www.padippakam.com

# பொருளாதாரம்

சாமுவெல்சன்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

படிப்பகம்

www.padippakam.com

# பொருளாதாரம்

## சாமுவல்சன்

3—CP 680—1,504 (5/67)

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பொருளாதாரம்

# ஆரம்ப ஆராய்ச்சி

போல் ஏ. சாமுவல்சன்
பொருளாதாரப் பேராசிரியர்,
மசச்சூசெற்சுத் தொழினுட்பக் கழகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால்
வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு, 1971

ECONOMICS
AN INTRODUCTORY ANALYSIS
*by*
SAMUELSON
*Copyright*
McGRAW—HILL BOOK COMPANY
Translated and Published in Ceylon
*by arrangement with*
THE McGRAW—HILL BOOK COMPANY

எல்லா உரிமையும் இலங்கை அரசாங்கத்தார்க்கே

மக்ரோ—ஹில் புத்தகக் கம்பெனியாரின் அனுமதியுடன்
இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினரால்
மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது

படிப்பகம்

www.padippakam.com

# පෙරවදන

මේ ග්‍රන්ථය වූ කලී පෝල් ඒ. සැමුවල්සන් මහතාගේ **Economics–An Introductory Analysis** නම් සුප්‍රකට කෘතියේ දෙමළ පරිවර්තනයයි. ආර්ථික විද්‍යාවේ සෑම අංශයක් ම පාහේ විස්තර විභාගයට ලක් කෙරෙන මෙම ග්‍රන්ථය, මෙම දෙපාර්තමේන්තුව මඟින් පළ කෙරෙන එබඳු සවිස්තර කෘතීන් අතුරෙන් පළමු වැන්න ලෙස සැලකිය හැකිය.

මෙම ග්‍රන්ථය කාණ්ඩ සයකින් සමන්විතය. ප්‍රථම කාණ්ඩයෙන් මූලික ආර්ථික සංකල්ප හා නූතන ආර්ථික ජීවිතයේ මූලික සංස්ථාවන් ද විග්‍රහ වන අතර, එය නිමා වන්නේ ජාතික ආදයම පිළිබඳ විස්තරයකිනි. දෙ වන කාණ්ඩයෙන් සමෘද්ධිය හා පරිහානිය ඇති වීමට හේතු සාධක විග්‍රහ වේ. තෙවන කාණ්ඩයට ඇතුළත් වන්නේ තරඟකාරී හා ඒකාධිකාරී බලවේගයන් පිළිබඳ විස්තර විභාගයකි. අනතුරු ව, ආදයම් ව්‍යාප්තිය හා නිෂ්පාදන සාධකයන්හි මිල නියම කිරීම සිව් වන කාණ්ඩය මඟින් විභාග කෙරේ. පස් වන කාණ්ඩයෙන් අන්තර්ජාතික වෙළඳාම—එහි මූල්‍ය අංශය මෙන් ම මූර්ත අංශය ද විග්‍රහ කොට දක්වෙයි. සවන කාණ්ඩයේ අරමුණ වන්නේ වර්තමාන ආර්ථික ගැටලු-විශේෂයෙන් ම ඌන සංවර්ධිත රට වලට අදල වන පරිද්දෙන් සාකච්ඡාවට ලක් කිරීමයි.

දෙමළ මාධ්‍යයෙන් රචිත ආර්ථික විද්‍යා පොත් ප්‍රමාණවත් නොවන හෙයින්, මෙම ග්‍රන්ථය එම ඌනතාව පිරිමසා ලීමට තරමක් දුරට හෝ ඉවහල් විය හැකිය. ගුරු-සිසු දෙපක්ෂයට ම මෙය බෙහෙවින් ම ප්‍රයෝජනවත් ග්‍රන්ථයක් වනු ඇතැයි මගේ බලවත් විශ්වාසයයි.

මෙම පොතේ මුල් පරිච්ඡේද සොළොස පො. තිරුනාවුක්කරසු මහතා විසින් ද, විසි එකක් වූ සෙසු පරිච්ඡේද සංඛ්‍යාව චෙ. ජෝ. ඉලයතම්බි මහතා විසින් ද පරිවර්තනය කොට ඇත.

ව. ආනන්ද ජයවර්ධන,
අධ්‍යාපන ප්‍රකාශන කොමසාරිස්.

1971 මැයි 13 වැනි දින,
කොළඹ 3, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා
මාවතේ '' සිරිමතිපායේ '' පිහිටි
අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුවේ දී ය.



படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

"பொருளாதாரம்" எனப் பெயரிய இந்நூல் போல் ஏ. சாமுவல்சன் அவர்கள் எழுதிய 'Economics—An Introductory Analysis' எனும் ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.பலவிடயங்களை உள்ளடக்கியன வாய், முதன்முதல் இத்திணைக்களத்தாரால் வெளியிடப்படும் பொருளா தார நூல்களுள் இதுவும் ஒன்றாகக் கொள்ளத்தக்கது. இது பொருளா தாரத்தின் எல்லா அமிசங்களையும் தன்னகத்தே கொண்டுளது. இந்நூல் ஆறுபகுதிகளை உடையது. முதலாம் பகுதி, இக்கால வாழ்வுக்குரிய மூலா தாரமான பொருளாதார உண்மைகளையும் தாபனங்களையும் ஆராய்ந்து சென்று, தேசிய வருமானம் பற்றிய கருத்து விளக்கத்துடன் முடிவடை கின்றது. இரண்டாம் பகுதி, பொருளாதார வளம், மந்தம் என்பவற்றுக் கான காரணங்களை ஆராய்கின்றது. மூன்றும் பகுதி, போட்டி, ஏகபோக வுரிமை ஆகிய சத்திகளுடன் சம்பந்தப்பட்டது. வருமானத்தைப் பங்கிடு தல், உற்பத்திக் காரணிகளுக்கு விலைகுறித்தல் ஆகியவை பற்றி நான்காம் பகுதி எடுத்துக்கூறுகின்றது. சருவதேச வியாபாரத்தின் பணத்துறை அமி சங்களும் உண்மை அமிசங்களும் ஐந்தாம் பகுதியில் ஆராயப்பட்டுள. ஆறும் பகுதியிலே, குறிப்பாக அபிவிருத்தி குறைந்த நாடுகள் சம்பந் தமான நடைமுறைப் பொருளாதாரப் பிரச்சினைகள் விளக்கப்பட்டுள.

பொருளாதார சாத்திரம் பற்றித் தமிழிற் போதுமான அளவிலே நூல் களில்லாக் குறையைப் போக்க இந்நூல் உதவும். இவ்வெளியீட்டை மாணவரும் ஆசிரியரும் உவந்தேற்றுக் கொள்வர் என்பது எனது நம் பிக்கை.

ஆங்கில நூலிலே முன்னைய பதினாறு அத்தியாயங்களைத் திரு. பொ. திருநாவுக்கரசும், பின்னைய இருபத்தொரு அத்தியாயங்களைத் திரு. சே. ஜோ. இளையதம்பியும் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தனர்.

டபிள்யூ. ஆனந்த ஜயவர்த்தன,
ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

"சிறிமதி பாயா"
58, சேர் எணெஸ்ட் த சில்வா மாவத்தை,
கொழும்பு 3, மே 13, 1971.



படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

இஃது ஒரு பொருளாதார ஆரம்ப நூலாகும். ஆரம்ப நிலையிற் பொருளாதாரத்தை அரை வருடத்துக்கோ முழுவருடத்துக்கோ பயிலுவோருக்கும், அதனைத் தொடர்ந்து பொருளாதாரத்தை மேலும் பயில விரும்பும் அல்லது விரும்பாத மாணவருக்கும் உதவுமுகமாக இஃது எழுதப் பெற்றுள்ளது.

பொருளாதாரம் முக்கியமானதோர் பாடமாகும்; அது கிளர்ச்சியூட்டும் ஒரு பாடமுமாகும். பொருளாதாரத்துறையிலே தொழில் செய்யும் பொருளியலாளன் என்ற முறையில், நான் இவ்வாறு கருதுவது இயல்பே. ஆயின், மக்கள் விரும்பி மதிக்கும் பாடங்களுள், நன்கமைக்கப்பெற்ற பொருளாதாரப் பாடத்திட்டமொன்றில் எப்பொழுதுமே ஏறக்குறைய முதன்மையான விருப்பங் காட்டப்பட்டுவந்துள்ளது என்பதை மக்கள் கருத்துப் பற்றிய மதிப்பீடுகள் மீண்டுமீண்டும் எடுத்துக் காட்டியுள. பொருளாதாரம் பயிலும் வாய்ப்புத் தமக்கு ஒரு போதும் கிடைக்க வில்லையே என்று ஏங்கும் மக்களை வாழ்க்கையில் நாம் அடிக்கடி கண்டுவருகிறோம்.

இந்நூலின் முதற் பதிப்பை நான் எழுதியகாலை,எனக்குள்ளே இவ்வாறு கூறிக்கொண்டேன்: "இருபதாம் நூற்றுண்டின் இப்பிற்பகுதியிலே, அறிவுக்கூர்மையுள்ள ஒருவன் பொருளாதாரம் பற்றி அறிய வேண்டியது யாது? இன்றிருந்து இருபதாண்டுகளுக்குப் பின் வாசகனொருவன் செல்வாக்கும் பொறுப்புமுள்ள நிலைமையில் இருக்கத் தொடங்குங்கால் அவனுக்கு மிக முக்கியமானவையாக இருக்கக்கூடிய விடயங்கள் எவையோ அவற்றையே அறிவதற்கு அவன் பெரும்பாலும் நாட்டங் கொள்வான்."

நான் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே இந்நூல் வெற்றிகரமான விளைவை அளித்துள்ளது. இது பல்வேறு மொழிகளிலே மொழிபெயர்க்கப் பட்டுள்ளதுமன்றி, இதனைத் தழுவிப் பல நூல்களும் எழுதப் பட்டுள்ளன. உண்ணாட்டிலும் பிறநாட்டிலும், கனிட்டகல்லூரிகளிலும் பேர்பெற்ற பல்கலைக் கழகங்களிலும், இரவுப் பாடசாலைகளிலும் அரசாங்கமும் வியாபாரமும் சம்பந்தப்பட்ட பயிற்சித் திட்டங்களிலும் பயன்படுத்துதற்கு, முக்கியத்துவம் வாய்ந்த பெரும்பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிக் கூறும் ஒரு பாடநூல் பொருளாதார ஆசிரியர்களுக்கு அவசியந் தேவைப்பட்டது. பணவீக்கமும் பணவாட்டமும், குடும்ப வருமானமும் தேசிய வருமானமும், விலை, சம்பளம், இலாபம், பங்குமுதற் சந்தை முதலியனவும் அப்பிரச்சினைகளுட் சிலவாம். அனைத்துக்கும் மேலாக, விரைவான பொருளாதார முன்னேற்றமும் ஏமமும் பெறுவதற்கும், திறமையாக விலைகுறிப்



படிப்பகம்

www.padippakam.com



பதற்கும், எமது வளங்களனைத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குமான நிலைமைகளைப் பகுத்தாராய உதவும் கருவிகள் பற்றிய பிரச்சினை அவற்றுள் முக்கியமானதொன்று.

ஐந்தாம் பதிப்பு முற்றாகத் திருத்தியும் புதுக்கியும் புனராக்கஞ் செய்யப்பட்டுளது. நூலிலுள்ள முக்கியமான விடயங்களை இற்றைக்காலம் வரைக்கும் பொருந்துமாறு செப்பஞ்செய்ததுடன், அடுத்த பத்தாண்டுக்குரிய முக்கியமான பிரச்சினைகள் பற்றியும் புதிய அத்தியாயங்களையும் பிரிவுகளையும் புகுத்தியுள்ளேன் : பொருளாதார முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, அமெரிக்க ஐக்கிய அரசின் சருவதேச நிலைமை, அதனுடன் சம்பந்தப்பட்ட பொன்நியமத்திட்டம், உண்ணாட்டுக் கொள்கை முதலியவற்றின் உட்கருத்துக்கள், "செலவு உந்தல்" வகையான புதியதொரு பணவீக்க அமைப்பு முறையினால் மேனாட்டுப் பொருளாதாரங்கள் அனைத்திலும் புகுத்தப்பெற்ற—மலைவுதருகின்ற—தர்மசங்கடமான நிலைமைகள் ஆதியனவற்றுக்கு இப்பதிப்பில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் புதிய பதிப்பு, அனைத்துக்கும் மேலாய், நுண்பாகப் பொருளியல் முற்றாகத் திருத்தியமைக்கப் பட்டுள்ளதைக் குறிக்கின்றது. விநியோகம், தேவை என்பனபற்றிய மூலக்கோட்பாடுகள் நாலாம் அத்தியாயத்தின் தொடக்கத்திற் கூறப்பட்டுள. பேரண்டப் பொருளியல் சம்பந்தமாய் இரண்டாம் பகுதிக்குத் தேவைப்படும் அடிப்படையான ஆய்வுக் கருவிகளை வழங்கும் பேரனுகூலத்தை இது பெற்றுளது ; அன்றியும், பேரண்டப் பொருளியலை ஆராயுமுன்னர் நுண்பாகப் பொருளியலை ஆராய விரும்பும் ஆசிரியர்களை இசைவாக வழிப்படுத்தற்கு ஏற்றவகையில் இப்பதிப்பு அமைந்துள்ளமையும் ஒரு பேரனுகூலமாகும்.

மூன்றும் பகுதியின் அமைப்பும் அதிற் சேர்ந்துள்ள புதிய அத்தியாயங்களும், மாஷலின் பொருளியலை இக்காலத்துக்கேற்றதாக்கி அடுத்து வரும் ஆராய்ச்சியோடு இணைவுறுத்துவதன் மூலமாக விலைக் கோட்பாட்டைப் புறக்கணிக்கப்படாமே பாதுகாப்பதோடு, அபிமானிகளின் வெறும்புகழ்ச்சியினின்றும் அதைக் காப்பாற்றவும் துணைபுரியும் என்பது எனது நம் நம்பிக்கை. விலையிடல் எத்துணையளவு செய்து முடிக்கக்கூடியது, எத்துணை செய்து முடித்துள்ளது, எத்துணை செய்யமுடியாமலுள்ளது என்பன பற்றிப் புதிய கருத்துக்கள் அழுத்திக் கூறப்பட்டுள. நான்காம் பகுதியிலுள்ள பங்கீட்டுக் கொள்கை பற்றிய விளக்கம்—குறிப்பாக மூலதனக் கொள்கையுடன் சம்பந்தமான விடயம் பற்றிய விளக்கம்—மிகவும் எளிதாக்கப்பட்டுளது. சருவதேசமுறைபற்றிய ஒப்பீட்டு அனுகூலமானது, பின்னிணைப்புக்களைத் தக்கவாறு கையாள்வதன் மூலம், இலகுவாக்கப்பட்டுளது. பணத்துறைக்குரிய பகுப்பாராய்ச்சியையும் வருமான-நிருணயிப்பையும் இணைக்கும் புதிய விடயங்கள் சம்பந்தமாக இருந்து வந்த நீண்டகாலத் தேவை, இவண் பூர்த்தி செய்யப்பட்டுளது. வண்ணத்திலோ தோற்றத்திலோ அற்பமாற்றஞ் செய்வதன் மூலம், வழக்கிலிருந்து மறைந்து போவதைப் புதிதாக ஆக்குவிக்க முயலவேண்டுமென்பதற்கு எமக்கு எவ்

www.padippakam.com



வித அவசியமும் ஏற்பட்டிலது. நூல்வெளியிடுவதிலும் பொருளாதார முறை பின்பற்றப்படவேண்டும். இந்நூலைப் பலர் பயன்படுத்துவது காரண மாக, இதனை இற்றைநாள்வரையுள்ள விடயங்களை உள்ளடக்குவதாய் வெளியிடுவது சாத்தியமாயிற்று. பொருளாதாரம் போன்ற ஒரு பாடத் திற்கு இப்படிச் செய்வது இன்றியமையாதது.

மாக்ஸ் பீயர் போம் முன்புதாம் எழுதிய நூலொன்றைப் புதுக்கி யெழுதுதற்குத் தமக்குத் துணிவில்லை என்று ஒரு முறை குறிப்பிட்டார். அதிலுள்ள பழஞ் செய்திகளை உரிமையின்றி மாற்றஞ்செய்யும்போது அதனை எழுதிய இளைஞர் எத்துணைச் சீற்றமடைந்திருப்பார் என்பதை அவர் நினைவிற் கொண்டதே இப்படி அவர் எழுதியமைக்குக் காரணமாகும். பெரும்பாலும் அவ்விளைஞரைப் போலவே நானும் உணர்கிறேன். கடுமை யான பொருளாதாரம் சுவையற்றதாகவோ கடினமானதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை என்ற உறுதியுடனேயே இந்நூலை எழுதப் புகுந்த இளைஞனும் இருந்தான். எவருடைய நூலின் குறைபாட்டையுந் திருத்துவதில் அவன் எத்துணைக் கடுமையாக நடந்து கொண்டான் என்பதை நான் நினைவுகூருகிறபொழுது, இந்நூலிலுள்ள சொல், அரைப்புள்ளி, வரி, பக்கம், அத்தியாயம் ஆதிய ஒவ்வொன்றையும் மிகத் தாராளமாக விமரிசனத்துக்கு உட்படுத்தவேண்டுமென்பது நியாயமமே என்பதை நான் உணருகிறேன். அன்றியும், உலகின் ஒவ்வொரு கண்டத்தி லிருந்தும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் குறிப்புரை அனுப்பிவைத்து எனக்கு உதவினார்கள். அவர்கள் ஆற்றிய உதவியை நான் அனுபவ பூர்வமாக அறிந்திருந்தமையாற்றான் அவர்களது மனத்தாராளத்தை உயர்வாகப் பேசவேண்டியவனாய் இருக்கின்றேன்.

நூலைத் தயாரிப்பதில் மக்ரோ–ஹில் புத்தகக் கம்பெனி என்னுடன் சிறப்பாக ஒத்துழைத்தது. நூலின் அச்சு, வண்ணம், வரிப்படங்கள், அமைப்பு ஆகியவை பொருளாதார நூற்பொருளை வெற்றிகரமாக வெளியீடு செய்வதொன்றையே ஒரே நோக்கமாகக் கொண்டு அக்கம்பெனி யாலே திட்டமிடப்பட்டன. அதன் விளைவாக, மாணவர் தம்வாழ்நாள் முழுவதிலும் நூல்நிலையத்தில் வைத்துப் பேணத்தக்க அழகியதொரு நூலாக இஃது அமைந்திருப்பின், அதனை ஒரு வரப்பிரசாதமாகக் கொள்ளல் வேண்டும். இந்நூல் சிறந்த ஒரு போதனை நூலாக அமைய வேண்டும் என்பதிலேயே கூடிய கவனஞ் செலுத்தப்பட்டுளது. அத்தி யாயங்களின் பொழிப்புக்களைக் கவனமாக ஆக்கியுள்ளோம்; தெளிவான முன்னுரைகளையும், நுட்பமான ஆராய்ச்சிக் கேள்விகளையும் தந்துள்ளோம்; ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும், மூலாதாரமான கோட்பாடுகளை முடிவாகச் செவ்வை பார்ப்பதற்கு வேண்டும் பட்டியலைச் சேர்த்துள்ளோம்; குறுங்காலப் பயிற்சியின்போதோ மூலாதாரமான அடிப்படைக் கருத்துக் களிற் கவனஞ் செலுத்தும்போதோ எளிதில் ஒதுக்கப்பட்டுவிடும் சில விடயங்களைக் கவனத்துக்குக் கொண்டு வருமுகமாக ஆங்காங்கே அத்தியா யங்களுக்குரிய பின்னிணைப்புக்களையும் கொடுத்துள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்நூல் முழுவதிலும் "உன்னதமான புதிய-பழம் பொருளியல் இணைப்பு" என்று நான் வழங்கிவந்துள்ள விடயம் மீண்டுமீண்டும் எடுத்துரைக்கப்பட்டுளது. இது நவீன வருமான நிருணயத்தின் வாய்ப்பான கருப்பொருளைப் பழம் பொருளியற் கோட்பாடுகளுடன் இணைக்கும் ஒரு முயற்சியாகும். அதன் அடிப்படைக் கொள்கை இதுதான். பணத் துறைக்குரியதும் அரசிறைக்குரியதுமான கொள்கைபற்றிய முக்கியமான பிரச்சினைகளுக்கு வருமானப் பகுப்பாய்வுக் கருவிகள் மூலம் பரிகாரங் காண்பது, பழம்பொருளியல் உண்மைகளைச் செல்லுபடியாக்கி, அவற்றை மீண்டும் பொருத்தமானவையாக்கும். இந்தப் புதிய-பழம்பொருளியல் இணைப்பும் பொருளாதார ஆசிரியருக்கு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும். இது மொத்தப் பேரண்டப் பொருளியலுக்கும் பாரம்பரிய நுண்பாகப் பொருளியலுக்குமிடையே உள்ள பிளவைச் சீர்படுத்துகின்றது ; அவ்விரண்டையும் ஒன்றை யொன்று கதுவிநிற்கச் செய்து ஐக்கியமாக்குகின்றது. ஆரம்பப் பொருளியலிலே, "தேசீய வருமான நோக்கின்" பயனை அது பெரிதும் கூட்டுகின்றது என்பது எனது முடிபாகும் ; எனது முந்திய பதிப்புக்கள் இதனை மீண்டுமீண்டும் பயன்படுத்தி இருந்திருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

இக்காலப் பொருளாதாரத்திலே புதியனவற்றைத் தேடிக்காணும் முயற்சியிற் காலெடுத்து வைக்கத் தொடங்கும் வாசகருக்கு எனது பொறுமை கலந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஓர் எச்சரிக்கையையும் விடுக்கின்றேன். இந்நூல் தெளிவான உரை நடையில் எழுதப்பட்டுள்ளதெனினும், ஏமாற்றத்துக்கு உள்ளாகவேண்டாம். ஆர்வமுள்ள வாசகரெவரும் நன்குபுரிந்து கொள்ளக்கூடிய ஆரம்ப ஆராய்வு ஒன்றை வழங்குவதே இதன் நோக்கம். ஆயின், இதன் அடிக்குறிப்புக்கள், பின்னிணைப்புக்கள், மற்றென்று விரித்தலின் பாற்பட்ட குறிப்புக்கள், மறைமுகமான கூற்றுக்கள் என்பவற்றுக்கிடையே நுண்ணறிவுடன் நோக்க வேண்டிய விடயங்கள் பல பொதியப்பட்டுள. ஆதலின், நுனிப்புல் மேயும் நிலையிலுள்ள வாசகர் தேர்ச்சிபெறுவது துர்லபம். வாசகர் உரியமுறையிற் கவனஞ்செலுத்துவாராயின், அவர் அவ்விடயங்களை நன்றாகப் புரிந்து கொள்வார். முழு ஆண்டுப்பயிற்சிக்கும் போதுமான விடயங்களை இந்நூல் வழங்குகின்றது. தேவைப்பட்டால், அவற்றுடன் பிற்சேர்க்கையாக வேறு சிலவற்றையும் சேர்க்க முடியும். இதிலடங்கிய விடயங்களின் தொடர்பு அறுபடாவண்ணம் அத்தியாயங்களையும் பின்னிணைப்புக்களையும் நீக்கி விடமுடியும். பல கல்வித் தாபனங்கள் அரைவருடப் பயிற்சிக்காகவே இந்நூலைப் பயன்படுத்த விரும்புகின்றன.

ஒவ்வோர் அத்தியாயமும் அறிந்து கொள்ளக்கூடிய ஓர் அலகைக் கொண்டிருக்கத்தக்கதாய் அமைக்கப்பட்டுளது. நீண்டு செல்லும் அத்தியாயமாக இருந்தால், அது, ஏ. பி. என்றவாறு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கும் ; இப்பிரிவுகளையுமே அத்தியாயங்களாக அமைக்க இயலும் ; பலவிடங்களில் அத்தியாயத்தின் பின்னிணைப்புக்களாகச் சில விடயங்கள்

படிப்பகம்

www.padippakam.com



தரப்பட்டுள்ளன. மிக எளிதில் வளைந்து கொடுத்துக் கருத்துக்களை விளக்கும் இந்த முறைக்குப் பல ஆசிரியன்மார் உடன்பாடுதெரிவித்துள்ளமை, ஒரு சிறுவாக்கெடுப்பிலிருந்து தெரியவருகிறது. இத்தகைய விடயங்களை அறிந்து கொள்வது அத்துணைக் கடினமன்று; ஆயின், காலம் போதவில்லை யாயின் அல்லது முதல்வாசிப்பாயிருப்பின், பொதுவாக அவற்றை ஒதுக்கி விடமுடியும்.

ஆசிரியன் விரும்பினால், விடயங்களின் ஒழுங்கமைப்பை மாற்றக் கூடிய வகையிலே விவாதத்திற்குரிய விடயங்கள் கவனமாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இப்படியாக, நுண்பாகப் பொருளியலைக் கூறும் மூன்றும் பகுதியை முன்னதாகவும், பேரண்டப் பொருளியலைக் கூறும் இரண்டாம் பகுதியைப் பின்னதாகவும் அமைப்பதை ம. தொ. கழகத்தில் நாம் விரும்பவில்லையாயினும், ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்பதற்கு எக்காரணமுமில்லை. கூறுவதை வேண்டுமென்றே மீட்டுங்கூறல் பயில் வதற்கு வலுவூட்டும் என்பதுடன், மரபுமுறையான ஒழுங்கிற்கு அப்பால் அத்தியாயங்களை ஆசிரியன் ஒதுக்கிக் கொடுப்பதற்கான வசதியையும் அளிக்கும்.

இந்நூலுக்கு நிறைவளிக்குமுகமாக, ரோபேட் எல். பிஷப், ஜோண் ஆர். கோல்மன் ஆகியோருடன் நானும் சேர்ந்து 'Readings in Economics' என்ற நூலைத் தயாரித்துள்ளோம். ரொம்னி ரொபின்சன் என்பார், "Study Guide and Workbook" என்ற சிறந்த நூலை ஆக்கித் தந்துள்ளமைக்கு எனது நன்றி அவருக்கு உரித்தாகும்; அந் நூலின் முந்திய பதிப்புக்கள் அமோக ஆதரவு பெற்று உத்தியோக பூர்வமான முறையில் ஆசிரியன்மாராலும், உத்தியோகச் சார்பற்ற முறை யில் ஆர்வமுள்ள மாணவர்களாலும் பரக்கப் பயன்படுத்தப்பட்டுள. அன்றியும், வகுப்பறை மாணவர்க்குச் சிறப்பாகத் துணைசெய்யும் பொருட்டு, பேசாத காட்சிப் படங்கள் பன்னிரண்டை மக்ரோ-ஹில் புத்தகக் கம்பெனி வழங்கியுள்ளது.

ஆரம்பப் பாடநூல் ஒன்றை எழுதுதல் கடினம். ஆயின், அதனு லுண்டாகும் பிரதிபலன் அளப்பரியது—பணப் பிரதிபலனை மட்டுமே நான் கூறவில்லை. ஒரு தலைமுறையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவருடன் சிந்தனைத் தொடர்பு கொள்ளும் அனுபவம் போன்று வேறெந்த அனுப வமும் ஓர் அறிஞருக்கு வாய்க்க முடியாது. மேலும், பொருளாதாரம் பற்றிப் பொருளியலாளரான நாங்கள் எழுதுதல் உண்மையிற் கிளர்ச்சி யூட்டும் ஓர் அனுபவமே. இந்த அனுபவத்தால் வாசகரும் ஓரளவுக் கேனும் கிளர்ச்சியூட்டப் பெறுவர் என்பது என் நம்பிக்கை.

நான் பெற்றுக் கொண்ட உதவிக்கு நன்றி செலுத்தும் இறுதிக் கட்டத்திலே, நன்றிக் கடனுக்கு வகைசொல்ல முடியாத வக்கற்றவனாய் இருக்கிறேன். நூலைத் திருத்தியமைப்பதற்கு ஆலோசனைகள் தந்துதவிய

www.padippakam.com



நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் பெயர்களேயும் வாசகர்களின் பெயர்களேயும் குறிப்பிடத்தொடங்கவுமே இயலாதவனுய் இருக்கிறேன். ம. தொ. கழகத்திலுள்ள என் கூட்டாளிகள் அனேவரையும் குறிப்பிடுவதென்றல், அலுப்பைத் தரும் ; ஆயின், பேராசிரியர்களான ரோபேட் எல். பிஷப், கேரி பிரவுண், ரோபேட் சோலோ ஆகியோரைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மற்றைக் கல்லூரிகளிலிருந்து பின்வருவோர் எழுத்து வேலேயில் எனக்குத் திறமையான உதவி அளித்துள்ளனர் : ரொம்னி ரொபின்சன், ரிச்சட் எஸ். எக்கவுஸ் (பிரண்டெயிஸ்), ஆதர் எம். ஓக்குன் (யேல்), வில்லியம் ஜீ. பொயின் (பிரின்ஸ்ரன்), டேவிட் பீ. மக்கல்மன்ற் (லங்காஸ்ரர், பென்சில்வேனியா), ஜோன் அவுற்றென் (ரைஸ்), அலிஸ் போணுவ் (பொஸ்ரன் கல்லூரி), ஜோன் பீ. ஹெண்டசன் (மிச்சிகன் அரசு), டட்லி ஜோன்சன் (வாஷிங்ரன்), பிராங்க் எல். கிட்னர் (கலிபோணியா), தியடோர் ஜே. கிரெப்ஸ் (ஸ்ரான்போட்), எச். லோரன்ஸ் மில்லர், டொன் வீ. பிளான்ஸ் (கன்சாஸ்), சாள்ஸ் டீ. ஸ்மித் (புளோரிடா), போல் சல்ரன் (கிளேயமொன்ற்), ஹரி ஈ. வால்ரேஸ் (வாஷிங்ரன்), ஜனெற் எல். வெஸ்ரன் (இலிஞேய்), ஜேம்ஸ் ஜீ. விற், இளேயவர் (பிற்ஸ்பேக்) இனெஸ் ஜே கிரண்டோல். கீழே குறிப்பிட்டுள்ள வேறுசிலர் நூலேப் பதிப்பிக்கும் கருமத்தில் எனக்குத் துணேசெய்துள்ளனர் : அவர்தாம் பெலிசிற்றி ஸ்கிட்மோ, பியற்றிஸ் ரோஜேஸ், ஜனெற் போஸ்ரர், ஷரோன் டிவார், கிரேஸ் லொக், மாகரெட் ரொபிசன் என்போராவர். எட்வேட் போஸ்ரர் என்பார், எனக்கு உதவிய மற்றுஞ் சில உதவியாளருடன் சேர்ந்து, காலமாற்றங்களுக்கேற்ப அடுத்தடுத்த பதிப்புக்களே அமைத்துக் கொடுப்பதில் எனக்குத் துணேபுரிந்துள்ளார்.

ஒரு பாடநூல் ஒருவருடைய பிள்ளேகளுக்கே அர்ப்பணிக்கப்படல் வேண்டும் ; எனக்கும் பிள்ளேகள் உண்டு. ஆயின், அனேவருக்கும் மேலாக, இந்நூலே எழுதுவதற்கு முதன்முதல் ஆலோசனே கூறிய பேராசிரியர் ரோல்ப் இலான்ஸ் பிரீமன் என்பாருக்கு நான் கடமைப்பட்டுள்ளதாகக் கருதுகிறேன். அவர் ம. தொ. கழகத்திலே பொருளியல்—சமூகவியல் என்ற துறையின் முன்னேத் தலேவராவர். நூலின் பெறுபேற்றுக்கு அவரையோ மேற்குறிப்பிட்டவர்களேயோ குற்றங்கூறலாகாது. சிறப்பு ஏதுவுமுண்டேல், அஃது என் மனேவிக்குரியது.

**போல் ஏ. சாமுவல்சன்.**

www.padippakam.com

# பொருளடக்கம்


பக்கம்

முகவுரை .. .. .. .. vii–xii

முதலாம் பகுதி
பொருளாதார அடிப்படைக் கருத்துக்களும் தேசிய வருமானமும்

1. தொடக்கவுரை .. .. .. .. 3
2. பொருளாதாரச் சமூகத்தின முக்கிய பிரச்சினைகள் .. .. 20
3. " கலப்பு " முதலாளித்துவ முயற்சித்திட்டம் செயற்படும் முறை 49
4. விநியோகமும் தேவையும் : அடிப்படை அமிசங்கள் .. .. 82
5. தொழில் அமைப்பும் வருமானமும். அனுபந்தம் : கணக்கு வைத்தலில் ஆரம்ப அறிவு .. .. .. .. 106
6. தனிப்பட்ட வருமானமும் குடும்ப வருமானமும் .. .. 155
7. தனிப்பட்ட நிதியும் சமூகப் பாதுகாப்பும் .. .. .. 183
8. தொழிலாளரும் தொழில்பற்றிய தொடர்புகளும் .. .. 213
9. பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கு : செலவு, பிரமாணம், நிதி .. 246
10. பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கு: கூட்டாட்சியின் வரித்திட்டமும் தலத்தாபனப் பணவிடயமும் .. .. 269
11. தேசிய வருமானமும் உற்பத்தியும் 291
அனுபந்தம் : உத்தியோக பூர்வமான தேசிய வருமானத் தரவு .. 317

இரண்டாம் பகுதி
தேசிய வருமானத்தையும் அதன் ஏற்றவிறக்கத்தையும் நிச்சயித்தல்

12. சேமிப்பு, நுகர்வு, முதலீடு .. .. .. 329
13. வருமான நிருணயக் கொள்கை .. .. .. 348
14. வர்த்தகச் சக்கரமும் முன்னரே உய்த்துணர்தலும் .. .. 384
15. விலைகளும் பணமும் .. .. .. .. 405
16. வங்கித்தொழின் முறையும் வைப்பு உண்டாக்குதலும் .. .. 429
17. கூட்டாட்சியொதுக்கம், மத்திய வங்கி என்பவற்றின் பணக்கொள்கை .. 463
அனுபந்தம் : வங்கித்தொழின் முறையைச் சீர்திருத்தச் சிலயோசனைகள் 485
18. பண ஆராய்ச்சியையும் வருமான ஆராய்ச்சியையும் இணைத்தல் .. 491
அனுபந்தம் : பணம், வருமானம் என்பவற்றை நிருணயிக்கும் சாதனங்கள் 505
19. அரசிறைக் கொள்கையும் பணவீக்கமற்ற பூரண வேலைவாய்ப்பும் .. 519

மூன்றும் பகுதி:
தேசிய உற்பத்தியின் உள்ளடக்கமும் விலையும்

20. விநியோகம், தேவை என்பவற்றால் விலையை நிருணயித்தல் .. 551
21. தேவை, பயன் என்பவை சம்பந்தமான கொள்கை .. .. 579
அனுபந்தம் : நுகர்வோர் சமநிலைபற்றிய கேத்திர கணித ஆராய்ச்சி 600




படிப்பகம்

www.padippakam.com




22. செலவும் விநியோகமும் .. .. .. .. 604
அனுபந்தம் : விநியோகம், தேவை சம்பந்தமான உதாரணங்கள் 630

23. விவசாயம் சம்பந்தமாகப் பிரயோகிக்கப்படும் விநியோகமும் தேவையும் .. 642
அனுபந்தம் : ஊக வியாபாரம், அபாயம், காப்புறுதி என்பன பற்றிய பொருளாதாரம் .. .. .. .. .. 677

24. கம்பெனியின் சமநிலை : செலவும் வரவும் .. .. 679
அனுபந்தம் : போட்டி விநியோகம் சம்பந்தமாகச் செலவு .. 705

25. நிறைவில் போட்டியும் நம்பிக்கைக்கெதிரான கொள்கையும் .. 719

**நான்காம் பகுதி**

**வருமானம் பங்கிடுதல்: உற்பத்திச் சாதனங்களுக்கு விலையிடுதல்**

26. உற்பத்தி, இறுதிநிலைப் பண்டங்கள் என்பனபற்றிய கொள்கை .. 751
அனுபந்தம் : உற்பத்திக் கொள்கையை வரைபடத்தின் மூலம் விளக்கல் .. 772

27. உற்பத்திச் சாதனங்களுக்கு விலையிடல் :
நிலத்தின் வாடகையும் வேறுவளங்களின் வாடகையும் .. .. 782
அனுபந்தம் : எளிதான உதாரணம் சம்பந்தமாய் இறுதிநிலை உற்பத்தியும் பகிர்வும் பற்றிய பரந்த நோக்கு 797

28. போட்டிச் சம்பளமும் கூட்டுப் பேரமும் .. .. .. 809

29. வட்டியும் முதலும் .. .. .. 849
அனுபந்தம் : வட்டி, பணம், கைக்கோள் ஆகியவற்றின் கோட்பாட்டு அமிசங்கள் 867

30. இலாபமும் தூண்டல்களும் .. .. .. 881
அனுபந்தம் : பொருள், சாதனம் என்பவற்றுக்கு விலையிடல்பற்றிய புனராய்வு : பொதுச் சமநிலை ; இலட்சிய பூர்வமான பொது நல விலையமைப்புப் பற்றிய நீதிக் கதை 902

**ஐந்தாம் பகுதி**

**சர்வதேச வியாபாரம், நிதி என்பவை**

31. சர்வதேச வியாபாரநிலைக் குறிப்பு .. .. .. 925
அனுபந்தம் : சர்வதேச நிதிபற்றிய வேறுசில தத்துவங்கள் .. .. 947

32. சர்வதேச வியாபாரமும் ஒப்பியல் நன்மைக் கொள்கையும் .. .. 961
அனுபந்தம் : ஒப்பியல் நன்மை விளக்கமும், விசேடிப்பும் .. .. 971

33. இறுப்புமுறைக் காப்பு, கட்டுப்பாடற்ற வியாபாரம் என்பவற்றின் பொருளியற்றன்மை .. .. .. .. 990

34. சர்வதேச நடப்புப் பொருளாதாரப் பிரச்சினைகள் .. .. 1009

**ஆறும் பகுதி**

**நடப்புப் பொருளாதாரப் பிரச்சினைகள்**

35. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பனபற்றிய பிரச்சினைகள் .. 1037

36. முன்னேற்றமான பொருளாதாரத்திலே வளர்ச்சி, உறுதி நிலையான விலை ஆகிய பிரச்சினைகள் .. .. .. .. 1067

37. மாற்றுப் பொருளாதார முறைகள் .. .. .. 1088
அனுபந்தம் : பொருளாதாரக் கோட்பாடுகளின் வரலாற்றுச் சுருக்கம் .. 1106

சொல்லட்டவணை .. .. .. .. 1117

www.padippakam.com

# முதலாம் பகுதி

## பொருளாதார அடிப்படைக் கருத்துக்களும் தேசிய வருமானமும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முதலாம் அத்தியாயம்

## தொடக்கவுரை

" அருள்விறல் போய்விட்டது. தருக்கஞ் செய்வோரும் பொருளியலாளரும் கணக்கிடுவோரும் வாழுங் காலம் வந்துவிட்டது "

—எட்மண்ட் பேர்க்.

வானத்துக்கோள்களின் மண்டலத்தைப்பற்றிப் புகழ்பெற்ற ஷேர்லொக் ஹோம்ஸ் ஒருபோதுங் கேள்விப்பட்டதில்லை என்ற செய்தியை அறிந்த பொழுது தாம் பெரிதும் ஆச்சரியமடைந்ததாகக் கலாநிதி வாட்சன் ஒரு முறை கூறினர். மனிதனுடைய மூளை களஞ்சியச்சாலை போன்றது. அங்கே எல்லாப் பொருள்களையும் வைக்கமுடியாது. சிலவற்றை மாத்திரமே வைக் கலாம் என்ற நூதனமானதோர் உளநூற் கொள்கையை உதாரணமாகக் கொண்டு, கிரகமண்டலத்தைப்பற்றிய அறிவை மூளையிலே திணித்தால் வேறுவகையான உபயோகமுள்ள அறிவுகள் வெளியே ஒதுக்கப்பட்டுவிடு மென்ற காரணத்தால் வான மண்டலத்தைப்பற்றிக் கூறினும் அதை ஹோம்ஸ் கேட்கவிரும்பவில்லையென்பதையறிந்து வாட்சன் மேலும் ஆச்சரியமடைந்தார்.

பொருளாதாரத்தை அறிவதனல் பௌதிகம், இலத்தீன் போன்ற கல்வி களால் உண்டான திறமை மறைந்துபோகமாட்டாது. ஆனல் மக்கள் நேரம் இன்றி அல்லற்படுவதால் எல்லாரும் எப்படியாவது நேரத்தை மிச்சம் பிடிக்கவே விரும்புகிறர்கள். பொருளாதாரத்தைப் பயின்றதால் எவ்வித பயனுமில்லாவிட்டால், பார்ப்பதற்கு வேறு பலகருமங்களுண்டல்லவா ?

### பொருளாதாரக் கல்வி எதற்கு?

பொருளாதாரம் எங்கள் ஒவ்வொருவரையும் பெரிதும் பாதிக்கும் விட யங்களைப்பற்றி ஆராய்கிறபடியால் அதைப் பயிலவேண்டியது அவசியமே. நாம் செய்வதற்கு என்னவிதமான வேலையிருக்கிறது ? ஒரு டொலர் காசைக் கொண்டு எவ்வளவு பொருளை இன்று வாங்கலாம்? பணவீக்கம் அதிகமாயிருக்கிற காலத்தில் எவ்வளவு வாங்கலாம் ? நியாயமான கால எல்லைக்குள் ஒருவன் தனக்கு ஏற்ற ஒரு வேலையைத் தேடிக்கொள்ள முடியாத ஒரு காலம் வருவதற்கு ஏதுக்களுண்டா ?

ஒவ்வொரு பிரசையும் கவனிக்கவேண்டிய சொந்தக் குடும்பவிடயங்களைத் தவிர, அவன் தீர்மானிக்கவேண்டிய அரசியல் விடயங்களைப்பற்றியும் பொரு ளாதாரம் ஆராய்கிறது.

அரசாங்கம் மேலும் வரிவிதிக்குமா ? அந்த வரிப்பணத்தைக் கொண்டு வேலையற்றிருக்கும் சுரங்கத் தொழிலாளர் சிலருக்கு உதவியளிக்குமா ? வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு வேறு வழிகளைக் காணுமா ?



படிப்பகம்

www.padippakam.com



புதியதொரு பாடசாலை கட்டுவதற்கு அல்லது வீதியமைப்பதற்கு வாக்களிக்க வேண்டுமா அல்லது வியாபாரமந்தமேற்பட்டுச் சீமெந்துவிலை குறையும் வரை அல்லது மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாடும்வரை காத்திருக்கவேண்டுமா ? கல்யாணமான பெண்கள் வேலை பார்ப்பதால் ஆண்கள் வேலையின்றியிருக்க நேருகிறது. ஆனபடியால் அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாதெனச் சட்டஞ் செய்வதற்கு நாம் வாக்களிக்க வேண்டுமா ? கைத்தொழிற்சாலைகளில் மக்களுதவியின்றிப் பெரிதும் இயங்கக் கூடிய இயந்திரங்களை அமைப்பதால் தொழிலாளர் வேலையின்றித் தவிக்கவும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளவீதம் மிகக் குறையவும் வழியேற்படுமா ? ஏகபோகவுரிமைக்கெதிராகச் செய்த சட்டம் பயனுடையதா ? பொருளாதாரம் வியாபாரத்தைப்பற்றியும் ஆராய்கிறது. பொதுப்பங்கு விலைகள் 1929 தொடக்கம் 1932 வரை ஏன் தலைகீழாக வீழ்ச்சியடைந்தன ? சண்டைக்குப் பின்னர் ஏன் அவை விறுவிறு என்று ஏறிவிட்டன ? பங்கு விலை வீழ்ச்சியுற ஏன் உறுதிப்பத்திரங்களின் விலைகள் ஏறுகின்றன ? சம்பள வீதம் நிலவாடகையை அனுசரித்து ஏறினால் நிலத்தையும் தொழிலாளரையும் தாம் பயன்படுத்தும் முறையை விவசாயிகள் எவ்வாறு மாற்றுவார்கள் ?

சமூகத்துக்கும் நாட்டுக்கும் சவால்விடுக்கும் சில முக்கியமான பிரச்சினைகளைப் பொருளாதாரம் தீர்த்துவைக்கவேண்டியிருக்கிறது.

குடிசனப் பெருக்கம் இந்தியாவுக்கு ஒரு பெரும் பிரச்சினை. எந்த வகையில் ? ஐக்கிய அமெரிக்காவுக்கும் இப்போது அஃது ஒரு பிரச்சினை. என்ன வகையில் ? எந்திரங்களையும் கைத்தொழிற் றளவாடங்களையும் உற்பத்தி செய்வதற்காக இன்று நாம் நுகர்பொருள்களைச் சுருக்கும் வீதத்திலே தான் எமது வருங்கால முன்னேற்றம் பிரதானமாகத் தங்கியிருக்கிற தென்று சொல்லமுடியுமா ? அல்லது அது சர்வகலாசாலை விஞ்ஞானிகள், எந்திர ஆராய்ச்சியாளர், கைத்தொழிற்சாலை அதிகாரிகள் ஆகியோரின் கண்டுபிடிப்புக்களிலேதான் தங்கியிருக்கிறதா ?

நாகரிக முன்னேற்றமடைந்த மேலைநாட்டவர் மனத்திலும் வளர்ச்சியின்றிப் பின்தங்கிய நாடுகளிலுமுள்ளவர் மனத்திலும் தோன்றும் மிக முக்கியமான பிரச்சினைகள் பின்வருமாறு : இன்னும் இருபது வருடத்திலே சோவியத் ரஷ்யா ஐக்கிய அமெரிக்காவிலும் பார்க்கச் செல்வம் கொழிக்கும் நாடாக மாறிவிடுமா ? அல்லது அதிலும் சிறந்த இராணுவ பலமுள்ள நாடாக மாறுமா ? இவ்விருநாடுகளிலுமுள்ள பொருளாதார முறைக்குமிடையே காணப்படும் வித்தியாசம் என்னவாகும் ? நிலைமையை மாற்றுவதற்கு அவ்வந்நாடுகள் என்ன செய்யமுடியும் ? தம் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு இந்தியாவிலோ கொங்கோவிலோ உள்ளவர்கள் எந்த முறையைப் பின்பற்றவேண்டும் ?

இவ்வினாக்களுக்கு விடை கூறுவதானால் பொருளாதாரசாத்திரத்தைப் பயிலவேண்டும். அப்பொழுதுதான் முன்னேறலாம். பயிற்சிபெற்றால்

படிப்பகம்

www.padippakam.com



மாத்திரம் போதாது. ஒருசேர ஒரேமுறையில் எல்லாவினுக்களுக்கும் விடைகூறிவிடவும் முடியாது. பொருளாதாரம் வாழ்வோடு சம்பந்தப் பட்டது. மனிதவாழ்வு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அவ்வளவு இலேசாக வும் திட்டமாகவும் விடை கூறிவிடமுடியாது.

ஆனுல் பொருளாதாரசாத்திரத்தைச் சரிவரப்படியாதவர்கள் இந்தப் பிரச் சினைகளைப்பற்றிச் சிந்திக்கவோ, விடைகூறவோ திறமையற்றவராவார்; செவிடன் காதில் ஊதியசங்குபோலத்தான். காதுகேட்கக்கூடிய சில வழிகளைச் செய்தாலும், இவர் நல்லசங்கீதத்தின் இனிமையை அறியமுடியாதிருப்பார். அவருக்குப் பயிற்சியும், இரசிகத்தன்மையுமில்லாமலிருக்கலாம். இருந்தும், சங்கீதம் என்ற அனுபவத்தையாவது இவர் பெறக்கூடியவராயிருப்பார்.

எங்கள் வாழ்நாள்முழுவதுமே மக்களும், பத்திரிகைகளும் மேற்காட்டிய வைபோன்ற பொருளாதாரப்பிரச்சினைகளையோ இதுவரை அறியாத புதிய வற்றையோ விவாதிக்கவே செய்வர். இதில் நாமும் பங்குபற்றி இன்ப மடைய வேண்டுமானுல் பொருளாதார அறிவைப் பெற்றிருக்கவேண்டிய தவசியம்.

### அறிவொளியும் இன்பமும்

பொருளாதாரத்தைப் பயிலவேண்டியதற்கு வேருெரு காரணமுமுண்டு. அது கவர்ச்சிகரமானதொரு கல்வி. வாழ்க்கையிற் காணப்படும் மனிதப் பண்பு பொருளாதாரத்திலே காணப்படுவதை இரண்டு நூற்றுண்டாகவே கல்விமான்கள் கண்டனர். மேலும் பொருளாதாரத் தத்துவங்களிலே இயூக் கிளிட்டின் கேத்திரகணிதத் தர்க்கசாத்திர அழகுகளைக் காணலாம். 'குவான் டம்' பௌதிகத்தின் அழகுகளை முற்றுய் அறிவதானுல் சிக்கலான கணித சாத்திர நுட்பங்களைத் துறைபோக அறியவேண்டும். பொருளியலின் ஆராய்ச்சியிலடங்கியுள்ள அழகுணர்ச்சியை அனுபவிப்பதற்குத் தர்க்கசாத் திர உணர்வும், இத்தகைய சிந்தனைக் கருத்துக்கள் உலகிலுள்ள எண்ணுக் கடங்காத மக்களின் உயிர் நிலையையே பாதிக்குந் தகைமையுடையன வென்று வியப்புணர்ச்சிகொள்ளும் ஆற்றலும் தேவை.

ஆனுல் வெறும் அழகை இரசித்தால் மாத்திரம் போதாது. ஒருவன் நீண்ட ஒரு சீவியத்தின் பின்னர் மக்களுக்குத் தன்னுடைய முயற்சி பயனளிக்க வில்லை, தான் வெறும் அழகை மாத்திரம் இரசித்துக் கொண்டி ருந்ததாக உணர்வது ஏமாற்றத்தைக் கொடுக்கும். தான்செய்த ஆராய்ச் சியின் பயனுக ஆயிரம் சந்தர்ப்பங்களிலே மக்கள் நன்மையடைந்தனர் என்று அறிந்தால் அவன் மகிழ்ச்சியடைவான். பொருளாதாரம் மனிதனுக்கு அறிவு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அதனுல் இன்பமுண்டாகிறதென் றுல் அஃது இரண்டாந்தரமான பயனென்றே கருதவேண்டும்.

### பொருளாதாரமென்றுலென்ன ?

பலவருடங்களுக்கு முன்னுல், பொருளாதாரம் பயில ஆரம்பித்த மாணுக் கர் பொருளாதாரத்தைப்பற்றி ஒரு வசனத்திலே வரைவிலக்கணம் வேண்டு

www.padippakam.com



மெனக் கேட்டனர். இந்தத் தேவையை அனுசரித்துப் பல வரை விலக் கணங்கள் கூறப்பட்டன. அவற்றுட் சில வருமாறு :—

1. பணமும், அதன் செலாவணி வசதிகளும் சம்பந்தமாக மக்களி டையே உண்டாகும் நடவடிக்கைகள்பற்றிய ஆராய்ச்சியே பொருளா தாரம்.

2. அருந்தலாகவோ, வரையறுக்கப்பட்டோ உள்ள நிலம், தொழில், மூலப் பொருள்களான எந்திரம், தொழினுட்ப அறிவு என்பவற்றைக் கோதுமை, மாட்டிறைச்சி, மேலங்கி, கலைவிருந்து, வீதி, தோணி போன்ற பொருள்களை உற்பத்திசெய்து சமூகத்திலுள்ள மக்களின் உபயோகத்துக்கு அவற்றை விநியோகஞ் செய்கிறார்கள் என்பதை ஆராயும் சாத்திரமே பொருளாதாரம்.

3. வாழ்க்கையில் ஊதியம் பெறவும் பெற்றதை அனுபவிக்கவும் மக் கள் செய்யும் முயற்சியைப் பற்றிய ஆராய்ச்சியே பொருளாதாரம்.

4. நுகர்தல், உற்பத்திசெய்தல் என்ற முயற்சிகளை மக்கள் எவ்வாறு அமைக்கிறார்கள் என்பதை ஆராய்வதே பொருளாதாரம்.

5. செல்வத்தைப் பற்றிய ஆராய்ச்சியே பொருளாதாரம்.

இது நல்லதோர் அட்டவணை. ஆனால் நல்லதொரு நூல்நிலையத்துக்குச் சென்று பொருளாதாரம் பற்றி ஒரு மணிநேரம் ஓர் அறிஞர் ஆராய்ச்சி நடத்துவாரானால் இதைப்போலப் பன்மடங்கு பெரிய அட்டவணையைத் தயார் செய்யலாம். ஒரு விடயத்தைப்பற்றி ஒரு சில வசனங்களிலே ஒரு சரியான வரைவிலக்கணத்தைக் கூறமுடியாது. மேலே காட்டிய வரை விலக்கணங்களிலெல்லாம் பொருளாதாரத்தின் முக்கியமான பல அமி சங்கள் கூறப்பட்டுள்ளன. விரிவாக அட்டவணை செய்யும்போது அங்கே சுருக்கமாகக் குறிப்பிட்ட விடயங்கள் விளக்கம் பெறலாம்.

முன்னேகண்ட அட்டவணையிலிருந்து பொருத்தமானதொரு வரைவி லக்கணத்தைத் தெரிந்தெடுக்குமாறு ஒரு நிபுணரை வற்புறுத்தினால் அவர் இரண்டாவது வரைவிலக்கணத்தையே தெரிவார். பணம் முக்கிய மென்பதை அவர் அறிவார். சீனா அடுத்த ஆண்டே பணத்தைக் கைவிட்டா லும் வேறு பல பொருளாதாரப் பிரச்சினைகள் அங்கு இருந்துகொண்டே யிருக்கும். ரொபின்சன் குருசோ என்றாலென்ன, சுயதேவையை முற் றாகப் பூர்த்திசெய்துள்ள நாணயப்பு க்கத்தையோ பண்டமாற்றையோ அறியாத எல்லைப்புற மக்கள் கூடப் பொருளாதார எல்லைக்குட்பட்டவரே.

பொருளாதாரம் வாழ்வோடு சம்பந்தப்பட்டதென்றோம். ஆனால் அது ஞாயிற்றுக்கிழமை தேவாலயதில் நிற்கும் ஒரு மனிதனுடைய மனோநிலையைக் கூறமாட்டாது. எலியட் தம் பாடல்களை வாசிக்கும்பொழுதோ சினட்ரா என்பவர் பாடும்பொழுதோ உண்டாகும் புளகாங்கிதத்தையோ, காதலின் துயரத்தையோ, மரண வேதனையையோ பொருளாதாரம் விவரிக்கும் திறமுடையதன்று. வாழ்க்கைக்குத் தேவையான சிறந்த பொருள்கள்

www.padippakam.com



இலவசமாகக் கிடைக்கமாட்டா. அவை சந்தையிலேகூட விற்பனைக்குக் கிடையா.

சுருக்கமாகக் கூறுவதானால், பொருளாதாரத்தைப்பற்றித் திட்டமான தொரு வரைவிலக்கணம் கிடையாது. அவ்வாறு ஒன்று இருக்கவேண்டிய அவசியமுமில்லை. இருந்தாலும் முன்னுரையாகவும் விடயத்தை அறிமுகஞ் செய்யக்கூடியதாகவும் இருக்குமொரு வரைவிலக்கணம் பின்வருமாறு :

"பணத்தின் உதவியோடோ அதன் உதவியின்றியோ காலமெல்லாம் பலவகையான பொருள்களை உற்பத்தி செய்து, நிகழ்காலத்திலும் வருங் காலத்திலும், பலவகைப்பட்ட மக்களிடையிலும் சமூகத்திலுள்ள பல தொகுதியாரிடையிலும் நுகர்ச்சிக்காக விநியோகஞ் செய்வதற்கு அருந்த லான உற்பத்திச் சாதனங்களை மக்களும் சமூகமும் எவ்வாறு தெரிந் தெடுக்கிற தென்பதை ஆராய்வதே பொருளாதாரம்".

### பொருளாதாரம் எது அன்று

வீட்டிலே தின்பண்டங்களை ஆக்கும் முறையும், கணக்குக்களை வைக்கும் முறையும் வீட்டுச் சிக்கனம்பற்றியவை. அவை பொருளாதாரமல்ல.

பொருளாதாரம் வியாபார நிருவாகமன்று. பத்துலட்சம் ரூபாயை எப்படி ஈட்டுவது, வருடக்கணக்கை எவ்வாறு தயார்செய்வது, நல்ல விளம்பரமுறையை எவ்வாறு திட்டப்படுத்துவது, பங்குச்சந்தை நிலையை எவ்வாறு ஊகிப்பது என்பன பொருளாதாரமாகா. அத்தகைய விடயங் களுக்கு வேறு இடத்தை நாடவேண்டும்.

பொருளாதாரம் எந்திரசாத்திரமன்று ; நல்லதோர் அணைகட்டுதல், பெனிசிலின் செய்தல், தானியங்களுக்கு மகரந்தஞ்சேர்க்கை என்ற இன் னோரன்ன விடயங்களை அறிவதற்குப் பரிசோதனைக்கூடங்களுக்குப் போக வேண்டும்; வாழ்க்கையிலும் பார்க்கலாம்.

ஆனால் பொருளாதாரமும் இந்தத் துறையனைத்தையும் தொட்டுக் கொண்டேயிருக்கிறது. என்ஜினியர் தன்னுடைய வேலையைச் செய்வான் என்பதைப் பொருளாதாரம் எதிர்பார்க்கிறது. இயற்கைக்கு எல்லையுண்டு ; மனிதனுடைய அறிவுக்கும் எல்லையுண்டென்பதை அது ஏற்றுக்கொள் கிறது. வளங்களில் அருந்தலும் விலைவாசிகளில் மாற்றமும், தொழில் நுட்ப முறைகளில் மாற்றங்களையுண்டாக்கத் தொழில்நுட்ப அறிஞரைத் தூண்டும். அதைப் பொருளியலறிஞரே விளக்கத் தகுதிபெற்றவர். மோட்டார் உடைந்துபோனால், பொருளியலறிஞரை அழைப்பதாற் பயனில்லை. **1929** இல் அமெரிக்காவில் உண்டான பெரிய வியாபாரமந்தம், ஜெர்மனி யிலுண்டான பணவீக்கம் ஆகியவற்றின்போது நிகழ்ந்ததுபோல உற்பத்தி சம்பந்தமாகவுள்ள பரஸ்பர சமூகத்தொடர்புகள் முறிந்துபோனால் பொருளா தார அறிஞரே உதவிபுரிவர்.

குடும்பங்கள் தங்கள் பணத்தைச் செலவு செய்யும்முறை பொருளாதார அறிஞருடைய கவனத்தைக் கவரக்கூடியதே—நுகர்வோருடைய தேவை

www.padippakam.com



பற்றிய நடவடிக்கை சம்பந்தமாய் அவர் விபரிக்கும் முறை வீட்டுப் பொருளியலறிஞர் கூறுவது போலவோ விவாக ஆலோசனையாளர் கூறுவதுபோலவோ இருக்காது. இலாபத்தையோ வேறு இலக்கையோ மனத்திற்கொண்டு முயற்சிசெய்யும் வியாபாரிகளின் நடவடிக்கை பற்றிப் பொருளியலறிஞர் கூறும் விளக்கம், இதுபோன்ற ஓர் ஆரம்ப நூலில் மாணுக்கனை அவனுடைய அனுபவம் வாய்ந்த தந்தையிலும் அறிவுடைய வனுக்கும்வகையிலே கூறப்படமாட்டாது.

பங்குச்சந்தையிலும் வியாபாரத்திலும் அடுத்த ஐந்து வருடத்திலே மிகுந்த இலாபம் அடையவேண்டுமென விரும்பினுல், நேரே முன்னணிக்குப் போய் வியாபாரத்தில் பயிற்சிபெறவேண்டியதுதான். தொழிற்பயிற்சிக்காகப் பொருளாதாரம் கற்பிக்கப்படாவிட்டாலும், இக்காலத்துப் பொருளாதார நிலையில் அடங்கிய பெரிய சமூகச் சக்திகளைப் பற்றி நன்ருக அறிந்துவிளங் கிக்கொண்டால், பணமீட்டுவதற்கும் அது பயனுடையதாயிருக்கும்.

**பலவற்றுள் ஒன்று**

அரசியற்பொருளாதாரம் என்ற பரியாய நாமமுடைய பொருளியல் வேறு முக்கிய கல்வித்துறைகளோடும் சம்பந்தமுடையது. சமூகவியல், அரசியல், உளவியல், மானிடவியல் என்ற சமூகக் கல்விகளெல்லாம் பொருளா தாரத்தோடு தொடர்புடையன. ஓர் உதாரணம் வருமாறு :—

வறுமைமிக்க இந்தியாவிலே பசு பரிசுத்தமான மிருகமெனக் கருதப் படுகிறது. அதனுல், கோடிக்கணக்கான பசுக்கள் வீதியில் உணவுதேடி அலைகின்றன—அப்பாவியும் மனித இயற்கையை உண்மையாகவே அறியாத வருமான ஒரு பொருளியலறிஞர், இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, நாட்டு மக்களின் உணவுக்குறையைத் தீர்ப்பதற்கும், உணவிற் பிசிதக்குறையை அகற்றுவதற்கும் இந்தப் பசுக்களைப் பயன்படுத்தலாமென எண்ணுவர். ஆனுல் அனுபவமும் ஆழ்ந்த அறிவுமுள்ள அறிஞன் மக்களுடைய நம்பிக்கைகளையும் அவற்றில் அடங்கிய உளவியலையும் கணக்கிலே கொண்டு தான் இந்தியப் பொருளாதார வளர்ச்சியை ஆராய்வான். அன்றியும் அரசியல் அமைப்பையும், அதனுல் உண்டாகக்கூடிய அபிப்பிராய நெருக் கங்களையும் மனத்திற்கொண்டே விடயத்தை ஆராய்வான்.

பொருளாதாரம் சரித்திரத்தோடும் பெரிதுந் தொடர்புடையது. கொலம்பஸ் தங்கம் நிறைந்த அமெரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடித்த பின்னர் ஸ்பெயினிலும் ஐரோப்பாவிலும், பலநூற்ருண்டாக விலைவாசிகள் உயர்ந்தமை தற்செயலாக உண்டான நிகழ்ச்சியா ? நீராவிக் கப்பலும் புகையிரதமும் தோன்றிய யுகம் ஐயோவாவிலுள்ள விவசாயிக்கு அனுகூலமாகவும், வேர்மண்ட், ஒக்ஸ்போட்ஷயர் ஆகிய இடங்களிலிருந்த விவசாயிகட்குப் பிரதிகூலமாகவுமிருந்தது ; ஆனுல் லண்டனிலுள்ள சேரிக் குடிகளுக்கு என் அனுகூலமாயிற்று ? நிகழ்ச்சிகளையும் சம்பவங்களையும் துருவி ஆராய்ந்தாற்ருன் உண்மை புலனுகும். சரித்திர நிகழ்ச்சிகளை

www.padippakam.com



விளக்குவதற்கு ஆராய்ச்சிச் சாதனங்களைப் பயன்படுத்தவேண்டும். இத்தகைய ஆராய்ச்சிகளிலும் குறைபாடுகளுண்டு.

பொருளாதாரம் வேறு பலதுறைகளோடும் சம்பந்தமுடையது. விசேடமாகப் புள்ளிவிவரவியலைக் கூறலாம். அரசாங்கமும் வர்த்தகத் தாபனங்களும் பலவகையான புள்ளிவிபரங்களை வெளியிடுகின்றன. இந்த நூலிலே ஆங்காங்குக்காணப்படும் கோடுகள் புள்ளிவிபரங்களைக் கொண்டே தயாரிக்கப் பட்டன. கணிதத்துறையைச் சேர்ந்த நிகழ்தகவுபற்றிய முறைகளும் புள்ளி விபரங்களும் பொருளாதாரத்துறையிலேதான் பெரிதும் பயன்படுகின்றன.

ஆரம்பப்பொருளாதார நூல்களிலும் கேத்திரகணிதப் படங்களைக் காண லாம். உயர்தரப் பொருளாதாரக் கொள்கைகளுக்குத்தான் கணித அறிவுதேவைப்படும். பொருளாதார அடிப்படைத் தத்துவங்களைச் சரிவர அறிந்துகொள்வதானால், தருக்கரீதியாக அனுமானிக்கும் ஆற்றல்வேண்டும். தரவுகளை நன்முக மதிப்பிடுவதுதான் பொருளாதாரச் சித்தாந்தங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கு உதவும்.

"குவாண்டம்" பௌதிக விடயத்தை முதன்முதலாக வெளியிட்டு நோபல்பரிசுபெற்றவரான மாக்ஸ்பிளாங் என்பவர், தாம் முதலில் பொருளாதாரத்தைப் பயின்றதாகவும் அது கடினமாயிருந்தபடியாலேதான் அதைக்கைவிட்டதாகவுங் கூறினுர். ரசல் பிரபு தற்காலக் கணிதபூர்வமான நியாயசாத்திரத்தின் வழிகாட்டி. அவருக்கு இந்தக் கதையை ஒருவர் கூறியபொழுது "இது நூதனம். நானும் பொருளாதாரம் பயின்றேன். ஆனால் அது மிக இலேசானபடியால் அதைவிட்டுவிட்டேன்" என்று கூறினுர்.

இரு கருத்துக்களிலும் உண்மையுண்டு. இரண்டிலும் தவறும் உண்டு. பதினறு வயதுக்குமேற்பட்ட விவேகி பொருளாதாரத் தத்துவங்களிலே நல்ல விளக்கத்தைப் பெறுவார் என எண்ணற்ற தடவை எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. ரசல்கூறுவதில் நியாயமுண்டு. மனிதவாழ்வு சம்பந்தமான பொருளாதாரச் சக்திகளை அறிந்துகொள்வதற்கு விவேகம் மாத்திரம் போதாது. சாதாரணமான அப்பாவிகள் எந்தவிடயத்திலும் சரிவரமாட் டார்கள்தான். ஆனால் சாத்திரமோ, கலையோ என்று நிச்சயமாகச் சொல்லமுடியாமல் இரண்டுக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் பொருளாதாரத்துறையிற் பெறும் அறிவைப் பயன்படுத்த அதிமனிதர் வேண்டியதில்லை என்பதும் ஒருதலை.

**பொருளாதார விவரணமும் ஆராய்ச்சியும்**

தேசீயவருமானத்திலுண்டாகும் ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி விவரித் தலும், ஆராய்தலும், விளக்குதலும், தொடர்புகூறி விவரித்தலும், புதிய பொருளாதார சாத்திரத்தின் முதற்கடமையாகும். விலையேற்றம், வியாபார மந்தத்தாலுண்டாகும் வேலையின்மை என்பனவும் நமது ஆராய்ச்சிக்குரிய

www.padippakam.com



விடயங்களே. இது சிக்கலான இடர்ப்பாடு நிறைந்த கருமம். ஆனால் இவற்றை ஒழுங்கு முறைப்படுத்துவதும் ஆராய்வதும் நமது கடமையென்பது சொல்லாமலேவிளங்கும்.

உற்பத்தியை எவ்வாறு உயர்த்தலாம், அதன்மூலம் மக்கள்வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு உயர்த்தலாம் என்பவற்றை விளக்கக்கூடிய பொருளா தாரத்தத்துவங்களை ஆராய்வது மற்றொரு கடினமான கருமமாகும். நாட்டிலுள்ள பொருளாதார வளங்கள் பயனின்றிக் கழியாதவாறு வேலைவசதிகளை உண்டாக்கினால் மாத்திரம் போதாது. மக்களுக்கு உண்மை யிலே தேவையான பொருள்களையும் பணிகளையும் நல்லமுறையில் உற்பத்திசெய்யக்கூடியவாறு நமது பொருளாதார வளங்களைப் பயன்படுத்த வும்வேண்டும். எனவே இந்நூலிலே பாதி தேசீயப் பொருள் உற்பத்தியின் கூறுகளை ஆராயுமேயன்றி அதன் கூட்டுத் தொகையைப்பற்றிமாத்திரம் ஆராய்வதுடன் நின்றுவிடாது.

மனிதருடைய நடவடிக்கையும், சமூகத்தின் நடவடிக்கையும் மிகச் சிக்கலானவை. ஆனபடியால் ஏனைப் பௌதிக சாத்திரங்கள் சிலவற்றிலே கிடைக்கக்கூடியனபோலத் திட்டமான முடிபுகளை இந்தச் சாத்திரத்திலே பெற முடியாது. இரசாயன அறிஞரைப் போலவோ, உயிர் நூலறிஞரைப் போலவோ பரீட்சைகளையும் ஆராய்வுகளையும், நாம் நினைத்தபடி நிலைமை களை நாமாகவே உண்டாக்கி மேற்கொள்ள முடியாது. வானசாத்திரிபோல நாம் வெறுமனே விடயங்களை அவதானிக்கமாத்திரமே முடியும். இங்கேயும் வானவெளியில் இயங்கும் கிரகங்களைப் போல, ஒழுங்காகவும் கிரமமாகவும் பொருளாதார நிகழ்ச்சிகள் உண்டாவதில்லை. ஆனபடியால் அவைபற்றிய புள்ளி விபரங்களும் ஒழுங்குமுறையின்றியே காணப்படுகின்றன. ஆனால் பொருளாதாரவிடயத்திலே நமது மதிப்பீடுகள் பல தசமத்தானங்களுக்கு அண்ணளவு செம்மையாயிருக்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக, காரணகாரியத்தொடர்பு எவ்வாறிருக்கிறதென்பதைப் பொதுப்படையாக அறிந்துவிட்டால் அதுவே பெரியகாரியமாகும்.

இயற்கையையும், சமூகத்தையும் அறிந்து அவற்றைப்பற்றிய அறிவைப் பெறுவது நல்லதே. வானத்துக் கிரகங்கள்போகும் பாதைகளையும், அணுக்கூட்டங்களின் நடமாட்டத்தையும் அறிவது எவ்வளவு சுவையான தோ அதேபோல வங்கிகள் எவ்வாறு பணத்தை உண்டாக்குகின்றன, பணவீக்கம் எவ்வாறு நடக்கிறது, உதவலும் தேவையும் எவ்வாறு விலைவாசிகளை நிர்ணயிக்கின்றன என்பவற்றை அறிதலும் பயனுடையதே. அறிவுபெறுதற்காக அறிவைத் தேடுவது ஒருபுறமிருக்க, பௌதிகசாத்திர அறிவு, திருத்தமான பொறிகளைச் செய்யவும் உதவும்; அவ்வாறே சரீரசாத்திர அறிவு வைத்தியசாத்திரத்தை முன்னேற்றமடையச் செய்யும். பொருளாதார நிகழ்ச்சிகளை விருப்புவெறுப்பின்றி ஆராய்வதால், சமூகத் திலே ஏற்படக்கூடிய வேண்டாத சிலசம்பவங்களை நிகழாமற் செய்யலாம்.

www.padippakam.com



**பொருளாதாரக் கொள்கை :**

பொருளாதாரக் கொள்கையென்ற முக்கியமான பிரச்சினை பற்றி ஆராயவேண்டிய கட்டத்தையடைந்துவிட்டோம். வியாபார ஏற்றத்தாழ்வை எவ்வாறு குறைக்கலாம் ? பொருளாதார முன்னேற்றத்தை எவ்வாறு தூண்டலாம் ? வாழ்க்கைச் செலவை எவ்வாறு எல்லார்க்கும் சமமுடையதாக்கலாம் ? இவ்விடயங்களை ஆராய்வதால் முன்னேற்றமுண் டாக்கலாம்.

ஆராய்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் கொள்கைப் பிரச்சினை சம்பந் தமாக விளக்கம்கொடுக்க முயல்வோம். இதில் வெற்றிபெறுவதானால் விடயங்களைக் காய்தல் உவத்தலின்றி ஆராயவேண்டும். விடயங்கள் இருந்த இருந்தபடியேயிருக்க அவற்றைப் பற்றின்றி ஆராயும் மனோபாவம் வேண்டும். பொருளாதார விளைவுகள் ஒவ்வொருவரோடும் உணர்ச்சிபூர் வமாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆழ்ந்தபற்றும், சார்பும் உள்ள விடயங்களைப்பற்றிய விவாதமானல் மக்கள் உணர்ச்சிவசப்பட்டுவிடுவர். இப்பற்றுக்களிலே சில, விசேடமான பொருளாதார நலவுரிமை யடிப்படை யிலே தோன்றி, வெளியே நிதானமான ஆராய்ச்சியின் கோலத்தைக் காட்டும்தன்மையுடையன.

நோயை அகற்றுவதற்கு மும்முரமாக முயற்சிசெய்யும் வைத்தியர் முதலில் நோய் பரவியுள்ளதன்மையை இருந்த இருந்தபடி அறிந்துகொள் ளவேண்டும். இருமிசாத்திரமானது வைத்தியர்விடயத்திலே ஒரு மாதிரியும், மனித இனத்தைப் பிளேக் நோயினல் அழிக்கவிரும்பி அச்சாத்திரத்தைப் பயன்படுத்தும் பைத்தியம் பிடித்த ஒரு விஞ்ஞானி விடயத்தில் வேறொருமாதிரியும் இருக்கமுடியாது. பற்றுடன் விடயங்களை ஆராய்வது உண்மையான ஆராய்ச்சியாகாது. "சூரியனை வணங்குவதானல், சூடுசம்பந் தமான விதிகளை அறிந்துகொள்வது சற்றே கடினமாகலாம்."

அவ்வாறே பொருளாதார விதிகளும் எல்லாருக்கும் பொதுவானவை. குறித்ததொரு பொருளாதார நிலையில் உண்மையாயுள்ள விதி ஒன்றே. அதனை அறிந்து மற்றவற்றிலிருந்து பிரித்துக்காட்டுவது சிரமமாயிருக்க லாம். குடியரசுக் கட்சியினரைப் பொறுத்தவரையில் பொருளாதாரம் ஒருவகையாகவும், சனநாயகக் கட்சியைப்பொறுத்தவரையில் வேறொரு வகையாகவும் இருக்கமுடியாது. தொழிலாளி விடயத்தில் அது ஒருவகை யாகவும் முதலாளி விடயத்திலே வேறொருவகையாகவுமிருக்க முடியாது. விலைவாசிகள் வேலைவசதிகள் சம்பந்தமான அடிப்படைப் பொருளாதாரத் தத்துவங்களைப் பற்றி பொருளாதார அறிஞர் எல்லோரும் பெரும்பாலும் ஒத்தகருத்துடையவராகவேயிருக்கின்றனர்.

கொள்கையைப் பொறுத்தவரையில் பொருளியலறிஞர் எப்பொழுதும் தம்முள் ஒத்தகருத்துடையவராயிருக்கின்றனர் என்பது இதன் தாற்பரிய மன்று. அ என்ற பொருளியலறிஞர் எவ்வகையிலும் பூரணவேலை வசதியை ஆதரிக்கலாம். ஆ என்ற பொருளியலறிஞர் அதை முக்கியமானதெனக்

www.padippakam.com



கருதாதிருக்கலாம். இலட்சியம் சரியா, பிழையா என்பதைப் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளைப் பொருளியலறிஞரால் தீர்மானிக்கமுடியாது. ஒவ்வொரு பிரசையும் அவற்றைத் தானே நிச்சயித்துக்கொள்ளவேண்டும். நிபுணராயிருப்பவர்க்கும் கூட மற்றவர்களைப் போலவே ஒரேயொரு வாக்குத் தானுண்டு. பல்வேறு தீர்மானங்களின் பயனாக உண்டாகக் கூடிய உண்மையான செலவைப்பற்றி எடுத்துக் கூறுவதே நிபுணருடைய கடமையாகும்.

**பொது அறிவும் அறிவின்மையும்**

பொருளாதாரம் இலேசான விடயமன்று. கணித்தத்துக்கு அவசியமான மனப்பயிற்சி அதற்கு அவசியமில்லையென்பது உண்மையே. கணிதம் சிக்கலான துறையாயிருந்தபோதிலும் அதில் ஒரு திட்பமுண்டு. எனவே சங்கடப் பட்டுப் படித்துப் பயிற்சியடைந்தால் குவாட்ராட்டிக் சமன்பாடுகள் போன்றவற்றை விடுவித்துக்கொள்ளலாமென மக்களிற் பெரும்பாலோர் எண்ணுவது இயல்பே.

பொருளாதாரம் ஆரம்பத்திலே அத்துணைத்திட்பமுடையதுபோலத் தோன்றுது. விலைவாசிகள், சம்பளங்கள், வட்டிவீதங்கள், பங்குகள், காப்புறுதிகள், வங்கி, கடன், வரி, செலவு என்பனவெல்லாம் சிக்கலானவை. ஒவ்வொரு பிரச்சினைக்கும் பலபக்கங்களுண்டு. அவற்றுக்குக்கொடுக்கப்படும் விடைகளுள் சரியானது கடைசியாக உங்களைச் சிந்தித்துப்பேசும் ஒருவருடைய கருத்தாயிருக்கலாம்.

வருந்திப் பலநூல்களை ஆராய்ச்சியுடன் படித்தாலன்றி இரசாயனம் போன்றதொரு சிக்கலான விடயத்தை அறிந்துகொள்ளமுடியாது. இதனுல் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. சாதாரண மனிதரோ புதினப்பத்திரிகையாளரோ இந்த விடயங்களிலே தம்மை நிபுணர் என்று சொல்ல முடியாது. அதுவும் நன்மையே. புதிதாக இரசாயனம் படிக்கும் மாணக்கன் அந்தச்சாத்திரத்துக்குரிய அடிப்படைக் கருத்துக்களை எல்லாம் முதன்முறையாக அறிந்து கொள்ளவேண்டும். அது நேரம் எடுக்கும்.

சிறுவயது தொட்டே எல்லாருக்கும் பொருளாதாரத்தைப்பற்றிச் சிற்சில விடயமேனும் தெரிந்திருக்கும். இஃது ஒருவகையிலே துணைபுரிகிறது. மற்றொருவகையில் ஏமாற்றத்தைத் தருகிறது. எவ்வாறு துணையாகிறதென்றல், பலவிடயங்கள் படியாமலே தெரிந்துவிடுகின்றன. ஆராய்ச்சியின்றி மேலெழுந்தவாரியாகச் சரிபோலத் தோன்றும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது மனித இயற்கை. கல்லூரியிற் படிக்கும் மாணக்கர்க்குப் பணத்தைப்பற்றி நன்ருகத் தெரியும். சிறுவர் உலோகக் காசை நோட்டுக் காசினும் பெரிதாக மதிப்பதை அவர்கள் பார்த்துச் சிரிப்பதுண்டு. டொலர் நோட்டினும் பார்க்க சிறிய வெள்ளி நாணயங்களை அவர்கள் பெரிதாக மதிப்பது அறிவீனமே. பாஸ்கு பிரதேசத்திலுள்ள கிராமிய மக்கள் அங்கே சென்ற ஒரு கலைஞரை அவருடைய காசோலைப் புத்தகத்தை அபகரிப்பதற்காகக் கொன்ற கதையும் அத்தகையதே.

www.padippakam.com



அற்ப அறிவு அபாயகரமானது. நுணுகி ஆராய்ந்தால், பொது அறிவு என்பவெல்லாம் முட்டாள்தனம். தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் பல தொழிலாளர் ஒப்பந்தங்களை நிறைவேற்றிவிட்டால், தாம் சம்பளப் பொருளாதாரத்தில் நிபுணர் என்று நினைக்கிறார்.

வியாபாரி ஒருவர் தம் வேலையாட்களுக்குரிய சம்பளத்தைக்கொடுத்து விட்டதும் விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாகத் தாம் கூறும் கருத்துக்களெல்லாம் முடிவானவையென்று நினைத்துக் கொள்ளலாம். வங்கிக்காரர் ஒருவர் தமது ஐந்தொகையை முடிக்கத்தெரிந்து விட்டால் பணத்தை உண்டாக்குவது பற்றி அறிய வேண்டியதெல்லாம் தமக்குத் தெரியுமென்று நினைத்துவிடலாம். வியாபார ஏற்றத்தாழ்வுகளை அறிந்துகொள்வதால், பங்குச் சந்தையை ஊகித்துக்கொள்ளலாமென்று ஒருவர் தம்மை ஏமாற்றிக் கொள்ளலாம்.

பொருளாதார நிகழ்ச்சியொன்று ஏற்பட்டால் அது தம்மை உடனடியாக எவ்வாறு பாதிக்குமென்பதையே ஒவ்வொருவரும் ஆராய்வர். அது இயற்கை. வண்டிசெய்யுந்தொழிலிலிருந்து வேலையின்மையாலே தொழிலை இழந்த ஒருவன் மோட்டர்த் தொழிலிலே புதியதொழில்வாய்ப்புக்களுண்டாகியிருக்கலாமென்று எண்ணுவானென எதிர்பார்க்கமுடியாது. ஆனால் நாம் அவ்வாறு செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

ஆரம்ப ஆராய்ச்சியிலே, பொருளாதார அறிஞர், பொருளாதார முறை ஒருசேர எவ்வாறு செயற்படுகிறதென்பதை ஆராய்வாரேயன்றி ஒரு தொகுதியோ கூட்டமோ கொள்ளும் அபிப்பிராயத்தை ஆராயமாட்டார். சமூகக் கொள்கையும் தேசியக்கொள்கையுமே அவருடைய நோக்கமாயிருக்குமன்றி, தனிப்பட்டவருடைய கொள்கை அவர் நோக்கமாயிருக்காது. எல்லாருடைய விடயத்தையும் எடுத்துக்கொள்வதானால் கடைசியில் அது எவருடையவிடயமுமாகாது என்றேசொல்லலாம். பொருளாதார ஆரம்ப அறிவைப் பெறுவதால் ஒரு வியாபாரத்தையோ வங்கியையோ எவ்வாறு நடத்தலாம், பணத்தை எவ்வாறு புத்தியாகச் செலவு செய்யலாம், பங்குச் சந்தையிலே வியாபாரஞ் செய்து எவ்வாறு விரைவாகப் பணஞ் சேகரிக்கலாம் என்பனவெல்லாம் தெரிந்துவிடுமென்று எண்ணிவிடக்கூடாது. ஆனால் இத்தகைய விவகாரங்களிலே பயன்தரக்கூடிய பின்னணி அறிவைப் பொதுப் பொருளாதாரம் வழங்குமென எதிர்பார்க்கலாம்.

வியாபாரிகளும், நுகர்ச்சியாளரும், பணம் முதலீடுசெய்வோரும் எவ்வாறு நினைத்து எவ்வாறு கருமமாற்றுகிறார்களென்பதைப் பற்றிப் பொருளியலறிஞர் பெரிதளவு அறிந்திருக்கவேண்டியது அவசியமே. ஆனால் பொருளியலறிஞர் கூறும் வகையில் அவர்கள், அதேமுறைகளையும் மொழியையும் பயன்படுத்தித் தமது முடிவுகளைச் செய்யவேண்டுமென்பது கருத்தன்று. இஃது எப்படியென்றால், வான ஆராய்ச்சியாளர் காணும் கருத்தின் படியே தாம் இயங்குகிறோமென வானத்துக்கோள்கள் அறிந்திருக்க வேண்டுமெனக் கூறுவது போலாகும். அறியாமலே நம்மிற்பலர் வாழ்

www.padippakam.com



நாள் முழுவதும் வசனம்பேசிக்கொண்டிருப்பதுபோல வியாபாரிகளிற் பலருடைய நடவடிக்கை பொருளாதார ரீதியில் ஆராயத்தக்க தென்பதை அவர்கள் அறிவதில்லை. இது கண்டிக்கத்தக்கவிடயமன்று. நமது சட்டையி லுள்ள தெறிகளை எவ்வாறு பூட்டுவதென்பதைப்பற்றி நாம் அதிகம் கவனஞ் செலுத்துவோமாளுல் அந்தவிடயம் எமக்குக் கடினமான கரும மாகிவிடும்.

**சொற்களின் பலபொருள்**

"முதல்" என்ற சாதாரணச் சொல்லுக்குப் பத்துக்கதிகமான பொருள் கொள்ளும் பொருளாதாரம் போன்ற துறையிலே சொற்களின் பொருள் பற்றிக் கவனமாயிருக்கவேண்டியதவசியம். இது சொற்களின் "கொடுமை". ஏலவே நமது ஆராய்ச்சியுலகம் சிக்கலுடையதாயிருக்கிறது. எவ்வாறெனில்,

1. இரண்டு சொற்கள் சிலசமயம் ஒரே பொருளைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகின்றன.

2. ஒரே சொல் இரண்டு வேறுபட்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகிறது. இவற்ருல் மேலும் சிக்கல் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வியாபாரமந்தம் ஏற்படுவதற்குக் காரணம் மக்கள் அளவுக்கு மிஞ்சிச் சேமிப்பதே. ஆனபடியால் தேவையானவற்றைக் குறைவாக நுகர்வது தான் வியாபாரமந்தத்துக்குக் காரணமென்று ரொபின்சன் கூறினுல் அதை ஜோன்ஸ் ஆட்சேபித்து ரொபின்சனைப் பொய்யன் என்று கூறலாம். சுவாட்ஸ் என்பவர் விவாதத்தில் ஈடுபடுகிருர். "நீங்களிருவரும் சொல்வது தவறு. காரணம், போதிய அளவு மக்கள் முதலீடுசெய்யாமையே" என்கிருர். இவ்வாறு நாள் முழுவதும் அவர்கள் விவாதிக்கலாம். ஆனுல் அவர்கள் உபயோகித்த சொற்களின் பொருளை ஆராய்வார்களாளுல், தாம் பேசிய விடயத்திற் கருத்து வேற்றுமையில்லையென்பதையும், சொற்களே மயக்கத்தைக் கொடுத்தனவென்பதையும் அறிவர்.

சொற்கள் சில சமயம் சதிசெய்யலாம். ஏனெனில் நாம் நடுநிலையான மனோபாவத்தோடு அவற்றைப் பிரயோகிப்பதில்லை. வேகவளர்ச்சி விடயத் தில் அரசாங்கம் ஒரு திட்டம் போட்டால், அரசாங்கக் கட்சியினர் அது நியாய மானதொரு திட்டபூர்வமான கொள்கையென்பர். எதிர்க்கட்சியிலுள்ள வர் "ஆட்சிக் குழுவின் சர்வாதிகாரம்" என்பார்கள். இரண்டுகருத்துக் களிலும் ஒரே உண்மையுண்டு. ஒன்றை எதிர்த்தும் மற்றதை மறுத்தும் கூறமுடியாது. விஞ்ஞான ஆராய்ச்சியிலே இத்தகைய உணர்ச்சி பூர்வமான சொற்பிரயோகத்துக்கு இடமில்லை. இதை உணர்வதற்கு மொழியும் அதன் பொருளும் பற்றிய துறையில் விசேட அறிவு வேண்டாம்.

**அறிமுறையும் செய்முறையும்**

பொருளாதார உலகம் சிக்கல் நிறைந்தது. விஞ்ஞான ஆய்கூடங்களிற் பொருள்களை எடுத்து வைத்து ஆராய்வது போலப் பொருளாதாரத் துறை

படிப்பகம்

www.padippakam.com



யினுஞ் செய்யமுடியாது என்பதை மேலே குறிப்பிட்டோம். சளிச்சுரம் பெனிசிலின் மருந்துக்கு எவ்வாறு அடங்குகிறது என்பதை ஒரு வைத்தியர் ஆராய்கிறுர் என்று வைத்துக்கொள்வோம். ஒரு பகுதியினர்க்குப் பெனிசிலின் கொடுக்கப்படுகிறது. மற்றெரு பகுதியினருக்கு அது கொடுக்கப்படவில்லை. மற்றெல்லா வகையிலும் இரு பகுதி நோயாளரும் ஒரே வகையான நிலையிலிருக்கிறுர்கள். இந்தப் பரிசோதனைமூலம் அந்த வைத்தியர் பெனிசிலின் சளிச்சுரத்தைக் குணமாக்குமா என்பதைப் பற்றி அறிந்துகொள்வார். பொருளியலறிஞரால் இத்தகைய ஆராய்ச்சியைச்செய்ய முடியாது. பெட்ரோல் எண்ணெய்மீது புதியவரியொன்று விதிக்கப்பட்டுள்ளது. அவ்வரியின் பயனுக எண்ணெய் உபயோகிப்பிலே எத்தகைய மாற்றமேற்பட்டிருக்கிறதென்பதை அறிவதற்கு ஆராய்ச்சி செய்யும்போது, வரிவிதித்த அதேவருடத்தில் எண்ணெய் இறைப்பதற்குக் குழாய்கள் முதன்முதல் அமைத்தமை ஒருவனுடைய ஆராய்ச்சிக்குச் சங்கடத்தையுண்டுபண்ணலாம். இருந்தும், இப்புதிய அமிசத்தைக் கருத்திலிருந்து அகற்றிவிட்டே வரிகளின் விளைவுகளை ஆராயவேண்டும். " மற்ற நிலைமைகள் மாருதிருக்கும்பட்சத்தில், " என்ற அடிப்படையிலே வரியின் விளைவுகளைப் பிரித்து வைத்தே ஆராயவேண்டும். இல்லாவிட்டால் வரியின் பொருளாதார விளைவையோ, பொருளை ஏற்றியிறக்கும் முறையினுலேற்பட்ட பொருளாதார விளைவையோ, இரண்டினுலும் ஏற்பட்ட விளைவுகளையோ அவனுல் அறிந்துகொள்ளமுடியாது.

பகைவனைக் கொல்வதற்கு மந்திரமும், சிறிது நஞ்சும் அவசியமென்று காட்டுமிராண்டிகளின் வைத்தியன் நினைத்தான். இந்த மயக்கம் அவனுக்கு உண்டாவது எதனுலென்ருல், விடயத்தைப் பிரித்துவைத்து ஆராய்வதற்கு வசதியில்லாதபடியாலேதான். பச்சை அங்கியை வசந்த காலத்திலே தான் முதலில் அணிந்தாற்ருன் மரங்கள் துளிர்க்குமென்றதொரு கொள்கையும் அவனிடத்துக் காணப்பட்டது.[1] இத்தகைய குறைபாடுகளின்ற் பொருளாதாரப் புள்ளிவிவர அறிவு பூரணமற்றதாயிருக்கிறது. இதனுல் புள்ளியியலறிவு இத்துறையிற் குறைவென்பது கருத்தன்று. குடிசன மதிப்புப்புள்ளிகளும், சந்தைப்புள்ளி விவரங்களும் பணப் புள்ளி விவரங்களும் ஏராளமாக உண்டு. அரசாங்கங்களும் வியாபாரத் தாபனங்களும் வர்த்தக நிலையங்களும் இவற்றைப் பெருவாரியாகச் சேகரித்து வைத்துள்ளன.

ஏராளமான புள்ளிவிவரங்களும் விசேடமான தரவுகளுமிருந்தாலும், பெருவாரியான இந்த விபரங்களைத் தரப்படுத்தி இலேசாக்கிச் சுருக்க வேண்டியது அவசியமாகிறது. எல்லா விஞ்ஞான ஆராய்ச்சியிலும் இந்த முறையே அனுசரிக்கப்படுகிறது. தொடர்பில்லாத தகவற் குவியல்களை மனம் கிரகித்துக் கொள்ளமாட்டாது. ஆராய்ச்சியிலே சுருக்கும்தன்மை உண்டு. விபரங்களை ஒதுக்கி, இலேசான கருதுகோள்களையும் விதிகளையும்

[1] இதனைத் தருக்கசாத்திரத்திலே " காகதாலீயநியாயம் " என்பர். இஃது ஓர் ஆபாசம்.

www.padippakam.com



வகுத்து, அவற்றின்மூலம் சேகரித்த தகவல்களிடையே இழையோடியிருக்கும் பொது உண்மையை அறியவேண்டும். தகவல்களை இணைத்து நிற்கும் ஒரு நியதியை அறிந்துகொள்ளவேண்டும். உலகை இருந்தபடி ஆராயு முன்னர், சரியான வினுக்களை நாம் வினவிக் கொள்ளக்கூடியதாயிருக்க வேண்டும். பௌதிகத்துறையிலாயினுஞ் சரி, உயிர்நூற்றுறையிலாயினுஞ் சரி, சமூகவியற்றுறையிலாயினுஞ் சரி, வகுக்கப்பட்ட விதியெல்லாம் விடயத்தை இலேசாக்குவதற்காகப் பிரத்தியட்சநிலையை விகாரப்படுத்துவது இயற்கை. பலவகையான அனுபவபூர்வமான தரவுகளை நல்ல ஒரு விதி விளக்குமானுல், பிரத்தியட்சநிலையிற்காணப்பட்ட விபரங்கள் பல தவிர்க்கப்பட்டாலும் பாதகமில்லை.

விதிக்கும் பிரத்தியட்சமாகக் காண்பவற்றுக்கும் எவ்வித பிணக்கும் கிடையாது. அவ்வாறே உய்த்தறிதலுக்கும் தொகுத்தறிதலுக்கும் பிணக்கில்லை. கவனித்த பிரத்தியட்ச விடயங்களை அறிவதற்கு ஒருவிதி எத்துணைப் பயன்படுகிறதோ அவ்வளவுக்கு அந்தக்கோட்பாடு உண்மையானதாகும். அது தர்க்க ரீதியாக அழகாகவும், நல்லமுறையிலே தொகுக்கப்பட்டதாகவுமிருப்பது வெறும் அலங்காரமே. மாணுக்கன் ஒரு கோட்பாட்டைக் குறித்து "அவையெல்லாம் கோட்பாட்டளவிற்சரிதான், ஆனுல் காரிய முறையிற் சரியில்லை" என்று சொல்வானுனல், பொருத்தமான கோட்பாடுகளோடு அது ஒத்துவரவில்லை என்பதே அவனுடைய கருத்தாகும்.

**முழுவதும் பகுதியும் : "அமைப்புப்போலி"**

பொருளாதாரத்தில் முதல் அறியவேண்டியது, வெளித்தோற்றத்தைக் கண்டு ஒன்றை நிச்சயித்துவிடக்கூடாது என்பதே.

பின்வரும் உண்மைக்கூற்றுக்கள் உதாரணங்களாகும் :

1. விவசாயிகளெல்லாரும் கடினமாக வேலைசெய்ய, இயற்கையும் அவர்களுக்கு ஒத்தாசைசெய்து நல்ல விளைச்சல் உண்டாகுமானுல், விவசாயியின் மொத்த வருமானம் வீழ்ச்சியடையலாம்; வீழ்ச்சியடையவுஞ் செய்யும்.

2. வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்க **ஒருவன்** ஒருவேளை வேலை தேடிப்பெறலாம் அல்லது குறைந்த சம்பளத்துக்கு வேலைசெய்யலாம். ஆனுல் **எல்லாரும்** இவ்வாறு தமது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளமுடியாது.

3. ஒரு கைத்தொழிலின் உற்பத்திப் பொருள்களுக்கு உயர்ந்த விலையிருக்குமானுல் அக்கைத்தொழிலை நடத்துவோருக்கு இலாபமுண்டு. ஆனுல் எல்லாப் பொருள்களுக்கும் ஒரேவீதத்தில் விலை ஏறுமானுல், எவருக்கும் அதனுல் இலாபமுண்டாகாது.

4. இறக்குமதிப்பொருள்கள்மீதுள்ள வரியைக் குறைத்தால், ஐக்கிய அமெரிக்காவுக்கு நன்மையுண்டு. மற்ற நாடுகள் அவ்வாறு செய்ய மறுத்தாலும் பாதகமில்லை.

படிப்பகம்

www.padippakam.com


5. ஏதாவது ஒரு தொழிலை அதன் பூரணச் செலவிலும் மிகக் குறைந்த செலவில் ஏற்றுக்கொள்வதால் ஒரு கம்பனி நன்மையடையலாம்.

6. வியாபாரமந்தமுள்ள காலத்திலே தனிப்பட்டவர்கள் அதிகம் சேமிக்க முயற்சிசெய்வது, சமூகத்தின் மொத்தச் சேமிப்பைப் பாதிக்கும்.

7. தனிப்பட்ட ஒருவருக்கோ தனியொருகம்பனிக்கோ நன்மையாகக் காணப்படும் சில நடவடிக்கை சில சமயம் தேசத்துக்கோ, அரசாங்கத் துக்கோ தீமைதருவதாயிருக்கலாம்.

மேலே காணும் கூற்றுயாவும் உண்மையானவை. ஆனால் வெளித் தோற்றமளவில் முரண்பாடுடையனவாகத் தெரியலாம். இந்த முரண் பாடுகள் இந்நூலில் ஆங்காங்கே தீர்த்துவைக்கப்படும்— மந்திரமோ தந்திரமோ உபயோகப்படுத்தியன்று. உண்மையாகவே சரியானதொன்று, அதைப் பற்றிய காரணகாரியங்களை வகைப்படுத்திப் பார்க்கும்போது நியாய மானதாகவே பொருளாதாரத்திலே தெரியும்.

மேலேகாட்டிய கூற்றுக்களிலே காணும் முரண்பாடுகள் அமைப்புப்போலி யென்னும் ஆபாசத்தைக்கொண்டுள்ளன. தர்க்கநூலார் இந்த ஆபா சத்துக்குப் பின்வருமாறு வரைவிலக்கணங் கூறியுள்ளனர்.

**அமைப்புப்போலி :** ஒரு பொருளின் ஒரு பகுதிக்குப் பொருத்தமான ஒரு விடயத்தை அக்காரணத்தால் மாத்திரமே முழுவதற்கும் பொருத்த மானதெனக் கொள்ளுதல்.

பொருளாதாரத்துறையிலே தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் உண்மையானதாகத்தோன்றும் ஒரு விடயம் சமூகம் முழுவதையும் பொறுத்தவரையிலும் உண்மையாயிருப்பதில்லை. அவ்வாறே எல்லாருக்கும் பொருத்தமான தொன்று தனிப்பட்ட ஒருவருக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். அணிவகுப்பைப் பார்ப்பதற்குக் கூடிநிற்கும் சனத்திரளிலுள்ள எல்லாரும் நுனிக்காலில் நின்று பார்ப்பதானால் ஒருவருக்கும் நன்மை யாயிராது. தனி ஒருவர் அப்படி நின்றுபார்த்தால் ஒருவேளை அவர் நன்றாகப் பார்க்கக்கூடியதாயிருக்கும். பொருளாதாரத்துறையில் இத்தகைய எண் ணற்ற உதாரணங்களைக் கூறலாம். மேலே காட்டிய ஆறு உதாரணங்களையும் ஆராய்ந்து அவற்றில் எவை அமைப்புப்போலியின்பாற்பட்டவை என்பதை அறியலாம், அல்லது புதிய உதாரணங்களைத் தேடிப்பிடிக்கலாம்.

ஆரம்ப ஆராய்ச்சியை இவ்வளவில் நிறுத்தலாம். பொருளாதார சாத்திரத்தை ஏன் கற்கவேண்டும் என்பதற்கு நல்ல பதிலாக, கெயின்ஸ் பிரபு எழுதிய—விவாதத்துக்கு இடமளித்த—பிரமாண நூலிற்[1] கூறப்பட்ட புகழ்பெற்ற கருத்துக்களை எடுத்துக்கூறலாம். பொருளியலறிஞர், அரசியல் தத்துவ அறிஞர் என்போரின் கருத்துக்கள், அவை சரியாயிருந்தாலென்ன பிழையாயிருந்தாலென்ன, மிகச் சக்திவாய்ந்தவை. உலகை ஆள்பவை

[1] ஜோன் மேனுட் கெயின்ஸ் : 'வேலை, வட்டி, பணம் என்பனபற்றிய பொதுக்கொள்கை' (ஹார்கோட், பிரேஸ், நியூயோக் 1936)

4—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com


இக்கருத்துக்களே. அறிவுத் துறைகளாற் பாதிக்கப்படாத காரியவாதிக ளென்று தம்மைக் கருதிக்கொள்வோர்தாமும் பழைய ஒரு பொருளியலறிஞரின் வழக்கிறந்து போன கருத்துக்களுக்கு அடிமையாயிருப்பதைக் காணலாம். அதிகாரத்திலிருக்கும் பைத்தியக்காரர் வானத்தில் சத்தங் கேட்பதாக நினைக்கும் போதெல்லாம், சில வருடங்களுக்கு முன்னுலிருந்த கல்வித்துறை யெழுத்தாளர் ஒருவரின் கருத்துக்களையே வடித்துக்கூறுவதாகக் காணப்படும். கருத்துக்கள் படிப்படியாக மக்களிடம் பரவும் முறை நலவுரிமைக்காரரின் அதிகாரம் பரவும் தன்மையிலும் அதிகம் சக்திவாய்ந்தது. அதுவும் உடனடியாகப் பரவமாட்டாது. கொஞ்சக் காலத்துக்குப் பின்னர்தான். பொருளாதார, அரசியல் துறைகளில் இருபத்தைந்து அல்லது முப்பது வயது கழிந்தவர்கள் புதிய கொள்கைகளினுலே பாதிக்கப்படமாட்டார்கள். எனவே சிவில்சேவையி லுள்ளவர்களும், அரசியல்வாதிகளும், கிளர்ச்சிக்காரருங்கூட நடைமுறை நிகழ்ச்சிகளை விளக்கப் பயன்படுத்தும் கருத்துக்கள் புதியவையல்ல. ஆனுல் நன்மைக்கும் தீமைக்கும் ஏதுவாயிருப்பன நலவுரிமைகளல்ல, கருத்துக்களே என்பதை இன்றே நாளையோ எல்லாரும் அறிந்துகொள்வர்.

**பூர்வ பீடிகை :**

முதலாம் பகுதியில் தற்காலப் பொருளாதார வாழ்வின் மூலாதாரமான தகவல்களையும் தாபனங்களையும் ஆராய்வதற்கு அவசியமான அடிப்படைச் சாதனங்களைப் பற்றிக் கூறுவோம். பின்னர் ஏனைய விடயங்களையெல்லாம் ஒன்றுபடுத்தும்போக்குடைய தேசிய வருமானம் பற்றிக் கூறுவோம்.

இரண்டாம் பகுதியிலே சமவிருத்தி, வியாபாரமந்தம் ஆகியவற்றுக்குரிய காரணம் பற்றி ஆராய்வோம். சேமிப்புமுறையும் முதலீடும் தம்முட் கலந்து பணத்தின் வாங்குஞ் சக்தியை எவ்வாறு நிச்சயப்படுத்துகின்றன, வருவாயை எவ்வாறு நிர்ணயிக்கின்றன, வேலை நிலையை எப்படிப் பாதிக்கின்றன என்பதை ஆராய்வோம். அரசாங்கத்தின் பணக் கொள்கையும் வருமானக் கொள்கையும் எவ்வாறு வியாபாரத்தை நல்ல நிலையிலிருத்தி முன்னேற்றமடையச் செய்யும் என்பதை எடுத்துக் காட்டுவோம்.

மூன்றும் பகுதி போட்டி, ஏகபோக உரிமை என்பவற்றைப்பற்றியது. இவை வழங்கல், தேவை என்பவற்றின்மூலம் தேசிய வருமானத்தின் அமைப்பை எவ்வாறு நிச்சயிக்கின்றன என்பதையும், அவை பொருள், பணி என்ற அடிப்படையில் எவ்வாறு ஆராயப்படுமென்பதையும் எடுத்துக் காட்டும். அத்துடன் இவை விலைகளை எவ்வாறு நிர்ணயிக்கின்றன என்பதும் விளக்கப்படும்.

நாலாம் பகுதி வருமானம், வரி, வட்டி, இலாபங்கள் என்பன எவ்வாறு பகுக்கப்படுகிறதென்பதை ஆராயும்.

சர்வதேச. வியாபாரத்தின் உண்மையான அம்சங்களும் பணத்துறை அம்சங்களும் ஐந்தாம் பகுதியில் ஆராயப்படும்.

படிப்பகம்

www.padippakam.com


ஐந்தாம் பகுதியின் கடைசி அத்தியாயமும், ஆறும் பகுதி முழுவதும் தற்காலப் பொருளாதாரம் சம்பந்தமான முக்கிய பிரச்சினைகளைப் பற்றியன. பின்தங்கும் நாடுகளின் முன்னேற்றம், பொருளாதாரவளர்ச்சி, பண வீக்கத்தைத் தடுத்தல் என்பனபோன்ற பிரச்சினைகள் அவற்றில் ஆராயப்படும். அத்துடன் பலவகைப்பட்ட பொருளாதாரக்கொள்கைகளும், தத்துவங்களும் ஒப்பிட்டு ஆராயப்படும்.

**விவாதிப்பதற்குரிய வினுக்கள் :**

1. 1930 இல் உண்டானது போன்ற வியாபார மந்தமுண்டானுல் நீர் எவ்வாறு பாதிக்கப்படுவீர். (அ) கடுமையாகவா (ஆ) ஓரளவுக்கா (இ) எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டீரா ?

2. முரணில்லாத்திட்டமென ஒன்று இல்லாதபோதிலும் அதைப் பற்றிப் பௌதிக அறிஞர் ஏன் அடிக்கடிபேசிக்கொள்கிறுர்கள் ? இதற்கு என்ன சமாதானம் கூறலாம்.

3. பின்வருஞ் சொற்களில் உள்ள உணர்ச்சிப் பண்பைப்பற்றி ஆராய்க : அணிப்பயிற்சி, திட்டமிடல், வட்டித்தொழில், ஏகபோக உரிமையாளர், சூதாட்டம், ஊகவியாபாரம், அமெரிக்கப்பண்பாடு, சுதந்திரமானமுயற்சி, பொருள்கள், சிக்கனம், பதுக்கல்.

4. அமைப்புப்போலி, காகதாலீயநியாயம் என்பவற்றுக்கு உதாரணந் தருக.

5. இந்த அத்தியாயத்தின் முதற்பகுதியிலுள்ள இருபது பிரச்சினைகளையும் சேர்த்துப் பொருளாதாரத்துக்கு வரைவிலக்கணம் கூறமுடியுமா ?

6. "அஃதெல்லாம் கொள்கையளவிலே சரிதான். ஆனுல் காரிய சாத்தியமாகாது" என்ற கூற்றை நிரூபிக்க ஓர் உதாரணந்தருக. இக்கூற்று அர்த்தமற்றமுறையில் நிகழக்கூடியதொரு சந்தர்ப்பம் கூறுக.

7. பொருளாதாரக் கல்வியால் உங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மையைப் பற்றி இரண்டு பந்தி எழுதுக. ஒரு தவணைக்குப்பின் உண்மையில் நீங்கள் பெற்ற பயனை நீங்கள் எதிர்பார்த்ததோடு ஒத்துப்பார்ப்பதற்காக இப்பந்தியை வைத்துக்கொள்ளுங்கள்.

8. பின்வரும் கருத்துக்களைப்பற்றி நீர் விளங்கியவற்றை இப்போது திருப்பி ஆராய்ந்து பார்க்க.

பொருளாதாரப் பயிற்சியும் மற்றப் பயிற்சிகளும்
சொற்களின் கொடுமை.
ஆராய்ச்சியும் கொள்கையும்
செய்முறையும் அறிமுறையும்
பற்றினுல் பிறந்த ஆராய்ச்சி.
சூழ்நிலையை உண்டாக்கிச் செய்யும் பரிசோதனை
அமைப்புப்போலி
காகதாலீயநியாயம்

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாம் அத்தியாயம்

## பொருளாதாரச் சமூகத்தின் முக்கிய பிரச்சினைகள்

நிலத்துப்பயனை நிறையப்பெறுவதற்கு
களத்தில் தொழிலாளர் உழைப்பதிகம்தேவை
அதனால் உணவுப்பொருள் விளைச்சல் ஒன்று இரண்டுமூன்றென்றுபெருகும்
குடிசனத்தொகையோ ஒன்று, இரண்டுநாலென்று பெருகும்.
—மல்தஸ்பாட்டு. குறைந்துசெல்விளைவுவிதிபற்றிய ஒரு பாடல்.

—பாடினவர் பெயர் தெரியாது.

எந்தச்சமூகத்தின் அடிப்படையிலும் பொதுப்படையான சில பொருளாதாரநிலைகளைக் காணலாம். ஹோமர், சீசர் என்போர் காலத்திலே எவ்வாறிருந்தனவோ அவ்வாறே இக்காலப்பொருளாதாரத்துக்கும் சில பின்னணிப் பிரச்சினைகள் உண்டு. வருங்காலத்துக்கும் அவை அவ்வாறே பொருத்தமுடையனவாயிருக்கும்.

இந்தப்பொதுப்படையான நிலைகளெவையென்பதை இந்த அத்தியாயத்திலே கவனிப்போம்.

(அ) பொருளாதார அமைப்புச்சம்பந்தமான மூன்று அடிப்படையான பிரச்சினைகளை ஒவ்வொரு சமூகமும் சமாளிக்கவேண்டும்.

(ஆ) ஒரு சமூகத்துக்குக் கிடைக்கக்கூடிய பொருள், பணி என்பவற்றில் எவ்வளவை அச்சமூகம் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பதை நுண்தொழில் அறிவும், குறிப்பிட்ட ஓரளவு நிலம், தொழில், மூலதனம் என்பனவுமே நிச்சயிக்கும். இந்த உற்பத்திச்சாதனங்கள்கூட மாறும் செலவினங்களினுலும், குறைந்து செல்விளைவு விதியினுலும் பாதிக்கப்படும்.

(இ) எந்தப்பொருளாதாரமும், ஒரு சமூகத்தின் குடிசனஅடிப்படையினுலும் அல்லது மானிட அமிசத்தினுலும் பாதிக்கப்படும்.

இந்தவிடயங்கள் இவ்வத்தியாயத்திலே மூன்று ஆதிகாரணங்களாக ஆராயப்படுகின்றன. மூன்ரும் அத்தியாயத்திலே தனியார் அமிசம், அரசாங்க அமிசம் என்ற இருவகை முயற்சி அமிசங்களும் கலந்துள்ள நமது பொருளாதாரத்தின் விசேடத்தன்மைகளைப் பற்றி ஆராய்வாம்.

### அ. பொருளாதார அமைப்பு

பொதுவுடைமைச் சமூகமென்ருலென்ன, தெற்குக் கடற்றீவுகளிலுள்ள ஆதிக்குடிகளென்ருலென்ன, முதலாளிவர்க்கத்தின் தொழில் நிறைவுடைய தேசமென்ருலென்ன, சுவிற்சலாந்தில் உள்ள ரொபின்சன் அல்லது ரொபின்சன் குருசோவென்ருலென்ன—அல்லது—ஒரு கூட்டம் தேனீக்களென்றே வைத்துக்கொண்டாலென்ன, அவை மூலாதாரமான,



படிப்பகம்

www.padippakam.com



பரஸ்பரம் சார்புடைய மூன்று பொருளாதாரப் பிரச்சினைகளை எப்படியாவது சமாளிக்கவேண்டியிருக்கும்.

(1) என்னபொருள்களை என்ன தொகையில் உற்பத்திசெய்யவேண்டும் ? அதாவது மாற்றுப்பொருள், சேவை என்பவற்றிலே எவற்றை எவ்வளவு தொகையில் உற்பத்திசெய்யவேண்டும்.

(2) பொருள்கள் எவ்வாறு உற்பத்திசெய்யப்படும்–அதாவது யார், என்ன வளங்களைக்கொண்டு, என்னதொழில்நுட்பமுறையில் அவற்றை உற்பத்திசெய்ய வேண்டும் ?

(3) யாருடைய உபயோகத்துக்கு உற்பத்திசெய்யப்படும் ? அதாவது வழங்கப்பட்டபொருள்கள் சேவைகள் என்பவற்றை யார் நுகர்ந்து பயன்பெறவேண்டும் ? வேறொருவகையிலே கூறுவதானால், தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் பல்வேறு தனிப்பட்டமக்களிடையிலும் குடும்பங்களிடையிலும் எவ்வாறு விநியோகஞ் செய்யப்படவேண்டும் ?

எந்தவகையான பொருளாதாரத்துக்கும் இம்மூன்று விடயங்களும் அடிப்படையானவை. ஆனால் வெவ்வேறு பொருளாதாரமுறைகள் இவற்றை வெவ்வேறு வகையாகச் சமாளிக்கும். புராதனமுறையிலுள்ள சமுதாயத்திலே அவர்களுடைய புராதனப் பழக்கவழக்கங்களின்படியே எல்லாம் நடைபெறும். பழக்கவழக்கம்பற்றி வந்த முறைப்படியே எதை, எப்படி, யாருக்கு உற்பத்திசெய்வதென்ற பிரச்சினை தீர்மானிக்கப்படும். வேறுவகையான பண்பாட்டையுடையவர்களுக்கு இவர்களுடைய பழக்கவழக்கங்கள் நூதனமாகவும், நியாயமற்றவையாகவுமிருக்கும். இக்காலப் பண்பாடுகளை இந்தப் புராதன இனத்தவர் அறிந்திருந்தபோதிலும், அவர்கள் பழைய் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதற்குரிய காரணத்தைக் கேட்டால், அதிசயமடைவர். சிலசமயம் மனத்தாங்கலுமுறுவர். உதாரணமாக குவாக்கியூடில் இந்தியர் பணத்தைச் சேமித்து வைக்க வேண்டுமென விரும்பவில்லை. பொட்லாஷ் என்ற களியாட்டத்தில் செலவுசெய்துவிடவேண்டுமென்பதே அவர்களுடைய கொள்கை. பணத்தைச் சேகரித்து வைக்கமுயலுதல் மனித இயற்கை. ஆனால் இந்தவகையான நூதனமான கொள்கை மானிடஇயல் ஆராய்ச்சியாளர்க்கு ஆச்சரியத்தைக் கொடுக்கமாட்டாது. ஏனெனில் ஒரு சாதியாரிடையே நல்லொழுக்கமெனக் கருதப்பட்டதை மற்றொரு சாதியார் பெரிய பழிபாதகமாகக் கொள்வது அவர்கள் ஆராய்ச்சியில் அறிந்ததொன்றே.

தேனீக்கள் விடயத்தில் மேலேகூறிய மூன்று பிரச்சினைகளும், தொழிற் பகுப்பு சம்பந்தமான கூட்டுறவுமுறை சார்ந்த பிரச்சினைகளும்கூட, தாமாகவே, உயிரினத்து இயல்பூக்கமென்ற விதியின்படி தீர்ந்துவிடுகின்றன.

சிலசந்தர்ப்பங்களிலே எதனை, எப்படி, யாருக்கு உற்பத்தி செய்யவேண்டுமென்ற விடயங்களைச் சர்வாதிகாரியொருவன் தான்தோன்றித் தனமாகத் தீர்த்துவைப்பதுமுண்டு. அவன் நன்மை பயப்பவனாகவோ,

www.padippakam.com



தீமை பயப்பவனுகவோ இருக்கலாம். தான் நினைத்தபடி சட்டம்செய்து விடயத்தை முடித்துவிடுகிருன். சில சந்தர்ப்பங்களிலே சனநாயகமுறைப்படி தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாற் சட்டஞ்செய்யப்படுகிறது. இவ்வாறு கூறுவதிலும் பார்க்க, பிரதிநிதிகள்சபையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட குழுவோ, திட்டமிடுங்குழுவோ சட்டங்களை அமைத்துவிடுகிறது. பொரு ளாதார முடிபுகள் பலதிறப்பட்டனவாகவும், சிக்கலுடையனவாகவுமிருப் பதால், இத்தகைய பொறுக்குக் குழுவினுற் சட்டஞ்செய்யப்படுகிறது.

"முதலாட்சிச் சுதந்திரமுயற்சியாளர் பொருளாதாரத்திலே" விலைத் திட்டங்களே—அதாவது சந்தைகள், இலாபங்கள், நட்டங்கள் என்பனவே—எதை உற்பத்திசெய்யவேண்டும், எவ்வாறு செய்யவேண்டும் யாருக்குச் செய்யவேண்டும் என்பவற்றைப் பிரதானமாக[1] நிச்சயிக்க உதவும். இவ்விடயம் மூன்றும் அத்தியாயத்திலே விரிவாக விளக்கப்படுகிறது.

**அருந்தல்விதி :**

கிடைக்கக்கூடிய வளங்கள் எல்லையின்றிப் பெருகுமானுல் எதனை உற் பத்திசெய்யவேண்டும், எவ்வாறுசெய்யவேண்டும், யாருக்குச் செய்யவேண்டு மென்பதெல்லாம் பிரச்சினையாகத் தோன்ரு. எல்லாப் பொருள்களும் எல்லையின்றி உற்பத்திசெய்யப்பட்டால், அல்லது மக்களுடைய தேவைகள் முழுவதும் திருத்திசெய்யப்பட்டால், குறித்ததொரு பொருள் அதிகமாக உற்பத்திசெய்யப்பட்டாலும் பாதகமில்லை. புத்திக்குறைவாக வேலை, சாதனம் என்பவற்றைப் பயன்படுத்தினுலும் பாதகமில்லை. ஒருபொருள் எல்லார்க்கும் தேவையான அளவு கிடைக்கக் கூடியதாயிருப்பதால், பலவகையான மக்களிடையிலும் குடும்பத்தவரிடையிலும் பொருள்களும், வருமானங்களும் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி அக்கறை கொள்ளவேண்டியதில்லை.

அப்படியானுல், பொருளாதாரப் பொருள் என ஒன்று இல்லாமற் போய்விடும்; அதாவது அருந்தலான பொருள் இல்லையென்ருகிறது. எனவே பொருளாதாரத்தைப்பற்றிப் படிக்கவேண்டியதில்லை. சிக்கனம்பண் ணவேண்டியதுமில்லை. காற்றைப்போல எல்லாப் பொருள்களும் இலவசமாகக் கிடைக்கும். "இரண்டில் எது வேண்டும்?" என்று கேட்டால் 'இரண்டும்' என்று விடைகூறமுடியாது. பாடசாலைச் சிறுவர்கூட இதை அறிவர். பின்தங்கிய நாடுகளோடு ஒத்துப்பார்க்கும்பொழுதோ கடந்துபோன நூற்ருண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுதோ இக்காலக் கைத்தொழிற் சமூகங்கள் அதிக செல்வச்சிறப்புடையனவாய்க் காணப்படுகின்றன. அதிக உற்பத்தி அதிக நுகர்ச்சியை உண்டாக்குகிறது. மக்கள் தமக்கு நீராவி வெப்பமும் குளிர்ப்பெட்டியும் வேண்டுமென உணர்வதோடு, "தேவை" யெனவும் எண்ணுகிருர்கள். கல்வி, சினிமா, வானொலி, டெலிவிஷன்,

[1] நூற்றுக்குநூறு தானுகவே செயற்படும் முயற்சியாளர்முறை எந்தக் காலத்திலுமிருந்த தில்லை. நமது முதலாட்சி முறையிற்கூட விலைவாசிகளை மட்டுப்படுத்த அரசாங்கத்துக்குக் கடமையுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



புத்தகம், கார், பிரயாணம், சங்கீதம், நல்ல ஆடை என்பனவற்றையும் அவ்வாறே தேவையென எண்ணுகின்றனர். சில சதம் செலவுசெய்து மெல்லிய கூழ்காய்ச்சிக் குடித்துக்கொண்டே சுகமாக உயிர்வாழலாம் என்று உயிர் நூலாராய்ச்சியாளர் கூறலாம்[1]; இந்நிலை அவர்களை அதிசயமடையச் செய்வதற்கில்லை. மனிதனுடைய உடம்பிலேயுள்ள இரசாயனப்பொருள்கள் இரண்டு டொலருக்குமேல் மதிப்புடையனவல்ல என்ற உண்மையும் அத்தகையதே. மனிதனுடைய உடலைச் சுகமாக வைத்திருப் பதற்குத் தேவையான குறைந்தபட்ச உணவும், உடையும், வீட்டுவசதியும், அதிகமென்று சொல்வதற்கில்லை. ஆனல் குடும்பவரவு செலவுக்கணக்கிலே அத்தியாவசியத் தேவைகளெனக் குறிக்கப்படுபவற்றுக்கும் அந்தக் குறைந்த பட்சத் தேவைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இன்று அமெரிக்கர் பெரும்பாலும் உடற்றேவைகளுக்கு மேலதிகமாகவே தேவைகளையுண்டாக்கிக்கொண்டனர் என்று உறார்வாட் சர்வகலாசாலைப் பேராசிரியர் கல்பிரேய்த் செல்வம்கொழிக்கும் சமுதாயம்[2] என்ற தமது நூலிலே அழகாக எடுத்துக்கூறியிருக்கிறர். நாகரிகக் கோலத்தினலும், விளம்பரஞ்செய்வோருடைய சாதுரியத்தினலும் நுகர்வோர் ஒரு பொருளை விட்டு மற்றெரு பொருளை அதிகம் விரும்புகின்றனர். உண்மையாகவே தனவந்தராயுள்ளோரின் உயர்நிலையிலிருந்து அனுபவிக்காவிட்டாலும் சாதாரணமான சுகவாழ்வு நடத்தும் ஒரு வைத்தியர், சட்ட அறிஞர், பேராசிரியர், விளம்பரகாரர் என்பவர்களைப்போலச் சீவியகாலம் முழுவதும் வாழ்வுநடத்துவதற்கு நமது மொத்த உற்பத்தி இப்போதிருப்பதிலும் பலமடங்கு அதிகரிக்கவேண்டுமென்பதை எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட மக்களுக்காகவன்றிப் பொதுமக்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு அதிகம் பணம் செலவுசெய்யவேண்டுமென்பதே கல்பிரேய்த் கூறும் வாதம். அதை நாம் ஆட்சேபிக்கவிரும்பவில்லை.

இப்போது செலவு செய்வதிலும் இரண்டு பங்கை அதிகமாகச் செல்வு செய்ய மக்கள் விரும்புவார்களென்பது உண்மையோ இல்லையோ, கிராம வாசிகள் இப்போது மேலதிகமான வருமானத்தைப் பெறும் நோக்கத்துடன் மேலதிகமாக வேலை செய்கிறர்கள்; வரியை உயர்த்தினல் ஆட்சேபிக் கிறர்கள். 1900 இல் எவ்வளவு பணத்தைச் சேமித்தார்களோ அதே அளவு பணமே இன்றும் சேமிக்கப்படுகிறது. மத்திய வகுப்பைச் சேர்ந்த தாய்மார் தமது தாய்மாரிலும் கடுமையாக வேலை செய்கிறர்கள். தேசீய வருமானத்தை ஒவ்வோர் ஆண், பெண் குழந்தையென்போருக்குச் சரிவரப் பகிர்ந்து கொடுத்தாலும் தலைக்கு ஒருவாரத்துக்கு 45 டொலரே கிடைக்கும்.

[1] 137 ஆம் பக்கத்திலே எடுத்துக் காட்டப்பட்ட ஆராய்ச்சியின்படி, 1961 ஆம் ஆண்டில் ஒருவாலிபனுக்குச் சத்துள்ள நல்ல உணவைப்பெற ஒருவருடத்துக்கு 100 டொலர் மாத்திரம் செலவு செய்யவேண்டிவரும். இந்த உணவு எப்படிப்பட்டது? கீரை, கோதுமை, மாமிச ஈரல் என்பனவே அதில்அடங்கும்.

[2] ஜோன் கென்னெத் கல்பிரேய்த் எழுதிய The Affluent Society என்ற நூல்.

www.padippakam.com



அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடாகிவிட்டதென்பதில் உள்ள உண்மையைப் பொருளாதார சாத்திரம் ஏற்றுக்கொண்டாலும், அருந்தல் என்ற அடிப்படைக் கொள்கையை அது புறக்கணிப்பதற்கில்லை.

## ஆ. எந்தச் சமூகத்துக்கும் தேவையான தொழில்நுட்பத் தெரிவு

**சமூகத்தின் உற்பத்தித் தகைமை அல்லது மாற்றக் கோடு**

பலவகையான பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்கள் எல்லாம் எல்லைக்குட்பட்டிருப்பதால், ஒப்பீட்டளவில் அருந்தலா யுள்ள பொருள்களிடையே தெரிவுசெய்யவேண்டிய அவசியமுண்டா கிறது. இந்த அடிப்படைப் பொருளாதார உண்மையைப்பற்றி மேலே ஆராய்ந்தோம். இதனைத் தொகையளவிலே எண்கணித உதாரணங்களால் எடுத்துக்காட்டலாம். அவ்வாறே கேத்திரகணிதப் படங்களாலும் விளக்க லாம். பொருளாதாரத்தின் பல பிரிவுகளை விளக்குவதற்குப் படங்களும் புள்ளிக் கோடுகளும் அவசியம் என்பதை மாணுக்கர் அறிந்துள்ளனர். ஆரம்பத்திலே இவற்றைச்சற்றே கருத்தோடு விளங்கிக் கொண்டால், பின்னர் அதனுற் பலமடங்கு பலனுண்டாகும்.

குறிப்பிட்ட தொகையுள்ள மக்களையும், குறிப்பிட்ட தொழில் நுட்ப அறிவையும், குறிப்பிட்ட அளவு கைத்தொழில் நிலையங்களையும் எந்திரங் களையும், குறித்த அளவு நிலம், நீர்ச்சக்தி, இயற்கை வளம் என்பவற்றை யும் உடையதொரு பொருளாதாரத்தை ஆராய்வாம். எதை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை நிச்சயிப்பதற்கு, முதலில் இந்த வளங்களை எவ்வாறு ஆயிரக்கணக்கான வகைப்பொருள்களை உற்பத்திசெய்யப் பிரித்துக் கொடுக்கலாம் என்பதைத் தீர்மானித்துவிடவேண்டும். கோதுமைச் செய் கைக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்படவேண்டும் ? எவ்வளவு மேய்ச்சல் நிலத்துக்கு ஒதுக்கவேண்டும் ? எத்தனை கைத்தொழிற்சாலைகளை ஊசி செய்வதற்கு ஒதுக்கவேண்டும் ? எந்திரத்தொழிற்சாலைகளுக்கு எத்தனை தொழில்நிபுணர்களை ஒதுக்கவேண்டும் ?

விவாதிப்பதற்கே இப்பிரச்சினைகள் சிக்கலானவை. அப்போது அவற்றை எவ்வாறு தீர்ப்பது? ஆனபடியால் விடயத்தை இலேசாக்கவேண்டும். எனவே இரண்டேயிரண்டு பொருளாதாரப் பொருள்களை—அதாவது இரண்டுவகை யான பொருளாதாரப் பொருள்களையே—உற்பத்திசெய்யப்போகிறேம் என்று வைத்துக்கொள்வோம். அவற்றைத் துப்பாக்கியும், வெண்ணெயுமென்று வைத்துக் கொள்வோம். சிவில் பொருள், யுத்தப் பொருள் என்ற வித்தி யாசத்தைக் காட்டுவதற்காகவே இவ்விரண்டு பொருள்களும் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன.

www.padippakam.com



**அருந்தலான வளங்களை முற்றுகப் பயன்படுத்துவதென்றல் துப்பாக்கி அதிகம் தேவையா, வெண்ணெய் அதிகம் தேவையா என்பதைத் தெரிவுசெய்யவேண்டும்.**

அட்டவணை 1. வெண்ணெய், துப்பாக்கி என்பவற்றின உற்பத்தி சம்பந்தமாக உண்டாகக் கூடிய மாற்று நிலைகள். வெண்ணெய் உற்பத்திக்கு உதவும் பொருளாதார வளங்களைத் துப்பாக்கி உற்பத்திக்கென ஒதுச்கிவிடலாம். இதனுல் வெண்ணெய்க்குப் பதிலாகத் துப்பாக்கிகள் கிடைக்கும்.

| சாத்தியக் கூறுகள் | துப்பாக்கி ஆயிரக் கணக்கில் | வெண்ணெய் பத்துலட்சம் இருத்தற் கணக்கில் |
|---|---|---|
| A | 15 | 0 |
| B | 14 | 1 |
| C | 12 | 2 |
| D | 9 | 3 |
| E | 5 | 4 |
| F | 0 | 5 |

ஆனுல் இந்த ஆய்வு, எந்தப் பொருளைத் தேர்ந்தெடுத்தாலும் அதற்குப் பொருந்தும். அதாவது, அரசாங்கம் வீதிகளை அமைப்பதற்கு எவ்வளவு அதிகமாக வளங்களைப் பயன்படுத்துகிறதோ அவ்வளவுக்குத் தனிப்பட்டவர்கள் வீடு கட்டும் வாய்ப்புக்கள் குறையும். பொதுமக்கள் எவ்வளவுக்கு உணவை அதிகம் உட்கொள்ளவிரும்புகிருர்களோ அவ்வளவுக்கு உடை குறையும். எவ்வளவுக்கு அதிகமாகஇன்றைக்கு உணவை நுகர விரும்புகிருர்களோ, அடுத்த ஆண்டுக்கும் அதையடுத்த பத்து வருடங்களுக்கும் நுகர்பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய எந்திரங்கள், முதற் கருவிப்பொருள்கள் என்பவற்றை உண்டாக்க முடியாதிருக்கும்.

துப்பாக்கி, வெண்ணெய் என எடுத்துக்கொண்ட உதாரணத்தைக் கவனிப்போம். கைவசமுள்ள சாதனங்களையெல்லாம் சிவில் பொருள்களை (வெண்ணெய்) உற்பத்திசெய்யப் பயன்படுத்துகிரேமென்று வைத்துக்கொள்வோம். அப்படியிருந்தாலும், நாட்டின் தேவையை நிரப்ப உயர்ந்தபட்சமான அளவு வெண்ணெய் மேலும் உற்பத்திசெய்யப்பட வேண்டியிருக்கும். எவ்வளவு வெண்ணெய் மேலும் தேவைப்படுமென்பது குறிப்பிட்ட பொருளாதாரச் சாதனங்களின் தன்மை, அளவு என்பவற்றையும், அவை எவ்வளவுதூரம் தொழில் நுட்பத்திறமையோடு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் பொறுத்ததாகும். நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திஞல் 50 இலட்சம் இருத்தல் வெண்ணெய் மாத்திரமே உற்பத்திசெய்யலாமென்று வைத்துக்கொள்வோம்.

மற்றவகையில் பார்க்கலாம். நாட்டின் சாதனவளத்தில் நூறு வீதமும் துப்பாக்கி செய்வதற்கே பயன்படுத்தப்பட்டதென வைத்துக்கொள்வோம். ஆயின், தேவையான துப்பாக்கியில் ஒரு பகுதியையே உற்பத்தி செய்யலாம்; அதாவது குறிப்பிட்ட ஒருவகையைச் சேர்ந்த 15,000 துப்பாக்கிகளையே

படிப்பகம்

www.padippakam.com




உற்பத்தி செய்யலாம். அதுவும் வெண்ணெய் உற்பத்தியை முற்றாக நிறுத்தி விட்டே துப்பாக்கிகளைச் செய்யலாம்.

இவ்வுதாரணங்கள் தீவிரமான நிலையை—அதாவது அசாதாரண நிலையை—காட்டும் உதாரணங்களாகும். இவற்றுக்கிடையே பலவகையான சாத்தியக்கூறுகளுண்டு. ஓரளவு வெண்ணெய் உற்பத்தியை விட்டுக்கொடுத்தால், சில மேலதிகமான துப்பாக்கிகளை உற்பத்தி செய்யலாம். வெண்ணெய் உற்பத்தியில் மேலும் ஓரளவைவிட்டுக்கொடுத்தால் மேலும் துப்பாகிகளைக் கூடுதலாக உற்பத்தி செய்யலாம். அட்டவணை 1 இல் இத்தகைய சாத்தியக் கூறுகளின் அட்டவணையொன்று தரப்பட்டுள்ளது. F என்பதில் முற்றாக வெண்ணெய் உற்பத்தி நடைபெறுகிறது. துப்பாக்கி இல்லை. அதற்குமாறாக A என்பதில் முற்றாகத் துப்பாக்கி உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றுக்கிடையிலே E, D, C, B, என்பவற்றில் துப்பாக்கி உற்பத்திக்குப் பதிலாக வெண்ணெய் உற்பத்தியை மேன் மேலும் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. வெண்ணெய் துப்பாக்கியாக மாறுகிறது. அதாவது வெண்ணெயை உற்பத்திசெய்வதற்கு உபயோகப்படும் சாதனங்கள் துப்பாக்கி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

**அட்டவணை 1 ஐக் கீழேயுள்ள படத்தின்மூலம் விளக்கலாம்**

**இதைப் படமூலம் பின்வருமாறு காட்டலாம் :**




படம் 1. எவ்வளவு வெண்ணெய் கைவிடப்படுகிறதோ அந்த அளவுக்குத் துப்பாக்கி செய்யப்படுகிறது. தியாகஞ்செய்யும் வெண்ணெயின் செலவைக் கொண்டு மேலதிகத் துப்பாக்கியின் உற்பத்திச் செலவைக் கணிக்கலாம்.

இந்த உற்பத்திச் சாத்தியக்கூறுகள் அதாவது உற்பத்தியின் உருமாற்ற அட்டவணையை மற்றொருவகையாக விளக்கலாம். அதாவது இரண்டாம் படத்திற் கண்டபடி வெண்ணெயின் அளவை கிடைஅச்சில் அளவிடலாம். துப்பாக்கித் தொகையை நிலைக்குத்து அச்சில் அளக்கலாம்.

www.padippakam.com



தொகையைக் காட்டும் இந்தப் படத்தை இனி விட்டுவிட்டுக் கடைசிப் படத்தை ஆராயலாம். எப் என்ற புள்ளியை அடைவதற்கு 5 வெண்ணெய் அலகை வலப்பக்கமாக எண்ணி O துப்பாக்கி அலகை மேலே எண்ணுக. ஈ யை அடைவதற்கு வலப்பக்கமாக நாலு வெண்ணெய் அலகை எண்ணி மேலே 5 துப்பாக்கி அலகை எண்ணுக. ஏ யை அடைய O வெண்ணெய் அலகை வலப் பக்கமாக எண்ணி மேலே 15 துப்பாக்கி அலகை எண்ணுக.

இடையேயுள்ள புள்ளி நிலைகளை நிரப்பினால் படம் 3 இல் உள்ள உற்பத்தித் தகைமைக் கோட்டிற் கண்டபடி பத்துலட்சம் வெண்ணெய், ஆயிரம் துப்பாக்கி என்பவற்றின் சினைகள் சம்பந்தப்பட்டவற்றைக் கூடக் கண்டு விடலாம்.

இந்தக்கோட்டிலே இந்த அடிப்படைக் கொள்கையைக் காணலாம் : பூரண வேலைப்பொருளாதாரத்தில் ஒரு பொருளை உற்பத்திசெய்வதானால் மற்றொரு பொருளின் உற்பத்தியில் ஒரு பகுதியை விடுக்கவேண்டும். ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தும் சாதனங்களில் ஒரு பகுதியையாவது வேறொரு பொருளை உற்பத்திசெய்யப் பயன்படுத்தலாம் என்ற கொள்கையை இது உள்ளடக்கியிருக்கிறது. உதாரணமாக உருக்கைத் துப்பாக்கி செய்யவும் பயன்படுத்தலாம் ; விவசாய இயந்திரங்கள் செய்வதன் மூலம் வெண்ணெய் உற்பத்திசெய்யவும் பயன்படுத்தலாம்.

பூரணவேலைப் பொருளாதாரத்தில் ஒரு பொருளுக்குப் பதிலாக வேறொரு பொருளை ஏற்றுக்கொள்வது மிக முக்கியமானதொரு விதியாகும். இவ்வாறு சமூகம் தராதரமறிந்து பொருள்களைத் தெரிந்தெடுக்கும் தன்மையையே உற்பத்தித் தகைமைக்கோடு (இதனைத் திரிதல் எனலாம்) காட்டுகிறது.

ஆனால் உற்பத்திச் சாதனங்களை அரைகுறையாகப் பயன்படுத்தினால் என்ன ஆகும் ? அதாவது மக்கள் வேலையில்லாமலும், நிலம் செய்கை பண்ணப்படாமலும், தொழிற்சாலைகள் மூடியுமிருந்தால் எப்படியிருக்கும்? அந்தச் சந்தர்ப்பங்களில் பொருளாதாரவிதியும் மாறிவிடும் என்பதை முன்னரே கூறியுள்ளோம்.


வேலையில்லாத் திண்டாட்டத்தில் நாம் உற்பத்தித் தகைமைக் கோட்டில் இருப்பதில்லை. அதற்குப் பதில் அக்கோட்டிற்கு உள்ளே ஏதோ ஓரிடத்தில் இருக்கிறோம். U என்ற இடத்திலென்று வைத்துக்கொள்வோம். இங்கே 20 லட்சம் வெண்ணெயும் நாலாயிரம் துப்பாக்கிகளுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்திச்சாதனங்கள் வேலையின்றிக் கிடந்தால் அவற்றைத் தொழிற்படுத்தி அதிக வெண்ணெயையும் அதிக துப்பாக்கிகளையும் உற்பத்திசெய்யலாம். எனவே " U " விலிருந்து " D " என்பதற்கோ, " E " என்பதற்கோ நகர்வதால் அதிக வெண்ணெயையும் அதிக துப்பாக்கியையும் உற்பத்திசெய்யலாம்.

படிப்பகம்

www.padippakam.com



**அல்லது வரைப்படத்தாளிலே புள்ளிகளைக் கணித்து வரைப்படமாகவும் காட்டலாம்.**




**படம் 2.** அட்டவணை 1 இலிருந்து கிடைத்த இலக்கங்களைச்சேர்த்து, கவனமாக ஒழுங்கு செய்யப்பெற்ற வெண்ணெய்–துப்பாக்கி உற்பத்தியைக் காட்டும்படம். B இற்கும் C இற்குமிடையில் உள்ளபுள்ளி எங்கேவிழும் என்பதை ஊகிக்க. பின்னர் அந்த இலக்கங்களை அட்டவணை 1 இல் பென்சிலாற் குறிப்பிடுக.

ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி, ரூஷியா ஆகிய மூன்று நாடுகளின் வேறுபட்ட யுத்தகால அனுபவங்களைப்பற்றிய முக்கியமான விடயங்களை இது விளக்கக்கூடியதாயிருக்கிறது. 1940 இன் பின்னர் ஐக்கிய அமெரிக்கா சனநாயகத்தின் கருவூலமாயிருந்துகொண்டு முன்னரில்லாத அளவு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடியதாயிருந்தது. அஃது எங்ஙனம் ? நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கியதாலேதான் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடிந்தது. ஆனால் 1933 இலே விவகாரர்தியாகப் பிரகடனஞ்செய்யாமலே ஹிட்லர் யுத்தமுயற்சிகளை ஆரம்பித்தார். அக்காலத்தில் ஜெர்மனியில் வேலையில்லாத்திண்டாட்டம் தாண்டவமாடிற்று. அந்த நிலையை ஹிட்லர் பயன்படுத்தி, சனங்களின் வாக்குகளைப் பெற்று, சமாதானமான முறையிலே அதிகாரத்துக்கு வந்தார். நாட்டிலே வேலையின்றியிருந்த தொழிலாளரை வேலையிலமர்த்திச் சோம்பிக்கிடந்த யந்திரங்களை மறுபடியும் ஓடச் செய்து ஜெர்மன் இராணுவத்துக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தார். நுகர்வோர்க்குத் தேவையான பொருள்கள் உற்பத்திசெய்யப்படவில்லை. இரண்டாவது உலக மகாயுத்தத்திலே ரூஷியா நடந்துகொண்ட முறையை மூன்றாவது உதாரணமாகக் காட்டலாம். மகாயுத்தத்துக்கு முன்னர் ரூஷியாவிலே வேலையில்லாத்திண்டாட்டமென்பது சிறிதளவாகவேயிருந்தது. உற்பத்தித்தகைமைக்கோட்டிலே அதமநிலையிலேதானிருந்தது. யுத்தப்பொருள்களுக்குப் பதிற்பொருளாக குடிமக்களுக்குத் தேவையான பொருள்களையே அது உற்பத்தி செய்ய வேண்டியேற்பட்டது. அதன்பயனாக ரூஷியர் ஒறுத்தலுக்கு ஆளானார்கள்.

உற்பத்தித்தகவுக்கோடு (1) மூலப்பொருள்களின் நிலையான கூட்டுத் தொகையையும், (2) கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப அறிவையுங்கொண்டே நிச்சயிக்கப்படுகிறதென்பதை எடுத்துக்கூறுவதற்கு இரண்டு விளக்கள் துணைபுரியும். வருடாவருடம் சனத்தொகையும், தொழிலாளர் தொகையும் கூடிக்கொண்டே வந்தால் உற்பத்தித்தகவுக் கோட்டுக்கு என்ன


நடக்கும் ? இரண்டாவது கேள்வி, விஞ்ஞானிகளும், பொறியியலறிஞரும், துப்பாக்கியும் வெண்ணெயும் உற்பத்திசெய்யச் சிறப்பான முறைகளைக் கண்டு பிடித்தால் அந்தக்கோட்டுக்கு என்ன நடக்கும் ? இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் உற்பத்தித்தகவுக்கோடு வெளிப்புறமாக நகரும். கூடிய அளவு வெண்ணெயும், கூடிய தொகை துப்பாக்கியும் உற்பத்தியாகும். கடந்த சில நூற்றுண்டுகளின் பொருளாதாரச் சரித்திரம் இதனை உறுதிப்படுத்தும். உற்பத்திப் பெருக்கத்தைக் காட்டக்கூடியவாறு மூன்றும் படத்திலே புதியதொரு கோட்டைப் பென்சிலால் கீறுக.

அல்லது உற்பத்தியின் சாத்தியக்கூறுகளைக்காட்ட ஓர் ஒப்பமான வளைகோட்டைக் கீறலாம்.

**செலவு அதிகரித்தல் :** எங்களுடைய உற்பத்தித் தகைமைக் கோடு வலமாகக் கீழே சரிகிறது. அதாவது வடமேற்கிலிருந்து தென்கிழக்காகச் சரிகிறது. இதன் அர்த்தமென்ன வென்றால், தெரிவுசெய்யும்போது, பூரண வேலை வசதியின் கீழ் பொருள்களை மாற்றவும் சிலவற்றைக் கைவிடவும் வேண்டுமென்பதே.

வளைகோடு வெளிப்புடைத்து, அதாவது மேலிருந்து பார்க்கும்போது குவிவாயிருப்பதால், இதில் முக்கியமான மற்றொரு பொருளாதாரக் கொள்கையுமடங்கியுள்ளது.

ஒரு பொருளில் மேலுமதிகமான தொகை தேவையானால், அதற்குப் பதிலாக வேறு சில பொருள்களைத் தியாகஞ் செய்யவேண்டும். அதாவது தேவையான பொருளின் மேலதிகமான அலகு ஒவ்வொன்றுக்கும் வேறு பொருள்களின் மேலதிகமான அளவை விட்டுக்கொடுக்க வேண்டும்.




**படம் 3.** குறிப்பிட்டதொரு மூலவளமிருக்கிறதென்றும் குறிப்பிட்டதொரு தொழினுட்ப அறிவுண்டென்றுங் கொண்டுபார்க்குமிடத்து, வெண்ணெய்க்குப் பதில் துப்பாக்கியை உற்பத்தி செய்வதைச் சமூகம் எவ்வாறு தெரிந்துகொள்ளுமென்பதை இதுகாட்டும். வளைகோட்டுக்கு உள்ளே U போன்ற ஒரு புள்ளியிருப்பது மூலவளங்கள் சிறந்தமுறையிற் பயன்படுத் தப்படவில்லையென்பதைக்காட்டும். (மூலம் : 1 ஆம் அட்டவணை முந்திய படத்திலுள்ள புள்ளிக்கூடாக ஓர் ஒப்பமானவளைகோடு கீறப்பட்டுள்ளது.)

அட்டவணை 1 உம், 1, 2, 3 என்ற படங்களும் விலையின் ஏற்றமாகிய இந்தத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. வெண்ணெயில் முதலாவது அலகு துப்பாக்கியின் ஒரலகைமாத்திரமே விட்டுக் கொடுக்கச் செய்கிறது.

www.padippakam.com



மேலதிகமாக ஒரு வெண்ணெய் அலகைப் பெற எத்தனை துப்பாக்கிகளை விட்டுக்கொடுக்க வேண்டும்? இரண்டு முழு அலகு துப்பாக்கியைவிட்டுவிட வேண்டும். நமது இலக்க அட்டவணையின்படி மேலதிகமான வெண்ணெய் அலகு ஒவ்வொன்றும், தியாகம் செய்யும் மேலதிகத் துப்பாக்கிக் கணக்கின்படி மேன்மேலும் ஒறுப்புள்ளதாகின்றது.

உயரும் மேலதிகச் செலவு என்ற இவ்விதி வெண்ணெய் உற்பத்தி விடயத்திற் பொருந்தும். ஆனால் துப்பாக்கிவிடயத்திலும் பொருந்துமா? ஆம். மூன்றும் படத்திலேயுள்ள வளைகோட்டின் குவியத்திலடங்கிய நியாயப்படி பார்த்தால் மேலதிகச் செலவு என்ற விதி துப்பாக்கி உற்பத்திக்கும் பொருந்துமென்பதை அறிகிறோம். அதாவது அவ்விதி இரண்டு பொருள்களுக்கும் செவ்வொழுங்காக முற்றாய்ப் பொருந்துகிறது. அதன் விளக்கம் பின்வருமாறு: முதலாவது மேலதிகமான ஒரு துப்பாக்கியை உற்பத்தி செய்வதானால் வெண்ணெயை அதிகம் தியாகஞ் செய்யவேண்டியதில்லை. அப்போது நாம் F என்ற புள்ளியில் நிற்கிறோம். ஆனால் E, D, என்ற புள்ளிகளுக்கு நகரும்போது துப்பாக்கிக்காக வெண்ணெயைவிட்டுக் கொடுக்கிறோம். அப்போது ஒவ்வொரு துப்பாக்கிக்குமாக முன்னையிலும் அதிக அளவாக வெண்ணெயைவிட்டுக்கொடுக்க வேண்டியதாகிறது. A, B., என்ற புள்ளிகளையடையும்போது ஒவ்வொரு துப்பாக்கிக்கும் பதிலாக அதிகமாக வெண்ணெயைவிட்டுக் கொடுக்கவேண்டியேற்படுகிறது. வளைகோடு தட்டையாக இருப்பதிலிருந்து இதை அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு உற்பத்திச் செலவு உயர்வதன் கருத்தென்ன? முதலாவது உற்பத்தி செய்யும் துப்பாக்கிகளின் பிரிவுகளை வெண்ணெயுற்பத்திக்கு உதவாத சில மூலப்பொருள்களைக் கொண்டே உற்பத்திசெய்து விடலாம். ஆனால் அதற்கு மேலதிகமாகத் துப்பாக்கி உற்பத்திசெய்ய வேண்டுமானால் வெண்ணெய் உற்பத்திக்கு இன்றியமையாத சில மூலப்பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். எல்லாம் துப்பாக்கியாகவே உற்பத்தி செய்ய வேண்டியிருந்தால் வெண்ணெய் உற்பத்திக்கே மிகப் பொருத்தமான பண்ணைகளையும், பண்ணையாட்களையும் துப்பாக்கி உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். அவர்கள் இத்துறையில் உற்பத்தியை அதிகம் பெருக்கத் தகுதியற்றவர்கள் என்பதையும் கருத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். எனவே உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது.[1]

ஆனால் வெண்ணெய்க்கும் துப்பாக்கிக்கும் ஒரே விகிதசமமான சாதனங்களை—அதாவது நிலம், தொழிலாளர் முதலியவற்றை—பயன்படுத்தி உற்பத்திசெய்வதாயிருந்தால் (இது நடக்கக்கூடியதன்று), உற்பத்தித் தகவுக்கோடு நேர்க்கோடாகவேயிருக்கும்; வளைகோடாயிராது. அப்போது ஓர்

[1] மூலச்சாதனங்களை ஒரேவகையான நிலம், ஒரேவகையான தொழிலாளர் என இரண்டு வகையாகப் பிரித்தாலும், வெண்ணெய் உற்பத்திக்கு அதிக நிலமும் துப்பாக்கி உற்பத்திற்கு அதிகத்தொழிலாளரும் தேவைப்படுவதால், உற்பத்திச்செலவு அதிகரிக்கிறதெனவே கொள்ள வேண்டும். எனெனில் துப்பாக்கி உற்பத்திக்கும், வெண்ணெய் உற்பத்திக்கும் வெவ்வேறு அளவான மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அலகு வெண்ணெயை உற்பத்திசெய்யப் பயன்படும் மூலப்பொருளைக்கொண்டு சரியாக மூன்று அலகு துப்பாக்கியை உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்கும். இப்புதிய தகவல்களை முதலாவது அட்டவணையில் நிரப்பி மூன்ரும்படத்தை நேர்க்கோடாகக் கீறலாம்.

**பிரசித்திபெற்ற குறைந்துசெல் விளைவு விதி :**

ஒரு பொருளின் விலை மற்ருெருபொருளின் மதிப்புக்கேற்றபடி உயர் தல் என்னும் நியதி பிரசித்திபெற்ற குறைந்துசெல் விளைவுவிதி என்ற பொருளாதாரப்பிரமாணத்தோடு தொடர்புடையது. இந்தவிதி துப்பாக்கி, வெண்ணெய் போன்ற இரு பொருள்களிடையேயுள்ள தொடர்பைக்கூற வில்லை. உற்பத்திச் சாதனமான தொழிலாளர் போன்றவர்களுக்கும், அச்சாதனத்தால் உற்பத்திசெய்யப்படும் வெண்ணெய் (அல்லது வாடிக்கை யான உதாரணம் தானியம்) போன்றவற்றுக்குமுள்ள தொடர்பையே காட்டுகிறது.

குறிக்கப்பட்ட **நிலையான** ஒரு சாதனத்தோடு **மேலதிகமானதும் மாறுவதுமான** ஓர் அளவு சாதனத்தைச் சேர்ப்பதால் உண்டாகும் அதே அளவு மேலதிகமான உற்பத்தியையே குறைந்து செல்விளைவுவிதி குறிப்பாகக் கருதும்.

இவ்விதியை விளக்குவதற்கு இங்கே ஓர் உதாரணத்தைத் தருகிருேம். செயற்கைச் சூழ்நிலையிலே பின்வரும் பரிசோதனையை நடத்துகிருேம். நூறு ஏக்கர் நிலமிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதைப் பண்படுத்தத் தொழிலாளர் இல்லையெனவும் வைத்துக் கொள்வோம். எனவே விளைவு இல்லை. ஆகவே விளைவு பூச்சியம் என்று குறித்துக் கொள்வோம்.

இனி இரண்டாவதொரு பரிசோதனையையும் செயற்கைச் சூழ்நிலையிலே செய்கின்ருேம். அதே ஏக்கர் நிலத்தில், குறிப்பிட்ட சில தொழிலாளரை வேலை செய்ய நியமிக்கிருேம். இப்போது விளைவு எவ்வளவு உண்டாகிறது. இதைத் தர்க்கரீதியாக அனுமானிக்க முடியாது. பரிசோதனையினுல் உண் டாகும் விளைவுகளை ஆராயவேண்டும். அவ்வாறு ஆராய்ந்தபொழுது 2000 அலகுக்குச் சமமான (இந்த அலகு புசலாயிருக்கலாம், மரக்காலாயிருக்க லாம், நாழியாயிருக்கலாம்) விளைவு உண்டாயிருப்பதை அறிகிருேம். இந்த இரண்டாவது பரிசோதனையின் முடிபுகளை வகைப்படுத்தும்பொழுது, ஓரலகு தொழிலாளரைக் குறித்த ஓர் அளவு நிலத்தில் வேலைசெய்யவிட்டபொழுது மேலதிகமாக 2000 அலகு விளைவு உண்டாவதைக் காண்கிருேம். குறைந்து செல் விளைவுவிதியை மேலும் கவனிப்பதாஞல், செயற்கைச் சூழ்நிலையில் மற்ருெரு பரிசோதனையை நடத்தவேண்டும். நிலத்தைக் குறிப்பிட்ட ஓரளவு நிலமென்றே கொள்கிருேம். இம்முறையும் முன்னர் நியமித்த அளவு தொழிலாளரையே நியமிக்கிருேம். அதாவது முதல் ஓரலகு தொழிலாள ராயிருந்தால் இப்போது ஈரலகு தொழிலாளரை நியமிக்கிருேம். பரி

படிப்பகம்

www.padippakam.com



சோதனையின் விளைவு எப்படியிருக்கிறதென்பதை ஆவலோடு ஆராய்கிறோம். இப்போது 4000 அலகு விளைவு உண்டாயிருக்குமா? அதாவது இரட்டிப்பங்கு தொழிலாளரை நியமித்தபடியால் இரட்டிப்பங்கு விளைவு உண்டாயிருக்குமா? அதாவது 2000 அலகு அதிகப்படியான விளைவுண்டாயிருக்குமா? அல்லது குறைந்துசெல் விளைவு அதற்கேற்றபடி இரட்டியாமல் குறைந்திருக்குமா?

**குறைந்துசெல்விளைவு பொருளியலினதும் தொழினுட்பவியலினதும் மூலாதாரமானதொரு விதி.**

| தொழிலாளர் | மொத்த உற்பத்தி, புசல் | கூடுதலான அலகு தொழிலாளரை நியமித்ததால் உண்டான மேலதிகமான விளைவு |
|---|---|---|
| 0 | 0 | |
| 1 | 2,000 | 2,000 |
| 2 | 3,000 | 1,000 |
| 3 | 3,500 | 500 |
| 4 | 3,800 | — |
| 5 | 3,900 | 100 |

அட்டவணை 2. குறிப்பிட்ட ஓரளவு நிலத்துக்குத் தொழில் அலகைக் கூட்டுவதால் உண்டாகும் விளைவு. நிலையான ஓர் உற்பத்திச் சாதனத்துடன், மாறுந்தன்மையுடைய ஒரேயளவான வேறு உற்பத்திச்சாதனத்தைச் சேர்ப்பதால் தொடர்ந்து குறைந்து கொண்டுவரும் மேலதிக விளைவைக் குறிப்பதே குறைந்துசெல் விளைவு எனப்படும். (அட்டவணையில் 4 ஆவது தொழிலாளியின் மேலதிக விளைவைப் பென்சிலாற் குறிப்பிடுக.)

குறைந்துசெல் விளைவுவிதி உண்மையானால் நாம் நடத்திய பரிசோதனையின் முடிபுகள் ஒரேமாதிரியாகவேயிருக்கும். அதாவது, இரண்டாவது அலகுத் தொழிலாளரை நியமித்தால் உண்டாகும் மேலதிகவிளைவு முதலாவது அலகை நியமித்ததாலுண்டாவதிலும் குறைவாகவேயிருக்கும். அவ்வாறே மூன்றாவது அலகுத் தொழிலாளரால் உண்டாகக்கூடிய மேலதிக விளைவும் குறைந்துகொண்டே செல்லும். இவ்வாறு, கூடுதலான ஒவ்வோர் அலகு விடயத்திலும் நிகழும். அட்டவணை 2 இலே, குறைந்துசெல் விளைவுவிதி என்பதன் பொருள் என்ன என்பதை விளக்க இலக்கத்திற் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

குறைந்துசெல் விளைவுவிதியானது பொருளியலிலும், தொழில்நுட்பத்துறையிலும் அடிக்கடி அவதானிக்கக்கூடியதொரு விதியாகும். அது முக்கியமானதுங்கூட. ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையானதொன்றன்று. மாறும் உற்பத்திச் சாதனத்தின் பெருந்தொகையான அளவை ஏனைய உற்பத்திச் சாதனத்தோடு கூட்டினால்தான் அஃது உண்மையில் நிகழும். அந்த அளவுக்குப் பின்னரே குறைந்துசெல்விளைவுவிதி உணரக்கூடியதாயிருக்கும். அந்த அவதி வரும்வரை, மாறுபடும் உற்பத்

www.padippakam.com



திச் சாதனங்கள் அதிகமான மேலதிக விளைவைக்கொடுக்கலாம். அதுவரை மேலதிகமான உற்பத்திச் சாதனங்களை வேறுபட்ட அளவில் நிலையான ஓரளவு உற்பத்திச்சாதனத்தோடு சேர்க்கும்போது மேலதிக விளைவையே கொடுப்பதைக் கண்டோமன்றிக் குறைந்த விளைவைக் கொடுப்பதைக் காணவில்லை.[1]

குறைந்துசெல் விளைவுவிதி நியாயமானதாகப் பெரும்பாலுந் தோற்றுவதற்குக் காரணமென்ன? நிலத்தோடு உழைப்பைச் சேர்ப்பதால் விளைவு விகிதாசாரப்படி அதிகரிக்கவேண்டும்; மேலதிக விளைவும் குறையவேண்டியதில்லையென்ற உணர்ச்சி உண்டாவதியல்பே. உற்பத்திச்சாதனங்களை நிலையானவையாகக் கொள்ளாமலும் எல்லாவற்றையும் ஒரேவிகிதாசாரப்படி மாற்றியும், உழைப்பின் அளவு எல்லாம் பெருகக்கூடியவிதத்திலே இதைச் செய்கிறேமென்று வைத்துக்கொள்வோம். ஓர் உற்பத்திச் சாதனத்தோடு அதே அளவு வேறு உற்பத்திச் சாதனங்களையும் சேர்க்கும்போது மேலதிக விளைவு குறைவதற்குக் காரணமென்ன?

அதாவது விகிதாசாரமான அளவோடு கூடிய மாற்றங்களால் உற்பத்திச் சாதனங்களும் விளைவுகளும் அதே விகிதாசாரத்தை அனுசரித்திருக்கவேண்டுமென எதிர்பார்க்கலாம். மற்றொருபுறம் ஒருவகை உற்பத்திச்சாதனங்களை நிலையாக வைத்துக்கொண்டு ஏனைச் சாதனங்களை மாற்றினுல், மாறுஞ் சாதனங்களுக்கு நிலையான சாதனங்களின் துணை குறைந்து கொண்டு செல்வதைக் காணலாம். இதன்பயனுக, மேலதிகமாகச் சேர்க்கப்படும் வேறுபட்ட அளவுள்ள சாதனங்களால் உண்டாகும் மேலதிகவிளைவு குறைந்துகொண்டு செல்வதைக் காண்பது நூதனமன்று. அதாவது நிலையான உற்பத்திச்சாதனமான நிலம், மாறுந்தன்மையுள்ள உற்பத்திச் சாதனமான உழைப்போடு நோக்குமிடத்து, குறைந்துகொண்டு செல்கிறது. நிலத்தைச் செய்கைபண்ணும் முறையை நெருக்கினுல், அதாவது ஓய்வின்றிப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டால், மேலதிகமான விளைவை ஓரளவு பெறலாம். ஆனுல் மேலதிகத் தொழிலாளர்அலகின் பயனுக உண்டாகும் மேலதிக விளைவு குறைந்துகொண்டே செல்லும். முடிவாக இவ் விடயத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுவோம் :

**குறைந்துசெல் விளைவுவிதி :** நிலையான சில உற்பத்திச் சாதனங்களோடு சம்பந்தப்பட்ட வேறு உற்பத்திச் சாதனங்களை அதிகரிப்பதால் மொத்த விளைவு அதிகரிக்கும். ஆனுல் ஓர் எல்லையை அடைந்தபின், ஓர் அளவு உற்பத்திச் சாதனத்தைச் சேர்த்ததன்பயனுக உண்டான மேலதிக விளைவு குறைந்துகொண்டே போகக்கூடிய தன்மையுண்டு. இந்தக் குறைவு ஏன் உண்டாகிறதென்ருல், புதிதாகச் சேர்க்கப்படுகின்ற

[1] அட்டவணை 2 இல் 2000 ஐ 900 ஆக மாற்றிவிட்டால், இரண்டாவது நிரைக்குப் பின்னரே குறைந்துசெல்விளைவு உண்டாவதை ஒருவர் காணலாம். அதுவரை சம அளவு உழைப்பைச் சேர்க்கச் சேர்க்க மேலதிக விளைவு அதற்கேற்றபடி உண்டாவதைக் காணலாம்.

www.padippakam.com



மாறுபடும் உற்பத்திச் சாதனங்களுக்கு, முதலில் சேர்க்கப்பட்ட நிலையான உற்பத்திச் சாதனத்தின் துணை குறைந்துசெல் முறையிலே கிடைப்பதின்றுருன்.

**அளவுத்திட்டச் சிக்கனமும் பெருவாரி உற்பத்திச்சிக்கனமும் : மற்ருென்று விரித்தல்**

குறைந்துசெல் விளைவு விதி உலகத்துக் குடிசனப்பிரச்சினை சம்பந்தமாக நல்ல விளக்கத்தை உதவுகிறதென்பதை இந்த அத்தியாயத்தின் சி-பிரிவிற் காட்டுவோம். செயற்கைச் சூழ்நிலையிலே ஒரு பொருளை ஒரு நேரத்தில் மாற்றிப் பரிசோதனை செய்யும்முறையிற் காணப்படாத ஒரு சம்பவத்தைப் பற்றி இங்கு கவனிப்போம். வேலையின் அளவுத் திட்டத்தை மாற்றுகிருேம் என்று வைத்துக்கொள்வோம். அதாவது உற்பத்தியோடு சம்பந்தப்பட்ட சாதனங்களையெல்லாம் ஒரே நேரத்தில் ஒரே அளவில் மாற்றுகிருேம் எனக் கொள்வோம். பல தொழில்களிலே சாதனங்கள் எல்லாவற்றையும் இரட்டித்தால், உற்பத்தி இருமடங்கு அதிகமாவதைக் கவனிக்கலாம். இந்த நிகழ்ச்சியை "அளவுத்திட்டத்தில் அதிகரித்துச்செல் விளைவு" எனக்கூறுவர்.

குறைந்துசெல் விளைவுவிதி நிகழும் சந்தர்ப்பங்களில், சில உற்பத்திச் சாதனங்கள் நிலையாகவும் வேறு சில மாறுந்தன்மையினவாயுமிருக்கும். எனவே "அளவுத்திட்டத்தில் அதிகரித்துச்செல் விளைவு" என்றவிதி இந்த விதியை முற்ருக நிராகரிக்கும் ஒரு விதியன்று.

"அளவுத்திட்டத்தில் அதிகரித்துச்செல் விளைவு" என்பது "பெருவாரி உற்பத்திச் சிக்கனம்" எனவும் வழங்கும். இது பின்வரும் நவீனத் தொழில் அபிவிருத்திகளில் ஏதாவது ஒன்ருேடு தொடர்புபெற்றிருக்கும்.

(1) நீர், காற்று, நீராவி, மின்சாரம், உள்ளெரியந்திரம், சுழல்சக்கரம் அணு என்றசக்திகளடங்கிய அமானுஷியமான சக்திகளைப் பயன் படுத்தல்.

(2) தாமாக இயங்கும் எந்திரங்களைப் பயன்படுத்தல்.

(3) நியமமானவும் ஒன்றுக்கொன்று மாற்றக்கூடியவுமான பகுதிகளைப் பயன்படுத்தல்.

(4) சிக்கலான தொழில் முறைகளைத் தனித்தனி இலகுவான சிறு தொழில்களாக, ஒன்றையே திருப்பித்திருப்பிச் செய்யக்கூடியன வாகப் பிரித்து வகைப்படுத்தல்.

(5) தொழிற்றுறைகளை விசேடதுறைகளாக்கிப் பயிற்சியளித்தல் ; தொழிலாளரையும் ஏற்றபடி விசேடப்பயிற்சிகளிற பிரித்துவிடுதல். மோட்டர் உற்பத்தியும், இக்கால நெசவுமுறையின் சரித்திரபூர்வமான வளர்ச்சியும் இப்பலவகைத் துறைகளுக்கு உதாரணமாகும்.

www.padippakam.com



இவ்வாறு பலவகைப்பட்ட துறைகளையும், அதாவது ஒரு தொழிலின் பல பிரிவுகளையும், தனித்தனி தொழிற்றுறைகளாக்குவதானால் அவ்வத் துறைகளிலே பெருவாரியான உற்பத்தியிருக்குமானாற்றான் உண்மையிற் சிக்கனமேற்படுவதாகும். இன்றேல் விசாலமானதொரு நிறுவனத்தை ஒவ்வொரு துறைக்கும் அமைத்து நடத்தமுடியாது. சிற் சில துப்பாக்கிகளே தேவைப்பட்டால் அவற்றைக் கையாலே செய்துவிடலாம். பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிகளைச் செய்வதற்குச் சாதனங்கள் கிடைப்பனவாயிருந்தால், மேலும் மேலும் தேவைப்படும்போதெல்லாம் பயனுள்ள சில அடிப்படை வேலைகளை அச்சாதனங்களைப் பயன்படுத்திச் செய்துவிடலாம். அந்த ஆரம்பவேலைகளை மறுபடி செய்ய வேண்டிய அவசியமில்லாமற்போய்விடும். அளவைப் பொறுத்த இத்தகையவிடயங்களில், உழைப்பைப் பெருக்குவதால் உண்டாகும் குறைந்துசெல் விளைவைச் சில காலம் தடுப்பதற்கு, முழுத்தொழிலாளர் தொகையைக் கூட்டலாம். இதன்படி பார்க்கப்போனால், முன்னர் நாம் காட்டிய வெண்ணெய், துப்பாக்கி உதாரணம் எளிதாக்கப்பட்ட உதாரணமாகும். அதைவிடுத்து இச்சந்தர்ப்பத்தில் முதன்முதற் செய்யும் ஓர் அலகு துப்பாக்கிக்கு இரண்டு அலகு வெண்ணெய் செலவு செய்யவேண்டிவரும். ஆனால் இரண்டாவது துப்பாக்கி அலகைப்பெறவேண்டுமானால் அதற்கு ஓர் அலகு வெண்ணெயைச் செலவுசெய்தலே போதும். இதற்குக் காரணம் பெருவாரி உற்பத்தியின் திறமையே. ஒரு பொருளின் கணக்கில் மற்றொரு பொருளை உற்பத்தி செய்யும் இந்த முறையில் செலவு சுருங்குகிறதேயன்றி உயர்வதில்லை.[1]

நாம் வாங்கும் பொருள்களிற் பலவற்றைப் பெரிய கம்பனிகளே உற்பத்திசெய்கின்றன. ஏன் அப்படியென்பதை விளக்குதற்கு அளவுத்திட்டச் சிக்கனங்கள் மிக முக்கியம். தொழில்முறைகள் பிரிக்கப்பட்டவகையையும், தொழில் நுட்பத்தின் திட்டம் அமைக்கப்பட்டமுறையையும் இவை விளக்கும். அவை எழுப்பும் பிரச்சினைகளைப் பின்வரும் அத்தியாயங்களிலே அடிக்கடி சந்திக்கநேரும்.

**சி. எந்த ஒரு பொருளாதாரத்திலும் அடிப்படையாயுள்ள குடிசனத் தொகை : முற்காலக் குடிசனப்பெருக்கமும் வருங்காலக் குடிசனப் பெருக்கமும் :**

**மல்தசின் குடிசனக்கொள்கை :** குடிசனத்துறையில் குறைந்துசெல் விளைவுவிதி ருசிகரமான வகையிற் பயன்படுகிறது. 1800 ஆம் ஆண்டளவில், தோமஸ் ரொபேட் மல்தஸ் என்ற பெயருடைய ஆங்கில நாட்டு இளம் போதகர், காலைப் போசனவேளைகளில், மனிதசமுதாயம் முன்னேறிக்கொண்டு வருகிறதெனக்கூறி வாதாடும் தம்தந்தையின் வாதத்தை எதிர்த்துப் பேசுவார். அவ்விடயம் மல்தசுக்கு மனக்கிளர்ச்சியை உண்டாக்கவே, அவர்

[1] அளவுத்திட்டத்தில் அதிகரித்துச்செல்விளைவு விதியினால் பெருகும் உற்பத்திச் செலவு குறைக்கப்படும் போது மூன்றும் படத்திலே காட்டிய படத்தை குவிவானதாகக் கீறாமல் குழிவானதாகக் கீறவேண்டும். ஒவ்வோர் அச்சுக்கும் அண்மையிலாவது அப்படியிருக்கவேண்டும்.

www.padippakam.com



அதைப்பற்றி ஒரு நூல் எழுதினார். குடிசனப் பெருக்கத்தின் தத்துவம் என்ற அந்தநூல் 1798 இல் வெளியானதும் எல்லாப் பிரதிகளும் செல வாகிவிட்டன. பலபதிப்புக்கள் வெளிவந்தன. ஒருநூறுண்டாக உல கத்து மக்களுடைய கருத்தையெல்லாம் அந்நூல் பாதித்தது. உள்ளது சிறத்தல் என்ற பரிணும வாதத்தைத் துவக்கிய சாள்ஸ் டாவினைக்கூட இந் நூல் சிந்திக்கச் செய்தது. இன்றுகூட இந்நூல் செல்வாக்குடையது. மல்தசுடைய கருத்துக்கள் குறைந்துசெல் விளைவுவிதியோடு நேரடியான தொடர்புடையன. அவை இக்காலத்து ஆராய்ச்சிக்கும் பொருத்த முடையன.

அமெரிக்கக்குடியேற்ற நாடுகளிலே பொருள்வளம் அதிகமானபடியால் 25 வருடத்துக்கொருமுறை குடிசனப்பெருக்கம் இரண்டுபங்காகிறதெனப் பெஞ்ஜமின் பிராங்லின் கூறிய கூற்றை மல்தஸ் முதலில் ஆராய்ந்தார். உணவு விநியோகத்தாலே தடைப்படுத்தப்படாதவரை உலகெங்கும் ஒரேவித மான குடிசனப் பெருக்கமுண்டென்றும், அது பெருக்கல் விருத்தியில் வளருகிறதென்றுங்கூறினார். கற்பனையைச் சிறிது பயன்படுத்தினால் பெருக்கல்விருத்தி எத்தகையதென்பதைச் சிறிது அறியலாம். 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256, 512, 1024, என இவ்வாறு பெருகினால், குடிசனத் தொகை இருக்கஇடமில்லாது பெருகிவிடும்.[1]

உலகம் சிறப்படைந்தேவருகிறதென்ற கொள்கையுடைய தந்தையார் மல் தசும், வில்லியம் கொட்வின் என்பவரும் இக்கருத்துக்களாற் பாதிக் கப்படவில்லை. இக்கட்டத்திலேதான் மல்தஸ், குறைந்துசெல்விளைவுவிதி யைப் பயன்படுத்தினார். சனத்தொகை கூடக்கூட உலகப் பரப்பே அரைப்பங்காகச் சுருங்குவதுபோலிருக்கும். ஈற்றில் உயிர்வாழ்வதற்குத் தேவையான உணவே இல்லாமற்போய்விடும். குறைந்து செல்விளைவு விதியின்படி பெருக்கல்விருத்தியிலே பெருகும் சனத்தொகைக்கு ஏற்ற படி உணவு பெருகுவதில்லை.

சனப்பெருக்கம் இவ்வாறுதான் விருத்தியாகுமென்று மல்தஸ் கூற வில்லை. அதனைத் தடைசெய்யாவிட்டால் அவ்வாறு பெருகும் இயல் புண்டென்பதையே அவர் சுட்டிக்காட்டினார். சனப்பெருக்கத்தைத் தடுப் பதற்கு எல்லாக் காலத்திலும் எல்லா நாடுகளிலும் முயற்சி நடைபெற்ற தென்பதை நிரூபிப்பது தமது வாதத்துக்கு முக்கியமென்பதை அவர் உணர்ந்தார். மக்களின் மரணவிகிதத்தை அதிகரிக்கும் நோய், பஞ்சம், போர் என்பன சனப்பெருக்கத்தைத் தடுக்கும் நேரடியான நிகழ்ச்சிக ளென்பதைத் தமது நூலின் முதலாவது பதிப்பில் அழுத்தமாகக் கூறி னார்.

[1] ஆறுவீதத் தொடர்வட்டியில் 12 வருடத்திலே ஒருதொகைப் பணம் இரட்டித்துவிடுகிறது. மன்ஹாட்டன் தீவுகளுக்காகச் சிவப்பிந்தியர் பெற்ற 24 டொலர், தொடர்வட்டி பெறுமானால், இன்று அத்தீவின் முழுப்பெறுமதிக்கும் ஈடாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஸ்பானியாவில் சேர் பிரான்சிஸ் ட்ரேக் கொள்ளையடித்த தங்கத்தை 6 சதவீதத் தொடர்வட்டியில் போட்டிருந்தால் இன்று பிரித்தானியாவின் முழுச் செல்வத்துக்கும் அதுசமனுயிருக்கும்.

www.padippakam.com



இது வியாகுலமானதொரு கருத்தென்பதை அவர் உணர்ந்து, அதை மாற்றி மக்கள் பிறப்பைக் கட்டுப்படுத்திஞல் உலகுக்கு நல்லதென வாதித்தார். கர்ப்பத்தடை இயக்கம் புதிய மல்தூசிய இயக்கமென்றே வழங்கப்பட்டுவந்தாலும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் வாழ்ந்த போதகரான மல்தஸ், மணவடக்கத்தையே குறிப்பிட்டார். இளம் வயதில் வாழ்க்கை நடத்தப் பொருளாதார வசதி பெருதநிலையில் விவாகஞ் செய்வதை அவர் தடுத்தார். மக்கள் வாழ்க்கை நடத்தப் பாடுபடுகிறுர்கள். அது சருவத்தையும் படைத்த ஆண்டவனுடைய விவேகத்தையே காட்டுகிறது என அவர் கொண்டார். காலைப் போசனமருந்தும்போது தம் மகளோடு அவர் குறைந்துசெல்விளைவு விதியைப் பற்றி விவாதித்திருப்பார். "வறியவர்களைப் பார், அவர்கள் சுறுசுறுப்பாகவும், ஓயாமல் உழைத்துக்கொண்டுமிருப்பதற்குக் காரணம் குறைந்து செல்விளைவு விதிதான்" எனக் கூறியிருப்பார். "கற்புடைய பிரமச்சாரி" யத்தின் சிறப்பைக்கூட அவர் அழுத்தமாகக் கூறியிருப்பார். குறைந்துசெல் விளைவின் இந்தப் பிரயோகம், ஒரு சாதாரணக் கொள்கை எவ்வளவுக்கு மக்கள் கருத்தைப் பாதிக்குமென்பதை விளக்குகிறது. மல்தசின் இக்கொள்கை பலவகையான மாற்றங்களையுண்டாக்கிற்று. அவர் எழுதிய நூலின் பயஞக ஆங்கில வறுமைச்சட்டம் பெரிதும் திருத்தப்பட்டது. வறுமைக்குக் காரணம் சோம்பல் என்றும், வேலையில்லா நிலையில் எவரும் இருக்கமுடியாதபடி அதைக் கடினமாக்கிவிடவேண்டுமென்றும் அந்நூலின்பயஞக அபிப்பிராயம் பரவிற்று. தொழிற்சங்கங்கள் தொழிலாளரின் நலவுரிமைகளைச் சீர்திருத்தமாட்டாவென்ற வாதத்துக்கு மல்தசின் கருத்துக்கள் ஆதரவளித்தன. தொழிலாளரின் சம்பளங்களை உயர்த்திஞல், அவர்களுடைய சனன விகிதம்பெருகி, உணவுக்குத்திண்டாட்டமுண்டாகும் என்ற காரணமும் எடுத்துக்காட்டப்பட்டது.

பலநாடுகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் அவருடைய நூலின் பிந்திய பிரசுரங்களிலே வெளியிடப்பட்டபோதிலும் மல்தசின் கருத்துக்கள் விடயத்தை மிக இலேசாக்கியதால் உண்மைநிலையைப் புலப்படுத்தத் திறமையற்றனவென்று இன்று கருதப்படுகின்றன. குறைந்துசெல்விளைவுவிதியை ஆராய்ந்தபொழுது மல்தஸ் தொழிற்புரட்சியால் ஏற்படக்கூடிய அற்புதங்களை எதிர்பார்க்கவில்லை. அடுத்த நூற்றுண்டிலே ஏற்பட்ட தொழினுட்ப ஆராய்ச்சி முடிபுகளின் பயஞய் உற்பத்தித் தகவுக்கோடு வெளியே நகரத் தொடங்கியதால் முன்னரிலும் அதிகமான மக்கள் உயர்வான வாழ்க்கைத் தரமுடையவர்களாய் வாழ்க்கை நடத்த முடிந்தது. அத்துடன் வைத்தியத்துறையிலேற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாய் மக்களுடைய சீவியகாலம் முன்னரிலும் அதிகம் நீடித்தது. அதஞல் குடிசனப் பெருக்கத்துக்கு உண்டான தடைகூட நெகிழ்ந்தது. மேலும் 1870 க்குப் பின் மேலைத் தேசங்களிலும் ஐக்கிய அமெரிக்காவிலுங்கூட கருப்பமுறும் திறமைகுறைந்து, குடும்பங்களிற் குறைவாகவே குழந்தைகள் பிறக்குமென்ற உண்மையை அவர் எதிர்பார்க்கவுமில்லை. ஆஞல் அவ

www.padippakam.com



ருடைய கொள்கைகளில் அடங்கிய சில உண்மைகள் உணவு குறைவான இந்தியா, சீன போன்ற நாடுகளின் சனப்பெருக்கநிலைமைகளை அறிவதற்குப் பெரிதும் துணைபுரியக்கூடியனவாகும்.

**உலக சனத்தொகை 1800 இற்குப் பின் மும்மடங்காக அதிகரித்துள்ளது.**

| | 1800 | 1940 | 1958 |
|---|---|---|---|
| ஐரோப்பா (சோவியத் ரூஷியா உட்பட) | 188 | 572 | 625 |
| அமெரிக்கா (வடக்கு, தெற்கு, மத்தியபகுதி) | 29 | 277 | 390 |
| ஆசியா, ஆபிரிக்கா, ஓசியானியா | 702 | 1,396 | 1,838 |
| உலகம் | 919 | 2,245 | 2,852 |

அட்டவணை 3. உலக சனத்தொகை (பத்துலட்சத்தில்) ஆதாரநூல்கள்: Plenty of People: W. S. Thompson ; ஐக்கியநாடுகளின் புள்ளிவிவர ஆண்டறிக்கை.

உலகக் குடிசனத்தொகை எவ்வளவு அதிகரித்துள்ளதென்பதை அட்டவணை 3 காட்டுகிறது. இப்பெருக்கத்துக்குக் காரணம் வைத்தியத்துறையிற் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வைத்தியமுறைகளும், கைத்தொழிற்புரட்சிகாரணமாக உண்டான உயர்ந்த வாழ்க்கைத்தரமுமேயாகும். மேலை நாட்டிலே 1800 இல் ஒரு குழந்தை பிறந்தால் அது 18 வயதுவரைக்குமேயிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இன்று அது 70 வயதுக்கு இருக்குமென எதிர்பார்க்கலாம். இந்த யுகத்திலே உள்ள வாழ்க்கைத்தர உயர்வு வேறு எந்த யுகத்திலுமிருந்ததில்லை. உணவுப்பொருள் கிடைப்பதைப் பொறுத்துச் சனப்பெருக்கம் விருத்தியடையும் நாடுகள் விகிதசம முக்கியத்துவமற்றன வாய்விட்டன என்பது அட்டவணையிலே காட்டப்பட்டுள்ளது. மல்தஸ் காட்டிய சனப்பெருக்கத்தை நிறுத்திவைக்கலாமா ? நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாக இந்தியாவிலே உயிர்வாழும் சீவனகால எல்லை அதிகரித்துள்ளது; 1939 துவக்கம் 1959 வரையுள்ள 20 வருடத்திலே இந்தியாவின் குடிசனத்தொகை 9 கோடியாக அதிகரித்துள்ளது. பிரான்சு, இங்கிலாந்து ஆகிய இருநாடுகளிலும் உள்ள சனத்தொகை இதுவே.

நவீன வைத்திய முறைகள் மக்களுடைய நோய்களை நீக்கியபோதிலும், அவர்கள் உயிரோடிருந்து பசியினால் வாட வழிசெய்தால் என்ன ஆகும்? பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சி சம்பந்தமான பொருளாதார ஆராய்ச்சியை நடத்துவதற்குத் தேவையான சாதனங்களை 35 ஆம் அத்தியாயத்தில் ஆராய்வோம்.

**அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சன உற்பத்திக் குறைவு உண்டாகுமா ?**

முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர், மல்தஸ் கூறிய சனப்பெருக்கம் உண்டாகிவிடுமோ என்று மக்கள் பயந்தனர். உலகிற் சனப் பெருக்கம் அதிகரிக்கப்போகிறது ; இருக்க இடங் கிடையாத காலம் வரப்போகிறது ; நிற்கத்தான் இடமுண்டென்றெல்லாம் தலையங்கமிட்டு நூல்கள் எழுதினர்.

படிப்பகம்

www.padippakam.com



இந்நூல்கள் அச்சேறி வெளியாகும் காலத்திலேயே மேற்கு ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் சன உற்பத்தியிலே புரட்சி உண்டாகிக் கொண்டிருந்தது. ஒரு தலைமுறைக்குப் பின்னரே இதனை மக்கள் விளங்கிக்கொண்டனர். பின்னர் சன உற்பத்தி குறைகிறது, இங்கிலாந்தில் மக்களினம் இல்லாமற் போகப்போகிறது என்றெல்லாம் நூதனமான நூல்கள் தோன்றின. அவற்றை மக்கள் பெரிதும் வாங்கி வாசித்தனர்.

இவ்வாறு திடீரென்று கருத்து மாறியதற்குக் காரணமென்ன? இங்கிலாந்து, பிரான்ஸ், சுவீடன், ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இறப்பிலும் பார்க்கப் பிறப்புக் குறைவாயிருந்ததா? பதிவுகளை ஆராய்ந்த போது அப்படி எதுவும் காணப்படவில்லை. இரண்டாம் உலகயுத்தத்துக்கு முன்னர், சன உற்பத்தி குறைந்துகொண்டு வருகிறதென நிபுணர்கள் ஏன் அபிப்பிராயப்பட்டார்கள்? இதற்குப் பதில் கூறுவது கடினமில்லை. 1870 தொடக்கம், பிரான்சிலே அதற்கு முந்திக்கூட, மேலைத்தேசங்களிலே சனன விகிதம் குறைந்துகொண்டு வந்தது. முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், பிரதானமாக 1930 ஆம் ஆண்டின் பெரிய வியாபார மந்தத்துக்குப் பின்னர், சனனவிகிதம் திடீரெனத் தலைகீழாக இறங்கிற்று. ஆனால் இப்பயங்கரமான செய்தி சிலகாலமாக மறைந்திருந்தது.

சனன மரண விகிதத்தை ஆராய்ந்தபொழுது மக்கள் அதிர்ச்சியடையாதிருந்ததற்குக் காரணமென்ன? மொத்தச் சனனமும் மரணமும் விடயத்தைச் சரியாகக் காட்டவில்லை. அமெரிக்காவிலும், மேலை ஐரோப்பாவிலும், கர்ப்பவதிகளாக ஏராளமான பெண்களிருந்ததை ஆராய்ச்சியாளர் கணக்கிலே எடுத்துக்கொள்ளவில்லை. இந்த வயதுத் தொகுதியில் ஏன் இவ்வளவு கர்ப்பவதிகளிருந்தனர்? 1900 இல் மக்கள் சிறிய குடும்பமுடையவராயிருந்தனர்; 1935 இலோ அவ்வாறிருக்கவில்லை. தாயாகுந் தகுதியுடையவர் தொகை அதிகமாயிருந்தபோதிலும் யுத்தத்துக்கு முந்திய சனனம் தற்காலிகமாகத் தடைப்பட்டது. இருந்தும் தாய்மார் குறைவாகவே பிள்ளைகளைப் பெற்றனர்—மிகக் குறைவாகப் பெற்றனர். இந்த நிலை நீடித்திருக்குமானால் வருங்காலத்திலே சனப்பெருக்கம் தடைப்பட்டு ஈற்றில் குறையத் தொடங்கியிருக்கும்.

**தேறிய சனனவிகிதம் : அகலவுரை**

யுத்தத்துக்கு முந்திய சனனவிகிதம் சம்பந்தமான போக்கை நுட்பமானதோர் எண்கணித யுக்திமூலம் விளக்கக்கூடியதாயிருந்தது. மொத்தச் சனனம் மொத்த மரணம் என்பவற்றை ஆராய்வதிலும் புதிதாகப் பிறந்த 1000 பெண்குழந்தைகள் தமது சீவியகாலத்தைக் கழித்து ஒழியும் எல்லையில் அவர்களுக்கு மொத்தம் எத்தனை பெண்குழந்தைகள் பிறந்திருக்கும் என அறிவது நன்றெனப்பட்டது. இவ்வாறு பிறக்கும் பெண் குழந்தைகள் சரியாக 1000 என்றிருந்தால், தேறிய சனனவிகிதம்

படிப்பகம்

www.padippakam.com



1.0 என்று கொள்வோம். அத்துடன், வருங்காலத்திலும் இந்தச் சனன விகிதம் மாருதிருக்கும் எனக் கொள்ளலாம். தேறிய சனன விகிதத்தை தே. ச. வி. எனக் கொள்வோம்.

1000 பெண்குழந்தைகள் வளர்ந்து தாயராகித் தம்காலம் முடியும்வரை மொத்தம் 900 பெண்குழந்தைகளைப் பெற்ருர் எனக் கண்டால் தே. ச. வி. 0.9 ஆகும். எனவே காலப்போக்கிற் சனனவிகிதம் சந்ததி ஒன்றுக்குப் பத்து வீதமாக குறையத் தொடங்கும். ஆனுல் 1000 பெண்களும் 2000 பெண்குழந்தைகளைப் பெற்ருர்களானுல் (அந்த 2000 மும் 4000 பெண்குழந்தைகளைப் பெறும்.....) தே. ச. வி. 2.0 ஆகும். அப்போது ஒவ்வொரு தலைமுறைக்கும் நூறு விகிதத்திற் சனனவிகிதம் கூடும். (ஒரு தலைமுறையென்பது 25 வருடம்—அதாவது, ஒரு பெண்ணுனவள் தாயா யிருக்கக்கூடிய கால எல்லை).

ஒரு தொகுதி மக்களின் தேறிய சனன விகிதத்தைக் கணிப்பது, தேவையான புள்ளிவிவரங்களிருக்குமானுல் அவ்வளவு கடினமில்லை. காப்புறுதிக் கம்பனிகள் திரட்டிய மரணப்புள்ளிவிவரங்களை ஆராய்ந் தால் 1000 பெண்களில் எத்தனைபேர் 15, 20, 25,— வயதுவரை இருப்பார்கள் என்பதை அறிவோம். இந்த வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் எத்தனை குழந்தைகளைப் பெறுவார்கள் என்ற புள்ளிவிவரங் களைக் கொண்டு நமது வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் தமது வாழ்நாளில் எத்தனை குழந்தைகளைப் பெறுவார்கள் என்பதைக் கணித் துக்கொள்ளலாம். மேலே கூறிய புள்ளிவிவரம் அமெரிக்காவில் எவரும் சேர்த்ததுகிடையாது. இதில் வரும் கணக்கிலே பாதிக்குச் சிறிது குறை வாகப் பெண் குழந்தைகள் கிடைக்கும். இந்தத் தொகையை ஆயிரத்தாற் பிரித்தால், தே. ச. வி. கிடைக்கும்.[1]

இரண்டாவது உலகமகாயுத்தத்துக்கு முன்னர் தேறிய சனன விகிதம் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், முதலிய பல நாடுகளில் ஒன்றுக்கு மிகக் குறைவாக வீழ்ந்துவிட்டதெனக் கூறப்பட்ட கூற்றிலிருந்து நமது யுகத்திலுண்டான சனத்தொகை நெருக்கடியைச் சுருக்கமாக அறிந்து கொள்ளலாம். ஐக்கிய அமெரிக்காவில் அப்போது ஒன்றுக்குச் சற்றே குறைவான விகிதத்திலிருந்தது. ஆனுல் யுத்தத்தின் பின்னர் இந்த விகிதங்கள் திடீரென்று ஏறிவிட்டன. தென்னமெரிக்காவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் தேறிய சனன விகிதம் மிக உயர்ந்து

[1] ஒவ்வொரு வயதுப் பிரிவையும் சேர்ந்த பெண்ணின் சனனவிகிதம் அதிகரித்தால், அல்லது தாய்மைப் பருவத்துக்கு முன் பலர் இறவாதிருந்தால் தே. ச. வி. அதிகரிக்கலாம். சுருங்கிய காலத்திலே சனத்தொகையை அதிகரிப்பதால், வயதுபோனவர்களைச் சாகவிடாது காப்பாற்றி யும் காலத்தோடு ஒரே சமமான குழந்தைகளைப் பெற்றும் விடவேண்டும். ஆனல் இந்த யுக்தி களால் தே. ச. வியை 1.0 க்கு மேல் அதிகரிக்கமுடியாது. காலகதியில் சனவிகிதத்திலுண் டாகும் வீழ்ச்சியையும் இந்த யுக்திகளால் நிறுத்தமுடியாது. தே. ச. வி. என்பது அடிக்கடி நாம் சந்திக்கும் ஒரு கருத்து. அது தேறிய தொகையிலும் அதிகமாயிருக்கும். ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் தாய்மைநிலை கழியும்வரை உயிரோடிருப்பாளென அது கொள்கிறது.

www.padippakam.com



விட்டது. இந்தியாவிலும் கீழ்த்திசைநாடுகளிலும் சன உற்பத்திச் சக்தி அதிகமிருந்தாலும், பலபெண்குழந்தைகள் இளமையிலும், வேறு பலர் பிரசவப் பருவத்திலும் இறந்துவிடுகிறபடியால் அங்கே தேறிய சனன விகிதம் ஒன்றுக்கு மிகவதிகமாகப் போகவில்லை.

**வியக்கத்தக்க சனப்பெருக்கம்**

இரண்டாவது மகாயுத்தத்திற்கு முன்னர் மேலை நாட்டவரின் எதிர்காலச் சனப்பெருக்கத்தைப்பற்றி நிபுணர்கள் திகிலடைவதற்குப் பலகாரணங்களிருந்தன. பிரச்சினையும் நேரடியாகப் பொருளாதார சம்பந்தமுடையதா யிருக்கவில்லை. செல்வர் குடும்பத்திலேதான் வறியவரிலும் பார்க்கக் குறைவான பிள்ளைகள் பிறப்பதுண்டு. யுத்தத்துக்கு முன்னர் ஹார்வார்ட், வஸ்ஸார் ஆகிய சர்வகலாசாலை மாணுக்கரிடையே சனன விருத்தியிருக்க வில்லை. மிச்சிக்கன் மாகாணத்திலும், ஒபெர்லீனிலும், ஏனை உயர்தரப் பாடசாலைகளிலுமுள்ள பட்டதாரிகளிடையிலும், நகரவாசிகளிடையிலும் சனவிருத்தியில்லாதிருந்தது.[1]

அத்தருணம் பிரதானமானதொரு சம்பவம் நிகழ்ந்தது. அது நிபுணர் களை யோசிக்கவைத்தது. அதை எப்படி விளக்குவதென்று இதுவரை ஒருவருக்குந் தெரியவில்லை. இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போதும் அதன்பின்னரும் சனனசக்தி படிப்படியாக உயர்ந்தது; உயர்ந்து புதிய உச்சங்களையடைந்தது. இன்று வருடாவருடம் 40 இலட்சம் குழந்தைகள் பிறக்கிருர்கள்.

இதற்குரிய காரணங்களிற் சில சொல்லாமலே போதரும். யுத்தம் உண்டானதும் நாட்டிலே செழிப்புண்டாயிற்று. மந்தகாலத்திலே பின்போடப் பட்ட பல விவாகங்கள் செழிப்புக்காலத்திலே நிறைவேற்றப்பட்டன. தெரிவுச் சேவைச் சட்டமும் விவாகத்தைப் பெருக்கிற்று. விவாகம் பெருகச் சனமும் பெருகிற்று. செழிப்பும், யுத்தமுஞ் சேர்ந்து புதியதிருமணத் தம்பதிகளிடையே சனன விகிதத்தை உற்சாகப்படுத்தின.

புதிய இந்தப் போக்கைக் குடிசன நிபுணர் நெடுங்காலமாகச் சந்தேகக் கண்கொண்டே பார்த்து வந்தார். இந்த அதிகரிப்புத் தற்காலிகமான தென்றே அவர் கூறிக்கொண்டார். “1930 இலோ 1950 இலோ பெற

[1] சனனவிகிதத்தை உயிரியற் காரணங்களைக்கொண்டு விளக்கக்கூடாது; சமூகக் காரணங் களைக்கொண்டே விளக்கவேண்டுமெனப் பல நிபுணர் அபிப்பிராயப்படுவர். பிரெஞ்சுக் கனேடியரின் சனனவிகிதம் அதிகம். ஆனல் அவர்களின் மூதாதையர் சனனவிகிதம் மிகக் குறைவான பிரெஞ்சுக் கிராமங்களிலிருந்து குடியேறினர். இரண்டாந்தலைமுறையைச் சேர்ந்த இத்தாலியரும் யூதநகரவாசிகளும் குறைந்த சனன விகிதமுடையவராகக் காணப்படு கின்றனர். தெற்கேயிருந்து வடபகுதிக்குக் குடியேறிய நீகிரோவரிடமும் இது குறைவாகவே காணப்படுகிறது. தெற்கேயுள்ள மலைப்பிரதேசங்களில் வசிக்கும் வெள்ளையரிடம் மிக உயர்ந்த, தே. ச. வி. காணப்படுகிறது. அமெரிக்க இந்தியரிடத்து மிக உயர்ந்த சனனவிகித முண்டு. ஒருகாலத்தில் அமெரிக்காவை அவர்களே கைப்பற்றவும்கூடும். இக்கால மனிதன் பசிகொண்ட தன் மூதாதையரளவு வீரியமுடையவனுகக் காணப்படவில்லையென்ற கருத்தை உடல்நூலறிஞர் ஆட்சேபிக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய குழந்தைகளைச் சனங்கள் 1948 இலே பெற்றுவிட்டார்கள். சனன அதிகரிப்பு முதலிரண்டு பிள்ளைகளின் பிரசவத்தாலுண்டான அதிகரிப்பே. சனனவிகிதத்தை ஒன்றுக்குமேல் உயர்த்துவதானுல், கலியாணமான தம்பதிகள் தாய்மைக்கால எல்லையுட் சராசரி இரண்டு அல்லது மூன்று குழந்தைகட்கு அதிகமாகப் பெறவேண்டும்" என்று அந்த நிபுணர் வாதித்தார்.

வீழ்ந்துகொண்டுபோன தேறிய சனனவிகிதத்திலே முக்கியமானதொரு மாற்ற முண்டாகித்தானிருக்கிறதென்பதை நிபுணர் கடைசியாக ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது. மேலைத்தேசமெங்கணும், நடுநிலைநாடுகளிலும், யுத்தத்திலீடுபட்ட நாடுகளிலும் சனனவிகிதத்திலே அதிகரிப்புக் காணப்பட்டது. பூரணவேலை நிலையும், விவாக நிலையுமே இதற்கு ஒரு காரணம். யுத்தகாலச் சேமிப்பு, மோட்டர் வாகனம் அருந்தலாகக்கிடைத்தல், தற்கால வைத்தியமுறைப்படி நோவின்றிப் பிள்ளைபெறக்கூடிய வசதி, அரசாங்கங் கொடுத்த ஊக்கம், யுத்தசேவையிலுள்ளவர்க்குச் செய்த பலவசதிகள், குடும்பப் படிச்செலவென்றவகையில் அரசாங்கம் உதவிவந்த நன்கொடை முதலிய ஏனைய காரணங்களையும் சுட்டிக்காட்டலாம்.

**மாறுபடும் வயதுச் செறிவுக்கேற்றபடி தேறிய சனனவீதம் திருத்தஞ் செய்கிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா மொத்தம் | 0.98 | (1930–40) | பெல்ஜியம் | 0.86 | (1936 |
| | | | | 1.08 | (1957) |
| | 1.76 | (1957) | நெதர்லந்து | 1.15 | (1935–40) |
| | | | | 1.44 | (1957) |
| வெள்ளையர் | 0.96 | (1935–40) | அவுஸ்திரேலியா | 0.96 | (1932–34) |
| | 1.70 | (1957) | | 1.60 | (1957) |
| வெள்ளையரல்லாதார் | 1.14 | (1935–40) | பலஸ்தீன் முஸ்லீம்கள் | 2.17 | (1940) |
| | 2.20 | (1957) | யூதர் | 1.61 | (1945) |
| பிரிட்டன் | 0.77 | (1931–35) | இஸ்ரேல் யூதர் | 1.67 | (1957) |
| | 1.15 | (1957) | | | |
| பிரான்ஸ் | 0.90 | (1931–35) | ஜப்பான் | 1.57 | (1930) |
| | 1.25 | (1957) | | 0.93 | (1957) |
| ஸ்வீடன் | 0.73 | (1933–35) | இந்தியா | 1.25 | (1931) |
| | 1.07 | (1957) | | 1.31 | (1941) |
| ஜெர்மனி–மொத்தம் | 0.70 | (1933) | சோவியத் ரஷ்யா | 1.72 | (1926) |
| மேற்கு | 1.07 | (1957) | | 1.54 | (1938) |

**அட்டவணை 4. பல தேசங்களின் தேறிய சனன வீதம்.**


ஒன்றுக்கு அதிகமாக தே. ச. வீ. நிரந்தரமாயிருக்குமானுல், காலப்போக்கிற் சனப்பெருக்கம் அதிகரிக்கும் என்று பொருள். ஒன்றுக்குக் குறைவாக தே. ச. வீ. இருக்குமானுல், காலப்போக்கிலே சனப்பெருக்கம் குறைந்துகொண்டுபோகுமென்பது அருத்தம். ஐக்கிய அமெரிக்காவில் தே. ச. வீ. இப்போது ஒன்றுக்கு அதிகமாயிருக்கிறது. (ஆதார நூல்: Population Index, Office of Population Research, Princeton, N. J.)

படிப்பகம்

குழந்தையைப் பெற்றுவிடவேண்டும் ; நான் போரிலே இறந்தாலும் என்னுடைய குழந்தை மூலம் நான் அழியாதிருப்பேன் என்ற எண்ணங் களாலும் விவாகஞ் செய்தவர் சந்ததி விருத்தியைப்பெரிதும் விரும்புவார். அபாயம் நிறைந்த உலகத்திலே மக்களுடைய மனச்சார்புகளும், நோக் கங்களும் வீட்டை நோக்கியே திரும்புகின்றன.

மற்றவர்கள் செய்வதைப் பார்த்து அதுபோலவேசெய்வது மனிதனுடைய குணம். மத்திய வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தவர் பல குழந்தை களைப் பெறுவது நாகரிகமாய்க் கருதப்பட்டால், பலர் அதைப் பின்பற்று வார்கள். கல்லூரி அறிவுத்துறையொன்றையே எடுத்துக்கொள்ளலாம். அங்கே சிலர் வயதில் இளையவரும், முதியவரும், மத்தியநிலையிலுள்ள வரும் காணப்படுவர். உதவிப்பேராசிரியர் பேராசிரியரிலும் பார்க்க அதிகம் பிள்ளைகுட்டியுடையவராய்க் காணப்படுவர். அப்படியிருந்தும் விடயம் முடி ந்ததாக இல்லை. மேற்கு ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலே போருக்கு முந்தியகாலத்திலே, தேறிய சனனவிகிதம் ஒன்றுக்கு மிகக் குறைவாயிருந் தது. இப்போது அங்கெல்லாம் ஒன்றையடுத்து வளர்ந்து வருகிறது. ஐக்கிய அமெரிக்காவிலே உலகிலேயே உயர்ந்த தே. ச. விகிதமுண்டு. சமீபகாலச் சரித்திரத்திலே அத்தகைய விகிதத்தைக் கண்டதில்லை என

**கர்ப்பந்தரிப்பதற்கு ஏற்றவயதுப் பிரிவிலே முதியோரும் இளையோரும் நயமடைகின்றனர் :**




**படம் 4·** தம்பதிகள் ஒவ்வொருவரும் பெரிய குடும்பமுடையவராயிருப்பதோடு சீவியகால எல்லையும் அதிகரிப்பதால், தொழில் செய்யக்கூடிய வயதுவந்த ஒவ்வொருவரும் பலரை ஆத ரிக்க வேண்டியவராயிருப்பார். எதிர்காலத்திலே தொழிலாளரைப் பெறுவதில் இடர்ப்பாடு இருக்குமா? (மூலம்: தேசீய மூலவளக் குழுவும் குடித்தொகை மதிப்பீட்டுச் செய்தியகமும்.)

www.padippakam.com



லாம்.[1] அட்டவணை 4 இலே, தேறிய சனனவிகிதத்திலுண்டாகும் சில சிகரமான வேறுபாடுகளைக் காணலாம்.

தற்கால அமெரிக்கப் போக்கு நீடிக்குமா ? ஒருவராலுஞ் சொல்லமுடியாது. இன்று கல்யாணமாகாதிருக்கும் வாலிபர்தொகை குறைவு. இந்நிலை நீடித்திருக்குமா ? என்பதில்தான் முதலில் நாம் கேட்ட கேள்விக்கு மறுமொழி தங்கியிருக்கிறது. கல்யாணமான தம்பதிகள் ஓர் ஆணும், ஒரு பெண்ணுமாக இரண்டு குழந்தைகளிருந்தாற் போதுமென்று எண்ணுவார்களா ? அல்லது பெரிய குடும்பம் வேண்டுமென்று எண்ணுவார்களா ? அதிலேதான் மறுமொழிதங்கியிருக்கிறது. இப்போதிருக்கும் நிலையில், பெரிய குடும்பத்தையே அவர்கள் விரும்புவார்கள் போலத்தெரிகிறது.

**சனப்பெருக்கத்தால் உண்டாகும் பொருளாதார விளைவுகள்.**

சனப்பெருக்கத்தாற் பொருளாதார மாற்றங்களுண்டாவது வெளிப்படை. நகரப் புறங்களிலே சிறுபிள்ளைகள் அதிகம். பாடசாலைகளில் இடநெருக்கடியுண்டு. யுத்தகாலத்திலேயுண்டான சனனப்பெருக்கத்தால் நமது கல்லூரிகள் பாதிக்கப்பட்டுவிட்டன. 1975 இல் 1960 இலிருந்ததிலும் பார்க்க இரண்டுபங்கு மாணுக்கர் கல்லூரிகளிலே சேருவர். வாலிபர் தொகை கூடியிருக்கிற தென்பது ஐஸ்கிரீம் விற்பனை மூலமும், பியானோ விற்பனைமூலமும் தெரிகிறது.

பெற்றோரிலே தங்கியிருக்கும் சிறுவரின் தொகை பெருகுவதை 4 ஆவது படம் காட்டுகிறது. சிறிது காலத்துக்கு வேலைசெய்யும் வயதுடையவர் தொகை ஒப்பளவில் முக்கியங் குறைந்துவிடும். வயது முதிர்ந்தவர்களும், இளையவர்களுமாகச் சேர்ந்த வேலைசெய்யாதவர் தொகை அதிகரிக்கும். இவர்களை ஆதரிக்கும் பெரும்பொறுப்பு குறைந்த தொகையினரான வேலை செய்வோரைச் சார்ந்ததாகும்.

இராணுவத்திலே மனித சக்தியைப் பற்றிப் பேசுவார்கள். அந்த நோக்கின்படி, மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளிலே மனித சக்தி குறையும் காலமேற்படும். அட்டவணை 5 இலே சில தேசங்களின் எதிர்காலச் சனத்தொகை குறிக்கப்பட்டுள்ளது. சோவியத் ரஷ்யாவின் உயர்ந்த சனத்தொகையைப் பாருங்கள். இங்கே ஒன்றுக்கு தே. ச. விகிதம் வீழ்வதானல், மிகத்தூரம் வீழ்ச்சியடையவேண்டும். சுவீடனுக்கும் இங்கிலாந்துக்குமுள்ள குறைந்த தொகையைக் கவனிக்க.

[1] தேறிய சனனவீதத்தின் எளிதில்மாறும் தன்மையைக் கவனிப்பதே நிபுணரிடையே இன்று காணப்படும் போக்காகும். மக்கள் எந்த வயதுகளிற் கல்யாணஞ் செய்துகொள்கிருர்கள் என்ற போக்கையும் பல்வேறு வயதுப் பிரிவுகளிலுள்ள கர்ப்பந்தரிக்குந்தன்மைகளையும் ஆராய்வதையே அவர்கள் விரும்புவர். பிரிட்டிஷ் ரோயல் விசாரணைக்குழு விடுத்த 1949 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்தப் போக்கைக் கவனிக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



ஐக்கிய அமெரிக்காவினதும் சோவியத்தினதும் சனத்தொகை, ஐரோப்பாவின் ஏனை நாடுகளுடைய சனத்தொகையினும் அதிகம் :

| | 1958 | 1975 |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 175 | 217 |
| ஐக்கிய இராச்சியம் | 52 | 56 |
| பிரான்ஸ் | 45 | 49 |
| சோவியத் ஐக்கியம் | 208 | 275 |
| சுவீடின் | 7.4 | 8.3 |
| இத்தாலி | 49 | 54 |

அட்டவணை 5. 1975 இல் வெவ்வேறு நாடுகளிலிருக்கும் சனத்தொகைபற்றிய எதிர்கால மதிப்பீடு (பத்துலட்சத்தில்) (ஆதாரம்: ஐக்கிய நாடுகள் புள்ளிவிபர ஆண்டறிக்கை).

எங்களுடைய சனத்தொகை அதிகரிப்பது நல்லதா ? இம்மாதிரியானதொரு பொதுக்கேள்விக்குப் பொருளாதாரம் தனித்து விடைபகரமுடியாது. குடும்பவாழ்க்கையிலுண்டாகும் இன்பதுன்பங்களை ரூபாய் சதக் கணக்கிலே மதிப்பிட முடியாது. இருந்தும், சனத்தொகையதிகரிப்பதாலுண்டாகும் பொருளாதார அமிசங்கள் சிலவற்றை ஆராயலாம். மேலத்தியாயங்களில் அந்த ஆராய்ச்சியைச் செய்யும்போது, அதன் பயனாக உண்டாகும் முடிபுகள் இலேசானவையாயிருக்கமாட்டா.

சனத்தொகை பெருகுவதாற் பணச்செலவும் பெருகும். ஏனெனில் சனப்பெருக்கத்துக்கேற்றபடி வீடுகள், தொழிற்சாலைகள் என்பனவும்பெருகும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கமாட்டாது. அதன் பயனாகப் பணவீக்கமுண்டாகும். சனப்பெருக்கமுண்டாவதால் குறைந்து செல் விளைவு விதியின் பயன்களேற்படும். நமது கார்களில் மக்கள் நெருக்கமாயிருப்பார்கள். வீதிகளெங்கும் கார்கள் நிரம்பியிருக்கும். இராமப்புறங்கள் இதனாற் பாழாவதோடு, தனிப்பட்டவருடைய ஒதுக்கமான வாழ்க்கைக்கும் பங்கமேற்படும்.

சனப்பெருக்கம்போன்றதொரு சிக்கலான விடயத்தைப் பிரசைகளும் அரசியல் தலைவர்களும் நன்றாக விளங்கிக்கொள்ளத்தகுந்த முறையிலே பொருளாதார ஆராய்ச்சி அதன் பலபட்டதன்மைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதாய் அமைய ஆராயவேண்டும்.

## பொழிப்பு :

### ஏ. பொருளாதார நிர்வாகம் பற்றிய பிரச்சினைகள் :

1. எந்த ஒரு பொருளாதாரமும் மூன்று மூலாதாரமான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். சாத்தியமான பொருள்கள் சேவைகள் என்பவற்றில் எவ்வகையானவற்றை எவ்வளவில் உற்பத்தி செய்யவேண்டும்? இப்பொருள்களை உற்பத்தி செய்ய எப்படிப் பொருளாதாரச் சாதனங்களைப் பயன்படுத்தல்

www.padippakam.com



வேண்டும்? யாருக்காக அவற்றை உற்பத்தி செய்யவேண்டும்? அதாவது பல வகையான வகுப்புக்களையும், தனிப்பட்ட நிலைமைகளையுமுடையவரிடையே வருமானம் எவ்வாறு விரவியிருக்கவேண்டும்? என்பன.

2. ஒவ்வொரு சமூகமும் இப்பிரச்சினைகளை ஒவ்வொருவகையிலே தீர்த்து வைக்கிறது. சிலர் வழக்கத்தையனுசரித்துத் தீர்ப்பர். வேறுசிலர் இயல் பூக்கத்தையனுசரிப்பர். வேறுசிலர் சட்டத்தினாலோ, கட்டளையினாலோ தீர்ப் பர். நமது நாட்டில் விலை, சந்தை என்னும் அமைப்புக்கள்மூலம் தீர்ப் போம்.

3. இந்த அடிப்படைப்பிரச்சினைகள் முக்கியமானவை. ஏனெனில் வரையறுக்கப்பட்ட மூலப்பொருள்களும், தொழில்நுட்பச் சாதனங்களும் இருக்கும்போது வாழ்க்கைத்தரமும் வரையறுக்கப்பட்டதாகவேயிருக்கும். இதுவே எல்லாப் பொருளாதார வாழ்க்கையிலும் காணக்கூடிய அடிப்ப டைத்தன்மை. பொருளாதாரப் பொருள்கள் ஏதேச்சையாகக் கிடைப்பதில்லை. அருந்தலாகவே கிடைக்கும். எல்லா ஆசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதென்பது இயலாத கருமமாதலால், கிடைக்கக்கூடியபொருள்களி டையே தெரிந்து எடுக்கவேண்டும்.

**பீ. சமூகத்துக்குக் கிடைக்கக்கூடிய தொழினுட்பச் சாதனங்கள் :**

4. கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட சாதனங்களையும் தொழில்நுட்ப வசதி களையும் கொண்டு ஒரு தேசத்தவர் என்ன பொருள்களை உற்பத்திசெய்ய லாமென்பதைத் தெரிவதற்கு, வெண்ணெய் துப்பாக்கி என்ற இரு பொருள் களைப் பற்றிக் கீறிய உற்பத்தித் தகவுக்கோடு பயன்படும். ஒரு பொருளை உற்பத்திசெய்வதற்குத் தேவைப்படும் சாதனங்களை மற்றொரு பொருளை உற்பத்திசெய்ய எவ்வாறு மாற்றலாமென்பதை இக்கோடு காட்டுகிறது.

5. உற்பத்தித் தகவுக்கோடுகள் குவிந்த கோடுகளாயிருக்கும். அது மேலதிக உற்பத்திச் செலவின் அதிகரிப்பைக் காட்டும். அதாவது மேலதிக மாகத் துப்பாக்கிகளை உற்பத்தி செய்வதானால் அதற்குப் பதிலாக எவ்வளவு வெண்ணெயைத் தியாகஞ் செய்யவேண்டும். வெண்ணெய்க் கணக்கில் மேலதிக துப்பாக்கி உற்பத்திக்கு எவ்வளவு செலவாகும் என ஆராயு மிடத்து, செலவு அதிகரிக்கும் இயல்பைக் காணலாம்.

6. குறைந்துசெல்விளைவுவிதி, ஓர் எல்லையின் பின்னர், நிலையான தொரு சாதனத்தோடு (உதாரணம்–நிலம்) மாறுமியல்புடைய மற்றொரு சாதனத்தை மேலும் மேலும் சேர்க்கும்போது (உதாரணம்–தொழிலாளர்) மேலதிகமாய்க் கிடைக்கக்கூடிய விளைவு குறைந்துகொண்டே செல்லும் என்பதை எடுத்துக்கூறுகிறது. இந்தவிதி விகிதாசாரத்தைப் பொறுத்தது. மாறுபடுந்தன்மையுள்ள சாதனங்களுக்குத் துணைபுரிதற்காக நிலையான சாதனம் குறையக்குறையவே கிடைத்துக்கொண்டிருக்கும்.

7. குறைந்துசெல்விளைவுவிதி, பெருகும்செலவு விதியோடு சம்பந்தப் பட்டதாயிருந்தாலும் இரண்டுமொன்றன்று. ஆனபடியால் இவற்றோடு

www.padippakam.com



தொடர்புள்ள மூன்றுவது விதியுமொன்றுண்டு. பெருவாரி உற்பத்திச் சிக்கனங்கள் அல்லது அளவுகளென்ற இப்போக்கு "அளவுக்கேற்ற அதிகரித்துச் செல் விளைவு" எனப்படும். "அளவு" என்ற சொல், எல்லாச் சாதனங்களும் ஒரே நேரத்தில் அளவில் மாற்றப்படுகின்றன, குறைந்துசெல் விதியில் நிகழ்வதுபோல எதுவும் மாருத ஒரு சாதனமாகக் கொள்ளப்படுவதில்லை என்பதை எடுத்துக்காட்டவே உபயோகிக்கப்படுகிறது. இக்காலத் தொழில்களிற் பல ஆரம்பதிசையில் அளவுக்கேற்ற அதிகரித்துச்செல் விளைவு என்ற கட்டத்தை அடைகின்றன. இதனுல் குறைந்துசெல்விளைவு விதியையும் பெருகுஞ் செலவு விதியையும் முதலிலேயே பின்னிடச் செய்யலாம்.

**சி. எந்த ஒரு பொருளாதாரத்துக்கும் அடிப்படையாகவுள்ள சனத்தொகை அமிசம்**

8. சனப்பெருக்கம்பற்றி மல்தசு கொண்ட கொள்கை குறைந்து செல் விளைவு விதியையே ஆதாரமாகக்கொண்டது. சனப்பெருக்கம் தடைப்படுத்தப்படாவிட்டால், பெருக்கல்விருத்தியிலே அதிகரிக்கும்; ஒவ்வொரு தலைமுறையினும் இரட்டிக்கும் என மல்தஸ் கருதினுர். ஆனுல் இவ்வாறு பெருகும் சனத்தொகையில் உள்ள ஒவ்வொரு மனிதனும் குறைவான வளங்களையும், நிலத்தையும் பெறவேண்டியவனுவான். குறைந்துசெல் விளைவுவிதியின் பயனுக அவனுடைய வருமானமும் வீழ்ச்சியடையும்; சிலசமயம் மிகவும் வீழ்ச்சியடைந்து பஞ்சமும் நோயும் உண்டாகும்.

9. மல்தசுக்குப் பின் ஒன்றரை நூற்றுண்டாக உலகின் எல்லாப் பாகங்களிலும் சனத்தொகை வேகமாகப் பெருகிற்று. மருத்துவத்துறையிலுண்டான முன்னேற்றத்தினுல் மரணம் குறைந்ததும் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஒரு காரணமாகும். தொழினுட்பத்துறையில் உண்டான முன்னேற்றத்தாலே குறைந்துசெல்விளைவுவிதியின் விளைவுகள் ஈடுசெய்யப்பட்டன.

10. 1870 இன் பின்னர் பிறப்புவிகிதம் குறைந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு முன்னர், முன்னேறிய நாடுகளிலே, தேறிய சனன விகிதம் ஒன்றுக்குக் குறைவாயிருந்தது. அதன்பயனுகச் சனவிருத்திகுறைந்தது. 1939 இற்குப் பின் அமெரிக்க நடுத்தரவகுப்பினர் பெரிய குடும்பங்களை விரும்பினர்; அதாவது பல பிள்ளைகளைப் பெற்று வளர்க்கவிரும்பினர். இந்தப் போக்கைப் பொருளாதார அறிஞர் பலர் எதிர்பார்க்கவில்லை. இதனுற் பாரதூரமான விளைவுகள் உண்டாகலாம்.

**விவாதிக்கத் தகுந்த பிரச்சினைகள் :**

1. பொருளாதார நிர்வாகத்துக்குத் தேவையான மூன்று பிரச்சினைகளையும் விநியோகம், தேவை என்பனமூலம் நமது விலைத்திட்டம் எவ்வாறு தீர்த்துவைக்கிறது.

2. "அருந்தல்", "இலவசப்பொருள்கள்" என்ற சொற்களுக்குப் பொருளியலறிஞர் கொடுக்கும் அர்த்தமென்ன ?

படிப்பகம்

www.padippakam.com



3. யுத்தப்பொருள்கள், சமாதானப் பொருள்கள் என்று பாகுபாடு செய்யாமல், நுகர்ச்சிப்பொருள், முதற்பொருள் எனப் பாகுபடுத்தித் தெரிந்துகொள்ளலாம். இந்தத் தெரிவைக் காட்டக்கூடியதும் பரீட்சார்த்தமானதுமான உற்பத்தித்தகவுக்கோடொன்றைக் கீறுக.

4. உற்பத்திச் சாதனங்களான தொழில், நிலம் முதலியனவெல்லாம் பெருகினுல், சமூகத்தின் உற்பத்தித்தகவுக்கோடு எப்படி அமையுமென்பதைக் காட்டுக. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், கொடுக்கப்பட்ட வளங்களால் ஆகக்கூடிய உற்பத்திகளைப் பெருக்கினுல் என்ன ஆகும். இந்தச் சீர்திருத்தங்கள் வெண்ணெய் விடயத்தில் மாத்திரம் உண்டாகின்றன; துப்பாக்கி விடயத்தில் இல்லை என்ற நிலையில் என்ன ஆகும்.

5. நிலத்தைப் பலபடிபெருக்கித் தொழிலாளரை ஒரே அளவில் வைத்திருந்தால், குறைந்துசெல்விளைவுவிதி நிகழுமா ? உதாரணமுகத்தால் விளக்குக.

6. (அ) குறைந்துசெல்விளைவுவிதி (ஆ) செலவுபெருகும் போக்கு (இ) அளவுக்கேற்ப விளைவு அதிகரித்துச்செல்வது என்ற விதிகளை விளக்கி அவற்றின் தாரதம்மியங்களை ஆராய்க.

7. நும் முப்பாட்டனுடைய குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் ? நும் தந்தை குடும்பத்தில் எத்தனைபேர் ? உமது குடும்பத்தில் எத்தனை பேர் இருப்பார்களென்பது உமது உத்தேசம்?

8. "சனப்பெருக்கம்தான் போருக்குக் காரணம் என்ற கொள்கை தவறு. இக்காரணகாரியங்கள் தலைமாறிக்கிடக்கின்றன. போர்தான் சனப்பெருக்கத்துக்குக் காரணம் என்பதை ஆராய்ச்சி வலியுறுத்துகிறது. வேறு நாடுகளைப் பிடித்து இராச்சியத்தை விரிவாக்க விரும்பும் தேசம், இராணுவ பலத்தை அதிகரிப்பதற்காகச் சனப்பெருக்கத்தை ஊக்கப்படுத்துகிறது. அந்தப் பெருக்கத்தைச் சாட்டாகக்கொண்டு யுத்தஞ் செய்து நாட்டை விரிவாக்கப் பார்க்கிறது. இதற்கு உதாரணம் இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான்." இக்கூற்றை ஆராய்க.

9. பின்வரும் கருத்துக்களை ஆராய்க :

| | |
|---|---|
| பொருளாதாரப்பொருள்களும் | இலவசப் பொருள்களும், |
| | தே.ச.வி. |
| ஈடுசெய்தல், அருந்தல்விதி, | உற்பத்தித்தகவுக்கோடு அல்லது |
| பெருகும் செலவு, குறைந்துசெல்விளைவு, | மாற்றக்கோடு (அட்டவணையோடு) |
| | அளவுக்கேற்ப அதிகரித்துச்செல்விளைவு |
| மல்தசின் சனத்தொகைக் கொள்கை. | மொத்த உற்பத்தி, மேலதிக உற்பத்தி |
| உற்பத்திச் சாதனங்கள், | வயதுச்செறிவு. |

www.padippakam.com

# மூன்றும் அத்தியாயம்

# "கலப்பு" முதலாளித்துவ முயற்சித்திட்டம் செயற்படும் முறை

*ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள முதலை மிகப் பயனுள்ள வகையிலேயே முதலீடு செய்ய முயல்கிறான். பொதுநலத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கமவனி டம் கிடையாது. அன்றி எவ்வளவுதூரம் பொதுநலனை அபிவிருத்தி செய்கிறான் என்ப தையும் அவன் உணர்வதில்லை. அவன்தனது பாதுகாப்பையும் இலாபத்தையுமே கருத் திற்கொண்டு தொழில்புரிகிறான். அவனுடைய நோக்கத்தில் இல்லாத ஒரு பயனைப் பெறுவதற்கு அவனைத் தோன்றாத் துணையாக ஒன்று இயக்கிக்கொண்டிருக்கிறது. சமூ கத்தின் நலனைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு முயல்வதிலும் பார்க்க அவன் தனது சொந்த நலனையே பெருக்கும் நோக்கத்தோடு செய்யும் முயற்சியினால் அடிக்கடி சமூகத்தின் நலன்பெரிதும் முன்னேற்றமடைகிறது— ''தேசங்களின் செல்வம்'' என்ற நூலில் அடம் ஸ்மித் கூற்று* (1776).

**கலப்புமுயற்சித் திட்டம் :**

இருபதாம் நூற்றாண்டிற் கைத்தொழில் நாடுகளாகத் திகழும் தேசங் களின் பொருளாதார வாழ்க்கையிலே காணும் விசேட அமிசங்களைப் பற்றியே இங்கு ஆராய்வோம். இதிலே சோவியத்திட்டம் சேர்க்கப்படவில்லை. இந் நாடுகளிற் பெரும்பாலானவற்றில், கடந்த சில நூற்றாண்டுகளாக, பொரு ளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் மிகக் குறைவாகவே தலையிட்டு வந்தது. சேவைமானிய முறையும், கைத்தொழில் யுகத்துக்கு முந்திய நிலைமைகளும் படிப்படியாக மாறிச் "சுதந்திரமான தனியார்முயற்சி" என்னும் "போட்டி முதலாளித்துவ முறை" உண்டானது.

இந்நிலை வளர்ச்சியடைந்து பூரணமான தன்னிச்சைநிலையை (அதாவது வியாபார விடயத்தில் அரசாங்கம் சிறிதும் தலையிடாதநிலையை) அடைய, நிலை மை எதிர்மாறாகத் திரும்பத் தொடங்கிற்று. பத்தொன்பதாம் நூற்றாண் டின் மிகப் பிந்தியகாலந் தொட்டு, நாம் ஆராயும் நாடுகளிற் பெரும் பாலானவற்றிலே அரசாங்கம் படிப்படியாகப் பொருளாதார விடயங்களில் அதிகப்படியாகத் தலையிடத் தொடங்கிற்று. முக்கியமானதும் எங்கும் பரந் ததுமான இந்தப் போக்கின் முக்கியமான அடிப்படை அமிசங்களைச் சரித் திராசிரியரே ஆராய்ந்து கொள்ள விட்டுவிடுவோம். இன்று காணப்படும் எமது திட்டம் கலப்புள்ள சுதந்தரமான முயற்சிப்பொருளாதாரத்திட்ட மென்பதைமாத்திரம் கூறிவிடல் போதுமானது. இத்திட்டத்திலே தனிப் பட்ட தாபனங்களும் அரசாங்கமும் தலையிட்டுப் பொருளாதார ஆதிக்கத் தைச் செலுத்துகின்றன.

இவ்வத்தியாயத்தின் முதற்பகுதியிலே எந்தச் சமூகமும் தீர்த்து வைக்க வேண்டிய மூன்று பொருளாதாரப் பிரச்சினைகளை இந்தக் கலப்புமுறை



5—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறு சமாளிக்கிறதென்ற விடயம் ஆராயப்படும். இக்காலப் பொருளாதார முறைபற்றிய மூலாதாரமான சில இயல்புகளைப்பற்றி இந்த அத்தியாயத்தின் கடைசிப் பிரிவிற் கூறுவோம்.

**அ. சுதந்தரமான முயற்சித்திட்டம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கிறது :**

சுதந்தரமானதும் தனியார் கையிலுள்ளதுமான ஒரு தொழில்முறையமைப்பில், இரண்டாம் அத்தியாயத்திலே நாம் குறிப்பிட்ட மூன்று பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றித் தனிப்பட்ட எவருமோ, தாபனமோ உணர்வோடு அக்கறை கொள்வதில்லை. எதை உற்பத்திசெய்யவேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும், யாருக்காகச் செய்யவேண்டுமென்பதைப்பற்றி அவர்கள் அக்கறைகொள்ளமாட்டார்கள். இது மிகவும் நூதனமான விடயமே. உதாரணத்துக்காக, பிரசித்தி பெற்ற பொருளாதார மேற்கோளொன்றைக் காட்டுவோம். நியூயோர்க் நகரமிருக்கிறது. அதன் தேவைக்கான பொருள்கள் ஓயாமல் வந்தும்போய்க் கொண்டுமிருக்காவிட்டால் ஒரு வாரத்தில் அந்நகரம் பட்டினியால் வாடிவிடநேரும். சரியான உணவு வகைகள் தேவையான அளவுக்குச் சுற்றுடலிலுள்ள ஊர்களிலிருந்தும் 50 மாகாணங்களிலிருந்தும் உலகின் தூரபாகங்களிலிருந்தும் அந்நகரை நோக்கி வாரங்களாகவும் மாதங்களாகவும் வந்துகொண்டிருக்கும்.

நகரத்து மக்களின் வாழ்வு மிகச் சிக்கலான விரிந்த பொருளாதார ஒழுங்குகளில் அமைந்திருக்கிறது. அது முறிந்துபோகுமாஞல் 100 இலட்சம் நகரவாசிகளின் உயிர் ஊசலாடும். ஆஞல் அந்தப் பயம் சிறிதுமின்றி அத்துணை மக்களும் அமைதியாகத் துயில்கிருர்கள். இந்த ஒழுங்கெல்லாம் எவருடைய தூண்டுதலோ வழிநடத்துதலோ இன்றி நடைபெறுகின்றன.

அரசாங்கமும் பலவகையிலே பொருளாதார நடவடிக்கைகளை நெறிப்படுத்த முயல்கிறது. காப்புவரிச்சட்டமென்றும், தூயஉணவுச் சட்டமென்றும், பொதுப்பயன் சட்டமென்றும், ரயில் பாதைச் சட்டமென்றும், குறைந்தபட்சச் சம்பளச் சட்டமென்றும், நியாயமான தொழில்வாங்கு சட்டமென்றும், சமூகப்பாதுகாப்புச் சட்டமென்றும், விலை உச்சவரம்பு, கீழெல்லைவரம்பு என்பன பற்றியசட்டமென்றும், மராமத்துவேலை, இராணுவப்பாதுகாப்பு, தேசவரிதலவரியென்றும், பொலிஸ்பாதுகாப்பு நீதிப்பரிகாரம், மண்டலப்பிரிவுச் சட்டம், நகரசபைத்தண்ணீர் விநியோகம், எரிவாயுவிநியோகம் என்னும் இன்னோரன்ன பலவகையிலும் அது பொருளாதார நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறது. ஆஞல் அரசாங்கத்தின் நேரடியான கண்காணிப்பின்றியே எவ்வளவோ பொருளாதார நடவடிக்கைகள் நிகழ்கின்றன. பல்லாயிரக்கணக்கான பொருள்களைக் கோடிக்கணக்கான மக்கள், மத்திய கண்காணிப்பின்றியே தம்மிச்சைப்படி உற்பத்திசெய்கிருர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



**குழப்பமில்லை ; பொருளாதார ஒழுங்கே நிலவுகிறது :**

சந்தையும் விலையும் என்ற போட்டிமுறையில் நடைபெறும் ஒரு திட்டம், அது வேறென்ன தன்மையுடையதாயிருந்தாலும், எத்துணைக் குறைபாடுகளோடு அது செயல்பட்டாலும், குழப்பமுள்ள ஒழுங்கில்லாதமுறையன்று என்பது திண்ணம். இங்கே ஒருவகையான ஒழுங்கும் முறையுங் காணப்படுகின்றன. அது செயற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. விலைவாசிகள், சந்தைகள் என்ற ஒரு திட்டத்தின்மூலம் தன்னுணர்வின்றியே ஒத்துழைக்கும் விரிவானதோர் இயந்திர அமைப்புப்போன்றது போட்டிமுறை. பல்வேறு வகைப்பட்ட கோடிக்கணக்கான தனியாட்கள் தமது அறிவையும் செய்கைகளையும் ஒருமுகப்படுத்துவதற்கான அறிவுறுத்து கருவிஅது. அறியாத மாறுந் தன்மையுள்ள ஆயிரக்கணக்கான பொருள்களும் தொடர்புகளும் சம்பந்தப்பட்டதும் கற்பனையிற்கூடக் கொண்டுவரச் சிரமமான சிக்கல் நிறைந்ததுமான ஒரு பெரும்பிரச்சினையை, நடுநின்று இயக்கும் ஒரு மேதாவியின்றியே தீர்த்துவைப்பது இந்தப் போட்டிமுறை. இதை எவரும் நினைத்து உருவாக்கவில்லை. இது தானகவே உண்டாயிற்று. மனித இயற்கைபோல இது மாறுமியல்புடையது. சமூகத்தாபனம் எதுவாயிருந்தாலும் அஃது எவ்வளவு காலம் நீடித்து நிலைநிற்கு மென்பதைக்கொண்டே அதன் பயனுடைமையை நிச்சயிக்கலாம். போட்டிமுறையும் நிலைநிற்கக்கூடியதே.

விலைத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் காட்டக்கூடிய உதாரணம் யுத்தத்துக்குப் பின் உள்ள மேற்கு ஜெர்மனியின் நிலைமையாகும். 1946–1947 இலே இங்கே உற்பத்தியும் நுகர்வும் மிகக் கீழான நிலையிலிருந்தன. இதற்குக் காரணமாக யுத்தகாலத்துக் குண்டுவீச்சினுலுண்டான அழிவையோ, அந்நாடு கொடுத்து வந்த யுத்த நட்ட ஈட்டையோ சுட்டிக்காட்ட முடியாது. விலைத்திட்டம் செயலற்றுப்போனமையே இதற்கு முக்கிய காரணமென்று கூறலாம். பணத்துக்கு மதிப்பில்லாமற் போய்விட்டது. பொருள்களில்லாதபடியால், தொழிற்சாலைகள் மூடப்பட்டன. நிலக்கரியில்லாதபடியால், புகைவண்டிகளை ஓட்டமுடியாதிருந்தது. நிலக்கரிச் சுரங்கங்களிலே தொழிலாளரை வேலைக்கமர்த்த முடியாதிருந்தது; ஏனெனில் அவர்கள் பசியினல் அல்லற்பட்டார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு உணவுப்பொருள்களை மாற்ருகக் கொடுப்பதென்ருல் அவை கிடைப்பது அருமையாயிற்று. விலைவாசிகள் சட்டபூர்வமாக விதிக்கப்பட்டன. ஆனல் நியமவிலைக்குப் பொருள்கள் விலையாயின. சில சந்தர்ப்பங்களிலே கள்ளச் சந்தைவிலையிலே பண்டமாற்றும் நிலவிற்று. 1948 இலே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. செலாவணியிலுள்ள பணம் சம்பந்தமானதொரு சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பயனக விலை எந்திரம் மறுபடியும் நல்லமுறையிலே செயற்படத் தொடங்கிற்று. அதன்பயனகத் திடீரென்று உற்பத்தியும் நுகர்வும் அதிகரித்தன. இவ்வாறு எதனை, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்யவேண்டுமென்ற பிரச்சினை சந்தைகளாலும், விலைவாசிகளாலும், தீர்க்கப்படலாயிற்று.

www.padippakam.com



இத்தகைய அற்புதங்கள் நாளும் பொழுதும் எம்மைச் சுற்றி எந்நேரமும் நடந்துகொண்டிருந்தன. நாம் கண்ணைத் திறந்து சந்தையின் தினசரி நிகழ்ச்சிகளைப் பார்த்தால் தெரியும். முதலாளித்துவ ஆட்சியை முற்றாய் அழித்துவிட விரும்பும் ஒரு புரட்சிக்காரன் விலைவாசி இயந்திரத்தைச் செயலறச் செய்யக்கூடிய பெரிய பணவீக்கத்தையோ, பணவாட்டத்தையோதான் விரும்புவான்.[1]

**தோன்றுத்துணையும் பூரண போட்டியும் :**

யாராவது மேற்பார்த்துக்கொண்டு நடத்தாவிட்டால் இந்த விலையந்திர அமைப்பு குழப்பமாகவே செயற்பட்டுக்கொண்டிருக்குமெனப் பொருளியல் மாணவர் கருதக்கூடாது. இந்தப் பாடத்தைப் படித்தபின்னர் விலையந்திரம்போலப் பூரணமான ஒரு முறை கிடையாதென்றும், அது தெய்வாதீனமானதென்றும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென்றும் எண்ணிவிட முடியாது. இது கடவுள் செயலாக உண்டானதொரு சமாதானமான அமைப்பென்றும் எண்ணிவிடக்கூடாது. அப்படியெண்ணுவது மற்றொரு வகையான தீவிரவாதமாகும். பொருளாதார அமைப்பிலே அடிப்படையில் ஓர் ஒழுங்கு இருப்பதை அறிந்து "**தேசங்களின் செல்வம்**" என்ற நூலை எழுதிய அடம் ஸ்மித் (1776) உள்ளம்பூரித்தார். இந்நூலே இக்காலப் பொருளியலுக்கு அடிப்படை நூலாகும். இங்கே "தோன்றுத்துணையாக" ஒரு சக்தி உண்டென அவர் ஒரு தத்துவத்தைக் கற்பித்தார். தன் சுயநலத்தையே கவனித்துவரும் ஒவ்வொரு தனியாளும், மற்றவர்களுடைய பொதுநலத்தையும் கவனிக்கத்தக்கவாறு அவனுக்குத் தோன்றுத் துணையாக ஒன்று நிற்கிறது. ஆனபடியால், சுதந்திரமான வியாபாரப் போட்டியில் அரசாங்கம் தலையிட்டால் அது ஆபத்தாகமுடியும். இந்தக் கொள்கையிலுள்ள பிரத்தியட்சபூர்வமான சில குறைபாடுகளை ஸ்மித் கண்டிருந்தபோதிலும், சுதந்திரமான வியாபாரப் போட்டியால் ஏற்படக்கூடிய நன்மைகளை முற்றாகப் பெறுவதானால், பூரண போட்டிக்குத் தேவையான கட்டுப்பாடுகளும் பாதுகாப்புகளும் இருக்கவேண்டுமென்பதைப் பிற்காலத்துப் பொருளியலறிஞரே கண்டுபிடித்தனர். பூரண போட்டியென்பது ஒரு கலைச்சொல். எந்த ஒரு விவசாயியோ, தொழிலாளியோ, வியாபாரியோ சந்தைவிலையைப் பாதிக்கக்கூடிய செல்வாக்குடையவனாயிருக்கக் கூடாது. அவனுடைய தானியமோ, சரக்கோ, தொழிலோ சந்தை விலையில் மந்தத்தையோ, உயர்நிலையையோ உண்டாக்கக்கூடிய அளவு அதிகமாயிருக்கக்கூடாது. அப்படி நிகழுமானால் ஏதோ ஒருவகை ஏகபோக உரிமைக்குறைபாடு ஏற்பட்டுவிடுகிறது. அந்த அளவுக்கு அந்தத் தோன்றுத்துணை குறைபாடுடையதாகிறது. பூரணபோட்டியைப் பற்றிக் கூறும் புகழுரைகளிற் சில பொருத்தமற்றன. முன்னர் சுட்டிக்காட்டியவாறு, நமது திட்டம் தனியாரும், அரசாங்கமும் சேர்ந்ததொரு கலப்புத்திட்டம்.

[1] விலைவாசி முறையில் நன்மைகளுண்டெனச் சில சோவியத் பொருளியலறிஞரும் சோவியத் நாட்டோடு நட்புரிமைபூண்ட நாட்டு அறிஞரும் 1960 ஆம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com



அத்துடன் அஃது ஏகபோக உரிமையும் போட்டியும் கலந்து இயங்குமொரு திட்டம். இதைப் பின்னால் விளக்குவோம். பேனுட்ஷா ஒரு முறை, கிறித்தவசமயத்தைப்பற்றிக் கூறியமுறையிலேதான், பூரணபோட்டியைப் பற்றியும், எல்லாவற்றிலும் குறைகாணும் ஒருவர் "பூரணபோட்டியென்பதை எப்பொழுதாவது நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்யப்படவில்லை" யென்று கூறலாம்.

சுதந்திரமான போட்டிவியாபாரம் நடைபெற்றகாலம் உண்டா என்பதுபற்றி சரித்திராசிரியர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. பொருளியலறிஞர் கருத்துப்படி இன்று போட்டி பூரணமான போட்டியாயிருக்கவில்லை. பெருவாரியான உற்பத்தி, நுண்தொழிலறிவு என்ற மூலாதாரமான காரணங்களாலும், நுகர்வோரின் பலவகைப்பட்ட விருப்பங்களாலும், வியாபாரிகளின் புதுப்புதுத்தாபன அமைப்புக்களாலும், போட்டியானது இன்று முன்னேயிலும் தீவிரமாயிருக்கிறதா குறைவாயிருக்கிறதா என்பதைக்கூட அறிய முடியாதிருக்கிறது. ஏகபோக உரிமையின்வலு சற்றே குறைந்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 1890 ஆம் ஆண்டிலும் அதையடுத்தவருடங்களிலும் பெரிய வியாபாரத் தாபனங்கள், கூட்டு நிலைக் கம்பனிகள், வாணிபச்சமாசங்கள், விற்பனை அமைப்புக்கள் பெருகினது போல இப்பொழுதும் உண்டாகுமென எண்ணுவதற்கு இடமில்லை. நமது பூரணமாகாத போட்டிவியாபாரமுறையைத் திருத்தக்கூடிய சட்டங்களையும் வழக்கங்களையும் நடைமுறையிலே கொண்டுவரவேண்டியதே தற்போது தேவைப்படுகிறது. ஒரு கோடியிலே அரசாங்கம் தலையிடாததும் வியாபாரிகள் தம்மிச்சைப்படி நடத்துவதுமான ஒழுங்கும் மறுகோடியிலே எல்லாவற்றையும் அரசாங்கமே நடத்தும் ஒழுங்கும் பொருளாதாரத் தத்துவங்களை அரங்கேற்றிக் காட்டுகின்றன. இந்த இரண்டு தீவிரவாதங்களுள் எதை அரசாங்கம் கொள்ளவேண்டுமென்பதன்று நாம் தீர்க்கவேண்டிய விடயம். தனியாருடைய பொருளாதார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எவ்வளவு தூரம் தலையிடவேண்டுமென்பதே நாம் ஆராய வேண்டிய விடயம்.

**விலைத்திட்டம் :**

விலையந்திரம் என்பது தன்னறிவற்ற, தானே இயங்கும் ஓர் அமைப்பு. அஃது எவ்வாறு இயங்குகிறது ? போட்டியின் அடிப்படையிலுள்ள இலாப நட்ட அமைப்பின் வெளியுருவத்தை விவரிப்பது இலேசு. எந்த ஒரு பொருளுக்கும் ஒரு விலையுண்டு. எந்த ஒரு பொருளாயினும், சேவையாயினும் அது விலைமதிப்புடையது. மனிதன் செய்யும் தொழில்வகை ஒவ்வொன்றுக்கும் விலையுண்டு ; அதாவது விதம் விதமான சம்பள வீதமுண்டு.

ஒவ்வொருவரும் தாம் விற்கும் பொருளுக்கு விலையாகப் பணத்தைப் பெறுகிறார். அந்தப் பணத்தைக்கொடுத்து அவர் தமக்கு விருப்பமான பொருளை வாங்குகிறார். ஒரு பொருளில் மேலும் அதிகம் தேவைப்பட்டால்—அப்பொருள் சப்பாத்து என்றே வைத்துக்கொள்வோம்—அதற்குப் புதிய

www.padippakam.com



கோரிக்கைகள் பல வந்து குவியும். அதனாற் சப்பாத்தின் விலை உயரும்; அதன் உற்பத்தியும் அதிகரிக்கும். இவ்வாறே கடைசியாக நிலவிய விலையிலே வாங்குவதற்கு விரும்பாதவகையிலே தேயிலை மிஞ்சிக்கிடக்குமானால், அதன் விலை போட்டியின் பயனாய் இறங்கிவிடும். குறைந்த விலையில் மக்கள் அதிகம் தேநீர் குடிப்பார்கள். தேயிலை உற்பத்தியாளர் தேயிலையைக் குறைத்துவிடுவர். இவ்வாறே தேவைக்கும் விநியோகத்துக்குமிடையிற் சமத்துவம் நிலைநிறுத்தப்படும். (இவ்விடயம் அடுத்த அத்தியாயத்திலும் மூன்றும் பகுதியிலும் ஆராயப்படும்.)

நுகர்பொருள் விடயத்திலே சந்தை எவ்வாறு நடைபெறுகிறதோ அவ்வாறே உற்பத்திச் சாதனங்களான உழைப்பு, நிலம், முதலீடு என்பவை சம்பந்தமான சந்தைகளிலும் நிகழும். கண்ணாடிக் குவளை செய்வோரைக் காட்டிலும் ஓட்டுவேலை செய்வோருக்கு அதிகத் தேவையிருந்தால் பின்னைத் துறையில் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஓட்டுவேலைக்காரரின் மணிநேரச் சம்பளம் உயரும். கண்ணாடிக் குவளை செய்வோருடைய சம்பளம் வீழ்ச்சியடையும். மற்றவிடயங்களெல்லாம் மாற்றமின்றியிருக்கும்போது, தேவையான தொழிலில் மக்கள் ஈடுபட இஃது உதவும். ஆற்றையடுத்த பள்ளப் பூமியைக் கரும்பு உற்பத்தியாளர் அதிகம் விரும்பி விலை கொடுக்க முன்வருவார்களானால் அத்தகைய காணியின் விலை உயரும். தேவையளவையும் விநியோக அளவையும் நோக்கியே இயந்திர ஆயுத உற்பத்தியும் நிச்சயிக்கப்படும்.

சுருங்கக்கூறுவதானால், பரீட்சைசெய்து, பின் பிழையை அறிந்து திருந்துவதற்கான ஒரு விசாலமானதிட்டம் உண்டு. விலையும், உற்பத்தியும் தம்முள் ஒரு சமத்துவத்தையுண்டாக்கிக் கொள்கின்றன. விநியோகத்தையும் தேவையையும், விலைவாசிகளையும் செலவினங்களையும் சமத்துவப் படுத்துவதனால் நமது மூன்று பிரச்சினைகளையும் ஒரே நேரத்திலே தீர்க்கக்கூடியதாயிருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு :—

1. எந்தப் பொருளை உற்பத்தி செய்யவேண்டுமென்ற விடயம் நுகர்வோரின் வாக்கைக் கொண்டே நிச்சயிக்கப்படுகிறது—இரண்டு வருடத்துக்கொரு முறையன்று; ஆனால் தினமும் தீர்மானிக்கப்படுகிறது ; அதாவது நுகர்வோர் இதை வாங்கவேண்டும், அதைவாங்கவேண்டியதில்லையென்று நிச்சயிக்கும்போதெல்லாம் தீர்மானிக்கப்படுகிறது. அவர்கள் பொருளை வாங்குவதற்குக் கொடுக்கும் பணம், சம்பளமாகவும் வாடகையாகவும், இலாபப்பங்கீடாகவும், நுகர்வோரின் வாராந்தச் சம்பளமாகவும் மாறுகின்றது. இவ்வாறு பணம் சுழன்று வருகிறது.

2. பொருள்கள் எவ்வாறு உற்பத்திசெய்யப்படுகின்றன என்பதைப் பல்வேறு உற்பத்தியாளரிடையே உண்டாகும்போட்டியே நிச்சயிக்கிறது. செலவுத்திறமையாலும், சடசம்பந்தமான திறமையாலும் மிக மலிவானதாக ஒரு காலத்திலே தோன்றும் முறை, அதிக செலவானமுறைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படும். விலையிலே உண்டாகும் போட்டியைச் சமாளிக்

www.padippakam.com



கவும், உச்சலாபத்தையடையவும் திறமான உற்பத்திமுறைகளை அனுசரித்து உற்பத்திச் செலவை மிகக் குறைவாக வைத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக, செயற்கை ரப்பரை எதிலிருந்து உற்பத்திசெய்யலாம்? பெட்ரோலியத்திலிருந்தா? மதுசாரத்திலிருந்தா? எது மலிவோ அதனையே தேர்ந்து எடுப்பார்கள். மின்சாரத்தை நீராவியிலிருந்தா, அணுசக்தியிலிருந்தா உற்பத்திசெய்யவேண்டும்? அது நிலக்கரியின் விலையைப் பொறுத்தது. குறிப்பிட்டதொரு மட்டத்துக்குக் கீழே நிலக்கரியின் விலை இருக்குமாஞல் நீராவியே தேர்ந்தெடுக்கப்படும். சின்னக் கமத்தைச் செய்வதிலும் பார்க்க இயந்திரக் கலப்பையைப் பயன்படுத்திச் செய்கைபண்ணும் பெரிய கமம் உற்பத்திச் செலவிற் குறைந்ததாஞல் அதையே தெரிந்தெடுப்பர்.

சர்வதேச உதாரணம்: பொப்ஜோன்ஸ் என்பவன் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் மாறும் தொழிலாளர் நிலையை அனுசரித்து, அமெரிக்க வயல்களில் பெரிதளவாகப் பயிர்செய்கின்ருன். பீர் ரெனியென்ற பிரெஞ்சு விவசாயி குறுகிய நிலத்தில் அதிகதொழிலாளரைக் கொண்டு நெருக்கமாகப் பயிர்செய்கிருன். இவை நியாயமான முடிவுகள். இவற்றை யார் நிச்சயிக்கிருர்கள் பிரான்சிலே அமெரிக்காவிலும் பார்க்கச் சனச்செறிவு அதிகம். எனவே இத்தகைய விவசாயமுறை நியாயமானதே. இதை நிச்சயப்படுத்தியது அமெரிக்க அரசாங்கமுமல்ல; பிரெஞ்சு அரசாங்கமுமல்ல; ஐக்கிய நாடுகளுமல்ல; நிலவிவந்த விலைத்திட்டமே இதனை நிச்சயிக்க உதவிற்று. கழுதையை ஊக்கப்படுத்த முள்ளங்கிக்கிழங்கையும் கசையடியையும் கொடுக்கும் எசமானன்போல, வியாபாரிகள் எதனை, யாருக்கு, எவ்வாறு, உற்பத்திசெய்யவேண்டுமென்பதை நிச்சயிக்க, இலாபநட்டங்களை உண்டாக்கும் விலைத்திட்டமே, உதவுகிறது.

3. உற்பத்திச்சேவைகளுக்கான சந்தைகளிலே தேவை, விநியோகம் என்பவற்ருல் யாருக்காகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவென்பது நிச்சயிக்கப்படுகிறது. சம்பளவிகிதம், நிலவரி, வட்டி, இலாபம் என்பனவே வருமானத்துக்கு ஏதுவானவை. இவை ஒன்றுக்கொன்று சார்புடையனவாயும், முழுவருமானத்தோடும் சார்புடையனவாயுமிருக்கும். (ஆரம்பத்திலே கிடைத்த சொத்துச் சுதந்திரம் என்பவற்றையும், இயல்பாகவோக பயிற்சியிஞலோ கிடைத்த திறமைகளையும் பொறுத்தே வருமானச் செறிவு நிச்சயிக்கப்படுகிறது.) இது கவனிக்கவேண்டியவிடயம். நுகர்ச்சியாளரின் விருப்பம் ஒன்றைக்கொண்டே என்ன பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை நிச்சயிக்கமுடியாது. தேவைக்கு ஏற்பப் பொருள் கிடைக்கவேண்டும். உற்பத்திச் செலவு, விநியோகமுடிவு என்பவற்ருேடு நுகர்வோரின் விருப்பமுஞ் சேர்ந்தே என்ன பொருளை உற்பத்திசெய்யவேண்டுமென்பது நிச்சயிக்கப்படுகிறது. வாங்குவோனுக்கும் விற்போனுக்குமிடையில் ஒரு பொருத்தத்தை உண்டாக்கும் தரகன் போலவே, பொருட் சந்தையிலே, நுகர்வோரின் விருப்பத்துக்கும், சந்தையிற் கிடைக்கக்கூடிய பொருள்களுக்குமிடையே ஒரு பொருத்தத்தை வியாபாரத்தரகன்

படிப்பகம்

www.padippakam.com



செய்கிறன். (அடுத்த அத்தியாயத்தில் இஃது எவ்வாறெனே விளங்கப் படுத்தப்படும்.) இவ்வாறே தொழினுட்பத்திறனுடைய தொழிலாளரை வழங்கும் சந்தையிலும் ஒரு தரகன் இருப்பான். இவன் முயற்சியாளருக் குத் தேவையான தொழிலாளர் அளவையும், கிடைக்கக்கூடிய தொகையை யும் இடைநின்று சமாளிப்பான். எவ்வாறு உற்பத்திசெய்வதென்பதை நிச்சயிப்பவன் இலாபத்தைவிரும்பும் முயற்சியாளன் ; இவனே சமூகத்தின் முகவன். ஒவ்வொரு பொருளேயும் மலிவான முறையில் உற்பத்திசெய்யும் வழிவகைகளை இவனே மேற்பார்வைசெய்வான். நல்லமுறைகளைப் பயன் படுத்தாவிட்டாற் கொடியபோட்டியினுலே தண்டிக்கப்படுவான்.

இந்தவிளக்கம் பிரச்சினையை மிக இலகுவாக்கிவிட்டது. சமூகத்தின் நிசமான தேவைக்கும் விநியோகத்துக்கும் வியாபாரியின் விநியோகத்துக் கும் தேவைக்குமிடையில் சந்தைவிலையானது நின்றுகொண்டு எவ்வாறு சரிப்படுத்துகிறதென்பதைப் படம் 1, பருந்து நோக்காகக் காட்டுகிறது. சமூகத்துக்கும் வியாபாரிக்குமிடையிலே தொடர்புபடுத்தும் ஒரு சாதனமாகச் சந்தை அமைந்திருப்பதைக் கவனிக்கவேண்டும். இருபது நிமிடம் இந்தப் படத்தைப் படித்தாலே போதும். பொருளாதார விலைபற்றித் தொடர்பில் லாது பல மணிநேரம் சிந்தித்துக்கொண்டிருப்பதினும் இந்த இருபது நிமிட ஆராய்ச்சி பயன்தரக்கூடியது.


போட்டிக்குள் அமைந்த திட்டம் சட்டத்தன்மையுடையதுதான். இருந்தா லும் பூரணமாக அத்தன்மையுடையதன்று. நுகரும் குடும்பத்தவர் வியாபாரத்தாபனங்களை இரண்டுமுனையிலே சந்திக்கின்றனர். இரண்டு பகுதிக்குமிடையில் விலைமாத்திரம் தொடர்புபடுத்திக்கொண்டிருக்கிறது. ஒரு முனையிலேசில்லறைச்சந்தை; இது மிகப்பரந்து கிடக்கிறது. இங்கே நுகர்வோர் ஆயிரக்கணக்கான சிறுச் சிறு சில்லறைப் பொருள்களை விலைக்கு வாங்குகிறர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள், உணவு, மருந்து, உடை, சினிமா டிக்கெட், எண்ணெய், பெட்ரோல், மின்சாரவிநியோகம் என்பனவற்றையும் தபாற்கந்தோர், வீட்டுமுதலாளி, புகையிரதப்பகுதி, காப்புறுதிக் கம்பெனி ஆகிய தாபனங்களிடமிருந்து பலவகையான பொருள் களையும் வாங்குகிறன்.

மற்றமுனையிலே — உழைப்பும், ஏனைய உற்பத்திச்சேவைகளும்— இங்கேயுள்ள சம்பந்தம் எப்பொழுதும் அமைதியானதாயிராது. குடும்ப சம்ரட்சணைக்கு உழைப்பவனுக்கு அவனுடைய சம்பளம் மற்றெரு விலைவாசியன்று. அது அவனுக்குப் போகப்பொருள்களைக் கொடுப் பதுமில்லை; சாதாரண சுகவாழ்வைக் கொடுப்பதுமில்லை. அது சுகவாழ்வுக்கும், வறுமைக்குமிடையிலுள்ள நிலையின் பிரதிநிதி. பேரம் பேசுவதில் பெரிய கம்பனிகளோடு தொழிலாளி சமமானவனல்லன். தொழிற்சங்கங்களின்மூலம் அவன் கூட்டுப்பேரம் பேசுவான். இதனுற் சிலசமயம் போட்டியையே மீண்டும் ஏற்படுத்துவான். சிலசமயம் பூரண போட்டியிலிருந்து விலகக்கூடிய நிலையை உண்டாக்குவான். உயர்ந்த

www.padippakam.com



**போட்டிவிலைமுறை, விநியோக—தேவைச்சந்தையைப் பயன்படுத்தி, எதனை, எப்படி, யாருக்கு உற்பத்திசெய்வது என்ற மூலாதாரமான பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கிறது.**




படம் 1. தேவைத்தொடர்புகள் கறுப்புக்கோட்டிற் காட்டப்பட்டுள்ளன. விநியோகத்தொடர்புகள் வெள்ளைக்கோட்டில் காட்டப்பட்டுள்ளன. நுகர்வோர் டொலர் கணக்கில் மதிப்பிட்டுள்ள தேவைப்பொருள்கள், மேற்பொருள் சந்தைகளில் வியாபாரச் செலவு விநியோகத் தீர்மானம் என்பவற்றோடு கலந்து ஒன்றையொன்று பாதித்து, என்ன உற்பத்திசெய்யவேண்டுமென்பதை நிச்சயிக்கின்றன. வியாபாரத்தில் உற்பத்திச்சாதனங்களின் தேவை, பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் உழைப்பு முதலிய சாதனச்சந்தைப் பொருள்களைப்பெற்றுச் சம்பளம், வாடகை, வருமானம் என்பவற்றை நிச்சயிக்க எல்வாறு துணைபுரிகிறது- அதாவது யாருக்காகப் பொருள் உற்பத்திசெய்யப்படுகிறதென்பதை நிச்சயிக்கிறது. உற்பத்திச்சாதனங்களை மிகமலிவாக வாங்குவதிலும் அவ்வாறே விற்பதிலும் உண்டாகும் வியாபாரப்போட்டி பொருள்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படும் என்பதை நிச்சயிக்கின்றது.

(எச்சரிக்கை: படத்தின் எல்லாப் பகுதிகளும் ஒன்றோடொன்று இணைந்தே தொழிற்படுகின்றன. கீழேயுள்ள பகுதி—அதாவது யாருக்கு உற்பத்தியென்பது—மேலேயுள்ள பகுதியிலே தங்கியிருக்கிறது. தச்சுக்கூலி வீட்டுக்குள்ள தேவையிலே தங்கியிருக்கிறது. உல்லாசத்தோணிகளுக்கான தேவை எண்ணெய் வயலால் வரும் வருமானத்திலே தங்கியுள்ளது.)

படிப்பகம்

www.padippakam.com


திறமையை அடையும் இலக்கோடு முயலும் இந்தப் போட்டி பற்றிய விளக்கம் மிக இலகுவாக்கப்பட்டதொன்று. இத்திட்டம் மேலே கூறியபடி ஒழுங்காகச் செயற்பட்டாலும், இதுவே சிறந்த இலக்கு எனப் பலர் கொள்ளமாட்டார்கள். ஒழுங்காக அது செயற்படமாட்டாதென்பதை எவரும் நன்கு அறிவர். தேவையும், அதிக பணமும் உள்ள இடத்துக்கே முதலிற் பொருள்கள் செல்லும். வறியவனுடைய குழந்தைக்கு அவசியம் தேவைப்படுகிற பால் தனவந்தனுடைய நாயைப்பராமரிக்கச் செல்லும். ஏன் ? விநியோகமும் தேவையும் சரியாக வேலைசெய்யாதபடியாலோ ? இல்லை. வியாபாரத்தரகர் தமது வேலையை ஒழுங்காகச் செய்கிறார்கள்; பணம் நன்றாகக் கொடுக்கக்கூடியவர் கையிலே பொருளைக் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள்.

அல்லது வேறோர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். மனிதர் துணையின்றித் தானாக இயங்கும் எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் தொழிலாளர் தேவை குறைந்துவிட்டது. அவர்களுடைய போட்டி விலைகுறைந்துவிட்டது. எனவே வறியவர் வருமானம் குறைகிறது. ஒழுக்க நெறியைப் பெரிதாகக் கொள்வோர் இந்த நிலையைச் சரியானதென ஒப்புக் கொள்வாரா ? அல்லது ஒருவன் 500 சதுரமைல் மேய்ச்சல் நிலத்தை முதுசொமாகப் பெற்றுவிட்டான் என்று கொள்வோம். அந்நிலத்திலே எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த எண்ணெய்க்காகக் கம்பனிகள் அவனுக்கு வருடமொன்றுக்கு 10 இலட்சம் டொலர் கொடுக்கின்றன. அவனுக்கு அவ்வளவு பெரியவருமானம் நியாயமானதா ? இத்தகைய பிரச்சினைகளை அமெரிக்கக் காங்கிரஸ் அடிக்கடி விவாதிப்பதுண்டு. போட்டிப் பிணக்கிலேதான் ஒருவனுடைய வருமானத்தை நிச்சயிக்கவேண்டுமா ? இஃது ஒழுக்கவியலைச் சார்ந்ததொரு விடயம். பொருளாதாரத்தால் இதை நிச்சயிக்கமுடியாது.

**போட்டிமுறையிலுள்ள குறைபாடுகள் :**

மேலே விவரித்த விலைத்திட்டத்திலுள்ளதொரு குறைபாடு, நிசவுலகிலே போட்டியானது எங்கேயும் பூரணமானதன்று என்பதே.
நுகர்வோரின் சுவைகள் எப்போது மாறும் என்பது வியாபாரத் தாபனங் களுக்குத் தெரியாது. ஆனபடியால் அவை ஒரு துறையிலே தேவைக்கதிகமா கவும் வேறொரு துறையிலே தேவைக்குக் குறைவாகவும் உற்பத்திசெய்யலாம். அனுபவம் பயன்படக்கூடிய தறுவாயில் நிலைமை மறுபடியும் மாறலாம். மேலும் போட்டிமுறையிலமைந்த ஓர் ஒழுங்கில் ஒரு பிரிவான உற்பத்தியாள ருக்கு மற்றப் பிரிவிலுள்ள உற்பத்தியாளர் அனுசரிக்கும் உற்பத்திமுறைகள் தெரியா. செலவுகளும் குறைந்த பட்ச அளவுக்கு வீழ்வதில்லை. அம் முறைகளை மற்றவர் அறியாத இரகசியமாய் வைத்திருப்பதாலும் உற்பத் தியை உயர்ந்த அளவுக்கு வைத்திருப்பதாலும் போட்டிப் போரிலே ஒருவர் வெற்றியடையமுடியும்.

படிப்பகம்

www.padippakam.com


பூரணப் போட்டிக்குப் பெரிய இடையூருயிருக்கும் மற்ருெரு விடயம் ஏக போக உரிமை அமிசம். ஏகபோக உரிமையினுல் விலேவாசிகள் பிழை போவதும், உற்பத்திச் சாதனங்கள் பொருத்தமின்றியும் வீணுகும் முறை யிலும் ஒதுக்கப்படுதலும் உண்டாகும். அத்துடன் ஏகபோக உரிமைக்குரிய இலாபங்களுமுண்டாகும். இவற்றைப்பற்றிப் பின்னுல் விவரிப்போம். பூரணமான போட்டியாளனைப்பற்றிப் பொருளியலறிஞனின் வரைவிலக் கணம் மிகக் கண்டிப்பானதென்பதை அடிக்கடி ஞாபகப்படுத்தவேண்டியி தாகும். போட்டியிடுவதற்குச் சிலர் இருந்தால்மாத்திரம் அது பூரண போட்டியாகாது. பூரணமற்ற போட்டியாளனைப்பற்றிப் பொருளியலறிஞர் கூறும் வரைவிலக்கணமாவது: " எவஞெருவன் பொருள்களின் விலேயைத் தானுக மாற்றியமைக்கக்கூடிய வகையில் அவற்றை ஏராளமாக வாங் கியோ விற்பனை செய்தோ தொழில் நடத்துகிருஞே அவனே பூரணமற்ற போட்டியாளன்". இதன் அர்த்தமென்ன ? ஓரளவு எல்லா வியாபாரிகளும் இந்த இலக்கணமுடையவராகவேயிருப்பர். ஆனுல் இலட்சக்கணக்கான விவசாயிகளே இதிற் சேர்க்கமுடியாது. அவர்களும் தனிப்பட்டமுறையிலே கணக்கில் எடுக்க முடியாத அளவு அற்பமான தானியத்தை விளைத்து மொத்தத் தானிய விநியோகத்துக்கு உதவுகின்றனர். பொருளாதார வாழ்விலே போட்டியும் போட்டியற்ற ஏகபோக உரிமையும் கலந்திருக்கின் றன. இந்தப் பூரணமற்றபோட்டியாகிய ஏகபோக உரிமையே இக்காலப் பொருளாதாரப் போக்காகும். பூரணபோட்டி கிடையாது. இது உலகில் காணும் இயல்பு. பூரணப்போட்டியையே எல்லாரும் விரும்புவார்கள். ஆனுல் அஃது அருமையானது. இது ஒழுக்கவாதியின் கண்டனமன்று. உலகில் நடைமுறையிலுள்ள தன்மையையே நாம்விவரித்துள்ளோம்.

வியாபாரி தான் விரும்பியபடி விலேகளே நியமித்துக் கண்டபடி இலாபத் தைப் பெறமுடியாது. இதைமேலே ஆராய்வாம். அவன் விற்கும் பொருள் க்ளுக்குப் போட்டியாகச் சந்தையிலே விற்கப்படும் போட்டிப்பொருள்களேயும் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும். திறமான நிலக்கரியை ஒருவன் உற்பத்திசெய்கிருன் என்று வைத்துக்கொள்வோம். இதற்கு வியாபார முத்திரையுமுண்டு. இருந்தும் அதனேடு போட்டியிட வேறுவகையான நிலக்கரிகளும், எண்ணெய்களும், வாயுவும், வீட்டுமின்சார அமைப்புக் களுமுண்டு என்பதை அவன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

வியாபாரிகளும், விவசாயிகளும், தொழிலாளிகளும் போட்டியை விரும்பு வதுமுண்டு ; வெறுப்பதுமுண்டு. எமது சந்தையை விரிவாக்க அது வசதியளிக்குமாறுற் போட்டியை விரும்புகிருேம். ஆனுல் அதற்கு மாருக அது பயன்படுமாஞல், அதை " நியாயமற்றது ", கெடுதிக்கேது வானது, கொடியது என்றெல்லாம் கூறுகிருேம். தொழிலாளி போட்டி யினுலே தனது சம்பளம் குறைவதைக் கண்டதும் போட்டியை எதிர்க்கிருன். விவசாயத்திலும் இதே கதைதான். அதிகவிளைவினுல் விவசாயப்பொருள் களின் விலே வீழ்ச்சியடைந்தால் விவசாயிகள் அரசாங்கத்தை நெருக்கி, விளைவைக் கட்டுப்படுத்தி விலேவாசிகளே உயர்த்தச் செய்கிருர்கள்.

www.padippakam.com

ஏகபோக உரிமையை உண்டாக்கக்கூடிய சில அடிப்படை அமிசங்கள் பெரிய அளவு உற்பத்திசம்பந்தமான சிக்கனங்களிலே அடங்கியிருக்கின்றன. விரைவாக மாறிக்கொண்டுவரும், தொழில்நுட்ப அறிவு மிகுந்த உலகத்தில் இது நியாயமாக எதிர்பார்க்கக்கூடியதே. ஏராளமான உற்பத்தியாளர் போட்டியிட்டுக்கொண்டு எல்லாத் துறையிலும் முயற்சிசெய்தால், திறமைக்கு இடமில்லாமற் போய்விடும். அதனால் அத்தகைய போட்டி நிலை நிற்கவும்மாட்டாது. சந்தைசம்பந்தமான ஏனைய குறைபாடுகளுக்கு வியாபார முத்திரைகளும், விசேட உற்பத்தி உரிமைகளும், விளம்பரமுமே காரணம். சட்டபூர்வமாகப் பூரணபோட்டியை ஏற்படுத்துவதென்பது இயலாத காரியம். நியாயமாகப் பயன்தரக்கூடிய நடைமுறையிலே செயற்படும் போட்டியை ஏற்படுத்துவதே நமது கடமை.

விநியோகம், தேவை என்ற விடயங்களைப்பற்றி மூன்றும் பாகத்தில் நுண்ணிதாக ஆராய்வோம். அதன்பின்னர் விலைத்திட்டம் செயற்படும் முறைகளைச் சரிவர அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும். போட்டி முறையிலமைந்த விலைவாசித்திட்டத்தின்மூலம் ஒரு பொருளாதாரத்தை அமைப்பது ஒரு வழியாகும். ஆனால் அதைவிட வேறுவழியில்லையென்று கூறமுடியாது. சில சமூகவுடைமைவாதிகள் தாம் அமைக்கவிருக்கும் புதிய சமூகத்திலே விலைத்திட்டத்தை ஓரமிசமாகக் கொள்ளவேண்டுமென்று கூறுவர். விலைத்திட்டம் பூரணமானதென்று கூறமுடியாது. அதற்குப் பதிலாக ஏற்படும் ஒழுங்குகள் இதைவிடப் பூரணமானவையென்றுங்கூற முடியாது.

**அரசாங்கத்தின் பங்கு :**

நமது பொருளாதாரம் தூயவிலைவாசிப்பொருளாதாரமன்று ; அது கலப்புப் பொருளாதாரம். உற்பத்தி, நுகர்வு என்பவற்றை அமைக்கும் விடயத்தில் அரசாங்கத்தின் பங்கும் சந்தைகளின் பங்கோடு கலந்திருக்கிறது. அரசாங்கம் உதவும் பொருளாதாரத்தொண்டு இப்போது மிகமுக்கியம் வாய்ந்ததாயிருப்பதால், ஒன்பதாம் அத்தியாயமும் பத்தாம் அத்தியாயமும் அதைப்பற்றி ஆராயும்.

அரசாங்கத்தின் செல்வாக்கு எத்தகையதென்பதைப்பற்றிச் சுருக்கமாக இங்கே கூறவிரும்புகிறோம். கட்டுப்பாடு சிறிதுமில்லாத சந்தைமுறையைக் கொண்டு, எதனை, எப்படி, யாருக்காக உற்பத்திசெய்கிறோமென்ற மூன்று கேள்விகட்கும் கொடுக்கும் விளக்கம் சனநாயக ஆட்சி நிலவும் நாடுகளுக்குத் திருப்தியளிப்பதில்லை. மக்களிற் சில பகுதியினர் வருமானமின்றி வாடுவர்; ஏனையோர் குறைவான வருமானத்தை அல்லது தேவைக்கு மிக மேலானவருமானத்தைப் பெறுகிறார்களென அத்தகைய முறைப்படி சொல்லிக்கொள்ளலாம். ஆனபடியால் அரசாங்கம் தலையிட்டுச் சிலருடைய நிசவருமானத்தையோ பணவருமானத்தையோ குறைநிரப்பும் முறையிலே தானாகச் செலவு செய்கிறது. உதாரணமாக அது சில மக்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்கும், அல்லது வயோதிப காலத்திலோ, வேலையில்

www.padippakam.com


லாக்காலத்திலோ உதவி தேவைப்பட்டோர்க்கு மாதவீதம் படி உதவும். இக்கால அரசாங்கங்களின் இலட்சியம் மக்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தையாவது அளிப்பதே என்பது பெரிதும் பரவியுள்ள ஒரு கருத்தாகும்.

சமூகவாழ்க்கைக்கு அத்தியாவசியமான சில பொதுப்பணிகளையும் அரசாங்கம் நிறைவேற்றுகிறது. இப்பணிகள் தனியாரால் நிறைவேற்றப் பட முடியாத தன்மை வாய்ந்தவை. "எல்லாருஞ் செய்ய வேண்டிய முயற்சியானுல் அது எவராலுஞ் செய்து கொள்ளமுடியாதது" என்பதை மக்கள் உணர்ந்தபின்னரே அரசாங்க அமைப்பு உண்டானது. தேசத்துக்கு இராணுவப் பாதுகாப்பு அளித்தல், உள்நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல், நீதிபரிபாலனம் என்பன வெல்லாம் அத்தகையவிடயங்களே.[1]

பணம் செலவு செய்வதில் அரசாங்கமும் பணத்தைப் பெருவாரியாகச் செலவு செய்யும் ஒருவரைப் போலவே இருக்கிறது. சில துறைகளிலே பணத்தை நன்முக இறைத்து அத்துறையை வளம்படுத்துகிறது. இத்துறையின் தேவைகள் கூட்டுத்தேவையாகவன்றித் தனியார் தேவையாகவே கருதி விலைத்திட்டம் செயற்படுகிறது.

கடதாசிப்பணத்தை அடித்தோ, வரையறையின்றிக் கடன்பட்டோ அரசாங்கம் தனது செலவினங்களைச் செய்யுமாளுல், கதைமுடிந்துவிட்டது போலத்தான். அரசாங்கச் செலவுகளிற் பெரும்பாலானவை, வசூலிக்கும் வரியைக் கொண்டே சரிக்கட்டப்படுகின்றன. இங்கேதான் முக்கியமானதொரு வலுக்கட்டாய அமிசம் காணப்படுகிறது. மக்கள் தாமாகவே வரிப்பளுவைத் தம் மீது சுமத்திக் கொள்ளுகிறுர்கள் என்பது உண்மையே. மேலும் அரசாங்கம் அடையும் கூட்டுநன்மையில் ஒவ்வொரு பிரசைக்கும் பங்குண்டு என்பதும் உண்மையே. காசைக் கொடுத்துப் பொருளைவாங்குவதுபோல வரியைக்கொடுத்து அரசாங்கத்திடம் உடனடியாக நன்மைகளைப் பெறமுடியாது. எனக்கு விருப்பமில்லாவிட்டால் சிகரட் புகைக்க வேண்டியதில்லை;

[1]வெளிச்சவீடுகளும் அத்தகைய அரசாங்க சேவைகளுக்கு ஓர் உதாரணமாகும். வெளிச்சவீடுகள் கடலில் ஆபத்துக்குள்ளாகும் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதோடு பொருள்களையும் காப்பாற்ற உதவுகின்றன. வெளிச்சவீட்டைக் காவல்செய்வோர் கப்பல் மாலுமிகளிடம் தமது சேவைக்குக் கூலிவாங்க முடியாது. "தனிப்பட்டவர்களுடைய நன்மை, பணச்செலவு (வெளிச்சவீடு நடத்திப் பணம் சம்பாதிக்கும் நூதனமான ஒருவனுடைய பார்வைப்படி) என்பவற்றுக்கும் உண்மையான சமூகநன்மை, செலவு (காப்பாற்றப்பட்ட உயிர்களையும் பொருள்களையும், (அ) வெளிச்சவீட்டின் முழுச்செலவோடும், (ஆ) மேலதிகமாக ஒரு கப்பலை வெளிச்சம் பார்க்கவிடுவதற்கு ஏற்படும் மேலதிகச் செலவோடும் ஒப்பிட்டுப் பார்த்து) என்பவற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடு இவ்வுதாரணத்தில் காணக்கூடியதாயிருக்கிறது" எனப் பொருளியலைப்பற்றிய விரிவான நூல் கூறும். மேலும் "அது தனிப்பட்டவர்களின் நன்மைக்கும் சமூக நன்மைக்குமிடையில் இவ்வாறு புறப் பொருளாதார வேறுபாடுகள் உண்டாகும் சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அவசியம் தலையிடவேண்டுமென்ற கொள்கையைத் தத்துவ அறிஞரும் அரசியலறிஞரும் எப்பொழுதும் ஆதரித்து வந்துள்ளனர்" எனக் குறிப்பிடும். இவ்விடயம்பற்றிய விவரங்கள் பின்னுல் பத்தாம், இருபத்திரண்டாம் அத்தியாயங்களிலே ஆராயப்படும்.

படிப்பகம்

www.padippakam.com


அவ்வாறே நைலோன் கால்மேசுகளை வாங்க வேண்டியதில்லை. ஆனால் விருப்பமோ விருப்பமில்லையோ வருடாந்த வரிகளை நான் செலுத்தியே தீரவேண்டும்.

மற்ருெரு முக்கியமான வலுக்கட்டாய அமிசம் அரசாங்கம் சட்டமியற்றுதலாகிய வழக்கம். இது எல்லாநாடுகளிலும் காணப்படுகிறது. நிறைகுறைய விற்றல், சிறுவரை வேலைக்கமர்த்தல் என்பன சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளன. அதுபோலவே, அபினைச் சாப்பிடுதல், விற்றல் என்பனவும் தொழிற்சாலைச் சிமினிமூலம் புகையைப் போக்குவதும், உச்சவிலைக்கு மேலாக உணவுப் பொருளை விற்றலும் சட்டப்படி தடுக்கப்பட்டுள்ளன. தனியார் முயற்சிகளெல்லாம் இத்தகைய சட்டதிட்டங்களுக்கமையவே செய்யப்பட வேண்டும். அம்முயற்சிகளின் போக்கையும் இந்தச் சட்டதிட்டங்கள் மேற்பார்வை செய்கின்றன. தேசத்தின் பொருளாதார வாழ்வை நிச்சயப்படுத்துமுகமாக அரசாங்கத்தின் வரிவிதிப்பும் செலவீடுகளும், சட்டதிட்டங்களோடு சேர்ந்து விலைத்திட்டத்திற்குத் துணைபுரிகின்றன.

சூழ்நிலையா, பரம்பரையா முக்கியமானதென்பதை விவாதிப்பதுபோலவே தனியார் முயற்சியா, அரசாங்க முயற்சியா முக்கியமென்று விவாதிப்பதும் பயனற்றதாகும். இந்த இரண்டுமில்லாவிட்டால் எமது பொருளாதார உலகம் முற்ருய் வேறுபட்ட ஓர் உலகமாயிருக்கும். பணவீக்கம், வேலையில்லாத்திண்டாட்டம் என்பன மாறிமாறி வருவதைத் தடுத்து அவற்றை ஒரு நிலையில் நிற்கச்செய்து பொருளாதார விருத்தியை உண்டாக்கத் துணைபுரிவது அரசாங்கத்தின் கடமைகளுள் ஒன்ருகும். இதைப்பற்றி இரண்டாம் பகுதியிலே கூறுவாம்.

**(ஆ) முதல், தொழிற் பிரிவு, பணம் :**

இக்காலப் பொருளாதாரச் சமூகத்தைப்பற்றி மேலும் மூன்று முக்கியமான அமிசங்களைக் குறிப்பிடலாம் :

1. முன்னேற்றமானவையும், நவீனமானவையுமான தற்காலப் பெருந்தொழில்கள் பெருவாரியான முதலைக்கொண்டே இயங்குகின்றன. விரிவான எந்திரசாதனங்கள், பிரமாண்டமான தொழிற்சாலைகள், எந்திரங்கள், முடிந்தவையும் செய்து முடிவுபெருதவையுமான பொருள் தொகுதிகள், பண்டசாலைகள் என்பன முதல் என்ற பிரிவைச் சேர்ந்தவை. நமது பொருளாதாரத்துக்கு "முதலாளித்துவம்" என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இதற்குப் போடப்பட்ட முதல் தனியார் சிலரின் சொந்த முதலாகும். இந்த முதலுக்கு உரிமையுடையவன் முதலாளி.

2. இக்காலத் தொழில் முறைகளில், நம்பமுடியாத அளவுக்கு ஒரு துறை நிபுணத்துவம் உண்டு. அது மிகவிரிவானது. அத்துடன் பல்வேறு வகைப்பட்ட தொழிற்பிரிவுகளுமுண்டு.

3. நமது பொருளியல் முறையிற் பணம் பெரிதும் வழங்கப்படுகிறது. பணத்தின் ஓட்டமே இத்திட்டத்தின் இரத்தோட்டமாகும். பெறுமானத்தை அளந்தறியும் அளவுகோலாகவும் பணம் அமைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



இந்த அமிசங்களெல்லாம் ஒன்ருேடொன்று பிணைந்திருக்கின்றன. அத்துடன் அவை இந்த அத்தியாயத்தில் அ எனும் பிரிவில் விவரிக்கப்பட்ட விலை எந்திர அமைப்போடும் பிணைந்திருக்கின்றன. பணம் வியாபாரஞ் செய்வதற்கும் பண்டமாற்றுச் செய்வதற்கும் மிக வசதியானதொரு சாதனமாயமைந்திருப்பதால் விரிவானதொரு தொழிலாளர் பிரிவை வகுத்து நிர்வகிக்கக்கூடியதாயிருக்கிறது. இல்லாவிட்டால் அவ்வாறு செய்வது மிகவும் கடினம். வங்கிமுறையின் உதவியால் பணமும் முதலும், கடன் வசதிகள் மூலம் தொடர்புபெறுகின்றன. முதற்சந்தைகள் மூலமாகவும் இந்தத் தொடர்பு உண்டாகிறது. இந்தச் சந்தைகளிலே ஈட்டுப்பொருள்களைப் பணமாகவும், பணத்தை ஈட்டுப்பொருள்களாகவும் மாற்றிக்கொள்ளலாம். விலை எந்திர அமைப்புக்கும் பணத்துக்குமுள்ள தொடர்பு நேரடியானதும் தெளிவானதுமாகும்.

**முதலும் காலமும் :**

நிலம், தொழில் என்பவற்றைப் பயன்படுத்திஞல், பொருளாதாரப் பொருள்கள் உண்டாகும் என்பதை உணர்ந்துகொள்வது எளிது. நிலம் என்று சொல்லும்பொழுது எல்லா இயற்கைவளங்களையும் கருதுகிருேம். இவை "பிரதம உற்பத்திச்சாதனங்கள்" என வழங்கப்படும். ஏனெனில் நிலமோ, உழைப்போ பொருளாதார விளைவின்பயனுக உண்டானதன்று. இவை சடசம்பந்தமானவும், உயிரியல் சம்பந்தமானவுமாய அமிசங்களால் ஏற்பட்டவை.

முதல் என்பது வித்தியாசயானதோர் உற்பத்திச் சாதனமாகும். முதலாக உதவும் சாதனங்களெல்லாம் பொதுவாக முதல் என்றே வழங்கப் படுகின்றன. பிரதம சாதனம் வேறு; முதல்வேறு. முதல், பொருளாதார உற்பத்தியாயமைந்ததொரு செயற்கைச் சாதனம்.

முதற்பொருளாயுள்ளவை உற்பத்திப்பொருள்கள். அவற்றை மேலும் சாதனங்களாகப் பயன்படுத்திப் பொருள்களை உற்பத்தி செய்யலாம். உழைப்பும், நிலமும் பிரதம சாதனங்கள். அவை பொருளாதார முறையின் பயனுக உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களல்ல. அவை இயற்கைப் பொருள்கள்.[1]

[1] ஆனுல் இங்கேயும் சில விளக்கம்வேண்டியிருக்கிறது. நிலத்தைக்கூடத் தேங்கிநிற்கும் நீரை இறைத்துப் புதிய மண்நிரப்பிப் பண்படுத்தலாம். சிக்காகோ ஏரிப் பிரதேசத்தின் பெரும் பகுதியும், பொஸ்டனைச்சேர்ந்த பாக்பே பிரதேசமும் இவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலங்களே. நிலக்கனி, உலோகம்போன்ற இயற்கைப் பொருள்கள் இயற்கையாகவே உள்ளவை. ஆனுல் அவற்றைக் கண்டுபிடிக்கவும், வெட்டியெடுக்கவும், தூய்மைப்படுத்தவும் பொருளாதார முறையில் எவ்வளவோ முயற்சிசெய்ய வேண்டும். ஆனபடியால் அவைகூட முதற்பொருளுக்குரிய சில இயல்புகளைப் பெறுகின்றன. மல்தசின் சனப்பெருக்கக் கொள்கைப்படி, எந்திரங்களைப்போலவே மக்களை உற்பத்தி செய்யவும் உற்பத்திச் செலவு வேண்டும். அந்தக்கொள்கையை மேனுட்டைப் பொறுத்த அளவில் கைவிட்டாலும், மக்களை உற்பத்திச் சாதனங்களாக்கும் முயற்சிதான் கல்வியென்பதை ஒருவர் உணர்ந்துகொள்ளலாம். உதாரணமாக வைத்திய மாணவன் ஒருவனைப் பார்க்கும்போது, ஓரளவு முதலாகக்கொள்ளக்கூடிய பொருளாதார உற்பத்திச் சாதனத்தையே காண்பதாகக்கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



சம்பளமும் வாடகையும், பிரதம பொருளான உழைப்பு நிலம் என்பவற்றின் சாதன விலைகள் என்பதையும், 4, 6, 10 ஆகிய வருடாந்தவட்டி விகிதங்கள் சமூகத்திலே அருந்தலாயுள்ள பல முதற் பொருள்களையும், முதலீட்டு முயற்சிகளையும் சமூகத்துக்குக் கொடுத்தும், அளவாகக் கொடுத்தும் உதவும் சாதனவிலையாக மதித்துக்கொள்ளலாம் என்பதையும் நாலாம் பகுதியில் ஆராய்கிறோம். வட்டி யென்பது ஓர் அலகுக்கு, குறிப்பிட்ட காலத்தில் இருக்கக்கூடிய விகிதம். (இக்காலம் வருடமாகவோ, மாதமாகவோ, 10 வருடமாகவோ இருக்கலாம்.) ஆனபடியால் முதலை மற்றொரு வகையிலும் நோக்கலாம். அதாவது காலத்துக்கும் முதலுக்குமுள்ள விசேட தொடர்பை வலியுறுத்தும் முறையைக்கொண்டு ஆராயலாம்.

முதலின் பொருளாதார முக்கியத்துவத்தைப்பற்றி மேலும் ஆராய்வோம். மனிதர் வெறுந்தரையிற் கையாலே வேலை செய்வதானல், விளைவும் நுகர்வும் மிக மட்டமாகவேயிருக்கும். காலப்போக்கிலே உற்பத்திச்சாதனங்கள் பெருகின. தொழிற்சாலைகளும் பண்டசாலைகளும் பெருகின. நிலத்தில் நீர் தேங்காமல் வடிகால் அமைத்து அதைப் பசளையிட்டு வளம்படுத்தினர்.

நேரடியான சாதாரண உற்பத்திமுறைகளைச் சீர்திருத்த, காலத்தைச் சுருக்கும் மறைமுகமான முறைகளை மனிதர் கண்டுபிடித்தனர். பொருளாதாரத் திட்டத்துள் அடங்கிக்கிடக்கும் எமக்கு உற்பத்தி முறைகள் எவ்வாறு சிக்கலாகியிருக்கின்றனவென்பது தெரியாது. நமது உற்பத்தி அமைப்பிலே பொருளை முடிவாகச் செய்யும் எவரையும் காணமுடியாது. எல்லாரும் பொருளுற்பத்தியில் ஏதோ ஒரு பகுதியையே கவனித்துக் கொண்டிருப்பார்கள். பொருளை முடித்து நுகரும் இலக்கு வெகு தூரத்திலுள்ளதாகவே எண்ணுவர். பன்றிப்பண்ணை வைத்திருப்பவர் பன்றிகளைக் கொழுக்கச் செய்வதில் மாத்திரமே கவனஞ் செலுத்துவர். லொறிச் சாரதி அவற்றைச் சந்தைக்குக் கொண்டு போவதில் மாத்திரம் கவனஞ் செலுத்துவான். தகரத்தில் இறைச்சியை அடைப்பவன் அந்த வேலையை மாத்திரமே செய்வான். உருக்குத் தொழிலில் ஈடுபட்டிருப்பவன் வார்ப்பு இரும்பைத் தயார் செய்வான். அதில் ஒரு பகுதி வீடுகட்டுவதற்குச் சுத்தியல் செய்யப் பயன்படுத்தப்படும். மற்றொரு பகுதி வார்ப்பிரும்புத் தொழிற்சாலை செய்யும் கட்டடம் அமைக்கப்பயன்படும். அந்தத் தொழிற் சாலையிலே தயார் செய்யப்படும் வார்ப்பிரும்பு வேறு பல சுத்தியலைச் செய்யவும் வார்ப்பிரும்புத் தொழிற்சாலைகளைக் கட்டவும் உதவும். இவ்வாறே தொழில் பெருகும்.

ஒருவருக்கு மற்றவர் ஈடுபட்டிருக்கும் உற்பத்தித் தொழிலின் அமிசம் என்னவென்று தெரியாதிருக்கும். ஒவ்வொருவரும் தத்தமக்கிட்ட வேலையைச் செய்வர் ; தாம் உற்பத்தி செய்யும் பொருள் எங்கே அனுப்பப்படும், அதைச் செய்வதற்குப் பயன்படும் மூலப்பொருள் எங்கிருந்து வருகிறது

www.padippakam.com


என்பதைப்பற்றியெல்லாம் அவர் அக்கறை கொள்ளமாட்டார். உற்பத்தியின் பலவகையான சுற்றுப்பாதைகளும் ஒழுங்குசெய்யப்பட்டு, எல்லாருடைய தொழிற்பங்குகளும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டபின், அதனுடைய சிக்கலான நிலையை வெளியேயிருந்து கவனிப்பவர்கூட அறிய முடியாதவராயிருப்பார். அத்தகைய மாற்றமில்லாத நிலையில் ஒவ்வொரு நாளும் முந்திய நாளைப்போலவே தோன்றும். ஒவ்வொருநாள் வேலையும் அன்றன்றைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொண்டிருப்பதாகத் தோன்றும்.

இது தவமுன தோற்றம். வேலையமைப்பு முழுவதையும் இயங்கச் செய்வதற்குப் பல நாள் சென்றிருக்கும். பல நாளாக மனிதச் சாதனங்களும், எந்திரச்சாதனங்களும் அந்த வேலையை ஆரம்பிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு புதிய தொழில் முறையாலும் உற்பத்திப் பொருள்கள் உண்டாகத் தொடங்குவதற்குமுன் பலகாலம் செயல்முறையிலே சாதனங்களை ஈடுபடுத்தவேண்டியிருந்திருக்கும். இது, பெரிய பிரமாண்டமான பட்டரிக்குப் பலபகல் சத்தியூட்டி பின்னர் தேவையான சக்தி ஏறியதும் பல்பைப்பூட்டி வெளிச்சத்தைப் பெறுவது போலாகும். படிப்படியாக ஒரு விகாரமில்லாத நிலை உண்டாகும். சக்தி ஊட்டப்பட்டுக் கொண்டிருக்கும். பின்னர் வெளிச்சம் பெறக்கூடியதாயிருக்கும். திடீரென்று சக்தி யூட்டுவதை நிறுத்திவிட்டால் வெளிச்சமும் உடனே நின்றுவிடமாட்டாது. பட்டரி இறங்கும்போதுதான் வெளிச்சம் நிற்கும். பொருளாதாரத்திலும் அப்படியே. புதிய முதலீடுகளைப் போடாமலே விளைவைச் சிலகாலம் பெறலாம். இது பழைய முதலிலே ஓடும் ஓட்டம்.

தொழிலை ஆரம்பித்து எல்லாச் செயற்பாடுகளையும் நேரத்தில் இயங்கச் செய்வதற்குப் பலகாலம் பிடிக்கும். இது முக்கியமான விடயம். நேரடியான செயல்முறைகளுக்குப் பதிலாக மறைமுகமான, விளைவை அதிகரிக்கக் கூடிய செயல்முறைகளைச் சமூகம் உடனுக்குடன் ஏன் புகுத்துவதில்லையென்பதும் மறைமுகமான செயல்முறைகளை மேலும் மறைமுகமான செயல்முறைகளைக் கொண்டு ஏன் நிரப்புவதில்லையென்பதும் இதிலிருந்து விளக்கமாகின்றன. இதனுல் சில நன்மைகளுண்டென்பதுண்மையே. ஆனுல் நடைமுறையிலுள்ள நுகர்ச்சிப் பொருள்களைச் சிறிதுகாலம் கைவிடவேண்டிய பிரதிகூலமுமுண்டு. அதற்குப் பயன்படக்கூடிய சாதனங்கள் புதிய தொழில் முறைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, ஒன்றினுல் உண்டாகும் பிரதிகூலம் மற்றதினுற் சமன்செய்யப்படுகிறது.

இப்போது நுகரவேண்டிய சில பொருள்களை எதிர்காலத்தில் நுகரலாமெனச் சமூகம் கைவிடுகிறது. அது ஒருவகையான சேமிப்பு. இவ்வாறு சேமிக்க மக்கள் எவ்வளவு தூரம் விரும்புகிறுர்களோ அவ்வளவு தூரம்

www.padippakam.com



வளங்களைப் புதிய முதலை உண்டாக்கப் பயன்படுத்தலாம்.[1] வருங்காலத்தைப்பற்றி மக்கள் அக்கறையற்றவராக இருந்தால், நிகழ்காலத்தில் பெறக் கூடிய இன்பத்தையெல்லாம் பெற அவர்கள் முயற்சிசெய்வர் ; எவ்வாறு ? முதலைப் பரிபாலிப்பதும் புதுப்பிப்பதும் முடிவில்லாத ஒரு முயற்சி. அதைச் செய்யாமல் தற்போதைக்குத் தேவையான நுகர்பொருள்களை மேலதிகமாக உற்பத்தி செய்வர். “நாளைக்கென்று கருத்துக்கொள்ளாதவன் இன்றைக்குத் திருத்தியாகச் சாப்பிடுவான். இக்கட்டுக்காலத்திலே இடர்ப்படுவான்” என்று பொருள்படும் பழைய சீனப் பழமொழி ஒன்று உண்டு.

சுருக்கமாகக் கூறுவோம் : பொருளாதார முயற்சி எதிர்காலத்தை நோக்கமாகக்கொண்டது. எனவே இப்போது நாம் நுகரும் பொருள்கள் பெரும்பாலும் சென்றகால முயற்சிகளாலுண்டானவை. சென்றகால முயற்சியின் பயனாக நிகழ்கால நுகர்ச்சிப் பொருள்களிருப்பதால், வருங் காலத்து நுகர்ச்சிக்காக இக்காலத்தில் உற்பத்தி செய்கிறோம். சென்றகாலக் கடனை இப்படித்தான் தீர்க்கலாம். முற்போக்கான சமூகங்களில் நிகழ்கால நுகர்ச்சிகளிற் சிலவற்றைக் குறைத்துக்கொள்ளுகிறார்கள். நிகழ்கால உற்பத்தியில் ஒரு சிறுபகுதி புதிய முதலை அல்லது தேறிய முதலை உண்டாக்க ஒதுக்கப்படுகிறது.

## முதலும் தனிப்பட்ட சொத்தும் :

எந்த ஒரு பொருளாதாரத்திலும் சடப்பொருளாயமைந்த முதற்பொருள்கள் முக்கியமானவை. ஏனெனில் அவை உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன. சோவியத் பொதுவுடைமையிலும் இந்நிலையுண்டு ; நமது பொருளாதார அமைப்பிலுமுண்டு. ஆனால் ஒரு வித்தியாசத்தைக் காணலாம். நமது முதலாளித்துவ அமைப்பிலே உற்பத்திச் சாதனங்கள் தனியார் கையிலேயே பெரும்பாலுமுண்டு. நமது திட்டத்திலுள்ள விதிவிலக்கு என்ன ? பொதுவுடைமையில் உற்பத்திச் சாதனம் முழுவதும் அரசாங்கத்தின் கையிலேதானுண்டு. உற்பத்திச்சாதனம் அங்கே கூட்டுரிமையாக்கப் பட்டுள்ளது. அத்தகைய நிசமான முதற்பொருள்களால் உண்டாகும் பயன் அரசாங்கத்தையே சார்ந்தது. தனியாருக்குக் கிடையாது. அந்த வருமானத்தைச் சமூகத்திடையே எவ்வாறு பகிர்வதென்பதை அது தீர்மானிக்கிறது. புதிய முதற்பொருள்களை விரைவாக எவ்வாறு ஆக்கலாமென் பதையும் அரசாங்கம் தீர்மானிக்கிறது. வருங்காலத்து உற்பத்தி உயர்வதானால் நிகழ்கால நுகர்ச்சியை எவ்வளவு கட்டுப்படுத்த வேண்டுமென்பதையும் ; அதன் பயனாகப் புதிய தொழிற்சாலைகளையும், சாதனங்களையும்

[1] இக்காலப் பணப்பொருளாதாரத்திலே சிலவேளை எவ்வளவு அதிகமாகச் சேமிக்க மக்கள் விரும்புகிறார்களோ, அவ்வளவுக்குக் குறைவாகவே முதற் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எவ்வளவு அதிகமாக நுகர் பொருள்களில் மக்கள் பணத்தைச் செலவு செய்கிறார்களோ அவ்வளவு அதிகமாக, புதிய தொழிற்சாலைகளையும் சாதனங்களையுமுண்டாக்க வியாபாரிகளுக்கு ஊக்கமுண்டாகிறது.

படிப்பகம்

www.padippakam.com


உற்பத்திப் பொருள்களையும் உண்டாக்கலாமென்பதையும் அரசாங்கமே தீர்மானிக்கிறது.

தனிப்பட்டவர் முதலாகத் தரும் பொருள்கள்மீது கிடைக்கக்கூடியவட்டி, பங்கு, இலாபம், வாடகை, உரிமைப்பங்கு என்பவற்றை அவர்களே பெற்றுக் கொள்ளுகின்றனர். ஒவ்வொரு துண்டுநிலமும், ஒவ்வொரு சிறு சாதனமும் யாரோ ஒருவருக்குச் சொந்தமென்ற சாசனம் உண்டு. கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானால் அதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவர்க்கும் அது சொந்தமாகிறது. மேலும் ஒவ்வொருவகை முதற்பொருளுக்கும் பணச்சந்தை மதிப்புண்டு. ஆனபடியால் அப்பொருளுக்கு உரிமை கொண்டாடுவதிலும் சந்தை மதிப்புண்டு. ஜெனரல் இலெக்ட்ரிக் கம்பனியின் சாதாரணப் பங்குக்கு ஒரு விலை குறிப்பிடப்படுகிறது. நியூயோர்க் சென்றல் பத்திரத்துக்கு வேறொருவிலையுண்டு. ஒரு வீட்டின் ஈட்டுக்கு வேறொருவிலை சொல்லப்படுகிறது. ஒரு வீட்டுக்கும் அதனோடு சேர்ந்தவற்றுக்கும் சொத்துச் சந்தையில் ஒரு விலைகுறிப்பிடப்படுகிறது. இவ்வாறே வேறு பலவற்றுக்கும் விலைகளுண்டு.

தேசத்தின் மொத்த முதலைக் கணக்கிடும்போது இரட்டையாகக் கணிக்கும் தவறான முறையைத் தவிர்க்கவேண்டும். 10,000 டொலர் பெறுமதியுள்ள வீட்டை பிரதான வீதியில் உள்ள ஒருவர், அந்த வீட்டின் 10,000 டொலர் பெறுமதியான உறுதியை வைத்திருக்கும் காரணத்தால், வீடு எல்லாமாக 20,000 டொலர் பெறுமதியான முதல் தன்னிடமிருக்கிறதென்று சொல்லுவது தவறு. மின்சார அடுப்பைச் செய்யும் சிறியதொரு கம்பனியின் பங்காளிகளான மூன்று சகோதரர்கள் கம்பனியின் பத்து லட்சம் டொலர் பெறுமதியுள்ள சாதாரணச் சரக்குமுதலோடு, பத்து லட்சம் டொலர் பெறுமதியுள்ள முதற்பொருளை (தொழிற்சாலை எந்திரம், கம்பி முதலியன) சேர்த்துக் கொள்ளலாமென்று நினைப்பது மயக்க உணர்ச்சியாலுண்டான விளக்கக்குறைவே.

இத்தகைய விடயங்கள் அவ்வளவு மயக்கத்தை உண்டாக்கமாட்டா. ஆனபடியால் இந்தக்கட்டத்திலே இவற்றை ஆராய்ச்சிசெய்யவேண்டியதில்லை. தினமும் நாம் பிரயோக்கிக்கும் முதல் என்ற சொல்லுக்குப் பல பொருள்களுண்டு. முதற்பொருளையும் அது குறிக்கும்; அல்லது வருமானத்தைக்கொண்டுவரக்கூடிய பத்திரம், கையிருப்பு, காப்புப்பத்திரம், உறுதி போன்ற எதையுங் குறிக்கும். சாதாரணமாக முதல் என்றதும் பணத்தையே கருதுகிறோம். "ஜோனுக்கு 1,00,000 டொலர் தேவை; அதை அவன் வங்கியிற் கடனாக எடுக்கப்போகிறான்" என்கிறோம். அப்படி அவன் அத்தொகையைக் கடனாக வங்கியிலிருந்து எடுக்கும்போது அதை அவன் தொடர்ந்து திரவப்பணமாக வைத்திருக்கமாட்டான். அதை எந்திரசாதனங்களாகவோ, கண்ணுற் காண முடியாத உற்பத்தி உரிமையென்னும் உரிமையாகவோ மாற்றிவிடுவான்.

படிப்பகம்

www.padippakam.com


தேசத்தின் நிசமுதலிற் பெரும் பகுதியை அரசாங்கமே சொந்தமாக வைத்திருக்கிறது. உதாரணமாக ஹூவர் அணையைச் சுட்டிக்காட்டலாம். மேலும், சிறு தொழில் நிர்வாகம் (சி. தொ. நி) போன்ற தாபனங்கள் தனியார்க்கும், வியாபாரத் தாபனங்களுக்கும் மூலதனக் கடன் கொடுக்கின்றன.

தனிப்பட்ட ஒருவரின் சட்டபூர்வமான சொத்துரிமை சார்புடையதும், எல்லையுடையதுமாகும். அந்தச் சொத்தில் எவ்வளவு அவனுடைய வாரிசுகளுக்குச் செல்லவேண்டும், எவ்வளவு அரசாங்கத்துக்கு முதல்வரியாகவும் முதுசொமாகவும் போகவேண்டுமென்பதைச் சமூகம் நிச்சயிக்கிறது. மின்சாரக் கம்பெனி, எரிவாயுக்கம்பெனி போன்ற கம்பெனிகளின் சொந்தக்காரர் எவ்வளவு சம்பாதிக்கலாம், தங்கள் வியாபாரத்தை அவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும் என்றெல்லாம் சமூகமே நிச்சயிக்கும்.

ஒருவனுடைய சொந்த வீட்டைப் பற்றிக்கூட அவன் ஏகபோக உரிமையுடையவனுயிருக்கமுடியாது. நகரின் மண்டலப்பிரிவுகளுக்குரிய விதிகளுக்கு வீட்டுக்காரன் இணங்கவேண்டும். புகைவண்டிப்பாதைபோடவோ, சேரி ஒழிப்புச் செய்யும் திட்டங்களை நிறைவேற்றவோ அவன் தன்வீட்டுச் சொத்துக்குரிய பாத்தியதையைச் சிலசமயம் விட்டுக்கொடுக்கவேண்டும். சமூகத்துக்குக் கிடைக்கும் பொருளாதார வருமானம் முழுவதையும் தனிச்சொத்துக்களாக மாற்றிவிடவும் முடியாது. தன் உழைப்பைக்கூட ஒருவன் தான் விரும்பியபடி மற்றவனுக்கு விற்க முடியாது சட்டஞ் செய்யப்பட்டுள்ளது. இது அடிமை ஒழிப்புக்காலத்திலிருந்து வருகிறது. தன்னையே விற்றுக்கொள்ள ஒருவனுக்கு அதிகாரம் கிடையாது.

**தனித்துறைப்படுத்தல், பரிவர்த்தனை, தொழிற்பாகுபாடு :**

இக்காலத்துப் பொருளாதாரத்தின் மூன்று சிறப்பு அமிசங்களுள் இரண்டாவது அமிசத்தை இனி ஆராய்வோம். சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் பண்ணைகளிலும், மாகாணங்களிலுமே உற்பத்தி இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்குமானுல், இக்காலத்து வாழ்க்கைத் தரம் தங்கியுள்ள பெருவாரி உற்பத்தி சம்பந்தமான பொருளாதார வாய்ப்புகளை அடைய முடியாது. திறமைகள், வளங்கள் என்பவற்றிலே காணப்படும் தனித்தன்மைகளை நயமான முறையிலே ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பிரதேசமும் பயன்படுத்துவதற்குத் தனிப்பயிற்சியும், தனித்துறைப்படுத்தலும் பெரிதும் துணைபுரிகின்றன. ஆதிச் சமூகங்களிலேகூட எல்லாரும் எல்லாவேலையையும் மட்டமாகச் செய்து கொண்டிருப்பதிலும் பார்க்கத் தொழில்வகையிலே பிரிவுகளை உண்டாக்குவது நல்லதென்றும், உடல்பருத்தவர்களை மீன்பிடிக்கவும், மெலிந்தவர்களை வேட்டையாடவும் அறிவுத்திறமையுள்ளவர்களை மருத்துவம்செய்யவும் விட்டுவிடுதல் நல்லதென்றும், இவ்வகுப்பினர் தாம்

www.padippakam.com


தாம் செய்தபொருள்களை மற்றப் பொருள்களுக்குப் பண்டமாற்றுச் செய்வரெனவும் அறிந்திருந்தனர். மனிதரிடத்துக்காணப்படும் திறமைகள் வித்தியாசப்படும். தனித்துறையாக்கும் முறை இதிலே தங்கியிருக்கிறது. அன்றியும் அது வித்தியாசங்களை உண்டாக்குவதோடு பெரிதாக்கவுஞ் செய்கிறது. வேட்டை பழகுவதால் உடல் மெலிகிறது. அத்துடன் அது ஒருவன் மிருகங்களைத் தேடிப்பதுங்கியிருக்கவும் பயிற்றுகிறது. தொப்பி செய்வதற்கேற்ற மூலப் பொருள்களில்லாத ஓரிடத்திலே சிலசமயம் தொப்பி செய்வதற்கான விசேடத் திறமை விருத்தியாகலாம். அதனுலே தொப்பித் தொழிலுக்கு அது வாய்ப்பான இடமாகிறது.

திறமைகளிலே இயற்கையாகவோ செயற்கையாகவோ உண்டான வித்தியாசங்களில்லாவிட்டாலும், தனித்திறமைபெறுதல் சிலசமயம் நயமுடையதாகும். முந்திய அத்தியாயத்திலே குறிப்பிட்ட பெருவாரி உற்பத்தி சம்பந்தமான சிக்கனங்கள் எல்லாவற்றையும் பெறுவதற்குத் தேவையான பெரிதளவு முயற்சிகளை இவ்வாறுதான் பெறலாம்.[1] அம்பும் வில்லும் செய்து வேட்டையாடிப் பிழைக்கும் செவ்விந்தியரில் இரட்டையராயுள்ளவர்களித்துக்கூட விசேடப்படுத்தும் தொழிற்பயிற்சியிருப்பது இலாபகரமானதே. ஒருவர் வில்லுகளைச் செய்வதிலே விசேட திறமைபெற்று விரைவாகவும் அதிகமாகவும் அவற்றை உற்பத்திசெய்யும்தன்மை ஏற்படும். மற்றவர் அவ்வாறே அம்புகளைமாத்திரம் செய்யலாம். எவர் எதைச் செய்வதென்பதைத் திருவுளச்சீட்டின்மூலம் நிச்சயிக்கலாம். இதனுல் உற்பத்தியிலேகூட திருந்திய முறை பிறக்கும்.

விசேடப் பயிற்சிமூலம் உற்பத்தியைப் பெருக்கலாமென்பதை விளக்குதற்கு அடம் ஸ்மித் சிறப்பானதோர் உதாரணத்தைக் கொடுத்தார். ஊசி உற்பத்தியைக் கவனிப்போம்—ஒரு மனிதன் நாளொன்றுக்குச் சில டசின் ஊசிகளை அரை குறையாகச் செய்வான். ஆனுல் ஊசி உற்பத்தி சம்பந்தமான பல துறைகளில் ஒவ்வொரு துறையையும் ஒவ்வொரு தொழிலாளர் கூட்டத்துக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால், ஒவ்வோரு கூட்டமும் ஒவ்வோர் இலேசான தொழிலைத் திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருக்கும். இதன் பயனுகப் பல்லாயிரக்கணக்கான திறமான ஊசிகளைக் குறிப்பிட்ட அதேகால எல்லையிற் செய்து குவிக்கலாம். தனித்துறைப்படுத்துவதால் தொழில் இலேசாக்கப்படுகிறது. எனவே மனிதன் உதவியின்றி, எந்திர சாதனங்களைப்

[1] சந்தையின் அளவை அனுசரித்தே தனித்துறையாக்கலும், தொழிற்பாகுபாடும் உண்டாகுமென அடம் ஸ்மித் புகழ்பெற்ற தமது நூலிற் கூறியுள்ளார். சந்தையின் அளவு என்பது விற்பனையாகக்கூடிய பொருளின் அளவே. ஆறுதேசங்கள் சேர்ந்த ஐரோப்பியப் பொதுச் சந்தைத்திட்டத்தை ஸ்மித் ஆதரித்திருப்பார். பெருவாரி உற்பத்தியையும், தனித்துறைப் படுத்துவதையும் ஆதரிக்கக்கூடிய பெரிய சந்தையை உண்டாக்கும் வகையில் வியாபார, பாதுகாப்பு வரிகளைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

படிப்பகம்

www.padippakam.com


பயன்படுத்தி அந்தத்தத் துறைக்குரிய வேலைகளைச் செய்துகொள்ளலாம்[1]. விசேட துறைப்படுத்துவதால் வேலைகள் இலேசாக்கப்பட்டன. இலேசான, வேலைகளைச்செய்ய எந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர்கள் வேலை செய்வதைக் குறைக்கும் முறைகள் புகுத்தப்பட்டன. மேலும் எல்லா வேலைகளையும் ஒருவன் செய்யவேண்டியிருந்தால் அவனுக்கு எல்லா ஆயுதங்களும் தேவைப்படும். இந்தப் புதிய ஒழுங்கினால் ஆயுதங்களை அவசியமின்றிப் பெருக்கும் அவசியம் தவிர்க்கப்படுகிறது. ஒருவேலையிலிருந்துவிட்டு மற்றொரு வேலைக்குச் செல்வதற்கு எடுக்கும் நேரமும் குறைக்கப்படுகிறது. கார்ப்பகுதிகளை ஒன்றுசேர்த்துக் காரை உற்பத்தி செய்வதற்கு இக்காலத்திலே பயன்படுத்தப்படும் சங்கிலித் தொடர்முறை, விசேடத் திறமையை எடுத்துக்காட்டுகிறது. தானாக இயங்கும் முறைகளை அனுசரிப்பதே இன்றைய போக்காகும்.

## தனித்துறைப்படுத்தலும் ஒன்றிலொன்று தங்கியிருத்தலும்

ஒன்றிலொன்று தங்கியிருக்கும் பெரும் பிரச்சினை தனித்துறைப்படுத்தலினாலும், தொழிற்பாகுபாட்டினாலும் உண்டாகிறது. ஓரணு உயிரான அமீபா சிக்கலான எந்தவிடயத்திலும் ஈடுபடாமல் தனியாகத் தானுந் தன்பாடுமாக வாழும். அதில் அதற்குப் பற்றுமுண்டு. மனிதனைப் பொறுத்தவரையில் இருதயக் கலம் இறந்துவிடுமானால் மற்றைக் கலங்களெல்லாம் செத்துப் போகும். எல்லாம் நன்றாக நடக்கும்வரை மற்றைக் கலங்களெல்லாம்

[1] 1904 இல் இறைச்சிக்காக மிருகத்தை யடிக்குந் தொழிலில் பயிலப்பட்ட விசேடத்துவத்தைப் பற்றிப் பின்வருமாறு விவரித்து ஒரு பந்தியை இங்கே குறிப்பிடுகிறோம். இஃது அடிக்கடி மேற்கோளாகக் காட்டப்படும் பந்தியாகும். "தொழிற்பாகுபாடு திறமையாகவும் இத்துணை நுட்பமாகவும் வகுக்கப்பட்டதொரு தொழின்முயற்சியைக்காண்பது கடினம். படத்தை அளந்து மதிப்பிட்டு வைப்பதுபோலவே இறைச்சியெடுப்பதற்குக் கொண்டுவரப்பட்ட மிருகமும் அளந்து படமிடப்படும். 30 வகையான விசேடத் துறைகளில் அந்த மிருகத்தின் உடலை வெட்ட இருபது தரமான கூலிகளில் வேலையாட்கள் நியமிக்கப்படுவர். இந்தக் கூலி ஒரு மணி நேரத்துக்கு 16 சதம் தொடங்கி 50 சதம் வரை தரப்படுத்தப்பட்டுள்ளது. 50 சதக்காரன் மிருகத்தின் மிருதுவான தோற்பகுதிகளில் கத்தியை வைப்பான்; அல்லது கோடரி கொண்டு முதுகெலும்பைப் பிளப்பான். இவற்றுக்கு விசேடத்திறமை வேண்டும்; இவற்றில் குறைந்த திறமையுடையவர்களை 18, 18½, 20, 21, 22½, 24 சதக் கூலிகளுக்கு ஏற்படுத்தலாம். கூலிக்கேற்ற வேலைகள் அவர்களுக்கு வகுக்கப்பட்டுள்ளன. தோலைப் பதப்படுத்துவதற்கே ஒன்பதுவகையான தானங்களுண்டு. அதற்கு எட்டுவகையான கூலியில் வேலைகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. 20 சதக்காரன் வாலை இழுத்துவிடுவான். 22½ சதக்காரன் தோலின் விலையற்ற பகுதியைவெட்டி விடுவான். 40 சதக்காரன் வேறொரு பகுதியையும் 50 சதக்காரன் விசேடமானதொரு பகுதியையும் வெட்டுவான். மிருகத்தின் அங்காதிபாதங்களை யனுசரித்துத் தொழின்முயற்சியும் வித்தியாசப்படும்... 1870 ஆ அடுத்த பத்து வருடங்களில் குளிரறைவசதி செய்யப்பட்டது. வெட்டிப்பதப்படுத்திய மாட்டிறைச்சி சந்தையில் விற்கப்பட்டது. இதன்பயனாகத் தொழிலிலே பல பிரிவுகளுண்டாயின. இத்தகைய புரட்சிகரமான விஞ்ஞான வசதிகளேற்படுவதற்கு முன்னர் மாடடிப்போர் தொகை குறைவு. உள்ளூர்த்தேவைகளே திருத்திசெய்யப்பட்டன. ஆனால் ஆயிரம் மாடுகளை அடிக்க வேண்டிய நிலையுண்டானதும் மாடடிப்போர் தொகையும் அதிகரித்தது. கடுமையான வேலைகளுக்குத் திறமையான ஆட்கள் நியமிக்கப்பட்டனர். —ஜே. ஆர். கொம்மன்ஸ், குவாட்டலி ஜேணல் ஒவ் எக்கனோமிக்ஸ். தொகுதி 19. 1094, பக்கம் 3, 6.

www.padippakam.com



தத்தம் வேலையைத் திறமையாகச் செய்கின்றன. ஆனால் ஒன்று மற்றொன்றிலே தங்கியேயிருக்கின்றது.

இன்றைய பொருளாதாரத்தில் இது நூற்றுக்கு நூறு பொருந்தும். ஒரு மனிதன் அனுபவிக்கும் பொருளில் ஒரு சிறு பகுதிகூடத் தனி ஒரு மனிதனால் உற்பத்திசெய்யப்பட்டதன்று. மத்திய காலத்திலே ஒரு கைவினைஞன் ஒரு பொருளைச் செய்து அதைக்கொடுத்துத் தான் விரும்பிய பலபொருள்களை வாங்கினான். இன்று ஒரு தொழிலாளி ஒரு பொருளைத் தானும் செய்ய மாட்டான். சப்பாத்து உற்பத்தியில் ஏதாவது ஒருவகையான தொழிலைத் திருப்பித்திருப்பிச் செய்வான். போட் கார் கூட்டும் வேலைத் தலத்திலே அவனுக்கு 999 ஆவது பூட்டை இறக்குதல் என்ற ஒரே ஒரு வேலை நியமிக்கப்பட்டிருக்கலாம். வாழ்நாள் முழுவதும் அவன் அதையே செய்துகொண்டிருப்பான். இதைச் செய்வதற்குக் கூலியாக, அவனுக்குச் சம்பளம் கொடுக்கப்படும். அதைக் கொண்டு உலகத்திலே பல நாடுகளிலும் உற்பத்திசெய்யப்படும் பல பொருள்களை வாங்க அவனுக்கு வசதியுண்டு. விசேடமான தனித்துறைப்பயிற்சியினால் மக்கள் அரைமனிதராகவே வளர்வார்கள். உதாரணமாக இரத்தோட்டம் குறைந்த எழுதுவினைஞர்களும் மிருக குணமுள்ள சாரதிகளுமே தோன்றுவர்.

தனித்துறைப் பயிற்சியினால் மக்கள் ஒருவரையொருவர் அண்டித்தங்கியிருக்கவேண்டியேற்படுகிறது. அவுஸ்திரேலியாவிலுள்ள ஒரு வங்கி முறிந்தால், மண்ணெண்ணெய்த் தகரங்களிலே தண்ணீர் எடுத்துச் செல்வோரும், பில்ஸ்பெரி மாச்சாக்குகளிலே தம் குழந்தைகளுக்கு உடை செய்து அணிவோருமான பிஜித்தீவிலுள்ளவர்கள், தமது வேலையை இழக்க நேரிடும். அதனால் பட்டினி கிடந்து வாடவும் நேரிடும். யுத்த காலத்திலே போக்குவரத்துத் தடைப்பட்டு நாணயப்பரிவர்த்தனையும் தம்பித்துவிட்டால், பரிவர்த்தனையிலே தற்காலப் பொருளாதார வாழ்வு எவ்வளவு தூரம் தங்கியிருக்குமென்பது தெரியவரும். நமது வாழ்க்கையை இலேசானதும், வறுமையுடையதுமாகச் செய்ய எம்மால் முடியுமா? தொழிற்பிரிவினாலுண்டாகும் நன்மைகளை வைத்துக்கொண்டு இந்த அமைப்பு முறிந்துபோகாதவகையிலே புதிய கொள்கைகளை வகுக்கமுடியாதா?

### பண்டமாற்றும் பணமும்

முதல், தனித்துறைப்படுத்தல் என்பவற்றோடு மூன்றாவதாக எண்ணப்படும் மற்றொரு பொருளாதார அமிசம் பணம். பணமில்லாவிட்டல் தற்காலத் தொழிற்பிரிவும், பரிவர்த்தனையும் சாத்தியமாகா. ஒரு பொருளுக்குப் பதிலாக வேறொரு பொருளைக் கொடுத்து வாங்கும் பண்டமாற்றே அப்போது நடைபெறும். புராதனச் சமூகங்களிலே மக்கள் உணவுப்பொருளைக் கொடுத்து அதற்குப் பதிலாக ஆயுதங்களை வாங்கினர். வீடுகட்டுவதற்கு யாராவது உதவி செய்தால் அதற்குப் பதிலாக வயலிலே வேலைசெய்து கொடுத்தார்கள். மிகவும் முன்னேற்றமுள்ள கைத்தொழிற் பொருளா

www.padippakam.com



தார அமைப்புள்ள தேசங்களிலே நடைபெறும் பரிவர்த்தனைமுறையை ஆராய்ந்து பணம் என்ற திரையை அகற்றிவிட்டால், வியாபாரமானது தனியாரிடையிலும் தேசங்களிடையிலும் பண்டமாற்ருகவேயிருப்பதைக் காணலாம். ஒரு வகைப் பொருளுக்காக வேறொருவகைப் பொருளை மாற்று தல் இஃதென்க.

பண்டமாற்றுமுறை மனிதரைச் சில தொழின்முறைகளிலே விசேட திறமைபெறச் செய்கிறது. இல்லாவிட்டால் எல்லாரும் எல்லாத் தொழி லிலும் திறமையுடையவராயிருக்கவேண்டிய நிலையுண்டாகும். ஆதியிலே இரண்டு குரங்கு மனிதர் இந்தப் பண்டமாற்றைச் செய்திருப்பார்கள். ஒருவர் தாம் வைத்திருந்த பொருளில் ஒரு பகுதியை மற்றவரிடமிருந்த வேறொரு பொருளுக்காக மாற்றிய சம்பவம் மிக முக்கியம் வாய்ந்தது. அதற்காக மனித சமுதாயம் இந்த இரு குரங்கு மனிதர்க்கும் நன்றியறித லுடையதாயிருக்கவேண்டும். சாதாரணமான பண்டமாற்று நிலவுமாஞல் தொழிற் பாகுபாட்டை விரிவாக ஏற்படுத்த முடியாது. அவ்வாறு செய்வ தாஞல் பணம் என்ற புதிய சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

புராதனச் சமுதாய மக்கள் தாம் ஒரு பொருளுக்காக வேறொரு பொருளைக் கொடுத்துப் பண்டமாற்றுச் செய்தனர். மற்றவர்களெல்லாரும் ஒரு பொருளை விற்று வரும் பணத்தைக்கொண்டு வேறு பொருளை வாங்கி வந்தனர். இஃது அத்துணை இலேசான விவகாரமன்றென்பது எடுத்த எடுப்பிலேயே தெரிந்துவிடுகிறது. ஒரு வியாபாரத்துக்குப் பதிலாக இரண்டு வியாபாரம் நடைபெறுகிறது. என்னிடம் அப்பிள் பழம் இருக்கிறது. எனக்குக்கடலை தேவைப்படுகிறது. என்னிடமுள்ள பழத்தைக் கொடுத்துக் கடலையை வாங்குவது இலேசான விடயம். அதற்குப் பதிலாக அப்பிளை விற்றுவந்த பணத்தைக் கொண்டு கடலை வாங்குகிறேம். இது சிக்கலான தாகத் தோற்றுகிறதா?

இல்லை. இந்த இரு வியாபாரங்களும் தனிப்பண்டமாற்றிலும் பார்க்க இலேசானவை[1]. சாதாரணமாக, அப்பிள் வாங்குவோரிருக்கவே செய்வர். கடலையை—ஒரு விலைக்கு—விற்போரும் இருக்கவே செய்வர். ஆஞல் கடலையை விற்று அப்பிளை வாங்கும் நோக்கமுடையவரும் இருப்பது அசாதாரணமானதோர் ஒற்றுமை என்றே கூறவேண்டும். இத்தகைய அசாதாரண நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும், இருபகுதியாரும் விரும்பும் தொகையும் பண்டமாற்று விகிதமும் ஒற்றுமையாயிருக்குமென்று கூறுவ தற்கு ஆதாரமில்லை.

[1] சோடிசோடியாகப் பொருள்களின் விகிதசமத்தை—அதாவதுஇத்தனை பொருளுக்கு மாற்ருக இத்தனை பொருள் என்ற விகிதத்தை—பண்டமாற்று முறையில் அமைத்துக் கொள்ளவேண்டும். ஆஞல் பணம் மாற்றுச்சாதனமாகவும், கணக்கின் அலகாகவும் வந்து விட்டால் ஒவ்வொரு பொருளினதும் விலையை மாத்திரம் பணக்கணக்கில் அறிந்தால் போதும்; அப்போது சோடிப் பொருள்களின் விலை விகிதத்தைப் பிரித்துக் கணித்துக்கொள்ளலாம். சோடிப்பொருள்களின் தொகை, பொருள்களின் தொகையிலும் மிக அதிகமாயிருப்பதால் (ஏறக்குறைய $\frac{1}{2}n^2$ கோடியானது $n$ பொருள்களுக்காகும்) புராதனப் பண்டமாற்றிலே விலை கூறுதல்கள் அதிகமாயிருந்தன.

www.padippakam.com



தேவை, இரு பக்கத்தும் ஒரு சேர நிகழ்வது அசம்பாவிதம். ஆனுல் இரு பக்கத்திலும் ஒற்றுமை ஏற்படுவதே பெரிய தேவையாயிருக்கும். பசியால் வாடும் தையற்காரன் ஒருவன், உணவுப் பொருளும், ஒரு சோடி காற்சட்டைக்கான விருப்பமும் உள்ள ஒரு விவசாயியைத் தேடிப் பிடித்தாலன்றி இரு பகுதியாருக்கும் எவ்வித வியாபாரமும் நடைபெறுது.

பணம், பொருளாதார வாழ்வை இலேசாக்குகிறது. ஆனுல் பணத்தில் வெறும் அதிகரிப்பு உண்டாவதால் மக்கள் அதிகம் நுகர முடியுமென்று எண்ணக்கூடாது. பொருளாதாரத்தில் உள்ள தொழில், நிலம், முதல் என்பவற்றைக்கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய நிசப்பொருள்களை விட அதிகமாக அவர்கள் நுகரமுடியாது.

**பொருளாயுள்ள பணம், கடதாசிப் பணம், வங்கிப் பணம் :**

பண்டமாற்று யுகம் மாறி, பொருள் பணமாய் வழங்கிய காலம் உண்டானது. சரித்திரத்தின் போக்கு இதுவே. மக்கள் பலவகையான பொருள்களைப் பணச் சாதனமாகப் புழங்கிய காலமுண்டு. கால்நடை, புகையிலை, தோல், உரோமமுள்ள மிருகங்களின் சருமம், ஒலிவ் எண்ணெய், மது சாரம், அடிமைகள், மனைவியர், தாமிரம், இரும்பு, தங்கம், வெள்ளி, கணையாழி, வைரம், மணி, சிப்பி, பெரிய கற்பாறைகள், இயற்கையமைப் பிலுள்ள சில முக்கியமான இடங்கள், ஒட்டுச் சுருட்டுகள் என்பனவெல்லாம் பரிவர்த்தனைச் சாதனமாயிருந்தன.

மேலே குறித்த பொருள்கள் ஒவ்வொன்றிலும் நன்மையான அமிசங்களுமுண்டு ; தீமையான அமிசங்களுமுண்டு. கால்நடையைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்க முடியாது. இந்தப் பணத்தைச் சேர்த்து வைக்க வைக்க அது பெற்றுப் பெருகிக்கொள்ளும். "பணம் பெருகாத மலட்டுத் தன்மையுடையதொன்று" என்றுர் அரிஸ்டோட்டில். அக்கூற்றுத் தவறு என்பதை இந்தப் பணம் நிரூபிக்கிறது. பீர் மதுசாரம் சேர்த்து வைப்பதால் கெட்டுப்போகும். வைன் அப்படியன்று, ஒலிவ் எண்ணெயை எவ்வளவு சிறிய பாகமாகப் பிரிக்கவேண்டுமோ அவ்வளவு சிறிதாகப் பிரித்துவிடலாம். இரும்பு உக்கிப்போகும். வைரத்தின் மதிப்பு அதனுடைய சதுரத் தன்மையிலேதான் தங்கியிருக்கிறது. அதனுடைய நிறையிலேயன்று. எனவே அதைவெட்டினுல் அதன் மதிப்புப் போய்விடும். தங்கம், வெள்ளி போன்றவிலையுயர்ந்த உலோகங்கள் வருடாவருடம் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படுவதால் அவ்வளவு கூடுவதுமில்லை. ஆபரணம் செய்தல், பல்லுக் கட்டுதல் போன்ற கருமங்களுக்கும் அதிகஞ் செலவாவதில்லை. எனவே இந்த உலோகங்களின் மொத்தப் பெறுமானமும் அளவும் அதிகம் உயர்வதுமில்லை ; தாழ்வதுமில்லை. வெள்ளி பளபளக்கும். ஆனுல் காற்றிலே மங்கிவிடும். தங்கம் ஒளி மங்காதுதான். ஆனுல் மிருதுவான உலோகமானபடியால் அதனை வேறுஉலோகங்களோடு சேர்க்கவேண்டும். தங்கத்தின் எடை உயர்ந்ததாதலால் போலியையும் கலப்பையும் கண்டு கொள்வது

படிப்பகம்

www.padippakam.com



சுலபமாகும். சரித்திரகாலம் பூராவும் தங்கம் கிடைப்பதருமையாயிருந்த படியால், மிகச் சிறிய அளவைக் கொண்டே நாணயங்கள் செய்து சாதாரணக் கொள்வனவுகளை நடத்தவேண்டியிருந்தது.

பணவகையிற் பெரும்பாலானவை ஒரு காலத்திலே தம்மளவிற் பயனுடையவாயுமிருந்தன. மணிகள்கூட அலங்கார வேலைசெய்வதற்குப் பயன் பட்டன. கடதாசிக்காசு உலோக இருப்புக்கு அத்தாட்சியாகவே வழங்கப் பட்டது. ஆனால் பணச் சாதனம் அதனளவிற் பயனுடையதாயிருந்தமை இன்று முக்கியமாகக் கருதப்படுவதில்லை.

பொருள்மயமான பணம் மாறிக் கடாதசிப் பணம் தோன்றிற்று. பணத்தின் மூலாதாரமான நோக்கம் கடதாசிப்பணத்தில் நன்கு தெரிகிறது. பணம், பணத்துக்காகத் தேவைப்படவில்லை. அது பொருள்களை வாங்கும் சக்தியுடையதானதாலேயே அதற்கு மதிப்புண்டு. பணத்தை நேரடியாக நாங்கள் பயன்படுத்த விரும்புவதில்லை ; அதைச் செலவு செய்து தொலைக்கிறோம். அதைச் சேமித்து வைக்கவிரும்பினாலும், அதைக் கொண்டு பொருளை வாங்கலாம் என்ற காரணத்தைக் கொண்டே அதைச் சேமிக்கிறோம்.

பணம் செயற்கையாக உண்டாக்கப்பட்டதொரு சமூக உடன்படிக்கை. ஏதாவது ஒரு காரணத்தைக்கொண்டு ஒரு பொருள் பணமாகப் பாவிக்கப் பட்டால், எல்லாரும் அதற்கு மதிப்புக் கொடுப்பர். அவர்கள் மது அருந்தாதவர்களாயிருந்தாலென்ன, தாவர உணவு உண்போராயிருந்தாலென்ன அல்லது அப்பணத்தின் சுயமதிப்பில் நம்பிக்கையில்லாதவராயிருந்தாலென்ன, பணத்துக்கு மதிப்புக்கொடுப்பர். குறித்த ஒரு பொருளைக் கொண்டு சாமான்களை வாங்கவும் விற்கவும் முடியுமானால் அதனை மக்கள் பிரயோகிப்பர். முரண்பாடு : பணம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, காரணம், அது ஏற்றுக்கொள்ளப்படுவதே.

பணநோட்டுப் பரவலாக எங்கும் உபயோகிக்கப்படுவதற்குக் காரணம், பரிவர்த்தனைச் சாதனமாக அது பலவகை வசதிகளையுடையதாயிருத்தலே. அதை இலேசாக எடுத்துச் செல்லவும், சேர்த்து வைக்கவும் முடியும். நோட்டிலே இரண்டொரு பூச்சியங்களை மேலதிகமாக அச்சடித்ததும் அந்த நோட்டின் பெறுமதி பத்து, நூறு மடங்கு அதிகரிக்கிறது. அத்துடன் அதை எடுத்துச் செல்வதும் இலேசாகும். தசமப்புள்ளிகளைப் பயன்படுத்துவதால் விரும்பியபடி பிரிக்கக்கூடியதாயுமிருக்கும். கவனமாக இலக்கங்களை நோட்டிலே அச்சடித்துவிடுவதால் நோட்டின் பெறுமதியை இலேசாக அறியக்கூடியதாகவும், அதனைப் போலியாக்கி மாற்றஞ் செய்யாமலிருக்கக்கூடியதாகவும் செய்யலாம். வேண்டிய நேரம் வேண்டிய அளவுக்குத் தனிப்பட்டவர்கள் நோட்டுக்களை அச்சடிக்கமுடியாதிருப்பதால், அஃது இலவசப் பொருளாகாமற் பொருளாதாரப் பொருளாகவும் அமைகிறது.

குறிப்பிட்ட ஓரளவு நோட்டுக்களே வெளியிடப்படலாமென்ற கட்டுப்பாடிருப்பதால் இக்கால நாணய நோட்டுக்களுக்கு மதிப்புண்டு. தங்கம், வெள்ளி, அரசாங்க அதிகாரம் என்பன இல்லாமலே அந்நோட்டுக்களைக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com



பொருள்களை வாங்கலாம். நாணயம் "வெள்ளிச் சான்றிதழில்" இருக்கிறதா, பெடரல் ரிசேர்வ் நோட்டுக்களில் இருக்கிறதா, செப்பு உலோகத்திலோ, வெள்ளி உலோகத்திலோ இருக்கிறதா என்று பொது மக்கள் அறிந்தோ, அறியும் அக்கறையுடனே இருக்க விரும்பமாட்டார். அத்தகைய அறிவோ அக்கறையோ அவர்களுக்கு அவசியமில்லை. ஒவ்வொரு நாணய வகையும், குறித்த ஒரு நிபந்தனையில் வேறொரு பணவகையாக மாற்றக் கூடியதாயிருக்கும்வரை சிறந்த நாணயவகை அதமமான நாணயவகைக்கு ஒப்பானதாகவேயிருக்கும்[1]. ஈற்றிலே கடதாசிப் பணயுகத்தோடு வங்கிப் பணயுகமுந்தோன்றிற்று. அதாவது வங்கிக் காசோலை வைப்புகளில், இன்று பத்திலொன்பது விகிதமான விவகாரங்களெல்லாம் காசோலைமூலமே நடைபெறுகின்றன. பேராசிரியர் ஒருவருடைய சம்பளம் அவருடைய கணக்கிலே வங்கிக்கு அனுப்பப்படுகிறது. அவர் பெயரால் அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய வருமானவரி, சமூகப்பாதுகாப்புவரி என்பனவெல்லாம் முதலாளியின் சம்பளப்பட்டியலிலேயே கழித்துவிடப்படும். அவர் கொடுக்கவேண்டிய வாடகை, வைத்தியருக்குச் செல்லவேண்டிய செலவு முதலியவெல்லாம் காசோலையாகவே அனுப்பப்படும். பெட்ரோல், உணவுவிடுதிக்கட்டணம் என்பனவெல்லாம் சீட்டுக்கள்மூலமே செலுத்தப்படும். உணவுச்செலவு, மோட்டார் செலவு என்னும் சில்லறைச் செலவுகளைவிட, அவர் ஒரு வருடத்திலே வேறெதற்கும் தொகையாகப் பணத்தைக் எடுத்துக்கொடுத்திருக்க மாட்டார்.

**பரிவர்த்தனைச் சாதனமாயும், கணக்கு அலகாயும் அமையும் பணம் :**

பணத்துக்கு இரண்டு தனிப்பட்ட கடமைகளுண்டு. (1) ஒன்று பரிவர்த்தனைச்சாதனம் என்றவகையில். (2) மற்றது மதிப்பீட்டலகு அல்லது கணக்கு அலகு என்றவகையில்.

பூரணமானதொரு கணக்கு வைக்கும்முறை செயற்படும் தாபனத்திலே இந்தவித்தியாசத்தை விளக்கமுடியும். இங்கே வியாபார விவகாரங்கள் சம்பந்தமான குறிப்புக்கள் மிகக் கருத்தோடு எழுதிவைக்கப்படும். இங்கே ஒருவனுடைய வரவு செலவெல்லாம் கணக்குப் பார்த்து, அவன் கணக்காற் செல்மதியானவற்றைக் கொடுத்து, வருமதியானவை பதிவு செய்யப்பட்டுவிடும். அத்தகையதொரு திட்டத்திலே பரிவர்த்தனைச் சாதனம் எதுவும் தேவைப்படமாட்டாது. ஆனால் மதிப்பை அளப்பதற்குப் பொதுவானதோர் அளவுகோல் தேவைப்படும். அதைக்கொண்டு பலவகையான பொருள்களின் பொதுமதிப்பை அறியலாம். உதாரணமாக, ஒரு கட்டி பிசினையும் ஒரு மோட்டாரையும் ஒப்பிட்டு மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

[1] ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வங்கி நோட்டுக்களை நாணயமாகச் சமவிலை மதிப்பில் மாற்றுவது அபூர்வம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மதிப்பையுடையதாயிருந்திருக்கும். அதுவும் நாளுக்குநாள் வித்தியாசப்படும். எனவே பண்டசாலைக்காரர் தினமும் மதிப்பு அட்டவணையொன்றை வைத்திருப்பார்கள். பணத்தை வாங்கி, விற்று இலாபம் சம்பாதிப்பதே ஒரு தொழிலாயமைந்தது.

www.padippakam.com



ஆபிரிக்கசாதியாருள் ஒருவகை "மகியூட்" என்னும் ஒன்று பணமாகப் பாவிக்கப்பட்டு வந்தது. இது சிப்பியுமன்று; பொருளுமன்று. பரிவர்த்தனைச் சாதனமான இதற்குச் சடப்பொருட்டன்மை கிடையாது. ஆனால் அது மதிப்பீட்டு நியம அலகாகவேயிருந்தது; அல்லது கணக்குக்கான பண மாகவேயிருந்தது. சமீபகாலம்வரை பரகுவேநாட்டிலே, வழக்கிலில்லாத புராதன ஆர்ஜென்டீனு நாணயமொன்றின் அடிப்படையிலமைக்கப்பட்ட பண அலகே பணமாயிருந்துவந்தது. இலண்டன் நாகரிகக் கடைகளிலே கினிக்கணக்கிலே சாமான்களின் விலை கூறப்படுகிறது. ஆனால் கினி என்ற நாணயம் இன்று புழக்கத்திலில்லை. ஒரு கினித்தொப்பிக்கு 21 சிலின் கொடுத்து வாங்குவார்கள். ஆனால் கினி இப்பொழுதும் வழக்கத்திலிருப்பதாக நினைப்பது நாகரிகமாகக் கருதப்படுகிறது. பிராங்க்ளினும் ஜெபர்சனுமே தசமமுறைப் பணத்தை அமெரிக்காவிற் புகுத்தினர். அதற்கு அமெரிக்கர் அவர்களுக்குக் கடமைப்பட்டவராவர். பார்திங், பென்னி, சிலின், அரைக்கிரவுண் போன்ற ஆங்கிலச் சில்லறைக் காசுகளைக் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பது எத்துணைச் சங்கடமான கருமம்![1]

அப்பிள்பழங்களோடு தோடம்பழங்களைக் கூட்டக்கூடாதெனப் பாடசாலையிலே நாம் படித்துள்ளோம். அளவிலே வித்தியாசப்பட்டவற்றை ஒன்று சேர்க்கக்கூடாதெனவும் சிறு வகுப்பிலே படித்துள்ளோம். பொருளாதாரத்திலும், பொருள்களின் மதிப்பை ஒரளவால் அளவிட வழிசெய்வது பணவிலையேயாகும். அப்பிளோடு தோடம்பழங்களைச் சேர்க்கமுடியாது. அப்பிள் ஒன்றின் விலையால் அப்பிளின் தொகையைப் பெருக்க ஒரு கணக்கு வருகிறது. அது டொலரில் இருக்கிறது. தோடம்பழம் விடயத்திலும் அப்படித்தான். டொலர் கணக்கில் அதன் மதிப்பை அறிகிறோம். இந்த இரு டொலர் தொகையையும் ஒன்றாகக் கூட்டலாம். பாணையும், மலரையும் ஒப்பிடுவது அழகியலுணர்ச்சிக்குப் பொருந்தாது. ஆனால் பணம் இரண்டையும் ஒரளவுக்குட்படுத்தி ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாக்குகிறது. முதற்பொருள் பலவற்றுக்கும் பணம் இவ்வாறே செய்கிறது. அவை சம்மட்டியாயிருக்கலாம், நெசவு யந்திரமாயிருக்கலாம், எண்ணெய்வகையாயிருக்கலாம்.

### பணமும் காலமும்;

பரிவர்த்தனைச் சாதனமாகவும், மதிப்புக்களை அளவிடும் பொது அளவீடாகவும்—அதாவது நியமமான கணக்கீட்டலகாகவும்—பணம் அமைந்துள்ளது எனவும், அவைதாம் பணத்தின் மிக முக்கியமான கடமை

[1] சிறுவர்க்குப் பயிற்றப்பட்ட எந்தமுறையும் அவர்களுக்கு இலேசானதாயிருக்கும். தங்கள் முறைதான் சிறந்ததென்று எண்ணுவது மக்களியல்பு. எந்தமுறை கற்பதற்கு இலகுவோ அந்தமுறைதான் நல்லது. தசமமுறை அந்தவகையில் எல்லார்க்கும் இலேசானது. (12 இற்கு பல சினைகளுண்டு; 10 இற்கு அத்துணைச் சினைகளில்லை. இதுவே தசமமுறையிலுள்ள குறைபாடு).

படிப்பகம்

www.padippakam.com



கள் எனவும் கண்டோம். இவை காலத்தோடு சம்பந்தப்பட்டவை. காலமென்பது தொடர்புள்ள வேறிரு தொழிற்பாடுகளை அடக்கியிருக்கிறது.

பணத்தைப் பெறுவதற்கும் அதைச் செலவு செய்வதற்குமிடையிலே ஒரு கால எல்லையுண்டு. இஃது ஒருவாரம் அல்லது ஒரு மாதமாயுமிருக்கும். பணத்தைச் செயற்படுத்தாமற் பலமாதம் வைத்திருப்பதானுல் அதனுல் எவ்வித வட்டியும் கிடையாது. வட்டியுதவக்கூடிய பத்திரங்களோ, ஈடுகளோ இருக்குமானுல் எவனும் பணத்தைச் சும்மா வைத்திருக்க மாட்டான். (எதிர்வரும் அத்தியாயங்களிலே இந்த முக்கியமான பிரச்சினை பற்றி அடிக்கடி குறிப்பிடுவோம்.)

ஒரு நாளென்றுலென்ன ஒன்பதுவருடமென்றுலென்ன பணம் சில காலத்துக்குக் கையில் இருக்கிறது என்பது உண்மை. மதிப்பீட்டின் களஞ்சியமாகப் பணம் இவ்வாறு அமைகிறது. ஒருவன் தனது சொந்தச் செல்வத்தை இங்ஙனம் வைத்துக்கொள்ளலாம். இதுவே பணஞ் செய்யக்கூடிய மூன்றுவது கடமையாகும்.

கால எல்லைக்குள் நடக்கும் பணவிவகாரங்களின் நிபந்தனைகளை விளக்கும் முறையிலும் பணம் முக்கியமானதொரு கடமையைச் செய்கிறது. உதாரணங்கள் : அடுத்த ஆண்டில் 106 டொலராகத் திருப்பித் தரும் நிபந்தனையில் ஏ, பீக்கு இன்று 100 டொலர் கடன் கொடுக்கிறுன். அடுத்த மே மாதத்திலே ஒரு புசல் இரண்டு டொலர் வீதம் 5,000 புசல் கோதுமையை டீ யிடமிருந்து வாங்குவதாக சீ உடன்படுகிறுன். வருங் காலத்திலே கொடுப்பனவு செய்வதற்குப் பணம் ஒரு நியம அளவாக அமைகிறது. இதுவே அதன் நாலாவது கடமை. 5 வருடத் தவணையில் திருப்பிக் கொடுத்துவிடுவதாக ஒருவன் 10,000 டொலர் கடன் வாங்குகிறுன். அது, இக்காலப் பணத்தைப் பெற்று வருங்காலப் பணத்தில் திருப்பிக் கொடுக்கப்படுவதைக் குறிக்கும்.

அடுத்தவருடம் விலைவாசிகள் இரட்டித்துவிட்டனவென்று வைத்துக் கொள்வோம். இன்று கொடுத்ததிலும் பார்க்கக் குறைவான வாங்குஞ் சக்தியுள்ள பணத்தில் ஒருவன் வாங்கினபணத்தைத் திருப்பிக்கொடுப்பது நியாயமா ? வருடாவருடம் விலைவாசிகள் இரட்டித்துக்கொண்டுபோகும் போது, மதிப்பீட்டுக் களஞ்சியமாக எண்ணிப் பணத்தை வைத்துக்கொண்டிருக்கலாமா ? விலைவாசிகள் நிலைபேறில்லாதிருக்கும்போதும், வீக்கமும் வீழ்ச்சியும் தீவிரமாயிருக்கும்போதும், எதிர்காலக் கொடுப்பனவுக்கு நியம அலகாகவும், மதிப்பீட்டின் களஞ்சியமாகவும் பணம் அமைவதற்குப் பொருத்தமற்றதாகும்.

காலஎல்லைக்குள் பணம் நிறைவேற்றக்கூடிய இரு முக்கியமான கடமைகள் இவைதாம். வங்கிகளினதும் அரசாங்கத்தினதும் பணம் சம்பந்தமான கடமைகளையும் கடன் சம்பந்தமான கடமைகளையும் இரண்டாம்பகுதியில்

www.padippakam.com



விவரமாக ஆராய்வோம். விலைவாசிகளிலும் உற்பத்திகளிலும் சம்பந்தப்பட்ட ஏற்ற இறக்கம் சம்பந்தமாய் அவை யாது செய்கின்றன என்பதை அப்பொழுது கவனிக்கலாம்.

**சுருக்கம் :**

உள்ளுறு நினைவில் எல்லாருக்கும் பழக்கமான சில விடயங்களே இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டபோதிலும், பொருளாதாரத்துறையிலே இது மிகவும் கடினமானதோர் அத்தியாயமாகும். எமது திட்டத்துக்கு மிக அண்மையில் நாமிருப்பதால், கருத்தோடு படித்தாலன்றி அஃது எவ்வாறு தொழிற்படுகிறதென்பதைச் சரியாக அறிந்துகொள்ளமாட்டோம்.

**அ. விலைவாசிகளும், கலப்புத் தொழின்முறைகளும் :**

1. நமது கலப்புத் தொழின்முறைத்திட்டத்திலே போட்டிச் சந்தைகளில், விநியோகம், தேவை என்பனவற்றின்மூலம் தொழிற்படும் விலையந்திரம், பொருளாதார அமைப்பின் மூன்று அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விடை தரும் வகையிலே செயற்படுகிறது. இத்திட்டம் பூரணமானதன்று. ஆனால் அஃது என்ன, எப்படி, யாருக்கு என்ற பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறது.

2. மக்கள் செலவு செய்ய ஒதுக்கும் பணம் பொருள்களின் விலையைப் பாதிக்கிறது. இந்த விலைகள், வெவ்வேறு பொருள்களின் எந்த அளவு உற்பத்தி செய்யப்படவேண்டுமென்பதை நிச்சயப்படுத்த உதவுகின்றன. ஒரு பொருளின் அதிக அளவு தேவையென மக்கள் விரும்பினால் அந்தப் பொருளின் உற்பத்தியைப் போட்டியிடும் வியாபாரி ஒருவன் அதிகமாக உற்பத்தி செய்வானானால் இலாபம் பெறுவான். பூரணபோட்டியிலே மிக மலிவாக உற்பத்தி செய்யும் முறையை அவன் அனுசரிக்கவேண்டும்; மலிவான உழைப்பு, நிலம் முதலிய சாதனங்களை அவன் பயன்படுத்தவேண்டும். ஒறுப்பான சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு நட்டமுண்டாகி அவன் வியாபாரத்திலிருந்து நீங்கவேண்டியேற்படும்.

அத்துடன் என்ன, எப்படி என்ற பிரச்சினைகளும் விலைவாசிகளாலே தீர்த்து வைக்கப்படும். யாருக்கு என்ற பிரச்சினையும் அப்படியே. உற்பத்திச் சாதனங்களின் விலைகளுக்குப் பேரம்பேசுஞ் சமயத்தில் ஏற்படும் போட்டியே வருமானம் பகிர்ந்துகொடுக்கப்படும் தன்மையை நிச்சயிக்கும். அதாவது ஒவ்வொருவகைத் தொழிலுக்குமுரிய கூலி, நிலவாடகை, புத்தகங்களுக்குரிய உரிமைப்பணம், முதலீட்டால் உண்டாகக்கூடிய பலவகைப்பங்கீடுகள் என்பனவே அப்பங்கீடாகும். நல்ல இடத்திலமைந்ததும், வளம் மிக்கதுமான நிலத்தை யுடையவன், நுகர்பொருட் சந்தைகளில் அந்நிலத்தைப் பயன்படுத்தி நல்ல வாடகையைப் பெறுவான். நல்ல பாடகன் விடயமும் அத்தகையதே. அவன் பாட்டைக்கேட்க மக்கள் நிறையப் பணங்கொடுப்பர். சந்தையிலே தேவைப்படாத நிலமோ, திறமைகளோ உள்ளவனுடைய வருடாந்த வருமானம் குறையும்.

www.padippakam.com



3. இரண்டு வகையில் நமது பொருளாதார முறை கலப்புடையதாயிருக்கிறது. அரசாங்கம் தனியார் முயற்சிக்குக் கட்டுப்பாடு உண்டாக்குகிறது. பூரணபோட்டி தொழிற்படுவதை ஏகபோக உரிமைக்குரிய அமிசங்கள் கட்டுப்படுத்துகின்றன.

**ஆ. முதல், தொழிற் பிரிவு, பணம் :**

4. முதற்பொருள்கள், அதாவது எந்திரம், வீடு, உற்பத்தியாகிவரும் பொருள்கள் என்பவை ஒரு தேசத்தின் உற்பத்திக்குப் பெரிதும் துணை புரிகின்றன. காலத்தைப் போக்கும் வக்கிரமானமுறைகள் மூலம் உற்பத்தியை ஆரம்பிப்பதற்குக் காலமெடுக்கும். எனவே முதற்பொருள் இருப்போடு, தற்காலத்தில் நுகரப்படும் பொருள்களிற் சிலவற்றைத் தற்காலிகமாகத் தியாகஞ் செய்வதும் அவசியம்.

5. முதலாளித்துவப் பொருளாதார முறையிலே முதற்பொருள்கள் தனியார் உடைமையாகவேயிருக்கும். அவற்ருல் வரும் வருமானம் தனியாருக்கே சேரும். பொதுவுடைமை முறையிலே முதற்பொருள்கள் அரசாங்கத்துக்கே சொந்தம். எந்தமுறையிலும் தனியார் உடைமை எல்லையில்லாமற் பெருக இடங்கிடையாது.

6. தனித்துறைப் பயிற்சியும், தொழிற்பிரிவுமே, இக்காலப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு. இதனுல் உற்பத்தி பெருகுகிறது. ஆனுல் ஒருவரில் மற்றவர் தங்கவேண்டிய நிர்ப்பந்தமுமுண்டாகிறது.

7. நாணயப் பரிவர்த்தனையில்லாவிட்டால், தொழிற்பிரிவை உயர்வாக அபிவிருத்திசெய்யமுடியாது. சாதாரணப் பண்டமாற்று திறமையற்றது. அது நாளடைவிற் பணத்துக்கு இடமளிக்கும். பொருள்மயமான பணம் காலகதியிற் பணமாகவும் வங்கிக் காசோலையாகவும் மாறும். ஏனைய பொருளாதாரப் பொருள்களைப் போலல்லாது பணத்துக்கு மதிப்புச் சமூகசம்பிரதாயத்தால் உண்டாகிறது. பணம் எதை வாங்குகிறதோ அதைக்கொண்டே அதற்கு மறைமுகமாக மதிப்புக்கொடுக்கிறேமன்றிப் பணத்துக்காகப் பணத்தை நாம் மதிப்பதில்லை.

8. பணத்தின் முக்கியமான இரு கடமைகள் (அ) பரிவர்த்தனைச் சாதனம் (ஆ) பொதுவான அளவை அலகு ; அதாவது கணக்கிடுவதற்கான அலகு. காலத்தன்மையால் இவ்விரு கடமைகளோடு வேறிரு சார்புக் கடமைகளுமுண்டு (இ) பணம் கையிலிருக்கும்வரை அது மதிப்பீட்டின் களஞ்சியமாயமைகிறது. அதன் கடைசிப்பயன் விலைவாசிகளின் போக்கிலேதான் தங்கியிருக்கிறது. (ஈ) எதிர்காலம் பற்றிய உடன்படிக்கைகள் பணக் கணக்கிலேதான் செய்யப்படுகின்றன. "எதிர்காலக் கொடுப்பனவுப் பிரமாணம்" எனப் பணம் அடிக்கடி வழங்கப்படும். எதிர்பாராத விலைமட்ட மாற்றங்களால் இக்கடமைகள் சிலசமயம் பாதிக்கவும்படலாம். பணம் ஒழுங்காகத் தொழிற்பட்டுக்கொண்டிருக்குமானுல் அதைப் பற்றி நாம் அக்கறைகொள்ளவேண்டியதில்லை. ஆனுல் அதன் தொழிற்பாட்டினுல்

www.padippakam.com



நாட்டிலே வியாபார மந்தமும், பொருளாதார வீக்கமும் உண்டாகுமாஞல் அதை விசேடமாக ஆராயவேண்டியது பொருளாதாரத்தின் கடமையாகும்.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள் :**

1. இரண்டாவது உலகமகாயுத்ததிலே நுகர்வோரின் பணத்தேவை, அவர்களுடைய சீனி நுகர்வை நிச்சயிக்கவிட்டோமா ? ஏன் விடவில்லை எது நிச்சயித்தது?

2. உழைப்பின் விநியோகம், தேவை என்பவற்றைக்கொண்டு பார்த்தால், அவை வாய்ச்சாதுரியமுள்ள கடைச்சிப்பந்திகளுக்கு, நுண்தொழிற்றிறமையுள்ள சத்திரவைத்தியரிலும் பார்க்கப் பத்துமடங்கு அதிகமானவருமானத்தைக் கொடுக்குமா ?

3. மக்களிடையே இலாபம் பெறவேண்டுமென்ற நோக்கம் நிலைத்திருக்கிறது. நுண்தொழில் செய்யவேண்டுமென்ற இயல்பூக்கமோ, சமூகத்துக்குப் பொறுப்புள்ளவராயிருக்கவேண்டுமென்ற உணர்ச்சியோ இந்த இலாபம் பெறும் நோக்கத்தை மாற்றுமா ?

4. தாஞகத் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் விலைத்திட்டத்தை மிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள சில சந்தர்ப்பங்களைக் கூறுக. ஏகபோக உரிமையமிசங்கள் விலைத்திட்டந் தொழிற்படுவதை மிதப்படுத்திய சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

5. அடுத்த சில தலைமுறைகளிலே திறமை மிக்க கைத்தொழில் நாடாக மாறுவதற்குச் சீஞ என்ன செய்யவேண்டும்? வெளிநாடுகளில் கடன் படமுடியாதென்ற அடிப்படையில் இதை ஆராய்க.

6. "லிங்கன் அடிமைகளை விடுதலை செய்தார். பல காலமாகத் தென்பகுதி மாகாணங்கள் தேடி வைத்த முதலின் பெரும்பகுதியை அவர் பேஞவிஞல் ஒரே கீறில் அழித்துவிட்டார்." இக்கூற்றை ஆராய்க.

7. ஐஸ்கட்டிகளைப் பண அலகாகப் பயன்படுத்தலாமா ? ஏன் பயன் படுத்த முடியாது ? ரேடியத்தைப் பயன்படுத்தலாமா ? டொலர் நோட்டு ஒவ்வொன்றும் அது அச்சடிக்கப்பட்ட காலந் தொடங்கி மாதாமாதம் 10 விகிதத்தில் மதிப்புக்குறைந்து கொண்டுபோஞல் மக்களுடைய செலவுப் பழக்கம் எவ்வாறு மாறும்?

8. வங்கிவைப்புக்களிலே கடதாசி நோட்டையோ உலோக நாணயத்தையோ பயன்படுத்தாமற் காசோலைகளைப் பயன்படுத்துவதாலுண்டாகும் நன்மையென்ன ? தீமைகளிருந்தால் அட்டவணைப்படுத்துக.

9. 1947 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் ருஷிய அரசாங்கம் பழைய ரூபிள்நாணயத்தை அகற்றிவிட்டு ஒவ்வொரு ரூபிளுக்கும் பதிலாக ஒரு புதிய ரூபிளை வழங்கிற்று. 1957 ஆம் ஆண்டிஞரம்பத்தில் உள்ளூர்க் கடன்களைக் கொடாது நிறுத்திற்று. பண உருவத்திலே தனத்தைச்

படிப்பகம்

www.padippakam.com



சேகரித்து வைக்கும் மக்களின் ஆசையை இந்தச் செய்கை எவ்வாறு பாதிக்கும்? பத்திரங்களாய்ச் செல்வத்தைச் சேகரிப்பதை எவ்வாறு பாதிக்கும்? இன்றைய நுகர்ச்சியைத் துறப்பதால் என்ன பலாபலனுண்டு?

10. கீழ்க்காணும் கருத்துக்களைப்பற்றி மறுபடியுஞ் சிந்திக்க.

கலப்புத்தொழின்முறைத்திட்டம்.

பொருள்களுக்கும் உற்பத்திச்சாதனங்களுக்கும் தேவை விநியோகச் சந்தைகள்.

இலாபந்தேடுதலும், செலவைக்குறைந்தபட்சமாக்குதலும்.

பூரணபோட்டியும், பூரணமல்லாத போட்டியும்.

அரசாங்கத்தின் பொதுச் சேவைகள்.

உற்பத்தியின் வக்கிரத்தன்மை.

துறத்தலும், காத்திருத்தலும்.

முதற்பொருள்களைப் புனர்தாபனஞ் செய்தலும், பரிபாலிக்கத் தவறுதலும்.

முதல்பற்றிய பல கருத்துக்கள்.

தனித்துறைப்பயிற்சியும் பரிவர்த்தனையும்.

தொழிற்பாகுபாடும், ஒன்றிலொன்று தங்கியிருத்தலும்.

பண்டமாற்றும், பணவிலையும்

பொருட்பணம், கடதாசிப்பணம், வங்கிவைப்புப்பணம்.

பரிவர்த்தனைச் சாதனம்.

கணக்கு அலகு.

மதிப்பீட்டுக் களஞ்சியம்.

எதிர்காலக்கொடுப்பனவுப் பிரமாணம்.

பணத்தின் வாங்குஞ் சக்தியில் மாற்றமான வீக்கம்.

6—CP 680 (5/67)

www.padippakam.com

## நாலாம் அத்தியாயம்

## விநியோகமும் தேவையும்: அடிப்படை அமிசங்கள்

கிளிப்பிள்ளையைக்கூட மெத்தப்படித்த அரசியற்பொருளியலறிஞனுக்கி விடலாம். அது அறியவேண்டிய இரண்டேயிரண்டு சொற்கள் "விநியோகம்" "தேவை" என்பனவே.

—அனுமதேயப்பேர்வழி.

பொருளியல்பற்றிய சுருக்கமான கூற்றுக்கள் ஒவ்வொன்றும் தவறானவை (நான் கூறும் இக்கூற்றுமாத்திரம் அதற்குப் புறநடை)

—அல்பிரட் மாஷல்.

இரண்டாம் மூன்றும் அத்தியாயங்களிலே எந்தப் பொருளாதாரமும் எதிர்நோக்கவேண்டிய மூன்று அடிப்படைப் பிரச்சினைகளை அறிமுகஞ் செய்தோம். அப்பிரச்சினைகளாவன :

1. விதம்விதமாக உற்பத்தி செய்யக்கூடிய பலவகைப் பொருள்களிலும் சேவைகளிலும் எவற்றை என்ன அளவில் உற்பத்திசெய்யலாம்?

2. ஒவ்வொரு பொருளையும் உற்பத்திசெய்வதற்கு நிலம், தொழில் முதலிய வெவ்வேறு உற்பத்திச் சாதனங்களை எவ்வாறு சமூகம்சேர்க்கும்? இந்த உற்பத்திமுறையைப் பயன்படுத்துவதா அந்தமுறையைப் பயன்படுத்துவதா? கோதுமைவிளைவுக்காகத் தொழிலாளரை அதிகம்போட்டு வேளாண்மை செய்வதா? அல்லது ஒவ்வோர் அலகுத் தொழிலாளர்க்கும் அதிக நிலத்தைப் பயன்படுத்துவதா?

3. எவருக்காகப் பொருள்களை உற்பத்திசெய்வது? அதாவது தேசீய உற்பத்திப்பொருள்களை, பலவகையான திறமைகளும், நிலப்பாத்தியதையும், முதற்பொருளுடைமையுமுள்ள சமூகத்தின் பல்வேறு அங்கத்தவரிடையே எவ்வாறு பாகுபாடு செய்வது?

இந்தமூன்று பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குப் பலவகையான முறைகளை உபயோகிக்கலாமென இரண்டாவது அத்தியாயத்திலே கண்டாம். எதை, எப்படி, யாருக்கு என்ற விடயங்களை வழக்கத்தை அனுசரித்தும் தீர்மானிக்கலாம்; இயல்பூக்கத்தைக்கொண்டும் நிச்சயிக்கலாம். கூட்டுறவு முறையில் ஒருமுகப்படுத்தும் சட்டங்களாலும் நிச்சயிக்கலாம். தற்காலக் கலப்புப் பொருளாதாரம் இம்மூலாதாரமான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு, இந்த உபாயங்கள் எவற்றிலும் முற்றாகத் தங்குவதில்லை என்பதை மூன்றும் அத்தியாயத்திலே கண்டோம். பதிலாக அது சந்தைகள், விலைவாசிகள் என்ற ஒருமுறையிலேதான் தங்கியிருக்கிறது.

நுகர்வோனை அரசன் என்று கூறலாம். ஒவ்வொரு மனிதனும் அரசன். ஒவ்வொருவரும் வாக்காளர். பணத்தையே வாக்காகப் பயன்படுத்துவர்.



படிப்பகம்

www.padippakam.com



தான் என்ன செய்யப்படவேண்டுமென்று விரும்புகிருனே அதைப் பணமாகிய வாக்கைப் பயன்படுத்திச் செய்கிறன். ஒருவனுடைய வாக்கு மற்ற மனிதருடைய வாக்குகளோடு போட்டிக்கு நிற்கவேண்டும். யாவரிடம் அதிக வாக்கு உண்டோ அவர்களே என்ன பொருள் உற்பத்திசெய்யப்படும், அவை எங்கே செல்லும் என்பவற்றை நிச்சயிப்பார்கள். இந்தப் பணவாக்குக்கள் எவ்வாறு செலவாகின்றன என்பதைக் காண்பதே நமது கடமை.

**சந்தை அமைப்பு :**

நாம் ஓர் உதாரணத்தை எடுப்போம். ஒரு சோடி புதிய சப்பாத்து வாங்கவேண்டுமென்ற உந்துதலோடு நீங்கள் நித்திரைவிட்டு எழும்புகிறீர்கள். "நகரசபைக்குப் போய், எனக்கு ஒரு சோடி புதிய சப்பாத்தைத் தரக்கூடிய ஒரு நகரசபைத் தலைவரைத் தெரிவதற்கு வாக்களிப்பேன். 9 அங்குல அளவுடையதும் மெல்லிய தோலினுற் செய்யப்பட்டதும், கரிய கபிலநிறமுள்ளதுமான சப்பாத்தாக இருக்கவேண்டும்" என்று சொல்ல விரும்பமாட்டீர்கள்.


அல்லது சரித்திரத்திலிருந்து உண்மையானதோர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். தினமும் உருளைக்கிழங்கையே சாப்பிடாமல், இறைச்சியைச் சாப்பிடக்கூடிய அளவுக்கு மக்கள் செல்வமுடையவராகிவிட்டார்களென வைத்துக்கொள்வோம். உருளைக்கிழங்குக்குப் பதிலாக இறைச்சியைப் பெறுவதற்கு அவர்கள் என்ன நடவடிக்கை எடுப்பார்கள் ? எந்த அரசியல்வாதியிடம் கூறுவார்கள் ? அதை நிறைவேற்ற அந்த அரசியல்வாதி, மெய்ன் பிரதேசத்திலுள்ள கால்நடைவளர்ப்போர் டெக்சாஸ் பிரதேசத்துக்குப் போய்விடவேண்டுமென எவ்வாறு கட்டளையிடுவார் ? உருளைக்கிழங்குச் செய்கையைக் கைவிட்டுக் கால்நடைவளர்க்கப் பண்ணைக்காரரைத் தூண்டுவதற்காக பிரத்தியேகமாக எவ்வளவு வாடகை தேவைப் படுமென அவர் நிச்சயஞ் செய்வார் ? பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி என்ற வகையில் மக்களுடைய தேவை பூர்த்திசெய்யப்படுகிறதா என்பதை அவர் எவ்வாறு நிச்சயப்படுத்திக்கொள்வார் ? மாட்டிறைச்சியில் நல்ல பகுதியை யார்பெறவேண்டும் ?

இதனை மேலும்மேலும் ஆராய்வதால் என்ன பயன் ? இப்பிரச்சினை மேலே குறிப்பிட்டவாறு தீர்க்கப்பட்டதில்லை என்பதை எவரும் அறிவர். உண்மையில் என்ன நடைபெறுகிறது ? நுகர்வோர் உருளைக்கிழங்கை வாங்காது மாட்டிறைச்சியையே வாங்கத் தொடங்குவர். இதனுல் இறைச்சியின் விலை ஏறும்; உருளைக்கிழங்கின்விலை விழுந்துவிடும். அதன்பயனுக உருளைக்கிழங்கு செய்கைபண்ணுவோருக்கு நட்டமும், கால்நடைவளர்ப்போருக்கு இலாபமும் உண்டாகும். கால்நடைவளர்ப்பிலே ஈடுபட்ட தொழிலாளருக்கு நல்ல சம்பளம் கிடைக்கும். அதனுல் உருளைக்கிழங்கு செய்கைபண்ணும் தொழிலாளர், கால் நடைவளர்க்கும் தொழிலிற் போய்ச் சேருவர். இறைச்சிவிலையேறவே பன்றி, மாடு, ஆடு என்பன

www.padippakam.com



கீழ் நோக்கிச் சரியும் வளைகோடு தேவையைக் காட்டும்.




படம் 1. விலைவாசிகளை நிலைக்குத்து அச்சில் அளக்க. தேவையான தொகைகளைக் கிடை அச்சில் அளக்க. முதலாம் அட்டவணையிலே வி அ (P Q) சோடி இலக்கங்களையும் இந்தப் படத்திற் புள்ளிகளாகப் போட்டு அப்புள்ளிகளுடாகச் செல்லும் கோட்டைத் தேவைக் கோடாகக் கொள்க. (தே தே d d) என்ற இக்கோடு வலப்பக்கமாகக் கீழ் நோக்கிச் செல்வது "கீழ் நோக்கிச் சரியும் தேவை விதி" என்ற முக்கியமான விதியைக் காட்டும்.

முதலாவது புள்ளியான A 5 டொலரையும் 90 இலட்சம் புசலையுங் குறிக்கும். எனவே அச்சில் 5 அலகு மேலே எண்ணியபின் 9 அலகு வலப்பக்கம் எண்ணி A புள்ளியைப் போடுகிறோம். அடுத்தபுள்ளி B. அதை அடைவதற்கு 4 அலகு மேலே சென்றபின் 10 அலகு வலப்பக்கம் எண்ணுகிறோம். கடைசிப் புள்ளி E. இந்தப்புள்ளிகளுடாக ஒரு கோட்டைக் கீறி அதை d d எனக் குறிப்பிடுகிறோம்.

இந்தத் தேவையட்டவணையின் படந்தான் தேவைக்கோடு. இங்கே தொகையும், விலையும் நேர்மாறான தொடர்பைக் கொண்டிருப்பதைக் கவனிக்கலாம். விலை இறங்கினால் வாங்குந் தொகை ஏறுகிறது. இந்தக் கோடு வடமேற்கிலிருந்து தென்கிழக்காகச் சரிந்து செல்கிறது. இந்த

www.padippakam.com



முக்கியமான தத்துவத்தைக் கீழ் நோக்கிச் செல்லும் தேவை நியதி என்பர். இவ்விதி எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அதற்குப் பொருந்துவதாயிருக்கும். கோதுமை, மின்சாரச் சவர அலகு, பருத்தி, எதில் எண்ணெய், சினிமா டிக்கெட் ஆகிய எல்லாப் பொருள்கள் விடயத்திலும் சரியாகவேயிருக்கும்.

**கீழ்நோக்கிச் செல்லும் தேவை விதி :**

ஒரு பொருளின் விலையைக் கூட்டினுல் (மற்ற நிலைமை யெதுவுமே மாருதிருக்கும்போது) அப்பொருளுக்குத் தேவை குறையும். இதையே வேறொருவகையிற் கூறலாம். அதாவது சந்தையில் ஒரு பொருள் அதிக மாகக் குவிந்து விடுமானுல், மற்றநிலைமைகள் மாருதிருக்கும்போது அந்தப் பொருளின்விலை இறங்கிவிடும்.

**கீழ் நோக்கிச் செல்லும் தேவைக்கான காரணங்கள்.**

இந்த நியதி பொது அறிவுக்கு ஏற்றது. சரித்திரகாலந்தொட்டு அவ் வளவு தெளிவில்லாவிட்டலும் அறியப்பட்டுவந்ததொரு விதியாகும். இதற் கான காரணத்தை அறிந்துகொள்வது எளிது. விலை ஆகாயமளவு உயர்ந் தால் செல்வர்களே பொருள்களை வாங்கக்கூடியவராயிருப்பர். வறியவர் குரக்கன் மாவிலே காலங்கழிக்கவேண்டியதுதான். கிழக்கு ஐரோப்பாவி லேயுள்ள வறிய நாடுகளில் இது இன்னும் நடைபெறுகிறது. விலை அவ் வளவு அதிகமாயில்லாவிட்டால் மத்திய வகுப்பினர்கூடக் கோதுமையை வாங்குவார்கள். இதிலிருந்து தெரியும் ஒரு விடயம், விலையிறங்கினுல், வாங்குவோர் தொகை அதிகரிக்குமென்பதே. இது கீழ்நோக்கிச் செல்லும் தேவைவிதிக்கு ஆதாரமாயுள்ள மிக முக்கியமானதொரு காரணமாகும்.

இரண்டாவது காரணம் அவ்வளவு எளிதாக அறியக்கூடியதன்று. ஆனுல் அதுவும் முதலாவது காரணம்போல முக்கியமானதே. விலைகுறை வதால் நுகர்வோர் தாம் வாங்கும்பொருள்களிற் சிலவற்றை அதிகமாக வாங்கவிரும்புவர். அதாவது, விலையேறினுல், வாங்குவதை நுகர்வோர் சுருக்கிக்கொள்வர். விலை ஏறுவதால் நாம் என் தேவைப்படும் பொருள் களைக் குறைக்கிறேம்? இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒரு பொருளின் விலை அதிகரித்தால் அதற்குப் பதிலாகவேறு பொருளைப் பயன்படுத்த எண்ணுகிறேம். உதாரணமாக, கோப்பியின் விலை கூடினுல் தேயிலைப் பானத்தை மேற்கொள்ளுகிறேம். மெலும் விலை ஏறினுல் நான் முன்னையிலும் வறியவனுகிறேன். வறியவனுகும்போது நிச வரு மானங் குறையும். அதனுல், சாதாரணமாக நான்அனுபவிக்கும்பொருள் களைக்கூடக் குறைத்துவிட விரும்புகிறென்.

ஒரு பொருளின்விலை இறங்கும்போது, அது அதிகமாகக் கிடைக்கும். உதா ரணமாகத் தண்ணீரை எடுத்துக்கொள்வோம். அதன் விலை ஒறுப்பாயிருக் கும்போது குடிப்பதற்கு மாத்திரமே தண்ணீரை வாங்குகிறேன். பின்னர் அதனுடைய விலைவிழுந்ததும், கழுவுதல் முதலியவற்றுக்கும் தண்ணீரை

படிப்பகம்

www.padippakam.com



வாங்குகிறேன். தண்ணீர் மேலும் மலியத்துவங்கினால் வேறு உபயோகங் களுககும் தண்ணீரை வாங்குகிறேன். கடைசியாகத் தண்ணீர் மிக மலிந்து விட்டால் நான் பூந்தோட்டத்துக்குத் தண்ணீரைப் பயன்படுத்துவதோடு வேறுபல தேவைகட்கும் பயன்படுத்துகிறேன். கார் கழுவுவதற்குத் தண் ணீர் தேவைப்படும்போது அதை ஒரு விலைக்கு வாங்குவேன். என்னிலும் வறியவர்கள், தண்ணீரின் விலை நான் வாங்கியவிலையிலும் பார்க்கக் குறைந் தபின்னரே, கார்கழுவத் தண்ணீர் வாங்குவார் என்பதை மனத்திலிருத்திக் கொள்ளவேண்டும். சந்தையில் ஒரு பொருளுக்கிருக்கும் தேவை என் பது, பலவகையான தரத்திலேயுள்ள மக்களின் தேவையையே குறிக்கும். எனவே நான் கார் கழுவ வாங்கும் தண்ணீர் விலை உயர்ந்ததாயும், என்னிலும் வறியவர் ஒருவர் வாங்கும்போது தாழ்ந்ததாயுமிருக்கிறது. இதன் அர்த்தமென்ன ? விலையிறக்கத்தால் எனது தேவை விரிவடைவது நின்றுபோனாலும், புதியவகையைச் சேர்ந்த நுகர்வோர் தண்ணீருக்குப் புதிய உபயோகங்களை யுடையவராய்த் தோன்றுவதால், தண்ணீருக்குள்ள கிராக்கி உயரும். கோதுமைக்கு இருந்தாற்போல் பெரிய கிராக்கி உண்டாகி விட்டதெனக் கொள்வோம் ; மக்களுடைய வருமானம் அதிகரித்ததால் இந்தக் கிராக்கி உண்டாயிருக்கலாம். இல்லையேல் கோதுமையோடு போட்டியிட்டுவந்த ரை தானியத்தின் விலை ஏறியிருக்கலாம். இன்றேல் கோதுமையில் தமது பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்று மக்கள் விருப்பங்கொண்டனர் என்று வைத்துக்கொள்ளலாம். இதனால் தேவைக் கோடு வலப்பக்கமாகத் திரும்பும் ; பின்னர் உயரும். புதிய இந்தக் கோட்டைதே தே ' (DD') என்று பெயரிடுக. இவ்வாறு தே தே' (DD') யிலிருந்து இதனை வேறுபடுத்திப் பார்க்கலாம். இவ்வாறு தேவையிலே உண்டான அதிகரிப்பின் அருத்தம் என்னவென்றால், பலவகையான விலைத்தரங்களிலே அதிகமாகப் பொருள் வாங்கப்படும் என்பதே. புதிய கோட்டிலே யுள்ள புள்ளிகளை வாசித்து அட்டவணை 1 இற்காகப் புதியதொரு நிரலை நிரப்பலாம். இதிலிருந்து ஒவ்வொரு விலையிலும் எவ்வளவு அதிகமாகப் பொருள்கள் தேவைப்பட்டன என்பதைக் காட்டலாம்.

**விநியோக அட்டவணை, விலைக்கும், விநியோகிக்கப்பட்ட அளவுக்குமுள்ள தொடர்பைக் காட்டும்.**

| | ஒரு புசலுக்குள்ள சாத்தியமான விலைகள் | தொகையாக விற்பனை செய்வோர் மாதாந்தம் விநியோகிக்கக் கூடிய பத்துலட்சக் கணக்கிலுள்ள புசல் |
|---|---|---|
| ஏ | 5 டொலர் | 18 |
| பி | 4 | 16 |
| சி | 3 | 12 |
| டி | 2 | 7 |
| ஈ | 1 | 0 |


**அட்டவணை 2. கோதுமைக்கான விநியோக அட்டவணை.** ஒவ்வொரு விலைக் கட்டத்திலும் உற்பத்தியாளர் விநியோகிக்கக் கூடிய அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

www.padippakam.com



இந்த விநியோக அட்டவணையை வளைகோடாகக் கீறலாம்.

### விநியோக அட்டவணை




படம் 2. இரண்டாம் அட்டவணையிலுள்ள அ.வி (Q P) சோடி ஒவ்வொன்றும் இங்கே புள்ளியாக அடையாளமிடப்பட்டுள்ளது. இப்புள்ளிகளூடாகச் செல்லும் ஒப்பமான ஒருவளைகோடு மேல்நோக்கிச் சரியும் விநியோகக்கோடு வி வி (S S) ஆகும்.

தேவையைப்பற்றி நிரம்பக்கூறியுள்ளோம். இனி விற்பனை செய்வோர் பக்கந் திரும்புவோம். அதுவே விநியோக அட்டவணை. தேவை அட்ட வணையிலே விலைக்கும், நுகர்வோர் நுகரும்பொருளின் தொகைக்குமுள்ள தொடர்பைக் காட்டினோம். விநியோக அட்டவணையென்பது என்ன?

விநியோக அட்டவணை அல்லது விநியோகக்கோடு என்பது சந்தை விலைக்கும் உற்பத்தியாளர் உற்பத்திசெய்து விற்கவிரும்பும் பொருளின் தொகைக்குமுள்ள தொடர்பைக் காட்டுவது.

இரண்டாவது அட்டவணையிலே கோதுமைக்கான விநியோக அட்டவணை உண்டு. இரண்டாவது படம் அதனை ஒரு கோடாகக் கீறிக் காட்டுகிறது, தேவைக் கோட்டைப் போலன்றி விநியோகக்கோடு சாதாரணமாக மேனோக்கி உயர்ந்து வலப் பக்கமாகச் செல்கிறது. அதாவது தென் மேற்கிலிருந்து வடகிழக்காகச் செல்கிறது. கோதுமையின் விலை கூடுமானால், சோளச் செய்கை பண்ணும் விவசாயிகள் அதைவிட்டுவிட்டுக் கோதுமைச் செய்கை பண்ணுவார். மேலும், அதிக பசளை வாங்கவும் அதிக தொழிலாளரை அமர்த்தவும், அதிக யந்திரசாதனங்களை அமைக்கவும், விவசாயிகட்கு வசதியுண்டாகிறது. தரிசு நிலங்களிலேகூடக் கோதுமையைச் செய்கைபண்ண முற்படுகிறார்கள். இதனால் விலைஏற்றம் உற்பததியைப் பெருக்குகிறதெனலாம்.[1]

[1] கீழ்நோக்கிச் செல்லும் தேவைக்கோட்டுவிதிக்குப் புறநடை மிக அற்பம். நடைமுறையில் அத்தகைய புறநடையை எவரும் பெரிதாக மதிப்பதில்லை. இரண்டாம் பகுதியிலே மேனோக்கிச செல்லும் விநியோகக்கோட்டு விதிக்குச் சிலருசிகரமான புறநடைகளைக் காண்போம். உதாரணமாகக் குடும்பத்தனான விவசாயி கோதுமைச் செய்கைபண்ணுகிறான் என வைத்துக் கொள்வோம். கோதுமைவிலை ஏறிக்கொண்டேபோகிறது. அதனால் அவனுக்கு அதிகப்படியான வருமானமுண்டாகிறது. கோதுமைக்கு விலையேறியதால் அந்தவிவசாயி ஓய்வு நேரத்திற் கூட மேலதிகமாகக் கோதுமைச் சாகுபடிசெய்ய முயல்வான். ஆனால் சில சமயம்

www.padippakam.com



விநியோகத்தில் அதிகரிப்பைக் காட்டுவதென்ருல், பலதரமான விலைகளிலும் பொருள்கள் அதிகமாகவே காணப்படும் என்பதை ஞாபகப்படுத்த வேண்டும். இரண்டாம் படத்திலே பென்சிலாற் கீறிய புதிய விநியோகக்கோடு வலப் பக்கமாக நகர்வதைக் காணலாம். மேனேக்கிச் செல்லும் விநியோகக் கோட்டுக்கு இந்த மாற்றம், புதிய வி' வி' (S' S') கோடு வலப்புறமாய்க் கீழ் நோக்கிச் செல்வதைக் குறிக்கும். கீழ்நோக்கிச் செல்லும் தேவைக்கோடு போல, வலப்பக்கமாய் மேல்நோக்கிச்செல்லாது. வி' வி' (S' S') விநியோகத்திலே அதிகரிப்பைக் காட்டுகிறதென்பதை நிரூபிக்க இரண்டாம் அட்டவணையிலே புதிய ஒரு கோட்டில், படத்திலுள்ள புள்ளி விபரங்களை வாசித்து நிரப்புக.

**விநியோகம், தேவை என்பவற்றின் சமநிலை :**

தேவை, விநியோகம் என்பனவற்றின் ஆராய்ச்சியை ஒன்ருகச் சேர்த்துப் பார்த்தால் போட்டிச் சந்தையில் விலை எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறதென்பதை அறியலாம். இவ்வாறு இணைக்கும் முயற்சி மூன்ரும் அட்டவணையிலுண்டு. இதுவரை விலைகளெல்லாம் சாத்தியமானவை என்ற வகையில் ஆராய்ந்தோம். "விலை இவ்வாறிருந்தால் விற்பனவு இப்படியிருக்கும் ; விலை இப்படியிருந்தால் விற்பனவு இப்படியிருக்கும்" என்றெல்லாம் இதுவரை ஆராய்ந்தோம். விலை எந்தமட்டத்துக்கு உண்மையாகச் செல்லும், எவ்வளவு உற்பத்தி செய்யப்படும், எவ்வளவு நுகரப்படும் என்பவற்றை விநியோக அட்டவணையிலிருந்து அறிந்துகொள்ளமுடியாது. வெந்தீசுக்காரன் செய்வதை நாமுஞ் செய்வோம். அதாவது பிழைவிட்டுத் திருந்துவோம். மூன்ருவது அட்டவணையிலே கண்டபடி ஒரு புசல் கோதுமை 5 டொலர் விற்கும் நிலை எப்பொழுதும் நிலவுமா ? இல்லை. 5 டொலர் விலையிலே விவசாயிகள் 180 இலட்சம் புசல் கோதுமையை ஒவ்வொரு மாதமும் சந்தைக்குக்கொண்டு வருவார்கள். [மூன்ருவது வரிசையைப் பார்க்க (3) ]. ஆனல் நுகர்வோருக்கு மாதமொன்றுக்கு 90 இலட்சமே தேவைப்படுகிறது. [இரண்டாவது வரிசையைப் பார்க்க (2) ]. கோதுமை கையிருப்புக் கூடக் கூட விற்பனையாளர் போட்டியில் விலையைச் சிறிது குறைப்பர். 4 ஆம் வரிசையிலே கண்டபடி விலை இறங்கும். ஆனல் பூச்சியம்வரை விழமாட்டாது.

இதை மேலும் விளங்கிக்கொள்ள விலை 1 புசல் ஒரு டொலராக இருக்கும் ஈ (E) என்ற தானத்தை ஆராய்வோம். இந்த விலை நெடுக நிலைத்திருக்குமா ? இல்லை. எனெனில் அந்தவிலையில் உற்பத்திக்கு அதிகமாக நுகர்வு உண்டாகும். இதை 2ஆம் 3ஆம் வரிசைகளை ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். தானியக் களஞ்சியங்கள் காலியாகும். தேவைக்குக் குறைவாகக் கோதுமை இருப்பதால் நுகர்வோர் அதன்விலை

வருவாய் தேவைக்கு அதிகமாயிருப்பதைக் கருதி அவன் சிரமப்படாமல் ஓய்வுஎடுக்கவும் கருதுவான். அதனுல் முன்போல அதிகம் வேலைசெய்யமாட்டான். அந்தக் கட்டம் வந்ததும், உற்பத்தி குறையும்; வி. வி. கோடு வடமேற்காக வளைந்துசெல்லத்தொடங்கும்.

www.padippakam.com



யை உயர்த்துவர். இவ்வாறு விலை உயர்வதை 4 ஆம் வரிசையில் உள்ள அம்பு காட்டும். வேறு விலைகளையும் உதாரணத்துக்குக் காட்டலாம். ஆனால் இதுவரையில் விடயம் தெளிவாகிவிடும்.

**தேவைக்கும் விநியோகத்துக்கும் சமநிலை உண்டாகும் தானத்திலே சந்தைவிலை சமநிலையடையும்**

| | 1 புசலுக்குரிய சாத்தியமான விலைகள். (1) | தேவைப்படும் கோதுமை. மாதமொன்றுக்கு 10 இலட்சம் புசல். (2) | விநியோகிக்கப்படும் கோதுமை மாதமொன்றுக்கு 10 இலட்சம் புசல். (3) | விலையில் அமுக்கம் (4) |
|---|---|---|---|---|
| ஏ | 5 டொ. | 9 | 18 | வீழ்ச்சி |
| பீ | 4 | 10 | 16 | வீழ்ச்சி |
| சீ | 3 | 12 | 12 | நொதுமல் |
| டீ | 2 | 15 | 7 | உயர்வு |
| ஈ | 1 | 20 | 0 | உயர்வு |

**அட்டவணை 3. கோதுமைக்கான விநியோக, தேவை அட்டவணைகள்.** நுகர்வோர்தேவையும் உற்பத்தியாளர் விநியோகமும் விலை 3 டொலராயிருக்கும்போதுதான் சமனாகும். விலையிறங்கினால் விநியோகம் குறைய, தேவை அதிகரிக்கும். விலை உயர, தேவையிலும் அதிகமாக விநியோகம் பெருகும்.

நிலைபேறான சமநிலைவிலை என்பது விநியோக அளவும் தேவை அளவும் சமமாக இருக்கும் நிலையிலுள்ள விலையே. விநியோகக்கோடும் தேவைக்கோடும் ஒன்றையொன்று வெட்டும் தானத்திலேதான் போட்டிச் சமநிலையுண்டு.

மூன்று டொலர் விலையிலேதான் அதாவது சி (C) என்ற தானத்தில் தேவைப்பட்ட 120 இலட்சமும் விநியோகமாகும். 120 இலட்சமும் சமநிலையிலிருக்கின்றது. இங்கே விலை கூடாமலும் குறையாமலும் சமநிலையிலிருக்கின்றது. இந்த நிலையான விலையை எடுத்த எடுப்பிலே அடைய முடியாது. ஆரம்பத்திலே பிழைவிட்டுத் திருந்தவேண்டியிருக்கும். சரியான விலைமட்டத்தை யடையும்வரை நிலை தளம்பிக்கொண்டிருக்கும். தேவைக்கு ஏற்ற விநியோகம் கிடைத்ததும் விலை சமநிலையை அடையும்.

மூன்றாவது படத்தில் இவ்வுண்மையைக் காட்டும் வரைபடத்தைக் காணலாம். இதில் தேவைக்கோடும், விநியோகக்கோடும் ஒன்றையொன்று ஓர் இடத்தில் வெட்டுகின்றன. இந்த இடம் சி (C) என்பது. அது சமநிலை விலையையும் பொருளின் அளவையுங் காட்டுகிறது. உயர்ந்தவிலையிலே

படிப்பகம்

www.padippakam.com


விற்கும் பொருளுக்குச் சமனுகவல்லவா இருக்கும். இதில் விலை என்ன தொடர்புடையது ? சந்தை சமநிலையிலிருந்தாலென்ன இராவிட்டாலென்ன, வாங்கிய தொகையையும் விற்ற தொகையையும் பதிவுசெய்யும் புள்ளியியற் கணக்கர் இவ்விரண்டையும் ஒரு சம்பவத்தின் இருவேறு அமிசங்களாகவே காண்பர். அவையிரண்டும் சமமாகவேயிருக்கும் ".

இதற்கு விடை கூறுவதானுல் பின்வருமாறு கூறலாம் :

புள்ளிக்கணக்கர் பதிவுசெய்துள்ளதுபோல விற்பனையான பொருளின் அளவும் வாங்கிய பொருளின் அளவும் சமமாயிருக்குமென்று நீர் கூறுவது உண்மையே. ஆனுல் முக்கியமான பிரச்சினை இதுதான். நுகர்வோர் வாங்கிக் கொண்டேயிருக்கக்கூடிய தொகை எந்தவிலையிலே உற்பத்தியாளர் விற்றுக் கொண்டேயிருக்கக்கூடிய தொகையுடன் சமமாயிருக்கும் ? அந்த விலையில்தான் விலை ஏறுமலும் இறங்காமலுமிருக்கும். உற்பத்தியாளர் விற்றுக்கொண்டேயிருக்கவும், நுகர்வோர் வாங்கிக்கொண்டேயிருக்கவும் கூடியதொகைகள் சமமாயிருக்கும் விலையிலேதான் விலையில் ஏற்ற இறக்கம் இருக்காது. மற்றவிலைகளில் அதாவது தேவைக்கோடும் விநியோகக் கோடும் ஒன்றையொன்று வெட்டும் தானத்துக்கு மேலேயுள்ள விலையில் வாங்கும்பொருளும் விற்கும்பொருளும் தொகையளவில் ஒத்திருப்பது அத்துணை அர்த்தமுடைய விடயமன்று. நுகர்வோர் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாளர் இந்த உயர்விலையில் விற்பதற்குத் தயாராயிருக்கிறுர்க ளென்பதை இந்த அளவையிலுள்ள சமநிலை மறுக்கவில்லை. அட்டவணை யிலுள்ள தேவைக்கு அதிகமாகவுள்ள விநியோக அட்டவணை விலைபைச் சமநிலைத்தானம் அடையும்வரை இறக்கிக்கொண்டேயிருக்கும். இந்தச் சம நிலைத்தானத்திலேதான் எல்லாரும் மகிழ்ச்சியாயிருப்பர். தரகர், விநியோகத்தர், நுகர்வோர் ஆகிய எல்லோரும் புள்ளி விபரக்கணக்கரும் மகிழ்ச்சியடைவர். வாங்கும் பொருளுக்கும் விற்கும்பொருளுக்கும் சம நிலையேற்படுவதை அறிவித்துக்கொள்வது அவர்தொழில்.[1]

**விநியோகம், தேவை என்பன நிறைவேற்றியதென்ன :**

விநியோகம், தேவை என்பவற்றை ஆராய்ந்தோம். அவை நிறைவேற்றியதென்ன ? சமூகத்துக்குத் தேவையானவையும் அருந்தலானவையுமான பொருள்கள் நுகர்வோரிடையே பகிர்ந்துகொடுக்கப்பட்டன. யார் பகிர்ந்து கொடுத்தது ? ஒரு சபையா ? ஒரு குழுவா ? இல்லை. போட்டிவிலையென்ற சாதனம் அதைச் செய்தது. பையிலேயுள்ள பணந்தான் இந்தப் பங்கீட்டைச்செய்தது. பணங்கொடுத்து யார் வாங்க ஆயத்தமாயிருந்தாரோ அவருக்கே பொருள் பகுக்கப்பட்டது. பணம் இருந்தால் கோதுமை கிடைக்கும். பணமில்லாவிட்டால் கோதுமையின்றியே வீட்டுக்குப் போக வேண்டும். அல்லது பணத்தை வைத்துக்கொண்டே கோதுமையை வாங்கா திருக்கலாம். தேவையான பொருள் பணமிருந்தால் கிடைக்கும்.

[1] 13 ஆம் அத்தியாயத்தில் வருமானம் நிச்சயஞ் செய்யும் ஆராய்ச்சியிலே அளவையிற் சர்வசமன், அட்டவணைக் குறுக்கீடு என்பவற்றிடையேயுள்ள முரண்பாட்டைக் கவனிப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



அத்துடன் என்ன பொருள் என்ற வினுக்கும் விடைகிடைக்கிறது. சந்தையில் கோதுமையின் விலை ஏறிஞல் சப்பிளே எபபடியும் அதிகரிக்கும். தொழிலாளரும், ஏனைய அருந்தலான சாதனங்களும் இனிக் கோதுமை உற்பத்தியிலே ஈடுபடலாம் என்பதற்கு அதுவே எச்சரிக்கை.

எப்படி ? என்ற கேள்விக்குக்கூட அரைகுறையான பதில் கிடைக்கிறது. கோதுமை விலை ஏறிவிட்டபடியால் விலையுயர்ந்த எந்திரக்கலப்பைகளையும், போரைகளையும் விவசாயிகள் இனிப்பயன்படுத்தலாம். தரிசு நிலங்களை யெல்லாம் கடினவேலைசெய்து செய்கைபண்ணலாம். அதனுல் இலாபமுண்டு.

"அரைகுறையான" என்று குறிப்பிட்டோம். யாருக்கு, என்ன, எப்படி என்ற மூன்று வினக்களுக்கும் அரைகுறையான விடைகிடைக்கிறதெனக் கூறினேம். இது போட்டிச்சந்தை ; கோதுமைச்சந்தை. பல சந்தைகளில் இதுவுமொன்று. சோளம், றை என்ற தானியச் சந்தைகளில் நடப்ப வையும் கணக்கிலெடுக்கவேண்டியவையே. போரை, தொழிலாளர், எந் திரக்கலப்பை என்ற சந்தைகளில் நடப்பவையும் முக்கியம்வாய்ந்தவை. சந்தைகள் ஒன்றேடொன்று தம்முள்ளே தொடர்புடையன. விலை நிச்ச யிக்கும் பிரச்சினை இந்தச் சந்தைகளெல்லாவற்றேடும் தொடர்புடையன. ஒரு சந்தையின் அரைகுறையான சமநிலையில் அது தங்கியிருக்கவில்லை.[1]

**போட்டியிலுள்ள குறைபாடுகள் :**

கோதுமைபோன்ற நியமமான பொருளை, பெருந்தொகையாகக் கொள் வோர், விற்போரின் விவகாரங்களைப் பதிவுசெய்யும் பரிவர்த்தனை நிர் வாகத்தாபனம் வியாபாரஞ்செய்யும் பூரணமான போட்டிச் சந் தைக்கே நமது தேவை, விநியோகக் கோடுகள் குறிப்பாகப் பொருத்த முடையன. சிக்காகோவிலுள்ள வர்த்தகச் சங்கம் இதற்கோர் உதார ணமாகும். நியூயோக்கிலும் லிவர்ப்பூலிலுமுள்ள பருத்திச் சந்தையையும் வேறு பல சந்தைகளையும் உதாரணமாகக் காட்டலாம், நியூயோக் பங்குச் சந்தையை எடுத்துக்கொள்ளலாம். இங்கே பொருள்களோ, உற்பத்திச்

[1] போட்டிச்சந்தை கையிற்பணமுள்ளவர்க்குப் பொருளை வழங்குவதோடு அதைத் திறமை யாகவும் நடத்துகிறதென்பதை உற்சாகமுள்ள வாசகர் அறிவர். உமது தொழிற்றிறமையையும் சொத்தையும் போட்டிச்சாதனச் சந்தையிலும், அரைகுறைப் போட்டிச்சந்தையிலும் எவ்வள வுக்கு விற்கலாமென்பதிலேதான் பணவருவாய் தங்கியிருக்கிறது. அது மேலும் (1) நீர் எத்துணை அதிட்டமுள்ளவர் (2) உமது பெற்றேர் மைத்துனராகியோர் எத்துணை அதிட்ட முள்ளவர் (3) உமது இயற்கையான திறமை, போக்கு என்பனவும், பயிற்சியால் கிடைத்த திறமை, போக்கு என்பனவும் எத்துணை வசதியாகவும் வசதிக்குறைவாகவுமிருக்கினறனவென் பதையுமே பொறுத்தன. மாணுக்கன் பரீட்சையில், யாருக்கு என்ற பிரச்சினையானது, மக்கள் தமது பணத்தை எவ்வாறு செலவுசெய்ய விரும்புகிருர்களென்பதைப் பொறுத்ததென்று எழுதுவானுனுல் அவவிடை பிழையானதன்று. அதற்கு 50 வீதம் புள்ளிபெறுவான். மற்ற 50 வீதத்தைப் பெறுவதானுல் அவன் "யாருக்கென்ற அடிப்படைப் பிரச்சினை, பணம் எவ்வாறு கிடைக்கிறதென்பதைப் பொறுத்தது. அது தனி ஒரு பொருட்சந்தையில் தேவை விநியோகத்தினுல் நிச்சயிக்கப்படுவதில்லை. தொழில், நிலம், முதலிய வேறு உற்பத்திச் சாதனச சந்தைகளினுல நிச்சயிக்கப்படுகிறது. இது நாலாம் பிரிவில் காட்டப்பட்டுள்ளது" என்று எழுதவேண்டும்.

www.padippakam.com


சாதனங்களுக்குத் தேவையான உற்பத்திப் பணிகளோ விற்பனை செய்யப்படுவதில்லை. ஆனால் ஜெனரல் மோட்டார், ரோயல் டச் பெட் ரோலியம் போன்ற கம்பனிகளின் பங்குகள் விற்கப்படுகின்றன. இவ் வேலை ஒவ்வொரு கணமும் நடந்துகொண்டிருக்கும். இந்தப் பங்குச் சந்தையின் உறுதிப்பத்திரப் பிரிவிலே பல கம்பனிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய சந்தைகளின் போக்கைக் காட்டுவதே தேவை, விநியோகக் கோடுகளாகும். இத்தகைய சந்தைகளில் கணந்தோறும் நடைபெறும் மாற்றங்களை விபரமாக இவை தெளிவுபடுத்துவதில்லை. இச்சந்தைகளுக்குப் பல தரகுக் கம்பனிகளிலிருந்து பலர் வந்து குவிவர். வந்து கையாலும் வாயாலும், வெந்நீசுக்காரராயுள்ள நிபுணருக்குச் சைகைகொடுப்பர். கம்பனி இருப்புப் பொருளைப்பற்றியும் ஒவ்வொரு தானியத்தைப் பற்றியுமே குறிப்பாகச் சொல்லுவர். இத்தகைய வியாபாரத்தாபனங்கள் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள்ள முக்கியமான சராசரித்தொடர்புகளை இந்த விநியோக, தேவைச் சாதனங்கள் சங்கிரகமாக எடுத்துக்காட்டுகின்றன.

விநியோகம், தேவை என்ற அடிப்படைக் கருவிகளைப் பொறுத்தவரையில், பொருள்கள் எந்தவகையான முறையில் ஏலம் போடப்படுகின்றன என்பது முக்கியமன்று. கைச்சைகையால் கூறுகிறார்களா, கடதாசித்துண்டிலே எழுதிக்கொள்கிறார்களா என்பது முக்கியமன்று. ஏலம் விடுதல் நாமெல்லாம் அறிந்த ஏலமுறையா அல்லது டச்சு ஏலமுறையா என்பது முக்கியமன்று. சாதாரண ஏலமுறையிலே ஒரு பொருளுக்கு மிகக் குறைந்த பட்ச விலை முதலிலே கூறப்படும். பின்னர் படிப்படியாக விலை ஏறிக் கொண்டேபோகும். டச்சுமுறையில் மிகக்கூடிய விலை முதலிலே கூறப்படும். பின்னர் படிப்படியாகவிலை குறையும். பின்னர் பொருளை வாங்க ஆவலுடையவர் முதலிலே கூறியவிலையைச்சொல்லிப் பொருளை வாங்கிவிடுவார். எவர் முதலிற்சொன்ன விலையைக் குறிப்பிடுகிறாரோ அவருக்கே அந்தப்பொருளை விற்கவேண்டும். சில சமயம் ஏலக்காரர் எழுத்திலே கேட்பார். அட்டவணை 3, படம் 3 இல் உள்ளது போல ஒரேயடியாக விளக்கப்படம் அமைத்துக்கொள்வது அப்போது இலேசாயிருக்கும்.

தனிப்பட்ட ஓர் ஏலக்காரர் இருக்கவேண்டிய அவசியமில்லை. எல்லாக் கேள்விகளும் தொலைபேசியிலேயே நடைபெறலாம். ஐக்கிய அமெரிக்கப் பத்திரங்களுக்கு இவ்வாறே ஏலம் நடைபெறும். நியூயோக் பங்குச்சந்தையிலும் பார்க்க இந்தச் சந்தை மிகவும் பூரணமுடையது. " மேசைச் சந்தை " என்று சொல்லப்படும் சந்தையில் அட்டவணைப்படுத்திய பொருள்களுக்கும் இது பொருந்தும். இந்தத் தரகுச்சந்தையின் விவகாரம் முழுவதும் தொலைபேசிமூலமே நடைபெறும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நடைபெறும். பலவகைத்தரகரும் விலைப்பட்டியல்களைத் தபால் மூலம் அனுப்புவர். உதாரணமாக " டைம் " என்றபொருளைக் குறிப்பிடலாம். இது இந்தச் சந்தையிலேதான் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



இஃது ஏனைய போட்டிப் பொருள்களைப்போலவே நடந்துகொள்ளும். நியூ யோக் பங்குச்சந்தைக்கு வரும் பொருள்கள் வாங்குவோர் விற்போர் குறைவா யுள்ள சில பொருள்களைப் போலிருப்பதில்லை.


தங்குதடையின்றி ஓடும் பெண்டியூலம் என்பது பௌதிகசாத்திரத்தில் காண்பது அரிது. அதுபோலவே பூரணமான போட்டியென்பதும் காணக் கிடையாது. பூரணநிலையை அணுகலாமன்றி அதை அடையமுடியாது. ஆன படியால் பூரண போட்டியென்ற கருதுகோள் பயனற்றதென்று கொள் வதற்கில்லை. வித்தியாசமான கோதுமைவகைகள் சற்றே வித்தியாசமான விலைமாற்றங்களையுடையனவாயிருக்கும். இந்த வித்தியாசம் பொருளிய லறிஞர்க்கு அத்துணை முக்கியமான விடயமன்று. அந்நியநாட்டுப் பரிவர்த்தனையில் வியாபாரஞ்செய்வோர் தொலைபேசி மூலமோ, தந்தி மூலமோ தமது விவகாரங்களைச் செய்தாலென்ன, சந்தையறையில், ஏலக் காரரோ, நிபுணரோ தலைமை வகிக்கையில் தமது விவகாரங்களைச் செய் தாலென்ன, அவை முக்கியமல்ல. அவர்களுடைய கேள்வியின்படிதான் ஆங்கிலப்பவுணுக்கு 2.80 டொலரா, 2.79 டொலரா என்றும், பிரெஞ்சுப் பிராங்குக்கு 20.5 சதமா, 2.06 சதமா என்றும் மாற்றுவீதம் நிச்சயிக்கப் படும். நியமப் பருத்திப்பொருள்களைச் சம்பிரதாயமற்றமுறையில் போட்டிக் கம்பெனிகள் வாங்கியும் விற்றும் வியாபாரஞ்செய்கின்றனவா என்பதும் முக்கியமன்று. இரண்டு பக்கத்திலும் வாங்குவோர் பலரும், விற்போர் பலருமிருக்கவேண்டும். பொருள்களின் தன்மையைப்பற்றி நன்கு அறிந் தவராயிருக்கவேண்டும். பரஸ்பரம் விலைவாசிகளையறிந்தவராயிருக்கவேண் டும். ஒரு வியாபாரி சார்பில் பட்சபாதங்காட்டி, மற்றவர் விடயத்தில் விரோ தங் காட்டாதவராயிருக்கவேண்டும். தமது கேள்விகளில் ஏற்படும் மாற் றங்கள், நிலவும் சந்தைவிலையைப் பெரிதும் பாதிக்குமென எதிர்பார்க்கக் கூடியநிலையிருக்கக்கூடாது. இவையெல்லாம் நிகழுமானால் விலையும், தொகையும், விநியோகத் தேவைக்கோடுகள் காட்டும் வகையிலேயே அமை யுமென எதிர்பார்க்கலாம்.

கோதுமை போன்ற முக்கியமானதொரு பொருளை விட வேறு பொருள் களைப்பற்றிய பொருளாதாரநிலைகளைத் திட்பமாகவும், விவரமாகவும் விளக்க விநியோகம், தேவை என்ற கருவிகளை எவ்வாறு பயன்படுத்தலா மென்பதைப் படம் 5 இல் உள்ள பல வரைபடங்கள் காட்டுகின்றன. இங்கே காரிக்கன் பருத்தித் துணிக்குள்ள போட்டிச் சந்தையொன்று காட்டப் பட்டுள்ளது. புதிதாய்ப் பட்டம்பெற்ற மின்சார என்ஜினியர்கள் காட் டப்பட்டுள்ளனர். அவர்கள் உற்பத்திச் சாதனத்தில் ஒரு பகுதியாவர். அவர்களின் விலை அவர்களுக்குக்கிடைக்கும் மாதாந்தச் சம்பளமாகும். பத்திரம், அல்லது மூலதனச் சொத்தாயமையும் நிலம் காட்டப்பட்டுள்ளது. கடைசியாக வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை காட்டப்பட்டிருக்கிறது. இதில் ஆங்கிலப்பவுண், பிரெஞ்சுப்பிராங்க் என்பவற்றின் டொலர் மதிப்பு நிச்சயிக் கப்படும். அல்லது வேறு நாட்டுப்பணத்துக்கு டொலர் மதிப்புக் கணிக்கப்

படிப்பகம்

படும். அது வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுவோரின் கேள்வியாலும், வெளிநாட்டுப்பணம் வைத்திருப்போர் அவற்றை டொலராக மாற்றுவதற்கு விரும்பிக்கேட்கும் கேள்வியாலுமே நிச்சயிக்கப்படும்.[1]

**விநியோக, தேவைக் கருவிகள் பலவகையிற் பயன்படும்.**




படம் 5.—விநியோகம், தேவை என்பவற்றின் பலபயன்களிற் சில இங்கே காட்டப்பட்டுள்ளன. முன்னுள்ள படங்களில் கோடுகள் வளைந்திருக்கும். இங்கே எல்லாம் நேர்க்கோடுகளாயிருப்பதைக் கவனிக்க. விநியோகம், தேவை சம்பந்தமாகவும், வேறு பலவிடயங்களிலும் பொருளியலாளர் இவ்வாறு நேர்க்கோடுகளைக் கீறுவது, கண் அவற்றை இலேசாகக் கிரகித்துக் கொள்ளுமென்பதனாலேயே. உண்மையாக நிகழக்கூடிய கோடுகளுக்கு மிக அண்மைப் பொருத்தமானவை இவ்வகைக்கோடுகளே. இவ்வாறில்லாதவிடத்து அக்கோடுகளை வளை கோடுகளாக்கலாம். உதாரணம் : மின்சார என்ஜினியர்களின் தொகை ஒப்புமை அளவிலே திட்டமாகவேயிருக்கும். அதனால் இரண்டாம் படத்தில் அவர்களின் விநியோகத்தைக் காட்ட நிலைக்குத்தானகோடு இடப்பட்டுள்ளது. ஆனால் இஃது உயர்வுநவிற்சி. சம்பளம் குறையத் தொடங்கினால் சிலர் வேறு வேலையை நாடுவர். சிலர், பட்டதாரிகள் பாடசாலையில்சேர்வர். இதனாலேதான் விவி (S S) கோடு சம்பளம் குறையும்போது தென்மேற்கை நோக்கி வளைகிறது.

இன்றைய சந்தைகள் எல்லாம், பொருளியலறிஞர் கருத்துப்படி, போட்டிச் சந்தைகளென்று கூறமுடியாது. ஏகபோக உரிமை, சந்தைக்குறைபாடு முதலிய அமிசங்கள் புகுந்துவிடக்கூடும். அதனால் போட்டிமுறையில் மாற்றமுண்டாக்கவேண்டியேற்படும். இதைப்பற்றி மூன்றும் பிரிவில் கூறுவோம். அத்தகைய நிலைமைகளை எவ்வாறு சமாளிக்கலாமென்பதை அறிந்தபின் உலகத்தில் போட்டியும் குறைபாடுகளுமுண்டென்பதை அறிந்து கொள்வோம். அதாவது தற்காலத்து யதார்த்த நிலையை அறிவதற்குப் போட்டி ஆராய்ச்சியை நிபந்தனையோடு ஏற்றுக்கொள்ளலாமென்பது தெரியவரும்.

[1] இந்த அத்தியாயத்தின் முடிவிலே 9 ஆம் வினாவில் புதினப்பத்திரிகையிலுள்ள பண அறிக்கையொன்று பிரதிசெய்யப்பட்டுள்ளது. இது ஒரு நாளைக்கானவிவரம். தானியம், பத்திரம், சாதாரண கையிருப்பு, வெளிநாட்டுச்செலாவணி என்பவற்றுக்கான விலைவாசிகளுண்டு. பொருளியல் படித்தவர்கள் இந்தவிலைகள் காட்டும் மூலாதாரச் சக்திகளையறிவர். எதும் ஒன்றை முன்னேறியே அறிந்து சொல்வதற்கு அனுபவமும் ஆராய்ச்சியும் வேண்டும்.

www.padippakam.com



**சுருக்கம் :**

1. பொருளியலின் அடிப்படைப் பிரச்சினையிலொன்று சந்தைவிலையென்ற அமைப்பு எவ்வாறு முப்பிரச்சினைகளான எதை, எப்படி, யாருக்கு என்பவற்றைச் சமாளிக்கின்றது என்பதை அறிவதே.

2. தேவை அட்டவணை என்பது எந்த ஒரு நேரத்திலும், ஏனைய விடயங்கள் சமனுயிருக்கும்போது மக்கள் வெவ்வேறு விலையில் வாங்கும் பொருளின் வெவ்வேறு அளவைக்காட்டும் ஓர் அட்டவணையாகும். இந்தச் சம்பந்தங்களை ஒரு படத்தில் கோடாகக் கீறும்போது அது தேவைக் கோடெனப்படும்.

3. விலை ஏறினுல் பொருளின் விற்பனை குறையும். இதற்கு விதி விலக்கு மிக அருமையாகவேயுண்டு. அவ்வாறே விற்பனை அதிகரித்தால் விலை குறையும். எல்லாப் பொருள்களும் " கீழ்நோக்கிச்செல்லும் தேவை விதி " என்ற இந்த விதிக்குட்பட்டனவே.

4. விநியோகக் கோடு அல்லது அட்டவணை என்பது விலைகளுக்கும், உற்பத்தியாளர் விற்கவிரும்பும் ஒரு பொருளுக்கும் உள்ள தொடர்பை (மற்ற நிலைமைகள் மாருதிருக்கும்போது) காட்டும். விநியோகக் கோடு மேனேக்கி வலப்பக்கமாக உயர்ந்து செல்வது வழக்கம். விலை உயர உயர, பொருள்களின் விநியோகமும் பெருகும். ஆனுல் எப்பொழுதும் இந் நிலையை எதிர்பார்க்கமுடியாது.

5. சந்தைச் சமநிலை விநியோகமும் தேவையும் சமனுயிருக்கும் ஒரு விலைமட்டத்திலேதான் ஏற்படும். தேவையும் விநியோகமும் ஒன்றையொன்று வெட்டும் சமநிலைத்தானத்துக்கு மேலான எந்தவிலையிலும் உற்பத்தியாளர் வழங்க விரும்பும் பொருளின் தொகை, நுகர்வோர் விரும்பும் தொகைக்கு அதிகமாகவே யிருக்கும் ; இதனுல் விலையிறங்கும். சில விற்பனையாளர் குறைவாக விற்கப்பார்ப்பார்கள். இவ்வாறே சமவிலைக் குக் கீழே விழும்விலை மேல் ஏறவே பார்க்குமென்பதை வாசகர்கள் காணலாம்.

6. போட்டி விலையினுல் குறித்த ஓர் அளவிலுள்ள பொருள்கள், தேவையும் பணமும் உள்ளவர் கையில் போய்ச் சேரும். இந்தப்போட்டி விலை யாருக்கு என்பதை நிச்சயிக்க உதவுவதோடு, என்ன உற்பத்தி செய்யப்படவேண்டும், எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டுமென்பவற்றையும் நிச்சயிக்கிறது. குறித்த ஒரு சந்தை எதை, எப்படி, யாருக்கு என்பதை அரைகுறையாகவே தீர்த்துவைக்கும். அந்தச் சந்தை வேறு பொருள்களோடும், சாதனச்சந்தைகளோடுந் தொடர்புகொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

7. முக்கியமான வாடிக்கைப் பொருள்களான கோதுமை, பருத்தி போன்ற பொருள்களுக்கு நன்கு அமைக்கப்பட்ட சந்தைகளுண்டு. சாதாரணப் பொருள்கள், பத்திரங்கள், பணப்பரிவர்த்தனைகள் என்பவற்றுக்கும் வேறு

www.padippakam.com



சந்தைகளுண்டு. ஏலச்சந்தைபோலக் கருமமாற்றும் சந்தைகளுமுண்டு. இங்கே சிலசமயம் மாமூலான ஏலநடவடிக்கைகளில்லாதிருப்பதுமுண்டு. சந்தைவிவகாரங்களை நன்கறிந்த பல விநியோகத்தரும், நுகர்வோரும் இருக்கும்போது விநியோகத் தேவைச்சாதனங்கள் அந்தச் சந்தைகளின் நடத்தையைச் சரிவரக் காட்டக்கூடியனவாயிருக்கும். இந்த விநியோகத் தரும், நுகர்வோரும் தம்மளவில் குறித்த ஒரு பொருளின் விலையைப் பாதிக்கக்கூடிய செல்வாக்கில்லாதவராயும், ஏனைய கொள்வனவுக்காரர் விற்பனவுக்காரர் விடயத்தில் பட்சபாதங் காட்டாதவராயுமிருப்பது அவசியம். கண்டிப்பான போட்டியமைப்பு ஏற்படுவது அசாத்தியம். ஏகபோக உரிமை, பூரணமில்லாத போட்டி என்பன பொருளியல் உலகில் தோன்றும். எனவே அவற்றை அளப்பதற்குப் புதிய கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

**ஆராய்ச்சிக்கான வினாக்கள் :**

1. சந்தைவிலை ஏறுவது தவிர்க்கப்படவேண்டியதே. அருந்தலான காலங்களில் விலையேற்றமும் பயனுள்ள சில கருமங்களைச் செய்யுமென்பதை எடுத்துக்காட்டுக. வேறுவகையான பொருளாதாரத்தில் அத்தகைய அருந்தல் எவ்வாறு தன்தொழிலைச் செய்து தீர்க்கும் என்பதை ஆராய்ந்து காட்டுக. குறித்த நிலைமைகளில் மக்களுக்குண்டாகும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கலாமா ?

2. தேவைக்கோடு அல்லது தேவை அட்டவணை என்றாலென்ன ? வரைவிலக்கணங்கூறுக. விலையும் தொகையும் எதிர்மாறான தொடர்புடையன. அதாவது ஒன்று உயர்ந்தால் மற்றது தாழ்ந்தும் மற்றது உயர்ந்தால் முன்னையது தாழ்ந்தும் போவது நியதி. இதையே கீழ் நோக்கிச் செல்லும் தேவைவிதி விளக்குகிறது என்பதை ஆராய்க.

3. விநியோக அட்டவணை அல்லது விநியோகக்கோடு என்பதற்கு வரைவிலக்கணங் கூறுக. விநியோகம் அதிகரித்தால் விநியோகக்கோடு வலப்பக்கமாகத் தாழ்ந்து செல்லும் என்பதை விளக்குக. இதனோடு தேவை அதிகரிப்பதால் தேவைக்கோடு வலப்பக்கமாக உயர்ந்து நகரும் என்னும் விதியை ஒப்பிடுக. வித்தியாசத்துக்குக் காரணமென்ன ? குறையும் விநியோகம், குறையும் தேவை ஆகிய சந்தர்ப்பங்களை ஆராய்க.

4. எப்படியான சாதனங்கள் கோதுமைத் தேவையை அதிகரிக்கச் செய்கின்றன ? விநியோகத்தை அதிகரிக்கின்றன ? மலிவான யந்திரங்களின் உபயோகத்தால், பருத்தியின் விலையில் மாற்றம் ஏற்படுமா ? கமத்தொழிற் கூலியில் மாற்றம் ஏற்படுமா ?

5. தேவை, விநியோகம் என்பன ஒன்றையொன்று வெட்டும் சமநிலையிலேதான் விலை நிலையாய் நிற்கும் என்பதைக் காட்ட நியாயங்கள் கூறுக. ஆரம்பத்தில் விலை மிக அதிகமாயும் பின்னர் மிகக் குறைவாயுமிருக்கும் நிலையைக் கற்பனைசெய்து ஆராய்க.

www.padippakam.com



6. "விநியோகத்தில் ஏற்றம் (அல்லது இறக்கம்) விலையை இறக்கும் (அல்லது ஏற்றும்). தேவையில் ஏற்றம் (அல்லது இறக்கம்) பொதுவாக விலையை உயர்த்தும் (அல்லது இறக்கும்). தேவை அதிகரிக்க விநியோகம் குறையும்போது விலை ஏறும் என்பதை முன்கூட்டியே கூறிவிடலாம். ஆனால் தேவையை உயர்த்தி அதே நேரத்தில் விநியோகத்தையும் உயர்த்தினால் என்ன நடக்குமென்பதை மேலும் தகவலின்றி நாம் யூகித்துக்கூறமுடியாது". இந்தக் கூற்றிலடங்கிய உண்மையை ஆராய்க. (எதிர்ச்சந்தர்ப்பங்களைக் காட்டுவதனால் பிறைக்கோட்டில்போட்டு இடத்தை வீணாக்காமல் விடலாம்.)

7. "தேவையில் அதிகரிப்பும் விநியோகத்தில் இறக்கமும் ஒரே நேரத்தில் உண்டாவதை (6 ஆம் வினாவிற்போல்) ப் புள்ளிவிபரத்தில் காட்ட முடியாது. தேவையும், விநியோகமும் ஒருபொருளே." இரு முட்டுக் கட்டைகள் என்ற பிரிவில் கூறியவற்றைக்கொண்டு இக்கூற்றை ஆராய்க.

8. விற்பனையாளர் ஒருவரோ, சிலரோ இருக்கும்பட்சத்தில், போட்டி விநியோகம், தேவை என்ற கருவிகளைக் கைவிட்டு ஏகபோக உரிமை, அரைகுறைப்போட்டி என்பவற்றைக்கொண்டு ஆராய்ச்சிநடத்தவேண்டும். பொருள்கள் நியமப்படுத்தப்படாவிட்டால், பொருளியலாளர் இலக்கணம் வகுத்தபடி பூரணப் போட்டியாளரால் பயன்படுத்தப்படாதவகையில் ஒவ்வொரு வகைப்பொருளையும் விற்போர்தம் விலையைக்கட்டுப்படுத்தக் கூடியவராயிருப்பர்". இக்கூற்றின் உண்மையை ஆராய்ந்து பூரணபோட்டிக்குத் தேவையான நிபந்தனைகளை அட்டவணைப்படுத்துக.

9. பின்வரும் பத்திரிகை அறிக்கைகளில் அடங்கிய விடயங்களைத் தெளிவு படுத்துக.

**கோதுமை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யூலை | .. 1.83$\frac{3}{4}$ | .. 1.84$\frac{1}{2}$ | .. 1.83$\frac{3}{8}$ | .. 1.83$\frac{7}{8}$ | .. 1.83$\frac{3}{4}$ | .. 1.88$\frac{1}{4}$ |
| செப். | .. 1.85$\frac{5}{8}$ | .. 1.86$\frac{3}{4}$ | .. 1.85$\frac{5}{8}$ | .. 1.83$\frac{7}{8}$ | .. 1.83$\frac{3}{4}$ | .. 1.92$\frac{3}{8}$ |
| டிசெ. | .. 1.91$\frac{3}{4}$ | .. 1.92$\frac{5}{8}$ | .. 1.91$\frac{5}{8}$ | .. 1.92$\frac{1}{4}$ | .. 1.91$\frac{3}{4}$ | .. 1.99$\frac{3}{4}$ |
| மார். | .. 1.96$\frac{1}{8}$ | .. 1.97 | .. 1.96 | .. 1.96$\frac{3}{4}$ | .. 1.95$\frac{1}{2}$ | .. 1.97$\frac{1}{4}$ |
| மே | .. 1.95$\frac{1}{2}$ | .. 1.96$\frac{3}{8}$ | .. 1.95$\frac{3}{8}$ | .. 1.95$\frac{7}{8}$ | .. 1.95$\frac{1}{2}$ | .. 1.97$\frac{1}{4}$ |

**சோளம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யூலை | .. 1.16$\frac{7}{8}$ | .. 1.18 | .. 1.16$\frac{7}{8}$ | .. 1.17$\frac{3}{8}$ | .. 1.16$\frac{1}{2}$ | .. 1.22$\frac{3}{8}$ |
| செப். | .. 1.16$\frac{7}{8}$ | .. 1.17$\frac{7}{8}$ | .. 1.16$\frac{7}{8}$ | .. 1.17$\frac{5}{8}$ | .. 1.17 | .. 1.18$\frac{1}{2}$ |
| டிசெ. | .. 1.13$\frac{1}{2}$ | .. 1.14 | .. 1.13$\frac{1}{2}$ | .. 1.14 | .. 1.13 | .. 1.14$\frac{1}{2}$ |
| மார். | .. 1.17 | .. 1.17$\frac{3}{4}$ | .. 1.17 | .. 1.17$\frac{3}{4}$ | .. 1.16$\frac{3}{4}$ | .. 1.19$\frac{3}{8}$ |
| மே. .. | .. 1.19$\frac{1}{4}$ | .. 1.19$\frac{7}{8}$ | .. 1.19$\frac{1}{8}$ | .. 1.19$\frac{7}{8}$ | .. 1. 8$\frac{7}{8}$ | .. 1.19$\frac{3}{8}$ |

படிப்பகம்

www.padippakam.com



## திறைசேரி ஒப்பந்தங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| $2\frac{1}{8}$சி | .. | 1960 நவ. | .. | 99.24 | .. | 99.26 | .. | 2.64 |
| $2\frac{3}{4}$சி | .. | 1965–60 டிசெ. | .. | 99.28 | .. | 100.2 | .. | 2.60 |
| $2\frac{3}{4}$சி | .. | 1961 செப். | .. | 99.12 | .. | 99.16 | .. | 3.18 |
| $2\frac{1}{2}$சி | .. | 1961 நவ. | .. | 98.26 | .. | 98.30 | .. | 3.30 |
| $2\frac{1}{4}$சி | .. | 1962–59 யூன் | .. | 97.26 | .. | 97.30 | .. | 3.35 |
| $2\frac{1}{4}$சி | .. | 1962–59 டிசெ. | .. | 97.12 | .. | 97.16 | .. | 3.32 |
| $2\frac{1}{2}$சி | .. | 1963 ஓக. | .. | 96.22 | .. | 96.26 | .. | 3.59 |
| 3 சி | .. | 1964 பெப். | .. | 97.20 | .. | 97.24 | .. | 3.67 |
| $2\frac{1}{8}$சி | .. | 1965 பெப். | .. | 95.0 | .. | 95.4 | .. | 3.79 |
| 2 சி | .. | 1966 ஓக. | .. | 95.30 | .. | 96.4 | .. | 3.72 |
| $3\frac{1}{2}$சி | .. | 1967–62 யூன் | .. | 91.18 | .. | 91.22 | .. | — |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| $69\frac{1}{2}$ | $52\frac{3}{4}$ | 50 | $62\frac{3}{8}$ | $63\frac{3}{8}$ | $61\frac{1}{2}$ | $61\frac{1}{2}$ | $\frac{3}{4}$ |
| $42\frac{3}{4}$ | $23\frac{3}{4}$ | 34 | $40\frac{1}{8}$ | $40\frac{3}{8}$ | 39 | $39\frac{3}{4}$ | $\frac{1}{4}$ |
| 52 | $41\frac{1}{8}$ | 12 | $46\frac{1}{8}$ | $46\frac{1}{8}$ | 45 | 45 | $1\frac{3}{8}$ |
| $15\frac{3}{4}$ | 12 | 27 | $13\frac{7}{8}$ | $13\frac{7}{8}$ | $13\frac{5}{8}$ | $13\frac{3}{4}$ | — |
| $32\frac{7}{8}$ | $23\frac{7}{8}$ | 8 | $24\frac{1}{8}$ | $24\frac{1}{8}$ | 24 | 24 | $\frac{1}{8}$ |
| $28\frac{1}{8}$ | $23\frac{1}{2}$ | 6 | $25\frac{5}{8}$ | $25\frac{3}{4}$ | $25\frac{1}{4}$ | $25\frac{1}{4}$ | $\frac{3}{8}$ |
| 47 | $16\frac{1}{2}$ | 22 | $40\frac{3}{4}$ | $41\frac{1}{2}$ | $39\frac{1}{2}$ | 40 | $\frac{1}{4}$ |

| | செவ்வாய் | வெள்ளி | கிழமைக்கு முன் | வருடத்துக்கு முன் |
|---|---|---|---|---|
| ஸ்டர்லிங்–இருத்தலுக்கு 2.80 பவுண் | | | | |
| தந்தி | 28081 | 28068 | 28057 | 28127 |
| 30 நாட்கள் | 28038 | 28428 | 28017 | 28123 |
| 60 நாட்கள் | 27997 | 27986 | 27978 | 28119 |
| 90 நாட்கள் | 27955 | 27947 | 27938 | 28114 |
| | 27912 | 27862 | 27862 | 28068 |
| பெல்ஜியம்–பிராங்குக்கு 200 | | | | |
| | 20075 | 20070 | 20065 | 20050 |
| | 20070 | 20070 | 20060 | 20055 |
| டென்மார்க்–க்ரேனுக்கு 14.477 | 14.52 | 14.52 | $14.51\frac{1}{2}$ | 14.54 |

படிப்பகம்

www.padippakam.com



பிரான்ஸ்– பிராங்குக்கு 20255
(அமெரிக்க நாட்டு 100 பவுணுக்கு 49370 பிராங்குகள்)
பிராங்க். .. .. $20.40\frac{3}{4}$.. $20.40\frac{1}{2}$.. $20.40\frac{1}{2}$.. —

10. பின்வரும் கருத்துக்களைப்பற்றி மறுபடியும் ஆராய்ந்து தெளிக.

என்ன, எப்படி, யாருக்கு.
தேவை அட்டவணை அல்லது கோடு.
கீழ்நோக்கிச்செல்லும் தேவைவிதி.
விநியோக அட்டவணை அல்லது கோடு.
சமநிலைக் குறுக்குவெட்டு.
அட்டவணையில் மாற்றம் VS அட்டவணையை அனுசரித்தபோக்கு.
ஒரு சந்தையிலுள்ள தேவையும் விநியோகமும், என்ன, எப்படி., யாருக்கு என்பவற்றை எவ்வாறு அரைகுறைப்போட்டி நிலைமைகளிலே தீர்க்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# ஐந்தாம் அத்தியாயம்

## தொழில் அமைப்பும் வருமானமும்

வியாபாரமே அமெரிக்காவின் வியாபாரத்தொழில்

*கல்வின் கூலிட்ஜ்.*

நமது வியாபார நாகரிகத்தை அறிவதானுல் வியாபாரத் தொழில் எவ்வாறு அமைப்புப்பெறுகிறது, எவ்வாறு செயற்படுகிறது என்பவற்றை அறியவேண்டும். இக்கால வியாபாரத்தாபனம் ஒன்றைப் பற்றி இந்த அத்தியாயத்தின் முதற்பகுதி ஆராய்கிறது. அதாவது ஓர் உதாரணத்தை எடுத்து ஆராய்ச்சி செய்கிறது. பிற்பகுதி அத்தகைய தாபனங்களின் பண அமைப்பை, பிரதானமாகப் பிரமாண்டமான வியாபாரத் தாபனங்களின் பண அமைப்பை ஆராய்கிறது.

அனுபந்தத்திலே கணக்குப் பார்த்தல் சம்பந்தமான அடிப்படை விடயங் களைப்பற்றிய சுருக்கமானதோர் அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது. கணக்கு வைத்தல் பற்றி ஓரளவாவது அறியாவிட்டால், வியாபாரஞ் சம்பந்தமான ஆழ்ந்த அறிவைப் பெறுவது முடியாத காரியமாகும்.

### அ. வியாபார அமைப்பின் உருவம்

**வியாபாரத் தாபனங்களின் தொகை**

1961 இல் 47.5 இலட்சம் அமெரிக்க வியாபாரத் தாபனங்களிருந்தன. இவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவையெல்லாம் தனிப்பட்டவர்களுக் குச் சொந்தமானவை. பெரும்பாலான வியாபாரத் தொழில்கள் இன்றைக் கிருக்கும்; நாளைக்கு மறைந்துவிடும். ஒரு தொழிலின் சராசரி வயதை 6 வரு டமாகக் கொள்ளலாம். சில முறிந்துபோகும். சிலர் தாமாகவே தொழிலை மூடிக்கொள்வர். நட்டமுமடைவர். சிலர் வேறு தொழில்களில் ஈடுபடுவர்.

பழைய தொழில்கள் மறையப் புதிய தொழில்கள் தோற்றமளிக்கும். முந்திய வருடங்களிலே தொழில்கள் மறைந்து போகப் புதிதாகத் தோன் றிய பெருந்தொகையான மேலதிகத் தொழில்முயற்சிகளின் பயனுகவே இப்போதுள்ள தொழில்முயற்சிகளின் தொகை வளர்ச்சியடைந்தது. மறைந்த தொழில்முயற்சிகளைவிடப் புதிதாகத் தோன்றுபவை, அமெரிக் கப் பொருளாதாரம் வளரவளர விருத்தியடையுமென எதிர்பார்க்கலாம்.

**பெரிய தொழிலும், சிறிய தொழிலும், மிகச் சிறியவையும் :**

அமெரிக்கத் தொழில்முயற்சித் துறையில் மிக அதிகமானவை சிறிய தொழில்கள். இவை நிலையில்லாதவை. சிறிய முதலாளிகளால், தனியாக நடத்தப்படுபவை. ஆனுல் நல்லவருமானமும், அரசியலதிகாரமும், பொரு



படிப்பகம்

www.padippakam.com



ளாதாரச் செல்வாக்குமுடையவை சில நூறு பிரமாண்டமான வியாபாரத் தாபனங்களாகும். இவை ஏராளமான தொகையைச் சம்பளமாகக் கொடுக்கின்றன. பெருந்தொகையான மக்களுக்கு வேலை கொடுக்கின்றன. இக்கால அமெரிக்காவிலே இவை முக்கியமான கேந்திரத் தானத்தை வகிக்கின்றன.

மிகச் சிறிய வியாபாரங்கள் நமது பொருளாதாரத்திலே வகிக்கும் பங்கைச் சுருக்கமாக ஆராய்வாம். ஐக்கிய அமெரிக்காவிலே 4,16,000 இற்கு அதிகமான பலசரக்குக் கடைகளுண்டு. இவற்றின் சொந்தக்காரர் இவற்றையே சீவனோபாயமாகக் கருதியிருக்கின்றனர். இரண்டரை இலட்சத்துக்கு அதிகமான பெட்ரோல் எண்ணெய்க் குதங்களுண்டு. 55,000 இற்கு அதிகமான மருந்துக் கடைகளுண்டு. இவ்வாறே சொல்லிக்கொண்டு போகலாம்.[1] இவற்றில் சில தொழில்கள் நல்ல வருமானமுடையன. வேறொருவரின் கீழ்ச் சம்பளத்துக்குக் குறைந்த முயற்சியோடு வேலை செய்வதால் கிடைக்கக்கூடியதினும் அதிக இலாபத்தை இவை கொடுப்பதில்லை. பலசரக்கு வியாபாரத்திலே நூற்றுக்கு 45 வீதத்தைச் சங்கிலித் தொடர்க்கடைகள் நடத்துகின்றன. எஞ்சிய 55 வீதம் தனிப்பட்டவர் கையிலுண்டு. இவற்றின் தினசரி விற்பனை 100 டொலருக்குள்ளாகவேயிருக்கும். ஒரு சில ஆயிரம் டொலர் முதலுள்ளவரே இந்த வியாபாரத்தை நடத்துவர். தினசரி 150 டொலர் வியாபாரம் இருந்தாற்றான் ஒருவருக்குக் குறைந்தபட்ச வருவாயாவது கிடைக்கும். இவர்களிடம் அத்தகைய வியாபாரத்தை நடத்துவதற்கான மூலதனத்தில் அரைவாசிகூடக் கிடையாது. இத்தகைய சிறிய வியாபாரம் நட்டமடையுமென்பது ஆரம்பத்திலிருந்தே தெரியவரும். வியாபாரத்தின் சொந்தக்காரருடைய ஆரம்ப மூலதனம் முடிவடைந்துவிட்டால் வியாபாரம் முடிந்துவிடும். இத்தகைய சில்லறை வியாபாரங்களில் மூன்றிலொன்று தொடக்கம் அரைவாசிவரை இரண்டு வருடத்துள் கைவிடப்படுவதன் காரணம் இதுதான்.

வியாபாரங்களுக்கு ஏற்றவகையில் மூலதனம் அவசியமென்பது உண்மையே. தற்காலமுறைக்கேற்ற பெட்ரோல் நிலையமொன்றைப் புதிதாகக் கட்டி அமைப்பதானால் 90,000 டொலர் தேவை. எண்ணெய்க் கம்பெனியிடமிருந்து ஒன்றை வாடகைக்கு வாங்குவதானால் 5,000 டொலர் போதும். காய்கறி போன்ற அதிகம் செலவாகும் பொருள்களின் வியாபாரத்துக்கு

[1] அமெரிக்காவிலுள்ள ஒவ்வோர் ஆயிரம் வியாபாரத் தாபனங்களிலும் பின்வரும் வகையில் விபரங்கள் காணப்படுவதாய் புள்ளிமதிப்பீட்டிலாகா கூறுகிறது. 103 கொந்தறாத்துக்காரர், 95 சில்லறைப்பொருள் கடைகள், 85 உண்டிச் சாலைகள், 85 பேர் பெருந்தோட்ட இன்சூரன்ஸ், வங்கித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 68 பலவகை மொத்தவியாபாரிகள், 63 பெட்ரோல் நிலையங்கள், போக்குவரத்து முதலிய பொதுப் பயன்தரு வேலைகளில 46 பேர். கார்விற்பனை, கார்திருத்துதல், கராஜ் வேலைகளில் 41 பேர். முகமலங்கரிக்கும் சாலைகளிலும், மயிர்திருத்தும் சாலைகளிலும் 50 பேர், 38 புடவைக்கடை, 22 மருந்து மதுபானக் கடைகள், 18 போசனசாலைவிடுதி முதலியன, 16 இரும்புக்கடை விவசாய எந்திரம் முதலியன, 14 தளவாட வியாபாரம், 11 மரவேலை முதலியனசெய்வோர்.

www.padippakam.com



கொள்ளலாம். இவ்வாறு கடன்படுவது குடும்பத்தின் எதிர்காலத்தை அபாய நிலையில் வைக்கலாம். வியாபாரத்திலே நிச்சயம் இலாபம் வருமென்ற திடநம்பிக்கையிருந்தால் அந்த அபாயத்தைத் தவிர்க்கலாம்.

உள்ளூர் வங்கியிடம் 6 வீத வட்டிக்குப் பணத்தைப் பெறமுடியாதா ? நல்ல வியாபாரத்தாபனமென்று நிரூபிக்கப்படாதவரை வர்த்தகவங்கிகள் " புதியமுதலை " க் கொடுக்கமாட்டா. வங்கிமுதல்வர் உங்கள் ஐந்தொகையைப் பார்த்து மிச்சம் எவ்வளவு என்று கணக்கிடுவார். ஆனால் வரவும் செலவும் ஒத்திருப்பதைக் கவனித்துவிடுவார். இது இயற்கையே. ஏனெனில் வருமதிகள் வந்துகொண்டிருக்கச் சென்மதிகளுக்கான காசோலை எழுதப்படும். வழக்கமாக வங்கியானது, செலவு அதிகரிக்கும் காலத்தில் செலவு செய்வதற்காக மூன்று மாதக் கடன்கொடுக்கும். பின்னர் அதை மீட்டுக்கொள்ளும். இப்போதிருப்பதிலும் மூன்று மாதத்துக்குப் பின் உமது வியாபாரத்தினால் பணம்வந்து குவிந்துவிடுமென்று எவரும் பகற்கனவு காண மாட்டார். அந்த மூன்று மாத வாயிதா முடிந்ததும் மேலும் கடன் கேட்டுக்கொள்வீர். அது உமக்குந் தெரியும் ; வங்கிக்காரருக்குந் தெரியும்.

பலவருட வாயிதாவில் கடன் கொடுக்கக்கூடாதென்ற கொள்கையை வங்கிகள் மாற்றிக்கொண்டாலும், உமது வியாபாரம் போன்ற புதிய வியாபாரத்தை வங்கி நம்பிப் பணங்கொடுக்கமாட்டாது. உமக்கு உமது வியாபாரத்தின் வருங்கால வளர்ச்சியைப்பற்றி நல்ல நம்பிக்கையிருக்கலாம். ஆனால் வங்கிக்காரர் கண்ணுக்கு நீரும், நாட்டிலே தோன்றிவரும் புதிய ஏராளமான வியாபாரிகளில் ஒருவராகவே காணப்படுவீர். அத்துடன் அவர்களிற் பெரும்பாலோர் நல்லகாலத்திற்கூட முறிந்து போவார்கள் : வியாபார மந்தமேற்பட்டால் ஒருவரும் தலைநிமிர்த்தமாட்டார்களென்பதையும் அவர்கள் அறிவார்கள். வங்கியிலே பணம்போட்டவர்களின் பணத்தைப் பாதுகாப்பதற்காக வங்கி வழக்கமான 5 வீத வட்டிபோக உமது கடனுக்காக அபாயப் பாதுகாப்பாய் மேலும் 10 வீத வட்டி[1] விதிக்கும். இதனால் நட்டமடைவோரின் காரணமாக வங்கிக்கு வரும் நட்டத்தை, நட்டமடையாதவர் கொடுக்கும் வட்டி ஈடு செய்யமாட்டாது. ஆனால் வங்கியிலே கடன் பெற ஒரு வழியுண்டு. சிறுதொழில் நிர்வாகம் என்ற (சி–தொ–நி) தாபனம் வங்கியுடன் கூட்டாகச் சேர்ந்து உமக்குக் கடன் கொடுக்கலாம். அப்படிக் கடன் கொடுப்பதற்கு வங்கிகளில்லாவிட்டால், சி–தொ–நி. தானாகவே கடனைக் கொடுக்கும். சில மாகாணங்களிலே அபிவிருத்திச் சங்கங்களுண்டு. அவை நாட்டிலுள்ள ஒரு தொழிலைப் பட்டினத்திலே தாபிக்க

1. மற்றொரு முறை ஜெர்மனியில் வழங்குகிறது. இது ஐக்கிய அமெரிக்காவிலோ, பிரிட்டனிலோ இடையாது. வியாபாரத்திலே ஒரு பங்கை ஜெர்மன் வங்கிகள் வாங்கிக்கொள்கின்றன. இலாபத்திலும் ஏற்ற பங்குபெறுகின்றன. இதனால் வங்கிகளும் இந்த வியாபாரத்தின் நிருவாகத்திலே பங்குபற்றிக்கொள்ளுகின்றன. இதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் எங்கள் வங்கிகளில் இத்தகைய முறை சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



வும், பட்டினத்திலுள்ளதை அங்கேயே நிலைபெறச் செய்யவும் ஓரளவு நிதியுடையனவாயிருக்கின்றன.

மூலதனத்தைப் பெறுவதற்கு நீர் செய்த முயற்சியெல்லாம் அத்துணைப் பயன்தராதிருக்கலாம். வியாபாரம் அல்லல்நிலையை அடைந்து கொண்டு வருகிறது. மூலதனமாக மேலும் கடன் எடுப்பதற்கு வழியில்லை. எனவே வியாபாரத்துக்கு ஒரு பங்குதாரரைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

**பங்காளர்** இரண்டுபேரோ அவருக்கு அதிகமானவரோ சேர்ந்து பங்காக வியாபாரம் நடத்தலாம். வியாபாரத்துக்கான முதல், உழைப்பு, இலாபம், நட்டம் என்பவற்றைத் தம்முள் பகிர்ந்துகொள்ள அவர்கள் இசைகின்றார் கள். இந்த ஒப்பந்தம் பேச்சளவிலிருந்தாலே போதும். ஆனால் பின்னால் விளக்கக் குறைவுண்டாவதைத் தடுப்பதற்கும், நல்ல முறையில் கருமங் களைச் செய்து கொள்வதற்குமாகச் சட்ட அறிஞர்மூலம் ஓர் ஒப்பந்தத்தை எழுதிக் கொள்வது நல்லது.

சரி, பற்பொடி வியாபாரத்தில் நீர் உமது மைத்துனரைப் பங்காளியாகச் சேர்த்துக்கொண்டீர் என வைத்துக்கொள்வோம். அவர் 25,000 டொலர் முதல்போடுகிறார். அவருக்கு வருடமொன்றுக்குச் சம்பளமாக 5,000 டொலர் கொடுக்கிறீர். நீர் 8,000 டொலர் சம்பளம் பெறுகிறீர். இலாப நட்டங்களில் நீர் மூன்றிலிரண்டு பங்கு ஏற்றுக்கொள்வீர். அவர் மூன்றி லொரு பங்கை ஏற்றுக்கொள்வார். உமது பங்காளி 25,000 டொலர் பணமாக முதல் போட்டிருக்கிறார். நீர் என்ன முதலீடுசெய்தீர்? உம் முடைய பங்காகச் சில பற்பொடி மூட்டைகளும், கொடுத்த சரக்குக்கு வரவேண்டிய பாக்கியுமிருக்கிறது. இஃது அவ்வளவு அதிகமாகத் தோன்ற வில்லையா.

உண்மைதான். நீங்கள் கொண்டுவரும் பங்கு **சூக்குமமானது.** ஆனால் விலையுள்ளது. அதாவது இலாபகரமான கேள்வுகள் பல உண்டு. அத்துடன் வியாபாரவிடயத்தைப் பற்றிய சூட்சுமமெல்லாம் உங்களுக்குத் தெரியும். இதை "நல்லெண்ணம்" என்பார்கள். அதாவது உங்களிடத் தில் இலாபம் சம்பாதிக்குந் திறமையுண்டு. அது நீங்கள் போட்ட முதல், வருடத்தில் கிடைக்கக்கூடிய 12,000 டொலர் இலாபம் என்பவற்றோடு சேர்ந்து சொத்தாகவேயிருக்கிறது. உங்கள் பங்காளிக்கு வருடச் சம்பளமாக 5,000 டொலர் கொடுக்கிறீர்கள். ஒருவேளை அந்தச் சம்பளத்தை அவர் வேறு இடங்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடியவராவார். இந்தச் சம்பளத் தோடு 25,000 டொலர் முதலுக்கு இலாபமாக 12,000 டொலரில் மூன்றி லொரு பகுதியைப் பெற்றுக்கொள்ளுகிறார்.

இந்த இலாபத்தை அவர் பங்குச் சந்தையில் ஈட்டுவதானால் 25,000 டொலரிலும் பார்க்க மிக அதிகமான பணத்தை முதலீடு செய்ய வேண்டும். 1,00,000 டொலர் பெறுமதியான 4 வீத அரசாங்கக் கடன் பத்திரங்களிலோ 80,000 டொலர் பெறுமதியான 5 வீதத் தனியார் கடன் பத்திரங்களிலோ

www.padippakam.com



முதலீடு செய்தால்தான் இந்த இலாபத்தைச் சம்பாதிக்கலாம். இந்த வியாபாரத்திலுள்ள அபாயச் சமுசயம் ஒரு குறையேயன்றி மற்றப்படி போட்ட 25,000 டொலருக்கு வருடாவருடம் 16 வீதம் இலாபம் பெறுகிறுர். அவர் உமக்குக் கிடைக்கும் மூன்றிலிரண்டு பங்குக்கு நீர் உதவும் " நல்லெண்ணம் " ஈடாகும்[1].

**" இப்படித்தான் நாம் வளருகிறேம் ".**

இவ்வாறு உமது வியாபாரம் செழிப்பாக வளருகிறது. ஒவ்வொருவருடமும் பங்காளர் இருவரும் தமக்குச் சேரவேண்டிய தொகையைமாத்திரமே எடுத்துக்கொள்ளுகிறுர்கள். இத்தொகை சம்பளம் போலவே மதிக்கப்படுகிறது. அத்துடன் இலாபத்தில் 1/5 பகுதியையே பெற்றுக்கொள்ளுகின்றனர். மற்ற இலாபத்தை வியாபாரத்தை விருத்தி செய்வதில் செலவாக்குகின்றனர். வியாபாரத்திலே இலாபத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென நிச்சயிப்பது எதனுல் ? அதுதான் நீங்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய வருமான வரி. அது உங்கள் உழைப்பில் ஒருவீதமாகமட்டுமன்றி, வியாபாரத்திலுள்ள பங்கில் வரும் இலாபத்துக்கு ஒரு வீதமாகவும் அறவிடப்படும்.

உமது வியாபாரம் போன்றதொரு வியாபாரம் வளர்வது எதனுல் ? இதற்குச் சில காரணங்கள் உண்டு. (1) வியாபாரத்துக்கு நல்லவிளம்பரஞ் செய்யப்படுவதால் பலர் உமது பற்பொடியைப்பற்றி அறிந்து கொள்கிறுர்கள். அதிக வியாபார எஜெண்டுகளை நீர் அனுப்பியிருப்பதும் அதற்குக் காரணமாகும். (2) பற்பொடி ஏராளமாக விலையாவதால் பெருவாரியாக உற்பத்தி செய்து உற்பத்திச் செலவைக் குறைத்துக்கொள்ளலாம். (3) பற்பொடி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களை வேறிடத்திலிருந்து வாங்காமல் நீங்களே உற்பத்தி செய்ய ஓர் இரசாயனசாலையையே வாங்கிவிடுகிறீர்கள். அத்துடன் மொத்த விநியோகத்தை நீங்களே செய்யவும் முற்படுகிறீர்கள். இவ்வாறு உற்பத்தியில் மூன்று படிகளையும் நீங்களே செய்ய முற்படுகிறீர்கள். (4) உங்களோடு போட்டிக்குப் பற்பொடி உற்பத்தி செய்வோர் பலரின் வியாபாரத்தை நல்லதருணம் பார்த்து நீங்களே வாங்கிவிடலாம். (5) பற்பொடியைவிட, சவர்க்காரம், அஞ்சனமை முதலிய பொருள்களையுஞ் சேர்த்து உற்பத்திசெய்வீர்கள். இதனுல் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். உங்கள் வியாபார எஜெண்டுகள் முன்னையிலும் அதிக ஆர்டர்களைப் பெறக்கூடியவராயுமிருப்பர். (6) உமது வியாபாரம் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான காரணம், உமது பற்பொடியே சந்தையிற் சிறந்த பற்பொடியாயிருக்கலாம் என்பதே.

[1] நல்லெண்ணம், மூலதனமாயுள்ள உழைப்புத்திறன் என்பனபற்றிக் கணக்கு வைத்தல் பற்றிய அனுபந்தத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தின் கடைசிப் பிரிவைப் பார்க்க.

படிப்பகம்

www.padippakam.com



## மூலதனத்துக்குப் புதிய தேவையும், அதைப்பெறுவதற்கு வழிகளும்

வியாபாரம் வளர்ச்சியடைகிறதென்பது உண்மையே. ஆனால் பணத்துக்கு மேலும் முட்டுப்பாடாயிருக்கிறது. 25,000 டொலர் புதிய முதலீடு பணவடி வில் அதிககாலமிருக்கவில்லை. அது புழக்கத்திலுள்ள சொத்தாகிவிட்டது. பொருளாகவும் அலுவலகத் தளபாடங்களாகவும் மாறிவிட்டது. ஒரு பகுதி நெருக்கடியான பொறுப்புக்களை நிவர்த்தி செய்யப் பயன்படுத்தப்பட்டது. எஞ்சியது தொழிற்சாலைத் தளவாடங்களை வாங்க முற்பணமாய்க் கொடுக்கப் பட்டது. மிகுதிப்பணம் அந்தத் தொழிற்சாலையை ஈடுவைத்துக் கொடுக்கப் பட்டது. ஈட்டுப்பணத்தை அயலிலுள்ள இன்சூரன்ஸ்கம்பனி 20 வருடத்தில் திருப்பிப்பெறும் $5\frac{1}{2}$ வீத வட்டிக்கடனாகக் கொடுத்தது. $5\frac{1}{2}$ வீத வட்டி கொடுபடாமலிருக்கும் பாக்கிக் கடனைக் கொண்டே கணிக்கப்படுமெனவும் ஒழுங்குசெய்யப்பட்டது. கடன் கொடுபடாவிட்டால் வங்கி ஈட்டுக் கட்டடத்தைக் கைப்பற்றி, விற்றுக்கிடைக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும். கம்பனி அத்துணைப் பெரிய அபாயச் சமுசயத்தை மேற்கொள்ளவில்லை. ஏனெனில் கட்டடத்தின் கால்விலை முற்பணமாகக் கொடுக்கப்பட்டது. இந்த விலையும் நயமான விலையே. வருடாவருடம் இன்சூரன்ஸ் கம்பனி தன் வருமதியில் ஒரு பகுதியைப்பெற்றுக்கொண்டு வரும். கடன் கொடுத்த சிலவருடங்களுள் கம்பனி எதிர்பாராத விதமாக முறிந்துபோனாலன்றி இந்தப் பேரத்தினால் இன்சூரன்ஸ்கம்பனிக்கு அத்துணை நட்டம் வரமாட்டாது.

வருகிற இலாபத்தை மறுபடியும் முதலில் சேர்த்துக்கொண்டபோதிலும் வியாபாரம் வளர்ச்சியடைகிறபடியால், மேன் மேலும் முதல் தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கும். இப்போது கம்பனி நல்ல கம்பனியெனப் பெயரெடுத்துவிட்டது. அதனால் கடனெடுப்பது அவ்வளவு சிரமமன்று. பல வழிகளிலே கடன் எடுக்கலாம். நத்தாருக்கு முந்திய நெருக்கடியான காலத்தில் உதவிபுரிய உங்கள் வங்கியே மனமுவந்து முன்வரும். தொழில் சகாயப் பணக் கம்பனிகள் உங்களுக்குப் பல திசையிலும் வரவேண்டிய பாக்கிப் பணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, பயமின்றிப் பணங்கொடுக்க முன்வரும். உங்களுடைய வங்கியே (முன்னெல்லாம் பின்வாங்கிச் சற்றே சாவதானமாயிருந்த வங்கியே) இப்போது 5 வருடத் தவணையில் கடன் கொடுக்க முன்வரும்.

இப்படிப் பலவகையில் கடன்பெற்றபோதிலும் மேலும் முதல் தேவைப் படலாம். எனவே மேலும் பங்காளிகளைச் சேர்க்க அவசியமுண்டாகிறது. இலாபத்திலும் நட்டத்திலும் பங்குபெறக் கூடிய புதிய பங்காளிகளைச் சேர்க்கவேண்டிய அவசியமுண்டாகிறது. (இந்தக் கட்டத்திலே வேறுசில நாடனங்களிடம் கடன்பட வசதியிருந்தாலும் அவ்வாறு செய்வது புத்தி சாலித்தனமன்று.) ஏற்கனவே பல பொறுப்புக்களையும், குறுகிய அடிப் படையில் நிலையான வட்டிகளையும் ஏற்றுக்கொண்டீர்கள். 6 வீதத்திலே முதலைக் கடனாகப் பெற்று 16 வீத இலாபம் பெறுவது நல்லதே. ஆனால் அவ்வகையில் எப்பொழுதும் வியாபாரம் ஒழுங்காக நடந்துகொண்டிருக்க வேண்டும். நட்டமேற்படுமானால் அஃது உங்களிருவரையுமே பாதிக்கும்.

7—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



**பங்காளிகளாயிருப்பதாலுண்டாகும் வசதியீனங்கள்**

முதலைப் பெருக்குவதானல் புதிய பங்காளிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். எத்தனை பங்காளரையுஞ் சேர்க்கலாம். அதற்கு எல்லை கிடையாது. தரகு தொழில், வங்கித் தொழில் என்பவற்றில் 100 பேருக்கதிகமான பங்காளிகளிருக்கிறார்கள். ஆனல் புதிதாக ஒரு பங்காளி வந்து சேர்ந்தால், அல்லது பங்காளி ஒருவரிறந்தால், அல்லது தமது அங்கத்துவத்தை ராஜினுமாச் செய்தால் புதிதாக மறுபடி அந்தப் பங்காளர் கூட்டம் அமைக்கப்படவேண்டும்[1].

பங்காளர் கூடக் கூட இதுவரை ஆராயப்படாத புதியதொருபிரச்சினை தோன்றுகிறது. அதாவது பங்காளர்படும் கடனுக்கு ஒவ்வோர் அங்கத் தவரும் அவரவருடைய சொத்து அளவுக்கு, வரையறையில்லாத பொறுப்புடையவராவர். ஒருவருக்கு முழு வியாபாரத்திலும் 1 வீதப் பங்கிருந்தால், வியாபாரம் முறிந்து நட்டமுண்டாகுமானல், நட்டத்தில் 1 வீதத்தை இவரும் ஏனைய 99 வீதத்தை மற்றவர்களும் செலுத்த வேண்டும். மற்றவர்கள் தமதுபங்கைக் கொடுக்க முடியாதிருந்தால் ஒரு வீதப் பங்குள்ளவரே எல்லாருடைய பங்கையும் கொடுக்கவேண்டிய வராவார். தம்முடைய வீடு வாசல், விலையுயர்ந்த பொருள் எல்லாவற்றை யும் வெந்தீசிலே விற்றுக்கொடுக்க வேண்டியவராவார்.

வரையறையில்லாத பொறுப்பிருக்கிறபடியாலேதான் பங்குக்காரர் சிறியதொகையினராகவும் செய்யும் வியாபாரம் தனிப்பட்ட வியாபாரமாகவு மிருக்கும். பங்காளர் கூட்டத்திலே "பரஸ்பர ஏஜென்சி" என ஒன் றுண்டு. அதன்படி பங்காளர் மற்றப் பங்காளரையும் ஈடுபடுத்தக்கூடிய வகையில் நடவடிக்கைகளை எடுக்கலாம். தமது சொந்தச் சொத்துக்களை இப்படி ஆபத்துக்குள்ளாக்குவதை எவரும் விரும்பாதபடியால்தான், மக்கள், தம்முடைய கட்டுக்குட்படாத சிக்கலான முயற்சிகளில் தமது முதலை விடுவதற்குப் பின்வாங்குவர். இக்காரணத்தினலேதான் விவசாயம், சில் லறை வியாபாரம் என்ற துறைகளில் மாத்திரமே மக்கள் தமது வியாபா ரத்தில் அரைவாசிக்கு மேலாகத் தனிச் சொந்தக்காரராகவிருந்தோ இரண்டொரு பங்காளரைக் கொண்டோ நடத்துகிறார்கள். வங்கித்துறையிலே கூட ஜே. பி. மோர்கன் அண்ட் கம்பெனி போன்ற தாபனங்கள், தம் வாடிக்கைக்காரருக்குத் தைரியமூட்டுவதற்காக "எமது கம்பெனி கூட்டுப்பங் குடையதன்று" என விளம்பரப்படுத்துகின்றனர். ஆனல் இத்தகைய தாபனங்களும் கடைசியில் கூட்டுப்பங்குக் கம்பெனிகளாகிவிட்டன.

[1] நிலைமையிலேயே அதிருத்தி கொண்ட ஒரு பங்காளி தான் விலகிக்கொள்ள விரும்பினல் உடனே அந்தப் பங்காளிமுறை கலைக்கப்படல் வேண்டும். இஃது ஒரு பெரிய வசதிக்குறைவே. மற்றப் பங்காளிகளின் சம்மதமின்றி ஒரு பங்காளி தனது பங்கை வேருெருவருக்கு விற்கக் கூடாது எனவும் பங்காளர் சம்பந்தமான சட்டம் கூறுகிறது. மற்றப் பங்காளர் இதற்கு இசையாவிட்டால் பங்காளரின் சொத்துக்கள் பிரித்துக்கொடுக்கப்பட்டுக் கம்பனியும் கலைக்கப் பட்டுவிடும். இதற்குப் பெருஞ் செலவுண்டாகும்.

படிப்பகம்

www.padippakam.com


மெரில் லிஞ்ச், பியர்ஸ், பென்னர் அண்ட் ஸ்மித் என்பது போன்ற பெரிய தரகுக் கம்பெனிகள் இந்நாட்டிலுள்ள பங்குச் சந்தை வியாபாரத்தில் பெரும் பகுதியை நடத்துகின்றன. சமீபத்திலேதான் இக்கம்பெனி கூட்டுப் பங்காளர் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டது. நெடுங்காலமாக இது பல சிரேட்ட பங்காளரையும், கனிஷ்ட பங்காளரையுங்கொண்டிருந்தது. கூட்டுப்பங்குக் கம்பெனியாக இயங்கிப் பெரிய வியாபாரத்தைச் செய்வது கஷ்டமானதன்றென்பதை இது நிரூபிக்கிறது. இத்தகைய பிரமாண்டமான கூட்டுப்பங்குக் கம்பனிகளைக்காண்பது இப்போது அருமை. கூட்டுப்பங்குத் தாபனங்களுக்கு முட்டுக்கட்டையாயிருப்பவை, வரையறையற்ற பொறுப்பும், அவை இயங்குவதை உத்தரவாதஞ் செய்வதற்கான அரசாங்க ஆதரவின்மையுமேயாகும்.

**(ஆ) தற்காலக் கூட்டுத்தாபனம் :**

இந்தக் கட்டத்திலே அல்லது இதற்கு எவ்வளவோ முன்னர், கூட்டுப்பங்கு அமைத்தலைவிட கூட்டுறவுக் கம்பெனியமைப்பதையே நீர் நிச்சயித்துக்கொள்வீர். நீர் இருக்கிற சமஸ்தானத்திலேயே அதை அமைத்து நடத்துவீர். கூட்டுறவுக் கம்பெனி பெரிதானதாயிருந்தால் டிலாவர், நியுயோர்சி ஆகிய இடங்களிலே அடையாளத் தலைமைக்காரியாலயத்தை அமைப்பீர். ஏனெனில் இந்த இடங்களிலே கம்பெனிகளைக் கவரத்தக்க முறையிலே இலேசான சட்டதிட்டங்களுண்டு.

பல நூற்றுண்டுகட்கு முன்னர் மிக அருமையாகவே அரசாங்கம் கூட்டு முயற்சிசெய்வதற்கு அனுமதி வழங்கிற்று. அதுவும் அரசனும், பாராளுமன்றமும் அனுமதி கொடுக்கவேண்டும். பொதுநலத்துக்குரிய முயற்சியாலுல் அல்லது ரயில்வே கம்பெனியாலுல் குறிப்பிட்ட ஒரு தொழிலைச்செய்ய ஒரு கூட்டுத்தாபனத்துக்குப் பாராளுமன்றமோ, காங்கிரசோ மனமுவந்து அனுமதி வழங்கும். கிழக்கிந்தியக் கம்பெனி அத்தகைய விசேட உரிமைபெற்ற கூட்டுத்தாபனமாயிருந்தது. புராதன காலத்திலே ரயில்வே கம்பெனிகளும் பெருந்தொகைப் பணம் செலவு செய்தே பாராளுமன்றத்திடம் அனுமதிபெற்றன. நாட் செல்லச்செல்ல நிலைமை மாறிற்று. கடந்த நூற்றுண்டிலே, இந்த முறை தவருனதென்ற எண்ணம் உண்டாயிற்று. காங்கிரசிடமிருந்தோ, பாராளுமன்றத்திலிருந்தோ விசேட அனுமதியின்றியே எவரும் எந்த முயற்சியைச் செய்வதற்கும் விசேட சலுகையளிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்று சட்ட அறிஞருக்கு ஒரு சிறு வேதனம் வழங்கிஞல், சாசனமொன்று தயார்செய்து அதில் உமக்குத் தேவையான அதிகாரங்களையெல்லாம் குறித்துக்கொடுப்பார். அரசாங்கம் எவ்வித தடையுமின்றி அதற்கு அனுமதி கொடுக்கும்.

உமது பற்பொடிக்கம்பெனி விடயத்திலே கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு அமைக்கப்படுகிறதென்பதைக் கவனிப்போம். உமது கூட்டுறவுச் சங்கத்தின் பேரால் 20,000 பங்கை விற்பதற்கு நிச்சயஞ் செய்கிறீர். இவற்றில்

படிப்பகம்

www.padippakam.com


6,600 நீரே வாங்கிக்கொள்கிறீர். 3,300 உமது பங்காளிக்கு விற்கப்படுகிறது. 100 உமது மனைவிக்குக் கொடுக்கப்படுகிறது. எஞ்சிய 10,000 உம் வெளியாருக்கு விற்கப்படுகிறது. ஒவ்வொரு பங்கும் 10 டொலர் ஆரம்பப் பெறுமதியுடையதாயிருந்தாலும், உமது சட்ட அறிஞர் அவற்றைச் சம நிலைவிலையில் விற்கக்கூடாதெனப் புத்திமதி கூறினர். ஏனெனில் சமநிலை விலைக்கு மதிப்புக் கிடையாது.

இந்த 10,000 பங்கும் பொது மக்களுக்கு உள்ளூர்ப் பங்குவங்கிமூலம் விலைப்படுத்தப்படுகிறது. இவை பங்குப் பத்திரங்களில் வியாபாரம் நடத்துபவை. எந்த ஒரு வியாபாரியும் தனது வருமானத்தை வாங்கி விற்கும் விலைகளிலிருந்து பெறுவது போலவே, இவைகளும் பங்குகளை வாங்கி விற்பதினாலேயே தமது இலாபத்தைப் பெறும். வாங்கும் விலைக்கும் விற்கும் விலைக்குமிடையிலுள்ள வித்தியாசமே அவைகளுடைய இலாபமாகும். உமது தொழிற்றுபனம் மிகச் சிறியதாயிருப்பதால், அவை அதிக இலாபத்தைப் பெறவேண்டும். ஏனெனில் உமது பங்குகளை விற்பதற்கு அவை அதிக பணம் செலவு செய்யவேண்டியேற் படும். எனவே பங்குத் தரகர் உமது பங்குகளை 10 டொலர் வீதம் வாங்கி 12.50 டொலர் வீதம் விற்க விரும்புவர். உமது கம்பெனி பெரிய கம்பெனியாயிருந்தால் 12.50 இற்கு விற்கக்கூடிய பங்குக்கு உமக்கு 12.25 டொலரோ 12.40 டொலரோ கிடைத்திருக்கும். வாங்குவோரிடையே அப்போது போட்டி ஏற்பட்டிருக்கும்.

பெரிய கம்பெனியாயிருந்தால் பங்குவங்கியாளன் அதனுடைய பங்குகளெல்லாவற்றையும் தானே வாங்குவதாக உறுதி எழுதியிருப்பான். அதாவது அந்த 10,000 பங்கையும் குறித்த ஒரு விலைக்குத் தான் வாங்கிவிடுவதாக உறுதி செய்து பத்திரம் பிறப்பித்திருப்பான். அவன் விளம்பரப்படுத்திய விலைக்கு அந்தப் பங்குகளெல்லாவற்றையும் பங்குச் சந்தை வாங்கமறுத்தால் அதனால் உண்டாகும் நட்டம் அவனையே சாருமன்றி உங்களைச்சாரமாட்டாது. உங்கள் பங்குவிடயத்தில் பங்கு வங்கியாளன் உறுதி எழுதுவதற்குத் தயங்குவான். உங்களுடைய வியாபாரஞ் சிறிதாயிருப்பதே இதற்குக் காரணம். எனவே "சிறந்த முயற்சி" செய்துபார்க்கலாமென்ற அடிப்படையிலேதான் உங்களுடைய பங்கை அவன் விற்பனைக்கு ஏற்றுக் கொள்வான். எல்லாப் பங்கையும் அவன் விற்கமுடியாவிட்டால் நீங்கள் விரும்பிய முதலைப் பெறமுடியாதிருக்கும்.

நல்லதிட்டமாக எல்லாம் விலைப்பட்டுவிடுகிறது. உமக்கு 1,00,000 டொலர் கிடைக்கிறது. பங்குத் தாபனமானால் அந்தப் பங்குகளை யாருக்கு வங்கியாளன் விற்றான் என்பதைக் கவனிக்கவேண்டும். அல்லது பங்கை வாங்கினவர்கள் மறுபடி அவற்றை வேறு யாருக்காவது விற்றுவிடுகிறார்களா என்பதைக் கவனிக்கவேண்டும். ஆனால் கூட்டுத்தாபனத்தில் அப்படியொன் றும் தேவையில்லை. பங்குவாங்கியவர்களின் பெயர்களைப் பங்குவங்கிக் கம்பெனி பதிவு செய்து வைத்துக்கொள்ளும். தற்செயலாக இப்பங்குப்

www.padippakam.com


பத்திரங்கள் இழக்கப்பட்டால், கருமங்களை நிவிர்த்திசெய்யவும், பங்கு இலா பங்களைப் பங்குக்காரருக்கு நீர் அனுப்பிக்கொள்ளவும் இது துணைபுரியும். பங்குக்காரர் கூட்டத்தைப் பற்றிய அறிவித்தலைக் கொடுக்கவும் இஃது அவசியமாகிறது.

ஒவ்வொரு பங்குக்கும் அதன் சொந்தக்காரருக்கான ஒரு வாக்கு உண்டு. பங்குக்கு ஏற்றபடி இலாபம் கிடைக்கும். 100 பங்குடையவருக்கு 100 வாக்கும், அதற்கேற்ற வருமானமும் உண்டு.

10,000 பங்கு வாங்கிய வெளியார் கம்பெனிக்கு 100,000 டொலர் காசு கொடுத்துள்ளனர். நீரும் உமது பங்காளனும் என்ன கொடுத்தீர்கள். பணம்கொடுத்திருக்கமாட்டீர்கள். அதற்குச் சமமான சொத்தைக் கொடுத் திருப்பீர்கள். யந்திரம், தளவாடம், பொருள்கள் "நல்லெண்ணம்" என்பன கொடுத்திருப்பீர். இந்த "நல்லெண்ணம்" என்பது என்ன? வியாபாரத்தின் உபரிவருமானம்பெறக்கூடிய சக்தி. அது முதல் மயமான பெறுமதி. வியாபாரக் குறி, சொந்தச் செய்முறை, அறிமுறை முதலியவையும் இந்த நல்லெண்ணத்திலடங்குமென்பதை மேலே கண்டாம்.

1929 ஆம் ஆண்டுக்கு முன்னர் நீரும், உமது பங்குவங்கியாளரும் நல்லெண்ணத்தை நீர் விரும்பியவாறு தாராளமாக மதிப்பீடு செய்து உமக்கு 10,000 பங்குக்குப் பதிலாக 20,000 பங்கு ஒதுக்கியிருப்பார். இந்த வழக்கம் "கையிருப்புக்கு நீர் விடுதல்" என்று வழங்கப்பட்டது. இன்று உமது புதிய பங்குகள் கணிசமான அளவுக்குப் பெரிதாயிருந்தால் அவற்றை 1933 இல் உண்டாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுத்திட்டத்தின் ஒரு பிரி வாக அமைந்த செக்கியூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ் கமிஷன் (செக்) என்ற தாபனத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டும். புதிய முதலீடு தவறான உரிமைகளைக் கொண்டிருக்கவில்லையென்பதை அத்தாபனத்தார் ஆராய்ந்து பார்ப்பர். அதன்பின்னரே அனுமதி கொடுப்பர். பங்கின்மதிப்பைப் பற்றி அவர்கள் அபிப்பிராயஞ் சொல்லவோ, உறுதிகூறவோ மாட்டார். வாங்குவோர் சாவதானமாயிருக்கவேண்டுமென்ற கொள்கை இன்றுமுண்டு.

**கூட்டுத் தாபனத்திலுள்ள நன்மை தீமை.**

கூட்டுத் தாபனம் கூட்டுப் பங்குத் தொழிலால் உண்டான பிரச்சினைகளிற் பலவற்றைத் தீர்த்துவிட்டது. பெருந்தொகையான முதலை உண்டாக்கு வதற்கு இது பூரணமானதொரு வழியாகும். இதன் முதலாவது சிறப்பு பங்காளரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளமை. 12.50 டொலர் ஒரு பங்குக்குக் கொடுத்தபின்னர் பங்குதாரர் தனது சொந்தச் சொத்துக்களுக்கு ஆபத்துவருமென்று பயப்படவேண்டியதில்லை. வியாபாரம் முறிந்து எல்லாம் முடிந்தாலும் ஒவ்வொரு பங்காளியும் தனது 12.50 டொலர் பங்கையே இழப்பான். அதற்குமேல் அவனுக்குப் பொறுப்புக் கிடையாது.

www.padippakam.com


கூட்டுத் தாபனமென்பது அரசாங்கம் உண்டாக்கிய சட்ட பூர்வமான ஒரு மாயமனிதன். இஃது அத்துணை முக்கியம் வாய்ந்ததொரு விடயமன்று. இஃது அரசாங்கத்தின் விருப்பப்படியே நிலவுகிறது. அதற்கு வேறு எவ்வித சுய உரிமையும் கிடையாது. தாபனம் கோட்டிலே வழக்குத்தொடரலாம்; அதன்மீது வழக்குத் தொடரப்படலாம். அதனுல் பங்காளிகள் சம்பந்தப் படமாட்டார். கம்பெனியின் உத்தியோகத்தர் பங்காளர்பெயரில் காரியங் களைச் செய்யலாம். பண விடயத்தில் அவர்களை ஈடுபடுத்தலாம். ஆனுல் அவ்வாறு செய்வதற்குரிய அவர்களின் உரிமை பெரிதும் வரையறுக்கப்பட் டுள்ளது. பங்கு பலதடவை மாறிமாறி விற்கப்படலாம். அல்லது கைமாற லாம். 10,000 பங்குக்கும் 10,000 பங்காளரிருக்கலாம். இவற்ருல் தாபனத் தின் சீவனுக்கு ஆபத்து வராது. அஃது எப்பொழுதும் நிலைபெற்றுக்கொண் டேயிருக்கும். பங்காளரில் ஒரு பகுதியினர் மற்றப் பகுதியினரைத் தமது பங்கை விற்கவோ, வைத்திருக்கவோ நிர்ப்பந்தஞ்செய்ய முடியாது. சாதாரணமான வியாபார முடிவுகளைச் செய்வதற்கு ஏகோபித்த சம்மதந் தேவையில்லை. பெரும்பான்மை வாக்குக்கிடைத்தாற் போதும். ஒவ்வொரு முடிவையுஞ் செய்வதற்கு எல்லாப் பங்காளரும் சமுகமாயிருக்கமாட்டார்கள். ஏனெனில் பங்காளர் தொகை பெரிதானதாயிருக்கும். எனவே பங்காளரின் பிரதிநிதிகளாகப் பத்துப்பன்னிரண்டுபேரை இயக்குநர் சபையெனத் தெரிந்தெடுப்பர். இது வருடாவருடம் நடைபெறும் தெரிவு. பாராளுமன்றத் தேர்தல்போலவே இந்தப்பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவர். ஆனுல் பெரிய கூட்டுத் தாபனங்களை உண்மையான சனநாயகமுறையில் நிர்வகிப் பது மிகக் கடினமென்பதை மேலே விளக்குவாம்.

சமீபகாலத்திலே கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்டுவரும் ஒரு வசதியீனத் தைக் குறிப்பிடலாம். இது மிகப் பாரதுரமானதாகி வந்துகொண்டிருக்கிறது. சமட்டி அரசாங்கம் கூட்டுத் தாபனங்கள்மீது வரிவிதிக்கிறது. அதிக இலாபவரியாக யுத்தகாலத்திலே ஒரு கூட்டுத்தாபனம் அதன் இலாபத்திலே 80 விகிதத்தை அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டும். கொரியாயுத்தம் நடைபெற்றபொழுது வியாபாரிகள் அதிக இலாபவரி கொடுக்கவேண்டி யிருந்தது. சமாதான காலத்திலே ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் பெறும் ஒவ்வொரு டொலர் மீதும் 52 வீதத்தை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும். (பங்காளர்கள் தமது பங்கு வருமானத்தின் பேராலே கொடுக் கும் வருமானவரிக்கு மேலாக இந்த வரியைக் கொடுக்கவேண்டும்.)

இது அநீதியான வரியெனச் சில விவேகமுள்ள வியாபாரிகள் உணரத் தொடங்கியிருக்கிருர்கள்[1]. பலர் பங்காளிகளாகவே வியாபாரத்தை நடத்த விரும்புகின்றனர். கூட்டுத் தாபனமாக நடத்துவதாற் சில வரிச் சலுகை

[1]. இங்கே சுருக்கமானதோர் உதாரணமுண்டு. பிரவுண் சகோதரர் இருவர் தலைக்கு 9,600 டொலர் முதல்போட்டு இருவரும் பங்காளிகளாக இருக்கின்றனர். தலைக்கு 19,600 டொலர் வருமானவரி கட்டுகிருர்கள். தலைக்கு 30,400 டொலர் வியாபாரத்துக்குப் பயன் படுகிறது. ஆனுல் இவர்கள் கூட்டுத் தாபானமாகவில்லை. சிமித் சகோதரர் என்போர் 1,00,000 டொலரை உழைக்கிருர்கள். அது வருமானவரி கொடுக்குமுன்னர் இந்த

www.padippakam.com



களுண்டென்பதால் அவர்கள் ஒரு முடிவுக்குவரச் சஞ்சலப்படுகிறார்கள். தற்போதைய சட்டத்திலே ஒரு புறநடையுண்டு. கூட்டுத்தாபன வியாபாரத்தின் பயனாக உண்டாகும் இலாபத்தை பங்காளரிடையே பகிர்ந்து கொடாவிட்டால் ஒருவர் தனிப்பட்ட முறையில் வருமானவரி கொடுக்கவேண்டியதில்லை. பகிர்ந்து கொடுக்கப்பட்ட இலாபங்கள்மீதுதான் வருமானவரி விதிக்கலாமென இப்போது சட்டம் உண்டு. எனவே ஒவ்வொரு டொலர் வருமானத்திலும் 85 சதத்தைத் தனிப்பட்ட வருமானவருவாயாகக் கொடுக்க வேண்டுமென ஒரு தனவந்தர் கேட்கப்பட்டால் அவர் பின்வருமாறு சொல்லக்கூடும். " பங்காளியாக, வியாபாரஞ் செய்வதினால் வரும் இலாபத்தில் நான் என் அவ்வளவு வரிகொடுக்கவேண்டும்? நாம் கம்பெனியைக் கூட்டுறவுக் கம்பெனியாக்கி கூட்டுறவு வரியான 52 வீதத்தைக் கொடுத்து விட்டுப் பங்கு இலாபத்தைக் கொடுக்காமல் விடுவோம்[1] ".

கூட்டுத்தாபனத்தில் இருவழிகளில் வரிசெலுத்தும் தொல்லையைத் தடுப்பதற்கு வேறோர் உபாயம் உண்டு. சுற்றமித்திரரையே பெரும்பான்மை அங்கத்தவராகக்கொண்ட ஒரு கூட்டுத்தாபனத்தின் பங்காளர்கள், தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியைத் தமக்கும் தம் உறவினருக்கும், வேதனமாகவும், உபகாரச்சம்பளமாகவும், விசேட இனமாகவும் பங்கிட்டுக் கொள்ளலாம். இவ்வாறு செலவை அதிகரிக்கும் வழிகளினால் வரிசெலுத்தாதிருப்பதைத் திறைசேரிப் பகுதி தடைசெய்ய முயல்கிறது. ஆனால் அச்செலவுகள் வியாபாரத்திற்காகவா, சொந்த உபயோகத்திற்காகவா செலவழிக்கப்பட்டன என்பதை நிச்சயிப்பது கடினமாகும்.

### கூட்டுத்தாபனம் எவ்வாறு முதலை உண்டாக்கலாம்

உமது பங்கு முயற்சி மேனேக்கியும், பக்கவாட்டுக்கும் விருத்தியடைகிறது என வைத்துக்கொள்வோம். அதாவது அது புதிய பொருள்களை உற்பத்தி செய்கிறது. பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்யும் முறைகளை வகுக்கிறது. பொருள்களை விளம்பரப்படுத்துகிறது. இப்படி வேறு பல

வருமானத்தின்மீது அக்கம்பெனி 46,500 டொலர் கூட்டுவருமானம் கொடுக்கவேண்டும். வரிகொடுத்தபின் எஞ்சிய வருமானத்தைச் சமனானவகையில் கொடுப்பதனால் சிமித் குடும்பம் ஒவ்வொன்றும் 26,750 டொலரைப் பெறும். அதில் தனிப்பட்ட வருமானவரியாக 6,350 டொலர் கொடுக்கவேண்டியிருக்கும். எனவே கூட்டுத் தாபனமாகப் பதிவுசெய்யாதபடியால் பிரவுண் தாபனத்தார் 10,000 டொலர் மிச்சம் பிடித்தனர் (=30,400—20,400). இப்போது கிடைக்கும் பங்கிலாபம் தனிவருமான வரியை 4 வீதம் குறைக்கிறது. இதனால் இரட்டைவரி கொடுப்பது தவிர்க்கப்படுகிறது.

[1] இவர் வரிகொடுப்பதைத் தாமதிக்கப்பார்க்கிறார் என்று மாத்திரமே கூறலாம். இவருடைய வழக்கறிஞர் " முதல் இலாபப் பொருத்தம் " என்ற விதமாக இலேசாக வரிவிதிக்கப்படக் கூடியவாறு அந்த இலாபங்களை முதலாகக் கணிக்க வகை செய்தாலன்றி, அவருடைய இலாபங்களை அவர் பெற்றுக்கொள்ளுங் காலத்தில் அவற்றுக்கு வரிவிதிக்கப்படலாம். எனினும் வரியைக் கொடாமல் தடங்கல் செய்வதால் அவருக்கு ஒரு கால எல்லைவரை பணம் கிடைக்கிறது. வரிகளைப் புதிதாகத் திருத்தும்போது, அவர் தமது கம்பெனியைப் பங்காளராய் வியாபாரஞ் செய்யும் கம்பெனியாகவோ, கூட்டுத் தாபனமாகவோ கருதி வரிவிதிக்கச் செய்யலாம். இதனால் பலர் இரண்டு வழியிலும் நன்மைபெறலாம்.

www.padippakam.com



முயற்சிகளையும் செய்கிறது. புதிதாக எப்படி முதலைச் சேர்க்கலாம்; வாக குறுதிப் பத்திரத்தின் பேரில் கடன் வாங்கலாம்; ஈட்டிலே பொருளைப் பெறலாம்; பங்கு இலாபங்களைப் பங்குதாரர்களுக்குக்கொடாமல் முதலிலே சேர்த்துக்கொள்ளலாம்; கடனாகப் பொருள்களை வாங்கலாம்; இவற்றை விட வேறென்னவழியுண்டு?

**பத்திரங்கள் :**

முதலில் பத்திரங்களை வெளியிடலாம். இவை விசேடமான வாக்குறுதிப் பத்திரங்களே. இவை அழகாக முலாம்பூசிய கடதாசியில் அச்சிடப்பட்டிருக்கும். 1000,500, 100 டொலர் எனப் பலவகையான தரங்களிலே பத்திரங்களை அச்சடிக்கலாம். அப்பொழுதுதான் அப்பத்திரங்களை மறுபடியுந் திருப்பி விற்கக்கூடியதாயிருக்கும். இது ஓர் உறுதிப்பத்திரந்தான். ஆறு மாதத்துக்கொருமுறை குறிப்பிட்டதொரு தொகைப் பணத்தைக் குறிப்பிட்ட சில வருடங்களுக்கு கடன் தீரும்வரை கொடுப்பதாக இப்பத்திரம் வாக்குறுதியளிக்கிறது. அந்த எல்லை வந்ததும், கடன்படும் கம்பெனி தான் பெற்ற கடன்தொகையை சமன்விலையில் திருப்பிக் கொடுத்துவிட உத்தர வாதங் கூறுகிறது. ஓர் உறுதிப்பத்திரம் முதிர்வதற்குச் சில வருடங்களுக்கு முன்னரே, அப்பத்திரதாரருக்கு முன்னேறியே சம்மதித்த ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்துப் பத்திரத்தை மீட்க ஒரு கம்பெனிக்கு உரிமையுண்டு. ஆறு மாதத்துக்கொருமுறை கொடுக்கும் டொலர் கொடுப்பனவு அந்தப் பத்திரத்துக்குரிய வட்டியாகும். இதைக் கூப்பன் கொடுப்பனவு என்பர். ஏனெனில் அந்த உறுதிப்பத்திரத்தின் ஒரு சிறு பகுதியைப் பத்திரதாரர் ஆறுமாதத்துக்கொருமுறை வெட்டிக் கம்பெனிக்கு அனுப்புவார். அவ்வாறு அனுப்பியதும் கம்பெனி தான் அனுப்பவேண்டிய வட்டியை அனுப்பிவிடும்.

கம்பெனிக்கு வருவாயிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன கூப்பன் கொடுப்பனவான வட்டி, கொடுக்கவேண்டிய காலத்திலே கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் மற்றக் கடனாளிகளைப் போலவே கம்பெனி மீதும் வழக்குத் தொடரலாம்.[1] பங்காளிகள் நடத்தும் வியாபாரக்கம்பனி பத்திரங்களைப் பயன்படுத்திப் பணம் கடனாகப் பெறலாம். ஆனால் கடன் கொடுப்போர் அத்தகைய வியாபாரிகளுக்குக் கடன் கொடுக்க விரும்புவதில்லை. அவ்வாறே சிறிய கூட்டுத்தாபனமும் பத்திரம் பிறப்பித்துக் கடன் பெற்றுக்கொள்வது அருமை.

**சாதாரணப் பங்கு :** உறுதிப்பத்திரம் பிறப்பித்தலுக்கு எதிரானதொரு முறைதான் சாதாரணப் பங்குபிறப்பித்தல். சாதாரணப் பங்குதாரர் சட்டரீதியான (equity) முதலைக்கொடுக்கிறார். அவர் இலாபத்திலே

[1] வருமானப்பத்திரங்களென்பவை, வருமானமிருந்தாலேயே வட்டிகொடுக்கக் கூடியவை. அவை சாதாரணமாகப் புழக்கத்திலுண்டு. ஈட்டுறுதிகள் சொத்தின்பேரில் பிறப்பிக்கப் படுபவை. அவை சாதாரணம். சாதாரணப் பங்குகளின் பேரில் மாற்றப்படக்கூடியவை மாற்றுப் பத்திரங்கள். அவை சமீபகாலத்திலுண்டான கலப்புப் பிறவி.

படிப்பகம்

www.padippakam.com


பங்குபெறுகிறுர். வியாபாரம் சம்பந்தமான தீர்ப்புகளில் அவருக்கு அதிகாரமுண்டு. நட்டத்திலும் அவர் பங்குபெறவேண்டும். இவருடைய வியாபாரம் அபாயம் நிறைந்தது. ஏனெனில் உறுதிதாரருக்குக் கொடுக்கவேண்டிய நியம வட்டியைக் கொடாவிட்டால் அவருக்குச் செல்மதியான பங்கு இலாபம் கொடுக்கப்பட மாட்டாது. உறுதிதாரர் குறைந்த வருமானத்தைப் பெற்ருலும் அது அவருக்கு ஒழுங்காகக் கிடைத்துக்கொண்டே வரும். கூட்டுத்தாபனம் முறிந்துபோனுல், அல்லது முறிந்துபோகுந் தறுவாயிலிருந்தாலன்றி, மற்றும்படி. உறுதிதாரருக்கு வியாபாரஞ் சம்பந்தமான தீர்மானங்களில் எவ்வித செல்வாக்கும் கிடையாது. ஆனுல் நல்ல நிர்வாகிகளாஞல் முதல்தரக்கூடிய எல்லாரோடும் நட்பையே வளர்ப்பார்கள்.

**விசேட பங்கு :** உறுதிப்பத்திரம், சாதாரணப்பங்கு ஆகிய இரண்டுக்குமிடையிலுள்ளதொரு பங்குதான் “ விசேடபங்கு ”. இது கூடியபட்சம் நியமிக்கப்பட்ட ஒரு பங்கு இலாபத்தைக் கொடுப்பது. உதாரணமாக அது பங்கின் சமவிலையில் நியமிக்கப்பட்ட நாலு வீதமாயிருக்கலாம். வியாபாரம் எப்படியிருக்கிறதென்பதை இது கவனிப்பதில்லை. விசேட பங்குதாரர் வியாபாரத்திலே இலாபங் குறைந்தாலும், தனக்கு வரவேண்டிய பங்கு இலாபத்தைப் பெறுவார். ஏனெனில் உறுதிதாரர், சாதாரணபங்குதாரர் ஆகிய இருவருக்கும் மத்தியிலேதான் விசேடபங்குதாரர் நிற்கிறுர். விசேடபங்குதாரர் தமது பங்கு இலாபம் முழுவதையும் பெருவிட்டால் சாதாரண பங்குதாரருக்கு எவ்வித பங்கு இலாபமும் கிடையாது.

திரண்ட விசேட பங்கு பெரும்பாலும் பிறப்பிக்கப்படுகிறது. இதன் அர்த்தமென்ன ? 5 வருடம் வியாபாரமந்தமுண்டானதெனக் கொள்வோம். விசேட பங்குதாரருக்குக் கொடுக்கவேண்டிய 4 வீத இலாபப் பங்கு கொடுக்கப்படவில்லை. நல்லகாலம் வந்ததும் 5 வருடமாகச் சேர்ந்த 20 டொலர் தொகையை (5 × 4 டொ.) விசேட பங்குதாரருக்கு முதலில் கொடுத்த பின்னரே சாதாரணப் பங்குதாரருக்கு எவ்வித பங்கு இலாபத்தையுங் கொடுக்கலாம். விசேட பங்கு “ திருப்பிப்பெற்றுக்கொள்ளக்கூடிய ”, “ மாற்றக்கூடிய ” பங்குகளாயிருக்கும். அதாவது திருப்பிப்பெற்றுக்கொள்ளக்கூடியதென்ருல் முன்னே குறிப்பிட்டதொரு விலையில் (உதாரணமாக 103 டொலர் என்போம்) கம்பெனி தனது விசேடப் பங்கைத் திருப்பிப்பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கும். “ மாற்றக்கூடிய ” தென்ருல் விசேட பங்குதாரருக்கு தமது பங்கு ஒவ்வொன்றையும் சாதாரண பங்காகக் குறிப்பிட்டதொரு வீதத்தில் மாற்றும் உரிமையுண்டென்பதே அர்த்தம்.[1]

[1] சில விசேடப் பங்குகள் சாதாரணப் பங்குக்குவரும் இலாபத்திலும் “ பகிர்ந்து ” கொள்ளக்கூடிய வசதியைச் செய்து அதைக் கவர்ச்சியுடையதாக்குகின்றன. அதாவது தனக்கு வரவேண்டிய நியம இலாபத்தைப் பெற்றபின்னர் மேனமிச்சமாயுள்ள இலாபத்தைச் சாதாரண பங்குதாரருடன் பகிர்ந்துகொள்ளும் சலுகை. ஆனுல் இது மிக அருமை. ஒரு கூட்டுத்தாபனம் வேறொரு கம்பெனியில் வரி கொடுக்கிறது. இதனுலேதான் கூட்டுத்தாபனங்கள் விசேடப் பங்கை விரும்பி வாங்குகின்றன.

படிப்பகம்

www.padippakam.com


**பலவகையான ஈடுகள் மூலம் உண்டாகும் நன்மை.**

பணத்தை முதலீடு செய்பவனுடைய நோக்கின்படி பார்க்கப்போனுல் உறுதிப்பத்திரம், விசேடபங்கு, சாதாரணப்பங்கு என்பன ஒன்றிலும் பார்க்க மற்றது அபாயமுள்ளதாயும் பாதுகாப்புக் குறைந்ததாயுமிருப்பதைக் காணலாம். இவற்றுக்கு ஈடாக நல்ல வருமானத்தை, அல்லது முதல் மயமான இலாபத்தைப் பெறக்கூடியதாயிருக்கும். இன்று பாதுகாப்புமிக்கதொரு பத்திரம் $4\frac{1}{2}$ வீத இலாபமும் நல்ல முன்னுரிமைப் பங்கு 5 வீத இலாபமும் உடையனவாயிருக்கும். சாதாரணப் பங்குகள் மதிப்பிலே உயர்ந்து முதல் மயமான இலாபத்தைக் கொடுக்கலாம் என்ற காரணத்தால், பத்திரங்களினுல் கிடைக்கும் இலாபத்திலும் பார்க்கக் குறைவாக ஆரம்பமாகும் பங்கு இலாபத்தைக்கொடுக்கின்றன. ஐ. பி. எம். போன்ற "வளர்பங்கு" களிற் சில, பாதுகாப்பான அரசாங்கக் கடன்பத்திரங்களிலும், மிகக் குறைவான இலாபத்தையே கொடுக்கின்றன. சாதாரணப் பங்குகள் பணவீக்கக் காலங்களிலே மற்றிருபங்குகளிலும் பார்க்கச் சிறந்த முதலீடாக இருப்பது எதனுலென்பதை வாசகர் அறிந்துகொள்வது அவசியம்.

கடன்பத்திரங்களே, மிகப் பாதுகாப்புவாய்ந்த முதலீடுகளென ஒரு தப்பான அபிப்பிராயம் வாசகரிடத்தேயிருக்கலாம். வியாபாரமந்த முண்டான காலங்களிலே பல கம்பெனிகள் முறிந்தன. அதனுல் டொலருக்குச் சில சதங்களேயே அவை கொடுக்கக்கூடியதாயிருந்தன. இதனுல் அவை வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமற்போயின. கம்பெனி முதலீடுகளிலுள்ள அடிப்படை அபாயம், அவற்றின் வருமானச் சக்தி சிலசமயம் குறைந்து போதலே. இதனுல் கம்பெனிச்சொத்துக்களின் பெறுமதி குறைந்துபோகும். கம்பெனி அடிக்கடி தனது கருமங்களைப் புனரமைப்புச் செய்வதுண்டு. அப்பொழுது பங்குதாரர் பலர் முற்றுக ஒதுக்கப்பட்டு விடலாம். நீதிமன்றம் அக்கம்பெனியின் கருமங்களை மேற்பார்வை செய்து நடத்த ஒரு தருமகர்த்தாவை நியமிக்கும். கடன்பத்திரமுடையவர்களுக்குப் புதிய பத்திரங்கள் அல்லது பங்குகள் கூடக்கொடுக்கப்படும். அத்தகைய பங்குகளும் பத்திரங்களும் ஆதியில் அவர்கள் முதலீடு செய்த தொகையின் ஒரு சிறு பகுதிக்கே சமமானதாயிருக்கும். சில கடன்பத்திரகாரருக்கு வேறு பத்திரங்கள் வைத்திருப்போரினும் பார்க்க முன்னுரிமையிருக்கக்கூடும். ரயில்வே கம்பெனிப் பங்குகளில் முதலீடு செய்த பலர் மேலே கூறிய விடயங்களை அனுபவத்தால் அறிந்தது முண்டு.

கம்பெனி நோக்கின்படி கடன் பத்திரம் குறைந்த இலாபத்தைக் கொடுத்தாலும் அது மாற்றமில்லாததும் முன்னேறியே நிச்சயிக்கப்பட்டதுமாயிருக்கும். மந்தமான காலங்களிலே இவை இடரையுண்டாக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



மாறும் விடயத்திலே முன்னுரிமைப் பங்கு சற்றே சிறந்ததாயிருக்கும். வட்டியில்லா முதலே எல்லாவற்றிலும் சிறந்தது[1].

**பிரமாண்டமான கம்பெனிகள் :** எல்லாக் கம்பெனிகளும் மூன்று படிகளைத் தாண்டவேண்டுமென எவரும் முடிபு செய்ய வேண்டியதில்லை. நமது பற்பொடி வியாபாரம் வெற்றியென்ற ஏணியில் வெகுதூரம் ஏறி விட்டது. இக்காலத்துப் பெரிய கம்பெனிகளைப் பற்றியும் அவற்றின்மூலம் அமெரிக்கப் பொருளாதாரத்துக்குண்டாகும் பிரச்சினைகளைப்பற்றியும் இனி ஆராய்வாம். அமெரிக்காவில் 200 பெரிய கம்பெனிகளுண்டு. அவை பணவியாபாரம் சம்பந்தமில்லாத கம்பெனிகள். அமெரிக்கவியாபாரத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக இவை விளங்குகின்றன. ஒவ்வொரு கம்பெனியின் பெயரும் அமெரிக்காவில் ஒவ்வொரு வீட்டிலும் அறியப்பட்ட பெயராகும். தொழிற் கம்பெனிகளில் அமெரிக்க ஸ்டீல், பெத்லகம் ஸ்டீல், அலுமினியம் கம்பெனி ஒப் அமெரிக்கா என்பன அடங்கும். அவற்றோடு நியூயோர்வலி, கலிபோனியா, இந்தியானு, என்றவிடங்களிலுள்ள ஸ்டாண்டர்ட் ஓயில் கம்பெனிகள், டெக்ஸாஸ்கம்பெனி, ஜெனரல் மோட்டர்ஸ், கிரிஸ்லர், போட், சுவிப்ட் அண்ட் ஆமர் இறைச்சி பதனிடும்கம்பெனி, அமெரிக்கன் புகையிலை (லக்கீஸ்), ஆர். ஜே. ரெய்னோல்ட்ஸ் (கமெல்ஸ்), லிகாட் அண்ட் மேயேர்ஸ் புகையிலை (செஸ்டர்பீல்ட்ஸ்), த கிறேட் அட்லாண்டிக் அண்ட் பசிபிக் தேயிலைக் கம்பெனி, சீயர்ஸ் ரூபக், மொண்ட்கமெரி வாட், எப். டபிள்யூ. வூல்வேர்த், ஜே. சி. பென்னி, நாஷனல் டேய்ரி (கிராப்ட்) போர்டென், புறெக்டர் அண்ட் காம்பிள், லீவர் பிரதர்ஸ், முதலியன அடங்கும்.

ரயில்வேக் கம்பனிகளிலே பென்சில்வேனியா, நியூயோர்க் சென்ரல், சதர்ண் பசிபிக் முதலிய பல கம்பெனிகளைக் கூறலாம். பொதுநலக் கருமங்கள் சம்பந்தமான கம்பெனிகளில் முதலில் நிற்பது அமெரிக்கன் டெல் அண்ட் டெல். பண நிருவாகம் சம்பந்தமான கம்பெனிகளைக் குறிப்பிடுவதானல், பாங்க் ஒவ் அமெரிக்கா (கலிபோனியா) பேஸ்ட், நாஷனல் சிட்டி வங்கி (நியூயோக்), சேஸ் மன்ஹாட்டன் வங்கி, கொன்டினெண்டல் இலினோஸ் நாஷனல் வங்கி (சிகாகோ), பேஸ்ட் நாஷனல் வங்கி ஒப் பொஸ்டன், த மெட்ரோபொலிட்டன் லைப் இன்சூரன்ஸ் கம்பெனி, புறுடென்ஷல் லைப், இகுவிட்டேபிள் லைப், முதலியவற்றை அட்டவணைப்படுத்தலாம். 1961 இல் பில்லியன்டொலர் மட்டத்தைத் தாண்டிய சொத்துக்களையுடைய 80 கம்பெனிகள் இருந்ததெனக் குறிப்பிடலாம்.

1 கம்பெனியின் வருமானத்திலிருந்து வரிகட்டுவதற்காகக் கடன்பத்திரவட்டி இலாபத்தைக் கழித்துக்கொள்ளலாம். மற்றக் கருமங்களெல்லாம் சமனுயிருக்கும்போது இந்த வழியையே மற்ற வழிகளிலும் சிறப்பாகக் கொள்வர். இதனுல முதலீடுசெய்வோரிடையே ஓர் ஊக்கம் உண்டாகும். மற்றக் கருமங்களெல்லாம் சமனுயில்லாதபடியால் கடந்த 20 வருடமாகக் கம்பெனிகள் தங்கள் வருமானத்தை மறுபடியும் முதலாகப் பயன்படுத்திவருகின்றன. கடன், வட்டியில்லா முதல் வீதத்தைச் சமநிலையில வைப்பதற்குப் போதிய கடன் பத்திரத்தையே பிறப்பித்தனர். புதிய பங்குகள் அதற்கேற்றவாறு பெருகவில்லை.

www.padippakam.com



பிரமாண்டமான இத்தகைய கம்பெனிகளில் அடங்கியுள்ள பொருளாதாரச் சக்தியைப்பற்றி அறிவதானுல் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ளவேண்டும். பண வியாபாரம் சம்பந்தமில்லாத பெரிய கம்பெனிகளெல்லாவற்றினதும் மொத்தச் சொத்தில் 40 வீதம் இந்தக் கம்பெனிகள் கைவசமுண்டு. வங்கிச் சொத்துகளில் மூன்றிலொரு பங்குக்கு அதிகமானது இவற்றின் கையிலிருக்கின்றன. வீமாக் கம்பெனிகளின் சொத்திலே 85 வீதம் இவற்றின் கையிலுண்டு. பெரிய 200 கம்பெனிகள் வருமானம் தரும் தேசியச் சொத்திலே 1/5 இற்கும் 1/4 இற்குமிடையிலுள்ளவற்றைத் தமது கையில் வைத்திருக்கின்றன. எட்டுத் தொழிலாளரில் ஒருவர் இந்தக் கம்பெனியிலேயே வேலை பார்க்கிருர். 5 கம்பெனிகள், நமது 50 மாகாணங்களில் எதுவும் பரிபாலிக்காத அளவு பணத்தைக் கையாண்டுவருகின்றன.

இக்கம்பெனிகளின் அதிகாரம் திடீரென்று உண்டாகவில்லை. 1900 இற்குப் பின் இவற்றின் விகித முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்தது. 1930 ஐ அடுத்த வருடங்களிலும், இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கும் வரையும் இவை தமது கருமங்களை நிர்வகித்துக்கொண்டு இயங்கின. யுத்த காலத்திலே 200 மிகப் பெரிய கம்பெனிகள் புதிய யுத்த உற்பத்திச் சாதனங்களில் அரைப்பங்குக்கு அதிகமானவற்றை இயக்கி, அடுத்ததாகத் திலிருந்த 800 சிறிய கம்பெனிகள் ஈட்டிய இலாபத்திலும் அதிகமான இலாபத்தையீட்டின. சிறிய கம்பெனிகளும் அதிக இலாபத்தைப் பெற்று வளர்ச்சியடைந்தன.

பெரிய கம்பெனிகளுக்கு இலாபமும் பெரிதாகவேயிருக்கும். இலாப வெற்றி இலாபத்தை உண்டாக்கும்[1]. ஆனுல் கம்பெனி பெரிதாவதற்குப் பொருளாதாரத் தடைகளும், அரசியற்றடைகளுமுண்டு. பெரிய கம்பெனிகளே நாட்டின் தொழில்களையெல்லாம் கபளீகரஞ் செய்கின்றனவென்று பொதுவாகக் கருதப்பட்டு வருவது தவறென்பதைச் சமீபகாலப் பொருளாதார ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. கடந்த 50 வருட காலத்திலே பெரிய கம்பெனிகள் சிறிது பின்னடைந்து விட்டனவென்று புள்ளிவிபரங்கள்மூலம் அறியக்கிடக்கிறது. ஹோட்டல் எப்பொழுதும், ஆனுல், வெவ்வேறுவகையான மக்களால், நிறைந்திருப்பதுபோலவே பெரிய கம்பெனிகளின் அட்டவணையும் மாறிக்கொண்டுவருகிறது. ஆனுல் அது ஆமை வேகத்திலேதான் மாறிக்கொண்டுவரும்.

[1] இலாபம் சம்பந்தமான புள்ளிவிவரங்களை ஆராய்ந்தால், கம்பெனியின் பெருப்பத்துக்கு ஏற்றதாக இலாபமும் அதிகரிக்கும் என்பது தெரிகிறது. ஆனுல் மிகப்பெரிய கம்பெனிகள் சிலசமயம், அவற்றினுஞ்சிறிய கம்பெனியிலும் பார்க்கச் சிறிது குறைவாகவே இலாபம் பெறுவதைக் கவனிக்கலாம். பெரிய கம்பெனிகளைவிட சிறியவையே அதிக நட்டமடைவதுண்டு.

www.padippakam.com



**பெரிய கம்பெனிகளில் உரிமையுமில்லை; ஆட்சியுமில்லை.**

இந்தப் பெரிய கம்பெனிகளில் ஒன்றின் நிர்வாகத்தை ஆராய்ந்து பார்ப்போம். முக்கியமாகக் காணக்கூடிய விடயம் பல்லாயிரக் கணக்கான பங்குதாரர்களே இந்தக் கம்பெனியில் பங்குடையவராயிருத்தல். அதனால் உடைமை பல்லாயிரக்கணக்கானவரிடம் பிரிந்து காணப்படுகிறது. 1961 இல் ஏ. ரி. அண்ட் ரீ. என்ற கம்பெனியிலே 18,00,000 பேர் பங்கு உடையவராயிருந்தனர். இவர்களில் அரைவாசிக்குக் குறைவானவர்களிடம் 10 பங்குக்குக் குறைவாகவே காணப்பட்டது. கால்வாசிப் பங்குகள் 100 பங்குக்குக் குறைவான துண்டுப்பங்குகளாயிருந்தன. எவரும் மொத்தத்தில் 1 வீதம் பங்குகூட உடையவராயிருக்கவில்லை. நியூயோக் பங்குச் சந்தையின் நோக்கம், மக்கள் முதலாளித்துவத்தை உண்டாக்குவது. அதன்படி பொது மக்கள், சமூகத்தின் முதலில் பெரும்பகுதியை, உரிமையாக்குவதே திட்டம். இப்போது 140 இலட்சம் மக்கள் சாதாரணப் பங்குகளையுடையவராயிருக்கின்றனர். ஆனால் பத்தில் ஒருவர்கூடக் கணிசமான அளவு சொத்தைப் பெறக்கூடிய நிலையிலில்லை.

இவ்வாறு பங்குகளைப் பரவலாக எல்லாரும் பெறக்கூடியதாயிருப்பதால், உரிமையும் ஆட்சியும் வேறுபடுத்தப்பட்டுள்ளனவென்று பேர்ள் என்ற ஆசிரியரும் மீன்ஸ் என்பவரும் தாம் எழுதிய நூலிலே எடுத்துக்காட்டியுள்ளனர்[1]. மிகப் பெரிய கம்பெனியிலே உத்தியோகத்தரும் இயக்குநருமாகச் சேர்ந்த நிர்வாகிகளெல்லாரும், எஞ்சிய சாதாரணப் பங்கில் மூன்று வீதத்தையே கொண்டிருக்கின்றனர் எனச் சமீபகால ஆராய்ச்சி தெளிவாக்கியுள்ளது. மிகப் பெரிய பங்குபெற்றிருக்கும் சிறுபான்மைப் பங்குதாரர் 1/5 இற்குள்ள பங்கையே கொண்டிருக்கிறார்கள். இந்த அற்பப் பங்கு "நிர்வாக ஆட்சி" நடத்துவதற்குப் போதுமானதெனக் கருதப்பட்டுள்ளது[2].

**பங்குவியாபாரக் கம்பெனிகளின் வளர்ச்சியும் அவற்றின் செல்வாக்குப் பெருக்கமும் :**

சிறுபான்மைப் பங்குதாரர் ஐந்திலொரு பங்குடையவராய்ச் செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்று குறிப்பிட்டோம். மேலதிகமான சாதாரணப் பங்குடன், கம்பெனி கடன் பத்திரமூலம் கடன்பெறும், அல்லது முன்னுரிமைப் பங்குகள் மூலம் முதலைப்பெருக்கும். 1920 ஆம் ஆண்டு துவக்கம் வாக்கில்லாத சாதாரணப் பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்றுவிட்டு வாக்குள்ள பங்குகளைக் கம்பெனி நிர்வாகிகளுக்கு ஒதுக்கி வைக்கும் ஒருமுறை நிலவிவந்தது. 10 பேர் பங்கிலே ஆதிக்கமுடையவராயிருந்தால் சொத்துரிமையுடையவர் 1 வீதமிருப்பார் எனக் கருதுவது நிசமான நிலையாகும்.

1. A. A. Berle., and Gardner C. Means, "The Modern Corporation and Private Property", (Commerce Clearing House, Inc., New York, 1932.)

2. R. A. Gordon, Business Leadership in the Large Corporation (Brookings Institutions, Washington, 1945), chap. II.

படிப்பகம்

www.padippakam.com



விடயம் இவ்வளவில் முடியவில்லை. 1,00,000 டொலரொடு 10 இலட்சம் டொலர்க் கம்பனியை ஆட்சிசெய்யலாம். ஆனால் 10 இலட்சம் டொலர்க் கம்பெனி 100 இலட்சம் டொலர்க் கம்பெனியில் நூற்றுக்குப் பத்துவீதப் பங்குபெற்றிருந்தால் ஆட்சிசெய்யும். 100 இலட்சம் டொலர்க் கம்பெனி பங்குவியாபாரம் நடத்தும் கம்பெனியானால், 1,000 இலட்சம் டொலர்க் கம்பெனியை இவ்வாறே ஆட்சிசெய்யலாம். ஆரம்பத்தில் ஒரு சிறு தொகைப் பணம் இருந்தால் மேன் மேலும் பங்குகளை வாங்கிப் பெரிய பெரிய கம்பெனிகளை ஆட்சிசெய்யலாம். 1000 இல் ஒரு பங்குடையவரே பெரிய ஆட்சியையும் ஆதிக்கத்தையும் நடத்தக்கூடியவராவர்.

பங்குவியாபாரம் செய்யும் கம்பெனிகளுக்கு இத்தகைய ஆதிக்கம் வந்துசேர்வது வெறும் அறிமுறைக்கருத்தன்று. நடைமுறையில் நிறை வேறக்கூடியதே. 1920 ஆம் ஆண்டையடுத்த வருடங்களிலே இம்முறை யிலே தான் பிரமாண்டமான மராமத்து வேலைகளும், பொதுநலத்துக்குரிய கருமங்களுஞ் செய்யப்பட்டன. அஸோஸியேட்டட் காஸ் அண்ட் எலெக்ரிக் கம்பெனியின் அமைப்பைப் பற்றி எழுதுவதானால் பல எழுதலாம்., 1929 ஆம் ஆண்டிலுண்டான பங்குச் சந்தைமுறிவினால் பங்குதாரருக்கு ஏற்பட்ட பெரிய நட்டங்கள், இத்தகைய பங்கு வியாபாரக் கம்பெனி ஈடு களினாலேயேஉண்டாயின. மிடில் வெஸ்டன் யூடிலிட்டீஸ் என்ற கம்பெனி யில் பங்கு வியாபாரஞ் செய்த சிக்காக்கோவைச் சேர்ந்த முதலாளியான சாமுவல் இன்சல் என்பவரிடம் பங்குகள் வாங்கிய சிறிய பங்குதாரரும் பெரிய பங்குதாரரும் கடைசியில் தமது முதலில் ஒரு சதங்கூட இல்லாமல் எல்லாவற்றையும் இழக்க அவசியம் நேர்ந்தது. இக்காரணங்களால் காங்கிர சும், செக்கியூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ் கமிஷன் என்ற தாபனமுமாகச் சேர்ந்து பப்ளிக் யூடிலிட்டீ ஹோல்டிங் கம்பெனிச் சட்டம் (1935) என ஒன்றை நிறைவேற்றி, பங்குவியாபாரக் கம்பெனிகளுக்குச் சாவுமணியடித் தன. இதனால் அத்தகைய கம்பெனிகள் சிறிது சிறிதாக மறைந்துகொண்டு வருகின்றன.

இத்தகைய மற்றொரு கம்பெனியைப் பற்றிக் குறிப்பிடலாம். இஃது அத்துணைச் செல்வாக்குள்ள கம்பெனியன்று. கிறிஸ்டியானா செக்யூரிட்டீஸ் கம்பெனியினுடைய பங்கின்பெரும்பகுதியை டூபொண்ட் குடும்பத்தினரே வாங்கியிருந்தனர். இந்தக் கம்பெனியே, ஈ. ஐ. டு பொண்ட் டீ நெமூர்ஸ் என்ற இரசாயனக் கம்பெனிக்குரிய காற்பங்கு வாக்குரிமையுள்ள பங்கையும் வாங்கியிருக்கிறது. இந்த நெமூர்ஸ் கம்பெனி, ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியின் $\frac{1}{4}$ பங்கு நலவுரிமைகளில் உரிமையுடையது. சமஷ்டி நீதிமன்றங்கள், சமீபத்தில் இந்த டு பொண்ட் கம்பெனி, ஜெனரல் மோட்டார்ஸ் பங்குகளை விற்றுவிடவேண்டுமென்று தீர்ப்புக்கூறியுள்ளன.

**பெரிய கம்பெனிகளில் தலைமையும் ஆட்சியும் :**

பிரமாண்டமானதொரு கம்பெனியைச் சனநாயகமுறையில் நிர்வாகஞ் செய் வது தொல்லைதருவதாகும். வருடாந்தக் கூட்டம் நடந்தால் 12 பங்குதாரர்கள்

படிப்பகம்

www.padippakam.com



கூடச் சமூகமாயிருப்பது அருமையாயிருந்தது. இப்பொழுது பலநூற்றுக் கணக்கானோர் வருகிறார்கள். இதற்கு ஒரு காரணம் அங்கே கொடுக்கப் படும் உணவு. மற்றது வேடிக்கை பார்க்கவும் நிர்வாகிகளைக் கேள்வி கேட்டுக் கேலிபண்ணவுமே அவர்கள் வருகிறார்கள்.

வருடாந்தக் கூட்டங்களிலே "பிரதிநிதித்துவ" தீர்மானங்கள் செய்யப்படுகின் றன. ஒவ்வொரு பங்குதாரரும் தமது பிரதிநிதித்துவத்தை எழுதி அறிவிக்கு மாறு வேண்டப்படுவர். சிலர் பதில் எழுதவேமாட்டார். ஆனால் கூட்டத் துக்கு நிறைவெண்ணை கோரம் சேரக்கூடியதாகப் பார்த்துக்கொள்வர். அத்துடன் நிர்வாகத்துக்குப் பெரும்பான்மை வாக்குக் கிடைக்கக்கூடியதா கவுஞ் செய்வர்.

செக் என்று சொல்லப்படும் செக்கியூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ் கமிஷன் கம்பெனிகளில் சனநாயகமுறை அனுட்டிக்கப்படக்கூடியவாறு, வருடாந் தக்கூட்டங்களிலே தீர்மானிக்கப்படவிருக்கும் பிரேரணைகளைப் பிரதிநிதிக் கூற்றிலே குறிக்கப்படவேண்டுமென்றும் அதன் பிரகாரம் பங்குதாரர் தமக்கு எது அதிகம் பிரியமானதென்பதைத் தெரிவிக்கலாமென்றும் விதித்திருக் கிறது. எதிர்க்கட்சியிலுள்ளவர்களும் பங்குதாரருக்கு எழுதியறிவிக்க வசதியளிக்கப்பட வேண்டுமென்றும் இன்னோரன்ன வேறு விடயங்களும் அதில் கூறப்பட்டுள்ளன.

அண்மையில் சில வருடங்களுக்கு முன், பெரிய கம்பெனிகளின் நிர் வாக அமைப்பில் மாற்றமெதுவுமின்றிக் காரியங்கள் நடைபெற்றன. கம் பெனிக் கருமங்கள் திறம்பட நடந்தாலென்ன நடக்காவிட்டாலென்ன, மானேஜர்மார் திறமையாக வேலைசெய்தாலென்ன செய்யாவிட்டாலென்ன, சிறிய பங்குதாரர் அந்த நிலையை மாற்றுவதற்குச் சக்தியற்றவராயிருந் தார். அவர் தமது சம்மதத்தை ஒன்றில் மாமூலாகத் தெரிவிக்கவேண்டி யிருந்தது, அல்லது வாக்களிக்காமலே தமது உணர்ச்சியை வெளிக்காட்டி விட்டுப் பேசாமலிருக்க வேண்டியிருந்தது. இவ்விருவகைச் செயல்களாலும் நிர்வாகிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாதிருந்தனர்.

சமீபகாலத்திலே சிறிது மாற்றங்கள் காணப்பட்டன. செக் பிரமாணங்கள் செய்த சகாயத்தினால் சிறுபான்மைக்குழுவினர், ஆட்சி நடத்திய நிர் வாகிகளைக் கலைத்துவிட்டுத் தாமே நிர்வாகிகளாக அமர்ந்துகொண்டனர். காலஞ்சென்ற ரொபேட் யங் என்பவர் ஒரு பெரிய கிளர்ச்சி நடத்தினார். நவீன விளம்பரமுறைகளையெல்லாம் பயன்படுத்தி நியூயோக் சென்ட்ரல் ரயில்வே உத்தியோகத்தரை நீக்குவதில் வெற்றிபெற்றார். அவருக்குப் பெரும்பான்மை ஆதரவு கூடக் கிடைத்தது. நியூஹேவன் ரயில்பாதை, மொண்ட்கொமெரி வார்ட் என்பவை சம்பந்தமாகவும் இத்தகைய போராட் டங்கள் நடந்தேறியுள்ளன. பங்குதாரரின் செல்வாக்கு கம்பெனி நிர் வாகத்தில் மேலோங்கி, சனநாயகமுறையில் கருமங்கள் நடக்கும் ஒழுங்கு அபிவிருத்தியாகியுள்ளதெனக் கூறலாம். ஆனால் சாதாரண நிலைமைகளில், கம்பெனி நிர்வாகிகள் உத்தியோகத்திலிருப்பதை விலக்கமுடியாதெனவும்

www.padippakam.com



கம்பெனியிலே மிக மோசமான நிர்வாக ஊழல் நடந்தாலொழிய இதை மாற்ற முடியாதெனவும் விடயத்தைக்கவனித்துவருவோர் கூறுகின்றனர். பிரதிநிதிகள் மல்லுக்கட்டுவது, எந்தச் சிறுபான்மைக்குழு ஆட்சிக்கு வரும் என்பதை நிச்சயிப்பதற்கே.

**நிர்வாகத்திற் புரட்சி :**

கம்பெனியின் சார்பான முடிவுகளை யார் செய்கிருர்கள் ? நிர்வாகம் என்றதுறையில் நிபுணத்துவம் பெற்ற முகவர்களே. பழங்காலத்து வியாபார முதலாளியாயிருந்தவர் பெரிய கம்பெனியைக் கட்டியெழுப்பும் திறமையும் ஆக்கச் சக்தியுமுடையவர். அபாயங்களைப் பொருட்படுத்தாது முன்னேறக் கூடிய துணிவுள்ளவர். இவரிடம் சாகச உணர்ச்சியும், பொது மக்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாத தன்மையும் காணப்பட்டன. கம்பெனிகள் இப்போதெல்லாம் அவற்றின் தாபகர்களை நீக்கிவிட்டுப் புதிய நிர்வாகிகளை நியமித்துவருகின்றன. இவர்களுக்குப் புதிய சிறப்புப் பெயர் வழங்கப்படுகிறது. இத்தகையதொரு நிர்வாகி தானுகவே பயின்று முன்னுக்கு வந்தவனுனல் விசேடப் பயிற்சியும் நிர்வாகத் திறமையும் பெற்றிருப்பான். புதிய நிர்வாகி பொதுமக்களோடு தொடர்பு கொள்வதிலே சாதுரியமுடையவனுயும், மக்களோடு இனிமையாகப் பழகுவதில் திறமையுடையவனுயுமிருப்பான். இருக்கும் நிர்வாக அந்தஸ்தை மாருமல் வைத்திருப்பதற்கும், அபாயம் நிறைந்த கருமங்களைத் துணிவோடு செய்வதற்கும் தைரியமுள்ள "உத்தியோக இனத்தவனுய்" அவன்காட்சியளிப்பான்.

கம்பெனியின் தலைவரே முக்கியமானவரும் அதிக செல்வாக்குள்ளவருமாயிருப்பார். வயது முதிரமுதிர அவருக்கு இயக்குநர்சபையின் தலைமைப் பதவி வழங்கப்படும். சபையின் சபாநாயகர் பெரும்பாலும் பழுத்த அரசியல்வாதியாயிருப்பார். அவர் இயக்குநர் சபையிலிருந்து தெரியப்பட்ட ஒரு நிர்வாகக் குழு அல்லது காரியக்குழுவுடன் சேர்ந்து, தலைவர், உப தலைவர்கள் என்போரின் செயல்களை ஆமோதிப்பதுடன் அவர்களுக்கு ஆலோசனையும் கூறுவார்.

இயக்குநர் சபையின் வேலை, கம்பெனிக்குக் கம்பெனியும், குழுவுக்குக் குழுவும் வித்தியாசப்படும். சில இயக்குநர் பெயர்போன பிரசையாயிருப்பர். கம்பெனிக்கு அந்தஸ்துத் தேடுவதற்காக அவர் இயக்குநர் குழுவில் சேர்க்கப்படுவர். வேறு சிலர் விசேட அறிவுடையவராயிருந்து கம்பெனியின் கொள்கையை நிச்சயிக்கும் முறையில் ஆர்வத்தோடு கடமை செய்வர். இயக்குநர் சபையின் அங்கத்தவரிலே பெரும்பாலோர் கம்பெனி நிர்வாகிகளின் முடிவுகளுக்கு ஆமாப் போடுவோராகவேயிருப்பர் எனக் கூறிவிட முடியாது. ஆனல் இயக்குநர்சபையின் நம்பிக்கை நிர்வாகிகள் பக்கம் இருக்குமானல், குறிப்பான கொள்கைகளை அவர்களுக்குத் திட்டமிட்டுக் கூற அச்சபை முன்வரமாட்டாது. அந்தவகையில் இயக்குநர்சபை நிர்வாகிகள் விடயத்திலே தலையிடாது. தருமகர்த்தாக்கள் தருமச் சொத்தைப் பரிபாலிப்

www.padippakam.com



பதுபோலவும், பாராளுமன்றமுறைப்படியுள்ள மந்திரி சபை ஆட்சிசெய்வது போலவுமே இயக்குநர்சபை கம்பெனிவிடயங்களைப் பரிபாலிக்கும்.

பொதுவிலே முகவர்க்கும், பங்குதாரர்களுக்குமிடையிலே இலட்சியம்பற்றிய முரண்பாடுகள் ஏற்படா. கம்பெனியின் இலாபத்தைக் கூடிய அளவுக்குப் பெருக்குவதே இரு கட்சியாருடையவும் நோக்கமாகும். இரண்டு முக்கியமான சந்தர்ப்பங்களிலே சுயநலங்கள் வித்தியாசப்படலாம். ஆனால் ஈற்றில் அவை முகவர்சார்பாகவே தீர்த்துவைக்கப்படும். முதலாவது சந்தர்ப்பம், உடைவ்டுக்காரர் சட்டமுறைப்படியோ அதற்கு மாறாகவோ வாக்களித்து, தமக்கும் தம் நண்பர்க்கும், சுற்றத்தவர்க்கும், பெரிய சம்பளங்களையும், செலவுப்படிகளையும், உபகாரச்சம்பளங்களையும், பென்ஷனையும், பங்குகளையும் பங்குதாரரின் செலவில் பெற்றுக்கொள்ளலாம்[1].

இரண்டாவது சந்தர்ப்பம் பங்குபிரிக்கப்படாத இலாபத்தைப்பற்றியது. கம்பெனி வளர்ந்து செழிப்படையவேண்டுமெனக் கம்பெனி முகவர்கள் எண்ணுவது சகசம். இதற்குச் சுயநலமென்று கூறமுடியாது. உளவியல் சம்பந்தமான இந்தக் காரணம் மிகச் சூக்குமமானது. பங்குதாரர் சில சமயம் தமது முதலை வேறு முதலீடுகளில் நயமாகப் போடலாமென்றோ, தாமே அனுபவிக்கலாமென்றோ நினைக்கலாம். அச்சந்தர்ப்பங்களில் இலாபத்தை என் முதலோடு சேர்த்துவிடக்கூடாது எனக் கேட்பதற்கு இடமுண்டாகும். சிலசமயம் முதலைப் பங்குதாரருக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டுக் கம்பெனியை மூடிவிடுவதே சிறந்தவழியாகத் தோன்றலாம். ஆனால் நிர்வாகிகள் தம்முடைய வேலையைவிட்டு நீங்குவதற்குத் தாமே முயலுவார்களோ என எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் சுபாமுள்ள சிலர் கூறலாம்.

**ஏகபோக உரிமையினாலுண்டாகும் தீமை :**

மேலே காட்டிய காரணங்களை முன்னிட்டு அமெரிக்காவிலுள்ள முக்கியமான கம்பெனிகளெல்லாம் பிரமாண்டமான கம்பெனிகளாயிருப்பதைக் காணலாம். குறிப்பிட்ட அவர்களுடைய தொழிலின் உற்பத்தி, அக்கம்பெனிகளின் முக்கியத்துவத்திலும் பெரிதாயிருக்கும். படம் 1 இல் பெரிய அமெரிக்கக் கம்பெனிகளின் அட்டவணையொன்றுண்டு. அவற்றின் செறிவும் காட்டப்பட்டுள்ளது. முதல் நாலு பெரிய கம்பெனிகளும் வேலைக்கமர்த்தும் பூரணத் தொழில்வேலையாட்களோடு அடுத்த நாலு கம்பெனிகளின் வேலையாட்களையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

[1] நேரடியான மோசடி மற்றொருவகைப் பிணக்குக்கு ஏதுவாகும். நிர்வாகிகள் இலஞ்சம் பெறலாம் ; தமது கம்பெனிகளுக்கே வியாபார சகாயத்தைச் செய்யலாம். உள்ளிரகசியங்களை அறிந்து தவறான வீண்கதைகளைக் கட்டிக் கம்பெனிப் பங்குகளில் இலாபம்பெறப் பார்க்கலாம். கிறிஸ்லர் கம்பெனியின் தலைவர் சமீபகாலத்தில், விநியோகிக்கும் கம்பெனியொன்றிலே இரகசியமாக உரிமை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதால் தமது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டியதாயிற்று. இன்சூரன்ஸ் நிர்வாகி ஒருவர், தாம் வேலைசெய்யும் கம்பெனியோடு வியாபாரம் நடத்திய மற்றொரு கம்பெனியுடன் வரிவியாபாரஞ் செய்ததால் கண்டிக்கப்பட்டார். இத்தகைய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவானாலும் அத்துணைக் குறைவெனக் கூறமுடியாது.


www.padippakam.com


நூலின் மூன்றும் பிரிவிலே ஏகபோக உரிமை, பூரணமற்ற போட்டி என்பவற்ருலுண்டாகும் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வோம். கடந்த 75 வருடமாக, குறிப்பாய் 1890 ஆம் ஆண்டின் ஷேர்மன் அன்ரிரஸ்ட் சட்டத்தின் பின்னர், பிரமாண்டமான கம்பெனிகள் சுயேச்சைப்போட்டிச் சந்தைகளைக் குலைக்கும் போக்கைப்பற்றி அச்சமிருந்து வருகிறது.

பின்வரும் ஏகபோக உரிமைத் தந்திரங்களில் எவற்ருல் விலை ஏறுகிற தென்பது பொருளாதார நோக்குப்படி முக்கியமானதன்று.

(1) போட்டியிடும் கம்பெனிகள் ஒன்று சேர்தல், (2) கம்பெனிகளின் கூட்டுவியாபார உடன்படிக்கை (காட்டல்), (3) பொறுப்பாட்சி (தெரிந் தெடுக்கப்பட்ட சில "தருமகர்த்தாக்கள்" விலைக்கொள்கையைத் தொடர்புபடுத்துவர்), (4) இயக்குநரை இணைத்தல், (5) பங்குவியா பாரக் கம்பெனியைப் பரிபாலித்தல், (6) இரகசியமாய் உடந்தை யாயிருத்தலும் வியாபாரச் சங்கமுயற்சியும், (7) அரசாங்கத்தின் "நியாயமான விலைச்சட்டமும்" (ரொபின்சன்—பாட்மன் சட்டம் முத லியன) அரசாங்க ஆதரவுள்ள "பொருள் உடன்படிக்கை" யும் (கோதுமை, ரப்பர், பருத்தி முதலியன). உச்சவிலைவைப்பதும், வளங் களை வீணுக்குவதும், ஏகபோக உரிமை இலாபங்களை உண்டாக்கு

சில தொழில்களில், ஒரு சில விற்பனையாளரே இருப்பர்.




**படம் 1.** அலுமினியம், கார், உருக்கு முதலிய தொழில்களில் சிலகம்பெனிகள் பெரும் பகுதியான தொழிலைப்பெற்றுவிடுகின்றன. இது, கணக்கற்ற சிறியவியாபாரிகள் பூரணபோட்டி யோடு தொழில் செய்வர் எனபதற்கு முரணுனது. உதாரணமாக (விவசாயியைக்கூறலாம்.) இவர்கள் மிகச்சிறிய வியாபாரிகளானபடியால் சந்தைவிலை இவர்களுடைய முயற்சியால் பாதிக் கப்படமாட்டாது. இதனேடு மேலே கூறிய பெரிய வியாபாரத்தை ஒப்பிட்டுப்பார்க்கலாம். ஆனல் எம்.ஐ.ரி. நிபுணரான எம்.ஏ.அடில்மன் 1900 இல் செறிவு இன்றிருப்பதிலும் அதிக மாயிருந்ததாகக் கருதுகிருர் (பெடரல் வியாபாரக் கமிஷன்.)

www.padippakam.com



வதும் எல்லாம் பொருளாதாரத் தீமைகள். இவை எவ்வாறு உண்டானுலென்ன, சட்ட நுணுக்கம் எவ்வாறிருந்தாலென்ன தீமைகளே. இதுபற்றி இந்நூலின் மூன்றும் பாகத்திலே படிப்போம்.

**பெரியதென்ற பயம்:**

**ஒரு கம்பெனி பெரிதாயிருப்பது கெடுதியை உண்டாக்குமா?**

பெரிய கம்பெனிகளை மக்கள் விரும்புவதில்லை. ஜெனரல் மோட்டர்சும், ஐக்கிய அமெரிக்க உருக்குத் தொழிலும், தமது தொழிலில் 9110 பகுதியையாவது உற்பத்தி செய்யும் வரை போட்டியாளரைக் கபளீகரஞ் செய்துகொள்ளமாட்டா. பொதுசன அபிப்பிராயத்தை அவை கவனிக்கும். பிரமாண்டமான கம்பெனிகளுக்கெதிராக உள்ள எதிர்ப்பு அது பெரியது என்பதாலா ? அல்லது அது ஏகபோக உரிமையுடையது எனபதாலா ? பொது நன்மைக்கேதுவானதும், நன்னடத்தையுள்ளதும், திறமையுள்ளதுமான பிரமாண்டமான கம்பெனியானுல் பொதுசன அபிப்பிராயம் எப்படியிருக்கும் ?

“ஏ அண்ட் பி” என்ற கம்பெனி இதற்கு நல்ல உதாரணமாகும். இந்தக் கம்பெனி சங்கிலித்தொடர்போல அநேக உணவுப்பொருட் கடைகளை வைத்திருக்கிறது. இருந்தும் நீதியிலாகா இக்கம்பெனிமீது, தர்மச் சொத்துக்கு எதிர்ச்சட்டங்களென்ற சட்டங்களின்கீழ் வழக்குத் தொடர்ந்தது. இக்கம்பெனி சிறிய ஒழுங்கீனங்களிலே ஈடுபட்டிருக்கலாம். ஆனுல் அடிப்படைக் கேள்வி இதுதான் ; திறமையாலும், மலிவான போட்டிவிலைக்குப் பொருள்களை விற்கக்கூடியதன்மையை நிலைபெறச் செய்தமையாலும் இக்கம்பெனி பிரமாண்டமான கம்பெனியாய் வளர்ச்சியடைந்தது. இது தவரு ? பெடரல் நீதிமன்றம் இதைத் தவறு என்ற வகையிலே தீர்ப்புக் கூறக்கூடியதாயிருந்தது.

கொள்கை சம்பந்தமான பிரச்சினைகள் சுலபமானவையல்ல என்பதைக் காட்ட மற்றோர் உதாரணமுண்டு. 1955 ஐ அடுத்த ஆண்டுகளில் மோட்டார் கம்பெனிகள் பல ஒன்று சேர்ந்தன. நாஷ் கம்பெனி ஹட்சன் கம்பெனியோடு சேர்ந்தது. ஸ்ருடிபேர்க்கர் கம்பெனி பக்காட்கம்பெனியோடு சேர்ந்தது. இவை வரிகளினும் கண்ணோட்டஞ் செலுத்தின. சில சந்தர்ப்பங்களிலே ஜெனரல் மோட்டர்ஸ், போட் என்ற கம்பெனிகளோடு போட்டியிடுவதற்காகத் திறமையோடு தொழில் செய்யவே ஒன்று சேர்ந்தன. இவ்வாறு சேர்வதால், சேர்ந்த கம்பெனிகளின் அளவு பெருத்தது உண்மையானுலும், அவை போட்டியைக் குறைக்கின்றனவா ? கூட்டுகின்றனவா ? (பெத்லஹேம், யங்ஸ்டவுன் என்ற கம்பெனிகள் ஒன்று சேர்வதை அட்டர்னி ஜெனரல் தவிர்த்தது தவரு ?)

அணுக்குண்டு செய்வதற்கு அரசாங்கம் டு பொண்ட் கம்பெனியிடம் தஞ்சம் புகுந்தது. அதற்கு உற்பத்திச் செலவோடு ஒரு டொலர் என்ற உடன்படிக்கையையும் எழுதிற்று. ஜெனரல் அண்ட் வெஸ்டேர்ண் மின்

www.padippakam.com



சாரக் கம்பெனியின் விஞ்ஞான அறிவுநுட்பம் சமாதான காலத்திலும் போர்க் காலத்திலும் மிக்க பயன்தரக்கூடியது. அதைப்பற்றி 1950 இல் இறந்து போன உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான ஷூம் பீட்டர் பின்வருமாறு எழுதியுள்ளார்[1] : சுதந்திரமான "பெரிய வியா பாரம்" நடைபெற்ற காலத்திலேதான் பெரும்பாலான மக்களின் தற் கால வாழ்க்கைத் தரம் வளர்ச்சியடைந்தது. இக்காலத் தொழிலாளியின் வரவு செலவுத் திட்டத்திலே இடம் பெற்றுள்ள அமிசங்களை அட்டவணைப் படுத்தி, 1899 ஆம் ஆண்டிலிருந்து அவற்றை வாங்கக் கூடிய விலையை, பண அடிப்படையில்லாமல், அவற்றை வாங்கக்கூடிய வேலை யடிப்படையின் மணிநேரக் கணக்கிலே—அதாவது ஒவ்வொரு வருடத் தின் பணவிலையையும் ஒவ்வொரு வருடத்தின் மணிநேரச் சம்பள விகிதத் தால் பிரித்துக் கணித்துப் பார்த்தால் அந்த அமிசங்கள் எவ்வளவு தூரம் துரிதமாக முன்னேறியுள்ளன என்பதை அறியலாம். அவ்வமிசங்கள் பண்பிலும் மிகச் சிறப்புடையனவாய் முன்னேறியதை அவதானிக்கலாம். இந்த முன்னேற்றம் முன்னெப்போதுமில்லாததொன்றென அறியலாம். ....அது மட்டுமன்று. முன்னேற்றம் மிக அதிகமாக, அடைந்த அமிசங் களை விபரமாக ஆராயும் போது, அதற்குக் காரணமாயிருந்தவை சுதந் திரமான போட்டிமுறையில் தொழில் நடத்திய கம்பெனிகளல்லவென்ப தும் உண்மையில் அந்நிலைமைக்கேதுவாயிருந்தவை பெரிய கம்பெனி களேயென்பதும் தெளிவாகிறது. இவை விவசாய யந்திர உற்பத்தியில் இந்நிலையை உண்டாக்கின. போட்டி வியாபாரத்துறையிலும் இந்தவகை யில் முன்னேற்றமுண்டாயிருப்பது உண்மையே. இவற்றிலிருந்து நாம் அனுமானிக்கக் கூடிய முடிபு என்னவென்றால் பெரிய கம்பெனிகளே பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு ஏதுவாயிருந்தன வென்பதே.

வருங்காலப் பிரச்சினை நாம் சிறிய போட்டி வியாபாரத்துக்குப் பதிலா கப் பெரிய கம்பெனிகளைத் தாபிப்பதா என்பதன்று. பிரமாண்டமான கம்பெனிகளின் சமூக, பொருளாதாரத் தொண்டுகளை எவ்வாறு சீர்திருத்

[1] ஜே.எ. ஷூம் பீட்டர் எழுதிய **Capitalism, Socialism and Democracy (Hamper, New York 1942.)** என்றநூலில் போட்டி விவசாயத்திலே உற்பத்தி சம்பந்தமாயேற்படும் மாற்றங்களை இது மறுக்கவில்லை. பல அடிப்படைக் கண்டுபிடிப்புக்கள் தனிப்பட்டவரிடமிருந்தும் சிறிய கம்பெனிகளிடமிருந்தும் வருகின்றன என்பதையும் மறுக்கவில்லை. ஏகபோகஉரிமை பெரிதும் காணப்பட்ட 1890 ஐ அடுத்த 10 வருடங்களில புதிய கண்டுபிடிப்புக்கள் அதிகம் உண்டாகவில்லை யென்பதையும் மறுக்கவில்லை. **American Capitalism (Houghton Mifflin, Boston 1952)** என்றநூலில் ஜே.கே. கல்பிரேத் "எதிர்யாருணசத்தி" என்று ஒரு கொள்கையை விளக்கு கிருர். அங்கே பெரிய எடுப்பில் நடத்தும் கருமங்களே அமெரிக்க வாழ்வின் தன்மை என்றும், ஆனல் "பெரியதொழில்" வாய்ப்பு பெரிய தொழின் முயற்சியைக் கட்டுப்படுத்துகிறதென்றும், பெரிய தொழின்முயற்சி பெரியதொழில வாய்ப்பைக் கட்டுப்படுத்துகிறதெனறும் கூறுகிருர். அத்துடன் பெரிய சியர்சும், எ அண்ட் பி யும் பெரிய விநியோகத்தரைக் கட்டுப்படுத்துகிறன்றன வென்றும் போட்டித் தினுசானதல்லாவிட்டாலும் இதனுல் ஒருவகையான சமநிலையுண்டாகிற தென்றும் கூறுகிருர்.

www.padippakam.com



தலாமென்பதே பிரச்சினே. பொதுநன்மையைக் கருத்திலே கொண்டு இந்தப் பெரும் கம்பெனிகளின் ஆக்கச் சக்தியைப் பயன்படுத்த வழிவகைகளைத் தேடவேண்டும். வருங்காலத்தில் இதையே நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டும். பூரணப்போட்டியிலும், பூரணமற்ற போட்டியிலும் விலைகளும், உற்பத்திச் செலவுகளும் எவ்வாறு அமையுமென்பதை இந்நூலின் மூன்றும் பகுதியில் ஆராயும்போது, " பயனுள்ளதும், நடைமுறையிற் செயற்படக் கூடியதுமான போட்டியை " எவ்வாறு பரிபாலிக்கலாமென்ற பிரச்சினையை ஆராய்வோம்.

## தொகுத்துக் கூறல் :

**(அ) வியாபார அமைப்பு வகை :**

1. இன்றைய அமெரிக்காவின் தொழில்கள், எராளமாகத் தோன்றியும் மறைந்தும் வந்த தொழில்களில், உயிரோடு தப்பியதொழில்கள் சேர்ந்த எச்சமேயாகும். மிகச் சிறிய தொழில்களைச் சில்லறையாக நடத்தும் சிறிய வியாபாரிகளின் தொகையே அதிகம். வியாபாரமும் துரிதமாக நடைபெறும்.

2. ஒரு தொழிற்றுபனம் எவ்வாறு வளர்ச்சியடைகிறது ; குறுகியகால முதலைப்பெற அது என்ன வழிவகைகளைக் கைக்கொள்ளலாம் ; நீண்டகால முதலைப்பெற என்ன செய்யலாம் ; தனிச்சொந்தமான வியாபாரம், பங்காளிகளாகச் சேர்ந்து செய்யும் வியாபாரம் என்பவற்றிலும் பார்க்கப் பெரிய கூட்டுத்தாபன வியாபாரத்திலுள்ள நன்மை தீமைகள், எவை என்பவற்றை அறியவேண்டும்.

**(ஆ) இக்காலக் கம்பெனிகள் :**

1. கம்பெனி விடயத்தில் சம்பந்தப்பட்ட அடிப்படைச் சட்ட உரிமைகளைப் பற்றியும், கடன்பத்திரம், முன்னுரிமைப்பங்கு, சாதாரணப்பங்கு என்பவற்றைப் பற்றியும் ஒருவர் அறிந்திருக்கவேண்டும்.

2. உரிமையைப் பிரித்துவிடுதல், நிர்வாக ஆட்சி, இக் காலத்தில் நிலவும் பிரமாண்டமான கம்பெனிகளில் நிலவும் பொருளாதாரச் செல்வத்தின் திரட்சி, ஏகபோக உரிமைச்சக்தி என்பன சம்பந்தமாக உண்டாகும் பிரச்சினைகள் கூர்ந்து ஆராயப்படவேண்டியனவாகும். (மூன்றும் பாகத்திலே பூரணமற்றபோட்டி, தருமகர்த்தாக் கொள்கைக்கு மாறுன கொள்கைகள் என்பனபற்றி ஆராயப்படும்.)

பொருளாதாரத்தை நன்கு அறிவதற்குக் கணக்கு வைக்கும் முறையை அறிதல் பயனுடையது. இந்த அத்தியாயத்தின் அனுபந்தத்திலே அது பற்றிய அடிப்படைக் கொள்கைகள் ஆராயப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள் :**

1. நீர் ஒரு தொழிலைத் தொடங்குகிறீர் எனக் கற்பனை செய்துகொண்டு அதன்வரலாற்றை எழுதுக.

2. (அ) தனிச்சொந்தமான வியாபாரம் ;
(ஆ) பங்காளிகளோடு செய்யும் வியாபாரம் ;
(இ) கூட்டுத்தாபன வியாபார நிர்வாகம் என்பவற்றின் நயநட்டங் களை ஆராய்க.

3. ஒரு வியாபாரம் பெரிதாக வளர்வதற்குரிய காரணங்களெவை ?

4. சிறிய, மத்திமமான, பெரிய வியாபாரங்களுக்கு முதல் சேர்ப் பதைப் பற்றி ஆராய்க.

5. பலவகையான ஈட்டுப்பத்திரங்களின் நயநட்டங்களை ஆராய்க.

6. பிரமாண்டமான பெரிய தற்காலக் கம்பெனியின் அமைப்பை ஆராய்க.

7. எமது யுகம் " மானேஜர் முறைப் புரட்சி, நிர்வாகமுறைப் புரட்சி " என்பவற்றின் யுகம் எனக் கூறப்படுகிறது. அரசாங்கத்துக்கு வெளியி லும் இது பொருந்துமா ?

8. பங்குதாரர், முகவர் என்பவர்களிடையே பலவகையான நலவுரி மைப் பற்றுக்களுண்டு. அவற்றுக்கு உதாரணம் தருக. ஒன்று பட்ட நலவுரிமைக்கு உதாரணம் தருக.

9. " பெரியவியாபாரம் " பெரிதாயிருப்பதை ஆதரிக்க. எதிர்க்க. அதனுலுண்டாகும் கெடுதிகளெவை ?

10. ஏகபோக உரிமையினுல் உண்டாகும் பொருளாதாரத் தீமைகள் எவ்வாறு உண்டாகின்றன. உதாரணம் கூறுக.

11. பலகம்பெனிகள் ஒன்றுசேர்வது எதனுல் ? அதை நீர் ஆதரிக் கிறீரா ? காரணங் கூறுக.

12. பின்வரும் கருத்துக்களைப்பற்றி மறுபடியும் விளங்கிக்கொள்க.
தனிச்சொந்தமான வியாபாரம்.
பங்குகாரரோடு சேர்ந்து செய்யும் வியாபாரம்.
கூட்டுத்தாபனம்.
சொத்தும், பொறுப்புக்களும்.
மேனேக்கி வளர்தல், பக்கமாக வளர்தல்.
வரையறையுள்ள பொறுப்பு, வரையறையற்ற பொறுப்பு.
முதலீட்டு வங்கித்தொழில்.
செக்யூரிட்டி அண்ட் எக்ஸ்சேஞ் கமிஷன் (செக்).
கம்பெனி வருமானவரி.
தனிப்பட்ட வருமானவரி.
கடன்பத்திரம், சாதாரணபங்கு, முன்னுரிமைப்பங்கு.

www.padippakam.com



பங்கு வியாபாரக் கம்பெனியும் படிப்படி வளர்முறையும்.
பிரதி, சிறுபான்மை அதிகாரம்.
இயக்குநர், நிர்வாகி.
ஏகபோக உரிமை ஆட்சி அமைப்புக்கள்.
ஒன்றுசேர்தல்.
பெரிய கம்பெனிகளாலுண்டாகும் பெரிய மாற்றங்கள்.

**அனுபந்தம் : கணக்குவைத்தலில் ஆரம்ப அறிவு.**

எமது யுகம் எந்திரயுகம். கணக்குயுகமென்றுங்கூறலாம். கணக்கு வைக்கும் முறையில் ஓரளவு அறிவுபெறுதல் மிக அவசியமாகிவிட்டது.

**ஐந்தொகை :**

கணக்குவைத்தலிலே முக்கியமான இரு விடயங்களைப் பொருளாதார மாணவர் அறிந்திருக்க வேண்டியது அவசியம். அவை ஐந்தொகையும், இலாபநட்ட அறிக்கையுமாகும். இலாபநட்ட அறிக்கையை "வருமான அறிக்கை" என்றுஞ் சொல்வதுண்டு.

ஐந்தொகை வருடாவருடம் அல்லது அடிக்கடி ஓர் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும். குறித்த ஒரு தினத்தில் வழக்கமாக வருட முடிவில் ஒரு தொழிற்றுபனத்தின் உடனடியான நிலைப்படத்தை அது காட்டும். ஒவ்வொரு சொத்தின் டொலர் மதிப்புக்கும்—அது தூலப்பொருளாயிருந்தாலென்ன, சூக்குமப்பொருளாயிருந்தாலென்ன—சரியொப்பான மொத்தக் கோரிக்கையோ, உரிமையோ இருக்கவேண்டும். பத்தாயிரம் டொலர் மதிப்புள்ள ஒரு வீடாயிருந்தால் அதற்கு உரிமையுடையவர் கடனாக ஒருவரிடம் 7,000 டொலர் எடுத்திருக்கலாம். 3,000 டொலர் அவருடைய சொந்தப் பணமாயிருக்கலாம்.

ஒவ்வொரு ஐந்தொகையிலும் இந்த அடிப்படை ஒற்றுமை இருக்கும். சொத்தின் மதிப்பு = உரிமை அல்லது பூரண உடைமை = பொறுப்புக்களின் மதிப்பு (கொடுக்கவேண்டியது) + உரிமையுள்ளதன்மதிப்பு (உடைமை) அல்லது சொத்து = பொறுப்பு + நிகரமதிப்பு.

அட்டவணை 1 இல்காட்டிய சாதாரண ஐந்தொகை ஒன்றை ஆராய்வதன் மூலம் இதை விளக்கலாம். இதிலே சொத்து இடப்புறத்திலும், பொறுப்பும் நிகர மதிப்பும் வலப்புறத்திலும் காட்டப்பட்டுள்ளன. சமீபத்திலே ஆரம்பிக்கப்பட்டதொரு புதிய கம்பெனியின் ஐந்தொகையே இது. சாதாரணப் பங்கு நிகரமதிப்பு என்ற அமிசத்துக்கு நேரே ஒன்றும் குறிக்கப்படவில்லை. ஐந்தொகையின் அடிப்படைத்தன்மைப்படி அந்த இடத்திலே 2,00,000 டொலர் போடலாமென்பதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். ஐந்தொகையிலே இரண்டுபக்கமும் சமமாக இருக்கவேண்டும். ஏனென்றால் நிகரமதிப்பு அதாவது எஞ்சிய உடைமைகளின் உரிமை எப்பொழுதும் சமமாகச் சரிக்கட்டிக்கொள்ளவே பார்க்கும்.

www.padippakam.com


உதாரணமாகக் கள்ளன் ஒருவன் காசெல்லாவற்றையும் களவெடுத்துக் கொள்கிறன் என்று வைத்துக்கொள்வோம். நெருப்பொன்று பற்றிப் பொருள்களில் நாலிலொரு பகுதியை அழித்துவிட்டது. கணக்காளர் இச்செய்தியைக் கேட்டு எவ்வித பரபரப்புமடையமாட்டார். "மொத்தச் சொத்து 40,000 டொலருக்கு இறங்கிவிட்டது. பொறுப்புக்களில் எவ்வித மாற்றமுமில்லை. சரி, நிகரமதிப்பை 40,000 டொலர் குறைத்து 1,60,000 டொலராக எழுதவேண்டும்" என்று கணக்குவைத்துக்கொள்வார்.

இலேசான இந்த ஐந்தொகை மூலம் பலருசிகரமான விடயங்கள் வெளியாகின்றன. சொத்துக்களை ஒரு வருடத்தில் பணமாகமாற்றக்கூடிய சொத்துக்கள் என்றும், அவ்வாறு மாற்றமுடியாத சொத்துக்களென்றும் இருவகையாகப் பிரிக்கலாம். முந்தியது நடப்புச் சொத்து. மற்றது நிலையான சொத்து. பொறுப்புக்களையும் அவ்வாறே நடப்புப் பொறுப்பு, நிலையான பொறுப்பென வகுக்கலாம். முன்னையது ஒருவருடத்துக்குள்ளே செலுத்தவேண்டியது. மற்றது அவ்வாறு செலுத்த அவசியமில்லாதது.

ஐந்தொகையிலே கவனிக்கவேண்டிய மற்றொரு விடயம், இரண்டுபக்கமும் மொத்தம் சமமாயிருக்கவேண்டும். ஆனல் ஒரு புறத்திலுள்ள எந்த ஓர் அமிசமும் எதிர்ப்புறத்திலுள்ள அம்சத்தோடு ஒத்திருக்க வேண்டியதில்லை. உதாரணமாகக் கடன்பத்திரங்கள், தளவாடம், கட்டடம் என்பவற்றேடு ஒத்திருக்கவில்லை. முதல் ரகத்தைச் சேர்ந்தவை, பணரகத்தோடு சமமாயிருக்கவில்லை. கடன்கொடுத்தவர்களுக்குக் கம்பெனியின் சொத்தில் திட்டமானதோர் அளவுக்கு உரிமை உண்டு. எஞ்சியவற்றில் கம்பெனிச் சொந்தக்காரருக்கு உரிமையுண்டு. ஐந்தொகையைப்பற்றிக் கூறக்கூடிய சரியான கூற்று இஃதொன்றே.

குறிக்கப்பட்ட விசேட அமிசங்களெல்லாம் அநேகமாகச் சொல்லாமலே விளங்கக்கூடியவை. காசு, நாணயமாகவும் புழக்கத்திலுள்ள நாணயமாகவும், வங்கியிற்போட்ட பணமாகவுமிருக்கும். காசு ஒன்றே மதிப்புத்திட்டமாக அறியப்பட்டதும், மதிப்பீட்டினல் அறியத் தேவையற்றதுமான சொத்து. மற்ற மதிப்பீடுகளெல்லாம் ஊகித்து, கருத்தோடு ஊகித்து அறியவேண்டியவை. குறித்த சொத்து என்ன நோக்கத்துக்காக அல்லது உபயோகத்துக்காக ஒதுக்கப்பட்டதோ அதை அடிப்படையாகக் கொண்டே கணக்கில்வரும் மதிப்பீடுகள் செய்யப்படும். ஒரு தொழின்முறை முறிந்து போகும் நிலைமையிலில்லாமல் நடந்துகொண்டிருப்பதானல், சந்தேகமான சொத்துக்களை வலுக்கட்டாயமாக விற்கவேண்டியேற்பட்டால், அவை கொண்டு வரும் தாழ்ந்த பெறுமதியைக் கணக்காளர் கணிக்காது, சாதாரணமான நடைமுறை வியாபாரத்தில் கம்பெனிக்குப் பயன்படக்கூடிய பெறுமதியையே கணித்தல்வேண்டும்.

www.padippakam.com



ஐந்தொகையென்பது குறித்ததொரு சமயத்தில் கம்பெனியின் நிலையைக் காட்டும் படம். அதாவது சொத்து = பொறுப்பு + நிகரப்பெறுமதி என்பதைக்காட்டும்.

| சொத்து | | பொறுப்பும் நிகரப்பெறுமதியும் | |
|---|---|---|---|
| | | பொறுப்புக்கள் | |
| **நடப்புச் சொத்து** | | **நடப்புப் பொறுப்புக்கள்** | |
| காசு (டொ.) | 20,000 | கொடுக்க வேண்டிய கணக்கு (டொ.) | 20,000 |
| பொருள் | 80,000 | கொடுக்க வேண்டிய உறுதிகள் | 30,000 |
| **நிலையான சொத்து** | | **நீண்டகாலப் பொறுப்புக்கள்** | |
| தளவாடம் | 1,30,000 | சிறு தொழில் நிர்வாகக்கடன் | 50,000 |
| கட்டடம் | 1,70,000 | கடன்பத்திரம் | 50,000 |
| | | **நிகரப் பெறுமதி** | |
| | | முன்னுரிமைப் பங்கு | 50,000 |
| | | சாதாரணப் பங்கு | — |
| மொத்தம் (டொ.) | 4,00,000 | (டொ.) | 4,00,000 |

**அட்டவணை 1. பெப்டோ கிளிட்டர் கம்பெனியின் 1963 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் தேதி முடியவுள்ள ஐந்தொகை.**

பொருள் என்பது நாம் உதாரணமாகக் காட்டியுள்ள பற்பொடிக் கம்பெனியில், சீனி, இரசாயனப்பொருள்கள், மூலப்பொருள்கள் முதலியவற்றைக் குறிக்கும். இவற்றின் பெறுமதியைப் பலவகையிலே மதிப்பிடலாம். பல வைதீகக் கம்பெனிகள் இப்பொருள்களின் ஆதிவிலை, நடப்புச்சந்தைவிலை என்பவற்றில் எது குறைவாயிருக்கிறதென்று பார்த்து அதையே கொள்ளும். மாதாமாதம் பொருள்களின் விலை மாறினால் சங்கடமுண்டாகும். உற்பத்தியில் உண்மையாகப் பயன்படுத்தப்பட்டவையும், விலை வேறாக இருந்தகாலத்திலே வாங்கப்பட்டவையுமான உப பொருள்களின் விலைப்படி பற்பொடியின் இரசாயனச் சேர்க்கைகளுக்கு விலைபோடவேண்டுமா ? அல்லது செலவாகிப் போன இரசாயனப் பொருள்களுக்குப் புதியவற்றை வாங்கும்போது அந்த நேரத்தில் நிலவும் விலையைப் போட்டுச் செலவைக் காட்டுவதா ? இவற்றைப் பற்றி ஆரம்பக்கட்டத்தில் ஆராய முடியாது[1]. விலையேற்றக் காலத்திலோ விலையிறக்கக் காலத்திலோ இந்தமுறைகளில் எது உபயோகிக்கப்பட்டாலும்

1. இவற்றைக் கணக்கு முறைகளில் முதல்முதல் செலவானது, கடைசியாக முதலிற் செலவானது எனக் குறிப்பிட்டு விபரமாக ஆராய்வர்.

படிப்பகம்

www.padippakam.com



இலாபக்கணக்கில் வித்தியாசங் காட்டும். எனவே, எந்தமுறையைப் பயன் படுத்தினுலும் அதையே மாருமல் பயன்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமுண்டு. இதுவரை பொருள்களைப் பற்றிக் கூறினேம்.

தளவாடங்களும், கட்டடப்பொருள்களும் 1963 இற்குக்கடைசியில் வாங்கப்பட் டனவென்று நாம் கொண்டால் ஐந்தொகையிலே அவற்றின் வாங்கிய விலையே கொடுக்கப்படும். இதுவே மாமூலான கணக்குமுறையிலுள்ள தோர் அடிப்படைப் பிரமாணம். "வாங்கும் காலத்திலே கம்பெனி அதற் குக் கொடுக்கும்விலை பெறுமதியானதேயென எண்ணிக் கொள்ள வேண்டும்".

காலப்போக்கினுலும், உபயோகத்தினுலும் தேய்மானமடைந்த தளவாடம், கட்டடம் என்பவற்றை எவ்வாறு சரியாக மதிப்பிடுவது என்பதைப் பற்றிப் பெரிய பிரச்சினையுண்டாகும். வருமானவரிபற்றிய அறிக்கை தயாரிக்கும் பொழுதும், அடுத்தவருடத்து ஐந்தொகை தயார்செய்யும்போதும் இத்தகைய பிரச்சினைகள் எழுவதைக் காணலாம்.

பொறுப்பு என்ற பிரிவிலே கொடுகடன் என்ற பகுதி உண்டு. அது வாங்கிய பொருள்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம். உறுதிகளென் பவை வங்கி, நிதிக் கம்பெனி என்பவற்றுக்கு வாக்குறுதி பண்ணி எழுதிய கடன் பத்திரங்கள். சி. தொ. நி. பத்திரம் என நீண்டகாலப் பொறுப்புக்கள் என்ற பிரிவிலே காட்டப்பட்டது பெடரல் சிறுதொழில் நிர்வாகத்தினல் 5 வருடத் தவணைக்கு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட கடன். இது சில சமயம் அந்த நிர்வாகத்தால் கடனுகக் கொடுக்கப்படா விட்டால், உத்தரவாதஞ்செய்யப்பட்டதாயிருக்கும். கடன்பத்திரம் என்பது மூன்றுவீத வட்டியிலே நீண்டகாலத் தவணையிற் பெற்ற கடன். இது 15 வருடத்துக்குத் திருப்பிக்கொடுக்கவேண்டிய அவசியமில்லை. (குறிப்பு: இந்தக் கம்பெனிக்குப் பொறுப்பாகக் காணப்படும் அமிசம் வேருெரு கம்பெனியின் சொத்தாயிருக்கலாம். எனவே இந்தக் கடனைக் கொடுத்தவர் கள் தமது ஐந்தொகையில் இதனைத் தமது சொத்தாக இடப்பக்கத்தில் பதிவுசெய்வர். இவை "கிடைக்கவேண்டிய கடன்பத்திரங்கள்" எனப்படும். இவ்வாறே மற்றவைக்கும் உதாரணம் கொள்க.)

நிகரப் பெறுமதி என்ற அமிசத்தை ஆராய்வோம். திரளும், (நுகர்வில் லாத) முன்னுரிமைப் பங்குகள் 500 (ஒவ்வொன்றும் 4 வீதம் 100 டொலர்) பிறப்பிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிருேம். சமநிலையிலில்லாத 10 டொலர் 20,000 சாதாரண பங்குகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இலேசான ஐந்தொகைப் பத்திரமொன்றை மேலாகப் பார்க்குமிடத்து இந்தவிடயங்கள் புலனுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



**இலாபநட்ட அறிக்கை அல்லது வருமான அறிக்கை.**

காலம் செல்கிறது என வைத்துக்கொள்வோம். அடுத்தமாதங்களிலே பற்பொடி உற்பத்தி செய்து விலைப்படுத்தி, இலாபகரமான தொழில் செய்வதில் கம்பெனி ஈடுபட்டிருக்கிறது. 12 மாதத்துக்கு உண்டான வருவாயைக் காட்ட நாம் அக்கம்பெனியின் வருமான அறிக்கையைப் பார்க்கவேண்டும். இதனைப் பல கம்பெனிகள் இலாபநட்ட அறிக்கையெனக் கூறும்.

இந்த அறிக்கையிலே பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்படும். (1) 1964 ஆம் ஆண்டிலே பெப்டோகிளிட்டர் கம்பெனி விற்பனையால் பெற்ற வருமானங்கள். (2) அந்தவிற்பனைகள் சம்பந்தமான செலவுகள் அவைக்கெதிராகச் சுமத்தப்படும். (3) செலவுபோக எஞ்சியுள்ள இலாபம். அதாவது மொத்த இலாபம்=மொத்த வருமானம் சய மொத்தச் செலவு (வருமான அறிக்கையிலுள்ள அடிப்படை ஒற்றுமை இதுவே). விற்றபொருள்களின் உற்பத்திச் செலவு என்ற பகுதியிலுள்ள இலக்கங்களைக் கணக்கிலெடுக்காமல் (இவை பொருள்களை வரவழைக்க ஏற்பட்ட செலவுகள்) வலப்பக்கத்திலுள்ளவற்றையே கணக்கிலெடுத்தால், நன்ருக விளங்கும். விற்பனையால் வந்தது 2,40,000 டொலர். விற்றபொருள்களை உற்பத்திசெய்வதற்கு 1,70,000 டொலர். விற்பனை, நிர்வாகம் என்பவற்றின் செலவுக்கு 14,000 டொலர். செலவு செய்த பின்னர் 56,000 டொலர் தேறிய நடைமுறை இலாபமாயிற்று. இதில் வரி வட்டி என்பவற்றுக்கு 19,000 டொலர் ஒதுக்கப்பட்டது. வரி கொடுத்தபின் தேறியவருமானமாக 37,000 டொலர் கிடைத்தது. இதில் முன்னுரிமை இலாபப்பங்கீடாக 2,000 டொலரும், சாதாரண இலாபப் பங்கீடாக 5,000டொலரும் கொடுக்கப்பட்டன. எஞ்சிய 30,000 டொலர் தேறிய வருமானம் (மேலதிகத்தோடு சேர்க்கக்கூடியது). இது தொழிலுக்குச் சேர்க்கப்பட்டது.

இனி விற்றபொருள்களின் உற்பத்திக்கு வரவழைக்கப்பட்ட பொருளின் செலவு என்ற பிரிவைப் பார்ப்போம். வியாபாரத்தின் இந்தப்பிரிவில் உண்டான செலவை இஃது அட்டவணைப்படுத்துகிறது. பொருள், கூலி, சில்லறைச் செலவுகள் என்பவற்ருேடு தேய்மானம் எனவும் ஓர் அமிசமுண்டு. தேய்மானத்தைத் தனி ஓர் அமிசமாக்கலாம். அதை விரைவில் ஆராய்வோம். மேலே சொல்லிய இந்த ஐந்து அமிசங்களுக்குஞ் செலவாகும் தொகையே (1,75,000 டொலர்) மொத்த உற்பத்திச் செலவு. இதன்பின்னர் ஓரளவு மயக்கத்துக்குரிய சரிக்கட்டல் காணப்படுகிறது. ஜனவரி 1 இல் உள்ள பட்டியலின் பெறுமதி கூட்டப்படுகிறது. வருடமுடிவிலுள்ள பட்டியல் கழிக்கப்படுகிறது. இவ்வாறு கிடைக்கும் மிச்சமே, (உற்பத்திச் செலவில் 5,000 டொலர் வித்தியாசப்படும்) விற்ற பொருளின் உற்பத்திச் செலவு. இந்தச் சொற்பிரயோகங்களில் உள்ள வித்தியாசமென்ன ? பட்டியலில் இவ்வாறு சரிக்கட்ட வேண்டிய அவசியமென்ன ?

படிப்பகம்

பெப்டோகிளிட்டர் கம்பெனியில் வருட ஆரம்பத்திலே 80,000 டொலருக்கு மூலப்பொருளும், உற்பத்தி பூரணமான பொருள்களுமிருந்தன. வருடப் போக்கில் அதன் பட்டியலில் 5,000 டொலருக்கு மேலதிகமான பொருள் காணப்பட்டது. இந்தநிலையில் உற்பத்திச்செலவு முழுவதையும் உண்மையில் விற்ற பொருள்களோடு சேர்த்துவிடுவது தவறு. இச்செலவினத்தில் சில வருங்காலத்தில் விற்கவிருக்கும் பொருள்களுக்கே சேரவேண்டியவை. இந்த அமிசத்தைக் கவனியாதுவிட்டால் நடப்பு வருடத்தில் விற்பனையாகிய பொருள்களின் உற்பத்திச் செலவை மிகைபடக்கூறியதாகும். இவ்வரு

**வருடவருமானத்தை, வருமான அறிக்கையிற் காணலாம்.**

| | | |
|---|---|---|
| தேறிய விற்பனவு (கழிவு, கமிஷன் முதலியன நீங்கலாக) | | 240,000 டொ |
| குறைய : விற்ற பொருள்களின் உற்பத்திச் செலவு: | | |
| மூலப்பொருள்கள் | 50,000 டொ | |
| கூலி | 1,00,000 | |
| தேய்மானம் | 20,000 | |
| சில்லறை உற்பத்திச் செலவு | 5,000 | |
| மொத்த உற்பத்திச் செலவு | 1,75,000 டொ | |
| கூட்டுக : ஆரம்பத்திலுள்ள பட்டியல் | 80,000 | |
| | 2,55,000 டொ | |
| குறைக்க : முடிவுப்பட்டியல் | 85,000 | |
| சமன் : விற்ற பொருள்களின் உற்பத்திச் செலவு | 1,70,000 டொ | 1,70,000 |
| மொத்த இலாபம் (அல்லது மொத்த இறுதிநிலை, | | 70,000 டொ |
| குறைய : விற்பனை, நிர்வாகம் என்பன பற்றிய செலவு | | 14,000 |
| தேறிய நடப்பு இலாபம் | | 56,000 டொ |
| குறைய : நிலையான வட்டி, மத்திய அரசாங்க வரி, தலத்தாபனங்களின் வரி | | 6,000 |
| வருமானவரிக்குமுன்னுள்ள தேறிய வருமானம் | | 50,000 டொ |
| குறைய : கம்பெனி சம்பந்தமான வருமானவரி | | 13,000 |
| வரிகளின் பின்னுள்ள நிகர வருமானம் | | 37,000 டொ |
| குறைய : முன்னுரிமைப் பங்கின் இலாபப்பங்கீடு | | 2,000 |
| சாதாரணப் பங்குதாரரின் நிகரலாபம் | | 35,000 டொ |
| குறைய : சாதாரணப் பங்குக்குக் கொடுத்த இலாபப் பங்கீடு | | 5,000 |
| மிதமிஞ்சியதனோடு கூட்டப்படுவது | | 30,000 டொ |

**அட்டவணை 2. 1964 ஜனவரி 1 ஆம் தேதி தொடக்கம் 1964 டிசெம்பர் 31 ஆம் தேதிவரை பெப்டோகிளிட்டர் கம்பெனியின் வருமான அறிக்கை.**

www.padippakam.com


டத்துத் தேறியவிற்பனைகளில் அதிகமானவற்றைக் கழித்ததுபோலாகும். இவ்வருடத்து இலாபத்தைக் குறைபடக் கூறியதுமாகும்.

பட்டியலின் தொகையில் எவ்வித மாற்றமுமில்லாவிட்டால் எல்லாம் இலேசாக இருந்திருக்கும். உற்பத்திச் செலவும் விற்றபொருள்களின் உற்பத்திச் செலவும் ஒன்றாகவேயிருக்கும்.

வருடமுடிவிலே வருட ஆரம்பத்திலும் பார்க்கக் குறைவான பட்டியல் இருக்குமானால் நிலைமை எப்படியிருக்கும் ?

இவ்வருடம் நாம் விற்ற பொருள்களின் விலை கூலிக்கும் மற்றக் கம் பெனிகளுக்கும் கொடுத்த செலவிலும்பார்க்க அதிகம் என அறிந் திராவிட்டால் அது நம்மையே ஏமாற்றுவதாக முடியும். ஒரு சமயம் செலவான பட்டியற் பொருள்களின் விலையையும், அதற்குப் பதிலாக வாங்கி வைக்கவேண்டிய பொருள்களின் விலையையும் நாம் கவனியாது விட்டிருக்கலாம். சுருக்கமாகக் கூறுவதானால், விற்றபொருளின் உற்பத்திச் செலவைப் பற்றிச் சரியான கணிப்புச் செய்வதானால் உற்பத்திச் செலவினங் களைப் பின்வருமாறு சரிப்பண்ணவேண்டும். ஆரம்பப் பட்டியலிலும் பார்க்க முடிவுப்பட்டியலில் அதிகரிப்புக் காணப்பட்டால், அவ்வாறு அதிகரித் ததைக் கழிக்க ; முடிவுப்பட்டியலில் குறைவு காணப்பட்டால் அந்தக் குறைவைக் கூட்டுக.

மொத்த உற்பத்திச் செலவான 1,75,000 இலிருந்து 5,000 ஐ நேரடியாகக் கழிக்காமல், கணக்காளன் இரண்டு படியாகக் கழிப்பான். இரண்டுக்கு முள்ள வித்தியாசத்தைக்கொண்டு கணக்கைச் சரிப்படுத்தாமல் முதலில் மொத்த ஆரம்பப்பட்டியலைக் கூட்டுகிறான். பின்னர் முடிவுப்பட்டியலைக் கழிக்கிறான். இதனால் விடயம் நியமப்படுத்தப்படுகிறது. பட்டியல் மேலே யிருந்தாலென்ன கீழேயிருந்தாலென்ன, ஒன்றே. பட்டியல் இலக்கத்தில் தனியொரு மாற்றமிருக்குமானால், சில சமயம் கழிக்கவும் சில சமயம் கூட்டவும் வேண்டிவரும். மொத்தப்பட்டியலோடு வைத்து அளக்கப்பட்ட இரு பட்டியலிலுள்ள மாற்றத்தைக் கணக்காளர் அனுசரிக்கும் முறையும் காட்டும்.

அட்டவணை 2 இல் உள்ள அமிசங்கள் அட்டவணை 1 இல் உள்ள ஐந்தொகையிலிருந்து வித்தியாசப்படுவதைக் கவனிக்க. வருமானம் சம் பந்தமான அமிசங்கள் காலப்போக்கிலுள்ளவற்றைக் குறிக்கும். இஃது ஓடும் படத்தின் செயல்போன்றது. ஐந்தொகை அமிசங்கள் குறித்த ஒரு காலத்திலிருந்த கையிருப்புகளைப்பற்றியது. ஓட்டமில்லாத நிலைப்படம் போன்றது.

**தேய்மானம்**

1964 இற்கு தேய்மானக் கணக்குகள் ஏன் பதிவு செய்யப்பட்டனவென்று முதலில் வெரும் அதிசயப்படலாம். தளவாடம், கட்டடம் என்பன புதிதாக வருட ஆரம்பத்திலே வாங்கப்பட்டன. அதற்கிடையில் அவை தேய்மான

படிப்பகம்

www.padippakam.com



மடையமாட்டா. தளவாடங்களை நல்ல நிலையிலே வைத்திருக்கவும், தொழிற்சாலைக்கு வெள்ளையடிக்கவும் செலவுசெய்யவேண்டியதே. அதற்குத் தொழிலாளரை ஏற்படுத்தவேண்டும். ஆனால் அந்தச் செலவினம் சில்லறை நடப்புச் செலவினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தேய்மானச் செலவிலே சேர்க்கப்படவில்லை.

இங்கேதான் தூரதிருஷ்டியுள்ள கணக்காளனின் திறமை வெளியாகும். 10 வருடத்துக்கு எந்தவிதமான புதுப்பித்தற் செலவுமில்லையெனவும் அதன்பின்னர் எல்லா எந்திரங்களையும் புதிதாக வாங்கவேண்டுமென்றும் அவன் எடுத்துக்காட்டலாம். 9 வருடமும் தேய்மானத்துக்கெனப் பணத்தை ஒதுக்காமல், நல்ல இலாபம் கிடைக்கிறதென ஏமாற்றிக்கொண்டு பத்தாமாண்டிலே எந்திரச் செலவுகளுக்குப் பெருந்தொகையை ஒதுக்கிவிட்டு அந்த வருடத்தில் பெரிய நட்டத்தைக் காட்ட அவன் விரும்பமாட்டான்.

தளவாடம் எப்பொழுதும் உபயோகத்திலிருப்பதால் தேய்மானமடைகிறதென்பதை அவன் எடுத்துக்காட்டுவான். தளவாடத்தின் சீவியகாலம் வரை அவன் செலவு பரவலாகக் காட்டப்படுமானல் நிகர வருமானம் நிகர லாபம் என்பவற்றைப் பற்றிய சரியான நிலையை அறியக்கூடியதாயிருக்கும். உபயோகத்தினலும், காலப்போக்கினலும் தளவாடத்தின் பெறுமதி குறைகிறது. புதிதாக அதனை வாங்கிய விலையிலிருந்து அது கழிவுப் பொருளாகும்வரை பெறுமதியில் குறைந்துகொண்டே போகிறது. இந்த உண்மையை அறிந்து கணக்காளன் நிலையான முதலாயுள்ள இனங்களின் பெறுமதியைப் படிப்படியாகக் குறைப்பான். இதற்கு அனுசரிக்கப்படும் பலவகையான முறைகளைப் பற்றி இங்கே ஆராயமுடியாது. பெருவழக்காயுள்ள இரண்டு முறைகளைத் தருகிறேம்.

முதலாவது முறை நேர்க்கோட்டுத் தேய்மானம். உங்களிடம் புதிதாயிருக்கும்போது 10,100 டொலர் பெறுமதியான ஒரு லொறி இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதனுடைய பொருளாதார வயது 10 வருடமென்றும் வைத்துக்கொள்வோம். இதற்குப்பின் இந்த லொறி உருப்படியாக இருந்தாலும் அதைப்பரிபாலிப்பதற்கு அதிக செலவுண்டாவதோடு நம்பிக்கையோடு அதனை வேலையில் ஈடுபடுத்த முடியாதிருப்பதால் அதனுடைய பொருளாதார வாழ்வு முடிந்துவிட்டதென்றும் கொள்ளவேண்டும். கழிவுப்பொருளாக அதனைப் பத்துவருடத்தின் பின் 100 டொலருக்கு விற்கலாமென்று வைத்துக்கொள்வோம். நேர்க்கோட்டு முறைப்படி ஒவ்வொரு வருடமும் அதன் தேய்மானக் கணக்கில் 1,000 டொலர் எழுதப்படும். ஏனெனில் 100 டொலர் கழிவுப்பொருள் பெறுமதி போக அதன் புதிய விலை 10,000டொலர். வருடமொன்றுக்கு 1000 ஆகப் பத்துவருடத்துக்குக் கணக்குப் போடப்பட்டுள்ளது.

மற்றெருமுறையும் சமீபகாலத்தில் எல்லாராலும் பின்பற்றப்பட்டுவருகிறது. இது விரைவான தேய்மானம். 1954 ஆம் ஆண்டின் வரிச்சட்டம் இதற்கு அனுகூலமாயிற்று. நேர்க்கோட்டு முறைப்படி புதியசொத்தான

படிப்பகம்

www.padippakam.com



லொறியின் பயனின்மையை வருடாவருடம் குறித்துக்காட்டிக் கழிப்பதிலும், விரைவாக, நேரத்தோடு தேய்மானத்தைக் காட்டும் "குறையும் நிலுவைமுறை" பயன்படுத்தப்படுகிறது. இம்முறைகளில் முதலாவதான முறையைமாத்திரம் இங்கே காட்டுகிறோம். இதைத் "தானக்கூட்டெண் முறை" என்பர். 10 வருட 10,000 டொலர் லொறியின் விலையைப் பார்க்கலாம். அதன் கழிவுப்பெறுமதியான 100 டொலர் அற்பப்பொருளென அதை ஒதுக்கிவிடலாம். 10,000 டொலர் லொறிக்குத் தேய்மானம் முதல் வருடத்துக்கு பத்திலொன்ருகக் கொள்ளாமல் 1954 சட்டப்படி, குறையும் நிலுவை முறைப்பிரகாரம், $2 \times 10 = 20$ வீதத்தைக் கழிக்கலாம். எனவே வரிகட்டுவோர் தேய்மானத்துக்கு அதிக தொகையைப் போட்டு வரியில் குறையக் கொடுக்கும் வசதியுண்டு. ஆனல் வருடாவருடம் இந்தத் தொகையைக் குறைக்கமுடியாது. ஏனெனில் 5 வருடத்தில் தேய்மானக் கணக்கு முடிந்துவிடும். எனவே குறையும் நிலுவை முறைப்படி முதல்வருடத்தில் 10,000 இல் 20 வீதம் குறைத்தால், இரண்டாம் வருடத்திலே மீதிப்பெறுமானமான 8,000 இல் 20 வீதத்தைக் குறைக்கலாம். அதாவது 1,600 டொலரைக் குறைக்கலாம். மூன்ரும் வருடத்தில் 6,400 இலிருந்து 20 வீதத்தைக் குறைக்கலாம். இவ்வாறே தேய்மானம் கணிக்கப்படும். இவ்வாறு லொறி தன்னுடைய வாழ்நாளில் அரைப்பங்கைச் செலவு செய்ததும், அதன் பெறுமதியில் $\frac{2}{3}$ ஐக் கழித்துவிட வசதியுண்டாகிறது. நேர்க்கோட்டு முறையில் அரைவாசியையே கழித்துவிடலாம். ஆரம்பத்திலே குறையும் நிலுவைமுறை மிகத் தாராளமாகக் கழிக்க இடந்தந்தாலும் காலம் செல்லச்செல்ல அதன் தாராளத் தன்மை குறைந்துகொண்டுபோகிறது[1].

பார்வைக்குச் சரியானதொரு வாய்பாட்டுமுறைப்படியே தேய்மானம் கணிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றினும், மதிப்பீடு பரும்படியானதென்பதையும், பலபிழைகள் அதில் ஏற்படலாமென்பதையும் ஒருதலை முடிவான மாற்றங்களை அதிலே செய்யலாமென்பதையும் எல்லாக் கணக்காளரும் உணர்வர். (1) பெரும்படியானதொரு தேய்மானக் கணிப்பு, எவ்வித கணிப்புமில்லாதிருப்பதிலும் நல்லது. (2) தேய்மானத்தைக் கணிப்பதில் ஏற்படும் தவறுகள் கடைசியாக எப்படியும் கண்டுபிடிக்கப்படும் என்ற இவ்விரு நிலைகளும் அவனுக்கு ஆறுதலளிக்கின்றன.

தேய்மானத்தைக் கணிப்பதிலுள்ள பிழை எப்படி ஈற்றில் கண்டு பிடிக்கப்படுகிறதென்பதை ஆராய்வோம். குறிப்பிட்ட அந்த லொறி 10 வருடம் சேவை செய்யாமல் 15 வருடம் சேவை செய்கிறதென வைத்துக்

1. இதற்கு முற்றும் மாருன "உற்பத்தி அலகுமுறை" அல்லது சேவை அலகுமுறை என்ற முறையொன்று உண்டு. இதன்படி அந்த லொறி தன்வாழ்நாளில் போகக்கூடிய மைல் அல்லது தூக்கும்பாரம், அல்லது சேவை அலகு என்பவற்றில் ஒன்றைக் கணித்துத் தேய்மானத்தை மதிப்பிடுவர். அதாவது அந்த லொறி 10 இலட்சம் மைலைப் பத்து வருடத்தில் ஓடுகிறதெனக் கொண்டால் அதன் தேய்மானம் 10,000 டொலர். எனவே ஒரு மைலுக்கு ஒரு சதம் தேய்மானம் எனக் கணிக்கப்படும்.

www.padippakam.com



கொள்வோம். எனவே நமது தேய்மானக் கணக்கைக் கடந்த பத்து வருடமாக மிகைப்படுத்திக் கூறிவிட்டோம். பதினோராம் பன்னிரண்டாம் வருடங்களில் அந்த லொறிக் கணக்கிலே தேய்மானப் பெறுமதி எழுதப்பட மாட்டாது. ஏனெனில் லொறி கழிவுப்பொருளாக விற்கப்பட்டுவிட்டதாகவே குறிப்பிடப்பட்டிருக்கும். 10 வருடத்துக்குப் பிந்திய காலத்தில் நமது இலாபங்கள் அதிகப்படியாகவே எழுதப்படும். முந்திய வருடங்களில் இலாபம் எவ்வளவுகுறைவாக எழுதப்பட்டதோ அவ்வளவுக்கு அதிகப்படுத் தப்படும். 15 வருடங்களின் பின்னர் எல்லாம் சரியாகிவிடும். வரிகளைவிட மற்றவையெல்லாம் முன்போலவேயிருக்கும். பலவிதப்பட்ட தேய்மானக் கணக்குகள், வருமானக்கணக்கை வருடந்தோறும் பலவிதமான முறையில் எடுத்துக்காட்டும். அதனால் கம்பெனியின் வருமானவரிப்படம் வித்தியாச மானதாயிருக்கும். வருடந்தோறும் தனது வருமானம் ஏற்றத்தாழ்வின்றிச் சராசரியாய்ச் செல்வதால், வரிவிகிதங்களை எவ்வளவுக்கும் கீழே வைத்துக் கொள்ளக் கூடியவாறும், நட்டங்களை நயங்களால் சரிப்படுத்தக்கூடியவாறும் அமைவதையே சாதாரணமாக வியாபாரிகள் விரும்புவர். அன்றியும் வரிகொடுக்கும் நாளைப் பின்போட்டுவைக்கக்கூடிய குறைந்துசெல்நிலுவை முறை போன்ற முறைகளையே அவர் பெரிதும் விரும்புவர்.

5 வருடத்துக்கு மேற்பட்ட தளவாடங்களையும், பாதுகாப்புயந்திர உற்பத்திச் சாதனங்களையும் மதிப்பிழக்கச் செய்யுமாறு அரசாங்கம் அவசரகால நடவடிக்கையாகக் கம்பெனிகளைக் கேட்டபொழுது அவற்றுட் பல அவ்வாறு செய்வதற்கு முன்வந்த காரணம் இதுவேயாகும். பாதுகாப்பு சார்ந்த அவசரகாலத்திலே அவற்றின் இலாபம் பெருகிற்று. இந்த இலாபங்களைத் தேய்மானக் கணக்குக் காட்டி, குறைத்தன. "துரிதப்படுத்தப்பட்ட இந்த மதிப்பிழப்பை" அவை பயன்படுத்தி, அவசரகாலத்தில் தமது இலாபங் களைப்பெருக்காமல் கம்பெனிவரி குறையக்கூடிய வேறு காலங்களில், இலாபத்தைப்பெற முயன்றன.

கம்பெனி, அரசாங்க வரியிலிருந்து தப்பிக் கொள்ளக்கூடியவாறு தனது தேய்மானங்களைச் சரிப்படுத்திக்கொள்ளத் திறைசேரி அனுமதிக்கமாட்டாது. கம்பெனி தேய்மானக் கணக்கு வைப்பதற்கு எந்தவிதமான முறையையுங் கைக்கொள்ளலாம். ஒருக்கால் ஒருமுறையை அனுசரித்தால் பின்னர் அதை மாற்ற முடியாது. யூகவியாபாரம் நடத்த முதலிடுவோர் வரிப் பளுவால் உண்டாகும் ஆபத்தைப்பற்றிச் சஞ்சலப்படுகிறார்கள். புதிய ஆயுதங்களில் மேலும் பணத்தை முதலீடு செய்வோம்; மேலும் வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவோம்; கம்பெனிகள் தங்கள் தளவாடங்களை விரைவாக மதிப்பிழக்கச் செய்து அதன் பயனைய் வரிகளுக்குத் தப்பத் திறைசேரி வழிசெய்யவேண்டுமென்றே அவை கூறுகின்றன.

**வருமான அறிக்கை, ஐந்தொகை என்பவற்றுக்குள்ள தொடர்பு :**

வருடப்போக்கில் நடந்ததைக் கூறும் வருமான அறிக்கைக்கும் வருடத் தொடக்கத்திலும் முடிவிலுமுள்ள ஐந்தொகைகளுக்குமுள்ள தொடர்

www.padippakam.com



பைப்பார்ப்போம். அட்டவணை 3 நமது பற்பொடிக் கம்பெனியின் முதல்வருடமுடிவிலுள்ள ஐந்தொகையைக் காட்டுகிறது. கம்பெனி விருத்தியடைந்துள்ளது. நிகரப்பெறுமதி, அதாவது மொத்தச் சொத்துக்கும் மொத்தப்பொறுப்புக்குமிடையிலுள்ள வித்தியாசம் அதிகரித்துள்ளது. கணக்கு வைக்கத்தொடங்கிய காலத்துக்கும், கணக்கு முடித்தகாலத்துக்குமிடையிலுள்ள காலத்தில் அது 30,000 டொலரால், அதாவது 2,50,000 டொலரிலிருந்து 2,80,000 டொலராக அதிகரித்துவிட்டது. இந்த அதிகரிப்பு சதாரணப் பங்குதாரருக்குக் கொடுக்கக்கூடியதும் பிரித்துக்கொடுக்கப்படாமலிருப்பதுமான இலாபம். இதனை ஐந்தொகைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அறியலாம். அதாவது வருமான அறிக்கையின் அடியிற்கண்ட 35,000—5,000—30,000 டொலர், பங்கீடு செய்யப்படாத இலாபமாகும்.

நிகரப்பெறுமதி அமிசத்தில் 30,000 டொலர் மேலதிகமாக எழுதப்படவேண்டும். முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கை அதிகரிக்க முடியாது. கம்பெனியின் இலாபத்துக்கு அத்தகைய பங்குதாரர் உரிமை கோரமாட்டார். புதிதாகப் பங்குவிற்கப்படவுமில்லை. எனவே 30,000 உபரியைச் சாதாரணப் பங்கு முதல் கணக்கில் எழுதவேண்டும். ஆனால் இது செய்யப்படவில்லை. பதிலாக சாதாரணப் பங்குமுதல் கணக்கு அதன் ஆரம்ப சமநிலையில் அல்லது பிறப்பிக்கப்பட்டபெறுமதியில் விடப்பட்டிருக்கிறது.

மேல்மிச்சம் அல்லது உழைத்த மிகை அல்லது வியாபாரத்திலே கைப்பற்றி வைக்கப்பட்டுள்ள உழைப்பு என்ற பிரிவில் ஒரு கணக்கை உண்டாக்கலாம். இது, பங்குபிரிக்கப்படாமல் வருடாவருடம் முதலோடு முதலாகச் சேர்க்கப்பட்ட உழைப்புக்கள்மூலம் நிகரப்பெறுமதி அல்லது "புத்தகப்பெறுமதி" கிடைத்ததென்பதைக் காட்டும்.

மேல்மிச்சமென்ற சொல் பலவகையில் விளக்கக்குறைவை உண்டாக்கக்கூடியது. இஃது அவசியமற்றதோர் உபரிப் பணம். இதனைக் கம்பெனி வேலையாட்களோ பங்குதாரரோ எந்த நேரமும் பிடுங்கியெடுத்துக்கொள்ளலாம் என்றோர் எண்ணத்தை உண்டாக்குகிறது. மேல்மிச்சம் சொத்துக் கணக்கிலே சேர்ந்ததன்று ; திரவக்காசாயுள்ள பொது நிதியுமன்று. இஃது உரிமையாளரின் உடைமையில் ஒரு பகுதியைக்காட்டுகிறது ; கடன்காரருக்கும், முதலில் முதல்விட்ட உரிமையாளர்க்கும் கொடுக்க வேண்டிய பொறுப்புக்களுக்கு மேலதிகமாயுள்ள தென்பதை உணர்த்துகிறது. பலதிறப்பட்டவரின் சொத்துக்களுள்ள கம்பெனியின் உடைமையில் ஒரு பகுதியைக் காட்டுகிறது. படம் 3 ஐப் பார்த்தால் பொறுப்புப் பக்கத்திலுள்ள 30,000 இற்கு, சொத்துப் பக்கத்திலே காசு இல்லாதிருப்பதைக் காணலாம்.

ஐந்தொகையிலே குறிப்பிட்ட அமிசங்களைப் பொருத்தப்பார்ப்பது தவறென மறுபடியும் எச்சரிக்கை செய்கிறோம். இறுதியிலுள்ள மொத்தத்தொகையே சமனாயிருக்கும். முதலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டோ, மேல் மிச்சமாக ஒதுக்கப்பட்டோ உள்ள 30,000 டொலர் எவ்வாறு செலவு செய்யப்பட்

8—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



**வருடத்து வியாபாரமுயற்சிகளின் பின்னர் புதியதொரு ஐந்தொகையைப் பெறுகிறோம்**

**அட்டவணை 3—1964 டிசெம்பர் 31 ஆம் தேதியிலே பெப்டோகிளிட்டர் கம்பனியின் ஐந்தொகை**

| சொத்து | | டொ. | பொறுப்புக்களும், நிகரப் பெறுமதியும் | டொ. |
|---|---|---|---|---|
| **நடப்புச்சொத்து** | | | **நடப்புப் பொறுப்பு** | |
| காசு | | 20,000 | கொடுக்க வேண்டிய கணக்கு | 10,000 |
| பட்டியல் | | 85,000 | கொடுக்க வேண்டிய உறுதிகள் | 17,000 |
| **தளவாடங்களைப் புதுப்பிக்கத் திரட்டு நிதி** | | | வரிகளுக்கு ஒதுக்கியது | 13,000 |
| (அமெரிக்க அரசாங்கக் கடன் பத்திரம்) | | 5,000 | | |
| **நிலையான சொத்து** | | | **நீண்டகாலப் பொறுப்பு** | |
| தளவாடம் | 1,30,000 | | சி. தொ. நி. உறுதி | 50,000 |
| குறைய : சகாய நிதி (அல்லது சேமநிதி) | | | கொடுக்க வேண்டிய கடன் பத்திரம் | 50,000 |
| தேய்மானங்களுக்கு | 15,000 | | | |
| | | 1,15,000 | | |
| கட்டடம் | 1,70,000 | | **நிகரப்பெறுமானம்** | |
| குறைய : சகாய நிதி (அல்லது சேமநிதி) | | | | |
| தேய்மானங்களுக்கு | 5,000 | | **முதல்கையிருப்பு** | |
| | | 1,65,000 | முன்னுரிமைக்கையிருப்பு | 50,000 |
| **சூக்குமமுதல்** | | | சாதாரணக்கையிருப்பு | 2,00,000 |
| ஆக்கவுரிமைகள் | | 10,000 | | |
| நன்மதிப்பு | | 20,000 | மேல்மிச்சம் | 30,000 |
| மொத்தம் | | 4,20,000 | மொத்தம் | 4,20,000 |

டதென்பதைச் சரியாகக் கூறவும் முடியாது. மேல்மிச்சத்தோடு கூட்டப்பட்டால் அது சொத்தில் அதிகரிப்பையோ, பொறுப்பில் குறைவையோ இரண்டையுமோ உண்டாக்கலாம். இதற்கு மிஞ்சி ஒன்றுஞ் சொல்லிக் கொள்ள முடியாது.

ஒரு கம்பெனியின் இலாபம் காசாகவே கிடைக்கிறதென்று கூறுவதுந் தவறு. வருடமுடிவிலே இலாபப் பங்கீட்டு வீதத்தை இயக்குநர் தீர்மானிக்குமுன்னர், 35,000 டொலர் காசாகக் கையிலிருந்தது, அது பங்குதாரர்க்குக் கொடுக்கவோ, முதலோடு முதலாகச் சேர்க்கவோ தகுந்ததாயிருந்தது என்று சொல்லிக்கொள்ள முடியாது. நமது பற்பொடிக் கம்பெனி விடயத்தில் கிடைத்த நல்ல இலாபம் முதலாகச் சேர்க்கப்பட்டும், பொறுப்புக்களைக் குறைக்கப் பயன்படுத்தப்பட்டுமுள்ளது. 5,000 டொலரைக் காசு இலாபப் பங்கீடாகக் கொடுத்திருந்தாலும், கம்பெனியின் பணம் சம்பந்தமான முடிபுகளில் பெரிய மாற்றங்களுண்டாயிருக்

www.padippakam.com



கலாம். இந்த முடிபுகள், மேலும் காசு கடன்படவேண்டும், அல்லது மெதுவாக விருத்தியடையவேண்டும், தளவாடம், சிலபட்டியற் பொருள்கள் என்பவற்றை நட்டத்துக்கு விற்கவேண்டும், அல்லது சிரிப்புக்கிடமான காசுக் கையிருப்போடு வியாபாரத்தை நடத்தவேண்டுமென்ற வகை களிலமையலாம்.

## ஆரம்பக்கணக்கு வைக்கும் தொடர்புகள் பற்றிய சுருக்கம் :

1963 ஆம் ஆண்டு ஐந்தொகையில் காணப்படாததும், 1964 ஆம் ஆண்டு ஐந்தொகையிலுள்ளதுமான புதிய சிக்கல்களை ஆராய்வதற்கு முன்னர் ஐந்தொகைக்கும், வருமான அறிக்கைக்குமுள்ள தொடர்பைப்பற்றிச் சுருக் மாகக் கூறுவாம். (1) ஐந்தொகை உடனடியாகக் காணக்கூடியதொரு காட்சிபோன்றது. ஒரு குளத்திலுள்ள தண்ணீரின் அளவை அளந்து காட்டுவது போன்றது. (2) வருமான அறிக்கை, ஒரு வருடத்தில் அல்லது கணக்கெடுக்கும் காலத்தில் விற்பனை, செலவு, வருமானம் என்பவற்றைக் காட்டும். இது குளத்திலுள்ள நீரின் ஓட்டத்தைக் காட்டும், அதாவது உள்ளே நிரம்பிய நீரையும் வெளியே ஓடிய நீரையும் அளந்துகாட்டும். (3) இதேகால எல்லையின் ஆரம்பத்துக்கும் முடிவுக்குமிடையிலுள்ள தேறிய பெறுமதியின் மாற்றத்தை மேல்மிச்சத்திலுள்ள மாற்றங்களால் அறிய லாம். இது இக்கால வருமான அறிக்கைகளிலே கடைசியிற் காட்டப்படும். புதிய ஐந்தொகையையும், பழைய ஐந்தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தேறிய பெறுமதியிலுள்ள மாற்றம் புலனாகும். குளத்தின் நீர் மட்டத்திலுள்ள மாற்றம், நீர் வெளியேசென்ற அளவை ஒத்திருக்கும். புதிதாகச் சாதாரணப் பங்கு விற்பனையாகியிருந்தால், இரண்டு ஐந்தொகை களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெரியும். முந்திய காலத்துக்குரிய பழைய மட்டத்துக்குமாறான சில திருப்பங்கள் ஐந்தொகை அமிசங்களிலே காணப்படுகின்றன. இதைப்பற்றி இடைக்கால வருமான அறிக்கை ஒன் றுங் குறிப்பிடவில்லை. 1964 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் தேதி ஐந் தொகையை ஆராய்ந்தால் சில விடயங்களைப் அவதானிக்கலாம். ஆனால் கணக்கு வைப்பது சம்பந்தமான அடிப்படை விடயங்களைப் பற்றி ஏலவே நிறையக் கூறியுள்ளோம்.

## சேமநிதி, நிதி

புதிய ஐந்தொகை பலவகையிற் பழைய ஐந்தொகை போலவேயிருக் கிறது. ஆனாற் சில புதிய அமிசங்கள் முதன்முதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய புதிய அமிசங்களில் இறுதியிலுள்ள மேல்மிச்சம் பற்றி விளக் கிவிட்டோம். பொறுப்புக்களில் வரிச்சேமநிதி என 13,000 டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை விளங்குவது கடினமன்று. 1965 மார்ச்சு 15 இலும், அதையடுத்துவந்த தவணைகளிலும் கம்பெனி அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய வரிகள், கொடுக்கும் கணக்குகள், கொடுக்கவேண்டிய உறுதிகள்போல அவை குறுகியகாலப் பொறுப்புக்களேயாகும்.

www.padippakam.com



கொடுக்கவேண்டிய என்று கூறுவதே பொருத்தம். "சேமநிதி" என்பது காசுச்சேர்க்கையையே கருதும். ஆனால் அது காசுச் சேர்க்கையன்று. வரிக்கான சேமநிதி என்றால், விசேட கடனுளிக்காகக் கம்பெனியின் மொத்தச் சொத்தில் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்தல் எனப் பொருள்படும். உரிமையாளரின் நிகரப்பெறுமதி, கொடுக்கவேண்டிய வரியளவுக்குக் குறைவுடையதென்பதே அதன்பொருள். மூன்று வகையான சேமநிதிகளுண்டு. இவற்றில் எந்த நிதியும் காசுச் சேர்க்கையையோ திரவச் சொத்தையோ குறிக்கவில்லை.

புதிய அமிசங்களுக்கு[1] செத்துப் பக்கத்தைப் பார்ப்போம். முதலாவது புதிய அமிசம் "திரட்டு நிதி தளவாடங்கள் புதுப்பிப்பதற்கு" என்று குறிப்பிடப்படும். இது நடப்புச் சொத்துக்கும், நிலையான சொத்துக்குமிடையிலுள்ளது. இது மூன்றுவீத அரசாங்கக்கடன் பத்திரமாகும். பழைய எந்திரங்களுக்குப் பதிலாகப் புதியவற்றை வாங்கும்போது இந்தப் பணத்தையும் பயன்படுத்தலாம். கம்பெனி இந்த நிதியை வேறு செலவுகளுக்குப் பயன்படுத்தத் தீர்மானிக்க இடமுண்டு. ஆனால் அப்படிச் செய்யப்படுவதில்லை. இத்திரட்டு நிதி எத்தகையதென்பதை இலேசாக அறிந்து கொள்ளலாம். வருங்காலத்தில் குறிப்பிட்டதொரு செலவுக்காக ஒதுக்கப்பட்ட திரவச் சொத்தே இந்தத் திரட்டுநிதியாகும்.

நிலையான சொத்துக்களைக் கவனிக்கையில் எமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய விடயமொன்றுண்டு. வருமான அறிக்கையிலே தேய்மானத் தரப்பில், முன் நாம் ஆராய்ந்த போது 2,80,000 டொலர் கட்டடத்துக்கும் தளவாடங்களுக்கும் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஏன்? வருடத் தொடக்கத்திலே அது 3,00,000 டொலர் ஆக இருந்தது. வருடப் போக்கில் புதிய தளவாடங்கள் வாங்கப்படவில்லை. மேலும் வருமான அறிக்கைப்படி உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாக இக் காலவெல்லையில் 20,000 டொலர் தேய்மானந் திரண்டிருக்கிறதெனத் தெரிந்தது.

புதிய ஐந்தொகையிலே, நிலையான சொத்து 1,30,000 டொலர் என்றும் 1,70,000 டொலர் என்றும் ஏன் குறிக்கப்பட்டது? கூர்ந்து ஆராய்ந்தால் அஃது அப்படியில்லையென்பது தெரியும். தளவாடச் செலவாகப்போடப்பட்ட 1,30,000 டொலரில் தேய்மானத்துக்கென ஒரு தொகை (சேமநிதி) கழிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வகையில் 1,15,000 டொலரே தளவாடத்துக்குச் செலவாகிறது. அவ்வாறே கட்டடத்துக்கென ஒதுக்கப்பட்ட 1,70,000 டொலரில் தேய்மானத்துக்கென 5,000 டொலர் கழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தலையைச் சுற்றி ஏன் மூக்கைத் தொடவேண்டும்?

1. இந்த ஐந்தொகையிலோ முந்திய ஐந்தொகையிலோ நடப்புச் சொத்தின் கீழ் அடிக்கடி வரும், முன்னேறியே கொடுக்கப்பட்ட செலவுகள் என்ற அமிசம் காணப்படவில்லை. கம்பெனிகள் வழக்கமாகத் தங்கள் வரியை முன்னேறியே கொடுப்பதுண்டு. பல மாதங்களுக்கு முன்னதாகவே தமக்குவேண்டிய பொருள்களை வாங்குவதுமுண்டு. எனவே ஐந்தொகையில் இது சொத்துக்களின் கீழ் குறிக்கப்படும்.

www.padippakam.com



இரண்டு என்று சொல்வதற்குப் பதிலாக நாலு சய இரண்டு என்று ஏன் சொல்ல வேண்டும்?

இதற்கு நல்ல காரணமுண்டு. நேர்மையுள்ள கணக்காளன் தேய்மானப்பெறுமதியை அறிந்திருப்பான். இருந்தும் அது பெரும்படியான யூகமாகவேயிருக்கும். வெறும் ஊகத்தைக்கொண்டு தளவாடக் கணக்கு 1,15,000 டொலர் என்று போட்டால், அந்த மதிப்பீட்டை எவ்வளவு தூரம் நம்பலாமென்று பொதுமக்கள் அறியமாட்டார். எனவே ஆதியில் தளவாடத்துக்கென மதிப்பிட்ட 1,30,000 டொலரைப் போட்டுப் பின்னர் தான் ஊகித்த தேய்மானப் பெறுமதியை அவன் போடுகிறான். எனவே 1,15,000 டொலர் கணக்கை எவ்வளவு தூரம் நம்பலாமென்று பொது மக்கள் உணர்வர். எனவே சுற்றிவளைத்து மதிப்புப்போடும் இந்தமுறையால் கெடுதியொன்றுமில்லை; நன்மையேயுண்டு.

தேய்மானச் சேமநிதி அல்லது படிச்செலவு என்ற அமிசத்தின் பொருளை இப்போது நன்ருக விளங்கிக்கொள்ளலாம். இது பணத்தொகையன்று. இது பழையவற்றைப் புதுப்பிப்பதற்குப் பயன்படும் திரவச்சொத்துமன்று. இது மிகைப்படுத்திக் காட்டப்பட்ட சொத்துக்கணக்கில் கழிக்கப்படவேண்டிய தொகை. கட்டடங்களின் தேய்மானப் படிச்செலவு 5,000 டொலர் என்ருல் கட்டடங்களின் ஆதிப் பெறுமதியைப்பற்றிய விளக்கமானதொருதிருத்தம் இதுவாகும். அவ்வாறு திருத்தாவிட்டால் முந்திய மதிப்பீடு மிகைப்பட்ட மதிப்பீடாகிவிடும். சொத்தும், நிகரப்பெறுமானமும் செயற்கைமுறையிலே ஏற்றமான விலையைப் பெருமலிருப்பதற்கு இத்தகைய திருத்தம் அவசியமே.

தேய்மானச் சொத்தைத் திருப்பியமைப்பதற்குத் திரட்டு நிதியில் பணம் ஒதுக்கப்பட்டாலென்ன, படாவிட்டாலென்ன, இத்திருத்தஞ் செய்யப்பட வேண்டியதே. கட்டடங்களுக்குத் திரட்டு நிதியில்லையென்பதைக் கவனிக்க. தளவாடத் தேய்மான மதிப்பீட்டில் மூன்றிலொரு பங்கு அதிகமாகவே தளவாடம் புதுப்பிக்கும் திரட்டுநிதியிருக்கிறதென்பதும் கவனித்தற்குரியது. அமெரிக்காவில் புதுப்பிக்கும் வேலைக்கு அத்துணைப் பணம் ஒதுக்கப்படுவதில்லை. ஏனெனில் திரவமான உறுதியுள்ள கடன்பத்திரங்கள் ஒரு சிறுவீதவட்டியே உழைக்கின்றன. ஆனல் கம்பெனியின் நடவடிக்கைகளிலேயே அந்த முதலை முதலீடு செய்தால் அதிலும் அதிகமான வருமானத்தைப் பெறலாம்.[1]

11. திரட்டுநிதி ஒதுக்கப்படாவிட்டால் பழைய யந்திரத்துக்குப் பதிலாகப் புதியதொன்று வாங்கவோ, பழைய கட்டடத்தைத் திருத்தவோ எங்கிருந்து பணம் கிடைக்கிறது? வேறு தளவாடங்கள் உழைக்கும் பணத்தைக்கொண்டு இதை வாங்கலாம். இந்தத் தளவாடத்திஞல் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்கும்போது அதற்கு ஒரு தேய்மான மதிப்பு ஒதுக்கப் பட்டிருக்கும். அதை முதலீடுசெய்துகொள்ளலாம். புதுப்பிக்கத் தேவை வராத தளவாடங்களின் தேய்மானக் காப்பு நிதியைக் கொண்டு புதுப்பிக்கவேண்டிய தளவாடங்களைப் புதுப்பிக்கலாம். பின்னர் புதிய தளவாடம் பழையதாகும்போது இவ்வாறே புதுப்பிக்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



இரண்டுவகையான சேமநிதியைப் பார்த்திருக்கிறோம். (1) பொறுப்புச் சேமநிதி. இது வரிகளுக்குரியது போன்றது. இது திட்டமானதொரு பொறுப்புத்தொகையாகும். (2) பொறுப்புப் பெறுமதிச் சேமநிதி, தேய்மானத்துக்குள்ளது போன்றது. அறவிட முடியாத நிலுவைக்கு ஈடாகவுள்ளது. இது மிகைபடக்கணக்குப் போட்ட சொத்திலிருந்து கழிக்கப்படுவது. மேல்மிச்சச் சேமநிதியெனவும் ஒன்றுண்டு. இதுவும் பணத்தொகையன்று. கம்பெனிகள் சில சமயம், மேல்மிச்சத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்து, அதற்கு வேறு பெயர்கொடுத்து ஒதுக்கிவிடும். பங்குதாரர்கள் அதிகமான இலாபப்பங்கீடு தாருங்கள் என்று ஆரவாரஞ் செய்யாதிருக்கவே இவ்வாறு செய்யப்படுகிறது. உதாரணமாக நமது பற்பொடிக் கம்பெனி தனக்குக் கிடைத்த மேல்மிச்சமான 30,000 டொலரில் 10,000 டொலரை ஆராய்ச்சி அபிவிருத்தி நிதிக்கென ஒதுக்கிவிடலாம். இந்த 10,000 டொலர் காசுமல்ல, திரவநிதியுமல்ல. மேல்மிச்சம், சேம நிதிகள் என்பனபோல இதுவும் காசாகவோ, திரவநிதியாகவோ இராது என்பதை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்[1].

இதுவரை கணக்கு வைத்தல் சம்பந்தமான அடிப்படை விடயங்களைப் பற்றிக் குறிப்பிட்டோம். இவை சம்பந்தமாக உண்டாகும் வேறு சில பிரச்சினைகள் மேல் ஆராயப்படும்.

**சூக்குமச்சொத்து :**

1964 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இற்குரிய ஐந்தொகையில் புதிய சொத்து என்ற பிரிவில் மேலும் ஒன்றை மாத்திரம் குறிப்பிடலாம். சொத்து எப்பொழுதும் தூலச்சொத்தாக, அதாவது தளவாடமாகவோ, பணமாகவோ, இருக்க வேண்டியதில்லையென்பதைக் காட்டுவதற்காக ஆக்க உரிமை என்ற அமிசம் புகுத்தப்பட்டுள்ளது. இப்புதிய ஆக்க உரிமை இலாபகரமான இரசாயனப்பொருள் ஒன்றைச் செய்வதற்கு 17 வருடத்துக்குத் தனியுரிமை வழங்குகிறது.

இத்தகைய ஆக்க உரிமையில் வருவாய் அதிகமுண்டு. 5, 10, 12, 16 என்று வருடங்கள் செல்லச் செல்ல ஆக்கவுரிமையும் அதன் வாயிதா முடிவடையும் கட்டத்தையணுகுகிறது. அதனால் பெறுமதியும் குறைந்து கொண்டே வரும். லொறிக்குத் தேய்மானப் பெறுமதி எப்படிக் கணக்கிடப்பட்டதோ அதைப்போலவே இதற்கும் தேய்மானக் கணக்குப் போட வேண்டியிருக்கும்.

**நன்மதிப்பும் ஏகபோக உரிமையும் :**

சூக்குமச் சொத்தாயுள்ள ஆக்க உரிமைபற்றி இத்துணை கூறினோம். ஆக்க உரிமையை நாங்கள் வாங்கிவிட்டோமென்றும், அதேசமயம் போட்டி

1. சேமநிதி சம்பந்தமான பிரச்சினைகள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களுண்டு ; நிகழாதனவுமுண்டு. இதனால்மேலும் சிக்கலாகின்றன. வியாபாரமந்தத்துக்கென ஒதுக்கப்பட்ட சேமநிதி போன்றவை உண்மையான பொறுப்பும் அல்ல ; மேல் மிச்ச நிதியுமல்ல.

www.padippakam.com



யாய் வியாபாரம் நடத்திய பற்பொடிக் கம்பெனியையும் வாங்கிக்கொண் டோம் எனவும் வைத்துக்கொள்வோம். இத்தகைய சமாந்தரமான சேர்க்கையினுல் நமது ஏகபோக அதிகாரமும், உழைக்குஞ் சக்தியும் பெருகும். எனவே போட்டிக் கம்பெனியின் அற்ப சொத்தான சில பட்டி யற்பொருள்களுக்காகக் கொஞ்சம் கூடுதலாகவே பொருள் கொடுத்து அவற்றை வாங்கினேம். கொள்வனவு விலையில் ஒரு பகுதி இந்தக்கொள் வனவை ஒழுங்கு செய்து ஏகபோக உரிமையை உண்டாக்கிய முகவர்களுக்கு இலாபமாகச் சென்றடைந்தது.

உழைப்புச் சக்தியை மூலதனமாக்குவதற்கு உதாரணம் இந்த நூற்றாண் டினாரம்பத்தில் ஜே. பி. மோர்கன் அமைத்த பிரமாண்டமான ஐக்கிய அமெரிக்க உருக்குக் கம்பெனியாகும். அவர் அண்ட்ரூ கார்ணீஜி உருக்கு எந்திரத் தொழிற்சாலைகளையெல்லாம் வாங்கி, அவற்றோடு மேலும் ஆறு கம்பெனிகளைச் சேர்த்தார்; அணுப்பௌதிகத்தைப் போலவே பொருளாதார திலும், முழுமையானது அதன்பகுதிகளின் கூட்டுத் தொகையிலும் பார்க்கக் கூடியது என்ற உண்மை பொருந்தும். பகுதிகளை ஒன்ருகச் சேர்த்த பின்னர் 1,300 இலட்சம் டொலர் பெறுமதியான உபரி மூலதனப் பெறு மதியிருப்பதை மோர்கன் கண்டார்.

இத்தகைய வியாபாரத்தினுல் யாருக்கு நட்டம்? கார்ணீஜிக்கோ மோர் கினுக்கோ நட்டமுண்டாகவில்லை. பங்குகளை வாங்கிய பொது மக்கள்கூட இலாபங் குறைக்கப்பட்டதென முறையிட இடமில்லை. ஏனெனில் பலவருடங்களுக்கு அவர்களுக்கு நல்ல இலாபப் பங்கு கிடைத்தது. பங்கு களை நிச விலைக்குவிற்றிருந்ததால் (1) பெருகிய இலாபம் பங்குதாரர்க்கு உண்டானது (2) போட்டிப் பங்குச் சந்தையில் அப்பங்குகளை நல்ல இலாபத் துக்கு விற்பதற்கு உரிமைகிடைத்தது. அந்தக்காலத்து ஒழுக்க நிலைப்படி இவ்வாறு கம்பெனிகளை ஒன்றுசேர்ப்பது தவறெனக் கருதப்படவில்லை.

நுகர்வோன் அதிக விலைகொடுக்க வேண்டிவருமா ? குறைந்தவிலை கொடுக்கவேண்டிவருமா என்ற வகையான பொதுக்கொள்கையோ, அரசி யல், பொருளாதார நோக்கோ காரியக்கெட்டியான நம் கணக்காளரிடம் கடையாது. நமது பற்பொடிக் கம்பெனிக்கோ, ஜே பி. மோர்கனுக்கோ அந்தக் கணக்காளர் வருமாறு சொல்லுவார் : "குறிப்பிட்டதொரு சொத் துக்கு ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து வாங்கினுல் அவ்வளவுக்குஅச் சொத்து உமக்குப் பெறுமதியுடையதாயிருக்க வேண்டும். சொத்து உருப் படியாக இல்லாவிட்டால் அதை உண்டாக்கவேண்டும். அத்தகைய சொத்துக் குத் தான் " நன்மதிப்பு " என்ற பெயருண்டு". சமீபகாலத்தில் இந்த நன் மதிப்பு என்ற சொல்லுக்கு அபகீர்த்தியுண்டாகி வருவதால் அது வேறு சொத்துக்களோடு சேர்த்து வழங்கப்படுகிறது.

சூக்குமச் சொத்து அட்டவணையில் இதுதான் கடைசியாக உள்ள அமிசம். ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியை வாங்கும்போது அதற்குவிலையாகக்

www.padippakam.com



கொடுக்கும் பணத்துக்கும், உருப்படியாக அது பெறும் சொத்துக்கு மிடையேயுள்ள வித்தியாசமே நன்மதிப்பு எனப்படும்.

**முடிவு :**

பொருளாதாரத்துக்கும், கணக்கு வைத்தலுக்குமுள்ள சில ருசிரகமான தொடர்புகளைச் சுருக்கமாக இங்கே கூறுவாம். (1) சொத்துக்களின் பெறுமதி என்பது முதலும் வட்டியும் என்ற கருதுகோளில் அடங்கிய அடிப்படை விடயம். ஐந்தொகையெல்லாம் இதிலே தங்கியுள்ளன. அதைப்பற்றி நாலாம் பிரிவில் ஆராய்வோம். (2) எமது தேசீய வருமானப் புள்ளி விபரங்கள், விற்பனை, செலவு முதலியவற்றின் கணக்குளிலே தங்கியிருக்கின்றன. இவற்றைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம். (3) கம்பெனிகள் எவ்வாறு விலையிடுகின்றன என்பதைப் பின்பு நாங்கள் ஆராய்வோம். அப்பொழுது விலையை நிர்ணயிப்பதற்குக் கணக்கிடும் செலவுகள் உதவுகின்றன.

கணக்காளர் கணக்குவழக்குப் பார்ப்பார். பொருளியலாராய்ச்சியாளர் கணக்குவழக்கின் அடிப்படையிலுள்ள விடயங்களை ஆராய்வர். பணவீக்கமும், இறக்கமுமுள்ள காலங்களில் கணக்காளர் பயன்படுத்தும் சாதாரண முறைகள் நூதனமான முடிபுகளைக் கொடுக்கலாம்.

விலைமட்டங்களில் மாற்றமும், தேய்மானப் பெறுமதியும் இதற்கு ஓர் உதாரணமாகும். விலைவாசிகள் விடம்போல் ஏறுகின்றன என்று வைத்துக்கொள்வோம். கூலி, மற்றச் செலவுகள், தேய்மானம் என்பனவற்றை மேவக்கூடிய அளவுக்கு நான் பொருள்களை விற்றுல் நட்டமின்றி வியாபாரம் நடத்துகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். யந்திரம், கட்டடம் என்பன மலிவாயிருந்த காலத்திலே வாங்கியவற்றுக்கு அதே அடிப்படையில் தேய்மானம் போடும் கணக்காளர் என்ன சொல்வார் ? நான் நட்டமின்றி வியாபாரம் நடத்துகிறேன் என்றுதான் அவருஞ் சொல்லுவார். ஆனால் உண்மையில் நான் எனது பொருள்களை நட்டத்துக்கே விற்கிறேன். ஒரு வியாபாரி தனது பொருள்களைத் திருப்பி வாங்கிப்போடுவதற்கு என்ன செலவாகுமோ அதிலும் பார்க்கக் குறைந்த செலவில் விற்பானுல் அவனும் நட்டத்துக்கே விற்கிருன். எனவே விலையேற்றக் காலங்களில் உண்மை இலாபம்போலக் கற்பனையில் பணத்தைப் பற்றி மிகைபடக் கூறப்படும். அவ்வாறே விலையிறக்கக்காலங்களில் இலாபங்கள் கற்பனையில் குறைபடக் கூறவும்படும். இவற்றைப் பற்றிக் கவனமாயிருக்கவேண்டும் தேசியவருமானப் புள்ளிவிபரங்களில் இலாபங்கள், பொருட்பெறுமதி குறிக்கப்படுமிடத்துச் " சரிக்கட்டப் " படுவதை அவதானிக்கலாம்.).

**அனுபந்தத்துக்குத் தொகுப்புரை :**

இங்கே நீண்டவகையில் நினைவூட்டவிரும்பவில்லை. கணக்கு வைக்கும் முறைபற்றிய சில விடயங்களின் அட்டவணை இங்கேயுண்டு.

www.padippakam.com



1. ஐந்தொகையில் அடிப்படையான தொடர்பு சொத்து, பொறுப்பு, தேறியபெறுமதி என்பவற்றுக்கிடையிலுண்டு. இவையொவ்வொன்றை யும் நடப்புச் சொத்து, நிலையான சொத்து, நடப்புப்பொறுப்பு, நீண்ட காலப் பொறுப்பு, மூலதனம், மேல்மிச்சம் என வகைப்படுத்தலாம்.

2. புதிய ஐந்தொகையிலே வருமான அறிக்கையுண்டு. (அதாவது இலாப நட்ட அறிக்கை). முடிவில் ஏற்படும் பிரிக்கப்படாத இலாபம், மேல்மிச்ச மாற்றங்கள் என்பற்றுக்கிடையேயுள்ள தொடர்பு இதிற் காட்டப்படும்.

3. தேய்மானம் பற்றிய ஆராய்ச்சி. வருமான அறிக்கையில் இது அவசியமான செலவினமாகவும் அது செலவாக இருக்கவேண்டியதில்லை யெனவும், ஐந்தொகை அறிக்கையில், முன்னரே மிகைப்படுத்திக் கூறிய சொத்தில் கழிக்கப்பட வேண்டிய தொகையாகவுமிருப்பது காட்டப்படுகிறது. முக்கியமான தேய்மானப் பெறுமதிகளுக்குரிய முறைகளும் ஏதுக்களும் காட்டப்பட்டுள்ளன.

4. நிதி அல்லது திரவச் சொத்தின் சேர்க்கை, மூன்று விதமான சேம நிதிகள் என்பவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசம், ஆக்க உரிமை, நன்ம திப்பு என்ற சூக்குமச் சொத்துகளின் விளக்கம் என்பன ஆராயப்பட்டுள் ளன.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள் :**

1. ஐந்தொகையின் வலப்பக்கக்கத்தில் காணப்படுபவற்றை விவரிக்க. இடப்பக்கத்திலுள்ளவற்றை விவரிக்க. அடிப்படையான ஒற்றுமையிருப் பதற்கு அறிகுறியாக என்ன அமிசங்கள் பொருந்தவேண்டும்.

2. பற்பொடிக் கம்பெனிக்குப் பணம் கடன்கொடுக்க யோசித்துக்கொண் டிருக்கும் ஒரு வங்கியாளராக உம்மை நினைத்துக்கொள்ளும். நடை முறை அமிசங்களில் நீர் ஏன் அக்கறை கொள்ளவேண்டும் ?

3. பலவகையான சொத்துக்களைப்பற்றி ஓர் அட்டவணைபோடுக. ஒவ் வொன்றின் தன்மையையும் சிலவரிகளிற் சுருக்கமாக விவரிக்க. பொறுப் புக்கள் விடயத்திலும் அவ்வாறே செய்க.

4. வருமான அறிக்கை, கம்பெனியின் குறிப்பிட்டதொரு கால எல்லை யில் நடைபெறும் கருமங்களைக் காட்டும் அசையாத படமா ? ஏன் அப்படி யில்லை ?

5. 1964 ஆம் ஆண்டிலே ஒரு கம்பெனியின் தேறிய விற்பனை 100 இலட்சம் டொலர். செலவினத்தில் 90 இலட்சம் டொலருண்டு. (இதில் வரி வட்டி முதலியன சேர்க்கப்பட்டுள்ளன.) அது தனது தளவாடங்களை வாடகைக்கு அமர்த்துகிறது. பட்டியற்பொருள்கள் வருடப்போக்கில் மாறுவ தில்லை. முன்னுரிமைப்பங்குகள் அதற்கில்லை. இலாபப்பங்கீடு அது கொடுப் பதில்லை. குறைந்தது 6 அமிசங்களையாவது போட்டு இதன் வருமான அறிக்கையைத் தயார் செய்க.

படிப்பகம்

www.padippakam.com



6. 5 ஆம் வினுவிலுள்ளதுபோல கம்பெனி எவ்வித கடனும் எவருக்கும் கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை. பலவருடங்களுக்கு முன்னரே அது வட்டியில்லா முதலைப் பெற்று வியாபாரத்தை ஆரம்பித்தது. அதன் வருடாந்த ஐந்தொகையைப் பின்கண்ட முறையில் நிரப்புக.

| சொத்துக்கள் | 1963 | 1964 | பொறுப்புக்களும் நிகரப்பெறுமதியும் | 1963 | 1964 |
|---|---|---|---|---|---|
| | | | பொறுப்புக்கள் | 0 | 0 |
| | | | நிகரப்பெறுமதி | 500 இலட்சம் டொலர் | —— |
| மொத்தம் | 500 இலட்சம் டொலர் | | மொத்தம் | | |

7. ஐந்தாம், ஆறும் வினுக்களிற் பின்வரும் மாற்றங்களைச் செய்து ஆராய்க. வேறு செலவினங்களோடு கட்டடங்கள் 20 இலட்சம் டொலர் தேய்மானமுடையன. அத்துடன் அதன் பட்டியற்பொருள் 30 இலட்சம் டொலரளவுக்கு குறைந்துவிட்டது. வருடத்திலுண்டாகக் கூடிய நட்டத்தைக் காட்டி வருமான அறிக்கையொன்று தயார் செய்க. 1964 ஆம் ஆண்டு ஐந்தொகையையும் அதன்படி சரிக்கட்டுக.

8. தேய்மானப் பெறுமதியைக் கணக்கிடும் இரண்டு முறையை விவரிக்க. அதனுல் ஏற்படும் வரி நன்மைகளைப்பற்றி விளக்கம் தருக.

9. மூன்றுவகையான சேமநிதிகளைக்கூறி அவற்றின் தாரதம்மியங்களை ஆராய்க. இவற்றில் எவையேனும் "நிதி" யாக உள்ளனவா? காசாக உள்ளனவா? சூக்குமச்சொத்துக்கு உதாரணம் தருக.

10. வருடத்தில் 10,000 டொலர்நிகர லாபம் தரக்கூடியதும் முதலுக்கு நட்டமேற்படாததுமானதொரு தொழிலை எவ்வளவு பணம்கொடுத்து வாங்குவீர்? நன்மதிப்பு நீங்கலாக அதன் மொத்தச் சொத்து 1,00,000 டொலர் பெறுமதியானுல் அதன் நன்மதிப்பு என்னவாயிருக்கும்?

11. பின்வரும் கருத்துக்களை மறுபடியும் ஞாபகப்படுத்தித் தெளிக:

ஐந்தொகை ஒற்றுமை.
வருமான அறிக்கை ஒற்றுமை.
சொத்து, பொறுப்பு, நிகரப்பெறுமதி.
நடப்புச்சொத்து, நிலையான சொத்து.
உழைப்பு, இலாபப்பங்கீடு, மேல்மிச்சம்.
விற்பனையான பொருளின் உற்பத்திச்செலவு.
உற்பத்திச்செலவு, பட்டியல்மாற்றம்.
தேய்மானப்பெறுமதி (செலவாகவும், சேமநிதியாகவும்).
சூக்குமமுதல், ஆக்க உரிமை, நன்மதிப்பு, சொத்து.
சொத்து, பொறுப்பு சேமநிதி, திரட்டு நிதி.

படிப்பகம்

www.padippakam.com

# ஆறும் அத்தியாயம்

## தனிப்பட்ட வருமானமும் குடும்ப வருமானமும்

**எப். ஸ்கொட் பிட்ஸ்ஜெரால்ட் :** *ஏர்ணெஸ்ட், செல்வர் எம்மிலும் வேறு பட்டவரல்லவா ?*

**ஏர்ணெஸ்ட் ஹெமிங்வே :** *ஆம் ; தெரியும். எங்களிலும் பார்க்க அவர் களிடத்துப் பணம் அதிகமுண்டு.*

வருமானத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி அறிவதற்கு ஒருவர் பொருளாதார விதிகளை அறியவேண்டிய அவசியமில்லை. உடையிலிருந்து மனிதனை மட்டுக்கட்டலாமென்பது பழமொழி. ஆனல் ஒருவனுடைய வருவாயிலிருந்து அவனை மட்டுக்கட்டலாமென்று கூறுவதும் பொருத்தமானதே. அதாவது ஒருவனுடைய வருமானத்தை அறிய முடியுமானல் அதிலிருந்து பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். அதாவது அவனுடைய அரசியல் அபிப்பிராயம், அவனுடைய சுவைகள், கல்விநிலை, வயது என்பவற்றையும், அவன் எவ்வளவு வயதுக்கு உயிர் வாழ்வான், அவனுடைய உயிர்மேல் எவ்வளவு தொகைக்குக் காப்புறுதி பிறப்பிக்கலாம் என்பவையெல்லாங் கூடப் பரும்படியாக ஊகிக்கக் கூடியனவாயிருக்கும். ஒரு குடும்பத்துக்கு வாராவாரமோ, மாதாமாதமோ, வருடாவருடமோ நிலையானதொரு வருமானம் வந்துகொண்டிராவிட்டால், அக்குடும்பம் சாதுக்களைக்கொண்ட குடும்பமாயிருந்தாலும், சலிப்படைந்து விடும். அதனுடைய தூலார்த்தமான நடவடிக்கைகள் மாத்திரமல்ல, சூக்குமார்த்தமான கல்வி, பிரயாணம், பொழுதுபோக்கு, தானதருமம், முதலியனவெல்லாம் தடைப்படும். உணவு, உடை, வீடு என்பவைபற்றிப் பேசவேண்டியதில்லை.

அமெரிக்காவின் வாழ்க்கைத்தரமும், குடும்பவருமானமுமே உலகில் மிக உயர்ந்தவையெனக் கூறப்படுகிறது. ஆனல் அமெரிக்காவின் சராசரி வருமானம் என்ன என்பதைப்பற்றி எவரும் தெளிவாக அறியமாட்டார். மிக உயர்ந்த வருமானத்துக்கும், குறைந்த பட்ச வருமானத்துக்குமுள்ள தூரம் எவ்வளவு என்பதையும், வருமான மட்டத்திலே காலப்போக்கில் எவ்வளவு ஏற்றத் தாழ்வுண்டென்பதையும் எவரும் சரியாக அறியமாட்டார்.

இந்த அத்தியாயத்திலே வருமானம் எவ்வாறு செறிந்திருக்கிறதென் பதைப் பற்றிய அடிப்படை விடயங்கள் சிலவற்றைக் காண்போம்.

### ஐக்கிய அமெரிக்காவில் வருமானச் செறிவு

மாணுக்கரிடையே அவர்களின் குடும்ப வருமானம் பற்றி விசாரணை நடத்திப்பார்த்தால், அதைப்பற்றி அவர்களிடம் தெளிவான தகவல் இல்



படிப்பகம்

www.padippakam.com



லாதிருப்பதைக் காணலாம். பெரும்பாலும் அவர்கள் தங்கள் குடும்ப வருமானத்தைச் சிறிது மிகைப்படுத்தியே கூறுவர். சமீபத்திலே ஒரு நாகரிகப் பெண் "பெண்களே தேசியவருமானத்தில் 70 வீதத்தைச் செலவு செய்கின்றனர்; எஞ்சிய 30 வீதத்தையும் நாம் விரைவில் சுவீகரித்துக்கொள்வோம்" என்று கூறினர். இது நியாயமான கூற்றே. இருந்தாலும் பெரும்பாலான பெண்களுக்குத் தமது கணவன்மார் உழைக்கிற உழைப்பைப் பற்றித் தெரிவதில்லை. இஃது ஆச்சரியமானதே. சிலருக்கு கணக்கு வைத்துக் கொள்ளத் தெரியாது. அதனுல் பல வழிகளில் வருமானம் வந்து கொண்டிருக்கிறபடியால் அவர்களுக்குச் சரியான வருமானம் என்ன என்பதே தெரிவதில்லை. வருமானம் எவ்வளவென்று தெரிந்திருந்தாலும், அதை மற்றவர்களுக்குக் கூறச் சிலர் சங்கோசப்படுவர். 1939 இல் இந்தியானுபோலிஸ் என்ற ஊரில் உள்ள உள்ளூர் வெள்ளை மக்களிடையே பழக்கத்திலுள்ள கர்ப்பத்தடை முறைகளை அறிவதற்கு விசாரணைகள் நடத்தப்பட்டபோது அந்தரங்கமான சொந்த விடயங்களைப் பற்றி மக்கள் கூறிய அளவுக்குத் தமது வருமானங்களைப் பற்றிக் கூறச் சங்கோசப்பட்டனர்.

புள்ளி விபரங்கள் கிடையாதபடியால் சஞ்சிகைகளில் வரும் படங்களைக் கொண்டே அமெரிக்க வாழ்க்கைத் தரத்தைப்பற்றி அறியவேண்டியிருக்கிறது. குளிர்காற்றினுல் தண்மை செய்யப்பட்ட பெரிய மாளிகையில் எவ்வித சஞ்சலமுமின்றி வாழும் அமெரிக்கக் குடும்பம், உயர்ந்த பூயிக் கார், பெரிய ஸ்டேஷன் வாகன் வண்டி, மோட்டார் படகு என வாழ்க்கையை இன்பமாகக் கழிப்பதற்கு ஏற்ற சகல வசதிகளும் பொருந்திய ஒரு குடும்பம் படத்திலே காட்டப்பட்டுள்ளது. 90 வீதமான அமெரிக்கக் குடும்பத்தினர் இத்தகைய வாழ்க்கைத்தரத்தைக் காணமாட்டார். கல்லூரிகளிற் படிப்பதற்கு வரும் மாணுக்கர் பெரும்பாலும் செல்வமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அவர்களிற் பலர்கூட இத்தகைய வாழ்க்கைத் தரத்தை அறியமாட்டார்.

அமெரிக்கச் செல்வநிலை உச்சநிலையடைந்திருந்த 1960 ஆம் ஆண்டிற்கூட, ஐக்கிய அமெரிக்காவிலே தலா வருடமொன்றுக்கு ஒருவருக்கு 2,300 டொலர் வருமானமே கிடைத்தது. இது வாரமொன்றுக்கு 44 டொலர் ஆகும். இது சராசரியாகக் கணக்கிடப்பட்ட வருமானமே. அதாவது அமெரிக்காவின் மொத்த வருமானத்தைச் சனத்தொகையால் பிரித்து வந்த கணக்கே இது. ஆனுல் நிசவாழ்க்கையில் வருமானம் இவ்வாறு சமனுக இருக்கமாட்டாது. எனவே இந்தக் கணக்கிலே கருத்தில்லை. வருமானத்தைச் சரிசமனுகப் பிரிப்பதால் மொத்தம் மாருதிருக்குமென்பது நிச்சயமில்லை.

www.padippakam.com



ஒரு வகுப்பிலுள்ள மாணுக்கரை அல்லது நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரையும் தமது வருமானத்தை ஒரு துண்டில் எழுதித் தரும்படி செய்தால், இத்துண்டுகளை இனமினமாகப் பிரித்து வைக்கலாம். அதாவது சில துண்டுகள் 0–2,000 டொலர் இனத்தைச் சேரும், மற்றுஞ்சில 2,000–4,000 டொலர் இனத்திற் சேரும். இவ்வாறே பல இன வருமானங்களைக் காணலாம். இவ்வாறு வருமானத்தின் புள்ளிவிபரமயமான செறிவைக் காணலாம். ஒரு புறத்திலே மிக்கவறியவரைக் காணலாம். மறுபுறத்திலே மிக்க செல்வரைக் காணலாம். இவ்விரண்டு இனங்களுக்குமிடையில் பெருந்தொகையான மக்கள் இனப்படுத்தப்படுவர்.

அட்டவணை 1 இல் இவ்விடயமாகத் தயார்செய்யப்பட்ட புள்ளிவிபரங்களைக் காணலாம். முதற்பிரிவில் வருமான இனம் காணப்படுகிறது. 2 இல் ஒவ்வோரினத்திலுமுள்ள மக்களின் வீதமும் குடும்பங்களின் வீதமும் கொடுக்கப்பட்டுள்ளன. 3 இல் கொடுக்கப்பட்ட வருமான இனத்திலேயுள்ள மக்களுக்குச் செல்லும் மொத்த வருமானத்தின் வீதம் காட்டப்படுகிறது. 4 இல் ஒவ்வொரு வருமான இனத்துக்கோ அதன் கீழுள்ளதற்கோ முழுச்சனத் தொகையில் எந்த வீதத்தினர் சேருவர் என்பது காட்டப்படுகிறது. 5 இல் மொத்த வருமானத்திலே எந்த வீதம், கொடுக்கப்பட்ட வருமான இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அல்லது அவர்களிலும் குறைந்த வருமானமுடையவருக்குச் செல்லுகிறதென்பது காட்டப்படுகிறது.

நடுத்தரத்தினரைச் சுற்றி வறியவரும், செல்வரும் சமனுகவே செறிவு பெற்றிருக்கின்றனர் என நினைப்பது எவ்வளவு தவறென்பதை அட்டவணை 1 காட்டுகிறது. விவிலிய வேதத்திலேயுள்ள "வறியவர் உங்களோடு என்றுமிருப்பார்" என்ற வாசகம் உலகில் அவர்களின் தொகையை எடுத்துக்காட்ட உதவாது. ஏபிரஹாம் லிங்கன் இதனைப்பற்றி "ஆண்டவனுக்கு வறியவரே விருப்பமுடையவர் ......எவ்வளவு வறியவரைப் படைத்துள்ளார்" என அழகாகக் கூறியுள்ளார். ஐக்கிய அமெரிக்காவிலேயுள்ள வருமானச் செறிவைப் பார்க்குமிடத்து பிரமிட்டின் அடிப்பாகம் எவ்வளவு விசாலமாகவும், நுனிப்பாகம் எவ்வளவு கூராகவும் இருக்கிறதென்பதை உணரலாம். "நுனியில் எப்போதும் போதிய இடமுண்டு" என்பது உண்மையே. எதனுலென்றல் நுனிக்குப் போயடைவது கடினம். சிறுவர் விளையாடும் பிரமிட்டுக் கட்டைகளை ஒவ்வோர் அடுக்கும் 1,000 டொலர் வருமானத்தைக் காட்டுவதாக அடுக்கினுல் அதன் முடி ஈபெல் கோபுரத்திலும் பார்க்க உயரமாக இருப்பதைக் காணலாம். ஆனுல் பெரும்பாலான மக்கள் நிலத்திலிருந்து ஒரு யார் தூரத்துக்கு மேலே போகக் கூடிய அளவு வருமானத்தையுடையவராயிருக்க மாட்டார்.

படிப்பகம்

www.padippakam.com


## அமெரிக்காவில் மிகச் சில குடும்பங்களே 10,000 டொலர் வருமானத்தைப் பெறுகின்றன

**அட்டவணை 1.** 1959ஆம் ஆண்டிலே அமெரிக்காவிற் குடும்பங்களும் தனிப்பட்டவர்களும் பெற்ற வருமானத்தைக் காட்டும் படம். இவர்களில் அரைவாசிப் பேர் மத்திய வருமான மான 5,300 டொலருக்குக் குறைவாகவே வருமானம் பெறுகின்றனர். மொத்த வருமான த்தைச் சரிசமமாகப் பங்கிட்டால், ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய சராசரி வருமானம் 6,500 டொலராகும். பெரும்பாலானோர் 4,600 டொலர் வருமானத்தையடுத்துப் பெறுவர். (அமெரிக்க வர்த்தக இலாகா உதவியது.)

| வருமான இனம் (1) | இந்த இனத்தி லுள்ள குடும் பத்தினர், தனி யார் என்போ ரின் விகிதம் (2) | முழு வருமா னத்தில் இந்த இனத்தைச் சே ர்ந்த குடும்பத் தினரும் தனி ப்பட்டவரும் பெறும் விகிதம் (3) | இந்த இனத்தி லும் இதற்குக் கீழும் உள்ள குடும்பத்தினர் தனிப்பட்டோர் ஆகியவர்களின் விகிதம் (4) | இந்த இனத்தி லும் இதற்குக் குறைவானபிரி விலுமுள்ளோர் பெற்ற வரு மானத்தின் விகிதம் (5) |
|---|---|---|---|---|
| 2,900 டொலரின் கீழ் | 14 | 2 | 14 | 2 |
| 2,000— 4,000 டொலர் | 21 | 10 | 35 | 12 |
| 4,000— 6,000 | 23 | 18 | 58 | 30 |
| 6,000— 8,000 | 18 | 19 | 76 | 49 |
| 8,000—10,000 | 10 | 14 | 86 | 63 |
| 10,000—15,000 | 9 | 16 | 95 | 79 |
| 15,000 இற்குமேல் | 5 | 21 | 100 | 100 |
| | 100 | 100 | | |

மேலும் மத்திய வருமான வகுப்பு (இ∴து உயர் வருமானமுடையவரை யும், குறைந்த வருமானமுடையவரையும் பிரிக்கிறது.) நடுத்தர வரு மானத்தைக் காட்டும். 1959 இல் மத்திய வருமான இனம், 2 வயது வந்தோரும் சில குழந்தைகளுமுள்ள சராசரி அமெரிக்கக் குடும்பத்துக்கு 5,300 டொலராக இருந்தது. இது சராசரி வருமானமான 6,500 டொலரி லும் குறைவானதென்பதை அட்டவணை 1 காட்டுகிறது. மத்திய இனத் துக்கு மேலேயுள்ள குடும்பங்களுக்கு இந்த நெளிவான வருமானச் செறிவு மிக அதிகமான வருமானத்தை ஒதுக்குகிறது.

எடுத்துக்காட்டாகவுள்ள அமெரிக்கக் குடும்பமொன்றின் இன்றைய வரு மானம் அதற்கு எவ்வளவுக்குப் போதுமானதென்பதை ஆராய்வோம். குறைந்தபட்ச வரவு–செலவு பற்றிக் கவனமாகக் கணக்கெடுத்த சமூக சேவைத் தொண்டர் சில வருடங்களுக்கு முன்னர் பின்வரும் தகவலைக் கொடுத்தனர் :—

1. உயிர் வாழ்வதற்கு மாத்திரம் :—சினிமா இல்லை, இறைச்சி இல்லை ; பல்வைத்தியமில்லை ; பத்திரிகையில்லை ; உடைகம்மி இவ்வாறு.

படிப்பகம்

www.padippakam.com



2. சுகாதாரத்தைக் கவனித்தல் குறைந்த பட்சம் ; அவ்வாறே மற்றை வாழ்க்கை வசதிகளும்—எப்போதாவது ஒரு நாளைக்கு சினிமா ; அல்லது வேறு விநோதச் செலவுகள் ; இடையிடையே மலிவான இறைச்சி ; பல் வைத்தியம் முதலியன ஓரளவுக்கே.

3. குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகள் :—போதிய உணவு, ஒரோ வொருகால் ஓய்வும், விநோதமும் ; புகையிலை, புத்தகம் முதலியன சிறிதளவு.

1959 இல் இங்கே காட்டிய வரவுசெலவு மதிப்பில் முதலாவதற்கு 2,500 டொலர் செலவு போடலாம். அட்டவணை 1 இல் 1959 இற்குரிய நிசப்புள்ளி விபரங்களை ஆராய்ந்தால், ஆறில் ஒருவருக்குக்கூட இந்த வருமானங்கிடைக்கவில்லை என்பதைக் காணலாம். இரண்டாவது வரவு செலவுத்திட்டத்துக்குத் தேவையான 3,600 டொலரைக்கூட 30 வீதத்தினர் பெறவில்லை. பட்டினத்திலே வசிப்பதிலும் பார்க்கக் கிராமங்களிலே வசிப்பது செலவு குறைவு என்ற போதிலும் "கீழான மூன்றும் தர"த்தைப் பற்றி மக்கள் அக்கறை கொள்வது எதனால் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சௌகரியமான வாழ்க்கை நடத்தக்கூடிய வரவுசெலவுத் திட்டத்துக்குத் தேவையான 4,400 டொலருக்கு அதிகமான வருமானத்தை ஐந்து பேரில் மூவரே பெறுகின்றனர். அமெரிக்க சஞ்சிகைகளில் அழகாக விளம்பரப்படுத்தப்படும் அமெரிக்கக் குடும்பத்தைப் பற்றி ஆராயுமிடத்து, விலையுயர்ந்த அதனுடைய ஸ்டேஷன் வாகன் வண்டியையும் தோற்சட்டையையும் கழித்துவிட்டாலும்கூட அமெரிக்கக் குடிசனத் தொகையிலே 5 வீதத்தினரே வரியுட்பட்ட 15,000 டொலர் வருமானமுடையராயிருப்பதைக் காணலாம். 1959 ஆம் ஆண்டிலே சஞ்சிகையில் விளம்பரஞ் செய்த வகையான வாழ்க்கையை அரும்பொட்டாக நடத்துவதற்குக்கூட அவ்வளவு செலவாகும். நியூயோர்க் நகரத்து ஐந்தாவது தெருவுக்குக் கிழக்கே ஒரு குடும்பம் சௌகரியமாக வாழ்க்கை நடத்த வேண்டுமானால் 40,000 டொலர் வருட வருமானமாவது வேண்டுமெனச் சஞ்சிகைகளில் விளம்பரப்படுத்தப்படும் தரமான வருமானமுடையவர் மிக அற்பமெனவே கூறலாம்.

மேலும், உயர் வகுப்பிலுள்ளவர்களின் வருமானம் குறையலாம். ஏனைய வகுப்பாரோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து இஃது உண்மையே. குடிசன மதிப்பீட்டுப்பிரிவும், தேசீயப் பொருளாதார ஆராய்ச்சியென்ற இலாபங்கருதாத தனியார் ஆராய்ச்சித் தாபனமும், வெளியிட்ட தகவல்களைக் கருத்தோடு ஆராயும்போது, அமெரிக்க வருமானப் பிரமிட்டு முன்னிருந்ததைவிடச் சமநிலையற்றதாய் உருவாகிறதென்பதை உணரலாம். உயர்வகுப்பைச் சேர்ந்த 5 வீதத்தினரின் மொத்த வருமானம் 1929 இலிருந்து குறைந்துகொண்டே வருகிறது. 1929 இல் நாட்டு மொத்த வருமானத்திலே மூன்றில் ஒரு பங்கைப் பெற்றுவந்த இவ்வகுப்பினர் இப்போது ஐந்திலொரு பங்கையே பெறுகிறார்கள். பலவேறு வருமானப்


படிப்பகம்

www.padippakam.com



பிரிவினர் கடந்த 25 வருடத்தில் எவ்வளவு வருமானத்தைப் பெற்று வந்தனர் என்பதை படம் 1 காட்டுகிறது. வருமானத்திலே சமநிலையுண்டாகி வருவதற்கு ஒரு காரணம், "சுபீட்ச அரசு" என்பது பற்றிய இக்கால அரசியற் கொள்கையே. இந்தப் போக்கு இந்நாட்டிலும் அயல்நாடுகளிலுமுண்டு. அதற்குரிய காரணத்தை முற்றாக ஆட்சியாளர் தலையிலே போடமுடியாது.

**யுத்தத்துக்குப் பிந்திய காலச் சுபீட்சம் எல்லா இனத்தவரின் வருமானத்தையும் உயர்த்தியுள்ளது**




படம் 1 : யுத்தகாலத்துக்கு முன்னிருந்தே குடும்ப வருமானச் சராசரி எல்லா இனங்களிடையிலும் அதிகரித்துள்ளது. பெரியவருமானமுள்ள குடும்பங்களில் $\frac{1}{5}$ பேர் டொலர்கணக்கில் மிக அதிகவருமானம் பெற்றனர். ஆனால் ஒப்பீட்டளவில இது குறைவே. மிகக்குறைந்த ஐந்தின் பகுதிக்கு வீதமளவில் அதிக உயர்வில்லை.

(அமெரிக்க வர்த்தகத்திணைக்களம், தேசியமூலவளங்கள் திட்டச்சபை).

**வறுமை குறைதல்.**—"உலகத்துத் தொழிலாளரே ! ஒன்றுபடுமின். அதனால் நீங்கள் இழக்கக்கூடியதொன்றிருக்குமானால் அஃது உங்களைக் கட்டிய சங்கிலிகளே !" என்றவகையில், 1848 இல், அதாவது ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே கார்ல்மாக்ஸும் பிரெட்ரிக் ஏஞ்ஜெலும் தாம் வெளியிட்ட பொதுவுடைமை அறிக்கையிற் கூறினார்கள். கைத்தொழிற்றுறையில் முதலாளித்துவம்பற்றி மார்க்ஸ் கூறிய தீர்க்கதரிசனங்களுட் சில காலஅடைவில் சரியென நிரூபிக்கப்பட்டுவிட்டன. ஆனால் அவருடைய தீர்க்கதரிசனங்களுள் பிரசித்திவாய்ந்ததொன்று முற்றுந் தவறுடையதென நிரூபிக்கப்பட்டுவிட்டது. தனவந்தர் மேலுந் தனவந்தராவார் ; வறியோர் மேலும் வறியவராவார் என அவர் கூறியது எந்தவகையான ஆராய்ச்சியாலும் உண்மையென நிரூபிக்கப்படமாட்டாது. சரித்திர முறையில் ஆராய்ந்தாலென்ன,

படிப்பகம்

www.padippakam.com



புள்ளி விவரமுறையில் ஆராய்ந்தாலென்ன அவருடைய இக்கூற்றுத் தவறுடையதே. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் குறைந்த பட்ச வாழ்க் கைத்தரம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. உணவு, உடை, வீடு, சுகாதாரம், ஆயுள் என்பன கூடிவிட்டன. முதலாளித்துவம் பற்றிய இச்செய்தி உண்மையென்பதைப் புள்ளி விவரங்கள் மூலம் எடுத்துக் காட்டலாம்.

கைத்தொழிற் புரட்சியினுல் உண்டாகிய கெடுதிகளேப்பற்றியும், நோய் மலிந்த நகரங்களிலே வசிக்கும் வறுமை நிறைந்த மக்களேப் பற்றியும், பொருளாதாரச் சரித்திராசிரியர்கள் ஓயாமற் கூறிவருவது ஒரு வழக்கமா யிருந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே சிறுவரைத் தொழிலுக்கமர்த்துதல், நாள் வேலேயின் நீடித்த காலம், தொழிற்சாலே களின் சுகாதாரம், வேலே செய்வோர்க்குப் பாதுகாப்பு என்பன பற்றிச் சார்ள்ஸ் டிக்கென்சுடைய நாவல்களிற்கூடச் செம்மையாக எடுத்துக் காட்டப் படவில்லே. வாரத்தில் 84 மணி நேரம் வேலே செய்ய வேண்டியிருந்தது. இதற்குள் இருந்த இடத்திலேயே காலேயுணவு, மத்தியான உணவு, இரவுப் போசனம் என்பனவுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டது. ஆறு வயதுச் சிறுவன் அல்லது சிறுமியிடம் போதிய வேலே வாங்கப்பட்டது. பன்னிரண்டு வயது வரை அச்சிறுவர் சிறுமியரின் சுகாதாரம் முதலியன கவனிக்கப்படவில்லே. எந்திரத்திலே ஒருவன் இரண்டு விரல்களேப் பலியாக்கினுல் அதைப்பற்றி எவ்வித அக்கறையுங் காட்டப்படவில்லே. எஞ்சிய எட்டு விரல்களும் அவனுக்கு இருந்தனவேயென ஆறுதலடைந்தனர்.

தொழிற்சாலே நகரங்களேப் பற்றிப் பொருளாதாரச் சரித்திராசிரியர்கள் பயங்கரமான செய்திகளேக் கூறியபோதிலும், கைத்தொழில் யுகத்துக்கு முந்திய காலத்திலே இந்தநிலேமை மிகமோசமாயிருந்ததை அவர்கள் எடுத்துக்காட்டவில்லே. அக்காலத்தில் தொழிற்சாலேகள் வீட்டில் இருந்தன. தொழிலாளர் வீட்டிலே வைத்து நெசவு செய்வதற்கென கம்பளியும், பருத்தி நூலும் கொடுக்கப்பட்டன. இந்த முறையினுல் மிகக் கொடிய விதத்தில் வேலேக்காரரிடம் வேலே வாங்கப்பட்டது. ஒரு வாரத்தில் தொழி லாளர் 168 மணிநேரம் வேலேசெய்ய வேண்டியிருந்தது. குடும்பத்திலுள்ள எல்லாருமே வேலே செய்ய வேண்டியவராஞர். நித்திரையில்லாமலே வேலேசெய்ய வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. இக்காரணங்களால் தொழி லாளர் சங்கங்கள் இத்தகைய உற்பத்திமுறையைக் கண்டித்தன. தொழிற் சாலேகளில் எத்தனேயோ கொடுமைகளிருந்ததாகக் காட்டப்பட்ட போதிலும் அவை வீட்டுவேலே முறையைக் கண்டித்தன.

மேலும் கிராமத்திலுள்ள வறுமையை எவரும் கருத்தோடு கவனிப்ப தில்லே. அஃது அவர்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவதில்லே. தொழிற்சாலேகள் நிரம்பிய பட்டினங்களிலுள்ள வறுமையே அவதானி களின் கண்ணேக் கவருகின்றது. கிராமப்புறங்களிலேயுள்ளவர்கள் சுகதேக முடையவர்களாயும், மகிழ்ச்சியுடையவராயும் ஆஜானுபாகுவாக இருக்கிருர்

www.padippakam.com



களென்று கூறப்படுவதெல்லாம் பகற்கனவே. இன்றும் சில அமெரிக்க கிராமங்களிலுள்ளது போன்ற வறுமை, நியூயோர்க், பொஸ்டன், சிகாகோ போன்ற பெரிய நகரங்களின் மோசமான சேரிகளிற்கூடக்கிடையாது.

இன்று தொழிற்றுறைகளிலே பெரிய திருத்தங்கள் உண்டாகிவிட்டன. முன்னர் தொழிற்றுறைகளிலேயும், விவசாயச் சேவைமானிய ஒழுங்கிலேயும் ஏற்படாத பல திருத்தங்கள் இன்று உண்டாகிவிட்டன. இவை பூரணமானவையாயில்லாவிட்டாலும், பெரிய திருத்தங்கள் என்பதில் ஐயமில்லை.

நாம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதைப் பின்வரும் மேற்கோளைக்கொண்டு உணரலாம். இந்த மேற்கோளிற் பேசப்படும் காலத்தில் வாழ்ந்தவர் இன்றும் இருக்கக்கூடும்: நோர்போக்கிலுள்ள மார்ஷாம் என்ற கோயிற்பற்றிலே 19 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் எட்வர்ட் என்ற குடும்பத்தினர் வாழ்ந்தனர். 1850 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆந் தேதி எட்வர்ட்டின் மனைவிக்குக் கடைசி ஆண் குழந்தை பிறந்தது. நான் பிறந்த காலத்திலே என் தந்தை மாட்டுப்பண்ணையில் வேலை செய்தார். வாரத்திலே ஏழு நாளும் அவருக்கு வேலை. விடியு முன்னர் அவர் வேலைக்குப் போய்விடுவார். பொழுதுபட்டு இருட்டின பின்னரே வீடு திரும்புவார். அதனுல் அவர் தம் குழந்தைகளைக் கூடக் காணமாட்டார். ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சிறிது நேரம் அவர்களைக் காண்பார். ஏனெனில் மாரிக் காலத்திலே அவர் வீடு திரும்பு முன்னரே குழந்தைகள் நித்திரைக்குப் போய்விடுவார்கள். இந்தக் காலத்திலே என் தந்தையின் சம்பளம் வாரத்துக்கு 7 சிலிங்காக (1.40 டொலர்) க் குறைக்கப்பட்டது. தாயார் கைத்தறியிலே நெசவு செய்து குடும்பத்து வருவாயைக் கூட்டினுள். இல்லாவிட்டால் எனது குடும்பம் பசியால் வாடவேண்டி ஏற்பட்டிருக்கும். 24 மணி நேரத்திலே 16 மணி வரை என் தாயார் கைத்தறியில் நெசவு செய்து கிழமைக்கு 4 சிலிங் வருமானம் பெற்றிருப்பார். பெரும்பாலும் இதற்குக் குறைவாகவே கிடைத்திருக்கும்.

நான் பிறந்த குடிசையில் இரண்டு அறைகளேயிருந்தன. இவற்றில் அப்பாவும், அம்மாவும், ஆறு குழந்தைகளும் நித்திரை செய்ய வேண்டிய அவசியமிருந்தது. அக்காலத்தில் எமது குடும்பம் மிக்க வறுமையிலாழ்ந்திருந்தது. குழந்தையைப் பெற்றிருந்த காலத்திலே என் தாயார் வெங்காயக் கூழைச் சாப்பிடுவார். வேறு உணவு அவருக்குக் கிடைப்பதில்லை. அதனுல் அவர் ஒரு வாரத்துக்கு மேல் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியவில்லை. அதன் பின்னர் ஆடை நீக்கிய இளக்கமான பாலிலே பாணை நனைத்துக் குழந்தைக்கு ஊட்டினுர். பின்னர், தாயார் நடமாடித் திரியக் கூடியதாய் எழுந்திருந்தபொழுது மறுபடியும் கைத்தறியிலே வேலை செய்தார்..... உணவுப் பொருள்களின் விலை, பஞ்சக்கால நிலையை அடைந்தது. விலை அதிகம் ஏருத ஒரு பொருள் இறைச்சி. ஆனல்

www.padippakam.com


வறியவர் வீடுகளில் இறைச்சி ஏது ? எப்போதாவது ஒரு நாளைக்கு ஒருதுண்டு பன்றியிறைச்சி கிடைக்கலாம். அதுவும் 1 ½ இருத்தலுக்கு அதிகமாக வாங்க வசதியிராது. ஒன்பது பேரைக் கொண்ட குடும்பத்தினர் அதை ஒரு வாரத்துக்காவது வைத்துச் சரிக்கட்டவேண்டிய அவசியமிருந்தது. கிரிமியாச் சண்டைக் காலத்திலே ஒரு வருடத்தில் இரண்டொரு தரந்தான் இறைச்சி எம்வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

பட்டினி கிடந்து வாடாமல் காப்பதற்காக என் தந்தை எசமானுடைய தோட்டத்திலே இரவிரவாக முள்ளங்கிக் கிழங்கைக் களவெடுப்பார். எங்களுடைய சப்பாத்துக்களைத் தந்தையார் பழுது பார்த்துத்தருவார். சனிக்கிழமை இரவில் நானும் என் சகோதரியும் நேரத்தோடு நித்திரைக்குப் போய்விடுவோம். அப்போது எங்கள் உடைகளைக் கழற்றி என் தாயார் கழுவி கிழிந்தவற்றைத் தைத்துக் காயவைத்து அடுத்தநாட்காலை தேவாலயத்துக்குப் போவதற்கு அவற்றை உடுக்கச் செய்வார். மாறி உடுப்பதற்கு அந்தக் காலத்திலே வேறு உடை கிடையாது. இதனால் சனிக்கிழமைகளில் இரவு முழுவதும் தாயார் விழித்திருப்பார். இருந்தாலும் அதிகாலையிலே அவர் நித்திரை விட்டெழுந்து அற்ப சொற்பமாயுள்ள காலைச் சாப்பாட்டைத் தந்து எங்களை ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைக்கு அனுப்புவார்.

இந்த ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைக்கல்வியைவிட நான் வேறு எந்த விதமான கல்வியையும் பெறவில்லை[1].

**இரண்டு உலகம் ?** மேலைத் தேசங்கள் கைத்தொழிற் புரட்சிக்கு முந்திய காலத்தில் எத்தகைய கீழானவாழ்க்கைத் தரத்தில் இருந்தனவோ அவற்றிலும் கீழான நிலையிலேயே இன்று ஆப்பிரிக்காவும் ஆசியாவுமிருக்கின்றன. படம் 2 இலே ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்தி பெருகிற்றென்பதைக் காணலாம்.

புகழ் பெற்ற பொருளாதாரப் புள்ளியியல் நிபுணரான ஹார்வாட்டைச் சேர்ந்த சைமன் குஸ்நெட்ஸ் என்பவர், முன்னணியிலுள்ள மேலை நாடுகள் பல, பத்தாண்டுகளாக தலைக்கணக்கில் விரைவான உற்பத்திப் பெருக்கத்தைக் காட்டின என்று கூறியுள்ளார். எத்தகைய விரைவான வளர்ச்சி? பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் ஒரு பத்து வருடத்தில் பத்து வீதம் ; கனேடாவுக்கும் அமெரிக்காவுக்கும் 16 வீதம், சுவீடனுக்கு பத்து வருடத்துக்கு 30 வீதம்.

வறிய நாடுகளின் முன்னேற்றம் எப்படி ? திட்டமான பதில் கொடுப்பதற்குச் சரியான தகவல் கிடைக்கவில்லை. ஆனால், அவற்றின் உற்பத்தி முன்னேறவில்லையென்பதே, குஸ்நெட்ஸ் பேராசிரியரின் அபிப்பிராயமாகும். அவர் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார் :—


1. ஜோர்ஜ் எட்வர்ட்ஸ் என்பவரின் (1850—1934) சுயசரிதையிலிருந்து Colin Clerk எழுதிய "National Income and Outlay" என்ற நூலிலிருந்து. (St. Martinus, New York 1938) பக்கம் 262–264.

படிப்பகம்

www.padippakam.com


தற்காலக் கைத்தொழில் மாற்றம் உண்டானபோது தற்போது அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் மற்ற நாடுகளைவிட முன்னேறியிருந்தன. மற்ற நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் தமக்குமுள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டின.

**உயரிய விளைதிறன் அதிகவிளைவையும் ஓய்வுநேரத்தையும் கொடுக்கிறது :—**




படம் 2 : தொழில்நுட்பமுன்னேற்றம், திருத்தமான மூலதனப் பொருள்கள், உயர்தரமான தொழில்நுட்பத்தொழிலாளர் என்பவற்ருல், சனப்பெருக்கத்தினும் பார்க்க உற்பத்தி பெருகிற்று.

குறிப்பு : இது "விகித" அல்லது "செமிலொக்" படம். நிலைக்குத்தான அளவு சமதூரம் சமவீதத்தைக் காட்டும்படி அமைந்தது. உ—ம். 100க்கு 200 எவ்வாறு உயர்ந்துள்ளதோ அவ்வாறே 400 உம் 200 உம் உயர்ந்துள்ளன.

(ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் சபை).

படம் 2 சமீபகாலத்தில் சர்வதேச வருமானம் தலைக்கு அதிகமாகப் பெருகியதைக் காட்டும். படம் 3 இல் உள்ள தேசப்படம் ஐக்கிய அமெரிக்காவிலேகூட ஒரே சீரான வருமானமில்லையென்பதைக் காட்டும். வடகிழக்கு, மேற்குக், கரையோரம் என்னும் பகுதிகளிலும் பார்க்கத் தெற்கிலே மிகக் குறைவான வருமானமுண்டு. 1900 ஆம் ஆண்டில் நியூயோர்க்கிலோ பென்சில்வேனியாவிலோ கிடைத்த வருமானங்கூட மிசிசிப்பி மாவட்டத்தில் இன்று கிடையாது. ஆனல் மாவட்டங்களிடையேயுள்ள வருமான வித்தியாசங்கள் வரவரச் சுருங்கி மறைகின்றன. தென்பகுதியில் முன்னேற்றமுண்டாகிறது. சராசரி வருமானத்துக்கு அதிகமான வருமானமுள்ள

www.padippakam.com


நியூ இங்கிலாந்து போன்ற மாவட்டங்களில் சராசரி வருமானமே கிடைக்கிறது. கலிபோணியா போன்ற மாவட்டங்களில் சராசரிக்கும் அதிகமான வருமானம் வந்துகொண்டிருக்கிறது.

## உலகிலே மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பவர் அமெரிக்கர். இடைவெளி குறைகிறது.

**அட்டவணை 2. 1957 இல் பல வேறு நாடுகளில் நிலவிய ஆள்வீத வருமானம்.**

(கிடைத்த மார்க்கம் : சர்வதேச ஆராய்ச்சி நிலையம், லிட். இந்த மதிப்பீடுகள் டொலர் மாற்றுக் கணக்கிலே கொடுக்கப்பட்டுள்ளன : நிசமான வாங்கும் சக்தியை அடிப்படையாகக் கொண்டவை. எல்லா எண்களும் அண்ணளவானவை.)


| | டொலர் | | டொலர் |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா .. | 2,108 | சோவியத் ருஷ்யா .. | 500 |
| கனேடா .. | 1,472 | அயர் .. | 451 |
| சுவிற்சலாந்து .. | 1,244 | இத்தாலி .. | 404 |
| சுவீடன் .. | 1,171 | ஆர்ஜென்டீனு .. | 402 |
| அவுஸ்திரேலியா .. | 1,075 | சோவியத்ருஷியாவின் செல்வாக்குள்ள ஐரோப்பிய நாடுகள் .. | 385 |
| பிரிட்டன் .. | 955 | ஜப்பான் .. | 252 |
| டென்மார்க் .. | 869 | மெக்சிக்கோ .. | 233 |
| பிரான்ஸ் .. | 720 | இந்தியா .. | 64 |
| மேற்கு ஜேர்மனி .. | 711 | சீனு .. | 64 |

**பலவேறு வருமான இனங்களிடையேயுள்ள வேற்றுமையை எவ்வாறு அளந்தறிவது.**

வருமானப் பரவல் எத்துணை அளவு அதிகம்? இந்த வருமானப் பரவலில் காணும் வித்தியாச வீதத்தை எவ்வாறு மதிப்பிடுவது? அட்டவணை 1 இலிருந்து அமெரிக்கரில் பாதிப்பேர் 3,000–7,500 டொலர் வருமான வீச்சில் அடங்குவர் என்பதைக் காணலாம். 7,500 டொலருக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் பிரிவிலும், 3,000 டொலர் வருமானம் பெறுவோர் பிரிவிலும் சமமான தொகையினர் அதாவது காற்பங்கு அமெரிக்கர் இருப்பதைக் கொண்டு அவர்கள் தேசத்து மொத்த வருமானத்தில் ஒரே அளவு வீதமான வருமானத்தைப் பெறுகின்றனர் என்று கூறமுடியாது. உயர்ந்த காற்பங்கினா பெறும் வருமானத்தின் பாதியில் பாதிக்குக் குறைவாகவே கீழ்க் காற்பங்கினர் பெறுகின்றனர்.

வருமானப் பரவலிலுள்ள தாரதம்மியங்களின் வீதத்தை இலக்கத்தில் கணிக்கும் முறையை இது சுட்டிக்காட்டுகிறது. கீழ்ப்படியிலுள்ள பத்து வீதத்தினருக்கு நாட்டின் வருமானத்திலே என்ன வீதம் செல்லுகிறது என்று நாம் இப்போது ஒரு கேள்வியைக் கேட்கலாம். கீழ்ப்படியிலுள்ள 50 வீதத்தினருக்கு எவ்வளவு செல்கிறது? கீழ்ப்படியிலுள்ள 95 வீதத்

அமெரிக்க மாகாணங்களிடையே வருமான மட்டங்கள் பரவலாக வேறுபடுகின்றன




படம் 3. சராசரியிலும் அதிகமான வளர்ச்சி வீதங்களைத் தென்பகுதி பெற்றிருப்பதால், மாகாண வருமான வேறுபாடுகள் சுருங்கி வருகின்றன. இதனிடையில், நியூ இங்கிலாந்திலும் வேறுசில உயர்மட்டத்திலுள்ள பிரதேசங்களிலும், ஆள்வீத வருமானங்கள் சராசரி வீதங்களிலும் குறைவாகப் பெருகுகின்றன; அவ்வீதங்களைத் தேசத்தில் சராசரி வருமான மட்டத்தை நோக்கிக் கீழிறக்குகின்றன. (மூலம்: அமெரிக்க வர்த்தகத் திணைக்களம்.)

www.padippakam.com



தினருக்கு எவ்வளவு செல்கிறது? இத்தகவல்களை அட்டவணை 1 இலுள்ள தரவுகளிலிருந்து பெறலாம்.

வருமானங்கள் ஒரே வகையாக எல்லாருக்கும் கிடைக்கிறதானால் கீழ் மட்டத்திலுள்ள 20 வீதத்தினருக்கு (இங்கே அந்த வீதம் எந்த 20 வீதமாகவும் இருக்கலாம்) நாட்டு வருமானத்தில் 20 வீதம் கிடைக்கும். கீழ்மட்டத்திலுள்ள 80 வீதத்தினருக்கு 80 வீத வருமானம் கிடைக்கும். உயர்மட்டத்திலுள்ள 20 வீதத்தினருக்கும் 20 வீத வருமானமே கிடைக்கும்.

**வருமானங்கள் தனிச் சமத்துவ நிலையிலோ தனிச் சமமின்மை நிலையிலோ இல்லாமற் பங்கிடப்படுகின்றன.**

| மக்கள் நூற்று வீதம் | வருமான நூற்றுவீதம் | | |
|---|---|---|---|
| | தனிச் சமத் துவ நிலை | தனிச் சமமின் மை நிலை | நிசமானது 1959 |
| 9 | 0 | 0 | 0 |
| 20 | 20 | 0 | 5 |
| 40 | 20 | 0 | 16 |
| 60 | 60 | 0 | 32 |
| 80 | 80 | 0 | 55 |
| 100 | 100 | 100 | 100 |

இதனை 4 ஆம் படத்திலுள்ள லோறன்ஸ் வளைகோடு காட்டுகிறது. இக் கோட்டிலே மிக்க வறியவர் முதல் செல்வந்தர் ஈறாக எல்லாவகை மக்களின் வீதத்தையும் கிடையச்சுக் காட்டுகிறது. அவர்களின் வருமான வீதத்தை செங்குத்தச்சு காட்டுகிறது. 4 ஆம் படத்தில் காட்டப்பட்ட அட்டவணையின் இரண்டாம் நிரலிலிருந்து தனிச் சம நிலையைக் காட்டும் மூலைவிட்ட நேர் கோட்டுக்கான தரவுகளைப் பெறுகிறோம்.


தனிச்சமநிலையைப் பற்றி இத்துணை கூறினோம். மற்ற எல்லையில் தனி அசமநிலையின் உத்தேச உதாரணம் உண்டு. இந்நிலையில் 100 இற்கு 99 பேருக்கு வருமானமே கிடையாது. ஒருவருக்கு மாத்திரமே எல்லா வருமானமுமுண்டு. 4 ஆம் படத்தின் மூன்றும் நிரலில் இது காட்டப் பட்டுள்ளது. என் அந்த இலக்கங்கள்? ஏனெனில் கீழ் மட்டத்திலுள்ள 1,20,80,99 பேருக்கு எவ்வித வருமானமுங் கிடையாது. கீழ் மட்டத்தி லுள்ள 100 ஆம் மனிதனே கடைசி மனிதன். எல்லா மக்களுக்கும் சகல வருமானமும் சேருகிறது. லோறன்ஸ் வரிப்படத்திலேயுள்ள அதம மான கோடு—கறுப்புச் செங்கோணக்கோடு—இந்தத் தனி அசமநிலையின் வரையறையான உதாரணத்தைக் காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



1959 ஆம் ஆண்டின் நிசவருமானப் பங்கீடு போன்றவை இந்த இரண்டு எல்லைக்குமிடையிலேயே விழுகின்றன. அட்டவணை 1 இன் 4 ஆம் 5 ஆம் நிரல்களை ஆராய்ந்தால், அவற்றின் மதிப்பீட்டு அட்டவணை 4 ஆம் படத்தில் காணப்படும். அது 4 ஆம் நிரலிலுள்ள இலக்கங்களோடு




படம் 4. மேலேயுள்ள அட்டவணையிற் குறித்தவைகளிலிருந்து, நிசவருமானப் பங்கீட்டு வளைகோடானது தனிச் சமத்துவ நிலைக்கும் தனிச் சமமின்மை நிலைக்குமிடையே இருக்கிறதென்பதைக் காணமுடியும். இந்த லோறன்ஸ் படத்தில் நிழற்றப்பட்டுள்ள பரப்பு (சதுரத்திற் பாதிப் பரப்பளவின் நூற்றுவீதமாகக் கொண்டு), சார்பினடிப்படையில் வருமானத்திலுள்ள சமமின்மையை அளக்கின்றது. (1920ஐ அடுத்த ஆண்டுகளிலே சமமின்மை இதனிலும் பெரிதளவாக இருந்தபோது வளைகோடு எவ்வாறு இருந்திருக்கும் ?).

பெரும்படியாக ஒத்திருப்பதைக் காண்பர். அதனுடைய லோறன்ஸ் வளைகோடு 4 ஆம் படத்திலே இடைக்கோட்டில் காட்டப்பட்டுள்ளது. தனிச் சமநிலையிலிருந்து விலகும் அமிசம், வர்ணம் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனால் நாம் வருமானப் பங்கீட்டிலுள்ள சமநிலையின் அளவை ஓரளவு மதிப்பிட்டுக் கொள்ளலாம்[1].

[1]. வருமானத்திலுள்ள அசமநிலையை அளப்பதற்கு வேறுபல முறைகளுண்டு. இவற்றுள் ருசிகரமான ஒன்றை இங்கே குறிப்பிட முடியுமேயன்றி விபரமாக விளக்க முடியாது. இத்தாலியிற் பிறந்த சுவிஸ் பொருளியற் பேராசிரியரான வில்பிரெடோ பறெட்டோ என்பவர் பாசிஸத்தின் முன்னோடியெனத் தவறாகவே கருதப்பட்டார். "பறெட்டோ படம்" என்ற ஒருவகை மடக்கைப் படத்தைப் பயன்படுத்தி, பலநாடுகளின் பலகாலத்து உயர்மட்ட வருமானம் ஒரே வகையான சார்புடைய நேர்கோடாயிருப்பதைக் கண்டார். இஃது ஓர் இயற்கை விதியெனவுங் கருதினார். பறெட்டோ விதியின்படி, வருமானம் சமூக அரசியல் தாபனங்களையும் வரிவிதிப்புக்

www.padippakam.com



**அசமநிலையின் போக்குகள்.**—இக்காலத்திலே தேசங்களில் வருமானப் பங்கீட்டு அசமநிலைக்கு என்ன நடக்கிறது ? நன்மைகாணுமியல்பில்லாத சிலர் நினைப்பது போல அசமநிலை அதிகரித்துக்கொண்டு வருகிறதா ? லோறன்ஸ் கோடு முதலிய கோடுகளின்படி அசமநிலையை அளந்த ஆராய்ச்சியாளர், அமெரிக்காவிலே 1929 இல் இருந்ததைப் பார்க்கிலும், இப்போது அசமநிலை குறைவாயிருக்கிறதெனக் கண்டனர். பிரித்தானியாவும் ஐக்கிய அமெரிக்காவும் வருமானத்தைப் பொறுத்தவரையில் ஒரே அளவான அசமநிலையையே கொண்டிருக்கின்றன எனத் தெரிகிறது. சில பெரிய வித்தியாசங்கள் சமூகத் தத்துவக் கொள்கையினலேற்படவில்லை ; அமெரிக்காவிலே பெருந்தொகையான விவசாயிகளும் நீக்கிரோத் தொழிலாளரும் குறைந்த சம்பளத்திலே வேலைசெய்து வருகிறார்கள்.

செல்வப்பங்கீட்டைப் பொறுத்தவகையில் இவ்விரு நாடுகளும் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன? பல தொழிலாளருக்கு நல்ல வருமானங்கிடைக்கிறது. அவர்கள் முதுசொமாக எவற்றையும் பெறவில்லை. தாமாகச் சேர்த்துவைக்கவுமில்லை. மூலைவிட்டக்கோட்டிலிருந்து லோறன்ஸ் செலவுப்பங்கீட்டுக்கோடு பெரிதும் விலகுவதால் பங்கீட்டிலே அசமநிலையதிகமுண்டென்பதைக் காட்டுகிறது. பிரித்தானியாவும் அமெரிக்காவும் ஒரே வகையான லோறன்ஸ் வருமானக் கோட்டைக் காட்டியபோதிலும், செல்வக் கோட்டைப் பொறுத்தவரையில் பழையதும், நெடுங்காலம் நிலைத்திருப்பதுமான பிரித்தானிய சமூகத்திலே மிக அதிகமான அசமநிலை காணப்படுகிறது. இஃது எதிர்பார்க்கக்கூடியதொன்றே.

தொழிற்புரட்சி உண்டாவதற்கு முன்னர் வருமானப் பங்கீட்டிலே பெரிதளவு சமநிலையிருந்ததா ? தற்போது கிடைக்கும் அரைகுறையான தகவல்களின்படி அவ்வாறிருந்ததாகத் தெரியவில்லை. பின்தங்கிய நாடுகளிலும் பார்க்க முன்னேற்றமான நாடுகளிலே அசமநிலையதிகமாயிருந்ததா ? யாத்திரிகர்களின் கணக்குப்படி அப்படியிருக்கவில்லையென்பது தெரிகிறது. சமநிலையே அதிகமென்பது இவர்களின் அபிப்பிராயம். செல்வம், வறுமை என்பவற்றிடையேயுள்ள வித்தியாசம் வறியநாடுகளிலேதான் அதிகம். கைத்தொழில் முன்னேற்றமுள்ளநாடுகளில் அது குறைவு. தற்போது கிடைக்கும் தகவல்கள் பூரணமாயில்லாவிட்டாலும் அவற்றை வைத்து ஆராயுமிடத்து இஃது உண்மையெனவே தெரிகிறது. உதாரணமாக இலங்கை, இத்தாலி போன்ற நாடுகளிலுள்ள அசமநிலையை லோறன்ஸ் கோட்டைக் கொண்டு ஆராயுமிடத்து அந்நாடுகளில் அசமநிலையதிகமென்

களையும் கவனியாது ஒரே வகையிலேதான் எங்கும் பங்கிடாகும். இது, அதன் இயற்கை என்று காணப்பட்டது. கடந்த 50 வருடமாகச் செய்த ஆராய்ச்சியின்பயனுக, பறெட்டோவின் விதி எங்கும் செல்லுபடியாகாதெனவும், அஃது இன்றியமையாததொரு நிகழ்ச்சியன்றென்பதும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. பிரித்தானியாவிலே இரண்டாம் மகாயுத்தத்துக்குப் பின்னர், வரி விகிதங்கள் அதிகரித்துள்ளபடியால் வரி கொடுத்த பின்னர் 24,000 டொலர் வருமானமுடையவர் ஒரு 70 பேரே தேறுவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



பதையும், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, நெதலாந்து போன்ற தேசங்களில் அது குறைவென்பதையும் காணலாம்.

எந்தத் தேசத்திலே சமநிலை கூட உண்டு? சோவியத் நாடுகளிலோ சீனுவிலோ உள்ள அசமநிலையை, ஏனைய கலப்புப் பொருளாதாரமுறைகளிலுள்ள நாடுகளின் நிலையோடு எவ்வாறு ஒப்பிடுவது என்பது எவரும் அறியாதவிடயம். கலப்பு முறைகளிலுள்ள தேசங்களை வைத்து ஆராயுமிடத்து அசமநிலை குறைவான தேசங்களில் முதலிடம் பெறுவது இஸ்ரேல் தேசமாகும். அங்கே வைத்தியர், ஆசிரியன்மார், ஏனைய தொழிற்றுறையிலுள்ளார் பெருந்தொகையாக இருப்பதால், மற்ற நாடுகளிலே சாதாரணத் தொழிலாளர் பெறும் சம்பளத்துக்கும் இவர்கள் பெறும் சம்பளத்துக்கும் அத்துணை வித்தியாசம் காணப்படுவதில்லை. கலப்பான பொருளாதாரமுள்ள டென்மார்க், நெதர்லாந்து போன்ற தேசங்களிலே உள்ள அசமநிலை குறைவாகும்.

**வருமானத் தாரதம்மியத்தோடு சம்பந்தப்பட்ட சில அமிசங்கள்.**

எந்தத் தொழிற்றுறையிலுள்ளவர்கள் அதிக வருமானம் பெறுகிறார்கள் ? சமீபகாலத்திலே வைத்தியர்களே அதிக வருமானம் பெற்றனர். அவர்கள் சட்ட அறிஞரிலும்பார்க்க அதிகப் பணம் பெற்றார்கள். அவர்களுடைய சராசரி வருமானம் 19000 டொலர். மையக்கோட்டு வருமானம் 16,000 டொலர். சட்டவறிஞருக்கு சராசரி 13,000 டொலரும் மைய வருமானமாக 9,500 டொலரும் என் கிடைக்கிறது? வைத்தியர்களுக்கு என் வருமானம் அதிகரிக்கிறது? ஏனெனில் வைத்தியர்க்குப் பயிற்சியளிப்பது செலவுமிக்க தொழிலாகும். அத்துடன் போதிய வைத்தியரைப் பயிற்றுவிக்க வசதிகளுமில்லை. வைத்தியக்கல்லூரிகள் குறைவு. எனவே 1910 ஆம் ஆண்டில் எத்தனை வைத்தியர்க்குப் பயிற்சியளித்தோமோ அத்தனை அளவாகவே இன்றும் பயிற்சியளிக்கிறோம். ஆனால் வைத்தியர்க்கான தேவை பெரிதும் அதிகரித்துள்ளது. வைத்தியத் தொழிற்சங்கங்களும் வைத்தியருடைய வருமானத்தை அதிகரிக்கவே வழிபார்க்கின்றன.

பல்வைத்தியர், பொறியியலறிஞர், பாடசாலை ஆசிரியர் என்பவர்களுக்கு முறையே 10,500 டொலர் 9,500, டொலர் 4,700 டொலர் என மைய வருமானமுண்டு. 9 மாதக் கல்லூரி காலத்துக்குக் கல்லூரியாசிரியர் 600 டொலர் மையவருமானம் பெறுகிறார். (கோடைகாலக் கல்லூரிகளிலே படிப்பிப்பவர்க்கு 7,000 டொலர் கிடைக்கும். ஆனால் பாதிப்பேருக்குத்தான் இந்த வாய்ப்புண்டு.) பெரிய சர்வகலாசாலைப் பேராசிரியர்கட்கு இதில் இரட்டிப் பங்கு வருமானமுண்டு. சமீபகாலத்திலே ஆசிரியர்மாருடைய வருமானம் கூடிக்கொண்டுவந்த போதிலும், பாதிரிமாருக்கே மிகக்குறைவான 4,000 டொலர் வருமானங்கிடைத்தது. அவர்களுக்கு வேறு செலவுப்படிகள் இருந்தபோதிலும் அவர்களுடைய வருமானம் நம்பமுடியாத அளவுக்குக் குறைவானதே.

படிப்பகம்

www.padippakam.com



வயது போகப்போக வருமானம் கூடுமா ? குறைந்த சம்பளம் பெறும் கூலிவேலைகளில் இது சாத்தியமில்லை. இத்தகைய வேலைகட்கு ஒருவர் 20, 25 வயதுடையவராயிருக்க வேண்டும். அதன் பின்னர் அவருடைய வருமானம் குறைந்துகொண்டே போகும். தொழிற்றுறைகளிலும், வியாபார நிர்வாகத்துறைகளிலும், வயது முதிரமுதிர வருமானமும் அதிகரிக்கும். வைத்தியத்துறையிலுள்ளவர் 50 வயதுவரையில் தமது சிறந்த திறமையை அடைவர். சட்ட அறிஞரும் அப்படியே. ஓய்வு பெறும் காலத்துக்குப்பின்னரும் இவ்விரு தொழிற்றுறையிலுமுள்ளவர்கள் வேலைசெய்ய முடியும். ஏ. பி. பட்டம் பெற்ற இளம் நிர்வாகி ஒருவர் 550 டொலர் மாதச் சம்பளம் வாங்குங் காலத்தில் பயிற்சி பெறுவார். அவர் திறமையுடையவரானால் கம்பெனித் தலைவராக வருடத்திற்கு 90,000 டொலர் சம்பளம் பெற்றுக்கொண்டு ஓய்வு பெறுவார். அப்போது அவருக்கு பங்குச் சகாயங்களும், ஓய்வுப் பென்ஷன் முதலியனவுங் கிடைக்கும்[1].

ஒருவர் 65 இல் ஓய்வு பெற வேண்டுமெனப் பலகம்பெனிகளும் தாபனங்களும் திட்டமாக விதி செய்திருக்கின்றன. மக்கள் உயிரோடு வாழக் கூடிய கால எல்லை அதிகரித்துக்கொண்டு வருவதால் 65 இல் ஓய்வு பெறுவது வீண் கால விரயமும், மகிழ்ச்சியில்லாத ஓய்வு காலத்தைக் கழிக்க வழிசெய்வதுமாகும். இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது ? ஒவ்வொருவரும் திடீரென்று ஓய்வு பெறாமல் விரும்பியபடி ஓய்வு பெறட்டும். வயது விடயத்தை அதிகம் கருத்திற் கொள்ளாமல் வேறு விடயங்களை வைத்து ஆராய்ந்தே ஓய்வு பெறும் கருமத்தை நிச்சயிக்க வேண்டும்.

### கல்லூரிக்கல்வி ஏற்றதா ?

வாழ்நாள் வருமானத்தைக் கல்வியும் பயிற்சியும் எவ்வாறு பாதிக்கின்றன ? அத்தகைய விடயங்களிலே செலவிடும் பணம் பயனுடையதா ? ஆம். கல்வி பயிலுஞ் செலவுக்காக 6 வீத வட்டியில் கடன் பெறவேண்டியிருந்தாலும், உழைப்புக் காலத்தில் ஒரு பகுதியைப் படிப்பிலே செலவு செய்யவேண்டியிருந்தாலும் வீட்டைவிட்டுப்போய் அதிக தூரத்திலிருந்தாலும், உணவு, புத்தகம் என்பவை வாங்கப் பணத்தைச் செலவுசெய்தாலும், கல்லூரிப் பட்டதாரிகளுக்கே உரிய தொழிற்றுறைகளிற் சேர்ந்து உழைப்பதால் வரும் வாழ்நாள் வருமானம் எல்லாவற்றுக்கும் ஈடுசெய்யக்

1. உயர்தர உத்தியோகத்தரின் சம்பளம் கம்பெனியின் தராதரத்துக்கேற்றவாறு உயரும். ஆனால் திட்டமான விகிதப்படி உயரமாட்டாது. பி. கம்பெனியிலும் பார்க்க இரண்டு மடங்கு பெரிய ஏ. கம்பெனியின் தலைவருக்கு, பி. கம்பெனியின் தலைவருடைய சம்பளத்தில் இரட்டிப் பங்கு கிடையாது. ஆனால் 30 வீதம் அதிகச் சம்பளமே கிடைக்கும். இவ்விடயம் புள்ளி விபரங்களின் பயனாக அறிந்ததொன்று. ஏ. கம்பெனியிலே தலைவராக வருவதற்கு உமக்கு பி. கம்பெனியில் இருப்பவர்களிலும் பார்க்கப் பாதி வாய்ப்பே உண்டாகலாம். அதனால் பெரிய கம்பெனியில் சேராதிருக்க வேண்டுமென்பது பொருளன்று. ஏ. கம்பெனியில் நீர் பி. கம்பெனித் தலைவர் பெறும் சம்பளத்தை உழைப்பீரா என்பதே பிரச்சினை. இஃது எந்தக் கம்பெனிக்கும் பொருத்தமானதொரு பிரச்சினையாகும்.

www.padippakam.com



கூடியதாகவேயிருக்கும். (உயர்ச்சித்தியோடு பட்டம் பெறுவதால் நன்மையுண்டு. டைம் பத்திரிகை நடத்திய ஆராய்ச்சியின்படி படிப்பில்லாதவர் சிறப்பாகப் படித்தவரிலும் குறைவாகவே சம்பளம் பெறுவர். ஆனுல் இருவரும் கல்லூரிப்படிப்பிலே விசேட திறமை பெருதவரிலும் பார்க்க அதிக வருமானத்தைப் பெறுவர்.)

எல்லாவிடயங்களும் பணத்திலே தங்கியிருக்கவில்லே. பணக்காரனுயிருந்துகொண்டும் மனநிம்மதியற்ற வாழ்க்கை நடத்துவதிலும், படிப்பில்லாத ஏழையாயிருந்துகொண்டு சந்தோஷமாய் வாழ்க்கை நடத்துவது சிறப்புடையது. மனநோய் சம்பந்தமாக விசாரணே செய்வதற்கு அரசாங்கம் 1960 இல் ஏற்படுத்திய விசாரணேக்குழு, பலதரப்பட்ட கல்விபெற்றவரிடையேயுள்ள மனவியாதிபற்றி ஆராய்ந்தது. படிப்புக் குறைந்தவர்களிலும் பார்க்கக் கல்லூரிப் பட்டதாரிகள் மனமொடிவும், மனச் சஞ்சலமுமுடையவராயிருக்கிருர்களா ? இல்லேயென்பதே இந்த விசாரணேக்குழுவின் முடிவாகும். அவர்கள் அகநோக்குடையவராயிருக்கிருர்களென்பதுண்மையே. ஆனுல் இதனேடு அவர்கள் மனத்திருத்தியும், மனநிறைவும் உடையவராயிருப்பதைக் காணலாம். அவர்களிடையே மனச் சஞ்சலமுண்டானுல் அது நிசமான விடயங்களேப் பற்றியதேயன்றி கற்பனேயிலுள்ள இடர்ப்பாடுகளேப் பற்றியதாயிருக்கமாட்டாது.

வருமானங்களிலே பல தொழிற்றுறைகளிலும் உள்ள அசமநிலேயைப் படம் 5 காட்டுகிறது. இந்தஅசமநிலே வரிசைப்படி சட்ட அறிஞர், வைத்தியர், கல்லூரி ஆசிரியர், இராணுவ உத்தியோகத்தர் என்ற படிமுறையில் அமைந்துள்ளமை எதனுல் ?

## திறமை, வருமானம் என்பவற்றிலுள்ள வித்தியாசங்கள்

வருமானப் பங்கீட்டுக்கு அடிப்படையாயுள்ள பொருளாதாரக் கொள்கைகளேப் பற்றி இந்நூலின் நாலாம் பிரிவில் விபரமாக ஆராய்வோம். வருமானத்திலே வித்தியாசமிருப்பதற்கு ஒரு காரணம், மக்களிடையே நிலவும் வித்தியாசமே என்பதை பொது அறிவைக்கொண்டே இக்கட்டத்தில் ஊகிக்கக் கூடியதாயிருக்கிறது.

மக்களிடையேயுள்ள இந்த வித்தியாசம் உடலேப் பொறுத்ததாகவோ மனத்தைப் பொறுத்ததாகவோ குணத்தைப் பொறுத்ததாகவோ, ஒழுக்கத்தைப் பொறுத்ததாகவோ இருக்கலாம்.

இவை பரம்பரையாக வந்த குணங்களாயிருக்கலாம் அல்லது சமூகப் பொருளாதாரச் சூழலால் உண்டானவையாயிருக்கலாம். அவை ஒருவனுடைய உடலோடு சேர்ந்த தற்கிழமைப் பொருள்களாயிருக்கலாம் அல்லது ஒருவன் பெற்ற கல்வி போலச் செயற்கையாலுண்டானவையாயிருக்கலாம்.


இந்த வித்தியாசங்கள் சில பிரச்சினேகட்கு அரைகுறையாகப் பதிலளிக்கின்றன. ஒருவருடைய உயரம், அரையைச் சுற்றிய அளவு, விவேகஈவு என்பன மக்களிடையே வருமானப் பங்கீடு போல அத்துணே வித்தி

படிப்பகம்

www.padippakam.com



**வருமானச் சமமின்மையானது சட்ட அறிஞர், மருத்துவர் என்போரிடை அதிக அளவிலும், பேராசிரியர், இராணுவ உத்தியோகத்தர் என்போரிடை குறைந்த அளவிலும் காணப்படுகிறது :**




படம் 5. வைத்தியர், சட்ட அறிஞர், ஆகியோரின் கோடு, நாலு வளைகோட்டுக்குள்ளே ஏன் விழ வேண்டும் ? வைத்தியர் வளைகோட்டுக்குமேலே பல்வைத்தியர் வளைகோடு இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பதற்குக் காரணம் யாது ? சாதாரணப்பங்கு வியாபாரம் நடத்துவோரின் கோடு எப்படியிருக்கும் ? (ஜி. ஜே. ஸ்டிக்லர், நியூயோர்க் தேசீயப் பொருளாதார ஆராய்ச்சி ; 1956)

யாசப்படுவதில்லை. மேலே கூறிய இக்குணவியல்புகளை ஆராயும் விஞ்ஞானிகள், இக்குணங்கள் சாதாரணமாகவே எல்லாரிடத்திலும் காணப்படுகின்றனவெனவும், பெரும்பகுதி மக்களிடையே இக்குணங்களில் அதிக வித்தியாசங் காணப்படுவதில்லையெனவும், மிகக்குறைவாகவும் அதிகமாகவும் உடையவர் தொகை மிக அற்பமெனவுங் கண்டனர். நடுப்பகுதியிலேயே பெரும்பாலான மக்கள் காணப்படுவர். இரண்டு அந்தங்களிலும் குறைவான மக்களே காணப்படுவர். படம் ஆறில் இவ்வியல்பு மணி உருவமைந்த கோடாகக் காட்டப்பட்டுள்ளது. (விவேக ஈவு சாதாரண மக்களுடையதிலும் வித்தியாசமாகக் காணப்பட்டால் உளவியலறிஞர் அதனை மறுபடி மட்டமிட்டு ஏனையவற்றோடு பொருத்துவர்.) வருமானங்கள்—சொத்துக்கள் மூலம் வரும் வருமானத்தைவிடத் தொழில் செய்வதாற் கிடைக்கும் வருமானங்கள்கூட—ஒருபுடையாகவே பங்கிடப்பட்டுள்ளன. இதை மற்றக் கோட்டில் காணலாம். உயர்ந்த சம்பளம் பெறும் ஆட்களை நோக்கி ஒரு நீண்ட வால் செல்வதைக் காணலாம்.


"சாதாரண வளைகோட்டை"ப்பற்றி எவ்வித தூய்மையுங் கிடையாது. சதுரத்திண்மங்களின் உயரத்தைச் சாதாரணமாகச் செறியச் செய்

www.padippakam.com



வதாஞல் அவற்றின் கன அளவு வலது பக்கமாகச் சரிவது இயல்பு. வருமானம் சம்பந்தமாக குடிசனமதிப்புத் தகவல்களைக் கவனமாக ஆராயும்போது சம்பளவருமானவகை ஒவ்வொன்றும் மிதமானதொரு சமச்சீருள்ள மணியின்வடிவக்கோட்டைக் காட்டுமெனக் காணலாம்.

சந்தை வருமானத்திலும் பார்க்கத் திறமைகள் அதிக செங்குத்தாகப் பங்கிடப்படுகின்றனவா ?




படம் 6. உயரம், விவேக ஈவு முதலிய அளந்தறியக்கூடிய மனிதப்பண்புகள் ' செங்குத்தான ' மணி வடிவமுள்ளபுள்ளி விவரப்பங்கீடு உடையவாய்க் காணப்படும். சந்தை வருமானங்கள் சரிவுடையன. உச்ச வருமானம் அதமவருமானத்திலும் பார்க்க நூறு மடங்கு அதிகமாயிருக்கும்.

ஆண்களுடைய வருமானத்தோடு பெண்களின் வருமானத்தையும், சொத்துடையவரின் வருமானத்தோடு தொழிலாளரின் வருமானத்தையும், ஊகவியாபாரம் நடத்துவோரின் வருமானத்தோடு ஏனையவகை வருமானம் பெறுவோரின் வருமானத்தையும் கூட்டிஞல் மொத்த வருமானச் செறிவின் சரிவு தென்படும். ஒவ்வொரு தொழிலாளியின் வருமானத்தையும் பல வருடங்களாகக் கவனித்துவந்தால், வருமானச் செறிவுப்படம் ஒன்று தோன்றும். இந்த வருமானங்கள் வித்தியாசப்படுவதற்குரிய காரணங்களில் மிக முக்கியமானது, அவர்களிடையே உண்டாகும் பலமட்டமான வேலையின்மையேயாகும்.

இந்த மூலாதாரமான பிரச்சினைகளைப் பற்றி ஒருவர் ஆராய்ந்து கொண்டே போகலாம். இதைப்பற்றித் தீர்ப்புக்கூறும் விடயத்தை ஒத்திப்போடுவது நன்று. பொருள்களின் விலையையும் உற்பத்திச் சாதனங்களின் விலையையும் தீர்மானிக்கும் அடிப்படைக் கொள்கைகளைப் படிக்கும்வரை

www.padippakam.com



இந்தத் தீர்ப்பை ஒத்திப் போடுவதே சாத்திர ரீதியானதும், பயனுள்ளதுமான விடயமாகும்[1]

இவ்வாறு வருமானத்திலே இத்தகைய வித்தியாசமிருப்பது அவசியம், அஃது இன்றியமையாதது என்று முடிபு செய்வது தவறென்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேம். போட்டிச் சமுதாயமான எமது சமுதாயச் சட்டத்தினுள்ளே கல்வித்துறையிலுண்டான மூலாதாரமான மாற்றங்களின் பயனும் இந்த அசமநிலையில் முக்கியமான மாற்றங்களேற்பட்டிருக்கின்றன. மேலும், நமது நாட்டிலே படிமுறையாக முன்னேறிவரும் வருமான வரிமுறை நிலவுதல், இந்த அசமநிலைகளைக்குறைத்து வருகிறது. அமெரிக்க வாழ்வில் இது நிலைபெறுனதோர் அமிசமாயிருக்குமெனக் கூறலாம்.

**சிறுபான்மையினரின் நிலை**

பொருளாதாரச் சிறுபான்மையினரைப்பற்றிக் குறிப்பிடாவிட்டால் வருமானத்திலுள்ள அசமநிலைபற்றிய ஆராய்ச்சி பூரணமடையாது. நாம் ஒவ்வொருவரும் ஒரு சிறுபான்மையைச் சேர்ந்தவர்களே. ஆனபடியால் சிறுபான்மையினர் பிரச்சினை எல்லாருக்கும் சொந்தமான நிசப்பிரச்சினையாகும்.

பொருளாதாரத்துறையில் நீகிரோவரும், தொழில் செய்யும் பெண்களும், வயோதிபரும் சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள். ஆண்கள் செய்யும் இதே வேலையைப் பெண்கள் செய்தால் பெண்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பது வாடிக்கையான வழக்கமன்றென இதைக்கூர்ந்து கவனித்துவரும் அவதானிகள் கூறுகின்றனர். அவ்வாறே ஒரு சாதி மக்கள் செய்யும் அதே வேலையை வேறொரு சாதிமக்கள் செய்தால் அவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பதும் பெரும்பாலும் நடைமுறையில்லையென அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் ஆண் பெண்பாலாரிடையிலும் சாதிமக்களிடையிலும் பொருளாதார வித்தியாசம் நிலவுவது உண்மையே. மேலே கூறிய கூற்றுக்கள் உண்மையானால் இந்த வித்தியாசங்களுக்கே இடமில்லாது போய்விடும். இவ்வாறு வித்தியாசங்களிருக்கும் நிலை படம் 3 இலிருந்து தெளிவாகும். ஆனால் இந்த இரு கூற்றுக்களும் முரணாயிருக்கின்றன.

1. எப்ரஹாம் பேர்க்சன் என்பவர் **Structure of Soviet Wages (Harward University Press, Cambridge, Mass. 1941)** என்ற நூலிலே ருஷ்யாவிலுள்ள பொதுவுடைமைச் சமுதாயத்திலே நிலவும் சம்பள வித்தியாசங்களைக் கருத்தோடு ஆராய்ந்துள்ளார். அங்கே உயர்ந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தருடைய வருமானத்துக்கும், மிகக் குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர் வருமானத்துக்குமிடையிலுள்ள வித்தியாசம் நமது சமூகத்தில் நிலவும் வித்தியாசம் போன்றதேயென்பதை எடுத்துக்காட்டியுள்ளார். ஷொஸ்தாகோவிச் போன்ற ருஷ்ய சங்கீத வித்துவான்களும், விஞ்ஞானிகளும், அமெரிக்க சங்கீத விற்பன்னரான ஸ்ட்ராலின்ஸ்கி போன்றவர்களிலும் டெல்லர் போன்ற அமெரிக்க விஞ்ஞானிகளைப் போன்றவர்களிலும் பார்க்க அதிக சம்பளம் பெறுகின்றனர். இந்த வித்தியாசம் சமமாகவே காணப்படுகிறது. சோவியத் ஆட்சிப் பீடத்திலுள்ளவர், இராணுவ உத்தியோகத்தர், பொதுவுடைமைக்கட்சி அங்கத்தவர், பொதுமக்கள் என்போரிடையேயுள்ள அரசியற் சலுகை சம்பந்தமான அசமநிலையை அளப்பது கடினம்.

www.padippakam.com



இதை எவ்வாறு தீர்க்கலாம்? ஆண்பெண் என்ற வித்தியாசமும் சாதி வித்தியாசமும் மிக நுட்பமாகச் செய்யப்படுகிறது. அதாவது உயர்ந்த சம்பளமுள்ள தொழில்களைப் பெண்களுக்கோ நீகிரோ மக்களுக்கோ கொடாமல் விடுகிறார்கள்.

இதுவே இந்த முரண்பாடான கூற்றுக்களை விளக்கக்கூடியது. ஆனால் வேறு சிலர், பெண்களும் நீகிரோச் சாதியாரும் உயர்ந்த சம்பளம் பெறக்கூடிய தொழில்களில் ஈடுபட்டபோதிலும் அவர்களுக்குக் குறைவாகவே சம்பளம் கொடுக்கப்படுகிறதெனக் கூறுவர். பெண் ஆசிரியைகள் ஆண்களிலும் குறைந்த சம்பளத்தையே பெறுகிறார்கள். மின்சாரத்தொழில் நிலையமொன்றிலே தொழில் நிலையை ஆராயும் நிபுணர்கள், தொழிற்சாலையில் நடைபெறும் தொழில்கள் எல்லாவற்றையும் இரண்டு வகையாகப் பிரிப்பார்கள். ஒன்று ஆண்கள் செய்யக்கூடிய வேலை. மற்றது பெண்கள் செய்யக்கூடிய வேலை. உச்சச் சம்பளமே ஆண்களின் ஆரம்பச் சம்பளமாயமைகிறது. ஆனால் சில தொழில்களில் ஆண்களிலும்பார்க்கப் பெண்களே உற்பத்தியை அதிகரிக்கக்கூடியவாறு திறமைகாட்டுகிறார்களென்பதை தொழில் நிர்வாகிகளும், தொழிற்சங்கங்களும் அந்தரங்கமாக ஒப்புக்கொள்வர்.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உடலமைப்பிலும், மனப்போக்கிலும் வித்தியாசமுண்டு. உதாரணமாக ஒரு பெண் மல்யுத்தத்திலே வெற்றி பெறமாட்டார். அல்லது 100 யார் ஓட்டத்துக்கு ஒரு முன்மாதிரியான உதாரணத்தை ஓடி நிலைநிறுத்தமாட்டார். ஆனால் பெண்களே பெரும்பாலும் நீண்ட ஆயுட் காலத்துக்கு உயிர்வாழக்கூடிய தகுதியும், நன்றாக முயற்சி செய்யும் ஆற்றலுமுடையவராயிருப்பர். வெள்ளையரிடையிலும், கறுத்த மக்களிடையிலும் நிறத்திலும், மயிர் அமைப்பிலும் வித்தியாசங்களுண்டு.

**ஆண்கள் பெண்களைக் காட்டிலும் அதிகம் உழைக்கிறார்கள். வெள்ளையர் நீக்ரோக்களைக் காட்டிலும் அதிகம் உழைக்கிறார்கள்.**

அட்டவணை 3: இடைப்பட்டதான சம்பள வருமானங்கள் 1958, (தகவல் : குடிமதிப்பு அலுவலகம்.)

| | ஆண் | பெண் |
|---|---|---|
| வெள்ளையர் | 4,569 டொ. | 2,364 டொ. |
| நீகிரோவர் | 2,652 | 1,055 |

சாதி, பால் என்பவை சம்பந்தமாக உயிரியல் ரீதியாகவும் சூழ்நிலை ரீதியாகவும் எத்தகைய அபிப்பிராயம் ஒருவருக்கிருந்தாலும்,—இவ்விடயங்களை நன்கு ஆராய்ந்த விஞ்ஞானிகளின் அபிப்பிராயம், சாதாரண மக்களின் அபிப்பிராயத்திலும் வேறுபட்டது—பெண்களும் நீகிரோவரும், ஆண்களையும், வெள்ளையரையும் போலச் செய்யக்கூடிய பல தொழில்களுண்டு

படிப்பகம்

www.padippakam.com



என்பதும், அத்தொழில்களை அவர்கள் செய்யவிடாது தடுக்கப்படுகின்றனர் என்பதும் உண்மையாகும். பூரிப்புக் காலத்திலும் யுத்தகாலத்திலும் இந்தத் தடைகள் நீக்கப்படுகின்றன என்பதை அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறே வயது முதிர்ந்த தொழிலாளியும் நமது சமூகத்திலே சில வசதியீனங்களை அனுபவிக்கிறான். சில சமயம், ஒரு தொழிலாளி 40 வயதிலேயே வேலையில்லாத நிலையை அடைகிறான். அவன் மேலும் பல காலம் நல்ல முறையில் வேலை செய்யக்கூடிய திறமையும், சக்தியுமுடையவனுயிருந்தாலும் வேலையில்லாத் திண்டாட்டமுடையவனுகிறான். வயது முதிர்ந்தவர்களைத்தான் முதலில் தாபனங்கள் வேலையிலிருந்து நீக்கும் என்று கூறப்படுவது தவறு. அவனுடைய முதிர்ந்த அனுபவமும், வேலைத் துறையில் அவன் அடைந்த முதிர்நிலையும் அவனைக் காப்பாற்றுகின்றன. ஆனல் அவன் ஒருமுறை வேலையிலிருந்து விலக்கப்படுவானுனல் மறுபடி அவனுக்கு வேலை கிடைப்பது துர்லபம். கம்பெனிகள் வயது முதிர்ந்த தொழிலாளருக்குச் சகாயஞ் செய்வதற்காக பென்ஷன் திட்டங்கள் வகுத்துள்ளன. கம்பெனிகள் வயது முதிர்ந்தவர்களை வேலைக்கெடாதிருப்பதற்கு ஒரு காரணம் இந்தப் பென்ஷன் திட்டமே. அதாவது வயது முதிர்ந்தவர்களை ஏற்படுத்தினல் அவர்களுக்குப் பென்ஷன் வழங்கும் பொறுப்பு கம்பெனிகளைச் சார்ந்ததாகும். அது எப்படியும் செலவுக்குரியதொரு விடயமேயாகும்.

யுத்தத்தின் பயனுகச் சில பயனுள்ள விடயங்களை அறிந்தோம். முன்னெல்லாம் வயோதிபரும், நீகிரோவரும், பெண்களும் விசேடமான வேலைகளுக்குத் தகுதியற்றவர்களென்ற எண்ணமிருந்து வந்தது. ஆனல் யுத்த காலத்திலே அவர்கள் அந்த வேலைகளைத் திறம்படச் செய்து உயர்ந்த சம்பளமும் பெற்றார்கள். நியாயமான தொழிற்குழுக்கள் மத்திய அரசாங்கத்திலும், சமத்தான அரசாங்கங்களிலுமுண்டு. இத்தகைய துரபிப்பிராயத்தைச் சட்டஞ்செய்து விரைவாக மக்கள் மனத்திலிருந்து நீக்க முடியாதென்பதே அந்தக் குழுக்களின் அபிப்பிராயமாகும். ஆனல் மக்களுடைய மனந் திரும்ப வேண்டும். தான்றோன்றிகளாக இருக்கும் கம்பெனி முதலாளிகளையும் குறை சொல்வதற்கில்லை. தொழிற் சங்கங்களும் இவ்விடயத்தில் அக்கறை காட்டவேண்டும்.

யுத்த காலத்திலும், யுத்தத்தை அடுத்த காலத்திலுமுள்ள செல்வநிலை நீக்ரோவரின் பொருளாதார நிலைமையை முன்னேற்றமடையச் செய்துள்ளது. 1939 ஆம் ஆண்டு துவக்கம் 1960 ஆம் ஆண்டுவரை வெள்ளையரல்லாதாரின் நடுவருமானம் நாலுமடங்குக்கு அதிகமாகிவிட்டது. வெள்ளையரின் நடுவருமானம் மூன்று மடங்காகவே அதிகரித்தது. வியாபாரமந்தம் நாட்டிலே உண்டானல் நீக்ரோவர்களுக்குக் கடைசியாகவே வேலை கிடைக்கும். அன்றியும் அவர்களே முதலாவதாக வேலையிழக்கக்கூடியவராயு



படிப்பகம்

www.padippakam.com



மிருப்பர். வேலை கிடைப்பது அருமையாயிருக்குமானால், வழக்கமாக நீகிரோ வர் பார்க்கக்கூடிய வீட்டு வேலைகளைக்கூட வெள்ளையர் பார்க்க விரும்புவர்.

உயர்ந்த வேலைகளை வித்தியாசம் பாராட்டாது கொடுக்க வேண்டுமென்ற பிரச்சினை மறுபடியும் தலைகாட்டுகிறது. வேலையின்மை, பொருளாதாரப் பாதுகாப்பின்மை என்ற சங்கடங்களுண்டாகும்போதுதான் சிறுபான்மை யினரான நீக்ரோவர், யூதர், கத்தோலிக்கர் போன்றோருக்கெதிராகக் கிளர்ச்சியுண்டாகிறது. இதனால் நமது சனநாயகத் தாபனங்களையே நடுங்க வைக்கக்கூடிய நிலைமைகளுண்டாகின்றன.

### பொருளாதாரப்படுகையமைப்பும் சந்தர்ப்பமும்

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நல்ல சந்தர்ப்பங்களையளிக்கும் நாடு அமெரிக்கா. திறமையுடையவர்கள் முன்னேற அங்கே வசதியுண்டு. தமது உழைப்பினாலும் திறமையினாலும் முன்னேறித் தம் முதலாளியின் மகளையே மணந்துகொண்ட ஹொரேஷியோ அல்கர் என்பவர் வறியவரானா லும், மானமுள்ளவர். அவருடைய வாழ்க்கை முன்மாதிரியானது. இவ் வாறே இதற்கு எதிர்மாறான சம்பவங்களும் அமெரிக்காவில் நிகழ்ந் துள்ளன. ஆனால் இவையெல்லாம் சற்றே மிகைப்படக் கூறப்பட்ட கதைக ளாகும். ஆனால் பழைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இக்கதை களிலெல்லாம் உண்மையமிசங்களுமுண்டு. ஐரோப்பிய நாடுகளிலே, பிர புக்களின் சம்பிரதாயங்கள் நிலவின. அங்கே ஆரம்ப வகுப்புக்களுக்கு அப்பால் இலவசப்படிப்பு வழங்கப்படவில்லை.

பிரித்தானியாவிலே அரசியலிலும், வாழ்விலும் முன்னேற விரும்பு வோருக்கு, ஒக்ஸ்போட் சர்வகலாசாலையிற் பயிலும் உச்சரிப்பும் நல்ல ஆரம்பப்பாடசாலைப் பயிற்சியும் அவசியமெனச் சமீபகாலம்வரை கருதப் பட்டுவந்தது. இலவசக்கல்விச் சகாய வசதிகள் பல ஏற்படுத்தப்பட்டபோதி லும், சமூகத்திலே தாழ்ந்தபடியிலும் மத்திய படியிலுமுள்ளவர்களில் மிகச் சிலரே இந்தத் தடைகளை மீறி முன்னேறக்கூடியதாயிருந்தது. அமெரிக்காவிலே ஆரம்பப் பாடசாலைப் பயிற்சியைப் பற்றியோ, உச்சரிப்புக் களைப் பற்றியோ எவரும் அக்கறை கொள்வதில்லை. பேச்சிலே நிகழும் உச்சரிப்பு வித்தியாசம் தேசவாரியான வித்தியாசமெனக் கருதப்படுகிறது. அமெரிக்க சுருக்கெழுத்தாளருக்கும் உயர்குடிப் பிறந்த இளம் உயர்தர உத்தியோகத்தருக்கும் தோற்றத்திலே வித்தியாசமிருக்கமாட்டாது.

மேலும் எமது நாகரிகம் உலோகாயத அடிப்படையிலுள்ளது. வியாபா ரத்திலோ தொழிலிலோ யார் வெற்றியடைகிறாரோ அவரே வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் என அமெரிக்கர் கருதுவர். பணமுள்ளவர் குலத் திலே பிறவாதவராயிருந்தாலும் சமூகத்தில் உயர்ந்த மட்டத்தை அடைந்து விடலாம். பரம்பரை, குலம் என்பவற்றைக் கவனிக்கும் சமுதாயமானால்

www.padippakam.com



அஃது இலேசான காரியமன்று, ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் இருந்த வாண்டர்பில்ட்ஸ் என்ற குடும்பத்தில் ஒரு தலைமுறையிற் கிடைத்த புதுப் பணமே அவர்களுடைய அடுத்த தலைமுறையின் சமூக அந்தஸ்தை நிரூபிக்கக்கூடியதாயிருந்தது.

பெரிய கம்பெனிகளின் இயக்குநர், உத்தியோகத்தர் முதலிய பணக்காரரின் சமூக அடிப்படையைக் கருத்தோடு ஆராய்ந்ததன் பயனுகச் சில நூதனமான தகவல்கள் கிடைத்தன. அமெரிக்கத் தொழிற்றுறை நிர்வாகிகளில் பெரும்பாலோர், விவசாயத் தொழிலிலிருந்தோ, தொழிலாளர் வர்க்கத்திலிருந்தோ வருவதில்லை. அவருடைய தந்தையர் பெரும்பாலும் தொழில் நிர்வாகியாகவோ வேறு உயர்தரத் தொழிற்றுறைகளைச்சேர்ந்தவராகவோ இருப்பர். அட்டவணை 4 இல் டௌசிக், ஜொசிலின் என்போர் நடத்திய ஆராய்ச்சி முடிபுகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**எவரும் உயர்பதவிக்கு வரலாம்; ஆனுல் உயர்ந்த இடத்திலிருந்து துவங்குவது எளிது :**

| தந்தையின் தொழில் | 1912 ஆம் ஆண்டின் மக்கள் அறிமுக அட்டவணையிற் கண்டபடி – வீதம் | 1925 இல் அமெரிக்க இலட்சாதிபதிகள் – வீதம் | 1928 இல் அமெரிக்க வியாபாரத்தலைவர்கள் – வீதம் | 1952 இல் வியாபாரத் தலைவர்கள் – வீதம் | 1962 இல் 50 வயதுக் குட்பட்ட வியாபாரத்தலைவர்கள் – வீதம் |
|---|---|---|---|---|---|
| வியாபாரிகள் | 35.3 | 75.0 | 60.0 | 61.8 | 67.8 |
| தொழிலில் ஈடுபட்டோர் | 34.3 | 10.5 | 13.4 | 13.5 | 14.8 |
| விவசாயிகள் | 23.4 | 7.3 | 12.4 | 12.7 | 11.1 |
| தொழிலாளர் | 6.7 | 1.6 | 12.5 | 7.8 | 2.5 |
| மற்றையோர் | 0.3 | 5.6 | 1.7 | 4.2 | 3.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

அட்டவணை 4. அமெரிக்காவிலே வெற்றி கண்ட தலைவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவரென்பதுபற்றிய ஆராய்ச்சி. வியாபாரிகளிலும் தொழிலாளரே பெருந்தொகையினராயிருந்தபோதிலும், வெற்றிகண்ட தலைவர்களின் தந்தைமார் வியாபாரிகளாகவேயிருந்தனர். இந்த அட்டவணையில் எத்தகைய போக்கைக் கவனிக்கலாம் ? அதனை எவ்வாறு விளக்கலாம்? (ஆதாரம் : F. W. Taussig & C. S. Joslyn, American Business Leaders, Macmillan, New York, 1932; Fortune) இதற்கு நேர் மாறுன இரண்டு விளக்கங்களைக் கூறலாமென அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்கப் பொருளாதாரச் சமூகம் சாதியடிப்படையில் வளருகிறதென் பது இதன் பொருளா ? டௌசிக், ஜொசிலின் என்பவர்கள் இதைப் பற்றித்திட்டமான கருத்தைக் கொள்ளவில்லை[1].

(1) பழங்காலத்திலே அமெரிக்காவில் சிறந்த திறமை உடையோர் மேனிலைக்கு வந்தனர். திறமையற்றோர் கீழ்ப்படியிலேயே நின்றார்கள். (2) பொருளாதார வகுப்புக்களிடையே புழக்கம் உண்டாவதற்குப் பல தடைகளிருந்தன.

டௌசிக்கும், ஜொசிலினும் முதற்கருத்தையே மேற்கொண்டனர். திறமையுள்ள ஒருவனை அமர்த்தி வைத்திருக்க முடியாது என்பதே அவர்களுடைய கருத்து. சமூக ஆராய்ச்சியாளர் இக்கொள்கையை ஒத்துக்கொள்ள மாட்டார். வாழ்க்கை வசதியற்ற குடும்பங்களில் உள்ள குழந்தைகட்கு ஏற்படக்கூடிய கல்வி, பொருளாதார, சமூக, உளவியற் சார்பான எத்தனையோ பிரதிகூலங்களுண்டென அவர்கள் எடுத்துக்காட்டுவர். சமசந்தர்ப்பங் கொடுக்கப்பட்டாலும், எல்லாரும் ஒரேமாதிரி நிலைமைக்கு வரமாட்டார்கள்.

> "எத்தனையோ நல்ல மலர்கள் காட்டிலே பூத்து
> மணம் வீசி மக்கட்குப் பயனில்லாது போகின்றன"

இவற்றில் எந்தக் கொள்கை சரியானதாயிருந்தபோதிலும், அரசாங்கம் அனுசரிக்கும் கொள்கைக்கு இரண்டும் பொருந்தும். ஒரு நாட்டின் மிக முக்கியமான சமூக மூலதனம் மக்களே. இது நல்ல பயனைத் தரக்கூடியதொரு மூலதனமாகும். இந்த மூலதனத்தில் நாம் பழங்காலத்தில் அதிகம் முதலீடு செய்யவில்லை. திறமை எங்கேயிருக்கிறதோ அதைத் தேடி வளர்க்க வேண்டியது அவசியம்.

**சுருக்கம்.**

1. அமெரிக்காவின் வருமானப்பங்கீட்டை ஆராய்ந்ததன் பயனாக, நடு வருமானம், பொதுவாகக் கூறப்பட்டு வருவதுபோல அவ்வளவு உயர்வானதன்று. குறைவானதே. அமெரிக்காவிலே முன்னெந்தக் காலத்திலும் இல்லாத முறையில், மற்றெந்த நாட்டிலும் இல்லாத வகையில் வருமானம் அதிகரித்துள்ளது. ஆனால் சுகமான நல்வாழ்வுக்கு ஏற்றவகையில் அந்த வருமானம் அதிகரிக்கவில்லை.

[1]. இந்நூலின் முதற்பதிப்பு எழுதப்பட்டபோது இதன் ஆசிரியர் கீழ்ப்படியிலிருந்து உயரச் செல்வது மிகக் கடினமென எண்ணினார். இப்போது அவர் அக்கருத்தைப்பற்றி அத்துணைத் திடமாக ஒன்றுஞ் சொல்லமுடியாதிருக்கிறார். 1900 இற்கு முன்னிருந்து வந்த வியாபாரத் தலைவர்களின் தோற்றம் முதலியவற்றை ஆராயும்போது பழங்காலத்து நிலையோடு இக்கால நிலைமையும் ஒத்துநிற்கலாமென்ற உண்மை வெளியாகிறது. வியாபார நிர்வாகங்கள் விரிவடைந்து வருகின்றன. அதனால் அண்ணன் தம்பியென்று சலுகை காட்டும் இயல்பு குறைந்துகொண்டு வருகிறது. புதிதாக ஏற்படுத்தப்பட்டுவரும் பரீட்சைகளின் பயனாகப் படித்தவர்களிடையேதான் திறமை காணப்படும் இயல்பை அறியக்கூடியதாயிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



2. தற்காலக் கைத்தொழில் நாடுகளில் எல்லாம் வறியோர் மேலும் வறியோராகின்றனர் என்ற கூற்று, உண்மையான தகவல்களைக் கொண்டு ஆராய்ந்துபார்க்குமிடத்துச் சரியாகத் தோன்றுது. கைத்தொழிற்புரட்சிக் காலத்தொட்டு மேற்கு ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் சராசரிவாழ்க்கைத்தரம் இலௌகீக வழியில் உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. பின்தங்கிய நாடுகளிலுள்ள வாழ்க்கைத் தரத்தையும் இது தோற்கடிக்கக்கூடிய போக்குக் காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவிலேகூட வாழ்க்கைத்தரத்தில் மிகப் பெரிய வித்தியாசமுண்டு. எனினும் வடபகுதிக்கும் தென்பகுதிக்குமிடையிலிருந்து வந்த பழைய வித்தியாசங்களைச் சுருக்குவதற்கான போக்கு இப்போது காணப்படுகிறது.

3. லோறன்ஸ் கோடு வருமானப் பங்கீட்டிற் காணப்படும் வித்தியாசங்களை அளந்தறிவதற்கு ஏற்ற சாதனமாகும். மிகவறியவரான ஒரு சதவீதத்தினருக்கு நாட்டின் மொத்த வருமானத்தில் எத்தனை வீதம் செல்கிறது? மிகவறியவரான பத்து வீதத்தினருக்கும் 50 வீதத்தினருக்கும், 95 வீதத்தினருக்கும் இவ்வாறே வேறு வீதத்தினருக்கும் எத்தனை வீதம் செல்லுபடியாகிறது என்றெல்லாம் அஃது எடுத்துக்காட்டுகிறது. 1929 ஆம் ஆண்டில் இருந்த அசமநிலையிலும்பார்க்க இப்போது அமெரிக்க வருமானப் பங்கீட்டிலுள்ள அசமநிலை குறைவு. பின்தங்கிய நாடுகளிலுள்ள அசமநிலையிலும்பார்க்க இது குறைவானதே. இருந்தும் தற்போது நிலவும் அசமநிலை பெரிது. வருமானப் பங்கீட்டிலுள்ள வித்தியாசத்துக்கும் மக்களுடைய சரீரத்திறமை, மானசிகத்திறமை என்பவற்றுக்கும் உள்ள தொடர்பைக் கண்டறிவது உருசிகரமானதாகும்.

4. சிறுபான்மை வகுப்பினர் அதாவது வயது முதிர்ந்தோர், பெண்கள், நீகிரோவர், ஏனைய சாதியார் போன்ற சிறுபான்மை வகுப்பினர் சம்பந்தமான பிரச்சினைகள் சனநாயக ஆட்சிக்குச் சில முக்கியமான பொருளாதாரப் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன. பொருளாதாரம், சமூக சாத்திரம் என்பவற்றின் எல்லைகளில் "உயர்தரக் கல்வியுடையவரின் நடமாட்டம்" என்ற பிரச்சினை தலைகாட்டுகிறது. "மூன்று தலைமுறையாக நாம் பரம்பரையிலுள்ளவர்கள்" என்பன போன்ற வாடிக்கையான கூற்றுக்களில் அற்ப உண்மையே உண்டு. ஒருவனுடைய பெற்றோரின் சமூக நிலை, பாட்டன் பாட்டியின் சமூகநிலை, தன்னுடைய சொந்தச் சமூக நிலை என்பவற்றுக்கும், வருமானத்துக்குமிடையே பலத்த தொடர்புண்டு என்பதைக் காட்டுகிறது. ஆனால் காரண காரியத் தொடர்புகளைத் திட்டமாக நிச்சயிப்பது கடினம்.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள்**

1. வகுப்பிலுள்ள ஒவ்வொருவனும் தனது குடும்பத்து வருமானத்தை மதிப்பிட்டு ஒரு கடதாசித்துண்டிலே எழுதட்டும். இவற்றிலிருந்து வருமானப்பங்கீட்டு அட்டவணை ஒன்று தயார் செய்க. நடுவருமானம் என்ன? சராசரி வருமானம் என்ன?

படிப்பகம்

www.padippakam.com



2. உமது சமூகத்தில் புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட பிள்ளை யில்லாத ஓர் ஆணும் பெண்ணும் சுகமாகச் சீவனம் நடத்த எவ்வளவு வருமானம் தேவை ? அதை எவ்வாறு செலவு செய்யலாம் ?

3. உங்களுடைய பெற்ருேர், அவர்களுடைய பெற்ருேரிலும் பார்க்கச் செல்வமுடையவரா ? முதலாளித்துவ அடிப்படையில் ஆராயும்போது இதில் உள்ள நன்மை தீமைகளெவை ?

4. வருமானம் மக்களுடைய திறமை, தேவை என்பவற்றைப் பொறுத்து வித்தியாசப்படுகிறது. அதை ஆதரிக்குமுகமாக நீர் கொள்ளக் கூடிய ஒழுக்கக் கொள்கைகளைக் கூறுக. இக்கொள்கைகளை நீர் எக் காரணத்தால் ஆதரிக்கிறீர் ? 19 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த அமெரிக்கர் உமது கொள்கைகளை ஆதரிப்பாரா ? அவற்றை ருஷ்யர் ஒருவர் ஆதரிப் பாரா ? தென்கடல் தீவு வாசி ஒருவர் ஆதரிப்பாரா ? தொழிற் புள்ளிப் பகுதியின் அறிக்கையின்படி 1,000 டொலருக்குக் குறைவான வருமான முடையவர் தமது வருமானத்திலே 3.3 வீதத்தைத் தேவாலயத்துக்கும் தருமத்துக்கும் கொடுக்கிருர்கள். 10,000 டொலருக்கு மேலே வருமான முள்ளவர் 2.6 வீதத்தைக் கொடுக்கின்றனர் என அதிற்காணப்படுவது பொருத்தமுடையதா ?

5. ஹரல்ட் லீடல், ஜோன் பி. லான்சிங் என்பவர்கள் (**American Economic Review, March 1859, pp 43-67**) பின்வரும் தகவல்களைக் கொடுத் துள்ளனர். இவை ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்குமுள்ள செல்வப் பங்கீட்டுக்கோடு அமைப்பதற்கான தரவுகள். இவற்றைக்கொண்டு லோறன்ஸ் கோடுகளை ஒன்ருகக் கீறுக ; பின்னர் அவற்றை விளக்கி 4 ஆம் படத்திலுள்ளதோடு ஒப்பிடுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்த குடும்பங்களின் வீதம் (கீழ்த்தரத்திலிருந்து) | 0 | 20 | 40 | 60 | 80 | 100 |
| ஐக்கிய அமெரிக்கா | 0 | 0 | 2 | 8 | 26 | 100 |
| மொத்த செல்வவீதம், பிரித்தானியா | 0 | 0 | 0 | 1 | 10 | 100 |

6. பின்வரும் கருத்துக்களைப்பற்றி மீண்டும் சிந்திக்க. வருமானப் பங்கீடு, சராசரி, நடு, வழக்கமான வருமானம், ஆள்வீத வருமானம், லோறன்ஸ் கோடு, சாதாரணப் பங்கீடு, சரிவுப் பங்கீடு, சமூகப் படிவு.

படிப்பகம்

www.padippakam.com

# ஏழாம் அத்தியாயம்

## தனிப்பட்ட நிதியும் சமூகப் பாதுகாப்பும்

“மலர், முத்தம் என்பனவெல்லாம் மிகநல்லவை ; ஆனால் வைரமோ திரமோ சதாகாலமும் நிலைத்திருக்கும்.”

**அனிதா லூஸ்**

தங்கத்திட்டம் பற்றியோ, பெடரல் ரிசர்வ்வங்கிக்கொள்கைபற்றியோ நேரடியான அனுபவம் எல்லாருக்கும் கிடையாது. ஆனால் வருமானம்பற்றிய பிரச்சினை சம்பந்தமாகவும், அவ்வருமானத்தைக் கொண்டு நுகர்பொருளை வாங்குதல் சம்பந்தமாகவும், வாழ்க்கையிலேற்படக்கூடிய எதிர்பாராத மாற்றங்களைச் சமாளிப்பதற்காகப் பாதுகாப்பளிக்கும் வகையில் பணத்தைச் சேமித்து வைப்பது சம்பந்தமாகவுமுள்ள பிரச்சினைகளைத் தினசரி ஒவ்வொருவரும் எதிர்நோக்க வேண்டியவராயிருக்கின்றனர்.

### செலவுத்திட்ட முறைகள்

எந்த இரு குடும்பத்தவரும் தமது வருமானத்தை ஒரேவகையில் செலவு செய்வதில்லை. ஆனால் உணவு, உடை முதலிய பெருஞ்செலவினங்களுக்காக மக்கள் தமது வருமானத்தைப் பங்கிடுவதில் ஓர் ஒழுங்குண்டு— இது சராசரியான முறையிற் கணிக்கப்பட்ட ஒழுங்கு.இதனைப் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். பலதரப்பட்ட வருமான மட்டங்களையுடைய மக்கள் எவ்வாறு தமது வருமானங்களைச் செலவு செய்கிறார்கள் என்பதை அறிய ஆயிரக்கணக்கான குடும்பச் செலவினங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து பொதுப்படையான சில ஒற்றுமைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. நடைமுறைப் பண்பிலுள்ள மாதிரிகள் என இவற்றை வருணிக்கலாம்.[1] இம்மாதிரிகள் எவை ?

வறிய குடும்பத்தவர் தமது வருமானத்திலே பெரும்பகுதியை வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவு, வீடு, உடை என்பவற்றிலே செலவு செய்ய வேண்டும். வருமானம் ஏற ஏற, உணவு வகையில் அதிகம் செலவு உண்டாகும். மக்கள் அதிக உணவும், சத்துள்ள உணவும் சாப்பிடுவார்கள். மலிவாகவும் மாச்சத்து அதிகமாகவுமுள்ள உணவுகளைத் தள்ளிவிட்டு விலையுயர்ந்த இறைச்சி, பிசிதப் பொருள்கள் என்பவற்றையும், பால், பழம், காய்கறி, தகரத்திலடைத்த உணவு என்பவற்றையும் சாப்பிடுவர்.

1. இந்த நடைமுறை மாதிரிகள் “ எஞ்செல் சட்டங்கள் ” என வழங்கப்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த பிரசியப்புள்ளிவிவர நிபுணரான எர்ணெஸ்ட் எஞ்செல் என்பவரே இதனை முதலில் அவதானித்து விதி செய்தவர். (மார்க்ஸ் என்பவரின் நண்பரான பிரெடரிக் எஞ்செல் இவரின் வேறானவர் என்பதை இங்கே கருத்திற் கொள்ள வேண்டும்.)



படிப்பகம்

www.padippakam.com



வருமானம் ஏற ஏற உணவுக்காகச் செலவு செய்யும் மேலதிகமான செலவுக்கு ஓர் எல்லையுண்டாகும். அதாவது வருமானங்கூடக்கூட உணவுக்காக உண்டாகும் செலவு விகிதம் குறையும். (உருளைக்கிழங்கு போன்ற சில மலிவான பொருள்களை அதிக வருமானமுள்ளவர்கள் சாப்பிடாது விட்டுவிடுவர். இப்பொருள்கள் " அதமப் பொருள்கள் " என வழங்கப்படும்.)

ஒருவர் மிக வறிய வருமான இனத்திலிருந்து நீங்கிவிட்டதும் வீட்டு வாடகைக்காக உண்டாகும் செலவு பலரிடையே ஒரே அளவினதாக இருக்கும். அதாவது ஒரு வார வருமானம் வீட்டு வாடகைக்கும் தளவாடங்கள் முதலியவற்றுக்குஞ் செலவாகும். இஃது அநேகமாக மாறாத ஒரு விதியெனலாம். இரண்டு வருட வருமானத்தை வீடு வாங்கப் பயன்படுத்தலாமென்ற விதி இன்று பொருளற்றதாகத் தொனிக்கக்கூடும்.

வரிகொடுத்து மிஞ்சியுள்ள வருமானத்திற் பெரும்பகுதி உடை, வாகனம், பொழுதுபோக்கு என்பவற்றில் செலவாகும். அதுவும் மிக உயர்ந்த வருமான எல்லையை அடையும்வரையே இவ்வாறு உயரும். சுகபோகப் பொருள்களுக்கான செலவு வருமானத்துக்குப் பொருத்தமற்ற வீதத்தில் உயரும். வருமானத்தைச் சேமிப்பதே மிகப் பெரிய சுகபோகமாகும். அதுவும் மிக உயர்ந்த வருமானங்களில் அது பெரிய சுகபோகமாயமையும். இது பலவகையில் நிகழுமென்பதைக் கீழே காட்டுவாம்.

இங்கு காட்டப்பட்ட அனுபவபூர்வமான பொதுப்படை உண்மைகளை 1 ஆம், 2 ஆம் படங்கள் விளக்குகின்றன.

எச்சரிக்கை : வருமானத்தை அனுசரித்து நுகர்வுச் செலவின் சராசரியானது திட்டப்படி மாறுகிறது. சராசரிகளைக்கொண்டு எல்லா விடயங்களையுமறிய முடியாது. ஒரே வருமான இனத்துள் சராசரியைச் சுற்றி பலவகையான விரிவுகளுண்டு. ஜோன் குடும்பத்தினர் உணவில் அதிக செலவு செய்கிறார்கள். ஆனால் வசிப்பதற்கு விசாலமான வீடு உடையவரல்லர். சிமித் குடும்பத்தினர் அதே வருமானமுடையவராயிருந்தபோதிலும் வீட்டுக்கு அதிக வாடகை கொடுக்கிறார்கள். ஆனால் கார் வைத்திருப்பதில்லை. மேலதிகமான குறிப்பு : குடும்பச் செலவுக்கான ஒரு வருடச் செலவுத் திட்டம், நீண்டகாலச் செலவுத்திட்டத்திலும் பார்க்க வித்தியாசமுடையதாயிருக்கும். குறுகியகால வருமானம் சம்பந்தமான சேமிப்பில் ஏற்ற இறக்கம் அதிகம். பத்துவருடச் சராசரிகளில் இந்த வகையான ஏற்ற இறக்கம் குறைவு.

**வாழ்க்கைச் செலவில் பிரதேசவாரியாகவுள்ள வித்தியாசம்**


ஐக்கிய அமெரிக்காவில் பல்வேறு பகுதியிலும் விலைவாசிகளும் வாழ்க்கைத் தரங்களும் வித்தியாசப்படுகின்றன. நகரங்களிலும்பார்க்கக் கிராமங்களிலே வீட்டு வாடகை மலிவு. கீழ்க்கரையிலும்பார்க்க மேற்கரையிலே வாடகை மலிவாக இருந்த காலமுண்டு. யுத்தத்துக்குப்பின்னர் பிரதேசவாரியான வித்தியாசங்கள் குறைந்து விட்டன. முன்னர் வாழ்க்கைச்

படிப்பகம்

www.padippakam.com




குடும்பச் செலவினங்கள் ஒழுங்கான வருமானத்திட்ட முறைகளைக் காட்டுகின்றன




படம்.1 நகர்ப்புறக் குடும்பங்களின் மாதிரிகளைக் கவனமாக ஆராய்தல், நுகர்ச்சிச் செலவைத் தீர்மானிப்பது பற்றிய வருமானத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தும். (மூலம் : தொழிற்புள்ளி விபரச் செயலகம், பென்சில்வேனியப் பல்கலைக் கழகம்.)

வருமானம் அதிகரிக்கிறபோது அத்தியாவசியப் பொருள்களுக்கான விகிதசமச் செலவு வீழ்கிறது. ஆனால் சுகபோகப் பொருள்களுக்கான விகிதசமச் செலவு உயர்கிறது.




படம். 2 உணவும் ஏனை அத்தியாவசியப் பொருள்களும் வருமான விகிதசமத்திலுங் குறைவாக அதிகரிக்கின்றன. பொழுதுபோக்கும் ஏனைச் சுகபோகங்களும் விகிதசமத்திலுங் கூடுதலாக அதிகரிக்கின்றன. (மூலம் : தொழிற் புள்ளி விபரச் செயலகம், பென்சில்வேனியப் பல்கலைக் கழகம்.)

www.padippakam.com



செலவு குறைவான இடங்களில் இப்போது உயர்ந்து விட்டமையே இதற்குக் காரணம். வடக்கேயுள்ள பெரிய பட்டணங்களில் செலவு அவ்வளவு ஏறவில்லை.

வடக்கேயும், தெற்கேயும் செலவில் வித்தியாசமிருந்ததை மக்கள் மிகைப் படுத்திக் கூறி வந்தனர். அவ்வாறே பட்டினங்களுக்குப் பட்டினம் வித்தியாசங்கள் நிலவிவந்தமையையும் மிகைப்படுத்தினர். தொழில் இலாகா தயாரித்த அறிக்கைகளைக் கருத்தோடு ஆராய்ந்து பார்த்தால், பெரிய நகரங்களிடையே வாழ்க்கைச் செலவில் உள்ள வித்தியாசம் குறைவென்பதைக் காணலாம்.

வாழ்க்கைச் செலவு மிகவுயர்ந்த நகரங்களெவை ? நியூயோர்க்கா ? வாஷிங்டனா ?அப்படி நினைப்பீர்களானால் அது தவறு. 20 பெரிய நகரங்களிலே வாழ்க்கைச் செலவு எவ்வாறு வித்தியாசப்படுகிறதென்பதை அட்டவணை 1 காட்டுகிறது. வாஷிங்டன் இந்த அட்டவணையில் நடுத்தானத்தை வகிக்கிறது. (அதன் வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100 ஆனபடியால் அதையே ஒத்துப் பார்ப்பதற்கு அடிப்படையாகக் கொண்டுள்ளோம்.) நியூயோர்க்கும், பிலாடெல்பியாவும் சராசரிக்குக் குறைவாகவேயுள்ளன. மேற்குக் கரை நாடுகள் சராசரிக்கு உயர்வாயிருக்கின்றன. தென் பிரதேசங்களிலுள்ள நாடுகள் சராசரிக்குக் குறைவாகவேயிருக்கின்றன. மத்தியத் தானத்திலும் அந்தங்களிலுமுள்ள நகரங்களிடையே 10 வீதத்துக்கிடையிலேதான் வித்தியாச வீச்சுக்காணப்படுகிறது. முடியிலிருந்து அடிவரை மிக உச்சமாயுள்ள வீச்சு 20 வீதமெனலாம்[1].

வாழ்க்கைச் செலவு எவ்வாறு கணிக்கப்படுகிறது ? விலைகளின் சுட்டிலக்கங்களைப் புள்ளிமுறைப்படி தயார் செய்வது மிகக் கடினம். நிசவிலைகளை அடிப்படையாகக் கொண்டு நுணுக்கமான அறிக்கை செய்ய வேண்டும். பால்டிமூரிலே எல்லா விலைகளும் வாஷிங்டனிலுள்ள விலைகளில் 93 வீதமானல் மாத்திரமே, வாஷிங்டனில் 100 என்ற அடிப்படையில் பால்டிமூரில் வாழ்க்கைச் செலவு சரியாக 93 வீதத்திலிருக்குமெனக் கூறலாம். ஆனால் உண்மையில் சில விலைகள் பால்டிமூரில் வாஷிங்டன் **விலையி**ல் 65 வீதமாகவேயிருக்கும். வேறு சில 150 வீதமாயிருககும். எனவே புள்ளி விவரக் கணக்குப் போடுபவர் "நிறையேற்றிய" சராசரியையே கொள்வார். குறித்த ஒரு சம நிலையான வாழ்க்கை மட்டத்துக்கு ஒவ்வொரு சமூகத்திலும் அவசியமான பொருள்களைக் கவனமாக அட்டவணைப்படுத்தி தொழிற்புள்ளி இலாகா அறிக்கை சமர்ப்பிக்கிறது. அதன் பின்னரே அந்தப் பொருள்களின் மொத்தச் செலவு மதிப்பிடப்படுகிறது.

[1]. உயர்ந்த செலவுப்புள்ளி உள்ள இடங்களிலே சம்பளமும் உயர்ந்திருக்குமென எண்ண வேண்டாம்: பெரும்பாலும் உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. மிகச் செலவுள்ள பொஸ்டனில், செலவு குறைந்த நியூயோர்க், டெட்ரோயிட் நகரங்களைப் போலவே சம்பளம் கொடுக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இதைச் செய்யும்போது மிக்க கவனமெடுக்கவேண்டும். உதாரணமாக தெற்குப் பிரதேசங்களிலே, காலநிலைவெப்பமுள்ளதாயிருக்கிறபடியால் வெப்பமூட்டும் செலவு, கட்டடச் செலவு என்ற விடயங்களில் விசேட சலுகை காட்டப்படும். மேலும் தெற்கிலேயுள்ளவர்களுடைய உணவு ருசிகள் வித்தியாசப்படும். இவை தீர்க்கமுடியாத பிரச்சினைகளை உண்டாக்கு கின்றன. பன்றி இறைச்சிக்குப் பதில் மாட்டிறைச்சி, றையுக்குப் பதில் பூர்போன் என்ற வித்தியாசங்களுண்டு. புள்ளி விபரம் தயாரிப்பவர் சமநிலையான வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டே விலைகளை மதிப்பிடுவார்.

சாதாரணமக்கள் இந்த விடயத்திலேதான் பிழை போவார்கள். ஒருவர் பின்வருமாறு ஆலோசனை கூறுவார் : “டிக்சிகல்லூரியிலே தாவர இயல் ஆசிரியர் பதவியை ஏற்போம். அங்கேயும் இங்கே கிடைக்கிற சம்பளம்தான் கொடுப்பார்கள். ஆனால் அங்கே 6,000 டொலர் இங்கே 12,000 டொலருக்குச் சரி” என்பார்.

**தேசத்தின் எந்தப் பகுதியிலும் வாழ்க்கைச் செலவில் அதிக வித்தியா சங் காணமுடியாது.**

**அட்டவணை 1. 20 பெரிய அமெரிக்கப்பட்டினங்களில் நிலவும் சராசரி நுகர்வோர் விலைகளுக்கு டொலர், சுட்டிலக்க ஒப்புமை 1959.**

ஒரு தொழிலாளியின் குடும்பத்துக்குள்ள வாழ்க்கைச் செலவு சம்பந்த மான மதிப்பீட்டுத் தரவுகள், வாஷிங்டன் வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100 ஆகவிருக்கும்போது சிக்காகோவின் புள்ளி 106.8 என்று சொல்லும்போது சிக்காக்கோவின் 6,567 டொலர் வருமானமானது வாஷிங்டனின் 6,147 டொலர் வருமானத்திலும் $\frac{106.8}{100.0}$ அளவு பெரிதென்பதே பொருள். மற்றப்புள்ளிகளையும் இவ்வாறே கணிக்கலாம். (கிடைத்த வழி : ஐக்கிய அமெரிக்கத் தொழில் இலாகாவின் தொழிற் புள்ளி விபரப்பகுதி.)

| நகரம் | | செலவு | சுட்டிலக்கம் |
|---|---|---|---|
| 1. | சிக்காகோ | 6,567 டொ. | 106.8 |
| 2. | சியற்றல் | 6,562 | 106.8 |
| 3. | பொஸ்டன் | 6,317 | 102.8 |
| 4. | சான்பிரான்சிஸ்கோ | 6,304 | 102.6 |
| 5. | லோஸ்எஞ்ஜல்ஸ் | 6,285 | 102.2 |
| 6. | சென்லூயி | 6,266 | 101.9 |
| 7. | போட்லண்ட் (ஓரி) | 6,222 | 101.2 |
| 8. | கிளெவ்லண்ட் | 6,199 | 100.8 |
| 9. | பிட்ஸ்பர்க் | 6,199 | 100.8 |
| 10. | மினிபோலிஸ் | 6,181 | 100.6 |
| 11. | வாஷிங்டன் | 6,147 | 100.0 |
| 12. | சின்சினட்டி | 6,100 | 99.2 |
| 13. | டெட்றோயிட் | 6,072 | 98.8 |
| 14. | நியூயோர்க் | 5,970 | 97.1 |

படிப்பகம்

www.padippakam.com



| நகரம் | செலவு | சுட்டிலக்கம் |
|---|---|---|
| 15. கன்சாஸ்சிடி | 5,964 | 97.0 |
| 16. பிலாடெல்பியா | 5,898 | 95.9 |
| 17. பல்டிமூர் | 5,718 | 93.0 |
| 18. ஸ்கிருண்டன் | 5,693 | 92.6 |
| 19. அட்லான்டா | 5.642 | 91.8 |
| 20. ஹௌஸ்டன் | 5,370 | 87.4 |

தெற்கிலுள்ள கிராமியப் பிரதேசங்களிலே வாழ்க்கைத்தரம் உயர்ந்ததன்று என்பது உண்மை. ஆனால் பலர் குறைந்த வாழ்க்கைத்தரமுடையவராயிருக் கின்றனர்.

வருடமொன்றுக்கு 6,000 டொலர் வருமானமுள்ள ஒரு குடும்பத்தினர், வடக்குப் பிரதேசத்திலுள்ள அதே வருமானமுடையவரிலும்பார்க்கச் சந்தோஷமுடையவராயிருப்பர். ஏனெனில் அந்த வருமானத்திலும் உயர்ந்த வருமானமுடையவர் மிகக் குறைவாக இருத்தலே ஒரு காரணமாகும். விவசாயிகளும் சிறிய நகரங்களிலே வசிப்போரும், நீகி ரோவரும், வெள்ளையரான பட்டணவாசிகளைவிடச் சிக்கனமுடையவராயி ருப்பதற்கு இதுவே காரணமாகும். ஓஹியோ கொலம்பஸின் 9,000 டொலர் வருமானமுள்ள நீகிரோ தனது வகுப்பில் உள்ளவருள் உயர்ந்த வருமா னப்படியை அணுகியவனாயிருப்பான். நியூயோர்க்கிலுள்ள பார்க் அவெனி யூவில் 40,000 டொலர் வருமானமுள்ள வெள்ளைக்காரனுக்கும் இவ னுக்கும் வித்தியாசமிருக்காது. இருவரும் ஒரே தொகையையே சேமிப் பார்கள்.

**வாழ்க்கைச் செலவில் குடும்ப வித்தியாசங்கள்.**

இந்தப் புள்ளி விவரச் செலவுத்தரவுகளை ஆராய்கிறபொழுது, ஒருவரைப் போல இரண்டுபேர் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த முடியுமா? என்ற பழையகேள்விக்கு விடை தோன்றுகிறது. தொழில் இலாகாப்புள்ளி விவரங்களின்படி இதற்குவிடை இல்லை என்பதே. வீட்டிலே ஒருவர் வேலை செய்தாலும், சராசரி ஒருவருக்கான செலவிலும்பார்க்க 100/70 வீதம் மற்றவருக்குஞ் செலவாகும். இருவர் தனித்தனி குடும்பம் நடத்துவதிலும் பார்க்க இவ்வாறு கூட்டாய் நடத்துவதால் செலவு குறைகிறதென்பதுண் மையே.

குடும்பத்திலே குழந்தைகளிருந்தால் ஒவ்வொரு குழந்தையும் செல வைக் கூட்டும். தனிமையில் குடும்பம் நடத்த 70 உம், மனைவியோடு நடத்த 100 உம் செலவானால் ஒரு குழந்தையுஞ் சேர்ந்தால் 130 ஆகவும் இரண்டு குழந்தைகள் சேர்ந்தால் 160 ஆகவும், இவ்வாறே கூடிக்கொண்டு போகும். குழந்தைகள் கூடக்கூட ஆரம்பச் செலவு முதலிய சில்லறைச் செலவுகளில் சிக்கனம் உண்டாக்கலாம். பல குழந்தைகளையுடைய வறிய குடும்பத்தினரின் பள்ளிக்கூடச் செலவு கஷ்டத்தையுண்டுபண்ணும். பெரிய குடும்பத்தினர் வீட்டு வாடகைக்குச் சிறிய குடும்பத்தினரைப்போலச் செலவு செய்ய மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு உணவுச் செலவு அதிகமாகும்.

படிப்பகம்

www.padippakam.com


கனேடா[1], இங்கிலாந்து, பிரான்சு, சுவீடன், முதலிய அரசாங்கங்கள் மாதந்தோறும் குடும்பங்களுக்குப் படிச்செலவு கொடுத்துவருகின்றன. படிச்செலவுத்தொகை குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. கருணையினாலும், சனப் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கமாகவுமே இந்தப் படிச்செலவு கொடுக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட கம்பெனிகள் இவ்வாறு படிச் செலவு கொடுப்பதில்லை. இத்தொண்டை அரசாங்கமே செய்துவருகிறது. கம்பெனிகள் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமிருந்தால் அவை கல்யாணமாகாத பிரமச்சாரிகளையே வேலைக்கமர்த்தும். பெரிய குடும்பத்தினரை வேலைக்கமர்த்தமாட்டா.

**பணம் செலவு செய்வதில் பிற்போக்கான கலை.**

மக்கள் ஒழுங்காகப் பணத்தைச் செலவு செய்தாலும், நியாயமாகச் செலவு செய்யமாட்டார்கள். உதாரணமாக 3,000 டொலர் வருமானமுள்ளவர்கள் தற்கால விஞ்ஞானம் அவசியமானதெனக் காட்டும் தொகையினும் குறைவாகவே வைத்தியத்துக்காகச் செலவு செய்கிறார்கள். வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையெனப் பெரும்பாலோர் கருதுவதெல்லாம் பரம்பரையாகச் சமூகத்தால் நல்லதெனக் கருதிவந்தவையேயன்றி உடல் நலத்துக்கு அத்தியாவசியமானவையல்ல. தேசீய ஆராய்ச்சிப்பகுதியினர் சிபார்சு செய்தவையும், உடல்நலத்துக்கு அவசியமெனக் காணப்பட்ட ஏ, பி, சி, டி முதலிய உயிர்ச்சத்துக்களும் இரும்பு கல்சியம் முதலியனவும் சேர்ந்தவையும் ஒரு வாலிபனுக்குத் தேவையானவையுமான உணவு வகைகளை வாங்க எவ்வளவு பணம் செலவாகுமென்பதை ஒரு பொருளாதார நிபுணர் ஒரு முறை மதிப்பிட்டார். அதன்படி ஒரு வருடத்துக்கு (i) 1939 இல் 39 டொலரும், 1944[2] இல் 57 டொலரும் (1961 இல் ஒரு சமயம் இத்தொகை 70 டொலராகலாம்) செலவாகுமெனக் காணப்பட்டது. இந்த உணவிலே ரொட்டி, உருளைக்கிழங்கு ஆகிய விலையுயர்ந்த உணவுவகைகளில்லை. ஆனால் இளக்கமான கோதுமைமா, கீரை, அவரை என்பனவே உண்டு. இந்த உணவு உருசியற்றதென்பது உண்மையே. இதை எவரும் விரும்பி உண்ணமாட்டார்கள். மீனை மாத்திரம் உண்ணும்படி பழக்கினால் நாய் பசி கிடப்பதுபோல, இந்த உணவையும் எவரும் விரும்பி உண்ணார்.

ஒரு கம்பனி பெருந்தொகையாக ஒரு பொருளைக் கொள்வனவு செய்தால் அதன் தரத்தை நன்றாகப் பரிசோதித்த பின்னரே வாங்கும். அத்துடன் மலிவான இடத்திலேயே வாங்கும். ஆனால் சாதாரண

1. கனேடாவில் அரசாங்கம் குழந்தையொன்றுக்கு அதன் வயதையனுசரித்து 6 டொலர் துவக்கம் 8 டொலர்வரை படிச்செலவு கொடுக்கிறது.

2. ஜோர்ஜ். ஜே. ஸ்டிக்ளர் ''ஜேர்னல் ஒவ் பாம் எக்கனோமிக்ஸ்'' (மே 1945, பக் 303—314) என்ற சஞ்சிகையில் எழுதினார். "ஒரு படித்திட்டம்" என்ற பொருளாதாரத்தேசீயப் பாதுகாப்புக்கணிதமுறை என்னும் புகழ்பெற்ற முறைக்கு இது முன்னோடியாயமைந்தது. மிச்சிக்கன் சர்வகலாசாலையைச் சேர்ந்த விக்டர் ஈ ஸ்மித் என்பவர் அதே சஞ்சிகையில், (மே 1959, பக்கம் 272-283) தினமொன்றுக்கு மூவரைக் கொண்ட ஒரு குடும்பத்தினர் 50 சதத்துக்கு ஒருவருக்கு உருசியான உணவை வாங்கமுடியுமென எழுதியுள்ளார்.

www.padippakam.com


நுகர்வோன் இந்த வகையில் அனுபவமில்லாதவனுகவேயிருப்பான். ஒரு ட்சின் டிஸ்பிரினுக்கு அவன் 15 சதம் கொடுத்து வாங்குவான். ஆனால் அதே தரமான 100 டிஸ்பிரினே 15 சதத்துக்கு வாங்கக்கூடிய நிலைமை இருக்கலாம். ஒரு சுருட்டிலேயுள்ள புகையிலையின் பெறுமதியளவுக்கு அநேகமாகச் சமனுன அளவு பணம் அதனை விளம்பரஞ் செய்வதிலே செலவாகிறது. 5 டொலருக்கு விற்பனையாகும் உதட்டுச் சாயத்திலே அடங்கிய பொருள்கள் 50 சதமே பெறும். இரசாயன ஆராய்ச்சியாளர் இதனை ஆராய்ந்து பார்த்துள்ளார். சவர்க்காரக் கட்டியொன்று சங்கிலித்தொடர் கம்பெனிக்கடையில் 18 சதமாக விற்பனையாகிறது. அந்தக் கடைக்கு அடுத்த தனியார் கடையில் 20 சதமாக விற்கப்படுகிறது. ஓர் அரைப் போத்தல் கொக்காகோலாவில் முழுப்போத்தலுக்குரியதிலும் பார்க்கக் குறைந்த வீதமான பானமேயிருக்கிறது. கோப்பிக் கம்பெனிகள் "முதல் தரமான" தமது கோப்பித்தூளை வேறு லேபல் போட்டு மலிவாக விற்கக்கூடும். சட்டம் இதைத் தடைசெய்யாதவரை அவ்வாறே அவர்கள் விற்றுவருவார்கள். பிரசித்தமானதொரு கார் டயரை ஒரு கம்பெனி தனது லேபலைப் போட்டு மிகக் குறைவான விலையில் பெருந்தொகையாக விற்கத் தொடங்கிற்று.

நுகர்வோனுடைய உடல் நலத்துக்கும் பணத்துக்கும் ஆபத்துண்டாகலாம். இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலே சிக்காக்கோவிலிருந்த கால் நடைப் பண்ணைகளின் நிலையைப் பற்றி உப்டன் சின்கிளேர் என்பவர் தாம் எழுதிய தி ஜங்கிள் என்ற நவீனத்திலே வருணித்தபொழுது இறைச்சி உண்பதைப் பலர் நிறுத்தினர். வியாபாரிகள் பெரிதும் எதிர்த்தபோதிலும், அரசாங்கம் தூய உணவு, மருந்துச் சட்டத்தை நிறைவேற்றியது. ஆனால் நரைமயிர்த் தைலம் போட்டுத் தமக்கே நஞ்சூட்டிக்கொள்ளும் அமெரிக்கரை அரசாங்கம் ஒன்றுஞ்செய்வதில்லை. அவ்வாறே லேபல் மருந்துகளைத் தாமாகவே வாங்கித் தமக்கு வைத்தியஞ் செய்துகொண்டு அகால மரணமடையும் அமெரிக்கரைப்பற்றியும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை. பொருள்களை விளம்பரப்படுத்தும்போது மிகவும் தவருக விடயங்களை மக்களிடத்து மிகைப்படுத்திக் காட்டும் கம்பெனிகள் மீது பெடரல் வியாபாரக் கமிஷன் வழக்குத் தொடர்கிறது. ஆனபடியால் அவை மறைமுகமாக மக்கள் மனதைத் திருப்புவதற்காகச் சாமர்த்தியமாக விளம்பரஞ் செய்கின்றன. (உதாரணமாகப் பெண்களுக்குரிய பிரசித்தமான ஒரு மருந்தின் லேபலில் "இந்த மருந்து எந்த நோய்களுக்கேற்றது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

நமது யுகம் விளம்பர யுகம். தினசரிப் பத்திரிகைகளிலும், டெலிவிஷனிலும், மேற்குப்பிரதேசங்கள்பற்றிய சினிமாக்களிலும், ஞாயிற்றுக்கிழமை விநோதச் சவாரிகளிலும் பலவகையான வியாபாரப் பொருள்கள்பற்றிய விளம்பரங்கள் மிகக் கவனமாகத் தெரிந்து ஊட்டப்படுகின்றன. தேசத்தின் ஆக்கத்திறமைகளிற் கணிசமான பகுதியும்,

www.padippakam.com


பத்திரிகைகளும், நவீன மின்சார வசதிகளும் வியாபார விளம்பரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம்.

விளம்பரம் அவசியமென வாதாடுவோர் அதனுற் பல பொருளாதார நன்மைகளுண்டெனக் கூறுவர். பொதுமக்களுக்குப் பயனுள்ள தகவல்கள் கொடுக்கப்படுகின்றன. பெருவாரி உற்பத்திச் சந்தைகள் உருவாக்கப்படுகின்றன. விளம்பரச் செலவின் பயனுகத் தனிப்பட்டதோர் அச்சுக்கூடம் உண்டாகிறது. ரேடியோவிலும் டெலிவிஷனிலும் சிறந்த நல்ல நிகழ்ச்சிகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. விளம்பரத்தின் பயனுக நல்ல பெரிய சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறே பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனுல் இந்த வாதத்துக்கு எதிராக விளம்பரத்திலே பெரும் பகுதி தன்னைத் தானே செயலற்றதாக்கி விடுகிறதென்றும், நுகர்வோருக்குச் சரியான தகவல்களைக் கொடுக்கும் விடயத்தில் அது ஒன்றையுஞ் சாதித்து விடவில்லையென்றும் அத்துடன் ஒரு நிமிட நேரம் ஒலிபரப்பாகும் உயர்ந்த சங்கீதத்துக்கு ஈடாக அரைமணிநேரம் உணர்ச்சி மிக்க சில்லறை நாடகம் ஒலிபரப்பாகிறதென்றும் கூறுவர். இந்த விடயம் விவாதத்துக்குரியதாக இருந்து கொண்டேயிருக்கும். ஆனுல் கல்லப் என்ற வாக்கெடுப்பிலே மக்கள் விளம்பரஞ் செய்யப்படுவதை விரும்புகிருர்கள் என்று முடிவு செய்யக்கூடியதாயிருந்தது. அவ்வாறு வாக்களித்தவர் விளம்பரத்திலே கூறப்படுபவை எல்லாவற்றையும் நம்பாவிட்டாலும், அவற்றை ஞாபகத்தில் வைத்தேயிருக்கிருர்கள்.

அமெரிக்காவிலுள்ள நுகர்வோர் இப்போதெல்லாம் நிபுணர்களாகி வருகின்றனர். ஒன்று : மலிவாகப் பொருள் விற்பனை செய்யும் கடைகளின் பெருக்கம் ; இரண்டு : நீண்டகால உபயோகத்துக்குரிய பொருள்களை விலையட்டவணையிலுள்ள விலையிலும் பார்க்க மிகக் குறைவான விலையில் கழிவு கொடுத்து விற்கும் கடைகளின் பெருக்கம் ; மூன்று "தாமாகச் செய்யும் இயக்கம்" பெருகி வருகிறது. இதன் பிரகாரம் சனிக்கிழமைகளில் வேலைக்குப் போகாமல் வீட்டிலேயிருந்து நமது வீட்டு வேலைகளை நாமே செய்தல். இளந்தம்பதிகள் ஒலிப்பதிவு செய்யும் இயந்திரம் வாங்குவதற்காக அதைப்பற்றிச் சகல விடயங்களையும் அறிய ஆராய்ச்சி நடத்திய பின்னரே வாங்குகின்றனர். இதற்காக அவர்கள் பல மணிநேரம் செலவு செய்கிருர்கள். இத்தகைய தொழில் நுட்பத்தை எந்த அராபிய வியாபாரியிடத்தில் காணலாம் ? இவ்வளவு கருத்துள்ள ஊக்கத்தை எந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளரிடம் காணலாம் ?

**யுத்தகாலத்தில் குடும்பச் சொத்துச் சேர்தலும், யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் அது சேர்தலும்.**

உமது வருமானத்துக்கும் நீர் நுகர்வதற்குமிடையேயுள்ள வித்தியாசமே அட்சரகணிதமுறைப்படியமைந்த உமது தேறிய சேமிப்பாகும். உமது வருமானத்துக்குக்குறைவாகச் செலவு செய்தால் உமது சேமிப்பு நேர்க்கணியமாயிருக்கும். அதனுல் உமது சொத்து அதிகரிக்கும். அல்லது

www.padippakam.com


பொறுப்புக்கள் குறையும். அதாவது, உமது நிசப் பெறுமதி கூடுகிறது. உமது வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்தால், உமது நிகரச் சேமிப்பு எதிர்க்கணியமாயிருக்கும். நீர் சேமிப்பதில்லை. உமது நிகரச் சொத்துக் குறைகிறது.

உமது வருமானத்துக்கு அதிகமாக எவ்வாறு செலவு செய்கிறீர் என்பதைப் பார்ப்போம். நீர் கடன்வாங்கிச் செலவு செய்யலாம். அதைப்பற்றி அடுத்த பகுதியிற்கூறுவோம். முன்னே சேமித்துவைத்திருந்த பணத்தை நீர் செலவு செய்யலாம். அல்லது வங்கியிலுள்ள பணத்தை எடுத்துச் செலவு செய்யலாம். அந்தப்பணம் சேமிப்புக் கணக்கிலிருந்தோ நடப்புக் கணக்கிலிருந்தோ கிடைக்கும். அல்லது அரசாங்கச் சேமிப்புப் பத்திரத்தை மாற்றிச் செலவு செய்யலாம். அல்லது உம்மிடம் விற்பனை செய்யக் கூடிய பத்திரங்களோ, பங்குகளோ இருந்தால் உமது தரகரைக்கொண்டு அவற்றில் சிலவற்றை விற்பனை செய்து, உமது கலிபோணியப் பிரயாணத்தை நடத்தலாம், அல்லது நீர் வாங்க விரும்பிய புதிய காரை வாங்கலாம்.

யுத்தத்தின் பயனாக அமெரிக்கர் முன்னெப்பொழுதும் இல்லாத வகையிலே சொத்துகளைச் சேகரித்தனர். யுத்தகாலத்திலே பெரும்பாலான குடும்பத்தினர் அபரிமிதமான வருமானத்தைப் பெற்றார்கள். ஆனால் நிலைபேறில்லாத நுகர் பொருள்களில் அவர்கள் மிதமான அளவு பணத்தையே செலவு செய்தனர். கார், ரேடியோ போன்ற நிலையான பொருள்களில் மிகக் குறைவாகவே செலவு செய்தனர். வருமானத்துக்கும் செலவுக்குமிடையேயுள்ள வித்தியாசம் அதிகரித்தது. யுத்தக்கடன் பத்திரங்களாகவும் சேமிப்புக் கணக்குகளாகவும், காப்புறுதிப் பத்திரங்களாகவும், இவை பரிணமித்தன. பழைய கடன்கள் கொடுக்கப்பட்டன. நோட்டுப்பணமும், வங்கி நடப்புக் கணக்குமாக இது தோற்றமளித்தது. யுத்தம் முடிய அமெரிக்க மக்களும், கம்பெனிகளும் 250 பிலியன் டொலர் திரவச் சொத்துடையவர்களாயினர். இவற்றில் பாதி அரசாங்கக் கடன் பத்திரங்களிலும், எஞ்சியவை நடப்புக் கணக்குச் சேமிப்பு, நோட்டுக்கள் என்பவற்றிலும் பணமாக இருந்தன. யுத்தம் முடிந்த பின்னர் சராசரியாகக் குடும்பத்திலே நேர்க்கணியமான சேமிப்பு உண்டாயிற்று. அவர்களுடைய செல்வம் அதிகரித்தது. அத்துடன் அரசாங்கக் கடன் பத்திரங்களை அவர்கள் மாற்றி வேறு நயமுள்ள விடயங்களில் முதலீடு செய்தனர்.

யுத்தத்துக்கு முந்திய காலத்திலேயிருந்ததிலும் ஆறு மடங்கு அதிகமான செல்வத்தை இந்த மொத்தத்திரவச் சொத்துக் குறிக்கிறது. எனவே 1960 இல் அமெரிக்கர் ஒரு வருட வருமானத்துக்கு அதிகமான செல்வத்தைச் சேமிப்பாய்ப் பெற்றிருக்கின்றனர். யுத்தகாலத்திலே அமெரிக்க பெடரல் அரசாங்கம் மக்களிடம் கடன் பட்டது. அதன் பயனாகவே மக்கள் வசம் இந்தச் செல்வம் வந்து சேர்ந்தது. (19 ஆம் அத்தியாயத்திலே இதைப் பற்றி ஆராய்வாம். மக்களிடம் சிக்கிய இந்த உபரிச்சொத்து அரசாங்கத்தின் பொறுப்பாக சமூக ஐந்தொகையில் காட்டப்படும்.)

www.padippakam.com


உண்மையில், சராசரிக் குடும்பம் என்ற ஒன்றில்லை. மொத்தத் திரவச் சொத்தானது எல்லாக் குடும்பத்தவரிடையிலும் சரிசமனுகப் பங்கீடு செய்யப்படவில்லை. திரவச் சொத்தின் பங்கீட்டைப் பற்றி நாம் யூகித்துத் கணக்கிடவேண்டிய அவசியமுமில்லை. பெடரல் ரிசேர்வ் சபையின் வேண்டுகோளின்படி, மிச்சிக்கன் சர்வகலாசாலையைச் சேர்ந்த நுகர்வோர் ஆராய்ச்சி நிலையம், சேமிப்புப் பங்கீடுபற்றிக் கவனமான புள்ளி விவர ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளது. 1950 ஆம் ஆண்டையடுத்த வருடங்களில் சகல குடும்பங்களிலும் காற்பங்கினர், எவ்வகையான திரவச் சொத்துமில்லாதவராயிருந்தனர். அவர்கள் வசம் சேமிப்புக் கணக்கோ, காசோலைக் கணக்கோ, அரசாங்கக் கடன் பத்திரங்களோ இருக்கவில்லை. அரைவாசிக்கு அதிகமானவர்களிடம் 500 டொலருக்குக் குறைவான சேமிப்பேயிருந்தது. மிக உயர்ந்த சேமிப்பான 5,000 டொலருக்கு அதிகமான திரவச் சொத்துள்ள 10 வீதத்தினர் மொத்தத் திரவச் சொத்தில் மூன்றிலிருபகுதியைக் கொண்டிருந்தனர். இவ்விபரங்கள் மேற்படி சபையின் சஞ்சிகையான பெடரல் ரிசேர்வ் சஞ்சிகையில் காணப்பட்டன. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து ஒரு விடயம் நூதனமானதாய்க் காணப்பட்டது. எந்த ஒரு வருமான இனத்திலும், ஒரு சிறு தொகையினரே சேமிப்பைச் செய்யக் கூடியவராயிருந்தனரென்பதே அது.

இப்போதெல்லாம் அமெரிக்கர் காசுகொடுத்து ஒரு வீட்டையோ, காரையோ வாங்கும் நிலையிலிருக்கிறுர்கள் என்பதே இவற்ருல் நாம் அறியக்கூடியதொரு விடயமாகும். இத்தகைய நிலை அமெரிக்காவின் சரித்திரத்திலே முன்னெப்பொழுதும் ஏற்பட்டதுகிடையாது.

**மக்கள் எவ்வாறு கடன்படுகிறுர்கள் ?**

கடன் வாங்கவேண்டிய அவசியமுள்ளவர்கள் கடன்படுவதற்கு என்ன வழிவகைகளுண்டென்பதை இப்போது ஆராய்வாம். கடந்த ஒரு நூற்றுண்டின் கடைசிக் கால் நூற்றுண்டுவரை வறிய மக்கள் அரசாங்க அனுமதி பெருது கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரரிடத்திலே கடன் பெற்று வந்தார்கள். இவர்கள் இன்னும் சில மாகாணங்களில், அதாவது சிறு கடன் சட்டம் நிறைவேற்றப்படாத மாகாணங்களில் இருந்து வருகிறுர்கள். இவர்கள் குறைந்த பட்சம் 120 வீதம் தொட்டு கூடிய பட்சம் 1,200 வீதம் வரை வட்டி வாங்குகிறுர்கள். 12 வீதமென்று நினைக்க வேண்டாம் ; 1,200 வீதம் 1949 ஆம் ஆண்டில் வைத்தியச் செலவுக்காக 20 டொலர் கடன்பட்ட ஒருவர் 1958 ஆம் ஆண்டுவரை வாராவாரம் 2.25 டொலர் கொடுத்துக் கடனையடைத்தார் என்பனபோன்ற கதைகள் சர்வசாதாரணம். இதே கடனைத் தீர்க்க அவரே, 1,053 டொலர் 600 வீத வட்டியில் கொடுக்கவேண்டிய அவசியமிருந்திருக்கும். வறியவரின் சாபக்கேடு வறுமை. பணமில்லாதபடியால் கடன்படுகிறுர்கள். அதே காரணத்தினுல் அவர்கள் கடனையடைக்க முடியாமலுமிருக்கிறுர்கள். கடன் கொடுக்கும் வட்டிக்காரன் சில சமயம் பலாத்காரத்தைக்கூட உபயோகிப்பான். அல்லது முதலாளியிடமோ

www.padippakam.com


மனைவியிடமோ சொல்லப் போவதாகப் பயமுறுத்துவான். வட்டிக்குக் கடன் கொடுப்பவன் தனது கடனை முற்றுகப் பெற்றுவிட விரும்பமாட்டான். கடன் வாங்கியவன் தன்னுல் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாதென்று கூறிவிட்டால் சட்டப்படி கடன் கொடுத்தவன் நடவடிக்கை எடுக்க முடியாது. மேலும், கடன் கொடுத்தவன் வழக்கெடுக்கவே மாட்டான்.

இந்த அவல நிலையைச் சீர்ப்படுத்துவதற்கு ஒரேயொரு வழிதானுண்டு. வட்டிவீதத்தைச் சாதாரண ஆறு வீதத்திலும் அதிகமாக உயர்த்திச் சட்டபூர்வமான வட்டியை விதிக்கும் சிறு கடன் சட்டமொன்றை ஆக்க வேண்டும். நேர்மையான வட்டிக் கடைக்காரரால் ஆறுவீதவட்டியில் தமது வியாபாரத்தை நடத்த முடியாது. எனவே அதிக வட்டி வாங்குதல் சட்ட பூர்வமாக விதிக்கப்பட்டால் நேர்மையாக அவர்கள் கடன் கொடுக்கும் முயற்சியைச் செய்வர். இவ்வாறு வட்டிக்குக் காசு கடன்கொடுப்பதில் அபாயமுண்டு. அத்துடன் பலவகை நிர்வாகச் செலவுகளுமுண்டாகும். தென்பகுதிகளிலும், ரொக்கிமலைப் பிரதேசங்களிலுமுள்ள சில மாகாணங் கள், ஒரேமாதிரியான சிறு கடன் சட்டங்களைச் செய்து கொள்ளவில்லை. அங்குள்ள லேவாதேவிக்காரர் இத்தகைய சட்டஞ் செய்வதானுல் பாராளுமன்றத்துக்கு இலஞ்சம் கட்டியாகவேண்டுமென ஒரு விஷமப் பிரசாரத்தைச் செய்து வருகிருர்கள். ஆறு வீத வட்டிக்கு அதிகமாக மக்கள் கொடுக்கக் கூடாதென ஒரு கூச்சலைக்கிளப்பி அதன் மூலம் அரசியல் செல்வாக்குப் பெற விரும்பும் அரசியல்வாதிகளும் இதில் சேர்ந்து கொண்டனர். அத்துடன் அபவாதஞ் சொல்லி தலைவர்களின் செல்வாக்கைக் குறைக்க முயலும் நயவஞ்சகக்காரரும் சேர்ந்து கொண்டனர்.

ஆனுல் ஒழுங்கான லேவாதேவிச் சட்டமுள்ள சில மாகாணங்களுண்டு. அங்கேயுள்ள வட்டிக்கடைகள் சட்டத்துக்குப்படவியாபாரம் நடத்துகின்றன. அவை ஒருவனுக்கு 250 டொலர் கடன் கொடுத்தால் அதை அவன் 12 மாதத்தில் 36 வீத வட்டியில் திருப்பிக் கொடுத்துவிடலாம். வேறு எவ்வித பணமும் அவன் கொடுக்க வேண்டியதில்லை. அவன் வேலை செய்யும் கம்பெனியிலே கடன் கொடுக்கும் சங்கமிருந்தால் அதிலிருந்து அவன் 12 வீத வட்டியில் கடன் பெற்றுக் கொள்ளலாம். நகை நட்டை ஈடாக வைத்துப்பணம் பெருக்க விரும்பினுல் வெந்நீசு மதிப்பில், முக்கால் பங்கு பணத்தை அவன் பெறலாம். நகை ஈடுபிடிப்போர் வருடத்தில் நாற்பது வீத வட்டி கேட்பார்கள்.

கடன்படுபவரின் உள்ளூர் வங்கி அவருக்குச் சிறிய கடன் கொடுக்க முன்வருமானுல் 12 வீத வட்டியில் மாதம் மாதம் திருப்பிக் கொடுக்கக் கூடிய வகையில் வங்கிக்கடன் உதவும். அவர் கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் அதிகம் இல்லாதவர் என வங்கி நினைக்குமானுல் வட்டியைக்கூட்டி விடுவார்கள். காரோ, வீட்டுத்தளவாடங்களோ வாங்கவேண்டியிருந்தால் தவணை வீதம் கொடுத்து வாங்கலாம். அதற்கு அவர் 15 வீத வட்டி கொடுக்கவேண்டியிருக்கும். அவர் வாழ்க்கைக் காப்புறுதிப் பத்திரம்

www.padippakam.com



உடையவராயும் அதன் தவணைப்பணங்களை ஒழுங்காகக் கொடுத்து வருபவரா யிருந்தால் அந்தப் பத்திரத்தின் பேரில் 5 அல்லது 6 வீத வட்டியில் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கடனெடுக்கலாம். வேறு வகையான உறுதிப் பத்திரங்களோ அரசாங்கக் கடன் பத்திரங்களோ உடையவராயிருந்தால் அவற்றை ஈடாக வைத்து 5 வீத வட்டியிலே கடனெடுக்கலாம்.

இந்த வட்டி வீதம் ஊருக்குஊர் வித்தியாசப்படலாம்; காலத்துக்குக் காலம் வித்தியாசப்படலாம்; தாபனத்துக்குத் தாபனம் வித்தியாசப்படலாம். வடகிழக்கு நகரங்களில் வட்டி வீதம் மிகக் குறைவாயிருக்கும். பெரிய குறுகிய காலக் கடனானால் வட்டி மேலுங் குறைவாக இருக்கும். உதாரணமாக நியூயோர்க் நகரிலுள்ள ஒரு வியாபாரி விலையாகக் கூடிய அரசாங்கக் கடன் பத்திரமுடையவராயிருந்தால் $3\frac{1}{2}$ வீத வட்டியிலே பெரிய தொகையைக் கடனாகப் பெறக் கூடியவராயிருப்பார்.

மேலே கூறிய வட்டிகளெல்லாம் கொடுபடாதிருக்கும் பாக்கியின் சராசரியையனுசரித்தே கணக்கிடப்படும். தவணைக் கொடுப்பனவு ஒப்பந்தப் படி ஒருவன் 12 வீதவட்டி கொடுப்பதாக நினைக்கும்போது உண்மையாக அவன் 24 வீத வட்டியே கொடுக்கிறான்; அல்லது அதிலும் இரண்டு பங்கு கொடுக்கிறான். இஃது ஏனென்று பார்ப்போம். ஏனெனில் அவன் கொடுக்க வேண்டிய பாக்கி, எடுத்த கடனுக்குச் சமனாகத் தொடங்குகிறது. பின்னர் ஒவ்வொரு தவணைக் கொடுப்பனவோடும் குறைகிறது. பின்னர் பூச்சியத் தில் முடிகிறது. அப்பொழுது ஒப்பந்தத்தில் கண்ட தொகையின் அரைவாசிக்குச் சராசரியாகத் தேறுகிறது. வேறொருவகையிலே கூறுவதானால் அந்தக் கடன் நிசத்தொகை சராசரி அரை வருடத்துக்கே கடனாகக் கொடுக்கப்படுகிறது. எனவே கடன் கொடுத்தவன் அரைவருடத்துக் கே 12 வீதவட்டி பெறுகிறான். இவ்வாறு குறிப்பிட்ட விகிதத்தில் இரண்டு மடங்கைப் பெறுகிறான்.[1]

மிகச்சிலரே இதனை உணர்கிறார்கள். நேர்மையற்ற லேவாதேவிக்காரர் பலரை ஏமாற்றக்கூடும். 3 அல்லது நாலு வீத வட்டி கொடுக்கும் பணத்தை யோ பத்திரத்தையோ வங்கியில் வைத்துக்கொண்டு தவணைக் கடனில் சில பொருள்களை வாங்குவர். அறியாமையினாலே சிலர் இவ்வாறு செய்வர்.

1. கல்லூரிப் படிப்புக்கான சில கடன்கள் சில சமயம் இதிலும் மோசமாக இருக்கும். ஐவிக்கல்லூரிக்கு என் பையனை அனுப்ப 1,200 டொலர் கடன் பெறுகிறேன். நான் வருடத்துக்கு 4 வீதம் அதாவது மாதமொன்றுக்கு $\frac{1}{3}$ வீதம் வட்டி கொடுப்பதாக எண்ணு கிறேன். ஒவ்வொரு தவணைக் கட்டணமும் 104 டொலராகிறது. அப்படித்தானா? கடன் கொடுக்கும் வங்கி செப்டெம்பரில் ஐவிக்கு 600 டொலர் கொடுக்கிறது. பெப்ரவரியில் மீண்டும் 600 டொலர் கொடுக்கிறது. இந்த 1,200 கடனைத் தீர்க்காமல் எவ்வளவு காலம் வங்கி வைத் திருக்கிறது. ஒரு வருடமா? இல்லை. அரைவருடமா? இல்லை. இந்தக் கடனில் அரை வாசி பெப்ரவரிவரை எடுக்கப்படவில்லை. தவணைப்பணம் திருப்பிக்கொடுக்கும் முயற்சி கடன் கொடுக்க ஒப்புக்கொண்ட காலத்திலேயே துவங்குகிறது. வங்கி வட்டியாக கால்வருடத்துக்கே 48 டொலரைப் பெற்றுக்கொள்ளுகிறது. அதாவது நான் வட்டியாக நாலுதரம் 120 ஐ வங்கிக்குக் கொடுக்கவேண்டும். இதைக் கணக்கிட்டால் வட்டி வீதம் 16 ஆகிறது. (தொடர் வட்டியில் கணக்குப் போட்டால் இந்த 16 வீதம் சற்றே கூடியிருப்பதைக் காணலாம்.)

www.padippakam.com



வேறு சிலர் தவணைப் பணமாகக் கொடுத்து நடைமுறை வருமானத்தில் சேமிக்கப் பார்ப்பர். கடன் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமுடையோர்க்கு அல்லது தவணைக்கடனில் வாங்கவிரும்புவோர்க்கு ஒரு புத்திமதி கூறுகிறோம். முதலில் உள்ளூர் வங்கியிலே கடனைப் பெறுங்கள் ; அல்லது நீங்கள் வேலை செய்யும் தாபனத்தின் கடன்கொடுக்கும் சங்கத்தில் பெறுங்கள்.

இரண்டாவது மகாயுத்தத்தை அடுத்து, நுகர்வோர் கடன் பெரிதும் பெருகிவிட்டது. 1961 இல், இது 5,000 கோடி டொலருக்கு அதிகரித்துவிட்டது. (இவை பெரும்பாலும் தவணைக்கடன், கடன் என்பனவாக இருக்கும்.) யுத்தத்துக்கு முந்திய காலத்திலும்பார்க்க இது ஆறு மடங்கு அதிகரிப்பாகும். மேலும் மக்களுடைய வருமானமும் உயர்ந்துவிட்டது. தேவைமட்டத்துக்கு அதிகமாக உயர்ந்து விட்டது. மக்கள் படும் கடனுக்கு ஓரளவு ஈடாகக் கூடியவாறு சொத்துமிருக்கிறது. எனவே சமீபகாலச் செல்வத்தினால் நுகர்வோரிற் சிலர் கடன்படுவதில்லை.

**அரசாங்கக் கடன்பத்திரங்களை வைத்திருப்பதா, இல்லையா ?**

மக்கள் தமது சேமிப்புப் பணங்களை என்ன செய்ய வேண்டும் ? சில முட்டாள்களும், பயந்தாங்கொள்ளிகளும், பாதகஞ் செய்வோரும், பணத்தை அப்படியே புதைத்து வைத்துக்கொள்கிறார்கள். சிலர் வைரங்களை வாங்குகின்றனர். சாதாரணமான பிரகிருதிகள் பணத்தைச் சேமிப்புக் கணக்கிலே போடுகிறார்கள். அவை வர்த்தக வங்கிகளில் மூன்று வீத வட்டி பெறுகின்றன. பெடரல் சேமிப்புகளில் 4 அல்லது 5 வீத வட்டி பெறுகின்றன. கடன் கொடுக்குஞ் சங்கங்களிலும், கட்டடச் சங்கங்களிலும் அவை அதேவீத வட்டியைப் பெறுகின்றன.

சிலர் தமது சேமிப்புக்களை ஐக்கிய அமெரிக்கச் சேமிப்புப் பத்திரங்களிலே வைக்கின்றனர். இவை இப்போது வருடத்துக்கு $3\frac{1}{2}$ வீத வட்டி பெறுகின்றன. சம்பளக் காசோலை கிடைத்ததும் அந்தப்பத்திரங்களை சம்பளச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் உடனடியாக வாங்கிக்கொள்ளலாம். அல்லது எந்த ஒரு வங்கியிலும் வாங்கலாம். அவற்றை 25 டொலர் பத்திரங்களாக ஒருவர் பேரிலோ இருவர் பேரிலோ வாங்கலாம். அல்லது ஒருவர் உரித்தாளராகவும் வேறொருவர் வாரிசாகவுமிருக்கலாம். இப்பத்திரங்களை வேறொருவருக்கு மாற்றமுடியாது. ஆனபடியால் அவற்றை விற்கமுடியாது. கடன் கொடுக்கவும் முடியாது. 25 டொலர் மதிப்புள்ள ஒவ்வொரு பத்திரமும் 18.75 டொலருக்கு வாங்கலாம். 8 வருடத்தில் அந்த மிகப் பெறுமதியான 25 டொலர் திருப்பிக் கொடுக்கப்படும். பத்திரம் கொடுத்து 60 நாட்களில் அந்தப் பத்திரங்களை எந்த வங்கியிலும் திருப்பிப்பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பணத்தை மாற்றிக்கொடுக்கும்போது அவற்றை மாற்றுங் கிரமமொன்றுண்டு. அந்தக் கிரமப்படி மாற்றிக் கொடுக்கப்படும். முதலில் அப்பத்திரத்தின் உரிமைக்காரர் அவர்தானா என்பதை வங்கிகள் நிச்சயப்படுத்திக்கொள்ளும். பத்திரங்கள் எவ்வளவு காலத்துக்கு ஒருவர்

படிப்பகம்

www.padippakam.com



கையில் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு ஏற்ற மதிப்பு அவற்றுக் குண்டு. நீர் வைத்திருக்கும் பத்திரங்களிற் சிலவற்றை அவை முதிர் வடையுமுன் மாற்ற வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டால் புதிதாக வாங்கிய பத்திரங்களை மாற்றுவதே நன்று. 1960 ஐயடுத்து மக்கள் பத்திரங்களை வாங்குவதிலும், மாற்றுவதே அதிகமாக நடைபெற்றது. "3 டொலருக்கு 4 டொலர் பெறலாம்" என்று விளம்பரங்கள் கூறுகின்றன. எட்டு ஒன்பது வருடங்களுக்குமுன் 3 டொலர் பெற்ற பொருள்களை இன்று 4 டொலருக்கும் பெறமுடியாது. "இந்தச் சேமிப்புப் பத்திரங்களெல்லாம் ஏமாற்று வேலைகள். நிசமாக அவை வாங்கும் சக்தியைக் கொண்டு கணிப்பதானல் அவற்றுக்குக் கொடுக்கும் நிசமான வட்டி $3\frac{3}{4}$ வீதமன்று; எதிர்க் கணியமானது" என்றெல்லாம் மக்கள் முணுமுணுக்கிருர்கள், இதில் உண்மையுண்டா? ஆம். ஓரளவுக்கு உண்மையுண்டு. சமீபகாலத் திலே ஏற்பட்ட விலையேற்றத்தைக் கவனிக்குமிடத்து இதில் உண்மையுண் டென்றே கூறவேண்டும். ஆனல் வங்கிப்பணம், பணச் சேமிப்பு என்பன போன்ற சொத்துக்கள் சம்பந்தமாகக் கிடைத்த வட்டியும் எதிர்க்கணியமான தே. சாதாரணப்பங்கு, நிச உடைமை என்பவற்றைவிட மற்றெல்லாம் இவ்வாறே எதிர்க்கணியமான வட்டி வழங்கின.

**வட்டியில்லாத பத்திரங்கள் அல்லது சாதாரணப் பங்குகள் வாங்குதல்.**

நல்ல வருமானமுள்ளவர்கள் தமது சேமிப்பு எல்லாவற்றையும் ஓர் இடத்தில் முதலீடு செய்ய மாட்டார்; பல வகையான தொழில்களிலும் பங்குகளிலும் முதலீடு செய்வர். நியூ இங்கிலாந்து வாசியான ஒரு கைம்பெண்ணின் முதலீடுகள் பற்றி அட்டவணை 2 இல் குறிக்கப்பட்டுள்ளது. நிபுணர் ஒருவர் இதைப்பற்றி என்ன கூறுவார்? அரைவாசிச் சேம நிதியைச் சாதாரணப் பங்கிலும், அரைவாசியை கடன்பத்திரங்களிலும் முன்னுரிமைப் பத்திரங்களிலும் முதலீடு செய்யலாமென்பார். பண வீக்கமுண்டானல் அவருடைய சாதாரணப் பங்குகள் ஒரு வகையான பாதுகாப்பளிக்கும். ஏனெனில் அவற்றின் விலை அதிகரிக்கலாம். மேலும் இதுவரை அவள் தனது முதலீடுகளிலிருந்து பெரிய இலாபங்களைப் பெற்றிருப்பாள். எனவே இன்று அவள் தன்னுடைய பங்குகளை வாங்கிய விலையிலும் அதிகமான விலைக்கு விற்கலாம். (அமெரிக்கச் சர்வகலாசாலை யினர் முன்னெல்லாம் சாதாரணப் பங்கென்ருல் பயந்துகொண்டிருந்தார்கள். இப்போது தமது சேமிப்பில் அரைவாசியை அதில் முதலீடு செய்கிருர்கள். வெஸ்லிய சர்வகலாசாலையினரும் திரித்துவசர்வகலாசாலையினரும் 80 வீதத்துக்கு அதிகமாகச் சாதாரணபங்குகளிலே முதலீடு செய்கிருர்கள்.)

அமெரிக்காவின் பணநிலை தொடர்ந்து பூரிப்புடையதாயிருக்குமென்ற நம்பிக்கையிலேதான் அந்தக் கைம்பெண் அவ்வாறு செய்கிருளென்று பொருளாதார நிபுணர் கூறக்கூடும். அவள் தானே ஒரு நிபுணராயிருந் தாலன்றித் தனது பணத்தை இவ்வாறு முதலீடு செய்திருப்பாளா? அல்லது அவளும், இந்நாளிற் பல கோடி மக்கள் செய்வதுபோல பரஸ்பர

www.padippakam.com



முதலீட்டு நிதியில் பங்குகளை வாங்குவாளா ? இது நிதி முதலீட்டுத் தாபனம். அதனிடம் நூற்று வகையான பங்குகளுண்டு. யாரும், எந்த நேரமும், நடப்புச் சந்தை விலையில் குறித்த ஒரு விகிதமான பங்குகளை அதனிடமிருந்து வாங்கலாம். இதனால் நன்மையுண்டு. வளரும் எண்ணெய்க் கம்பெனி, கிளாஸ் கம்பெனி, இரசாயனக் கம்பெனி என்பவற்றில் அவளுக்கு ஒரு ஈடுபாட்டையுண்டாக்கும். அன்றியும் சிறிது குறைவான இலாபத்தையும் கொடுக்கும். என் ? விற்பனையாளர் கழிவு கொடாத ஒரு கம்பெனியிலே அவள் பங்கு எடுத்திருந்தால் நல்லது. அப்படியில்லாவிட்டால் விற்பனையாளர் கழிவாக அவள் 8 வீதக் கமிஷன் கொடுக்க வேண்டிவரும். ஆனால் அவளுடைய முதலீடுகளை நிபுணர் மேற்பார்வை செய்வர். (அதற்கு அவள் அவர்களுக்குச் சம்பளமாக வருடத்தில் அவளுடையசொத்தின் ஒரு வீதத்தில் அரைவாசியைக் கொடுப்பாள். இது நியாயமானதே.)

**சமநிலையான பணப்பை வருமானம் முழுவதையும் ஒரே இடத்தில் முதலீடு செய்வதைத் தவிர்க்கிறது :**

**அட்டவணை 2. விதவையின் 100,000 டொ. பணப்பை, 1960.**

| பாதுகாப்பு | சந்தை மதிப்பு | 1960 இல் கிடைத்த இலாபம் | விளைவு விகிதம் |
|---|---|---|---|
| அரசாங்கப்பத்திரம் தொடர் | 10,000 டொலர் | 375 டொலர் | |
| ஜெனரல் மின்சாரக்கம்பெனி $3\frac{1}{2}$ வீதம் 1972 இல் கிடைப்பது | 10,000 | 380 | |
| கொன்சொலிடேட்டட் எடிசன் $5\frac{1}{8}$ வீதம் 1989 இல் கிடைக்கும் | 10,000 | 483 | |
| மொத்தப்பத்திரம். | 30,000 டொ. | 1,238 டொ. | 4.13 |
| ஜெனரல்மில்ஸ் 5 வீதம் முன்னுரிமை | 10,000 | 476 | |
| செசபீக் ஒஹியோ கூட்டுமாற்று $3\frac{1}{2}$ வீதம் முன்னுரிமை | 10,000 | 354 | |
| மொத்தம் முன்னுரிமை. | 20,000 டொ. | 830 டொ. | 4.15 |
| அமெரிக்கன் தெல். உம் தெல். உம் சாதாரணம் | 20,000 | 733 | |
| டெக்ஸாஸ் ஆயுதம், சாதாரணம் | 10,000 | 0 | |
| ஜெனரல் மோட்டார், சாதாரணம் | 10,000 | 450 | |
| பசிபிக் காஸ் அண்ட் இலெக்ரிக், சாதாரணம் | 5,000 | 200 | |
| ரிறி-கொண்டினெண்டல் ("மூடிய அந்த" நிதி) சாதாரணம் | 5,000 | 165 | |
| சாதாரணம்—மொத்தப் பங்கு | 50,000 டொ. | 1,548 டொ. | 3.10 |
| மொத்தப் பங்குகள் | 100,000 டொ. | 3,616 டொ. | 3.62 |

www.padippakam.com



நியூயோர்க் பங்குப் பரிவர்த்தனைத் தாபனத்தின் அறிக்கைப்படி இந்நாட்களில் அமெரிக்கரில் 140 இலட்சம் பேரிடந்தான் கணிசமான அளவு பங்குகள் உண்டு. 1929 ஆம் ஆண்டில் ஒரு பெரிய வியாபார மந்தமேற்பட்டது. அதன் பின்னரும் வேறு பல வியாபாரநெருக்கடிகளுண்டாயின. அப்போது பங்குவிலைகள் கீழ் நோக்கி வீழ்ச்சியடைந்தன. இவற்றையெல்லாம் ஞாபகத்திலே மக்கள் கொள்ளாதிருந்தால், இந்தப் பங்குகள் தொகை பெரிதும் அதிகரித்திருக்கும்.

**பெரிய பங்குச்–சந்தை வீழ்ச்சி. அகலவுரை.**

அமெரிக்காவிலே 1920ஆம் ஆண்டுகளையடுத்துண்டான பூரிப்பில், எல்லாரும் பங்கு வியாபாரத்தில் ஈடுபட்டனர். வீட்டுப் பெண்கள், போட்டர்மார், கல்லூரி மாணாக்கர், வகுப்புநேரங்களுக்கிடையில் பங்கு வியாபாரம் நடத்தினர். இவ்வாறு வாங்கினவரெல்லாரும் பங்கின்விலை 10,000 டொலரானால் 2,500 டொலரையே காசாகக் கொடுத்து மற்றப் பணத்துக்கு வாங்கின பங்கையே ஈடாகக் கொடுத்துப் பணத்தைக் கடன்பட்டனர். தரகருக்கு வருடத்தில் கடன் வாங்கிய கணக்கில் ஆறு வீதமோ பத்துவீதமோ பதினைந்து வீதமோ கொடுக்கவேண்டியிருக்குமென்பதை அவர்கள் ஏன் கவனித்தார்கள் ? ஓபேர்ன் மோட்டார் கம்பெனிப் பங்குகளோ பெத்லேகம் உருக்குக்கம்பெனிப் பங்குகளோ ஒரு நாளில் 10 வீதம் மதிப்பிலே பெருகலாம். அல்லவா ?.

ஊகப்பங்குச் சந்தையில் உள்ள மிக நூதனமானதொரு விடயம் தானாகவே தன் மீது மற்றவர்க்கு நம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறது. பங்குவிலை அதிகரிக்குமென்ற நம்பிக்கையோடு மக்கள் பங்குகளை வாங்கினால், அவ்வாறு எல்லாரும் வாங்குவதனால் பங்குகளின் விலை ஏறுகிறது. எனவே மேலும் பங்குகளைவாங்க மக்கள் முற்படுவர். அதனால் விலை மறுபடியும் ஏறுகிறது. இதில் வெற்றி பெறுவோருக்கு ஏற்படும் லாபத்தை மற்றெவரும், இழப்பதில்லை. சதுரங்கம்,கடதாசி விளையாட்டென்பவற்றில் அப்படியில்லை. இங்கே எல்லாருக்கும் பணம் கிடைக்கிறது. எல்லாப் பரிசுகளும் கடதாசியில் உண்டு. அந்தக்கடதாசியைக் காசாக மாற்றமுற்படும்போதுதான் பரிசு மறைந்துபோவதை அறியலாம். ஆனால் இவ்வாறு லாபத்தைக் கொண்டுவரும் பங்குகளை ஏன் எவரும் விற்கவேண்டும். ?

உலகம் முழுவதும் பித்தலாட்டம் ஆடும்போது நிதானமுள்ளவராயிருக்கப் பார்ப்பது முட்டாள்தனம். பொது மராமத்து வேலைகளைச் செய்விப்பதற்குத் தாபிக்கப்பட்ட கம்பெனிகளெல்லாம் கடதாசிக் கம்பெனிகள் ; உள்ளீடில்லாத வெறும் போலிகள் ; புளோரிடா தோட்ட அபிவிருத்திக் கம்பெனிகள் வெறும்கனவுகள். தென்னமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் கடன் கொடுக்க ஏற்பட்ட கடன் கம்பெனிகளின் பணத்தை அத்தேசங்கள் நீச்சல் தொட்டிகள் அமைப்பதிலும், பயனற்ற வீதிகளையமைப்பதிலுஞ் செலவு செய்கின்றன என்று வதந்தி நிலவினால்

www.padippakam.com



அதை ஒருவன் நம்புவானுனல் அத்தகைய முட்டாள் என்ன செய்ய வேண்டும் ; சொத்துக்களின் மதிப்பு, மக்கள் கொண்ட அபிப்பிராயப்படியே அமையும் என்பதை அவன் முதலில் கைக்கொள்ளவேண்டியது புத்தி சாலித்தனமே. இருந்தாலும் மற்றுமொரு முதுமொழி உண்டு. அதை அவன் பின்பற்றினுல்தான் வாழ்க்கையில் வெற்றிகாண்பான். அதாவது "மற்றவன் உன்னை ஏமாளியாக்கிவிடும்வரை நீ காத்துக் கொண்டிராதே" என்பது தான். இந்த விதியை அனுசரிப்பது மிகக்கடின சாத்தியமான தொன்ருகும். இது பூனைக்கு யார் மணிகட்டுவது என்பதுபோன்றது; கொக்கின் தலையில் வெண்ணெய் வைப்பது போன்றது.

1929இலே பெரிய வியாபார வீழ்ச்சி உண்டானபோது எல்லாரும் அதற்குக் குப் பலியானுர்கள், வியாபாரப் பெரும் நிபுணர்களும், சில்லறைக் கற்றுக்குட்டிகளும் அதற்குப் பலியாயினர். அண்ரூமெலன் வெள்ளை மாளிகையிலிருந்த என்ஜினியாரன ஜோன். டி. ரொக்பெலர், யேல் சர்வகலா சாலையிலுள்ள பொருளாதாரப் பேராசிரியர் எல்லாருமே பலியாயினர். சந்தை உள்ளீடில்லாது போயிற்று. பங்கில் முதலீடு செய்தவர்களின் ஈட்டுப் பொருளின் "கழிவு" தொகையைத் தரகர் விற்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. முதலீடு செய்தோர் இந்தத் துணையீட்டின்[1] மதிப்பை நிலைநிறுத்தப் பொருளில்லாது தத்தளித்தனர். அதனுல் சந்தை மேலும் படுத்துவிட்டது. கழிவு கொடுத்து வாங்காதவர்கூட அந்த வருட முடிவிலே தமது முதலில் மூன்றிலொரு பங்கை இழந்தனர். 1932 வரையில் $\frac{5}{6}$ ஐ இழந்தனர்.

ஊகப்பங்குச் சந்தை முடிவடைந்தது. விலையிறங்குமென்று நினைத்துப் பங்கை விற்கும் சந்தை ஆரம்பித்தது. முந்திய ஊகச்சந்தையைப் போலவே இந்த ஊகச் சந்தையிலும் (முந்தியதை மாட்டுச் சந்தையென்றும் பிந்தியதைக் கரடிச் சந்தையென்றும் வழங்கினர்.) கோடிக்கணக்கான பெறுமதியுள்ள பங்குகள் ஒவ்வொரு மாதமும் மறைந்தன. ஊக வியாபாரிகளின் பல கோடி முதல் இவ்வாறு அழிந்தது. இடையருது ஒழுங்கான வருமானத்தை எதிர்பார்த்த பல கைம்பெண்களின் சேமிப்புத் தொலைந்தது. ஐக்கிய அமெரிக்க உருக்குக் கம்பெனியின் மிகப் பாதுகாப்பானதும், 1929 இல் 261 மதிப்புள்ளதுமான பங்கு 1932 இல் 21 மதிப்புள்ளதாக வீழ்ச்சியடைந்தது. குறைந்த பாதுகாப்புள்ள பங்குகள் முற்ருக மறைந்தன. சனுதிபதி ஹூவரும் அவருடைய அரசாங்கமும் வியாபாரத்துறையிடம் மிக்க கரிசனையுடையவராயிருந்தனர். " சுபீட்சம் விரைவில் உண்டாகப்போகிறது "; " தற்போதைய விலைமட்டத்திற் பங்குகளை வாங்குங்கள் " என்றெல்லாம் தீர்க்கதரிசனம் சொன்னபோதிலும் மக்களிடையே நம்பிக்கை உண்டாகவில்லை.

1. Only Yesterday என்ற பெயரிலே பிரெடெரிக் லூயி அலென் என்பவர் 1920 ஆம் ஆண்டின் சரித்திரத்தை உருசிகரமாக எழுதியவிடத்து, பங்குச் சந்தையின் பூரிப்பு அமெரிக்க வாழ்வில் எந்த இடத்தை வகித்ததென விபரமாய் எழுதுகிருர்.


www.padippakam.com



ஈற்றில் 1933 இலேயுண்டான வங்கி நெருக்கடியின் பின்னர் மறுபடி பங்குச் சந்தை ஒருவாறு தலைதூக்கத் துவங்கிற்று. படம் 2 இலே பங்குச் சந்தை மதிப்புகளின் போக்குக் காட்டப்பட்டுள்ளது. 1936–1937 இல் பங்குகள் மாட்டுச் சந்தையாயிருந்தன. இரண்டாம் மகாயுத்த காலத்திலும் அவ்வாறேயிருந்தன. பின்னர் 1950 ஐ அடுத்த நடுப்பகுதியில் 1929 ஆம் ஆண்டு உச்ச நிலையை பங்குகள் மறுபடியும் அடைந்தன. 1960 இல் பங்கு விலை 20 வீதத்துக்குக்கூட வீழ்ச்சியடைந்தது. இதிலிருந்து பங்குச் சந்தை ஒருவழியில் எப்பொழுதும் செல்லாதென்பது தெளிவாயிற்று. மின்சாரப் பொருட்பங்குகளில் மறுபடியும் பூரிப்பு உண்டானது. இது மனித இயற்கை ஒருபோதும் மாறுதென்பதை எடுத்துக்காட்டக்கூடியதாயிருந்தது.

**பங்கு முதல் விலைகளைப்பற்றி நிச்சயமாகக் கூறக்கூடிய ஒரு விடயம் அவை ஏறியும் இறங்கியும் கொண்டிருக்குமென்பதே :**

கைத்தொழிற் பங்குமுதல் விலைகள் சம்பந்தமான டௌ–யோன்சின் சராசரி




**படம் 3.** *தேசீயப் பணவருமானம் உண்மையான வளர்ச்சியாலும் விலைமட்ட வளர்ச்சியாலும் உயர, சாதாரணப் பங்குமுதல் விலைகள் உயரும். ஆனால், தீவிரமான ஏற்றவிறக்கம் இருப்பதைக் கவனிக்க. (மூலம் : பறன் பிரசுரக் கம்பனி.)*

படிப்பகம்

www.padippakam.com



### சந்தையை மிஞ்சி யூகித்தல்

வியாபார நடவடிக்கையைச் சந்தை பின்பற்றுகிறதா, சந்தையை வியாபார நடவடிக்கை பின்பற்றுகிறதா என்ற நிரந்தரமான கேள்விக்கு இலேசான விடை கொடுப்பது கடினம். வியாபார நடவடிக்கை, தேசீய வருமானம், கூட்டு வருமானம் என்பனவே பங்கு விலைகளை நிச்சயிக்கின்றன பங்கு விலைகள் அவற்றை நிச்சயிப்பதில்லை.

அத்துடன் சந்தைப் போக்கினுலுண்டாகும் உளவியல் விளைவுகளுக்கு இப்போது முக்கியத்துவம் கிடையாது. ஆனால் இன்றும் தேசீய வருமானத்திலும் மொத்த வாங்கும் சக்தியிலும் மாற்றத்தைச் சந்தை எதிர்பார்க்கலாம். இவற்றுக்குச் சந்தையே முன்மாதிரியாயிருக்கிறதெனத் தோன்றலாம். ஆனால் சந்தை இவற்றை அனுசரித்தே உண்மையிற் செல்லுகிறது.

### முதலீடு செய்வதெப்படி

பங்குச் சந்தையில் வியாபாரம் நடத்தி இலாபம் பெறுவதற்குத் திட்ட வட்டமான சாதாரண விதிகள் கிடையா. வியாபாரத்தின் எதிர்காலப் போக்கைச் சரியாக முன்னரே அறிந்து சொல்லக்கூடியவர் சித்தியடைவர். ஆனால் அத்தகைய தீர்க்கதரிசியைக் காணமுடியாது. முதலீடு செய்வோரும் ஊகவியாபாரம் நடத்துவோரும் நாலு வகைப்படுவர்.

**1.** சாதாரணமாக வாங்கி வைத்திருக்கும் பிரிவினர் ஓர் இனம். தேசீயப் பொருளாதாரம் நீண்டகாலப் போக்கில் உயர்ந்து வரும். எனவே இவர்களும் கால அடைவில் சித்தியடைவர். முதலீடு செய்வோர்க்கு ஆலோசனைகூறும் சங்கங்களின் புள்ளி விவர யோசனைகளைப் பின்பற்றினால் அவர்கள் மேலும் சித்தியடையலாம். நல்ல வளர்ச்சியடையக்கூடிய கம்பெனிகளைப் பற்றி இவை ஆலோசனை கூறும். டௌ—ஜோன்ஸுக்குரிய சராசரி 30 தொழிற் பங்கு வியாபாரத்தாபனங்களிற் பார்க்க இந்த ஆலோசனைச் சபைகள் அத்துணை பயனுடையன என்று சொல்வதற்கில்லை. இம்முடிபு நீண்ட ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்டது.

இந்தப் பங்கு வியாபாரிகளின் முயற்சியால் விலைகள் நிலைபேறாய் நிற்பது மில்லை ; தளம்புவதுமில்லை. அவர்கள் சந்தையிலிருந்து எவ்வளவு பங்குகளை அப்புறப்படுத்தி விடுகிறார்களோ வியாபாரத்துக்கு எவ்வளவு தூரம் எல்லை வகுக்கிறார்களோ, அவ்வளவுக்குச் சந்தையை "மெலியச்" செய்கின்றனர். மெலிவான சந்தையிலே கொள்வனவு விற்பனவு மிகக் குறைவாயிருக்கும். நடை முறையிலுள்ள சந்தை விலையை அனுசரித்து விற்பதற்கு விருப்பமானவர்கள் இல்லாதபடியால், சில நூறு பங்குகளை வாங்குவதற்குப் பிரயத்தனஞ் செய்தால் பங்கின் விலை ஒரு சில புள்ளிகள் உயரலாம். அவ்வாறே விற்பதற்கு முயன்றால் விலை ஒரு சில புள்ளிவரை இறங்கலாம்.

**2.** மற்ற எல்லையில் ஒவ்வொரு தரகர் கந்தோரிலும் பங்கு விலை தந்தியில் வந்து பதிவதை மணிக்கு மணி, நாளுக்குநாள் கவனித்

படிப்பகம்

www.padippakam.com



துக்கொண்டிருக்கும் பங்குவிலைக் காவற்காரர் இருப்பர். பொதுவாகக் கூறுவதானல் இவர்கள் வாங்கி விற்றும், விற்று வாங்கியும் வியாபாரம் நடத்துவர். ஆனல், இவர்கள் தரகர்க்கு வருவாய் தேடிக்கொண் டேயிருப்பர்.

இவர்கள் சந்தையை ஓரளவு மெலிய விடாது பார்ப்பர். இவர்களிருப் பதால் எந்த ஒரு முதலீட்டுக்காரரும் தமது பங்குகளை எந்த நேரமும் ஏதோ ஒரு விலைக்குப் பைசல் செய்யக்கூடியவராயிருக்கிறர். இந்த விலையை முன்னேறியே கூறமுடியாது. அன்றியும் முதலீட்டுக்காரர் விரும்பிய விலை யாகவும் அது இருக்கமாட்டாது. சிறிய கம்பெனிகள் அட்டவணைப்படுத் தாததும், தரகர் கம்பெனிமேசைமீது கொள்வனவு விற்பனவு செய்வது மான பங்குகளைப் பார்க்கிலும் இந்தப் பங்குகள் திட்டப்படி ஒழுங்கு செய்யப் பட்டு வியாபாரஞ் செய்யப்படுவதாலும், ஒரெல்லைக்குள் " திரவத்தன்மை " யுடையனவாயிருப்பதாலும், கவர்ச்சியுடையனவாயிருக்கின்றன.

இவர்களுக்கு இடைநடுவிலே பல மாதமாகவோ வருடமாகவோ ஊஞ் சலாடிக் கொண்டிருக்கும் ஊக வியாபாரிகள் உளர். இவர்களில் அதிகம் சித்தியடையாதவர்கள்தான் புதிதாக வியாபாரத்தில் நுழைவோராவர். இவர் கள் காலம் மிகச் சென்றபின்னர் சந்தையில் உயர் மட்டத்திலே பிரவேசிப் பவர்கள்[1]. " ஊறுப்பண "ங்கொண்டு வியாபாரஞ் செய்வோர் தமது பணத்தை வாபஸ் செய்வதற்கு அறிகுறி இதுவே. சனக்கும்பல் காட்டும் தீவிர ஆரவாரமின்றி வியாபாரத்தின் இயல்பை ஆர அமர ஆராய்ந்து தொழில் நடத்தக்கூடியவரே சித்தியடைவர். பங்குவிலை குறைந்திருக்கிற தெனக் கண்டவுடன் அதை வாங்கி, விலையேறுகிறதெனக் கண்டவுடன் விற்பதென்பது இதன் பொருளன்று. பங்குகள் விலையேறக்கூடுமெனக் காணும் நேரத்தில் வாங்கியவிலையிறங்குமென உற்பாதங்கள் கண்டவுடன் விற்றே வேறு கடன் பத்திரங்களை வாங்கியோ செயலாற்றுவது நல்ல முறை. காசுக்கு விற்பதற்கு மன உறுதி வேண்டும். ஏனெனில் பெரும்பாலும் சந்தை பெரிய நயம் உண்டாகக்கூடிய வகையிலேதான் இயங்கிக் கொண்டி ருக்கும். தனி ஒருவர் சாதுரியமாக இதை நடத்துவாரானல் " கரடிச் சந்தை " யால் உண்டாகும் நட்டத்தைத் தவிர்ப்பார்.

இத்தகைய ஊக வியாபாரிகளின் நடவடிக்கை, விலைகளை நிலைகுலையச் செய்யலாம். விலையேற்றத்தை இவர்கள் துரிதப்படுத்தி மேலும் ஏறச் செய்வர். இவ்வாறே விலை இறக்கத்தையும் துரிதப்படுத்துவர்.

4. தனிப்பட்ட விசேட நிலைமைகளை ஆராயும் போக்குடையவர்கள் சிலர் இருக்கிறர்கள். சில கம்பெனிகளின் நிலைமையைப் பற்றிப் பொதுவாகக் கொடுக்கப்படும் தகவல்களிலிருந்தோ, அந்தரங்கமான தகவல்களிலிருந் தோ முன்னேறியே அறிந்துவிடுவர். அதாவது கம்பெனி முறியப் போகிற தென்றே அதனுடைய பங்குகளுக்கு விசேடப் பங்கீடு உண்டென்றே கம்பெனி பிரியப்போகிறதென்றே, வேறு கம்பெனிகளோடு சேரப் போகிற

[1] கம்பெனி, அரசாங்கம் முதலியன தம் ஊழியர் ஊறடைந்தாற் கொடுக்கும் நட்ட ஈட்டுப்பணம்.

www.padippakam.com



தென்றே அவர் அறிவார். கிடைக்கக்கூடிய லாபம், பங்கீடு பற்றிய தகவல் என்பனவற்றை அறியக்கூடியவராயிருப்பார். மூன்றாவது பிரிவுக்குரிய சித்திதரக்கூடும் பண்புகளை இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கொண்டிருந்தால் (உதாரணமாக இரண்டு மகா யுத்தத்திலே அனுபவம் பெற்று முதிர்ந்த அரசியல்வாதிகளான பேர்னூட், பரூஷ் போன்றவர்கள்) இந்தச் சந்தையில் பெரிய இலாபத்தைப் பெறுவர். இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் சில முயற்சியுள்ள வியாபாரிகள் 1,000 டொலரை 10,000,000 டொலராகப் பெருக்கியுள்ளனர். அத்துடன் இலாபங்களைக் குறைவான வரி கொடுக்கும் முதலாகவும் மாற்றியுள்ளனர். ஆனால் பரூஷ் கூறிய எச்சரிக்கையைக் கவனத்துக்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்ற வேலைகளையெல்லாம் விட்டுவிடவேண்டும். சந்தையின் வரலாறு, பின்னணி என்பவற்றையெல்லாம் நன்றாகப் படிக்க வேண்டும். அங்காதிபாத சாத்திரத்தை வைத்தியமாணவன் எவ்வாறு படிப்பானோ அவ்வாறே பங்குகள் விளம்பரப்படுத்தப்பட்ட கம்பெனிகளின் வரலாற்றையும், பின்னணியையும் ஆராயவேண்டும். இவற்றைச் செய்வதோடல்லாமல் சூதாடுபவனின் மனத்திடமும், ஆவிகளோடு பேசுவோருக்கிருக்கக்கூடிய ஆறாவது அறிவொன்றும், சிங்கத்தின் தைரியமுமிருந்தால் ஓரளவு வெற்றி கிட்டும்.

### வீடு சொந்தமாய் வைத்திருப்பதிலுள்ள பொருளாதாரம்

வீட்டிலே பொருளை முதலீடு செய்தல் எல்லாராலும் மேற்கொள்ளப்பட்டதொரு முதலீடாகும். மகா யுத்தகாலத்துக்குப் பின்னர் நாட்டிலே கட்டட வேலைகள் பூரிப்படைந்தன. வியாபார மந்தகாலத்திலும், யுத்த காலங்களிலும் வீடுகட்டும் முயற்சி மேற்கொள்ளப்படாதிருந்தது. எனவே நிறைவேற்றப்படாத வீட்டுக் கட்டட வேலைகள் அதிகமிருந்தன. சண்டைக் காலத்திலும் அதன் பின்னரும் விவாகங்களின் தொகையும், குடும்பங்களின் அளவும் பெருகத் தொடங்கின. வருமானம் அதிகரித்தது. பலருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன. அதனால் பலர் வீடு கட்ட விரும்பினர். ஆனால் தொழிலாளர் சம்பளம் அதிகரித்தது. கட்டடச் சாமான்கள் விலையேறின. தொழில் நுட்ப அறிவு இந்தத்துறையில் முன்னேற்றமடையவில்லை. இக்காரணங்களினாலே யுத்த காலத்துக்கு முன்னிருந்ததைவிட மூன்று மடங்கு அதிகமாகப் புதிய வீடுகளும் பழைய வீடுகளும் விலையேறின.[1]

1. வீட்டுவிலையின் எட்டிலொரு பகுதி நிலத்துக்குச் செலவாகிறது. (இதில் பாதி திருத்தங்களுக்காகும்). எஞ்சியது தொழிலாளர் செலவுக்கும் தளவாடங்களுக்குமாகச் செலவாகிறது. 20,000 டொலர் வீடு வாங்குவதானால், 20 வீதம் உடனே கொடுக்கவேண்டும். நட்டஈட்டுக் கடனும், (6 வீத வட்டியும் 20 வருடத்தவணையும்), வரியும், பரிபாலனச் செலவும், மாதம் 200 டொலராகும். இதில் மின்சாரம், தெலிபோன் என்பன சேரா. இஃது உயர்வானதா ? இப்படி ஒரு வீடு வாங்குவதானால் 10,000 டொலருக்கு அதிகம் வருமானம் வேண்டும். 40,000 டொலர் வீடானால் அதில் இரட்டிப் பங்கு வருமானம் வேண்டும். (வீடு வாங்கக் கடன் படுவதானால் $5\frac{1}{4}$ வீத வட்டிக்குக் கடன் எடுப்பது கடினம். $5\frac{3}{4}$ வட்டிக்கொடுப்பது கூடக் கடினம். ஆனபடியால் 6, 7, 8 வீதவட்டி கொடுக்க வேண்டிவரும். மேற்கில் சிலர் சமீப காலத்தில் இரண்டாம் ஈட்டுக்கு 25 வீத வட்டிகூடக் கொடுத்திருக்கிறார்கள்.

www.padippakam.com



வீடு வாங்குவது எப்பொழுதும் நல்ல முதலீடு என்று கூற முடியாது. ஆனால் அது நல்ல விநோதக் காலப்போக்காகும். ஒருவீட்டைப் பரிபாலிப்பது செலவுக்குரிய விடயமே. வீட்டின் தேய்மானம் அவ்வளவு பெரிதன்று. அயல் தேய்ந்து பழைமை அடைவது பெரியபிரச்சினை. இவை அவ்வளவு பெரிய அபாயங்களல்ல. சில சமயம் காணிபூமி விலை வீழ்ச்சியடைந்து மந்தமுண்டாகலாம். இது வியாபார மந்தத்தினால் எற்படக்கூடியது. அல்லது ஊக வியாபாரத்தினாலும், கட்டடங்கள் அளவுக்கு மிஞ்சிக் கட்டப்படுவதாலும் உண்டாகலாம்.

விலை எறும் போக்குடைய பத்து ஆண்டுக் காலங்களில் இந்த அபாயங் கள் குறைவாகவேயிருந்தன. வருமான அதிகரிப்பினாலும், குடும்பப் பெருக்கத்தினாலும், நகர்ப்புறங்களுக்கு மக்கள் செல்லத்துவங்கியதாலும், 60 வீதத்துக்கு அதிகமானோர் சொந்த வீடுள்ளவராயிருக்கின்றனர். அல் லது வீட்டுக்குரிய தவணைப் பணத்தைக் கொடுத்துக்கொண்டு வருகின்றனர். மற்றக்காலங்களிலோ, முன்னேற்றமான பொருளாதார அமைப்புள்ள காலங்களிலோ இவ்வாறு நடைபெறவில்லை.

**சீவியக்காப்புறுதி வாங்குதல்**

அரசாங்கக் கடன் பத்திரம், வங்கிக் கணக்கு, வீடுவாங்குதல் என்பவற் றைவிடச் சாதாரணமாக மக்கள் முதலீடு செய்யும் மற்றொரு சேமிப்பு சீவியக் காப்புறுதி. இதில் மூன்று வகையுண்டு. ஒன்று தொகுதிக் காப்புறுதி. இஃது ஒரு தாபனத்திலே வேலைசெய்யும் உழைப்பாளிகளை ஒரு தொகுதியாகக் கொண்டு செய்யும் காப்புறுதி. மற்றது தொழிற் சீவியக் காப்புறுதி. மூன்றாவது சாதாரணச் சீவியக்காப்புறுதி.

முதலாவது வகையான காப்புறுதி பிரசித்தமானது. அதுவும் தொழில் நிலைய முதலாளியே காப்புறுதிப் பணத்தைக் கட்டுவதானால் மிக வசதி யுடையதே.

தொழிற் சீவியக் காப்புறுதி குறைந்த சம்பளமுள்ள தொழிலாளர்க்கு விற்கப்படும் காப்புறுதியாகும். வழக்கமாக இத்தகைய காப்புறுதியை முகவர்கள் ஒரு வாரத்துக்கு ஒரு காசு (அல்லது அதற்கு அதிகமாகவும்) என்றவகையில் வைத்தியப் பரீட்சையில்லாமலே விற்பார்கள். அதாவது அவர் தான் அவதானித்தவகையிலும், அயலண்டையிலுள்ளவர்களிடம் அறிந்து கொண்டவகையிலும் காப்புறுதி செய்யப்படுபவர் நற்சுகமுள்ளவரென் பதை அறிந்து கொள்வார். வருடத்துக்கொருமுறை தவணைக் கட்டணத் தை மொத்தமாகக் கட்டுவதிலும் பார்க்க, உள்ளூர்க் காப்புறுதிக் கந்தோ ரிலே சிறு சிறு தொகையாகக் கட்டிவரலாம். அல்லது அயலிலுள்ள காப்புறுதி முகவர் நேரத்துக்கு நேரம் வந்து 5, 10 சதமாகச் சேர்த்துக் கொள்வார். உங்கள் வீட்டுக்குப் பால் கொண்டு வருபவருக்குப் பால் விலையோடு சிறிது அதிகமாகக் கொடுப்பதுபோல் சாதாரணக் காப்புறுதி யிலும் பார்க்க இத்தகைய காப்புறுதிக்கு அதிக கட்டணம் கொடுக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டிவரும். விசேடமாக வறியவர்க்குக் காப்புறுதி அவசியம். ஆனால் அவர்கள் பணம் கொடுக்க வசதியற்றவராயிருப்பதால் இத்தகையதொரு காப்புறுதி அவசியமாகும்.

இங்கே நாம் சாதாரண சீவியக் காப்புறுதி பற்றியே முக்கியமாக ஆராய்வோம். இதில் பலவகையுண்டு. அவற்றில் முக்கியமானவை (1) காலத் தவணைக்குக் காப்புறுதி (2) நேரடியான சீவியக்காப்புறுதி (3) நன்கொடைத் திட்டக்காப்புறுதி.

**தவணைக் காப்புறுதி**

இஃது அத்துணைப் பிரபலமானதன்று. இதை விளங்கிக்கொள்வது இலகுவானது. 35 வயதுள்ள 100,000 பேர் தலைக்கு 1,000 டொலருக்கு 1 வருடக்காப்புறுதி செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இவர்களில் 1 வீதமானோர் அதாவது 1,000 பேராவது ஒரு வருடத்துள் இறந்து போகிறார்களெனப் புள்ளிவிவரங்களிலிருந்து அறிகிறோம். எனவே அந்தக் காப்புறுதிக் கம்பெனி, இறந்தவரின் மனைவி மக்களுக்கோ உரிமையுடையோர்க்கோ 1,000 × 1,000 டொலர் அதாவது 10 இலட்சம் டொலரைக் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே 35 வயதுள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் கம்பெனி 10 டொலராவது தவணைக் கட்டணம் அறவிடவேண்டும். அடுத்தவருடம் அப்படியே மறுபடியும் காப்புறுதி செய்யலாம். ஆனால் வயது முதிர்ந்தபடியால் காப்புறுதி செய்வோர்க்குரிய கட்டணம் அதிகரிக்கும். தவணைக் காப்புறுதியின் கீழ் ஒவ்வொரு வருடமும் தனித் தனி வியாபாரமாக இருக்கும். அதனால் கம்பெனி அதிக சேமநிதியைச் சேர்த்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. தவணைக் காப்புறுதியினால் எதிர் காலத்தில் எவ்வித சேமிப்புமிருக்காது. ஆனால் ஒருவர் இறந்து போனால் அவருடைய இளங்குடும்பத்துக்குக் கூடியபட்சமான பாதுகாப்புக்கிடைக்கிறது.

**நேரடியான சீவியக் காப்புறுதி**

35 வயதில் இந்தக் காப்புறுதியிலே சேருவோர் இறக்கும்வரை ஒரு தொகைக் கட்டணத்தை வருடா வருடம் கம்பெனிக்குக் கொடுப்பர். 30 வயதில் அல்லது 34 வயதில் சேருவோருக்கு 35 வயதில் சேருவோரிலும் கட்டணம் குறைவு. இந்த நிரந்தரமான கட்டணம் ஆரம்பத்திலே அதிகமாயிருக்கும். அதாவது 35 வயதுத் தொகுதியைச் சேர்ந்த எல்லாருக்கும் அவர்களை வேலைக்கமர்த்திய கம்பெனி தான் சேர்க்கும் தொகையிலும் குறைவாகவே கட்டும். அதிலுள்ள வித்தியாசப் பணத்தைக் கடன்பத்திரத்திலோ ஈடுகளிலோ முதலீடு செய்துவிடும். பின்னர் வயது முதிர முதிரக் கட்டணம் குறையும். குறைந்த கட்டணத்துக்கும் நியமக் கட்டணத்துக்குமுள்ள வித்தியாசத்தை முதலீடு செய்த பணத்தின் வட்டியிலிருந்து கம்பெனி சரிக்கட்டிக்கொள்ளும். அந்தத் தொகுதியிலுள்ளவர்கள் 100 வயதாகி இறந்த அளவில் காப்புறுதிப் பணமும் கொடுபட்டு முடிந்துவிடும்.

படிப்பகம்

www.padippakam.com




35 வயதில் காப்புறுதியில் சேர்ந்து 80 வயதுவரை இருக்கும் சிலரைக் கொண்ட ஒரு தொகுதியின் தவணைக் காப்புறுதி, நேரடிச் சீவியக் காப்புறுதி என்பவற்றைப் படம் 4 காட்டுகிறது.

**நன்கொடைத் திட்டக் காப்புறுதி**

நன்கொடைத்திட்டத்தில் அதிகசேமிப்புண்டு. அத்துடன் காப்புறுதியு முண்டு. 20 வருட நன்கொடைத்திட்டக் காப்புறுதியின்கீழ் 35 வயதுள்ள ஒருவர் 20 வருடத்துக்கு உயர்வான கட்டணத்தைக் கொடுப்பார். 55 வயதி லே அவர் அந்தக் காப்புறுதியின் முகப்பெறுமதியைப் பெறுவார். அவர் இறந்துபோகாவிட்டாலும் அஃது அவருக்குக் கொடுக்கப்படும். எனவே நன்கொடைத் திட்டக் காப்புறுதி சேமிப்பும், காப்புறுதியுமாகும். இஃது இடை யில் முறிந்துபோகவிடாது கட்டணத்தைக் கட்டிக்கொண்டே வரவேண்டும். அப்படியானால் இது நல்ல காப்புறுதி முறையாகும். ஒழுங்காகப் பணத் தைச் சேமிக்க விரும்புவோர்க்கு இது நல்ல முறை. அரசாங்கக்கடன் பத்திரங்களிலோ வேறு முதலீடுகளிலோ என்ன வட்டி கிடைக்குமோ அதைப் போன்ற வட்டி இதிலும் கிடைக்கும். மேலும் வரிச்சகாயம், வேலை வாய்ப்பு முதலியனவும் இதில் கிடைக்கும்.

**நேரடிச் சீவியக் காப்புறுதி நிரந்தரமான தவணைக் கட்டணம் விதிக்கும்; வாலிபத்திலே தேறிய சேமிப்பும், வயோதிபத்திலே சேமிக்காத நிலையு முண்டாகும்.**




படம் 4. *தவணைக்காப்புறுதி குறைந்த கட்டணத்திற் துவங்கி, வருடாவருடம் கூடும். அது வயது செல்லச் செல்ல உண்டாகும் செலவு மரண அபாயம் என்பவற்றை உத்தேசித்து அதி கரிக்கும். நேரடிச்சீவியக் காப்புறுதி நிரந்தரமான வருடக் கட்டணமுடையது. இது முதலில் நடப்பிலுள்ள காப்புறுதிச் செலவைக் காட்டிலும் அதிகரிக்கும். வித்தியாசமாயுள்ள தொகை தொடர் வட்டியிலே முதலீடு செய்யப்படும். நாளடைவில் கட்டணத்தைவிடப் பதிவுச்செலவுகள் அதிகரிக்கும்போது காப்புறுதித் தொகுதிக்குச் சொந்தமான சொத்துக்கள் பகிர்ந்து கொள்ளப் படும்.* **(Public Affairs Pamphlet 62.)**

அதிக விபரம் தேவையானோர் காப்புறுதி ஏஜண்டுகளிடம் பெற்றுக் கொள்ளலாம். காப்புறுதிக் கம்பெனிகளின் கொள்கைகளிடையே சிறு சிறு வித்தியாசங்களிருக்கலாம். அதனால் எந்தக் கம்பெனியில் காப்புறுதி செய்வதெனப் பொதுமக்கள் நிச்சயப்படுத்த முடியாதவராயிருப்பர். பல

www.padippakam.com



கம்பெனிகள் அதிக கட்டணம் விதிப்பது வழக்கம். பின்னர் வருட முடிவில் அவர்கள் அந்த உபரிக்கட்டணத்துக்கு ஈடுசெய்யுமுகமாக இலாபப் பங்கீடு செய்வர். இருந்தும் கம்பெனிகளிடையே பெரிய வித்தியாசங்களுண்டென நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். எனவே இப்பிரச்சினையை ஆராய்வதும் நேரடியாகப் போய்ப் பார்ப்பதும் நல்லது. மசாச்சுசெட்ஸ், நியூயோர்க் போன்ற மாகாணங்களிலே சேம வங்கிச் சீவியக்காப்புறுதிகளை வாங்குவதில் நன்மையுமுண்டு தீமையுமுண்டு. ஆனால் காப்புறுதிகள் விற்கப்படுகின்றனவேயன்றி வாங்கப்படுவதில்லை. ஆதலால் மக்களிற் பெரும்பாலோர் வியாபாரக் கம்பெனிகளிடமே அவற்றை வாங்குவர். காப்புறுதி முகவர் சொத்துத் திட்ட ஆலோசனை கூறுவோராயிருப்பதால் இவ்விடயங்களில் அனுபவமில்லாதவர்கள் இவர்களுடைய ஆலோசனையைக் கேட்டல் இன்றியமையாததாகும்.

### சமூகப் பாதுகாப்பு

வயோதிபத்தினாலும், வேலையின்மையாலும், உண்டாகும் பொருளாதார நெருக்கடி, அமெரிக்க மக்களுக்கு ஏற்படாதபடி 1937 இல் சமூகப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுகொண்டுவரப்பட்டபோது பலரும் கடுமையாக எச்சரிக்கை செய்தனர். ஆனால் அது நல்ல பலனை அளித்துள்ளது. இப்போது அத்திட்டத்தை விரிவாக்க வேண்டுமென்று ரிப்பப்பிளிக்கன் கட்சியும் சனநாயகக் கட்சியும் போட்டியிடுகின்றன. இப்போது காப்புமுறை மூன்று பிரிவையுடையது. (1) வயது சென்ற ஓய்வு காலத்தில் தானோ தானில்லாவிட்டால் சொந்தக்காரரோ நன்மையடையக் கூடிய கட்டணக் காப்புறுதி (2) வேலையில்லாக் காலத்தில் சகாயம் பெறும் காப்புறுதி (3) வயது முதிர்ந்த காலத்தில் சகாயம் பெறுதலும், பொது நன்மையும். முதலிரண்டு பிரிவின் கீழும் வயதுவந்து ஓய்வு பெற்றவர்களும் வேலையிழந்தவர்களும் கண்டிப்பாகச் சகாயம் பெறுவர். அவர்கள் கணக்கிலே பணமிருக்கிறதா என்று அறிவதற்குத் “தேவைப்பரீட்சை” மூலம் அவர்கள் பரீட்சிக்கப்பட வேண்டியதில்லை.

ஒவ்வொருவருடைய சம்பளத்திலும் ஒரு பகுதி சமூகப் பாதுகாப்பு வரிக்கென ஒதுக்கப்படும். ஒவ்வொருவரும் தமது அந்திம காலத்துக்குப் பணம் ஒதுக்கப்படுகிறதெனவே எண்ணிக்கொள்வர். ஆனால் சமூகப் பாதுகாப்பென்றும் சமூகக் காப்புறுதிக்கும், தனிப்பட்டவர்களுடைய காப்புறுதிக்கும் வித்தியாசமுண்டு. சமூகக் காப்புறுதியில் ஒருவன் கட்டணமாகக் கொடுத்த பணத்திலும்பார்க்க அதிகமான நன்மையைப் பெறுவான். அவன் கொடுத்த கட்டணத்துக்கும், பெறும் உபரியான சகாயத்துக்குமுள்ள வித்தியாசத்தை அரசாங்கம் வரிகள் மூலமும், மற்றவர்கள் கட்டிய கட்டணத்தின் மூலமும் நிரப்புகிறது. இப்போது இத்திட்டம் “போகும்போதே கொடுத்துவிட்டுப் போகும்” ஒழுங்கில் அமைந்திருக்கிறது. இதனால் காப்புறுதிச் சேமநிதியொன்றும் சேர்ந்துவிடாது. படிப்படியாகச் சம்பளத்தில் கொடுக்கவேண்டிய வரிவீதம் உயரும். 1975 வரையில் வயதுவந்தோர் தொகையும், ஓய்வுபெற்றோர் தொகையும் உயர்ந்துவிடும்.

படிப்பகம்

www.padippakam.com



வேலையற்றோர் சகாய ஒழுங்கு மத்திய அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் மாகாண அரசாங்கங்களால் நிறுவப்பட்டுள்ளது. இதன்படி வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் பிரதிவாரமும் வேலையற்றோர் சகாய நிதிக்கு உதவவேண்டும். அவனுக்கு வேலையில்லாமற் போகுமானால் சில நிபந்தனைகளின்படி அவனுக்கு வாராவாரம் சகாயமாக ஒரு தொகை கிடைக்கும். அத்தொகையின் அளவு அவன் முன்னர் எவ்வளவு சம்பளம் பெற்றான், எவ்வளவு கட்டணஞ் செலுத்தினான் என்பவற்றைப் பொறுத்தது. நிபந்தனைகள் வருமாறு : அரசாங்கத்தொழில் பரிவர்த்தனை நிலையத்தினால் தேடிக்கொடுக்கப்படும் எந்த வேலையையும் அவன் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். வேலையில்லாமற் போன காலத்துக்கு முந்திக் குறைந்த பட்சமாகச் சிலவாரம் வேலை செய்திருக்கவேண்டும். "தேவைப் பரீட்சை" போன்ற இழிவான பரீட்சைகளிருக்கமாட்டா. கொடுக்கும் சகாய நிதி சோம்பேறித்தனத்தை ஊக்கக்கூடிய அளவுக்கு அதிகமாகவும் இருக்கமாட்டாது. வியாபாரமலர்ச்சியுள்ள காலத்திலே வேலையற்றோர் சகாய நிதி பெருகும். வியாபார மந்தமேற்படுங்காலங்களில் மக்களுடைய வாங்குஞ் சக்தியை நிலைநிறுத்துவதற்காக அந்த நிதியிலிருந்து வேலையில்லாதவருக்கு உதவியளிக்கப்படும்.

சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வயோதிபர்க்கும், பொதுசன நன்மைக்குமாக மத்திய அரசாங்கம் ஒரு தொகைப்பணத்தை மாகாண அரசாங்கங்களுக்கு உதவும். அவை ஆதரவற்றோருக்கும், வயோதிபருக்கும், குருடருக்கும், கைம்மை நிலையிலிருப்போருக்கும், அநாதைகட்கும், உடல்நலம், மனநலமற்றோருக்கும் உதவிவழங்கும். செல்வநிலையிலுள்ள மாகாணங்களுக்குக் குறைவாகவே நிதி வழங்கப்படும். வறியநிலையிலுள்ள மாகாணங்கள் அதிக உதவியைப் பெறும்.

**சமூகப் பாதுகாப்பின் வளர்ச்சி.**

இந்தச் சமூகப் பாதுகாப்புத்திட்டம் நிலைபெற்றுவிட்டது. அது மேலும் விரிவாக்கப்படுகிறது. பல்டிமூரில் துளையிடும் மட்டை மூலம் கருமம் இலேசாக்கப்பட்டிருக்கிறது. இதனால் நிர்வாகப்பதிவு, எழுத்து முதலியன இலேசாக்கப்பட்டுள்ளன. ஒருவனுக்குண்டாகும் வறுமை, சமூக இன்னல் முதலியன அவனுடைய சொந்த வசமானதல்ல என்ற தத்துவத்தைச் சமூகம் இப்பொழுது பெரிதும் ஆதரிக்கத் துவங்கியுள்ளது. ரூமென், ஐசின்ஹோவர் ஆகிய சனாதிபதிகள் காலத்திலே சமூகப்பாதுகாப்புத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டதன் பயனாக 110 இலட்சம் பேர் மேலதிகமாக இத்திட்டத்திலே சேர்க்கப்பட்டனர். சொந்தமாக விவசாயஞ்செய்வோர், பாதிரிமார், சில துறைகளில் தாமாகவே ஈடுபட்டுழைப்போர் ஆகியவர்கள் முதன்முதலாக இத்திட்டத்திலே இந்த ஆட்சியில் சேர்ந்து கொண்டார்கள். இத்திட்டத்தின்கீழ் வருடவருமானமுள்ளவர்களின் முதல் 4800 டொலருக்கு இவர்கள் 3 வீதமும், முதலாளியாயிருப்போர் இவர்கள் பேரில் மூன்றுவீதமுங்கட்டு

10—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



கிருர்கள். (தாமாகவேலையில் ஈடுபட்டுள்ளோர் முதலாவதுள்ள 4,800 டொலர் வருமானத்துக்கு 4½ வீதம் கொடுக்கின்றனர்).

ஆரம்பத்திலே 10 டொலர் துவக்கம் 85 டொலர் வரை ஒரு மாதத்துக்கு நன்கொடை கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது 33 டொலர் துவக்கம் 254 டொலராக உயர்த்தப்பட்டுள்ளது. 65 வயதுக்கு மேற்பட்ட தராதர முள்ள ஒருவருக்கு ஒய்வு காலச் சகாயநிதி வழங்கப்படும். கைம்பெண் அறுபத்திரண்டு வயதுக்கு மேற்பட்டவளானல் ஒய்வுச் சகாயம் வழங்கப் படும் அல்லது 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளிருந்தால் வழங்கப் படும். தொழில் செய்யும் பெண்கள் இப்போது 62 வயதில் 80 வீதச் சகாயத்தோடு ஒய்வு பெறலாம். தராதரமுள்ளவர்களின் மனைவியர்க்கு 62 வயதில் சகாயமளிக்கப்படும். முற்றுக அசக்தர்களானேர்க்குச் சகாய மளிக்க இப்போது வசதியுண்டு. தொழிலாளி ஒருவர் இறந்தால் மொத்த மாக அவர் பேரில் சகாயம் வழங்கப்படும். அத்துடன் வேறு பல சில்லறை வசதிகளுமுண்டு. ஒய்வுகாலச் சகாயநிதி கணக்கிடும் முறை சிக்கலானது. ஆனல் அதன் பொதுத்தன்மை பின்வருமாறு : தொழிலாளியின் சகாய நிதி பிரதானமாக அவனுடைய சராசரி மாதாந்தச் சம்பளத்திலே தங் கியுள்ளது. முதல் 110 டொலருக்கும் தாராளமாகக் கணக்கிடப்படும் மேலதிகப் பிரதி வருடத்துக்கும் ஆரம்பச் சகாய வகையில் மேலும் சில அதிகரிப்புண்டு. அவனுடைய சகாயநிதி கணிக்கப்பட்டபின் அவனுடைய மனைவிக்கு 65 வயதுக்குப்பின்னர் அவனுக்குச் சேர வேண்டிய சகாயங் களில் 50 வீதம் மேலதிகமாகக் கிடைக்கும். 65 வயதுக்கு முன்னர் சகா யம் கோரினல் இந்த வீதம் குறையும். 62 வயதுக்குப்பின் கைம்பெண் ணுக்கு 75 வீதச் சகாயம் கிடைக்கும். அவனில் தங்கியிருக்கும் மக்களுக்கு ஒரு பகுதி கிடைக்கும். இத்தகைய வருடாந்தச் சகாயங்களுக்கும் சலுகை களுக்கும் தனிப்பட்ட காப்புறுதிச் சங்கமானல் பத்தாயிரக் கணக்கில் கட்டணம் விதிக்கும். சமூகப்பாதுகாப்புத் திட்டம் வீமாத்தீரும் முறை யிலே நடத்தப்படவில்லை.

இத்தகையதொரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் நாட்டின் வரி செலுத்தும் திறமையில் தங்கியுள்ளது. பண வீக்கத்தினல் தனிப்பட்ட அதிக காப்புறுதித் திட்டங்களும், சேமிப்புக்களும் மறைந்து போனலும், சமூகப் பாதுகாப்புத் திட்டம் மாற்றமின்றி மறுபடியும் தொழிற்படும்.

இந்தத் தலைமுறையிலேயே நோய்நொடி, மருத்துவமனை வசதி, பொதுச் சுகாதாரம் என்பவற்றுக்குக் காப்புறுதி செய்ய அரசாங்கம் திட்டம்வகுக் குமா? வயது வந்தவர்க்குச் சுகவசதியளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்ற விடயம் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இவை யெல்லாம் விவாதத்துக்குரிய விடயங்களாயிருக்கின்றன. அமெரிக்காவில் நாலு பேரில் மூவர், புளூ குரொஸ் போன்ற சகாயத்திட்டங்களையுடைய வராயிருக்கின்றனர். 1931 இலே இத்தகைய தனிப்பட்ட சுகாதாரத் திட் டம், மருத்துவமனை வசதி என்பவற்றை வைத்தியர்கள் எதிர்த்தனர். இன்று அவர்களே இத்திட்டங்களை ஆதரிக்கிருர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பிரிட்டன், ஸ்காண்டிநேவியா போன்ற நாடுகள், "பொது நல அரசாங்கம்" அமைப்பதில் எவ்வளவோ முன்னேறியுள்ளன. அமெரிக்காவில் அத்தகைய முன்னேற்றம் இன்னும் உண்டாகவில்லை. பிரிட்டனில் "தொட்டில் துவங்கிச் சுடுகாடுவரை" ஒரு குழந்தையின் குடும்பத்துக்கு அதன் பிறந்த நேரந்தொட்டுச் சகாயம் வழங்கப்படுகிறது. அவன் சிறுவனாயிருக்க்கும்போது அவன்குடும்பத்துக்கு அளிக்கப்படுகிறது. அவனுக்கு வைத்திய வசதி, பல்வைத்தியவசதி என்பன சீவியகாலப்பரியந்தம் வழங்கப்படுகிறது. தொழில் இல்லாதிருக்கும்போதும், சுகவீனமாயிருக்கும்போதும், ஓய்வு பெறுங்காலத்திலும் சகாயமளிக்கிறது. இறந்த பின்னர் அந்திமக்கிரிகைகளுக்கு உதவுவதோடு, அவனில் தங்கியிருப்போர்க்கும் சகாயம் வழங்குகிறது. தேர்தல் தொகுதிகள் இத்தகைய திட்டங்களை ஆதரிக்கின்றன. கொன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற் கட்சியும் இதனை ஆதரிக்கின்றன. இவற்றுக்குப் பணம் வேண்டும். அதற்குரிய பணத்தை எவ்வளவு தூரம் ஒதுக்குவதென்பதைச் சனநாயக முறையிலே ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் நிச்சயிக்கும்.

**சுருக்கம்.**

1. குடும்பத்தின் அளவு, பிரதேச வாழ்க்கைச்செலவு என்பவற்றை அனுசரித்து அவற்றுக்கு ஓரளவு சலுகை வழங்கியபின்னர் உணவு, உடை வீடு, சேமிப்பு என்னும் அமிசங்களில் குடும்பச் செலவு எவ்வாறிருக்குமென்பதை ஓரளவு முன்னேறியே சொல்லிடலாம். மேலும் இவை ஒழுங்காகவேயிருக்கும்.

2. மக்கள் பலவகையிலே பணத்தைக் கடன்படலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை வட்டி வீதத்தையுடையதாயிருக்கும். இவ்வாறே பணத்தையும் பலவகையிலே சேமிக்கலாம். வங்கியிலே போடலாம். அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யலாம். வீடு வாங்கலாம், பங்குகள் வாங்கலாம், சீவியக்காப்புறுதிகள் வாங்கலாம்.

3. தனிப்பட்ட காப்புறுதி, சமூகக் காப்புறுதி என்பவற்றிடை முக்கியமான வித்தியாசங்களுண்டு. வயோதிபகாலம், வேலையின்மை, உடல் ஊறு என்பவற்றை அனுசரித்து நமது சமூகக் காப்புறுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத்திட்டம் மேலும் விரிவடையக்கூடியது. இவற்றிலே சிலவற்றையிட்டு விவாதம் நடைபெறுகிறது.

**ஆராய்ச்சிக்குரிய வினக்கள்.**

1. உமக்கும் உமது குடும்பத்துக்கும் ஒரு செலவுத்திட்டம் அமைக்க, உமது வருமானம் 30 வீதமாக உயர்த்தப்பட்டதெனவும், 30 வீதமாகக் குறைக்கப்பட்டதெனவும் வைத்துக்கொண்டு புதிய செலவுத் திட்டம் அமைக்க.

2. அடுத்த 30 வருடத்துக்கு நீர் எவ்வளவு உழைப்பீர்; எவ்வளவு செலவு செய்வீர் என்பதைப்பற்றித் திட்டமிடுக. உமக்கு முதலீட்டுத்திட்டமொன்றை அமைக்க. பணவீக்கம் ஏற்படுமென்று நீர் கருதினல் என்ன

www.padippakam.com



முதலீடுகளை நீர் வாங்குவீர்; பணவாட்டம் உண்டானால் எவ்வாறு முதலீடு செய்வீர்.

3. தனிப்பட்ட காப்புறுதியைப் பணவீக்கம் எவ்வாறு பாதிக்கும்; சமூகக்காப்புறுதியை எவ்வாறு பாதிக்கும்?

4. பின்வரும் கருத்துக்களைப் பற்றி மீட்டும் சிந்திக்க: வரவு செலவுப் படம், பங்குச் சந்தை முறிவு. அவசியப்பொருள், உல்லாசப்பொருள் தொழில் காப்புறுதி, சாதாரணக்காப்புறுதி, தொகுதிக்காப்புறுதி. வரி கொடுத்த பின்னர் வருமானம், அல்லது பைசல் செய்யக்கூடிய வருமானம். நேரடிச் சீவியக்காப்புறுதி, நன்கொடைக்காப்புறுதி, வாழ்க்கைச் செலவுப்புள்ளி, மட்டக்கட்டணம், வரவுக்கு மிஞ்சிய செலவு, தேறிய சேமிப்பு, சொத்து, பொறுப்பு, தேறிய பெறுமதி, செலவு கொடுபடாத பாக்கிமீதுவட்டி, சாதாரணப் பங்கு, சமூகப்பாதுகாப்பு; சமூகக்காப்புறுதி, வேலையின்மை நட்டஈடு, வயோதிபச் சகாயம், சுபீட்சக் கொடுப்பனவு.

படிப்பகம்

www.padippakam.com

# எட்டாம் அத்தியாயம்

## தொழிலாளரும் தொழில்பற்றிய தொடர்புகளும்

**திரு. ஹெனெசி :** இந்தக் கடைக்காரரெல்லாம் தொழிற்சங்க ஆட்களாம்.

**திரு. டூலி :** ஆமாம் ; அதுவும் நல்ல முறையில் நடத்திஞல், வேலை நிறுத்தமேது, கட்டுப்பாடேது, ஒப்பந்தமேது, சம்பளவிகித மேது, கூலியுமில்லை ; கொஞ்சப்பேர்தான் அங்கம் வகிப்பார்.

**பின்லி பீட்டர் டுன்னே.**

அமெரிக்காவில் "தொழிலாளர் பொருளாதாரமே" உண்டு. தொழிலாளர் பொருளாதாரம் என்ற இச்சொல்லை முதலில் பிரயோகித்தவர், தொழிலாளர் பொருளாதாரத்திலே சிறந்த நிபுணராயிருந்த ஹாவாட் சர்வகலாசாலையைச் சேர்ந்த சம்னர் ஸ்லிஸ்டர் என்பவரே. இந்தச் சொற்பிரயோகத்திலே ஒரளவு மிகைப்படக்கூறும் அதிசயோக்தி உண்டு. எமது பொருளாதாரம் இப்பொழுதும் முதலாளித்துவப் பொருளாதாரமாகவேயிருக்கிறது. அத்துடன் அது கலப்புப் பொருளாதாரமாகவுமிருக்கிறது. அதில் அரசாங்கத்தின் பங்கு மிக முக்கியமானது. ஆஞல் 1933 ஆம் ஆண்டு துவக்கம் தொழிற் சங்கங்கள் பெருகி வந்ததால் அவை அரசியல் முறையிலும் பொருளாதார முறையிலும் செல்வாக்குடையனவாயிருக்கின்றன. ஹென்றி போட் போலவே வால்டர் ரூதரும் இக்காலத்தில் சமமான செல்வாக்குடையவர்.

தொழிற் சங்கம் அமெரிக்கவாழ்வில் இன்றியமையாத ஓர் அமிசமாகிவிட்டது. சனநாயக ஆட்சியுள்ள நாடுகளிலெல்லாம் தொழிற்சங்கங்கள் சட்ட பூர்வமான தாபனங்களாகிவிட்டன. ஹிட்லருடைய ஜெர்மனியிலும், முஸோலினியின் இத்தாலியிலும் தொழிற் சங்கங்கள் அநுமதிக்கப்படவில்லை என்பதை நாமறிவோம். இக்கால ருஷியாவிலும் தொழிற்சங்கங்களுக்கு இடமில்லை.

### தொழிற்சங்க அங்கத்தவர் யார் ?

180 இலட்சம் அமெரிக்கருக்கதிகமானேர் ஒரு தொழிற் சங்கத்திலே அங்கம் வகிக்கின்றனர். இதன் கருத்தென்ன ? விவசாயத்திலே ஈடுபடாத தொழிலாளரில் மூன்றிலொரு பகுதியினர் தொழிற் சங்க அங்கத்தவரே. உயர் உத்தியோகத்தரையும், தொழிற்றுறைமுகவரையும், நிர்வாகிகளையும் தவிர்த்துப் பார்த்தால் இந்த விகிதம் மேலும் அதிகரிக்கும். முக்கியமான சில தொழிற்றுறைகளான ரெயில்வே, தண்ணீர்ப்பங்கீடு, உருக்குத் தொழில், கார், நிலக்கரி, நெசவு ஆலை என்பவற்றை ஆராய்ந்தால் தகுதி



படிப்பகம்


www.padippakam.com



யுள்ள எல்லாத் தொழிலாளரும் தொழிற் சங்கத்தில் சேர்ந்தவர்களாகவே யிருப்பதைக் காணலாம். தொழிற் சங்கத்திற் சேராத தொழிலாளரை யுடைய பெரிய கம்பனிகள் மிகச்சிலவே.

**வியாபாரமந்தமுண்டான காலத்திலும் யுத்தகாலத்திலும் தொழிற் சங்கங்கள் பெருகின. சமீபகாலத்தில் அவை தம்பித்துவிட்டன.**

**தொழிற்சங்க அங்கத்தவர்.**




படம் 1. 1933 இல் விவசாயத்திலீடுபடாத தொழிலாளர் 11.5 வீதத்திலிருந்தனர். இன்று இது 34 வீதமாகும். தொழிலாளர் சங்கம் சமீபகாலத்தில் வளர்ச்சியடையுமென்பதற்கு அறிகுறியில்லே. ஏனெனில் "வெள்ளேப்பட்டி"த் தொழிலாளரை ஒன்று சேர்ப்பது கடினம். "தன்னியக்க" த்திறன் என்பது "நீலப்பட்டி" த் தொழிலாளரைக் குறைத்தல் என்பதாகும். தெற்குப் பிரதேசங்களிலே தொழிற்றுறைகள் விருத்தியாகின்றன. இங்கே தொழிலாளர் சங்கங்களே நிறுவுவது கடின சாத்தியம். மேலும், தொழிலாளர் சங்கங்களேப் பொதுமக்கள் எதிர்க்கின்றனர். தொழிற்சங்கச் செல்வாக்கில் அவர்களுக்கு ஐயப்பாடுண்டு. சட்டபூர்வமாகவும் தொழிற்சங்கத்துக்கெதிரான சட்டங்கள் இதுகாரணமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (தகவல் கிடைத்த மார்க்கம் : ஐக்கிய அமெரிக்கத் தொழில் திணைக்களம்.)

1900 ஆண்டு துவக்கம் தொழிற் சங்க அங்கத்தவரின் பெருக்கத்தை படம் 1 காட்டுகிறது. முதலாவது மகாயுத்தம்வரை படிப்படியாக அது வளர்ந்து யுத்தகாலத்திலும், அதன் பின்னரும் உயர்ந்து, 1920 வரை இறக்கமடைந்து மட்டமாகிறது. 1929 ஆம் ஆண்டு வியாபாரமந்தத்தின் பின்னர் புதிய மலர்ச்சியில் மறுபடி உயர்ந்து பின்னர் இரண்டாவது மகாயுத்தகாலத்தில் அதிகரித்துக் கொண்டுசென்றது. சமீபகாலத்திலே அது தம்பித்துவிட்டது.

தொழிலாளர் எந்தச் சங்கங்களிலே சேர்ந்திருக்கிருர்கள் ? படம் 2 இலே பெரிய தொழிற் சங்கங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டு சங்கங்களேவிட மற்றவையெல்லாம் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனத்திலும், தொழிற்றுறைத்தாபனச் சங்கங்களிலும் சேர்ந்துள்ளன. இவை சுருக்கமாக


படிப்பகம்

அ.தொ.ச. எனவும், தொ.தா.ச. எனவும் வழங்கப்படும். 1957 இலே டீம்ஸ்டேர்ஸ் என்ற தொழிற் சங்கம் அ.தொ.ச. விலிருந்து நீக்கப்பட்டது. இச் சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ். ஆர். ஹெவ்வா. தொ.தா.ச. நடத்திய விசாரணையின் பயனாக மேற்படி சங்கம் ஊழல் நிறைந்ததெனக் காணப்பட்டது. அதன் காரணமாகவே அது நீக்கப்பட்டது. ஜோன். எல். லுவிஸ் என்பவர் தலைமையிலும் பின்னர் வேறு தலைவர்கள் தலைமையிலும் இயங்கிய ஐக்கிய சுரங்கத் தொழிலாளர் சங்கம் அ.தொ.ச. விலும் தொ.தா.ச. விலும் அடிக்கடி சேர்ந்தும் விலகியுமுள்ளது.

அங்கத்துவப் புள்ளிவிவரங்கள் தொழிற் சங்கங்களின் செல்வாக்கைக் குறைபடவே கூறிவிடுகின்றன. சங்கத்திலே சேராதவர்களுக்குக்கூடச் சங்க ஒப்பந்தப்படியுள்ள சம்பளங்களும், வேலைநேரங்களும், வேலை நிபந்தனைகளும் கொடுக்கப்படுகின்றன. தொழிற்சங்கத்திற் சேருவதில்லையென்றோ, தொழிற்சங்க ஒப்பந்தத்தின்கீழ் வேலை செய்வதில்லையென்றோ நீர் சத்தியஞ் செய்வீராயின் எந்த ஒரு தொழிற்சாலையிலும் உமக்கு வேலை கிடையாது. எந்த ஒரு தொழிற்சாலையிலும் வேலை செய்பவர்களில் 20 வீதத்தினரேனும் தொழிற்சங்க ஒப்பந்தத்தின் கீழேதான் வேலை செய்கிறார்கள். அவர்கள் சங்க அங்கத்தவராயிருக்க வேண்டிய அவசியமில்லை.

சுரங்கத்தொழில் வேலையையோ, கட்டடத்தொழில் வேலையையோ, போக்குவரத்துத் தொழில் வேலையையோ நீர் கைவிடுவதானால் எங்கே வேலை தேடுவீர் ? விவசாயத்துறையிலேயுள்ள சங்கங்களை நீர் கைவிடலாம்; அரசாங்க சேவையைக் கைவிடலாம், பணத்தொழிற்றுறை வேலையைக்

**இக்காலங்களிலே தொழிற்சங்கங்கள் கூட்டுத்தாபனங்களைப் போலவும் அரசாங்கத்தைப் போலவும் பெரிய உருவத்தை எடுக்கின்றன.**




படம் 2. இந்த ஏழு தொழிற் சங்கங்களிலே கட்டணம் செலுத்தும் அங்கத்தவர் தொகை 60 இலட்சம். இத்தகைய தாபனங்களின் தலைவர்கள் இக்காலத்திலே மிகச் செல்வாக்குள்ளவராய் மதிக்கப்படுவர்.

www.padippakam.com



கைவிடலாம். மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் என்ற துறைகளையும் கைவிடலாம். வெள்ளைப்பட்டித் தொழிலாளரைத் தொழிற் சங்கத்திலே சேரவைப்பது கடினம். அல்லது தெற்கே போங்கள். அங்கே தொழிலாளரைச் சங்கமாகச் சேர்ப்பதென்பதும் கடினமே. அங்கேயுள்ள தொழிலாளரில் மூன்றிலிரு பகுதியினர் 10 கைத்தொழில் மாகாணங்களில் இருக்கிறார்கள்.

**தேசியச் சம்மேளனம், உள்ளூர்ச் சங்கம்.**

அமெரிக்கத் தொழிற் சங்கங்களின் அமைப்பிலே மூன்று முக்கியமான படிகளுண்டு. (1) உள்ளூர்ச் சங்கம் (2) தேசியச் சங்கம். (3) தேசியச் சங்கங்களின் சம்மேளனம். தொழிற் சங்க அங்கத்தவனுக்கு உள்ளூர்ச் சங்கமே தொழிற் சங்கத்தின் ஆரம்பம். அந்தச் சங்கத்திலே அவன் முதலிற் சேருவான். அவன் வேலைசெய்யுந் தொழிற்சாலையிலோ, பட்டினத்திலோ சங்கமிருக்கும். அதிற் சேர்ந்து கட்டணம் கொடுப்பான். அவனுடைய சம்பளம், வேலைநிலை என்பன சம்பந்தமாகக் கூட்டான பேரஞ் செய்து உடன்படிக்கை எழுதுவது உள்ளூர்ச் சங்கமாகவேயிருக்கும்.

உள்ளூர்ச் சங்கம் தேசீய சங்கத்தின் கிளை. சிக்காகோவிலுள்ள லைனோடைப் தொழிலாளி அங்கேயுள்ள உள்ளூர்ச்சங்கத்தின் அங்கத்தவராயிருப்பார். சர்வதேச லைனோடைப் தொழிலாளர் சம்மேளனத்தில் உள்ள பலநூறு கிளைகளில் இஃது ஒன்றே. இந்தச் சம்மேளனத்தின் தலைமைக்காரியாலயம் இந்தியானாபோலிசிலுள்ளது. உள்ளூர்க் கட்டணத்திலே ஒரு பகுதி, அதாவது அரைப்பகுதியோ அதிற் குறைவானதோ, வழக்கமாகத் தேசீய சம்மேளனத்துக்குச் சேரும். தேசீய சம்மேளனத்தின் விரிந்த கொள்கைக்கு அடங்கியே உள்ளூர்ச் சங்க உபவிதிகளும் நடவடிக்கைகளும் அமையும். உள்ளூர்ச்சங்கத்தின் உத்தியோகத்தரும் தலைவரும் உள்ளூர்த் தொழிலாளராகவே இருப்பர். விவகார முகவர் பதவி முக்கியமானது. அது முழுநேரவேலை. அப்பதவிக்குரிய சம்பளத்தைத் தேசீய தொழிற் சம்மேளனமே கொடுக்கும். உள்ளூர்த்தொழிற்சங்கங்கள் கூட்டுப் பேரம் செய்ய வேண்டியிருந்தால் தேசீய சம்மேளனம் சில சமயம் உதவி செய்யும்.

ஏறக்குறைய 200 சுதந்திரமான தேசீயத்தொழிற் சம்மேளனங்களுண்டு. இவற்றில் ஏழு சங்கங்கள் 50 இலட்சத்துக்கு அதிகமான அங்கத்தவரைக் கொண்டிருக்கின்றன. பாதிக்கு அதிகமான சங்கங்களில் ஒவ்வொன்றும் 10,000 துவக்கம் 200,000 வரை அங்கத்தவரைக்கொண்டிருக்கின்றன. கால்வாசித் தேசீயத் தொழிற் சங்கங்கள் 5,000 இற்குக் குறைவான அங்கத்தவரைக் கொண்டிருக்கின்றன.

78,000 கிளைச் சங்கங்கள் அங்கங்கு நிலவுகின்றன. சில கிளைகளில் பத்துப் பன்னிரண்டு அங்கத்தவரே இருப்பர். சில சங்கங்கள் ஆயிரக் கணக்கான அங்கத்தவரைக் கொண்ட பெரியசங்கங்களாயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



உதாரணமாக, போர்ட் தொழிலாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த கிளேச் சங்கமே மிகப் பெரியது. அதில் 34,000 அங்கத்தவருண்டு. பெரும்பாலான கிளேச் சங்கங்களில் 50 அங்கத்தவர் தொட்டு 1,000 அங்கத்தவர்வரை இருக்கிறார்கள்.

## தேசியத் தொழிற் சங்கங்களும் தொழிற் சம்மேளனமும்.

தேசியத்தொழிற் சங்கங்களை அங்கத்தவராகப் பெரும்பாலுங்கொண்டதே, அ. தொ. ச, தொ. தா. ச ஆகியவை இணைந்த சம்மேளனமாகும். இதனைத் தொழில் இயக்கத்தின் மிகமுக்கியமான ஓர் அமிசம் எனப் பொதுமக்கள் கருதுகின்றனர். தொழிலாளர் சார்பில் வாதாடும் தாபனம் இதுவே. ஆனால் இதன் அதிகாரம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மோட்டார்த் தொழிலின் ஐக்கிய சங்கத்தின் தலைவரென்ற முறையில் வால்டர் ரூதர் அ.தொ.ச. தொ.தா.ச என்பவற்றின் உபதலைவரென்ற முறையிலும் பார்க்க அதிக அதிகார முடையவராயிருக்கின்றார். முன்னாள் தொழிலாளர் தலைவரான டாவேபெக் என்பவர், அ.தொ.ச ; தொ.தா.ச என்ற சங்கங்கள் பணவிடயமாகத் தாம் செய்த சிறிய தவறுகளைக் கண்டிப்பதிலும் பார்க்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைளைப்பற்றியே பெரிதும் அச்சமடைந்தார். தொழிற்சங்கங்கள் நீகிரோவருக்கு எதிராகப் பட்சபாதங்காட்டுவதை அ.தொ. சவும் தொ.சா. சவும் பெரிதும் ஆட்சேபிக்கின்றன. தமது தொழிற் சங்க அமைப்புத்திட்டங்களில் நீகிரோவருக்கெதிரான சட்டங்களை எழுதிவைத்திருக்கும் சங்க அங்கத்தவருக்கு எதிராக நடவடிக்கையெடுக்க இச்சம்மேளனத்துக்குச் சக்தி கிடையாது. ஒரே ஒரு வழிதான் இதற்குண்டு. அதாவது அத்தகைய அங்கத்தவரை அங்கத்துவ நிலையிலிருந்து நீக்கிவிடுதலாகும். 1949 இலும், 1950 இலும் தோ.தா.ச. ஐக்கியமின்சாரத் தொழிலாளரை (ஐ.மி)யும், பொதுவுடைமைப் போக்குள்ள வேறு 10 தொழிற் சங்கங்களையும் நீக்கியபொழுது, இது தீவிரமான செய்கையெனக் கருதப்பட்டது.

கடந்த 20 வருடமாக சம்மேளனம் முக்கியத்திலும், பலத்திலும் வளர்ச்சியடைந்து வந்தது. அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்தைப் பின்னர் ஆராயும்போது அதன் வளர்ச்சியிலே சமட்டி அமைப்பே அதன் முக்கியத்துவத்தன்மையென்பதைக் காணலாம். இன்றும் "சமட்டி" என்பது (சம்மேளனம்) அ. தொ. சவும், தொ. தா. ச. வும் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டு நிலையையே குறிக்கும். ஒன்று மற்றொன்றிலே இரண்டறக் கலந்த நிலையென அதனை நினைக்கக் கூடாது. ஏனைய தேசியத் தொழிற் சங்கங்களின் பணக்கட்டணத்திலேயே அ. தொ. ச. வும், தொ. தா. சவும் தொழில் புரிகின்றன. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையிலே அங்கத்துவம் வகிக்கும் ஐந்து வல்லரசுகள் போலவே, தேசியத் தொழிற் சங்கங்களும், தமக்குத் "தனியாணை" இருக்க வேண்டுமென்றும், "வீட்டோ" உரிமை (தள்ளும் உரிமை) இருக்கவேண்டுமென்றும், தமது பிராந்தியத்தைச் சேர்ந்த தொழிலாளர் விடயத்தில் தமக்கே "பிரத்தி


www.padippakam.com



யேகச் சட்ட உரிமை ” இருக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றன. இத்தகைய அதிகார எல்லே விடயமாகவே பல பிணக்குகளும் சண்டைகளு முண்டாகி வருகின்றன.

1955 இல் அ. தொ. ச. வும், தொ. தா. ச.வும் ஒன்று சேர்ந்த போதி லும் தம்மளவில் சில தனியுரிமைகளே வைத்துக்கொண்டே இருக்கின்றன. கடந்த பத்து இருபது வருடங்களில் இவ்விரு தொழிற் சங்கங்களும் அரசிய லில் ஈடுபட்டுள்ளன. இவ்விரு சங்கங்களேயுஞ் சேர்ந்த அரசியற் கல்விக்குழுக் கள் தொழிலாளர்க்குச் சார்பான தேர்தல் அபேட்சகரையே ஆதரித்து வந்தன. சனநாயக அபேட்சகரையே பட்சபாதமில்லாத தொழிலாளர் சங்கங்கள் ஆதரிக்கும். ஆனுல் இதற்கு விதிவிலக்குகளுமுண்டு. (உதாரண மாக, கலிபோனியாவைச் சேர்ந்த குடியாட்சிக்கட்சித் தேசாதிபதி நைட் என்பவருக்கு 1954 இல் தொழிற் கட்சி ஆதரவு கிடைத்தது). குடியாட்சிக்கட்சிச் சார்புடையவர்களேயே சனுதிபதிப் பதவிக்குச் சில தொழிற் கட்சித்தலைவர்கள் ஆதரித்தனர்.

**அமெரிக்கத் தொழிற் சங்கங்களான அ. தொ. ச. வும் தொ. தா. ச. வும் 1955 இல் கடைசியாக ஒன்றுசேர்ந்தன.**




படம் 3. நமது சமட்டித் தொழிற் சங்க அமைப்பிலே, தேசீயத் தொழிற் சங்கங்களும், உள்ளூர்த் தொழிற் சங்கங்களும் முக்கியமான அமிசங்களாகும்.

புதிய அ. தொ. ச., தொ. தா. ச. சம்மேளனத்தின் அமைப்பைப் படம் 3 காட்டுகிறது. மாகாணச் சங்கங்களும் பட்டணத்துச் சங்கங்களும் அங்கே காட்டப்பட்டபடி அந்தமட்டங்களில் அரசாங்கங்களோடு தமது செல் வாக்கைப் பயன்படுத்தி விடயங்களே நிறைவேற்றுகின்றன. வானெலி நிகழ்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், தேர்தல் முயற்சிகள், வேலே நிறுத்தங்கள் என்பவற்றில் ஒத்துழைக்கின்றன. தேசீயத் தொழிற் சங்கங்களிலே சேராமல் நேரடியாகச் சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டுள்ள உள்ளூர்ச்

www.padippakam.com



சங்கங்களும் காட்டப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் புதியதொழிற் றுறைகள் சம்பந்தமான தொழிற் சங்கங்களாயிருக்கலாம். அல்லது தேசீயச் சங்கங்களின் ஆட்சிக்கு இடைப்பட்ட பிரதேசங்களில் உள்ளனவா யிருக்கலாம். இவை கட்டடத்துறை போன்ற துறைகளை இணைக்கும் சங்கங்களாயிருக்கும்.

### தொழிற் சங்கங்கள் உண்டாவதற்கான காரணங்கள்

இக்காலத் தொழிற் சங்கங்கள் எவ்வாறுண்டாயின ? மத்தியகாலத் திலே தொழில்களில் ஈடுபட்டோரும், அவற்றிலே வேலை பழகினோரும் ஒரு சங்கமமைத்திருந்ததை நாமறிவோம். இக்காலத்துத் தொழிற் சங்கங்களில் தொழிலாளர் சேர வேண்டியதற்குக் காரணமென்ன ? இச் சங்கங்களின் கருமமென்ன ?

கடந்த நூற்றுண்டுகளிலே தொழிலாளர் சம்பளம் எங்கும் குறைவாகவே யிருந்தது. அக்காலங்களில் சமூகம் உற்பத்திசெய்த பொருள்கள் குறை வாகவேயிருந்தன. அதனுல் அவற்றை எந்தவகையிலே பிரித்தாலும் சாதாரண மக்களுக்குப் போதிய பங்கு கிடைத்திருக்கமாட்டாது. முதலாளி களுடைய தயவிலேதான் நாம் தங்கியிருக்கிறோம் எனத் தொழிலாளர் கருதினர். அவர்கள் வறியவராயும், கல்வியறிவற்றவராயும், முதலாளிக்கு எதிராகச் செல்ல முடியாதவராயுமிருந்தனர். எந்த ஒரு பிணக்கிலும் முதலாளிகள் நின்று பிடிக்கக்கூடிய சக்தியுடையவராயிருந்தனர். சர்வாதி காரமுறையிலேதான் கம்பெனிகள் இயங்கின. உயர் பதவியிலுள்ளவர் களே கட்டளையிட்டனர். தொழிலாளி சொன்னதைச் செய்யவேண்டிவனு யிருந்தான். அவன் எந்திரத்தின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டான். சரித்திரவரலாறுகளிலும், சாசனங்களிலும் காணப்படும் தொழிலாளரைப் பற்றிய படம் இதுதான்.

ஆள் தொகையினுல் பலமுண்டு என்பதை மக்கள் படிப்படியாக உணர்ந் தனர். ஒவ்வொருவரும் தத்தம் உரிமைகளுக்காகத் தனித்தனி போராடு வதிலும்பார்க்க நூறுபேர் ஒருமித்துப் பேரம்பண்ணுவது பலமுடையதாகும். தவறணைகளிலும், தேவாலயங்களிலும் தொழிலாளர் கூடிப் பேசினர். ஒருவரையொருவர் சந்தித்து விடயங்களை ஆராய்வதற்காகவும், விநோத காலப்போக்கு நடத்துவதற்காகவும் அவர்கள் சங்கங்களை அமைத்தனர். இந்தச் சங்கங்கள் ஆரம்பத்திலே பரஸ்பர உதவி செய்யத் தொடங்கின. இறந்தவர்களுக்குச் சகாயம் செய்தன. இவ்வாறு வேறு பல காப்புறுதிகளையும் வழங்கியதோடு, கல்வி வளர்ச்சியிலும் ஈடுபட்டன. அத்துடன் தொழிலாள ருக்கு நியாயமானதொரு சம்பளத்தையும் வகுத்து அதனை அவர்கள் முதலாளிகளிடம் கோர வேண்டுமெனவும் உறுதிபூண்டன. முதலாளிகள் இதனை எதிர்த்தமை ஆச்சரியமன்று. அவர்களும் ஒன்று சேர்ந்தனர். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற உண்மையை உணர்ந்தனர். தொழிற்சங்கங்களிற் சேர்ந்து கிளர்ச்சி செய்யும் தொழிலாளரை வேலைக் கெடுப்பதில்லையென அவர்கள் தீர்மானித்தனர். தொழிலாளர் சூழ்ச்சி

www.padippakam.com



களையும், கூட்டு நடவடிக்கைகளையும் நசுக்குவதற்கு அவர்கள் சட்டத்தின் உதவியை நாடினர்.

இதுதான் இக்காலத்தொழிற் சங்கத்தின் வரலாறு. இச்சங்கம் தொழிலாளரின் பொருளாதார நன்மையை முக்கியமாக உத்தேசித்தே தொடங்கப்பட்டது. அதாவது சம்பள உயர்வு, வேலை நேரத்தைக் குறைத்தல், ஓய்வு நாட்களை அதிகரித்தல், வேலை சம்பந்தமாக இலேசான விதிகளையுண்டாக்குதல், இளைப்பாறற் சப்பளம் சுகாதாரக் காப்புறுதிபோன்ற நன்மைகளைப் பெறுதல், தொழில் செய்வோர்க்குச் சனநாயக உரிமை வழங்கல் போன்ற பொருளாதார நன்மைகளைப் பெறுவதே இந்நோக்கங்களாகும்.

தொழிற் சங்கங்களின் முக்கியமான நோக்கங்கள் இவையே. ஆனால் இச்சங்கங்கள் சமூகத்தொண்டுகளையும் செய்தன. அவை இச்சங்கங்கள் வளர்ந்தபொழுது உண்டான சில அமிசங்களிலிருந்து தோன்றின. சங்க அங்கத்தவர் கூட்டாகவே நடவடிக்கையெடுத்தனர். இரத்ததானஞ் செய்தல், தருமகைங்கரியங்கள், பொதுசன நன்மைக்கான தொண்டுகள் என்பவற்றிலே தொழிலாளர் தமது சங்கங்களின் மூலம் கூட்டாக நடவடிக்கையெடுத்தார்கள். ஒரு குடும்பம் தமது மகனை இராணுவ சேவையிலிருந்து தவிர்க்கச் செய்ய விரும்புகிறதென வைத்துக்கொள்வோம். பணி நெருக்கடி காரணமாகவே இவ்வாறு செய்ய விரும்புகிறது. உடனே உள்ளூர்த்தொழிற் சங்க உத்தியோகத்தர், தேசியத்தலைமைக்காரியாலயத்தோடு தொடர்பு கொள்ளுகிறார். தலைமைக் காரியாலயம் மாவட்டக் காங்கிரஸ்காரரோடு தொடர்புகொண்டு அந்த விடயமாகச் செய்யக்கூடியதைச் செய்யத் தூண்டும். ஒருவன் தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருப்பதுபோல, குறிப்பிட்ட ஒரு கோயிலையும், அமெரிக்க லீஜன் என்ற சங்கத்தையும், தோணிச் சங்கத்தையும், சேர்ந்தவனாயிருப்பான். அவ்வாறே தொழிற் சங்கத்திலும் சேர்ந்திருப்பது நல்லதென எண்ணுவான். ஆனால் எல்லாத் தொழிலாளரும் சங்கத்தில் ஆர்வங்கொண்டு அதன் நடவடிக்கையில் ஓயாமல் ஈடுபடுவார்களெனக் கூறுவதிற்கிடமில்லை. சிலர் தங்கள் கட்டணத்தை மாத்திரம் கொடுத்துவிட்டுப் பேசாதிருப்பர். வேறுசிலர் தொழிலாளர் சங்கமாகச் சேர்ந்து பேரம்பேசுவதையே வெறுப்பர்.

### கூட்டுமுறையில் எவ்வாறு பேரம் பேசுவது ?

மேல்வரும் பக்கங்களிலே தற்கால அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம் எவ்வாறுண்டானதென்பதைச் சரித்திரபூர்வமாகக் கூறுவாம். முதலில் கூட்டுப் பேரம் எவ்வாறு நடைபெறுகிறதென்பதை விளக்குவாம்[1]. உற்பத்தித்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு தொழிற்சாலைத் தொழிலாளியை எடுத்துக்கொள்வோம். அ. தொ. ச.—தொ. தா. ச. சங்கங்கள், தேசியத் தொழில் தொடர்புச் சங்கத்துக்கு, இப்புதியதொழிற்சாலை

1. 28 ஆம் அத்தியாயத்திலே இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



சம்பந்தமாகப் பேரம்பண்ண முகவரைத் தெரிவுசெய்யத் தேர்தல் ஏற்படுத்துமாறு ஒரு விண்ணப்பஞ் செய்கின்றன. இவ்விடயமாகத் தெரிவு நடைபெற வேண்டும். குறித்த தொழிலாளி தனக்கு விருப்பமானதொரு தொழிற்சங்கத்தைத் தெரிய வேண்டுமென இரகசியமாய் வாக்களிக்கிருன். ஏற்கனவே அந்தத் தொழிற்சாலைக்குரிய தொழிற்சங்கமொன்று இருந்து வரும். அது கம்பெனித் தொழிற் சங்கம். கம்பெனி முதலாளிகள் தமது கம்பெனித் தொழிற்சங்கத்தையே பேரம் பேசுவதற்கு விரும்புவர். இந்தத் தொழிற்சங்கம் வெளியிலுள்ள சங்கங்களோடு தொடர்பில்லாததாயிருக்கும். தொழிலாளி வாக்களித்து ஆதரித்த கம்பெனிக்கு அதிக வாக்குகள் கிடைத்தபடியால் அதனையே தே. தொ. தொ. ச. பேரம் பேசும் முகவராக உறுதிப்படுத்தும். வேறெந்தச் சங்கமும் அந்தக் கம்பெனி முதலாளிகளோடு நேரடியாக இவ்விடயமாய்ப் பேசும் உரிமை கிடையாதெனவும் கட்டுப்படுத்தப்படும்.

புதிய இந்தத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் முதலாளிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒன்றுகூடுவர். அந்தக்கூட்டத்தில் தொழிற்றொடர்பு மேற்பார்வை செய்யும் அதிகாரி ஒருவரும் இருப்பார். தொழிற்றுறை சம்பந்தமான சட்டங்களை அறிந்த சட்ட அறிஞர்களின் கம்பெனியைச் சேர்ந்த நிபுணர்களுமிருப்பர். தொழிற்சங்கச்சார்பிலே அச்சங்கத்தின் விவகாரங்களைக் கவனிக்கும் உள்ளூர் முகவர் ஒருவர் இருப்பார். அவரோடு தொழிற் சங்க உத்தியோகத்தரின் சிறிய குழுவொன்றுமிருக்கும். தொழிற் சங்கத்தலைமைக்காரியாலயத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் கருமங்களைக் கவனிப்பார். இவர் சட்ட அறிஞராகவோ, பொருளாதார அறிஞராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனல் தொழிற்சங்கத்துப் பொருளாதார ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இவருக்குச் சகல ஆலோசனைகளையும் கூறியிருப்பர். சங்கக் கோரிக்கைகளை ஆதரிக்கும் முகமாகப் பல நுணுக்கமான விடயங்களை இவருக்கு அவர்கள் எடுத்து விளக்கியிருப்பர்.

கம்பெனியின் இலாபம் பிரகடனஞ் செய்யப்பட்ட கணக்கு வழக்கு எல்லாவற்றையும் அந்த ஆராய்ச்சியாளர் ஏற்கனவே ஆராய்ந்து விளக்கியிருப்பார். கம்பெனித்தலைவர் வருடமொன்றுக்கு 150,000 டொலர் சம்பளம் பெறுகிருர் என்பன போன்ற விபரங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும். வாழ்க்கைச் செலவு விடயமாக உண்டான மாற்றங்கள் பற்றிய தேசியப்புள்ளிகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும். உள்ளூர் நிலைமையில் வீட்டு வாடகை தேசியச் சராசரி வாடகையிலும் பார்க்க எவ்வாறு உயர்ந்திருக்கிறதென்பது போன்ற விடயங்களும் இடம் பெறும். குறித்த கம்பெனி கொடுக்கும் சம்பளங்களுக்கும் ஏனைய கம்பெனிகள் வழங்கும் சம்பளங்களுக்குமுள்ள வித்தியாசங்கள் எடுத்துக்காட்டப்படும். தொழிலாளரின் நுகர்வை உயர்ந்த மட்டத்திலே வைத்துக் கொள்ளவும், தேசியத் தொழில் வாய்ப்பைப் பூரணமான நிலையில் வைத்திருக்கவும் உயர்ந்த சம்பளம் கொடுப்பது அவசியமெனச் சுட்டிக்காட்டிப் பல காரணங்கள் எடுத்துக்கூறப்படும். இவ்வாறு தொழிற் சங்கம் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு

படிப்பகம்

www.padippakam.com



விடயத்தையும் கவனமாக நிராகரித்துக் கம்பெனி முதலாளிகள் தமது கருத்தை விளக்குவர். இந்தத் தொழிற்றுறை முக்கியமானதொன்ருயிருந் தால் தொழிற் சங்கமும் முதலாளிமாரும் பத்திரிகைகளுக்குத் தமது கருத்தை எழுதுவார்கள்.

இவ்வாறு பேரம்பேசும் விடயத்தில் மணிநேர வேலைக்குரிய சம்பளம் மாத்திரம் ஆராயப்பட மாட்டாது. தொழிற்சங்க அங்கத்தவ ருடைய சங்கக் கட்டணத்தைச் சம்பளத்தில் கழிக்கும் விடயமும் எடுத்துக் கொள்ளப்படும். வேலை ஒப்புக்கொண்ட 30 நாளைக்குள் தொழிலாளர் எல்லாரும் தொழிற் சங்க அங்கத்தவராக வேண்டுமென்ற விடயமும் பேசப்படும். இளைப்பாறற்சம்பளம் சுகாதாரக் காப்புறுதி போன்ற விடயங்களும் பேசப்படும். துண்டுவேலை செய்யப்படும் சந்தர்ப்பங்களிலே அவ்வேலைக்குரிய சம்பளம் ஆராயப்படும். ஒருவன் எத்தனை நெசவுத் தறிகளுக்குப் பொறுப் பாயிருக்க வேண்டும் என்பன போன்ற விடயங்கள் தீர்மானிக்கப்படும். தொழில் நுட்பச் சீர்திருத்தங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் புகுத்தப்படு மென்ற விடயமும் கடைசியாக ஒப்பந்தத்திலே இடம் பெறும். தொழி லாளரின் கால அடைவுப்படி அவர்களுக்கு வழங்கப்படும் உரிமை, தொழி லாளரைவேலையிலிருந்து நீக்குமிடத்து அவர்கள் குறை நிறைகளை ஆராயும் முறை என்பனவும், இதுபோன்ற பல பிரச்சினைகளும் கூட்டுப்பேரம் சம்பந்தமாக ஆராயப்படும்.

தொழிற் சங்கங்கள் தமது உரிமைகளில் தலையிடுவதைத் தொழில் முதலாளிகள் விரும்பியதில்லை. அஃது அவர்களுக்கு எப்பொழுதும் தலை யிடியாகவேயிருந்தது. தொழில் முன்னேற்றத்துக்கு ஏற்றவகையில் கருமங் களை நடத்தத் தொழிற் சங்கங்கள் தடையாயிருக்கின்றனவென்று பல முதலாளிகள் நினைக்கிருர்கள். தமக்குப் பொருத்தமான தொழிலாளரை நியமிக்கவும், நியாயமான காரணமிருந்தால் அவர்களை வேலையிலிருந்து நீக்கவும், வேலை முறைகளை நிர்ணயிக்கவும், தொழிலாளரை எந்தக் கிரமத்தில் வேலை நீக்கஞ் செய்யலாம் என்பதை நிச்சயிப்பதும் அவர் களுக்கு முடியாதிருக்கிறது. புதிதாக ஒவ்வொரு விடயத்தைத் தீர்மானிக் கும்போதும் புதிய கமிட்டியைக் கூட்ட வேண்டியிருக்கிறதென உணர்கிருர் கள். உற்பத்தியைப் பெருக்குவதில் பயன்படுத்தக்கூடிய நேரத்தை இப்போது தொழிலாளர் பிரச்சினைகளில் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஒருசில காலத்துக்கு வகித்த பதவியை மேலும் தொடர்ந்து வகிக்கத் தமக்கு உரிமை இருப்பதாகத் தொழிலாளர் நினைப்பதாய் முதலாளிகள் கருதுகின்றனர். தொழிலாளர்க்கு ஊக்கமளிக்கும் சம்பளத்திட்டங்கள் வகுப்பதைத் தொழிற் சங்கங்கள் எதிர்க்கின்றனவென்றும், தொழிலில் வேலைக்கமர்ந்தவருடைய காலச் செலவுக்கேற்றவாறு உயர்வு கொடுக்க வேண்டுமென்பதைத் தொழிலார்கள் கண்டிப்பாக விரும்புகிருர்கள் என்றும், திறமையான வேலைமுறைகளை விரும்புகிருர்களில்லையென்றும், நிர்வாகத் தின் தனியுரிமையை எல்லைப்படுத்துகிருர்களென்றும், இத்தகைய

படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகள் கருதுகின்றனர். கூட்டுப்பேரம் சம்பந்தமாகச் சமீபத்தில் வெளியான ஆராய்ச்சி நூலில், தொழிலாளர் செய்யும் தொழிலின் பயனாக உண்டாகும் உரிமைகளைப் பற்றியே அதிகம் ஆராயப்பட்டிருக்கிறது.

கடைசியாகப் பல பக்கங்களில் அழகாக அச்சிடப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகிறது. உடன்படிக்கைக் காலத்தில் உண்டாகும் குறைபாடுகளுக்கு எடுக்க வேண்டிய பரிகாரமுட்பட எல்லா விடயங்களும் அச்சடிக்கப்பட்டுள்ளன. உடன்படிக்கைப் பிரகாரம் எழும் பிரச்சினைகளைத் தீர்க்க நடுத்தீர்ப்பு நாடப்படுமென்பதும், வெளியேயுள்ள நடுவர் ஒருவரின் முடிவை இருகட்சியினரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒழுங்கும் முன்னேறியே உடன்படிக்கையில் காணப்படுகின்றன. ஓர் உடன்படிக்கை ஒரு வருடத்துக்கே வழக்கமாகச் செல்லுபடியாகும். புதிதாக உடன்படிக்கை செய்வதானால் குறிப்பிட்ட நிபந்தனைகளின்பேரில் அதற்கான பேச்சு வார்த்தையை மேற்கொள்ள விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

கூட்டுப்பேரம் என்பது சிக்கலானதொரு பிரச்சினை. இரண்டு கட்சியும் தாராளமாக நடந்துகொள்ள வேண்டும்.

### அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம்பற்றிய சுருக்கமான வரலாறு

அமெரிக்கப் புரட்சியுத்தம் உண்டான பின்னரும் உள்ளூர் யுத்தம் ஏற்படு முன்னரும் உள்ள காலத்திலேயே அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம் ஆரம்பித்துவிட்டதெனலாம். ஆனால் அது தொழிற் சங்க முறையில் அமைக்கப்பட்டது பின்னரேயாகும். ஆரம்பத்திலே அச்சுத்தொழிலாளர் போன்ற விசேடத் தொழிற்றுறைகளில் உள்ள தொழிலாளரே சங்கங்களை அமைத்தனர். காலத்துக்குக் காலம் அதாவது வியாபாரப் பெருக்கமுள்ள காலத்திலும், தொழிற்குழப்பமுள்ள காலங்களிலும், இவை அரசியற் கிளர்ச்சி செய்யவும், அரசியல் சீர்திருத்தங்களுண்டாக்கவும் ஒன்று சேர்ந்தன. பட்டின வாரியாகவும் தேசீய முறையிலும் இவ்வாறு ஒன்று பட்டன. 1880 ஐ அடுத்த ஆண்டுகளிலே அ. தொ. ச. அமைக்கப்பட்டது. அக்காலத்திலிருந்தே தொழிலியக்கம் இக்கால அமைப்பைப் பெறலாயிற்று.

### தொழிலாளர் வீரத் தொண்டர்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் மூன்றும் காற்பகுதியின் பிற்பகுதியில் அமெரிக்க நாட்டில் ஒரு பெரிய "கிளர்ச்சி" பரவிற்று. இது "பெருந் தொழில்" நலவுரிமைகளுக்கு எதிராக உண்டான தொழிலாளர் வீரத் தொண்டர் இயக்கமாகும். ஆதியிலே இஃது இரகசியச் சங்கமாயிருந்தது. சட்ட அறிஞர், வங்கிக்காரர், சூதாட்டக்காரர், மதுவியாபாரிகள், துப்பறிவோர் என்போரைத் தவிர மற்றையோருக்கு இச்சங்கத்திலே சேர உரிமையிருந்தது. பின்னர் கால அடைவில் இஃது இரகசியச் சங்கமன்றென விதிக்கப்பட்டது. 1886 ஆம் ஆண்டில் இச் சங்கத்திலே 700,000 அங்கத்தவர் இருந்தனர். எல்லாத்தொழிலாளருக்கும் பொதுவான ஒரு சங்கத்தை யுண்டாக்கவேண்டுமென்று வீரத்தொண்டர் விரும்பினர். அவ்வாறே பல

படிப்பகம்

www.padippakam.com



தாம் இறக்கும்வரை அந்தப் பதவியை வகித்தார். குறிப்பிட்ட ாவினையாளர் சங்கங்களைச் சேர்ந்த நுண்வினைத்தொழிலாளரின் யங்களையே அவர் வெளியிட்டார். ஆனால் லூயிஸ் குறித்த ஒரு நிலையத்தைச் சேர்ந்த எல்லாத் தொழிலாளரையுங் கொண்ட நிலையத் தொழிலாளர் சங்கங்களுடனும் தொடர்பு வைத்திருந்

## ச.வின் புனருத்தாரணமும் அமைப்பும்

இல் வியாபாரப் பெருமந்தம் தீவிர நிலையை அடைந்தபொழுது ச.வின் அங்கத்தவர் தொகை 30 இலட்சத்துக்குக் கீழே வீழ்ச்சி து. ஆனால் வியாபாரம் சீரடைந்ததும் தொழிற் சங்கங்களுக்குப் ாரு யுகம் உதயமானது. இந்த வியாபார மந்தம் 1920 ஐ ஆண்டுகளில் அமெரிக்காவில் கூறிவந்த சுலோகங்களை அர்த்த கிவிட்டது. இது வர்க்கப் போராட்டத்தை உண்டாக்கிற்று. பிராங்கி ஸ்வெல்ட் தெரிந்தெடுக்கப்படுமுன்னரே தொழிற்சங்க நடவடிக்கை எதிராக நீதிமன்றங்களும் தேர்தல் தொகுதிகளும் காட்டிய க் குறையத் தொடங்கிவிட்டது.

த் தொழிற் சங்கங்கள் தமது பிரத்தியேக ஆட்சியைக் கைவிட ுதன வாதாடியதால், அ.தொ.ச. வுக்குள்ளேயே ஒற்றுமையில்லா து. அதனால் பெரிய கம்பெனிகளைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங் மைப்பதில் அ.தொ.ச.விலேகூடப் பிளவுகளிருந்தன. 1919 இலே பெரிய வேலை நிறுத்தத்தை ஐக்கிய அமெரிக்க உருக்குத்தொழிற் ரியைச் சேர்ந்த நீதிபதி கேரி என்பவர் நசுக்கு முன்னர், 40 தனிப் தாழிற் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் வேலை நிறுத்தத்தை ஒரு பெரிய குழுவை நியமித்தனர். தச்சர், பொறியாளர் தொழிற் ர் இதுவரை தமக்குள்ளிருந்த கருத்து வேற்றுமைகளை இன்னுந் கொள்ளவில்லை.

ழிற் சங்கங்கள் வருங்காலத்திலே பெரிய செல்வாக்கைப் பெற ன 1933 ஆம் ஆண்டிலேயே சில அவதானிகள் கண்டார்கள். தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஜோன்.எல். லூயிசும், நெச தாழிற்சாலைத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற சிட்னி னும், வேறு தொழிற்சங்கத்தலைவர்களும் 1925 ஆம் ஆண்டிலே கம்பெனிகளின் தொழிற் சங்கத்தை அமைக்க ஒரு குழுவை தனர். அ.தொ.ச.வின் பிரத்தியேக ஆட்சி உரிமைக்கொள்கை மாறாக இவர்கள் நடவடிக்கை எடுத்ததால், சங்கத்திலிருந்து விலக் ார்கள். அதன் பயனாக இவர்கள் தொ.தா.ச.வை அமைத்தனர். ந் லூயிசைத் தலைவராக நியமித்தனர். அரசாங்கம் தொழிலாளர் தில் புதிய கொள்கையைக் கைக்கொண்டதாலும், 1935 ஆம் ன் வாணர்சட்டம் போன்ற சட்டங்களின் பயனாகவும், நீதிமன்றத் களின் துணையாலும், கார்த் தொழில், உருக்குத்தொழில், ரப்பர்த்



ார். குறித்த ஒரு
தன. வேறு பல

கிளர்ச்சிகளிலும்
னமும் உயர்த்து
வனஞ் செலுத்தி
ர் சில தோல்வி
று உயர்ந்ததோ
தொழிலாளர்
ராயிருக்கவில்லை.
க்கமான அமைப்
ில்லை[1].

சங்கம் உருவா
பர்ஸ் என்பவர்
மங்களை நடத்தி
பறிய அவர்தம்
க்குக் கொண்டு
னார். பின்னர்
அமெரிக்கத்
த்திலே ஆரம்
ல் முதலாளித்
உணர்ந்தார்.
ாவை. அவை

யரவேண்டும்;
தை மாற்றும்
தொழிலாளர்
டுபடக்கூடாது.

கைத்தொழில்
ர் இயக்கத்தை
ாழிலாளரையும்,
ரது. சனாதிபதி
வர் 1920 இல்
சிறையிலிட்டார்.
செல்வாக்கற்றுப்

படிப்பகம்

www.padippakam.com



தொழில், எண்ணெய்த்தொழில் போன்ற பெரியதொழில்களைச் சேர்ந்த தொழிலாளரின் தொழிற்சங்கங்கள் தாபிக்கப்பட்டன. இத்தொழில்களில் ஈடுபட்ட முக்கியமான கம்பெனிகள் எதிர்த்தபோதிலும், இச்சங்கங்கள் தாபிக்கப்படலாயின.

இதற்கிடையில் அ.தொ.ச. தொழிற் சங்கங்களின் அவசியத்தைப்பற்றி அறிந்து கொண்டது. தொழிற்சாலை அடிப்படையில் அது சங்கங்களை ஏற்படுத்திற்று. சிறுதொழிற் சங்கங்களே அப்பொழுதும் செல்வாக்குடைய வாயிருந்தன. அ.தொ.ச.வுக்கும், தொ.தா.ச வுக்குமிடையில் போர் நடந்துகொண்டே வந்தது. தொ.தா.ச வைச் சேர்ந்த சில தொழிற் சங்கங்கள், உதாரணமாக டேவிட்டு பின்ஸ்கியின் சர்வதேசப் பெண்கள் ஆடைத்தொழிலாளர் சங்கம் போன்றவை (ச.பெ.ஆ.தொ.ச.) அ.தொ.சவிற் சேர்ந்துவிட்டன. கடைசியில் லூயிஸ் இரண்டு தொழிற் சம்மேளனங்களிலி ருந்தும் தம் சுரங்கத்தொழிலாளரை விலகுமாறு செய்தார்.

**1960 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலே தொழிற் சங்கங்கள்.**

எல்லாத் தொழிற் சங்கங்களும் ஒற்றுமைப்பட்டுத் தொழில் செய்ய வேண்டுமென்ற தொழிலாளர் கனவு கடைசியாக 1955 இலே நனவாயிற்று. அ.தொ.ச. வைச்சேர்ந்த ஜோர்ஜ் மீனி அதன் முதற்றலைவரானார். இப்போது சங்க இயக்கம் நிலை பெற்றுவிட்டது. சில சில தொழில்களில் மாத்திரமே சங்கங்கள் இன்னும் அமைக்க வேண்டியிருக்கின்றன. தென் பகுதியிலும் சங்கங்களை அமைக்கும் முயற்சி ஓரளவுக்குத்தான் வெற்றி பெற்றுள்ளது.

புது வகையான மனிதர் தலைமைப் பதவிகட்கு வருகிறார்கள். சங்கங்கள் ஆரம்பித்த காலங்களிலும், உயிருக்கே அவை போராடிக் கொண்டிருக்குஞ் சமயங்களிலும் ஜோன். ஜே. லூயிஸ், பிலிப் மறே, டான் டொபின் போன்ற விசித்திரமான தலைவர்களிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு வராய் மறைந்துபோகவே நிர்வாகத்திறமையுள்ளவர்கள் தலைமைப்பத விக்கு வருகிறார்கள். கோடிக்கணக்கான அங்கத்தவரையும் பல கோடிக் கணக்கான டொலர் சகாயநிதிகளையுமுடைய சங்கங்களை நல்ல முறையில் நடத்தவும், காங்கிரஸோடும், நிர்வாகத்தோடும், பொதுசனங்களோடும், நய மாய்ப் பழகவும் திறமையுள்ள நிர்வாகிகளும் தலைவர்களும் அவசியமே.

**தொழிற்சங்கங்களிலே பொதுவுடைமை.**

தொழிற் சங்கங்களில் பொதுவுடைமைவாதிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பது எப்பொழுதுமே ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. 1920 இல் டுபின்ஸ்கி என்பவர் தமது சங்கத்திலிருந்து பொதுவுடைமைச் செல்வாக்கையகற்றுவதற்கு வெற்றிகரமாக முயற்சி செய்தார். 1930 ஐ அடுத்த ஆண்டுகளிலே பல தொழிற்சங்கங்களிலே பொதுவுடைமைவாதி கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த முயன்றனர். ஊக்கமுள்ள தொழிற் சங்க நிர்வாகிகளைப் பொதுவுடைமைத்தாபனம் உதவிற்று. லூயிஸ் கூடச்

www.padippakam.com


சில காலமாகத் தமது கட்சி வாதங்களில் அவர்களைப் பயன்படுத்தினர். ஐக்கிய மின்சாரத் தொழிலாளர் சங்கத்திலும், துறைமுகத்தொழிலாளர் சங்கத்திலும், பொதுவுடைமைக்காரருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் பெரும் பிணக்குகள் உண்டாயின. தொ.தா.ச வைச் சேர்ந்த தோற்றொழிலாளர் சங்கத்தில் பொதுவுடைமைக்கட்சி செல்வாக்குப் பெற்றது.

பொதுவுடைமைவாதிகள் ஐக்கியமாகவும், தமது நோக்கங்களை நிறைவேற்றப் பல குறுக்குவழிகளைப் பயன்படுத்தியும் இருந்தமையாலும், சிறிய தொகையினராயிருந்தும், பெரிய செல்வாக்கைப் பெற்றனர்கள். அவர்களுடைய நோக்கம் அமெரிக்கத் தொழிலாளரின் தினசரித் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. பொதுவுடைமைவாதிகள் மொஸ்கோவில் உள்ள அதிகாரபீடத்தின் சொற்படியே நடப்பார்கள். கடந்த மகாயுத்தத்தில் ஜெர்மனி ருஷ்யாவைத் தாக்கியபோது, அமெரிக்கப் பொதுவுடைமைவாதிகள், ரூஸ்வெல்டை யுத்த வேட்டைக்காரரென்றும், ஏகாதிபத்தியச் சண்டையைத்தூண்டுபவரென்றும் கூறி வந்ததை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் ரூஸ்வெல்ட் மாபெருந்தலைவரென்றும் பாசிசக்கொள்கைக்கெதிராக சனநாயகத்தை நிலைநிறுத்தப் போர் செய்யும் மகாபுருஷரென்றும் போற்றினர்.

தமது கொள்கைக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் தொ.தா.ச. இடதுசாரிக் கொள்கையுடையவர்களை எதிர்க்கவில்லை. ஆனால் 1949 இன் பின்னர் நிலைமை மாறிற்று. ஐக்கிய மின்சாரத் தொழிலாளர் சங்கம், வேறு அரை டசின் சங்கங்கள் ஆகியவற்றை தொ.தா.ச. கலைத்து விட்டது. 1950 இல் ஹரி பிரிட்ஜெஸ் என்பவருடைய துறைமுகத் தொழிலாளர் சங்கம் பொதுவுடைமைச் சார்புடையதென்று அதனையுங் கலைத்துவிட்டது. 1955 ஐ அடுத்த ஆண்டுகளில் பொதுவுடைமைவாதிகளுக்கெதிராகச் சட்டம் மேன் மேலும் இறுகிக்கொண்டுவந்தது.

ஒரு பன்னிரண்டு பதின்மூன்று சங்கங்களிலேதான் பொதுவுடைமைச் செல்வாக்கு இருந்தது. பொதுவுடைமையாளர் தமது தந்திரத்தாலும், தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபடுவதாலும் சிறுதொகையினராயிருந்தும் செல்வாக்குப் பெற்றனர். அமெரிக்கத் தொழிற் சங்கத்தின் கொள்கைகள் எவ்வளவு தூரம் பொருளாதாரப் புத்திசாலித்தனமானவையாயிருந்த போதிலும், அது பொதுவுடைமைப் போக்குடையதன்று.

**தொழிற்சங்கங்களில் ஊழல் : இலாண்ட்ரம்—கிரிப்பின் சட்டம் 1959.**

தொழிற்சங்கங்களிலுள்ள நட்டாமுட்டித்தனம் அதிகமன்று. மதுவிலக்கு நீக்கப்பட்டபின்னர் நேர்மையற்ற சில துப்பாக்கிக்காரர் சில நகரத்தொழிற் சங்கங்களிலே (உதாரணமாக நியூயோர்க்கையடுத்துள்ள துறைமுகத்தொழிற் சங்கங்களில்) நுழைந்தனர். அத்தகைய தொழிற் சங்கங்களிலிருந்த உத்தியோகத்தர் தொழிற்சங்க உரிமைகளைப் பணத்துக்காக விரயஞ் செய்தனர். பணத்துக்காகத் தொழிற்சங்கத்தின் பக்கத்தில் நின்று போரிடவும் ஆயத்த

www.padippakam.com



மாயிருந்தனர். இதனுல் தொழிற் சங்கங்கள், தமது தாபனத்திலே ஒழுங்கை உண்டாக்க முயன்று வெற்றி பெற்றன. சட்டமும் ஒழுங்கும் நன்ருக அமுல் செய்யப்படும் நகரங்களிலே, தொழிற் சங்கங்களில் நட்டாமுட்டித் தனம் ஆட்சி செய்வதை நீக்கி வருகின்றனர்.

இருந்தும் சங்க நிதிகளை ஒழுங்கற்ற முறையில் துர்ப்பிரயோகஞ் செய்யும் வழக்கம் இன்னுமிருந்து வருகிறது. தொழிற் சங்க நிதியை முதலீடு செய்து டீம்ஸ்டர் டேவ் பெக் என்பவர் பணக்காரனுனர். காங்கிரஸ் விசாரணைக்குழுக்களை ஏற்படுத்தி விசாரணை செய்ததன் பயனுக தொழிற் சங்க நிதிகள் சம்பந்தமான வேறு துர்ப்பிரயோகங்களும் வெளிப்படுத்தப்பட்டன. பெக்குக்குப் பின்னர் பதவி வகித்த “ ஜிம்மி ” ஹொவ்வா என்பவர் அ.தொ.ச, தொ.தா.ச விசாரணைக்குழுவையும், நீதிமன்றப் பரிபாலகரையும் டீம்ஸ்டர் சங்கச் சிறுபான்மையினரையும் வெற்றிகரமாக எதிர்த்து நின்ருர்.

இலஞ்சப்பழக்கமிருப்பதாக அறிந்த அரசாங்கம் தொழிற்கட்சியினரின் எதிர்ப்பையும் மீறி ஒரு சட்டத்தை 1959 இல் நிறைவேற்றிற்று. இதுவே லாண்ட்ரம்–கிரிப்பின் சட்டமாகும். இச்சட்டம் பின்வருமாறு :

**(1) தொழில்மந்திரியிடம் பண அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும்.** தொழிற்சங்கங்கள் தமது பண நிலை பற்றி வருடந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். தொழிற்றலைவர்களுக்கு வழங்கும் கடன் போன்ற பணவிவகாரங்களின் விவரம் அதிலே சேரவேண்டும். சம்பள வகையிற் சேராத வேதனங்கள் தொழிற் சங்க உத்தியோகத்தருக்கோ, அங்கத்தவருக்கோ கொடுத்திருந்தால், இலஞ்சம் எனக்கருதக்கூடிய அத்தகைய கொடுப்பனவுகளை அறிவிக்கவேண்டும். அத்துடன், தொழிற்சங்கங்களோடுள்ள பிணக்குகளைத் தீர்க்கும் முறையிலே தமக்கு ஆலோசனை கூறுவோர்க்குக் கொடுக்கும் பணங்களைப் பற்றியும் முதலாளிகள் அறிவிக்கவேண்டும்.

**(2) நம்பிக்கைப் பாதுகாப்பு :** இச்சட்டப்படி தொழிற்சங்க உத்தியோகத்தருக்கோ ஊழியருக்கோ 2,000 டொலருக்குமேல் கடன் கொடுக்கக் கூடாதெனவும், இந்தச் சட்டத்தை மீறிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள்மீது விதிக்கப்பட்ட அபராதத்தைத் தொழிற் சங்க நிதியிலிருந்து கொடுக்கக் கூடாதெனவும் விதிக்கப்பட்டுள்ளன. தொழிற் சங்கப் பிரதிநிதிகட்குச் சம்பள வகையைச் சேராத எவ்வகை வேதனத்தையுங் கொடுக்கக்கூடாதெனவும் விதிக்கப்பட்டுளது.

பணவிடயத்தோடு தொடர்பில்லாத வேறு விடயங்களும் சட்டத்திலே காணப்படுகின்றன. வஞ்சனையாகத் தேர்தல் நடத்துவதைத் தடுப்பதற்கும் அங்கத்தவரிடையே ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் “ உரிமைச்சட்டம் ” என்ற ஒரு சட்டம் உண்டு. வேறு பல தொழிலாளர் விடயங்களும் இதிலேயுண்டு.

**தொழிற் சங்கங்கள் எவ்வளவுக்கு சனநாயக முறையைப் பின்பற்றுகின்றன.**

கம்பெனி நிர்வாகத்திலே பங்குதாரர் சனநாயகமுறையில் ஆட்சி செய்யும் போதுண்டாகும் பிரச்சினை பற்றி முன்னர் கவனித்தோம். தொழிற்சங்கம்

www.padippakam.com



பற்றியும் இத்தகைய பிரச்சினை எழுவதுண்டு. தொழிற்சங்க அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குண்டு. அதைப் பயன்படுத்தி உத்தி யோகத்தர் தெரிவு செய்யப்படுவர். ஒரு முறை தெரிவு செய்யப்பட்டவர் பல வருடங்களுக்கு அதிகாரத்திலிருப்பார். வருடாந்த மகாநாடுகளுக் கிடையில் சங்க அலுவல்களைச் சிறியதொரு நிர்வாக சபை நடத்தும். ஜோன். எல். லூயிஸ், வால்டர் ரூதர் என்போர் எல்லாராலும் விரும்பப்பட்ட தலைவராயிருந்தனர். அத்தகைய தலைவர்கள் விதித்த கொள்கைகட்கு மாறாக ஓர் அங்கத்தவர் கருத்துடையவராயிருந்தால் அவருடைய அபிப்பிராயம் மிகத்தூரம் செல்வாக்குடையதாயிராது.

கொள்கைகளை உருவாக்குவதிலே சாதாரணத் தொழிற்சங்க அங்கத்தவர் அதிகம் ஈடுபடுவதில்லை. இதைப் பற்றி சும்னர் சிலிச்சர் என்பவர் பின்வருமாறு கூறுகிறார் :

இதனால் சாதாரண அங்கத்தவரிடம் செல்வாக்கில்லையென்பது அர்த்தமன்று. அவர்களுடைய செல்வாக்கு அதிகம் ; ஆனால் செல்வாக்கு அதில் ஈடுபடுவதற்குச் சமமானதாகாது. சாதாரண அங்கத்தவரெல்லாரும் செல்வாக்குடையவராயிருத்தலே சனநாயகமானால், பெரும்பாலான தொழிற் சங்கங்கள் சனநாயகப் போக்குடையனவே. மற்ற வகையான தாபனங் களிலும், திருச்சபைகளிலும், காணிகளிலும் உள்ள நிலைமையே தொழிற் சங்கங்களிலும் நிலவுகிறது. காரியக் கூட்டங்களிலே பங்கு பற்றி ஏற்படும் பிரச்சினைகளைத் தீவிரமாக விவாதிப்பதில் ஈடுபாடுள்ள ஒரு சிறுபான்மையினர் இருந்துகொண்டேயிருப்பர். இந்தச் சிறுபான்மையினர் தொழிலாளர் கோரிக்கை விடயத்தில், கடுமையான தீவிர நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தரை வற்புறுத்துவர். இவை முதலாளிகள் இலேசாகவிட்டுக் கொடுக்கமுடியாத கோரிக்கைகளாயிருக்கும் ; பல முதலாளிகள் தமது வியாபாரத்தை மூடிவிடச்செய்யக்கூடிய கோரிக்கைகளாயிருக்கும். நெருக் கடியைத் தவிர்ப்பதற்காகத் தொழிற் சங்கத்தில் பெரும்பகுதியினர், சிறு பான்மையினர் கேட்கும் கோரிக்கைகளிலும் மிகக்குறைவானவற்றையே கேட்டுப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வர்.

தொழிற் சங்கத்தலைவர் எப்பொழுதும் சமாளிக்கும் திறமையுடையவரா யிருப்பார். உயிர்ப்போடு வேலை செய்யும் சிறுபான்மை அங்கத்தவரை எதிர்ப்பாரானால் அவருடைய தலைமைப்பதவிக்கு ஆபத்துண்டாகும். துடிப்பில்லாத பெரும்பான்மை அங்கத்தவரின் கோபத்துக்குத் தலைவர் ஆளானால் சங்கத்திலே புரட்சியுண்டாகும். எனவே இரண்டு கட்சியையுஞ் சமாளிக்கப் பார்ப்பார். இருந்தும் துடிதுடிப்புள்ள சிறுபான்மையினரையே சமாதானப்படுத்த விரும்புவார். ஏனெனில் அவர்களுடைய ஆதரவோ, எதிர்ப்போ, பெரும்பான்மையினருடைய ஆதரவிலும், எதிர்ப்பிலும் பார்க்கப் பயனுடையது. பெரும்பாலும் தொழிற்சங்க உத்தியோகத்தர்

படிப்பகம்

www.padippakam.com



தமது பதவியை இழப்பது பெரும்பான்மையோரிடை புரட்சிக்காரன் என்ற பெயர் வாங்குவதாலன்று; சிறுபான்மையோரிடை வைதீகப்போக்குடையவனென்று பெயர் பெறுவதினாலேயே.[1]

### அமெரிக்க முதலாளிகள் தொழிற் சங்கங்களை எதிர்த்தல்.

தமது சம்பளத்தை உயர்த்தவும், தொழிற்சங்கங்களைப் பொருட்படுத்தவும், தொழிலாளர் நீண்ட கிளர்ச்சி நடத்தவேண்டியதாயிற்று. அமெரிக்கத் தொழிலாளர் தமது நோக்கங்களை நிறைவேற்ற மிருகபலத்தைப் பயன்படுத்தினர். துப்பாக்கி, வெடிமருந்து என்பவற்றைப் பயன்படுத்தினர். உலகின் வேறெப்பாகத்திலும் இவ்வாறு மிருகபலத்தைப் பயன்படுத்தித் தமது நோக்கத்தை நிறைவேற்றிய சங்கங்களில்லையெனலாம். ஒரு மணி நேரத்துக்கு ஒரு சில சதத்தை அதிகப்படியான சம்பளமாய்க் கொடுக்குமாறு கிளர்ச்சி செய்து பெறுவதற்கு இரத்தஞ்சிந்த வேண்டுமா? நாட்டிலே புரட்சியை உண்டாக்காமலே பொருளாதாரத்தைத் தம்பிக்கச் செய்யும் நோக்கமாக பத்து இலட்சத்துக்கு மேலான தொழிலாளர் ஒரு சேர வேலை நிறுத்தஞ் செய்ய வேண்டுமா என்பதை ஐரோப்பியர் விளங்கிக் கொள்வதில் கடினமிருக்கலாம்.[2]

அமெரிக்கத் தொழிலாளர் இவ்வாறு மிருகபலத்தை ஏன் பயன்படுத்துகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்வதற்கு, ஒரு விடயத்தைக் குறித்துக்கொள்ள வேண்டும். ஐரோப்பாவிலேயுள்ள சிலநாடுகளில் முதலாளிமார் தொழிற் சங்கங்களைத் தீவிரமாக எதிர்த்தனர். சரித்திர ரீதியாகப் பார்க்கும்போது அமெரிக்க முதலாளிமார் தொழிற் சங்கங்களுக்கெதிராகத் தீவிரமாய் நடவடிக்கையெடுத்தனர். தொழிற்சங்கம் பரவுவதைத் தடுக்கும் முயற்சியில் போட்மோட்டார்க் கம்பெனி, ரிபப்ளிக் ஸ்டீல் கம்பெனிபோன்ற கம்பெனிகள், 1930 ஆம் ஆண்டிலேயே தனிப்பட்ட உளவாளிகளை ஏற்படுத்தக் கோடிக்கணக்கான டொலர்களைச் செலவுசெய்தன. வேலைக்குப்போக வேண்டாமென மறியல் செய்த இடங்களிலே துப்பாக்கிக் குண்டுகள் பறந்தன. 1937 ஆம் ஆண்டிலே ஞாபக தினத்தன்று ஒரு டசின் மக்கள் இந்தத் துப்பாக்கிக்குண்டுக்கிரையானார்கள். தொழிற் சங்கங்களை அமைக்கத் தொழிலாளருக்கு உரிமையுண்டென நாட்டிலே சட்டஞ் செய்யப்பட்டுப் பல வருடங்களின் பின்னர் இவ்வாறு நடைபெற்றது.

இவையெல்லாம் பழங்கதை. இன்று பெரிய கார்க் கம்பெனிகளும் சிறியவையும் எல்லாம் சமாதானமாகவே ஒன்றுகூடிப் பேரம்பண்ணுகின்றன. பெரிய உருக்குத் தொழிற்சாலைகளும் சிறியவையும் இதே முறையையே அனுசரிக்கின்றன. எனினும் அமெரிக்கத் தொழிற் சங்கத்தின் வரலாற்றில் இஃது அறியத்தக்கதொரு கட்டமாகும்.

1. S. H. Slichter, The Challenge of Industrial Relations (Cornell University Press, Ithaca, N.Y. 1947) பக்கம் III.

2. M. S. Pitzele "Can American Labour Defeat the Communists" Atlantic Monthly, March 1947.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகள் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கெதிராக நடத்திய யுத்தத்திலே பின்வரும் முறைகளைக் கையாண்டனர் : (1) தொழிற்சங்க அங்கத்தவரைப் பட்சபாதங் காட்டி வேலையிலிருந்து நீக்குதல். (2) அயோக்கியர் என்போரின் அட்டவணை தயாரித்தல். (3) வேலை கொடாது விடுதல். (4) "மஞ்சள் நாய்" ஒப்பந்தம் (5) தொழிலாளர் உளவு பார்த்தல் (6) வேலை நிறுத்தத்தை முறிப்போரும் இராணுவந்தாங்கிய காவற்காரரும். (7) "கம்பெனிச் சங்கம்" என்பனவே அவை. நீதிமன்றங்களைக் கூட முதலாளிகள் இதற்குப் பயன்படுத்தினர்.

**சங்கத்துக்கெதிராக எவ்வாறு நடவடிக்கை எடுப்பது.**

இதை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். நான் கம்பெனி நிர்வாகி என்றும், என் தொழிலாளர் சங்கத்திற் சேர்வதை நான் விரும்பவில்லையென்றும் வைத்துக்கொள்வோம். நான் கொடியவனல்லன் ; என் குடும்பத்தவர்க்கு நல்லவன். என் வாடிக்கைக்காரரை நான் ஏமாற்றுவதில்லை. சண்டையைத் துவக்கினால் விடமாட்டேன். எனக்குச் சரியென்று தெரிவதற்காகச் சண்டை செய்வேன். 20, 25 வருடங்களுக்கு முன்னே நான் செய்திருக்கக்கூடிய சில விடயங்கள் பின்வருமாறு :—

முதலாவது : நிர்வாகியை "புதிய தொழிற் சங்கத்திலே குழப்பத்துக்கு முன்னிற்பவர்கள் யாவர்" என்று கேட்பேன். அவர்களுடைய பெயரை அறிந்துகொண்டு அவர்களை வேலையிலிருந்து நீக்குவேன். இந்தத்தொழிலாளரை மற்ற முதலாளிகள் வேலைக்கமர்த்தாதவாறு ஓர் அட்டவணையைத் தயாரித்து விளம்பரப்படுத்துவேன். வெளியூர்த்தொழிற்சங்க அங்கத்தவரை என்னூரிலிருந்து கலைப்பதற்கு முயற்சிகள் செய்வேன். உள்ளூர்ச் சமாதானத்துக்குப் பங்கம் விளைத்ததாக அவர்களை உள்ளூர்ப் பொலீசாரைக்கொண்டு கைது செய்விப்பதற்குமுன் அவர்களுக்கு எச்சரிக்கை செய்வேன். தொழிற் சங்கங்கள், தமது கூட்டங்களை நடத்த உள்ளூர்ப் பாடசாலைகளையோ, தேவாலயங்களையோ பயன்படுத்தாதபடி பார்த்துக்கொள்வேன்.

தொழிற் சங்கம் வேலை நிறுத்தத்தைத் தொடங்கு முன்னர் நானே தொழிற் சாலையை மூடிவிடுவேன். தொழிலாளர் வேலையின்றி வாடிப் பின்னர் சங்கங்களிற் சேர்வதை விடுவார்கள். புதிதாக எவரையாவது வேலைக்கெடுத்தால் அவர் ஓர் ஒப்பந்தத்துக்குக் கைச்சாத்திட வேண்டும். அதாவது எந்த ஒரு தொழிற் சங்கத்திலும் சேர்வதில்லையென அவர் ஒப்பந்தமெழுதுவார். இது "மஞ்சள் நாய்" ஒப்பந்தம் எனப்படும். பின்னர் தொழிற் சங்க அமைப்பாளர் யாராவது ஒப்பந்தத்தை மீறுமாறு தூண்டுவாரானால் நீதி மூலம் அவருக்கு நான் தடைவிதிப்பேன்.

நான் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும் சங்க அமைப்பு நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். என்னைப் பாதுகாப்பதற்காக நான் வெளியார் துணையை நாடவேண்டும். தனிப்பட்ட உளவு பார்க்கும் தாபனங்களுண்டு. அவை இத்தகையவேலைகளிலே பயிற்சி பெற்றிருக்கும். அத்தாபனங்களிலிருந்து ஐந்து பேரையோ, 500 பேரையோ நான் கூலிக்குப்

www.padippakam.com


பிடித்துக்கொள்ளலாம். இவர்களைச் சங்கத் தொழிலாளர் விரும்பமாட்டார். எனவே அவர்கள் ஆயுதபாணிகளாயிருக்க வேண்டியதவசியம். அத்துடன் தனிப்பட்டவர் சொத்தைக் காப்பதற்காகவும் அவர்கள் ஆயுதபாணிகலாயிருப்பதவசியம். உள்ளூர் நீதவான்கள் மூலம் அவர்கள் உத்தியோகபூர்வமான பிரதிநிதிகள் என அத்தாட்சிப்படுத்தவேண்டியும் வரும்.

மிருகபலத்தைப் பயன்படுத்த வேண்டாமென்று இவர்களுக்கு நான் கூறுவேன். உண்மையாகவே நான் அதை உணர்ந்து கூறுவேன். ஆனால் அவர்களும் மனிதர்தாமே. தங்களுயிருக்கு ஆபத்தென்று கண்டால் அவர்கள் ஆயுதத்தைப் பயன்படுத்துவர்.

பின்னர் தொழிற் சங்கம் ஒரு நாளைக்கு வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கும். சில தொழிலாளர் மாத்திரம் வேலைநிறுத்தஞ் செய்வாரென எண்ணியிருந்தேன். ஆனால் பேச்சிலே மயங்கி ஏறக்குறைய அரைவாசிக் குமதிகமானோர் வேலைநிறுத்தஞ் செய்கிறார்கள். தொழிற்சாலை வாயலுக்கு வெளியே மறியல் செய்ய நிரையாய் நிற்கிறார்கள். பேச்சுச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதாகவும் அது தமக்குரிய பிறப்புரிமையென்பதாகவும் அவர்கள் கூறிக்கொண்டு, தகாதவார்த்தைகளால் வேலை நிறுத்தஞ் செய்யாதவர்களைத் திட்டுகிறார்கள். என் காவற்காரரையும் திட்டுகிறார்கள். ஆத்திரம் அதிகரிக்கவே சிலர் தொழிற்சாலை யன்னலுக்குக் கல்லெறிகிறார்கள். நிருவாகியின் காருக்கும் கல்லெறி விழுகிறது.

பின்னர் கூட்டம் ஆத்திரமடைந்து வேலிகளைப் பிரிக்கத்துவங்கும். தற்பாதுகாப்புக்காகவும் பொருளைப் பாதுகாப்பதற்காகவும், உளவு பார்க்க அமர்த்தப்பட்டவர்களில் சிலர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்வர். அடுத்த நாள் பத்திரிகைகள் தொழிலாளர் படுகொலைகளைப் பற்றித் தலையங்கம் போட்டு எழுதத் தொடங்கும். அதனால் பொதுசனத் தொடர்பு சம்பந்தமான பிரச்சினைகளுண்டாகும்.

ஈற்றில் வேலை நிறுத்தம் தோல்வியடையும். நான் வெற்றி பெறுவேன். தொழிலாளர் மேலும் வேலைக்குப் போகாதிருப்பதை விரும்பமாட்டார். அவர்கள் வேலைக்குத் திரும்பியபின்னரும் அதிருப்தியும் குழப்பமும் தொடர்ந்து இருந்துகொண்டிருப்பதால், நான் தொழிலாளர் சங்கம் தாபிப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டியதாகிறது. தொழிலாளர் தமக்கு ஒரு சங்கத்தை அமைக்க விரும்பினால் அமைக்கட்டும். ஆனால் அஃது ஒத்துழையாத வெளியார் சங்கமாக ஏன் இருக்க வேண்டும்? கம்பெனியில் நீண்டகாலம் வேலை செய்து அதன் பிரச்சினைகளையறிந்தவர்களைக்கொண்ட கம்பெனிச் சங்கமாக ஏன் இருக்கக் கூடாது? எனவே என் தொழிலாளரிடையே இயற்கைத் தலைவராயுள்ளவரை ஊக்கப்படுத்தி "கம்பெனித் தொழிற்சங்கம்" ஒன்றை ஆரம்பிக்க முயற்சிசெய்கிறேன். அதன் ஆரம்பச் செலவுக்காக ஒரு பீப்பா பீர் குடிவகை வாங்கப் பணம் கொடுக்கிறேன்.

www.padippakam.com


சங்கக்கணக்கிலே குளிர்பானம் முதலியன விற்கத் தொழிற்சாலையில் வசதி செய்கிறேன். அதனால் வரும் இலாபம், தொழிற்சங்கத்துக்கே கொடுக்கப் படுகிறது.

**தொழிற்சாலைகளில் புதியவகையான தொடர்பு.**

மேலே கூறிய வகையைச் சேர்ந்த கம்பெனி நிர்வாகியை தென்னமெரிக் காவிலே சில இடங்களைத் தவிர வேறெங்கும் காண்பது அரிது. அத்தகைய நிர்வாகிகளுக்கு ஓய்வளிக்கப்பட்டுவிட்டது. புதிய வகையைச் சேர்ந்த நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஏன்? முதலாவதாக, 1930 ஆம் ஆண்டிலேயே பெரிய தொழிற்சாலைகளிலெல்லாம் தொழிற்சங்கங்கள் நிறுவப்பட்டுவிட்டன. தொழிற்சங்கங்களுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து சண்டையை நடத்திவருவது இலாபகரமான வேலையன்று. இரண்டாவதாக, அரசாங்கம் தொழிலாளர் விடயத்திலே தனது மனோபாவத்தை மாற்றிக் கொண்டது. 1930 ஆம் ஆண்டின் பின்னர், அரசாங்கம் தொழிற் சங்கங்களுக்கு அனுசரணையாயிருந்தது. புதிய அரசாங்கத்தின் தொழிற் கொள்கை முட்டாள்தனமானதென்று முதலாளிமார் நினைத்தாலும், அரசாங்கத்தை எதிர்க்க அவர்கள் விரும்பவில்லை. (அரசாங்கம் இத்தகைய கொள்கையை ஏன் அனுசரித்தது; அது எவ்வகையில் சமீபகாலங்களில் மாற்றமடைந்தது என்பதெல்லாவற்றையும் மேலே ஆராய்வாம்.) ஐக்கிய அமெரிக்க ரப்பர்கம்பெனியின் முன்னாள் உபதலைவரும், பின்னர் பெடரல் சமாதானச் சங்கத்தலைவருமாயிருந்த சைரஸ் எஸ். சிங் என்பவருடைய கூற்றில் அடங்கிய உண்மையைப் பல தொழில் தலைவர்கள் ஆதரிக்கத் துவங்கினர்.

.. "தொழிற்சங்கத்தோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்ளும்பொழுது எங்களைப் போன்றவர்களையே அங்கே தலைவராகக் காண்போம்" என்பதே சிங்* என்பவரின் கூற்று. தொழிற்றலைவர் ஒருவருடைய கூற்றிலே ஓரளவேனும் உண்மை நிலை பற்றியஅம்சம் உண்டெனப் பல முதலாளிமார் உணரத்துவங்கினர்.[1]

எத்தகைய தொழில் தொடர்பு வேண்டுமென முதலாளிமார் விரும்புகிறார்களோ அத்தகைய தொடர்பையே அவர்கள் பெறுவார்கள். தொழிலாளர் "அளவுகடந்து" சென்றால் அதற்கு முதலாளிகளே பொறுப்பாளிகளெனலாம். உதாரணமாக, முதலாளி தொழிலாளர் நடவடிக்கையை ஒற்றி அறிய உளவுகாரரை ஏற்படுத்தலாம். தொழிற் சாலையில் கண்ணீர்ப்புகை, ஆயுதம் முதலியவற்றை வைத்திருக்கலாம். நீதிமன்றத்திலும், தொழிற் சங்கங்களிலும் தொழிற் சங்க அங்கத்தவருக் குத்தொந்தரவு செய்வதற்குப் பெரிய சம்பளங்கொடுத்து நியாயவாதிகளை

*Cyrus S. Ching, "Problems in Collective Bargaining", Journal of Business University of Chicago, 1938, Part 2, P. 40.

1. P. Murray and M. L. Cooke, Organized Labour and Production, (Harper New York, 1940) PP 259-260.

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்தலாம். தொழில் மானேஜர்மாரிடையே தொழிற் சங்கத்துக் கெதிரான விளம்பரங்களை விநியோகஞ் செய்து அவர்களைத்தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கெதிராக ஏவிவிடலாம். தொழிற்சங்கத்தோடு உடன்படிக்கை செய்ய மறுக்கலாம். மிக்க நிர்ப்பந்தத்தின்பேரில் உடன் படிக்கை செய்தாலும், அந்த நிபந்தனைகளை நிறைவேற்றவோ தொழிலாளர் குறைபாடுகளை நிவர்த்திசெய்யவோ பின்வாங்கலாம். அல்லது தொழிற் சங்க அங்கத்தவர் மீது பட்சபாதமாக நடந்து கொள்ளலாம். இதுபற்றி உடனே தொழிற்சங்கம் நடவடிக்கையெடுக்கும். முதலாளிகளிற் பெரும்பாலோர் தூரத்திலிருந்துகொண்டு " இது தொழிலாளரின் மற்றொரு கொடுமை " என்று ஆரவாரஞ் செய்வார்கள்.

முதலாளிகளெல்லாரும் தொழிற்சங்கத்துக்கு விரோதமானவர்களென்று இக்காலத்தொழிலாளர் தொடர்புகளை அவதானிப்போர் கூறிவிட முடியாது. எங்காவது அடிதடி குழப்பம் நடந்தால் பத்திரிகைகளில் பெரிய எழுத்திலே புதினமாக வெளிவரும். ஆனால் அமைதியான முறையில் சரிப்படுத்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி எவரும் பேசுவதற்கில்லை. பெருந்தொகையான தொழிற்சாலைகளில் முதலாளியானவன் தொழிலாளியோடு சௌஜன்னிய மாக நடந்து கொள்ளுகிறான். தேசீயத்திட்டக் கமிஷன் வெற்றிகரமான தொழில் உறவுள்ள சந்தர்ப்பங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறது. முன் பெல்லாம் பகைமையை வளர்த்து வந்த கட்சிகள் நியாயமான சமநிலையில் எவ்வாறு ஒத்துழைக்கக்கூடுமென்பதையும், பாதுகாப்பு, வளர்ச்சிச் சந்தர்ப்பம், ஆக்கம் என்பன அளிக்கும் தமக்குப்பொதுவான முயற்சிகளில் எவ்வாறு பங்குகொள்ளக்கூடுமென்பதையும் இந்த ஆராய்ச்சிகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.[1]

மேற்குக் கரைக் கடதாசிக்கம்பெனி, 27 வருடமாக திருப்திகரமான தொழிலாளர் தொடர்பையுடையதாய் வேலைசெய்துவருகிறது. கிரௌன் செல்லர்பாச் கோர்ப்பொரேஷன் இந்தக் கம்பெனியில் முக்கியமாக அங்கம் வகிக்கிறது. டபிள்யூ. ஆர். கிரேஸ் என்ற கம்பனியின் டியூ இ அன்ட் அல்மிப்பிரிவு, தனது தொழிற் சங்கத்தோடு 21 வருடமாக சௌஜன் னியமான தொடர்புடையதாயிருந்து வருகிறது. இவ்வளவு காலத்தில் நாலே நாலு வேலை நிறுத்தம் தான் நிகழ்ந்திருக்கிறது. நாஷுவா கம் பெனி 7 தொழிற்சம்மேளனங்களோடு சௌஜன்னியமான தொடர்புடையதாய் வேலை நிறுத்தமில்லாமலே 27 வருடம் வியாபாரம் நடத்தி வந்திருக்கிறது. ஹிக்கி பிரிமன் கம்பெனி, ஆண்களின் உடுப்புத்தயாரிக்கும் நிறுவகம். இது 42 வருடமாக வேலை நிறுத்தமில்லாமலே கருமங்களை நடத்தி வந்துள்ளது ; 30 வருடமாக எவ்வித நடுத்தீர்ப்புக்குங்கூட உட்படுத்தப்படவில்லை.

இவற்றிலே முதலாளியோ, தொழிற் சங்கமோ முரண்டு பண்ணாமல் சமாதானம் நிலைநிறுத்தப்பட்டது என்று கூறமுடியாது. இரண்டு

[1]. Fundamentals of Labour Peace: A Final Report, Case Studies 14 (National Planning Association, Washington, 1953)

படிப்பகம்

www.padippakam.com



தரப்பினரும் கடுமையாகப் பேரம்பண்ணியே இந்த நல்லுறவை ஏற்படுத்தினர். இரண்டு பக்கத்திலும் ஊக்கமின்மையாலோ, ஒரு பக்கத்தவரின் கை ஓங்கி நிற்பதாலோ இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாது, பின்போடப்படலாம். அவை ஈற்றில் தொந்தரவை உண்டாக்கலாம். சௌஜன்னியமான தொடர்புள்ள சந்தர்ப்பங்களிலே ஒரு கட்சி மற்றக் கட்சியின் உரிமைகளைப் பாதுகாக்கிறது. இரண்டு கட்சியினரும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களென்பதற்கில்லை. ஆனால் ஒருவர்க்கு மற்றவர் இன்றியமையாதவராகிறார்.

**தொழிலாளருக்கு எதிராக அரசாங்கத்தின் நிலை.**

பிரிட்டனிலே 150 வருடத்துக்கு முன்னர் தொழிற் சங்கங்கள் தோன்றிய பொழுது அவை சட்ட விரோதமானவையெனக் கருதப்பட்டன. பழைய சட்டங்களை அனுசரித்துத் தொழிற்சங்க அங்கத்தவர் சிறைப்படுத்தப்பட்டனர். பின்னர் பாராளுமன்றம், தொழிற் சங்கங்கள் சட்ட பூர்வமானவையெனச் சட்டமியற்றியது. தொழிலாளர் தமது சம்பள உயர்வுக்காகச் சட்ட பூர்வமான முறையிலே கிளர்ச்சி செய்வது சட்ட விரோதமன்றென்று அமெரிக்காவிலும் ஒரு நூற்றாண்டுக்குமுன் நீதிமன்றங்கள் ஒப்புக்கொண்டன.

தொழில் விடயத்தில் ஏகபோக உரிமை கொண்டாடுவது சட்ட விரோதமானதென்று 1890 இல் அன்டிட்ரஸ்ட் சட்டம் விதித்தது. அது தொழிற் சங்கங்களைக் குறிப்பிடவில்லை. ஆனால் அடுத்த 20 வருடங்களில் நீதிமன்றங்கள், தொழிலாளர் சங்க நடவடிக்கைகளை நசுக்குவதற்காக ஷேர்மன் சட்டத்தைப் பயன்படுத்தின. நீதிபதி ஒருவரின் அபிப்பிராயப்படி, ஒரு தொழிற் சங்கம் விரும்பத்தகாத நோக்கத்தோடு வேலை நிறுத்தஞ் செய்யுமானால், அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென அவர் தீர்ப்புக் கூறலாம். நியாயமான ஒரு நோக்கத்தோடு தொழிற் சங்கங்கள் சம்பிரதாயமான முறைகளைப் பயன்படுத்தினால் அவை சட்ட விரோதமானவையென நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

தொழிற்சங்க அங்கத்தவருக்கெதிராகப் பிராது கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்தது. வழக்கு அங்கத்தவர்க்கெதிராகத் தீருமானால், சங்கமும், அதன் உத்தியோகத்தருமே நட்ட ஈடு கொடுப்பதற்குப் பாத்திரமாயிருப்பர். உதாரணமாக 1908 ஆம் ஆண்டிலே நிகழ்ந்த டான்பெரி ஹாட்டேர்ஸ் வழக்கில் வேலை மறுப்புகாரணமாக உண்டான சேதங்களுக்குச் சங்கத்தின் ஒவ்வோர் அங்கத்தவரும், உத்தியோகத்தரும், பொறுப்பாளிகளாக்கப்பட்டனர். அதன் பயனாக தொழிற் சங்கம் 25 இலட்சம் டொலர் நட்ட ஈடு கொடுக்கவேண்டியேற்பட்டது. அது சங்கத்துக்குப் பெரிய நட்டமாகும். மேலும் சங்கங்களுக்கெதிராகப் பெருந்தொகையான செலவை உண்டாக்கக்கூடிய வழக்குகள் தொடரப்போவதாகப் பயமுறுத்தல்களிருந்து வந்தன. அவற்றில் வெற்றி பெறக்கூடிய வசதியிருந்தாலும், தொழிற் சங்கங்கள் வழக்குக்குப் போவதில்லை. வேலை மறுப்புச்செய்வதை நீதிமன்றங்கள் மட்டுப்படுத்தின. வேலை நிறுத்தம் இல்லாத காலத்திலே மறியல் செய்வதையும் பெரும்பாலும் தடை

www.padippakam.com



செய்தன. பலாத்காரத்தோடுகூடிய மறியல் நடைபெறுவிட்டாலும், பெருந் தொகையான தொழிலாளிகள் மறியல் செய்வதும் தடுக்கப்பட்டது. மஞ்சள் நாய் ஒப்பந்தம் செல்லுபடியாகுமென்பதை நீதிபதிகள் ஒப்புக்கொண்டு, தொழிலாளர்மீது கட்டளை விதிக்கலாம்.

அ. தொ. ச. தொழிற்சங்கம் அரசியலில் ஈடுபடுவதை விரும்பாதபோதிலும், அஃது அரசியல் அரங்கிலே தள்ளிவிடப்பட்டது. 1914 இல் கிளேட்டன் அன்டிட்ரஸ்ட் சட்டத்தைக் கொண்டுவரத் தொழிற் சங்கம் முயற்சி செய்து வெற்றி பெற்றது. இந்தச் சட்டம் தொழிலாளருக்கு "மகா சாசனம்" போன்றது. ஷேர்மன் சட்டத்தின்படி தொழிற் சங்கத்துக்கெதிராக வழக்குத் தொடர்வதைத் தடுப்பதற்கு இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டபோதிலும், தொழிற் சங்கத்துக்கெதிராகச் சட்ட ரீதியாகவும், நீதி நிர்வாக ரீதியாகவும் எதிர்ப்புண்டாக்குவதை இது தடுக்கவில்லை.

**தொழிலாளருக்கு அரசாங்கத்தின் ஆதரவு.**

1930 இன் பின்னர் தொழிற் சங்கங்கள் பேரம் பேசுவதை அரசாங்கம் ஆதரித்தது. கூட்டுப் பேரம் செய்வதை அனுமதித்த 1926 ஆம் ஆண்டு, ரயில்வேத்தொழிலாளர் சட்டமும் செல்லுபடியாகுமென உயர்நீதி மன்றம் ஒப்புக்கொண்டது. 1932 இல் நிறைவேற்றப்பட்ட நொறிஸ்—லாகார்டியா சட்டம் (1) மஞ்சள்நாய் ஒப்பந்தத்தை சமட்டி அரசாங்கம் அமுல் நடத்த முடியாதெனவும், (2) தொழிற்றகராறுகளிலே சமட்டிநீதிமன்றங்கள் தலையிட முடியாதென்றும் விதித்தது. இதன் பயனாக வேலைசெய்யமறுத்தல் கூட்டுமறியல் என்பன தொழிற் பிணக்குகளில் அனுமதிக்கப்பட்டன.

1933 இன் தேசீயக் கைத்தொழில் மறுமலர்ச்சிச் சட்டத்தின் (தே. கை. ம. ச.) 7 (அ) பிரிவில் கூட்டுப் பேரத்துக்கு ஆதரவளிக்கப்பட்டது. கடைசியாக தேசீயத் தொழில் உறவுச் சட்டம் (வாணர் சட்டம்) 1935 இல் நிறைவேற்றப்பட்டது. அது பின்வருமாறு குறிப்பிடுகிறது : "தொழிலாளர் தம்முடைய நலனுக்காகத் தொழிற்சங்கங்களை அமைக்கலாம். கூட்டுப் பேரஞ் செய்வதற்காகவோ தொழிலாளர் சம்பந்தமான வேறுநலன்களுக்காகவோ முயற்சி செய்வதோடு தமது பிரதிநிதிகள் மூலமும் நடவடிக்கை எடுக்கலாம்." (பிரிவு 7), தேசீயத்தொழிலாளர் உறவுச் சங்கம் அமைத்து, முதலாளிகள் நியாயமற்ற தொழில் வழக்கங்கள் மூலம் தொழிலாளரைத் துன்புறுத்தாமற் பார்த்துக்கொண்டது[1]. தொழில் நிலையங்களி

1. தொழிலாளர் தொழிற்சங்கங்களை ஏற்படுத்துவதற்கு மாறாக முதலாளிமார் நடவடிக்கை எடுப்பதையே "நியாயமற்ற தொழில் வழக்கங்கள்" என்ற பதப்பிரயோகம், வாணர் சட்டத்திலே குறிப்பிடுகிறது. அத்தகைய வழக்கங்கள் பின்வருமாறு :—(1) தொழிற் சங்கத்தில் சேர்ந்ததற்காகத் தொழிலாளரை வேலையிலிருந்து நீக்குதல் (2) தொழிற்சங்க அனுதாபிகளுக்கு வேலை கொடாதிருத்தல். (3) தொழிற் சங்கத்தில் தொழிலாளர் சேர்ந்தால் அவர்கள் வேலைசெய்யும் தொழில் நிலையத்தை மூடிவிடுவதாகப் பயமுறுத்தல். (4) தொழிலாளர் நிர்வாகத்திலே தலையிடுதல் (5) தொழிலாளர் பிரதிநிதிகளோடு பேரம்பேச மறுத்தல்.

குறிப்பு : தொழிற்சங்கம் அமைக்கத் தொழிலாளருக்குப்பல உரிமைகளிருந்தன. ஆனால் 1930 ஆம் ஆண்டுச்சட்டம் இந்த உரிமைகள் வெளிப்படையாக ஊக்கப்படுத்தியதோடு இவற்றை விரிவாக்கவுஞ் செய்தது.

படிப்பகம்

www.padippakam.com



லுள்ள எந்திரங்களைக்கூடப் பரிசீலனை செய்வதில் தே. தொ. உ. ச. ஈடு பட்டுள்ளது. எல்லாத்தொழிலாளருக்கும் பிரதிநிதியாக இருந்து பேச எந்தத் தாபனத்தை ஏற்படுத்தலாமென்பதற்குத் தேர்தலையும் நடத்தும். நீதிமன்றங்கள் விண்ணப்பஞ் செய்தபின்னர் அமுல் நடத்தத் தகுந்த "நிறுத்தக் கட்டளை" களை முதலாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்த அதற்கு உரிமையுண்டு. நியாயமற்ற முறையிலே வேலை நீக்கஞ் செய்யப்பெற்ற தொழி லாளருக்கு, சம்பளத்தோடுவேலை கொடுக்க அது முதலாளிகளைத் தூண்டும்.

**சீர்திருத்தச் சட்டம்.**

1940 வரையில் தொழிலாளருக்கு மேலும் சாதகமான நிலைமைகளுண் டாயின. தொழிலாளர் கூட்டுப் பேரம் செய்யப் பூரண உரிமையுடையவர் என்பதைச் சட்ட சபைகளும், நீதிமன்றங்களும் அங்கீகரித்துக்கொண்டன. முதலாளிகள் தொழிலாளரைக் கொடுமைப்படுத்திளுல் கடுமையான தண்டம் விதிக்கப்பட்டது. பாதுகாப்புச்சட்டத்துறையிலும் தொழிலாளருக்கு ஆதரவு கிடைத்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தொழிற்சாலைகளில் தொழிலாளரு டைய சுகாதாரம், பாதுகாப்பு என்பவற்றைப் பேணுவதற்காக முதன் முதல் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது இங்கிலாந்திலே பிற்போக்குக் கட்சியான டோரிக் கட்சியினரே அதனை ஆதரித்தனர். தாராளப்போக்குடைய வரான விக்கட்சியினர் நடப்பது நடக்கட்டும் என்ற கொள்கையுடையவராயிருந் தனர். அரசாங்கம் இந்த விடயங்களிலே சட்டஞ் செய்வது தனிப்பட்ட உரிமை யில் தலையிடுவதாகுமெனக் கருதிற்று. இத்தகைய தலையீட்டிளுல் நன் மையேற்படாது தீமையே உண்டாகுமென்றும், போட்டி முறையில் அஃது அவசியமற்றதாகிவிடுமென்றும் கூறப்பட்டது.

குறைந்த பட்சச் சம்பளம், பெண்களை வேலைக்கமர்த்தும் நிபந்தனைகள், சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்துதல் என்பன சம்பந்தமாகச் சட்டம் செய் தல் ஆரம்பத்தில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. நீதிமன்றங்கள் அத்தகைய சட்டங்கள் அரசியலமைப்புக்கு மாறுனவையெனத் தீர்ப்பளித்தன. ஆளுல் பெண்கள் விடயத்திலும் சிறு பிள்ளைகள் விடயத்திலும் பாதுகாப்பான சட்டங்களியற்றப்பட்டன. முதலாம் உலகமகாயுத்தத்துக்கு முன்னர், காயம டையும் தொழிலாளருக்கு நட்ட ஈடுகொடுக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1930 வரையிற்கூட அ. தொ. ச. பொதுவாக சமூகப் பாதுகாப்பை எதிர்த்தது. ஆண்களுக்குக் குறைந்தபட்சச் சம்பளம்கொடுக்கப்படுவதையும் எதிர்த்தது.

பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் நிர்வாகத்திலே தொழிலாளர் சகாயத்துக் கான சில நடவடிக்கைகள் செயல்முறைக்குக் கொண்டுவரப்பட்டன. வால்ஷ்—ஹீலி பொது உடன்படிக்கைச் சட்டப்படி (1936), தொழில்மந்திரி அனுமதித்த குறைந்தபட்சச் சம்பளம் அரசாங்கக் கொந்தராத்துக்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென விதித்தது. 1938 இல் சமட்டி அரசாங்கம் "நியாயமான தொழில் நியமச் சட்டம்" என ஒரு சட்டத்தை நிறை

படிப்பகம்

www.padippakam.com



வேற்றியது. விவசாயத்துறை நீங்கலாகவுள்ள ஏனைய துறைகளில், மாகாணங்களிடையே முயற்சியிலீடுபட்ட தொழிலாளரில் பெரும்பாலோருக்குக் குறைந்தபட்சச் சம்பள விகிதத்தை அது விதித்தது. (1960 இல் இது ஒரு மணி நேரத்துக்கு 1 டொலராயிருந்தது.) ஒரு வாரத்துக்கு 40 மணி நேர வேலையே அனுமதிக்கப்பட்டது. மேலதிக வேலைசெய்வோர் ஒரு மணி நேர வேலைக்கு 1½ மணிநேரச் சம்பளம் பெறலாமெனவும் விதிக்கப்பட்டது. சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்தக்கூடாதெனத் தடைசெய்யப்பட்டது. பல மாகாணங்கள் குறைந்தபட்சச் சம்பளம், கூடிய பட்ச வேலைநேரம் என்பவற்றைப் பற்றிச் சட்டம் இயற்றுவித்தன.

**தொழிலாளருக்கு ஆதரவு குறைதல் : டாவ்ட்–ஹாட்லி சட்டம்**

இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் நிலைமை மாறத் தொடங்கிற்று. பிராங்ளின் ரூஸ்வெல்ட் இறந்துவிட்டார். அவர் ஆரம்பித்த " நியூடீல் " வேகங்குறைந்தது. அதன் ஆதாரவாளரும் குறைந்தனர். தொழிலாளர் ஆதரவற்றவர் என்ற எண்ணம் மாறிவிட்டது. வாணர் சட்டம் தொழிலாளரை ஆதரித்ததென்றும் முதலாளிமாரை நிர்ப்பந்தப்படுத்தியதென்றும் காங்கிரஸ்காரர் பலரிடம் அபிப்பிராயம் நிலவிற்று. எனவே 1947 இல் காங்கிரஸ் தொழில் நிர்வாகத் தொடர்புச் சட்டம் (டாவ்ட்–ஹாட்லி சட்டம்) என்ற சட்டத்தை நிறைவேற்றியது.

இஃது இருமுனையுள்ள தொழிலாளர் உறவுச் சட்டம். இது வாணர் சட்டம் போன்றதன்று. இதுதொழிற் சங்கங்களுக்கும் முதலாளிகட்கும் ஒழுக்க விதிகளை வகுக்கிறது. தொழிற் சங்கத்திலே சேரவிரும்பாத தொழிலாளிக்கும் பலமளிக்கிறது. தொழிற் சங்கத்திலே சேர்ந்த அங்கத்தவரை அதன் உத்தியோக வர்க்கத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் வழிவகுக்கிறது. டாவ்ட்–ஹாட்லி சட்டத்தின் முக்கியமான நோக்கங்களிற் சில பின்வருமாறு :

1. தொழிற்சங்கத்தவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற அவசியம் முதலாளிமாருக்கில்லை. தொழிற் சங்க அங்கத்துவ நிபந்தனைகள் சம்பந்தமாகக் கடுமையான சட்டங்களை நிறைவேற்ற மாகாணங்களுக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. (" வேலைக்கு உரிமை " என்ற ஒரு சட்டத்தைப் பல மாகாணங்கள் சமீபகாலத்திலே நிறைவேற்றியுள்ளன. இதன்படி எந்த ஒரு தொழிலாளியையும் தொழிற் சங்கத்தில் சேர வேண்டுமென எவரும் நிர்ப்பந்தஞ் செய்ய முடியாது.)

2. அத்தியாவசிய தொழில்களில் வேலை நிறுத்தஞ் செய்வதைத் தற்காலிகமாக நீதிமன்றக் கட்டளை மூலம் நிறுத்திவைக்கலாம். முந்திய சட்டப்படி தனிப்பட்ட தாபனங்களின் கட்டளைப்படி வேலை நிறுத்தந்தடைசெய்யப்பட்டது. இப்போது அமெரிக்கச்சட்ட அதிகாரி நீதிமன்ற மூலம் வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாக 80 நாளைக்கு நிறுத்திவைக்க உரிமையுண்டு. தேசத்தின் சுகாதாரத்தையோ, பாதுகாப்பையோ ஆபத்துக்குள்ளாக்கும் பட்சத்தில் இத்தகைய நீதிமன்ற உத்தரவை அவர் பிறப்பிக்கலாம். (நியாய

படிப்பகம்

www.padippakam.com


மற்ற முறையில் தொழிலாளருக்கு இன்னல் விளைக்கும் பழக்கங்களை நிறுத்துவிக்க நீதிமன்றத்தின் மூலம் கட்டளை பிறப்பிக்க தே. தொ. உ. ச. வுக் கிருக்கும் உரிமை முதலியனவும் விரிவாக்கப்பட்டன).

3. தொழிற் சங்கங்கள் சம்பந்தப்பட்டவரையில் ஏற்படக்கூடிய நியாய மற்ற தொழில் நடவடிக்கைகள் எவையென்பது முதன் முதலாக வரை யறுக்கப்பட்டது. வேலைநிறுத்தத்தைத் தொடக்கக்கூடாது என்ற உடன் படிக்கையை மீறினால் தொழிற்சங்கங்கள் மீது வழக்குத் தொடரலாம். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் செய்யும் செயல்களுக்குத் தொழிற் சங்கமே இனிமேல் பொறுப்புடையதாயிருக்கும். தொழிற் சங்கங்களின் சுகாதார, நலவுரிமை நிதிகள் கண்டிப்பாக மேற்பார்வை செய்யப்படும். தொழிலாளர் குறைபாடுகளைச் சங்கங்களே விசாரணை செய்ய வேண்டுமென்ற உரிமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்களின் பிரவேசக் கட்டணம் நியாயமற்றதாயிருக்கக் கூடாது. செய்யாத ஒரு கருமத்துக்குத் தொழிற் சங்கங்கள் பணம் வசூலிக்க முடியாது. பேரம் பேசும்போது கூட்டாகவே பேசவேண்டும். கட்டண விடயத்தில் சங்கம் தானாகவே பணத்தை வலாற் காரமாக வசூலிக்க முடியாது. கட்டணங் கொடுக்கத் தவறியதற்கன்றி வேறு கருமங்களுக்காக அங்கத்தவர் மீது சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரி வேறும் பல கட்டுப்பாடுகள் சங்கங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளன. கூட்டுப் பேரம் விடயமாக முதலாளி களை நீதிமன்றத்துக்கு இழுக்கலாம்.

4. தொழிற் சங்கங்கள் பின்வருவனவற்றுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். தொழிற்சங்க உத்தியோகத்தர் பெயர், அவர்களுடைய சம்பளம், தேர்ந்தெடுக்கப்பட்ட முறை என்பனபற்றித் தொழிற் சங்கம் தகவல் கொடுக்க வேண்டும்.

5. தொழிற் சங்கங்கள், சமட்டித் தேர்தல்களுக்கு நிதி உதவக்கூடாது. அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. முதலாளிக்கு வாக்குச் சுதந்திரமுண்டு. வாணர் சட்டத்திலுள்ளதிலும் பார்க்க இச்சட்டத்தில் இஃது அழுத்திக்கூறப்பட்டுள்ளது.

6. இரண்டாந்தரப்பகிஷ்காரமும், வட்டார வேலைநிறுத்த அதிகாரமும் சட்ட விரோதமாக்கப்பட்டன.

7. அதிகாரிகள் (போர்மென்) கூட்டுப்பேரம் செய்ய பாதுகாப்பு அளிக் கப்படவில்லை. முதலாளி விரும்பினால்தான் அவர்களோடு கூட்டுப் பேரம் பேசலாம்.

8. கூட்டுப்பேர ஒப்பந்தத்தை மறுபடி புதுப்பிக்க விரும்பாவிட்டால், 60 நாள் வேலை நிறுத்தமற்ற தவணை கொடுக்க வேண்டுமென விதிக்கப் பட்டுள்ளது. இந்தத் தவணைக்கிடையில் வேலை நிறுத்தஞ் செய்யுந் தொழி லாளர் வாணர் சட்ட உரிமைகளை இழப்பர். நடுத்தீர்ப்பு கட்டாயப்படுத் தப்படவில்லை. தொழிற்பகுதியோடு சம்பந்தமற்ற புதிய மத்தியட்ச சாத னம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



9. தே. தொ. உ. . மூன்று அங்கத்தவரிலிருந்து ஐந்து அங்கத்தவராக விரிவாக்கப்பட்டுள்ளது. அதற்குப் புதிய கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. புதிய கட்டுப்பாடுகளுக்கமைய அஃது அரைகுறை நீதி வழங்கும் தாபன மாகவும் அமைந்துள்ளது.

**தொழில் இயக்கத்தின் வருங்கால அந்தஸ்து**

1959 ஆம் ஆண்டின் லாண்ட்ரம்–கிரிப்பின் சட்டம் தொழிற் சங்கமும் முதலாளியும்சார்ந்த பணவிவகாரம் சம்பந்தமாகப் புதிய நிபந்தனைகளை விதித்திருக்கிறதென முன்னரே குறிப்பிட்டுள்ளோம். தே. தொ. உ. ச. அதிகாரஞ் செலுத்தாத இடங்களில் மாகாணங்கள் சட்டஞ் செய்ய உரிமை வழங்கியது. இரண்டாந்தரப் பகிஷ்காரத்தை நிராகரித்தது. சட்ட விரோதமான பொருள்கள்பற்றிய உடன்படிக்கையை வரையறுத்தது.

இந்தச் சீர்திருத்தச் சட்டங்கள் தொழிற் சங்கங்களைப் பெரிதும் பாதிக்கு மெனத் தொழிலியக்கத் தலைவர்கள் தீர்க்கதரிசனம் கூறியபோதிலும் அத்தகைய ஆபத்து அவற்றுக்கு உண்டாகவில்லை. கூட்டுப் பேரத்தை அவை இப்பொழுதும் நடத்தி வருகின்றன. பல தே. தொ. உ. ச. தேர் தல்களில் பேரம் பேசும் பிரதிநிதிகள் என்ற முறையில் அவை வெற்றிகள் பல வற்றைப் பெற்றுள்ளன. அச்சுத் தொழில் போன்ற தொழில்களில், தொழிற் சங்க அங்கத்தவரையே வேலைக்கமர்த்த வேண்டுமென்ற நியதி நீக்கப்பட்டிருந்தபோதிலும், தொழிலாளர் எல்லாரும் தொழிற் சங்க அங்கத்தவராகவேயிருக்கிறார்கள். பலம் குறைந்த தொழிற் சங்கங்களை இந்தச் சட்டங்கள் பாதிக்கின்றனபோல்தெரிகிறது. (உதாரணமாக, தெற்கு மாகாணங்களில் தொழிற்சங்கம் தாபிக்க விரும்புதல்). ஆனால் பலமுள்ள சங்கங்களுக்கு இவற்றால் தீங்கு கிடையாது.

இச்சட்டங்களை நிறைவேற்றியவர்கள் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறை வேறியதாகத் தெரியவில்லை. சட்டம் நிறைவேறியபின் சமாதானம் நிலவிய தெனக் கூறவும் முடியாது. 1959–60 இல் சரித்திரத்திலே காணாத நீண்ட வேலைநிறுத்தமொன்று உண்டானது. அது எஃகுத் தொழிலாளர் சம்பந்தமானது. இது பெரிய நட்டத்தை உண்டாக்கிற்று. நிர்வாகிகள் புதிய வேலை நிபந்தனைகளை ஏற்படுத்தலாமா என்ற பிரச்சினை சம்பந் தமாகவே இந்த வேலைநிறுத்தம் உண்டானது.

நாட்டின் பொருளாதார நன்மைக்கும், தேசத்தின் பாதுகாப்புக்கும் அவசியமான முக்கியத் தொழில்களில் வேலைநிறுத்தமுண்டாவதைப் பொதுசனமோ அரசாங்கமோ ஆதரிப்பதில்லை. இத்தகைய வேலை நிறுத் தங்கள் சமூகத்துக்குப் பெரிய நட்டத்தை உண்டாக்கும். "பொதுமக்களின் பாதுகாப்புக்கு விரோதமாக எவராவது எப்போதாவது, எங்கேயாவது வேலை நிறுத்தஞ் செய்யக் கூடாது" என பொஸ்டன் பொலிஸ் வேலைநிறுத்தஞ் சம்பந்தமாக 1919 இல் தேசாதிபதி கல்வின் கூலிட்ஜ் கூறி, வேலை நிறுத் தத்தைத் தடுத்துவிட்டார். இந்தக் கொள்கையே முக்கியமான தொழில்க ளில் இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. சட்டம் எப்படியிருந்தாலும்,

www.padippakam.com




முக்கிய தொழில்களில் வேலைநிறுத்தம் காலவரையறையின்றி நிகழ் வதை அரசாங்கம் வழக்கமாக அனுமதிப்பதில்லை. நெருக்கடியான பிரதேசங்களில் வேலைநிறுத்தத்தைத் தடுப்பதற்கு டாவ்ட்-ஹாட்லிச்சட்டத் தை ஜனாதிபதிகளான ட்ரூமனும், ஐசன்ஹோவரும் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமுண்டாயிற்று.

**யுத்தத்துக்குப் பின்னிருந்த சம்பளத்திட்டம்.**

யுத்த காலத்திலே யுத்தத்தொழிற் சங்கம் (யு. தொ. ச.) மணி நேரச்சம்பள விகிதத்தைச் சட்டப்படி நிலையுள்ளதாக்கிற்று. தொழிலாளர் மேலதிகமாக வேலைசெய்யத் தொடங்கியதால் சம்பளங்கள் உயரத் தொ டங்கின. ஆனால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டே சென்றபடியாலும், உற்பத்திப்போக்கு உயர்ந்ததாலும் மணிநேரச் சம்பளவீதம் போதா தெனத் தொழிலாளர் எண்ணினர்.

யுத்தம் முடிந்ததும் தொழிலாளருடைய கோரிக்கைகள் தலைகாட்டத் தொடங்கின. சம்பளத்தை உயர்த்தவேண்டுமென எங்கும் கிளர்ச்சி நடைபெற்றது. அதிகப்படியாக வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லா மற்போகவே தொழிலாளர் வருமானம் குறைந்தது. அதனால் அவர்கள் சம்பள விகிதத்தை 30 வீதமாக உயர்த்துமாறு கேட்டனர். அதன் பயனாக எங்கும் வேலைநிறுத்தமுண்டாயிற்று. நிலக்கரித் தொழில், எஃகுத்தொழில், இறைச்சித் தொழில் என்பவற்றிலே 1946 இல் வேலை நிறுத்தங்களுண்டாயின. படம் 4 இலே வேலைநிறுத்தம் சம்பந்தமான விபரம் காட்டப்பட்டுள்ளது.

போரையடுத்து உடனடியாக வேலைநிறுத்தங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன.




படம் 4. வேலை நிறுத்தங்களால் இழந்த நேரம் பத்துலட்ச ஆள்–நாள் கணக்கில் அளவிடப் பட்டாலும், வேலை செய்த மொத்தத் தொழில்நாளின் சதவீதமாக இதனைக் கணித்தால், அது ஒரு போதும் $1\frac{1}{2}$ சதவீதமாக இருக்காது; சராசரியாக ஒரு சதவீதத்தின் அரைவாசிக்கும் குறைவாகவே காணப்படும். (மூலம் : அமெரிக்கத் தொழில் திணைக்களம்.)

www.padippakam.com



ஈற்றில் முக்கிய தொழில்களிலே மணிநேரத்துக்கு $18\frac{1}{2}$ சதவீதமாகச் சம்பளம் உயர்த்தப்பட்டது. இந்த முறையைப் பலதொழில்கள் பின் பற்றின. இதுவே சம்பள உயர்வில் முதற்படி. பின்னரும் பல படியாகச் சம்பள உயர்வு உண்டானது. இவ்வாறு யுத்தத்துக்குப்பின் புதியதொரு போக்கு நிலவியது. (1) சம்பள உயர்வு வேண்டுமென மேன்மேலும் கேட்கப்பட்டது. (2) முக்கியமான ஒரு தொழிலிலே ஒரு முறை பின்பற்றப் பட்டால், அதை மற்றத்தொழில்களும் பின்பற்றத்துவங்கின. (3) புதிய சம்பள உயர்விஞல் உற்பத்திச் செலவும் விலைவாசிகளும் உயர்ந்தன. பின்னர் அடுத்தபடியாக மேலும் சம்பள உயர்வு வேண்டுமெனத் தொழி லாளர் கோரத் துவங்கினர். (4) 1950இற்குப் பின்னர் தொழிலாளர் தமக்கு இளைப்பாறற்சம்பள வசதி, காப்புறுதி, விடுமுறை, குடும்பத்துக்கு இலவச வைத்தியம் என்பவற்றைக் கேட்டனர். உறுதியாக்கப்பட்ட வருடாந் தச் சம்பளம் வேண்டுமென வால்டர் ரூதர் என்பவர் கிளர்ச்சி செய்து பெற்றுக் கொண்டார். இது மோட்டார் தொழிலாளருக்குக் கிடைத்தது. இப்போது பெரிய தொழில்களில் 32 மணி நேர வேலைக்கு 40 மணிநேரச் சம்பளம் வேண்டுமெனக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சரித்திரபூர்வமாகப் பார்க்குமிடத்து நமது தேசிய உற்பத்தியில் வருடா வருடம் சராசரி இரண்டு அல்லது மூன்று வீத அதிகரிப்புக் காணப்படுகிறது. காசுச் சம்பள உயர்வு வருடாவருடம் 5 வீதமாக உயருமாஞல் அதஞல் என்ன விளைவுகளுண்டாகும் ? உற்பத்திச் செலவு அதிகரிக்கலாம். அதஞல் விலைவாசிகள் உயரலாம். இந்தவகையான ஏற்றம் பின்னர் ஓய்வில்லாமல் வளர்ந்து கொண்டே செல்லலாம். சம்பளம் உயர விலைவாசி உயரும் ; விலைவாசி உயரச் சம்பளம் மறுபடி உயரவேண்டி வரும். 1945-1947, 1950-51, 1956-60 என்ற ஆண்டுகளிலே மக்களை இடர்ப்படுத்திய பிரச்சினை இதுவே.

நமது பொருளாதாரம் விலைவாசிகளை ஒரே நிலையில் வைத்திருப்பதோடு, எல்லாருக்கும் வேலை வழங்குமா ? 1960 இல், சம்பள உயர்வு விலைவாசி களை உயர்த்திக்கொண்டு வருகிறது. இப்பிரச்சினை எல்லாராலும் பேசப் பட்டுவருகிறது. மேல்வரும் அத்தியாயங்களில் இப்பிரச்சினைபற்றி அடிக்கடி ஆராய்வோம்.

**முடிவு.** மேல் வரும் அத்தியாயங்களிலே பொதுப்படையான சம்பள விலைப் பிரச்சினை பற்றி ஆராய்வோம். இந்தக் கட்டத்திலே ஓர் எச்சரிக்கை அவசியம். யுத்தத்துக்குப் பின்னர் எங்கும் சம்பள உயர்வு உண்டான தெனப் பொதுப்படையாய்க் கூறிவிட முடியாது. பலதொழில்களில் சம்பளம் உயர்த்தப்படவில்லை. "சம்பள உயர்விஞல் விலைவாசிகள் உயர்ந்தன" என்று கூறிக்கொள்ளக்கூடாது. "விலைவாசிகள் அதிகரித்துப் பணவீக்கமுண் டானபடியாலேதான் சம்பளங்கள் உயரவேண்டிவந்தன" என்று கொள்ளலாம்.

www.padippakam.com



தொழிற் சங்கங்கள் சம்பளத்தை உயரச் செய்தனவா ? விநியோக, தேவை விதிகளுக்கு, கூட்டுப்பேரம் பொருத்தமுடையதாயிருக்கிறதா ? சம்பளங்களை உயர்த்துவதில் தொழிற் சங்கங்கள் வெற்றிபெறுமாஞல் ஏற்படும் விளைவுகளெவை ? தேசீய வருமானம், அதன் செறிவு, விலை வாசிகள், உற்பத்தி என்பவற்றின் அடிப்படைத் தத்துவங்களை ஆராய்ந்த பின்னரே இந்த வினுக்களுக்கு விடை கூறலாம். இந்த நூலின் இண்டாம் மூன்றும் நான்காம் பகுதிகளிலும், முக்கியமாகச் சம்பளச் சிக்கனம் என்பதை விளக்கும் 28 ஆம் அதிகாரத்திலும் இவைபற்றிக் கடைசியாக ஆராய்வோம்.

**சுருக்கம்**

1. அமெரிக்கப் பொருளாதாரத்திலே தொழிற்சங்கங்கள் முக்கியமான தோர் இடம் வகிக்கின்றன. அங்கத்துவரீதியிலும், செல்வாக்குச் செலுத்தும் வகையிலும் அவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவற்றின் தற்கால அமைப்பு மூன்று அடிப்படையிலுள்ளது : (1) உள்ளூர்ச் சங்கங்கள் (2) தேசீயச் சங்கங்கள் (3) சங்கங்களின் சம்மேளனம். (அ. தொ. ச—தொ. தா. ச.). இவற்றில் முதலிரண்டுமே முக்கிய மாணவை.

2. தொழிற்சங்கமொன்றை தே. தொ. உ. ச. தேர்தலில் பேரம்பேசும் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டால், நிர்வாகிகளும், தொழிலாளர் பிரதி நிதிகளும் ஒன்றுகூடி, சம்பள விகிதம், வேலை நிபந்தனை, உற்பத்திப் பிரமாணம், தொழிற்சங்கச் செல்வாக்கு, சிரேட்டத்துவ உரிமை, குறை நிறைகளை விசாரிக்கும் நடவடிக்கை என்பனபற்றி ஒப்பந்தஞ் செய்து கொள்வர்.

3. 1880 இல் அமெரிக்கமுறையில் அரசியல் சார்பில்லாத சமட்டித் தன்மை வாய்ந்த தொழிற்சங்கம் தாபிக்கப்பட்டது. 1933 ஆம் ஆண்டி லிருந்து தொ. தா. ச. வும் ஈற்றில் அ. தொ. ச. வும் வினைத்திறமை யுள்ள தொழிலாளரில் முற்றுய்த் தங்காமல் பெரிய தொழில்களிலுள்ள தொழிலாளர்களைச் சம்மேளனமாகச் சேர்த்தன.

4. 1930 ஆம் ஆண்டையடுத்த காலம்வரை தொழிற் சங்கங்களுக்கு எதிர்ப்பு இருந்து வந்தது. கடைசியில் அரசாங்கம் கூட்டுப்பேரஞ்செய் வதை ஆதரித்தது. (1935) வாணர் சட்டம் தொடக்கம், கைத்தொழில் நிலையங்களுக்கும் தொழிற் சங்கங்களமைக்கப்பட்டன. அதன் பயனுக, நாட்டிலே குழப்பங் குறைந்தது. ஆனல் கூட்டுப் பேரம் நடைபெற்றது. 1947 இன் பின்னர் காங்கிரஸ் தான் தொழிலாளரை அதிகம் ஆதரிப்ப தாக உணர்ந்து, டாவ்ட் ஹாட்லி சட்டத்தையும் லாண்ட்ரம்—கிரிப்பின் சட்டத்தையும் இருபக்கத்திற்கும் சார்பாக நிறைவேற்றியது.

5. யுத்தத்தின் பின்னர் உண்டான ஒரு பிரச்சினை சம்பள உயர்வுக்கும் விலைமட்டத்துக்குமுள்ள சம்பந்தமாகும். வருடத்தில் உண்டாகும் 2 அல்

www.padippakam.com



லது 3 வீத உற்பத்தி அதிகரிப்புக்கு மேலாகச் சம்பளம் படிப்படியாக உயருமானல், விலே மட்டம் பெரிதும் ஏறிவிடக்கூடும்.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினேகள்**

1. தொழிற்சங்க அங்கத்துவம் எத்துணே விரிவானது? தொழிற் சங்கங்கள் எப்போது அதிகரித்தன?

2. அமெரிக்காவின் தொழிலாளர் சங்கங்களேப் பற்றி விபரிக்க. தொழிற் சங்க இயக்கத்தின் வெவ்வேறு படிகளே விவரிக்க. உங்கள் பிரதேசத்தி லுள்ள பெரிய சங்கம் எது?

3. சாமுவல் கொம்பேர்ஸ் என்பவரோடு சம்பந்தப்பட்ட கொள்கை களேயே அமெரிக்கத் தொழிற் சங்கம் பின்பற்றி வந்திருக்கிறது. அக் கொள்கைகள் என்ன? 1933 இன் பின்னரும் தொ. தா. ச. தோன்றிய பின்னரும் இந்தக் கொள்கைகள் எவ்வாறு மாற்றமடைந்தன? ஐரோப் பிய சமூகவாதக் கொள்கையைப் பின்பற்றி அமெரிக்கத் தொழிலாளர் ஏன் அரசியலில் அதிக அக்கறை காட்டவில்லே?

4. தொழிலாளரும் முதலாளிமாரும் ஒருவரையொருவர் கடுமையாக எதிர்க்கும்பொழுது அனுசரிக்கும் தந்திரங்களேக் குறிப்பிடுக. மஞ்சள்நாய் ஒப்பந்தம், ஒப்பந்தத்துக்கு விரோதமாகத் தொழில் செய்ய உடன்படுபவன், வேலே செய்ய விடாது தடுத்துவிடல் என்பவற்றை விளக்குக.

5. சமாதானபூர்வமான கூட்டுப் பேரம் என்பதற்கு உதாரணந்தருக.

6. வாணர் சட்டத்துக்கு முன்னும் பின்னும், சட்டசபைகளும் நீதிமன்றங் களும் எவ்வாறு தொழிலாளர் விடயத்தில் மனம் மாறின என்பதை விவரிக்க.

7. டாவ்ட் ஹாட்லி சட்டத்திலும் சமீபகாலச் சட்டங்களிலுமுள்ள முக்கிய மான நிபந்தனேகளேக் குறிப்பிடுக. இப்போது நீர் எவ்விதமான மாற்றங் களே விரும்புவீர்?

8. பாதுகாப்புச் சீர்திருத்தச் சட்டம் உருவான வரலாற்றைக் கூறுக.

9. பொலீஸ்காரர் வேலேநிறுத்தஞ் செய்யலாமா? தபால் சேவகர்? பாற்காரர்? வேறெவரும்?

10. "சம்பளம் குறையக் குறைய அவற்றின் விகிதம் மாருதிருக்கும்" இஃது உண்மையாயிருப்பது எதனுல்?

11. பின்வருவனவற்றை ஆராய்க.

தேசீயத் தொழிற்சங்கம், அ. தொ. ச.—தொ. தா. ச. சமட்டி (சம்மேளனம்), கூட்டுப் பேரம் , நடுத்தீர்ப்பு.

வாணர்சட்டம் டாவ்ட்–ஹாட்லிசட்டம், லாண்ட்ரம்–கிரிப்பின் சட்டம், பகிஷ் காரம் ; தடையுத்தரவு. வேலேநிறுத்தம், சம்பள உயர்வு விலேவாசிகளே உயர்த்துதல்.

www.padippakam.com

# ஒன்பதாம் அத்தியாயம்.

## பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கு: செலவு, பிரமாணம், நிதி.

*அரைவாசி நேரத்திற்கு அதிகமாக அரைவாசிக்கு அதிகமான பேர் கூறுவது சரியாயிருக்குமென்ற சந்தேகமே சனநாயகம்.*

**ஈ. பி. வைட்**

தற்காலப் பொருளாதார ஆராய்ச்சியில், அரசாங்கத்தின் நடவடிக்கையைப்பற்றிய ஆராய்ச்சி முக்கியமானதோர் இடத்தை வகிக்கிறது. அரசாங்கத்தின் செலவு பெரிதளவில் கூடியிருப்பதையும், பொருளாதார வாழ்வை நேரடியாக ஒழுங்குசெய்யும் முறை விரிவாக்கப்பட்டிருப்பதையும் கொண்டு இதனை அறியலாம். இந்த அத்தியாயத்திலே அரசாங்கச் செலவுபற்றி ஆராய்வோம். அடுத்த அத்தியாயத்திலே அரசாங்க வரி பற்றியும் உள்ளூர் நிதி, மத்திய நிதி என்பனபற்றியும் ஆராய்வோம்.

### அரசாங்கச் செலவின் வளர்ச்சி

முதலாவது உலக மகா யுத்தத்துக்கு முன்னர் மத்திய அரசாங்கத்தின் செலவும், மாகாண அரசாங்கங்களின் செலவும், தலத்தாபன ஆட்சி சம்பந்தமான செலவும் நமது தேசிய வருமானத்தில் பன்னிரண்டில் ஒரு பகுதிக்குச் சிறிது அதிகமாயிருந்தது. இரண்டாவது மகாயுத்தத்தின் போது தேசிய வருமானத்தின் அரைப்பங்கை அரசாங்கம் செலவுசெய்ய வேண்டியதாயிற்று. ஒரு நூற்றுண்டின் மூன்றிலொருபங்கு காலத்திலே அமெரிக்க அரசாங்கத்தின் செலவு 1913 ஆம் ஆண்டிலே 300 கோடி டொலராயிருந்தது; 1960 இல் 14,000 கோடி டொலராக உயர்ந்தது.

இந்த மாற்றம் யுத்தகாலத்துக்குரிய தற்காலிகமான விளைவு எனக் கொள்ள முடியாது. ஒரு நூற்றுண்டுக்கதிகமாகவே தேசிய வருமானமும் உற்பத்தியும் உயர்ந்துகொண்டே வந்தன. மேலும் எல்லா நாடுகளிலும் அரசாங்கச் செலவு விரைவாக அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒவ்வோர் அவசரகாலத்திலும் (அதாவது யுத்தத்திலும், வியாபார மந்தத்திலும்) அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிகரித்தன. அவசரகாலம் ஒவ்வொன்றும் கழிந்தபின்னர் செலவுகள் பழைய நிலைக்கு மாறுவதாகத் தெரியவில்லை.

செலவு யுத்தகால உச்சநிலையிலிருந்து இறங்கிவிட்டபோதிலும், பழைய 1000 கோடி டொலருக்கு இறங்கவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் தான் இந்த 1000 கோடி மிகப் பெரிய தொகையெனக் கருதப்பட்டது. எதிர்காலத்திற்கூட எந்தக்கட்சி ஆதிக்கத்துக்கு வந்தபோதிலும், அரசாங்கச் செலவு மேலும் ஏறிக்கொண்டே போகக்கூடிய தன்மை காணப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com




படம் 1, தேசீய வருமான வளர்ச்சி சம்பந்தப்பட்ட அளவில் அரசாங்கத்தின் செலவையும், சமட்டிக் கடனையும் சரித்திரபூர்வமாகக் காட்டுகிறது. அட்டவணை 1, வளம் மிகுந்த தேசங்களில் அரசாங்கம் அதிக செலவு செய்வதையும், வறிய நாடுகள் அவ்வாறு செய்யாதிருப்பதையுங் காட்டுகிறது.

பொது நிதி சம்பந்தமான தகவல்களிவை. சிலர் இவற்றையிட்டுத் துக்கப்படலாம். சிலர் இவற்றை விரும்பலாம். இவற்றிலிருந்து நாட்டுப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கு அதிகமென்பது தெரிய வருகிறது. தற்காலப் பொருளாதார நூல்கள் பொதுநிதியை ஒரு மூலேயில் ஒதுக்கிவிட்டு ஆராய்ச்சி நடத்த முடியாதென்பது இவற்றிலிருந்து விளங்குகிறது.

**அரசாங்கக் கட்டுப்பாட்டின் வளர்ச்சியும் அரசாங்கம் ஒழுங்கு செய்யும் விதமும்.**

அரசாங்கத்தின் கூட்டான செலவு அதிகரித்துள்ளமை ஒரு விடயம். அரசாங்கம் தேசீய உற்பத்திகளில் நேரடியாகத் தலையிடுவதோடு, பொருளாதார விடயங்களிலும் தலையிட்டுப் பல சட்டங்களைச் செய்துள்ளது. நிர்வாகக் கட்டளைகளையும் விதித்துள்ளது.

**தேசீயவருமானம் பெருகுவதை உத்தேசித்து அரசாங்கச் செலவும் அதிகரிக்கும் போக்குடையது:**




படம் 1.—அரசாங்கச் செலவினமானது, சமட்டி, மாகாணம், தலத்தாபனம் என்பவற்றின் வருடாந்தச் செலவையடக்கும். இஃது ஒரு வகையானது. விகிதப்படம், நிலைக்குத்து இடைவெளிகள் சதவீதங்களின் மாறுதல்களைக் காட்டும். (மூலம்: ஐ. அ. வர்த்தகத் திணைக்களம்.

www.padippakam.com



**வளமுள்ள செல்வமிக்க நாடுகளிலே தேசிய உற்பத்தியில் அரசாங்கத்தின் பங்கே மிகக்கூடுதலானது:**

| முன்னேறிய நாடுகள். | யுத்தத்துக்குப் பின் சராசரிவரி வீதம். | முன்னேறாத நாடுகள். | யுத்தத்துக்குப் பின் சராசரிவரி வீதம். |
|---|---|---|---|
| பிரிட்டன் | 35 | இலங்கை | 19 |
| பிரான்சு | 31 | பிரேசில் | 18 |
| கனேடா | 27 | பேட்டோரீக்கோ | 17 |
| மேற்கு ஜெர்மனி | 27 | இந்தோனீசியா | 15 |
| ஐக்கிய அமெரிக்கா | 26 | கொலம்பியா | 10 |
| அவுஸ்திரேலியா | 25 | மெக்சிக்கோ | 10 |
| ஜப்பான் | 22 | பாகிஸ்தான் | 10 |
| இத்தாலி | 20 | இந்தியா | 8 |

**அட்டவணை 1. அரசாங்கவருமானம் தேசிய உற்பத்தியில் ஒரு வீதமாக.** முன்னேறாத நாடுகள் அதிக வரிவிதித்துக் குறையவே செலவுசெய்யும். முன்னேறியநாடுகள் அப்படியில்லை. அதிக வருமானம் உண்டானுல் முன்னரிலும் அதிகம் மற்றவர்களில் தங்கியிருக்கவேண்டி வரும். தனிப்பட்ட விடயங்களுக்கு அதிகம் செலவு செய்யவேண்டியதில்லை.

பத்தொன்பதாம் நூற்ருண்டிலே அமெரிக்கா தலையிடாக் கொள்கையை அனுசரித்தது. இதையே கார்ளேல் " அராஜரீகமும் பொலீஸ் ஆட்சியும் " எனக் கூறினர். இதனுல் பொருளாதார முன்னேற்றமுண்டானதோடு மனிதருடைய சுதந்தரம் பாதிக்கப்படவில்லை. இடைக்கிடை வியாபார நெருக்கடிகளும், திருப்பிப் பெறமுடியாத இயற்கைப் பொருள்களின் வீண் அழிவும், மிக்க வறுமையும், மிக்க செல்வமும், சுயநலங்கருதிய கூட்டத்தினர் அரசாங்கத்தைத் தீய வழிகளில் நடத்துவிப்பதும், போட்டியை ஏகபோக உரிமை சிலசமயம் ஆட்சிசெய்வதும் ஆகிய இன்னேரன்ன விடயங்கள் நடைபெற்றன.

" மிகக் குறைவாக ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தும் ஆட்சியே சிறந்த ஆட்சி " என்ற கொள்கையில் இக்கால மனிதர்க்கு நம்பிக்கையில்லை. மத்திய அரசாங்கத்துக்கும் தலத்தாபனங்களுக்கும் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரங்களுக்குத் தாராளமாக வியாக்கியானங் கொடுக்கப்பட்டது. அதன் பயனுகப் பொதுமக்களின் நன்மை பாதுகாக்கப்பட்டதோடு பொருளாதார விடயங்களும் மேற்பார்வை செய்யப்பட்டன. ரயில் பாதைகளும் ஏனைய பொது வசதிகளும் அரசாங்க ஒழுங்கின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1887 இற்குப் பின்னர், சமட்டி மாகாண வியாபாரக்குழு என ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. இது மாகாண எல்லைகளைத் தாண்டும் ரயில் போக்குவரத்தை மேற்பார்வை செய்ய ஏற்படுத்தப்பட்டது. 1890 இற்குப் பின்னர் வியாபாரத்திலே ஏகபோக உரிமையைத் தடுப்பதற்காக ஷேர்மன் அன்டிடிரஸ்ட் சட்டமும் வேறு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. வங்கித்தொழிலும் நன்கு மேற்பார்வை செய்யப்பட்டது. 1913 இன் பின்னர் பெடரல் ரிசர்வ் வங்கி ஏற்படுத்தப்பட்டது. அஃது ஏனைய வர்த்தக வங்கிகளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



உதவி செய்து அவற்றை மேற்பார்வை செய்து வழிநடத்தி வந்தது. 1933 ஆம் ஆண்டு துவக்கம் வங்கியில் போட்ட பணங்களிற் பெரும்பகுதி பெடரல் டிபொசிட் இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷனுல் காப்புறுதி செய்யப் பட்டது.

1900 ஆம் ஆண்டையடுத்த வருடங்களில் துப்புரவான உணவு—மருந்து சம்பந்தமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வட்டிக்குப் பணங் கொடுப்போரின் கொடுமைகளைக் கட்டுப்படுத்தப் பல மாகாணங்களிலே சட்ட மியற்றப்பட்டது. 1929 ஆம் ஆண்டுக்கு முன்னும் பின்னும், பணவிவகாரங் கள் சம்பந்தமாக நடைபெற்ற ஊழல்களைத் தவிர்ப்பதற்காக பணச் சந்தைகளைக் கட்டுப்படுத்துஞ் சட்டங்களைப் பாதுகாப்புப் பரிவர்த்தனைக் கமி ஷன் முதலிய தாபனங்கள் மேற்கொண்டன.

சிறு பிள்ளைகளும் பெண்களும் வேலைசெய்யும் தொழிற்சாலைகளில் அவர்கள் நிலையைச் சீர்திருத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களைக் கோடுகள் ஆரம்பத்திலே அவ்வளவாக ஆதரிக்கவில்லை. காலப்போக்கிலே ஒரு காலத்தில் மிகத்தீவிரமான கொள்கைகளெனக் கருதப்பட்டவை மற் றொரு காலத்தில் சர்வசாதாரணமான கொள்கைகளெனவும், சில சமயம் பிற்போக்கான கொள்கைகளெனவுங்கூடக் கருதப்பட்டன. குறைந்த பட்சச் சம்பளச் சட்டம், தொழிலாளர் கட்டாய விபத்து நட்டஈட்டுச் சகாயச் சட்டம், கட்டாய வேலையின்மைக் காப்புறுதிச் சட்டம், ஓய்வுகாலப் பென்ஷன் சட்டம், ஆண், பெண், சிறுவர் ஆகியோர்க்குக் குறைந்தபட்ச வேலை நேரச் சட்டம், தொழிற்சாலை நிலை சம்பந்தமான சட்டம், கட்டாயக் கூட்டுப் பேரம், நியாயமான தொழில் உறவு என்பன சம்பந்தமான சட்டம் என்பவை சம்பந்தமாக மாகாண அரசும் பெடரல் அரசும் சட்டங்களை இயற்றின.

அரசாங்கம் தொழில் விடயங்களிலே பெரிதும் தலையிட்டமையை சரிவர அறிந்துகொள்வதானுல், சரித்திரக்கண்கொண்டு விடயங்களை ஆராய்வது அவசியம். புதிய ஒவ்வொரு நடவடிக்கையும் இரண்டு பக்கத்திலும் பலமான அரசியல் உணர்ச்சியைத் தூண்டியது. குடியரசுக்கட்சியைச் சேர்ந்த தியடோர் ரூஸ்வெல்ட் கொண்டு வந்த “ நியாயமான வழங்கல் ” கொள் கைகள் இந்தக் காலத்திலே சர்வசாதாரணமானவையெனக் கொள்ளப்படும். இவை அந்தக் காலத்தில் மிகத் தீவிரமானவையெனக் கருதப்பட்டன. இன்று அமெரிக்க அரசாங்கம் 19 ஆம் நூற்றுண்டுக் கொள்கைகளை அனு சரிப்பது அசாத்தியம். நடந்தேறியவற்றை மறுபடி மாற்றுவது முடி யாத காரியம். ஓமார் கய்யாம் கூறியதுபோல,

“ அசையும் விரல் எழுதிக்கொண்டே போகிறது ; எழுதிய பின் அசைந்து கொண்டே செல்கிறது. உங்கள் பக்தியோ, சாதுரியப் பேச்சோ, எழுதியதில் அரைவரியைக்கூட அழிக்க முடியாது. நீங்கள் விடும் கண்ணீர் முழு வதும் ஒரு சொல்லைக்கூட அழிக்கமாட்டாது. ”

படிப்பகம்

www.padippakam.com



சனநாயகம் அது விரும்பும் வகையான ஆட்சியையே பெறும். குறித்த தோர் அரசாங்க அதிகாரத்தை விரிவாக்கியமை நல்லதா தீயதா, நமது ஆட்சி முறையில் உள்ள நல்ல அமிசங்களைப் பாதுகாத்துத் திருத்துவதில் அக்கறையுள்ளவர்களின் ஆதரவை அது பெறவேண்டுமா ? என்பவற்றைச் சரித்திரம் பிற்காலத்திலேதான் சிலசமயம் வெளிப்படுத்தும். கெடுதியில் கொண்டுபோய் விடக்கூடிய வழிகளும் நல்ல நோக்கத்தைக் கொண்டிருப் பதை நாம் அரசியற்றுறையிலும் வேறு துறைகளிற்போல காண்கிறோம்.

பழையவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்று புதியவற்றுக்கு இடமளியா விட்டால் பழையதும் அழிந்துபோய்விடும். வளையாதபட்சத்தில் இரும்பு முறிந்துவிடும். நடைமுறையில் நிகழும் நிலைமைகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்காத கெட்டியான பொருளாதாரக் கொள்கை நின்று பிடிக்காது. விஞ்ஞானமும் தொழில் முறை நுணுக்கங்களும் பொருளாதார வாழ்வின் இயல்பான போக்குக்களை மாற்றுகின்றன. ஒரு பொருளாதாரத்திட்டம் தொடர்ந்து நல்ல பலன் தரவேண்டுமானால், நமது சமூகத்தாபனங்களும் கொள்கைகளும் புதியமாற்றங்களுக்கு ஏற்ற வகையில் மாறவேண்டும். சரித்திரக்கண்கொண்டு விடயங்களைப் பார்க்காவிட்டால் தீவிரவாதிகளோ, வைதீகக்கொள்கையினரோ இடைநடுவில் செல்வோரோ தமது நோக்கங் களை நிறைவேற்ற மாட்டார்.

அரசாங்க நடவடிக்கைகளைப் பொருளாதார முறையில் ஆராய்வதற்கு முன்னர், தற்போது என்ன நடக்கிறதென்பதைப் பற்றிய தெளிவானதோர் அறிவைப் பெற வேண்டும்.

**சமட்டியரசு, தலத்தாபனம், மாகாண அரசு என்பவற்றின் கடமை.**

அரசின் மொத்தச் செலவினத்தைப் பார்க்கும்போது அவை என் னென்ன நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கின்றன என்று பிரித்துப் பார்க்கும்போதுதான் அவற்றின் தொடர்பைக் காணலாம். அத்துடன் அவை அரசின் எவ்வெத்துறையைச் சேர்ந்தனவென்பதையும் பிரித்துணர்ந்து கொள்ளலாம்.

ஆட்சியில் மூன்றுபடியுண்டு. சமட்டியரசு, மாகாண அரசு, தலத்தாபன அரசு என்பன அவை. அரசாங்கச் செலவு சம்பந்தமாக இந்த மூன்று அரசுகளில், மாகாண அரசே முக்கியம் மிகக் குறைந்தது. அஃது இன்றும் உண்மையே.

முதலாம் உலக மாகாயுத்தத்துக்கு முன்னர் தலத்தாபனமே மிகமுக்கிய மான ஆட்சியுடையதாயிருந்தது. சமஷ்டி அரசு தேசிய இராணுவப் பாது காப்புக்கும், பென்ஷனுக்கும், பழைய போர்களின் பயனாக உண்டான வட்டிகளுக்கும் சில பொது வேலைகளுக்கும் பணம்கொடுத்தது. அத்துடன் நீதிபதிகளின் சம்பளங்களையும், காங்கிரஸ்காரரின் சம்பளங்களையும், அர சாங்க உத்தியோகத்தரின் சம்பளங்களையும் வழங்கிற்று. அதனுடைய வருமானம் பெரும்பாலும் மதுவரி, புகையிலைவரி என்பவற்றிலிருந்தே


www.padippakam.com



கிடைக்கிறது. அந்தக்காலத்திலே வாழ்வு எளியதாயிருந்தது. தலத்தாபனங்கள் பெரும்பாலான கடமைகளைச் செய்தன. வருமானத்திலே பெரும் பகுதியைத் தலத்தாபனமே வசூலித்தது. பெரும்பாலும் சொத்துடையவர்களிடமிருந்து கிடைக்கும் வருமானத்தை வசூலித்தது.

முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் எல்லாம் எவ்வாறு மாறின என்பதைப் படம் 2 காட்டுகிறது. மாகாண, தலத்தாபனச் செலவுகளைப் பார்க்குமிடத்துச் சமட்டி அரசே அதிக செலவுடையதாயிருக்கிறது.

**இராணுவப் பாதுகாப்பு நீங்கலான சமட்டிச் செலவினத்தைக்காட்டிலும் தலத்தாபன மாகாணச் செலவினம் விரைவாக அதிகரித்துள்ளது.**




படம். 2 பெரிய வியாபாரமந்தத்தின்போது சமட்டிச் செலவினம் விரைவாக உயர்ந்தது. யுத்தகாலத்தில் மேலும் உயர்ந்தது. இராணுவச் செலவு உயர்வாகவேயிருந்து வருகிறது. ஆனால் பாடசாலை, சாக்கடைக் கால்வாய், வீதியமைத்தல் என்ற தலத்தாபன ஆட்சி விடயங்களிலும் மாகாண ஆட்சி விடயங்களிலுமே செலவு அதிகரிக்கிறது. (மூலம் : ஐ. க. வர்த்தகத்திணைக்களம்.)

## சமட்டி ஆட்சிச் செலவு.

உலகத்திலே மிகப் பெரியதொழில் அமெரிக்க ஆட்சி நிர்வாகம் எனலாம். அது மற்றெந்தத் தாபனத்தையும்விட அதிகமான தட்டச்சு யந்திரங்களையும், சீமேந்தையும் வாங்குகிறது. சம்பளப் பட்டியல் மிகப்பெரியதொகை. அது பட்டுவாடாச் செய்யும் பணம் வேறெந்த ஒரு தாபனமுஞ் செய்யாத அளவு பெரியது. சமட்டிச் செலவுத் தொகை இலட்சம், பத்து இலட்சத்தில் அடங்கவில்லை. கோடானுகோடியாக இருக்கும் இந்தக் கணக்குகளைச் சொல்வதால் எவரும் அவற்றின் தாற்பரியத்தை உடனே அறிந்துகொள்வதில்லை. வீட்டிலிருந்து ஒருமைல் தூரம் என்று சொல்லும்போது நாம் ஒரு கருத்தைக் கொண்டுள்ளோம். ஆனால் சூரியன் எமது உலகத்திலிருந்து

www.padippakam.com



930 இலட்சம் மைலுக்கு அப்பாலுள்ளது என்றால் அதைப்பற்றி நாம் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அப்படியா என்று தலையை அசைத்து விடுவோம். பத்தாயிரம் இலட்சம் டொலர் செலவு என்று கூறும் பொழுது ஒவ்வோர் ஆணும், பெண்ணும், குழந்தையும் தலைக்கு ஆறு டொலர் கொடுக்க வேண்டியேற்படுகிறதென்னும்போது எங்களுக்கு ஓரளவு விளக்க முண்டாகிறது. சமட்டி ஆட்சிச் செலவு வருடத்தில் 8,50,000 லட்சம் டொலர் என்று கூறும்போது தலைக்கு 480 டொலர் ஆகிறது. அதாவது ஒரு வருடத்து வருமானத்தில் இரண்டு மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிடுவ தாகிறது.

1960 ஆம் ஆண்டு ஜுலை துவக்கம் 1961 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆந் தேதிவரையுள்ள 1961 ஆம் ஆண்டு பிஸ்கால் வருடத்தில் சமட்டி ஆட்சிச் செலவின் பல இனங்களுடைய முக்கியத்துவத்தை அட்டவணை 2 காட்டுகிறது.

முதல் நாலு வகைகள் கடந்த காலத்தில் நடந்த யுத்தங்களின் செலவையும் எதிர்கால யுத்தச் செலவுகளையும் காட்டும். சமட்டிச் செல வில் இந்த இனங்கள் $\frac{4}{5}$ ஐக் காட்டுகின்றன. அத்துடன் முன்னைய யுத்தகாலங்களில் உண்டான செலவுகளின் மட்டத்துக்கு மேலதிகமான செலவுகளையும் இது காட்டுகிறது. இவை மதிப்பீடுகள். சர்வதேச நெருக்கடி நிலை மாறினால் இவையும் மாறக்கூடும்.

**இராணுவப் பாதுகாப்பு, சென்றகால யுத்தங்கள் என்பவற்றுக்காகவே சமட்டிச் செலவிற் பெரும் பகுதி செல்கிறது :**

| | மதிப்பு பத்தாயிரம் இலட்சம் டொலர் | மொத்தத்தின் வீதம் |
|---|---|---|
| தேசியப் பாதுகாப்பு | 45.6 டொ. | 57 |
| பழையயுத்தவீரரின் பாதுகாப்பும் நலன்களும் | 5.5 | 7 |
| பொதுக்கடன் வட்டி | 9.6 | 12 |
| சர்வதேசவிவகாரமும் பணவிடயமும் | 2.2 | 3 |
| இயற்கை வளம் | 1.9 | 2½ |
| விவசாயமும் விவசாய சேவையும் | 5.6 | 7 |
| சமூகப்பாதுகாப்பு, நன்மை, சுகாதாரம் | 4.6 | 6 |
| வர்த்தகம், வீடமைத்தல் | 2.7 | 3 |
| வேறு, பொது அரசாங்க நிர்வாகம் உட்பட | 2.1 | 2½ |
| மொத்தச்செலவு : | 79.8 டொ. | 100 |

**அட்டவணை 2.** 1961 ஆம் பிஸ்கால் ஆண்டிலே ஏற்படக்கூடியதெனக் கணக்கிடப்பட்ட சமட்டி அரசின் செலவு. முதல் நாலு செலவினமும் முழுச் செலவினத்தின் 79 வீதமாகும். எனவே சமாதானகால சிவில் செலவு மொத்தத்தில் ஐந்திலொரு பகுதியாகும். யுத்தத்துக்கு முந்திய காலமானால் விகிதம் மாறியிருக்கும். (மூலம் : பட்ஜெட் செயலகம்)

www.padippakam.com



ஐந்தாவது செலவு வகையின் பெரும்பகுதி செண்லோறன்ஸ் கடற் பாதைத் திட்டம், ரி.வீ.எ. திட்டம் போன்றவற்றுக்குச் செலவு செய்யப் படுகிறது. ஏனைய செலவினங்கள் தாமாகவே விளக்கந்தருவன. விவ சாயிகட்கு உதவி செய்தல், சகாயந் தேவைப்பட்டவர், வயதுபோனவர், வலது குறைந்தவர் போன்ருேர்க்கு உதவிசெய்தல், தொழில், கல்வி சுகாதாரம் என்பவற்றுக்குச் செலவு செய்தல் என்பன இவற்றில் அடங் கும். கடைசிச் செலவினத்துக்கு முன்னர் பெரிய வீதிகளைப் பரிபாலிப்பதும் உள்ளூர்ப் பாதுகாப்பும் சேர்க்கப்பட்டுள்ளன.

கடைசிச் செலவினத்திலே ஆட்சியை நடத்துஞ் செலவு, நீதிமன்றங்கள் செலவு, நிர்வாகச் செலவு என்பன சேர்ந்துள்ளன. சமட்டிச் செலவின் பெரும் பகுதியும் கடனும், யுத்தத்தாலும் கெடுபிடி யுத்தத்தாலு முண்டானதே. அவை வியாபார மந்தத்தினுலும் பொதுநல அபிவிருத்தித் திட்டங்களை நிர்வகிப்பதினுலும் ஏற்பட்டவையல்ல என்பதை அழுத்தமாகக் கூற வேண்டும்.

**அரசாங்கத்தின் மாறும் கடமைகள்**

கடந்த 25 வருடங்களாகப் பெரிய அரசியல் மாற்றங்களுண்டாகியிருக் கின்றன. பொருளாதாரத்தில் எத்தகைய பெரிய மாற்றங்களுண்டாயின? பரம்பரையான முதலாளித்துவத்திட்டத்திலிருந்து எவ்வளவு தூரம் விட யங்கள் மாறிவிட்டன? இவ்விஞக்களுக்கு விடை தருவதாஞல் அரசாங் கத்தின் நடவடிக்கைகளை நாலு தலைப்பின்கீழ் ஆராய வேண்டும்.

1. **நேர்முகமான கட்டுப்பாடுகள்.** அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் பெரு கின என்பதை நேரத்தோடு குறிப்பிட்டுள்ளோம். இந்தக் கட்டுப்பாடு களிலே பெரும்பாலானவற்றை “திட்டம்” எனறு கூறமுடியாது. இன்றும் அரசாங்கத்தின் பல நடவடிக்கைகள் சந்தை விலையை அனுசரித்தே நடை பெறுகின்றன. ஆனுல் அரசாங்கத்தின் தலையீடுபற்றிப் பொருளாதார முறையில் ஆராய்வது பின்னர் விவாதிக்கப்பட வேண்டியதொன்று.

2. **சமூக முறையில் நுகர்வு.** அரசாங்கத்தின் செலவு அதிகரித்திருப்ப தைக்கொண்டு நமது தேசிய உற்பத்திகளைத் தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட சொந்தப் பணத்தைக் கொடுத்து வாங்கி அனுபவியாமல் சமூக முறையில் அனுபவிக்கும் முறை பெருகியுள்ளது. ரயில் பாதையில் பிரயாணஞ் செய்வதற்கு விசேட கட்டணம் கொடுப்பதுபோலப் பொது வீதிகளில் பிரயாணஞ் செய்வதற்கும் நாம் நேரடியாகக் கொடுக்காமல் வரி மூலம் பணம் கொடுக்கிருேம்.

சமூக முறையில் அனுபவிக்கும் பொருள்களும் பணிகளும், தனியார் துறையிலேதான் பெரும்பாலும் உற்பத்திசெய்யப்படுகின்றன. அரசாங்கம் ஒரு மருத்துவக் கட்டிடத்தையோ, தட்டச்சுயந்திரத்தையோ பணம்கொடுத்து வாங்கலாம்; ஆனுல் இவற்றை உற்பத்தி செய்வோர் தனிப்பட்ட துறை யைச் சேர்ந்தவரே. உற்பத்திப் பொருள் விடயமாக அரசாங்கஞ் செய்யும்

www.padippakam.com


செலவெல்லாம் இப்படிப்பட்டதே. பொதுவுடைமை வாதம் என்பதை ஆரம்பித்த பொதுவுடைமைவாதிகள் கருதியது இதுவன்று—தொழிற்சாலை, நிலம்[1] போன்றவற்றை அரசாங்கம் உரிமையாக்கி நடத்துதல் பற்றியதன்று.

**3. அரசாங்கத்துறையின் உற்பத்தி.** அரசாங்கத்தின் மூன்றாவது வகையான நடவடிக்கை, நேரடியாக அரசாங்கமே உற்பத்தி செய்தலாகும். சமீபகாலத்தில் இந்த வகையில் அதிக முயற்சி நடைபெறவில்லை. தபால், பார்சல், அஞ்சல் என்பன அரசாங்கத்தின் கடமைகளாகவே பல காலமிருந்து வந்தன. எங்களுடைய தந்திச் சேவையையும், ரயில் சேவையையும் தனியாரே நடத்தி வந்தனர். விமான சேவையை அரசாங்கம் வைத்துக்கொண்டது. நகர சபைகள் தண்ணீர், வாயு, மின்சாரம் போன்ற சேவைகளை நடத்தி வந்திருக்கின்றன. ஆனால் தெலிபோன் சேவை அவை வசமில்லை.

ஓர் இடத்தில் எல்லைபோடுவதும் மற்றோர் இடத்தில் எல்லை போடாதிருப்பதும் ஓரளவு பார்த்தால் சரித்திர சம்பந்தமான காரணம் பற்றியதெனக் கொள்ளவேண்டும். மற்றொரு வகையில் அவை மாற்றமடைவதே காரணமெனலாம். பொருளாதார நோக்குடன் பார்த்தால் இந்த வித்தியாசம் காரணமற்றதெனக் கூறவும் முடியாது. பொதுசன நன்மைக்கான சேவைகளில் போட்டியிருக்கக்கூடாது. எனவே அவற்றைப் பொதுத்தாபனத்துக்குரிமையாக்கிப் பொதுத்தாபனத்தின் பரிபாலனத்தில் விட்டுவிடவேண்டும். ஆனால் சவர்க்காரம் போன்ற ஒரு பொருளின் உற்பத்தி அரசாங்கத்தின் கையிலிருக்கவேண்டுமென்று எவரும் நினைக்க மாட்டார்.

கடந்த 30 வருடமாக அரசாங்கத்துறையில் உற்பத்தி எவ்வளவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்தல் நன்மை பயக்கும். 'நியூடீல்' கொள்கையின்கீழ் ஒரு துறையில் அரசாங்க உற்பத்தி பெருகிற்று. அதுவே நீர்வீழ்ச்சி மின்சாரத்துறையாகும். (உதாரணம் : தெனெசி பள்ளத்தாக்கு அபிவிருத்தி, வடமேற்கிலே பொன்வீல் அணை, தென்மேற்கிலே ஹூவர் அணை, முதலியன). கனேடா, சுவீடன், பிரிட்டன் போல அமெரிக்காவிலே ரயில் பாதைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், எஃகுத் தொழிற்சாலைகள், விமானப் போக்குவரத்துக்கள், ரேடியோ, தொலைக்காட்சிச்சாதனம் என்பன அரசாங்கத்தின் பராமரிப்பில் இருக்கவில்லை.

தெனசி பள்ளத்தாக்கு அபிவிருத்தியைச் சமவுடைமைவாதமென்று சொல்வதில் தவறில்லை. இத்தகைய திட்டங்கள் மிகச் சிலவே சமீபகாலத்தில் தோன்றியுள்ளன.

அணுசக்தித்திட்டம் நியூ டீல் கொள்கைக்குப் பிந்தியது. பழையதொரு சொல்லைப் புதிய கொள்கைக்குப் பயன்படுத்துவது எத்துணைப் பொருத்தமற்றது. பிரமாண்டமானதோர் அணுச்சக்தித் தொழிலை ஆரம்பித்து நடத்துவதற்கு ஜெனரல் மின்சாரத் தொழிலுக்கு அரசாங்கம் நிரந்தரமாக

[1] பொதுவுடைமை, அபேதவாதம், பாசிச வாதம் என்பன பற்றி 37 ஆம் அத்தியாயத்திலே பார்க்க.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு சிறிய தொகையைக் கொடுக்கிறது. இதனைத் தனியார் துறைமுயற்சி யென்பதா? பொதுத்துறை முயற்சியென்பதா? ஜெனரல் மின்சாரத்தொழி லாளர் எல்லாரும் சிவில் சேவையிற் சேராதபடியால் தனியார் துறையைச் சேர்ந்தவரே. ஆனால் பணம் முழுவதும் அரசாங்கத்தால் கொடுக்கப்படு கிறது. பெரிய திட்டங்களையெல்லாம் அரசாங்கமே பரிசோதனை செய்கிறது. அணுக்குண்டு, சலவாயுக்குண்டு, என்பன சம்பந்தமான தொழில்களைத் "தீவிர சமவுடைமைவாதம்" எனச் சிலர் கூறலாம். (சமாதானகால அணுக்குண்டுச் சக்திக்கு அரசாங்கம் தனது ஏகபோக உரிமையில் சிலவற்றை விட்டுக் கொடுக்கிறது. ஆனால் அவற்றைப் பற்றிய இரகசியத் தன்மை, உற்பத்தி உரிமை என்பவற்றைப் பொறுத்தவரை அவை பொது நன்மை யோடு சம்பந்தமுடையனவாயும், பொதுப் பரிபாலனத்தோடு தொடர்புடை யனவாயுமிருக்கும்.)

மூன்றாவது இனம், அரசாங்கம் தொழிலாளரையும் ஏனைய சாதனங் களையும் பயன்படுத்துவது சம்பந்தமானது. இங்கே அரசாங்கம் பெருவாரி யான உத்தியோகத்தரை வேலைக்கமர்த்தியிருப்பது கருத்திற் கொள்ளத் தக்கது. இவர்களிற் பெருந்தொகையானோர் வாஷிங்டனிலுள்ள நிர்வாக அலுவலகங்களில் வேலை செய்கிறார்கள். வேறு பலர் பிரதேச ஆராய்ச்சிக் கூடங்களிலும், இராணுவ சேவைகள் முதலியவற்றிலும் பதவி வகிக்கிறார் கள். தனியார் துறைக்குப் போட்டியாக இவர்கள் ஈடுபடாவிட்டாலும், அவர்களுடைய சாதனங்களை அரசாங்கமே பயன்படுத்துகிறது. எமது தேசியத் தேவைகளுக்கு ஏற்றவாறு அவை நல்ல முறையிலும், சரியான அளவிலும் சாதுரியமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

### 4. பொதுநலச் செலவுகள்.

1930 ஆம் ஆண்டுகளையடுத்துப் பெரிதும் விரிவடைந்த அரசாங்க முயற்சி யொன்றைப்பற்றிக் கடைசியாகக் குறிப்பிடுவோம். இது பொதுநலனுக் காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள திட்டங்களைக் குறிக்கும். இதன் பயனாக, தேவையுள்ளவர்க்கும் தகுதியுடையவர்க்கும் வாங்கும் சக்தி எவ்வித பிரதிபலனும் கருதாமல் வந்துசேரும். பழைய யுத்தவீரர், வயது முதிர்ந்தோர், வலதுகுறைந்தோர், பென்ஷன் பெறும் தொழிலாளர், அவர்கள் குடும்பம், வேலையற்றோர் என்போரே இத்தகைய சகாயத்துக் குரியவர். இந்த நாலாவது செலவினம் "மாற்றச் செலவினம்" எனப் படும். இதைப்பற்றி மேலே ஆராய்வாம். எமது தற்கால அரசியல் முறை சில சமயம் "பொதுநல அரசுமுறை" என அழைக்கப்படும்.

### அரசாங்கத்தின் மாற்றச் செலவுகள்

பழைய போர்வீரனுக்கோ, உதவி தேவைப்படும் அசக்தருக்கோ கிடைக் கும் இந்த உதவிப் பணம், பொருளாதார முறையில், ஒரு தபால் ஊழி யருக்கோ, தட்டச்சு உற்பத்தி செய்யும் ஒருவருக்கோ கிடைக்கும் சம்பளத் திலும் பார்க்க வித்தியாசமானது. என் வித்தியாசப்படுகிறதென்பதை நாம்

www.padippakam.com


அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் தேசீய வருமானம்பற்றி ஆராயும் போது, "மாற்றச் செலவினம்," தேசீய வருமானம் என்ற இனங்களை வகைப்படுத்தி அறியவேண்டி வரும்.

தபால் எழுதுவினைஞருக்கோ தட்டச்சு அடிப்போர்க்கோ, ஆயுத வகையை யோ, தட்டச்சையோ உற்பத்தி செய்வோர்க்கோ கொடுக்கும் அரசாங்கச் சம்பளங்கள் தேசீயவருமானம், உற்பத்தி என்பவற்றில் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றன. ஏன் ? ஏனெனில் அவை பணிவகைகளை உள்ளடக்கி யிருக்கின்றன; உற்பத்திச் சாதனங்களையும் வேறு உற்பத்திப் பொருள் களையும் பயன்படுத்துகின்றன. அவை அமெரிக்க மக்களுக்குக் கூட்டான நேரடியான அனுபவப் பொருள்களையும், மறைமுகமான அனுபவப் பொருள் களையும் வழங்குகின்றன. வரிமூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டோ, தபால் முத்திரைகளை விற்பதில் வேறு வகைகளினாலோ அவற்றுக்குரிய பொருள் வசூலிக்கப்படலாம். அரசாங்கம் அவ்வாறு கிடைக்கும் பணத் தைப் பொதுசன உபயோகத்துக்கான சேவைகளில் பயன்படுத்துகிறது. அவை தேசீய வருமானமே. ரயில் பாதைக் கம்பெனியொன்று, பொது மக்களுக்குப் பிரயாணவசதியளிப்பதற்காகப் பயன்படுத்தும் பணமும் தேசீய வருமானத்தில் ஒரு பகுதியே.

குருடான ஒரு விதவைக்குக் கொடுக்கும் இளைப்பாறற்சம்பளப் பணம் வேறு வகையைச் சேர்ந்தது. சமூகநலனை வைத்து ஆராயுமிடத்து இது பயனு டைய ஒரு சேவையே. ஆனால் அது தேசீய உற்பத்தியிலோ, வருமானத் திலோ ஒரு பகுதியன்று. ஏனெனில் அந்த விதவை அந்தப் பென்ஷன் பணத்துக்கு ஈடாக அரசாங்கத்துக்கோ, பிரசைகளுக்கோ எவ்வித சேவை யுஞ் செய்வதில்லை. உழைப்போ, நிலமோ, மூலதனமோ அவளால் வழங் கப்படவில்லை. இளைப்பாறற்சம்பளம் அவளுடைய வாங்குஞ் சக்தியை அதிகரிக் கிறதென்பது உண்மையே; மேலும் தாராளமாக வாழ்க்கை நடத்தவும், மற்றவர்களிடமிருந்து பண்டங்களையும் சேவைகளையும் வாங்கவும் வசதி யளிக்கிறதென்பதும் உண்மையே. இவ்வாறு அவள் வாங்கும் பண்டங் களும் பணிகளும், தேசீய வருமானத்திலும், உற்பத்தியிலும் ஒரு பகுதியே. ஆனால் அவை அவளுடைய முயற்சியாலுண்டானவையல்ல; மக்களும் தனிப் பட்ட தொழிற்சாலைகளுமே அவற்றை உண்டாக்கும் ஏதுக்கள்.

இத்தகைய மாற்றுச் செலவுகள் சமீபகாலங்களில் பெரிதும் அதிகரித்து வருகின்றன. இவை வியாபார மந்தம் காரணமாகவும் அதிகரிக்கின்றன. ஆனால் முக்கியமான காரணம் அமெரிக்க மக்களுடைய மனச்சாட்சியென லாம். எல்லாரும் ஓரளவு குறைந்தபட்சச் சுகாதார வசதியும் சக்தியுள்ள உணவும் பாதுகாப்புமுடையவராயிருக்க வேண்டுமென அமெரிக்க சமூகம் உறுதி கொண்டமையே இதற்குக் காரணம். பெற்றோரின் வறுமை காரண மாகவோ துரதிட்டவசமாகவோ, குழந்தைகள் நோயினால் துன்பப் படவேண்டியதில்லை. சத்திரசிகிச்சை செய்யவோ, தகுந்த கவனிப்புப் பெறவோ பணமில்லாத நிலையில் வறியவர் இளமையிலேயே இறந்துபோக வேண்

www.padippakam.com



டியதில்லை ; வயது சென்றவர்கள் தமது கடைசிக் காலத்தை கடின சீவிய மாய் நடத்த வேண்டியதில்லை. இவ்வாறு அமெரிக்க சமூகம் திட்டமிட் டுள்ளது.

இத்தகைய செலவினங்கள் முதலாளித்துவத்துக்கு மாறுனவையா ? முதல் எடுப்பில் இச் செலவுகள் பண்டங்களையோ பணிகளையோ நேரடியாக வாங்குவதில்லையென்பதை அறியலாம். ஆனுல் இரண்டாம் எடுப்பில் அவை, சகாயம் பெறுவோரின் வாங்குஞ் சக்தியை அதிகரித்து அதன் மூலம் தனிப்பட்ட உற்பத்தியாளருக்கு உதவி செய்கின்றன. **இந்த முறை யிஞல் தூண்டப்படும் உற்பத்தி தனிப்பட்ட விதத்தில் உற்பத்தி செய்ய வும் தனிப்பட்ட விதத்திலேயே நுகரவும்படுகிறது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.**

இந்தச் செலவினத்துக்குரிய பணத்தை, தாட்பணத்தைப் பெருவாரியாக அடிப்பதாலோ, அரசாங்கக் கடன் பத்திரங்களைப் பிறப்பிப்பதாலோதான் பெற லாம். இல்லாவிட்டால் அதிகப்படியான வரிகளை விதிக்க வேண்டும். இத ஞலேதான் இது “ மாற்றச் செலவு ” எனப் பெயர் பெறும். செல்வர் வறியவரின் சகாயத்துக்காக உதவி செய்கிருர்கள். நியாயமான எல்லைக் குள் இவ்வாறு நடைபெறுமாஞல் பெரும்பாலோர் இதனைப் பொருத்த மானதொரு செயலென்றே கூறுவர்.

**வரிமூலம் வருமானத்தை மறுபடி பகிர்தல்.**

அரசாங்கத்தின் பொதுநலத்திட்டம் சம்பந்தமாக ஒரு விடயத்தைக் குறிப் பிடவேண்டும். அரசாங்கம் பல இன மக்களிடையேயும் பல இனமான வரிகளை விதித்து அவற்றின் மூலம் வருமானத்தை மக்களிடையே பல படப் பகிர்ந்துவிடுகிறது. அடுத்த அத்தியாயத்திலே வரிவிதித்தல் பற்றி ஆராய்வோம். தற்காலத்து அரசுகளிற் பெரும்பாலானவை வரி விதிக்கும் போது, செல்வர்மீது அதிக வரியும், நடுத்தரவருமானத்துக்குக் குறைவாகப் பெறுவோர்மீது குறைவான வரியும் விதிக்கின்றன.

அரசாங்கம் நேரடியாக மாற்றஞ்செய்யும் திட்டத்தை மேற்கொள்ள வில்லையென வைத்துக்கொள்வோம். தேசத்தின் இராணுவப் பாதுகாப்புக் கும், பிரசைகளின் நலனைப் பெருக்கும் திட்டங்களுக்கும் தேவையான பணத்துக்கு அரசாங்கம் தனவந்தர் மீதே வரிவிதிக்கிறதெனவும் கொள் வோம். வரி கொடுத்த பின் மிஞ்சும் வருமானம் பரவியுள்ள விடயத்தில் ஏற்படும் உயர்வு தாழ்வை இந்த வகையான வரிமுறை மாற்றவில்லையா ? அதாவது பலவிதமான வகுப்பினரும், உணவு, உடை, கார் என்பவற்றில் செலவு செய்கின்ற, வரி கொடுத்து மிஞ்சிய வருமானஞ் செறிந் துள்ள முறையில் உள்ள சமமற்ற நிலையை மாற்றவில்லையா ?

மாற்றத்திட்டங்கள் ஒரு புறமிருக்க, தற்காலப் பொதுநல அரசுகளின் நடவடிக்கைகளில், பல வகையான வருமான இனங்களிடையேயுள்ள வித் தியாசங்களை மறைக்கும் நோக்கமாக ஏற்படுத்தும் வரி முறையையுஞ் சேர்த் துக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com


**செலவினங்களுக்கான பணத்தைத் திரட்டும் வழிவகைகளும் பிஸ்கால் கொள்கையைத் திரப்படுத்தும் வழிவகைகளும்.**

அரசாங்கச் செலவுகளுக்கான பணம் எங்கிருந்து வருகிறது ? அது மூன்று வழியாகக் கிடைக்கும். (1) வரிகள்[1] (2) வட்டிகொடுக்கும் கடன் பத்திரங் களைப் பிறப்பித்தல் (3) நோட்டுகளையும், நாணயங்களையும் அடித்தல் ; இந்த வகையான நோட்டுக்களுக்கும் நாணயங்களுக்கும் அவற்றை வைத் திருப்போர் வட்டி பெறமாட்டார். சாதாரணமாக வரி விதித்தலே முக் கியமான ஒரு வழியெனலாம். ஆனால் இரண்டாவது மகாயுத்தத்திலே அரசாங்கம் கடனையும் பெற்றது. புரட்சி யுத்தத்தின்போது கடதாசி நோட்டு மிக்க முக்கியத்துவம் வகித்தது.

வரிசம்பந்தமான ஆராய்ச்சி அடுத்த அத்தியாயத்திலே ஆராயப்படும். நூலின் இரண்டாம் பகுதியிலே அரசாங்கம் வரியில் எவ்வளவு தூரம் தங்கியிருக்கிறது, கடன் பத்திரங்களில் எவ்வளவு தூரம் தங்கியிருக்கிற தென்பதை அறியலாம். தனது செலவினம், வரித்திட்டம் என்பவற்றை அரசாங்கம் எவ்வளவு தூரம் விருத்தி செய்யலாம், எவ்வளவு தூரம் குறைக்கலாமென்பதையும் அறியலாம். இவையெல்லாம் பொருளாதாரப் பரிபாஷையில் " பிஸ்கால் கொள்கை " எனப்படும். அதாவது பொதுவரிக் கொள்கை, செலவுக்கொள்கை, செலவுக்குரிய வருமானத்தைப் பெறும் வகைகள் என்பவைபற்றிய கொள்கை எனப்படும். தேசிய வருமா னத்தை நிச்சயிக்கும் சக்திகளைப்பற்றியும், அச்சக்திகளின் உயர்வு தாழ்வுகளை நிச்சயிக்கும் சக்திகளைப் பற்றியும் இரண்டாம் பகுதியில் ஆராய்வோம். தற்காலப் பொருளாதாரத்தைத் திரப்படுத்த உதவும் பிஸ்கால் கொள்கை யின் முக்கியத்துவத்தைப் பற்றியும், பணவீக்கத்தைத் தடுப்பதற்கும், வேலையின்மை பரவுவதைத் தடுப்பதற்கும் அஃது எவ்வாறு பயன்படு மென்பதைப் பற்றியும் ஆராய்வோம். பத்தொன்பதாம் அத்தியாயத்திலே இந்த வகையில் பிஸ்கால் கொள்கைபற்றிப் பார்க்கலாம்.

பொருளாதார சாத்திரத்திலே பயிலும் சில ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி, இதுவரை நாம் குறிப்பிட்ட அரசாங்கத்திட்டங்களின் தன்மை களைப் பரிசீலனை செய்வோம்.

**அரசாங்க நடவடிக்கை பற்றிய ஆராய்ச்சி.**

இரண்டாம் அதிகாரத்திலேயுள்ள உற்பத்தித் தகைமைக்கோட்டைப் பயன் படுத்தினால் அரசாங்க நடவடிக்கையின் தன்மைபற்றி அறிந்துகொள்ள லாம். படம் 3 (அ) வரி கொடுத்து மிஞ்சிய வருமானத்தைக் கொண்டு தனிப்பட்ட பண்டங்களையும் சேவைகளையும் சொந்த விருப்பப்படி குடும் பத்திலுள்ளோர் வாங்குதல் (ஆ) யுத்தக் கப்பல், பொலீஸார் சேவை

1. நானாவித வருமானமூலம் அரசாங்கத்துக்கு ஓரளவு பணம் கிடைக்கும். மேலதிக தளவாடங்களை விற்பதால் ; முத்திரை விற்பதால் ; தண்ணீர், வாயு என்பவற்றை விற்பதால் ; பொதுநிலங்களை விற்பதால். அன்றியும் சிலநன்கொடைகளும் கிடைக்கலாம்.

படிப்பகம்


www.padippakam.com



சிவில் உத்தியோகத்தர் சேவை முதலியவற்றிலும் அரசாங்கத்தினூடாக நாம் கூட்டாய் நுகரும் பண்டம், பணி என்பவற்றிலும் அரசாங்கம் செலவிடுதல் ஆகியவற்றுள் எதனைச் சமூகம் தெரிவுசெய்கிறதென்பதைக் காட்டுகிறது.

**செலவைக் குறைக்குமுகமாக வீண் செலவினங்களைக் குறைப்பது ஒரு வழி ; அரசாங்க நடவடிக்கைகளின் நோக்கைக் குறைப்பது இதனிலும் மாறுபட்ட மற்றொருவழி.**

நமது பொருளாதாரம் E என்ற புள்ளியிலே காட்டப்பட்டுள்ளது. E, G இற்குப் பதில் C என்ற புள்ளிக்குச் சமீபமாயிருப்பது எதனால் ? C புள்ளியிலே நாம் நமது வளங்களில் 100 வீதத்தையும் தனிப்பட்ட தேவைகளை உத்தேசித்துத் தனிப்பட்ட வகையில் நுகர்வோம். G புள்ளியிலே நமது வளங்களில் 100 வீதத்தையும் சமூகத்தின் தேவைக்காக விட்டுக் கொடுப்போம். இவ்வாறு E புள்ளியில் நமது பொருளாதாரம் C இற்குச் சமீபமாயிருப்பதற்குக் காரணம் 1960 இல் ஐக்கிய அமெரிக்கா தனது வளங்களில் $\frac{1}{5}$ பங்கை அரசாங்கத்துக்கும் $\frac{4}{5}$ பங்கைத் தனியார் நடவடிக்கைக்கும் ஒதுக்கிவிட்டுள்ளமையே. அதனாலேதான் E, G இற்குச் சமீபமாக இல்லாமல் C இற்குச் சமீபமாக அமைந்துள்ளது. (1900 ஆண்டுக்கு இப்படி ஒரு கோடு கீறுவதானால் அது தற்போதுள்ள கோட்டுக்கு உள்ளே அடங்கியிருக்கும். ஏனெனில் அமெரிக்கா அந்தக் காலத்திலே சிறிதாகவும் உற்பத்திக் குறைவுடையதாகவுமிருந்தது. தனியார்துறைப் பொருளாதாரத்தைக் காட்டும் கிடைநிலையான அச்சுக்கு மிகச் சமீபத்திலே E புள்ளி அமைந்திருக்கும். அதனால் அரசாங்கம் பொருளாதாரத்துறையில் மிக அற்பமான பங்கே வகித்ததென்பதை அது பிரதிபலிக்கும்.)




**படம் 3.** பொருள்களிலும் சேவைகளிலும் தனியாரும் அரசாங்கமும் செய்யும் செலவுகளுக்கிடையே தெரிவு செய்தல்பற்றிக் காட்டும் சமூக உற்பத்தி—இயல் தகவு வளைகோட்டின் வழியே, E ஐப் போன்றதொரு புள்ளியில் அமெரிக்கா அமைந்துளது. தனிப்பட்ட விருப்பங்களைத் திருத்தி செய்வதில் மிகக் கூடிய செலவு உண்டாகிறது.

சட்டமன்றத்தின் தீர்மானப்படியே E என்ற புள்ளி இப்போது இருக்க வேண்டிய இடத்திலிருக்கிறது. அரசாங்கத்தின் மூன்று கிளையின் செலவு எவ்வாறமையுமென்பதையும் அச்சட்ட மன்றமே தீர்மானிக்கிறது. E புள்ளியில் தனியார்துறைக்குரிய அமைப்பு என்ன ? அதுவும் அரசாங்கத்தின் கருத்துப்படியே அமைகிறதென்பது சிறிது சிந்தித்தால் புலனாகும். அரசாங்

www.padippakam.com



கமும் பின்வரும் விடயங்களில் மாத்திரமே கருத்துச் செலுத்த வேண்டும். (1) பொது நலத்துக்கான மாற்றுச் செலவை அரசாங்கஞ் செய்யும்போது தனியார் துறையிலுள்ள மக்கள் செலவு செய்யக்கூடிய வருமானம் எவ் வாறு பகிரப்பட வேண்டுமென்பதை அக்கைமாற்றம் நிச்சயிக்கிறது. இந்தப் பணத்தையே அவர்கள் சந்தையில் தமக்கு விருப்பமான பண்டங்களை வாங் குவதிற் செலவுசெய்வர். (2) நமது பாராளுமன்றப் பிரதிநிதிகள் செய்யும் வரிசம்பந்தமான சட்டம், வரியை எவ்வாறு பலதரப்பட்ட மக்களிடையே பலவாறு விதிக்கலாமென்பதை நிச்சயிக்கிறது. இந்தத் தீர்மானங்கள் E இன் தனிப்பட்ட பண்டங்களை மக்களிடத்தில் எவ்வாறு பகிர்ந்துவிடலா மென்பதையும் நிச்சயிக்கிறது. மாற்றுச் செலவு, வரி என்ற காரணங்கள் ஒரு புறமாக, தனிப்பட்டவர்களுடைய விருப்பு வெறுப்புக்களும், அதாவது சந்தையிலே வெள்ளைப் பாணை வாங்குவதா, றை ரொட்டியை வாங்குவதா, பன்றியிறைச்சியை வாங்குவதா, மாட்டிறைச்சியை வாங்குவதா, மோட் டாரை வாங்குவதா, தோணியை வாங்குவதா என்ற விருப்பங்களைப் பொறுத்தும் தனியார் பண்ட நுகர்வு நிச்சயிக்கப்படலாம்.

சர்வதேச நெருக்கடி நீங்கிவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அத னல் அரசாங்கச் செலவு பெரிதும் குறைக்கப்படுகிறது. அதனுல் வரிகள் பெரிதும் குறைக்கப்படுகின்றன. அதனுல் மக்களிடம் தம்மிட்டப்படி செலவு செய்ய அதிக பணம் மிஞ்சுகிறது. பொருளாதார எந்திரம் இலேசாக ஓடிக்கொண்டிருக்கிறது. தற்காலிகமான வேலையில்லாத் திண் டாட்டமோ நிரந்தரமான வேலையில்லாத் திண்டாட்டமோ காணப்படவில்லை யென்று வைத்துக்கொள்வோம். அப்போது E என்ற புள்ளி தனியார் துறைச் செலவை நோக்கி அதிகமாகவும் சமூகச் செலவைநோக்கிக் குறைவாகவும் இறங்கிக் கொண்டிருக்கும்.

கல்பிரேய்த் எழுதிய ' செல்வச் செழிப்புள்ள ' சமூகம் என்ற நூற்கருத் தைச் சமூகம் ஏற்றுக்கொள்ளுகிறதென்று கொள்வோம். இனி, தனிப்பட்ட முறையிலே கார்களைப் பயன்படுத்துவதில்லை; நெடுஞ்சாலை, பூஞ்சோலை, பாடசாலை, வைத்தியசாலை என்பவற்றைக் கூட்டுமுறையில் பயன்படுத்து வோம் என்று அது நிச்சயிக்குமாளுல் E புள்ளி மேல் நோக்கி இடப் புறமாக உற்பத்தித் தகைமைக் கோட்டில் நகரத் துவங்கும்.

**அரசாங்கத்தில் வீண் செலவு.**

நமது வரைபடம் பொதுவானதொரு மயக்கத்தைத் தெளியச் செய்கிறது. அரசாங்கச் செலவை இரண்டு புறம்பான வழிகளிற் குறைக்கலாம். முதலா வது, பிரசைகள் தமது பொதுக் கடமைகளைத் திறமையோடு நடத்துவிக்க முயற்சி செய்யலாம். இலஞ்சத்தை ஒழிக்கலாம். வீண் செலவுகளை நீக்கி விடலாம். திட்டங்களை நன்கு அமைக்கலாம். நிர்வாகத்தைத் திறமையோடு நடத்துவிக்கலாம். இதனை " தசையை வெட்டாமல் கொழுப்பை வெட்டுதல்" என்று வருணிப்பர்.


படிப்பகம்

www.padippakam.com



இரண்டாவதாக தற்போது அரசாங்கம் மேற்கொண்டுவரும் பல நடவடிக்கைகளைக் கைவிடச் செய்து அரசாங்கச் செலவைச் சுருங்கச்செய்யலாம். அரசாங்கம் புதிதாக வீதிகளைப் போடாமல் விடலாம்; காலநிலைபற்றிய அறிக்கையை வெளிப்படுத்தாதிருக்கலாம். ஆராய்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளியிடலாம். மண்ணரிப்பைத் தடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்தலாம். இவ்வாறு பல திட்டங்களைக் கைவிடலாம்.

அரசாங்கத்தில் நிர்வாகத்திறமை ஒரு விடயம்; அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் எல்லை மற்றொரு விடயம்.




**படம் 4.** வீண்செலவைக் குறைத்து அரசாங்க நிர்வாகத்திறமையை உயர்த்துவதால் உற்பத்தித் தகைமைக்கோடு பழைய G* இலிருந்து புதிய G** இற்கு மாறும். தனியார் பண்டங்களை அதிகம் தியாகஞ் செய்யாமல் $E_2$ விலுள்ள பழைய அரசாங்க சேவையை அனுமதிக்கிறது. அரசாங்கத்தின் பலபட்ட சேவைகளைக் குறைத்து வீண்செலவுகளைச் செய்யாமல் விட்டால் பழைய கோடு E3 இற்கு இறங்கும். E4 இலே புதிய செழிப்பு; புதிய மேலதிகப் பண்டங்கள்; இவை தனியார் துறையையும் அரசாங்கத் துறையையுஞ் சேர்ந்தவை.

படம் 4இல் இவ்விரு விடயங்களும் புறம்பாகக் காட்டப்பட்டுள்ளன. புதிய கோடான C* G** அரசாங்க நிர்வாகத்தின் திறமை வளர்வதால் உண்டான பலாபலனைக் காட்டுகிறது. தனியார் துறையில் நாம் தியாகஞ் செய்த பொருள்களுக்குப் பதிலாக முன்னையிலும் அதிகமான அரசாங்கப் பண்டங்களையும் பணிகளையும் பெறுகிறோம். எனவே பழைய C* G** கோடு மேலே நகர்ந்து G* யை அடைகிறது. ஆனால் பழைய C** புள்ளியை மையமாகக் கொண்டு அக்கோட்டை மேலும் செங்குத்தாக்கும் வகையில் அஃது அமைந்துள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மாற்றுதிருக்க வாக்காளர் விரும்பினால் புதிய $E_2$ புள்ளி எங்கேயமையும்? $E_2$ பழைய E புள்ளிக்கு (இது இங்கே $E_1$ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) நேரே வலப்பக்கமாய் அமையும். அதே $G_1$ சமூக நுகர்ச்சி மட்டத்தில் இருக்கும். ஆனால் தனிப்பட்ட நுகர்ச்சி $C_2$ ஆக உயர்த்தப்படும். (பின்னணியில் இது பின்வருமாறு உருவாயிற்றெனலாம்: நிர்வாகத்தைத் திறமைப்படுத்தியதால் உண்டான சேமிப்பு,

www.padippakam.com



வரிகளைக் குறைக்க வழி செய்தது. அந்த வரிக்குறைவின் பயனுக அரசாங்கம் விடுவித்த வளங்களையெல்லாம் மக்கள் பயன்படுத்த மேலதிக வருமானம் போதுமானதாயிருந்தது.)

மேலே கூறிய சந்தர்ப்பத்துக்குப் பதிலாக வேறெரு சந்தர்ப்பம் உண்டாகிறதெனக் கொள்வோம். அதாவது அரசாங்கத்தின் நடவடிக்கைகளிற் சிலவற்றை நிறுத்துவதன் மூலம் அரசாங்கச் செலவு குறைக்கப்படுகிறது. எனவே நிர்வாகத்திறமையில் மாற்றமிருக்காது. புதிய கோடும் ஏற்படாது. பழைய C*G* கோட்டிலே நாடு வலப்பக்கமாக $E_3$ இற்கு நகர்கிறது.

மற்றெரு சந்தர்ப்பத்தைக் கவனிப்போம். எல்லாரும் நிர்வாகத் திறமையையே விரும்புகிறுர்களென வைத்துக்கொள்வோம். புதிய கோடு அமைகிறது. ஆனுல் வாக்காளர் புதிதாகக் கிடைத்த செல்வத்தைத் தனியார் துறைக்குப் பயன்படுத்துவதோடு மேலதிகமான சமூகத் தேவைகளை ஏற்படுத்தவும் விரும்புகிறுர்கள். இந்த இரண்டு இனத்துக்குமாக மேலதிக நிசவருமானத்தைச் செலவு செய்ய அவர்கள் விரும்பினுல், கோடு மேலே உயர்ந்து வலப்பக்கமாக நகர்ந்து $E_4$ என்ற புள்ளியை அடையும்.[1]

இந்தப் பொருளாதார ஆராய்ச்சியால் நடைமுறைக்கொள்கை எவ்வாறு பயனடையும்? தனியார் துறையிலுள்ள திறமை அரசாங்க நிர்வாகத்திலுமுண்டென நிர்வாகத்தை ஆராயும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கணக்குப் பரிசோதிக்கும் முறைகள் முன்னேறியிருக்கின்றன. பொது வேலை முறைகள் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. சிவில் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி அதில் தேறுவோர் நல்ல தகுதியுடையவராய்க் காணப்படுகின்றனர். எனவே அரசாங்கச் செலவிலே அதிகரிப்பு ஏற்படுவது நிர்வாகிகளின் திறமைக்குறைவினுலன்று; அரசாங்கம் புதிய பலதுறைகளில் புதிய புதிய வேலைகளை ஆரம்பித்திருப்பதனுலேயே என்பது குறிப்பிடத்தக்கது. விஷயமறிந்தவர்களும், நல்லெண்ணமுடையவர்களுமான அறிஞர் பொதுத்துறையிலும் தனியார்துறையிலும் திறமையை அதிகரிக்க வேண்டுமெனக் கருதுகிறுர்கள். அரசாங்கத்தின் நடவடிக்கைகளது எல்லையை வரையறுக்கும் விஷயம் விவாதத்துக்குரியதுமன்றித் தத்துவச் சார்புடையதுமாகும். வாக்காளரில் பெரும்பான்மையோருடைய விருப்பத்துக்கு சனநாயக அரசாங்கம் இசைந்து செயல்புரிய வேண்டும்.

1. தேசீய வருமானத்தில் 25 வீதத்துக்கு அதிகமாக வரி வசூலிக்கவோ செலவு செய்யவோ எந்த அரசாங்கமும் முற்படக்கூடாது. அவ்வாறு செய்தால் நாட்டுக்குப் பெரிய ஆபத்துண்டாகுமென ஓர் அபிப்பிராயம் கூறப்படுவதைக்கேட்டிருப்பீர். ஐக்கிய அமெரிக்காவின் இராணுவத்திட்டம் பொருளாதாரத்துக்கு ஏற்றபடியேயிருக்கிறதென்று கூறப்படுவதையுங் கேட்டிருப்பீர். G இற்கு, திட்டமான ஓர் எல்லையிருக்குமானுல் உற்பத்திக்கோடு E1 இல் ஒரு திருப்பமடைந்து கிடைநிலையாய் இடப்பக்கமாகச் செல்லும். இத்தகைய இடையறுதல் இருப்பதற்குச் சான்றில்லை. E புள்ளியிலிருந்து வடமேற்கே போனுல் பணவீக்கமுண்டாகுமென்பது வேறு விடயம். இரண்டாம் பகுதியைப் படித்த பின்னர் இந்தக்கூற்றுச் சரியா என்பதை அறிந்து கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



**சமூகத் தேவைகளும் தனியார் தேவைகளும்: தீவிரமான முறையில் தலையிடாக் கொள்கை.**

அரசாங்கம் பண்டங்களையும் பணிகளையும் ஏன் பயன்படுத்த வேண்டுமென்பதற்குப் பொருளாதார சாத்திரம் என்ன காரணங் கூறமுடியும்? முதலாவதாக, பூரணமான போட்டித் தாபனங்கள் மூலம் எந்த அளவிலும் எல்லாப் பண்டங்களையும் திறமையாக உற்பத்தி செய்துவிடலாமென வைத்துக்கொள்வோம். இந்தப் பண்டங்களெல்லாம் பாண்துண்டுகளென்றும், அவற்றின் மொத்தத்தைப் பலவகைப்பட்ட தனியார் நுகர்ச்சிக்குரியனவாகத் திட்டமாய்ப் பிரித்துவிடலாமென்றும் கொள்ளுவோம். எனவே நான் எவ்வளவு அதிகமாக நுகர்கிறேனோ அவ்வளவுக்குக் குறைவாகவே நீங்கள் மொத்தப் பொருளிலிருந்து நுகரவேண்டியேற்படும். மற்றவர்களுடைய நன்மையைக் கருதவேண்டுமென்ற எண்ணம் எவரிடமுமில்லை. எவரும் எவரிடத்தும் அழுக்காறு கொள்வதுமில்லை. எல்லார்க்கும் எல்லா வளத்தையும், தொழிலாளரையும் பெறச் சமசந்தர்ப்பமிருக்கிறதென்றும் மற்றவர்களின் துணையின்றியே தமது அலுவலைத்தாமே பார்க்கும் சக்தியிருக்கிறதென்றும் வைத்துக்கொள்வோம்.

மேலே கூறிய இந்த இலட்சிய நிலையெல்லாம் இருந்தாலுங்கூட கலப்புப் பொருளாதாரத்துக்குத் தேவையேதும் உண்டா? அரசு என்பது எதற்கு? சமூகம் என்ற பேச்சு எதற்கு? அப்படியானல் உலகமானது தம்முள் தொடர்பில்லாத அணுக்களின் நிரையாகுமெனக்கூறலாம். இத்தகைய அரசாங்கமில்லாத நிலை தீவிரநிலையாகும்.

இத்தகைய நிலைமையிற்கூட மக்களிடையிலும், பிரதேசவாரியாகவும் தொழிலாளர் பிரிவு இருக்குமானல், 3 ஆம் 4 ஆம் அத்தியாயங்களிலும், இந்நூலின் மூன்ரும் பகுதியிலும் ஆராயப்பட்ட விலைத்திட்டம் நடைமுறையிலிருக்குமானல், நேர்மையை நிலைநிறுத்தவும், உடன்படிக்கைகளை நிறைவேற்றவும், கபட நடவடிக்கை, மிருகபலப் பிரயோகம் என்பவற்றை நிறுத்தவும், களவைத் தடுக்கவும், அந்நியர் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பவும், சொத்துச் சுதந்திரங்களுக்கு உத்தரவாதஞ் செய்யப்பட்ட உரிமையைப் பாதுகாக்கவும் விரைவிலே அரசாங்க நீதிமன்றங்களும் பொலீஸ்காரரும் ஏற்படுத்தப்படல் வேண்டும். ஆட்சி குறைந்தபட்சத்திலுள்ள தலையிடாக் கொள்கை இதுவெனலாம். மேலே கூறிய இலட்சிய நிலைகள் இருக்குமானல் இத்தகையதொரு நிலை மிகச் சிறப்பானதொரு முறையாகும்.

**நிசவாழ்வில் சமூகத் தேவைகள்.**

மேலே காட்டிய இலட்சிய நிலைகளை நிசவாழ்வில் முற்ருகக் காணமுடியாது. உயிர் வரலாறு, சமூக வரலாறு என்பவற்றை அனுசரித்து மனிதருடைய திறமை, சந்தர்ப்பங்கள், சொத்துரிமை என்பன பெரிதும் வித்தியாசப்படுகின்றன. பொருளாதார அறிஞர் திட்டமாக வரையறுத்துக் கூறியபடி பூரணப் போட்டிக்கு மிகப் பெரிதான கூறுகளிலேதான் மிகத்

www.padippakam.com


திறமையாக பலவகையான உற்பத்திகள் நடைபெற முடியும். வேறு பல குறைபாடுகளும் இந்த அழகிய காட்சியை மாசுபடுத்தலாம். இவையெல்லாம் இந்நூல் முழுமையும் ஆராயப்பட்டிருக்கின்றன. சுதந்திரமுள்ள ஒரு சமூகம் செய்ய விரும்பும் முக்கியமான சமாதானங்களை விளக்குமுகமாக இந்நூலில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. பொதுச் செலவு என்ற இந்த அதிகாரத்தின்கீழ், அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி மாத்திரம் ஆராய்வோம்.

தேசிய பாதுகாப்புப் பற்றிக் கவனிப்போம். ஒரு சமூகத்துக்கு அதன் பாதுகாப்பு மிக முக்கியமானது. பாண் என்ற தனியார் பண்டத்தைவிட தேசியப்பாதுகாப்பு என்ற பண்டம் எத்துணை வித்தியாசமானது. ஒரு தொகுதியிலுள்ள தனிப்பட்டவர்க்கு 10 பாண்களை எத்தனையோ விதமாகவும் பகிர்ந்து கொடுக்கலாம். ஆனால் தேசியப் பாதுகாப்பு எல்லாருக்கும் ஒரேவிதமாகவே இயல்பாக அளிக்கப்பட வேண்டியதொன்று. பிரசைகளில் பெரும்பாலோர் பாணை எவ்வாறு விரும்புவார்களோ அவ்வாறே பாதுகாப்பையும் விரும்புவர். இவர்களும் சிலர் பாதுகாப்பை முன்னிட்டு ஓரளவுக்குத் தேவையானால் பாணைத் தியாகஞ் செய்யவிரும்புவர். சமாதானத்தை விரும்புஞ் சிலர், பாதுகாப்புச் செலவு தமக்கு உடன்பாடானதன்றென வாதாடுவர். வேறு சிலர் சமூகத்துக்கு இன்னலுண்டாகுமென வாதாடுவர். அத்தகையோருக்கு மேலும் அதிகஅளவான பாணை வழங்கிச் சமாதானப்படுத்தித் தேசியப் பாதுகாப்புச் செலவுக்கு வாக்களிக்கச் செய்துவிடலாம்.

அரசியல் துறையில் வாக்களிக்காமலும், நிர்ப்பந்தப்படுத்தாமலும் தலையிடாக் கொள்கையானது பெரும்பான்மையோர் விரும்பும் தேசியப் பாதுகாப்பை வழங்குமா ? வழங்காது. நீங்கள் செலவு பண்ணுவதால் எனக்குப் பாதுகாப்புண்டாகுமென்று நான் அறிந்தால் நான் சந்தையில் வந்துநின்று 1 டொலர் செலவு செய்து எதற்காகப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்க வேண்டும் ? தேசபக்தி அவ்வாறு செய்யத் தூண்டலாம். ஆனால் அது நானும் எனக்கு அயலவனும் வாக்களித்த முறையால் வெளிப்படும். நமது பாராளுமன்றப் பிரதிநிதிகள் செய்த சட்டங்களுக்கு நாம் எவ்வாறு இணங்கினோம் என்பதையும் வெளிப்படுத்தும். ஆனால் நாளாந்தம் நாம் தனிப்பட்ட முறையிற் செய்யும் கொள்வனவுகளில் அது வெளிப்படாது.

தேசியப்பாதுகாப்பு என்ற உதாரணம் தீவிரமானதும், நாடக அமைதியுடையதுமாகும். இரவிலே காவல்செய்யும் பொலீஸ்காரன், நீதிமன்றத்திலே நீதியாசனத்திலிருக்கும் நீதிபதி , வெள்ளத்தாலுண்டாகும் அழிவைத் தடுப்பதற்காக ஒரு நதியை மறித்து அணைகட்டுதல் என்பனபோன்ற அரசாங்க நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது பொதுவானதோர் அமிசத்தைக் காணலாம். தனியார் நன்மைக்குரிய பண்டத்திலும் பார்க்க சமூகத்துக்கு நன்மைபயக்கும் பண்டத்தினாலுண்டாகும் நன்மைகள் தனியொருவனுக்கு மாத்திரமன்றி அவனுக்குப் புறம்பான பலர்க்கும்

படிப்பகம்

www.padippakam.com



உரித்தாயிருக்கின்றன. ஒரு பண்டத்தைப் பகிர்ந்து போட்டி விலையில் விற்க முடியுமானல், அத்தகைய பண்டத்தால் ஏனையோர்க்கு எவ்வித நன்மையும் கிடையாதிருக்கும்பட்சத்தில் அத்தகைய பண்டத்தை அரசாங்கம் உற்பத்தி செய்யவேண்டிய அவசியமில்லை.

என்னுடைய தொழிற்சாலைப் புகைபோக்கியிலிருந்து எழும் புகையானது காற்றை மாசுபடுத்தி மற்றவர்க்கெல்லாம் " புறப்பொருளாதார நட்டத்தை " உண்டாக்குகிறது. எனது தோட்டத்திலுள்ள பழச் செடிகளுக்கு மகரந்தச் சேர்க்கையுண்டுபண்ணுவதற்காகத் தேனீக்களை நான் வளர்க்கிறேன். ஆனல் அந்தத்தேனீக்கள் அயலாருடைய தோட்டத்துச் செடிகொடிகளுக்கும் மகரந்தச் சேர்க்கையுண்டாக்குகின்றன. இது " புறப்பொருளாதார நன்மை " எனப்படும். இவை புறப் பயன்கள். இவற்றைப் பற்றி 22 ஆம் அத்தியாயத்திலே விரிவாகக் கூறுவோம். புறப்பயனுள்ள அரசாங்க நடவடிக்கைகளுக்குரிய சில உதாரணங்களை இங்கே குறிப்பிடுவோம்.

வெளிச்சவீடு ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். சில பாறைகள் கடலில் உண்டு என்பதைக் கப்பல்களுக்கு அறிவிப்பதற்காக இந்தக் கலங்கரை விளக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.[1] அதனுடைய ஒளி எல்லாருக்கும் பயனுதவுகிறது. வியாபாரி ஒருவன் இதனைக் கட்டி அதிலிருந்து இலாபம் பெற முடியாது. ஏனெனில் அதைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரிடமிருந்தும் வரி அறவிட முடியாது. இத்தகைய முயற்சியை அரசாங்கமே மேற்கொண்டு நடத்த வேண்டும். ஆபிரஹாம் லிங்கன் கூறியநிபந்தனையை அது நிறைவேற்றும் : " மக்களுக்குச் செய்ய வேண்டியனவும் தனிப்பட்ட முயற்சியால் அவர்கள் நன்கு செய்துகொள்ளமுடியாதனவுமான தேவைகளை அரசாங்கம் செய்து நிறைவேற்ற வேண்டும் " என்பதே அவருடைய நிபந்தனை.

சோளம் சாகுபடி செய்வதுபற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. போட்டியாகச் சாகுபடியிலிறங்கியுள்ள விவசாயிகளில் எவராவது தனிப்பட்ட முறையில் அந்த ஆராய்ச்சியை நடத்தும் வசதியுடைய

1. நட் விக்செல் முதலிய 19 ஆம் நூற்றுண்டுப் பொருளியலறிஞரும், சமீபத்திலே The Theory of Public Finance (McGraw-Hill New York, 1959) என்றநூலை எழுதிய ரிச்சர்ட் எ. மஸ்கிரேவ் என்பவரும் கூறிய கருத்துக்களை இங்கே பெரிதும் பயன்படுத்தியுள்ளேன். வெளிச்சவீட்டு உதாரணத்தில், அதிலே வேலைசெய்வோர், அதைப்பயன்படுத்துவோரிடமிருந்து ஒரு விலையைப் பெருமலிருப்பதனுல் அது பொதுநன்மைக்குரிய சேவையாகிறது. வெளிச்சவீடு நடத்தும் நிர்வாகி ரடார் மூலம் அந்த வெளிச்சத்தைப் பயன்படுத்தும் கப்பல்களை இனங்கண்டு அவற்றிடம் வரியறவிடக்கூடியதாயிருந்தாலும், அது சமூகத்துக்கு அதிக பயனுடையதாகாது. தனியார் பண்டம் போலச் சந்தையில் நிச்சயிக்கப்பட்ட தனிப்பட்ட விலைக்கு இதனை விற்கமுடியாது. என்? மேலதிகமாக ஒரு கப்பல் அந்த வெளிச்சத்தைப் பயன்படுத்த விடுவதால் சமூகத்துக்கு எவ்வித உபரிச் செலவுமுண்டாவதில்லை. வரிகொடுத்தன்றிக் கப்பல்கள் அந்த வெளிச்சத்தைப் பயன்படுத்தக்கூடாதென விதித்தால் கப்பல்கள் அங்கே வராதுவிடும். அது சமூகத்துக்குப் பெரிய நட்டமே. வெளிச்சவீட்டைக்கட்டி நடத்துவது சமூகத்துக்குப்பயனுடையதானல், இதனை எல்லாரும் பயன்படுத்தவிடுவதனுல் சமூகம் பயனடையும்.

www.padippakam.com



வராயிருக்கமாட்டார். இருந்தும், இத்தகைய ஆராய்ச்சியால் விவசாயிகட்கும் சமூகத்துக்கும் பெரிய நன்மையுண்டாகும். இத்தகைய பொது நன்மைக் குரிய விடயத்தைத் தனிப்பட்ட துறையிலுள்ளவர் தமது சொந்தப் பணங்கொண்டு ஆக்கிப் பொதுசன நுகர்வுக்குப் பயன்பட விடமுடியாது. ஆனபடியால் எல்லார்க்கும் பயன்தரும் இத்தகைய ஆராய்ச்சிகளை அரசாங் கம் முன்வந்து செய்ய வேண்டும். அது சனநாயக ஆட்சி முறைக்கு ஏற்றதொரு நடவடிக்கையாகும்.

அரசாங்க நடவடிக்கை சம்பந்தமாகச் செய்த சுருக்கமான பொருளாதார ஆராய்ச்சி இவ்வளவில் முடிகிறது. இந்நூலின் மூன்றும் பகுதி அரசாங்கப் பணப்பிரச்சினைக்கு அப்பாற்பட்ட விடயங்களை ஆராயும். அத்துடன் ஏகபோக உரிமையை மட்டுப்படுத்த அரசாங்கம் எந்தக் கட்டத்தில் தனது தலையிடாக் கொள்கையை மேற்கொள்ளும் ? அவசியமான நேரத்தில் எவ்வாறு ஒழுங்குபடுத்தும், புறப்பொருளாதாரக் குறைகளையும் புறப் பொருளாதார நன்மைகளையும் தவிர்ப்பதற்கு, வரி விதித்தும், சகாய நிதி முதலியன உதவியும் எவ்வாறு முயற்சி செய்யும்? என்பனபற்றித் தீர்மானிக்கும். பொருளாதாரக் கொள்கைகளையும் ஆராயும். அடுத்த அத்தியாயம் சமட்டி வரித்திட்டங்கள், மாகாண வரித்திட்டங்கள், தலத்தாபனவரித் திட்டங் கள் பற்றிய பொதுப் பணம் சம்பந்தமான விடயங்களை ஆராயும். மாகாண அரசின் செலவு, தலத்தாபனங்களின் செலவு என்பனபற்றியும் அவற்றுக்கும் சமட்டி அரசுக்குமுள்ள தொடர்புகள் பற்றியும் அந்த அத்தியாயத்தில் ஆராயப்படும்.

**சுருக்கம்.**

1. அரசாங்கம் பொருளாதாரத்துறையில் நடத்தும் முயற்சி வளர்ந்து வரும் ஒரு விடயமாகும். சிக்கலானதும் ஒன்றிலொன்று தங்கியிருப்பது மான நமது சமூகத்தின் பலதரப்பட்ட நடவடிக்கைகள் நேரடியான அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் வந்து கொண்டிருக்கின்றன.

2. உள்ளூர் மொத்த உற்பத்தியின் பெரும்பகுதியும் வெளிநாட்டு உற்பத்தியின் பெரும்பகுதியும் கூட்டு அரசாங்க நுகர்வுக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

3. தேசிய வருமானத்திலே பெரும்பகுதி வரிகள் மூலமும், பொதுநலத் திட்டச் செலவுகள் மூலமும், பணக்காரரிடமிருந்து வறியவரிடம் திருப்பப் படுகிறது. இந்தப் போக்கு வேறுபடவில்லை.

4. அமெரிக்காவில் தொழில்களையும் சமூகத்தின் உற்பத்திச் சாதனங் களையும் அரசாங்கமே கொள்ளவேண்டுமென்ற போக்கு உண்டாகவில்லை.

5. முதலாம் உலக மகாயுத்தம் நடைபெற்ற காலந்துவங்கி தலத் தாபனச் செலவுகளையும் மாகாண ஆட்சிச் செலவுகளையும்விடச் சமட்டி அரசின் செலவு பெரிதும் கூடி விட்டது. 1930 இல் உண்டான வியாபாரமந் தத்தின்போது சகாயச் செலவுகளும், பொதுமராமத்துச் செலவுகளும்,

படிப்பகம்

www.padippakam.com



அவைபோன்ற ஏனைய செலவுகளும் சமட்டிச் செலவை 10 மில்லியன் டொலருக்கு உயர்த்திவிட்டது. இராணுவப் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்த தாலும், பொதுக்கடன் வட்டி கொடுக்க வேண்டியதாலும், இளைப்பாறிய போர்வீரருக்குச் சகாயஞ் செய்யவேண்டியதாலும் யுத்த காலத்தையடுத்த செலவுகள் முந்திய செலவிலும் பார்க்கப் பலமடங்கு உயர்ந்துவிட்டன. (குறிப்பு;—வியாபாரமந்தத்தை எதிர்த்துப் போர் புரிய வேண்டிய பெரிய சந்தர்ப்பம் எதுவுமேற்படாமலே இவ்வாறு செலவு உயர்ந்துள்ளது.)

6. இரண்டாம் அத்தியாயத்திலுள்ள உற்பத்தித்தகைமை அட்டவணையைக்கொண்டு (அ) அரசாங்கத்தில் நிகழும் வீண்செலவைக் குறைத்தல் (ஆ) அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் குறைத்தல் என்பவற்றால், எவ்வாறு அரசாங்கச் செலவைக் குறைக்கலாமென்பதை விளங்கிக் கொள்ளலாம். சமூகப் பண்டங்கள் ஒரு சமுதாயத்திலுள்ள பலரிடம் " புறநுகர்ச்சிப் பயன் " உடையனவாயிருக்கலாம். இவற்றுக்கு எதிரிடையாக தனியார் மாத்திரம் நுகரும் தனியார் பண்டங்களுண்டு. பொருளாதார ஆராய்ச்சி இவ்விரு வகைப் பண்டங்களிடையிலுமுள்ள பேதத்தை எடுத்துக் காட்டும். தேசீயப் பாதுகாப்பு, ஆராய்ச்சி, மண்ணரிப்புத்தடை, வெளிச்சவீட்டுப் பரிபாலனம், என்ற இன்னோரன்ன கருமங்கள் " புறப்பயன் " உடையனவாயிருந்தால், அவற்றை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டியதே.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள்.**

1. கடந்த காலத்திலே அரசாங்கம் செய்யாத — இப்போது செய்து வருகின்ற — சில கருமங்களைக் கூறுக.

2. இன்றிலிருந்து 1970 வரை தேசியவருமானத்திலே அரசாங்கத்துக்கிருக்கும் பங்கு எவ்வாறு அபிவிருத்தியடையும் ? ஏன் ? உமது விடையை எந்த அமிசங்கள் பாதிக்கின்றன?

3. அரசாங்கச் செலவு அதிகரிப்பதால் நிர்வாகத்திறமை குறைந்து விட்டதென எவ்வளவு தூரம் சொல்லலாம் ? இவ்விடயத்தைச் சாத்திரமுறைப்படி எவ்வாறு ஆராயலாம்?

4. 30 வருடத்துக்கு முன்னர் அதிதீவிரக்கொள்கைகளாகக் கருதப் பட்டவை இன்று பிற்போக்குக் கொள்கைகளாகத் தெரிகின்றன. இஃது என்றாவது உண்மையாயிருந்ததா ? எப்போதும் உண்மையாயிருக்குமா? சாதகமான சந்தர்ப்பங்களையும் பாதகமான சந்தர்ப்பங்களையும் எடுத்துக் காட்டுக.

5. " பண்டம், பணி என்பவற்றிலே அரசாங்கம் செலவு செய்வது சமூகப் பண்டங்களையே குறிக்கும். இவற்றிற்பல சந்தை மூலம் விலையாகும் தனியார் உற்பத்தியைச் சேர்ந்தவை. " ஆராய்க.

படிப்பகம்

www.padippakam.com



6. "யுத்தகாலத்துக்கு முன்னிருந்த மட்டத்துக்கு சமட்டிச் செலவைக் கொண்டு வருவதானல் இராணுவச் செலவையும், இளைப்பாறிய யுத்தவீரர் செலவையும் குறைக்கவேண்டும்." ஆராய்க.

7. 'நியூ டீல்' என்ற கொள்கையின் சில நடவடிக்கைகள் எவை? அவற்றில் எவை, இன்று நடைமுறையில் இல்லாதவை?

8. புனர்ப் பகிர்வு வரிமுறை என்பதற்கும், மாற்றக்கொடுப்பனவு என்பதற்கும் வரைவிலக்கணங்கூறி உதாரணந் தருக. நமது லோறன்ஸ் கோட்டில் இவற்ருலுண்டாகும் பயன்களைக் காட்ட முடியுமா?

9. பின்வரும் கருத்துக்களை ஆராய்க.

அரசாங்கச் செலவும் வரியும்.

பொதுக்கடனும் வரவு செலவும்.

தலையிடாக்கொள்கையும் கட்டுப்பாடுகளும்.

பொதுநல அரசு.

பொதுவுடைமை.

மாற்றச் செலவு.

பிஸ்கால் கொள்கை.

தனியார் பண்டமும் சமூகப்பண்டமும்.

பாதுகாப்புப் பரிவர்த்தனைக் கமிஷன்.

மாகாண வியாபாரக் குழு.

தெனெஸி பள்ளத்தாக்கு அபிவிருத்தி.

படிப்பகம்

www.padippakam.com

## பத்தாம் அத்தியாயம்

# பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கு : கூட்டாட்சியின் வரித்திட்டமும் தலத்தாபனப் பண விடயமும்

*வரி விதிப்பதற்குள்ள அதிகாரம்,...... அழிவு செய்வதற்கு ஏதுவான அதிகாரம் மாத்திரமன்று; உயிரோடு வைத்திருப்பதற்கேதுவான அதிகாரமுமாகும்.*

**ஐக்கிய அமெரிக்க உயர் நீதிமன்றம்.**

இந்த அத்தியாயத்திலே பொதுநிதியை ஆராய்வதைத் தொடர்ந்து கூட்டாட்சியின் வரித்திட்டம் பற்றியும், மாகாண அரசு தலத்தாபன அரசு என்பவற்றின் செலவு பற்றியும் ஆராயப்படும். அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பல மட்டத்தில் ஒன்றுபடுத்தும்போதுண்டாகும் பிரச்சினைகளைப் பற்றியும் சுருக்கமாக ஆராயப்படும். ஆரம்பத்திலே பொருளாதார அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுவது பயனுடையதாகும்.

### வரி விதித்தல் பற்றிய பொருளாதாரத் தன்மை.

**நிசச் செலவுகளுக்குப் பணம் ஒதுக்கல் :** அரசாங்கத்தின் செலவுக்குப் பணம் வேண்டும். அத்தகைய பணத்தை வரிமூலமே அரசாங்கம் பெறுகிறது. ஒரு போர்க்கப்பலைக் கட்டவோ, வெளிச்சவீட்டை நடத்தவோ வேண்டிய பணம் அன்று ; பொருளாதார நிசமான வளங்களான உருக்கு, காவற்காரர் என்பனவே தேவை. அதாவது சமூகத்தில் அருந்தலாக உள்ள தொழிலாளர், நிலம் மூலதனப் பொருள்கள் என்பனவே அவசியம். எனவே வரி விதிக்கும்போது, மக்கள் சமூகத் தேவைக்கு அவசியமான வளங்களை எப்படிக் குடிமக்களிடமிருந்தும், அவர்களுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களிலிருந்தும் எடுத்து அரசாங்கப் பண்டங்களுக்கும், பணிகளுக்கும் வழங்கலாம் என்பதைத் தீர்மானிக்கின்றனர் எனலாம்.

**வருமானச் செறிவை மாற்றுதல்.** அரசாங்கம் தனிப்பட்டவரின் நன்மையைக் கருதியும் செலவு செய்கிறது. அப்பணத்தைச் சமூகத்திலுள்ள தனிப்பட்டவர் தமது சொந்தத் தேவைகளுக்காகச் செலவு செய்வர். அரசாங்கம் ஒரு பகுதியினர்மீது வரிவிதித்து அப்பணத்தை வேறொரு பகுதியினர்க்குப் பகிர்ந்து கொடுக்கிறது. அவர்கள் அப்பணத்தைக்கொண்டு நிசப்பண்டங்களையும் பணிகளையும் வாங்குவர்.

நேரடியான பொதுநலச் செலவுகளில்லாவிட்டாலும், தலையிடாக்கொள்கையின் பயனாக உண்டாகும் வருமானத்தை அரசாங்கம் பின்வரும் வழிகளிற் பங்கீடு செய்கிறது. பொதுநலப்பண்டங்களிலும் பணிகளிலும் செலவுசெய்யும் பணத்துக்கு யார் ஈடுசெய்வது என்பதை நிச்சயம் பண்ணும்போது



படிப்பகம்

www.padippakam.com



வாக்காளர், செல்வர்மீது கடுமையாகவும் வறியவர்மீது இலேசாகவும் விழக் கூடியவாறு வரி விதிப்பதை ஆதரிப்பார்கள். அவ்வாறே உற்சாகமுடையவர் மீது அதிக வரியும், சோம்பேறிகள்மீது இலேசான வரியும் விதிப்பர். நிலபுலமுள்ளவர்மீது அதிக வரியும், தொழிற்சக்தி உடையவர்மீது குறை வான வரியும் விதிப்பர். இவ்வாறு வரியானது தனியார் வருமானத்தின் செறிவைப் பாதிக்கிறது.

பழங்காலத்திலே அதிகாரத்தில் உள்ளவர்கள் அதிகாரமில்லாதவர்மாட்டு, வசதியை முன்னிட்டு வரி விதித்தனர். 14 ஆம் லூயியின் சபையிலுள்ள ஒரு ராஜ சேவகன் வரி கொடாமல் தப்பிவிடலாம். ஆனல் மார்சேல்சி லுள்ள வியாபாரியோ, நோர்மண்டியிலுள்ள விவசாயியோ, கடுமையாக வரி கொடுக்க வேண்டியிருக்கலாம். வரி விதிப்பதற்கு நியாயமான ஒரு வழிகாட்டி எது, என ஆராய்ச்சியாளர் ஆராய முற்பட்டபோது எந்தக் கொள்கைகள் வெளியாயின ?

**நன்மை—தியாகம் என்ற கொள்கைகள்.** மிக வாய்ப்பான வரிவிதித் தல் சம்பந்தமாகவுள்ள பல கொள்கைகளில் இரண்டு பெரிய இனங்களைப் பிரித்தறியலாம்.

அரசாங்க நடவடிக்கையின் பயனுக மக்களுக்குண்டாகும் பயனை அனு சரித்த விகிதாசாரப்படி, ஒவ்வொருவரும் வரி கொடுக்கவேண்டுமென்ற பொதுக் கருத்துண்டு.

விரும்பத்தக்கதொரு தியாகப் படத்தை உண்டாக்கக்கூடியவாறு வரி விதிக்கப்பட வேண்டுமென்றதொரு பொதுக் கொள்கையுமுண்டு. அதாவது சந்தையினுல் நிச்சயிக்கப்படும் வருமானத்தின் உசிதமான புனர்ப்பங்கீடு என்று நல்ல சமூகம் கருதுமொன்றை நிறைவேற்றக்கூடிய விதமாக வரி விதிப்பு அமையவேண்டும் என்பதே அக்கொள்கை.

அத்தகைய பொதுக் கொள்கைகள் முக்கியமானவையே. விரும்பத்தக்க வரி அமைப்பு எது என்பதுபற்றிய கனமான முடிவுகளை அவை தட்டிக் கழிப்பதில்லை.

உதாரணமாக, சகாய வரிவிதிப்பை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்களும் நானும் எல்லாவகையிலும் சமமானவர்களாயிருந்தால், இராணுவசேவை, பொது வீதிகள், பொது அரசாங்க சேவைகள் என்பவற்றுல் நாம் அடையும் பயனும் சமமாகவேயிருக்கும். எனவே நாமிருவேமும் ஒரே வகையான வரியையே கொடுக்க வேண்டும். அவ்வாறே புனர்ப்பங்கீட்டு வரி விதிப்பை எடுங்கள். நாமிருவேமும் எல்லா வகையிலும் சமமானவராயிருந்தால், நாமிருவேமும் தனித்தனி செய்யும் தியாகமுஞ் சமமாகவேயிருக்கும். அப்போது, எல்லாவகையிலும் சமமானவர் மீது சமமானவரி விதிக்க வேண்டும் என்ற கொள்கை சர்வசம்மதமானதாயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



**சமமானவர்க்கு சமதையும், சமமற்றவர்க்கு அசமதையும்.**

சமமானவரைச் சமமாக நடத்தவேண்டுமென்ற கொள்கை இறந்த காலத்தில் முக்கியமுடையதாயிருந்தது. இப்போதும் முக்கியமுடையதாயிருக்கிறது. ஏ என்ற மனிதனும் பி என்ற மனிதனும் எல்லாவகையிலும் சமமானவர்கள். ஆனால் ஏயின் தலைமயிர் மாத்திரம் சிவப்பு. அந்தக் காரணத்தைக்கொண்டு வரியை வித்தியாசப்படுத்தக் கூடாது. அல்லது ஏ, பிரதம மந்திரியின் நண்பனாகவோ, சனாதிபதியின் நண்பனாகவோ இருப்பதால் அவனை வரியிலிருந்து விலக்கிவிட முடியாது. மேலே கூறிய இந்தக் கூற்றை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய தவசியம். வரிச் சட்டங்களிலே தப்பும் வழிகள் சில இருப்பதால் இவ்வாறு செய்வது மிக அவசியமாகும்.

சமமானவர்களுக்குச் சமமான வரிவிதிக்க வேண்டுமென்றால் சமமற்றவர்க்குச் சமமற்ற வகையில் வரி விதிக்க வேண்டுமல்லவா ? என்ற துணை முடிவும் அதனால் உண்டாகக்கூடிய பிரச்சினைகளும் தலைகாட்டுகின்றன.

பொதுநன்மை, தியாகம் என்ற அடிப்படையொன்றின் துணைகொண்டேனும் இத்துணை முடிவு சமூகத்தின் கொள்கைப் பிரச்சினைகளை உண்மையில் தீர்க்கவில்லை.

எல்லாவகையிலும் பி என்பவனுக்கு ஒப்பானவன் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் பி யிடம் ஏ யிலும் பார்க்கப் பத்துமடங்கு அதிகமான வருமானமும் சொத்துச்சுதந்திரமுமுண்டு. ஏயைப் போலவே பியும் பொலீஸ் பாதுகாப்புக்கு ஒரேவகையான வரியைக் கொடுக்க வேண்டுமா ? அல்லது தனது வருமானத்தின் விகிதாசாரப்படி கொடுக்க வேண்டுமா? தனவந்தருடைய நிலபுலங்களைப் பாதுகாப்பதிலேயே பொலீசார் அதிக நேரம் செலவு செய்ய வேண்டும். பி செல்வனானபடியால், தனது வருமானத்தின் விகிதாசாரப்படி வரி கொடுக்க வேண்டியதே நியாயம். இந்நிலையில் நல்லமுறையில் எப்படி வரியைத் திட்டப்படுத்தலாம் ? வறியவரிலும் பார்க்கத் தனவந்தரே வரி கொடுக்குஞ் சக்தி அதிகமுடையவர். அத்துடன் தனவந்தர் ஒரு டொலர் கொடுப்பதால் தியாகம் அத்துணைப் பெரிதன்று. வறியவரின் தியாகமே பெரிது. வருமானத்தில் வித்தியாசமுடையவர்கள் மீது எவ்வாறு வரி விதிக்கப்படவேண்டும் என்ற பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை.

**வரி விதிப்பதில் சில விட்டுக் கொடுப்பு.**

இந்தக் கடினமான தத்துவப்பிரச்சினைகளைக் கடந்த நூற்றாண்டிலிருந்த கலப்புச் சமூகம் தீர்த்துவைக்க எவ்வாறு முயன்றது ? அரசாங்கம் சகாயஞ் செய்ய வேண்டுமெனத் தீவிரமாக வாதாடுவோரையோ, வருமானத்தைப் பூரணமாகப் புனர்ப்பங்கீடு செய்து செல்வரைத் தியாகஞ் செய்யச் சொல்ல வேண்டும் எனப் பெரிதும் வாதாடுவோரையோ திருப்திப்படுத்தாத காரிய சாத்தியமான பரிகாரங்களை சனநாயக அரசாங்கங்கள் பொதுவாக மேற்கொண்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



உள்ளூர் ஆட்சியிலும் தேசீய ஆட்சியிலும், நடத்தப்படும் பலவித பொதுச் சேவைகள் குறிப்பிட்ட ஒரு குழுவினரின் நன்மைக்கேயெனக் காணுமிடத்து அக்குழு வினர் பெறும் சராசரி வருமானத்தாலோ, வேறு தன்மை களாலோ அரசாங்க உதவிபெறவோ பெருதிருக்கவோ விசேட உரிமையற் றிருக்கும் பட்சத்தில், தற்கால அரசாங்கங்கள் சகாயமுறையான வரிவிதிப் பதையே விரும்பும். எனவே உள்ளூர் வீதியமைப்பதாலுல் அதற்குரிய செலவை உள்ளூர்வாசிகளே கொடுப்பர். பெட்ரோல் விற்பனையால் வரும் வரியை வீதிகளமைக்கவே நிர்வாகம் செலவு செய்யும். பாடசாலைகள் அமைக் கவோ, நூல்நிலையங்களமைக்கவோ செலவு செய்யாது.

**முற்போக்கான வரியும் பிற்போக்கான வரியும்.**

படிமுறையான வரி விதிப்பதில் அதிக நம்பிக்கையை அரசாங்கம் வைத்துள்ளது. அரசாங்கஞ் செய்யும் செலவுகளினுல் தான் அதிகபயன் பெறவில்லையெனக் கண்ட 20,000 டொலர் வருமானமுள்ள ஒருவன்மீது அதிக வரியும் 10,000 டொலர் வருமானமுள்ளவன் மீது குறைவான வரியும் விதிக்கப்படுகிறது. உயர்ந்த வருமானமுள்ளவன் அதிகமான வரி கொடுப்பது மாத்திரமன்றித் தனது வருமானத்திலிருந்து உயர்ந்த ஒரு பகுதியையும் வரியாகக் கொடுக்கிருன். இத்தகைய படிமுறையான வரித்திட்டம், வருமான விகிதாசார வரித்திட்டத்தோடு ஒப்பிட்டு வித்தியா சம் அறியக்கூடியதாயமைந்திருக்கிறது. "விகிதாசார வரித்திட்டத்திலே" ஒவ்வொருவனும், தனது வருமானத்தின் ஒரு விகிதத்தை எப்பொழுதும் கொடுக்க வேண்டிவரும். அந்த விகிதம் மாறுவதில்லை. படிமுறை வரியை "முற்போக்கு வரிமுறை" எனக் கூறுவர். முற்போக்கு என்று குறிப்பிடும்போது இது நல்ல முறையென்பதோ தற்காலப் போக்குக்கு உகந்ததென்பதோ கருத்தன்று. கூடிய வருமானமுள்ளவர்கள்மாட்டுக் கடுமையான வரியை விதிப்பதென்பதே அர்த்தம்.

முற்போக்கு வரியென்ருல் வருமனம் உயர, உயர, அதுவும் உயர்ந்து கொண்டே செல்லும். விகிதாசார வரி, குறித்த ஒரு விகிதத்தையே வரு மானத்திலிருந்து வரியாகப் பெறும். சிறிய வருமானத்தைக்காட்டிலும் பெரிய வருமானமாலுல் முற்போக்குவரி அதிக பணத்தை வசூல் செய்யும்.

பிற்போக்குவரியென்ருல் என்ன ? வருமானம் அதிகரிக்க வரி குறைந்து கொண்டே போகும். சிறிய வருமானமாலுல் அதிகவரி வசூலிக்கப்படும். பெரிய வருமானமாலுல் வரி குறையும். உதாரணமாக, பாலுக்கு வரி விதிக்கப்படுகிறதென்று கொள்வோம். இந்த வரி 20,000 டொலர் வரு மானம் பெறுபவரிலும்பார்க்க 10,000 டொலர் பெறுபவர்மாட்டு அரைப் பங்குக்கதிகமான பாரத்தைப் போடுகிறதாலுல் அது பிற்போக்கு வரியா கும். (கேள்வி : பழைய நல்ல வைன்மீது போடும் வரி பிற்போக்கானதா? விகிதாசாரமானதா ? முற்போக்கானதா ? ஏன் முற்போக்கானது?)

படிப்பகம்

www.padippakam.com



**நேரடியான வரி, மறைமுகமான வரி.**

புனர்ப்பங்கீட்டு முற்போக்கு வரியானது, நேரடியான படிமுறை வரியினு லும் பூதல் வரியினுலுமுண்டாகிறது. விகிதாசாரவரியும் பிற்போக்கு வரியும், கலால் வரிமூலம் மறைமுகமாக விதிக்கப்படும் வரியாகும். ஒவ்வொரு வாக்காளர்மீதும் தலைவரிப்பணமாக 2 டொலர் வாங்குவது நேரடி வரியா கும். ஆனுல் அது பிற்போக்கான வரி ; ஏனெனில் வரிப் பளு தனவந் தரைத் தாக்குவதில்லை; ஏழைகளையே அதிகம் தாக்கும். ஒரு சுருட்டின் மீது 75 சத வரி விதிப்பதும், திறமான பிரண்டி மீது 50 வீத வரிவிதிப் பதும் மறைமுகமான வரியானுலும், முற்போக்கான வரியென்றே கூற வேண்டும்.

இக்கால வரிமுறைகள் விட்டுக்கொடுத்துச் சமாதானஞ் செய்யும் இயல் புடையன. சகாயக் கருத்துக்கு ஓரளவு மதிப்புக் கொடுக்கின்றன. தியாகம், புனர்ப்பங்கீட்டுக் கருத்துக்களுக்கு ஓரளவு மதிப்புக் கொடுக்கின்றன. அர சியல், சமயோசிதம் என்பவற்றுக்கும் ஓரளவு மதிப்புக் கொடுக்கின்றன. சில வரிகளை உயர்த்தினுல், அவை புனர்ப்பங்கீட்டுவாதிகட்கு எவ்வளவு சிறப் புடையனவாகக் காணப்பட்டாலும், மக்களுடைய சுதந்திரமான முயற்சிக் கும், சமூகத்தின் வளங்களைப் பயன்படுத்துவதில் உள்ள திறமைக்கும், பெரிதும் பங்கமுண்டாக்குகின்றன.

இத்தகைய பல விடயங்களை மேலே வரும் அத்தியாயங்களில் ஆராய் வோம். இப்போது தகவல்பூர்வமான ஆராய்ச்சியைப் பார்ப்போம்.

**சமட்டிவரி விதித்தல்.**

அட்டவணை 1 இல் பலவகைப்பட்ட இக்கால சமட்டி வரிகள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றில் முதலிரண்டு, தனிப்பட்ட வருமான வரியும், மரணவரியுமாகும். நன்கொடை வரியும் இதிலடங்கும். இவை அதிக வருமானமுள்ளவர்கள்மாட்டே அதிக பளுவையுண்டாக்கும். சம்பள வரி, விற்பனைவரி என்பன பிற்போக்கானவை. அவை தனவந்தருடைய வருமானத்தின் சிறு பகுதியையும் வறியவருடைய வருமானத்தின் பெரும் பகுதியையும் வசூலிக்கின்றன. கம்பெனி வரி இடைநடுவிலுள்ளது. ஒரு வழியில் அது முற்போக்கானதெனலாம். ஏனெனில் பெரும்பாலான பங்கு டொலர்கள் நடுத்தர வருமானத்துக்கு மேலுள்ளவரையே பாதிக்கும். ஆனுல் பல ஏழை விதவைகளும், அநாதைகளும் பங்குமுதலுடைய வராயிருக்கின்றனர். இருந்தும், மொத்தப்பங்கு முதலில் அவர்களுக்குள்ள பகுதி அத்துணைப் பெரிதன்று. வியாபாரக் கம்பெனிகள் மீது விதிக்கும் வரி மறுபடி விலை அதிகரிப்பில்போய் நிற்கும். அதனுல் வியாபார இலாபத்தில் விதிக்கும் வரி பிற்போக்குடையதெனலாம்.

எங்கள் சமஷ்டி அரசின் வரித்திட்டம் 25 வருடத்துக்கு முன்னிருந்ததை விட இன்று முற்போக்குடையதாயிருக்கிறது. தலத்தாபனங்களிலும், மாகா ணங்களிலுமுள்ள வரித்திட்டங்களைக் காட்டிலும் முற்போக்குடையது.

12—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



**தனிப்பட்ட வருமானவரியும் வியாபாரத்தாபனங்களின் வருமான வரியுமே சமட்டி அரசின் முக்கிய வருமானங்களாகும்.**

| வரிவிகிதம் | | வரவு 100 கோடியில் |
|---|---|---|
| முற்போக்கு | தனிப்பட்டவருமானவரி | 43.7 |
| | மரணவரி, நன்கொடைவரி | 1.6 |
| நடுத்தரம் | கம்பெனிவருமானவரி | 23.5 |
| பிற்போக்கு | சம்பளவரி | 0.3 |
| | உண்ணூட்டுப்பொருள்வரி | 13.9 |
| | புகையிலை, மது | 5.2 |
| | உற்பத்தி, சில்லறை உண்ணூட்டுப் பொருள்வரி | 5.7 |
| | சுங்கவரி | 1.4 |
| | நானுவிதவரி | 1.6 |
| | வேறுவரிகள் | 3.9 |
| | மொத்த வரி | 87.0 |
| | கழிவு முதலியன | 3.0 |
| | மொத்தம் | 84.0 |

**அட்டவணை 1.** பிலகால வருடம் 1961இற்கு சமஷ்டி அரசாட்சியில வரவு மதிப்பு வரி. சமஷ்டி வரி வருமானத்திலே நாலில் மூன்று பங்கு இப்போது தனிப்பட்டவர் வருமான வரி மூலமும், வியாபாரக் கம்பெனி வருமான வரி மூலமுமே வருகின்றன. தேசிய வருமானம் மாறினல் இவையும் மாறும். செல்வத்தையும், வருமானத்தையும், புனர்ப்பங்கீடு செய்வதற்குப் பூதல்வரி இக்காலத்தில் அதிகம் துணை புரிவதில்லை.

பலவகையான வரிகளையும் ஆராய்வது பயனுடையது.

## விற்பனைவரி, உண்ணூட்டுப்பொருள் வரி

பிற்போக்கு வரிகள் என்ற முறையில் இவைதாம் முன்னுக்கு நிற்கும். இதைப்பற்றி நீண்டகாலம் விவாதம் நடைபெற்றது. சமட்டி நிதி சம்பந்தமாக ஒரு சமாதானம் செய்து கொள்ளப்பட்டது. பொது விற்பனை வரி எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஆனல் சிகரெட், குடிவகை, அழகு சாதனங்கள், பிரயாணப் பொருள்கள் முதலியனமீது வரி விதிக்கப்பட்டுள்ளது.

## சமூகப்பாதுகாப்பு, சம்பளப்பட்டியல், வேலை என்பனபற்றிய வரி

பெரும்பாலான தொழில்கள், இன்று சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. வயோதிப காலத்தில் இளைப்பாறியவர்க்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளக் கணக்கைக் கொண்டு இளைப்பாறற் சம்பளம் வழங்கப்படும். அவர்கள் தமது வறுமையை எடுத்துக்காட்டி இரந்து கேட்க வேண்டியதில்லை. இந்த வசதிகளைப் பெறுவதற்காகத் தொழிலாளியும் முதலாளியும் 1961 இல் சம்பளத்தில் மூன்று வீதத்தை வருடாந்தம் 4,800 டொலருக்குக் குறைவான சம்பளம் பெறுவோர் விடயத்தில் வரியாகக் கொடுத்தனர்.

www.padippakam.com



இந்தச் சம்பளவரி வறியவர், மத்திய வகுப்பினர் என்போரைப் பாதிப்பதால் பிற்போக்கானதாகும். ஆனால் சமூகப்பாதுகாப்புச் சகாயக் கொடுப்பனவுகளைக் கவனிக்குமிடத்து பிற்போக்கு அத்துணை கடுமையானதன்று.

## கம்பெனி வருமான வரி

கம்பெனிகள் தமது செலவுகளெல்லாவற்றையுங் கொடுத்து வருடாந்த வருமானத்தைக் கணித்தபின், இவரும் இலாபத்திலே ஒரு பகுதியைச் சமட்டி அரசுக்குக் கொடுக்க வேண்டும். 1961 இல் ஒரு சிறிய கம்பெனி தேறிய வருமானத்தில் ஒவ்வொரு டொலரிலும் 30 சதத்தைச் சமட்டி நிர்வாகத்துக்கு வரியாகக் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆனால் வருடத்தில் 25,000 டொலருக்கு மேலாக வருமானமிருந்தால் ஒவ்வொரு டொலரிலும் 52 சதத்தைக் கொடுக்க வேண்டும்[1].

சமாதானகால வரிவிகிதம் மிக அதிகமென்றும், அதனாலே கம்பெனிகள் புதிய பயனுள்ள முயற்சிகளில் ஈடுபடப் பயப்படுகின்றனவென்றும், அவ்வாறு புதிய முயற்சிகளில் ஈடுபட்டால் புதிதாகப் பலருக்கு வேலை கிடைத்திருக்குமென்றும் பலர் கருதுகிறார்கள். சிறியதொரு கம்பெனி வளரவேண்டுமானால் அரசாங்கம் அதனிடம் வரியாகப் பெறும் பணத்தை அது முதலீடு செய்ய விட்டுவிட வேண்டுமென இவர்கள் நினைக்கிறார்கள். இவ்வாறு கருதுவோர், அரசாங்கமானது, கம்பெனிகள் பெறும் வருமானத்திலேயும் பங்குஇலாபத்திலேயும் வருமான வரி விதிப்பது "இரட்டை வரியாகு" மெனக் கூறுகின்றனர். அவர்கள் கூறும் யோசனையாவது: கம்பெனி வரி விகிதங்களைக் குறைக்க வேண்டும். அல்லது பங்கு இலாபத்தில் வரியைக் குறைக்கலாம். அதாவது கம்பெனிகள் கொடுக்கும் வரியை உத்தேசித்துப் பங்குதாரர்களின் இலாபவரியில் சலுகை காட்டலாம் என்பதே.

ஆனால் வேறொரு சாரார், கம்பெனிகள் மீது கடுமையான வரி விதிக்க வேண்டுமென்றும், பெரிய கம்பெனிகள் மீது அதிக வரி விதிக்க வேண்டுமென்றும், கூறுவர். அரசாங்கம் பெருந்தொகைப்பணத்தை வரிமூலம் வசூல் செய்ய வேண்டுமானால் தனிப்பட்ட வருமான வரிமூலம் அதைச் செய்ய முடியாவிட்டால், விற்பனைவரி, சம்பள வரி என்பவற்றிலும் பார்க்கக் கம்பெனிமீது வரி விதிப்பதே சிறந்ததெனக் கூறுவர். கம்பெனிகள் இலாபம் முழுவதையும் பங்காளிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதில்லை; ஒரு பகுதியை மறுபடியும் தொழிலில் முதலீடு செய்கின்றன என அவர்கள் எடுத்துக்காட்டுவர். கம்பெனிகளின் இலாபங்களில் தாம் கொடுக்க வேண்டிய வருமான வரிகளைப் பங்காளிகள், பல வகையான தந்திரங்களால்

1. யுத்தகாலங்களிலே இந்நாட்டிலேயும், வேறு நாடுகளிலும், "உபரிஇலாபவரி" மேலதிகமாகக் கம்பெனிகள் மீது விதிக்கப்படுவது வழக்கம். இது மேற்படி வருமான வரியைவிடப் பிரத்தியேகமானது. உதாரணமாக 1951-53 இல் நிகழ்ந்த கொரிய யுத்தத்தின்போது சில கம்பெனிகள் டொலருக்கு 82 சத வட்டி கொடுக்க வேண்டியிருந்தது. அவைகளுக்கு மிஞ்சியது 18 சதமே.

படிப்பகம்

www.padippakam.com



தவிர்க்கப் பார்ப்பார்கள். அதை மேலே பார்ப்போம். இவர்களுடைய கருத்துப்படி கம்பெனிமீது அதிக வரி விதிப்பதால் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்த்து விடலாம். ஆனல் பிரச்சினை மிகச் சிக்கலானது. அதை முற்றுக இவ்விடத்திலே தீர்க்க முடியாது.

**தனிப்பட்டவர் வருமான வரி.**

வசந்தகாலம் எல்லார்க்கும் துன்பத்தைக் கொடுத்து வந்தது. ஏனெனில் கடந்த வருட வருமானத்திலே கொடுக்க வேண்டிய வருமானவரியை இந்தக்காலத்திலேதான் கொடுத்துத் தீர்க்க வேண்டியிருந்தது. அந்த வருமானம் அநேகமாக செலவாகி ஒழிந்திருக்கும். ஆனல் இப்போது நிலைமை மாறிவருகிறது. வரி முழுவதையும் முதலாளிகளே சம்பளம் கொடுக்கும்போது கழித்துக்கொண்டு கொடுக்கிறார்கள். எனவே வருடச் சம்பளம் செலவாகி முடிந்தாலும் வருமானவரி கொடுபட்டிருக்கும்.

300 இலட்சம் குடும்பத்தவர் 5,000 டொலர் வருமானமோ அதற்குக் குறையவோ பெறுகின்றனர். வேறு சொத்து வருமானம் கிடையாது. இவர்கள் முதலாளிகள் கொடுத்த பற்றுச்சீட்டுக்களைக் காட்டிவிடவேண்டியதுதான். திறைசேரி அவர்கள் கொடுக்க வேண்டிய வருமான வரியைக் கணக்கெடுத்து ஏதாவது அதிகப்படி வசூல் செய்யப்பட்டிருந்தால் திருப்பிக்கொடுத்து விடும். நியாயமான வருமானத்தையுடைய ஏனையோர் தருமக்கணக்கிலோ விசேட வைத்திய சிகிச்சைக்காகவோ அதிக பணம் கொடுக்காவிட்டால், ஒரு சின்னப் பத்திரத்தை நிரப்ப வேண்டியதுதான். உடனே வருமான வரியை விரைவாகக் கணித்துவிடலாம்.

நல்ல வருமானமுள்ளவர்கள் சிக்கலான நீண்ட பத்திரங்களை நிரப்ப வேண்டும்.

ஒவ்வொரு வருமான மட்டத்திலும் எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்பதை அட்டவணை 2 இல் பார்க்கலாம். (வரி விகிதங்கள் எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கின்றன.)

(1) கோட்டிலே அட்டவணைப்படுத்திய வருமானத்தைப் பொறுத்து மக்கள் கொடுக்க வேண்டிய வரி, (2) கோட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. வறியவர்க்கு வரி குறைவாயிருப்பதையும் வருமானம் ஏற ஏற வரியும் ஏறிக் கொண்டிருப்பதையும் காணலாம். வருமானம் 20 இலட்சம் டொலரைக் கடந்ததும் 87 வீதம் அரசாங்கத்துக்குச் செல்லும். (3) கோடு, தனியார் வருமானவரி எவ்வாறு படிமுறையாய் அமைந்திருக்கிறதென்பதைக் காட்டும். 3,000 டொலர் வருட வருமானமுள்ளவரிலும் பார்க்க 10,000 டொலர் வருட வருமானமுள்ளவரின் வரி அதிகம். அதாவது இது 19 வீதமும் 12 வீதமுமாகும். 10 இலட்ச வருமானமுடையவரின் வரி மேலும் அதிகரிக்கப்படுகிறது. 4 ஆவது கோட்டிலே உருசிகரமானதொரு விடயமுண்டு. இது மேலதிகமான ஒவ்வொரு டொலர் மீதுமுள்ளவரி. இது 20

www.padippakam.com



வீதமான "சாதாரண வீதத்"திலே துவங்கி 10,000 டொலர் வரை அதிகம் உயரவில்லை. இஃது "இறுதிநிலை வரி அல்லது உபரிவரி". கடைசியாக இது 91 வீதத்தை அடைகிறது.

**வருமானம் உயர வரியும் படிப்படியாக உயருகிறது:**

அட்டவணை. 2.

| கழிவு கொடுப்பதற்கு முன்னுள்ள தேறிய வருமானம் (1) | தனிப்பட்ட வருமானவரி (2) | சராசரி வரி வீதம் நூற்று வீதத்தில் (3)[=(2)÷(1)] | இறுதிநிலை வரிவீதம் (உபரிடொலர் மீதுள்ள வரி) (4) | வரி கொடுத்த பின் செலவு செய்யக் கூடிய வருமானம் (5) [=(1)=(2)] |
|---|---|---|---|---|
| டொலருக்குக்கீழ் 1,200 | 0 | 0 | 0 | 1,200 |
| 3,000 | 360 | 12 | 20 | 2,640 |
| 5,000 | 760 | 15.2 | 20 | 4,240 |
| 8,000 | 1,416 | 17.7 | 22 | 6,584 |
| 10,000 | 1,888 | 18.9 | 26 | 8,112 |
| 20,000 | 4,870 | 24.4 | 34 | 15,130 |
| 50,000 | 19,600 | 39.2 | 59 | 30,400 |
| 100,000 | 52,800 | 52.8 | 72 | 47,200 |
| 200,000 | 134,000 | 67 | 87 | 66,000 |
| 500,000 | 404,000 | 80.8 | 91 | 96,000 |
| 1,000,000 | 859,000 | 85.9 | 91 | 141,000 |
| 2,000,000 டொலருக்குமேல் | 0.87 × நிரல்(i) | 87 | 87 | 0.13 × நிரல்(i) |

அட்டவணை 2. குழந்தையில்லாத தம்பதிகள் பலவகை வருமானமட்டங்களிலே கொடுக்க வேண்டிய சமட்டி வருமானவரி, 1961. கல்யாணமாகாதவர் அதிகம் கொடுப்பார். பெரிய குடும்பமுடையவர் குறைவாகக் கொடுப்பர்.


(5) கோட்டில் வரி கொடுத்தபின் மிஞ்சும் வருமானமுண்டு. அதிக வருமானம் அதிக பணத்தை மிச்சமாகக் கிடைக்கச் செய்யும். உயர்ந்த வருமானத்துக்கு வாரிசாயுள்ள ஒரு பெண் செலவுக்கு மேலும் அதிக பணத்தைப் பெறக்கூடியவளாயிருப்பாள். ஒவ்வொரு மேலதிக டொலரிலும் 91 சதத்துக்குமேல் அரசாங்கம் எடுக்கமாட்டாதென்பதை 4 ஆம் கோட்டிலே காணலாம். 35,000 டொலர் வருமானத்திலே ஒரு டொலரில் அரைப்பங்குக்கு அதிகமாக அஃது எடுக்கத் துவங்குகிறது—இது தம்பதிகளிடம். பிரமச்சாரி 17,500 டொலர் வரையில் அவ்வாறு கொடுக்க வேண்டிய அவசியமேற்படுகிறது.

வருமானத்திலுள்ள அசமத்துவநிலையை வருமானவரி ஓரளவுக்குக் குறைக்கிறது. படம் 1 வருமானத்திலுள்ள அசமநிலையை, படிமுறையான வரி எவ்வாறு குறைக்கிறதென்பதைப் பெருப்பித்துக் காட்டுகிறது. லோறன்ஸ் படத்திலே அசமத்தைக் காட்டும் பரப்பு, எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளதென்பதைக் கவனிக்க.

www.padippakam.com



**படிமுறைவரிகள் வருமானப்பங்கீட்டைச் சமன்படுத்தும் போக்குடையன :**




**படம் 1.** வரிக்கு முன்னர் உள்ள அசமமான வருமானப் பங்கீட்டைக் காட்டுவது கறுப்புக் கோடு. வரிக்குப்பின் மிஞ்சும் பணத்தில் முன்னரிலும் சமமான பங்கீட்டைக் கொண்டுவருவது படிமுறைவருமானவரி என்பதை உடைந்த கோடுகள் காட்டும்.

படிமுறைவரியானது கறுப்புக்கோட்டை உள்ளே உடைந்த கோடுவரை அதாவது 45° கோடுவரை தள்ளிவிட்டது.

**படிமுறைவரி, முதலீடு, செலவீடு.**

வருமானவரியை உயர்த்துவதால் மக்களின் உற்சாகமும், புதிய முயற்சிகளில் ஈடுபடும் ஆர்வமும் குறைய மாட்டாவா ? உற்சாகம் குறையுமா மாட்டாதா என்பதை நிச்சயிப்பது கடினம். வரியினால் சில சமயம் உற்சாகம் கூடலாம். 10 இலட்சம் டொலர் வருமானத்தைப் பெறுவதற்குச் சிலர் மேலும் முயற்சிசெய்வர். பல வைத்தியர்களும், விஞ்ஞானிகளும், கலைஞரும், வியாபாரிகளும் தமது வேலையில் இன்பங்காண்பவராய், தமது முயற்சியால் வரும் புகழ், ஆதிக்கம் என்பன காரணமாக 30,000 டொலருக்குச் செய்யும் வேலையையே 100,000 டொலர் கொடுத்தாலும் செய்வர். வேறு சிலர் படிமுறைவரி காரணமாக அதிகம் வேலை செய்யாது ஒய்வு நேரத்தை விரும்புவர். இதனால் வரும் பயனைக் கணிப்பது கடினம். இப்போது இவ்விடயத்தைக் குறிப்பிடுகிறோம். நாலாம் பகுதியில் அதை ஆராய்வோம்.

படிமுறை வரியானது ஆபத்துள்ள முதலீடுகளைப் பாதிக்கின்றது என்பதில் ஐயத்துக்கிடமில்லை. அரசாங்கம், வரி கொடுப்பவனைப் பார்த்து “ சுல்தான் அல்லது பக்கிரி ” என்று சொல்லுகிறது.

ஓர் உதாரணம் :

ஒருவன் ஒரு வருடத்தில் 200,000 டொலர் உழைக்கிறான். அடுத்த 3 வருடத்தில் அவனுக்கு உழைப்பில்லை. அவன் தம்பி 50,000 டொலர் வீதம் 4 வருடமாய் உழைக்கிறான். வரிகொடுப்பதற்குமுன் அவ்விருவரதும் சராசரி வருமானம் ஒரேவிதமாகவேயிருக்கிறது. ஆனால் தம்பி 4 வருடத்துக்கும் வருமான வரியாக 134,000 டொலர் கொடுக்கிறான் ; அவனுக்கு மிஞ்சிய வருமானம் 66,000டொலர் ஆகும். (அட்டவணை 2 ஐப் பார்க்க.) ஆனால் அவன் அண்ணன் 78,400 டொலரையே வரியாகக் கொடுக்கிறான். (4 × 19600 டொலர்). அவனுக்கு வரி கொடுத்து மிஞ்சிய பணம் 121,600

www.padippakam.com



டொலர் ஆகும். எனவே முயற்சியுள்ள தம்பியிலும் பார்க்க அண்ணனுக்கே வருமானம் அதிகரித்துள்ளது. படிமுறையான வரி தம்பியைப் பாதித்து விட்டது.

ஹார்வாட் வியாபாரக்கல்லூரியினர் செய்த ஆராய்ச்சியின் பயனாக, செல்வர் தற்போதுள்ள சட்டத்திலிருக்கும் குறைபாடுகள் காரணமாக, 50 வீதம் வரியைக்கொடுத்துத் தப்பிக்கொள்ளக்கூடியவராயிருப்பர். இதை நாலாம் பகுதியில் குறிப்போம். நியாயமாக அவர்கள் 87 வீதம் கொடுக்க வேண்டியவராவர். அவர்கள் அபாயம் நிறைந்த துறைகளில் முயன்று வரி குறைவான இலாபமுள்ள துறைகளில் ஈடுபடுகின்றனர். வரியில்லாத நகர சபைக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றனர். எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டிப் பார்க்கின்றனர். மரம் வளர்த்தல், இறைச்சிக்காக மாடுகளை வளர்த்தல் என்பவற்றில் ஈடுபடுகின்றனர். இவை வரிகுறைவான முதலீடுகள். ஆனால் கண்டனஞ் செய்வோர் பின்வருமாறு கேட்கின்றனர் :

50 வீதத்துக்கு அதிகமான வரிகளால் கிடைக்கும் தொகை ஒப்புக் கணக்குப்படி குறைவாயிருக்கும்போது 87 வீத உயர்வரி என்ற வேடிக்கை எதற்கு ? சமத்துவம் வேண்டுமென்போரைத் திருப்திப்படுத்துவதற்காக, வரியிலிருந்து தப்பும் உபாயங்களை உபயோகியாத நல்லவர்களை மாத்திரம் தண்டிக்கிறோம்.[1]

படிமுறையான வரிகள் முதலீட்டையும் தொழில் வாய்ப்புக்களையும் தேசிய வளர்ச்சியையும் பாதிக்கின்றன என்று எதிர்த்தால் அஃது எதிரிடையானபலனைக் கொடுக்கிறது. சிக்கனமான வாழ்வு நடத்தும் தனவந்தர்களிடமிருந்தே டொலர்களை அரசாங்கம் வசூலிக்கிறது. பணத்தை உடனடியாகச் செலவு செய்வோர் வறியவர். படிமுறைவரியானது செலவிடும் சக்தியை உயர்மட்டத்தில் வைத்துக்கொள்கிறது. பணவீக்கம் ஏற்படும் உற்பாதங்களிருக்குமானால் அதனை மிக உயர்ந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளும். இத்தகைய பாதிப்பு மொத்தச் செலவில் அதிகமாயிருக்கமாட்டாது.

படிமுறை வரியினால் உண்டாகும் பலவகைப் பயன்களைப் பொருளாதார சாத்திரம் சுட்டிக்காட்டுமேயன்றி நுட்பமாகக் கணக்கிடமாட்டாது. சமுதாயம் சம உடைமையுடையதாயிருக்க வேண்டுமா ? தனிப்பட்டவர்களின் முயற்சிக்குப் பெரிதாகவா, சிறிதாகவா உபகாரம் பண்ணவேண்டும் ? என்ற விடயங்களை ஒழுக்க முறையிலும், செலவின முறையிலும் ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டியது வாக்காளர் கடமை.

**மாகாணச் செலவும், தல ஆட்சிச் செலவும்.**

சமட்டி ஆட்சிச் செலவு ஒருபுறமிருக்க வேறு ஆட்சிச் செலவுகளை இனி ஆராய்வாம். சமட்டி ஆட்சிச் செலவுகள் மாகாணத்தல ஆட்சிச்


1. அதிகவரி விதிக்கப்பட்ட வருமானங்களைக் கொண்டுவரும் முயற்சிகளைக் கைவிட்டு இலேசான வரிகளுள்ள அபாயம் நிறைந்த முயற்சிகளில் தனவந்தர் ஈடுபடுவர். அப்போது உயர்வரி, அபாயம் நிறைந்த முயற்சிகளில் ஈடுபட மக்களைத் தூண்டும். அத்தகைய முயற்சிகளை அரசாங்கமே 91 வீதம் பணமுமுதவி, விருத்தி செய்யும்.

www.padippakam.com



செலவுகளிலும் எத்தனையோ மடங்கு பெரிதானாலும், இவையும் தம்மள வில் முக்கியமான செலவுகளே. தல ஆட்சிகளும், மாகாணங்களும் எவ்வாறு பணத்தைச் செலவு செய்கின்றன என்று அறிவதற்கு படம் 2 ஐப் பார்க்க. இந்தச் செலவினங்களை விளக்க வேண்டியதில்லை. பாடசாலைச் செலவினமே மிகப் பெரிய செலவினம். அதுவும் தலவாரியாகவுள்ள செலவு பெரிதும் அதிகமாகும்.

**மாகாண, தல ஆட்சிகளிலே பாடசாலைகளுக்கு அதிகம் செலவு செய்யப் படுகிறது.**




படம் 2. சனப்பெருக்கத்தினுல் மக்கள் நகரங்களை விட்டுக் கிராமங்களுக்கு இடம் பெயர்வ தால் மாகாண ஆட்சிச் செலவும் தலத்தாபன ஆட்சிச் செலவும் அதிகரித்துள்ளன. அதனுல் இவ்விரண்டு ஆட்சிகளிலும் கடன் அதிகரித்துள்ளது. (மூலம் : குடிமதிப்புச் செயலகம்)

**மாகாணவரியும் தலத்தாபன வரியும்.**

இந்தச் செலவுக்குரிய நிதி எங்கிருந்து வருகிறதென்பதை அறிவதற்கு படம் 3 ஐயும் அட்டவணை 3 ஐயும் பார்க்க. இங்கே மாகாணவருமானம், தலவருமானம் என்பன காட்டப்பட்டுள்ளன. முன்னே வரியினங்களைப் பற்றி ஆராய்ந்தோம். அவற்றை வைத்து ஆராயுமிடத்து மாகாணவரிகளும்

www.padippakam.com



தலவரிகளும் பிற்போக்கான வரிகளாகக் காணப்படும். சில முக்கியமான வரிகள் பின்வருமாறு :

சொத்துவரி : மாகாண வருமானம், தலத்தாபன வருமானம் என்பவற்றின் மொத்த வருமானத்தில் அரைப்பங்கு இந்த வரி மூலமே கிடைக்கிறது. தலத்தாபனங்களே சொத்துவரி விதிக்கின்றன என்பதை படம் 3 இலும் அட்டவணை 3 இலுமிருந்து அறியலாம்.

**மாகாண, தல ஆட்சிக்குரிய நிதியில் நிச ஆதனச் சொத்துவரியே இன்னும் முக்கியமான இடம் பெற்றுளது,**




**படம் 3.** தல, மாகாண ஆட்சிகளுக்குரிய வரிகளிற் பெருமபாலானவை பிற்போக்கு வரிமுறை வகையினவாகும் ; இவை தேவைகள் அதிகரிப்பதற்கேற்ப எளிதில் விரிவடைவனவல்ல. (மூலம் : குடிமதிப்பீட்டுச் செயலகம்.)

சொத்துவரி முக்கியமாக அசையாத ஆதனத்துக்கும், நிலம், கட்டிடம் என்பவற்றுக்கும் விதிக்கப்படும். சில சமயம் தளபாடம், கடிகாரம், போன்ற பொருள்களுக்கும் விதிக்கப்படும். தலத்தாபனங்களில் வருட வரி விகிதம் ஒன்றுண்டு. மதிப்பிடப்பட்ட சொத்துப் பெறுமதி 1,000 டொலருக்கு 55 டொலர் கொடுக்க வேண்டுமென்று பெரிய நகரங்களில் வரி விகிதமுண்டு. அதாவது என்னுடைய வீடு 10,000 டொலர் பெறுமதியுள்ளதாக மதிப்பிடப்பட்டால் நான் சொத்து வரியாக 550 டொலர் கொடுக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். பல இடங்களிலே சந்தைப் பெறுமதியிலும் பார்க்க மிகக் குறைவாகவே சொத்து மதிப்பிடப்படுகிறது. எனது வீடும் அதைப்போன்ற வீடுகளும், 20,000 டொலர் பெறுமதியுடையதாயிருக்கலாம். ஆனால் அவை 10,000 டொலர் பெறுமதியுள்ளனவாகவே கொண்டு, வரி விதிக்கப்படும். எனவே எனது உண்மையான ஆதன வரி வீதம் 5.5 ஆகும். ஆனால் நிசமாக 2.8 வீதமே வரி கொடுக்கிறேன்.

சொத்துவரி மாற்ற முடியாதது. மதிப்பீடுகளும், வீதங்களும் சிறிது சிறிதாக மாறுமியல்புடையன. வியாபாரமந்த காலத்திலே, தாவரசொத்துக்களின் மதிப்பு வீழ்ச்சியுறும்போது வரி மிகப் பளுவுடையதாயிருக்கும். அதனால் வியாபார முறிவும், ஈட்டுப் பொருளை மீட்கும் உரிமையைப் பறிமுதல் செய்தலும், நிர்ப்பந்தமாக ஆதனத்தை விற்றலும் உண்டாகும். யுத்தகாலத்துக்குப் பின்னர் உண்டான பொருளாதார நிலையிலே வியாபாரம் பெருகியதால், சொத்து மதிப்பீடுகளும் வரி விகிதங்களும் படிப்படியாக உயர்ந்து கொண்டன.

கொலோனியல் ஆட்சிக் காலத்திலே ஒருவனுடைய மொத்த வருமானமும், செல்வமும் தாவரச் சொத்தோடு சம்பந்தப்பட்டனவாகவேயிருக்கும். அத்தகைய ஆதனத்தின்மீது விதிக்கப்படும் வரியின் பயன், விகிதாசாரப்படி விதிக்கும் வருமான வரியை ஒத்திருக்கும். இன்று எவ்வளவோ செல்வமும் வருமானமும் தாவரச் சொத்தோடு தொடர்பின்றியிருக்கும்போது சொத்து வரியானது வருமானத்தோடு சார்த்திப் பார்க்குமிடத்துப் பிற்போக்குள்ளதாய்க் காணப்படலாம். அதுவும் சிறிய சொத்துக்கள்மீது, பெரிய சொத்துக்கள்மீது விதிப்பதிலும்பார்க்க, அதிக வரி விதிக்கப்படுகின்றபடியால் அவ்வாறு தோன்றலாம்.

**வீதிவரி.** இந்த வரி இரண்டு வழியாக அரசாங்கத்துக்குக் கிடைக்கிறது. ஒன்று ஒவ்வொரு கலன் பெட்ரோலுக்கும் விதிக்கும் வரி ; மற்றது கார், லொறி, சாரதிகள் என்போர்மீது விதிக்கப்படும் லைசென்ஸ் வரி. பல மாகாணங்களிலே வீதிகளிற் செலவு செய்வதிலும் பார்க்க இவ்வழியில் அதிகமான வரி வசூல்செய்யப்படுகிறது. மிஞ்சிய வருமானம் பள்ளிக்கூடங்களைப் பரிபாலிப்பதற்கும் வயோதிபர்க்கு இளைப்பாறற் சம்பளம் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சில கல்லூரிகள் பந்தாட்டப் போட்டிகளில் ஈட்டும் பணத்தை புத்தகம் முதலியன வாங்க உபயோகிக்கின்றன. அதுபோன்றதே இதுவும்.

வரிகொடுப்பவர் வீதிகளைப் பயன்படுத்துகிறார். ரயில் பாதையில் பிரயாணஞ் செய்வதற்கு டிக்கெட் வாங்குவது போலவே இந்த வரியும் கருதப்படுகிறது. இவ்வாறே தண்ணீர், மின்சாரம் என்ற வசதிகளுக்கும் வரி செலுத்தப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



**மாகாணங்கள் சமட்டி அரசிடமிருந்து உதவி நன்கொடை பெறுகின்றன. அதேசமயம் தலத்தாபன ஆட்சிகளுக்கு உதவியளிக்கின்றன.**

| வருமானம் வரும்வழி | மாகாணம் | தலத்தாபனம் |
|---|---|---|
| வரிகள் | 14.9 டொலர் | 15.5 டொலர் |
| ஆதனம் | 0.5 டொலர் | 13.5 டொலர் |
| வேறு | 14.4 | 1.9 |
| சமட்டி அரசிடமிருந்து உதவி | 4.5 டொலர் | 0.4 |
| மாகாண அரசிடமிருந்து உதவி | | 7.5 |
| கட்டணம் முதலியன | 6.5 | 7.5 |
| தேறிய மொத்தம் | 25.9 டொலர் | 30.9 டொலர் |

**அட்டவணை 3.** மாகாண அரசு, தலத்தாபன அரசு ஆகியவற்றின் வரிகளும் ஏனைய வருமானங்களும், 1958 (ஆயிரங் கோடியில்). மாகாண வரிகளும் தலத்தாபன வரிகளும் அநேகமாக ஒரே விதமாயிருந்தபோதிலும் தலத்தாபன வரிகள் பெரும்பாலும் சொத்து வரிகளாக வேயிருப்பதைக் காணலாம். சமட்டி அரசு மாகாண அரசுக்கு வழங்கும் உதவி நன்கொடை போல் இரட்டிப்பங்கு உதவியை, மாகாண அரசு தலத்தாபனங்களுக்கு வழங்குகிறது. (குடி மதிப்பீட்டுச் செயலகம்.)

**விற்பனைவரி.**—சில்லறை விற்பனை வரிகளால் அதிக வருமானம் மாகாணங்களுக்குக் கிடைக்கிறது. பலசரக்குக் கடை, மருந்துக்கடை என்பவற்றில் விற்பனையாகும் ஒவ்வொரு பொருள்மீதும் விகிதாசாரப்படி வரியுண்டு. (சிலசமயம் உணவு, மருந்து என்பவற்றின் மீது வரி விதிக்கப்படுவதில்லை.) இவற்றோடு மாகாணங்கள் மது, புகையிலையென்பவற்றின் மீது சமட்டி அரசின் வரியைவிடத் தாமும் வரி விதிப்பதுண்டு. சில நகரங்களும் இந்தச் சட்டத்துக்கு உட்படுகின்றன. புகையிலை புகைத்தல், மதுவருந்துதல் என்பன ஒழுக்கங்கெட்ட செயல்களென்று பெரும்பாலான மக்கள் தெளிவில்லாத ஓர் உணர்வுடையவராயிருக்கின்றனர். எனவே இந்தப் பொருள்கள் மீது வரி விதிப்பதை, அரசாங்கம் ஒரு கல்லால் எறிந்து இரண்டு பட்சிகளை விழுத்தியதுபோல எண்ணுகின்றனர். அரசாங்கம் இவற்றால் வருமானத்தைப் பெறுகிறது. அத்துடன் கெட்ட பழக்கங்கள்மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என அவர்கள் நினைக்கின்றனர். (இதிலேயுள்ள முரண்பாட்டைக் கவனிக்க).

இதேவிதமான ஒழுக்கச் சார்பான மனக் கிளர்ச்சி வேறு பொருள்கள் விடயத்தில் உண்டாகாது. உதாரணமாக, ஒரு சோடி செருப்பு, ஒரு சவர்க்காரக்கட்டி, மெழுகுதிரி என்பன விடயத்தில் 5 வீத வரி கொடுக்கும் விடயத்தைச் சுட்டிக் காட்டலாம். ஏழை, வறியவர் என்று பாராமல் எல்லாரும் ஒரே வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. வறியவர்கள் தமது வருமானத்திலே பெரும் பகுதியைச் செலவு செய்ய வேண்டியிருப்பதால், போகப் பொருளல்லாத பொருள்களுக்கு விதிக்கும் வரி பிற்போக்கு வரியாகக் கொள்ளப்படுகிறது. அதாவது உயர்ந்த வருமானத்தில் அதிக

படிப்பகம்

www.padippakam.com



பங்கையெடாமல் குறைந்த வருமானமுள்ளவர்களின் வருமானத்தில் பெரும்பகுதியை வசூல் செய்கிறது.

**சம்பள வரி, வியாபார வரி.**—கம்பெனி நடத்துவதற்கும், தவறணை முதலியன நடத்தவும் லைசென்ஸ் வரி விதிக்கப்படுகிறது. சில மாகாணங்கள் கம்பெனியின் தேறிய வருமானத்துக்கு வரி விதிக்கின்றன. தொழில் நிலையங்களிலிருந்து வேறு வகையான பல வரிகளும் விதிக்கப்படுகின்றன.

சமூகப்பாதுகாப்புச் சட்டம் செல்லுபடியாகும் தொழில்தாபனங்களிற் கொடுக்கப்படும் சம்பளத்தின்மீது 3 சதவரி வசூல் செய்யுமாறு சமட்டி அரசு மாகாண அரசுகளை நிர்ப்பந்தப்படுத்தியுள்ளது. இந்த வரிமூலம் கிடைக்கும் வருமானம் தொழிலாளர் வேலையிழந்திருக்கும் காலங்களில் உதவி புரிவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**தனிப்பட்ட வருமானம், வழிவழிச் சொத்து வரி.** மாகாணங்களில் அரைவாசி சமட்டி அரசைப் பின்பற்றிக் குறைந்த அளவில் வருமானவரி விதிக்கின்றன. ஒவ்வொருவருடைய வருமானத்துக்குத் தக்கவாறு வருமானவரி விதிக்கப்படுகிறது. சமட்டிப் பணவிடயம்பற்றி ஆராய்ந்தபொழுது இந்த வரிமுறையைப்பற்றி ஆராய்ந்தோம். இலினோஸ் போன்ற சில முக்கியமான மாகாணங்கள் இத்தகைய முற்போக்கான வரியில் ஒரு துளியுந் தங்கியிருக்கவில்லை.

நாதி மித்திரர் நன்கொடையாகக் கொடுக்கும் ஆதனங்கள்மீது வழிவழிச் சொத்து வரி விதிக்கப்படுவது எல்லாருமறிந்த விடயம். இஃது இறந்தவரின் காணி பூமி மீது விதிக்கப்படும் வரியிலும் சிறிது வித்தியாசமானது. நன்கொடை மீது வரி விதிக்கப்படாவிட்டால், தனவந்தர் தாம் உயிரோடிருக்கும் காலத்திலேயே, தமது நிலபுலம் முதலியவற்றை எவ்வித வரியுமின்றித் தமது வாரிசுகட்கு எழுதிக் கொடுத்துவிடலாம். இதனால் அவர்கள் வரி கொடாமல் தப்பிவிடலாம்.

சொத்து வரி, வாரிசுவரி என்பன மாகாண அரசிலும் சமட்டி அரசிலும் நிலவும் வரியாகும். புளோரிடா போன்ற மாகாணங்கள், "வாரிசு"வரிக்குத் தப்பவேண்டுமென்றால் இங்கே வந்து கடைசிக்காலத்தைக் கழியுங்களென்று விளம்பரஞ் செய்வதைத் தடுப்பதற்காகச் சமட்டியரசு இந்தவரியை வசூல் செய்கிறது. இவ்வாறு வரி வசூல் செய்யும் மாகாணத்திற்குச் சமட்டி அரசு தனது வருமானத்தின் ஒரு பகுதியைக் கொடுத்து விடுகிறது. அத்துடன், மாகாண அரசின் வரிப்பற்றுச்சீட்டை, குடியானவரின் வரியில் ஒரு பகுதி செலுத்தப்பட்டதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளுகிறது. இருந்தாலும், மாகாணங்களிடையே இவ்விடயத்திற் பலவகையில் வித்தியாசமுண்டு.

சொத்து வரியும் வாரிசு வரியும் முற்போக்குவரிகளெனக் கருதப்படுகின்றன. ஏழைக் கைம்பெண்ணின் வாரிசுச் சொத்துக்கு வரிகிடையாது. இவ்விடயத்தில் அரசாங்கம் பலவகையான சகாயங்களைச் செய்கிறது. ஆனால் தனவந்தனது ஆதனத்தின்மீது முற்போக்கான வீதத்தில் வரி விதிக்கப்

www.padippakam.com



படுகிறது. சமூகச் சீர்திருத்தவாதிகள் இந்த வரிக்கு மிகுந்த முக்கியத்துவங் கொடுக்கிறார்கள். இதனால் பணக்காரர் என்றொரு வகுப்பாரை வளர விடாதுசெய்யலாமென்பது அவர்கள் கருத்து. 1961 இலிருந்து, " பிளவு பட்ட வருமான " உரிமையும், நன்கொடை உரிமையும் வழங்கப்பட்டுள்ளன. சிக்கலான தருமச் சொத்துக்களும், வரியில்லாத காப்புறுதிப் பொலிசிகளும் ஏற்படுத்த வசதியளிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் மரணவரி வசூலை மிகக் குறையச் செய்துவிட்டன. (இது பெரிய பிரித்தானியாவிலும் நடைபெறுகிறது.)

வேறு வகையான சில்லறை வருமானங்களுமுண்டு. சில தலத்தாபனங்கள் வாயு, மின்சாரம் முதலியவற்றை விற்பனை செய்கின்றன. நெவாடா போன்ற இடங்களில் சூதாட்டம், குதிரைப்பந்தய ஆட்டங்கள் மீது வரி விதிக்கப்படுகிறது. ஆதன வரியாகச் சொத்து உரிமையாளரிடமிருந்து வரி சேகரிக்கப்படுகிறது. இந்த வரியின் பயனாக அவர்கள் றோட்டு வசதியும் சாக்கடை வசதிகளும் பெறுகிறார்கள்.

**அரசாங்கங்களிடையே பரஸ்பர உதவி நன்கொடையும், கடன்நிதியும்.**

மாகாணங்கள் சமட்டி அரசிடமிருந்தும், தலத்தாபனங்கள் மாகாண ஆட்சியிடமிருந்தும் பண உதவி பெறுவது முக்கியமானதொரு வருமானமாகும்.

பலவகையான வருமானங்களுக்கு வழி செய்தபின், சமட்டி அரச மாகாண அரசுகட்கும் தலத்தாபனங்கட்கும் மேலதிகமாக நன்கொடை கொடுத்து வருகிறது. இவை பெரும்பாலும் வீதியமைப்பதற்கும், பொது நலக்கருமங்களை நிறைவேற்றுவதற்கும் கல்வி விருத்திக்குமேயாகும். நிச வருமானத்தில் மாகாணங்களுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை ஓரளவு இவை சமன்படுத்துகின்றன. அதாவது சமட்டியரசு தெற்கேயுள்ள சில வறிய மாகாணங்களுக்குத் தாராளமாக நன்கொடையுதவுகிறது.

இவ்வாறே மாகாணத்திலுள்ள பல தலத்தாபனங்களுக்கும் நன்கொடை வழங்கப்படுகிறது. பிரதானமாக அப்பணம் பாடசாலைகட்கும் வீதியமைப்புக்கும், வேறு பொதுநன்மைக்குரிய விடயங்களுக்குமே (உதாரணமாக, சகாயம், வயோதிபர் பென்ஷன் முதலியன.) செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள வறிய பிரதேசங்களில் ஓரளவு நல்ல பாடசாலைகளும், வீதிகளும், இத்தகைய கொடைகளினால் தான் அமைக்கப்படுகின்றன. வாழ்க்கைத் தரமும் ஓரளவு உயர்த்தப்படுகிறது. இவ்வாறு நகரிலிருந்து நகர்ப்புறங்களுக்குச் செல்லும் தனவந்தர் மீது ஓரளவு வரிச்சுமை ஏற்றப்படுகிறது.

இத்தகைய உதவி நன்கொடைகள் கொடுக்கப்பட்டபோதிலும், கணிசமான அளவு பிரதேசங்கள் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளின்றியிருக்கின்றன.

www.padippakam.com



இவையெல்லாவற்றையும் கணக்கிலெடுத்த பின்னர், மாகாணச் செலவு களும் தலத்தாபனச் செலவுகளும், அவற்றின் வருமானத்துக்குச் சமமா யிருக்கின்றன என்று கூறமுடியாது. வித்தியாசம் புதிய கடன்வாங்குவதை யும் பழையகடன் கொடுப்பதையும் காட்டும். யுத்தகாலத்திலேயுண்டான செல்வப் பெருக்கு மாகாண வருமானத்தை அதிகரிக்கச் செய்தது. (பெட்ரோல் கட்டுப்பாடிருந்தபோதிலும்), புதிய பாடசாலைகளைக் கட்டவோ, வீதிகளையமைக்கவோ முடியாதிருந்தது. மேலும் சகாயமில்லாதவர்க்குச் சகாயமளிப்பதும் அவசியமில்லாதிருந்தது. அதன்பயனுக யுத்தகாலத் திலே மாகாணங்களிற் பெரும்பாலானவை வருமானத்தில் மிச்சம் பிடிக் கக்கூடியனவாயும், பழைய கடன்களைத் தீர்க்கக்கூடியனவாயுமிருந்தன.

யுத்தத்தின் பின்னர் மாகாணங்களும் தலத்தாபனங்களும் மறுபடியும் கடனைப் பெருக்கின. அவற்றின் செலவினங்கள் உயர்ந்துவிட்டன. புதிய பாடசாலைகளும், வீதிகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஓய்வு பெற்ற யுத்த வீர ருக்கு அளிக்கும் நன்கொடைகளாலும் கடன் பெருகின. 1960 ஐ அடுத்த ஆண்டுகளிலே மாகாணங்களும், தலத்தாபனங்களும் பணமுடைப்பட வேண்டிவரும்.

முதலாவது மகாயுத்தத்துக்கும் இரண்டாவது மகாயுத்தத்துக்குமிடை யிலுள்ள காலத்திலே பெரும்பாலான மாகாணங்களும் தலத்தாபனங் களும், வியாபாரச் சக்கரவேகத்தைத் தணிக்காமல் தூண்டும் வகையில் கடன்பட்டன. செல்வம் செழித்த 1920 ஐ அடுத்த ஆண்டுகளிலே சமட்டி ஆட்சி தனது கடன்களை ஓரளவு கொடுத்துவரும் சமயத்தில் மாகாண அரசுகளும் தலத்தாபனங்களும், புதிய வீதிகளையும் பாடசாலைகளையும், உயர்ந்த விலைவாசிகளைக்கூடப் பொருட்படுத்தாது, அளவுக்குமிஞ்சிய செல விலே கட்டுவதற்குப் பிரமாண்டமான கடன் பெறுமுகமாகப் பத்திரங்களை வழங்கின. 1930 ஐ அடுத்து வியாபாரமந்தம் உண்டானதும், மாகாண அரசு களும் தலத்தாபனங்களும் தமது நடவடிக்கைகளைத் திடீரென நிறுத்திவிட்டு எஞ்சிய பணத்தைக் கொண்டு கடன்களைத் தீர்க்கத் துவங்கின. வியாபாரச் சக்கரத்தை மட்டுப்படுத்துவதில் தீவிர நடவடிக்கையெடுக்குமாறு மாகாணங்களையும் தலத்தாபனங்களையுங் கேட்பது பொருத்தமன்று. அவை நன்மை செய்யாவிட்டாலும், தீமையாவது செய்யாமல் விடலாம். வியாபாரம் மந்தமாயிருக்குங் காலங்களிலே முதலீடு செய்வதை நிறுத்த முடியாவிட் டாலும், செழிப்பான காலத்திலே செலவு செய்ய உண்டாகும் ஆசையையாவது தடுக்கலாம். இவ்வாறு செய்வதால் செழிப்பை மேலும் தீவிரமாக்காதிருக்கலாம். இந்தப் புத்திமதியின்படி நடந்தால் அவற்றின் டொலர்களுக்கு அதிக பயனுண்டாவதோடு, திரமான நிலைமையை ஏற்படுத் தும் பிரச்சினை அவ்வளவு கடினமற்றதாகவுமிருக்கும்.

**முடிவு : வரி நிகழ்வின் எல்லை.**

வரி, முதலிய வருமானங்கள்பற்றிய இந்த ஆராய்ச்சியின் முடிவிலே சில எச்சரிக்கைகளைக் கவனிப்போம். தனிப்பட்டவர் வரிப்பளுவை எவ்வாறு

www.padippakam.com



தாங்குவர் என்ற விடயத்தை வாக்காளர் நிச்சயித்துக்கொண்டாலும், பின்வரும் கடினமான பிரச்சினைகள் உண்டு. குறித்த ஒரு வரி கடைசியில் யாரால் கொடுக்கப்படும்? எவர்மீது வரிப்பளு விழவேண்டுமென்று ஆரம்பத்திலே நினைக்கப்பட்டதோ அவர்மீது அது விழுமா? எவர்மீது வரிப்பளு விழவேண்டுமென்று அரசாங்கம் நினைத்து வரியை விதித்ததோ அவர்மீதே அது விழுமென்று எவரும் கூறிவிடமுடியாது. அவர் அந்த வரிப்பளுவை, வேருெருவர்மீது தள்ளிவிடலாம். பொருளின் விலையை வரியளவுக்கு உயர்த்தி நுகர்வோர்மீது தள்ளிவிடலாம். அல்லது தாம் எவரிடம் பொருள்களை வாங்குகிருரோ அவர்களிடம் அந்த வரியையுந் தள்ளிவிடலாம். அதாவது அவர் வாங்கும் விலையைக் குறைத்துக் கொடுக்கலாம்.

எனவே, பொருளியலறிஞர், வரியானது கடைசியில் யார்மீது பொறுக்கிறதென்பதை ஆராயவேண்டும் எனக்கூறுவர். அதாவது வரியின் பளு கடைசியாக யார் வசம் தங்குகிறது; பொருள்களின் விலையை அது எவ்வாறு பாதிக்கிறது, சாதனவிலைகளை எவ்வாறு பாதிக்கிறது; வளங்களை ஒதுக்கும் விடயத்தை எவ்வாறு பாதிக்கிறது; மக்களுடைய பிரயத்தனங்களை எவ்வாறு பாதிக்கிறது; உற்பத்தி அமைப்பு, நுகர்வு அமைப்பு என்பவற்றை எவ்வாறு பாதிக்கிறது என்பதெல்லாம் இதிலடங்கும். எனவே வரியின் பலாபலன் இலேசான பிரச்சினையன்று. அதைத் தீர்த்துவைப்பதற்குப் பொருளாதாரத்தின் உயர்தர உபகரணங்களின் துணைவேண்டும்.

(உதாரணமாக, கோதுமைமீது விதிக்கப்பட்ட ஒரு வரி நுகர்வோனுக்கு அந்த அளவுக்கு விலையைக் கூட்டுகிறதா? அதன் பயனுக வரிப்பளு நுகர்வோர்மீது சுமத்தப்படுகிறதா? அல்லது வரியானது விலையை அதில் அரைவாசியால் உயர்த்துகிறதா? அல்லது சிறிதுமே உயர்த்தவில்லையா? அதனுல் வரிப்பளு ஓரளவு உற்பத்தியாளர்மீது சுமத்தப்படுகிறதா? கடலை விலை அதனுல் மாறுபடுகிறதா? இந்த வரியினுல் கோதுமை உற்பத்தி ஓரளவுக்கோ, முற்றுகவோ நின்றுவிடுகிறதா? வரியின் பயனுக பண விலைவாசிகளும், சம்பள விகிதங்களும் மாறுவதோடமையாது வெவ்வேறு குடிமக்கள்மீது சுமத்தப்பட்ட பளுவுக்கு மேலதிகமாகவும் அது செல்லுகின்றதா?)


இந்தச் சிக்கலான பிரச்சினையை ஆராய்வதற்கு அவசியமான முக்கிய சாதனங்களைப்பற்றி இந்நூலின் மூன்றும் நாலாம் பகுதிகளிற் கூறுவாம். முடிவான பயன்களைப் பற்றிப் பொருளியலார் ஏகோபித்த முடிவுக்கு வரவில்லை. கம்பெனிமீது விதிக்கப்படும் வரி பெரும்பாலும் நுகர்வோர் தலையிலேயே சுமத்தப்படுகிறதெனச் சிலர் கருதுவர். சிலர் அது பெரும்பாலும் பங்குதாரர்மீதும் முதலாளிகள்மீதுமே விழுகிறதென்பர். சிலர் இரண்டு பக்கத்துக்கும் நியாயங் கூறுவர். சிலர் திருவுளச்சீட்டுப் போடுவர். சிலர் அறிய முடியாதென ஆத்திரப்படுவர்.

படிப்பகம்

www.padippakam.com



"வரிகளைச் செலுத்துவோர் யார்" என்ற வினாவிற்கு நிபுணர்கள் விடையளிக்க முயலுகின்றனர்.




படம் 4. மாகாண தலத்தாபன வரிகளின் தேய்வு முறையான பளுவைக் கவனிக்க. இது, சமட்டி வரிகளின் ஓரளவான வளர்வீத முறைகுரிய வளைகோட்டினின்றும் வேறுபட்டதாகும். (மூலம்: பொருளாதார அறிக்கை பற்றிய கூட்டுக்குழு, நவம்பர், 9, 1957.)

நமது வரிமுறை எவ்வளவு தூரம் முற்போக்குடையது, எவ்வளவு தூரம் பிற்போக்குடையதென்பதைப் படம் 4 காட்டுகிறது. அதை வகுத்த ரிச்சாட் ஏ. மஸ்க்ரேவும் அவருடைய கூட்டாளிகளும் இந்த வரிகளின் பயனைத் தனித்தனியாக அறிவதற்குப் பெரிதும் முயன்றுள்ளனர். இவை வரிப்பயனைக் கூடிய அளவு காட்டும். இந்த ஆராய்ச்சிகளைச் செயற்கை நிலையில் செய்யக்கூடிய சக்தி தமக்கு இல்லையெனவும் மஸ்க்ரேவ் கூறியுள்ளார். செயற்கை நிலையிலே ஆராய்ச்சி செய்வதானால் (1) வரியில்லாத நிலையில் விடயங்களை அளந்து காணவும் (2) பின்னர் வரியுள்ள நிலையில் விடயங்களை அளக்கவும் (3) கடைசியாக இந்த இரண்டு நிலைக்குமிடையிலுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவும் வேண்டுமெனவுங்கூறலாம்.

எப்படியானாலும், மாகாணத் தலத்தாபன வரிகள், சமட்டி வரிகளிலும் பார்க்கப் பிற்போக்கானவையெனவும், படம் 4 அதைக் காட்டும் எனவும் நிபுணர் கூறுவர்.

**சுருக்கம்.**

1. அரசாங்கம் தனது நடவடிக்கைகளைமேற்கொள்வதற்குத் தேவையான வருமானங்கள் வரி மூலம் கிடைக்கின்றன. வருமானப்பங்கீட்டை மாற்றக் கூடிய வகையில் அமைந்த பொதுநல மாற்றச் செலவுகளுக்கும் வரிகள் துணை செய்கின்றன. வரிகள் விதிக்கப்படும் விதமே சனங்களிடம் வருமானம் பங்கிடப்படும் முறையை நிச்சயிக்கிறது.

www.padippakam.com



2. வரி விதிப்பதன் அடிப்படை நோக்கம் " நன்மை ", " புணர்ப்பங்கீட்டிலுள்ள தியாகம் " என்ற இரண்டு கருத்துக்களையும் உடையது. வருமானத்திலும் ஆதனத்தின்மீதும் படிமுறையாக முன்னேறும் நேரடியான வரிகளுண்டு. அவற்றுக்கு எதிராகப் பிரதானமாகப் பண்டங்கள், பணிகள் என்பவற்றின்மீது விதிக்கப்படும் மறைமுகமான வரிகளுண்டு.

3. சமட்டி வருமானத்திலே, முக்காற்பகுதி தனிப்பட்ட வருமான வரி மூலமும் கம்பெனி வருமானவரி மூலமுங் கிடைக்கிறது. எஞ்சியது பிற்போக்கான வரிகளான சம்பளவரி, கலால்வரி முதலியன மூலம் கிடைக்கிறது. தனிப்பட்டவர் வருமானவரி முற்போக்கானது ; அது வருமானத்தை செல்வரிடையிலும் வறியவரிடையிலும் புணர்ப்பங்கீடு செய்கிறது.

4. யுத்தகாலத்துக்குப் பின்னர் மாகாணச் செலவும் தலத்தாபனச் செலவும் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. செலவினங்களில் முக்கியமானவை கல்வி, வீதியமைப்பு, பொதுநலம், பொலீஸ், அரசாங்கப் பாதுகாப்புக் கருமங்கள் என்பனபற்றியவை.

5. தலத்தாபன வருமானத்தில் சொத்துவரி முக்கியமானது. மாகாண வரிகளில் விற்பனை வரியும் கலால் வரியும் முக்கியமானவை. யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலே மாகாணங்களும் தலத்தாபனங்களும் வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்தன. அதனால் அவற்றின் கடன்கள் அதிகரித்தன.

6. வீதியமைப்புக்கும் சமூக நலனை விருத்தி செய்வதற்குமாக மாகாணங்களுக்குச் சமட்டி அரசு கோடிக்கணக்கான தொகையை நன்கொடையாகக் கொடுக்கிறது. கல்வி, வீதியமைப்பு, பொதுநலசேவையென்பவற்றுக்கென மாகாண அரசு தலத்தாபனங்களுக்கு அதிகப்படியான உதவி செய்து வருகிறது.

7. வரியின் பாதிக்கும் முறையென்பது, அதன் பளு எவ்வாறு பிரிக்கப்படுகிறதென்பதே. அதாவது விலைகளையும் ஏனைய பொருளாதாரவிடயங்களையும் அஃது எவ்வாறு மாற்றுகிறது என்பதாகும். எவர்மீது ஒரு வரி விதிக்கப்படுகிறதோ, அவர் அந்தப் பளுவின் ஒரு பகுதியை முன்னுக்கோ பின்னுக்கோ தள்ளக்கூடும். நூலின் மூன்றும், நாலாம் பிரிவிலே பொருளியல் உபகரணங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைக்கொண்டு இந்தக் கடினமான பிரச்சினையை ஆராயலாம்.

**ஆராய்ச்சிக்குரிய விடயங்கள்.**

1. வரிகளின் முற்போக்குக் கிரமப்படி பலவகையான வரிகளையும் அட்டவணைப்படுத்துக.

(1) சமட்டி (2) மாகாண (3) தலத்தாபன மட்டத்தில் அவையொவ்வொன்றினதும் முக்கியத்துவமென்ன ?

www.padippakam.com



2. தொகைமுக்கியத்துவம்பற்றி மாகாண, தலத்தாபனச் செலவுகளை வகைப்படுத்துக. ஒன்பதாவது அத்தியாயத்திலே அட்டவணை 2 இல் காட்டிய சமட்டிச் செலவுவகைகளோடு அவற்றை ஒப்பிடுக.

3. மூன்று படிமுறை அரசாங்க மட்டத்திலும் அரசாங்கம் என்னென்ன கடமைகளைச்செய்ய வேண்டும்? வருமானம், உதவி நன்கொடை என்பன எவ்வாறு இவையிடையே பங்கீடு செய்யப்பட வேண்டும் ?

4. அர்க்கன்ஸாஸிலுள்ள ஒரு பிரசைக்கு உதவி செய்வதற்காக மசாச்சு செட்சிலுள்ள ஒரு பிரசைமீது வரி விதிக்க வேண்டுமா ? வேர்மண்டிலும், மாசாச்சுசெட்சிலும், மெக்ஸிக்கோவிலுமுள்ள பிரசைக்கு உதவி செய்ய அவ்வாறு செய்யலாமா ?

5. "வரி விதிப்பதன் பயனாக மக்கள் புகைக்கும் தமது பழக்கத்தை விடமாட்டார். வறியவரும் புகைக்கும் பழக்கமுடையவர். சிகரெட்மீது விதிக்கும் வரி பாண்மீது விதிக்கும் வரியிலிருந்து வேறுபட்டதல்ல." இந்தக் கூற்று பொருத்தமுடையதா ? இஃது உண்மையானால் அதை நிவர்த்திக்க என்ன செய்வீர் ?

6. வைத்தியர், நியாயவாதி, ஆசிரியர், தட்டச்சாளர், பொறியியக்குநர், தச்சர் என்போர் கொடுக்கும் வருமானவரியை அட்டவணை 2 ஐக்கொண்டு மதிப்பிடுக.

7. "அதிக குழந்தைகள், அதிக மோட்டார் என்பன தலத்தாபனம் செலவிடுவதும், கடன்படுவதும் அதிகமாவதைக் குறிக்கும்" இந்தக் கூற்றின் பொருள் என்ன ?

8. பின்வரும் கருத்துக்களைப்பற்றி ஆராய்க.

நன்மை தியாகம் என்ற கருத்துக்கள்.
நேரடிவரி, மறைமுகவரி.
முற்போக்குவரி, பிற்போக்குவரி.
உதவிநன்கொடை, பொதுக்கடன்.
வரவுசெலவுசார்ந்த மேல் மிச்சமும், விழுக்காடும்.
வரியினால் வரும் தாக்கம்.
வரிப்பயனைத் தள்ளி விடுதல்.

படிப்பகம்

www.padippakam.com

## பதினோராம் அத்தியாயம்

# தேசீய வருமானமும் உற்பத்தியும்

*சப்பாத்து, கப்பல், மெழுகு,*
*கீரை – அரசர் எனப் பல*
*வகையான பொருள்களைப்பற்றியும்*
*பேசுவதற்கான காலம் வந்துவிட்ட*
*தெனக் கடல்யானை கூறிற்று.*

*— லூயிஸ் கரோல்.*

எந்தப் பொருளாதார நூலிலும் முக்கியம் வகிக்கக்கூடியதொரு விடயத்தைப்பற்றி இப்போது ஆராய்வோம். அது தேசீயவருமானத்தைப்பற்றியது. முப்பது வருடத்துக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்கா தனது தேசீய வருமானத்தைப்பற்றிய புள்ளிவிபரங்களைச் சேகரிக்கவில்லை. 1930 இன் ஆரம்பத்தில் பெரிய வியாபார மந்தமுண்டானபோது நாம் மாதா மாதம் எமது நிலையைப்பற்றி வெறும் ஊகம் பண்ணினோம். தேசீயப் பொருளாதார ஆராய்ச்சிநிலையமென்ற தனியார் தாபனத்தின் முயற்சியாலும், அந்நிய நாடுகளிலிருந்த சில அறிஞரின் முயற்சியாலும், தேசீய வருமானம் பற்றிய புள்ளிவிபரத்தின் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. இப்போது வியாபாரப் பகுதியினர், இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரித்து, வருடாந்த தேசீயவருமானத்தை வெளியிடுகின்றனர்; சில சமயம் மூன்றுமாதத்துக்கொரு முறையும் சிலசமயம் மாதம் ஒருமுறையும் வெளியிடுகின்றனர். தேசீய வருமானத்தை எந்த ஆய்வாளரும் கருத்திலே கொள்ளாதிருக்கமுடியாது. அதனுல்தான் ஐக்கியநாடுகள் தாபனம் அத்தகைய விபரங்களை எல்லா நாடுகளும் சேகரிக்கவேண்டுமென முயற்சிசெய்கிறது.

### ஒரு பொருளாதாரத்தின் நடவடிக்கையை அளக்கும் அலகு.

தேசீயவருமானமென்றுலென்ன ? ஒரு வருடகாலத்தில் ஒரு பொருளாதாரத்திலே பயன்படும் பண்டம், பணி என்பவற்றைப் பணமென்ற அளவு கொண்டு அளக்கும் அளவைக்குக் கொடுக்கப்பட்ட பெயரே இது. தேசீய வருமானம் என்ற சொல்லுக்குப் பதிலாக "தேசீய உற்பத்தி", "தேறிய தேசீய உற்பத்தி" (தே. தே. உ.)[1] (N N P) என்றெல்லாம் கூறப்படுகிறது.

பெரிய வியாபார மந்தம் என்பதன் அர்த்தமென்னவென்று பொருளியற் சரித்திராசிரியரைக் கேட்டால், அவர் சுருக்கமாகக் கூறுவது இதுதான் :

1. இன்னுஞ் சில பக்கங்களிலே தேறிய தேசீய உற்பத்தி, மொத்தத் தேசீய உற்பத்தி என்பவற்றிடையே உள்ள வித்தியாசத்தை ஆராய்வோம். ஐக்கிய அமெரிக்க வியாபாரப்பகுதி "தேசீய வருமானம்" என்று கூறும்போது எதைக் கருதுகிறதென்பதையும் ஆராய்வோம்.



படிப்பகம்

www.padippakam.com



" 1929 இலுள்ள தே. தே. உ. 95.8 நூறுகோடி டொலரிலிருந்து 1933 இலுள்ள தே. தே. உ. 48.8 நூறு கோடி டொலராக இறங்கிவிட்டது. பண்டம், பணியென்பவற்றின் பணப்பெறுமதி அரைவாசியாக வீழ்ச்சியடைந்ததால் அமெரிக்காவிலே மக்கள் இன்னலனுபவித்தனர் ; வங்கிகள் முறிந்தன. கலவரங்களுண்டாயின ; அரசியல் குழப்பங்களேற்பட்டன" என்று அவர் கூறுவார்.

சுருக்கமாகக் கூறுவதானால், தேசீய வருமானம் அல்லது உற்பத்தி யென்பது பணம் என்ற அளவையினால் அளந்து கண்டதொகையாகும். அதாவது சமூகம் தன்னுடைய நிலம், உழைப்பு, ஏனைய மூலதன வளங்கள் என்பவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யும் அப்பிள், தோடம்பழம், எந்திரங்கள் என்பவற்றைப் பண அலகால் அளந்துகண்டதொகை எனலாம். தேசீய வருமானம் என்ற கருத்து முதற்பிரிவிலே கண்ட முகவுரையாய மைந்த ஆராய்ச்சிக்கு ஒரு சுருக்கமெனக் கூறலாம்.

**தேசீய உற்பத்தியை அளக்க இரண்டுவகை அலகு : பொருள்வருவாய் அல்லது வருமானவருவாய் :** தேறிய தேசீய உற்பத்தியை எப்படி அளப்பது ? (தே. தே. உ.) பொதுவான கருத்து இலேசானது. படம் 1 இலே அரசாங்கம் இல்லாததும், மூலதனச் சேர்க்கை இல்லாததும், தேறிய சேமநிதியில்லாததுமானதொரு பொருளாதாரத்திலே, டொலர் செலவின் விருத்தமான ஓட்டம் காட்டப்பட்டுள்ளது.

உற்பத்திப் பொருள் ஓட்டம்.—ஒவ்வொரு வருடமும் மக்கள் அப்பிள், தோடம்பழம், பாண் போன்ற பொருள்களை நுகர்வதோடு, பல்சாரத்தியம், திரைப்படம் காட்டுதல் போன்ற சேவைகளையும் பெறுகிறார்கள். பொதுமக்கள் இந்த நுகர்பொருள்களுக்குப் பணஞ் செலவு செய்கின்றனர். இது படம் 1 இல் மேலேயுள்ள வளைவின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

நுகர்பொருளில் செலவுசெய்யும் எல்லாவற்றையும் கூட்டி (N N P) தே. தே. உ. வைக்காண்கிறோம். எனவே வருடத்தில் கிடைக்கும் பண்டம், பணி என்பவற்றின் கூட்டுத் தொகையே தே. தே. உ. வாகும். (தோடம்பழத்தின் விலை × தோடம் பழத்தின் மொத்தத்தொகை) + (அப்பிளின் விலை × அப்பிளின் தொகை) + ........ சட சம்பந்தமான பலவகைப் பண்டங்கள், பணிகள் என்பவற்றை மதிப்பிடவும், தொகுத்துக் கூறவும் சந்தை விலையை ஏன் பயன்படுத்தவேண்டும் ? பலவகைப்பண்டங்கள், பணிகள் என்பவை, சார்புநோக்கில் எவ்வாறு மக்களுக்குத் தேவைப்படுகின்றன என்பதைச் சந்தைவிலைகளே எடுத்துக்காட்டக்கூடியன. அதை நூலின் மூன்றும் பகுதியில் காட்டியுள்ளோம்.


தேறிய தேசீய உற்பத்தி அல்லது " சந்தைவிலைகளிலே கணிக்கப்படும் தேசீய வருமானம்" என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவதானால், சமூகத்

படிப்பகம்

www.padippakam.com



**தே. தே. உ. (N N P) இன் அளவானது விளை வின் ஓட்டமாக அல்லது செலவின் ஓட்டமாக அளவிடப்பட்டுளது.**




படம் 1. மேல் வளைவிலே மக்கள் நுகர்பொருளில் தமது பணத்தைச் செலவிடுகின்றனர். இதன் ஒருவருடத்து மொத்தப் பெருக்கத்தை அளந்தால், அது தே.தே. உ. (NNP) வையறிந்த தாகும். கீழ் வளைவிலே வருடத்தில் உண்டாகும் செலவு அல்லது உழைப்பு காட்டப்பட்டுள்ளது. இதுவே வியாபாரத்தலம் வெளியே கொடுக்கும் செலவு அல்லது உழைப்பு. இதில் இலாபமும் அடங்கும். தே.தே. உ. (NNP) வையளக்கும் இந்த இரண்டு அளவும் ஒத்திருக்கவேண்டும்.

தின் பூரணப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருள்களின் மொத்தப் பணமதிப் பீடு என்று கூறலாம்.[1]

**வருமானம் வரும்வழி அல்லது உழைப்பு** :—இதைப்போன்ற இலகு வானதொரு பொருளாதாரத்திலே தே. தே. உ. வைக் கணிப்பதற்கு இரண் டாவது வழியொன்றுமுண்டு. படம் 1 இல் உள்ள கீழ்வளைவைப் பார்க்க. பொதுசனத்துக்கு வியாபாரம் எதைக் கொடுக்கிறது ? அது சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்பவற்றைக் கொடுக்கிறது. ஏன் ? இந்தச் சாதன உழைப்புக்களே உற்பத்திச் செலவுகள். உற்பத்தியோட்டத்தின் செலவுகள் இவை. (குறிப்பு : இங்கே கணக்குவழக்குப் பார்ப்போரைப் போலல்லாது, பொருளியலறிஞர் இலாபத்தை உற்பத்திச் செலவாகவோ, உழைப்பு இனமாகவோதான் கருதுவர்.)

[1] ஆரம்பத்தில் நாம் கொடுத்த இலகுவான விளக்கத்தில், சமூகத்தின் பூரணமாக்கப்பட்ட உற்பத்தி தனியார் நுகர்வுகளும் செலவுகளும் என்று குறிப்பிட்டோம். அரசாங்கம் பண்டங் களிலும் பணிகளிலும் செலவுசெய்யும் பணமுமாகும், தனியார் தேறிய முதலீடுகளும் இதிலே அடங்கும் என்பதை மேலே காண்போம்.

படிப்பகம்

www.padippakam.com



புள்ளிவிவரங்களைத் தயார்செய்வோர் அத்தகைய வருடாந்தச் சாதன உழைப்புக்களை, அதாவது வருமானத்தை, கீழேயுள்ள வளைவிலிருந்து கணிக்க முடியும். இவ்வாறு தே. தே. உ. (N N P) வைக்கணித்துக் கொள்ள லாம்.

தேறிய தேசிய உற்பத்தி என்பதற்கு இரண்டாவதொரு நோக்கின்படி வரைவிலக்கணங் கூறுவதானுல், சமூகத்தில் பூரணமாக்கப்பட்ட பொருள் களின் உற்பத்திச் செலவான சாதன உழைப்பின் (சம்பளம், வட்டி, வரி, இலாபம்) மொத்தம் எனலாம்.[1]

இப்போது நாம் உற்பத்திப் பொருள் ஓட்டத்தைக்காட்டும் மேல்வளைவைக் கொண்டும், உழைப்பு ஓட்டத்தைக் காட்டும் கீழ் வளைவைக் கொண்டும் தே. தே. உ. (N N P) வைக்கணித்துக் கொண்டோம். இவற்றில் எது பெரியது ? விடை : இரண்டும் சமம்.

இவ்வாறு சமமாயிருப்பது எதனுல் ? இதோ அதற்குக் காரணம்: இலா பத்தைக் கீழ்வளைவிலே சேர்த்திருக்கிறேமென்பதை ஞாபகத்திற்கொள்க. இலாபமானது சம்பளம், வட்டி, வரி என்பவற்றேடு சேர்க்கப்பட்டுள்ளது ; இலாபம் என்றுலென்ன ? அதாவது பொருள்களை (தோடம்பழம், அப்பிள், பாண்) விற்கும்போது, ஏனைய உற்பத்திச் சாதனச் செலவுகளைக் கொடுத்தபின் எஞ்சுவது. உழைப்புக்கள் மூலம் கீழ்வளைவுப்பாதையானது பொருள் ஓட்டம் மூலம் மேல்வளைவுப்பாதையோடு சரிசமனுயிருக்கும்பொ ருட்டு, எஞ்சியிருப்பது தானுக எந்த அளவை மேற்கொள்ளுமோ அதுவே இலாபம்.

கணக்கு வைப்பவர்களும், கணக்காளரும் பயன்படுத்தும் முக்கியமான சாதனமான " இரட்டைப்பதிவுமுறையிலே " இந்தத் தத்துவம் காணப்படு கிறது. கணக்கின் இரண்டுபக்கத்தையும் சரிக்கட்டுவதற்காகவே அவர்கள் இந்த முறையைப் பயன்படுத்துகிருர்கள். இந்த இரட்டைப் பதிவுமுறை உலகில் ஒரு பெரிய கண்டுபிடிப்பு எனலாம்.

மீட்டுச் சொல்வதானுல், தே. தே. உ. (N N P) அல்லது தேறிய தேசிய உற் பத்தியைப் பொருளின் ஓட்டம் என்ற முறையில் அளக்கலாம். அவ்வாறே, உழைப்பு ஓட்டமென்ற கீழ்வளைவுமூலமும் புள்ளிவிபரஞ் சேகரிப்பவர் தமது மதிப்பீட்டுக்கான புள்ளிகளைச் சேகரிக்கலாம். இலாபமென்பதற்குப் பொருத் தமான வரைவிலக்கணம் கூறி, அதனைப் பொருளாதார உழைப்பும் உற்பத்திச் செலவுமெனக் கொண்டால் இரண்டுவகையான மதிப்பீட்டு வழிகளாலும், ஒரே தே. தே. உ. (N N P) ஐப் பெறலாம்.

1. எமது இலேசான உதாரணத்தைக் கைவிடும்போது வரிகள் இங்கு சேர்க்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



| திகதி | பணவடிவான தே.தே.உ. (NNP) ஆயிரங்கோடி நடைமுறை டொலர் கணக்கில் (1) | விலைச்சுட்டி இலக்கம் (2) | 1929 ஆம் ஆண்டில் வழங்கிய ஆயிரங்கோடி டொலரில் நிசமான தே.தே.உ. (3) $\left[=\frac{(1)}{(2)}\times 100\right]$ |
|---|---|---|---|
| 1929 | 96 | 100 | $\frac{96}{100}\times 100=96$ |
| 1933 | 48 | 75 | $\frac{48}{75}\times 100=64$ |

*அட்டவணை 1. நிச தே.தே. உ. (NNP) ஐ மதிப்பிடும் மாதிரி. இரண்டாம் கட்டத்திலுள்ள விலைச்சுட்டைப்பயன்படுத்தி (1) கட்டத்தை இறக்கி (3) கட்டத்திலுள்ள நிசமான தே. தே. உ. ஐக்காணலாம். (நொடி : 1933 இன் விலையைக்கொண்டு 1929 இன் நிச தே. தே. உ. 72 ஆயிரங்கோடி டொலர் எனக் காட்டமுடியுமா ? குறிப்பு : 1933 ஐ அடிப்படையாகக் கொண்டால் 1929 இன் விலைச்சுட்டெண் 133 1/3 ஆகும்.)*

**நிச தேசிய உற்பத்தியும் பணத் தேசிய உற்பத்தியும் : வீக்கத்தை இறக்குவதற்காக விலைச் சுட்டைப் பயன்படுத்தல்.**

தே. தே. உ. (NNP) சந்தையின் பணவிலையை அளவுகோலாகக் கொண்டு, பலவகையான பொருள்களை மதிப்பிட ஓர் அளவுகோலைப் பயன்படுத்துகிறது. ஆனால் தினமும் விரிந்து கொடுக்கும் ரப்பர் அளவுகோலைப் பயன்படுத்துவதிலும் பார்க்க மர அளவுகோலைப்பயன்படுத்துவதையே மக்கள் விரும்புவர்.

பணத்தை அளவுகோலாகக் கொள்ளும்போது பொருளியலாளர் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளில் இதுவுமொன்று. பணவீக்கமோ, இறக்கமோ விலைகளை ஏற்றியோ இறக்கியோ மாற்றக்கூடும். அல்லது பொருளியலாளர் கூறுகிறபடி "1929—1933 ஆம் ஆண்டுகளுக்கிடையில் அல்லது 1939—1961 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இருந்ததுபோலப் பணத்தின் விலை மாறும்."...

இதற்கு என்ன செய்யலாம் ? நமது அளவுகோல் அடிக்கடிமாறுவதை, பொருளியலாளர் விலைகட்குச் சுட்டிலக்கம் பயன்படுத்தி மாற்றிக் கொள்ளலாம்.[1] 1929-1933 இன் விடயங்களை ஒத்துப்பார்த்தால், அது நடைமுறைப் பண தே. தே. உ. (NNP) இறக்கவிலைச் சுட்டிலக்கத்தை எவ்வாறு பயன்படுத்தலாமென்பதையும், 1929 இன் மாறுவாங்கும் சக்தி டொலர்கள் மூலம் அதை நிச தே. தே. உ. (NNP) ஆக எவ்வாறு மாற்றலாமென்பதையும் காட்டும். அட்டவணை1, 1929, 1933 ஆம் ஆண்டுகட்குரிய தே. தே. உ.

1. விலைக்கு சுட்டிலக்கம் எவ்வாறு கழிக்கலாமென்பதை 7 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டோம்.

www.padippakam.com




(N N P) தொகையை அண்மிய 96 ஆயிரங்கோடி, 48 ஆயிரங்கோடி டொலருக்குக் கொடுக்கிறது. அது பண தே. தே. உ. (N N P) அரைப்பங்கா னதைக் காட்டும். பண்டம், பணி என்பவற்றின்விலை வியாபாரமந்தத்திலே சராசரி 25 வீதம் வீழ்ச்சியுற்றதென அரசாங்கம் மதிப்பிடுகிறது. 1929 ஆம் ஆண்டை நூற்றுக்கு அடிப்படையாகக்கொண்டு 1933 ஆம் ஆண்டில் விலைச் சுட்டிலக்கம் 75 என அரசாங்கம் கூறுகிறது. எனவே 1933 ஆம் ஆண்டுக் குரிய 48 ஆயிரங் கோடி தே. தே. உ. உண்மையில் 1929 இற்குரிய 96 ஆயிரங் கோடி டொலர் தே. தே. உ. இன்மதிப்புக்கு அரைவாசி அதிக மதிப்புடைய தாயிருந்ததெனத் தெளிவாகிறது. அரைவாசிக்கு எவ்வளவு அதிகம் ?

அட்டவணை 1, விலைச்சுட்டிலக்கத்தால் பணத் தேசிய உற்பத்தியைப் பிரிப்பதால், நிசமான தே. தே. உ. (NNP) 1929 ஆம் மட்டத்திலிருந்து 2/3 பங்கே வீழ்ச்சியடைந்தது என்பதைக் காட்டுகிறது. 1929 ஆம் ஆண்டின் வாங்குஞ் சக்தியை டொலர் கணக்கில் வைத்துக் கணிக்கும்போது அது 64 ஆயிரங்கொடி டொலருக்கு வீழ்ச்சியடைந்தது எனக் கூறலாம். ஆனால் பண தே. தே. உ. (NNP) காட்டும் அரை மட்டமான விழுக்காடு விலையளவு கோல் மாறியதாலுண்டான மயக்கமாகும்.

சரித்திரரீதியாக ஒவ்வொருவருடத்திலும், புழக்கத்திலிருந்த விலைகள், நிசமான டொலர்கள் என்பவற்றில் கணிக்கப்பட்டபடியுள்ள பண தே. தே. உ. இன் வரலாற்றைப் படம் 2 காட்டுகிறது.

**உயர்ந்துசெல் விலைகளால் தேறிய தேசிய உற்பத்தி போலியாக வீக்கமடைந்ததைக் காட்டுவது :**




பண தே.தே.உ. (NNP)வுடன் ஒத்துப்பார்க்கும்போது நிச தே.தே.உ. (N N P) வளர்ச்சியில் குன்றுவது எதனாலென்றால், விலை ஏறுவதனால் என்க. 1959 ஆம் ஆண்டின் வாங்கும் சக்தியை அடிப்படையாகக்கொண்ட டொலரில் ஓர் அளவைக் கொடுக்க, பண தே.தே.உ. வை இறக்குவதற்காக, நிச தே.தே.உ. 1959 இன் விலைச்சுட்டிலக்கத்தைப் பயன்படுத்துகிறது. (மூலம் : ஐ.அ. வர்த்தகத் திணைக்களம்)

www.padippakam.com



1959 ஆம் ஆண்டு டொலரில் கணிக்கப்பட்ட நிச தே. தே. உ. (N N P) ஒப்பு நோக்குவதற்காகக் காட்டப்பட்டுள்ளது. பண தே. தே. உ. (N N P) வில் காணப்படும் பெருக்கம் போலி என்பதைக் குறித்துக்கொள்க. அது கடந்த 25 வருடமாக உள்ள பண அளவின் விலே வீக்கத்திஞலுண்டானது.

**இடை நிலேயிலுள்ள பொருள்களே "இருமுறை கணிப்பதைத்" தடுத்தல்**

புழக்கத்திலுள்ள பணக்கணக்கை மறுபடியும் ஆராயும்போது இடை நிலேப் பொருள்களே (இவை சம்பூரணமாக்கப்படாதபொருள்கள்) எவ்வாறு பைசல் செய்யவேண்டுமென்பதைக் குறிப்பிடுவோம். அதன் பயஞக எந் தப் பொருளேயும் இரண்டாம், மூன்றும், நாலாம் முறையாகத் திருப்பிக் கணக்கிடுவதைத் தடுக்கலாம்.

**இடைநிலேப் பொருள்களேத் தவிர்த்தல்.**—தே. தே. உ. (NNP) வில் பாணே க்கணக்கெடுக்க விரும்புகிரேம். ஆஞல் போறணேயில் உள்ள மாவைக் கணக்கிலெடுப்பதைத் தடுக்கவேண்டும். அதைத் தடுக்காவிட்டால் ஒரே பொருள் இரண்டுமுறை கணக்கில் சேர்ந்துவிடும். படம் 1 இலுள்ள 2 வளேவுப் படத்தைத் திருப்பிப்பாருங்கள். அங்கே பாண், சவரஞ் செய்யும் அலகு எல்லாம் காட்டப்பட்டுள்ளன. ஆஞல் அங்கே பாண் செய்வதற்குரிய பதமான மாவோ, கோதுமையோ காட்டப்படவில்லே. அவை எங்கே? இவை "வியாபாரம்" என்ற கட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. இவைதாம் இடைநிலேப் பொருள்கள். இவை பலவகையான உற்பத்திக் கட்டங்களி லிருக்கின்றன. கடைசிக்கட்டமே பூரணப்படுத்தப்பட்ட பொருளான பாண். இந்த இடைநிலேப் பொருள்களே முடிந்த பொருள்களோடு சேர்த்துக் கணக் கிடுவதாஞல் ஒரேபொருள் பலமுறை கணக்கிலே சேர்க்கப்பட்டதாகிவிடும்.

**இருமுறை கணக்கெடுப்பதைத் தவிர்த்தல்.**—சில மாணுக்கர் பின்வரு மாறு கூறுவர்: "சிறிது கவனமாயிருந்தால், மேல்வளேவு வழிமூலம் தே. தே. உ. (NNP) ஐக் காணப்பார்க்கும்போது இடைப்பொருள்களேக் கணக்கெ டுப் பது தவிர்க்கப்படலாம். ஆஞல் கீழ் வளேவு முறையை அனுசரிக்கும்போது சில இடையூறுகளுண்டாகும். வியாபாரக் கம்பெனிகளின் கணக்குகளிலி ருந்துதானே அரசாங்கத்தின் வியாபார இலாகா வருமான அறிக்கைகளேப் பெறுகிறது. மாவரைப்போர் விவசாயிகளுக்குக் கொடுக்கும் பணம், பாண் செய்வோர் மாவரைப்போருக்குக் கொடுக்கும் பணம், அப்பக்கடைக்காரர் பாண் சுடுவோருக்குக் கொடுக்கும் பணம் என்பனவெல்லாம் அவர்களுடைய கணக்கிலே சேர்க்கப்படவில்லேயா? இவ்வாறு பல உற்பத்திக்கட்டங்களேக் கடக்கும் பொருள்கள் விடயத்தில், இரண்டு, மூன்று, நாலு முறை கூட ஒரு பொருள் கணக்கிடப்படமாட்டாதா?"

இது நியாயமான கேள்விதான். இதற்குத் திருப்திகரமான பதில் கொடுக் கலாம். கீழ்வளேவு உழைப்பை அதாவது சாதனச் செலவு அளவுகளேக் கணக்கிடும் புள்ளிவிபரக் கணக்காளன் "பெறுமதி சேர்க்கப்பட்ட" முறை யைப் பயன்படுத்துகிருன்.

www.padippakam.com



" பெறுமதி சேர்க்கப்பட்ட " முறையிலே கீழ்வளைவிலுள்ள சாதன உழைப்பு சம்பந்தமான கம்பெனி வருமான அறிக்கை காட்டும் எல்லாச் செலவுகளும் சேர்க்கப்படுவதில்லை. மற்றக் கம்பெனிகளிலிருந்து வாங்கிய பொருள்களும் சேவைகளும் தவிர்க்கப்படுகின்றன. ஏனெனில் இந்தச் செலவுக்கான டொலர்கள் மற்றக் கம்பெனிகள் அனுப்பிய கணக்குகளிலிருந்து தே. தே. உ. (N N P)இல் சேர்க்கப்பட்டிருக்கும்.

உதாரணம் : பெப்டோ–கிளிட்டர் கம்பெனி, எடிசன் கம்பெனியிடமிருந்து மின்சார சக்தியை வாங்குகிறது. இந்தச் செலவு " சேர்க்கப்பட்ட பெறுமதியில் " சேர்த்துக் கூட்டப்படவில்லை. ஏன் அப்படி ? இது சம்பளமன்று ; வட்டியுமன்று, வரியுமன்று, இலாபமுமன்று; பெப்டோ–கிளிட்டர் உற்பத்திச் சாதனம் எதற்குமே, இ∴து ஒரு கொடுமானமன்று. அதனால் இது கீழ் வளைவில் காணப்படாது வியாபாரக் கட்டத்துக்குள்ளேயே அடங்கியிருக்கும். அங்கே இதுவும் இத்தகைய செலவினங்களும், கவனமாகப் பெப்டோ பற்றுச்சீட்டுக்களிலிருந்து கழிக்கப்படும். எஞ்சுவது என்ன ? பெப்டோவின் சரியான பெறுமதி சேர்க்கப்பட்டமையே மிஞ்சும். இ∴து உண்மையில் அதன் சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்பனவாகும்.

இந்த மின்சக்தி, எடிசன் கம்பெனியால் உற்பத்தி செய்யப்பட்டது. எடிசனிலுள்ள வட்டி, வரி, இலாபம் என்பவற்றைப் பெறுவோரே இதனை உற்பத்தி செய்தனர். தே. தே. உ. (N N P)புள்ளிவிபரக் கணக்காளர் இந்த மின்சார நடவடிக்கையைக் கைவிட்டிருக்கமாட்டார். அவர் அதை எடிசன் கம்பெனிக்குள்ள மதிப்புச் சேர்க்கப்பட்டதாகக் கொள்வர். இது நடைபெற வேண்டிய முறையே. ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொருமுறை சேர்த்துக்கொள்வதே எமது நோக்கம். இரண்டு மூன்று முறை சேர்க்கும் நோக்கமில்லை.

அட்டவணை 2, பாண் உற்பத்தியின் பல படிகள் மூலம் விவசாயிகள், மாவரைப்போர், பாண்சுடுவோர், அதைவிற்பனை செய்வோர் ஆகியோரின் வருமான அறிக்கைகளில் காணும் இடைநிலைச் செலவுகளை மதிப்புச் சேர்க்கப்பட்ட முறையினால் எவ்வாறு கழிக்கலாமென்பதைக் காட்டுகிறது. அத்துடன் அது பூரணமாய்ச் செய்யப்பட்ட பாணின் தேறிய பெறுமானம், கீழ்வளைவு சாதனச் செலவினம் என்பவற்றிடையே நாம் விரும்பிய சமத்துவத்தையும் உண்டாக்குகிறது. இவற்றையெல்லாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

இரண்டுதரம் கணக்கிலே சேர்ப்பதைத் தவிர்ப்பதற்காக, தே. தே. உற்பத்தியில் இடைநிலைப் பொருள்களைச் சேர்க்காமல் பூரணநிலையிலுள்ள பொருள்களையே சேர்க்கிறேம். ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்புச் சேர்க்கப்பட்டதென்ற முறையைப் பின்பற்றி, மற்றக் கம்பெனிகளின் இடைப் பொருள் உற்பத்திக்கான செலவுகளைக் கழித்துவிடுவதால் இரட்டைக் கணிப்பு தவிர்க்கப்படுகிறது. சம்பளம், வரி, வட்டி, இலாபம் என்பன ஒரு முறையே கணக்கிலெடுக்கப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



**தே. தே. உ. என்பது எல்லாக் கட்டங்களினதும் சேர்க்கப்பட்ட மதிப்பாகும்.**

| உற்பத்திக்கட்டம் | | விற்பனவு ரசீது (1) | | இடைநிலைப் பொருள்களின் அல்லது மூலப்பொருள்களின் விலை (2) | | சேர்க்கப்பட்ட மதிப்பு (சம்பளம், இலாபம் முதலியன) (3) = [(1) − (2)] |
|---|---|---|---|---|---|---|
| கோதுமை | .. | 4 | — | 0 | = | 4 |
| மா | .. | 6 | — | 4 | = | 2 |
| சுட்ட பாண் | .. | 12 | — | 6 | = | 6 |
| விநியோகித்த பாண் | .. | 20 | — | 12 | = | 8 |
| | | 42 | — | 22 | = | 20 (சேர்க்கப்பட்ட மதிப்பு) |

**அட்டவணை 2.** பாண் ரசீது, விலை, சேர்க்கப்பட்ட மதிப்பு : (ஓர் இருத்தல் பாணுக்கு இத்தனை சதம் என்ற கணக்கில்). இரண்டுதரம் கணக்கில் சேர்த்துக் கொள்ளாதிருப்பதற்காக ஒவ்வொரு கட்டத்திலும் சேர்க்கப்பட்ட மதிப்பைக் கவனமாகக் கணிக்கிறோம். வேறு கம்பெனிகளிடமிருந்து அந்தக் கட்டத்திலே வாங்கிய பொருள்கள், இடைநிலைப் பொருள்கள் என்பவற்றின் விலையைக் கழித்துக் கொள்ளுகிறோம். இடைநிலைப் பொருள்கள் முதலாம் கோட்டிலும் இரண்டாங் கோட்டிலுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாங்கோட்டில் அவை எதிர்க்கணியமாகச் சேர்க்கப்பட்டதால் அவை ஒன்றையொன்று சமன்படுத்திவிடுகின்றன.

இதை அறிந்துகொள்வது கடினமன்று. ஆனால் பணப்பித்துப் பிடித்தபலர் இதை விளங்க முடியாதிருக்கின்றனர். அரசாங்கம் புதிய பணநோட்டுக்களை அச்சடித்து விநியோகஞ் செய்தாலன்றி, சந்தையில் நிலவும் விலை உற்பத்திச் செலவுக்குக் காணுதென இவர்கள் கருதுவர்.

**தேறிய முதலீடு அல்லது மூலதனம் உண்டாக்குதல்.** மூலதனம் உருவாதல், வளர்தல் என்பவற்றை இதுவரை நமது ஆராய்ச்சியில் நாம் புகுத்தாது விட்டுவிட்டோம். மக்கள் அப்பிள், தோடம்பழம், அப்பம், என்பனவற்றை நுகர்வதற்கு விரும்புகிறார்கள் என்பதை மாத்திரமே கருத்தில் கொண்டோம். நடைமுறை வாழ்க்கையிலே மக்கள் தமது வருமானத்திலே ஒரு பகுதியை மிச்சம் பிடிக்கவும், முதலீடு செய்யவும் விரும்புவர். இப்போது அப்பம் சாப்பிடுவதற்குப் பதிலாக, புதிய எந்திரங்களை நிர்மாணித்து வருங்காலத்தில் அதிக அப்பம் சாப்பிடுவதற்கான வழி வகுப்பார்கள். அல்லது அரசாங்கம் அப்பத்தைச் சேகரித்து வைப்பதற்கான உதவியைச்செய்ய விரும்புவர். எனவே நுகர்வது மாத்திரமன்று ; மக்கள் மிச்சம் பிடிக்கவும் விரும்புகிறார்களென்பதை உணரவேண்டும். இத்தகைய சேமிப்பே மூலதனம் உண்டாக்குதல் அல்லது தேறிய முதலீடு எனப்படும்.

படிப்பகம்


www.padippakam.com



சமூகத்தின் உற்பத்தித் தகவை நுகர்வுக்குப் பயன்படுத்தாமல் மூலதன உற்பத்திக்கு மக்கள் செலவு செய்தால், பொருளியல் புள்ளி விவரம் சேகரிப்பவர், அத்தகைய மூலதனத்தை தே. தே. உ. (NNP) வின் மேல் வரிசையில் சேர்த்துவிட வேண்டுமென்று உணர்ந்துகொள்வர். எனவே முதலில் நாம் கூறிய வரைவிலக்கணத்தைப் பின்வருமாறு மாற்றவேண்டும்.

தேறிய தேசிய உற்பத்தி என்றுல் நுகர்பண்டம், பணி என்பவற்றின் கூட்டுத் தொகையோடு தேறிய முதலீடும் சேர்ந்த தொகையாகும்.

**நிலைபேருன மூலதனமுள்ள ஒரு பொருளாதாரத்திலே, நுகர்வு தே. தே. உ. இற்குச் சமனுயிருக்கும்**




படம் 3 (அ). இங்கே மூலதனம் தேயத் தேய உடனே நிரப்பப்படுகிறது.

இந்தத் தேறிய முதலீட்டில் (அல்லது தேறிய மூலதனம் உருவாதலில்) (1) கட்டிடம், (2) தளவாடம், (3) கையிருப்பு என்பனவும் அடங்கும். இந்த முதலீட்டு முறையை உதாரணங்கொண்டு விளக்கலாம்.

**சூனியமான தேறிய மூதலீடுள்ள ஒரேநிலையிலிருக்கும் சமூகம்:** ஒரு பொருளாதாரம் வளர்ச்சியடையாவிட்டால் அதன் மூலதனக் கையிருப்பு மாருது. அதே கட்டிடங்கள், தளவாடங்கள் கையிருப்புச் சரக்குகள் இருந்து கொண்டேயிருக்கும். இந்த மூலதன அமிசங்கள் முடியமுடிய மறுபடி புதுப்பிக்கப்படும். ஆனுல் புதிதாக தேறிய வகையில் எதுவும் சேர்க்கப்பட மாட்டாது. அப்போது சமூகம் அதன் தேசிய வருமானம் முழுவதையும் நுகர்கிறதெனக் கூறவேண்டும். படம் 3 (அ) இல் இந்நிலைமை காட்டப் பட்டுள்ளது.


**நேர்க்கணியமான தேறிய முதலீடுள்ள வளரும் சமூகம்:** சாதாரணமாக சமூகம் மூலதனத்தைப் பெருக்கிக்கொண்டேயிருக்கும். பழையகட்டிடங் களுக்கும் எந்திரங்களுக்கும் பதிலாகப் புதியவற்றை வைப்பதுமாத்திரமன்றி மேலதிகமான கட்டிடங்களையும், எந்திரங்களையும் அது சேர்த்துக்கொள்ளுகிறது. அத்துடன் கையிருப்புச் சரக்குகளையும் (தோல், பாண், முதலியன.) பெருக்கு கிறது. இவ்வாறு அதனுடைய தேறிய முதலீடு நேர்க்கணியமானது. இது படம் 3 (ஆ) இல் காட்டப்பட்டுள்ளது. (மூலதனக் கையிருப்பு வருடத்துத் தேறிய முதலீட்டின் அளவுக்குப் பெருகியிருப்பதைக் கவனிக்க).

www.padippakam.com



**வளரும் மூலதனமுள்ள ஒரு பொருளாதாரத்திலே தே.தே.உ. (NNP) நுகர் விலும் அதிகமாகும். அந்த நேர்க்கணியமான மேலதிகம் தேறிய முதலீடாகும்.**

படம் 3(ஆ). புதிய மூலதனம் உருவாதல், மூலதனத் தேய்மானத்திலும் அதிகமாகும். மக்கள் நாளாந்த வருமானம் முழுவதையும் நுகர்வதில்லை. வருங்காலத்துக்குமென மிச்சம் பிடிப்பர். நிகழ்காலத்தில் நுகரும் பொருள்களை உற்பத்திசெய்யக்கூடிய வளங்களை மூலதனக் கையிருப்பை அதிகரிப்பதற்குத் திருப்பிவிடுவர்.




**அதிகம் நுகரும் சமூகமும் எதிர்க்கணியமான தேறிய முதலீடும் :** *மூலதனத்தைக் கொண்டே ஒரு சமூகம் வாழ்க்கை நடத்தலாம். அப்போது அதன் முதலீடு எதிர்க்கணியமாயிருக்கும். எனெனில், அது தனது கையிருப்புச் சரக்கை நுகர்ந்துகொண்டு, மூலதனப்பொருள் தேய்மானம் அடைவதை ஈடுசெய்யாமலிருக்கும். தேசீயவருமானப் பரிபாஷையிற் கூறுவதானால், அதனுடைய நுகர்வு, அதன் தே.தே. உற்பத்தியை மிஞ்சிவிட்டது என்று கூறவேண்டும்.*

*ஒரு வருடத்திலே உற்பத்திசெய்யாததை ஒரு சமூகம் எவ்வாறு ஒரு வருடத்தில் நுகரும் ?*

*ஆம் ; இல்லாத ஒன்றை நுகரமுடியாதுதான். ஆனால் இந்த வருடத்து விளைவை முற்றாக நுகர்ந்துவிட்டு, அடுத்தவருடத்துக்கு விதைநெல்லுக்கூட வைக்காதிருக்கலாம். எனவே உற்பத்திக்கு அதிகமாகவே நாம் இவ்வருடத்தில் நுகர்கிறோம். யுத்தகாலத்திலே பெரும்பாலான தேசங்கள் இவ்வாறுதான் செய்தன. தேசீய உற்பத்திக்கு அதிகமாகவே நுகர்ந்தன. பயன்படுத்திய மூலதனப் பொருளுக்கு அவை ஈடுசெய்யவில்லை. 1944 இல் தகரத்தில் அடைத்த பொருள்கள் ஏராளமாயிருந்தனவா ? அதைப் போர்வீரரும், பொதுசனங்களுமுண்டனரா ? மூலதனத்தை நுகர்தல் என்பது இதுதானா ? இல்லை. இவ்வாறு மூலதனத்தை நுகர்வதானால் அநேக தேசங்கள் ஒரு மாதத்திலேயே பட்டினி இருக்க நேரிடும்.*


*எதிர்க்கணியமான முதலீடு என்பது என்ன ? பொருளியலாளர் கூறுவது இதுதான் : செலவானமூலதனப்பொருள்களுக்கு ஈடுசெய்வதற்காக ஒதுக்கப்பட்ட சாதனங்களை நுகர்ச்சிப்பொருள்களையே உற்பத்தி செய்ய ஒதுக்கிவிட்டு, அதன்பயனாக இயல்பாக நுகரும் பொருள்களுக்கு மேலதிகமாக நுகர்தலே எதிர்க்கணியமான முதலீடாகும். இவ்வாறு நிகழ்ந்த எந்த வருடமுடிவிலும், மூலதனக் கையிருப்பு எவ்வாறிருக்குமென்பதைப் படம் 3 (இ) காட்டுகிறது.*

படிப்பகம்

www.padippakam.com



**தேய்கின்ற மூலதனமுள்ள பொருளாதாரத்திலே தேசிய தேறிய உற்பத்தியிலும் அதிகமாக நுகர்வு இருக்கும் :**




படம் 3(இ). தேய்வுறும் மூலதனத்துக்கு ஈடுசெய்வதற்கு ஒதுக்கப்பட்ட சாதனங்களை, நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்திசெய்வதிற் பயன்படுத்துவதால், மக்கள் தமது தேறிய உற்பத்திப் பொருளிலும் அதிகமாக நுகரலாம்.

**தேறிய முதலீடு என்பது தேய்மானத்தைக் கழித்த மொத்த முதலீடு.**

வருமானப் புள்ளிவிபரம் தயார்செய்யும் கணக்காளருக்குப் பொருளியலாளர் ஒரு கடமையைக் கொடுத்துள்ளனர் : அதாவது, நுகர்ச்சி ஓட்டம் முழுவதையும் கணக்கிடுக; பின்னர் தேறிய முதலீட்டைக் கூட்டுக என்பதே. தேறிய முதலீடு பற்றிய சரியான கணக்கை அவர் எங்கே பெறுவார் ?

முதலாவது கையிருப்புக்களையும், பின்னர் அவற்றிலேற்பட்ட மாற்றங்களையும் கணக்கெடுக்கவேண்டும். கட்டிடம் தளவாடம் என்பவற்றிலே தேறிய முதலீட்டைக் கணக்கெடுப்பது அவருக்குக் கடினமாயிருக்கும்.

அவர், எல்லாக் கட்டிடங்களையும் எந்திரங்களையும் கணக்கில்போட்டு கையிருப்பு மாற்றத்தோடு கூட்டிக் கணக்கெடுக்கலாமே. அவர் அவ்வாறு தான் கணக்கெடுக்கிறார். ஆனால் கிடைக்கும் இலக்கம் மிகப் பெரியது; மொத்தக்கணக்கைக் காட்டுவது. இதை உணர்ந்து அவர் இதற்கு " மொத்த முதலீடு " என்ற பெயர்கொடுக்கிறார். " தேறிய முதலீடு " என்று கூறுர்.

ஏன் " மொத்தம் " என்றசொல்லை உபயோகிக்கவேண்டும் ? புள்ளிவிவரக் கணக்காளர் இந்தச்சொல்லையே உபயோகிப்பர் ; அதாவது மூலதனத் தேய்மானத்துக்குக்கழிவு செய்யப்படவில்லையென்பதே இதன் அர்த்தம். (5 ஆம் அத்தியாயத்திலுள்ள கணக்கு அனுபந்தத்தை ஞாபகப்படுத்துக).

மனிதர் தொகையைக் கணக்கெடுக்கும் ஒரு புள்ளிவிபரக் கணக்காளர், இறப்பவரின் தொகையைக் கணக்கில் எடுக்காவிட்டால் அவரைப்பற்றி என்ன நினைப்பீர்கள் ? மொத்தப் பிறப்பை மாத்திரம் கணக்கிலெடுத்து இறப்பைக் கணக்கிலெடாமல்விட்டால், குடிசனப் பெருக்கத்தில் உண்டான மாற்றம் சரியாகக் கணக்குக்குவராது. இது பொருளியல் தளவாடங்கள், கட்டிடங்கள் ஆகிய விடயத்துக்கும் பொருந்தும். தேறியமாற்றம் என்பது மொத்தப் பிறப்பிலிருந்து (மூலதனம்) இறப்புக்களைக் (தேய்மானம்) கழித்தாலுண்டாகும். இதனைப் பின்வரும் வரைவிலக்கணத்தில் காணலாம்.

www.padippakam.com



தேறிய முதலீடென்பது மொத்த முதலீட்டிலிருந்து தேய்மானத்தைக் கழித்தாலுண்டாவது.

படம் 3 இலே தேறிய முதலீட்டையும், மொத்த முதலீட்டையும் காட்டும் கணக்கீடுகளுண்டு. இவையிரண்டுக்கும் உள்ள வித்தியாசம் தேய்மானமே. தேய்மானம் வருடாவருடம் சிறிது சிறிதாக உண்டாகும். அதனுல்தான் தேறியமுதலீட்டில் அக்கறையுள்ள வியாபாரத் தீர்க்கதரிசிகள் மொத்த முதலீட்டுக் கணக்கீடுகளைப் பத்திரிகைகளிலும் உத்தியோகபூர்வமான புள்ளிவிபர அறிக்கைகளிலும் பார்த்துத் தமது கருமங்களை நடத்துவர்.

**மொத்த தேசிய உற்பத்தியும் தேறிய தேசிய உற்பத்தியும் :** தேறிய முதலீட்டுக்கணக்கை, தேய்மானத்தைக்கொண்டு கணிக்குமுன்னர், மொத்த முதலீட்டைக் கணித்துக்கொள்வது இலகுவாகும். இக்காரணத்தினுலேதான் ஐக்கிய அமெரிக்க வர்த்தக இலாகாவும், ஐக்கியநாடுகளும், தேறிய தேசிய உற்பத்தியைக் கணக்கிடுவதற்கு முன்னர் மொத்த தேசிய உற்பத்தியை முதலிற் கணக்கிட்டன. இந்த மொ.தே.உ. (GNP) எப்படியுண்டாகிறது ? ஏனைய கடைசி உற்பத்திப் பொருள்களோடு மொத்த முதலீட்டை (தேய்மானம் உட்பட) கூட்டுவதால் உண்டாகிறதேயன்றி தேறிய முதலீட்டைக் கூட்டுவதாலன்று. மொத்த தேசிய உற்பத்திக்கும், தே.தே. உற்பத்திக்குமுள்ள பேதம் தேய்மானமாகும்.

**தே. முதலீட்டைப்பெற மொத்த முதலீட்டிலிருந்து தேய்மானத்தைக் கழிக்கவேண்டும் :**

| முதலீட்டு அங்கங்கள் | 1929 | 1932 | 1959 |
|---|---|---|---|
| | டொலர் | டொலர் | டொலர் |
| புதிய கட்டிடம் | 8.7 டொ. | 1.9 டொ. | 40.3 டொ. |
| உற்பத்தியாளர் நிலையான தளவாடம் | 5.8 | 1.6 | 25.8 |
| கையிருப்பின் மாற்றம் | 1.7 | —2.6 | 5.9 |
| மொத்தத் தனியார் உள்நாட்டு முதலீடு | 16.2 டொ. | 0.9 டொ. | 72.0 டொ. |
| தேய்மானக் கழிவு அல்லது மூலதன நுகர்வு (மொ.தே.உ.—தே.தே.உ.) | —8.6 | —7.6 | —40.5 |
| தேறிய தனியார் உள்நாட்டு முதலீடு | 7.6 | —6.7 | 31.5 |
| தேறிய வெளிநாட்டு முதலீடு | 0.8 | 0.2 | —1.0 |
| தேறிய தனியார் முதலீடு | 8.4டொ. | —6.5 டொ. | 30.5 டொ. |

**அட்டவணை. 3.** மொத்த முதலீடும், தேறிய முதலீடும் (ஆயிரங் கோடி டொலரில்). மொத்தத் தனியார் உள்நாட்டு முதலீட்டிலிருந்து மூலதனத் தேய்மானத்தைக் கழித்தால், தேறிய தனியார் உள்நாட்டு முதலீட்டைப் பெறலாம். இதனேடு தேறிய வெளிநாட்டு முதலீட்டைச் சேர்க்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



தே.தே. உற்பத்தியைப் பெறுவதற்கு மொத்தத் தேய்மானம் எவ்வளவென்பதை அறிய வேண்டும். மொத்தத் தேசீய உற்பத்தியி லிருந்து மொத்தத் தேய்மானத்தைக்கழித்தால் தே.தே.உ. ஐப் பெறுவது சுலபம் என்பதைப் படம் 3 காட்டுகிறது.[1]

தே.தே.உ. (NNP) சம்பந்தமான தகவல்கள் உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்கள்மூலம் வருடாவருடம் வெளியிடப்படுகின்றன. அவை பொதுவாக மொ.தே.உ. (GNP) இனைத்தான் பெரிதும் காட்டும். ஏனெனில் ஒவ்வொரு தவணைக்கும் விரைவாகவும், நுட்பமாகவும் தேய்மானத்தைக் கணிக்க முடியாது. பொருளியலறிஞர் தே.தே.உ. இனைப்பற்றியே பேசவிரும்பினாலும், மொ.தே.உ. தகவல்களைக் கொண்டே கணக்குப் போடுவதை நாடுவர். ஏனெனில் தே.தே.உ.வும் மொ.தே.உ.வும் நெருங்கிய தொடர்புடையன வாயிருப்பதால்.

**பண்டம் பணி சம்பந்தமாக அரசாங்கத்தின் செலவு :**—இதுவரை அரசாங் கத்தை நாம் கணக்கிலே எடுக்கவில்லை. நுகர்வோரைப்பற்றிப் பேசினோம். ஆனால் மிகப் பெரிய நுகர்ச்சித்தலங்களான சமஷ்டி அரசு, மாகாண அரசு, தலத்தாபன அரசு என்பவற்றைப் பற்றிப் பேசாதுவிட்டுவிட்டோம். ஒரு தேசம் கூட்டாக நுகரும் கோடானுகோடி டொலர் மதிப்புள்ள பொருள்களைத் தே. தே. உ. (NNP) கணக்கில் எடுக்கவேண்டும். எவ்வாறு ?

ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியநாடுகள் சங்கம் ஆகியவற்றின் வருமானப் புள்ளிவிபரக்கணக்காளர், மிக இலகுவான முறையைப் பின்பற்ற விரும் பினர். (1) நுகர்வுப்பொருளோடு (2) தேறிய முதலீட்டுப் பொருளையும், (3) பண்டம்பணியென்பவற்றில் அரசாங்கம் செலவு செய்த செலவையும் சேர்த்தனர். (அடுத்த அத்தியாயங்களிலே சிலவற்றில் (நு + மு + அ) என்ற வாய்பாடு வருவதைக் காணலாம். நு = நுகர்பொருள் ; மு = முத லீடு ; அ = அரசாங்கச் செலவு.)

இங்கே சில உதாரணங்களுண்டு : தே. தே. உ. (NNP) இல் அற்ப நுகர் வையும் தேறிய முதலீட்டையும் சேர்ப்பதுபோலவே போர் விமானங்களுக்கு அரசாங்கம் செலவு செய்யும் பணத்தையுஞ் சேர்த்துக்கொள்ளுகிறோம். காலநிலைகணிக்கும் உத்தியோகத்தர், நீதிபதிகள், பொலீஸ்காரர், விமானச் சாரதிகள், நெருப்பணைக்கும் படையினர், விவசாய ரசாயன ஆராய்ச்சியாளர் என்போர்க்குச் செலவாகும் அரசாங்கப் பணமெல்லாம் சேர்க்கப்படுகிறது. (அரசாங்க வர்த்தக இலாகாவில் வேலை செய்யும் தேசீய வருமானப் புள்ளிவிவரந் தயார் செய்யும் கணக்காளருக்குக் கொடுக்கப்படும் தே. தே உ. இல் சேர்க்கப்படுகிறது).

சுருக்கமாகக் கூறுவதானால் அரசாங்க உத்தியோகத்தரின் சம்பளம் தட்டச்சு, துப்பாக்கி, ஆகாயவிமானம் முதலிய தளவாடங்கள் (இவை

1. மொத்தத் தேசீய உற்பத்தியில் 11/12 பங்கு தே.தே.உ. ஆகும். மொ. தே. உற்பத்தியில் 1/12 பங்கு தேய்மானமாகும்.

படிப்பகம்


www.padippakam.com



தனியார் தொழிற்சாலைகளிலிருந்து வாங்கப்படுகின்றன) என்பனவெல்லாம் அரசாங்கத்தின் செலவு என்ற இனத்திலே சேர்க்கப்படுகின்றன. படம் 4 தே. தே. உற்பத்தியையும் அதன் முக்கியமான கூறுகளையும் காட்டுகிறது.

**மாற்றுக்கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட்டன.**— அரசாங்கம் கொடுக்கும் ஒவ்வொரு டொலரும் தே. தே. உ. (NNP) இலே சேர்க்கப்பட்டுள்ளதா ? திட்டமாக இல்லை என்றே கூறவேண்டும். அரசாங்கத்திடமிருந்து வயோதிப காலப்பென்ஷன் எனக்குக் கிடைக்குமானால் அது "மாற்றுக் கொடுப்பனவு" என்று வழங்கப்படும். அது தே. தே. உ. இல் சேர்க்கப்படமாட்டாது. ஏன்? அது நடப்பு வருடத்து அரசாங்கச் செலவிலே சேர்ந்ததன்று. உங்கள் மாமிக்கு விதவைச்சகாயப் பணம் கிடைக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதுவும் மாற்றுக் கொடுப்பனவிலேயே சேர்க்கப்படும். குருடர்க்குப் பென்ஷன், ஸ்பானியப்போர் வீரருக்குச் சகாயம், இதர சகாயப்பணங்கள் என்பனவெல்லாம் இந்த இனத்திலேயே சேர்க்கப்படும்.

**நுகர்வு, முதலீடு அரசாங்கச் செலவுகள் என்பவற்றின் மொத்தத் தொகையே தே. தே. உ. ஆகும்.**




படம் 4. தே.தே.உ. இல் நுகர்வுப் பகுதி அதிகம். யுத்தகாலத்திலும் யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலுமே அரசாங்கச் செலவிலும் முதலீட்டிலும் அதிகரிப்பைக் காணலாம்.

13—CP 680 (5/67)

www.padippakam.com



அரசாங்க மாற்றுக் கொடுப்பனவு இனத்தில் மேலும் பல விடயங்களைச் சேர்க்கலாம்.[1] ஆனால் ஒரு பெரிய அமிசத்தை இங்கே குறிப்பிட்டு இதனை முடிக்கலாம். சமஷ்டிக் கடன்பத்திரங்களினால் கிடைக்கும் வட்டி பல வருடங்களுக்குமுன் தே. தே. உ. இற் சேர்க்கப்பட்டது. ஆனால் இன்று தேசங்கள் இதனை மாற்றுக் கொடுப்பனவிலே சேர்த்துக் கொள்வது வழக்கமாகி விட்டது. இஃது இப்போது அரசாங்கச் செலவிலே சேர்க்கப்படுவதில்லை. நடைமுறைப் பண்டங்கள் சேவைகள் என்பவற்றிற்குக் கொடுப்பனவாக இது சேர்க்கப்படாதபடியால் அரசாங்கச் செலவில் சேர்க்கப்படுவதில்லை.[2]

மாற்றுக் கொடுப்பனவுகளைக் கருத்தோடு திறைசேரி வரவு செலவுத்திட்டமானது கணக்கில் எடுக்கவில்லையெனக் கொள்ளக்கூடாது. 182 ஆம் பக்கத்திலே கண்ட திட்டத்தில் பின்வருவன உண்டு : அரசாங்க உபரி = வரி— அரசாங்கச் செலவும், மாற்றுக் கொடுப்பனவும். உத்தியோகபூர்வமான வரவு செலவுத்திட்டத்திலே கணக்குப் பதிவுச் செலவுகளுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. வரவுசெலவுத்திட்டத்தைத் தேசியவருமானக் கணக்குகளோடு மயக்கக்கூடாது. அவை ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையனவானாலும், தனிப்பட்டவை.

**வரிகளை எவ்வாறு கருத்திற் கொள்வது.** பொருள்களின் ஓட்டம் என்ற முறையைப் பயன்படுத்த தே. தே. உ. (NNP) இனை நு+மு+அ (C+I+G) எனக் கணிக்கும்போது வரிகளைப் பற்றியோ அரசாங்கம் எவ்வாறு தனது பண நிலையைச் சரிக்கட்டிக் கொள்ளுகிற தென்பதைப் பற்றியோ அக்கறை கொள்ள வேண்டியதில்லை. அரசாங்கம் வரிவிதித்தாலென்ன, வட்டியுள்ள கடன்பத்திரங்களைப் பிறப்பித்தாலென்ன வட்டியில்லாத பச்சைப் பத்திரங்களைப் பிறப்பித்தாலென்ன, புள்ளிவிபரக்காரர் அரசாங்கச் செலவைப்

1. ஒன்பதாவது அத்தியாயத்திலும் இங்கேயும் வழங்கப்பட்ட மாற்றுக் கொடுப்பனவு சற்றே மயக்கத்தையுண்டாக்கலாம். வேலையில்லாமலிருக்கும் எனது அயலார்க்குச் சகாயஞ் செய்வதற்காக என்மீது வரி விதிக்கப்பட்டால் அது மாற்றுக் கொடுப்பனவாகலாம். ஆனால் புதிதாக 20 டொலர் பத்திரங்களையடித்தோ, கடன்பத்திரங்களை விற்றோ அவர்களுக்குச் சகாயம் செய்யலாம். சகாயக் கொடுப்பனவுகளைப் பொருளியலாளர் மாற்றுக் கொடுப்பனவு என்றே கூறுவர். அது எந்த வகையிலே சேர்க்கப்பட்டாலும் பாவாயில்லை.

2. தே.தே.உ. இல் அடங்கும் அரசாங்க இனங்களை எவ்வாறு கருத்திற்கொள்வதென்பது இன்றும் விவாதத்திற்குரிய விடயமாகவேயிருக்கிறது. உதாரணங்கள் : (1) அவை தனியார் பொருள்கள் பிரிக்கப்பட்டுள்ளமைபோல அரசாங்க நடைமுறை நுகர்வுகள், அரசாங்கத் தேறிய முதலீடுகளென இரண்டாய்ப் பிரிக்கப்பட வேண்டுமெனச் சில நிபுணர் வாதாடுவர். தேறிய முதலீட்டில் புதிய கட்டிடங்கள், புதிய தளவாடங்கள், கையிருப்புக்கள் என்பன அடங்கும். சில தேசங்கள் இவ்வாறு செய்கின்றன. (2) சில நிபுணர் அவற்றின் ஒரு பகுதி " இடைப்பொருள் " என்றும் முடிவானபொருளன்றென்றும் கூறுவர். இவ்வாறு செய்வதால் இரண்டுமுறை கணக்கில் சேரும். அஃது எவ்வளவென்பதை மிகச்சில நாடுகளே மதிப்பிடத்துவங்கியுள்ளன. (3) வரியாலும், கடன்படுவதாலும், புதிய நோட்டுக்களையடிப்பதாலும் அவைபற்றிய வரைவிலக்கணம் பாதிக்கப்படலாமெனச் சில நிபுணர் கருதுவர். இவ்விடயத்திலே கருத்தொற்றுமை கிடையாது. நிபுணரிடையே நிலவும் வாதங்களை ஆரம்ப நூலாகிய இத்தகைய நூலிலே எடுத்து ஆராய வேண்டியதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பண்டம் பணி என்பவற்றுக்கு அரசாங்கம் செலவு செய்யும் செலவாகவே கணக்கிடுவர். இந்தப்பண்டமுஞ் சேவைகளும், அரசாங்கத்துக்கு உள்ள நிசச் செலவிலேயே மதிப்பிடப்படும். செலவுக்குரிய பணம் எங்கிருந்து வருகிறதென்பதைப் பற்றிய அக்கறையின்றியே இது நிகழும்.

மேல்வளவுப் பொருள் கிட்டப்பார்வையிலே, வரிகளைக் கவனிக்காதுவிட லாம். ஆனுல் கீழ் வளவு உழைப்பு அல்லது செலவுப்பார்வையில், அவற் றைக்கவனிக்காது விடலாமா? கீழ்வளவுப் பார்வையிலே எல்லா வரிகளை யும் கவனத்திலே எடுத்துக்கொள்ளவேண்டும்.

உதாரணமாக சம்பளங்களை எடுத்துக்கொள்க. எனது முதலாளி எனக் குக் கொடுக்கும் சம்பளத்தின் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வருமான வரியாக நான் கொடுத்துவிடவேண்டும். கீழ் வளவுச் சம்பள அமைப்பிலே இந்த நேர்வரிகள் சேர்ந்துவிடுகின்றன. வட்டி வரி, இலாபம் என்பவற்றுக் குப் போடப்படும் நேரடியான வரிகளுக்கும் இவை பொருந்தும்.

ஒரு பாண்துண்டுக்கு சில்லறை வியாபாரிகளும் உற்பத்தியாளரும் கொடுக்கும் விற்பனைவரி முதலிய மறைமுகவரிகளை எடுத்துக் கொள்க. (அல்லது கோதுமை நிலை, மாநிலை பாண்சுடும் நிலையில் கொடுப்பவற்றைக் கவனிக்கலாம்.) இந்த மறைமுகவரிகள் 5 சதம் ஆகிறதென வைத்துக் கொள்க. சம்பளம், இலாபம், சேர்க்கப்பட்ட மதிப்பு இனங்கள் எல்லாமாகச் சேர்ந்து 20 சதமாகின்றன. இந்த 20 சதத்தில் எவ்வளவு நேரடிவரியாகக் கொடுக்கப்படுகிறதென்பதைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. மேல் வளவில் பாண் என்ன விலைக்கு விற்கப்படும். 20 சதத்துக்கா? இல்லவே இல்லை. அது 25 சதத்துக்கு விலைப்படும். உற்பத்திச்சாதனச் செலவுகளுக்கு 20 சதம், 5 சதம் மறைமுகவரிகள்.[1]

தே. தே. உ. (NNP) இற்கும் மொ. தே. உ. (GNP) இற்கும் கணக்கிடும் கீழ்வளவுச் செலவு நோக்கிலே வரிகளைச் சேர்ப்பது இயல்பு.

அரசாங்கம் இந்த விடயத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டபடியால் பூரண் மானதொரு வரைவிலக்கணத்தைக் கொடுக்கலாம். மொ. தே. உ., தே. தே. உ. என்பன மூன்று பெரிய அம்சங்களின் கூட்டுத் தொகையாகும். அவை: தனிப்பட்டவர்கள் பண்டம்பணி என்பவற்றில் செய்யும் செலவு; அரசாங்கம், பண்டம், பணி என்பவற்றில் செய்யும் செலவு; முதலீட்டுச் செலவு என்ற இம்மூன்றின் கூட்டுத் தொகை. ஆனுல் மொ. தே. உ. இலே சகல புதிய எந்திரங்களுக்கும், தளவாடங்களுக்குஞ் செல வாகும், மொத்த முதலீட்டுச் செலவுகளும், சேர்க்கப்பட்டுள்ளன. ஆனுல்

[1]. சேட இலாபம் என்பதைப்பற்றி நாம் வரைவிலக்கணம் கூறினேம். அதன்படி இது பொருந்தும். சேட இலாபம் உற்பத்திச் செலவாகவே கருதப்படுகிறது. வரியானது நுகர்வோர் தலையில் சுமத்தப்படுகிறதா அல்லது உற்பத்திச்சாதனச் செலவுகளோடு சேர்க்கப்படுகிறதா? வரி அங்கே சேர்க்கப்படாவிட்டால் சம்பளமும் ஏனைய பெறுபேறுகளும் உயர்ந்திருக்கும். 10 ஆம் அத்தியாயத்திலே சொல்லப்பட்ட சந்தர்ப்பங்கள் 20 ஆம் அத்தியாயத்தில் ஆராயப் படுகின்றன.

www.padippakam.com



தே.தே.உ. இல் தேறிய முதலீட்டுச் செலவுமாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளது; தேய்மானமானது கழிக்கப்பட்டுள்ளது.

மொ. தே. உ. ஐயும் தே. தே. உற்பத்தியையும் மேல்வளவு உற்பத்தி ஓட்டமாகவல்லாது கீழ்வளவுச்செலவுத் தொகையாகக் கூறலாம். சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்ற சாதனங்களின் உற்பத்திச் செலவாகக் குறிப்பிடலாம். (மற்றக்கம்பெனிகளிடம் வாங்கும் இடைப்பொருள்களை இரண்டுதரம் கணக்கிலே எடாதவகையில் கவனமாயிருக்கவேண்டும்). மறைமுகமான வர்த்தக வரிகளை (அதாவது பொருள் ஓட்டத்தை உற்பத்தி செய்வதற்கான செலவுகளை) யும் சேர்க்கவேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தி விடயமானல் தேய்மானச் செலவையுஞ் சேர்க்கவேண்டும்; தேசிய உற்பத்தியானல் இந்தச் செலவினத்தைச் சேர்க்கவேண்டியதில்லை.

இந்த இரண்டு வரைவிலக்கணங்களும் ஒரேவகையான அளவையே வரைவிலக்கணப்படி கொடுக்கின்றன (அதாவது இரட்டைப் பதிவு முறையை அனுசரிப்பதால்).[1]

**அமெரிக்காவின் தே. தே. உ. (NNP) உம், மொ. தே. உ. (GNP) உம்.**

கருத்துமுறைகளை நன்கு அறிந்துகொண்டபின்னர் நிசமான தகவல்களை இனி ஆராயலாம்.

**பொருள் ஓட்ட நோக்கு :** படம் 4 இன் இடப்பக்கத்தை முதலிற் பாருங்கள். அது, தே. தே. உ. இனை ஆராய, மேல்வளவு பொருள் ஓட்ட நோக்கைக் காட்டும்.

உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை வேற்றுமைப்படுத்தும் நாலு அம்சங்களுண்டு. இவற்றில் நுகர்வு, அரசாங்கச் செலவு, அவை வகுக்கப்பட்ட பிரிவுகள் என்பனபற்றி அதிகம் விளக்கவேண்டியதில்லை. வெளிநாட்டு வியாபாரம் பற்றிய விரிவான ஆராய்ச்சியை இந்த அத்தியாயத்தின் அநுபந்தத்திலும் 31 ஆம் அத்தியாயத்திலும் பார்ப்போம். எமது தேறிய வெளிநாட்டு முதலீடு, "நாம் இறக்குமதிசெய்யும் பண்டம், சேவை என்பவற்றிற்கு மேலதிகமாக நாம் நடைமுறையிலே ஏற்றுமதி செய்யும் பண்டம் பணிகளையே" குறிக்கும்.

[1]. புள்ளிவிவரம் கணிப்போர் பூரணமற்ற அறிக்கைகளைக் கொண்டே தமது அறிக்கைகளைத் தயாரிப்பர். சில தகவல்கள் உத்தேச மதிப்பீட்டின்பேரில் கொடுக்கப்படுகின்றன. "புள்ளிவிபர மூரண்பாடு" என்று உத்தியோகபூர்வமாகக் கூறப்படுவதைக் கொண்டு பார்க்குமிடத்து இரு வரைவிலக்கணங்களைப்பற்றிய உத்தேசம் சிறிது வேறுபடலாம். சம்பளம், வட்டி என்ற இனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர் தலைமைவகிப்பதுபோலவே "புள்ளிவிபர மூரண்பாட்டுக்கும்" ஒருவர் உண்டு. தகவல்கள் சரியாயிருந்தால் அவருக்கு வேலையில்லாதிருக்கும். ஆனல் வாழ்வில் எல்லாம் பொருத்தமாயிருப்பதில்லை. ஆனபடியால் அவர் விடயங்களைச் சரிக்கட்ட வேண்டிய அவசியமுண்டு. இது மிகக் கடினமான வேலை. சர்வதேசக் கடன் சம்பந்தமான கொடுப்பனவுப் பாக்கி விடயம் 31 ஆம் அத்தியாயத்திலுண்டு. அங்கே "பிழை, தவறியவை" உண்டு.

www.padippakam.com



## தே. தே. உ. ஐயும் (NNP) மொ. தே. உ. ஐயும் (GNP) நிசமான இலக்கங்களோடு ஆராய்ந்து பார்க்க இரண்டுவழி :

படம் 4. தேறிய தேசிய உற்பத்தி 1959. நடைமுறை டொலர் ஆயிரங் கோடியில் இட பக்கம் பொருள் ஓட்டத்தைச் சந்தைவிலையில் அளக்கிறது. வலப்பக்கம் செலவு ஓட்டத்தைக் சாதன உழைப்பு + மறைமுகவரி) காட்டுகிறது. மொ. தே. உ. (தேய்மானம் சேர்ந்தது) உம் காட்டப்பட்டுள்ளது. முக்கியமான இனங்களை விளங்கிக் கொள்க. உடுக்குறிபோட்டது "புள்ளி விபரமுரணைக்" கோட்டும். இது மேல்வளவு, கீழ்வளவுகளைச் சரியாக அளந்துகொள்ளாமை யால் உண்டானது."

| பொருள் ஓட்ட நோக்கு | | உழைப்பு செலவு நோக்கு | |
|---|---|---|---|
| தனிப்பட்டவர் நுகர்வு செலவு. .. .. | 313.8டொ. | சம்பளமும் ஏனைய தொழிலாளர்செலவுகளும் .. | 277.8 |
| நெடும்பயன்தரு பொருள்கள்.. | 43.4டொ. | தேறியவட்டி .. .. | 16.4 |
| குறுபயன்தரு பொருள்கள் .. | 147.6 | ஆட்களின் வாடகைவருமானம் .. | 12.4 |
| பணிகள் .. .. | 122.8 | மறைமுகவர்த்தகவரிகள், அவற்றைச் சரிக்கட்டல் முதலியன .. | 41.9 |
| | | கூட்டாய்ப்பதியாத கம்பெனிகளின் வருமானம் (சரிக்கட்டியது) .. | 46.5 |
| பண்டம், பணி, என்பவற்றை அரசாங்கம்வாங்குதல் .. | 97.1 | வரிக்குமுந்தியகம்பெனி இலாபம் (சரிக் கட்டப்பட்டது) .. .. | 46.6 |
| தேறிய தனியார் உள்நாட்டு முதலீடு .. .. | 31.5 | பங்குஇலாபம் .. 13.4டொ. | |
| தேறிய வெளிநாட்டு முதலீடு (பண்டம்பணி என்பவற்றின் தேறிய ஏற்றுமதி) .. | —1.0 | பருக்காத இலாம் .. 10.5 | |
| | | கம்பெனி இலாபவரிகள் 23.2 | |
| தேறியதேசிய உற்பத்தி .. | 441.6டொ. | அறிவிக்கப்பட்ட இலாபம் (சரிக் .. கட்டாதது) .. 47.1டொ. | |
| | | கையிருப்பு மதிப்பு சரிக்கட்டியது .. | 40.5 |
| தேய்மானம் (அல்லது முதல் நுகர்வுக்குக்கழிவு) .. | 40.5 | தேறிய தேசியவருமானம் .. | 441.6டொ. |
| | | தேய்மானம் (முதல் நுகர்வுக்குக்கழிவு) | 40.5 |
| மொத்தத்தேசிய உற்பத்தி .. | 482.0டொ. | மொத்தத்தேசிய உற்பத்தி .. | 482.0டொ. |

தேறிய தனியார் உள்நாட்டு முதலீட்டைப் பற்றிச் சிறிது கூறவேண்டியது அவசியம். தேறிய மொத்தமாக 31.5 நூறு கோடி டொலர் முன்னர் கூறியபிரகாரமே கிடைத்தது. மொத்தம் தனியார் உள்நாட்டு முதலீடான 72.0 இலிருந்து இவ்வத்தியாயத்தின் அட்டவணை 3 இல் கூறியபடி., தேய்மானமாக 40.5 கழிக்கப்பட்டது.

இடப்பக்கத்திலுள்ள நாலு அமிசங்களையும் கூட்டும்போது தே. தே. உ. ஆக 441.6 நூறுகோடி டொலர் கிடைக்கிறது. நமது விளைவு இதுதான். 1959 இற்கு அமெரிக்காவின் பொருளாதார விளைவு பணக்கணக்கில் இதுவே.

படிப்பகம்

www.padippakam.com



கடைசியாக ஒரு விடயம் கவனிக்கப்படவேண்டும். தேய்மானத்தை மேற்படி இலக்கங்களோடு கூட்டினுல் மொத்த தேசிய உற்பத்தியாகிய 482.0 நூறுகோடி டொலர் கிடைக்கும். இது பெரிதாக இருப்பது, மொத்த முதலீடு அடங்கியிருப்பதனுலாகும்.

**கீழ்வளைவுச் செலவுஒட்ட நோக்கம்.** இனி அட்டவணையில் வலப்பக்கம் நோக்குக. இங்கே சேர்த்த மதிப்பீட்டு இனங்களோடு வரிகளுஞ் சேர்க்கப்பட்டுள்ளன.

சிலவற்றுக்கு விளக்கம் கொடுக்கவேண்டியது அவசியம். சம்பளமும் ஏனைய உபசரணைகளும் என்பவற்றில் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளம், ஓரப்பயன்கள், சம்பளவரி என்பன அடங்கும்.[1]

தேறியவட்டியும் அத்தகையதே. (அரசாங்கக் கடன் பத்திரங்களுக்குரிய வட்டிகள், இதில் சேர்க்கப்படவில்லை. அத்தகைய வட்டி மாற்று இனமாகக் கருதப்படுமேயன்றி, அரசாங்கச் செலவாகவோ, தே. தே. உ. இன் ஒரு பகுதியாகவோ கருதப்படமாட்டாது.)

ஆட்களின் வரி வருமானம் பற்றி ஒரு விளக்கம் கூறவேண்டும். உமக்குச் சொந்த வீடிருந்தால் நீரே உமக்கு வரிகொடுப்பதாகக் கருதவேண்டும். இது "சாட்டுதல்" செய்யப்பட்ட ஓர் இனம். இதையும் கணக்கில்போடவேண்டியதே. ஏனெனில் தன் சொந்த வீடு சம்பந்தமான வாடகைக்கு ரசீது கொடுப்பதில்லை.

மேல்வளைவோடு கீழ்வளைவைச் சமன்படுத்துவதானுல் கீழ் வளைவில் மறைமுக வரிகளையுஞ் சேர்க்கவேண்டியதே. சம்பளம், வட்டி, வரி என்பவற்றில் நேரடியான வரிகள் அவ்வவ்வினங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இனி, இலாபம் என்ற விடயத்தை ஆராய்வோம். இதுவே கடைசியாக வரவேண்டிய இனம். இலாபத்தில் இரண்டு வகையுண்டு. ஒன்று கம்பெனிகளின் இலாபம். மற்றது கம்பெனியாகப் பதிவுசெய்யப்படாத தொழில்களால் உண்டாகும் இலாபம். அதாவது முதலாளிகள், பங்காளிகள் தொழில்களால் வரும் இலாபங்கள். பதிவுசெய்யப்படாத தொழில்களால் உண்டாகும் (சரிப்படுத்தப்பட்ட[1]) இலாபம் பிந்தியவகை. இதில் விவசாயிகள் வருமானமும், தொழில்துறைகளில் உத்தியோகம்புரிவோர் வருமானமும் அடங்கும். 30 ஆம் அத்தியாயத்திலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். மக்கள் செலவிடும் மூலதனம், நிலம், முயற்சி என்பவற்றுக்குக் கிடைக்கும் பிரதிபலனே இதிற் பெரும்பாகமாகும். ஆனுல் புள்ளி விவரயியற்காரர் இதனை எல்லாம் இலாபத்திலே அடக்கிவிடுவர்.

1. தேசீய வருமானத்திலே சம்பளத்தின் பங்கு ஒரு நூற்றுண்டாக மாற்றமின்றியிருந்ததென்பதை இலண்டன் பொருளியற்கலாசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சேர். ஆர்தர் பௌலி எடுத்துக்காட்டினுர். ஏன் இஃது இப்படி என்பது எவருக்கும்புரியவில்லை. (இலாபத்தில் ஒரு பகுதி சம்பளக் கணக்கில் சேர்க்கப்பட்டதுடன் சமீபகாலத் தசாப்தங்களில் பௌலியின் கொள்கைக்கு மாருக அது உயர்ந்துகொண்டும் வந்தது.)

www.padippakam.com



கடைசியாக "கம்பெனி இலாபம், வரிகள் சரிக்கட்டப்படமுன்"[1] என்பது காட்டப்பட்டுள்ளது. அந்த இனத்தில் 46.6 நூறுகோடி டொலர் சேர்க்கப் பட்டுள்ளது. அதில் இலாபவரி 23.2 நூறுகோடி டொலராகும். மிச்சம் இலாபப் பங்கீடாகும்; அல்லது பகிரப்படாத கம்பெனி இலாபமாகும். இந்தக் கடைசியமிசந்தான் தொழிலில் மறுபடியும் முதலீடு செய்யப்படும் பணம். அது "தேறிய கம்பெனிச் சேமப்பணம்" எனப்படும்.

மறுபடி வலப்பக்கத்திலே செலவு ஓட்ட நோக்கு தே. தே. உ. வாக 441.60 கோடி டொலரைக் கொடுக்கிறது. மொ. தே. உ. வும் 482.00 கோடி டொலரே. இது தேய்மானத்தைக் கூட்டியதாலுண்டானது.

**ஒன்றோடொன்று தொடர்புள்ள மூன்று கருத்துக்கள்: பைசல்செய்யக் கூடிய வருமானம்; ஆளுக்குரிய வருமானம்; தேசீய வருமானம்.**

தேசீய வருமானம் கணக்கெடுப்பதுபற்றிய அடிப்படை விடயங்களை அட்ட வணை 4 இல் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. விரிவான பொருளியல் விளக்கத்துக்கு அது போதும். அமெரிக்கப் பொருளாதாரத்திலோ அதற்கு வெளியிலோ என்ன நடக்கிறதென்பதை மாதாமாதமோ தவணைக்குத் தவணையோ கவனமாக அவதானிக்கும் வர்த்தகராகவோ, பிரசையாகவோ, அரசியற்றலைவராகவோ நீர் இருந்தால் ஐக்கிய அமெரிக்க வர்த்தக இலாகாவும், அதைப்போன்ற உத்தியோகபூர்வமான தாபனங்களும் ஆராய்ந்து அறிவித்த வேறுமூன்று கருத்துக்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். பைசல் செய்யக்கூடிய வருமானம், ஆளுக்குரிய வருமானம், தேசீய வருமானம் (குறுகலான வரைவிலக்கணத்தோடு கூடியது) என்பன அவை. இவை மேலே தந்த தகவல்களை வேறுவிதமாக மாற்றி ஒழுங்கு செய்துள்ளன. அது பயனுடையதே.

**பைசல்செய்யக்கூடிய வருமானம்.** தனிப்பட்டவர்க்கும் குடும்பத்த வர்க்கும் வருடத்தில் சொந்தச் செலவுக்கு எத்தனை டொலர் கிடைக்கும்? இந்தக் கேள்விக்கே பைசல் செய்யக்கூடிய வருமானம் பதில் கொடுக்க

1. "சரிப்படுத்தப்பட்ட" என்பது பின்வரும்வகையில், கையிருப்பு மதிப்பீட்டைச் சரிப்படுத்து வதைக் குறிக்கும்.

ஒரு வருடத்துள் பணவிலை மாறினால் இலாபத்தை அளக்கும் நமது அளவுஅலகு குறையுடையதாகும். குறிக்கப்பட்ட இலாபத்தின் ஒருபகுதி கையிருப்பில் மேற்குறிப்பே. (விலைவாசி அந்த வருடத்திலே விழுமானால் அது கீழ்க்குறிப்பாகும்). வருடத்து நடைமுறை விலைவாசி மாற்றத்தைக்கொண்டே புள்ளிவிவரயியற்காரர் இலாபத்தின் மேலதிக அறிக்கை எவ்வளவிலிருக்கிறதென்பதை மதிப்பார். உதாரணமாக 1959 இல் விலைவாசிகள் ஏறின. கம்பெனி இலாபம் 4710 கோடி டொலராக அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து 50 கோடி டொலர் கையிருப்பு மதிப்பீட்டுச் சரிக்கட்டலுக்குக் கழிக்கவேண்டியிருந்தது. அப்பொழுது தான் 4660 கோடி டொலர் சரிக்கட்டப்பட்டதும் கருத்துள்ளதுமான தொகை கிடைக்கும். (1953 இல் விலைவாசிகள் விழுந்தபொழுது சரிக்கட்டல் நேர்க்கணியமாயிருந்தது). அறிவிக்கப் பட்ட இலாபத்துக்கு நூறுகோடி கூட்டப்பட்டது. இஃது ஏன் என்பதை விளக்க முடியுமா? பதிவு செய்யாதபங்காளர் கம்பெனி வருமானங்களில் இதைப் போன்றதொரு சரிக்கட்டல் செய்யப்பட்டது. ஆனால் அது காட்டப்படவில்லை.

www.padippakam.com



முனைகிறது. பொதுவாகக் கூறுவதானல் பைசல் செய்யக்கூடிய வருமானத்தைப் பெறுவதற்கு தே. தே. உ. (NNP) இலிருந்து நேர்முக வரிகளையும், மறைமுகவரிகளையும் கழிக்கவேண்டும். கொடுக்கப்படாமல் கம்பெனியின் சேமநிதியில் சேர்க்கப்பட்ட இலாபப் பங்குகளைக் கழிக்கவேண்டும். சமஷ்டிக் கடன் வட்டியைச் சேர்ந்த மாற்றுக் கொடுப்பனவுகளைக் கூட்டவேண்டும். இதனல் தேறும் பணம், உண்மையில் எமது செலவுகளுக்காக எமது கையில் மிஞ்சியிருக்கக்கூடிய பணமே.

பைசல் செய்யக்கூடிய வருமானம் பற்றியது மிக முக்கியமான தகவலாகும். இஃது இரண்டாம் பிரிவில் ஆராயப்படும். ஏனெனில் மக்கள் தம்முடைய நுகர்வுப் பொருள்களை வாங்குவதற்கும், சொந்த முறையில் சேமிப்பதற்கும் இந்த வருமானத்தையே பயன்படுத்துவர். சமீபகாலத்தில் மக்கள் தமது பை. வ. இல் 93 வீதத்தை நுகர்வுப் பொருள்கள் வாங்குவதிலும், 7 வீதத்தை மொத்தச் சேமிப்பிலும் செலவுசெய்தனர். கடைக்காரர் இந்த வருமானத்தையே கவனிப்பர். பணவீக்கத்தையோ, நுகர்பொருளில் குறைவாகச் செலவு செய்வதையோ கவனிக்குங் கொள்கை நிர்மாணிப்போரும் இதனையே கவனிப்பர்.

**ஆளுக்குரிய வருமானம்.** பைசல் செய்யக்கூடிய வருமானம்பற்றிய தகவல் மூன்று மாதத்துக்கு ஒரு முறையே கிடைக்கிறது. ஆனல் மாதந்தோறும் தகவல் பெற விரும்புவோரின் நன்மைக்காக அரசாங்கம் " ஆளுக்குரிய வருமானம் " என்ற தகவலைப் பிரசுரிக்கிறது. பை. வ. போலவே ஆ. வருமானமும் தே. தே. உ. இலிருந்து கம்பெனிச் சேமநிதிகளை நீக்கிவிடுகிறது. மாற்றுக் கொடுப்பனவுகளைச் சேர்த்துக்கொள்ளுகிறது. வரிகளையும் கழித்துவிட்டால் ஆ. வ. என்பது பை. வ. உக்குச் சமமாகும். சில வரிகளை மாதாமாதம் விரைவாகக் கணித்துவிடுவது கடினமான காரியம். ஆ. வ. சிறிதுகாலத்திலே சரியாகக் கணித்துவிடக்கூடிய சில வரிகளை நீக்கிவிடுகிறது. இவை கம்பெனி வருமானவரி; சம்பளவரிகளிற் சில என்பனவாகும். ஆ. வ. மக்களுடைய வருமானவரியை மதிப்பிடமுயலுவதில்லை. அதனல் பை. வ. இலிருந்து இது சிறிது வித்தியாசப்படுகிறது. இருந்தும், பை. வ. மாதாமாதம் கணிக்கப்பட்டால் மற்றக் காலங்களில் மாறும்வீதத்திலேயே அதுவும் மாறும் என எண்ண இடமுண்டு. ஆ. வ. இன் முக்கியத்துவம் அங்கேதானுண்டு. ஆ. வ. விரைவில் கிடைக்கக்கூடிய மாதமதிப்பீடு. பை. வ. உக்குப் பதிலாகப் பெறக்கூடிய சிறந்த பதில் அஃதாகும். ஒரு குடும்பத்தின் செலவு, சுகசேமம் என்பவற்றைக் காட்டக்கூடிய குறிப்பு இதுவெனலாம்.

**குறுகிய வரைவிலக்கணம் கொண்ட தேசிய வருமானம்.** தே. தே. உ. மொ. தே. உ. முதலியவற்றையெல்லாம் குறிப்பதற்கு "தேசியவருமானம்" என்ற சொல்லை வழங்கிவந்தோம்.இதுவே சாதாரணமாக எல்லாராலும் வழங்கப்பட்டுவருவது. ஐ. அமெரிக்க வர்த்தக இலாகா இதற்குக் குறுகிய வரைவிலக்கணமொன்று வழங்கியுள்ளது. இந்த வரை


www.padippakam.com



விலக்கணப்படி தேசிய வருமானம் என்றால் மறைமுகவரிகளான கலால் வரி, சிகரெட் வரி, முத்திரை வரி, பெட்ரோல் வரி, விற்பனை வரி முதலியன வெல்லாம் நீக்கப்பட்ட தே. தே. உ. ஆகும். நேரடியான வரிகளும், கம்பெனிவருமானவரிகளும்[1] சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தின் அனுபந்தத்திலே காட்டிய படம் 6 இல் இப்பலவகைக் கருத்துக்களிடையேயுள்ள தொடர்பு காட்டப்பட்டுள்ளது.

படம் 5 தேசிய வருமானம் சம்பந்தமான மூன்று முக்கியமான கருத்துக்களைக் காட்டுகிறது. அவை மொ. தே. உ., தே. தே. உ., பை. வ. என்பனவாகும். இவற்றின் போக்கு எவ்வளவு பொருத்தமுடையது ; அவை பிரியுந் தன்மை எத்துணை மந்தமானது என்பவற்றையும் இது காட்டுகிறது.

**வெவ்வேறு தேசிய வருமானக் கூட்டுத்தொகைகள் ஒன்றுகவே செல்லுமியல்புடையன**




படம் 5. மொ. தே. உற்பத்தியில் 11/12 தே. தே. உ. ஆகும். வரி, கம்பெனிச் சேமிப்பு என்பன காரணமாக, மக்கள் பைசல் செய்யக்கூடிய வருமானம் மேலும் குறைவு. மூலம் : அமெரிக்க வர்த்தகத் திணைக்களம்.

1. தே. தே. உ. என்றால் சந்தைவிலையில் மதிப்பிடப்பட்ட தேசிய உற்பத்தி எனக் கூறக்கூடுமானால், இந்தத் தேசியவருமானத்தைச் சந்தைவிலையில் மதிப்பிடாது, மறைமுகவரி நீங்கிய சாதனச்செலவுப்படி மதிப்பிடப்பட்ட அந்த உற்பத்தியின் தேறிய தேசிய உற்பத்திப் பொருள் எனலாம்.

www.padippakam.com



அதனுலேதான் பெரும்பாலோர் மொ. தே. உ. ஐ மாத்திரம் கவனித்து விட்டு இடையிடையே பை. வ. ஐக் குறைநிரப்புவதற்காகக் கணக்கிலே எடுத்துக் கொள்ளுகின்றனர்.

இந்த அத்தியாயத்தில் ஒரு பொருளாதாரத்தின் வளர்ச்சி, நலம் என்பவற்றைக் கவனிக்கும் சாதனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நூலின் முதற் பிரிவில் ஆராயவேண்டிய விடயங்கள் இதில் முற்றுப்பெறுகின்றன. இரண்டாம் பிரிவுக்கு இஃது ஒரு முகவுரையாகும். தேசிய வருமானத் தின் போக்கு, மட்டம், சகடமாய் வரும் ஏற்ற இறக்கம் என்பவற்றை நிச்சயிக்கும் பிரமாண்டமான பொருளாதார சக்திகளை இரண்டாம் பிரிவு ஆராயும்.

சுருக்கம் :

1. தேறிய தேசிய உற்பத்தி அல்லது தே. தே. உ. என்பது உற்பத்திப் பொருளின் ஓட்டமே. இது நுகர்வுப் பொருள், தேறிய முதலீடு (உள்நாடு, வெளிநாடு), அரசாங்கம் பண்டம்பணிகளிற் செலவிடும் செலவு என்பவற்றை அடக்கியது. அதாவது தே. தே. உ. = நுகர்ச்சி + முதலீடு + அரசாங்கச் செலவு.

2. விலைக்குறியீடொன்றைப் பயன்படுத்துவதால் தே. தே. உ. வை இறக்கலாம். அதன்பயனுக ஒரு வருடத்து வாங்குஞ் சக்தியையனுசரித்து டொலர் கணக்கில் நிசமான தே. தே. உ. வை மிக்க பொருத்தமான அளவிற் காணலாம். நுகர்பொருள், முதலீட்டுப் பொருள், அரசாங்கப் பொருள் விலைகள் என்பவற்றுக்கான அத்தகையதொரு சராசரி விலைக்குறியீடு, மாறும் விலைமட்டங்களுக்கேற்ற அளவையலகுக்கு விட்டுக்கொடுக்க வழி யாகும்.

3. எச்ச இலாபம் என்பதற்கு வரைவிலக்கணம் கொடுக்கும் முறையைக் கொண்டு, தே. தே. உ. ஐ பொருளுற்பத்தியோட்ட அளவையால் அளப் பதைக் கீழ்வளைவுச் செலவு ஓட்ட அளவால் அளப்பதோடு சமனுக்கிவிடலாம். இது சாதன உழைப்பைப்பயன்படுத்தி, இடைப்பொருள்களை இருமுறை சேராதபடி, சேர்க்கப்பட்ட மதிப்பீட்டைக் கவனமாகக் கணிக்கிறது. வரிக்கு முந்தியசம்பளம், வட்டி, வரி, இலாப வருமானம் என்பவற்றைச் சேர்த்துக் கொண்டபின் அதனோடு மறைமுக வர்த்தக வரிகளையுஞ் சேர்க்கிறது. (தே. தே. உ. இல் அரசாங்கக் கடன்பத்திரவட்டி, பொதுநலப்பென்ஷன் வரவு என்பவற்றைச் சேர்ப்பதில்லை).

4. சமூகத்தின் வளத்தில் ஒரு பகுதியைப் புதிய கட்டடங்கள், தளவாடங் கள், கையிருப்புக்களைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தும் போது உண்டாகும் முதலீடு நேர்க்கணியமானதாகும். தேறிய முதலீடு, மொத்த முதலீட்டி லிருந்து தேய்மானத்தைக் கழித்தால் வருவது. தேய்மானத்தை அளந் தறிவது கடினம். எனவே மொத்த முதலீட்டை அளப்பதில் புள்ளிக் கணக்காளருக்கு அதிக நம்பிக்கையுண்டு ; தேறிய முதலீட்டை அளப் பதில் அத்துணை நம்பிக்கையில்லை.

www.padippakam.com



5. மேலே காட்டிய காரணத்துக்காக உத்தியோகப் புள்ளி விபரக் கணக்குகள் தேறிய உற்பத்தியிலும் பார்க்க மொத்தத் தேசீய உற்பத்தியை அதிகம் அழுத்தமாகக் கூறும். மொ. தே. உ. (GNP) = தே. தே. உ. (NNP) + தேய்மானம். தேய்மானம் மந்தமான போக்குடையது; அது மொ. தே. உ. இலிருந்து $\frac{1}{12}$ அதிகமாக மாறுவதில்லை. (இது தே. தே. உ. இல் $\frac{1}{11}$ ஆகும்). நடைமுறை விடயங்களுக்கு நாம் ஒன்றில் மொ. தே. உ. ஐப் பயன்படுத்தலாம்; அல்லது தே. தே. உ. ஐப் பயன்படுத்தலாம்.

6. பைசல் செய்யக்கூடிய வருமானம், ஆளுக்குரிய வருமானம், (குறுகிய வரைவிலக்கணமுடைய) தேசீய வருமானம் என்பன உத்தியோக பூர்வமான மூன்று மேலதிகஅளவைகளாகும். தே. வருமானம் என்பது தே. தே. உ. இலிருந்து மறைமுகவரி (பெட்ரோல்வரி, கலால்வரி, விற்பனை வரி) யை நீக்கிய எச்சமாகும். ஆள்வருமானம் என்பது மூன்று மாதத்துக்கு ஒரு முறை கிடைக்கக்கூடிய பைசல் செய்யக்கூடிய வருமானம் முதலிய இனத்தைச் சேர்ந்த வருமானங்களைப் போன்றது. ஆனால் இது மாதா மாதம் கிடைக்கக்கூடியது; எல்லாவரிகளையும் கொடுத்தபின்னர், கம்பெனியின் பங்கிடாத இலாபத்தையும் மாற்றுக்கொடுப்பனவுகளையும் ஒழுங்கு செய்தபின்னர் ஒவ்வொருவருக்கும் வேண்டிய செலவுகளுக்கு மிஞ்சக்கூடிய வருமானமாகும்.

தேசீய வருமானம் கணக்கிடுதல் பற்றிய விரிவான தகவல் இந்த அத்தியாயத்தின் அனுபந்தத்திற் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் சமீபகாலப் பொருளாதார சரித்திரத்திலிருந்து தெரிந்தெடுத்த சில தொகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பெடரல் ரிசர்வ் சங்கத்தின் முக்கியமான உற்பத்திக் குறியீடு மாதாந்தம் வெளியாகிறது. அதையுங் கொடுத்துள்ளோம். வேலை வாய்ப்பு, வேலையின்மை சம்பந்தமான தகவல்களுமுண்டு. இந்தப் புள்ளி விவரங்கள்தாம் நாட்டின் பொருளாதார சுகநலத்தைக் காட்டக்கூடியன.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள் :**

1. 1929 துவக்கம் 1933 வரை அமெரிக்காவிலே ஒரு பெரிய வியாபார மந்தமுண்டானது. இந்தவிபரத்தைப்பற்றி எந்தப் படத்தில் வாசித்தறியலாம்? யுத்தகால வியாபாரமலர்ச்சியை எந்தப்படத்திலே வாசிக்கலாம்? 1937–1938 இல் உண்டான வியாபாரப் பிற்போக்கை எதிலிருந்து அறியலாம்? அவ்வாறே 1948–1949, 1953–1954, 1957–1958 என்பவற்றில் நடந்த வற்றை எதிலிருந்து அறியலாம்? 5 ஆம் அட்டவணையைப்பார்த்து இந்த ஏற்றத்தாழ்வுகளை அறிக.

2. 1 ஆம் படத்திலுள்ள இரு வளைவுப் பணஓட்டத்தை 43 ஆம் பக்கத்திலுள்ள வரைபடத்தோடு ஒப்பிடுக. சமூகத்திலே உள்ள எது, எப்படி, எவருக்கு என்ற பிரச்சினைகளை விலைத்திட்டம் எவ்வாறு தீர்க்கும் என்பதை 43 ஆம் பக்கத்திலுள்ள படம் காட்டுகிறது. அது "சிறிய அளவில்" உள்ள பொருளாதாரப் பிரச்சினையைக் காட்டும். படம் 1 இல் மொத்தச்

www.padippakam.com



செலவு—"பெரிய அளவு"—முந்திய படத்தோடு எவ்வாறு பொருந்துகிற தென்பதைக் காட்டுக.

3. "அப்பிளையும் தோடம்பழத்தையும் நீங்கள் கூட்டமுடியாது." பணம் அதைச்செய்யும் என்பதை விளக்குக.

4. சவரஞ்செய்தல் என்ற உதாரணம் பண்டம் பணி என்பவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டவே எடுத்தாளப்பட்டது. பணிகள் கொடுக்கும் நுகர்வுச்சேவைகளுக்கு பண்டங்கள் அவசியமென்பதை ஆராய்க.

5. படம் 2 இலே சமீபகாலப் பணமயமான தே. தே. உ. ஐயும் நிச தே. தே. உ. ஐயும் பென்சிலால் கீறி, குறையும் முறை எப்படியென்பதை மனத்தில் நிணைவுபடுத்துக. அப்போது 1959 ஆம் ஆண்டிலிருந்து விலை வாசிகள் எவ்வாறு மாறின என்பதை உத்தேசமாகக் கொள்க. குடிசன மாற்றத்துக்கு எவ்வாறு குறைப்பை உண்டாக்குவீர்? பிரிட்டனில் 1959 இல் தே. தே. உ. 1890 கோடி பவுணுயிருக்க 1 பவுண்ஆனது 3 டொலர் பெறுமதி யான பொருள்களை வாங்குமானல், 1959 ஆம் ஆண்டின் அமெரிக்க டொலரில் பிரிட்டனின் தே. தே. உ. ஐ எவ்வாறு கூறுவீர் ?

6. ரொபின்சன் குரூஸோ 1, 000 டொலர் மேல்வளைவுப் பொருளை உற் பத்திசெய்கிறுன். அவன் 750 டொலரைச் சம்பளமாகவும், 125 டொலரை வட்டியாகவும், 75 டொலரை வரியாகவும் கொடுக்கிறுன். அவனுடைய இலாபம் என்ன ? தே. தே. உ. ஐ மேல்வளைவுமுறையிலும் கீழ்வளைவு முறை யிலும் கணித்து, அவையிரண்டும் சமன் என்பதைக் காட்டுக.

7. குரூஸோ தனதுவிவசாய இலாகாவிலிருந்து 100 டொலர் பெறு மதியான தளவாடங்களைத் தனது கைத்தொழில் இலாகா வாங்கியிருப்பதாக அறிகிறுன். விவசாய இலாகாவின் செலவுகளிற் பாதி சம்பளமாகவும் பாதி நிலவாடகையாகவுஞ் செல்கிறது. மதிப்பீடு சேர்க்கப்பட்ட தகவல்களைக்கணிக்க. இருமுறை கணித்தல் எடுப்பதைத் தவிர்க்க. இப்பொழுதும் தே. தே. உ. 1000 டொலர்தான் ; உற்பத்திப் பொருள் ஓட்டத்தை அனுசரித்துப் பார்த் தாலென்ன, சாதனச் செலவு நோக்கை அநுசரித்துப் பார்த்தாலென்ன அது 1000 டொலரே. (குறிப்பு : இரண்டு கைத்தொழில்களௌனக் கொள்க. தேய்மானத்தைக் கணக்கெடுக்கவேண்டாம்.)

8. சமீபத்திலே வெளியான பெடரல் ரிசேர்வ் அறிக்கை அல்லது நடைமுறைத் தொழில்கள்பற்றிய ஆராய்ச்சி (வர்த்தக இலாகா) என்பதை ஆதாரமாகக் கொண்டு அட்டவணை 4 ஐ 1959 ஆம் ஆண்டுக்குப்பிந்திய ஓர் ஆண்டுக்குக் கணக்கிடுக. இலாபம் சரிக்கட்டப்படுவதையும், கம்பெனியின் விடயங்கள் கவனிக்கப்பட்டிருப்பதையும் விளக்குக.

9. தே. தே. உ. (NNP) = நு + மு + மொ. (C + I + G) என்பதிலுள்ள மொ. ஐயும் அரசாங்க மாற்றுச்செலவு என்பதையும் பிரித்து வேற்றுமை கூறுக. பைசல் செய்யக்கூடிய வருமானத்தைப் பெறுவதற்கு தே. தே. உ. இலிருந்து வரிகளெல்லாவற்றையும் என் கழித்து மாற்றுக்கொடுப்பனவைச்

படிப்பகம்

www.padippakam.com



சேர்க்க வேண்டும்? பகிர்ந்து கொடுக்கப்படாத பங்காளர் இலாபத்தின் நிலையென்ன?

10. பின்வரும் கருத்துக்களைப் பற்றி ஞாபகப் படுத்துக: தே. தே. உ.; தே. தே. உ. (NNP) = நு + மு + மொ (C + I + G). 1963 ஆம் ஆண்டின் பணமயமான தே. தே. உ. நடைமுறை டொலரில்; 1963 நிச தே. தே. உ. 1959 ஆம் ஆண்டு டொலரில்.

இடைநிலைப் பொருள்; இரட்டைக்கணக்கு; மதிப்பீடு சேர்க்கப்பட்டது. மொத்த முதலீடு – தேய்மானம் = தேறிய முதலீடு.

மொ. தே. உ. – தேய்மானம் = தே. தே. உ. அரசாங்கமாற்றுக்கொடுப்பனவு. நேர்முகவரி; மறைமுகவரி. தேறிய வெளிநாட்டு முதலீடு = சகல நடைமுறை ஏற்றுமதிகள் – சகல நடைமுறை இறக்குமதிகள் (பண்டம், பணி). இணைக்கப்படாத தொழின்முயற்சியால் வரும் வருமானம்; தே. மு.; பைசல் செய்யக்கூடிய வருமானம்; ஆளுக்குரிய வருமானம் (பை.வ.)(ஆ.வ.).

**அனுபந்தம்: உத்தியோகபூர்வமான தேசிய வருமானத் தரவு.**

தேசியவருமானம் பற்றிய அடிப்படைத் தத்துவங்களை இந்த அத்தியாயத்தின் முக்கிய பகுதிகளிற் குறிப்பிட்டோம். சில விசேட அமிசங்களை இங்கே விளக்குகிறேம்.

**சில நுட்பங்கள்:** சில நுட்பமான மாதிரி அமிசங்கள் பின்வருமாறு:

1. வீட்டு மனையாள் செய்யும் பணிகள் தே. தே. உற்பத்தியிற் சேர்க்கப்படுவதில்லை. ஒருவன் தனது வீட்டு வேலைகளைப் பார்க்கும் ஒருத்தியைக் கலியாணம் பண்ணிக் கொள்வானுனல் தே. தே. உ. இறங்கிவிடும்; அல்லது மனையாள் அயல்வீட்டாளுடன் சேர்ந்து மாறிமாறி இருவீடுகளையும் இருவரும் வருடம் 4,000 டொலர் கூலியில் சுத்தஞ்செய்வதாக ஒப்புக்கொண்டால் தே. தே. உ. 8,000 டொலராக உயர்ந்துவிடும். இவ்விடயம் தர்க்க ரீதியாக ஆராய்ச்சி செய்வதற்கு இங்கே எடுத்துக்காட்டப்படவில்லை. ஆனுல் மனையாள் செய்யும் பணிகளைப் பணக் கணக்கில் மதிப்பிடுவது முடியாத காரியம் என்பதைச் சுட்டிக்காட்டவேயாகும். வீட்டிலே வேலைசெய்யும் பெண்களின் தொகை அளவுக்கு மிஞ்சி அதிகரிக்காவிட்டால், இந்த அமிசத்தைச் சேர்த்தாலென்ன, சேராது விட்டாலென்ன, தே. தே. உ. இன் உயர்வு தாழ்வில் அதிகம் வித்தியாசமுண்டாகாது[1]. பொருளியலிலே, பொருத்தமான அளவீடு செய்வது மிகமுக்கியமென்பதை இந்த உதாரணங்கள் காட்டுகின்றன. அளவையிலக்கணங்களுள் எந்த இலக்கணத்தை நீர் பயன்படுத்துகிறீர் என்பது முக்கியமன்று. எந்த இலக்கணத்தை அனுசரித்தாலும் அதையே மாற்றமின்றிப் பயன்படுத்தவேண்டும்.

1. இத்தகைய வேறுவிடயங்கள்: வீட்டுக்காய்கறித்தோட்டம், தானகச் செய்யும் அலுவல்கள் என்பன.

www.padippakam.com



2. பல அமிசங்களை இடைப்பொருள்வரிசையிற் சேர்ப்பதா, பூரண மாக்கப்பட்ட பொருளின் வரிசையிற் சேர்ப்பதா என்பது கடினசாத்திய மானவிடயம். உதாரணங்கள் : தச்சனுடைய சுத்தியலைப் பூரணமாக்கப் பட்ட நுகர்ச்சிப்பொருளாக மதிக்கமுடியாது. அப்பத்துக்குக் குழைக்கும் மாவைப்போல அஃது இடைநிலைப்பொருள். தச்சன் கட்டும் அழகிய வீடுகள், நிர்மாணிக்கும் மேசைகள் என்பனவற்றின் செலவுக்குரிய பொருள்களில் ஒன்றுகவே சுத்தியல் கருதப்படும்.

தச்சனுடைய மேலங்கிகள் விடயமெப்படி ? ஒரு வேலைத்தலத்திலி ருந்து மற்ற வேலைத்தலத்துக்குச் செல்லும் கார்ச்செலவு, வீட்டிலிருந்து வேலைத்தலத்துக்குச் செல்லும் கார்ச்செலவு, வாடிக்கைக்காரருக்கு அவன் வாங்கும் கோப்பி, அவன் குடிக்கும் கோப்பி, வாடிக்கைக்காரர் ஒருவரை அவன் பந்தாட்டத்துக்குக் கூட்டிச் செல்லும் செலவு, வாடிக்கைக்காரர் பந்தாட்டங்களை விரும்பும் ஒருவராயிருந்தால் அந்த அமிசம் ஆகியவற்றை எவ்வாறு கருதுவீர் ?

இந்த அமிசங்களொவ்வொன்றும் சர்ச்சைக்குரிய விடயமாகும். இவை யொவ்வொன்றிலும் இடைநிலைவியாபாரச் செலவுகளுண்டு. ஒவ்வொன்றி லும் நுகர்வு அம்சங்களுமுண்டு. வரிவசூலிப்பவரும், தேசிய வருமானப் புள்ளிதிரட்டுபவரும் இந்த அமிசங்களைப் பற்றி ஏகமனதான அபிப்பிராயம் கொள்வதில்லை. எனவே அவர்களுடைய முடிவைக் குறித்து நாம் ஆட்சே பந்தெரிவிக்கலாம். (உதாரணம், வரிவசூலிப்பவர் பட்டினத்திலே வேலை செய்வதற்கான மொத்தச் செலவை மாற்றச் சம்மதிக்கமாட்டார். பட்டினத் துக்கு வெளியேயானுல் சம்மதிக்கக்கூடும். வரி விதிக்கத்தகுந்த வருமானத்தி லிருந்தும் தே.தே.உ. இலிருந்தும் சுத்தியலைக் கழிக்கலாம். ஆனுல் மேலங்கி விடயத்தில் அதை அணிவதால் காற்சட்டை மேற்சட்டைகள் விரைவில் நட்டமடையமாட்டாவென்பதைக் காட்டக்கூடுமானுல் அவ்வாறு கழிக்கவேண் டியதில்லை. இவ்வாறே மற்ற விடயங்களும். தான்தோன்றித்தனமான முடிவுகளும், தன்னிச்சைப்படி செய்யும் முடிவுகளும் இத்தகையனவே.)

3. செய்தவேலைக்கோ, கிடைத்த பண்டம் பணி என்பவற்றுக்கோ மறை முகமாக நன்கொடை போலக் கொடுக்கும் கொடுப்பனவுகள் தே. தே. உ. இல் சேர்க்கப்படமாட்டா. அவை அரசாங்க மாற்றக்கொடுப்பனவு போன் றவை. தந்தை மகனுக்குக் கொடுக்கும் படிச்செலவும் இத்தகையதே. முற்றத்திலுள்ள புல்லைவெட்டுவதற்கு மகனுக்குத் தந்தை கொடுக்கும் கூலி எந்த இனத்தைச் சேர்ந்தது? தர்க்கமுறைப்படி அது, தே. தே. உ. ஐ சேர்ந்ததே. ஆனுல் அவ்வாறு கணிக்கப்படுவது அரிது.

4. நான் பழைய ஓவியம் ஒன்றை வாங்கினுலோ, பழைய கார் ஒன்றை வாங்கினுலோ அஃது இறுதியான விவகாரமன்று. ஆனபடியால் அது தே. தே. உ. இல் சேர்க்கப்படமாட்டாது. அவரும் நானும் சொத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம். அவ்வளவுதான். நான் பணத்தைக் கொடுத்து அவருடைய ஓவியத்தை வாங்கினேன். எந்தவிதமான பொருளும் புதி

படிப்பகம்

www.padippakam.com



தாக உற்பத்தி செய்யப்படவில்லை[1]. இது விசேடமான மாற்றுக் கொடுப்பனவு வகையைச் சேர்ந்தது[2]. இது முக்கியமானதொரு விடயத்தை எடுத்துக்காட்டுகிறது. இடைநிலைவியாபார டொலர் வருமானம் இறுதி நிலை வியாபார வருமானமாகிய தேசீயவருமானத்திலும் மிக அதிகமென்பதே. படம் 1 இன் வளைவுகள் அந்தப்படத்திலடங்கிய வர்த்தக, பொதுசனக் கட்டத்தில் நடைபெறும் விவகாரங்களில் ஒரு பகுதியையே கொண்டுள்ளன.

விலைமாற்றங்களால் உண்டாகும் மூலதன இலாபங்களை தே. தே. உ. (NNP) இல் சேரவிடமாட்டோம். எனது போட்மோட்டார் கையிருப்பை அதிக விலைக்கு வியாபாரிகள் வாங்கினுல் நான் பணக்காரனுகிவிட்டேன் என்று நினைத்துக்கொண்டு பை. வ. இல் அதிகமாகச் செலவு செய்ய நினைப்பேன். ஆனுல் இந்த அதிட்டம் நடைமுறைப் பொருளியல் நடவடிக்கைகளால் உண்டானதன்று. அதனுல் புள்ளிவிவரக்கணக்காளர் அதை தே. தே. உ. இல் சேர்க்கமாட்டார். இதே காரணங்களுக்காக, பங்குக் கம்பெனி இலாபங்களில் கையிருப்பு மதிப்பீட்டுச் சரிக்கட்டலை நடத்துவார்.

5. ஒருவர் எல்லைக்கோட்டு உதாரணங்கள் பலவற்றைக் கொடுக்கலாம். ஆனுல் நாம் இன்னும் ஓர் உதாரணத்தை எடுத்துக்காட்டுவோம். தே. தே. உ. ஐ அளவிடும்போது பணமதிப்புக்காக நுகர்பொருள்களிலோ, முதலீட்டுப்பொருள்களிலோ நாம் அக்கறைகொள்வதில்லை. பண்டங்கள் மூலம் சில "திருப்திகளும்" "நன்மைகளும்" "உளப்பாட்டு வருமானங்களும்" உண்டு. அவற்றை அளப்பதற்குப் பணம் பயன்படுகிறது. நுட்பமாக ஆராய்வதானுல் ஒவ்வொருமுறையும் நான் ஓர் இசைத்தட்டைப் போட்டுச் சங்கீதத்தை அனுபவிக்குந்தோறும், அதன் பெறுமதி தே. தே. உ. இல் சேர்க்கப்பட வேண்டுமா? கொள்கைப்படி பார்ப்பதானுல் அஃது அப்படித்தான். பத்துச்சத நாணயத்தை ஒரு பொது இசைப்பெட்டியில் போடவேணுனுல் அதுவும் தே. தே. உ. இல் சேரவேண்டியதே. ஆனுல் வீட்டிலே அத்தகைய இசைப்பெட்டியில் போட்டு மகிழ்வதால் அது நேரடியாக தே. தே. உ. இல் சேரமாட்டாது.

இவ்வகையான உள்ளத்தோடு சம்பந்தப்பட்ட மகிழ்ச்சி, அந்த இசைத்தட்டை எவ்வளவுதூரம் தேய்மானமடையச் செய்கிறேனே அவ்வளவுக்கு மறைமுகமாக தே. தே. உ. இல் சேரும். பழைய இசைத்தட்டுகளை வீசிவிட்டுப் பதிலாகப் புதியவற்றை வாங்குவேனுனுல், என்னுடைய நுகர்வுப் பொருள் வாங்கும் அளவிலிருந்து என்னுடைய மகிழ்ச்சியின் அளவைப் பணத்தில் அளந்துவிடலாம். இந்த அளவை, பருமட்டான அளவாகவேயிருக்கும்.

1. இந்த வியாபாரம் புரோக்கர்மூலம் நடைபெற்றதாயிருந்தால் அவர்பெறும் கொமிஷன் தே. தே. உ. இன் ஒரு பகுதியாகக் கணிக்கப்படும். அப்பஞ்சுடுவோர் ஒருவகையான உதவியைச் சமூகத்துக்குச் செய்வதுபோல புரோக்கரும் விலைப்படுத்துவோரும் ஒருவகையான உதவியைச் செய்வர். விற்போரையும் வாங்குவோரையும் ஒன்றுசேர்ப்பதே இந்த உதவி.

2. இந்த மாற்றுக்கொடுப்பனவு வேறு; முன்னர் நாம் ஆராய்ந்த அரசாங்க மாற்றுக் கொடுப்பனவு வேறு.

www.padippakam.com



புள்ளிக் கணக்காளர் இதை ஏற்றுக்கொள்ளுவார். ஒருவனுடைய வீட்டில் நுகரப்படுவதை ஆராய எமக்கு அதிகாரமில்லை. வீட்டுக்கென்று எப்பொருள்கள் வாங்கப்பட்டனவோ அவற்றை நுகர்பொருளாகவே கொள்வோம். இஃதெல்லாம் நன்றாகவே நடக்கின்றன. ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில்மட்டும் இது பொருந்தாது.

நெடும்பயன்தரு பொருள்களிலேதான் இப்போது நாம் நுகர்பொருள் வாங்கும் டொலர்களை அதிகமாகச் செலவு செய்கிறோம். நுகர்வைப் பணிகள், நெடும்பயன்தரு பொருள்கள், குறும்பயன்தரு பொருள்கள் என அட்டவணை 4 இலே காட்டினோம். அத்தகைய நெடும்பயன்தரு பொருள்களை வீட்டில் சேர்த்துத் தளவாடங்களை அதிகரிக்கின்றபோது, நமது அகச் சார்பான நுகர்வு, எங்கள் சில்லறைக் கொள்வனவுகளால் பெரிதுபடுத்திக் கூறப்படலாம். தளவாடங்கள் குறைந்துசெல்லும்போது எதிர்மாறான நிலைமை உண்டாகும்.

தூய்மைவாதிகளிற் சிலர் பின்வருமாறு கூறுவர்: "தே. தே. உ. இன் பணி நெடும்பயன்தரு பண்டம் என்பவற்றில் எவ்வளவு உண்மையில் வீட்டு நுகர்வாகப் பயன்படுகிறதென்பதைக் கணித்து அதை நுகர்விலே சேர்க்க வேண்டுமேயொழிய வருடத்தில் சில்லறையாக வாங்கியவற்றையன்று". வர்த்தக இலாகா இது செய்வது கடினமெனக் கூறுகிறது. ஆனால் சில விசேட காரியங்களுக்காகப் பொருளியலாளர், கார் நுகர்வு சம்பந்தமான தகவல்களை, பெட்ரோல் விற்பனவைக் கொண்டும் மைல்தூரம் சென்ற பதிவுகளைக் கொண்டும் சேகரித்துள்ளனர். புதிய கார் விற்பனைகளைவிட இவை விசேடமான கணிப்புக்களாகும்[1].

சமூகம் விரைவாக முன்னேறுவிட்டால் இந்த இரண்டுமுறைகளும் ஒரே தன்மையுடையனவாகவேயிருக்கும்.

### வருமானம் பற்றிய சர்வதேச அமிசங்கள்.

தேறிய வெளிநாட்டு முதலீடு எவ்வாறு உண்டானது என்பதைப்பற்றிச் சில தகவல்களை இந்த இடத்திற் கூறலாம்.

ஐக்கிய அமெரிக்கத் தேசிய வருமானம் என்று சொல்லும்போது, ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் நிரந்தரமான அமெரிக்கவாசிகளுக்கு வரும் வருமானம் அல்லது உற்பத்திப்பொருள் என்றே வைத்துக்கொள்வோம். இவர்களுடன் வெளிநாட்டிலே தற்காலிகமாக வசிக்கும் அமெரிக்கரும் சேர்க்கப்படுவர்.

1. ஒருவருடைய இல்லமே நெடும்பயன் தரும் நுகர்பண்டங்களுள் முக்கியமானது. அதைப் பற்றி உத்தியோகத்தர் பின்வரும் கொள்கையை அனுசரிக்கின்றனர். ஒரு வீட்டில் செலவு செய்யப்படும் தொகையை அதன் நுகர்வாகக் கருதுவதில்லை. வீட்டைப் புறம்பாகவே மதிப்பிடுகின்றனர். ஆனால் கார் முதலிய நெடும்பயன்தருபண்டங்களைப் பொறுத்தவரையில் மூலதனக் கணக்கை அவை சம்பந்தமாக வைத்துக்கொள்ள உத்தியோகத்தர் அஞ்சுவர். ஏனெனில் அது கடுமையான வேலையாகும். அதற்குப் பதிலாகச் சில்லறைக் கொள்வனவுகளையே அண்ணளவாகக் கொள்வர்.

www.padippakam.com



அமெரிக்காவில் வசிக்கும் ஓர் ஆங்கிலேயர்க்கு அமெரிக்காவில் ஓர் ஏக்கர் நிலம் உண்டு எனக் கொள்வோம். அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் இங்கிலாந்துத் தேசியவருமானத்திலே சேர்த்துக் கொள்ளப்படுமேயன்றி எங்கள் நாட்டுத் தேசிய வருமானத்திலன்று. அவ்வாறே பிரித்தானியக் கம்பெனிகளிலிருந்து அமெரிக்கருக்குப் பங்கு இலாபம் கிடைக்குமானால், அஃது அமெரிக்க வருமானத்தின் ஒரு பகுதி யேயன்றி பிரித்தானிய வருமானத்தின் பகுதியன்று. சொத்துமூலம் கிடைக்கும் சேவையை நாம் வெளியூருக்கு ஏற்றுமதி செய்துள்ளோம்.

வருமானவிடயத்திலே சம்பந்தப்பட்ட வெளிநாட்டு விவகாரங்கள் மிகப் பாரதூரமானவையென்பது இதிலிருந்து தெளிவாகும். இவ்விடயத்தில் இறக்குமதி, ஏற்றுமதி, பங்கு இலாபம் முதலிய விடயங்களைக் கணக்கிலே சேர்த்துக்கொள்ளவேண்டும். சர்வதேசப் பணப்பிரச்சினை இந்நூலின் ஐந் தாம் பகுதியில் ஆராயப்படும். ஐக்கிய அமெரிக்காவுக்கும், ஏனைய உலக நாடுகளுக்குமிடையில் உள்ள கடன் கொடுப்பனவு சம்பந்தமாக இத்தகைய அமிசங்களை அட்டவணைப்படுத்தலாம். இந்தக் கட்டத்தில் அந்த விவரங் களைக் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. அவை பின்னர் விரிவாய் ஆராயப்படும். தே. தே. உ. இன் மூன்றாவது முக்கிய அம்சமான (அட்ட வணை 3 ஐப் பார்க்க) முதலீடுபற்றிய வெளிநாட்டு முதலீட்டின் தன்மையை விளக்குவதே எங்கள் நோக்கம். அதனைத் தனிப்பட்ட உள்நாட்டு முதலீட் டோடு சேர்க்கவேண்டும்.


வெளிநாட்டு முதலீட்டின் தேறிய தொகையை அறிவதானால் இறக்கு மதிக்கு மேலதிகமாக ஏற்றுமதி எவ்வளவு உண்டென்பதை மதிப்பிட வேண்டும்[1]. எனவே, (அ) ஐக்கணிக்கும்போது, எமது ஏற்றுமதி மொத்தத்தையும் (எந்திரம், கப்பல் முதலியன) வெளிநாடுகளில் எமக் கிருக்கும் உற்பத்திச் சாதனங்களால் வரும் உழைப்புக்களையும் (பங்கு இலாபம், வட்டி முதலியன) கூட்டவேண்டும். (ஆ) ஐ மதிப்பிடும்போது வெளி நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் மொத்தத்தையும், இந்நாட்டில் வெளிநாட்டார் வைத்திருக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கான உரிமைச் செல வையும் சேர்க்கவேண்டும். ஆ. விலும் பார்க்க அ. எவ்வளவு அதிக மாயிருக்கிறதோ, அதுவே எமது வெளிநாட்டு முதலீடு. ஆனால் 1959 இல் அ. விலும் பார்க்க ஆ. வே அதிகமாயிருந்தது. அப்போது, எமது தேறிய வெளிநாட்டு முதலீடு எதிர்க்கணியமாகும். உள்நாட்டு முதலீட்டினால், பலருக்கு வேலை கிடைப்பதோடு பொருளாதாரமும் விரிவடைகிறது. அவ்

1. இந்த அத்தியாயத்திலே தேறிய வெளிநாட்டு முதலீடு என வழங்கப்படுவது, வர்த்தக இலாகாவினால் "ஏற்றுமதிசெய்யப்படும் பண்டங்களினதும் பணிகளினதும் தேறிய தொகை யாகும்." வெளிநாடுகட்குச் செய்யும் உதவிசம்பந்தமாக உண்டான மாற்றத்தினாலேதான் இந்தப்பெயரில் மாற்றமேற்படுத்தப்பட்டது. இவ்விடயம் 31 ஆம் அத்தியாயத்தில் ஆராயப் படும். இந்நூலிலே தேறிய வெளிநாட்டு முதலீடும், தேறிய இறக்குமதி ஏற்றுமதியும் ஒன்றெனற முறையிலேயே ஆராயப்படுகிறது.

www.padippakam.com



**உத்தியோகபூர்வமான தேசியவருமானத் தரவுகளிடையே உள்ள தொடர்பை எவ்வாறு காட்டுவது :**




படம் 6. ஒரு கருத்திலிருந்து மற்றென்றுக்குச் செல்லும்போது உண்டாகும் தொழிற்பாடுகளை இது காட்டும்.

வாறே வெளிநாட்டு முதலீட்டினாலும் தொழில்வாய்ப்பும் பொருளாதார விரிவுமுண்டாகின்றன.

**உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள் :** தேசியவருமானம் அல்லது உற்பத்தி பற்றி ஐக்கிய அமெரிக்க அரசாங்கப்புள்ளிவிபரங்களின் தொடர்புகளைப் படம் 6 சுருக்கமாக விளக்குகிறது. இதைக் கவனமாகப் படிப்பதால் விளக்கம் கூடும்.

அட்டவணை 5 உம், தேசிய வருமானத் தகவல்களும் சேர்ந்து, வியாபாரிகளும், உத்தியோகத்தரும் கருத்தோடு கவனிக்கும் மற்றை முக்கியமான கூட்டு விடயங்களைக் காட்டுகின்றன.

**அளந்து கணிக்கப்பட்ட சேமிப்பு, முதலீடு என்பவற்றின் ஒற்றுமை.**

13 ஆம் அத்தியாயத்திலேயுள்ள சேமிப்பு, முதலீடு அட்டவணைகள் ஒன்றையொன்று வெட்டும் விடயத்தைப்பற்றி ஆராய்வதற்கு இங்கே ஒரு விடயத்தை எடுத்துக் காட்டலாம். அதாவது தேசிய வருமானப் புள்ளி கணக்கிடுபவர், தாம் கணிக்கும் சேமிப்பு, முதலீட்டுக்குச் சரியென்பதைக் கூறுவார். அளந்த சேமிப்பும், அளந்த முதலீடும் இரட்டைப் பதிவுமுறையாலுண்டான ஒற்றுமையாகும். அது வரைவிலக்கணத்தோடு ஒத்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



இவற்றின் சேர்க்கையிலிருந்து தேசத்தின் பொருளியல் நிலையை அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை 5. முக்கியமான பொருளியற் சேர்க்கைகள் :** (வருமானத் தகவல் எல்லாம் நூறுகோடி நடைமுறை டொலரில் உண்டு). வருமானத் தகவலிலும் பார்க்க விடயங்களை நன்ருக அறிவுறுத்துவன உற்பத்திக் குறிப்புக்கள் : ஹேஷ்யம் சொல்லுவோர் உற்பத்திக்கு குறிப்புகளையே பயன்படுத்துவர். அரசியல் தலைவர்கள் வேலையின்மைபற்றிக் கவலைகொள்வர்,

| வருடம் | மொத்தத் தேசிய உற்பத்தி | தேறிய தேசிய உற்பத்தி | தேசிய வருமானம் | கைசல்செய்யக்கூடிய வருமானம் | கைசல் செய்யக் கூடியவருமானத்தின் விகிதமாயுள்ள தேசிய சேமிப்பு | பண்டம் பணி என்பவற்றில் அரசாங்கம் செய்யும் செலவு மொ. தே. உ. யில் ஒரு விகிதமாக | தொழில் உற்பத்தியின் பெடரல் ரிசர்வ் குறிப்பு 1957—100 | இலில் தொழிலாளர் 1000 கணக்கில் | இலில் தொழிலாளரோடு ஒப்பிட்டலி தொகைப்படியுள்ளவேலையற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1929 | 104.4 | 95.8 | 87.8 | 83.1 | 5.0 | 8.1 | 38 | 49,180 | 3.2 |
| 1931 | 76.3 | 68.1 | 59.7 | 63.8 | 3.9 | 12.1 | 26 | 50,420 | 15.9 |
| 1933 | 56.0 | 48.8 | 40.2 | 45.7 | — 1.4 | 14.4 | 24 | 51,590 | 24.9 |
| 1935 | 72.5 | 65.3 | 57.1 | 58.3 | 3.5 | 13.8 | 31 | 52,870 | 20.1 |
| 1937 | 90.8 | 83.0 | 73.6 | 71.0 | 5.3 | 12.9 | 40 | 54,000 | 14.3 |
| 1938 | 85.2 | 77.4 | 67.6 | 65.7 | 1.6 | 15.0 | 31 | 54,610 | 19.0 |
| 1939 | 91.1 | 83.3 | 72.8 | 70.4 | 4.1 | 14.6 | 38 | 55,230 | 17.2 |
| 1940 | 100.6 | 92.5 | 81.6 | 76.1 | 5.5 | 14.0 | 44 | 55,640 | 14.6 |
| 1941 | 125.8 | 116.8 | 104.7 | 93.0 | 11.9 | 19.7 | 56 | 55,910 | 9.9 |
| 1942 | 159.1 | 149.0 | 137.7 | 117.5 | 23.6 | 37.5 | 69 | 56,410 | 4.7 |
| 1943 | 192.5 | 181.6 | 170.3 | 133.5 | 24.7 | 46.0 | 82 | 55,540 | 1.9 |
| 1944 | 211.4 | 199.4 | 182.6 | 146.8 | 25.2 | 45.7 | 81 | 54,630 | 1.2 |
| 1945 | 214.6 | 201.0 | 181.2 | 150.4 | 19.1 | 38.8 | 70 | 53,860 | 1.9 |
| 1946 | 209.2 | 197.6 | 179.6 | 159.0 | 7.9 | 14.8 | 59 | 57,520 | 3.9 |
| 1947 | 234.3 | 221.3 | 198.2 | 170.1 | 2.8 | 12.1 | 65 | 60,168 | 3.6 |
| 1948 | 259.4 | 244.0 | 223.5 | 189.3 | 5.8 | 13.3 | 68 | 61,442 | 3.4 |
| 1949 | 258.1 | 240.8 | 217.7 | 189.7 | 4.5 | 15.6 | 64 | 62,105 | 5.5 |
| 1950 | 284.6 | 265.5 | 241.9 | 207.7 | 6.1 | 13.7 | 74 | 63,099 | 5.0 |
| 1951 | 329.0 | 307.0 | 279.3 | 227.5 | 7.8 | 18.4 | 81 | 62,844 | 3.0 |
| 1952 | 347.9 | 323.0 | 292.2 | 238.7 | 7.9 | 21.9 | 84 | 62,966 | 2.7 |
| 1953 | 365.4 | 338.9 | 305.6 | 252.6 | 7.9 | 22.7 | 91 | 63,815 | 2.5 |
| 1954 | 363.1 | 334.3 | 301.8 | 256.9 | 7.3 | 20.7 | 85 | 64,468 | 5.0 |
| 1955 | 397.5 | 365.5 | 330.2 | 274.4 | 6.4 | 19.0 | 96 | 65,848 | 4.0 |
| 1956 | 419.2 | 384.8 | 350.8 | 292.9 | 7.9 | 18.8 | 99 | 67,530 | 3.8 |
| 1957 | 442.8 | 405.3 | 366.9 | 308.8 | 7.7 | 19.5 | 100 | 67,946 | 4.3 |
| 1958 | 444.2 | 406.1 | 367.7 | 317.9 | 7.7 | 21.0 | 93 | 68,647 | 6.8 |
| 1959 | 482.0 | 441.6 | 399.6 | 337.3 | 6.9 | 20.2 | 105 | 69,394 | 5.5 |

படிப்பகம்

www.padippakam.com



## தேசிய வருமானத்தின் உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன :

**அட்டவணை 6.** *மொத்தத் தேசிய உற்பத்தி, தேறிய தேசிய உற்பத்தி, தேசியவருமானம், ஆள்வருமானம், பைசல் செய்யக்கூடிய வருமானம். (நூறு கோடி டொலரில்). உத்தியோக பூர்வமான தகவல்களை இலகுவாக விளங்கிக்கொள்வதானல் இதனேடு 6 ஆம் படத்தையுஞ் சேர்த்துப் படிக்க. (ஐக்கிய அமெரிக்க வர்த்தக இலாகா).*

| அமிசங்கள் | 1929 | 1933 | 1939 | 1945 | 1950 | 1956 | 1957 | 1958 | 1959 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த தேசிய உற்பத்தி** .. | **104.4** | **56.0** | **91.1** | **213.6** | **284.6** | **419.2** | **442.8** | **444.2** | **482.0** |
| கழிவு : மூலதன நுகர்வு (தேய்மானம்) .. | 8.6 | 7.2 | 7.8 | 12.5 | 19.1 | 34.4 | 37.4 | 38.1 | 40.5 |
| சமன் : **தேறிய தேசிய உற்பத்தி** .. | **95.8** | **48.8** | **83.3** | **201.0** | **265.5** | **348.8** | **401.3** | **406.1** | **441.6** |
| கழிவு : மறைமுகமான வர்த்தகவரி .. | 7.0 | 7.1 | 9.4 | 15.5 | 23.7 | 35.7 | 38.2 | 39.4 | 42.6 |
| வர்த்தக மாற்றுக் கொடுப்பனவு .. | 0.6 | 0.7 | 0.5 | 0.5 | 0.8 | 1.6 | 1.8 | 1.8 | 1.8 |
| புள்ளிவிபர முரண்பாடுகள் .. | 0.3 | 0.9 | 1.2 | 4.5 | -0.7 | –2.4 | –0.6 | –1.7 | –1.8 |
| சேர்மானம் : அரசாங்க உதவி, அரசாங்க முயற்சிகளின் நடைமுறை உபரியில் கழிவு | --0.1 | 0.0 | 0.5 | 0.8 | 0.2 | 1.0 | 1.0 | 1.1 | 0.6 |
| சமன் : **தேசிய வருமானம்** .. | **87.8** | **40.2** | **72.8** | **181.2** | **241.9** | **350.8** | **366.9** | **367.7** | **399.6** |
| கழிவு : பங்காளர் லாபமும், கையிருப்பு மதிப்பீடு சரிக்கட்டலும் | 10.1 | –2.0 | 5.7 | 18.4 | 35.7 | 42.0 | 41.7 | 37.4 | 46.6 |
| சமூகக் காப்புறுதிக்கட்டணம் .. | 0.2 | 0.3 | 2.1 | 6.1 | 6.9 | 12.6 | 14.5 | 14.8 | 17.3 |
| கொடுத்தபின் மிஞ்சியுள்ள மேலதிகச் சம்பளம் .. | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| சேர்மானம் : அரசாங்க மாற்றுக் கொடுப்பனவு .. | 0.9 | 1.5 | 2.5 | 5.6 | 14.3 | 17.2 | 20.1 | 24.5 | 25.2 |
| அரசாங்கம் கொடுத்த தேறிய வட்டி .. | 1.0 | 1.2 | 1.2 | 3.7 | 4.8 | 5.7 | 6.2 | 6.2 | 7.1 |
| பங்கு இலாபம் .. | 5.8 | 2.1 | 3.8 | 4.7 | 9.2 | 12.1 | 12.6 | 12.4 | 13.4 |
| வர்த்தக மாற்றுக் கொடுப்பனவு .. | 0.6 | 0.7 | 0.5 | 0.5 | 0.8 | 1.6 | 1.8 | 1.8 | 1.8 |
| சமன் : **ஆள் வருமானம்** .. | **85.8** | **47.2** | **92.7** | **171.2** | **228.5** | **332.9** | **351.4** | **360.3** | **383.3** |
| கழிவு : ஆள்வீதவரி .. | 2.6 | 1.5 | 2.4 | 20.9 | 20.8 | 40.0 | 42.6 | 42.4 | 46.0 |
| (பெடரல்) .. | 1.3 | 0.5 | 1.2 | 19.4 | 18.2 | 35.2 | 37.3 | 36.7 | 39.8 |
| (மாகாணம், தலத்தாபனம்) .. | 1.4 | 1.0 | 1.2 | 1.5 | 2.6 | 4.8 | 5.3 | 5.7 | 6.2 |
| சமன் : பைசல் செய்யக்கூடிய ஆள் வருமானம் (மாகாணம், தலத்தாபனம்) .. | 1.4 | 1.0 | 1.2 | 1.5 | 2.6 | 4.8 | 5.3 | 5.7 | 6.2 |
| சமன் : **பைசல் செய்யக்கூடிய ஆள் வருமானம்** .. | **83.1** | **45.7** | **70.4** | **150.4** | **207.7** | **292.9** | **308.8** | **317.9** | **337.3** |
| கழிவு : நுகர்வுச் செலவு | 79.0 | 46.4 | 67.6 | 121.7 | 195.0 | 269.9 | 285.2 | 293.5 | 313.8 |
| சமன் : ஆளுக்கான சேமிப்பு .. | 4.2 | –0.6 | 2.9 | 28.7 | 12.6 | 23.0 | 23.6 | 24.4 | 32.4 |

www.padippakam.com



முதலீட்டை அளப்பதெப்படி ? அரசாங்கத்தைக் கணக்கிலெடாமல் விட்டு விட்டால், முதலீடு மேல்வளைவில் நுகராமல் மிஞ்சியிருப்பதாகும். சேமிப்பை அளப்பதெப்படி? அரசாங்கச் சேமிப்பையும், பங்காளர் சேமிப்பையும் விட்டு விட்டால் சேமிப்பென்பது கீழ்வளைவில் உள்ள பைசல்செய்யக்கூடிய வருமானத்திலே, நுகராமல் மிஞ்சியிருப்பதாகும். அதாவது நுகர்வில் செலவாகாமல் எஞ்சியிருக்கும் தே. தே. உ. ஆகும். இதைச் சங்கிரகமாகக் கூறுவதானால்,

மு=மேல்வளைவு தே. தே. உ. – நு
சே=கீழ்வளைவு தே. தே. உ. – நு

இரண்டு வளைவுகளும் ஒரே தே. தே. உ. ஐக் கொடுக்கவேண்டும். என்பதை அறிவோம். எனவே மு≡சே : அளந்த சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் ஒற்றுமையுண்டு. கம்பெனிகளையும் அரசாங்கத்தையும் கணக்கில் கொண்டுவந்து விட்டால் எமது வேலை முடிந்துவிடும். முதலீடு முந்திய படியே இருக்கும். சேமிப்பை இப்போது மூன்றாகப் பிரிக்க வேண்டும். (1) தேறிய தனிப்பட்ட சேமிப்பு. இது மக்கள் தம்மிடமுள்ள பைசல் செய்யப்படக்கூடிய வருமானத்திலிருந்து சேமிப்பது. (2) தேறிய பங்காளர் சேமிப்பு. கம்பெனிகள் இலாபப் பங்கைக் கொடாது சேமிப்பது. (3) தேறிய அரசாங்க உபரிப்பணம் (அல்லது "சேமிப்பு"). பண்டம் பணம் என்பவற்றிலே செலவு செய்து மிஞ்சிய வருமானம். வரிகள் மூலம் கிடைத்த வருமானத்திலிருந்தே மேற்படி செலவைக் கழிக்க வேண்டும். செலவோடு மாற்றுக் கொடுப்பனவுகளையும் சேர்க்கலாம்.

அளந்த சேமிப்பு, அளந்த முதலீடு என்பவற்றை, இனி மூன்று சேமிப்பு வகைகளாகப் பிரித்து எழுதவேண்டும்.

மு≡தே. தனியார் சேமிப்பு+தேறிய நுகர்வோர் சேமிப்பு
+தேறிய அரசாங்கச் சேமிப்பு.

1. 311 ஆம் பக்கத்திலுள்ள ஆராய்ச்சியை, மறுபடி திருப்பிப் பார்த்து இந்தச் சமன்பாட்டைப் பரீட்சித்துக்கொள்ளலாம். அங்கே பை. வ., நு. சே. முதலியனவெல்லாம் ஆராயப்பட்டுள்ளன.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாம் பகுதி

## தேசிய வருமானத்தையும் அதன் ஏற்ற இறக்கத்தையும் நிச்சயித்தல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## பன்னிரண்டாம் அத்தியாயம்

# சேமிப்பு, நுகர்வு, முதலீடு

*மக்கோபரின் சமன்பாடு. வருமானம் வருடத்துக்கு 20 பவுண் : செலவு 19 பவுண் 19 சிலின் ஆறுபென்ஸ் = இன்பம். வருமானம் 20 பவுண் : செலவு 20 பவுண் ஆறுபென்ஸ் = துன்பம்*

*சார்ள்ஸ் டிக்கின்ஸ்.*

தேசிய வருமானமென்றால் என்ன என்பதை விளங்கிக்கொள்வதற்கு இந்நூலின் முதலாம் பிரிவிலே அத்திவாரம்போடப்பட்டது. இனி அதனை மேலும் விரிவாக ஆராயலாம். தேசிய வருமானம் ஏன் உயருகிறது? ஏன் வீழ்ச்சியடைகிறது? பெரிது சிறிது என்று வித்தியாசப்படுத்தாமல் அஃது எந்தவொரு சமயத்திலும் எப்படியிருக்கும்?.

வருமான ஆராய்ச்சிபற்றிய இக்காலக் கொள்கையை அறிவதற்கு இந்த அத்தியாயம் ஒரு முகவுரையாகும். சேமிப்பு, முதலீடு என்ற பணச்சக்திகளின் கண்ணாமூச்சி விளையாட்டினால் நிச்சயிக்கப்படும் மொத்தச் செலவு மட்டத்தைப்பற்றித்தான் இங்கே முக்கியமாக வற்புறுத்தப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியின் பெரும்பகுதி ஆங்கிலப் பொருளியலறிஞரான ஜோன் மேனாட் கேயின்ஸ் என்பவருடைய (இவர் 1946 இல் இறந்தார். அதற்கு முன் இவர் பிரபுப்பட்டத்தைப் பெற்றார்.) கருத்தைத் தழுவியதானாலும், இந்தக் கருத்துக்களின் அடிப்படைத்தத்துவங்கள் பலவகைப் பொருளியலறிஞராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. கேயின்சின் குறிப்பிட்ட கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களும், ஆராய்ச்சியின் நுட்பமான விபரங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களுங்கூட, கேயின்சின் அடிப்படைத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளுகின்றனர். இது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயமாகும்.[1]

இங்கு கூறப்படும் வருமான ஆராய்ச்சி பக்கச்சார்பில்லாதது. தனியார் முயற்சியை ஆதரிக்கவும், அதனை மட்டுப்படுத்தவும் இந்த ஆராய்ச்சியில் இடமுண்டு. அரசாங்கம் பிஸ்கால் விடயங்களை ஆதரிக்கவும், எதிர்க்கவும்

1. கேயின்ஸ் கணிதம், தத்துவசாத்திரம், இலக்கியம் என்ற பலதுறைகளிலே புகழ்பெற்ற ஒரு மேதை. இவற்றோடு, பெரியதோர் இன்சூரன்ஸ் கம்பெனியையும் நடத்தினார். இங்கிலாந்து வங்கியை நடத்தும்முறைபற்றி பிரித்தானிய திறைசேரிக்கு ஆலோசனை கூறினார். உலகப்பிரசித்திபெற்ற பொருளியற் சஞ்சிகையொன்றுக்கு ஆசிரியராய் இருந்தார். நாடகம், நாட்டிய நாடகம், என்பவற்றின் இயக்குனராயிருந்தார். தமக்கும், கேம்பிரிட்ஜிலுள்ள கிங்ஸ்கல்லூரிக்கும் பணம் ஈட்டினார். 1936 இல் அவர் எழுதிய வேலைவாய்ப்பு, வட்டி, பணம் என்பவற்றின் பொதுக்கொள்கை என்ற நூல் இந்தநூற்றாண்டின் பொருளியல் ஆராய்ச்சியில் பெரியமாற்றத்தை உண்டாக்கிற்று. இந்நூல் நீண்டகாலத்திற்கு பிரமாணநூலாயிருக்கும் தன்மைவாய்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com



தொகை, உயர்ந்த உற்பத்தி விகிதம், உயர்ந்த வருமானம் என்பவற்றில் தங்கியுள்ளன. புதிய, உயர்ந்த என்ற விசேடணங்கள் வலியுறுத்தப் படுவதை நோக்குக. சமூகத்தின் வளர்ச்சியமிசங்கள் சலனமானவை; முன்னேறியே கூறிக்கொள்ள முடியாதவை. முதலீடு இந்த அமிசங்களிலேயும், பொருளாதாரத்துக்குப் புறம்பான நுண்தொழில்வளர்ச்சி, அரசியல், மக்களுடைய நலங்காண் சுபாவம், தீமைகாண் சுபாவம் என்பவற்றைப் பொறுத்துண்டாகும் அபிலாஷைகள், அரசாங்கவரி, செலவு, சட்டம்சார்ந்த கொள்கைகள் முதலியவற்றிலும் தங்கியுள்ளது.

முதலீட்டிலேயுண்டான இத்தீவிரமான மாற்றமே அடுத்ததாக வலியுறுத் தப்படவேண்டிய விடயமாகும். எமது கைத்தொழில்முறை பல அற்புதமான கருமங்களைச் செய்யக்கூடியதாயிருக்கிறது. பொருள்களுக்குத் தேவையிருந் தால் அவற்றை உண்டாக்கத் தொழிலாளர், ஆயுதம், அறிமுறை என் பவற்றை அது பெறக்கூடிய ஆற்றலுள்ளது. காலஞ் செல்லச்செல்ல செய்முறையில் திருத்தங்களுண்டாகும்.

ஆனால் அஃது எப்பொழுதுஞ் செய்ய முடியாத ஒரு விடயமுமுண்டு. பூரண வேலைவாய்ப்பு உண்டாகக்கூடிய சரி அளவான முதலீடு இருக்கு மென்று அஃது உத்தரவாதஞ் செய்யமுடியாது. வேலையின்மையுண்டாகக் கூடிய அளவுக்கு அத்துணை குறைவான முதலீடோ, பண வீக்கத்தை உண்டாக்கக்கூடிய அளவுக்கு அத்துணை அதிக முதலீடோ இருக்குமென அஃது உத்தரவாதஞ் செய்யமுடியாது. பூரணமுதலீடு அல்லது பணம் செலவு செய்யும் சக்தி சம்பந்தமாக, சுயேச்சைக் கொள்கைவிடயத்தில் நிலைமையைக் காட்டக்கூடிய சாதனங்கிடையாது. பல தசவருடங்களாக முதலீடு மிகக் குறைவாயிருக்கலாம். அதனால் பணவாட்டம், நட்டம், மேலதிகமான ஆற்றல், வேலையின்மை, வறுமை என்பன உண்டாகும். வேறு ஆண்டுகளிலோ தசவருடங்களிலோ அதிக முதலீடு ஏற்படலாம். அதனால் பணவீக்கம் உண்டாகும் இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் சாதுரியமான பிஸ்கால் கொள்கையையும் (அதாவது வரி, செலவு என்பன பற்றியது) பணக் கொள்கையையும் (அதாவது பெடரல் ரிசர்வ், மத்திய வங்கி என்பனபற்றியது) பின்பற்றவேண்டும்.

கெட்டகாலத்துக்கு ஈடுசெய்ய நல்லகாலம் உண்டாகுமா ? விஞ்ஞானிகள் உரிய நேரத்திலே புதிய பொருள்களையும் உற்பத்தி முறைகளையும் கண்டு பிடிப்பார்களா ? 1855 ஆம் ஆண்டு துவக்கம் 1875 வரை உலகின் பல பாகங்களிலும் புகையிரதப்பாதைகள் போடப்பட்டன. அடுத்த இருபது ஆண்டுகளில் இத்தகைய முயற்சிகள் நடைபெறவில்லை. 1920 ஐ அடுத்த ஆண்டுகளிலே மோட்டாரும், பொதுப் பயனுக்குரிய சாதனங்களும் பெரிய புரட்சியை உண்டாக்கின. 1930 ஐ அடுத்த வருடங்களில் பிளாஸ்டிக்கும் வானொலியும் மொத்த முதலீட்டில் குறிப்பிடத்தக்க முதலீட்டை ஏற்படுத்த

படிப்பகம்

www.padippakam.com



வில்லை[1]. யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலே, பல வருடமாக, மேலதிக மான முதலீடு செய்தோம். நுகர்வைக் குறைத்துச் சேமிப்பை உண்டாக்கி யதால் செலவையுஞ் சுருக்கிக்கொண்டோம்.

இத்தகைய திரமற்ற நிலைமை எப்பொழுதும் பணவாட்டத்தோடு நிற்க வில்லை. பொருளாதாரச் சரித்திரம், பணவீக்கத்தின் சரித்திரமே. 1961 ஆம் ஆண்டிலே கடுக்கண்ட ஒரு வயதுவந்தவர் விலைகள் இரண்டுமடங்காக அதிகரித்திருப்பதை உணர்வார். அரசாங்கம் விலையேற்றத்தைத் தடுப்பதற் கான கொள்கைகளை அனுசரித்தாலன்றி விலைவாசிகள் ஏறுமேயன்றி இறங்க மாட்டா.

1929 ஆம் ஆண்டில் இருந்த பொருளாதாரமோ, 1960 இல் இருக்கும் பொருளாதாரமோ தாமாகவே விலைவாசிகளைத் திரமாக வைத்திருக்க மாட்டா; பூரண வேலைவாய்ப்பையுங் கொடுக்கமாட்டா என்பதை யதார்த்த வாதிகள் உணரவேண்டும். விலைப்பொருளாதாரத்திலே திரமான நிலையை உண்டாக்கக்கூடிய சில அமிசங்களுண்டு. அந்த அமிசங்கள் செயற்படச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அத்துடன் திரநிலையை உண்டாக்குவதற் கான தீவிரநடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். வட்டிவிகித அமைப்புகள் முதலீட்டில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுப்படுத்தக்கூடியன. இவ் விடயம் மேலேவரும் அத்தியாயங்களில் ஆராயப்படும். தற்காலத்துக் கலப் புப்பொருளாதாரத்திலே பல விலைவாசிகளை மாறுமலும், ஒட்டிக்கொண்டு மிருக்கச்செய்யும் தடைநிலைகளைப் பொதுநடவடிக்கைகளாலும், முன்னர் உண்டானது போன்ற அபரிமிதமான விலையேற்றங்களேற்படமாட்டா வென் னும் ஒரு பாதுகாப்பு மனோநிலையை உண்டாக்குவதாலும் மாற்றிவிடலாம்.

இதுவே முக்கியமான பொருளாதாரப்படிப்பனைகளிலொன்றாகும். முத லீடு செய்வதற்கான தூண்டுதலைப் பற்றிக் கூறுவதானால், இந்த முறையில் எதையும் நிச்சயமாகக் கூறமுடியாது. அது தெய்வாதீனமே. நாம் அதிட்ட சாலிகளாக இருக்கலாம்; அல்லது நமக்கு துரதிட்டம் ஏற்படலாம்.

ஆனால் எல்லாவற்றையும் அதிட்டத்தின் தலையில் போட்டுவிடவேண்டிய தில்லை. எமது பொருளாதாரமுறை சஞ்சலமின்றி நடைபெறுவதையும் உற்பத்தி பெருகுவதையும் பெரிதும் ஊக்கப்படுத்தக்கூடியமுறையிலே நியா யமான பொதுக் கொள்கைகளையும் தனியார் நடவடிக்கைகளையும் திட்டப் படுத்தலாம். வியாபாரத்திலேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை நூற்றுக்கு நூறு அகற்றிவிடமுடியாது. அப்படிச் செய்யவேண்டுமென்று விரும்பவும் மாட்

1. 1930 ஐ அடுத்த வருடங்களிலே விஞ்ஞானத்துறையில் முன்னேற்றமுண்டானது. யுத்தகால உற்பத்திகள் இதைத் தெளிவாய்க் காட்டுகின்றன. சில விஞ்ஞானக் கண்டுபிடிப் புக்கள், தொழில் வாய்ப்புக்களையும் வாங்கும் சக்தியையும் பாதிக்கலாம். இது நீண்ட காலத்திலும் பிரதானமாகக் குறுகியகாலத்திலும் ஏற்படலாம். தொழில்முறையில் மாற்றங் களுண்டாவதால் வாங்குஞ் சக்தியில் வாய்ப்பான மாற்றமுண்டாகுமெனக் கூறமுடியாது. எந்திரமுற்போக்கினால் வேலையில்லாத்திண்டாட்டம் உண்டாகாமல் நன்மையான பலன் ஏற்படுவது அரசாங்கத்தின் பிஸ்கால்கொள்கையையும், பணக்கொள்கையையும் பொறுத் ததாகும்.

www.padippakam.com



போம். ஆனால் விலைவாசிகள் தலைகீழாக மாறுவதையும் வேலைவாய்ப்புக்களில் தீவிரமான ஏற்ற இறக்கமுண்டாவதையும் குறைப்பது நல்லது. அதைப்பற்றி மேல்வரும் அத்தியாயங்கள் ஆராயும்.

தேசியவருமானத்தின் சமநிலைமட்டத்தை முதலீடும், சேமிப்பும் நிச்சயிக்கின்றனவென்பதை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம். நுகர்வு, சேமிப்பு, வருமானம் என்பவற்றைத் தொடர்புபடுத்தும் இரு முக்கியமான கோடுகளை முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். இவைதாம் "நுகர்வு நாட்டத் தொடர்பு" "சேமிப்பு நாட்டத் தொடர்பு" என வழங்கப்படும்.

**சேமிப்பு நாட்டமும், நுகர்வு நாட்டமும்.**

செல்வர், வறியவரிலும் பார்க்க அதிகமாகச் சேமிப்பார் என்பது எல்லாரும் அறிந்தவிடயம். மிக ஏழையாயிருப்போர் எதையுஞ் சேமிக்க மாட்டார். அதற்குப் பதில் அவர்கள் வரவுக்குமிஞ்சியே வருடாவருடம் செலவுசெய்வர். அதனால் ஒன்றில் அவர்கள் கடன்காரராவர்; அல்லது முன்னேயுள்ள சேமிப்புகளைச் செலவுசெய்வர். எனவே சேமிப்புக்கு முக்கியமானதொரு காரணம் வருமானம்.

அட்டவணை 1 இலே சேமிப்பு, நுகர்வு என்பவற்றைப் பற்றிய தகவல்களுண்டு. இவை 1950 ஆம் ஆண்டின் குடும்ப ஆராய்ச்சி அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது 7 ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டது. பைசல் செய்யக்கூடிய வருமான மட்டம் ஒவ்வொன்றையும் சேர்ந்த தேறிய சேமிப்பு 2 ஆம் கோட்டிலுண்டு. 4,000 டொலர் வருமானத்தில் வரவுஞ் செலவுஞ் சரி. இதற்குக் கீழே 3,000 டொலரிலும், 2,000 டொலரிலும் வருமானத்துக்கு அதிகமான செலவு உண்டு. (வரவுக்கு மிஞ்சிய செலவு −110 டொலர் −170 டொலர் எனக் காட்டப்பட்டுள்ளது). 4,000 டொலருக்கு மேலே நேர்க்கணியமான சேமிப்பு உண்டு.

3 ஆம் கோட்டிலே, ஒவ்வொரு வருமானமட்டத்திலும் நிகழும் நுகர்வு காட்டப்பட்டுள்ளது. இது "நுகர்வுநாட்டம்" எனப்படும். ஒவ்வொரு டொலரும் நுகர்வுக்கும் சேமிப்புக்கும் பயனாகிறபடியால் இரண்டாம் கோடும் மூன்றாம் கோடும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இவையிரண்டையும் கூட்டினால் முதலாம் கோடு வரும். (இதைப் பரீட்சித்துப்பார்க்க.)

நுகர்வின் மொத்தத் தொகை எவ்வளவு, சேமிப்பு மொத்தம் எவ்வளவு என்பதில் மாத்திரம் பொருளாதார ஆராய்ச்சி அக்கறை கொள்ளவில்லை. ஒவ்வொரு மேலதிக டொலர் வருமானமும் எவ்வளவு மேலதிக சேமிப்பையும், நுகர்வையுங் கொண்டுவருகிறதென்பதிலேயும் அக்கறை கொண்டுள்ளது. உதாரணமாக 4,000 டொலர் வருமானம் 5,000 டொலராக மாறும்போது, 850 டொலர் மேலதிக நுகர்வுக்கும் 150 டொலர் மேலதிக சேமிப்புக்கும் பயன்படுகிறது. அதாவது 85 வீதம் நுகர்வும் 15 வீதம் சேமிப்புமுண்டாகிறது. (இந்தத்தொகைகள் எவ்வாறு கிடைத்தன ? 4850 இலிருந்து 4,000 டொலரைக் கழித்தால் 850 உம்

படிப்பகம்

www.padippakam.com



150 இலிருந்து 0 ஐக் கழித்தல் 150 உம் கிடைக்கும். 5,000 டொலருக்கு மேலேயுள்ள மேலதிக டொலரின் நுகர்வு, சேமிப்பு விகிதம் 75, 25 வீதமாகவும், 64, 36 வீதமாகவுமிருக்கிறது. தனவந்தர் தமக்குக் கிடைக்கும் உபரி டொலர் ஒவ்வொன்றிலும் வறியவரிலும் குறைவாகவே நுகர்வார் என்பது நியாயமானதாக உமக்குப் படுகிறதா?[1]

**சராசரிக்கு மேலதிகமான வருமானமுடைய குடும்பத்தவரே சேமிக்கிறுர்கள்.**

| வரிகொடுத்தபின்மிஞ்சும் பைசல்செய்யக்கூடிய வருமானம். (1) | – தேறிய வரவுக்கு மிஞ்சிய செலவு(–) சேமிப்பு (+) (2) | நுகர்வு. (3) |
|---|---|---|
| 2,000 டொ. | —170 டொ. | 2,170 டொ. |
| 3,000 .. | —110 .. | 3,110 .. |
| 4,000 .. | 0 .. | 4,000 .. |
| 5,000 .. | +150 .. | 4,850 |
| 6,000 .. | +400 .. | 5,600 |
| 7,000 .. | +760 .. | 6,240 |
| 8,000 .. | +1,170 .. | 6,830 |
| 9,000 .. | +1,640 .. | 7,360 |
| 10,000 .. | +2,150 .. | 7,850 |

**அட்டவணை 1. யுத்தத்துக்குப் பின்னர் குடும்பங்களில் நுகரவும் சேமிக்கவுமுள்ள நாட்டம்.** கடன்படாமல் சேமிக்கத் துவங்கக்கூடிய வருமானம் 4000 டொலராகக் காட்டப்படுள்ளது. இந்த உபரி டொலரில் எவ்வளவை இந்த வருமானமுள்ள மக்கள் நுகர்வில் செலவு செய்கின்றனர் ? எவ்வளவை சேமிப்பில் ஈடுபடுத்துகின்றனர் ?

சேமிப்பு நாட்டமும் நுகர்வு நாட்டமும் அநேகமாக ஒரேதன்மையாகவேயிருக்கும். விவசாயிகளிலும் பார்க்கத் தொழிலாளர் குறைவாகவே சேமிப்புச் செய்கின்றனர். தேசீய வருமானமும், வேலைவாய்ப்பும் சேமிப்பினுலும் முதலீட்டினுலுமே நிச்சயிக்கப்படுகின்றன. இதைச் சரிவர அறிந்துகொள்வதற்கு சேமிப்பையும் வருமானத்தையும் தொடர்புபடுத்தும் சேமிப்பு நாட்ட அட்டவணையைப் படிக்கவேண்டும். அதனுடன், நுகர்வையும் வருமானத்தையும் சம்பந்தப்படுத்தும் நுகர்வு நாட்ட அட்டவணையையும் ஆராயவேண்டும்.

1. வரவும் செலவும் சரியாயிருக்கும் மட்டத்துக்குக் குறைவான குடும்ப வருமானமிருக்கும்போது, சேமிப்பு எதிர்க்கணியமாயிருக்கும்போதுகூட உபரி டொலர் ஒவ்வொன்றுக்கும் உபரி நுகர்வும் உபரி சேமிப்பும் உண்டென்பதை மாணவர் முதலில் விளங்கிக்கொள்ளக் கஷ்டப்படுவர். அட்டவணை 1 இன் இரண்டாம் கோட்டை முதற்கோட்டுடன் ஒப்பிடுக. 1000 டொலரை 2000 டொலரோடு சேர்த்தால் 3000 டொலராகிறது. உபரி வருமானம் நுகர்வை 2170 டொலரிலிருந்து 3110 ஆக உயரச் செய்கிறது. இதனுல் 940 டொலர் இலாபமுண்டாவதோடு 60 டொலர் உபரி சேமிப்புமுண்டாகிறது.

www.padippakam.com



**நுகர்வு நாட்ட அட்டவணை விபரம் :**

அட்டவணை 2 இந்த விபரங்களை வசதியான வகையிலே ஒழுங்குசெய்துள்ளது. தற்போதைக்கு 3, 4, 5, ஆம் கோடுகளைக் கருத்திலே கொள்ளவேண்டாம். நுகர்வுச் செலவு எவ்வாறு வருமான மட்டம் உயர உயர உயர்ந்து கொண்டு வருகிறதென்பதைக் கவனிக்க.

இந்தத் தொடர்பை உருவப்படம் மூலம் விளக்கமாகக் காட்டலாம். 338 ஆம் பக்கத்திலுள்ள படம் 1இல், 2ஆம் கோட்டிலுள்ள நுகர்வுச் செலவு முழுவதும் 1 ஆம் கோட்டில் உள்ள பைசல்செய்யக்கூடிய குடும்ப வருமானத்துக்கெதிராகப் புள்ளியிடப்பட்டுள்ளது. A, B, C, D, E, F, G, H என்ற வட்டங்களுக்கூடாகக் கோடு கீறப்பட்டுள்ளது.

இது நுகர்வுக்கோடு, நுகர்வு நாட்ட அட்டவணை, நுகர்வு நாட்டம் என்றெல்லாம் வழங்கப்படும். நுகர்வு அட்டவணை மூலாதாரமானதும் முக்கியமானதுமானதொரு கொள்கையாகும். அதன் பொதுக் குணங்களை ஆராய வேண்டியது அவசியம்.

படம் 1 இலே காட்டப்பட்ட 45° கோட்டை முதலிற் பார்த்தால் அதன் தன்மைகள் விளங்கும். நிலைக்குத்தான நுகர்வு அச்சு கிடைநிலையான வருமான அச்சு அளவுக்கே கீறப்பட்டிருப்பதால் 45° கோட்டிலுள்ள எந்தப் புள்ளியும் பின்வரும் இலேசான தன்மையை உடையதாயிருக்கும். அதனுடைய குறிக்கப்பட்ட நுகர்வுச் செலவு குறிக்கப்பட்ட பைசல் செய்யும் வருமான மட்டத்துக்கு 100 விகிதசமமுடையதாயிருக்கும். (நிலைக்குத்தான அளவிலிருந்து கிடை நிலையான அளவுக்கு ஒரு புள்ளியை அளக்கவேண்டும்). 45° கோட்டில் இல்லாத ஒரு புள்ளி இரண்டு அச்சிலிருந்தும் சம தூரமுடையதாயிருக்கமாட்டாது என்பதைக் கண்ணால் பார்த்தே ஒரளவு அறிந்து கொள்ளலாம்.

**சமநிலைப்புள்ளி.** 45° கோட்டிலிருந்து நமது நுகர்வுச் செலவு வருமான மட்டத்துக்குச் சமமானதா, கூடியதா. குறைந்ததா என்பதை அறியலாம். நுகர்வுக் கோட்டிலே 45° இல் வெட்டும் புள்ளி குடும்பங்களின் வரவுஞ் செலவுஞ் சரியாக இருப்பதைக் காட்டும். இந்தச் சமநிலை B இல் உண்டு. இங்கே நுகர்வுச் செலவு பைசல்செய்யக்கூடிய வருமானத்துக்குச் சமமாயிருக்கிறது. குடும்பம் கடன்படவுமில்லை. மிச்சம்பிடிக்கவுமில்லை. நுகர்வுக் கோட்டிலே வேறு எந்த இடத்திலும் குடும்பம் சமநிலையிலிருக்கமுடியாது. B இற்கு வலப்புறத்திலே கோடு 45° இற்குக் கீழே செல்கிறது.

படம் 1 இலுள்ள அம்புகள் கிடைநிலைத் தூரத்தினும் (பைசல்செய்யக் கூடியவருமானம்) குத்து நிலைத்தூரம் (நுகர்வுச்செலவு) குறைவு என்பதைக் காட்டுகிறது. குடும்பம் தனது வருமானமெல்லாவற்றையும் செலவு செய்யாவிட்டால், அது மிச்சத்தைச் சேமிக்கவேண்டும். 45° கோடு, சேமிப்பதையுஞ் சேமிக்கப்படும் தொகையையும் காட்டுகிறது. தேறிய சேமிப்பை நுகர்வு நாட்டக்கோட்டின் 45° கோடுவரை அம்புக்குறி போட்டிருப்பதைக் கொண்டு அளக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



அவ்வாறே B புள்ளிக்கு இடப்புறத்திலே 45° கோட்டிலிருந்து நமது குடும்பம் இப்போது வரவுக்கு அதிகமாகச் செலவு செய்கிறதென்பதை அறிந்து கொள்ளலாம். வரவுக்கு மிஞ்சிய செலவு குடும்பத்தின் தேறிய கடனாகும். அதை இரண்டு கோடுகளுக்குமிடையிலுள்ள குத்து நிலைத்தூரத்தைக் கொண்டு அறியலாம்.

**முக்கியமான நுகர்வு வருமானம், சேமிப்பு வருமானம் முதலிய ஒழுங்குகளை நாங்கள் குறிப்பிடும் விதம் :**

| | வரிகொடுத்தபின் மிஞ்சும் பைசலாகக் கூடிய வருமானம் (1) | நுகர்வுச் செலவு (2) | இறுதிநிலை நுகர்வுநாட்டம் (இ.நு.ந.) (3) | தேறிய சேமிப்பு (4) [=(1) − (2)] | இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (இ.சே.நா.) (5) |
|---|---|---|---|---|---|
| *A.* | 3,000டொ | 3,110டொ | | −100டொ | |
| | | | $\frac{890}{1000}=.89$ | | $\frac{110}{1000}=.11$ |
| *B.* | 4,000 | 4,000 | | 0 | |
| | | | $\frac{850}{1000}=.85$ | | $\frac{150}{1000}=.15$ |
| *C.* | 5,000 | 4,850 | | +150 | |
| | | | $\frac{750}{1000}=.75$ | | $\frac{250}{1000}=.25$ |
| *D.* | 6,000 | 5,600 | | +400 | |
| | | | $\frac{640}{1000}=.64$ | | $\frac{360}{1000}=.36$ |
| *E.* | 7,000 | 6,240 | | +760 | |
| | | | $\frac{590}{1000}=.59$ | | $\frac{410}{1000}=.41$ |
| *F.* | 8,000 | 6,830 | | +1,170 | |
| | | | $\frac{530}{1000}=.53$ | | $\frac{470}{1000}=.47$ |
| *G.* | 9,000 | 7,360 | | +1,640 | |
| | | | $\frac{490}{1000}=.49$ | | $\frac{510}{1000}=.51$ |
| *H.* | 10,000 | 7,850 | | +2,150 | |

இந்தச் சேமிப்பு நாட்டக்கோடு படம் 1 இலிருந்து கிடைக்கிறது. 45° கோட்டுக்கும் நுகர்வு நாட்டக்கோட்டுக்குமிடையேயுள்ள தூரமே இது. படம் 1 இலே A என்ற ஒரு புள்ளியில் குடும்பத்தின் சேமிப்பு எதிர்க்கணியமானதென்பது நுகர்வு நாட்டக்கோடு 45° கோட்டுக்கு மேலே கிடப்பதால் தெரிவிக்கப்பட்டது. படம் 2 இதனை நேரடியாகக் காட்டுகிறது. அவ்வாறே குடும்ப வருமானம் B புள்ளிக்கு அப்பாற் செல்லும்போது நேர்க்கணியமான சேமிப்பு உண்டென்பதையுங் காட்டுகிறது.

14—C.P. 680 (5/67)

படிப்பகம்


www.padippakam.com



**சுருக்கமாகக் கூறுவதானல் :**

நுகர்வு நாட்டம் 45° மேலேயிருந்தால் குடும்பம் கடன்படுகிறதெனலாம். நுகர்வு நாட்டமும் 45° உம் ஒன்றையொன்று சந்திக்கும்போது வரவுஞ் செலவுஞ் சரியாகின்றன. நுகர்வு நாட்டம் 45° இற்குக் கீழே செல்லுமானல் குடும்பம் சேமிக்கிறது. நுகர்வுநாட்டம், 45° கோடு என்பவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசத்தை அளந்து சேமிப்பையும் கடனையும் கணித்துக்கொள்ளலாம்.

**இரண்டாவது நுகர்வு நாட்டத்தைக் காட்டும் கணரேகை**




படம் 1. A.B.C.D. ... ஊடாகச் செல்லும் கோடே நுகர்வு நாட்டக் கோடாகும். எந்த ஒரு புள்ளியிலுமுள்ள சரிவு—இது முக்கோணமாயிருக்கும்—இ. நு. நா. ஆகும். 45° கோடு சமநிலையைக் காணவும் சேமிப்பைக் காணவும் உதவும். எப்படி? அட்டவணை 1, 2 பார்க்க.

**சேமிப்பு நாட்டக்கோடு :**

படம் 1 இலுள்ள நுகர்வுக்கோட்டிலிருந்து ஒரு புதிய கோடான சேமிப்பு நாட்டக்கோட்டை வரைந்து கொள்ளலாம். இது சேமிப்பு அட்டவணை என்றும் அழைக்கப்படும்.

இது படம் 2 இலே காட்டப்பட்டுள்ளது. கிடைநிலையான அச்சிலே ஸ்பெசல் செய்யக்கூடிய வருமானம் காட்டப்பட்டுள்ளது. நிலைக்குத்தாகக் குடும்பத்தினர் செலவு செய்யாமல் மிச்சம் பிடிப்பதை இதிற் காட்டுகிறேம்.


www.padippakam.com



இது தேறிய சேமிப்பு. இது நேர்க்கணியமாகவோ எதிர்க்கணியமாகவோ இருக்கலாம்.

முதலாவது அட்டவணை : நுகர்வு–நாட்ட அட்டவணையைக் காட்டும். இரண்டாவது அட்டவணை : நுகர்வு நாட்டத்தையும் சேமிப்பு நாட்டத்தையும் காட்டும். வருமானத்தின் நுகர்வுபடாத டொலரும் சேமிப்பிலே சேரும். மேலதிக வருமானம் ஒவ்வொரு டொலரும் மேலதிக நுகர்விலோ மேலதிக சேமிப்பிலோ சேரும். இவையிரண்டும் இறுதிநிலை நுகர்வு நாட்டம், இறுதிநிலை சேமிப்பு நாட்டம் என்ற இரண்டு முக்கியமான கொள்கைகளாகும்.

**மூன்றுவது, நுகர்வுக் கோட்டைப் போன்றதே சேமிப்புக் கோடும்**




படம் 2. வருமானத்திலிருந்து நுகர்வைக் கழிக்க சேமிப்பு வரும். 45° துணைக்கோட்டிலிருந்து நுகர்வுக்கோட்டைக் குத்துநிலையாய்க் கழிக்க இதுவரும். சமபிரிவுப் புள்ளி **B**, 4,000 டொலர் மட்டத்திலே படம் 1 இல் உள்ளதுபோல உண்டு. என் ? இ. சே. நா. வை கோட்டின் வளைவில் எந்தப் புள்ளியிலும் அளக்கலாம். இ. சே. நா. + இ. நு. நா. = 1. எங்குமா ? (அப்படியிருந்தால் நல்லதே !)

**இறுதிநிலை நுகர்வு நாட்டம்.**—மேலதிகமாக ஒரு டொலர் வருமானங் கிடைத்தால் நுகர்வுக்காகச் செலவுசெய்ய அதில் எவ்வளவை மக்கள் விரும்புவார் என்ற விடயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அடுத்த அத்தியாயத்திலே கூறுவாம். பொருளியலறிஞர் இந்தக் கருத்திலே அதிக அக்கறை காட்டி "இறுதி நிலை நுகர்வு நாட்டம்" என அதற்கு விசேடமான தொரு பெயரையுங் கொடுத்துள்ளனர். (இறுதிநிலை என்ற சொல்லைப் பொருளியலறிஞர் "மேலதிக" என்ற பொருளிலே பயன்படுத்துவர். எனவே இறுதிநிலைச் செலவு என்றுல் மேலதிகமான ஓர் அலகு உற்பத்திப் பொருளை ஆக்குவதற்கான மேலதிகச் செலவாகும். இறுதிநிலைப் பயன் என்றுல் மேலதிகப் பயன் ; இறுதிநிலைவருமானம் என்றுல் மேலதிக வருமானம் என்றிவ்வாறு பொருள் கொள்ளலாம்).

அட்டவணை 2 இலே காணும் 3ஆம் கோட்டில் மேலதிக நுகர்வு நாட்டத்தைக் கணக்கிடும்முறை காட்டப்பட்டுள்ளது. **B** இற்கும் **C** இற்குமிடையிலே 100 டொலரில் வருமானம் அதிகரிக்கிறது. அதாவது 4000 டொலரிலிருந்து

படிப்பகம்

www.padippakam.com



5000 டொலருக்கு வருமானம் அதிகரிக்கிறது. நுகர்வு எவ்வளவு அதிகரிக்கிறது ? 4000 டொலரிலிருந்து 4850 டொலராக உயர்கிறது. அதாவது 850 டொலர் அதிகரிக்கிறது. எனவே மேலதிக நுகர்வு, வருமானத்தில் 85 வீதமாகும். மேலதிகமான ஒவ்வொரு டொலர் வருமானத்திலும் 85 சதம் நுகர்வுக்குச் செலவாகிறது. 15 சதம் சேமிக்கப்படுகிறது. எனவே மேலதிக நுகர்வு நாட்டம் B—C இற்கு இடையில் 85 ஆகும். இது 2 ஆம் அட்டவணையில் உள்ள 3 ஆம் கோட்டுடன் பொருந்துகிறது.


மற்றைய வருமானமட்டங்களிடையேயுள்ள இறுதிநிலை நுகர்வு நாட்டத்தையும் இவ்வாறே இலேசாகக் கணக்கிட்டுவிடலாம். அட்டவணை 2 இல் வறியவருடைய நுகர்வு நாட்ட இறுதிநிலை 89 இல் துவங்குகிறது. கடைசியாக உயர்வருமானமட்டத்திலே அது ·49 ஆகக் குறைகிறது.

எண்ணளவாக இறுதிநிலை நுகர்வு நாட்டத்தைக் கணிக்க நாம் அறிந்து கொண்டோம். இதனுடைய கேத்திரகணிதத் தாற்பரியமென்ன ? நுகர்வுக் கோட்டுச் சாய்வு விகிதத்தின் சரிவு எண்ணளவாக அளக்கப்பட்டுள்ளது என்பதே[1]. படம் 1ஐ மறுபடியும் பாருங்கள். B, C என்ற புள்ளிகளுக்குக்கீழே ஒரு முக்கோணமுண்டு. B இலிருந்து வலப்பக்கமாக அந்தக் கோட்டில்நிற்க 1000 டொலர் நகர்ந்தால் 850 டொலர் வரை உயரச் செல்லவேண்டும். இது எண்ணளவான 850 டொலர் 1000 டொலர் சாய்வைக் கொடுக்கும். அதாவது 85 வீதச் சாய்வு என்க. **குறிப்பு:** உயர்வருமானமுள்ள சந்தர்ப்பங்களிலே, இறுதிநிலை நுகர்வு நாட்டம் தாழ்வாயிருந்தால், குடும்பநுகர்வுக்கோடு மேலேயிருந்து பார்க்குமிடத்துச் சற்றே குவிவானதாயிருக்கும்.

**இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்.**—இறுதிநிலை நுகர்வு நாட்டத்தோடு இரட்டையாகச் செல்வது இறுதிநிலைச் சேமிப்புநாட்டம் (இ.சே.நா.). ஒவ்வோர் உபரி டொலர் வருமானத்திலும் நுகர்வுக்குப் போனதைவிட சேமிப்புக்குச் செல்லும் பகுதி இஃதாகும். இ.நு.நா. வும் இ.சே.நா. வும் ஏன் இரட்டைகளாகக் காட்சியளிக்கின்றன.

ஒவ்வொரு மேலதிக டொலர் வருமானமும் உபரி நுகர்வாகவோ, உபரிசேமிப்பாகவோ இருக்கவேண்டியதால், இ. நு. நா. ·85 ஆனால்

[1] XY என்ற கோட்டின் எண்ணளவான சரிவு என்னும்போது ZY என்ற நீளத்துக்கும் XZ என்ற நீளத்துக்குமுள்ள எண்ணளவான விகிதத்தையே கருதுகிறேம்.



www.padippakam.com



இ. சே. நா .15 ஆகும். (இ. நு. நா. ·6 ஆனுல் இ. சே. நா. என்ன வாகும்? ·99 ஆனுல் அஃது என்னவாகும்? அட்டவணை 2 இன் (3) (5) ஆம் கோடுகளை ஒப்புநோக்கிஞல் எந்த வருமானமட்டத்திலும் இ. நு. நா.வும் இ.சே. நா.வும் சேர்ந்து 1 ஆகும்; அதற்குக் கூடவோ குறையவோ ஆகாது என்ற பொதுக்கருத்துச் சரியென்பது உறுதியாகிறது.[1]

**வரைவிலக்கணங்களை மறுபடி ஆராய்தல்.**

இதுவரைகண்ட பிரதான வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுவோம்.

1. நுகர்வு நாட்ட அட்டவணை அல்லது நுகர்வுக்கோடு நுகர்வுமட்டத்தை வருமானமட்டத்தோடு தொடர்புபடுத்தி அட்டவணையிலோ கோட்டிலோ காட்டுகிறது.

2. சேமிப்பு நாட்ட அட்டவணை அல்லது சேமிப்புக்கோடு வருமானத்தோடு சேமிப்புக்குரிய தொடர்பைக் காட்டுகிறது. சேமிக்கப்படுவது நுகரப்படாததே.

சேமிப்பும் நுகர்வும் இரட்டைகள். அதாவது சேமிப்பு + நுகர்வு = பைசல்செய்யக்கூடியவருமானம்.

3. "சமநிலைப்புள்ளி" என்பது சேமிப்பு பூச்சியமாயுள்ள வருமான மட்டம். அதற்குக் கீழே எதிர்க்கணியமான சேமிப்பு உண்டு. அதற்கு மேலே நேர்க்கணியமான சேமிப்புண்டு. வரைகோட்டுப்படி சமநிலையானது 45° கோடு நுகர்கோட்டை வெட்டும் இடத்திலுண்டு. அல்லது சேமிப்புக்கோடு கிடைநிலையான அச்சை வெட்டுமிடத்திலுண்டு. இது வியாபாரக் கம்பெனியின் சமநிலைப்புள்ளி (25 அத்தியாயம்) யோடு மயங்கிக் கொள்ளக்கூடியது.

4. இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்பது (இ.நு.நா.) உபரி டொலர் உண்டாக்கும் உபரி நுகர்வுத் தொகையாகும். இது வரைகோட்டிலே நுகர்வுக் கோட்டின் சரிவாகக் காட்டப்பட்டுள்ளது. உயர்சாய்வான சரிவு, உயர்ந்த இ. நு. நா. வையும், மட்டமான சரிவு குறைந்த இ. நு. நா. வையும் காட்டும்.

5. இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (இ.சே.நா.) உபரி டொலரினுல் உண்டாக்கப்பட்ட உபரிசேமிப்பாகும். இதுவே சேமிப்புக்கோட்டின் சரிவாகும். நுகரப்படாத ஒவ்வொரு டொலரின் பாகமும் சேமிக்கப்படுவதால் இறுதி நிலை சேமிப்பு நாட்டம் = 1 - இ. நு. நா. ஆகும். இது ஒருபோதும் மாறமாட்டாது. எனவே இ. நு. நா. வைக் குறைக்கும் குடும்பவருமான

[1] சேமிப்பு நாட்டக்கோட்டுச் சரிவின் எண்ணளவான உயர்சாய்வை படம் 2 இல் பார்த்து உறுதிப்படுத்தலாம். அது இ. சே. நாட்டத்தின் கேத்திரகணித முறையான கூற்றுகும். நுகர்வுக் கோட்டுக்கு எதிர்மாறான வளைவே சேமிப்புக்கோட்டுக்கு உண்டாகும். இறுதிநிலை நுகர்வு நாட்டம் விழுந்தால் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் உயரும். ஒவ்வோர் உபரி டொலரும் ஒன்றில் நுகர்வாகவோ உபரிச் சேமிப்பாகவோ இருக்கும். அதனுல் நுகர்வுக் கோடோ, சேமிப்புக்கோடோ எங்காவது 45° உயர்சாய்வுடைய சரிவாயிராது. இது வரைவிலக் கணப்படி 1 சரிவுடையதாகும். இங்கே நாம் இறுதிநிலை நாட்டத்தையே ஆராய்கிறேம். எனவே A என்ற புள்ளியில் குடும்பம் வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்கிறது. இவ்வுண்மை, A புள்ளியில் உபரிடொலரின் இறுதி நிலை நுகர்வு நாட்டம் 1 இற்குக் குறையுமென்பதை மாற்றுது.

www.padippakam.com



ஏற்றம் இ. சே. நா. வை உயர்த்தும். இதனல் நுகர்வுக்கோடு மேலிருந்து குவிவானதாகவும் சேமிப்புக்கோடு குழிவுள்ளதாகவுமிருக்கும்.

**சமூகத்தின் சர்வநுகர்வுக் கோடு.**

இதுவரை பலவகை வருமானமுள்ள குடும்பங்கள் வெளிப்படுத்தும் நுகர்வுப் படங்கள் பற்றி ஆராய்ந்தோம். ஒரு தேசத்தின் வருமானத்தை எது தீர்மானிக்கிறதென்பதை ஆராய்வதாஞல் குடும்பச்செலவு அட்டவணையினின்று சிறிது வித்தியாசமான நுகர்வு நாட்ட அட்டவணையில் நாம் அக்கறை கொள்ளவேண்டும். தேசிய நுகர்வு நாட்ட அட்டவணையொன்றில் நாம் அக்கறை கொள்ளவேண்டும்; அது மொத்த நுகர்வை மொத்த பைசல் செய்யும் வருமானத்தோடு தொடர்புசெய்யும் அட்டவணையாய் இருக்க வேண்டும்.[1]

**4 ஆவது, தேசிய நுகர்வு தேசிய வருமானத்தையனுசரித்துச் செல்லுமென்பது**




படம் 3. யுத்தகாலத்திலே பொருள் அருந்தலும், பொருள் கட்டுப்பாடும் நிலவியதால் சேமிப்பு எத்துணை அதிகமாயிற்று என்பதைக் கருத்திற் கொள்ளலாம். (மூலம்: ஐ. அ. வர்த்தகத்திணைக்களம்).

ஐக்கிய அமெரிக்காவில் செலவழிக்கக்கூடிய வருமானம் உயரும்போது எல்லா நுகர்வுச் செலவுகளும் எவ்வாறு மாறுகின்றன என்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

1. பைசல் செய்யும் வருமானமாவது வரிகளைக் கொடுத்தபின் மிஞ்சும் மக்கள் வருமானமாகும்.

படிப்பகம்


www.padippakam.com



மொத்த நுகர்வை நிச்சயிப்பது மொத்த வருமானம் மாத்திரமன்று. ஆனால் அது மிக முக்கியமானதொரு காரணமென்பதைப் பொது அறிவும், புள்ளிவிபரங்களுமெடுத்துக் காட்டுகின்றன. நுகர்வு பைசல்செய்யக்கூடிய ஆண்டு வருமானத்தை எவ்வாறு அனுசரித்துச் செல்லுகின்றது என்பதை படம் 3 இல் பார்க்கலாம். யுத்தகாலந்தான் விதிவிலக்கான காலமாகும். அக் காலத்திலே பொருள்கள் கிடைப்பது அருமை. அத்துடன் அவை கட்டுப் படுத்தவும்படுகின்றன.

**5 ஆவது, தேசிய நுகர்வுக்கோடு—புள்ளி விவரமுறையில்**

**தேசிய நுகர்ச்சி அட்டவணை, 1929–1960**




படம் 4. நுநு (CC) கோடு சமாதான காலப் புள்ளி விவரக் கோட்டை ஒத்திருக்கிறது. இதன் இ. நு. நா. சரிவு, 92 என்பதைப் பரீட்சித்துப் பார்க்கமுடியுமா ?

அதனால் சேமிப்பு நாட்டம் அதிகம். 1929–1960 ஆம் ஆண்டுகட்குரிய நுகர்வு, பைசல்செய்யக்கூடிய வருமானம் என்பவற்றின் தொடர்பை "சிதறு வரிப்படம்" மூலம் படம் 4 காட்டுகிறது. ஒவ்வொரு வருடத்துக்குமுரிய அளவை ஒவ்வொரு புள்ளியுங் காட்டுகிறது. புள்ளிகள் சிதறிக்கிடக்கும் தன்மை குறிப்பிட்ட ஒரு வளைவைக் காட்டவில்லை. அதனால் நேர்க்கோடாக நுகர்வுக் கோடு கீறப்பட்டது. பொருத்தப்பட்ட நுகர்வுக்கோட்டிலே திருத்தமாகத் தகவல் புள்ளிகள் விழாமல், அதனையடுத்தே அமைகின்றன. பௌதிக சாத்திரத்தைப்போல பொருளாதார சாத்திரம் திருத்தமான சாத்திரமல்ல வென்பதை இது காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



**நிபந்தனைகள் :** வருமானம் நிச்சயிப்பது சம்பந்தமான கொள்கையை ஆராய்வதற்கு இப்போது வசதிகளேற்பட்டுவிட்டன. அடுத்த அத்தியாயத்திலே பயன்படுத்தக்கூடியவையும் நுகர்வு, சேமிப்பு என்பன சம்பந்தமானவையுமான கருத்துக்களைக் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம்.

தேசீய நுகர்வு அட்டவணையானது, நாட்டிலுள்ள குடும்ப நுகர்வு அட்டவணைகளின் கூட்டுத் தொகையாக இருக்கவேண்டும். குடும்ப நுகர்வு அட்டவணை பூரணமாக நம்பத்தகுந்ததாயிருந்தாலும், தேசீய நுகர்வுக் கோட்டிலே மொத்த நுகர்வுபற்றிய புதிய புள்ளியைப் பெறுமுன் அதிக வருமானம் பங்கிடப்பட்டுள்ள நிலையைப்பற்றிச் சிறிது அறிந்துகொள்ள வேண்டும். மேலதிகவருமானம் உபரிவருமானப் பங்கீட்டோடு சம்பந்தமுடையதாயிருந்தால், நுநு (CC) என்ற தேசீய நுகர்வுக் கோட்டில் நாம் நகர்ந்து கொண்டிருப்போம். இக்கோடு மாறமாட்டாது.

குடும்ப நுகர்வுத்திட்டத்தையும் தேசீய நுகர்வுத்திட்டத்தையும் தொடர்புபடுத்துவதானல் வருமானப் பங்கீட்டைவிட மற்றொரு விடயத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக, எனது வருடவருமானம் 5,000 டொலரிலிருந்து 40,000 டொலர் ஆகிறதெனக் கொள்வோம். 40,000 டொலர் வருமானமுள்ளவர்கள் செலவுசெய்து சேமிப்பது போலவே எனது வரவுசெலவும் அமையுமா ? அஃது அவசியமில்லை. ஆரம்பத்திலே நான் புதுப் பணக்காரன்போலப்[1] பலவகையான நடவடிக்கையில் ஈடுபடுவேன். குடும்ப நுகர்வுக்கோட்டைக் கொண்டு தேசீய நுகர்வு அட்டவணையை நிச்சயிப்பது கடினமென்பதற்கு மூன்ருவது காரணம் "ஊரோடு ஒத்தோடுதல்" என்ற விடயமாகும். 50 வருடத்துக்கு முன்னர் உங்களுக்கு 2,000 டொலர் வாங்கும் சக்தியிருக்குமானல் அஃது உங்களைச் சமநிலைக்கு மேலே வைத்திருக்கும். சீவியம் சுகமாக நடைபெறும். ஆனல் இன்று பெரும்பாலோர்க்கு அந்த மட்டத்துக்கு மேலே வருமானமுண்டு. மனிதன் சமூகமாக வாழும் ஒரு மிருகமானபடியால் மற்றவர்களுடைய நுகர்வைப் பார்த்தே ஒருவர் தமது வாழ்வைத் திட்டப்படுத்திக் கொள்ளுகிருர். ஆனபடியால் இன்று 2,000 டொலர் வருமானத்தைக் கொண்டு ஒருவர் வாழ்க்கை நடத்துவதற்கு மிகவும் இன்னற்படுவார். ஒருவருடைய நுகர்வு, மற்றவர்களுடைய வருமானங்களிலும் நுகர்விலும் தங்கியிருப்பதால், தேசீய நுகர்வு அட்டவணை குடும்ப நுகர்வு அட்டவணைகளின் கூட்டுத் தொகையென்று கூறமுடியாது. ஒவ்வொரு தசவருடத்திலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் நுகர்வு அட்டவணையும் மாறும். எனவே படம் 4 இல் கோட்டை 1900 வருடத்துக்கோ 1999 வருடத்துக்கோ தள்ளிவிடுவது மடைமையாகும். இது சரித்திரத்தைப்பற்றிய சுருக்கமான வருணனையாகுமேயன்றி, நுகர்வு நடவடிக்கைபற்றி வங்கிப் பொருளியல

1. ஜேம்ஸ் எஸ். டூசென்பெரி, மில்டன் பிரீட்மன், பிராங்கோ மோடிக்லியானி போன்ற பேராசிரியர்கள் செய்த ஆராய்ச்சிப்படி, வருமானத்திலே ஒரு விகிதம் உயருமானல், நீண்டகால நுகர்வுச் செலவில் அதிகரிப்புண்டாகுமெனச் சொல்லலாம்.

படிப்பகம்

www.padippakam.com



றிஞர் ஒருவர் அடுத்த வருடத்து நுகர்வைக் கணக்கிடப் பயன்படுத்தும் சிறந்த ஊகமாக இருக்க முடியாது.

வேறு பல முக்கியமான நிபந்தனைகள் வாசகர் மனத்திலே தோன்றலாம். விலைமாறுந்தோறும், குடிசனத்தொகை அதிகரிக்குந்தோறும் தேசிய நுகர்வு அட்டவணை மாறும். இந்த மாற்றத்துக்கு ஈடாக ஆள்வீத நுகர்ச்சி, வருமானம் என்பவற்றைக் கடந்த அத்தியாயத்திலே ஆராய்ந்த பணவாட்ட விலைக்குறியீடு மூலம் புள்ளி விபரநிபுணர் நிசமான வகையில் விளக்கலாம். நுகர்வு நாட்டக்கோடு மாறுவதற்கு வேறு பல காரணங்களையும் காட்டலாம். உதாரணமாக இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் பல பொருளியலறிஞர் பிழையானதொரு தீர்க்கதரிசனத்தைக் கூறினர். யுத்தத்துக்குப் பின்னர் மக்களிடத்திலே அரசாங்கக் கடன்பத்திரம், வங்கி வைப்பு என்பனபோன்ற பலவகையான திரவச் சொத்திருந்ததென்பதை அவர்கள் கருத்திலே கொள்ளவில்லை. இக்காரணத்தினாலும், இதுபோன்ற காரணங்களினாலும், நுகர்வு அட்டவணை, பலர் முன்னரே அறிந்து கூறியதினும் உயர்ந்த மட்டத்திலிருந்தது.

சமூக சாத்திரங்கள் விடயத்தில் நறுவிசாக ஒன்றையுங் கூறிவிடமுடியாது. நுகர்வு நாட்டக்கோடு, விநியோகத் தேவைககோடு, என்பனபோன்ற சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இவை தவறின்றியிருக்கமாட்டா ; காலப் போக்கில் இவை மாற்றமடையக்கூடியனவாகும்.

**சுருக்கம் :**

1. சேமிப்பிலேயும், முதலீட்டிலேயும் ஈடுபடும் மக்கள் பல நோக்கங்கொண்டு செயல் புரிகின்றனர். ஆகையால், அரசாங்கம் சரியானபணக் கொள்கையையும், பிஸ்கால்கொள்கையையும் வகுத்துப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், உறுதிப்படுவதற்காக அது தனது அந்தரங்க நடைமுறைகளை இயற்கையாகவே பலப்படுத்தவும் உதவாவிட்டால், இக்காலத்துக் கலப்புப் பொருளாதாரம் பணவீக்கத்தையோ வியாபார மந்தத்தையோ உண்டாக்கக்கூடும்.

2. நுகர்வு, சேமிப்பு என்பவற்றை நிச்சயிக்கும் சாதனம் வருமானமாகும். நுகர்வு நாட்டம் என்பது நுகர்வையும் வருமானத்தையும் தொடர்புபடுத்தும் அட்டவணையாகும். ஒரு டொலர் வருமானம் ஒன்றில் நுகர்வாகவோ சேமிப்பாகவோ இருக்கும். ஆனபடியால் சேமிப்பு நாட்டக்கோடு, நுகர்வு நாட்டப்படத்தின் மறுபக்கமாகும்.

3. குடும்பநுகர்வு நாட்டம், குடும்பச் சேமிப்பு நாட்டம், தேசிய நுகர்வு நாட்டம், தேசியச் சேமிப்பு நாட்டம் என்பவற்றின் தன்மைகள் 250 ஆம் பக்கத்திலே காட்டப்பட்ட வரைவிலக்கணங்கள் பற்றிய சுருக்கமான ஆராய்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளன. அடுத்த அத்தியாயத்திலுள்ள வருமான நிர்ணயம் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வதற்குமுன் இவற்றை நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



4. (அ) பைசல் செய்யக்கூடிய வருமான மட்டம் ஒவ்வொன்றினதும் வருமானப் பங்கீட்டை அறிந்துகொண்டால்,

(ஆ) குறுகிய காலத்திலும் நீண்டகாலத்திலும் ஒரே வகையான நுகர்வு மாதிரியையும், வருமானமாதிரியையும் குடும்பத்தினர் பின்பற்றுவார்களானல்,

(இ) ஒருவனுடைய நுகர்வு மட்டம் அவனுடைய அயலவரின் வருமான மட்டத்தாலே பாதிக்கப்படுகிறதென்பதைக் கருத்திலே கொள்ளாதுவிட்டால்,

(ஈ) விலைமட்டங்கள், குடிசனத்தொகை, கூட்டுச் சேமிப்பு, வரி என்பன வற்றைக் கருத்திலே கொள்ளாதுவிட்டால், குடும்ப நுகர்வு அட்டவணைகளை ஒன்று கூட்டுவதனல், தேசிய நுகர்வு நாட்ட அட்டவணையைத் தயார் செய்துவிடலாம்.

மொத்த நுகர்வுச் செலவு பைசலாகக்கூடிய மொத்த வருமானத்திலுண்டாகும் மாற்றங்களையனுசரித்து மாறுகிறதென்பது புள்ளி விபரங்களால் அறியக்கூடியதாயிருக்கிறது. அடுத்த அத்தியாயத்திலே காணும் வருமானம் நிச்சயிக்கும் ஆராய்ச்சியில் நுகர்வு நாட்டக் கருத்தைப் பயன்படுத்தும் போது இக்கருதுகோளில் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது.

**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள்.**

1. மக்கள் சேமிப்பதற்கான காரணங்களிற் சிலவற்றைக் கூறுக. மக்கள் தமது சொத்துக்களை என்ன வடிவில் வைத்திருக்கிருர்கள்? சிலவற்றைக் குறிப்பிடுக.

2. அட்டவணை 1 இல் இறுதிநிலை நுகர்வு நாட்டம், இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் என்பன எவ்வாறு கணிக்கப்பட்டன? **A, B,** என்பவற்றுக்கிடையிலுள்ளதை உதாரணத்தால் விளக்குக. “மேலதிகமான” என்றதற்கு “இறுதிநிலை” என்ற சொல் பொருந்துமா? இ. நு. நா.+இ.செ. நா.=1 என்பது என் எப்பொழுதும் பொருந்தும் என்பதை விளக்குக.

3. நான் எனது வருமானம் முழுவதையும் நுகர்வில் செலவிடுகிறேன். என்னுடைய நுகர்வுக்கோட்டையும், சேமிப்புக்கோட்டையுங் கீறுக.

4. சமநிலைத்தானம் நியூயோர்க்கிலும், மிசிசிப்பியிலும் ஒன்றுகவேயிருக்க முடியுமா? உமது சமூகத்தில் சமநிலைத்தானம் எது? எதிர்க்கணியமான தேறிய சேமிப்பு எவ்வாறு ஒருவனுக்குக் கிடைக்கக்கூடுமென்பதற்குச் சில சந்தர்ப்பங்களைக் காட்டுக.

5. “நுகர்வுக் கோட்டையனுசரித்து நுகர்விலும்பார்க்க வருமானம் மாறுதலடைகிறது.” என்? இது சேமிப்புவிடயத்தில் நுகர்விலும் பார்க்க உண்மையானதென்பதைக் காட்டுக.

6. தேசிய நுகர்வு நாட்ட அட்டவணையைப் பெறுவதற்கு குடும்பங்களின் நுகர்வு நாட்ட அட்டவணைகளைக் கூட்டிக் கணக்கெடுப்பதாலுல் என்ன நிபந்தனைகளைக் கருத்திலேகொள்ளவேண்டும். வருமானத்திலேயுள்ள

www.padippakam.com



அசமநிலையின் தன்மையை அதிகரித்தால், 40,000 கோடி டொலர் பைசலாகக் கூடியவருமானத்தில் நுகர்வுக்குச் செலவான தொகைக்கு என்ன நடக்கும்? சேமித்த தொகைக்கு என்ன நடக்கும்? 40,000 கோடி டொலரில் வரி உயர்ந்தால் என்ன நடக்கும்? மக்களிடம் அதிக அரசாங்கக் கடன் பத்திரமும் வங்கிவைப்பும் இருக்குமாஞல் 4,000 கோடியிலுள்ள சேமிப்பை அஃது எவ்வாறு பாதிக்கும்?

7. பின்வரும் கருத்துக்களை மறுபடி நினைவுசெய்க.
தேறிய முதலீடு, மாற்று முதலீடு.
சேமிப்பு நோக்கமும் சலனமான முதலீடு செய்யும் முடிவும்.
நுகர்வு, சேமிப்பு அட்டவணைகள்.
நுகர்வு நாட்டம்.
சேமிப்பு நாட்டம்.
இறுதிநிலை நுகர்வு நாட்டம்.
இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்.
சமநிலைப்புள்ளியும் 45° கோடும்.
வரிகொடுத்தபின்னுள்ள வருமானம்;
அல்லது பைசல்செய்யக்கூடிய வருமானம்.
தேசிய நுகர்வு அட்டவணை.
குடும்ப நுகர்வு அட்டவணை.
ஆளுக்குரிய நிச அட்டவணைகள்.

படிப்பகம்

www.padippakam.com

# பதின்மூன்றும் அத்தியாயம்

## வருமான நிருணயக் கொள்கை

*நுகர்வு நாட்டத்தையும், புதிய முதலீட்டு வீதத்தையும் கொடுத்தால், சமநிலையோடு ஒத்துப்போகக்கூடிய தொழில் வாய்ப்பு மட்டம் ஒன்றேயொன்ருகத்தானிருக்கும்.*

—ஜே. எம். கீன்ஸ் (1936)

வருமானம், தொழில்வாய்ப்பு என்பவற்றில் ஏற்ற இறக்கம் உண்டாவதற்குரிய முக்கிய காரணம் முதலீடு என்பதைப் பொருளியலறிஞர் எல்லாரும் ஒத்துக் கொள்ளுகின்றனர். விலைவாசிகள் உயர்வதோ, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடுவதோ எல்லாம் முதலீட்டுமட்டத்தையே பொறுத்ததாகும். இதை நாம் மேலே காண்போம்.

வருமானம் நிர்ணயித்தல் என்ற பிரச்சினையின் முக்கியத்துவத்தை நாம் அதிகம் அழுத்தமாகக் கூறவேண்டியதில்லை. கடந்த சில தசாப்தங்களாக மிக அதிகமான பொதுப்பணத்தேவையினுலும், பொருள் குறைபாடுகளாலும், விலையேற்றத்தினுலும் தேசங்கள் மிகவும் இன்னலுற்றன. யுத்தத்துக்கு முன்னர் ஏற்பட்ட பெரிய வியாபார மந்தத்தின்போது வேலையில்லாத்திண்டாட்டம் மிகப் பெரிய அளவிலே நிலவிற்று. அதை நிவிர்த்திசெய்ய அரசாங்கம் பெருந்தொகைப்பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்தது. அந்த வியாபாரமந்தத்தின் செலவு பதினுயிரம் கோடானுகோடி டொலரில் அரைவாசிக்குச் சற்று அதிகமாயிருந்ததென்பதை படம் 1 காட்டுகிறது. இந்தச் செலவு தொழிலாளரையும் எந்திரங்களையும் பயன்படுத்தாமையால் பொருளுற்பத்தியில் உண்டான நட்டமாகும். அந்த வியாபாரமந்தத்தினுல் உண்டான பொருளாதாரச் செலவு இரண்டாவது மகாயுத்தத்திலே செலவு செய்த சகல பொருளாதார வளங்களுக்கும் சமமானதெனக் கூறினுல் மிகையாகாது.

**(அ) வருமானத்தின் சமநிலை மட்டத்தை நிர்ணயித்தல்.**—சென்ற அத்தியாயத்திலே, சமூகத்துக்குரிய நுகர்வு நாட்டப்படத்தையும் சேமிப்பு நாட்டப் படத்தையும் இலகுவாக்கிக் காட்டினேம். பல குடும்பங்களிடையே நிலவும் சிக்கனம், வருமானப் பங்கீடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவை வரையப்பட்டன. இதை ஆரம்பத்திலே மேலும் இலகுவாக்கி, வரியில்லையெனவும், பகுக்கப்படாத கம்பெனி பங்குஇலாபங்களில்லையெனவும், மாற்றுச் செலவு இல்லையெனவும், சிக்கலைத் தரக்கூடிய எவ்வகை அரசாங்கச் செலவுமில்லையெனவும் வைத்துக்கொள்ளுவோம். எனவே தேறிய தேசீய உற்பத்தி, பைசல் செய்யக்கூடிய வருமானம் என்பவற்றைப் பற்றித் தற்போது பகுத்தறிந்துகொள்ள வேண்டிய அவசிய




படிப்பகம்

www.padippakam.com



மில்லை. "வருமானம்" என்னும்போது இரண்டுவகை வருமானத்தையும் குறிப்பிடலாம். விலைமட்டத்திலுள்ள மாற்றங்களையும் இப்போது நாம் கணக்கில் எடுக்காது விட்டுவிடுவோம்.

**பெரிய வியாபார மந்தத்தில் உண்டான செலவு யுத்தகாலச் செலவுக்குச் சமனுகிறது:**




படம் 1. வருணந்தீட்டிய பகுதி, 1930 இல் நாம் உற்பத்தி செய்ததற்கும், நமது பொருளாதாரம் உற்பத்தி செய்யக்கூடியதாயிருந்ததற்குமிடையிலுள்ள இடைவெளியைக் காட்டுகிறது. யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் இந்த அழிவு அரை திரிலியன் டொலருக்கு அதிகமாயிருந்தது.

படம் 2 இல் உள்ள நுகர்வுக் கோட்டின் ஒவ்வொரு புள்ளியும், சமூகம் பைசல் செய்யக்கூடிய அந்த வருமான மட்டத்திலே நுகர்வதற்கு எத்துணை விரும்பும் என்பதைக் காட்டுகிறது. அந்த வருமான மட்டத்திலே அஃது எவ்வளவைச் சேமிக்கும் என்பதை சேமிப்புக் கோட்டின் ஒவ்வொரு புள்ளியும் எடுத்துக் காட்டும். இந்த இரண்டு கோடுகளும் சம்பந்தமுடையன என்பதை ஞாபகத்திலிருத்துக. நு + சே (C+S) = வருமானம். எனவே நுநு (CC) கோடும் சேசே (SS) கோடும் இரட்டைகள்; இரண்டுஞ் சேர்ந்து 45° கோட்டை அடையும்.

**சேமிப்புக் கோடும் முதலீட்டுக் கோடும் சந்திக்குமிடத்தில் எவ்வாறு வருமானம் நிர்ணயிக்கப்படுகிறது?**

சேமிப்பும், முதலீடும் வித்தியாசமான பல காரணங்களிலே தங்கியுள்ளன என்பதைக் கண்டோம். சேமிப்பு ஒருவகையில் தன் "செயலற்ற" நிலையில் வருமானத்தில் தங்கியுள்ளது. மாறுமியல்புள்ள முதலீடு, வளர்ச்சிக்குரிய "தன்னியல்பான" சாதனங்களில் பெரும்பாலும் தங்கியுள்ளது.

www.padippakam.com




தேறிய முதலீடு தே. தே. உள்மட்டத்தை அனுசரிக்காமல் ஒருவருடத்துக்கு 2,000 கோடி டொலராயிருக்கும் என முதலில் வைத்துக்கொள்வோம். இதன் தாற்பரியமென்ன ? தே. தே. உ. வுக்கு எதிராக முதலீட்டுக் கோடொன்றைக் கீறினுல், அது கிடையான கோடாயிருக்கும். அஃது எப்பொழுதும் கிடையான அச்சுக்குமேலே ஒரே தூரமுடையதாகவேயிருக்கும். படம் 3 ஐப் பார்க்க. முதலீட்டுக் கோடு 11 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது, சேசே (SS) சேமிப்புக்கோட்டிலிருந்து பிரித்துக்காட்ட அவ்வாறு காட்டப்பட்டுள்ளது.

சேமிப்புக் கோடும், முதலீட்டுக்கோடும் ச (E) இல் வெட்டுகின்றன. இது OM இற்குச் சமமான தே. தே. உ. (NNP) மட்டத்துக்கும் சமமாகும்.

தேசிய வருமானம் நாடும் சமநிலே, சேமிப்பு முதலீடு ஆகிய கோடுகள் சந்திக்கும் இடமேயாகும். நாம் கற்பித்துக் கொண்ட நிலேமைகளில் வேறு எந்த வருமான மட்டமும் நிலேபெற்றிருக்கமாட்டாது. இந்த முக்கியமான தத்துவத்தை இனி விளக்குவாம்.

## சமூகத்தின் தேசிய வருமானம் அதன் நுகர்வையும் சேமிப்பையும் நிர்ணயிக்கின்றது




படம் 2. நு. நு. (CC) என்பது நுகர்வு நாட்டம். சே. சே. (SS) சமூகத்தின் சேமிப்பு நாட்டக்கோடு. இவை ஒன்ருேடொன்று சம்பந்தமுடையவை. சமபிரிவுப்புள்ளியான B மேற்படத்திலே நு. நு. (CC) 45° கோட்டை வெட்டுமிடத்திலுண்டு. கீழ்ப்படத்திலே சே. சே. (SS) கிடையான அச்சை வெட்டுமிடத்திலுண்டு. நிலேக்குத்தாய்க் கீறப்பட்ட அம்புகள் என் சமம் என்பதை விளக்க முடியுமா ? F என்ற இடையிட்ட கோடு பூரண வேலேவாய்ப்பாகும். தே. தே. உ. (NNP) இனைக் காட்டும். அந்த மட்டத்திலே என்ன நுகர்வும், சேமிப்புமுண்டென்பதைக் குறிப்பிடுக. இரண்டு கோடுகளேயும் பிரித்தறிவதன் பொருட்டு வளேவு சற்றே அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

www.padippakam.com



சமநிலைவருமானம், முதலீடும், சேமிப்பும் வெட்டும் ச (E) என்ற புள்ளியில் என் இருக்கவேண்டும் என்பதை ஆராய்வோம். அதற்கு மூன்று உதாரணங்களைப் பார்ப்போம். முதலாம் உதாரணத்திலே சமநிலை வருமானம் ச (E) இலேயே இருக்கிறது. இங்கே முதலீட்டுக்கோடு மு.மு(II) அதாவது வியாபாரக் கம்பெனிகளில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டுக் கோடு சே.சே (SS) இனை, அதாவது, குடும்பங்கள் சேமிக்க விரும்பும் கோட்டை வெட்டுகிறது. இதனால், எல்லாரும் தாம் வழக்கப்படி செய்துவந்ததையே செய்ய விரும்புவர். உற்பத்திப் பொருள்கள் கம்பெனியில் வந்து குவிய மாட்டா. கையிருப்புச் சரக்குகளும் உற்பத்தியைப் பெருக்கக்கூடியமுறையில் மடமடவென்று விற்பனையாக மாட்டா. எனவே உற்பத்தி, வேலைவாய்ப்பு வருமானச் செலவு என்பன ஒரேநிலையில் நிற்கும். தே.தே.உ (NNP) இந்தச் சந்தர்ப்பத்தில் ச (E) என்ற தானத்திலேயே நிற்கும். இதை உண்மையில் சமநிலையென்று கூறலாம்.

இரண்டாவது உதாரணம் சமநிலைவருமானம் முதலில் தே. தே. உ., ச (E) இலும் பார்க்க உயர்ந்த தானத்தில் ச (E) க்குக் கிழக்கே உயர்ந்த வருமான மட்டத்தில் காணப்படும். இங்கே சே.சே.(SS)கோடு, மு.மு. (II)கோட்டுக்கு உயர் வாயிருக்கும். இந்த நிலை மாறுதிருக்க முடியாதா ? இல்லை. ஏனெனில் அந்த வருமான மட்டத்திலே, குடும்பங்கள் சேமிக்கின்றன. நுகர்விலே செலவு செய்யாதுவிடுகின்றன. வியாபாரக் கம்பெனிகள் முதலீடு செய்வ தற்கு எவ்வளவு விரும்பவில்லையோ அவ்வளவுக்கு குடும்பங்கள் செலவு செய்வதைக் குறைக்கின்றன. அதனால் கம்பெனிகள் சரக்கை விற்பனை செய்யாது அடுக்கி வைத்திருக்க வேண்டியேற்படும் ; வாங்குவோர் தொகை குறையும். இவ்வாறு வேண்டாத சரக்கில் முதலீடுசெய்ய அவர்கள் விரும்பமாட்டார். இதை நிவர்த்தி செய்வதற்கு மார்க்கமென்ன ? உற் பத்தியைக் குறைக்கலாம். தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கலாம். இதனால் தேறிய தேசீய உற்பத்தி கீழே இறங்கும். அதாவது 3 ஆம் படத்திலுள்ளபடி மேற்கு நோக்கிச்செல்லும். இத்தகைய அசமநிலையுண் டானால் இத்திட்டம் எங்கு போய் நிற்கும் ? ச (E) தானத்தை மறுபடியும் அடைந்தாலேதான். அதுதான் சமநிலை சந்திக்கும் கோடு. இங்கே மாறுதலுக்குரிய நிலைமை மாறிவிடும்.

மூன்றாவது உதாரணத்தை வாசகர் நன்றாக அறிந்து கொள்ளவேண் டும். தே.தே.உ. சமநிலைக்குக் கீழேயிருந்தால் அதனை ச (E) தானத்துக்குக் கிழக்கே தள்ளுவதற்குப் பலமான சக்திகள் உண்டாக்கப்படும். (குறிப்பு : வியாபாரக் கம்பெனிகள் கருதிய முதலீட்டுக்குக் கீழே, குடும்பங்கள் கருதிய சேமிப்பு விழுமானால், உற்பத்தி செய்யப்படுவதற்கு அதிகமாக நுகர்வு ஏற்படும். இதன் அர்த்தமென்ன ? கம்பெனிகள் உற்பத்தியிலும்பார்க்க அதிகமாகப் பொருள்களை விற்பனை செய்யவேண்டியேற்படும். தாம் குறை வாக முதலீடு செய்கிறோம் என்பதை வியாபாரிகள் உணர்ந்துகொண்டால் அவர்கள் என்ன செய்வர் ? உற்பத்தியைப் பெருக்கவும் தொழிலாளரை

படிப்பகம்

www.padippakam.com




அதிகமாக அமர்த்தவும் விரும்புவர். இது, இத்திட்டம் ச(E) தானத்தையடைவதற்காக பின்னாலே கிழக்குத்திசையாய் நகரும் என்பதை நிதர்சனப் படுத்துகிறது.)

**தேசிய வருமானத்தின் சமநிலை நிர்ணயித்தலைப் பின்வரும் சமவழிகளிற் காட்டலாம்.**

**முதலாவது, சேமிப்பு, முதலீட்டுக் கோடுகள் இடைவெட்டும்போது:**

**சேமிப்பும் முதலீடும் வருமானத்தை நிச்சயிக்கும் விதம்**




படம் 3. ச. (E) என்ற புள்ளியிலே முதலீட்டுக் கோடும் சேமிப்புக்கோடும் வெட்டுகின்றன. சமநிலை அந்தத் தானத்தில் இருப்பதற்குக் காரணம் தே. தே. உ. (NNP) இன் வேறெந்த மட்டத்திலும் குடும்பங்கள் விரும்பும் சேமிப்பு, கம்பெனிகள் விரும்பும் முதலீட்டுக்குச் சமனாயிருக்க மாட்டாது.

இந்த மூன்று சந்தர்ப்பங்களும் ஒரே முடிவுக்கு ஒருவரை இட்டுச் செல்கின்றன.

சேமிப்பும், முதலீடும் சந்திக்கும் இடம் ச. (E) என்றே கூறலாம். அதுதான் தேசிய வருமானத்தின் சமநிலைப்புள்ளியாகும். வேறு புள்ளிகளிலானால், குடும்பங்கள் விரும்பும் சேமிப்புக்கள், கம்பெனிகள் விரும்பும் முதலீட்டுக் குச் சமனாக மாட்டா. இந்த முரண்பாட்டினால் சமநிலையடையும் வகையில் வியாபாரிகள் தமது உற்பத்தியையும், தொழிலாளரையும் மாற்றவேண்டிய அவசியமிருக்கும்.

மேலே தொடர்ந்து ஆராய்ச்சியை நடத்துமுன்னர் ஓர் எச்சரிக்கை அவசியம். ச (E) போன்ற சமநிலை மட்டம் மாறாது நிற்கக் கூடியது. ஒவ்வொரு சமநிலைப்புள்ளியிலும் ஏதாவது உயர்நிலை அவசியமுண்டெனவும் கூற முடியாது. படம். 3 இலே புள்ளியிட்ட கோட்டைப் பார்க்க. இது பூரண வேலைவாய்ப்பு வருமான நிலையைக் காட்டும். காட்டப்பட்ட ச (E) சம நிலையானது, F இன் பூரணவேலைவாய்ப்புக்கு என்ன தேறிய தேசிய உற்பத்தியுண்டோ அதற்குக் குறைவான தே. தே. உ. (NNP)மட்டத்திலேயே உண்டு என்பதைக் கவனிக்க.

பெரிய வியாபார மந்தமுண்டானால், முதலாளித்துவ முறையிலே, பெரிய வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும். அப்போது சமநிலை குறைந்த முதலீட்டுக் கோட்டிலிருப்பதைக் காணலாம். அத்தகையதோர் ஆழ

www.padippakam.com



மான வேலையின்மைச் சமநிலை நல்லதெனை எவரும் நினைத்துவிடக் கூடாது. பொருளாதாரமுறையானது கோடுகளைப் புதிய சமநிலை விரும்பத் தக்க மட்டத்திலே கிடைக்குமாறு தள்ளிவிடும் வகையில் அரசாங்கம் அதற்கு உதவி செய்ய வேண்டும்.


## நுகர்வு, முதலீடு என்பவற்றால் வருமானத்தை நிச்சயித்தல்.

சேமிப்பு முதலீட்டுக்கோடுகள் சந்திப்பதைக்கொண்டு வருமானத்தை நிச்சயிக்கும் முறையை விட, இரண்டாவது முறையொன்றுண்டு. கடைசியாகக் கிடைக்கும் முடிபு ஒன்றே. ஆனால் இந்த இரண்டாவது முறையைப் பின்பற்றினால் வருமானம் நிச்சயிக்கும் கொள்கையில் நமக்குள்ள நம்பிக்கை அதிகரிப்பதோடு விளக்கமும் கூடும்.

இந்த இரண்டாவது முறை நுகர்வு+முதலீட்டுமுறை எனப்படும். இது சேமிப்பு+முதலீட்டுமுறையன்று. நு+மு (C+I) முறை,[1] சேமிப்பு நுகர்வுக்கோடுகள் இரட்டையாயிருக்கும் தன்மைகளைப் பயன்படுத்துகிறது. எனவே சேமிப்பு

## 2 வது, 45° கோட்டிலே நு+மு கோடு இடைவெட்டும்போது:

நுகர்ச்சியும் முதலீடும் வருமானத்தை நிச்சயிக்கும் விதம்




படம் 4. மு. மு. (II)இனை நு. நு. (CC)வோடு சேர்த்தால் நு+மு (C+I) கோடு வரும். இது மொத்தச் செலவைக் காட்டும் (E) ச வில் அது 45° கோட்டை வெட்டுகிறது. சேமிப்பு முதலீட்டுப் படத்திலே கண்ட சமநிலையை இது காட்டுகிறது. (இந்தப் படத்துக்கும் படம் 3 இற்குமுள்ள ஒப்புமைகளைப் பார்க்க. நு. நு. (CC) இற்குச் சேர்க்கப்பட்ட முதலீடு படம் 3 இலுள்ள மு. மு. (II)இற்குச் சரி. Bஉம் Fஉம் இரண்டு படத்திலும் ஒரே இடத்தில் வருகின்றன. ச (E) குறுக்கு வெட்டும் அவ்வாறே நிகழ்கிறது.)

1. இதில் அரசாங்கத்தையும் கொண்டுவந்தால் நு+மு என்ற வாய்பாடு நு+மு+அ எனவாகும்.

www.padippakam.com



முதலீட்டுமுறை, எந்தச் சமநிலைவருமானத்துக்கு இட்டுச் செல்கிறதோ, அதே சமநிலைவருமானத்துக்கே இந்த முறையும் இட்டுச் செல்லும். 3 ஆம் படத்துக்குக் கீழே 4 ஆம் படத்தைக் குத்து நிலையாக வைத்துப் பார்த்தால் இரண்டுபடத்திலும் ச (E) தே.தே. உ. (NNP) இன் சமநிலையில் விழுவதைக் காணலாம்.

நு+மு (C+I) முறையானது மொத்தச் செலவிலே கருத்தைச் செலுத்து கிறது. அதாவது நுகர்வுப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் முதலிய எல்லாவற்றுக்கும் ஆகும் மொத்தச் செலவைக் கருத்திலே கொள் கிறது. நு+மு (C+I) முறையானது குடும்பங்கள் நுகரவிருக்கும் செலவின் நு.நு. (CC) நுகர்வுக்கோட்டை வியாபாரக் கம்பெனிகள் விரும்பும் முதலீட்டு மு.மு.கோட்டுடன் குத்துநிலையாகச் சேர்க்கிறது.

செலவு செய்ய விரும்பிய இருவகைத் தொகைகளும் உற்பத்திப் பொரு ளுக்குச் சமனாக இருந்தால்தான் சமநிலையுண்டாகும்.

நு+மு (C+I) கோடு எதனைச் சந்தித்தால் இந்தச் சமநிலையைக் காட்டும்? படம் 4 இலே 45° பயனுள்ள கோடொன்று காணப்படுகிறது. இது நமது குறுக்கே வெட்டும் தானத்தைக் காட்டும். 45° கோடானது, கிடையான அச்சிலே காட்டப்பட்ட வருமானத்துக்கு ஈடானதொரு தூரத்தை நிலைக்குத் தான திசையிலே காட்டும் தன்மையுடையது. தேசீய உற்பத்தியை உண் டாக்குவதற்கான உற்பத்திச் சாதனங்களை வாங்கக் கம்பெனிகள் செய்யும் செலவைக் காட்டக்கூடியவாறு 45° கோடு அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. அவை மறுபடியும் அதே தொகை ஆட்களை வேலைக்கமர்த்தவும், அதே மட்டம் தே.தே.உ. இனை உற்பத்தி செய்யவும் விரும்பினால் அந்த உற்பத்திச் சாதனங்களைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்க வேண்டும்.[1] நு+மு (C+I) வருமானமுறை நிர்ணயத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூற லாம்.

விரும்பிய மொத்தச் செலவின் நு+மு (C+I) கோடும் மொத்த உற்பத்தி யின் மதிப்பைக் காட்டும் 45° கோடும், ஒன்றையொன்று வெட்டும் இடத்திலே தேசீய வருமானத்தின் சமநிலைமட்டம் உண்டு. இந்தச் சமநிலையான "ச" ("E") சேமிப்பு முதலீட்டுச் சமநிலையோடு சரியாக ஒத்திருக்கிறது. இஃது எதனாலென்றால் நுகர்வுக் கோடும், சேமிப்புக்கோடும் இரட்டைகள் போல இணைந்திருப்பதால்.

1. இந்த முறையானது இந்த இடத்தில் குறுக்கே வெட்டாவிட்டால் எதிர்பாராதவகையில் சரக்குக் கையிருப்பாயிருக்கும் அல்லது முதலீடில்லாமலிருக்கும் அல்லது எதிர்பாராத இலாபமுண்டாகும் அல்லது நட்டமுண்டாகும். அதன் பயனாக சமநிலையுண்டாகாது. அதற்குப் பதிலாக உற்பத்தியை விரிவடையச் செய்யவோ, குறுக்கவோ புதிய தீர்மானங்கள் தொடர்பாகச் செய்யப்படும். விலையை ஏற்றவோ இறக்கவோ தீர்மானங்கள் செய்யப்படும். எனவே இம்முறை யானது சமநிலையில்லாது நகர்ந்து சென்று சமநிலைத்தானத்திலே சந்திக்கும். சமநிலை மிகமோசமாயுள்ள காலத்திலும் அளந்த சேமிப்பும் அளந்தமுதலீடும் சமனாகவேயிருக்கும். இது சிலர் எதிர்பாராத நட்டத்தையோ இலாபத்தையோ பெறுவதாலும், எதிர்பாராத முதலீடு அல்லது சேமிப்புப் பெறுவதாலும் உண்டாகிறது.

www.padippakam.com



இப்பிரிவிலே நு+மு (C+I) முறையானது அரசாங்கச் செலவையும் பிஸ்கால் கொள்கையையும் ஆராய மிக அனுகூலமானதென்பதைக் காணலாம். அது நு+மு+அ (C+I+G) முறையை இலேசாகக் காட்டும்.

**வருமானம் நிர்ணயித்தலை எண்கணித முறையில் எடுத்துக்காட்டல்: மூன்றுவது புனர்க்கூற்று.**

வருமானத்தின் சமநிலைமட்டம், சேமிப்புக்கோடும் முதலீட்டுக் கோடும் சந்திக்குமிடத்திலுண்டு. ஏன் அப்படியென்பதற்கு, மேலும் காரணங்களை ஆராயக் கருத்துள்ள வாசகர் விரும்பலாம். வருமானத்தை வேறு மட்டத்துக்குத் தள்ளும் சக்திகள் எவை ?

இந்த முக்கியமான விடயத்தை, எண்கணித உதாரணத்தால் விளக்கலாம். அட்டவணை 1 இல் சேமிப்பு நாட்டம் பற்றிய ஓர் இலேசான மாதிரிப்படம் உண்டு. எதையும் சேமிக்க வறுமையான தேசத்தின் சமநிலைவருமான மட்டம் 24,0000 கோடி டொலராகக் கொள்ளப்படிருக்கிறது. ஒவ்வொரு 3,000 கோடி டொலர் மாற்றத்திலும், 1,000 கோடி சேமிப்பும், 2,000 கோடி நகர்வும் உண்டு. அதாவது இங்கே இறுதி நிலை நுகர்வுநாட்டம், மாறுததொகையாகவும் அது $\frac{2}{3}$ பங்காகவுங் கொள்ளப்பட்டுள்ளது. இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் $\frac{1}{3}$ ஆகக் கொள்ளப்பட்டுள்ளது. இக்காரணத்தால் 358 ஆம் பக்கத்திலுள்ள படம் 5 இல் காணப்படும் சேமிப்புநாட்டக்கோடான சே. சே. (SS) நேர்கோடாகக் காட்டப்பட்டுள்ளது. இது மிக இலேசாக்கப்பட்ட ஒரு கோடு.

முதலீட்டைப் பற்றி நாம் என்ன கொள்ளலாம் ? தன்னியல்பாக நிரந்தரமாய் நிலைநாட்டக்கூடிய முதலீட்டு மட்டம் அட்டவணை 1 இல் நாலாங் கோட்டில் காட்டிய 2,000 கோடி டொலராகும்.

(5)ஆம்,(6) ஆம் கோடுகள் நிச்சயமானவை. சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்பவற்றுக்கு கம்பெனிகள் தேசிய உற்பத்தியின் ஒவ்வொரு மட்டத்திலும் செய்யும் மொத்தச் செலவு 5 ஆம் கோட்டிலே காட்டப்பட்டுள்ளது. இது 1 ஆம் கோட்டில் உள்ள தே. தே. உ. ஆகும். அதுவே கோடு 5 இல் மறுபடியும் திருப்பிக் குறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மேல்வளைவு அளவுகளும், கீழ்வளைவு அளவுகளுஞ் சமனுயிருக்குமென்று 11 ஆம் அத்தியாயத்திலே காட்டியுள்ளோம்.

ஆறுவது கோடு, காலப்போக்கில் வியாபாரத்தாபனங்கள் நுகர்வுக்கான திட்டமிட்ட செலவாகவோ, தன்னியல்பான செலவாகவோ எவ்வளவு தொகையைத் திரும்பப் பெறுகின்றன என்பதையும் அதேபோல முதலீடாக எவ்வளவைத் திரும்பப் பெறுகின்றன என்பதையும் காட்டும்.

வியாபாரக் கம்பெனிகள் தற்காலிகமாக, நுகர்வோர் வாங்கக்கூடியதற்கு அதிகமான பொருள்களை உற்பத்தி செய்தால், அவை சாதனங்களிலும், கையிருப்புச் சரக்குகளிலும் முதலீடு செய்ய வேண்டிய மூலதனத்தை, விற்பனை செய்யமுடியாத பொருள்களைச் சேர்த்துவைப்பதிலேயே

www.padippakam.com



3 ஆவது, சமநிலை நாட்டம் எண்கணித வாய்பாட்டால் காட்டப்படும்போது:

| தே. தே. உ. பை. வ. என் பவற்றின் மட்டம் | அட்டவணைப் படுத்திய திட்டப்படுத் திய நுகர்வு | அட்டவணைப் படுத்திய திட்டப்படுத்திய, அல்லது நிலை நிறுத் தக் கூடிய சேமிப்பு | அட்டவணைப் படுத்திய திட்டப்படுத்திய அல்லது நிலைநிறுத் தக் கூடிய முதலீடு | தே. தே. உவை உற்பத்தி செய்ய வர்த்தகம் அடைந்த செலவு | | திட்டப்படுத்தியதும் வியாபாரத்துக்குத் திரும்பக்கூடியதுமான செலவு | | வருமானப் போக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) [=1−2] | (4) | 5)=1 | | (6)=2+4 | | (7) |
| 360டொ. | 320டொ. | 40டொ. | 20டொ. | 360டொ. | > | 340டொ. | ↓ | சுருக்கம் |
| 330 | 300 | 30 | 20 | 3330 | > | 320 | ↓ | ,, |
| 300 | 280 | 20 | 20 | 300 | = | 300 | | சமநிலை |
| 270 | 260 | 10 | 20 | 270 | < | 280 | ↑ | விரிவு |
| 240 | 240 | 0 | 20 | 240 | < | 260 | ↑ | ,, |
| 210 | 220 | −10 | 20 | 210 | < | 240 | ↑ | ,, |

**அட்டவணை 1.** சேமிப்பினுலும் முதலீட்டினுலும் வருமானம் நிர்ணயித்தல். (ஆயிரங்கோடி டொலரில்). வர்ணந்தீட்டாத கோடு தே. தே. உ. இன் சம நிலையைக் காட்டுகிறது. இது வியாபாரிகள் தொடர்ந்து முதலீடு செய்ய விரும்பும் 2,000 கோடி டொலர். இது குடும்பங்கள் உத்தேசித்த சேமிப்புக்குச் சமன். (மேலேயுள்ள கோடுகளிலே கம்பெனிகள், எதிர்பாராத கையிருப்பில முதலீடு செய்ய நிர்ப்பந்தப்படுத்தப்படும். அதன் பயனாக உற்பத்தியை அவை குறைத்து தே. தே. உ. (NNP) இனைச் சமநிலைக்குக் கொண்டுவரும். கீழ்க் கோடுகளில் உள்ள விரிவு காட்டும் அம்புக்குறிகளையும் அவ்வாறே விளக்குக).

செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் இலாபம் குறையக் கூடும். மொத்த விற்பனை வருமானம் சே. சே. (SS), மு. மு. (II) இற்கு மேலேயிருப்பதால், அவை தமது முயற்சிகளைக் குறைக்கப் பார்க்கும். அத்துடன் தே. தே. உ. வீழ்ச்சியடையப் பார்க்கும். எதிர்நிலையாக மு. மு. (II), சே. சே. (SS) இலும் அதிகமாகும்போதும், கையிருப்புக்கள் தன்னிச்சையின்றிக் குறைந்து, இலாபம் அதிகரிக்கும்போதும் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். உற்பத்தி பெருகும் ; தே. தே. உ. அதிகரிக்கும்.

கம்பெனிகள் விற்பனை செய்வதற்கும் மேலதிகமான செலவில் தற்காலிகமாக உற்பத்தி செய்தால், தமது முயற்சிகளைச் சுருக்கப் பார்க்கும். அப்போது தே. தே. உ. வீழ்ச்சியடையும். ஆனல் உற்பத்திச் செலவுக்கு அதிகமாக ஊதியங் கிடைக்குமானுல், அவை உற்பத்தியை அதிகரிக்கும். தே. தே. உ. வும் அதிகரிக்கும்.

மூன்ரும் கோட்டிலுள்ள அட்டவணைப்படுத்திய சேமிப்பு, 4 ஆம் கோட்டிலுள்ள அட்டவணைப்படுத்திய முதலீட்டுக்குச் சரியாயிருந்தாற்றுன் வியாபாரக் கம்பெனிகள் தொடர்ந்து கூட்டுச் சமநிலையிலிருக்கும்; இப்போது நடைமுறையிலுள்ள மொத்த உற்பத்தி மட்டத்தை வைத்துக்கொள்வதற்கு

www.padippakam.com



அவற்றின் விற்பனைகள் போதுமானவையாயிருக்கும். தே. தே. உற்பத்தி அப்போது பெருகவும் மாட்டாது, சுருங்கவும் மாட்டாது.

இதே விடயம் 5 ஆம் படத்திலும் காட்டப்பட்டுள்ளது. தே. தே. உ. (NNP) இனை இரண்டு வகையில் வாசிக்கலாம். ஒன்று கிடையான அச்சில் வாசிப்பது. மற்றது அதே அச்சிலிருந்து நிலைக்குத்தாக 45° துணைக்கோடுவரை வாசிப்பது. சே. சே. (SS) சேமிப்புக் கோட்டைக் காட்டும். மு. மு. (II) சதாகாலமும் நிலை நிறுத்தக்கூடிய முதலீட்டு மட்டத்தைக் காட்டும். படத்திலே நுகர்வையுங் காணலாம். சேமிக்காத வருமானம் நுகரப்படுவதால் நுகர்வு எப்போதும் சேமிப்புக் கோட்டுக்கும் 45° கோட்டுக்குமிடையிலுள்ள தூரமாகும்.

அட்டவணை 1 இல் எண்கணிதமயமாகக் காட்டியவற்றை உறுதிப்படுத்த 5 ஆம் படத்தைப் பயன்படுத்தலாம். 300 பில்லியன் டொலரில் சேமிப்பும் முதலீடும் வெட்டும் சமநிலைமட்டத்துக்குமேல் எந்த வருமானமும் அதிக காலம் நிலைத்திருக்காது. வெட்டும் ச (E) புள்ளிக்கு வலப்புறத்தில், கம்பெனியின் விற்பனையிலும் பார்க்க உற்பத்திச் செலவு அதிகரிக்கும். அது நுகர்வு, முதலீடு என்ற வடிவங்களில் அதிகரிக்கும்.

வரைப்படமுறையில் இது பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது: கம்பெனி வெளியே கொடுக்கும் 45° கோடு வரை, அதாவது Q விலிருந்து R வரையிலுள்ளது. ஆனால் கம்பெனி மறுபடியும் பெறக்கூடிய தொகை சுயாதீனமான முதலீடாயுள்ள QK உம் நுகர்வான JR உம் ஆகும். இங்கே JK என்ற ஓர் இடைவெளியுண்டு. இப்போது வியாபாரம் தருமசங்கடமான நிலைமையை அடைகிறது. கொஞ்சக்காலத்துக்கு விலைகளைக் குறைக்காமல் கையிருப்பை அடுக்கி வைத்திருக்க முடியும். ஆனால் அந்த நிலை சமநிலையன்று. ஆனபடியால் அது நெடுநாளைக்கு நிலைத்திராது. அல்லது கொஞ்சக் காலத்துக்குப் பொருள்களின் விலையைக் குறைத்துத் தேவையான செலவுத் தொகைக்குக் குறைவாக விற்க முடியும். ஆனால் அந்த நிலையும் நெடுங்காலம் நிலைத்திருக்கமாட்டாது.


சமநிலைமட்டத்துக்குமேல் வருமானத்தை நிரந்தரமாய் வைத்திருக்க முடியாதென்பது தெளிவாகிறது. இந்தச் சமநிலைமட்டமானது, பொது மக்கள் சேமிக்கவிரும்பும் மட்டமாகும்; இம் மட்டத்துடன் கம்பெனிகள் முதலீடு செய்ய விரும்பும் மட்டம் சமமாகிறது. J K போன்ற ஒரு இடைவெளி தொடர்ந்து இருக்குமானால் வாய்ப்புக்குறையும். தேறிய தேசீய உற்பத்தி மறுபடியும் சமநிலைக்குச் செல்லும். அப்போது அங்கே இடைவெளி யிருக்கமாட்டாது. எனவே Q உக்குக் கிட்டவுள்ள அம்பு இடப்புறமாக மறுபடியும் சமநிலையையே நாடுகிறது.

சமநிலை வெட்டுக்கு இடப்புறமாக, எந்தத் தானத்திலும் வருமானம் உயரலாம் என்பதற்கு இதைப்போலவே வாதிக்கலாம். வியாபாரச் செலவையும், வியாபாரம் மறுபடி திரமாக எதனைத் திரும்பப் பெறுமென்பதையும் காட்ட படத்தில் குறிப்பிடுக. J'K' இலுள்ளது போல வாய்ப்பான இடைவெளியுண்டென்பதைக் காட்டுக. ஒன்றில் நல்ல விற்பனவு இருக்கும்

www.padippakam.com



4 ஆவது, அட்டவணையின் வரைப்படம் தேசிய வருமான நிர்ணயிப்பைக் காட்டும்போது:




படம் 5. சேமிப்புக்கும் முதலீட்டுக்குமிடையில் ச (E) இலேதான் இடைவெளியில்லை. J K இல் காட்டப்பட்ட இடைவெளி கம்பெனிகள் உற்பத்தி செய்வதைக் குறைக்கச் செய்யும். மேற்கு நோக்கிய அம்பு தே. தே. உ. (NNP) இனை ச (E) இன் சமநிலைக்குத் தள்ளுவது இதனாலேதான். J. 'K' இனுள்ள இடைவெளி விற்பனவு அதிகமாயிருப்பதால் வர்த்தக தாபனங்களின் கையிருப்புக் காலியாவதைக் காட்டும். கிழக்கு நோக்கியுள்ள அம்பு கம்பெனிகள் உற்பத்தியைப் பெருக்கியதன் பயனாய் தே. தே. உ. (NNP) ஐ கிழக்கே தள்ளுகின்றன வென்பதைக் காட்டும்.

அல்லது கம்பெனிகள் தற்காலிகமாக விலையை உயர்த்தி உபரி இலாபத்தைப் பெறக்கூடும். இரண்டு வழியிலும் அவை தொழிலை விரிவாக்கி உற்பத்தியைப் பெருக்கவேண்டிவரும். அப்படிச் செய்யும் போது வருமானம் அதிகரித்துச் சமநிலையை அடையும்[1].


1. J K இல் காட்டப்பட்ட (6) ஆம் கோட்டிலிருந்து 5 ஆம் கோட்டைக் கழித்ததாலுண்டாவதான இடைவெளியைக் குறிக்கப்பட்ட வருமானப் புள்ளிகள் காட்டமாட்டா? ஏன்? ஏனெனில் இவை மக்களுடைய அட்டவணையிற் காணும் இடைவெளிகள். இவை காட்டும் மட்டங்கள் நிலைத்திருக்கமாட்டா. வருமானம் எப்படியிருந்தபோதிலும் சேமிப்பு, முதலீடு என்பவற்றின் அளவிடக்கூடிய புள்ளிவிபரம் ஒன்றே. சரக்குக் கையிருப்புப் பராதீனமாக உயர்ந்து செல்லும்போது முதலீடும் சேமிப்பும் ஒத்திருப்பது பராதீனமாக உண்டான

www.padippakam.com



வருமானம் நிர்ணயிக்கும் விடயத்திலுள்ள முக்கியமான அமிசங்களை 6 ஆம் படம் இலேசானமுறையில் ஒன்றுபடுத்தியுள்ளது. சேமிப்பும் முதலீடும் இல்லாவிட்டால், வருமானமானது பொதுமக்களிடமிருந்து வியாபாரத் தாபனங்களுக்கும், வியாபாரத்தாபனங்களிலிருந்து பொதுமக்களுக்குமாக மாறிக்கொண்டேயிருக்கும். மேலே வியாபாரத்தாபனங்கள் சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்பவற்றை பணி, மூலப்பொருள் என்பவற்றுக்குக் கூலியாகப் பொது மக்களுக்குக் கொடுக்கின்றன. கீழே அந்த வியாபாரத்தாபனங்கள் உதவும் பொருள், பணி என்பவற்றுக்கு ஈடாகப், பொது மக்கள் நுகர்பொருளுக்கான செலவைக் கொடுக்கிறார்கள்.

**சலனமுள்ள முதலீடு, தேசியவருமானத்தைக் கூட்டவும் குறைக்கவும் செய்கிறது.**




6 ஆம் படம்—முதலீட்டுக்குழாயின் கைப்பிடியை ஓயாமல் இயக்கிக்கொண்டிருப்பவை தொழில் நுட்பமாற்றங்களும், சனப்பெருக்கமும், இவைபோன்ற வேறு சலனபூர்வமான சாதனங்களுமாகும். முதலீட்டில் உண்டாகும் மாற்றங்களையனுசரித்து, வருமானம் உயர்ந்தும் தாழ்ந்துங் கொள்வதுண்டு. Z இலுள்ள உத்தேச சேமிப்பு A இலுள்ள உத்தேச முதலீட்டோடு சமனாயிருக்குமிடத்துத்தான் நிலைநிறுத்தக் கூடிய சமநிலைமட்டம் உண்டாகும்.

பொதுமக்கள் தமது வருமானத்திலே கொஞ்சத்தை மிச்சப்படுத்த விரும்புவது இயற்கை. அது Z என்ற துவாரத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே நுகர்வுப்பொருள்களின் விற்பனவு வியாபாரத்தாபனங்கள் கொடுக்கும் சம்பளம், வட்டி, வரி, இலாபம் என்பனவற்றுக்குச் சமனாயிருக்க முடியாது. ஏன் ? எனெனில் சேமிக்கப்படும் பணம், நுகர்பொருள்களை விற்பனை செய்த பணங்களோடு சேர்ந்து, வியாபாரத்தாபனங்களுக்கு மறுபடி திரும்பிவிடுவதில்லை.

---

முதலீட்டின் விரிவு என்பதை வர்த்தக இலாகாப்புள்ளி விபரக்காரர் கவனிப்பதில்லை. ஆனால் வருமானத்தை நிர்ணயிக்கும் முயற்சியில் அக்கறை கொண்ட நாம் அட்டவணைகளில் அக்கறையுடையோம்.

www.padippakam.com



இந்தச் சேமிப்பினால், நாட்டில் வேலையின்மையும், வியாபாரமந்தமும், உண்டாகுமென்று சில கற்றுக்குட்டிகள் சொல்லலாம். இது தவறான கொள்கையாகும். நல்ல இலாபந்தரக்கூடிய முதலீட்டுச் சந்தர்ப்பங்களிருக்குமானால், கம்பெனிகள் 100 வீதம் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யாமல் புதிய முதலீட்டுச் சாதனங்களுக்கான சம்பளம், வட்டி, முதலிய செலவுகளுக்கும் தமது பணத்தைச் செலவிடும். எனவே சமூகம் சுகமாக வாழவேண்டுமானால், அச்சமூகம் பெறும் வருமானத்தில் ஒருபகுதியையே வர்த்தகத் தாபனங்கள் உற்பத்தி செய்யும் நுகர்பொருளுக்குச் செலவு செய்யவேண்டும். அந்தப்பகுதி, நடைமுறை நுகர்பொருளின் உற்பத்திச் செலவுக்கான தொகையாயிருக்க வேண்டும். கம்பெனிகள் இலாபகரமாக முதலீடு செய்யக்கூடிய அளவுக்கு அதிகரிக்காமல், பொதுசனம் சேமிக்குமானால், அதனால் தேசிய வருமானத்துக்கு எவ்வித இன்னலுமேற்படாது.

படம் 6 இலே A யிலுள்ள வருமானப்பெருக்கோடு முதலீட்டு வெள்ளம் சேரக்கூடியவாறு இறைக்கப்படுகிறது. குழாயின் கைப்பிடியை (1) புதிய நுண்கலைக்கண்டுபிடிப்புகள் (2) சனப்பெருக்கம் (3) இயக்குஞ் சாதனங்கள் என்பன அருட்டுகின்றன. முதலீட்டுக்குழாய் விரைவாகவும் நிதானமாகவும் வேலைசெய்கிறபோது தேசீய வருமானம் உயர்வாகவும் நிலைநாட்டக்கூடிய சமநிலையிலுமிருக்கிறது. அப்போது Z இலுள்ள சேமிப்பு A யிலுள்ள முதலீட்டுக்குச் சமனாகிறது.

சேமிப்பு எப்பொழுதும் கெடுதியையே உண்டாக்கும் என்ற வாதம் தவறு என்பதை இது காட்டுகிறது. இதனோடு மற்றுமொரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. (இக்காலத்துக் கலப்புப்பொருளாதாரத்திலே சேமிப்பும் முதலீடும், வருமானம் அதிகம் உயரவோ, மிகத் தாழவோ விடமாட்டா என்பதாகும்). சிலர் வங்கிக்கொள்கை, பிஸ்கால் கொள்கை என்பவற்றைக் கணக்கிலெடாமல் Z இலுள்ள குழாயை A இலுள்ள குழாயுடன் இணைக்கும் பெருந்தவற்றைச் செய்கின்றனர். இவ்விடயம் பற்றிப்பல ஆராய்ச்சி நூல்கள் எழுதப்பட்டன. ஆனால் கடந்த சில தசாப்தங்களாகவே இவ்விரு தீவிரவாதங்களில் உண்மை பொய்களைப் பிரித்தறியக்கூடியவராயிருந்தனர். அடுத்த 100 பக்கங்களிலே இந்த முக்கியமான விடயம் பற்றியும், வருமானம், வங்கித் தொழில், வியாபாரச்—சக்கரக்கொள்கை என்பவற்றோடு அது கொண்டுள்ள தொடர்புபற்றியும் ஆராயப்படும்.

### (ஆ) முதலீடும், வருமானமும்.

#### " பெருக்குமெண் "

வருமான நிர்ணயம் சம்பந்தமான தற்காலக் கொள்கையின் முக்கியமான அமிசங்களைப்பற்றி இதுவரை ஆராய்ந்தோம். முக்கியமான நிபந்தனைகள் பலவற்றைப்பற்றி, (உதாரணமாக, வருமான ஆராய்ச்சியை அரசாங்கப் பணக்கொள்கை எவ்வாறு பாதிக்கிறது என்பது போன்ற) ஆராய

www.padippakam.com



வேண்டியிருக்கிறது. நுணுக்கமான ஆராய்ச்சிகள் இப்போதைக்குத் தேவையில்லை. ஆ பிரிவில் வெளிநாட்டு முதலீட்டுச் சலனங்களுக்கும், வருமானங்களுக்குமுள்ள தொடர்புகளைப்பற்றி ஆராய்வோம்.

தனிப்பட்ட முதலீடு அதிகரித்தால், வருமானம் எவ்வாறு அதிகரிக்கும்; முதலீடு சுருங்கினால், வருமானம் எவ்வாறு சுருங்கும் என்பவற்றைப் பற்றி முதலிற் காட்டுவாம்.

இது நூதனமானதொரு விடயமன்று. முதலீடு, தேறிய தேசீய வருமானத்தின் ஒருபகுதி என்பதை முன்னரே அறிந்துள்ளோம். ஒருபகுதியின் மதிப்பு உயர்ந்தால், முழுவதன் மதிப்பும் உயருமென்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

தேறிய முதலீடு அதிகரிக்குமானால், தேசீய வருமானம், பெருக்கல் தொகையால் அதிகரிக்கும். அதாவது அதிகரிப்புப் பன்மடங்காகும். முதலீட்டு டொலர் மிக்க சக்திவாய்ந்ததும், இரட்டைவரியுடையதுமான டொலராயிருக்கும்.

முதலீட்டினால் இவ்வாறு வருமானத்திலுண்டாகும் பெரும் பாதிப்பு " பெருக்குமெண் " கொள்கையெனப்படும். " பெருக்குமெண் " என்பது ஒவ்வொரு முதலீட்டுச் செலவிலும் உண்டாகும் அதிகரிப்பினால் வருமானத்தில் எத்துணை அதிகரிப்புண்டாகிறதென்பதைக் காட்டும் எண்குணகத்தைக் குறிக்கும். இந்தப் பரிபாடைச் சொல்லை விளக்கச் சில உதாரணங்களைக் கூறுவாம். முதலீடு 5 பில்லியன் டொலராக அதிகரிக்கப்பட்டால் வருமானம் 15 பில்லியனாக உயரும்போது பெருக்குமெண் 3 ஆகும். வருமானத்திலே உண்டான அதிகரிப்பு 20 பில்லியன் டொலரானால் பெருக்குமெண் 4 ஆகும். அதிகரித்த முதலீட்டைப் பெருக்கெண்ணினால் பெருக்கினால், வருமானத்திலுண்டான மாற்றத்தை அறியலாம்.

பெருக்குமெண் ஒன்றுக்குமேலாக இருக்குமென்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. உதாரணமாக நான் ஒரு 1,000 டொலர் கொட்டகை போட இதுவரை வேலையிலமர்த்தப்படாத சாதனங்களைக் கூலிக்கு அமர்த்துகிறேன். இதனால் தேசீய வருமானமும் உற்பத்தியும் முதலாந்தரமுதலீட்டிலும் அதிகமாக இரண்டாந்தரத்தில் அதிகரிக்கும். ஏன் ?

நான் வேலைக்கமர்த்தும் தச்சரும், மரவியாபாரிகளும் 1,000 டொலர் வருமானத்தை மேலதிகமாகப் பெறுவர். அவ்வளவில் விடயம் முடியவில்லை. எல்லாரும் $\frac{2}{3}$ நுகர்வு இறுதிநிலை நாட்டமுள்ளவராயிருந்தால், அவர்கள் நுகர்வுப்பொருள்களை வாங்க 666.67 டொலர் செலவு செய்வர். இந்த நுகர்வுப்பொருளை உற்பத்தி செய்வோருக்கு, 666.67 மேலதிக வருமானமுண்டாகும். அவர்களுடைய இறுதிநிலை நுகர்வுநாட்டமும் $\frac{2}{3}$ ஆக இருந்தால் அவர்கள் 444.44 டொலர் அதாவது 666.67 டொலரில் $\frac{2}{3}$ ஐச் செலவு செய்வர். (1,000 டொலர் இன் $\frac{2}{3}$ இன் $\frac{2}{3}$). இவ்வாறே இது தொடர்ந்து செல்லும். ஒவ்வொருவரும் தமது மேலதிக வருமானத்தில் $\frac{2}{3}$ ஐச் செலவு செய்வர்.

படிப்பகம்

www.padippakam.com



எனவே 1,000 டொலர் முதலீட்டினுல், இரண்டாந்தர நுகர்வுச் செலவுகள் சங்கிலித்தொடர்போலச் செல்லுகின்றன. ஆனுல் இத்தொடர் போகப் போகக் குறைந்து கொண்டே போகும். மொத்தம் முடிவானதொரு தொகையிருக்கும். கூட்டல் விருத்தியினுலும் பெருக்கல் விருத்தியினுலும், நாம் பின்வரும் முடிவைப் பெறுகிரேம்.[1]

$$\left.\begin{array}{c} 1{,}000.00 \text{ டொலர்} \\ + \\ 666.67 \\ + \\ 444.44 \\ + \\ 296.30 \\ + \\ 197.53 \\ + \\ \cdots \end{array}\right\} = \left\{\begin{array}{c} 1 \times 1{,}000 \text{ டொலர்} \\ + \\ \frac{2}{3} \times 1{,}000 \text{ டொ.} \\ + \\ \left(\frac{2}{3}\right)^2 \times 1{,}000 \text{ டொ.} \\ + \\ \left(\frac{2}{3}\right)^3 \times 1{,}000 \text{ டொ.} \\ + \\ \left(\frac{2}{3}\right)^4 \times 1{,}000 \text{ டொ.} \\ + \\ \cdots \end{array}\right.$$

$$2{,}999.9{,}999 \text{ டொ. அல்லது } 3{,}000 \text{டொ.} \qquad \frac{1}{1-\frac{2}{3}} \times 1{,}000 \text{ டொ. அல்லது } 3 \times 1{,}000 \text{ டொ.}$$

இ. நு. நா. $\frac{2}{3}$ ஆக இருந்தால், பெருக்கல் எண் 3 ஆகும் என்பதை இது காட்டுகிறது. முதற்றர முதலீட்டுக்கணக்கிலே 1 உம் இரண்டாந்தர நுகர்வுப்புணர்ச்செலவுக்கணக்கில் 2 உம் ஆகக் கூடியதே இத்தொகை.

இ. நு. நா. $\frac{3}{4}$ ஆனுல் பெருக்குமெண் 4 ஆகும். $1+\frac{3}{4}+(\frac{3}{4})^2+(\frac{3}{4})^3+\ldots$ சேர்ந்தால் மொத்தம் 4 ஆகும். இ. நு. நா. $\frac{1}{2}$ ஆனுல் பெருக்குமெண் 2 ஆகும். பெருக்குமெண்ணின் அளவு இ. நு. நா. இன் அளவைப்பொறுத்துள்ளது. அல்லது இரட்டைக்கருத்தான இ. சே. நா. பற்றிக் குறிப்பிடலாம். இ. சே. நா. $\frac{1}{4}$ ஆனுல் இ. நு. நா. $\frac{3}{4}$ ஆகும். பெருக்குமெண் 4 ஆகும். இ. சே. நா. $\frac{1}{3}$ ஆனுல் பெருக்குமெண் 3 ஆகும். இ. சே.நா. $\frac{1}{X}$ ஆனுல் பெருக்குமெண் $X$ ஆகும்.

1. முடிவில்லாத பெருக்கல் விருத்திவாய்பாடு :— $1+r+r^2+r^3+\ldots+r^n+\ldots=\frac{1}{1-r}$ இது இ. நு. நா. r 1 இற்குக் குறைவாயிருக்கும் பட்சத்தில் என்க. அது வளைகோடாக பெருக்குமெண் வாய்பாட்டில் மாறினுல் பழையதற்கும் புதியதற்குமிடையிலுள்ள வருமான மட்டத்திலே இ. நு. நா. ஐப் பயன்படுத்தவேண்டும்.

www.padippakam.com



பெருக்குமெண் எப்பொழுதும், இ. சே. நா. இன் தலைகீழாகுமெண் பதை இதுவரை வாசகர் அறிந்திருக்கலாம். எனவே எமது பெருக்குமெண் வாய்பாடு (வரியும் கம்பெனிச் சேமிப்பும் கணிக்கத்தக்கவையன்றுனல்)

$$\text{எப்போதும் வருமான மாற்றம்} = \frac{1}{\text{இ. சே. நா.}} \times \text{முதலீட்டு மாற்றம்}$$

$$= \frac{1}{1 - \text{இ. நு. நா.}} \times \text{முதலீட்டு மாற்றம்.}$$

வேறொருவகையிற் கூறுவதானல், பிரத்தியேக நுகர்வுச் செலவு எவ்வளவு அதிகமோ, பெருக்குமெண்ணும் அவ்வளவு அதிகமாயிருக்கும். ஒவ்வொரு செலவுமுறையிலும், மேலதிகச் செலவில் எத்துணை சேமிப்புண்டோ அவ் வளவுக்குப் பெருக்குமெண் சிறிதாயிருக்கும்.

**பெருக்குமெண்ணை வரைகோட்டில் காட்டுதல்**

பொது அறிவு, எண்கணிதம் என்பவற்றைக் கொண்டு இதுவரை பெருக்கு மெண்பற்றி விளக்கினேம். வருமானம் பற்றிய எங்கள் சேமிப்பு, முதலீட்டு ஆராய்ச்சி, அதே முடிபைக் கொடுக்குமா ? இதற்கு விடை உடன்பாடாகவே யிருக்கும். அட்டவணை 1 இல் கண்டபடி, இ. சே. நா. $\frac{1}{3}$ ஆக, புதிய சில கண்டுபிடிப்புக்களினுல், மேலும் 10 பில்லியன் முதலீடு செய் யச் சந்தர்ப்பங்களுண்டாகின்றனவென்று வைத்துக்கொள்வோம். இது முன்னைய 20 பில்லியன் முதலீட்டுக்கு மேலதிகமானதாகும். முதலீட்டில் அதிகரிப்புச் சமநிலை தே. தே. உ. (NNP) இனை 300 பில்லியனிலிருந்து, 330 பில் லியனுக உயர்த்திவிடும். இதுவும் நமது முன்னைய ஆராய்ச்சியின்படி பெருக்குமெண் சரியாகக் கொடுக்கப்பட்டிருந்தாற்றுன்.

7 ஆம் படம் இந்த முடிபை உறுதிப்படுத்துகிறது. நமது பழைய முதலீட்டுக்கோடான மு.மு. (II) 10 பில்லியன்டொலர் அதிகரித்தபடியால் மு.'மு'. (I'I')என்ற இடத்துக்கு உயர்ந்துள்ளது. சேமிப்பும் முதலீடும் புதிதாக வெட்டும் இடம் ச' (E')ஆகும். வருமானம் முதலீட்டிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகரிக்கிறது. இ. சே. நாட்டம் $\frac{1}{3}$ ஆனுல், சேமிப்பு ஒப்பளவில் தட்டையாகவேயிருக்கும். இதுவே இத்தகைய அதிகரிப்புக்குக் காரணம். வெள்ளை அம்பு காட்டுவது, கிடைநிலையாயுள்ள வருமானத்தூரம் நிலைக்குத்தாயுள்ள முதற்படிச் சேமிப்பு முதலீட்டிலும் பார்க்க மூன்றுபங்கு அதிகமாகும் என்பதையே. இதிலுள்ள முரண்பாடு இரண்டாந்தர நுகர் வுப்புனர்ச் செலவைச் சேர்ந்ததாகும்.

சுருக்கமாகக் கூறுவதானல், புதிய முதலீட்டுக்குச் சமனுகச் சுயாதீன மான சேமிப்புண்டாவதானுல், வருமானம் அதற்கேற்றவாறு அதிகரிக்க வேண்டும். இ. சே. நாட்டம் $\frac{1}{3}$ ஆக 10 பில்லியன் டொலர் புதிய

www.padippakam.com




சேமிப்பை உண்டாக்க வருமானம் எவ்வளவு உயரவேண்டும்? 30 பில்லியன் டொலரால் உயர வேண்டும்.[1]

**சேமிப்பையும் முதலீட்டையும் காட்டும் படம் பலவழியிற் பயன்படும்:**

1 ஆவது, ஒவ்வொரு முதலீட்டு டொலரையும் மூன்று டொலர் வருமானமாகப்பெருக்கிக் கொள்ளலாம்.

**"பெருக்குமெண்" தொழிற்படும் விதம்**




படம் 7. புதிய முதலீடு முமு (II), மு'மு' (I'I') இங்கு உயருகிறது. 1 டொலர் முதலீட்டு அதிகரிப்புக்கு மூன்று டொலர் வருமான உயர்வுண்டு. (இடையான வெள்ளை அம்பு மேலே முதலீட்டதிகரிப்பைக் காட்டும் அம்பிலும் 3 மடங்கென்பதைக் கவனிக்க. ஒவ்வொரு முதலீட்டுக்கும் 2 நுகர்வுப் புனர்ச் செலவுண்டு என்பதைக் காட்ட, அஃது இரண்டாக வெட்டப் பட்டுள்ளது).

**சிக்கனம் அல்லது நுகர்வுக்கோட்டிலேற்படும் மாற்றம் வருமானத்தை எவ்வாறு பாதிக்கிறது.**

முதலீடுகள் வருமானங்களைப் பாதிக்கின்றனவென்பதைக் கண்டோம். இனி, சிக்கனத்தைப் பற்றி ஆராய்வோம். சிக்கனம், சேமிப்புக்கோட்டை மேலே நகரச் செய்யாதா ? புதிய சேமிப்புக்கோடான சே'சே' மாற்றமில் லாத முமு ஐ புதிய ச' சமநிலைத் தானத்திலே வெட்டமாட்டாதா ? இதனால் தேசியவருமானம் குறையமாட்டாதா ?

இம்மூன்று கேள்விக்கும் ஆம் என்பதே விடை. சேமிப்புக்கோடு மேலே உயருமானால் (அதுவே நுகர்வுக்கோடு கீழே நகர்வதுமாகும்) முதலீட்டில் மாற்றம் எதுவுமில்லாத பட்சம் வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் கீழே இறக்கிவிடும். இது படம் 8 இல் காட்டப்பட்டுள்ளது.

பொது அறிவைக் கொண்டு இதற்குக் காரணத்தை அறிந்து கொள்ள லாம். மக்கள் தமது வருமானத்திலிருந்து குறைவாகவே நுகர்வார்


1. 1 ஆம்அட்டவணை (பக்கம் 262) இந்தவிடையை உறுதிப்படுத்தும். 4 ஆம் கோட்டிலே, நாம் 20 பில்லியன் முதலீட்டுக்குப் பதிலாக 30 பில்லியனை வைக்கிறோம். பழைய சமநிலைமட்டத்தை விட்டுப் புதிய சமநிலைமட்டம் ஒரு நிரைமேலே செல்கிறது. பெருக்குமெண் கீழேயும் செயற்படும். முதலீட்டில் 1 பில்லியன் டொலர் விழுக்காடு உண்டானால் சங்கிலித் தொடர் போல முடிவில்லாத வகையில் எதிர்க்கணியமான அமிசங்களுண்டாகும். இது கடைசியாக 3 பில்லியன் விழுக்காடுள்ள சமநிலைவருமானத்திலுண்டாகும்.

www.padippakam.com



களாலும், வியாபாரிகள் விரும்பி முதலீடு செய்யாவிட்டால், விற்பனை குறையும். உற்பத்தியைக் குறைக்க வேண்டும்; எவ்வளவு குறைப்பது? வியாபாரம் முதலீடு செய்வதற்கு அதிகமாக மக்கள் சேமிக்காமலிருக்கக் கூடியவாறு தேசீய வருமானத்தை அழிக்கும் அளவுக்கு அதனைக் குறைக்கவேண்டும்.

**2 ஆவது, சிக்கனத்தில் மாற்றம், நுகர்வில் மாற்றம் என்பவற்றால் வருமானம் பெருக்க முறையில் மாறும்.**




படம் 8. எந்த வருமான மட்டத்திலும் குறைவாக நுகரவேண்டுமென்ற சிக்கனவிருப்பம் சேமிப்புக்கோட்டை மேலே உயர்த்தும். முமு (II) மாறாமலிருக்கும்போது இந்நிலையில் சமநிலை (E′) தானத்தில் விழும். ஏன் ? ஏனெனில் வருமானம் விழவேண்டும். மக்கள் தாம் வறுமையுடையவராவதைஉணர்ந்து வியாபாரம் முதலீடு செய்யும் அளவுக்குச் சேமிக்கப் பழகவேண்டும்.

ஆனால் இது சொல்லாமலே தெரியக்கூடிய ஒரு விடயமாயிருக்கலாம். ஆனால் படம் 8 இல் இதனிலும் ஆச்சரியமானதொரு விடயம் தெளிவாகிறது. சேமிப்புக்கோட்டிலே 1 டொலர் மேலே நகரத்துவங்கியினால் 3 டொலர் வருமானம் நட்டமாகிறது. அவ்வாறே சேமிப்பில் 1 டொலர் கீழ் நோக்கிச் சென்றால் நுகர்வுக் கோட்டிலே 1 டொலர் மேல் நோக்கி நகரும். இதுவும் பெருக்குமெண் 3 டொலர் வருமான உயர்வைக் கொண்டு வரும்; சுருக்கமாகக் கூறுவதானால், முதலீட்டு டொலர்கள் அதிசக்திவாய்ந்தவை. அவை வருமானத்தைப் பெருக்குமெண்ணால் அதிகரிக்கத் தக்கவை. நுகர்வு டொலர்களும் அவ்வாறே பெருஞ் சக்தி கொண்டவை. நுகர்வு நாட்டத்திலும், சேமிப்பு நாட்டத்திலும் உண்மையான மாற்றத்தை உண்டாக்கக் கூடியனவானால், அவை அதிசக்திவாய்ந்தவையே.

இவ்வாறு, பல உதாரணங்களைக் காணலாம். இ பிரிவிலே வரிகளைக் குறைப்பதால் நுகர்வு அதிகரிப்பதும், நுகர்வு உண்டாக்கும் மாற்றத்துக்கு மிக அதிகமாகவருமானத்தை உண்டாக்குவதும் விளக்கப்படுகிறது. மற்றோர் உதாரணத்தை எடுக்கலாம். பிராங், டபிள்யூ. டௌசிக் என்ற ஹார்வாட் பொருளியல் பேராசிரியர், சென்ற தலைமுறையிலே உண்டான

www.padippakam.com



வியாபாரமந்தத்தின்போது குறைவாக எல்லாரும் சேமிக்க வேண்டு மென்றும், நுகர்பொருள்களை வாங்க நன்ருகச் செலவு செய்ய வேண்டு மென்றும் வானெலியிற்பிரசங்கஞ் செய்தார். அவருடைய கருத்தென்னவெ ன்ருல், நுகர்பொருளிலே பணத்தைச் செலவு செய்தால், மக்களுக்கு வேலை கிடைக்குமென்பதும், வருமானம் அதிகரிக்குமென்பதுமேயாகும். நுகர் வுப்பொருள்களிலே புனர்ச்செலவு செய்வதால் இரண்டாம் முறையாக வேலையும் வருமானமும் கிடைக்குமென்றும், பெருக்குமெண் விகிதத்தில் இது தொடர்ந்து செல்லுமென்றும் அவர் எண்ணியிருக்க வேண்டும். வருமான நிர்ணயம் பற்றிய இக்காலக் கொள்கைகளை அறியுமுன்னரே இவ்வாறு இவர் கருதினுர்.

அடுத்த பந்தியில் ஆராயப்படும் "சிக்கனம் பற்றிய முரண்பாடு" சம்பந் தமாய் ஓர் உதாரணத்தைக் கொள்ளலாம். பின்வரும் சங்கிரகம் அதை விளக்க உதவும்.

திட்டப்படி வகுத்த முதலீடு நிரந்தரமாயிருந்தால், சேமிப்புக்கோட்டிலே மேல்நோக்கியுள்ள மாற்றம் தேசீய வருமானத்தை அழிக்கும். அதே சமயம் நுகர்வுக்கோடு கீழ்நோக்கி விழும். வீழ்ச்சியடையும் வருமானம், மக்கள் விரும்பும் சேமிப்பை முதலீட்டுச் சந்தர்ப்பங்களோடு சமமாக்கும் வரை வீழ்ந்து கொண்டிருக்கும். எனவே சேமிப்பதற்குச் செய்யும் முயற்சி சில சந்தர்ப்பங்களில் அதிக சேமிப்புக்கு இடங்கொடாமல், தேசீய வருமானத்தையே குறைக்கக்கூடும்.


**முதலீடுசெய்யத் தூண்டுதலும், சிக்கனம் பற்றிய முரண்பாடும்.**

தேறிய முதலீட்டை இதுவரை நாம் தேசீய வருமானத்துக்கு முற்றும் புறம்பான, தனிப்பட்ட, அமிசமாகவே எப்பொழுதும் கருதிவந்தோம். எமது முதலீட்டுக் கோடுகளெல்லாம் கிடைநிலையான கோடுகளாகவே கீறப் பட்டுள்ளன. அவற்றின் மட்டம் எப்பொழுதும் ஒரேயளவாகவேயிருந்தன. தே. தே. உ. ஐக் கணக்கில் எடுக்காது விட்டன. இந்த முறையில் இலேசாக்கும் கொள்கையை நாம் இனிச் சற்றுக் கைவிடலாம்.

எந்திரங்களின் தகுதியைக்கொண்டு ஆராயுமிடத்து, உற்பத்திப் பொருள் களின் விற்பனவு உயர்வாயிருந்தால், அந்தத் தொழிலுக்கு அதிபன் தனது எந்திர சாதனங்களைப் பெருப்பிக்க வேண்டுமென்றே கூறுவான். குறுந்த வணையில், (அதாவது ஒருமுதலாளி தனது மாறுபட்ட வருமான மட்டத் துக்கேற்றவாறு முதலைச் சரிப்படுத்த அவகாசம் ஏற்படுவதற்கு முன்னர்) 9 ஆம் படத்திலுள்ள முழு கோட்டை, உயரும் வளைகோடாகக் கீறுவது நியாயமானதாகும். வேலைவரய்ப்புக் கிடைப்பதிலும், தேசீய உற் பத்தியிலும் விருத்தியுண்டாளுல், தேறிய உற்பத்தியும் அதிகரிக்க இடமுண்டு.

**3 ஆவது, உயர்வான வருமானம், உயர்வான முதலீட்டை வியாபாரிகள் பெறத்தூண்டும்.**

வருமானம் முதலீட்டைத் தூண்டும் விதம்




தேறிய தேசீய உற்பத்தி (பில்லியன் டொலர்)

படம் 9. முமு (II) கோடு கிடைநிலையாயிருக்குமென்பதை நாம் ஏற்பதில்லை. இப்போது முமு (II) மேலாகச் சரிந்து செல்கிறது. இது தாழ்வான தே. தே. உ. (NNP) இல் உத்தேச முதலீடு 20 பில்லியனுக்குக் குறைவென்பதையும் உயர்வான தே. தே. உ. (NNP) இல் 20 பில்லியனுக்கு அதிகமென்பதையும் காட்டும். சமநிலை ச (E) இல் அதாவது சே. சே. (SS), முமு (II) வெட்டுமிடத்தில் உள்ளது.

9 படத்தில் முன்போலவே தேசீய வருமானத்தில் சமநிலை சேமிப்புக் கோடும் முதலீட்டுக் கோடும் வெட்டும் ச (E) இல் இருக்கும். சேசே (SS) கோடு முமு (II) கோட்டைக்கீழேயிருந்து வெட்டும்போது வியாபாரிகளின் நடவடிக்கை பொருளாதாரத்தை மறுபடியும் சமநிலைக்குக் கொண்டு வந்துவிடும்.[1]

ஊக்கப்படுத்திய முதலீடு என்றால், தேசீய வருமானத்தை அதிகரிக்கும் எதுவும் முதற்பொருள் முயற்சிகளுக்குப் பயனுடையதென்பதே. தேசீய வருமானத்துக்கு ஊறு செய்யும் எதுவும் இத்தகைய முயற்சிகளுக்குப் பாதகமாயிருக்கும்.

சிக்கனம், நுகர்வு என்ற இரட்டைகள் சம்பந்தமான பழைய முரண்பாட்டைப் பற்றிப் புதிய விளக்கத்தை இது கொடுக்கிறது. நுகர்வுக்கு அதிக நாட்டமிருக்குமானால்—அதாவது சேமிப்புக்குக் குறைவான நாட்டமிருந்தால்—பொருள்கள் அதிகம் விலையாவதோடு, முதலீடும் அதன்மூலம் அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும் காலங்களில், சிக்கனத்தில் அதிக நாட்டமிருப்பது பணவீக்கத்தைக் குறைக்கும். வியாபாரமந்தமுள்ள காலத்திலே, சிக்கனம் அந்த மந்தத்தை மேலும் அதிகரிக்கச் செய்து, நிசமான தேறிய மூலதனம் சமூகத்தில் உண்டாவதைக் குறைக்கும். எனவே நுகர்வு அதிகரித்தால் முதலீடும் அதிகரிக்கும். இவை ஒன்றுக்கொன்று முரணானவையல்ல.

1. இரண்டு கோடுகளும் எதிர்ப்பக்கமாக வெட்டினால் 5 ஆம் படத்திலுள்ள அம்புகள் வெளியே காட்டியபடியிருக்குமன்றி உள்ளே காட்டியபடியிரா. அப்போது சமநிலை தளம்பும். பொருளாதாரம் இரண்டு பக்கமும் குறுக்குவெட்டுக்கு அயலாக அலையும். உதாரணமாக, முட்டையை எடுத்துக் காட்டலாம். முட்டை பக்கத்தில் கிடந்தால் அது நிலையான சமநிலையிலிருக்கும். சிறிது அசைத்தாலும் அது சமநிலைக்கு வந்துவிடும். நுனியில் நிற்கும் முட்டை நிலையற்ற சமநிலையிலிருக்கிறது. சற்றே தொட்டுவிட்டால் போதும் அது நிலைதவறிவிடுகிறது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



நூதனமான இந்த முடிவு "சிக்கனமுரண்" எனச் சிலசமயம் சொல்லப்படுகிறது. சிக்கனம் நல்லதெனக் கூறவே நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். அதனால் புதிய இக்கருத்து முரண்போலத் தோன்றும். பழைய சிந்தனையாளரெல்லாம் சிக்கனம் எப்பொழுதும் நல்லதெனக் கூறிவரப் புதிய சிந்தனையாளர், வியாபார மந்தமுள்ள காலங்களில் சிக்கனம் கூடாதெனக் கூறுவது நூதனமாயிருக்கலாம்.

வாலாயமான பழைய கொள்கைகளை ஒருபொழுதுக்கு மனத்திலிருந்து அகற்றிவிட்டு, இந்த முரண்பாட்டை விஞ்ஞான ரீதியில் விருப்புவெறுப்பின்றி நடுநிலையில் ஆராய்வோம். இரண்டு விடயங்களை மனத்திலிருத்தினால் விடயம் தெளிவாகும்.

முதலாவது, தர்க்கசாத்திர சம்பந்தமான "சேர்க்கைப்போலி" யைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவர்க்கும் தனித்தனி நல்லதான ஒரு விடயம் அவர்கள் எல்லாருக்கும் ஒருசேர எப்போதும் நல்லதாயிருக்க முடியாது. சில சந்தர்ப்பங்களிலே தனிப்பட்ட சிலர்க்குப் பயனுடைய செயலாகக் காணப்படும் விடயம் சமூகத்தைப் பொறுத்த அளவில் மதியீனமானதாயிருக்கலாம். உதாரணமாக ஒவ்வொருவரும், தமது தனிப்பட்ட சேமிப்பை அதிகரிக்க முயன்றால் கீழே கூறப்படும் சந்தர்ப்பங்களிலே சமூகத்திலுள்ள அனைவரது நிசமான சேமிப்பும் குறைய வழியுண்டாகும். "முயன்றால்" "நிசமான" என்ற சொற்களைக் கவனிக்க. முயல்வதற்கும், நிசமான சேமிப்புச் செய்வதற்குமிடையில், நமது பூரணமற்ற கலப்புப் பொருளாதாரத்திலே, மக்கள் வேலையின்றியும் குறைந்த வருமானத்தோடுமிருந்தால், எவ்வளவோ வித்தியாசங்களுண்டாகலாம்.

சிக்கனமென்ற புதிரை விளங்கிக்கொள்வதற்கு மற்றொரு குறிப்பு, தேசிய வருமானம் மந்தமான மட்டத்தில் இருக்கிறதா, இல்லையா என்பதை அறிவதே. நாம் பூரண வேலைவாய்ப்புடையவராயிருந்தால், நடைமுறை நுகர்வுக்கு எவ்வளவு தேசிய உற்பத்தியைப் பயன்படுத்துகிறோமோ, அவ்வளவுக்குக் குறைவாகவே மூலதன ஆக்கத்துக்குக் கிடைக்கும். உற்பத்தி எப்பொழுதும் கூடியபட்ச மட்டத்திலிருக்குமானால், பழைய சிக்கனக் கொள்கை முற்றும் பொருத்தமுடையதாயிருக்கும். தனிப்பட்டவரைப் பொறுத்தவரையிலும் சமூகத்தைப் பொறுத்தவரையிலும் பொருத்தமாயிருக்கும். புராதன விவசாயச்சமூகங்களிலே, அந்தக் கொள்கை பொருத்தமுடையதாயிருந்திருக்கும். முதலாம், இரண்டாம் உலகப்போர்க் காலங்களிலும் அது பொருத்தமாயிருந்திருக்கும். வியாபாரப் பெருக்கக் காலங்களிலும் பணவீக்கக் காலங்களிலும் அஃது உண்மையாயிருந்திருக்கும். அதாவது மக்கள் சிக்கனத்தை அனுட்டித்தால், நுகர்வைக் குறைப்பதால் முதலீடு அதிகரிக்கும்.

ஆனால் புள்ளி விபரக்குறிப்புக்களின்படி பூரண வேலைவாய்ப்பும், பணப்பெருக்கத்தேவை நிபந்தனைகளும் நமது தேச சரித்திரத்திலே இடையிடையேதாம் நிலவியிருக்கின்றன. காலப்போக்கிலே, பெரும் பகுதியில் மூலப்


www.padippakam.com



பொருள்கள் வீணுக்கப்பட்டன ; ஓரளவு வேலையின்மையிருந்தது. தேவை, முதலீடு, வாங்குஞ்சக்தி என்பவற்றிலும் குறைபாடிருந்தது. நிலைமை இவ்வாறிருந்தால் எல்லாட் தலைகீழாக மாறலாம். ஒரு காலத்திலே சமூகச்சீலமாயிருந்த ஒன்று. மற்றொரு காலத்தில் சமூக ஒழுக்கக்கேடாக லாம். தனிப்பட்ட ஒருவர் விடயத்திலே பொருத்தமாய்த் தெரிந்த ஓர் உண்மை, அதாவது கூடிய சிக்கனம் கூடிய சேமிப்பையும் செல்வத்தையும் கொண்டுவருமென்பது, சமூகத்தைப் பொறுத்தவரையிலே முற்றும் தவருகக் காணப்படலாம்.

வேலையின்மை நிலவிய காலத்திலே சேமிக்க முயலல் சேமிப்பைக் கூட்டுவதிலும் பார்க்கக் குறைக்கலாம். சேமிக்கவிரும்புபவர் நுகர்வைக் குறைக்கிருர். முன்னரிலும்பார்க்க இப்போது வாங்குஞ்சக்தி குறைகிறது. அதனுல் யாரோ ஒருவருடைய வருமானம் குறைகிறது. ஏனெனில் ஒருவன் செலவு செய்வது மற்றொருவனுக்கு வருமானமாயமையும். ஒருவன் சேமிப்பதால் வேரொருவனுக்கு ஆதாயமே இல்லாமற் போகிறது.

**4 ஆவது, அதிகம் சேமிப்பதற்கு முயன்ருல், அது குறைவான நிசச் சேமிப்பையும் முதலீட்டையுமுண்டாக்கும்.**




படம் 10. சே.சே. (SS) மேலே சே'சே' (S'S') இற்கு நகர்வதால் வருமானம் குறைகிறது. வருமானம் குறைவதனுல் முதலீட்டில் ஒருபகுதி குறைகிறது. அதனுல் நாம் தென்மேற்காக முமு (II) சாய்வுக் கோட்டில் நகர்கிருேம். F என்ற பூரணவேலைவாய்ப்பு மட்டத்திலே பொருளாதாரம் நலிந்தால், சிக்கன அதிகரிப்பின் பலாபலன் வேறுவிதமாயிருக்கும்.

ஒருவன் அதிக பணத்தைச் சேகரிப்பதில் முயன்ருனுல் யாரோ ஒருவன் அந்தப் பணத்தால் வரும் பயனை அனுபவியாது வறுமைப்படுகிருன் என்பதே கருத்து.

தடுக்க முடியாத வேலையின்மை நிலவுமானுல் நுகர்வும், முதலீடும் ஒன்றோடொன்று போட்டியிடாமல், ஒன்றுக்கொன்று அனுசரணையாயிருக்கலாம். ஒன்றுக்குத் துணையாயிருப்பது மற்றதுக்கும் துணையாயிருக்கலாம். நுகர்வைக்குறைத்துச் சேமிக்க முயன்ருல் வருமானம் குறையும் ; வருமானங் குறையவே சேமிக்கமுடியாது போகும். முதலீடு செய்வதற்கு மேலாக ஒருவர் சேமிக்க முடியாத நிலைமையுண்டாகும். மேலும் குறைந்த



படிப்பகம்

www.padippakam.com



வருமான மட்டங்களிலே மூலதனப் பொருள் குறைவாகவே தேவைப்படும். அதனுல் முதலீடு உண்மையில் குறைவாகவேயிருக்கும். (சிக்கனப்புதிர் ஆபத்தான பயனைக் கொடாதவகையில் நமது பொருளாதாரத்தைச் செயற்படுத்தப் புத்திசாலித்தனமான கொள்கைகளை அரசாங்கமும், தனிப்பட்ட முயற்சியாளரும் கைக்கொள்ளவேண்டும்).

படங்கள் 8, 9 என்பவற்றை 10 ஆம் படத்தோடு சேர்த்துவைத்து இந்தப் புதிரைப் பொது அறிவு கொண்டு ஆராய்வாம். சேமிக்க வேண்டுமென்ற விருப்பம் சிக்கனத்தை அதிகரிக்கும். அதனுல் சேசே (SS) கோடு மேலே சே'சே' (S'S')வரை நகரும். புதிய குறுக்குவெட்டுத்தானமான ச(E) வருமான குறைவைக்காட்டுகிறது. முதலிடாமலிருக்கத்தூண்டப்படுவதால், வருமான இறக்கம் முதலீட்டில் இறக்கத்தைக் கொண்டுவரும். எனவே வருமானமும், முதலீடும் உண்மையிற் குறைந்துவிட்டன. வியாபார மந்தமான காலங்களில் அதிகம் சேமிக்க முயல்வதால் உண்மையில் குறைவாகவே சேமிக்கப் படுகிறது.[1]

இஃது உண்மையானுல் இது முக்கியமானதொரு படிப்பினையாகும். வியாபார மந்தமுண்டாகுங் காலங்களிலே, சிக்கனத்தை மேற்கொள்ளுமாறும், வியாபாரமலர்ச்சியை மறுபடியுமுண்டாக்கச் சேமிப்பை மேற்கொள்ளுமாறும் மக்களைக் கேட்பது நல்ல கொள்கையன்று. இதனுல் ஏற்படக்கூடிய பலாபலன், பணவாட்டம் மேலும் மோசமான நிலை அடைவதே. அப்படியான காலங்களில் வாடிக்கையாகக் கூறப்படும் நியாயங்கள் மறுபுறமாக மாற்றப்பட்டுவிடும். மூலதனப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டோரைச் சார்ந்த பொருளியலாளர், மக்கள் சிக்கனத்தை மந்த காலங்களில் மேற்கொள்ளக்கூடாதென்றும், அதனுல் நுகர்வு அதிகரிக்க வழிதேடவேண்டுமென்றும், வருமானத்தைக் குறைக்கக்கூடிய சேமிப்பு முயற்சியிலீடுபடக்கூடாதென்றும் வாதாடுவர். அப்பொழுதுதான் கனத்த மூலதனப் பொருள்கள் விற்பனையாவதோடு அவற்றின் உற்பத்தியில் முதலீடு செய்வதும் அதிகரிக்கும்.[2]

1. 270 ஆம் பக்கத்திலே சங்கிரகம் என்ற பந்தியின் முடிவில் பின்வருமாறு பென்சிலால் எழுதலாம் : "சேமிக்கச் செய்யும் முயற்சி சில சமயம் உண்மையான சேமிப்பைக் குறைக்கலாம்". ஊக்கப்படுத்திய முதலீடு பெருக்குமெண்ணைப் பெரிதாக்கும். ஊக்கப்பட்ட நுகர்வுச் செலவுத் தொடர் இரண்டாவது முறையாக உண்டாவது போலவே ஊக்கப்பட்ட முதலீட்டுச்செலவுத் தொடரும் உண்டாகும்.

2. பூரணவேலைவாய்ப்புள்ள நிலைமைகளில் இவ்வாறு விவாதிப்பது பொருந்தாதென்பதை மேலே கண்டோம். சிக்கனம் சில வருமானத்தைக் குறைப்பதால் வட்டிவீதத்தைக் குறைக்கும். அதனுல் முதலீடு அதிகரிக்கலாம். அல்லது சம்பளம், விலைவாசி என்பவற்றைக் குறைத்து மக்கள் தேடிய பணத்தின் வாங்குஞ்சக்தியை அதிகரிக்கலாம். அதனுல் ஆரம்பச்சிக்கனம் பாழாகலாம். இவற்றை விரிவாகப் பின்னர் ஆராய்வோம். நமது தூய்மையற்ற கலப்புப் பொருளாதாரத்திலே இவை பெரிய வியாபாரமந்தமுள்ள காலங்களில் முக்கியமற்ற பிரச்சினைகளாகும்.

www.padippakam.com



இக்காலப் புதுமுறையிலமைந்த பழம்பொருளியல் தொகுமுறைக் கொள் கை சிக்கனப்புதிரிலுள்ள அச்சந்தரும் அமிசங்களை நீக்குவதை மேலே காண்போம்.

**பணவாட்ட இடைவெளி.**

பெருக்குமெண் என்பது இரண்டு பக்கமும் கூருள்ள வாள். உமக்குச் சார்பாகவும் வெட்டும், உமக்கு எதிராகவும் வெட்டும். நாம் முன் கண்டது போல முதலீட்டை விரிவாக்கவுஞ் செய்யும். முதலீட்டிலே குறைவு உண்டானல், அதை எதிர்க்கணியமாகவும் பெருக்கும். உதாரணமாக, முதலீட்டு வாய்ப்பு 10 பில்லியன் டொலரால் வீழ்ச்சியடைந்தால், தேசிய வருமானம் மூன்று மடங்கு அதாவது 30 பில்லியன் டொலரால் வீழ்ச்சியடையும். தேறிய முதலீடு பூச்சியமாக இறங்கினல், வருமானம் தேறிய சேமிப்பைச்செய்ய முடியாதவகையில், சமூகம் வறுமையடையவேண்டிவரும்.

தேசியவருமானத்தின் சமநிலை மட்டம் என்று நாம் குறிப்பிட்டதில், பிரத்தியேகமான நன்மை எதுவும் இல்லையென்பதை இது மறுபடியும் ஞாபகப்படுத்துகிறது. முதலீடு குறைவாயிருந்தால் வருமானத்தின் சமநிலை மட்டத்தில் அதிக வேலையின்மையும், தேசிய மூலப்பொருள்கள் விரயமும் காணப்படும். நல்லதென நாம் முயலக்கூடிய தேசிய வருமான மட்டம், பூரணவேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடியதே. பூரணவேலைச் சேமிப்பு அளவுக்கு முதலீட்டு வசதிகள் இருந்தாற்றுன் பூரண வேலைவாய்ப்புள்ள நிலையை நாம் அடையலாம்.

பூரணவேலைச் சேமிப்பு உண்டாவதற்கு அனுசரணையாகத் தனிப்பட்ட முதலீடோ, அரசாங்கக் கொள்கைகளோ நெறிப்படுத்தப்பட்டாலன்றி, நாட்டிலே பூரணவேலை வாய்ப்பு இருக்கமாட்டாது. அப்பொழுது "பணவாட்ட இடைவெளி" உண்டாகும் என்பர். அதன் அளவை, முதலீட் டிலுண்டாகும் குறைபாட்டை பூரணவேலைச் சேமிப்போடு ஒப்பிட்டு அளந்தறியலாம்.

படம் 3 இலுள்ள பணவாட்ட இடைவெளியை, பூரண வேலைவாய்ப்புள்ள வருமானமட்டமான F இல் சேமிப்புக்கோட்டுக்கும் முதலீட்டுக் கோட்டுக்குமிடையிலுள்ள செங்குத்தானதூரம் என அறிந்து கொள்ளலாம். அல்லது படம் 11 இல் உள்ளது போல பணவாட்ட இடைவெளியை, நுகர்வு + முதலீட்டு வரைகோட்டில் கீறிக் காட்டலாம். உதாரணமாக, பூரணவேலை வாய்ப்பு வருமானம் 400 பில்லியன் டொலர் எனக்கொள்வோம். இந்த வருமான மட்டத்திலே நுகர்வும் முதலீடும் (நு + மு) சேர்ந்து 380 பில்லியனுகிறது. இது G என்னும் இடத்திற் காட்டப்பட்டுள்ளது. இதனல் 20 பில்லியன் பணவாட்ட இடைவெளி G இற்கும் F இற்கும் இடையிலே காணப்படுகிறது. எனவே பூரண வேலைவாய்ப்பில் நாம் இருக்கமுடியாது. அப்போது என்ன நடைபெறுகிறது ? வருமானம் 20 பில்லியன் டொலரால்


www.padippakam.com



வீழ்ச்சியடையுமா? இல்லை. ஆதியில் கண்ட பணவாட்ட இடைவெளியிலும் பலமடங்கு அதிகமாக வருமானம் விழும். வீழ்ச்சியடையும் ஒவ்வொரு டொலர் வருமானத்திலும் $\frac{2}{3}$ டொலர் நுகர்வுக்குக் கழிக்கப்பட்டால் வருமானம் ஆதியிலிருந்த பணவாட்ட இடைவெளியிலும் மூன்று மடங்காக வீழ்ச்சியடையும் (11 ஆம் படத்திலேயுள்ள (E) புள்ளியைப் பார்க்க)[1].

**பூரணவேலைவாய்ப்பில் உண்டாக்கப்பட்ட C + I (நு + மு) செலவு, பூரண வேலைவாய்ப்பு தே. தே. உ. (NNP) இலிருந்து வித்தியாசப்பட்டால் அதை நாம்:**

**1 ஆவது, செலவுக்குறைபாட்டை " பணவாட்ட இடைவெளி " என்போம்.**




படம் 11. பணவாட்ட இடைவெளி எப்பொழுதும் பூரணவேலைவாய்ப்பின் தே. தே. உ.(NNP) மட்டத்திலேதான் அளக்கப்படும். அது 45° கோட்டுக்கும் நு + மு(C + I)கோட்டுக்கும் இடைப்பட்ட தூரம். அதாவது FG ஆகும். அத்தகைய பணவாட்ட இடைவெளி வருமானத்தைப் பெருக்குமெண்முறையிலே குறைக்கும். C பின்னர் அரசாங்கம் புகுத்தப்பட்டபின் நு + மு (C + I) என்பதை நு + மு + அ (C + I + G) எனக் குறிப்பிடலாம்.


[1] இதைப்பற்றி என்ன செய்யலாம்? அரசாங்கத்தை இதிலே சேர்க்காமல் விட்டால் ஒன்றில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும்; அல்லது நுகர்வை அதிகரிக்கவேண்டும். பூரணவேலைவாய்ப்பு இருக்கவேண்டுமானால் முதலீட்டு மட்டமும் நுகர்வுக்கோட்டு மட்டமும் எவ்வளவுக்கு மேலே உயரவேண்டும்? தேவையான 60 பில்லியன் வருமானத்தினால் உயரவேண்டுமா? இல்லை. பெருக்குமெண்ணிருப்பதால், பணவாட்ட இடைவெளியை நீக்குவதானால் நு + மு(C + I) கோடு அந்த இடைவெளியளவான தூரம் மேலே நகரவேண்டும்; இடைவெளியின் பெருக்குமெண்ணலன்று.

**விலைவீக்கமுறை.**

பணவாட்ட இடைவெளிக்குப் பதிலாக, பணவீக்க இடைவெளியுண்டாக லாம். பூரண வேலைச் சேமிப்பிலும் திட்டப்படுத்தப்பட்ட முதலீடு அதிக மானுல், உற்பத்திக்கு மேலாகத் தேவை உண்டாகும். அதனுல் விலைவாசி ஏறும். படம் 12 இலே பணவீக்க இடைவெளியை நிலைக்குத்துத் தூரமாக எவ்வாறு அளக்கலாமென்பது காட்டப்பட்டுள்ளது. புதிய (நு' + மு') 45° கோட்டுக்கு மேலேயுண்டு. அது பூரணவேலைவாய்ப்பு மட்டம். அதன் இடைத்தூரம் FG. இது 15 பில்லியன் டொலர் பணவீக்க இடை வெளியாகும்.

இனி என்ன நடைபெறும்? உற்பத்தி 45 பில்லியன் டொலராக உயர் வதால் (ச') இல் புதிய சமநிலை உண்டாகுமா? இல்லை. எல்லாருக்கும் பூரணமாக வேலைகிடைத்துவிட்டது. தொழிற்சாலைகள் சாத்தியமான அளவு உற்பத்தி செய்கின்றன.

**2 ஆவது, மேலதிகச் செலவை " பணவீக்க இடைவெளி " என்போம்.**




படம் 12. FG' பணவீக்க இடைவெளி. உற்பத்திக்கு மேலதிகமாக மக்கள் வாங்க முயல்வதால் விலைவாசி ஏறுகிறது. (எல்லா விலைகளும் மாறிச், செலவுக்கோடு மேலே நகரும். எனவே ச' (E') இனை எளிதிற் பெறக்கூடிய சமநிலைத் தானமாகக் கொள்ளக்கூடாது.)

பூரண வேலைக்கோடான நிலைக்குத்துக் கோடு F (பூ) இற்கு வலப்புறத்தி லுள்ள பிரதேசம் கற்பனைப்பிரதேசம். அது, நாம் உற்பத்தி செய்ய

www.padippakam.com



விரும்புவது எது என்பதைக் காட்டும். நம்மால் சாத்தியமாகக்கூடிய உற்பத்தியைக்காட்டாது. பணவீக்க இடைவெளி பணவாட்ட இடைவெளிக்கு நேர் எதிரானதால், வேலை, உற்பத்தி என்பவற்றில் அதன் தாக்கம் சிறிதே வித்தியாசமுடையது. பணவாட்ட இடைவெளி, உற்பத்தியை இடப் பக்கம் நகரச் செய்யும். நகரச் செய்து பூரணவேலைமட்டத்தின் பாதிமட்டத்துக்கு அல்லது முக்கால் மட்டத்துக்கு இறங்கச் செய்யும். ஆனால் பணவீக்க இடைவெளி, வேலைவாய்ப்பை வலப்பக்கமாக 150 வீதத்துக்கு அதாவது கூடிய பட்ச வேலைவாய்ப்பின் 150 வீதத்துக்கு உயர்த்தமாட்டாது. உடைந்த கோடான பூரணவேலைக்கோட்டின் வலப்பக்கத்தில், மிகத்தூரம் பொருளாதாரம் உண்மையில் நகரமாட்டாது.

வாங்கும் சக்தியின் உபரி, விலையதிகரிப்பை உண்டாக்கும். அதனால் பணவீக்கமுண்டாகும். கடதாசி விலைமாற்றத்தால் தேசீய பண வருமானம் உயரும். ஆனால் நிசமான தேசிய உற்பத்தி அதனுடைய பூரண வேலை மட்டத்துக்கு மேலே செல்லாது. பணவீக்க இடைவெளியிருக்கும் வரை விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக்கும்.[1] அதாவது முதலீட்டுத் தேவையும், நுகர்வுத் தேவையும் வீழ்ச்சியடையும்வரை அல்லது அரசாங்கம் சரியான கொள்கையை அனுசரித்துப் பணவீக்கத்தை மாற்றும்வரை, விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக்கும்.

இக்கால வருமான ஆராய்ச்சி, வியாபார மந்தம்பற்றிய பொருளாதாரமன்று. பணவீக்கம் எவ்வாறுண்டாகிறது ; அதை எவ்வாறு நீக்கலாம் என்பனபற்றி அந்த ஆராய்ச்சியால் கண்ட உண்மைகளைக் கொண்டு நிவிர்த்தி காணலாம். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போதும், அதன் பின்னரும், கட்டுப்பாடு நீக்கப்பட்டபொருள்களின் விலை உயராமல் தடுப்பதற்காக எத்துணை வரி அவசியம் என்பதைக் காட்ட பணவீக்க இடைவெளிபற்றிய கருத்து அவசியமாயிற்று. வருமான ஆராய்ச்சி சம்பந்தமான அடிப்படை அமிசங்களை விளங்கிக்கொள்ளாவிட்டால் பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும் விவாதிக்கப்படும் முக்கியமான பொருளாதார விடயங்களை விளங்கிக்கொள்ளமுடியாது.[2]

### (இ) வருமானம் நிர்ணயிப்பதில் பிஸ்கால் கொள்கை.

பணவீக்க இடைவெளியோ, வாட்ட இடைவெளியோ பெரும்படியாக இருக்கும்போது, விலையேற்றத்தைத் தடுக்கவும், வேலையில்லாத் திண்டாட்

1. உயர்ந்த விலையோடு இந்த நிகழ்ச்சி நின்றுவிடாது. புதிய உயர்விலைமட்டம் சப்பிளையையும் தேவையையுஞ் சமநிலைப்படுத்தாது. ஆனால் வியாபாரிகள் பெறும் உயர்விலைகள் வேலை செய்வோருக்கோ, சொத்துரிமையுடையவருக்கோ உரித்தான வருமானமானபடியால் தேவை மேலும் உயரும்; அதனால விலைகளும் உயரும்; தொழிலாளர் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதால் உயர்ந்த சம்பளம் கேட்பர் ; அதனாலும் பணவீக்கம் ஏறிக்கொண்டேயிருக்கும். (பணவீக்கம் பற்றிய இந்தக் கொள்கையை 1939 இல் கேய்ன்ஸ் பிரபு எடுத்து விளக்கினர்.)

2. பணவீக்கம் பற்றிய ஆராய்ச்சியை மேலும் இரண்டாம் பகுதியிலும் ஆரும் பகுதியிலுமுள்ள அத்தியாயங்களிற் காண்க.

படிப்பகம்

www.padippakam.com



டத்தைக் குறைக்கவும் அரசாங்கத்தின் உதவி கோரப்படுகிறது. வரிக் கொள்கைகளும், அரசாங்கச் செலவுக் கொள்கைகளும் பிஸ்கால் கொள்கை யென வழங்கப்படும். இந்த பிஸ்கால் கொள்கையினுல் வருமானத்தின் சமநிலை மட்டம் மாறும். எனவே இந்தக் கட்டத்திலே நாம் அரசாங்கப் பிஸ்கால் கொள்கையை எமது ஆராய்ச்சியில் வெளிப்படையாகப் புகுத்தி, வருமான நிர்ணயம் எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கத் தலையீட்டினுல் எத்தகைய சமநிலை உண்டாகும் என்பதை அறிவதற்கு இப்போது நு + மு + அ (C + 1 + G) என்ற செலவுக் கோடு விடயமாக ஆராயப்போகிறேமென்பதை நீங்கள் இதுவரை ஊகித்திருக் கலாம்.

வரி வகைகள் ஒரே நிலையில் இருப்பதாக வைத்துக்கொண்டு, அரசாங்கத் தலையீடு செலவை எவ்வாறு பாதிக்கிறதென்பதை ஆரம்பத்தில் ஆராய்வது சுலபம். வரிகளைச் சேர்த்துக்கொண்டால் பைசலாகக் கூடிய வருமானம் தேறிய தேசிய வருமானம் என்பவற்றிடையேயுள்ள வித்தியாசத்தை அசட்டை செய்ய முடியாது. ஆனுல் வரிகள் நிரந்தரமானவை எனக் கொண்டால், அவை எப்பொழுதும் ஒரே வகையான தொகையினுற்றுன் வித்தியாசப் படும். அத்தகைய வரிகளைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, கூட நு நு (C C) நுகர்வுக்கோட்டை பை.வ. (DI) இலும்விட தே. தே. உ. (NNP) இலேயே கீறிவிடலாம்.

தேறிய தேசிய உற்பத்தி மூன்று பகுதிகளையுடையதென 11 ஆம் அத்தியாயத்திலே கண்டோம். அதாவது,

தே.தே.உ (NNP)= நுகர்வுச் செலவு + தனிப்பட்ட தேறிய முதலீடு — பண்டம் பணி என்பவற்றிலே அரசாங்கம் செய்யும் செலவு.

$$= \text{நு} + \text{மு} + \text{அ} \ (C + 1 + G)$$

எனவே, 13 ஆம் படத்திலுள்ள 45° கோட்டுவரைப்படத்தில், நுகர்வுக் கோட்டிலே, தனிப்பட்ட முதலீட்டையும் அரசாங்கச் செலவையும் மேலே பதிக்கவேண்டும். ஏன் ? தனிப்பட்ட புகையிரத வீதியமைப்பைப் போன்றதே பொதுவீதியமைத்தலும் ; இலவச நூல் நிலையத்தைப் பரிபாலிப்பதற்குச் செலவு செய்யும் கூட்டு நுகர்வுச் செலவு, சினிமா முதலிய தனிப்பட்ட நுகர்வுச் செலவைப்போலவே வேலை வாய்ப்புக்களைப் பாதிக்கும்.

தே. தே. உ. இன் ஒவ்வொரு மட்டத்திலும், செலவு செய்ய வசதியுள்ள முழுத்தொகையைக் காட்டும், நு+மு+அ (C+I+G) கோட்டைக் காண்கி றேம். தேசிய உற்பத்தியின் சமநிலை மட்டத்தை வாசிப்பதற்கு, 45° கோட்டை வெட்டும் தானத்தை நாடவேண்டும். தே தே. உ. சமநிலை மட்டத்திலே, எல்லாப் பண்டங்களிலும் தேசத்தவர் செலவிடவிருக்கும் முழுத்தொகை, இந்தப்பண்டங்களை உற்பத்தி செய்யச் செலவாகும் தொகைக்குச் சமமா யிருக்கும்.


படிப்பகம்

www.padippakam.com



**தேசிய வருமானத்தை நிர்ணயிக்கும் விடயத்திலே, நுகர்வு, முதலீடு போலவே அரசாங்கச் செலவுகள், செயற்படும்.**

வருமான நிருணயத்தின் மீது
அரசாங்கச் செலவின் விளைவு




படம் 13. நுகர்வுச்செலவு, முதலீட்டுச் செலவோடு நாம் இப்போது அரசாங்கம் பண்டம், சேவை என்பவற்றில் செலவு செய்வதையும் கூட்டியுள்ளோம். இஃது எமக்கு நு+மு+அ (C+I+G) என்ற கோட்டைத் தருகிறது. ச (E) புள்ளியில் இக்கோடு 45° கோட்டை வெட்டுகிறது. அதுவே சமநிலை. (அ (G) கூடினால் அல்லது குறைந்தால் என்ன நடக்கும், வருமானத்திலுண்டாகும் பெருக்குமெண் மாற்றங்களைக் குறிப்பிட முடியுமா ?)

தனிப்பட்ட முதலீட்டைப் போலவே அரசாங்கச் செலவும் வரிகளைக் கணக்கில் எடுக்காது கவனித்தால், வருமானத்தைப் பெருக்குமெண்முறையில் பாதிக்கும் என்பதை படம் 13 காட்டுகிறது. எனென்றால் அரசாங்கத் திடமிருந்து முதல் வருமானம் பெறுவோராகிய வீதியமைப்போரும் நூல் நிலையக்காரரும் சங்கிலித்தொடர்போன்ற மறிவினைகளை உண்டாக்கிவிடுகிறார்கள்.[1]

1. சேமிப்பு-முதலீடு வரைபடம் 45° கோட்டுவரைப்படம் கொடுக்கும் விடையையே தரும். அரசாங்கச் செலவில் அதிகரிப்பு உண்டாகுமானால், வரிகள் உயர்த்தப்படாதவரை, அரசாங்கத்துக்குப் பற்றுக்குறையுண்டாகிறது. தேறிய சேமிப்புத் தனிப்பட்ட முதலீட்டோடு அரசாங்கப் பற்றுக்குறைக்குச் சமமாயிருக்கும். முமு (II) கோட்டின் மேலே பற்றுக்குறையையுஞ் சேர்த்துக் கொள்ளுகிறோம். அதன் பயனாய்ப் புதிய வருமானச் சமநிலை மட்டம் சேசே (SS) கோட்டின் வெட்டுத்தானத்தில் கிடைக்கிறது. இதனினும் விரிவான ஆராய்ச்சிகளிலே ஊக்கிய முதலீடோ அரசாங்கச் செலவோ, (அதாவது மாறிய வருமான மட்டத்தாலுண்டாவது) பெருக்குமெண்ணில் எவ்வாறு பிரவேசிக்கிறதென்பதைக் காட்ட படம் 13 ஐப் பயன்படுத்துவோம். நு+மு+அ (C+I+G) கோட்டிலே ஓர் அலகு மேலே செல்வதால் உண்டாகும் இறுதியான வருமான மாற்றம் எப்பொழுதும் $1 \div (1-k)$ ஆகவேயிருக்கும். இங்கே K ஆனது நு+மு+அ (C+I+G) கோட்டின் சாய்வு ஆகும். இதனை இறுதிநிலைச் செலவு நாட்டமெனலாம்.

www.padippakam.com



மேலதிகமாக அரசாங்கம் 10 பில்லியன் டொலரைச் செலவு செய்கிற தென வைத்துக்கொள்வோம். அதை 13 ஆம் படத்திலே காட்டுவதானல் நு+மு+அ (C+1+G) ஐ, நு+மு+அ' (C+1+G') என மாற்றுக. அப்போது புதிய ச' (E') தே. தே. உ. (N.N.P.) இன் பெருக்குமெண் அதிகரிப்பைக் காட்டும்.

**வரியும், நுகர்வுக் கோடு கீழ்நோக்கிச் செல்லலும்.**

சமநிலே தே. தே. உ. (NNP) மட்டத்தில், வரிகள் உண்டாக்கும் தாழ்வுப் பலாபலன்களே இனி ஆராய்வோம். அரசாங்கம் தனது (1) செலவுகளே நிரந்தரமாக வைத்துக்கொண்டு, (2) எம்மிடமிருந்து வரியாக அதிகம் எடுக்குமானல் என்ன நடக்குமென்பதைப் பொது அறிவைக் கொண்டு நாம் உணரலாம். இதற்கு வரைகோடு தேவையில்லே. மேலதிக வரி யென்ருல், எமது பைசலாகக்கூடிய நிச வருமானம் குறைவென்று பொருளாகும். பைசலாகக்கூடிய வருமானங் குறைந்தால் நுகர்வுப் பொருள்களேக் குறைப்போம். முதலீடும், அரசாங்கச் செலவும் ஒரே அளவிலிருக்குமானல், நுகர்வுச் செலவைக் குறைப்பதால், தேறிய தேசீய உற்பத்தியும் வேலே வாய்ப்பும் குறையும்; அல்லது முன்பே வீக்க இடைவெளியிருந்தால், புதிய இவ்வரிகள் அந்த இடைவெளியை நிரப்பி, மேலதிகமான வீக்க விலேவாசிகளே நீக்கிவிடும்.

எமது வரைப்படம் இதை நிருபிக்கும். மு. + அ (1 + G) மாறவில்லே. இப்போது வரிகள் அதிகரித்ததால், பைசலாகக்கூடிய வருமானம் குறையும்; ஆனல் நுகர்வுக்கோடு கீழே இறங்கும். எனவே நு + மு + அ (C + 1 + G) கோடு கீழ் நோக்கி நகரும். இது 45° கோட்டை வெட்டும் புதிய தானம் தே. தே. உ. இன் தாழ்வான சமநிலே மட்டத்திலேயிருக்கும்.

படம் 14, நுநு (CC) கோட்டை வரி ரசீதுகள் எவ்வாறு கீழ்நோக்கி நகரச் செய்கின்றனவென்பதைக் காட்டும்[1]. உதாரணமாக, மக்கள் $\frac{2}{3}$ இறுதிநிலே நுகர்வு நாட்டமுள்ளவரெனக் கொள்வோம். 30 பில்லியன் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதனல் பைசல் வருமானம் தே. தே. உ. இற்குக் கீழே 30 பில்லியன் டொலரால் வீழ்ச்சியடைகிறது. நுகர்வும் 30 பில்லியன் டொலரால் வீழ்ச்சியடையுமா ? இல்லே $\frac{2}{3}$ இறுதிநிலே நுகர்வு நாட்டமிருப்பதால் நுகர்வு 20 பில்லியனுகவே வீழ்ச்சியடையும். தனிப்பட்ட சேமிப்பு எஞ்சிய 10 பில்லியனுக வீழும்.

(குறிப்பு : பொது அறிவினல் உடனே அறிய முடியாத ஒரு விடயம் இப்போது தெளிவாயுள்ளது. மு + அ (1+G) இலே உண்டாகும் 20 பில்லியன் டொலர் உயர்வை ஈடுசெய்ய 20 பில்லியனுக்கு அதிகமாக வரி

[1] 14 ஆம் படத்திலே நுநு (CC) மாறுவதை வீழ்ச்சியாகவோ, வலப்பக்கம் நகர்வதாகவோ கொள்ளலாம். வலப்பக்க நகர்வு வரியின் முழுத்தொகைக்குச் சரி. ஏன் ? தே. தே. உ. இன் சம்பந்தப்பட்ட பைசல் வருமானத்தைப் பெறவும் U இலே காட்டிய நுகர்வைப் பெறவும் தே. தே. உ. இன் V இலிருந்து முழுவரியையும் கழிக்கவேண்டும். விரிவான ஆராய்ச்சிகளில் இந்நிலேமைகட்கு நிபந்தனேகளுண்டாகும்.

படிப்பகம்


www.padippakam.com



திரட்ட வேண்டும். இதன் கருத்தென்ன ? (1) பூரணவேலை வாய்ப்புப் பொருளாதாரத்தோடு அரசாங்கத்தின் இராணுவப் பாதுகாப்புச் செலவு கூட்டப்பட்டால் (2) வரவு செலவைச் சரிக்கட்டுவதற்காகத் தேவைக்கதிகமான அளவு வரிகளை உயர்த்தவேண்டும். அப்பொழுதுதான் வீக்க இடைவெளியைத் தவிர்க்கலாம்).

மோசமானதொரு வியாபார மந்தத்தைப் போக்குவதற்கு, வரிகளைக் குறைத்தல் அவசியமென்பதை விளக்க மேலே கூறிய நியாயங்களை அடிதலைமாறிக் கூறவேண்டும். ஒவ்வொரு டொலர் வரிக்குறைப்பும் நு. நு. (CC) இனை உயரமாக இடப்புறம் நகரச் செய்யும். அதனால் மக்களுடைய பைசல் வருமானம் ஒவ்வொரு டொலராக அதிகரிக்கும். அதனால் ஆரம்ப நுகர்வுச் செலவு ஏறக்குறைய ஒவ்வொரு டொலரால் உயரும். டொலர் டொலராக வரிகளைக் குறைப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் ; அரசாங்கம் டொலர் கணக்கில் செலவை உயர்த்துவதாலும் இத்தகைய நிலையே உண்டாகும். செலவுத்திட்டத்திலும் பார்க்க இத்தகைய திட்டம் அதிகமான வரவு செலவுப் பற்றுக்குறை உடையதாயிருக்கும். மேலும் அரசாங்கத்துறையை விடத் தனியார் துறையிலேதான் பொருளாதார விரிவு உண்டாகிறதென்பதும் தெளிவாகிறது.

**உயர் வரிகள் பைசல் வருமானத்தையும் நுகர்வையும் வெட்டும்**




படம் 14. வரி உயர்ந்தால் நுகர்வுக்கோடு நுநு (CC) இறங்கும். எவ்வளவு ? 30 பில்லியன் டொலர் வரி 10 பில்லியன் சேமிப்பு டொலரையும் நுகர்வு 20 பில்லியன் டொலரையும் வெட்டும். (இ. நு. நா $\frac{2}{3}$) வரி நுகர்வை 30 பில்லியன் டொலர் வலப்பக்கமாகவும் 20 பில்லியன் டொலர் கீழாகவும் நகர்த்தும். அதாவது UV = 30 VW = 20 (நுநு(CC) இறங்கினால் நு ÷ மு ÷ அ (G ÷ H ÷ A) உம் இறங்கும். படம் 13 இல் அங்கே வரி உயர்வினால் ஏற்படும் வருமான வீழ்ச்சியைக் காட்டுக.)

**சேமிப்பு—முதலீடு ஆராய்ச்சிக்கு நிபந்தனைகள்.**

இந்த அத்தியாயத்திலே ஆராயப்படும் வருமான நிர்ணயம் பற்றிய கொள்கை பலம் பொருந்திய ஆயுதமாகும்[1].

[1] வரிகளைப் போலவே கூட்டுச் சேமிப்பையும் வரவுமுறையில் கையாளலாமென்பதை விரிவான ஆராய்ச்சிகள் காட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வியாபாரச் சக்கரத்தின் உயர்வு தாழ்வுகளை இது தெளிவுபடுத்துகிறது. வெளிநாட்டுக் கடன் (இதுவும் மொத்தத் தேறிய முதலீட்டின் ஒரு பகுதி) உள்ளூர் வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதையுந் தெளிவாக்குகிறது. பணவீக்கத்தையும் வேலையின்மையையும் போக்குவதற்கு அரசாங்கத்தின் பிஸ்கால் கொள்கை எவ்வாறு உதவுமென்பதையுங் காட்டுகிறது. இவ்விடயங்களெல்லாம் எதிர்வரும் அத்தியாயங்களிலே ஆராயப்படுகின்றன.

சேமிப்பு, முதலீடு என்று கிளிப்பிள்ளைபோலச் சொல்லிக்கொண்டிருந்தால் பொருளியலறிஞராகிவிட முடியாது. இந்தக் கோடுகள் காட்டும் விடயங்களுக்குப் பின்னால் பல கருமங்கள் நடைபெறுகின்றன. அடுத்த அத்தியாயத்திலே வர்த்தகச்சக்கர வரலாறு ஆராயப்படும். அதன் பின்னர் பணம், வங்கி என்பன ஆராயப்படும். வட்டி வீதம், கடன் மாற்றங்கள் என்பன முதலீட்டுக் கோட்டை எவ்வாறு மாறச் செய்கின்றன என்பவை பின்னர் தெளிவாக்கப்படும்.

அரசாங்கக் கடன்பத்திரங்களையும், வேறு செல்வங்களையும் பொதுசனம் அதிகமாக வைத்திருக்குமானால் நுகர்வுக்கோடு மேலே உயரலாம். வாழ்க்கைத்தரம், (புதிய பொருள்களின் உற்பத்தியாலும், வர்த்தக விளம்பரங்களாலும்) உயர்ந்தால் நுகர்வுக்கோடு முன்போல மேலே உயரும்.

முதலீடு எப்போதும் தன்னுரிமையுடைய காரணமென்றும், நுகர்வு வருமானத்திலே தங்கியுள்ள செயற்பாட்டுக் காரணமென்றும் நினைப்பது விடயத்தை மிகச் சுலபமாக்குமொரு நிலையாகும். அஃது உண்மையே. குறுகிய காலத்திலே சில தேறிய முதலீடுகள் வருமான மாற்றத்தால் ஊக்கப்பட்டனவாகலாம். மேலும் வட்டிச் செலவினாலும், கடன்படுவதிலுள்ள சகாயங்களினாலும் முதலீட்டுப் போக்கில் மாற்றமுண்டாகலாம். மேலும் வருமானம் நிலையாய் நின்றாலும், நுகர்வு சில சமயம் தானாகவே மாறக் கூடும். சேமிப்பு முதலீட்டோடும் 45° கோட்டு வரைப்படங்களோடும் ஆராய்ந்தால் நுகர்விலும் சேமிப்பிலும் உள்ள மாற்றங்கள் தேசீய வருமானத்திலே பெருக்குமெண்மயமான பலாபலனைக் காட்டுமென்பதை அறியலாம். முதலீட்டு மாற்றங்களில் உள்ள பெருக்குமெண் பலாபலன் போன்றதே இதுவும் எனலாம்.

**சுருக்கம்.**

**அ. வருமானம் நிச்சயித்தல்.** மக்கள் பணத்தைச் சேமிக்க விரும்பும் நோக்கங்கள் பெரும்பாலும், கம்பெனிகள் முதலீடு செய்ய விரும்பும் நோக்கங்களிலும் பார்க்க வித்தியாசமானவை. புதிய சனப்பெருக்கம் புதிய பிரதேசம், புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய ருசிகள் போன்ற வளர்ச்சி அமிசங்களிலேயே தேறிய முதலீடு தங்கியிருக்கிறது. நுகர்வும் சேமிப்பும், தேசீய வருமானத்தை அனுசரித்துக் கீறப்பட்ட கோடுகளுக்கு ஏற்பவே செயற்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



2. மக்கள் சேமிக்க விரும்புவதும், தொழில்தாபனங்கள் முதலீடு செய்யவிரும்புவதும் ஒன்றுக்கொன்று இணக்க முள்ளதாக்கப்படுவது வருமானத்திலேயுண்டாகும் மாற்றங்களினுலேயே. வருமானத்தின் சமநிலை மட்டம், சேமிப்பு, முதலீடு இரண்டும் ஒன்றையொன்று வெட்டும் தானத்திலேயே இருக்க வேண்டும். அதாவது, நுகர்வு முதலீட்டுக்கோடும், 45° கோடும் வெட்டுமிடத்திலிருக்கவேண்டும்.

3. சமநிலை மட்டத்துக்கு மேலே வருமானங்கள் தற்காலிகமாக இருக்குமானுல், உத்தேச உற்பத்திச்செலவைப் பெறக்கூடிய விலைகளில் உற்பத்தி செய்த பொருள்களையெல்லாம் வியாபாரத்தாபனங்கள் விற்கமுடியாதிருக்கும். சிறிது காலத்துக்கு உற்பத்திச் சரக்கு விலைப்படாமல் குவிந்து கொண்டேயிருக்கும் அல்லது இலாபம் இல்லாது விலையாகும். ஆனுல் நாளடைவிலே வேலை வாய்ப்பும், உற்பத்தியும் சமநிலைமட்டத்தை அடைந்துவிடும். குடும்பத்தவர் தாமாக நினைத்து, வியாபாரத்தாபனங்கள் சுயேச்சையாக முதலீடு செய்யும் அளவுக்குச் சேமித்தால், அந்த வருமானத்தையே மாருமல் நிலைநிறுத்த முடியும்.

4. சுருக்கமாகக் கூறுவதானுல் முதலீடே வருமானத்தை மாற்றும் சக்தியுடையது. நிலைநிறுத்தக் கூடிய முதலீட்டு மட்டத்துக்கு, சுயேச்சைச் சேமிப்போ, திட்டப்படுத்திய சேமிப்போ தம்மைச் சரிபடுத்தும்வரை முதலீடு வருமானத்தை எழவும் விழவுஞ் செய்யும். இது விடயத்தை இலகுவாக்கிக் கூறியவாருகும்[1].

## (ஆ) முதலீடும் வருமானமும்

5. முதலீடும், (தாஞக உண்டாகும் தனிப்பட்ட கோட்டு மாற்றமும்) வருமானத்திலே பெருக்குமெண் பாதிப்புடையனவாகும். முதலீடு மாறினுல் தேசிய வருமானத்திலும் அதே அளவான பிரதம மாற்றமுண்டாகிறது. ஆனுல் இந்தப் பிரதம வருமானத்தைப் பெறும் மூலதன–பொருள் தொழிற்ருபனங்களில் உள்ளோர் அதிகமான உழைப்பு வருமானத்தைப் பெறுவதால் அவர்கள் இரண்டாம்படியான நுகர்வு, வேலைவாய்ப்பு வசதிகளைச் சங்கிலித்தொடர்போல உண்டாக்கிவிடுகிருர்கள். மேலதிகமாக வரும் ஒவ்வொரு டொலர் வருமானத்திலும் $\frac{2}{3}$ பங்கை ஒருவர் நுகர்விலே எப்பொழுதும் செலவு செய்தால் பெருக்குமெண் தொடரின் மொத்தம்

$$1+2/3+(2/3)^2+\ldots\ldots\frac{1}{1-2/3}=3 \text{ ஆகும்.}$$

1. மக்கள் மேற்கொண்டு நிலைநிறுத்த விரும்பும் சேமிப்பும், வியாபாரத் தாபனங்கள் நிலைநிறுத்த விரும்பும் முதலீடும் சமமாயிருக்கும் நிலையே தேசிய வருமானத்தைத் திரமாய் நிற்கச் செய்யும் சமநிலையாகும். இந்தச் சமன்பாடு வேறு ; 11 ஆம் அத்தியாயத்தின் அனுபந்தத்தில் ஆராய்ந்த ஒவ்வொரு வருமானமட்டத்திலும் அளந்த சேமிப்பும், முதலீடும் வேறு.

www.padippakam.com



பெருக்குமெண்ணுவது முதலீட்டின் அதிகரிப்பையோ, குறைவையோ பெருக்கிக் காட்டுவதால் முன்னும் பின்னும் வேலை செய்யும். இலகுவான பெருக்குமெண் இறுதி நிலைச்சேமிப்பு நாட்டத்தின் மறிவினைத் தொகைக்குச் சமமாயிருக்கும். இதற்குக் காரணம் சேமிப்பிலே ஒரு டொலர் மாற்றத் தையுண்டாக்க வேண்டுமானுல் வருமானத்திலே ஒரு டொலருக்கு அதிக மான மாற்றமிருக்க வேண்டும் என்பதே.

6. சமூகம் முழுவதற்குமாக அதிகமாகச் சேமித்துக் கொள்வது ஒரு விடயம். அவ்வாறு சேமிக்க முயல்வது மற்றொரு விடயம். "சிக்கனத் தின் முரண்" என்பது எடுத்துக்காட்டுவதுபோல் சிக்கனத்திலே அதிகரிப்பு உண்டானுல், முன்னே குறைந்து போன வருமானம் மேலும் குறையும். முதலீடு மேலும் தூண்டப்படுவதன் பலனுக, தேறிய முதலீடு குறைந்து போகும். வேலைவாய்ப்புப் பூரணமாகவோ, மாருமலோ இருந்தாற்முன் நுகர்வும் முதலீடும் போட்டியாயி நக்கும். அப்பொழுதுதான் தனிப்பட்ட தருமங்கள் சமூகத் தருமங்களாகும்.

வியாபாரமந்தமான காலங்களில் தேசாபிமானியாயிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு, எவரும் தமது பணத்தை வீண் விரயஞ்செய்யக்கூடாது. அதற்குப் பதிலாக பொருத்தமான தேசீயக் கொள்கைகள் மூலம் நாம் உயர்ந்த வேலைவாய்ப்புண்டாகக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

7. சுருக்கமாகக் கூறுவதானுல், நாம் பணவீக்க இடைவெளியையும் பணவாட்ட இடைவெளியையும் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் பூரண வேலைச்சேமிப்பும், முதலீடும் வீக்கமின்றிச் சமன்படும். பணவாட்ட இடை வெளியை அல்லது பணவீக்க இடைவெளியை அளக்கும்போது, அது பூரணவேலை வருமானத்திலே சேமிப்பு முதலீடு என்ற கோடுகளுக்கிடையே யுள்ள குத்துநிலை வேறுபாடாக அமையும். அதுவே நு+மு (C+1) இற்கும் (இது நு+மு+அ (C+1+G) ஆக அரசாங்கம் சேர்ந்ததும் மாறும்) 45° கோட்டுக்குமிடையேயுள்ள குத்துநிலைத்தூரமாகும்.

## இ. பிஸ்கால் கொள்கையும் வருமான நிர்ணயமும்.

8. அரசாங்கச் செலவில் அதிகரிப்பு–அதாவது வரிகள், முதலீடுகள் மாருமல் இருக்கையில், தேறிய முதலீட்டைப் போலவே, தேசீய உற்பத்தி யிலும் விரிவை உண்டாக்கும். நு+மு+அ (C+1+G) என்ற கோடு 45° கோட்டை வெட்டிக்கொண்டு புதியதொரு நிலையை அடையும்.

9. முதலீடும் அரசாங்கச் செலவும், மாருமலிருக்கையில் வரிகளிலே அதி கரிப்புண்டானுல் தேசீய உற்பத்தியின் சமநிலைமட்டம் இறங்கிவிடும். தே. தே. உ. (N.N.P.) இற்குச் சார்பாகக் கீறப்பட்ட நுகர்வுக்கோடு கீழ்நோக்கி வலப்பக்கமாக வரிகளால் நகர்த்தப்படும். மேலதிகமான வரு மானமாயுள்ள டொலர்களில் ஒரு பகுதி சேமிப்புக்குச் செல்வதால், நுகர்விலே ஏற்படும் டொலர் வீழ்ச்சி, புதிய வரிகளிலும் பார்க்க அதிக மாயிராது. எனவே, குறிக்கப்பட்டதொரு வீக்க இடைவெளியையோ, வாட்ட

படிப்பகம்

www.padippakam.com



இடைவெளியையோ சமாளிப்பதற்கு, வரிவிதிப்பில் பெரிய மாற்றமேற் படுத்த வேண்டியிருக்கும்.

10. வருமான நிர்ணயத்தைப் பற்றிய இலேசான கொள்கையில் உள்ள அடிப்படை உண்மையையும், அதற்குத் தேவையான நிபந்தனைகளையும் அறிவதிலேதான் பொருளியற் சாத்திரம் தங்கியிருக்கிறது. தேசிய வரு மான மட்டங்களை நிர்ணயிக்கும் கோடுகளில் வட்டி வரிவிதிதங்களும் ஏனைய காரணங்களும் எவ்வாறு மாற்றத்தையுண்டுபண்ணுகின்றன என்பதைப் பின்னருள்ள அத்தியாயங்களிற் காண்போம்.

18 ஆம், 19 ஆம் அத்தியாயங்களிலே, அரசாங்கப் பணக்கொள்கையும், பிஸ்கால் கொள்கையும் ஆராயப்படும். அதற்கிடையிலே வியாபாரச் சக்க ரம், பணம், வங்கிக் கொள்கை, வட்டி என்ற இன்னோரன்ன விடயங்களைப் பற்றி ஆராய்வோம்.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்**

1. சேமிப்பு முதலீட்டுப் படமும், 45° கோட்டுப்படமும் (அல்லது C + I) தேசிய வருமானம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றனவென்பதைக் காட்டுவதற்குரிய இரண்டு வழிகளாகும். இவ்விருவழியையும் விவ ரிக்க. இரண்டும் சமன் என்பதைக் காட்டுக. இவற்றில் நீர் எதை விரும்பு கிறீர்?

2. அட்டவணை 1 ஐ தேறிய முதலீடு (அ) 40 பில்லியன் டொலருக்குச் சமம் எனக் கொண்டும் (ஆ) 50 பில்லியன் டொலருக்குச் சமன் எனக் கொண்டும் புனரமைப்புச் செய்க. தேசிய வருமானத்திலேயுண்டாகிய வித்தியாசமென்ன? முதலீட்டிலேயுண்டான மாற்றத்திலும் இது பெரிதா சிறிதா ? ஏன் ?

3. (1) பொது அறிவு (2) பெருக்குமெண்ணைப் பற்றிய எண்விருத்தி (3) பெருக்கு விருத்தி என்பவற்றைச் சில கட்டங்களில் கூறுக. இறுதிநிலை நுகர்வு நாட்டம்—0.9 ; 0.8 ; 0.5, ஆக இருக்கும்போது அதன் வெவ் வேறு பெருக்குமெண்கள் யாவை ?

4. படம் 3 இலே, வாட்ட இடைவெளியை எவ்வாறு அளக்கலாம் ? 4 ஆம், 5 ஆம் படத்தில் எவ்வாறு அளக்கலாம் ? அட்டவணை 1 இல் எவ்வாறு அளக்கலாம். வீக்க இடைவெளியைக் காட்டப் படங்களை எவ்வாறு மாற்றுவீர்?

5. சிக்கனத்துக்குச் சார்பாகவும் எதிராகவுமுள்ள காரணங்களைக் கூறுக. (அ) தனிப்பட்டவர் கருத்து, சமூகத்தின் கருத்து என்பவற்றை ஆராய்க. (ஆ) வியாபார மலர்ச்சி, மந்தம் என்பவற்றை ஆராய்க.

6. (அ) அரசாங்கச்செலவு, (ஆ) வட்டிகள் (இ) ஏற்றுமதி வியாபாரம் இறக்குமதியினும் அதிகமாயிருத்தல் (அதாவது வெளிநாட்டுத் தேறிய நேர்க்கணிய முதலீடு) என்பவற்றுல் வருமானத்திலேற்படும் விளைவுகள் யாவை?

www.padippakam.com



7. "பிஸ்கால் கொள்கையின் நோக்கம் பணவீக்கம், பண வாட்டம் என்பவற்றாலுண்டாகும் இடைவெளிகளை நீக்கிவிடுவதே. நு+மு+அ (C+1+G) மிக அதிகமானால் பணவீக்க இடைவெளியுண்டாகும். வரிகளை உயர்த்துவதனால் $நு^1+மு^1+அ^1$ $(C^1+1^1+G^1)$ என்ற புதியகோட்டைக் கீழே இறக்குகிறோம். இதனால் வீக்க இடைவெளியை நீக்குகிறோம்". இதை விளக்குக. வாட்ட இடைவெளியை நீக்க வரிகளுக்கு என்ன செய்வீர்? அரசாங்கச் செலவுக்கு என்ன செய்வீர்?

8. பின்வரும் கருத்துக்களைப் புனராலோசனை செய்க.

முதலீடு, சேமிப்பு, நுகர்வுக்கோடுகள்; 45° கோடுகள்.

சமநிலைக்குறுக்கு வெட்டு; சமநிலைமட்டத்தை அடையாவிட்டால் உம்மை இயக்கும் சக்திகள்; முதலீட்டு பெருக்குமெண் வலு; சேமிப்பு மாற்றம் நுகர்வுமாற்றத்தால் வருமானத்திலே பெருக்குமெண் பலாபலன்; தூண்டல் முதலீடு; சிக்கன முரண்; (C+1+G) நு+மு+அ கோடு; பிஸ்கால் கொள்கை ; நுநு (CC) இலும் ச (E) இலும் வரியினாலுண்டாகும் பயன்; பணப்பெருக்க இடைவெளி; பண வாட்ட இடைவெளி; ஒன்றுசேர்ந்த பணவீக்கம்; ஆராய்சிக்கு நிபந்தனைகள்.

படிப்பகம்

www.padippakam.com

# பதினான்காம் அத்தியாயம்

## வர்த்தகச் சக்கரமும் முன்னரே உய்த்துணர்தலும்

*புரூட்டஸ் ! எங்கள் கிரகங்களிற் குற்றத்தைப்*
*போடாதே, எங்களிலேதான் குற்றமுண்டு.*


*— வில்லியம் ஷேக்ஸ்பியர்.*

நாங்கள் சேமிப்பு, முதலீடு என்பவற்றின் சமநிலையாகிய தேசீய வருமானத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரச் சக்திகளைப்பற்றி இதுவரை ஆராய்ந்தோம். தேசீய வருமான மட்டம், எவ்வாறு உயர்ந்தும் தாழ்ந்தும் சலனப்படுகிறதென்பதையும், பொருளியலறிஞர் எதிர்காலத்தைப்பற்றி எவ்வாறு முன்னேறியே தீர்க்கதரிசனம் கூறக்கூடியவராயிருந்தனரென்பதையும் பற்றி ஆராயவிரும்புகிறோம். பொருளியலில், திட்டமான கொள்கைகள் இருக்கும் ; பின்னர் அனுபவத்தில் காணும் தகவல்கள் கவனமாக ஆராயப்படும்.

### சுபீட்சமும், வியாபார மந்தமும்

வியாபாரம் எப்பொழுதும் ஒரே நிலையிலிருப்பதில்லை. சுபீட்சத்தின் பின்னர் மந்தமும் அதனால் திகிலும் உண்டாகும். தேசீய வருமானமும், வேலைவாய்ப்பு நிலையும், உற்பத்தியும் வீழ்ச்சியடையும். விலைவாசிகளும், இலாபங்களும் வீழும். மக்கள் வேலையின்றித் திண்டாடுவர். இந்தநிலை அடித்தளத்தையடைந்த பின்னர் மறுமலர்ச்சியுண்டாகும். இந்தப் புன

**வியாபாரச் சக்கரங்கள் அமைதி பெறுகின்றனவா ?**







படிப்பகம்

ருத்தாரணம் விரைவாக உண்டாகலாம்; அல்லது மெதுவாக உண்டாக லாம். அஃது அரைகுறையாக இருக்கலாம்; அல்லது பலமுடையதாய்ப் புதியதொரு வியாபார மலர்ச்சிக்கேதுவாகலாம். இந்தப் புதிய சுபீட்சம் நீண்டகாலம் ஒரே நிலையாக இருக்கலாம். பொருள்களுக்கு விரைவான தேவையுண்டாகலாம்; வேலை வாய்ப்பு நிறைய இருக்கலாம்; விலைவாசி கள் நன்றாயிருக்கலாம். வாழ்க்கைத்தரம் உயரலாம். அல்லது; விலை களும் வியாபார ஊகங்களும் மடமடவென்று உயர்ந்து பணவீக்கமுண் டாகலாம்; அதன்பின்னர் மந்தமுண்டாகலாம்.

கடந்த ஒன்றரை நூற்றாண்டாக, உலகத்துக் கைத்தொழில் நாடுகளிலே ஏற்பட்ட வியாபாரச் சக்கரம் சுருக்கமாக இதுவே. அந்தக் காலந்தொட்டுப் பரஸ்பரத் தொடர்புள்ள பணப் பொருளாதாரமானது, அதற்குமுன், சுய தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியதாயிருந்த வியாபார சமுதாயத்துக்கு முந்தி நிலவிய சமுதாயத்துக்குப் பதிலாக, அதன் தானத்தைப் பெற்றது.

வியாபாரச் சக்கரங்கள் இரண்டு, எக்காலத்திலும் ஒரேவிதமாக இருப்ப தில்லை. இருந்தும், இரண்டுக்குமிடையிலே பொதுத்தன்மைகள் பலவுண்டு. இரண்டும் வித்தியாசமில்லாத இரட்டைப் பிள்ளைகள் அல்ல. எனினும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையெனச் சுட்டியறியலாம். இறந்தகாலத்து வியாபாரச் சக்கரங்களோ, எதிர்காலத்து வியாபாரச் சக்கரங்களோ நிகழும் பருவத்தைப்பற்றிக்கூற சந்திரனின் போக்கு, பெண்டியூலத்தின் சலனம் என்பனவற்றைப் பற்றிக் கூறுவதற்குப் பயன்படும் வாய்பாடுகளைப்போல, திட்டமான வாய்பாடுகள் கிடையா. இவை தொற்று நோயைப் போலவும், பருவங்களின் நிலையில்லாத்தன்மைபோலவும், குழந்தையின் தட்பவெப்ப நிலையிலேற்படும் மாற்றம்போலவுமிருக்கின்றன. தொழில் வாய்ப்பையும் உற்பத்தியையும் நல்லமட்டத்தில் வைத்திருக்கவும், முன்னேற்றமான பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை




படம் 1. இப்போது 20 வருட மாகக் குறிப்பிடத்தக்க மந்தங் கள் உண்டாகவில்லை. ஆனால் எமது சரித்திரத்தில் அவ்வாறே எப்போதுமிருந்ததில்லை. (மூலம்: கிளிவ்லண்ட் ட்ரஸ்ட் கோ:)

www.padippakam.com



யின் மற்றோர் அமிசமே வியாபாரச் சக்கரமாகும். முன்னுரையாகக் கூறப்பட்ட குறிப்புக்களிலிருந்து இது தெரியவரும்.

**வியாபாரச் சக்கரத்தை அளந்து முன்னறிந்து கூறல்**

படம் 1 இலே, வியாபாரச் சக்கரம் நிகழ்வதை நிச்சயமாகக் கூற முடியாத தன்மையால், எமது பொருளாதாரம் எத்துணைச் சீர்கேட்டை அவ்வப்போது அடைந்ததென்பதைக் காணலாம். இவை நமது வரலாற்றில் கண்ட நிகழ்ச்சிகள். 1929 ஆம் வருடத்துக்குப் பின்னர் உண்டான பெரிய மந்தத்தைப்போல நட்டத்தை உண்டாக்கியது வேறெதுவுங் கிடையாது. இங்கிலாந்து, ஜேர்மனி முதலிய தேசங்களிலும் மிகக் குறைவான வேறுபாடுகளோடு இத்தகைய வியாபாரச் சக்கரச் சுழற்சி காணப்பட்டது. ஆனால் வயதால் மிகக் குறைந்ததும், வீறுள்ளதுமான அமெரிக்கா போன்ற ஒரு தேசத்திலே, மற்றத் தேசங்களைவிட அதிகமான வேலை யில்லாத் திண்டாட்டமும், வேலையின்மையிலே பெரிய தாரதம்மியமும் காணப்பட்டது நூதனமே. 1933 இல் எமது வேலையில்லா வீதம் ஜேர் மனியின் வீதத்தோடு போட்டியிட்டுக் கொண்டிருக்கையில், இந்த நிலைமை உண்டானது மட்டுமல்ல; அதற்கு எத்தனையோ ஆண்டுகட்கு முன்னரும், நம்மிடம் குறிப்புகள் உள்ள காலம் தொட்டு இவ்வாறே நடந்து வந்திருக் கிறது. கடந்த 20 வருடங்களாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமில்லாதிருந்து வருகிறது.


படம் 2 இலே, சமீபகாலத்துப் பொருளாதாரப் "பருவத்தொடர்" பல ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம், பங்குச்சந்தைவிலைகள், வீடுகட்டல் என்பவற்றி லெல்லாம், பரந்து அடித்துக்கொண்டிருக்கும் வியாபாரச் சக்கரத்தின் நாடி ஓட்டத்தைக் கவனிக்கவேண்டும். பொருளாதாரப்பற்றில்லாத விவாகம், பிறப்பு, சத்தில்லாத உணவு போன்ற விடயங்கள் பற்றியும் தரவுகள் கொடுக்கப்பட்டால், அவற்றிலேகூட வியாபாரச் சக்கரத்தின் ஆதிக்கத்தைக் காணக்கூடியதாயிருக்கும். அரசியல் தேர்தல்கள்கூட வியாபாரச் சக்கரத் தையே பின்பற்றுகின்றன.

பொருளியலறிஞர், பிரசைகள் என்றவகையிலே, மொத்த வேலை வாய்ப்பு, மொத்த உற்பத்தி, மொத்த (நிச) தேசீய வருமானம் என்ப வற்றிலுண்டாகும் ஏற்றத்தாழ்வுகளிலே முதற்கண் அக்கறையுடையவரா யிருக்கிறோம். ஆனால் பல நாடுகளிலே பல தசாப்தங்களைப் பொறுத்தவரை யில் அந்தத் தகவல்களைப் பெறுவது துர்லபம். பலவகையான இரண்டாந் தரத் தொடர்களிலே சில நிபுணர் அக்கறையுடையவராயிருக்கின்றனர். அதாவது பங்குவிலைகள், மொத்தவிலைகள், இலாபங்கள், உருக்கு உற்பத்தி முதலியவற்றில் அவர்கள் அக்கறையுடையவராயிருக்கின்றனர். புள்ளி விபரம் தயாரிப்போர், வார்ப்பிரும்பு உற்பத்திபோன்ற பருவத் தொடர்களை வியாபாரச் சக்கரத்துக்கு அறிகுறியாகக் கொள்வர். சில சமயம் மின்சார உற்பத்தி, வங்கியில் மாற்றப்பட்ட பணப்பெறுமதி முதலிய பல தொடர்

களின் சராசரியை எடுத்து அவற்றை ஒன்று சேர்த்து, வியாபாரச் சக்கரத்தின் போக்கை அறிகிருர்கள். படம் 1 அத்தகைய வியாபார முயற்சியின் அறிகுறியாகும்.

இப்போதைக்கு, நாம் தகவல்களையும் புள்ளிவிபரங்களையுமே எடுத்துக் கொள்வோம். பின்னர் தகவல்கள் காட்டிக்கொண்டிருக்கும் விரிவான மாதிரிப் போக்குகளை விளக்குதற்கு கருதுகோள்களையும் விளக்கமாயமைந்த கொள்கைகளையும் உருவாக்கலாம். இவை, மாதம், மாதம் நிகழும் நிகழ்ச்சிகளை விளக்குவனவாயமையாது போகலாம்.

**பொருளாதார நடவடிக்கைகளிற் பல ஒன்ருகவே மேலுங்கீழும் இயங்குகின்றன.**




படம் 2. இருண்ட வண்ணமான பகுதிகள் சுருங்கும் நிலையையும், ஒலி வண்ணமான பகுதிகள் விரிவடையும் நிலையையும் குறிக்கின்றன. முதலீட்டைப் போன்று பெரும்பாலுமுள்ள கீழ் வளைகோடுகள் பெரிதளவில் ஏற்றவிறக்கங்களைக் காட்டுவதைக் கவனிக்க. "விரைவாகத் திரும்பும் வளைகோடுகளை" நீர் கண்டு கொள்ள முடியுமா? (மூலம்: அ. வர்த்தகத் திணைக்களம்).

www.padippakam.com



**பருவபூர்வமான மாற்றங்களுக்கும், புதிய போக்குக்களுக்கும் ஏற்ற புள்ளி விபரத் திருத்தம்**

நீண்டகாலப் போக்குச் சிலவற்றையும், பருவமயமான மாதிரிகளையும் புள்ளிவிபரத் தகவல்களிலிருந்து நீக்கிவிடவேண்டும். இவை தேவையற்றவை. அத்துடன் குழப்பத்தையுண்டாக்குபவை. 1957 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து டிசெம்பர்வரை, சீயர்ஸ் ரோபக்கின் விலைகள் உயருமானால் 2 ஆம் படத்திற் காட்டிய 1957 இன் பின்னடைவு இல்லையென்று கூறமுடியாது. கோடையில் கேப்கொட் ஓட்டல்களில் நெருக்கமுண்டாவது போல, கிறிஸ்மஸ் காலங்களிலே சில்லறை வியாபாரம் உயர்கிறது. முந்திய வருடத்து மாதிரிகளை ஆராய்ந்து பருவகாலமாற்றங்களைப் புள்ளிவிவர ஆராய்ச்சிக்காரர் தவிர்க்கப்பார்க்கிறார். வருடத்திலே ஒவ்வொரு மாதச் சராசரி விற்பனையிலும் 150 வீதம் அதிகமாக, ஒவ்வொரு டிசெம்பரிலும் பொருள் விலையாகிறதுதெனவும், ஒவ்வொரு ஜனவரியிலும் 90 வீதமே விலையாகிறதெனவும் கண்டால், ஒவ்வொரு மாதத் தரவுகளையும் எடுத்து டிசெம்பர் விற்பனைகளை 1.5 ஆல் பிரிப்பார்; ஜனவரி விற்பனைகளை .9 ஆல் பிரிப்பார். அவ்வாறே அடுத்தடுத்த மாதங்களுக்கும் செய்வார். இவையெல்லாம் முடிந்தபின்னர் பண்டசாலை விற்பனைகளைப் பருவத்தொடர் முறையில், "பருவச்சரிக்கட்டல் செய்து" கணிப்பார். இவை நாம் எதிர்பார்த்த முடிவுகளையே காட்டும். அதாவது 1957 ஆம் ஆண்டின் கடைசி மாதங்களிலே விற்பனை குறைந்துகொண்டே வந்ததென்பதாகும். ஏனெனில் நவம்பரிலும் பார்க்க டிசெம்பரிலே நடைபெற்ற விற்பனை அதிகரிப்பு, பருவகாலத்துக்குரிய வழக்கத்திலும் குறைவாயிருந்தமை எனக.

மின்சாரசக்தி நுகர்வு போன்ற சீக்கிரம் வளர்ந்துவரும் பருவத்தொடர் போன்ற ஒன்று, காலப்போக்கில் எவ்வாறு உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லுகிறதென்பதை ஆராயும்போது, இதைப்போன்றதொரு பிரச்சினை எழுகிறது. மின்சாரசக்தி உற்பத்தி எந்த ஒரு பின்னடைவிலும் குறையவில்லை. ஆனால் அந்தத் தொடரில் பின்னடைவு மறைந்துவிடவில்லை. அது பருவத் தொடரில் வளர்ச்சிவீதம் குறைந்து செல்லும் போக்கில் தனதுநிகழ்ச்சியைக் காட்டிக்கொள்ளுகிறது. நாம் மிருதுவானதொரு போக்குக் கோட்டை மின்உற்பத்திப் படத்துக்கூடாகக் காட்சியிலே அல்லது புள்ளிவிபர வாய்பாடுமூலம் கீறுவோமானால், தரவு போக்குக் கோட்டுக்கு மேலும் கீழுமாக வளைந்துகொண்டிருப்பதிலே விற்பனவுச் சக்கரத்தைக் காண்போம். போக்குக் கோட்டிலிருந்து நேர்குத்தான மாற்றங்களை அளந்து புறம்பானதொரு படத்திலே கீறினால் வியாபாரச் சக்கரத்தின் தெளிவான படத்தைப் பெறுவோம். இப்போது அதைப் பார்ப்போம்.

**சக்கரத்தின் நாலு அமிசங்கள்**

வியாபாரச் சக்கரம்பற்றி முன்னர் எழுதியவர்கள் தொகைபற்றிய தகவலில்லாதபடியால், 1720 இல் உண்டான "தென்கடற்குமிழி" 1837 இல்

படிப்பகம்

www.padippakam.com



உண்டான வியாபார அதிர்ச்சி, 1873 இல் உண்டான ஜே. குக் அதிர்ச்சி, 1893 இல் உண்டான கிளெவ்லண்ட் அதிர்ச்சி, 1907 இல் உண்டான செல்வர் அதிர்ச்சி, 1929 ஆம் ஆண்டு, ஒக்டோபர் 29 இல் உண்டான பிரசித்தி பெற்ற "கறுத்தச்செவ்வாய்" பங்குச் சந்தைமுறிவு என்பனபற்றித் தாரதம்மியமறியாமல் எழுதிவிட்டனர். பின்வந்த ஆசிரியர்கள் வியாபாரத்தில் இரண்டு அமிசங்களைப் பற்றிப் பேசினர். ஒன்று சுபீட்சம்; மற்றது மந்தம்; அல்லது உயர்ச்சி வீழ்ச்சி என்றபடி. இவை உச்சம், நீசம் என்ற இரு தன்மைகளுடையனவென்றும், இவைதாம் மாறும் அவதிகள் என்றும் கருதினர்.

வியாபாரம் திருந்திக்கொண்டுவரும் ஒவ்வொரு பருவமும், பூரண வேலை வாய்ப்புக்கு எம்மை இட்டுச் செல்லவேண்டியதில்லை என்பது இன்று உணரப்படுகிறது. 1932–1933 பள்ளத்திலிருந்து எழும்பும் அறிகுறிகள் 1930 ஐ அடுத்த தசாப்தத்தில் காணப்பட்டன. ஆனால் நாம் இந்தப் பருவத்தை உண்மையான சுபீட்சக் காலமென்று சொல்லமுடியாது. இலாபங் கருதாத தேசீயப் பொருளாதார ஆராய்ச்சி நிலையத்தின் நெடுங்காலத் தலைவராயிருந்து காலஞ்சென்ற வெஸ்லிசி. மிச்செல் என்பவர் பிரயோகித்த பரிபாஷைகளே இப்பொழுது எங்கும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன[1].

இந்த வியாபாரச் சக்கரத்தை நாலு அமிசங்களாக மிச்செல்லும் வேறு பல பொருளியலாளரும் பிரிக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமான இரண்டு அமிசம் "விரிவுப்" பருவமும் "சுருக்கப்" பருவமுமாகும். விரிவுப்பருவம் முடிய சுருக்கப்பருவம் "உச்சத்திலு" ண்டாகும். விரிவுப் பருவம் அத்துடன் முடிவடையும். அதேபோல பள்ளம் என்ற மறுமலர்ச்சிப் பருவத்திலே சுருக்கம் முடிவடைந்து விரிவுப்பருவம் உண்டாகும். படம் 3 இலே காட்டியதுபோல இந்த நாலு அமிசங்களும் மாறிமாறி வரும். வியாபார முயற்சி உச்சமாகவோ நீசமாகவோ இருப்பதைப்பற்றி இப்போது எவரும் வற்புறுத்துவதில்லை. வியாபார முயற்சி எழுவதிலும் விழுவதிலும் சம்பந்தப்பட்ட இயக்க அமிசங்களைப் பற்றியே வற்புறுத்தப்படுகிறது.

வியாபாரச் சக்கரத்தின் ஒவ்வோர் அமிசமும் அடுத்த அமிசத்தில் போய் முடியும். ஒவ்வோர் அமிசமும் வெவ்வேறு பொருளாதார நிலைமைகளையுடையதாயிருக்கும். எனவே அவற்றை விளக்குவதற்கு வெவ்வேறு கருதுகோள்கள் வேண்டும். மேலும் பகுத்தாராய்ந்து கருதுகோள்களை வகுக்குமுன்னர் தகவல்களை மேலும் சேர்த்துக் கொள்வோமாக.[2]

1. W. C. Mitchell Business Cycles: The Problem and Its Setting (National Bureau of Economic research New York 1927).
அவர் பிரயோகித்த பின்னடைவு என்ற சொல்லுக்குப் பதிலாக உச்சம் என்ற சொல் வழக்கத்தில் வந்துள்ளது.

2. உதாரணமாக விரிவு காலத்திலே வேலை உற்பத்தி, விலை, பணம், சம்பளம், வட்டிவீதம், இலாபம் என்பன உயரும். சுருக்க காலத்திலே இவை சுருங்கும்.


படிப்பகம்

www.padippakam.com



**வியாபாரச் சக்கரம், வருடத்துப் பருவச் சக்கரம்போன்றது**

சகடவோட்டத்தின் நாலு பருவங்கள்




படம். 3. சக்கரவிரிவு, சக்கரச் சுருக்கத்தைத் தொடர்ந்துவரும். இடையே சந்திகள் உண்டு. உச்சங்கள் எல்லாவற்றிலும் சுபீட்சம் உண்டாவதில்லை. அதாவது வேலையின்மை மிக அற்பமாக இருக்கும்நிலை ஏற்படுவதில்லை. மறுமலர்ச்சி ஏற்படும் பள்ளங்களில் சில சந்தர்ப்பங்களிலன்றி, மற்றப்படி இந்த நாட்களிலே வியாபாரமந்தமோ, விழுக்காடோ உண்டாவதில்லை.

வழக்கமாய் நிகழும் வியாபாரச் சக்கரங்கள் எவ்வளவு நாட்களுக்கு நிலைக்கும் ? எத்தனை சிறிய சிறிய சக்கரங்களை எண்ணவிரும்புகிறீரோ அதிலேதான் இது தங்கியிருக்கிறது. பெரிய சக்கரங்கள் 8–10 வருடம் நீடிக்கும். 1920 ஐ அடுத்த ஆண்டுகளில் சுபீட்சமுண்டானதென்றும், 1930 ஐ அடுத்த ஆண்டுகளிலே மந்தமுண்டானதென்றும் எல்லாரும் ஒப்புக்கொள்வர். இவ்வாறே ஏனைய பெரிய வியாபாரச் சக்கரங்களைப் பற்றியும் கூறலாம். பொருளாதாரப் படங்களிலே காணும் சிறிய வியாபாரச் சக்கரங்களைப் பற்றி எல்லாப் பொருளியலறிஞரும் அக்கறை காட்டுவதில்லை. 1924 இலும், 1927 இலும் வியாபாரத்தில் சற்றே இறக்கமேற்பட்டது. எனவே 1920 ஐ அடுத்த ஆண்டுகளை மூன்று தனிப்பட்ட சிறிய சக்கரங்களென்று கூறுவதா ? அல்லது பெரிய சுபீட்சப் பருவமென்று வருணிப்பதா ? 1948–1949, 1953–1954, 1957–1958, 1960–1961 ஆகிய ஆண்டுகளிலே நாம் சற்றுப் பின்னிடைவடைந்தோம். இவற்றையும் சக்கரங்களெண்டதா ?

இந்நூல் போன்ற ஆரம்ப நூலிலே, பெரிய வியாபாரச் சக்கரங்களைப்பற்றி அக்கறை கொள்வதே நல்லது. ஹார்வாட்டைச் சேர்ந்த, அல்வின் ஹான்சன் என்பவர் தரும் சுருக்கமான விபரத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.[1] அது பின்வருமாறு :—

பெரிய வியாபாரச் சக்கரம் ஏறக்குறைய 8 வருடத்துக்குச் சற்று அதிகமாகவே நிலைத்துவந்ததென்பது அமெரிக்க அனுபவமாகும். 1795 துவக்கம் 1937 வரை ஒவ்வொன்றும் 8.35 வருடம் நிலைத்த 17 வியாபாரச் சக்கரங்கள் நிகழ்ந்தன. பெரிய உச்சங்களிரண்டு நிகழ்வதற்கிடையில்

1. Alvin H. Hansen. Fiscal Policy and Business Cycles (Norton, Newyork 1941) PP. 18–24.

www.padippakam.com



இரண்டு சிறிய உச்சங்கள் நிகழ்வது வழக்கம். எனவே சிறிய சக்கரம் பெரிய சக்கரத்தின் காலத்தில் அரைப்பங்கு காலமே நிகழும் என்பது தெளிவு. 1807 துவக்கம் 1937 வரை 37 சிறிய சக்கரங்கள் ஒவ்வொன்றும் சராசரி 3.5 வருடம்வரை நிகழ்ந்துள்ளன. கட்டடச் சக்கரம் 17, 18 வருடம்வரை நிகழ்ந்துள்ளது. இது பெரும்பாலும் பெரிய வியாபாரச் சக்கரத்தின் இரண்டு பங்கு காலமாகும். பெரிய வியாபாரச் சக்கரம் நிகழ்ந்ததும் அடுத்த நிகழ்வின்போது கட்டடமுயற்சியிலும் ஒரு மலர்ச்சி யுண்டாவது அமெரிக்க அனுபவமாகும். அடுத்த பெரிய சக்கர மறுமலர்ச்சி யின்போது கட்டட முயற்சியில் மந்தமேற்படும். கட்டட முயற்சியில் மந்தநிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கும் காலப்பகுதி நீண்டதாயிருக்கும். பின்னர் மறுமலர்ச்சி உண்டாகும்போது கட்டட முயற்சியிலுண்டான மந்தநிலையால் ஏற்பட்ட பலாபலன்கள் அதற்குத் தடையாயிருக்கும்.

### நீண்ட அலைகள் ?

சிலபொருளியலறிஞர், நீண்டவரலாற்று நோக்கை அடிப்படையாகக் கொண்டு, ஒரு வியாபாரச் சக்கரம் நீண்ட அலைபோன்றதெனவும் அது 50 வருடம் நீடித்திருக்குமெனவும் கூறுவர். உதாரணமாக, 1815 இல் முடிவுற்ற நெப்போலியன் சண்டைகளுக்குப் பின் துவங்கி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை விலைகளிறங்கின ; இடர்ப்பாடுள்ள கால மாகவே யிருந்தது. 1850 இன் பின்னர் அவுஸ்திரேலியாவிலும், கலி போணியா விலும் தங்கச் சுரங்கங்களை வெட்டத் துவங்கினர். அதன் பயனாகவும், சிவில் யுத்தம், கிரிமியாயுத்தம் என்பன காரணமாகவும் விலைகள் உயரத் துவங்கின. 1873 வியாபார மந்தத்தின் பின்னர், விலைகள் நெடுங்காலமாக வீழ்ச்சியடைந்து, 1890 இல் ஆபிரிக்காவிலும், அலாஸ்காவிலும் தங்க உற்பத்தி அதிகரிப்பு உண்டானதால் மறுபடியும் உயரத்துவங்கின. இந்தப் புதிய அலையைப் பயன்படுத்திக்கொண்டு, மக்கின்லியும் குடியரசுக் கட்சி யும் அதிகாரத்துக்கு வரக்கூடியதாயிற்று.

இந்த நீண்ட அலையானது தங்கக் கண்டுபிடிப்பு, புதிய ஆராய்ச்சிகள் அரசியற் போர்கள் என்பவற்றின் பயனாகச் சரித்திரத்திலே தற்செயலாக உண்டாகும் நிகழ்ச்சியா என்பதைத் திட்டமாகக் கூறமுடியாது[1].

### வியாபாரச் சக்கரம் பற்றி அறிய முதல் அடையாளம்: மூலதனம் உருவாதல்

ஹான்சன் கட்டடம் அமைப்பது விடயமாக அழுத்திக் கூறுவதிலிருந்து வியாபாரச் சுழல் எவ்வாறுண்டாகிறதென்பதற்கு முதல் அறிகுறி காட்டப் படுகிறது. வியாபாரச் சுழலிலே ஒரு சில பொருளாதார மாற்றப்பொருள் கள் வேறொருவகை மாற்றப்பொருள்களிலும் அதிகமான உயர்வு தாழ் வுடையன. உதாரணமாக வார்ப்பிரும்பு உற்பத்திக்கான கோட்டை சிகரெட் நுகர்வுக் கோட்டுக்குப் பக்கத்திலே கீறினால், சிகரெட்டில் வியாபாரச் சுழல்

1. இவ்விடயத்தில் அக்கறையுள்ளவர், J. A. Schumpeter எழுதிய Business Cycles என்ற நூலின் 6ஆம், 7 ஆம் அத்தியாயங்களைப் பார்க்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இருப்பதை நாம் கவனிக்கமுடியாது. வார்ப்பிரும்பு வியாபாரத் தொடரில் வியாபாரச் சுழலைவிட வேறெதனையுங் காணமுடியாது. ஏன் ? எனெனில் சிகரெட் குறுநிலைப்பயன்தரு நுகர்வுப் பொருள். நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும் மக்கள் ஒரே அளவான சிகரெட்டையே புகைப்பார்கள். வார்ப்பிரும்போவென்றால் நெடுங்காலப் பயன்தரும் பலவகை மூலதனப் பொருள்களில் ஒன்று. இஃது எந்திரஞ் செய்யவும், நெடுங்காலப்பயன்தரும் எந்திரங்கள் செய்யவும், தொழிற்சாலை, வீடு என்பன கட்டவும், மோட்டர், சீலை கழுவும் எந்திரம் போன்ற நெடுங்காலப் பயன்தரும் நுகர்பொருள்களைச் செய்யவும் பயன்படுகிறது.

இத்தகைய நெடுங்காலப் பயன்தரும் பொருள்களின் தேவை அடிக்கடி மாறும். கெட்ட காலத்தில் அவற்றை வாங்காமலே பின்போட்டுவிடலாம். நல்ல காலத்தில் எல்லாரும் 10 வருடத் தேவையை வாங்கி அடுக்கிவைக்க விரும்புவர். எனவே வாணிபச் சூழலின்போக்கு எப்படியிருக்கிறதென்பதை அறிவதற்கு முதல் அறிகுறி நெடும்பயன்தரும் முதல்வகைப் பொருளிலே தான் உண்டு. அதிலேதான் மிக அதிகமான சுழலும்தன்மை காணப்படும்.

படம் 2 ஐத் திருப்பிப்பார்க்க. மூலதனவகைப் பொருள்களுக்கும், குறுகிய காலப்பயன்தரும் பொருள்களுக்குமிடையிலுள்ள நொடிப்பு வித்தியாசத்தை அறியலாம். கடைசியாயுள்ள பருவத் தொடர்கள், நெடும்பயன் பொருள், மூலதன வகைப் பொருள் என்பவற்றின் பல இனங்களைக்காட்டுகின்றன. நுகர்வுப் பொருள்களுக்கும் இவற்றுக்குமுள்ள மாற்றத்திலுள்ள வீச்சைக் கவனிக்க. இவற்றில் பெரும்பாலானவை வருமானத்தையனுசரித்து அதிக மாற்றமில்லாமலியங்குகின்றன. நுகர்வு இயக்கங்கள் வியாபாரச் சுழலின் பயனாகவேயுண்டாகின்றன ; அவை ஏதுக்களல்லவென்று நினைக்கத்தோன்றும். ஆனால் நெடும்பயன்தரும் பொருள்களின் இயக்கமே மூலாதாரமானதொரு வகையில் முக்கிய காரணமென்று கூறுவதற்கு நல்ல சான்றுகளுண்டு.

**சேமிப்பு, முதலீட்டுத் திட்டங்கள் எவ்வாறு பொருந்தும்**

மூலதன முதலீட்டுமுறை மிக முக்கியமானதென்பதைப் புள்ளிவிவர ஆராய்ச்சி முடிபுகள் ஆதரிக்கின்றன. கடந்த அத்தியாயத்திலே எடுத்துக் காட்டிய வருமானம் நிர்ணயிக்கும் கொள்கைகள், பொருளாதார சரித்திரத்தை அறிந்து கொள்ள உதவுகின்றன. ஞாபகத்திலே வைப்பதற்காகச் சில விடயங்கள் இங்கு காட்டப்படுகின்றன.

1. போர்கள், பொருளாதாரத்தைச் சிதைக்கும் ஏதுவாகவே எப்பொழுதுமிருந்துவருகின்றன. அவை எவ்வாறு தமது பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன ? அவை நு+மு+அ (C+I+G) திட்டத்தில் உள்ள

www.padippakam.com



அ (G) பிரிவில் பலமாற்றங்களை உண்டாக்குகின்றன. இதனால் உற்பத்தியிலும், வருமானங்களிலும் பெரிய மாற்றங்களுண்டாகின்றன.

2. யுத்தத்துக்குப் பிந்திய காலங்களில் உண்டாகும் சிறிய சுழல்களிலே, சரக்கு முதலீட்டிலே பெரிய முறையில் நொடிப்புக்களுண்டாகலாம். விரிவுக் காலங்களிலே, சரக்கு முதலீடு நேர்க்கணியமாயிருக்கும். ஏனெனில் வியாபாரிகள் தமது கையிருப்பைக் கூட்டிக்கொள்ளவும், விற்பனவுமட்டத்துக்கு அவற்றைச் சரிக்கட்டிக்கொள்ளவும் விரும்புவர். சரக்குச் சேர்ப்பதில் வியாபாரிகள் நேர்க்கணியத்தைவிட்டு எதிர்க்கணியத்துக்கு மாறத் துவங்கினால், நு + மு + அ (C + 1 + G) அட்டவணையிலுள்ள அ (1) என்ற பகுதி இறங்கி விடுகிறது. அதனால் உற்பத்திக்கோடு துண்டிக்கப்படவே, வேலைநேரச் சராசரி குறைகிறது. சிலருக்கு வேலையில்லாமற்போகிறது. சம்பளம், இலாபம் எல்லாம் வீழ்ச்சியடைகின்றன. இவையெல்லாம் தே. தே. உற்பத்தியைக் குறைக்கும்; அல்லது அதனைச் சாதாரணப்போக்கில் வளரவிடாமற் தடை செய்யும்.

3. புகையிரதவீதி அமைப்பதிலும், கட்டுவதிலும், பெரிய அலைகள் உண்டாகும்போது, நு + மு + அ (C + 1 + G) என்பதிலுள்ள மு (1), அட்டவணை முழுவதையும், அதனுடைய சம நிலையையும் மந்தமாகப் போகச் செய்யும். ஆனல் பரப்பு விரிவாயிருக்கும்.

4. காலத்தையனுசரித்து நுகர்வுக்கோடு மாறுதென்று கூறுவது, விடயத்தை மிகவும் இலேசாக்குவதுபோலாகும். ஆனால் வருமானத்தையனுசரித்த சேமிப்புப் போக்குப் பெரும் காலப் பகுதியில் மாறுதிருந்ததென சைமன் குஸ்நெட்ஸ் என்பவரும், ரேமண்ட் கோல்ட்ஸ்மித் என்பவரும் தாம் செய்த ஆராய்ச்சியில் எடுத்துக் காட்டியுள்ளனர். வருமானத்திலிருந்து சேமிக்கப்பட்ட தொகை கடந்த ஒரு நூற்றுண்டிலே மாறுதிருக்கிறதென்பதே அவர்களுடைய ஆராய்ச்சி முடிபாகும். மோட்டர்களுக்கும், ஏனைய நெடுங்காலப்பயன்தரும் பொருள்களுக்கும் நுகர்வோரின் தேவை ஏற்படுங் காலங்களே, நுகர்வைத் தன்செயலற்ற, முன்னேறியே அறியக்கூடிய சக்தியாகக் கொள்ளமுடியாத சந்தர்ப்பமாகும். உதாரணமாக, அமெரிக்கர் 1955 இல் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய கார்களை விரும்பியதால், 1954 இல் உண்டான வியாபாரப் பின்னிடைவிலிருந்து விரைவில் மீளக்கூடியதாயிற்று. நுகர்வுக்கோடான இந்த நுநு (CC) கோட்டில் உண்டான மாற்றம் நு + மு + அ (C + 1 + G) குறுக்குவெட்டுகளிலும் மாற்றத்தை உண்டாக்கும்.

**வியாபாரச் சக்கரம் சம்பந்தமான சில கொள்கைகள்**

வருமானக்கோடு ஏன் மாறுகிறதென்பதை விளக்க வியாபாரச் சக்கரம் பற்றிய 12 இற்கு அதிகமான கொள்கைகளை ஆராய்ச்சி மாணவர் அட்டவணைப்

www.padippakam.com



படுத்துவர்.[1] ஒவ்வொரு கொள்கையும் ஒவ்வொரு போக்குடையது. ஆனல் இவற்றைக் கூர்ந்து ஆராய்ச்சி செய்து தகவல்களுக்குப் பொருந்தாத வற்றையும், நியாயத்துக்குப் பொருத்தாதவற்றையும் விலக்கிவிட்டால், இந் தக் கொள்கைகளில் மிகச் சிலவே மிஞ்சும். இவற்றில் பெரும்பாலானவை, வற்புறுத்திக்கூறப்படும் விடயங்களிலே தான் வித்தியாசப்படுகின்றனவன்றி வேறன்று. வியாபாரச் சுழல் ஏற்படுவதற்குக் காரணம், மொத்தத் தேறிய முதலீட்டில் ஏற்படும் நொடிப்பேயெனச் சிலர் கருதுகின்றனர். வேறு தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களிலுண்டாகும் நொடிப்புக்களும், உற் பத்தியிலுண்டாகும் புதிய மாற்றங்களுமே தேறிய முதலீட்டின் மூலம் உற்பத்தியைப் பாதிக்கின்றனவென்பர் சிலர். நமது வங்கிகளில் வைப்புப் பணம் உண்டாக்கும்முறை முதலீட்டை விரிவடையவும் சுருங்கவுஞ் செய் கிறது; அதனுல் வியாபாரத்திலே பூரிப்பும், முறிவும் உண்டாகின்றன என்பார் இன்னொரு சாரார்.

இவை மூன்று வேறுபட்ட கொள்கைகள் போலத் தோன்றலாம். உயர்தரப் பாடநூல்களிலே இவற்றை மூன்று ஆசிரியரின் கொள்கைகளாக விரித் தெழுதுவர். ஆனல் இவை மூன்றும் ஓரே போக்கின் மூன்று அமிசங் களாகும். இம்மூன்று கொள்கைகளிடையேயும் பூரண ஒற்றுமையுண் டென்பது இதன் பொருளன்று. இவற்றைப் பற்றி எழுதும் ஆசிரியர்களும் தமது கொள்கைகளைப் பற்றி அழுத்தமாகக் கூறும்போது சில முக்கியமான வேற்றுமைகளை எடுத்துக்காட்டமாட்டார்கள் என்பதுமில்லை.

**அகக்காரணங்களும், புறக்காரணங்களும்**

பலவகைப்பட்ட இக்கொள்கைகளையும் இனப்படுத்துவதற்காக முதலில் அவற்றை முதற்படிப் புறக்கொள்கைகளென்றும், முதற்படி அகக்கொள் கைகளென்றும் பிரிக்கலாம். புறக்கொள்கைகளின்படி வியாபாரச் சுழலுக் குக் காரணம், சூரியனில் புள்ளிகள் விழுதல், போர், புரட்சி, அரசியல் நிகழ்ச்சிகள், தங்கச் சுரங்கம் கண்டுபிடித்தல், சனப்பெருக்கம், சனக் குடியேற்றம், புதிய தேசங்களையும், வளங்களையும் கண்டுபிடித்தல், விஞ்ஞானத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள், உற்பத்தி முதலியவற்றில் புதிய மாற்றங்கள் என்பனபோன்ற பொருளாதாரத்துக்குப் புறம்பான அமிசங்களாகும்.

[1] பிரசித்தமான சில கொள்கைகளாவன: (1) பணக்கொள்கை. இது வங்கிக் கடன் விரிவதனுலும் சுருங்குவதனுலுமே வியாபாரச் சுழல் உண்டாகிறதெனக்கொள்ளும் (ஹோட்ரீ முதலியோர்). (2) புதுவது காணும் கொள்கை. ரெயில்ரோட்டுப்போன்ற புதிய கண்டுபிடிப்புக் களால் உண்டாகும் வியாபாரப் பூரிப்பு. (ஷும்பீட்டர், ஹான்சென் முதலியோர்) (3) உளவியற் கொள்கை. நன்மைகாணும் இயல்பை அல்லது தீமைகாணும்இயல்பை மக்களிடையே பரப்புவதாலுண்டாவது. (பீகு, பேஜெட் முதலியோர்) (4) குறைநுகர்வுக் கொள்கை. பணக்காரரிடத்தும், சிக்கனமுடையவரிடத்தும் அதிக வருமானம் போய்ச்சேருகிறது. அதனுல் முதலீடுசெய்வது குறைகிறது. (ஹொப்சன், பொஸ்டர், காச்சிங்ஸ் முதலியோர்) (5) அதிக முதலீட்டுக்கொள்கை. இதன்படி அதிகமுதலீட்டினுல் பின்னிடைவுண்டாகின்றதென்பர் (ஹேயெக் மிசெஸ்முதலியோர்) (6) சூரியனில் புள்ளிவிழுதல்—காலநிலை—விளைவுக்கொள்கை கள் (ஜிவோன்ஸ், மூர்).

www.padippakam.com



அகக் கொள்கைகள், பொருளாதார அமைப்புக்களுள்ளேயே காரணங்கள் காண முற்படுகின்றன. அக்காரணங்கள் தாமாகவே வியாபாரச் சுழல்களையுண்டாக்கும். அதன்விளைவாக ஏற்படும் ஒவ்வொரு வியாபார விரிவும் பின்னர் பின்னிடைவையுண்டாக்கும். பின்னிடைவின் பின்னர் சுருக்கமுண்டாகும். ஒவ்வொரு சுருக்கமும் மறுபடி மலர்வையும், விரிவையுமுண்டாக்கும். அஃது ஓரளவு ஒழுங்குடனும், திரும்பித்திரும்பி வரும் முறையிலும், முடிவில்லாத வகையிலும் உண்டாகும்.

சூரியனிலுண்டாகும் புள்ளிகள்தாம் வியாபாரச் சுழலுக்குச் காரணம் என்ற கொள்கையை நீங்கள் நம்புவதானல், அகக் கொள்கை, புறக் கொள்கை என்பவற்றின் வித்தியாசங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். ஆனல் பொருளியலறிஞருட் செல்வாக்குள்ள எவரும் இந்தக் கொள்கையை ஆதரிப்பதில்லை. இந்தக் கொள்கையிற்கூட சூரியன் புள்ளிகள் வியாபாரச் சுழலை எவ்வாறுண்டாக்குகின்றன என்பதை ஆராயும்போது, பொருளியலின் அக அமைப்பைப்பற்றிப் பேசவேண்டியேற்படுகிறது. ஆனல் சுழலுக்குக் காரணம் எத்திசையிலுள்ளதென்பதை எவரும் சந்தேகிக்கமாட்டார். அல்லது பொருளியல் அமைப்புத்தான் சூரியன் புள்ளியை உண்டாக்குகிறதென்றும் வாதிக்கமாட்டார். ஆனல் போர், அரசியற் சம்பவங்கள், குடிசனப் பெருக்கம், தங்கச் சுரங்கம் கண்டுபிடித்தல்போன்ற புறக்காரணங்களை ஆராயும்போது, அக்காரணங்களுக்கேற்பப் பொருளாதார அமைப்பு பாதிக்கப்படவில்லையா என்ற கேள்வி எழும். இதனல் அகக் காரணம், புறக்காரணம் என்பன அத்துணை வித்தியாசமுடையன என்று கூறமுடியாத நிலையுண்டாகும். காரியம் காரணத்தைச் சென்றடைவது சம்பந்தமான இத்தகைய விளைவுகள் நம்மைப் பரம்பரைப் பொருளியல் எல்லைக்கு வெளியே இட்டுச் சென்றுவிடுகிறது. இதனுற்ருன் அகக் காரணம் புறக்காரணமென்ற வித்தியாசங் காட்டப்படுகிறது.

**தூய அகக்கொள்கைகள் :** சூரியன்புள்ளி போன்ற மட்டமான புறக் கொள்கைபோலவே, மட்டமான அகக் கொள்கைக்கும் ஓர் உதாரணத்தைக் காட்டலாம். எந்திரம் முதலிய நீண்டகாலப் பயனுள்ள பொருள்களெல்லாம், 8 அல்லது 10 வருட வாழ்வுடையனவாயிருந்தால் வியாபாரச் சுழற்சியையும் 8 அல்லது 10 வருடத்துக்கு வைக்கலாம்; அப்போது அச்சுழற்சிக்குரிய காரணம் அதுதானென விளக்கலாம். ஏதோ ஒருவகையிலே வியாபாரப் பூரிப்பு உண்டாகுமானல், அதே வயதுடைய புதிய மூலதனப் பொருள்கள் பெருகலாம். சிலகாலஞ்சென்ற பின்னர், இந்தப் பொருள்கள் தேய்ந்து போவதற்குமுன், அவற்றை மாற்றுவதற்குத் தேவையுண்டாகாது. அதனல் வியாபாரமந்தமுண்டாகும். 8, 10 வருடத்துக்குப் பின்னர் மூலதனச் சாதனங்களெல்லாம் திடீரென்று தேய்வடையும். உடனே அவற்றுக்குப் பதிலாக வேறு பொருள்களை வாங்கவேண்டிவரும். அதனல் பணவீக்கப் பூரிப்புண்டாகும். இதனல்

www.padippakam.com



வியாபாரச் சுழல் ஒன்று பூரணமாக ஏற்படும். பின்னர் மந்தமும் அதையடுத்துப் பூரிப்பும் ஒவ்வொரு பத்துவருடமும் உண்டாகும். எனவே தானுக உண்டாகும் "புனர்மாற்றம் செய்யும் அலே" யின் பயனுக அக வியாபாரச் சுழற் கொள்கை ஒன்று வேறு சார்பின்றியேயுண்டாகும்.

எல்லாச் சாதனங்களுக்கும் ஒரேவயது கற்பிக்கமுடியாது. ஒரே நாளில் உற்பத்தி செய்யப்பட்ட காரகள் ஒரே நாளில் புனர் மாற்றம் செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பம் வரமாட்டாது. எனவே சாதனச் செலவுகள் ஒரே நேரத்தில் உண்டாகமாட்டா ; பற்பல பருவங்களில் உண்டாகும். அதனுல் புனர் மாற்றச் செலவின் உச்சம் பலம் குன்றியதாய் நிகழும். உள்நாட்டு யுத்தத்துக்கு 25 வருடத்துக்குப் பின்னர், பிறப்புவிகிதத்தில் விழுக்காடு உண்டாவதை எவரும் கவனித்திருக்கலாம். ஆனுல் மேலும் ஒருதலே முறை சென்றபின்னர் இந்த விழுக்காடு உண்டாயிருக்கமாட்டாது. இன்று அதைப்பற்றிய அறிகுறியே காணமுடியாது. புனர்மாற்ற அலேகள், மீட்டிய வீணையின் தந்தி போன்றவை. அதனுல் உண்டான சத்தம் மெல்ல மெல்லப் போயடங்கிவிடும். அது புதிய குழப்பம் உண்டாகும்வரை அடங்கியே கிடந்துவிடும்.

தானுக உண்டாகும் சட சம்பந்தமான தூய நொடிப்புக்களே உராய்வு குறைக்குமென்பது பௌதிக விதிகளினுல் உத்தரவாதஞ் செய்யப்பட்டுள்ளது. சமூகவிஞ்ஞான சாத்திரங்களிலே, சத்திக்காப்பு என்ற விதி கிடையாது. இருந்தால் அது கொள்வனவுச்சத்தி உண்டாவதைத் தடுக்கும். தானுக உண்டாகும் சுழல் சம்பந்தமான புனர்மாற்ற அலேயிலும் பார்க்கப் பொருத்தமான உதாரணமாக, மாருட்டக் குணமடைவதற்கு முன் மனிதன் மாறி மாறி அடையும் மகிழ்ச்சி நிலேயையுந் துக்கநிலேயையும் எடுத்துக் காட்டலாம். இத்தகைய அகக் கொள்கையை நாம் தவிர்த்துவிடமுடியாது. மேலும் இக்கொள்கை இருந்த இருப்பில் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கது மன்று. ஏனெனில் அஃது அதிகம் விளக்கமாகவுங் காணப்படவில்லே ; மிக அதிகமாக விளக்குவதாயுந் தெரியவில்லே.

### புறக்காரணங்களேயும் அகக்காரணங்களேயும் ஒன்று சேர்த்தல்

வீணே நரம்பிலே ஒரு சுரத்தை உண்டாக்கினுல் அஃது அதிர்வடைகிறது. இஃது அகக் காரணத்தாலுண்டாவதா ? புறக்காரணத்தாலுண்டாவதா ? இரண்டு காரணங்களாலுந்தான். சுரத்தை உண்டாக்கியமை புறக்காரணம். வீணே நரம்பு மறுவினே நிகழ்த்தியமை அகக் காரணம்.

இவ்வாறே வியாபாரச் சுழலும் பொம்மைவண்டிபோன்றதே. தள்ளினுல் ஓடும் ; தள்ளாவிட்டால் நிற்கும். ஆடுங் குதிரை அல்லது ஊஞ்சல் பொருத்தமான உவமை. ஒருமுறை தள்ளிவிட்டால் ஊஞ்சல் அசைந்து அசைந்து சிறிதுசிறிதாக வேகங் குறையும். குதிரையும் அப்படியே. அதன் பாரம், உருவம் என்பனவற்றைப் பொறுத்து, அஃது ஆடி நிற்கும் வேகம் அமையும். இவ்வாறே பொருளியலிலும் புதிய

www.padippakam.com



உற்பத்திமுறைக்கான நுண்தொழில் முறைகள் கண்டு பிடிக்கப்பட்டால் பொருளாதாரம் தன்னுடைய உள்ளமைப்புக்கேற்றவாறு அந்தவெளிக் காரணங்களை ஏற்று மாறுதலடையும். வியாபாரச் சுழலை விளக்குவதற்கு அகக் காரணங்களும் புறக்காரணங்களும் அவசியமாகும்.

இன்றைய பொருளியலறிஞருட் பெரும்பாலானோர் அகக் காரணம், புறக்காரணம் இரண்டையும் சேர்த்து ஆராயவே விரும்புவர். பெரிய வியாபாரச் சுழல்களை விளக்கும்போது முதலீடு அல்லது மூலதனம் சார்ந்த பொருள்களில் உண்டாகும் நொடிப்புக்களை விசேடமாகக் குறிப்பிடுவர். (1) தொழில் நுட்பம் சம்பந்தமான கண்டு பிடிப்புக்கள், (2) குடிசன விருத்தி, புதிய நிலங்களின் சேர்க்கை போன்ற புறக்காரணங்களிலேதான் முதலீட்டு நொடிப்புக்களுக்கான ஆரம்ப ஏதுக்களுண்டு. இந்தப் புறக் காரணங்களோடு அகக்காரணங்களையுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவ் வகைக் காரணங்கள் முதலீட்டிலே ஆரம்பமாற்றங்களை உண்டாக்கக்கூடியன வாயிருக்கும். அதாவது மூலதனப் பொருள்கள் உற்பத்தியில் மக்களுக்கு வேலை கொடுக்கப்பட்டால் அவர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை நுகர்வுப் பொருள்கள் வாங்குவதிலே செலவிடுவர். அதனால் வியாபார வட்டாரங்களில் சுறுசுறுப்பு ஏற்படும். அதனால் அவை வங்கியிற் பணங் கடனெடுக்கும் ; பங்குச் சந்தைகளிலே புதிய கடன்களை வாங்கும்.

அத்துடன் பொதுப்படையான வியாபார நிலை முதலீட்டைப் பாதிக்கும். நுகர்பொருள்கள் அதிகம் விற்பனையாகுமானால் வியாபாரிகள் புதிய புதிய தொழில்களைத் துவக்க முற்படுவர். வியாபாரச் சுழல் ஒரு புறம் நிகழ மற்றொரு புறத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் உண்டாகும். ஆனால் அவற்றை எவ்வளவு தூரம் பொருளாதாரத்துக்குப் பயன்படப் பிரயோகப் படுத்தலாமென்பது வியாபாரநிலைகளைப் பொறுத்ததாகும். யுத்தத்துக்கு முந்தியதை விட 50 விகிதம் அதிகமாகத் தேசீயவருமானம் உயருமானால் அதன் பயனாகப் புதிய எந்திரங்கள், சரக்குகள், கட்டடங்கள் என்ற வகையில் மூலதனம் அதிகரிக்கும். எனவே பிரதானமாகக் குறுகிய காலநிலையில், முதலீடு ஒருவகையில் வருமானத்துக்கு ஏதுவாகவும் பயனாக மிருக்கும்.

நீண்டகால நிலையில், வருமானம் எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும், மூலதனப் பொருள் இருப்பு உயர்ந்ததொருமட்டத்துக்குச் சரிக்கட்டப்பட்டுக் கொண்டுவர புதிய முதலீடுகள் பூச்சியமட்டத்துக்கு இறங்கும். இதைத் தடுப்பதற்கு (1) வருமானம் வளரவேண்டும், (2) தொழில் நுட்பமுறைகள் வளரவேண்டும், (3) வட்டிவிகிதங்கள் குறைந்துகொண்டேயிருக்கவேண்டும். இவற்றில் முதலாவதாக, விற்பனவு வருமானம் என்பன உயர்வதால் முதலீட்டுத் தேவை எவ்வாறு ஊக்கப்படுத்தப்படும் என்பதைக் காட்டும் முறைக்கு "துரிதக்கொள்கை" என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. வியாபாரச் சுழற் கொள்கைகளிலே முடிவான கொள்கைகளைக் கூறுமிடத் தில் இதை ஒரு முக்கிய அமிசமாக எல்லா ஆசிரியரும் குறிப்பிடுவர்.

www.padippakam.com



இந்த அகச் சூழல் அமைப்புமுறை மற்றக் காரணங்களை எவ்வாறு பாதிக்கிறதென்பதை இப்போது ஆராய்வாம்.

**துரிதக் கொள்கை**

இந்தக் கொள்கையின்படி சமூகத்துக்குத் தேவையான மூலதனம், அது தளபாடமாயிருந்தாலென்ன, சரக்காயிருந்தாலென்ன, வருமான மட்டத்திலேயும், உற்பத்திமட்டத்திலேயுமே தங்கியிருக்கிறது என்பதாம். கையிருப்புள்ள மூலதனத்தோடு மேலதிகமாகச் சேர்ப்பதானுல், (இதைத் தேறிய முதலீடு என்பர்) வருமானம் உயர்ந்தாற்ருன் செய்யலாம். இதன் பயனாக சுபீட்சநிலை நீங்கிவிடும். நுகர்வுப்பொருள்களின் விற்பனவு குறைந்து, முன்னைய மட்டத்திலும் குறைவாகவே விற்கப்படும்.

எண்கணித முறைப்படி ஓர் இலகுவான உதாரணத்தைக் காட்டலாம். ஒரு நெசவு ஆலையுண்டென வைத்துக்கொள்வோம். அதன் மூலதனச் சாதன இருப்பு வருடாந்த துணி விற்பனவின் பத்துமடங்காக எப்போதும் வைக்கப்பட்டிருக்கிறது.[1] எனவே அதன் வருடவிற்பனவு 60 இலட்சம் டொலராகச் சிலகாலமாக இருந்துகொண்டுவந்தால், ஐந்தொகைக் கணக்கிலே 600 இலட்சம் டொலர் மூலதனச் சாதனம் காட்டப்படும். அதில் பற்பல காலத்தில் வாங்கப்பட்ட 20 எந்திரங்கள் காணப்படலாம். இவற்றில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வோர் எந்திரம் பழுதடைவதற்குப் பதிலாகப் புதிதாக வைக்கப்படும். புதிதாக வைக்கப்பட்டது தேய்மானத்துக்குச் சமனானபடியால், தேறிய புது முதலீடோ சேமிப்போ ஆலைக்குக் கிடையாது. மொத்த முதலீடு வருடமொன்றுக்கு 30 இலட்சமாகச் செய்யப்படுகிறது. இது வருடத்தில் புதிதாக வைக்கப்படும் ஓர் எந்திரத்துக்குச் சமனாகும். (விற்பனவில் எஞ்சிய 30 இலட்சம் டொலர் சம்பளம், பங்கு இலாபம் என்ற இனங்களுக்குச் செலவாகும்). அட்டவணை 1 இன் முதற் பருவம் இதைக் காட்டும்.

நாலாம வருடத்திலே விற்பனவு 50 சத விகிதம், அதாவது 60 இலட்சம் டொலரிலிருந்து 90 இலட்சம் டொலருக்கு உயரும். அப்போது எந்திரங்களும் 50 சத வீதம் உயரும். அதாவது 20 இலிருந்து 30 எந்திரங்களாக உயரும். நாலாம் ஆண்டிலே 11 எந்திரங்கள் வாங்கவேண்டும். அதாவது 10 புதிய எந்திரங்களும், பயனற்றதாய்ப் போனதொன்றுக்குப் பதிலாக வைக்கப்படும் புதியதொன்றும் வாங்கவேண்டும்.

விற்பனவுகள் 50 வீதம் உயர்ந்துவிட்டன. எந்திர உற்பத்தி எவ்வளவு உயர்ந்தது? 1,000 வீதத்தில்! நுகர்விலோ, முதலீட்டு மட்டத்திலுள்ள வேறு இறுதி அமிசங்களிலோ உண்டான மாற்றத்தின் வேகமான பாதிப்பினலே தான் இதற்கு துரிதக் கொள்கையென்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

[1] விடயத்தை இலேசாக வைத்திருப்பதற்காக நாம் இந்த வீதத்தை 10 : 1 வைத்துள்ளோம். வட்டிவீதத்திலும், எந்திரத்திறமையைப் பயன்படுத்தல் அளவிலும் உள்ள மாற்றங்களை கணக்கிலே எடுக்காதுவிட்டுவிடுகிறேம். வாசகர், சரக்குமாற்றம் தளவாடமாற்றங்களை ஆராய்ச்சியிற் சேர்த்துக் கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



ஐந்தாம் வருடத்திலும், ஆறும் வருடத்திலும் விற்பனவுகள் 30 இலட்ச டொலரால் உயர்ந்தால், நாம் பிரதிவருடமும் 11 புதிய எந்திரங் களைத் தருவிப்போம்.

இதுவரை துரிதக் கொள்கை எவ்வித இடர்ப்பாட்டையுங் கொடுக்க வில்லை. நுகர்வுப் பொருள் விற்பனைகளில் மிதமான அதிகரிப்புண்டான தின் பயனாக, அது முதலீட்டுச் செலவில் பெரிய அதிகரிப்பையுண்டாக்கி விட்டது. இப்போது நாம் புலியின் வாலைப் பிடித்துக்கொண்டோம். முதலீடு நிலையில் நிற்பதானால் நுகர்வு அதிகரிக்கவேண்டும். நுகர்வு மிக்க வேகத்திலே வளர்வது நிற்குமானால்—அது 7 ஆம் வருடத்திலே 150 இலட்சம் டொலர் மட்டத்திலே நிற்குமானால்—தேறிய முதலீடு பூச்சிய மாகிவிடும். மொத்த முதலீடு 1 எந்திரக் கணக்குக்கு விழுந்துவிடும். (அட்டவணை 1 பார்க்க.) அதாவது விற்பனவிலே பூச்சிய வீதம் வீழ்ச்சி யானால், மொத்த முதலீட்டில் 90 வீதம் வீழ்ச்சியுண்டாகும். தேறிய முதலீட்டி லே 100 வீதம் வீழ்ச்சியுண்டாகும் (1 ஆம் அட்டவணையிலே, மூன்றும் பருவத்தைப் பார்த்து நாலாம் பருவத்தை நிரப்புக).

துரிதக்கொள்கை இரண்டு திசையிலும் செயற்படும். விற்பனவு 150 இலட்சம் டொலருக்குக் கீழே விழுந்தால், மொத்த முதலீடு பூச்சியமாக இறங்கிவிடும். பழைய எந்திரங்கள் விற்கும் சந்தையில் கம்பனி தனது எந்திரங்களிற் சிலவற்றை விற்று, முதலீட்டைக் குறைக்க விரும்பும்.

**ஓரமைப்பின் வளர்ச்சிவீத மாற்றங்கள் அதன் முதலீட்டு மட்டத்திலும் மாற்றங் களை உண்டாக்குமென்பதை வேகவளர்ச்சித் தத்துவம் காட்டுகிறது.**

அட்டவணை 1. வேகவளர்ச்சித் தத்துவ விளக்கம். (10 இலட்சம் டொலரில்)

| காலம் | வருடாந்த விற்பனவு | மூலதனக் கையிருப்பு | தேறியமுதலீடு.தே.மு | மொத்த முதலீடு மொமு (தே. மு. தேய்மான புதுப்பித்தல்) |
|---|---|---|---|---|
| **முதற்பருவம்** | | | | |
| முதல்வருடம் | .. 6 டொ. | .. 60 டொ... | 0 டொ... | 1 எந்திரம் 3 டொ. படி. = 3 டொ. |
| இரண்டாம்வருடம் | .. 6 | .. 60 | .. 0 | .. 1 ,, 3 ,, ,, = 3 டொ. |
| மூன்றும்வருடம் | .. 6 | .. 60 | .. 0 | .. 1 ,, 3 ,, ,, = 3 டொ. |
| **இரண்டாம் பருவம்** | | | | |
| நாலாம் வருடம் | .. 9 டொ. | .. 90 டொ... | 30 டொ... | (1+10) எந்திரம் 3 டொ.படி. = 33 டொ. |
| ஐந்தாம் வருடம் | ..12 | ..120 | .. 30 | ..(1+10) எந்திரம் 3 டொ.படி. = 33 டொ. |
| ஆறும் வருடம் | ..15 | ..150 | .. 30 | ..(1+10) எந்திரம் 3 டொ.படி. = 33 டொ. |
| **மூன்றும் பருவம்** | | | | |
| ஏழாம் வருடம் | ..15 டொ. | ..150 டொ... | 0 டொ... | 1 எந்திரம் 3 டொ. படி. = 3 டொ. |
| **நான்காம் பருவம் (வாசகர்பூரணமாக்குக)** | | | | |
| எட்டாம் வருடம் | . 14.7 டொ... | டொ.— .. | 3 டொ... | —எந்திரங்கள் 3 டொ. படி. = 3 டொ. |

www.padippakam.com



முற்றாக இல்லாது போகாவிட்டாலும், உயர்ந்த மட்டத்திலிருந்து விற்பனவுகள் குறைந்துகொண்டு வருகிறபடியால் ஒரு வியாபார மந்தம் உண்டாகலாம்.

எந்திர உற்பத்தித் தொழில்களிலே உற்பத்தி குறைக்கப்பட்டால் அவற்றின் வருமானம் குறைய, அவை உணவு, உடை என்பவற்றில் செலவு செய்வதைக் குறைக்கும். அதனால் செலவினங்களில் மேலும் பெருக்குமெண் மாற்றங்களுண்டாகும். இது புடைவை விற்பனவு வளர்வதையே கடைசியாக நிறுத்தச் செய்யும், அல்லது குறைந்துபோகச் செய்யும். இதனால் தேறிய வருமானத்திலே மேலும் விழுக்காடு உண்டாகும். இதனால் நாம் மீளமுடியாத சிக்கலில் சிக்கிக்கொள்வோம். துரிதக்கொள்கையும், பெருக்குமெண்ணும் பரஸ்பரம்செயற்படுவதால் கூட்டான வீக்கமோ, வாட்டமோ வளர ஏதுவாகும்.

நமது உதாரணத்திலே, எந்திரங்களைத் திருட்டாந்தமாகக் காட்டினேம். இதனால் சரக்குமுதல் "பின்னிடைவுகளில்" துரிதக்கொள்கை பொருந்தாதென்பது பொருளா? அவை சமீபத்தில் முக்கியமாகக் கருதப்பட்டன வல்லவா? (1920–1921, 1937–1938, 1948–1949, 1953–1954,, 1957–1958) அப்படியன்று. மூலதனப் பொருள்களின் கையிருப்பு ஒரலகின் விற்பனவுக் காலத்துக்கு, ஏதோ ஒருவீதத்தில் பொருத்தமுடையதாயிருக்கும். குறுகியகாலச் சரக்குச் சுழலை விளக்க இக்கொள்கை பயனுடையதாகும்.

துரிதக்கொள்கையிலே, பொருளாதாரத்தைத் திரமற்றதாக வைத்திருக்கக்கூடிய சக்திவாய்ந்த சாதனமுண்டென்பதைக் கண்டுகொள்வது சுலபம். விற்பனவுகள் மேலுங் கீழும் அசைந்துகொண்டிருந்தால் துரிதக் கொள்கை இந்த நொடிப்பைத் தீவிரமாக்கலாம். மேற்போக்கிலே, அது தேறிய முதலீட்டை ஊக்கப்படுத்தும். கீழ்ப்போக்கிலே அதே அளவு முதலீட்டுக்குறைவை உண்டாக்கும். நெடுந்தவணையில் இம்முறையானது குடிசனத்தொகை பெருகுங்காரணமாகவோ உயர்ந்த நிசவருமானத்தினலோ வளர்ச்சியடையுமானல், துரிதக்கொள்கை தூண்டுதல் செய்யும் சாதனமாகவே பெரிதும் உதவும். தேசிய வருமானம் உயர்ந்தால் மூலதனம் வளரும்; அதன் பயனாக துரிதமான முதலீட்டுத் தேவையுண்டாகும். அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

**தொழில் முயற்சியைப் பற்றி முன்னேறியே கூறுதல்**

தொழில் முயற்சியாளர் முதலீடு செய்யும்போதும், உற்பத்திபற்றித் தீர்மானங்கள் செய்யும்போதும், வருங்காலத்தைப் பற்றி ஊகித்துக் கொள்ள வேண்டும். அடுத்த வருடம் வியாபாரமந்தமுண்டாகுமென்று அவர்கள் நினைப்பார்களானல், முதலீட்டை இப்போது குறைக்கவிரும்புவர். ஆனல் இன்னும் நாலு மாதத்திலே விலைகள் உயருமென்று எதிர் பார்ப்பார்களானல், உடனேயே தளவாடம், உற்பத்திச்சாதனம் என்பவற்றைப் பெருக்க அவர்கள் கொள்வனவுகளைச் செய்வதில் முனைந்து நிற்பர்.

www.padippakam.com



ஊகவியாபாரிகளும் அவ்வாறே சாதாரண சரக்குகளை வாங்கி வியாபாரஞ் செய்து இலாபம் பெறுவதற்காக வருங்காலத்தைப் பற்றியறிய விரும்புவர். அரசாங்கக் கொள்கைகளை உருப்படுத்துவோர் அடுத்த வருடத்துத் தேசீய வருமானக் கணக்கை முன்னேறியே அறிந்து கொள்ள விரும்புவர். ஏனெனில் அதைச் சமாளிப்பதற்கான பிஸ்கால் நடவடிக்கைகளையும் பண நடவடிக்கைகளையும் அப்போதுதான் மேற்கொள்ள முடியும். புள்ளியியலாளரோ, பொருளியலாளரோ சரியானபடி தீர்க்கதரிசனம் கூறமுடியாதிருக்கிருர்கள். அவர்களுடைய ஊகம் சில சமயம் முற்றும் பிழையாகிப்போகிறது. இருந்தும், மக்கள், அவர்களால் இயலக் கூடியதைச் செய்யும்படி கூறுகின்றனர். ஏன் ? எவ்வித தீர்க்க தரிசனமும் இல்லாதபோதும், அதிலேயே ஒரு தீர்க்கதரிசனம் அடங்கியுள்ளது. தேர்ச்சிபெற்ற புள்ளியியலாளரைவிட பொருளியலறிவில்லாதவரே நெடுந்தவணைச் சராசரித் தீர்க்கதரிசனம் கூறுவது இயல்பு. மிகச் சிறந்த தீர்க்கதரிசிகள் என்ன முறையைக் கையாளுகிருர்கள் ? இதுபற்றி இலேசானதொரு விவரணை கொடுக்க முடியாது. இருந்தாலும் வழக்கத்திலுள்ள சில சாதாரண முறைகள் பின்வருமாறு :—

1. அவர்கள் தேசீய வருமானக் கணக்கெல்லாவற்றையும் மிக நுட்பமாக ஆராய்வர். மொத்தத் தேசீய உற்பத்தியை ஒவ்வொரு தவணையும் ஆராய்வர். தனிப்பட்டவர் வருமானத்தை ஒவ்வொரு மாதமும் ஆராய்வர். புதிய கட்டடம், தளவாடம் வாங்குதல், குறுந்தவணைச் சரக்குப் போக்கைப் பற்றிய முக்கியமான ஆராய்ச்சி, எதிர்பார்க்கும் அரசாங்கச் செலவுகள், வரிகள் என்பனபற்றிய மதிப்பீட்டு ஆராய்ச்சி என்பன நடைபெறும். மேலும் அவர்கள் விலைப்பட்டியல்களை ஆராய்வர் ; பெடரல் ரிசர்வ் சபையில் மாதாந்த உற்பத்திப் பட்டியலை ஆராய்வர் ; வேலையற்ருேர் சம்பந்தமான மாதாந்த அறிக்கையையும் ஆராய்வர்.

மேலும், பண்டசாலை விற்பனவு அறிக்கையை வாரந்தோறும் ஆராய்வர் ; சங்கிலித் தொடர் பண்டசாலை, தபால்—ஓடர் விற்பனவு என்பவற்றை மாதாந்தம் ஆராய்வர். அதோடு ஒவ்வொருமாதமும் கொடுக்கப்படும் புதிய ஓடர்களும், சரக்குநிலைகளின் உற்பத்தி, விற்பனவு என்பவற்றிலுண்டாகும் மாற்றங்களும் மாதாமாதம் ஆராயப்படும்.

2. இரண்டாவது மகாயுத்தம் ஆரம்பித்த காலந் துவங்கி, முதலீடு சம்பந்தமான தகவல்களைப் பலதாபனங்கள் சேகரித்தன ; பொருள் கொள்வனவு செய்யுந் தாபனங்களும் தமது அபிப்பிராயங்களை அறிக்கை மூலம் வெளிப்படுத்தின. இவையெல்லாம் ஆராயப்பட்டன.

நுகர்வோர் சம்பந்தமாகவுஞ் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. நுகர்வோர் பொருள்களை வாங்கும் மனநிலையிலிருக்கிருர்களா ? செலவு செய்வது பற்றி அவர்களுடைய நோக்கமென்ன என்பதுபற்றியெல்லாம் மிச்சிக்கன் தொகுதி ஆராய்ச்சி நிலையம் பலதகவல்களைச் சேகரித்து வெளிப்படுத்திற்று.

16—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



பொதுவாக வியாபாரிகள் விடயத்திலே "டன் அண்ட் பிராட்ஸ்ரீட்" என்ற தாபனமும், "போச்சூன்" என்ற பத்திரிகையும் வருங்கால, நிகழ்கால நிலைமைகளைப்பற்றி அபிப்பிராயம் சேகரித்தன. ஐரோப்பாவிலே இத்தகைய அபிப்பிராயச் சேகரிப்பு முன்னேற்றமடைந்துள்ளது.

3. எதிர்கால மாற்றங்களைப் பற்றி அண்ணளவாக ஊகிப்பதற்கு நு+மு+அ "(C+1+G)" மாதிரிகளைச் சிலர் உண்டாக்குவர். பலதரமான விடைகளை அவர்கள் கொடுப்பார்கள்.

4. பல்வேறுவகைப்பட்ட பருவத்தொடர்கள்—படம் 2 இலே கண்டவாறு —உயர்கின்றனவா, தாழ்கின்றனவா என்பதை ஆராய்ந்து மேற்படி ஊகங்களை அவர்கள் உறுதிப்படுத்துவர்.

ஒருவாரத்துக்கு வேலைசெய்யும் சராசரி நேரம், பங்கு விலைகள், கட்டடப் பரிசுவழங்கல், வழங்காமை, புதிய ஓடர்கள் என்பன உயர்வதைவிட்டு வீழ்ச்சியடைகின்றனவா? இவை முக்கியமான சில அறிகுறிகளாகும்.[1]

சாதகமாகவும் பாதகமாகவுமுள்ள நியாயங்களைச் சொல்லி முடித்தபின்னர், ஒரு விடயம் தெளிவாகிறது. பெரிய கம்பெனித் தலைவர்கள் தீர்மானங்களைச் செய்வதற்கு உதவியாகத் தீர்க்கதரிசிகள் இருக்கிறார்களென்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. "இந்த வருடமும் அடுத்த வருடம்போலவேயிருக்கும்" என்று தீர்க்கதரிசனஞ் சொல்லும் தீர்க்கதரிசிகளைப் போலல்லாமல் இவர்கள் சிறப்புடையவர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். இதனாலேதான் கம்பெனி, பொருளியற் பிரிவினரை விரும்புகிறது. எந்த நாட்டரசாங்கத்துக்கும் பொருளியற் பிரிவு அவசியமாகும்.

**சுருக்கம் :**

1. வியாபாரச் சக்கரம் என்பது பல நாடுகளிலுமுள்ள, பல்வேறு பொருளாதார வாழ்வின் உயிர்நாடியாகும். தேசியவருமானம், வேலையில்லாத் திண்டாட்டம், உற்பத்தி, விலைகள், இலாபம் என்பவற்றின் இயக்கங்கள் ஒழுங்கானவையல்ல; கோல்களின் போக்கைப்போல அவற்றை முன்னேறியே சொல்லிவிடமுடியாது. பெண்டியூலத்தின் அசைவைப்

1. வியாபாரம் கீழ்நோக்கிச் செல்வதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்னர் அதைக் காட்டக்கூடிய புள்ளிவிபரத்தொடரைக் காண்பதற்கு மக்கள் முயன்று வந்தனர். தீர்க்கதரிசனம் கூறுவதற்கு இத்தகைய முதன்மையான சூசகம் மிகப் பயனுடையதே. ஆனால் அத்தகைய பூரணவழிகாட்டியைக் காண்பது துர்லபம். ஜியோபிரே மூர், ஆர்தர். எப். போர்ன்ஸ் என்பவர்கள் தேசியப்பொருளாதார ஆராய்ச்சி நிலையத்திலே, மேலே கூறியதொடர்களிற் சில, வியாபாரத்திருப்பங்களை முன்கூட்டியே அறிவிக்கவும், அவை நிகழ்ந்து விட்டனவென்பதை நிரூபிக்கவும் உதவுகின்றன என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். தீர்க்கதரிசிகள் இந்தச் சூசகங்களை மாத்திரம் நம்பி விடயங்களை நிச்சயிக்கமுடியாது. 1952 போன்ற பருவங்களிலே அவை பிழையான குறிப்புக்களைக் கொடுத்தன. ஏனைய விரிவுக்காலங்களில் சூசகங்கள் விரைவாக வீழ்ச்சியடைந்து பின்னர் ஈடாடத்தொடங்குகின்றன. அதனால் அவற்றின் பயன் குறைவுடையதாகின்றது; இத்தொழில்நுட்பங்களில் மேலும் முன்னேற்றஞ் செய்யப் பொருளியலறிஞர் விரும்புவர். காரியக்கெட்டியான தீர்க்கதரிசிகள் மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பை இத்தகவல்களால் நிறைவுடையதாக்குவர்.

www.padippakam.com



போல முன்னரே நிர்ணயித்துவிடமுடியாது. வியாபாரப் போக்கை முன்னரே யூகித்தறியக்கூடிய திட்டமான முறையுங் கிடையாது .

2. விரிவு, உச்சம், சுருக்கம், மறுமலர்ச்சி என்ற நாலு பருவங்களையும் ஆராய்ச்சிக்காக வேறுபடுத்தலாம். இவற்றைப் பருவகால நொடிப்புக்கள், நீண்டதவணைப் போக்குகள் என வித்தியாசப்படுத்தலாம். இதன் பயனாக உண்டாகும் 8–10 வருடப் பெருஞ் சுழல், குறுங்காலச் சிறிய சுழல், நீண்டகாலக் கட்டடச் சுழல் என்பனவெல்லாம் பொருளியலறிஞராலும், புள்ளியியலறிஞராலும், சரித்திராசிரியராலும் நுட்பமாக விவரிக்கப்பட்டுள்ளன.

3. இச்சுழல்களை விளக்குவதற்கு கொள்கைகளை அமைக்குமிடத்து, முதலீடான அல்லது நீண்ட பயனுள்ள மூலதனப் பொருள்களமைவதில் உள்ள நொடிப்புக்கள் விரிவாயிருப்பது ஓர் அறிகுறியைக் காட்டும். இந்த விடயத்தில் பெரும்பாலான பொருளியலாளர் உடன்பட்டாலும், புறச் சாதனங்கள், அகச்சாதனங்கள் என்பவற்றை அழுத்திக்கூறும் விதத்தில் வித்தியாசப்படுகின்றனர். அங்கே ஒருபுறத்திலே, புதுக் கண்டுபிடிப்புக்கள், குடிசனப் பெருக்கம், புதுநிலம் சேர்தல், தங்கச் சுரங்கங் கண்டுபிடித்தல், அரசியல் சண்டைகள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மறுபுறம் பொருளியலாளர், முதலீட்டு வாய்ப்புக்களில் உள்ள இந்தப் புற மாற்றங்கள், எவ்வாறு பொருளாதாரப் பெருக்குமெண் விளைவுகளாலும், வங்கிகளின் கடன்முறைகளாலும், மக்களிடையே உண்டாகும் நல்லது காணல், தீயதுகாணல் என்ற மனப்பான்மைகளாலும், தீவிரமான மாற்றங்களையும் மட்டங்களையுமுண்டாக்கும் துரிதக் கொள்கையாலும், வருமானம் முதலீட்டிலே உண்டாக்கக்கூடிய புனரூட்டவிளைவுகளாலும் மட்டுப்படுத்தப்படுகின்றன என்பதை அழுத்திக் கூறுகின்றனர்.

4. தீர்க்கதரிசனம் கூறுவது இன்னும் சரியான முறையில் அமையவில்லை. நீண்டதவணைச் சராசரியை அனுசரித்துக் கூறப்படுபவை தேசீய வருமானம், அது சம்பந்தமான புள்ளிவிபரம் என்பன சம்பந்தமாக ஓரளவு பொருத்தமுடையனவாயிருக்கின்றன. அவை பெரும்பாலும், அரசாங்க ஆராய்ச்சி அறிக்கைகள், நுகர்வோர், வியாபாரிகள் ஆகியோர் உத்தேசங்கள் என்பவற்றிலே தங்கியுள்ளன. அவை நு+மு+அ (C+1+G) உத்தேசங்களை, முக்கியமான அறிகுறிகளால் உறுதிப்படுத்துகின்றன.

பின்வரும் அதிகாரங்களில், வரலாற்று வர்த்தகச் சுழலின் கடுமையை மட்டுப்படுத்துவதற்குரிய சாதனங்கள் ஆராயப்படும்.

### வினாக்கள்

1. வியாபாரச் சக்கரம் என்றாலென்ன ? அதை எவ்வாறு அளப்பது ?

2. இந்த நாட்டிலேயுள்ள வியாபாரச் சுழலின் வரலாற்றைக் கூறுக.

3. சுழலின் பல பருவங்களை வருணிக்க. நீங்கள் இப்போது எந்தப் பருவத்திலிருக்கிறீர்கள் ?

படிப்பகம்

www.padippakam.com



4. சுழல்பற்றிய கொள்கைகளுள் எதை நீர் பெரிதும் விரும்புகிறீர்? ஏன் ?

5. துரிதக்கொள்கை பற்றி இரண்டு பக்கத்தில் விளக்கந்தருக. அது பெருக்குமெண்ணேடு எவ்வாறு தொழிற்படுகிறதென்பதை உம்மால் யூகிக்க முடியுமா ?

6. வியாபார நடவடிக்கையின் எதிர்காலத்தை முன்னேறியே அறிந்து கூறுவது ஏன் முக்கியமானது ? தினுசான வியாபாரங்களை உதாரணங் காட்டி விளக்குக. தீர்க்கதரிசனம் கூறுவதெப்படி ? எவ்வளவு நம்பிக்கையோடு அதைச் செய்யலாம்?

7. பின்வரும் கருத்துக்களை ஆராய்க :
வியாபாரச் சுழல்,
நெருக்கடி,
பின்னிடைவு,
புனர்மாற்ற அலை,
சூரியன்புள்ளி,
திருப்பம்,
பருவம்,
துரிதக்கொள்கை,
தீர்க்கதரிசனமுறைகள்,
பருவத்திருத்தங்களும் போக்குத்திருத்தங்களும்,
அகக்கொள்கைகளும் புறக்கொள்கைகளும்,
முக்கியமான ஆதரிச அறிகுறிகள்.

படிப்பகம்

www.padippakam.com

## பதினைந்தாம் அத்தியாயம்

## விலைகளும் பணமும்

*செலாவணி விடயம் பத்தாயிரத்தில் ஒருவருக்குத்தான் விளங்கும். அத்தகையவரை நாம் தினமுஞ் சந்திக்கிறோம்—*

**கின் ஹபாட்**

சேமிப்பு, முதலீடு என்ற கணக்கிலே, அதாவது நுகர்வு அமிசங்கள், முதலீட்டு அமிசங்கள், அரசாங்கச் செலவு அமிசங்கள் என்ற வகையில், பண வருமானம் எந்தச் சக்திகளால் சுருங்குகின்றது, விரிகின்றது என்பதை ஆராய்தல் சுலபமென்று இக்காலப் பொருளியலறிஞன் உணர்கிறான். இதை முந்திய அத்தியாயங்கள் காட்டின. பணவீக்க இடைவெளியிலன்றி, மற்றும்படி பெரும்பாலும் உயர்ந்த வேலைவாய்ப்புக் கிட்டுமலன்றி, விலைமட்டங்கள் அதிகம் மாற்றமடையமாட்டாவென்று கருதிக் கொண்டோம். விலைமட்டமாகிய அளவுகோலிலேயுண்டாகும் மாற்றங்களுக்கேற்பச் சரிப்படுத்தப்பட்ட டொலர் கணக்கில் எல்லா அட்டவணைகளும் காட்டப்பட்டன என்று முன்னரே கருதிக்கொண்டோமென்றுங் கொள்ளலாம். நுகர்வு—சக—முதலீடு—சக—அரசாங்கச் செலவு என்ற அட்டவணையில் உண்டாகும் ஒரு மாற்றம் தொழில் வாய்ப்பையும் உற்பத்தியையும் பெருக்குமென இதுவரை எண்ணப்பட்டு வந்தது.

இப்போது நாம் விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றம் பற்றிக் கவனத்தைச் செலுத்தப்போகிறோம். பெரிய யுத்தம் நடைபெறும் காலங்களிலே விலைகள் ஏறுவது எதனால்? துள்ளல் பணவீக்கத்தில் விலைகள் கோடிக் கணக்கில் உயர்வதும், சீர்குலைந்த நாடுகளிலே கப்பற்கணக்கில் பச்சை நோட்டுக்கள் அடிக்கப்படுவதும் எதனால்? நு+மு+அ (C+I+G) செலவு ஒரு பொருளாதாரத்தைப் பூரணவேலைவாய்ப்புக்கோ உயர்ந்த மட்டமான வேலைவாய்ப்புக்கோ நிலைநிறுத்துவதற்குமுன் விலைகள் உயரத் துவங்குவதேன்? தற்காலக் கலப்புப் பொருளாதாரத்தில் மேற்பார்வைக்கு அதிக எந்திர உற்பத்தி வாய்ப்பும் மந்தமான தொழில் சந்தையும் உள்ள காலத்தில் விலைகளும் சம்பளமும் ஏறுவது எதனால்?


இந்த மூலதாரமானதும் சிக்கலானதுமான பிரச்சினைகளைப் பின்வருந் திட்டப்படி ஆராய்ந்தால் பயனுண்டு. இந்த அத்தியாயத்திலே முதலாவதாக, விலைமட்ட மாற்றங்கள் சம்பந்தமாகவும், அவற்றால் உண்டாகும் விளைவுகள் பற்றியும் தகவல்கள் தருவோம். அதன் பின்னர் பண விநியோகம் சம்பந்தமான கருத்தை ஆராயலாம்; நெடுந்தவணை விலைகள் சார்பாக அது பொதுவாய் எத்தகைய போக்குடையதென்பதை ஆராய்வோம். ஈற்றிலே முக்கியமான "பணத்தின் அளவுக் கொள்கை" ஆராயப்படும். பருமட்டான தூய்மையற்ற நிலையில் இந்தப் பண அளவுக்கொள்கையை



படிப்பகம்

ஆராய்ந்தால் அது வங்கி முறைபற்றியும், பெடரல் ரிசேர்வ் வங்கியின் பணக்கொள்கைகள்பற்றியும் ஒரு காட்சியை அளிக்கும். அதை மேல்வரும் அத்தியாயங்களில் ஆராய்வோம். நமது தற்காலக் கலப்புப் பொருளாதாரத்தில் பரம்பரையான மேலதிக டொலர்செலவுசெய் தினுசுப் பணவீக்கத்தை ஊரும் பணவீக்கத்தோடு சேர்த்து ஆராய்வதா, இல்லையா, என்ற வாதத்துக்குரிய பிரச்சினை ஆறும் பகுதியிலே மதிப்பிடப்படும்.

**போரினால் விலையில் தீவிர அதிகரிப்பு உண்டாகிறது :**




படம் 1 : யுத்தத்துக்குப் பிந்திய காலங்களில், விலைகள் அவ்வளவு குறையவில்லை. கடந்த யுத்தத்தின் பின்னர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படவில்லை. கடந்த 60 வருடமாக விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகின்றன.

### அ. விலைகள்

**விலைகளின் பழைய நடத்தை.**—மொத்த விலைகளின் சரித்திரபூர்வமான ஏற்ற இறக்கங்களை படம் 1 இல் காணலாம்.[1] ஒவ்வொரு யுத்த காலத்திலும் திட்டமானதொரு விலையுச்சமுண்டு. முதற்பார்வையிலே பொதுவாக உயர்வோ தாழ்வோ புலப்படுவதில்லை. படம் 2 இலுள்ள நுகர்வோர் விலைப் படம், இந்நூற்றுண்டிலே விலைகள் செல்லும் போக்கைக் காட்டுகிறது. விலைவாசிகள் பொதுவாக உயர்ந்து கொண்டே சென்றன.

[1]. விலைகளின் சராசரி சுட்டிலக்கத்தைக் கணிப்பதிலேயுள்ள கொள்கை சம்பந்தமான பிரச்சினைகளையும் புள்ளிவிபரம் சம்பந்தமான பல பிரச்சினைகளையும் 7 ஆம் அத்தியாயத்திலே கண்டோம். எல்லாப் பொருள்களுக்கும் அண்ணளவான விலைகளைப் பெறுவது கடினம். அன்றியும் பல விலைகளையும் எவ்வாறு பாரப்படுத்துவதென்பதும் ஒரு பிரச்சினை. மேலும் செல்வனுடைய வாழ்க்கைச்செலவு வறியவனுடைய செலவிலும் வேறுவிதமாக மாறும். மரக்கறி சாப்பிடுபவருடைய செலவும் அவ்வாறே மாமிசம் சாப்பிடுபவரின் செலவைப் போல மாறும். இருந்தும், பலவேறு சுட்டிலக்கங்களும் ஒரேவகையிலேயே மாற்றமடைவது நூதனம்.

www.padippakam.com



டொலரின் மதிப்பு அதன் வாங்குஞ் சக்தியால் அளக்கப்படுவதனுல் இந்தச் சந்ததியினுரம்பத்திலே அரைவாசியாகக் குறைந்து விட்டது.

எதிர்காலத்தின்தீய சகுனமாயமைந்த ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது இரண்டாவது மகா யுத்தத்தின் பின்னர், விலைகள் எவ்வகையிலும் குறையவில்லை. முதலாவது மகாயுத்தத்தில் அவை குறைந்ததுபோல இச்சமயம் குறையவில்லை. சம்பளங்களும், விலைகளும் கீழே இறங்கவில்லை. வியாபார மந்தம் உண்டாகாமல் தடுப்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை எடுத்தது. நல்ல காலத்திலே விலைகள் உயர்ந்து, கெட்ட காலத்தில் அதிகம் வீழ்ச்சியடையாமலிருந்தால் அவற்றின் நெடுந்தவணைப்போக்கு எத்தகையது ? வினுவே, விடையையும் அளிக்கும்.

**பணவீக்கம், பணவாட்டம், வகுப்புக்களிடையே வருமானத்தை மறுபடி பகிர்தல் ஆகியவை**

பண்டம், உற்பத்திச் சாதனம் என்பவற்றின் விலைகள் பொதுவாக உயரும் பருவத்தையே பணவீக்கம் என்கிறேம். விலைகளெல்லாம் வீழ்ச்சியடையும் பருவத்தையே வாட்டம் என்கிறேம். பணவீக்கத்திலேயோ, பணவாட்டத்திலேயோ எல்லா விலைகளும் ஒரே திசையிலோ ஒரே விகிதத்திலோ நகர்வதில்லை. சார்பு விலைகளின் மாற்றங்களாலும், மொத்தச் செலவில் ஏற்படும் மாற்றங்களாலும், வீக்கமும் வாட்டமும் (1) பொருளாதார வகுப்புக்களிடையே வருமானம் பங்கிடப்படுவதையும் (2) மொத்த உற்பத்தியையும், திட்டமான வழியில் மாற்றுகின்றன.

எதிர்பாராத வீக்கம், திரமான வருமானமுடையவருக்கும் கடன் கொடுத்தவர்க்கும் பாதகமாக, கடன் பெற்றவரையும் இலாபம் பெறுவோரையும் நன்மைபெறச் செய்கிறது. வாட்டம் இதற்கு எதிர்மாறுன தன்மையை உண்டாக்குகிறது.

உதாரணமாக, நீர் 1,000 டொலரை இன்று கடன் கொடுக்கிறீர் என்றும், ஒருவருடத்தின் பின்னர் அந்தத் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டு விடுமென்றும் வைத்துக் கொள்வோம். அதற்கிடையில் விலைவாசிகள் இரட்டிப்பாக உயர்ந்துவிட்டன. அப்போது உம்மிடம் கடன் பெற்றவர் உமக்கு நீர் கொடுத்த, வாங்குஞ் சக்தியில் $\frac{1}{2}$ பங்கையே திருப்பிக் கொடுப்பார். விலைகள் நூறுயிரங்கோடி மடங்கு அதிகரித்தால் கடன் கொடுத்தவர்களின் பணப்பெறுமதி முழுவதும் சூனியமாகி விடும். 1920–23 இல் ஜெர்மனியில் உண்டான பணவீக்கத்தின்போது இவ்வாறு நடந்தது. ஜெர்மன் சர்வகலாசாலைக் காப்புறுதிப் பணங்களுக்கும், உயிர்க்காப்புறுதிப் பணங்களுக்கும் இது நடந்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், ஈட்டுப்பங்கில் வருடம் 5 வீதம் பெற்ற ஓர் அமெரிக்கன், தனது டொலரின் நிச வாங்குஞ் சக்தி அவ்வளவு குறைந்ததால் வாழ்க்கை நடத்தவே இடர்ப்பட்டான்.

படிப்பகம்

www.padippakam.com




1949 இல் 75 டொலர் வாங்கிய அமெரிக்க அரசாங்கச் சேமிப்புப் பங்குகள் 1959 இல் 100 டொலர் வரை கொடுத்தது. ஆனால் 1949 ஆம் ஆண்டில் 75 டொலருக்கு 1959 ஆம் ஆண்டின் 100 டொலரிலும் பார்க்க அதிக வாங்குஞ் சக்தியிருந்தது. முதலாவது உலக மகாயுத்தத்தின் போதும், அதன் பின்னரும் அமெரிக்க விலைகள் தக்க அளவுக்குக் கட்டுப்படுத்தப் படவில்லை. வாழ்க்கைச் செலவு உயர்ந்தபடியால், ஓரளவு திரமான வருமானமுள்ள ஆசிரியர், தபாற் சேவகர், கணக்குவைப்டோர் முதலியோர் வாழ்க்கை நடத்த வருமானம் போதாது இடர்ப்பட்டனர்.

குறிப்பிட்ட ஓய்வுப் பணம் பெற்றோ, காப்புறுதி வருமானத்தைக் கொண்டோ, வட்டியைக் கொண்டோ வாழ்க்கை நடத்தும் வாழ்விழந்த பெண்கள், யுத்தத்துக்கு முந்திய 50 சதம், இன்றைய டொலரிலும் பார்க்க அதிக வாங்குஞ் சக்தி பெற்றிருந்ததால் அதே இன்னல்நிலையை அனுபவிக்கின்றனர். மிக்க நிர்வாகத் திறமையமைந்த பெரிய தொழிற் சாலைகளில் வேலை செய்யுந் தொழிலாளர், தொழிற்சங்க நடவடிக்கை மூலம் வாழ்க்கைத்தரம் உயர்வதைச் சமாளித்துக் கொள்வர். ஆனால் உண்மைச் சம்பளம் போதாதிருப்பதைப் பலர் உணர்வர்.

**விலைவாசி நமது வாழ்வுக்கூடாக வழிவகுத்துச் செல்கிறது.**

அமெரிக்க நுகர்வோர் விலைகள்–1900 தொடக்கம்




படம் 2. போர்களும், மந்தநிலைகளும் விலைவாசிகளை ஏற இறங்கச் செய்கின்றன. ஆனால் இந்த நூற்றாண்டிலே பொதுவான விலைப்போக்கு மேனோக்கியேயுள்ளது.

www.padippakam.com



ஆனால் நிசச் சொத்திலோ, சாதாரணப் பங்குகளிலோ மாவுமூட்டைகளிலோ தனது பணத்தை முதலீடு செய்யும் ஒருவன், பணவீக்கக் காலத்திலே அதிக இலாபத்தைப் பெறுவான். விற்பனவுத் தொகை அதிகரிக்கும். வியாபாரிகள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் விற்பனவு செய்வதற்குமிடையிலே விலைகள் ஏறிவிடும். நிலையான செலவுகளும், பொதுச் செலவுகளும் மாறாதிருக்கும். மாற்றுச் செலவுகளும் ஏறும்; ஆனால் விலைகளைப் போல ஏறமாட்டா. இக்காரணங்களால் இலாபம் அதிகரிக்கும். வாழ்க்கைச் செலவுக்கு அதிகமாகவே அஃது அதிகரிக்கும். பெரும் பண வீக்கம் நிலவுங்காலங்களிலே எந்த மடையனும் பெரிய பணக்காரனுகலாம்.

பணவாட்டக் காலத்திலே, விடயம் எதிர்மாருக விருக்கும். கடன் கொடுப்போரும் நிலையான வருமானம் பெறுவோரும், படுகடன்காரர், இலாபம் பெறுவோர் ஆகியோர் நட்டமடையும் வகையில் தாம் நயம் பெறுவர். கொடுகடன்காரன் கொடுத்த கடனைத் திருப்பி வாங்குமுன்னர் விலைகள் விழத்துவங்கினுல், அவருக்கு வாங்கும் சக்தி அதிகமுள்ள பணம் கிடைக்கும். வியாபாரி ஒருவன் பொருளை வாங்கி விற்பனவு செய்வதற்கிடையில் விலை வீழ்ச்சியடைந்தால் அவனுக்கு நட்டமுண்டாகும்.

பள்ளிக்கூட ஆசிரியையின் மெய்ச் சம்பளம் உயரும். பூரிப்புக்காலத்திலே சாதாரணப் பங்குகளை வாங்காது தனது பணமெல்லாவற்றையும் பாதுகாப்புறுதியுள்ள அரசாங்கக் கடன்பத்திரங்களிலே முதலீடு செய்த ஒரு கைம்பெண் இப்போது நல்ல இலாபம் பெறுவாள். தேசீய வருமானம், வரி அறவீடு என்பவற்றை அனுசரித்துப் பொதுக் கடன் உயர்வதை அரசாங்கமும் உணர்கிறது. தலையணையுறைக்குள்ளே பணத்தைப் புதைத்து வைத்துக்கொண்டு அதன்பேரில் எவ்வித வட்டியும் பெருத ஒருவன், தனது பணத்தின் உண்மை மதிப்பு, விலை வீழவீழ, தினமும் அதிகரிப்பதை உணர்கிருன். வருடத்தில் பத்துவீதம் விலைகள் வீழுமானுல், அவனுக்குப் பத்துவீதம் வட்டி கிடைக்கிறது. ஆனுல் வியாபாரி ஒருவன், ஒருவனுக்கு உத்தியோகம் வழங்குவானுனுல், தனது முதலைக் கூட மீட்கமுடியாத நிலையில் இருப்பான். இலாபத்தைப் பற்றிப் பேசவேண்டியதில்லை.

பணவீக்கத்தின் பயனுக வயதுபோனவர்களுடைய வருமானம், வாலிபர் கைக்கு வந்துவிடுகிறதென்று தற்கால ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஒருவர் 25 ஆவது வயதில்தனது 70 ஆவது வயதுக்குப் பயன்படுமென ஒதுக்கி வைக்கும் டொலர், வாங்குஞ் சக்தியில் குறைவடைகிறது. வருடத்திலே சராசரி 3 வீதமாக விலைகள் ஏறினுல் 45 வருடமாகச் சேமிப்பிலிருந்த டொலரின் உண்மையான வாங்குஞ் சக்தி அரைவாசியாகி, மேலும் அதே காலத்தில் மறுபடியும் அரைவாசியாகிவிடும்.

**உற்பத்தி, வேலைவாய்ப்பு என்பவற்றை விலை மாற்றம் எவ்வாறு பாதிக்கிறது ?** விலைவாசிகள் ஏறினுல், வேலைவாய்ப்புக்கள் உயர்ந்துவிட்டன

www.padippakam.com



என்றே பொதுவாகக் கருதப்படும். மிதமான பணவீக்கத்தின்போது தொழில் எந்திரத்தின் சக்கரங்கள் நன்ருக எண்ணெபோடப்பட்டிருப்பதால், உற்பத்தித் தகுதிக்கேற்றனவாயிருக்கும். தனிப்பட்டவர் முதலீடு துரிதமாயிருக்கும் ; வேலே நிறையக் கிடைக்கும். எனவே வியாபாரிகளோ, தொழிற் சங்க அதிகாரிகளோ மிதமான பணவாட்டம், மிதமான பணவீக்கம் என்பவற்றைப் பற்றிப் பேசும்போது, பணவாட்டமே பணவீக்கத்திலும் பார்க்க ஆபத்தானதெனக் கூறுவர். நிலேயான வருமானமுள்ள பிரிவினர்க்குண்டாகும் நட்டம், எஞ்சிய மக்களுக்குண்டாகும் இலாபங்களிலும் குறைவே. அரைகுறையான, நிலேவருமானமுள்ள தொழிலாளர்கூட, சிறப்பான வேலேவாய்ப்புக்கள் அதிகமிருப்பதாலும், நல்ல ஊதியம்பெறுவதாலும், நன்மையடைவர். கடன் கொடுப்போர் புதியகடன் பத்திரங்களில் வட்டிவீதம் அதிகரிப்பதால், தமக்குண்டாகும் நட்டங்களேச் சரிப்படுத்திக் கொள்வர்.

பணவாட்டத்தின்போது தொழில்வாய்ப்புக் குறைவதாலும், மூலதனம் பயன்படுத்தப்படாமையாலும் சமூகத்தின் மொத்தச் சுபீட்சம் குறையும். எனவே இலாபம் பெறுவோர், நட்டமடைவோர் அடையும் நட்டத்திலும் குறைவாகவே இலாபத்தைப் பெறுவர். ஆனல் மோசமான மந்தமுண்டானல், கொடுத்த கடனே அறவிடமுடியாதிருக்கும் கொடுகடன்காரர் உட்பட எல்லோருமே இன்னலடைவர்.

வேலேயில்லாக் காலங்களிலே விலேவாசிகள் சற்றே ஏறினும், நுகர்விலும், முதலீட்டிலும் பணத்தைச் செலவு செய்வது நல்லதாகும் என்பது மேலே கூறியவற்ருல் விளக்கம்பெறும். மோசமான மந்தநிலேயால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும்போது, தனிப்பட்டவரோ, அரசாங்கமோ செலவு செய்வது பணவீக்கத்தையுண்டாக்குமென்று எவரும் கூறமாட்டார். உண்மையிலே அதிகப்படியான செலவு உற்பத்தியைப் பெருக்கும். அப்போது வேலேவாய்ப்புக்களுண்டாகும்.

ஆனல் பூரணவேலேயும், பூரண உற்பத்தித் தகவும் அடைந்தபின்னர், மேலும் பணவிரயஞ் செய்வது, விலேவாசிகளே உயர்த்த உதவும் வீண் முயற்சியாகும்.

**பாயும் பணவீக்கம்.**—வருடத்துக்கு 2 சத வீதத்துக்குள்ளே விலேவாசிகளின் உயர்வை அடக்கி வைக்கக்கூடுமானல் அதைப்பற்றி அக்கறைகொள்ள வேண்டியதில்லே. ஆனல் விலே உயரச் சம்பளங்களும், உற்பத்திச் செலவும் உயர, அதனல் மேலும் விலே உயரவேண்டிய நிலே உண்டாகுமானல் அப்போது பாயும் பணவீக்கம் உண்டாகிவிட்டதென்பது கருத்து. 1920–23 இலே ஜெர்மனியிலும், சமீபத்திலே சீனவிலும் ஹங்கேரியிலும் விலேவாசிகள் விரைவாக ஏறின. அது நன்மையானதன்று. அதனல் உற்பத்தியும், சமூக அமைப்புமே நிலேகுலேயும். பணத்துக்கு மதிப்பில்லாதுபோகவே, குடிசனத் தொகையிலே பெரும் பகுதியாருடைய செல்வம் அழிகிறது. கடன்காரர் கடன்கொடுப்போரை நாடுகின்றனர். அவர்களுக்கு மதிப்பிழந்த

படிப்பகம்

www.padippakam.com



பணத்தைக்கொடுத்து தமது கடமைகளைத் தீர்க்கப் பார்க்கின்றனர். யூக வியாபாரஞ் செய்வோர் இலாபமடைவர். விலையேறுமுன் துணிமணிகளை வாங்கிவிடவேண்டுமென்று விரும்பும் வீட்டு மனையாள் கணவனின் சம்பளத்தையுங் கொண்டு கடைக்கு விரைகிறாள். ஆனால் அந்தச் செய்கையே விலைவாசிகளை விரைவாய் ஏற்றிவிடுகிறது. தென்மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் பண வீக்கத்தின்போது பின்வருமாறு கூறினார் :—

சட்டைச்சாக்கிலே பணத்தோடு செல்வோம். கடகம் நிறைய உணவுப் பொருள்களோடு வீடு திரும்புவோம். இப்போது கடகம் நிறையப்பணங் கொண்டு போகிறோம். சட்டைச்சாக்கிலே உணவுப்பொருள்களைக் கொண்டு வருகிறோம். பணத்தைவிட மற்றெல்லாப் பொருள்களும் அருந்தலாகிவிட்டன. விலைவாசிகள் தலைதடுமாறிக் கிடக்கின்றன. உற்பத்தி சீர்குலைந்து விட்டது. ஒரு நாடகம் பார்க்கும் பிரவேசச்சீட்டின் விலை கொடுத்து முன்பெல்லாம் ஒரு நேர உணவு பெற்றோம். இப்போது அதே உணவின் விலை 20 மடங்கு அதிகரித்துவிட்டது. வியாபாரம் தம்பித்துவிட்டது. ஏனெனில் என்னவிலை போடுவதென்று எவருக்குந் தெரிவதில்லை. அதனால் எல்லாரும் பொருளைப் பதுக்கிவைக்கப் பார்க்கிறார்கள். கடதாசிப் பணம் கெட்டது என்று அதைப் புழக்கத்திலிருந்து கலைத்துவிட முயற்சிசெய்கின்றனர். கடதாசிப்பணம் உலோக நாணயத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டி விடுகிறது. இதனால் மறுபடியும் பண்டமாற்றுமுறை அரைகுறையாகவாவது வந்து விடும்போலிருக்கிறது.

யுத்தகாலத்திலோ, புரட்சி, யுத்தம் என்பவற்றாலுண்டாகும் விளைவுகளினாலோ உண்டாகும் பணவீக்கத்தைவிட வேறுகாலங்களில் உண்டாகும் பண வீக்கத்துக்கு இப்போது நம்மிடம் சில உதாரணங்கள் உண்டு. இக்காலத்தில் விலைகள் சிறிதுசிறிதாக உயர்ந்துவிடுமென்பதே பெரிய பயம். அவ்வாறு விலை மேலே உயர்ந்து ஊர்வது கடைசியாகத் தாவிப்பாய்தலாகி விடுமா ? இதற்குத் திட்டமான பதில் கூறமுடியாது. இன்றைய பொருளியல் நிபுணர்கள் இத்தகையதொரு வீக்கம் உண்டாக நியாயமில்லையென்றே கூறுவர். ஆனால் விலையேறும் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவே செய்வர்.

முதலாவது உலக யுத்தத்தின் பின், விலைவாசிகள் உயர்ந்தபொழுது, சில பொருளியல் அறிஞர் " விலைவாசிகளும், சம்பளமும் உயராவிட்டால் பூரணவேலை நிலையை அடையமாட்டோம். விலை நிர்ணயிக்கும் சபையொன்றை ஏற்படுத்தினாலன்றி, பூரணவேலைவாய்ப்பை ஏற்படுத்தவும், விலைவாசிகளை நிலையாக நிறுத்தவும் முடியாது ", என்று கூறினர். இந்தக் கருத்து நியாயமானதென 1936–1937, 1945–1948, 1956–1958 ஆண்டுகளுக்குரிய அனுபவங்கள் காட்டின. ஆனால் 1951–1955 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு மிகவும் குறைவாயிருந்தது. மொத்த விலைகள் வீழ்ச்சியடைந்தன : வாழ்க்கைச்செலவு நிலையாயிருந்தது. தொழில்முயற்சியில் சுதந்திரமிருக்க வேண்டும் ; அரசாங்கம் கட்டுப்பாடுகள் விதிக்கக்கூடாது என்று நாம்

www.padippakam.com



விரும்புகிறோம். எனவே பூரண வேலைவாய்ப்பு, திறமை சுதந்தரம் என்பவற்றோடு கூடி இயங்கமுடியுமா என்பதைப் பற்றி அச்சமடையவேண்டியதில்லை.

**நெடுந்தவணை விலைப்போக்கின் நோக்கம்.**

வியாபாரச் சுழலின் அபரிமிதமான போக்கு மிதப்படக்கூடிய பூரண வேலைவாய்ப்புள்ள முற்போக்கான பொருளாதாரமே நாமெல்லாம் விரும்புமொன்றாகும். வியாபாரச்சுழல் பூரிப்பிலிருந்து நெருக்கடிக்குப் போய், பின்னர் மந்தநிலையடையும்போதுண்டாகும் பணமதிப்பின் பித்தலாட்டத்தை மட்டுப்படுத்தவே நாம் விரும்புகிறோம். நெடுந்தவணை விலைப்போக்கைப் பொறுத்தவரையில், பலவேறு பொருளியலாளரும் நல்லதெனக் கொள்ளும் மூன்றுவகையான திட்டங்களுண்டு.

1. **விலைகள்–சராசரியாக–நிலையாயிருக்கவேண்டும்.**—காலப் போக்கிலே, குடிசனப் பெருக்கத்தாலும், மூலதனம் உருவாகுவதாலும், உற்பத்தித் தொழில்நுட்ப மாற்றங்களாலும், டொலர் செலவுகளின் மொத்தம் அதிகரிக்கும். காலப்போக்கிலே உற்பத்தியிலுண்டாகும் அதிகரிப்பினால் பணச் சம்பளமும், மெய்ச்சம்பளமும் உயரும்.

2. **விலைகள் மெதுவாக உயரவேண்டும்.**—உயர்வேலைவாய்ப்பு, உற்பத்தி வளர்ச்சியினாலும் பெருக்கத்தாலும் உயரும். அப்போது மொத்த டொலர் செலவு விலைகளிலும் பார்க்க அதிகமாக உயரும். பணச் சம்பளங்களும் நிதானமாக உயர்ந்துகொண்டே போகும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் மெய்யான கூலியில் அதிகரிப்பு அதிகமில்லை.

3. **விலைகள் கிரமமாக வீழ்ச்சியடையவேண்டும்.**—பணச்சம்பளமும், சொத்து வருமானமும் பெரும்பாலும் நிலையாகவேயிருக்கும்; மாறாது. விளைதிறன்சார்ந்த தொழில்நுட்ப முறை மாற்றங்களால் உண்டாகும் உற்பத்திப் பெருக்கம் விலையைக் குறைக்கிறது. பணச் சம்பளம் நிரந்தரமாக மாறாதிருந்தாலும், நிசச் சம்பளம் ஏறிக்கொண்டேயிருக்கும். விலையிலே ஏற்படும் அத்தகைய வீழ்ச்சி வியாபார நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டியதில்லை. அது, முன்னர் செலவிலுண்டான குறைவுகளால் ஏற்பட்டதானால், வியாபாரிகள் ஏங்க வேண்டிய அவசியமில்லை.

வேலையின்மையைக் குறைந்த அளவில் இருக்கும்படி செய்துவிட்டால், மூன்று உபாயங்களும் உதவலாம். விலைவாசிகளின் போக்கை முன்னேறியே அறிந்துகொள்ளவும், எல்லாவகையிலும் அதனைச் சரிப்படுத்தக் கூடியதாயும் இருந்து, பொருளாதார அமைப்பும் தங்குதடையின்றிச் செல்லக்கூடியதாயிருந்தால், எந்த உபாயத்தையும் பயன்படுத்தலாம். ஆனால் மூன்றுவது உபாயத்தின் கீழ் உயர்ந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடாதென்பதைத் தற்காலக் கலப்பு பொருளாதாரத்தின் வரலாறும், ஆராய்ச்சியும் தெளிவுபடுத்துகின்றன. நிலையான விலையோ, படிப்படியாய் மெதுவாக உயரும் விலைவாசிகளோ உள்ள காலத்திலேதான், முதலாளித்துவ

படிப்பகம்

www.padippakam.com



முன்னேற்றத்தின் நல்லகாலம் நிலவியிருக்கிறது. இக்காலத்திலே எவ்வித அரசியற் குழப்பமுமுண்டாகவில்லை. ஸ்பானியாவின் புதிய உலகத்தில் கண்டுபிடித்த தங்கச் சுரங்கங்களின் பயனுக விலைகள் உயர்ந்துகொண்டு சென்ற பொழுதுதான் முதலாளித்துவமும் முன்னேற்றமடைந்தது. இதை எவராவது திட்டமிட்டுக் கொள்ளவில்லை. ஆனால் பண அமைப்புக்கள், விலை உயர்ந்த உலோகங்களிலேதங்கியிருந்தன. அத்துடன் கொலம்பஸ் அந்த நேரத்திலே விலை உயர்ந்த உலோகங்கள் நிறைந்த புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார்.

பெரிய அளவில் பொருளியல் ஆராய்ச்சி நடத்துவதற்கான சாதனங்களைச் சரிவர அறிந்துகொள்ளும்வரை, இந்த விடயத்தை இவ்வளவில் நிறுத்துவோம்.

## (ஆ) பண விநியோகமும், அது புழக்கத்தில் வரும் வேகமும்.

விசேடமான பொருளாதாரம், பண்டமாற்றுக்குப் பதிலாகப் பணத்தையே பயன்படுத்துமென்று மூன்ரும் அத்தியாயத்திலே கண்டோம். தற்காலப் பரிவர்த்தனைச் சாதனம் பணமே. விலைகளும் கடன்களும் இந்தப் பிரமாண அலகிலேதான் குறிப்பிடப்படுகின்றன. பணத்தின் போக்கையும் கொடுகடன்முறையையும் கட்டுப்படுத்தினால், அரசாங்கமும் பெடரல் ரிசேர்வ் அமைப்பும், சேமிப்பு, முதலீடு என்ற செலவுவகைகளிடையேயுள்ள சமநிலையைப் பாதிக்கலாம். பணவீக்கத்தைக் குறைப்பதும், மந்த நிலை ஏற்படாமல் தடுப்பதும் இப்போது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

### மூன்றுவகையான பணம் : சிறு நாணயம் ; நோட்டு ; வங்கிவைப்பு.

தினசரிப் புழக்கத்திலுள்ள முக்கியமான பணவகைகளை அட்டவணைப் படுத்துவாம் : அவை சிறு நாணயம், நோட்டு, வங்கிவைப்பு என்பனவாகும். சிறு நாணயங்கள் சில்லறைக் கருமங்களுக்குப் பயன்படுத்தப்படும். அவை செம்புச்சல்லி, பித்தளை 5 சதக்குத்தி, வெள்ளிக்காசு, அரைரூபாய், ஒரு ரூபாய் என்பன. இவை " சினை " மாற்று நாணயம். சிறுவர் இவைகளை மிக மதிப்புள்ளவை என்று நினைக்கக்கூடும். ஆனால் அவை அதிக தொகையைக் காட்டமாட்டா. ஒரு சமூகத்தின் பதின்மூன்றிலொருபங்கு காசு நாணயமே இவ்வாறு இருக்கிறது. இவை அடிக்கப்பட்ட உலோகத்தின் மதிப்பு இவற்றின் மதிப்பிலும் மிகக் குறைவாயிருப்பதால் இவை " குறியீட்டுப்பணம் " எனப்படும்[1]. இவற்றின் உலோகமதிப்புக்கு மிக அதிகமாகவே இந்த நாணயங்கள் மதிப்பிடப்படுகின்றன. ஏனெனில் அவை வேறுவகையான பணமாக மாற்றப்படலாம். உதாரணமாக

1. சர்வாதிகாரி ஒருவர் நோட்டுப் பணத்துக்குப் பதிலாக அதன் மதிப்புள்ள உலோகத்தில் பணத்தை அடித்து விநியோகஞ் செய்வாரானால் அவருக்குப் பணவிடயம் தெரியாதென்றுகிறது. பிளாட்டினம் அல்லது வெள்ளி உலகச் சந்தையிலே மதிப்பு உயர்ந்திருக்குமானால், மக்கள் உலோக நாணயங்களை உருக்கி விற்றுவிடுவார்கள். நாணயங்கள் மிக மலிவான உலோகத்திலுல் செய்யப்பட்டபடியினுலேதான் அவற்றை எவரும் உருக்கி மாற்றிக்கொள்வதில்லை.

www.padippakam.com



ஒரு டொலர் 20 ஐந்து சதங்களாக மாற்றப்படலாம். மலிவான உலோகத்தாற் செய்யப்பட்ட நாணயங்களை, எவரும் எவர்மாட்டும் நிர்ப் பந்தப்படுத்திப் புகுத்திவிடுதல் கிடையாது. பொதுமக்களுக்கு இந்த நாணயங்கள் அதிகந் தேவைப்படுவதில்லை. சிகரெட், புதினப்பத்திரிகை முதலிய சில்லறைப் பொருள்கள் வாங்கவே அவை தேவைப்படுகின்றன.

கடதாசிக் காசு உலோகக் காசிலும் மிக முக்கியமானது. கடதாசி நோட்டிலே அரசியல் தலைவர் ஒருவரின் படம் இருக்கும். நோட்டின் பெறுமதி எழுதப்பட்டிருக்கும். அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் ஒப்பம் காணப்படும். ஒவ்வொரு நோட்டின் இலக்கமும் அதிலே பொறிக்கப் பட்டிருக்கும்.

ஒரு டொலர் நோட்டைக் கவனித்துப் பார்த்தால், "வெள்ளிச்சான்றிதழ்" என்ற சொற்கள் அதில் அச்சடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதன் அர்த்தமென்ன ? ஐக்கிய அமெரிக்கத் திறைசேரி ஒரு வெள்ளிடொலரை உங்கள் கணக்கிலே போட்டுவைத்திருக்கிறது. அதை விரும்பியநேரம் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்பதே பொருள். ஆனால் முன்னே எடுத்துக்காட்டியவாறு, ஒரு வெள்ளி டொலரில் உள்ள வெள்ளி உலோகம் ஒரு டொலர் பெறுமதியுள்ளதன்று. அதன் பெறுமதி மிகக் குறைவான தே. எனவே வெள்ளிவேண்டுமானால், மக்கள் டொலர் நோட்டைக் கொடுத் துச் சந்தையிலே வாங்கவிரும்புவார்களன்றித் திறைசேரிக்குப் போய் மாற் றமாட்டார்கள். அமெரிக்க அரசியல், வரலாறு என்பவற்றை அறிந்தவர்கள் சில கடதாசி நோட்டுக்கள் வெள்ளிச் சான்றிதழ்களென வழங்கப்படுவதை அறிவர். அஃது எதனாலென்றால், வெள்ளிச் சுரங்கமுள்ள மேற்குப் பிரதேசங்களிலிருந்துவரும் சில செனேட்டர்கள், சுரங்கத்திலெடுக்கப்பட்ட வெள்ளியில் ஒரு பகுதியை, நாணயஞ் செய்ய அரசாங்கம் வாங்கவேண் டுமென வாதாடிவெற்றிபெற்றதனாலேயே. அதனால் அரசாங்கம் வெள்ளிக் குக்கொடுக்கும் உதவியைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேவந்தது. இல்லாவிட்டால் வெள்ளிக்குப்பணம் சம்பந்தமான எவ்வித முக்கியத்துவமும் ஏற்படிருக்கமாட்டாது. பல நாடுகளிலே மிகச் சிறிய நாணயங்களைக்கூட வெள்ளியில் இப்போது அடிப்பதில்லை. கீழைத்தேசங்களிலும் அதனை நாணயமாக உபயோகிக்கும் வழக்கம் குன்றிவிட்டது.

பத்து டொலர் நோட்டையோ வேறு நோட்டையோ ஆராய்ந்துபாருங்கள். அதிலே "பெடரல் ரிசர்வ் நோட்டு[1]" என்று எழுதியிருக்கும். டொலர் நோட்டைப்போலவே, இந்த நோட்டிலும் "பொதுக்கடன், தனிப்பட்டகடன் என்ற எல்லாக் கடன்களுக்கும் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும்" என்று

[1]. நியூ இங்கிலாந்தைத் தவிர மற்றும் நாடுகளில் 2 டொலர் நோட்டு துரதிட்டமெனக் கருதப்பட்டது. இந்த நோட்டுக்கள் உள்நாட்டு யுத்தகாலத்தில் அடிக்கப்பட்டவை. அவை ஐக்கிய அமெரிக்க நோட்டுக்கள் எனவும் வழங்கப்படும். சில 5 டொலர் நோட்டுக்களாயிருக்கும். சில நோட்டுக்களிலே "பெடரல் ரிசர்வ் வங்கி நோட்டு" எனவும் எழுதப்பட்டிருக்கும். சில நோட்டுக்களில் "நாஷனல் வங்கி நோட்டு" எனக் காணப்படும். இவை பழைய நோட்டுக்கள். புழக்கத்திலிருந்து நீக்கப்பட்டுவருகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



எழுதப்பட்டிருக்கும். மேலும், ஐக்கிய அமெரிக்கத் திறைசேரியிலோ, வேறு எந்த பெடரல் ரிசர்வ் வங்கியிலோ, சட்டபூர்வமான பணமாக இதை மாற்றிக் கொள்ளலாமென்ற வார்த்தைகளுங் காணப்படும். இதன் அர்த்தமென்ன? பழைய நோட்டுக்களுக்கும் புதிய நோட்டுக்கள் கொடுக்கப்படுமென்பதே.

அமெரிக்கச் செலாவணியிலுள்ள நோட்டுக்களும், நாணயங்களும் இன்று சட்டபூர்வமான பணமாகக் கருதப்படுகிறன. அதைப் பணமாக நாம் ஒப்புக்கொள்வது எதனுலென்ருல் அரசாங்கம் அவ்வாறு கட்டளையிட்டுள்ளது என்பதாலேயே. அன்றியும் நாமெல்லாம் அதைப் பணமாக ஏற்றுக்கொள்ளுகிரேும்.

1933 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்ததினப் பரிசாகச் சிறுவர்க்கு 5 டொலர், 10 டொலர் தங்கக் குத்திகளைக் கொடுப்பது வழக்கம். தங்கத்துக்குப் பதிலாகச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுவந்தன. அச்சான்றிதழ்களைத் தங்கமாக அமெரிக்க திறைசேரியில் மாற்றலாம். ஆனுல் 1933 இல் காங்கிரஸ் தங்கத்தின் வாங்கும் விலையை 21 டொலரிலிருந்து 35 டொலராக உயர்த்தியபொழுது, நாட்டிலுள்ள தங்கம் எல்லாம் வாங்கப்பட்டன. டொலர் மதிப்பிழந்தால் 67 வீத இலாபத்துக்கு தங்கத்தைப் புதைத்துவைத்திருப்போர் இலாபம்பெருதபடி செய்யவே, அரசாங்கம் இந்த உபாயத்தை மேற்கொண்டது. அதே நேரத்திலே எல்லாத் தங்கச் சான்றிதழ்களும் வாபஸ்பெறப்பட்டன. இந்தச் சான்றிதழ்களுக்குத் தங்கத்தை மாற்றிக்கொடுக்கவேண்டியதில்லையென்றும், காசு நோட்டுக்களையே கொடுக்கலாமென்றும் அரசாங்கம் விதித்தது. சில மறதிக்காரர் தம்வசமுள்ள தங்கச் சான்றிதழ்களைத் திருப்பிக் கொடுக்கவில்லை. ஆனுல் இவைகளைத் திருப்பி வங்கிக்கு மாற்றக்கொண்டுவரப்பட்டால் புழக்கத்திலிருந்து அவை நீக்கப்பட்டு, பதிலாக வேறு நோட்டுக்கள் பிறப்பிக்கப்படும்[1].

பணத்தின் தன்மையை அறிவதற்கு, இந்தத் தங்கச் சான்றிதழ்களைக் கணக்கிலேயெடுக்காமல் விடுவது நல்லது. முன்பெல்லாம், புழக்கத்திலுள்ள பணத்துக்குச் சமானமான தங்கம், இருப்பிலிருந்ததென்று கருதப்பட்டது. இக்கால மாணுக்கருக்கு இது தவறென்பது தெரியும். தங்கமாக மாற்றமுடியுமானுல் பணத்திற்குக் கூடிய மதிப்புண்டு என்று சகல நிபுணரும் அறிவர். தங்கப் பவுணை காசாக்கும் பயன் இல்லாவிட்டால், அந்த உலோகத்துக்கு அதிகமதிப்பு இருக்கமாட்டாது. தென்னுபிரிக்கா

1. தங்கத்திலே கொடுக்கவேண்டுமெனச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களைக் கோடு செல்லுபடியாகாததாக்கிவிட்டது. டொலர்மூலமாகவே கொடுப்பனவு செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டது. இல்லாவிட்டால் கொடுகடன்காரருக்கு 67 வீத இலாபமும் படுகடன்காரருக்கு 67 வீத நட்டமுமுண்டாகும். ஆனுல் பெடரல் றிசேர்வ் வங்கிகள் இப்பொழுதும் விசேட தங்கச் சான்றிதழ்களை வைத்திருக்கின்றன. இவ்விடயம் 17 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்படும்.

www.padippakam.com



விலே தங்கச் சுரங்கத் தொழிலில் ஈடுபடுவோர் இத்துணைச் செல்வரா யிருக்கமாட்டார்கள்[1].

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பணத்தின் பெறுமதியைப் பெரிதும் பாதிக்கலாம் என்ற எண்ணத்தால், சிலர் தங்கப் பணத்திலே அதிக நம்பிக்கை வைப்பதுண்டு. நமது மொத்தப் பண விநியோகம் எத் துணைப் பெரியதாயிருக்குமென்பதைத் தங்கம் நிச்சயிக்கிறது. மேல்வரும் அத்தியாயங்களிலும், நூலின் ஐந்தாம் பிரிவிலும் இதைப் பற்றி ஆராய்வோம். இந்த 20 ஆம் நூற்றுண்டுப் பொருளாதாரத்திலே தங்கம் வகிக்கும் உண்மையான பங்கு இங்கேதான் உண்டு.

பணவிநியோகம் கட்டுப்படுத்தப்பட்டாலேதான், அதற்கு மதிப்பு உண்டு. நாணயம் எல்லையில்லாது பெருகி இலவசமாய்க் கிடைக்கக் கூடியதாய்ப் போகுமானுல், மக்களிடம் பெருவாரியாகப் பணமிருக்கும். அதனுல் விலைகளும், சம்பளங்களும் எல்லையின்றி உயர்ந்துவிடும். இதனுற்றுன் பணம் சம்பந்தமான அதிகாரமும், வங்கி சம்பந்தமான அதிகாரமும் தனிப்பட்டவர் கையிலேயில்லாமல், எப்பொழுதும் அரசாங்கத்தின் கையிலே வைக்கப்பட்டுள்ளது.

**செக்மூலம் பெறக்கூடியவாறு பணத்தை வங்கியிற் போடுதல்.**

மூன்றுவது இனத்தைச் சேர்ந்த ஒருவகைப் பணமும் உண்டு. பொருளியலறிஞர் இதனையும் பணம் என்றே கூறுவர். இது "வங்கிப்பணம்" எனப்படும். இது வங்கியிற்போட்டுக் கேட்டநேரத்தில் திருப்பி எடுக்கப்படும் பணம். எனக்கு 1000 டொலர் வங்கியிலிருந்தால், அது பணமாகவே கருதப்படும். ஏனெனில், நான் அந்த வங்கியில் செக்கு எழுதி, எனது செலவுக்கான பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். நான் வங்கியில் போட் டிருக்கும் வைப்பு ஒருவகையான பரிவர்த்தனைச் சாதனமாகும். கேட்ட நேரம் அதைத் திருப்பிப் பெறலாம். அது "ஒரு நியம மதிப்பாகவும்", "கணக்காகவு"மிருக்கிறது.

பணத்தின் முக்கியத் தன்மைகள் வங்கி வைப்புக்குமிருப்பதால், அதனைப் பணமெனக் கூறுவதில் தவறில்லை[2].

1. கடதாசிக் காசின் பிரமாணத்தையும், மொத்தச் செலவுச் சக்தியையும் சுருக்கவோ விரிவாக்கவோ திறமையுடையதானுல் மாத்திரமே, தங்கம் விலையைப் பாதிக்கும். இதை ஐரோப்பிய நிதியமைச்சர்கள் கருத்திற் கொள்ளாதுவிட்டனர். எனவே முதல் மகா யுத்தத்தின் பின்னர் உண்டான வீக்கத்தை நிறுத்துவதற்காக அவர்கள் கடதாசி நோட்டை யடித்துத் தங்கத்தைப் பகிரங்கச் சந்தையில் வாங்கினர். இதனுல் கருதியதற்கு மாருக வீக்கம் மேலும் பலமடங்கு அதிகரித்தது. எனவே அவர்கள் தங்கத்தைக் கொடுத்து நோட்டுகளை வாங்கி தேவையில்லாததை எரிக்கவேண்டிய அவசியமுண்டாயிற்று. அப்போது தான் வீக்கம் நின்றது.

2. எனது வங்கியிருப்புப் பணமெனவே கருதப்படும். நான் எழுதும் செக்குகள் பணமல்ல. இவை பணத்தின் செலவை அதாவது பணம் கைமாற்றப்படுவதைக் குறிக்கும். கையிருப்பே தொகையைப் பொறுத்தவரையில் பணமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றும் அத்தியாயத்திலே பணத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தபொழுது புழக்கத்திலுள்ள பணத்திலும்பார்க்க வங்கிப் பணம் தொகையளவில் முக்கியமெனக் கண்டோம். ஏனெனில் விவகாரங்களிற் பெரும் பகுதி செக்மூலமே நடைபெறுகின்றது. செக் என்றுல் இலேசாகத்தபாலிலே போடலாம்; கொடுப்பனவுகளை அண்ணளவாகக் கொடுக்கலாம்; பற்றுச்சீட்டுப் பெறுவது எளிது; களவு போனுலோ, தவறவிட்டுவிட்டாலோ பாதுகாப்புண்டு; இக்காரணங்களாலேயே வங்கிப் பணம் பெருவழக்கிலுள் ளது. அட்டவணை 1 இலே மூன்றுவகைப் பணத்தின் தொகை அளவான முக்கியத்துவம் காட்டப்பட்டுள்ளது.

**நீர்மைச் சொத்து அல்லது " சமீபப்பணம் ".**

அட்டவணை 1 இலே பணத்தின் மொத்தத்தோடு " சமீப பணத்தின் " மொத்தமும் காட்டப்பட்டுள்ளது. பகிரங்கச் சந்தையிலே பணத்துக்கு நேரடியாக விற்கவோ, உடனடியாக மாற்றிவிடவோ கூடிய அரசாங்கக் கடன்பத்திரங்கள், சேமிப்புக் கையிருப்புகள் என்பன " சமீபப்பணம் " என்ற வகையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய நீர்மைச் செல்வப் பொருளினங்கள் பணத்தின் இயல்புகள் பலவற்றைக் கொண்டுள்ளன. உமது மாதாந்தச் செலவைக் கடன்பத்தி ரங்கள்மூலம் நீர் கொடுத்துக் கழிப்பதில்லை. எனவே அத்தகைய இனத் தைப் " பணம் " என்று நாம் குறிப்பிடத் தயங்குகிறேம். விரைவாய் மாற்றக்கூடிய இத்தகைய சொத்து உங்களிடமிருக்கிறதென்பது, உங்களுடைய செலவு செய்யும் பழக்கங்கள், அரசாங்கக் கடன்பத்திரங்கள் வைத்திருப் பதிலும் பார்க்க வங்கிக் கையிருப்பு இருந்தால் எப்படியிருக்குமோ அப்படியேயிருக்குமென்பதை எடுத்துக் காட்டுகிறது. உங்களிடம், கேட் டவுடன் திருப்பிப்பெறக்கூடிய 10,000 டொலர் கையிருப்பும், நும் சகோதரனிடம் 5,000 டொலர் உடனடியாகப் பெறக்கூடிய கையிருப்பும், 5,000 டொலர் தவணையில் பெறக்கூடிய கையிருப்பும் இருந்தால் உமது சேமிப்பு, நுகர்வுக் கோடுகள் மிக வித்தியாசமுடையனவாயிருக்குமா? சமமான வருமானம் கிடைக்குங் காலத்தில் உம்மிலும் பார்க்க அதிக விகிதமான சேமிப்பை அவர் செய்யக்கூடியவராயிருப்பாரா?

இக்கேள்விகட்குத் திட்டமான விடைகள் கொடுத்துவிட முடியாது. ஆனுல் இதுமாத்திரம் தெளிவு. அதாவது அரசாங்கக் கடன்பத்திரங்களும் சேமிப் புக கணக்குகளும், செலாவணிக் கையிருப்பு, உடன்மாற்றும் கையிருப்புப் போன்ற பணங்களினுலுண்டாகும் பலாபலன்களையே உடையனவாயிருக்கின் றன. அதனுலேதான் பொருளியலறிஞர் இத்தகைய நீர்மைச் சொத்துக் களைச் " சமீபப்பணம் " என்று வழங்குவர்[1].

1. நீர்மைச் சொத்துக்களிலிருந்து நடைமுறைப் பொறுப்புக்களைக் கழித்துவிடுவது தர்க்க ரீதியானதே. வருமானமும், தேறிய தகைமையுமே அவர்களுடைய செலவை நிச்சயிக்கும் முக்கியமானதொரு விடயமாகும்.

www.padippakam.com



செலவோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட பொருள்கோவையில், எந்தவோர் இடத்தையாவது திட்டமாக வரையறுத்துக் கூறுவது கடினமானபடியால், பண விநியோகத்திற்குத் திட்டமாக வரைவிலக்கணங் கூறமுடியாது. அஃது ஓரளவுக்கு ஒருவரின் ருசியைப் பொறுத்ததேயன்றி விஞ்ஞானப்போக்கான அவசியத்தைப் பொறுத்ததன்று. கேட்டவுடன் மாற்றக்கூடிய கையிருப்புக்கள், பணம் என்ற கணக்கில் ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் கணிக்கப்படவில்லை. இன்று எல்லாப் பொருளியலறிஞரும், அதனைப் பணமாகக் கருதுவர். செக் கணக்குச் செலாவணியைச் சிக்கனமாக்குகின்றது. அது செலாவணியின் தொகையில் ஏற்றத்தை உண்டாக்கும் பணியையும் செய்கிறது. பணவிநியோகத்தை அளக்கும்போது வட்டியுள்ள சேமிப்புக்

**எங்கள் மொத்தப் பணவிநியோகத்தில் நான்கில் மூன்றுபங்கு, தேவையான வைப்புக்களாக இருக்கின்றன.**

| பணவகை | மார்ச்சு 1939 | மார்ச்சு 1960 |
|---|---|---|
| சில்லறை (வங்கிக்குப் புறம்பான) : | | |
| சில்லறை நாணயம் (பென்னியும் கல்லீயமும்) .. | 0.2 டொலர் | 0.5 டொலர் |
| வெள்ளிநாணயம்) .. .. .. | 0.4 | 1.8 |
| | .6 டொலர் | $ 2.3 |
| நோட்டுக்கள் (வங்கிக்குப் புறம்பான) : | | |
| பெடரல் ரிசேர்வ் நோட்டு .. .. | 4.3 டொலர் | 26.8 |
| வெளிச்சான்றிதழ் ஐ. அ. நோட்டுக்கள் .. | 1.6 | 2.4 |
| வேறு செலாவணி (இப்போது புழக்கத்திலிருந்து அகற்றப் படுகின்றன .. .. .. | 0.3 | 0.2 |
| | 6.2 டொலர் | $ 29,3 |
| வங்கிப்பணம் : | | |
| எல்லாவங்கியிலுமுள்ள தேவையான கையிருப்பு (அரசாங்கக் கையிருப்பு முதலியன தவிர்க்கப்பட்டன) .. | 26.1 | 108.8 |
| மொத்தப் பணம் .. .. .. | 32.9 டொ. | $ 140.4 |
| வட்டிய பணம் (மதிப்பீடு) | | |
| தவணைக் கையிருப்பு, சேமிப்புக் கையிருப்பு (பரஸ்பர சேமிப்பு வங்கி, தபாற்சேமிப்பு, சேமிப்புக் கடன்தாபனம் என்பன). | 30.0 டொ. | $ 158.2 |
| இ.அ. கடன்பத்திரம் : | | |
| தனிப்பட்டோரும், வியாபாரிகளும் வைத்திருப்பவை. (வங்கி, இன்சூரன்ஸ் கம்பெனி முதலியன தவிர்க்கப்பட்டன) .. | 12.0 டொ. | $ 91.8 |
| மொத்தம் " சமீபப் பணம் " .. .. | 42.0 டொ. | $ 250.0 |

**அட்டவணை 1.** ஐ. அமெரிக்காவின் பணமும் சமீபப் பணமும். (பிலியன் டொலரில்).

www.padippakam.com



கையிருப்புக்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனப் பல பொருளியலறிஞர் வாதாடுவர்[1].

யுத்தத்துக்கு முன்னர் இருந்ததிலும் பார்க்கப், பலமடங்கு அதிகமாக மதிப்பைப் பலவகைப் பணங்களும் பெற்றிருக்கின்றன என்பது, அட்டவணை 1 இலே தெரிகிறது. எனவே எந்தக் கருதுகோள் பயன்படுத்தப்பட்டதென்பதைப் பற்றி நாம் அக்கறைகாட்டவேண்டியதில்லை. இலேசாக இருக்கவேண்டுமென்ற நோக்கத்தினால், இந்த நூலிலே சாதாரண வழக்கத்தை அனுசரித்து மொத்தப் பண விநியோகத்துக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுவோம். பணம் என்றால் வங்கிக்கு வெளியே புழக்கத்திலுள்ள நாணயமும், செலாவணியுமாகும். இத்துடன் செக்மூலம் பெறக்கூடிய கையிருப்பையும் சேர்க்கலாம். (இந்த இனத்திலே செய்யவேண்டிய பல மாமூலான சரிக்கட்டல்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன).

### பணப்புழக்க வேகம்

டொலர் தே. தே. உ. வளரும்போது பணமும் வளரும் என்பது சரித்திர சம்பந்தமான உண்மை. யுத்தத்துக்கு முன்னிருந்ததினும் இப்போது பணம் 5 மடங்கு அதிகமாயிருக்கிறது. டொலர் தே. தே. உ. முன்னரிலும் பார்க்க 5 மடங்கு அதிகமானதாயிருக்கிறது. இது வெறும் சரித்திரம் மாத்திரமன்று. தற்போதைய மட்டமான $\frac{1}{2}$ டிரிலியன் டொலர் தொகையிலிருந்து தே. தே. உ. கால்நூற்றாண்டிலே ஒரு டிரிலியனாக உயருமானால் பணம் இன்றையிலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமாகும். பணத்தில் உண்டாகும் மாற்றந்தான், தே. தே. உ. வில் உண்டாகும் மாற்றத்துக்குக் காரணமா அல்லது இஃது எதிர்மறையானதா என்பதை அறியுமுன்னரே இந்தக் கூற்றை உறுதியாகக் கூறிவிடலாம்.

இவற்றுக்கிடையே தொடர்பு ஏன் இருக்கவேண்டும் ? ஏனைய ஐந்தொகை ஏட்டில் உள்ள சொத்துக்களைப்போலவே, பணத்தை விரைவில் அளந்துவிடலாம். வருடாந்த டொலர் வருமான ஓட்டமே தே. தே. உ. ஆகும். இரண்டு தேதிகளுக்கிடையிலுள்ள காலப்போக்கோடு சம்பந்தமுள்ள வருமானக் கூற்றுக்களிலிருந்தே அதை அளந்துகொள்ளலாம்.

இருவேறு பருமன்களிடையேயுள்ள விகிதங்களை வருணிப்பதற்குப் புதியதொரு கருதுகோளை மேற்கொள்ளலாம். அது வருடாந்தப் பணப்புழக்க வேகம் எனப்படும். அதனை “ வே ” (V) என்று குறிப்பிடுவோம்.

**வேகம் என்பதற்கு வரைவிலக்கணம் :** வருமான விவகாரங்களை நிறைவேற்ற வருடத்தில் பண இருப்பு மாறிக்கொண்டிருக்கும் விகிதமே பணவேகம் அல்லது வருமானவேகம் எனப்படும். பண இருப்பு மிக

1. அரசாங்கக் கடன்பத்திரம் போன்று கிட்டிய பணத்தையும் சேர்க்கச் சில அறிஞர் விரும்புவர். அவர்கள் இதைப் பயனுள்ள பண விநியோகம் என்பர்.

www.padippakam.com



மெதுவாகவே மாறிக்கொண்டிருக்குமானால், வருட வருமான டொலர் செலவு குறைவாயிருக்கும். அப்போது வே (V) குறைவாயிருக்கும். தே. தே. உ. ஓட்டத்துடன் ஒப்பிடும்போது மக்கள் ஒவ்வொருமுறையும் குறை வாகவே பணத்தை வைத்திருப்பார்களானல், வே (V) உயர்ந்துவிடும். பலவகைத் தாபனங்களிடையிலும், வருமானப் பிரிவுகளிடையிலும் பங் கிடு செய்யப்படும் பணத்தின் சார்புப் பிரிவீட்டைப் பொறுத்தும், பண நிலையங்களிலும் பழக்கவழக்கங்களிலும் மனப் போக்குக்களிலும், எதிர் பார்ப்புக்களிலும் உண்டாகும் மாற்றத்தைப் பொறுத்தும் காலப் போக்கிலே வே (V) இன் அளவு மாறலாம். ஆனல் இம்மாற்றம் திடீரென உண்டாகவேண்டியதில்லை ; தீவிரமாக ஏற்பட வேண்டியதில்லை ; முற்றுக எதிர்பார்க்க முடியாததாயிருக்க வேண்டியதில்லை. இக்காலப் பொருளி யலாளர், முதலீடு, சேமிப்பு (அல்லது நு+மு+அ C+1+G) என்ப வற்றின் போக்கை ஒற்றுமைப்படுத்தி ஆராய்ந்து, பணம், இருப்பு முதலிய மாறுபடும் பொருள்களுக்கும், வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமான ஓட்டம் என்பவற்றுக்குமிடையேயுள்ள தொடர்புகளுக்குப் பொருத்தமான தராத ரத்தைக் கொடுப்பர். பணப்புழக்கவேகம் சம்பந்தமான இந்த வரைவிலக் கணம் பின்வரும் வாய்ப்பாட்டைக் கொண்டது.

$$V \equiv \frac{NNP}{M} \equiv \frac{p_1q_1 + p_2q_2 + \cdots}{M} \equiv \frac{\text{Sum } pq}{M} \equiv \frac{Pq}{M}$$

குறிப்பிட்டதொரு வருமான வேகத்துக்கு வரைவிலக்கணம்கூற எந்த வருமானத்தின் (NNP, GNP, NI, – – –) மொத்தத் தொகையைப் பயன்படுத்துவதென்பதை விரும்பியபடி தெரிந்துகொள்ள இடமுண்டு. இங்கே P என்பது சராசரி விலைமட்டத்தைக் குறிக்கும். விலைமட்டத்துச் சுட்டிலக்கத்தோடு அஃது ஏறியுமிறங்கியுங்கொள்ளும். Q நிசமான தேசிய உற்பத்தியைக் குறிக்கும். இதைப் புள்ளியியற்படி, முன்னர் குறித்த விலைச்சுட்டிலக்கத்தால் தே. தே. உ. வை வாட்டுதல் முறையில் கணிக்க வேண்டும்.

இதை விளக்கக்கூடிய உதாரணமொன்றைக் காண்போம். அட்டவணை 1 இன்படி 1960 இன் ஆரம்பத்தில் பணம் 140 பிலியன் டொலராயிருந் தது. தே. தே. உ. (N. N. P) உம் மொ. தே. உ. (G. N. P.) உம் அப்போது வருடாவருடம் 460 பிலியனுகவும் 500 பிலியனுகவுமிருந்தன. எனவே 460 ஐ 140 ஆல் பிரித்தால் 3.3 வருடாந்த வருமானவேகம் கிடைக்கிறது. இதன் கருத்தென்ன ? ஒவ்வொரு பண அலகும், தே. தே உ. (N.N.P.) விவகாரத்துக்கு வருடம் மூன்று முறைக்குச் சிறிது அதிக மாகவே பயன்படுத்தப்பட்டதென்பதாகும். வேறொருவகையிற் கூறுவதா னல், வருடத்திலே ஏதோ ஒரு முறையில் மக்கள் 4 மாதச் சராசரி வரு

www.padippakam.com



மானத்தை வைத்திருந்தார்கள் என்பதாகும். [மொ. தே. உ. (G.N.P) விவகாரங்களுக்கு வே (V) ஆனது வருடத்தில் 3.6 ஆகும்[1] என்பதை ஆராய்க].

**பரிவர்த்தனையின் தொகைச் சமீகரணம்.**

பணப்புழக்கத்தின்வேகம் என்ற கோட்பாட்டைப் பொருளியலாளர் ஏற் படுத்திய பின்னர், "பரிவர்த்தனையின் தொகைச் சமீகரணம்" என்ற புதியதொரு சர்வசமனை உண்டாக்கும் முறையிலே அதனுடைய வரை விலக்கணத்தை மறுபடி ஒழுங்குபடுத்தலாம்.

$$MV \equiv PQ$$

இதிலே M ஐ முந்திய வரைவிலக்கணத்திலே கண்ட வலப்பக்கப் பகுதி யெண்ணிலிருந்து, மற்றப் பக்கத்துப் பகுதியெண்ணுக்கு மாற்றுகிறோம். வே (V) இற்குக் கொடுத்த வரைவிலக்கணப்படி இப்புதிய சமீகரணத்து இடப்பக்கம் தே. தே. உ. (N.N.P) க்குச் சர்வசமனுயிருக்கின்றது. தே. தே. உ. (N.N.P) யே நடைமுறைவருமானம் அல்லது வருடத்து உற்பத்தி யாகும். ஆனல் P, Q, என்பவற்றுக்கு நாம் கொடுத்த வரைவிலக் கணப்படி வலப்பக்கமும் தே. தே. உ. (N.N.P) இற்குச் சரிசமனுகும். (உதாரணம்: தே. தே. உ. (N.N.P.) இல் ஒரேயொரு பொருள்தானிருக் கிறதெனக் கொள்வோம். அதாவது 1 பிலியன் கடகம் நிறைந்துள்ள பாண் ஒவ்வொன்றும் 5 டொலர்வீதம் விற்கப்படுகிறது. அப்போது N.N.P≡ PQ=5 பிலியன் டொலர் ஒரு வருடத்தில்; ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களிருந்தால் அந்த P×q பொருள்களையெல்லாம் ஒன்ருகக் கூட்டு கிறோம். அவற்றில் q க்கள் மாருதிருந்து, P க்களெல்லாம் இரட்டித் தால், P குறிக்கும் சராசரி விலைமட்டம் இரட்டிக்கும். அப்போது நமக்கு 5 பிலியன் டொலர் தே. தே. உ. (N.N.P) இற்குப் பதிலாக 10 பிலியன் டொலர் தே. தே. உ. (N.N.P) கிடைக்கும்[2].)

வரைவிலக்கணச் சமன்பாடுகளெல்லாம் இரண்டு கோட்டுச் சமன்பாட்டால் காட்டாமல் மூன்றுகோட்டுச் சமன்பாட்டினுல் (≡) காட்டப்பட்டுள்ளன. தருக்கநூலார் "கூறியது கூறல்" என்பதைக் காட்டுவதற்கே இந்தவகை

1. பொருளியலாளர் சிலசமயம் எல்லா விவகாரங்களுக்கும் (ஒன்றிலிருந்து மற்றதுக்கு மாற்றுதல், இடைநிலைப்பொருள்கள் முதலியன) (v) ஐக் கணிப்பர். நியூயோர்க் நகரத்துக்கு வெளியேயுள்ள நகர வங்கிக் கையிருப்பு வருடத்தில் 26 முறையும், நியூயோர்க் நகரத்திலுள்ள வங்கிக்கையிருப்பு வருடத்தில் 60 முறையும் மாறுகின்றனவென்று வங்கி செக்கு விவகாரப் புள்ளிகளை ஆராய்ந்தவர்கள் கூறுவர். இத்தகைய வேகத்தொகை வருமானவேகத்திலும் அதிகமாகும்.

2. இந்தச் சமீகரணத்துக்குச் சிலர் பின்வருமாறு விளக்கங் கொடுப்பர். ஒவ்வொரு வருமான விவகாரமும் பற்றுச்சீட்டு P×q உடையது. அது வலப்பக்கத்திலுள்ள Pq மொத் தத்தைக் கொடுக்கும். ஆனல் அத்தகைய விவகாரங்களிலே M தான் பயன்படுகிறது. ஒரு வருடத்திலே எவ்வளவு? அது சராசரி வருடவேகத்தைக் கையிருப்பு M ஆல் பெருக்கிய அள வாகும். எனவே பெறுமதி பெறுமதிக்குச் சரி. இரண்டு பக்கமும் சமனுகவேயிருக்கும்.

www.padippakam.com



யான சமன்பாட்டுக் குறியீடு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது இக்கூற்றுக் கள் பொருளின் தன்மையைப் பற்றி எந்தவிதமானதொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஐக்கிய அமெரிக்கா நாளைக்குப் பண்டமாற்றுமுறையை அனுசரித்தாலென்ன, அதனுடைய NNP பத்து மடங்காக உயர M ஆனது அரைப்பங்காக மாறினுலென்ன, மேலே கூறிய கூற்றுக்கள் வரைவிலக்க ணப்படி சரியாகவேயிருக்கும். பரிவர்த்தனைச் சமன்பாடு கூறியது கூறலா யிருந்தபோதிலும் அது பயனற்றதென எண்ணக்கூடாது. பொருளாதார அனுபவ பூர்வமான தொடர்புகளை உணர்த்தக் கூடிய காரணங்களை தனிப்பட்ட ஆராய்ச்சிக்காகப் பிரித்துக்கொள்வது பயனுடையதாயிருக்கலாம் அல்லது, பயனற்றதாயிருக்கலாம். நு+மு+அ (C+1+G) அட்டவணை களாலே வருமானம் நிச்சயிக்கப்படும் தன்மையைக் கவனமாக வருணிப் பதையும், அவை வங்கிக்கொள்கை மாற்றங்களால் எவ்வாறு தொடர்பு பட்டிருக்கின்றன என்பதை விளக்குவதையும், பரிவர்த்தனைச் சமன் பாட்டிலே காணும் பரிமாணக் கணக்கிலே அல்லது எதிர்முறையிலே குறிப்பிடலாம்.

**பணம், விலையென்பவற்றின் கணியக்கொள்கை.**

**பரும்படியான கணியக் கொள்கை.**—1960 ஆம் ஆண்டின் M, 1939 ஆம் ஆண்டின் M இனும் 5 மடங்கு அதிகமானல், "பணம் விலையென்பவற் றின் பரும்படியான கணியக்கொள்கை" யையுடையவர் 1960 ஆம் ஆண்டு விலைமட்டம் P, 1939 ஆம் ஆண்டு விலைமட்டத்தினும், 5 மடங்கு அதிகம் எனத் தீர்க்கதரிசனங் கூறக்கூடும். பண விநியோகத்துக்கு நேர் விகிதத் திலே விலைமட்டம்போகும் என்ற பரும்படியான கருதுகோளை, விலைமட்டங் கள் இந்தக்காலவெல்லையில் இரட்டித்தமை, என்ற உண்மை நிராகரிக்கின் றது. எண்கணிதமுறைப்படி பரும்படியான கணியக் கருதுகோளை எழுதுவதா ஞல் $P = kM$ என்று எழுதவேண்டும். இங்கே $k$ என்பது நேர்க்கணியமான விகிதசமமாறிலி ; இது பயன்படுத்தப்படும் அலகுகளிலே தங்கியுள்ளது. P யும் M உம் ஒரே அடிப்படை வருடத்தில் 100 சுட்டிலக்கத்தால் அளக்கப் பட்டால், $k$ யை 1.0 ஆக மாற்றலாம்; அல்லது விட்டு விடலாம். இங்கே இரண்டுகோட்டுச் சமன்பாட்டுக்குறியீடே பயன்படுத்தப்பட்டுள்ளது. காரணம் இந்தச் சமன்பாடு திட்டமாகச் சரியெனக் கூறக்கூடியதன்றென்பதைக் காட்டு வதற்கும், இது பயனுள்ள அனுபவசாத்தியமான கருதுகோளென்பதைக் காட்டுவதற்கும், இக்கருதுகோளைப் பயன்படுத்தி சரியான தீர்க்கதரிசனங்களைக் கூறலாமெனப் பல காலமாக நம்பியிருந்ததாலும், இதன் உண்மையை நிகழும் சம்பவங்களோடு வைத்து ஆராய்ந்து கண்டுகொள்ளலாமென்பற்கு மாகவே எனலாம்.

பரும்படியான கணியக்கொள்கையிலடங்கிய கருத்து இலேசானது. M இல் (M என்பது பணம்) ஆயிரம் மடங்கு அதிகரிப்பை அரசாங்கம் உண்டாக்கினுல், பாய்ச்சல் பணவீக்கம் உண்டாகும் ; அதனுல் P என்னும் விலைவாசிகள் ஆயிரம் மடங்கு உயரும். இந்தக் கருத்து பரும்படியான

www.padippakam.com



தாயிருந்தாலும் பயனுடையதே. 1921–1923 இலே, ஜெர்மனியில் பண வீக்கம் உண்டானபோது, ஜெர்மன் மத்திய வங்கியின் தலைவர், விலைவாசிகள் கோடிமடங்கு உயர்ந்தமை கடதாசிநோட்டுக்களை அடித்தபடியினால் தான் என நினைக்கவேண்டாமென அர்த்தமற்ற பேச்சைப் பேசினார்" "விலைக்கும் (P), பணத்துக்கும் (M) உயர்ந்து உயர்ந்து செல்வதில் போட்டியேற்பட்டுள்ளது. நாடு போரில் தோல்வியடைந்துவிட்டது. அதனால் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சீரழிவுண்டாகிவிட்டது. சனங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி நான் இதைச் செய்யவேண்டியேற்பட்டது" என்று அவர் சொல்லியிருந்தால் நாம் அவரோடு அனுதாபப்பட்டிருக்கலாம். பொருள்கள் குறைவாயிருக்க அவற்றுக்குத் தேவை மிக அதிகமாயிருக்குமானால் விலைவாசிகள் வானத்தை நோக்கி உயர்வதில் அதிசயமென்ன! விலைக்கும் பணத்துக்குமுள்ள தொடர்பைக் காட்டும் பருமட்டான கணியக் கொள்கை ஆரம்ப நிசையிலுள்ள ஒரு கொள்கையாயிருந்தாலும் பயனுடையதே. புதிய உலகத்திலே தங்கம் கண்டுபிடிக்கப்பட்டபின் ஐரோப்பாவிலும், ஸ்பெயினிலுமுண்டானவை போன்றநீண்ட தவணை விலைப் போக்குகள், தீவிரபணவீக்கம் என்ற நிகழ்ச்சிகளை வருணிக்க இந்தக் கொள்கை பயனுடையதாகும். சனநாயக சமுதாயத்துக்குச் சகிக்கமுடியாத ஒரு பாரத்தைப் பாய்ச்சல் பணவீக்கம் உண்டாக்குமாதலால், பருமட்டான கணியக் கருதுகோளை அடிக்கடி மக்களுக்குச் சொல்லிவைப்பது நன்று.

**திருத்தமுற்ற கணியக் கொள்கை.**

பருமட்டான கணியக் கொள்கையை ஆதரிப்போர் மிகச்சிலரே. முதலீடு, வேலை வாய்ப்பு, உற்பத்தி, விலை என்பனபோன்ற பெரிய பொருளியல் விடயங்களைப் பணம் பெரிதும் பாதிக்கும் என்ற உண்மை, அந்தக் கொள்கையில் உள்ள குறைபாடுகளால் மாற்றமடையமாட்டாது.

செலவுசெய்யும் மொத்தத் தொகையை, பணக்கொள்கை பெரிதும் பாதிக்கும் என்பதை அடுத்த சில அத்தியாயங்கள் விளக்கும். 10, 20 வருடங்களுக்கு முன்னர் இந்த ஆராய்ச்சியை V, M என்ற வாய்ப்பாடு மூலம் விளக்குவது வழக்கத்திலில்லாவிட்டாலும், இன்று இலேசாக அவ்வாறு செய்துவிடலாம். சமீபகாலமாக சில திறமைமிக்க அமெரிக்கப் பொருளியலாளர் கணியக்கொள்கையில் மறுபடியும் அக்கறை காட்டி வருகின்றனர். எனவே பலவற்றிலும் நன்மையெனக் கண்டவற்றை ஒன்று சேர்த்து திருத்தமுற்ற கணியக் கொள்கையொன்றின் அடிப்படைகளை ஆராய்வது நன்று. ஒவ்வொரு கொள்கையாளரும் விரும்பும் மதங்களை எவ்வாறு ஒன்றுபடுத்தலாமென்பதைப் பின்னர் ஆராய்ச்சிக்கு விட்டு விடலாம்.

இக்காலப் பொருளியலறிஞர்களில் சிக்காகோவைச் சேர்ந்த மில்டன் பிரீட்மன் போன்றவர், M 5 மடங்கு உயர விலை (P) இரட்டித்தால் அதையிட்டு ஆச்சரியப்படமாட்டார். நிசமான உற்பத்தி ஒரேவிதமாக இருந்தால் தான் – அதாவது உயர் வேலை வாய்ப்பு மட்டத்தில் இருந்தால் – M க்கும்

www.padippakam.com



P க்கும் நேரடியான தொடர்பு இருக்கும். M க்கும் P க்கு மல்ல, M க்கும் NNP க்குமே தொடர்பிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் கள். V என்ற பணவோட்டத்தின் வேகம் மாருதிருக்குமென ஓரளவுக்குக் கூறிவிடலாமென்ற கருதுகோளிலேதான் இந்த நம்பிக்கை நிலைபெற்றிருக் கிறது. இந்தவேகம் நியாயமான அளவு நிலையாயில்லாவிட்டாலும், கிரம மாக முன்கூட்டியே சொல்லக்கூடிய மாற்றங்களுக்குட்பட்டதாயிருக்கும்.

1939 ஆம் ஆண்டு துவக்கம் M இலும் பார்க்க NNP விரைவாக உயர்ந்துகொண்டு சென்றது உண்மையேயானாலும், இந்தவேகம் படிப்படி யாக உயர்ந்ததொன்றே. 1939 ஆம் ஆண்டு மந்தமான வருடமாயும், குறைந்த வட்டியும், மிகத் தாழ்ந்த V யும் உடையதாயுமிருந்தபடியால், இந்த வேகப்படிவு எதிர்பார்க்கப்பட்டதே சரித்திரக்கண்கொண்டு பார்க்குமிடத்து நெடுந்தவணையிலே V யானது கீழ் நோக்கியிறங்கும் போக்கைக் காட்டிக்கொண்டது. நிசமான வருமானம் வளரவளர V கீழே இறங்கிக் கொண்டிருந்தது. குறுந்தவணையில் V யின் போக்கு நேர்மாரு யிருந்தது. உற்பத்தியும், நிசவருமானமும் உயர, V யும் குறுந்தவணை யில் உயரும் போக்குடையதாயிற்று. குறுந்தவணையில் உற்பத்தி குறைய V யும் வீழ்ச்சியடைந்தது.

திருந்திய கணியக் கொள்கைவாதி V யானது இயற்கையில் நிலை பேரு னது; அது மாருதது என்று நம்புவதாகக் கூறமுடியாது. M ஐக் கட்டுப்படுத்தினல், NNP ஐயும் பெரிதளவுக்குக் கட்டுப்படுத்தலாமென் பதே அவனுடைய கோட்பாடு. அதனல் V யில் உண்டாகும் மாற்றம், ஒன்றில் மிக அற்பமாயிருக்கும்; அல்லது டொலர் NNP ஆனது M திசையிலேயே நகரும் என ஒருவர் நிச்சயமாகச் சொல்லக்கூடிய அளவுக்கு, முன்கூட்டியே தீர்க்கதரிசனம் கூறக்கூடியதாயிருக்கும். பண் டைப் பொறுத்த அளவில் இது இக்கால வருமான நிர்ணயக்கோட் பாட்டோடு பொருத்தமுடையதாயிருக்கிறது. M இலேயுள்ள மாற்றங்கள், NNP இல் எத்தகைய மாற்றங்களை எவ்வளவுக்கு உண்டாக்கும் என் பதை, எவ்வளவு நம்பிக்கையுடன் முன்னேறியே கூறலாம் என்ற ஒரு விடயமே விவாதத்துக்குரியதாய்விடும்[1].

1. பணக் கொள்கையினுலோ, வேறு வகையினுலோ வீக்கத்தை உண்டாக்கும் எதுக் களால், டொலர் NNP மிக உயருமானல், விலைவாசிகள் உயரும் போக்குண்டாகும் என்ற விடயத்திலே பொருளியலறிஞரிடத்து அப்பிராய ஒற்றுமையுண்டு. நமது கலப்புப் பொருளாதாரத்திலே நெகிழாத்தன்மைகள் எவ்வளவுதூரம் சம்பளங்களையும், விலைவாசிகளை யும் மந்தமான காலங்களிலே உயர்மட்டத்தில் வைத்து, வேலைவாய்ப்பும், உற்பத்தியும் டொலர் NNP மொத்தத்துடன் வீழக்கூடியதாயும், டொலர் NNP தனது பயனைக் கீழ்நிலைச் சம்பளங்களுக்கும் கீழ்நிலை விலைவாசிகளுக்கும் சுவறச் செய்யாதிருக்கக் கூடியதாக இருக்கும் வகையில் வைத்திருக்கின்றன என்பதிலேதான் அபிப்பிராய ஒற்றுமைக்குறைவு இருக்கின்றது. மேலதிக டொலர் தேவையின் வீக்கப்பயன்களுக்கெதிராக விலையைக் குறைக்கும் செலவு-தூக்கு அமைப்புமுறையின் முக்கியம்பற்றி இன்றும் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இரண்டு கருத்துக்களிலும் எவ்வளவு உண்மையுண்டென்பதை இந்நூலின் பிற்பகுதியில் ஆராய்வாம்.

www.padippakam.com



எனவே, எதிர்வரும் அத்தியாயங்களிலே செய்யப்படும் பலவகையான ஆராய்ச்சிகளும் மிக முக்கியமானவை. அதாவது பெடரல் சேமவங்கி அதிகாரிகள் தமது சேம வைப்புக்களை மாற்றுங்காலங்களில், வர்த்தக வங்கிகள் எவ்வாறு M என்ற தேவை—வைப்பை உண்டாக்குகின்றன, பெடரல்ரிசர்வ் வங்கி போன்ற மத்திய வங்கியொன்று எவ்வாறு செயற் படுகின்றது, வருமான நிர்ணயிப்போடும், பிஸ்கால் கொள்கையைத் திரப்படுத்துவதோடும் எவ்வாறு பணக்கொள்கை பொருந்துகிறது என்ற விடயங்கள் பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் அங்கு காணப்படுகின்றன.

**சுருக்கம்.**

**அ. விலை வாசிகள்.**

1. முதலீட்டைப் பெருக்குவதாலும், வேறு வகையான செலவுத்தானங் களையுண்டாக்குவதாலும், வேலைவாய்ப்பிலும் உற்பத்தியிலும் மாத்திரமே மாற்றங்களுண்டாகுமென்று நினைப்பது தவறு.

விலைமட்டங்களிலே மாற்றம் உண்டாவதையும் எதிர்பார்க்கலாம். விலை வாசிகளும், சம்பளங்களும் (வீக்கம்) உயர்வது எதனுல் என்பதும், அதனுல் உண்டாகும், பலாபலன்களும், விலைவாசிகளில் ஏற்படும் பொதுப் படையான வீழ்ச்சியும் (அதாவது வாட்டம்) பொருளியல் ஆராயும் முக்கிய பிரச்சினைகளுட், சிலவாகும்.

2. யுத்த காலத்திலேதான் விலைவாசிகள் ஏற்ற இறக்கத்தைக் காட்டு கின்றன. இது சரித்திரபூர்வமான உண்மை. ஆனுல் இந்த நூற் ருண்டிலே விலைவாசிகளின் போக்கு, ஒருவழிப் போக்கையுடையதாகவே காணப்படுகிறது. இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர், விலைவாசிகள் விழவில்லை. நீண்டகால வேலையின்மையையோ, மென்மையான வியாபார நிலைமையையோ, விலை வீழ்ச்சியையோ இக்காலத்துக் கலப்புப் பொருளா தாரம் அனுமதிக்கமாட்டாதென்பதையே இது சுட்டிக்காட்டுகிறது போலும்.

3. பணவீக்கமும், வாட்டமும் சமன்பாடுடையவகையாக இருப்பதில்லை. எல்லாவிலைகளும் சம்பளங்களும் ஒரேவகையான வீதத் தொடர்போடு எவருக்கும் சகாயம் புரிந்தோ, இன்னல் உண்டாக்கியோ நகர்வன வல்ல. முன்னரெல்லாம் பணவீக்கம் கொடுகடன்காரருக்கும், இலாபம் விரும்புவோருக்கும், ஆபத்தைப் பாராத யூகவியாபாரிகட்கும் வாய்ப்புடைய தாயிருந்தது. வீக்கம் படுகடன்காரருக்கும், நிலையான வருமானமுள்ள வர்க்கும், பென்ஷன்காரருக்கும், வைதீகப் போக்கும் பயமும் உள்ள முத லீட்டுக்காரருக்கும் இன்னலுண்டாக்கிற்று. இந்த நிலைமையால் இன்னல டைந்தோர் பெரும்பாலும் வயதானவர்களேயன்றி இளைஞர்களல்லர்.

4. குறிப்பிட்ட நிலையானதோர் உற்பத்தியில், பணவீக்கம் புனர்ப் பங்கீட்டுப் பயனைக் கொடுக்கக்கூடியதாயிருப்பதுமல்லாமல், முதலாளித்து வத்தின் சரித்திரத்திலே காணப்படும் மிதமான பண வீக்கம், மிதமான பணவாட்டம் செய்வதைக் காட்டிலும் வேலைவாய்ப்பை உயர்மட்டத்திலே

www.padippakam.com



வைத்திருப்பதோடு, வியாபாரத்தைச் சுறுசுறுப்பாகவும், வைத்திருக்கிறது. ஆனால் வீக்கத்தின் காரணம் முக்கியமானது. மந்தமான விலையேற்றம் சில சமயம் தீவிரமானதாகவும் பாய்ச்சலுடையதாகவும் மாறலாம். விலை வாசிகளின் உயர்வைப்பற்றித் திருத்தியோடிருப்பது ஆபத்தானதென் பதையே இது காட்டுகிறது.

இந்த நடைமுறைகளை முன்னேறியே அறிந்திருந்தாலும், அவை மாற்ற மின்றியிருந்தாலும் நெடுந்தவணை மாதிரிகளிலே அதிக வித்தியாசமிருக்க மாட்டாது. (i) விளைதிறனோடு, பணச் சம்பளமும் நிசச் சம்பளமும்உயரும்; விலை தளம்பாதிருக்கும். (ii) விலைவாசிகள் மிதமாக உயரும் பணச் சம்பளமானது, நிசச் சம்பளத்திலும், விளைதிறனிலும் பார்க்க விரைவாக உயரும்; (iii) விலைவாசிகள் மிதமாக வீழ்ந்துசெல்லும்; பணச் சம்பளம் தளம்பாமலிருக்கும் நிசச் சம்பளம், நுகர்வோனின் ஒவ்வொரு டொலரும் அதிகமதிகமாகப் பொருள்களை வாங்குவதால் உயர்ந்தும்செல்லும். பல சம்பளவிகிதங்களும், கீழ் நோக்கிய சரிக்கட்டல்கள் தேவைப்படும்போது விலைகள் ஓரளவு நெகிழ்ந்துகொடாமலுமிருக்கும் விலைவாசிகளும் உள்ள இக்கால கலப்புப் பொருளாதாரத்தில், மூன்றுவது நிபந்தனை சாத்தியமா எனப் பல பொருளியலறிஞர் ஐயப்படுவர். ஆனால் இஃது அரசியற் பொருளாதாரஞ் சம்பந்தமான மிக முக்கியமான பிரச்சினையாகும்.

**ஆ. பண விநியோகமும் பணப் புழக்கவேகமும்.**

5. குறிநாணயம், கடதாசிநாணயம், கேட்டவுடன் பெறும் வைப்பு என் பனவே $M$ என்று சொல்லப்படும் பணம். அவற்றோடு நீர்மைச்சொத்து எனப்படும் சமீபப் பணம், சேமிப்பு வைப்பு அல்லது பருவ வைப்பு, (இவை வட்டி ஈயும். விரும்பின நேரம் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்) அரசாங் கக் கடன்பத்திரம், (இதனை நடப்புச் சந்தையைப் பொறுத்துள்ள விலையில் விரைவாகக் காசாய் எவரும் மாற்றிக் கொள்ளலாம்) என்பனவும் மிகமுக் கியமான பணங்கள். பணத்துக்கு எத்தகைய வரைவிலக்கணம் கூறினு லும், கடந்த தசாப்தங்களிலே பணம் பெருகிவிட்டதென்பது உண்மை. விசேடமாக 1939 ஆம் ஆண்டு மட்டத்தைவிட மிக அதிகமாகப் பெருகி விட்டது.

6. (வருமான) பணப்புழக்க வேகம் என்பது டொலர் தே. தே. உ. NNP இற்கும் $M$ இற்கு முள்ள வீதமாகும். $V$ என்பது நிலையான எண்ணுயில்லாவிட்டாலும், அதனுடைய போக்குச் சில ஒழுங்கைப்பின் பற்றும். அதனுடன் அது முன்னேறியே மதிப்பிட்டுச் சொல்லக்கூடியது. $V \equiv NNP/M \equiv PQ/M$ என்ற வரைவிலக்கணத்திலிருந்தே $MV \equiv PQ$ என்ற பரிவர்த்தனையின் கணியக்கொள்கைச் சமன்பாடு பிறக்கிறது.

7. பணம், விலை என்பனபற்றிய பருமட்டான கணியக் கொள்கை P யை $M$ க்குக் கண்டிப்பாக விகிதசமமானதெனக்கருதிற்று. அமிதப் பணவீக்கத்திலும், சில நெடுந்தவணைப்போக்கை விபரித்தலிலும் இந்த அபிப்பிராயம் பயனுடையதாயிருந்தாலும், இந்தப் பருமட்டான வடிவத்தில்

படிப்பகம்

www.padippakam.com



எந்தப் பொருளியலறிஞரும் இதனை இன்று ஏற்றுக்கொள்ளமாட்டார். பணத்தின் விநியோகத்தையும், முதலீடு செய்யும் படுகடன்காரருக்கு அது கிடைக்கக்கூடியதாயிருப்பதையும், அந்தக் கடனுக்கான வட்டிச் செலவுகளையும் பாதிக்கக்கூடிய அரசாங்க நடவடிக்கை, நுகர்வு + முதலீடு + அரசாங்கச் செலவு என்பவற்றைப் பெரிதும் பாதித்து, அதன்பயனாக விலைமட்டத்தையும் சம்பளமட்டத்தையும் பாதிக்கும் என்பதைப் பலரும் இன்று ஒத்துக்கொள்வர். எனவே திருத்தமான கணியக் கொள்கையை ஆதரிப்போரும், தேசியவருமானக் கொள்கையாளரும், வங்கி, பிஸ்கால்கொள்கைகள் சம்பந்தமான விடயங்களடங்கிய பின்வரும் அத்தியாயங்களில் அதிக சிரத்தையெடுக்கவேண்டும்.

**ஆராய்ச்சி வினாக்கள்.**

1. பணவீக்கம் உண்டாகுமென்று கண்டால் உம்மைப் பாதுகாத்துக்கொள்ள நீர் என்ன செய்வீர் ? தாவும் பணவீக்கம், மிதமான பணவீக்கம் என்பன நிகழும்போது நடைபெறும் நிகழ்ச்சிகள் சிலவற்றை அட்டவணைப்படுத்துக.

2. "தே. தே. உ. (N.N.P) யில் தொழிலாளரின் பங்கு அதிகம் மாருதபடியால், தொழில் உற்பத்தியில் உயர்வுண்டானால்தான் நிசச் சம்பளம் உயரும். *W* பணத்திலுண்டாகும் அதிகரிப்பு, உற்பத்தி அதிகரிப்புகளிலும் வேகமானதாயிருந்தால் பணம் **P** யை உயர்த்தும்". இந்தத் தரவைக்கொண்டு 306 ஆம் பக்கத்திலே கண்ட மூன்று உதாரணங்களிலும் **P** யும் *W* யும் எவ்வாறு மாறுமென்பதைக் காட்டுக.

3. உமது வகுப்பிலுள்ள சகபாடிகள் வசமுள்ள பலவகைப்பணத்தை அட்டவணைப்படுத்துக. செக்குக் கணக்கில் வங்கி வைப்பை எவ்வாறு கணிப்பது ?

4. "கிட்டிய பணம்" என்றாலென்ன ? விளக்குக. அந்தப் பெயர் உண்டானது எப்படி ? இரட்டையர் இருவருக்கு ஒரேவருமானமும் சொத்துமுண்டு. ஒருவருக்குச் சொத்திலே பாதி பணமாயும் மற்றப்பாதி அரசாங்கக் கடன்பத்திரமான திரவப்பணமாயுமிருக்கிறது. மற்றவருடைய சொத்திலே 9/10 பணமாயும் 1/10 அரசாங்கக் கடன்பத்திரமாயுமிருக்கிறது. அவர்களுடைய நுகர்வுநாட்டம் அதிகம் வித்தியாசமுடையதாயிருக்குமா ?

5. 100 பில்லியன் நோட்டுக்களை அடித்துப் புழக்கத்திலேவிட்டால் விலைவாசிகளுக்கு என்ன நடக்கும் ? பருமட்டான கணியக் கொள்கையில் ஓரளவு உண்மையுண்டா ? $MV \equiv PQ$ என்பதை மதிப்பிடுவதில் பருமட்டக்கணியக் கொள்கையாளர்க்கும் திருந்தியகணியக் கொள்கையாளர்க்கும் உள்ள வித்தியாசமென்ன ?

6. செக்குகள் ஏன் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன ? ஏன் மேலும் அதிகமாக உபயோகிக்கப்படவில்லை. AT&T பங்கை, பங்கு 90 டொலர் வீதம் நீர் வாங்கிவிட்டீர் ; அதற்குரிய விலையைச் செக்மூலம் கொடுத்து விட்டீர்

www.padippakam.com



என வைத்துக்கொள்க. அந்தச் செக்கின் சரித்திரத்தை ஆராய்க. உம் தரகர் 1000 மைலுக்கப்பால் இருக்கிறார் என்று வைத்துக்கொள்க.

7. பின்வரும் கருத்துக்களை மறுபடியும் நினைவுகூர்க. பணவீக்கம், அபரிமிதப் பணவீக்கம், பணவாட்டம், நுண்தொழில்முறை, விலைகுறைப்பு, விலைமட்டப்போக்குகளின் தொழில்வாய்ப்புப் பயனும் புனர்ப்பங்கீடும், நிசச்சம்பளம், பணச்சம்பளம் ; பின்னநாணயம், குறி நாணயம், பரிவர்த்தனை அமைப்புக்கள், கேட்டதும் பெறக்கூடிய வைப்பு, பருவ வைப்பு, கிடடியபணம், வேகவரைவிலக்கணம், பரிவர்த்தனைச் சமன்பாடு, MV=PQ, பரும்படியான கணியக் கொள்கை.

படிப்பகம்

www.padippakam.com

# பதினாறும் அத்தியாயம்

## வங்கித்தொழின் முறையும் வைப்பு உண்டாக்குதலும்

*வங்கிக்காரன் கவனிக்கவேண்டியதொரு விதி*
*ஒருவனுக்குப் பணந் தேவையில்லாத பட்சத்திலே*
*யன்றி மற்றப்படி அவனுக்குக் கடன் கொடாதே.*
—ஒக்டென் நாஷ்.

ஒரு சமூகத்தினுடைய பணவிநியோகத்தின் ஓர் அமிசம் அதனுடைய வங்கிவைப்பு. அதன் முக்கியத்துவம் முன்னரே ஆராயப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்திலே, மேலும் அந்த ஆராய்ச்சி இரண்டு தனிப்பிரிவாக ஆராயப்படுகிறது. முதற்பிரிவிலே இக்கால வங்கிமுறையைப் பற்றியும் அஃது எவ்வாறு தொழிற்படுகிறதென்பதைப் பற்றியும் சுருக்கமாக ஆராய்வோம். இக்கால வர்த்தக வங்கி படிப்படியாக "பின்னப் பணச் சேம நிதியை" மட்டும் வைப்புக்கு ஈடாக வைத்திருக்கத் தொடங்கியதென்பதை அதில் எடுத்துக் காட்டுவோம். இரண்டாம் பிரிவிலே, வங்கிகள் எவ்வாறு வங்கி வைப்பை "உண்டாக்குகின்றன" என்பதை இலேசாகவுந் தெளிவாகவும் ஆராய எத்தனிப்போம். இதுவே நமது பண விநியோகத்தின் மிக முக்கியமான அமிசம்.

### அ. இக்கால வங்கி அமைப்பு எவ்வாறு தொழிற்படுகிறது? அதன் தன்மை எத்தகையது ?

**வங்கித்தொழிலின் இக்கால அந்தஸ்து.**

செக்கு வைப்பு முறையை இன்று அனுசரிக்கும் 13,000 வங்கிகள், ஐக்கிய அமெரிக்காவிலுண்டு. இவற்றில் மூன்றிலொரு பங்கே தேசீய வங்கிகள். ஏனையவை அரசாங்க அதிகாரத்தின் கீழ் இயங்குகின்றன. எல்லாத் தேசீய வங்கிகளும் பெடரல் ரிசர்வ் அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ளன. அத்துடன் அரசாங்கத்தின் பெரிய தாபனங்களெல்லாம் ரிசர்வ் வங்கியின் உறுப்புக்களே. வங்கிகளில் பாதிக்குமேற்பட்டவை பெடரல் ரிசர்வ் முறையில் சேராதனவாக இருந்தும், அவற்றின் வைப்பு மொத்தத்தில் 1/7 ஆனபடியால், அவை அளவில் சிறிய வங்கிகளேயாகும்.[1] மேலும் 1933 ஆம் அண்டு துவக்கம் அநேகமாக எல்லா வர்த்தக வங்கிகளும், (அரசாங்க, தேசீயவங்கிகள்) பெடரல் டிபொசிட் இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷனில் தமது வைப்பைக் காப்புறுதி செய்துள்ளன. பெ. டி. இ. கோ. 10,000 டொலர் வரை ஒவ்வொரு வைப்புக்கும் காப்புறுதியளிக்கிறது.

1. பூரணவளர்ச்சி பெறுத உறுப்புக்களான பல அரசாங்க வங்கிகள் பெடரல் ரிசர்வ் செக்குத்தீர்வக அமைப்பிலே சேர்ந்துள்ளன. அதனுல் மற்ற வங்கிகளின்பேரில் எழுதப்பட்ட செக்குகளைப் பட்டுவாடாச் செய்ய அவை ரிசர்வ் வங்கியைப் பயன்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இங்கிலாந்திலும் கனேடாவிலும் சில பெரிய வங்கிகள் நூற்றுக்கணக்கான கிளைகளோடு முக்கியத்துவம் வகிக்கின்றன. ஆனால் ஐக்கிய அமெரிக்காவிலே தனிப்பட்டவையும், ஒப்புநோக்குமிடத்துச் சிறியவையுமான உள்ளூர் வங்கிகள் பலவுண்டு.[1] எவரும் சிறிய தொகைப்பணத்தைக் கொண்டு ஒரு வங்கியை ஆரம்பிக்கக்கூடிய நிலை அமெரிக்காவிலே சமீபகாலம் வரையிருந்துவந்தது. வங்கிகள் முறிவதும், அதனால் பணம் போட்டவர்கள் நட்டமடைவதும் மிக இன்னல் விளைத்து வந்தமை அமெரிக்க சரித்திரத்திலே காணப்பட்டது ஆச்சரியமன்று. 1915 ஆம் ஆண்டிலேயிருந்த வங்கிகளில் பாதி அளவுதான் இன்று முறிவடையாதிருக்கிறது. வியாபார மலர்ச்சி நிலவிய 1929 ஆம் ஆண்டிலேகூட அதாவது பெரிய வியாபார மந்தம் ஏற்படுவதற்கு முன்னரே 2,000 இலட்சம் டொலர் மொத்த வைப்புள்ள 659 வங்கிகள் முறிந்து போயின. பெ. டி. இ. கோ. ஆரம்பித்த காலந்தொட்டு வங்கி முறிவு மிக அருமையாகவே ஏற்பட்டது.

வர்த்தக வங்கிகளின் பிரதானமான பொருளியற் கருமம், கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கும் வைப்புக்களை வைத்திருப்பதும், அவை பேரில் எழுதப்படும் செக்குகளுக்குப் பணம் கொடுப்பதுமேயாகும். இரண்டாவது பெரிய கருமம், உள்ளூர் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும், கைத்தொழிலில் ஈடுபடுவோர்க்கும் பணம் கடன் கொடுப்பதாகும்.

வேறு பல பணத்தாபனங்களோடு போட்டியிட்டுக்கொண்டு வங்கிகள் வேறு பல கருமங்களையுஞ் செய்கின்றன. சேமிப்பு அல்லது பருவ வைப்பு என்பவற்றை வங்கிகளே வைத்திருக்கின்றன. கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கும் வைப்புக்களைப் போலன்றி இவை வட்டி கொடுக்கின்றன. பணத்தைப் போட்டு 30 நாளைக்குப் பின்னரே அதைத் திரும்ப எடுக்கலாமென்பது கொள்கையளவிலிருந்தாலும், பணம் போடுவோர் விரும்பிய நேரம் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடியவராயிருப்பர். வியாபார வங்கிகள் இத்தகைய கருமத்தைச் செய்வதால், நாட்டின் சில பகுதிகளில் பருவ வைப்பை மாத்திரம் ஏற்றுக்கொள்ளும் " பரஸ்பர சேமிப்பு வங்கி "களோடு போட்டியிடுகின்றன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், அவை கூட்டுறவுக் கட்டடச் சங்கங்களோடும் கடன் சங்கங்களோடும், பெடரல் சேமிப்புச் சங்கங்களோடும் போட்டியிடுகின்றன. இவை தபால் பணக் கட்டளை, பிரயாணிகள் செக்கு என்பவற்றை விற்பனை செய்வதால் தபாற் கந்தோருடனும், மேற்கு யூனியனோடும் போட்டியிடுகின்றன. தருமச் சொத்து, தோட்டம் என்பன விடயமாக அவை பரிபாலனம் நடத்துவதால், முதலீட்டு ஆலோசனைச் சபைகளோடும், தத்துவ உரிமை பரிபாலிப்போரோடும், ஏனைத் தருமகர்த்தாக்கள் சபைகளோடும் போட்டியிடுகின்றன.

1. நியூயோர்க் நகரிலே சேஸ் நாஷனல் வங்கிக்குப் பல கிளைகளிருப்பது போல, கலிபோனியாவிலே, அமெரிக்க வங்கிக்குப் பல கிளைகள் எங்கும் உண்டு. மினெசோட்டா, விஸ்கொன்சின் ஆதிய சமஸ்தானங்களிலே சில கம்பெனிகள் பல வங்கிகளைப் பரிபாலிக்கின்றன. பல கிளையுள்ள வங்கிகளைச் சட்டம் தடைசெய்வதற்குக் காரணம் " பெரும் நிதி " விடயத்தில் அமெரிக்காவுக்குள்ள அவநம்பிக்கையாகும்.

www.padippakam.com



தனிப்பட்டவர்களுக்கும், வியாபாரிகட்கும் பணம் கடன் கொடுக்கும் விடயத்திலே, நிதிக் கம்பெனிகளோடும், நடைமுறை மூலதனத்தைக் கம்பெனிகளுக்கு வழங்கும் தாபனங்களோடும் வங்கிகள் போட்டியிடுகின்றன. கடன் பத்திரங்கள், ஈடுகள், ஈட்டுப்பங்குகள் என்பன வாங்கும் விடயத்திலும், இன்சூரன்ஸ் கம்பெனிகளோடும், ஏனைய முதலீட்டினரோடும்[1] வங்கிகள் போட்டியிடுகின்றன.

எனவே வர்த்தக வங்கிகள் மாத்திரமே நமது நிதித்தாபனங்களென்று கூற முடியாது. "வங்கிப்பணம்" எனப்படும் செக்கு வைப்புப் பணத்தை அதாவது பரிவர்த்தனைச் சாதனமாக இலேசாய்ப் பயன்படுத்தக்கூடிய வைப்பைத் தரக்கூடியவை இவையொன்றேயென்பது வர்த்தக வங்கிகளின் வரைவிலக்கணத்தாலே தெரியவரும். இங்கேதான் வங்கிகளின் பிரதான முக்கியத்துவமும், முதன்மையான பொருளியல் நலமும் தங்கியுள்ளன.

வங்கிகளின் இரண்டாவது பெரிய கருமம், அவை கடன் வசதிகள் உதவுதல். அவை வியாபாரிகட்கும், குடும்பத்தவர்க்கும் குறுகிய தவணைக் கடன் கொடுக்கின்றன. அவை நெடுந்தவணை ஈட்டுக்கடன் கொடுக்கின்றன. இடைப்பருவக் கடன்களைப் பருவக்கடனாக ஒருவருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்குக் கொடுக்கின்றன. இதுவும், வங்கிகள் பருவந்தோறுமே கடன் வழங்கவேண்டுமென்ற பழைய கருத்துக்கெதிராக வழங்குகின்றன.

### பெடரல் ரிசர்வ் முறை அமைக்கப்பட்டமை.

1913 ஆம் ஆண்டிலே காங்கிரஸ், பெடரல் ரிசர்வ் சட்டத்தை நிறைவேற்றியது. அதற்கு சனாதிபதி வில்சன் கைச்சாத்திட்டார். 1907 இல் திகில் உண்டானமையும், அதனால் வங்கிகள் ஒன்றனபின் ஒன்றாய் மறைந்தமையுமே எல்லாவற்றுக்கும் ஒரு முடிவைக் கொண்டு வந்தன. தனிப்பட்டவர் வங்கித்தொழில் நடத்துவதை அமெரிக்கர் வெறுத்தனர். அஃது அராஜரீகமான, நிலையில்லாத தொழில் என எண்ணினர். 6 வருடமாகக் கிளர்ச்சி செய்தும், குடியரசுக்கட்சியும் சனநாயகக் கட்சியும் விவாதங்கள் நடத்தியும் முடித்தபின்னர், பெடரல் ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இதைப் பெரிய வங்கிகளும், வங்கிக்காரர் சங்கங்களும், எதிர்த்தன.

நாடு 12 பெடரல் ரிசர்வ் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பெடரல் ரிசர்வ் வங்கி தாபிக்கப்பட்டது. பெடரல் ரிசர்வ் அமைப்பில் உறுப்புக்களாயுள்ள வர்த்தக வங்கிகளே ஆரம்ப மூலதனத்தை வழங்கின. எனவே பெயரளவில் ஒவ்வொரு பெடரல் ரிசர்வ் வங்கியும், உறுப்புக்களான வங்கிகளுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனமாகும். இவையெல்லாம் 7 அங்கத்தவரைக் கொண்ட பரிபாலன சபையினால் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சபை வாஷிங்டனிலுள்ள பெடரல் ரிசர்வ்

1. மசாச்சுசெட்ஸ், கொனெக்டிகட், நியூயோர்க் ஆகிய இடங்களிலே சீவிய காப்புறுதிப் பத்திரங்களைக்கூட சேமிப்பு வங்கிகள் விற்கின்றன.

www.padippakam.com



அமைப்பைச் சேர்ந்தது. இதனையே பெடரல் ரிசர்வ் சபையெனப் பொது வாகக் கூறுவர்.

12 அங்கத்தவரைக் கொண்ட வெளிச்சந்தைக் கமிட்டியொன்றுண்டு. 12 பிரிவுக்கும் பிரதிநிதிகளாயுள்ள 5 பிரதிநிதிகளும் 7 பேரைக் கொண்ட பரிபாலனச்சபையும் இதன் அங்கத்தவராவர். இக்காலப் பணக்கொள் கையை நிர்வாகஞ் செய்வது இந்தக் கமிட்டியே. அதனால் "அமெரிக்காவி லுள்ள தனிப்பிரசைகளில் மிகச் செல்வாக்குள்ளவர்கள்" இந்தச் சபை யினரேயெனக் கூறுவது வழக்கம்.

பெடரல் ரிசர்வ் முறையின் இக்கால நிலைமைகளைப் பின்வருமாறு சங்கிரகமாகக் கூறலாம். வாஷிங்டனிலுள்ள பெடரல் ரிசர்வ் சபையும், 12 பிரதேச பெடரல் ரிசர்வ் வங்கிகளுமே அமெரிக்க மத்தியவங்கியாகும். இக்காலப் போக்குடைய நாடுகளிலெல்லாம், அத்தகைய மத்திய வங்கி உண்டு. உதாரணமாக, இங்கிலாந்து வங்கி, பிரான்சு வங்கி, ஜெர்மனி யிலுள்ள டொச்சே பண்டெஸ்பாங்க் என்பனவெல்லாம் அத்தகைய வங்கிகளே. அரசாங்கம் தனது விவகாரங்களை நடத்தவும், வர்த்தக வங்கி களைத் தொடர்புபடுத்திப் பரிபாலிக்கவும், தேசத்தின் பணச்சப்பிளை, கடன் நிபந்தனைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தவும் ஏற்படுத்தப்பட்ட வங்கியே மத்திய வங்கியாகும்.

பெடரல் ரிசர்வ் வங்கி, வர்த்தகவங்கிகளுக்குச் சொந்தமான கூட்டுத் தாபனமானலும் அஃது அரசாங்க ஏஜென்சியே. அது காங்கிரசுக்கு நேரடி யாகப் பொறுப்புள்ளது. அதன் இலாபம் பெரிதோ, பொதுசன நலன் பெரிதோ என்ற பிரச்சினை எழும்போதெல்லாம், பொதுசன நலனே பேணப்படும். அங்கத்துவ வங்கிகள் அதனிடமிருந்து மாறுதபங்குகளை பெயரளவுக்குப் பெறுகின்றன. பெடரல் வங்கி நல்ல இலாபத்தை ஈட்டு கிறது. ஆனல் ஒரு தொகைக்கு மேலதிகமான இலாபமெல்லாம் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தையே சேரும். பெடரல் ரிசர்வ் அதிகாரிகள் அதாவது பிரதேச வங்கி உத்தியோகத்தரும், வாஷிங்டன் வங்கி உத்தி யோகத்தரும் தமது வங்கியின் பங்குதாரர்களான அங்கத்துவ வங்கிகளைத் தமது செய்கைகளை நடத்துவிட்டனவாய் நினைப்பதில்லை. ஆனல் பெடரல் வங்கியை அரசாங்கத் தாபனமாகவோ, அதற்கிணையான தாபனமாகவோ தான் கவனிப்பர். (எனவே பெடரல் பகிரங்கச் சந்தைக் கமிட்டி அங்கத்தவர் தனிப்பட்ட பிரசைகளல்லர்; அவர்களுடைய சம்பளம் பெடரல் அரசாங்கத்திடமிருந்து வருவதில்லை).

நீண்ட தவணைக்கு வங்கியின் ஆள்பதிகளாயிருக்கும்படி சனதிபதி நிய மனங்களைச் செய்வார். ஆனல் சபையானது, காங்கிரசிற்குப் பொறுப்புள்ள தாகவே யிருக்கும்; நிர்வாகக் கிளைக்கு அடங்கி நடப்பதாயிராது. அமெ ரிக்கமுறை பிரிட்டனில் நடைபெறும் முறையிலும்பார்க்க வித்தியாசமுடை யது. பிரிட்டனிலே இங்கிலாந்து வங்கி தேசியமயமாக்கப்பட்டுவிட்டது. மந்திரிசபையின் அதிகாரத்துக்கு அடங்கியது. ஆனல் அது வெளிப்படை

படிப்பகம்

www.padippakam.com



யாகத் தனது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் உரிமையுடையது. அதனுடன் மந்திரிசபையின் கொள்கைகளுக்குத் தனது கொள்கைகளையும் ஏற்றதாக அமைக்கும். 1951 இலே திறைசேரிக்கும் பெடரல் வங்கிக்குமிடையில் ஏற்பட்டதோர் உடன்படிக்கையின்படி, ட்ரூமன் நிர்வாகத்தின்போது திறைசேரி, பெடரல் வங்கியின் நடவடிக்கைகள்பற்றிப் பெரிதும் நெருக்க முண்டாக்கிற்று. ஆனல் சமீபகாலத்திலே, காங்கிரசின் விருப்பத்துக்கேற்ற படி நடப்பதே தனது கடமையென்பதை பெடரல் வங்கி உணர்ந்துவிட்டது.

**வங்கித்தொழில் ஒரு தொழில்.** மற்றத் தொழில்களைப் போலவே, வங்கித் தொழிலும் ஒரு தொழில். வர்த்தக வங்கி ஒப்பளவில் மிக இலேசான தொழில் நிறுவனமாகும். வங்கி தனது வாடிக்கைக்காரரான, வைப்புக்காரர், கடன்காரர் என்போருக்குச் சில சேவைகளைச் செய்கிறது. அதற்குக் கூலியாக அது சில பெறுவனவுகளை ஏற்றுக்கொள்கிறது. அப்பெறுவனவுகள் பலவடி விலிருக்கும். பங்குதாரர்க்கு இலாபமுண்டாக்கவும் அது முயல்கிறது.

வங்கியின் ஐந்தொகையிலே சொத்து, பொறுப்பு, மூலதனச்சொத்து என்பன காட்டப்பட்டுள்ளன. சிற்சில மாற்றங்களைத்தவிர, மற்றப்படி வங்கியின் பிரசுரிக்கப்பட்ட ஐந்தொகை, வேறுதொழில்களின் ஐந்தொகை யைப் போலவேயிருக்கும். ஒரு வகையில், அதனினும் இலேசானதாய்க் காணப்படும்.

அட்டவணை 1 இலே காட்டப்பட்ட, திரப்படுத்தப்பட்ட வங்கி ஐந்தொகை யிலேயுள்ள முக்கியமானதோர் அமிசம், வங்கியின் பொறுப்புக்களில் பெரும்பகுதி, கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கக்கூடியதாயிருப்பது. அதா வது அந்த வைப்புகளைச் செக்கு மூலம் திருப்பியெடுத்துக் கொள்ளலாம்.

இத்தகைய பொறுப்புக்களைப் பணம் என்று கூறுவது, பொருளியலாள ருக்குச் சற்றே மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய விடயமே. வங்கியாளர் இதையிட்டு அக்கறை கொள்வதில்லை. நெடுங்காலமாக இது ஒப்புக்கொள் ளப்பட்டதொரு விடயமாக இருந்து வருகிறது. வங்கிவைப்பாளர் எல்லாரும் ஒரே நாளில் தாம் போட்ட பணங்களைத் திருப்பி எடுத்துக்கொள்ளும் நிலைமையிருந்தாலும், அது நிகழக்கூடிய காரியமன்றென்பதை அவர் களுணர்வர். ஒவ்வொரு நாளும் ஒரு பகுதியினர் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக்கொள்ள, மற்றொருபகுதியினர் பணத்தைப் போடுகின்றனர். வளர்ச்சியடையும் ஒரு பொருளாதாரத்திலே, எடுப்பதிலும் பார்க்க வைப்புச் செய்யும் பணமே அதிகமாயிருக்கும்.

எந்த ஒரு கணத்திலோ, எந்த ஒரு நாளிலோ, எந்த ஒரு வாரத்திலோ, இஃது உண்மையாயிருக்க மாட்டாது. போடப்படும் பணத்திலும் பார்க்க எடுக்கப்படும் பணம் அபூர்வமாகவே அதிகமாயிருக்கும். ஒரு நாணயத்தைச் சுண்டி எறியும்போது தலைமேலாகச் சில சமயம் தொடர்ந்து விழலாம்; எப்பொழுதும் விழாது. பணம் எடுப்போர் தொகை அதிகரிக்கலாமென்ற எண்ணத்திலேதான் வங்கியாளர் காசாக ஓரளவு பணத்தை வைத்திருப் பதோடு, அண்மையிலுள்ள பெடரல் ரிசர்வ் வங்கியிலே "சேமவைப்பாக"



படிப்பகம்

www.padippakam.com



வும் ஒரு தொகைப் பணத்தை வைத்திருப்பர். இந்த வைப்பு, வங்கியின் மொத்த வைப்பிலே மிக அற்பமானதொரு பின்னமாகும். பெருந்தொகையானவர் சீவியக்காப்புறுதி செய்தால், வங்கியாளர் தமது வங்கியைப் பெரிதாக்கிக் கொள்வார் ; பணம் போடுவோர் தொகையும் அதிகரிக்கும். அதன் பயனாக சேமப்பணவைப்புக் குறைவாயிருக்கலாம்.

**பொற்கொல்லர் தாபனங்களிலிருந்து வங்கிகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன.**

மேலே கூறிய விடயங்களெல்லாம் தெரிந்தவிடயங்களென இக்கால வங்கியாளர் கருதுவதால் அவர்கள் அவற்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. வர்த்தகவங்கிமுறை, புராதன காலத்துப் பொற்கொல்லருடைய வழக்கத்திலிருந்தே உண்டானது. ஆதியில் மக்கள் தமது தங்கம், ஆபரணம் முதலிய விலையுள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகப் பொற்கொல்லர்வசம் ஒப்படைத்தனர். ஆதியில் இந்த இடங்கள் சிப்பங்கள் வைக்கும் அறைகள் போலவும், பண்டசாலைகள் போலவுமிருந்தன. வைப்புக்காரர், தமது தங்கத்தைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அங்கே கொடுத்தனர். அதற்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்கப்பட்டது. பின்னர் அந்தப் பற்றுச்சீட்டைக் காட்டி அடைக்கலப்பொருளைப் பெற்றனர். பாதுகாப்பாக வைத்துக் கொடுத்தமைக்காக ஒரு சிறு தொகை வாடகை கொடுக்கப்பட்டது.

**எமது பணச்சப்பிளையில் பெரும்பகுதி கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கும் வைப்புக்களாகும்.**

| சொத்து | டொலர் | பொறுப்பும் தேறிய பெறுமதியும் | டொலர் |
|---|---|---|---|
| சேமிப்பிலுள்ள பணம் | .. 2.0 | மூலதனக் கணக்கு | .. 16.3 |
| சேமப்பணம் (0.3 டொலர் உபரி பணம்) | .. 18.1 | கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கும் வைப்பு | .. 130.5 |
| கடன், கழிவு | .. 94.8 | பருவவைப்பு | .. 54.2 |
| ஐக்கிய அமெரிக்கக்கடன் பத்திரம் | .. 46.8 | ஏனைய பொறுப்பு | .. 4.7 |
| ஏனைய கடன் பத்திரங்கள் | .. 16.3 | | |
| ஏனைய சொத்துக்கள் | .. 27.7 | | |
| மொத்தம் | .. 205.7 டொ. | மொத்தம் | .. 205.7 டொ. |

அட்டவணை 1. சகல உறுப்பு வங்கிகளினதும் திரப்படுத்தப்பட்ட ஐந்தொகை. ஜனவரி 1, 1960. (பில்லியன் கணக்கில்). றிசர்வ் மிச்சமும், கேட்கும்போது திருப்பிக் கொடுக்கும் வைப்புமே, பின்னர் ஆராயப்படும் பொருளாதார ஆராய்ச்சிக்கு முக்கியமான இரண்டு அமிசங்களாகும். சட்டநியதிகளுக்காகவே றிசர்வ் இவ்வளவு ஒதுக்கப்படுகிறது. பணத்தை எடுக்கவிரும்புவோர்க்குக் கொடுப்பதற்கென அஃது அவ்வளவாக ஒதுக்கப்படவில்லை. (கிடைத்த வழி : பெடரல் றிசர்வ் புதினம்).

www.padippakam.com



பணத்தை ஒருவர் விரும்புவதற்குக் காரணம் அதைக் கொண்டு அவர் ஏதாவது வாங்கக் கூடியதாயிருப்பதே. மற்றும்படி பணத்துக்காக எவரும் பணத்தை விரும்புவதில்லை. பணத்துக்கு அநாமதேயமானதொரு குணமுண்டு. ஒரு டொலர் நாணயத்தை மற்றொரு டொலர் நாணயத்துக்காக மாற்றிக்கொள்ளலாம். சுத்தமானதொரு தங்கக் கட்டி மற்றோர் அதே அளவான கட்டிக்குச் சமமாக ஏற்றுக்கொள்ளப்படலாம். ஒருவர் கொடுத்த தங்கக் கட்டியையே மறுபடி அவரிடம் திருப்பிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அதற்கு அளவான தங்கத்தைக் கொடுக்கலாமெனப் பொற்கொல்லர் எண்ணினர். எனவே வாடிக்கைக்காரர் தாம் கொடுத்த குறிப்பிட்ட பெறுமதியுடைய தங்கத்திற்காகவோ பணத்திற்காகவோ ஒரு பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டனர்.

**முதலாவது பொற்கொல்லர் வங்கியில், கேட்டவுடன் கொடுக்கும் வைப்பின் அளவுக்கு ரொக்கம் சேமிக்கப்பட்டிருந்தது.**

| சொத்து | டொலர் | பொறுப்பும் தேறிய மதிப்பும் | டொலர் |
|---|---|---|---|
| பணம் .. | .. 1,000,000 | மூலதனம், உபரி | .. 50,000 |
| கடன், முதலீடு .. | .. 50,000 | கேட்டவுடன் கொடுக்கும் வைப்பின் பொறுப்பு | .. 1,000,000 |
| மொத்தம் | .. 1,050,000 டொ. | மொத்தம் | .. 1,050,000 டொ. |

அட்டவணை 2. முற்கால வங்கியின் ஐந்தொகை.

பணத்தின் இந்த " அநாமதேயத்தன்மை " முக்கியமானது. இன்றைய வங்கிக்கும், களஞ்சியசாலைக்குமுள்ள வித்தியாசம் இங்கேதான் தெரிகிறது. நான் எனது பெட்டியைப் பெரிய மத்திய புகையிரத நிலையத்திலே களஞ்சியசாலையிற் பாரங்கொடுக்கிறேன். சிறிது நேரத்தின் பின்னர் தெருவிலே ஒருவர் அதே பெட்டியை எடுத்துக்கொண்டு செல்வதைக் காண்கிறேன். உடனே நான் செய்யக்கூடியது ஒன்றுதான். எனது நியாய துரந்தரரிடம் சொல்லிப் புகையிரதக்கம்பனி மீது வழக்குத் தொடர்வதே. 10 டொலர் நோட்டிலே எனது கையெழுத்தையிட்டு அதை வங்கியிலே போடுகிறேன். பின்னர் அதே நோட்டை வேறோர் அந்நியர் கையில் காண்பேனானால், வங்கிமீது வழக்குத் தொடரமாட்டேன். வங்கி மனேஜரைக் குறை சொல்லமாட்டேன். வங்கி என்னுடைய நோட்டின் மதிப்புக்குச் சமமான பணத்தைத் திருப்பித் தருவதாக மாத்திரமே என்னோடு பொருந்திக் கொண்டது.

இக்கால வர்த்தக வங்கிகளின் ஆரம்பத்தானமாயிருந்த பொற்கொல்லரின் களஞ்சியசாலையை மறுபடியும் ஞாபகத்தில் இருத்துவோம். அந்தச் சாலைகளின் ஐந்தொகை எவ்வாறிருக்கும் ? பெரும்பாலும் அட்டவணை 2 ஐயே ஒத்திருக்கும். வங்கிகள் பொற்கொல்லர் தொழிலை இப்போது செய்வதில்லை. மக்களுடைய பணங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்துத்

www.padippakam.com



திருப்பிக் கொடுப்பதே அவற்றின் முயற்சி. பழங்காலத்தில், 10 இலட்சம் டொலர் வங்கியின் பாதுகாப்புத் தானங்களிலே சேமித்து வைக்கப்பட்டன. இம்முழுத் தொகையையும் அது பணச் சொத்தாக வைத்திருக்கிறது. இந்தத் தொகைக்குச் சமனுக நடப்பு வைப்புப் பொறுப்பு, அதே தொகையளவுக்குப் போட்டு வைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான முயற்சிக்கு வேறெந்த விதமான சொத்தும் தேவையில்லை. அலுவலகமும், பாதுகாப்பு அறையும் மாத்திரமே தேவை. ஆனல் வங்கிச் சொந்தக்காரர் 50,000 டொலரை முதலீடு செய்து அதை வட்டிக்குக் கொடுக்கலாம். கடன் பத்திரங்களைக்கூட வாங்கலாம். சொத்துப் பக்கத்திலே இத்தொகை கடன் முதலீடு என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ளது. இது வலப் பக்கத்திலே மூலதனம், உபரிக்கணக்கு என்றவாறு எழுதப்பட்டுள்ளது.

இது மிகப் புராதனநிலை. இந்நிலையிலே பொருளியலாளர்க்கு வங்கிகளில் விசேட அக்கறை உண்டாகவில்லை. இந்த முதலீடுகளும் மூலதன அமிசங்களும் வங்கி வைப்போடு எவ்வித தொடர்பும் பெறவில்லை. வங்கிக் கடன்களும், முதலீடுகளும் மதிப்பற்றனவாகப் போய்விட்டால், பங்குதாரர் தலையிலேதான் நட்டம் விழும். அவர்கள்தாம் இலாபத்தைக் கருதி இந்த ஆபத்தை மேற்கொண்டவர்கள். வங்கிவைத்திருக்கும் 100 வீதப் பணச் சேமநிதியிலிருந்து, வைப்பாளர் ஒவ்வொருவருக்கும் அவரவர் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாம். அப்பொழுதுகூட வங்கியின் எழுத்துச் செலவு முதலிய செலவுகளை வாடிக்கைக்காரரிடமிருந்து பெற்று விடலாம். பணத்தைப் பாதுகாப்பதற்கான இந்த வாடகைக் கூலி, வைப்பாளர் எவ்வளவு காலம் பணத்தை வங்கியில் வைத்திருந்தார் என்பதையும் வைப்பாளர் வங்கியில் பாதுகாப்பிற்காக எவ்வளவு சராசரிப் பணம் வைத்திருந்தார் என்பதையும் அதைக் கணக்கு வைப்பதற்கு எழுதுவினைஞர் எவ்வளவு தரம் வேலை செய்தார் என்பதையும் பொறுத்தது.

இத்தகையதொரு வங்கியின் தொழிற்பாடுகளிலே பொருளியலாளனுக்கு அக்கறை கிடையாது. வங்கிப் பணம் என்பது இருசாராரின் விருப்பத்தைப் பொறுத்தது. வங்கியானது வைப்புப் பணத்தை ஏற்றுத் தனது வைப்பிலே வைத்துப் பின்னர் அவர் கேட்கும்போது கொடுக்க விருப்பமுள்ளதாயிருக்க வேண்டும்; வைப்பாளர் வங்கியிலே தமது பணத்தைப் போட்டுவைக்க விருப்பமுள்ளவராயிருக்க வேண்டும்.[1] நாணயமாகவும், நோட்டாகவும் வங்கிப்பெட்டியில் சேமித்து வைப்பதன் மூலம், புழக்கத்திலிருந்து வாபஸ் செய்யப்பட்ட பணத்துக்கு வங்கிப் பணம் சமனுயிருக்கும். இந்தவகையான வங்கி நடவடிக்கையில் மக்களுக்கு என்ன அக்கறை? பொதுமக்கள் தமக்குச் சொந்தமாயுள்ள டொலர் நோட்டுக்களிலே சில வற்றை பத்துச்சதக் காசுகளாக மாற்ற நிச்சயித்தால், அவர்களுக்கு என்ன அக்கறை உண்டாகுமோ அத்தகைய அக்கறையேயன்றி வேறெவ்வகை

1. செக்குமூலம் கொடுப்பனவைச் செய்யும் வசதியேற்பட்ட பின்னர் வைப்புப் பணத்தைத் திரவ்ப்பணமாகவே பொருளியலாளர் கருதினர்.

படிப்பகம்

www.padippakam.com



அக்கறையுமில்லை. எனவே வங்கி முறையானது செலவிடுதலிலும், விலை வாசிகளிலும் எவ்வித மாற்றத்தையுமுண்டாக்குவதில்லை என்ற முடிபுக்கு ஒருவர் வரலாம். மொத்தப் பணம் கூடுவதுமில்லை, குறைவதுமில்லை.

**இக்காலப் பின்னச்சேம வங்கித்தொழில் ;** புராதனப் பொற்கொல்லர்—வங்கியாளர் பற்றி மறுபடியும் ஆராய்ந்தால் இக்கால வங்கி எவ்வாறு வளர்ச்சியடைந்ததென்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம். பழங்காலப் பொற்கொல்லன் சற்றே சாமர்த்தியமுள்ளவனுயிருந்தால் ஒருவிடயத்தை உடனே அறிந்திருப்பான். அதாவது அவனிடம் வைப்புக்கு வரும் பொருளெல்லாம் திருப்பிக் கேட்டவுடன் கொடுக்கப்பட வேண்டியிருந்தாலும், அவையெல்லாம் ஒரே நேரத்திலே வாபஸ்பெறக்கூடியனவல்ல என்பதை உணர்வான். காசு போட்டவர்களுடைய வைப்பையெல்லாம் ஒரே நேரத்திலே திருப்பிக் கொடுப்பதாஞல் 100 வீதம் இருப்பு இருக்கவேண்டும் என்பதை அவன் உணர்ந்தாலும், தனது வங்கி நடைமுறை வங்கியாயிருந்தால் அத்துணை இருப்புப் பணம் வைத்திருக்க வேண்டியதில்லை என்பதை உணர்வான். பணம்போட்டவர் எடுக்கும்போது அந்தக் குறைப்பைப் புதிதாகப் போடப் படும் பணம் நிரப்பிக் கொண்டேயிருக்கும். 2 வீதத்துக்குக் குறைவான பெட்டிப் பணம் மாத்திரம் களஞ்சியத்திலிருந்தால் போதுமானது. இதனைப் பெட்டிப் பணம் எனலாம்.[1]

முதலில் இது நிசமாகவிருக்குமா என்று அவன் சந்தேகித்திருக்கலாம். பின்னர் போட்டிக்குத் தொழில் நடத்தும் வேருெரு வங்கியிலே ஒரு கள்ள எழுதுவினைஞன் அந்த வங்கியின் சமப்பணத்தில் 95 வீதத்தைக் களவாடிக் கொண்டு போனதும், அப்பணம் அடுத்த 50 வருடமாக மீட்கப் படவில்லையென்ற செய்தியும் அவனுக்கு ஞாபகம் வந்திருக்கும். எவருமே வங்கியின் பாதுகாப்பு நிலையத்தின் பிற்பகுதிக்குப்போய்ப் பணம் எடுத்துக் கொண்டுவந்து வைப்பாளருக்குக் கொடுத்தது கிடையாது. ஏனெனில் நடப்பு வருமானத்திலிருந்தே எல்லாக் கொடுப்பனவுகளையுங் கொடுக்கக் கூடியதாயிருந்தது. இந்த வருமானங்கள் பாதுகாப்பு நிலையத்தின் முற்பகுதியிலேயே வைக்கப்பட்டிருக்கும்.

புத்தியுள்ள வங்கியாளனென்றல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தின் ஒருபகுதியைக்கொண்டு இலாபம் சம்பாதிக்கக்கூடிய கடன்பத்திரம் முதலியவற்றை ஆரம்பத்திலே சிறிது கவனமாக வாங்கத் தொடங்கு

1. வைப்பாளர்க்குச் செக்குமூலம் அல்லது நோட்டுமூலம் பணத்தைக் கொடுக்கமுடியுமாஞல், பெட்டிக்காசு வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை. கடனுக்கும் முதலீட்டுக்கும் விதிக்கும் வட்டியை நிதானமான முறையிலே சரிக்கட்டிஞல் மற்ற வங்கிகளிடமிருந்து பெறும் செக்குகளும், தன்னிடம் கொடுக்கப்பட்ட வைப்பும், ஒரு வங்கி தன் கொடுப்பனவுக்குச் சமமானவையாயிருக்கக்கூடியவாறு செய்யலாம். தற்காலிகமாக வங்கியானது பெருவாரியாகக் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தால், சிலமணிநேரத்துக்கோ சிலநாட்களுக்கோ மற்ற வங்கிகட்குக் கொடுக்கவேண்டிய பணத்தைச் செக்காக்கிக் கொடுக்கலாம். அதற்கிடையில் அதன் சொத்தில் ஒருபகுதியைப் பணமாக்கவோ, வெளியேறும் பணத்துக்கு ஏற்ற அளவு வருமானத்தைப் பெறும் முறையில் தனது வியாபாரத்தைச் சுருக்கியோ கொள்ளலாம்.

www.padippakam.com



வான். அப்பொழுது எல்லாம் சரியாகவே நடைபெறும்; கேட்டபோது வைப்பாளருக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும். வங்கியும் சற்றே இலாபம் பெற்றுள்ளது. தான் செய்யும் முயற்சிகளை வைப்பாளரிடமிருந்து மறைத்துவைப்பதற்கு அவசியமில்லையென வங்கியாளன் நினைக்கத் துவங்குகிருன். வைப்பாளன் வங்கியாளனுக்கு முறையிடத் துவங்குவாஞனால், வங்கியாளன் பின்வருமாறு கூறுவான்; "உங்கள் பணம் பாதுகாப்பாக இருக்கிறது. நான் செய்யும் முயற்சிகள் உங்களுக்கு உடன்பாடில்லாவிட்டால் நீங்கள் போட்ட பணத்தை எடுத்துக்கொள்ளலாம்; புதியமுறையாகிய பின்னமான ரொக்கச்சேமஇருப்பு வைத்திருப்பதால் நான் உங்களிடம் வாங்கும் சேவைக்கூலி குறைக்கப்பட்டுள்ளது தெரியவில்லையா? மேலும் எனது தொழில்முயற்சியின் பயனுய் உள்ளூர்க் கைத்தொழிலாளர் என்னிடம் கடன் பெற்றுத் தமக்குத் தேவையான ஆயுதங்கள், கட்டடங்கள், மூலப் பொருள்கள் என்பவற்றை வாங்கிப் புதிய கைத்தொழில்களை விருத்தி செய்கிருர்கள். இவ்வாறு நான் உண்டாக்கும் மூலதனம் நுகர்வோருக்குப் பலவகையில் துணைபுரிகிறது. அவர்கள் குறைந்தவிலையிலே பொருள்களை வாங்கக்கூடியவராயிருக்கிருர்கள். அன்றியும் புதிய வேலைவாய்ப்புக்களுமுண்டாகும்"

எனவே தம்மிடம் வைக்கப்பட்ட வைப்புக்களில் பெரும்பகுதியை வங்கிகள் இலாபந்தரக்கூடிய சொத்துக்களில் முதலீடு செய்வதும் மிகச் சிறிய ஒரு பகுதியையே இருப்புப் பணமாக வைத்திருப்பதும் நூதனமன்று. வியாபாரத்தில் உயர்ந்த அளவு நாணயமிருக்குமாஞல், வங்கி முகவர் கடன் கொடுப்பதிலும், முதலீடு செய்வதிலும் நிதானமாயிருப்பார்களாஞல், வைப்புக்களுக்கு ஈடாக 2 வீதக் கையிருப்புக்கு மேல் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

முதலீடுகளிலே வங்கியாளர் ஏதாவது தவறு செய்வாராஞல் என்ன நடக்கும்? முதலீடுகளிலே எப்போதும் ஏதாவது ஆபத்துண்டாவது சகசமே. எனவே கடும்நட்டமுண்டாகாதபடி வங்கியாளர் தமது பணங்களைப் பல வகையான முதலீடுகளிலே போடலாம். எல்லாவற்றையும் ஒரே முதலீட்டிலே போட வேண்டியதில்லை. மேலும் வைதீகப் போக்குடைய வங்கிகள் வசம் ஏராளமான பங்கு மூலதனமிருக்கும். கேட்டவுடன் கொடுக்கும் வைப்புக்களில் 10 வீதத்துக்குச் சமமாக மூலதனப் பங்கு கொடுக்கப்பட்டிருக்கும். அப்போது வங்கியின் சொத்து எல்லாம் இலாபம் ஈட்டும் முதலீடுகளில் இல்லாத பணமாக இராமல், இலாபமீட்டும் முதலீடுகளாகவேயிருந்தாற்கூட, வங்கியின் முதலீட்டின் 10 வீதத்துக்கு மேலாக வைப்பாளர் நட்டமடையமாட்டார். சாதாரணமாக வங்கி உயர்ந்த கடன் பத்திரங்களையும், ஈட்டுப்பத்திரங்களையும், வியாபாரக் கடன்களையும் பெற்றுக் கொள்ளுமாஞல் இந்தப் பாதுகாப்பே போதுமானது.

வங்கி நிர்வாகம் வங்கி வைப்புக்களின் போக்கைக் கவனித்துக் கொண்டே வரவேண்டும். வைப்புக்கள் காலப்போக்கிலே தேய்ந்து கொண்டு போகின்

www.padippakam.com



றனவா என்பதை நிச்சயப்படுத்துவதற்கு இஃது அவசியம். அஃது அப்ப படியாயிருக்குமானுல், வங்கிவைப்பாளர் போட்ட பணத்தைக் கேட்ட நேரங் கொடுக்கும் முறையில், வங்கியின் முதலீடுகள் பணமாகப் படிப்படியாய் மாற்றக்கூடிய முதலீடுகளாயிருக்க வேண்டும்.

வங்கியின் தொழில் விருத்தியாகிக்கொண்டேயிருந்தாலும், புத்தி யுள்ள வங்கி நிருவாகிகள், தற்காலிகமாக வைப்பாளர் ஒரே நேரத்தில் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு முயற்சி செய்யக்கூடிய நிலைமையைச் சமாளிக்கத் தயாராயிருக்க வேண்டும். அத்தகைய நிலைமைகளைச் சமாளிப் பதற்காகக் கையிலே பணத்தை வைத்திருப்பது இலாபகரமானதன்று. ஏனெ னில் கையில் பணமிருப்பதால் எவ்வித இலாபமுமில்லை. எனவே விரைவாகப் பணமாய் மாற்றக்கூடிய கடன்பத்திரங்களிலே இரண்டாந்தரச் சேமப்பண மாக ஒரு தொகையை முடக்கி வைத்திருக்கலாம். குறுகிய தவணை அரசாங்கக் கடன் பத்திரங்கள் இந்த வகையில் உதவும். இத்தகைய கடன்பத்திரங்கள் 90 நாட்களில் அல்லது 12 மாதங்களில் திருப்பிக் காசாக மாற்றப்படும் இயல்புடையன. மேலும் மதிப்பிலே அதிகம் வித்தி யாசமுடையனவல்ல. எனவே 90 நாளைக்குப் பின்னர் புதிய பத்திரங் களை வாங்காமலிருக்கலாம். நீண்ட தவணை அரசாங்கக் கடன் பத்திரங் களையும் சாதாரண காலங்களில் குறித்த ஒரு சந்தை விலைக்கு வேறொரு வருக்கு மாற்றி விடலாம். எனவே, இத்தகைய நெடுந்தவணைப் பத்திரங் கள் கூட நீர்மையுடையன. இவை முதிர்வடைய 30 வருடமெடுக்கலாம். முக்கியமான விடயம், பத்திரம் முதிர்வடைய எவ்வளவு காலம் எடுக்கு மென்பதன்று. வேறொரு முதலீட்டில், அதை எவ்வளவு இலேசாக மாற்றிவிடலாமென்பதே முக்கியம். 90 வருடத்தின் பின் முதிர்வுள்ள பாது காப்பான பரிவர்த்தனைக் கடன்பத்திரமொன்று இலேசாக விற்கக்கூடியதா யிருந்தால், அது 90 நாளில் முதிர்வடையக்கூடியதும், இலேசாக மாற்ற முடியாததுமான பத்திரத்திலும் பார்க்க நீர்மையுடையதெனலாம்.

**சட்டபூர்வமான சேமநிதித் தேவைகள்.**

நல்ல வங்கித்தொழிலுக்குத் தேவையான மேற்படி விதிகள் நன்கு புரியக்கூடியவையும் இலேசானவையுமாகும். கொள்கையளவில் இவற்றை விளக்குவது சுலபம். ஆனுல் நடைமுறையிலே கொண்டுவருவது கடினம். வாழ்விலும் இது பொருந்தும். சொல்வது சுலபம்; செய்து காட்டுவது கடினம்.

வளர்ந்து வரும் ஒரு வங்கியை எந்தவொரு கம்பனியோடும் ஒப்பிடும் போது வங்கி வைத்திருக்கும் சேமப்பணம் மிக அற்பமாயிருக்கக் காணலாம். பணநிலைமை நன்ருக இருக்கும்போது கையிருப்பிலே 100 வீதம் சேமப் பணம் வைத்திருக்கவேண்டிய அவசியமுமில்லை. அவ்வாறே சொற்பச் சேமப்பணம் வைத்திருப்பதிலும் தவறில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் சாதுரியமுள்ள இக்கால வங்கியாளர், தமது வங்கிச் சொத்தின் நியாயமான ஒரு பகுதியை இலாபம் ஈட்டாத பணமாக வைத்திருப்பர். இது சட்டத்தேவையுமாகும். கேட்கும்போது திருப்பிக் கொடுக்கும் வைப்புக்களில் ஆறிலொரு பகுதியோ ஏழிலொரு பகுதியோ இலாபமீட்டாத வங்கிச் சேமநிதியாய் வைத்திருக்கப்படல்வேண்டும். அங்கத்துவ வங்கிகள் இத்தகைய சட்டபூர்வமான கையிருப்புக்களை பிரதேச பெடரல் வங்கியிலே தான் போட்டு வைத்திருப்பது வழக்கம். ஆனால் சமீபகாலமாக வேறொரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டிமாண்ட் வைப்பில் ஒரு சிறு வீதத்துக்கு மேலதிகமாக, பாதுகாப்பு அறையிலே வைக்கப்பட்ட பணத்தைத் தனது சேமப்பணமாக மதிக்குமாறு பெடரல் வங்கி தனது அங்கத்துவ வங்கிக்கு அனுமதி கொடுத்துள்ளது (இவ்வாறு 1960 ஒக்டோபரில் பிரதேச வங்கியொன்று தனது டிமாண்ட் வைப்பின் $2\frac{1}{2}$ வீதத்துக்கு மேலதிகமாயுள்ள நிலவறைக்காசைக் கையிருப்புப் பணமாகக் கொள்ளலாம். ஆனால் நகரத்து வங்கியொன்று வைப்பின் 1 வீதத்துக்கு மேலான அத்தகைய பணத்தையே சேமக் கையிருப்பாகக்கொள்ள முடிந்தது. நவம்பருக்குப் பின்னர், நிலவறைப் பணம் எல்லாவற்றையும் சேம இருப்பாகக் கொள்ளுமாறு வங்கிச்சபை அனுமதிகொடுத்தது. மேல்வரும் அட்டவணைகளிலே நிலவறைப் பணத்தைப் பெரும்பாலும் சேமநிதி என்ற அடைப்பிலேதான் காட்டுவோம்).

அட்டவணை 3 இலே தேவையான சேம விகிதம் காட்டப்பட்டுள்ளது. வங்கியைப் பொறுத்து, அவை பருமட்டாக டிமாண்ட் வைப்பில் ஆறில் ஒரு பகுதியாகவேயிருக்கும். 1/5 ஆகுமானால், கணக்குப்போடுவது இலேசாகும். எனவே பெரும்பாலும் 20 வீதச் சேமவிகிதத்தையே நாம் குறிப்பிடுவோம்.

**வங்கியின் இருப்பிடத்திற்கேற்றவாறு ரிசர்வ் பணத்தேவைகள் மாற்றமடைகின்றன.**

| தேவையான சேமநிதி விகிதம் | | |
|---|---|---|
| வங்கியின் தன்மை | கேட்டவுடன் கொடுக்கும் வைப்பு | பருவவைப்பு |
| மத்திய ரிசர்வ் நகர வங்கி (நியூயோர்க், சிக்காகோ) .. | $16\frac{1}{2}$ .. | 5 |
| ரிசர்வ் நகரவங்கி (பெரியதும் மத்தியமானதும்) .. .. | $16\frac{1}{2}$ .. | 5 |
| வேறு உறுப்பு வங்கிகள் .. .. .. | 12 .. | 5 |

அட்டவணை 3. பெடரல் ரிசர்வ் அங்கத்துவ வங்கிகட்கு சட்டபூர்வமான சேமநிதி விகிதம் ஜனவரி 1961. மத்திய ரிசர்வ் வங்கிக்கும், ரிசர்வ் நகரவங்கிக்குமுள்ள வித்தியாசம் இப்போது இல்லாமற் போய்விட்டது. இருவகை வங்கிகட்கும் ஒரேவகையான விகிதம் விதிக்கப்பட்டுள்ளது. கிராம வங்கிகட்கு 7 துவக்கம் 14 வீதமும், ஏனைய வங்கிகட்கு 10 துவக்கம் 22 வீதமும் சேமநிதி வைக்க காங்கிரஸ், வங்கிச் சபைக்கு உரிமை வழங்கியுள்ளது).

www.padippakam.com



பெடரல் ரிசர்வ் வங்கியில் அங்கத்துவம் வகிக்கும் வங்கிகளின் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவே சட்டபூர்வமாகச் சேமப்பணவிகிதம் விதிக்கப்பட்டுள்ளது. முக்கியமில்லாதனவும் பெடரல் ரிசர்வ் வங்கியமைப்பில் அங்கத்துவம் வகிக்காதனவுமான வங்கிகள், இவ்வாறு பெருந்தொகையான சேம நிதியைக் கைவசம் வைத்திருக்கமாட்டா. எல்லா வங்கிகட்கும் சேமிப்புப் பணம் பற்றி ஒரேவிதமான சட்டமிருக்கவேண்டுமெனப் பலபொருளியலாளர் கருதுகின்றனர். அங்கத்துவம் வகிக்காத வங்கிகள் மொத்தவைப்பினுல் முக்கியத்துவம் பெற்ருல், சட்டபூர்வமான சேமநிதி ஒழுங்குக்கு அவை உட்படுத்தப்படல் வேண்டும்.

அட்டவணை 3 எல்லா பெடரல் ரிசர்வ் வங்கிகளும் வைத்திருக்கவேண்டிய சேமநிதி விகிதத்தைக் காட்டுகிறது. இந்தச் சட்டபூர்வமான விகிதத்தை விளக்கவேண்டியதவசியம். வங்கிப் பணத்தை பெடரல் ரிசர்வ் சபை பரிபாலிக்கும் அமைப்பிலே இது மிக முக்கியமானதொன்ருகும்.

**புவியியல் ரீதியான பழைமை நிபந்தனைகள்**

ஒரு நகரத்தின் பருமனைப் பொறுத்து அங்குள்ள வங்கியின் சேமப் பணவிகிதம் என் பாதிக்கப்படவேண்டும்? பெடரல் ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப் படுமுன்னர் சிறிய நகர வங்கிகளின் சேமப்பணத்தை நகர வங்கிகளே கையேற்று வைத்திருந்தன. நெருக்கடியேற்பட்ட காலங்களிலே சிறிய வங்கிகள் நகரத்து வங்கிகளிலிருந்து பணத்தை வாபஸ் செய்தன. எனவே பெரிய நகரங்களான நியூயோர்க், சிக்காகோ ஆகியவற்றிலமைந்த வங்கிகள் அதிக விகிதமான சேமநிதியை வைத்திருக்கவேண்டியது அவசியமாயிற்று.

அந்தக் காலம் மலையேறிவிட்டது. இன்று பெரடல் ரிசர்வ் வங்கியே அதிகமான சேமப்பணத்தை அங்கத்துவ வங்கிகளின் பேரில் வைத்திருக்கிறது. நியூயோர்க், சிக்காகோ நகரங்களிலுள்ள வங்கிகளிலே அதிகப்படியான சேமப்பணம் இருக்கவேண்டுமென்ற நியதி அகற்றப்பட்டுவிட்டது. எல்லா அங்கத்துவ வங்கிகளும் ஒரேவிகிதமான சேமப்பணத்தையே வைத்திருக்க வேண்டுமென்ற ஒழுங்கு நாளடைவில் உண்டாகலாம். ஆனுல் அஃது எதிர்காலத்தில் விரைவில் ஏற்படுமெனக் கூறமுடியாது.

**சட்டபூர்வமான சேமப் பணவிகிதம் அதிகமா?**

வைப்புக்கு ஈடாக வைத்திருக்கும் சேமப்பணத்தில் ஒரு பகுதியைக் கடன் பத்திரம் வாங்கவும் கடன் கொடுக்கவும் பயன்படுத்திஞல் அதிக இலாபம் பெறலாமேயெனப் பல வங்கியாளர் ஆவலோடு கருதுகிருர்கள். அவர்கள் கூறும் நியாயம் பின்வருமாறு :—

சட்டபூர்வமான சேமப்பணமாக வைத்திருக்குமாறு விதிக்கப்படும் பணம் ஒரு செம்புச்சல்லியைக் கூட இலாபமாகக் கொடுப்பதில்லை. அப்போது அவ்வளவு பெருந்தொகைப் பணத்தை எதற்காகச் சட்டபூர்வமான சேமப் பணமாய் வைத்திருக்கவேண்டும்? நமது பாதுகாப்புக்கு 1/6 வீதம் தேவையில்லை. பணத்தை வாபஸ் செய்வோர் அவ்வளவு வாபஸ் செய்வ

www.padippakam.com



தில்லே. புள்ளிவிபரங்களிலிருந்து இது தெரிகிறது. நிலவறையிலே தேவைக்கான குறைந்தபட்ச பணம் உண்டு. அப்படியில்லாவிட்டாலும், எமக்கு அதிக சேமநிதி தேவைப்பட்டால், சில அரசாங்கக் கடன்பத்திரங்களே உடனடியாக விற்ருே, பெடரல் ரிசர்வ் வங்கியைக் கேட்டோ அதைப் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் வேருெரு வங்கியிலிருந்து தற்காலிகமாக அத்தொகையைக் கடனுகப் பெறலாம். சட்டபூர்வமான சேமநிதியாக ஐந்து அல்லது பத்து வீதமிருந்தாலே போதும். வைப்புக்கள் கூட காப்புறுதி பண்ணப்பட்டுள்ளபடியால் இது போதுமானதே.

இவ்வாறு கூறும் வங்கியாளரின் பேச்சு ஓரளவில் சரியானதே. பல வருடங்களுக்கு முன்னர் மூன்று வகையான வங்கிகளுக்கும் சட்டபூர்வமான சேமநிதிவிகிதம் 13, 10, 7 வீதமாயிருந்தது. இது டிமாண்ட் வைப்புக்கே உரியது. பருவ வைப்புக்கு 3 வீதமாயிருந்தது. 1930 ஆம் தசாப்தத்தின் நடுப் பகுதியில் இந்த விகிதங்களே இரட்டிக்குமாறு காங்கிரஸ் வங்கிச்சபைக்கு அனுமதி வழங்கியது. வங்கிச்சபை உசிதப்படி இந்த உரிமையைப் பயன்படுத்தப் படிப்படியாக முயன்றுவந்தது.

சட்டபூர்வமான சேமப்பணத்தை வங்கிச் சபை ஏன் உயர்த்திற்று? மேலும் அதை உயர்த்துவதற்குக் காங்கிரசின் அனுமதியை ஏன் கேட்டது? பணம் போட்டவர்கள் தேவையானபோது அப்பணத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்வதற்கு வசதிபண்ணவே, சட்டபூர்வமாக இவ்வாறு சேமப்பணத் தொகையை உயர்த்தினர்களா?

இல்லே, நிச்சயமாக இல்லே. வைப்புக்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், அவற்றை நீர்மையுடையனவாக்குவதும், கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கக்கூடியதாக்குவதும் சட்டபூர்வமான சேமநிதியின் பிரதான நோக்கமன்று. பின்னர் நோக்கமென்ன? அங்கத்துவ வங்கிகள் உண்டாக்கக்கூடிய வங்கிப்பணமான டிமாண்ட் வைப்பின் தொகையை, பெடரல் ரிசர்வ் அதிகாரிகள் கட்டுப்படுத்த உதவுவதே, அந்தச் சேமநிதிகளின் முக்கிய கடமையாகும். குறிப்பிட்ட சேமநிதித்தொகையை விதிப்பதன்மூலம், வங்கி வைப்பின் வளர்ச்சியை பெடரல் வங்கி கட்டுப்படுத்த முடியும். இஃது எவ்வாறு தொழிற்படுகிறதென்பதை இந்த அத்தியாயத்தின் இரண்டாம் பகுதியிலும் அடுத்த அத்தியாயத்திலும் ஆராய்வோம்.

**வங்கிகளுக்கு அரசாங்கம் துணே புரிகிறது.**

பெரிய வியாபாரமந்தத்துக்கு முன்னர் இருந்ததிலும் பார்க்க வங்கிகள் இன்று பாதுகாப்புடையனவாகக் காணப்படுகின்றன. சட்டபூர்வமான சேமநிதி காரணமாக இந்த நிலே ஏற்படாவிட்டால், வேறு எக்காரணத்தால் இஃது உண்டானது?

மறுபடியும் ஒரு வியாபார மந்தமுண்டாகி வங்கிகள் திகிலடைந்து தமது பணங்களேயெல்லாம் காலி செய்யும் நிலேயுண்டானுல், அதற்குப் பாதுகாப்பாக அரசாங்கம் துணே செய்யுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

www.padippakam.com



பின்ன வீதத்தில் சேமநிதியுள்ள வங்கிகள், அதாவது வைப்புப் பணத்துக்குச் சமமான பணத்தைச் சேமநிதியாக வைத்திருக்காத வங்கிகள் ஒரு கணநேர அறிவித்தலின் பேரில் தமது வைப்புக்களையெல்லாம் காசாக மாற்ற முடியாதிருக்கும். எனவே பின்னவீதச் சேமநிதியுள்ள வங்கிகள் அரசாங்க உதவியின்றி இயங்கமாட்டா. மறுபடியும் ஒரு வங்கி முறிவு ஏற்படக்கூடிய திகில் மக்களிடத்து உண்டாகுமானால் காங்கிரசும், சனாதிபதியும், திறைசேரிக் காரியதரிசியும், பெடரல் ரிசர்வ் வங்கிச் சபைத் தலைவரும் தகுந்த நடவடிக்கையெடுப்பர். "திகிலடைந்த மக்கள் தாம் போட்ட பணத்தையெல்லாம் வங்கியிலிருந்து எடுத்து விட முற்படுவாரானால் நமது அரசியற் சட்ட உரிமையைப் பயன்படுத்தி நெருக்கடியை நிவிர்த்தி செய்வதற்குப் போதுமான அளவு நோட்டை அச்சடித்து விடுவோம்" என்று சொல்வர்.

1930 ஆம் ஆண்டிலாரம்பத்தில் இவ்வாறு சொல்லியிருந்தால், சரித்திரம் வேறுவிதமாயிருந்திருக்கும். நாட்டிலே பரபரப்பையும், பயத்தையும், முதலாளித்துவமுறைக்கு ஒரு நெருக்கடியையுமுண்டாக்கிய வங்கி முறிவுகள்[1] ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

அமெரிக்காவிலேயுள்ள இரண்டு அரசியற் கட்சியையுஞ் சேர்ந்த மக்கள், வங்கிகளுக்கு அரசாங்கம் துணைசெய்யுமானால், வங்கி பற்றி எவ்வித திகிலுமுண்டாகாதென்பதை உணர்ந்துள்ளனர். சங்கடம் வந்தால் தைரியமாக நடவடிக்கை எடுப்போம் என்று தயாராயிருப்பதால் சங்கடம் ஏற்படாதிருக்கும் என்ற உண்மையை எடுத்துக் காட்ட இது நல்ல உதாரணமாகும்.

**ஒவ்வொரு வங்கியையும் பாதுகாக்கும் முறை.**

நாடு முழுவதையும் பாதிக்கும் விதமாக வங்கிகளிலுள்ள பணம் காலியாகக் கூடிய ஆபத்து வராமல் அரசாங்கம் தடைசெய்யுமென்ற காரணத்தால், வங்கியாளர் தமது வங்கியின் பாதுகாப்பைப் பற்றி அக்கறை கொள்ளாமலிருக்க முடியாது. தனிப்பட்ட வங்கிகளின் வைப்புக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சமீப காலங்களில் பல முக்கியமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நடப்பது நடக்கட்டுமென்ற மனோபாவனையோடு தொழில் புரியும் வங்கிகளின் திரமற்ற நிலைமையை மாற்ற அரசாங்கம் படிப்படியாக எடுத்துவந்த நடைமுறைகள் பின்வருமாறு :—

**1. வங்கி அமைத்தல், தொழில் நடத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்தல்.** மாகாண அதிகாரிகளும், பெடரல் அதிகாரிகளும் பல தசாப்தங்களாக வங்கிகளை அமைக்கும் விடயம்பற்றி நிபந்தனைகளை ஏற்படுத்தியுள்ளனர். அதாவது ஒரு வங்கிக்கிருக்கவேண்டிய குறைந்தபட்ச மூலதனம் முதலியன பற்றியவை அவை. வங்கிப் பரீட்சகர் காலத்துக்குக்காலம் வங்கிச்

1. 1930–33 இலே 8,000 வங்கிகளில் 5 பில்லியன் டொலருக்கு முறிவுண்டானது. எல்லா வங்கிகளையும் முறியாமல் வைத்திருப்பதற்காக பிராங்ளின் ரூஸ்வெல்ட் "வங்கி விடுதலை"ப் பிரகடனஞ் செய்தார். பொதுசன நம்பிக்கை மறுபடியும் உண்டாகும்வரை விடுதலை நிலைக்கச் செய்தார்.

www.padippakam.com



சொத்துக்களை ஆராய்ந்து, வங்கியின் பெறுமானம் முதலியவற்றை உறுதிப்படுத்துவர். நோயைத் தீர்ப்பதிலும் பார்க்க, அதை வராமல் தடை செய்வதே நல்லதென அவர்கள் எண்ணுவர்.

**2. பெடரல் ரிசர்வ் முறையை அமைத்தல்.**—கெடுபிடியேற்பட்ட காலங்களிலே, வங்கிகள் முறிவடையாதவாறு அரசாங்கத்தின் பணச் சக்திகள் அனைத்தையும் பயன்படுத்த ஆயத்தமாய் நிற்கும் அவசரகாலக் கடமையுள்ள மத்திய வங்கியொன்றை அமைப்பதே அடுத்தபடியாகும். இத்தகைய வங்கியின் மிக முக்கியமான கருமங்களிலொன்று பணச் சப்ளையைப் பரிபாலிப்பதும் கடன்வசதிகளை ஏற்படுத்துவதுமாகும்.

**3. வங்கி வைப்புக்களை, அரசாங்கத்தில் காப்புறுதி செய்வது.** அரசாங்க வங்கிச் சீர்திருத்தங்களிலே, முக்கியமானதொன்று சமீப காலத்தது. 1933 இல் உண்டான வங்கி நெருக்கடியின் பின்னர் எல்லா வங்கிவைப்புக்களையும் பாதுகாப்பதற்காக F. D. I. C. நிறுவப்பட்டது.[1] பெடரல் ரிசேர்வ் முறையைச் சேர்ந்த வங்கிகளெல்லாம் இதிலே சேரவேண்டியது கடமை. மாகாண வங்கிளிற் பல, இதில் அங்கம் வகித்தன. இந்த வங்கியின் வாடிக்கைக்காரருக்குப் பூரணபாதுகாப்பு 10,000 டொலர் வரைக்கும் கொடுக்கப்படும். இது வங்கி முறிந்தாலும் கொடுக்கப்படும். வங்கிகள் இதற்காக வைப்புத் தொகையை அனுசரித்து ஒரு தொகைப்பணம் கொடுக்கும்.

இந்த ஒழுங்கு மிகப் பயனுடையது. இனிமேல் வங்கிகளை மூடுவதானால் வங்கிப் பரீட்சகரின் யோசனைப்படியோ அரசாங்கத்தின் யோசனைப்படியோ தான் மூடலாம். வைப்பாளரின் கெடுபிடிக்கிணங்க வங்கிகள் மூடப்பட மாட்டா. வங்கிகள் தமது கீர்த்தி குறைந்துவிடுமென்று பயப்படவேண்டிய ஆபத்து இனிமேலிருக்காது.

**(ஆ) வங்கி வைப்புக்களை உண்டாக்குதல்.**

**வங்கிகள் பணத்தை உண்டாக்க முடியுமா ?** "வங்கிவைப்புக்கள் பன்மடங்காக விரிதல்" என்ற முறைசார்ந்த கடன் பண அமிசம் மிக ருசிகரமானது. அதை இனி ஆராய்வாம். காற்றிலிருந்து பணத்தை உண்டாக்கும் தந்திரம், வங்கிகளுக்கு உண்டெனப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் இஃது எவ்வாறுண்டாகிறதென்பதைச் சிலரே அறிவர்.

வங்கிவைப்புக்களை உண்டாக்குவதில் எவ்வித மந்திரமோ, தந்திரமோ. இடையாது. வங்கிக்கணக்குகளுக்கு என்ன நடக்கிறதென்பதைப் படிப்படியாக விளங்கிக் கொள்ளலாம். வைப்பு உண்டாக்கலே மிக இலேசாக

[1]. 1961 இல் F. D. I. C. வங்கிகளிலே 1000 இலட்சம் வைப்பாளர் இருந்தனர். வைப்பாளரில் 97 வீதம் 10,000 டொலர் எல்லையிலுள்ளவர். இவர்களில் 98 வீதத்தினர் முற்றாய்க் காப்புறுதி செய்திருந்தனர்.

www.padippakam.com



விளக்கிவிடலாம். அதைப் பற்றி உலாவிவரும் தவருன விளக்கங்களே விளங்குவதற்குக் கடினமானவை.

தவருன இந்த விளக்கங்களின்படி, வைப்புச் செய்யப்படும் ஒவ்வொரு டொலருக்கும், சாதாரண வங்கி மனேஜர்மார் பல டொலரைக் கடனுகக் கொடுக்கிருர்கள்; அதுவும், பவுண்டன்பேனுவினுல் இந்தக் கருமத்தைச் செய்துவிடுகிருர்கள். காரியக் கெட்டிகளான வங்கியாளர் இந்தக் கதையைக் கேட்டு அதிர்ச்சியடைவர். தாமும் அவ்வாறு செய்தாலோ என விரும்புவர். தன்னிடம் இல்லாத பணத்தை ஒருவன் முதலீடு செய்ய முடியாதென்பதை எல்லா வங்கியாளரும் அறிவர். கடன் பத்திரத்தை வாங்குவதிலோ, கடன் கொடுப்பதிலோ முதலீடு செய்யும் பணம் வங்கியை விட்டு விரைவில் வெளியேறிவிடுகிறது.

எனவே, வங்கியாளர் மற்ற அந்தலைக்குச் செல்கின்றனர். வங்கி அமைப்பினுல் பணத்தை உண்டாக்க முடியாதென அவர் சில சமயம் வாதாடுவர். "எங்களிடமுள்ளதைத் தானே நாம் முதலீடு செய்யலாம்; நாம் ஒன்றையும் புதிதாக உண்டாக்குவதில்லை. சமூகத்தின் சேமிப்புப் பணத்தை நாம் தொழிற்படுத்துகிறேம்" என்பது அவர்களுடைய வாதம். இவ்வாறு கூறும் வங்கியாளரின் வாதம் தவறுடையது. இது சேர்க்கைப் போலியின் பாற்படும். ஒரு சிலவற்றைப் பொறுத்தவிடயத்தில் உண்மையானவை; எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்குமிடத்து உண்மையாகச் சிறிய வங்கிகள் தனித்தனி செய்ய முடியாததை வங்கியமைப்புத் தானுகச் செய்துவிடும். ஆரம்பத்திலே அதனிடம் போடப்பட்ட பணத்துக்குப் பன்மடங்கு அதிகமாகக் கடன்களையும் முதலீடுகளையும் பெருக்கலாம். ஆனுல் சிறிய வங்கிகள் தம்மிடம் போடப்பட்ட பணத்தின் ஒருசிறுபகுதியையே கடன் கொடுக்கக் கூடியனவாயிருக்கும்.

வங்கியமைப்பும், பொதுமக்களும் தம்முள் வங்கிவைப்பிலே ஒரு டொலர் வைப்புக்கு 5 டொலரை உண்டாக்க முடியும். அஃதெவ்வாறென்பதை இனி ஆராய்வாம்.

**வைப்புக்கள் எவ்வாறு உண்டாக்கப்படுகின்றன: வங்கி முதற் கட்டம்.** 1,000 டொலரை ஒருவர் வங்கியிலே போடுவதற்குக் கொண்டு வருகிருர்.[1] புராதனகாலத்திலே பொற்கொல்லர் செய்ததுபோல போட்ட காசுக்குச் சமனுன காசை வைத்துக்கொண்டு முதலீடு செய்வதாலுல், 1,000 டொலர் வைப்பில் எவ்வித உபரிப்பணத்தையும் உண்டாக்க முடியாது. வைப்பாளர் 1,000 டொலர் நோட்டைக் கொடுத்து வைப்பு உண்டாக்கலாம்.

1. இந்தப் பணத்தை வைப்பாளர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்தார். அல்லது புதைத்துவைத்திருந்ததை எடுத்துக்கொண்டு வந்தார். அல்லது ஒரு கடன் பத்திரத்தை பெடரல் றிசர்வ் வங்கிக்கு விற்றுப் பணத்தைக் கொண்டுவந்தார் என்று கொள்வதே சுலபம்.

www.padippakam.com



**முதலாவதாக : வங்கியின் அசல் ஐந்தொகையில் புதிய வைப்பு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.**

| சொத்துக்கள் | டொலர் | பொறுப்புக்கள் | டொலர் |
|---|---|---|---|
| ரிசர்வ் .. .. | +1,000 | வைப்பு .. | +1,000 |
| மொத்தம் .. | +1,000 | மொத்தம் .. | +1,000 |

அட்டவணை 4a. அசல் வங்கியின் ஆரம்ப நிலை.

வங்கியின் ஐந்தொகையிலே, டிமாண்ட் வைப்பைப் பொறுத்தவரையில் ஏற்படும் மாற்றம் அட்டவணை 4a யில் காட்டியபடியேயாகும்.[1] வங்கியானது இந்த வைப்பை மாத்திரம் உண்டாக்கவில்லை. வாடிக்கைக்காரர் வைப்பைப் போட்டுவைக்க விரும்பவேண்டும். வாடிக்கையாளர் தமது பணத்தை வங்கியிலே போட ஆயத்தமானால் வங்கி அவருடைய செக் புத்தகக் கணக்கை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கும். வங்கியும், பொது மக்களுமாகச் சேர்ந்து 1,000 டொலர் வங்கிப் பணத்தை உண்டாக்கினர். இதுவே வைப்பு. ஆனால் அங்கே பன்மடங்கு விருத்தி அதாவது 1 இற்கு 5 போன்ற அதிகரிப்புக்கிடையாது. வங்கிகள் 100 வீதம் சேமநிதியை வைத்திருந்தால், வங்கிப் பணம் அதிகரிப்பது புழக்கத்திலுள்ள நாணயம் குறைவதனால் சமனாக்கப்படுகிறது.

100 வீதச் சேமநிதியை வங்கிகள் வைத்திருக்க வேண்டியதில்லையெனக் கொள்வோம். சட்டப்படி 20 வீதம் சேமநிதி வைக்கவேண்டியிருக்கிற தெனவும் கொள்வோம். (வங்கி விரும்பினால் அதிகமான சேமநிதியை வைக்கலாம். ஆனால் பாதுகாப்புள்ளதும், சிறந்த வட்டி கொடுக்கக்கூடிய அரசாங்கக் கடன்பத்திரங்களோ, வேறு கடன் கொடுக்கும் இலாபகரமான வசதிகளோ இருக்குமானால், வங்கிச் சட்டம் விதிப்பதற்கு அதிகமான சேமநிதியை வங்கியில் வைத்துக்கொண்டிருப்பது இலாபகரமானதன்று).

அப்போது வங்கி என்ன செய்ய வேண்டும் ? அது தனது கடன்களை யும், முதலீடுகளையும் 4,000 டொலரினால் அதிகரிக்கலாமா ? அதனால் அட்டவணை 4b யில் காட்டியுள்ள மாதிரி அதன் ஐந்தொகை மாறுமா ? மாறாது. மொத்தச் சொத்துக்கள், மொத்தப் பொறுப்புக்களுக்குச் சமனா கின்றன. மொத்த வைப்பில் 20 வீதம் பணச்சேமநிதியிருக்கவேண்டு மென்னும் சட்டத்தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

1. இலேசாயிருப்பதற்காக நமது அட்டவணைகளிலெல்லாம் ஐந்தொகையில் உள்ள மாற்றம் மாத்திரமே காட்டப்படும். கணிதத்தை இலேசாக்குவதற்காக ரிசேர்வ் விகிதத்தை ஆக்கியுள்ளோம். இது 3 ஆம் அட்டவணையில் காணப்படும் சட்டபூர்வமான விகிதத்திலும் சிறிது கூடுதலே. 5 க்கு 1விரிவு எங்காவது காட்டப்பட்டால் கவனமான வாசகர் 1 க்கு 6 அல்லது 7 வீத விரிவைக் கருத்திலே கொள்ளலாம். முக்கிய குறிப்பு : கடன், முதலீடு என்ப வற்றை வங்கியாளர் " முதலீடுகள் " என்று குறிப்பிடும்போது தம்மிடமுள்ள கடன்பத்தி ரங்களையே குறிப்பிடுவர். (C+1+G) என்ற வாய்ப்பட்டியிலேயுள்ளதும் சமூகத்துக்குரிய மூலதன அமைப்புமான முதலீட்டை அவர்கள் குறிப்பதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



உண்மைதான். ஆனால் வங்கி இலாபம் பெறக் கருதி முதலீடு செய்வதற்குப் பணத்தை எவ்வாறு பெற்றது? கடன் பத்திரத்தை வாங்க அஃது ஒரு செக்கை எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். அல்லது வாக்குறுதிப் பத்திரம் கொடுத்தவருக்கும் அவ்வாறே செக் மூலம் பணத்தைக் கொடுத்திருக்கவேண்டும். அந்தச் செக்கைப் பணமாக மாற்றுவதில்லையென அவர் வாக்குறுதியளிப்பாரானால், வங்கியானது தான் விரும்பியதெல்லாவற்றையும் பணத்தைக் கொடாமலே வாங்கிக் கொள்ளலாம்.

**இரண்டாவது: அப்படியானால் வைப்பைக் காட்டிலும் நாலு பங்கு அதிகமான பணத்தை வங்கி கடனாகக் கொடுக்க முடியாது.**

| சொத்துக்கள் | டொலர் | பொறுப்புக்கள் | டொலர் |
|---|---|---|---|
| சேமநிதி .. .. | +1,000 | வைப்பு .. | +5000 |
| கடனும் முதலீடும் .. | +4,000 | | |
| மொத்தம் .. | +5,000 | மொத்தம் .. | +5,000 |

அட்டவணை 4b. தனிச் சிறிய வங்கிக்குச் சாத்தியப்படாத நிலை.

6 வீத வட்டியில் கடன்பட்டுப் பணத்தை எவரும் வங்கியில் போட்டு வைக்கவிரும்பமாட்டார். கடன்பட்டவர் பணத்தைத் தொழிலாளருக்குக் கூலி கொடுக்கவும், தளவாடம், மூலப்பொருள் என்பன வாங்கவும் பயன் படுத்துவர்; அல்லது வாகனம் வாங்கப் பயன்படுத்துவர். எனவே கடன் பட்ட பணத்தை வங்கி விரைவில் பணமாகக் கொடுத்தே தீரவேண்டும். அந்த வங்கி, நகரிலோ, மாவட்டத்திலோ, மாகாணத்திலோ, நாட்டிலோ உள்ள பல வங்கிகளிலே ஒன்றாக இருந்தால், அதிலிருந்து மீளப் பெறப்பட்ட பணத்தில் ஒருபகுதிதான் அதற்கு மறுபடி வேறொரு வாடிக்கைக்காரரின் வைப்பாக வந்து சேரும்.

தனது முதலீடுகளை விரிவாக்கிக் கொள்ளும் ஒரு வங்கியின் பண இழப்பு எப்போது தெளிவாகத் தெரியவருமென்றால், உள்ளூரில் கடன் கொடுப்பதைவிட கடன் பத்திரத்தை வாங்கும் பொழுதெனலாம். எனது பொஸ்டன் வங்கி அரசாங்கக் கடன் பத்திரத்தை வாங்கும்போது, அந்தப் பத்திரத்தை விற்பவனுக்கு அந்த வங்கியிலே பற்றுவரவு இருக்கிறதென்பது எவ்வளவு தூரம் சாத்தியம். அத்தகைய சாத்தியக் கூறு மிகக் குறைவு. ஒரு வேளை அவன் நியூயோர்க் நகரைச் சேர்ந்தவனாயிருக்கலாம்; அல்லது அமேஸ், அயோவா ஆகிய தேசங்களைச் சேர்ந்தவனாயிருக்கலாம். எனவே கடன் பத்திரம் வாங்கிய காசு முழுவதையும் வெளியே கொடுத்துத் தீர்க்கவேண்டுமென்பதை வங்கி அறிந்திருக்கும்.

வங்கி தனது பணத்தைச் செலவுஞ் செய்ய வேண்டும்; செலவு செய்யாமலுமிருக்க வேண்டுமென்ற நிலைமையுண்டாகக் கூடாது. நியூ இங்கிலாந்து வங்கி கடன்பத்திரம் வாங்கவும் வேண்டும்; அதற்குரிய செலவைச்

www.padippakam.com



கொடாமல் வைத்திருக்கவும் வேண்டுமென்ற நிலை ஏற்பட முடியாது. தனிப்பட்ட ஒரு வங்கி செய்யக்கூடியதொரு தவறான கருத்தை அட்டவணை 4b கொடுக்கிறது.

அப்படியானால் அட்டவணை 4a கதையின் முடிவைக் கூறுகிறதா? வங்கியானது 100இற்கு 100 சேமநிதி வைத்திருக்கும் பொற்கொல்லர் வங்கி போலிருக்க வேண்டுமா? இல்லவே இல்லை. பணச் சேமநிதிக்கு 5 மடங்கு அதிகமாக வைப்பை உயர்த்துவது வங்கிக்கு இயலாத கருமம். ஆனால் வைப்பின் ஐந்திலொரு பகுதியாகப் பணச் சேமநிதியைக் குறைத்து விட அதனால் முடியும். இது மிக இலேசாகச் செய்யக்கூடிய கருமம். கடன் பத்திரம், வட்டிக்குக் கடன் கொடுத்தல், ஈட்டுக்குக் கொடுத்தல் போன்ற வற்றில் 800 டொலரை அது முதலீடு செய்யலாம். இரண்டொரு நாளில் இதற்குரிய பணம் வங்கியிலிருந்து காசாகக் கொடுக்கப்பட்டுவிடும். எனெனில் இரண்டொரு நாளில் இதற்குரிய செக்குகள் வங்கிக்கு மாற்றுவதற்காக வந்துவிடும். அதற்குரிய ஐந்தொகை அட்டவணை 4c இலே காட்டப் பட்டுள்ளது.[1]

முதல் வங்கியைப் பொறுத்தவரையில், எல்லாம் சரியாய்ப் போய் விடுகிறது. வைப்புக்கு ஈடான சட்டபூர்வமான சேமநிதியிருக்கிறது. மேலும் வைப்பை உண்டாக்கப் பொதுசனம் விரும்பினாலன்றி வங்கிஇதற்கு மேலொன் றையுஞ் செய்ய முடியாது.

**மூன்றாவது: அது செய்யக்கூடியது வைப்பில் $\frac{4}{5}$ பங்கைக் கடன் கொடுப்பதாகும்.**

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| சேமநிதி | .. + 200 டொலர் | வைப்பு | .. +1,000 டொலர் |
| கடன், முதலீடு | .. + 800 டொலர் | | |
| மொத்தம் | .. +1,000 டொலர் | மொத்தம் | .. +1,000 டொலர் |

அட்டவணை 4c. அசல் வங்கியின் நிதி நிலைமை

தனிப்பட்ட சிறிய வங்கியைப் பற்றி மற்றொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். அது பணத்தை உற்பத்தி செய்துள்ளது. எப்படி? வைப்புக் களில் 200 டொலரையே பணக் கையிருப்பாக வைத்துக்கொள்ளுகிறது. பொதுசனத்தின் மொத்தப் பணத்துடன் 1,000 டொலரை வங்கிப்பணமாக அஃது அதிகரித்துள்ளது.

1. வாடிக்கைக்காரருக்கு வங்கி 800 டொலர் கடன் கொடுத்து அதை அவர்கள் வைப்பிலே வைத்திருந்தால், கொஞ்சக்காலத்துக்கு வங்கியில் 1800 டொலர் வைப்பு இருக்கும். ஆனால் கடன் பட்டவர் பணத்தைச் செலவு செய்வார்; பணத்தைப்பெற்றோர் உள்ளூர் வாடிக்கைக்காரரானால் பணத்தை அசல் வங்கியிலே வைப்பாகப் போடுவர். இல்லாவிட்டால் அப்பணம் அட்டவணை 4 C இலுள்ளபடியே காணப்படும்.

www.padippakam.com



**நாலாவது : அசல் வங்கியிலிருந்து கடன்பட்ட பணம் வேறு வங்கிகளிலே வைப்பாக வைக்கப்படும்**

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | .. +800 டொலர் | வைப்பு | .. +800 டொலர் |
| மொத்தம் | .. +800 டொலர் | மொத்தம் | .. +800 டொலர் |

அட்டவணை 4d. இரண்டாம் தலைமுறை வங்கிகளின் ஆரம்பநிலை.

இவ்வாறு அதனுடைய முயற்சியினால் பணச்சப்பிளையில் தேறிய அதிகரிப்பு 800 டொலர் உண்டாயிருக்கிறது.

**மற்ற வங்கிகளிலே உண்டாகும் மாற்றங்கள்**

ஆனால் வங்கிகளெல்லாம் அமைதியாகத் தமது கருமத்தைச் செய்து கொள்ளத் துவங்குவதற்கு இன்னும் அவகாசம் ஏற்படவில்லையெனலாம். கடன்பத்திரங்களை விற்றவர்களும், வங்கியிலிருந்து பணத்தைக் கடன் பட்டவர்களும் தமது கைவசமுள்ள பணத்தை வேறு வங்கிகளிலே போடுவர் ; அல்லது வேறெவர் கையிலோ அப்பணத்தைக் கொடுப்பர். அவர்கள் அதை வேறு வங்கியிலே போடுவர். நமது முதல் வங்கி 800 டொலரை வேறு ஒருவங்கிக்கு வழங்குகிறது. இந்த வேறு வங்கியை இரண்டாந் தலைமுறை வங்கியென்று கூறுவோமானால் அவற்றின் ஐந்தொகை அட்டவணை $4d$ இலுள்ளபடி காணப்படும்.

இத்தகைய வங்கிகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சிதறிக் கிடக் கின்றன. (இரண்டாந்தலைமுறை வங்கியின் ஒரு சிறுபகுதி நமது முதல் வங்கியாயுமிருக்கலாம். ஏனெனில் அது பிறப்பித்த செக்கிலே சில, அத னுடைய வைப்பாளர் கையிலேயே சிக்கியிருக்கலாம்). இந்த வங்கிகளுக்கு அவற்றிலே போட்ட டொலர்கள் ஏனைய டொலர்களைப் போலத்தானிருக்கும் ; எமது ஆதி வைப்புப் போன்றேயிருக்கும். இவை, வைப்புத் தொடரொன் றில் இரண்டாமிடத்தை வகித்து வருவது இவற்றுக்குத் தெரியாது. ஆனால் அவை இலாபஞ் சம்பாதிக்காத பணத்தை அதிகமாக வைத்திருக்கின்றன. இதை, அவை நன்கு உணர்ந்திருக்கின்றன. 800 டொலர் வைப்புக்குச் சேமநிதியாக 5 வீதம் அதாவது 160 டொலரே வைத்திருக்க வேண்டும். எனவே 640 டொலர் விலையுள்ள கடன் பத்திரங்களையோ முதலீடுகளையோ அவை வாங்கலாம். எனவே சில தினங்களிலே அவற்றின் ஐந்தொகை அட்டவணை $4e$ யிலே கண்ட சமநிலையைப் பெற்றுவிடும்.

இரண்டாந் தலைமுறை வங்கி விடயம் அவ்வளவில் அமைக. அவைகூடப் பணத்தை உண்டாக்கியுள்ளன. ஆதியிலிருந்த 1,000 டொலர் புழக்கத் திலேயிருந்து வந்தது. அதை வங்கியிலே போட்டதும் முதற்றலைமுறை வங்கிக்கு 1,000 டொலர் வைப்பையும், இரண்டாந்தலைமுறைக்கு 800 டொலர் வைப்பையும் உண்டாக்கிற்று. மொத்தப் பணம் அதிகரித்துள்ளது. இவ் வளவில் கருமம் முடியவில்லை. காரணம், இரண்டாந்தலைமுறை வங்கி

படிப்பகம்

www.padippakam.com



**ஐந்தாவது : இரண்டாந் தலைமுறை வங்கி புதியவைப்புத் தொகையின் 4/5 ஐக் கடனுக்குக் கொடுத்துவிடும்**

| சொத்து | | பொறுப்பு | |
|---|---|---|---|
| சேமநிதி | + 160 டொலர் | வைப்பு | + 800 டொலர் |
| கடன், முதலீடு | + 640 டொலர் | | |
| மொத்தம் | 800 டொலர் | மொத்தம் | 800 டொலர் |

அட்டவணை 4e. இரண்டாந் தலைமுறை வங்கியின் இறுதிநிலை.

கடன், முதலீடு என்பவற்றில் ஈடுபடுத்தச் செலவு செய்த 640 டொலர் புதியதொரு வங்கியாகிய மூன்றுந்தலைமுறை வங்கிக்குச் செல்லும் என்பதே. வாசகர் தமது ஐந்தொகையை நிரப்பக்கூடியவராயிருக்க வேண்டும். (அட்டவணை 4f ஐப் பார்க்க). 640 டொலரில் 4/5 ஆன 512 டொலரைச் சேமநிதியாக மூன்றும் தலைமுறை வங்கி தொடக்கத்திலே கொண்டதாயிருக்கும். இந்த நிதியைக் கடன் கொடுப்பதிலும் முதலீட்டிலும் செலவிட்ட பின்னர்தான் மூன்றுந் தலைமுறை வங்கிகள் அட்டவணை 4g யில் உள்ள சமநிலையைப் பெறும்.

**ஆறுவது. மூன்றுந்தலைமுறை வங்கியிலும் அவ்வாறே.**

| சொத்து | | பொறுப்பு | |
|---|---|---|---|
| சேமநிதி | + | வைப்பு | + |
| கடனும் முதலீடும் | – | | |
| மொத்தம் | + | மொத்தம் | + 640 டொலர். |

அட்டவணை 4f. மூன்றுந்தலைமுறை வங்கியின் ஆரம்பநிலை.

| சொத்து | | பொறுப்பு | |
|---|---|---|---|
| சேமநிதி | + 128 டொலர் | வைப்பு | + 640 டொலர் |
| கடன், முதலீடு | + 512 | | |
| மொத்தம் | + 640 டொலர் | மொத்தம் | + 640 டொலர் |

அட்டவணை 4g. மூன்றுந்தலைமுறை வங்கியின் இறுதிச்சமநிலை.

வங்கி வைப்பின் மொத்தம் இப்போது 1,000, +800, +640 டொலர் அல்லது 2,440 டொலர் ஆகும். இது முதல்வைப்பின் $2\frac{1}{2}$ : 1 வீதமாகும். நாலாந்தலைமுறை வங்கி 640 டொலரில் 4/5 வீத வைப்புடையதாயிருக்கும்; அதாவது 512 டொலர் வைப்புடையதாயிருக்கும். ஐந்தாம் தலைமுறை வங்கி 512 டொலரில் 4/5 அல்லது 409.60 டொலர் வைப்பும், ஆறும் தலைமுறை வங்கி 409.60 டொலரில் 4/5 வைப்புடையதாயுமிருக்கும். 25 ஆவதுதலைமுறை வங்கி 1 பென்னியுடையதாயிருக்கும்.

www.padippakam.com



கடைசித் தொகை எவ்வளவாயிருக்கும் ? டொ. 1,000, + டொ. 800, + டொ. 640, + டொ. 512 + டொ. 409.60 + .... ? கணிதமுறைப்படி கணித்தால் 4,999.999 டொலர் கிடைக்கும். கடைசியிலே 5,000 டொலர் வரை வைப்புண்டாக்குவதாலுண்டாகும் பூரண பலாபலனை அட்டவணை 4*h* காட்டுகிறது. இதே விடையைப் பொது அறிவினாலும் அட்சர கணிதத்தாலும் பெறலாம்.[1]

வைப்புக்கு 20 வீத சேமநிதி விகிதத்தினும் அதிகமாக சேமநிதியை வங்கியமைப்பிலே எந்த வங்கியும் வைத்திராத பட்சத்தில் வைப்புண்டாக்கும் முறை முடிவடையுமென்பதைப் பொது அறிவு அறிவுறுத்துகிறது. முன்னர் நாம் காட்டிய உதாரணங்களிலெல்லாம் சேமிப்பு நிதியானது வங்கிமுறையிலிருந்து நழுவவில்லையென்பதையும், ஒரு வங்கிக் கூட்டத்தி

**ஏழாவது : இந்தச் சங்கிலித் தொடர்மூலம் வங்கிமுறையானது மொத்த வைப்புக்களை ஆதியில் இருந்த புதிய சேமநிதிக்கு ஐந்து மடங்கு சமனுள்ளவையாகச் செய்கிறது :**

| வங்கி நிலை | புதியவைப்பு | புதியகடன், முதலீடுகள் | சேமநிதி |
|---|---|---|---|
| முதல்வங்கிகள் .. .. | .. 1,000.00$.. | 800.00$.. | 200.00$ |
| 2 ஆம் தலைமுறை .. .. | .. 800.00 .. | 640.00 .. | 160.00 |
| 3 ஆம் தலைமுறை .. .. | .. 640.00 .. | 512.00 .. | 128.00 |
| 4 ஆம் தலைமுறை .. .. | .. 512.00 .. | 409.60 .. | 102.40 |
| 5 அம் தலைமுறை .. .. | .. 409.60 .. | 327.68 .. | 81.92 |
| 6 ஆம் தலைமுறை .. .. | .. 327.68 .. | 262.14 .. | 65.54 |
| 7 ஆம் தலைமுறை .. .. | .. 262.14 .. | 209.72 .. | 52.42 |
| 8 ஆம் தலைமுறை .. .. | .. 209.72 .. | 167.77 .. | 41.95 |
| 9 ஆம் தலைமுறை .. .. | .. 167.77 .. | 134.22 .. | 33.55 |
| 10ஆம் தலைமுறை .. | .. 134.22 .. | 107.37 .. | 26.85 |
| முதல் 10 தலைமுறைவங்கிகள் மொத்தம் | .. 4,463.13$.. | 3,570.50$.. | 892.63$ |
| எஞ்சிய தலைமுறை மொத்தம் .. | .. 536.87 .. | 429.50 .. | 107.37 |
| வங்கி முறைக்குள்ள மொத்தம் | .. 5,000.00$.. | 4,000.00$.. | 1,000.00$ |

அட்டவணை 4*h*. **வங்கிமுறைமூலம் வங்கிவைப்புக்களின் பன்மடங்குப் பெருக்கம்.** (7 ஆம் தலைமுறைதுவக்கம், எல்லாத்தரவுகளும் இரண்டு தசம இடத்துக்குத் திருத்தப்பட்டுள்ளன.) ஒவ்வொரு தலைமுறையிலும், சிறிய வங்கியொவ்வொன்றும், பின்வருமாறு பணத்தை உண்டாக்கியிருக்கிறது. கடைசியாக வைத்திருக்கும் சேமநிதியிலும் 5 மடங்கு அதிகமான வைப்புடையதாயிருக்கிறது.

[1] அட்சரகணிதமுறைப்படி அறிவது பின்வருமாறு :— டொ. 1000 + டொ. 800 + டொ. 640 + ...

$$= \text{டொ. } 1000\,[1 + 4/5 + (4/5) + (4/5)^3 + \ldots\ldots] = \text{டொ. } 1000\left(\frac{1}{1 - 4/5}\right) = \ldots \text{டொ.} 1000 \times 5$$

= 5000 டொலர்.

www.padippakam.com



லிருந்து மற்ருெரு வங்கிக் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்ததென்பதையும் கண்டோம். முதல் தலைமுறை வங்கி, இரண்டாம் தலைமுறை வங்கி என இவ்வாறு 100 ஆம் தலைமுறை வங்கிவரையுள்ள எல்லா வங்கிகளுக்கும் ஒருசேரவுள்ள ஐந்தொகை 4*i* யில் கண்ட அட்டவணைப்படி இருந்தாற்ருன் எல்லாவங்கிகளும் சமநிலையிலிருக்கும். புதிய வைப்பின் தொகை 5,000 டொலருக்குக் குறைந்தால், 20 வீத விகிதம் கிடைக்காது. அதனுல் ஓரிடத்திலும் சமநிலையேற்படமாட்டாது.

முன்னர் சாத்தியமற்றதெனக் கருதப்பட்ட அட்டவணை 4*b* யை அட்டவணை 4*i* யுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தனிமையில் ஒரு வங்கி செய்ய முடியாததை முழுவங்கி அமைப்பும் செய்துவிடுமென்பதை அறியலாம். ஆரம்பப் புதிய வைப்பில் 5 மடங்காக அது தனது வைப்பைப் பெருக்கலாம். ஒன்றுக்கு ஐந்தாக வங்கிப்பணம் உண்டாக்கப்பட்டுள்ளது. வைப்பாகப்பெற்ற பணத்தில் ஒரு பகுதியையே ஒவ்வொரு வங்கியும் முதலீட்டிலோ, கடன் கொடுப்பதிலோ செலவு செய்கிறது.[1]

**எட்டாவது : தனிப்பட்ட வங்கியொன்று தனியாகச் செய்யமுடியாத கருமத்தை எல்லா வங்கிகளுமாகச் சேர்ந்து செய்யமுடியும்.**

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| சேமநிதி | + 1,000 டொ. | வைப்பு | + 5,000 டொ. |
| கடன், மூதலீடுகள் | + 4,000 | | |
| மொத்தம் | + 5,000 டொ. | மொத்தம் | + 5,000 டொ. |

அட்டவணை 4 *i*. எல்லா வங்கிகளினதும் ஒன்று சேர்க்கப்பட்ட ஐந்தொகை. இ∴து எல்லாவங்கிகளினதும் கடைசி நிலையைக்காட்டும்.

வைப்பின் பன்மடங்கு பெருக்கத்தை உண்டாக்குபவர் யார்? மூன்று கட்சியினர் இதில் சேர்கின்றனர். ஒன்று பொதுசனம். அது வங்கியிலே தமது பணத்தை வைப்பாக வைக்கிறது. வங்கிகள் இந்த வைப்பிலே ஒரு பகுதியையே பணமாகச் சேமநிதியாய் வைத்திருக்கின்றன.[2] பொதுமக்களும், தனிப்பட்ட படுகடன்காரரும், வங்கிகள் தம்மிடமுள்ள மேலதிகமான

[1] ஒவ்வொரு சிறியவங்கியும் 1 : 1/5 விகிதமாகவே புதுப்பணத்தையுண்டாக்கியிருக்கிறது. 5 : 1 விகிதத்திலன்று.

[2] புழக்கத்திலுள்ள கடதாசிக் காசுகளிலும் பார்க்கப் பல மடங்கு அதிகமாகவே வங்கிவைப்புக்களிருக்கின்றன. இதில் எவ்வித முரண்பாடுமில்லை. அரசாங்கக் கடன்பத்திரம், நிலச்சொத்து என்பவற்றுக்கும் இது பொருந்தும். வைப்புக்கள் என்பவை வங்கிகள் வாடிக்கையாளர்க்குக் கொடுக்கவேண்டிய கடனே. காசு வங்கியில் விடப்படும். ஆனுல் அ∴து அவ்வங்கியிலேயே தங்கியிருப்பதில்லை. ஒரு டொலர் அதன் சீவியகாலத்திலே பல வங்கிகளில் கிடந்திருக்கும். அவ்வாறே பொருள் பண்டங்களை வாங்க அது பல முறை பயன்பட்டிருக்கலாம். இக்காலப் பணவகை மூன்றிலே, வங்கி வைப்பு முக்கியமானதொன்று. அளவைப்பொறுத்தமட்டில் அது மிக முக்கியமானது.

www.padippakam.com



பணத்தைக் கடன் கொடுக்கவும் வேறு இலாபம் தரக்கூடிய முயற்சிகளில் ஈடுபடுத்தவும் வங்கிக்கு உறுதுணைபுரிகின்றனர். நாலாவது பிரிவு ஒன்றும் உண்டு. அதுவே மத்தியவங்கி. வங்கிமுறைக்கு வரக்கூடிய புதிய சேமிப்பு நிதி எவ்வளவாயிருக்கலாமென்பதைத் தனது நடவடிக்கைகளால் இது நிச்சயிக்கிறது. இந்த விடயம் அடுத்த அத்தியாயங்களிலே விளக்கப்படும்.

பயந்தாங்கொள்ளிக் கைம்பெண்ணொருத்தி தனியொருவங்கியிலிருந்து எப்பொழுதும் 1,000 டொலரை எடுத்து வீட்டிலே புதைத்து வைப்பாளா ஞல் என்ன நடக்குமென்பதைக் கிரமப்படி ஆராய்ந்து, கொடுகடன் பணம் எவ்வாறு உண்டாக்கப்படுகிறதென்பதைப்பற்றி நீங்கள் ஏற்கனவே கொண் டுள்ள அறிவைப் பரீட்சித்துப் பாருங்கள். (1) வங்கி 1,000 டொலர் காசையிழப்பதோடு 1,000 டொலர் வைப்பையும் இழக்கிறது. ஆனல் இந்த வைப்புக்கீடாகச் சேமநிதியாய் வங்கியிலே வைத்திருந்த பொருள் 2,00 டொலர்தான். இது 20 வீதம். எனவே வேறு வைப்புக்களுக்கீடாக வங்கி வைத்திருந்த சேமநிதிகளையும் இப்போது அந்தப் பெண்ணுக்கு அந்த வங்கி கொடுக்க வேண்டிய நிலையேற்படுகிறது. எனவே சட்டபூர்வமாக வங்கி வைத்திருக்கவேண்டிய மொத்தச் சேமநிதித் தொகை குறைந்து விடும். அதனல் சட்டபூர்வமான குறைந்தபட்சத்தொகையிலும் சேமநிதி குறைந்துவிடுகிறது. (2) எனவே 800 டொலர் பெறுமதியுள்ள முதலீடுகளை விற்கவேண்டி வரும் அல்லது 800 டொலர் கடனெடுக்கவேண்டும். முதற் றலைமுறை வங்கி சமநிலையிலிருப்பதானல் அட்டவணை 5 a யிலுள்ளபடி காணப்படவேண்டும்.

**ஒன்பதாவது ; வைப்புக் கொடுக்கப்பட்டவுடன் பன்மடங்கு ஒடுங்குதல் ஏற்படும்.**

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| சேமநிதி | – 200 டொ. | வைப்பு | – 1,000 டொ. |
| கடன், முதலீடு | – 800 | | |
| மொத்தம் | – 1,000 டொ. | மொத்தம் | – 1,000 டொ. |

அட்டவணை 5*a*. அசல் வங்கிவைப்பை இழக்கும் பொழுதுள்ள சமநிலை

ஈட்டுப்பத்திரங்களை விற்கும்போது, அசல் வங்கியானது இரண்டாம் தலைமுறைவங்கிகளிலிருந்து 800 டொலரை உறந்து கொள்கிறது. அவை தம்முடைய நடவடிக்கையால் கடன்பத்திரம், கடன் ஈடு முதலியவற்றைப் பணமாக மாற்றவேண்டும். அதனல் மூன்ருந்தலைமுறை வங்கிப் பணத்தை உறக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்வாறே இந்த நடவடிக்கைகள் கடைசியில் வங்கி அமைப்பிலேயே 5,000 டொலர் வைப்பை நாசமாக்கி வங்கி இலாபம் அடையும் 4,000 டொலர் சொத்தையும் அழிக்க ஏதுவாயிருக்கிறது. மாணக்கன் எல்லாப் படிகளையும் ஆராயவேண்டும் ; அதாவது அட்டவணை 5*b*, 5*c*......முதலியன.

www.padippakam.com



முதலில் 1,000 டொலரை வங்கியிலே போட்டால், 10 வீதச் சேமநிதியையே அவை இருப்பாக வைத்திருக்கும்போது, 10,000 டொலர் வைப்பு உண்டாகும் என்பதை எடுத்துக் காட்டக்கூடியதாயிருக்க வேண்டும். 1920 இல் இவ்வாறுதான் நடைபெற்றது. அட்டவணை 3 இலுள்ள சேமநிதி விகிதம் சராசரி 20 வீதத்துக்குக் குறைவாயிருப்பதால், 5 : 1 இலும் பார்க்க 6 : 1 விகிதமே பொருத்தமுடையதென்பதை நீங்கள் எடுத்துக் காட்டலாம்.

**" ஏகபோக உரிமை வங்கி "**: மேலே கூறிய நடைமுறைகளிலெல்லாம் வங்கிகளிலிருந்த பணம் வெளிப்பட்டு நிலத்திலே புதைக்கப்படவுமில்லை ; புழக்கத்திலே வரவுமில்லையென்பதை நாம் கருதிக் கொண்டோம். வங்கிகள் பிறப்பித்த செக்குகளும் தமது வங்கியொன்றுக்கே போய்ச் சேரும் என்ற நிலையை அவை உணர்ந்தன.

நிலைமை இவ்வாறிருக்கையில், ஏகபோக உரிமையுள்ள ஒரு வங்கி பல கிளைகளை வைத்துக்கொண்டு, சிறு சிறு வங்கிகள் செய்ய முடியாத கருமங்களையெல்லாஞ் செய்ய முடியும். அதனுடைய ஐந்தொகை அட்டவணை 4b, 4i என்பவற்றிலே காணும் நிலைமையை அடையலாம். ஈடு, கடன் என்பவை கொடுக்க அந்த வங்கி தாராளமாகச் செக்குகளைப் பிறப்பிக்கலாம். எனெனில் அந்தப் பணங்கள் திரும்பவும் அதே வங்கியையே வந்து சேரும் என்பது உறுதி. எனெனில் அஃது ஏகபோக உரிமையுள்ள வங்கியாகும்.[1]

**எல்லா வங்கிகளும் ஒரேநேரத்திலே விரிதலும், ஒடுங்குதலும்.**

பல தலைமுறைகள் மூலம், வங்கிகள் விரிவின் எல்லையை எவ்வாறு அடைகின்றன என்பதை முந்திய பிரிவில் கண்டோம். ஒவ்வொரு கட்டத்திலும் செக்குகளைப் பைசல் செய்வதற்கும், தீர்மானங்கள் செய்வதற்கும், பாதிக்கிழமையை விட்டுக் கொள்வோமானால் 5 துவக்கம் 8 கிழமைவரை இந்த நடைமுறைசெயற்பட்டு ஒரு டசின்தரம் சுற்றிவர அதனை விட வேண்டும்.

ஒவ்வொரு வைப்பு டொலரும் எவ்வாறு சுழன்றுகொண்டு வருகிறதென்பதை அறிய வேண்டிய அவசியமில்லை. எனெனில் பணத்தைப் புதைத்து வைக்கும் முயற்சியில் மந்தமேற்படுமானல் எல்லா வங்கிகளையும் அது பாதிக்கும். அவையெல்லாவற்றிலும் காசு போடப்படும். முதலில் சேமநிதியிலே உபரியான தொகையுண்டாகும். எல்லா வங்கிகளும் ஒருமிக்கக் கடன்பத்திரங்களை வாங்கவும், கடன் கொடுக்கவுந் தொடங்கிவிடும்.

1. இங்கிலாந்து போன்ற நாடுகளிலே, " பெரிய 5 " கூட்டமான கிளை வங்கிகள் இருக்கின்றன. கனேடாவில் சில பெரிய வங்கிகளுண்டு. கலிபோர்னியா போன்றநாடுகளில், பன்மடங்கு கிளை வங்கிகளுண்டு. இந்நாடுகளிலே, சட்டபூர்வமான உபரி சேமநிதிக்கு அதிகமாகக் கடன் கொடுக்கமுடியும். எனெனில் இவ்வாறு கடன் கொடுக்கும் பணத்திலே பாதி தம்மிடம் அடுத்த தலைமுறை வங்கிகளிலிருந்தாவது வருமென அவை எதிர்பார்க்கலாம். ஆனல் இத்தகைய வைப்புக்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு முக்கியமல்ல இவற்றைப் பற்றி ஞாபகப்படுத்துவது ஆரம்பமாணுக்கர்க்கு மயக்கத்தை உண்டாக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



சிறியதொரு தனிவங்கி, கடன்பத்திரங்களை வாங்கச் செக்கை எழுதுகிறது. இந்தச் செக்குகள் வேறு வங்கிகளிலே மாற்றப்படுவதால் இந்த வங்கியின் காசு வெளிச்செல்லுகிறது. ஆனால் எல்லா வங்கிகளும் ஒரே நேரத்திலே செக்கை எழுதவேண்டி ஏற்படும்போது அவை எல்லாம் புதிதாகக் காசைப் பெறுகின்றன. எனவே சேமநிதியை எந்த வங்கியும் இழக்க வேண்டியேற்படாது. எனவே ஒவ்வொரு வங்கியும் தனது சேமநிதி நிலையை ஆபத்துக்குள்ளாக்காதவரை, தனது கடன்களையும் முதலீடுகளையும் ஆனந்தமாக விரிவுபடுத்தலாம். வைப்புக்கும் காசிருப்புக்கும் 5 : 1 வீதம் இருக்கும்வரை இவ்வாறு செய்யலாம். இந்த நிலையை அடைந்துவிட்டால், பணம் உண்டாக்கும் திறமையின் எல்லையை வங்கிகள் அடைந்துவிட்டன என்று சொல்லலாம்.

எல்லா வங்கிகளும் ஒரே நேரத்திலே வங்கியிலிருந்து எடுக்கும் ஒவ்வொரு டொலர் சேமநிதிக்கும் 5 : 1 ஆகக் காசை மடக்கும் முறையை இவ்வாறே விளங்கிக் கொள்ளலாம்; இதனை ஏகபோக உரிமையுள்ள வங்கி எவ்வாறு சுருக்குமென்பதையும் காட்டலாம்.

**இரண்டு நிபந்தனைகள்.** சிறந்த நிலைமையை அடையவேண்டுமானால் இரண்டு நிபந்தனைகள் வேண்டும். 1,000 டொலர் புதிய சேமநிதி வங்கியில் போடப்பட்டால், அது கடைசியாக வங்கி வைப்பை 5,000 டொலராக அதிகரிக்கும். எல்லாப் புதுப்பணங்களும் வங்கிகளிலேயே தங்குகின்றன. அதாவது ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவதொரு வங்கியில் இருந்து கொண்டிருக்கும். எவ்வித "உபரி சேமநிதியுமில்லாமலே" ஒவ்வொரு வங்கியும் "கடன் கொடுத்தபடி"யிருக்கலாம்.

**1. கைமாறும் பழக்கத்தில் நழுவுதல்.** வைப்பு விரிவிலே செக்கைப் பெறும் ஒருவர் தமது பணத்தை ஒரு வங்கியிலே விட்டுவிடாமல், புழக்கத்திலே புகுத்தவோ, மறைத்து வைக்கவோ பார்க்கலாம். மலர்ச்சிக் காலத்திலே வைப்புக்கள் பெருகும்போது, பென்னி நோட்டு என்ற வகையிலுள்ள நாணயங்களுக்கு அதிக தேவை ஏற்படலாம். அதிகரித்துள்ள சில்லறை விவகாரங்களுக்கு இவை அவசியமே.

பணத்தை அவ்வாறு வாபஸ் பெறுவதன் பலாபலன் இலேசானவை. வங்கியிலே 1,000 டொலர் இருந்தால் புதிதாக 5,000 டொலர் வைப்பு உண்டாகும். வங்கிக்கு வெளியே 200 டொலர் புழக்கத்தில் நழுவிவிடுமானால், 800 டொலரே வங்கியிலிருக்கும்போது புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட வைப்பு 4,000 டொலராகும். ($800 \times 5$). வங்கியிலே எவ்வளவு புதிய வைப்புக்கள் நிலையாக இருந்தாலும், வங்கித்தொழில் 5: 1 வீதத்தில் பெருக வசதியுண்டு.

**2. சாத்தியமான மேலதிக சேமநிதி.** வியாபார வங்கிகள் சட்டபூர்வமான சேம விகிதத்தை அனுசரிக்கின்றன என்ற எடுகோளை மனத்திற் கொண்டே பன்மடங்கு வைப்பு ஆக்கம் நடைபெறும்தன்மையை வருணித்தோம். சட்டபூர்வமான இருப்புக்கு அதிகமாகச் சேமநிதியை வங்கிகள் வைத்

www.padippakam.com



திருப்பதில் ஆட்சேபமில்லை. உதாரணமாக, புதிதாய் 1,000 டொலர் வைப்பைப் பெறும் அசல் வங்கி, 800 டொலரை உபரி சேமநிதியில் வைத்திருக்கலாம். அப்போது வைப்புப் பன்மடங்கு பெருகுவதில்லை. சட்ட பூர்வமான சேமநிதிக்கு அதிகமாக 5 வீதம் வங்கிகள் வைத்திருந்தால் வைப்புப் பின்வருமாறு விரிவடையும் $[1+\frac{3}{4}+(\frac{3}{4})^2+\ldots\ldots]$. ஆனால் வைப்பு விரிவடைதல் 5 : 1 வீதத்துக்குப் பதில் 4 : 1 வீதமிருக்குமானால் வைப்புப் பெருக்கம் $[1+4/5+(4/5)^2+\ldots.]$ என நடைபெறும்.

1930 ஆம் ஆண்டைத் தொடர்ந்த தசாப்தத்தின் கடைப்பகுதியில், சட்ட பூர்வமான சேமநிதிக்கு மேலதிகமான சேமநிதி கணிசமான தொகையாயிருந்தது. ஏனெனில் வங்கியாளர் கடன்கொடுப்பதற்குப் போதிய தூண்டுதல்களிருக்கவில்லை. அரசாங்கக் கடன்பத்திரங்களும் ஒருவீதத்தின் 1/8 வட்டியே கொடுத்தன. அந்தக் காலத்தில் பெடரல் வங்கி, வங்கித்தொழிலுக்கு 1,000 டொலர் புதிய வைப்புக் கொடுத்திருக்குமானால், அதில் அரைப் பகுதியோ முக்காற்பகுதியோ சேமநிதியில் போய்க் கிடந்திருக்கும். இந்தக் காலத்தில் மேலதிக சேமநிதிக்கு இடமில்லை. ஏனெனில் ஒருநாள் வைப்புக்கே பலவகையான உபயோகங்களை வங்கிகள் கொண்டிருக்கின்றன. கிராம வங்கிகள் சேமநிதிகளை அதிகமாக வைத்திருப்பதன் காரணம் விளங்கவில்லை.

கடனுக்கு எவ்வளவு வட்டி பெறலாமென்ற காரணமும், பணம் போட்டவர்கள் எதிர்பாராத விதமாகத் தமது பணங்களை எடுத்துக் கொள்வாரோ, மாட்டாரோ என்ற எண்ணமுமே சேமநிதி எவ்வளவு வைத்திருக்க வேண்டுமென்ற வங்கியாளர் பிரச்சினையைத் தீர்மானிக்கின்றன. வங்கிகளின் இத்தகைய விவகாரங்கள், குறுந்தவணை வட்டி வீதம் அதிகம் குறைந்தால் மிக முக்கியமான கட்டத்தை அடையும். நீர் ஒரு வங்கியாளர் என்று வைத்துக்கொள்வோம். 10 இலட்சம் உபரிடொலரைக் காசாக வைத்திருப்பதனால் உமது உழைப்புநிலை மாற்றமடையாதெனக் கொள்வோம். உமது உபரிசேமநிதியைப் பைசல் செய்துவிட நீர் விரும்புவீரா ? பெரும்பாலும் அப்படி விரும்பமாட்டீர். இலாபம் சம்பாதிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டாகுமானால், உமது வருமானமில்லாச் சேமப்பணத்தை முதலீடுகளிற் புகுத்தி பங்குதாரர்களுக்கு நல்ல இலாபம் தேட முயலுவீர்.

காலப்போக்கிலே வங்கிகளின் உபரிசேமநிதி மாறலாம். இதைப் பிரதானமாக நினைவுகூரவேண்டும். 5 : 1 என்ற வீதத்திலோ வேறு வீதத்திலோ சேமப்பணத்தை வைத்துப் பணத்தை உண்டாக்கலாமென்பதில் பூரணமான உண்மையோ, எந்திரபூர்வமான பொருத்தமோ கிடையாது.

வைப்பு உண்டாக்குவதை, தானாக இயங்குந்தன்மையுடையதெனக் கொள்ளக்கூடாது. அதற்கு நாலு சாதனங்கள் தேவை. வங்கிகள் எப்படியும் புதிய சேமநிதிகளைப் பெறவேண்டும். அவை அச்சேமிப்புக்களை பயன்படுத்தாது வைத்திருக்காமல் கடன் கொடுக்கவும் கடன் பத்திரங்களை வாங்கவும்

www.padippakam.com



விரும்பவேண்டும். கடன் வாங்கவும் பத்திரங்களை விற்கவும் யாராவது விரும்பவேண்டும். கடைசியாக பொதுமக்கள் வங்கியிலே தமது பணத்தைப் போட்டு வைக்க விருப்பமுடையவராயிருக்க வேண்டும்.

**சுருக்கம்**

**அ. இக்கால வங்கித்தொழில்முறை**

1. அமெரிக்க வங்கிமுறையிலே சிறுசிறு அலகு வங்கிகள் உண்டு. அவற்றுக்குத் தேசீய அரசாங்கமோ மாகாண அரசாங்கமோ உரிமை வழங்கும். அரைவாசிக்குக் குறைந்தவை, பெடரல் ரிசர்வ் வங்கியின் உறுப்புக்களானாலும் மொத்த வைப்பிலே 6/7 பங்கு அங்கத்தவர் கேட்கும் போது கொடுக்கக்கூடிய வைப்பாகும்.

2. வர்த்தக வங்கிகளின் கடமை மிகப் பல; இவை பரஸ்பர சேமிப்பு வங்கி, கூட்டுறவுக் கட்டட, கடன் கொடுக்கும் வங்கி, நிதிவசதி செய்யும் வங்கி, காப்புறுதிக் கம்பெனி என்பவை செய்யும் கடமைகளைக் கூடச் செய்கின்றன. வங்கிச் செக்குகளைப் பணமாகக் கொடுப்பதிலும் சேர்ப்பதிலும் வர்த்தக வங்கிகள் மிக முக்கியமான பொருளாதாரத் தொண்டைச் செய்கின்றன. நமது பணவிநியோகத்தின் அல்லது பரிவர்த்தனைச் சாதனத்தின் முக்கியமானதோர் அமிசம், தேவைப்படும்போது கொடுக்கத்தக்க, அவை வைத்திருக்கும் வைப்புக்களாகும். கடன் பெறுவதற்கு அவை உகந்த இடங்களாகும்.

3. பெடரல் ரிசர்வ் வங்கிகள் பிரதானமாக (அ) அங்கத்துவ வங்கிகளையும், (ஆ) நாடெங்கும் பரவியிருக்கும் 12 பெடரல் ரிசர்வ் வங்கிகளையும், (இ) வாசிங்டனில் நிர்வாக அதிகாரிகள் சபையையும் (அல்லது பெடரல் ரிசர்வ் சபை) உடையனவாகும்.

பெடரல் ரிசர்வ் வங்கிகள் அங்கத்துவ வங்கிகளுக்கு உரிமையான கூட்டுத் தாபனங்களாகவே பெயரளவில் இருந்தபோதிலும், அவை பெடரல் அரசாங்கத்தின் கிளைகளாகும். அவற்றுக்கு விசாலமான அதிகாரங்களுண்டு. வங்கி இலாபங்களிலும் பார்க்கப் பொதுசன நன்மையிலேயே அவை அதிக சிரத்தையுடையன. இவை காங்கிரசுக்கே பொறுப்புடையன. இருந்தாலும் இவற்றின் நடவடிக்கைகளெல்லாம் திறைசேரிக்கும், நிர்வாகக் கொள்கைகளுக்கும் உட்பட்டவை. பொதுமக்களிடையே திகிலுண்டாகும் காலங்களிலே, வங்கி முறை செயலற்றுப்போகாதபடி, தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவது ரிசர்வ் வங்கிகளின் கடமையாகும். பூரணவேலை வாய்ப்பும், திரமான விலைவாசிகளும் ஏற்படக்கூடியவாறு நிலைமையை உண்டாக்குவதும் அவற்றின் கடமையாகும்.

4. தற்காலவங்கிகள், பொற்கொல்லரின் பழைய (தொழிலகம்) பொக்கிஷசாலையைப் பின்பற்றியே உண்டாகி வளர்ந்தன. அந்தப் பொக்கிஷ சாலைகள் விலையுயர்ந்த திரவியங்களைச் சேமித்து வைப்பதற்குப் பயன் பட்டன. வைத்த பணத்துக்குச் சமமாக 100 வீதம் சேமநிதியை வைத்தி

படிப்பகம்

www.padippakam.com



ராமல் எவ்வளவோ குறைவாக வைத்துக்கொண்டு, எஞ்சிய பணத்தை கடன் பத்திரங்களிலும் கடன்கொடுப்பதிலும் முதலீடு செய்து, வட்டி வாங்கும் பழக்கமுடையவாயின.

5. வங்கியிலே பணம் போடுவோர் ஏககாலத்திலே தமது பணத்தை வாபஸ் செய்ய விரும்பினுல், வங்கி வைப்பில் ஒரு சிறு பகுதியையே சேமிப்பாக வைத்திருக்கும் வங்கிகளெல்லாம் முறிந்துவிடக்கூடும். அத்த கைய நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் தனது அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தத் தயாராயிருக்க வேண்டும். அரசாங்கம் அவ்வாறு செய்யுமென்பதை அறிந்தவுடன் மக்கள் தமது பணத்தை வாபஸ் பெறமாட்டார்கள்.

அங்கத்துவ வங்கிகள், வைப்புப் பணத்தின் ஒருவிகிதத்தைச் சட்ட பூர்வமான சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். இந்தப் பணத்தை பிரதேச ரிசர்வ் வங்கியிலோ, பணப்பெட்டியிலேயோ வைத்திருக்கலாம். இந்தச் சட்டபூர்வமான சேமநிதிகள் வைப்புக்களைப் பாதுகாப்பதற்கல்ல; பெடரல் ரிசர்வ், வங்கிவைப்புக்களையும் மொத்தப் பண விநியோகத்தை யும், சரியான செலவுகளுக்குப் பொருத்தமான முறையிலே கொடுகடன் நிலைமைகளையும் கட்டுப்படுத்துவதற்காகும்.

6. அரசாங்கக் கட்டுப்பாடும், பரிசோதனையும், பெடரல் ரிசர்வ் முறையும், பெடரல் வைப்புக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உத்தரவாதஞ் செய்யும் வங்கி வைப்பும் இல்லாவிட்டால், நமது சிறு அலகு வங்கிமுறை நடை பெருது. இந்தச் சீர்திருத்தங்கள் தனிப்பட்ட வங்கிகளின் பாதுகாப்பைப் பெரிதும் சீர்திருத்தியுள்ளன.

**(ஆ) வங்கிவைப்புக்களை உண்டாக்குதல்.**

7. வங்கியிலுள்ள கேட்ட நேரம் பெறக்கூடிய வைப்புகள் பரிவர்த்தனைச் சாதனமாகவும், பெறுமதிக்களஞ்சியமாகவுமிருக்கின்றன. எனவே அவை பணமாகக் கருதப்படுகின்றன.

8. எல்லா வைப்புக்கள் விடயத்திலும், வங்கிகள் 100 வீதம் பணச் சேமநிதியை வைத்திருந்தால், நாணயத்தைப் புழக்கத்திலிருந்து அகற்றி, வங்கிமுறையிலே போடும்போது புதிய பணம் ஆக்க முடியாது போகும். ஓரினப் பணத்துக்கு வேருேரினப் பணத்தை 1 : 1 வீதத்தில் மாற்றும் நிலைதானுண்டாகும்.

9. வைப்புக்களுக்கீடாக 100 வீதம் பண ஒதுக்கல்களை இக்கால வங்கிகள் வைத்திருப்பதில்லை. 1961 இலே, பெடரல் ரிசர்வ் அங்கத்தவர் டிமாண்ட் வைப்புக்களில் 1/6 பங்கையோ அதற்குக் குறைவாகவோ சட்டபூர்வமான சேமநிதியில் வைத்திருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. இது ரிசர்வ் வங்கி தாபிக்கப்பட்டிருக்கும் நகரத்தைப் பொறுத்ததாய்த் தீர்மானிக்கப்பட்டது.

www.padippakam.com



இதன்பயனாக, வங்கிமுறை முழுமையாக—அதாவது அரசாங்கக் கடன் காரர், தனிப்பட்ட கடன்காரர், வைப்பு வைக்கும் பொதுசனம் எல்லாரும் உட்பட—வைப்புப்பணம் 6 : 1 ஆக ஒவ்வொரு டொலருக்கும் உண்டாக்கு கின்றது. (அதாவது புழக்கத்திலிருந்து எடுத்து வேறு ஒரு வங்கியில் வைக்கப்பட்ட ஒவ்வொரு டொலருக்கும் 6 : 1 என்றவாறு.) வேறொரு வகையாகக் கூறுவதானால், நாம் உதவிய இலேசான உதாரணங்களின்படி இது 5 : 1 எனலாம்.

10. ஒவ்வொரு சிறிய வங்கியும் தனது கடன்களையும் வைப்புக்களையும் விரிவாக்குவதற்கு எல்லையுண்டு. வைப்பாளரிடமிருந்து பெற்றதற்கு அதிக மாக அது கடன்கொடுக்கவோ முதலீடு செய்யவோ முடியாது. கிடைத்த திலும் பார்க்க 4/5 க்கு அதிகமாகவே கடன் கொடுக்கலாம். கையிலி ருக்கும் பணத்திலும் பார்க்க 5 மடங்கு அதிகமாக வைப்பு உண்டு. பணம் குறைந்துகொண்டு போவதனால் இந்நிலையுண்டாகிறதேயன்றி, வைப்பு அதிகரிப்பதனாலன்று. ஆனால் வைத்திருக்கும் 1/5 ஆக உள்ள ரிசர்வுக்கு 1 அலகு வங்கிப்பணத்தை இஃது உண்டாக்குகிறது.

11. ஒவ்வொரு சிறிய வங்கியும் விரிவடையமுடியாவிட்டாலும், வங்கி முறை முழுவதும் ஒருசேர விரிவடையலாம். வெளித்தொடர்பில்லாத ஒரு சமூகத்திலே நிலவும் ஏகபோக உரிமையுள்ள வங்கியை ஆராய்ந்தால் இது விளங்கும். இத்தகைய வங்கி எழுதும் செக்கு எப்போதும் அதற்கே திரும்பி வந்துவிடும். எனவே அது தன்னுடைய முதலீடுகளையும் வைப்புக் களையும் விரிவாக்கும் திறமைக்குள்ள ஒரே ஒரு கட்டுப்பாடு, வைப்புக்கீடாக 1/5 பண ரிசர்வ் வைத்திருக்கவேண்டுமென்பதே. (வங்கியின் சொத்து பொறுப்பு என்பனவெல்லாம் இரட்டைப் பதிவுமுறையிலிருக்கும்). வைப்புக் கள் புதிய காப்பொதுக்கல்களில் 5 மடங்காகும்வரை பெருகினால், ஏகபோக உரிமை வங்கி மேலும் வைப்புக்களை உண்டாக்கமாட்டாது. அப்ப டிச் செய்வதானால் அதிக காப்பொதுக்கல்களைப் பெறவேண்டும்.

12. இக்கால அமெரிக்காவிலே ஏகபோகவுரிமை வங்கி கிடையாது. ஆனால் 5 : 1 ஆக வங்கி வைப்பு பெருக்கம் உண்டாகும். புதிதாக 1,000 டொலர் வைப்புப் பெறும் புதிய வங்கி, புதிதாகப் பெற்ற இந்தப் பணத்திலே 4/5 பகுதியைக் கடன் கொடுப்பதிலும், முதலீடு செய்வதிலும் செலவழிக்கிறது. இந்த 1,000 டொலரில் 4/5 பகுதி இரண்டாவது தொகுதி வங்கிகளுக்கு வைப்பாகச் செல்கிறது. அவை 1/5 பகுதியைக் காசாக வைத்துக்கொண்டு 4/5 ஐப் புதிய முதலீடுகளிற் போடுகின்றன. அவை இந்நடவடிக்கையின் பயனாக, மூன்றாவது தொகுதி வங்கிகளுக்கு ஓரளவு பணம் கிடைக்கச் செய்கின்றன. இம்மூன்றாவது தொகுதி வங்கிகள் 1,000 டொலரின் 4/5 இன் 4/5 வைப்பைப் பெறுகின்றன. இவ்வாறு இந்தச் சங்கிலித்தொடர் குறைந்து குறைந்து செல்லும். இவ்வாறு தொடர்ந்து வைப்புப்பெறும் வங்கிகளை ஆராய்ந்தால் புதிய வைப்புக்கள் பின்வருமாறு அமைவதைக் காணலாம்.

www.padippakam.com



$$1,000 \text{ டொ.} + 800 \text{ டொ.} + 512 \text{ டொ.} + \ldots\ldots\ldots\ldots$$
$$= 1,000 \text{ டொ.} \times [1 + 4/5 + (4/5)^2 + (4/5)^3 + \ldots\ldots\ldots\ldots]$$
$$= 1,000 \text{ டொ.} \left(\frac{1}{1-4/5}\right) = 1,000 \text{ டொ.} \left(\frac{1}{1/5}\right) = 5,000 \text{ டொ.}$$

புதிதாக வைப்புப் பெற்ற 1,000 டொலரில் ஒவ்வொரு டொலரும் வங்கி முறையிலே எங்காவது உள்ள 5 டொலரைத் தாங்கினுற்ருன், வைப்பு விருத்தி கடைசி எல்லையை அடையும். அப்பொழுது அவ்வங்கிமுறை கடனுக்குட்பட்டதாகிவிடும். புதிய காப்பொதுக்கல்களைப் பெறும்வரை அது புதியவைப்புக்களை உண்டாக்கமுடியாதிருக்கும்.

13. நடைமுறையிலே 1000, 800, 640 டொலர் என்ற தொடரிலே யுள்ளவை பூரணமாகச் செயற்பட்டொழியும்வரை, தாமதித்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை. அதே சமயத்திலே, புதிய காப்பொதுக்கல்களைப் பெறு வதற்குப் பல வங்கிகளுக்கு வசதியேற்படும். கிட்டுமானவகையில் சமநிலையளவில் விருத்தி செய்வதற்காக அவற்றின் கடன்களும் முதலீடுகளு மிருக்குமானுல், அவற்றின் கொடுப்பனவுகள் ஒன்றையொன்று சமன் படுத்திவிடக்கூடும். எனவே ஒவ்வொன்றும் பணத்தை இழக்கமாட்டாது. வங்கிகள் எல்லாமாக ஒருசேர 5 : 1 எல்லைக்கு விரைவாய்த் தமது உழைப்புச் சொத்துக்களையும், வைப்புக்களையும் பெருக்கிக்கொள்ளும்.

14. மேலே கூறிய ஆராய்ச்சிக்குச் சிறிய தொரு நிபந்தனையாக, வங்கி முறையிலிருந்து வங்கிக்கு வெளியே புதிய பண ரிசர்விலுள்ள பணத்திலே சிறிது புழக்கத்துக்குப் போய்விடும். முன் காட்டிய உதாரணங்களிற் போல, 5,000 டொலர் புதிய வைப்பு உண்டாக்கப்படுவதிலும்பார்க்க, அதனிலும் சிறிது குறைவாக நாங்கள் வைத்திருக்கலாம். இந்த வித்தியாசம், வங்கி முறையிலேயிருந்து வாபஸ்பண்ணப்பட்ட தொகையைப் பொறுத்ததாகும்.

சில வங்கிகள், சட்டபூர்வமான ரிசர்வ்களிலும் பார்க்க அதிகமான ரிசர்வ் வைத்திருக்கலாம். செழிப்பான காலங்களிலே நகரத்திலுள்ள வங்கிகள், உபரி ரிசர்வ்களை வைத்திருப்பதில்லை. ஏனையவங்கிகள், வட்டி வீதத்தையும், ஏனைய முன்னெச்சரிக்கையான அபேட்சைகளையும் கருத்திலே கொண்டு, பலவகையான தொகைகளை உபரி ரிசர்வாக வைத்திருக்கலாம். எனவே 5 : 1 விகிதமோ, வேறு திரமான விகிதமோ விதிப்பதில் தாகுக ஏற்படும் தன்மை எதுவும் இடையாது.

வங்கிமுறையிலே இருக்கும் சட்டரீதியான ரிசர்விலும் 5 மடங்கு அதிகமான வைப்புக்களிருப்பதைப்பற்றி இந்த அத்தியாயத்திலே ஆராய்ந்தோம். மொத்தப் பணவிநியோகத்தை விரிவாக்க விரும்பினுல் பெடரல் ரிசர்வ் வங்கிகள், வங்கிச் சேமநிதிகளை உயர்த்திவிடமுயலும் என்பதை 17 ஆம் அத்தியாயத்தில் ஆராய்வோம். பணத்தின் அளவு சுருங்கவேண்டுமானுல், பெடரல் ரிசர்வ் அதிகாரிகள் செயல்வேகத்தை நிறுத்தி விடுவார்கள். வங்கி அமைப்பில் புதிய சேமநிதிகளை உண்டாக்குவதை விடுத்து,

படிப்பகம்

www.padippakam.com



உள்ள சேமநிதிகளிலிருந்து எடுக்கத் துவங்குவார்கள். இவ்வாறு செய்யும் போது ஒன்றுக்கொன்ருக அன்றி, ஒன்றுக்கு ஐந்தாகப் பணத்தைக் குறைப்பர். இதை மேலே காட்டினேம்.

**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள்**

1. உங்கள் பிரதேசத்திலுள்ள வங்கி அமைப்பை விவரிக்க. வங்கிச் சேவைகளை அட்டவணைப்படுத்துக. இத்தகைய சேவைகளை வேறு எந்தத் தாபனஞ் செய்கிறது. உள்ளூர் ஐந்தொகைகளை ஆராய்க. வெவ்வேறு அமிசங்களை விளக்குக. உள்ளூர் செக்குகள் எவ்வாறு பைசல்செய்யப்படு கின்றன ?

2. எல்லா வங்கிகளும் 100 வீதம் சேமநிதி வைத்திருக்கின்றன என்று கொள்வோம். அவை எவ்வாறு வித்தியாசப்படும் ? சட்டரீதியான சேமநிதி செய்யும் கடமையென்ன ? உபரி சேமநிதியென்ருல் என்ன ?

3. 10 வீத ரிசர்வ் விகிதமுண்டெனக் கொள்க. பன்மடங்கு வங்கிப் பெருக்கத்தை $4a$, $4i$ இரட்டிப்பு அட்டவணைகள் மூலம் ஆராய்க. இந்த முறையைக் கீழிருந்து மேலாகவும் ஆராய்க.

4. வங்கியாளர், வைப்புக்களை உண்டாக்குகின்றனரா ? யார் உண்டாக்கு கின்றனர் ? புதிய வைப்பையும் புதிய சேமநிதிகளையும் வங்கியாளர் ஒருவர் பெற்ருல், அவர் கடன்காரரை எப்பொழுதும் பெறமுடியுமா ? தம்மிடமுள்ள அரசாங்கக் கடன்பத்திரங்களை அவர் மேலும் எப்பொழுதும் பெருக்க முடியுமா ? எவ்வாறு அதை அவர் செய்வார் ?

5. "வங்கிகள் வைப்பாளரிடமிருந்து பூச்சிய வீதத்திலோ, குறைவான வீதத்திலோ வட்டிக்குப் பணத்தைக் கடனகப் பெற்று, அதை உயர்வட்டி தரும் கடன்களுக்கோ, முதலீடுகளுக்கோ கொடுக்கின்றன. வட்டி வீதத்தி லுள்ள இலாபத்தைக்கொண்டு, தமது நிர்வாகச் செலவைச் சரிக்கட்டிக் கொள்ளுகின்றன ; நமது பண நடவடிக்கைகட்கு மலிவான சாதனங்களை யுண்டாக்குகின்றன. அத்துடன் தமது பங்குதாரர்களுக்கு, சொத்துக்கள் சம் பந்தமாய் இலாபமீட்டும் திறன் குறையக் கூடிய அபாயங்களுக்காக உபகாரஞ் செய்கின்றன. சமூகத்தின் சேமிப்புக்களை நல்ல உள்ளூர் முயற்சிகளில் முதலீடுசெய்யும் திறமைமிக்க ஒருமுறையாய் அவை அமைகின்றன. இதி லுஞ் சிறந்தொரு முறையை வெறும் கற்பனை செய்ய முடியாது. வைப்பாளர் நட்டமடையாமலும், வங்கிகள் உளவியற் காரணங்களால் முறிந்து போகாமலும் சமீபகாலத்தில் அரசாங்கம் சீர்திருத்தங்களால் பாதுகாப்பளித்திருப்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது". இக்கூற்றை நிதானமாக ஆராய்க.

6. "எனது வங்கிக் கணக்குகள் வரவுசெலவு சரியாக இருக்கின்றன. எனது வங்கிக்குப் பணவைப்பாளர் கொண்டுவரும் சேமிப்புக்களை நான் முதலீடு செய்வோருக்குக் கொடுத்துவிடுகிறேன். வங்கியாளன் பணத்தை

படிப்பகம்

www.padippakam.com



உண்டாக்குவான்; கேட்கும் நேரம் கொடுக்கும் வைப்பை உண்டாக்குவான் என்று யார் கூற முற்படுவார் ? " நீர் கூறுவீரா ?

7. "சிறந்த வருமானத்தைப் பெறக்கூடியதாக வங்கியாளர் கடன் கொடுக்க முடியுமானுல் பெடரல் வங்கி புதிய சேமநிதிகளை வரையறையின்றி உண்டாக்க வேண்டும். அப்போது புதிய பணமாகிய M புதிய பொருளாகிய Q உடன் சமனுகும். அப்போது விலைகள் உயரமாட்டா. சமூகம் நிரந்தரமாக உயர்ந்த தேறிய தேசிய உற்பத்தியைப் பெறும்". 1913 இல் பெடரல் வங்கியைத் தாபித்தோர் இந்தக் கொள்கையை ஆதரித்தனர். நு+மு+அ (C+I+G) கோடுகள் ஏறியுமிறங்கியும் வரும் நிலையில் உள்ள உலகத்திலே M இன் நெகிழ்ச்சி எங்கே ஆபத்தையுண்டாக்கும் என்பதை ஆராய்க.

8. பின்வரும் கருத்துக்களின் பொருளை ஞாபகப்படுத்துக. தேசிய, மாகாண வங்கிகள், அங்கத்துவ வங்கிகள், பெடரல் வைப்பு காப்புறுதிக் கூட்டுத்தாபன வங்கிகள் (FDIC), கவர்ணர் சபை, 12 பெடரல் ரிசர்வ் வங்கிகள், பெடரல் வங்கி, வங்கி ஐந்தொகை, பொற்கொல்லரும் பின்னல ரிசர்வ் வங்கியும், சட்டபூர்வமான ரிசர்வ் நிபந்தனைகள் ; ஏகபோக உரிமையுள்ள வங்கிக்கு வைப்பு உண்டாக்குதல்—பல சிறு வங்கிகள் முறை இவற்றிடையுள்ள தாரதம்மியம் ; உபரிசேமநிதி, பன்மடங்கு வைப்பு உண்டாக்குதலுக்கான நிபந்தனைகள்.

www.padippakam.com

## பதினேழாம் அத்தியாயம்

# கூட்டாட்சியொதுக்கம், மத்தியவங்கி என்பனவற்றின் பணக்கொள்கை

உலகம் தோன்றிய காலந்தொட்டு இதுவரை
மூன்றுபெரிய நூதன கண்டுபிடிப்புக்கள் தோன்றின;
நெருப்பு, சக்கரம், மத்தியவங்கி என்பனவே அவை.
—வில் றேஜேர்ஸ்.

கூட்டாட்சியொதுக்க வங்கியென்பது ஒரு மத்தியவங்கி. அது வங்கியாளர்க்கும், அரசாங்கத்துக்கும் வங்கியாயமைகிறது. ஒவ்வொரு மத்திய வங்கிக்கும் முக்கியமானதொரு கடமையுண்டு. பொருளாதாரத்துக்கு அவசியமான பணம், கடன் என்பவற்றை விநியோகம் செய்வதில் கட்டுப்பாட்டையுண்டாக்க அது நடவடிக்கையெடுக்கிறது. தொழில் முயற்சிகள் சீரழிந்து, வேலைபெறுவது கடினமாகும்போது, பெடரல் ரிசர்வ்சபை பணத்தையும் கடனையும் விரிவாக்க முயலும். ஆனால் செலவு அதிகரிக்கும் அறிகுறியிருந்தால், விலைகள் ஏறி, வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும்போது பெடரல் ரிசர்வ் வங்கி (இதனை வங்கியாளரும் நிதிப்பத்திரிகையாளரும் சுருக்கமாக பெட் எனக்கூறுவர்) அதிகாரிகள் முன்வந்து பணத்தையும், கடன்வசதிகளையும் சுருக்குவர். ரிசர்வ்சபையின் தலைவரான வில்லியம் மக்செஸ்னி ஜூனியர் கூறியதுபோல "பெடரல் வங்கியில் அடிக்கும் பொருளாதாரக் காற்றுகளுக்கு எதிராக நிற்கவேண்டியது எமது கடமையாகும்" எனக் கூறவேண்டும்.

மத்தியவங்கியின் கடமை இதுவே. பணத்தையும் கடன்வசதியையும் பெருக்கவோ, சுருக்கவோ பெடரல்வங்கி பயன்படுத்தும் சாதனங்களை இந்த அத்தியாயத்திலே ஆராய்வோம்.

**பணம் செலவு செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தப் பணக்கொள்கை என்ன செய்கிறது.**

ரிசர்வ் வங்கி அதிகாரிகள் பொதுமக்கள் செய்யும் செலவை எவ்வாறு கட்டுப்படுத்துகிறார்கள்? அவர்கள் கையாளும் முறைகளின் ஐந்து படிகள் பின்வருமாறு :—

1. வர்த்தகவங்கிகளும் அங்கத்துவவங்கிகளும், தமது சொத்துக்களுக்கும் வைப்புக்களுக்கும் ஆதாரமாகச் சேமநிதிகளை வைத்திருக்கவேண்டுமென முந்திய அத்தியாயத்திற் கூறினோம். (இந்தச் சேமநிதிகள் மிக முக்கியமானவையாதலால் இச்சொல்லை இனித் தடித்த எழுத்துக்களிலே எழுதுவோம்.)



படிப்பகம்

www.padippakam.com



பணவிடயத்திலே தடைபோட பெட் (பெட் என்பது பெடரல் ரிசர்வ் வங்கி என அறிந்துகொள்க) வங்கிச் சேமநிதிகளை (இதை ரிசர்வ் என்றும் எழுது வோம்) குறைக்கப்பார்க்கும்.

2. வங்கி ரிசர்விலே குறைக்கப்படும் ஒவ்வொரு டொலருக்கும் மொத்த வங்கிப்பணத்தில் 5 : 1 சுருக்கம் உண்டாகும். (அதாவது மொத்தத் தேவை வைப்புக்களில்) பின்னமான சேமநிதிவைத்திருக்கும் வங்கிமுறையிலே பன்மடங்கு வைப்பு ஆக்குதல் பற்றி ஆராய்ந்தபொழுது சென்ற அத்தி யாயத்திலே இதைப்பற்றிக் குறிப்பிட்டோம்.

3. மொத்தப் பணத்திலே சுருக்கமுண்டானால் கடன் வசதி "இறுக்க" மாகும்; அதாவது கடன்வசதிபெறுவது அருந்தலாயிருக்கும். பணம் (M) குறைந்தால் வட்டிவீதம் அதிகரிக்கும். அவ்வாறே பணம் (M) குறைவாயி ருந்தால்கடன் எடுப்பதும் கடினமாயிருக்கும்.

ஈட்டுக்குப் பணம் கடன்பெறுவோர் அதிகம் வட்டிகொடுக்கவேண்டி யேற்படும். புதிய பள்ளிக்கூடங்கள் கட்டவும் புதிய றோட்டுக்களை அமைக்க வும் தலத்தாபனங்கள் விரும்பினால், அவற்றுக்கும் வட்டிவீதம் அதிகரிக்கும். புதிய எந்திரசாலைகளைக் கட்டவும், தளவாடங்களை வாங்கவும், புதிய பொருள்களை வாங்கவும் விரும்பும் முயற்சியாளருக்கும் வட்டிவீதம் அதி கரிக்கும்.

கடனுக்குப் பணம் எடுப்பது கடினமாகும்போது வட்டிவீதம் கூடும்; அதனால் உற்பத்திச் செலவும்கூடும். உதாரணமாக, நீர் ஒரு வீடுகட்ட வேண்டியிருந்தால் வட்டிவீதம் 5 இலிருந்து 6 ஆக உயருமானால், அஃது உம்மைச் சிந்திக்கச்செய்யும். உமது வங்கியாளரும் உற்சாகமிழந்தவராகக் காணப்படுவார். 25,000 டொலர் பெறுமதியான வீட்டை நீர் வாங்காமல் 18,000 டொலர் வீட்டையே வாங்கப்பண்ணுவார்.

4. கடன்படுவது செலவுத்தானமாயிருப்பதுமன்றி அருந்தலாகவுமிருப்ப தால், தனிப்பட்டவர்களும் அரசாங்கமும் முதலீடு செய்வது குறைந்து கொண்டுபோகும். மு (I) கோட்டிலும் அ (G) கோட்டிலும் என் இத்தகைய இறக்கம்?

புதிதாக ஓர் எந்திரத்தை வாங்கவோ, ஒரு வீட்டைக் கட்டவோ, பொருள் களை வாங்கவோ பணம் வேண்டும். வட்டிவீதம் அதிகரித்தால் கடன்படுவது கடினம். எனவே முதலீடு குறையும். அரசாங்க விடயங்களும் அப்படியே. அது மத்திய அரசாங்கமானாலென்ன, தலத்தாபன அரசாங்கமானாலென்ன புதிதாக றோட்டு அமைப்பதை விட்டு, பழைய றோட்டையே திருத்தி யமைக்கும். பள்ளிக்கூடத்துக்கு தேகாப்பியாச அரங்கும், புதிய நூல் நிலையமும் கட்டத் திட்டம்போட்டவர்கள் அத்திட்டத்தைக் கைவிடவேண்டிய அவசியமுண்டாகும்.

5. கடன் வசதியிலும் முதலீட்டுச் செலவிலும் விழுக்காடு உண்டானால் மு + அ (I + G) கோட்டில் இறக்கமுண்டாகும். அதனால் வருமானச் செலவு

www.padippakam.com



வீழ்ச்சியடையும், அதனால் விலைகளும், உத்தியோகங்களும் பாதிக்கப்படும்.
13 ஆம் அத்தியாயத்திலே காட்டிய பெருக்குமெண் ஆராய்ச்சியின்படி முத
லீட்டிலே இத்தகைய வீழ்ச்சியுண்டானால், வருமானச்செலவை அது பெரி
தும் பாதிக்கும் எனக் கண்டோம்.

பணவீக்கத்துக்குரிய காரணத்தை "பெட்" அறிந்தமுறை சரியானால்,
பண வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படுத்துவதே அதற்கு வைத்தியர் சொன்ன
நிவிர்த்தியாகும். பணவீக்க இடைவெளியைக் குறைப்பதில் "பெட்டின்"
நடவடிக்கை சித்தியடைந்தது. பெடரல் வங்கித் தலைவர்கள் தமது நட
வடிக்கைகள் நல்ல பலனைக் கொடுத்தமைபற்றித் தம்மைத்தாமே புகழ்ந்து
கொள்ளலாம்.

**நினைவுபடுத்தல் :** இந்த ஐந்துபடிமுறையான மாற்றம் மிக முக்கிய
மானது. ஆரம்பத்திலே பெடரல் வங்கி வர்த்தக வங்கிகளின் சேமநிதியை
5 : 1 ஆக மாற்றுகிறது. பின்னர் மொத்தப் பணத்திலே மாற்றமுண்டா
கிறது. அதனால் கடன்வட்டி உயர்வதோடு கடன்பெறுவது கடினமாகிறது.
அதன்பயனாக, தனிப்பட்டவர் முதலீட்டுச் செலவிலும், அரசாங்கத்துறை
முதலீட்டுச் செலவிலும் மாற்றமுண்டாகிறது. ஈற்றிலே பணவருமானத்
திலே பலமடங்கு மாற்றமுண்டாகிறது.

மேலே காட்டியமுறை, பெடரல் வங்கி வியாபார நடவடிக்கையைச்
சுருக்கமுனைந்தபொழுது உண்டாகும் நிலையுடன் சம்பந்தப்பட்டது. பெடரல்
வங்கி வியாபார நடவடிக்கையை விரிவாக்கவிரும்பும்பொழுது என்ன நடக்கு
மென்பதை நீர் விவரிக்கமுடியுமா ?

நாட்டின் பொருளாதாரத்திலே இலேசான மந்தமுண்டாயிருப்பதாகக்
கொள்வோம். நீர் கமிட்டித் தலைவர் என வைத்துக்கொள்வோம். நீர்
மேற்கொள்ளக்கூடிய விரிவு நடவடிக்கைகளைக் காங்கிரஸ் கமிட்டிக்கு எவ்வாறு
விளக்குவீர் ? விபரமாக இந்த நடவடிக்கைகளைத் திருப்பிச் சொல்லுவீரா?
பெடரல் வங்கி சேமநிதிகளை விரிவாக்குகிறது. உறுப்புவங்கிகளில் டிமாண்ட்
வைப்புக்கள் 5 : 1 ஆகப் பெருக்குகின்றன. சமூகத்தின் பணம் (M) பெருகி
யிருப்பது, பணம் பெறுவது மலிவானபடியால்; அதாவது கடன்பத்திரம்,
ஈடு முதலியவற்றுக்கு வட்டிகுறைந்துவிடுகிறபடியால். முதலீடு செய்வதற்
கும் அரசாங்கச் செலவுக்கும் கடன் எடுப்பது இலேசாகிவிட்டது. அதனால்
மு + அ (I + G), நீண்டகாலப் பயன்தரும் நுகர்வுப்பொருள் (C) என்ப
வற்றில் பெருக்கமுண்டாகிறது. ஈற்றிலே நு + மு + அ (C + I + G)
கோட்டிலே நகர்வினாலேற்படும் பெருக்குமெண் விளைவுகளினால் வருமானம்,
வேலைவாய்ப்பு என்பவற்றிலும், ஒரு சமயம் விலைமட்டத்திலும் மாற்றமுண்டா
கிறது.

**பெடரல் ரிசர்வ் வங்கிகளின் ஐந்தொகை :**

பணக்கொள்கை இயங்கும் தன்மையைத் தூரதிருஷ்டிக்கண்ணாடி
கொண்டு ஆராய்ந்துவிட்டோம். இனி அதன் இயக்கத்தை நுணுக்கமாக
ஆராயலாம். பெடரல் ரிசர்வ் கொள்கையைப் பூதக் கண்ணாடி கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



ஆராயவேண்டியதில்லை. அது பணம், வங்கிவிடயம் என்பவற்றின் இடைக்கால அறிவுக்கிரமமாகும். வங்கிச் சேமநிதிகளைப் பாதிக்கும் வகையில் பெடரல் வங்கி என்ன சாதனங்களைப் பயன்படுத்துகிறது என்பதைப் பற்றி ஒருபொது நோக்கைப் பெறவேண்டும்.

12 ரிசர்வ் வங்கிகளின் கூட்டான ஐந்தொகையை அட்டவணைப் படுத்திக் காட்டும் அட்டவணை 1 ஐப் பார்க்க. முதலாவது சொத்து பெரும்பாலும் தங்கச் சான்றிதழ்களாயிருப்பதைப் பார்க்கலாம். அதாவது திறைசேரி, பெடரல் வங்கிக்கு அனுப்பிய பற்றுச்சீட்டு. இது தன் களஞ்சியசாலைக்கு வந்த தங்கத்தைப்பற்றியது. எஞ்சிய சொத்துக்கள், ஐக்கிய அமெரிக்க அரசாங்கப் பங்குகளைப் பற்றியவை. இந்த அமிசத்தின் தாற்பரியம் பற்றி விரைவில் விளக்குவோம். சிறு கழிவுகள், கடன்கள், உண்டியல் அங்கீகாரங்கள் என்ற வகையைச் சேர்ந்த அமிசங்களிலே பிரதானமாக அங்கத்துவ வங்கிகளுக்குரிய கடன்களும், முற்பணங்களும் அடங்கும். இத்தகைய கடன்களுக்கு பெடரல் வங்கி விதிக்கும் வட்டி, "கழிவு வட்டி" எனப்படும். இது 12 ரிசர்வ் வங்கிகளிலும் அநேகமாக ஒரே வீதமாயிருக்கும்.

வலப்பக்கத்திலே, வழக்கமான மூலதனக் கணக்குக்கள் உண்டு ; அங்கத்துவ வங்கிகள் ஆரம்பத்திலே போட்ட மூலதனமும், திரண்ட உபரியும் இதில் சேரும். திரண்ட உபரியானது இத்தகைய இலாபகரமான தொழிலுக்கு அதிகமாயிருக்கும். ஆனால் ரிசர்வ் வங்கி தனது உபரி இலாபம் முழுவதையும் திறைசேரிக்குக் கொடுத்துவிடுகிறபடியால், அந்த நிலை உண்டாவதில்லை.

**எமது பணச்சப்பிளையானது பெடரல் ரிசர்வ் நோட்டுக்களிலும், வைப்புக்களிலும் தங்கியிருக்கிறது.**

அட்டவணை 1. 12 பெடரல் ரிசர்வ் வங்கிகளின் கூட்டான ஐந்தொகை, 1960 ஜூன் 30. (பில்லியன் கணக்கில்) (அ) உழைப்பால் வரக்கூடிய சொத்தைக் கட்டுப்படுத்தல் (அரசாங்கக் கடன்பத்திரம், பங்குகள் என்பன). பெடரல் வங்கி (ஆ) தனது பொறுப்புக்களையும் கட்டுப்படுத்துகிறது (வைப்புக்களும் பெடரல் ரிசர்வ் நோட்டுக்களும்). அதன்பயனாக (இ) பொருளாதாரத்தின் பணச் சப்பிளையை (நாணயம், கேட்டவுடன் கொடுக்கும் வைப்புக்கள்) கட்டுப்படுத்தல்.

| சொத்துக்கள் | | பொறுப்புக்களும் தேறியபெறுமானமும் | |
|---|---|---|---|
| தங்கச்சான்றிதழும் ஏனைப்பணமும் | 19.7டொ. | மூலதனக் கணக்கு .. | 1.3டொ. |
| ஐ. அமெரிக்க கடன் பத்திரம் .. | 26.5 | பெடரல் ரிசர்வ் நோட்டு .. | 27.5 |
| கழிவு, கடன், அங்கீகாரம் .. | 0.3 | வைப்பு: அங்கத்துவவங்கிசேமநிதி | 17.9 |
| நானாவித சொத்துக்கள் (பிரதானமாக வசூலாகாத அமிசங்கள்) .. | 5.9 | ஐ. அமெரிக்க திறைசேரி .. | 0.5 |
| | | வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 0.7 |
| | | நானாவித பொறுப்புக்கள் .. | 4.5 |
| மொத்தம் | 52.4டொ. | மொத்தம் | 52.4டொ. |

www.padippakam.com



பெடரல் ரிசர்வ் நோட்டுக்களே பெடரல் வங்கியின் முக்கியமானபொறுப்புக்கள். இவைதாம் நாம் சட்டைப் பையிலே கொண்டு திரியும் பத்து டொலர் நோட்டும் ஐந்து டொலர் நோட்டுமாகும். இவை ஐ. ஒ. யூக்கள். இவற்றுக்கு பெடரல் வங்கி வட்டிகேட்பதில்லே. காங்கிரஸ், நோட்டடிக்கும் இந்த விசேட சலுகையைப் பெடரல் வங்கிக்குக் கொடுத்துள்ளது.

வைப்புப் பொறுப்புக்கள் பற்றி, அதிகம் கூறவேண்டியதில்லே. ஐக்கிய அமெரிக்க அரசாங்க வைப்புக்கள், வெளிநாட்டு மத்திய வங்கி வைப்புக்கள், நானுவித வைப்புக்கள் எல்லாம் இதிலே சேர்ந்துள்ளன.

அங்கத்துவ வங்கிகள் தமது சேமநிதி இருப்புக்களேப் பெடரல் ரிசர்வ் வங்கிகளிலே வைப்பாகக் கொண்டிருக்கும். இது மிக முக்கியமானவிடயம். பொக்கிஷசாலேயில் சொற்ப பணத்தோடு இவையுஞ் சேர்ந்து, பன்மடங்கு வைப்பு ஆக்கத்தை உறுப்புவங்கிகள் உண்டாக்க உதவும் சேமநிதியென நாம் முன்னர் குறிப்பிட்டனவெல்லாம் இவையே.

பெடரல் வங்கி, அரசாங்கக் கடன்பத்திரங்களேயும் தள்ளுபடிச் சொத்துக்களேயும் வைத்திருக்கும் முறையை மாற்றுவதன்மூலம் வியாபார வங்கிகளிலேயுள்ள சேமநிதிகளில் மாற்றங்களேயுண்டாக்கலாம். இதன் பயனுக நாம் முன்னே கூறிய ஐந்துபடிமுறையைத் தூண்டலாம். அரசாங்கக் கடன் பத்திரங்களும் தள்ளுபடிகளும் சேர்ந்து "ரிசர்வ் வங்கிநாணயம்" எனக் கொள்ளப்படும். இந்தவிடயத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பெடரல் வங்கி நாணயத்தைப் பெருக்கவோ சுருக்கவோ விரும்புகின்றனவென்பதைக் காட்டும். ஆதலால் அவதானிகள் பத்திரிகை அறிக்கைகள்மூலம் இதைக் கவனித்து வருவர். (பின்னுல் 2 ஆம் படத்திலே முக்கியமான இந்த ஐந்தொகை அமிசங்கள் சமீபகாலத்திலே எவ்வாறு மாற்றமடைந்தன என்பதை அறியலாம்).

**பெடரல் ரிசர்வ்வங்கியின் விரகறிந்த பணக்கொள்கைகள்**

பெடரல் ரிசர்வ் வங்கி தனது ஐந்து படிக்கிரமத்தை ஆரம்பிப்பதற்கு மூன்று முக்கியமான சாதனங்களே வைத்திருக்கிறது. அவை வரிசைக் கிரமப்படி பின்வருமாறு :—

(1) பகிரங்கச் சந்தைநடவடிக்கைகள்

(2) தள்ளுபடிவீதக் கொள்கை

(3) அங்கத்துவவங்கிகளின் சட்டபூர்வமான சேமநிதிநிபந்தனேகளே மாற்றுதல்.

பெடரல் வங்கி சில சமயம் வேறும் நான்கு சிறிய சாதனங்களேப் பயன்படுத்துவதுண்டு. அவையாவன :

(4) ஒழுக்க உணர்ச்சியைத் தூண்டிவிடுதல்.

(5) பங்குகளே வாங்கச் செய்யும் கடன்சம்பந்தமான எல்லேக் கோட்டு நிபந்தனேகளேப் பொறுக்கியெடுத்துக் கட்டுப்படுத்தல்.

www.padippakam.com



(6) ஸ்தாபன ஒப்பந்தம்போன்ற நுகர்வோர் கொடுகடன் விடயமாய்ப் பொறுக்கியெடுத்த கொடுகடன் கட்டுப்பாடு செய்தல்.

(7) வீட்டு அடமான ஒப்பந்த நிபந்தனைகள் சம்பந்தமாகத் தேர்ந்த கட்டுப்பாடு செய்தல். கடைசி இரண்டு அதிகாரங்களையும் காங்கிரஸ் 1952 இலும் 1953 இலும் கைநெகிழவிட்டது.

பணக்கொள்கையின் மூன்று பெரிய சாதனங்களை ஆராயலாம்.

**பகிரங்கச்சந்தை நடவடிக்கை :** அரசாங்கக் கடன்பத்திரங்களைப் பகிரங்கச் சந்தையிலே (பிரதானமாக நியூயோர்க் நகரில்) வாங்குவதனாலும் விற்பதனாலும் ரிசர்வ் வங்கி அதிகாரிகள் அங்கத்துவ வங்கிகளின் சேமநிதிகளை இறுக்கலாம் அல்லது இளக்கிவிடலாம். இந்தப் பகிரங்கச் சந்தை நடவடிக்கையே, பெடரல் வங்கியின் முக்கியமான திர நிலையுண்டாக்கும் சாதனம். பகிரங்கச் சந்தைக் கமிட்டி அடிக்கடி சந்தித்து அரசாங்கக் குறுந்தவணைக் கடன்பத்திரங்களை வாங்கி, சேமநிதியை மேலும் வங்கிமுறையில் புகுத்துவதா, அல்லது பத்திரங்களை விற்றுக் கருமங்களை இறுக்கிக் கொள்வதா என்பதை நிச்சயிப்பது வழக்கம். இது நிரந்தரமாக நிகழ்வதொன்று.

பகிரங்கச் சந்தை நடவடிக்கை சேமநிதிகளை எவ்வாறு மாற்றுகிறது என்பதை அறியவேண்டுமானால், பணவீக்கம் உண்டாகியிருப்பதாகப் பெடரல் வங்கி நினைக்கிறதென வைத்துக்கொள்வோம். வங்கியின் பகிரங்கச் சந்தைக் கமிட்டி இரகசியக் கூட்டமொன்றைக் கூட்டும். வாஷிங்டன் அங்கத்தவரும், நியூயோர்க் அங்கத்தவரும் கூறும் யோசனைகளை எல்லாரும் கருத்தோடு கேட்பர். " நாம் 1 பில்லியன் டொலர் மதிப்புள்ள அரசாங்கக் கடன் பத்திரங்களை விற்போம் ; அதனால் சேமநிதிகளும், கடன்வசதிகளும் சுருங்கும் " என்ற பிரேரணை பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்படும்.

நியூயோர்க் வங்கியின் பிரதிநிதி எழுந்து " 3 வீத அரசாங்க நெடுந்தவணைப் பத்திரங்களை விற்றாலென்ன ? இவற்றுக்கு இன்னும் 38 வருட ஆயுளுண்டு. சந்தையிலே அவற்றை விற்கும்படி கட்டளையிட்டால் அவற்றின் விலை 90 இலிருந்து 88 ஆக இறங்கிவிடும். அத்தகைய கடன்பத்திரங்களுக்கு இஃது உயர்வான வட்டியாகும். எல்லாக் கடன்பத்திரங்களுக்கும் உபரியான் நெடுந்தவணை வட்டிவீதம் உண்டாகும். இது நிச முதலீட்டைக் குறைக்கும். அதுவே எமது நோக்கம் " என்று கூறலாம்.

வாஷிங்டன் வங்கிப்பிரதிநிதிகள் இதை ஆட்சேபிக்கலாம். நியூயோர்க்குக்கும் வாஷிங்டனுக்குமுள்ள பழைய சண்டை இது. வாஷிங்டன் "இல்லை ; 1953 ஆம் ஆண்டு துவக்கம் குறுந்தவணை அரசாங்கக் கடன்பத்திரங்கள் கணக்கிலே நமது பகிரங்கச் சந்தை நடவடிக்கையை நடத்த ஒப்புக் கொண்டுள்ளோம். நெடுங்கால வட்டி, குறுங்காலவட்டி ஆகிய விவகாரத்தைப் பகிரங்கச் சந்தைக்கே விட்டுவிடுவோம் " என்று சொல்லலாம். வாஷிங்டனும் நியூயோக்கும் இவ்வாறு மாறுபட்டால் ஈற்றிலே யார் வெற்றி

www.padippakam.com



பெறுவார் ? பகிரங்கச் சந்தை விற்பனவு உண்டியல் கணக்கில் முடிவடையலாம் (90 நாள் அரசாங்கக் கடன்பத்திரம்). யாருக்கு அந்த உண்டியல் விற்கப்பட்டது ? யாருக்குந் தெரியாது. அரசாங்கக் கடன்பத்திரங்களில் வியாபாரஞ் செய்பவை (இவற்றில் பெரியபுள்ளிகள் ஐந்து ஆறு உண்டு) வாங்குவோர் பெயரைச் சொல்லமாட்டா. ஆனல் அவை பிரதானமாக காப்புறுதி கம்பெனியாகவோ, பெரிய வியாபாரக் கம்பெனியாகவோ, வர்த்தக வங்கிகளாகவோ இருக்கலாமென நீங்கள் ஊகிக்க இடமுண்டு.

கடன்பத்திரங்களை வாங்குபவர் செக் மூலம் பணம் கொடுப்பார். பெடரல் வங்கி அந்தச் செக்கை அங்கத்துவ வங்கிக்கு அனுப்பும். அந்த வங்கி சேமநிதிக் கையிருப்பை பெடரல் வங்கியில் இழக்கும். அட்டவணை 2, பெடரல் சேமநிதி ஐந்தொகையை எவ்வாறு கடையாக இது தாங்குமென்பதைக் காட்டுகிறது. பகிரங்கச் சந்தைவிற்பனவு பெடரல் வங்கியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் குறைத்துவிட்டது. (ஆரம்பத்திலே அஃது அங்கத்துவ வங்கிச் சேமிப்பிலும் குறைவுண்டாக்கிவிட்டது. டிமாண்ட் வைப்புக்கள் பத்திரம் வாங்குவோருக்குச் செல்லுபடியாயின).

இது பகிரங்கச் சந்தைவிற்பனைகளின் சக்தியை குறைத்துக் கூறுவதாகிறது. 1 பில்லியன் டொலர் அரசாங்க உண்டியல் விற்பனை, சமூகத்தின்

**பகிரங்கச் சந்தை விற்பனவு சேமநிதியைக் குறைத்து, வைப்பை 5 : 1 ஆகக் குறைக்கிறது :**

முதலில் இந்தமாற்றம் பெடரல் ரிசர்வ் வங்கியின் ஐந்தொகையிற் காணப்படும்.

| பெடரல் ரிசர்வ் சொத்துக்கள் | | பெடரல் ரிசர்வ் பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க சொத்துக்கள் | — 1.0டொ. | அங்க வங்கிகள் ரிசர்வ் | — 1.0 டொ. |
| மொத்தம் | — 1.0 டொ. | மொத்தம் | — 1.0 டொ. |

**ஈற்றிலே இந்த மாற்றத்தை அங்கத்துவ வங்கி ஐந்தொகையிற் காட்டல்.**

| அங்கத்துவவங்கி சொத்துக்கள் | | அங்கத்துவவங்கிப் பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| சேமநிதிகள் | — 1.0 டொ. | டிமாண்ட் வைப்புக்கள் | — 5.0 டொ. |
| கடன், முதலீடு | — 4.0 | | |
| மொத்தம் | — 5.0 டொ. | மொத்தம் | — 5.0 டொ. |

**அட்டவணை 2.** பெடரல் ரிசர்வ் வங்கி, அங்கத்துவ வங்கி என்பவற்றின் ஐந்தொகையில் மாற்றம். (பில்லியன் கணக்கில்.) பகிரங்கச் சந்தைவிற்பனவு 1 பில்லியன் டொலர் சேமநிதியை நாசம் பண்ணிஞல் 5 பில்லியன் டொலர் டிமாண்ட் வைப்புக் குறையும். அங்கத்துவவங்கிகள் கடன்பெறுவதோடு தமது முதலீடுகளை (அதாவது தமது ஈடுகளை) 4 பில்லியன்வரை விற்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



பண விநியோகத்தை 5 : 1 ஆகக் குறைத்ததாக முடியும். என்? அதற்குரிய காரணங்களை முந்திய அத்தியாயத்திலே எடுத்துக்காட்டினோம்.

1 பில்லியன் டொலரால் சேமநிதி குறைகிறது. இதனால் 5 : 1 கணக்கில் வைப்புக்கள் குறையத் தொடங்கும். அட்டவணை 2 பகிரங்கச்சந்தை நடவடிக்கை மூலம் சேமநிதி குறைக்கப்பட்டபின் உண்டான நிகழ்ச்சியைக் காட்டுகிறது. ஈற்றிலே பெடரல் வங்கியின் பகிரங்கச் சந்தை விற்பனவு, 5 : 1 வீதமான சுருக்க அமுக்கத்தை வங்கி வைப்புக்கள் மீது போட்டுவிட்டது.

பகிரங்கச் சந்தை நடவடிக்கையை நீர் நன்கு அறிந்துகொண்டீரா என்பதைப் பரீட்சிப்பதற்கு, எதிர்ப்போக்கான நிகழ்ச்சிமுறையை ஆராய்க. வருமானங்களும் உத்தியோகங்களும் மிகக் கீழானமட்டத்தில் இருப்பதாகக் கொள்க. அப்போது பகிரங்கச் சந்தைக்கமிட்டி என்ன செய்யவிரும்பும் ? அரசாங்க உண்டியல்களைப் பகிரங்கச் சந்தையிலே வாங்கி அங்கத்துவ வங்கிகளின் சேமநிதியை உயர்த்துமா ? அதனால் பணத்தை (M) 5 : 1 விகிதத்தில் அதிகரிக்குமா ? அதன் பயனாகக் கடன் வசதியை மலிவாக்கி இலேசாகப் பெறச் செய்து, முதலீட்டை உயர்த்தி நு+மு+அ (C+I+G) ஐ உயரச்செய்து தே. தே. உ. (N N P) யை பன்மடங்கு அதிகரிக்குமா ?

**தள்ளுபடி வீதக் கொள்கை—இரண்டாவது சாதனம் :** பெடரல் ரிசர்வ் வங்கிகள் அங்கத்துவ வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதுமுண்டு. இவற்றை நாம் " தள்ளுபடிகள் " என்போம். பெடரலின் தள்ளுபடிகள் வளர்ச்சியடையத் துவங்கினால், வங்கிகள் பெடரல் வங்கிகளிலிருந்து கடன்வாங்குகின்றன. இவை வங்கிச் சேமநிதியை வளரச்செய்கின்றன. அவற்றினுடைய தள்ளுபடிகள் விழத் துவங்கினால் வங்கிச் சேமநிதிகள் சுருங்கத் துவங்கும்[1]

ஆனால் பெடரல் வங்கி தான் விரும்பியபடி வங்கிவீதத்தை ஏற்படுத்த முடியாது. தள்ளுபடிகளைப் பெருக்கவேண்டுமானால் வியாபாரிகளை அனுப்பி அவ்வாறு செய்ய முடியாது. வங்கிகள் தன்னிடம் வரும்வரை அது

1. பெடரல் ரிசர்வ் வங்கிமுறை ஆரம்பிக்கப்பட்டபொழுது தள்ளுபடிக்கொள்கையே மிக முக்கியமானதெனக் கருதப்பட்டது. அங்கத்துவ வங்கிகள் வாடிக்கைக்காரரின் புறநோட்டுக்களை ரிசர்வ் வங்கிகளுக்கு அனுப்பிப் புதுக்காசாக மாற்றி " புனர்தள்ளுபடி " செய்யப்பண்ணுவதே இதன் நோக்கமாகும். இந்த முறையைப் பின்பற்றுவதால் நம்பிக்கையான விவசாயிகட்கும், வியாபாரிகட்கும் பணம் கொடுப்பதற்கு அயலண்டையிலுள்ள வங்கிகளுக்கு வசதியுண்டாகும் என எண்ணப்பட்டது. ஆனால் அஃது அப்படி நிகழவில்லை. அதற்கு இரு காரணங்களுண்டு. முதலாவதும் மிக முக்கியமானதுமான காரணம், பழுதற்ற பொருளாதார நிலைமையுண்டாக வேண்டுமானால், நல்ல காலத்தில் விரிந்தும் மந்தமான காலத்தில் சுருங்கியும் போகக்கூடிய பணச் சப்பிளை இருப்பது விரும்பத்தக்கதன்று. இது வியாபாரச் சக்கரங்களையும் பணவீக்கத்தையும் ஊக்கப்படுத்துவதாகும். இரண்டாவது, வாடிக்கைக்காரரின் புறநோட்டிலும் பார்க்க அரசாங்கக் கடன்பத்திரங்களின் அடிப்படையில் பெடரலிலிருந்து பணத்தைக் கடன்பெறுவதை வங்கிகள் விரும்புகின்றன. 1935 ஆம் ஆண்டு துவக்கம் கடன் பெறுவது பெரும்பாலும் அரசாங்கக் கடன்பத்திரங்களினடிப்படையிலேயே நடைபெற்றது. அதனால் தான் முன்னர் நாம் வழங்கிய " புனர் தள்ளுபடி வீதம் " என்பதைவிட்டு இப்போது " தள்ளுபடிவீதம் " எனப் பேசுகிறோம். (இங்கிலாந்திலே வங்கிவீதம் எனவே கூறுவர்).

www.padippakam.com



காத்திருக்கும். அது தள்ளுபடி வீதத்தை அறிவிக்கலாம். பன்னிரண்டு பிரதேசங்களிலும் அந்தவீதமே அனுட்டிக்கப்படும்.

தள்ளுபடியென்னும் கடன் கொடுப்பதை அதிகரிக்க விரும்பினால் அது வட்டிவீதத்தைக் குறைக்கலாம். கடன் கொடுப்பதை இறுக்கமாக்க விரும்பினால் வட்டிவீதத்தை உயர்த்தலாம். கடன்கொடுக்கும் கொள்கை விடயத்தில் பெடரல் வங்கி தானாக முயற்சியெடுக்கக்கூடாது. அது காத்திருந்து பார்க்கலாம்; தள்ளுபடிசெய்யலாம். தனது வட்டிவீதத்தைக் கவர்ச்சியுடையதாக்கலாம். ஆனால் தான் நினைத்த அளவுக்குக் கடன் கொடுப்பதைத் திட்டப்படுத்தமுடியாது. பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளிலேதான் அது முன்னுக்குவந்து தன் போக்கில் நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால் தள்ளுபடி செய்யும் அதிகாரத்தின் சக்தியைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. கடன் கொடுக்கும் அதிகாரத்தைத் துர்ப்பிரயோகஞ் செய்யக்கூடாதென்பதை அது நன்கு உணரும். இந்த நிதியை, அது எப்பொழுதும் பயன்படுத்தக்கூடாது. கடன் கொடுக்கும் சக்தியைக் குறைக்கும் அதிகாரம் பெடரல் வங்கிக்கு உண்டு. அஃது இல்லை என்பது கடன் மறுப்பதன்மூலம் உண்டாகிறது.

தள்ளுபடி வீதத்தை மாற்றுதல்: பெடரல் வங்கி தான் கொடுக்கும் கடனுக்கு விதிக்கும் வட்டிவீதத்தை நியூயோக்கிலும், சிக்காகோவிலும், பொஸ்டன் மாகாணத்திலுமுள்ள வங்கியாளரெல்லாம் கவனித்தபடியேயிருப்பர். உதாரணமாக, வியாழக்கிழமை வட்டிவீதம் உயர்த்தப்பட்டால் பங்குகளும், பத்திரங்களும் மலியத்துவங்கும். அமெரிக்க வட்டிவீதம் இலண்டன், பாரிஸ் வட்டிவீதங்களையும் முதலீடுகளையுங் கூடப் பாதிக்கும்.

இவ்வாறு பெடரல் வங்கி வட்டியை உயர்த்தினால், "பணவீக்கமுண்டாவதாகக் கவர்ணர்சபை நினைக்கிறதுபோலும்" என்று சந்தையை அறிந்த பலர் சொல்லக்கூடும். வட்டிவீதத்திலேயுள்ள மாற்றங்களும், கடன்வசதியிலுண்டான இறுக்கம்பற்றிய குறிப்புக்களும் கடன்வசதிச் சந்தையைப் பாதிக்கலாம்.

பெடரல்வங்கி இலேசான கடன்வசதியை விரும்பினால், மேலே கூறிய கிரமம் அடிதலைமாறி நடக்கும். சந்தையிலே தென்படும் இலேசான தன்மையைப் பிரதிபலிக்கக்கூடியவாறு வட்டிவீதம் குறைக்கப்படுகிறது. 1957 ஆம் ஆண்டின், நவம்பர் வியாழக்கிழமைக்குப் பின்னர் அதாவது வட்டிவீதம் $3\frac{1}{2}$ இலிருந்து 3 ஆகக் குறைக்கப்பட்ட நாட்டொடங்கிப் பங்குகளும், பத்திரங்களும் விலையேறின[1].

1. தள்ளுபடிக் கிரமத்தைப் பற்றிய கண்டனங்களும் அதைச் சீர்திருத்துவதற்கான முறைகளும் அனுபந்தத்திலே காட்டப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



**சேமநிதி நிபந்தனைகளை மாற்றுதல் : அருமையாகப் பயன்படுத்தும் தீவிர மான ஆயுதம்.**

அங்கத்துவ வங்கிகளிலே போடப்பட்ட வைப்புக்கு ஈடாக அவை வைத்திருக்க வேண்டிய சட்டபூர்வமான சேமநிதி விகிதத்தை உயர்த்தவோ, தாழ்த் தவோ, பெடரல் ரிசர்வ் சபைக்குக் காங்கிரஸ் அதிகாரம் வழங்கியுள்ளது. மிகுவிரைவாகக் கடன்வசதியை இறுக்கமாக்கப் பெடரல் வங்கி விரும்பினல், நகரத்து வங்கிகளுக்கும் கிராமத்து வங்கிகளுக்குமான சேமநிதி விகிதத் தைப் பல சதவீதம் 22 வரைக்கும் 14 சதவீதத்துக்கும் உயர்த்தலாம். கடன்வசதியை மேலும் இறுக்கமாக்க விரும்பினல் இந்த எல்லைகளுக்கு மேலே உயர்த்துவதற்கு உரிமை தரு மாறு பெடரல்சபை, காங்கிரஸைக் கேட்கும்.

கடன்வசதியை இலேசாக்க விரும்பினல் மேலே சொன்னதற்கு மாருகச் செய்யலாம். அதாவது சட்டபூர்வமான சேமநிதி விகிதத்தைக் குறைக்க லாம். மேன் மேலும் குறைத்து 10, 7 என்ற விகிதத்துக்கு இறங்கும் வரை செய்யலாம். இவற்றுக்குக் குறையப்போவதானல் காங்கிரஸ் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றவேண்டும்.

சேமநிதி விகிதங்களை மாற்றுவது, மிகச் சக்திவாய்ந்த ஆயுதம். ஆன படியால் அது மிக அருமையாகவே பயன்படுத்தப்படும். சில வருடங்களுக் கொருமுறைதான் இந்த மாற்றம் உண்டாகும். பகிரங்கச் சந்தை நடவடிக் கைகளிற் கையாள்வதுபோலத் தினமும் மாற்றமேற்படுவதில்லை.

சேமநிதி விகிதத்திலே அதிகரிப்பு உண்டாக்குவதால் கடன் வசதிகள் எவ்வாறு இறுக்கமடைகின்றன? 20 வீத விகிதம் தேவையென விதிக்கப் பட்டதன் காரணமாக, வங்கிகள் 5 : 1 விகிதம் வைப்பை ஆக்கிக்கொண் டன. உபரி சேமநிதி கணிக்கத்தக்க அளவு இல்லை என வைத்துக்கொள் வோம். பெடரல் வங்கி கடன்வசதியை இறுக்கப்பார்க்கிறது ; காங்கிரஸ் சேமநிதி விகிதத்தை 25 வீதம் உயர்த்த உரிமையளிக்கிறது எனவும் வைத்துக்கொள்வோம். பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள் மூலமோ கடன் கொடுக்கும் கொள்கைமூலமோ வங்கிச் சேமநிதிகளை மாற்ற அஃது ஒன்றுஞ் செய்யாதிருந்தபோதிலும். அங்கத்துவ வங்கிகள் தமது கடன்களையும், முதலீடுகளையும் பெரிதும் சுருக்கிக்கொள்ளவேண்டும்—அத்துடன் வைப்புக் களையுஞ் சுருக்க வேண்டும். ஏன் ?

ஏனெனில், வங்கிவைப்புகள் இப்போது 4 : 1 வீதத்திலேயிருக்குமன்றி 5 : 1 வீதத்திலிருக்கமாட்டா, எனவே எல்லா வைப்புக்களிலும் $\frac{1}{5}$ விழுக்காடு உண்டாகும்.

இந்தக் குறைப்பு விரைவில் பயன்தரத்துவங்கும். அதாவது 25 வீதம் இருக்கவேண்டுமென்று சபை புதிய சட்டத்தைச் செய்யுமானல் சேம நிதிவிடயத்திலே எல்லாவங்கிகளும் குறைவுடையனவாயிருக்கும். எனவே அவை தமது கடன்பத்திரங்களிற் சிலவற்றை விற்றும், கொடுத்த கடன்களை அறவிட்டும் நிலைமையைச் சரிக்கட்டவேண்டும். கடன்பத்திரம் வாங்குவோர்

படிப்பகம்

www.padippakam.com



**சேமநிதி நிபந்தனைகளை உயர்த்தினால் அங்கத்துவ வங்கிகள் சுருங்கும்.**

*முன்னர் 1 : 5 விகிதம் நிலவியபோது*

| அங்கத்துவ வங்கிச் சொத்துக்கள் | | அங்கத்துவவங்கிப் பொறுப்பு | |
|---|---|---|---|
| சேமநிதி .. | 20 டொ. | கேட்டவுடன் கொடுக்கப்படும்வைப்பு | 100 டொ. |
| கடன், முதலீடுகள் | 80 | | |
| மொத்தம் | 100 டொ. | மொத்தம் | 100 டொ. |

*பின்னர் 1 : 4 விகிதம் நிலவியபோது*

| அங்கத்துவ வங்கிச்சொத்துக்கள் | | அங்கத்துவ வங்கிப் பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| சேமநிதி .. | 20 டொ. | கேட்டவுடன் கொடுக்கப்படும் வைப்பு | 80 டொ. |
| கடன், முதலீடு .. | 60 | | |
| மொத்தம் | 80 டொ. | மொத்தம் | 80 டொ. |

அட்டவணை 3. சட்டபூர்வமான சேமநிதித் தேவைகள் $\frac{1}{5}$ இலிருந்து $\frac{1}{4}$ ஆக உயர்ந்ததனால் உண்டாகும் விளைவு. அதே சேமநிதியடிப்படை இப்போது 5 : 1 ஐ அல்லாது 4 : 1 ஐத் தாங்குகிறது. இடைக்காலத்திலே என்ன நடக்கும் ?

தமது டிமாண்ட் வைப்புக்களைப் பயன்படுத்துவர். கடன் எடுத்தவர்கள் தமது கடன்களைக் கொடுப்பதற்காகத் தமது டிமாண்ட் வைப்புக்களை எடுத்துக் கடனை அடைப்பார்கள். சேமநிதியிலும் பார்க்க வைப்பை 5 மடங்கிலிருந்து 4 மடங்காக்கிய பின்னர்தான், இந்த நிகழ்ச்சிகள் ஒரு முடிவுக்கு வரும்.

இந்தமாற்றத்தின் பின்னர், வங்கிகளின் கூட்டு ஐந்தொகை எவ்வாறிருக்குமென்பதை அட்டவணை 3 காட்டுகிறது. இவ்வளவு சிறிய காலத்திலே இவ்வளவு பெரியமாற்றம் மிக உயர்ந்த வட்டிவீதத்தை உண்டாக்கும் ; அத்துடன் கடன்வசதிகளை இல்லாமற் செய்யும் ; முதலீட்டையும் உள்ளூராட்சிமன்றங்களின் செலவையும் பெரிதும் குறைக்கும். தேசிய வருமானமும், தொழில் வசதிகளும் பெரிதும் குறையும். ஆனபடியால் சேமநிதித் தேவைகளை மாற்றுவதாகிய இந்தச் சக்திமிக்க ஆயுதம் மிக அருமையாகவே பயன்படுத்தப்படுகின்றது[1].

1. 1936-1937 இலே சேமநிதித் தேவைகள் பெரிதும் உயர்த்தப்பட்டன. ஆனால் அந்தக் காலத்திலே வங்கிகள் " உபரி சேமநிதியை " (அதாவது சட்டத்தின்படி தேவைப்பட்ட அளவுக்கு அதிகமாக வெறும் பணத்தை) வைத்திருந்தன. கடன் கொடுப்பதிலோ, கடன்பத்திரங்களை வாங்குவதிலோ அவை முதலீடு செய்யவில்லை. சட்ட நிபந்தனைப்படி, சேமநிதியை உயர்த்துவதால் பணத்தைக் குறைக்கும் நடவடிக்கை நடைபெறவில்லை ; வட்டிவீதங்கள் ஏறும் முறையும் நடைபெறவில்லை. இன்று அந்நிலை வேறாகலாம். இன்று திடீரென்று வங்கிகளின் சேமநிதிநிலையைப் பிதுக்கினால், வங்கிகள் கடனுக்குப் பணத்தை எடுக்கும். வட்டிவீதம் உயர்ந்திருந்தாலும் கவனியாது.

படிப்பகம்

www.padippakam.com



இந்த ஆயுதம், சமீபகாலத்திலே, தேவையான சேமநிதி விகிதங்களை முக்கியமாகக் குறைக்க, மூன்று வங்கிகளையும் ஒரே தன்மையாக்கவும், வளரும் நமது தேசியப் பணவருமானத்தோடு ஒத்து நிற்கக்கூடியவாறு மொத்தப் பணச் சப்பிளையை நிலைநாட்டத் தேவைப்படும் சேமநிதிகளை வங்கிகள் வளர்க்கவும் பயன்படுத்தப்பட்டது. வியாபாரம் மந்தமான காலத்திலேயே இத்தகைய சேமநிதித் தேவைகள் குறையக்கூடும் என்பது எக்காரணத்தால் என்பதை நீர் விளக்கமுடியுமா? இந்தக் குறைப்பு கடன்வசதியை எவ்வாறு இலேசாக்கி, பணத்தை (M) அதிகரிக்கச் செய்து, வருமானத்தையும் முதலீட்டையும் விரிவடையச் செய்யுமென்பதை நீர் விளக்குவீரா?

## சிறிய ஆயுதங்கள்: குணமயமானகட்டுப்பாடும் தொகைமயமானகட்டுப்பாடும்

அறவொழுக்கத்தை எடுத்துக்கூறி மக்களைச் செயற்படுத்துவதுமொன்று. வங்கிகள் தாம் செய்யவேண்டியவற்றைச் செய்யாதுவிட்டால் ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தமது அதிருப்தியை அறிவிப்பர். உடனே வங்கியாளரை அழைத்து மனந்திறந்துபேசுவர். சமூக நலனுக்காகத் தொண்டுசெய்ய வேண்டுமென்பதை உணர்த்துவர். எதிர்காலத்துக்குரிய கடன்வசதியேற்பாடு பற்றி எச்சரிக்கை செய்வர். வங்கிப் பரிசோதகர் கருத்தோடு கணக்குப் புத்தகங்களை ஆராய்வர்.

போட்டிமனப்பான்மையுள்ள வங்கியாளர், இத்தகைய எச்சரிக்கைகளுக்கு எடுபடமாட்டார் எனப் பல பொருளியலறிஞர் கூறுவர். குறுகிய கால நடவடிக்கைகளில் இவ்வாறு ஒழுக்க நெறியை எடுத்துக்கூறுவதால் ஓரளவு பயனுண்டு. பெடரல் வங்கியிலே கடன்பெறவேண்டிய நிர்ப்பந்தமிருக்கும் போது இது நிகழ்வதுண்டு. வங்கியாளர்கூட ஏனைய மக்களைப் போல பொதுசன அபிப்பிராயத்துக்கு அடிபணியவேண்டியவரே.

## தேர்ந்த, குணமயமான கட்டுப்பாடு

தேர்ந்த குணமயமான கடன் வசதிக்கட்டுப்பாட்டுடன் தொகைமயமானதும், வங்கிச் சேமநிதிகளைப் பாதிப்பதும், கடன்வசதி இறுக்கத்தைப் பாதிப்பதுமான கடன்வசதிக்கட்டுப்பாடு ஒப்பிடப்படுகிறது. தொழிலின் விரிவான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்பார்வை செய்யும், மத்திய திட்டம் வகுத்தும் செயலாற்றும் நாடுகளிலே, தேர்ந்த கடன்வசதிக் கட்டுப்பாடு மிகமுக்கியமானதாயிருக்கும். அந்நாடுகளிலே ஒரு வீட்டைக் கட்டுவதானால் அனுமதிபெறவேண்டும். புதியதொரு பங்கு விற்பனையையோ, கடன்பத்திர விற்பனையையோ துவக்குவதற்கும் அனுமதி பெறவேண்டும்.

வங்கிகளை, பெரும்பாலும் இங்கிலாந்திலுள்ளது போன்ற பெரிய வங்கிகளைத் திறைசேரித் தலைவர் அழைப்பார். ஏற்றுமதித் தொழிலுக்கு ஆதரவளிக்கும் முறையில் கடன்கொடுக்கவேண்டுமென்றும், தேவைகளுக்கு ஆதரவளிக்கவேண்டுமென்றும் கிறிஸ்மசுக்கு முன்னர் மொத்தக்கடன்களை 10 வீதத்தால் குறைத்து விடவேண்டுமென்றும் அவர் அவற்றுக்குக்கூறுவர்

படிப்பகம்

www.padippakam.com



**எல்லைக்கோட்டுத் தேவைகள்.**—இத்தகைய தேர்ந்த கடன்வசதிக்கட்டுப் பாடுகள் மிகச் சக்திவாய்ந்தனவாயிருக்கலாம். விலைவாசிகள் விடயமாகத் தலையிடுவது, சமாதான காலத்தில், அமெரிக்காவில் வழக்கமில்லை. ஆனால் ஒரு புறநடைமாத்திரமுண்டு. எல்லை நிபந்தனைகளை விதிக்கப் பெடரல் ரிசர்வ் வங்கிக்கு உரிமையுண்டு. அதன்படி மக்கள் சாதாரண பங்குகளையும் முன்னுரிமைப் பங்குகளையும் எவ்வளவுக்கு வாங்க உரிமையுண்டென்று அது விதிக்கும். இதன்படி 1961 ஆம் ஆண்டிலே நான் 30 வீதம் தரகரிடம் கடன்பட்டுக்கொண்டு, ஏனைய 70 வீதத்தை என் செலவிலே போடலாம். 1958 இலே நான் 50 வீதம் கடன் படலாம்.[1]

**தவணைக் கட்டணத்தின்மீது கட்டுப்பாடு.** இவையிரண்டையும்விட பெடரல் வங்கி தவணைக்கட்டண ஒப்பந்தங்களுக்கு எல்லை விதிக்க உரிமையுடைய தாயிருந்தது. கொரியா யுத்தம் நடந்தகாலத்திலே, கார், வீட்டுத் தள வாடம் முதலிய பொருள்களை வாங்கும் காலத்தில் ஒரு தொகை வரியாக விதிக்கப்பட்டது. இதை "W விதி" என்றனர். கடனுக்கு வாங்க உத்தேசித்துள்ள பொருள்கள்மீதும் வரி விதிக்கப்பட்டது. இந்த W விதி மிகப் பயனுடையதாயிருந்தது. பிரிட்டன் முதலிய நாடுகளிலும் இது மிக்க பயனுடையதாய்க் காணப்பட்டது. கொரிய யுத்தம் முடிந்ததும் மக்கள் இதனை வெறுத்தனர். எனவே பெடரல் வங்கிக்கிருந்த இந்த அதிகாரம் வழக்கிறந்துபோகவிடப்பட்டது.

### ஈட்டு நிபந்தனைகள்மீது கட்டுப்பாடு

ஈட்டுக்குப் பணம் வாங்குவோர் கொடுக்கவேண்டிய நிபந்தனைகள், எத்தனை வருடங்களிலே தவணை கொடுக்கவேண்டு மென்பவற்றை பெடரல் ரிசர்வ் வங்கி தீர்த்துக்கொள்ளலாமெனக் காங்கிரஸ் அதற்கு அதிகாரம் வழங்கி யிருந்தது. இந்த "X விதி"யானது வங்கிச் சபைக்கு வீடு கட்டுஞ் செலவு சம்பந்தமாக அதிகாரம் வழங்கிற்று. தவணைப் பணவீதத்தை உயர்த்தித் தவணைகளைச் சுருக்குவதனால் சபை வீடு கட்டுந்தொழிலைக் கட்டுப்படுத்த லாம். இதற்கு எதிர்மாறுகச் செய்யுமானால் வீடுகள் அதிகம் கட்டப்பட லாம்.

1953 இல் இந்த உரிமையையும் காங்கிரஸ் வழக்கொழிந்துபோகச் செய் தது. இந்த அதிகாரத்தை இழப்பதை பெடரல் வங்கி பொருட்படுத்த வில்லை. ஆனால் வெறும்வெளியை நிரப்பாமல் இருப்பது இயற்கைக்கு விருப் பமான விடயமன்று. இந்த அதிகாரத்தை மத்திய வங்கிசெலுத்தாவிட்டால்

1. 1929 ஆம் ஆண்டு பூரிப்புச் சந்தையில் இவ்விதவிதி ஒன்றுமிருந்ததில்லை. ஒருவர் ஒரு பங்குவிலையில் 70, 80, 90 வீதத்தைக்கூடக் கடன்படலாம். எனவே முறிவு ஏற்பட்டதும் தரகர், மேலும் எல்லையைக் கூட்டுமாறு வாடிக்கைக்காரருக்குத் தொலைபேசிமூலம் அறிவித்தனர். பங் குகளின் விலைகுறைவதை அடைப்பதற்கே இந்த எல்லைகோரப்பட்டது. பல வாடிக்கைக்காரருக்கு அவ்வாறு செய்ய வசதி ஏற்படவில்லை. இதன் விளைவாகத் தரகர்மார் பங்குகளை விற்றனர். ஏற்கனவே பங்குகள் விலை குறைந்திருந்தன. அதனோடு இந்தப் பங்குகளும் விலையாகவே பெரிய வியாபார மந்தமுண்டானது.

www.padippakam.com



வேறு ஏதாவது ஒரு தாபனஞ் செலுத்தும். எனவே வீடு கட்டும் முயற்சிக்கு அரசாங்கம் உதவியளித்து வருகிறது. "வெட்டரன்ஸ் நிர்வாகம்" என்ற தாபனம் (VA) ஈட்டுக் கடன்களுக்கு உத்தரவாதமளிக்கிறது. "பெடரல் ஹௌஸிங்" தாபனமும் (F. H. A.) இவ்வேலையைச் செய்கிறது. "பன்னி மாய்" என்ற தாபனம் அதாவது பெடரல் நாஷனல் மோட்கேஜ் சங்கம், ஈடுகளை வாங்கிக் கடன்வசதி செய்கிறது. இந்த அரசாங்கத் தாபனங்கள் பெடரல் வங்கியோடு எவ்வித தொடர்புங் கொண்டிருக்கவில்லை. இருந்தும் அவை, நீர் எதிர்பார்ப்பதையே செய்துதருகின்றன; ரிசர்வ் வங்கிச் சபைக்குச் சாதகமில்லாதவற்றைச் செய்கின்றன. இவற்றின் படிப்பினையென்ன ? கடன்வசதிச்சந்தையின் சில பிரிவுகளில் அக்கறை கொண்டே அரசாங்கம் தனது கொள்கைகளை வகுக்கிறது. அப்படியான சந்தைகளில் வட்டிவீதம் தன்விருப்பப்படி தனது மட்டத்தைக் கண்டு கொள்ள அரசாங்கம் விடுவதில்லை. வீடுகட்டுதல், சிறுகைத்தொழில் என்பவற்றை அரசாங்கம் ஊக்கப்படுத்துவதிலும், பங்கு ஊகவியாபாரம் போன்றவற்றைத் தவிர்ப்பதிலும் முயன்று வருகிறது.

**சர்வதேசத் தங்க நடமாட்டம் : மற்றொன்றுவிரித்தல்**

அதிகாரிகள் விரும்பிய பிரகாரம் வங்கிச் சேமநிதிகளை மாற்றும் நோக்கத்துடன் பெடரல் ரிசர்வ் எடுக்கும் நடவடிக்கைகளிலேதான் மொத்தப் பணத்தின் எல்லாப் போக்கும் தங்கியிருக்கிறதென்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டே இதுவரை பேசினோம். நமது (M) பணத்தைப் பாதிக்கும் மற்றொரு வெளிச்சக்தியுமுண்டு. அதுவே தங்கநடமாட்டம். இது ஒன்றில் இறக்குமதியாயிருக்கலாம் அல்லது ஏற்றுமதியாயிருக்கலாம். பெடரல் வங்கி எந்த நடவடிக்கையை எடுக்காவிட்டாலும், தங்க நடமாட்டம் பணத்தில் (M) மாற்றத்தை ஓர் அர்த்தத்தில் உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். ஆனால் பெடரல் வங்கியின் பணக்கொள்கை சம்பந்தமான மூன்று ஆயுதங்களும், தேசிய நலனுக்கு மாறானவகையில் M இலே ஏற்படும் மாற்றங்களை நிவர்த்திசெய்ய, அதிகாரிகளுக்குத் துணைபுரியும் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்நூலின் ஐந்தாம் பிரிவில் சர்வதேச வர்த்தகம்பற்றி விரிவாகக் கூறுவோம். இங்கே தங்க ஓட்டம்பற்றிய வங்கிவிடயங்களை மாத்திரம் சுட்டிக் காட்டுவோம். அமெரிக்க வியாபாரிகள் ஏராளமான பொருள்களை ஏற்று மதி செய்கிறார்களென்றும், அவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருளிலும்பார்க்க அதிகமென்றுங் கொண்டால், வெளிநாட்டார் எங்களுக்குத் தங்கமாகக் கொடுப்பார்கள். அதனால் நமது வங்கிகளிலே வைப்பு 5 : 1 ஆன வீதத்தில் பெருகும். நாம் முன்னர் கொடுத்த உதாரணங்களிலே, இதை ஒரு விதவை புதிய சேமநிதியை அங்கத்துவவங்கியில் போட்டுவைக்கக் கொண்டுவரும் தன்மையாகக் காட்டினோம். ஆனால் இதற்கு மாறாகச் சமீபகாலங்களிலே நடந்ததுபோல, அமெரிக்கா ஏற்றுமதியிலும் பார்க்க இறக்குமதியில் அதிகஞ் செலவுசெய்கிறதென்று கொண்டால்,

படிப்பகம்

www.padippakam.com



அது தங்கத்தை இழக்கும். அதனால் சேமநிதி குறையும். பெடரல் ரிசர்வ் சபை, இதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் M இக்கு என்ன உண்டாகும் ? பணச் சப்ளை 5 : 1 வீதம் சுருங்கிவிடும்.

**பழைய தங்க அளவைத்திட்டம்.**—1933 ஆம் ஆண்டின் முன்னர் தங்க நடமாட்டம் இலேசாக அளந்துகொள்ளப்பட்டது. இங்கிலாந்திலே 1914 ஆம் ஆண்டின் முன்னர் இருந்ததுபோலவே அமெரிக்காவிலும் தங்க நாணயம் இருந்தது. வியாபாரம் நடத்துவதற்கு நாணயங்கள் அத்துணைப் பொருத்தமுடையனவாயில்லாதபடியால் நாம் தங்கச் சான்றிதழை வழங்கினோம். இவை திறைசேரியால் வழங்கப்பட்ட களஞ்சியசாலைப் பற்றுச் சீட்டான நோட்டுக்களாகும். இவை அழகாகத் தங்கநிறத்திலும் கறுப்புநிறத்திலும் அச்சிடப்பட்டன. இவை 10 டொலர், 20 டொலர் மதிப்புள்ள தங்கத்துக்குச் சமானமாயிருந்தன.

1933 ஆம் ஆண்டுக்கு முன்னர் அமெரிக்கா, இறக்குமதியிலும் பார்க்க அதிகமான ஏற்றுமதியைச் செய்து, தங்கக் கட்டியாகப் பணத்தை இறக்குமதிசெய்தபொழுது, என்ன நடந்தது? இந்தத் தங்கக் கட்டிகளைத் திறைசேரியிலே கொடுத்துத் தங்க நாணயத்தையோ, தங்கச் சான்றிதழையோ பெறுவர். ஏற்றுமதி வியாபாரி இவற்றை வர்த்தக வங்கிக்குக் கொண்டு போய் நாலுவகையாயுள்ள பன்மடங்கு விரியும் வைப்புக்களில் ஒன்றிலே முதலீடு செய்வார். (இது 5 : 1 ஆயில்லாமல் 10 : 1 ஆயிருந்தது. ஏனெனில் 1936 இக்கு முன்னர் அங்கத்துவ வங்கிகள் சட்டபூர்வமான சேமநிதி வீதத்தை வைப்பில் பத்திலொன்றாக வைத்திருக்க வேண்டியிருந்தன. அமெரிக்கா உபரி இறக்குமதிக்காகத் தங்கத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தபொழுது, வைப்புக்கள் 10 : 1 ஆகச் சுருங்கினவென்பதை நீங்கள் காட்டலாம்.)

**1933 இலிருந்து.**—இன்று விடயங்கள் சற்றே வித்தியாசமுடையனவாயிருக்கின்றன. புது டீல் காங்கிரஸ், ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலையை 21 டொலரிலிருந்து 35 டொலராக உயர்த்தத் தீர்மானித்தபோது, நாட்டிலுள்ள தங்கம், தங்கச் சான்றிதழ் எல்லாவற்றையும். வாபஸ் செய்தது. (நாணய விடயத்தில் காங்கிரசுக்குள்ள இந்த உரிமையை உயர்தர நீதிமன்றம் சரியென ஒத்துக்கொண்டது.) 21 டொலர், ஓர் அவுன்ஸ் என்ற நிலையில் காங்கிரஸ் தங்கத்தை வாபஸ் செய்தமை தங்கம் வைத்திருப்போர் பின்னர் இலாபம் பெறுது தடுப்பதற்காகவே. எதிர்காலத்திலே காங்கிரஸ், தங்கத்தின் விலையை உயர்த்திவிடக்கூடாதென்ற எண்ணத்தினால், அமெரிக்கர் உள்ளூரில் தங்கத்தை வைத்திருக்கக்கூடாதென்று சட்டம் விதித்தது. ஆபரணம், பற்கட்டு, பழைய நாணயம் என்பவற்றிலடங்கிய தங்கம் இதற்குப் புறநடையாக்கப்பட்டது.

ஆனால் இறக்குமதியிலும்பார்க்க நாம் ஏற்றுமதியை அதிகமாக்கித் தங்கத்திலே அவற்றுக்கு விலையைப் பெறுவோமானால், திறைசேரி அந்தப் பணத்தைப் புதிய நாணயமாக மாற்றும். ஆனால் இப்போது அஃது அவ்

www.padippakam.com



வாறு தங்க நாணயமாகவோ, தங்கச் சான்றிதழாகவோ மாற்றுவதில்லை. அது பெடரல் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி, அதன்மூலம் அந்தவேலைகளைச் செய்விக்கிறது.

அந்த நடவடிக்கை பின்வருமாறு நிகழ்கிறது. வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்த பொருள்களின் விலையாகக் கிடைத்த தங்கத்தை நீர் நியூயோர்க் பெடரல் ரிசர்வ் வங்கிக்குக் கொண்டுவரவேண்டும். அது, ஓர் அவுன்ஸ் தங்கத்துக்கு 35 டொலர் வீதம் மாற்றிக் கொடுக்கும். இது செக் மூலம் கிடைக்கும். தங்கச் சான்றிதழாகக் கிடைக்காது. தங்கச் சான்றிதழைப் பொதுமக்கள் வைத்திருப்பது குற்றமாகும். நீர் இந்தக் செக்கை வங்கியிலே போடலாம். உமது வங்கி அதைப் பெடரல் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பும். அஃது உமது அசல் தங்கத்துக்குச் சமமான புதிய சேமநிதியைப் பெறும். 1933 இக்கு முந்திய உதாரணத்தைப் போல தங்கத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட புதிய சேமநிதி, பன்மடங்கு விரியும் வைப்பை உண்டாக்கும்.

பெடரல் ரிசர்வ் வங்கி, இந்தத் தங்கப்பவுணை என்ன செய்கிறது? அஃது ஓர் ஏஜெண்டாகவேயிருக்கிறது. தான் பெறும் தங்கத்தை அது திறைசேரிக்கு அனுப்ப, திறைசேரி கெண்டக்கியிலுள்ள நொக்ஸ் கோட்டையில் சேமித்து வைக்கிறது. அதற்குப் பதிலாகப் பெடரல் வங்கி மேலே ஐந்தொகையிற்கண்ட தங்கச் சான்றிதழ்களைப் பற்றுச்சீட்டாகப் பெறுகிறது. இவ்வளவில் விடயம் முடிவடைகிறது.[1]

### பணக்கொள்கைவிடயத்தில் தங்கம் மட்டுப்படுத்தும் ஒரு சாதனம்

நமது பணச்சப்பிளையைச் சர்வதேசத் தங்கப் போக்குவரத்து எவ்வாறு பாதிக்கிறதென்ற ஆராய்ச்சி இவ்வளவில் முடிகிறது. பெடரல் பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள் எதிர்த்திசையாகச் செயற்படுவதால், அந்தச் சர்வதேசப் பாதிப்புக்கள் மாற்றப்படலாம். சர்வதேசத் தங்கப் போக்குகளின் பாதிப்புகளை ஈடுசெய்வதற்கு, எல்லா நாட்டிலும் மத்திய வங்கிகள் நடவடிக்கை எடுப்பது இயல்பே. 1933 இன் பின்னர், கால் நூற்ருண்டாக ஐக்கிய அமெரிக்காவில் அவ்வளவு தங்கம் இருந்தபடியால் அது தனது கொள்கையைத் திட்டப்படுத்தும்போது சர்வதேசக் கொடுக்கல்களைப் பற்றிச் சிறிதும் அக்கறைகாட்டாமலிருந்தது.

சர்வதேச வியாபாரம் பற்றி ஐந்தாம் பாகத்திலே நாம் ஆராயும்போது இந்தநிலை இப்போது இல்லை என்பதைக் காண்போம். உள்ளூரிலே பல ஆண்டுகளுக்குப் பின்னர், முதன்முதலாக விரிவாக்கல் பற்றிய உள்ளூர்த்

[1]. பெடரல் வங்கி சொத்தைப் புதிதாகச் சேர்த்துக்கொண்டதோடு பொறுப்பையுஞ் சேர்த்துக் கொண்டது. (எது ?) அரசாங்கம் தங்கத்தைப் பெற்றுக்கொண்டு தங்கச்சான்றிதழைப் பிறப்பிக்கிறது. வங்கிகளுக்குப் புதியசேமநிதி கிடைக்கிறது. 4 :1 கடனும், முதலீடுகளும், 5 : 1 டிமாண்ட் வைப்புப் பொறுப்புக்களும்.

www.padippakam.com



திரப் படுத்தும் கொள்கையை அனுசரிப்பதற்காக, பெடரல் ரிசர்வ் வட்டி வீதங்களைக் குறைக்கவிரும்பினுல், அது பின்வரும் விடயத்தைக் கவனித்தல் வேண்டும். வெளிநாட்டு வட்டிகளுக்கேற்றவாறு உள்ளூர் வட்டிகளைக் குறைத்தால், பல அந்நியநாட்டார் தமது முதலீடுகளை உயர்ந்த வட்டியுள்ள வேறு சந்தைகளில் முதலீடு செய்யவிரும்புவர். அதனுல் நமது நாட்டிலிருந்து தங்கம் வெளிநாடுகளுக்கு அதிகமாகச் செல்லும். நம்மிடம் இன்னும் தங்கம் இருந்த போதிலும், இவ்வாறு தங்கம் வெளியே போவதைக் கவனியாதிருக்கமுடியாது. குறுந்தவணை வட்டிவீதத்தைவிட, நீண்டதவணை வட்டிவீதங்களைப் பெடரல் வங்கி நேரடியாகப் பாதிக்கக் கூடியதாயிருந்தாலொழிய, வருங்காலத்திலே நாம் புதியதொரு யுகத்தை அடைவோம். அப்போது பணக்கொள்கைகளைத் திரப்படுத்துவதிலும் பார்க்கப் பிஸ்கால் கொள்கைகளைத் திரப்படுத்துவதிலேயே நாம் அதிக கவனஞ் செலுத்தவேண்டிய அவசியமேற்படும்.

## கடன் வசதிக் கூர்முனைக் கோபுரம்

வர்த்தக வங்கி, அல்லது அங்கத்துவ வங்கிகளுக்கும் பொதுமக்களுக்கு மிடையிலுள்ள தொடர்பை படம் 1 தொகுத்துக் காட்டுகிறது. இந்த வங்கிகளுக்கும் பெடரல் ரிசர்வ் வங்கிகளுக்குமுள்ள தொடர்பும், ரிசர்வ் வங்கிகளுக்கும் திறைசேரிக்குமுள்ள தொடர்பும் அதிற் காட்டப்பட்டுள்ளன. கூர் முனையின் அடியில் அமெரிக்கத் திறைசேரியின் கையிருப்பாயுள்ள தங்கம் காட்டப்பட்டுள்ளது. இது மிக அற்பம். 19.3 பில்லியன் டொலர் மதிப்புள்ளது (1960 இல்). இந்தத் தங்கத்துக்கு ஈடாக பெடரல் ரிசர்வ் வங்கிகளிலே தங்கச் சான்றிதழ்களுண்டு.


திறைசேரியிலிருந்து கூர்முனை வழியாக மேலே சென்றுல், பெடரல் ரிசர்வ் வங்கிகள்: இவற்றின் மொத்தப் பொறுப்பும் சொத்தும் 52 பில்லியன் டொலர். எனவே பெடரல் ரிசர்வ் வங்கியின் தங்கச் சான்றிதழ் மொத்தப் பொறுப்பில் $\frac{3}{8}$ ஆகும். பெடரல் ரிசர்வ் வங்கிகள் தமது நோட்டு, வைப்புப் பொறுப்பு என்பவற்றில் 25 வீதத்தைத் தங்கச் சான்றிதழாக வைத்திருக்கவேண்டுமென்பது சட்டபூர்வமான தேவை. பெடரல் ரிசர்வ் வங்கியின் தங்கச் சேமநிதி வேறு, அங்கத்துவ வங்கிகள் வைத்திருக்கவேண்டிய 1 : 5 வீதம் வேறு. பெடரல் வங்கி, விரிவாக்கும் நோக்கத்தோடும் சுருக்கும் நோக்கத்தோடும் சுதந்திரமாகச் செயற்படவேண்டுமானுல், அது சட்டபூர்வமான சேமநிதி வீதத்துக்கு மேலே சேமநிதியை வைத்திருக்கவேண்டும். தங்கத்தை இழந்துவருதலால் பெடரல் வங்கி இந்தச் சட்டபூர்வமான சேமநிதி விகிதத்தை அணையும்போது, காங்கிரஸ் சட்டம் நிறைவேற்றிச் சட்டபூர்வமான விகிதத்தைக் குறைக்கும் அல்லது இல்லாமற் செய்துவிடும். மகாயுத்தகாலத்திலே இவ்வாறே நடைபெற்றது.

www.padippakam.com



பெடரல் ரிசர்வ் வங்கி நமது நாணயங்களையும் வங்கிச் சேமநிதிகளையும் வழங்குகிறது.

கொடுகடன் கூர்முனை (1960)
(பில்லியனில்)




படம் 1.—பெடரல்ரிசர்விலே 25 வீத தங்கச் சேமநிதியிருக்கவேண்டு மென்ற கட்டுப்பாட்டைக் காங்கிரஸ் ஒரு சட்டத்தின்மூலம் நிராகரிக்குமானல் கூர்முனையின் அடியிலுள்ள தங்கத்தை முற்றாக நீக்கிவிடலாம். (இரண்டாவது உலகமகாயுத்தத்தின்போது இந்த விகிதம் 40 இலிருந்து 25 ஆகக் குறைக்கப்பட்டது. அவ்வாறே தேவையானல் 15, 5, 0 வீதங்களாகவும் குறைக்கலாம்).

இதனல் இரண்டு வழியிலும் சுதந்திரத்தைப் பெடரல் வங்கி பெறலாம்.[1] தங்கச் சான்றிதழ்களைவிட, ரிசர்வ் வங்கிகள் குறுந்தவணை அரசாங்கக் கடன்பத்திரங்களிலும், முதலீடுகளிலுமாக 33 பில்லியன் டொலரை ஒதுக்கியிருக்கிறது.

1. 1913 இலே பெடரல் வங்கிமுறையைத் தாபித்தவர்கள் இந்தத் தங்கச் சேம நிதி அவசியமென்று எண்ணினர். 1920 இலே சேமநிதி வைப்பு 35, 40 விகிதமிருக்கவேண்டுமென்று சட்டமிருந்தது. பெடரல் வங்கி அந்த விகிதத்துக்குக் கீழே போகலாமென்பதை அறிந்த காங்கிரஸ், சட்டபூர்வமாக விகிதத்தைக் குறைத்தது. அப்போது உண்டான விலைவாசி வீழ்ச்சிக்கு இந்த விகிதக்குறைப்பும் ஒரு காரணமாக எண்ணப்பட்டது. இன்றைய கடன்வசதிக் கூர்முனைக் கோபுரத்தைப் பார்த்ததும் பெடரல் வங்கித் தாபகர் பின்வருமாறு கூறலாம் : ஒவ்வொரு டொலர்த் தங்கமும் 20 :1 வைப்புப் பெருக்கத்தை உண்டாக்கலாம். அதாவது பெடரல் வங்கியின் 4 : 1 தரத்துக்கு அங்கத்துவ வங்கிகள் 5 : 1 தரமாகப் பெருகும். இது மயக்கமானதென்பதை அறிவோம். ஏனெனில் பெடரல் வங்கி அதனுடைய 1 : 4 விகிதத்துக்குக் கட்டுப்படுவதில்லை. ஒவ்வொரு டொலர் தங்கமும் 5 : 1 வைப்புப் பெருக்கத்தையே

www.padippakam.com



மொத்தச் சொத்துக்களுக்கு ஈடாக ரிசர்வ் வங்கிகளுக்குள்ள மிக முக்கியமான பொறுப்பு அவற்றின் நோட்டுப் பணமாகும். இந்தப் பணத்திலே பெரும் பகுதி பொதுமக்கள் கையிலுண்டு; ஒரு சிறு பகுதி வங்கிகளின் ரொக்கப் பெட்டியிலுண்டு.


ரிசர்வ் வங்கிகளின் மற்றொரு பொறுப்பு, அங்கத்துவ வங்கிகளின் சட்டபூர்வமான சேமநிதி வைப்பு. இந்த 18 பில்லியன் டொலர் பணத்துக்கு மேலே பொதுசனங்களின் செக்குப் பணமுண்டு.

**யுத்தகாலத்திலும் யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலும் நிலவிய நிதி :**

கடன்வசதிப் பிரமிட் அசலனமானதொரு படத்தை எமக்குக் காட்டுகிறது. சமீபகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறியவேண்டுமானால் படம் 2 ஐப் பார்க்க.

**“ரிசர்வ் வங்கிக் கொடுகடன்” எமது பணச் சப்பிளையை எவ்வாறு நிச்சயித்தது.**

முக்கியமான வங்கித்தொழில் மாறிகள்




**படம் 2.**—புழக்கத்திலும், சேமநிதியிலுமுள்ள பணம், ரிசர்வ் வங்கிக்கடன் வசதியை மிக நுணுக்கமாகப் பின்பற்றுகிறது. தங்க ஓட்டப்போக்கானது நிலைமையைப் பாதிப்பதற்குப் பெடரல் வங்கி விடவில்லை. சேமநிதிவளர்வதைப் பெடரல் வங்கி சமீபகாலத்திலே கட்டுப்படுத்தி வந்திருக்கிறது. (1957 இல் அது கடன்வசதியை இலகுவாக்கியது. ஏன்?)

அதிலே பெடரல் ரிசர்வ் சஞ்சிகையில் பிரதிமாதமும் வெளியாகும் பொருளாதார மாற்றங்களில் முக்கியமானவை குறிக்கப்படுகின்றன.

---

உண்டாக்கும். அதையும் சமன்படுத்த விரும்பினால் அந்தப் பெருக்கமும் உண்டாகாது. அமெரிக்கா சர்வதேசத் தங்க நியமத்திலே இருப்பது இந்த 25 வீத விதியைப் பாதிக்காது. அபூர்வமாக ஏற்படக்கூடிய அவசரகாலநிலை ஒருசமயம் எம்மைத்தங்க நியமத்திலிருந்து வெளியேற்றிவிடலாம்.


www.padippakam.com



முடியிலே புழக்கத்திலுள்ள பணத்தைக் காணலாம். யுத்தகாலத்தின் போது அது வளர்ந்து, இதுவரை சிறிது சிறிதாக வளர்ச்சியுற்றுளது. அதே படத்தில் டிமாண்ட் வைப்புக்களைக் காட்டமுடியாது. அவை மிக அதிகம். ஆனால் அவையும் இதே பொதுமாதிரியையே காட்டுகின்றன.

அங்கத்துவ வங்கிகளின் சேமநிதிகளும் இதேமாதிரியையே காட்டுகின்றன. இந்தச் சேமநிதிகள் எவ்வாறு மாறுகின்றனவென்பதை விளக்குவதே நமது முக்கியமான கடமை. தங்க இருப்பு எவ்வாறு நடக்கிற

**படம் 3. வங்கிகளின் சேமநிதி நிலைகளைப் பெடரல் ரிசர்வ் வங்கி கட்டுப் படுத்துதல்.**




பகம் 3. கழிவு, உபரி சேமநிதிக்கு அதிகமானல் தேறிய சுதந்தரச் சேமநிதி எதிர்க்கணியமாகும். (அது கடன்பட்ட தேறிய சேமநிதியாகும்) இதன் தாற்பரியமென்னவென்ருல், கடன் வசதி இறுக்கமாகவும் வட்டி வீதம் அதிகமாகவுமிருக்கிறதென்பதே:

தென்பதில் இந்தவிளக்கம் ஓரளவு தங்கியிருக்கிறது. ஆனால் அஃது அதிக அளவிலன்று. நமது தங்க இருப்பிலே உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளைச் சேமநிதி மாற்றங்களாகக் காட்டுவதற்குப் பெடரல் வங்கி அனுமதியாது.

சேமநிதியை விளக்குவதானல் ரிசர்வ் வங்கியின்கடன் வசதியைப் பற்றிக் கவனிக்கவேண்டும். அதாவது பெடரல் வங்கியிலுள்ள அரசாங்கக் கடன்பத்திரங்களையும், வட்டிக் கழிவுகளையும் பார்க்கவேண்டும். 1957 ஆம் ஆண்டு துவக்கம் ரிசர்வ் வங்கிக் கடன்வசதியை நமது தங்க நட்டத்துக்குச் சமனுக உயர்த்தப் பகிரங்கச் சந்தைக்கொள்வனவுகளைப் பெடரல் வங்கி எவ்வாறு செய்துவந்ததென்பதையும், அதன்பயனுக அங்கத்துவ வங்கிகளின் சேமநிதிகளை விழாமல் எவ்வாறு பாதுகாத்துவந்ததென்பதையும் அறிந்திருப்பீர். 1955–1960 இல் ஏற்பட விருந்த பணவீக்க ஆபத்தை எதிர்க்க இதுவே கங்கணங்கட்டிக் கொண்டிருந்தது.

கழிவுத் தொகை அளவை 3 ஆம் படத்திலே காண்க. அவற்றின்

www.padippakam.com



மொத்தம் அரசாங்கக் கடன்பத்திரங்களோடு ஒப்பிடும்போது குறைவாகவேயிருக்கிறது. ஆனால் அவை வருடத்தில் நடந்த பகிரங்கச் சந்தைவிற்பனவு அல்லது கொள்வனவுகளிலும் பார்க்க அதிகமான மாற்றத்தை ஒவ்வொரு வருடமும் ஏற்படுத்துகின்றன. குறுந்தவணையில், இந்தக் கழிவுகள், பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளுக்கு விரோதமானவையாகும். 1952 இல் பெடரல் வங்கி கடன் வசதியை இறுக்கமுயன்றபோது கழிவுகள் அதிகரித்ததைப் பார்க்கலாம். எனவே சில பொருளியலறிஞர் கழிவுக் கொள்கையைப் பற்றிக் கொஞ்சம் கண்டிப்பாகவேயிருப்பார்கள். ஆனால் ஆதரவாளர் "கழிவு வசதி ஒரு பாதுகாப்பு; இல்லாவிட்டால் பகிரங்க விற்பனவுசம்பந்தமாய் பெடரல் வங்கி இறுக்கமானதொரு கொள்கையை வைத்திருக்கமுடியாது. காருக்கு பிரேக் இருப்பதால் அதை விரைவாகச் செலுத்த ஒருப்படுவதுபோலவே கடன் வசதியிருப்பதால் பெடரல் வங்கி பகிரங்கச் சந்தைக்கொள்கையிலே கண்டிப்பாக இருக்கமுடிகிறது" என்று கூறுவர்.

3 ஆம் படத்தின் மேற்பகுதியிலே காட்டியபடி உபரி சேமநிதி சமீப காலத்திலே மிக அற்பமே[1]. கடன்வசதிகள் உபரிச் சேமநிதிக்கு அதிகப் பட்டால் பணம் இறுக்கமாகிவிடும். தேறிய சுதந்திரச் சேமநிதி எதிர்க் கணியமாயிருக்கும்.

3 ஆம் படத்தில் முக்கிய கருத்தான தேறிய சுதந்திரச் சேமநிதி காட்டப்பட்டுள்ளது. பணம் இறுக்கமாயிருக்கும்போது அஃது எதிர்க்கணியமாயிருக்கும். வட்டிவீதம் அதிகரிக்கும். பின்னர் பெடரல் வங்கி கடன் வசதியை இளக்கினால் அது நேர்க்கணியமாகும். 1960 இலே வியாபாரத்தின் கதி மந்தமானபொழுது, வட்டிவீதத்தைக் குறைப்பதற்காகப் பெடரல் வங்கி பகிரங்கச் சந்தை நடவடிக்கையைப் பெருக்கிற்று. இதனால் கடன் வசதி பெருகிற்று. மொத்தப் பணம் பல மாதமாக இறங்கியபின், ஏறத் துவங்கிற்று. (3 ஆம் படத்தின் மூன்று பிரிவுகளையும் பார்க்க).

அடுத்த அத்தியாயத்திலே ஆளப்படும் பணக்கொள்கை, வருமான நிர்ணயம் என்பவற்றுக்கிடையேயுள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சிக்கு இங்கே அடியிட்டுள்ளோம். நமது வங்கிமுறையில் ஏற்படுத்தவேண்டிய சில திருத்தங்கள் பற்றி இந்த அனுபந்தத்திலே குறிப்பிடுவோம்.

**சுருக்கம் 1.** பெடரல் ரிசர்வ் வங்கி மத்தியவங்கியாகும். அது வங்கியாளரின் வங்கி. சமூகத்தின் பண விநியோகத்தை அது கட்டுப்படுத்தும்.

1. ஆனால் 1930 ஆம் தசாப்தத்தின் நடுப்பகுதியில், உபரிசேமநிதி மிக அதிகமாயிருந்தது. தங்கம் ஏராளமாக இறக்குமதியாயிற்று. ஆனால் வங்கிகள் கடன்கொடுப்பதில் கவனமாயிருந்தன. அதனால் பன்மடங்கு விருத்தியுண்டாகவில்லை. உபரிசேமநிதிகள் குவிந்தன. பணவீக்கமுண்டாகுமென்று பயந்த வங்கிச்சபை இந்த உபரி சேமநிதியானது வைப்புப்பெருக்கத்தை உண்டாக்குமெனப் பயந்தது. எனவே சேமநிதியை இரட்டிக்கச்செய்து, உபரிச் சேமநிதியைக் கட்டுப்படுத்திற்று. வியாபாரப்பூரிப்புள்ள காலத்திலே வங்கிகள் உழைக்கக் கூடிய சொத்துக்களைக் காண முடியுமென்பதால் உபரிச் சேமநிதி அதிகம் உண்டாவதில்லை.

www.padippakam.com



2. அதனுடைய ஐந்து படி செயல்முறை பின்வருமாறு : அது வங்கிச் சேம நிதிகளைச் சுருக்கும் ; அது மொத்த வைப்புக்களிலே பண்மடங்கு சுருக்கத்தையுண்டாக்கும். அதனல் கடன் ஒறுப்பாகும் (உயர்ந்த வட்டிவீதம்); அதனல் தனிப்பட்ட முதலீட்டுச் செலவும் பொதுமுதலீட்டுச் செலவும் குறையும் ; அதனல் பண வருமானமும், விலைகளும் தறுக்கணிக்கும்.

3. பெடரல் வங்கி பயன்படுத்தும் வலிமை மிக்க ஆயுதங்களாவன: (1) பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள் (2) கழிவு வட்டிவீதக் கொள்கை (3) சட்டபூர்வமான சேமநிதி நிபந்தனைகளை மாற்றுதல். மத்தியவங்கிகள் சில சமயம் பயன்படுத்தும் சிறிய ஆயுதங்களாவன ; அறநெறிகூறி வழிப்படுத்தல், எல்லைக்கோட்டுக் கடன்படுதல் மீது தேர்ந்த கட்டுப்பாடு, தவணை விற்பனை, ஈடு என்பனவாகும்.

4. பெடரல் வங்கி அரசாங்கக் கடன்பத்திரங்களைப் பகிரங்கச் சந்தையிலே விற்றல், அதனுடைய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் குறைப்பதோடு, அங்கத்துவ வங்கிகளின் சேம நிதிகளைக் குறைப்பதன் மூலம், வைப்புக்கான அடிப்படையையுங் குறைக்கிறது. பணக்கொள்கையை ஆராயும் ஒவ்வொரு மாணவரும் தினசரி செயற்படும் பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளை அறிந்திருக்கவேண்டும்.

5. கடன்வசதிக் கூர்முனைக் கோபுரம் காட்டும் பணம் சம்பந்தமான முக்கிய விடயங்களை இந்த அத்தியாயத்தில் ஆராயப்பட்டமுறையில் விளங்கிக் கொள்ள வேண்டும்; அல்லது மாறும் சேமநிதி, பணம் என்பன சம்பந்தமான அசலனப் படங்களைக் கொண்டு விளங்கிக் கொள்ளவேண்டும்.

**ஆராய்வதற்குரிய வினக்கள்**

1. நீர் எந்த பெடரல் ரிசர்வ் மாவட்டத்தில் வசிக்கிறீர் ? உமது கிளை வங்கி எவ்வளவு தூரத்திலுண்டு ?

2. ரிசர்வ் வங்கிகளின் சமீபகால ஐந்தொகையிற் காணும் அமிசங்களை விளக்குக.

3. ஒரு குகையிலே தங்கத்தைக் காண்கிறீர். அதன்பின் நடப்பவற்றைக் கிரமமாக விளக்குக.

4. "பணச்சப்பிளையைக் கூட்டவோ குறைக்கவோ சமிக்கை கொடுக்கும் பாரமானியாக நாம் தங்கத்தைப் பயன்படுத்தியபடியால் தங்கப்போக்குவரத்து விலைகளைப் பாதிக்கின்றது. தங்கநியமம் முட்டாட்டனமான திட்டமே. ஆனல் பணவீக்கத்தையுண்டாக்கும் கடதாசி நோட்டுக்களையடித்துவிடும் ஊழல்நிறைந்த சட்டசபையில் நம்பிக்கை வையாமல், குறைவுள்ள தங்கத்திட்டத்திலே நம்பிக்கை வைப்பது நல்லதே". இக்கூற்றை ஆராய்க.

5. 1 பில்லியன் டொலர் பகிரங்கச் சந்தைக்கொள்வனவினல் உண்டாகக் கூடிய விளைவுகளை ஆராய்க.

6. சேமநிதி நிபந்தனைகளை இரட்டிப்பதால் உண்டாகும் விளைவுகளை ஆராய்க. அரைவாசியாகக் குறைப்பதால் உண்டாகும் விளைவுகளை ஆராய்க.

படிப்பகம்

www.padippakam.com



7. ரிசர்வ் வங்கி அதிகாரிகள் உபயோகிக்கும் பணக் கட்டுப்பாட்டு ஆயுதங்களை அட்டவணைப் படுத்துக. அவை (1) M ஐக் கட்டுப்படுத்த எத்துணைப் பலம் உடையன ? (2) வட்டிவீதத்தைக் கட்டுப்படுத்த எத்துணைப் பலம் வாய்ந்தவை ? (3) விலைவாசிகளைக் கட்டுப்படுத்த எத்துணைப் பலம் வாய்ந்தவை ? (4) வேலைவசதி, வசதியின்மை என்பவற்றைக் கட்டுப்படுத்த எத்துணைப் பலம் வாய்ந்தவை ?

8. ரிசர்வ் சபையின் 1939 ஆம் ஆண்டின் பின்வரும் கூற்றை ஆராய்க : "வியாபாரம், தொழிற்றுறை, விவசாயம் என்பவற்றுக்குக் குறைந்தவட்டியில் பணத்தைக் கொடுக்கப் போதிய சேமநிதியை வங்கிகள் வைத்திருக்கின்றனவா என்பதைக் கவனித்துக்கொள்ளப் பெடரல் ரிசர்வ் வங்கிக்கு முடியும் ; ஆனால் மக்கள் பணத்தைக் கடன்வாங்கச் செய்ய முடியாது. அத்துடன் வங்கிகள் கடன்கொடுப்பதாலும், முதலீடு செய்வதாலும் உண்டாகும் வைப்புக்களைப் பொதுமக்கள் செலவு செய்யப்பண்ணவும் முடியாது".

9. 1961 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து வந்துள்ள பணக்கொள்கையை ஆராய்க.

10. குணவியல்புள்ள தேர்ந்த கட்டுப்பாடு, அளவியல்புள்ள கட்டுப்பாடு என்ற இவற்றின் தாரதம்மியங்களை ஆராய்க.

11. பின்வருங் கருத்துக்களைப் புனராலோசனை செய்க.

5 படிவிளைவு, வட்டிவீதம், கடன்சேமநிதியும் உபரி சேமநிதியும் சட்டபூர்வமான சேமநிதி நிபந்தனைகள்; கடன்வசதி கிடைப்பதும் அதன் செலவும் ; அறநெறியொழுக்கங்கூறி வழிப்படுத்துதல் ; X விதியும் தங்கச் சான்றிதழும் ; கடன்வசதி ; கடன்வசதிக் கூர்முனைக்கோபுரம். பெடரல் ரிசர்வ் நோட்டு. தேறிய சுதந்திரச் சேமநிதிகள். பகிரங்கச் சந்தைக் கொள்வனவும், விற்பனவும் ; தேறிய கடன்பட்ட சேமநிதிகள்.

## அனுபந்தம்

### வங்கித்தொழில் முறையைச் சீர்திருத்தும் சில யோசனைகள்

நமது வங்கிமுறை பூரணமானதென்று சிலர் கருதினாலும், பலர் அது எமது தேவைக்குப் போதுமானதென எண்ணுகின்றனர். சிலர் பின்வரும் சீர்திருத்தங்களிற் சிலவற்றைச் செய்வது நல்லதெனக் கருதுகின்றனர்.

**கழிவுவட்டிச் சீர்திருத்தம்.** பெடரல் வங்கி பகிரங்கச் சந்தை விற்பனவுகள் மூலம் கடன்வசதியை இறுக்கும்போது வட்டிவீதம் உயர்கிறதென்பதைப் படம் 3 இல் கண்டோம். இதன்விளைவாக சேமநிதிகளின் வீழ்ச்சியை வங்கிகள் தடுக்கின்றன. ஒருவகையிலே வட்டியந்திரமுறை பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றுக்கு மாறுக

www.padippakam.com



வேயிருக்கின்றது. தற்போதைய வங்கிமுறையை ஆதரிப்போர், வட்டி செயற்படும் முறை தற்காலிகமானதொரு பாதுகாப்பை உதவுவதால் பெடரல் வங்கி பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளிலே பெரிதும் ஈடுபடலாமெனக் கூறுவர். ஆனால் பகிரங்கச் சந்தை நடைமுறைகளுக்குப் பாதகமாக வட்டிச் செயற்பாடுகள் செல்லும் அளவைக் குறைக்கச் சில பொருளியலாளர் சில சீர்திருத்தங்களைக் குறிப்பிடுவர். அவர்கள் கூறும் நியாயங்கள் சில பின்வருமாறு :—

1. வட்டிச் சலுகையை முற்றாக நீக்கிவிடுக. பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளில் மாத்திரம் தங்குக. அங்கத்துவ வங்கிகள் பெரிய சேமநிதிகளை வைத்திருக்கவிரும்பினால் அதற்கு ஒழுங்குசெய்யவேண்டும். விவசாயம், தொழில், வியாபாரம் முதலியவற்றுக்குப் பணம் கடன் கொடுக்கும் வசதி எப்போதுமிருக்கவேண்டுமென்ற 1913 ஆம் ஆண்டுக் கருத்து இன்று செல்லுபடியாகாது. ஏனெனில் அப்படியானால் பண விநியோகம் நெகிழ்ச்சியுடையதாயிருக்கும். அதனால் உற்பத்தி, வேலை வாய்ப்பு, விலைவாசி என்பவற்றில் சக்கரபூர்வமான ஏற்றத்தாழ்வுண்டாகும். இவ்வாறு அவர்கள் நியாயங்கூறுவர்.

இந்தக் கொள்கையிலுஞ் சிறிது வித்தியாசமானது வட்டியை முற்றாக நீக்காமல், பெரிய அவசரநிலையுண்டானால் மாத்திரம் பயன்படுத்தக்கூடிய வகையில் வைத்துக்கொள்ளவேண்டுமென்பதாகும். இந்தக் கொள்கைப்படி தற்போதுள்ள குறுந்தவணை வட்டிவீதத்தினும் 2 அல்லது 3 வீதம் மேலாக தண்டனைமட்டத்தை உண்டாக்கி வட்டிவிதிக்குமாறு கூறுகிறது. அப்படியானால் புத்தியுள்ள எந்த வங்கியாளனும் வட்டி விதியாமல் "பெடரல் நிதிச் சந்தையில்" கடன் பெறுவான். இச்சந்தையிலே ஒவ்வொரு வங்கியும் தனது உபரிசேமநிதியை வெந்நீசிலே ஒவ்வொருநாளும் தமக்கிடையே விற்றுக்கொள்ளும். இல்லாவிட்டால் அவர் தமது திறைசேரிப்பத்திரங்களை விற்பர்.

2. ஒவொரு வாரமும் அல்லது நாளும் கழிவுவீதத்தைத் திறை சேரிச் சுதந்திரச்சந்தை உண்டியல் வீதத்துக்கு மாற்றிக்கொள்ளவேண்டும். இந்தச் சிபார்சை அனுசரித்து, 1956 துவக்கம், கனேடா மத்தியவங்கி கழிவுவீதத்தைச் சுதந்திரச்சந்தை உண்டியல்வீதத்தினும் $\frac{1}{4}$ வீதம் அதிகமாகச் சரிக்கட்டிக்கொண்டுவந்தது. (இதற்கு ஒரு சிறு மாற்றுமுண்டு. அதாவது பெடரல் வங்கியானது உண்டியல் வீதம், கழிவுவீதம் இவற்றிடை வாரா வாரம் உண்டாக்கும் வித்தியாசத்தை, பொருளாதாரத்துக்குச் சரியான பண இறுக்கத்தைக் கொடுக்கும் வகையில், வட்டிவீதத்தை உற்சாகப்படுத்தவோ, தளர்த்தவோ வேண்டுமென்பதைக் கொண்டு மாற்றுதல்.)

3. அங்கத்துவவங்கிச் சேமநிதிகளுக்குப் பெடரல் வங்கி குறிக்கப்பட்ட கழிவு வீதத்திலே வட்டிகொடுக்கச் செய்தல்.

கழிவுவீதத்திலே வங்கிகள் சுதந்திரமாகப் பணத்தைக் கடன்படவும், கடன்கொடுக்கவும் செய்தால், உண்டியல்வீதமும், குறுந்தவணை வட்டி

www.padippakam.com



வீதங்களும் பெடரல் வங்கியின் விருப்பத்துக்கு உடனே தங்களைச் சரிப்படுத்திக் கொள்ளும். பின்னர் பெடரல் வங்கி சமூகத்தில் பணம் இறுக்கமாயிருக்க வேண்டுமா நெகிழ்வாயிருக்க வேண்டுமா என்பதை உத்தேசித்து வட்டி வீதத்தை நிச்சயித்துக்கொள்ளும். 1960 இலே யேலைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் தோபின் இவ்வாறு ஒரு யோசனையைக் கூறினர்.

இங்கே கூறிய யோசனைகளுக்குச் சார்பாகவும், மாருகவும் எவ்வளவோ கூறலாம். கழிவுவீதத்தை சந்தையை நுணுக்கமாக அனுசரிக்கும் முறையில் அடிக்கடி மாற்றிஞல் ஒழிய, கழிவுசெய்யும் முறையிலுண்டாகும் விபரீதங்களை மாற்றும்முறையிலே பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளைத் தீவிரமாக அனுசரித்தாலொழிய மற்றும்படி முக்கியமான நன்மைகளை இந்தச் சீர்திருத்தங்கள் மூலம் பெறமுடியாவெனப் பல பொருளியலாளர் அபிப்பிராயப்படுகின்றனர். கழிவுவீதத்திலே உண்டாகும் மாற்றங்களை பெடரல் சேமநிதியின் நோக்கங்களுக்கு அறிகுறியாகப் பயன்படுத்தலாம். கழிவுகளின் போக்கிலிருந்து, பெடரல் வங்கி சந்தை இறுக்கத்தின் நிலையை அறியக்கூடியதாயிருக்கும். சிலர் இதனை ஒத்துக்கொள்வதில்லை.

### பகிரங்கச் சந்தைச் சீர்திருத்தங்கள்

1953 ஆம் ஆண்டு துவக்கம் பெடரல் ரிசர்வ் வங்கி அதிகாரிகள், குறுந் தவணை அரசாங்க உண்டியல் சம்பந்தமான பகிரங்கச் சந்தை விவகாரங் களில் மாத்திரம் ஈடுபட்டனரேயன்றிப் பல காலங்களில் பூர்த்தியடையும் அரசாங்கக் கடன்பத்திரங்களை வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடவில்லை. பழையவழக்கத்திலிருந்து மாறிய இந்தக் கொள்கை "உண்டியல்மாத் திரம்" கொள்கை எனப்படும். (ஏனெனில் அவசரகாலங்களிலும், விசேட சந்தர்ப்பங்களிலும் சில சமயம் பெடரல்வங்கி தனது விதிக்கு விலக்காக நடக்கும். அதாவது இதனை "வழக்கமாக உண்டியல்" அல்லது "முன் னுரிமையாக உண்டியல்" என்று கூறும்).

"உண்டியல் மாத்திரம்" என்ற கொள்கைக்குச் சார்பாகப் பல நியாயங் கள் காட்டப்பட்டுள்ளன. முக்கியமான காரணம் தத்துவக்கொள்கை சார் பானது. அதாவது சுதந்திரச்சந்தையே வட்டிவிகிதத்திட்டத்தை முன்மா திரியாக அமைக்கவேண்டும். மத்திய வங்கி, வங்கிச் சேமநிதிகளையும் பணத்தையும் கட்டுப்படுத்தவேண்டும் என்பதே. பின்னர் கூறப்பட்ட கார ணங்கள், அரசாங்கக் கடன்பத்திர வியாபாரிகள் விரிவான சந்தையை ஏற் படுத்துவது சம்பந்தமானவை. பெடரல் வங்கி ஒருவகையான முதிர்ந்த கடன் பத்திரங்களை வாங்கவோ விற்கவோ போகிறதென அறிந்த ஊகவியா பாரிகளுக்குச் சலுகைசெய்யாதிருத்தல்; குறுந்தவணை உண்டியல்விகிதங் களைக் கட்டுப்படுத்துவதால் நெடுந்தவணை உண்டியல்விகிதங்களையும் பெட ரல்வங்கி கட்டுப்படுத்துகிறதென்ற முரணுன வாதம்; இவை போன்ற வேறு வாதங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இக்காலச் சனநாயக அமைப்புள்ள கலப்புப் பொருளாதாரத்துக்கு "உண்டியல் மாத்திரம்" கொள்கை நல்லகொள்கையன்றென அறிமுறை

www.padippakam.com



வல்ல பொருளியலறிஞரிற் பெரும்பாலோர் கருதுகின்றனர். ஆரம்பத்திலே நியூயோர்க் பெடரல் வங்கி, வாஷிங்டன் "உண்டியல்மாத்திரம்" என்பதை எதிர்த்ததுபோல, இக்கால மத்தியவங்கியானது காங்கிரசின் விருப்பத்தை அனுசரித்து விலைவாசிகளை திரமாக்குவதற்கும், உயர்ந்த வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவதற்கும் ஏற்றவகையில், கடன்வசதிக் கொள்கையை அனுசரிக்கவேண்டியது அதன் கடமை என நினைக்கின்றனர். அரசாங்க நிர்வாகப் பிரிவுக்கும் மத்திய வங்கிக்கும் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்ற அரசியல் விவகாரங்களை நீக்கிவிட்டு, சந்தையிலுள்ள நீண்ட தவணைக் கடன்பத்திரங்களுக்கும் குறுந்தவணைக் கடன்பத்திரங்களுக்கும் இடையில் பங்கிடப்படும் தன்மையை மாற்றினால், திரப்படுத்தும் கொள்கை அதிக சக்திவாய்ந்ததாயமையுமெனப் பொருளியல் நிபுணர் பொதுவாக அபிப்பிராயப்படுகின்றனர். ஏனெனில் நீண்ட தவணைக் கடன் பத்திரங்கள், குறுகியவகையிலே வரைவிலக்கணங் கூறப்பட்ட பணத்துக்குத் தூரத்திலிருக்கின்றன. அத்துடன் அவற்றின் வட்டிவிளைவுகள் நீண்ட தவணை முதலீட்டு நடவடிக்கைகளைப் பாதிப்பதில் நேரடியாக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஏனெனில் நெடுந்தவணை முதலீட்டு நடவடிக்கைகளே வேலை, வருமானம் என்பவற்றை ஏறவும் இறங்கவுஞ் செய்கின்றன. பணவீக்கம் உள்ள காலத்திலே மத்தியவங்கியும் திறைசேரியும் தம்முள் (மற்றநிலைமைகள் மாருதிருந்தால்) (1) நீண்டகாலக் கடன் பத்திரங்களின் மேல்மிச்சமாயுள்ளவற்றின் விகிதத்தை அதிகரிக்கமுயலும். (2) அதனால் அவற்றின் விலையைக் குறைக்கும். (3) நீண்டகால வட்டி வீதத்தை அதிகரித்து கட்டடத்துக்கும் தளவாடத்திலே முதலீடு செய்வோருக்கும் பணம் கிடைப்பதை அருமையாக்கி விலைகளைக் கூட்டும். (4) மக்களுடைய மூலதனச் சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து அவர்கள் நடப்பிற் செலவுசெய்வதைத் தடுக்கும். மந்தகாலத்திலே மற்றவையெல்லாம் மாருதிருக்கும்போது நு+மு+அ (C+I+G) அட்டவணையை மேலே உயர்த்த வேண்டினால், மேலே கூறிய முறையை மாற்றி, குறுந்தவணைக் காலக் கடன்பத்திரங்களைப் பிறப்பிக்கவேண்டும். "உண்டியல் மாத்திரம்" என்ற கொள்கை மேலே கூறிய முறையின் முக்கியத்தை ஒன்றில் மறுக்கிறது அல்லது இத்தகைய பிரச்சினைகளை யெல்லாம் அரசாங்க நிர்வாகப் பிரிவு கடன்நிர்வாகக் கொள்கைப்படி தீர்க்கலாமென்று கருதுகிறது[1]. இதில் மத்தியவங்கி தலையிடவேண்டியதில்லை. ஒரு பொது நிர்வாகத் தாபனத்திலிருந்து மற்றொரு நிர்வாகத்தாபனத்துக்குக் கடமைகளை மாற்றுவதால் தனிப்பட்டவரின் சுதந்திரம் சம்பந்தமான தத்துவப் பிரச்சினைகள் பாதிக்கப்படவில்லை. கடன்நிர்வாகம் பொருளாதாரத் திர

[1]. கடன்நிர்வாகப் பிரச்சினை, திரநிலைக்கொள்கை நோக்கில் வைத்துப் பார்க்கும் போது, புதிய கடன்பத்திரங்கள் பிறப்பித்தலுடனே பணத்தைத் திருப்பிக் கொடுப்பதுடனே எவ்வித சம்பந்தமுமுடையதன்று. ஆனால் அது மிஞ்சி நிற்கும் கடனின் நெடுந்தவணைக் குறுந்தவணை முதிர்வு அமைப்பைப் பற்றியே அக்கறையுள்ளது. Quarterly Journal of Economics, Vol. LXXIV No. 3 (August 1960) PP. 341-373

படிப்பகம்

www.padippakam.com



நிலைக்கு முக்கிய தொண்டைச் செய்யாத ஒரு காலக்கட்டத்தில், "உண்டியல் மாத்திரம்" என்ற கொள்கை நிலவியமை தற்செயலாக ஏற்பட்டதொரு பொருத்தமன்று.

நெடுந்தவணை வட்டிவீதம், குறுந்தவணை வட்டிவீதம் என்பவற்றி டையேயுள்ள வித்தியாசத்தை பெடரல் வங்கி நேரடியாகப் பாதிக்கமுடியு மானால், பணக்கொள்கையின் சக்திபெரிதும் பயனுடையதாயிருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் (உதாரணம், 1961 ஆம் ஆண்டு தங்கப் பிரச்சினையும், பின்னி றக்கமும்) உண்டெனா "உண்டியல்மாத்திரம்" கொள்கையைக் கண்டிப்போர் எடுத்துக்கூறுவர். பெடரல் வங்கி தன்னுடைய கால்களுக்கே கட்டுப்போடுகிறது; அதனால் தன் அதிகாரத்தைக் குறைத்துக்கொள்கிறது; அதனால் சன நாயக அமைப்பிலுள்ள சமூகங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வழி கோலுகிறது. சஞ்சலமற்ற பொருளாதார நிலையையும், வீணாகக் கிடக்கும் மூலவளங்களை நல்லமுறையில் பயன்படுத்தலையும் இலக்காகக் கொண்டகொள் கைகளை ஏதோ ஒரு வழியில் கடைப்பிடிக்க இந்தச் சமூகங்கள்முயலும்.

**மத்திய வங்கிகளுக்குள்ள உசிதாசாரப்படி நடக்கும் உரிமையை ஒழித் தல்.**—வேறு பல சீர்திருத்தங்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.[1] பின் னச்சேமநிதி வங்கிமுறையை ஒழிக்குமாறு சிலர் கூறுவர். 100 வீத ரிசர்வ் வங்கிமுறை அரசியல்வகையில் அபூர்வமானதொன்று. எனவே அத்தகைய நிலையைப்பற்றி இங்கே ஆராயவேண்டியதில்லை.

பெடரல் ரிசர்வ் வங்கிமுறையை ஒழித்துவிடவேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டது. இதற்குப் பதிலாகத் தங்க நாணய முறையை அனுசரிக்க லாம்; அல்லது அரசாங்க உத்தியோகத்தரின் உசிதாசார மதிப்புக்குவிடாத தும் அரசியலமைப்பை அனுசரித்ததுமான அரசாங்கமுறைப்படி அரசாங் கமே எல்லாப் பணத்தையும் சப்பிளைசெய்யும் முறையை அனுசரிக்கலாம். "சட்டப்படி விதியமைப்பதன்றி மனிதருடைய அபிப்பிராயப்படியன்று" என்பதே இக்கொள்கையின் இலட்சியம். அரசியல்முறையில் இத்தகைய தொரு மாற்றம் ஏற்படுவது அசாத்தியம். ஆனபடியால் இதைப்பற்றி இங்கு ஆராயவேண்டியதில்லை.

இத்தகைய தீவிரமான சீர்திருத்தங்களுக்குப் பதிலாக, பெடரல் ரிசர்வ் அதிகாரிகள் காற்றடிக்கும் திசையை அறிந்து, அதற்கு எதிராக நிற்கும்

[1] தேவையான சேமநிதிவிகிதத்தைப் படிப்படியாக பெடரல் வங்கி உயர்த்தவேண்டு மெனவும் இதற்கீடாக அரசாங்கக் கடன்பத்திரங்களைப் பகிரங்கச் சந்தையில் வாங்க வேண்டு மெனவும் காங்கிரஸிலுள்ள சிலர் எண்ணுவர். பொதுக்கடன் கணக்கினால் வங்கிக்கும் வேறு தாபனங்களுக்கும் சென்மதியாகும் வட்டிவீதம், இதனால் குறையும். இதனால் பெடரல் வங்கியின் உழைப்பு (அதாவது திறைசேரிக்கு ஈற்றில் செல்லுபடியாவது) கூடு மேயன்றித் தனிப்பட்டதாபனங்களின் உழைப்பன்று. வங்கி உழைப்பின் சரியான மட்ட மென்னவென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, நாளடைவில் உண்டாகக்கூடிய M இன் வளர்ச்சித் திட்டத்தையும் கடன்வசதி இறுக்கத்தையும் உண்டாக்கக்கூடியவகையில் இவை யெல்லாவற்றையும் செய்யலாம். இந்தமுறையை அடிதலையாகமாற்றினால் வங்கி உழைப்புக்களுக்கு உதவிபுரியலாம். ஆனால் பணவாட்ட முண்டாகாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

www.padippakam.com



வகையில் முடிபுகளைச் செய்யாதிருக்கவேண்டுமென ஒரு யோசனை கூறப்பட்டது. பெடரல் ரிசர்வ் அதிகாரிகள் பின்வரும் அறிவுறுத்தல்களை மேற்கொள்ளவேண்டுமென்றுங் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அரசாங்கச் செலவிலும், நுகர்விலும், முதலீட்டிலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எப்படியிருந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல், சட்டப்படி விதிக்கப்பட்ட பணம், வருடம் 3 வீதத்திலே வளரக்கூடியவாறு பெடரல் வங்கி நடக்கக் கட்டளையிடப்படவேண்டும்.

இந்தவிதி தத்துவரீதிப்படி முக்கியமானதென இதனையுண்டாக்கியோர் கருதினர். ஏனெனில் இஃது அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தில் தலையிடு வதைக் கட்டுப்படுத்துவதோடு மனிதர் செய்யும் விதிகளுக்கன்றிச் சட்டவிதிகளுக்கு முக்கியத்துவமும் கொடுக்கிறது. அதற்கு மேலும் விசேடமானதொரு சகாயமுண்டு எனக் கருதப்படுகிறது. இந்தத் தத்துவ நன்மை ஒருபுறமிருக்க, இந்தவிதி நாட்டின் பொருளாதாரத்துக்குச் சஞ்சலப்படாததொரு தன்மையைக் கொடுக்கிறது. பண அதிகாரிகள் இப்போது பின்வரக்கூடியதைப் பற்றி முன்கூட்டியே அறிந்துகூறவும், அந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும் அவர்களுக்கிருக்கும் குறுகிய திறமை, பொருளாதார முறையைப் பாதிக்குமேயன்றி அதற்கு உதவிபுரியமாட்டாது என இந்தக் கொள்கையை ஆதரிப்போர் எடுத்துக் காட்டுவர்.

இக்காலப் பொருளியலாளருட் பெரும்பாலோர் (இவர்களில் இந்நூலாசிரியரும் ஒருவர்) இம்முறை அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு ஏற்றதன்றெனக் கருதுவர். இப்போதுள்ள முறை நிறைவற்றதாயிருந்தாலும், புதிய இம்முறையிலும் பார்க்கச் சிறந்தது. மேலும் சனநாயக சமூகத்தில் இத்தகையதொரு முறையை எவரும் விரும்பமாட்டார். இதனால் உண்டாவது தீமையேயன்றி நன்மையன்று. ஆனால் இந்தப் புதிய முறை நல்லதென அபிப்பிராயப்படும் பொருளியல் நிபுணருமுளர்.

விவாதத்துக்குரிய இத்தகைய விடயங்களைக் கணக்கிலேயெடுத்து ஆராய்ந்தாற்றான் இக்காலப் பொருளியல் பற்றிய முழுக் காட்சியையும் பெறமுடியும். பொருளியலாளர் நல்லெண்ணத்தோடு தமது அபிப்பிராய வேற்றுமையைக் காட்டுவர். இப்பிரச்சினைகளில் அடங்கிய நன்மைதீமைகளைக் கண்டறிய ஆராய்ச்சிகளைச் செய்வர். எத்தகைய ஆராய்ச்சியை நடத்தினாலும் இத்தகைய பிரச்சினைகளுக்குப் பூரணமான தீர்வு காணமுடியாது. இவ்வளவு அபிப்பிராய ஒற்றுமை அவர்களிடம் காணப்படுவதே பெரிய நூதனம். அவர்கள் ஒத்துக்கொள்ளும் விடயம் மிக அதிகம்; வேறுபடும் விடயமோமிக அற்பம்.

www.padippakam.com

## பதினெட்டாம் அத்தியாயம்

# பண ஆராய்ச்சியையும், வருமான ஆராய்ச்சியையும் இணைத்தல்

இச்சந்தர்ப்பத்திலே நோட்டுக் காசு மேலும் தேவையென்று கூக்குரல் கேட்டது. 1723 இலே அடித்த சிறிய நோட்டுத் தொகை, வியாபாரத்தைப் பெருக்கிற்று ; வேலைவாய்ப்புக்களை உண்டாக்கிற்று ; குடிசனத் தொகையை அதிகரிக்கச்செய்தது. பழைய வீடுகளிலெல்லாம் சனங்கள் நிறையக் குடியிருப்பதையும் புதிய வீடுகள் கட்டப்படுவதையுங் கண்டேன். அதனால் இந்த நோட்டுப் பணம் நன்மை பயக்கிறதென்பதை அனுபவ வாயிலாகக் கண்டேன். ஆனால் நோட்டை அடிப்பதற்கும் ஓர் எல்லையுண்டு. அதனை அதிகம் அடித்தால் ஆபத்துண்டாகும்.

—**பெஞ்சமின் பிராங்லின்**

சேமிப்புக்கோடும், முதலீட்டுக்கோடும் ஒன்றையொன்று வெட்டும்போது வருமான மட்டத்தை அறியக்கூடியதாயிருந்ததென்று 13 ஆம் அத்தியாயத்திலே கண்டோம். பெடரல் ரிசர்வ் கொள்கை மாற்றம் எவ்வாறு சமூகத்தின் பண நிலையை மாற்றும் என்பதைக் கடந்த சில அத்தியாயங்களிலே ஆராய்ந்தோம்.

இந்த அத்தியாயத்திலே இந்த இருவகை ஆராய்ச்சிகளையும் இணைக்கப் போகிறோம். வருமான நிர்ணயம் என்ற இக்காலக் கொள்கையோடு பண ஆராய்ச்சி நன்றாகப் பொருந்தக்கூடியதாயிருக்கிறது. நிலைமையைத் திரப்படுத்துவதற்கு இது முதற்படி. அதாவது மத்திய வங்கிப்பணக் கொள்கையும் அரசாங்கப் பிஸ்கால் கொள்கைகளும் (அதாவது பொதுச் செலவு, வரிவிதித்தல், அதனால் உண்டாகும் வரவு செலவுப் பற்றாக்குறை அல்லது மேல்மிச்சம் ஆகியன ஆகும்.) நியாயமான விலைவாசிகளும், உற்பத்தித் திறமைகளைப் பயன்படுத்துதலும் உள்ள முற்போக்கான பொருளாதார நிலையை அடைய, இந்தப் பணக்கொள்கையையும், பிஸ்கால் கொள்கைகளையும் இணைப்பது அவசியம்.

திரமாக்கும் கொள்கைகள் எவ்வாறு செயற்படுகின்றன; ஒன்றோடொன்று எவ்வாறு இணைகின்றன என்பதை இந்த அத்தியாயம் எடுத்துக்காட்டும். பிஸ்கால் கொள்கை சம்பந்தமான பிரச்சினைகளை விபரமாக ஆராயும் வேலை, இரண்டாம் பிரிவின் கடைசி அத்தியாயத்தில் மேற் கொள்ளப்படும்.

### பணக்கொள்கை பிரதானமாக முதலீட்டுக் கோட்டையே பாதிக்கும் : வரைபடங்கள்

மலிவான பணக்கொள்கை எவ்வாறு செயற்படுகிறது என்பதை, வருமான ஆராய்ச்சிக்குரிய சாதனங்களைப் பயன்படுத்தி படம் 1 காட்டுகிறது.




படிப்பகம்

www.padippakam.com



வட்டி வீதம் குறைவதாலும், கடன்வசதி அதிகரிப்பதாலும் முதலீட்டி லுண்டாகும் இறுதியான உயர்வைக் கவனிக்க. இது மொத்தப் பணம் பன்மடங்கு உயரும்போது நிகழும்.

**முதலீட்டுக் கோட்டை உயர்த்துவதற்காக மத்தியவங்கி கடன்வசதியை இலேசாக்கும் :**




படம் 1.—வங்கிகளுக்கு அதிக சேமிப்புநிதியை வழங்குவதாலும், வட்டி வீதத்தைக் குறைத்துக் கடன்வசதியை அதிகரிப்பதாலும், பெடரல் வங்கி முதலீட்டுக் கோட்டை உயர்த்தி, வருமானத்தைப் பன்மடங்காகப் பெருக்குகிறது.

(இதே கருமத்தை 13 ஆம் அத்தியாயத்திலே, காட்டிய நு+மு+அ (C+I+G) என்ற வாய்பாட்டைப் பயன்படுத்திக் காட்டலாம். 372 ஆம் பக்கத்திலேயுள்ள 11 ஆம் படத்தில் காட்டப் பட்ட பணவாட்ட இடைவெளியை நீக்க, விரியும்பணக் கொள்கையொன்று செயற்படலாம். முமு (II) கோட்டிலே மலிவான பணத்தினல் தூண்டப்படும் தலத்தாபன முதலீடுகளும் அரசாங்கமுத லீடுகளும் இதில் அடக்கப்படல்வேண்டும். படம் 1 இல் இந்த விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.)

உதாரணமாக, நமது பொருளாதாரம் பணவீக்க இடைவெளியையுடைய தாயிருக்கிறதெனக் கொள்வோம். இதனுல் சேசே (SS) முழுவேலைவாய்ப்பின் மட்டத்து வலப்பக்கத்தில் முமுவைச் (II) சந்திக்கிறது எனவும் கொள்வோம். விலைவாசிகள் ஏருமல் வருமானத்தை விரும்பியமட்டத்துக்குக் கொண்டு வர சுருங்கும் பணக்கொள்கை எவ்வாறு துணைசெய்யுமென்பதைக் காட்ட முடியுமா[1] ?

[1]. பணக்கொள்கையானது முதலீட்டைப் பாதிப்பதோடு சேமிப்பு ,நுகர்வு ஆகிய பக்கத்தி லிருந்தும் சிறிது உதவிபெறுமெனச் சிலபொருளியலறிஞர் எதிர்பார்த்ததுண்டு. உயர்ந்த வட்டி வீதம் சேமிப்பை விருத்தி செய்து நுகர்வைக் குறைக்குமென அவர்கள் எதிர்பார்த்தனர். அதாவது படம் 1 இலுள்ள சேசே (SS) ஐ வட்டிவீத உயர்வு மேலே தள்ளிவிடுமென எண்ணினர். இதனுல் முமு (II) கீழே இறங்குவதாலுண்டாகும் பயனைத் திரப்படுத்தலாமெனவும் நினைத்தனர். ஆனுல் இந்தப் பயன்கள் அதிகம் வலியுடையனவல்லவென்றும் இவற்றை அதிகம் கணக்கில் கொள்ளமுடியாதென்றும் 29 ஆம் அத்தியாய ஆராய்ச்சியும் அனுபவமும் தெளிவாக்கு கின்றன. (வட்டி வீதம் ஏறுவதால் சேமிப்புக் குறையலாம்.) கடன்வசதி இறுகுவதால் மக்களு டைய சொத்து மதிப்பு அதிகரிக்கலாம் ; தவணை வீதம் கடனைத் திருப்பிக் கொடுக்கவிரும்பும் நுகர்வோருக்குக் கடன்வசதியை அதிகரிக்கலாம். இன்றுள்ள பொருளியலாளர் முமு (SS) கோட் டிலே அவ்வாறு மாற்றமுண்டாவது முக்கியமன்றெனக்கருதுவர்.

www.padippakam.com



**வருமான நிருணயிப்பிலே பணத்தின் செல்வாக்கு : சொற்கள்**

பெடரல் ரிசர்வ் பணக்கொள்கையானது வருமானம், தொழில் வாய்ப்பு, விலைவாசிகள் என்பவற்றைப் பெருக்க, எவ்வாறு தொழில்புரிகிறதென் பதைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. பகிரங்கச் சந்தைக் கொள்வனவுகளாலும், வேறு வகையான பெரிய சாதனங்களாலும் பெடரல் வங்கி பணச் சப்பிளையை அதிகரிக்கிறது. (வங்கிச் சேமநிதியையும் பண்மடங்கு வைப்புப் பெருக்கத்தையும் ஞாபகப்படுத்துக).

2. பணத்தின் சப்பிளையைப் பெருக்கும் முறை, கடன்பத்திர விலைகள் உயர்த்தப்படுவதை உணர்த்தும். எனெனில் பெடரல் வங்கியும், அங்கத்துவ வங்கிகளும், பொதுமக்களும் தமது புதிய பணத்தை அத்தகைய கடன் பத்திரங்களை வாங்கவே பயன்படுத்துவர். கடன்பத்திர விலைகள் மிக உயர்ந்தாலும், கடன் பத்திர உழைப்புக்கள் அதிகம் குறைக்கப்பட்டு, புதிய பணத்தை வங்கிகளும் மக்களும் வைத்திருக்கச் சம்மதமுடைய வாய்ச் செய்யும்வரை மாத்திரமே, மக்கள் இந்தப் புதிய பணத்தை அகற்றச் செய்யும் முயற்சியை எதிர்ப்பர். இந்த முறையினல், கடன்பத்திர வட்டிகள் மாத்திரம் குறைக்கப்படவில்லை. புதிய பணத்தைப் பெற்ற வங்கிகள் அதிகம் கடன் கொடுக்க விரும்பும் ; அதனல் வட்டிவீதம் வீழ்ச்சியடையும் ; கடன்வசதி இலேசாகும் ; ஈட்டு வட்டிவீதங்களும் குறையும் ; ஈட்டுக்குப் பணம்பெறுவதும், பணக் கம்பெனிகள் பணம் பெறுவதும் இலேசாகும். அபாயம் அதிகமுள்ள ஈடுகளுக்கும் அவை இலேசாகக் கடன்கொடுக்கத் துவங்கும். வியாபாரக் கம்பெனிகள் புதிய கடன்பத்திரங்களைப் பிறப்பிப்பது இலேசாகும். புதிய சாதாரணபங்குகளை விற்பனவு செய்வதும் அவற்றுக்கு இலேசாகும். புதிய இயந்திரங்களை அமைக்கவும், முதலீட்டுத் திட்டங்களை அமைக்கவும் கம்பெனி நிர்வாகிகள் மறுக்க மாட்டார்கள்.

இங்கே கூறிய விடயங்களையெல்லாம் சுருக்கமாகச் சொல்வதாஞல் வட்டி வீத அமைப்பு வ (i) வீழ்ச்சியடையும் ; அதனல் கடன்வசதி இலேசாகும் எனக் கூறலாம்.

3. கடன்வசதி இலேசாக, புதிய முதலீடுகளானவை வ (I) பெருகும். முன்னர் அவசியமில்லாதிருந்த எந்திரம் இப்போது கொள்வனவு செய்யப் படும். விடுதிச்சாலையும், கிராமத்துப் புதிய சாய்ப்புக்கடையும் பணவசதியைப் பெறும். கணவன் தன்வங்கியிலே இலேசான நிபந்தனையில் ஈட்டுக்குப் பணம் வாங்கி வீடுகட்டத் துவங்குவான். வீடு கட்டி வாடகைக்குக் கொடுப்போர் வீடுகளைக்கட்டி வாடகைக்குக் கொடுப்பர்.

வட்டிகுறைவதால் உண்டாகும் இந்தச் செலவுத்தானவாய்ப்புக்கள் ஒரு புறமிருக்க, மக்களின் சொத்துக்கள், அதாவது கடன்பத்திரங்கள், நிலம்,

www.padippakam.com



மூலதனச் சொத்துக்கள் என்பனவற்றின் விலே, வட்டிவீழ்ந்ததால் ஏறியுள்ளது.[1]

இப்போது மக்களிடம் அதிகம் செல்வமிருப்பதால் முதலீடு செய்யத் துணிகின்றனர். முமு II கோட்டுடன் அவர்களுடைய CC கோடும் மேலே உயர்கிறது. மத்திய அரசின் முதலீட்டுச்செலவும் தலத்தாபன முதலீட்டுச் செலவும், நகரசபைக் கடன்பத்திர வட்டிவீதம் குறைந்தால், அதிகரிக்கலாம் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்க.

4. C+I+G கோடு மேனேக்கி உயரும்போது NNP யின் குறுக்கு வெட்டுத் தானத்தில் உயர்வு உண்டாகும். இதுவே இந்த முறையில் உள்ள கடைசிப்படி.

சுருக்கம்! பணக்கொள்கை வருமான நிர்ணயத்தைப் பாதிக்கும். இந்த நாலுபடிகளேயும் பின்வரும் காரணச் சங்கிலித் தொடராயுள்ள வாய்பாட்டின் மூலம் குறிப்பிடலாம்.

M உயர்ந்தால் $\rightarrow i$ தாழ $\rightarrow$ I உயர $\rightarrow$ NNP உயரும்.

இங்கே M= பணம் ; $i$ = வட்டி

I = முதலீடு; NNP= தேறிய தேசிய வருமானம்.

(இந்தச் சங்கிலியின் தொடர்களே எதிர்மாறி அமைத்தால் பணத்தின் குறுக்கத்தைக் காணலாம்.)

பணத்தின் ஆராய்ச்சி, வருமான நிர்ணயம் என்பவற்றின் இணைப்பு இப்போது பிரதானமாக நிறைவேற்றப்பட்டது. இதை இவ்வளவில் விட்டுவிட்டு, பிஸ்கால் கொள்கை எவ்வாறு செயற்படுகிறது என்பதை இவ்வாறே வருணிப்போம்.

பணத்தின் (M இன்) அதிகரிப்பும், வட்டியின் இறக்கமும், என்பவற்றுக் கிடையேயுள்ள தொடர்பைக்கூர்ந்து ஆராய்வதற்குச் சிலவாசகர் அனுபந்தத்தைப் பார்க்கலாம். இதனே இக்காலப் பொருளியலறிஞர் " நீர்மைத் தேர்வு " என்பர். குறைக்கப்பட்ட வட்டிக்கும், அதிகரிக்கப்பட்ட முதலீட்டுக்குமிடையேயுள்ள தொடர்பை அவர்கள் அறியவும் விரும்புவர். இது "வட்டி—முதலீட்டுத் தேவைக்கோடு" (அல்லது சில நவீனப் பொருளியலாளர் "இறுதிநிலே முதலீட்டுத் திறன் தொடர்பு" என்பர்) என்பதாகும். இந்த இரு தொடர்புகளின் செயற்பாட்டைப் பணப் புழக்கத்தின் வீச்சுக்குரிய செயற்பாடு என்பர். (15 ஆம் அத்தியாயம் இதனே V என்றது.) இந்த விடயத்தைப் பற்றிய ஆராய்ச்சியும், நவீன வருமான நிர்ணயக் கொள்கையானது பழங்கொள்கைகளோடு எவ்வாறு பொருத்தப்படுகிறது என்பதைப்பற்றிய செய்தியும் அனுபந்தத்திலுண்டு.

[1]. 4 ஆம் அத்தியாயத்திலுள்ள 5 ஆம் படத்தைப் பார்க்க. 29 ஆம் அத்தியாயத்திற் காணும் மூலதனம்பற்றிய ஆராய்ச்சியும் இதைப்பற்றிக் கூறும்.

படிப்பகம்

www.padippakam.com



**பிஸ்கால் கொள்கையும் வருமான நிர்ணயமும்**

நடைமுறைச் செலவைப் பாதிப்பதற்கு மத்திய வங்கியைவிட மற்ருெரு பெரிய மார்க்கம் அரசாங்கத்துக்குண்டு. பிஸ்கால் கொள்கையின் ஓர் அமிசமாக அது தன்னுடைய செலவுகளைப் பெருக்கலாம். புதிய ருேட்டுக் களையும் பாடசாலைகளையும் அமைக்கலாம்; அரசாங்க நிர்வாகிகளை நியமிக்கலாம்; இராணுவச் செலவைப் பெருக்கலாம்; இவ்வாறு பத்து நூறு பயனுள்ள கருமங்களையோ, பயனில்லாத கருமங்களையோ செய்து மொத்தச் செலவைப் பெருக்கலாம். இதை, படம் 1 இலுள்ள சேமிப்பு முதலீட்டு வரிப்படம் மூலம் காட்டலாம்.

வருமானச் சமநிலையைக் காட்டுவதற்குப் பதில்வழியாக நாம் பயன் படுத்திய நு+மு+அ (C+I+G) அட்டவணையிலுள்ள (அ) (G) யின் மேனேக்கிய உயர்வாக இதைக் காட்டலாம். படம் 2 இலுள்ள முதல் வரைப்படம் அரசாங்கச் செலவான (அ) (G), வருமானப் பெருக்கத்தை உண்டாக்குமென்பதைக் காட்டுகிறது.

இதேவகையான வரைப்படத்தின்மூலம் பிஸ்கால் கொள்கையின் மற்றப் பக்கத்தையும் காட்டலாம்—அதாவது வரி வசூலில் உள்ள மாற்றம் அஃதாகும்.[1] NNP ஐ உயர்த்துவதற்குப் பிஸ்கால் அதிகாரிகள் வரிகளை வெட்டுவர். இதனுல் மக்களிடம் உள்ள பைசல்செய்யக்கூடிய வருமானம் அதிகரிக்கும். மேலதிக வருமானத்திலிருந்து நுகர்வதற்கு அவர்கள் நாட்டமுடையவ ராயிருப்பதால், அவர்கள் அதிகம் நுகர்வர்.

படம் 2 இலேயுள்ள இரண்டாவது வரைப்படத்திலே மேலதிக நுகர்ச்சியை எவ்வாறு காட்டலாம்? குறைக்கப்பட்ட வரிகளின் பலாபலனை தே. தே. உ. (NNP) க்கு எதிராகப் போடப்பட்ட நுநு (CC) கோட்டின் மேலெழுச்சியாகவும், (நு+மு+அ) (C+I+G) அட்டவணையின் பெரிய அமிசமாகவும் காட்டலாம். வரி குறையக் குறையப் பைசலாக்கக்கூடிய வருமான மட்டத்தைப் பெற, தே. தே. உ. (NNP) மட்டம் ஒவ்வொன்றிலும் குறைவாகவே கழிப்போம். ஒவ்வொரு தே. தே. உ. (NNP) க்கும் பொருத்தமான உயர்ந்த பைசல்வருமானத்துக்கும் உயர்ந்த நுகர்ச்சியைக் காட்டவேண்டும்.—அதனுல் CC கோடு உயர்கிறது. இனி பிஸ்கால் கொள்கையின் விளைவைச் சுருக்கமாகக் கூறலாம்.

நு+மு+அ (C+I+G) யின் அஅ (GG) பிரிவை உயர்த்துவதால் உயர்த்தப்பட்ட அ (G) வருமானத்தை உயர்த்தும். வரி குறைக்கப்பட்டால் நு+மு+அ (C+I+G) யின் அஅ (CC) பகுதி உயரும். இவையிரண்டுஞ் சேர்ந்து (இதுவே பற்ருக்குறைப் பணமிடுதல் அல்லது வரவு செலவு உபரியில்


1. இங்கே 13 ஆம் அத்தியாயத்திலுள்ள ஆராய்ச்சியே மறுபடியும் கூறப்பட்டுள்ளது. இது தனிப்பட்டவருமானவரியின் பயனைச் செவ்வனே ஆராய்கிறது. மறைமுகவரி முதலியவற்றின் சிக்கலான ஆராய்ச்சியையும், முதலீட்டை வரி எவ்வாறு பாதிக்கும் என்பதையும் ஆரம்ப நூல்களிற் காண்க.

www.padippakam.com




அரசிறைக் கொள்கையென்றால் அரசாங்கச் செலவும் வரிக்கொள்கையுமாகும்.

அரசாங்கச் செலவின் விளைவு




வரிக்குறைப்பின் விளைவு




படம் 2.—அரசாங்கச் செலவின் உயர்வு நு+மு+அ (C+I+G) ஐ நு+மு+அ' (C+I+G') க்கு உயர்த்தும். ச' (E') உயர்ந்த வருமானத்தைக் காட்டும்.

வரிகளைக் குறைப்பதாலும் வருமானத்தில் இத்தகைய விளைவு உண்டாகும். குறைந்த வரி வசூலினால், பயன்படுத்தக்கூடிய வருமானத்தை தே. தே. உ. (NNP) யிலிருந்து பெறலாம். இதனால் நுகர்வுக் கோடு உயரும். புதிய நு'+மு+அ (C'+I+G) கோட்டின்படி ச (E) யிலிருந்து ச' (E') க்குச் செல்கிறோம். அ (G) அதிகரிப்பினும் வரிக் குறைப்புப் பலவீனமானது. ஏன்? நுநு (CC) ஐ உயர்த்துவதற்கு வரிக்குறைப்புச் சேமிக்கப்படுகிறதேயன்றிப் பயன்படுத்தப்படவில்லை. 10வரி வெட்டு, நுநு (CC) ஐ $2/3 \times 10 = 6\ 2/3$ வரை உயர்த்தும். MPC 2/3 ஆகவிருந்தால் இவ்வாறு ஏற்படும்.

www.padippakam.com



குறைத்தல்) நு+மு+அ (C+I+G) கோட்டை மேலும் உயர்த்தும். அத்துடன் சமநிலைவருமானம் உயரும். சுருங்கும் பிஸ்கால் கொள்கையின் போது, கோடு கீழேயிறங்கும்.

## இணைவு செயற்படுதல் : நுண்தொழில் வேலையின்மை ?

தற்கால வருமான ஆராய்ச்சி, பண ஆராய்ச்சியென்பவற்றை நடத்துவதற்குப் பயன்படும் சாதனங்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை விளங்குவதற்கு, அவற்றை இக்காலப் பெரும் பிரச்சினை ஒன்றை ஆராயப் பயன்படுத்துவோம். தற்கால நாகரிகத்தின் பிரதான அமிசங்களிலொன்று எந்திர இயக்கம். மனிதர் உதவியின்றித் தாமாக இயங்கும் இயந்திரங்கள் பெருகியுள்ள காலம். இந்தப் புதிய கைத்தொழிற் புரட்சி மனித சாதிக்குப் பயனுடையதா ? அல்லது நாசகாரணமா ? சுருக்கமாகக் கூறுவதானால், தற்காலப் பொருளாதாரத்தில் அது பெருவாரியான வேலையின்மையை உண்டாக்காதா ?

உண்டாக்காது என்பதே நமது இச்சாதனங்கள் தரும் பதில். புதிய கண்டுபிடிப்புக்கள் புதிய தொழில் வாய்ப்புக்களையுண்டாக்கினாலும், பழைய தொழின்முறைகளை அழித்துவிடுகின்றன என்பதே பழைய கொள்கையாளர் கருத்து. இக்கருத்து விடயம் விளங்காததன்மையால் உண்டானபடியால் அத்துணை வலிவுடையதன்று. அனுபவம் சில சமயம் அதனோடு பொருந்திற்று ; சில சமயம் பொருந்தாதுபோயிற்று. சுருக்கமாகக் கூறுவதானால், பலன் அதிட்டத்தில் தங்கியதாயிற்றெனலாம். ஆனால் இக்கால அறிஞர் இதிலும் பார்க்க நன்மை நோக்குடைய பதிலையே கொடுப்பர். தானியங்குதல் என்பதன் தாற்பரியம் என்ன ? 1947 இலே டெல்ஹாடர் என்பவர் இச்சொல்லை உருவாக்கினார். இவர் போர்ட் மோட்டார் கம்பெனியின் உபதலைவர். “ முற்போக்கான உற்பத்தி முறைகளிடையே உதிரிப் பகுதிகளைத் தன்னியக்கமாகப் ” பைசல்செய்வதற்கு இச்சொல் அவரால் உபயோகிக்கப்பட்டது. அதே காலத்தில் நிர்வாக என்ஜினியரான ஜோன் டீபோல்ட் என்பவர் இந்தச் சொல்லைச் சுருக்கிவிட்டார்.

இச்சொல்லுக்கு வேறு பல பொருள்களுமுண்டு. மின்சக்தியால் கணக்கிடும் கணக்கு எந்திரங்கள், பலவகையிலே பதிவு வைக்கும் வேலைகளைச் சுருக்கிவிட்டன ; பல இலட்சம் மடங்கு விரைவாக்கியும்விட்டன. ஓர் எந்திரம் 100 பெண்கள் செய்யும் வேலையைச் செய்கிறது. சதுரங்கம்போன்ற விளையாட்டுகளைக்கூட எந்திரங்கள் விளையாடும்.

## தொழில் செய்வோருக்குப் பதிலாக எந்திரம்

தானாக இயங்கும் எந்திரமுறை பெரியதொரு சக்தி. அது முன்னே அறியப்பட்டதுதான். இதனால் உற்பத்தி பெருகும். இல்லாவிட்டால் இதை எவரும் தாபிக்கமாட்டார். தொழிலாளரின் மொத்தத் தேவையை இது குறைக்குமா ? அதனால் வேலையில்லாத் திண்டாட்டமுண்டாகுமா ? 1930 ஆம் ஆண்டைத் தொடர்ந்த வருடங்களில் ஏற்பட்ட வேலை மந்தத்தின்



படிப்பகம்

www.padippakam.com



போது, இந்தத் தன்னியக்க எந்திரப் பேச்சு வருவதற்கு முன்னரே தொழில்நுட்ப வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும் என்ற பயமிருந்தது. மறுபடியும் அதே பயத்தை உண்டாக்கி, இக்கால மனிதன் பழைய பட்டிக்காடாகிவிடுவானோ என்று ஏங்கவேண்டுமா ?

ஒரு காலத்தில் அதிசயமான மதிநுட்பமுடைய சிறுவனென்று புகழ் பெற்ற நோபேட் வீனர் என்ற கணித நிபுணர் "சைபர்னெட்டிக்ஸ்" என்ற சொல்லை உருவாக்கினர். இது மூப்பன் என்ற பொருளையுடையது. அவர் பின்வருமாறு கூறுகிறர் :— "வருங்காலத்துத் தொழிற்சாலை இக்காலத்துக் கணக்குப் போடும் எந்திரம்போன்ற ஒன்றினல் ஆட்டி வைக்கக்கூடியதாயிருக்கும். ஒரேவகையான வேலையைத் திருப்பித் திருப்பிச் செய்யும் தொழிலாளிகட்கு இனித் தேவையுண்டாகாது. இடைக்காலம் ஒன்று ஏற்படும். அதில் பெரிய தடுமாற்றமும் மயக்கமும் உண்டாகும். நீண்டகாலத் தேய்மானத்தைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், உடனடியாக இலாபத்தைத் தரக்கூடியனவாய்த் தோன்றும் புதிய பல ஆயுதங்களைத் தொழிற்சாலைகள் கொண்டிருக்கும். இந்நிலை வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கும். இந்த வேலையில்லாத்திண்டாட்டம் 1930 இலுண்டானதிலும் மிகப் பிரமாண்டமானதாயிருக்கும்."[1]

**முன்னேக்கம் :** உற்பத்தித் திறன் அதிகரிக்க, உற்பத்திப் பொருள்கள் அதிகரியாதுவிட்டால், வேலையில்லாத்திண்டாட்டம் உண்டாகும். பெரிய வியாபார மந்தத்தின்போது உற்பத்தித் திறன் அதிகரித்தால், விரும்பியபடி உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்கமாட்டாவென்றும், மொத்தப் பொருள் உற்பத்தி அப்படியேயிருக்குமென்றும் மக்கள் நம்பினர். இந்தக் கருத்தின்படி பின்வருமாறு யோசிக்கத் தோன்றும் : "வேலையில்லாது திண்டாடும் தொழிலாளர் தமது வேலைகளை எவ்வாறு இழந்தனர்? எந்த எந்திரம் இவர்கள் வேலையிழக்கச் செய்தது ?" என்றிப்படிப் பல.

இக்காலத்து வருமான நிர்ணய ஆராய்ச்சியாளர் பயன்தரக்கூடிய வேறெரு மார்க்கத்தைப் பின்பற்றுவர். "வேலையிழந்தோர் அவ்வாறிழந்தமைக்குரிய காரணம் ஒருபுறமிருக்க, அவர்களுக்குப் புதிய வேலைகள் இல்லாதிருப்பது ஏன் ? அவர்களை மறுபடியும் வேலைக்கமர்த்துவதற்குப் புதிய டொலர் வாங்கும் சக்தியை உண்டாக்க, எத்தகைய பிஸ்கால் கொள்கையும், பணக்கொள்கையும் தேவை," என்று கேட்பார்.

சாச்செல்பேஜ் என்ற பேஸ்பந்து விளையாட்டு வீரர் ஒரு முறை "பின்னல் ஒருபோதும் பார்க்கவேண்டியதில்லை ; யாராவது உன்னை முந்துவதற்கு வரலாம்" என்று சொன்னர். பொருளியல் விடயத்திலும் இது நல்லதொரு புத்திமதி. உயர்ந்த அளவு வேலைவாய்ப்பை உண்டாக்கும் வழிகளைப் பார்க்கவேண்டும். இது திறமைவாய்ந்ததொரு நோக்கம்.

[1] Nobert Wiener, The Human Use of Human Beings (Cambridge, Newyork 1950) PP. 180, 181, 186, 188, 189.

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்டுபிடிப்புக்கள் மக்களிடை வேலையின்மையை உண்டாக்குகின்றன என்ற கொள்கையாளரைப் பற்றி அக்கறைகொள்ளவேண்டியதில்லை. பணவீக்கமில்லாத உயர்ந்த வேலைவாய்ப்பு உண்டாக்குவதானால், சரியான அளவில் பணக்கொள்கையும், பிஸ்கால் கொள்கையும் அனுசரிக்கப்படவேண்டும்.

**உயர்வேலை வாய்ப்புச் சமநிலை சம்பந்தமான வரைகோட்டுப் புனரமைப்பு:**

இத்தகைய பயனுள்ள முறையைப் பயன்படுத்துவதானால் நாம் நுகர்வு + முதலீடு + அரசாங்கச் செலவு என்ற வாய்பாட்டைப் பயன்படுத்தி C+I+G 45° துணைக் கோட்டைவெட்டும் இடத்திலுள்ள வருமானச் சமநிலையை எதிர்பார்க்கலாம். படம் 3 இதை எடுத்துக் காட்டும்.

தன்னியக்கிகளால் தொழிலாளர் 30 வீதம் மேலதிக உற்பத்தியைப் பெறுகிறார்களென வைத்துக் கொள்வோம். இதன் தாற்பரியமென்னவென்றால், பூரண வேலைவாய்ப்புள்ள தொழிலாளர் சமூகம் உண்மையான தேசிய உற்பத்தியை 30 வீதம் அதிகரிக்கிறதென்பதாகும். எனவே 3 அ படத்திலுள்ள FF என்னும் பூரணவேலைக்கோடு வலப்பக்கமாக 30 வீதம் F'F' க்கு நகர்கிறது. அதமப்போக்கான பின்வரும் விதத்தில், நாம் சிலவற்றைக் கருதுகோளாகக் கொள்ளலாம். (1) அரசாங்கம் G என்ற தனது செலவை முன்னிருந்தபடியே விட்டுவிடுகிறது. புதிய எந்திரங்கள் மலிவாகவும் குறுகியகாலத்தில் பயனற்றுப்போகக் கூடியனவுமாயிருப்பதால் தேய்மானச் செலவைக் கொண்டு இவற்றை வாங்கலாம். அதனால் (2) தேறிய முதலீடான I முன்னரிலும் அதிகமன்று ; கடைசியாக, தன்னியக்கிகளால் பொருள்கள் மலிவாகின்றனவேயன்றிப் புதுவகையான பொருள்களில் ஒரு விருப்பம் மக்களுக்கு உண்டாவதில்லை. அதனால் (3) பைசல் வருமானக் கணக்கில் நுகர்வு நாட்டமும், சேமிப்பு நாட்டமும் முன்னிருந்தபடியே இருக்கும்.


சுருக்கமாகக் கூறுவதானால், தன்னியக்கியின் பயனாக நு + மு + அ (C+I+G) என்ற அட்டவணையில் உள்ள அமிசங்கள் எதுவும் மாறவில்லை. முன்னர் வெட்டிய (E) தானத்திலேயே இந்தக் கோடு வெட்டுப்படும். இந்த ச(E) தானம் முன்னர் பூரண வேலைவாய்ப்புள்ள சமநிலையுடையதாயிருந்தது. இப்போது அது 30 வீத வேலையின்மையைக் குறிக்கிறது. குடிசனங்களிற் பெரிய பின்னப் பகுதியொன்று வேலையில்லாதிருக்கிறது. வேறு பலர் ஒரு நேரமே வேலை செய்கின்றனர். நிலைமை இதுவானால், தொழிற் சங்கங்களும் அரசாங்கமும் வேலை நேரத்தைக் குறைக்கவும், புதிய முறைகளையும், எந்திரங்களையும் நடைமுறையிற் கொண்டு வராமற் செய்யவும் அவர்கள் கிளர்ச்சி செய்வர்.

இந்த அசமநிலையைக் கூடச் சீர்திருத்தலாம். அது பின்வருமாறு :— இந்த மந்தநிலையைச் சரிப்படுத்துவதானால் பெடரல் வங்கி கடன்வசதியை மலிவாக்கலாம் ; அதனை இலேசாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாய்ச் செய்யலாம்.

படிப்பகம்


**தன்னியக்கியின் முன்னரும் பின்னரும் உள்ள வருமான நிருணயத்தைக் காட்டும் படங்கள்.**

முழு வேலைவாய்ப்பை இழத்தல்




படம் 3a. புதிய கண்டு பிடிப்புக்கள் 30 வீதத்தினால் விளைதிறனைக் கூட்டினால், FF 30 வீதம் வலப் பக்கமாக F'F' க்கு நகரும். C, I, G என்பன மாருவிட்டால் குறுக்கே வெட்டும் இடம் E ஆக வேயிருக்கும்; ஆனால் இப்போது 30 வீதம் வேலையின்மை உண்டு.

முழு வேலைவாய்ப்பை மீண்டும் பெறுதல்




படம் 3b. விரியுந்தன்மையுள்ள பணக் கொள்கை முதலீட்டை உயர்த்தும். விரியும் அரசிறைக் கொள்கை வரி வீதத்தைக் குறைத்துப் பைசல் செய்யக்கூடிய வருமானத்தை உயர்த்தி, நுகர்ச்சிக்கோட்டை மேலோங்கச் செய்யும். பூரணவேலைச் சமநிலை E' என்ற தானத்தில் புனரமைப்புச் செய்யப்படும். C'+I'+G' என்பது சரியான அளவுக்கு மேலே நகர்ந்துவிடும்.

www.padippakam.com



(பகிரங்கச் சந்தைவிவகாரம், சேமநிதி நிபந்தனைகளைக் குறைத்தல், வட்டி வீதத்தைக் குறைத்தல் என்பவற்றை ஞாபகத்திலே கொள்ளவேண்டும்). மு (I) அட்டவணைக்கு இ∴து என்ன செய்யும்? அதனை மேலே ஏறச்செய்யும். முன்னர் பூரணவேலைவாய்ப்பு நிலையிற் காணப்பட்ட கடுமையான வரி விதிப்பை இப்போது குறைக்க வேண்டும். இதனால் மக்களுடைய பைசல் வருமானம் அதிகரிக்கும். நுகர்வுச் செலவு அதிகரிக்கும்; நு+மு+அ (C+I+G) அட்டவணையின் (C) பிரிவை மேலே உயர்த்தும். (இதனால் I மேலும் நகர்த்தப்படலாம்). நேரடியாக அரசாங்கச் செலவை உயர்த்தாமல் நாம் நு+மு+அ (C+I+G) கோட்டை மேலே கூடிய அளவுக்கு உயர்த்தலாம். எனவே புதிய C′+I′+G′ கோடு 45° கோட்டை E′ என்ற புதிய பூரணவேலை வாய்ப்புத் தானத்தில் சந்திக்கும். பொதுமராமத்து வேலையாலோ, வேறு வகையால் G இன் விரிவாக்கலை உண்டாக்கியோ C+I+G ஐ குறித்த ஒரு மட்டத்துக்கு உயர்த்தலாம். அதுவும் மக்கள் C, I என்பவற்றை விடப் பொதுச் சேவையை அதிகம் விரும்பினாலேதான்.

இத்தகைய மேனோக்கிய மாற்றங்கள், பூரணவேலைவாய்ப்புச் சமநிலையை மறுபடி எவ்வாறு உண்டாக்குகின்றன என்பதை படம் 3b காட்டுகிறது. நாசந்தருவதாய்த் தோன்றிய எந்திரத்தை, உண்மையில் நன்மை தரக் கூடியதொன்றாகச் சரியான கொள்கையின் பிரகாரம் மாற்றிவிட்டோம். இப்போது மக்கள் 30 வீதம் அதிகமான உற்பத்திப் பொருள்களை அனுப விக்கிறார்கள். அவர்கள் குறுகிய நேரத்துக்கு வேலை செய்து, திங்கட் கிழமையில் வேலை செய்யாது, மற்றவர்களுக்கு வேலையைப் பகிர்ந்து கொடுக்கவேண்டிய நிலை ஏற்படவில்லை.

தன்னியக்கியோ, புதிய கண்டுபிடிப்போ தனனிச்சைப்படி முதலீட்டைப் பெருக்கி, நுகர்ச்சியை மக்கள் உயர்த்தச் செய்யும் நிலைமையைக் காட்ட, அதே படத்தை எவ்வாறு பயன்படுத்தலாமென்பதைப்பற்றி நிச்சயமா யிருக்க வேண்டும். விரும்பிய E′ சமநிலை எவ்வாறு தானாக உண்டாகு மென்பதைக் காட்டலாம். உமது அதிகாரங்களைப் பரீட்சைசெய்வதற்கு, தன்னியக்கி அதிக முதலீட்டையும் நுகர்ச்சிச் செலவையும் உண்டாக்கும் நிலையை ஆராய வேண்டும். பணவீக்க இடைவெளியை நீக்கிப் புதிதா யுண்டாகும் C+I+G என்ற கோட்டைச் சரியான குறுக்கீட்டுக்குக் கொண்டு வர, சுருங்கும் தன்மையுள்ள பணக்கொள்கையும் பிஸ்கால் கொள்கையும் தேவையென்பதைப் பின்னர் காட்டவேண்டும்.

## புதிய வைதீக இணைப்பு

பழைய வைதீகப் பொருளாதாரக் கொள்கைகள் இக்காலத்துக்குப் பொருந்தாதவையென ஆராய்ச்சியாளர் கண்டனம் தெரிவித்தனர். பாணுக் காக வரிசையில் நிற்போரையும், வீதியில் அப்பிள் விற்போரையும் பார்த்து விட்டு, இவர்கள் "அருந்தலைப்பற்றி ஏன் பேசுகிறீர்கள்? திறமையைப் பற்றி எதற்கு? வளர்ச்சியைப்பற்றி ஏன்? நிதானத்தைப்பற்றி எதற்கு? விநியோகம், தேவை என்ற சாதனங்களைத் தூரவீசி விடுங்கள். சந்தையிலே

www.padippakam.com



பற்றிய அழகிய கொள்கைகளைத் தூரவீசுங்கள் ; நாம் புதிய யுகத்தில் இருக்கிறோம். இங்கே எல்லாம் தலைகீழாக இருக்கிறது. சேமிக்கமுயற்சி செய்தால் முதலீடு இல்லாமற் போகும். புயற்காற்றினாலோ, யுத்தத்தினாலோ அழிவுண்டாவது நல்லது. அதனால் வேலையில்லாதவர்க்கு வேலை கிடைக்கும். பசியினால் வாடுவோருக்கு உணவு கிடைக்கும் " என்று கூறுவர்.

தற்காலப் பொருளியலறிஞர் இவையெல்லாவற்றுக்கும் என்ன பதில் கூறப்போகிறார் ? அவர் சொல்வது " பழைய கொள்கைகளைக் கண்டிப்பது பொருத்தமானதே. இந்தக்கொள்கைகள் எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராயவேண்டும். பழங்கொள்கைகள் மிக இலேசானவை. 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டு வாழ்வுக்கு அவை கணக்குப்போடவில்லை. உமது அனுமானங்கள் பிழையானவை. இஃது அனுபவத்தாலும் தர்க்கரீதியான ஆராய்ச்சியாலும் தெரிகிறது. ஆனபடியால் அவற்றைக் கைவிடுங்கள் ; வியாபார மந்தத்தை அரசாங்கங்களும், மத்தியவங்கிகளும் போக்கடிக்குஞ் சக்தி வாய்ந்தவை. இது சுதந்திர அரசாங்கம் நடைபெறும் நாடுகளிலெல்லாம் அனுபவத்திலே கண்டதொன்று. பிஸ்கால் கொள்கை (செலவும், வரிகளும்) என்ற சாதனமுண்டு. அதனுடன் பணக்கொள்கைச் சாதனமுமுண்டு ; இதனால் (பகிரங்கச் சந்தைவிவகாரம், வட்டிவீதக் கொள்கை, சட்டரீதியான சேமநிதி வீதக்கொள்கை) தேசிய வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் நிர்ணயிக்கும் கோடுகளை நகர்த்தலாம். நோய்வந்தால் அமைதியாக நாம் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அதுபோலவே பெரிதளவான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை. இஃது இப்படியானால் பழையகொள்கைகளை மறுபடியும் பயன்படுத்தலாம் என்பதை அறிவீர்.

இது தைரியமான பதில் ; பொருத்தமானதுங்கூட. சஞ்சலமான நிலைமை ஏற்படாதவாறு தடுக்க எம்மால் இப்போது முடியுமென நாம் இறுமாப்புக் கொள்ளவேண்டியதில்லை. 14 ஆம் அத்தியாயத்திலே காட்டிய வியாபாரச் சக்கரத்தின் மிக மோசமான விளைவுகள், முதலாளித்துவத்தை ஆதியிலிருந்தே நசித்துவந்தன. இந்நிலை இப்போது மலையேறிவிட்டது. இருந்தும் வியாபாரச் சக்கரம் ஒழிந்துவிட்டதெனக் கூறமுடியாது. சிறிய கையிருப்புச் சரக்கு சம்பந்தமான ஏற்றத்தாழ்வும், யுத்தம் சமாதானம் என்பவற்றிடையேயுண்டாகும் இடைக்கால மாற்றமும் ஒருவகையான வியாபார மலர்ச்சியிலிருந்து மற்றொருவகையான மலர்ச்சியுண்டாவதைக் குறிப்பனவாகும். ஆனால் வித்தியாசம் இதுதான் : காலாகாலமாயுள்ள ஏற்றத்தாழ்வுக்குரிய தன்மை இருந்துகொண்டேயிருக்கும். ஆனால் முன்னையைப் போலப் பெரிய வியாபார மந்தமும், பணவீக்கமும் பெரிதளவில் வளரவிடமாட்டோம். நமது வங்கிகளை முறியவிடமாட்டோம். பணவரட்சியும் வங்கிமுறிவும் ஏற்படவிடமாட்டோம்.

சனநாயக முறைக்குரிய அரசியல் நெருக்கங்கள், வியாபார மந்தம் ஏற்படவிடமாட்டா என்பது உண்மையே. இதே நெருக்கங்கள் சிறிய பணவீக்கத்தைத் தடுக்கமுடியுமா ? வருடத்தில் இரண்டொரு வீதமாயிருக்கும்

படிப்பகம்

www.padippakam.com



மிதமான பணவீக்கத்தை பிஸ்கால்கொள்கையும் பணக்கொள்கையும் மாற்றினும் அவை பயன்படுத்தப்படுமா?

ஈற்றில், 36 ஆம் அத்தியாயத்திலே, 1960 இல் உண்டாகக் கூடிய புதிய பிரச்சினைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் இந்தப் பிரச்சினையும் ஆராயப்படும். எமது கலப்புப் பொருளாதாரத்திலே புதுவிதமானதொரு பணவீக்கமுண்டா? இரண்டாம் பிரிவிலே ஆராயப்பட்ட மொத்தத் தேவைச் சாதனங்கள் கணக்கில் விளங்கக்கூடிய வீக்கம் மட்டுமன்று; தவழும் வீக்கத்தை உண்டாக்கக் கூடிய செலவு உயர்த்தும் சக்திகளை ஆராய்வதுமான ஒன்றுகும்.

**சுருக்கம்**

1. மத்திய வங்கியின் பணக்கொள்கையானது சேமிப்பு, முதலீடு என்ற அட்டவணைகளை அதாவது நுகர்வு+முதலீடு+அரசாங்கச் செலவீடு என்ற மொத்த அட்டவணையை நகர்த்தும் முக்கியமான வழியாகும்.

2. காரணகாரியச் சங்கிலித்தொடர் பண அதிகரிப்பில் ஆரம்பித்து, குறைவான வட்டிவீதம், அதிக கடன்வசதி, அதிக முதலீட்டுச்செலவு வரை செல்லும் (இதில் சில சமயம் அதிக தலத்தாபனச் செலவும், நுகர்வுச் செலவுஞ் சேர்க்கப்படலாம்). இவற்றால் வேலை வாய்ப்பும், வருமானமும் அதிகரிக்கும். சில சமயம் விலையும் அதிகரிக்கும். $M \rightarrow i \rightarrow I \rightarrow NNP$ என்பதே இதன் வாய்பாடு. இது விரிவுக்கும் குறுக்கத்துக்கும் பொருந்தும். (பெரிய வியாபார மந்தமுண்டான காலத்திலே, மேலதிகமான சேமநிதியிருக்கும்போது வட்டிவீதம் மிகக் குறையும். அது மேலும் குறைக்க முடியாத நிலையிலிருக்கும். முதலீடு குறையும். கடன்வசதியும் செலவு இறக்கமும் இருந்தாலும் எவரும் முதலிட விரும்பமாட்டார். அப்போது பெடரல் ரிசர்வ் செயற்பாடு மிகக் குறைவாயிருக்கும். நிலை நிறுத்தற்கொள்கைகள் திடமாகக் கைக்கொள்ளப்பட்டால் இத்தகைய சந்தர்ப்பங்கள் மிக அருமையாகவே உண்டாகும்).

3. பிஸ்கால் கொள்கையென்பது, அரசாங்கத்தின் வரிவிதிப்பும் செலவுக் கொள்கையுமாகும். செலவுக்கோட்டை மாற்றுவதனால் இதுவும் வருமான நிர்ணயத்தைப் பாதிக்கும். பணி, பண்டம் எனப்வற்றிலே அதிகம் செலவு செய்வதால் $C+I+G$ என்ற அட்டவணையின் $G$ அமிசம் நேரடியாக உயரும். அதன்பிரகாரம் சமநிலை வெட்டும் உயரும். வட்டிகள் மாறுமுறையிலே செயற்படும். குறைக்கப்பட்ட வட்டிவீதம் CC கோட்டை இடப்பக்கமாயும், மேலேயும் நகர்த்துவதால் $C+I+G$ என்ற கோடு மேலே உயரும். அதிகரித்த வட்டிவீதம் எதிரான சுருக்கும் பலனையுண்டாக்கும். இரண்டு வழியிலும் வட்டிமாற்றம் அரசாங்கச் செலவு மாற்றங்களிலும் பார்க்கக் குறைவான சக்தியுடையதாயிருக்கும். MPC ஆனது 2/3 ஆக இருந்தால் பைசல் வருமானத்திலே உண்டாகும் ஒரு டொலர் மாற்றம் நுகர்வுச் செலவிலே 2/3 டொலராகவேயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



4. தன்னியக்கியின் பயனுக, தொழிலாளரின் தேவை குறைவாயிருக்கும் போதும், டொலர் தேவை வேறிடங்களில் பெருகாதிருக்கும் அதி அதமமான சந்தர்ப்பங்களிலுங்கூடத் தற்காலப் பொருளாதாரம் எவ்வாறு உயர் வேலை வாய்ப்புச் சமநிலையைப் புனருத்தாரணஞ் செய்யப் பிஸ்கால்கொள்கைகளையும், பணக்கொள்கைகளையும் பயன்படுத்தலாமென்பதைப் புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கள் காட்டுகின்றன, என்பது முக்கியமான ஓர் உதாரணமாகும்.

5. அடிக்கடியுண்டாகும் வியாபார மந்தங்களையும், அபரிமிதமான பண வீக்கங்களையும் ஒழிப்பதற்கு, இக்காலச் சனநாயக அரசுகள் பிஸ்கால் கொள்கை, பணக்கொள்கை, அரசியல் அதிகாரம் என்ற சாதனங்களைப் பயன்படுத்துகின்றன. இந்தச் சாதனங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதால் பின்வரும் அத்தியாயங்களிலே ஆராயப்படும் பழைய விலைக் கொள்கைகள் பொருத்தமுடையனவென்பதைக் காட்டிப் புதிய வைதீக இணைப்பு உண்டாக்கப்படுகிறது.

**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள்**

1. இறுக்கமான பணக்கொள்கை, பிஸ்கால் கொள்கை என்பவற்றைக் காட்டக் கூடியவாறு படம் 1 ஐயும் 2 ஐயும் திருப்பிக் கீறுக.

2. "மோசமான வியாபாரமந்தமுள்ள காலங்களிலே $M \rightarrow i$ ; $i \rightarrow I$ என்ற தொடர்பு பலமற்றதாயிருக்கும்" இதை ஆராய்க.

3. 1970 இல் தன்னியக்கியால் உண்டாக்கப்பட்ட பணவாட்ட இடைவெளியை ஒழிக்க (அ) பிஸ்கால் கொள்கையை மாத்திரம் பயன்படுத்துக. (ஆ) பணக் கொள்கையை மாத்திரம் பயன்படுத்துக (இ) இரண்டையும் சேர்த்துப் பயன்படுத்துக. எந்தமுறை மந்தமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும் (அதாவது வருங்காலத்துக்கு மிகக் குறைவான மூலதன ஆக்கத்தையுண்டாக்கும்) ?

4. "பிஸ்கால் அதிகாரமும், பண அதிகாரமும் ஓரிடத்தில் அமைய வேண்டும். அல்லது இரண்டும் ஒன்று சேரவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றின் கருமத்தால் உண்டாகும் பலன் மற்றதின் செயலால் பாதிக்கப் படலாம்". இக்கூற்றை ஆராய்க.

5. ஒரே நேரத்திலே வட்டியும் அ (G) வும் அதிகரித்தால், வருமானத்தைப் பொறுத்தவரையில் ஒன்றையொன்று ஒழித்துவிடும். படம் 2 ஐப் பயன்படுத்தி இதைத் தெளிவுபடுத்துக. கடினமான வினு : 370 ஆம் பக்கத்திலேயுள்ள சிக்கலான ஆராய்ச்சிமுறையை விளங்கமுடியுமா ? அதாவது டொலருக்கு டொலர் அ (G) விலுள்ள மாற்றங்கள் வரிகளிலுள்ள மாற்றங்களிலும் பார்க்கச் சக்திவாய்ந்தவை. அதனுல் சமன்செய்யப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலுள்ள அ (G) சிறிது விரிவுடையதாயிருக்கும்.

6. புதிய வைதீக இணைப்பு என்றுல் என்ன ? விளக்குக. நிபந்தனையிடுக.

படிப்பகம்

www.padippakam.com



7. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஆராய்க.
நு+மு+அ (C+I+G) நகர்வு ; M→i→I→NNP
பணக்கொள்கையால் ; இடமாக நுநு (CC) நகர்வு
வரிசெலவு ஆகிய மாற்றங்களால் ; வரிகுறைத்தல்
தன்னியக்கி ; வேலைவாய்ப்பு ; புதிய வைதீக இணைப்பு

## அனுபந்தம் : பணம், வருமானம் என்பவற்றை நிருணயிக்கும் சாதனங்கள்

பணம், வட்டி, முதலீடு, வருமானம், விலைகள், பணப்புழக்கத்தின் வேகம் என்பன தம்முள் எவ்வாறு தொடர்புபெற்றிருக்கின்றன என் பதைப்பற்றிய சுருக்கமான ஆராய்ச்சியே இது. வேலையின்மை ஒருபோதும் இருக்க மாட்டாதென்ற வைதீகக் கொள்கைகளும், கெய்ன்சின் வியாபார மந்தம் பற்றிய கொள்கைகளும் இத்தகைய ஆராய்ச்சியின் இருகோடி களாகும். நமது பொருளாதாரம் எவ்வாறு செயற்படுகிறது, கொள்கைச் சாதனங்களின் சக்தி எத்துணையது என்பவற்றைப் பற்றிய மிக யதார்த்த மான வருணனை எத்தகையதெனப் பெரும்பாலான பொருளியலறிஞர் கருதும் விடயங்கள் இந்த இரண்டு கோடிகளுக்குமிடையிலே எங்கோ ஓரிடத்தில் அமையும்.

இங்கே, பின்வரும் முறையில் விடயங்கள் ஆராயப்படும். நீர்மை விருப் பத்தொடர்புகள், முதலீட்டின் இறுதிநிலைத்திறன் (அல்லது முதலீடு—வட்டித்தொடர்பு), செலவுக்கோட்டில் உண்டாகும் மாற்றம், டொலர் செல வில் பெருக்கெண் பலாபலன், வேகத்தொடர்புகள், வைதீக மாதிரிகள், “செலவு உந்தல்” அல்லது “விற்பனையாளர் வீக்கம்” என்றமாதிரிக ளோடு ஒப்பிடல்பற்றிய இறுதிப் பொதுக் கருத்துக்கள்.

### நீர்மை விருப்பம் : பணமும் வட்டியும்

பணத்தை அதிகரித்தால், அது பலவகையான விளைவுகளை உண்டாக்கும். இது அஃது எவ்வாறு செய்யப்பட்டதென்பதைப் பொறுத்து உண்டாகும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஒவ்வோர் ஆட்களுக்கும் ஒரு புதிய 20 டொலர் பத்திரத்தை அனுப்புவதன்மூலம் பெற்ற 1 பில்லியன் டொலர் பணத்தினுல் ஏற்படக்கூடிய விளைவுகள் வேறு. பெடரல் ரிசர்வ், பகிரங்கச் சந்தைக்கொள்வனவுமூலம் பெறும் 1 பில்லியன் டொலரினுல் உண்டாகும் விளைவுகள் வேறு. இது திறைசேரிக் கடன்பத்திரங்களை விற்ப தால் உண்டாவது. இது பணந்தான். பணச்சார்பான திரவச் சொத்தான திறைசேரிப் பத்திரங்களை விற்பதால் உண்டானது. சார்புப்பணத்தின் கணக் கில் உண்டாகும் இப்பணம் உயரும்போது, அது நுகர்வோனையோ முதலிடு வோனையோ பாதிக்க மாட்டாது. வட்டி வீதங்களையும் சமூகத்திலுள்ள நீர்மை மட்டத்தையுமே பாதிக்கும்.

www.padippakam.com



நாலாம் அத்தியாயத்திலுள்ள 5 ஆம் படத்தில் காட்டப்பட்ட விநியோகம், தேவை என்ற முறையின்படி அரசாங்கக் கடன்பத்திரங்களுக்கு அதிகம் கிராக்கி ஏற்பட்டால் அவற்றின் சந்தைவிலை அதிகரிக்கும். அதுவும் நீண்ட தவணைப்பத்திரங்களென்றால் மேலும் விலை அதிகரிக்கும். ஒரு பத்திரத்தின் (1) விலை ஏறினால், (2) ஓரலகு காலத்துக்கு அஃது உதவும் சுருங்கிய டொலர் தொகை இருந்தபடியேயிருந்தால், அப் பத்திரம் உழைக்கக்கூடிய வட்டி வீதத்துக்கு என்ன ஆகிறது ? ஒரு பத்திரத்தின் சந்தைவிலை உயர்ந்தால் அதன்வட்டிவீதம் வீழ்ச்சியடையும்.

மற்றவிடயங்கள் சமனாகவிருக்கும்போது, பணச்சப்பிளையில் அதிகரிப்பு உண்டானால், வட்டிவீதத்தில் கீழ் நோக்கிச் செலுத்தக்கூடிய பாதிப்பு உண்டாகும். இதனால் கடன்வசதி இலேசாகும். நீர்மைவிருப்பத் தொடர்பு பற்றி இவ்வளவுதான் இங்கே நாம் கூறக்கூடியது.

நீர்மைவிருப்புப்பற்றி மிக இலகுவாக்கப்பட்ட ஒரு தோற்றத்தை 4 ஆம், 5 ஆம் படங்கள் தருகின்றன. விளக்கத்திற்காக, மொத்தமான பணம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது "உயிர்ப்புள்ள பணம்"; "உயிர்ப்பில்லாத பணம்". எனவே சாதாரண வருமான விவகாரங்களுக்கு முன்னையது தேவைப்படும். அதற்கென நாம் குறைந்த பட்சப் பணத்தையுடையவராய்ப் பணத்தைச் சொத்தாக வைத்திருப்பதிலும் பார்க்க அகற்றிவிட விருப்பமுள்ளவராயிருத்தல் வேண்டும். இத்தகைய உயிர்ப்புள்ள பணம் வருடாந்த வருமானத்திலே ஒரு பின்னமாகும். இதைப்பெரும்படியாக 1930 இக்கு முன்னிருந்த பணக்கையிருப்பைக் கொண்டு கணக்கிடலாம். அக்காலத்தில் பணத்தை வைத்திருப்பதிலும் பார்க்க நல்ல வட்டிதரும் முதலீடுகளிற் போடுமாறு தூண்டப்பட்டது. இந்த முதல்அமிசத்தைக் கணக்கிட்டபின்னர், புள்ளி இயலறிஞர் உயிர்ப்பில்லாத பணத்தின் விபரத்தைத் தருவார்[1].

குறைந்த வட்டி வீதமும், உயர்ந்த செயலில்லாத M உம் ஒன்றாகவே இணைந்து செல்லும் என்பதைப் படம் 4 காட்டுகிறது. இத்தகைய தொடர்பு ஒழுங்காக வரும் இலேசாக்கப்பட்ட வடிவத்தை, 5 ஆம் படம் காட்டுகிறது. பல தசாப்தங்களாக உண்டான மாற்றங்களையும், சிதறுதல்களையும் அது கணக்கில் எடுக்கவில்லை.


1. மொத்தப் பணத்தை கேயின்ஸ் என்ற ஆசிரியர் "விவகார டிமாண்ட்" என்றும் "யூக டிமாண்ட்" என்றும் இருவகையாகப் பிரிப்பர். இதில் மற்றோர் அங்கமாக "தற்காப்பு டிமாண்ட்" என ஒன்றுமுண்டு. பண வருமானம் + வட்டி வீதம் என்ற இரண்டின் மொத்தமே மொத்த டிமாண்ட் எனச் சில புள்ளியியலாளர் கூறுவர். இரண்டு டைமென்ஷன் வரைக் கோட்டுக்கு இத்தகைய பிரிவு வசதியாயிருக்கும். பலவகையான துறைகளிலிருந்து தொகுக்கப்பட்ட ஒரு கொள்கையானது பணடிமாண்டை வருமானம், விலைகள், வட்டிவீதங்கள் என்பவற்றின் தொழிலாகவே கருதும். இங்கே குறிக்கப்பட்ட பிரிவு விளக்கங் கொடுப்பதற்காக மாத்திரமே செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



M → *i* தொடர்பு பற்றி இந்த அத்தியாயத்திலே கூறப்படும் விடயத்தை, இத்தகைய ஒரு வளைகோட்டை அனுசரித்த ஒரு போக்கினுல் காட்டலாம். மத்திய வங்கியின் ஆழ்ந்த மந்தத்தாலுண்டாகும் சக்திக்குறைவில் நம்பிக்கையுடையவர்கள் அத்தகையதொரு மந்தமான காலத் தவணைக்கு




படம் 4.

இடைநிலையான கோட்டைக் கீறுவர். அப்போது பெடரல் வங்கி, எந்த வகையில் M ஐ மாற்றினுலும், வட்டிவீதம், கடன்வசதி என்பவற்றின் அமைப்பில் ஏற்படும் பிரதிபலன் மிகக் குறைவாகவேயிருக்கும். M இக்கும் *i* இக்குமுள்ள தொடர்பு பலமற்றதாகவேயிருக்கும்.

### இறுதிநிலை வினைத்திறன் அல்லது வட்டி—முதலீட்டுக் கோடு.

கட்டிட அமைப்பு, தளவாடம், கையிருப்புச் சரக்கைப் பெருக்குதல் என்பவற்றிலே முதலீட்டுச் செலவின் அதிகரிப்பை உண்டாக்குவன, கடன் வசதி அதிகரிப்பும் குறைந்த வட்டிவீதமுமாகும். இவற்றுக்கிடையேயுள்ள தொடர்பு "இறுதிநிலை முதலீட்டுத்திறன்" என வழங்கப்படும். 5 ஆம் படத்திலே *i* ஐ இறுக்கமாக்குவதால் I அதாவது முதலீடு குறைவதைக் காணலாம்.

5 ஆம் படத்திலே, பெடரல் வங்கி M ஐ ஓரங்குலம் வலப்பக்கமாய் நகர்த்தியதால் முதலீட்டில் அதாவது I இல் உண்டாகும் பலனை 6 ஆம் படத்தில் அவதானிப்பதற்காகவே 5 ஆம் படமும் 6 ஆம் படமும் அந்தப் பக்கத்திற் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய விரிவுக்கொள்கை *i* ஐக் குறைக்கும். இவ்வாறு குறைந்த *i* யுடன் ஆரும் படத்துக்குச் சென்ருல், முதலீடு I அதிகரிப்பதைக் காணலாம்.


### வேலை, வருமானம், விலைகள் என்பவற்றில் பெருக்கம்

இந்தச் சங்கிலியிலுள்ள கடைசித் தொடர் 13 ஆம் அத்தியாயத்திலும் ஏனைய அத்தியாயங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. M இன் பெருக்கம் நு + மு + அ


www.padippakam.com



(C+I+G) செலவில் பெருக்கத்தை உண்டாக்குவதால் தே. தே. உ. (NNP) வில் மேல் நோக்கி உயர்வு உண்டாகும். எனவே புதிய M புதிய 1 பில்லியன் முதலீட்டை உண்டாக்குமானல் NNP ஆனது 1 பில்லியனுக்கு அதிகமான பெருக்கத்தைப் பெறும். இது மேலும் செலவு செய்யத்தூண்டப்படுவதால் உண்டாவதாகும்.




படம் 5.




படம் 6.

புதிய வேலைகளையும், புதிய உற்பத்திகளையும் புதிய தே. தே. உ. (NNP) எவ்வளவு தூரம் பிரதிபலிக்கும்? இந்தமுறையிலே எவ்வளவுதாமதம் முன்னர் இருந்ததென்பதிலேதான் இதற்குப் பதில் தங்கியுள்ளது. வேலையின்மை அதிகமாகவும், திறமை அதிகமாகவும் இருக்குமானல், அலகுச் செலவுகளிலும், விலைகளிலும் அதிகரிப்பில்லாமல் புதிய உற்பத்திப்பொருள்களை ஆக்கிக் கொள்ளலாம். அப்போது விரிவெல்லாம் உண்மையான பொருள்களாகவே யிருக்கும். மிக உயர்ந்த வேலைவாய்ப்பு இருக்கும்வகையில் திட்டம் செயற்பட்டால், தே.தே.உ. (NNP) மொத்தத் தேவையில் உண்டான புதிய அதிகரிப்பு, பொருள்களின் விலையேற்றத்திலும் தொழிலாளர்போன்ற உற்பத்திச்சாதனங்களிலும் சுவறும். புதிய செலவு (அ) முதலீட்டாளர் நம்பிக்கையின் சுயேச்சையாயுண்டானதொரு மலர்ச்சியினுலோ (இறுதி நிலைத்திறன்கோடு வலப்பக்கமாய் நகர்வதால் காட்டப்படும் 6 ஆம் படத்தில் காணலாம்), (ஆ) பெடரல் வங்கியின் பணக்கொள்கையாலோ, (இ) விரியும் பிஸ்கால் கொள்கையாலோ (இதுவிரியும் வரிப்பக்கத்தால் அல்லது குறைக்கப்பட்ட வரிப்பக்கத்தால் உண்டாகும்) ஏற்பட்டதானல், விலைக்கும் பொருள் அளவுக்கும் P+Q இடையில் புதிய டொலர் செலவு விகிதத்தில் வித்தியாசமிருக்குமென்று நிணைக்கவேண்டியதில்லை.

www.padippakam.com



## வேகத்தின் போக்கு

$M \rightarrow i \rightarrow I \rightarrow NNP$ என்ற தொடருக்குப் பதிலாகச் சிலர் $M \rightarrow MV \equiv NNP$ எனறு எழுதலாம்.

M இலே அதிகரிப்பு உண்டானால், டொலர் தே.தே.உ (NNP) ஐ அஃது அதிகரிக்கச் செய்யும் என்பதையே இது காட்டுகிறது. $P \times Q$ பெருக்கத்தால் உண்டாகக் கூடிய பலாபலன்களும் அதில் அடங்கும். ஆனால் V இலே அதாவது வேகத்திலே மாற்றம் ஏற்படுத்தப்படுமானால் இந்த அதிகரிப்பு உண்டாகாது[1].

சில நிகழ்சிகளின் தொடர்பை ஆங்கிலத்திலும் கொடுக்கலாம், பிரெஞ்சிலும் கொடுக்கலாம். அதுபோலவே இவையும் பலவகையான முறையிலே கூறப்படும் விவரணமாகும். ஆதலால் பொருளைப் பற்றியோ சொற்பிரயோகத்தைப் பற்றியோ நிதானமானவர்கள் விவாதித்துக்கொண்டிருக்கமாட்டார். ஆனால் குறித்த ஒரு பரிபாஷையை விரும்புவோர் நிச உலகைப் பற்றிய சில கருதுகோள்கள் வேறு சிலவற்றைக் காட்டிலுஞ் சிறந்தனவென்று கருதுவர். MV ஐப் பயன்படுத்த விரும்புவோர் V இன் நடத்தை பற்றி நன்கு அறிந்தவராயிருப்பவர். பலவகைப் பதில் நிலைமைகளில் V நடந்துகொள்ளும் முறையையும் அறிந்தவராயிருப்பர். நு + மு + அ (C + I + G) வாய்பாட்டை விரும்புவோரினும், அவர்களுக்கு மேற்கூறிய வாய்பாட்டில் அதிகப்பிரியமுண்டு. இன்றுள்ள பொருளியலறிஞரில் பெரும்பாலோர் கடைசியான வாய்பாட்டையே ஆதரிக்கிறார்கள். ஆனால் இவ்விடயத்தில் ஒன்றுதான் நல்லது, மற்றது கெட்டதெனத் திடமான அபிப்பிராயங் கொள்ள வேண்டியதில்லை. V என்னும் வேகவழிதான் சிறந்ததென அதனை ஆதரிப்போர் நன்றாக ஆராய்ந்து நிரூபிப்பாரானால் பயனுடைமை வாதிகள் அதைப் பயன்படுத்தப் பின்வாங்கமாட்டார்.

## வைதீகக் கொள்கையாளர் விலை நெகிழ்ச்சி.

எந்தக் கொள்கையாளரின் பரிபாஷையை உபயோகிப்பதென்பது பிரச்சினையன்று. அஃது அத்துணை முக்கியமானதன்று. தொல்லையுண்டாக்காததும், சந்தைவிலை நெகிழ்ச்சியுடையதுமான ஒரு முறைக்கும், கலப்புள்ளதும் அமெரிக்காவிலும் ஏனை மேலைத்தேசங்களில் நிலவுவதுமான யதார்த்த உலகுக்கு மிடையிலுள்ள தாரதம்மியமே அடிப்படை முக்கியத்துவமுடையது. ஒரு திசையிலே செலவு செய்யப்படாதது தானாகவே மற்றொரு திசையிற் செலவு செய்யப்படும். ஆகையால் வேலையின்மை ஒருபோதும் ஏற்படமாட்டாதெனப் பல வைதீகக் கொள்கையுடைய பொருளியலறிஞர் கருதினர்.

1. பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டபின்னர் V மாருதிருக்குமெனச் சில கொள்கையாளர் கருதுவர். வேறுசிலர் இத்தகைய எடுகோள் தேவையில்லையென எண்ணுவர். முன்னரெல்லாம் குறுந்தவணைமேலோட்டங்கள் M, V என்பவற்றை ஒன்றுபடுத்தினவென்ற காரணத்தால், இந்த அனுபவத்தை முன்கூட்டியே கூறமுயல்வர். பகிரங்கச்சந்தை விவகாரம் நிகழ்ந்த சூழ்நிலையை அனுசரித்துச் சிக்கலான கருதுகோள்களைச் சிலர் ஏற்படுத்துவர்.

www.padippakam.com



**சே என்பவர் வகுத்த விதி.**

பிரெஞ்சு எழுத்தாளரான சே என்பவர் 1803 இல் உருவாக்கிய இக் கொள்கை, தெளிவாக உரைக்கப்படாதபடியால் பல விவாதங்களுக்கு இடம் அளித்தது. மதிப்புத்தொடர்புகள் எல்லாம் சார்புடையவாதலால், அமித உற்பத்தி சாத்தியமில்லையென சேயும், ஏனை வைதீகக் கொள்கையாளரும் கருதினர். இவ்வகையில், சப்பாத்துகள் கரண்டிகளுக்குச் சமனுக ஒரு சார்பு விலையில் குறிக்கப்படலாமெனை எடுத்துக் காட்டினர். தொழிலாளி ஒருவன் சேமிக்கும் பணம், யந்திர உற்பத்தித்தொழில்களில் வேலையாட்களை அமர்த்துவதிற் செலவு செய்யப்படும். அவன் அப்பணத்தை உணவு முதலிய தேவைப்பொருள்களை உற்பத்திசெய்வோரிடத்திற் செலவு செய்வதன் மூலம் அவர்களுக்கு வேலை கொடுப்பான் என்பது அவர்களுடைய கொள்கை. நெகிழ்ச்சியுடைய மூலதனச் சந்தையில் நிலவும் வட்டிவீதம் (பூரண வேலை வாய்ப்பில்) சேமிப்பும் முதலீடும் சந்திக்கும் மட்டத்தையே நாடும் என்று அவர்கள் ஒரு தெளிவற்ற கொள்கையுடையவராயிருந்தனர். பணச் சம்பளம் அதிகம் இறங்குமாலுல், வேலைசெய்ய விருப்பமுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் அது வேலை வாய்ப்பை உண்டாக்கும் என அவர்களும் அவர்களுடைய அனுதாபிகளும் எண்ணினர்.

1800 இக்குப் பின்னர், சிறு சிறு காலங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாயிருந்தது. சில சமயங்களில் நீண்ட காலம், வேலையில்லாத்திண்டாட்டமிருந்தது. மேலும் வேலைக் குறைவுமிருந்துவந்தது. எனவே சேயின்விதியை மீறிச் செல்லவேண்டுமெனச் சில பொருளியலறிஞர் கருதினர்; நெகிழ்ச்சிவிலை, சம்பளம் என்பவற்றைப் பற்றி அவ்விதியிலடங்கிய சில தாற்பரியங்களை மறுத்தனர் அல்லது அந்தவிதியைக் கைவிட்டு வேறு கருதுகோள்களைக் கொண்டு கருமங்களை ஆற்றவிரும்பினர். 20 வருடங்களின் முன்னர் இந்தவகையான ஆராய்ச்சி பயனுதவிற்று. இன்றும் பயனுதவுகிறது. ஆனுல் இதற்குப் பதிலாயுள்ள கொள்கைகளும் இதனோடு பிணக்கின்றி ஏற்புடையனவாகச் செய்யப்பட்டுவிட்டபடியால் இவற்றிடையே அத்துணைப்பேதத்தைக் காண முடியாது. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த எ. சி. பீகு என்ற ஆசிரியர் முதலில் கேய்ன்சுடைய கொள்கைகள், முரணுன கோட்பாடுகளென எண்ணினுர். பின்னர் தமது பழைய கருத்துக்களைக் சேய்ன்சின் கருத்துக்களோடு இணைத்துவிடலாமெனக் கண்டார். அவர் இணைத்த முறை பின்வருமாறு :—

**பீகு விளைவுகள்.** நாணயங்களும், கெட்டுப்போகாத நோட்டுக்களுமுள்ள நாணய முறையிலே M என்ற ஒன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். பூரண வேலைவாய்ப்புமட்டத்தின் இடப்பக்கத்திலே சே.சே. (SS) உம் முமு (II) உம் வெட்டுவதால் வேலையின்மை ஆரம்பத்தில் உண்டாகிறதென வைத்துக் கொள்வோம். கடன் பத்திரச் சந்தையிலும் ஈட்டுச் சந்தையிலும் வட்டி விகிதம் சமனில் இருப்பதாகக் கொள்வோம். எலக்காரர் விநியோகம், தேவைக்குச் சமனுயிருப்பதாகக் காண்கின்றனர். இந்த நிலையை மாற்றுவதற்கு வங்கிக்

www.padippakam.com



கொள்கைகளோ பணக்கொள்கைகளோ பிரயோகிக்கப்படவில்லையென விடயத்தை இலேசாக்குவதற்காக வைத்துக்கொள்வோம்.

சேயின் ஆதரவாளரான அனுபவசாலிகள் சிலர், பின்வருமாறு வாதிப்பர்: "இந்தச் சமநிலையில் ஒரேயொரு தவறுதானிருக்கிறது. நிகழும் வேதன ஒழுங்கின்படி வேலைசெய்ய விரும்பும் தொழிலாளருக்கு வேலை கொடுக்கப்படவில்லை. இது யதார்த்தமானதாய் இருக்கிறதோ இல்லையோ, நியாயத்தை உத்தேசித்து தொழிற்சந்தைக்கு ஓர் ஏலக்காரர் இருப்பதாக நீர் கற்பனை செய்துகொள்ளவேண்டும். பணக் கணக்கிலே கூறப்படும் அவருடைய சம்பளத்தை விழ விட்டுவிடவேண்டும். ஏனெனில் தொழிலாளர் சப்பிளை அதிகமாகிவிட்டது."

பீகு இந்தக் கருத்துக்கு உடன்படுகிறார். சம்பளவிகிதத்தை வீழ்ச்சியடைய விட்டுவிடுகிறார். பணச் சம்பளம், உற்பத்திச் செலவில் முக்கியமானது. இவ்வாறு சம்பளம் வீழ்ச்சியடையவிடுவதால் எல்லாவிலைகளும் பெரிதும் வீழ்ச்சியடையும். அதை நூலின் மூன்றும், நாலாம் பகுதிகளில் ஆராய்வாம். இவ்வாறு விலைகளும் சம்பளங்களும் வீழ்ச்சியடைந்தால் சேசே (SS) உம் முமு (II) உம் வெட்டும் நிலைமைக்கு என்ன நடக்கும் ? உதாரணமாக என்னிடம் முன் ஒரு ஏக்கர் நிலமும், ஒரு யந்திரமும், 100 டொலர் பணமும் இருந்தனவென்று வைத்துக்கொள்வோம். (எனக்கு ஈட்டுக் கடனோ ஐ. ஒ. யூ. கடனோ இருந்திருக்கலாம். இது பணத்திலே கொடுக்கவேண்டிய கடன். ஆனால் சமூகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய தனிப்பட்ட பணப்பொறுப்புக்களும் சொத்துக்களும் ஒன்றையொன்று சமன்படுத்திவிடலாம். இந்தப் படத்தில் அரசாங்கக் கடன்பத்திரங்கள் கணக்கில் இல்லையென்பதைக் கவனிக்கவேண்டும்).

சம்பளங்கள் முன்னையிலும் ஆயிரம் மடங்கு குறைந்துவிட்டன என்று வைத்துக்கொள்வோம். விலைகளும் முந்தியவிலையிலும் பார்க்க .001 அளவு குறைகின்றன. எல்லாம் மதிப்பில் வீழ்ச்சியடைகின்றன. ஆனால் என்னுடைய 100 டொலர் உண்டியல், 100 டொலர் உண்டியலாகவேயிருக்கிறது. ஆனால் நான் முன்னர் 100,000 டொலர் பெறுமதியுள்ளதற்கு இப்போது அதிபதியாயிருக்கிறேன். நான் ஓர் இலட்சாதிபதி !

பணத்திலோ உண்மை வகையிலோ முன்னிருந்தபடியேயிருக்கும் வருமான மட்டத்திலிருந்து, நுகர்வுக்கும் சேமிப்புக்கும் அதே அளவைச் செலவு செய்வேனா ? இல்லை. நான் தனவந்தன்தான். பொருளாதார முறையிலுள்ள கெட்டியான பணத்தின் அதிகரித்த வாங்குந் திறனால் உண்டான நிசச் செல்வத்தின் பயனாய் (இது விலை வீழ்ச்சியினாலும் சம்பள வீழ்ச்சியினாலும் உண்டாவது), நுநு (CC) கோடுகள் மேலே ஏறும்; சேசே (SS) கோடுகள் கீழ் நோக்கி விழும். முமு (II) கோட்டிலே விலை மட்ட மாற்றத்தின் சாதகமான விளைவுகள் இல்லாவிட்டாலும், பணச் சம்பளத்தையும், விலைகளையும் கீழே இறக்கினால், பூரண வேலைவாய்ப்பு நிலை கருத்தளவிலாவது நிறைவேற்றப்படும். நிரூபணம்.

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய "கடும் பணவிளைவினால்" கருத்துலகில் மாத்திரம் நில வும் வைதீகக் கொள்கைகளை பீகு நிரூபித்தார். இதனையே இன்றைய பொருளியலறிஞர் "பீகுவிளைவு" என அவருடைய பெயரால் வழங்குவர். கலப்புள்ள முதலாளித்துவச் சமூகத்திலே சம்பளங்களைக் கீழே இறக்கு வதி லுள்ள இடர்ப்பாடுகளை பீகு காரியவாதியானபடியால் உணர்ந்துகொண்டார். கடனால் உண்டான பணவாட்டத்தினால், வங்கிமுறிவு, கலகம், வியாபார மந்தம், புரட்சி என்பவற்றைக் கண்ணாரக் கண்டுகொண்டு வாழ்ந்த பீகு, முதலாளித்துவ முறையில் நிலவும் வேலையின்மையை நீக்குவதற்குத் தாம் தமது முறையைச் சிபார்சு செய்யமுடியாதெனக் கூறிவிட்டார். டொலர் M ஐப் பெருக்குவதனால் இதை அவர் செய்ய விரும்பியிருக்கலாம். இந்நூலின் இரண்டாம் பாகத்திலே கூறப்பட்ட பொதுக் கருத்துக்களை அவர் ஆதரித்தார். "வேகம்" என்ற சொல்லை அவர் அடிக்கடி பிரயோ கிக்கவிரும்பியதால், சொல்லும் அதன் பொருளும் அவருக்கு அதி முக்கியமாகத் தெரியவில்லை என்பது தெளிவாகும்.

### வைதீகமுறையில் திருத்தமற்ற கணியக் கொள்கை

உள்ள பணத்துக்கு ஏற்றவிகிதமாக விலைகள் இருக்கவேண்டும் என்ற திருத்தமற்ற கணியக் கொள்கையை இத்தருணம் ஞாபகத்திலே கொள் ளலாம். இதன்படி M ஐ இரட்டித்தால் P யும் இரட்டிக்கும். யதார்த்த உலகில் உள்ள பலவகையான நிலைமைகளுக்கிடையில் அதாவது நிலையான விலைகள், வியாபாரமலர்ச்சி, மந்தம் என்று இத்தகைய பல மாற்றங்களுக் கிடையில், மேலே கூறிய கணியச் கொள்கையானது விடயங்களை முன்கூட்டியே அறிவிக்க வாய்ப்பான முறையன்று. ஆனால் பீகு முதலியோர் பயன் படுத்திய உண்மையான வைதீகமுறையைப் பயன்படுத்தினால் திருத்த மற்ற இந்தக்கணியக் கொள்கையிலே சில உண்மைகளிருப்பதைக் காண லாம். இக்கொள்கை முன்னேறியே ஹேஷ்யம் கூறும் தன்மைகளைக் கொண்டிருப்பதற்குரிய காரணத்தை, அதாவது பணவீக்கம் அதிகமுள்ள காலங்களிலும், சில நீண்டகாலத் தவணைகளிலும் அத்தகைய தன்மை களைக் கொண்டிருப்பதற்குரிய காரணத்தை, நாம் அறியலாம்.

பீகு காட்டிய சமநிலையை ஞாபகத்திலிருத்துங்கள். அதன்படி பூரண வேலைவாய்ப்பின்போது சமூகம் முதலீடு செய்யக்கூடிய அளவுக்கு ஒருவன் சேமிக்கக்கூடியவகையில்தான் தனவந்தன் என நினைக்கலாம். அவனுடைய 100 டொலர் உண்டியல் 10 டொலர் உண்டியலாயிருக்கும் போது எல்லாவிலைகளையும் பத்திலொன்றாகக் குறைத்திருந்தால் சமநிலை மறுபடியும் பழைய நிலைக்கு மாற்றிவிடப்படும். சார்புவிலைகளும் சம்பளங் களும் முன்போலவே யிருக்கும். எல்லாச் சடப்பொருள்களும், முதலீடு களும் முன்போலவேயிருக்கும். M ஐ பத்திலொன்றாக வெட்டினால் P யும் அவ்வாறே வெட்டப்படுகிறது.

இந்தச் சுருக்கமான மாதிரியில் திருத்தமற்ற கணியக் கொள்கை அமைந்துள்ளது. பரிவர்த்தனைச் சமன்பாடான $MV \equiv PQ$ இல் Q

படிப்பகம்

www.padippakam.com



அல்லது V மாறுவதற்குக் காரணமில்லை. எனவே $P = kM$ என்றாகும். இதில் $k$ ஆனது $V/Q$ என்ற வீதமாகும். இதன் மேலெண்ணும் அடியெண்ணும் இந்தக் கற்பிதமான உதாரணத்தில் மாறாதிருக்கும். ஆனால் யதார்த்த உலகில் அஃது எப்படியும் மாறியிருக்கலாம்.

இந்த நீண்ட தவணைப் பூரண வேலைவாய்ப்பு உதாரணத்திலே, M இல் உண்டான சமனுக்கிய மாற்றத்தினால் வட்டிவீத மாற்றம் உண்டாகாது. இரண்டு பென்சாயிருந்தது ஒரு பென்சானதுபோல், எல்லாவிலைகளும் சம்பளங்களும் ஒரே விகிதத்தில் மாறினால், டேவிட் ரிக்கார்டோ கூறியது போல 1000 பென்சுக்கு 50 பென்சாக 5 வீதத்தில் வட்டிகொடுத்த சொத்து, இப்போது 500 பென்சுக்கு 25 பென்சு வீதம் 5 வீதம் வட்டிகொடுக்கும்.

யதார்த்த உலகம் நமது கற்பனையுலகத்திலும், அதிகம் வித்தியாசமுடையதன்று. குறுந்தவணையில் விசேடமாக இவையிரண்டிற்கும் வித்தியாசமுண்டு. நெடுந்தவணையில் விலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஏனைக் குழப்பங்கள் ஒழுங்காகிவிட்டால் எமது கருத்துலக உதாரணம் பெரிதும் பொருத்தமுடையதாயிருக்கும். அத்தகைய மாதிரியில் பொருத்தமற்றவற்றை பொருத்தமுள்ளனவோடு எவ்வாறு பொருத்தலாம்; அவற்றை நிகழ்ச்சிகளோடும் கொள்கைகளோடும் பொருத்தி எவ்வாறு விளக்கலாமென்பதிலேயே பொருளியற்கலை தங்கியிருக்கிறது.

### செலவு உந்தும் பணவீக்கம் அல்லது விற்பனையாளர் பணவீக்கம்

1960 இல் பொருளியலறிஞரால் ஆராயப்பட்ட மிக முக்கியமான விடயங்களில் ஒன்று சாத்தியமாகக் கூடிய விலை வீழ்ச்சியாகும். இது பெரிதளவு வேலையின்மையிருக்கும்போதும், உபரியான திறமையிருக்கும்போதும், நு + மு + அ (C + I + G) அல்லது MV தொடர்புகளில் உள்ள விசேட பண வீக்க இடை வெளியினால் உண்டாவதாகத் தோற்றமளிக்காது. விலையில் உண்டாகும் "தேவை இழுப்பு", அதற்கு முரணாயுள்ள "செலவு உந்தல்" ஆகிய சொற்கள் இந்த ஆராய்ச்சிக்குதவும் பதங்களாகும். இவ்வாராய்ச்சியின் பிற்காலப் போக்குக்குப் பின்னணியாகச் சில சொற்களைக் கூறலாம்.

தொழிற்சந்தையிலும் வேறு சந்தைகளிலும் குறைவுண்டெனக் கொண்டு ஆராய்ச்சியைத் துவங்குவோம். பலகாரணங்களினால் சம்பளவிகிதங்கள் கீழ்நோக்கிச் செல்வதைப்பொறுத்தவரையில், சார்பளவில் நெகிழ்ச்சியற்றிருக்கின்றன என்றும், அதனால் பீகு விளைவுகள் கருத்திற்கொள்ளத் தக்கனவாயமையவில்லை என்றும் கொள்வோம். தொழிற் சங்கங்களின் தலையீடின்றியே, முதலாளிகளும் தொழிலாளிகளும் சம்பளவிகிதங்களை அமைத்துக்கொள்ளுகின்றனர் என்றும் வைத்துக்கொள்வோம். இந்தச் சம்பளவிகிதம் தொழிலாளர் உலகில் உள்ள வேலையின்மை மட்டத்துக்கு அற்பமாக மறிவினைசெய்யக்கூடிய வருடாந்த வீதத்தில் பணக் கணக்கில் உயர்கிறதெனக்கொள்வோம். தீவிரமான உதாரணமொன்றைக் கொடுப்ப

www.padippakam.com



தாலுல், எங்கும் வருடத்திலே ஒரு மணித்தியாலத்துக்கு 5 சதவீதம் சம்பளம் உயர்வதாகக் கொள்ளலாம். இது, அனுகிருதியினாலும் இயல்பாக ஏற்படும் அதிர்வினாலுமே உண்டாகிறது. ஈற்றில் தொழிலாளர் உற்பத்தி விடயத்தில் நுண்தொழில் சீர்திருத்தம் வருடத்துக்கு 3 சதவீதம் உண்டாகிறதெனக் கொள்வோம்.

இதன் விளைவென்ன ? மொத்த தே.தே.உ. (NNP) இல் தொழிலாளரின் பங்கை $\frac{3}{4}$ ஆக வைத்திருக்கக் கூடியவாறு வியாபாரம் பொதுவாகத் தனது விலைகளை அமைக்குமாலுல், அதன் விளைவாக உண்டாகும் விலை நிர்மாணிக்கப்பட்டதாகிவிடும். வருடம் 5 வீதம் சம்பளவிகிதம் வளருமாலுல் விலைகள் வருடம் 2 வீதம் அதிகரிக்கும். எஞ்சிய 3 வீதம் நிச உற்பத்தியின் தொழில் நுட்ப அதிகரிப்பு எனலாம். (எனவே நிசச் சம்பளம் 3 வீதமாகவே உயரும். விரும்பிய 5 வீதமாக உயரமாட்டாது. உயரும் P ஆனது குறைவுக்கு ஈடாகும். $\frac{3}{4}$, $\frac{1}{4}$ பிரிவு மாருதிருக்குமாலுல், நிச லாபம் 3 வீதத்தால் உயரும் என்பதையும் கவனத்திலெடுக்கவேண்டும்).

இதுவரை சேமிப்பைப்பற்றியோ, முதலீட்டைப்பற்றியோ M, V என்பவற்றின் நடத்தையைப்பற்றியோ நாம் ஒன்றுங்கூறவில்லை. வீக்க இடைவெளி பூச்சியமாகவும், வாட்ட இடைவெளி பூச்சியமாகவும் இருந்தால், இந்த மாதிரியிலும் விலைகள் வருடத்தில் இரண்டுவீதமாகவே ஏறும். வருமான நிர்ணயம் நு + மு + அ (C + I + G) மாதிரி ஆகவோ MV மாதிரி யாகவோ இருந்தாலும் நமது வருமான நிர்ணயக் கொள்கை பொருத்த முடையதாகவேயிருக்கும். ஆலுல் இதைக்கொண்டு P ஐ நிச்சயிக்க முடியாது. அது Q வை நிச்சயிக்க உதவும் கொள்கையாகவே முடியும்.

உயர்ந்த விலை மட்டத்திலே, 13 ஆம் அத்தியாயத்திலே காட்டிய பணவீக்கத்தைத் தீர்மானிக்கும் வீக்க இடைவெளி, பூச்சிய இடைவெளியை யுண்டாக்கக் கூடியவாறு மேலே சமனுக உயருமாலுல், வருடம் 3 வீதமாக நிசமான Q உயரும். அப்போது நமது பூரண வேலை வாய்ப்பு, உற்பத்தி தொழில்நுட்பமுன்னேற்றங்கள் காரணமாக வளரும். ஆலுல் P யின் புதிய உயர்மட்டம், கோடுகள் நேர்த்தியாக மேலே உயரமாட்டாவென்பதையும் அதற்குப் பதிலாக பணவாட்ட இடைவெளியோடு குறுக்கே வெட்டத் துவங்குமென்பதையும் காட்டுமாலுல் செலவு உந்தும் நடவடிக்கை வேலையின்மையை உண்டாக்குவதுடன் நிசமான Q ஆனது தொழில் நுட்பமுறையிலே சாத்தியமான 3 வீதத்திலும் பார்க்க மெதுவாக வளரவுஞ்செய்யும். மூன்ருவது உதாரணமாக M கண்டிப்பாக நிலைமாருதிருக்க, P யின் ஏற்றம் V யின் ஏற்றத்தோடு சமவாயமாயிருக்க, அது போதிய அளவு பெரிதாயிருந்தால் செலவு உந்தலை அதிகரிக்கக்கூடியவாறு "தேவை—இழுக்கும்" வீக்கம் உண்டாகலாம். அதாவது புதிய செலவுக் கோடுகள் வீக்க இடைவெளியை உண்டாக்கக்கூடிய அளவு மேலே உயர்ந்திருக்கும். நாம் பூரணவேலை வாய்ப்புடன் ஆரம்பித்தால் நிசமான Q, டொலர் தே.தே.உ. (NNP) வில் ஏற்படும் விகித அதிகரிப்பை அனுசரித்து விரைவாக உயர்ந்திருக்கமாட்டாது.

www.padippakam.com




ஏனெனில் உற்பத்தியிலும், உற்பத்திப் பொருளிலும் 3 வீத வளர்ச்சியே சாத்தியப்படும்.

செலவு உந்தலின் மிக இலேசான கொள்கையையே இது விவரிக்கிறது. இதற்கு விற்போர் வீக்கம் என்ற பெயர் பொருத்தமுடையதாயிருக்கும். இலாப வீதத்திலும் பார்க்கச் சம்பளவீதத்திலே உயர் விகிதமான உற்பத்தி ஏது இருக்கவேண்டியதில்லை; மேலும் இந்தச் செயல்முறை ஒரு பக்கப் போக்கான நெருக்கடியினாலன்றி, எல்லா விலைவாசிகளும், சம்பளங்களும் கடைசியாக நிச்சயிக்கப்படும் தாபன அமைப்புக்களின் பரஸ்பர நடவடிக்கையால் உண்டாகும். இஃது உற்பத்தியாளன், தொழிலாளி, நுகர்வோன் ஆகியோரின் உளவியல், மன உறுதி என்பவற்றால் நிச்சயமாகும்.

இத்தகையதோர் இலேசான மாதிரியில் நியாயபூர்வமாக எவ்வித தவறுமில்லை. ஆனால் அதன் கருதுகோளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இத் தகைய கருதுகோள் யதார்த்த உலகுக்கு உதவாதெனச் சிலர் கூறுவர்; யதார்த்த உலகுக்குப் பொருத்தமான மாதிரி வைதீகமுறையேயாகுமென எடுத்துக்காட்டுவர். மற்றையோர், இந்தக் கருதுகோளை முற்றாக ஏற்றுக் கொள்ளுவர். நடுவிலேயுள்ள ஒரு சாரார் அதை யதார்த்த உலகுக்கு ஏற்றவகையில் திருத்திக்கொள்ள விரும்புவர்.

படம் 7 பிலிப்ஸ் விளக்கப்படம் எனப்படும். இஃது இலண்டன் பொருளியற் கல்லூரி ஆசிரியரான ஏ. டப்ளியூ. பிலிப்ஸ் என்பவரால் அமைக்கப் பட்டது. மிதமான செலவு உந்தல் மாதிரியைக் காட்டக்கூடியது.




படம் 7.

இடைநிலையான அச்சிலே, வேலையின்மையின் விகிதம் உண்டு. இடப் பக்கக் குத்துநிலை அளவுச் சட்டத்தில் வருடத்துக்குள்ள விகிதமாற்றம் சராசரி விலையில் அட்சர கணிதமுறையில் கொடுக்கப்பட்டுள்ளது. இடக் கைக்குத்துநிலை அளவுச் சட்டத்தில் ஒரு மணிநேரத்துக்குரிய பணச்

படிப்பகம்

www.padippakam.com



சம்பளத்தின் விகித மாற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு அளவுச் சட்டங்களும், வருடத்துக்குரிய உற்பத்தி அதிகரிப்பில் விகித்த தொகையிலேயே வித்தியாசப்படும். (வருடத்தில் 2 சதவீத விலைமாற்றம் சம்பளத்திலே 5 வீத மாற்றத்துக்கு நிகராயிருக்கும்; இஃது உற்பத்தி வருடத்தில் 3 வீதமாக வளர்ந்து, அதன் பயனைத் தொழிலாளரும் மற்றையோரும் பழைய விகிதத்திலே பங்கிடக்கூடியதாக இருக்கும்போது தான்).

வேலையின்மையின் மட்டத்தை உயர்த்துவதால், விலைகள் ஏறுவதைத் தடுக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம் என்பதை மேலே காட்டிய "பிலிப்ஸ் கோடு" அதன்கீழ் நோக்கிய வளைவினால் காட்டுகிறது. நியாயமான அளவு வேலை வாய்ப்பும் விலையேற்றமும் வேண்டுமா அல்லது நியாயமான அளவு திரமான விலையும், வேலையின்மைப் பெருக்கமும் வேண்டுமா என்பதைச் சமூகம் நிர்ணயித்துவிடவேண்டும். இதில் எந்தவகையான இணக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைச் சமூகம் நிர்ணயிப்பது தர்மசங்கடமானது.

MV, C+I+G முறைகள் இன்றும் அரங்குக்கு வெளியே நடைமுறையிலுண்டு. P×Q என்ற விளைவுப் பயனைத் தனித்தனி அம்சங்களாகப் பிரிப்பதற்கு பிலிப்ஸ் கோடு அவசியம். இலகுவான அமைப்புள்ள வைதீகவாதிகளின் உலகில் பிலிப்ஸ்கோடு குறைந்தபட்ச வேலையின்மை மட்டத்திலே குத்துநிலைக்கோடாயிருக்கும். Q அப்போது பூரணவேலை வாய்ப்பைக் காட்டும். P ஆனது, மொத்தப் பணச்செலவு எவ்வாறு நிச்சயிக்குமோ அந்தமட்டத்தில் சுதந்தரமான தொழிற்சந்தையில் நீந்திக் கொண்டிருக்கும். வியாபாரமந்தமுள்ள, எல்லேப்பட்ட வேலையில்லா மாதிரியில், சம்பள விகிதங்கள் கீழ்நோக்கிச் செல்லும் நகர்தலில் நெகிழாதிருக்க, பூரணவேலை வாய்ப்பு ஏற்படும்வரை செலவுகள் மேலே உயராதிருக்கும்போது, பிலிப்ஸ் கோடு கிடைநிலை அச்சாகவேயிருக்கும்; இது குறைந்தபட்ச வேலையின்மை உண்டாகும் வரையிருக்கும்; பின்னர் வைதிக முறையிலுள்ளதுபோல் குத்துநிலையாக மேலே பீறிக்கொண்டு செல்லும்.

பலவகையான கலப்புப் பொருளாதாரத்துக்குப் பிலிப்ஸ் கோடு பலவிதமாயிருக்கும்; இது அவ்வவற்றின் தாபன அமைப்பு, உளநூல் நோக்கு என்பவற்றைப் பொறுத்து வித்தியாசப்படும். 1950 இல் மேற்கு ஜெர்மனியின் கோடு மேலே காட்டிய எல்லேப்பட்ட உதாரணங்களைப் போலிருந்தது. அமெரிக்க, பிரித்தானிய, சுவீடிஷ் கோடுகளைப் போல இருக்கவில்லை. எனவே பின்னர் கூறப்பட்ட தேசங்களிலே பணவீக்கத்தின் செலவு–உந்தல் நகர்வுகளைப் பற்றிய பேச்சு இருந்துவந்தது.

இக்கால வாழ்வு சம்பந்தமான முக்கியப் பிரச்சினையொன்றைப் பின்வருமாறு கூறலாமெனப் பல பொருளியலறிஞர் கருதுகின்றனர். திறமையற்ற நேரடிச் சம்பளத்திலும், விலைக்கட்டுப்பாடுகளிலும் அவசியமின்றித் தங்கியிராமல் கலப்புப் பொருளாதாரம் தனக்கு பிலிப்ஸ் கோட்டை

www.padippakam.com



எவ்வாறு உண்டாக்கும்? அதாவது, விலை நகர்வை அதிகம் உண்டாக்காமல் உயர்வேலைவாய்ப்பை உண்டாக்கும் பிலிப்ஸ் வளைகோட்டை எவ்வாறு உண்டாக்கலாம்? 25 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்டது போன்ற நம்பிக்கை விரோதச் சட்டம் உதவுமா? தொழிற்சங்க எதிர்ப்பினால் முடியுமா? உற்சாகமூட்டுவதால் முடியுமா? தொழிலாளர் சலனத்தைத் திருத்துவதற்குத் திட்டம் போடுவதால் முடியுமா? பணவீக்க அபேட்சைகளையும், கோரிக்கைகட்காகச் சண்டித்தனமாய்ப் பேரம்பேசும் சுபாவத்தையும் மாற்றத் தற்காலிகமாகப் பெரிய வேலையின்மையை உண்டாக்குவதால் முடியுமா?

இது, 1960 இல் உண்டான மிக முக்கியமானதும் மிகச் சிக்கலானதுமானதொரு பிரச்சினையாகும்.

**அனுபந்தத்துக்குச் சுருக்கம்.**

1. பணசப்பிளை, வட்டி என்பவை சம்பந்தமான பொதுக் கோட்டுக்குக் கொடுத்த பெயர் நீர்மைத் தெரிவு என்பதாகும். இது போன்ற மற்றொரு தலைகீழான கோடு *i* யினால் அளக்கப்பட்ட செலவையும், கடன் வாய்ப்பையும் முதலீட்டுச் செலவோடு தொடர்புபடுத்துகிறது. (எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய வியாபாரமந்தத்திலே கடைசியாகக் காட்டிய கோடு குத்துநிலையாகவும், முந்திய கோடு கிடைநிலையாகவுமிருக்குமானால் பணக்கொள்கை தனது வழக்கமான சக்தியை இழந்துவிடும்).

2. மேலே கூறப்பட்ட காரணகாரியத்தொடர்பை MV என்ற பரிபாஷையிற் கூறலாம். ஆதியில் M இல் உண்டான மாற்றங்களை முற்றாய் மாற்றாதவகையில் V யிலே மாற்றங்களை ஏற்படுத்தலாமென ஒருவர் எதிர்பார்த்தால், M இல் ஏற்படும் மாற்றம் தே.தே.உ. (NNP) வில் மாற்றத்தை யுண்டாக்குமென்று கூறிவிடலாம்.

3. பிணக்கமில்லாத பூரணமான வைதீக உலகில், நெகிழ்ச்சியற்ற கெட்டியான பணம் இருக்கும்போது, சேயின் விதியை நிரூபிக்கமுடியுமென பீகு 1940 இல் வாதாடினார். கொள்கைக்காகவும், யதார்த்தமான விவரணத்தைக் கொடுப்பதற்காகவும், உயர் பணவாட்டத்தைப் பயன்படுத்தி "பீகு விளைவை" உண்டாக்க அவர் விரும்பவில்லை. அப்படியான ஒரு பூரணவேலைவாய்ப்பு மாதிரியைத் தர்க்க பூர்வமான எல்லைக்குத் தள்ளிவிடுவதால் திருத்தமற்ற கணியக் கொள்கையைத் (இக்கொள்கையில் P ஆனது M இற்கு ஏற்றவிகிதசமமாயிருக்கும்) திரப்படுத்தலாம். (புறநீர்மையான நிசமாற்றங்கள் ஏற்பட்டால்தான், விகித சமத்தின் அளவு மாறும்).

4. வைதீகப் போக்கற்ற செலவு உந்தல் அல்லது விற்பனையாளர் பணவீக்கமாதிரியிலேதான், கொள்கை பற்றிய சங்கடங்கள் உண்டாகும். தாபனரீதியாகச் சம்பளமட்டமும் விலைமட்டமும் நிச்சயிக்கப்பட்டால், வேலையின்மை இருந்துகொண்டிருக்கும். மாறாத வேலையின்மையில், சம்பள விகிதங்களை உயரச் செய்வது P உயர்வதற்கு வழிவகுக்கும். தேவை

www.padippakam.com



உந்தல் வகைசார்ந்த பணவீக்க இடைவெளி இல்லாதபோதும் இது நிகழும். தேவை உந்தல், செலவு உந்தல் என்ற இரண்டு அமிசங்களுமிருந்தாலும், பூச்சிய பணவீக்க இடைவெளியை உண்டாக்கும் நோக்கத்தோடு செயயப்படும் பணக்கொள்கையும், பிஸ்கால் கொள்கையும் விலையூர்வதைத் தடுக்கமாட்டா. இதை நிறுத்துவதற்கு பலவகையான மட்டமுள்ள வேலையின்மை தேவைப்படும். இது வருடத்து விலை விகித மாற்றத்தையும், வேலையின்மை விகிதத்தையும் இணைக்கும் பிலிப்ஸ் கோட்டிலே, எத்துணை ஒரு நாடு அபாக்கியமுடையதாயிருக்கும் என்பதிலே தங்கியிருக்கிறது.

ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள்.

1. பின்வரும் கருத்துக்களைப் புனராலோசனை செய்க :

உயிர்ப்புள்ள பணம் ; உயிர்ப்பில்லாத பணம்.

நீர்மைத்தெரிவுக் கோடு

இறுதிநிலைத்திறன் அல்லது வட்டி–முதலீட்டுக்கோடு

சேயின் விதியும் வைதீகப் போக்குடைய மாதிரிகளும்

பீகு விளைவுகளும் திருத்தமற்ற கணியக்கொள்கையும்.

செலவு உந்தல் அல்லது விற்பனையாளர் பணவீக்கம்.

பிலிப்ஸ் கோடும் கொள்கைபற்றிய தர்மசங்கடங்களும்.

www.padippakam.com

## பத்தொன்பதாம் அத்தியாயம்

# அரசிறைக் கொள்கையும் பணவீக்கமற்ற பூரண வேலைவாய்ப்பும்

சக்தியும், விருப்பமும், வேலை வேண்டுமென்ற நாட்டமுமிருப்போர்க்குப் பயனுள்ள வேலைவாய்ப்புக்களைக் கொடுக்கக்கூடிய நிலைமைகளை உண்டாக்கவும், பரிபாலிக்கவும், பெடரல் அரசாங்கம் தன்னிடமுள்ள காரியபூர்வமான எல்லாச் சாதனங்களையும் உபயோகித்துக் கூடிய பட்சவேலையையும், உற்பத்தியையும், வாங்குஞ் சக்தியையும் உண்டாக்குவது, அதனுடைய கடமையும், அதனுல் தொடர்ந்து கைக்கொள்ளப்படும் கொள்கையுமாகுமென்று காங்கிரஸ் பிரகடனஞ் செய்கிறது.

—1946 ஆம் ஆண்டின் வேலைவாய்ப்புச் சட்டம்

சேமிப்பு, முதலீடு என்பவற்றின் போக்கே, தேசீய வருமானத்தினுடைய மட்டத்தையும், வேலைவாய்ப்பினுடைய மட்டத்தையும் நிச்சயிக்கும் என்பதை முந்திய அத்தியாயங்களிற் கண்டோம். முதலீடும் வேறு செலவுகளும், வருடாவருடம் பெரும்பாலும் உயர்ந்தும், தாழ்ந்தும் வருவதைக் கண்டோம். வியாபாரச் சக்கரம் முன்னரெல்லாம் எவ்வாறு துன்பகாரமானதாயும், வீண் முயற்சியாயுமிருந்த தென்பதை வரலாறு காட்டும். பொருளியலில், நிலையற்றதன்மை ஏற்படுவதையும் அடிக்கடி வியாபார மந்தமுண்டாவதையும் பணவீக்கமேற்படுவதையும் தடுத்தாலன்றி, அமெரிக்காவில் நிலவும் சுதந்திரமாக முயற்சி செய்யும் நிலை ஆபத்துக்குள்ளாகுமென்பதை எல்லோரும் இன்று ஒப்புக்கொள்ளுகின்றனர்.

பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள நோயைப் பரீட்சை செய்தோம். அதற்குள்ள பரிகாரமென்ன ? அதற்கு ஒரு தனிப்பட்ட விடை கொடுக்க முடியாது. பொருளாதாரம் சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் தனியொரு சர்வரோக நிவாரணியைக் காண்பதரிது. நிலையானதும், உயர்ந்த வேலை வாய்ப்பை உதவக்கூடியதுமான சம்பளக் கொள்கையையும் விலைக் கொள்கையையும், வியாபாரமும், தொழிலும், விவசாயமும் மேற்கொள்ள வேண்டும். சஞ்சலநிலையைத் தணிப்பதற்கு, வட்டிக்கொள்கை பணக் கொள்கை என்பவற்றின் மூலம் பெடரல் ரிசர்வ் வங்கி பெரிதும் உதவலாம். இந்த நடவடிக்கைகளெல்லாம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், பொது பிஸ்கால் கொள்கை என்ற ஆயுதத்தையும் திறம்படப் பயன்படுத்தவேண்டும். (பிஸ்கால் கொள்கை யென்பது அரசாங்கத்தின் வரிக்கொள்கையும், செலவுக் கொள்கையுமாகும்) பிஸ்கால் கொள்கை சர்வரோக சஞ்சீவியன்று. ஆனுல் அஃது எந்த ஒரு பொருளாதாரத் திட்டத்திலும் முக்கிய பங்கை வகிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



இந்த அத்தியாயத்திலே ஆராயப்படும் விடயங்களில் கருத்து வேற்றுமை நிறைய உண்டு என்று எச்சரிக்க வேண்டும். பலவகையான பிஸ்கால் கொள்கைகளின் குறைபாடுகள், நன்மை தீமைகள் எல்லாம் ஆராயப் படுகின்றன. ஆனால் இன்றைய பொருளியல் அறிவு போதாத நிலையில், பிஸ்கால் கொள்கைகளின் பாதக சாதகங்களைப்பற்றிப் பொருளியலறிஞர் ஏகமனதாக அபிப்பிராயந் தெரிவிப்பர் என எதிர்பார்ப்பது வீண். விடயத்தைப்பற்றிய புறவயமான ஆராய்ச்சியை நடத்திக் காட்டினால், ஒவ்வொரு வரும் விடயங்களைத் தாமாகத் தொகுத்து ஆராய்ந்து சுய அபிப்பிராயத்தைக் கொள்ளலாம்.

### அ. குறுகியதவணை அரசிறைக் கொள்கையும் நெடுந்தவணை அரசிறைக் கொள்கையும்

(1) வர்த்தகச் சக்கரம் மேலும் கீழும் ஏறி இறங்குவதைத் தடுப்பதற்கும் (2) அபரிமிதமான பணவீக்கமோ பணவாட்டமோ நிகழாமல், வளர்ந்து வரக்கூடிய உயர்வேலைவாய்ப்புள்ள பொருளாதாரத்தை நிலை நிறுத்த உதவுவதற்கும் அரசாங்கம் வரிவிதிப்பதையும் அரசாங்கம் செலவு செய்வதையும் உருவாக்கும் விதத்தையே நேர்க்கணியமான பிஸ்கால் கொள்கையென்போம்.

பிஸ்கால் கொள்கை மிகச் சக்திவாய்ந்ததோர் ஆயுதமென்பதை யுத்தகாலம் தெளிவு படுத்திற்று. அணுக்குண்டுபோல அது மிகச் சக்தியும் அபாயமும் நிறைந்தது. ஆனபடியால் அதனோடு மக்களோ அரசாங்கங்களோ சேட்டைபண்ணக்கூடாதெனவும், அதை ஒருபோதும் பயன்படுத்தாது விடுவது நன்மைபயக்குமெனவுஞ் சிலர் வாதிப்பர். ஒரு நாட்டிலே வைசூரி பரவிக் கொண்டிருக்குமானால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் எவரும் வெறுமனே பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார். அது போலநாட்டிலே வியாபார மந்தம் தாண்டவமாடும்போது பிஸ்கால் கொள்கையை அரசாங்கம் மேற்கொள்ளாதிருக்காது. இதற்கு வேறு வழியில்லை. பொருளாதாரமுறையில் சரியான வழியில் பிஸ்கால் கொள்கையை மேற்கொள்ள வேண்டும். நாசத்திற்கு ஏதுவான வழிகளில் அதைப் பயன்படுத்தக் கூடாது. எந்த அரசாங்கமும் ஏதாவதொரு பிஸ்கால் கொள்கையை மேற்கொள்ளும். அதன் நோக்கம் நிறைவேறினாலென்ன நிறைவேறாவிட்டாலென்ன. உண்மையான காரியமென்ன வென்றால், மேற்கொள்ளும் பிஸ்கால் கொள்கை பயனுடையதாயிருக்க வேண்டுமென்பதே.

### அரசிறைக் கொள்கையின் கடமை

பிஸ்கால் கொள்கையும், பணக்கொள்கையுமில்லாவிட்டால் குறித்த ஒரு வருடத்தில் பொருளாதார அமைப்பில் பணவாட்ட இடைவெளியுண்டாகலாம். தனிப்பட்டோர் நுகர்வும் முதலீட்டுச் செலவும் போதிய வேலை வாய்ப்பை உண்டாக்க முடியவில்லை யென்று வைத்துக்கொள்வோம். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் ?

www.padippakam.com



தனிப்பட்டோர் முதலீட்டைத் தூண்டுவதற்கு வியாபகமான பணக்கொள் கையை பெடரல் ரிசர்வ் வங்கி பயன்படுத்தும். அதனுடைய முயற்சிகள் விரும்பிய பயனைக் கொடுக்கவில்லையானால் அதனால் ஏற்படும் பணவாட்ட இடை வெளியைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு பிஸ்கால் அதிகாரிகளுக்கு உண்டாகும். பொருளாதாரம் மறுபடியும் நிலையான பூரணவேலைவாய்ப் பைப் பெறக்கூடிய முறையில் வரிகளையும், அரசாங்கச் செலவுக் கொள்கை களையும் மேற்கொள்வதற்கு காங்கிரசுக்கும், சனாதிபதிக்கும் இஃது ஒரு சமிக்கையாகும்.

தனிப்பட்டவர் முதலீடும், நுகர்ச்சித் தீர்மானங்களும் பணவீக்க இடை வெளியைப் பொருளாதாரத்தில் உண்டாக்கப் போகின்றனவெனக் கண்டால் மேலே கூறியது போன்ற நடவடிக்கையை எடுப்பது அவசியமாகும். விலை ஏற்றம் ஒருபுறமிருக்க முதலாளிகள், இல்லாத தொழிலாளரைத் தேடி யலையும் நிலையுண்டானால், பணவீக்க இடைவெளியைக் குறைப்பதற்காக பெடரல் வங்கி சுருக்கும் கடன்வசதித் திட்டங்களை ஆரம்பிக்கும். சேமிப்பு–முதலீடு அல்லது நு + மு + அ (C + I + G) குறுக்குவெட்டுக்கள், பணவீக்க இடைவெளியை இன்னும் உண்டாக்கினால் காங்கிரசும், சனாதிபதியும் பண வீக்கமில்லாத உயர் வேலைவாய்ப்புச் சமநிலையை உண்டாக்க உயர்ந்த வரிவீதங்களையோ குறைந்த பொதுச் செலவுத்திட்டங்களையோ, இரண்டை யுமோ நடைமுறையிற் கொண்டு வரமுயலல் வேண்டும்.

**சுருக்கம் :** உயர்ந்த வேலைவாய்ப்பும், வளர்ச்சியுமுள்ள பொருளாதா ரத்தை விலை ஏற்றமில்லாத வகையில் உண்டாக்குவதே நாட்டின் வரி, பொதுச் செலவு என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பிஸ்கால் கொள்கை, நிலை மையைத் திரமாக்கும் பணக்கொள்கையுடன் சேர்ந்து நடத்தும் முயற்சியின் நோக்கமாகும். ஆனால் இப்பொருளாதாரத்தில் ஏற்றம் இருக்காது. "வீசிக் கொண்டிருக்கும் பொருளாதாரக் காற்றுக்கு எதிராகச் சாய்ந்து கொள்வதே" பிஸ்கால் அதிகாரிகளதும் பண அதிகாரிகளதும் வழக்கம். ஆகவே தனிப்பட்ட முயற்சியாளரின் தொடக்கச் சக்திகளுக்குச் சாதகமான பொருளாதாரச் சூழலை உண்டாக்கி, அவர்களுடைய முயற்சி வெற்றி பெற நல்ல சந்தர்ப்பங்களை உண்டாக்குவதே இவர்களுடைய இச்செயலின் குறிக்கோள்.

### நமது முக்கியமான "நிர்மாண நிலையாக்கி"

அரசாங்க உத்தியோகத்தர் கருத்தோடு நிலைமையை ஆராய்ந்து, எதிர் காலத்தில் உருவாகக்கூடிய நிலைமைகளை முன்னேறியே சரியாக அறிந்து, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயன்றாலன்றி பிஸ்கால் கொள்கை, பொருளாதாரத்தைத் திரமாக்கத் துணைசெய்யமாட்டாதென்ற எண்ணம் மேலே கூறிய விடயங்களைப் படிப்போர் மனத்தில் உண்டாக லாம். திட்டமான தீர்மானங்களை உண்டாக்கவும், மாற்றவும் செய்யும் இத்தகைய "உசிதாசாரமான பிஸ்கால் கொள்கைகள்" எல்லாம் முக்கிய மானவையே. ஆனால் நமது கருமங்களில் அவை ஒரு பகுதியே.

www.padippakam.com



இன்றைய பிஸ்கால் முறையில், தானுகவே நிலைமையைத் திரப்படுத்தும் தன்மைகள் அடங்கியுள்ளன. சனுதிபதி வெள்ளை மாளிகையில் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, இந்த பிஸ்கால் முறை நமது பொருளாதாரத்தைத் திரமான நிலையில் வைப்பதற்கு இரவு பகலாகத் துணை புரிந்து கொண்டேயிருக்கிறது. 1966 இல் காங்கிரஸ் கூடும் தவணையில்லாதபோது, வியாபார மந்தமொன்று ஏற்படுமானுல், அதைத் தடுப்பதற்குச் சக்தியுள்ள சுயம்புவான சக்திகள் உடனே செயற்படும். இதற்குக் கமிட்டிக் கூட்டங்கள் தேவையில்லை. மக்கள் தமது விவேகத்தைக் கூடப் பயன்படுத்த வேண்டியதில்லை.

அந்தரங்கமாய்ச் செயற்படும் இந்த நிலைநிறுத்திகள் எவை ? அவை முக்கியமாகப் பின்வருமாறு :—

**1. வரி வசூலிப்பில் சுயமான மாற்றங்கள்.**

பெடரல் வட்டிமுறையானது தனிப்பட்ட வருமானத்திலும், சமூக வருமானத்திலும் தங்கியிருக்கிறதென்று 9 ஆம், 10 ஆம் அத்தியாயங்களிலே கண்டோம். நிலைநிறுத்தி விடயத்தில் இதன் தாற்பரியமென்ன ? வருமானம் வீழ்ச்சியடையத் துவங்குமுன்னர், காங்கிரஸ் வரிவிதிதங்களிலே மாற்றங்களை ஏற்படுத்துமுன்னர் அரசாங்கத்தின் வரிவசூலும் விழுந்துவிடுகிறது (இன்று NNP யில் ஏற்படும் 10 பில்லியன் டொலர் வீழ்ச்சியினுல் வரிவசூல் $3\frac{1}{2}$ பில்லியனுக வீழ்கிறது).

வருமானம் வீழ்ச்சியடைந்தால், வரியைக் குறைக்கவேண்டும். இதுவே அதற்குப் பரிகாரம். எனவே நமது தற்கால வரிமுறை மகத்தானதும் விரைவானதுமான நிர்மாண நிலையாக்கியாகும். (வரிகள், வருமானம் உயர்வதையும் குறைவதையும் தடுக்கும் நிலையாக்கிகளாகும்).

ஒரு நூற்றுண்டுக்கு முன்னிருந்த பொருளியலறிஞர், வரி வருமானம் நிலையாயிருத்தல் நல்லதென எண்ணினர். வரி வசூல்கள் தேசிய வருமானத்தை அனுசரித்து உயர்வதும், தாழ்வதுமான இக்காலப் போக்கை அவர்கள் ஆட்சேபித்திருப்பர். உண்மை இதற்கு எதிர்மாருனதெனப் பெரும்பாலோர் இன்று கருதுவர். வியாபாரப்பூரிப்பை அடக்குவதற்கு, வரவுசெலவுத்திட்ட மிகுதிப்பாடு அவசியமென அவர்கள் நினைக்கின்றனர். மிகுதிப்பாட்டை இரண்டுவகையில் உண்டாக்கலாம். அரசாங்கச் செலவைக் குறைப்பதால் ? ஆம் ; அத்துடன் வரிவசூலை அதிகரிப் பதாலும் அவ்வாறு செய்யலாம். சுதந்திரமான தனிப்பட்டவர் முயற்சி என்ற வகையில் பார்க்குமிடத்து வரிமாற்றங்கள் வைதீகக் கொள்கையையே காட்டும். எமது இக்கால வரிமுறை சுயமான நெகிழ்ச்சியுடையதாயும் பணவீக்கக் காலத்திலே வரிவசூல் உயரக்கூடியதாயும் வியாபாரமந்தக் காலங்களில் வீழ்ச்சியடையக் கூடியதாயுமிருப்பது நமது நல்லதிட்டமே. பொருளாதாரத்தை நிலையாக்கவும், வியாபாரச்சக்கரத்தை மிதமாக்கவும் இது மிகப் பலம் வாய்ந்ததொரு சாதனமாகும்.

www.padippakam.com



**2. வேலையின்மைக்குச் சகாயம், ஏனைய பொதுநலக் கடமைகள்.** கடந்த 25 வருடமாக நாம் வேலையின்மைச் சகாயத்துக்கான விசாலமானதோர் அமைப்பைச் செய்துகொண்டோம். தொழிலாளர் நோயுற்றால் இந்தச் சகாய நிதியிலிருந்து அவர்களுக்குப் பணம் வழங்கப்படுகிறது. மறுபடியும் அவர்கள் வேலைக்குப்போகத் துவங்கினால் சகாயப்பணம் கொடுக்கப்படமாட்டாது. தொழில்வாய்ப்பு உயர்நிலையிலிருந்தால், வேலையின்மைச் சகாயநிதி சம்பந்தமான வரிகள் பெரிதும் உயரும். வியாபாரமலர்ச்சியுள்ள காலத்திலே, வேலையின்மைச் சேமநிதி பெருகி, அதிக செலவு செய்வதைத் தடுக்கும். வேலை குறைவான காலங்களிலே சேமநிதிகளிலிருந்து வேலையற்ற தொழிலாளருக்குச் சகாயப்பணம் கொடுக்கப்படுகிறது. இதனால் நுகர்ச்சி குறையாமலிருப்பதோடு வியாபார வீழ்ச்சியையுந் தடைசெய்யலாம்.

சமூகப் பாதுகாப்பு முறைக்கு வெளியேயுள்ள ஏனைய பொதுநலத் தொண்டுகள், பொருளாதாரத்தை நிலையாக்கக்கூடியதும் சுயமானதுமான வியாபாரச் சக்கரத்துக்கெதிரான தன்மையைக் காட்டும்.

**3. விவசாயச் சகாயத்திட்டங்கள்.**

விவசாயத்துக்குத் துணை செய்யக்கூடிய பல சம நிலைத்திட்டங்களும் நிர்மாண நிலையாக்கிகளாகவே துணை செய்கின்றன. இவற்றைப்பற்றி இந் நூலின் மூன்றும் பாகத்தில் குறிப்பிடுவாம். டொலர் செலவு குறைய, விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்தால் பெடரல் அரசாங்கம் விவசாயிகளுக்கு டொலர் உதவிசெய்து மேலதிகமானவற்றைத் தானே சேர்த்துக் கொள்ளுகிறது. பணவீக்கம் உண்டாக ஆயத்தமாகும் போது, விலைகள் உயரத்துவங்க, அரசாங்கப் பண்டசாலைகள் பொருள்களை வெளியே கொடுத்து டொலர்களை எடுத்துக்கொள்ளும். இதனால் எவ்வித இயக்கமும் உண்டாகாதபடி பாதுகாப்பளிக்கப்படுகிறது.[1]

**4. கூட்டுச்சேமிப்பும் குடும்பச் சேமிப்பும்.**

எல்லாம் அரசாங்கம் செய்யும் நன்மையென்றுங் கூறமுடியாது. நமது தனிப்பட்ட தாபனங்களிலும் நிர்மாணநிலையாக்கிகளுண்டு. குறுந்தவணையிலே கம்பெனிகளின் வருமானம் மாறினாலும், அவை இலாபப் பங்கை மாற்றாது வைத்திருக்கும். இதனால் அவை சேமிப்புக்கள் நிர்மாண நிலையாக்கிகளாய்த் தொண்டு புரிகின்றன.[2] குடும்பங்கள் தமது முந்திய வாழ்க்கைமட்டத்தை நிலைநிறுத்திக்கொண்டு புதிய மட்டத்துக்கு ஏறுமல் இருக்கும்வரை, அவையும் பொருளாதாரத்தை நிலைப்படுத்தத்

[1] மூலப்பொருள்களின் விலையை ஏற்றினால் சமநிலை வாய்பாடுகளும் சஞ்சல நிலையை உண்டாக்கலாம். சமநிலைவாய்ப்பாடுகள் எல்லாக் காலங்களிலும் விநியோகத்தை எவ்வளவுக்குக் கட்டுப்படுத்துகின்றனவோ, அவ்வளவுக்கு அவை வருமானத்தைப் புனர்ப்பங்கீடு செய்கின்றனவேயன்றி அதனை நிலைப்படுத்துவதில்லை.

[2] கூட்டுமுதலீடு கூட்டுச்சேமிப்புக்கு எவ்வளவு தூரம் தொடர்புபடுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு இந்த நிலையாக்கிச் செல்வாக்கு எதிர் பலனுடையதாக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



துணைபுரிகின்றன. (அதிக வருமானம் கிடைத்ததும் அதிக செலவைச் செய்ய முயலும் அளவுக்கோ, பொருளாதார நெருக்கடியுண்டாவதைக் கண்டு நுகர்வைக் குறைக்க முயலும் அளவுக்கோ அவை பொருளாதார திரத்தன்மைக்குத் தடைவிளைவிக்கின்றனர்).

வேறு சில நிலையாக்கிகளையும் குறிப்பிடலாம். ஆனால் முக்கியமானவை இவையே[1] .

**சுயமான நிலையாக்கிகளின் குறைபாடுகள்.**

சுயமான நிலையாக்கிகளைப்பற்றிய ஆராய்ச்சியை முடிக்கும் முன்னர் இரண்டு விடயங்களை அழுத்தமாகக் குறிப்பிடவேண்டும். முதலாவது நிர்மாணநிலையாக்கிகள்தாம் நமது முதற்பாதுகாப்பு ; ஆனால் நிலைமாருமையைப் பூரணமாக நிலை நிறுத்துவதால் இவை மட்டும் போதாது. இரண்டாவது உசிதாசாரமான வேறு திட்டங்களைவிட்டு, இவற்றிலேயே நம்பிக்கை வைத்தல், ஒழுக்கம், தத்துவம் என்பன சம்பந்தமான பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

இவற்றைக் கவனிப்போம். தே.தே.உ. (NNP) இன் மேலதிகமான ஒவ்வொரு டொலரிலுமிருந்து ஒரு பின்னப்பகுதியை வரிகள் சுயமாக எடுத்துக் கொள்ளும் போக்கின் அர்த்தமென்ன ? பெருக்கியின் பருமன் குறைக்கப்படுகிறதென்பதேயாகும். முதலீட்டிலேயுள்ள ஒவ்வொரு டொலர் வீச்சும், அது புதிய கண்டுபிடிப்புக்களால் உண்டானதென்றாலென்ன, வேறுவகையில் உண்டானதென்றாலென்ன, திரமற்றநிலைமையை உண்டாக்கும் தன்மையைக் குறைக்குமேயன்றி, அதனை முற்றாக அழித்துவிடாது. இத்தகைக் குழப்பங்களின் விளைவு தே.தே.உ. வில் மூன்று நான்கு மடங்கு பெருகுவதற்குப் பதிலாக வரிகளின் சுயமான நிலையாக்கும் விளைவினால் இப்போது பெருக்கிவிளைவு 1.5 மடங்கோ 2 மடங்கோதான் இருக்கும்.[2]

பொருளாதாரத்திலுள்ள எவ்வகையான ஏற்ற இறக்கத்தையும் ஓரளவுக்குக் குறைக்க நிர்மாண நிலையாக்கி உதவும் ; ஆனால் உண்டாகும் குழப்பத்தை முற்றாகத் துடைத்துவிடமாட்டாது. அதைப் பிஸ்கால் நடவடிக்கையும், பணநடவடிக்கையும் உசிதம் போலச் செய்யக்கூடிய நடவடிக்கைமூலம் செய்யவேண்டும்.

சில சீர்திருத்தவாதிகள் மனிதர் தலையிட்டுக் கொள்கைகளை நிச்சயிப்பதை விரும்பமாட்டார். அவர்கள் “ சட்டத்துக்கமைந்த அரசாங்கம் மனித

1. விலை வருமானம் என்பன மாறும்போது, வரிவிகிதங்களையும் மாற்றக்கூடியவாறு காங்கிரஸ் சட்டம் இயற்றவேண்டுமென்றும் அதன்மூலம் நிலையாக்கிகளை ஆதரிக்கவேண்டுமென்றும் பல நிபுணர் ஆலோசனை கூறுவர். காங்கிரஸ் இதை விரும்பவில்லை.

2. இலேசான பெருக்கிவாய்பாடான $1/(1-MPC)$ இல் MPC ஐ .65MPC ஆகக் குறைக்கவேண்டும். ஏனெனில் NNP யின் ஒவ்வொரு டொலரிலும் .35 வரியாகச் செல்கிறது. .65 மாத்திரமே பைசல் வருமானத்துக்குப் போகிறது. MPC இவ்வாறு குறைவதால் பெருக்கியை அஃது எவ்வாறு பாதிக்கும். $3.0 1 = (1-2/3)$ என்ற பெருக்கியில் அது 2/3 ஐ .433 இக்குக் குறைக்கிறது. கடைசிப்பெருக்கியை 1.8 ஆகவே விடுகிறது.

www.padippakam.com



ருடைய அரசாங்கமன்றென" வாதாடுவர். அவர்கள் சுயமாக இயங்கும் விதிகளையும் இயந்திரப்போக்குக்களையும், மனிதருடைய தீர்மானமின்றியே இயங்கக்கூடியவாறு அமைக்கவேண்டுமென வாதாடுவர்.

இப்போது எல்லாம் சுயமாக இயங்கும் எந்திரமொன்று விமானத்தை ஓட்ட, விமானச்சாரதி நித்திரை கொள்ளமுடியும். ஆனால் அசாதாரணமாக ஏதாவது உண்டானால், சாரதி பொறுப்பேற்கலாம். மனிதனைப் போல இயங்கக்கூடிய வளைந்து கொடுக்கும் எந்திரமொன்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. சமூகத்துறையிலும் இப்படித்தான்.மனிதருடைய உசிதாரக் கொள்கையின் உதவியின்றியே அரசியல் திட்டத்தை எந்தத் தேசமும் இன்னும் மேற்கொள்ளவில்லை.

**உசிதாசாரமான பிஸ்கால் கொள்கை.**

உசிதாசாரமான பிஸ்கால் கொள்கையின் பிரதானமான கருவிகள் (1) பொதுமராமத்து வேலைகளையும், ஏனைச் செலவுத்திட்டங்களையும் மாற்றுதல் (2) மாற்றுச் செலவுத்திட்டங்களை மாற்றுதல் (3) காலத்துக்குக் காலம் சுழற்சியாக வரிவீதங்களை மாற்றுதல்.

**பொதுமராமத்து வேலைகள்.** வியாபார மந்தத்தை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபொழுது, வேலையற்றோருக்கு வேலை உதவும் நோக்கமாகப் பொது முதலீட்டுத்திட்டங்களிலே வேலையாரம்பித்தது. இத் திட்டங்கள் பெரும்பாலும் விரைவாய் அமைக்கப்பட்டன. மக்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு இவை செய்யப்பட்டபடியால் திறமையற்றனவாயிருந்தன. உதாரணம் : வீதியமைத்தல் ; வேலையை நீட்டிப்பதற்காக இத்தகைய வேலைகட்கு குறைந்தளவு எந்திரத்தை பயன் படுத்துதல். இலைசேர்த்தல் ; வியாபார மந்தகாலத்திலே வேலைத்திட்ட நிர்வாகிகள் சங்கத்தைச் சேர்ந்த சகாயத் தொழிலாளர் இவ்வேலையைச் செய்வர். கருத்தோடு திட்டமிடப்படாதவையும், பயன்படாதவையுமான பொது வேலைத்திட்டங்களை உண்டாக்குதல். மற்றொரு கற்பனை வேலைத்திட்டமுண்டு; அதாவது வேலையற்றோருக்கு வேலை கொடுப்பதற்காக, அவர்களைக்கொண்டு குழிவெட்டுவித்துப் பின்னர் அவற்றை மூடச் செய்தல்.

இவ்வாறு கருத்தின்றி அமைக்கப்பட்ட பயனற்ற பொதுவேலைகள் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மீட்கக்கூடிய ஒரு நிலை ஒரு தற்கால அரசுக்கு ஏற்படமாட்டாது. அந்தக்காலம் மலையேறிவிட்டது. இம்மாதிரியான வேலைக்காக வேலையை உண்டாக்கும் கொள்கையை இன்று எவரும் ஆதரிக்கமாட்டார். குறுங்கால வியாபாரமந்தமானால் அதைப் போக்குவதற்குப் பொருளியலாளர் தற்காலிகமாக வரிகளைப் குறைப்பர். பொது வேலைகளைப் பெருக்கமாட்டார்.

வியாபார மந்தத்தைப் போக்கடிக்கப் புதிய பொதுவேலைகளை உண்டாக்கும் கொள்கையை இப்போது எவரும் ஆதரியாது விடுவது ஏதனால்? ஒரு தபாற்கந்தோரைத் தொழிற்படச் செய்வதற்குப் பலகாலம் எடுக்கும்.

www.padippakam.com



வீதியமைப்பதும் அப்படித்தான். சேரி ஒழிப்புத் திட்டமும் அப்படியே. திட்டங்களை அமைக்கவேண்டும்; நீல அறிக்கையைத் தயார் செய்யவேண்டும். நிலத்தைக் கொள்வனவு செய்யவேண்டும். உள்ள கட்டிடங்களை, இடிக்கவேண்டும். புதிய கட்டிடங்களையும் வீதிகளையும் அமைக்கவேண்டும். இதற்கெல்லாம் குறைந்தது 5 வருடமாவது செல்லும். தொழிலாளர், தளவாடம் என்பவற்றில் திட்டம்போட்ட பணத்தில் பெரும்பகுதி செலவாவதற்கு $2\frac{1}{2}$ வருடமாவது செல்லும். வியாபாரமந்தம் ஒரு வருடம் நீடிக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதன் பின்னர் இரு வருடத்துக்கு நிலையான அபிவிருத்தி உண்டாகிறது. மூன்ருவது வருடத்திலே, தேவை குறைவாக இருந்த நிலையிலிருந்து தேவை அதிகமாயிருக்கும் நிலைக்கு வந்ததும், வியாபாரமந்தத்தை நீக்கவென்று கருதி அரசாங்கம் செலவுகளைக் கூட்டும் நிலை தோன்றும். சஞ்சல நிலைமையை இந்த பிஸ்கால் கொள்கை அதிகரிக்குமேயன்றிக் குறைக்கமாட்டாது.

இதனுல் பொதுவேலைகளைச் செய்யக்கூடாதென்பது பொருளன்று. சேரி ஒழிப்பு, நகரச் சீர்திருத்தம், வீதியமைத்தல், பொதுக்கட்டிட அமைப்பு என்பன அவசரமான சமூக நடவடிக்கைகள். அவற்றை விரைந்து நடத்த வேண்டும். ஆனுல் குறுகிய காலத் திரமான நிலையை நிறைவேற்றும் நோக்கத்துடன் போட்ட திட்டமாய் அவற்றைக் கொள்ளக் கூடாது. அவை நிறைவேறவேண்டும், திறம்பட அமையவேண்டுமென்ற நோக்கத்துடன், நீண்டகாலம் தேவையானுல், நீண்ட காலம் எடுத்து அவற்றைச் செய்ய வேண்டும்.

வியாபார மந்தமுள்ள காலம் உண்டாகலாம். செய்யப்பட வேண்டுமென பொதுமக்கள் முடிவு நிச்சயித்த ஒரு பொதுச் செலவுத் திட்டத்தை முன்போடவேண்டியேற்படலாம். இம்மாதிரியான விரும்பத்தகுந்த பொது மராமத்து வேலைகளுக்குத் தெளிவான நீல அறிக்கையைத் தயார் செய்தல் பயனுடையது. இதற்குச் சிறிது பணம் செலவானுலும் உரிய காலத்துக்கு முன்னர் ஒழுங்கு செய்வதும் காலப்போக்கோடு ஒத்ததாக வைத்திருப்பதும் பிஸ்கால் கொள்கையை வகுப்பதற்குத் துணையாயிருக்கும். வர்த்தக மந்திரியாகவும், சனுதிபதியாகவுமிருந்த ஹெபேட் ஹுவர் பல காலமாக இதனை வலியுறுத்தினுர். 1931 ஆம் ஆண்டு துவக்கம் இந்த நோக்கத்தை நிறைவேற்றுமுகமாகச் சட்டமியற்றி வந்துள்ளோம்.

### பொதுநலன் கருதிய செலவுகள்.

வேலையில்லாதவர்களுக்குச் சகாயமுதவுதல், ஒய்வுப்பென்சன் முதலிய வைபோன்ற பொதுநல வேலைத்திட்டங்கள் சுயமான நிலையாக்கிகளாய்த் தொழிற்படுவதை நாம் கவனித்துள்ளோம். இவை வருமானம் வீழ்ச்சியடையும்போது சுயமாக உயரும்.

இத்தகைய நிர்மாண நிலையாக்கிகளைத் தவிர, பொருளாதாரத்தை மேலும் நிலையாக்கக்கூடிய மாற்றச் செலவுத் திட்டங்களை அரசாங்கம்

www.padippakam.com



உசிதாசாரப்படி ஏற்படுத்தலாம். பணவீக்கமுள்ள காலங்களிலே இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றோருக்கு உதவி நன்கொடை கொடுப்பதை நிறுத்திவிட்டு, மந்தமான காலங்களில் அதைச் செய்யலாம். விவசாயிகளுக்கு சமநிலைக் கொடுப்பனவுகளைக் குறைக்க அரசாங்கம் விரும்பினால், வியாபாரமலர்ச்சிக் காலத்தில் அவ்வாறு செய்ய காங்கிரஸ் எதிர்பார்க்கலாம். நீண்டகாலமாக வேலையின்மை இருந்துவந்ததால், நிலைமை சீர்குலைவதை மட்டுப்படுத்த பெடரல் அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் கொடுத்து வரும் துன்ப நிவாரணப்படிக்கு உதவி புரியலாம். தொடர்ந்து நிலைத்திருக்கும் வேலையில்லாக் காலங்களிலேயே இந்த வேலைத்திட்டத்தின் குறைபாடு தெரியும். இத்தகைய காலங்களிலேதான், வேலையின்மைச் சகாய உதவியின் பெருக்கத்தினாலும், வேலைச் சலனத்தினாலும் குறைந்த பட்சமான தீமைகளுண்டாகும்.

பொதுநலத்திட்டங்களைக் குறுந்தவணை நிலையாக்கி விடயங்களுக்குப் பயன்படுத்துவதிலுள்ள பெரிய குறை, நல்ல காலம் வந்த பின்னர் இத்திட்டங்களை நிறுத்த முடியாதிருப்பதே.

**வட்டி வீதங்களை மாற்றுதல்.**

வியாபார மந்தம் சிறிது காலத்துக்கே நிலைக்குமென நம்புவதற்கு நல்ல நியாயமிருக்குமானால், பைசல் வருமானம் வீழ்ச்சியடையாமல் தடுப்பதற்கு வருமான வரிவீதங்களில் தற்காலிகமான வெட்டையேற்படுத்துவது நல்லது. வரியைச் சம்பளத்திலேயே கழித்துக்கொண்டு கொடுக்கும் வழக்கத்தைப் பொறுத்தமட்டில், காங்கிரஸ் அல்லது நிர்வாக அதிகாரபீடம் வட்டிவீதத்தைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானிக்குமானால், முதலாளிமார் தொழிலாளிகளின் சம்பளத்திலிருந்து குறைவாகவே கழிக்க வேண்டிய அவசியம்வரும். பணவீக்க இடைவெளியுண்டாகும் நிலையைத் தவிர்க்கவேண்டுமானால் வட்டிவிகிதத்தைக் குறைக்கலாம்.

வட்டிவீதத்தை குறைப்பதானால் காங்கிரசுக்கு அதிக காலம் பிடிக்கும். வட்டியை உசிதாசாரப்படி மாற்றும் முறையிலே மற்றொரு குறைபாடுமுண்டு. ஒருமுறை வரிவீதத்தைக் குறைத்தால் ஜனநாயக ஆட்சியில் மறுபடி அதைக் கூட்டுவது கடினமாகும். வேலையின்மைக்கெதிராக யுத்தஞ் செய்வதென்றால் மக்களைத் திருப்புவது சுலபம். பணவீக்க இடைவெளிக்கெதிராக யுத்தஞ்செயய வேண்டுமென்று விரும்பினால் அல்லது பூரணவேலைவாய்ப்புக்கு அதிகமான நிலைக்கெதிராய்ப் போர் புரிவதற்கானால் மக்களைத் திருப்புவது கடினம்.

பற்பல பிஸ்கால் திட்டங்களுண்டு. அவற்றை ஆராயுமிடத்து நன்மையுமுண்டு தீமையுமுண்டு. கடந்த 30 ஆண்டாக அமெரிக்காவிலே அடிக்கடி உண்டாகும் வியாபார மந்தமும், சஞ்சலமான பொருளாதார நிலைமையும் பெரிதளவில் குறைக்கப்பட்டுவிட்டன. 1912 இல் வில்லியம் ஹோவாட் ராப்ட் என்பவர் சனாதிபதியாய் வந்தபொழுது பெடரல் நிதிவிடயம்

www.padippakam.com



1800 இல் இருந்த மாதிரியே இருந்தது. இந்த நூற்றுண்டிஞரம்பத்தில் அது வேறு நிலேயிலிருந்தது.

**பற்ருக்குறை நிதி ஒழுங்கும் மேலதிக நிதி ஒழுங்கும்: தேக்கம், மலர்ச்சி, நிர்மாணவளர்ச்சி ஆகியன.**

வீக்க இடைவெளி உண்டாஞல், அதை நீக்க சுருக்கும் பிஸ்கால் கொள்கையை அனுசரிக்கவேண்டும். உயர்ந்த வரி விகிதமும், செலவுக் குறைப்பும் நிகழுமாஞல் வரவு செலவுத்திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது. பணவாட்ட இடைவெளியை நீக்கப் பார்த்தால் வரவு செலவுத்திட்டம் பற்ருக்குறைத் திட்டமாகவே முடியும்.

வியாபார ஏற்றத்தாழ்வு சாதாரண மட்டத்தையனுசரித்திருக்குமாஞல், எவரும் அதிகம் கவலே கொள்ளமாட்டார். மலர்ச்சிக் காலத்திலுள்ள மேலதிக மிச்சம், மந்தகாலத்திலுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்யும். ஒவ்வொரு வருடமும் அல்லது மாதமும் வரவு செலவு சமஞயில்லாவிட்டாலும் வர்த்தகச்சக்கர கால எல்லேயில் அது சமஞகிவிடும். பொதுக் கடன் விடயத்தில் நூதனமான உயர்வோ, தாழ்வோ ஏற்படமாட்டாது. இந்த வியாபாரச் சக்கரம் கிரமப்படி ஒழுங்காயிருக்குமென்று எவ்வாறு நம்புவது ? ஹார்வாட்டைச் சேர்ந்த அல்வின் ஹன்சென் என்பவர் கூறியதுபோல அமெரிக்காவில் "நூதனமான தேக்கம்" உண்டாஞலென்ன? அதாவது (1) சனப்பெருக்கம் மெதுவாக அதிகரித்தல் (2) எல்லேநிலங்கள் பராதீனமாதல் (3) கூட்டுச்சேமிப்பு அதிகரித்தல் (4) மூலதனப்பண்டங்கள் குவிதல் (5) மூலதனத்தைச் சேமிக்கக்கூடிய புதிய கண்டுபிடிப்புக்கள் (அதாவது சேமிப்புக் கோடுகள் சம்பந்தமான குறைந்து செல்லும் முதலீட்டுக் கோடுகள்) என்பன நீண்டகாலமாக உண்டாகும் நிலேயே "நூதனமான தேக்கம்" ஆகும். இத்தகைய பணவாட்ட இடைவெளிகளே நீக்குவதற்கு அமைக்கப்பட்ட ஊக்கமுள்ள பிஸ்கால் கொள்கை எப்பொழுதும் பற்ருக்குறையை உண்டாக்கமாட்டாதா ? அது பொதுக்கடனில் ஒரு நூதன வளர்ச்சியாயிருக்கமாட்டாதா ?

எதிர்நிலேயாக குடிசனத்தொகை அதிகரிக்கிறதென்றும், புதிய கண்டுபிடிப்புக்கள் அதிகரிக்கின்றனவென்றும், முதலீடு பூரணவேலேவாய்ப்புச் சேமிப்பைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கும்போது பொதுவாக அதிகமாயிருக்கிறதென்றும் கொள்வோம். இந்நிலே தொடர்ந்திருக்குமாஞல், ஊக்கமுள்ள பிஸ்கால் கொள்கைக்கு உபரி பட்ஜெட் தேவைப்படாதா ? இத்தகைய "நூதன மலர்ச்சி" பொதுக் கடனில் நூதன இறக்கத்தைக் காட்டமாட்டாதா ?

1960 ஆம் ஆண்டைத் தொடர்ந்து மூன்ருவது சாத்தியக் கூறென்று ஏற்பட்டிருக்கலாம். சனநாயக ஆட்சி தனது வளர்ச்சியைத் தூண்டுவதிலேயே கருத்தாயிருக்கிறதெனக் கொள்வோம். பிரதிநிதிகள் சபையின் பயஞக இயங்கும் அரசாங்கம் தனது பூரண வேலேவாய்ப்பு வருமானத்தின் பகுதி

www.padippakam.com



யை நுகர்ச்சியில் ஈடுபடுத்தாமல் மூலதன ஆக்கத்தில் ஈடுபடுத்துகிறதெனக் கொள்வோம். அரசாங்கம் இலேசான கடன் வசதிகளை உண்டாக்கியோ வேறு கொள்கைகளைப் பின்பற்றியோ தேறிய முதலீட்டைத் தூண்டுகிற தென வைத்துக்கொண்டால், பணவீக்கத்தைக் குறைக்கக்கூடியவாறு உபரி டொலர் செலவைத் தடுக்க நுகர்ச்சிச் செலவை எவ்வாறு குறைக்கலாம் ? இறுக்கமான பிஸ்கால் கொள்கை அனுசரிக்கப்படவேண்டும் ; வரி வீதங்களை உயர்த்த வேண்டும் ; இறுதி நிலைச் செலவுகளைக் குறைக்க வேண்டும். இதன்பயனாக பட்ஜெட் உபரியை ஓயாமல் உண்டாக்கலாம்.

பொதுக்கடன் சம்பந்தமாயெழும் பிரச்சினைகளைச் சரிவர ஆராயாமல் பிஸ்கால் கொள்கை போன்ற முக்கியமான விடயத்தை ஆராயமுடியா தென்பது இப்போது தெளிவாகிறது.

## அ. பொதுக்கடனும் இக்கால பிஸ்கால் கொள்கையும்.

இரண்டாவது மகாயுத்தத்தின் பயனாக பெடரல் அரசாங்கம் 250 பிலியனுக்கு (1 பிலியன் = 10,000 இலட்சம் அல்லது 100 கோடி) அதிகம் பொதுக் கடன் உடையதாயிற்று. இந்தக் கடன் வகையினாலுண்டான பொருளாதார விளைவுகளெவை ? இதோடு போலிப்பிரச்சினைகள் எவையேனும் சேர்ந்திருக்கின்றனவா ? இந்த மூலாதாரமான அரசியல் பிரச்சினையை ஆராயும் போது, பொருளாதாரத்துக்குப் புறம்பான முக்கிய அமிசங்கள் எவற்றைக் கணக்கில் எடுக்கவேண்டும்?

ஒரு சிறு வியாபாரியின் கடன் விடயத்திலே எது உண்மையோ, அது அரசாங்கக் கடன் விடயத்திலும் பொருந்தும் என்று முன்னேறியே கருதிக் கொள்ளும் விஞ்ஞானத்துக்கு மாறான பழக்கத்தை, பொதுக்கடன்பளுவை ஆராயும் போது தவிர்க்க வேண்டும். இவ்வாறு பிரச்சினையை முன்னேறியே தீர்மானிப்பது அமைப்புப் போலி என்ற குற்றத்துக்குட்படுவதாகும். மேலும், அது பொதுக்கடன் சம்பந்தமான உண்மைப் பளுவைப் பிரித்துக்காண்பதை விடுத்து விடயத்தை மயங்கவைத்துவிடும்.

பொதுக்கடன் சம்பந்தமான சிக்கல்களைச் சரியாக அறிந்து கொள்வது ஆரம்ப அறிவுள்ளவர்க்குக் கடினமாகும். தற்காலப் பொருளியலாளர் இவ்விடயத்தில் மிகக் கவனமாயிருக்கின்றனர். ஆனால் சாதாரண மக்கள் இப்பிரச்சினையை ஆராய்வது ஒருவிதம். பொருளியல் நிபுணர்களுடைய ஆராய்ச்சி வேறு விதமாகும்.

## யுத்தகாலப் பொதுக்கடன் தோன்றும் விதம்.

இங்கே நாம் ஆராயும் விடயம் என்ன என்பதைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். பிஸ்கால் கொள்கைகளிலும், பணக் கொள்கைகளிலும் ஏறக்குறைய அதிகம் தங்கியிருப்பதால் உண்டாகும் விளைவுகளைப்பற்றி முந்திய அத்தியாயங்களிலும் ஆராய்ந்தோம், பிந்திய அத்தியாயங்களிலும் விபரமாய் ஆராய்வோம். இப்போது அது பிரச்சினையன்று.



படிப்பகம்

www.padippakam.com



யுத்தத்தின் பயனுக அமெரிக்காவின் பொதுக்கடன் 250 பில்லியனுக்கு அதிகமாயிற்றென்பதே சாதாரண பிரசையின் பிரச்சினையாகும்.

இரண்டாவது உலகமகாயுத்தம் அமெரிக்காவிலே பின்வரும் முறையில் நிகழ்ந்தது. இடைக்கக்கூடிய பொருள்களை நேரடியாகக் கட்டுப்படுத்துவதும் மட்டாகப் பகிர்ந்து கொடுப்பதும் வாயிலாக, 1941–45 இல் நுகர்ச்சிப்பொருள்கள் குறைந்தபட்ச மட்டத்துக்கு அரசாங்கத்தால் திட்டப்படுத்தப்பட்டன. குடிமக்கள் அதிகமாக வேலை செய்தனர். அதிக நேரமும் வேலை செய்தனர். வயோதிபரும், பெண்களும் அதிகமாக வேலையிலீடுபட்டனர். பொருள்கள், முதலீடுகள் என்பன நேரடியாகக் கட்டுப்படுத்தப்பட்டன. குடிமக்களுடைய முதலீடு பெரிதளவிற் குறைக்கப்பட்டது. எந்திரம், தொழிற்கருவி முதலியன புதுப்பிக்கப்படவில்லை. சரக்குக்கையிருப்பு குறைந்தது. இத்தகைய நேரடியான கட்டுப்பாடுகள் இல்லாமலே தற்காலப் பூரண யுத்தத்தைச் செய்யலாமென்பது உண்மையானுலும், அவ்வாறு நடைபெறவில்லை. எல்லாப் பண்டங்களும் மிதமாகப் பங்கிட்டுப் கொடுக்கப்பட்டன. வருமானத்தில் சிறிதளவு உபரியோ, விலையில் சிறிய மாற்றமோ தொகையளவில் அதிக விளைவையுண்டாக்காது என்பதை மக்கள் உணர்ந்திருந்தனர்.

குறித்த ஒரு காலத்திலே யுத்தத்தில் வெற்றி பெறக்கூடிய அளவு குறைந்தபட்ச மூலதனப் பண்டங்களே இருந்தன. 1945 ஆம் ஆண்டின் வாரிசாகப் பெற்ற இந்த நிலையை, யுத்தத்துக்குப் பணம் உதவக்கூடிய சாத்தியமான வேறு முறைகளால் மாற்றமுடியாது. உதாரணமாகத் தேசியக் கடனுக்குக் காரணமாயிருந்த யுத்தகாலப் பற்றுக்குறைப் பண ஒழுங்குகளில் நம்பிக்கை வைக்காமல், உயர்ந்த உபரிகளை விதித்து நிலைமையைச் சரிக்கட்டல் அத்தகைய ஒரு முறையாகும்.

யுத்தத்தை விரைவாக நடத்தி அதில் வெற்றிகாணும் நோக்கம் காரணமாகவே, யுத்தத்துக்குப் பின்னர் மூலதனப் பொருள்களில் (தளபாடம், எந்திரம், தொழில் நிலையம், சாதனங்கள், வீடு, சரக்குகள், நுகர்வோரின் நெடுபயன் பொருள்கள்) குறைவு ஏற்படவேண்டியதாயிற்று. இந்த யுத்தம் எங்கள்மேற் சுமத்தப்பட்டது. நாம் செய்யவேண்டியதைச் செய்தோம். அதற்குக் கழிவிரக்கப்படவில்லை. மூலதனப் பொருள்கள் குறைந்தமைக்கு யுத்தமே காரணம். 1938 இல் ஒரு சுழல்காற்று நியூஇங்கிலாந்திலேயுண்டானது. அஃது இழைத்த கெடுதியை நமது காடுகளில் இன்றுங் காணலாம். அந்தக் கெடுதியை நிவர்த்தி செய்யப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. அந்த முயற்சியை நாம் வேறு விடயங்களுக்காகப் பயன்படுத்தியிருந்தால், இன்று பொது நன்மைக்குரிய பல விடயங்களை நிறைவேற்றியிருக்கலாம். இந்த யுத்தமும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இந்தப் புயல் போன்றதே.

1938 ஆம் ஆண்டிலுண்டான புயலுக்கும், பொதுக்கடனுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. மேலே காட்டிய எளிதான யுத்தப் பணமுறையமைப்பிலே யுத்தப்பளுவும் அத்தகையதாகவேயிருக்கும். யுத்தத் தொழிலாள

www.padippakam.com



ருக்கு வரிப்பற்றுச்சீட்டுக்களை வெட்டிப்போட்டுக் கொடுத்தாலென்ன, அரசாங்கக் கடன்பத்திரங்களைக் கொடுத்தாலென்ன, நோட்டுப் பணத்தைக் கொடுத்தாலென்ன, மூலதனப் பொருள்களின் இழப்பு எம்மோடிருந்த படியேயிருக்கும். யுத்தகாலக் கட்டுப்பாடுகள் நீங்கியதும் மூன்று மடங்கு அதிகரிக்கும்.

யுத்தத்தினுலுண்டாக்கப்பட்ட பொதுக்கடனுல் எவ்வித விளைவுகளுமுண்டாகமாட்டாவா? சில விளைவுகளுண்டென்பதுண்மையே. போலி விளைவுகளிலிருந்து உண்மையான விளைவுகளைச் சாவதானமாகப் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். உண்மையான விளைவுக்கு ஓர் உதாரணம் பின்வருமாறு :—

இரட்டைகளில் ஒருவரான ஜேன் டே யுத்த காலத்திலே மிகக் கடுமையாக உழைத்தார். மற்றவரான ரோஸ் உழைக்கவில்லை. நமது அரசாங்கம் பற்றுக்குறைப் பண ஒழுங்கை மேற்கொண்டபடியால், ஜேனுக்கு 1945 இல் கடன் பத்திரங்கள் கிடைத்தன. வரிப்பற்றுச்சீட்டுக்கிடைக்கவில்லை. 1945 துவக்கம் ஜேனுக்கு நுகர்வுப் பொருள் ரோசிலும் பார்க்க அதிகம் கிடைத்தது. ஜேனுக்கு வட்டியும் முதலும் கொடுப்பதற்காக ரோசு மீது அதிக வரி விதிக்கப்படுகிறது. படிப்பினை : ஒரே வயதையோ வேறு வயதுப் பிரிவையோ சேர்ந்தவரிடையே மாற்று விளைவைப் பொதுக்கடன் திட்டமாக உண்டாக்கும்.

## 1. வெளிநாட்டுக் கடனும் உள்நாட்டுக் கடனும்

வெளிநாட்டுக் கடனுல், அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு அ∴து ஒரு கட்டுப்பாடாகவும் பெரிய பளுவாயுமிருக்கும். வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி கொடுக்கவும், முதலிலே ஒரு பகுதியைக் கரைக்கவும் விலையுயர்ந்த பண்டங்களையும் பணிகளையும் நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டி வரும். தேசிய வருமானத்திலே, பத்துவீதத்தை இவ்வாறு ஏற்றுமதி செய்ய வேண்டியிருந்தால் கடன் பளுவுடையதாகவே கருதப்படல் வேண்டும். அதனுல் அமெரிக்க மக்கள் முன்னரிலும் கடினமாகவும், நீண்டநேரமாகவும் வேலை செய்ய வேண்டிய அவசியமேற்படும்.

உள்ளூர்க் கடன் விடயத்திலும் சில பொறுப்புக்களுண்டு. ஆனுல் உள்ளூர்க்கடன் பளுக்கள் வெளிநாட்டுக் கடன் பளுக்களைவிடத் தன்மையாலும், தொகையாலும் வித்தியாசமானவை.[1] பொதுக்கடன் பற்றிய பொருளாதாரத்தை அறிந்துகொள்வதானுல், இதுவே மிக முக்கியமானதும்

[1] வெளிநாட்டுக் கடன் எவ்வாறு உண்டாகிறது? யுத்தகாலத்திலே நாம் வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்திருக்கலாம். அதற்கு விலை கொடுக்கவேண்டும்; அல்லது அது வெளிநாட்டு முதலீடுகள் மூலம் ஏற்படலாம். அதைப்பற்றி ஐந்தாம் பகுதியில் ஆராய்வோம். நமது வளங்களை அபிவிருத்திசெய்ய வெளிநாட்டார் மூலதனப் பொருள்களைக் கொடுத்திருந்தால் எமது NNP அதிகரிக்கும். வெளிநாட்டுக் கடனுல் உண்டாகும் வட்டி, பங்கீட்டுலாபம் என்பவற்றைக் கொடுக்கப் போதுமானதாயிருக்கலாம். இருந்தும் பொதுக்கடன் இருக்கும்வரை நாம் வறுமைப்பட்டவரே. ஆதியில் இருந்த வெளிநாட்டு முதலீட்டுக்குச் சேத

www.padippakam.com



முதலிற் படித்துக் கொள்ள வேண்டியதுமான பாடமாகும். உள்ளூர்க் கடனிலுள்ள வட்டியை அமெரிக்கர், அமெரிக்கருக்கே கொடுக்கிருர்கள். அதனுல் பண்டம் பணிகள் நேரடியாக நட்டப்படுவதில்லே. வரியிலிருந்து நேரடியாகக் கடன்வட்டி கொடுக்கப்பட்டால், பைசலாகக்கூடிய வருமானத்தில் நேரடியான நட்டம் எதுவுமேற்படாது. பீட்டர் என்பவர் கைவிடுவதைப், போல் என்பவர் பெறுகிருர். சில சமயம் கைவிடுபவரும், பெற்றுக் கொள்பவரும் ஒரே ஆட்களாயிருக்கலாம்.

பிரித்தானியர் பெரிய உள்ளூர்க் கடனுனுலும் பயப்படுவதில்லே. சிறிய வெளியூர்க் கடனென்ருல் சஞ்சலப்படுவர். அதற்கு இதுதான் காரணம். வெளியூர்க் கடன் நாட்டை வறுமைப்படுத்தும். சரித்திரத்தில் இதுவரை கண்டறியாத மிகச் செலவையுண்டாக்கிய இரண்டாவது மகாயுத்தத்தில், மிக அற்பமான மூலதனத்தளவாட நட்டத்தோடும், குறைந்த வெளி நாட்டுக் கடனேடும் அமெரிக்கா தப்பிக் கொண்டது.

**காலப் போக்கில் கடன்பட்டுப் பொருளாதாரப் பளுவை மாற்றிக் கொள்ளுதல்**

“யுத்தத்தை நடத்துவதற்காக வரி விதிக்காமல் கடன் பெறுவோமாளுல், பொருளாதாரப் பளுவை வருங்காலச் சந்ததியார் தலேயில் போட்டு விடுகிரும். வட்டியையும் முதலேயும் அவர்களே கொடுக்க வேண்டிய அவசியமேற் படுகிறது”. இத்தகைய கூற்றை அடிக்கடி கேட்கிரும். இதில் வெளிநாட்டுக் கடன், உள்நாட்டுக் கடன் பற்றிய வேருெரு மயக்கம் காணப்படுகிறது. வெளிநாட்டுக்கடன் பற்றியோ மூலதன ஆக்கத்தைக் குறைக்கும் கடன்பற்றியோ இவ்வாறு கூறுவது பொருந்தும். ஆளுல் உள்நாட்டுக் கடன்பற்றி இவ்வாறு கூறுவது தவருகும்.

இன்றைய யுத்தத்தை நடத்துவதாளுல், எதிரிமீது இக்கால ஆயுதங்களேப் பயன்படுத்தவேண்டும்; டொலர் உண்டியல்களேயும், வருங்காலப் பண்டம் பணிகளேயும் பயன்படுத்த முடியாது. நடுநிலே தாங்கும் நாட்டிடமிருந்து போர்ப்பொருள்களேக் கடனுகப் பெற்றுக்கொண்டு நம் பிள்ளேகளும் பேரப்பிள்ளேகளும் பண்டம் பணிகளாக அவற்றுக்கு ஈடுகொடுப்பார்களென்று உறுதிகூறிளுல் வெளிநாட்டுக்கடன் பொருளாதாப் பளுவை எம்சந்ததியார்மீது சுமத்து மென்றுகூறி விடலாம்.

ஆளுல் நமக்குப் பொருள்களேக் கொடுக்க, வெளிநாடுகள் சம்மதிக்கவில்லேயெனக் கொள்வோம். சிவில் மூலதன ஆக்கம் முற்ருக ஒதுக்கப்

முண்டாக்காதமுறையில் வெளிநாட்டுக்கடனே நீக்கிவிட்டால் எமக்கு நல்லதே. இவற்றைப் பற்றிப் பின்னர் சர்வதேச வர்த்தகம், அபிவிருத்தி என்பனபற்றி ஆராயும்போது கூறுவாம். யுத்தம் சம்பந்தமாகக் கூறுமிடத்து எமது சொந்த மூலதனத்தைத் தேய்த்துக்கொள்ளாமல வெளிநாட்டிலிருந்து கடன்வாங்கத் தீர்மானித்துள்ளோம் என வைத்துக் கொள்வோம். இவ்வாறு வெளிநாட்டில் கடன்பட்டால் 1945 இல் எந்த நிலேயிலிருந்தோமோ அதே நிலேயிலேதான் இருப்போம். நமது வெளிநாட்டுக் கடனுக்கு உள்ளூர் உபரி மூலதனப் பொருள் சமனுயிருந்திருக்கும். J. M. Buchanan : Public Principles of Public Debt (Irwin, Homewood III, 1958) என்ற நூலேப் பார்க்க.

www.padippakam.com



பட்டு விட்டதென்றும், யுத்த முயற்சிக்கு மேலும் பொருள்கள் தேவையென்றும் வைத்துக்கொள்வோம். பெருகிய செலவினங்களைச் சமாளிக்கும் நோக்கமாக வரிகளை அதிகரிக்க காங்கிரஸ் விரும்பவில்லையெனவுங் கொள்வோம். அல்லது மக்களுடைய செலவினங்களைக் குறைத்து, அதன்மூலம் மிஞ்சும் பணத்தை அது யுத்த முயற்சிக்குச் செலவிடும். அதனால் விலைவாசிகள் கட்டுப்படும். அப்போது அரசாங்கம் பற்றாக்குறை வரவு செலவையுண்டாக்கிக் கடன் பளுவை அதிகரிக்கும்.

" உள்நாட்டுக் கடன், யுத்தப்பளுவைப் பிற்காலச் சந்ததிக்கு விட்டுவிடும். ஆனால் வரி விதித்தால் அது இக்கால மக்களையே பாதிக்கும் " என்று எவ்வாறு கூறுவது?

இல்லை. இக்கால மக்களே தமது வளங்களைப் பயன்படுத்தி யுத்தப் பொருள்களை உண்டாக்குவர்.

### மாற்றுவதால் உண்டாகும் பளு

யுத்தம் முடிந்து பல தசாப்தங்களின் பின்னர், அந்த யுத்தத்துக்காகப் பட்ட பொதுக்கடனை, வட்டியும் சில சமயம் முதலுமாகக், கொடுத்துத் தீர்ப்பதற்கு எமது வருங்காலச் சந்ததியினர் மீது வரி விதிக்கப்படும். அந்த வரியைக்கொண்டு, கடன்பட்ட வேற்றுநாட்டவரின் வருங்காலச் சந்ததியினர் கடனைத் திருப்பிப் பெறுவார்கள். இத்தகைய சமகாலத்தவரின் பளு மாற்றம் முக்கியமானதே. ஆனால் விடயம் அவ்வளவில் முடியவில்லை. இன்னும் பல தசாப்தங்களின் பின்னர், நாம் முன்னர் குறிப்பிட்ட ஜேன் டே உயிரோடிருக்கலாம். இரண்டாவது மகாயுத்தத்திலே யுத்த முயற்சியில் பெரிதும் ஈடுபட்ட ஜேன் டேயின் கடன் பத்திரத்துக்கே இந்தத் தொழிலாளி கொடுக்கும் வரி போய்ச் சேரலாம். படிப்பினை : வெளிநாட்டுக் கடனின்றியோ யுத்தகால மூலதன ஆக்கத்தை மாற்றாமலோ, பொதுக் கடனானது மாற்ற விளைவுகளையுடையதாய், யுத்தகாலத்தில் பிறவாத குடிமக்களின் வரியை யுத்தத்தில் வேலை செய்த ஒருவருக்குச் சுவறச் செய்யலாம்.[1]

1. **American Economic Review (Sept. 1960, PP. 701—706)** என்ற சஞ்சிகையிலே பிறின்ஸ்டனைச் சேர்ந்த டபிள்யூ. ஜி. போவன், ஆர். ஜி. டேவிஸ், டி. எச். கொப் என்பவர்கள் இவ்விடத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ஜேன்டே 1955 இலே இறந்துபோயிருந்தாலும் 1945-55 இல் அவன் தனது கடன் பத்திரங்களை விற்று அதிகம் நுகர்ந்திருக்கலாம் எனவும் இந்த உபரி நுகர்வின் பளுவை 1955 இக்குப் பின்னர் பிறந்தவர்களும் தாங்கலாமென்றும், (1) 1945-55 இலே தாழ்வான முதலீடு இருப்பதால் 1955 இக்குப் பின்னர் குறைவான மூலதன இருப்பு உண்டாக்குவதாலும் (2) யுத்தத்துக்குப் பிந்திய தொழிலாளராயுள்ள ஓர் இடைநிலைச்சந்ததியை, வயோதிபத்தில் 1980 ஆம் வருடத்தொழிலாளர் பொதுக்கடனுக்குக் கொடுக்கும் வட்டி மூலம் ஆதரிப்பதாலும் (இந்த இடைநிலைச் சந்ததியார் 1945-55 இல் வேலை செய்தவராயும் ஜேனிடமிருந்து அந்தக் கடன்பத்திரத்தைத் தமது சேமிப்பைக் கொண்டு வாங்கியவராயுமிருப்பர்) இதைச் செய்யலாமென்றும் அவர்கள் தமது ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



**" நாமே நமக்குக் கொடுத்துக் கடனைத் தீர்க்கிறோம் ".**

உள்நாட்டுக் கடனை அமெரிக்கரே, கொடுத்து அமெரிக்கரே திரும்ப அறவிடுகிறார்கள் என்றால், யுத்தகாலத்திலே 250 பிலியன் டொலர் கடன் பத்திரங்களை அரசாங்கம் பிறப்பித்ததால், மக்கள் தனவந்தராகி விடுகிறார்கள், நுகர்வை அதிகரிக்கிறார்கள் என்று சிலர் நினைப்பதற்குக் காரணமென்ன? நாடு முழுவதற்குமுள்ள வரவு செலவு ஐந்தொகையைத் தயார் செய்தால், உள்நாட்டுக்கடன் என்பது போலியான செல்வத்தைக்காட்டுமென்பதையும், சொத்தும் பொறுப்பும் சமனாயிருக்குமென்பதையும் அறிவோம்.

சுத்த நிதிச் சொத்துக்கள் முக்கியமான விளைவுகளை உண்டாக்குகின்றன. அரசாங்கக் கடன்பத்திரம் வைத்திருப்போர் ஐந்தொகை தயாரிக்கும்போது அதையும் ஏனைய சொத்துக் கணக்கிலே சேர்த்துக்கொள்வர். அரசாங்கத்தின் வருங்கால வட்டிக்கொடுப்பனவுகள், கடன் தீர்வைகள் என்பவை சம்பந்தமான தொகைகளைத் தமது நடப்புப் பொறுப்புக்களில் எவரும் சேர்த்துக்கொள்ள மாட்டார். இந்த வரிகளிலே தம்முடைய பங்கு எவ்வளவென்பதை மதிப்பிடக்கூட ஒரு வழியைக் காணமாட்டார். இதன் விளைவாக, உள்நாட்டுக் கடனை மக்கள் சொத்தாகவே கருதுவர்; பொறுப்பாகக் கருதமாட்டார். கடன் பத்திரமாக ஒருவர் பணத்தைச் சேமித்து வைத்திருந்தால் அதை அவர் விற்பனை செய்யலாம் அல்லது காசாக மாற்றலாம். இந்தச் சேமிப்பினால் அவர் முன்னரிலும் தனம்படைத்தவராகவும், பாதுகாப்புடையவராகவும் தம்மைக் கருதுவார். அதன் பயனாக நடப்பு வருமானத்திலிருந்து அதிகம் நகர முயல்வார்.

## கடன் நிர்வாகமும் பணக்கொள்கையும்

கொடுபடாத பெரிய பொதுக்கடனிருக்குமானால் அது வட்டிவீதத்தைப் பாதிப்பதோடு வியாபாரச் சக்கரத்தை மாற்றவும் பயன்படும். முதலீட்டுப் பணத்தை அரசாங்கக் கடன் பத்திரங்கள் வாங்குவதில் செலவிட்டால், தனிப்பட்ட படுகடன்காரர் விடயத்தில் வட்டி உயரும் எனச் சில எழுத்தாளர் கருதுவர். பெடரல் கட்சி ஆதரவாளரான அலெக்ஸாண்டர் ஹமில்டன் இதற்கு மாறான அபிப்பிராயமுடையவர். நியாயமான அளவு பொதுக் கடனைச் சரியாக நிர்வாகஞ் செய்தால் அது மக்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாகும்; ஏனெனில் அது நம்பிக்கையுள்ள சொத்தாக வியாபாரிகளுக்கு வருமானத்தைக் கொடுப்பதோடு, சிறிய இலாபத்துக்கு வர்த்தகஞ் செய்யவும் துணைபுரிகிறதென அவர் கருதுகிறார்.

அரசாங்கக் கடன்பத்திரங்கள் விடயத்திலே வட்டிவீதத்தைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கை எடுக்கப் பெடரல் வங்கிக்கு அதிகாரமுண்டு. இதைக் கடந்த இரண்டு அத்தியாயங்களிலும் விளக்கினோம். எனவே கடனின் பயனாக வட்டி வீதத்தில் உயர்வு தாழ்வுண்டானால், அதைப் பகிரங்கச் சந்தைக் கொள்வனவாலும், விற்பனவாலும் சரிப்படுத்திக் கொள்ளலாம். பெரிய பொதுக்கடன்

படிப்பகம்

www.padippakam.com



பெடரல் வங்கியின் அதிகாரத்தை அதிகரித்தபோதிலும், திட்டமான பணக் கொள்கையையும் வட்டிக் கொள்கையையும் வங்கி நடைமுறையிற் கொண்டு வருவதற்குத் தடையாயிருக்கும்.

பல திசையிலுமிருந்துவரும் தேவையின் விளைவாகப் பணவீக்கம் உண்டானால், கடன் வசதி நிலைகளை இறுக்கமாக்கி, வட்டி வீதங்களை உயர்த்துவது பணக் கொள்கையின் கடமையாகும் என முன்னர் கண்டோம். வங்கிகளும் பொதுமக்களும் பெருந்தொகையான கடன் பத்திரங்களை வைத்திருக்கும்போது, கடன் வட்டிச் செலவுகளைக் குறைப்பதற்காக அரசாங்க பீடம் கடன் வசதியை இலகுவாக்கப் பார்க்கும். அரசாங்கக்கடன் பத்திரங்களின் விலை வீழ்ச்சியடையாதிருந்தால், வட்டி வீதங்களை இறுக்க முடியாது. மக்களும் வங்கிக்காரரும் தமது கடன்பத்திரங்களைக் காசாக மாற்றி நுகர்பொருள் வாங்கவும், முதலீட்டுச் செலவு செய்யவும் பயன்படுத்துவர். **1945–51** இலேயிருந்த பெரிய கடன், வியாபாரச் சுழலைக் கட்டுப்படுத்தும் பணக் கொள்கையைச் செயற்படாமல் தடை செய்திருக்கும். அதன் பயனாக பிஸ்கால் கொள்கைமீது அஃது அதிக பளுவைப் போட்டிருக்கும்.

**1951** ஆம் ஆண்டு துவக்கம் இஃது அத்துணைப் பெரிய பிரச்சினையாயிருக்கவில்லை. திறைசேரியும் பெடரல் ரிசர்வும் செய்துகொண்ட ஒழுங்கின்படி, எதிர்த்துச் சுழலக்கூடிய பணக்கொள்கையை மேற்கொள்ள பெடரல் ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டது. அரசாங்கக் கடன்பத்திரங்களிலே ஒரு விசாலமான சந்தையிருப்பதால், திரப்படுத்தக் கூடிய பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளை அது பரவலாக நிகழச் செய்கிறது. கடன் நிர்வாகத்தைத் திறைசேரி செய்வதாலும், பலகாலங்களில் முதிரும் கடன் பத்திரங்களிலே பகிரங்கச் சந்தை நடவடிக்கையெடுக்கும் கொள்கையாலும் இக்காலமுறையின் திரமான தன்மையை உயர்த்தலாம்.

## வட்டிமாற்றத்தால் ஏற்படும் உண்மையான மறைமுகப்பளு

பொதுக்கடன் சம்பந்தமான வட்டிச் செலவை வரிமூலம் கொடுத்தால், பணம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாறும். வெளிநாட்டுக்கடன் விடயமாக உள்ள நேரடியானபளு இதில் கிடையாது. ஆனால் எவ்வித பளுவும் உண்டாகாது என்ற முடிவுக்கும் நாம் வரமுடியாது. இதிலே மறைமுகமானதொரு பளுவுண்டுதான். அது மிக முக்கியமானது. முதலாவதாக பணம் ஒருவர் சட்டைச்சாக்கிலிருந்து மற்றவருடைய சாக்குக்குச் சென்றாலும், அவரவர் அணிந்திருக்கும் சட்டை வெவ்வேறு மனிதருக்குரியதே.[1] இப்போதுள்ள தேசியக் கடன், பரவலாக எல்லார் தோளி

1. இவ்விடயத்தை முந்திய அடிக்குறிப்புக்களோடு தொடர்புபடுத்தலாம். 1938 இலேயுண்டான வியாபாரமந்தத்தின்போது செய்யப்பட்ட பற்றுக்குறை நிதியொழுங்கினால் இக்காலக் கடனில்ஒரு தொகை பில்லியன்டொலர் சேரும். ஆனால் 1938 இலே ஐரோப்பாவிலிருந்து வந்த தங்கமும், உள்ளூர் உபரிச்சேமநிதியும் மிக அதிகமாயிருந்தபடியால், பணக்கொள்கை மூலம் முதலீட்டைத் தூண்டுவது முடியாத காரியமாயிருந்தது. எனவே ஒன்றில் பற்றுக்குறை

www.padippakam.com



லும் தங்கியிருக்கிறது. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் நேரடியாகவோ, வங்கி வைப்புக்கள்மூலமோ, இன்சூரன்ஸ் மூலமோ பங்கு உண்டு. கடன் பத்திர வட்டிபெறுவோர் சராசரியாகக் குறைந்த வருமான மட்டத்தி லுள்ளவர்களல்லர் என்று புள்ளிவிபரத்தால் அறிகிறோம். நமது பிஸ் கால் திட்டத்திலே பொதுக்கடன்மீதுள்ள வட்டியானது பிற்போக்கான அமிசமென்று விமர்சகர் கூறுவர். அதாவது வறியவர்களை உறிஞ்சிப் பணக்காரருக்குக் கொடுக்கும் திட்டமென்பதே அவர்கள் கூறும் அபிப்பிரா யம். அது தீமையானுல் அவசியமானதொரு தீமையென்றும், பொதுக் கடன் என்ருல் அதைக் கௌரவமாகத் தீர்த்துவைப்பதற்கு அஃது அவசிய மென்றுங் கூறப்படுகிறது.

ஒரு வருமானப்படியிலுள்ளவரிடமிருந்து பளுவை மற்றொருவருமானப் படியிலுள்ளவரிடம் மாற்றி விடுவது மாத்திரம் எமது இப்போதுள்ள பொதுக்கடனில் முக்கியமான மறைமுகப்பளுவன்று. வேறொரு முக்கிய மான விடயம் உண்டு; பீட்டரிடமிருந்து பெறும் வரிப்பணத்தை அதே பீட்ட ரின் கடன் பத்திரம் மீதுள்ள வட்டியைக் கொடுப்பதற்குப் பயன்படுத்துவது பொருளாதாரத்தில் பெரிய மறைமுகப்பளுவையுண்டாக்கும். மக்களு டைய பொருளாதாரப் போக்கை, வரிவிதித்தல் ஓரளவு குழப்பிவிடுகிறது. பல நூற்றுண்டுகட்கு முன்னர் வீட்டுவரி, யன்னல்களின் தொகையைக் கொண்டே நிச்சயிக்கப்பட்டது. அதனுல் மக்கள் யன்னல் இல்லாமல் வீடுகட்டினர். அப்போது அரசாங்கம் யன்னல்மீதுள்ள வரியை உயர்த்தி விட்டது. அதன்பயனுக முந்திய வரியையே அரசாங்கம் அறவிடக்கூடியதா யிற்று. மக்களுடைய வருமானத்தில் அதிக வரிவிதித்தால் மக்கள் ஒன் றில் வேலைசெய்வதைக் குறைப்பர்; அல்லது கடுமையாக உழைத்துத் தமது பழைய வாழ்க்கைத்தரத்தைக் குறையவிடாது பாதுகாப்பர். இதி லும் முக்கியமான வேறொரு விடயம்: கம்பெனி வரிகளையோ தனிப்பட்டவர் வருமான வரியையோ உயர்த்துவதால் மக்கள் தமது முதலை ஆபத்தான முயற்சிகளில் முதலீடு செய்யப் பின்வாங்குவர். இதன் விளைவாகத் தொ ழில் நுட்பமுறைகள் முன்னேறமாட்டா. வேலைவாய்ப்புக்கள் குறையும்.

இப்படிப் பேசுவதெல்லாம் குதர்க்கம்; உள்நாட்டுக் கடனில் வரிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுவதால் தேறிய வரிப்பளு கிடையாது; ஒவ்வொருவரும் அவரவர் வரிப்பங்குக்கு ஏற்றவாறு கடன் பத்தி ரம் வைத்திருக்கிருர், அதன் விளைவாகக் கொடுக்கப்படும் வரி அவரவருக்கே கொடுக்கப்படுகிறதெனவுஞ் சிலர் வாதிக்கலாம். இது தவருன கூற்று. ஒருவன் கொடுக்கும் வரியும், அவன் பெறும் கடன் பத்திர வட்டியும் சமமாக இருந்தாலும், பொருளாதாரக் கருத்துப்படி அவை சமமல்ல.

---

அல்லது குறைவான வேலைவாய்ப்பும் மிகக் குறைவான மூலதன ஆக்கமும் எனறேயிருந்தது. அந்த வருடத்திலிருந்து கடனுனது பளுவாயில்லாமல், அதிகம் மூலதனப்பொருளைத் தரக் கூடிய பளுவற்ற தொன்ருயிருந்தது. ஆனுல் மாற்றத்திலுண்டான குறைபாடு இருந்து கொண்டே யிருக்கும்.

www.padippakam.com



இது சரியே ; ஏனெனில் எல்லாருக்கும் பொருத்தமான சில விடயம் தனிப்பட்டவர் விடயத்திலே பொருத்தமாயிராது. உதாரணமாக, எல்லா அமெரிக்கரும் வருடாவருடம் 4500 டொலர் வருமானம் பெறுகிறுர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொருவரிடமும் அரசாங்கக் கடன் பத்திரமாக 25,000 டொலர் பெறுமதியுண்டெனக் கொள்வோம். இது 2 வீதவட்டியில், 500 டொலர் வருமானத்தைக் கொண்டுவரும். இந்த வட்டியைக் கொடுப்பதற்கு அரசாங்கம் இப்போதுள்ள வரிகளைவிட மொத்தம் 5000 (4500 + 500) டொலர் மீது பத்துவீத வட்டி விதிக்கிறதென வைத்துக் கொள்வோம். முன்னெல்லாம் நான் எனது 4500 டொலரில் கடைசி டொலரை உழைக்க அரசாங்கம் உபரிவேலைச்சம்பளம் கொடுத்தது. இப் போது அரசாங்கம் கடைசி டொலரிலே மற்றெரு கடைசி "டைம்" காசை எடுத் துக் கொள்ளுகிறது. என்னைப்போலவே மற்ற ஒவ்வொரு அமெரிக்கனும், உபரிவேலை செய்வதால் பயனில்லையென எண்ணுவான். எனது வேலை நேரத்தில் மூன்றிலொரு பகுதியை வெட்டிவிட்டால் எனக்கு 3500 டொலர் வருமானமே கிடைக்கும். வரியானது தேசீய முயற்சியையும் உற்பத்தி யையுங் குறைத்துவிடுகிறது.

இந்தக் கட்டத்திலே இந்த வாதத்தில் நம்பிக்கையில்லாத ஒருவர் "அதனுலென்ன ? நீர் செய்வதுபோல மற்றவர்களும் தமது வேலை நேரத்தைக் குறைத்துக் கொள்ளட்டுமே. அப்போது உபரிவீதம் பத்திலி ருந்து பதினைந்தாக உயர்த்த வேண்டிவரும். அப்பொழுதுதான் கடன் பத்திர வட்டி வீதத்தை முற்றுக அறவிடலாம்" என்று கூறுவர். அஃது உண்மையே. இப்படிப் போகுமாணுல் தேசீயப் பிரயத்தனம் மேலும் குறையும். மக்கள் அபாயமான முயற்சியில் முதலீடு செய்ய மேலும் தயங்குவர். அதனுல் வரி வீதத்தை உயர்வட்டி வீதத்துக்கு உயர்த்த வேண்டி வரும். இஃது எதனுல் உண்டாகிறது ? வட்டி அளவுக்கு வரியை உயர்த்தாமலிருக்க அரசாங்கத்தால் முடியாது. இருந்தும், தனது சிறிய சொந்த வட்டிக்கொடுப்பனவு எந்த வகையில் போனுலும், தன்னைப் போன்ற ஒரு சிறிய ஆள் எதைச் செய்தாலும், தனது முயற்சியால் தனது வரியை மாற்றலாமென்பதை ஒவ்வொருனும் உணர்ந்திருப்பான்.

மேலே கூறிய உதாரணம், விடயத்தை மிக இலகுவாக்கி உள்ளூர் வரிப் பளுமாற்றத்தாலுண்டாகும் தீமைகளை மிகைப்படுத்திக் கூறுகிறது. வரி ஒவ்வொன்றும் தனித்தனி வகையில் தீமையுடையது. நமது வரிகள் உயர்ந்திருக்கின்றன. பொதுக்கடன் வட்டி கொடுப்பதற்காக, மேலும் உயர்த் தினுல் அது பெரிதளவுக்குத் தீமையுடையதாகும்.

வங்கிகள், சர்வகலாசாலைகள், கைம்பெண்கள், மற்றும் உதவி பெறு வோர்க்குக் கிடைக்கும் வட்டிக் கொடுப்பனவின் நல்ல விளைவுகளை நாம் கவனியாது விட்டுவிட்டோம். பொதுக்கடன் இல்லாவிட்டால் அல்லது வட்டி வீதங்கள் கண்டபடி வீழ்ச்சியடைந்தால் (1) தருமத்தாபனங்கள், தருமச்சொத்துமூலம் வரும் வட்டியினுலன்றி, பொதுமக்களுடைய நேரடி

www.padippakam.com



யான உதவியாலும் தனிப்பட்டோருடைய நடைமுறையான பண உதவிகளாலுமே நடைபெறவேண்டும். (2) சமூகப் பாதுகாப்பும், வருடாந்த உபகார வேதனங்களும் வட்டிபெறுவோரின் இடத்தை வகிக்கவேண்டும். (3) அரசாங்கக் கடன்பத்திர வட்டியைவிட வங்கிகள் தமது சேவைச் செலவுகளை அதிகம் நம்பியிருக்கவேண்டும்.

### தனிப்பட்ட முதலீட்டிஞலுண்டாகும் விளைவுகள்

கடனென்ருல் மக்கள் உள்ளத்திலே மிக்க உணர்ச்சியுண்டாவது இயற்கை. இதைத் தட்டிக் கழிக்க முடியாது. பாலுணர்ச்சி, சமயம் என்பனபோலவே பகிரங்கக் கடனைப்பற்றியும் நாமெல்லாம் பேசுவதற்கு ஆசைப்படுவோம். இப்போதுள்ள மட்டத்தில் நூறிலொன்ருகவோ, பத்திலொன்ருகவோ, ஐந்திலொன்ருகவோ பொதுக்கடன் வந்துவிட்டால் உலகம் அழிவதற்குக் காலம் வந்துவிட்டதெனப் பலர் தீர்க்கதரிசனம் சொல்வதுண்டு. உலகம் அந்த வருடத்தில் அழியாவிட்டால் அடுத்தவருடம் அழியுமெனத் தீர்க்க தரிசனம் கூறுவர்.

இத்தகைய போக்குத் தனிப்பட்டவர் முதலீட்டைப் பாதிக்காலம். உதாரணமாக வியாபார மந்தமுள்ள காலங்களிலே அரசாங்கச் செலவோ பற்ருக்குறையோ, வாங்குஞ் சக்திக்கு அதிகம் கூட்டமாட்டா என்று சிலர் வாதிக்கலாம். தனிப்பட்டவர் முதலீடு எப்பொழுதும் ஒரே மட்டத்திலிருக்குமென்றுகொண்டால், பொதுச் செலவு வருமானத்திலும் வேலைவாய்ப்பிலும் சாதகமான முதனிலை விளைவுகளை உண்டாக்கும். அன்றியும், வருமானத்தை நுகர்வுக்கு மறுபடி செலவு செய்வதால், பெருக்கித் தொடரான சாதகமான இரண்டாம்நிலை விளைவுகளுமுண்டாகும். ஆனுல் அரசாங்கம் செலவு செய்வதாலோ, பற்ருக்குறையாலோ தனிப்பட்டவர் முதலீடு அச்சுறுத்தப்பட்டால் என்ன நடக்கும்?

இது ஒருவேளை நடக்கலாம். வியாபாரிகள் பின்வருமாறு கூறலாம் "வெள்ளைமாளிகையில் உள்ள அந்த மனிதன் கண்டபடி செலவு செய்யும்போது நாம் திட்டமிட்ட சிறிய தனியார் முதலீட்டைக் கூடக் கைவிடவேண்டியதுதான்". அல்லது பொதுநல வேலையிலீடுபட்ட தனிப்பட்ட கம்பெனி, அரசாங்கம் அந்த வேலைகளைத் தானே செய்துவிடக் கூடுமென அஞ்சி, தனது முதலீடுகளைக் குறைக்கலாம். அல்லது அரசாங்கம் செலவு செய்வது சில்லறைக் கடையில் பண்டங்களை வாங்குவதற்கு மக்களுக்குப் பணத்தைக் கொடுக்கிறது. இதன் பயனுக வியாபார மந்தகாலத்திலே வியாபாரிகள் கையிருப்பிலுள்ள மேலதிகமான பொருள்களை உடனே விற்றுவிடுவர். அதனுல் உற்பத்தியைப் பெருக்க வழிசெய்யாவிட்டால், அரசாங்கச் செலவினுல் எவ்வித பயனும் விளையாதுபோகும். தனியார் உற்பத்தியில் முதலீடு செய்யாது விடுவர். அதனுல் பெருக்கி விளைவு அப்படியே தம்பித்துப் போய்விடும்.

படிப்பகம்

www.padippakam.com



அரசாங்கச் செலவினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளே இவை. ஆனால் சாதகமான விளைவுகளுமுண்டு. அதனால் தனியார்துறையில் முதலீடுகள் பெருகலாம். நடைமுறையிலேயே உற்பத்தி குறைவாயிருக்கும்போதும் எந்திரங்களின் ஆக்கத்திறன் அபரிமிதமாயிருக்கும்போதும், எந்த ஒரு முயற்சியாளனும் புதிய மூலதன ஆக்கத்திலிறங்கமாட்டான். அரசாங்கத்திற்குச் சில்லறை விற்பனையைத் தூண்ட முடியுமானாலும், நுகர்வுப்பொருள்களின் உற்பத்தியையுந் தூண்டமுடியுமானாலும், முயற்சியாளர் தமது தளபாடங்களைப் புதுப்பிக்கவும், புதிய தொழிற்சாலைகளைக் கட்டவும் உற்சாகம் பெறுவர். அவற்றுக்கான பணச்சக்தியும் உண்டாகும்[1]. சிலசமயம் பொதுக் கடனைப் பற்றியும், பற்றுக்குறை பற்றியுமுண்டாகும் உளவியல் சம்பந்தமான பயம் பணவீக்கத்தை உண்டாக்கலாம். அஃது ஒருசமயம் பிஸ்கால் சம்பந்தமில்லாத காரணங்களால் தோன்றிதாகவுமிருக்கலாம்.

தனியார் முதலீட்டை இவ்வாறு விரியச் செய்தும் சுருக்கியும் கொள்ளக் கூடிய போக்குகளிருக்கும்போது நாம் உண்மையான தகவல்களையே ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாய்க் கொள்ளவேண்டுமேயன்றி வெறும் தர்க்கத்தை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது. தனியார் முதலீடு, தேசிய வருமான மட்டத்தை அனுசரித்தே செல்லும். புள்ளிவிவரங்கள் இந்த உண்மையையே காட்டுகின்றன. பொருளாதாரச் சாத்திரத்திலே நமக்குத் தேவையான நிலைகளை உண்டாக்கிப் பரிசோதனைசெய்து முடிவு காண்பது முடியாத காரியமாகும். காசுப்புத்தகமே பல்லவியை எழுப்பும்; முயற்சி செய்யச் சுதந்திரமுள்ள சமூகத்தில் அவ்வாறுதானிருக்க முடியும்.

### கடன்பற்றிய தொகை சம்பந்தமான பிரச்சினை

நமது தற்காலப் பொதுக்கடனின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதானால் தகவல்களை ஆராயவேண்டும். வட்டி எமது தேசிய வருமானத்தையெல்லாம் விழுங்கிவிடுகின்றதா? மொத்த வட்டிக்கொடுப்பனவுகள் (தனியார் துறையும் பொதுத்துறையும் சேர்ந்து) சென்ற ஆண்டுகளில் கொடுப்பனவுகளோடு எவ்வளவு ஒத்திருக்கின்றன ; மற்ற நாட்டுக் கொடுப்பனவுகளோடு எவ்வளவுக்கு ஒத்திருக்கின்றன? என்பவற்றை அறியவேண்டும். முன்னேறியே காணக்கூடிய எதிர்காலப் போக்குகள் எவ்வாறிருக்கும்?

இக்காலக் கடன், சென்ற வருடங்களோடு எவ்வாறு இருக்கின்றது, வேறு தேசக் கடன்களோடு எவ்வாறு இருக்கின்றது, என்பவற்றை விளக்கவே அட்டவணை 1 தயார் செய்யப்பட்டுள்ளது. தேர்ந்தெடுத்த காலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள தேசியக் கடன்களையும், அவை தேசிய வருமானத்துக்கும், வட்டிக் கொடுப்பனவுக்கும் எவ்விதம் தொடர்புள்ளவை என்பதையும் அந்த அட்டவணை காட்டுகிறது. 1959 இல், எமது தேசியக் கடன் 290 பில்லியன் டொலராகும். அஃது எமது 1 வருடத்

[1] இதற்கு ஓர் உதாரணம் 14 ஆம் அத்தியயத்திற் கொடுத்துள்ளோம். அங்கே முதலீட்டுத் தூண்டல், விற்பனை அதிகரித்தல் என்பனவை சம்பந்தமான தூண்டல் கொள்கை ஆராயப்பட்டது.

www.padippakam.com



தேசிய வருமானத்தில் மிகக் குறைவாகும். கடன் வட்டி எமது தேறிய தேசிய உற்பத்தியில் 2 வீதமேயாகும். இங்கிலாந்திலே 1818இலும் 1923 இலும் 1946 இலும் தேசிய வருமானத்தைவிட இரண்டு மடங்கு அதிகமான உள்ளூர்க் கடன் இருந்ததைக் கவனிக்கலாம். இந்தக் கடன் மீதுள்ள வட்டி, தேசிய வருமானத்தின் விகிதமாகப் பார்க்கும்போது மிக அதிகமானதே. எனினும் உலக மகா யுத்தத்துக்கு முந்திய நூற்றுண்டே இங்கிலாந்தின் மிகச் சிறப்புவாய்ந்த நூற்றுண்டாயிருந்தது. அதிகாரத்திலும், செல்வப் பெருக்கிலும் அதுவே சிறந்த நூற்றுண்டா யிருந்தது. இருந்தும் அதனுடைய தேசியக் கடன் அதிகம் குறையவில்லை. ஆனல் தேசிய வருமானம் அதிகரிக்க அதிகரிக்கக் கடனும் வட்டியும், ஒப்பீட்டளவில் ஒன்றுமே இல்லையென்று சொல்லும்படி குறைந்துபோயின.

**தீவிரமாக முன்னேறும் பொருளாதாரத்துக்கு வளரும் கடனல் ஆபத் தில்லை**

அட்டவணை 1: தேசிய வருமானத்தோடு சார்த்திக் கணக்கிட்ட தேசியக் கடனும் வட்டியும். 1930 சார்ந்த ஆண்டுகளிலே மக்களைச் சஞ்சலப் படுத்திய 40 பில்லியன் டொலர் கடன், பின்னர் உண்டான வருமானத் தோடு சார்த்திப் பார்க்குமிடத்துச் சிறிதாய்த் தோன்றுகிறது.

(கிடைத்த வழி: Ecnomic Almanac, U.S. Department of Commerce; U.S. Treasury; United Nations; Colwyn Report; statistical Abstract of United Kingdom.)

| வருடம் (1) | தேசியக் கடன் (2) | தேசியக் கடனின் வட்டி (3) | தேசிய வருமானம் (4) | தேசிய வருமான வருடங்களில் கடன் அளவு (5) [= (2) ÷ (4)] | தேசிய வருமானத்தின் விகிதமான வட்டி (6) [÷ 100 = (3) ÷ (4)] |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா (பில்லியன் கணக்கில்) | | | | | |
| 1959 | 290.9 டொ. | 9.20 டொ. | 399.6 டொ. | 0.7 | 2.3 |
| 1945 | 278.7 .. | 4.10 .. | 181-2 .. | 1.5 | 2.3 |
| 1939 | 47.6 .. | 1.19 .. | 02.5 .. | 0.7 | 1.6 |
| 1929 | 16.3 .. | 0.73 .. | 87.4 .. | 0.2 | 0.5 |
| 1920 | 23.5 .. | 1.06 .. | 68.4 .. | 0.3 | 1.5 |
| 1916 | 1.2 .. | 0.02 .. | 38.7 .. | 0.0+ | 0.0+ |
| 1868 | 2.6 .. | 0.13 .. | 6.8 .. | 0-4 | 2.0 |
| பிரித்தானியா (பத்துலட்சக் கணக்கில்) | | | | | |
| 1959 | 28,511 ப. | 840 ப. | 18,904 ப. | 1.5 | 4-4 |
| 1946 | 23,774 .. | 472 .. | 8,411 .. | 2.8 | 5.6 |
| 1923 | 7,700 .. | 271 .. | 3,800 .. | 2.0+ | 7.1 |
| 1913 | 656 .. | 17 .. | 2,300 .. | 0.3 | 0.7 |
| 1818 | 840 .. | 31 .. | 400 .. | 2.1 | 7.7 |

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் புள்ளி விபரங்களையும் ஆராய்ச்சிகளையும் ஆதாரமாகக் கொண்டு, தேசியக் கடன் இன்றும் மகத்தானதொரு பிரச்சினையா என்பதையும் இராணுவப் பாதுகாப்பு அணுக்குண்டு, வேலையின்மை, பணவீக்கம் என்பவற்றிலும் அது முக்கியமானதா என்பதையும் வாசகர் தாமாகவே நிச்சயித்துக் கொள்ளலாம். எதிர்காலத்தில் உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்குமா ? வேலை நிறுத்தம், பணவீக்கம் என்பனவற்றை உண்டாக்காமல், தொழிலாளியும் முதலாளியும் கூட்டுப்பேரத்தினால் ஒற்றுமைப் படுவார்களா? என்ற பிரச்சினைகளே தேசியக் கடனிலும் முக்கியமான பிரச்சினைகளாகும்.

**பொருளாதாரத்திலே வளர்ச்சி.** கடன் வளர்ச்சியைப் பட்சபாதமின்றி ஆராயும்போது, நாம் தவிர்க்க வேண்டியதொரு தவறுண்டு. ஐக்கிய அமெரிக்காவின் நிசமான தேசிய உற்பத்தி எப்பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கு மொன்றாகும் என்பதை மறக்கக்கூடாது.

நமது சனத்தொகை பெருகுகிறது. உற்பத்தியைப் பொறுத்தவரையில் வேலைநேரத்திறமையோ, புதிய தொழில் நுட்பமுறைகளோ அவ்வளவுக்கு தளர்ந்துவிட்வில்லையெனத் தெரிகிறது. "தேக்கவாதிகளும்", "மலர்ச்சி வாதிகளும்" இந்த விடயத்தை ஒப்புக்கொள்வர். 1790 இலே பெரிய கடன் போலத் தோன்றியது, இன்று அவ்வளவு பெரிய கடனாகத் தெரிவதில்லை. நமது புத்திரரால் பெரிய கடனாகக் கருதப்படுபவை எங்களுடைய பௌத்திரருக்குப் பெரிய கடனாகத் தெரியமாட்டது.[1]

இங்கிலாந்தும் பிரான்சும், முதலாளித்துவமுறை உருவாகிய இக்கட்டான காலத்திலும், கைத்தொழிற்புரட்சியேற்பட்ட காலத்திலும், தசாப்தம் தசாப்தமாகவும், நூற்றுண்டு நூற்றுண்டாகவும் ஏறக்குறைய அரைவாசிக் காலம் பட்ஜெட்டைச் சமன்படுத்திக்கொண்டு இடையூறின்றி ஆட்சி நடத்தக் கூடியனவாயிருந்ததற்குக் காரணம் இதுவே. இக்காரணத்தினாலேதான் நிசத் தேசிய உற்பத்தி வருடாவருடம் 3 அல்லது 4 வீதமாக அதிகரிக்கும் ஐக்கிய அமெரிக்காவில் 25 வருடத்தில் பொதுக்கடன் 250 பில்லியன் டொலராக உயர்ந்தாலும், கடன்பளு வீதம் அதிகரியாதிருக்கிறது.

அரசாங்கம் செலவு செய்ய வேண்டுமென்ற கொள்கையில் நம்பிக்கையுடையவர் வருடாவருடம் 10 பில்லியன் டொலர் சராசரி பற்றுக்குறையை எதிர்பார்க்கலாம். அதன்பின்னர்தான் அவர் காசுநோட்டடித்தல், வட்டியில்லாத கடன் பத்திரங்களைப் பெடரல் சேமவங்கிகட்கு விற்றல் போன்ற

1 இரண்டாவது மகாயுத்தம் முடிவுற்றபின்னர் உண்டான தசாப்தம் சிறந்ததோர் உதாரணமாகும். 1945 இலே பொதுக்கடன் வருமானத்தில் 1.5 தரமாயிருந்தது. கெடுபிடியுத்தமிருந்த போதிலும் வருமானம் அதிகரித்தது. அதன்பயனாக 12 வருடத்தில் இந்தவீதம் அரைவாசியாகக் குறைந்தது. அரசாங்கத்தாபனங்களினாலோ, பெடரல் சேமவங்கியினாலோ கொள்ளப்படாத கடன்பகுதியில் கவனஞ் செலுத்துவது பலவகையாலும் பயனுடையதாகும். இந்தத் தேசிய கடன் 1945 இலிருந்து 1960 வரை 227 பில்லியன் டொலரிலிருந்து 205 பில்லியல் டொலராகக் குறைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அவைதீகமான பண உபாயங்களில் ஈடுபடுவார். இந்தவகையான உபாயங்களில் ஈடுபடுமுன்னர், அரசாங்கக் கடன் பத்திரங்களின் வட்டிவீதத்தைக் கீழிறக்கிவைத்திருத்தல் போன்ற பழக்கமான தந்திரங்களை உபயோகிக்க இடமுண்டு. இது, விடயத்தை மிதமாக்கும் பிரச்சினையைக் கிளப்புகிறது.

பற்றுக்குறைச் செலவிலே பழகிவரும் ஒரு தேசம், நமது வாழ்நாள் முழுவதும், அதன் பின்னரும் இத்தகைய கொள்கையைப் பின்பற்ற முடியுமா ? இதற்குத் தடையாயிருக்கக் கூடியது, நிதிவிடயமன்றென்பது, வங்கி தொழிற்படும் முறையையும் வருமானத்தை நிர்ணயிக்கும் முறையையும் ஆராய்வோர் உணர்வர். இத்தகைய தடை அரசியல் வடிவிலிருக்கும். அத்தகைய கொள்கையின் விளைவுகள், அது பணவீக்கத்துக்குரிய பொருளாதாரத்தையோ பணவாட்டத்துக்குரிய பொருளாதாரத்தையோ, சார்ந்திருக்கிறதென்பதையே பொறுத்ததாகும். செலவு பரவலாக விரியக்கூடியதென்ற அரைகுறையான உண்மையைத் தேர்தல்தொகுதிகளும், காங்கிரசும் அறிந்துகொண்டு, அவசியமற்ற செலவு விரிவைத் தடுப்பதற்கு மக்கள் விரும்பாத வரிகள் தேவைப்படுமென்பதை மறந்துவிட்டால், நெடுந்தவணையில் விலைவாசிகள் ஏறக்கூடும்.

நம்நாட்டிலும், வேறுநாட்டிலும், உள்ள பொதுக்கடன்பற்றிக் கருத்துடன் ஆராய்ந்தோம். அதன் பளு சம்பந்தமான பொருளாதாரக் கொள்கைகளைக் கவனமாக ஆராய்ந்தோம். திட்டமான சில பிரச்சினைகளுண்டென்பதையுணர்ந்து கொண்டோம். ஆனால் உண்மையான பழு எது உண்மைய பளு எது என்பதைப்பற்றிச் சாதாரண மக்கள் மயக்கமுடையவராகவே காணப்படுகின்றனர்.

நமது பொருளாதாரம் சம்பந்தமான பல முக்கிய பிரச்சினைகளுண்டு. பணவீக்கம், வியாபாரமந்தம், சனநெருக்கமும் சுகாதாரப்பாதுகாப்பும், போதிய அளவு வளர்ச்சி, சர்வதேசக் கடன், முதலிய பல பிரச்சினைகள் உண்டு. இவை சாவதானமான பிஸ்கால் கொள்கையோடும், பணக் கொள்கையோடும் தொடர்புடையன. நியாயமான ஒரு மனிதனின் ஆராய்ச்சியின்படி, பாரதூரமான பிரச்சினைகளுள் ஒன்றாக தற்கால அளவில் உள்ள பொதுக் கடன் முதலிடத்தைப் பெறமாட்டாது.

### முடிவு: பெரிய நவவைதீக இணைப்பு

1946 ஆம் ஆண்டு வேலைவாய்ப்புச் சட்டத்திலே, வேலை வாய்ப்பு நிலையை உயர்ந்த மட்டத்திலே வைத்துக்கொள்வதும், வியாபாரச் சுழல் காரணமாக உண்டாகும் சஞ்சல நிலையைத் தணிப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பெனக் காணப்பட்டது. ஆனால் நியாயமான விலைமட்டத்தை நிலைநிறுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பென விளக்கமாக ஒரு திருத்தம் அந்தச் சட்டத்தில் இடம் பெறவேண்டுமெனப் பலர் யோசனை கூறியுள்ளனர். இத்தகைய சட்டம் பிரகடனஞ் செய்யப்படாவிட்டாலும், இக்காலக் கலப்புப் பொருளாதாரத்தில் வாழும் மக்கள், தமது அரசாங்கங்கள் வேலைவாய்ப்பை உயரமாகவும், வளர்ச்சியைப் பலமுள்ளதாகவும், விலைவாசியை நிலை

www.padippakam.com



யாகவும் வைத்திருக்கக்கூடியவாறு பொருளாதாரக் கொள்கைகளை அனுசரிக்க வேண்டுமென விரும்புவது உலகெங்கும் காணப்படும் வழக்கமாகும்.

இரண்டாம் பகுதியிலே பெரிய பொருளாதாரத்தை அளக்கும் ஆயுதங்கள் தரப்படுகின்றன. அதாவது வருமானங்கள், விலைவாசிகள் என்பவற்றின் மட்டங்களையும், போக்குகளையும் பலவகையான கோடுகள் எவ்வாறு நிச்சயிக்கின்றன ; பணவீக்க இடைவெளி, பணவாட்ட இடைவெளி என்பவற்றைத் தவிர்க்கப் பணக்கொள்கையும் பிஸ்கால் கொள்கையும் அந்தக் கோடுகளை எப்படி நகர்த்துகின்றன; இவற்றால் வளர்ச்சி எவ்வாறு தூண்டப்படுகிறது—என்ற விடயங்களை அறிவதற்குரிய சாதனங்கள்இவை. வளர்ச்சி, தேவை, செலவு உந்தும் பணவீக்கம் என்பன போன்ற இக்கால வாழ்வோடு சம்பந்தப்பட்ட விசேட பிரச்சினைகள் ஆறும் பகுதியில் விபரமாக ஆராயப்படும்.

நமது பெரிய பொருளாதார ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைத்த தளரா நோக்கியல்புடைய முடிபுகளோடு இவ்வத்தியாயத்தை முடிக்கலாம். நடப்பது நடக்கட்டுமென்று விடும் தலையிடாக் கொள்கையானது இலட்சியபூர்வமான திரநிலையை உண்டாக்கும் என்ற வைதீகக் கொள்கையை இது காட்டவில்லை; தற்கால உலகுக்கு வைதீகக் கொள்கைகள் பொருந்தா என்ற யுத்தத்துக்கு முந்திய தளர்நோக்கியல்பையுங் காட்டவில்லை. " நவ வைதீக இணைப்பு " என்று கூறக்கூடிய ஒரு கருத்தைத் தெரிவித்து இப்பகுதியை முடிப்பாம். உயர்–தொழில் வாய்ப்பு உற்பத்திச் சாத்தியக்கூறுகள் பல விருந்தால், சமூகம் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் ; சிக்கனம் சம்பந்தமான முரணுரைகளும், சேர்க்கைப் போலிகளும் தனிப்பட்ட ஒழுக்கம், சமூக ஒழுக்கம், தனிப்பட்ட ஒழுக்கக்கேடு, சமூக ஒழுக்கக் கேடு என்பவற்றுக்கிடையே பிரிவினையை உண்டாக்க விடக்கூடாது என்ற சிறிய பொருளாதாரம் சம்பந்தமான கருத்துக்களைத் திரப்படுத்தும் முறையில் பொருளாதாரச் சூழ்நிலையிருக்கக்கூடியவாறு செய்ய, பணக்கொள்கையும், பிஸ்கால் கொள்கையும் உதவும் என்பதைக் காட்டுவதே இந்த நவ வைதீக இணைப்பாகும்.

நவ வைதீக இணைப்பு : பணக் கொள்கையையும், பிஸ்கால் கொள்கையையும் பொருத்தமான முறையில் பலப்படுத்துவதன்மூலம் நமது கலப்புத்தொழின்முயற்சி முறையானது வியாபார மேலதிக மலர்ச்சியையும், வியாபார மந்தத்தையும் தடுக்க முடியும். அவ்வாறு செய்து முற்போக்கான நல்ல வளர்ச்சியை அடையலாம். இந்த அடிப்படைக் கொள்கையை அறிந்துவிட்டால், சிறிய பொருளாதாரம் சம்பந்தமாக ஆராய்ந்த பழைய வைதீகக் கொள்கைகளில் உள்ள முரண்பாடுகள் மறைந்துவிடும். பழைய விலைக்கொள்கைகளின் அடிப்படைத் தத்துவங்களை, இக்கால வருமான

www.padippakam.com



நிர்ணய ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே, சிறிய பொருளாதாரத்துக்கும் பெரிய பொருளாதாரத்துக்குமிடையிலுள்ள பிளவு தீர்ந்ததெனப் பொருளியலறிஞர் கருதுகின்றனர்[1].

தேசிய வருமானமும் தொழில் வாய்ப்பும் எவ்வாறு விபரமாக நிர்ணயம் பெறுகின்றன என்பதை மூன்றும் பாகத்திலே ஆராயலாம்.

**சுருக்கம்**

**குறுகியகால பிஸ்கால் கொள்கையும், நீண்டகால பிஸ்கால் கொள்கையும்**

1. தனியார் முதலீடும், நுகர்வுச் செலவும் வீக்க இடைவெளியையோ வாட்ட இடைவெளியையோ உண்டாக்கினால், எஞ்சிய இடைவெளியைச் சமன்படுத்தி விலைவாசிகளைத் திரப்படுத்தவும் உயர்ந்த வேலைவாய்ப்பையுண்டாக்கவும் பிஸ்கால் கொள்கையோடு பணக்கொள்கையும் முயலவேண்டும்.

இந்த பிஸ்கால் சாதனங்கள் வரிவிதிப்போடும் செலவோடும் சம்பந்தப்பட்டவை.

2. தற்காலப் பொருளாதாரத்திலே, முக்கியமான "நிர்மாண நிலையாக்கி" களுண்டு. காலோசிதமான நடவடிக்கை எதுவும் எடுக்காமலே வரி அறவீடுகள், வருமானத்தினால் தாமாக மாறுகின்றன. அதனால் பெருக்கியின் அளவு குறையும். அதன் பயனாகக் குழப்பம் ஏதுமிருந்தால், அதில் ஒரு பங்கு குறைந்துவிடும். (தொழிலில்லாக் காலத்திலே வழங்கப்படும் சகாயம், அதுபோன்ற ஏனைய பொதுநலச் சகாயங்களுக்கான பொருள் மாற்றங்களும் வருமானங் குறையக் குறையத் தாமாக உண்டாகின்றன; அத்துடன் விவசாய உதவித்திட்டங்கள், கம்பெனிகள், நடப்பு வருமானத்திலிருந்து பங்குலாபத்தின் ஒரு பகுதியை மாத்திரம் வழங்குதல் என்பனபோன்ற நடவடிக்கைகளாலும் இந்த விளைவுகளுண்டாகும்.

3. ஒரு பொருளாதாரத்திலேற்படும் திரமற்ற நிலைமைகளைத் தாமாக உண்டாகும் நிலையாக்கிகள் முழுமுகச் சமப்படுத்துவதில்லையாதலால், சமயோசிதமாகச் செய்யக்கூடிய சில திட்டங்களுமுண்டு. குறுகிய காலப் பொருளாதார மந்தத்தைப் போக்கடிப்பதற்கு, பொது மராமத்து வேலைகளும் அவைபோன்ற பயன்தரக் காலமெடுக்கும் பண்டம் பணிமீது செய்யும் செலவுகளும் ஏற்றவையல்ல. மாற்றுச் செலவு, வரி விகிதம் என்பன பற்றிச் சமயோசிதமான நடவடிக்கை எடுப்பதில், அரசியலைக் கணக்கிலெடாவிட்டால், குறுந்தவணை நெகிழ்வு அதிகமுண்டு.

[1] தளர்வில் மனநிலையோடு உருவாக்கப்பட்ட இந்தக் கொள்கைக்குப் பல நிபந்தனைகளைப் போடலாம். ஆனால் கடந்த தசாப்தங்களில் உண்டான நிகழ்ச்சிகளும், சர்வகலாசாலைகள், தொழிற்சாலைகள், அரசாங்கம் என்பன நடத்திய நீண்ட ஆராய்ச்சிகளும் நாம் தோலைவிட்டு விட்டுச் சுளையையே கவனிக்கவேண்டுமென்ற எமது கொள்கைக்கு ஆதாரவளிக்கின்றன.

www.padippakam.com



4. அரசாங்க வரவு செலவுத்திட்டம் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு மாதமும், சமன் செய்யப்படவேண்டுமென்ற கொள்கையை மக்கள் கைவிட்ட போது, வியாபாரச் சக்கரத்தவணையில் அது சமன்செய்யப்பட்டுவிடுமென முதலில் நினைத்தனர்; அதாவது வியாபாரமலர்ச்சிக்கால உபரிவருமானம், மந்தக்காலத்துப் பற்றுக்குறையைச் சமன்செய்யுமென எண்ணினர். ஆனால் இன்று, செல்வவிருத்தி எவ்வளவு வருடத்துக்குண்டோ, அவ்வளவு உபரி வருமானம், வியாபாரமந்த காலத்துப் பற்றுக்குறையை ஈடு செய்வதென்பது தற்செயலாக ஏற்படலாமேயன்றி அதைப்பற்றி நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

தனியார் சேமிப்பும், முதலீடும், பணவாட்ட இடைவெளியையுண்டாக்கிக் கொண்டிருக்கும்போது " நிலைத்தேக்கம் உண்டாகும். அப்போது பொதுக் கடனை அதிகரிக்கச் செய்துதான் பிஸ்கால் கொள்கை பணவீக்கமில்லாத உயர்ந்த வேலைவாய்ப்பை உண்டாக்கும். மற்றவர் நம்புவதுபோல் நிலைத்த மலர்ச்சியிலே தேவைகள் அதிகரிக்க பணவீக்க இடைவெளியுண்டாகு மானல், உற்சாகமுள்ள பிஸ்கால் கொள்கை அதிகபணம் மிஞ்சும் நிதி நிலைமையையுண்டாக்கும். அதனல் தேசீயக் கடன் அபூர்வமாகக் குறை யும். அபிவிருத்தியடையும் நிலைமைக்கு ஏற்ற வேலைத்திட்டத்தைச் சிபார்சு செய்யப் பொருளியலாளரில் பெரும்பாலோர் தயாராயிருப்பதால், வருங் காலத்தில் என்ன நடக்குமென்பதைப்பற்றித் தீர்க்கதரிசனஞ் சொல்ல வேண்டியதில்லையெனக் கருதுவர். மேலும் நெடுந்தவணை உபரி நிதி ஒழுங்கு இருந்தால், நெடுந்தவணைக்கடன் வசதி இலேசாகும்; மூலதன ஆக்கத்துக்கு விசேட தூண்டுதல் உண்டாகும். அதன்பயனுக கலப்புப் பொருளாதாரம், முதலீட்டுத் திசையிலும் வேகவளர்ச்சித் திசையிலும் உயர்வேலைவாய்ப்பு உற்பத்தியை நகர்த்தவும், நடப்பு நுகர்வுக்கு அப்பால் விலக்கவும் உதவும்.

## ஆ. பொதுக்கடனும் தற்கால பிஸ்கால் கொள்கையும்

5. நாட்டுப் பிரசை ஒவ்வொருவரும் தலையிலே பாராங்கல்லைத் தூக்கிச் செல்வது போன்ற பளுவைப் பொதுக்கடன் தேசத்தின்மீது சுமத்தமாட்டாது. மூலதன ஆக்கத்தைக் குறைக்கக்கூடிய கொள்கைகளை எந்த அளவுக்கு நாம் இப்போது மேற்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கு உற்பத்திச் சாத்தி யக் கூறுகள் பாதிக்கப்படலாம். மூலதன ஆக்கத்தைக் குறைத்தால், வருங் காலச் சந்ததியாருக்குக் குறைவான மூலதனப் பண்டங்களே கிடைக்கும். தற்காலிகமான நுகர்வையுத்தேசித்து, வெளிநாடுகளிலிருந்து எவ்வளவுக்கு கடன்பட்டுக்கொண்டு வருங்காலச் சந்ததியார் வட்டியும், முதலையும் திருப்பிக் கொடுப்பார் என்று உறுதி கூறுகிறோமோ அவ்வளவுக்கு அந்தச் சந்ததி மீது ஒரு நிகரப்பளுவை உண்டாக்குகிறோம். அது அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களில் ஓர் இறக்கத்தை உண்டாக்கும். பிற்சந்ததியார் யாருக்கு உள்ளூர்க் கடனை எவ்வளவு தூரம் சுமையாகவிட்டு, மூலதன இருப்பில் அவர்களுக்கு இயல்பாகச் சேரவேண்டியதற்கு மேலாக, எவ் வித மாற்றமுஞ் செய்யாமல் விடுகிறோமோ, அவ்வளவுக்கு உள்ளூர்

படிப்பகம்

www.padippakam.com



மாற்ற விளைவு உண்டாகும். இதனால் சமூகத்திலேயுள்ள ஒரு பகுதியினர், மற்றொரு தொகுதியினரிலும் பார்க்க அதிகமான உற்பத்திப் பொருள்களைப் பெறுவார்கள். வெளிநாட்டுக் கடனிலுள்ளதுபோன்ற நிகரப்பழு இந்த மாற்றத்தால் ஒரே நேரத்தில் உண்டாவதில்லை. ஆனால் பல வயதுக் கட்டங்களிலுள்ளவரிடையே இம்மாற்றத்தால் முக்கியமான விளைவுகளுண் டாகலாம்; ஒவ்வொரு சந்ததியாரின் வாழ்நாளிலும் சில விளைவுகளுண் டாகலாம்; இது நுகர்பொருள்களில் எவ்வளவை, எந்தக் காலங்களில் அவர்கள் பெறுவார் என்பதைப் பொறுத்ததாகும். மேலும் பீட்டர் மீது வரி விதித்து அதை அறவிட்டு போலுக்குக் கொடுக்கவும், அதே பீட்டர்மீது வரிவிதித்து அதை அறவிட்டு அவருக்கே கொடுக்கவும் திட்டமான செலவுக ளுண்டாகும். இவற்றால் பொருளுற்பத்தியிலும் திறமையிலும் தடையுண் டாகலாம். இதை, வெளிநாட்டுக்குப் பொருள் ஏற்றுமதி செய்வதோடு குழப்பிக்கொள்ளக் கூடாது.

இத்தகைய நிசமான விளைவுகளை விட உளப்பாங்கான விளைவுகளுமுண் பாகும். அதனால் மக்கள் செய்யும் செய்கைகளை நிசமானவையெனக் கொள்ளவேண்டும். மேலும் சமூகத்திலேயுள்ளவர்களிடம் குறைவாயிருப் பதை விடக் கூடக் கடன்பத்திரங்களிருப்பதால், அவர்கள் சேமிக்கவும், வரு மானத்திலிருந்து நுகரவும் கொள்ளும் நாட்டம் நிசமாகப் பாதிக்கப்படும். ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள அரசாங்கக் கடன்பத்திரத்தைச் சொத்தாகவே கருதுவர். இந்தக் கடன்பத்திர நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு வருங்காலத்தில் விதிக்கப்படும் வரிகளைப் பற்றி, நடைமுறைச் சொந்தப் பொறுப்பாக அவர் கருதுவதில்லை. இருந்தும் அந்தக் கடன்சேவைக் குச் சமனான வரியைச் சமூகத்தவர் எல்லாரும் கொடுக்கவேண்டியது அவசியமாகும். (அவருடைய நோக்கின்படி இது தர்க்கத்துக்கு மாறான தன்று; ஏனெனில் அவர் கொடுக்கவேண்டிய வரிவீதங்கள் அவர் கொண்டுள்ள சொந்தக்கடன்பங்குடன் தொடர்புடையதன்று.) கூடிய அளவு கடன் நிர்வாகத்தினாலும், பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளாலும், நமது பொதுக் கடன் பொது நிலையாக்கித் திட்டங்களின் சக்தியை உயர்த்தக் கூடியதாயிருக்கும் (வட்டிவீதம் உயருமானால் அரசியல் பாங்கான எதிர்ப் புக்களையும் அஃது உண்டாக்கும்).

பிரச்சினையின் சிக்கலை எடுத்துக் காட்டுவதற்காகவே, இந்தச் சுருக்கத் தைச் சற்றே நீடித்துள்ளோம். கடன்கள், பொருளாதார அமைப்பைப் பாதிப்பது உண்மை. எனினும் அந்த விளைவுகள் பத்திரிகை ஆசிரியர்கள் எடுத்து இயம்பும் வகையை முக்கியமாகச் சேர்ந்தனவல்ல.

தேசீய வருமானம், வட்டிச் செலவு என்பன சம்பந்தமாக யுத்தத்துக்குப் பிந்திய பெடரல் கடனின் அளவு எவ்வளவு என்பதைப் பொதுப்படையாக அறிந்திருப்பது முக்கியமாகும். அப்போது தான், நிகழ்காலத்தை, இறந்த கால நிலையையும் எதிர்கால நிலையையும் வைத்து அளவிடக்கூடியதா யிருக் கும். பொருளாதாரத்தை முற்றாக எடுத்து, அதன் வளர்ச்சியை அடிப்படை யாக வைத்துக்கொண்டே கடன் வளர்ச்சியை அளந்து கொள்ளவேண்டும்.

www.padippakam.com



6. பூரண வேலைவாய்ப்புத் திட்டம் (அல்லது உயர்ந்த) வேலைவாய்ப்புத் திட்டம், தனது இலட்சியமாக மிகக் குறைந்த மொத்தச் செலவு மட்டத்தையோ மிக உயர்ந்த செலவு மட்டத்தையோ வைத்திருக்க மாட்டாது. அப்போதுதான் சேமிப்புக்கோடும், முதலீட்டுக்கோடும் பூரணவேலைவாய்ப்பில் ஒன்றையொன்று வெட்டும். 1946 இலே கொண்டு வரப்பட்ட வேலைவாய்ப் புச் சட்டம், நமது குடியரசின் முக்கியமானதொரு கொள்கையைக் காட்டு கிறது. அதாவது வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவதும், அது சம்பந் தமான கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரும் நிர்வாக எந்தி திரத்தையும், காங்கிரஸ் நிர்வாக எந்திரத்தையும் அமைப்பதும் அரசாங் கத்தின் கடமையென்பதை அஃது உறுதிப்படுத்துகிறது.

7. வியாபாரமலர்ச்சி, மந்தம் என்பவற்றால் உண்டாகும் மோசமான மிகைப்பாடுகளைச் சமன்படுத்தப் பணக்கொள்கையையும் பிஸ்கால் கொள் கையையும் உபயோகித்துப் பயன்பெறலாம். எனவே தனிப்பட்டவர் ஒழுக்கம், சமூக ஒழுக்கம் என்பனபற்றியோ, மந்தமான பொருளாதாரம் சம்பந்தமான பல்வேறு முரண்பாடுகளைப்பற்றியோ நாம் பயப்படத்தேவை யில்லை. பெரிய பொருளாதாரமட்டத்தில் வருமானத்தை நிர்ணயிக்கும் தற்காலச் சாதனங்களை வாலாயப்படுத்துவதால், விலை நிச்சயித்தல், அருந் தல் என்பன, சிறிய பொருளாதார மட்டத்திலேயுள்ள வைதீகக்கொள் கைகளின் அடிப்படை உண்மைகளை உறுதிப்படுத்தக்கூடியனவாயிருக்கும். இதுவே மனத்தளர்ச்சியில்லாத நோக்குக் கொண்ட “நவ வைதீக இணைப் பாகும்”.

**ஆராய்ச்சி வினாக்கள்**

1. “பிஸ்கால் கொள்கையை எந்த நாடும் தவிர்க்க முடியாது. இன் றுள்ள பொருளாதாரத்தில் அரசாங்கம் இத்தகைய முக்கியமானதொரு பகுதி யாயிருந்தும், நடுநிலை பிஸ்கால் கொள்கை என ஒன்றுக்கு வரைவி லக்கணம் கூறுதல் முடியாத காரியமாகும். பணவீக்கம், பணவாட்டம் என்பவற்றைத்தடுக்கும் நோக்கமாக ஒரு தீவிரமான பிஸ்கால் திட்டத்துக் குப் பதிலாக அத்தகையதொரு கொள்கையை ஏன் ஆதரிக்க வேணடு மென்பதற்குக்காரணங் காட்டுவதே கடினமானதாகும்”. இக்கூற்றை நுணுக்கமாக ஆராய்க.

2. நிர்மாண நிலையாக்கிகளை அட்டவணைப்படுத்துக. அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதைக் காட்டுக.

3. வியாபாரச் சக்கரத்தில், இப்போது என்ன கட்டத்திலிருக்கிறீர்? எந்த வரிக்கொள்கைகளும், செலவுக் கொள்கைகளும் பொருத்தமுடை யனவாய்க் காணப்படும்? பலவகையான வரிகளின் ஒப்பியலான முக்கி யத்துவத்தை, பணவீக்கம், வேலையின்மை என்பவற்றை நீக்கப் பண்பு முறையாக எவ்வாறு மாற்றுவீர். (வருமானவரி விகிதங்கள், விதிவிலக்கு விற்பனை வரிகள், சொத்துவரிகள்).

படிப்பகம்

www.padippakam.com



4. 1870 இன் ஆரம்பத்திலிருந்து 1890 இன் மத்திய பகுதிவரை வியாபார மந்தங்கள் அதிகமாகவும் நீண்டகாலத்துக்கு நீடித்துமிருந்தன. வியாபாரவளர்ச்சிகள் குறுகிய காலத்தனவாய்ப் பலமற்றனவாயிருந்தன. விலை மட்டம் குறைந்து கொண்டு சென்றது. எத்தகைய நெடுந்தவணைப் பிஸ்கால் கொள்கை, அந்த 25 ஆண்டில் அனுசரிக்கப்பட்டிருக்க வேண்டும்? முதலாம் உலகமகாயுத்தத்துக்குச் சிறிது முந்திய அடுத்த 20 வருடகாலத்துக்கும் இதே விடையைத் தான் கொடுப்பீரா? (அதாவது விலைவாசிகள் உயர்ந்து, சுபீட்சம் கொழித்த காலத்துக்கு).

5. 1840 இல் மக்கோலே என்ற சரித்திர அறிஞர் கூறிய பின்வரும் கூற்றை ஆராய்க :—

அந்தக் கடன் வளர்ந்துவந்த ஒவ்வொரு கட்டத்திலும் தேசத்தவர் ஆற்ருமையாலும் மனச்சஞ்சலத்தாலும் ஓலமிட்டனர். அப்போது அறிஞர், வங்கிமுறிவும் கெடுதியுமுண்டாகப் போவதாக உறுதியாகக் கூறினர். இருந்தும் கடன் வளர்ந்து கொண்டே சென்றது. ஆனால் வங்கி முறிவோ, கெடுதியோ வந்து சேரவில்லை.

கெடுதி வருமெனத் தீர்க்கதரிசினம் கூறியவர்கள் இரண்டுவகையான மயக்கத்துக்கு ஆளானார்கள். தனிப்பட்ட ஒருவர் மற்றொருவரிடம் கடன்பட்ட நிலைமையையே சமூகம் அதன் ஒருபகுதியிடம் கடன்பட்ட நிலைமையுடன் ஒப்பிட்டனர். விஞ்ஞானவளர்ச்சியால் உண்டான முற்போக்கை அவர்கள் கணக்கிலெடுக்கவில்லை. மக்களுடைய தனிமுயற்சியையும் கணக்கிலெடுக்கவில்லை. கடன் வளர்ந்துகொண்டு போவதையே கண்டனர். வேறு விடயங்களும் உடன் வளர்ந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

6. "கடன்பளு" என்பது சிக்கலானதொரு பொருளாதாரப் பிரச்சினை. இஃது ஏன் என்பதைச் சுருக்கமாக ஆராய்க.

7. "நவவைதீக இணைப்பு" என்பதை விளக்கி ஆராய்க.

8. பின்வரும் கருத்துக்களை ஆராய்க :—

பணவீக்க இடைவெளி.
பணவாட்ட இடைவெளி.
வரி வருமானம், வரி விகிதம்.
பண்டம், மாற்று என்பவற்றில் அரசாங்கத்தின் செலவு.
நிர்மாண நிலையாக்கிகளும், குறைக்கப்பட்ட பெருக்கியும்.
உசிதாசாரமான கொள்கைப் பிரச்சினைகள்.
உள்ளூர்க்கடன், வெளிநாட்டுக்கடன்.
நிசமான மறைமுக உள்ளூர்க்கடன்பளு அல்லது மாற்றவிளைவுகள்
கடன்/வருமான விகிதங்கள் இன்றும் நேற்றும், நாளைக்கும்.
இங்கேயும், வெளிநாட்டிலும்.
நூதனதேக்கம், மலர்ச்சி, கடன் போக்கு.
1946 ஆம் ஆண்டு வேலை வாய்ப்புச் சட்டம், நவவைதீக இணைப்பு.

படிப்பகம்

www.padippakam.com

# மூன்றும் பகுதி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## இருபதாம் அத்தியாயம்

# விநியோகம், தேவை என்பவற்ருல் விலையை நிருணயித்தல்

எல்லாப் பொருளும் தங்கத்திஞலும் வெள்ளியிஞலும் செய்யப்பட்டதாஞல் வெண்கலப் பாத்திரத்தை விரும்புவது இயற்கை. எல்லாம் பட்டும் பீதாம்பர மூமாயிருந்தால் பருத்தித்துணிக்கு விலே அதிகரிக்கும்.

—கில்பேட், சலிவன் என்போர்.
எழுதிய "கொண்டொலியர்ஸ்"
என்ற நூலிலிருந்து.

இந்நூலின் முதலாம் பாகத்திலே, தற்காலப் பொருளாதார அமைப்பைப் பற்றியும், தேசியவருமானத்தைப்பற்றியும் விவரித்தோம்.

இரண்டாம் பாகத்தில் வருமானம் நிர்ணயிப்பது சம்பந்தமாக உள்ள இக்காலக் கொள்கையைப்பற்றி ஆராய்ந்தோம். வருமானங்கள் ஏன் ஏறியும் இறங்கியும் இருந்தன ; எப்படி ஏறியும் இறங்கியுங்கொள்ளுகின்றன என்பதைக் கண்டோம். பணமும், வங்கித் தொழிலும் எவ்வாறு வருமான ஆராய்ச்சியுடன் பொருந்துகின்றன என்பதையும் கண்போம். அத்துடன் கூட்டு அமைப்பைச் சுமாரான செயற்படுநிலேயில் எவ்வாறு அரசிறைக் கொள் கையும், பணக்கொள்கையும் வைத்திருக்கின்றன என்பதையும் கண்டோம்.

மூன்ரும் நாலாம் பகுதிகளிலே பின்வரும் முக்கியமான பிரச்சினேகளேப் பற்றி ஆராய்வோம். பண்டங்களின் விலேகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படு கின்றன. தேசியவருமானத்தின் கூட்டுத்தொகுதி பல பிரிவானபண்டங் களாகவும், பணிகளாகவும் பிரிவதை எது நிர்ணயிக்கிறது ? பழைய பாடநூல்களிலே "மதிப்பும் விலேயும்" என வழங்கப்பட்ட விடயமே மூன்ரும் பகுதியில் இவ்வாறு ஆராயப்படுகிறது. நாலாம் அத்தியாயத் திலே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட விநியோகம், தேவை என்பனபற்றிய சாதனங்களேப்பற்றி இங்கே விரிவாய் ஆராய்வோம். உற்பத்திச் சாதனங் களின் விலேயை என்ன நிர்ணயிக்கிறதென்பதை நுணுக்கமாக நாலாம் பகுதியில் ஆராய்வோம். கூலிகள் ஏன் உயருகின்றன ? ஏன் பொருளாதாரத்தில் நில வாடகைப்பங்கு இப்படியும் அப்படியும் நகரு கிறது ? வட்டியை என்ன நிர்ணயிக்கிறது ? உத்தியோகத்தர் சம்பளத் தோடு ஒத்துப்பார்க்கும்போது அரைகுறைத் திறமையாளர் கூலிகள் ஏன் உயருகின்றன ? நாலாம் பாகத்திலேயுள்ள "வருமானச்செறிவு" என்ற தலேப்பில் ஆராயப்படும். இந்த அத்தியாயத்தில் ஆராயப்படும் விநியோகம், தேவை என்ற சாதனங்கள் இதனே விளக்குவதில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. (ஐந்தாம் பகுதியிலே ஆராயப்படும் சர்வதேச



படிப்பகம்

www.padippakam.com



வர்த்தகப்பிரச்சினைகளை விளக்குவதற்கு விநியோகம், தேவை எனப்படும் சாதனங்கள் இன்றியமையாதன. ஆறும் பகுதியில் ஆராயப்படும் நடைமுறைப்பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்குவதற்கும் அவை அவசியமாகும்.)

## அண்டப்பொருளாதாரமும் பிண்டப்பொருளாதாரமும்

பொருளாதாரத்தை இந்தவகையில் ஆராய்வது பிண்டப்பொருளாதாரம் எனப்படும். அண்டப்பொருளாதாரமான பெரிய பொருளாதாரத்திலிருந்து பிரிப்பதற்காகவே இது பிண்டப்பொருளாதாரமெனக் கூறப்படுகிறது. அண்டப்பொருளாதாரம் எல்லா வருமானங்களையும், வேலைவாய்ப்புக்களையும், விலைமட்டங்களையும் அடக்கியதாகும். ஆனால் பிண்டப்பொருளாதாரம் முக்கியமில்லாத சிறிய விபரங்களைப்பற்றிக் கூறுகிறதென எண்ணவேண்டாம். அண்டம் பிண்டங்களின் சேர்க்கையே. பில்லியன் கணக்கிலேயுள்ள டொலர்களைப்பற்றிப் பேசுவதாற் பயனில்லை. மக்களுக்குத் தேவையான ஆயிரமாயிரம் பண்டங்கள் பணிகளை அவர்கள் பெறக் கூடியனவாயிருக்கவேண்டும். பெரியதொரு தேசிய வருமானமிருந்தாலும், மக்களிடையில் அது திட்டமின்றி நினைத்தபிரகாரம் செறிந்திருக்குமானால், சிலரிடம் அளவுகணக்கின்றி அதிகமாகவும், சிலரிடம் மிகக் குறைவாகவும் பரவியிருக்குமானால், அதனால் என்ன பயன் ?

அண்டப்பொருளாதாரத்துக்கும், பிண்டப்பொருளாதாரத்துக்குமிடையில் எவ்விதமாறுபாடுங் கிடையாது. இரண்டும் மிக முக்கியமானவை. ஒன்றைப் பற்றி அறிந்துகொண்டு மற்றதை அறியாமலிருந்தால் உங்களுடைய படிப்பு அரைகுறையானதென்பது தெரியும். எது முதலில் வருகிறதென்பதை நாம் கூறமுடியாது. சில நூல்கள் ஒன்றை முதலிலே கூறும் ; வேறு சில மற்றதைக் கூறும். அண்டப் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்வனவற்றையும் தேசியவருமான நிர்ணயத்தைக் கற்பிப்பதற்கு முன் சந்தைவிலைவாசிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் 40 சத வீதத்தினர் மாத்திரமே பயன்படுத்துகின்றனர்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால், அண்டப் பொருளாதாரத்தைப் பற்றி நமது சமூகம் சரிவர அறிந்திருக்கவில்லை. அதனால் பிண்டப் பொருளாதாரத்துக்கு மக்கள் குறைவாகவே முக்கியத்துவம் அளித்தனர். வியாபாரமந்தமேற்பட்டால் பல கோடிக்கணக்கானோர் உணவின்றி வாடினர். அப்போது ஆட்டிறைச்சியும், மாட்டிறைச்சியும், விலைப்பொருத்தமுடையனவாயிருந்தனவா, என்று பார்ப்பதில் யார் கவனஞ் செலுத்தினர்? அரைகுறை பயிற்சி பெற்ற தொழிலாளரின் கூலிக்கும் உத்தியோகம் பார்ப்போர் கூலிக்குமுள்ள தாரதம்மியத்தை வேலையில்லாது திரிவோர் தொகை பெருகியுள்ள நிலையில் யார் கவனித்தார்கள்.

இன்று இந்த நிலைமைகளெல்லாம் மாறிவிட்டன. அண்டப்பொருளாதாரப்பிரச்சினைகளை இப்போது மக்கள் சரிவர அறிந்துகொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



எனவே பிண்டப் பொருளாதாரத்தின் வைதீகப் பிரச்சினைகளில் அவன் மறுபடியும் அக்கறைகொண்டுள்ளமை இயற்கையே.

**விநியோகம் தேவை என்பவற்றின் அடிப்படைகள்பற்றிய ஆராய்ச்சி**

எதை உற்பத்திசெய்வது ; எவ்வாறு பண்டங்களை உற்பத்திசெய்வது ? எவருக்காக உற்பத்திசெய்வது ? என்பவற்றை எந்த ஒரு கலப்புப்பொருளாதாரத்திலும், நிச்சயப்படுத்துவதற்கு விலை நிர்ணயிக்கும்முறையும் சந்தைமுறைகளும் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதை மூன்றும் அத்தியாயத்திலே கண்டோம். நாலாம் அத்தியாயத்திலே விநியோகம் தேவை என்பவற்றின் அடிப்படைக் கருத்துக்களை ஆராய்ந்தோம். இலக்க அட்டவணைக் கணக்கிலும், கோடுகள் ஒன்றையொன்று வெட்டும் முறையிலும் அவை வருணிக்கப்பட்டன. அந்தவிடயங்களை மறுபடியும் மனத்திலே பதித்துக்கொள்ளுதல்வேண்டும்.

விநியோகம், தேவை என்பவற்றின் சாதனங்களைச் செயற்படுத்திப்பார்ப்பதே இங்கே நாம் மேற்கொள்வது. விலைவாசிகளில் குறுந்தவணையிலும், நெடுந்தவணையிலும் மாறுதல் உண்டாவதை விளக்க இவை எவ்வாறு உதவிபுரிகின்றன என்பதைக் காட்டுதல் ; போட்டிவிலையை ஒரு வரி எவ்வாறு பாதிக்கும் என்பதை முன்னரே அறிந்து கூற உதவிபுரிதல் ; விநியோகம், தேவை என்பவை சம்பந்தமான விதிகளில் தலையிடும் கொள்கைகளை மதிப்பிடுதல் என்பனவும் நாம் மேற்கொண்டுள்ள கடமைகளாகும். பொருளாதாரம் நிறைவேற்றும் அடிப்படைக்கடமைகளை எத்துணைத் திறமையுடன் செய்கிறது. இந்தத் திறமையில் அடிப்படையில் சந்தைவிலை எதைச்சாதிக்கிறதென்பதை அடிக்கடி நாம் ஆராயமுயல்வோம்.

மூன்றும் பகுதி முழுவதிலும், படிப்படியாகப் புதிய பொருளாதாரச் சாதனங்களை அறிமுகஞ் செய்வோம். பழைய சாதனங்கள் சிறிது சிறிதாக அபிவிருத்திசெய்யப்படும். ஆனால் அந்தச் சாதனங்கள்மீது வாசகர்மயங்கிவிடக்கூடாது. அந்தச் சாதனங்களைத் தற்காலப் பொருளாதார வாழ்வின் வளத்துக்கேற்றபடி பயன்படுத்திப்பார்க்கவேண்டும். அதிலேதான் அந்தச் சாதனங்களின் கவர்ச்சிதங்கியிருக்கிறது. இக்காலப் பொருளாதார உலகையும் வருங்காலப்பொருளாதார உலகையும் ஆராய்வதற்கு ஒரு திட்டமான முறையில்லாவிட்டால், அவற்றை எவரும் விளங்கிக்கொள்ளமுடியாது. இது அனுபவத்தாற் கண்டவிடயம். பொருளாதார ஆராய்ச்சிக்குரிய அடிப்படைச்சாதனங்களை நன்ருக அறிந்துகொண்டால் பொருளாதாரத்தின் அடிப்படை முறையை அறிந்துகொள்வது வித்தியாசமானதாயிருக்கும். தலைமுறைதலைமுறையாகவுள்ள மாணுக்கரின் அத்தாட்சி இதுவே.

68 ஆம் பக்கத்திலுள்ள விநியோக, தேவைப்படத்தைப்பார்த்தால் P என்ற சமநிலை DD, SS என்ற போட்டிக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டுமிடத்தில் தோன்றுகிறதென்பதை அவதானிக்கலாம். சமநிலைக்கு

www.padippakam.com



மேலேயுள்ள பிறழ்வு அதிவிநியோக நிலையை உண்டாக்கி, அது மறுபடி சமநிலைக்குக் கொண்டுபோகிறது. P யானது சமநிலைக்குக் கீழே வீழ்ந்தால், அதிக தேவைநிலையை உண்டாக்குகிறது. அது P யை உயர்த்திச் சமநிலையை மறுபடி உண்டாக்க உதவும்.

69 ஆம் பக்கத்திலுள்ள படம், விநியோகத்திலே மாற்றமுண்டானால் (இது விளைவு எதிர்பாராமல் மோசமடையும்போது உண்டாகலாம்) சமநிலை விலையான P யை அதிகரித்து சமநிலைத் தொகையான Q வைக் குறைக்கும். புதிய E, வெட்டுத்தானம் நகர்த்தப்படாத தேவைக்கோட்டில் சற்று உயரத்தில் காணப்படுகிறது. குறைவான விளைவிலிருந்தோ பொதுவான விநியோக நிலையிலிருந்தோ மேலதிக நுகர்வை வெட்டக் கூடிய அளவு அதிக உயர்விலுள்ளது. கீழ் நோக்கி நகரும் தேவை விதி என்ற முக்கியமான கொள்கையை இது எடுத்துக்காட்டுகிறது.

(அதாவது விலை மலியும்போது மக்கள் அதிகம் வாங்குவர்; விலை யேறும்போது அவர்கள் குறைவாக வாங்குவர் என்ற கொள்கையைக் காட்டும் முகமாக தேவைக்கோடு தென்கிழக்காக இறங்கிச் செல்லும்) 69 ஆம் பக்கத்திலேயுள்ள மற்றப்படம், தேவைக்கோடு மேனோக்கிவலப்பக் கமாகச் சென்றால் சமநிலை P உண்டாகும் என்பதைக் காட்டுகிறது.

### (அ) தேவை விநியோகம் என்பவற்றின் நெகிழ்ச்சி

அதிக விளைவாலோ வேறு காரணத்தாலோ விநியோகம் அதிகரித்தால், விலையிறங்குமென்பதை எவரும் அறிவர். 67 ஆம் பக்கத்திலே குறிப்பிட்ட ஆங்கில அறிஞர் 17 ஆம் நூற்றாண்டிலே இதைப்பற்றிக்கூறியது வியப்பன்று. ஆனால் அதே கிரெகொரிகிங், வெளிப்படையாகத்தெரியாத மற்றொரு விடயத்தைப்பற்றியுங் குறிப்பிட்டுள்ளார். அதாவது விளைவு நல்லாயிருக்குங்காலங்களிலே, விவசாயிகளை ஒன்றுசேர எடுத்துப்பார்க்கும் போது, அவர்களுடைய மொத்த வருமானம் விளைவுகுறைவான காலத்திலும் பார்க்கக் குறைவுடையதாயிருக்கும் என்பதே. இது அவர்தமது ஆராய்ச்சி யின் பயனைக் கண்ட முடிவு. உயர்ந்த விவசாய Q வானது குறைந்த $P \times Q$ வுடன் சேர்ந்து வருவது இயற்கை. விவசாயப் பிரச்சினை எழும் போதெல்லாம் ஐக்கிய அமெரிக்க சனாதிபதிகள் ஒவ்வொருவரும் தீர்க்க வேண்டிய பிரச்சினை இதுவே. இதனை விளங்கிக்கொள்வதற்கும், 23 ஆம் அத்தியாயத்தில் காணும் விவசாயப் பிரச்சினைகளை ஆராய்வதற்கும், இந்த அத்தியாயத்திலே புதியதும் முக்கியமானதுமானதொரு பொருளாதாரக் கருத்தை—ஆராயவேண்டும். அது “ தேவையின் நெகிழ்ச்சி ” என்பதாகும்.

### தேவையின் நெகிழ்ச்சி

வாங்கிய பொருளின் தொகை (Q) அதன் (P) விலைமாற்றத்துக்கு ஏற்றபடி மாறும்போது அந்தமாற்ற அளவுக்கேற்றவாறு பலவகைப் பொருள்களும் மாறும். கோதுமையின் (P) விலையில் 1 வீத வெட்டு உண்டானால் அதன் தொகை (Q) 1 வீதத்துக்கு மிகக் குறைவாகவே

www.padippakam.com



உயரும். ஹென்றி போட்டின் P விலேயிலே 1 வீத வெட்டு உண்டானுல் Q 1 வீதத்துக்கு அதிகமாக உயரும். P இரட்டிப்பானுல் Q அரைவாசியாகக் குறையும் பொருள்கள் இந்த இரண்டு வகைக்கும் இடைப்பட்ட இனத்தைச் சேர்ந்தவை.

இந்த மூன்று இனத்தையும் இனம்காண்பதற்காக ஏற்பட்டதொரு கருதுகோள்தான் தேவைநெகிழ்ச்சி. எனவே கோதுமை Q குறைந்த வீதமறிவினையுடையதாயிருக்கும்போது தேவை "நெகிழ்ச்சியற்ற" இனத்திலேசேர்க்கப்பட்டது. இது முதலாம் இனம். இரண்டாமினத்திலே அதிக வீதமறிவினையுடையது. அது "நெகிழ்ச்சித் தேவை"யுடைய இனத்திலே சேர்க்கப்பட்டது. மூன்ருவது இனம் எல்லேக் கோட்டைச் சேர்ந்தது. அதற்கு "ஒற்றைநெகிழ்ச்சித்தேவை" என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் வரைவிலக்கணம் வருமாறு :— இதிலே பிரதானமாகக் கவனிக்கவேண்டிய விடயம், வாங்குவோர் விற்போருக்குக் கொடுக்கும் மொத்த டொலர் வருவாயாகும். நுகர்வோர், ஒவ்வொன்றும் மூன்று டொலர்விலேயில் 5 அலகை வாங்கிஞல், மொத்த வருவாய் என்ன ? அது 3 டொலர் P மாத்திரமன்று. அல்லது 5 அலகு Q மாத்திரமன்று. மொத்த வருமானம் விலே × தொகை. அதாவது P×Q தேவைக் கோட்டிலேயுள்ள ஒவ்வொரு தானத்துக்கும் மொத்த வருமானத்தை எண்கணிதப்பெருக்கல் மூலம் கணித்துக்கொள்ளலாம். அல்லது தேவைக் காட்டிற் காட்டப்பட்ட அதே தானத்திலிருந்து கணித்துக்கொள்ளலாம். ṕ யிலே வீழ்ச்சியுண்டானுல் Q வில் தேவைக்கோட்டை அனுசரித்து ஏற்றம் உண்டாகும். அப்போது மொத்த வருமானம் மாறும்; அது எவ்வாறுண்டாகிறதென்பதைக் காட்டுவதில் தேவை நெகிழ்ச்சி முக்கிய மானது.

**தேவை நெகிழ்ச்சிக்கு வரைவிலக்கணம்**

சந்தைவிலே P யில் மாற்றமுண்டாகும்போது பொருள்களின் அளவான Q என்ற தொகையில் உண்டாகும் மாற்றத்தின் அளவைக்காட்ட ஏற்பட்டதே இந்தக் கருதுகோள். இது வீதமாற்றத்திலே பிரதானமாகத் தங்கியுள்ளது. Q, P, என்பவற்றை அளக்கப் பயன்படுத்தும் அலகுகளில் சாராதது. நெகிழ்ச்சிபண்புச் சார்புடையது. அது மூன்று மாறுபாடான பிரிவுகளிலே ஒன்ருகக் காணப்படும்.

P×Q என்ற மொத்த வருமானத்தை அதிகரிக்கக்கூடியவாறு, P யிலே வெட்டுண்டாகி Q உயருமாஞல் நாம் தேவை நெகிழ்ச்சியுடையதென்று கூறுவோம். அதாவது தேவையின் நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகம் என்கிருேம்.

P யிலே உண்டாகும் வெட்டு, Q வில் சரிசமஞன உயர்வை உண்டாக்கி, மொத்த வருமானமான P×Q வில் எவ்வித மாற்றமுமுண்டாக்காது விட்டால், அதனே ஒற்றைத் தேவைநெகிழ்ச்சி அல்லது தேவை நெகிழ்ச்சி

www.padippakam.com




ஒன்றுக்குச் சமமானதெனக் கொள்ளுகிறோம். P யில் வீதவெட்டு Q வில் மிகச் சிறிய வீத அதிகரிப்பை உண்டாக்கி மொத்த வருமானமான P×Q வை விழச்செய்யுமானால் நெகிழ்ச்சியற்ற தேவையெனக் கூறுகிறோம். அதாவது தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதெனக் கூறுகிறோம். (இது பூச்சியத்துக்குக் குறைவானதன்று).

படம் 1 இல் மூன்று இனங்களைப் பற்றியும் ஒரு உதாரணம் கொடுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் P ஆனது Aஇல் இருந்து B வரை அரைவாசியாக்கப்பட்டது. P இல் மிக அற்பமான வீதமான மாற்றத்தைக் கணக்கெடுத்தாலும் இந்த அளவு மாறுது. முதலில் நாம் எல்லைக்கோட்டு உதாரணமான ஒற்றைத் தேவை நெகிழ்ச்சியை ஆராய் வோம்.

படம் 1 (b) இலே Q வை இரட்டித்தால் P அரைவாசியாகும். ஆனால் வசூல் செய்யப்பட்ட மொத்த வருமானம் மாறவில்லை. நீள்சதுரமான சிலபகுதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதால் இதை வரைப்படமுறையிலே காட்டலாம். எப்படி ? விலையும், தொகையும் கோட்டிலே எந்தத் தானத்திலும் வைத்து அறிந்துகொள்ளலாம். P×Q என்ற பெருக்கற்றொகையான வருமான மொத்தத்தை எவ்வாறு அறிவது ? நீள்சதுரத்தின் பரப்பளவு, அடிப்பகுதியை உயரத்தால் பெருக்கினால் கிடைக்கும்.

A என்ற குறித்த ஒரு தானத்தில், மொத்த வருமானம், அதை மையமாகக்கொண்ட இரண்டு அச்சுக்களால் உருவான நீள்சதுரத்தின் பரப் பளவால் தெரியவரும். (நிறந்தீட்டப்பட்ட நீள்சதுரம் Q என்ற அடித்

மூன்று இனங்கள் பற்றிய தேவை நெகிழ்ச்சி




படம் 1. A–B இல P ஐக் குறைத்தால், மொத்த வருமானச் செவ்வகத்தை, தேவை நெகிழ்ச்சியுடையதா, ஒற்றை நெகிழ்ச்சியுடையதா, நெகிழ்ச்சியற்றதா, என்பதை அனுசரித்து, உயர்த்துகிறோம், அல்லது மாற்றமின்றி வைத்திருக்கிறோம், அல்லது குறைத்துவிடுகிறோம். P இன் நூற்றுவீத மாற்றம் ஒவ்வொன்றுக்கும் எற்றவாறு Q இன் வீதம் மாறும். அதை அனுசரித்தே நெகிழ்ச்சி உண்டாகும்.

www.padippakam.com



தளத்தையும், P என்ற உயரத்தையும் உடையதோ என்பதைப் பரிசோதித்துப் பார்க்க) விலையை வெட்டிக்குறைத்து தேவைக்கோட்டிலிருந்து கீழே இறங்கும்போது ஒவ்வொரு புள்ளியையும் மையமாகக் கொண்ட செவ்வகப்பரப்பளவு எவ்வாறு மாறுகிறதென்பதைக் கவனித்தால், நெகிழ்ச்சியினத்தின் எந்தவகையை அந்த ஒவ்வொரு இயக்கமும் நிகர்க்குமென்பதை அறியலாம்.

நடுப்படத்திலே பரப்பளவில் எவ்விதமாற்றமும் உண்டாவதில்லை. அதற்குக் காரணம் அடியும் உயரமும் மாற்றமடைந்துகொண்டு பரப்பளவைமாறவிடாது தடுக்கின்றன. இது நெகிழ்ச்சித் தேவை ; நெகிழ்ச்சியற்றதேவை என்பவற்றினால் உண்டாகவில்லை. ஒற்றை நெகிழ்ச்சித் தேவையின் எல்லைக் கோட்டு நிலைமையேயாகும்.

படம் 1. a தேவை, நெகிழ்ச்சியைக் காட்டுகிறதென்பதையும், நெகிழ்ச்சி ஒன்றிலும் அதிகம் என்பதையும், P குறையும்போது மொத்த வருமானம் உயருகிறதென்பதையும் வாசகர் உணரலாம். படம் 1 C நெகிழ்ச்சியற்ற தேவையைக் காட்டும். இதிலே நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவு. (விளைவு சிறிதானால் விவசாயிகளின் மொத்த வருமானம் உயரும் என்று கிரெகொரிசிங் கூறிய கூற்றுக்கு எந்தப்படத்தை உதாரணமாகக் காட்டலாம். முதலாம் உலகமகாயுத்தகாலத்திலே ஹென்ரிபோட்டின் T மொடல்கார்கள் விலைகுறைந்தால், அதிகமாக விற்றிருக்குமென்ற கொள்கையை எந்தப்படம் எடுத்துக்காட்டும். ஊகஞ் செய்து பதில் கூறவேண்டாம்). இரண்டு எச்சரிக்கைகள் செய்யவேண்டியிருக்கிறது. நெகிழ்ச்சி, தேவைக்கோட்டில் கேத்திரகணிதம் போல மட்டமாயிருக்கும் நெசிழ்ச்சியற்றதன்மை தேவைக் கோட்டிலே செங்குத்தானதன்மையைக் காட்டுமெனவும் பொருளியலாரம் பமாணுக்கர் கருதுவர். இது விடயத்தை மிக இலகுவாக்குவதாகும். குத்து நிலையான கோடு என்றால் நெகிழ்ச்சி பூச்சியமென்பதைக் காட்டும். கிடை நிலையான கோடு என்றால் நெகிழ்ச்சிக்கு எல்லையில்லையென்பதைக் காட்டும் என்பது உண்மையே. எனினும் படம் 1 (b) கோட்டை அனுசரித்து நெகிழ்ச்சி ஒரேவிதமாக இருந்தாலும் அதனுடைய செங்குத்தானதன்மை மாறும் என்பதை எச்சரித்துக்காட்டுகிறது.

தேவைக்கோடு நேர்கோடாயிருக்கிறதென வைத்துக்கொள்வோம். அதனுடைய சரிவு அல்லது செங்குத்து எங்கும் ஒரேதன்மையாயிருக்கிறது. அதனுடைய நெகிழ்ச்சியும் எங்கும் ஒரேதன்மையா ? மொத்தவருமானத்தைக் கணக்கிட்டால், இது திட்டமாக இல்லை என்றே கூறவேண்டிவரும். உயர்ந்த விலைவிகிதத்திலிருந்து இறங்க இறங்க வருமானம் அதிகரிக்கும். இதன் அர்த்தமென்ன ? அதன் நெகிழ்ச்சி ஒன்றிற்கு அதிகமென்பதாகும். அரைவழி தூரத்தில் அதன் நெகிழ்ச்சி சரியாக ஒன்றாகும் ; ஏனெனில் அப்போது மொத்த வருமானம் உயர்ந்தபட்சமாயிருக்கும். குறைந்தவிலைமட்டத்திலே, அதனுடைய தேவை நெகிழ்ச்சியற்றதாகும்.

www.padippakam.com



**நெகிழ்ச்சியை எண்ணளவில் அளத்தல்—விரித்தல்**

விலேயை அனுசரித்துப் பொருளின் தொகை சதவீதத்தில் தெரிவிக்கும் தன்மை நெகிழ்ச்சியாகும். மொத்த வருமானம் எவ்வாறுகாட்டிக்கொள்ளுகிறதென்பதை உணர்த்துவதும் நெகிழ்ச்சி ; அது நெகிழ்வு நெகிழ்வின்மை, ஒற்றையலகு நெகிழ்வு என மூன்றுவகைப்படும். இவை பண்புகள் ; இவற்றை எண்முறையில் எவ்வாறு அளந்தறிவது தேவைநெகிழ்ச்சி 1.0, 2.3, .5, 1/3 என்றெல்லாம் கூறுவதன் அர்த்தமென்ன ? தேவைக்கோடொன்றிலே உள்ள விலேத்தானங்களிரண்டிற்கிடையிற்காணும் E என்பதன் நெகிழ்ச்சிக்குணகத்தின்வரைவிலக்கணமொன்றைக் கொடுக்கிருேம். நெகிழ்ச்கிக்குணகம் $E = \frac{\text{Q உயர்ந்துள்ள சதவீதம்}}{\text{P யில் குறைக்கப்பட்ட சதவீதம்}}$

P, Q என்பவற்றை அனுசரித்துள்ள போக்குகள் எதிர்த்திசைகளிலுண்டு. இதற்குக் கீழ் நோக்கிச் சரியும் தேவைவிதியே காரணம். சதவீதங்களின் உபயோகத்தையும் கவனிக்கவேண்டும்.

சதவீதமாற்றங்கள் சம்பந்தமாக, எப்பொழுதும் சிறிது மயக்கமுண்டு. வியாபாரி ஒருவன் 15 சதத்துக்குப் பாண வாங்கி 25 சதத்துக்கு விற்கிருனென்று வைத்துக்கொள்வோம். 66 2/3 சதவீத உயர்வு 10 ஐ கீழ்த்தளமான 15 உடன் தொடர்பு செய்ததனுல் உண்டானதா ? அல்லது 40 வீத மாற்றம் 10 ஐ உயர்தளமான 25 உடன் தொடர்பு செய்ததனுலா ? எந்தப்பதிலும் சரியென்ருே பிழையென்ருே சொல்லிவிடமுடியாது, இந்த மாற்றங்கள் 100 இலிருந்து 99 ஆகவோ, 100 இலிருந்து 101 ஆகவோ வித்தியாசம் 1/100 ஆகவோ 1/99 ஆகவோ இருந்தால் அவற்றைக் கணக்கிலெடுப்பது அனுவசியம். சிறியமாற்றங்களானுல் சதவீத மாற்றங்களே எவ்வாறு கணிப்பதென்பதைப்பற்றி அக்கறையில்லே. பெரிய மாற்றங்களானுல், அது பெரிய வித்தியாசத்தைக் காட்டும். எனவே ஒருவிடைதான் சரியெனக் கொள்ளமுடியாது.

இதை எவ்வாறு நிச்சயிப்பது ? விலே மாற்றத்தை இரண்டு P க்களில் (உயர்ந்த, குறைந்த விலே) எதனேடும் தொடர்புபடுத்தாது விடுவதே நன்று. சராசரிக்குத் தொடர்புபடுத்தலாம். 101 இலிருந்து 99 இக்குக் குறைவது 2/99 என்பதன் மாற்றமா அல்லது 2/101 என்பதன் மாற்றமா? நமது சம்பிரதாயத்தின்படி இரண்டின் மாற்றமுமல்ல. நாம் அதை 2/100 இன் மாற்றமென்போம். ஏனென்ருல் 99, 101 என்பவற்றின் சராசரி $\frac{(99+101)}{2} = \frac{200}{2}$ 100 ஆகும். அட்டவணே 1 இல் உதாரணங்களும், நிரப்பவேண்டிய இடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



**நெகிழ்ச்சிக் கணக்கைக் காட்டும் உதாரணங்கள் :—**

அட்டவணை I (மூலம் : படம் 1a, 1b, 1c என்பவற்றிலிருந்து, கோதுமை, சினிமா – டிக்கெட், கார், முதலியவற்றின் தகவல்)

| | கோதுமை | | கார் | | சினிமா – டிக்கெட் | | கார் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விலை, டொலர் .. .. | 4.00 | 3.00 | 1,000 | 500 | 1.01 | 0.99 | 500 | 250 |
| அளவு, பத்துலட்சம் .. | 10 | 12 | 1 | 3 | 990 | 1,010 | 3 | 4 |
| மொத்தவருமானம், பத்துலட்சம் டொலரில் .. .. | 40 | 36 | 1,000 | — | — | — | — | — |
| நெகிழ்ச்சி இனம் .. | நெகிழ்ச்சியின்மை | | | | நெகிழ்ச்சி | | நெகிழ்ச்சியின்மை | |
| நெகிழ்ச்சிக் குணகம் E. .. | $\frac{2/11}{1/(3.5)}$ | $\frac{7}{11}$ | — | = — | — = 1.00 | | $\frac{1/(3.5)}{250/375}$ | $= \frac{3}{7}$ |

இந்தத் தரவுகளை படம் 1 உடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கார்விடயத்தில் இரண்டு வகையான நெகிழ்ச்சியுண்டு. அவற்றிலிருந்து நெகிழ்ச்சியானது, தேவைக்கோட்டின் ஒவ்வொரு வீச்சுக்கும் பொருத்திப் பார்க்கவேண்டுமென் பதை ஞாபகப்படுத்துகிறது. தேவைக்கோட்டிலே[1] பெரும் பாலானவை உயர்விலையிலே நெகிழ்ச்சியுடையனவாய் ஆரம்பித்துக் குறைவான விலையில் நெகிழ்ச்சியற்றனவாகின்றன. இடை நடுவில் உயர்பட்சமானதொரு மொத்த வருமானத்தானத்தை அடைகின்றன. இது ஒற்றை நெகிழ்ச் சியாகும்.

[1]. சதவீதமான மாற்றங்கள் கண்களுக்குத் தெரியக்கூடியதாயிருப்பதற்காக, இரட்டைமடக் கையில் அல்லது விகிதப்பத்திரத்தில் தேவைக்கோடொன்றைக் குறிக்கமுடியுமென்பதை உயர் தரக்கணித ஆராய்ச்சிகள் அங்கீகரிக்கின்றன. இத்தகைய இரு புள்ளிகளை ஒரு நேர்கோட்டினால் இணைப்பதால், மடக்கை அல்லது சதவீதமாற்றம் சம்பந்தப்பட்ட சாய்வை அளவிடலாம், அப் போது அத்தகைய சாய்வுக்குரிய எண்பெறுமானத் தலைகீழ்நிலையாக E ஐக் கணிக்க முடியும். மேற்கூறிய கணித ஆராய்ச்சிகள் தனிப்புள்ளியான A இல் E ஐ எங்ஙனம் கணிக்கும்? அவை, A இல் இரட்டைமடக்கை வளைகோட்டைத் தொடும்படியாக ஒரு வரைகோலை வைக்குமாறு கூறுகின்றன. பின், அந்தப்புள்ளியில் E ஐப் பெறுவதற்காக, வரைகோலுக்குரிய எண்ணுக் குரிய சாய்வு பற்றிய தலைகீழ்நிலையை அவ்வாராய்ச்சிகள் அளவிடுகின்றன. இதனால் நுண் கணித அளவீடுகள் செய்ய வேண்டிய அவசியமேற்படுவதில்லை ; ஆனால், இது கணித அடிப் படையில் பின்வரும் எல்லைக்குச் சமனாகவிருக்கிறது.

$$\Delta \frac{Q}{Q} \div \Delta \frac{P}{P} = P = \frac{P \Delta Q}{Q \Delta P} = \frac{P}{Q} \frac{dQ}{dP}$$

இதில் $\Delta P$ ஆனது பூச்சியத்துக்குச் செல்கிறது ; அதனுடன் $\Delta Q$ வும் எடுத்துச் செல்லப் படுகிறது ; சதவீதமாற்றங்களைக் கணிப்பதற்கு P ; Q (அல்லது அவற்றின் சராசரிகள்) என் பவற்றில் எத்தனை அளவை எடுத்து நாம் பயன்படுத்தினாலும் அது பற்றி அக்கறையில்லை.

ஒழுங்கான பத்திரத்தில் நேர்கோடாகவுள்ள தேவைக் கோடொன்றிலுள்ள எந்தவொரு புள்ளியையும் பொறுத்தவரை புள்ளிக்குக்கீழேயுள்ள கோட்டினுடைய நீளத்துக்கும் புள்ளிக்

www.padippakam.com



**விநியோக நெகிழ்ச்சி**

தேவைவிடயத்தில் என்ன செய்தோமா அதையே விநியோக விடயத்திலும் செய்யலாம். போட்டிவிலையான P யின் வீத அதிகரிப்பினால் விநியோகிக்கப்பட்ட Q வின் சதவீத அதிகரிப்பை உணர்த்தவே பொருளியலறிஞர் "விநியோக நெகிழ்ச்சி" (சப்ளை நெகிழ்ச்சி) என்ற சொல்லைப் பயன்படுத்துவர். (சப்ளைகோடு உயரும்போது P யில் அதிகரிப்புண்டெனக் கூறுவோமேயொழிய P யில் வீழ்ச்சியுண்டெனக் கீழ் நோக்கிச் செல்லும் தேவைக்கோட்டைப் போலக் கூறமாட்டோம்.)

சந்தைக்கு மீன்கொண்டுவரப்படுகிறது. அது கெட்டுப் போகக்கூடிய பொருள். என்ன விலைக்குப் போகுமோ அந்தவிலைக்கு அதைவிற்று விடவேண்டும். சப்ளைசெய்யப்பட்ட தொகை இவ்வளவென நிச்சயிக்கப் பட்டுள்ளது. இது நெகிழ்ச்சியற்ற செங்குத்தான சப்ளையாகும். கிடையான சப்ளைகோடு இருக்குமானால், P யிலே ஏற்படும் அற்பகுறைப்புகூட Q வைப்பூச்சியமாக்கிவிடும். P யில் அற்ப உயர்வு உண்டானாலும் சப்ளை எல்லையின்றி அதிகரிக்கும். அப்போது நாம் பூரணமான நெகிழ்ச்சி சப்ளையின் பக்கத்திலிருக்கிறோம். இந்த இரு எல்லைகளுக்குமிடையே Q விலுள்ள அதிகரிப்பு வீதம் அதை உண்டாக்கிய P யின் வீத அதிகரிப்பில் முறையே கூடியிருக்கிறதா என்பதை அனுசரித்து சப்ளை நெகிழ்ச்சியுடையது, அல்லது நெகிழ்ச்சியற்றதென்று கூறுவோம்[1].

சப்ளை நெகிழ்ச்சி, தேவை நெகிழ்ச்சிபோல அத்துணைப் பயனுடையதன்று, ஏனெனில் தேவை நெகிழ்ச்சி மொத்த வருமானத்துக்கு என்ன

---

குமேலேயுள்ள கோட்டினுடைய நீளத்துக்குமுள்ள விகிதத்திலிருந்து கிடைத்ததாக, புள்ளியிலுள்ள இந்தத் துல்லியமான கணமான E ஐக் காட்டமுடியும். ((1) இந்த உண்மையை எவ்வாறு பயன்படுத்துவது? (2) எந்தவொரு தேவைக்கோட்டினுமுள்ள ஒரு புள்ளியில் கணமான நெகிழ்ச்சியைப் பெறுதற்கு, (3) இரட்டை மடக்கைப்பத்திரத்தைவிட ஒழுங்கான பத்திரத்தில் குறித்த தேவைக்கோட்டைத் தொடுவதான ஒரு வரைகோலை எவ்வாறு பயன்படுத்துவது? ஆகியவை சம்பந்தமான விடயங்களை நீவிர் ஊகித்துக்கொள்ள முயற்சிக்கலாம். 1 ஆம் படத்திலுள்ள புள்ளிகளை முயற்சிக்க).

[1]. விநியோக நெகிழ்ச்சி E இன் ஓர் எண்குணகத்தை இவ்வாறு வரைவிலக்கணஞ் செய்யலாம் : $E_2 =$ (Q வில் சதவீதமான மாற்றம்) (P இல் சதவீதமான மாற்றம்). மூன்று நேர்கோட்டு விநியோகவளைகோடுகளை 2 ஆம் படம் காட்டுகிறது ; A இல் மூலத்தானத்தினூடே செல்லும் கோடு சரியாக 1.0 நெகிழ்ச்சியுடையது. ஒன்றுக்கும் குறைந்த நெகிழ்ச்சிக்குணகமுடையதாய் செங்குத்தான வளைகோடு நெகிழ்ச்சியற்றிருக்கிறது. ஒன்றுக்கும் அதிகமான நெகிழ்ச்சிக் குணகமுடையதாய் தட்டையான வளை கோடு நெகிழ்ச்சியுடனிருக்கிறது. (உண்மையில் விநியோகவளைகோடு பின்னோக்கி வளையுமானால்—இப்படி நிகழுமென்பதை நாம் பின்னர் படிப்போம் —இங்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்டபடியான விநியோக நெகிழ்ச்சி உண்மையில் எதிர்க்கணியமாகிவிடும். மேலும், வளைவுடைய எந்தவொரு விநியோகக் கோட்டையும் பொறுத்தவரை அதனுடைய தொடுகோட்டு வரை கோலுடன் ஒரு நேர்கோட்டை வரைவதன்மூலமும், 2 ஆம் படத்திலுள்ள எந்த வளைகோட்டை அது ஒத்திருப்பதுபோல் தெரிகிறதென்பதைக் காண்பதன் மூலமும் ஒரு புள்ளியிலே அதனுடைய நெகிழ்ச்சியை நாம் கணிக்கலாம்.

www.padippakam.com



நடக்கிறதென்பதைக் காட்டுகிறது. எனினும் முக்கியமானதொரு தகவலை சப்ளை நெகிழ்ச்சி விவரிக்கத் துணைபுரிகிறது.


தற்காலிகமானதொரு நிலையிலிருந்து, குறுந்தவணைக் காலத்துக்கும் நெடுந்தவணைக் காலத்துக்கும் நகரும்போது, சப்ளை செய்யப்பட்டதொகை யினை, விலை மாற்றம் அதிக மதிகமாகப் பாதிக்கத் துவங்கும். உயர் விலைக்கான சரிக்கட்டல்கள் எல்லாம் செய்யப்பட்ட பின்னர் நெடுந்தவணை யில் சப்பிளை நெகிழ்ச்சி அதிகமாகிறது. குறுந்தவணைக் காலத்தில் அது அப்படியில்லை.

**தற்காலிகமான குறுந்தவணைச் சமநிலையும், நெடுந்தவணைச் சமநிலையும்.**

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலே கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் ஆசிரியராயிருந்த அல்பிரட் மாஷல் என்னும் புகழ்பெற்ற பொருளிய லறிஞர் சப்ளை, தேவை எனப்படும் இச் சாதனங்களை உருவாக்க உதவி புரிந்தார். இப்பிரச்சினையில் காலம் என்ற அமிசத்தைப்பற்றி அவர் வலியுறுத்திய விடயத்தை ஆராய்ந்தால், நமது அறிவைப்பெருக்குவ தோடு சமநிலைபற்றிய தெளிவையும் பெறுவோம்.

அவர் மூன்றுவகையான கால எல்லைகளைக் குறிப்பிடுகிருர்.

சப்பிளை நெகிழ்ச்சிகள்




படம். 2

1. நிலையான சப்ளை உள்ளபோதுண்டாகும் தற் காலிகச் சமநிலை.
2. குறுந்தவணைச் சமநிலை இருக்கின்ற எந்திரங் களினுல் கம்பெனிகள் அதிகம் உற்பத்தி செய்தல்.
3 நெடுந்தவணைச்சமநிலை (சாதாரணகாலவிலை)

இக்காலத்தில் கம்பெனிகள் பழைய எந்திரங் களையும் சாதனங்களையும் கைவிட்டுப் புதியவற்றை உண்டாக்குதல் ; புதிய கம்பெனிகள் முயற்சியை மேற்கொள்ளுதல் ; பழையவை தொழிலைவிட்டு விடுதல் என்பன நிகழும்.

மீன்போன்ற சீக்கிரம் கெட்டுப்போகக்கூடிய பண்டத்தின் தேவை *dd* யிலிருந்து *d'd'* ஆக உயர்கிறதெனக் கொள்வோம். விநியோகஞ்செய்யப் பட்ட மீனின் அளவில் மாற்றமில்லாவிட்டால், தேவை அதிகரிக்கும்போது மீனின் விலை ஏறிவிடும். இது படம் **3a** யில் காட்டப்பட்டுள்ளது. இங்கே நிலையான சப்ளை கோடு S*m*, S*m* புதிய தேவைக்கோடான *d'd'* வரை செல்கிறபோது உயர்வானதும், தற்காலிகமானதுமான புதிய சமநிலை, விலை E' இல் காட்டுகிறது. மீனுக்குத் தேவை அதிகரித்தபடியால் விலை அதிகரித்தது.

சந்தையிலே உயர்ந்த விலை நிலவும்போது, மீன்பிடிகாரர் அதிகம் பேரை வேலைக்கமர்த்துவர். அதிகம் வலைகளையும் பயன்படுத்துவர். புதிய

21—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



மீன்பிடிவள்ளங்களைக் கட்டமுடியாவிட்டாலும் பழைய தற்காலிகச் சமநிலையில் நிலவாத அளவு அதிகமான மீனைச் சந்தைக்குக் கொண்டுவருவர். படம் 3b இலே SsSs குறுந்தவணைப் புதிய சப்பிளைகோடு காட்டப்பட்டுள்ளது. புதிய தேவைக்கோட்டை அது E″ இல் வெட்டுகிறது. இது குறுந்தவணைச் சமநிலைப்புள்ளியாகும். தற்காலிகமான E′ விலையிலும் இந்தச் சமநிலைவிலை சிறிது குறைவான தாகும். ஏன் ? குறுந்தவணையிலே, கைவசமுள்ள மீன்பிடிவள்ளங்களை அதிகமாகப் பயன்படுத்தியதால் உண்டான மேலதிக மீன் விநியோகத்தினாலேயே இது உண்டாயிருக்கிறது. 3 C படத்திலே, நெடுந்தவணை இறுதிச் சமநிலை அல்லது " சாதாரண " விலை காட்டப்படுகிறது "


பலகாலமாக அதிக விலை நிலைபெற்றுவந்தபடியால், கப்பல்கள் புதிதாகக் கட்டப்பட்டதோடு தேர்ச்சிபெற்றபுதிய மாலுமிகளும் தொழிலில்

**மூன்று காலங்களிலும் தேவை அதிகரிப்பின் விளைவாக விலைகள் மாறும்.**

1 ஆவது. புதிய தற்காலிகமான சமநிலையை உயர்த்துகிறது. அதனால் மாருதநிலையிலுள்ள சப்பிளையைப்பங்கிட வேண்டியதாகிறது.

2 ஆவது. குறுந்தவணைச் சமநிலை, உள்ள உற்பத்திச்சாதனங்கள் மூலமே சப்பிளையை அதிகரிக்கச் செய்கிறது.

3 ஆவது. புதிய உற்பத்திச் சாதனங்களும், வசதிகளும் மாறும்போது சாதாரண நெடுந்தவணைச்சமநிலையுண்டாகும். விலை கடைசியாக உற்பத்திச் செலவுக்குச் சரிக் கட்டப்படும்.




படம் 3. மாஷல் மூன்று பருவத்தைக் குறிப்பிடுகிறார். இவை சப்பிளை அமிசங்கள் (a) விலையோடு சரிக்கட்டல்களைச் செய்யக் காலம் இல்லாத பருவம் (b) விலையோடு தொழிலாளர், ஏனைய மாற்ற மடையும் சாதனங்கள் என்பன சம்பந்தமான சில சரிக்கட்டல்களைச் செய்தல் (c) எல்லாச் சாதனங்கள், எல்லா உற்பத்திச் செலவுகள் சம்பந்தமாகவும் விலையோடு பூரண சரிக்கட்டல் செய்தல் என்பவற்றில் இவை தங்கியுள்ளன. ($S_L$ $S_L$ இன் மேற்செல்லும் போக்கும் இதனை " அதிகரிக்கும் உற்பத்திச் செலவு " என்ற இனத்தில் சேர்க்கும். இது அடுத்த பக்கத்தில் ஆராயப்படும் " மாறு உற்பத்திச் செலவு " விடயத்தில் $S_L$ $S_L$ எப்படியிருக்கும்? சிறிய தொழிலிலே ஏன் மாறு உற்பத்திச் செலவு இருக்க வேண்டும்?)

படிப்பகம்

www.padippakam.com



ஈடுபட்டனர். நெடுந்தவணை சப்ளைச் கோடான $S_L S_L$, $d'd'$ என்ற தேவைக் கோட்டை E″ என்ற தானத்திலே வெட்டும்போது கடைசிச் சமநிலை அதாவது புதிய தேவைமட்டத்துக்கு எல்லாப் பொருளாதார நிலைமைகளும் சரிக்கட்டப்பட்டபின் ஏற்படும் சமநிலை காணப்படுகிறது.

நெடுந்தவணைச் சமநிலை விலையானது குறுந்தவணைச் சமநிலை விலை போல உயர்வானதன்று. தற்காலிகச் சமநிலை விலை அளவு உயர்வானது மன்று. ஆனால் தேவை குறைவாயிருந்தகாலத்திலே நிலவிய விலையிலும் சற்று உயர்வானது. மீன்பிடித்தொழில் தனக்கே உரிய உற்பத்திச்சாதனங்கள் ஒன்றையும் பயன்படுத்தாதுவிட்டால், அல்லது அது மிகச் சிறிய தொழிலாயிருந்து மற்றப் பொருளாதாரத்துறையிலிருந்து அவற்றின் விலைகளை உயர்த்தாமல் தனக்குத் தேவையான, அதாவது தனது முந்திய உற்பத்தித் தொகையைத் திரும்பத்திரும்ப உண்டாக்கக்கூடிய சாதனங்கள் எல்லாவற்றையும் பெறக்கூடிய தாயிருந்தால் அது மீனுக்குரிய புதிய தேவையை நெடுந்தவணை உற்பத்திச் செலவையோ, விற்கும் விலையையோ அதிகரிக்காமல் பூர்த்திசெய்யக் கூடியதாயிருக்கும். அச்சந்தர்ப்பத்திலே நெடுந்தவணை சப்ளைக்கோடு கிடைநிலையாயிருக்கும். அப்போது மாஷல் அதை "மாறுச்செலவு" க்குரிய இனமாகக் கொண்டிருப்பார். ஆனால் மீன்பிடித்தொழிலின் கப்பல்களும் வலைகளும், தொழிலாளரும் வேறு தொழிற்றுறைகளில் ஈடுபடாதிருக்கவேண்டுமானால் சாதனச்செலவுகளை உயர்த்தவேண்டும். அப்போது $S_L S_L$ நெடுந்தவணை சப்ளை கோடு சற்றே உயர்ந்து செல்லும். இது படம் 3 C யில் காட்டப்பட்டுள்ளது. "உற்பத்தி விலை அதிகரிப்பு" என இதனை மாஷல் வருணிப்பார். நியாயமான அளவு பெரிய தொழில்களிலே காணப்படும் சாதாரண நிலைமை இது என்று அவர் கொள்வார்.

இதனை வாசகர் பரீட்சித்துப்பார்ப்பதானால் தேவைக்கோடு $dd$ இக்கு இறங்குகிறதெனக்கொண்டு அவ்வாறு செய்யலாம். புதிய தற்காலிகப் போக்கில் என்ன நடக்கிறது. குறுந்தவணையில் என்ன நடக்கிறது. பல சப்ளைகோடுகளில் அடங்கியுள்ள காரணங்களை 22 ஆம் அத்தியாயத்தில் விபரமாய்க் காணலாம்.

**(ஆ) சப்பிளை தேவை என்பவைசம்பந்தமான பிரயோகங்களும் நிபந்தனை களும்.**

எந்தக் காலத்திலும், மற்றப் பொருள்கள் மாற்றமில்லாதிருக்கும்போது சப்ளைக்கோடும் தேவைக்கோடும் தனித்தன்மையோடு விளங்கும். ஆனால் மற்றப் பொருள்கள் சமனுயிருக்கமாட்டா. ரேயன் விலைகுறைந்தபடியால் பருத்தியின் தேவை பல ஆண்டுகளாகக் குறைந்து கொண்டு வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தினுல் பெட்ரோலியத்தை மலிவாக உற்பத்தி செய்யக்கூடியதாயிருப்பதால், பெட்ரோலியச் சப்ளை அதிகரித்துள்ளது. ஆனுல் உற்பத்திச் செலவுகளும், மக்களுடைய ருசிகளும் மாற, வருமானங்கள் மாற, போட்டிப்பொருள்களின் விலைகள் மாற, (உ-ம். தேயிலை,

www.padippakam.com



கோப்பி) கூட்டுப்பொருள்கள் (உ-ம். தேயிலைக்குச் சீனி) மாற நமது சப்ளைத் தொகைகளும் மாறும். இந்நிலையிலே நுகர்வு, உற்பத்தி, விலை என்பவற்றில் உண்டாகும் விளைவுகள் என்ன ? அதை இப்போது ஆராய்வோம்.

பொருளியலைப் படிக்கத் துவங்குவோர் பொதுவாக உண்டாகும் ஒரு தவறைப்பற்றிக் கவனமாயிருக்கவேண்டும். தேவை அதிகரித்தல் வேறு ; தேவைப்பட்டதொகை அதிகரித்தல்வேறு. தேவை அதிகரிப்பு என்பது முழுக்கோடும் வலமாக மேலே உயர்தல் ; ஏனெனில் ஒரே விலையில் இப்போது அதிகம் வாங்கப்படுகிறது. தேவைப்பட்டதொகை அதிகரித்தல் என்பது அதே தேவைக்கோட்டிலே குறைந்தவிலைக்கு நகர்தல். தேவையென்னும் போது தேவைக்கோடு முழுவதையுமே குறிக்கிறோம். சப்ளை என்னும் போது சப்ளைக்கோடு முழுவதையுமே குறிப்பிடுகிறோம். தேவையில் அல்லது சப்ளையில் " அதிகரிப்பு " என்றால் குறித்த அக்கோடு வலமாகத் திரும்பு தலையே குறிப்பிடுவோம். தேவைக்கோட்டிலே ஒரு தானத்தைக் குறிப்பிடும் போது குறித்த ஒரு விலையில் " வாங்கிய தொகையையோ " "தேவைப்பட்ட தொகையையோ " குறிப்பிடுகிறோம். அதேகோட்டையனுசரித்து நகர்வு உண்டானால் " விலைமாற்றத்தால் உண்டான தேவைத் தொகையில் மாற்றம் " என்று அர்த்தம். இது தேவைக்கோட்டில் எவ்விதமாற்றத்தையும் குறிப்பிடாது. இந்த எச்சரிக்கையின் அவசியம் சற்று நேரத்தில் விளங்கும்.

**வரிவீதம் :**

கோதுமையின் கருதுகோள் முறையான தேவை, சப்ளைக் கோடுகள் நாலாம் அத்தியாயத்தின் மூன்றும் அட்டவணை 3 ஆம் படம் என்பவற்றைக் கொண்டு கோடு முழுவதற்குமான மாற்றமொன்றை எடுத்துக் காட்டலாம். இவற்றின்பயனாகப் புசல் ஒன்றுக்கு மூன்று டொலராகச் சமநிலைவிலையேற்பட்டது.

இந்தச்சமநிலையைக் குழப்பக்கூடிய புதியதொரு அமிசத்தை இப்போது புகுத்துவோம். அரசாங்கம் விற்பனை வரியொன்றைக்கோதுமை மீது விதிக்கிறதென வைத்துக்கொள்வோம். உற்பத்தியாளர் விற்பனை செய்யும் ஒவ்வொரு புசல்கோதுமைக்கும் ஒரு டொலர் வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. இந்தவரியின் கடைசி விளைவு என்ன ? இவ்வரியை முற்றாக உற்பத்தியாளர் தாம்கொடுக்கவேண்டுமா ? அல்லது ஒரு பகுதியை நுகர்வோர் கொடுக்கலாமா ? நமது சப்ளை, தேவைக்கோடுகளே இதற்குப் பதில் தரவேண்டும்.

நுகர்வோரின் தேவைக்கோடு மாறவேண்டியதற்குக் காரணமில்லை. 3 டொலர் விலையிலே நுகர்வோர் 120 லட்சம் புசல் கோதுமையை வாங்கியே தீருவர். உற்பத்தியாளர் வரிகொடுக்கவேண்டியிருந்ததென்பது அவர்களுக்குத் தெரியாது. அதில் அவர்கள் அக்கறை காட்டவும்மாட்டார்.

www.padippakam.com




ஆனால் சப்ளை கோடு முழுவதும் மேனேக்கி இடப்புறமாக உயர்கிறது. இடப்புறமாக உயர்வதற்குக் காரணம் வரியின் பயனுக ஒவ்வொருசந்தை விலையிலும் உற்பத்தியாளர் குறைவாகவே சப்ளைசெய்வர். உயர்வது எதனு லென்றால் 120 லட்சம் அலகைச் சந்தைக்கு உற்பத்தியாளர் கொண்டு வருவதானுல் முன்னிருந்த 3 டொலரைவிட 1 டொலர் அதிகமான விலையைக்கொடுக்கவேண்டும். இதுவே 1 டொலர் வரியாகும்.

நாலாம் அத்தியாயத்திலேயுள்ள அட்டவணை 3 இல் காணப்படும் 3 ஆவது கோட்டிற்கண்டதுபோன்ற புதியதொரு சப்ளைக் கோட்டை மாணவர் புதி தாகப் போட்டு நிரப்பவேண்டும். ஆனால் விலை மாத்திரம் 1 டொலரால் அதிகரிக்கப்படவேண்டும். இங்கே 4 ஆம் படத்தில் தேவைக்கோடான *dd* மாற்றப்படவில்லை. ஆனால் SS என்ற சப்ளைக்கோடு எங்கும் 1 டொலரால் உயர்த்தப்பட்டதால் S'S' என்ற புதிய சப்ளைக்கோடு தோன்றுகிறது.

புதியசமநிலைவிலை எங்கேயுண்டு. புதிய தேவை சப்ளைக்கோடுகள்வெட்டும் தானத்திலேதான் இதற்கு விடையுண்டு. அல்லது S'S' உம் *dd* யும் சந்திக்கும் C' இல் உண்டு. சப்ளைகுறைந்ததால் விலை கூடிவிட்டது. வாங்கிய தொகையும் விற்றதொகையும் குறைந்துவிட்டன. வரைப்படத்தைக் கவன

**கோதுமை மீதுள்ள வரி, நுகர்வோர் மீதும் உற்பத்தியாளர் மீதும் சுமத் தப்படுகிறது :**




**படம் 4.** ஒரு டொலர் வரி, S'S' ஐக் கொடுப்பதற்காக எல்லாவிடமும் 1 டொலர் வரை SS ஐ உயர்த்துகிறது. இது புதிய சமநிலையில C' இல் *dd* ஐ வெட்டுகிறது. அதில் நுகர்வோருக்குரிய விலை பழைய C சமநிலைக்குமேல் 2/3 டொலராக அதிகரித்தும், உற்பத்தியாள ருக்குரிய விலை 1/3 டொலராகக் குறைந் தும் இருக்கின்றது. தடித்த வெள்ளை அம்புகள் P இலும் Q இலும் உள்ள மாற்றத்தைக் காட்டுகின்றன. (SS சார் பினடிப்படையில் *dd* மிக நெகிழ்ச்சி யுடையதாயும் தட்டையாயும் இருந்தால், ஒரு டொலர் வரியிற் பெரும்பகுதி உற் பத்தியாளர்மீது சுமத்தப்பட்டிருக்கும்.)

www.padippakam.com



மாகப் பார்த்தால் புதிய சமநிலைவிலை மூன்று டொலரிலிருந்து 3 2/3 டொலராக மாறியுள்ளதைக் காணலாம். கொள்வனவும் விற்பனவும் சமநிலையிலுள்ள புதிய சமநிலை உற்பத்தி மாதம் 120 இலட்சம் புசலி லிருந்து 106 இலட்சம் புசலாகக் குறைந்துவிட்டது.

இந்த வரி யாரால் கொடுக்கப்படுகிறது. ஒரு பகுதியை விவசாயிகளே கொடுக்கிறார்கள். ஏனென்றால் இப்போது அவர்கள் மூன்று டொலருக்குப் பதிலாக 2 2/3 (3 2/3 – 1) டொலரே பெறுகிறார்கள். நுகர்வோனும் ஒரு பகுதியைக் கொடுக்கிறான். ஏனென்றால் உற்பத்தியாளன் பெறும் விலை ஒரு டொலர் அளவால் வீழ்ச்சியடையவில்லை. நுகர்வோன் இப்போது 2 2/3 டொலரோடு 1 டொலர் வரியையுஞ் சேர்த்து 3 2/3 டொலர் கொடுக்கிறான். நுகர்வோருக்குக் கோதுமை மிகத் தேவைப்படுகிறபடியால் வரியிலே 2/3 வீதத்தைக் கொடுக்கின்றனர். உற்பத்தியாளர் வரியில் 1/3 வீதத்தைக் கொடுக்கின்றனர்[1]. மேலே கூறிய கருத்தை விளங்குவதற்கு சப்பிளை எதிர் மாறிச் செல்லும் சந்தர்ப்பமொன்றை ஆராய்தல் நன்று. ஒரு புசல்மீது அரசாங்கம் 1 டொலர் வரிவிதிப்பதைவிட்டு ஒரு டொலர் சகாயப்பணத்தை உற்பத்தியாளர்க்கு உதவட்டும். SS ஐ புதிய S″ S″ கோட்டுக்கு இறக் கட்டும். *dd* யுடன் அது வெட்டும் C″ எங்கே ? புதியவிலை என்ன ? புதிய தொகை என்ன ? உற்பத்தியாளருக்கு இந்தச் சகாயத்தில் எவ்வளவு செல்லும் ? நுகர்வோருக்கு எவ்வளவு செல்லும் ?

**பொதுப் போலிக் கொள்கை :**

இவ்வளவில் மாணுக்கர் சப்பிளை, தேவை, என்பவற்றை நன்கு அறிந் திருப்பார். வரிபோட்டால் அது நுகர்வோர் கொடுக்க வேண்டிய விலையை உயர்த்தும். பின்வரும் ஒரு கருத்துப் பத்திரிகைகளிலும் மேடைப்பேச்சுக் களிலும் காணப்படுகிறது.

ஒரு பொருள்மீது வரிவிதித்தால் அது நுகர்வோர் கொடுக்கவேண்டிய தாய் முதலிற் தோற்றலாம். ஆனுல் விலையேறிஞல் தேவை குறையும். தேவைகுறைந்தால் விலையிறங்கும். எனவே, வரியிஞல் விலை ஏறும் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது[2].

1. வரிப்பிரச்சினையைத் தீர்க்க மற்றொரு முக்கியமான வழியுண்டு. நுகர்வோர் தாம் வரியை முதலிற்கொடுக்கின்றனர் என்று கொண்டால் *dd* கோட்டிலிருந்து 1 டொலரை நீங்கும் கழிக்கலாம். புதிய *d′d′* புதிய Q வில் SS ஐ வெட்டும். அதே 2 2/3 டொலர், 3 2/3 டொலர் விலைகளே நிலவும். இந்த விலைகளெல்லாம் கருதுகோள் முறையானவை என்பது சொல்லாமலே விளங்கும்.

2. H. D. Hendrson எழுதிய Supply and Demand (Cambridge, London, 1922) என்ற நூலில் இந்தப் "போலி நியாயம் நன்றாக விளக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மற்றொரு விதமாகக் கூறலாம். "விலை ஏறத் தேவை குறையும் ; தேவைகுறைய விலை இறங்கும். விலை இறங்கத் தேவை கூடும். அப்போது விலை ஏறும். விலை உயரத் தேவை குறையும். இவ்வாறே ஓயாமல் விலை ஏறியும் இறங்கியுங்கொண்டிருக்கும்." இந்தவகை யான நியாயத்திலுள்ள தவற்றை மாணுக்கர் கண்டுகொள்ளவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வரியின் ஏற்றத்தால் விலை ஏறுமா ? பத்திரிகைக்காரரும், அரசியல் வாதிகளும் "இல்லை" என்பர். இது சொல் மயக்கத்தாலுண்டாவது. மேலேயுள்ள பந்தியிலே தேவை என்ற சொல்லுத் தப்பான அர்த்தத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மாருத கோட்டையனுசரித்த போக்கு உண்டாவதைக், கோட்டில், முழுதாகவே உண்டாகும் நகர்வுடன் மயங்கக் கூடாதென மாணுக்கர்க்கு எச்சரிக்கை செய்துள்ளோம். இதற்குச் சரியானவிடை பின்வருமாறு :—

வரியினுல் நுகர்வோர் அதிகவிலைகொடுப்பர். ஆனுல் உற்பத்தியாளர் பெறும் விலைகுறையும். விலைகளின் வித்தியாசம் அரசாங்கத்துக்குச் செல்லும். உயர்ந்த விலையானுல் நுகர்வோர் பொருளைக் குறைவாகவே வாங்குவர். உற்பத்தியாளரும் விலைகுறைந்ததால் குறைவாகவே பொருளை உற்பத்தி செய்வர். புதிய சப்ளை, தேவைக்கோடுகள் சந்திக்குமிடத்தில் கொள்வனவும் விற்பனவும் சமனுகவேயிருக்கும். அதனுல் விலையில் மேலும் மாற்றமுண்டாகாது.

**சப்பிளை, தேவைவிதி மாற்றமுடியாததா ?**

போட்டிவிலையும், போட்டித் தொகையும் சப்பிளை, தேவை, என்பவற்றைக் கொண்டே நிச்சயிக்கப்படுகிறது. தங்க உற்பத்தியிலும் யுத்தநிலைமையிலும் விலைகள் தங்கவில்லையா ? உண்மையில் விலையானது இத்தகைய பல அமிசங்களிலேதான் தங்கியிருக்கிறது. இவ்வமிசங்கள் சப்ளை, தேவை என்பவற்றுக்குப் புறம்பாயுள்ள மேலதிகக் காரணங்களன்று. சப்ளை, தேவை என்பவற்றினூடாகச் செயற்படும், அல்லது அவற்றை நிச்சயிக்கும் பல வகைக் காரணங்களோடு சேர்ந்தவை. உதாரணமாக புதிய தங்க உற்பத்தி எல்லாருடைய வருமானத்தையும் உயர்த்தினுல் தேவைக்கோட்டை அது மாற்ற, விலைகள் உயரும். எனினும், போட்டிவிலைகள் சப்ளை தேவை என்பவற்ருலேயே நிர்ணயிக்கப்படுகின்றன, என்பது இப்போதும் உண்மையானதே.

அப்படியானுல் உற்பத்திச் செலவும் விலையை நிர்ணயிக்க ஒரு ஏதுவாகாதா ? சப்பிளை, தேவை என்பவற்றேடு இதையும் மூன்ருவது காரணமாகக் கருதக்கூடாதா ? உற்பத்திச் செலவு சப்பிளையை எவ்வளவுதூரம் பாதிக்கின்றதோ அவ்வளவுதூரமே போட்டி விலையை உற்பத்திச் செலவு பாதிக்கிறது. கடவுள் வானத்திலிருந்து அன்னத்தைச் செலவின்றி, ஆனுல் குறித்த அளவுக்கு வழங்குவாராஞல் அதன் விலை பூச்சியமாயிருக்க மாட்டாது. தேவைக்கோடும் சப்ளைக்கோடும் சந்திக்குமிடத்திலேதான் அதன் விலையுண்டு. ஒரு ஊசியின் தலையில் தேசீயகீதத்தை அச்சடிக்க 50,000 டொலர் செலவானுல், அதைவாங்க ஒருவருமில்லாவிட்டால் அதை உற்பத்திசெய்யமாட்டார்கள். அப்போது அதற்கு 50,000 டொலர் விலையுமிருக்க மாட்டாது. இல்லாத ஒரு பொருளுக்குச் சந்தைவிலை என்பதொன்று இருக்குமா ?

www.padippakam.com



விலையை நிர்ணயிப்பதற்கு உற்பத்திச் செலவு அவசியமில்லை யென்பது இதன் கருத்தன்று. போட்டி நிலையில் அது மிக முக்கியம். சப்ளையை அது எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கொண்டே அதன்முக்கியத்துவம் புலனுகும். வியாபாரிகள் இலாபம் பெறுவதற்காகவே உற்பத்திசெய்வர். உற்பத்திச்செலவுகளைத் தீர்க்கக்கூடிய அளவு விலையைப் பெருவிட்டால் அவர்கள் அதை விரும்பமாட்டார். ஆனுல் விளைவு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது போட்டிநிலையை அவர்கள் ஒன்றுஞ் செய்ய முடியாது. உற்பத்திச் செலவுக்கு அனுகூலமான விலை கிடையாவிட்டால் அவர்கள் எதிர்காலத்திலே பொருளை உற்பத்திசெய்யமாட்டார். எனவே சப்ளை உற்பத்திச் செலவில் தங்கியுள்ளது. அதுவும் மேலதிக உற்பத்திச் செலவில். விலையும் அதிலேயே தங்கியிருக்கிறது. (22 ஆம் அத்தியாயத்திலே இதன் விபரங்களைக் காணலாம்.)

விலை, உற்பத்திச்செலவுக்குச் சமன் என்று கூறுமிடத்து எது எதற்கு ஏதுவாயுள்ளதென்பதைக் கூறமுடியாது. உற்பத்திச் சாதனம் விசேட தன்மையுடையதாயிருக்கும் பட்சத்தில் (உதாரணம் பந்துவிளையாடல், ஒபருப்பாட்டுக்காரர், முந்திரிசெய்கைபண்ணும் நிலம்) விலையே உற்பத்திச் செலவை நிர்ணயிக்கும் ; நெல்லுவிலை அதிகமானுல் வயல் நிலமும் ஒறுப்பாயிருக்கும். வீட்டுவாடகை குறைந்தால் வீடுகட்டும் நிலமும் மலிவாயிருக்கும். இரண்டாவது மகாயுத்தத்தின்போது மசாச்சுசெட்சிலுள்ள பாற்பண்ணைக்காரர், பால்மாட்டின்விலை அதிகரித்திருப்பதால் பால் விலையைக் கூட்டித் தருமாறு விண்ணப்பஞ்செய்தமை இந்த உண்மையை அறிந்திராதபடியினுலேயே. அவர்களுடைய விண்ணப்பத்துக்கு இணங்கியிருந்தால் மாட்டின்விலை பாலின்விலைக்குப் பின்னுல் தொடர்ந்து உயர்ந்து செல்வதைக் கவனித்திருப்பர்[1].

விலைவாசிகளை, சப்ளை, தேவை என்பவற்றைக் கொண்டுமட்டும் விளக்க முடியாது. விலையைச் சார்ந்த பல்வேறு காரணங்கள், சக்திகள், சாதனங்கள் என்பவற்றை விவரிப்பதற்கும், ஆராய்வதற்கும் அவை பயனுள்ள பகுப்புக்களாகும். சப்ளை, தேவை என்பவை முடிவான விடைகளாயிருக்காது ஆரம்பவினுக்களாகவேயிருக்கின்றன. நமது வேலை இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது.

பொருளியலில் ஆரம்ப அறிவைப் பெற்ற சிலர், சப்ளை தேவை என்ற விதியை மாற்றமுடியாது. அரசாங்கம் அதிற்தலையிட்டு ஒன்றுஞ் செய்ய முடியாதெனக் கூறுவர்.

இத்தகைய அபிப்பிராயத்தை உண்டாக்கக்கூடிய பொருளாதாரத்தைப் படிப்பதிலும், படியாமல் விட்டுவிடுவது நல்லது. அரசாங்கம் விலைவாசி

1. உற்பத்திச்சாதனமொன்று சப்ளைவிடயத்தில் நெகிழ்ச்சியற்றிருந்தால், அதனுடைய செலவு விலையினுல் நிச்சயிக்கப்படும். விலை அதனை நிச்சயிக்கமாட்டாது. அதன் பயனைப் "பொருளாதாரவாடகை" என்பர். அத்தியாயம் 22 இன் அனுபந்தத்தையும் 27 ஆம் அத்தியாயத்தையும் பார்க்க.

www.padippakam.com



களைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கலாம். சப்ளை அல்லது தேவை என்பனவற்றில் தலையிட்டு விலையைப் பாதிக்கலாம். பண்ணை உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்திட்டங்கள் சப்ளையைக் குறைப்பதால் எவ்வாறு விலையையும், வருமானத்தையும் உயர்த்துகிறதென்பதை 23 ஆம் அத்தியாயத்திலே ஆராய்வோம். அரசாங்க விற்பனை அமைப்புக்கள், இத்தகைய திட்டங்களை உலகெங்கும் அனுசரிக்கின்றன. பிரேசிலிலே கோப்பியின் விலையை உயர்த்துவதற்காக கோப்பியை எரித்துவிடுவார்கள். 1920 இல் பிரிட்டன் செயற்கைமுறையில், ரப்பரின் விலையைக் கட்டுப்படுத்திற்று. இது "ஸ்டீபின்சன் கொள்கை" எனப்படும். சீனி இப்பொழுதும் சர்வதேசக்கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

இந்த அரசாங்கங்கள் சப்ளை, தேவை விதியை மீறவில்லை ; அந்த விதியை அனுசரித்துக் கொண்டே தமது கருமத்தைச் செய்தன. அரசாங்கத்தினிடம் இரகசிய ஆயுதங்களோ தந்திரங்களோ இல்லை. அரசாங்கத்தின் விடயத்தில் பொருத்தமானது தனிப்பட்டவர் விடயத்திலும் பொருத்தமே. சந்தையில் விரயஞ்செய்யப் பணமுள்ளவரும், சந்தையிற் சேரவிடாமல் வைத்திருக்கக் கோதுமையுள்ளவரும் கோதுமையின் விலையைப் பாதிக்கும் யோக்கியதையுடையவராவர்.


நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தொழிலாளர் சப்ளையைக் கட்டுப்படுத்துவதன்மூலம் தொழிற்சங்கங்கள் கூலியைப் பாதிக்கலாம். விசேஷ உற்பத்திப் பொருள் உள்ளவர், விளம்பரம்மூலம் தமது பொருளுக்குரிய தேவையை அதிகரிக்கலாம். அல்லது சப்ளையைக் கட்டுப்படுத்தி, உற்பத்திச் செலவுக்கு, மேலதிகமான செலவுக்கும் கூடுதலாக விலையை உயர்த்தலாம். தனிப்பட்ட உற்பத்தியாளர் தொகை அதிகரித்து, அவர்கள் விற்பனை செய்யும் பொருளின் விலைகளைப் பாதிக்கக்கூடிய அளவு முக்கியத்துவமுடையவர்களானால், அவர்கள் பூரணப்போட்டியாளராயில்லாமல், ஏகபோக உரிமையும் போட்டியும் சேர்ந்த, ஒருவகையிலடங்கக்கூடியராவர். அதாவது 25 ஆம் அத்தியாயத்திலே சுட்டிக்காட்டப்பட்ட பூரணமற்றபோட்டி நிலையிலிருப்பர். இவர்களுடைய போக்கை ஏகபோக உரிமையும் போட்டியுஞ் சேர்ந்த ஓரினத்தின் போக்காகக் கொண்டு ஆராயவேண்டும்.

**சட்டத்தால் நியமிக்கப்படும் விலைகள் :**

சப்ளை, தேவை என்பவற்றின் போக்கில் தலையிடும் ஒரு முக்கிய விடயமுண்டு. அதன்விளைவுகளை ஆராய்வதவசியம். அரசாங்கம் சில சமயம் உயர்ந்தபட்ச விலையையோ, குறைந்தபட்சக் கூலியையோ சட்டப்படி நியமிக்கும். வாழ்க்கைப்பொருள்கள் சம்பந்தமான, உயர் விலைமட்டமொன்று, யுத்தகாலத்தில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது. 1960 இல் தொழிற்சாலைவேலையாட்களுக்கு ஒருமணிநேர வேலைக்குக் குறைந்தபட்சக் கூலி 1 டொலர் என விதிக்கப்பட்டது. சட்டப்படி இயற்றப்படும் இந்தத் தலையீடுகள், முன்னேகுறிப்பிட்ட அரசாங்க நடவடிக்கைகளிலும் பார்க்க வித்தியாசமானவை. அவை சப்ளை தேவை என்பனமூலம் தொழிற்படுவன.

சீனிச்சந்தையை உதாரணமாக எடுக்கலாம். இது சப்ளை தேவை சம்பந்தமான சாதாரணக்கோட்டின்படி இயங்குவது. இக்கோட்டின் தன்மையை இந்த அத்தியாயத்தில் அடிக்கடி சந்தித்துள்ளோம். சீனியின் விலை ஒரு இருத்தல் 7 சதத்துக்கு (சில்லறை) மேலே போகக் கூடாதென அரசாங்கம் விதிக்கிறதென்று வைத்துக்கொள்வோம். இதனை அரசாங்கம், விலை நிலையாக்கும் கந்தோர் மூலம் செய்கிறதெனக் கொள்வோம். (OPS) மக்கள், வருமானம் அதிகரித்தபடியாலோ உற்பத்திகுன்றியதாலோ சப்ளை குறைந்து சீனிக்கு அதிக தேவையுண்டாகிச் சமநிலைவிலை 20 சதமாயிற்றெனவும், அரசாங்கம் தலையிடாதிருந்ததெனவுங்கொள்வோம். இதனால் சீனியுற்பத்தியாளர் நல்ல லாபம் பெறுவர். வறியவர் அதிகம் விலைகொடுத்துச் சீனி வாங்கவேண்டியேற்படும். இதனால் வாழ்க்கைச் செலவு ஏறும். அதனால் தொழிலாளர் அதிக கூலிகேட்பர். அதையனுசரித்துப் பல சிக்கல்களுண்டாகும்.

**சட்டமுறையான உச்சவிலை, பங்கீடு இன்றியே தேவை, சப்பிளை என்பவற்றுக்கிடையில் ஓர் இடைவெளியை உண்டாக்கும் :**




படம் 5. சட்டபூர்வமான உச்ச விலை மட்டமில்லாவிட்டாலும் விலை E க்கு உயரும். செயற்கை உச்சவிலைமட்டத்தில் சப்பிளையும் தேவையும் சமனுவதில்லை. குறைந்த சப்பிளையைப் பங்கிடுவதற்கும் பயன்படு தேவையை d'd' க்குக் கொண்டுவருவதற்கும் பொருளைப் பங்கீடு செய்யுமொருவழி வகுக்கவேண்டும்.

எனவே நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் காங்கிரசின் துணையோடும் விலைநிலையாக்கும் கந்தோரின் துணையோடும் விலையைக் கட்டுப்படுத்தும். சீனி கூடியவிலை, பழைய விலையான இருத்தல் 7 சதமென்று விதிக்கும். MN என்ற கோடு சட்டபூர்வமான உச்ச விலையைக் குறிக்கும். இப்போது என்ன நடக்கும் ?

சட்டபூர்வமான மட்டவிலையில் சப்ளையும் தேவையும் சமனுவதில்லை உற்பத்தியாளர் விநியோகஞ் செய்வதிலும்பார்க்க ஆயிரக்கணக்கில் அதிக

www.padippakam.com



மான இருத்தல் சீனி, நுகர்வோருக்கு அவசியம். இது MN என்ற இடைவெளியினால் காட்டப்பட்டுள்ளது. இந்த இடைவெளிமிக அதிகமான படியால் கடைகளிலோ உற்பத்தித் தாபனங்களிலோ இத்தேவையை நிரப் பக்கூடிய அளவு சீனி இருக்கமாட்டாது. சீனி இல்லாமலே சிலர் காப்பி சாப்பிடவேண்டிவரும். சட்டபூர்வமான உச்ச விலையில்லாவிட்டால் இந்தச் சிலர் சீனி இல்லாது சாப்பிடாததைவிட 8 சதமோ 9 சதமோ அதற்குக் கூடவோ கொடுத்துச் சீனியை வாங்குவர். அத்தியாயம் 4 படம் 3. இலே காட்டியவாறு MN க்குச் செங்குத்தான ஒரு அம்பைப்போட்டு இந்த நிலையைக் காட்டலாம். இந்த அம்பு 20 சதச் சமநிலை விலைவரையும் உயரும். நுகர்வோர் அதிகவிலைக்கு வாங்குவதே சட்டவிரோதமானது. வாங்குபவர் அதிக விலைகொடுத்தாலும், விற்பவர் அதை ஏற்கக் கூடாது. எனவே சீனிப் பங்கீட்டை நடத்தவேண்டியேற்படுகிறது. முதலில் இதை "முதல்வந்தவர்க்குக் கொடுப்பது" என்ற முறையில் நடத்தலாம். அப்பொழுது இதற்குமேல் ஒருவருக்குக் கொடுப்பதில்லையென்று விதி வைக்கலாம்; அல்லது எல்லையின்றியே முதல்வந்தவருக்கு விற்கலாம். எனவே எல்லாரும் நேரத்தை வீணாக்கிக் கியூ வரிசையில் நின்று சாமான் வாங்கவேண்டியேற்படும். ஆனால் கியூவில் நிற்பவரெல்லாருக்கும் சீனி கிடைப்பதில்லை. சிலர் சீனியில்லாமலே வீடுதிரும்பவேண்டியேற்படும்.

விலையந்திரம் தடைசெய்யப்படுகிறது. பணமிருந்தாலும் பொருள்கிடைப்ப தில்லை. முதல்வந்தவர்க்குக் கிடைக்கிறது. அல்லது வேறு பலகாரணங்களால் பொருள் கிடைக்கிறது.

இதனால் எவருக்கும் சந்தோஷங் கிடையாது. சீனிவிற்பவர் சங்கடப்படு வார் நியாயத்தைச் செய்யவேண்டுமென்ற உணர்ச்சியில்லாதபட்சத்தில் நிலைமை தாங்கமுடியாததாகிவிடும். சில சமயம் கள்ள வாணிபம் ஆங்காங்கு தோன்றும்.

சப்பிளைமட்டத்துக்குத் தேவை இறங்கும்வரை, விலையை ஏறவிடுவது அரசியற்காரணங்களுக்கும், சமூகக்காரணங்களுக்கும் ஏற்றதன்றானால் மிஞ்சியிருக்கும் ஒருவழி கூப்பன் அல்லது புள்ளிப் பங்கீட்டுமுறையே.

இதைச் செய்தால் மக்கள் ஆறுதலடைவர். ஏனெனில் விற்பனையாளர் வாங்கவந்தவர்களைத் துரத்திவிடத் தேவையில்லை.

வாங்குவோர் சப்ளை குறைவாகவிருந்தாலும் தமக்கு ஏதோ ஓரளவு கிடைக்குமெனத் திருப்திப்படலாம். ஆனால் ஒரு சிலர் பங்கீட்டில் பழியைப் போடுவர். கூப்பன் புள்ளிகளை ஏன் அரசாங்கம் அதிகரிக்கக்கூடாதென்று கேட்பர். இது நிலைமையை மோசப்படுத்துவதால், இவர்கள் பழங்காலத்து அரசரைப்போன்றவர். அ தா வ து கெட்டசெய்தியைக்கொண்டுவரும் சேவகரைக்கொலைசெய்யும் அரசரைப்போன்றவர். இவர்களைப் பற்றி எவரும் அக்கறைகொள்ளவேண்டியதில்லை.

சப்ளை, தேவை விடயத்தில் கூப்பன் எவ்வாறு தொழிற்படுகின்றது. விலை நிலையாக்கும் கந்தோர், *d'd'* இக்குத் தேவைக்கோட்டை இறக்கும்

படிப்பகம்

www.padippakam.com



அளவுக்குக் கூப்பனை அடிக்கும். இங்கே சப்பிளையும் புதிய தேவையும் மட்டவிலையில் சமனுகும். கூப்பனை அதிகம் அடித்தால் தேவை வலப் பக்கமாகவே அதிகம் சாயும் ; அதனுல் பழைய இடர்ப்பாடுகள் முன்னையி லும் சற்றுக்குறைவாக இருந்துகொண்டேயிருக்கும். கூப்பனைக் குறைவாக அடித்தால் சீனி சப்பிளை அதிகரிக்கும். அப்போது சீனிப் பங்கீட்டைக்கைவிடும் அறிகுறிதோன்றும்.

மக்கள் எவ்வாறு சாதாரணமாக நடப்பர் என்பதை நன்கு அறிவதானுல் பைத்தியகார ஆஸ்பத்தரிக்குப் போகவேண்டும். யுத்தகாலத்திலே விலையந்திரம் சீர்கெட்டுப்போவதைக் கவனித்தால், அது சாதாரண காலத் தில் செயற்படும் விசித்திரமான தன்மை விளங்கும். பொருள்கள் எப்பொழுதும் தேவைக்கு வேண்டிய அளவு நிறைந்திருப்பதில்லை. அருந்தலான பொருள்களை விலையானது பங்கீடு செய்யப்பண்ணுகிறது. அதிக நுகர்ச்சியிருந்தால் விலை உயர்ந்து அந்த அதிகரிப்பை நீக்குகிறது. அத்துடன் உற்பத்தியையும் பெருக்குகிறது. விலை வீழும் போது நுகர்வு அதிகரிக்கிறது ; உற்பத்தி குறைகிறது ; அதிக கையிருப்பைக் குறைக்கிறது.

**சப்பிளை தேவைகளில், ஏகபோக உரிமை தலையிடல்.**

பொருளாதாரத்தை அமைப்பதற்கு ஒருவழி போட்டி நிலையில் சப்பிளையை யும் தேவையையும் அமைத்தல். இஃது ஒரு வழியேயன்றி ஒரேயொரு வழியன்று. ஒருசிலர் ஏகபோக உரிமையைப்பெற்றுல், விளைவை அவர்கள்போட்டிச் சமநிலையிலிருந்து அப்புறப்படுத்திவிடுவர். ஏகபோக உரிமையாளர் உற்பத்தியை குறைத்து விலையை உயரச்செய்யலாம். சப்பிளை, தேவை என்பவற்றில் அவ்வாறு தலையிடுவது நல்லதா ? ஏகபோக உரிமையாளன் மற்றவர்களை விட மிகத்தகுதியுடையவனுயிருந்தால் அல்லது மற்றவர்களிலும்பார்க்க அதிக பணத்தேவையுடையவனுயிருந்தால் அவன் விலையை உயர்த்தியதை ஆதரிக்கச் சிலர் முன்வரலாம். அல்லது அவன் தனது பணத்தைத் தருமத்துக்கோ விஞ்ஞான ஆராய்ச்சிக்கோ பயன்படுத் துவானுயிருந்தால், தனவந்தரின் பணத்தை வாங்கி ஏழை எளியவர்க்குக் கொடுத்துதவுகிறுனெனச் சிலர் அவனை ஆதரிக்கலாம்.

ஆனுல் ஏகபோக உரிமை விரும்புவோர், மற்றவர்களிலும் சிறப்பான பண்புடையவரென்று கூறிவிடமுடியாது. பொதுக் கைங்கரியங்களில் அரசாங்கமே ஈடுபடவேண்டுமன்றித் தான்தோன்றிகளான ஏகபோக உரிமையாளரல்லர். வரிமூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை அரசாங்கமே பொதுக் கருமங்களிற் செலவு செய்யவேண்டும்.

எனவே போட்டி நிலையிலுள்ள சப்ளை தேவை முறையில் தலையிடுவது சில அபூர்வமான சந்தர்ப்பங்களிலன்றி மற்றும்படி கெடுதியையே உண்டாக்கும்.

ஏகபோக உரிமைச் சார்பான தலையீட்டினுல், உற்பத்தி அவசியமின்றிக் குறையு ம், அதனுல் பொருள்கள் அருந்தலாகி, விலை அதிகரிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும் ஏகபோக உரிமையினால் தனிப்பட்ட சிலரிடம் செல்வம்போய்ச் சேரும். வருமானம் சரியாகப் பகிர்ந்து கொள்ளப்படமாட்டாது.

இச்சந்தர்ப்பத்தில் உற்பத்திக் குறைவு மிக முக்கியமானவிடயம். வருமானப் பங்கீட்டில் ஏற்படும் உயர்வு தாழ்விலும் பார்க்க இதுவே மிக முக்கியமானது. ஏகபோக உரிமையாளரின் செல்வத்தை வரி விதித்து அபகரித்தாலென்ன[1]? வருமானப் பங்கீட்டுத் தாரதம்மியத்தில் உள்ள குறையை நீக்கிவிடலாம். ஆனால் பொருள்களுக்கு அருந்தல் இருந்துகொண்டேவரும். உற்பத்திசெய்யக்கூடிய சக்தி இருந்தும் உற்பத்தி பெருகமாட்டாது.

ஏகபோக உரிமையை மக்கள் வெறுக்கின்றனர். எனவே சப்ளை தேவை அமைப்பில் அது தலையிடுவது தீமையையே உண்டாக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை.

**சப்பிளை, தேவைகளில் அரசாங்கத் தலையீடும் வேறு தலையீடுகளும்**

சப்பிளை, தேவை அமைப்பில் அரசாங்கம் தலையிடலாமா? ஆம்; அரசாங்கம் பொதுநன்மையை உத்தேசித்தே தலையிடும். ஆனபடியால் அத்துணை எதிர்ப்பு அதற்கு இருக்கவேண்டியதில்லை.

மக்களுக்கு எது நன்மையானது, எது தீமையானதென்பதை அரசாங்கம் அறியக்கூடிய நிலையிலிருந்தால் அதன் தலையீடு நிலைமையைச் சீர்திருத்த முடியும். உதாரணமாக அபின் விடயத்தை எடுத்துக்கொள்வோம். இந்தவிடயத்தில் நுகர்வோனைச் சிறுபிள்ளையாகவோ, பைத்தியக்காரனாகவோ, நல்லதுகெட்டது தெரியாதவனாகவோதான் அரசாங்கம் நடத்தும்.

ஆனால் பெரியகார் விடயத்திலோ, சிகரட்விடயத்திலோ நுகர்வோன் எப்படியும் நடக்கட்டுமென்று அரசாங்கம்விட்டுவிடும். நுகர் வோனுக்குச் சுதந்திரம் வேண்டும். ஆனபடியால் விளம்பரங்கள் என்னவகையான சுவையை உண்டாக்குகின்றனவோ அத்தவகையில் அவன் செல்லச் சுதந்திரமளிக்கப்படுகிறது.

ஆனால் சந்தையில் விற்பனை செய்வோரும் வாங்குவோரும் மிக்க தனவந்தராகவோ, ஏழைகளாகவோ விசேடமாகத் தகுதியுடைய வராகவோ தகுதியற்றவராகவோ இருக்கும்பட்சத்தில் விடயம் சிக்கலுடையதாகிறது.

1. ஏகபோக உரிமையாளர் தொகை கூடி விலை உயர்ந்தால் என்ன நடக்கும்? தொழின் முறைகளைத் தம்முள் அவர்கள் பங்குபோடுவர். ஆனால் அதிகலாபத்தை எவரும் பெறமாட்டார். அப்போது வருமானப் பங்கீட்டிலுள்ள தீய தன்மைகள் அகன்றுவிடும். ஆனால் விலைவாசிகள் இறங்கமாட்டா. தொழில்முறைகளில் வீண்விரயமுண்டாகும். பூரண மற்றபோட்டியைப்பற்றி 25 ஆம் அத்தியாயத்திலே கூறும்போது இவ்விடயத்தை மேலும் விரிவாய் ஆராய்வோம்.


www.padippakam.com



தனது சொந்த ஒழுக்கநியதிகளை மக்கள் தலையிலே எற்றாமல் பொருளியலாளர் பின்வருமாறு கூறுவர் :—

வருமானச் செறிவைத் திருத்துவதற்குப், போட்டி சப்ளைதேவை யந்திரத்தில் தலையிடுவது திறமையற்றமுறையாகும்[1]. என்ன வகையான வருமானச் செறிவை நீர் ஏற்படுத்தவிரும்புகிறீரோ, அதை வரிமுறையை அனுசரித்துத் திறம்படச் செய்யலாம். அதைவிடுத்து ஒரு தனிச்சந்தையில் தனிப்பட்ட ரொபின் ஹூட்முறையைப் பின்பற்றவேண்டியதில்லை. சமூகத்திலே யாருக்கென்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வரி விதிப்பதை அனுசரித்துக்கொண்டால் என்ன, எப்படி என்ற பிரச்சினைகளைத் திறம்படத் தீர்ப்பதற்குப் பூரணபோட்டிமுறையை (அது நிலவுமானால்) அனுசரிக்கலாம்.

சப்பிளை, தேவை என்பவற்றின் வினைத்திறன்




படம். 6. நான் என்னுடனே வியாபாரஞ் செய்யும் ஓர் இலகுவான சந்தர்ப்பத்தைக் கவனிப்போம். எனக்கு 10 மணிநேர ஓய்வு உண்டு ; இது சரியாக எனக்கு மணியொன்றுக்கு 2.50 டொலர் பெறுமதியுடையதாகும். நான் ஒவ்வொரு மணிநேர வேலைக்கும் அல்லது தியாகஞ்செய்த ஓய்வுக்கும் 1 Q அலகு உற்பத்தி செய்யமுடியும். முதலாவது Q அலகு சரியாக எனக்கு 4 டொ. பெறுமதியுடையதாயும், அடுத்தடுத்த Q அலகுகள் முறையே 3 டொ., 2 டொ., 1 டொ., 0 டொ., பெறுமதியுடையன வாயுமிருக்கின்றன எனக் கொள்வோம். 6 ஆம் படம் Q இக்கு எனது சப்பிளையையுந் தேவையையுங் காட்டுகின்றது. E இல் சமநிலை இருக்கிறது ; அதில் 2 Q ஐ சரியாக நான் நுகர்கிறேன். அவற்றிலிருந்து 4 டொ. + 3 டொ. "திருப்தியை" நான் பெறுகிறேன். (மெல்லிய நிழலிடுக் காட்டப்பட்டுள்ளது) ; மேலும் எனது ஓய்வில் எஞ்சியுள்ள 8 மணியிலிருந்து 8 மடங்கு 2.50 டொலரைப் பெறுகிறேன். (இருண்ட நிழலிட்டுக் காட்டப்பட்டுள்ளது) ; அல்லது மொத்தத்தில் 27 டொ. திருப்தியைப் பெறுகிறேன் (பரப்பளவு மொத்தத்தால் காட்டப்பட்டுள்ளது). நாம் 1 மணி மிகக் கூடுதலாகவோ மிகக் குறைவாகவோ வேலை செய்வதில் உண்டாகும் தடை எனது திருப்தியில் 50 சதத்தை அழித்துவிடும் என்பதை நாம் எடுத்துக் காட்டமுடியும். இரண்டாவது மணிநேரத்தில் எதிர்ப்படும் இடைஞ்சல் எனது திருப்தியில் 1.50 டொலரை அழித்துவிடும். இப்படியாக மேலும் உண்டாகும் இடைஞ்சல் ஒவ்வொன்றினாலும் மேன் மேலும் பளுவான இழப்பு ஏற்படும் ; *dd* இக்கும் SS இக்குமிடையே முரண்பாடு வளர்ந்துகொண்டு வருதல் எடுத்துக் காட்டுவதுபோல் இந்த இழப்பு வரவரப் பெரிதாகிக் கொண்டுபோகும்.

[1]. வாங்குவோரும், விற்போரும் வித்தியாசமானவர்கள். அவர்கள் வருமானமும் தகுதியும் வெவ்வேறாக இருக்கலாம். இவைகள், போட்டிச் சமநிலைப் புள்ளியில், பொருளியற் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்குச் சிலபங்கீட்டுத் திறனுள்ள தன்மைகள் இருக்கின்றன என்ற உண்மையை மறைக்கின்றன. நான் என்னுடன் வியாபாரம் செய்வதாகக் கொள்வோம். மணிக்கு 2.50 டொலர் பெறுமதியான 10 மணித்தியால ஓய்வு நேரம் எனக்குண்டு. ஓய்வு நேரத்தைத் தியாகஞ்செய்து ஒவ்வொரு மணியும் Q அலகு உற்பத்தி செய்வோம். முதலாவது Q அலகு 4 டொலர் பெறுமதியாகும். ஆனால் அடுத்த Q அலகுகள் முறையே 3, 2, 1, 0, டொலர் பெறுமதியாக இருக்கும். படம் 6. Q இன் சப்ளை தேவை என்பவற்றைக் காட்டுகின்றது. சமநிலைE, 2 Q நுகரும் இடத்தில் இருக்கும். எனக்கு 2 அலகுகளால் 4 + 3 டொலரும், மிச்ச ஓய்வு நேரத்தால் $8 \times 2.50$ டொலருமாக 27 டொலர் பெறுமதியான

www.padippakam.com



ஆனால் இது முழுவதும் விவாதத்துக்குட்பட்ட விடயங்கள். இதற்கு ஒரு விடைகிடையாது. உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலும் விலை விடயத்தில் பல முனையில் தலையீடு உண்டு. உதாரணம் : வீட்டு வாடகைகள் கட்டுப் படுத்தப்படுகின்றன. இரத்ததானம் முதலில் இலவசமாகப் பெறப்படுகிறது (ஏன் ?) வைத்தியர் செல்வரிடம் அதிக பணம் வாங்குவர் ; வறிய வரிடம் குறைவாக வாங்குவர். செல்வர் பணத்திலிருந்து வறியவருக்கு இவ்வாறு சகாயஞ்செய்யப்படுகிறது. (ஏன் இத்தகைய தனிப்பட்ட வரி முறை?) அரசாங்கம் பால்முதலிய உணவுப்பொருள்களுக்குச் சகாயஞ் செய் கிறது. விவசாயத்துக்கு அரசாங்கம் செய்யும் உதவிகளைப்பற்றிப் பின்னர் கூறுவோம். போட்டியில் ஏகபோக உரிமையின் பூரணமற்ற தன்மைகள் என்ற விடயங்கள் பற்றியும் பின்னர் ஆராய்வோம்.

### கருக்கம்

### (அ) சப்பிளை, தேவை என்பனபற்றிய நெகிழ்ச்சி

1. பிண்டப்பொருளியலின் அடிப்படைப் பிரச்சினை, சந்தை விலையமைப்பு எவ்வாறு பொருளியலின் மூன்று பிரிவுகளான என்ன, எப்படி, யாருக்கு என்பவற்றைச் சமாளிக்கிறது என்பதே. ஒவ்வொரு போட்டிச் சந்தையிலும் என்ன நடக்கிறது என்பதை நாலாம் அத்தியாயத்திலுள்ள கோடுகள் விளக்கும்.

2. விலையைக் குறைத்தால், மொத்த வருமானத்துக்கு என்ன நடக் கிறதென்பதிலேயே தேவை நெகிழ்ச்சி தங்கியுள்ளது. விலை குறைப்பு மொத்த வருமானத்தை அதிகரிக்கச் செய்யுமா ? குறையச் செய்யுமா ? மாற்றமில்லாமலிருக்கச் செய்யுமா என்பதிலேயே தேவை, நெகிழ்ச்சியு டையதா, நெகிழ்ச்சியற்றதா, ஓரலகுடையதா என்பது தங்கியுள்ளது. தேவை நெகிழ்ச்சியின், எண்குணகம், தொகையிலுண்டாகும் வீத அதிகரிப்பை விலைக்குறைவின் வீதத்தால் பிரிக்க உண்டாவது.

3. சந்தைவிலை P, குறித்த ஒரு வீதத்தால் உயர்த்தப்பட்டபோது, கொடுக்கப்பட்ட சப்ளை Q வின் விகித மறிவினையை அளப்பது சப்ளை நெகிழ்ச்சி.

4. மாஷல் கால அம்சத்தை வலியுறுத்தினர். (அ) நிலையான சப்ளை யின் தற்காலிகமான சமநிலை (ஆ) மாருத தொழிற்சாலை, கம்பெனி என்பவற்றின் மாறுகின்ற உற்பத்தி சம்பந்தமான குறுந்தவணைச் சமநிலை. (இ) கம்பெனிகள் தொழிற்சாலைகள் என்பவற்றின் தொகையும் ஏனைப் பொருளியல் நிலைமைகளும், புதிய தேவைமட்டத்துக்குத் தமது கருமங் களைச் சரிக்கட்டிக்கொண்டபோது உள்ள சாதாரண விலையின் நீண்ட தவணைச் சமநிலை.

---

திருப்தி கிடைக்கும். நாள் வேலை செய்யாவிட்டால் முதல் மணியில் 50 சதம் இழப்போன். அடுத்தடுத்த மணிகளில் நாள் இழப்பவை கூடிக் கொண்டே போகும். இது *dd*, *ss*, என்பவற்றிற்கிடையேயுள்ள வித்தியாசத்திலிருந்து தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



### (ஆ) சப்ளை, தேவை என்பவற்றின் பிரயோகமும் நிபந்தனைகளும்

5. சப்ளை, தேவை என்ற சாதனம், சப்ளை, தேவையாகிய கோடுகளில் தனித்தனி அல்லது ஒன்று சேர ஒரே நேரத்திலுண்டாகும் நகர்த்துதலின் விளைவுகளை ஆராய உதவுகிறது. "தேவையில் அதிகரிப்பு", (தேவைக் கோடு முழுதாகவே வெளிப்புறமாக நகர்தல்), விலை குறைவதால், "தேவைப் பட்ட பொருளின் தொகையில் அதிகரிப்பு" (அதாவது மாறுத ஒரு கோட்டில் கீழ் நோக்கிய நகர்வு) என்பனபற்றிய மயக்கங்களை ஆரம்ப மாணுக்கர் தவிர்க்கவேண்டும்.

6. ஒரு பொருளின் ஓர் அலகுக்கு இத்தனை டொலர் வரியென்று விதித்தால், அது புதியதொரு சமநிலைக் குறுக்குவெட்டை உண்டாக்கும். அவ்வரியை, நுகர்வோர் ஓரளவு தாங்குவர். அது சப்ளைக்குச் சார்பாக, தேவை எத்துணை நெகிழ்ச்சியற்றதாயிருக்குமோ அத்துணை அளவினதா கும்.

7. விலையை, ஆயிரம் சக்திகள் பாதிக்கின்றன. ஆனால் சுதந்திரமான போட்டிச் சந்தையிலே, அவை சப்ளை தேவை என்பவற்றுக்கூடாகவே செயற்படுகின்றன. உதாரணமாக, உற்பத்திவிலே போட்டிவிலையை, சப்ளை யைப் பாதிப்பதன்மூலமே பாதிக்கும். வேறுவகையிலன்று

8. சப்ளையில் அல்லது தேவையில் மாற்றங்களைச் செய்து விலையில் அரசாங்கம் மாற்றத்தையுண்டாக்கும். சிலவேளைகளிலே போட்டிச்சந்தை யில் தலையிடக்கூடிய சட்டங்களையும் விதிக்கும். அந்த குணங்களில் சப்ளை யும் தேவையும் சமனுயிருக்கமாட்டா. சில உற்பத்தியாளரோ, நுகர்ப வரோ, சட்டபூர்வமான விலையில் வாங்கவோ விற்கவோ முடியாது, கூடிய விலையில் விவகாரஞ்செய்ய விரும்பலாம். இதனால் எற்படும் குறைபாடு களைச் சட்டபூர்வமாக நீக்கினுல் (அதாவது பங்கீடு செய்து) நீக்காவிட்டால், குழப்பமும் கள்ள வாணிபமும் உண்டாகலாம்.

9. சப்ளை தேவைகளில் தற்காலிகமாகவும், ஒரு தலைமுடிபாகவுமுள்ள தலையீடு பெரும்பாலும் கெடுதியை உண்டாக்கும். உதாரணமாக, எக போக உரிமை சார்பான தலையீட்டை எடுத்துக்கொள்வோம். இங்கே எற் படக்கூடிய தீமை அதிகமன்று. வருமானச் செறிவு அத்துணைக் குழப்ப முடையதாகாது. இங்கே சமூகம் வாங்கும் சக்தியுடையதும், தேவைப்படு வதுமான பொருளில்லாமலே சமாளிக்கவேண்டியேற்படுகிறது. விரும்பிய வாறு வருமானத்தைப் பங்கீடுபண்ணவோ, வேறு வகையான சமூக நலனை மனத்திற்கொண்டோ அரசாங்கம் சப்ளையிலும் தேவையிலும் தலையிடுமானுல், இத்தகைய திறமையற்ற முறையைப் பிரயோகிப்பதில் செலவுவகை மறைந்திருக்கும். மேலும் விரும்பிய அதேபயனை வரி முறையைப் பயன்படுத்துவதாலும், சந்தைவிலைத் திறமையைப் பாது காப் பதாலும் நிறைவேற்றலாம்.


படிப்பகம்

www.padippakam.com



**ஆராய்ச்சிக்கான வினுக்கள் :**

1. கோதுமைத் தேவையை என்ன அமிசங்கள் அதிகரிக்கும்; சப்ளையை எவை அதிகரிக்கும்?
2. நெகிழ்ச்சியற்ற தேவை பின்வருபவற்றில் எவைக்கு உண்டு :— வாசனைத் திரவியம், உப்பு, பென்சிலின், சிகரெட், ஐஸ்கிறீம், சொக் லேட்ஐஸ்கிறீம் ; ஏன்?
3. தேவை நெகிழ்ச்சியுள்ள தாயின் (நெகிழ்ச்சியற்ற தாயின், ஓரல கையனு சரித்ததாயின்) விலை P உயர்ந்தால் மொத்த வருமானத் துக்கு என்னநிகழும்? இம்மூன்று வகைகளிலும், உயர்ந்த தொகை யால் (Q) உண்டாகும் விளைவென்ன?
4. "நெகிழ்ச்சியான தேவை என்றல் நெகிழ்ச்சியான சப்ளை என்பதே அர்த்தம். ஏனெனில் கோடுகள் ஒன்றையொன்று வெட்டும்" இந் தக் கூற்றைக் கண்டிக்க.
5. மாஷலின் முக்காலத் தவணைகளையும், அவற்றின் சமநிலைகளையும் விளக்குக.
6. பல வருடங்களுக்கான கோதுமையின் தேவை, சப்ளைக் கோடுகளைக் காட்டும் கீழேயுள்ள படத்தை ஆராய்க. பின்னர் பக்கத்திலுள்ள அட்டவணையை நிரப்புக. அது நாலு வருடத்துக்குமான கோதுமை விலையைத் தனித்தனியே காட்டுகிறது. (குறுக்கே வெட்டும் புள்ளி களிலிருந்து தேவை சப்ளை நெகிழ்ச்சியை மதிப்பிடுவது கடினம் என்பதைக் கவனிக்க).




7. தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும்போது விற்பனைவரி பெரும்பா லும் நுகர்வோரையே பாதிக்கும். தேவை நெகிழ்ச்சியுடையதா யிருந்தால் அதற்கு எதிர்மாருயிருக்கும். சப்பிளை மிக நெகிழ்ச்சி யுடையதாஞல் (SS கோடு போல அது கிடைநிலையாயிருக்கும் போது) என்ன நடக்கும்? சப்பிளை பூரணமாக நெகிழ்ச்சியற்றதாஞல் என்னவாகும்?

www.padippakam.com



8. பைப் முதலியன இணைப்போருக்குச் சட்டபூர்வமான உயர்வான, குறைந்தபட்சச் சம்பளம் விதிக்கப்பட்டால் அது அத்தகைய வேலையிலீடுபட்டோரிடை என்ன விளைவையுண்டாக்கும்?

9. பின்வரும் கருத்துக்களை மறுபடி நினைவிலிருத்துக :
அண்டப் பொருளாதாரம், பிண்டப்பொருளாதாரம் ; மொத்த வருமானம், $P \times Q$ ; நெகிழ்ச்சியுள்ள, நெகிழ்ச்சியற்ற, ஒற்றையலகான நெகிழ்ச்சியுள்ள,
சப்பிளை நெகிழ்ச்சி,
மாஷலின் முக்காலத்தவணை,
தேவையும், தேவைப்படும்தொகையும்,
ஒரு கோட்டையனுசரித்த மாற்றமும், அக்கோட்டின் நகர்வும்,
வரிவீதம்,
உற்பத்திச்செலவு, சப்பிளை, விலை
சப்ளை, தேவைக்கோடுகளைப் பாதிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள்,
பங்கீடும் விலை நியமித்தலும்
ஏகபோகமான உரிமையாளர் உற்பத்தியைக் குறைத்தலும், வருமானப் பங்கீட்டை ஏகபோக உரிமையாளர் மாற்றுதலும் நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் சப்பிளை, தேவை என்பவற்றிலே தலையிடும்போது தியாகஞ் செய்யக்கூடிய திறமைகள்.

www.padippakam.com

# இருபத்தொன்றும் அத்தியாயம்

## தேவை, பயன் என்பவை சம்பத்தமான கொள்கை

*ஒன்றிலும் நன்மை காணுதவன் யார் ? பொருள்களின் விலையை அறிந்தவனும், அவற்றின் மதிப்பை அறியாதவனுமே அவன்.*

**ஒஸ்கார் வைல்ட்**

போட்டிச்சந்தையிலே விலையானது சப்ளை, தேவை என்ற கோடுகளால் நிச்சயிக்கப்படுகிறது. ஆனுல் தேவை அட்டவணைக்குப்பின்ஞல் இயங்கும் பொருளாதாரத் தத்துவமென்ன, சப்ளை அட்டவணைக்குப் பின்ஞல் இயங்கும் பொருளாதாரத் தத்துவமென்ன ? இந்த அத்தியாயத்திலே சந்தைத் தேவை அட்டவணைக்குப் பின்ஞல் இயங்கும் பொருளாதாரக் கொள்கைகளைச் சுருக்கமாக ஆராய்வோம். சப்ளை அட்டவணை சம்பந்தமான பொருளாதாரக் கொள்கைகளை அடுத்த அத்தியாயத்திலே சுருக்கமாக ஆராய்வோம்.

### தனிப்பட்ட தேவைகளைக் கூட்டினுல் சந்தைத் தேவையுண்டாகும்

மாட்டிறைச்சிக்குச் சந்தையில் இருக்கும் தேவையை அறிவதற்குச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் அப்பொருளின் தேவையின் மொத்தத்தைக் காணவேண்டும். ஒவ்வொரு நுகர் வோனுக்கும் ஒரு தேவைக்கோடு உண்டு. அதை இறைச்சிவிலைக்கு எதிராகக் குறிக்கலாம். இது பொதுவாக வலப்பக்கமாய்க் கீழே சரியும். அதாவது வடமேற்கிலிருந்து தென்கிழக்காகச் சரியும். நுகர்வோரெல்லாரும் ஒரே வகையான தேவையுடையவராய் இருக்கிறுர்களென்று வைத்துக் கொள்வோம். உதாரணமாக 10 லட்சம் நுகர்வோர் இருக்கிறுர்களெனக் கொண்டால் சந்தைத் தேவைக்கோடு தனிப்பட்டவர் தேவைக்கோட்டை 10 லட்சம் முறை பெருப்பித்த கோடாகவேயிருக்கும்.

ஆனுல் மக்கள் எல்லாரும் ஒரேமாதிரி இருப்பதில்லை. சிலருக்கு வருமானம் அதிகமிருக்கும் சிலருடைய வருமானம் குறைவாக இருக்கும். சிலர் மாட்டிறைச்சியையே விரும்புவர். வேறுசிலர் காய்கறியையோ பன்றியிறைச்சியையோ விரும்புவர். ஒவ்வொரு நுகர்வோரின் கோட்டையும் உபயோகித்துச் சந்தைத் தேவைக்கோட்டைப் பெறுவதானுல் என்ன செய்யவேண்டும். குறிப்பிட்டதொரு விலையிலே ஒவ்வொரு நுகர்வோனும் நுகரும் பொருளின் மொத்தத்தைக் கணிக்கவேண்டும். இந்த மொத்தத்தை சந்தைத் தேவைக்கோட்டில் ஒரு தானமாக அமைக்கவேண்டும். அல்லது நமக்கு விருப்பமானுல் நாலாம் அத்தியாயத்திலே கண்டபடி தேவை அட்டவணையில் மொத்தத்தைக் குறிப்பிடுவோம்.




படிப்பகம்

www.padippakam.com



**சந்தைத் தேவையைப் பெறுவதற்கு, நுகர்வோரின் தேவைவளேகோடுகளே ஒன்று சேர்ப்போம்.**




படம். 1. 5 டொலர் போன்ற ஒவ்வொரு விலேயிலும் ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் தொகையைக் கிடைநிலேயாகச் சேர்ப்போம். இவ்வாறு சந்தைத் தேவைத் தொகையைப் பெறுவோம்.

**சுருக்கம் :** தனிப்பட்டவர் தேவையை ஒவ்வொருவிலேயிலும் கூட்டினுல் கடைசியாகச் சந்தைதேவைக்கோடு கிடைக்கும். (படம் 1 தேவைக்கோடுகள் எவ்வாறு கிடைநிலேயாகச் சேர்க்கப்படுகின்றனவென்பதைக் காட்டும்).

**வருமானமாற்றத்தாலும், வேறு மாற்றங்களாலும் தேவை நிலேமாறுதல்**

விலேமாற்றமின்றி வேறு மாற்றங்களால் தேயிலேயின் தேவையில் மாற்றமுண்டாகலாம். பணவருவாயில் மாற்றமுண்டானுல் நாம் வாங்கும் பொருள்களே அதிகமாக வாங்குவோம். இவ்வுண்மை வரலாற்று அனுபவத்தாலும், வரவுசெலவு ஆராய்ச்சிகளாலும், நமது சொந்த நடத்தைகளாலும் கண்டறிந்த உண்மையாகும். வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களில் அதிக அதிகரிப்பு உண்டாகாது. ஆனுல் போகப் பொருள்களிலேதான் அதிக அதிகரிப்பு உண்டாகும். மலிவுப்பொருள்கள் பலவற்றைக் கைவிட்டுவிட்டு விலேயுயர்ந்த உணவுப் பொருள்களே வாங்க நாட்டமுண்டாகும்.

தேவைக்கோட்டுக் கணக்கில் இந்தமாற்றத்தின் அர்த்தமென்ன ? ஒரு பொருளின் விலே இறங்கினுல், அது எவ்வளவு கொள்வனவில் அதிகரிக்கிறதென்பதை வரைப்படமுறையில் காட்டுவதே தேவைக்கோடு. ஆனுல் வாங்கும் பொருளின் அளவு, மற்றப்பொருள்களின் விலேகளில் மாற்றமுண்டானுலும் மாறும்; நுகர்வோன் வருமானத்திலுண்டான மாற்றத்


www.padippakam.com



தினாலும் மாறும். ஆனால் இத்தகைய மாற்றங்களுண்டாவதில்லை யென்ற கருத்தைக்கொண்டுதான் தேவைக்கோடு வரையப்படுகிறது. ஆனால் மற்ற அமிசங்கள் மாறினால் என்ன நடக்கும்? அப்போது தேவைக்கோடு முற்றும் வலப்பக்கமாகவோ இடப்பக்கமாகவோ நகரலாம்.

**வருமானத்தில் மாற்றத்தினாலோ, வேறு பொருள்களின் விலை மாற்றத்தினாலோ தேவை வளைகோடு நிலைமாறலாம்.**

தேவை வளைகோட்டிலுள்ள பெயர்ச்சிகள்




படம் 2. உயர்ந்த வருவாய் *dd*, ஐ *d'd'* ஆக மாற்றும். (இதைவிளக்குக. வருவாய் குறைந்தால் *dd*, *d"d"* ஆக மாறும். இதையும் விளக்குக.) கோப்பிவிலை அதிகரித்தால், தேயிலையின் *dd*, *d'd'* ஆக மாறும். (கோப்பி விலையிறங்கினால் என்ன நடக்கும்? எலுமிச்சை விலை அதிகரித்தால் என்னவாகும்? மக்களுடைய உருசியில் மாற்றமுண்டானால், அல்லது குடிசனம் பெருகினால், அல்லது விலைகள் எதிர்காலத்தில் மாறும் என எதிர்பார்த்தால், *dd* கோட்டில் மாற்றமுண்டாகலாம்.

படம் 2 அத்தகைய மாற்றங்களைக் காட்டுகிறது. வருமானத்தைக் குறித்த ஒரு அளவாக்கி, மற்றப் பண்டங்களின் விலைகளும் மாறாதிருக்குமானால் நுகர்வோரின் தேயிலைத் தேவைக் கோட்டைக் கீறிவிடலாம். விலையும், தொகையும் A என்ற தானத்திலிருப்பதாகக் கொள்ளலாம். இப்போது அவனுடைய வருவாய் அதிகரிக்கிறதெனக் கொள்வோம். தேயிலையின் விலை மாறாவிட்டாலும், அவன் முன்னையிலும் அதிகமாகவே தேயிலை வாங்குவான். அப்போது தேவைக்கோடு வலப்பக்கமாய் *d'd'* க்கு நகரும். A, A' க்கு மாறும். அது அவன் கொள்வனவு செய்யும் தேயிலையின் அளவில் உண்டானமாற்றத்தைக் காட்டும். அவனுடைய வருமானம் விழுமானால் அவன் வாங்கும் தேயிலை குறையும். இது *d"d"*, A" என்பவற்றால் காட்டப்படுகிறது.

தேவைக்கோடு வருமானத்தில் மாத்திரம் தங்கியிருக்க வில்லை. தேயிலைப்பானஞ் செய்வது நாகரிகமாகக் கருதப்பட்டால் தேயிலைக்குத் தேவையுண்டாகும். அதனால் கோடு வலப்பக்கமாக நகரும்; தேயிலை குடிப்பதை மக்கள் பெரிதாக மதியாவிட்டால் தேவைகுறையும். ஒரே அளவு தேயிலையையே ஒவ்வொருவரும் பயன்படுத்திவந்தாலும், குடிசனம்பெருகினால் பொதுவாகச் சந்தைத் தேவை அதிகரிக்கும். வியாபாரப் பூரிப்பு உண்டாகப் போவதாக மக்கள் நினைத்தால் அவர்கள் தமது கொள்

www.padippakam.com



வளவை அதிகரிக்கலாம். விலைமலிவாயிருக்கும் பொழுதே வாங்கி வைத்துவிடவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம்[1]. வேறு காரணங்களாலும் தேவைக்கோடு நகரலாம்.

## தேவையின் குறுக்குத் தொடர்புகள்

தேயிலையின் விலை ஏறினால், அதை வாங்குவோர் தொகை குறையும். அதனால் அப் பொருள்களை வாங்கும் அளவும் குறையும். தேயிலை விலை ஏற்றத்தினால் லெமன்போன்ற பண்டத்துக்குந் தேவைகுறையும். அதாவது லெமனின் தேவைக்கோட்டைக் கீழே இறக்கிவிடும். அத்துடன் கோப்பியின் தேவையும் அதிகரிக்கும். ஆனால் உப்பின் தேவையை அது பாதிக்கமாட்டாது.

இதனால் நாம் தேயிலையும் கோப்பியும் போட்டிப் பொருளெனக் கூறுகிறோம். அவை ஒன்றுக்கொன்று ஈடானவை ; பதிற்பொருள்கள். தேயிலையும், லெமனும் ஒன்றுக்கொன்று துணையானவை. அனுபானங்கள். தேயிலையும் உப்பும் தனித்தனிப்பொருள்கள். மாட்டிறைச்சிக்குப் பன்றியிறைச்சி ; வான்கோழிக்கறிக்குப் புளிக்குழம்பு ; காருக்குப் பெட்ரோல், எண்ணெய்க்கு நிலக்கரி என்பவற்றின் தொடர்புகளை வாசகர் அறிந்து கொள்ளலாம்.

மற்றப் பொருள்களின் விலை மாறுவதால் உண்டாகும் விளைவை எடுத்துக்காட்டுவதற்கும் படம் 2. ஐ நாம் பயன்படுத்தலாம். கோப்பியின் விலை இறங்கினால், நமது நுகர்வோர் குறைவாகத் தேயிலையை வாங்குவார். தேவைக்கோடு $d''d''$ க்கு நகரும். லெமனின் விலை வீழ்ச்சியடைந்தால் என்னவாகும். மாற்றம் மிக அற்பமாகும். அல்லது சூனியமாகும். ஏதாவது மாற்றமிருந்தால், அது தேயிலையில் அதிக கொள்வனவாகவேயிருக்கும். $dd$ யானது வலதுபக்கமாக நகரும். ஏனிப்படி நிகழ்கிறது. கோப்பி தேயிலைக்குப் போட்டியான பொருள். லெமன் அதற்கு அனுபானம். அதாவது அதற்குத் துணையான பொருள்[2].

## குறைந்து செல் இறுதிநிலைப் பயன் விதி.

கீழ்நோக்கிச் சரியும் தேவைவிதி மிக முக்கியமானது.ஆனபடியால், அதன் பொருளாதார அடிப்படையை ஆராயவேண்டியது அவசியமாகும். கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் பொருளியலாளர் " இறுதி நிலைப் பயன் என்ற மூலாதாரமான கருத்தைக் கண்டுபிடித்தனர். இதை ஆராய்ந்ததன்பயனாக தேவைக்கோட்டை அமைக்கவும், அதன் தன்மைகளை விளக்

1. இன்று பத்திரிகையில் தேயிலை விலையேறப்போவதாய்ச் செய்தியிருக்குமானால் நான் உடனே தேயிலையை அதிகமாக வாங்கமுற்படுவேன். விலையேறினால் நான் தேநீர் அருந்துவதைக் குறைப்பேன். விலையிறங்கினால் தேநீர் குடிப்பதை அதிகரிப்பேன்.

2. பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணங்கள் மாறும்போது தேவைக் கோட்டில் நகர்வு ஏற்படும். பொருளின் விலை மாறுவதால் தேவைக் கோட்டை அனுசரித்து மாற்றமுண்டாகும் கோட்டை அனுசரித்த மாற்றத்திற்கே கீழ்நோக்கிச் செல்லும் தேவை விதிபொருந்தும்.

www.padippakam.com



கவும் கூடியதாயிருந்தது. அந்தக் கொள்கைகளின் அடிப்படைக் கருத்துக்களை மாத்திரம் இங்கே குறிப்பிடலாம். விரிவான ஆராய்ச்சிக்கு வேறு நூல்களையே பார்க்கவேண்டும்.

நுகர்வோன் என்ற முறையில் உமக்குத் திருத்தியைக் கொடுக்கக்கூடிய பொருளையே நீர் வாங்குவீர். இதனைப் "பயன்" என்கிறோம். ஒரு பொருளின் முதல் அலகு உமக்கு மனவியல்சார்பானதொரு பயனைக் கொடுக்கிறது. இரண்டாவது அலகை நீர் நுகர்கிறீர் எனக் கற்பனை செய்க. இரண்டாவது அலகு மேலதிகமான பயனைக் கொடுப்பதால் உமது பயனின் மொத்தம் அதிகரிக்கிறது. அதேபொருளில் மூன்றும், நாலாம் அலகுகளைச் சேர்த்தாலென்ன ?

ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் பொருளியலாளர் குறைந்துசெல் விளைவு விதியைப் போலத் தொனிக்கும் ஒரு முக்கியமான விதியைப் பிரகடனம் செய்தனர். தொடர்ந்து தொடர்ந்து பொருளை உள்ளிடுவதால் உண்டாகும் மேலதிக உற்பத்திப்பொருளைப்பற்றிக் குறிப்பிடுவதிலும் பார்க்க (அத்தியாயம் 2, அட்டவணை 2ஐப் பார்க்க) இந்தவிதி ஒரு பொருளை மேலும் மேலும் சேர்ப்பதால் உண்டாகும் மனவியல் சார்ந்த பயனின் போக்கைப் பற்றிக் கூறுகிறது. இதைச் சொல்லால் விபரிக்கலாம் ; இலக்கத்தால் விபரிக்கலாம் ; இரண்டுகோடுகளாலும் விளக்கலாம்.

**குறைந்துசெல் இறுதிநிலை விளைவு விதி.**

ஒரேபொருளை அதிகமாக நுகரும்போது உமது மொத்தப்பயன் (மனவியற்சார்பானது) அதிகரிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் "இறுதிநிலைப் பயன்" என்ற சொல்லால் ஒரு பொருளின் "மேலதிகக் கடைசி அலகினால் உண்டாகும் மேலதிகப் பயனைக் குறிப்பிடுவோம். அதே பொருளைப் புதிதுபுதிதாகச் சேர்க்கும்போது உமது மொத்தப் பயன் மந்தம் மந்தமாகவே பயன்படும் ; எனெனில் ஒரே பொருளை மேலும் மேலும் அடுக்குவதால் அதிற் கருத்துக்கெட்டுக் கொண்டு வரும். மொத்தப் பயனில் ஏற்படக்கூடிய அதிகரிப்புக் குறையும்போக்கைப் பொருளியலாளர் பின்வருமாறு குறிப்பிடுவர் :—

ஒரு பொருளின் நுகர்வு அதிகரிக்கும்போது, அதனுடைய இறுதிநிலைப் பயன் (அதாவது அப்பொருளின் கடைசி அலகினால் பெறும் மேலதிகப் பயன்) குறைந்துகொண்டு வரும்.

அட்டவணை 1இல் கோடு (1) குறித்த பொருளின் நுகர் தொகையைக் காட்டுகிறது. (2) ஆவது கோடு நுகரும்பொருளின் மொத்தப் பயன் அதிகரித்தாலும் அது இறக்கமான அதிகரிப்பையே காட்டுகிறது. கோடு (3) ஒரு பொருளின்கடைசி அலகு ஒன்று அதிகரிக்கப்பட்டால், விளையும் மொத்தப்பயனின் அதிகரிப்பாக இறுதிநிலைப்பயனை அளக்கிறது. அட்டவணையிற் காணப்படும் இறுதிநிலைப்பயன்கள் குறைந்து செல்வது குறைந்து செல் இறுதிநிலைப்பயன்விதியை விளக்குகிறது. படம் 3 இலே, இடது

www.padippakam.com



பக்கத்திலுள்ள படத்திலே மொத்தப் பயன் குறைந்தகதியில் அதிகரிப்பதைக்காணலாம். வலதுபக்கத்துப் படத்திலே இறுதிநிலைப்பயன்கள், அதாவது பயனின் அதிகரிப்புக்களை (பயன்னின் மொத்தமன்று) காணலாம். குறைந்து செல் இறுதிநிலைப்பயன் விதி என்றால் படம் 3b யிலுள்ள தொடர்புகள் அதாவது படம் 3a யிலுள்ள மொத்தப் பயன்தொடர்புகள் மேலிருந்து பார்க்கும்போது குவிந்திருக்கும். ஏனெனில் மொத்தப்பயனின் வளர்ச்சி குறைந்துகுறைந்தே செல்லும்.

மேலதிகமாக ஒரு பொருளை நுகரும்போது உண்டாகும் மனப்போக்கை அவதானித்த, சென்ற தலைமுறையைச் சேர்ந்தபொருளியலாளருக்குக் குறைந்துசெல் இறுதி நிலைப்பயன் விதி பொருத்த முடையதாகத் தெரிந்திருக்கலாம். சென்ற நூற்றாண்டின் அகநூலறிஞர் செய்த ஆராய்ச்சிகளும் இந்த உண்மையை உறுதிப்படுத்தியிருக்கலாம்.

உதாரணமாக ஒருவனுடைய கண்ணைக் கட்டிவிட்டு உள்ளங்கையை நிமிர்த்தியபடி கையை நீட்டச் சொல்லுங்கள். உள்ளங்கையிலே ஒரு பாரத்தை வையுங்கள் அது அவனுக்குத் தெரிந்துவிடும். பின்னர் மேலும் அதிக பாரத்தை ஏற்றிவிட்டுக் கடைசியில் ஆரம்பத்திலே ஏற்றிய அளவு பாரத்தை ஏற்றினால் அவனுக்கு அது தெரியாமலிருக்கலாம். அதாவது மொத்தப்பாரம் எவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்கு அவன் கடைசியாகச் சேர்க்கும் உபரிப்பாரத்தை உணரமாட்டான்.

**இலக்கங்களாலும், வளை கோடுகளாலும் குறைந்துசெல் இறுதிநிலைப் பயன் விதியைக் காட்டலாம்.**

| ஒரு பொருள் நுகரப்பட்ட அளவு (1) | மொத்தப் பயன் (2) | இறுதிநிலைப் பயன் (3) |
|---|---|---|
| 0 | 0 | |
| 1 | 4 | 4 |
| 2 | 7 | 3 |
| 3 | 9 | 2 |
| 4 | 10 | 1 |
| 5 | 10 | 0 |


**அட்டவணை 1.** மொத்தப்பயன் நுகர்வோடு உயர்ந்தாலும் அது குறைந்து செல்வேகத்திலேயே உயருகிறது. இதன் அர்த்தமென்ன? இறுதிநிலைப்பயன் (அதாவது பொருளின் கடைசி உபரி அலகு ஒவ்வொன்றினாலும் உண்டாகும் உபரிப் பயன்) குறைந்துகொண்டே போகுமென்பதே.

படிப்பகம்

www.padippakam.com



ஒலி, ஒளி, முதலிய புலனறிவுகள் கூட இத்தகைய குறைந்துசெல் பயனைக் கொடுப்பதை உணர்ந்த பழைய பொருளியலாளர் பொருளாதாரத் துறையில் உள்ள இந்த விதி பொருத்தமுடையதென நம்பினர்[1]. குறைந்து செல் இறுதிநிலைப்பயன் விதியை இலக்கங்களினாலோ கோடுகளினாலோ காட்டலாம்.




**படம் 3.** ஒவ்வொரு புதிய அலகினாலும் விளையும் மேலதிகப் பயனைத் தடித்த படிகள் காட்டுகின்றன. மொத்தப்பயன் குறைந்துசெல் வீதத்தில் அதிகரிக்கிறது என்பதை வலப் பக்கத்திலுள்ள இறுதிநிலைப்பயனின் குறைந்துசெல் படிகள் காட்டுகின்றன. அலகுகளின் அளவைக் குறைத்ததால், மொத்தப் பயனிலுள்ள படிகள் அழுத்தமாக்கப்பட்டு, மொத்தப்பயன் சுறுத்த கோடாகக் காட்சியளிக்கிறது. இறுதிநிலைப்பயன் இப்போது (a) யிலுள்ள கோட்டின் வளைவோடும் (b) யில் காட்டிய இறுதிநிலைப்பயனோடும் ஒத்திருக்கிறது. இது கீழ்நோக்கிச் சரிந்து செல்கிறது.[2]

1 பணத்தேவைக்கோட்டை விளக்க, பயனை அளக்கும் சரியானமுறை முக்கியமான தல்லவென்பதை இக்காலத் தலைமுறையினர் உணர்ந்தனர். சிலர் உள்முக ஆராச்சியைப் பயன்படுத்துவர். இரண்டாம் தொப்பியின் இறுதிநிலைப்பயன் முதலாம் தொப்பியின் இறுதி நிலைப்பயனில் அரைவாசியாகும். பொருளியலாளர் பெரும்பாலும் இன்று " சமநோக்குக் கோடுக "ளைவே பயன்படுத்துவர். இதனைப்பற்றி இந்த அத்தியாயத்தின் கடைசியிலுள்ள அனுபந்தத்தைப் பார்க்க. இவற்றில் ஏதாவது ஒருமுறையை அனுசரித்து சந்தைத்தேவைக் கோட்டின் பொதுத்தன்மைகளை நிலை நாட்டலாம்.

2 (3) ஆம் கோட்டிலுள்ள இறுதிநிலைப் பயன்களின் மொத்தம் குறித்த ஒரு புள்ளிக்கு மேலே கணக்கெடுத்தால் 2 ஆம் கோட்டிலுள்ள மொத்தப்பயனோடு சமனாயிருக்கும். (4+3+2=9 இது 2 ஆம் கோட்டிற் காட்டப்பட்டுள்ளது. 4+3 எதைக் கொடுக்கும் ?) படத்தைப் பார்த்துக் கணிக்குமிடத்து, இறுதி நிலைப்பயன் கோட்டின் கீழுள்ள பரப்பு படம் 3a யிற் காட்டப்பட்டுள்ள மொத்தப் பயன் கோட்டுக்குச் சமனாயிருக்கவேண்டும். நமது சமன்பாடு குறித்த ஒரு அளவுமட்டத்திலேயே செய்யப்படுகிறது. இவற்றிலிருந்து மொத்தப் பயன், இறுதிநிலைப்பயன்களின் மொத்தத்துக்குச் சரியாயிருக்குமென்பது தெரிகிறது.

www.padippakam.com



## குறைந்துசெல் இறுதிநிலைப்பயனும் தேவைப்போக்கும்: மற்றொன்று விரித்தல்

படம் 3 *b* யிலுள்ள கோடு (படிகள்) கீழ் நோக்கிச் செல்லும் தேவைக் கோடுபோலத் தெரிகிறது. ஆனால் அது அப்படியன்று. அது இறுதி நிலைப்பயனின் மனவியற்சார்பான அளவைக் காட்டுகிறதேயன்றி புறவய மான சந்தைவிலையின் டொலர் சதம் காட்டவில்லை. இருந்தும் இந்த இருகோடுகளுக்குமிடையே ஒரு சம்பந்தமுண்டு. கீழ் நோக்கிச் செல்லும் தேவையை குறைந்துசெல்லும் இறுதிநிலைப் பயன்விதியிலிருந்து பொரு ளியலாளர் சில நியாயமான நிபந்தனைகளின்கீழ் நிரூபிக்கலாம். இந்த இரண்டு தன்மைகளையும் ஒன்றாகக் காணவும் முடியும்.

இதனைப் பின்வருமாறு விளக்கலாம். உதாரணமாகச் சீனி வாங்குகி றோம் என்று வைத்துக்கொள்வோம். இறுத்தல் 4 சதந்தான் நடப்புச் சந்தைவிலை. அந்த விலையில் ஒரு வாரத்துக்கு 1. 2......5 இறுத்தல் வாங்குவதா? அல்லது ஒன்றும் வாங்காமல் விடுவதா? இறுத்தல் 1 சத வீதம் நான் எவ்வளவு வாங்குவேன். 6 சதவீதமும் 20 சதவீதமும் எவ் வளவு வாங்குவேன்.

சீனி எனக்கு அத்துணை முக்கியமான பொருளன்று. ஈற்றில் எவ்வளவு சீனி தேவைப்பட்டாலும் ஒரு டொலருக்குமேல் சீனி வாங்க மாட்டேன். எனது வாராந்தச் சம்பளம் 200 டொலரானபடியால் இந்த ஒரு டொலர் மிக அற்பசெலவே. இந்த அற்ப செலவைக் கொடுக்கும் சீனியை எவ் வளவு வாங்கவேண்டுமென்று நான் நிச்சயப்படுத்தினாலும், மற்றப்-பொருள்கள் விடயத்தில் நான் செலவுசெய்யும் கடைசி பென்னியினால் உண்டாகும் மேலதிகப் பயனில் அல்லது இறுதி நிலைப்பயனில் அதிக மாற்றமிருக்கப்படமாட்டாது. எனவே எனது கடைசி டொலரினால் உண்டா கும் இறுதிநிலைப்பயன், ஏறக்குறைய ஒரேமாதிரியாகவேயிருக்கும்; சீனி பற்றி நான் என்ன முடிபுசெய்தாலும் இது மாறாது. (ஒரு உதாரணத்தால் இதை விளக்கலாம். கடலின் நீர் மட்டத்தை, விரிகுடா ஒன்றிலுள்ள நீர் மட்டத்திலேற்படும் மாற்றம், மாற்றமாட்டாது. சீனி விடயமும் அந்த விரிகுடாவிடயம்போன்றது. எனது வருமானத்தின் பெரும்பகுதியைக் கொண்டு நான் வாங்கும் ஏனைப் பொருள்கள் கடல்போன்றவை.)

## பயனுடைமையை அளக்கும் நிரந்தர அளவுகோல் பணமே.

சீனியின் இறுதிநிலைப் பயனைப்பற்றி நினைக்கும்போது பணம் என்ற அளவுகோல் கிடைத்துள்ளது. அதனால் அந்தப்பயனை எடுத்துக்கூறலாம். இந்த விடயத்தில் இறுதிநிலைப்பயனை அளக்கக்கூடிய இயல்பான அலகு பென்னி அல்லது டொலரே. அவற்றின் இறுதிநிலைப்பயனைச் சீனித் தேவைத் தீர்மானங்கள் மிக அற்பமாகவே மாற்றக்கூடும்.

**அட்டவணை 1** இலுள்ள இலக்கங்களையும், படம் 3b யிலுள்ள இறுதி நிலைப் பயன்கோட்டையும் பார்க்க. பயன் அளவிடப்படும் அலகுகள் பண

www.padippakam.com



அலகான "சதம்" அல்லது "பென்னி" யாயிருக்கும். முதல் இருத்தல் சீனி நாலு சதம் மதிப்புள்ள பயனை உண்டாக்குகிறது. 2 இருத்தல் சீனி எல்லாமாகா 7 சதம் மதிப்புள்ள பயனை உண்டாக்குகிறது. இரண்டாவது இருத்தல் சீனியைச் சேர்த்தபொழுது ஒரு இருத்தலுக்கு 3 சதம் பெறுமதியான பயனையே கொண்டுவந்தது. இது குறைந்துசெல் இறுதி நிலை விதிக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. ஏனெனில் முதல் இருத்தலின் பெறுமதியான 4 சத இறுதிநிலைப்பயன் இரண்டாம் இருத்தலில் குறைந்துள்ளது. ஒவ்வொரு கூடிய அலகு சீனியும் இறுதிநிலைப்பயனைக் குறைத்துக்கொண்டே வருகிறது. அது நமது புதிய அலகான பண அலகினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இப்போது அட்டவணை 1 ஐப் பயன்படுத்தி சீனிக்கான எனது தேவைக் கோட்டைப் பெறலாம். ஓர் இருத்தல் 10 சதவீதமாகக்கூட நான் ஒரு இருத்தல் சீனியையாவது வாங்கத் தயாராயிருப்பேனா? இல்லை. ஏனெனில் 1 ஆம் அட்டவணைப்படி அதனால் எனக்குக் கிடைக்கும் இறுதிநிலைப் பயன் 4 சதமே. எனவே சீனி மூலம் கிடைக்கும் 4 சதப் பயனுக்காக 10 சதப் பயனைவிட்டுக் கொடுப்பது மடைமை. எனவே 10 சதத்தில் நான் சீனியை வாங்கமாட்டேன்.

என்ன விலையிலே சீனியை வாங்குவேன்? ருத்தல் $3\frac{1}{2}$ சதம் எப்படி? அட்டவணைப்படி முதல் அலகு சீனியால் எனக்குக் கிடைக்கும் பயன் 4 சதப்பயனே. எனவே அதற்கு $3\frac{1}{2}$ சதம் கொடுக்க நான் பின்னிற்க மாட்டேன். இரண்டாம் அலகைப் பெறுவதெப்படி? இரண்டாம் அலகினால் எனக்குக் கிடைக்கும் இறுதிநிலைப்பயன் 3 சதமே. எனவே நான் அந்த வகையில் சீனி வாங்கமாட்டேன். $3\frac{1}{2}$ சதத்தில் நான் ஒரு அலகே வாங்குவேன் ; கூடவுமில்லை ; குறையவுமில்லை.


இதே ஆராய்ச்சிப்படி எனது தேவைக் கோட்டைக் கீறுவது சுலபம். 4 சதத்துக்கு மேலே நான் எதையும் வாங்கமாட்டேன். 4 சதத்துக்கும் 3 சதத்துக்குமிடையில் ஒரு வாரத்துக்கு ஒரு அலகு சீனியே வாங்குவேன். மூன்று சதத்துக்கும் இரண்டு சதத்துக்குமிடையில் நான் 2 அலகே வாங்குவேன் ; 2 சதத்துக்கும் 1 சதத்துக்குமிடையில் நான் மூன்று அலகை வாங்குவேன் ; 1 சதத்துக்கும் 0 சதத்துக்குமிடையில் சரியாக 4 அலகுகள். விலை பூச்சியமாக இறங்கினால்தான் ஒரு வாரத்துக்கு 4 அலகுக்குமேல் சீனி நுகர்வேன். 4 சதத்தில் ஓர் அலகை வாங்கவோ ஒன்றையும் வாங்காமல்விடவோ எனது மனம் நாட்டங்கொள்ளாது. 3, 2, 1 சத விலைகளில் வாங்குதல் வாங்காமல் விடுதல் என்பதுபற்றி நொதுமலாக இருப்பேன்[1].

1. சதம், அலகு என்பவற்றைப் பிரித்தல் சம்பந்தமாக ஒரு பிரச்சினையுண்டு. $3\frac{1}{2}$, $3\frac{1}{2}$ சதவிலையென்று கூறுவதையிட்டுச் சஞ்சலப்படவேண்டாம். $3\frac{1}{2}$ சத விலையில் நான் ஒரு இருத்தல் சீனியை ஒருவாரத்துக்கு நுகர்வேன் என்றால், இரண்டுவாரத்துக்கொருமுறை நான் 7 சதத்துக்கு 2 இருத்தல் வாங்குகிறேன் என்பதே அர்த்தம் ; ஆனால் ஒரு ருத்தலையே ஒருவாரத்துக்கு நுகர்வேன். இவ்வாறே $2\frac{1}{2}$ சதம் $3\frac{1}{3}$ -சதம் என்பவற்றையும் விளக்கலாம்.

www.padippakam.com



குறைந்துசெல் இறுதிநிலைப் பயன் கீழ்நோக்கிச் செல்லுந் தேவையை விளக்கப் பயன்படும்.




படம் 4. ஒரு பொருளின்மீதுள்ள செலவு, மற்றப் பொருள்கள்மீதுள்ள செலவின் இறுதிநிலைப் பயனைப் பாதிக்க ஆற்றலின்றி மிகச் சிறியதாயிருந்தால் பயனையும், இறுதிநிலைப்பயன், வளைகோட்டையும் பண அலகுகளிலே எடுத்துக்கூறலாம். அப்போது *dd* தேவை வளைகோட்டின் சரிவை இறுதிநிலைப்பயன் வளைகோட்டோடு ஒப்பிடலாம். $P=1\frac{1}{2}$ சதம், $Q=3$ என்பன ஏன் என்பதை விளக்குக.

4 ஆம் படத்திலே மேலே தரப்பட்ட தேவைக்கோடு பற்றிய தகவல்களைச் சுருக்கிக் காட்டுவதோடு தேவைக்கோடு படியாயிருந்தாலென்ன வரியாயிருந்தாலென்ன, இறுதி நிலைக்கோடாக நேரடியாய்க் கொள்ளலாம் என்பதைக் காட்டுகிறது. இது விசேடமான ஒரு சந்தர்ப்பத்தில், அதாவது மற்றப் பொருள்கள்மீது செலவு செய்யப்பட்ட வருமானத்தின் இறுதி நிலைப்பயன், சிறிய ஒரு பொருள்மீது செலவு செய்யப்படும் சிறு தொகையில் உண்டாகும் மாற்றங்களால் மாறாது எனக் கொள்வது நியாயமானதே. இத்தகைய சந்தர்ப்பத்திலே இறுதிநிலைப்பயனைக் குறிக்கும் அலகுகளை அளக்கும்போது அவை பண அலகாயிருக்கவேண்டும்; அப்போது இரண்டு கோடுகளும் ஒன்றாகவே காணும்[1]. நுகர்வோனுக்குத் திருப்தி கொடுக்கக் கூடியதாயிருக்கும். இதைப்பின்வருமாறு குறிப்பிடலாம்.

[1]. சீனியின் இறுதிநிலைப்பயன் கோடு, சீனியிலேயே தங்கியுள்ளது. மற்றப் பொருள்களின் மாற்றங்கள் இதைப்பாதிக்காது என்ற கருதுகோளிலேயே இந்த உதாரணம் தங்கியிருக்கிறது. இவ்வாறு தனித்து நில்லாவிட்டால் மேலே கூறிய ஆராச்சியை மாற்றிவிடவேண்டுமென்பதை மார்ஷல் ஒத்துக்கொண்டிருப்பார். துணைப்பொருள்களாகவும், போட்டிப்பொருள்காளாகவும் உள்ள பொருள்களை இனப்படுத்த வேண்டுமென மாஷல் விரும்பியிருப்பார்; அதாவது உற்சாகமளிக்கும் பணங்கள் அவருடைய Q வாக இருக்கலாம் (இதில் சீனியும் சேரும்). இந்த இனத்திலே செலவு சிறிதாகவும், இனத்தின் பயன் மற்ற இனங்களோடு சேராது தனித்துமிருந்தால் மேலே கூறிய ஆராச்சி பொருத்தமுடையதென எண்ணியிருப்பார்.

www.padippakam.com



இறுதிநிலைப் பயன்கோட்டின் தன்மை தேவைக் கோட்டின் இறங்கும் தன்மையோடு எவ்வாறு தொடர்புறலாம்; பிந்தியது முந்தியதோடு எவ்வாறு தொடர்புறலாம் என்பதைப்பற்றி ஆரம்ப நூலுக்குப் போதிய அளவு குறிப்பிட்டுள்ளோம்[1].

### நியாயபூர்வமாகத் தெரிதல் முறை

நுகர்வோனொருவன் தனது வருமானத்தைப் பயன்முறையாக அல்லது சுபீட்சமாய் வாழும் வகையாக இருப்பதற்குப் பலவகை விலையுள்ள பொருள்களில் செலவு செய்வானாகில் நிறைவேற்றப்படவேண்டிய அடிப்படைச் சமநிலைத்தன்மை என்ன? அவன் வாங்கும் கடைசி முட்டை, அவன் வாங்கும் கடைசி இறைச்சித்துண்டின் இறுதி நிலைப்பயனுக்குச் சமனாயிருக்குமென அவன் எதிர்பாக்க முடியாது. ஆட்டிறைச்சித் துண்டு முட்டையிலும் பார்க்க விலையுள்ளது. ஒரலகு இரண்டு மடங்கு விலையுள்ள பொருள் விலைகுறைந்த பொருளிலும் பார்க்க இரு மடங்கு அதிகமான இறுதிநிலைப் பயனைக் கொடுக்குமென்பது நியாயமானதே.

சுருக்கமாகக் கூறுவதானால் விலைக்கு ஏற்ற வீதத்தில் இறுதிநிலைப் பயனைக் கொண்டு வரக்கூடியதாக ஒவ்வொரு பொருளையும் அவன் நுகரக் கூடியவாறு ஒழுங்கு செய்வானாகில் அத்தகைய சமநிலையே **குறைந்து செல்லும் இறுதிநிலைப்பயன் கீழ் நோக்கிச் செல்லும் தேவையை விளக்கப் பயன்படுகிறது.**

இறுதிநிலைப்பயன் விலைக்கேற்ற விகிதத்திலிருக்குமானால் ஒவ்வொரு பொருளின் இறுதிநிலைப்பயனையும் விலையினால் பிரித்தால் வரும் வீதங்கள் சமமாயிருக்கவேண்டும். இதை $Mu/P$ இறுதி நிலைப்பயன் விலை வீதம் என்போம். இதுவே ஒரு பொருள் மீது நுகர்வோன் செலவு செய்யும் ஒவ்வொரு டொலர் மீதும் பெறும் இறுதிநிலைப்பயனாகும். கடைசி இறுதி நிலையைப் பெறுவதானால் ஒவ்வொரு பொருளின் டொலர் இறுதிநிலைப் பயனும் ஒத்திருக்க வேண்டும். அடுத்த பிரிவில் இந்தக் கொள்கையை வலியுறுத்துவோம்.

### இறுதிநிலை சமநிலைத்தன்மை : ஒவ்வொரு பொருளுக்கும் டொலர் இறுதி நிலைப்பயன் சமனாயிருக்க வேண்டும்.

நிலைத்த வருமானமுள்ள நுகர்வோன் பல பொருள்கள் விடயத்திலும் குறிப்பிட்ட சந்தை விலைக்குப் பொருள்களை வாங்கவேண்டியிருந்தால் உயர்ந்தபட்சச் சமநிலைப்பயனை அல்லது திருப்தியைப் பெறுவதானால் பின் வரும் நிபந்தனை நிறைவேறவேண்டும்.

1. குறிப்பிட்டபொருளின் செலவு தட்டிக்கழிக்கக்கூடியதல்லாததாயிருந்தால் என்ன நடக்கும் (அதாவது முன்கூறிய உதாரணப்படி குடாவிலுள்ள நீர் சமுத்திரத்தின் மட்டத்தைப் பாதிக்கக்கூடிய அளவு அதிகமாயிருந்தால் என்ன நடக்கும்) என வினவுவோர் அனுபந்தத்தினடியிலுள்ள குறிப்பைப் பார்க்கலாம்.

www.padippakam.com



**ஒரு டொலருக்குச் சம இறுதிநிலைப் பயன்கள் பற்றிய விதி**

சீனி போன்ற ஒவ்வொரு பொருளும், உப்புப் போன்ற வேருெரு பொருளுக்குச் செலவு செய்யப்படும் டொலரி (அல்லது பென்னி)ன் இறுதி நிலைப்பயன் எவ்வளவோ அவ்வளவுக்கு அதன்மீது செலவிடும் டொலர் (பென்னி)ன் இறுதிநிலைப்பயன் இருக்கும் அளவு நுகரப்படும். ஒரு டொலர் பெறுமதியான ஒரு பொருள் அதிக இறுதி நிலைப்பயனைக்கொடுக்க முடியுமாளுல், ஒருவன் ஏனைப் பொருள்களில் செலவு செய்யும் பணத்தை எடுத்து இதில் செலவு செய்வது லாபமுடையதாகும். அதுவும் ஒரு டொலரின் குறைந்து செல் இறுதிநிலைப் பயன் விதி அதன் டொலர் இறுதி நிலைப்பயனைச் சமனுக்கும் அளவுக்கே செலவு செய்யலாம். சாதாரண மட்டத்துக்குக் குறைவான டொலர் இறுதிநிலைப்பயனை ஒரு பொருள் கொடுக்குமாளுல், சாதாரண மட்டத்துக்கு செலவு செய்யப்படும் கடைசி டொலரின் இறுதிநிலைப்பயன் மறுபடியும் ஏறும் வரையும் குறைவாக வாங்க வேண்டும்.[1]

நுகர்வோன் சமநிலை சம்பந்தமான இந்த மூலாதார நிலையை விலை, இறுதி நிலைப்பயன்கள் என்பவற்றின் கணக்கில் பல பொருள்களுக்கும் பின்வருமாறு எழுதலாம் :

$$\frac{\text{இ.ப. (M.}u\text{) பொருள் 1}}{\text{வி (P)}_1} = \frac{\text{இ.ப. (M.}u\text{) பொருள் 2}}{\text{வி (P)}_2} = \frac{\text{இ.ப. (M.}u\text{) பொருள் 3}}{\text{வி (P)}_3}$$

...... = ஒரு டொலர் வருமானத்துக்குரிய சாதாரண இ. ப. (M.$u$)

இந்த வாய்ப்பாட்டைச் சொல்லிக் கொண்டிருப்பதிலும், இதன் தாற்பரியத்தை தர்க்க ரீதியாக அறிந்துகொள்வதே முக்கியம். இந்தச் சமநிலை நிபந்தனையை, பொது அறிவைக் கொண்டு சமாதானங் கூறிக் கொள்வது அவசியம் ; அவ்வாறு சொல்லக்கூடிய சமாதானம் பின்வருமாறு : சீனியின் இறுதிநிலைப் பயன் அதன் விலையிலும் பார்க்க இரண்டு மடங்கு ஆகவும், உப்பின் இறுதி நிலைப்பயன் அதன் விலையிலும் மூன்று மடங்காகவுமிருக்கும்போது நான் என் சமநிலையிலிருக்க முடியாது. ஏனெனில் உப்பிலே செலவிடப்படும் கடைசிப்பண அலகு சீனியிலே செலவிடப்படும் கடைசிப்பண அலகிலும் அதிக இறுதிநிலைப்பயனைக் கொடுக்கிறது. குறைந்த இறுதிநிலைப் பயனைத் தரும் சீனியிலே செலவிடும் பணத்திலொரு பகுதியை அதிக இறுதி நிலைப்பயனைத் தரும் உப்பில் செலவிட்டால் என்ன நடக்கும். இந்த இரண்டு இறுதிநிலைப்பயன்களுக்குமிடையிலுள்ள

1. பொருளாதாரத்திலே சில இடங்களில் அலகுகளைப் பிரிக்கமுடியாது. இதுமுக்கியம். காடில்லாக் கார்கள் பயற்றங்கொட்டைபோன்றனவல்ல. அவை பிரிக்கமுடியாதவை. அதில் ஒரு காரைவாங்கலாம். இரண்டை எதற்கு ? முதற்காரின் இறுதிநிலைப்பயனை அதன் விலையினல் பிரித்தால் அது வேறு பொருள்களிலே செலவு செய்யும் டொலர்களின் இறுதிநிலைப் பயனுக்கு அதிகமாகும். எனவே நான் காரையே வாங்குவேன். இரண்டாவது காரின் இறுதிநிலைப்பயன் குறைவு. ஆனபடியால் அதை வாங்கமாட்டேன். பொருளைப் பிரிக்கமுடியாது போனுல் சமநிலைக்குரிய சமன்விதியைச் சமனில் விதியெனமாற்றலாம்.

www.padippakam.com



வித்தியாசத்தை நான் பெறுவேன். எனவே நான் மாற்றத்தை உண்டாக்கிப் புதிய நிலையை மறுபடியும் ஆலோசனை செய்வேன். கடைசியாக உப்புவாங்குவதில் நான் செலவு செய்த டொலர் மேலும் உப்பு வாங்குவது கடைசியாக உப்பு வாங்குவதில் நான் செலவுசெய்த டொலரிலிருந்து இறுதிநிலைப்பயனைக் குறைத்துவிட்டது. (குறைந்து செல் இறுதி நிலைப்பயன் சம்பந்தமான அடிப்படை விதியை ஞாபகப் படுத்துக) நான் குறைவாகச் சீனி நுகர்வதானது அதிற் செலவு செய்யும் பணத்தின் இறுதிநிலைப்பயனை உயர்த்திவிட்டது. இவ்வாறு நான் சமநிலையை அணுகிக்கொண்டு வருகிறேன். பூரண சமநிலை அடையும்வரை நான் சிறிது லாபம் பெற்றுக் கொண்டே வருவேன். இது சமநிலைக்குத் திட்டமாக அவசியமான ஒரு நிபந்தனையாகும்.–அதாவது நான் திருப்திப்பட்டுக்-கொண்டு மேலே செல்லவிரும்பாமலிருக்கும் நிலை–அதாவது ஒவ்வொரு பொருளிலும் செலவு செய்யும் ஒவ்வொரு டொலர் விடயத்திலும் இறுதி நிலைப்பயன் சமமாயிருக்கவேண்டும்[1].

பணம்செலவு செய்யும் விடயத்துக்கு மாத்திரமே இது பொருத்தமாயிருக்கவேண்டியதில்லை. உதாரணமாகப் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்ய உமக்கு ஓரளவு மணித்தியாலங்களேயுண்டென்று வைத்துக்கொள்வோம். உமது சராசரிப் புள்ளியை அதிகரிப்பதே உமது நோக்கமானல் உமது நேரத்தை எவ்வாறு பகிர்ந்து கொள்வது? ஒவ்வொரு பாடத்துக்கும் சமமான மணித்தியாலத்தைச் செலவு செய்வதினலா? இல்லை. ஒரே இறுதிநிலைப் பயனை நீர் ஒவ்வொரு பாடத்துக்கும் செலவு செய்த கடைசி நிமிடத்திலிருந்தும் பெறக்கூடிய வகையில் நீர் சரித்திரத்திலிருந்து ரசாயனத்துக்கும், ஜெர்மனிலிருந்து பொருளாதாரப் பாடத்துக்கும் மாறலாம்[2]. இதே இறுதிநிலை விதிப்படி உமது விடுமுறை காலத்தையும் சிறந்த முறையிற் பயன்படுத்தலாம். நமது இறுதி நிலைச்சமநிலை நிபந்தனை பொருளாதார விதிமாத்திரமன்று ; அது தர்க்க விதியுமாகும்.

### பதிலீட்டு–வருமான–விளைவுகள்

இறுதிநிலைப்பயன் என்ற விதி தேவை குறைந்துசெல் விதியை நிரூபித்து விட்டது. இதே விடயத்தை மற்றொருவகையில் பார்க்கும்போது இறுதி நிலைப்பயனின் பேச்சே நேரடியாக எழுவதில்லை. ஆனல் அது விரும்பிய பயனைக் கொடுக்கிறது. தொகை விலை என்பவை ஒன்றையொன்று பாதிக்

1. பயனை இலக்கக்கணக்கிலே அளவிடுகிறேமா வேறு விதமாயளவிடுகிறேமோ என்பதைப் பொருட்படுத்தாமலே இந்தச் சமநிலை நிபந்தனையின் உண்மையை நிரூபிக்கலாம். தேவை நிர்ணயங்களால் ஒரு பென்னியின் அல்லது டொலரின் இறுதிநிலைப்பயன் மாறினலும் இது மாருது. சார்பான இறுதிநிலைப் பயனே அவசியம்.

2. எல்லாப் பாடங்களிலும் 89 புள்ளியைப் பெறக்கூடியவாறு நீர் படிக்க வேண்டுமென்பதன்று. உமது சராசரி 93, 92, 90, 81 என்ற மட்டங்களில் உமது சராசரி உச்சநிலையடையலாம். ஆனல் ஒவ்வொரு இறுதிநிலை மணிநேரமும் ஒவ்வொரு பாடத்துக்கு ஒரு மட்டத்தின் $\frac{1}{10}$ புள்ளியை அதிகரிக்கலாம்.

www.padippakam.com



கும் முறை பெரிதா சிறிதா என்பதை நிச்சயிக்கும் அமிசங்களைப்பற்றிய தன்மையையும் காட்டுகிறது.

**பதிலீட்டு-விளைவு**

விலை ஏறும்போது பொருளின் நுகர்வு குறையுமென்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை. மற்றப் பொருள்களின் விலை ஏருமல் தேயிலை அருந்தலாகிவிட்டதென்பது அர்த்தம். எனவே ஒருவர் தமது வாழ்க்கைத் தரத்தை மலிவாக நிலைநிறுத்தவிரும்பினுல், தேயிலைக்கான வேறுபொருள் களைப் பயன்படுத்தவேண்டும். தேயிலையைக் குறைவாக வாங்கிக் கோப்பி, கொக்கோ முதலியவற்றை அதிகமாக வாங்கலாம். சினிமாச் சீட்டு, நாடகச் சீட்டிலும் மலிவானுல் அதையே மக்கள் அதிகம் நாடுவர். வியாபாரிகளும் இந்த யுக்தியையே கையாள்வர். ஒறுப்பான பொருள்கள் விலையாகாவிட்டால் அவர்கள் மலிவான பதிற் பொருள்களை உற்பத்திசெய்து சந்தையில் விடுவர். இவ்வாறு பதிற்பொருளை உற்பத்தி செய்வதால் தேவையான அளவு பொருளை, மலிவான செலவில் உற்பத்திசெய்கிருன்.

**வருமான விளைவு**

இரண்டாவதாக, உமது காசு வருமானம் நிரந்தரமானதாயிருந்தால் ஒரு பொருளை, அதுவும் நீர் அதிகமாக வாங்கும் ஒரு பொருளை அதிக விலையில் வாங்குமாறு நிர்ப்பந்தமுண்டானுல், அது வருமானத்திலே விழுக்காடு ஏற்பட்டமாதிரியோ, வாங்குஞ் சக்தி குறைந்தமாதிரியோ இருக்கும். நிசவருமானம் குறையுமானுல் இப்போது நீர் தேயிலையைக் குறைவாகவும் ஏனைப் பொருள்களைக் குறைவாகவுமே வாங்கவேண்டிய நிலையுண்டாகும். விலையேறிய பொருள் "இளக்கமான" தினிசாயிருந்தாலொழிய, மற்றும்படி உமது வருமானம் குறையுமானுல் அந்தப் பொருளை குறைவாகவே வாங்க முயற்சிசெய்வீர்[1]. சம்பந்தப்பட்ட பொருள், நுகர்வோன் என்ற அமிசங்களை அனுசரித்து இந்த விளைவுகளின் அளவு முக்கியத்துவம் வித்தியாசப்படும். சில சந்தர்ப்பங்களிலே இவற்றின் விளைவாக உண்டாகும் தேவைக்கோடு மிக நெகிழ்ச்சியுடையதாயிருக்கும். உதாரணமாக ஒரு பொருள்மீது நுகர்வோனெருவன் அதிக பொருள் செலவு செய்தானுக்கும்; அத்துடன் அப்பொருளுக்குப் பதிலீடு செய்ய வேறு பொருள்கள் வசதியாயிருக்குமாயினும் சாப்பாட்டுராமன் ஒருவன் விடயத்

[1]. வருமானப் பதிலீட்டு விளைவுகள் தேவையின் கீழ் நோக்கிய சரிவை விளக்குவதோடு இந்த விதிக்குப் புறநடையானதொரு மிக அருமையாக நிகழும் நிகழ்ச்சியையும் விளக்குகிறது. 1845 இல் நிகழ்ந்த அயர்லாந்துப் பஞ்சத்திலே உருளைக்கிழங்கின் விலை மிக உயர்ந்தது. மாமிசம் சாப்பிட வழியில்லா ஏழைகள் உருளைக்கிழங்கை அதிகமாகச் சாப்பிட்டிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் உயிர் வாழ்வதற்கு உருளைக்கிழங்கு மிக அவசியமாயிற்று. சாதாரணமாக வறிய ஒருவரின் வருமானம் உயர்ந்தால் உருளைக்கிழங்கு சாப்பிடுவது குறையும் ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்திலே குறைவான பொருளான உருளைக் கிழங்கின் பதிலீட்டு விளைவு வேண்டுமெனறே தவருன முறையிற்செல்லும் வருமான விளைவால் மாற்றப் பட்டுவிட்டது.

www.padippakam.com



தில் மாட்டிறைச்சி பதிலீட்டுப் பொருளாகலாம். ஆனுல் உப்புப் போன்ற ஒரு பொருள் விடயத்தில் நுகர்வோர் அதிக பணஞ் செலவுசெய்ய வேண்டியதில்லே. மேலும் அதற்குப் பதிலாக வேறு பொருள்களே இலே சாகப் பயன்படுத்தமுடியாது. அன்றியும் முக்கியமான வேறு பொருள் களுக்கு அனுமானமாக இது மிகச் சொற்பமாகவே தேவைப்படும். அப் போது தேவை நெகிழ்ச்சியற்றதாகும்.

**மதிப்பின் முரண்பாடு**

"தேசங்களின் செல்வம்" (The Wealth of Nations) (1776) என்ற இக்காலப் பொருளாதாரத்தின் ஆதி நூலே எழுதிய அடம்ஸ்மித் என்ப வரைக் கஷ்டப்படுத்திய பிரசித்தமான பிரச்சினேயை விளக்குவதற்கு மேலே காட்டிய கொள்கைகள் துணேபுரிகின்றன. தண்ணீரில்லாமல் உயிர்வாழ முடியாது. அது மிகப்பயனுள்ள பொருள். அதன் விலே ஏன் மிக மலிவாயிருக்கிறது? ஆனுல் வைரக்கல் வாழ்க்கைக்கு அத்தியாவசியமன்று. அதற்கேன் அவ்வளவு விலேயுண்டு. இவைதாம் அவர் எழுப்பிய பிரச் சினே.

இன்று பொருளாதாரத்தைப் படிக்கத் துவங்கும் மாணவரே இந்தக் கேள்விக்கு விடை கூறிவிடுவர். "தண்ணீர் சம்பந்மான தேவைக்கோடும், சப்ளேக்கோடும் மிகக் குறைவான விலேயிலே வெட்டுகின்றன. ஆனுல் வைரத்தின் விடயம் அப்படியன்று. அது உயர்விலேயிலேதான் வெட்டு கிறது."

இந்தப் பதில் பொருத்தமுடையதே. அடம் ஸ்மித் இந்தப் பதிலேக் கூறிக்கொள்ளமாட்டார். ஏனெனில் சப்ளேக்கோடும் தேவைக்கோடும் அந் தக் காலத்திலே கண்டுபிடிக்கப்படவில்லே. அதற்கு 75 வருடம் செல்ல வேண்டியிருந்தது. ஆனுல் விடயம் தெரிந்துபோனதும் அடம் ஸ்மித் "தண்ணீர் சம்பந்தப்பட்ட சப்ளே, தேவைக்கோடுகள் குறைந்த விலேயில் ஏன் ஒன்றையொன்று வெட்டுகின்றன" என்று கேட்கத் துவங்குவார்.

இதற்குப் பதில் கூறுவது இலேசு. இரு பகுதிகளாகக் கூறலாம். (1) வைரக்கல் எடுப்பது மிக அருமை; மேலதிகமாக அவற்றைப் பெறுவ தானுல் அதிக விலேகொடுக்கவேண்டும். தண்ணீர் இலேசாகவும் அதிக மாகவும் கிடைக்கும். உலகில் பல பாகங்களிலே இதை மலிவாகப் பெற லாம்.

நூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த பொருளியலறிஞர்கூட முதலிற் கூறிய விடயத்தை நியாயமெனக் கூறி அவ்வளவில் ஆராய்ச்சியை விட் டிருப்பர். தண்ணீர் வைரத்திலும் பார்க்கப் பயனுள்ளதென்பதையும், இவற்றின் விலேகளேயும், அவர்கள் பொருத்திப் பார்ப்பதற்கு அறியா திருந்திருப்பர். இந்தப் புதிரை அடம்ஸ்மித் அவிழ்க்கமுடியதுபோனுர். ஒரு பொருளின் பயன்படு மதிப்பு வேறு—அதாவது பொருளாதார நன்மைக்கு அது உதவும் பங்கு வேறு—அப்பொருளே விற்பனே செய்வதால்



படிப்பகம்

www.padippakam.com



வரக்கூடிய பணவருவாயான பண்டமாற்று மதிப்பு வேறு, என்று அவர் கருதினர். ஒரு பொருளின் இறுதிநிலைப் பயன், மொத்தப் பயன் என்பவற்றிடையேயுள்ள வேறுபாட்டைக் காண அவருக்குத் தெரியவில்லை.

இன்று நாம் பின்வரும் விடயங்களின் செலவு விடயங்களையும் சேர்த்து ஆராய்வோம்.

(2) தண்ணீரின் மொத்தப் பயன் அதனுடைய விலையையோ தேவை யையோ நிச்சயிக்கவில்லை.

சார்புடைய இறுதிநிலைப்பயனும் கடைசியாகவுள்ள சிறிதளவு நீருமே அதன் விலையை நிச்சயிக்கும். ஏன்? ஏனெனில் அந்தக் கடைசி அளவை, மக்கள் வாங்கலாம். வாங்காமலும் விடலாம். இறுதிநிலைப் பயனுக்கு அதிகமாகத், தண்ணீருக்கு விலையிருக்குமானல், அந்தக் கடைசி அலகை விற்கமுடியாது. அந்தக் கடைசி அலகின் பயனுடைமை மட்டத்தை அடையும் விலையிறங்கவேண்டும். தண்ணீரின் ஒவ்வொரு அலகும் வேறு ஒரு அலகு அளவு போலவேயிருக்கும். போட்டிச் சந்தையிலே ஒரு விலைதானிருக்கும். அதனுல் ஒவ்வொரு அலகும் பயன்மிகக் குறைந்த கடைசி அலகும் விற்பனையாகிறதோ, அந்தவிலைக்கு விற்பனையாகவேண்டும். (பொருளாதார மதிப்புக் கொள்கையை இலேசாக விளங்கிக்கொள்வதானல், வால்தலையை ஆட்டுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் போதும், இறுதி நிலைப் பயனிலே கருத்தைச் செலுத்தவேண்டுமேயன்றி மொத்தப் பயனில் அன்று.)

ஒரு பொருள் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ, அதனுடைய கடைசிச் சிறு அலகில் அதன் அளவு அதிகரிக்க அதிகரிக்க மொத்தப் பயனும் அதிகரிக்கும். எனவே பெருந்தொகையான தண்ணீருக்கு விலை அற் பமாவதன்காரணம் தெரிய வருகிறது. காற்று மிகப் பயனுள்ள பொரு ளானலும் அது ஏன் இலவசப் பொருளாய் விளங்குகிறது என்பதன் கருத்தும் தெளிவாகிறது. கடைசி அலகுகள் எல்லா அலகுகளின் மதிப் பையும் கீழே இறக்கிவிடுகின்றன.

**நுகர்வோர் எச்சப்பாடு.**

மொத்தப் பொருளாதார மதிப்பு அல்லது பொருளின் வருமானம் (விலை × தொகை) என்பதைப் பதிவு செய்யும் கணக்குமுறை "மொத்த நலனை" ப்பதிவுசெய்யும் அளவு முறையோடு வித்தியாசப்படுகிறது என்பதை மேலே போந்த ஆராய்ச்சி வலியுறுத்தும். காற்றின் மொத்தப் பொரு ளாதார மதிப்புப் பூச்சியம். பொது நலத்துக்கு அது உதவும் பங்கு மிக அதிகம். அதுபோலவே ஒரு பொருளின் உற்பத்தித் தொகையை அதிகரித்தால் சமூகத்தின் நலத்தை அதிகரிக்கிறோம். ஆனல் கோதுமை போன்ற தேவை நெகிழ்ச்சியில்லாத பொருளானல் ஓரளவு பொருளா தார மதிப்பையும் நாசமாக்குகிறோம்.

www.padippakam.com



மொத்தப் பயனுடைமை, மொத்தச் சந்தை மதிப்பு என்பவற்றுக்கிடையே ஒரு இடைவெளியுண்டு. இந்த இடைவெளி எச்சப்பாடாகும். இது நுகர்வோனுக்குக் கிடைப்பது. ஏனெனில் அவனுக்கு எப்பொழுதும் “ தான் கொடுப்பதிலும் அதிகமாகவே கிடைக்கும்.”

விற்பனையாளனுடைய செலவில் நுகர்வோன் நன்மையடைகிறனென்று சொல்லவுமுடியாது. பண்டமாற்றிலே ஒருவருக்குக் கிடைக்கும் லாபத்தினுல் மற்றவருக்கு நட்டம் உண்டாவதில்லை. சத்தியை உற்பத்திசெய்யவோ அழிக்கவோ முடியாது. அது போலல்லாது வியாபாரம் பங்குபற்றும் எல்லாருக்கும் நன்மையை உண்டாக்கும்.

இந்த எச்சப்பாடு எவ்வாறு உண்டாகிறது ? நுகர்வோன்வாங்கும் ஒவ்வொருபொருளின் அலகுக்கும் அப்பொருளின் கடைசி அலகின் பெறுமதியளவுக்கே அவன் விலைகொடுக்கிறன். ஆனுல் நமது அடிப்படை குறைந்துசெல் இறுதிநிலைப்பயன்பாட்டு விதியின்படி முதல் வாங்கும் அலகுகள் கடைசி அலகுகளிலும் பார்க்க அவனுக்கு மதிப்புடையன. எனவே முன்புவாங்கிய அலகுகள் ஒவ்வொன்றிலும் அவனுக்கு எச்சப்பாடுண்டாகிறது. அவனுக்கு நன்மையில்லாதவகையில் வியாபாரம் நடந்து மிச்சப்பாடு உண்டாகுமானுல் அவன் வாங்குவதை நிறுத்திவிடுவான்.

இரக்கமற்றதொரு விற்பனையாளன் நுகர்வோனைப் பார்த்து “ இந்தப் பொருளை வாங்குவதானுல் சிறிது அதிக விலைகொடுத்து மொத்தமாக வாங்கு ; அல்லது ஒன்றுமே கிடையாமற் போகும் “ என்று கூறலாம். நுகர்வோன் இல்லாமற் போவதிலும் சிறிது அதிகவிலையைக் கொடுத்து வாங்குவான். எனவே நுகர்வோன் மிச்சப்பாடு ஓரளவு பெறுவானென்பதற்கு இஃதோர் அத்தாட்சியாகும்.

நுகர்வோன் மிச்சப்பாடு என்ற கொள்கை சரியான சமூகத் தீர்மானங்களைச் செய்யச் சில சமயம் தேவைப்படும். புதிய தொரு கிளைவீதியை அமைக்க 1,00,000 டொலர் செலவாகுமென்றுவைத்துக்கொள்வோம். அது எல்லாரும் இலவசமாகப் பயன்படுத்துவதானபடியால் வருமானத்தைக்கொண்டு வரமாட்டாது. வீதியைப்பயன்படுத்தும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பயனும் நுகர்வோன்மிச்சப்பாடாகும். (1,000 பேர் அந்த வீதியைப் பயன்படுத்துகிறர்கள் என்று கருதுவோம். அவர்கள் அத்தனை பேரும் ஒரேவகையான பயனையே பெறுகிறர்களெனக் கொள்வோம்.) அந்த வீதியினுல் ஒவ்வொருவரும் 100 டொலர் நுகர்வோர் எச்சப்பாட்டை அனுபவிக்கின்றனர். அதனுல் அவர்கள் அந்த வீதியை அமைப்பதால் அவர்களுக்குப் பயன்கிடையாதெனை எண்ணி அதைக் கைவிடுவர்.

www.padippakam.com




நுகர்வோர் எச்சப்பாட்டைக் கணிப்பதற்குப் பல நுட்பமான வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன[1]. ஆனால் அவற்றைப்பற்றி இங்கே ஆராயவேண்டிய அவசியமில்லை. இக்காலத்துத் திறமைவாய்ந்த சமூகத்தின் குடிமக்கள் மிக அதிஷ்டசாலிகள். குறைந்த விலையில் அவர்கள் பல பொருள்களை வாங்கும் வசதியுடையவராயிருக்கின்றனர்.

ஒருவன் தனது பொருளாதார உற்பத்தித் திறனைப் பற்றியோ அவனின் நிச உழைப்பைபற்றியேயோ கர்வங்கொள்வானுனால், சற்றே தன்னுள் சிந்திப்பானாக. அவனை ஆதி மனிதர்வாழும் பாலைவனத்தீவுக்கு அனுப்பிவிட்டார்கள் எனக் கருதிக்கொள்வோம். அவனுடைய பண உழைப்பைக்கொண்டு அவன் எவ்வளவு பொருளை வாங்குவான்? மூலதன யந்திரம், வளமுள்ள மூலப்பொருள்கள், தொழிலாளர், பரம்பரையாக வரும் தொழில் நுட்ப அறிவு என்பன இல்லாமல் அவன் பொருள்களை எவ்வாறு உற்பத்தி செய்வான்?. நாம் ஆக்குவதற்கு உதவிசெய்யாத பொருளாதார உலகின் பயன்களை இப்போது அனுபவிக்கிறோம் என்பது தெளிவு.

தொழின் முயற்சித் தலைவர் ஒருவர் தாம் தமது தொழிலைக்கட்டி எழுப்பி நல்ல நிலைக்கு வந்துவிட்டதாக நினைக்கலாம். ஆனால் தொழில் பயிற்சியுடைய தொழிலாளர், யந்திரம், சந்தை, சமாதானம், ஒழுங்கு என இப்படிப்பட்ட பெரியதோர் அமைப்பை அவன் கண்முன்னே கண்டு பயன் படுத்தினுன். அதைக்கோடிக்கணக்கான மக்களும் பலதலை முறையினரும் கட்டியெழுப்பினுர்கள். இந்தச் சமூக அமைப்பை அகற்றிவிட்டால் நாம் ரொபின்சன் குருேசாவின் நிலையைக் கூட அடையமாட்டோம். கிழங்கும் காட்டுக்கனியும், சாப்பிட்டு வாழ்ந்த காட்டு மிராண்டிகள் நிலையையே அடைவோம்.

**சுருக்கம் :**

1. நுகர்வோர் எல்லாருக்குமான சந்தைத் தேவைகோடு ஒவ்வொரு நுகர்




படம் 5.

1. பயனுடைமையை அளப்பதற்குப் பணம் அளவுகோலாயிருக்கும் விசேடசந்தர்ப்பத்தில் நுகர்வோர் எச்சப்பாட்டை இலேசாக அளக்கலாம். படம் 5, படம் 4 இலுள்ள கறுத்த தேவைக்கோட்டை எடுத்துக்காட்டுகிறது. நுகர்வோன் OM சீனியை ஒவ்வொன்றும் ON விலைக்கு வாங்குகிறபோது அவன் மொத்த வருமானமாக செங்கோணமான OMEN ஐக் கொடுக்கிறன். ஆனுல் அந்தச் சீனி மொத்தப்பயனைக் கொடுக்கிறது (இது பணக்கணக்கில்) இது OMER இனுல் காட்டப்பட்டது. NER என்ற முக்கோணம், நுகர்வோர் எச்சப்பாடாகும். விலை குறைந்தால் இது பெரிதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



வோரினதும் தனிப்பட்ட தேவைக்கோடுகளெல்லாவற்றையும் கிடைநிலையாகக் கூட்டுவதால் உண்டாகும். தேவைக்கோடு பல காரணங்களை முன்னிட்டு நகரலாம் ; உதாரணம் : வருமானம் உயர்ந்தால் வலப்பக்கமாக நகரும். அதனுல் தேவை அதிகரிக்கும். போட்டிப் பொருளின் அல்லது பதிற்பொருளின் விலை ஏறினுல் (தேயிலைக்குப் பதிலாகக்கோப்பி, முதலியன) தேவையில் அதிகரிப்புண்டாகும். அனுபானமான ஒரு பொருளின் விலை ஏறினுல் (உதாரணமாக தேயிலைக்கு அனுபானமான லெமன்) எதிர் விளைவுண்டாகும். அதாவது *dd* கோடு கீழ் நோக்கி இடப்பக்கமாக நகரும். மக்களுடைய உருசிகள் மாறுவதாலும், சனத்தொகை மாறுவதாலும், அபேட்சைகள் மாறுவதாலும் தேவைகள் ஒன்றில் அதிகரிக்கலாம் ; அல்லது குறையலாம்.

2. கீழ் நோக்கி நகரும் தேவை விதியை விளக்குவதற்காகவே மொத்தப் பயனுடைமை இறுதிநிலைப்பயனுடைமை என்பனபற்றிய கருதுகோள் ஆராயப்பட்டன. ஒரு பொருளைப் புதிய இறுதிநிலை முறையில் சேர்ப்பதால் ஒவ்வொரு சேர்க்கையுடனும் மொத்தப் பயனுடைமை உயரும் ; ஆனுல் வளர்ச்சிவீதம் குறைந்து செல்லும் என்ற விடயத்தை வேறு விதமாகவும் கூறலாம். ஒரு பொருளின் தொகையோடு சமமான பொருளைச் சேர்த்தால் அதனுடைய இறுதிநிலைப்பயன் (இது ஒரு தொகையின் கடைசி மேலதிக அலகைச் சேர்ப்பதால் உண்டாகும் பயனுடைமையின் அதிகரிப்பாகும்) குறைய முற்படும்.

3. பணத்தின் இறுதிநிலைப் பயனுடைமை மாருதிருப்பதாகக் கொள்ளும் விசேடசந்தர்ப்பத்திலே பயனுடைமைபற்றிய உளவியல் அலகுகளை நீக்கிவிடலாம். பின்னர் பணமென்ற அளவுகோலைக்கொண்டு இறுதிநிலைப்பயனுடைமையைத் தேவைக்கோடாகவே மாற்றிவிடலாம். இவ்வாறு பழைய பொருளியலாளர் கருதினர். குறைந்துசெல் தேவை விதியின் உண்மையை அவர்கள் குறைந்து செல் இறுதிநிலைப்பயன்விதியிலிருந்து நேரடியாக நிரூபிக்கக்கூடியதாயிருந்தது. (அலகுகளைப் பிரிக்கமுடியாதிருந்தால், விசேடமான சில சந்தர்ப்பங்களிலன்றி மற்றும்படி, காலப் போக்கிலுள்ள சராசரிகளைக் கணக்கெடுப்பதன்மூலமும், இறுதிநிலைப் பயனுடைமைப்படிகளை தொடர்கோடாக மட்டமாக்கிவிடுவதன்மூலமும், சரிப்படுத்தி விடலாமென அவர்கள் எண்ணினர்).

4. பணமானது பயனுடைமையை அளப்பதற்குத் திரமான அளவுகோலாயிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, தேவைச்சமநிலைக்கு ஒரு மூலாதாரமான இறுதிநிலை நிலைமை அவசியமென்பதைப் பழைய பொருளியலாளரும் புதிய பொருளியலாளரும் ஒத்துக்கொள்வர். ஒவ்வொரு பொருளிலுஞ் செலவு செய்யும் ஒவ்வொரு டொலருக்குமுரிய இறுதிநிலைப் பயன்களைச் சமன்படுத்திஞல்தான் நுகர்வோன் தனது நன்மையை உச்ச நிலைக்குக் கொண்டுவரமுடியும். (ஒரு அவுன்ஸ் 25 டொலர் விலையுள்ள வாசனைப் பொருளின் இறுதிநிலைப்பயன் 10 சதப்பானத்தின் இறுதிநிலைக்கு ஒப்பா

www.padippakam.com



காது. ஆனால் அவற்றின் இறுதிநிலைப்பயனுடைமைகளை ஓர் அலகின் விலையால் பிரித்தால் அவை சமனாயிருக்கும். அதாவது அவற்றின் கடைசி டொலரின் இறுதிநிலைப் பயனுடைமை).

இது தர்க்கசாத்திர அடிப்படைக் கொள்கையாகும். இது தேவைவிதிக்கு அப்பாற்பட்டது. எல்லைக்குட்பட்டதொரு பொருட் தொகையைப் பலவகையான பயன்களுக்கு ஒதுக்கவேண்டியிருந்தால், ஒரு வகைப் பயன்படுத்தலாலுண்டாகும் இறுதிநிலைப்பயன் மற்றொரு பயன்படுத்தலாலுண்டாகும் இறுதிநிலைப்பயனுக்கு அதிகமானதாயிருந்தால் அதிக பயன்தரும் பயன்படுத்தலுக்கே பொருளை அதிகமாக ஒதுக்கவேண்டும். ஆனால் இறுதியில் சமநிலையுண்டாகும்வரை இது தொடர்ந்திருக்கலாம்.

5. இறுதி நிலைப்பயன்பாட்டுக் கருத்தை வெளிப்படையாகப் பயன்படுத்தாமல் கீழ் நோக்கிச் செல்லும் தேவை எக்காரணங்களால் உண்டாகிறதென்பதைப்பற்றிப் புதிய கருத்துக்களை அறியலாம். விலையேற்றத்தினாலுண்டாகும் விளைவுகளை (1) பதிலீட்டு அமிசம் (2) வருமான அமிசம் என்று பிரித்து அவற்றைக் காணலாம். ஒரு பொருளின் விலை ஏறினால், ஒரேமட்டமான நலத்தைக் காப்பாற்றுவதற்கு அருந்தலான பொருளுக்காக வேறு பதிற்பொருளைப் பயன்படுத்தலாம். பதிலீட்டுப் பொருளை நுகர்வதால் உண்டாகும் நுகர்வுக் குறைவைப் பலப்படுத்துவது வருமான விளைவாகும். குடும்ப வருமானம் குறையுமானால் ஒருவர் குறித்த ஒரு பொருளைக் குறைவாகவே வாங்குவார். விலை ஏறினால் நிச வருமானம் அல்லது வாங்குஞ் சக்தி குறையும். இதனால் நுகர்விலே மேலும் குறைவு உண்டாகும். ஏனெனில் நுகர்வோனுடைய நிச வருமானம் குறைந்துவிடுகிறது.

6. அடம்சிமிதின் மதிப்பு முரண்—அதாவது மனித நலத்துக்கு முக்கியமான ஒரு பொருள் அதிலும் முக்கியம் குறைந்தபொருளிலும் பார்க்கக் குறைவானவிலைக்கே விற்பனையாகிறதென்பது—இறுதிநிலைப் பயனுடைமை என்ற கருதுகோளினால் விளக்கம்பெறுகிறது. ஒரு பொருள் அருந்தலாயிருந்தால்—அதனை நிச்சயிப்பவை விலையும் சப்ளை நிலைமைகளுமாகும், அது அப்பொருளுக்குரிய சந்தைத் தேவையோடு கலந்துவிடுகிறது. இது அதன் இறுதிநிலை அலகின் பயனுடைமையைக் கொண்டு நிச்சயிக்கப்படும். (அல்லாது அப்பொருளின் மொத்தக் கையிருப்பின் பயனுடைமையாலன்று).

7. சந்தைவிலையாவது இறுதிநிலைப்பயனுடைமையினாலேயே நிச்சயப்படுத்தப்படுகிறது. மொத்தப் பயனுடைமையாலன்று. இது நுகர்வோர் எச்சப்பாடு என்ற கருதுகோளினால் விளக்கம்பெறுகிறது. இறுதிநிலை அலகு எவ்வளவு பயனுடையதோ அந்த விலையையே நாம் ஒவ்வொரு அலகுக்கும் கொடுப்பதால் முந்திய அலகுகளெல்லாவற்றிலும் நாம், நுகர்வோர் மேலதிகத்தைப் பெறுகிறோம். இது குறைந்த விலையில் நாம் பொருள்வாங்குவதாலுண்டாகும் பயனுடைமையைக் காட்டுகிறதேயன்றி ஏகபோக உரிமையாளர் எமக்கு மொத்தப் பொருள் என்ன பெறுமதியைக் கொடுக்குமோ அவ்வளவையும் கொடுக்குமாறு கேட்கும் நிலையயன்று. நுகர்வோர் எச்சப்

www.padippakam.com



பாடு என்பதைத் தொகைப்படுத்திக் கூறமுடியாவிட்டாலும், பல சமூக விடயங்களைத் தீர்மானிப்பதற்கு இது பயனுடையதாகும். உதாரணமாக ஒரு வீதியையோ பாலத்தையோ போடும் விடயத்தில் இத்தீர்மானம் பலனுடையதாகும்.

மற்றொருவிடயம், நுகர்வோன் புள்ளிவிவரங்களிலோ, கணனரேகைக் கணக்குகளிலோ வல்லவனாயிருக்கவேண்டியதில்லை. இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட தேவை நடத்தையோடு அவனின் நுகர்வு பொருந்தியிருக்கவேண்டியதில்லை. அவன் தனது முடிபுகளிற் பெரும்பாலானவற்றை தன்னையறியாமலே பழக்கவாசனையாற் செய்யலாம். அவனுடைய ருசிகளும் செய்கைகளும் கூடிய அளவுமாறாமலிருக்குமானால், முன்னெல்லாம் அவன் தனக்கு அத்தியாவசியமாய் வேண்டப்பட்ட பண்டம் பணிகளை பெறுமலிருப்பதற்கு என்ன தவறுகள் பொறுப்பாயிருந்தனவோ அவற்றை மறுபடி செய்யாதிருக்கவேண்டும். அத்துடன் வாங்கும் நடத்தையில் அவன் தாறுமாறான மாற்றங்களையுண்டாக்கக்கூடாது. பலர் இவ்வாறு செய்வாரானால் நமது விஞ்ஞானக் கொள்கை பிரத்தியட்ச நிகழ்ச்சிகளோடு பொருத்தமுடையதாயிருக்கும். விஞ்ஞானத்தாலுண்டாகும் பயன் அதுவே.

## ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்

1. அதிகமதிகமான மக்களின் தேவைகளை கிடைநிலையாய்க் கூட்டினால் கூட்டான சந்தைக்கோடு அதே அளவுமட்டத்தில் தட்டையாகிக்கொண்டே போகும். அதே அளவில் விலையைக் குறைத்தால் வாங்குவோர் தொகை கூடுமேயன்றிக் குறையாதென்பதை இது காட்டுகிறது. எவ்வாறு ?

2. இறுதிநிலைப்பயனுடைமை, மொத்தப் பயனுடைமை என்பவற்றிடையேயுள்ள வித்தியாசத்தை விளக்குக. குறைந்துசெல் இறுதுநிலைப்பயன் விதி என்பதை விளக்குக. இலக்கம் படம் என்பவற்றால் விளக்குக

3. “சமநிலையிலே எல்லாப் பொருள்களின் இறுதிநிலைப் பயனும் சரிசமனாயிருக்கவேண்டும்” இது அர்த்தமற்ற பேச்சு. ஏன் ? இதை அர்த்தமுள்ளதாகத் திருத்தி எழுதுக. எழுதி விளக்குக.

4. இறுதிநிலைப்பயன் கொள்கையைப் பயன்படுத்த நீர் விரும்பவில்லை ; அல்லது பயனை அளப்பதற்குப் பணம் நல்லதோர் அளவுகோல் என்ற கொள்கையை பயன்படுத்தவிரும்பவில்லை என வைத்துக்கொள்வோம். (1) பதிலீட்டு விளைவு (2) வருமான விளைவு என்பவற்றைப் பயன்படுத்தி கீழ் நோக்கியிறங்கும் தேவைவிதியை எவ்வாறு நிரூபிப்பீர்.

5. சினிமாப் பார்ப்பதை நிறுத்தாமலிருப்பதற்காக நீர் எவ்வளவு ஈடுசெய்ய ஆயத்தமாயிருப்பீர் ? சினிமாப் பார்ப்பதற்கு ஒரு வருடம் எவ்வளவைச் செலவு செய்வீர் ? நுகர்வோர் எச்சப்பாட்டைக் கணிக்க.

6. பின்வரும் கருதுகோள்களைப் பற்றி ஞாபகப்படுத்திக் கொள்க : சந்தைத் தேவை—தனிமனிதர் தேவை.

படிப்பகம்

www.padippakam.com



வருமானத்தினாலும் வேறு காரணங்களாலும் உண்டாகும் தேவை மாற்றம் ;
பதிலீட்டுப் பொருள்.
அனுபானப் பொருள்.
தனிப்பொருள்.
குறைந்துசெல் பயனுடைமைவிதி.
வருமானவிளைவு, பதிலீட்டு விளைவு.

குறைந்துசெல் தேவைவிதிக்கு எவ்வாறு சமாதானங் கூறலாம். ஒவ்வொரு பொருளினும் செலவு செய்யும் கடைசி டொலரின் இறுதி நிலைப் பயனைச் சமன் செய்தல்.


இறுதிநிலைப்பயன் மொத்தப்பயன் முரண்பாடு நுகர்வோர் எச்சப்பாடு.

**அனுபந்தம்: நுகர்வோர் சமநிலை பற்றிய கேத்திரகணித ஆராய்ச்சி**

**சம பயனுடைய உணவு—உடைச் சேர்க்கைகள் ''சமநோக்குடையவை'';**

| | உணவு | உடை |
|---|---|---|
| அ | 1 | 6 |
| ஆ | 2 | 3 |
| இ | 3 | 2 |
| ஈ | 4 | $1\frac{1}{2}$ |

**அட்டவணை 2.** சமநோக்குச் சேர்க்கைகள். ஒரு பொருளிலிருந்து அதிகம் பெறுதல், மற்றொன்றிலிருந்து ஓரளவை விட்டுக் கொடுப்பதால் ஈடு செய்யப்படும். நுகர்வோன் அ இலுள்ள நிலைமையை, B, C, D என்ற ஒன்றிலுள்ள நிலைமையை விரும்புவது போலவே விரும்புவான்.





**படம் 6.** சமதிருப்தியளிக்கும் உணவு—உடைச் சேர்க்கைகளை ஒப்பமான சமநோக்கு வளைகோடாக (அல்லது " சம பயன்பாட்டு உருவரையாக ") கீறலாம். பதிற் பொருள் விதிக்குப் பொருந்த இது மேலிருந்து குழிவு உடையதாக இருக்கும். அவ்விதி கூறுவதாவது : ஒரு பொருளிலிருந்து அதிகம் பெறும்போது, அதன் " பதிற் பொருள் விகிதம் " அல்லது "சம நோக்குச் சரிவு" குறைந்து விடும்.

www.padippakam.com



ஒவ்வொரு புள்ளியும் பல சமநோக்கு வளைகோடுகளுள் ஒன்றிலே தங்கியுளது:




படம் 7. $U_1$ $U_2$ $U_3$ $U_3$ என்று குறிப்பிடப்பட்ட வளைகோடுகள், சமநோக்கு வளைகோடுகளைக் குறிக்கின்றன $U_3$ படம் 6 இன் வளைகோடாகும்.

மாறுத வருமானமும் சந்தை P இன் வருமானமும் எல்லைக்குட் பட்ட நுகர்ச்சி இயல் தகவுகளைக் குறிக்கும்.


| உணவு | | உடை |
|---|---|---|
| 4 | .. | 0 |
| 3 | .. | $1\frac{1}{2}$ |
| 2 | .. | 3 |
| 1 | .. | $4\frac{1}{2}$ |
| 0 | .. | 6 |

அட்டவணை 3. மாற்றுன நுகர்ச்சி இயல் தகவுகள் இந்த வரவு செலவுத் திட்டங்களுக்காய செலவுகள் அனைத்தும் (§ 1.50 F + §1C) 6 டொலர் வருமானமும் வரையம் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com







படம் 8. MN, நுகர்வோனின் நுகர்ச்
—இயல் தகவுக் கோடாகும். உணவு, உ
விலைகள் முறையே 1.50 டொலர், 1 டெ
லர் ஆகவிருக்கும்போது அவன் தினமு
6 டொலர் செலவழிப்பானுகில், இக்கோ
டில் எந்தப் புள்ளியையும் அவன் தெரிந்
கொள்ளலாம். (ஏன் அதன் சரிவு 1.5
டொலர்–1 டொலர்—3–2 அல்லது 1.
என்ருகிறது ?)

**நுகர்வோன் மிகவுயர்ந்த திருப்தி மட்டத்தை அடையுமிடத்தே சமநி
உண்டாகிறது :**

நுகர்வோனின் உத்தம சமநிலை





**படம் 9.** B இல், நுகர்வோன் தனது வருமானத்தைக் கொண்டு அடையக் கூடிய மிகவுயர்
சமநோக்கு வளைகோட்டை அடைகிருன். மிகவுயர்ந்த சமநோக்குக் கோட்டுடன் நுகர்ச்சி–இ
தகவுக் கோட்டின் தொடுதகவை B குறிக்கின்றது (ஏன் ? சாய்வுகள் சமமற்றவையாயிருந்தா
NM உம் உருவரை U உம் ஒன்றையொன்று வெட்டும்: நாம் மிகவுயர்ந்த திரு
மட்டங்களுக்குச் செல்ல முடியும்). தொடுதகவுப் புள்ளி B இல், "பிரதியீட்டு விகித
விலை விகிதம் விஉ/விஉடை இற்குச் சமனுகிறது. அதாவது எல்லாப் பொருள்களதும் இ
நிலைப் பயன்கள் அவற்றின் விலைகளுடன் விகிதசமமாய் இருக்கின்றன ; ஒவ்வெ
பொருளின் மீதும் செலவிடும் கடைசி டொலரின் இறுதிநிலைப் பயன்கள் சமனுக்கப்படுகின்ற
என்பதே இதன் பொருள். இவ்வத்தியாயத்தில் இது பற்றி ஏலவே எடுத்துக் காட்டப்பட்டது.

www.padippakam.com




## வருமானம் அல்லது ஒரு P மாறுகிறபோது புதிய சமநிலை உண்டாகிறது :

சமநிலைமீது வருமான
மாற்றத்தின் விளைவு




**படம் 10.** வருமான மாற்றமொன்று நுகர்ச்சி—இயல்தகவுக் கோட்டைச் சமாந்தரமான வழியில் நகர்த்துகிறது. இப்படியாக, வருமானத்தைப் பாதியாக்கி, 3 டொலருக்குக் கொண்டுவருவதால NM, NM" இற்கு நகர்த்தப்படுகிறது. மேலும் B′ இற்குச் சமநிலையைத் தள்ளுகிறது. (பெருகும் வருமானம் சமநிலைக்கு யாது செய்யும் எனக் காட்டுக).

சமநிலைமீது விலைமாற்றத்தின் விளைவு




**படம் 11.** உணவு விலையில் உண்டாகும் ஓர் அதிகரிப்பினால் நுகர்ச்சி-இயல்தகவுக் கோடானது NM இலிருந்து NM" இற்குச் சுழல்கிறது. புதிய தொடுதகவுச் சமநிலை B" இலிருக்கிறது ; குறைந்த உணவும், கூடுதலான அல்லது குறைவான உடையும் கிடைக்கின்றன. (உடையில் ஒரு விலைமாற்றத்தை நீர் செய்ய முடியுமா ?)

www.padippakam.com

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

## செலவும் விநியோகமும்

*விநியோகவிடயத்தில் உற்பத்திச் செலவு எவ்வித விளைவையும் உண்டு பண்ணுவிட்டால் போட்டிவிலையையும் அது பாதிக்கமாட்டாது.*

—**ஜோன் ஸ்டுவேர்ட் மில்.**

தேவைக்கோடு சம்பந்தமான இறுதிநிலைப் பயன் ஒன்றைவிட மற்றென்றைத் தெரிந்தெடுப்பதற்கான காரணம், என்பனபற்றிச் சென்ற அத்தியாயத்திலே கூறினோம். இதில் விநியோகம் கோட்டின் பின்னணியான உற்பத்திச் செலவின் அடிப்படை விடயங்கள் ஆராயப்படும். இறுதிநிலைப்பயன்போல இறுதிநிலைச் செலவும் மூலாதாரமானதொரு விடயமாகும். இந்தக் கட்டத்திலே விடயத்தைச் சிக்கலாக்கக்கூடாது. நுட்பமான சில கருத்துக்களை 24 ஆம் அத்தியாயத்தின் பின்னர் குறிப்பிடுவோம். அந்த அத்தியாயத்திலே கம்பெனியின் பொருளாதாரக் கொள்கைபற்றிக் கருத்தோடு ஆராய்வோம். இந்த அத்தியாயத்தில் அடிப்படை விடயங்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

**சகல கம்பெனிகளின் சப்பிளையையும் கூட்டிச் சந்தைச் சப்ளையை அறிதல்.**

மொத்தச் சந்தைத் தேவையை அறிவதற்குத் தனித்தனித் தேவைகளைக் கூட்டினோம். இது 21 ஆம் அத்தியாயத்தின் படம் 1 இலிருந்து அறியப்பட்டது. சப்ளை (விநியோக) விடயத்திலும் இவ்வாறே அறியவேண்டும்.

மீன்சந்தையை எடுத்துக்கொள்வோம். இது போட்டியுள்ளது. ஒவ்வொரு சந்தைவிலைமட்டத்திலும் எவ்வளவு மீன் விற்பனைக்கு வரும். A என்ற கம்பெனி குறித்த ஒரு விலைக்குக் குறித்த ஓரளவு மீனைச் சந்தைக்குக் கொண்டுவரலாம். அதே விலையில் B என்ற கம்பெனி குறித்த ஒரு தொகையைக் கொண்டுவரலாம். C என்ற கம்பெனி மற்றொரு தொகையைக் கொண்டுவரலாம். இவ்வாறே மற்றக் கம்பெனிகளும் குறிப்பிட்டதொரு சந்தைவிலை P யில், சந்தைக்குக் கொண்டுவரப்படும் மீனின் தொகையான Q அந்தவிலைக்கு கம்பெனிகள் சந்தையில் கொண்டுவந்து விநியோகிக்கும் $q$ தொகைகளின் மொத்தமேயாகும். வேறொரு விலை சம்பந்தமாகவும் இதே நிலைதானுண்டு.

**சுருக்கம் :** ஒரு பொருளின் மொத்த சப்ளை கோடான SS ஐப் பெறுவதானால் அப்பொருளை உற்பத்திசெய்து விநியோகஞ் செய்யும் ஒவ்வொருவரினதும் சப்ளைத் தொகையைக் கிடைநிலையாகக் கூட்டவேண்டும்.




படிப்பகம்

www.padippakam.com



படம் 1 இல். இரண்டு கம்பெனிகள் விடயத்தில் இது காட்டப்பட்டுள்ளது. கம்பெனிகளின் தற்காலிகமான போக்கு $S_m$ $S_m$ கோடுகளுக்கு, உற்பத்தியிலே மாற்றம் உண்டாக முடியாத மிகக் குறுகிய தவணையில் உண்டாகும் நெகிழ்ச்சியற்ற சப்ளையென வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஒரு கைத்தொழிலின் பணச் சப்ளை ( $S_m$ $S_m$ ) யைப் பெறுவதானால், P என்ற ஒரேவிலையில் உள்ள எல்லாக் கம்பெனிகளின் தற்காலிக சப்ளை எல்லாவற்றையும் இடைநிலையாகக் கூட்டவேண்டும். குறுந்தவணை என்றால் ஒரு கம்பெனி திட்டம் போட்ட மாறுத சில உற்பத்தியைச் செய்வதற்குரிய காலம். இக்காலத்தில் $S_s$ $S_s$ கோட்டை அனுசரித்து, அதிக உற்பத்தி செய்ய, மாற்றக்கூடிய உற்பத்திச் சாதனங்களை மாற்றலாம். அந்தக் குறுத்தவணையிலே உள்ள குறிப்பிட்டதொரு தொகையான கம்பெனிகளின், குறுந்தவணை சப்ளைக்கோட்டைக் இடைநிலையாகக் கூட்டுவதால், கைத்தொழிலின் $S_s$ $S_s$ சப்ளைகோடு கிடைக்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சந்தைச் சப்பிளையைப் பெற எல்லாக் கம்பெனிகளின் சப்பிளை வளைகோடுகளையும் நாம் கூட்டவேண்டும் :




படம் 1. 5 டொலர் போன்ற விலைகளில், ஒவ்வொரு கம்பெனியும் கொடுக்கும் தொகைகளைக் கூட்டிச் சந்தையில் விநியோகமாகுந் தொகையைக் கணக்கெடுக்கிறோம். ஒரேமாதிரி 1,000 கம்பெனிகளிருந்தால் சந்தைச் சப்பிளை கோடு ஒரு கம்பெனியின் கோடு போலவேயிருக்கும்; ஆனால் ஆயிரம் மடங்கு, 3 ஆம் படத்திலுள்ள இடைநிலையான அளவை அதிகரிக்கவேண்டியேற்படும். இடைநிலை அளவில் மாற்றம் உண்டாக்காவிட்டால், கூட்டுச் சப்பிளை தனித் தனிக் கம்பெனிகளின் சப்பிளையினும் மட்டமாகவே காணப்படும். (குறிப்பு : இடைநிலை அச்சு மூன்றிலும் குறிக்கப்பட்ட அளவுகள் பல்லாயிரக்கணக்கான மீனைக் குறிப்பிடும். 1, 2, 3 என்பன ஒவ்வோராயிரம் பீப்பாவைக் குறிக்கும். நிலைக்குத்தான விலை அச்சு ஒவ்வொரு பீப்பாவினதும் டொலர் விலையைக் குறிக்கும்.)

www.padippakam.com



கொடுத்த மொத்தத் தொகை, தனிப்பட்ட கம்பெனிகள் சப்ளை செய்யச் சித்தமாயிருக்கும் தொகையின் கூட்டுத்தொகையையே காட்டும்[1].

**கம்பெனிகளிடையே உற்பத்தி நிலை வேற்றுமைகள்.**

ஒரேதொழிலில் ஈடுபட்டிருக்கும் கம்பனிகள் தம்முள்பெரிதும் வித்தியாசப்படுகின்றன. என்பதையும் படம் 1 காட்டுகிறது. 5 டொலர் விலையில் A சம்பெனி உற்பத்திசெய்வதில் இரண்டு பங்கு தொகையை B கம்பெனி உற்பத்திசெய்யத் தயாராயிருக்கிறது. போட்டித் தொழில்கள் பலவற்றிலே சிறிய போட்டியாளரிலும் நூறுமடங்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய கம்பெனிகள் தோன்றுவது இயற்கை.

மொன்டானுவிலுள்ள கூட்டுறவு விவசாயக் கம்பெனி பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தில் கோதுமை பயிரிடலாம். 25 ஏக்கர் உள்ள ஓர் குடும்ப விவசாயப் பண்ணையின் விளைவுடன் ஒப்பிடும்போது அதன் தாரதம்மியந் தெரியும். மொன்டானு பண்ணை பெரிதானுலும், மொத்தக் கோதுமை உற்பத்தியை ஒப்பிடும்போது அது ஒரு சிறு பிரிவாகவே தோன்றும். எனவே போட்டியில் அதனுல் ஏகபோக உரிமை நிலைநாட்டமுடியாது.

B யானது A யிலும் பார்க்க அதிசமாகப் பொருளை உற்பத்தி செய்வதோடமையாது விலை மிக இறங்கியகாலத்திலும் அது ஓரளவு உற்பத்தி செய்யக்கூடியதாயுமிருக்கிறது. ஆனுல் A உற்பத்தியைக் கைவிட்டுவிடலாம். மீனின் விலை அதிகம் விழுந்துவிடுமானுல் பழைய வள்ளங்களில் மீன்பிடிப்போர் மீன்பிடித்தொழிலை விட்டுவிடலாம். அதனுல் அவர்களுக்கு நட்டமுண்டாகாது. உண்டாகக்கூடிய நட்டத்தைத் தடுக்கலாம். (படம் 1 இலுள்ள $S_a$ $S_a$ கோடு விலை மிகக்குறைவானதும் திடீரென நின்றுவிடுவதைக் கவனிக்கலாம்) A கம்பெனிகள் கூட நல்ல லாபம் அடையக்கூடியவாறு விலை அதிகரிக்குமானுல், திறமைமிக்க B கம்பெனிகள் பெருவாரி லாபம் பெறும்.

உற்பத்திச் செலவிலே உண்டாகும் இத்தகைய வித்தியாசம் விவசாயத்திலும், சுரங்கத் தொழிலிலும் பெரிதும் காணக்கூடியதாயிருக்கும். நல்ல வளமுள்ள நிலமானுல், விலை குறைந்தாலும், உற்பத்தியைவிடாமற் செய்யலாம். வளமற்ற நிலமானுல் விலை இறங்குமாயின் ஒன்றுஞ் செய்ய முடியாது.

1. இத்தகைய கூட்டுமுறை, 20 ஆம் அத்தியாயத்தில் படம் 3 இல் காட்டிய மார்ஷலுடைய நீண்டகால சப்ளைக்கோட்டுக்கும் பொருந்தமாட்டாதா ? பொருந்தும். ஆனுல் நீண்டதவணை விலையாற்றம், கைத்தொழில் செய்யும் கம்பெனிகளின் தொகையை மாற்றக்கூடாது. விலை இறங்கியபடியிருந்தால் நீண்டதவணையிலே சிலகம்பெனிகள் தொழிலில் இருக்கமாட்டா என்பதை அறிவோம். விலை ஏறியபடியிருந்தால் புதிய கம்பெனிகள் போட்டியிலிறங்கும். நீண்டதவணையிலே கம்பெனிகளின் தொகைமாருதிருக்கமாட்டாது. அதனுல் கூட்டு முறையைப் பிரயோகிப்பது முடியாதகாரியம். விரைவில், தொழில் முயற்சியில விலையானது மாறுமபோது கம்பெனியின்கோடு மாறுவதனுல் வேறுசில பிரச்சினைகளைச் சந்திக்கநேரிடலாம்.

www.padippakam.com



இயற்கைவளம் இல்லாத சந்தர்ப்பங்களிலும், இதே குறை பாடுகளைக் காணலாம். டைப் அடிக்கும் வேலைக்குரிய கூலி விகிதம் குறைந்தாலும் திறமையுள்ள தட்டச்சுவல்லுநர் விரைவாக அடித்துத் தமது சீவியத்தை நடத்தக்கூடியவசதியைப் பெறுவர். ஆனால் விரைவாக அடிக்கமுடியாதவர் தட்டச்சு அடிக்கும் முயற்சியைவிட்டுவிட்டு வேறு தொழிலைப் பார்க்க வேண்டியேற்படும். திறமையான நிர்வாகிகளையுடைய கம்பெனிகள் போட்டியில் குறைந்த உற்பத்தியுடைய கம்பெனிகளோடு நின்றுபிடிப்பர். எல்லாம் ஒரேசந்தைவிலையையே பெற்றபோதிலும், உற்பத்திச் செலவில் வித்தியாசப் படலாம்.

இந்தவேற்றுமைகளின் தாற்பரியத்தைப் பொருளாதாரம் அறியாதவர்கள் உணரமாட்டார். உதாரணமாக முதலாம் உலகயுத்தத்தின் போது ஏனைய பொருள்களைப் போலவே செம்பின்விலை அதிகரித்தது. செம்புக்கு அப்போது அதிக கிராக்கியிருந்தது. விலை உயரவே முன்னெல்லாம் கட்டாதென்று கைவிடப்பட்ட சுரங்கங்களை மறுபடி வேலை செய்யத் துவக்கினர். சாதாரணமாகக் கட்டாதெனக் கைவிட்டவர்களே மறுபடியும் செம்பு உற்பத்தியில் ஈடுபட்டு லாபம்பெற்றார்களென்றால், ஏனையவரின் இலாபம் அதிகமென்பது சொல்லாமலே விளங்கும்.

அக்காலத்து விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு இது புதிராயிருந்தது. செம்பின் விலையைக் குறைத்தால் அதன் உற்பத்திகுறையும் ; விலையை அதிகம் கூட்டினால் திறமைமிக்க உற்பத்தியாளருக்கு அதிக இலாபம் உண்டாகும்.

**கம்பெனிகள் தோன்றுவதும் மறைவதும்.**—“ புற எல்லை ”

விலை ஏறினால் புதிய கம்பெனிகள் தோன்றும், பழையவை நிலையாக நிற்கும். இதைக் குறிப்பதற்குப் பொருளியலாளர் ஒரு பரிபாஷைச்சொல்லை உபயோகிப்பர். குறிப்பிட்ட விலையில் உற்பத்தி செய்துகொண்டிருக்கவிரும்பும் கடைசிக் கம்பெனிகளை, அவர்கள் அவ்விலையில் உள்ள “ இறுதிநிலைக் கம்பெனிகள் ” என்பர், இந்தக் கம்பெனிகள் இறுதிநிலையின் எல்லையிலிருப்பன. பழைய பொருளியல் நூல்கள் “ இறுதிநிலைச்செலவு ” என ஒரு சொல்லையும் பயன்படுத்தின. அதற்கு நாம் வேறு பொருள் கொண்டுள்ளோம். அவர்கள் கொண்ட கருத்தாவது, நயமுமில்லை நட்டமுமில்லையென்று கொண்டிருக்கும் கம்பெனிகள் இவை கையும் கணக்குஞ் சரியென்றிருப்பவை[1].

1. பழையபொருளியல் நூல்களில் சந்தைவிலையானது அத்தகைய இறுதிநிலை உற்பத்தியாளரின் உற்பத்திவிலைக்குச் சமன் எனக் குறிப்பிட்டன. வேறுசிலர் போட்டிவிலையானது இறுதிநிலை உற்பத்தியாளரின் உற்பத்திச்செலவினால் நிச்சயிக்கப்படுமென்றனர். ஆனால் இந்தவிலைமட்டந்தான் இறுதிநிலை உற்பத்தியாளரை உண்டாக்குகிறதென்பதை அவர் மறந்து இவ்வாறு கூறுவர். உற்பத்திச் செலவு விலைக்குச் சமனாகாது. பல தொழில்களிலே முழுச்செலவுக்குக் குறைவாக உற்பத்திசெய்யும் புது முயற்சியாளரையுங் காணலாம். இவர்கள் ஈற்றில் ஒதுங்கிவிடுவர். சில புதியவர்கள் தொழிலைவிட்டுச் செல்லும் கம்பனிகள் அளவு உற்பத்தியை உண்டாக்குவர். இவர்களுக்கேற்படும் நட்டம் நுகர்வோர் எச்சப்பாட்டுக்கு உதவுகிறது எனலாம்.

www.padippakam.com



பழைய கருத்துக்களை இங்கே ஆராயவேண்டிய அவசியமில்லை. ஆனால் அவற்றைப் பற்றிய தவறான கருத்துக்களிருப்பதால் அவற்றைத் திருத்துவது அவசியமாகும். முதலாளிமுறையைக் கண்டிக்குஞ்சிலர் பொருளாதார நிகழ்வைப்பற்றிப் பின்வருமாறு தவறான கருத்தைக் கொடுப்பர்.

போட்டி திறமையுடையதெனச் சிலர்வாதாடுவர். என்ன முட்டாள்தனம்! விலையானது குறைந்தசெலவுசெய்யும் திறமையுள்ள உற்பத்தியாளரால் நிச்சயிக்கப்படவில்லை. உயர் செலவு செய்யும் இறுதிநிலை உற்பத்தியாளராலேயே நிச்சயிக்கப்படுகிறதென்று தமது பாடநூல்களிலேயே அவர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். நமது இலட்சிய உலகில் போட்டிச் சந்தையை ஒழிப்போம்; குறைந்த செலவு செய்யும் உற்பத்தியாளரின் செலவுக் கேற்றவகையில், நாம் விலையைச் சமன்படுத்துவோம்.

சமூக அமைப்பை மாற்றுவதனால், குறைந்த தராதரமுள்ள சுரங்கங் களில் செப்புத்தாது அதிகரிக்கமாட்டாது. அல்லது நிலத்தின் வளம் பெருகமாட்டாது. புதிய சமூக அமைப்பினால் உற்சாகமாக வேலை செய் வதற்கும், கல்வியை விருத்திசெய்வதற்கும் புதிய ஊக்கம் பிறக்கலாம். ஆனால் இயற்கை வளத்தை மாற்றுவது கஷ்டம். சுரங்கங்களையெல்லாம் ஒரேவகையில் திறம்பட நிர்வாகஞ் செய்யமுடியாது. ஒன்றில் மற்றது திறம்பட நிர்வாகஞ்செய்யப்படுகிறதாயிருக்கவும் முடியாது. சமூகம் விலைத் திட்டமொன்றை ஏற்படுத்தி அல்லது வேறு யுக்திகளை அனுசரித்து உள்ளதைக் கொண்டு சமாளிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். அதைப் பற்றிமேலே ஆராய்வோம்.

போட்டித்தொழில்களிலே நல்லது எது, தீயது எது, என்பதை மதிப்பிடும் போது ஒரு விடயத்தைக் கருத்திலே கொள்ளவேண்டும். பூரணப்போட்டி யில் ஒவ்வொரு விலை மட்டத்திலும், உற்பத்தியாளரைக்கவர்ச்சிசெய்தோ, கைவிடச்செய்தோகொண்டிருக்கும் “ புற எல்லை ” ஒன்று உண்டு. இந்தச் சுதந்திரம், அதாவது நினைத்தநேரம் தொழிலில் இறங்கவும் அதை விடவும் உள்ள சுதந்திரம், திறமைக்குமிக அவசியம். போட்டி முயற்சியாளர் எவரும் மேலும் தமது தொழிலை முன்னேற்றுவதற்கான முயற்சியிலீடு படாமற் சும்மாவிருக்கமுடியாது. புதியவழிகளைக் காணவேண்டும். புதிய முறைகள் கண்டுபிடிக்கப்படுவதால் தொழில் நுட்பமுறைகள் மாறுகின்றன. அறிமுறைகளில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. புதிய அறிவுகள் பரப்பப்படுகின்றன. தொழிலாளர் சம்பளம், நிலத்தின் விலை, ஏனைய உற்பத்திச் சாதனங்களின் விலை என்பன மாறியுள்ளன. எனவே புதிய வழிகளில் உற்பத்தியை மாற்றுவது உசிதமாகும். குறைந்த செலவில் உற்பத்திசெய்துவந்தவர், புதிய போட்டிகளால் சந்தைவிலை மிக இறங்கு வதைக் காணலாம். அவர் இறுதிநிலை உற்பத்தியாளர் தகைமைக்கு

www.padippakam.com



இறங்கவுங்கூடும். அல்லது "மேலதிக இறுதிநிலை" உற்பத்தியாளரா கலாம். அதனால் அவர் தமது யந்திரங்கள் தேய்மானமானதும் தொழிலைக்கைவிடவேண்டியவராவார்.[1]

போட்டிவிலையானது சப்ளை தேவை என்பன பொருந்தும்போதே நிச்சயிக்கப்படுகிறது. நெடுந்தவணை விநியோகக் கோட்டின் தன்மையை நிச்சயிக்கும் ஒரு காரணம் கம்பெனிகள் தொழிலில் புகுதல், விடுதல் என்பதைப் பொறுத்தது. "புற எல்லை" பற்றிப் பொருளியலாளர் குறிப்பிடும்பொழுது தொழிலில் இறங்குவதையும், அதிலிருந்து வெளியேறுவதையுமே குறிப்பிடுகின்றனர். சந்தைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை வருணிப்பதற்கு மாத்திரமன்றி அவை எவ்வளவு தூரம் திறம்படச் செயலாற்றுகின்றன என்பதை மதிப்பிடவும் இது முக்கிய மானதாகும். நுகர்வோர் தேவையில் அதிகரிப்பு உண்டாகி சந்தைவிலை உயர்ந்தால் உயர் செலவு உற்பத்தியாளர் அருந்தலை அகற்றத் தொழிலில் இறங்குவது சமூகத்தின் நன்மைக்கு அவசியம். விலை உயர்வதால் குறைந்த செலவு உற்பத்தியாளர் தொழிலில் ஈடுபடுவதால் பாதகமில்லை.

**ஒரு கம்பெனியிலேயே பலவகை உற்பத்தி: இறுதிநிலைச் செலவின் உண்மையான வரைவிலக்கணம்.**

குறுந்தவணையிலும் நெடுந்தவணையிலும் ஒரு கம்பெனி விநியோகஞ் செய்யும் தொகை விலையை அனுசரித்து வித்தியாசப்படும். இது மூலாதாரமானதொரு விடயம். புதியதொரு கம்பெனி சந்தேக எல்லையி லிருக்கும்போது விலை ஏற்றத்தினால் உற்பத்தியை அதிகரிக்கலாம். அது புற எல்லை. தற்போதுள்ள கம்பெனிகள் மேலதிகமாக உற்பத்தியைச் செய்வதற்கு விலையில் ஏற்றமுண்டாவது அவசியமே. இதனால் பழைய பொருளியலாளர் "அகஎல்லை" ஒன்றைப்பற்றித் திட்டமில்லாது பேசிக் கொண்டார்கள். இந்த அக எல்லை ஒவ்வொரு கம்பெனிக்குள்ளும் உள்ளது. வெளி எல்லையுள்ள கம்பெனிகள் வேறுவகையைச் சேர்ந்தவை.

சப்ளையில் நிகழும் அகவேறுபாடுகளை விளக்குவதானால், செம்புச் சுரங்க உதாரணத்துக்கு மறுபடியும் போவோம். ஒரு கம்பெனிக்குள்ளே பலவகையான உற்பத்திப்பொருள்களிருக்கலாம். அவற்றை ஒவ்வொரு சந்தைவிலைக்கும் உற்பத்தி செய்வது லாபகரமாயிருக்கலாம். உதாரணமாக ஒரு சுரங்கத்தில் பல வாசல்களிருக்கலாம். மேல் தளத்திலேயுள்ள வாசலில் நல்ல உலோகக் கனியிருக்கலாம். இதனைக்குறைந்த விலையிருந்

1. இவருக்கு வளமுள்ள நில மிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். சிக்கனமில்லாத முறையில் விவசாயஞ்செய்து அவர் கிடைக்கக்கூடிய நல்ல விளைவையும் துறக்கிறார். டொலர்விலையில் அந்நிலம் அவரிலும்பார்க்க மற்றவர்களுக்கு அதிக மதிப்புடையதாய்க் காணப்படுகிறது. நிலத்தை வில்லாமலோ வாடகைக்குவிடாமலோ இருப்பாரானால், தமது சொந்தப்போகத்துக்காக நிலத்தைவிற்றுக் கூத்தியும் குடியுமாயிருப்பவரையொத்தவராவார். விவேகமும் திறமையுமுள்ள ஒருவாலிபன் ருசியற்றவேலையிலோ தேயந்துகொண்டேபோகும் தொழில்முயற்சியிலோ இருப்பானானால் அவனும் தனது திறமைகளை வீண் விரயஞ்செய் பவனேயாவான்.

www.padippakam.com



தாலும் வேலைசெய்விப்பது நட்டமன்று. கீழேகுறைந்த கனியுள்ள சுரங்க மிருக்கலாம். அதை சமகாலத்தில் வெட்டிவேலைசெய்வதானுல் விலையை ஏற்றவேண்டும். போட்டிச் சந்தையிலே சுத்தஞ்செய்த செம்பு சுத்தச் செம்புதான். சுலபமாக எடுக்கக்கூடிய செம்பும், கஷ்டமாக எடுத்த செம்பும் விலைப்படும் விலை ஒன்றுதான்.

உயர்ந்தவிலையிலே அதிக தொகையை ஒரே கம்பெனியில் உற்பத்தி செய்யலாம். இது சுரங்கவிடயத்தில் இலகுவாகத் தெரிகிறது. ஆனுல் போட்டித் தொழில் முறைகளெல்லாவற்றிலும் இது காணப்படுகிறது. விலை உயர்ந்திருந்தால் வறிய விவசாயி செளிப்பில்லாத நிலத்திலும் பயிர்செய்வான். அத்துடன் நல்ல காணியிலும் அவன்விளைவை அதிகரிக்க முயற்சிசெய்வான். அதற்கு அவன் விலையுள்ள பசளையைப் பயன்படுத்து வான். அதிக தொழிலாளரை ஏற்படுத்துவான்; விலையுள்ள யந்திரங் களைப் பயன்படுத்துவான். இந்தப் புதிய செலவை அவன் முன்னர் செய்திருக்கமாட்டான். மீன் விலை அதிகரித்தால் அதிகமான பேரை நியமித்து மீன்பிடிக்க முயற்சி நடைபெறும். முன்னர் எல்லாம் இலாபமற்ற தெனக் கைவிடப்பட்ட தூரக்கடலிற் கூட மீன் பிடிக்கத் தலைப்படுவர்.

விலை ஏறினுல் புதிய கம்பெனிகள் உற்பத்தித்தொழிலில் ஈடுபடும். இது படம் 1 இல் காட்டப்பட்டது. இதனுல் சப்ளை அதிகரிக்கும். உயர் செலவில் உற்பத்திசெய்யும் A கம்பெனிகள் உற்பத்தியில் இறங்குமாறு தூண்டப்படலாம். இதனுல் குறைந்த செலவில் உற்பத்திசெய்யும் B கம்பெனிகளின் உற்பத்திக்கு இது அனுசரணையாயிருக்கும். ஒரு கம்பெனிக் குள்ளேயே அதிகவிலையிருக்கும்போது மேலதிக உற்பத்தி தூண்டப்படலாம் என்பதை படம் 1 மேலும் காட்டுகிறது. ஒவ்வொரு கம்பெனியின் சப்ளைக் கோடும் வலப்பக்கமாகச் சரிந்து வடகிழக்குத் திசையாக மேலே செல்வதைக் காணலாம்.

இந்தக் கட்டத்திலேதான் பொருளியலாளன் முக்கியமானதும் புதிய துமான எல்லைச் செலவு என்ற கருதுகோளைக் கொண்டுவருகிறுன். கம்பெனியின் சப்ளைக் கோட்டின் உருவத்தை அதாவது—விலையேற்றம் இறக்கம் என்பவற்றை அனுசரித்துக் கம்பெனியின் உற்பத்தி அகவயமாய் வேறுபடுவதற்குக் காரணமென்ன என்பதை விளக்குவதே இந்தப்புதிய கருதுகோளின் நோக்கம். கம்பெனியின் போட்டிச் சப்ளைக்கோட்டை நிர்ணயிக்கும் முக்கிய விடயம் இறுதிநிலைச் செலவுக்கோடாகும்.

**இறுதிநிலைச் செலவின் விளக்கம்**

செலவு விடயமாகப் பொருளியலாளரிடையே பல கருதுகோள்களுண்டு. 24 ஆம் அத்தியாயத்திலே முக்கியமான கருதுகோள்கள்கருத்தோடு விளக்கப்படும். ஒரு கம்பெனி ஏகபோக உரிமையுடையதாயிருந்தாலென்ன பூரணப் போட்டியுடையதானுலென்ன, பூரணமில்லாதபோட்டிச் சந்தையில் விற்பனை செய்வதாயிருந்தாலென்ன சமநிலையில் உயர் லாபநிலை எது

www.padippakam.com




என்பதைக் காட்டுவதே இதன் நோக்கமாகும். இங்கே எல்லை உற்பத்திச் செலவு என்பதைச் சுருக்கமாக விளக்குவோம்.

மிக மலிவான செலவில், மேலதிக அலகு ஒன்றை உற்பத்திசெய்வதற்கான, மேலதிகச் செலவே எல்லைச் செலவாகும், உதாரணமாக மீனின் எல்லை உற்பத்திச் செலவென்றுலென்ன ? 1000 பீப்பா மீனை உற்பத்தி செய்யும், மொத்தச்செலவிலிருந்து 999 பீப்பா மீனை உற்பத்திசெய்யும் மொத்தச் செலவைக் கழிக்கும்போது உண்டாகும் செலவெனலாம். முன்னெல்லாம் இறுதிநிலைச் செலவு என்பதற்கு "மேலதிகச் செலவு"


**இறுதிநிலைச் செலவை எண்களில் அல்லது வளைகோடுகளிற் காட்டலாம்.**

**அட்டவணை 1.** 1 இலிருந்து 2 அலகுக்குப் போகும்போது 4,200 டொலர் இறுதிநிலைச்செலவு உண்டாகிறது. 2 ஆவது கோட்டிலுள்ள மொத்தங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளாக மேலதிகச் செலவுகளைக் கணித்தால், 3 ஆம் கோட்டிலுள்ள இறுதிநிலைச் செலவைக் காணலாம்.

| உற்பத்தி Q (1) | மொத்தச் செலவு TC (2) | இறுதிநிலைச் செலவு MC (3) |
|---|---|---|
| 1 | $ 8,000 | |
| | | $ 4,200 |
| 2 | 12,200 | |
| | | 5,800 |
| 3 | 18,000 | |
| | | 8,000 |
| 4 | 26,000 | |




(a)




(b)

**படம் 2.** படத்திலேயுள்ள ஒரு மொத்தச் செலவுப் புள்ளியிலிருந்து அடுத்த புள்ளிக்குப் போகும்போது இறுதிநிலைச் செலவின் படிகளை அறிவோம். நமது அலகுகளைத்தொடர்ந்து பிரிக்கமுடியுமானால் இறுதிநிலைச் செலவு எவ்வாறிருக்குமென்பதை முறிவில்லாத கோடு காட்டுகிறது. (புத்திசாலித்தனமாக நிர்வாகம் நடத்தும் கம்பெனிக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு, தொழிலாளர் செலவு, பொருள்களின் செலவு, ஏனைய உற்பத்திச் செலவுகள் என்பவற்றைக் கொடுத்தால், அது மொத்தச் செலவைக் குறைவாக வைத்துக் கொள்ளும். சாதனமொன்றின் செலவுகூடினால் மொத்தச் செலவுவளைகோடு மேலே உயரும். அதனால் கம்பெனியின் இறுதிநிலைவளைகோடும் மேலே உயரும்.)

www.padippakam.com



" மீதிச்செலவு " " மிகைச்செலவு " என்றெல்லாம் வழங்கப்பட்டது. பொருளியலிலே இறுதிநிலையென்று வருமிடங்களிலெல்லாம், மேலதிக என்ற விசேடணத்தைப் பயன்படுத்துவது பொருத்தமுடையதாகும். எனவே இறுதிநிலைப் பயன் என்றால் மேலதிக பயனாகும். இறுதிநிலைப் பொருள் என்றால், மேலதிக பொருளாகும். 12 ஆம் 13 ஆம் அத்தியாயங்களிலே நுகர்வின் இறுதிநிலை நாட்டம் என்பதற்கு மேலதிக வருமானத்தின் பயனாக உண்டாகும் மேலதிக நுகர்வுப் பொருள் என்றே குறிப்பிட்டோம். இறுதிநிலைச் செலவு என்றால் கூடுதலான உற்பத்தியின் அலகு ஒவ்வொன்றுக்கும் உண்டாகும் மேலதிக செலவேயாகும். இறுதிநிலைச் செலவுக்கு ஓர் உதாரணத்தை, இலேசாக்கப்பட்ட இலக்க முறையிலும், வரைப்படமுறையிலும், படம் 1 உம், 2 உம், காட்டுகின்றன. 3 ஆம் கோட்டிலுள்ள இறுதிநிலைச் செலவுத்தரவுகள் இரண்டாம் கோட்டிலுள்ள மொத்தச் செலவுகளைக் கழித்து வந்தனவே. இதிலிருந்து மேலதிக அலகு ஒன்றை உற்பத்திசெய்வதற்கான இறுதிநிலைச் செலவைமதிப்பிடலாம். ஒவ்வொரு உற்பத்தி மட்டத்துக்கும் ஒவ்வொரு இறுதி நிலைச் செலவு உண்டு. ஒரு அலகிலிருந்து மற்றொரு அலகுத் தொகையை உற்பத்திசெய்ய 4,200 டொலர் மேலதிகச் செலவானால் 2 அலகிலிருந்து 3 அலகுத் தொகையை உற்பத்திசெய்ய 5,800 டொலர் மேலதிகச் செலவாகும்.[1] எனவே 2 ஆம் படத்தில் உள்ள இறுதிநிலைச் செலவுக்கோடு உயருங்கோடாகும். மொத்தச் செலவு உயரவேண்டியது அவசியமே. ஏனெனில் நேரடியான இறுதிநிலைச் செலவு ஓரளவு செலவு செய்யாமல் மேலதிக உற்பத்தியை உண்டாக்கமுடியாது. மேலும் MC (இ. செ.) கோடு உயர்ந்தால் மொத்தச் செலவு அதிக விகிதத்திலே உயரும். இதன் கருத்தென்னவென்றால் மேலிருந்து பார்க்கும்போது இது குவிவாகவும், மொத்தப் பயனுடைமையிலிருந்து பார்க்கும்போது எதிர்மாறாகவுமிருக்குமென்பதே.

2b படத்திலுள்ள மிருதுவான கோடு நாம் பழகிய கோடுபோலத் தெரியலாம். இந்த இறுதிநிலைச் செலவுக் கோடு படம் 1 இலுள்ள B கம்பெனியின் சப்ளைக்கோட்டின் $S_8$ $S_8$ போலக்காணப்படுகிறது. இது தற்செயலாக ஏற்பட்டதன்று. B கம்பெனியின் சப்ளைக்கோட்டை உண்டாக்கத் தேவையான இறுதிநிலைச் செலவைச்சரியாகக் காட்டக்கூடியவாறே படம் 1 இன் செலவுத் தகவல் தயார்செய்யப்பட்டது. படம் 3 இல் 2b படத்திலுள்ள இறுதிநிலைச் செலவுக்கோடு பொருத்தமான அளவுக்குக் கீறப்பட்டுள்ளது.[2]

[1]. இறுதிநிலைச் செலவு வேறு, ஓரலகின் சராசரி உற்பத்திச் செலவு வேறு. பிந்தியது AC என்று வழங்கப்படும். இதனை 24 ஆம் அத்தியாயத்திலே, " மொத்தச் செலவை $q$ அலகின் மொத்த தொகையாற் பிரித்தபோது " உண்டாவதெனக் குறிப்பிடுவோம். $q = 3$, AC = டொலர் 12,800/3 = டொ 4,266 2/3 ஓர் அலகு. இது 3 ஆம் கோட்டிலுள்ள இறுதிநிலைச்செலவு MC யிலும் வித்தியாசமானது.

[2]. ஒரு பீப்பா மீனின் இறுதிநிலைச் செலவின் டொலர் பெறுமதி 1000 பீப்பா அலகின் இறுதிநிலைச் செலவில் ஆயிரத்து ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. படம் 1 இலே யுள்ள அலகுகளின் கருத்து இந்தப் பெரிய அலகே எனக்கொள்ளவேண்டும்.

www.padippakam.com




**இறுதிநிலைச் செலவுக்கும் போட்டிச் சப்ளைக்கோட்டுக்குமுள்ள ஒற்றுமை :**

படம் 3 இலுள்ள MC (இ. செ.) கோடு, கம்பெனியின் இறுதிநிலைச் செலவுக் கோடாகவும் சப்ளைக்கோடாகவும் அமைந்து இரண்டு கடமைகளைப் புரிகிறது. போட்டிக் கம்பெனி B சந்தைவிலையான 5 டொலருக்குத் தனக்குவிரும்பிய தெல்லாவற்றையும் விற்றால் (படம் 3 இலுள்ள தேவைக்கோடான *dd*யில் அது எங்கு வேண்டுமானாலும் செல்லச் சுதந்திரமுண்டு) MC கோட்டிலே குறுக்கு வெட்டு உண்டாகும் C என்ற தானத்தில் உற்பத்தி செய்யவிரும்பும். இந்தத் தானத்திலே கம்பெனியின் இறுதிநிலைச் செலவு 5 டொலர் விலைக்குச் சமனுள்ளதாயிருக்கும். இதைப் பொருளியலறிஞரான நாம் பின்வருமாறு எழுதுவோம். MC (இ. செ.) = P (விலை) கம்பெனியின் சமநிலை நிபந்தனை அதனுடைய சப்ளைக்கோட்டிலிருக்கும்.

உச்ச இலாபத்தை விரும்பும் உற்பத்தியாளன் ஒருவன் MC (இ. செ.) = P என்ற தானத்துக்கு சப்ளை தொகை *q* வைக் கொடுக்க விரும்புவார் ? C என்ற தானத்திலே தொகை *q* 2 ஆயிரம் பீப்பா. C க்குச் சற்று இடப்பக்கமாக *q* வானது 1999 (ஆயிரம்) ஆகும். உற்பத்தியாளன் C ஐ விரும்புவது எதனால். அவன் தன்னைப் பின்வருமாறு கேட்கலாம் :

நான் ஒரு மேலதிக பீப்பாவை உண்டாக்கி விற்பனை செய்தால் அதனால் எத்தனை டொலர் மேலதிக வருமானம் எனக்கு உண்டு ? மேலதிக

**இறுதிநிலைச் செலவுத் தரவுகள், சப்பிளை மறிவினைகளைப்பற்றிய தகவலைக் கொடுக்கும்.**




**படம் 3.**—இலாபத்தை உச்சமாக்க விரும்பும் போட்டிக் கம்பெனி MC — P புள்ளிகளில் அன்றி வேறு தானங்களிலே சப்பிளைவழங்கினால் இலாபத்திற் சிறிதளவு இழக்கும். உயர்ந்த *dd*, குறைந்த *dd* என்பவற்றை வரைந்து MC வளைகோடே கம்பெனியின் ss வளைகோடு என்பதைக் காட்டுக.

www.padippakam.com



பீப்பாவுக்கு நான் சந்தைவிலை 5 டொலர் பெறுகிறேன். ஆனால் என்னுடைய மேலதிகச் செலவு என்ன ? C க்கு இடப்பக்கமாக எங்கும் எனது இறுதி நிலைச் செலவு 5 டொலருக்குக் குறைவு. எனவே C க்கு நகர்ந்து போய்மேலதிக உற்பத்தியைச் செய்தால் மேலதிகமாக ஓரளவு லாபமுண்டு.

இக்காரணத்தினாலே அம்பு C யை நோக்கி வலப்பக்கமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. 5 டொலர் விலையில் உச்சலாபம் விரும்பும் போட்டிக் கம்பெனி C க்கு அதிகமாகச் சப்ளை செய்யமாட்டாது, என்பதை வாசகர் ஆராயலாம். மேலதிக உற்பத்தி அலகு ஒவ்வொன்றும் 5 டொலரை வருமானமாகக் கொண்டு வருகிறது. C க்கு அப்பாலுள்ள ஒவ்வொரு அலகும் 5 டொலர்க்கு அதிகமான செலவைச் செலவு செய்யும். உயரும் கோடு இதனையே குறிப்பிடும். எனவே MC (இ. செ.) = P என்ற C க்கு மேலே போனால் கம்பெனி நிகரவருமானத்தில் ஒரு சிறு தொகையை இழக்கும்.[1] வாசகர் சந்தைவிலையை வேறொரு மட்டத்துக்குப்படம் 3 இல் புதிய கிடைநிலையான கோட்டைக் கீறி மேலேசொன்ன நியாயங்களைக் காட்டி சப்ளை நிலைமையும் MC (இ. செ.) கோட்டில் சப்ளைக்கோடு வெட்டும் தானத்திலிருந்து அறிந்துகொள்ளலாமென வாதிக்கலாம். இப்போது போட்டிச் சப்ளை கம்பெனி சம்பந்தமான இந்த முக்கிய விடயத்தைப்பற்றிப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

விலை மாற்றங்களைக் கவனியாமல், உச்சலாபம் கோரும் போட்டிக் கம்பெனியொன்றின் செலவுக்கோட்டைக் கீற அறிவும் திறமையுமிருக்குமானால் உயர்ந்து செல்லும்கோடே ss சப்ளைக்கோடாயுமிருக்குமென்பதை அறிவோம். அக்கம்பெனி சந்தைக்குக் கொண்டுவரும் தொகை முழுவதும் இறுதிநிலைச் செலவுக்கோட்டிலேயே விழும்.

இறுதிநிலைப்பயனுடைமைக்கோடு, சில சந்தர்ப்பங்களிலே நுகர்வோர் சந்தைத் தேவைக்கோட்டுக்குச் சமமானதாயிருக்கும் என்பதை உணர்ந்தவர்கள் கம்பெனியொன்றின் இறுதிநிலைச், செலவுக்கோடு, சந்தைச்சப்ளைக் கோட்டுக்குச் சமனாக்கப்படலாமென்பதைக் காட்டினால் அதிசயப்படமாட்டார்.

## இறுதிநிலைச் செலவுவிலை விசேடம் : மற்றொன்று விரித்தல்.

சமூகத்தின் நன்மையில் எவ்வித அக்கறையுமில்லாத அந்தமேற்படி இறுதிநிலைச் செலவுக் கருதுகோளை மிக முக்கியமானதொரு கருத்தாக விஞ்ஞானி ஒருவர் கொள்வர். ஆனால்மனிதருடைய சுபீட்சத்தையும், திறமையுள்ள தொரு விலைமதிப்பிடும் திட்டத்தையும் கருத்திலே கொண்ட ஒருவரின் நிலை என்ன ? விலையை இறுதிநிலைச் செலவோடு சமன்படுத்துவதை அவர் சுவாரசியமாகக் கவனிப்பார். அதை ஆராயும்போது பின் வரும் விடயம் நிதர்சனமாகும்.

[1] MC க்கும் dd க்கு மிடையில் நிலைக்குத்தான கோடுகளைக் கீறினால் மேலதிக உற்பத்தியாலுண்டாகும் நட்டத்தைக் காட்டும் முக்கோணங்களை ஆக்கலாம். C க்கு இடதுபக்கமாயுள்ள முக்கோணங்கள் மிக அற்பமாக உற்பத்திசெய்வதாலுண்டாகும் மேலதிக நட்டத்தைக் காட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



பண்டங்களின் விலைகள் இறுதிநிலைச் செலவுக்குச் சமமானுல்தான், பொருளாதாரமானது அருந்தலான வளங்களையும் எல்லைக்குட்பட்ட தொழில் நுட்ப அறிவையும், பயன்படுத்த உச்சநிலையான உற்பத்தியைப் பெறும். தொழில் முயற்சியின் ஒவ்வொரு ஊற்றும் தனது உயரும் இறுதிநிலைச் செலவை வேருெரு ஊற்றின் இறுதிநிலைச் செலவோடு சமன்படுத் தினுலேதான்—ஒவ்வொரு இ. நி. செலவும் பொதுவிலைக்குச்சமமாகச் சரிக்கட்டப்படும் நிலைகளில் இது சகசம். தொழில் முயற்சி தனது மொத்த உற்பத்தித் தொகையைக் குறைந்தபட்ச மொத்தச் செலவில் உற்பத்திசெய் யமுடியும்.

சம இறுதிநிலைச் செலவுக்கொள்கை எவ்வகையான சமூகத்துக்கும் பொருத்தமானது. போக்குவரத்துச் செலவுகள் உட்பட்ட இறுதிநிலைச் செலவுகளைச் சமன்படுத்தக்கூடியமுறையில் சோவியத் யூனியனின் கோதுமைச் செய்கை எல்லாப் பகுதிகளிலும் ஊக்கப்படுத்தப்படாவிட்டால், அந்நாட்டி லுள்ள பொருளாதாரத் திட்டக் குழுவினர் கோதுமை ஏனைப்பண்டங்கள் என்பன விடயத்திலே, தாம் விரும்பிய நிறைவைப் பெறமாட்டார். இதற்கு கைவசமுள்ள மூலவளங்களைத் திறம்படப் பகிர்ந்து ஒதுக்கவும் வேண்டும். இந்த உண்மையை அவர்கள் உணர்ந்து வருவதை அவர்களுடைய பொருளாதாரச் சஞ்சிகை முதலியவற்றிலே காணலாம்.

சுபீட்சப் பொருளாதார நூல்களிலே இந்த விதியைப்பற்றிக் கடினமான நிருபணங்கள் கொடுக்கப்படும். மூலாதாரப்பிரமாணங்கள் தவருயிருக்கும் போது உண்டாகக் கூடிய புறநடைகளையும் அவை காட்டுகின்றன. இந்த உயர்நிலை முடிவை நிறுவுவதற்குத் தேவையான நியாயங்களைச் சுருக்கமாக இங்கே கூறுவோம். அது பின்வருமாறு :—

ஒரு கம்பெனியிலிருந்து அல்லது இடத்திலிருந்து கூடிய இறுதிநிலைச் செலவுடன் பொருள் உற்பத்திசெய்யப்படுகிறதென்று வைத்துக்கொள் வோம். மற்றொரு கம்பெனியோ, இடமோ குறைவான இறுதிநிலைச் செலவுடன் உற்பத்திசெய்கிறதெனவும் கொள்வோம். உயர் இறுதிநிலைச் செலவுள்ள இடத்தில் உற்பத்தி செய்வதைச் சிறிது நீக்கி குறைவான இறுதிநிலைச் செலவுள்ள இடத்தில் அந்த மேலதிக உற்பத்தியைச் செய்கிறேம். அதனுல் எங்களுக்கு லாபம் உண்டென்பது உறுதி. ஏன் ? இந்த இரண்டு இறுதிநிலைச் செலவுக்குமிடையில் உண்டாகும் இந்த வித்தியாசம் சமூகத்துக்கோ, தொழிற்துறைக்கோ லாபமாகும். இந்த மாற்றத்தைச் செய்தபின் நிலைமையை மறுபடி ஆராய்ந்து பார்ப்போம். MC யான இறுதிநிலைச் செலவுகள் இப்பொழுதும் சமமற்றிருந்தால் அந்த நடவடிக்கையை மேலுஞ் செய்வோம். ஈற்றில் எந்தவகையிலிருந்து உற்பத்திசெய்யப்பட்டாலும் இறுதிநிலைச் செலவு ஒரு பொருளுக்கு சமனுயிருப்பதைக் காண்போம். அப்போது குறைந்தபட்ச மொத்தச் செலவுகள் விடயத்தில் சமநிலையுண்டாகிறது. ஏனெனில் இறுதிநிலைச் செலவு வேற்றுமைகளைப் பயன்படுத்துவதால் எதனையும்சேமிக்க முடியாத நிலையை அடைவோம்.

படிப்பகம்

www.padippakam.com



மேலே காட்டிய நியாயங்கள் பணக் கணக்கிலே பேசப்பட்டிருக்கின்றன. தொழிலாளர், தொழில், குதிரைச்சக்தி, அருந்தலான நிலக் கனிப்பொருள் கள் முதலியவற்றைச் சேமித்தல் என்ற வகையிலே மேற்படி காரணங்களைத் திருப்பிக் கூறலாம். ஒரு கம்பெனி தனது பொருளுற்பத்தியின் மொத்தத் தொகையை எவ்வாறு தனது பலவேறு யந்திரத் தாபனங்களிடையே பகிர்ந்து ஒதுக்கலாம் என நிச்சயிக்கும் நிலைமைக்கும் பொருந்தும். குறித்த ஒரு தொகைக் கம்பெனிகட்கோ, பல கம்பெனிகட்கோ இது பொருத்த முடையதாகும்.

இறுதிநிலைச் செலவுக்கு இந்த விசேடத் தன்மையிருப்பதால் எந்தவகை யானதொரு தாபனத்திலுமுள்ள திறமையின்மையை அளப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம். பூரணப்போட்டித் தொழின் முயற்சிகள் முற்றாக இல்லா விட்டாலும், இன்றுள்ளதைப் போலன்றி மிக அருமையாயிருந்தாலும், இறுதிநிலைச் செலவு என்ற கருதுகோளுக்கு வரைவிலக்கணம் கூறுவதாலும் அதை ஆராய்ச்சிசெய்வதாலும் அதிக பயனுண்டாகும்.

## மொத்தச் செலவும், குறுந்தவணை மூடும் நிலைமைகளும்

போட்டி சப்ளை பற்றிய வருணனையைக் கவனிப்போம். குறுந்தவணை என்றால் கம்பெனியின் சில தளவாடம், வளம், கடமைகள் என்பன எல்லைப்படுத்தப்பட்டகாலம் என்பதை முன்னரே அறிந்திருக்கிறோம். ஆனால் இந்தக் கால எல்லைக்குள்ளேயே தொழிலாளர் மூலப் பொருள் கள் முதலிய மாற்றக்கூடிய உற்பத்திச் சாதனங்களைக் கூடுதலாகவோ குறைவாகவோ கம்பெனி பயன்படுத்தி உற்பத்தியை மாற்றப் போது மான காலமாகும். இந்தக் காலம் எல்லாக் கைத்தொழில்களுக்கும் பொதுவான குறிப்பிட்டதொரு காலமன்று. ஒரு தொழின்முறைக்குள் ளேயே பலவகைப் பருவமடங்கிய குறுந்தவணையைப்பற்றி நாம் கேள்விகள் கேட்கலாம். மிகக் குறுகியதொருகாலத்திலே பல தீர்மானங்களைக் கைவிட வேண்டியதாகும். அதனால் உண்டாகும் இறுதிநிலைக் கோடு நிலைக்குத் தான நெகிழ்ச்சியற்ற கோடாகலாம். அல்லது நீண்டட்டருவத்துக்கு உற்பத் தியைச் செய்யவிடலாம். அதனால் தளவாடங்கள் தேயவோ, புதியவற்றை நிறுவவோ இடங்கொடுத்து இறுதிநிலைச் செலவை நீண்ட தவணையில் ஏற்படக்கூடியவாறு மட்டமாகவோ செய்யலாம். அந்நிலையில் கம்பெனி யின் நிர்வாகம் சம்பந்தமான நிலையான தன்மைகளுக்கு அன்றி வேறு எவ்வகையான நிலையான தன்மைகளுக்கும் இடம் இருக்கமாட்டாது.

குறுந்தவணைத் தீர்மானங்களைச் செய்யும் ஒரு கம்பெனியை எடுத்துக் கொள்வோம். அதற்கு " நிலையான " ஒரு செலவு உண்டு. குறுந்தவணை யில் மாறாதனவென்று கொள்ளப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்படும் நிலையான செலவுகளின் மொத்தமான வரைவிலக்கணம் கூறப் பட்டுள்ளது. உதாரணங்கள் : கடன்பத்திரவட்டி, வாடகை, பொதுச் சம்பளங்கள், விசேடத் தொழில் உரிமைக்கான வரிகள், முதலியன வாகும். இவை தவிர்ந்த ஏனைய மொத்தச் செலவுகள் " மாறுஞ்

www.padippakam.com



செலவுகள்" எனப்படும். உற்பத்தியோடு மாறும் செலவுகளின் மொத்தம் என்பது இதற்கு வரைவிலக்கணம். உதாரணம் : மூலப்பொருள்களின் செலவு, உற்பத்தித் துறையில் வேலைசெய்வோருக்குரிய சம்பளம், முதலியன. இவைபற்றிய விபரம் 24 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்படும்.

கீழ்நோக்கிச் செல்லும் விலை உண்டாகும்போது ஒரு கம்பெனி என்ன செய்யும்? அது உற்பத்தியை முற்றுக நிறுத்தலாம். அப்போது அதற்கு உண்டாகக் கூடிய நட்டமென்ன? வருமானம் பூச்சியம். நிலையான செலவு மாறவில்லை. உற்பத்தி நிறுத்தப்பட்டது. அதனுல் வரும் நட்டம் நிலையான செலவோடு சமனுயிருக்கும். மாறும் செலவுக்குக் குறைவாகவே வருமானத்தைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு விலை குறையுமானுல், கம்பெனியானது உற்பத்தியை நிறுத்தித் தொழிலை மூடிவிடவிரும்பும். நிலையான செலவுக்கு அதிகமாகவே நட்டம் உண்டாகுமானுல் அது உற்பத்தியை என் தொடர்ந்து நடத்தவேண்டும்? எனவே பின்வரும் விதி :

## மூடும் அவத்தை

உற்பத்தியால் மாறும் செலவு மாத்திரம் கிடைக்கக்கூடியவாறு சந்தை விலை மிகக் குறைவாயிருக்குமானுல், கம்பெனி தனது தொழிலை மூடிவிட வேண்டிய நிலை உண்டாகும். அந்தக் கட்டத்துக்குக் கீழே கம்பெனி எதையும் உற்பத்திசெய்ய மாட்டாது. அந்தக் கட்டத்துக்கு மேலேயுள்ள விலை P யில் அது குறுந்தவணை இறுதிநிலைக்கோட்டை அனுசரித்தே உற்பத்தி செய்யும். MC(இ.செ.) = P கட்டங்களில் கம்பெனி நிலையான செலவை நிரப்பக்கூடிய வருமானத்தைப் பெறும். அதனுல் நட்டம் குறைக்கப்படும்; (இந்தக் கருத்திலே லாபம் உச்சமாக்கப்படும்).

மூடும் கட்டத்தைக் காட்டும் தானம் படம் $4a$ இல் காட்டப்பட்டுள்ளது MC (இ.செ.) கோடானது அந்தத் தானத்துக்குக் கீழேயும் தொடர்கிறது. ஆனுல் நமது படங்களிலே அந்த MC (இ.செ.) இன் அவசியமற்ற கோடு காட்டப்படவில்லை. அவசியமற்றதென்று கூறுவது எதனுலென்ருல், கம்பெனி தொழிலைக் கைவிடுமானுல் மிச்சம்பிடிக்கக்கூடிய மாறும் செலவிலும் குறைவாகவே பொருள்களை விற்பதால் $(P \times q)$ வருமானம் கிடைக்குமானுல், உற்பத்தியைத் தொடர்ந்து நடத்தமாட்டாது என்பதனுலேயே. ஆனுல் குறுந்தவணையிலே கோட்டின் தடித்த பகுதியில் உற்பத்திசெய்யும். இது நீண்ட தவணைச் செலவுகளைச் சரிக்கட்ட முடியாவிட்டாலும் இதுநிகழும். அதனுடைய நிலையான செலவுகள் இருந்துகொண்டேயிருக்கும். அதனுல் நியாயத்தை ஆராய்ந்து கருமம்செய்யும் கம்பெனி, நிலையான செலவுகளிருந்துகொண்டேயிருக்குமென்பதால், நட்டத்தை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கலாம் என எண்ணும். எனவே மாறும் செலவுக்குச் சிறிது அதிகமாக அது பெறுமானுல் அது MC (இ.செ.) = P என்ற மட்டத்தில், அதாவது நட்டத்தை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கக்கூடியவகையில் உற்பத்தியைச் செய்யும்.


www.padippakam.com




## மொத்தச் செலவும், நெடுந்தவணை முறிவு நிலைகளும்

நிலையான சில செலவு நிபந்தனைகள் ஏற்படுமானால் குறுந்தவணையிலே MC (இ.செ.) கோட்டை அனுசரித்து மூடும் புள்ளிக்கு மேலே நான் உற்பத்திசெய்ய விரும்புவேன். எனது செலவுகள் எல்லாவற்றுக்கும் ஈடுசெய்யவருமானம் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. எனது MC (இ. செ.) கோட்டிலுள்ள உயர்புள்ளி ஒன்றிலேதான் எனது செலவுகளெல்லாவற்றுக்கும் ஈடுசெய்யக் கூடிய வருமானத்தைப் பெறுவேன். குறுந்தவணை முடிந்த பின்னர் (1) பழைய கட்டுப்பாடுகளை மறுபடியும் புதுப்பிப்பதற்கும் (2) புதியதொரு தொழிலைத் துவக்கிப் புதிய கடப்பாடுகளை உண்டாக்கவும் எனக்குரிய பழைய நெடுந் தவணைச் சுதந்திரத்தை மீட்டுக்கொண்டு தொழிலிலே தொடர்ந்து இருப்பதற்கு இது அவசியமாகும்.

அப்போது நெருக்கடியானதொரு முறிவுக்காலம் உண்டாகும். இதற்குக் கீழே நீண்டதவணை P நிலைத்திருப்பதானல் நான் இந்த முயற்சியிலே




படம் 4a.—P ஆனது மாறும் செலவுகளை மாத்திரம் ஈடுசெய்யக் கூடியதாயிருந்தால் கம்பெனி தன்தொழிலைக் கைவிட நிச்சயித்துவிடும். முறிவுத்தானத்துக்கு மிக உயர்வான இடத்துக்குப் P உயருமானல், கம்பெனிக்குமாறும் செலவும், நிலையான செலவும் எல்லாம் சமாளித்து மிஞ்சக்கூடிய வருமானமுண்டாகும். இடையிலே குறுந்தவணை நட்டங்களை MC வளை கோட்டில் உற்பத்தி செய்வதன்மூலம் குறைவாக வைத்துக்கொள்ளும். P முறிவுத்தானத்துக்குக் கீழேயிருக்குமானல் நெடுந்தவணையில் தொழில் நின்றுவிடும்.

படம் 4b.—தொழின்முயற்சியிலே பிரவேசிப்பதற்கும், அதிலிருந்து வெளியேறுவதற்கும் பூரணசுதந்திரமிருக்கும்போது, எத்தனை கம்பெனிகளும் ஈடுபடலாமென்ற சுதந்தரமிருக்கும் போதும், அவை மாறாத ஒரேமாதிரியான செலவில் உற்பத்திசெய்யமுடியுமானல், நெடுந்தவணை ss சப்பிளை வளைகோடு கிடையாயிருக்கும். மாறாத சாதனநிலைகளில் கம்பெனி எல்லாச் சாதனங்களையும் பெறமுடியாவிட்டால் ss' சப்பிளைகோடு மேனேக்கிச் செல்லவேண்டும். அப்போது ஒவ்வொரு கம்பெனியின் செலவுவளைகோடும் மேலே நகரும்.

www.padippakam.com



தொடர்ந்திருக்கவியலாது. ஏனைய கம்பெனிகளும் என்னுடைய கம்பெனி போலிருந்தால் நெடுந்தவணைச் சப்பிளையானது நெருக்கடியான இந்த முறிவுமட்டத்தின் கீழே (தொழிலில் நிலைத்திருப்பதற்குள்ள செலவெல் லாவற்றையும் இது தான் சமாளிக்கும்) முற்றுக வற்றிவிடும்.

நெடுந்தவணையில் செய்யப்படும் தொழிலில் பிரவேசிக்க யாருக்கும் பூரண சுதந்திரமிருக்கிறதென வைத்துக்கொள்வோம். எத்தனை கம்பெனி களும் பிரவேசிக்கலாம்; எனக்குக் கீழிருக்கும் கம்பெனிகளைப் போலவே இவையும் பொருளை அதே செலவில் உற்பத்திசெய்யலாம். இவ்வாறு சுதந்திரமான பின்பற்றும் நிலைமைகளில், நெடுந்தவணை (P) விலை இதே நெருக்கடியான முறிவுத் தானத்துக்கு மேலே நிற்கமாட்டாது என்பது தெளி வாக வில்லையா? இந்த முறிவுத்தானத்திலேதான் கம்பெனிகள் பின்வரும் விடயங்களையும் அடக்கிய நெடுந்தவணை மொத்தச் செலவுகளை ஈடுசெய்யும் (1) தொழிலாளர், உபகரணங்கள், தளவாடம், வரி, இதரச் செலவுகள் (2) சமமான திறமையும், முயற்சியுமுள்ள நிருவாகிகளுக்கு எல்லாத் தொழில் நிலையங்களிலும் கொடுக்கப்படும் சம்பளம் (3) வேறு தொழிலில் முடக்காமல் குறித்த முயற்சியிலே மூலதனத்தை முடக்குவதனால் கிடைக் கும் வட்டி.

### நெடுந்தவணை முறிவுத்தான நிலை

சமநிலையிலுள்ள கம்பெனிகள் தங்கள் தங்கள் போட்டி விலைகளைச் சமாளிக்கக்கூடிய நிலையில் (P) விலையானது நெருக்கடியான தன்மையை அடையும்போது உண்டாவது. நெடுந்தவணை விலை மிகக் குறைவாயிருக் கும்போது விலை இந்தச் சமநிலை மட்டத்தை அடையும்வரை கம்பெனிகள் முயற்சியை விட்டுவிடும். உயர்வான நெடுந்தவணை (P) விலையில் புதிய கம்பெனிகள் முயற்சியிலிறங்கும். இறங்கித் தற்போதுள்ள கம்பெனிகள் செய்யும் முயற்சியையே செய்யும். அதனால் சந்தைவிலை போட்டிச் செல வைச் சரிக்கட்டக்கூடிய நெடுந்தவணைச் சமநிலை (P) விலைக்கு இறங்கும்.

இந்தப் "பூரண போட்டிச் செலவுகள்" கணக்காளர் செலவுக் கோட்டிலே போடும் தொகையிலும் அதிகமாயிருக்கும். எல்லாத் தொழில்களிலும் போட்டிமுறையிலே தீர்மானிக்கப்படும் நிர்வாகச் சேவைகளுக்குத் திரும்பும் தன்மையும் இவற்றிலடங்கியிருக்கும். அத்துடன் சமமான ஆபத்துள்ள தொழில்கள் எந்தப்பகுதியிலும் போட்டிமுறையில் நிச்சயிக்கும் மூலதனத் துக்குச் சாதாரணமாகத் திரும்பும்தன்மையும் அடங்கியிருக்கும். "சாதாரண இலாபங்கள்" செலவுக் கணக்குகளில் அடங்கும்; "மேலதிக லாபங்கள்" புதிய கம்பெனிகள் உண்டாகும் போட்டியால் கரைந்துவிடும்; "அசாதாரண

www.padippakam.com



மான நட்டங்கள்'' நெடுந்தவணைக் கம்பெனிகள் மறைவதால் இல்லாமற் போகும்[1].

**உள் அடங்கிய செலவு அமிசங்கள்.**

உற்பத்திச் சாதனம் பொருளாதாரமுறையில் முக்கியமானது. அது யார் கையிலிருந்தாலும் பறவாயில்லே. கம்பெனிக்குச் சொந்தமான உற்பத்திச் சாதனங்கள் சம்பந்தமாய்க் கிடைக்கும் வருமானம் பொருளறிஞருக்கு மிக முக்கியமானது. எனவே இதற்குப் புதியதொரு பெயரை வழங்கவேண்டும். வெளியிலிருந்துவரும் தொழிலாளர்க்கு வெளிப்படையாகக் கொடுப்பதற்கு மாற்முெப்பாக, உள்அடங்கிய சம்பளங்கள் என்பதை, சொந்தக்காரனே உதவும் தொழிற்சக்தியின் வருமானம் என்று வரையறுத்தோம். இவ்வாறே அடங்கிய வாடகை, வட்டி என்பன சொந்தக்காரனுடைய நிலம், மூலதனம் என்பவற்ருல் கிடைக்கும் வருமானமாகும். இவை வெளியாரிடமிருந்து பெறும் நிலம், மூலதனம் என்பவற்றைக் கருதாது குறுந்தவணையிலே அடங்கிய சம்பளங்களே ஒருவன் கணக்குத் தவருல் பெறமுடியாதிருக்கலாம். சில சமயம் குறுந்தவணையிலேயே தேவையான உள்அடங்கிய வருமானத்துக்கு அதிகமாக அவன் பெறக்கூடும். இந்த வித்தியாசம் தற்காலிகமானது. போட்டியினுல் கரைந்துபோகாதது. அவனிடத்து விசேடமான சில உற்பத்திச் சாதனங்களிருந்தால் (உதாரணமாக நிலக்கனிநிறைந்த நிலம், விசேடமான தொழில்நுட்ப அறிவு, வளம் பொருந்திய நிலம்,) அவனுக்கு நெடுந்தவணையிலும் நல்லவருமானமுண்டாகும். ஆனுல் அதிட்டவசமாக அவன் பெற்ற விசேட உற்பத்திச் சாதனங்கள் கொண்டுவந்த வருமானம் அவ்வளவு லாபமானதாக இல்லே என்று நாம் அறிகிருேம்.

**சந்தர்ப்பச் செலவு அமிசங்கள்.**

காசாகக் கொடுக்கும் செலவினங்களேச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்வர். பொருளியலறிஞர், கணக்காளர் என்போர் இதற்கு அப்பாலுஞ் செல்லவேண்டியிருக்கிறது. பொருளியலறிஞர் மேலும் செல்வார். ஒரு கருமத்தைச் செய்யமுற்பட்டால் வேமுெரு கருமத்தைச் செய்யாதுவிடுகின்ருேம். அது அத்துணைத் தியாகமாகும். இதனைச் சந்தர்ப்பச் செலவு என்கிருேம். ஒரு கருமமிருக்க அதற்குப் பதிலாக மற்றுென்றைச் செய்வது சந்தர்ப்பச் செலவு.

[1]. முதலீடு செய்வோர் நல்ல லாபமுண்டென நினைத்துக்கொண்டு தேவைக்கதிகமாக சப்ளேசெய்தால் நிலேயான நட்டம் சராசரியிலுண்டாகும். திரும்பத்திரும்பப் பிழையாகக் கணக்கிடுவதால் உண்டாகும் நட்டத்தை அனுசரித்தே பூரணப்போட்டிச் செலவுகளுக்கு வரைவிலக்கணங்கூறவேண்டும். மற்றுெரு விடயமும் கவனிக்கப்படல்வேண்டும். முறிவுவிலே P யிலேயே ஒவ்வொரு கம்பெனியும் தனது யந்திரங்களே இரட்டித்துச் சப்ளேயைப் பன்மடங்கு பெருக்கலாம். ஆனுல் கம்பெனியின் நிர்வாகத் திறமை எல்லேக்குட்பட்டதாயிருந்தால் முறிவு நிலேச்செலவுகளே உயர்த்தாமல் அதுகுறித்த ஒரு தொகைக்கு $q$ மேல் உற்பத்திசெய்யமுடியாதிருக்கும். இந்தநிலேயில் புதியதொரு கம்பெனிமூலம் சமூகம் தனது மேலதிகத்தொகையைப் பெறுவது நன்று.

www.padippakam.com



கைத்தொழில் சப்ளை, கம்பெனியின் முறிவுத் தானம் என்பவற்றுக்கு இது எவ்வாறு பொருந்தும் ? நெடுந்தவணை முறிவுத்தானச் செலவு மட்டம், வெளிப்படையான செலவுகளோடு, வேறுவகையில் செலவிடாமல் இதற்கெனவே செலவு செய்யப்படும் அடங்கிய செலவுவகைகளையுமடக்கும். கோதுமை விளைவுக்குப் பயன்படுத்தும் தொழிலாளரை வயலில் வேலை செய்யவோ, வேறு ஒருவரின் கோதுமைவயலில் வேலை செய்யவோ நியமித்தால் அந்தப் பயனுடைமைக்கு உண்டாகும் மதிப்புக்கு ஈடு செய்ய வேணடும்[1]. இல்லாவிட்டால் எனது கோதுமை வயலுக்கே சப்பிளை பண்ண மாட்டேன். இக்காரணங்களால் பூரணப்போட்டிச் செலவு, சந்தர்ப்பச் செலவோடு தொடர்புடையதாகும். இந்தக் கருதுகோள் மிக முக்கியமானது. இது அடங்கிய செலவுக்கொள்கையினும் பார்க்க விசாலமான பிரதேசத்தை யடக்கியதாகும். போட்டிவிவசாயிகள், தொழிலாளர், ஏனைய சாதனங்கள் என்பன சம்பந்தமாக வெளிப்படையாய்க் கொடுக்கவேண்டியிருக்கும் விலைகள், வேறு தொழில்களிலோ, ஓய்வுகாலத்திலோ பயன்படுத்தும் சந்தர்ப்பங்களிலேதான் முக்கியமாகத் தங்கியுள்ளன. எல்லாப்போட்டிச் செலவுகளும், சந்தர்ப்பச் செலவுகளோடு தொடர்புள்ளன. இவ்விடயத்தைப் பற்றிப் பேசும்போது பொருளியலாளர் ஒரே பரிபாஷையைப் பயன் படுத்துவதில்லை. ஆனால் சந்தர்ப்பச் செலவென்பது முக்கியமானதாகும். இதைப்பற்றி அடிக்கடி நாம் கேட்போம்.

## நெடுந்தவணைக் கைத்தொழிற் சப்பிளையும் கம்பெனியின் முறிவுத்தானங்களும்

கம்பெனிகள் ஒரு கைத்தொழிலிற் பிரவேசிக்கும்போதும், அதைவிட்டு நீங்கும்போதும் உள்ள கைத்தொழில் சப்ளையின் நடத்தைபற்றி இனி ஆராய்வோம்.

படம் 4*b* இலே நெடுந்தவணை கிடைநிலையான $S_LS_L$ என்ற சப்பிளைக்கோடு காட்டப்பட்டுள்ளது. இது படம் 4*a* யிலுள்ள கம்பெனியின் முறிவுத் தானமட்டத்தில் நாம் முன்னர் விதித்த சுதந்தரப் பிரவேசம், செய்ததையே மறுபடி பன்மடங்கு செய்தல் என்ற நிபந்தனைகளினால் உண்டாகிறது. இந்தக்கிடைநிலை மற்றொரு நிபந்தனையிலே தங்கியுள்ளது. (1) இந்தக் கைத்தொழில் ஏனைய கைத்தொழில்களின் மொத்தத்தை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மிகச் சிறிது (2) (நிலம், தேர்ச்சிபெற்ற, தேர்ச்சி பெறாத தொழிலாளி, முதலிய) உற்பத்திச் சாதனங்களை யெல்லாம் விரியும் இந்தக் கைத்தொழில் சுருங்கிக்கொண்டிருக்கும் ஏனைய பொருளாதாரத்துக்கு ஏற்பப்பயன்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறது.

[1] சந்தர்ப்பச் செலவைக் கணக்கிடுவதில் பயன்படுத்தும் செலவே நல்லபதில் பயன்படுத்தலாகும். பதில்பயன்படுத்தல் தங்குதடையின்றி நடைபெற்றால், அத்தகைய சந்தர்ப்பச் செலவு இந்தக் கைத்தொழிலின் செலவுக்கு எல்லையிடும். பதில்பயன்கள் படிப்படியாக உண்டானால், அடுத்தபதில்பயன் சாதன விலைக்குக் கீழ் எல்லையையே கொடுக்கும். ஒரு பிரதேசம்மாத்திரம் மிச்சம்விடப்படும். அந்தப்பிரதேசத்தின் விலையை நாலாம்பாகத்தில் ஆராயப்படும் வரி ஆராய்ச்சியாலேயே நிச்சயிக்கவேண்டும்.

www.padippakam.com



இந்தத் தொழிலானது விரிவடைவதால் (மற்றத்தொழில்கள் சுருங்குவதால்) அதேவகையான உற்பத்தியாளர் (எதிர்காலத்தில் தொழில் துவங்கும் உற்பத்தியாளர்) பயன்படுத்தும் உற்பத்திச் சாதனங்கள் எவற்றின்விலையையும் மாற்றமாட்டாது என்பது இதனால் உறுதியாகிறது. எனவே இந்தத் தொழிலுக்குத் தேவை மிக அதிகமானாலும், எமது செலவுக்கோட்டை மாற்றமாட்டாது.

இந்த மேலதிகமான முற்கோள் செய்து கொள்ளப்படாவிட்டால், இத்தொழிற்றுறை நெடுந்தவணையில் விருத்தியடையும்போது உற்பத்திச் சாதனங்களின் சந்தை விலை அதிகரிக்கும். (உ-ம்: வைன் உற்பத்தியைப் பெருக்கினால் முந்திரிகை உற்பத்திசெய்யப்படும் நிலங்களில் செய்யப்படும் ஏனைய விவசாயத்தை வழக்கமான வாடகை கொடுப்பதால் மாற்றமுடியாது).

விசேடமாய் இத்தொழிலுக்குரிய உற்பத்திச்சாதனங்களின் விலை, உற்பத்திப் பெருக்கத்தால் உயருமானால் $S_LS_L$ சப்பிளைக்கோட்டில் எத்தகைய விளைவு உண்டாகும்? புதிய கம்பெனிகள் பழைய கம்பெனிகள் என்பனவற்றின் இறுதிநிலைச் செலவுக்கோடும் ஏனைய செலவுக்கோடும் மேலே உயரும். அதன்விளைவாக இடைநிலையாயிருந்த நெடுந்தவணைச் சப்பிளைக்கோடு மேனோக்கி உயரும்[1].

[1] இந்த சப்பிளைக்கோட்டை இரண்டாம் அத்தியாயத்திலே ஆராய்ந்த உற்பத்திச்சாத்தியக் கோட்டுடன் தொடர்புபடுத்தலாம். உற்பத்திச் சாதனங்களின் மொத்தம் மாறுது திரப்படுத்தப்படுமானால் இந்தத் தொகையிலிருந்து ஒரு குறித்தளித்தத்தை ஒவ்வொரு கைத்தொழிலும் பயன்படுத்தி வருமானால் ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் இடைநிலையான மாஷல் சப்ளைக்கோடு உண்டாகும். எந்த இரண்டுபொருள்களுக்கிடையிலுமுள்ள (உதாரணம் துப்பாக்கி, வெண்ணெய்; நுகர்பொருள் மூலதனப்பொருள் என்பன) உற்பத்திச்சாத்தியக்கோடு நேர் கோடாக இருக்கும் என்ற உதாரணத்துக்கு இது பொருந்தும். சில கைத்தொழில்கள் தமக்கென விசேடமாயுள்ள சில சாதனங்களைப் பயன்படுத்தும். அல்லது மற்றக் கைத்தொழில்கள் பயன்படுத்தும் சாதனங்களிலும்பார்க்க அதிகமான அளவில் பயன்படுத்தல் பெரும்பாலும் சாதாரணவழக்கமாகும். இந்தச்சந்தர்ப்பத்திலே மற்றத்தொழில்கள் சுருங்க இது விரிவடைவதால் விசேடமாயுள்ள சாதனங்களின் விலை மற்றச்சாதனங்களின்விலையிலும் அதிகரிக்கும். இதன்பயனாக ஒவ்வொரு கம்பெனியின் செலவுக்கோடும் உயரும். இதனால் கைத்தொழில் சப்பிளைக்கோடு மேல்நோக்கி நகரும். அதாவது உற்பத்திச் சாத்தியக்கோடு குவிந்துவில்வளைவாயிருக்கும். இது இரண்டாம் அத்தியாயத்திலே கூறிய அதிகரிக்கும் இறுதிநிலைச் செலவு விதியை அனுசரித்திருக்கும். அகக்காரணங்களினாலோ புறக்காரணங்களினாலோ தொழிலுக்குரிய பொருத்தமான செலவுகள் கீழ்நோக்கி நகரும் உற்பத்திச்சாத்தியக்கோடு தனது வளைவை முற்றாக மாற்றிக்கொள்ளலாம். இத்தகைய ஒரு நிலை தொழில் ஆரம்பிக்கும்போது உண்டாவதியல்பு. ஏனெனில் பெரும்பாலான தொழில் முறைகள் குறிப்பிட்ட ஓரளவுப்பிரமாணத்தையடையும்வரை விளைவு அதிகரிப்பதுண்டு. (சமூகத்தின் மொத்தச் சாதனச்சப்பிளைகளில் தூண்டப்பட்ட மாற்றங்களுண்டானால் அவை நம்மை வித்தியாசமான உற்பத்திச்சாத்தியக்கோட்டை நோக்கி நகரச் செய்யும். நேரான உற்பத்திச் சாத்தியக்கோடுகள் மாறுந்தன்மைபெற்றால் எந்த ஒரு தொழிலுக்கும் மேனோக்கிச் செல்லும் சப்பிளைக்கோட்டோடு பொருத்தமுடையதாயிருக்குமென்பதை நிரூபிக்கலாம்.) குறிப்பு :—எல்லாக் கம்பெனிகளும் தமது முறிவுத்தானத்தை ஒரே மட்டத்தில் அடைந்தால்—அதாவது $Q = nq^*$ அல்லது $(n \pm 1)\, q^*$ என்ற புள்ளிகளே கோட்டில் காட்டக்கூடிய தாயிருக்கக் கூடியவாறு (இங்கே கம்பெனிகளின் தொகை) அடைந்தால்—ஏற்படக்கூடிய விவேகத்தை நமது ஆராய்ச்சிகளில் நாம் மறந்துவிட்டோம்.

www.padippakam.com



SS (ச.ச.) மேனேக்கி நகரும் தொழில்களில், சுரங்கச் சொந்தக்காரர், நிலமுள்ளவர், அறிமுறை தெரிந்தவர், அல்லது குறித்த தொழிலுக்குப் பொருத்தமான சாதனங்களையுடையவர், அத்தொழிலின் உற்பத்தி விரிவடையும்போது உயர்ந்த வருவாயைப் பெறுவர். இம்மாதிரி மேலதிக வருமானத்தை அவர்கள் பெறுவது உமக்கு விருப்பமில்லாவிட்டால், அந்த வருமானத்தில் ஒரு பகுதியை வரிமூலமோ வேறு வழியாகவோ எடுத்துக் கொள்ளலாம். ஆனல் உச்சவிலை மட்டத்தை விதித்து அவர்கள் மேலதிக லாபத்தைப் பெருமல் தடுத்தால் அது சமூகத்திறமைக்கு அவசியமான இறுதிநிலைச் செலவுச் சமன்நிலையில் தலையிடும். இத்தகைய சமன்படுத்தும் சட்டம் எப்போது நிறைவேற்றப்படவேண்டும்? இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேறு வழியில்லையென்று கண்டால், அதுவும் அதனலே வரும் நன்மை பெரிதெனத் தெரிந்தால்தான்.

## செலவு குறைதலும், பூரணப்போட்டி நிலை சீர்குலைதலும்.

பலவருடங்களுக்கு முன்னர் எழுதிய பொருளியல் நூல்களில் இடைநிலையான சப்ளைக்கோடு மேனேக்கிச் செல்லும் சப்ளை என்பவற்றேடு மூன்றுவதொரு கோடும் குறிப்பிடப்பட்டுவந்தது. இந்தச் சப்ளைக்கோட்டில் கம்பெனிகளின் இறுதிநிலைச் செலவு உயர்வதைவிட வீழ்ச்சியடையும்; இது ஒரு தொழிலின் நெடுந்தவணைக்கோட்டைக் கீழே மெதுவாக இறங்கச் செய்யும் எனக் கருத இடமளித்தது. 613 ஆம் பக்கத்திலே உச்சநிலையடையச் செய்யும் கம்பெனி MC=P என்ற நிலையிலே உற்பத்தி செய்யவிரும்புகிறதெனக் கூறும் நியாயத்தைப் புனராலோசனை செய்தால், கம்பெனியின் MC கோடு கீழ்நோக்கிச் செல்லும் கோடாயிருக்கும்போது இந்த நியாயம் சிறிதும் பொருத்தமற்றிருப்பதை உணரலாம். ஏனெனில் கீழ்நோக்கிச் செல்லும் MC கோட்டிலே ஒரு புள்ளியில் வலப்பக்கமாக நகர்ந்தால் உமது அலகொன்றுக்குள்ள மேலதிக (P) விலை தற்போதுள்ள கீழான MC யிலும் அதிகமாயிருக்கும். குறைந்துபோகும் இறுதிநிலைச் செலவுவிடயத்தில் உபரி லாபம் பெறுவதற்காக MC கோட்டுக்கு அதிகமாகக் கம்பெனி தனது உற்பத்தியை விரிவடையச் செய்யும்.

குறைந்து செல்லும் இறுதிநிலைச் செலவிலே ஆரம்பிக்கும் முதலாவது கம்பெனி, வளரவளரத்தான் அதன் நலம்வளர்ச்சியடைவதைக் காணும். மற்றக் கம்பெனிகளை அது சுருங்கச் செய்யும்போது அவற்றின் வசதியீனங்கள் அதிகரிக்கும். அவற்றின் MC கூடிக் கொண்டு போகும்.

கம்பெனிகளுக்குச் செலவுகள் குறைந்து கொண்டேயிருக்கும் நிலைமையுண்டானல் கம்பெனிகளில் ஒரு சில அத்தொழிலின் மொத்த உற்பத்தித் தொகைக்குரிய சந்தையின் கணிசமான பகுதியாய் வரும்முறையில் தமது $q$ வை விரிவடையச்செய்யும். அப்போது (1) அத்தொழிலில் ஏகபோக உரிமையுள்ள ஒரு கம்பெனி மிஞ்சும் (2) ஒரு சில பெரிய விற்பனையாளர் ஒருமித்து அத்தொழிலுக்கு ஏற்படுவர். இவர்களைப் பின்னர் "சிலருரிமை" என்பர் அல்லது (3) தொழிலில் போட்டி பூரணமற்றதன்மையுண்டாகும்.

www.padippakam.com



இது நிலையானதொரு முறையில் அமையலாம் ; அல்லது அடிக்கடி ஏற்படும் விலைப்போர் சம்பந்தப்பட்டதாயிருக்கலாம். பொருளியலாளரின் பூரணப்போட்டித் தினுசுக்குப் புறம்பானதாயிவையிருக்கும். அந்நிலையில் எந்த ஒரு கம்பெனியும் ஏகபோகவிலையதிகாரமுடையதாயிருக்கமாட்டாது.

**புறச்சிக்கனமும், சிக்கனமின்மையும்**

கம்பெனிக்குள்ளே அகவயமாக உண்டாகும் செலவை அடிப்படையாகக் கொண்ட கீழ் நோக்கிச் செல்லும் தொழில் சப்ளைக் கோட்டைக் காட்டக்கூடிய ஒரு மூன்றுவது படத்தைப் படம் 4 இல் கீறுவது தவறு என்பதைக் கண்டோம். தொழிலின் Q இன் விரிவடைதல் ஒவ்வொரு கம்பெனியின் $q$ வுக்கெதிராகப் புள்ளியிடப்பட்ட செலவுக்கோட்டையும் கீழ் நோக்கிச் சரியச் செய்யும் கருதுகோள்முறையான சாத்தியக்கூறு உண்டு. **புறச்சிக்கனங்களால்** உண்டாகும் கீழ்நோக்கிச் செல்தொழிற் சப்ளைக்கு இது ஓர் உதாரணம் என அல்பிரெட் மார்ஷல் இதனை வருணிப்பார்.

வேறு ஒரு மனிதனே, கம்பெனியோ செய்யும் முயற்சியால் ஒருவனுக்கோ பலருக்கோ உண்டாகும் நன்மையான விளைவே “புறச்சிக்கனம்” எனக் கூறப்படுகிறது. அது உதவிபுரியும் ஒவ்வொரு மனிதனுடைய செலவையோ பயனுடைமையோ அது மாற்றுகிறது. அத்தகைய புறக் காரணத்தால் உண்டாகும் மாற்றத்தை, பாதிக்கப்பட்ட தனிப்பட்டவரின் சொந்தச் செலவுக்கோட்டின் அகவயப்போக்கிலிருந்து வித்தியாசப்படுத்தி அறியவேண்டும். அவ்வாறே புறச்சிக்கனமின்மையுமுண்டு. அதற்கும் இவ்வாறே வரைவிலக்கணம் கூறப்படுகிறது. ஆனால் புறச்சிக்கனமின்மையில் புறவயமாக மற்றவர்க்கு உண்டாகும் தீங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. குறித்த எல்லைக்குட்பட்ட ஒரு கடற்பிரதேசத்திலே மற்றவர்களும் வந்து மீன்பிடிதொழிலில் இறங்கி அதைவிஸ்தரித்தால் ஒவ்வொரு மீன்பிடி வள்ளத்தின் செலவும் அதிகரிக்கும். இதுவே புறச்சிக்கனமின்மைக்கு எடுத்துக்காட்டு. மற்றொரு உதாரணம் எண்ணெய் கண்ட ஒரு பிரதேசத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் அயலாரின் எல்லைக்கு அருகில் நிலங்களில் எண்ணெய்ச் சுரங்கங்களை அமைக்கப் பார்த்தல். இதனால் கிடைக்கக்கூடிய எண்ணெய் குறையும்.

தனிப்பட்ட பலருக்கு நன்மையுதவும் அரசாங்க நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்களில் புறச்சிக்கனம் மிக முக்கியம்வாய்ந்தது. வளர்ச்சி சம்பந்தமாக அதாவது ஒரு பகிரங்க வீதியமைக்கவோ, வைத்தியசாலை ஆசுப்பத்திரி அல்லது நீரணைக் கட்டு, என்பன நிர்மாணிக்கவோ, புறச்சிக்கனங்களைப் பயன்படுத்துவதால் பல குடும்பங்களுக்கும் கம்பெனிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் நன்மையுண்டாகும். தொழில் சப்ளைக்கோட்டையனுசரித்து விசாலமடையும் விடயங்களோடு விசேடமாகத் தொடர்புடைய புறச்சிக்கனங்களின் இனத்தைக் கண்டுகொள்வது இலேசன்று. ஆனால் சில உதாரணங்களைக் காட்டலாம்.

www.padippakam.com



(Q) மீன்பிடித் தொகைவிரிவடையுமானுல், தொழிற்பயிற்சி பெற்ற மீன்பிடிதொழிலாளருக்கு அதிக தேவையுண்டாகும். அத்தகைய தொழிலாளரைப் பயிற்றுவதற்கு ஒரு பாடசாலையை நிறுவக்கூடக் கம்பெனிகள் அரசாங்கத்துக்கு உதவிபுரிய முன்வரும். அல்லது இலாபத்தை நோக்கமாகவுடைய ஓர் ஏகபோக உரிமைக்காரரிடம் அந்த வேலையை ஒப்படைக்கத் தயாராயிருக்கும். முன்னெல்லாம் இத்தகைய பாடசாலை யொன்றைக் கம்பெனிகள் கட்ட முன்வந்திருக்கமாட்டா. ஏனெனில் அதன் இறுதிநிலைச் செலவு இழ்மட்டமான செயற்பாட்டில் அதிகமாயிருக்கும். மற்ருேர் உதாரணம், மீன்பிடித் தொழிலுக்கான விசேட எந்திரத்தை மற்றெரு தொழில்நிலையம், குறைந்த இறுதிநிலைச் செலவிலேதான் செய்து கொடுக்க முடியும். எனது அயலிலுள்ள எல்லாரும் தேனீ வளர்க்கலாம். அயலவர்களுடைய தோட்டங்களிலிருந்து எனது தோட்டத்துக்கு தேனீக்கள் தேன் சேர்த்து வரலாம். ஆனுல் மொத்தத் தேன் அளவு குறைவாயிருந்தால், எனது தேனீக்களிற் சில அயலிலுள்ள சோள வயல்களுக்குப் போவதைக் காணலாம். எனது அயலிலுள்ள சோளக் காணிக்காரரிடம் என்னுடைய தோட்டத்துக்கு வரும் தேனீயில்லாமற் போகலாம். அல்லது சுரங்கமொன்றுண்டெனக் கொள்வோம். நான் எனது சுரங்கத்தை வற்ற இறைத்தால், அயலிலுள்ளவருடைய சுரங்கத்திலும் தண்ணீர்வற்றும். அதனுல் புறச்சிக்கனம் உமக்கு உண்டாகிறது.

"புறச்சிக்கனக்குறைவு"கள் பற்றி உதாரணங்கள் காண்பது இலேசாகும். ஒருவனுடைய உற்பத்தியின் விளைவாக மற்றவர்களுக்குண்டாகும் தீயவிளைவுகளே புறச்சிக்கனக் குறைவுகளெனக் கண்டோம். உருக்குத் தொழில் ஒரு சப்ளைக் கோட்டை அனுசரித்து விரிவடையுமானுல், புகை அதிகரிக்கும். இந்தப் புறவிளைவு தொந்தரவாக இருக்கும் மக்களுடைய சுகாதாரத்துக்குக் கெடுதியையுமுண்டாக்கலாம்; மேலும் சுத்தஞ்செய்வதற்குக் கூலி அதிகரிக்கும். இந்தப் புகை ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்தும் கார், தொழிற்சாலை என்பவற்றிலிருந்து உண்டாகும் சிக்கனக் குறைவாகும். மிகப் பெரிய சிக்கனக்குறைவு எதனுலுண்டாகிறதென்ருல் ஒரு நாடு அணுக்குண்டை வெடிப்பதால் இது இப்போது நிகழாவிட்டால், எதிர்காலத்திலே நிகழக்கூடும். அதனுல் மனித சமுதாயத்துக்கு ஆபத்துண்டாகலாம். பிறக்கும் பிள்ளைகள் அங்கவீனமுடையன வாய்ப் பிறக்கலாம்.

எங்கே பூரணத் தனித்துவமிருக்கிறதோ, அதை ஏதோ ஒருவகையான தொகுதி நடவடிக்கையால் மாற்றிவிடலாம். இதற்கு உதாரணமாக அணுக்குண்டு வெடித்தலைக் காட்டவேண்டியதில்லை. புகையினுலுண்டாகும் நட்டத்தை ஈடு செய்யப் பொருளை வாங்குவோர் ஒரு வகை வரியைக் கொடுக்கலாம். விவசாயிகளுக்கு ஒரு ஆதார உதவியைக் கொடுக்கலாம். அந்த உதவிப்பணத்தைக் கொண்டு அவர்கள் மரங்களை வளர்த்து வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தலாம். சிறு காணி வைத்திருப்போர் அயலவருடைய எண்ணெய்ச் சுரங்கங்களையடுத்து எண்ணெய்க் கிணறுகளை வெட்டக்கூடாதெனத் தடுப்பது பொருளாதார முறையிலே நியாயமான



படிப்பகம்

www.padippakam.com



தாகும். இவ்வாறு தனிப்பட்டவரின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதால் பொருளாதாரத்துறையில் சிக்கனத்தையுண்டாக்கலாம். இவை புறக்கரு மங்கள்.

இவற்றைப் பற்றி மேலும் குறிப்பிடவேண்டியதில்லை. இவை கம்பெனி யின் செலவுக்கோட்டை மாற்றலாம். அதன்விளைவாக தொழில் சப்ளைக் கோட்டின் சரிவு மேனோக்கி கீழ்நோக்கிச் செல்வதையோ மாற்றலாம்.

போட்டி சப்ளை சம்பந்தமான ஆராய்ச்சி இத்துடன் முடிகிறது. இன்றுள்ள போட்டிச் சந்தை சம்பந்தமான மிக முக்கியச் செய்முறையை அடுத்த அத்தியாயத்திலே காணலாம். அதாவது போட்டிச் சந்தைக்குத் துணை புரியக்கூடியவகையில் அமைக்கப்பட்ட விவசாய நிலையும், கொள்கைகளும் சம்பந்தமான ஆராய்ச்சியை அதற்கடுத்த அத்தியாயத்திலே காணலாம். அதாவது போட்டிச் சந்தைக்குத் துணைபுரியக்கூடியவகையில் அமைக்கப் பட்ட விவசாய நிலையும், கொள்கைகளும் சம்பந்தமான ஆராய்ச்சி. அதற்கடுத்த அத்தியாயத்திலே இறுதிநிலைச் செலவுக் கருதுகோள், வேறு செலவுக் கருதுகோள் என்பன மேலும் விரிவாக ஆராயப்படுகின்றன. பூரணமான போட்டிச் சந்தையிலோ, பூரணமற்ற போட்டிச் சந்தையிலோ, பூரணமான ஏகபோகஉரிமைச் சந்தையிலோ விற்பனை செய்யும் கம்பெனி யின் பொருளாதாரக் கொள்கையை அறிமுகஞ் செய்கிறது. அந்த அத்தி யாயத்தின் அனுபந்தத்திலே கம்பெனிகளின் செலவுகட்கும் அதனாலுண் டாகும் தொழிற் சப்ளைக்குமுள்ள மூலாதாரத் தொடர்புகள் பற்றி இந்த அத்தியாயத்தில் ஆராய்ந்த விடயம் மேலும் கருத்தோடு ஆராயப்படும்.

**சுருக்கம்.**

1. போட்டிச் சந்தையிலே, தனிப்பட்ட ஒரு தொகுதிக் கம்பெனிகளின் மொத்தச் சப்ளையை அறியவேண்டுமானால் தனிப்பட்ட சப்ளைக் கோடுகளைக் கிடைநிலையாகக்கூட்டுவதனால் பெறலாம். கம்பெனிகளின் தொகை மாறு பட்டால் அவ்வாறு மாறும் கம்பெனிகளின் தொகையைக் கணக்கிலெடுப்ப தானால் (நெடுந்தவணையிலே புதிய கம்பெனிகள் தொழிலில் இறங்குவதும் பழையவை தொழிலைக் கைவிடுவதும் இயற்கை) கூட்டும் முறை சிக்க லானதாகும்.

2. குறுந்தவணை என்பது என்னவென்றால் ஒரு கம்பெனியின் சில உற்பத்திச் சாதனங்களும் செலவுகளும் மாறாமலும் சில மாற்றமடையக் கூடியதாகவும் உள்ள கால அளவாகும். ஒரு கம்பெனியின் குறுந் தவணை இறுதிநிலைச் செலவு என்பது மேலதிக அலகை உற்பத்திசெய் வதற்குத் தேவையான மேலதிகச் செலவாகும். ஒவ்வொரு உற்பத்தியிலும் மாறும் இறுதி நிலைச் செலவு மட்டத்தைக்கணிப்பதற்கு ஒரு அட்டவணை யைப் பயன்படுத்தலாம். அல்லது மொத்தச்செலவைக் காட்டும் ஒப்புரவான கோட்டைப் பயன்படுத்தலாம். (ஒரு கம்பெனியின் நெடுந்தவணை மொத்தச் செலவுகளிலிருந்து அதனுடைய நெடுந்தவணை இறுதிநிலைச் செலவைக்

www.padippakam.com



கணிக்கலாம். அதாவது கம்பெனியின் தற்காலிகக் கட்டுப்பாடுகளெல்லாம் முடிவடைந்து, புதிய கடப்பாடுகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ ஏற்ற சுதந்தரநிலையிலிருக்கும் கால எல்லைக்குப் பொருத்தமான செலவைக் கணிக்கலாம்.)

3. குறிப்பிட்ட சந்தைவிலையிலே தனக்குவிருப்பமானதையெல்லாம் விற்கும் இயல்புடைய, லாபத்தை உச்சமாக்கவிரும்பும் போட்டிக் கம்பெனி, உயரும் இறுதிநிலைச் செலவுக் கோட்டை அடையும்வரை இடைநிலையான தேவைக்கோட்டையனுசரித்து நகரும். இந்தச் சந்திப்பிலே (MC = P) கம்பெனியின் லாபங்கள் உச்சநிலையை அடையும். வேறொரு வகையிற் கூறுவதானால் நட்டங்களைக் குறைக்கிறது. குறிப்பிட்ட சில கம்பெனிகளின் மொத்தச் சப்ளைக்கோடு, அவற்றின் இறுதிநிலைச் செலவுக் கோடுகளின் இடைநிலையான கூட்டுத் தொகையாகும்.

4. ஒரு கம்பெனியின் குறுந்தவணை "மூடும்தானத்தையோ", நெடுந் தவணை "முறிவுத்தானத்தையோ" நிச்சயிப்பதானால் செலவு மொத்தங் களைக் கணக்கிலெடுக்கவேண்டும். MC (இ.செ.) கோட்டில் குறித்த ஒரு நெருக் கடியான தானத்தின்கீழ், மாறும் செலவைக்கூடக் கம்பெனி விலை வருமானத்தால் பெறமாட்டாது. கம்பெனியை மூடினால், இந்த மாறும் செலவையாவது பெற்றுக்கொள்ளலாம். எனவே, அதன் நிலையான செல வுக்கு அதிகமாக நட்டமடைவதிலும் பார்க்கக், கம்பெனி, குறைந்த P யில் உற்பத்தி செய்ய விரும்பாது தனது வியாபாரத்தையே கைவிட்டு விடும். காலப்போக்கிலே கம்பெனியின் கடப்பாடுகளெல்லாம் முடிந்து விடும். அதன் முழு நெடுந்தவணைச் செலவுகளைச் சமாளிக்கக்கூடியதாய் விலைகளிருந்தாலே தான், அது முயற்சியில் நிலைத்திருக்கவிரும்பும். இந்நெடுந்தவணைச் செலவுகள் நிசமான தினசரிச் செலவுகளாய் தொழி லாளருக்கும், கடன்காரருக்கும், உற்பத்திச் சாதனங்களைக் கொடுப்போ ருக்கும் நிலச் சொந்தக்காரருக்கும் கொடுக்கப்படுவனவாயிருக்கலாம்; அல்லது அவை "அடங்கிய கூலிகளாய்" (அதாவது சந்தர்ப்பச் செலவு கள்—சொந்தக் காரரின் முயற்சியால்—இதை வேறு தொழில்களில் அல்லது ஓய்வு எடுப்பதில் பயன்படுத்தலாம்) அல்லது கம்பெனிக்குச் சொந்தமான சொத்துக்கள்மீதுள்ள அடங்கிய வட்டிவாடகை என்பனவாயிருக்கலாம் (இவற்றின் சந்தர்ப்பச் செலவுகளை, இவற்றை வேறு ஆபத்துள்ள முயற்சி களில் பயன்படுத்துவதால் கிடைக்கக்கூடிய பயனைக் கொண்டு அளந் தறியலாம்.)

5. ஒரு முயற்சியில் பிரவேசிப்பதற்கு எவருக்கும் தடையில்லையென்று வைத்துக்கொள்வோம். எந்த ஒரு கம்பெனிக்கும் இடம், பொருள், பயிற்சி, என்பவற்றால் "விசேட" வசதிகளில்லாது எல்லார்க்கும் சமமான சந்தர்ப் பம் இருக்கும் நிலைமையில், நாளடைவில் புதிய போட்டியாளர் முயற்சியிற் புகுந்து, மேலதிக இலாபத்தை நிலவிவரும் கம்பெனிகள் பெற்றுக் கொண்டுபோகாமல் தடைசெய்யும். சுதந்தரமாக முயற்சியைக் கைவிட்டு

www.padippakam.com



விடுவதால், P யானது முறிவுத்தானத்துக்குக் கீழே விழமாட்டாது. அவ்வாறே சுதந்தரமாக ஒரு முயற்சியில் பிரவேசிப்பதால் ஒரு கம்பெனி நெடுந்தவணைச் சமநிலையிலே அந்தத்தானத்துக்கு உயர்வாக நின்று கொள்ளமாட்டாது.

ஒரு கைத்தொழிலுக்குப் பொருத்தமான சில சாதனங்களின் விலைகளை ஏறச் செய்யாமல், செய்ததையே திருப்பித் திருப்பிச் செய்துகொண்டு அது விரிவடையுமானால் அதன்பயனாக உண்டாகும் நெடுந்தவணைச் சப்ளைக் கோடு கிடைநிலையாயிருக்கும். சுருங்கிக்கொண்டு வரும் ஏனைய கைத் தொழில்களைப் போலல்லாது ஒரு கைத்தொழில் சில உற்பத்திச் சாதனங் களை அதிகமாகப் பயன்படுத்தலாம். இதன் பயனாக அதனுடைய நெடுந் தவணைச் சப்ளைக்கோடு மேனோக்கி நகரலாம்[1].

6. போட்டிக் கம்பெனிகளின் கீழ் நோக்கிச் செல்லும் இறுதிநிலைச் செலவுக்கோடுகள், அவற்றின் சப்ளைக் கோடுகளாக இருக்க முடியாது. ஏனெனில் அவற்றின் லாபம் அந்தக் கோட்டையனுசரித்து மிகக் குறைவா யிருக்கும். அத்துடன் அவை அந்தப்புள்ளிகளிலிருந்து விரைவில் விலகி இரண்டு பக்கமும் பிரியும். இதன்பயனாக ஒரு கம்பெனியோ பல கம்பெனி களோ விரியத்துவங்கும். ஏஞ்சியவை சுருங்கத்துவங்கும். நெடுங்காலத் துக்கு நிலைக்கக்கூடிய கம்பெனிகளுக்கு அகவயமான செலவுக் குறை வினால் பூரணப்போட்டி ஒழியும். இத்தகைய சந்தர்ப்பங்களிலே குறையும் சப்ளைக்கோட்டைப்பற்றியோ போட்டிச் சப்பிளை பற்றியோ பேச முடியாது.

7. ஒருகைத்தொழிலிலே புறச்சிக்கனங்கள் இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களிலே, கைத்தொழில் Q இன்விரிவு தனிப்பட்ட கம்பெனி களின் செலவுக்கோட்டை அனுசரித்துக் கீழ்நோக்கி இறங்கும், இதனா லுண்டாகும் எல்லாக் கம்பெனிகளினதும் சப்பிளைகளின் சிக்கலான கூட்டல் முறையில் கைத்தொழிலின் சப்ளைக்கோடு கீழ் நோக்கி நகர்வதாகவே முடியும்.

புறச்சிக்கனமோ, புறச்சிக்கனக்குறைவோ முக்கியமான கருதுகோள் களாகும். இத்தகைய புறச்சிக்கனங்கள் மற்றவர்களுக்கு நன்மையாகவும் முடியலாம் ; தீமையாகவும் முடியலாம். இது ஒருவனுடைய நடத்தையைப் பொறுத்தது. தனது சொந்த நன்மையையும் சுபீட்சத்தையும் விரும்பும் ஒருவர் சொந்த நயத்தையும், செலவையுமே பார்ப்பார். அதுவும் அவர் நோக்கப்படி அப்போது இறுதிநிலைச் சமூகச் செலவுக்கும் தனிப்பட்ட ஒருவர் செலவுக்குமிடையே வித்தியாசமுண்டாகும். இத்தகைய சந்தர்ப் பங்களில் மக்கள் கூட்டாகச் சேர்ந்து அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவிப்பணம் அளித்து அல்லது தொழிலைத் தேசியமய

[1] அது பயன்படுத்தும் தொழிலாளரைக் குடும்பங்கள் குறைந்த தொகையில் (Q விரிவு கூலியை உயர்த்தும்போது) கொடுத்தால் கைத்தொழிலின் $S_LS_L$ கோடு வடமேற்கை நோக்கித் திரும்பலாம். இந்த அத்தியாயத்தின் அனுபந்தத்திலுள்ள 5 ஆவது உதாரணத் தைப் பார்க்க.

படிப்பகம்

www.padippakam.com



மாக்கிப் புறச்சிக்கனம் மலிந்த கருமங்களை விஸ்தரிக்கலாம். புறச்சிக்கனம் குறைவான சந்தர்ப்பங்களிலே வரிவிதித்தல் மூலமோ சட்டமூலமோ அவற்றைச் சுருக்கலாம்.

8. போட்டிச் சப்பிளையை விவரிக்கவும் விளக்கவும் இறுதிநிலைச் செலவு முக்கியம். அது போலவே சுபீட்சப் பொருளாதாரத்துக்கும் அது முக்கிய மானதாகும். இறுதிநிலைச் செலவிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள் களெல்லாம் சமனுனவையாயிருந்தால்தான் சமூகத்தின் வளங்களைத் திறம்படப் பிரித்துப் பயன்படுத்தலாம். இறுதிநிலைச் செலவிலே போட்டி விலையை ஏற்படுத்துவதால் இறுதிநிலைச் சமன்பாட்டை உண்டாக்கலாம். இது ஒரு வழி. ஏகபோக உரிமைத்தன்மையும், போட்டிப் பூரணமின்மையு முள்ள சந்தர்ப்பங்களிலே இந்த இறுதிநிலைச் செலவுச் சமன்நிலை உண் டாகக்கூடிய திறமையின்மையை அறிய உதவிபுரிவதோடு எந்தத் திசையில் சீர்திருத்தஞ்செய்யவேண்டியிருக்கிறதென்பதையும் காட்டும்[1].

இந்த அத்தியாயத்துக்குரிய அனுபந்தத்திலே சப்பிளை தேவை சம்பந்த மாய் அறிந்துகொண்ட கொள்கைகளைப் பொருத்திக் காட்டும் உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுபந்தத்திலே ஆரம்ப அறிவுள்ளவர்க்கு அவசியமில்லாத கடும்விடயம் கொடுக்கப்படவில்லை. படித்த விதிகளைப் பொருத்திப் பார்ப்பதற்கான உதாரணங்களே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சிக்கான வினுக்கள்.**

1. கூட்டுவதற்கு சப்பிளைக்கோடுள்ள சில கம்பெனிகளே தவறினுல், பொருளியலறிஞரின் வரைவிலக்கணப்படி ஒரு கைத்தொழில், போட்டி முறையில் நிலவ மாட்டாது. ஏன் ? ஆயிரம் சிறிய கம்பெனிகளும், மொத்தத் தொழிலின் 49 சத வீத உற்பத்தியை உதவும் 3 பெரிய கம்பெனி களுமிருந்தால் நிலைமை எப்படியிருக்கும் ? குறைந்து செல்லும் இறுதி நிலைச்செலவு எல்லாக் கம்பெனிகளுக்கும் ஒரே மாதிரி இருந்தால் என்ன வாகும் ?

2. தற்காலிகமான, குறுந்தவணை, நெடுந்தவணைப் பருவங்களிடையே யுள்ள வித்தியாசம் இனப்பிரிவினுலுண்டாவதன்று ; அளவுமுறையிலேயே உண்டாவது. பருவங்களிலே சிலசமயம் நிலையான சாதனங்கள் இருப்பது குறைவு ; மாறும் சாதனங்களே பெரும்பாலும் காணப்படும்.

1. படம் 4b. யிலுள்ள SS கோட்டையனுசரித்து உற்பத்திசெய்வது சமூகத்திற்குத் தேவையான Q வை மிக மலிவாகப் பெறுவதற்குரிய வழியாகும். கம்பெனிகள் திருப்பித் திருப்பி மலிவாய் உற்பத்திசெய்யும்பொருளை எதற்காக ஒறுப்பாக உற்பத்திசெய்யுமாறு நிர்ப்பந்தப்படுத்தவேண்டும் ? ஒவ்வொரு கம்பெனியும் அளவாகவே உற்பத்திசெய்கின்றன என்பதை உறுதியாக அறிந்துவைத்துக்கொள்வது நல்லது. அன்றி முறிவுத்தானத்துக் குரிய $q$ வை அதாவது $P = MC$ என்றவகையில், P யானது ஓர் அலகு உற்பத்திசெய்வதற்கான மிகக் குறைந்த சராசரிச்செலவாயிருந்தால் அதுவே காலப்போக்கில் கம்பெனியை உயிரோடிருக் கச் செய்வதாய் விளங்கும்.

படிப்பகம்

www.padippakam.com



3. "புற எல்லை, அக எல்லை" என்ற சொற்கள் என்ன தகவல்களையும் நடவடிக்கைகளையும் குறிப்பிடும்?

4. ஒரு தொழிலுக்குப் பல கம்பெனிகள், அது போல ஒரு கம்பெனிக்கு ஏன் பல தொழிற்சாலைகள்?

5. இறுதிநிலைச் செலவு முதலில் குறைந்து, பின்னர் கூடுவதற்குக் காரணமென்ன?

6. நட்டம் உண்டாகும்போதும், குறுந்தவணை MC (இ.செ.) கோட்டில் ஏன் பொருளைச் சப்பிளைசெய்யவேண்டும்?

7. "நிலையான செலவுகளைச் சமாளிக்கப்போதுமான வருவாய் கிடைக்குமானால் நான் மாறும் செலவுகளை மறந்து உற்பத்தியைச் செய்துகொண்டிருப்பேன்". அடிக்கடி கேட்கப்படும் இந்தக் கேள்வியில் இரண்டு சொற்கள் மாறிக்கிடக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுக.

8. உயரும் $S_LS_L$ கிடைநிலையான $S_LS_L$ வீழும் $S_LS_L$ என்பவை எவ்வாறுண்டாகின்றன? (கடைசி உதாரணத்தைக் கவனிக்க).

9. புறச்சிக்கனக் குறைவுகளுக்கு (அல்லது சிக்கனங்களுக்கு) உதாரணந் தருக. அரசாங்கத் தலையீடு ஏற்படக்கூடிய நிலைமைகளை எடுத்துக் காட்டுக.

10. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஞாபகப்படுத்துக :—கம்பெனியகத்தும், கம்பெனிகளுக்கிடையிலும் குறுந்தவணை உற்பத்தி மாற்றமும், நெடுந்தவணை உற்பத்திமாற்றமும்.

இறுதிநிலைச் செலவும், மொத்தச் செலவும். கம்பெனி சப்பிளை கோடும் MC (இ.செ.) கோடும் ஒன்றுயிருத்தல்.

மூடும் தானமும் முறிவுத்தானமும்.

நிலையான செலவும், மாறும் செலவும்.

பூரணப் போட்டிச் செலவில்காணும் அமிசங்கள். அடங்கிய செலவு அமிசம்; சந்தர்ப்பச் செலவு அமிசம்.

கிடைநிலை $S_L$ $S_L$ ; உயரும் $S_L$ $S_L$.

குறையும் MC (இ.செ.) யும் ஏகபோக உரிமையும், புறச்சிக்கனமும், புறச்சிக் கனக் குறைவும்.

சம-MC (இ.செ.) விதி சம்பந்தமான விசேடம்.

**அனுபந்தம். விநியோகம் (சப்பிளை), தேவை சம்பந்தமான உதாரணங்கள்.**

**கூற்று 1 (அ)** சப்பிளை மாருதிருக்க, தேவை அதிகரித்தால் விலை ஏறும். இது பொதுவிதி.

(ஆ) வாங்கிய தொகையும் விற்றதொகையும் பெரும்பாலும், (நிச்சயமாகவன்று) அதிகரிக்கும். தேவை குறைந்தால் விலை ஏறும்.

படிப்பகம்

www.padippakam.com



**கூற்று 2.** தேவை மாருதிருக்கச் சப்பிளை அதிகரித்தால், விலை இறங்குவது நிச்சயம். வாங்கிய விற்றதொகை அதிகரிக்கும். சப்பிளை குறைந்தால் விலை ஏறும்.

சப்பிளை, தேவை, என்பவற்றிலே உண்டாகும் மாற்றங்களால் ஏற்படும் பண்பு விளைவுகளை மேலே காட்டிய இருமுக்கியக் கூற்றுக்களும் சுருக்கமாக விளக்குகின்றன. விலையிலும், தொகையிலும் உண்டாகும் மாற்றம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுமுண்டாகும் கோடுகளின் குறிப்பான உருவத்தைப் பொறுத்தது. செலவு சப்பிளை சம்பந்தமான சில உதாரணங்களை, இங்கே தருகிறேம்.


**உதாரணம் 1. மாருத செலவு.** சவர அலகு (பிளேட்) ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்க. இதன் உற்பத்தியைப் பெருக்குவதானல் பிரதிசெய்யும் எந்திரமும், தொழிற்சாலை விஸ்தரிப்பும் தொழில் நிலையங்களும், கூடிய தொழிலாளரும் மாத்திரமே தேவை. 1,000 அலகைச் செய்வதும் 1,00,000 அலகைச் செய்வதும் ஒரே முறைதான். ஆனல் பிந்தியது 100 மடங்கு அதிகமானது. அவ்வளவுதான். இச்சந்தர்ப்பத்திலே சப்ளைக்கோடு அலகின் செலவுமாருதிருக்கும் மட்டத்திலே SS கிடைநிலையான கோடாயிருக்கும். படம் 5 ஐப் பார்க்க. தேவையில் அதிகரிப்பு உண்டானல் புதிய குறுக்கு வெட்டுத் தானம் வலப்பக்கமாக E' என்ற தானத்துக்கு நகரும். இதனல் தொகை அதிகரிக்க, விலை இருந்தபடியே இருக்கும். ஓர் அலகுக்கு 5 சதம் வீதம் விற்பனை வரிவிதிக்கப்பட்டால், உற்பத்தியில் என்னவிளைவு உண்டாகும் ; நுகர்வோன் கொடுக்கும் விலையிலே என்னமாற்றமுண்டாகும். படத்தில் நிரப்பிக் காட்டுக.

**உதாரணம் 2.—செலவேற்றமும் குறைந்தபயனும்.** முந்திரிகைக்கொடி வளர்ப்பதற்குப் பொருத்தமான நிலமும், சூரியவெளிச்சம் நிறைந்த மலைச்சாரலும் வேண்டும். அத்தகைய நிலங்களைப் பெறுவது கஷ்டம். எனவே முந்திரிகை உற்பத்தியை ஓரளவு அதிகரிப்பதானல், நல்ல பசளை போட்டுத் தொழிலாளரைக் கொஞ்சம் கூட்டலாம். அத்துடன் வேறு பயிர்செய்யப்படும் மலைச் சாரல்களை முந்திரிகைச் செய்கைக்கென வாடகைக்குப் பெறலாம். மாருத நிலையிலுள்ள உற்பத்திச் சாதனமான நிலத்துடன் தொழிலாளர், பசளை போன்ற மாற்றக்கூடிய சாதனங்களைச் சேர்ப்பதால் குறைந்து செல் பயன் விதி செயற்படும். இதனை இரண்டாம் அத்தியாயத்திலே கண்டோம். இஃது எதனல் ? மாறும் சாதனமான தொழிலாளர், பசளை என்பவற்றைக்கூட்டுவதால், நிலத்தின் விகிதாசாரம் சிறிதாகவேயிருக்கும். ஒவ்வொரு சிறிய நிலப்பரப்பிலும், அதிகமான தொழிலாளரும், பசளையும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நிலத்தின் உற்பத்திவளமும், வருமானமும் அதிகரிக்கிறது. பயன் : மேலதிகமான வைனைப் பெறுவதால் மொத்தச் செலவுவிகிதாசாரத்துக்கு அதிகமாக உயருகிறது. எனவே வைனின் ஒவ்வோரலகையும் உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகரிக்கிறது.


www.padippakam.com



சப்ளைக்கோடானது தென் மேற்கிலிருந்து வடகிழக்காக உயர்கிறது. எனெனில் விலைகுறைவாயிருந்தால் சப்ளையும் குறைவாகவேயிருக்கும். விலையேறினால் சப்ளையும் ஏறும்.




படம் 5.




படம் 6.

படம் 6 இலே சப்ளைக்கோடு SS ஐக் காணலாம். தேவை அதிகரித்தால் விலை எவ்வாறு பாதிக்கப்படும்? தொகை எவ்வாறு பாதிக்கப்படும். ஒரு அவுன்ஸ் வைனுக்கு 5 சதவீதம் விற்பனை வரிவிதிக்கப்பட்டால், சவர அலகுகள் விடயத்தில் வரிவிதிக்கப்பட்டபோதுண்டானதிலும் குறைவாகவே நுகர்வோனுக்கு விலை அதிகரிக்கும். என்? உற்பத்தியாளன் பெறும் விலையில் எத்தகைய விளைவு உண்டாகும்? வைனுக்கும், சவர அலகுகட்கும் உள்ள ஆதித் தேவைக்கோடுகள் ஒரே மாதிரியிருந்தால், சவர அலகுகட்கான உற்பத்தி வீழ்ச்சியே வைன் உற்பத்தி வீழ்ச்சியிலும் அதிகமாயிருக்கும் என்பதைக் காட்டுக.

**உதாரணம் 3. பூரணமாக மாறுநிலையிலுள்ள சப்பிளை அல்லது நெகிழ்ச்சியற்ற சப்பிளையும் பொருளாதார வரியும்.**

விலையைக் கணக்கிலே கொள்ளாமல், சில பொருள்களும் உற்பத்திச் சாதனங்களும் தொகையளவில் பூரணமாக நிலையானவை. உதாரணமாக லியனாடோ டீறிய மோனலிஸா ஒன்றேயொன்றுதானுண்டு. நிலமும் அப்படித்தான். விலையை ஏற்றினாலும் நிலத்தைப் பெருக்கமுடியாது. உயர்ந்த வருமானம் பெறும் சைத்திரிகளும், வர்த்தகர்களும், சம்பளம் குறைந்தாலும் தமது தொழிலைக் கைவிடமாட்டார்.


இத்தகைய சந்தர்ப்பங்களிலே சப்பிளைக்கோடானது மேலும் கீழும் நேராகச் செல்லும். படம் 7 ஐப் பார்க்க. விலையைக் கூட்டினால் சப்ளை அதிகரிக்க

www.padippakam.com



மாட்டாது. தற்போதுள்ள சப்பிளையை வெளியே கொண்டுவருதற்கு உயர்ந்த விலை அவசியமுமில்லை. குறைந்த விலைக்குக் கூட இந்தச் சப்பிளை கிடைக்கும். ஏனெனில் இதன் விலை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய உற்பத்திச் சாதனத்துக்கு "தூயபொருளாதார வாடகை அல்லது எச்சப் பாடு" என்ற பெயருண்டு. தேவையான சப்பிளையைப் பெறுவதற்கு இதற்குச் செலவு செய்யவேண்டியதில்லை.

உண்மையான வாடகைக்கு எடுத்துக்காட்டு




படம் 7.

இப்போது தேவை மேனோக்கி உயருமானால் அதன் விளைவு விலையை உயர்த்தும். தொகை மாறாது. விலையேற்றமும் தேவையின் உயர்வும் சர்வசமனாயிருக்கும்.

ஒரு பொருள் மீது வரி விதிக்கப்பட்டால், உற்பத்தியாளர் அது சம்பந்த மாகப் பெறும் விலை அந்தவரியளவால் குறையும். வரி கடைசியாகப் பொருளைச் சப்ளை செய்பவர் தலையிலேயே பொறுக்கும். அவர் தமது பொருளாதார வாடகை அல்லது எச்சப்பாட்டைக் கொண்டு அதைச் சமாளித்து விடுவார். நுகர்வோன் முன்வாங்கிய அளவுக்கே அப்பண்டத்தையோ, பணியையோ மேலதிக விலை கொடாமற் பெற்று விடுகிறான்.

**உதாரணம் 4.** பின்னோக்கி உயரும் சப்பிளைக் கோடு : ஆதியில் புதிய நிலங்களில் தொழில் நடத்தியவர்கள், ஒரு விடயத்தைக் கவனித்தனர். அதாவது சுதேசிகளின் சம்பளத்தை உயர்த்தினால், தொழில் செய்யும் அளவு குறையுமேயன்றிக் கூடாது. சம்பளத்தை இரண்டுமடங்காக உயர்த்தினால், ஜீவனத்துக்காக வாரத்தில் 6 நாள் வேலைசெய்யும் தொழிலாளர் 3 நாள் வேலைசெய்து அந்தப் படியைப் பெற்றுக்கொண்டபின் மற்ற 3 நாளைக்கு மீன்பிடிக்கச் சென்றுவிடுவர். "நாகரிகமுற்ற இக்கால மக்க

www.padippakam.com



ளிடையிலும் இதேமுறை நிலவுவதைக் காணலாம். தொழில் நுட்ப முறைகள் வளர்ச்சியடைவதால் வாங்கும் சக்தியாயமைந்த உழைப்பு அதிகரிக்கிறது. அதனால் தொழிலாளர் ஓய்வு நேரத்தைப் பெருக்கப் பார்க்கிறார்கள். வேலை செய்வதைக் குறைக்கின்றனர். கடந்த பத்து வருடத்தில் வாரத்து வேலை நேரம் 84 மணியிலிருந்து 40 மணியாகக் குறைந்ததற்கு இதுவே காரணமாகும். மனைவி மக்களும் குடும்பத்தினரும் தமது குடும்ப வரும்படியை உயர்த்துவதற்கு வேலைசெய்யாமலிருப்பதற்குக் காரணமும் இதுவேயாகும்.[1] இந்தச் சந்தர்ப்பத்திலே படம் 8 தொழிலின் சப்ளைக் கோட்டைக் காட்டுகிறது. முதலில் இக்கோடு உயர்ந்த சம்பளத்திற்காகத் தொழில் கொடுக்கப்படுவதால் உயரும். ஆனால் T என்ற புள்ளிக்கு மேலே, உயர்சம்பளம் ஓய்வை அதிகரிக்கச் செய்யுமேயொழிய, வேலையை அதிகரிக்கச் செய்யாது. தேவை அதிகரித்தால், தொழில் விலையை அதி

1. 21 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்ட இறுதிநிலைப்பயனுடைமைக் கொள்கை, அல்லது வருமானம்-பதிலீட்டு-விளைவுக்கொள்கையைக்கொண்டு, தொழில் சப்ளைக்கோடு பின்னோக்கி வளைவதற்கான காரணத்தை விளங்கிக்கொள்ளலாம். எனது சம்பளத்தை உயர்த்தினால், எனது ஓய்வுநேரம் முன்னையிலும் விலையுடையதாகிறது. நான் வாங்கி அனுபவிக்கக்கூடிய நல்லபண்டங்களைவைத்து ஒப்புநோக்குமிடத்து எனது ஓய்வு நேரத்தின் மதிப்பு எவ்வளவு மதிப்புடையதென்பதை அறியலாம். அதிக நேரம் வேலை செய்யவும், வருடத்தில் அதிக வாரங்கள் வேலைசெய்யவும் அனுகூலமான பதிலீட்டு விளைவு உண்டாகிறது. ஆனால் இதற்கெதிராக மற்றொரு விளைவுமுண்டு. சம்பளம் உயர்வதால் வருமானம் உயரும். அதனால் நல்ல பண்டங்கள் சிலவற்றை வாங்க வசதியுண்டாகிறது.—அத்துடன் ஓய்வையும் நான் வாங்கிக்கொள்ளலாம். இங்கே, தேவைக்கு எதிரான சப்ளை பக்கத்தில் வருமான விளைவானது பதிலீட்டு விளைவுக்கு எதிராகப் பயன்படுகிறது. பதிலீட்டு விளைவிலும் பார்க்க வருமானவிளைவு அதிகமாயிருக்குமானால் உயர்ந்த கூலிக்கு நான் எனது தொழிலைக் கொடுக்க மறுப்பேன். எனது வருமானத்தைக் கொண்டு வாங்கும் பண்டங்களின் இறுதிநிலைப்பயன் எப்போதும் மாறாதிருக்குமானால், என்னை மேலதிகமாக வேலை செய்விப்பதற்கு உயர்ந்த சம்பளம் வேண்டும். அதாவது நான் வேலை செய்யும் நேர அளவின் கடைசி நிமிடத்தின் இறுதிநிலைப் பயனின்மை அதே நிமிடத்துக்கு நான் பெறும் உயர் சம்பளத்தின் பயனாக வாங்கக்கூடிய உயர்ந்த அளவு பண்டத்தின் இறுதி நிலைப்பயனோடு சமனாயிருக்கும். ஆனால் நுகர்பொருளின் இறுதிநிலைப்பயன் குறைந்து செல்விதியை அனுசரிப்பதே வழக்கம். பின்னர் சம்பளம் மிக அதிகம் உயர்ந்தபின்னர் நான்மேலதிகமாக அதிக மணிநேரம் வேலைசெய்து பலபண்டங்களை வாங்கி அனுபவித்தபின்னர், அந்தப் பண்டங்களின் இறுதிநிலை மிகக் கீழ்நிலையை அடையும்; தொழிற்சக்தி சம்பந்தமான இறுதிநிலைப்பயனின்மை மிக உச்சநிலையை அடையும். அதனால் நான் எனது தொழிலை விற்பதைக் குறைக்கவே சம்பளம் மேலும் உயரத்துவங்கும். 21 ஆம் அத்தியாயத்தைத் தொடர்ந்து வரும் அபேட்சை நிலைக்கோடுகள் சம்பந்தமான அனுபந்தம், தொழிற்சப்ளைக் கோடு எவ்வாறு பின்னோவளையுமென்பதையுங் காட்டும். 603 ஆம் பக்கத்திலேயுள்ள 11 ஆம் படத்தின் குத்துநிலையான அச்சுக்கு ஓய்வு காலநேரம் என்று புதிய லேபல் (பெயர்) கொடுங்கள். சீலை என்ற லேபலை எடுத்துவிடுக. சமநிலை B யிலே ஆரம்பிக்க. இப்போது மணி நேரச் சம்பளத்தை உயர்த்துக. அதாவது பட்ஜெட்கோட்டை NM” இலிருந்து NM க்கு மாற்றுக. தியாகஞ் செய்யப்படும் ஒவ்வொரு மணிநேர ஓய்வுக் கணக்காலும் உணவில் விலை குறைக்கப்படுமென்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது. அதிகரிக்கப்பட்டசம்பளம் புதிய B என்ற சமநிலைக்குக் கொண்டுசெல்கிறது. இது அதிக ஓய்வும் குறைவான உழைப்புமுள்ளதொரு நிலை (B” இல் சம்பளத்தைக்குறைத்தால் கொடுக்கப்பட்ட தொழிற் சக்தியும் குறைக்கப்பட்டதெனக்காட்டலாம். ஆரம்பத்திலேயே தொழிற்சப்ளைக்கோடு மேனோக்கிச் செல்லும் என்பது இதிலே சிந்திக்கப்பட்டுள்ளது).

படிப்பகம்


www.padippakam.com



கரிக்கும் என்பது முதலாவது கூற்று (அ) இன் பிரமாணத்துக்கு இது அடங்கும். ஆனுல் 1 (ஆ) இல் " நிச்சயம் குறைவாக " என்ற சொல் ஒருண்மையைப் புலப்படுத்தும். தேவை அதிகரிக்கவே, தொழிலின் தொகையை அதிகரிக்காமல் குறைத்திருக்கிறது.

வியாபார மந்தத்தின்போது விவசாயப் பொருள்களுக்குத் தேவை குறையும்போது விவசாயிகள் தமது வருமானத்தைக் கூட்டுவதற்காக அதிக நேரம் வேலைசெய்யவேண்டியேற்படும். இதனுலேற்படும் பயன் ; தேவை குறைந்தபோதிலும் உற்பத்தி குறைவதற்குப் பதிலாக அதிகரித்துள்ளது.

பின்னோக்கி வளையும்
சப்ளைக்கு எடுத்துக்காட்டு




படம் 8.

**உதாரணம் 5.** ஒரு சாத்தியமான புறநடை. குறையும் செலவு. இது வரை நமது உதாரணங்கள் கூற்று 1(அ) உடன் ஒத்துப்போயுள்ளன. அதாவது தேவை அதிகரித்தால் விலை அதிகரிக்கும். தேவை அதிகரிக்கும் போது, குறைந்த செலவில் பெருவாரியாக உற்பத்தி பெறுவதும் சகசம். எவ்வாறு ?

சரியான கொள்கையானுல் எல்லாத் தகவல்களுக்கும் விளக்கம் கொடுக்க வேண்டும். எனவே நமது முதலாங் கூற்றுக்குப் புறநடைகளுண்டென் பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவை அதிகரிப்பதால், செல விலே குறைவுண்டானுல், சப்ளைக்கோட்டிலே நிரந்தரமான கீழ் நோக்கிய நகர்வு உண்டாகும். அதைவிடுத்து விழும் சப்ளைக் கோட்டில் நகர்வுண்டா காது.

உதாரணமாக அரசாங்கம், ரேடார் உபகரணங்களுக்கு அதிக தேவையுடைய தாயிருக்கிறதெனக் கொள்வோம். முதற்சில செட்டுக்களை ஆய்கூடத்திலே ஆராய்ச்சி முறைப்படி செய்யவேண்டும். அவை தையற்காரராற் செய்யப்பட


www.padippakam.com



வேண்டியன. மிக விலையுள்ளன. ஆனால் அனுபவத்தின் பயனாக உற்பத்திச் செலவைக் குறைக்கலாம். தேவை திடீரென்று பழைய மட்டத்துக்குச் சென்றாலும் விலை அதன் முந்திய உயர்மட்டத்துக்குத் திரும்ப மாட்டாது. படம் 9 இல் EE" என்ற அம்பை அனுசரித்துச் செல்லும் போது நாம் சப்ளைக்கோட்டையனுசரித்துத் திரும்பிவரக் கூடியவாறு செல்ல வில்லை. அதற்குப் பதிலாக சப்பிளைக் கோடானது திரும்பிவரமுடியாதவாறு SS இலிருந்து S'S' இக்கு நகர்ந்தாலும், தேவை மறுபடியும் *dd* இக்குத் திரும்பினாலும் E" இல் விலை முன்னையிலும் பார்க்கக் குறைவாகவே யிருக்கிறது.

இந்த உதாரணம் கூற்று 1 இன் கீழ் வரவில்லை. கூற்று 2 இன் கீழ் வருகிறது. இக்கூற்று சப்பிளைகளின் மாற்றத்தைப் பற்றியது. சப்பிளை அதிகரித்தால் விலை இறங்கும்; தொகை அதிகரிக்கும் என்ற முடிவு இங்கே நிதர்சனமாகிறது. (E, E" என்பவற்றை ஒப்பிடடுப்பார்க்க) ஆனால் இந்த உதாரணம் அசாதாரணமானது. தேவையின் நகர்விலேதான் சப்ளையின் நுகர்வு தூண்டப்பட்டுள்ளது.

செலவுகள் குறிப்பிடத்தக்க விதத்தில்
கீழ்நோக்கி நகர்வதற்கு எடுத்துக்காட்டு




படம் 9.

பொருளாதாரச் சரித்திரத்தைப் பொறுத்தவரையில் பெரிய தேவை யுண்டான காரணத்தால் வியாபாரம் பெருகுவதனால் தொழில் நுட்பமுறை மாறி உற்பத்திச் செலவு குறையும் சந்தர்ப்பங்கள் மிக மிக முக்கியமானவை. இதனால் பொருள்களின் தன்மை அபிவிருத்தியடைவதோடு விலைகளும் குறைகின்றன.

பெருவாரியாக உற்பத்திசெய்யும் பொருள்கள் மறுபடி திரும்பிச் சிறிதளவாக உற்பத்திசெய்யப்படும் நிலையில் செலவுகள் உயரும். இதன் முக்கியத்துவத்தை இக்காலப் பொருளியலாளர் மறுக்கமாட்டார். ஆனால் போட்டி

www.padippakam.com




வியாபாரத்தில், ஒவ்வொரு கம்பெனியும் ஓர் அலகை உற்பத்திசெய்வதற்குத் தேவையான மேலதிகச் செலவு மேனோக்கி உயரச் செல்லும் தானத்துக்குத் தமது உற்பத்தியை இதுவரை விரிவடையச் செய்திருக்கும். ஏனெனில் ஒவ்வொரு போட்டி உற்பத்தியாளரும், தனது சந்தையைக் கெடுத்துக் கொள்ள விரும்பமாட்டான். குறையுஞ் செலவுக்கட்டத்துக்கு மப்பால் தனது உற்பத்தியை விரிவடையச் செய்ய எல்லா வகையான தூண்டுதலும் பெற்றிருப்பான்.[1]

(சில கம்பெனிகள் செலவு குறைய உற்பத்திசெய்ய வசதிவரும்போது வியாபாரத்தின் பெரும் பகுதியைத் தாம் பற்றிக்கொள்ளும் நிலைமையில் உண்டாகும் பூரணமற்ற போட்டியைப் பற்றி மேல்வரும் அத்தியாயங்களில் ஆராய்வோம்).

**உதாரணம் 6.** சப்ளையில் மாற்றம் 5 ஆம் உதாரணத்தின் ஒரு பகுதியை விட மேலேயுள்ள ஏனை உதாரணங்கள் எல்லாவற்றிலும், தேவையிலுண்டாகும் மாற்றம் பற்றியே கவனித்தோம். சப்ளையிலுண்டாகும் மாற்றம்

சப்பிளை நிலைபெயர்வதற்கு எடுத்துக்காட்டு




படம் 10

பற்றிக் கவனிக்கவில்லை. கூற்று 2 ஐ ஆராய்வதானல் தேவையை மாருமல் வைத்துக்கொண்டு சப்ளையை மாற்றவேண்டும். இது படம் 10 இல் உண்டு. கீழ்நோக்கிச் செல்லும் தேவை விதி உண்மையானல், சப்பிளை

[1] மார்ஷலின் புறச்சிக்கனம் காரணமாகக் கீழ் நோக்கிச் செல்லும் $S_L$ $S_L$ கோடு சம்பந்தமாக ந்த அத்தியாயத்திலே ஆராயப்பட்ட ஓர் உதாரணம் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



அதிகரிக்க தேவைக்கோட்டைக் கீழ்நோக்கிச் செல்லச் செய்யும்; இது விலையை இறங்கச் செய்து உற்பத்தித் தொகையை அதிகரிக்கும்.[1]

இரண்டாவது கூற்றின் பின்வரும் கிளைத் தேற்றத்தைச் சரியெனப் பரீட்சித்துப் பார்க்கவிரும்பினுல், படங்கீறியோ கோதுமையைக் காருடன் ஒப்பிட்டுப்பார்த்தோ மாணுக்கர் பரீட்சித்துக்கொள்ளலாம்.

(அ) தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும்போது சப்பிளை அதிகரித்தால் விலையிறங்கும். தேவை சார்பு அளவில் நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் விலையிறக்கம் அதிகமிராது.

(ஆ) தேவை நெகிழ்ச்சியற்றதாயிருந்தால் சப்ளையில் உண்டாகும் அதிகரிப்பு தொகையை மிகக்குறைவாகவே உயர்த்தும். தேவை நெகிழ்ச்சியுடைய தாயிருந்தால் தொகையை மிக அதிகமாக்கும்.

சாதாரணமாகப் பொது அறிவைக்கொண்டு கொடுக்கக்கூடிய காரணங்கள் எவை? கார், கோதுமை என்பவற்றை உதாரணமாகக் கொண்டு காட்டுக.

**உதாரணம் 7.** மாறுத நிலையான நிலைமைகளை மாத்திரமல்லாமல் மாறும் நிலைமைகளையும் ஆராய சப்ளை தேவையென்ற சாதனங்களைப் பயன்படுத்தலாமெனபதைக் காட்டப் பிரசித்தமான பொருளாதார உதாரணமொன்றுண்டு (காலம் சுருக்கமாயிருந்தால் மாணுக்கர் இப்பகுதியைப்படியாது விடலாம்.)

போட்டிப் பொருளான இறைச்சியடிக்கும் பன்றிகள் வெந்நீசில் விற்கப்படுகிறதென்று வைத்துக்கொள்வோம். Q விலிருந்து $dd$ தேவைக்கோடுவரை போகக்கூடிய (P) விலை வரக்கூடியவாறு வெந்நீசில் விற்கப்படுகிறது. ஆனுல் இப்பொழுது சப்ளை பக்கத்தை இயக்க முள்ளதாக்க விருபுகிறோம். பன்றிப்பண்ணைக்காரர் இன்றைய (P) விலையைப் பார்த்துவிட்டு அடுத்த பருவத்துக்கு எவ்வளவு தொகைப் பன்றியை விற்பனைக்குக் கொண்டுவரலாமெனநிச்சயஞ் செய்கிறுர்கள். விசேடமாக இன்றைய (P) விலை உயர்வாயிருந்

[1]. இதற்குப் புறநடையை 21 ஆம் அத்தியாயத்திலே கண்டோம். அங்கே அயர்லாந்து விவசாயிகளுக்கு உருளைக் கிழங்கு அதிகமாக விளைந்ததால் அதை அதிகமாக நுகரவேண்டிய நிர்ப்பந்தமுண்டாயிருக்கலாம். (இதனை "கிப்பினின் நிகழ்ச்சி" என்று வழங்கினர். 19 ஆம் நூற்றுண்டிலே இதனை சர் பிரான்சிஸ் கிப்பின் என்பவரே முதன்முதலாகக் குறிப்பிட்டாராம்.) குறுந்தவணையிலே விலை அதிகரித்தால் மக்கள், வருங்காலத்தில் விலை மேலும் உயரும் என்று எண்ணி, அதிகமாகப் பொருளை வாங்கவிரும்புவர். அதனுல் நிலைமையைக் குழப்பக்கூடிய ஊகம் உண்டாகும். இதுவும் ஒருபுறநடை. மூன்ருவது புறநடையுமொன்றுண்டு. வைரம், பெண்களின் தலையணிபோன்றவை—நாகரிகப் பண்டங்கள். அவை அதிகவிலையுள்ளனவாயிருப்பதற்குக்காரணம், அவை பணக்காரர் அணியும் பொருள்கள் என்பதேயன்றி, அவற்றைப் பொறுத்தமட்டில் அவைவிலை மதிப்புடையனவல்ல. அவற்றின் விலையைக் குறைத்துவிட்டால் அவற்றின் தேவை குறைந்துவிடும். விலைபோகாத பண்டங்களின் விலையை ஏற்றிவிட்டால் சிலசமயம் அப்பொருள்கள் விரைவாக விலைப்பட்டுவிடும். அதற்குக் காரணம் நுகர்வோர், விலை ஏறியபொருளாயிருந்தால் அது நல்லபொருளாகவேயிருக்குமென்று எண்ணு வதேயாகும்.

www.padippakam.com



தால் புதிதாகப் பலபன்றிகளை வளர்க்கப் பார்ப்பார். பண்ணைக்காரருக்கு SS சப்ளைக்கோடு ஒன்று உண்டு. அது அடுத்த பருவத்து Q வை இந்தப் பருவத்து (P) விலையுடன் தொடர்பு படுத்துகிறது. பருவம் என்பது பன்றியைவளர்ப்பதற்குத் தேவைப்படும் காலமாகும்.

படம் 11 இலே SS உம் *dd* உம் குறுக்கே வெட்டும் இடத்திலேயே சந்தைவிலையிருக்குமானால் இது மாருத ஒரு சமநிலையைக் காட்டும். மாருத சந்தர்ப்பங்களில் இவ்வாறே தோன்றும். இன்றும், நாளைக்கும் அதன் பின்னரும் பண்ணைக்காரர் SS கோட்டிலிருந்தபடி E யில் காட்டியதொகையை உற்பத்தி செய்துகொண்டிருப்பர். நுகர்வோர் அந்த விலையில் தேவைப்படும் தொகையே பண்ணைக்காரர் சப்ளை செய்யக்கூடிய தொகையாகும். அவ்வளவில் எவ்வித வித்தியாசமுங் கிடையாது.

ஆனால் தொற்றுநோயினால் பன்றிகள் சாகின்றன. எனவே தொகை Q 1 ஆகக் குறைகிறது. இது Q* என்ற சமநிலைத் தொகைக்குக் குறைவே. நாம் தேவைக்கோடு E இல் இருக்கும் வரை செல்லுகிறோம். அப்படிச் சென்று ஏற்றமான $P_1$, விலையைப்பெறத் தெண்டிக்கிறோம். தொகை குறைந்ததற்கான ஈடு இதுவே. ஆனால் விடயம் அவ்வளவில் முடியவில்லை நெடுந்தவணைச் சமநிலையில் நாம் இருக்கவில்லை. இந்த உயர்விலை $P_1$ இல் பண்ணையாளர் நாளைக்கு எவ்வளவை உற்பத்திசெய்வார். வலதுபக் கமாக உயர்ந்து $F_2$ என்ற தானத்தொகையில் இரண்டாவது பருவத்தில் உற்பத்தி செய்வர். இந்த Q தொகை சமநிலை G விலும் அதிகமென்பதை நாம் அறிவோம். போட்டிச்சந்தையில் இது எப்படிவிலையாகும்? தேவைக் கோட்டிலே $P_2$ ஆனது $E_2$ என்ற மட்டத்துக்கு வீழ்ச்சியடைய வேண்டும். ஆனால் நாம் இன்னும் முடிவான சமநிலைக்கு வரவில்லை. இந்தக் குறைந்த இறுக்கவிலையில் நாளைய உற்பத்தியைப் பண்ணையாளர் குறைக்க விரும்புவர். எனவே இடதுபக்கமாக SS கோட்டில் இறங்கி $F_3$ யை அடைவர். அங்கிருந்து *dd* கோட்டில் மேனோக்கி ஏறுவோம். ஏறி $E_3$ தானத்திலுள்ள $P_3$ ஐ அடைவோம்.

இவ்வாறே நெடுக நடைபெறும். முதலில் Q குறைவாகவும் P உயர் வாகவுமிருக்கும். P உயர்வதால் அடுத்த பருவத்திலே Q உயரும்; அதனால் அடுத்த பருவத்து P குறையும். இவ்வாறு சமநிலைக்கு இரு புறத்திலும் சந்தைவிலை ஏறியும் இறங்கியுங் கொண்டு சிலந்திவலைபோலக் காட்சியளிக்கும்.

ஆனால் முடிவென்ன? படம் 11 இல் சப்பிளைக்கோட்டின் E யிலுள்ள சரிவு தேவைக்கோட்டின் விழும் சரிவிலும் செங்குத்தாயிருக்கிறது. கடைசியில் ஏற்ற இறக்கங்கள் இல்லாமற் போகின்றன. சிலந்திவலை உட்பக்க மாகச் சுழன்று சுழன்று E என்ற புள்ளியில் மறைகிறது. அப்போது நாம் மறுபடியும் சமநிலை யடைகிறோம். அங்கே நிலைத்திருக்கமுடியுமா? வெளியிலிருந்து வரும் குழப்பங்கள் தோன்றும்வரை அப்படியிருக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com



எல்லாச் சமநிலை முனைகளும் இயக்கவகையில்நிலை யுள்ளனவாகவே காணப்படுவதில்லை. படம் 12 இல் E என்ற நிலை பூதக்கண்ணாடிமூலம் ஆராயப்படுகிறது. ஏற்படக்கூடிய வேறு சந்தர்ப்பங்கள் கற்பனை செய்யப் பட்டுள்ளன. முதலாவது படத்திலே SS, *dd* யிலும் தட்டையாக்கப்பட்டுள்ளது. எனவே சிலந்திவலையானது வெளிநோக்கி விரிகிறது. இரண்டா

இயக்கவிசைச் சிலந்தி





படம் 11.

வது படத்திலே, நேர்கோடுகள் ஒரே சரிவாயிருப்பதால் அழகான சிலந்திவலையுண்டாகிறது. சந்தை குழப்பமடைவதையனுசரித்து அது சமநிலையைச் சுற்றி ஓயாமல் ஏறியுமிறங்கியுங்கொண்டிருக்கும். அசைவிலே, அதிக வீக்கமடையாது (தடையில்லாத பெண்டியூலம் போல ஓயாமல் அங்குமிங்குமசைந்து கொண்டிருக்கும்.)

நேர்கோடுகளைப் பயன்படுத்த வேண்டியதில்லை யென்பதைக்காட்டுவதற்கே கடைசிப்படம் காட்டப்பட்டுள்ளது. சமநிலை முனையிலே *ss* ஆனது *dd* யிலும் பார்க்கத் தட்டையாயிருக்கிறது. (அதாவது நெகிழ்ச்சியுடையதாயிருக்கிறது) சிறிய குழப்பமேற்பட்டாலும் அசைவுகள் உண்டாகிவிடும். கோடுகள் வளைவதால் அமைப்பானது நிலையான "பெட்டி" யான ABCD யில் கடைசியாய் அடங்கிவிடும். பின்னர் அமைப்புப் பருவத்துக்குப் பருவம் மாறி மாறி அசையத்துவங்கும். அசைவின் வீச்சை *dd*, *ss*, என்பவற்றின் வளைவைக்கொண்டு நிச்சயிக்கலாம். புதிய குழப்பங்களுண்டான பின்னர் அமைப்பு இந்தப் பெட்டியில் வந்து அடங்கும்; தற்செயலாக நிலையான சமநிலை E யிலே பெற்றுக் கொண்டாலும் புதிதாக ஒரு சிறிய அதிர்ச்சியுண்டானால், சந்தை அத்தகைய நிலையற்ற சமநிலையிலிருந்து

தூர விலகிவிடும். (கருத்துள்ள மாணுக்கர் இந்தக் கட்டத்திலே பின்வருமாறு கேட்கலாம்: விலைகள் இந்த மாதிரி ஏறியும், இறங்கியுங்கொண்டிருப்பதைத் தந்திரமுள்ள வியாபாரிகள் கவனிப்பதில்லையா? அப்படியானல் விலை குறைந்த காலத்தில் பொருள்களை வங்கி அடுக்கிவிட்டு விலையுயரும்போது விற்கமாட்டார்களா? இதனுல் விலை வித்தியாசங்கள் முற்றுய் ஒழிக்கப்படமாட்டாவா? அடுத்த அத்தியாயத்துக்கான அனுபந்தத்திலே ஊகவியாபாரத்தின் இயக்கத்தைப் பற்றி ஆராய்வோம். இந்த நிலை ஏற்படுவது சகசம் என அதில் குறிப்பிடப்படுகிறது.)




படம் 12.

சிலந்திவலைத் தினிசைப்பற்றி மிகச் சுருக்கமாகவே இங்கு ஆராய்ந்தோம். பன்றி வளர்ப்புப் பருவச் சுழற்சி இவ்வாறு ஏற்படுகிறதென்பது இக்கால வரலாற்றில் காணப்படும் சர்வசாதாரணமான அமிசமாகும். இந்நூலின் இரண்டாம் பகுதியிலே, சுதந்தரமான முயற்சியாளரின் போக்குக்கு வியாபாரத்தை அரசாங்கம் தலையிட்டு சமநிலைப் படுத்தும் தந்திரங்களைப் பயன் படுத்தாவிட்டால், நிலைமை ஏறியும் இறங்கியும் கொண்டிருக்குமென்பதைக் காட்டினேம். இங்கே தரப்பட்ட இலேசான மாதிரியமைப்பு இந்த வியாபார நிகழ்ச்சியை ஓரளவு விளக்க உதவுகிறது. பன்றிப் பண்ணைகள் போலவே பெரிய கம்பெனிகளும் ஒரு கோடியிலிருந்து மற்றக் கோடிக்குப் பாயலாம். அதனுல் நிலையற்ற தன்மையுண்டாகும்.

www.padippakam.com

# இருபத்துமூன்றும் அத்தியாயம்

## விவசாயம் சம்பந்தமாகப் பிரயோகிக்கப்படும் விநியோகமும் தேவையும்

*நமது விவசாயம் இன்னும் "மேல் மிச்சப்" பிரச்சினை ஏற்படும் ஒரு நிலைமையை இன்னும் எதிர்பாக்கவேண்டுமென அமெரிக்கவிவசாயத்தலைவர்கள் கூறுவது பொருந்தும். ஆனல் எமது "மேல்மிச்சம்" எப்படிப் பட்டதாயிருக்கவேண்டும் என்பதை அவர்கள் கவனத்துக் கெடுப்பதில்லை. அமெரிக்காவின் நெடுந்தவணை விவசாயப் பிரச்சினை, மேல்மிச்சமான பருத்தியையோ பற்றியதன்று. மேல்மிச்சம் விவசாயிகளைப் பொறுத்ததே.*

**—வில்லியம் எச். நிக்கல்ஸ்**

ஒரேவகையான பொருளைப் பல கம்பெனிகள் உற்பத்தி செய்து நன்முக அமைக்கப்பட்ட சந்தையில் விற்கும் பூரணப்போட்டிமுறை அமெரிக்க வாழ்க்கைமுறைக்கு ஏற்றதன்று. எனவே அடுத்த அத்தியாயங்களிலே புரணமற்ற போட்டி, ஏகபோக உரிமையுள்ள போட்டி என்றபுதிய முறைகளையும் ஆராய்வோம்.

சப்ளை, தேவை என்ற மூலாதாரமான உபகரணங்களைப் பிரயோகித்துப் பார்ப்பதற்கு வசதியுள்ள ஒரு பெரிய விரிவு விவசாயமாகும். அது பரபரப்பான புதினங்களை உதவக்கூடியது ; வாக்காளருடைய வாக்குகளை மாற்றும் சக்தியுடையது. அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகளான சப்ளை, தேவை என்ற கருத்துக்களை முதலில் விளங்கிக் கொள்ளாவிட்டால், இந்தத் துறையிலேயுள்ள முக்கியமான கொள்கைகளை விளங்கிக்கொள்ள முடியாது. இந்த அத்தியாயத்திலே பொதுவான விவசாயப் பிரச்சினையை வருணித்து மேலே கூறிய உபகரணங்களைப் பிரயோகித்துப் பார்ப்போம்.

**விவசாயம் சார்பளவில் குறைதல் :** அமெரிக்காவின் பெரிய தனித் தொழில் விவசாயமே. ஆனல் கடந்த இரண்டு நூற்றுண்டாக விவசயஞ் செய்வோரின் தொகை குறைந்துகொண்டே வருகிறது. எமது நாடு முன்னெல்லாம் விவசாய நாடாயிருந்தது. அந்த நிலை இப்போது இல்லை. விவசாயிகளின் அரசியற் செல்வாக்கு இப்பொழுதும் அதிகமாகவேயிருந்த போதிலும் 13 அமெரிக்கரில் ஒருவர்த்தான் இன்று விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கிருர். விவசாயத்தை ஏன் மக்கள் புறக்கணிக்கிருர்கள் ? நகரத்திலே அதிக வருமானத்துக்கு வேலை செய்யலாமல்லவா ? குறைந்த மணித்தியாலத்துக்கு வேலை செய்யலாமல்லவா ? அத்துடன் பட்டிணங்களிலே சிறப்பான நாகரிக வாழ்க்கையுண்டல்லவா ? இவைதாம் காரணம்.



படிப்பகம்

www.padippakam.com



## ஜனனவிகிதத்தில் வேற்றுமை

இஃது இவ்வாறு இருப்பது ஒரு வழியில் நல்லதிஷ்டமே. இரண்டாவது அத்தியாயத்திலே கண்டதுபோல் பட்டினங்களிலும் பார்க்க கிராமங்களிலே பிறப்பு அதிகம். இவ்வாறு மக்கள் கிராமங்களிலிருந்து பட்டினங்களுக்கு வராதுவிட்டிருந்தால் நகரங்கள் சிறுத்துக் கொண்டே வரலாம். மொத்தச் சனத்தொகையின் கிராமப் பங்கு பெருத்துக்கொண்டே போகும். குறைந்துசெல் பயன்விதி என்ன கூறுகிறது. விவசாயத்தில் ஒவ்வொரு மனிதனும் செலவிடும் ஒவ்வொரு மணிநேரத்தின் விளைவு பெரிதும் குறையும். நிலத்திலே குடிசனப் பெருக்கம் அதிகரிக்கும். ஒவ்வொருவரும் உற்பத்தி செய்யும் அளவு குறையும்; இந்தக் குறைந்த விளைவைக் கொண்டு வாழ்க்கைக்குத் தேவையான போகப்போக்கியங்களைப் பெறமுடியாது.

இந்த நிலை உலகின் மூன்றிலிரு பாகத்திலும் உள்ளதொன்று. விசேடமாக ஆசியாவிலே வாழ்க்கைத்தரம் மிகக் குறைவு. நாலில் மூன்று பேர் சீவனத்துக்குத் தேவையான உணவு உற்பத்தியிலீடுபட்டிருக்கிறார்கள். நாலுபேரில் ஒருவரே போகபோக்கியப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்காவிலே ஒவ்வொரு உற்பத்தியாளரும் 23 பேருக்கு உணவளிக்கக்கூடிய அளவு உற்பத்தி செய்கின்றனர்.

## தொழில்நுட்ப மாற்றமும் மக்கள் ருசியில் உள்ள வித்தியாசமும்.

விவசாயத்தின் முக்கியத்துவம் குறைவதற்கு ஜனனவிகிதத்தை விட வேறு இரு காரணங்களுமுண்டு. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயனாக உணவு, தும்பு என்பவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆட்களின் தொகை குறைக்கப்பட்டுள்ளது. எந்திரக் கலப்பை, பருத்தி பிடுங்கும் யந்திரம், நீர்ப்பாசனம், செயற்கை உரம், சோளத்தையும், கால்நடைகளையும் இனக் கலப்புச்செய்து வளர்த்தல், என இத்தகைய பல விஞ்ஞான முறைகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

இவ்வாறு தொழிலாளர் செய்யும் வேலையை எந்திரத்தின் மூலம் செய்வதோடு மற்றொரு விடயமும் கவனிக்கப்படவேண்டியிருக்கிறது. பணம் அதிகரிக்க அதிகரிக்க நாம் உணவுப் போகத்தைக் குறைத்துக் கொண்டு நகரத்துப் பொருள்களைப் பயன்படுத்த விரும்புகிறோம். இது இங்கும் அயல்நாடுகளிலும் செய்த புள்ளிவிபர ஆராய்ச்சிகளால் நன்கு விளங்குகிறது. பிறப்பு விகிதம், மக்கள் ருசியில் மாற்றம், தொழில் நுட்பவளர்ச்சி என்பவற்றின் பயனாய் மக்கள் உற்பத்தியிலிருந்து கைத்தொழிலுக்கு மாறுகிறார்கள்.

## விவசாயத்தின் நெடுந்தவணை வீழ்ச்சி.


651 ஆம் பக்கத்திலுள்ள இரண்டாம் படத்திற் காணப்படும் கடும் வளைவு எதனைக் காட்டுகிறதென்றால், தசாப்தங்களில் மற்றப் பொருள்களின் விலையை ஒப்பிடும்போது விவசாயப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடை

www.padippakam.com



கின்றன என்பதே. இரண்டாவது உலக மகாயுத்தத்திலே உண்டான தற்காலிகமான உணவுக்குறை துப்புக் குறை என்பன இல்லாதிருந்தால் இந்தப் போக்கு மேலும் குறிப்பிடத்தக்கதாயிருந்திருக்கும். பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தனிப்படம் இந்தப் போக்கை இலேசாகவிளக்கிக் காட்டும்.

பண்ணைப் பிரச்சினையை விளக்குவதற்கு வரிப்படமொன்று மிகு தூரம் செல்கின்றது ;




படம் 1.—காலப் போக்கிலே குடிசனப் பெருக்கத்தாலும் கூடிய வருமானத்தாலும் ஏற்படும் பண்ணைப் பொருள்களின் தேவை அதிகரிப்பு, தொழில் நுட்பத்தால் ஏற்படும் சப்பிளையின் அதிகரிப்பிலும் குறைவாக இருக்கும்.

1 ஆம் படத்திலே முன்னேயொரு காலத்தில் இருந்த சப்பிளை தேவை என்பவற்றின் ஆரம்பச் சம நிலையை E என்ற புள்ளிகாட்டுகிறதென வைத்துக் கொள்வோம். இந்தக் கோடுகளுக்குக் காலப் போக்கில் என்ன நடக்கிறது ? $dd$ யானதும் சனப்பெருக்கமுண்டானல் வலப்பக்கமாக நகரும் என்பதை நாம் அறிவோம். மக்களுடைய வருமானம் அதிகரிக்கவே மக்கள் அதிக உணவை உண்ணத் தலைப்படுவர். விலைமாருது. வாங்கும் சக்தி அதிகரித்தாலும், அடிப்படை உணவும் பொருள்களில் எந்தமாற்றமும் எந்தக் குடும்பத்திலு முண்டாகாது. மேலும் ஐக்கிய அமெரிக்காவில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே உண்டானது போன்ற அதிக சனவிகிதம் 20 ஆம் நூற்றாண்டிலுண்டாவதில்லை. எனவே வலப்பக்கமாக நகரும் $d'd'$ தேவை நகர்வு அவ்வளவு அதிகமன்று.

www.padippakam.com



சப்பிளை விடயம் எப்படி? விவசாயம் பிற்போக்கானதொரு தொழில் எனப் பலர் தவருகக் கருதலாம். ஆனுல் அமெரிக்க விவசாயத் துறையிலே உற்பத்தி பெருகியிருப்பதைப் புள்ளிவிவர அறிக்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம். இது கைத்தொழிலிலும்பார்க்க விரைவாகப் பெருகியிருக்கின்றது. புதிய செயற்கை உரம் உண்டாக்கப்பட்டால், புதிய எந்திரக் கலப்பைகள் அமைக்கப்பட்டால், புதிய விதைகள் விளைவிக்கப்பட்டால் SS கோடு வலதுபக்கமாகப் பெரிதும் நகரும்.

அரசாங்கம் தலையிடாவிட்டால் சந்தையிலே உண்டாகக்கூடிய புதிய E' சம நிலைக்கு என்ன ஆகும்? தேவையிலுள்ள நகர்வுக்கு மிஞ்சிய வகையில் சப்ளையில் நகர்வு உண்டானுல், சந்தைவிலையிலே வீழ்ச்சியுண்டாகும். (இது பொதுவிலை மட்டத்துக்கு ஏற்றவாறேயுண்டாகும். பொதுவகையான பண வீக்கத்திஞல் ஏற்படக்கூடிய விளைவுகள் கணக்கிலே எடுக்கப்படவில்லை.) விலையில் இத்தகைய வீழ்ச்சியுண்டாவதால் திறமையில் மாற்றம் எதுவும் அடையாத விவசாயிகளும் கிராமத் தொழிலாளரும் இந்தவிலை வீழ்ச்சியால் பணக்கஷ்டமும் வேறு இன்னலுமடைவர். இதஞல் கிராமங்களில் வேலை செய்வோர் தொழிற்சாலைகளில் வேலை தேடிக்கொண்டு செல்வர்.[1] அத்துடன் நுகர்வோர் தமது உணவின் மூலப் பொருட் பகுதிகட்குக் குறைந்தவிலை கொடுப்பர். வளரும் சமூகத்திலே அதிகம் தேவைப்படும் பொருள்கள்மாட்டு, பொருளாதாரமானது தனது வளங்களைப் புனர்ப்பங்கீடு செய்து புதிதாக ஒதுக்கவேண்டியிருக்கிறது. இதஞல் விவசாயத்துக்கு அதிக உதவி செய்யுமாறு அரசியல்வாதிகள் அரசாங்கத்தை நெருக்கவேண்டியேற்படும்.

**விவசாயத்திலே.** அமெரிக்கர் குடும்ப விவசாயப் பண்ணையை இலட்சியமாகக் கொண்டவர்கள். தந்தைதாய், பிள்ளைகள் என்போர் சில சமயம் வெளியார் உதவியுடன் இதை நடத்துவர். இது நியாயமான அளவு திறமையுள்ள ஒரலகாகும். மேலும் இந்த முறையிஞல் நகரத்தில் வேலைசெய்வோர் பெறும் வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துக் குறைந்தபட்ச வருமானமாவது கிடைக்கிறது.

உள்ள நிலைமை எப்படி என்பதை ஆராய்வோம். சிகாக்கோ சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் தியடோர் சுல்ட்ஸ் என்பவர், இந்த வரைவிலக்கணம், பங்குவிளைவு பெறுவோரைத் தவிர்த்துவிடுமென எடுத்துக் காட்டியுள்ளார். எஞ்சிய பண்ணைகளிலே கிராமத்து வங்களாக்களையும் குடும்பப் பண்ணையென்ற முறையிலமையாத பெரிய பண்ணைகளையும், அன்ருடு வாழ்க்கைவருவாய் பெறும் விவசாயிகள் பண்ணைகளையும் அவர்

[1] விவசாயி விற்கும் பொருளின்விலை வீழ்ச்சியடைந்தாலும், சில்லறைவிலை வீழ்ச்சியடைவதில்லை. பதிலாக அது எதிர்வருடங்களில் உயர்ந்தாலும் உயரலாம். ஏன்? கூலிச்செலவு, அடைக்குஞ் செலவு உயர்சந்தை என்பன காரணமாகவே இது உண்டாகிறதென்பதை விவசாய நிபுணர் ஒத்துக்கொள்வதில்லை. இதற்குக் காரணம், இன்று மக்கள் உணவைவிரைவில் தயார் செய்யக்கூடிய விதமாகப் பக்குவம்பண்ணிச் சந்தையில் விற்பனையாவதை விரும்புகிருர்கள். 1960 ஆரம்பத்தில் விற்பனையான உணவுப் பொருள்விலையில் 40 சதவீதமே விவசாயிக்குக் கிடைத்தது. அதற்கு முன்னர் 50 சதவீதம் கிடைத்தது.

www.padippakam.com



இந்தக் கணக்கிலிருந்து அகற்றிவிட்டார். இதனால் குடும்பப் பண்ணைகள் என்று கணக்கு எடுக்கக்கூடிய பண்ணைகளின் தொகையை வெகுவாகக் குறைத்து 30 இலட்சத்துக்குக் குறைவாக்கிவிடுகிறது. இவற்றில் 2,500 டொலருக்குக் குறைவான மொத்த வருமானமுள்ளவை, வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதில்லையென்பதை அட்டவணை I காட்டுகிறது. எனவே அமெரிக்க விவசாயிகளில் ஒரு சிறு தொகையினரே தமது லட்சியத்தை அடைந்துள்ளனரென்பது தெரியும்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலே பெரும்பாலான பண்ணைகள் பூரணமாகப் பங்குபற்றவில்லை. பெரிய பண்ணைகளையுடைய 1,34,000 விவசாயிகள், 2,00,000 வறிய விவசாயக் குடும்பங்கள் (இவர்கள் வருடத்தில் மொத்தம் 5,000 டொலர்கூடப் பெறுவதில்லை) உற்பத்தி செய்வதிலும் அதிகமாகவே உற்பத்தி செய்கிறார்கள். இதிலிருந்து நாமறியக் கூடியது பெரும்பாலான விவசாயப் பண்ணைகளின் விளைவு குறைவென்பதாகும். குறைந்த விளைவுள்ள நிலங்களிலே இறுதிநிலை விவசாயிகளாக இருக்கும் மேலதிக குடிசனங்களைப் பற்றி வெளியே தெரியாது. குடும்பப் பண்ணைகள் விஸ்தாரத்தில் பெருகி, தொகையில் குறையவேண்டும். பங்கு விவசாயங்களும் கம்பெனிகளும் முக்கியத்துவத்திலே அதிகரிக்கலாமென எதிர்பார்க்கலாம்.

விவசாயத் தொழிலாளர் யுத்தகாலத்துக்கு முன்னர் மிகக் குறைவான கூலியைப் பெற்றார்கள். 25 இலட்சம் விவசாயத் தொழிலாளரில் 2/5 வீதத்தினர் சாப்பாடு முதலிய செலவுகள் போக வருடத்தில் 250 டொலருக்குக்

**விவசாயப் பிரச்சினை சிறு விவசாயிகள் சம்பந்தமானதே.**

**அட்டவணை 1.** விற்பனை மூலம் பண்ணைகளைப் பகிர்தல். 4 வீதமாயுள்ள பெரிய பண்ணைகள் உற்பத்தியில் 32 வீதத்தை உண்டாக்குகின்றன. முழுநேர விவசாயிகளாயுள்ள 5 பேரில் 3 பேர் வருடத்தில் 5,000 டொலருக்குக் குறைவாகவே மொத்த வருமானம் பெறுகிறார்கள். இதைக் கொண்டே அவர்கள் சகல செலவுகளையும் செய்யவேண்டும். (மூலம் : விவசாயப் புள்ளி அறிக்கை 1954. இதில் அரைநேர விவசாயிகளும், தாபனத்தைச் சேர்ந்த விவசாயிகளும், குடியிருந்து தொழில் நடத்தும் விவசாயிகளும் சேர்க்கப்படவில்லை).

| ஒரு பண்ணையில் விற்பனவு (விலைடொலரில்) | பண்ணைகள் தொகை ஆயிரத்தில் | சகலபண்ணைகளின் வீதம் | விற்பனையான பொருள்களின் பெறுமதி வீதம் |
|---|---|---|---|
| 25,000 உம் அதற்குமேலும் | .. 134 | 4.0 | 32.0 |
| 10,000— 24,999 | .. 449 | 13.5 | 27.5 |
| 5,000— 9,999 | .. 707 | 21.3 | 20.9 |
| 2,500— 4,999 | .. 812 | 24.4 | 12.4 |
| 1,200— 2,499 | .. 763 | 22.9 | 5.8 |
| 250— 1,199 | .. 462 | 13.9 | 1.4 |
| மொத்தம் | .. 3,327 | 100.0 | 100.0 |

படிப்பகம்

www.padippakam.com



குறைவாகவே பெற்ருர்கள். 1/5 வீதத்தினரே 500 டொலருக்கு அதிகமாகப் பெற்றனர். யுத்தகாலத்திலே ஏராளமான தொழிலாளர் விவசாயத் துறையிலீடுபட்டதோடு அவர்களுடைய சம்பளமும் அதிகரித்தது. முதலாவது உலக மாகாயுத்தத்தில் நிலவிய கூலியிலும் பார்க்க 1960 இல் கூலி ஆறுமடங்காக அதிகரித்தது. இருந்தும் இது வாரத்துக்கு 45 டொலராகவே காணப்பட்டது (வீட்டுக் கூலி இல்லை). இந்த விகிதம் கூட மிகக் குறைந்த கூலியேயாகும். ஏனெனில் வேலைநேரம் நீண்டிருப்பதோடு வேலையும் கஷ்டமானதாகும்.

தெற்கு மாகாணங்களிலுள்ள வெள்ளைக்காரத் தொழிலாளரும் நீக்ரோ தொழிலாளரும் விளைவில் பங்கு பெறும் தொழிலாளர். இவர்களிடம் நிலமோ, ஆயுதங்களோ கிடையா ; இவர்களுடைய சீவியம் கடன் பட்டே நடக்கும். கம்பெனிப் பண்டசாலைப் பொருள்களைக் கடனுக்கு வழங்கும். இவர்களுடைய பிரச்சினை சிக்கலானது. சாதாரண வருடங்களில் பருத்தி விளைவு நன்ருக இருந்தால் தொழிலாளி தனது கடனெல்லாவற்றையும் கொடுத்துத் தீர்க்கக்கூடிய அளவுக்கு வருமானம் பெறுவான். பெரும்பாலும் அவன் பருத்தி விளைவையே எல்லாவற்றிற்கும் நம்பியிருப்பான். ஏனெனில் பருத்தியை உடனடியாக உண்ணவும் முடியாது, இலேசாக அதனைக் களவாடவும் முடியாது.விளைவு முடிந்த ஒரு வாரத்துள் அவன் மறுபடியும் கடன்காரனுகிவிடுவான். சில சமயம் பருத்தியின் விலை ஏறுமானுல் அவனுக்கு இலாபமும் கிடைக்கலாம். அதைக்கொண்டு அவன் பழைய கடன்களைக் கொடுத்துச் சிறிது பணத்தை மிச்சமும் பிடிப்பான். எனவே அவன் ஒருவகையில் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன் எனலாம். ஆனுல் இந்தப் பட்டம் அவனுக்குப் பெரிதன்று ; நல்ல சம்பளம் பெறுவதே அவனுக்கு முக்கியம். இதனுலேதான் தெற்கு மாகாணங்களிலுள்ள நீக்கிரோவரும், வறுமைப்பட்ட வெள்ளையரும் வடக்குப் பிரதேசத்திலுள்ள பட்டினங்களில் வேலைக்காகப் படையெடுத்துச் செல்லுகிருர்கள். இது இரண்டு பெரிய மாயுத்தங்களின்போதும் அதன் பின்னரும் நடைபெற்றுள்ளது.

**வாரத்துக்கு விவசாயஞ் செய்வோர் :** இந்தவகையான விவசாயிகளை ஐக்கிய அமெரிக்க நாடெங்கும் காணலாம். சாதாரணமாக இவன் குறிப்பிட்டதொரு விலைக்கு நிலத்தைக் குத்தகைக்குப் பெறுகிருன். இல்லாவிட்டால் பங்குமுறையில் பெறுகிருன். அவன் பண்ணையிலே குடியிருந்துகொண்டு, தொழிலாளரை எல்லாம் ஏற்படுத்தலாம். பண்ணைக்குத் தேவையான தளவாடங்களில் அரைப் பங்கையும், கால்நடைகளிலே அரைவாசியையும் உடைமையாகச் சில சமயம் உடையவனுயிருக்கலாம். சாதாரணமாகவே வருடவிளைவிலே அரைக்கரைவாசியாகப் பகிர்ந்து கொள்ளலாம். வசதியான சந்தர்ப்பங்களிலே குத்தகைக்கு விவசாயஞ் செய்தல் ஒரு ஏணிபோன்றது. அதனைப் பயன்படுத்தி இளம் விவசாயி தனது பண்ணைக்குச் சொந்தக்காரனுகலாம். ஆனுல் விவசாயமானது பல தசாப்

www.padippakam.com



தங்களாகக் குன்றிக்கொண்டு வந்தால்,—இரண்டு மகாயுத்தத்துக்கிடைப் பட்டகாலத்திலே இவ்வாறு நடந்தது—சொந்த நிலமுள்ள விவசாயிகள் கூடத் தமது நிலங்களை ஈடுவைத்து அதன்மூலம் இழக்கநேரிடலாம்.

**விவசாயத்திலே நிலையற்ற தன்மை**

பண்ணைத்தொழில் நிலையில்லாதது. விலைகள் ஏறியும் இறங்கியுங்கொண்டிருக்கலாம். சோளம், கோதுமை, மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, முதலிய பண்ணை விளைபொருள்கள் போட்டிச் சந்தையிலே விற்கப்படுகின்றன. சந்தையிலே வருடாவருடம் விலைகள் மாறிக் கொண்டேயிருக்கும். தினமும் மாறும்; மணித்தியாலந்தோறும் மாறும்; நிமிடந்தோறும் மாறும். இந்த ஊஞ்சலாட்டத்திலே விவசாயி ஊஞ்சலின் அந்தலையில் நிற்பான். நல்லகாலமானால் வருமானத்தில் அதிகரிப்புண்டாகும். வியாபார மந்தமுண்டானால் பண வருமானம் குறைந்துவிடும். யுத்தகாலத் தேவை நிலைகளினால் விவசாயிக்கு விசேடமாக நயமுண்டு. சமூகத்திலுள்ள மற்றவர்க்கத்தினரிலும் பார்க்க விவசாயி விலையேற்றத்தை நன்றாகச் சமாளித்துவிடுவான். ஆனால் 1947 ஆம் ஆண்டு துவக்கம் பண்ணை வருமானம் குறைந்துகொண்டே வருகிறது. இது மொத்த வருமானம், தலைக்கான வருமானம் என்ற இரண்டுவகையிலும், மற்றவர்க்கத்தவரின் வருமானத்தைவிடக் குறைந்துள்ளது.

பண்ணைப்புள்ளி விவரங்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் ஒரு நூதனமான காரியத்தை அவதானிக்கலாம். பண்ணை வருமானம் மந்தகாலத்திலென்றாலென்ன பூரிப்புக்காலத்திலென்றாலென்ன, மற்றவருமானங்களை விட அதிகமாக ஏற்ற இறக்கம் காட்டுகின்றன. ஆனால் பண்ணை உற்பத்தி கைத்தொழிற்துறை உற்பத்திகளிலும் பார்க்க நிலையானது. எந்தப் பண்ணையினாயினும் காலநிலையானது வருமானத்தின் திரமான நிலைக்குக் குந்தகம் விளைக்கும். ஆனால் அது கூட மொத்தப் பண்ணை விளைவுகளுக்குப் பெரும்படியான ஏற்றத்தாழ்வையுண்டாக்குவதில் உற்பத்தியிலே 12 வீத சராசரி வருடாந்த வித்தியாசங் காணப்பட்டது. ஆனால் பண்ணை விளைவிலே சராசரி 4வீத வித்தியாசமே காணப்பட்டது.

விவசாயி தான் ஏறியும் இறங்கியுங்கொண்டிருக்கும் சந்தையின் சக்திக்கு ஆளாகவேண்டியிருக்கிதென எண்ணுகிறான். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பலகாரணங்களால் அவனுடைய சப்ளைக்கோடு நெகிழ்ச்சியற்றதாயிருக்கிறது. (1) விலைவாசிகள் குறைவாயிருக்கும்போது, விவசாயி தனது குடும்ப வருமானத்தைக் குறையவிடாமல் வைத்திருப்பதற்காகப் பண்ணை விளைவை அதிகரிப்பதற்குச் செய்யும் முயற்சி அதிகரிக்கும். (2) அவனுடைய செலவுகளிலே பெரும்பாலானவை இருந்தபடியேதான் இருக்கும். உற்பத்தி அதிகரித்தாலென்ன, குறைந்தாலென்ன? அதனால் உற்பத்தித் தொகையைக் குறைப்பதனால் அதிக மேலதிகச் செலவைக் குறைத்துக்கொள்ளமாட்டான். அப்போது உற்பத்தித் தொகையைக் குறைப்பதனால் என்ன பயன்.

படிப்பகம்

www.padippakam.com



பண்ணைப் பொருள்களுக்கான தேவை, வருமானம் உயரும்போது குறையும் ; அத்துடன் விலை மாறுவதனுலும் அது நெகிழ்ச்சியற்றதாகியிருக்கும். அப்போது (a) சார்பு நெகிழ்ச்சியற்றதேவை (b) சார்பு நெகிழ்ச்சியற்ற சப்ளேயோடு கூடினுல் (c) இரண்டுகோடுகளும் மாறக்கூடியதாயிருக்கும் போது, நிலைமையாலுண்டாகும் விளைவென்ன ?

இதற்கு விடை கூறுவதானுல் ஒரு கடதாசியெடுத்து அதிலே விலை அச்சு, தொகை என்பவற்றை வரைக. அதன்மீது குத்துநிலையான சப்ளைக்கோடொன்றை, குத்துநிலையானதேவைக் கோடு வெட்டும் பாவனையிற் கீறுக. படம் 1 இலுள்ள மாதிரி இது அமையும். இப்போது இரண்டு கோட்டில் ஒன்றைச் சிறிது நகர்த்துக. இதனுல் P யிலுண்டாகும் மாற்றங்களென்ன ? உமது குழந்தைக்குச் சத்திர வைத்தியஞ் செய்யவேண்டியிருக்கிறது. உமது மகளுக்குச் சர்வகலாசாலையில் கல்வி பயிற்ற வேண்டியிருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் சப்ளை, தேவைக் கோடுகளிலே சிறிய நகர்வு தேவைப்படலாம். அதன்பயனுக குடும்ப வருமானத்திலே சிறிது மாற்றமுண்டாகும். அதை நீர் எவ்வாறு விரும்புவீர்.

விவசாயிகள் பெறும் விலைகளில் உண்டாகும் ஏற்ற இறக்கம், அவர்கள் வாங்கும் பொருள்களின் விலைகளில் உள்ள ஏற்ற இறக்கத்திலும் பெரிது என்பதைப் படம் 2 காட்டும். 1930 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்து வியாபார மந்தத்தின்போது விவசாயிகள் பெற்ற விலைகள் மற்றவிலைகளிலும் இரண்டு மடங்கு கீழே இறங்கின. வியாபார மலர்ச்சியிலிருந்து வந்த 1920 ஆம் ஆண்டுகளிலே விவசாயிகள் அதிகலாபம் பெறவில்லை. அத்துடன் அவர்கள் ஈட்டுக் கடன் பழுவையுந் தாங்கவேண்டியிருந்தார்கள். இது முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் உண்டான நிலவிலையிறக்கத்தின் பயனுக உண்டானது. இன்று விவசாயிகள் கேட்பது இதுதான். “ 1960 ஆம் ஆண்டும் 1920 ஆம் ஆண்டுபோலவே விவசாயிகளைத் தவிர மற்றெல்லார்கும் நன்மைதரக்கூடிய ஆண்டா ” என்பதே.

**விவசாயத்துக்கு அரசாங்கஞ் செய்யும் உதவி**

விவசாயம் இயற்கையென்ற மாற்றுந்தாயின் மகள். ஆதிகாலந்தொட்டே பொதுமக்கள் நிலச்சுவான்களை வெறுத்துவந்தனர். விவசாயிகளை நேசித்து வந்தனர். விவசாயிகளுடைய வாக்களிக்கும் பலம் குறைந்த போதிலும் விவசாயிகட்கு உதவி வழங்கும் விடயத்தில் பொதுசனம் ஆதரவளித்துவந்தது.

1929 க்கு முன்னர், விவசாயத்துக்கு அரசாங்கத்தின் மூலம் கிடைத்த பிரதானமான உதவி நமது நிலக் கொள்கையின்பயனுகவே உண்டானது. இக்கொள்கையின் பல தரிசுநிலங்களைச் செய்கைக்குரிய நிலங்களாக்குவதும், விவசாயமுறையைத் தற்கால விஞ்ஞானமுறையில் திருத்துவதுமாகும். அத்துடன் மண்பாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டது. விவசாயப் பரிசோதனை நிலையங்களில் செய்யப்படும் வேலைகள் பிரசித்தமானவை. ஒவ்வொரு

www.padippakam.com



விவசாயப் பண்ணைப் பிரதேசங்களிலும் பிரதேச முகவர் என ஓர் அரசாங்க உத்தியோகத்தர் காணப்படுவர். அவர் திறமான விவசாய முயற்சிக்கு உதவி செய்வார்.

ஆனல் 1929 இல் ஹூவர் நிர்வாகத்திலே, பெடரல் விவசாய சபை ஏற்படுத்தப்பட்டது. அதன்பயனுக விவசாயிகளுக்கு நேரடியான உதவி செய்யும் யுகம் ஆரம்பமாயிற்று. பின்னர் பண்ணைகளின் வருமானத்தை உயர்த்தி அதை நிலைபெறச் செய்வதற்கு அரசாங்கம், "இயற்கையான சப்ளை தேவை விதிகளில்" தலையிட்டது. இது பலவகையான அட்சரத் தாபனங்கள் (உ-ம் AAA, CCC முதலியன) மூலம் நடைபெற்றது. இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்வதாக இரண்டு அரசியற் கட்சிகளும் வாக்களித்துவிட்டன. "பண்ணைச் சங்கங்களின் சம்மேளனம்", "தி கிராஞ்ஜ்" விவசாயிகள் சங்கம் போன்றவை காங்கிரஸ் விவசாயிகளின் தேவைகளை நன்கு அறிந்துகொள்ளக்கூடியதாக வாஷிங்டனேடு தொடர்பு கொண்டிருக்கின்றன.

**சமநிலைக் கருத்து.** 1910 ஆம் வருடம் துவங்கி 1914 வரை விவசாயத்தின் பொன்யுகமாகக் கருதப்பட்டு வருகின்றது. விவசாயிக்குக் குறித்த தொருவிலை அவனுடைய பொருள்களுக்குக் கிடைக்கக்கூடியவாறு அரசியற் கட்சிகள் அரசாங்கத்தை நெருக்கின. இதுவே "சம உரிமை" என்ற கருத்து. 1909-1914 இல் ஒரு புசல் கோதுமையோ பண்ணைப் பொருள்களோ என்ன விலைக்கு விற்கப்பட்டு மார்க்கட்டில் பண்டமாற்றுக எவ்வளவு பண்டங்களையும் சேவைகளையும் பெறக்கூடியதாயிருந்ததோ அதேவகையில் 1960 இலும் இருக்கவேண்டுமென்பதே இக்கருத்தின் தாற்பரியம்.


எந்தச் சமநிலைத் திட்டமானுலும் செயல்முறையில் நடக்கும்போது அதில் பலவகையான சிக்கல்களுண்டாகும். படம் 2 இலே கண்டபடி, விவசாயி வாங்கும் பண்டங்களின் விலை உயர்ந்துவிட்டது. எனவே சமநிலைக் கணக்கை அடைவதானுல், (1) 1910-1914 இல் இருந்த விலைக்கும் இப்போதுள்ள நிசமான விலைக்குமுள்ள விலையை எடுத்து வந்த விகிதத்தை (2) விவசாயிகள் அந்தக் காலத்தில் வாங்கிய பண்டங்களின் விலையோடு சார்த்தி இன்றுள்ள பண்டங்களின் விலைகளால் பிரிக்கவேண்டும். இதன் பயனுக வரும் விகிதம் 100 க்குக் குறைவானுல் அதன் கருத்தென்ன ? விவசாயிகளின் விலைகள், மற்றவிலைகளைவிடக் கீழே இறங்கிவிட்டன என்பதே.

சமநிலை என்னும்போது இலேசாகத் தொனிக்கலாம். பிரதானமாக நாம் விவசாயிகளையும் அவர்களுடைய வாக்குகளையும் விரும்புகிறேம். அப்போது அரசாங்கம் விலைகளை 100 வீத அல்லது 80 வீதச் சமநிலையிலே வைத்திருப்பதைவிட்டு விட்டு நெகிழ்வான விலை ஆதரவுகளை, குறைவான வீதச் சமநிலையில் ஆதரிக்குமாறு கேட்பது எதற்காக. அரசாங்கம் விலை ஆதரவுகளை முற்றுகக் கைவிடுமாறும் இச்சந்தர்ப்பத்தில் சிலர் கேட்கக் கூடும்.

படிப்பகம்

தேவையும், சப்ளையும் நெடுந்தவணையில் மாறுவதால் விலையைத் தான் தோன்றித்தனமாக உயர்ந்த ஒரு மட்டத்திலே நிலைநாட்டிவிட்டால் பண்ணை விளைபொருள்கள் விற்பனையாகாமற் குவியலாம்.

**விவசாயி கொடுக்கும் விலைக்கும் அவன் வாங்கும் விலைக்கு மிடையேயுள்ள விகிதமே சமநிலையாகும் ;**




**படம் 2.** 1910–1914 துவக்கம் விவசாயிகள் தமது பொருள்களுக்குப் பெறும் விலைகளிலே உள்ள மாற்றம் அவர்கள் தாம் வாங்கும் பொருள்களுக்குக் கொடுக்கும் விலைக்குச் சமமான மாற்றமாயிருந்தால் சமநிலை விலை விகிதவளைகோடு 100 இல் இருக்கும். சமீபகாலத்திலே அது 80 ஐ எடுத்துள்ள தென்பது, விவசாயிகள் பெற்றவிலை, அவர்கள் கொடுக்கவேண்டியிருக்கும் விலையளவுக்கு ஏறவில்லையென்பதைக் காட்டும்.

(படம் 1 இல் $s's'$ க்கும் $d'd'$ க்கும் இடையிலுள்ள வெளி $E'$ என்ற விலைக்கு விலைகளில் எப்படியிருக்குமென்பதையும் அதுகாலப்போக்கிலே எவ்வாறு வளருமென்பதையும் காட்டுக). உதவி செய்வதற்குச் செலவிடப் படும் டொலர் செலவு மிக அதிகம். உற்பத்தி மாற்றம் சேர்க்கையால் அதிகரிக்கிறது. பண்டசாலைகளில் பொருள்களைச் சேமிக்க இடமில்லை. தானியங்களை நிலத்திலேயே சேமிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இதற்கு எப்போது முடிவு வரும்.

www.padippakam.com



இதற்குரிய காரணங்களை படம் 1 இலே பார்த்தோம். பட்டினங்களைவிட கிராமங்களிலே தொழில்நுட்பத்துறையில் விரைவான மாற்றம் உண்டாவதனால் 1 மணி நேரம் கிராமத் தொழிலாளர் செய்யும் முயற்சி 1910–1914 இல் உற்பத்தியாக்கப்பட்ட தொகையிலும் அதிகமான உணவு உற்பத்தியை உண்டாக்குகிறது. பட்டினத்திலேயுள்ள தொழிலாளர் ஒரு மணிநேரத்தில் கிராமத் தொழிலாளர் உற்பத்தி செய்யுமளவு கைத்தொழிற்பொருள்களை உற்பத்தி செய்யாவிட்டால், பண்ணை விளைபொருள்களும், பட்டினத்தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களும், ஒரே "சமநிலை" நிலைமையில் ஏன் பண்டமாற்றுச் செய்யவேண்டும்? சுருக்கமாகக் கூறுவதானால், அன்று தொட்டு இன்றுவரை உற்பத்தியின் உண்மைச் செலவு இறங்கிவிட்டது. எனவே விலைகளைப் பழைய மட்டத்திலே நிலைநிறுத்துவதானால், சமநிலை விலைகளினால் சந்தைக்கு வரக்கூடிய பொருளிலும் பார்க்க மிக அதிகமான சப்ளைவரும். திறமையுள்ள விவசாயிகளுக்கு இதன்பயனாக வருமானம் இலட்சக்கணக்கில் உண்டாகும். அத்துடன் திறமையற்ற விவசாயிகளையும் உயர் உற்பத்தித் தொழில்களிற் சரணடையாமற் பாதுகாக்கும். விவசாயிகள் தமது சுதந்தரத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் அரசாங்கத்திடம் உதவி பெறவரும்போது, தாம் பிச்சையெடுக்க வரவில்லையென்றும், கொடுக்கும் உதவிகளுக்கேற்ற தொழில் செய்யவிரும்புவதாகவும் கூறுவர். ஆனால் யுத்தத்துக்குப் பிந்திய பல வருடங்களில் சில விளைபொருள்களுக்காக விவசாயிகள் சந்தையிலே சேர்த்த பொருளில் அரைவாசிக்குமேலாக அரசாங்க உதவி மூலம் கிடைத்ததே.

**அரசாங்க உதவிவகைகள் :**

விவசாயிகளுக்கு அரசாங்கம் எவ்வாறு உதவிபுரிகிறது. ஐந்துவகை உதவியைக் குறிப்பிடலாம்.

1. உதவி தேவைப்பட்ட விவசாயிகள் தமது நிலைமையை நிரூபித்தால் நேரடி உதவியோ, சகாயமோ கிடைக்கும்.
2. பண்ணைவிளைபொருளுக்குத் தேவையை உண்டாக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் உதவி புரியுந்திட்டம்.
3. சப்ளையைக் குறைத்துவிலையைக் கூட்டும் நோக்கத்துடன் விளைநிலத்தை எல்லைப்படுத்தும் திட்டம்.
4. கொள்வனவு –கடன் அடுக்கிவைத்தல். இது விலைகளை உத்தரவாதம் செய்ய அல்லது ஆதரிக்க உண்டானது.
5. வாங்கிவிற்று வித்தியாசத்தைக் கொடுக்கும் சகாயத்திட்டம். இது ஐசன்ஹோவரின் விவசாயக் காரியதரிசியாக இருந்த பென்சன்,ட்ரூமனின் காரியாதரிசியாயிருந்த பிரென்னன் என்போரின் பெயரோடு சம்பந்தப்பட்டது.

www.padippakam.com



**கொள்கையும் சகாயமும் :** நேரடியான கொடை, மாற்றுக் கொடுப்பனவு என்பவற்றில் சிக்கல் எதுவும் கிடையாது. இவை நமது சமூகப்பாதுகாப் புத்திட்டத்தோடு சேரும் தகுதிவாய்ந்தவை. பண்ணை அமுக்கல் கூட்டத் தினர் இத்தகைய உதவிகளை விரும்பமாட்டார். விவசாயிகளின் பளுவை அரசாங்கம் தீர்த்து எல்லாருக்கும் குறைந்தபட்சப் பிரமாணத்தைக் கொடுப் பதானல், நேரடி உதவி சம்பந்தப்பட்ட செலவினத்தைத் தெளிவுபடுத்தும்; அதன்பயனாக தேர்தல் தொகுதி தனக்குத் தேவையானதை நியாயமாகவே தீர்மானித்துவிடும்.

**தேவை உயர்வும் ஆராய்ச்சியும் :** விவசாய இலாகா பண்ணை விளைபொருள் களுக்குப் புதிய இரசாயன உபயோகத்தைக் கண்டு பிடிப்பதிலும், மக்கள் நல்ல உணவைச் சாப்பிடவேண்டுமென அறிக்கைகள் விடுவதிலும் முயற்சிகள்செய்கிறது. (மலிவான உணவைப் பாடசாலைகளுக்கு வழங்கவும் வேறுவகையில் தேவையை அதிகரிக்கவும், காங்கிரஸ் நிதியை வழங்க வேண்டுமென விவசாய இலாகா கேட்கலாம்). இது நமது சரித்திரத்தில் முன்னிகழ்ந்த சம்பவமே. விவசாயப் பரீட்சைகள் நடத்த அரசாங்கம் கல்லூரிகளுக்கு நிலங்களை ஒதுக்கி வந்துள்ளது. விவசாய இலாகா துண்டுப் பிரசுரங்கள்மூலம் விவசாயிளுக்கும் பிரதேசமுகவர்களுக்கும் பயனுள்ள விடயங்களை அறிவுறுத்தலாம். அரசாங்கத்தின் ஒரு பிரிவு குறைவாக உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்க மற்றொரு பிரிவு உற்பத்தியைப் பெருக்குமாறு உபதேசஞ் செய்வது நூதனமாயி ருக்கலாம்.

**பிரதானமாக மூன்று உதவித் திட்டங்களின் பொருளாதாரம்**

எஞ்சிய மூன்று திட்டங்களை விளங்கிக் கொள்வதற்கு சப்ளை தேவை என்ற பொருளாதார ஆயுதங்களின் உதவி மிக அவசியம். மூன்று வகை களும் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆராய்வாம்.

**1. பயிர் எல்லைப்படுத்தப்படுதல் :** குறித்த ஒரு பயிரைப் பயிரிடும் மொத்த ஏக்கர் நிலத்தை எல்லைப்படுத்தவும், ஒவ்வொரு விவசாயிக்கும் பகிர்ந்து கொடுக்கும் நில அளவைக் கட்டுப்படுத்தவும் விவசாய மந்திரிக்குச் சட்டபூர்வமான அதிகாரமுண்டு. இந்த எல்லைப்பாடுகள் தமக்கு அவசியமா என்பதையிட்டுக் கோதுமை விவசாயிகள் எல்லாரும் வாக்களிப்பார்கள். அவர்கள் எப்பொழுதும் சாதகமாகவே வாக்களிப்பர். ஏன் ? ஏக்கரைக் குறைத்துக் குறைவான நிலத்தைப் பெறுவது அவர்கள் நோக்கமா ? இல்லை. பயிரிடுவதைமட்டுப்படுத்தாவிட்டால் விலைகள் இறங்கிவிடுமென் பதே அவர்களுடைய பயம்.

நூறு ஏக்கர் கோதுமை வயலுள்ள விவசாயி 10 ஏக்கரைச் செய்கை பண்ணுது ஒதுக்குவதானல், குறைந்தவிளைவுள்ள நிலத்தையே ஒதுக் குவான். பின்னர் 90 ஏக்கரில் 100 ஏக்கர் நிலத்தின் விளைவைப் பெறக் கூடியவகையில் சாகுபடியைச் செய்வான். அந்த 10 ஏக்கரில் சோளம்,

www.padippakam.com




புல்லு என்பவற்றைப் பயிரிடுவான். இதனுல் மாட்டுத் தீன் பயிராகிறது. ஆனுல் இம்மாதிரி ஏக்கர் கோட்டா மூலம் சப்ளையை நிரந்தரமாகக் குறைக்கலாமென்று எண்ணிவிடமுடியாது.

படம் 3 இல் பயிரை மட்டுப்படுத்தும் முயற்சி எவ்வாறு செயற்படுகின்றது என்பதைக் காணலாம். அரசாங்கம் தலையிடுமுன் $s's'$, $d'd'$ என்பன சப்ளை தேவை என்பவற்றைக் காட்டுகின்றன. சமநிலை விலை E யில் இருக்கும். விவசாயிகள் இப்போது தமது ஏக்கரைமட்டுப்படுத்துகிருர்கள். பண்ணை விளைவு மட்டுப்படுத்தப்படுவதால் சப்ளை குறைகிறதென்பதை நாம் கருதிக்கொள்வோம். பயன் என்ன ? புதிய சப்ளைக்கோடு SS' ஆகக் காட்டப் படுகிறது. அது E' என்பதில் காட்டப்பட்டுள்ள புதிய உயர் சமநிலை விலையிலே தேவைக்கோட்டை வெட்டுகிறது. நுகர்வோர் உயர்ந்த விலையைக் கொடுத்து, குறைந்த தொகையை நுகர்கிருர்கள். விவசாயி உயர்ந்த விலையைப் பெறுகிருர். ஆனுல் குறைந்த உற்பத்திப் பொருளை விற்பனை செய்கிருர். இதனுல் அவருடைய வருவாய் அதிகரிக்கிறதா குறைகிறதா ? இதற்குவிடை தேவையின் நெகிழ்ச்சி எத்தகையது என்பதிற் தங்கியுள்ளது. விவசாயத்துக்குரிய தேவைக் கோடு நெகிழ்ச்சியற்றதாயிருந்தால், உற்பத்தியைக் குறைக்க விலை உயரும். அவ்வாறு உயரக் கிடைக்கும் வருமானம் உயரும்.

### பண்ணைச் சப்பிளை குறைக்கப்பட்டால் விலையும் மொத்தவருமானமும் அதிகரிக்கும்

பயிரை எல்லைப்படுத்துந் திட்டம்




படம் 3. ஏக்கர் பயிர்ச்செய்கையைக் குறைக்கும் திட்டம் சப்பிளையை ss' இலிருந்து SS' இக்குக் குறைப்பதில் சித்தியடையுமானுல் விலை E' இக்கு உயரும். தேவை நெகிழ்ச்சியற்றதாயிருந்தால் மொத்தப் பண்ணை வருமானம், (இது E, E' என்ற நீள்சதுரப் பிரதேசங்களால் அளக்கப்படுகிறது) அதிகரிக்கப்படுகிறது.

www.padippakam.com



பண்ணைப் பொருள்களுக்குரிய தேவை நெகிழ்ச்சியற்றதாயிருந்தால், பயிரைக் குறைக்கும் திட்டத்தால் விவசாயிக்கு வருமானம் உயரலாம். குறைவாக உற்பத்தி செய்யும்போது அவன் மொத்தச் செலவைக் குறைக்கிறபடியால் அது அவனுக்குச் சேமிப்பாகிறது. எனவே அவனுடைய நிகர வருமானம் மொத்த வரவிலும்பார்க்க அதிகரிக்கிறது.

முதலாவதாகவுள்ள இந்த இலேசான உதாரணத்தைக் கைவிடுவதற்கு முன்னர் மொத்த வருமானத்தை தேவைக்கோட்டுப் படத்திலிருந்து வாசித்து அறியலாமென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். E என்ற தானத்திலுள்ள மொத்த வருமானத்தை, E ஆனது இரண்டு அச்சுக்களோடும் உண்டாக்கும் நீள்சதுரத்தின் பரப்பளவைக் கொண்டு அறியலாம். நீள்சதுரத்தின் பரப்பளவு, அதன் உயரத்தை அடியினால் பெருக்கிய தொகைக்குச் சமனாகும் என்ற உண்மையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு OAEs என்ற நீள்சதுரத்தைப் பார்க்க. அதனுடைய உயரமான OA விலை, அதனுடைய அடித்தளமான OS தொகையாக அதனுடைய பரப்பளவு விலை × தொகையாகும். இதுவே மொத்த டொலர் வருமானம்.

இப்பொழுது மேலே கூறிய விளைவைக் கற்பனை செய்வோம். தேவைக்கோடு நெகிழ்ச்சியற்றிருப்பதால் புதிய சமநிலைத் தானமான E′ யினால் அமைக்கப்பட்ட நீள்சதுரத்தின் பரப்பளவு பழைய சமநிலைத் தானமான E யினால் உண்டானநீள்சதுரத்தின் பரப்பளவிலும் அதிகமாகும். புதிய நீள்சதுரம், அகலத்தால் இழப்பதை உயரத்தால் மேலதிகமாகவே பெறுகிறது. (தேவைக்கோடு நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் இந்த வாதம் எவ்வாறு மறுபுறமாகத் திரும்புமென்பதை வாசகர் அறிவர்.)

**2. அரசாங்கம் வாங்குவதால் அல்லது கடன் உதவியால் உண்டாகும் சம விலை.**

இவ்விடயம் சற்றே கடினமானது. சந்தையில் நிலவும் விலையிலும் பார்க்க உயர்வானதொரு விலையையே அரசாங்கம் விவசாயிக்குக் கொடுப்பதாக உத்தரவாதமளிக்கிறது. படம் 4 இலே இந்தவிலை மட்டம் BB′ எனக் காட்டப்பட்டுள்ளது. அவ்வளவு உயர்வான விலையிலே நுகர்வோர் விளைவு முழுவதையும் வாங்கமாட்டார்கள். நுகர்வோர் தேவைக்கோட்டிலே C என்ற தானத்திலே இருப்பர். ஆனால் விவசாயிகள் F என்ற புள்ளி காட்டும் முழுத் தொகையையும் வழங்குகிறார்கள். அரசாங்கம் ஒன்றும் செய்யாவிட்டால் விலை E இக்கு விழும். இது சமவிலைக்குக் கீழேயுண்டு.

இதில் அரசாங்கம் என்ன செய்யவேண்டும். முற்றாக வாங்குவதன் மூலம் அல்லது கடன்மூலம் C இக்கும் F இக்குமிடையேயுள்ளதும் அம்பு அடையாளமிடப்பட்டதுமான விலைப்படாத பகுதியை வாங்கவேண்டும். இந்தத் தொகை ஒன்றில்வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும்; அல்லது பண்டசாலையிற் சேமித்து வைக்கப்படும்: அல்லது வீணாகக் கெட்டுப் போகவிடப்

www.padippakam.com



படும். அப்போது முடிவான பயன் என்னவாகும் ? விவசாயிபெறும் விலேயை E இலிருந்து F இக்கு அரசாங்கம் உயர்த்தியுள்ளது. ஆனால் முன்னேயைப் போலன்றி இப்போது விவசாயிகள் தாங்கள் விரும்பிய அளவை விற்றுவிடலாம். விலேயுயர்வு அவர்களுக்கு உயர்வருமானத்தைக் கொண்டுவரும். நுகர்வோர் அதிகவிலே கொடுத்துக் குறைவாகவே பொருள் களே வாங்குகின்றனர். அவர்களுக்கு முதற் சந்தர்ப்பம் 2 ஆம் சந்தர்ப்பம் 1 ஐப் போலவே நயமற்றதாயிருக்கும். விவசாயிகள் பெறும் மேலதிக வருமானத்தை யார் கொடுக்கிறுர்கள் ? அரசாங்கமே. திறைசேரி தான் வாங்கும் விளைவுப் பொருட் பகுதியைப் பூரணச் சந்தை விலேயால் பெருக் கும் அளவுக்குள்ள தொகையை அது கொடுக்கவேண்டிவரும். (பரப்பு அளவிற் கூறுவதானல் திறைசேறியின் செலவு வண்ணந்தீட்டிய CFsS பரப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இஃது ஏன் என்பதை விளக்கமுடியுமா ?)

பிந்திய ஆண்டுகளிலே தேவைக்கோடான dd' மேனேக்கி நகர்ந்து சப்ளேக் கோட்டை F என்ற இடத்திலே வெட்டுமானல், சமநிலேயை உறுதிப்படுத் தத் திறைசேரி எதையுஞ் செய்யவேண்டியதில்லே. அத்தகைய செந்தளிப் பான வருடத்திலே முன்கூறிய நடைமுறையைச் சரியாக மாற்றி விடமுடியும். விளேவின் ஒரு பகுதியை வாங்கிச் சேமிப்பதிலும் பார்க்க, சேமிப்பிலுள்ள உணவுப்பொருளே எடுத்து விற்கலாம். அக்கறையுள்ள வாசகர் DD என ஒரு புதிய கோட்டைக் கீறி மறுதலேயான இந்தமுறை எப்படி உண்டாகிறதென் பதை ஆராயலாம்.

3. உற்பத்தியாளர்—நுகர்வோர் சகாய விலே வித்தியாசம்.

இது மற்றெல்லா உதாரணங்களிலும் பார்க்க மிகக் கடுமையானது. இது அழிந்துபோகக்கூடிய பொருள்கள் விடயத்தில் ட்ரூமன் சனதிபதியின் விவசாய மந்திரியான பிரன்னன் என்பவரால் ஆதியில் கொண்டுவரப் பட்டபோதிலும், மறுபடி விற்கும் இந்தத்திட்டம் ஐசன்ஹோவர் ஜனதி பதியின் மந்திரியான பென்சன் என்பவரால் வெண்ணெய் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டது. பின்னர் கம்பனி விடயத்திலும் இது அனுசரிக்கப்பட வேண்டுமென்று ரிப்பப்ளிக்கன் காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முன்போல இங்கேயும் விவசாயிகளுக்கு BB' சமவிலே உத்தரவாதஞ் செய்யப்பட்டது.

ஆனல் புதியதோர் உண்மைவெளியாகிறது. உணவானது பண்டசாலே களிலே கிடந்து வீணுவதிலும் பார்க்க, நுகர்வோருக்கு, என்ன சந்தைவிலே யுண்டோ அதேவிலேக்கு விற்கப்படுகிறது.

சந்தைவிலேயானது குறித்ததொகைக்குக் கீழேயிருக்கிறதானல் விவ சாயி சமவிலேயை எவ்வாறு பெறுவான். விவசாய இலாகா மீதிப் பணத்தை விவசாயிக்குக் காசோலேமூலம் கொடுத்து விடுகிறது. இதன் அர்த்தமென்ன ? சமவிலேயில் அரசாங்கம் விளேவை வாங்கினதாகவேயிருக் கும். ஆனல் அது உடனே பகிரங்கச் சந்தையில் அதனேக்

படிப்பகம்

www.padippakam.com




கிடைக்கும் எந்த விலைக்கும் விற்றுவிட்டதாகவும் கொள்ள வேண்டும். படம் 5 இல் இதன் சாரத்தைக் காணலாம்.

உற்பத்தியான ஒவ்வொரு பொருளும் SS' என்ற சப்ளைக்கோட்டிலே காட்டியபடி நுகர்வோனுக்கே செல்லும். நுகர்வு ஆதித் தானமான E யில் முடியும். என் ? " சப்ளைதேவை விதியானது ", நுகர்வோர் விளைவு முழுவதையும் வாங்குவதானுல், விலை சந்தைச் சப்ளையை தேவைக்கோடுவெட்டும் தானத்துக்கு விழவேண்டும். ஆனுல் சமவிலை முழுவிளைவுக்கும் கொடுக்

**விலைப்படாத மேல் மிச்சப் பொருள்களை அரசாங்கம் வாங்குவதன்மூலம், அதன் கொடு கடன்களாலும் கொள்வனவுகளாலும் விலைக்கு ஆதாரமுண்டாகிறது.**

**விலை ஆதாரத் திட்டம்**




**படம் 4.** அரசாங்கம் விலையைக் குறிப்பிட்ட ஒரு மட்டத்திலே அல்லது ஆதாரவிலையிலே அதாவது $BB^1$ யில் (சமவிலைக்கோ அதற்கு அருகாமையிலோ) வைத்திருக்கிறது. விற்க முடியாத மேலதிகப் பொருளை (CF) வாங்கிச் சேமிப்பதால் இதுஉண்டாகிறது. சந்தை விலையை E இலிருந்து F இக்கு உயர்த்துவதால் அரசாங்கத்துக்குண்டாகும் மொத்த விலையை வருணநீதீட்டிய பகுதி காட்டுகிறது. நுகர்வோர் அதிகவிலை கொடுக்கிருர்கள் ; அதனுல் CF என்ற பகுதியிலிருந்து நிகழ் காலத்தில் எவ்வித பயனும்பெறுவதில்லை.

கப்படுமென உற்பத்தியாளர் உத்தரவாதமளிக்கப்படுகின்றனர். எனவே அவர்கள் வாங்கும் விலை F எனக் காட்டப்பட்டுள்ளது. (இது 2 ஆம் உதாரணத்திலுள்ளபடி), வித்தியாசம் யாரால் கொடுக்கப்படும் ? அரசாங்கத்தால், எப்படி ? முதல், உற்பத்தியாளனுக்கு ஒரு காசோலையை அனுப்பும். அதிலே ஒரு புசலின் விலை குத்துநிலையான அம்புக்குறி EF இனுல் படம் 5 ல் காட்டப்பட்டுள்ளது.

இதனுல் அரசாங்கத்துக்கு எவ்வளவு செலவாகிறது? உற்பத்திசெய்யப்பட்ட ஒவ்வோர் அலகு சம்பந்தமாகவும் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமுள்ள வித்தியாசத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்பதை நாம்

24—CP 680 (5/67)

படிப்பகம்


www.padippakam.com



உணர்ந்தால் இதற்கான விடை தெரிந்துவிடும். (பரப்பளவில் சொல்வ தானால் படத்திலே வருணந்தீட்டப்பட்ட ABFE என்ற நீள்சதுரமாகும். இங்கே வருணந்தீட்டப்பட்ட நீள்சதுரம் இடப்பக்கமாக விலை அச்சுவரை செல்கிறது. 2 ஆம் உதாரணத்திலோ அரசாங்கச் செலவைக் குறிக்கும் வருணந்தீட்டிய நீள்சதுரம் கீழ்நோக்கித் தொகை அச்சுவரை செல்கிறது.)

**பென்சன்—பிரான்னன் திட்டம், நுகர்வொர் விலைக்கும், உற்பத்தியாளர் ஆதாரவிலைக்கு மிடையில் விவசாயிகளுக்குரிய விலை இடைவெளியை நிரப்பும் நோக்கமாகச் சகாயம் புரிகிறது.**

சுருக்கிய மறுவிற்பனைத் திட்டம்




**படம் 5.**—நுகர்வோனுக்கான விலை E வரை விழ அரசாங்கம் அனுமதிக்கிறது. பின்னர் அது EF ஐ விவசாயிகளுக்குப் புசல்ஒன்றுக்கு நேரடியாகக் கொடுப்ப தன்மூலம் குறைந்த சந்தைவிலைக்கும், விரும்பிய ஆதார விலைக்குமிடையி லுள்ள வித்தியாசத்தைச் சரிக்கட்டிக் கொள்ளுகிறது. இத்தகைய இரண்டு விலைத்திட்டத்திலே சம்பந்தப்பட்ட நேர டிக்கொடுப்பனவினால் அரசாங்கத்துக் குண்டான செலவை வருணந்தீட்டிய பரப்புக் காட்டுகிறது.

முக்கியமானதும், தந்திரமானதுமொரு பிரச்சினை பின்வருமாறு :—அரசாங் கம் நுகர்வோரிடமிருந்து இரண்டாம் உதாரணத்திலே காட்டப்பட்ட விளைவுப் பொருளில் ஒரு பகுதியை நுகர்வோரிடமிருந்து எடுத்துவிடும் திட்டம் திறைசேரிக்கு அதிக செலவைக் கொடுக்குமா அல்லது மூன்றும் உதாரணத் திலுள்ள பென்சன்—பிரான்னன் திட்டம் அதிக செலவைக் கொடுக்குமா? இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு விடை தேவை நெகிழ்ச்சியிலேயே தங்கி யிருக்கிறது. இந்தப் பிரச்சினையைப் பின்வருமாறு ஆராயலாம். இரண்டு திட்டங்களிலும் உற்பத்தியாளர் நன்மையடைகிறார்கள். அவர்கள் இரண்டு சந்தர்ப்பங்களிலும் F இலேயேயிருக்கிறார்கள். ஒரே மொத்த வருமானத் தையே பெறுகிறார்கள். இரண்டு திட்டத்திலும் உற்பத்தியாளரின் வரு மானம் இரண்டு வழிகள் மூலமாகவே வரும். அதாவது நுகர்வோர் கொடுக்

படிப்பகம்

www.padippakam.com



கும் மொத்த வருமானம் + அரசாங்கம் கொடுக்கும் கட்டணம். "எந்தத் திட்டம் அரசாங்கத்துக்கு அதிக செலவைக் கொடுக்கும்?" என்ற கேள்விக்கு விடை காண்பதானல், மிக இலேசான மற்றக் கேள்விக்கு விடை காண வேண்டும். அந்தக் கேள்வியென்ன? நுகர்வோரிடமிருந்து அதிகமான மொத்த வருமானத்தை எந்தத்திட்டம் பெறும்? நுகர்வோர் அதிக விலையைக் கொடுத்துக் குறைவான பொருளை வாங்கும் திட்டமா? அல்லது அவர்கள் குறைவான விலையைக் கொடுத்து அதிக பொருள்களை வாங்குந் திட்டமா?

ஆனால் இது நெகிழ்ச்சியின் வரைவிலக்கணம் சம்பந்தமாக அடிக்கடி நாம் சந்தித்த கேள்விதான். தேவைக்கோட்டிலே உயரமாயுள்ள C என்ற தானம் கீழே E இல் உள்ள தானத்திலும் பார்க்க அதிகமான மொத்த வருமானத்தைப் பெறும். ஆனால் இதற்கு இந்த இடைவெளியிலே, தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கவேண்டும். தேவை நெகிழ்ச்சியுடையதா யிருந்தால் எதிர்மாறான் உண்மையே சரியாகும். எனவே இப்போது சார்பு விலை சம்பந்தமாக எழுந்த வினவுக்கு நாம் பின்வருமாறு விடை கூறலாம் :—தேவைக்கோடு நெகிழ்ச்சியற்றதாயிருந்தால் பொருளை வாங்கிச் சேமித்தல் அல்லது அழித்தல் திட்டத்திலும் பார்க்க நுகர்வோருக்கு அதிக பொருளைக் கிடைக்கச் செய்யும் பென்சன் பிரான்னன் திட்டத்தினல் திறைசேரிக்கு அதிக செலவு உண்டாகும். ஆனல் தேவைக்கோடு நெகிழ்ச்சியுள்ளதானல் எதிரான உண்மையே பொருத்தமுடையதாகும்.

அரசியற் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் நுகர்வோன் கொடுக்கும் விலையைக் குறைக்கும் திட்டம், திறைசேரிக்குச் செலவையுண்டாக்கக் கூடியதாயிருந்தாலும் நன்மைதரக்கூடியதே. விவசாயிகளுக்கு ஒரு வருமானம் எந்தவழியாலும் கிடைக்கக்கூடியதாயிருந்தபோதிலும், நுகர்வோருக்கு முக்கியம் எதுவானல், இறுதிநிலைப்பயன்களும், விலைகளும் சமமாயிருக்கும் வகையில் உணவை உற்பத்திசெய்து அனுபவிப்பதேயாகும். நமது கொடுப்பனவுகளைச் சந்தைக் கொள்வனவுகளுக்கும் வரிகளுக்குமிடையே பிரித்துக் கொள்வது முக்கியமன்று.[1]

**விவசாயத்துக்கு உதவி :** நியூ டீல் துவங்கிய காலத்திலே பயிரைக் குறைக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அதன்பயனகப் பன்றிப்

1. சேமிப்பில் செல்லும் மேலதிகப் பொருள் வருங்கால யுத்தத்துக்குப் பயனுள்ளதாகவோ வேறு சேமிப்புக்காலங்களுக்குப் பயனுள்ளதாகவோ, வறுமைப்பட்ட நாடுகளின் பசியைத் தீர்ப்பதற்குப் பயனுள்ளதாகவோ இருக்கிறதா என்பதை ஆராயவேண்டும். அப்பொழுதுதான் இருதிட்டங்களையும் ஒப்பு நோக்குமிடத்து நியாயமுள்ளதாயிருக்கும்.

இது நெடுங்காலத்துக்கு அரசியல் பிரச்சினையாகவேயிருந்துவரும். விலைகள் கண்டபடி ஏறியுமிறங்ியும் கொண்டிருப்பதை எந்த விவசாயியும் விரும்பமாட்டான். கொடைகள் ஒருபுறமாக, நிச்சயமில்லாத எதிர் காலத்தைப்பற்றி அரசாங்கம் நல்லமுறையிலே ஹேஷ்யம் கூறமுடியுமா ? தனியார் ஊகசந்தையிலும் பார்க்கமேலான ஹேஷ்யமாயிருக்குமா ? அரசாங்கம் சேமிப்புத் திட்டப்பிரகாரம் விலைகளை நிலையாக வைத்திருக்க முடியுமா என்றகேள்வியை ஆராய வேண்டும்.

www.padippakam.com



பண்ணைகள் வீணுக அழிக்கப்பட்டன. பயிர்கள் வீணே அழிக்கப்பட்டன. விவசாயச் சரிக்கட்டல் சட்டத்தை உயர்நீதிமன்றம், சட்ட ஒழுங்குக்கு மாருன தென விதித்த பின்னர், அரசாங்கம் பொருள்களை வாங்குவதாலும் விவசாயிகட்குக் கடன் கொடுப்பதாலும் விலைக்கு ஆதாரமளிக்கவேண்டுமென்ற கொள்கை எழுந்தது. அரசாங்கம் ஏராளமாகப் பொருள்களை வாங்கிச் சேமித்தது. நல்லகாலம் சண்டையுண்டானபடியால், அந்தப் பொருள் களுக்குப் பயன் உண்டானது. ஆனல் யுத்தம் முடிந்ததும் பழையபடி உற்பத்திப் பெருக்கப் பிரச்சினையுண்டானது.

விவசாய உற்பத்தி விடயத்திலே புதிய அபிவிருத்திகளுண்டானபடியால் சம நிலையில் அல்லது 90சத வீதச் சமநிலையில் விலையாதாரத்தைத் தொடர்ந்து நடத்துவது அரசாங்கத்துக்குப் பெரிய பொருட் செலவையுண்டாக்கும். அவ்வாறு ஓர் ஆதாரத்தில் பொருள்களைச் சேமிப்பதற்குப் பண்டசாலைகள் இல்லாமற்போகும். 1945–47 ஆம் ஆண்டுகளிலே விவசாயத்துக்கு ஏற்பட்ட நல்லகாலம் மெதுவாக நீங்கிற்று. அப்போது காங்கிரஸ் 90 சத வீதச் சமநிலையைக் கைவிட்டது.

70 வீதச் சமநிலையில் நெகிழ்ச்சியுடைய விலை ஆதாரங்கூட உற்பத்தியை நன்கு பெருக்கியதால் பயிர்க்கட்டுப்பாட்டுப் பேச்சு மறுபடியும் எழுந்தது. நில ஒதுக்கல்கூடச் சிறிது ஒருப்பணவாகவே நடைபெற்றது. ஏக்கர்கள் குறைக்கப்பட்டபோதெல்லாம், விவசாயிகள் ஒவ்வொரு ஏக்கரிலும் கூடிய அளவு விளைவைப் பெறமுயன்றனர். இதுகூடத் தற்காலிகமானதொரு பரிகாரமே. உற்பத்தியைக் குறைக்கவேண்டுமென்று வாதாடுவோர் கூட இருக்கின்றனர்.

நமது விளைவுகளில் மேலதிகமாயுள்ளவற்றை வெளிநாடுகளுக்குஅனுப்பி விடும் முறையும் தற்காலிகமானதே. இதன் அர்த்தமென்ன? பருத்தி கோதுமை என்பவற்றை வெளிநாடுகளில் மலிவான விலைக்கு விற்கிருே மென்பதே. நமது மேலதிக பொருள்களிற் சிலவற்றை நட்புமுறையிலுள்ள வெளிநாடுகளுக்கு வெளிநாட்டு உதவி என்ற முறையில் கொடுக்கிருேம். நாம் எமது கோதுமையை வெளிநாடுகளிலே குவித்துவிடுவதைக் கனேடியர் விரும்பமாட்டார். ஏனெனில் அவர்களுடைய ஏற்றுமதி வியாபாரத்துக்குத் தீங்குண்டாகும். நமது உள்ளூர் ஜவுளி உற்பத்தியாளர் ஆத்திரமடைவர் ; உள்ளூர் விலையிலும் பார்க்க, மலிவான விலைக்கு பிறதேசங்களுக்கு விற்கப்பட்ட பருத்தியைக் கொண்டு அந்நாட்டினர் ஜவுளி உற்பத்திசெய்து போட்டி போடுகிருர்களென்பதே இதற்குக் காரணம். ஆனல் அமெரிக்கப் பருத்தி விற்பனை இந்தியாபோன்ற வறியநாடுகளுக்கு வரப்பிரசாதம் போன்றதாகும்.

## பொருளாதார ஆராய்ச்சியால் வெளியாகும் உண்மைகள்

போட்டிச் சந்தைப்பயனைக் கைவிடாது போற்றுதல் நல்லதென 20 ஆம் அத்தியாயத்தின் முடிவிலே கண்டோம். ஆனல் அதற்கு ஒரு புறநடையுமிருந்தது. (1) அரசாங்கத் தலையீட்டினுல் உதவி பெறும் மக்கள்,

www.padippakam.com



நொந்துபோனவர்களைவிட விரும்பத்தக்கவர்கள் என்ற நிலை (2) பொது வரிகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றமுடியாதெனக் காட்டப்படும் நிலை. இது விவசாயப் பிரச்சினைக்கு எவ்வாறு பொருந்தும்?

இப்போது அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுக்கும் உதவிகள் பெரும் பாலும் செல்வம் மிக்க பெரிய விவசாயக் கம்பெனிகளுக்கே போய்ச் சேருகின்றனவென்று பழுத்த பொருளாதார அறிஞர் கூறுவர். வருடத் தில் 20,000 டொலர் உழைக்கும் விவசாயிகளுக்கு எவ்வளவு அரசாங்க உதவி கிடைக்கிறதென்பதைப் பொதுமக்கள் அறிந்திருந்தால் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவிசெய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள். வறிய விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கவில்லையென்பதை அறிந்தாலும் பொதுமக்கள் அரசியலிலே மாற்றத்தை உண்டாக்க விரும்புவர்.

எத்தகைய அரசியல் மாற்றம்? நல்லமுறையில் கொடுக்கும் உதவியைக் கொடுக்குமாறு அரசியலாரைக் கேட்பர். உதவி அவசியந் தேவைப்படு வோர்க்கே உதவியளிக்கவேண்டுமென்று வாதாடுவர்.

உணவு பஞ்சு என்பவற்றின் விலையை நிச்சயிப்பதற்குச் சந்தைச் சக்திகளிலே தங்கியிருக்கவேண்டுமென்ற கொள்கை இந்த மாற்றத்தினுல் ஊர்ச்சிதமடையும். விலைகளிறங்கினுல் நுகர்வோருக்கு அதிக உணவைப் பிரதானமாகப் புரோட் டீன் சேர்ந்த பால், இறைச்சிபோன்ற பொருள்களைப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டாகும். கம்பெனி விவசாயிகள் மேலும் திறமைகாட்ட உந்தப்படுவர். எஞ்சிய குடும்ப விவசாயிகள் தமது வருமானங் குறைவதைக்கண்டு விவசாயத்தைக் கைவிட்டுவிட்டுக் கைத்தொழிலில் ஈடுபடுவர். உண்மையில் வறுமைபட்ட விவசாயிகள் திட்டப்படி சகாயம் பெறுவர். அவர்கள் விவசாயிகள் என்ற காரணத்தால் இந்த உதவி கிடைப்பதில்லை. வறுமை யுற்றவர்களும் தம் நிலையைச் சீர்ப்படுத்த விரும்புபவருமான விவசாயிகள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். இவ்வாறு விவாதிக்கும் பொருளாதார அறிஞர் பின்வருமாறு கூறுவர் :—

வளங்களைப பங்கிட்டு ஒதுக்கும் விடயத்திலே, அமெரிக்கர் மற்றப் பொருள் களின் உற்பத்தியோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மேலதிக உணவு அலகு உற்பத்தியைப் பெரிதும் பொருட்படுத்தமாட்டார். ஆனுல் நமது தொழில் நுட்பமுன்னேற்றம் மேலதிக உணவு அலகை உற்பத்திசெய்ய இலேசாக உதவுகிறது. இதன்பயனுகக் குறைந்தவிலைகளில் உணவுச் சப்பிளை தேவை என்பவற்றைச் சமநிலைப்படுத்த முடிகிறது. இந்த விலை மிக இறங்கிவிட்ட படியால் விவசாயத்திலீடுபட்டவர்களைக் கைத்தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய சக்தி அதற்கிருக்கும். கைத்தொழில் துறையிலே அவர்கள் தேவையுள்ள பொருள்களை உற்பத்தி செய்வர். செயற்கைமுறையில் அரசாங்கம் அந்த உற்பத்திகளுக்குச் சகாயஞ்செய்யவேண்டியதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



**நெடுந்தவணைப் பரிகாரம் :**

இலட்சியபூர்வமானதொரு சகாயத்திட்டம் பின்வரும் அமிசங்களை உடையதாயிருக்கும். (1) வருமானத்தை இழப்போருக்கு, விடயங்களைச் சரிக்கட்டல் விடயத்தில் கருமங்களைச் சுலபமாக்க இடைக்கால உதவி (2) கிராமங்களில் இடம்பெயர்வோர் வேலைதேடவும், அதற்கு ஆயத்தஞ் செய்யவும் உதவிகளைத் தொடர்ந்து செய்தல் (3) தகுதிவாய்ந்தவர்களுக்கு விவசாயப் பண்ணைகளிலே புதிய வேலைகள் கிடைக்கக்கூடியதை உத்தரவாதஞ் செய்யப் பயனுள்ள பூரணவேலை வாய்ப்புத்திட்டங்கள். (4) தேவைப்பட்டவர்களுக்கு நிரந்தரமான நன்மைக்கான செலவுகள். இவர்கள் பட்டினவாசிகளாகவோ, கிராமவாசிகளாகவோ இருக்கலாம். ஆனால் தாட்சணியமில்லாத திட்டமொன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்படு மென்பதைப் பற்றிய ஆபத்துக்கிடையாது. விவசாய உதவி சம்பந்தமான அரசியல், மிகத் தீவிரமானதாயிருப்பதால் தற்காலத்திட்டங்களிலே பெரிய மாற்றங்களையுண்டாக்குவது சுலபமன்று.

இந்த ஆராய்ச்சி இப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய ஒரேயொரு வழியை எடுத்துக்காட்டுகிறது. இந்த வழியென்ன ? நமது மேலதிக விவசாயிகளைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்ளுதலே. இது பிரதிவருடமும் நடைபெற்றுக்கொண்டே வருகிறது. பிரதிவருடமும் விவசாயத்திலீடுபட்டுள்ளோர் தொகை குறைந்துகொண்டே வருகிறது.

**சுருக்கம் :**

1. கிராமத்துச் சனனவிகிதம் நகரத்துச் சனனவிதத்திலும் அதிகமாயிருந்தபோதிலும், மக்கள் நிரந்தரமாக நகரை நோக்கியே செல்வதைப் பார்க்கும்போது, விவசாயத்திலீடுபட்டோர் விகிதம் குறைந்துகொண்டு வருகிறதென்பது தெரியவருகிறது. விவசாயத் தொழில் துறையில் தொழில் நுட்ப முன்னேற்றமேற்பட்டுள்ளது. அதனால் சப்ளை பெரிதும் அதிகரிக்கிறது. உணவுப் பொருள்களின் அதே தொகையை முன்னரிலும் குறைவான தொழிலாளரைக் கொண்டு உற்பத்திசெய்துவிடலாம். அத்துடன் வருமானம் அதிகரிப்பதனால், உணவுக்குரிய தேவை விகிதாசாரத்துக்குக் குறைவாகவேயிருக்கிறது. அதனால் அரசாங்கம் விவசாயப் பொருள்களின விலையை ஆதரிக்கப் பல வகையான திட்டங்களைக் கைக்கொண்டது. அதன்மூலம் விவசாய வருமானங்களை நிலைநிறுத்தப்பார்த்தது.

2. பழைய சமநிலை வாய்பாட்டிலே விலைகளை நிலைநாட்டப்பார்ப்பது, தேவை, நிச உற்பத்திச் செலவு என்பவற்றிலுள்ள அடிப்படை மாற்றங்களைமுற்றாக அசட்டைசெய்வது போலாகும். காலஞ் செல்லச் செல்ல அத்தகைய சமநிலையானது இயற்கையான போட்டி விலைமட்டத்துக்கு (இங்கும் வெளிநாடுகளிலும்) மாறான விலைகளை உண்டாக்கும். இதன்பயன் : அபரிமிதமான மேலதிகப் பொருள்கள் ; மிகக்குறைவான கோட்டாக்கள் ; திறமையிலே பங்கம்.

படிப்பகம்

www.padippakam.com



3. சகாயத்திட்டங்கள் ; இவை நேரடிக் கொடை வழங்கல் தேவையை அதிகரித்தல், விலை ஆராய்ச்சி செய்தல் என்பவற்றை உள்ளடக்கியவை. இவற்றுக்கு ஆழ்ந்த பொருளாதார ஆராய்ச்சி தேவையில்லை. மூன்று வகைச் சகாயத் திட்டத்தை விளங்கிக்கொள்வதற்குச் சப்பிளை, தேவை என்ற ஆயுதங்கள் தேவை. (1) பயிர்க்கட்டுப்பாடு. இஃது எக்கர் முறையிலும் ஒதுக்கல்முறையிலும் நடைபெறும். (2) அரசாங்க விலை ஆதாரம். இது கொள்வனவு கடன் சேமித்து வைத்தல் திட்டப்படி (3) கருர்விலைக்கு வாங்கிய உணவுப் பொருளைப் போட்டிச் சந்தைவிலையில் நுகர்வோருக்குத் திருப்பிவிற்றல். விலைவித்தியாசத்தை அரசாங்கம் பொறுக்கும்.

4. உயர்வானதும், நெகிழ்ச்சியற்றதுமான சமநிலை ஆதாரம் சேமித்து வைத்தலைப் பெரிதும் அதிகரிப்பதால் அரசாங்கத்தின் சகாயத்தொகை மிகவும் அதிகரிக்கும். அதனால் 2 ஆம் சந்தர்ப்பம் நடைமுறையில் 1 ஆம் சந்தர்ப்பத்துக்கேயிட்டுச் செல்லும். (விவசாயிகள் 2 ஐயே விரும்புவர். நுகர்வோர் 1 ஐ யும் 2 ஐயும் விரும்பாமல் 3ஐயே விரும்புவர்.)

5. நெடுந்தவணைத் தீர்வு விவசாயத்துக்கு வெளியே சுபீட்சத்தை நிலைநாட்டவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் உயர் உற்பத்தி வழியில் நகர்வர். அப்போது விவசாயத்துகான தேவை உயரும். கைத்தொழிலிலே சுபீட்சமிருந்தால்மாத்திரம் போதாது. 1920 ஐயு ம் 1950 ஐயும் அடுத்த ஆண்டுகள் ஒருண்மையைக் காட்டியுள்ளன. அதாவது கிராமத்துப் பொருளாதார நிலை வீழ்ச்சியடைய நகரத்திலும் பட்டினத்திலும் சுபீட்சம் தாண்டவமாடலாம் என்பதே. நெடுந்தவணையிலே, மூலப்பொருள்களைக் குறைந்த தகைமையுள்ள கிராமத்துச் சேவையிலிருந்து மிக்க பயனுள்ள சேவைக்குப் பயன்படுத்தவேண்டும். இதனால் விவசாயிகள் தொகை குறையும் ; இவ்வாறுண்டாகும் மாற்றத்தை ஆதரிக்கக் குறுந்தவணைச் சகாயத்தை அரசாங்கம் செய்யவேண்டிவரும்.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்**

1. கிராமத்திலிருந்து மக்கள் நகரத்துக்குச் செல்வதற்கு இறந்தகாலத்தையொட்டியும் வருங்காலத்தையொட்டியும் உள்ள காரணங்களைத் தருக. பொருளாதாரத் தொடர்பற்ற காரணங்கள், விவசாயத்தில் குறைந்த வருமானம் என்ற அடிப்படைப் பொருளாதார உண்மைக்குச் சாதகமாயிருக்கின்றனவா ? பாதகமாயிருக்கின்றனவா ?

2. நெடுந்தவணையும் சுழற்சியும் விவசாயத்திட்டம் சார்ந்த, கைத்தொழிற் திட்டம் என்பவற்றை ஒப்பிட்டு ஆராய்க. கோடுகளைப் பயன்படுத்துக.

3. அரசாங்கத்தின் நேர்முக விவசாய உதவி, மறைமுக விவசாய உதவி என்பவற்றை விவரிக்க ; சமநிலையென்றாலென்ன ?

4. ஒருபண்ணையில் ஒரு பயிரின் செய்கையைக் குறைப்பதனால் மொத்தப் பயிர் என் அதிகம் குறைவதில்லை? அதுகட்டுப்பாடற்ற சாகு படியை எவ்வாறு பாதிக்கும் ? உரத்தின் தேவையை எவ்வாறு பாதிக்கும் ?

www.padippakam.com



5. படம் 3இலே AE, SE′ என்பவை சந்திக்கும் தானத்தை R என்ற எழுத்தால் குறிக்க. தேவை நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் REsS, RABE′ இலும் அதிக பரப்பளவுடைய தென்பதைக் காட்டுக. உமது விடை சரியென்பதைக் காட்டுவதற்கு மொத்த வருமானக் கணக்கில் விரிவான விளக்கந்தருக. E′, E, என்பவற்றுக்கிடையில் தேவை நெகிழ்ச் யற்றதானால் என்னாகும்?

6. 13 வெளிவிவசாயத்தில் 12 இலிருந்து ஒவ்வொரு டொலரை எடுத்து விவசாயத்திலுள்ள ஒன்றுக்குக் கொடுப்பதாலுள்ள நன்மையை ஆராய்க. அந்த டொலரைக் கொடுக்கும் வழிவகைகளை ஆராய்க.

7. பின்வருமாறு பேராசிரியர் டீ்லி ஜோன்சன் (வாஷிங்டன் சர்வகலா சாலை) கூறுகிறார்.

"சாத்திய எடுகூற்று: சமூகம் வறியவர்க்கு உதவிசெய்யவேண்டும். பக்க எடுகூற்று: (இதன் உண்மை சந்தேகத்துக்குரியது) விவசாயிகள் வறியவர். முடிவு: (சந்தேகத்துக்குரியது) ஆனபடியால் சமூகம் விவசாயி களுக்கு உதவி செய்வதானால், தொழில்வாரியாக அது செய்யப்படக் கூடாது. அவர்கள் வறியவர்கள் என்றகாரணத்தினாலேயே செய்யப்பட வேண்டும். அதாவது வருமான அடிப்படையில் உதவி செய்யவேண்டும்."

பேராசிரியரின் கருத்தென்ன?

8. பின்வரும் கருத்துக்களைப் புனராலோசனை செய்க. விவசாயத்தில் நெகிழ்ச்சியற்ற தேவையும் சப்ளையும்; சமநிலை; விவசாய நுண்தொழில் அபிவிருத்தியும் உணவிலே செலவு செய்யப்பட்ட வருமானத்தின் குறை யும் வீதமும்.

புதிய டீலுக்கு முன்னிருந்த விவசாய உதவிகள்.

சுதந்திரமான விவசாய விலைப் போக்கு.

மட்டுப்படுத்தல், ஆதாரம், நுகர்வோர் உற்பத்தியாளர் வித்தியாசமா யிருக்கும் நிலையில் நேரடிக் கொடுப்பனவுகள். சுதந்திர விவசாய விலைகள் சார்பாகவும் பாதகமாகவுமுள்ள நியாயங்கள்; பொருள்களைக் குவித்துவிடல்; நெடுந்தவணைப் பரிகாரமும் குறுந்தவணைப் பரிகாரமும்.

## அனுபந்தம்: ஊகவியாபாரம், அபாயம், காப்புறுதி என்பனபற்றிய பொருளாதாரம்

காலம், இடம் என்பவற்றுக்குக் கட்டுப்படாத விலைச் சம்பந்தங்களை ஆராய்வதற்கு இங்கே நாம் சப்ளை, தேவை என்ற ஆயுதங்களைப் பயன் படுத்துகிறோம். அபாயம், ஊகவியாபாரம், சூதாட்டம் என்பவற்றில் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகளை நாம் இதில் அறிமுகம் செய்கி றோம். தானியம், பருத்தி என்பவற்றின் விற்பனவு, கொள்வனவு என்பவற்றைப் பற்றி மாத்திரமன்றி, சிறு கடதாசித் துண்டுகளைக் கொள் வனவு விற்பனவு செய்வதைப் பற்றியும் ஆராய்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கடதாசித்துண்டுகளுக்குப் பண்டப் பொருத்தம் என்று பெயர். சிகாகோ வியாபாரசபை, நியூ ஓலியன்ஸ் பருத்திக்கடை போன்ற நியமப் பண்டப் பசாரில் தரகர் பரிமாறும் பொருத்தங்களே இவை. பொருத்தம் என்பது உடன்படிக்கை. நிசமான பருத்தியையோ, தானியத்தையோ கண்ணுற்காணுமலே இந்தப் பண்டங்களில் நாம் வியாபாரஞ் செய்யலாம். இத்தகைய பொருத்தங்களிலே வியாபாரஞ் செய்யும் நாம், விரும்பாத ஒரு விடயம், நாம் இம்முறையில் வாங்கும் பண்டங்கள் நமது வாசலில் லொறிகளிலே வந்து இறக்கப்படுவதற்குக் காத்துநிற்கும் நிலேயே. ஊக வியாபாரிகள் பண்டங்களேக் கண்ணுல் காணமாட்டார்; விளேவுகாலங்களிலே நுகர்வோரிடையே இப்பண்டங்களேப் பகிர்ந்துவிடப்போதிய உதவி செய்வர்; மிஞ்சிய பண்டங்களேச் சேமித்து வைக்கவுந் துணேபுரிவர்.

பேணுட் பரூச் என்ற முதிர்ந்த அரசியல் அறிஞர் தமது சுயசரிதையிலே, பேராசிரியர் ஜி. பி. நியூகம் 10 வருடத்துக்கு முன்னர் சப்பிளே தேவை பற்றி நிகழ்த்திய பேச்சைக் கேட்டுத் தாம் ஊகவியாபாரத்தில் இறங்கி 10 இலட்சம் டொலருக்குமேலே உழைத்ததாகக் கூறியுள்ளார். இந்த அனுபந்தத்தை வாசிப்பதால் நீங்கள் தனவந்தராகிவிடமாட்டீர்கள். மேலும் இதை வாசியாதுவிட்டால் மேல்வரும் அத்தியாயங்களே விளங்கமுடியாத நிலேமை உண்டாகாது. ஆனுல் ஊகவியாபாரம் உருசிகரமானதொரு விடயம். சப்பிளே, தேவை என்பவற்றை எவ்வாறு பயன்தருமாறு பிரயோகிக்கலாமென்பதற்கு உதாரணமாக அஃது அமையலாம். ஊகவியாபாரம் சிக்கலான விடயமானபடியால் ஆரம்ப நூல்களில் அதைப்பற்றிப் பூரணமாகக் கூறிக் கொள்ளமுடியாது.

### பூமிசாத்திர ரீதியான விலேக்கோலம்

நன்ருக அமைக்கப்பட்டதொரு போட்டிச் சந்தையிலே குறித்த ஒரு காலத்திலும் இடத்திலும், தனி ஒரு விலேயே நிலவும். இதற்குக் காரணம் ஊகவியாபாரிகளும் தரகருமாவர். இவர்கள் சந்தைவிலே நிலேவரத்தைக் கவனித்துக்கொண்டேயிருப்பர். விலேகளில் வித்தியாசமிருப்பதைக் கண்டால் இவர்கள் மலிவான இடத்திலே பண்டங்களே வாங்கி ஒறுப்பான இடத்திலே விற்று இலாபஞ் சம்பாதிப்பர். அத்துடன் விலேயையும் சமநிலேப்படுத்துவர்.[1]

மிகத் தூரத்திலுள்ள இரண்டு சந்தைகளில் இரண்டுவிதமான விலேகள் நிலவலாம். சிக்காகோவிலே ஒரேரகக்கோதுமை, ஒறுப்பாகவும் கன்சாஸ் நகரில் மலிவாகவும் பெறலாம். இதற்குக் காரணம் கப்பற்போக்குவரத்து, காப்புறுதி, வட்டிச் செலவு முதலிய செலவினங்களே. சிக்காகோவில், கப்பற் செலவு காரணமாக ஒரு சில சதம் விலே ஏறுமானுல்

[1]. சிக்காகோ வியாபாரச் சபை தானியவியாபாரத்துக்குப் பேர்போனது. இங்கே விலேமாற்றத்தைப் பார்த்து அன்ருடம் ஊகவியாபாரம் நடத்தி இலாபம்பெறும் 100 தரகர்களிருக்கிருர்கள். இவர்களுடைய வியாபாரம் ஒவ்வொருநாள் முடிவிலும் முடிந்துவிடும். இலாபத்தையும் பெற்றுக் கொண்டு அவர்கள் பேசாமல் நித்திரை செய்யப்போய்விடுவர்.

www.padippakam.com



ஊகவியாபாரிகள் கன்சாஸ்நகரில் வாங்கி சிக்காகோவுக்கு ஏற்றுமதி செய்வர். இதனால் கன்ஸாஸ்நகரில் விலை ஏறும் ; சிக்காகோவில் விலை குறையும்.

இத்தகைய மாதிரிகள் சம்பந்தமாய் எவரும் சட்டமியற்றுவதில்லை. இவை சப்பிளை தேவை என்பவற்றிலிருந்து பிறப்பன.

**காலப்போக்கிலே ஊகவியாபாரமும் விலைப் போக்கும் :** இடத்துக்கேற்ற மாதிரி போட்டிச் சந்தையில் விலைப்போக்கு ஒருவகையிலிருப்பது போலவே காலத்துக்கேற்றமாதிரியும் திட்டமான விலைக்கோலமுண்டு. ஆனால் இவ்விடயத்தில் வருங்காலம் எப்படி அமையுமென்று கூறுவது கடினம். அதனால் இம்முறை பூரணமற்றதாயுள்ளது. எனவே இதன் சமநிலை அடிக்கடி கலைக்கப்பட்டு மறுபடியும் திரும்ப உருவாகிறது. இதற்குக் கடலின் மேற்பரப்பை உவமையாகக் கூறலாம்.

**பருவகாலக் கோலங்களை நிலைப்படுத்தல் :** வருடத்திலே ஒரு பருவ காலத்தில் விளைவு செய்யப்பட்ட ஒரு தானியம் பற்றிய இலேசான விடயத்தை ஆராய்ந்து பார்ப்போம். இந்தப் பயிர் வருடம் முழுவதும் விளைந்துகொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தத் தானியத்துக்குப் பஞ்சமுண்டாகும். தானியத்தைச் சேமித்து வைக்கவேண்டுமென்று சட்டமில்லை. எனவே இந்தத் தானிய அருந்தலை எவ்வாறு தவிர்க்கலாம் ? இது தான் ஊகவியாபாரிகளால் தமது இலாபங்கருதிச் செய்யப்படுகிறது. விடயமறிந்த யூகவியாபாரி, இந்தத் தானியவிடயங்களில் நிபுணராயிருப்பார், தானியம் முழுவதையும் முதுவேனிற்காலத்திலே சந்தையிற்சேர்த்தால் அதன்விலை நன்றாக இறங்கிவிடும் ; பின்னர் சில காலங் கழித்துத் தானியத்துக்குப் போகமில்லாதபோது, அது சந்தையில் அருந்தலாயிருப்பதால் சுரம் போல விலை ஏறிக் கொண்டேபோகும். இதை அவர் அறிந்திருப்பார்.

ஊகவியாபாரிகள் இல்லாவிட்டால் மேற்படி நிலைமைதான் உண்டாகும். தானியம் மலிவாயிருக்கும்போது அவர்கள் அதை வாங்கிச் சேமிப்பர். விலை ஏறும்போது அதைவிற்பர். அதுவரை தானியம் பண்டசாலையிலேயே இருக்கும். இதனால் அவர்களுக்கு இலாபமுண்டாகிறது. இவ்வாறு செய்வதனால் விளைவு காலத்திலேகூடத் தானியத்துக்கு உள்ள தேவையை அதிகரிக்கிறார்கள். அதனால் விலை ஏறுகிறது. வசந்த காலத்திலே தானியத்தின் சப்பிளையை அதிகரித்து, விலையை இறக்கி விடுகிறார்கள். விலையை வருடம் பூராவும் சமநிலைப்படுத்திக்கொண்டிருக்கும்போதே மாதாமாதம் சந்தைக்கு வரும் சப்பிளையையும் சமநிலைப்படுத்துகின்றனர். இது நிகழவேண்டியதொரு கருமமே.

ஆனால் ஊகவியாபாரிகளிடையே போட்டியிருக்குமானால் எவரும் அதிக இலாபமடையமாட்டார்கள். ஊகவியாபாரி தானியத்தையோ பருத்தியையோ கண்டிருக்கவும்மாட்டான். பண்டசாலையைக்கூடப் பார்த்திருக்க மாட்டான். அவன் வாங்குவதும் விற்பதும் சிறிய கடதாசித்துண்டுகளே. ஆனால் நடப்பது மேலே சொன்னவிடயந்தான்.

படிப்பகம்

www.padippakam.com




இலோபமோ நட்டமோ கொண்டுவராத மாதாந்த விலைமாதிரி ஒன்றே யொன்றுண்டு. இது நிரந்தரமான விலைமாதிரியன்று. தூரத்துக் கேற்றுற்போல் போக்குவரத்துக்கூலி அதிகரிக்கும். அதையொட்டித் தானியத்தின் விலை உயரும். அது போலவே காலத்தை யொட்டியும் விலை மாதத்துக்கு மாதம் உயரும். இது பண்டசாலையில் பொருளைச் சேமித்து வைக்கும் செலவு காரணமாக உண்டாகிறது. ஒரு வருடச் சக்கரத்தில் விலைகள் மாறும் முறையைப் படம் 6 காட்டுகிறது. மாதாமாதம் விலை உயர்வு ஒரே நிலையிலிருப்பதில்லை. ஏனெனில் பண்டசாலையில் அடைபட்டுக் கிடக்கும் தானியத்துக்கான விலைப்பணம் தொடர்வட்டிகொடுத்து வருகிறது.[1]

## எதிர்பார்க்கக்கூடிய ஏற்ற இறக்கங்களை நிலைப்படுத்தல்

பருவகால விளைவைப் போல எல்லா நடைமுறையிலுள்ள விலை ஏற்றத் தாழ்வுகளையும் பற்றி முன்னேறியே தீர்க்கதரிசனங் கூறிவிடமுடியாது. அடுத்த வருடத்துக் காலநிலையை யார்தான் அச்சொட்டாகக் கூறமுடியும்? அல்லது அண்மையில் சூறுவளியுண்டாகுமென்று யார்தான் முன்கூட்டியே கூற முடியும்? ஆனால் ஊகவியாபாரிகள் வருங்காலத்தில், ஒரு பொருளுக்கு

**பண்டமொன்று சேமிக்கப்படுவதானல், சேமிக்கும் செலவுக்குச் சமமாக எதிர்பார்த்த விலை ஏறவேண்டும்.**

பருவகால விலைகளின் சிறந்த மாதிரி




படம் 6. விளைவுக் காலத்தில் $P$ மிகக் குறைவாயிருக்கும். சேமிக்கும் செலவுடன் அது மெதுவாக உயரும். இது அடுத்த விளைவுகாலம்வரையிருக்கும். இந்தமாதிரியானது நுகர்வைச் சமன் படுத்தும். ஆனல் மற்றமாதிரியில் விளைவுகாலத்தில் அதிக பண்டமும், முதுவேனிலில் விலையிறக்கமும், கோடையிலே பண்டம் அருந்தலாகவும், விலைஉயர்வாகவும் காணப்படும்.

1. உதாரணமாக நான் தானியத்தைச் சேமிக்கும் பண்டசாலை அதிபதியானல் எனது சேமிப்புச் செலவுக்குத் தகுந்தவாறு தானியத்தின் விலை ஏறுமா என்பதைச் சாத்திரம் பார்த்து அறிய வேண்டியதில்லை. இன்றைய சந்தையே எனக்கு வருங்காலவிலையைக் கூறி விடும். இந்தவிலை நிகழ்காலவிலையிலும் அதிகமாயிருந்தால் நான் உடனே தாமதமின்றித் தானியத்தைச் சேமித்து விடுவேன்.

www.padippakam.com



எத்துணை அருந்தல் உண்டாகும் என எவ்வளவுதூரம் அச்சொட்டாகத் தீர்க்கதரிசனம் கூறமுடியுமோ, அவ்வளவுக்கு அந்தத் தானியத்தை அவர்கள் இப்போது கொள்வனவுசெய்து பிற்காலப் பரிமாறலுக்கு வைத்துக்கொள்வர். இதனால் (1) நிகழ்காலச் சப்பிளை குறையும் (2) தற்காலவிலை ஏறும் (3) சேமிக்கும் பண்டத்தின் தொகை அதிகரிக்கும் (4) வருங்காலச் சப்பிளை அதிகரிக்கும். (5) வருங்கால விலை குறையும். பொதுவாகக் கூறுமிடத்து விலை அதற்கேற்ற நிலைபெறும் ; நுகர்வும் திரப்படும்.

வாசகர் இதற்கு எதிர்மாறான போக்கைக் கற்பனை செய்து பார்க்கலாம். இங்கே ஊகவியாபாரிகள், விளைவு அபரிமிதமாகவும் எதிர்காலத்தில் விலையிறக்கமும் காண்பாரானால், விலையைத்திரப்படுத்துவர். அதன்பின்னர் அவர்கள் எவ்வாறு "சுருக்கமாக விற்பனை செய்வர்[1]" (எதிர்காலத்தில் கொடுப்பதற்கு); இஃது எவ்வாறு நடப்பு விலையை விழச்செய்கிறது ; நடப்பு நுகர்வை எவ்வாறு உயர்த்துகிறது ; எவ்வாறு பண்டச் சேமிப்பைக், குறைக்கிறது என்பனபோன்றவற்றையெல்லாம் கற்பனை செய்து பார்க்க வேண்டும்.

**அபாயம் பரவல்.** விலைகளைத்திரப்படுத்துவது ஒரு புறமிருக்க ஊக வியாபாரிகள் மற்றொரு முக்கியமான கடமையையுஞ் செய்கிறார்கள். வியாபாரத்திலேற்படக்கூடிய அபாயங்களை அவர்களே ஏற்று, மற்றவர்களுக்கு வரவிருக்கும் அபாயத்தை அகற்றிவிடுகின்றனர்.

உதாரணமாக, பண்டசாலைக்காரர் ஒருவர் ஏராளமான தானியத்தைச் சேமித்து வைக்கவேண்டும். விலை ஏறினால் அவருக்குக் கொள்ளைலாபம். இறங்கினால் பெரிய நட்டம். ஆனால் அவர் அபாயத்தைத் தவிர்க்க விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். இதனை "தடைசெய்தல்" என்ற முறையால் அவர் நிறைவேற்றுகிறார். தரைப்படைக்கும் கடற்படைக்குமிடையில் நடைபெறும் போட்டியில் பந்தயம் வைக்கும் ஒருவர் இரண்டு பக்கத்துக்கும் பந்தயம் வைத்தால் நட்டமோ இலாபமோ இல்லாமல் சமனான முடிவைப்பெறுவது போன்றதே இந்தத் தடைமுறையும். இதற்கு ஓர் உதாரணம் தருவாம்.

[1]. சுருக்கமாக விற்பனை செய்வதில் ஒரு நூதனமுமில்லை. நான் என் புரோக்கருக்கு ஒரு கட்டளை கொடுக்கிறேன். நிகழ்கால விலையொன்றுக்கு, வருங்காலத்திலே ஒரு தொகைத் தானியத்தை வழங்குவதாக அதில் பொருந்திக்கொள்ளுகிறேன். கட்டளை கொடுத்த காலத்தில் என் கைவசம் தானியமில்லை. ஆனால் பின்னர் தானியத்தை வாங்கி அந்த ஒப்பந்தத்தைச் சட்டப்படி நிறைவேற்றுகிறேன். பின்னர் இப்போதையிலும் பார்க்க நான் அதிகவிலை கொடுக்க வேண்டியிருந்தால், எனக்கு நட்டமுண்டாகும். ஆனால் எனது ஊகம் சரியாயிருந்து விலைகள் இடைக்காலத்தில் வீழ்ச்சியடைந்தால் நான் விற்றதற்குக் குறைவாக வாங்கி இலாபமடைவேன். பங்குச் சந்தையிலே குறைவாக விற்றலும் இவ்வாறே நிகழும். ஆனால் நான் விரும்பிய நேரத்தில் தானியத்தை வாங்கிக்கொடுப்பேன். இதற்கிடையில் பண்டத்தை வாங்கியவர் பண்டப்பங்கை வாங்குவார். எவ்வாறு ? என் தரகர் பங்குப்பத்திரங்களைக் கடனாகத் தந்து பண்டத்தைக் கொடுக்க வழிசெய்கிறார். பின்னர் நான் பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது, பண்டங்களில் ஒரு தொகையை வாங்கிவிட்டுப் பத்திரங்களைத் தரகருக்குக் கொடுத்து விடுகிறேன்.

www.padippakam.com



நான் தானியத்தைக் கடைசிக் கந்தாயத்தில் வாங்கிச் சேமிக்கிறேன். நான் பண்டசாலை நடத்துவதில் நிபுணன். கடைசிவரை ஊகமின்றி நடத்தப் பார்க்கிறேன். ஊகப்பந்தயம் எடுக்க எனக்கு விருப்பமில்லை. தானியத்தைச் சேமித்து வைத்த பின்னர் அதனைக் கொடுப்பதற்குப் புசலொன்றுக்கு எனக்கு 9 சதம் செலவாகிறது. எனவே இப்போதே உடன்பட்டுக்கொண்ட ஒரு விலைக்குத் தானியத்தை விற்கவிரும்புகிறேன். பின்னர் வைத்துக்கொடுக்க எனக்கு விருப்பமில்லை. ஊகச் சந்தையிருந்தால் " தடைசெய்தல் " முறை மூலம் நான் அதனைப் பயன்படுத்துவேன். எவ்வாறு தடைசெய்யலாம் ? நவம்பர் மாதத்தில் வாங்கி மேமாதம் வரையும் சேமிப்பில் வைத்துக்கொடுக்கும் 5,000 புசல் சோளத்தில் ஒவ்வொரு புசலுக்கும் நான் இலினோசிலுள்ள விவசாயிடமிருந்து 1 டொலர் வீதம் கொடுப்பேன் என வைத்துக்கொள்வோம். சிக்காகோ வர்த்தக சங்கம் நவம்பர் 30 ஆம் தேதியான இன்று மே மாதத்துச் சோளத்தின் எதிர்கால விலை 1.09 டொலர்என்று குறித்திருக்கிறது. இதில் 9 சத இலாபம் எனக்குண்டு. சேமிப்புச் செலவெல்லாவற்றையும் இஃது உள்ளடக்கி, எனக்கு இலாபத்தையுந் தரக்கூடியதாயிருப்பதால், நான் சோளத்தைச் சேமிக்கிறேன். 5,000 புசல் மே மாதச் சோளத்தை எதிர்காலத்தில் கொடுப்பதாக நான் ஒப்பந்தஞ் செய்து " தடைமுறை " செய்கிறேன். (இந்த விவகாரத்திஞல் புசலொன்றுக்கு அரைச்சதம் தரகுக் கழிவுண்டு. நான் எனது உடன்படிக்கை நிபந்தனையை நிறைவேற்ற, "எல்லை "யைப் புசலுக்கு 10 சதத்துக்குக் குறையப்போடுமாறு என் தரகர் விரும்புவார். என்னிடம் நிசமான சோளம் பின்னர் கொடுப்பதற்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றித் தரகர் அக்கறை காட்டமாட்டார்).

இப்பொழுது நான் தடைசெய்ய மாட்டேன். என்னிடம் 5,000 புசல் நிசமான சோளம் பண்டசாலையிலுண்டு. அத்துடன் 5,000 புசல் மே மாதச் சோளம் விற்றுள்ளேன். சோளத்துக்கு அதிக தேவையில்லாத காரணத்தாலும், மாரிகாலத்திலே சோளம் விளைச்சல் அதிகமிருப்பதாலும் அடுத்த மே மாதம் வரையில் சோளம் 90 சதமாக விலையிறங்கிஞல் என்னநடக்கும்? என் சகோதரன் ஒரு பண்டசாலை வைத்திருக்கிருன். அவனும் என்னைப் போலவே விலையிறங்கியபோது சோளத்தை வாங்கியவன், " தடைசெய்யாமல்" விட்டுவிட்டான். அதஞல் அவன் புசலுக்கு 10 சதம் இழப்பான், அது மாத்திரமன்று ; பண்டசாலைப் பராமரிப்புச்செலவாக (காவற்காரர் கூலி, முதலியன) 9 சதமும் இழக்கிருன். எனவே மொத்தம் புசலுக்கு 19 சதத்தை இழக்கிருன். தந்திரமுள்ள எனது விடயமெப்படி? எதிர்பாராதவிதமாக விலையில் மாற்றமுண்டானபடியால் நிசமான சோளத்திலே ஒரு புசலுக்கு 10 சதம் இழக்கிறேன். ஆஞல் மே மாதம் வந்துவிட்டது. வர்த்தகச் சங்கவிலை அறிவிப்புகளைப் பார்க்கும்போது விலை 1.09 சதத்திலிருந்து 90 சதமாக வீழ்ச்சியடைவதைக் கண்டு ஆறுதலடைகிறேன், ஏனெனில் இந்த விலையிலேதான் நான் கொள்வனவு செய்கிறேன் வருங்கால ஒப்பந்தங்களை நிறைவேற்ற. எனவே சுருக்க விற்பனவிலே

www.padippakam.com



நான் 19 சதம் இலாபமடைகிறேன். இதுதான் நான் (என் சகோதரனும்) மொத்தமாக இழந்தது. அதாவது நிசமான சோளத்தை விற்பதால் இழந்தது. நான் செய்த "தடை", விலை மாற்றங்களிலிருந்து என்னைக் காப்பாற்றிவிட்டது. வலப்பக்கத்திலுள்ள நிசச் சோளச் சாக்கிலிருந்து நான் இழந்ததை இடப் பக்கத்திலுள்ள எதிர்காலச் சோளத்திலிருந்து பெற்றுவிட்டேன். எனக்குத் "தடை" செய்ய உதவிய ஊக வியாபாரி எனது தோளிலிருந்து விலை அபாயமென்ற பாரத்தைத் தானே எடுத்துக்கொண்டார்.[1]

ஊகவியாபாரிகள் அச்சொட்டாகத் தீர்க்கதரிசனம் சொல்லுமளவுக்கு அவர்கள் திட்டமானதொரு சேவையைச் சமூகத்துக்குச் செய்கின்றனர். சரியாகத் தீர்க்கதரிசனம் சொல்லாத அளவுக்கு, விலைவாசிகள் மாறுவதை ஊக்கப்படுத்துவர். விவசாய இலாகாவும், தனிப்பட்ட தாபனங்களும் கொடுத்த புள்ளிவிவரத் தகவலில்லாவிட்டால், சிக்காகோவர்த்தகச் சங்க வியாபாரிகள் வீண் வதந்திகளையும், சந்தைப் பேச்சையுமே கொண்டு கருமங்களை நடத்தவேண்டும். ஊகம் என்பது தொற்றுநோய் போன்றது. அது தொற்றிப் பரவும் இயல்புடையது.

## சூதாட்டமும் இறுதிநிலைப் பயனைக்குறைத்தலும்[2]

குதிரைப் பந்தயத்தில் பந்தயம் பிடிப்பதும், லொத்தர் டிக்கெட் வாங்குவதும் போன்றதே ஊகவியாபாரமுமெனச் சிலர் கூறுவர். ஆனால் ஊக வியாபாரத்தை ஆதரிப்போர், உலகத்தில் விடயங்கள் எல்லாம் தாறுமாறாய் நிகழ்வதால் எல்லாக் கருமங்களிலும் அபாயமிருக்கிறது; இந்த அபாயத்தை யாராவது பொறுக்கவேண்டும்; ஊக வியாபாரியின் அறிவும் முயற்சியும் சமூகத்துக்குப் பயனுடையனவாகும்; இதனால் விலை ஏற்ற இறக்கங்களும், மற்றவர்களுக்கேற்படக்கூடிய அபாயங்களும் குறைக்கப்படுகின்றன என வாதிக்கின்றனர். இஃது எப்பொழுதும் நிகழக்

1. யுத்த பயமேற்பட்டதால் மே மாதச் சோளத்தின் விலை 1.19 டொலராக உயர்ந்துவிட்டதெனவைத்துக்கொள்வோம். தடைசெய்யப்படாத என் சகோதரன், பண்டசாலைக்காரன் என்ற முறையிலே கிடைக்கும் 9 சதத்தோடு புசலொன்றுக்கு 10 சதக் கொள்ளைலாபத்தையும் பெறுகிறான். என் கதி என்ன ? நிசக் கோதுமை விடயத்தில் அதை நான் 1 டொலருக்கு வாங்கி 1.19 டொலருக்கு விற்பதால் இலாபமடைகிறேன். மேமாதக் கோதுமையை நான் 10 சதம் அதிகமாக வாங்குவதால் 10 சதம் நட்டமடைகிறேன். எனவே எனக்குப் பண்டசாலைச் செலவான 9 சதம் மாத்திரமே கிடைக்கிறது. தானியவிலை ஏற்ற இறக்கத்தால் இது பாதிக்கப்படமாட்டாது. இயந்திரக்காரர், விவசாயிகள், பண்டசாலைக்காரர் என்பவர் விடயத்தில் தடைசெய்வது சிக்கலானவிடயமாக வரலாம். ஊகவியாபாரிகளைத் தூண்டுவதற்காக, மே மாதத் தானியத்தின் நவம்பர் விலைச் சராசரியில் மே மாதத்தில் விலைப்படக்கூடியதாய் எதிர்பார்க்கும், நிசத்தானியம் 1.09 டொலருக்குச் சிறிது குறைவாகவே விற்பனையாகவேண்டும். இதன் அர்த்தமென்ன ? அபாயத்தைத் தாங்கும் ஊகவியாபாரிகளுக்கு, தாம் உதவும் காப்புறுதி போன்ற அபாயத்துக்கு ஒருவட்டம் தேவைப்படும். இந்த வட்டத்தை உற்பத்தியாளரும் நுகர்வோருமே தாங்கவேண்டும்.

2. பக்கம் 582 இல் உள்ள இறுதிநிலைப்பயன் சம்பந்தமாக ஆராய்ந்தவற்றோடு இது சம்பந்தமுடையது.

படிப்பகம்

www.padippakam.com



கூடிய விடயமன்று. ஊகவியாபாரம் நிலைமையைத் திரமற்றதாக்கவுங் கூடும்; ஆனால் மேலே கூறிய காரணங்கள் நியாயமானவையே. சூதாட்டம் என் கண்டிக்கப்படுகிறது? முக்கிய காரணம், ஒழுக்கத்தையும், சமயத்தையும் சார்ந்தது. இது சம்பந்தமாகப் பொருளியலறிஞர் ஒன்றுஞ் சொல்லமுடியாது. ஆனால் பொருளாதார அடிப்படையில் சூதாட்டத்துக் கெதிரான காரணங்களுமுண்டு. முதலாவது சூதாட்டத்தினால் பணம், கைமாறுகிறதேயன்றி புதிய பணமோ பண்டமோ ஆக்கப்படவில்லை.[1] புதிய உற்பத்தி எதையும் சூதாட்டம் உண்டாக்காவிட்டாலும், காலத்தைக் கழிக்க உதவுகிறது. காலப்போக்குக்கு மேலாக நேரத்தைக் கொல்லுதல் என்ற வகையில் சூதாட்டம் பயன்படுமானால், தேசீய வருமானத்தை அது குறைக்கிறது.

சூதாட்டத்தினாலுண்டாகக்கூடிய இரண்டாவது குறைபாடு, அது சமமற்ற நிலைமையை உண்டாக்குவதோடு, வருமானத்திலே நிலையில்லாத தன்மையையுந் தருகிறதுஎன்பதே. ஒரு தொகைப் பணத்தோடு சூதாட்ட மேசையில் சூதாட உட்காருவோர் பலவேறுதொகைப்பணத்தோடு வீடு திரும்புகின்றனர். சூதாட்டக்காரனும் அவனுடைய குடும்பமும் ஒரு நாள் மிகச் செல்வ முடையவர்களாக விளங்கலாமென எதிர்பார்க்கலாம். ஆனால் அதிட்டம் மாறினால் அவர்கள் பட்டினிகிடக்கவும் ஏற்படலாம்.

**மீண்டும் குறைந்துசெல் இறுதிநிலைப்பயன் :** ஆட்களிடையே காலப்போக்கில் வருமானத்தில் வித்தியாசமிருப்பது தீயது எனக் கருதப்படுகிறது. 1.000 டொலர் மேலதிக வருமானத்தால் உண்டாகும் இலாபத்தின் பயனிலும் 1,000 டொலர் இழப்பதனால் உண்டாகும் நட்டத்தின் பயன் அதிகமாகும். நியாயமான வாய்ப்புள்ள இடத்தில் ஒரு பந்தயம் பொருளாதார நட்டத்தையுடை யதாயிருக்கும். இழந்த பணமும் இலாபமடைந்த பணமும் சரியாயிருக்கலாம். ஆனால் இலாபமடைவேனென்ற திருப்தி நட்டமடைவேனென்ற திருப்தியிலும் பார்க்கக் குறைவாகவேயிருக்கும்.

மக்கள் பெரும்பாலும் ஒரே தன்மையுடையவர். ஒழுக்கத்தைப் பொறுத்தவரையில் ஒப்பிடப்படக்கூடியவர். அவர்களுடைய பயனுடைமையைக் கூட்டலாம். இவ்வாறானால் தனவந்தர் பெற்ற செல்வம் வறியவர் இழந்த செல்வமளவுக்கே பொதுப்பயனுடையதாயிருக்கும். சூதாட்டத்தைக் கண்டிக்கு முகமாக இந்த நியாயம் கூறப்படவில்லை. வருமானத்திலுள்ள

1. தொழில் முறையிலமைந்த சூதாட்டத்திலெல்லாம், சூதாடுவோர் ஈற்றில் நட்டமடைவர். சூதாட்டம் நடத்துவோர் சார்பாகவே அதிட்டவாய்ப்புக்கள் சாரும். நேர்மையுடன் சூதாட்டம் நடத்தும் சொந்தக்காரர்கூட கடைசியில் நயமடைவர். நண்பர் தமது விநோத காலப்போக்குக்காக நடத்தும் சூதாட்டம் ஒருவகையான நுகர்வு நடவடிக்கையாகும். சமூகத்துக்கு இதனாலுண்டாகும் செலவு பூச்சியமெனலாம். அதிட்டச் சீட்டு வாங்குவோர் நடைமுறை நுகர்வைக் குறைத்துச் சில சமயம் அதிட்டப்பணம் பெறுவர். சூதாட்டத்தினால் உண்டாகும் வருமானத் தாரதம்மியம் கூடுவதால், பழைய சமூகங்களிலும் இக்காலச் சமூகங்களிலும், சேமிப்பும், மூலதன ஆக்கமும் முன்னேறுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளன.

www.padippakam.com



தாரதம்மியங்களைக் குறைக்கும் முகமாக வரி விதிப்பதற்கு ஆதரவளிக்கும் நோக்கமாகவே இது கூறப்படுகிறது.

குடிசனப் பெருக்கம் சம்பந்தமாக மல்தஸ் கூறிய கொள்கையில் குறைந்துசெல் பயனே அடிப்படையாயிருப்பது போல தொழில்முறைச் சூதாட்டத்தைக் கண்டிக்கப் பல பொருளியலறிஞர் குறைந்துசெல் இறுதி நிலைப்பயன் விதியைப் பயன்படுத்துவர். காசு வருமானம் உயர உயர புதிய ஒவ்வொரு டொலரும் பயனுடைமைக்கு ஓரளவு சேர்த்துக்கொள்ளுகின்றது. ஆனால் அது குறைந்துகொண்டே செல்லும். அவ்வாறே பணத்தைக் கொண்டு வாங்கும் ஒவ்வோர் அலகு மேலதிக பண்டமும் குறைந்த திருத்தியையே கொடுத்துக்கொண்டு வரும். ஒரு பண்டத்தை எமது தேவைக்கு மேலாகப் பெறமுடியுமானால் (உதாரணம் காற்று) அப்பண்டம் இலவசப் பண்டமாகிறது. ஏனெனில் அப்பண்டத்தின் மேலதிக அலகினால் எவ்வித புதுப்பயனும் எங்களுக்கு உண்டாவதில்லை.

**ஊகவியாபாரிகளால் ஏற்படும் இலட்சியமான நிலைப்படுத்தல் ஏன் சிறந்தது.**

காலப் போக்கிலே மொத்தப் பயனை இலட்சியமான ஊகவியாபாரம் எவ்வாறு உச்சநிலையுடையதாக்கும் என்பதைக் காட்ட இறுதிநிலைப் பயன் சம்பந்தமான கருவிகளை நாம் பயன்படுத்தலாம். நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் அந்தந்த வருடத்துக்குரிய பயன்படு பொருள் அட்டவணை உண்டு எனக் கொள்வோம். இரண்டு வருடங்களிலே முதல் வருடத்தில் பெரிய விளைவுண்டானது; அதாவது ஓர் ஆளுக்கு மூன்று அலகு இடைத்தது; இரண்டாவது வருடத்தில் ஓர் ஆளுக்கு ஓர் அலகு வேளாண்மையே கிடைத்தது இந்தப்பற்றுக்குறையை முன்னேறியே அறிந்திருந்தால் 2, வருட நாலு அலகு மொத்தத்தை இரண்டு வருடத்துக்கும் சமனாக எவ்வாறு பிரித்துவிடலாம்?

பண்டசாலைச் செலவு, வட்டி, காப்புறுதிச் செலவு என்பவற்றையும் பயனுடைமை வீதத்தையும் கணக்கெடுக்காதுவிடுவோம். இரண்டு வருடத்துக்குமான மொத்தப் பயனுடைமை, ஒவ்வொரு வருடத்திலும் நுகர்வு சமனாயிருந்தால், உச்சமாக்கப்படும்.

கிடைக்கும் மொத்தப் பொருள்களை ஒரே அளவு நுகர்வாகப் பிரிப்பது வேறுவகையில் பிரிப்பதிலும் பார்க்கச் சிறப்புடையதாகும். ஏன் ? குறைந்துசெல் இறுதிநிலைப் பயன் விதி இருப்பதால். காரணம் ?


உதாரணமாக இரண்டாம் வருடத்திலும் பார்க்க முதல் வருடத்திலே நான் அதிகம் நுகர்வேன் என்று வைத்துக்கொள்வோம். எனது கடைசி அலகின் இறுதிநிலைப் பயன் முதல் வருடத்திலே குறைவாகவும் இரண்டாம் வருடத்திலே அதிகமாகவுமிருக்கும். முதல் வருடத்திலிருந்து இரண்டம் வருடத்துக்குக் கொஞ்ச விளைவை மாற்றினால் குறைந்த இறுதிநிலைப் பயனிலிருந்து அதிக இறுதி நிலைப்பயன் பெறுவேன். இது மொத்தப் பயனுடைமையை உச்சநிலைக்குக் கொண்டு செல்லும்.

www.padippakam.com



இலட்சியமான ஊகவியாபார முறை இதைத்தான் அச்சொட்டாகச் செய்கிறது.

ஊகவியாபாரிகள் வட்டி, பண்டசாலைச் செலவு, காப்புறுதிச் செலவு என்பவற்றைக் கணக்கிலெடாமல் அடுத்த வருடத்துக் குறைவான விளைவை அச்சொட்டாக முன்னேறியே சொல்லமுடியுமானால் என்ன செய்வர்? இந்த வருடத்துக் குறைவான விலையுள்ள அதிக விளைவிலிருந்து பொருள்களை அடுத்த வருடத்துக்கு மாற்றுவது, அடுத்த வருடத்து அருந்தல் விலையில் விற்பதிலும்பார்க்க நல்லதென எண்ணுவர். இந்த வருடத்துச் சப்பிளையிலிருந்து ஊகவியாபாரி பொருள்களைக் கழித்து அடுத்த வருடத்துக்குச் சேர்ப்பதால் என்ன நடக்கும்? இரண்டு விலையும் சமனாக்கப்பெற்றால்தான் சமநிலையுண்டாகும். எனவே மேலும் அதிக விளைவை அடுத்த வருடத்துக்கு எடுத்துச் செல்லத் தூண்டுதல் ஏற்படாது[1]. (ஊக வியாபாரியின் முயற்சிக்காக ஓரளவு சிறிய கொடுப் பனவைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் உதாரணத்தை இலேசாக்குவதற்காக எல்லாச் செலவுகளையும் கணக்கிலெடுக்காமல் விட்டு விட்டோம்.)




**படம் 7.** இலேசாக வர்ணந் தீட்டப்பட்டவை ஒருவருடத்தில் அனுபவிக்கப்படும் மொத்தப் பயனுடைமை. ஓர் அலகை அடுத்த வருடத்துக்கு எடுத்துச் சென்றால் Q வும் P யும் சமனாகும். அத்துடன் வெள்ளைநிறப் பகுதியின் அளவால் மொத்தப் பயனுடைமை அதிகரிக்கும்.

[1]. வரைபடத்தின் மூலம் இந்தக் கருத்தை விளக்கலாம். பயனுடைமையை டொலரிலே கணக்கெடுப்பதானால் டொலர் ஒவ்வொன்றும் இறுதிநிலைப் பயனைக் குறிப்பிடுமானால் தேவைக்கோடு 588 ஆம் பக்கத்திலுள்ள இறுதி நிலைப்பயன் கோடுபோலவே காணப்படும். படம் 7 இலுள்ள இரண்டு கோடுகளும், மற்ற வருடத்துக்குப் பொருள்களைக் கொண்டு செல்லாத போது நடக்கக்கூடியதும், $A_1$ இல் $S_1$ $S_1$, $dd$ ஐ வெட்டும் இடத்தில் விலை முதலில் நிர்ணயிக்கப்பட்டும், இரண்டாவது $A_2$ வில் குறைந்த சப்பிளை $S_2$ $S_2$, $dd$ ஐ வெட்டும் இடத்தில் நிச்சயிக்கப்பட்டும் உள்ளதுமான நிலையைக் காட்டும். வர்ணந் தீட்டப்பட்ட பிரதேசத்தின் மொத்தப் பயனுடைமை தலைக்கு $(4+3+2)+4$ அல்லது 13 டொலர் ஆகும். அனால் இரண்டாம் வருடத்துக்கு 1 அலகை ஊகவியாபாரிகள் எடுத்துச் செல்வதானால் P யும் Q வும் $E_1$, $E_2$ என்ற தானங்களிற் சமனாக்கப்படும். இலேசன வர்ணந் தீட்டப்பட்ட பிரதேசங்களின் மொத்தப் பயன் தலைக்கு $(4+3)+(4+3)$ அல்லது 14 ஆகத் தேறும். (பயனுடைமையில் 1 டொலர் இலாபம் வெள்ளைப் பகுதியால் அளக்கப்பட்ட தென்பதைக் காட்டுக. இது மூன்றும் அலகின் இறுதிநிலைப்பயனுடைமையினும் இரண்டாம் அல ன் இறுதிநிலைப் பயனுடைமை எவ்வளவு அதிகரித்துள்ளதென்பதைக் காட்டும்.)

www.padippakam.com



எந்த ஊகவியாபாரியும் வருங்கால நிலேயை அச்சொட்டாகக் கூறமுடியாது. அவர்கள் பிழைவிடுவது இயற்கை. அவர்கள் ஊர் வதந்திகளேயும், பொதுமக்களின் ஆராய்ச்சியில்லாத கூக்குரல்களேயும் கேட்பர். எனவே நிலேமை இங்கு குறிப்பிட்டது போலச் சிறப்புடையதன்று. ஊகவியாபாரிகள் கூர்மையோடு வருங்கால நிலேயை எவ்வாறு தீர்க்க தரிசனம் சொல்ல முடியுமோ அவ்வளவுக்கு அவர்களும்[1] தூரதிருட்டியுள்ள அரசாங்கத் தாபனங்களுங்கூட பயனுள்ள திரமான நிலேயை ஊண்டாக்க உதவலாம்.

**காப்புறுதிப் பொருளாதாரம் :**

காப்புறுதியும் ஒரு சூதாட்டமே. ஆனுல் சூதாட்டம் கெடுதியான பயனே யுண்டாக்கும்; காப்புறுதி நன்மையான பயனே உண்டாக்கும்.[2] சூதாட்டம் அபாயத்தையுண்டாக்கும் ; காப்புறுதி அபாயத்தைக் குறைக்கும். நெருப்புக்கு இரையானுல் நட்ட ஈடுபெறும் நோக்கத்துடன் ஒருவர் தமது வீட்டைக் காப்புறுதிசெய்கிருர். அப்போது வீட்டுச் சொந்தக்காரர் காப்புறுதிக் கம்பனியோடு ஒரு பந்தயம் வைக்கிருர். அதாவது தமது வீடு எரிந்துவிடுமென்று பந்தயம் பிடிக்கிருர். வீடு எரியாவிட்டால், எரியும் வாய்ப்புக்கள் குறைவாயிருந்தால் வீட்டுச் சொந்தக்காரர் தாம் கட்டும் தவணேப் பணத்தை இழக்கிருர். வீடு எரிந்துபோனுல் கம்பனி முன்னர் சம்மதித்த நட்ட ஈட்டைக் கொடுக்கவேண்டும்.

தீயுக்கீடாகச் செய்யும் காப்புறுதியைப் போன்றதே சீவிய காப்புறுதியும், விபத்துக் காப்புறுதியும், கார் காப்புறுதியும் ஏனேய காப்புறுதிகளுமாகும். இலண்டனிலுள்ள பெரிய காப்புறுதி கம்பெனியான லோயிட்ஸ் என்ற கம்பெனியில் எந்தவகையான காப்புறுதிக்கும் ஒழுங்கு செய்யலாம். ஆனுல் அந்தக் கம்பெனி கிறிஸ்மஸ் தினத்தன்று பனிக்கட்டி பெய்யாது என 10,000 டொலருக்கு உன்னேடு பந்தயம் வைக்கமுடியாது. இந்தப் பந்தயத்தைக் கோட்டிலே வாதாடி வெல்ல முடியாது. ஏனெனில் எனக்கு "காப்புறுதி செய்யக்கூடிய அக்கறை" அதில் இல்லே. ஆனுல் பனிக்கட்டி விளேயாட்டுக் காரியாலயம் ஒன்றின் சொந்தக்காரன்

1. (1) கூடிக்கொண்டிருக்கும் இறுதிநிலேப்பயனுடையவர்கள் சூதாடக்கூடாது. காப்புறுதி செய்யவேண்டும். ஆனுல் அதிகரிக்கும் இறுதிநிலேப்பயன் உடைய ஒருவர் தாம் எதிர்பார்க்கும் பயனுடைமையை, சூதாடுவதாலும் காப்புறுதி செய்யாமல் விடுவதாலும் உச்சநிலேயடையச் செய்வர்.

(2) ஒருவருக்கு இறுதிநிலேப்பயனுடைமை எவ்வாறு மாறும் என்பதைப் பரீட்சிக்க அவர் நிகழ்தகவுகள் சம்பந்தப்பட்ட கருமங்களில் எவ்வாறு நடந்துகொள்வாரென்பதில் எந்த ஒரு பொருளியலறிஞரும் தமது அவதானங்களேப் பயன்படுதததுவாரானுல் அவர் ஒன்றையொன்று பற்றிச்செல்லும் வாதத்தில் ஈடுபடுவார். அது பின்வருமாறு :—சூதாடுவோர் சூதாடவே வேண்டும். காப்புறுதி செய்வோர் காப்புறுதிசெய்யவேவேண்டும். சூதாட்டத்தை நிறுத்த வேண்டுமென்ற வாதத்தில் ஈடுபடுவோர் சமயக் காரணங்களேயோ அறவொழுக்கக் காரணங்களேயோதாம் காட்டவேண்டும்; அல்லது நியாயம் கூறுதிருக்க வேண்டும்; அல்லது தனிமனிதனுக்கு எது நல்லதென்பதைச் சமூகமே அறியும் என்ற நியாயத்தைக் காட்டலாம் அல்லது நாமெல்லாம் குறைவுடையவர்கள் என்று கூறலாம். மிதமான சூதாட்டத்தைச் சமூகத்துக்குப் பயனுள்ள கருமங்களில் திருப்பிவிடலாமெனச் சில அரசியல் பொருளறிஞர் கூறுவர்.

www.padippakam.com



அந்தப் பணத்தைப் பனிக்கட்டிபெய்யாததால் இழக்க நேர்ந்தால், அவனுக்கு அதில் அக்கறையுண்டு. எனவே அப்படி ஒரு காப்புறுதிப் பொலிசியை அவன் வாங்கலாம். இந்த இரண்டுவகை காப்புறுதிக்குமுள்ள வித்தியாசத்தைப் பொருளாதாரக் கொள்கை எடுத்துக் காட்டும்.

காப்புறுதிக் கம்பனி சூதாட்டத்திலீடுபடவில்லை. ஏனெனில் தீர்க்கதரிசனம் கூறமுடியாததும், தனிப்பட்ட ஒருவர் விடயத்தில் அதிட்டமாகக்கருதக் கூடியதுமான ஒன்று, பொது மக்கள் விடயத்திலே தீர்க்கதரிசனம்கூறக் கூடியதாயும், ஒரே மாதிரி எப்போதுமிருக்கக்கூடியதாயுமிருக்கும். ஜே. சி. ஸ்மித் என்பவர் 20 வயதுள்ளவர் ; நல்ல ஆரோக்கியமுள்ளவர். அவர் மேலும் 30 வருடம் இருப்பாரா என்பது அதிட்டத்தைப் பொறுத்தது. ஆனால் பெருந்தொகை சம்பந்தப்பட்ட விதியின்படி 1,00,000 தொகையான 20 வயதினர் நல்ல ஆரோக்கியமுடையவராயிருந்தால், குறித்த கால எல்லைக்குப் பின் ஒரு குறிப்பிட்ட தொகையினரே உயிரோடிருப்பர். காப்புறுதிக் கம்பனி தான் நட்டப்படாத முறையிலே கட்டணத்தை விதிக்கலாம். எனவே கம்பனி சூதாட்டமிடுகிறதெனக் கூறமுடியாது. காப்புறுதி செய்பவர் விடயமெப்படி ? அவரும் சூதாட்டமாடுகிறாரா ? இது சூதாட்டமன்றெனக் கூறுவதுங் கடினமானதே. தன் வீட்டைக் காப்புறுதி செய்யாதவன் சூதாட்டந்தான் ஆடுகிறான். சிறியதொரு தொகைக் கட்டணத்தைச் சேமிப்பதற்கு விரும்பி அவன் தனது முழு வீட்டையுமே பணயம் வைக்கிறான். அவனுடைய வீடு எந்த வருடத்திலாவது எரிந்து போகாமலிருந்தால், அவன் பந்தயத்தில் வெற்றி பெற்றவனே. வீடு எரியுமானால் அவன் பந்தயத்தில் இழக்கிறான். அதன் பயனாகப் பெரிய தண்டனையைப் பெறுகிறான்.

வெற்றிதோல்வியில் அதிகம் அக்கறையில்லாத ஒருவனானால் “அதனாலென்ன ? காப்புறுதி செய்யாவிட்டால் ஒருவன் சூதாடுவான். ஆனால் அந்தப் பந்தயத்தினால் கிடைக்கும் வாய்ப்புத் திருப்தியானதே. உண்மையில் வாய்ப்புத் திருப்தியுள்ளதெனவே கூறலாம். காப்புறுதிக் கம்பனி பதிவுப் புத்தகங்களை வைத்திருக்கவேண்டும் ; காப்புறுதி உத்தியோகத்தருக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும். இவ்வாறு பல செலவுகள் அதற்கு உண்டு. இச் செலவெல்லாம் கட்டணத்திலே தான் சேர்க்க வேண்டும் என்று கூறுவான்.”

இதற்கு விடயங்களை ஆராய்ந்து உண்மை காணும் நிதானமான ஒருவன் பின்வருமாறு கூறுவான் :—“ நண்பர் மத்தியிலிருக்கும்போது நான் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக ஒரு சிறிது நேரம் சூதாடவிரும்புவேன். வாய்ப்பு எனக்குக் குறைவாயிருந்தாலும், சாதகமாயிருந்தாலும் நான் அதில் ஈடுபடமாட்டேன். நான் வீட்டைக் காப்புறுதி செய்கிறதற்குக் காரணம் வருடாந்தக் கட்டணத்தை நான் கட்டத் தவறுவதில்லை என்பதே ; ஆனால் காப்புறுதி பண்ணாமலே வீடு எரிந்துபோனால், அதனால் வரும் நட்டம் பெரிதாயிருக்கும். காப்புறுதி பண்ணினால் எனது வாழ்க்கை

www.padippakam.com



மட்டம் மாற்றமடையாது. வருமானமும் மாற்றம் அடையாது. காப்புறுதி பண்ணுவிட்டால் கொஞ்சக் காலத்துக்கு மகிழ்ச்சியிருப்பேன். ஆனுல் அபாயம் உண்டாவது எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும்". குறைந்து செல் இறுதிநிலைப் பயனுடைமை—இது நட்டத்தால் வரும் அருந்தல்கள், இலாபத்தாலுண்டாகும் திருப்திகளிலும் பார்க்க முக்கியம் வாய்ந்தன என்பதை உணர்த்தும்—மேலே கூறிய ஆராய்ச்சிக்குச் சமாதானம் கூறுவதாகும். நிலையானதொரு வருமானம் எரிந்துபோன வீட்டுக்காரர் எரியாத வீட்டுக்காரர் என்ற வகையினரிடையே கண்டபடி பிரிக்கப்படாமல் சரிவர எல்லாருக்குமிடைலே பிரிக்கப்பட்டால், அது பொருளாதார முறையில் நயமுடையதாகும் என்பதை இந்தக் குறைந்துசெல் இறுதிநிலைப் பயனுடைமை எடுத்துக் கூறுகிறது. (குடும்பமொன்று ஆசுபத்திரி, வைத்திய காப்புறுதியொன்றை வாங்கினுல், இது சேமிப்பு முயற்சியில் இலேசான பாதை என்ற அபிப்பிராயம் தோன்றலாம். இத்தகைய கட்டாயச்சேமிப்புத் தன்மை இன்சூரன்ஸ் மற்றெருரு அமிசமாகும்.)

**எதைக் காப்புறுதி செய்யலாம்?:** ஆபத்தைப் பரவலாக்கும் முக்கியமான முறை காப்புறுதியாகும். வாழ்விலுண்டாகக் கூடிய ஆபத்துக்கெல்லாம் நாம் என் காப்புறுதி செய்யக்கூடாது. இதற்கு விடையென்ன? அச்சொட்டான அபாயக் கணிப்பு முதலியவற்றை நிச்சயிப்பதற்குச் சில குறிப்பிட்ட கணிதமுறை நிபந்தனைகள் அவசியம். அவையாவை.

முதலாவது : காப்புறுதி செய்வோர் தொகை அதிகமாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அபாயச் சங்கடத்தை ஒன்ருகச் சேர்க்கலாம். சராசரியைச் சமன்படுத்திவிடலாம். மொண்டி கார்லோவிலுள்ள வங்கியில் பெருந்தொகையில் பாதுகாப்புண்டென்ற உண்மை உணரப்படுகிறது. பெருந்தொகையிருந்தால் மாத்திரம்போதாது. மான்ஹட்டான் தீவிலே ஆயிரக்கணக்கான வீடுகளிருந்தாலும், நிதானமான எந்தவோர் அக்கினிக் காப்புறுதிச் சங்கமும் அந்தத் தீவிலே மாத்திரம் தனது முயற்சியை அமைத்துக்கொள்ளமாட்டாது. நிச்சயமற்ற நிகழ்ச்சிகள் சார்பளவில் ஒன்ருேடொன்று தொடர்பற்றனவாயிருக்கவேண்டும். சூதாட்டக் காய் ஒவ்வொன்றின் வீழ்ச்சியும், தீயினுல் உண்டாகும் நட்டவாய்ப்பு ஒவ்வொன்றும் தனித்தனியிருக்க வேண்டும். 1871 இல் சிக்காகோவில் உண்டான பெரிய தீ விபத்தும், பூமியதிர்ச்சியைக் தொடர்ந்து சான்பிரான்சிஸ்கோவில்உண்டான தீ விபத்தும், அந்தந்தப் பிரதேசத்திலுள்ள கட்டிடங்களை ஒரேவகையான ஆபத்துக்குள்ளாக்கும். கம்பனியானது ஒரு சம்பவம் பற்றியே பணயம் வைக்கும்; தனிப்பட்ட ஆயிரம் சம்பவங்கள் சம்பந்தமாகவன்று. அது பல வகைப்பட்ட அபாயங்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும். தனிப்பட்ட கம்பனிகள், அணுக்குண்டு காப்புறுதி அபாயத்தை அரசாங்க ஆதரவில்லாமற் பொறுக்கமுடியாது. தனிப்பட்ட கம்பனியிடமிருந்து வேலையின்மைக்கு ஈடாகக் கொடுக்கப்படும் காப்புறுதியைப் பெற முடியாது. வியாபார மந்தம் எல்லாப் பிரிவினரையும் எல்லா வகுப்பாரையும் ஒரே நேரத்திலே பாதிக்கும் வாந்திபேதி நோய் போன்றது. அஃது எப்போது

www.padippakam.com



எவ்வளவில் நிகழுமென்று முன்கூட்டியே கூறமுடியாது. நட்ட அபாயத்தைத்தாங்கக் கூடியதும், தாங்கும் பொறுப்புடையதும் அரசாங்கமே. எனவே வேலையின்மைக்கு ஈடு கொடுக்கக்கூடியது அதுவே.

ஆனால் இவற்றை விட வியாபாரத் துறையிலும் தனிப்பட்டவர் விடயத்திலும் எத்தனையோ வகையான அபாயங்களுண்டு. புதிய சலூன், புதிய எலிப்பொறி என்பவற்றின் வியாபார முன்னேற்றத்தையிட்டு எவரும் காப்புறுதி செய்ய முடியாது. புதிய பாடகர் விடயமும் அத்தகையதே. பிழைவிட்டால் தான் பரீட்சை நடத்தலாம். பரீட்சை நடத்தாவிட்டால் முன்னேற்றமடைய முடியாது.

### அனுபந்தத்துக்குச் சுருக்கம்

1. காலம், இடம் என்பவற்றை அனுசரியாமல் திட்டமான சமநிலை விலைமுறையை ஊகவியாபாரிகள், நடுவர் என்போரின் இலாபங் கருதிய புத்திக்கூர்மையுள்ள நடவடிக்கைகள் உண்டாக்குகின்றன. ஊகவியாபாரிகள் விலையை மட்டப்படுத்துவதோடு, நுகர்விலே நிலையற்றதன்மையிருப்பதையும் குறைக்குமளவுக்குச் சமூகத்துக்குப் பயனுள்ளதொண்டைச் செய்கிறார்கள். ஒரு சந்தையை உண்டாக்கி மற்றவர்களுடைய அபாயத்தைத் தடுப்பதற்கு வழிவகுக்கும் முறையில் அவர்கள் செய்யும் தொண்டு மேலும் சமூகத்துக்குப் பயனுடையதே.

ஆனால் விலை மாற்றங்களை ஆதரிப்பதால், பண்டங்களிலும் விலையிலும் ஏற்ற இறக்கங்களையும், வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்திலே ஏற்ற இறக்கத்தையும் உண்டாக்குவாரானால் ஊகவியாபாரிகளின் தொண்டு தீமை பயப்பதாகும்.

2. குறைந்துசெல் இறுதிநிலைப்பயனுடைமை பொருளாதாரக் கொள்கையாகும். நுகர்வும், விலையும் மாறுதிருப்பது என் நல்லதென்பதை இஃது எடுத்துக்காட்டும். சூதாட்டம் தீமை பயக்கும், காப்புறுதி நன்மை பயக்கும் என்பதையும் இதுவே காட்டுகிறது. தனிப்பட்ட தாபனங்களால் காப்புறுதி செய்யப்படுவனவற்றுக்கும், சமூகத் தாபனங்களால் காப்புறுதி செய்யப்படுவனவற்றுக்கும், காப்புறுதி செய்ய முடியாதனவற்றுக் குமிடையே பெரிய வித்தியாசங்களுண்டு.

### மீண்டும் கருதுவதற்குரிய பிரச்சினைகள்

1. இலட்சியபூர்வமான ஊகவியாபாரம் பருவ விலைகளை எவ்வாறு நிலைபெறச் செய்யும் ?

2. அபாயம் என்பதை இலட்சியபூர்வமான ஊகவியாபாரம் எவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுகிறது ?

3. "மொத்த அபாயத்தைக் காப்புறுதி குறைக்கிறது. சூதாட்டம் அதை அதிகரிக்கச் செய்கிறது. ஆனபடியால் முந்தியது நல்லது. பிந்தியது கெட்டது" இக்கூற்றை விளக்குக.

www.padippakam.com



4. "சூதாட்டத்திலுண்டாகும் திகில் எனக்குப் பிரியமானது. வாய்ப்பு, பொருளாதாரக் கொள்கை என்பனவெல்லாம் எனக்கு ஏன்?" இவ்வாறு கூறும் ஒருவன் சூதாட்டத்திலீடுபடத் தக்கவனு இல்லையா என்பதைப் பற்றிப் பொருளாதார இயல் தீர்ப்புக் கூறமுடியுமா?

5. சூதாட்டம், காப்புறுதி செய்தல் என்பவை விரும்பத்தக்கவை என்ற கூற்றுக்குச் சாதகமாக நியாயங்கள் கூறப்படுகின்றன. இரண்டுபேர் உயர்ந்து செல்லும் இறுதிநிலைப் பயனுள்ள வருமானமுடையவராயிருக்கின்றனர். மேலே சொன்ன நியாயங்களை இவர்களுக்குப் பொருத்தமுடையதாக்குக.

6. தனிப்பட்ட காப்புறுதி சமூகக் காப்புறுதி என்பவற்றுக்கிடையே யுள்ள முக்கியமான வித்தியாசங்கள் சிலவற்றைக் கூறுக.

7. பின்வரும் கருத்துக்களைப் பற்றி ஆராய்க :—

P விடயத்தில் இடம் சம்பந்தமாகச் சமநிலையிருக்கும். ஆனால் அதற்குப் பிரதிகூலமாயுள்ளது போக்குவரத்துச் செலவு;
இலட்சியபூர்வமான பருவ விலைமுறை; தடைசெய்தல், ஊகவியாபாரம், சுருக்கவிலை; மோகம், பொதுசன உளப்போக்கு,
குறைந்து செல் இறுதிநிலைப்பயன்;
நுகர்வில் நிலையான தன்மையும் நிலையற்றதன்மையும்.
சூதாட்டமும் காப்புறுதியும்.
சமூகக் காப்புறுதியும், தனிப்பட்டவர் காப்புறுதியும்.

படிப்பகம்

www.padippakam.com

# இருபத்துநான்காம் அத்தியாயம்

## கம்பெனியின் சமநிலை ; செலவும் வரவும்

*விலைகளை நிச்சயிப்பதில் ஏகபோக சக்திகளும்*
*போட்டிச் சக்திகளும் ஒன்று சேர்கின்றன.*

*எட்வாட் எச். சேம்பர்லேன்*

போட்டிமுறையிலுள்ள சப்பிளை தேவை என்பனவற்றின் தொழிற்பாட்டைப்பற்றிக் கடந்த பல அத்தியாயங்களிலே விபரமாக ஆராய்ந்தோம். "பூரணபோட்டி" எனப் பொருளாதார அறிஞர் கூறும் விடயத்தையே பெரும்பாலும் அவற்றில் ஆராய்ந்தோம்.

பொருளாதார அறிஞருக்குப் பூரண போட்டியென்பது திட்டமான பொருளுடையது. பலவகையான தொழில் தாபனங்களிடையிலும் கம்பெனிகளிடையிலும் கடுமையான போட்டி நடைபெறுகிறதென்று வியாபாரிகளும், சாதாரண மக்களும் பேசும்போது எதைக்கருதுகிறார்களோ அதிலும் பார்க்க மிக உறைப்பான கருத்திலேயே பொருளாதார அறிஞர் இதற்கு அர்த்தங் கொடுப்பார்கள்.

பூரணபோட்டியென்பது முக்கியமானதொரு விசேட சந்தர்ப்பமாகும். ஆனால் இது தனியொரு சந்தர்ப்பம். பொருளாதார அறிஞர் இதற்கு விசேடத்துவங்கொடுப்பது எதனாலென்றால் வளத்தை இஃது எவ்வளவு திறமையாகப் பயன்படுத்துகிறதென்பதை விளக்குவதனாலேயே. தற்காலத் தொழில்களைப் பற்றிய பல அமிசங்களை அஃது உண்மையாக எடுத்துக் காட்டமாட்டாது. நிச உலகத்திலே—அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் நாம் காண்பதுபோல.—அரைகுறையான ஏகபோக உரிமைகளும், போட்டி அமிசங்களும் கலந்திருப்பதைக் காணலாம். எனவே நிச உலகில் அரைகுறைப் போட்டியுண்டு. அது பூரணமான போட்டியுமன்று ; பூரணமான ஏகபோக உரிமையுமன்று.

மூன்றும் பிரிவில் எஞ்சியுள்ள அத்தியாயங்கள் நிறைபோட்டி, நிறைவில் போட்டி என்பவற்றை ஆராயும் சாதனங்களை யுதவும். நிறைபோட்டி ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட முடிபுகளில் எத்தகைய மாற்றங்களைச் செய்யவேண்டுமென்பதை அவை காட்டும். என்ன, எப்படி, யாருக்கு என்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விலைத்திட்டம் எவ்வாறு முயலும் என்பது பெரிதளவுக்கு ஏகபோக உரிமைக்குறைபாடுகளாலுண்டாகும் அமிசங்களால் பாதிக்கப்படும் ; இந்த அமிசங்கள் தற்காலக் கைத்தொழில்கள் பலவற்றிலே காணப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## நிறைபோட்டியின் வரைவிலக்கணம்

நிறைபோட்டி என்றால் என்ன ? பொருளியலறிஞர் எவ்வாறு அதற்கு வரைவிலக்கணம் கூறுவர் ? அவர்களுடைய தேவைகள் கடினமானவை. பல உற்பத்தியாளர் ஒரேவிதமான பொருளை விற்பனைசெய்யவேண்டும். ஒரு கம்பெனியின் பொருள் மற்றக் கம்பெனிகளின் பொருள்போலவே இருப்பதனால், சந்தையில் நிலவும் விலைக்கு மேலாக உயர்த்துவதற்கு நிறைபோட்டியிலுள்ள ஒரு கம்பெனிக்கு வழியில்லை. அதே பொருளை வேறு பல கம்பெனிகளும் உற்பத்தி செய்துகொண்டிருக்கும்போது, ஒரு கம்பெனி தனது உற்பத்தியை இரண்டுமடங்கோ நாலுமடங்கோ அதிகரிக்கு மானல் சந்தைவிலையைக் குறைக்க அது போதுமானதன்று. எனவே நிறைபோட்டியாளர் தாம் விரும்பிய அளவு பொருளை நடப்புச் சந்தை விலையில் விற்கக்கூடியவர் ; ஆனால் அந்தச் சந்தைவிலையை நியாயமான அளவுக்குக் கூட்டவோ குறைக்கவோ சக்தியற்றவர். நிறைபோட்டித் தொழில் என்றால், நிறைபோட்டியாளர் பலர் சேர்ந்து நடத்தும் தொழிலாகும். இத்தொழிலுக்கு ஏதோ ஒருவகையான வெந்தீசுமுறை அமைக்கப் பட்டிருக்கும் ; அல்லது மாற்றுச் சந்தைவிலையானது எடுத்துக்கூறப்பட்டிருக் கும். (வருங்காலத்திலே ஒரு பண்டத்துக்குக் குறித்த ஒரு தேதியில் வழங்கும் சந்தைவிலைகூட எடுத்துக்கூறப்படும்) இது வரைவிலக்கணம்.

இவ்வரைவிலக்கணம் எத்துணைக் கடினமானதென்பதைக் கவனிக்க வேண்டும். மனத்திலே தட்டுப்படும் சில பொருள்களை நினையுங்கள் ; சவர அலகு, பற்பசை, உருக்கு, அலுமினியம், உருளைக்கிழங்கு, கோதுமை, சிகரட், புகையிலை, நைலோன், பருத்தி முதலியன. இவற்றுள் நிறை போட்டி நிலைக்கு எவை பொருத்தமானவை ? சவர அலகன்று ; பற்பசையன்று ; சிகரட் அன்று ; சவர அலகுக்கோ, பற்பசைக்கோ, சிகரட்டுக்கோ வெந்தீசுச் சந்தையிருந்ததை நீங்கள் கேள்விப்பட்டிருக் கிறீர்களா ?

அலுமினியம், உருக்கு என்பனவும் நிறைபோட்டி வரைவிலக்கணத்துக் குப் பொருத்தமான பண்டங்களல்ல. பலகாலமாக ஒரே ஓர் அலுமினி யக் கம்பெனிதான் இருந்து வருகிறது. இஃது அமெரிக்க அலுமினியம் கம்பெனி ; சுருக்கத்துக்காக 'அல்கோவா,' எனப்படும். இன்று இதைவிட ரேனோல்ட்ஸ், கைசர் என வேறு சில கம்பெனிகளுமுண்டாயிருக்கின்றன. இந்தக் கம்பெனிகளோடு ஒப்பிட்டால் பருத்தி, கோதுமை என்னும் பண்டங் களுக்கு இலட்சக்கணக்கான கம்பெனிகள் காணப்படுகின்றன.

உருக்கின் நிலை எப்படி ? யூ. எஸ். ஸ்டீல், பெத்லஹெம் என்ற தாபனங் கள் உருக்குக்குப் பேர்போனவை. ரிபப்ளிக்ஸ்டீல், ஜோன்ஸ் அண்ட் லௌலின் முதலிய வேறு சில சிறிய உருக்குக் கம்பெனிகளும் உருக்கு உற்பத்தியிற் பெரும்பகுதியை நடத்துகின்றன. உற்பத்திரகம் எல்லாம் ஒரேமாதிரித்தான் இருக்கிறது. ஆனால் பெத்லஹேம் தாபனமோ, ரிபப்ளிக்


www.padippakam.com



தாபனமோ தாம் விரும்பிய அளவு உருக்கைச் சந்தையிற் கொடுத்து விலையை இறக்கக்கூடிய சத்தியுடையனவல்ல எனக் கூறுவது பொருந்தாது.

மேலே தரப்பட்ட பண்டங்களின் அட்டவணையிலே உருளைக் கிழங்கு, புகையிலை, கோதுமை, பருத்தி என்பனவே நிறைபோட்டி வரைவிலக் கணத்துக்குப் பொருந்தியவை. நைலோன், பருத்தியோடு போட்டியிடலாம். ஆனால் பொருளாதார அறிஞரின் அர்த்தப்படி அது நிறைபோட்டியில் உற்பத்தி செய்யப்படும் பொருளன்று. மேலும் அதன் உற்பத்தியாளரும் அதே அர்த்தப்படி நிறைபோட்டியாளருமல்லர்.[1]

**நிறைவில்போட்டியை கம்பெனியின் தேவையில் சரிவை உண்டாக்குதல் மூலம் பரீட்சித்தல்**




படம் 1.—நிறைபோட்டியிலுள்ள கம்பெனி தான் விரும்பியதையெல்லாம் கிடை நிலையான *dd* கோட்டை அனுசரித்து விற்கலாம். சந்தைவிலை பாதிக்கப்படமாட்டாது. ஆனால் நிறைவில் போட்டிக் கம்பெனி தனது தேவைக்கோடு கீழ் நோக்கிச் சரிவதைக் காணும். இது Q அதிகரிக்கவே P இறங்குவதால் ஏற்படும். பாதுகாப்புள்ள ஏகபோக உரிமையுடையதாய் அஃது இருக்காவிட்டால், போட்டிக் கம்பெனிகளின் P யில் வெட்டு ஏற்படுவதால் அதனுடைய சொந்த *dd* இடப்பக்கமாக *d'd'* க்கு நகரும்.

[1]. சில சமயம் பொருளியலறிஞர் நிறைபோட்டிக்குப் பல பரியாயப் பெயர்களைப் பயன் படுத்துவர். "தூய போட்டி" என்ற சொல் சில சமயம் தூய்மையற்றபோட்டி, நிறைவில் போட்டி, ஏகபோக உரிமைப் போட்டி என்ற பொருள்களுக்கு எதிரான சொல்லாகப் பயன் படுத்தப்படுகிறது. சில சமயம் இது "அணுப்போட்டி" எனவும் கூறப்படுகிறது. பல சிறிய கம்பெனிகள் பல அணுக்கள்போலதிரண்டு தொழில்செய்தலைக் குறிப்பிட இவ்வாறு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சில சமயம் பொருளியலறிஞர் "நிறைபோட்டியென்றால் உண்மையில் பூரணமான போட்டியே ; கோதுமைச் சந்தைபற்றிய எதிர்காலம் முழுவதையும் சந்தேகத்துக் கிடமின்றிக் கூறினாலன்றிக் கோதுமைச் சந்தை நிறைபோட்டியிலிருக்கிறதெனக் கூறமுடியாது" எனக்கூறுவர். ஆனால் இங்கே இந்தப்பொருளில் இச்சொல் பிரயோகிக்கப்படவில்லை. கோதுமை விலை ஏறியுமிறங்கியுங் கொண்டேயிருக்கும். இதனை எவரும் முன்னேறியேயறிந்து கொள்ள முடியாது. ஆனால் விற்பனையாளரில் எவராவது போதிய அளவுக்குக் கோதுமை விலையை மாற்றமுடியாதிருக்கும்வரை கோதுமைச் சந்தை பூரணபோட்டியிலிருக்கிறதெனவே கூறு வோம். (அரசாங்கம் கோதுமை விலையிலே தலையிடுமானால் (அத்தியாயம் 23 இல் கண்டபடி) நிறைபோட்டியிலுள்ள இந்த அமைப்பிலே ஏகபோக உரிமை நிறைவில்போட்டி புகுத்தப் படுகிறது.)

www.padippakam.com



**சுருக்கம்.**—தனிப்பட்ட விற்பனையாளர் நிறைவில் போட்டியாளராக தமது *dd* கோட்டையனுசரித்து இருப்பதால் விலைமீது ஓரளவு செல்வாக்குடைய வராய் இருப்பர். அத்தகைய விற்பனையாளரையுடைய தொழில்களில் அல்லது தொழிற்கூட்டங்களில் நிறைவில்போட்டி நிகழும்.

படம் 1 இல் குறித்த ஓர் உற்பத்தியாளர் நிறை போட்டியாளரா, நிறை வில்போட்டியாளரா என்பதை நிச்சயிக்க ஒரு சிறந்த பரீட்சை கொடுக் கப்பட்டுள்ளது. அவர் விற்பனை செய்யும் ஒவ்வொரு தொகைக்குமுள்ள விலையைக் கோட்டில் குறிக்க. 1 *a* படத்திலுள்ளதுபோல தேவைக்கோடு கிடைநிலையாயிருந்தால், அந்த விற்பனையாளர் விலையைப் பாதிக்கமாட்டார் என்பதும், நடைமுறைவிலைக்கு அவர் தாம் விற்கக்கூடிய அத்தனை யையும் விற்பார் என்பதும் தெளிவாகும். அப்போது அவர் நிறைபோட்டி யாளராவார்.[1]

**நிறைவில் போட்டியின் வரைவிலக்கணம்**

படம் 1 *b* யில் இருப்பது போலக் கீழே இறங்கும் தேவைக்கோட்டை ஒரு கம்பெனியுடையதாயிருக்குமானல்—அதாவது சந்தையில் அதிகம் பொருளை விற்பனை செய்ய அது விரும்பினல், *dd* கோட்டை அனுசரித்து விலையைத் திட்டமாய் இறக்கும்—அந்தக் கம்பெனியைப் பொருளியலறிஞர் நிறைவில்போட்டிக் கம்பெனியென இனப்படுத்துவர்.

இத்தகைய நிறைவில்போட்டியாளர் ஒழுக்கங் கெட்டவரென்று நினைக்கக் கூடாது. மேலும் மற்ற வியாபாரிகளைவிடக் குறைந்த விலையில் தமது பொருளை விற்கவோ, விளம்பரத்தை அதிகப்படுத்தவோ இந்த நிறைவில் போட்டியாளர் விரும்பமாட்டார் எனவும் எண்ணக்கூடாது. வியாபாரப் போட்டி வேறு; நிறைபோட்டி வேறு. ஜோன்ஸ் என்ற விவசாயி நிறை போட்டியாளர். அவர் தமது பொருளுக்கு விளம்பரம் செய்யமாட்டார். என் செய்யவேண்டும் ? அவர் விளைக்கும் கோதுமை முழுவதையும் சந் தைவிலையை இறக்காமல் விற்றுவிடுவார். ஆனல் அமெரிக்கப் புகை யிலைக் கம்பெனியின் விடயம் அப்படியன்று. அது தனக்குப் போட்டியா யுள்ள செஸ்டர்பீல்ட் பொருள்விற்பனைக் கம்பனியோடும், பொடிவியாபாரத் தோடும், மிட்டாய் வியாபாரத்தோடுங்கூடப் போட்டியிடும்.

சரியான பரீட்சை தேவைக்கோடு கிடைநிலையாயிருத்தல் பற்றியதாகும், கம்பெனி இலாபமுடையதோ இல்லையோ என்பது பிரச்சினையன்று. அல்லது அதற்குத் தனியுரிமைப்பத்திரமோ, இரகசியமான தெரிமுறைகளோ, வியாபாரச் சின்னங்களோ, சந்தைவிலைமீது ஆதிக்கஞ் செலுத்தக் கூடிய வேறு நன்மைகளோ இருக்கின்றனவா என்பதுமன்று.

[1]. படம் 1 *a* இலுள்ள தொழில் தேவை பெரிதும் வலப்பக்கமாயிருக்கும். சரிவு கீழ் நோக்கியிருக்கும். இது படம் 1 *b* இல் உள்ள *dd* போல இருக்குமேயன்றி நிறைபோட்டியா ளரின் கிடைநிலையான *dd* (படம் 1 *a*) போல இராது.

www.padippakam.com



ஒரு கம்பெனியின் தேவைக்கோடு கீழே இறங்கிஞல் அது நிறைவில் போட்டிக் கம்பெனியாகிவிடும். நிறைபோட்டியிஞுள்ள தனித்தனிச் சிறு கம்பெனிகள் இடைநிலேத் தேவைக்கோடு போலல்லாது, முந்திய அத்தியாயங்களிலே விவரிக்கப்பட்ட தொழில் தேவைக்கோடுபோல காணப்படும். (இதஞல் விலே விடயத்திலே இதற்குத் தனி உரிமையுண்டெனக்கொள்ளக் கூடாது. நிறைவில்லாத போட்டிச் சந்தைகளிலே பலவகையான ஏகபோகவுரிமை நிறைவின்மையிருப்பதை நாம் அவதானிக்கலாம்.)

**நிறைவில்போட்டி ; ஏகபோக உரிமை ; சிலருரிமை, வேற்றுமை செய்யப்பட்ட பொருள்கள்.**

**ஏகபோக உரிமை.**

நிறைவில்போட்டி எவ்வளவுக்கு நிறைவற்றதாகும்? தீவிரமான உதாரணம் : தனி விற்பனையாளர் ஒருவர் பூரண ஏகபோக உரிமையுடையவராயிருத்தல். இவரை ஏகபோக உரிமையாளர் அல்லது தனி உரிமையாளர் எனலாம். ஆங்கிலத்தில் மொஞேபொலிஸ்ட் என்பர். இது கிரேக்கச் சொல்; மொஞே என்ருல் ஒருவர் ; பொலிஸ்ட் என்ருல் விற்பனையாளர், அதாவது ஏகவிற்பனையாளர். இவருடைய தொழில் உற்பத்தி செய்யும் பொருளுக்கு அணுக்கமான பதிற்பொருளே எவரும் உற்பத்தி செய்வதில்லே. (படம் 1 *b* இலே மற்ருெரு கம்பெனியின் விலேயில் மாற்றமுண்டாஞல் இவருடைய *dd* கோடு அதிகம் மாருது.)

பிரத்தியேக ஏகபோக உரிமைகளான பொதுச் சாதனங்கள், தெலிபோன் என்பன வழக்கமாக அரசாங்கத்தாலேயே ஒழுங்குசெய்யப்படுகின்றன. இவைகூட எண்ணெய், கேபிள் போன்ற பதிற்பொருள்களேப் பற்றியும் அவற்ருல் ஏற்படக்கூடிய போட்டியைப் பற்றியும் கவனமாயிருக்கவேண்டும். பூரணமான ஏகபோக உரிமைகள் சார்புவகையில் எவ்வாறு முக்கியமற்றன என்பது இதஞல் தெரியும்.

**சிலருரிமையாளர் :** இதில் இரண்டுவகையினர் உளர். ஒரே வகையான பண்டத்தை உற்பத்திசெய்தும் விற்கும் சிலருள் சிலருரிமையாளர் ஒருவராயிருக்கலாம். உதாரணமாக A யின் உருக்கு B உற்பத்தி செய்யும் உருக்கைப்போலவேயிருந்தால், B விலேயைச் சற்றே குறைத்தவுடன் A யிடம் வாங்குவோர் B யிடம் வாங் முற்படுவர். A யை அல்லது B யை ஏகபோக உரிமையாளர் என்று கூறவிடமுடியாது. ஆஞல் விற்பனையாளர் தொகை குறைவாஞல் ஒவ்வொருவரும் சந்தையில் நியாயமான அளவு செல்வாக்கை உடையவராயிருப்பர்.

உற்பத்திப் பொருள் ஒரு சீராயுள்ளதும், தொழில் பெரிய எடுப்பிஞுள்ளதுமான அடிப்படைக் கைத்தொழில்களில் இத்தகைய சிலர் உரிமை சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது. உதாரணமாக அலுமினியம், நைலோன் என்பவற்றைக் குறிப்பிடலாம். மற்ருேர் உதாரணம் நியூ-யோக்குக்கும் சிக்காகோவுக்குமிடையில் பண்டங்களே ஏற்றிச் செல்லுதல்.

www.padippakam.com



இதற்கு மூன்று, நாலு ரயில் பாதைகளுண்டு. முற்காலத்திலே ரயில் வீதங்கள் ஒழுங்குமுறையில்லாதிருந்தன. அப்போது ஒவ்வொரு ரயில் பாதையும் தனக்கு அதிக வாடிக்கைக்காரரை உண்டாக்கிக் கொள்வதற்காகப் போட்டியிடும். நியூயோக்கிலிருந்து சிக்காகோவுக்குப் பண்டங்களை ஏற்றிச்செல்வது, நியூயோக்கிலிருந்து பவ்வலோவுக்கு ஏறிச்செல்வதிலும் பார்க்கச் சிலசமயம் மலிவாயிருக்கும். சில சமயம் நியூயோக்கிலிருந்து சிக்காகோமூலம் பவ்வலோவுக்கு ஏற்றிச் செல்வது மலிவாயிருக்கும்.

இரண்டாவது வகையைச் சேர்ந்த உரிமையாளர், ஒரு வகையான பண்டத்தை விற்காமல் பல்வேறுவகையான பண்டத்தை விற்பவராயிருப்பர். உதாரணமாக மோட்டார் உற்பத்தித்துறையிலேயுள்ள போட், செவ்லெட், பிளிமத் என்ற மூன்று உற்பத்தியாளரைக் குறிப்பிடலாம். இவர்கள் உற்பத்தி செய்யும் கார் வகைகள் வித்தியாசமானவை. சிகரெட் தொழிலிலும், பெரிய விற்பனையாளர் சிலரே. இவர்கள் வியாபாரம் முழுவதையும் தங்கள் கையில் வைத்திருக்கின்றனர். அதற்குப் போட்டியுண்டு. பெரிய இயந்திரத் தொழிலில் ஜெனரல் இலெக்ட்ரிக், வெஸ்டிங்ஹவுஸ், அலிஸ்-சேர்பேர்ஸ் முதலியன சிலருரிமை முறையில் இயங்குவன. இப்பண்டங்களை விற்பனை செய்வோர் சிலர் ; பண்டங்களிடையே வித்தியாசமுமுண்டு.

**வித்தியாசமுள்ள ஒரே இனப்பொருளை விற்பனை செய்யும் பலர் :**

இத்துறையிலே விற்பனையாளர் பலர். இவர்கள் ஒரே இனப்பொருளை உற்பத்திசெய்வதில்லை. சற்றே வித்தியாசமான ஒரே இனப்பொருளை உற்பத்திசெய்வர். நான் விற்கும் பற்பசை நீர் விற்பதிலும் சற்று வித்தியாசமானதாயிருக்காலம். எனது பற்பசையின் விலையை உயர்த்தினுல், எனது பிரசாரத்தினுலும் எனது பற்பசையை உபயோகித்த பழைய பழக்கத்தினுலும், எனது பற்பசையை மேலும் அதிகமாக விற்பனை செய்யமுடியும்.

உற்பத்திப் பொருள்களிடையே வித்தியாசமிருப்பது எதனுல்? பிரசாரம், விளம்பரம், வியாபாரச்சின்னம், உரிமைச் சின்னம், சுங்கம் என்பன இதற்குரிய காரணத்தை விளக்கும். குறிப்பிட்டதொரு சவரக்கடை அல்லது மளிகைக்கடை சில நுகர்வோர் வசிக்கும் இடத்துக்குச் சமீபத்திலிருக்கலாம். இவ்வாறு சமீபத்திலிருப்பது சிலசமயம் ஏகபோக உரிமையை அளிக்கலாம். ஆனுல் அதனுடைய விலை உயருமானுல், அது வியாபாரத்தை இழக்க நேரிடும்; தூரத்திதேயுள்ள போட்டியாவர் அந்த வியாபாரத்தைக் கைப்பற்றலாம். (படம் 1b யில் உமது போட்டியாளர் தமது P யை வெட்டினுல் *dd* கோடு கீழே இறங்குவதைக் காணலாம்.)

இந்த இனங்கள் ஒன்றையொன்று கவிந்துகொண்டிருக்கும். நிறை போட்டியிலிருந்து பல இனமான பொருளை விற்கும் விற்பனையாளர் அமைப்புமுறையை அனுசரித்தும், சிலருரிமை விற்பனைமுறையை அனுசரித்தும் சென்றபின்னர் ஏகபோக உரிமை முறை ஏற்படும்.

படிப்பகம்

www.padippakam.com



**போட்டியினங்கள் பற்றிய சங்கிரகம்**

அடுத்த பக்கத்திலேயுள்ள அட்டவணையில் நிறைபோட்டி நிறைவில் போட்டி என்பவற்றின் பல இனங்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதை ஆராய்ந்து படிக்க.

**விலை, பண்டத்தின் தொகை, மொத்த வருமானம்**

ஒரு கம்பெனி தனக்கு இலாபத்தைக் கொண்டுவரக்கூடிய உற்பத்தியையும் விலையையும் எவ்வாறு நிச்சயிக்கிறதென்பதை இனி ஆராய்வாம். நிறைவில்போட்டி நிறைபோட்டியையும் ஒரளவு உள்ளடக்கியுள்ளது. இங்கே தேவைக்கோட்டின் வளைவு அதிகமாயிராது. அப்போது நிறைவில் போட்டியாளரின் பொதுவிடயத்தைப் பற்றிச் சிந்திக்கலாம். இவர் பெயர் ஜோன் டோ கம்பெனியென்று வைத்துக் கொள்வோம். அவர் Q என ஒரு பொருளை உற்பத்தி செய்கிறார் எனக் கொள்வோம்.

அட்டவணை 2 கம்பெனியின் அசல் தேவைப்பட்டியலைக் குறிக்கிறது. அதில் மொத்த வருமானக் கோட்டின்கீழ் விடுபட்ட இலக்கங்களை வாசகர் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

கம்பெனி எவ்வளவை உற்பத்திசெய்யும்? என்ன விலையில்? அதனுடைய உற்பத்திச் செலவை அறிந்தாலொழிய இதை அறியமுடியாது.

**பெரும்பகுதிக் கைத்தொழில்கள் நிறைவில்போட்டியுடையவை—அதாவது ஏகபோக உரிமையும் போட்டியும் கலந்தவை.**

அட்டவணை 1. போட்டி வகைகள்

| போட்டிவகை | உற்பத்தியாளர் தொகை பொருளில் உள்ளவித்தியாசம் | எப்பொருளாதாரத்துக்குப் பொருத்தமானது | விலைமீது செல்வாக்கு | சந்தைப் படுத்தும் முறை |
|---|---|---|---|---|
| நிறைபோட்டி | பல உற்பத்தியாளர்: ஒரே வகைப்பொருள் | சிலவிவசாயக் கைத்தொழில்கள் | பூச்சியம் | சந்தைமாற்றம் அல்லது வெந்தீசு |
| நிறைவில்போட்டி : | | | | |
| பல வகைவிற்பனையாளர் | பல உற்பத்தியாளர் ; உற்பத்திப்பொருளில் பலரகம். உண்மையில் அல்லது கற்பனையில். | பற்பசை வியாபாரம் சில்லறை | சிறிது | விளம்பரம், பொருளின், தன்மையில் வித்தியாசம், விலை நிர்வாகஞ் செய்யப் படுகிறது. |
| சிலவிற்பனையாளர் | சில உற்பத்தியாளர் பொருளில்வித்தியாசமில்லை. சில உற்பத்தியாளர் பொருளில்வித்தியாசமில்லை. | உருக்கு அலுமினியம். கார், யந்திர வகை. | | |
| பூரணத்தனியுரிமை .. | தனி உற்பத்தியாளர் ; தனிப் பொருள், போட்டிப்பொருள் இல்லை | சில பொது சன உபயோகத்துக்குரியபொருள்கள். | அதிகம் .. | விளம்பரம் ; பொதுசனத் தொடர்பு. |

www.padippakam.com



ஒரு கம்பெனி தனது இலாபத்தை உச்சநிலேயில் வைப்பதற்கு என்ன செய்கிறதென்பதை விளக்குவதற்காகச் செலவு விடயத்தை ஆராயாது விடுவோம். கம்பெனிக்குச் செலவு இல்லாவிட்டாலும், உச்சவிலேயான 134 டொலரைக் கேட்கமாட்டாது. என்? எனெனில் அது தனது இலாபத்தையும் வருவாயையும் உச்சத்தில் வைத்துக்கொள்ள மாட்டாது. ஓரலகுக்கான உச்சவிலேயை அது பெற்றுக்கொள்ளும். ஆனால் ஓர் அலகையே அது விற்று 134 டொலர் மொத்த வருமானத்தைப் பெறும்.

செலவு பூச்சியமாயிருக்கக் கம்பெனி 7 அலகு உற்பத்தி செய்வதே ஏற்புடையது. அதற்குரிய நல்ல விலே 74 டொலர். மொத்த வருமானக் கோடு $R=P \times Q$ என்பதை ஆராய்ந்தே விடைபெறவேண்டும். அங்கே விலே உச்சத்தில் இல்லே. தொகையும் அப்படி இல்லே. உச்சமொத்த வருமானத் தானம் வருணந்தீட்டப்படாதிருக்கிறது. இங்கே விலே உச்சமன்று; பொருட்டொகையுமப்படியே. மொத்த வருமானம் உச்சமாக்கப்பட்டுள்ளது. அட்டவணே 2 உடன் உள்ள படம் 2 தேவைக் கோட்டுக்கும் மொத்த வருமானக் கோட்டுக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுகிறது.

**தேவை அட்டவணேயிலிருந்து கம்பெனி மெத்த வருமான அட்டவணேயைப் பெறுகிறது.**


| அளவு Q (1) | விலே P (2) | மொத்த வருமானம் $R=P \times Q$ (3) |
|---|---|---|
| 0 | டொ. 144 அல்லது கூட | டொ. 0 |
| 1 | 134 | — |
| 2 | 124 | 248 |
| 3 | 114 | — |
| 4 | 104 | — |
| 5 | 94 | — |
| 6 | 84 | 504 |
| 7 | 74 | 518 |
| 8 | 64 | 512 |
| 9 | 54 | — |
| 10 | 44 | — |

**அட்டவணே 2.** நிறைவில்போட்டியாளருக்கு தேவைக்கோடும் வருமானக் கோடும் எப்போழுதும் $R=P \times Q$. தவறிய தகவலே நிரப்பியதும் கம்பெனி தனக்குரிய எல்லாச் செலவையும் கேட்கமாட்டாதென்பதைப் பரீட்சிக்க முடியுமா? உச்ச P யில் தன் மொத்த வருமானத்தைக் கம்பெனி உச்சமாக்காது: ஆனல் 74 டொலர் P யிலேயே அவ்வாறு செய்யும். (உச்சலாபத்தின் சமநிலேத் தானம் என் இதுவாயிருக்கவேணடும், அதாவது அதன் உற்பத்திச் செலவு புறக்கணிக்கத்தக்கதாயிருக்கையில்?)

படிப்பகம்


www.padippakam.com






படம் 2. தேவைக் கோட்டிலிருந்து கம்பெனி மொத்த வருமானக் கோட்டைப் போடுகிறது இது தேவை நெகிழ்ச்சியுடையதாயிருக்கும் போது உயரும் குன்றைப்போலிருக்கும். தேவை நெகிழ்ச்சியற்றிருக்கும் போது சரியும். (Q=7 என்ற *m* தானத்திலே தேவைக் கோட்டின் வருமான நீள் சதுரம் உச்சமடைவதைக் காணலாம்.)

**நிலையான செலவுக்கோடு, மாறும் செலவுக்கோடு என்ற இரண்டையும் கூட்டினால் மொத்தச் செலவுக்கோடு உண்டாகும்.**




படம் 3.—நிலையான செலவுக்கோடு கிடைநிலையானது. மாறும்செலவுக் கோடு, நிலையான செலவுக்கோட்டுக்கு (FC) மேலே உள்ள தூரமே. மொத்தச் செலவுககோடு அதன் நிலைக்குத்தான தொகைக்குச் சமனாகும் TC (மொ.செ.) = FC(நி.செ.) + VC(ம.செ.)

படிப்பகம்

www.padippakam.com



## மொத்தச் செலவும், இறுதிநிலைச் செலவும்

இப்போது விலை விடயத்தை அறிமுகப்படுத்தலாம். கம்பெனி தேவைக் கோட்டை ஊகிக்கவேண்டும்.

பலவகையான உற்பத்திகளை உண்டாக்குவதற்கு ஏற்படும் செலவைக் குறுந்தவணைக்கு டொலரில் அச்சொட்டாக மதிப்பிடவேண்டும். அத்தகைய மொத்தச் செலவுக்கோட்டைப் பெறுவதற்குக் கணக்கு வைக்கும் முறைகள் கடினமானாலும், கம்பெனியானது எது நிலையான செலவு, எது மாறும் செலவு என்பதை நிச்சயப்படுத்தவேண்டும். இது 22 ஆம் அத்தியாயத்திலே சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பிட்டதொரு கம்பெனிக்கு அத்தகையதொரு செலவுத்திட்டத்தை அட்டவணை 3உம் படம் 3உம் கொடுக்கின்றன.

## மொத்தச் செலவு அட்டவணையிலிருந்து மற்றச் செலவுகளையெல்லாம் மதிப்பிடலாம் :

**அட்டவணை 3.** மொத்தச் செலவு, நிலையான செலவு, மாறும் செலவு ; ஓர் அலகுக்கான இறுதிநிலைச் செலவும் சராசரிச் செலவும். நிலையான செலவு Q விலுள்ள மொத்தச் செலவுக்குச் சமனாயிருக்கும் Q=0 ; FC (நி+செ.) ஒரு போதும் மாறாது. மொத்தச் செலவைப் பெற நிலையான செலவுக்குச் சேர்க்கப்படுவதே மாறும் செலவு. (ஒவ்வொரு Q வுக்கும் இதனைப் பரீட்சித்துப் பார்க்க).

| அளவு Q (1) | நிலையான செலவு FC (2) | மாறும் செலவு VC (3) | மொத்தச் செலவு TC=FC+VC (4) | ஓர் அலகுக்கான இறுதிநிலைச் செலவு MC (5) | ஓர் அலகுக்கான சராசரிச்செலவு AC=TC÷Q (6) |
|---|---|---|---|---|---|
| 0 | டொ. 256 | டொ. 0 | டொ.256 | ... | அனந்தம் |
| 1 | 256 | 64 | 320 | டொ64 | டொ.320 |
| 2 | 256 | 84 | 340 | 20 | 170 |
| 3 | 256 | 99 | 355 | 15 | 118.33 |
| 4 | 256 | 112 | 368 | 13 | 92. |
| 5 | 256 | 125 | 381 | 13 | 76.20 |
| 6 | 256 | 144 | 400 | 19 | 66.67 |
| 7 | 256 | 175 | 431 | 31 | 61.57 |
| 8 | 256 | 224 | 480 | 49 | 60. |
| 9 | 256 | 297 | 553 | 73 | 61.44 |
| 10 | 256 | 400 | 656 | 103 | 65.60 |

அலகின் சராசரிச் செலவைப் பெறுவதானால் மொத்தச் செலவை உற்பத்தியான அலகுகளாலே பிரிக்கவேண்டும் (அதாவது AC=TC÷Q). ஓர் அலகின் இறுதி நிலைச் செலவு முக்கியம். இறுதிநிலைச் செலவு, மேலதிக Q வை உற்பத்திசெய்யத் தேவைப்படும் மேலதிகச் செலவு. இது முன்னர் ஓரலகு குறைய உற்பத்திசெய்த மொத்தச் செலவைப் புதிய பெரிய மொத்தச் செலவிலிருந்து கழிக்கக் கிடைக்கும். (முக்கியம் : 5 ஆம் நிரலையும் 4 ஆம் நிலையும் ஒப்பிட்டுப் பார்க்க).

www.padippakam.com



**நிலையான செலவு :**—கோடு (1) ஓர் அலகுக் காலத்தில் 0 துவக்கம் 10 அலகுவரை போகும் பலவகை உற்பத்திமட்டங்களைக் காட்டுகிறது. கோடு (2) ஓர் அலகுக்குரிய நேரத்தில் கம்பெனிக்கான நிலையான செலவு 256 டொலர் எனக் காட்டுகிறது. இச்செலவு கம்பெனி ஒன்றையும் உற்பத்திசெய்யாவிட்டாலும் நிகழும். வரைவிலக்கணப்படி மொத்த நிலையான செலவு நிலையானது. எந்தவகையான உற்பத்தி நிலையிலும் இது 256 டொலரே. இது பழைய உற்பத்திகளாலும், இது வரை செய்த செலவுகளாலும், மேலதிகச் செலவுகளினாலும் உண்டாகிறது.

**மாறும் செலவு :**—கோடு (3) பலவகை உற்பத்தி மட்டங்களிலேயுள்ள மொத்த மாறும் செலவை இதுகாட்டும். வரைவிலக்கணப்படி உற்பத்தியில்லாவிட்டால் மாறும் செலவு பூச்சியம். ஆனால் தொகையான Q வை அனுசரித்து அது மாறும்.

ஆரம்ப உற்பத்தியிலே மாறும் செலவு விரைவாக அதிகரிக்கும். ஆனால் உற்பத்தி அதிகரிக்க, பெருவாரி உற்பத்திப் பொருளாதாரம் ஏற்படும். அப்போது உற்பத்திக்கு ஏற்ருற்போல மாறும் செலவு அதிகரிப்பதில்லை. குறைந்து செல்பயன் உண்டானதும் குறுந்தவணை மாறும் செலவு உற்பத்தியிலும் பார்க்க வேகமாக அதிகரிக்கும்.

**மொத்தச் செலவு :**

இது நிரை (4) இல் கொடுக்கப்பட்டுள்ளது. இது நிலையான செலவையும் மாறும் செலவையும் கூட்டியதொகையாகும். இது பூச்சியமான உற்பத்திச் செலவிலே 256 டொலரில் ஆரம்பித்து அதிலிருந்து மாறும் செலவுபோலவே அதிகரித்துக்கொண்டுபோகும். படம் 3 இலே மூவகைச் செலவினங்களின் படமும் காட்டப்படுகிறது.

**சராசரிச் செலவு :**

இதுவரை ஆராயப்பட்ட மூன்று செலவு அட்டவணைகளில் அடிப்படையானது மொத்தச் செலவே. மற்ற இரண்டையும் இதிலிருந்தே கணக்கிடலாம். கணக்காளர் வேறுவகையான செலவுக் கணக்குகளைச் செய்வது இலேசென நினைப்பர். அட்டவணை 3 இல் உள்ள (6) ஆவது நிரலிலே உற்பத்தியின் சராசரிச் செலவு (அல்லது அலகு) குறிக்கப்பட்டுள்ளது. சராசரிச்செலவு காணவேண்டுமானல் மொத்தச் செலவை உற்பத்தி அலகினால் பிரித்தால் ஓர் அலகின் சராசரிச் செலவு கிடைக்கும். $(AC = TC \div Q)$.

ஆரம்பத்திலே சராசரிச் செலவு அதிகமாயிருக்கும். ஏனெனில் பெரிய நிலையான செலவு சில அலகு உற்பத்திக்கே செலவாகிறது. உதாரணமாக உற்பத்தி பூச்சியமானல், ஓர் அலகின் செலவு அனந்தமாகும். ஒரே அலகை உற்பத்தி செய்வதானல், சராசரிச் செலவு 320 டொலர் ஆகும்.

25—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் பல அலகுகள் உற்பத்தி செய்யப்படும்போது நிலையான செலவான 256 டொலர் பல அலகுகளிடையே பகிரப்படுகிறது. படம் 4 இலேயுள்ள சராசரிச் செலவு நேரத்தோடு விரைவாக வீழ்ச்சியடைவதற்குரிய காரணத்தை இது விளக்குகிறது.

மேலதிகச் செலவைப் பல அலகுகள் வீதம் சிறிது சிறிதாகப் பரவி விட்டால் சராசரிச் செலவை அஃது அவ்வளவு தாக்கமட்டாது. மாறுந் தன்மையுடைய அமிசங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நிர்வாகச் சிக்கல்களினாலும் இயந்திரத் தளவாடங்களை வைப்பதற்கு இடமில்லாதபடியாலும் சராசரி மாறும் செலவு உயர, சராசரி செலவு உயரத்துவங்கும். எனவே அட்டவணை 3 நிரை (6) இலும் படம் 4 இலும் 8 அலகிலே சராசரி விலை மிகக் குறைவான இடத்திலிருக்கிறது. இங்கே அலகுக்கு அது 60 டொலர் ஆகும். இந்தத் தானத்துக்குமேலே உற்பத்தி விரிவடைந்தால் சராசரி விலை ஏறும். எனவே சராசரிக் கோடு U என்ற உருவத்தை உடையதாயிருக்கிறது. மேல்மிச்சச் செலவையும் பெருவாரி உற்பத்தியாலுண்டாகும் சிக்கனத்தையும் பரவச் செய்வதால் ஆரம்பத்திலே இது வீழ்ச்சியடைகிறது. கடைசியில் உயருகிறது. இதற்குக் காரணம் குறைந்துசெல் பயனுடைமையே.

**இறுதிநிலைச் செலவு :** அதிக இலாபத்தைப் பெறக்கூடியவாறு எவ்வளவை உற்பத்திசெய்யலாமென்பதை வியாபாரி நிச்சயித்துக்கொள்ளவேண்டும். எனவே அவன் உற்பத்தியை மாற்றுவதால் உண்டாகும் மேலதிகச் செலவில் அக்கறைகொள்ளுவானேயன்றி சராசரிச் செலவிலன்று. 22 ஆம் அத்தியாயத்திலே இம்மேலதிகச் செலவு மிக முகியமானதென்றும் அதற்குப் பொருளியலாளர் இறுதிநிலைச் செலவு என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்களென்றும் குறிப்பிட்டோம். (46 ஆம் பக்கத்திலுள்ள வரைவிலக்கணத்தைத் திருப்பிப் படிக்க).

அட்டவணை 3 இலுள்ள நிரை (5) ஒவ்வொரு மேலதிக உற்பத்தி அலகின் மொத்தச் செலவிலுள்ள வித்தியாசமே இறுதிநிலைச் செலவெனக் கணக்கிடுகிறது. ஐந்தாவது அலகிலிருந்து ஆறுவது அலகுக்குச் செல்வதற்குரிய இறுதிநிலைச் செலவு 4 ஆம் நிரலிலிருந்து கிடைக்கிறது ; அதாவது ஆறு அலகுகளின் மொத்தத்திலிருந்து ஐந்து அலகுகளின் மொத்தத்தைக் கழிப்பதாலுண்டாகிறது. இது 400–381 டொலர் அல்லது 19 டொலர் ஆகும். (8 அலகிலிருந்து 9 அலகுக்குச் செல்லும் இறுதிநிலைச் செலவு என்ன? ஏன்?)


இறுதிநிலைச் செலவின் நடவடிக்கைபற்றி அறிவதற்குப் படம் 5 ஐப்பார்க்க. MC (இ.செ.) கோடானது நிலையான செலவுக்குப் புறம்பானது. என்? நீர் மேலதிக அலகை உண்டாக்கினுலென்ன உண்டாக்காவிட்டாலென்ன, நிலையான செலவு இருந்துகொண்டேயிருக்கும். இறுதிநிலைச் செலவு முதலில் வீழ்ச்சியடையும் ; அதன்பின்னர் அது சராசரிச் செலவுக்குக் குறைவாயிருக்கும். முன்னுள்ள அலகுகளெல்லாவற்றினதும் சராசரிக்குக் குறை

www.padippakam.com



**சராசரிச் செலவுக் கோடு (AC) பொதுவாக U உருவமுடையதாயிருக்கிறது :**

சராசரிச் செலவு வளைகோடு




**படம் 4.** சராசரிச் செலவு, மொத்தச் செலவை Q தொகையினுல் பிரித்தால் இடைக்கும். ஆரம்பத்திலே அஃது உயர்வாயிருக்கும். ஏனெனில் FC (நி.செ.) சில அலகுகளுக்கிடையிலேயே பரப் பப்பட்டிருக்கும். Q என்ற தொகை அதிகரித்தால் சராசரிச் செலவின் FC/Q பகுதி மெதுவாக வீழ்ச்சியடையும். மேலதிகச் செலவைப் பல அலகுகளுக்கிடையே பரப்புதல் என்பது AFC என்ற உடைந்த வெள்ளைக் கோட்டாலும், AC (ச.செ.) கோட்டுக்கும் சராசரி மாறும் அலகுச் செலவுக் கோட்டுக்குமிடையிலுள்ள வர்ணந்திட்டிய பிரதேசத்தாலும் காட்டப்பட்டுள்ளது. AC ஆனது குறைந்தபட்சத்தை U இன் அடித்தானமான M இல் அடைகிறது. சராசரிச் செலவானது, சராசரி மாறும் செலவின் ஏற்றம் சராசரி நிலையான செலவின் வீழ்ச்சிக்கு மேலோங்கி நிற்கும்போது உயரும்.


வாகவே ஒவ்வொரு மேலதிக அலகும் செலவுடையதாஞல், அந்தச் சராசரிச் செலவுக்கு என்ன நடக்கும்? அஃது இழுத்து விழுத்தப்படும் நிலையிலிருக்கும். அத்துடன் சிறிது சரியும் கோடாகவுமிருக்கும். புதிய அலகுகளின் மேலதிகச் செலவு முந்திய அலகுகளெல்லாவற்றினதும் சராசரிச் செலவுக்குமேல் உயருமாஞல், இறுதிநிலைச் செலவு சராசரியை மேலே இழுக்கும்; எனவே MC, (இ.செ.) AC (ச.செ.) யை அடியிலே வெட்டி AC (ச.செ.) யைத்தன் பக்கம் இழுத்துக்கொள்ளும் ; முதலில் கீழேயும் பின்னர் மேலேயும் இழுக்கும் ; சமஞன கீழ்ப்பகுதியில் AC (ச.செ.) யை மட்டமாக்கிவிடும்.

www.padippakam.com



**இறுதிநிலே (அல்லது "மேலதிக") விலே முக்கியமானதொரு பொருளாதாரக் கருத்தாகும்.**

இறுதிநிலைச் செலவு வளைகோடு




படம் 5. இறுதிநிலேச் செலவு என்ருல் மேலதிக உற்பத்திக்குச் செலவாகும் மேலதிகச் செலவே. அட்டவணே 2 இலிருந்து இது கிடைக்கிறது. இது முன்னேய செலவையும் கவனமாக்க கழிப்பதாலுண்டாகும். படிகளே அழுத்தமானதொரு வளேகோடாக மாற்றிவிட்டால் MC வளேகோடு கிடைக்கும். MC ஆனது AC வளேகோட்டை அதன் அடியிலே வெட்டுவது தற்செயலாக எற்பட்டதன்று. கடைசி அலகானது சராசரிக்கு அதிக மாகச் செலவையுண்டாக்குமாஞல் M தானத்திலே AC வளேகோடு மேனேக்சிச் செல்லக்கூடியதாக அது சராசரிச் செலவை உயர்த்தும். MC (இ.செ.), AVC (ச.ம.செ.) ஐ AVC (ச.ம.செ.) இன் அடியில் ஏன் வெட்டுகிறதென்பதற்கும் இதுவே விளக்கமாகும்.

## இறுதிநிலே வருமானமும் விலேயும்

இனித் தேவை அல்லது வருமானம் என்ற அமிசத்தை ஆராய்வோம்; இறுதிநிலேச் செலவு என்பது மேலதிகச் செலவே. அதுபோல இறுதிநிலே வருமானமும் மேலதிக வருமானமே. இது பொருளின் மேலதிகமான அலகு ஒன்றை விற்பதஞல் உண்டாவது. இறுதிநிலே வருமானம், 2 ஆம் அட்டவணேயின் மொத்த வருமான நிரலிலிருந்து கிடைக்கும். இது அட்டவணே 4 இலே காட்டப்பட்டுள்ளது. இது அட்டவணே 2 ஐ மறுபடியும் திருப்பிக்காட்டுகிறது. அத்துடன் இறுதிநிலே வருமானத்துக்கு ஒரு புதிய நிரலேயும் உடையதாயிருக்கிறது.

www.padippakam.com



விலைநிரல் (2) க்கும் இறுதிநிலை வருமானநிரல் (4) க்குமிடையே என் வித்தியாமிருக்கிறதென்பது முதலில் வாசகருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். 2 அலகிலிருந்து 3 அலகு உற்பத்திக்கு நகரும்போது மூன்ருவது அலகு விற்கும் விலைக்கு இறுதிநிலை வருமானம் ஏன் சமனுக இருக்கவில்லை? அது 94 ஆயிருப்பதிலும் 114 டொலராக ஏன் இருக்கக்கூடாது?

மூன்ருவது அலகு 114 டொலருக்கு விற்கப்படுவது உண்மையே. ஆனுல் அதை விற்பனை செய்வதற்காக முன்னிருந்த 2 அலகுகளின் விலையை 10 டொலர் வீதம் (124 இலிருந்து 114 ஆக) வெட்டவேண்டியிருந்தது. இறுதிநிலை வருமானத்தைக் கவனிக்கும்போது முன்னுள்ள அலகில் ஏற்பட்ட நட்டத்தை மூன்ரும் அலகுக்கு எதிராகச் சாட்டுதல் பண்ணவேண்டும். எனவே இறுதிநிலை வருமானம் 114–(2 × 10) டொலர் அல்லது 94 டொலர் ஆகும். பொதுவாகப் பேசிசுடத்து இறுதிநிலை வருமானம் விலையிலும் பார்க்கக் குறைவானது. இதற்கு அடிப்படை வாய்பாடு ;

$n$ ஆம் அலகின் இறுதிநிலை வருமானம் $=(n-1)$ இலிருந்து $n$ அலகுக்குச் செல்லும்போதுள்ள மொத்த வருமானத்தின் வித்தியாசம்.
$=n$ ஆம் அலகின் விலையிலிருந்து விலை குறைக்கப்பட்டதால் முந்திய அலகுகளில் உண்டான வருமான நட்டத்தைக் கழித்தல்.


**இறுதிநிலை (அல்லது "மேலதிக") வருமானம் முக்கியமானதொரு பொருளாதாரக் கருத்தாகும் :**

| தொகை Q (1) | விலை P (2) | மொத்த வருமானம் R=P×Q (3) | இறுதிநிலை வருமானம் MR (4) |
|---|---|---|---|
| 0 | டொ. 144 + | டொ. 0 | |
| | | | டொ. 134 |
| 1 | 134 | 134 | |
| | | | 114 |
| 2 | 124 | 248 | |
| | | | 94 |
| 3 | 114 | 342 | |
| | | | 74 |
| 4 | 104 | 416 | |
| | | | 54 |
| 5 | 94 | 470 | |
| | | | 34 |
| 6 | 84 | 504 | |
| | | | 14 |
| 7 | 74 | 518 | |
| | | | — 6 |
| 8 | 64 | 512 | |
| | | | —26 |
| 9 | 54 | 486 | |
| | | | —46 |
| 10 | 44 | 440 | |


**அட்டவணை 4.** இறுதிநிலை வருமானமும் விலையும் : மேலதிக உற்பத்தி அலகு ஒன்றை விற்கும்போது மொத்த வருமானத்திலேயுண்டாகும் மாற்றமே இறுதிநிலை வருமானமெனப்படும். இது MR (இ.வ) எனப்படும். கோடு (4) இல் உள்ள ஒவ்வொரு வரிசையையும், 3 ஆம் கோட்டிலுள்ள வரிசையில் மேலேயுள்ளதைக் கீழேயுள்ளதிலிருந்து கழிப்பதால் உண்டாவதாகும். இந்தக் கம்பெனிபோல் உள்ள ஒவ்வொரு நிறைவில்போட்டியாளருக்கும், MR (இ.வ.) ஆனது விலைக்குக் கீழே இறங்குவதைக் காணலாம்.

www.padippakam.com






**படம் 6(a):** நிறைவில்போட்டியிலே இறுதிநிலை வருமானம் விலையிலும் குறைவாகவே யிருக்கும். *dd* கீழ் நோக்கிச் சரிந்தால் இறுதிநிலை வருமானம் விலைக்குக் குறைவாக விழுந்துவிடும். தேவையானது நெகிழ்ச்சியற்றதாய்ப்போனல் இறுதிநிலைவருமானம் எதிர்க்கணியமாகும். இந்நிலையில் பொருள்களின் தொகை அதிகரிப்பதால் மொத்த வருமானம் இறங்கிவிடும். நிறைவில் போட்டியாளன் பொருள் Q இல் சிறிய அலகை விற்பதால் முந்திய அலகுகளில் உண்டாகும் நட்டத்தை NP என்ல் வர்ணந் தீட்டிய பகுதி காட்டுகிறது KM என்ற இறுதிநிலை வருமானத்தைப் பெற PM என்ற சந்தைவிலையிலிருந்து கழிக்கப்பட்ட சமப்பிரதேசத்தை PK காட்டுகிறது.




**படம் 6(b):** நிலைத்திட்டமான *dd* இருப்பதால் முந்திய அலகுகளிலே நிறைபோட்டியாளருக்கு நட்டமில்லை. எனவே MR உம் *dd* உம் ஒரே மாதிரியாயிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



### விவேகமுள்ள கம்பெனி தனக்கு உயர்ந்த இலாபம் அளிக்கும் தானத்தைத் தேடும் :

**அட்டவணை 5.** கம்பெனியின் வருமானம், விலை, இலாபம் என்பனவற்றின் சுருக்கம்.

| அளவு Q (1) | விலை P (2) | மொத்த வருமானம் R = P × Q (3) | மொத்த விலை TC = FC + VC (4) | மொத்த இலாபம் (5) [= (3) − (4)] | இறுதிநிலை வருமானம் MR (6) | இறுதிநிலை செலவு MC (7) |
|---|---|---|---|---|---|---|
| 0 | டொ. 144 + | டொ. 0 | டொ. 256 | டொ. — 256 | டொ. 134 | டொ. 64 |
| 1 | 134 | 134 | 320 | — 186 | 114 | 20 |
| 2 | 124 | 248 | 340 | — 92 | 94 | 15 |
| 3 | 114 | 342 | 355 | — 13 | 74 | 13 |
| 4 | 104 | 416 | 368 | + 48 | | |
| | 94 | | | | 54 | 13 |
| 5 | 84 | 470 | 381 | + 89 | 34 | 19 |
| 6 | 74 | 504 | 400 | + 104 | 14 | 31 |
| 7 | 64 | 518 | 431 | + 87 | — 6 | 49 |
| 8 | 54 | 512 | 480 | + 32 | — 26 | 73 |
| 9 | | 486 | 553 | — 67 | — 46 | 103 |
| 10 | | 440 | 656 | — 216 | | |

இங்கே தேவைத் தகவல், விலைத் தகவல் எல்லாமுண்டு. கூடிய இலாபம் 6 வரிசையிலுண்டு. இங்கே அளவு = 6. விலை = 84 டொ., இலாபம் = 104 டொ. இதுவே உச்சலாபம்.

$Q < 6$, $MR > MC$ இல் கம்பெனி விரிவடையும்; $Q > 6$, $MR < MC$ என்பதில் கம்பெனி தனது உற்பத்தியைச் சுருக்கும்.

$Q = 6.0$ என்ற இடத்துக்கு, MR உடன் MC ஐச் சரிப்படுத்தினால் (5 இக்கும் 6 இக்கும் அல்லது 6 இக்கும் 7 இக்கும் இடையில் இல்லாமல்) $MR = 24$ டொலர் $= MC$ என்பதைக் காணலாம். $MR = MC$ தான் உச்சலாபத்துக்குரிய நிலையாகும்.

படம் 6*a* யில் உள்ள சமாந்தரமான வருணந்தீட்டிய பிரதேசம் முந்திய அலகுகளில் உண்டான நட்டத்தைக் காட்டும். மேலதிக அலகுகள் விலையை விழச் செய்யாத நிறைபோட்டியிலேதான் வருமானத்தில் நட்டம் பூச்சியமாகும். அப்போதுதான் விலையும் இறுதி நிலை வருமானமும் ஒன்ருக இருக்கும். (படம் 6 *b* பார்க்க[1].)

[1]. அக்கறையுள்ள வாசகர் அட்டவணை 4 இலே இறுதிநிலைவருமானம் விலை என்பவற்றிடையேயுள்ள தொடர்பைப் பரீட்சித்துப்பார்க்கலாம். 20 ஆம் அத்தியாயத்திலே விவரிக்கப்பட்டதேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக்கீழே விழுமானல் விலையின் விகித இறக்கம் எப்பொழுதும் விற்ற பொருளின் தொகைவிகிதத்துக்கு அதிகமாயிருக்கும். உற்பத்தியிலே ஏற்றம் மொத்தவருமானத்தைக் குறைக்கும். அதாவது இறுதிநிலை வருமானம் எதிர்க்கணியமாகும். ஏன் நமது வாய்பாட்டிலே இரண்டாவது சொற்ருெடர்—முந்திய அலகுகளிலுள்ள நட்டம்—என்பது முதலாவது சொற்ருெடரான கடைசி அலகுக்குப் பெற்ற விலை என்பதை அடித்துவிடும். மேலதிக உற்பத்தியைக் கம்பெனி அழித்துவிட்டால் அது நல்ல இலாபம் பெறும் ; இல்லாவிட்டால் புதிய உற்பத்திச் சந்தையைக் குழப்பிவிடும்.

படிப்பகம்

www.padippakam.com



**இலாபத்தை உச்சப்படுத்தல் : நல்ல இலாபம் பெறக்கூடிய தானம்**

இப்போது நாம் எல்லாத் தகவல்களையும் பெரியதோர் அட்டவணையிலே அடக்கலாம். அது 5 ஆவது அட்டவணை. மொத்த இலாபமே இந்த அட்டவணையில் மிக முக்கியமானது.

எவ்வளவு தொகை இலாபத்தை உச்சப்படுத்தும் ; என்ன விலையில் அவ்வாறு நடக்கும்? இதற்கு இலேசான வழி கோடு (5) ஐக் கணக்கிடல். மொத்தவிலை, மொத்த வருமானம் என்பவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசமான மொத்தலாபம் இந்தக் கோட்டிலுண்டு. இந்தக் கோட்டைப் பார்க்கும்போது பின்வரும் விடயங்கள் தெளிவாகும்.

உச்சமான தொகை 6 அலகாகும். இந்த அலகின்விலை 84 டொலர் வீதமாகும். வேறு சந்தர்ப்பங்களிலே இந்த உச்ச இலாபம் 104 டொலர் கிடைக்கமாட்டாது. மற்றொரு வழி இறுதிநிலை வருமானம் கோடு (6) ஐ இறுதிநிலைச் செலவு கோடு (7) உடன் ஒப்பிடுதல். மேலதிக உற்பத்திக்கு ஓரடி எடுத்துவைத்தாலும், இறுதிநிலை வருமானம், இறுதிநிலைச் செலவிலும் பார்க்க அதிகரிக்கும். அதனால் நமது இலாபம் அதிகரிக்க, உற்பத்தி அதிகரிக்கும். ஆனால் இறுதி நிலைச் செலவு இறுதிநிலை வருமானத்திலும் பார்க்க அதிகமாயிருந்தால், உற்பத்தி குறையும். சமநிலை எங்கே?

நல்ல இலாபச் சமநிலையானது இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருமானமும் சமமாயிருக்குமிடத்திலேயே நிகழும். இங்கேதான் உச்சலாபம் அடையக்கூடிய உச்சமான சந்தர்ப்பமேற்படும்.

இறுதிநிலைச் செலவையும் இறுதிநிலை வருமானத்தையும் ஒப்பிட்டு உச்சத் தானத்தை அறியும் இந்த இரண்டாவது முறை மொத்த இலாபத்தை ஆராயும் முதலாவது முறையிலும் சிறந்ததுமன்று ; குறைந்ததுமன்று. இவையிரண்டும் ஒன்றே.

**கம்பெனியின் உச்சத்தானத்தை வரைபடத்தினால் காட்டுதல் : மொத்தக் கோடுகள்**

7a படத்திலுள்ள மூன்று கோடுகளும் இந்த நடவடிக்கைகளைக் காட்டும். மொத்த வருமானம் ஒரு குன்றைப்போன்றது. தேவையானது நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் அதனுடைய சரிவு மேனோக்கியிருக்கும். தேவை நெகிழ்ச்சியற்றதாயிருந்தால் அது கீழ்நோக்கியிருக்கும். மேலதிக உற்பத்தியை வெறுமனே பெற முடியாதானபடியால் மொத்தச் செலவு அதிகரிக்கும். மொத்த வருமானத்துக்கும் மொத்தச் செலவுக்குமிடையிலுள்ள தொகையே மொத்த இலாபம். இது படத்திலே இரண்டு இடத்தில் இலேசாக வர்ணந் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதமக் கோட்டினால் நேரடியாகவும், மேலேயுள்ள வருமானம், செலவு என்பவற்றின் கோடுகளிடையேயுள்ள குத்துநிலைத் தூரமாகவும் இது காட்டப்பட்டுள்ளது.

www.padippakam.com



உற்பத்தி சிறிதாயிருந்தால் மொத்தச் செலவு மொத்த வருமானத்தி திலும் அதிகமாயிருக்கும். அதனால் கம்பெனி வரவு செலவைச் சரிக்கட்டிக் கொள்ளமாட்டாது. உற்பத்தி அதிகம் பெருகினாலும் செலவு அதிகரிக்கும்; விலை குறையும். அப்போதும் ஆபத்துண்டாகிறது. எனவே இந்த இரண்டு நிலைகளுக்குமிடையிலேதான் உச்சலாபம் பெறக்கூடிய உச்சத்தானமுண்டு. உச்ச உற்பத்தி அளவு 6 அலகாகும் இங்கே மொத்த இலாபம் உச்சத்திலிருக்கும். மேற்பரப்பிலுள்ள இரண்டு கோடுகளுக்கிடையிலுமுள்ள நேர்க்குத்தான வித்தியாசம் உச்சமாயிருக்கும்.[1]

நல்ல இலாபத்தானம், மொத்த வருமானக் கோட்டின் சரிவும், மொத்தச் செலவுக்கோட்டின் சரிவும் சமாந்தரமாயிருக்கும் இடத்திலுள்ள தொகையேயாகும். அப்போது மொத்த இலாபக்கோட்டின் சரிவு பூச்சியமாகவும் இடைநிலையாகவுமிருக்கும்.

4 அலகுபோன்ற சிறிய உற்பத்திகளில் இரண்டு சரிவுகளும் பிரிந்து செல்லும். அதனால் இரண்டு கோடுகளுக்குமிடையேயுள்ள நேர்க்குத்தான தூரம் அதிகரிக்கும். கம்பெனி தனது உற்பத்தியைப் பெருக்கும். உச்சத்துக்கு அதிகமான உற்பத்தியில் இரண்டு சரிவுகளும் குறுகிக்கொண்டு வரும். பின்னால் நகர்வதன்மூலம் வருமானத்துக்கும் செலவுக்குமிடையேயுள்ள நிலைக்குத்தான தூரத்தை அதிகரிக்கலாம். உச்சத் தானத்திலே தான் சரிவுகள் சமாந்தரமாயிருக்கும்; இதில் வலப்பக்கமாகவோ இடப்பக்கமாகவோ திரும்பாமலிருப்பது இலாபகரமானதாகும். இதுதான் கம்பனியின் உச்சலாபச் சமநிலை, அதுவே நல்ல இலாபத்தானமாகும்.

## இறுதிநிலைக் கோடுகளைப் பயன்படுத்தல்

மொத்தச் செலவு, மொத்த வருமானம் என்ற கோடுகளின் சரிவுதான் இறுதிநிலைச் செலவு, இறுதிநிலை வருமானம் என்பன. படம் 76 இல் உத்தம உற்பத்தியை நிர்ணயிக்கும் முறை புதிதாகக் காட்டப்பட்டுள்ளது. MC (இ.செ.), MR (இ.வ.) கோடுகள் ஒவ்வோர் உற்பத்திக்கும் கீறப்படுகின்றன. (இது 5 ஆம் அட்டவணையிலே கொடுக்கப்பட்ட தகவலை மென்மையாக்குவதாலோ 7 *a* யிலுள்ள இலக்கச் சரிவுகளை வாசித்துக்கொள்ளவதாலோ உண்டாகிறது). MC (இ.செ.) கோடு MR (இ.வ.) கோட்டைச் சரியாக 6 அலகில் வெட்டுமிடமே உச்சலாபம் தரக்கூடியதானம்.

1. உச்சவிலையை இந்தப் படத்திலே உடனடியாகக் காட்டமுடியாது. ஆனால் தொகை 6 ஆக இருக்கிறதென அறிந்தால் விலை என்ன என்பதை டொலர் (84) அட்டவணையைப் பார்த்து இலேசாக நிச்சயித்துக்கொள்ளலாம். அல்லது 2 ஆம் படத்தில் உள்ள தேவைக் கோட்டைப் பார்த்து விலையை அறியலாம்; அல்லது 7*b* ஐப் பார்த்து அறியலாம். அதில் Q6 அலகில் பார்த்தால் தெரியும்.


www.padippakam.com



**நல்ல இலாபத்தானம் மொத்தக் கோட்டினுல் அல்லது இறுதிநிலைக் கோட்டினுல் காட்டப்படுகிறது.**

முதலாவது, மொத்த வருமானம், மொத்தச் செலவு, இலாபம் என்ற வளைகோடுகளால் :

மொத்த வளைகோடுகள்




படம் 7 (a) TR (மொ.வ), TC (மொ.செ.), வளைகோடுகளிடையேயுள்ள நேர்க்குத்தான தூரம் மொத்த இலாபத்தைக் குறிக்கும். அதுவே புள்ளியிடப்பட்டுள்ளது. TR இக்கும் TC இக்கும் சமமான சரிவும் T.Pro மொத்த இலாபத்துக்கு கிடையான சரிவுமிருந்தால் நல்ல இலாபத்தானம் காணப்படும்.

நல்ல தொகை 6 அலகு என்பது இப்போது தெரிந்திருப்பதால், தேவைக் கோட்டைப் பார்த்து நல்ல விலை (அல்லது சராசரி வருமானம்) 84 டொலர் என்பதை அறியலாம். இப்போது கேத்திரகணித முறையில் நமது முக்கியமான வாய்பாட்டை அடைகிறோம்.

தேறியலாபம் எப்போது உச்ச நிலையடையுமென்றால் ;

இறுதிநிலை விலை = இறுதி நிலைவருமானம்.

நியாயவாதத்தை அனுசரிக்கும் ஒரு கம்பெனி நல்லலாபச் சம நிலையை அடையுமென்ற ஆராய்ச்சி இவ்வளவில் முடிவடைகிறது.

www.padippakam.com




## கடந்தவையும் இறுதிநிலையும்

பொருளாதார அறிமுறை ஒருவரை நல்ல வியாபாரியாக்கிவிட மாட்டாது: ஆனால் அது புதிய சிந்தனைமுறையை அளிக்கிறது. அதற்கு ஓர் உதாரணம்:

பொருளியல் அறிஞர் ஒரு தீர்மானத்திலடங்கிய "மேலதிக" அல்லது "இறுதிநிலைச்" செலவையும் நன்மையையும் அழுத்தமாய்க் கூறுவார். அவர் சொல்லுகிறார் :—

போனது போகட்டும் ; நடந்ததைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். முன்னுக்குப் பாருங்கள். என்ன ஒரு முடிவு செய்து கொண்டாலும் அதன்

**இரண்டாவது, இறுதிநிலை வருமானம் இறுதிநிலைச் செலவு என்ற வளைகோடுகளினால்:**




**படம் 7 b.** இறுதிநிலைச் செலவுவளைகோடு இறுதிநிலை வருமானவளைகோட்டை E இல் வெட்டும்இடத்தில் நல்ல இலாபத்தானம் காட்டப்படுகிறது. F இலே காட்டியபடி இந்த $Q=6$ தேவை வளை கோட்டில் $P=84$ டொலருக்கு விலையாகிறது. (வர்ணந்தீட்டப்பட்ட நீள்சதுரம் 104 டொலர் மொத்தலாபத்தைக்காட்டுகிறது. ஏன்? அதைப் போன்ற வேறு நீள்சதுரத்துக்கு பரப்பு ஏன் குறைவாயிருக்கும்?)

www.padippakam.com



பயனுக உண்டாகும் மேலதிகச் செலவு, மேலதிக நன்மை என்பவற்றை ஒப்பிடுக. நீர் செய்யும் தீர்மானம் சாதகமாகவோ பாதகமாகவோ இருக்க லாம். இரண்டு வழியிலும் ஏற்படக்கூடிய நன்மையைத் தீமைக்கு ஈடு செய்துவிடுக.

இவ்வாறு போனதற்கு இரங்காமலிருப்பது தீர்மானஞ் செய்வோர் தா மாக அனுசரிக்கும் ஓர் ஒழுக்கமாகும். அவர்கள் பொருளாதார அறிவு பெற்றவராயிருந்தாலென்ன பெருதவராயிருந்தாலென்ன இவ்வாறு செய் வது வழக்கம். இது மிக நல்ல பழக்கமாகும்.

இதற்கு ஓர் உதாரணம் பின்வருமாறு :—

அரசன், நெருப்புப் பெட்டி உற்பத்தி செய்யும் தனி உரிமையாளரின் சலுகைக்காக குறிப்பிட்ட ஒரு தொகையை வரியாக விதிக்கிருன். இது புதிய நல்ல இலாபத்தானத்தையும் விலையையும் எவ்வாறு பாதிக்கும். இந்த அத்தியாயத்திலே கூறப்பட்ட சாதனங்களை நன்ருகத் தெரிந்து கொண்டால் குறிப்பிட்ட மட்டமானதொரு தொகைவரி MR (இ.வ.) கோட்டையோ MC (இ.செ.) கோட்டையோ நகரச் செய்யமாட்டாது என்பது தெளிவாகும். வரிக்கு முன்னும் பின்னும் தனியுரிமையாளர் தமது இலாபத்தை உச்சமாக்கினுல், வேறு எதுவும் மாருமலும் அவர் வியாபாரத்திலே தொடர்ந்தும் இருந்தால், மட்டவரியானது விலையிலோ உற்பத்தியிலோ எவ்வித மாற்றத்தையுமுண் டாக்கமாட்டாது. ஏனெனில் இவ்வரியை தனியுரிமையாளரே பொறுத்துக் கொள்ளுகிருர்.

**நிறைவில்போட்டி, வளத்தைப் பகிர்வதை எவ்வாறு பாதிக்கும்**

அடுத்த அத்தியாயத்திலே நிறைவில் போட்டி சம்பந்தமான சில முக்கிய மான உதாரணங்கள் ஆராயப்படும். இவை நம்பிக்கைக்குமாருன கொள்கை என்றதுறையைச் சேர்ந்த முக்கியமான சில பொதுக் கொள்கைகளில் எம்மை ஈடுபடுத்தும்.

என்ன, எப்படி, யாருக்கு என்ற முக்கியமான பிரச்சினைகளை சுதந்திர விலைத்திட்டம் தீர்த்துவைக்கும் திறமையை நிறைவில் போட்டி எவ்வாறு பாதிக்கிறது என்பதைச் சுருக்கமாக ஆராய்வாம். சுதந்திர விலைத்திட்டத் திலே கம்பெனிகள் சரியும் தேவைக் கோட்டை எதிர்நோக்குகின்றன. அதனுல் அவற்றின் இறுதிநிலை வருவாய் விலையிலும் பார்க்கக் குறைந்த தாயிருக்கும்.

அத்தகைய நிறைவில் போட்டியாளர் எவ்வளவுக்குத் தமது சுயநலத்தை நாடுகிருர்களோ அவ்வளவுக்கு அவர்கள் பொதுநன்மைக்கான கருமங் களைச் செய்வதற்கு அடம் ஸ்மிதின் " தோன்ருத் துணை " யையே நம்பி யிருப்பார்களா ?

இல்லை ; இந்தப் படத்திலே இப்போது ஒரு குறைபாடிருக்கிறது. வியா பாரி ஒருவர் இறுதிநிலை வருமானத்தை கணக்கிலெடுக்கும்பொழுது, சந்தையைக் குழப்பாதிருப்பதற்குப் பார்த்துக்கொள்வார். தமது பொருளை

படிப்பகம்

www.padippakam.com



அருமையானதாகவே வைத்திருக்கப் பார்ப்பார். இல்லாவிட்டால் அவருடைய வருவாய் இறங்கிவிடும். ஆனால் பொருளை முற்றாய் அருந்தல் நிலையில் வைத்திருக்கமாட்டார். அப்படியானால் அவருடைய வருமானம் பூச்சியமாகிவிடும். இறுதிநிலைச் செலவு மட்டத்துக்குத் தமது விலை இருக்க அவர் விரும்பமாட்டார். விவசாயத்திலுள்ள நிறைபோட்டியாளர் போலன்றி இவர் தமது பொருளில் போதிய அளவை (Q) தனது MC (இ.செ.) ஐ MR (இ.வ.) இலே வைத் திருப்பதற்காக விற்பனை செய்யாமல் வைத்திருப்பார். MR அவருடைய P (வி) இலும் குறைவாகவேயிருக்கும்.

பொருளாதாரம் உற்பத்தியையும் விநியோகத்தையும் அமைக்கும் முறையின் நன்மை தீமைகளை விலை, இறுதிநிலைச் செலவு என்பவற்றிடையிலுள்ள வித்தியாசம் எவ்வாறு பாதிக்கிறது. இந்தச் சிக்கலான பிரச்சினையை முன்னர் நாம் சந்தித்தோம். இனியும் சந்திப்போம்.

முதலாவது, நிறைவில் போட்டியாளரை, அரசாங்கம் நிறைபோட்டியாளர் போலப் போட்டியிடவைத்தால் அவர் இப்போது உழைப்பதிலும் அதிகமாக உழைப்பார். அப்படியானால் அது நல்லதா, தீயதா ? அவர் தனவந்தரா ? அல்லது வறுமையும் தேவையுமுடையவரா ? (அவர் தாம் பெறும் வருவாயை கலைகளை வளர்க்கப் பயன்படுத்துவாரா ? அல்லது அதனால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பாரா ? தனியுரிமையால் வந்த இலாபத்தைக்கொண்டு புதிய கைத்தொழில் ஆராய்ச்சியை நடத்துவாரா ? அல்லது தமது பொருள் மற்றக் கம்பனிகளின் பொருளிலும் சிறந்ததென்பதை மக்களுக்கு அறிவுறுத்துவதில் செலவு செய்வாரா ?

சாதாரண மனிதன் தனியுரிமைப் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கும் போது மேலே கூறிய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பான். யாருக்கென்ற பிரச்சினையும் எவ்வாறு விநியோகஞ்செய்வதென்ற பிரச்சினையும் இவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றனவென்பதையும் பற்றிச் சிந்திப்பான்.[1] இது வருமானச் செறிவிலே பாதகமான விளைவுகளை உண்டாக்காவிட்டாலும், நிறைவில் போட்டியானது முக்கியமானதொரு பொருளாதாரக் கெடுதியையே காட்டுகிறது. இதற்கு ஓர் உதாரணம் : பணமானியம் எல்லாம் சரியாகப் பகிர்ந்துவிடப்படுகிறதென நினையுங்கள். இதில் A என்பவர் மாத்திரமே நிறைவில்போட்டியாளர். மற்றவர்களெல்லாரும் நிறைபோட்டியாளர். அவர்கள் தமது MC (இ.செ.) ஐ P (வி) இக்குச் சமமாக வைத்துக் கொள்வர்.

1. சம்பந்தப்பட்ட தொழிலிலே எவரும் பிரவேசிக்கலாமென்ற உரிமை இருக்குமானால், நிறைவில் போட்டியால் எவரும் இலாபம் பெறக்கூடிய விளைவு உண்டாகுமெனக் கூறுவதற்கில்லை. P, MC இக்கு மேலேயிருக்கலாம் ; அதன்விளைவு மூலப்பொருள்கள் வீண்விரயஞ் செய்யப்படுதலே ; பல இடங்களில் பல தொழிலாளர் அதிகவேலை செய்யாது காத்துநிற்கும் பெட்ரோல் தாபனங்கள் இருக்கலாம். இத்தொழிலாளருக்குப் போதிய சம்பளங்கூடக் கிடைக்காமலிருக்கலாம். பல பெட்ரோல் நிலையங்களிருப்பதால் நுகர்வோர் வசதி அதிகரிக்கலாம் ; ஆனால் இந்த வசதி குறிப்பிட்ட எந்த ஒரு நிறைவில் போட்டியிலும் கிடைக்குமா என்பதை யார் நிச்சயிப்பது.

www.padippakam.com



பலவகைப் பண்டங்களை எவ்வாறு நுகர்வோர் மதிக்கின்றனர் என்பதற்கு விலையே அறிகுறி. செலவும், இறுதிநிலைச் செலவுமே ஒவ்வொரு பொருளின் உற்பத்தியும் சமூகத்தின் விலையுள்ள வளங்களை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதற்கு அறிகுறி. இந்த வளங்கள் தரம் அருந்தலாயுள்ள நிலவளம், தொழிலாளர் வளம், முதலியனவாகும். போட்டிக்கம்பெனிகள் சனங்கள் பெரிதும் விரும்பும் பொருள்களைக் கொடுக்கின்றன. அவற்றையும் P(வி) = MC(இ.செ.) என்ற தானம் வரையே உற்பத்தி செய்கின்றன; P = MC என்ற தானத்தில் பண்டங்கள் அவற்றின் செலவுக்குத் தகுதிவாய்ந்தவையென்பதைக் காட்டும்.

ஆனால் நிறைவில் போட்டியாளரான A யை எடுங்கள். அவர் என்ன செய்கிறார்? சனங்கள் தம்மிடம் பண்டத்தை வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தவில்லை. ஆனால் சரிவான தேவைக்கோட்டையுடையவர் என்பதால் விலை விடயத்தில் அவருக்குச் செல்வாக்கு உண்டு. அவர் அதை எவ்வாறு பயன்படுத்துவார்? பொருளை உற்பத்தி செய்கிறாரா? அதாவது சமூகச் செல (அவருடைய M C யினால் அளக்கக்கூடியது) வானது சமூகத்துக்கு அப்பண்டத்தின் கடைசி அலகு எவ்வளவு பயனுடையதாயிருக்குமோ அவ்வளவுக்குச் சமனாயிருக்குமா? நுகர்வோர் பணமானியத்திலிருந்து உண்டாகும் சந்தை P யினால் அளக்கக் கூடியதாயிருக்குமா?

இல்லை. A பண்டங்களை அருந்தலாக வைத்திருக்கவிரும்புகிறார். P (வி) யை MC (இ.செ.) க்கு மேலாக வைத்திருக்க விரும்புகிறார். ஏனெனில் அவ்வாறு செய்வதால் MR (இ.வ) = MC (இ.செ.) என்று ஆகும். இஃது இலாபத்தை உச்சமாக்கும். எனவே சமூகம் A யின் பண்டங்களை அதிகமாகப் பெறுவதில்லை. அதாவது சமூகத்துக்கு அந்தப் பண்டத்தை, உற்பத்திசெய்யும் செலவுடன் ஒப்பிடும்போது சமூகம் அவற்றை வாங்குவதில்லை. A ஒருபோக்கிரியென்று நினைக்கவேண்டாம். தனது கம்பெனியின் இலாபத்தை உச்சமாக்குவதற்கு அவன் முயற்சி செய்யாவிட்டால் பங்குதாரார் அவனைப் பதவியிலிருந்து நீக்கலாம்; அல்லது அவன்மீது வழக்குத் தொடரலாம். கம்பெனி A க்கே சொந்தமானதாயிருந்தாலும் P யை MC க்குச் சமமாக்க முயல்வானானால், அவன் தன் மனைவி மக்களுக்குச் சேரவேண்டிய பணத்தைப் பொதுசனத்துக்குப் பிரித்துக்கொடுப்பவனாகிவிடுவான். இதற்குச் சட்டபூர்வமான தண்டனை கிடையாது. எனினும் இதனால் பயன் உண்டாகாது. தன் சொந்த நலத்தைப் பார்த்தால் தான் பொது நலமுமுண்டாகும். இதை ஆடம்ஸ்மித் வற்புறுத்தினார்.

“தோன்றாத்துணை” என அடம்ஸ்மித் கூறும் முரணுரையை விளங்குவதற்குக் குறிப்பு இங்கேயுண்டு. அடம்ஸ்மித் நிறைபோட்டி என்பதற்குக் கூறப்பட்ட வரைவிலக்கணத்தில் தங்கியிருக்கவேண்டும். அப்பொழுது தான் அவர் எண்ணிய பயன் கிடைக்கும். நிச உலகிலே நிறைவில் போட்டியிருக்கும் சமயத்தில் நாம் ஏதேன் தோட்டத்தை விட்டு நீங்கு

www.padippakam.com



கிறேம். பின்னர் அடுத்த அத்தியாயத்தில் ஆராயப்படும் பிரச்சினைகள் தோன்றும். அவையாவன, அத்தகைய நிறைவில் போட்டியிலே உள்ள தீமைகள், வீண் விரயங்களை எவ்வாறு குறைப்பது என்பனவே.

இலாபத்தை உச்சப்படுத்தல் சம்பந்தமான கொள்கைகளெல்லாம் நிறை போட்டி, நிறைவில் போட்டி இரண்டுக்கும் பொருந்துவனவே. நிறை போட்டியிலே ஈடுபட்டுள்ள கைத்தொழில்களின் சப்பிளைக்கோடுகளோடு கம் பெனிச் செலவுகள் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளன என்ற பிரச்சினையை ஆராய, நாம் புதிதாகக் கண்ட இறுதிநிலைச் சாதனங்களையும், சராசரிச் சாதனங்களையும் பின்வரும் அனுபந்தம் பிரயோகித்துக் காட்டுகிறது. இவை 22ஆம் அத்தியாயத்தில் ஆராயப்பட்டன.

**சுருக்கம்**

1. நிச உலகத்துச் சந்தைநிலையிற் பெரும்பாலானவை நிறைபோட்டிக் கும் தனி உரிமைக்கும் இடையேயுள்ள ஒரு கோட்டில் விழுகின்றன எனலாம். நிறைவில் போட்டியிலே கம்பெனிகள் தமது விலையை ஓரளவு நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கின்றன. ஏனெனில் ஒரு கம்பெனிவிற்பனை செய் யும் பொருள்போன்ற பொருளை விற்பனை செய்யும் போட்டியாளர் சிலரா யிருக்கின்றனர். சிலவிற்பனையாளரும் (அதாவது சமமான ஆனால் வித் தியாசமான பண்டங்களை விற்பனை செய்வோர்), ஒரு பொருளிற் பல இன உற்பத்திகளை விற்பனை செய்வோரும் ஆராய்ச்சிக்கு முக்கியம்.

2. கம்பெனியின் தேவைக் கோட்டிலிருந்து அதன் மொத்த வரவுக் கோட்டை யூகிக்கலாம். மொத்த வருமானக்கோடு அல்லது அட்டவணை வாயிலாக அதன் இறுதிநிலை வருமானத்தைப் பெறலாம். இது மேலதிக உற்பத்தியை விற்பதினாலுண்டாகும் மேலதிக வருமானமாம். சாதாரண மாக இறுதிநிலை வருமானம், விலையிலும் குறைவாகவே இருக்கும். மேலதிக உற்பத்தியை விற்பனை செய்வதற்கு விலையைக் குறைக்கும் நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருப்பதன் விளைவாக முந்திய அலகுகள் எல்லா வற்றிலுமுண்டான நட்டமே இதற்குக் காரணமாகும்.

3. மொத்தச் செலவை நிலையான செலவு, மாறும் செலவு என இரண்டாகப் பிரிக்கலாம். மேலதிக உற்பத்தியை உண்டாக்கும்போது மொத்தச் செலவிலே ஏற்படும் மாற்றமே இறுதிநிலைச் செலவாகும். அஃது ஓர் அலகை உற்பத்தி செய்வதற்குச் செலவாகும் சராசரிச் செலவன்று. இது மொத்தச் செலவுக்கும் மொத்த உற்பத்திக்கும் உள்ள விகிதாசார மாகும். மேலதிகச் செலவைப் பரவலாக்குவதனாலும், அளவு வகையில் உண்டாகும் சிக்கனங்களாலும், AC (ச.செ.) கோடு முதலில் விழும். பின்னர் கம்பெனியின் உற்பத்தி " தரத்தை " அடையும் போது அது U வடிவத் தில் உயரும். AC யின் குறைந்தபட்சதானத்திலேயே MC (இ.செ.), AC (ச.செ.) யை எப்பொழுதும் வெட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



4. மேலதிகச் செலவுக்குச் சமமான மேலதிக வருவாயை ஒரு கம்பெனி விற்பனை செய்யும் கடைசிச் சிறிய அலகு கொண்டுவருமானால், அது தனது உச்சநிலை இலாபத்தானத்தைக் காணும். இந்நிலைமை வரைபடம் மூலமும் காட்டலாம். மொத்த வருவாய்க்கோடு, மொத்தச் செலவுக்கோடு என்பவற்றின் சரிவுகள் சமமாயிருப்பதன் மூலம் இது தெளிவாகும். இறுதி நிலைவருமானம் இறுதிநிலைச் செலவு என்பது உச்சநிலை இலாபத்தின் சமநிலைத்தானத்தில் நின்றுபிடிக்கவேண்டும்.

5. இறுதிநிலை நன்மை தீமைகள் பொருளாதாரவாதம் வற்புறுத்துவது இயல்பு ; நீர் என்ன முடிவைச் செய்தாலும், முன்னே நடந்தேறியவற்றை நினைவிலிருந்து அகற்றிவிடவேண்டும்.

6. என்ன, எப்படி, யாருக்கென்ற சமூகப் பிரச்சினைகளை நல்ல முறையிலே தீர்க்க மனிதருடைய சுயநலத்தைப் பயன்படுத்தலாமென அடம் ஸ்மித் கருதினார். அதற்கு மேலதிகத் தடையாக நிறைவில்போட்டி பயன்படுகிறது. இது சில பண்டங்கள் விடயத்தில் MC (இ.செ.) க்கு மேலே P (வி) யைப் போடுகிறது. அவ்வாறு இம்மேலதிகத் தடை உண்டாக்கப்படுகிறது.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள்**

1. நிறை போட்டி, நிறைவில் போட்டி என்பவற்றிடையேயுள்ள வித்தியாசத்தை அட்டவணைப்படுத்துக.

3. "தாங்கக் கூடியதைத்தான் கம்பெனி அறவிடும்" ஆராய்க.

3. நிலையான செலவு, மாறும் செலவு என்பவற்றிடையே பின்வரும் செலவினங்களை எவ்வாறு பங்கிடுவீர்?—சம்பளம், மின்சாரம், வரி, தேய்மானம், நிர்வாகிகள் சம்பளம், மூலப் பொருள்கள்.

4. இறுதிநிலைச் செலவு, இறுதிநிலை வருமானம் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் கூறுக. இறுதிநிலை வருமானத்துக்கும் விலைக்குமுள்ள தொடர்பென்ன?

5. தேவைக்கோடு ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் (அதாவது 20 ஆம் அத்தியாயத்தில் 1 ஆம் அட்டவணையிலுள்ளது போல்) இறுதிநிலை வருமானத்தின் இலக்க மயமான மதிப்பென்ன? ஏன்?

6. நிலையான செலவு 100 ஆகவும் சராசரி மாறும் செலவு அலகுக்கு 10 ஆகவும் இருந்தால் சராசரிச் செலவும், இறுதிநிலைச் செலவும் எப்படியிருக்கும்? இறுதிநிலைச் செலவைப் புள்ளியிட்டுக் காட்டுக. சராசரி (மொத்தச்) செலவு, சராசரி மாறும் செலவு, சராசரி நிலையான செலவு என்பவற்றையும் அதே படத்திற் கீறுக.

7. ஒரு கம்பெனி வியாபாரத்திலே இருக்கும்வரை அதனுடைய விலையிலும் உற்பத்தியிலும் மொத்தவிலை எவ்வித விளைவையும் உண்டாக்காது. அவ்வாறே ஒரு கம்பெனியின் நிகரலாபத்திலே 10 வீத வரி விதித்தால் அஃது அதனுடைய சிறந்த விலையையோ, உற்பத்தியையோ பாதிக்காது".

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கூற்றுக்கள் ஏன் குறுந்தவணையிலாவது உண்மையாயிருக்கின்றன. விற்பனை வரி, உற்பத்தி செய்யும் அலகு ஒவ்வொன்றின் மீதும் விதிக்கும் வரிகளைப் பற்றி இவ்வாறு கூற முடியுமா? ஏன் கூறமுடியாது.

8. 7*a*, 7*b* என்ற படங்கள் நல்ல இலாபத்தின் சமநிலைத்தானத்தை விளக்குகின்றன. ஒரே விடயத்தைக் கூறும் இரண்டு வழி அவை என்பதை விவரமாக விளக்குக. அதாவது ஒரு கம்பெனி மேலும் உற்பத்தி செய்வதற்கான மேலதிகச் செலவு மேலதிக வருமானத்துக்குச் சமமாயிருந்தால் அது உற்பத்தியை நிறுத்திவிடும் என்பதை விளக்குக.

9. பின்வரும் கருத்துக்களை மறுபடி சிந்தித்து ஆராய்க.

நிறைபோட்டியும் நிறைவில் போட்டியும்

தனியுரிமை ; சிலருரிமை ; உற்பத்திப் பொருளில் வித்தியாசம், போட்டியும் நிறைபோட்டியும்.

விலை சம்பந்தமான மொத்த வருமானம் ; இறுதிநிலை வருமானம் ; மொத்தச் செலவு, நிலையான செலவு, மாறும் செலவு ; சராசரிச் செலவு இறுதிநிலைச் செலவு, சராசரி மாறும் செலவு ; **MR = MC** நல்ல இலாபத்துக்கான நிலை ; கடத்துபோன விடயங்களும், நிலைமையைச் சீர்ப்படுத்த வேறு வழிகளும்.

போட்டியில் நிறைவின்மை ; அடம் ஸ்மித்தின் " தோன்றாத்துணை ".

### அனுபந்தம் : போட்டி விநியோகம் சம்பந்தமாகச் செலவு

இலாபத்தை உச்சப்படுத்தும் மேலே கூறிய தொடர்புகள் சாதாரணப் பொது அறிவையும், ஆரம்ப எண்கணித அறிவையும் அடிப்படையாகக் கொண்டவை. இவை கோதுமைப் பயிர் செய்யும் போட்டி விவசாயிக்கும், நிறைவில் போட்டியிலீடுபட்டதொரு கம்பெனிக்கும் ஏன் பொருந்தமாட்டா ? 22 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்ட போட்டி சப்பிளைக் கோட்டின் பின்னால் என்ன இருக்கிறதென்பதைக் காட்டுவதற்கு நமது சாதனங்களை இந்த அனுபந்தம் பிரயோகித்துக் காட்டும்.

### விலைச்சமனும் போட்டிக்கான இறுதிநிலைச் செலவும்

எந்த ஒரு விற்பனையாளருக்குரிய மிக வாய்ப்பான நிலையிலும் இறுதிநிலைவருமானம், இறுதிநிலைச் செலவுக்குச் சமனுடையதாயிருக்கும். ஆனால் நிறைபோட்டியாளர் தாம் விரும்பியதெல்லாவற்றையும் கிடைநிலையான *dd* கோட்டையனுசரித்துக் கொடுத்த ஒரு விலைக்கு விற்கலாம். அப்போது இறுதிநிலை வருமானமும் விலையும் ஒரே தன்மையாயிருக்கும். மேலதிகமாக விற்பனை செய்யப்பட்ட அலகின் பயனாகக் கிடைத்த விலையிலிருந்து கழிக்கப்படவேண்டிய முன்னையுள்ள அலகுகளால் ஏற்பட்ட நட்டம் இருக்கமாட்டாது. இந்தக் கூற்றுக்களை ஒன்று சேர்த்துப் பின்வருமாறு கூறலாம் :—சந்தையைக் குழப்பிவிடுவேன் என்ற பயமற்றிருக்கும் நிறை

www.padippakam.com



போட்டியாளர், விலையை மிஞ்சும் இறுதிநிலைச் செலவுத்தானம்வரை உற்பத்தி செய்வார். அல்லது தமது சமநிலையான இறுதிநிலைச் செலவு = விலை என்பதுவரை உற்பத்தி செய்வர்.


### உயரும் இறுதிநிலைச் செலவே குறுந்தவணைச் சப்பிளைக்கோடு :

படம் 8 இலுள்ள MC (இ. நி.) தகவலின்படி, பலபடியான விலைகளில் கம்பெனி எவ்வளவு பொருளைச் சப்பிளை செய்யுமென்பதை முன்கூட்டியே கூறிவிடலாம். அதனுடைய அழுத்தமான வளைவுகள், நமது அலகுகள் திட்டமற்ற முறையில் பிரிக்கக்கூடியனவாய்ச் செய்யப்பட்டால் உண்டாகும் இறுதிநிலைச் செலவைக் காட்டுகின்றன.[1]

கம்பெனியானது ஓரலகை விற்பனை செய்யும் சந்தைவிலை 100 என்றிருந்தால் உற்பத்தி A என்றதானத்துக்கு தள்ளப்படுகிறது. அதாவது 9.4 அலகுக்காகும். அந்தத் தொகையிலேதான் இறுதிநிலைச் செலவு விலைக்குச் சமனுயிருக்கிறது. அங்கேதான் இலாபங்கள் உச்சமாக்கப்படுகின்றன. (இதனை விளக்க 100க்கு மேற்பட்ட விலைகளில் என்ன தொகை சப்ளைபண்ணப்படுமென்பதைக் காட்டுக. உதாரணம் : அளக்கும் மட்டத்தை P = 110 டொலர் என்பதில் வைக்க. பின்னர் சப்பிளை பண்ணப்படுந் தொகையை MC (இ. நி.) கோட்டிலிருந்து வாசித்தறிக.)

1. இதிலிருந்து ஒரு பொருளின் பின்னப்பகுதிகளைக்கூட உற்பத்தி செய்து விற்கலாமென்றுகிறது. பின்னங்களை ஏன் விலக்கவேண்டும்? ஒரு விவசாயி முட்டையின் 1/3 பகுதியை விற்பனை செய்யமாட்டான். ஆனல் ஒரு வண்டிமுட்டையில் 1/3 பகுதியை ஏன் விற்பனை செய்யக்கூடாது. ஒரு முட்டையே எமது அளவு அலகாக இருந்தால் ஒவ்வொருமணி நேரத்துக்கு 3 முட்டையை அவன் விற்கலாம். இது 1 மணிநேரத்துக்கு 1/3 முட்டையாகும். மொத்த விலைக்கோட்டின் கேத்திர கணிதவளைகோடு இறுதிநிலைச் செலவை ஒன்ருகக் கருதுமிடத்து பிரிக்கக்கூடிய அலகுகளையே இடையருமல் பயன்படுத்தினேம். இறுதிநிலைச் செலவு பற்றிய இரண்டு சற்றே வித்தியாசமான கருத்துக்களையே நாம் பயன்படுத்தினேம் என்பதை இந்தப் படத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். $a-b$ தூரம் ஒரு மேலதிக அலகின் உற்பத்தியைக்காட்டுகிறது. $b-a'$ அதனுலுண்டாகும் மொத்தச் செலவின் அதிகரிப்பைக்காட்டுகிறது. இதுவே இறுதிநிலைச் செலவைப் பற்றிய இலேசானதும், முதலாகக் கொடுக்கப்பட்டதுமான வரைவிலக்கணமாகும். இரண்டாவது வரைவிலக்கணம், $b$ க்கும், $c$ க்குமுள்ள தூரமானதும், $a$ யில் உள்ள மொத்தச் செலவுக்கோடுமாயுள்ள சரிவினுல் கொடுக்கப்படுகிறது. மேலதிக அலகின் உருவம் சிறிதாக நாம் புதிய சிறுமுக் கோணத்தின் விகிதாசாரத்தை மறுபடி சோதித்துப் பார்க்கிறேம். இரண்டு வரைவிலக்கணங்களுக்குமுள்ள வித்தியாசம் அதாவது $ca'$ மிக அற்பமாகிறது.

சாய்வுக்கும் இறுதிநிலைச் செலவுக்குமிடையிலுள்ள தொடர்பு




www.padippakam.com



விலை 80 டொலராயிருக்கிறதெனக் கொள்க. கம்பெனி எவ்வளவைச் சப்பிளை செய்யும்? 80 டொலர் விலைக்கோடு MC (இ. செ.) கோட்டை இருதடவை வெட்டுகிறது. ஒரு தரம் 8.9 அலகில் வெட்டுகிறது. மறுமுறை 0.1 அலகில் வெட்டுகிறது. நமது வாய்பாடான விலை=MC(இ. செ.) விளக்க மற்றது. இது பல விடைகளுக்கு இடமளிக்கிறது. எது சரியான விடை?

இதற்கு ஒரேயொரு கடைசிப் பரீட்சை உண்டு. மொத்தலாபத்தைக் கணக்கிட்டு அஃது எங்கே டெரிதாக இருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டும். இதற்கு விடை தெளிவு. பெரிய உற்பத்தியிலேதான். கம்பெனி 1 அலகு மட்டும் உற்பத்திசெய்தால் அதனுடைய வருவாய் $80 \times 1$, அட்டவணை

**கம்பெனியின் உயரும் MC வளைகோடு குறுந்தவணைச் சப்பிளைக்கோட்டைத் தருகிறது**




படம் 8. இலாபத்தை விரும்பும் போட்டியாளர் ஒவ்வொரு கிடைநிலையான தேவைவளை கோட்டின் P இக்கும் மறிவினை செய்து, அது P(வி)=MC (இ.செ.) என்ற நிலையிலுள்ள MC ஐ வெட்டுமிடத்துக்கு நகர்வார். நல்ல இலாபத் தானத்திலே MC வளைகோடு உயரும்.

கம்பெனியானது நிலையான செலவைப் புறக்கணித்துவிட்டு நட்டத்தைக் குறைக்கும்போது குறுந்தவணையில் சப்பிளைக் கோடானது பூரண AC (ச. செ.) செலவுக்குக் கீழே விழும். AVC ச.மா.செ. அடிக்குக் கீழே P விழுந்தால் கம்பெனி மூடப்படும்.

நெடுந்தவணையில் AC (ச.செ.) இன் அடித்தானத்துக்குச் கீழே சப்பிளைக்கோடு விழ மாட்டாது, ஏனெனில் கம்பெனியானது எப்பொழுதும் நட்டத்தில் உற்பத்தி செய்யமாட்டாது.

www.padippakam.com



3 இல் உள்ளபடி அதன் செலவு 320 டொலராகும். அதன் இலாபம் —240 டொலரை அடுத்து இருக்கும். அது 9 அலகுகளை உற்பத்தி செய்தால் இலாபம் $(80 \times 9) - 553$ டொலர் அல்லது 167 டொலருக்கு இருக்கும். எனவே உத்தமமான உற்பத்தி B யிலேயிருக்கிறதன்றி $B^1$ யிலன்று.

நமது இலாபத்தை மறுபடி கணக்கெடுக்கும் வகையில் எம்மை வைக்காதவாறு நமது விலை = MC (இ.செ.) என்ற விதியை ஒழுங்கு செய்வது கடினமன்று. விலை அல்லது இறுதிநிலை வருமானம், இறுதிநிலைச் செலவுக்குச் சமமாயிருக்குமானுல் இலாபம் தேங்கிவிட்டதென்பது தெளிவாகும். இலாபத்தின் உச்சத்திலிருந்து மட்டமாகிறதா பள்ளத்தாக்கினடியிலிருந்து மட்டமாகிறதா என்பதை நமது வாய்பாடு காட்டவில்லை. MR (இ.வ.) = MC (இ.செ.) என்ற கூற்றுடன் ஒரு நிபந்தனையைச் சேர்க்கவேண்டும். அதாவது இறுதிநிலைச் செலவிலும் பார்க்க இறுதிநிலை வருமானம் விரைவாக வீழ்ச்சியடையும் ; எனவே கோட்டிலே நாம் வலப்பக்கமாக நகரும்போது அது MR (இ.வ.) கோட்டை எப்போதும் கீழேயிருந்து மேலே வெட்டும். நிறைபோட்டியாளர் தமது இலாபத்தைக் குறைக்காமல் உச்சப்படுத்துவதானுல் மேலே கூறிய விதிஎன்ன அர்த்தத்தைக் காட்டுகிறது? போட்டியாளருடைய சமாந்தரமான MR இற்கு ஊடாகச் செல்லும் போது MC உயரும் என்பதை அது காட்டும். B யிலே இந்நிலைமையைச் சந்தித்தோம் ; B′ யில் எதிர் நிலைமை உண்டானது. இந்த உண்மை B′ யைக் கெட்ட தானமாக்குகிறதென்பதைச்சிறிது கணக்குப்போடுவதன் மூலம் அறியலாம். அந்தத் தானத்துக்கு வலமாகவோ இடமாகவோ நகர்வது நல்லது. ஏனெனில் இலாபம் அங்கே குறைந்த பட்சமாயிருக்கும்.

### குறைந்துசெல் செலவும் நிறைபோட்டியின் முறிவும்

இப்பொழுது துவக்கம் நிறைபோட்டியில் நமது விதி பின்வருமாறு இருக்கும் :—

விலை = இறுதிநிலைச் செலவு (இறுதிநிலைச் செலவு ஏறிக்கொண்டேயிருக்கும்).

அல்லது வேறொரு வகையாகக் கூறுவதானுல் கம்பெனியின் சப்பிளைக் கோடு U உருவிலுள்ள வீழ்ச்சியடையும் இறுதிநிலைச் செலவுக்கோட்டின் பகுதியன்று. (படம் 8) இறுதிநிலைச் செலவு விழுமானுல் கம்பெனி தனது உற்பத்தியை விரிவடையச் செய்ய ஏதுக்களுண்டு. ஒவ்வொரு புதிய அடியும் மேலதிக வருவாயையும் குறைந்த மேலதிக செலவையுமுண்டாக்கும்.

எமது விதியின் இந்த இரண்டாம் பகுதி அறிமுறையிலுள்ளதொரு திருத்தமன்று. போட்டி எதற்காக முறிவடைகிறதென்பதை இது விளக்கிக் காட்டுகிறது. குறிப்பிட்டதொரு கைத்தொழில் சம்பந்தமான நுண்தொழில் முறை சிக்கலாகிக் கொண்டுவருவதால், திறமையான உற்பத்தியானுல், அது பிரமாண்டமான அளவிலேதான் நிகழவேண்டும். இந்த அளவை

படிப்பகம்

www.padippakam.com



அடையும்வரை சராசரிச் செலவும் இறுதிநிலைச் செலவும் வீழ்ச்சியடையும். போட்டிக்கம்பெனிகள் தமது உற்பத்தியைப் பெருக்கமுற்படுகின்றன. பின்னர்கண்டபடி, போட்டியேற்பட்டுக் கம்பெனிகளுக்கு நட்டமுண்டாகும். ஈற்றில் வளங்கள் அதிகமுள்ள கம்பெனிகள், அல்லது முதன் முதலாகத் தொழிலில் ஈடுபட்ட கம்பெனிகள் மற்றக் கம்பெனிகளைக் கலைத்துவிட்டு நிறைபோட்டிக்குப் பதிலாக நிறைவில்போட்டியை உண்டாக்கிவிடும்.

செலவு மாத்திரமன்றி வேறு காரணங்களும் இதிலே சம்பந்தப்பட்டிருப்பதால் மோட்டார் தொழிலில் இதுதான் நிகழ்ந்தது. 100 அமெரிக்க கார்த் தொழிற்சாலைகளிலிருந்த இடத்தில் இன்று 5 கம்பெனிகளே மிஞ்சியுள்ளன. இவற்றுள்ளும் 4 கம்பெனிகளே கணக்கிலெடுக்கத்தக்கவை.

கோதுமை விவசாயத்துக்கு இந்தக் கதி ஏன் உண்டாகவில்லை. ஏனெனில் ஒவ்வொரு விவசாயியின் இறுதிநிலைச் செலவுக்கோடும், அந்த விவசாயி சந்தைவிலையைப் பாதிக்குமளவுக்கு முக்கியத்துவம் பெறுவதற்கு மிக முன்னரே உண்டாகிவிடுகிறது. பத்துலட்ச ஏக்கருள்ள பண்ணையை மிகத் திறமான பண்ணையாக மாற்றக்கூடிய கண்டுபிடிப்பு உண்டானால் இன்று போல் விவசாயம் நிறைபோட்டியுடையதாக இருக்கமாட்டாது.

## நட்டங்களைக் குறைத்தலும், எப்போது மூடுவதென்பதை நிச்சயித்தலும்

கற்பனைப் பண்ணையின் சப்பிளைக்கோட்டை ஆராய்வோம். விலை 60 டொலருக்கு வீழ்ச்சியடைந்தால் கம்பெனி 8 அலகை உற்பத்தி செய்து சமாளித்துக் கொள்ளும். (இதிலே 22 ஆம் அத்தியாயத்திலே கூறப்பட்ட சந்தர்ப்பச் செலவுகளுமடங்கும்).

மிகக் குறைவான சராசரிச் செலவுமட்டமான 60 டொலருக்குக் கீழே விலை இறங்கினால் என்ன நடக்கும் ? சந்தைவிலை 40 டொலருக்கு இறங்கிவிட்டதென வைத்துக்கொள்வோம். கம்பெனி 7.1 அலகை உற்பத்தி செய்யுமானால் (இது D என்ற தானத்தால் காட்டப்பட்டுள்ளது. இங்கே P = Mc) அதன் மொத்த வருமானம் 280 டொ. 40 டொ. × 7 ; ஆனால் மொத்தச் செலவு 431 டொலர் ஆகும் (அட்டவணை 3 ஐனப் பார்க்க). கம்பெனி 40 டொலர் தொடக்கம் 150 டொலர் வரை நட்டத்திலே உற்பத்தி செய்கிறது. இறுதி நிலைச் செலவு, விலை என்பன சம்பந்தமான எமது வாய்பாடு எம்மை நட்டத்திலே விட்டுவிட்டது'

உண்மையாகவா ? நட்டத்தில் வியாபாரத்தை நடத்தாமல் கம்பனியை மூடிவிடவிரும்பினால், அதனுடைய வருவாய் பூச்சியமாகவும், நிலையான செலவு 256 டொலராகவுமிருக்கும். எனவே அதனுடைய நட்டம் 256 டொலராகவுமிருக்கும். இது, 7.1 அலகுகளை உற்பத்தி செய்யும் போது உண்டாவதிலும் அதிக நட்டமாகும். இலாபங்கள் எதிர்க் கணியமாக இருக்கும்போது கூட இறுதிநிலைச் செலவை இறுதிநிலை வருமானத்தோடு

www.padippakam.com



சமன்படுத்துவது வாய்ப்புடையதாகும். ஏனெனில் இந்த வகையில் நட்டங் கள் குறைவாக வைக்கப்படுகின்றன. சிந்தித்துக் கருமமாற்றும் வியாபாரி ஒருவர் மேலதிகத் தொழிலே ஏற்பதா என்ற முடிவு செய்யும்போது, நிலேயான செலவைப் பொருட்படுத்தமாட்டார். ஏனெனில் நிலேயான செலவு எப்படியுமிருந்தே தீரும். எந்த ஒரு தீர்மானத்திலும் அந்தச் செலவு கணக்கில் எடுக்கக்கூடியதன்று. மாறும் செலவுகளுக்கு மேலதிகமாக, மொத்த வருமானத்தை பெறும்வரை அவன் மேலதிகச் செலவுக்கு அதிகமாக வருமானம் பெறுகிருன் ; எனவே மேலதிக வருமானத்தை அவன் ஏற்றுக்கொள்வதால் அவனுக்கு நன்மையுண்டு.

24 டொலருக்குக் குறைவாகக்கூட விலே "இறங்கினுல் என்ன நடக்கும் ? இந்தவிலேயில் கம்பெனி 6 அலகை உற்பத்தி செய்தால், அதனுடைய மொத்த வருமானம் 144 ஆகும். மாறும் செலவும் 144 ஆகும். கம்பெனியை மூடினுலென்ன நடத்தினுலென்ன அது 256 டொலரை இழக்கும்.

24 டொலருக்குக் கிழே எந்த ஒரு விலேயிலும் உதாரணமாக 15 டொலர் என வைத்துக்கொள்வோம். கம்பெனி தனது மாறும் செல வைக் கூடப் பெற்றுக்கொள்ளமாட்டாது. இறுதிநிலே சம்பந்தமான நமது வாய்பாடுகள் பொருந்தமாட்டா. 5 உற்பத்தி செய்வது, 4 அல்லது 6 உற்பத்தி செய்வதிலும் சிறந்ததென அவை கூறும். ஆனுல் பூச்சியம் உற்பத்தி செய்வதிலும் மற்றவையெல்லாம் நட்டத்தையே உண்டுபடுத்தும்.

சுருங்கக்கூறுவதானுல், நிலேயான எந்தச் செலவும், தேவையானுல் கழிந்துபோன விடயமெனக் கொள்ளலாம். சிந்திய பாலுக்கு இரங்கு வதனுல் பயனில்லே. நிலேமையைச் சமாளிப்பதற்காக நாம் இறுதிநிலேச் செலவை விலேயோடு சமன்செய்து நமது நட்டத்தைக் குறைக்கலாம். இறுதிநிலேச் செலவு நிலேயான செலவினுல் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது.

சுருக்கம் : கம்பெனியின் குறுந்தவணே சப்பிளேக்கோடு அதனுடைய இறுதி நிலேக்கோட்டின் உயரும் பகுதியாகும். இந்தக்கோடு சராசரிமாறும் செல வுக்கோடான AVC (சா.மா.செ.)க்கு மேலே இருக்கவேண்டும். கம்பெனியை மூடுவதால் மிச்சம் பிடிக்கக்கூடிய மாறும் செலவிலும்பார்க்க அதிகவரு மானத்தைக் கம்பெனி பெறும்).

## நெடுந்தவணே இலாபமில்லாக் குறைந்த செலவுச் சமநிலே

இந்த ஆராய்ச்சி குறுந்தவணே சம்பந்தமானது. நெடுந்தவணேயில் நமது நிலேயான செலவுகள் முடிவடைகின்றன. கட்டிடங்கள் பழுதடை கின்றன ; அவற்றைத் திருத்தவேண்டுமா ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவேண் டுமா என்ற தீர்மானம் எழுகிறது. இப்பிரச்சினேயைத் தீர்க்கும்போது

படிப்பகம்

www.padippakam.com




எந்தச் செலவும் நிலையானதன்று.[1] எனவே நெடுந்தவணையில் கம்பெனி நட்டத்தில் உற்பத்தி செய்யவேண்டியதில்லை. இறுதிநிலைச் செலவு விலையோடு சமமான அந்த உற்பத்தியை உண்டாக்கிக் கொண்டிருக்கும் :

நெடுந்தவணையிலே எப்பொழுதும் போட்டிக் கம்பெனியானது MC = P என்ற நிலையில் உற்பத்தியைச் செய்யும். ஆனால் P யானது அதனுடைய AC யின்அளவுக்காவது பெரிதாயிருக்கவேண்டும் : நெடுந்தவணையிலே விலையானது சராசரி விலைக்குச் சமனாகவோ, அதிகமாகவோ ஏன் இருக்க வேண்டும் ? ஏனெனில் ஒரு கம்பெனியானது தானாக ஒரு தொழிலில் நெடுந்தவணையில் இருப்பதானால், அது திரும்பத்திரும்ப வருஞ் செலவுகளைச் சரிக்கட்டக்கூடியதாயிருக்கவேண்டும். (இதிலே வேறு இடத்திலே எந்தச் சாதனங்களையும் அதன் சொந்தக்காரர் கொடுத்து உதவ அக்கம்பெனி பெறக்கூடிய பயனைச் செலவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.)

முக்கியமானதொரு விசேட சந்தர்ப்பத்திலே பலமுள்ளதொரு நெடுந்தவணைச் சமநிலை நிலையை வருணிக்கலாம். இது " தனிச் சுதந்திரமுள்ள பிரவேச " மாகும். இங்கே (1) எத்தனை கம்பெனிகள் தொழிலிற் பிரவேசிக்கவேண்டுமோ அவையெல்லாம் தொழிலிற் பிரவேசித்துத் தேவையில்லாத சமயம் விடலாம். (2) பழைய கம்பெனிகள்போல உற்பத்தி


1. நெடுந்தவணையிலே கம்பெனியானது தனது இயந்திரத் தளவாடங்களையும் உற்பத்தி முறைகளையும் சுதந்திரமாகமாற்றிக்கொள்ளலாம். படம் 9*a* யில் கம்பெனியின் நெடுந்தவணைச் சராசரிச் செலவுக்கோடு LAC எனக் காட்டப்பட்டுள்ளது. (SAC) குறுந்தவணைச் சராசரிச் செலவுக்கோட்டின் கறுத்த கீழ் எல்லையாகும். இது ,அத்தகையை சாத்தியக்கூறுகள் சில உள்ள சந்தர்ப்பங்களிலேயே காணப்படும். கம்பெனியானது கணக்கற்ற பல SAC கோடுகளைக்தெரிவு செய்யக் கூடிய சந்தர்ப்பத்திலே அதே கீழ் எல்லையை . படம் 9*b* காட்டுகிறது. LAC யானது U உருவமுள்ள ஒப்பமான கீழ் மூடிய கோடாகும். அதனுடைய LMC ஒழுங்காக நிகழ்வதொன்று. இது கம்பெனியின் நெடுந்தவணைச் சப்ளைக் கோடாகும். இதுகுறைந்தபட்சத் தானமான C யிலே ஆரம்பித்து, அங்குள்ள SMC குறுந்தவணைக்கோட்டினுள்ளதினும் இலேசான சரிவுடன் செல்கிறது.

நெடுந்தவணைச் செலவு வளைகோடு




படம் 9a.

ஒப்பமான கீழ்முடிய வளைகோடு




படம் 9b.

படிப்பகம்

www.padippakam.com



செய்யும் திறமை ஒவ்வொரு கம்பெனிக்கும் இருக்கவேண்டும். அதாவது அதே என்ஜினியரிங் அறிவைப் பயன்படுத்தவும் அதே உற்பத்திச் சாதனங்களை அதே விலையில் வாங்கவும் திறமையுடையதாயிருக்க வேண்டும்.

இந்த விசேட சந்தர்ப்பத்திலே எந்தக் கம்பெனியும் நெடுந்தவணையில் சாதாரண இலாபத்திலும் பார்க்க அதிக இலாபத்தை அந்த மூலதனத்துக்குப் பெறமுடியுமா ? முடியாது. அப்படி இலாபம் உண்டாகுமானால் புதியவர்கள் தொழிலிற் பிரவேசிப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு கம்பெனியினதும் சராசரிக்குறைந்த பட்சச் செலவுக்கு விலைகளை இறக்கி இலாபம் இல்லாமற் போகும்வரை வந்து குவிந்து கொண்டிருப்பார்கள். அவ்வாறே P (வி) யானது நெடுந்தவணையில் AC (ச.செ.) க்குக் குறைவாக நிரந்தரமாய் நிற்கமாட்டாது. இல்லாவிட்டால் கம்பெனிகள் தொழிலைவிட்டு வெளியேறும்.

தனிச்சுதந்திரமுள்ள பிரவேசத்திலே நெடுந்தவணைப் போட்டிச் சமநிலையில் ஒவ்வொரு கம்பெனியும், இறுதிநிலைச் செலவும், சராசரிச்செலவும் சந்தை விலைக்குச் சமனாக இருக்குமிடத்தில் உற்பத்திசெய்யும். (கம்பெனி தன்னலத்துக்காக MC=P யாகச் செய்யும். ஆனால் தன்னலமுள்ள போட்டியாளரின் செயல்களே கம்பெனியின் AC யோடு சமனாக P யைத் தள்ளிவிடச் செய்கின்றன.) சமநிலையின் கூட்டு நிலையைப் பின்வருமாறு கூறலாம்.

இறுதிநிலைச் செலவு = விலை = சராசரிச் செலவு = "U வின் அடித்தளத்து" அதம AC.

இறுதிநிலைச் செலவும் சராசரிச் செலவும், இறுதிநிலைச் செலவானது சராசரிச் செலவை அதன் அடித்தளத்தில் துளைத்தால்தான் சமனாயிருக்குமென்பதை படம் 8 ஞாபகப் படுத்துகிறது. உயர்ந்த $q$ வில் அல்லது தாழ்ந்த $q$ வில் AC (ச.செ.) யை MC (இ.செ.) உயர்த்தும் அல்லது தாழ்த்தும்.

**நிறைபோட்டியும் டார்வினியத் திறமையும்**

ஒவ்வொரு தொழிலிலும் பல்லாயிரக்கணக்கான போட்டியாளர் சுதந்திரமாகப் பிரவேசிக்கக்கூடிய நிலை இருக்குமானால் அது சமூகத்துக்கு நல்லதே. ஏன் ? பண்டங்களை எவ்வாறு உற்பத்தி செய்யலாமென்ற பிரச்சினையைத்தீர்ப்பதற்குத் "தோன்றாத்துணை" நல்லதொரு வழியை நிச்சயிக்கும். அப்போது நிறைபோட்டி, டார்வின் கொள்கையில் உயிரினம் தான் உயிரோடிருப்பதற்குப் போராடுவதுபோல, வளர்ச்சிப்படியிலுள்ள ஒவ்வொரு கம்பெனியும் குறைந்தபட்சச் சராசரிச் செலவில் உற்பத்தி செய்யக்கூடியவாறு இயங்கும். அப்போது கம்பெனி தனது பண்டங்களை மிகக் குறைவான மொத்தச் செலவில் உற்பத்தி செய்யக் கூடியதாயிருக்கும்.

டார்வினுடைய உலகிலுள்ள போட்டி கொடுமை நிறைந்தது. ஆனால், நமது போட்டியில் அழகான தடைகளும், மீறுமல் அடக்கக்கூடிய நிதானப் பாதைகளுமுண்டு. எனவே ஒவ்வொரு கம்பெனியும், ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு நிலச்சொந்தக்காரரும், அவரவர்

படிப்பகம்

www.padippakam.com



நிர்ப்பந்திக்கப்படும் வேலையைச் செய்வர். அதன்பயனாக சந்தையில் நிச்சயிக்கப்பட்ட சம்பளம், வட்டி, வரியென்பன பெறுவர். உற்பத்தி செய்யும் ஒரு சமூகத்துக்கு இவை நல்ல பயன்களே. காட்டில் வாழும் பிராணிகளிடையே இந்த நிலைகிடையாது. அங்கே வாழ்க்கை சுருக்கமான தாகவும், கடினமானதாகவும், கொடுமை நிறைந்ததாகவுமிருக்கும்.

நிசவாழ்க்கையில், இவற்றையெல்லாம் பொருந்தாதிருக்கச் செய்வது எது ? அதாவது, செலவுக்கோடுகள் வீழ்ச்சியடைந்து கொண்டேயிருக்கும் ஒவ்வொர் கம்பெனியும் U வின் அடித்தளம்வரை உற்பத்தி செய்யத் தூண்டப்பட்டால், ஒரு சிறுதொகைக் கம்பெனிகளே தொழிலில் நிலைத் திருக்கும் ; போட்டியை நிறைவுடையதாக வைத்திருக்கக்கூடிய அளவுக்கு அத்துணை தொகை நிலைபெறமாட்டாது.[1]

## கம்பெனியும் தொழிலும் : ஓர் ஆராய்ச்சி

ஒவ்வொரு போட்டிக்கம்பெனியிலும் உள்ள சமநிலைபற்றிய சுருக்கமான ஆராய்ச்சி இது. எல்லாக் கம்பெனிகளதும் சப்பிளைக்கோடுகள் ஒன்று சேர்ந்து 22 ஆம் அத்தியாயத்திலுள்ள சப்பளைக்கோட்டை போட்டித் தொழிலுக்குக் கொடுக்கின்றன.

மாஷலைப் போல நாமும் மூன்று பருவத்தைப் பயன்படுத்துகிறோம் : தற்காலிகம், குறுந்தவணை நெடுந்தவணை.

**தற்காலிகச் சமநிலை :** ஒவ்வொரு கம்பெனிக்கும் நிலையான தற்காலிக சப்ளைக்கோடு நிலைக்குத்தாக இருந்தால், கம்பெனியின் தற்காலிக சப்ளைக் கோட்டைப் பெற்றுவோம். அது நிலையான கோடுகளின் கூட்டுத்தொகை. இந்தக்கோடு நிலைக்குத்தாக வுமிருக்கவேண்டும். இது மிக இலேசான ஓர் உதாரணமாதலால் இதைப்பற்றி மேலே ஆராயவேண்டியதில்லை.[2]

## குறுந்தவணைச் சமநிலை.

குறுந்தவணையிலே கம்பெனிகளின் தொகை இவ்வளவெனக் குறிப் பிடப்படுகிறது. இதுவே அதற்கு வரைவிலக்கணம். ஆனால் ஒவ்வொன்றும் அதன் FC (நி.செ.) கோட்டை அனுசரித்து அதிகமாகவோ குறைதவாகவோ $q$ வை உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு கம்பெனியினதும் நிலையான செலவான FC இந்தக் குறுந்தவணையில் மாறமாட்டாது. இலாபத்தை உச்ச

[1] நிலைமைகள் நிச்சயமற்றிருப்பதால் செலவு குறைவது சாத்தியப்படலாம். பொருள் களிடையே தினிசுகளில் வித்தியாசமிருப்பதும், போக்குவரத்துச் செலவுகளும், ஒவ்வொரு சம இனப்பொருள்களினதும் சந்தையளவைக் குறைப்பதால், U வின் அடித்தள உற்பத்தியை, அது மொத்தச் சந்தையின் ஓர் பின்னமாக்கி விடுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களிலே நடப்பது நடக்கட்டும் என்ற கொள்கையோ, டார்வின் போராட்டமோ நிறைபோட்டியை முறிப்பதற்கு ஏதுவாகிறது. அதனால் பலவகையான சிலருரிமையும் நிறைவில் போட்டியும் ஏற்படுகின்றன.

[2] பண்டம் அழியாத பண்டமானால் நிலைமை சிக்கலானதாகும். இது முந்திய அனுபந் தத்திலே கூறப்பட்டுள்ளது.

www.padippakam.com



மாக்க விரும்புவோர், இதனைப் பொருட்படுத்தமாட்டார். அவருக்கு SS (ச.ச.) சப்பிளைக்கோடுண்டு. அது MC கோட்டின் ஒரு பகுதி. அஃது உயரும்; அது அத்துடன் அவருடைய சராசரியின் மாறும் செலவுக்கோட்டுக்கு மேலாயுமிருக்கும்.

தொழிலின் குறுந்தவணை SS (ச.ச.) கோட்டைப் பெற, ஒவ்வொரு P (வி) யிலும் ஒவ்வோரு கம்பெனியின் ss கோட்டைச் சேர்த்துக்கொள்ளுகிறோம். இதன் விளைவு எந்தக் கம்பனியின் கோட்டிலும் பார்க்க இது மட்டமாயிருக்கும். ஏன் ? P யிலுண்டாகும் ஒவ்வொரு மாற்றமும் இப்போது ஆயிரம் சிறுபோட்டியாளர் ஒவ்வொருவருக்கும் கொண்டு வருவதிலும் பார்க்க ஆயிரம் மடங்கு அதிகமாகக் கைத்தொழில் மறிவினையை உண்டாக்கும். (1500 கம்பெனிகளுடன், படத்தின் இடைநிலை அளவில் மாற்றமின்றியிருந்தால் தொழிலின் SS கோடு மேலும் மட்டமானதாய்க் காணப்படும்.)

ஒரு முன்மாதிரியான கம்பெனியின் செலவுக்கும், சப்பிளைக்கும், தொழிலின் குறுந்தவணைச் சப்ளைக் கோட்டுக்குமிடையிலுள்ள தொடர்பைக் காண்பதற்கு படம் 10a, 10b என்பவற்றைப் பார்க்க.

**நெடுந்தவணைச் சமநிலை.**

நெடுந்தவணையிலே நிலையான செலவுப்பாடுகளெல்லாம் ஈற்றில் முடிந்துவிடும். அவற்றைப் புதுப்பிப்பதற்கு மனமறிந்தமுடிபைச் செய்ய வேண்டும். இந்தவகையிலே குறுந்தவணை நிலையான செலவுகள் நெடுந்தவணை மாறும் செலவுகளாக மாற்றப்படுகின்றன. நெடுந்தவணையில் கம்பெனிகளின் தொகை மாறும்; பிரவேசம் சுதந்திரமுடையதாயிருந்தால், புதிய கம்பெனிகள் தொழிலிற் பிரவேசிக்கும். P (வி) யானது ஒவ்வொரு கம்பெனியின் சராசரிச் செலவுக்கோட்டின் அடித்தளத்துக்கும் மேலே இருக்கும் வரையும், மேலதிக இலாபம் பெறும் வரையும் புதிய கம்பெனிகள் தொழிலிற் சேர்ந்துகொண்டேயிருக்கும். அதே நிலம், அதே தொழிலாளர், அதே உற்பத்திச் சாதனங்கள் என்பவற்றை உபயோகிக்கும் ஏனைத் தொழில்களோடு ஒப்பிடும்போது இந்தத் தொழில் சிறிய தொழிலாயிருந்தால், பெருப்பிக்கப்பட்ட கம்பெனிகளின் தொகை பழைய U கோடுகளோடேயே எப்பொழுதும் உற்பத்தி செய்யக்கூடியனவாயிருக்கும். நிரந்தரச் செலவுள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தின் கடைசிச் சமநிலையென்ன ?

தொழிலின் நெடுந்தவணை சப்பிளைக்கோடு $S_L$ $S_L$ கிடைநிலையானதும் U சராசரிச் செலவின் அடித்தள மட்டமானதுமாயிருக்குமென்பதை படம் 10c காட்டுகிறது. இந்த நிரந்தரச்–செலவுச் சந்தர்ப்பத்தில் தேவையிலேற்படும் அதிகரிப்போ வீழ்ச்சியோ நெடுந்தவணையில் கம்பெனிகளின் தொகையை மாற்றுவதால் பொருளின் தொகையை மாற்றும். நெடுந்தவணையிலே விலையில் அதற்கு மாற்றமுண்டாகாது. தொழிலில் தொடர்ந்திருக்கும்


படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு கம்பெனியினதும் அளவிலோ செலவிலோ மாற்றமுண்டாகாது. ஏனெனில் ஒவ்வொரு கம்பெனியும் அதனதன் U வின் அடித்தளத்துக்குத் தள்ளப்படும்.[1]

**எல்லாக் கம்பெனிகளதும் சப்பிளைக் கோடுகளைக் கூட்டினால் போட்டித் தொழிலின் சப்பிளைக்கோட்டைப் பெறலாம்:**




படம் 10. *a* இல் உள்ள கம்பெனிகளின் குறுந்தவணை *ss* கோடுகளைக் கூட்டினால் *b* இலுள்ள மிகமட்டமான தொழில் – குறுந்தவணை சப்பிளைக்கோடு கிடைக்கும். (1,000 கம்பெனிகளில் எல்லாம் ஒரேமாதிரியிருந்தால் தொழிலின் கோடு ஆயிரம் மடங்கு அதிகரிக்கும். அப்பொது அது மிக மட்டமானதாகத் தோற்றமளிக்கும்.)

நெடுந்தவணையில் கம்பெனிகளின் தொகை சிறிது சிறிதாக வளரலாம் அல்லது குறையலாம். குறுந்தவணை சப்பிளை SS, வலமாக அல்லது இடமாக நகரும். P (வி) = AC (ச.செ.) எனவும் இலாபமில்லா மலுமுள்ள நெடுந்தவணைச் சமநிலை ஒவ்வொரு கம்பெயின் U இன் அடித்தளத்திலுமிருக்கும். தேவையானது, ஆதரிக்கக்கூடிய அளவு பல கம்பெனிகளையோ சில கம்பெனிகளையோ கூட்டும்போது (c) இலுள்ள தொழிலின் நிலைநிலையான நெடுந்தவணை $S_L$ $S_L$ கோட்டைக்காண்கிறோம். இதுவே மட்டத்தின் அடித்தளத்திலிருக்கிறது. (தீவிரமான நிரந்தரச் செலவுச் சந்தர்ப்பத்திலே தேவையிலுள்ள நகர்வு நெடுந்தவணை Q வை மாற்றும்; ஆனால் P ஐ மாற்றமாட்டாது. வழக்கமான சந்தர்ப்பங்களிலே $S_L$ $S_L$ சரிவு மெதுவாக மேலே நகரும்; ஏனெனில் இந்தத் தொழிலிலுண்டாகும் விரிவானது அது பயன்படுத்தும் சாதனங்களின் விலையை எல்லாக் கம்பெனிகளுக்கும் உயர்த்துகிறது.)

[1] ஒரு தொழிலானது நியாயமான அளவு பெரிதாயிருக்க அது வேறு தொழில்களின் பெரும்பகுதியிலிருந்து சாதனங்களைப் பல அளவில் பயன்படுத்தினால், அதனுடைய விசேட அமிசங்களின் சம்பளமும் விலைகளும் அது விரிவடைவதால் உயரும். அதனால் கம்பெனியின் U வை மேலே சிறிது உயர்த்தும். உயரும் அடித்தளங்களைக்கூட்டினால் மேலே சிறிது சரியும் நெடுந்தவணைத் தொழிற் சப்பிளைக்கோடு உண்டாகும். இத்தகைய சற்றே உயரும் செலவானது போட்டி உலகிற்குமுண்டு. இங்கே இரண்டாம் அத்தியாயத்திற் காட்டிய உற்பத்திச் சாத்தியக்கோடுகளுண்டாகும். பண்டங்களின் விலைகள் உயர்வது மக்கள் அவற்றை விரும்புவதனாலேயே. அவற்றின் சாதனங்களுக்கு உயர்ந்த P (வி) யைக்கொடுப்பதும் இயல்பே; அவற்றைப் பயனுள்ள உபயோகத்தில் ஈடுபடுத்தப் பங்கீடு செய்வதும் பொருத்தமானதே.

www.padippakam.com



நிலையற்ற தன்மையை உண்டாக்கும் நிலைமைகள்.

*கடைசியில் ஒன்றை* ஞாபகப்படுத்த விரும்புகிறேம். நிசவாழ்விலே *சமநிலைத்தன்மைகள்* எப்பொழுதும் குழம்புகின்றன. பொருளாதாரமானது புதியதொரு சமநிலையை நோக்கி ஓடும்போது புதியதொரு குழப்பமுண்டாகிறது. அஃது அதனை வேறு திசையிலே கலக்கிறது. ஆனல் கதையின் முடிவு என்னவாகுமென்பதைச் சாத்திரம்பார்த்துக்கூட அறிய முடியாது.

எந்த ஒரு தொழிலிலும் தற்காலிகமான இலாபநட்டங்கள் அதிகமாயிருக்கலாம். விலைகள் அங்குமிங்கும் அலையலாம். நெடுந்தவணையிற்கூட சமநிலையானது புள்ளிவிபரச் சமநிலையாயிருக்கலாம்,. இதில் சிலருக்கு இலாபமும் சிலருக்கு நட்டமும் உண்டாகலாம். ஏதாவதொரு காரணத்தைக்கொண்டு மக்கள் ஒரு தொழிலைப்பற்றி அளவு கடந்த நன்மையைக் காண விரும்புவார்களானல் அது நெடுங்காலம் எதிர்க்கணியமான இலாபத்தைக் காட்டலாம். ஒரு கம்பெனி தற்கொலை புரிந்தால் புதியதொரு நன்மைகாணும் ஒருவர் தோற்றுவார்.

இந்த நிபந்தனை முக்கியமானதாயிருந்தாலும், நிறைபோட்டி அமைப்பானது குழப்பமானதொரு சமநிலையைச் சீர்ப்படுத்தவே முயலும். அது பிரயாணம்செய்யும் வழியே முக்கியமானது. அமைதியான முடிவை அடைகிறதா என்பதன்று.

**அனுபந்தத்துக்குச் சுருக்கம்.**

1. நிறைபோட்டியாளருக்கு இறுதிநிலை வருமானமும் விலையும் அச்சொட்டாக ஒன்றே. முந்திய அலகுகளில் அவனுக்கு நட்டம் ஏற்படாதபடியால் அவன் சஞ்சலப்படுவதற்கு ஒன்றுமில்லை. இறுதிநிலைவருமானம் இறுதிநிலைச் செலவுக்குச் சமன் என்ற உச்ச நிபந்தனையை நிறைபோட்டியினர் விடயத்திலே பின்வருமாறு எழுதலாம் :— விலை = இறுதிநிலைச் செலவு. கடைசி அலகின் உற்பத்திச் செலவு, பண்டத்தின் சந்தைவிலையிலும் அதிகரிக்கும் ; அந்த எல்லைவரை அவன் தனது உற்பத்தியை விரிவடையச் செய்யலாம்.

2. எனவே கம்பெனியின் சப்பிளைக்கோடு அதனுடைய இறுதிநிலைச் செலவுக் கோடாகும். ஆனல் இக்கோடு உயர்ந்து கொண்டிருக்கவேண்டும். விலை கம்பெனியை மூடிவிடும் அளவுக்கு வீழ்ச்சியடையக்கூடாது.

3. விலையும், இறுதிநிலைச் செலவும், கம்பெனியின் சராசரிச் செலவுக்கு அதிகமாயிருந்தால், அது நேர்க்கணியமான இலாபத்தை அடையும். ஆனல் விலையும், இறுதிநிலைச் செலவும் கம்பெனியின் சராசரிச் செலவுக்குக் குறைவாயிருந்தால் அது நட்டத்தையடையும். இது நீடித்திருக்குமானல், தேய்ந்துபோன தனது எந்திரதளவாடங்களைப் புதுப்பிப்பதில்

படிப்பகம்

www.padippakam.com



முதலீடு செய்யாமல், தொழிலை மூடிவிட முயலும். புதிய போட்டிக் கம்பெனிகள் தொழிலில் ஈடுபட்டு, குறிப்பிட்ட கம்பெனிக்காகும் செலவிலேயே உற்பத்தி செய்தால், நேர்க்கணியமான இலாபங்கள் (மூலதனம், தொழிலாள் என்று முதலீடு செய்யப்பட்டதற்கு ஈடாகக் கிடைக்கும் சாதாரண இலாபத்துக்கு அதிகமாக) நெடுந்தவணைச் சமநிலையிலே போட்டியால் கரைந்துபோகலாம். இந்தக் கடைசிச் சமநிலையிலே விலையும், இறுதிநிலைச் செலவும் குறைந்த பட்சச் சராசரிச் செலவுக்குக் சமனுயிருக்கும்.

4. எல்லாப் போட்டிக் கம்பெனிகளினதும் குறுந்தவணைச் சப்பிளைக் கோடுகளின் கூட்டுத்தொகையே, தொழிலின் சப்பிளைக் கோடாகும். நெடுந்தவணையில், தொழிலிலுள்ள கம்பெனிகளின் எண்ணிக்கை மாறும்போது தொழிலின் சப்பிளைக் கோடு மட்டமானதாகவும் நெகிழ்ச்சியாகவும் இருக்கும்.

5. குறிப்பிட்டதொரு பண்டத்தின் உற்பத்திக்கு விசாலமான பரப்பில் இறுதிநிலைச் செலவு குறைந்துகொண்டு போகுமானுல், சில கம்பெனிகள் சந்தையைப் பிடித்துவிடக்கூடிய அளவுக்கு விரிவடையும். அப்போது நிறை போட்டி சாத்தியப்படாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலையற்ற தன்மையிருந்தால் எந்த ஒரு சமநிலையும் தொடர்ந்து குழப்பிக்கொண்டிருக்கும்.

**ஆராய்ச்சிக்குரிய பிரச்சினைகள் :**

1. நிறைபோட்டியாளருக்கு மொத்த வருமானம் எவ்வாறு காட்சியளிக்கும் ? 7*a* படத்தை அவருக்காகத் திருப்பிக் கீறுக.

2. MC(இ.செ.) = P (வி) என்பதை நிறைபோட்டியாளர் ஏன் அமைத்துக் கொள்கிறுர் என்பதைச் சாதாரண முறையில் விளக்குக.

3. எந்திரத்தளவாடங்களை மூடிவிட எப்போது நிச்சயிப்பீர் ? புதிய தொழிலை ஆரம்பிக்க எப்போது நிச்சயிப்பீர் ?

4. தொழிலின் சப்பிளைக்கோடு கம்பெனியின் செலவோடு எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கும் ? குறுந்தவணையிலே எவ்வாறு ? நெடுந்தவணையிலே எவ்வாறு ?

5. வீழ்ச்சியடையும் MC (இ.செ.) கோடு ஏன் சப்பிளைக்கோடாக இருக்க முடியாது? (குறிப்பு : போட்டி அப்போது கழுத்தை வெட்டும் போட்டியாகவோ, ஆபத்தை உண்டாக்கும் போட்டியாகவோ இருக்கும்.)

6. "சமமான புதிய கம்பெனிகள் சுதந்திரமாகத் தொழிலிலே பிரவேசித்தால் விலையானது குறைந்த பட்சச் சராசரிவிலைக்கு வீழ்ச்சியடைந்துவிடும்". நெடுந்தவணையிலே இந்தச் சமநிலை மட்டத்திலும் கீழாகவோ மேலாகவோ P ஏன் இருக்கக் கூடாதென்பதைக் காட்டுக.

www.padippakam.com



7. பின்வரும் கருத்துக்களை மீட்டல் செய்க :

P (வி) = MC (இ.செ.) நெடுந்தவணை P = MC = AC (ச.செ.) = குறைந்தபட்ச AC தனிச் சுதந்திரப் பிரவேசம்.

MC (இ.செ.) யானது வீழ்ச்சியடைதல், அல்லது AVC (ச.மா.செ.)க்குக் கீழேயிருத்தல் நிலேயில் உள்ள புள்ளிகளை சப்பிளைக்கோட்டிலே சேராதிருத்தல்.

பல பருவகாலத்துக் கம்பெனி சப்பிளைக்கோடும் தொழிற்கோடும்.
டார்வின் போராட்டக் கொள்கையும் நிறைபோட்டிக் கொள்கையும்.
நிலேயில்லாததால் உண்டாகும் விளைவுகள்.
குறையும் விலேயும், போட்டி முறிதலும்.

படிப்பகம்

www.padippakam.com

# இருபத்தைந்தாம் அத்தியாயம்

## நிறைவில் போட்டியும் நம்பிக்கைக்கெதிரான கொள்கையும்

சுதந்திரச் சந்தையிலே தீவிரமாகப் போட்டியிடல் என்ற மூலாதாரமான கருதுகோளிலேதான் தனியார் முயற்சியின் தொடர்பு முழுவதும் தங்கியிருக்கிறது. அத்தகைய ஒழுங்கை நிலைநிறுத்த விரும்பினால் போட்டியைத் தீவிரமாகவும் சந்தையைச் சுதந்திரமாகவும் வைத்திருப்பது அவசியம்.

20 ஆம் நூற்றாண்டு நிதியின் தனியுரிமை, தனியார் கைத்தொழில் முயற்சியாளர் சங்கம் என்பவற்றின் கமிட்டி.

இக்காலத்துத் தொழில்களின் சந்தை அமைப்பைப் பற்றிப் பரந்ததொரு நோக்கைப் பெறுவதற்கு முந்திய அத்தியாயம் வழிவகுத்திருக்கிறது. கம்பெனிகள் விலையை எவ்வாறு நிச்சயிக்கின்றன ? சென்ற அத்தியாயத்திலே பயன்படுத்தப்பட்ட அறிமுறைச் சாதனங்கள், இலாபத்தை உச்சமாக்குதலை ஆராய எவ்வாறு துணைபுரிகின்றன.

நிறைவில் போட்டி சம்பந்தமான முக்கிய மாதிரிகள் சில எவை ? பொதுசன நம்பிக்கையைக் கெடுக்கும் கொள்கைக்கு அவை எத்தகைய விளைவுகளை உண்டாக்குகின்றன ?

### கம்பெனிகள் இலாபங்களை உச்சப்படுத்துகின்றனவா ?

தொழில்களில் ஈடுபடுவோர் தமது இலாபத்தை எவ்வளவு தூரம் உச்சப்படுத்துகின்றனர் ? அதில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றிபெறுவர் ? இக்கேள்விகட்குத் திட்டமான பதில் கொடுக்கமுடியாது. ஒரு கம்பெனி வரவு செலவைத் திட்டமாக ஆராயாது செயற்படுவதானால், தகுதியுடையவரே எஞ்சிநிற்பார் என்ற டார்வின் கொள்கை அந்தக் கம்பெனியைப் பொருளாதாரத்துறையிலிருந்து அகற்றினாலும் அகற்றிவிடும்.

உயிரோடு தப்பக்கூடிய கம்பெனிகள் இலாபத்தை உச்சமாக்கும் முயற்சியில் முற்றாக அசிரத்தை காட்டமுடியாது. இதிலிருந்து ஒவ்வொரு தனியுரிமையாளரும் சிலருரிமையாளரும், மக்களிடமிருந்து பெறக்கூடிய கடைசி அவுன்ஸ் லாபத்தைப் பிழிந்து கொள்ளவே முயற்சிக்கின்றனர் என்று கூறமுடியாது. கம்பெனி பெருகி, விலைமீது ஓரளவு செல்வாக்குப் பெறக்கூடியதாயிருக்குமானால், இலாபத்தை உச்சமாக்கும் முயற்சியை ஓரளவு தளர்த்தலாம்.

உடனடிலாபத்தில் கருத்தைச் செலுத்தாமல் நெடுங்காலப்போக்கை நோக்குதல் வியாபாரத்துக்கு நல்லது. தன்னலமற்றதொண்டுகளும்,



படிப்பகம்

www.padippakam.com



வெளிப்படையாகத் தோற்றக்கூடிய வள்ளன்மையும் பொதுசனங்களிடையே நல்லெண்ணத்தையுண்டாக்கும். அத்துடன் நெடுந்தவணை லாபத்தை உச்சமாக்கும்.

நியாயமான முறையில் தனது இலாபத்தை உச்சமாக்கும் ஒரு கம்பெனியைப் பற்றி ஆராய்க. செலவு வருமானம் என்பவற்றைப்பற்றி அது கேத்திர கணித வடிவான கோடுகளை அமைத்து அவற்றிலிருந்து இறுதிநிலைச் செலவு, இறுதிநிலை வருமானம் என்பவற்றைப் பற்றிய விரிவான நடவடிக்கைகளை அனுமானிக்கிறதென்று இதிலிருந்து கூறிவிடலாமா? நடைமுறை வியாபார நடவடிக்கைகளை ஆராய்ந்தால் இது தவறு என்பது தெரியும். அறிமுறைப் பொருளாதார அறிஞரின் விசேடமான இறுதிநிலைச் சாதனங்கள் பற்றி மனமறிந்து இந்தப் பிரச்சினையைச் சீராக்க நினையாவிட்டாலும் (அதாவது தனது உச்ச இலாபம் எங்கே கிடைக்குமென்பதைப்பற்றிச் சரியான ஊகம் செய்துகொள்ளுமளவில்) அஃது இறுதிநிலை வருவாயையும், இறுதிநிலைச் செலவையும் அச்சொட்டாகச் சமனுக்கும் முயற்சியில் வெற்றி பெறும். இதனை அது கோடில்லாமல் எது நல்லதென்பதைச் செய்து பார்த்துப் பார்த்துத் திருந்திக் கொள்ளும்.

**விலை குறிப்பிடுதல் :**

நிறைவில்லாத தகவல்களை ஆதாரமாகக் கொண்டு தவறான ஊகங்களைச் செய்வதினாலேயே வியாபாரம் மனத்தைக் கவரும் ஒரு நடவடிக்கையாக இருக்கின்றது. தனது உற்பத்திப் பொருள்களுக்கானதொரு தேவைக் கோட்டை மதிப்பிடுவது, சிறியதொழிலாளனென்ன பெரிய தொழிலாளனென்ன, பெரிய விடயமே. ரயில்வே தனது கட்டணத்தில் 20 வீதத்தை வெட்டினால் அது வாடிக்கைக்காரர் தொகையை உயர்த்துமா என்பதை ஊகமாகவே அறியலாமன்றி நிச்சயமாக அறிய முடியாது. எனெனில் பொருளாதாரத்திலே மற்ற விடயங்கள் சமமாக இருக்காதபடியால், ஒரு கம்பெனி தனது பலவகைப் பொருள்களுக்குரிய தேவை நெகிழ்ச்சியை அச்சொட்டாக அறிவதற்கு வழி இடையாது.

தற்காலக் கம்பெனிகள், பெரியவை கூட இறுதிநிலை வருமானத்தையும் இறுதிநிலைச் செலவையும் சரியாக நிச்சயித்துக் கொள்ளமாட்டா எனப் பல அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். தமது வாய்ப்பான விலையையும், உற்பத்தியையும் அச்சொட்டாக அவை நிச்சயிக்க முடியாது. ஆனால் தினசரி வேலை எப்படியோ நடந்தே தீரவேண்டும். உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிச்சயிக்கவேண்டும். இங்கேதான் சராசரி விலையோ அலகு விலையோ முக்கியமான தொரு பங்கை வகிக்கிறது. இது சம்பந்தமான ஆராய்ச்சி பின்வருமாறு :—

பல பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு கம்பெனியின் தலைவராக நீங்கள் உங்களைக் கருதிக் கொள்ளுங்கள். விலைகளை நிச்சயிப்பது ஓரளவில் உமது கையிலேயே இருக்கிறது. சென்றவருடத்து விற்பனவுகள்

www.padippakam.com



உமக்குத் தெரியும். உமது விலைகளை மாற்ருமல் விட்டாலும், உமது அடுத்த பருவத்து விற்பனவுகளை ஊகத்திஞலேயே அறிந்து கொள்ளலாம். உமது பொருள்களின் தேவை நெகிழ்ச்சியையோ, அவற்றின் எல்லையையோ அறியாதிருப்பதால் உமது இறுதிநிலை வருமானத்தை அறியமுடியாதிருப்பீர். அப்போது என்ன செய்வீர் ?

உமது கணக்காளரையோ, விற்பனவு நிர்வாகியையோ அழைப்பீர். "சந்தையில் நமக்கிருக்கும் பங்கை நிலைநாட்டவும், வியாபாரத்தில் நிலையாயிருக்கவும், நமக்குத் தேவையான உற்பத்தியின் அளவு எவ்வளவு ?" என்று அவர்களைக் கேட்டால், அவர்கள் பதில் கொடுப்பதற்கு தொழில் நடவடிக்கைகளின் மட்டத்தைப் பற்றியும், நுகர்வோர் தேவை பற்றியும், சந்தை ஆராய்ச்சி முடிவுகள் பற்றியும், வேறுபல விடயங்கள் பற்றியும் ஊகித்தறிய வேண்டும்.

அவர்கள் தமது மதிப்பை எடுத்துக் கொண்டபின்னர் நீர் செலவு நிபுணரை உசாவவேண்டும். அந்த உற்பத்தி மட்டங்களில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்ய உண்டாகும் சராசரிச் செலவு பற்றியும் கேட்பீர். எந்த ஓர் இலக்கம் பற்றியும் ஆராயும்போது பல இன்னல்களுண்டாகும். பலவகை உற்பத்திப் பொருள்களிடையே நிர்வாகச் செலவுகளும் மேலதிகச் செலவுகளும் எவ்வாறு பங்கிடப்படவேண்டும், அல்லது குறிப்பிடப்பட்டதொரு செய்முறையிஞல் இறைச்சியும், தோலும் ஒரே நேரத்திற்கிடைத்தால் செலவை எவ்வாறு இவற்றுக்கிடையே பகிர்ந்து கொள்வது, அல்லது ஒரு கட்டிடம் பலவருடங்களுக்கு நிலைத்திருக்குமாஞல், நடைமுறை நடவடிக்கைகட்கு எவ்வளவு செலவு குறிக்கவேண்டும் என்பன அவற்றுட் சில.

சராசரிச் செலவு சம்பந்தமாக ஏதாவதொரு விடை கொடுப்பது கணக்காளரது வழக்கமான கடமையாகும். செலவுத் தொகைக்கு மேலாக எவ்வளவைச் சேர்த்து விலையைக் குறிக்கவேண்டுமென்பதை நிருவாகம் இப்போது தீர்மானிக்க வேண்டும். நுகர்வோரின் மறிவினை எப்படியிருக்குமென்பதையும், போட்டிக் கம்பெனிகள் எப்படி விலை போடுகின்றன என்பதையும் ஆராய்ந்து கம்பெனியானது 5 வீதமோ, 10 வீதமோ, 30 வீதமோ கூடப்போடும்.[1] வியாபாரி விலையிடும்போது தெரிந்தோ தெரியாமலோ தனது தேவை நெகிழ்ச்சிபற்றி ஊகித்துக்கொள்கிருன்.

கெட்ட காலத்திலே விலைப் போட்டி மும்முரமாயிருக்கும்போது வியாபாரிகள் விலையை "முழுச் செலவுக்குக்" குறைவாகக்கூட குறிப்பர். உற்பத்தி கீழ் மட்டத்திலிருந்தாலென்ன, இருக்காவிட்டாலென்ன நிலையான செலவுகள் இருந்தபடியே இருக்குமென்பதே இதற்குக் காரணம். ஆஞல்

1. ஜெனரல் மோட்டர்ஸ் என்ற பெரிய கம்பெனி இவ்வாறு விலைகுறிக்கும் முறையை 30 வருடமாகச் செய்துவருகிறது. விலை குறிப்பதற்கு முன்னர் பயன்படுத்திய சராசரி விலை பல கம்பெனிகளுக்கு, கம்பெனியின் மூலதனத்துக்குரிய வருமானத்தைச் சேர்ந்ததாயிருக்கும்.

26—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



சராசரிமாறும் செலவுக்குக் கீழே விலை குறிப்பிடப்படமாட்டாது. ஆனால் இப்போதும் வருங்காலத்திலும் வேறு பொருள்கள்மாட்டு வாடிக்கைக் காரரின் கவனத்தை ஈர்ப்பதற்கோ போட்டிக்காரர் ஒருவரைத் தொழிலிலி ருந்து கலைத்துவிடுவதற்கோ தற்காலிகமான நட்டத்தைக் கம்பெனி ஏற்றுக் கொள்ளும்.

மேலே கூறிய விடயங்கள் 24 ஆம் அத்தியாயத்திலே கூறியவற்றோடு ஒத்திருக்கின்றன. MC (இ.செ), MR (இ.வ.) ஆராய்ச்சியில் அடங்கிய தாக்கத்துக்கு விலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் விகிதம் ஆளா கும்வரை, விலை குறிக்கும் முறை, இலகுவாக்கப்பட்ட அறிமுறையிலே யுள்ள நிபந்தனைகளிலேயே தங்கியிருக்கும்.

**சமநிலைத்தானமும் " நிர்வகிக்கப்பட்ட விலைகளும் "**

வியாபாரிகள் இலாப நட்டமில்லாத சமநிலைத் தானத்தைப் பற்றிப் பேசுவர். யுத்தத்துக்குப் பின்னர் தொழிற்சங்கங்கள் அதிக சம்பளம் கோரியதால் சமநிலைத் தானங்களின் மட்டம் ஆபத்தான நிலைக்கு உயர்ந்து விட்டது என அவர்கள் முறைப்படுவதுண்டு. பூரண வேலைவாய்ப்புடைய உச்ச விற்பனவு மட்டத்திலே குறைபாடு இருக்குமானால், இலாபங்களெல் லாம் நட்டமாக மாறிவிடும். சமநிலைத்தானமென்பதென்ன ?

பல தொழில்களிலே உற்பத்திக்கு நேரடி விகிதப்படி மாறும் செலவு அதிகரிப்பதுண்டு. உற்பத்தியை இரட்டித்தால் மொத்த மாறும் செலவை இரட்டிக்கவேண்டும் ; உற்பத்தியை மும்மடங்காக்கினால் மொத்த மாறும் செலவையும் மும்மடங்காக்கவேண்டும். உற்பத்தியை எப்படி மாற்றினா லும், உமது எந்திர தளவாடத்தின் அளவுக்குள் நின்றால், சராசரி மாறும் செலவு AVC (ச.மா.செ.) யும் இறுதிநிலைச் செலவு MC (இ.செ.) யும் சமனாகவும், மாறாதுமிருக்கும். இஃது உண்மையானால், உமது மொத்தச் செலவுக்கோடுமாறாத சரிவுடையதாகவும், உயரும் நேர்கோடாகவுமிருக்கும்.

நீர் விதிக்கும்விலையை நிர்ணயித்துவிட்டீர் என வைத்துக்கொள்வோம். அவ்வாறு செய்வதற்கு ஏதோ ஒருவகை விலைகுறிக்கும் விதியை அனுசரித் திருப்பீர். இலாபகரமான விலைப்பரப்பை ஊகித்து அறிந்திருப்பீர். ஆனால் உமது தீர்மானத்தை நீர் எப்படிச் செய்திருந்தாலும் அதனால் ஒன்றும் கெட்டுப்போகவில்லை.

மற்றக் கம்பெனிகளைப் போலவே நீரும் இருந்தால் ஒவ்வொரு நாளும் அல்லது மணிநேரமும் நீர் உமது விலையை (P) மாற்றமாட்டீர். " நிர்வாக விலை " யென ஒரு விலையை நீர் சொல்லுவீர். அந்த விலையை அறிவித்தலின்றி மாற்றமாட்டீர்.

ஒவ்வொரு மேலதிக உற்பத்திக்கும் உமது சராசரி மாறும் செலவுகள் மாறாதிருந்தால் அந்தச் சிறிய உற்பத்தியிலிருந்து கிடைக்கும் விலை உயர்ந் திருந்தால் உமது இலாபங்கள் விற்பனவோடு வளரும் ; சிறிய உற்பத்தி யானால் உமது நிலையான செலவைச் சமாளிக்கக் கூட வருவாய் போதா


படிப்பகம்

www.padippakam.com



## நிலையான விலையிருக்கும்போது, விற்பனவுகள் வீழ்ந்தால் கடைசியாக நட்டத்தை உண்டாக்கும்

முறிவுத்தான விளக்கப்படம்




படம் 1. P என்ற விலை நிலையானதாயிருந்தால், அளவு Q இக்கான அதிக தேவையால் மொத்த வருமானம் OR ஐ அனுசரித்துப் பெருகும். சராசரி மாறும் செலவும், இறுதிநிலைச் செலவும் நிறைதகவுத்தானம் C வரை மாருதிருக்குமானுல், மொத்தச் செலவு ABC ஐ அனுசரிக்கும்; இக்கோடுகளுக்கிடையேயுள்ள நிலைக்குத்தான வித்தியாசமே இலாபமாகக் காட்டப்படும். இதில் B முறிவுத் தானமாயிருக்க, நட்டங்கள் நயங்களாக மாறும்.

திருக்கும். ஆனுல் உமது விற்பனவுகள் அதிகரிக்கும்போது இந்த நட்டம் குறையும்; பின்னர் உமது நிலையான செலவையும் மாறும் செலவையும் சமாளிக்கக் கூடிய தொரு தானத்தை அடைவீர். உமது விற்பனவுகள் சமநிலைத் தானத்தை அடைந்துவிடும்.[1]

இந்தச் சமநிலைத்தானத்துக்கு மேலே உங்களுடைய இலாபங்கள் பலவித மாகும். விற்பனவுகளை அதிகரிக்க என்ன செய்தாலும் நன்மையையே உண்டாக்கும். படம் 1 இலே சமநிலைத்தானப் படத்தின் கேத்திர கணிதச் சார்பான படமுண்டு. ஒரே விலையில் அதிக பண்டங்களை விற்பதால் உமது வருவாய் எவ்வாறு வளருமென்பதை OR காட்டுகிறது. ஆதியிலிருந்த நிலையான செலவுத்தானம் A யிலிருந்து "எந்திரத்தகுதிக் குரிய C மட்டம்வரை உமது செலவு எவ்வாறு வளருகிறதென்பதை ABC காட்டுகிறது. அப்போது செலவுகள் உயரத்துவங்கும். சமநிலைத் தானம் B யிலுண்டு; உமது விற்பனவுகள் இந்த மட்டத்துக்குக் கீழேவிழுந் தால் உமக்கு நட்டமுண்டாகும்; இதன் பரப்பு இரண்டு கோட்டுக்குமிடையே


1. இந்நூலின் இரண்டாம் பாகத்திலே நுகர்வு, வருமானம் என்பனபற்றிய சமநிலைத் தானமொன்றைச் சந்தித்தோம். அதை இதனோடு மயங்கி விடக்கூடாது. இந்த இரு கருத்துக்களுக்குமிடையே கேத்திரகணித ஒப்புமை தானுண்டு. மேலேயுள்ள படம் 1 உம் 24 ஆம் அத்தியாயத்துப் படம் 7a யும் வேறு. பின்னையதில் கம்பெனியானது தனக்குத் தேவையான Q வை அமைக்கிறது. முன்னையதிலே அஃது ஒரு P யைச் சொல்லுகிறது. தேவையிலுண்டாகும் வெளி நகர்வுகள் Q எங்கே விழுமென்பதை நிச்சயிக்கும்.

படிப்பகம்

இலேசான வண்ணத்தாற் தீட்டப்பட்டுள்ளது. உமது விற்பனவுகள் சமநிலைத்தானத்துக்கு அப்பால் உயர்ந்தால் உமது இலாபங்கள் மேன்மேலும் அதிகரிக்கும். இது கோடுகளுக்கிடையே உள்ள கறுப்பு வருணந்தீட்டப்பட்ட பிரதேசத்தாற் காட்டப்பட்டிருக்கிறது. இதைப்போன்ற ஒரு படத்திலே வியாபாரியின் நிலையைக் காட்டுவதால் அவர் தமது விலைக்கொள்கை, உற்பத்திமுறை, விற்பனவு முறை என்பவற்றைப் புனராலோசனை செய்யத் தூண்டப்படுகிறார் (படம் 2 இலே தேவையிலுள்ள நுகர்வு காட்டப்படுகிறது. அதுவே சமநிலைப் படத்தை உண்டாக்குகிறது).

**சமநிலைக் கோட்டை தேவைக்கோட்டின் நகர்வு எவ்வாறு உண்டாக்குகிறது :**

**தேவை நகர்வுகளும் இலாபங்களும்**




படம் 2. *d'd'* இல் B இலே கம்பெனியின் சமநிலை உண்டாகிறது. *dd* இல் A இலே நட்டம் காட்டுகிறது. *d"d"* இல் C இலே அது நயத்தைப் பெறுகிறது.

வியாபார விலையிடும் கொள்கைகளிலே ஈடுபட்ட பல ஆராய்ச்சியாளர் செலவு, விலையிடல் அடிப்படையில் விலை குறிக்கும் மேலே கூறிய பழக்கத்தைக் கம்பெனிகள் பின்பற்றி வருகின்றன என்று கூறுகின்றனர். இந்த நடவடிக்கையின் பயனாக அவை தமது முழு உற்பத்திச் செலவையும் முதலீட்டுக்கான வருவாயையும் பெற முயல்கின்றன. எனவே இந்தக் கொள்கை யதார்த்தப்போக்குடையதானாலும் அவ்வளவு தகவல்களைக் கொடுக்கக்கூடியதன்று. ஒரு தொழிலில் குறிக்கும் விலை 40 வீதமாகவும் மற்றொரு தொழிலில் 5 வீதமாகவும் இருப்பதற்குக் காரணமென்ன ? அல்லது யுத்தத்துக்கு முன்னர் மோட்டார் தொழிலில் ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனி தனது முதலீட்டு மூலதன எட்டுமதிப்பில் 30 வீதம் உழைக்கக் கூடியதாயும், அதைப்போலவே பெரிய கம்பெனியாயுள்ள போட் கம்பெனி மூலதனத்திலே ஒரு வீதத்தில் அரைப்பங்கை உழைக்கக் கூடியதாயுமிருந்தமை என் ?

www.padippakam.com




**நிறைவில் போட்டி மாதிரிகள்.**—24 ஆம் அத்தியாயத்திலே காட்டப்பட்ட முக்கியமான அட்டவணையில் (520 ஆம் பக்கம் பார்க்க) நிறைவில் போட்டி சம்பந்தமான பல மாதிரிகளைப் படங்களாகச் சுருக்கிக் காட்டலாம்.

**தனியுரிமை.**—தனி உருவத்தில் இந்த விடயம் பல தகவல்களை விளக்கு வரைபட ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதானாலும், மிக அருமையாகவே நிகழும். படம் மூன்றிலே தனியுரிமையாளரின் நெடுந்தவணைச் சமநிலை காட்டப் படுகிறது. அவருடைய சிறந்த விலை சராசரிச் செலவுக்கு மேற்பட்டது. அதனால் அவர் நிரந்தரமான "தனியுரிமை இலாபத்தைப்" பெறுகிறார். அவருடைய P (வி) யும் MC (இ.செ.) க்கு மேலேயிருக்கிறது. ஏன்? ஏனெனில் அவருடைய சரியும் தேவைக்கோடு (இதுவே அவர் விலைமீது செலுத்தும் ஆட்சி) எதைக் குறிக்கிறதென்றால் இறுதி நிலை வருமானம் விலையிலும் குறைவாக இருக்குமென்பதையே. இதை முன்னர் விளக்கி யுள்ளோம்.

MR (இ.வ.) = MC (இ.செ.) யுடன் உச்சலாபமானது, MC க்கு மேலே P உள்ளதென்பதைச் சுட்டிக்காட்டும். சமூகத்துக்குப் பயனுள்ள பொருள் களின் விலைக்கும், அவற்றை உற்பத்தி செய்யச் செலவாகும் இறுதிநிலைச் செலவுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எதைக் காட்டுகிறதென்றால் சமூ கத்தின் வளங்கள் திறம்படப் பகிர்ந்து கொள்ளப்படவில்லை என்பதையே.

**தனியுரிமையிலே விலை மிக அதிகமாயிருக்கும்:**




படம் 3. தனியுரிமையாளருக்கு நல்ல இலாபச் சமநிலை E இலுண்டு. இது நெடுந்தவணை MC (இ.செ.) உம் MR (இ.வெ.) உம் வெட்டுமிடத்துக்கு மேலேயுண்டு. இங்கே MC (இ.செ.வ.) க்கு மேலே P (வி) உண்டு. தனியுரிமை இலாபம் வருணந்தீட்டிய நீள்சதுரத்தால் காட்டப்பட்டுள்ளது. தனியுரிமையைப் பொது நலத்தன்மை வாய்ந்ததென ஒழுங்கு செய்வதால் விலை F இக்கு இறங்கும். இது தேவையும், நெடுந்தவணைச் சராசரிச் செலவும் வெட்டுமிடம். இதனால் மேலதிக இலாபம் நீக்கப்படுகிறது. இதிலும் முக்கியமானது இது விலையை இறுதி நிலைச் செலவுமட்டத்துக்குச் சமீபமாக அதாவது G இல் கொண்டுவருகிறது. இங்கே இறுதி நிலை சமூகச் செலவும் நன்மைகளும் சமமாயிருக்கின்றன.

www.padippakam.com



**ஒழுங்குசெய்யப்பட்ட தனியுரிமை.**—தனியுரிமையானது சமூக விலையைத் திரித்தலினாலும், அஃது ஈட்டும் இலாபம் சமூகத்துக்குப் பயனற்றதென்ற எதிர்ப்பினாலும், வேறு காரணங்களினாலும், சமூகம், தனியுரிமையைப் பொதுமக்களுக்குச் சகாயமான பொதுப்பயனுடையதெனப் பிரகடனஞ் செய்யலாம். அவ்வாறு செய்து விலையைக் கட்டுப்படுத்த விரும்பலாம். தனியுரிமைக்குக் கிடைக்கும் மேலதிகவருவாயை நீக்கிவிடும் சமநிலை நிலைமை படம் 3 இலே F இல் காட்டப்பட்டுள்ளது. அங்கே P (வி) யும் AC (ச.செ.) யும் சமமாக்கப்பட்டுள்ளன. F இலே ஒழுங்கு செய்யப்பட்ட சமநிலை, ஒழுங்கு செய்யப்படாத E தானத்திலும் பார்க்கத் விலைக்கும் இறுதிநிலைச் செலவுக்குமிடையே குறைவான வித்தியாசத்தையே காட்டுகிறது. இத்தகைய குறையும்செலவுச் சந்தர்ப்பத்திலே எல்லா வித்தியாசங்களும் ஒழியமாட்டா. அப்படி ஒழிவதானால் அரசாங்கம் தனது பொது வரி விதிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பற்றுக்குறையை, அதாவது P யை G யின் MC (இ.செ.) மட்டத்துக்கு அமைப்பதால் உண்டாகும் பற்றுக்குறையைச் சமாளிக்க வேண்டும்.

**ஓரினத்தில் வித்தியாசமுள்ள பொருள்களை விற்கும் பலர்.**—முக்கியமான இந்த உதாரணம் ஹார்வாட்டைச் சேர்ந்த எட்வட் எச். சேம்பர்ளின் சுட்டிக் காட்டியது. படம் 4 இலே ஒரு கம்பெனி E யில் குறுந்தவணைச் சமநிலையிலிருக்கிறது. ஆனால் புதிய கம்பெனிகள் தொழிலிலே பிரவேசிப்பது சுதந்திரமாயிருந்தால் அவற்றின் பிரவேசம் ஏதாவது ஒரு கம்பெனியின் தேவையைக் குறைக்கும். அப்போது *dd* கோடு இடப் பக்கமாக நகரும்; அது AC (ச.செ.) கோட்டை முட்டுமேயொழிய மேலே வெட்டமாட்டாது. தினிசு விற்பனையாளரின் முடிவான நெடுந்தவணைச் சமநிலை, E என்ற இடத்துத் தொடு கோட்டில் முடியும். AC (ச.செ.) என்னும் தொடுகோடு வீழ்ச்சியடைகிறது, இறுதி Q வானது U உருவுள்ள AC கோட்டின் அடித்தளத்துக்குச் சமமான Q விலும் சிறியது என்பதை கீழ்நோக்கிச் செல்லும் *dd* காட்டுகிறது. நுகர்வோர் ஒரே பண்டங்களிடையேயுள்ள இனம்பிரியாமல் நுகர்வாரானால், கீழே யிருக்கக் கூடிய சமநிலை P சாத்தியமாகும். ஏனெனில் உற்பத்தியை உண்டாக்கச் சில கம்பெனிகள் தீவிரமாகவேலை செய்கின்றன. படம் 4 இலேயுள்ள மேலதிக பண்டத் தினிசுகளுக்காக மக்கள் மேலதிகமாக என்ன விலையைக் கொடுக்கவேண்டுமென்பதை நிச்சயிக்க வழியில்லை.

**சிலருரிமை :** பண்டங்கள் ஒரே வகையானதாயிருந்தாலென்ன, வித்தியாசமானதாய் இருந்தாலென்ன அவற்றை விற்பதற்கு இரண்டு, மூன்று அல்லது பலவிற்பனையாளர் இருந்தால், அவர்கள் தமது விலைகள் ஒன்றோடொன்று தொடர்புடையன வென்பதைக் கண்டுகொள்வர்.


A என்ற கம்பெனி தனது விலையைக் குறைக்குமானால், அதன் வியாபாரமதிகரிக்கும், போட்டியாளரின் வியாபாரம் அந்த அளவுக்குக் குறையும். அதற்கு இது தெரியும். அது விலையைக் குறைத்தால், மற்றக்கம்பெனி

www.padippakam.com



களும் விலையைச் சில சமயம் ஏற்றவாறு குறைக்கும் அல்லது நன்றாகவும் குறைக்கக்கூடும் என்பதை அனுபவத்திலும் ஊகத்திலும் அறிந்து கொள்ளும். இதனால் பொருளாதாரச்சண்டையுண்டாகும். ஈற்றில் சில விற்பனையாளர், தாமெல்லாரும் ஒரே நிலையில் இருப்பதை அறிவர்.

**அநேக நிறைவில் போட்டியாளரின் சுதந்திரப் பிரவேசத்தால் இலாபம் அற்றுவிடும் :**




படம் 4. ஓரினத்திலே பலவித்தியாசமுள்ள பொருள்களில் ஒன்றை விற்கும் ஒரு தனி சான வியாபாரி சுதந்திரமாகத் தொழிலிற் பிரவேசித்தால் நெடுந்தவணை இலாபமில் லாத் தொடுகோட்டு நிலையை E இல் அடைவர். அத்தகைய போட்டியாளர் சந்தை விலையை இறுதிநிலைச் செலவுமட்டத்துக்கு வீழ்த்தாமலே பிரித்து விடுவர். இது நிறை போட்டியிலும் நடைபெறும். இவரும் இவருடைய போட்டியாளரும் MC (இ செ.) இக்கு மேலுள்ள P உடன் முடிவடைவர். Q ஐ உற்பத்தி செய்வர். அதிலே நெடுந்தவணைச் சராசரிச் செலவுவிழுந்து கொண்டேயிருக்கும். ஏனெனில் U உருவான கோட்டின் அடித்தளத்தி லுள்ள பிரத்தியேகமான Q இற்கு இது குறைவுடையதாயிருக்கும்.


முற்காலத்திலே நம்பிக்கைப் பங்கச் சட்டங்கள் முக்கியத்துவம் பெறு வதற்கு முன்னர் இத்தகைய சிலருரிமையாளர் ஒன்று சேர்ந்திருக்கலாம். சிறிய சங்கமாகவோ, நம்பிக்கைத்தாபனமாகவோ உருவாகியிருக்கலாம். தசாப்தங்களுக்கு முன்னே ஐக்கிய அமெரிக்க உருக்குத்தொழிற் கம்பெனி யைச் சேர்ந்த ஜட்ஜ் கேரி நடத்திய புகழ்பெற்ற விருந்துகளிலே பங்கு பற்றி, விற்பனையாளர் ஒன்று சேர்ந்து தனியுரிமை விலையொன்றை நிச் சயித்தனர். நிறைவான தனியுரிமை விலையா ? ஆம். புதியவர்களை விலக்கிக் கொள்ளக்கூடிய திறமையிருந்ததால் அவ்வாறு செய்தனர். உயர்ந்த ஒரு விலையைக் குறித்தால் புதியவர்கள் வந்து சேரக்கூடும். அப்போது அவர்கள் தனிப்போட்டி விலக்கு மேலான ஒரு விலையைக் குறிப்பர். ஆனால் விலையை மிக அதிகமாகக் குறித்தால் புதியவர்கள் வந்து நுழையக் கூடுமென்று அதையும் கவனமாகவே தீர்மானித்தனர்.

www.padippakam.com



ஆனால் இன்று ஐக்கிய அமெரிக்காவில் இவ்வாறு விலையை நிச்சயிப்பது சட்டவிரோதமாகும். இம்முறை வேறு சில நாடுகளிலேயுமுண்டு. ஆனால் இந்தப் பிரச்சினையைச் சில பெரிய கம்பெனிகள் எதிர்நோக்கவேண்டியிருந்தால், தீவிரமான விலைப்போட்டியை உண்டாக்காமலே இரகசியமாக அவற்றின் பொறுப்பாளர் அலுவலை நடத்துவர். சந்திக்கவும் மாட்டார், போன்மூலம் ஒழுங் செய்யவும் மாட்டார், கடிதமூலம் ஒழுங்கு பண்ணவும் மாட்டார். விலைத்தலைவர் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன விற்பனையாளர் ஒரே விலையையே விதிப்பர். இவ்விலை 22 ஆம் அத்தியாயத்திலே ஆராயப் பட்டதும் MC (இ.செ.) மட்டத்துக்கு அயலில் வரமாட்டாததுமான விலையாயிருக்கும்.

**சிலருரிமை என்பது ஒரே பொருளை அல்லது ஒரே இனத்தில் பலவகை வித்தியாசமுள்ள பொருளை சிலர் விற்பனை செய்வதாகும் :**




படம் 5. ஒரு சந்தையில் ஆதிக்கஞ் செலுத்தும் சில போட்டியாளர் விலை குறைத்தல், விலை குறைப்பதற்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்பதை விலைச்சண்டை அனுபவத்தைக் கொண்டு அறிவர். தனிசான சில உரிமையாளர் தமது தேவைக்கோடு DD (தே.தே.) ஐ மதிப்பிடும்போது, மற்றவர்களும் அதே விலையை விதிப்பார் எனக் கொண்டும் புதிய சிலருரிமையாளர் தொழிலிற் புகக்கூடுமென்பதைக் கருத்திற் கொண்டும் மதிப்பிடுவர். அவர் தூரதிட்டமான தொரு தொழிலில் ஈடுபட்டால் அவருடைய நல்ல இலாபமான E பூச்சிய மேலதிக இலாப நிலையை அடையும் அல்லது தற்காலிகமாக அதற்குக் கீழான நிலையை அடையும். ஆனால் அவருடைய P (வி) ஆனது குறுந்தவணைச் செலவு மட்டத்தையோ நெடுந்தவணைச் செலவு மட்டத்தையோ அடையாது.

ஆனால் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் பலவாயிருப்பதால் அதைப் பற்றியே ஒரு நூல் எழுதிவிடலாம். தனிசான ஒரு சிலருரிமையாளர் ஒரு தொழிலில் எந்த நிலையை அடைவார் என்பதைப் படம் 5 காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



சில கம்பெனிகள் தாம் நடத்தும் தொழிலின் உற்பத்தியை திறம்பட நடத்தப் பெரிய எடுப்பு அவசியமென எண்ணுவதால் நல்ல பயனை அடையும், அல்லது தொழில் ஆராய்ச்சியிலோ, தனி உரிமைச் சட்டம் பெறுவதிலோ பெரிய கம்பெனி ஈட்டும் வெற்றி, P (வி) மீது தற்காலிகமாகவோ நிரந்தர மாகவோ ஆதிக்கத்தைப் பெறும். இந்த நிலைகளில் சிலருரிமையாளர் அடையும் இறுதி நிலையையே அந்தப்படம் காட்டும். 5 ஆம் படத்திலே காட்டப்பட்ட கம்பெனியின் கோடு முன்னர் காட்டியதினும் பார்க்க வித்தியாச மானது. தமது விலையை மாற்றும்போது மற்ற விலைகள் நிலையாயிருக்கு மென சிலருரிமையாளர் நினைப்பதில்லை. மற்றக் கம்பெனிகளின் சிலரு ரிமை விலைகளில் எட்டிக்குப் போட்டியான மாறுதல் உண்டாகுமென அவர் உணர்வார். தமது நெடுந்தவணை DD (தே.தே.) கோட்டைக் கீறும்போது உயர் விலை P (வி)யில் விற்பனவாகும் நழுவல்களுக்குக் கழிவு விட்டுக் கொள்வார். அவர் தமது போட்டிப் பிரதேசத்திலே புதியவர்களைக் கொண்டுவருதற்கு அந்த விலை ஒரு தூண்டுதல் போல இருக்கும்.


இறுதிச் சமநிலையானது, கம்பெனியின் இறுதிநிலை விலைமட்டத்துக்கு மேலே அதிகமாகவோ குறைவாகவோ முடிவுறும். புதிதாகத் தொழி லிலே புகுவதற்குப் பயன் அதிகமிருந்து விற்பனையாளர் தொகை அதிக மாயிருந்தால் DD (தே.தே ) கோடானது கிடைநிலைக்கோட்டுக்குச் சமீப மாயிருக்கும். விளைவு நிறைபோட்டி விளைவுகளினும் பார்க்க அதிகம் வித்தியாச முள்ளதாயிராது. ஆனால் விற்பனையாளர் குறைவாகவும், மொத்தத் தேவையோடு சார்த்திப் பார்க்கும்போது அதிகமாகவுமிருந்தால், புதியவர்பற்றி அதிகம் பயமில்லாதிருந்தால், பரஸ்பர நலன்களைப்பற்றி உணர்வுடையவராயிருந்தால், குறிப்பாயுள்ள விலை மாதிரியானது, குறுந்த வணை-நெடுந்தவணை இறுதிநிலைச் செலவுக்குச் சார்பளவில் உயர்வுடைய தாக முடியலாம்.

**நிறைபோட்டி :** ஒரே தன்மையான பொருளைப் பல போட்டியாளர் உற்பத்தி செய்யும்போது, ஒவ்வொருவருடைய உற்பத்தித் தொகையும் சிறிதாயிருப்பதால் சந்தைவிலையை நியாயமான அளவுக்குப் பாதிக்கச் சக்தியற்றதாயிருக்கும் ஓர் உதாரணம் சம்பந்தமான சமநிலை, படம் 6 இலே காட்டப்பட்டுள்ளது. தினிசான கம்பெனி நெடுந்தவணையிலே மேல திக லாபத்தைப் பெறமாட்டாது. ஆனால் அது பயன்படுத்தும் சாதனங்களு களுக்கு வெளிப்படையாகவும் குறிப்பாகவும் செலவு செய்யக் கிடைக்கும் வருமானத்துக்கு மேலே இலாபத்தைப் பெறமாட்டாது. இறுதிநிலைச் செலவு விலையிடல், நெடுந்தவணைச் சராசரிச் செலவுக்கு மிக அதிகமான விலையில் முடியுமானால், புதிய கம்பெனிகள் பிரவேசித்தல் P (வி) யைப் பின்னால் மேலேதள்ளும் ; அல்லது பழைய கம்பெனிகள் வெளியேறல் P (வி) யை பின்னால் கீழே நெடுந்தவணைச் செலவு மட்டத்துக்கு இறக்கிவிடும்.

www.padippakam.com



**நிறைபோட்டி, பொருளியலாளர்க்குத் திட்டமானதொரு கருத்தையுடையது:**




படம் 6. இந்தத் தினிசான விற்பனையாளர், உற்பத்தியாளர் பலருள் ஒருவர். இவர் உற்பத்தி செய்வதும் ஒரேவகையான பொருளே. அதனால் இவர் சமாந்தரமான (எல்லையில்லாத நெகிழ்ச்சியுடைய) *dd* கோட்டை எதிர்ப்படுவார். தொழிலின் மிகப்பெரிய DD (தே.தே.) கோடு மிக நெகிழ்ச்சியற்றதாயிருக்கலாம். பிரசித்தமான கம்பெனிகள் சுதந்திரமாகப் பி.வேசித்தும், விட்டுவிலகவும் முடியுமானல் (இவை எந்த ஒரு கம்பெனியின் செலவு நிலைகளையும் பின்னே திருப்பக் கூடியனவாயிருக்கவேண்டும்) E இல் நெடுந்தவணைச் சமநிலை போட்டிச் செலவுக்கு மேலே எவ்வகையான இலாபத்தையும் உட்படுத்தமாட்டாது. இது சரியாகக் கணிக்கப்பட்ட குறிப்பான செலவையும் சந்தர்ப்பச் செலவையும் உள்ளடக்கியிருக்கும். சமூகமானது மொத்த உற்பத்தியை மிகத் திறமையுடன் பெறும். இது 22 ஆம் அத்தியாயத்திலே காட்டிய MC சமமாயிருத்தல் என்ற கொள்கையை அனுசரிப்பதாலுண்டாகிறது. தற்போதுள்ள கம்பெனிகளிலிருந்து, புதிய கம்பெனிகளைச் சேர்ப்பதால் மலிவாகச் கிடைக்கக்கூடிய உற்பத்தியை அது பலவந்தமாக எடுப்பதில்லை.

### நிறைவில் போட்டியினலுண்டாகும் வீண் செலவுகள்.

நம்பிக்கைப் பங்கச் சட்டம் சம்பந்தமான சட்ட சரித்திர, தாபன அமிசங்களைப்பற்றி ஆராய்வதற்கு முன்னர் தனியுரிமை போன்ற நிறைவில் போட்டிகள் சம்பந்தமான பொருளாதாரக்கேடுகள் எவை யென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### தனியுரிமைக் கட்டுப்பாடுகள்.

தனியுரிமைக்கு AC (ச.செ.) கோடு கிடைநிலையாயிருக்கும். இதற்கும் அதனுடைய நெடுந்தவணை MC (இ.செ.) கிடைநிலைக் கோட்டுக்கும் வேறுபாடில்லை. ஆனல் அதன் விலை இந்த மட்டத்துக்கு அதிகமாகவே அமைக்கப்படுகிறது. தனியுரிமை வரியொன்றை இலாபத்துக்குச் சமமானதாக விதித்தால் தனியுரிமையால் வரும் தீமைகள் நீங்குமா ?.

அப்படியானல் தனியுரிமையாளர் இலாபமில்லாது தொழில் நடத்த வேண்டும். அரசாங்கம் அவர்களுடைய இலாபத்தை அபகரித்துவிடும். ஆனல் தனியுரிமை அதனுடைய விலை (P) யையோ பொருளின் தொகை (Q) வையோ குறைக்கமாட்டாது. ஏனெனில் தொகையாகக் கொடுக்கும் வரியினல் MR (இ.வ.) உம் MC (இ.செ.) யும் வெட்டுமிடம் மாறமாட்டாது.

www.padippakam.com



அத்தகைய வரி Q வுடன் மாறமாட்டாதபடியால் அது MC (இ.செ.) யைப் பாதிக்காது. MR (இ.வ.) தேவைக் கோட்டிலேயே தங்கியிருக்கும்; செலவிலும், தனியுரிமை வரியிலுமன்று. அதனுல் நுகர்வோர் குறைவாகவே பண்டத்தைப் பெறுவர்; விலை அதிக மாயிருக்கும். அரசாங்கம் தனியுரிமை இலாபமெல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளும்; வளங்களைப் பிரித்து ஒழுங்கு செய்யும் கடமையில் அது தவறிவிடும்.


அரசாங்கம், தனியுரிமையாளர் விலையை இறுதிநிலை வருவாயோடு சமன்செய்யாமல் செலவோடு சமன்செய்யத் தூண்டினுலென்ன? அப்போது நாம் 3 ம் படத்திலுள்ள E சமநிலையிலிருந்து F, G என்ற தானங்களுக்கு நகருவோம். நிலையான அலகுச் செலவு என்ற இலேசான சந்தர்ப்பத்தோடு சேருவோம். சமூகம் உண்மையான வாய்ப்பைப் பெறும். இதிலிருந்து நாம் பெறும் விளைவு: தனியுரிமையாலுண்டாகும் உண்மையான மேலதிகப் பளு P (வி) க்கும் MC (இ.செ.) க்குமுள்ள தனியுரிமை மாற்றமேயாகும்.[1]

**மிகப் பலர் பிரவேசித்தலும் " நோயான " கைத்தொழிலும்.**

பலதுறைகளிலே கம்பெனிகள் அதிகம். இவற்றிலே பல, சிறு தொகைத் தொழிலைச் செய்துகொண்டு தமது மூலதனம் தேயும்வரை தொழிலில் நிலைநிற்கும். சில்லறை வியாபாரத்துறையில் இதற்கு உதாரணம், மாளிகைக்கடை, தவறணை, சாப்பாட்டுக்கடை, இரவுச் சங்கங்கள், பெட்ரோல் நிலையங்கள் என்பனவாகும். ஆரம்பத்தில் அதிக முதல் தேவைப்பாடாத புடைவை வியாபாரம், உடைவியாபாரம் முதலியன கூட இந்த நிலைக்கே வரும்.

இலாபம் சம்பாதிக்க முடியாத இத்தகைய தொழில்கள் முயற்சியிலிருந்து நீங்கினுலென்ன? இதற்கு விடை அவை அப்படித்தான் செய்கின்றன.

தனியுரிமைத் திரிபு




படம் 7.

1. தனியுரிமையாலுண்டாகும் " மீளாப்பளுநட்டம் " என்பதை விளக்க இந்தப்படத்தை விரிவான நூல்கள் பயன்படுத்தும். போட்டி இலட்சியமான G யில் சமூகம், மாஷலின் நுகர்வோர் மேல்மிச்சத்தை (படம் 7) அனுபவிக்கும். இது NGR என்ற முக்கோணப் பரப்பிலடங்கும். தனியுரிமையானது P யை நல்ல இலாபத்தானமான E க்கு உயர்த்தினுல், இலாபநீள்சதுரமான NSEN' காட்டும் நுகர்வோர் மேல்மிச்சத்தை நுகர்வோர் தனியுரிமையாளருக்கே தியாகஞ் செய்வார். அவருக்கு N' ER மாத்திரமே. சிறிய முக்கோணம் SGE க்கு என்ன நடக்கும்? இது " மீளாப்பழுநட்டம் " தனியுரிமையாளரின் இலாபத்திலும் அதிகமாக நுகர்வோர் நட்டமடைவர். மொத்தத் தொகையாய் இலாபவரியைத் தனியுரிமையாளர் கொடுத்தாலும், மீளாப்பளு முக்கோணத்தில் நட்டமுண்டாகும்.

www.padippakam.com



ஆனால் அவற்றை விட வேறு கம்பெனிகள் அத்தொழிலிலே புகுவதால் நிலைமை மாறுவதில்லை. சில சமயம் கம்பெனிகள் தொகை கூடவுஞ் செய்யும்.

தொழில் நடத்தும் பல கம்பெனிகள் நட்டமடையும்போது புதிதாக ஏன் கம்பெனிகள் இத்தொழில்களிலே பிரவேசிக்க வேண்டும் ? சில அறியாமையால் பிரவேசிக்கின்றன. வேறு சில இலாபம்பெறலாமென்ற நம்பிக்கையால் சேருகின்றன. வயதான தம்பதிகள் தமது சீவிய காலச் சேமிப்புப் பணத்தைப் போட்டு ஒரு சில்லறைக் கடையைத் தொடங்குகின்றனர். அதில் இலாபம் கிடைக்குமென்பது அவர்களுடைய நம்பிக்கை. ஆனால் அவர்களுக்கு விசேட வியாபாரத் திறமை கிடையாது. மூலதனமும் குறைவு. எனவே அந்த மூலதனம் முடியும் வரை அவர்கள் அந்த வியாபாரத்தை நடத்துவர்.

உடைவியாபாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு தொழிலாளி சொந்த வியாபாரத்தைத் துவங்குகிறார். பல உடைவியாபாரிகள் செலவைக் கூடச் சமாளிக்க முடியாது திண்டாடுவது இவருக்குத் தெரியும். இருந்தும் சிலர் நல்ல இலாபம் பெறுகிறார்கள் என்ற எண்ணத்தால் தாமும் துவங்குகிறார்.

ஆனால் இந்தச் சிறிய தொழில்களால் சிலருக்கு வேலை கிடைக்கிறது. ஆனால் வேலைக்குக் கொடுக்கும் சம்பளம் குறைவு. இது அரசாங்கம் வேலையற்றோருக்கு வேலை கொடுப்பதற்காகக் குழியைத் தோண்டி அதை நிரப்பச் செய்யும் வேலைபோன்றதே.

நெடுநாளாக இருந்துவரும் இத்தகைய தொழில் நெருக்கம் நிறை போட்டியுடையதெனக்கூறமுடியாது. விவசாயம், பருத்தித்தொழில் என்பவற்றில் ஒரு வேளை அப்படியிருக்கலாம். இத்தகைய போட்டித் தொழிலிலே பல கம்பெனிகளிருப்பது விரும்பத்தக்கதன்று. இதனால் வளங்களும் வீணாகும்; நட்டமுமுண்டாகும். இத்தகைய போட்டித் தொழிலில் நுகர்வோருக்கு ஓரளவு நன்மையுண்டு ; அதாவது விலை குறையும் ; இது கடைசியில் உற்பத்தியாளருக்குண்டாகும் நட்டமே.

நெடுநாளாக உண்டாகும் நெருக்கமான இத்தொழில்களில் சந்தைப் போட்டி நிறைவில்லாததாயிருக்கும். திறமையற்ற இந்த உற்பத்தியாளர் என இச்சிறிய வியாபாரிகள் மிக மலிவாக விற்பனை செய்யமாட்டார். விலையடிப்படையில் போட்டியிடுவதை விட்டு அவை மிக அதிகமான விலையைக் குறிப்பர். அதனால் தொழில் பிளவுபடும்.

இத்தகைய நிறைவில் போட்டியின் பயனாக உண்டாகும் பொருளாதார நிலை பூரணத் தனியுரிமையாலுண்டாகும் நிலையிலும் மோசமாயிருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



விலே உயர்வது மாத்திரமன்றிப் பயனுள்ள வளங்கள் வீணுக்கப்படுகிறன. ஏனெனில் ஒவ்வொரு கம்பெனியும் பல எந்திர தளவாடங்களை வேலே யின்றிப் போட்டு வைத்திருப்பதோடு தொழிலாளர் சக்தியும் வீணுக்கப்படு கிறது. உற்பத்தியாளர் நட்டமடைவர்; வளங்கள் வீணுக்கப்படுகின்றன. விலேயும் அதிகமாகிறது. இவ்வாறு மூன்று வகையிலும் இது கெடுதியை உண்டாக்கும்.

நிறைவில் போட்டியினுல் வளங்கள் எவ்வாறு வீணுக்கப்படுகின்றன, விலேகள் எவ்வாறு ஏறுகின்றன, நிறைவில் போட்டியாளருக்கு எவ்வாறு இலாபங் கிடைப்பதில்லே என்பதை ஒரு படத்தின் மூலம் விளக்கலாம். சுதந்திரமாகக் கம்பெனிகள் தொழிலிலே பிரவேசிப்பதால் உண்டாகும் நிறைவில் போட்டித்துறைக்கு மாஷலின் நெடுந்தவணைக்கால ஆராய்ச் சியின் போக்கு எவ்வாறு பொருந்துமென்பதையும் இது காட்டும்.

படம் 4 அத்தகைய நிறைவில் போட்டியாளரைக் காட்டுகிறது. உதாரண மாக ஒரு சவரக்கடைக்காரரை எடுப்போம். அவருடைய வாடிக்கைக் காரர் நீண்ட தூரம் நடந்துவந்து சவரஞ் செய்விக்க விரும்பவில்லே. அசல் தேவைக்கோடு $d'$ $d'$ கீழ் நோக்கிச் சரியும் இறுதிநிலேவருவாய், செலவு என்பவற்றை ஊகிக்கும்போது அசல் தானம் E யிலே உற்பத்தியை உண்டாக்கச் செய்யும். இது நேர்க்கணிய இலாபத்தை உச்சமாக்குகிறது. நிறைவான அலகுச் செலவுகளுக்கு அதிகமாகவிலே குறிக்கப்படுகிறது (பக்கம் 729 ஐப் பார்க்க).

மற்ற நாவிதர்கள் இந்த இலாபச் சந்தர்ப்பத்தை உணர்வர். அவர்களும் தொழிலிற் பிரவேசிப்பர். நாலு பகுதிக்கு ஒரு சவரக்கடை இருந்த இடத்திலே மூன்று சவரக்கிடைகளுக்கு ஒன்று தோன்றும். சவரக்கடைக் காரரின் தேவைக்கோட்டுக்கு என்ன நடக்கிறது. புதியவர்கள் தொழிலிலே பிரவேசித்தபடியால் வியாபாரம் பிரிகிறது. அதனுல் தேவை கீழ்நோக்கி இடமாகச் $dd$ க்குச் சரியும். புதிய நல்ல இலாபத்தானத்தில் நாவிதருக்கு இலாபமில்லே. ஏனெனில் புதிய தேவைக்கோடு சராசரிச் செலவுக்கோட்டைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. இறுதிநிலேச் செலவு புதிய இறுதிநிலே வரு மானத்திற்குச் சமனுக்கப்படுகிறது. இதனுல் நட்டம் தவிர்க்கப்படுகிறதே யன்றி நேர்க்கணியமான இலாபம் கிடைப்பதில்லே.

E யிலுள்ள நெடுந்தவணைச் சமநிலே, U உருவிலுள்ள சராசரிச் செலவுக் கோட்டின் அடித்தளத்தில் நிலவும் திறமை மிக்க செலவுமட்டத்திலும் விலே அதிகமென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. சவரக்கடைக்கு மேல திக சக்தியுண்டு. ஆனுல் வாடிக்கைக்காரார் குறைவு. (இப்பொது வாடிக் கைக் காரர் முன் போல 4 பகுதியைக் கடக்கவேண்டியதில்லே. 3 பகுதி யையே கடக்க வேண்டும். இது பயனுடையதே. ஆனுல் திறமையுள்ள

www.padippakam.com



சவரக்கடைக்காரரிடம் குறைந்தவிலையிலே நெடுந்தூரம் சென்று சவரஞ் செய்யும் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை).[1]

சவரத் தொழிலாளர் மேலும் அதிகமாகத் தொழிலிலே இறங்குவராஞல் *d'd'* என்ற கோட்டை *dd* க்குக் கீழே கீறி வளம் வீணுக்கப்படுவதையும் சமூகத்துக்கு நட்டமுண்டாவதையுங் காட்டுக. 6 ஆம் படத்திலே காட்டப்பட்ட நிறை போட்டி விடயத்திலும் இவ்வாறு செய்யலாம்.

**சிலருரிமையால் உண்டாகும் தீமைகள்.** சென்ற நூற்றுண்டிலே ரெயில் கட்டணம் சம்பந்தமாக நடந்த போட்டியைப்பற்றி 24 ஆம் அத்தியாயத்திலே குறிப்பிட்டதை ஞாபகப்படுத்துக. சிக்காகோவிலிருந்து நியூயோக்குக் கப்பலிற் சரக்கேற்றுவோர், சில பென்னியாவது குறைவான கட்டணம் கேட்போருடைய கப்பலையே விரும்புவர். அதனுல் இந்தப் பாதையிற் கப்பலோட்டும் மூன்று நாலு கப்பல் கம்பெனிகள் ஒன்ருேடொன்று போட்டியிட்டுத் தமது கட்டணங்களை குறைத்துக் கொண்டேயிருக்கும். கடைசியில் மிக மோசமான வகையில் கட்டணம் வீழ்ச்சியடையும். கப்பல் போகாத இடங்களுக்கு ரயில் தனது கட்டணத்தைக் கூட்டும். இவ்வாறு பொருத்தமற்ற கட்டணமுறை உருவாகும். 1887 இலே ரயில்கட்டணங்களை ஒழுங்கு செய்யவும் வருமானத்தை ஒழுங்கு செய்யவும் நிலையற்ற விலைவாசிகளைத் தடுக்கவும் சமஸ்தான வர்த்தகக் கமிஷன் தாபிக்கப்பட்டது.

அரசாங்கத் தலையீடில்லாமலே பெரிய கம்பெனிகள் போட்டியால் தீமையே உண்டாகுமென்பதை உணர்கின்றன. எல்லாருடைய நெடுந்தவணை இலாபத்தையும் உச்சப்படுத்தக்கூடிய ஒரு விலையை விதிக்க வெளிப்படையாகவோ குறிப்பாகவோ கம்பெனிகள் எல்லாம் இசையும். வர்த்தக சங்கங்கள் நீதி இலாகா வழக்கறிஞரில் கண்ணேட்டஞ் செலுத்தும்; இவர்கள் ஷேர்மன் நம்பிக்கைப் பங்கச் சட்டத்தை அமுல்நடத்தி ரகசிய விலைச் சலுகை செய்யும் கள்ள வியாபாரிகளுக்குத் தண்டனை விதிப்பர். சில சமயம் தொழிலிலே நிலவிவரும் நடைமுறை நிலைமையைப் புதிய நிலைமைகளும், கம்பெனிகளும் குழப்பக்கூடும். இதன் பயனுக விலைப் போட்டியொன்று உண்டாகும். இதுவும் ஈற்றில் எல்லாருக்கும் நல்ல படிப்பினையைக் கொடுக்கக்கூடியதாயிருக்கும்.

சிலருரிமையை ஆராயும் இடத்து, கம்பெனிகள் தங்கள் பழைய முதலீட்டுக்கு ஏற்றவருவாயைப் பெற முயலுவதால் சில சமயம் நுகர்வோரின் நன்மைக்கெதிராகச் செல்ல வேண்டியேற்படுவதையும் கருத்திற் கொள்ள

[1] "திறமை" விலையிடுதல்பற்றிய நமது ஆராச்சியில், விரிவான நூல்களிலே அது நிரூபிக்கப்பட்டுள்ளதென்பதைக் காண்கிருேம். இறுதிநிலைச் செலவுக்கு அதிகமாகவிலை குறித்தால், அறிமுறைவசையில் எல்லாருக்கும் நன்மை செய்யலாமென்ற நிலை உண்டாகலாம்; அதாவது சவரத்தொழிலாளர், வழுக்கைத் தலையர், நீண்ட மயிருள்ளவர், நீண்டதூரம் நடக்கவிரும்பாதவர் முதலியோர். ஆனுல் இதிலிருந்து மாற்றத்தை எவரும் விரும்பவில்லையென நினைக்கக்கூடாது; அல்லது P (வி) = MC (இ.செ.) என்பதை அமுல்நடத்திஞல் பலவகை மாற்றமுண்டாகுமென்றும் ஊகிக்ககூடாது. இங்கே எது வாய்ப்பானது என்பதைத் திட்டமாகக் கூறுவது கஷ்டசாத்தியமானதென்பது விளங்கும்.

www.padippakam.com



வேண்டும். பழங்காலத்திலே கம்பெனி எந்திர தளவாடங்களில் அதிக பணத்தை முடக்கியிருக்கலாம். அக்காரணத்தால் விலையை உயர்த்தவோ, உற்பத்தியைக் குறைக்கவோ கூடாது. கழுத்தறுக்கும் போட்டி மூலமே மேலதிகத் தளவாட சக்தியைப் பயன்படுத்தலாம்; (எந்திர தளவாடங்களைப் பெரிய எடுப்பில் அமைத்து விட்டு அதை நல்ல வகையில் பயன்படுத்தாதிருப்பதும் சமூகத்துக்கு நன்மையுடையதன்று). நட்டப்படுத்தலும், குறைந்த இலாபத்தைப் பெறுவதுமே மேலதிக எந்திர சக்தியைக் குறைப்பதற்குச் சுதந்திர வியாபாரத்துறையில் அனுசரிக்கக் கூடிய முறையாகும்.

இத்தகைய நிறைவில் போட்டிக்கு உதாரணமாக உருக்கு முதலிய உலோகத் தொழில்களைக் காட்டலாம். ஆனால் இவை இன்றைய நிலைமையில் எவ்வாறு செயற்படுகின்றன. 1960 ல் மந்தமேற்பட்டது. உருக்கு உற்பத்தி பாதியாகக் குறைந்தது. இதனால் விலைகள் இறங்கக் கூடுமென்றும், உருக்குச் கம்பெனிகளின் வருவாய் குறைந்து இலாபநட்டமில்லாச் சமநிலையோ அதற்குக் கீழான நிலையோ ஏற்படக்கூடுமென்று சிலர் அஞ்சினர். ஆனால் அப்படி நடந்ததா ? இல்லை. சாதாரண சக்திக்குக் குறைவான மட்டத்தில் இலாபஞ் சம்பாதிக்கலாமென்று உருக்குத் தொழில் கருதிற்று. விலை வாசியும் அவ்வளவு தூரம் குழப்பமடையவில்லை.

நிறைபோட்டியுள்ள தொழிலில் தேவை இடப்புறமாக நகர்ந்தால் விலையிறங்கும். இலாபமும் பெரிதும் குறையும். இருந்தும் போட்டித் தொகை அதிகம் வீழ்ச்சியடையாது. ஏனெனில் கிடைத்ததற்குப் பண்டம் விற்பனை செய்யப்படும். உற்பத்தியாளர் இழப்பினால், நுகர்வோர் நன்மையடையமாட்டார். புதிய தேவை நிலைக்கேற்றபடி உற்பத்தியானது காலப் போக்கில் சரிக்கட்டப்பட்டுவிடும்.

சிலருரிமையில் உற்பத்தி பலவாறு மாறுபட்டாலும் விலை மாறாதிருக்கும். யந்திரத்தளவாடங்கள் வேலையின்றிக் கிடக்கலாம். உற்பத்திப் பொருள் புதிய தேவைக்கேற்றவாறு மலியமாட்டாது. குறிப்பிட்ட விலைகளின் கீழ்நோக்கிய நெகிழ்ச்சியின்மை பணவீக்கத்தைத் தூண்டுமெனப் பொருளியலறிஞர் கருதுவர். ஏன் ? விலைகளும் செலவும் வீழ்ச்சியடையாவிட்டால் விலைப்பட்டியல் உயர்வதற்கு ஒரே ஒரு வழியுண்டு.

**தீவிரமான ஆராய்ச்சியும் தனியுரிமையும்.**

எந்த ஒரு துறையிலும் எல்லாம் தீமையைக் கொண்டுவரமாட்டா. நிறைவில் போட்டியில் சில நன்மைகளுமுண்டென வாதிக்கலாம். ஒரு கம்பெனி தனது நுண்தொழில் திறமையாலும், பண்டங்களுக்குப்பெற்ற விசேட உற்பத்தி உரிமையாலும், வியாபாரச் சின்னங்களாலும் விளம்பரச் சுலோகங்களினாலும், விலைவாசிமீது ஆதிக்கஞ் செலுத்தும்; இதுவே சாதாரணமான தொழில் முறைகளிற் காணப்படும் மாதிரி. ஏகபோக உரிமை காரணமாக வரும் இலாபம், தொழில் ஆராய்ச்சிக்கும், விளம்பரத்துக்கும் மறுபடி செலவு செய்யப்படுகிறது. அதனால் போட்டிக்கம்பெனி

படிப்பகம்

www.padippakam.com



களோடு சரி நிகராய் நிற்கவோ அவைகளுக்கு மேலதிகமாய் வெற்றியீட்டவோ அதற்கு முடியும். ஜெனரல் இலெக்ட்ரிக், ஆர். சி. ஏ., டூபொண்ட் என்பன இத்தகைய கம்பெனிகளே.

ஆராய்ச்சியும், விளம்பரமும் மிக்க செலவு உண்டாக்கக் கூடியவை. அவற்றின் விளைவு ஒரு சேர வருவது ; வெற்றி மேலும் பல வெற்றிகளை உண்டாக்கும்; இலாபம் மேலும் இலாபத்தை உண்டாக்கும்; எனவே சிறிய தொழில்கள் அவற்றோடு போட்டி போட முடியாது. தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிகளால் பெரிய அளவிலே சிக்கனங்களை உண்டாக்கலாம். இவ்வாறு சிறியதொழில்கள் செய்து கொள்ள முடியாது.[1]

பியர், சிகரெட், சவர்க்காரம் என்ற உதாரணங்களைக் கொண்டு விளம்பரப்படுத்தல் வேறு, ஆராய்ச்சி செய்தல் வேறு என்பது தெரியும். பட்வீசர் பீயர் நல்லாக விலைப்படுவதற்கு விளம்பரமே காரணம். சவர்க்கார விளம்பரம், சவர்க்காரம் உபயோகிப்பதால் சுத்தமாயிருக்கலாமென்பதைக் காட்டவில்லை ; ஒரு கம்பெனியின் சவர்க்காரமே சிறந்ததென்பதையே எடுத்துக் காட்டுகிறது. பல சந்தர்ப்பங்களிலே தொழில் முறை சம்பந்தமான பிரயோக ஆராய்ச்சி, தொழில் நுட்பத்தைச் சீர்ப்படுத்தவா சந்தையைச் சீர்ப்படுத்தவா என்று சொல்லிக் கொள்ள முடியாதபடியமைந்திருக்கும்.

ஷூம்பீட்டர் தனியுரிமையாளரைப் புகழ்ந்து எழுதியதை (பக்கம் 132) மறுபடியும் வாசித்துப் பார்க்கலாம். எமது சிறந்த கண்டுபிடிப்புக்களிற் பல சிறிய தொழில்கள் ஆராய்ச்சி செய்ததன் பயனாகவே உண்டாயின என்ற ஒரு கொள்கையுமுண்டு. அவர் கூறுவதை இந்தக் கூற்றுடன் ஆராய்ந்து பார்த்தால், இது விவாதத்துக்குரிய விடயமென்பது தெரிய வரும்.

மேலே கூறிய கம்பெனிகள் சிலவற்றின் திறமையையும், முற்போக்கையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால் அதே தருணத்தில் சில விமர்சகர்கள், அந்தத்திறமையின் முழு நன்மைகளையும் நுகர்வோர் பயனடைய விட்டுவிடவேண்டுமென்றும், கம்பெனிகள் தாம் இலாபமடைய வேண்டுமென்று நினையாது நுண்தொழிலபிவிருத்தியில் அதனைச் செலவு செய்யவேண்டுமென்றுங் கூறுவர். "சோப் நாடகம்", நடனம் போன்ற விளம்பரங்களிலே அதிகம் பணத்தைச் செலவு செய்யாமல், தொழில் நுட்பத்தை மேலும் அபிவிருத்தியடையச் செலவு செய்தால் நல்லதென்றும் அவர்கள் எடுத்துக்காட்டுவர். ஆனால் இதுவும் விவாதத்துக்குரிய விடயமே.

[1] பெரிய கம்பெனிகளென்றால் ஆபத்துக்களை ஒன்றுசேர்க்கலாம். தனிப்பட்ட ஆபத்துக்களை ஒன்று கூட்டினால் பல்வேறு மாற்றங்களுக்கு ஈடுசெய்யலாம். (கம்பெனியை நானுமடங்காகப் பெருப்பித்தால் ஒரு டொலருக்குரிய சராசரி ஆபத்தை அல்லது மாற்றங்களை அரைவாசியாக்கலாம்.

www.padippakam.com



## தனியுரிமைக் குறைபாடுகள்பற்றி என்ன செய்யலாம்

தனியுரிமைக்கும், சிலர் உரிமைக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியாதா? முடியும். தொழிலில் புகுவதற்கான தடை மிகக் குறைவாயிருந்தால் வருங்காலத்தில் போட்டியுண்டாகலாம் என்ற அச்சமும் அது நிகழ்ந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளும் சிலர் உரிமை விலையை ஏறவிடாது தடுக்கும்.

சப்ளையில் ஆதிக்கஞ் செலுத்தவும், விலைகளை நிலையாக வைத்திருப்பதற்காக ஒன்று சேரவும் நோக்கமிருந்தால், அரசாங்கம் நம்பிக்கைப் பங்கக் கொள்கையை நன்கு அமுல்நடத்த வேண்டும். அப்போது சிலருரிமையாளர் சமூகத்தின் நிசமான இறுதிநிலைச் செலவுக்கு மேலே ஒரு மட்டத்தில் இறுதிநிலை வருமானத்தையும், செலவையும் சமன்படுத்த முடியாதிருப்பர்.

சில பொருளியலறிஞர் உதாரணமாக சிக்காகோவைச் சேர்ந்த ஜோர்ஜ் ஜே. ஸ்டிக்லர் போன்றோர் பெரிய தொகைகளைச் சிறு தொகைகளாகப் பிரிக்கவேண்டுமென்று வாதாடுவர். U வடிவான செலவுக் கோட்டின் அடித்தளமானது நேரத்தோடு தோன்றுவதால் இதைச் சாத்தியமாக்குமெனவும் அதனால் பெரிய அளவு உற்பத்தியின் நியாயமான சிக்கனங்களைத் தியாகஞ் செய்ய வேண்டியதில்லையென்றும் அவர் நினைக்கிறார். விற்பனையாளர் பலராயிருப்பதால் போட்டி நிறைபோட்டியாயிருக்குமேயன்றிச் சிலருரிமையாயிருக்காதெனவும் கூறுகிறார். (கம்பெனிகள் ஒன்று சேர்ந்து அவற்றின் தொகையைக் குறைப்பதை அவர் விரும்பவில்லை. தற்காலத்திலுள்ள பிரமாண்டமான கம்பெனிகள் பல கம்பெனிகள் ஒன்று சேர்ந்ததால் உண்டானவையெனவும் அவை உற்பத்தித்திறமையை இலட்சியமாகக் கொள்ளாது சந்தை விலைமீது தனியுரிமை ஆதிக்கஞ் செலுத்த விரும்பினவென்றும் எண்ணுகிறார்.)

இது விவாதத்துக்குரியதொரு விடயம். இந்தப் பிரச்சினைகள் பற்றி உயர்நீதிமன்றம் கூடத் தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுகின்றது. அது, நியூ ஜேர்ஸி ஸ்டான்டர்ட் எண்ணெய்க் கம்பெனியை ஜோன் டி. றொக்பெலர் காலத்திலே பிரித்தது. பழைய அமெரிக்கப் புகையிலைக் கம்பெனி விடயத்திலும் இவ்வாறே நடந்தது. ஆனால் முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் யூனைட்டெட் ஸ்டேட்ஸ் உருக்குக் கம்பெனியை அது எத்துணைப் பெரியதாயிருந்தாலும் பிரிக்கவேண்டியதில்லையெனத் தீர்ப்பளித்தது.

றெய்னோல்ட்ஸும் கெய்சரும் முக்கியமான அலுமினிய உற்பத்தியாளராய் வந்த பின்னர் அல்கோவாவின் தனியுரிமை நீங்கிற்று. இதை 1946 இலும் 1950 இலும் நீதிமன்றம் வரவேற்றது. (அலுமினியம், செம்பு, உருக்கு என்பவற்றோடு போட்டியிட வேண்டியதாயிற்று. டு பொண்ட் செலோபேன் வழக்கில் செலோபேன் மற்றைப் பொருள்களோடு போட்டியிடவேண்டியிருந்ததால் அதன் உற்பத்தியாளர் தனியுரிமையுடையவரல்லர்

www.padippakam.com



என நீதிமன்றம் தீர்த்தது). பெரிய சினிமா உற்பத்தியாளர்களை நீதிமன்றம் நாடகத் தொழிலிலிருந்து விலகவுஞ் செய்தது.

தனியுரிமை நிறைவில் போட்டியை எதிர்க்க நம்பிக்கைப் பங்கச் சட்டங்களே உதவிபுரிந்தன என்பதை மேல்வரும் பிரிவுகளிற் காண்போம். அவற்றின் சரித்திரத்தையும் பின்னர் ஆராய்வோம்.

**அரசாங்கத்தால் மேற்பார்வை செய்யப்படும் தனியுரிமைகள்**

தனியுரிமைபற்றி அரசாங்கம் என்ன செய்யக்கூடுமென்பதை அறிய அரசாங்கத்தின் ஒழுங்கின்படி அனுமதி வழங்கப்பட்ட தனியுரிமையை விபரமாக ஆராய்வோம். பொது நன்மைக்குரிய காஸ் வெளிச்சக் கம்பெனிகள், தெலிபோன் சேவை, போக்குவரத்துச் சேவை, ரயில்ரோட்டுச்சேவை முதலியன ஆராயப்படலாம். உள்நாட்டுத் தெலிபோன் சேவை விடயத்தில் இரண்டு வகையான தெலிபோன் கம்பிகளை வைத்திருப்பது சிக்கனமற்ற தானபடியால், ஒரு கம்பெனிக்கே தனியுரிமை வழங்கப்படுகிறது. (பால் விநியோக விஷயத்திலும் இதே கொள்கையை என் அனுசரிக்கக்கூடாது).

பொதுப் பயனுடைய வேலைகளைப் பார்க்கும் கம்பெனிக்குப் பூரணத் தனியுரிமை வழங்கியபின் அரசாங்கம் தலையிட்டு நுகர்வோனைக் காப்பாற்ற உச்சவிகிதத்தை விதிக்கும். இதைப் பொது ஒழுங்குசெய் கமிஷன்களே நடத்தும்; அவை ஒவ்வொரு சேவைக்கும் பொருத்தமான உச்ச விலைகளை விதிக்கும். கம்பெனியின் முதலீட்டுக்கு ஏற்றவருவாய் கிடைக்கக்கூடிய விலைகளை விதிப்பதே வழக்கமாயிருந்து வருகிறது. 5, 6, 7 வீதம் நியாயமானதாகக் கருதப்படும் (மூலதனத்துக்கு ஏற்றவருவாய் தரக்கூடிய விகிதத்தை உத்தரவாதஞ் செய்தல், பொதுநல வேலையைத் திறமையுடையதாகவும், செலவுச் சிக்கனமுடையதாகவும் வைத்திருக்கச் செய்யுமென்ற பிரச்சினையை எழுப்பும்).

இந்த நியாயமான விகிதம் பிரயோகிக்கப்படும் கம்பெனியின் மூலதன மதிப்பு அடிப்படையை நிச்சயிப்பது சிக்கலான விடயமாகும். மூலதன மதிப்பை நியாயமான முறையில் அளப்பதற்கு மூன்று முறைகள் கூறப்பட்டுள்ளன. (1) அசல் செலவு (தேய்மானம் நீங்கலாக) அல்லது பழைய கவனமான முதலீடுகளின் கூட்டுத்தொகை. (2) நடைமுறைத் திருத்தங்கள்—புதுப்பிக்கும் செலவுகள் (தேய்மானம் நீங்கலாக)—அதாவது கம்பெனியின் எந்திர தளவாடங்களைத் திருத்திப் புதிய பகுதிகளை நிகழும் விலைகளிற் போடுவதற்குரிய செலவு; (3) சந்தை மதிப்பை முதலாக்கல். அதாவது பொது நன்மைச் சாதனங்கள் சம்பந்தமான கடன் பத்திரங்கள், சொத்துக்கள் என்பவற்றின் சந்தை மதிப்பை முதலாக்கல்.

இவற்றில் மூன்றாவது முறை அர்த்தமற்றதென எல்லாராலும் கருதப்படுகிறது. எந்த ஒரு வருமானம் ஈட்டும் சொத்தின் சந்தை மதிப்பும், அதனுடைய வருடாந்த வருவாயை வட்டி வீதத்தினால் முதலாக்குவதால்

www.padippakam.com



உண்டாகும் என[1] நல்லெண்ணம் சம்பந்தமாக 5 ஆம் அத்தியாயத்திலே நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். மூலதனத்தை அளப்பதற்கு முதலாக்கிய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொள்ளுதல் உயர்ந்த வருமான மட்டத்தையோ தாழ்ந்த வருமான மட்டத்தையோ நியாயமானதெனக் கொள்வதற்குச் சமமானதாகும். புதிய அடிப்படையில் முதலாக்கப்பட்டால் மிக அதிகமான வருவாய், மிதமான வட்டி வருமானமாய்த் தோன்றும். மிகக் குறைவான வருமானமும் அப்படியே தோன்றும். எனவே வருமானத்தை மூலதனமாக்கும் முறை பிரச்சினைக்குத் தீர்வுகாணமாட்டாது. அதை அதிகாரிகளே கவனிக்க வேண்டும்.

ஆதலால் அமெரிக்க நீதிமன்றங்கள் அசல் செலவுக்கும் புதுப்பிக்குஞ் செலவுக்குமிடையே ஊசலாடிக்கொண்டிருக்கின்றன. பொது விலை மட்டம் மாருதிருக்கும்வரை இந்த இரண்டும் வித்தியாசமானவையல்ல. ஆனால் பல தசாப்தங்களாக விலைகள் உயரும்போது புதுப்பிக்கும் செலவு அசல் செலவை விட உயர்ந்த வருவாயையும் விகிதங்களையும் உள்ளடக்கும் நிலையுண்டாகும். விலைகளிறங்கும்போது அதற்கு எதிரான வித்தியாசத்தைக் காணலாம். அசல் செலவைப் பயன்படுத்துவதால் பொதுநன்மைக்கான பத்திரங்களில் முதலீடு செய்யும் ஊகமில்லாத வியாபாரிகளுக்குக் சலுகை உண்டாகும். புதுப்பிக்கும் செலவு, நெகிழ்ச்சியுடைய விலையமைப்பை உண்டாக்குவதோடு பழைய செலவுகளுக்கும் அதிக மதிப்பைக் கொடுக்க மாட்டாது.

## கம்பெனிகள் ஒன்று சேர்வதை எதிர்க்கும் கொள்கையின் வரலாற்றுச் சுருக்கம்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவிலே கம்பெனிகள் ஒன்று சேரத் தொடங்கின. சிறிய கம்பெனிகள் பெரிய கம்பெனிகளோடு சேர்ந்தன. சப்ளையைக் கட்டுப்படுத்தவும், விலையை ஏற்றவும் சிறிய கம்பெனிகளும் பெரிய கம்பெனிகளும் ஒன்று சேர்ந்தன. பங்குச் சந்தையை வளர்க்கும் திட்டங்கள் உருப்பெற்று வளர்ந்தன.[2]

1 முதலாக்கும் முறை 29 ஆம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

2 "பொதுநலப் பொருளாதாரம்" பற்றிய விரிவான ஆராய்ச்சிவிடயத்தில் இரண்டுமுறைகளும் உயர்ந்தனவல்ல. பொதுநலச்சாதனங்கள் சம்பந்தமான சேவைகளுக்காய விலையை இறுதி நிலைச் செலவுக்கு மேலாக விதிக்கக்கூடாதென்ற கொள்கையைச் சில எழுத்தாளர் கொண்டனர். (P (வி) = MC (இ.செ.) என் திறமையுடையதென்பதை நாம் எற்கனவே கண்டோம்). இறுதி நிலைச் செலவுகொண்டு விலையை நிர்ணயிப்பதைக் காரியசாத்தியமானதென மிகச் சிலரே கொள்வர். தகுதிக்கு மேலாக தேவை அதிகரித்தால் சொந்தக்காரருக்கு அதிக வருமானமுண்டாகும். ஆனால் செலவு குறையும்போது (பொதுநன்மைக்கான தாபனங்களில் இது சகசம்) அசல் முதலீடு செய்வோருக்கு போதாத வருவாயைக் கொடுக்கும். இக்கட்டத்திலே அரசாங்கம் தலையிட்டு சகாய உதவி மூலம் முதலீட்டுக்காரருக்கு நியாயத்தை வழங்கலாம். அப்படிச் செய்யும்போது விரும்பத்தக்க உற்பத்தி, விலை என்பவற்றில் தலையிடக்கூடாது; தற்போது வழக்கத்திலிருக்கும் நடைமுறைக்கு இது மாருனது.

இது முற்றாய் அமுலுக்கு வருமென எதிர்பார்க்க முடியாது. பொன்வில் அணைபோன்ற திட்டங்கள் இத்தகைய விலைத்திட்டத்தையே நோக்கமாகக் கொண்டவை எனலாம். ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



தனியுரிமை வளர்வதைப் பார்த்துப் பொதுமக்கள் அச்சமடைந்தனர். 1890 இல் ஷெர்மன் கம்பெனிக் கூட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி வியாபாரத்தில் தனியுரிமை வைத்திருப்பதோ கூட்டாகச் சேர்வதோ, வியாபாரத்துக்குத் தடையான முறையில் சூழ்ச்சி செய்வதோ சட்டவிரோத மெனத் தவிர்க்கப்பட்டது. முன்னே தனியுரிமைக் கெதிராக இருந்த தடைகளிலும் பார்க்க இது முக்கியமானதொரு முன்னேற்றத்தையுடையதாயிருந்தது. ஆனால் இது வாக்குவாதமின்றி மற்றவர்களுடைய கவனத்தைப் பெறுமல் நிறைவேற்றப்பட்டது. மேலும் எத்தகைய நடவடிக்கைகள் சட்டவிரோதம், எவை சட்டவிரோதமில்லாதன என்பது பற்றியும் எவரும் தெளிவான கருத்துக் கொண்டிருந்ததாய்த் தெரியவில்லை ; தனியுரிமை ஆகாது என்ற ஒரு கருத்து மாத்திரமே நிலவியது.

1900 ஆம் ஆண்டு துவக்கம் முதற் சில வருடங்களிலே தியடோர் ரூஸ்வெல்ட், வில்லியம் ஹோவாட் டாவ்ட் என்பவர்களுடைய குடியரசுக்கட்சி ஆட்சியில் ஷேர்மன் சட்டத்தின் கீழ் பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. மோர்கன் உறரிமன் என்பவர்கள் தமது வடபசிபிக் ரயில் ரோட்டுக் கம்பெனியை உறில்ஸ் கிரேட் நோதேண் கம்பெனியுடன் சேர்க்கப் பார்த்தனர். உயர்நீதி மன்றம் அதைத் தடுத்தது. பின்னர், அமெரிக்கப்புகையிலைக் கம்பெனியையும், ஸ்டான்டர்ட் எண்ணெய்க் கம்பெனியையும் சிறிய சிறிய கம்பெனிகளாகப் பிரித்துவிடுமாறு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த முதற் பருவத்தின் முடிவிலே உயர்நீதிமன்றம் " நியாயவிதி " என்ற கொள்கையை ஏற்படுத்திற்று. நியாயமற்ற முறையிலே வர்த்தகத்தைத் தடைசெய்வதே (ஒப்பந்தங்கள் கூட்டுச்சேர்தல்கள் முதலியன) ஷேர்மன் சட்டத்தால் தண்டிக்கப்படவேண்டியதெனவும், அதுவே சட்டவிரோத மானதெனவுங் கொள்ளப்பட்டது. கிளேட்டன் கம்பெனிக் கூட்டுச் சட்டம் (1914)) தொழிலாளரை இச்சட்டத்திலிருந்து தவிர்த்ததோடு, சட்டவிரோதமான செயல் எது என்பதைப்பற்றித் தெளிவாக வரைவிலக்கணமும் கொடுத்தது. அதன் பயனுக எல்லா விடயங்களையும் பெடரல் நீதிபதிகளின் சொந்தக் கருத்துக்கு விடாமல் தவிர்த்தது. ஆனால் சரியான போக்கு எது என்பது தெளிவற்றதாகவே விடப்பட்டது. பெடரல் வியாபாரக் கமிஷன் சட்டம் (1914) பொலிஸில் போட்டி விடயமாகவும் அரசாங்கத்துக்குரிய அதிகாரத்தை விரிவாக்கியது.

ரூஸ்வெல்ட், டாப்ட் என்பவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் மும்முரமாக அமுல் செய்யப்பட்ட கம்பெனிக் கூட்டுச் சட்டம் கைவிடப்பட்ட காலத்திலிருந்த நிலைமையை, மேலே கூறிய ஐக்கிய அமெரிக்க உருக்குக் கம்பெனி சம்பந்தமான வழக்கு எடுத்துக் காட்டிற்று. இவ்வழக்கு முதலாவது

---

தனியார் துறைபோலன்றி அரசாங்கம் பெருந்தொகைக் கடனைக் குறைந்த வட்டியிலெடுக்கலாம். மேலும் இதே அணைகள் பலவகையில் பொதுமக்களுக்குப் பயன்படுகின்றன. தேசீயப் பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து, வெள்ளக் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம் எனப் பலவகையில் பயன்படுகின்றன ; இதனை இலேசான ஓர் அளவுகோல் கொண்டு தனியார்துறை முயற்சிகளோடு ஒப்பிடுதல் கஷ்டசாத்தியமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



உலக மகாயுத்தத்துக்கு முன்னர் ஏற்பட்டது. 1920 ஆம் ஆண்டு வரையிலேதான் முடிவுற்றது. நீதிமன்றம் மேற்படி உருக்குக் கம்பெனி தனியுரிமையுடையதன்று எனத் தீர்ப்பு வழங்கிற்று. கம்பெனி நல்லமுறையில் தனது கடமைகளைச் செய்யுமானல் அது எத்துணைப் பெரியதாயிருந்தாலும் குற்றமல்ல.

1920 ஐ அடுத்த ஆண்டுகளில் கம்பெனிக்கூட்டுக்கெதிரான நடவடிக்கை குறைந்தது. 1930 ஐ அடுத்து உண்டான வியாபார மந்தத்தின் பயனுக மக்கள் விலையேற்றத்தைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை. வியாபாரிகள், பிரதானமாகச் சிறு தொழில் செய்வோர், விலைகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென வாதாடினர்.

**கம்பெனிக் கூட்டை எதிர்க்கும் சட்டங்களுட் சில போட்டியை பலவீனப்படுத்துகின்றன.**

ஷேர்மன் சட்டம், கிளேய்ட்டன் சட்டம், செல்லர் கூட்டுச் சட்டம் (1950) என்பனவும் கம்பெனிக் கூட்டுக்கெதிரான பல சட்டங்களும், நமது முறையில் உள்ள போட்டியின் அளவைத் திருத்த உதவியுள்ளன. முதலாளித்துவ முறையை விரும்பும் எல்லோரும், இத்தகைய அரசாங்கத் தலையீட்டை வரவேற்கவேண்டும். இதனுல் போட்டியிலுள்ள குறைபாடுகள் குறைக்கப்படும்.

பெரிய வியாபார மந்தத்தின் போது கம்பெனிக் கூட்டுக்கெதிரான சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கிளர்ச்சி செய்யப்பட்டது. இது போட்டியை நிறைவில் போட்டியாக்கிக் கொண்டுவந்தது. தேசீய புனருத்தாரணச் சட்டம் (1933) மந்தத்திலிருந்து மீளுதல் என்ற சாட்டைக் கொண்டு கம்பெனிகள் கூட்டுச்சேர்வதையும், இணைந்து விலையிடுவதையும் ஆதரித்தது. (இந்தச் சட்டம் பின்னர் அரசியற் சட்டத்துக்கு விரோதமானதெனக் கொள்ளப்பட்டது).

மற்றொரு சட்டம் றொபின்சன்—பாட்மன் சட்டம் (1936) வியாபாரி ஒரே பொருளை வேறு முத்திரைப்பெயருடன் மிகக் குறைந்த விலைக்கு விற்பதைத் தடை செய்வதுடன், போட்டியைப் பலவகையில் எல்லைப்படுத்தவும் உதவுகிறது. நுகர்வோனுடைய நன்மையை உத்தேசித்து விலையை இறக்குவதற்குப் பதிலாக, பல கம்பெனிகளை, திறமையற்றவற்றைக் கூட, இது தொழிலில் நிலைத்திருக்கச் செய்கிறது.

மில்லர் ரைடிங்ஸ், மக்கியர் போன்ற கம்பெனிகளின் திரும்பவிற்கும் விலைப் பரிபாலனச் சட்டம் போன்றவை வேறு சில உதாரணங்கள். குறிப்பிட்ட ஒரு தினிசான பண்டங்களைக் குறைந்த விலைக்கு விற்று மற்ற வியாபாரிகளை நட்டமடையச் செய்யும் போக்கை இது தடை செய்கிறது. விலை பரிபாலிக்கும் இச்சட்டங்கள் 1960 ஐ அடுத்த வருடங்களில் நீதிமன்றங்களாலும் பொது

www.padippakam.com



மக்களாலும் கண்டிக்கப்பட்டன. பெரிய கம்பெனிகள் விடயத்தில் பாராளு மன்ற அங்கத்தவரும், சட்ட வல்லுநரும், நீதிபதிகளும் எதிராகவே இருந்தார்கள். அவை திறமையை வளர்த்து நுகர்வோருக்கு விலைச் சகாயத்தைச் செய்தமையும் அவர்களால் பெரிதாகக் கருதப்படவில்லை. A & P வழக்கிலே, இந்தக் கம்பெனிமீது சுமத்தப்பட்ட குற்றம் இது மற்றக் கம்பெனிகளிலும் குறைந்த விலைக்குப் பண்டங்களை விற்பனை செய்கிறதென் பதே. இவ்வாறு விலையைக் குறைப்பதால் மற்றப் போட்டியாளர் வியா பாரத்திலிருந்து கலைக்கப்படுவார் என ஓர் அச்சம் இருந்தது. இவ்வாறு மற்ற வியாபாரிகளைக் கலைத்தபின்னர் அக்கம்பெனி தனது விலையை உயர்த்தலாம் எனவும் எண்ணி, கம்பெனிக் கூட்டுக்கெதிரான சட்டத்தை A & P மீது அமுல் நடத்த முயற்சி செய்யப்பட்டது.

எதை, எப்படி, யாருக்கு என்பதை விலையமைக்கும்முறை எவ்வாறு நன்ருக நிச்சயிக்க உதவுகிறது என்று பொருளியலாளர் ஈடுபடும் ஆராய்ச்சி, யார் இந்தக் குற்றத்தை யாருடன் சேர்ந்து செய்கிருன் என நீதிபதி ஈடு படும் ஆராய்ச்சிக்கு வேருனது என்பதை மேலே கூறிய விடயங்களால் ஊகித்து அறியலாம்.

**மகாயுத்தக்காலந் தொட்டு கம்பெனிக் கூட்டுக்கெதிரான நடவடிக்கை.**

1930 ஆம் ஆண்டையடுத்து கடைசி வருடங்களிலே அரசாங்கம் கம்பெனிக் கூட்டுக்கெதிராக தீவிரமாய் நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கை கட்குத் தலைவராயிருந்த தூர்மன் ஆர்நல்ட் என்பவர், கட்டிடத்தொழில், கண்ணுடி, சிகரெட், சீமேந்து முதலிய தொழில்கள் என்பவை சம்பந்த மாக நடவடிக்கை எடுத்தார். வழக்குகள் நடத்தப்பட்டன. ரெடி ரூஸ் வெல்ட் காலத்திலிருந்ததிலும் பார்க்க நூறுமடங்கு அதிகமான சட்டவல் லுநர் இந்த முயற்சியிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். அதனுல் வழக்குகளும் பிராதுகளும் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. உதாரணமாக 1946 சிகரெட் வழக்கையும், 1948 சீமேந்து வழக்கையும் எடுத்துக் கொள்ளலாம். 1957 இலே டுபொண்ட், ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனி மீது தகாதவகை யில் ஆதிக்கஞ் செலுத்துகிறதென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத் துடன் அதனுடைய ஜீ. எம். இருப்புச் சரக்குகளைத் தொலைத்து விடவேண்டு மெனவும் விதித்தது. கம்பெனிகள் கூட்டுச் சேர்வதற்கெதிராக எவ் வாறு நடவடிக்கையொடுக்கப்பட்ட தென்பதை இது காட்டுகிறது.

(பெத்லஹேம் உருக்குத் தொழிற்கம்பெனியும் யங்ஸ்டௌன் கம்பெனி யும் ஒன்று கூடவேண்டுமா? பெத்லஹேம் அவ்வாறே நினைத்தது. ஆனுல் அட்டர்னி ஜெனரல் அதை அனுமதிக்கவில்லை).[1]

[1] அரசாங்கம் தாக்கல்செய்யும் வழக்குகளெல்லாவற்றிலும் வெற்றி பெறுவதில்லை. முதலீட்டு வங்கியாளர் மீது தனியுரிமைக் குற்றத்துக்காக அரசாங்கம் தாக்கல்செய்த வழங்கு மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



**கம்பெனி கூட்டுச்சேர்வதற்கெதிரான கொள்கையின் வருங்காலம் : நடைமுறையிற் கொண்டுவரக்கூடிய போட்டி.**

குடியரசுக் கட்சியினரும், சனநாயகக் கட்சியினரும் ஏராளமான பணஞ் செலவுசெய்து சட்ட அறிஞரையும், ஆராய்ச்சியாளரையும் ஏற்படுத்திக் கூட்டுச்சேரும் கம்பெனிகளுக்கெதிராகத் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அமெரிக்கத் தொழில் முறைகளிலே பிரமாணமாயமைந்து வந்த கூட்டு நடவடிக்கைகளைக் கம்பெனிகள் இப்போது பயன்படுத்தத் துணியமாட்டா. நீதிடதிகள் கடுமையான தீர்ப்புக்களை வழங்குகின்றனர். கம்பெனிகளின் பலம் பெரிதும் குறைக்கப்படுவதால், அவை தமது விசேடத் தனியுரிமையையும் சந்தை நயங்களையும் பயன்படுத்தத் துவங்கியுள்ளன. ஒரு கம்பெனிக்கெதிராக வழக்குத் தீர்க்கப்பட்டாலும் அவ்வளவில் விடயம் நின்றுவிடாது. கம்பெனி குறிப்பிட்ட சில கொள்கைகளை அனுசரிப்பதாகச் சம்மதம் கொடுக்க வேண்டும். பல வருடங்களின் பின்னர் கூட நீதிபதி அந்தக் கம்பெனியின் நடவடிக்கைகளிலே கண்ணோட்டஞ் செலுத்துவார். (யூனைட்டெட் ஷூ வழக்கு இதற்கு நல்ல உதாரணம். இதன்படி கம்பெனி தனது எந்திரத் தளவாடங்களை வாடகைக்கு விடாமல் விற்றுவிடவேண்டும்).

பொருளியலறிஞரும், சட்ட நூலறிஞரும் தம்முள் கருத்தால் ஒற்றுமைப்படுவதில்லை. சட்ட நூலறிஞரும், நீதிமன்றங்களும் சட்டத்தின் அட்சர அர்த்தத்தைக் கவனிக்கிறார்களேயன்றிச் சட்டம் என்ன நோக்கத்துடன் செய்யப்பட்டதென்பதை உணர்வதில்லை. அந்த நோக்கத்தைத் திட்டவட்டமாக வரையறுப்பதில்லை. சில வியாபாரிகளுடைய கடிதக் கோவையிலே தவறான கடிதங்கள் காணப்பட்டால் நீதிமன்றம் அவர்மீது கோபம் காட்டுகிறது. ஆனால் மற்றொரு கம்பெனி மறைவாகவே இந்த கருமத்தைச் செய்துவந்தால் அதன்மீது நடவடிக்கையெடுக்கப்படுவதில்லை. விலைகள் வித்தியாசப்படுவதையிட்டுச் சட்டவல்லுநர் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் விலைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதிலேயே அவர்களுக்கு அக்கறை. அப்படியிருந்தும் இன்று பொருளாதார அறிஞருக்கும் சட்ட அறிஞருக்கும் நெருங்கிய கருத்தொற்றுமை இருந்து வருகிறதுபோலத் தெரிகிறது.

கம்பெனிக்கூட்டை எதிர்க்கும் விடயம் பற்றிய ஆராய்ச்சி ஐக்கிய அமெரிக்காவையே மையமாக வைத்து ஆராய்ந்திருக்கிறது. ஏனெனில் அமெரிக்காவே இத்தகைய சட்டங்களில் மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாக இருந்து வருகிறது. பல ஆண்டுகளாகவே பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான், ஏனை ஐரோப்பிய நாடுகள் என்பன, ஏகபோக உரிமை ஒழுங்குகளின் சட்டத் தன்மைபற்றி அக்கறை கொள்ளவில்லை. இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் ஜப்பானிலும் ஜெர்மனியிலும் தங்கிய அமெரிக்க இராணுவத்தினர் பழைய தனியுரிமைகளை முறிப்பதற்குச் சட்டம் கொண்டுவந்தன. சில காலமாக இது வெற்றியீட்டிற்று. பின்னர் அந்த நாடுகள் தமது சுதந்

www.padippakam.com



திரத்தைப் பெற்றதும் பழைய தனி உரிமைகளைக் காப்பாற்றத் துவங்கின. தனியுரிமைக்கெதிராக ஜெர்மன் பொருளியலறிஞர் லட்விக் எர்ஹார்ட் என்பவர் சட்டமியற்றிக் கிளர்ச்சியுஞ் செய்தார். பிரித்தானியப் பாராளுமன்றம் இவ்விடயத்தில் விழிப்படைந்து இத்துறைகளில் சீர்திருத்தங்களையுண்டாக்க கமிஷன்களை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் வழங்கும் கம்பெனிக் கூட்டுக்கெதிராக உள்ள சட்டங்களும் அவற்றின் அமுலும் தர்க்கபூர்வமானவையென்றோ, பூரண வெற்றியை வழங்கியுள்ளனவென்றோ எவரும் கருதமாட்டார்கள். இருந்தும் சட்டத்தின் பயனாகத் தண்டனை கிடைக்குமென்ற அச்சம் இல்லாவிட்டால், எமது பொருளாதாரம் எத்துணை மோசமாயிருக்குமென்பதை வெளிநாட்டு நிலைமைகளோடு ஒத்துப்பார்த்து நிச்சயித்துக்கொள்ளலாம். அமெரிக்கக் கம்பெனிகள் எப்பொழுதும் தற்காப்பு நிலையிலேயேயிருந்து கொண்டிருப்பதால் மற்ற நாடுகளில் சர்வசாதாரணமாகக் காணப்படும் மோசமான தந்திரங்களை அவை பின்பற்றமாட்டா.

நடப்பது நடக்கட்டுமென்றுவிட்டால் நிறைபோட்டி ஏற்படாது. போட்டியிலுள்ள நிறைவின்மையைக் குறைப்பதானால் ஒரு நாடு ஓயாது போராடி விழிப்பாயிருக்க வேண்டும். சமூகத்தின் பிரச்சினைகளான என்ன, எப்படி, யாருக்கு என்பதை விலை நிர்ணயிக்கும் திட்டமே தீர்த்துவைக்குமென இந்நூலின் மூன்றும் பிரிவில் அடிக்கடி வற்புறுத்தப்பட்டுள்ளது. கம்பெனிக் கூட்டுக்கெதிரான கொள்கையின் இலட்சியம் இதுவே.

பொருளியலறிஞரின் கண்டிப்பான கருத்துப்படி போட்டியானது எங்கும் பூரணமான போட்டியாயிருக்க முடியாது. ஆனால் நடைமுறைப் போட்டிக்கு நாம் முயலலாம். கொலம்பியாவைச் சேர்ந்த பழைய பொருளியலறிஞர் ஜே. எம். கிளார்க் இதையே பலவருடங்களின்முன் வற்புறுத்தினார். தனியார் தேவைகளையும் விருப்பங்களையும், பண்டங்களின் நிசமான செலவின் பின்னணியில் சந்தை விலைகள் பிரதிபலிக்கும் திறமையை அரசாங்கக் கொள்கையாலும், தனியார் கொள்கையாலும் சீர்திருத்தலாம். இந்தச் செலவுகள், பயன்படுத்தப்படும் அருந்தலான உற்பத்திச் சாதனங்களால் வீண் தொழில் விரயத்தோடும் வசதியீனங்களோடும் உற்பத்தி செய்யப்படும் பதிற் பண்டங்களின் உற்பத்திக் கணக்கால் உண்டாவன.

நிலம், தொழிலாளர், முதல் என்பவற்றின் விலையை நிச்சயிக்கும்போது உண்டாகும் சமமான பிரச்சினைகள்பற்றி நாலாம் பகுதியில் ஆராய்வோம். சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இத்தகைய விலை நிர்ணயத்தையே மையமாகவைத்து ஆராயவேண்டும்.

## சுருக்கம்

1. செலவு, வருமானம் என்பவற்றைச் சில கம்பெனிகளே அச்சொட்டாக நிச்சயிக்க முடியும். அவை இலாபத்தை உச்சப்படுத்தும் விடயத்தில் அக்கறையில்லாதிருக்கின்றன என்பது இதன் அர்த்தமன்று. பிழைவிட்டு

www.padippakam.com



விட்டுத் திருந்துவதன் மூலம் தொழிலைச் சாகவிடாது நிலைபெறச் செய்வதில் அவை நியாயமான தொண்டைச் செய்கின்றன. அத்துடன் நெடுந்தவணையில் வாய்ப்பான இலாபத்தையும் ஈட்டுகின்றன.

2. நிறைவில் போட்டியிலே விலையை அமைக்கும்போது அவை பரும்படியான ஊகத்தினுலேயே அதைச் செய்கின்றன. அலகின் செலவுத் திட்டத்தில் ஒருவகையான விலைபோடும் முறையைக் கையாளுகின்றன. சமநிலைத்தானப் படங்கள், வியாபாரியின் விலை நிர்ணயிக்கும் பிரச்சினையில் மும்முரமான பங்கெடுக்கலாம். இருந்தும் எந்த ஒரு கம்பெனியும் பாது காப்புடன் எவ்வளவு விலைபோடும் அளவைப் பெறலாமென்பதைச் சந்தை நிலைமையே நிச்சயிக்கும். ஒவ்வொரு நிலைமைபற்றியுமுள்ள தகவல்களை ஆராய்ந்தே விளைவு எவ்வாறிருக்குமெனக் கூறலாம்.

3. நிறைவில் போட்டியில் பலவகையுண்டு. அவையெல்லாம் பொருளியலாராய்ச்சிக்கு உகந்தவை. இவற்றுள் தனியுரிமையொன்று. அடுத்தது சேம்ப லேன் முறையில் பலவகை பண்டங்களைப் பலர் விற்பனை செய்தல். அடுத்து சிலர் உற்பத்தியாளர் இதில் ஓர் இனத்தில் பல வித்தியாசமுள்ள பண்டங்களை விற்பனை செய்வது. ஈற்றில் நிறைபோட்டியுண்டு. இத்தகைய நிறைவில் போட்டிகளாலுண்டாகும் தீமைகள், தனியுரிமை இலாபத்திலும் அதிகமானவை. புதியவர்களின் தொழிலில் ஈடுபடுவதால் மேலதிக லாபங்கள் நீக்கப்படும்; விலைகள் இறுதிநிலைச் செலவுக்குச் சமமாக மாட்டா. நிறைவில் போட்டியாளர் அதிகம்பேர் தொழிலிற் புகுந்தால் வளங்கள் வீணுக்கப்படுவதோடு விலையிறக்கத்தின் பயனுல் நுகர்வோர் பயன்பெற முடியாது போகும். இறுதிநிலைச் செலவுக்கு மேல் தனியுரிமை விலை நிச்சயித்தலும் சிலருரிமை விலை நிச்சயித்தலும் வளங்களைப் பகிர்வதில் திருப்புதலையுண்டாக்குகிறது. சம்பந்தப்பட்ட கம்பெனிகள் தமது மேலதிக இலாபத்தை அரசாங்கத்துக்கு வரியாகக் கொடுத்தாலும் இது நிகழும்.

4. தனியுரிமையும் சிலருரிமையும் தீமைகளை உண்டாக்கினுலும், ஷும் பீட்டரின் கருத்துப்படி அவை தீவிரமான திறமைகளை உண்டாக்குகின்றன. காப்புள்ள ஒரு சந்தையிலே ஒரு பெரிய கம்பெனி புதிய கண்டுபிடிப்புக்களை அபிவிருத்திசெய்ய வசதியுண்டு. அத்துடன், தான் ஆராய்ச்சியின் பயனுகப் பெற்ற நன்மைகளை அதுமற்றப் போட்டியாளருக்கு விட்டுக் கொடுக்கமாட்டாது.

5. நிறைபோட்டியினுல் கிடையாத தடைகள், நிதானங்கள் என்பவற்றை அரசாங்கம் உதவலாம். இதனை பொது நன்மைக்குரிய சாதனங்களை ஒழுங்கு செய்வதாலும், கம்பெனிக் கூட்டுக்கெதிரான பலவகை நடவடிக்கையெடுப்பதாலும் செய்யலாம்.

6. அமெரிக்காவிலே கம்பெனிக் கூட்டுக்கெதிரான சட்டமும், அதன் அமுலும் ஒழுங்கற்றமுறையிலேயே வளர்ந்து வந்தன. நடவடிக்கைகள் சில சமயம் கைவிடப்பட்டன. தீவிரமான விலைப்போட்டியைச் சில நடவடிக்கைகளும் சட்டங்களும் கூட்டுவதற்குப்பதிலாகக் குறைத்தன. சட்ட

www.padippakam.com



அறிஞரும் நீதிபதிகளும், பாராளுமன்றத்தினரும் முக்கியமான பிரச்சினையைக் கவனிப்பதில்லை. " நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய போட்டி " ஒரு வழியில் அபிவிருத்தியடைந்து வந்துள்ளது. அந்நிய நாடுகள் பல நமது முறையைப் பின்பற்றத் துவங்கியுள்ளன. நிறைபோட்டி தானுக உண்டாகாது. வலுக் கட்டாயமாகவும் புகுத்தமுடியாது. இதைப் பொருளியலறிஞர் உணர்ந்துள்ளனர். நடைமுறையிற் சாத்தியப்படக்கூடிய போட்டிக்கு வரைவிலக்கணம் வகுப்பதும் அதற்காக முயல்வதும் முக்கிய பிரச்சினைகளாகும். பொருளியல் ஆராய்ச்சியும், கொள்கையும் இந்தத்துறையில் ஈடுபடவேண்டும்.

**ஆராய்ச்சிக்கான வினுக்கள்**

1. இலாபத்தை உச்சப்படுத்தப் போகிறேமென்று சொல்லும் கம்பெனிகளின் நடத்தை பற்றி உதாரணம் தருக. இதற்குத் தோற்றத் தளவில் விதிவிலக்குக் கூறுக.
2. நீர் மின்சாரக் கம்பெனியொன்றை நடத்துகிறீர் என்று வைத்துக் கொள்வோம். இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்துவீர். தேவை நெகிழ்ச்சியை எவ்வாறு மதிப்பிடுவீர் ? பொருளியல் நூல் இதற்குத் துணைபுரியுமா ?
3. விலையைக் குறிப்பிடுதல் என்ருலென்ன ? இஃது எவ்வாறு நிகழ்கிறது.
4. சமநிலைப்படத்தில் எடுத்தாளப்பட்ட எடுகோள்களை விளக்குக.
5. கார்த்தொழில், சிகரட் தொழில், அலுமினியத்தொழில், எலிப் பொறித் தொழில், பெண்கள் உடைத் தொழில், சில்லறை பலசரக்குக் கடை, சவரத்தொழில் என்பவற்றில் உள்ள நிறைவில் போட்டி மாதிரியை வருணிக்க.
6. " தனியுரிமைப் போட்டியில் மேலதிக இலாபம் பற்றிய விடயமில்லை. உயர்ந்த விலையானது சிறுதொகையை உற்பத்தி செய்வதிலும் திறமையற்ற முறையில் உற்பத்தி செய்வதிலும் விரயமாகிறது. இலாபமென்ற பேச்சே சில சமயம் இல்லாதிருக்கும் " இதை ஆராய்க.
7. அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் உள்ள கம்பெனிகள் கூட்டுக் கெதிரான நடவடிக்கைகள் பற்றிக் கூறுக.
8. " தனி உரிமைகளைப் போட்டியிடும் சில அலகுகளாகப் பிரித்தல் கற்பனை உலகுக்குரியது. ஏனெனில் தனியுரிமைக்கான அடிப்படைக் காரணம், குறையும்செலவு விதியும் பெருவாரி உற்பத்தியுமாகும். நிறைபோட்டியின் விலையிடும் மாதிரியைப் பிரதிபண்ணச் சிறு தொகைப் போட்டியாளர் போதாது " இக்கூற்றை ஆராய்க.
9. " A & P கம்பெனி பெரிதென்ற காரணத்தால் கெட்டதெனக் கூறமுடியாது " ஆராய்க.

www.padippakam.com



10. வரி வசதிகளை உத்தேசித்தே கம்பெனிகள் கூட்டுச் சேர்கின்றன. இதை விளக்குக. (குறிப்பு : கைசெர்கம்பெனி கார் உற்பத்தியில் பெரிய நட்டமடைகிறது ; வில்லிக்கம்பெனி இலாபமடைகிறது. கைசெரின் நடத்தை வில்லியின் இலாபத்திஞல் சரிக்கட்டலாம்).

11. ஐசன்ஹோவரின் நீதி இலாகா, ஹட்சன், நாஷ் என்பவற்றை, ஸ்ருடிபேக்கர், பக்காட் என்பவற்றைக் கூட்டுச்சேர அமெரிக்கன் மோட்டர்ஸ் அனுமதித்ததுபோல அனுமதித்தது. ஆஞல்பெத்ல ஹேம், யங்ஸ்டௌன் ஆகிய உருக்குக்கம்பெனிகளைக் கூட்டுச்சேர விடவில்லை. இத்தீர்ப்பெல்லாம் போட்டியைத் தூண்டுவதற்கே செய்யப்பட்டன. இவை ஒன்றுக்கொன்று முரணுனவையா ? இரண்டு பக்க நியாயங்களையும் தருக.

12. "இக்காலக் கம்பெனி ஆபத்துக்களைப் பகிர்வதில் சமர்த்தானது. மற்றவிடயங்கள் மாருதிருக்கும்போது எவ்வளவுக்கு ஒரு கம்பெனி பெரிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு ஓர் ஆபத்தை மற்ருேர் ஆபத்திஞல் நீக்கிவிடும். பண்டத்திலும், மேலதிக உச்ச உற்பத்தித் தகுதியிலும் சிக்கனமுண்டாக்கும். உயர்ந்த ஆராய்ச்சிகளின் பயஞக உண்டாகும் பிரிக்கமுடியாத செலவைத் தனது பல பகுதிகளுக்கும் பரவச்செய்யும். கம்பெனி பெரிய அளவாஞல் அது பல நன்மைக்கும் ஏதுவாகும். அது ஜெனரல் மோட்டர்சின் உதாரணத்தைப் பின்பற்றிஞல், பெரிதாயிருப்பதால் ஏற்படக்கூடிய எவ்வித தண்டனையையும் அடையமாட்டாது. தனியுரிமையைத் தடைசெய்வது இயற்கைக்கு மாருனது "–இதை ஆராய்க.

13. பின்வரும் கருத்துக்களை ஞாபகப்படுத்திக் கொள்க :

விலைகுறிப்பிடுதல் ; சமநிலைப்படம் ; சுதந்திரமாகப் பிரவேசித்தல் ; ஒரேவகையில் பலதினிசுப் பண்டங்களை உற்பத்தி செய்வோரின் இலாப மில்லாச் சமநிலை.

மௌனமான சம்மதத்தோடோ சம்மதமில்லாமலோ கூடிய சிலருரிமை, பயனுடைமை வீத ஒழுங்கு. நிறைவில்போட்டியாலுண்டாகும் தீமைகள். அசல் செலவிலோ, புதுப்பிக்கும் செலவிலோ, சந்தை மதிப்பிலோ நியாயமான வருமானம்.

ஷேர்மன் கம்பெனிக் கூட்டுக்கு எதிர்ச்சட்டம், அதே மாதிரி வேறு சட்டங்கள். தேசீயப் புனருத்தாரணச்சட்டம், புனர் விற்பனை விலைப்பரிபாலனம், நடைமுறைச்சாத்தியமான போட்டிக்கு எதிர்ப்பு. ஷும்பீட்டரின் தீவிர நன்மைகள்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நான்காம் பகுதி

## வருமானம் பங்கிடுதல்: உற்பத்தி சாதனங்களுக்கு விலையிடுதல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## இருபத்தாறும் அத்தியாயம்

# உற்பத்தி, இறுதிநிலைப் பண்டங்கள் என்பன பற்றிய கொள்கை

*குறைந்துசெல் விளைவுக்குட்படாத ஓர் உற்பத்திச் சாதனம் அறிவு மட்டுமே.*

ஜே. எம். கிளார்க்.

நாலாம் பாகத்தில் சில அத்தியாயங்களிலே சந்தையில் உற்பத்திச் சாதனங்களுக்கு எவ்வாறு விலை குறிக்கப்படுகிறது என்பதைப் பிரதானமாக ஆராய்வோம் ; (1) நிலம், வேறு வளங்கள் என்பனவற்றின் வாடகை நிர்ணயம் (2) தொழிலாளியின் பலவகையான சம்பள நிர்ணயம் (3) மூலதனச் சொத்தின் வட்டிவீதநிர்ணயம், (4) இலாப நிர்ணயம்.

இதைப் பொருளியலறிஞர் பங்கீட்டுப் பிரச்சினை என்பர். சாதாரணமாகப் பங்கீடு என்ருல் பண்டங்களைச் சந்தைப்படுத்தி நுகர்வோருக்குக் கொடுத்தல் என்பதாகும். 4 ஆம் பாகத்திலே யாருக்குப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்பதைப் பங்கிடுதல் மூலம் ஆராய்வோம். சப்பிளை தேவை என்பவற்ருல் சாதனங்களுக்கு விலையிடல், யாருக்கு உற்பத்தி யென்பதை நிச்சயிக்க உதவிசெய்யும். சமூகம் எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டுமென்ற பிரச்சினையையும் இது தீர்க்க உதவும்.

தேசத்தின் மொத்த உற்பத்தியில் முக்காற் பங்கு சம்பளமாகும் ; இஃது ஏன் என்பதை அறிவதற்கு நாம் சந்தைச் சம்பளவிகிதத்தையும், சந்தை நில வாடகையையும் சந்தை வட்டிவீதத்தையும் ஆராயவேண்டும். தொழினுட்ப மாற்றங்கள் சந்தைச் சம்பளவிகிதத்தை இறக்கிளுல், சம்பளத்துக்குரிய பங்கு வீழ்ச்சியடையும். சொத்துள்ளவர் தொகை தொழில்நடத்துவோர் தொகையிலும் குறைவாயிருப்பதால் சமமின்மையின் லோறன்ஸ் கோட்டு அளவை, வருமானச் சமமின்மைப் பக்கமாக நகரச் செய்யும். உற்பத்திச் சாதனங்களுக்கு விலைநிர்ணயிக்கப்படும் சந்தைகளிலே நாம் கவனஞ் செலுத்திளுல் பங்கீட்டுப் பொருளாதாரப் பிரச்சினையை விளங்கிக் கொள்ளக்கூடியவராவோம்.

இவ்வாறு சாதனத்துக்கு விலையிடுதலையறியும் மார்க்கம் உற்பத்தியின் பொருளாதாரக் கொள்கையை அறிதலாகும். வருமானத்தின் பங்கீடு சம்பந்தமான பொதுஆராய்ச்சிக்கு முகவுரையாக இந்த அத்தியாயம் உற்பத்தியின் அறிமுறையை ஆராய்கிறது. இங்கே “ இறுதிநிலை உற்பத்தி ” என்ற முக்கியமான பொருளாதாரக் கருதுகோள் வரையறை செய்யப்படும். பின்னர் இதனை குறைந்துசெல் வருமான விதியுடன் பொருத்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com



பல வகை உற்பத்திச் சாதனங்களின் தேவைக்கோடு – (உதாரணமாக தொழிலாளருக்குரிய தேவை, நிலத்துக்குரிய தேவை முதலியன) இறுதி நிலே உற்பத்திக்கணக்கிலே விளக்கப்படவேண்டும்.

**உற்பத்தியும் உற்பத்திச் சாதனங்களும் சம்பந்தமான விதி : உற்பத்தித் தொழில்.**

உற்பத்திக் கொள்கையானது குறிப்பான என்ஜினியரிங் தகவலோடும், நுண்தொழில் தகவலோடும் ஆரம்பிக்கும். உங்களிடம் ஒரு தொகை தொழிலாளரும், நிலமும், எந்திர தளவாடங்களும், மூலப்பொருள்களுமிருந் தால், குறிப்பிட்ட பொருளில் எவ்வளவு தொகையை உற்பத்தி செய்வீர். இதற்கு விடை நுண்தொழிலின் நிலேமையிலேயே தங்கியிருக்கிறது. யாரா வது புதியதொரு கண்டுபிடிப்பையோ, புதிய தொழில் முறையையோ மேற்கொண்டால் உற்பத்தி பெருகும். ஆனல் எந்த ஒரு நேரத்திலும் கொடுக்கப்பட்டதொரு சாதனங்களுக்கூடாக எப்பொழுதும் உச்சமாகக் கிடைக் கக்கூடிய உற்பத்திப்பொருளின் தொகையிருக்கும். இந்த நுண்தொழில் விதி அதாவது உள்ளீடு வெளியீடு சம்பந்தமான விதி மிக முக்கியமான தானபடியால் பொருளாதார அறிஞர் இதற்கு உற்பத்திச் செயற்பாடு என்பர்.

**உற்பத்திச் செயற்பாடு என்பதற்கு வரைவிலக்கணம்.**

குறிப்பிட்ட அளவு உள்ளீடுகளால் உற்பத்தி செய்யப்படக்கூடிய வெளி யீட்டின் தொகையைக் கூறும் நுண்தொழில் சம்பந்தம் இஃதாகும். உள்ளீடென்பது உற்பத்திச் சாதனங்கள். இந்த வரைவிலக்கணம் குறிப் பிட்டதொரு நுண்தொழில் அறிவு நிலேமைக்கேயாகும்.

இங்கே ஓர் உதாரணம் தருகிறேம். விவசாய என்ஜினியர் ஒருவர், பலவகையான தொகைகளில் சோளத்தை உண்டாக்க உதவும் பலவகை நிலம், உழைப்பு என்பவற்றின் சேர்க்கையை, ஒரு புத்தகத்திலே எழுதிவைக்கிருர். புத்தகத்தின் ஒரு பக்கத்திலே 100 புசல் சோளத்தை உண்டாக்க உதவும் நிலம், உழைப்பு என்னும் சாதனங்களின் சேர்க் கை, பதில் வழிச்சேர்க்கை என்பவற்றைப் பதிந்து வைத்திருக்கிருர்; மற்றெருபக்கத்திலே 200 புசல் சோளத்தை உற்பத்தி செய்யக்கூடிய உள்ளீட்டுச் சேர்க்கைகளே எழுதி வைக்கிருர். உற்பத்திச் செயற்பாட்டின் மற்றேர் உதாரணம் இரசாயன என்ஜினியரின் காஸோலீன் உற்பத்தி சம்பந்தமான பல வகை உற்பத்தி முறைகளேப் பதிந்து வைத்தலாகும்.

அமெரிக்கப் பொருளாதாரத்திலே ஆயிரக்கணக்கான விதம்விதமான உற்பத்திச் செயற்பாடுகளுண்டு. ஒவ்வொரு கம்பெனிக்கும் ஒவ்வொரு உற் பத்திச் செயற்பாடு உண்டு. இந்த அத்தியாயத்தின் முக்கிய நோக்கம் 24 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்ட கம்பெனியின் மொத்தச் செலவுக் கோட்டின்பின்னல் அதனுடைய உற்பத்திச் செயற்பாடு எவ்வாறு அமைந் திருக்கிறதென்பதைக் காட்டுவதே. இதையே அடிப்படையாகக் கொண்டு

www.padippakam.com



கம்பெனியானது நிலம், தொழிலாளர், உரம் முதலிய பலவேறு உற்பத்திச் சாதனங்களை எவ்வாறு கேட்கிறதென்பதையும் அஃது இவற்றை எவ்வாறு சந்தையில் வாங்குகிறதென்பதையும் காட்டுவதே.

இவ்வாறு கம்பெனியானது இரண்டு வகையான சந்தைகளுக்கிடையில் வைக்கப்படுகிறது. (1) பண்டச்சந்தை ; இங்கே அது பண்டத்தை விநியோகஞ் செய்கிறது. வாடிக்கைக்காரரின் தேவைக்கோட்டை அனுசரித்துத் தனது பண்டங்களை விற்கிறது. (2) உற்பத்திச் சாதனங்களின் சந்தை ; இங்கே அது பொருள்களை வாங்குகிறது. அதாவது உற்பத்திப் பண்டங்களின் செலவைக் குறைப்பதற்கும் உச்சலாபவெளியீடுகளை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற வகையில் உள்ளீடுகளை வாங்குகிறது. பின்னே கூறிய சந்தையிலேதான் சமூகத்தின் பலவகை உற்பத்திச் சாதனங்களின் விலை நிர்ணயிக்கப்படுகிறது ; அதன் பயனாக வருமானம் பகிர்வு செய்யப்படுகிறது (அதாவது சம்பளம், வாடகை, வட்டி முதலியன).

**கூட்டுமொத்த அமெரிக்க உற்பத்திச் செயற்பாடு.**

நாம் உபயோகிக்கும் நுண்ருடியை வைத்துவிட்டுத் தொலையாடியைப் பயன்படுத்தி அமெரிக்க உற்பத்தி சம்பந்தமான உழைப்பு, முதல், உற்பத்திப் பொருள் என்பனவற்றின் மொத்தத்தின் கூட்டுமொத்தப் பருமனை ஆராயவேண்டும். இத்தகைய பருமனைக் கருத்தோடு அளக்க வேண்டும். இதில் சரியான அளவு சம்பந்தமான பிரச்சினைகளின் சுட்டிலக்கங்கள் எண்ணற்றவை தோன்றும் ; ஆனால் சமூகத்தைப் பற்றிய விரிவான வருணனை செய்வதற்கு இவை பயன்படும். 1920 ஐ அடுத்த ஆண்டுகளிலே செனேட்டர் பி. எச். டக்ளஸ் என்ற சிக்காகோ சர்வ கலாசாலைப் பேராசிரியர், அமெரிக்காவின் உற்பத்திச் செயற்பாட்டைப் புள்ளிவிவரத்தின் மூலம் விளக்கி, இத்துறையில் வழிகாட்டி, பரிசுகூடப் பெற்றார். சமீபத்திலே றெபேட் சொலோன் என்பவர் இந்த ஆராய்ச்சியை மேலும் ஒருபடி தொடர்ந்து செய்து, அமெரிக்காவின் தொழில் வசதிகளையும் மூலதனத்தையும் சீர்திருத்த, நுண்தொழில் வளர்ச்சி எவ்வாறு பயன்பட்டதென்பதைக் காட்டினர்.[1]

டக்ளசும், சொலோவும் எதைக் காட்டினர்கள் ? அவர்களுடைய புள்ளி விவரங்களின்படி ஒரு வகையில் தொழிற்சக்திதான் உற்பத்தியின் முக்கிய சாதனமாய்க் காட்டப்பட்டது. தொழிற்சத்தியும் மூலதனமும் உற்பத்திக்கு அவசியமே. மூலதனத்தை முற்ருக அல்லது தொழிற்சத்தியை முற்ருக எடுத்துவிடுங்கள். மிஞ்சுவது என்ன ? மிக அற்பமான உற்பத்தியே. மூலதனத்தை 1 வீதம் அதிகரிப்பதிலும் தொழிற் சத்தியை 1 வீதம்

[1] P. H. டக்ளஸ், Theory of Wages (Macmillan, Now Year, 1934.) ஆர். எம். சொலோவ் "Technical Charge and the Aggregate Production Function", Review of Economics & Statistics. இவை நிலத்தின் பயன்பாட்டை அளக்கவில்லை. 1960 இல் இது முழுப்பொருளாதாரத்துக்கும் 5 வீதம்தான் ; கைத்தொழிலுக்கு மேலும் குறைவு ; ஆனல் நூற்ருண்டினரம்பத்தில் இரட்டிப்பு.



படிப்பகம்

www.padippakam.com



அதிகரிப்பதால் மூன்று மடங்கு உற்பத்தி அதிகரிக்கும்.[1] இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனுக வேறு பல உண்மைகளும் வெளியாயிருக்கின்றன. தேசீயப் பொருளியலாராய்ச்சிக் கழகம் என்ற இலாபங் கருதாத தாபனம் செய்த ஆராய்ச்சிகளாலும் இவை உறுதிப்படுத்தப்படுகின்றன. முக்கிய மானவற்றுட் சில பின்வருமாறு :

1. தொழிற்சக்தி, மூலதனம் என்பவற்றின் உற்பத்திவலு இந்த நூற்ருண்டிலே அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் நுண்தொழிலபிவிருத்தியும், தொழில் செய்யும் சாமர்த்தியமுமே. சாரசரி வளர்ச்சிவீதம் வருடமொன்றுக்கு $1\frac{1}{2}$ வீதமாகும்.

2. சமூகம் சிக்கனத்தை அதிகம் கடைப்பிடித்தபடியால் தொழிற் சக்தியிலும் பார்க்க மூலதனம் அதிகரித்து வந்தது. அதனுல் ஒவ்வொரு தொழிலாளியிடமும் தொழில் செய்வதற்கு அதிக மூலதனமிருந்தது. அவனுடைய உற்பத்திச் சம்பளம் நுண்தொழில் துறையில் உண்டான $1\frac{1}{2}$வீதப் பெருக்கத்திலும் பார்க்க விரைவாக உயர்ந்துள்ளது.

3. இப்போது ஒவ்வொரு மூலதன அலகையும் தொழிற்படுத்தத் தொழி லாளர் இல்லாமையால் மூலதன அலகின் வருவாய் குறைந்துசெல் நிலையை அடையுமென எதிர்பார்க்கப்படலாம். ஆனுல் மூலதன அலகின் வருவாய் மாருமலிருந்தது. என்? தொழில்நுட்பத்துறையிலுண்டான முன்னேற்றம் அந்தக் குறையைச் சமாளித்துக் கொள்ளத் துவங்கிற்று. காலப்போக்கிலே மூலதனத்தின் மொத்த வருமானம் உயர்ந்தது. இது மூலதனம் பெருகிய தால் உண்டான விளைவு. ஆனுல் மொத்த வருமானம் ஒரே அளவில் வளரவில்லை ; தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனுக உண்டான விளைவுகளை குறைந்துசெல் வருமானவிதி பலனற்றதாக்கிவிட்டது. ஆனுல் சமூகத்துக் குக் கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பங்கிடும் விடயத்தில் $\frac{3}{4}$ உம் $\frac{1}{4}$ உம் ஆகவேயிருந்துவருகிறது. தொழிற்சங்கங்களின் வளர்ச்சி, 1900 ஆம் ஆண்டு துவக்கம் நமது பொருளாதார அமைப்பில் உண்டான பெரிய மாற்றங்கள், எந்திரசாதனங்கள், மனிதனுடைய மூளைச் சக்தி, கைத்திறமை என்பவற் றின் மதிப்பைக் குறைத்துவிட்டனவென்ற பரவலான அபிப்பிராயம் என் பன நிலவியபோதிலும் இது முக்கியமான தொரு நிகழ்ச்சியெனவே கூறலாம்.

பொருளியல் அறிமுறை என்ற எலும்புச் சட்டத்துக்கு இத்தகைய தகவல்கள் தசை கூட்டி அழகுசெய்வனபோலும். அத்துடன் பொருளியல் கொள்கைகளை நேரடியாக அளந்தறிவதற்கும் இவை பயன்படும்.

[1] குறைந்துசெல் பயன் நியதிப்படி (இது 2 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்டது) இச்சாதனங்கள் எவையாலுைம் ஒன்றை 1 வீதம் அதிகரித்தால் உற்பத்தி 1 வீதத்துக்குக் குறைவாகவே அதிகரிக்கும்: அதாவது தொழிற்சக்தியை அதிகரித்தால் $\frac{3}{4}$ வீதம் அதிகரிக்கும்; மூலதனத்தை அதிகரித்தால் $\frac{1}{4}$ வீதம் அதிகரிக்கும்.

www.padippakam.com





## இறுதிநிலை உற்பத்திப் பொருள்களுக்கு வரைவிலக்கணம்

இரண்டாவது அத்தியாயத்திலே குறைந்துசெல் விளைவுவிதியைப் பற்றி வரைவிலக்கணம் கூறினோம். படம் 1 இலே (32 ஆம் பக்கத்திலே முன்னர் காட்டிய) படம் மறுபடியும் காட்டப்படுகிறது. இதில் நிலையான அளவு நிலத்தில், பல தொகையான தொழிலாளரை வேலையிலீடுபடுத்துவதால்

**குறைந்து செல்விளைவு, குறைந்துசெல் இறுதிநிலைப் பிண்டப் பொருள் விதி என விளக்கப்படுகிறது.**

| உழைப்பு அலகுகள் (1) | மொத்த விளைவு (2) | இறுதிநிலைப் பிண்டப் பொருள் (3) |
|---|---|---|
| 0 | 0 | |
| | | 2,000 |
| 1 | 2,000 | |
| | | 1,000 |
| 2 | 3,000 | |
| | | 500 |
| 3 | 3,500 | |
| | | 300 |
| 4 | 3,800 | |
| | | 100 |
| 5 | 3,900 | |




**படம் 1.** கீழேயுள்ள படத்திலே இறுதி நிலைப் பிண்டப்பொருளைக் காட்டும் நீள் சதுரங்கள் ஒரு கோட்டினால் ஒப்புரவாக் கப்பட்டுள்ளன. இதனுடைய (அதாவது நீள்சதுரங்களின்) பரப்பளவைக் கூட்டினால் மொத்தப் பொருளின் தொகை கிடைக்கும் (உ-ம் 2,000 + 1000 + 500 = 3500 மொத்தப் பொருள் மூன்றுபேருக்காகும். நான்கு பேருக்கு மொத்தம் என்ன ?)

படிப்பகம்

www.padippakam.com



உண்டாகும் குறைந்து செல் மேலதிகப் பொருள் காட்டப்படுகிறது. அங்கே உற்பத்திச் செயற்பாட்டுக் கருத்தை அதன் இயற்பெயர் தெரியாமலே பயன்படுத்தினேம்.

மேலதிக உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருளியலறிஞருடைய பெயரை அப்போது நாம் உபயோகிக்கலாம். பொருளியலறிமுறையிலே மேலதிகம் என்ற சொல்லுக்குப் பதிலாக " இறுதிநிலே " என்ற சொல்லேப் பயன்படுத்துகிறேம். எனவே பின்வரும் வரைவிலக்கணத்தைக் கொடுப்பது பொருத்தமுடையதே.

உற்பத்திச் சாதனமொன்றின் இறுதிநிலே உற்பத்தியானது, மற்றச் சாதனங்களெல்லாம் மாருதிருக்கும் நிலேயில், அந்தச் சாதனத்தின் மேலதிகப் பொருள் அல்லது உற்பத்தியெனலாம். ஏனைய உள்ளீடுகள் மாருதிருக்க ஒரு தொழிலாளர் அலகைச் சேர்க்கும்போது உண்டாகும் மேலதிக உற்பத்தியே தொழிலாளர் இறுதிநிலே உற்பத்தியாகும். அவ்வாறே நிலத்தின் இறுதிநிலே உற்பத்தியென்பது ஏனைய உள்ளீடுகள் மாருதிருக்கையில், மேலதிக நில அலகொன்றைச் சேர்ப்பதால் மொத்த உற்பத்தியில் உண்டாகும் மாற்றமாகும். இவ்வாறே மற்றச் சாதனங் களுக்கும் வரைவிலக்கணம் கூறிக்கொள்ளலாம்.

ஒரு சாதனத்தின் இறுதிநிலே உற்பத்தி, மேலதிக உள்ளீட்டலகொன்றின் பயனுக உண்டாகும் பிண்டமான சோளத்தானிய அலகினுலேயே விளக்கப் படும். எனவே கவனமுள்ள பொருளியலறிஞர் " இறுதிநிலேப்பிண்டப் பொருள் " என்றே இதனேத் குறிப்பிடுவர். வெறுமனே இறுதிநிலேப் பொருள் என்று வழங்கமாட்டார். ஏனெனிற் பின்னர் டொலர் சம்பந்த மான " இறுதிநிலே வருமானப் பொருள் " என்ற கருத்து தோன்றும் போது இது மயக்கமுண்டாக்காதிருக்கும்.

### இறுதிநிலே பிண்டப்பொருள்,—குறைந்துசெல் விளேவு

1 ஆம் படத்திலுள்ள அட்டவணேயின் கோடு (3) ஐ இப்போது நாம் " இறுதிநிலேப் பிண்டப்பொருள் " என வழங்கலாம். கீழேயுள்ள படம், தொழிலாளரின் இறுதிநிலே—பிண்டப்பொருள் நிதானமாகக் குறைந்து செல்வதைக் காட்டுகிறது. மேலேயுள்ள படத்திலுள்ள மொத்தப் பொருள் சிறிய சிறிய படிகளாக உயர்வதைக் காட்டுகிறது. இச்சந்தர்ப்பத்தில் நிலம் மாருததும் மேலதிகத் தொழிலாளர் அலகு சமமாகக் காட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கவை. குறைந்து செல்விளேவு விதியென்பதை நாம் இப்போது " குறைந்துசெல் இறுதிநிலேப் பிண்டப்பொருள் " என மாற்றலாம். சுருக்கத்தை உத்தேசித்து " பிண்டம் " என்ற சொல்லே விட்டுவிடலாம்.

ஓர் உள்ளீட்டுக்குப் பொருத்தமானது மற்ற எந்த உள்ளீட்டுக்கும் பொருந் தும். நிலம், தொழிலாளர் என்ற அமிசங்களில் ஒன்றை மாற்ருமல் மற்றதை மாற்றியும் இரண்டாவதை மாற்ருமல் முதலாவதை மாற்றியும் செயலாற்றலாம். இதன் விளேவாகப் புதிய அட்டவணேயைத் தயார் செய்ய

படிப்பகம்

www.padippakam.com



லாம். இதுவும் குறைந்துசெல் விளைவு விதியையே பின்பற்றும். ஏன்? ஒவ்வொரு மேலதிக நில அலகும் நிலையான தொழிற்சக்தி அமிசத்தைக் குறைவாகவே உடையதாயிருக்கும்.

**சாதனவகையில் பதிற்சாதன அமிசங்களைப் புகுத்தல்**

உற்பத்திச் செயற்பாட்டிலேயுள்ள முக்கியமான இயல்பொன்றை இங்கே வற்புறுத்த வேண்டும். பொருளியலறிவோ என்ஜினியரிங் அறிவோ இல்லாத ஒரு சிறுவன் குறிப்பிட்டதொரு வெளியீட்டை உண்டாக்க ஒரேயொரு வழிதானுண்டென முடிவு செய்வான். நிலத்தின் வாடகையோடு ஒப்பிட தொழிலாளர் சம்பளம் எவ்வளவு உயர்ந்ததானாலும், விவசாயிகள் தமது தானியத்தை அதே நிலத்தில் அதே தொழிலாளர் சக்தியைக் கொண்டே உற்பத்தி செய்வர் என அவன் எண்ணுவான்.

ஆனால் என்ஜினியர்மாரும் பொருளியலாளரும் விடயத்தை நன்கு அறிவர். தொழிலாளர் அருந்தலாகவும், நிலம் ஏராளமாகவுமுள்ள (இதற்கு உதாரணம் குடியேற்ற அமெரிக்கா ; இதனை சன நெருக்கமுள்ள ஐரோப்பாவோடு ஒப்பிடலாம்) சந்தர்ப்பங்களில், விவசாயிகள் பரவலான விவசாயத்தின் மூலம் மலிவாகத் தானியத்தை விளைவிப்பர். உயர்ந்த சம்பளமும், குறைந்த நிலவாடகையுமிருந்தால் தொழிலாளர்க்குப் பதிலாக நிலத்தைப் பதிற் சாதனமாகக் கொண்டு உற்பத்தியைச் செய்வர்.

எனவே ஒரே அளவான விளைபொருளை உண்டாக்குவதற்குப் பலவகையான சாதனப் பதிலமிசங்களுண்டென்பதை உற்பத்திச் செயற்பாடு எங்களுக்கு எடுத்துக் காட்டும். வியாபாரிகள் எவ்வாறு உற்பத்திச் செலவைக் குறைந்தபட்சமாக்குகின்றனர் என்பதில் இவ்வுண்மை முக்கியமான இடம் பெறுகிறது இதைப்பற்றி மேலே ஆராய்வாம்.

**செலவுக் கோட்டின் பின்னால் உள்ளது : சாதனப்பதிலினால்செலவு குறைவு.**

வியாபாரக் கம்பெனி ஒன்றின் செலவுக்கோடு சம்பந்தமாக அடிக்கடி நாம் முந்திய அத்தியாயங்களில் ஆராய்ந்துள்ளோம். கணக்காளர் ஏதோ ஒருவகையில் நமக்குச் செலவுகளைக் கொடுத்துள்ளனர் என்ற எடுகோளை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கோடுகள் சரியென நாம் ஏற்றுக்கொண்டோம். இனி இந்தக் குறைந்தபட்ச மொத்தச் செலவுக்கோடு எவ்வாறு வகுக்கப்பட்டதென்பதை உற்பத்திக் கொள்கை எவ்வாறுவது விளக்க வேண்டும்.

அவை எவ்வாறு கிடைத்தன? குறைந்த செலவு உற்பத்தியைக் கம்பெனி செய்தது எவ்வாறு? ஒறுப்பானவற்றுக்குப் பதிலாக மலிவான உள்ளீடுகளைப் பயன்படுத்தி, தனது உற்பத்தித் தொகையை அது மலிவான சாதனச் சேர்க்கையால் உற்பத்திசெய்தது. ஒவ்வோர் உற்பத்தியிலும் மொத்தச்

படிப்பகம்

www.padippakam.com



சம்பளம், ஏனைச் செலவுச் சாதனங்கள் என்பவை குறிக்கப்படுகின்றன. பின்னர் குறைந்த செலவுக்கு ஏதுவான சரியான சாதனப்பதில்கள் கிடைத்ததும் கோடு பூரணமாக்கப்படுகிறது.

அத்தகைய குறைந்த செலவுச் சாதனக் கூட்டுடைய ஒரு கம்பெனிக் குரிய பதிற்சாதனங்கள் பற்றிய சமநிலை நிலைமைகள் பற்றிப் பொதுவான ஒரு விளக்கத்தைக் கொடுக்கலாமா? ஆம். ஒவ்வொரு சாதனத்தின் (1) சந்தைவிலை (2) அது தரக்கூடிய இறுதிநிலைப் பொருள் என்பவற்றை ஒப்பிட்டு அதன்பயனுகை ஊகிக்கலாம்.

ஒரு தொழிலாளர் அலகின் சம்பளம் ஓர் ஏக்கர் நிலத்தின் வாடகைக் குச் சரியாக இருக்கிறதெனக் கொள்வோம். உதாரணமாக ஒவ்வொன் றும் அலகுக்கு 2 டொலர் சாதனவிலையை சந்தையில் உடையதெனக் கொள் வோம். அதாவது 2 டொலர் சம்பளம் 2 டொலர் நிலவரிக்குச் சரி. குறைந்த செலவுத்தானத்திலே உள்ள இறுதிநிலை உற்பத்தியை தொழி லாளர் இறுதிநிலை உற்பத்திப் பொருளோடு ஒப்பிடும்போது, எது உண்மை யாயிருக்கும்? தொழிலாளரின் இறுதிநிலைப்பொருள் நிலத்தின் இறுதி நிலை உற்பத்திப் பொருளிலும் அதிகமாயிருந்தால், தொழிலாளர் சாதனத் தையே பதிற்சாதனமாக ஏற்றுக்கொள்வீர். அப்போது நிலத்திற் செலவு செய்யும் ஒரு டொலரிலும் பார்க்க தொழிலாளரிற் செலவு செய்யும் டொலருக்கு அதிக உற்பத்தி உமக்குக் கிடைக்கும்.

இவ்வாறு பதிலுக்குச் சாதனத்தைப் பயன்படுத்துவதை எப்போது நீர் நிறுத்துவீர்? சமமான விலையுள்ள நிலம், தொழிலாளர் என்பவற்றின் இறுதிநிலை உற்பத்தி அச்சொட்டகச் சமனுயிருக்கும்போதே குறைந்த செலவு நிறுத்தும் தானத்தில் நிறுத்த விரும்புவீர். அப்பொழுதுதான் தொழிலாளர், மூலதனம் என்பவற்றில் செலவு செய்யும் கடைசி ஒவ் வொரு டொலருக்கும் உச்சமான பலனை பெறுவீர். அதுதான் நீர் செலவு செய்யும் பணத்துக்கு உச்சமான உற்பத்தி; அந்த உற்பத்திக்குச் செல வாகும் பணமும் மிகக் குறைந்ததாக அப்பொழுதுதான் இருக்கும்.

**பொதுவான குறைந்த செலவுப் பதிற் சாதனம் பயன்படுத்தற் கொள்கை**

பலவகையான சாதனங்களால் உண்டாகும் இறுதிநிலை உற்பத்திப்பொருள் களைச் சமன்படுத்தும் பதிற் சாதனவிதி, நிலமும், தொழிலாளரும் ஒரே சாதனவிலையை உடையனவாயிருக்கும் போதுதான் செல்லுபடியாகக் கூடியதாயிருக்கும். ஆனுல் சாதனவிலைகள் சமமாயிருத்தல் கூட மிக விசேடமான தொரு நிலையிலுள்ளது.

ஓர் அலகு நிலம், ஓர் அலகுத் தொழிற்சக்தியிலும் பார்க்க பத்து மடங்கு அதிக விலையுள்ளதானுல், சமமான இறுதிநிலைப் பிண்டப் பொருட் தானத்துடன் நிறுத்துதல் மௌட்டீகம். அப்படியானுல் எந்தத்தானத் திலே நிறுத்தவேண்டும்? ஒறுப்பான நிலத்துக்குப் பதிலாக மலிவான தொழிலாளரைப் பிரதியீடு செய்யலாம். ஆனுல் இஃது எந்த எல்லைவரை?

www.padippakam.com



நில அலகின் இறுதிநிலைப் பிண்டப்பொருள் தொழில் அலகிலும் சரியாகப் பத்து மடங்காகத் தேறும்வரை. அதிலேதான் நீர் செலவு செய்த பணத்துக்கு ஏற்ற வருவாய் கிடைக்கும். இங்கே குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படும் ; எனவே பொதுஅறிவுக்குப் பொருத்தமான சாதாரண விதி வருமாறு :—

குறைந்த செலவைப் பதில்சாதனங்களைப் பயன்படுத்திப் பெறவேண்டும். அதுவும் இறுதிநிலைப் பிண்டப்பொருள்கள் சம்பந்தப்பட்ட சாதனவிலைகளுக்கு அச்சொட்டாக அவை விகிதாசாரமுடையனவாயிருக்க வேண்டும். அப்பொழுது தான் தொழிலாளர்மீது செலவு செய்த கடைசி டொலருக்கு உண்டாகும் இறுதி நிலைப்பிண்டப் பொருள், நிலத்தின்மீது செலவு செய்த கடைசி டொலர் பொருளுக்குச் சமனுடையதாயிருக்கும். கடைசி ஒவ்வொரு டொலருக்குமுண்டாகும் இறுதிநிலைப் பிண்டப்பொருளின் சாதாரணமான சமன்பாடு இருப்பதனுல், செலவைச் சிக்கனமாக்கும் வேறுபதிற் சாதனங்களை மேலும் பயன்படுத்த முடியாதிருக்கும். (21 ஆம் அத்தியாயத்திலே ஆராயப்பட்ட நுகர்வோர் சமநிலைக்கான ஒரு டொலருக்குள்ள சமமான இறுதிநிலைப் பயன்பாடுகள் பற்றிய விதி போன்ற நியதியே இதிலுமடங்கியுள்ளது.) எந்த ஒரு சாதனத்திலும் கடைசியாகச் செலவு செய்த ஒவ்வொரு டொலர் மூலமும் கிடைத்த இறுதிநிலைப் பிண்டப்பொருள், எந்த ஒரு சாதனத்துக்கும் ஒரேமாதிரியிருக்கும் என்ற நிலை வரும்வரை, பதில் சாதனங்களையிடுவதென்பதன் பயனுகப் பின்வரும் சமநிலைக் கூற்றைப் பெறலாம் :

$$\frac{\text{A யின் இறுதிநிலைப்பிண்டப்பொருள்}}{\text{A யின் விலை}} = \frac{\text{B யின் இறுதிநிலைப்பிண்டப்பொருள்}}{\text{B யின் விலை}}$$

இந்த நிபந்தனை எத்தனை உற்பத்திச் சாதனங்களுக்கும் பொருந்தும்.

$$\frac{\text{A யின் இறுதிநிலைப்பிண்டப்பொருள்}}{\text{A யின் விலை}} \text{ என்பது } \frac{\text{B யின் இறுதிநிலைப்பிண்டப்பொருள்}}{\text{B யின் விலை}}$$

ஐ மிஞ்சியதாகும். A யிலே செலவு செய்த கடைசி டொலரின் பயனுக உண்டாகும் பொருள் B யில் அவ்வாறு செலவு செய்த தொகையிலும் அதிகமாகும். அப்பொது B க்குப் பதிலாக A யைப் பதிற் சாதனமாகப் பயன்படுத்தினுல் செலவைக் குறைக்கலாம். அப்படிப் பதிலீடு செய்தால் A யின் இறுதிநிலைப் பிண்டப்பொருள் வீழ்ந்து B யின் இறுதிநிலைப் பிண்டப் பொருள் உயரும் என்பதைக் குறைந்துசெல் விளைவு விதி எடுத்துக் காட்டும். விரும்பிய குறைந்த செலவுச் சமநிலைச்சமன்பாடு ஏற்பட்டு மேலும் பதிலீடு செய்தல் நிறுத்தப்படும்வரை இது நிகழும்.

நுகர்வோன் ஒருவன், தனது பணத்தைப் பலவேறு பண்டங்களிலே ஒரு டொலரின் இறுதிநிலைப்பயன் எல்லாவகைப் பயன்பாடுகளிலும் சமனுக இருக்கும்வரை செலவு செய்தால்தான் தனது மொத்தத்திருத்தியை உச்சப்படுத்துவான். ஒரு மாணுக்கன் கடைசிமணிநேரத்தைத் தனது

www.padippakam.com



சராசரி அந்தஸ்தை உயர்த்தவோ, புகழை நிலைநிறுத்தவோ கூடியவகையிலேதான் பலதுறைப்பாடங்களையும் பகிர்ந்து படிப்பான். செலவைக் குறைக்கும் உற்பத்திப் பதிற்சாதனங்கள் விடயத்திலும் இந்த விதி பயன்படும்.

**மாறும் சாதனவிலைகள் எவ்வாறு பதிலீட்டைத் தூண்டும்**

மூன்றும் பகுதியில் ஆராய்ப்பட்ட செலவுக்கோட்டின் பின்னல் என்ன நடைபெறுகிறதென்பதை உற்பத்திக் கொள்கை மூலம் அறிந்துகொண்டோம். இந்த அத்தியாயத்தின் முதற்பகுதி பூரணமாயிற்று. உமது விளக்கத்தைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்காகப் பின்வரும் அப்பியாசத்தைச் செய்க : A யின் விலை உயர B யின் விலை மாருமலிருக்கும்போது செலவுக் கோட்டுக்கும், சாதனங்கள் சேர்க்கப்படும் முறைக்கும் என்ன நடக்கிறது? இப்போது செலவுகள் உயர்வது இயல்பே. எனெனில் A உள்ளீட்டின் விலை அதிகரிக்கிறது. அதனால் செலவுக்கோடு உயருகிறது. A உள்ளீட்டுக்குப் பதிலீடான B மலிவாயிருப்பதையும் கவனிக்கலாம். (தொழிலாளர் அருமையாயிருந்தால் குறைந்த தொகையான தொழிலாளரைப் பயன் படுத்தலாம். ஆனல் நிலத்தைக் கூட்டிப் பரவலான சாகுபடிசெய்து விளைவை அதிகரிக்கலாம்). ஆனல் புதிய சாதனவிலைகளுக்கு ஏற்ற விகிதத்திலே இறுதிநிலைப் பிண்டப் பொருள்களைக் கொண்டுவந்துவிட்டால் பதிலீட்டுச் சாதனம் பயன்படுத்தப்படு வது நின்றுவிடும்.

**நல்ல இலாபத்தான உற்பத்தியில் தீர்மானமான சாதனத் தேவை.**

சாத்தியமான பலவகை உற்பத்தி மட்டங்களிலும் தொழிலாளர், நிலம் போன்ற சாதனங்களின் தேவை என்ன என்பதை இப்போது அறிந்து கொண்டோம். ஆனல் சாதனச்சந்தை சாத்தியக்கூறுகளில் அக்கறைகொள் வதில்லை. நிசநிலைமைகளிலேதான் அதற்கு அக்கறையுண்டு. அதாவது உமது கடைசி உற்பத்தி என்னவாயிருக்கும் என்பதிலேதான் அக்கறையுண்டு. தொழிலாளர், நிலம் என்பவற்றில் வியாபாரம் நடத்துவோர், உமக்கு எவ்வளவு தொழிலாளர் தேவைப்படுவர், எவ்வளவு நிலம் தேவைப்படும் என்பதிலேதான் அக்கறைகாட்டுவர். அதாவது கொடுக்கப்பட்ட ஒவ்வொரு சம்பளத்திலும், வாடகையிலும், எந்திரதளவாட வாடகையிலும்தான் உமக்கு எவ்வளவு நிலம் தேவைப்படும், எவ்வளவு தொழிலாளர் தேவைப் படுவர் என்று கேட்பர்.

இந்த முக்கியமான தேவைகளை அறிவதற்கு குறைந்த செலவு விதியோடு மூன்றும்பகுதியிற் கண்டதொரு முடிவையும் சேர்க்கவேண்டும். இறுதி நிலைச் செலவு இறுதிநிலை வருவாயோடு சமனுயிருக்கும்போதுதான் உச்சநிலை இலாப உற்பத்தி உண்டாகுமென்பதை முன்னர் கண்டோம். MR(இ.வ.) = MC(இ.செ.) நல்ல இலாபத்தான உற்பத்தியைக் கொடுக்கும். இதைக்கொண்டு எவ்வளவு தொகை உற்பத்திச் சாதனங்களை உற்பத்திக்காக வாடகைக்குப் பெறவேண்டுமென்பது நிச்சயமாகிறது.

www.padippakam.com



**எல்லாவகையான குறைந்த செலவு உற்பத்திகளிலிருந்தும் நாம் நல்ல இலாபத்தானத்தைத் தெரிந்துகொள்கிறோம்:**

**படம் 1.** மூன்றுவகை உற்பத்தியிலும், இறுதிநிலைப் பிண்டப்பொருள், சாதனவிலைகளோடு கொண்ட குறைந்த விலைவிகிதம் பின்னணியில் திருத்திப்படுத்தப்படுகிறது. ஆனால் 100 டொலர் நல்ல இலாபத்தானம் 400 உற்பத்தியிலேதான் உண்டாகிறது. இது MR(இ.வ.) = MC(இ.செ.) என்ற நிலையிலாகும். சாதனங்களின் கடைசி வழிவந்த தேவை இந்த நல்ல இலாப உற்பத்தித்தானத்திலேதானுண்டாகிறது.

| வெளியீடு $q$ | குறைந்த விலை TC | தேவைக் கோடு விலை $p$ | மொத்த வருமானம் $p \times q$ TR | MR, MC ஒப்பு நோக்கல் | மொத்த இலாபம் |
|---|---|---|---|---|---|
| 200 | 300 டொ. | 1.75 டொ. | 350 டொ. | MR > MC | 50 டொ. |
| 400 | 500 | 1.50 | 600 | MR = MC | 100 |
| 600 | 700 | 1.25 | 750 | MR < MC | 50 |

படம் 1 உற்பத்திச் சாதனங்களுக்குத் தேவையை எவ்வாறு நாம் காண்கிறோம் என்பதைக் காட்டுகிறது. முதலிரண்டு கோடுகளும் எமது செலவுத் தரவான செலவுக்கோட்டை தருகின்றன. ஒவ்வொரு தானத்திலும் இந்தச் செலவுகளின் பின்னால் என்ன உண்டென்பது எமக்குத் தெரிகிறது. அதாவது இறுதிநிலைப் பிண்டப்பொருள்கள் சாதனவிலைகளுக்கு ஏற்ற விகிதத்தில் உண்டாகும் என்ற பதிலீட்டுவிதியாகும். மூன்றும் கோடு கம்பெனியின் தேவைக்கோட்டைக் காட்டுகிறது. இதிலிருந்து நாலாம்கோட்டில் மொத்த வருமானத்தைக் கணிக்கிறோம். செலவையும் வருவாயையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நல்ல இலாப உற்பத்தி 400 அலகில் உண்டு என்பது தெரிகிறது. ஏன் ? இங்கேதான் MR = MC ஆகிறது. இந்த விசேட நல்ல இலாப உற்பத்திக்குப் பொருத்தமான சாதனத்தேவையே சாதனங்களால் கம்பெனிகள் கோரும் தொகையைக் கொடுக்கிறது.

நிசவாழ்விலே குறைந்த செலவும், நல்ல இலாப மதிப்பீடுகளும் ஒரே நேரத்தில் பட்டறிவுமுறையினுற் காணப்படுகின்றன.

**பிண்டப்பொருளிலிருந்து டொலருக்கு: "இறுதிநிலை வருமானப் பொருள்"**

சாதனங்களிடமிருந்து கோரும் இந்தத் தொகையை ஒரே அடியில் எப்படிப் பெறலாம்? இறுதிநிலைப் பிண்டப்பொருள் என்ற கருத்திலிருந்து இறுதிநிலை வருமானப்பொருள் என்ற கருத்துக்குச் செல்ல நீர் விரும்பலாம். நீர் வியாபாரம் செய்வது உமது உடல் நலத்தைப் பாதுகாக்கவன்று. உமக்குத் தேவை டொலர். மேலதிக இறுதிநிலைப் பண்டத்தைப் பெறுவதற்காக நீர் மேலதிக நிலத்தைப் பயன்படுத்தவில்லை. மேலதிக டொலர்

www.padippakam.com



வருமானத்தைக் கருதியே அவ்வாறு செய்கிறீர். நீர் பின்வருமாறு. கூறுகிறீர் : " மேலதிகமாக ஓர் ஆளை ஏற்படுத்தினல் எனக்கு 2 டொலர் கூலியாகச் செலவாகிறது. அந்த ஆளினல் எனக்கு வரக்கூடிய இலாப மென்ன ? அவன் 4 அலகு இறுதிநிலைப் பிண்டப்பொருளைக் கொண்டு வருகிருன். இதனல் மேலதிகமாக எனக்கு எவ்வளவு டொலர் கிடைக்கிறது பார்ப்போம் : எனது சந்தை நிபுணர்கள் இப்போது எனது இறுதிநிலை வருமானம் ஓர் அலகுக்கு 1.50 டொலர் என்கிருர்கள் (அவர்கள் இதனை அட்டவணை 1 இலுள்ள தேவைக்கோட்டுத் தகவலிருந்து மதிப்பிட்டனர்). எனவே எனது தொழிலாளர் அலகு மேலதிக வருமானப் பொருளாக 4—1.50டொ. = 6 டொலர் கொண்டுவந்துள்ளது. 2 டொலர் கூலிபெற்று 6 டொலர் வருமானப்பொருள் கொண்டு வரக்கூடிய ஒருவனை நான் ஏற்படுத் துவேனு ? ஆம். எதுவரை அவ்வாறு செய்வேன் ? குறைந்துசெல் விளை வும், வீழ்ச்சியுறும் MR உம் 2 டொலர் சாதனவிலைக்கு மேலதிக வரு மானப் பொருளை உண்டாக்கும்வரை அவ்வாறு செய்வேன். அதன்பின்னர் ஆட்களை வேலைக்கு எடுக்கமாட்டேன் ".

பொது அறிவைப் பயன்படுத்தி நீர் புதியதொரு கருத்தை நோக்கிவந்து விட்டீர். அதாவது இறுதிநிலைப் பிண்டப்பொருளை இறுதிநிலை டொலர் வருவாயினல் பெருக்கியுள்ளீர்.—சுருக்கமாகக் கூறுவதானல், இந்தச் சாதனம் கொண்டுவரக்கூடிய மேலதிக வருமானப்பொருளுக்கு வந்து விட்டீர். இந்தக் கருத்துக்கு பொருளியலறிஞர் " இறுதிநிலை வருமானப் பொருள் " எனப்பெயரிட்டுள்ளனர். அதற்கு வரைவிலக்கணம் பின்வரு மாறு :—

மேலதிகப் பிண்டப்பொருளை விற்றல், ஒரு சாதனத்தால் கிடைக்கும் இறுதிநிலைப் பிண்டப்பொருள் நிசமாகக் கொண்டுவரும் மேலதிக டொலர் வருமானமே இறுதிநிலை வருமானப் பொருளாகும். ஒவ்வொரு சாதனத் துக்குமுள்ள இறுதிநிலை வருமானப்பொருள், வெளியீட்டின் இறுதிநிலை வருமானத்தை இறுதிநிலைப் பிண்டப்பொருளாற் பெருக்கியதொகையாகும்.

A யின் இறுதிநிலை வருமானப்பொரு $= MRq \times A$ யின் இறுதிநிலைப் பிண்டப் பொருள்.

B யின் இறுதிநிலை வருமானப்பொருள் $= MRq \times B$ யின் இறுதிநிலைப் பிண்டப்பொருள்.

நாலாம் பகுதியில் ஆராயப்படும் பகிர்வுக்கொள்கையில் கூறப்படும் சாத னத் தேவைக்கோடுகளை இந்த இறுதிநிலை வருமானப்பொருளே கொடுக் கும். தனியுரிமை பற்றிய ஒரு தீமையை ஆராய்ந்தபின் இதனைக் காட்டு வாம்.

**எல்லைப்பட்ட சாதனத்துக்கான தேவையின் : தனியுரிமைத் தீமை அகலவுரை**

நீர் நிறைபோட்டியாளரானல், நீர் சந்தைக்கு எத்துணை பிண்டப் பொருளை அனுப்பினலும், சந்தைவிலையைப் பாதிக்குமளவுக்கு நீர்

www.padippakam.com



முக்கியத்துவமுடையவராயிருக்கமாட்டார். அத்தகைய விசேட சந்தர்ப்பத்திலே இறுதிநிலை வருமான உற்பத்தியானது, நீர் சந்தைக்கு அனுப்பும் மேலதிகச் சோள அலகால் கிடைக்கும் சந்தைவிலையினால் இறுதிநிலைப் பிண்டப்பொருளைப் பெருக்கின தொகையாகும். ஆனால், நீர் சந்தை விலையைப் பாதிக்கும் சந்தர்ப்பத்தில் இறுதிநிலை வருமான உற்பத்தியிலே, மேலதிகப் பிண்டப்பொருள் விலைப்படுத்தும் எல்லாவற்றையும் சேர்க்க மாட்டீர். ஏன்? எனெனில் இந்த மேலதிகப் பொருளை விற்பதால், சரியும் தேவைக்கோட்டை அனுசரித்து அஃது உம்மை இறக்கிவிடும். இந்த மேலதிக உற்பத்தி உமது முந்திய பொருள் எல்லாவற்றையும் குறைந்தவிலைக்கு விற்கச் செய்யும். இவ்வாறு முந்திய பொருள்களிலே உண்டான நட்டம் மேலதிகப்பொருள் விற்பனையால் வந்த வருமானத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் உமக்குரிய நயநட்டம் தெரியும். 24 ஆம் அத்தியாயத்திலே இறுதிநிலை வருமானம் பற்றி நாம் கொடுத்த அசல் வரை விலக்கணம் முந்திய அலகுகளினால் ஏற்படும் நட்டங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளும்வகையிலேயே அமைக்கப்பட்டது. இறுதிநிலை வருமான உற்பத்தியைக் கணிக்குமிடத்து இறுதிநிலைப் பிண்டப்பொருளை MR (இ.வ.) இனால் பெருக்கவேண்டுமென்று வற்புறுத்தியபோது இந்த உண்மையை ஞாபகத்தில் கொண்டுள்ளோம். P (வி) யும் MR (இ.வ.) உம் அச்சொட்டாகச் சரியாயிருக்கும் நிறைபோட்டியிலேதான் (முந்திய அலகுகளிலே நட்டமில்லாதிருக்குமானால்) இறுதிநிலை வருமானப்பொருளை P × இறுதிநிலைப் பிண்டப்பொருளெனக் கணித்துக்கொள்வோம்.

தனியுரிமை நிறைவின்மையிலே அடங்கிய ஒரு தீமையை இந்தநுண்ணியல் நிலை ஞாபகப்படுத்துகிறது. சந்தையைக் குழப்பி விடுவேனென்ற பயத்தினால் தனியுரிமையாளர் மிகக் குறைவாகவே உற்பத்தி செய்வர். பொருளுக்கு அருந்தலுண்டாக்குவதே அவருடைய நோக்கம். அதற்காக அவர் பல சூழ்ச்சி செய்வர். உற்பத்திக் கொள்கையில் இஃது எவ்வாறு தோன்றுகிறது ? நிறைபோட்டியாளராக இருக்கும்போது எவ்வளவு சாதனங்களைப் பயன்படுத்துவாரோ அதனினும் குறைவான சாதனங்களை அவர் வாடகைக்கு அமர்த்துவதனாலேயே இது தோன்றுகிறது. ஏன்? எனெனில் தனி உரிமையாளரின் இறுதிநிலை வருமானப்பொருளைக் கணிக்கும்போது சாதனங்களின் இறுதிநிலைப் பிண்டப் பொருள்களை MR (இ.வ.) இனால் அவன் பெருக்குகிறான். இது விலைக்குக் குறைவானதே. எனெனில் தனியுரிமையாளன் முந்திய அலகுகளில் உண்டான நட்டத்தைச் சரியாகவே கணித்துக் கொள்வான் ; இந்த நட்டம் மேலதிகப் பொருளை உற்பத்தி செய்தால் சந்தை குழம்பிவிடுமென்ற காரணத்தால் உண்டாவது.

கூட்டுக்கம்பெனிகள், சிலருரிமையாளர் முதலிய நிறைவில் போட்டியாளரின் தடைசெய் கொள்கை மிகக் குறைவான சாதனத்தேவையாகத் தோற்றமளிக்கும். தனியுரிமையின் பளுவை வரிப்பளு விடயத்தில் நடத்து

www.padippakam.com



வதுபோல, உற்பத்திச் சாதனங்களில் சேர்த்துவிடலாம் ; அல்லது நுகர்வோர் தலையிற் போட்டுவிடலாம்.[1] இவ்வளவில் எமது அகலவுரை முடிகிறது.

## இறுதிநிலை வருமானப் பொருள்களிலிருந்து சாதனத்தேவைக்கோடு

கம்பெனியின் உற்பத்திச் சாதனங்களுக்குத் தேவைக்கோடு எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறதென்பதை அச்சொட்டாகக் கண்டுகொண்டோம். இலாபத்தை உச்சப்படுத்த விரும்பும் ஒரு கம்பெனி அதனுடைய இறுதிநிலை வருமானப்பொருள் சந்தையிலுள்ள சாதனவிலைக்குச் சமமாகும் நிலை உண்டாகும்வரைதான் சாதனத்தை வாடகைக்கு அமர்த்தும். அந்த நிலையில் இலாபம் உச்சமாகும். இதைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

சாதனத்தை வாடகைக்கு அமர்த்துவதில் நல்ல இலாப இறுதிநிலைச் சமன்பாடு பின்வருமாறு :—

(1) கம்பெனியின் இறுதிநிலை வருமானப்பொருள், நடைமுறைச் சந்தை விலைக்குக் கடைசியாகச் சமனுகும்வரைதான் ஒவ்வோர் உள்ளீடும் அமர்த்தப்படும். எனவே கடைசி நல்ல இலாபச் சமநிலைத்தானத்தில்

A யின் இறுதிநிலை வருமானப் பொருள் = A யின் விலை
B யின் இறுதிநிலை வருமானப் பொருள் = B யின் விலை
C யின் இறுதிநிலை வருமானப் பொருள் = C யின் விலை
,, ,, ,,
,, ,, ,,
,, ,, ,,
Z யின் இறுதிநிலை வருமானப் பொருள் = Z இன் விலை

(2) ஒரு சாதனத்தின் விலை உயர்ந்தால் அந்தச் சாதனம் குறைவாகவே பன்படுத்தப்படும். ஏனெனில் பதிற் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதோடு செலவு உயர்தல் வெளியீட்டைக் குறைக்கும். இந்நிலை சமநிலைச் சம்பந்தம்

[1] நிறைவில்போட்டியின் வேறுவிதமான கெடுதியொன்றை 28 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் அடிக்குறிப்பு ஆராய்கிறது. சாதனச்சந்தையில் ஒரு கம்பெனி மிக்க ஆதிக்கம் செலுத்துமானல் அச்சாதனங்களை வாங்குவதில் அது தனியுரிமைச் செல்வாக்கையுடையதாயிருக்கும். (இதைப் பொருளியலறிஞர் " தனியுரிமை வாங்குவோன் " எனக் கூறுவர்). பின்னர் அந்தக் கம்பெனி தொழிலாளரின் இறுதிநிலை வருமானப்பொருள் அவர்களுடைய சந்தைச் சம்பளத்துக்குச் சமனுகும் தானம்வரை அவர்களை அமர்த்த மறுக்குமா ? ஏன் ? ஒரு மேலதிகத் தொழிலாளியை அமர்த்த அது முயன்றால், ஏனைத்தொழிலாளரின் சந்தைச் சம்பளத்தையும் உயர்த்த அது சக்தியுடையதாகும் என்பதை உணர்ந்திருக்கிறது. அந்தத்தொழிலாளிக்குக் கம்பெனி 2 டொலரைக் கொடுப்பதோடு, முந்திய 100 தொழிலாளருக்கும் 1 சதவீதம் அதிக சம்பளம் கொடுக்கவேண்டிவரும். எனவே மேலதிகத்தொழிலாளி இறுதிநிலை வருமானப்பொருளை 3 டொலர் மதிப்புள்ளதாக்காவிட்டால் அவனைக் கம்பெனி அமர்த்த மாட்டாது. இத்தகைய தனியுரிமை வாங்குந்திறன் அதாவது வாங்குவோன் ஒரேயொருவனுய் இருந்தால் வெளியீடுக் கட்டுப்படுத்தப்படுவதோடு தொழிலாளர் சங்கங்கள் மேலும் பெருக வழிபிறக்கும்.

www.padippakam.com




மறுபடி நிலைநாட்டப்படும் வரை நிகழும். சாதனப்பதிலீடும் வெளியீட்டுக் குறைவும் ஆகிய இரண்டு விளைவுகளும் முக்கியமானவை.[1]

## நிசமான நிபந்தனை

முக்கியமான தொரு நிபந்தனையைச் சில சமயம் செய்யவேண்டும். எந்த ஓர் உள்ளீட்டின் இறுதிநிலைப் பிண்டப்பொருளையும் நாம் (1) மற்ற உள்ளீடுகளை மாற்றாமலும் (2) குறிப்பிட்ட உள்ளீட்டை ஓரலகினால் அதிகரித்தும் கணக்கிட்டுள்ளோம். அதன் பயனாக அதிகரிக்கும் பிண்டப் பொருள் பின்னர் அளக்கப்பட்டது. அதுவே சாதனத்தின் இறுதிநிலைப் பிண்டப் பொருளாகக் காணப்பட்டது. சில நுண்தொழில் முறைகளில் உள்ளீட்டுச் சாதனங்கள் மிகநெருக்கமாகத் தொழிற்படுகின்றன. எனவே ஒன்றை அதிகரித்து மற்றவற்றை மாறாது வைத்துக்கொண்டால் உமக்கு மேலதிகப் பொருள் பூச்சியமாய் விளையும். ஒரு சாதனத்தை மாத்திரம் குறைத்தால் இரண்டினாலும் உற்பத்தி செய்யப்பட்ட முழுப் பொருளும் நட்டமாகும். ஆனால் கூட்டாது இரண்டையும் மாற்றும்போது அழுத்தமான ஓர் இறுதிநிலைப் பிண்டப் பொருள்கோடு கிடைக்கும்.

[1] படம் 2 இன் அடியிலுள்ள படம் தொழிலாளர் போன்ற ஒரு சாதனத்துக்கு இறுதிநிலை வருமானப் பொருள் தேவை சம்பந்தமான தொடர்பை வரைபடத்தாற் காட்டுகிறது. இஃது எவ்வாறுண்டாகிறது? தொழிலாளரின் இறுதிநிலைப்பிண்டப்பொருளை பண்டத்தின் விற்பனையாற் கிடைக்கும் இறுதிநிலை வருமானத்தாற் பெருக்கினால் இஃது உண்டாகும். இதை காட்டுவதற்கு மேலேயுள்ள 2 கிடைநிலையான அளவுகளைப்பார்க்க. தொழிற் சக்தி சமமான அளவுக்கு நகர, உற்பத்தி சமமாகக் குறைந்து செல்லும் (அளவுகளுக் கிடையேயுள்ள கோடுகள், குறைந்து செல்விதிக்கேற்ப எவ்வாறு குறுகுகின்றன என்பதை நோக்குக.) மேலேயுள்ள நீள்சதுரங்களின் வருணந்தீட்டிய பரப்பு, தொழிலாளர் தேவைக்கோட்டை அமைக்கத் தேவையான இறுதி நிலைவருமானப் பொருள் தொகையைக் காட்டுகிறது. ஒரு தொழிலாளியலகின் இறுதிநிலைப்பிண்டப் பொருளே இந்த நீள்சதுரத்தின் அடியாகும். ஒவ்வொரு மேலதிகப் பொருளின் அலகும் கொண்டுவரும் இறுதிநிலை வருமானமே உயரமாகும். பரப்பளவு அடி × உயரமாதலால் அது $MR \times MPP = MRP$ யைக் காட்டும். எனவே இரண்டு காரணங்களுக்காக தொழிலாளர் தேவை சரிந்துகொண்டே போகும். குறைந்து செல்லும் பிண்டப்பொருளின் வருமானம் குறுகிய அடித்தளத்தைக் காட்டும். வீழ்ச்சியடையும் இறுதிநிலை வருமானமானால் குறுகிய உயரத்தைக் காட்டும். இவையிரண்டும் சேர்ந்து, விரைவாக வீழ்ச்சியடையும். இறுதிநிலைவருமானம் பொருட் பரப்பைக் காட்டும்.




படம் 2.

www.padippakam.com



இத்தகைய இசைவின்மை சில சமயம் உண்டாவது இயல்பே. ஆனால் சில விமர்சகர் நினைப்பது போல அடிக்கடி உண்டாகமாட்டா. ஒரே மண் வெட்டியை ஒருவன் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தையும், தொழிலாளரைப் பதிலீடு செய்யாமலே ஒரு கைக்கடிகாரப்பட்டியை உண்டாக்க குறித்த ஓரளவு பவுன் தேவைப்படுவதையும் சில விமர்சகர் குறிப்பிடுவர். ஆனால் மண்வெட்டும் முயற்சியில் மேலதிகமாகச் சில மண்வெட்டிகளை வைத்திருக்க வேண்டியது அவசியம். மண்வெட்டிகளின் விலை மிக அதிகமாகவும், தொழிலாளரின் சம்பளம் குறைவாகவுமிருந்தால் தொழிலாளர் ஒரே மண்வெட்டியை வெவ்வேறு வேலை நேரங்களிற் பயன்படுத்துவர். அதன் பயனாக மண்வெட்டியின் தொகையைக் குறைந்த பட்சத்தில் வைத்துக்கொள்ளலாம். காலப்போக்கிலே மண்வெட்டிகளின் பருமனை மாற்றலாம். அல்லது பெரிய புல்டோசர் எந்திரங்களைப் பயன்படுத்தலாம். அதன் விளைவாகச் சாதனங்களின் விகிதத்தை மாற்றலாம். தங்கக் கடிகாரப்பட்டி விடயத்தில் தங்கத்தில் வேலை செய்யும்போது தேய்மான முண்டாகும். பவுனோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துத் தொழிலாளர் சம்பளம் குறைவாக இருந்தால் குறைந்த தங்கத்தைக் கொண்டு பல தொழிலாளர் மூலம் அதே தொகையான பட்டிகளை உற்பத்தி செய்ய லாம். இங்கே உழைப்பு அதிக தங்கத்தைப் பயன்படுத்தாதிருப் பதற்குப் பதிலீடாயிருக்கும்.

சாதன விகிதம் நிலையாயிருக்க வேண்டுமென்றும், பதிலீட்டில் தொடர் பின்மை, இறுதிநிலைப்பெருளில் தொடர்பின்மை என்பன இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்துவோருக்குப் பதிலாக வேறு பல நியாயங்களை யும், உதாரணங்களையும் கொடுக்கலாம். சில நுண் தொழில்முறைகளிலே பலவகை உள்ளீடுகளிடையே தொடர்பான பதிலீட்டுத் தன்மையிருக்கமாட் டாது. அதனால் கணிக்கப்பட்ட இறுதிநிலைப்-பிண்டப்பொருள் மாறுபடும் இயல்புடையதாயும் பருமட்டானதாயுமிருக்கும் இதனால் அஃது உற்பத்தி சம்பந்தமான பொருளியல் கொள்கையைக் குழப்பிவிடுமென்று ஒரு காலத்திலே கருதப்பட்டது. ஆனால் நல்லதிட்டமாக அது நடைபெறவில்லை.

இத்தகைய நுண் தொழில் முறையோடு நீர் ஒரு கம்பெனியை வைத்திருப் பீரானால், மேலே காட்டிய குறைந்த-செலவுக்கொள்கை, நல்ல-இலாபக்கொள்கை என்பவற்றைப் பிரயோகிக்கலாம். இஃது உமக்கு இலேசாக வுமிருக்கலாம். ஏனெனில் ஆதியிலிருந்தே உமது என்ஜினியர்மார் பல சாதனக்கூட்டுக்களை ஒதுக்கிவிடலாம். தொழிலாளியைச் சேர்த்துக் கொண்டு வேறு உள்ளீடுகளைச் சேராமல் விடுவதால் மேலதிக உற்பத்தி உண்டாகாதிருக்குமானால், எவரும் அவ்வாறு செய்யமாட்டார். தொழிலா ளரையும் எந்திரங்களையும் சேர்ப்பதால் வருமானப் பொருளில் பெரிய அதிகரிப்புண்டாகுமானால், அதாவது தொழிலாளர் எந்திரங்களென்பவற் றின் செலவிலும் பார்க்க அதிகமான வருவாய் உண்டானால் அத்தகைய சேர்க்கையை நீர் விரும்புவீர். அதைப் பயன்படுத்துவீர். ஆனால்

www.padippakam.com



குறைந்து செல் பிண்டவருமான விதி அல்லது குறைந்துசெல் இறுதிநிலை வருமானவிதி கூட்டு இறுதிநிலைவருமானப் பொருளைக் கூட்டுச் சாதனச் செலவுவரை இறக்கக்கூடுமானால் அவ்வாறு செய்வதை நிறுத்துவீர்.[1]

தொழில் நுட்பத் தொடர்பின்மையாலும், பருமட்டான தன்மைகளாலும் உண்டாகும் வித்தியாசம், பின்வருமாறு : அத்தகைய சந்தர்ப்பங்களிலே சாதனவிலை முதலில் மாறினால், அந்தச் சாதனத்தை வேறு சாதனங்களோடு கூட்டும் முறையை மாற்றுவதால் கம்பெனிக்கு நயமுண்டாகாது. சாதனவிலை பெரிதும் மாறியபின்னர், முற்றும் புதிய வேறு சாதனக் கூட்டை உண்டாக்குவதால் கம்பெனிக்குத் திடீரென நல்ல இலாபமுண்டாகும். ஒரு சாதனத்துக்கு அனுவதித்த தேவை இடையிடையே தேவை நெகிழ்ச்சியின்மையைக் காட்டும். (வாங்கிய தொகையில் மாற்றம் காட்டாது.) சில சமயம் தேவையில் பெரிய தொடர்பின்மையையும் காட்டும். மேலே கூறிய தொடர்பின்மைகள் இந்த வகையான விளைவுகளையன்றி எமது உற்பத்திக் கொள்கையில் வேறு விளைவுகளை உண்டாக்கமாட்டா. இருந்தும், ஒவ்வொரு சாதனத்துக்குமுள்ள கம்பெனியின் தேவைக்கோடு நன்றாக நிர்ணயிக்கப்பட்டதாயிருக்கும்.

### சாதனத்தேவை வருவிக்கப்பட்ட தேவையே

சாதனத் தேவை பற்றிய சில ஆரம்பக் குறிப்புக்களைக் கூறி இந்த அத்தியாயத்தை முடிப்போம்.

சஞ்சிகை அல்லது மேலங்கி போன்ற முற்றாய் முடிக்கப்பட்ட பண்டத்தை ஏன் மக்கள் விரும்புகின்றனர் ? அப்பண்டங்களால் வரும் திருத்தியை உத்தேசித்தே. ஆனால் வியாபாரி ஒருவன் சாதன உள்ளீட்டை ஏன் விரும்புகிறான் ? அதனால் வரக்கூடிய உற்பத்திப் பொருள், இலாபம் என்பவற்றை உத்தேசித்தே.

மேலங்கி நுகர்வோனுக்கு உதவும் திருத்தியைக் கொண்டு, ஒரு புடைவைக் கம்பெனி எத்தனைமேலங்கியை, எவ்வளவுக்கு விற்கலாம் என்பதை நிர்ணயிக்கிறது. எனவே நுகர்வோர் திருத்தியே கடைசியாக கம்பெனியின் உள்ளீட்டுத் தேவையை நிச்சயிக்கிறதெனலாம். இதனாலேதான் பொருளியலறிஞர் உற்பத்திச் சாதனங்களுக்கான தேவையை வருவிக்கப்பட்ட தேவை அல்லது அனுவதித்த தேவையென்பர்.

### வருவிக்கப்பட்ட தேவைக்கு வரைவிலக்கணம்

இலாபத்தை விரும்பும் கம்பெனிகள் ஓர் உற்பத்திச் சாதனத்துக்குத் தேவை தெரிவித்தால், நுகர்வோர் பணம் கொடுத்து வாங்கும் பொருளை

1 மேலே விளக்கப்பட்டது போன்ற சந்தர்ப்பங்களிலே இறுதிநிலைப் பொருள் என்பதற்குப்பதிலாகச் சில உயர்தர பொருளியல் நூல்களில், இறுதிநிலைத் தேறியபொருள் என்று இடையிடையே பயன்படுத்தப்படுகிறது. 27 ஆம் அத்தியாயத்தின் அனுபந்தத்தில் சாதனவிலையை நிர்ணயிக்க, பண்டங்களுக்கிடையே பதிலீடு எவ்வாறு உதவுகிறது என்பது ஆராயப்படும்.

www.padippakam.com



அஃது உற்பத்தி செய்வதே அதற்குக் காரணமாகும். சாதனத்துக்குத் தேவையேற்படுவது நுகர்வோரின் விருப்பங்களை அனுசரித்தே.

அங்கி செய்வோருக்கு நாம் பணம் கொடுக்கிறோம். ஏன்? அந்த அங்கியால் எமக்குண்டான திருத்திக்காகவே. வருவிக்கப்பட்ட தேவைகள் சிலசமயம் பல படிகளையுடையவாயிருக்கும் கம்பளி, கம்பளிப்புரி செய்யத் தேவைப்படுகிறது. புரி புடைவை நெய்யத் தேவைப்படுகிறது. புடைவை, சட்டை தைக்கத் தேவைப்படுகிறது. சட்டை நுகர்வோனுக்குத் திருத்தியளிக்கிறது.

## சாதனத்தேவை ஒன்றோடொன்று தொடர்புடையது

சாதனங்கள் தனிப்படத் தொழிற்படுவதில்லை. எனக்கு ஒரு நிலவறை தேவைப்பட்டால், மண்வெட்டி மாத்திரமிருந்தாற் போதாது. நிலத்தை வெட்ட ஆளும் வேண்டும். எனவே பல சாதனங்களைக் கொண்டே பண்டத்தைச் செய்யலாம்.

ஆரம்பப் பொருளியலறிஞரான சேர் வில்லியம் பெற்றி என்பவர் இவ்விடயத்தைச் சுருக்கமாக விளக்கினார். ஒரு குழந்தையைப் பெறுவதற்குத் தாயும் அவசியம்: தந்தையும் அவசியம். தனித்தனிச் சாதனங்கள் எவ்வளவு தூரம் ஒரு பொருளின் உற்பத்திக்குக் காரணமாயிருந்தனவென்று கூறுவது கடினம். பலவகைச் சாதனங்களும் பயன்படுகின்றன. ஒவ்வொன்றும் மற்றதற்குத் துணையாயிருக்கிறது. சில சமயம் அவை ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன.

இவ்வாறு சாதனங்கள் பரஸ்பரம் துணையாயிருப்பதால் உண்டாகும் விளைவென்ன? தொழிலாளியின் கூலியைக் கொண்டே தொழிலாளர் தொகை நிச்சயிக்கப்படுகிறது. எந்திரங்களில் விலையைக் கொண்டே தொழிலாளர் தொகை நிச்சயமாகிறது. எந்திரத்தேவை விடயத்திலும் இந்த நியாயம் பொருந்தும். சுரங்கத் தொழிலாளரின் சம்பளத்தை ஜோன். எல். லூயிஸ் என்பவர் உயர்த்தினார். அதனால் அவர்கள் பயன்படுத்துவதற்கான ஆயுதங்களுக்குப் பெரிய கிராக்கி உண்டானது. எனவே ஒவ்வொருசாதனத்தின் விலையும் அதனதன் விலையிலே தங்கவில்லை ; எல்லாச் சாதனங்களின் விலையிலும் தங்கியுள்ளது.

சாதனங்களிடையே ஒழுங்கான நெகிழ்ச்சி எவ்வாறு முக்கியமானதாயிருக்கிறதோ அவ்வாறே கூட்டு நெகிழ்ச்சியும் முக்கியம்.

### சுருக்கம்

1. பகிர்வு என்பது பலவகை மக்களின் வருமானத்தை நிர்ணயிப்பதிலும், யாருக்குப் பொருளாதாரப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற அடிப்படைப் பிரச்சினையிலுமே தங்கியிருக்கிறது. தேசீய உற்பத்தியிலே தொழிலாளர் பங்கு, சொத்துக்களின் பங்கு என்பவற்றை எது நிச்சயிக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளவும், வருமானச் சமத்துவ நிலையைப் பாதிக்கும் சக்திகளை விளங்கிக் கொள்ளும் பொருட்டு,

படிப்பகம்

www.padippakam.com



பகிர்வுக் கொள்கையானது, நிலம், தொழிற்சக்தி, மூலதனம், முயற்சியுடைமை, என்னும் உற்பத்திச் சாதனங்கள், ஆபத்துக்குப் பணயம் வைத்தல், ஆகியவை சந்தையில் எவ்வாறு விலை நிர்ணயிக்கப்படுகின்றன என்ற பிரச்சினையை ஆராய்வதோடு சம்பளம், வாடகை, வட்டி, இலாபம் முதலியவற்றை நிச்சயிக்க சப்பிளை, தேவை என்பன எவ்வாறு பரஸ்பரம் தம்முட் செயற்படுகின்றன என்பதையும் ஆராய்கிறது.

2. உற்பத்திச் சாதனங்களின் தேவைக்கோடுகள் ஏன் இவ்வாறு இருக்கின்றன என்பதை விளங்கிக்கொள்ள ஒரு கம்பெனிக்குள்ளே நிலவும் உற்பத்திக்கொள்கை, செலவுக் கொள்கை என்பவற்றை ஆராயவேண்டும். ஏனெனில், உள்ளீடுகளுக்கான தேவை தருவிக்கப்பட்ட தேவையாகும். எவ்வாறு தருவிக்கப்பட்டது? நுகர்வோனின் கடைசித் தேவையிலிருந்து மறைமுகமாகத் தருவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை சிக்கலானது. அதற்குக் காரணம் சாதனங்களுக்கான தேவை கூட்டுத்தேவை. அதாவது முழுப் பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்குச் சாதனங்கள் ஒன்றேடொன்று சேர்க்கப்படுகின்றன.

3. எல்லாச் சாதனங்களின் சந்தை விலையையும், முடிந்த பண்டத்தைப் பாதிக்கும் சாதனமாற்றங்கள் பற்றிய நுண்தொழில் சார்ந்த தகவல்களையும், பொறியியல் தகவல்களையும் வியாபாரிக்குக் கொடுத்தால், அவன் இரு பிரச்சினைகளையும் ஒரே நேரத்திலே தீர்த்துக்கொள்ளுவான். அதாவது (அ) ஒன்றுக்குப் பதிலாக மற்றொரு சாதனத்தைப் பதிலீடு செய்து குறைந்த செலவுக் கூட்டைப் பெறுவதற்கும், (இங்கே அவன் தான் பயன்படுத்தும் ஒவ்வொரு சாதனம் சம்பந்தமாகவும் செலவு செய்யும் ஒவ்வொரு டொலர் இறுதிநிலைப் பிண்டப் பொருளையும் சமன்படுத்துகிறான்). (ஆ) தனது சாத்தியமான உற்பத்திகளில் எது நல்ல இலாபத்தானத்தைக் கொடுக்குமென்பதை அறுதியாக நிச்சயிக்கவும் வல்லவனுயிருப்பான். (ஆ) வில் MR (இ.வ) = MC (இ.செ.) யாக விருக்கும்.

4. சாதனச் சமநிலைக்குரிய அச்சொட்டான சமான நிபந்தனை பின்வருமாறு: சாதன விலைகளோடு இறுதிநிலை வருமானப் பொருள் சமமாயிருக்க வேண்டும். நல்ல இலாபச் சமநிலையில் இஃது ஏன் இப்படியிருக்க வேண்டும்? பொது அறிவுள்ள எந்த வியாபாரியும், சந்தையிலுள்ள சாதனங்களின் விலை, தனது கம்பெனிக்கு இறுதிநிலை பிண்டப்பொருள் கொண்டுவரும் இறுதிநிலை டொலர் வருமானத்துக்கு அதிகமாயிருந்தால் அந்தச் சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடுவான்.

5. சாதனத்தின் விலை ஏறுமானல் அதற்குரியதேவை வீழ்ச்சியடையுமென்று நமது ஆராய்ச்சியிற் கண்டோம். தொழிலாளர் சம்பளம் அதிகரித்தால் தொழிலாளருக்குப் பதிலாக வேறு சாதனங்கள் பயன்படுத்தப்படும். தொழிலாளர் சம்பளம் கூடினல் நல்ல இலாப உற்பத்திப் பொருள் குறைந்தமட்டத்திலேயிருக்கும். அப்போது MR, (இ.வ.) உயர்வான MC (இ.செ.)க்குச் சமனுயிருக்கும். மற்றொருவகையிற் கூறுவதானல் அந்தச்

www.padippakam.com



சாதனத்துக்குரிய இறுதிநிலை வருமானப்பொருளின் தேவைக்கோடு கீழ்நோக்கிச் சரியும். காரணம், குறைந்து செல்விளைவும், தனியுரிமையாள ரின் சந்தையிற் குழப்பமுண்டாவதுமே. (அதாவது தனியுரிமையாளர் உற்பத்தியைக் குறைப்பதோடு சாதனங்களைக் குறைவாகவே பயன்படுத் துவர்.)

6. பலவகைச் சாதனங்களைப் பதிலீடு செய்யும் விடயத்தில் விசேடமான இசைவின்மையிருந்தால் நாம் எமது அறிமுறைக் கொள்கையைச் சிறிது மாற்றவேண்டும். ஆனால் மாருத விகிதாசாரத்தையனுசரிக்க வேண்டு மென்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அஃது எமது உற்பத்திக் கொள்கையைக் குழப்பமாட்டாது. அப்போது கம்பெனியானது ஒரு சாதனத்துக்குமேற் பலவிதமான சாதனங்களைச் சேர்க்கும். அதன் பயனாகத் தனது முடிவு களை அது செய்து கொள்வதற்கும் இலேசாயிருக்கும். தனிப்பட்ட சாதனங் களுக்கான தருவிக்கப்பட்ட தேவைகள் நன்ருகவே நிச்சயிக்கப்படும். சில சமயம் அவை நெகிழ்ச்சியற்றனவாகவும் ஆங்காங்கு இசைவற்றனவாகவு மிருக்கலாம்.

7. உற்பத்திக் கொள்கை, இறுதிநிலைப் பொருட்கொள்கை என்பவற்றை ஓரளவு உறுதிப்படுத்தக்கூடிவரையில், அமெரிக்காவின் முழு உற்பத்திக்கு மான மொத்த உற்பத்திச் செயற்பாட்டை அளந்து காட்டும் முயற்சி அமைந்துள்ளது. இந்த நூற்ருண்டிலே தொழிலாளர், மூலதனம் என்ற சாதனங்களின் உற்பத்திச் சக்தியை நுண்தொழில் ஆராச்சியின் பயனாகக் கிடைத்த விடயங்கள் அதிகரிக்கச் செய்துள்ளன. தொழிற்சக்தியிலும் பார்க்க மூலதனம் விரைவாகப் பெருகியுள்ளது. அதன்பயனாக (அ) நுண்தொழில் அறிமுறையினாலுண்டாகிய முன்னேற்றம் தனிப்படச் செய் வதிலும் பார்க்க ஒவ்வொரு தொழிலாளி விடயத்திலும் உண்டான மூலதனப் பெருக்கம் அவனுடைய உற்பத்திச் சம்பளத்தை வேகமாக உயர்த்தியுள்ளது. (ஆ) ஒவ்வொரு மூலதன அலகும், குறைந்துசெல் விளைவையடையும் தன்மையை நுண்தொழில் அறிமுறை வளர்ச்சி இல்லாமற் செய்துவிட்டது. (இ) தொழிலாளர் வருமானம், சொத்து வருமானம் என்பனவற்றின் ஒப்பியலான பங்குகள் $\frac{3}{4} : \frac{1}{4}$ ஆக இருக்கின்றன. தொழிலாளர் சங்கங் கள், தன்னியக்கயந்திரங்கள் என்பன பெருகியும் இந்த நிலை மாறவில்லை.

சாதனச் சந்தைகளிலே சப்பிளை தேவையென்ற விடயங்கள் வாடகை, சம்பளம், வேறு சாதன விலைகள் என்பனவற்றை நிச்சயிக்கும் முறையில் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதைக் காட்ட, இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்தி அடுத்த அத்தியாயங்களிற் காட்டுவோம். இந்த அத்தியாயத் தின் முடிவிலே கேத்திரகணிதமுறைப்படி உற்பத்திக் கொள்கையை விளங்க விரும்புவோர்க்கென அநுபந்தஞ் சேர்த்துள்ளோம்.

www.padippakam.com



## ஆராய்ச்சிக்குரிய வினக்கள்

1. ஒரு கம்பெனி தீர்த்துவைக்கவேண்டிய முக்கியமான இரண்டு உற்பத்திப் பிரச்சினைகள் எவை ? பொறுப்பைப் பொறியியலாளர், செலவுக்கணக்காளர், தொழிலாளர், மேற்பார்வையாளர் முதலியோரிடை எவ்வாறு பிரிக்கலாம்?

2. ஒவ்வொரு சாதனத்தின் பேரிலும் செலவு செய்யும் ஒவ்வொரு டொலர் விடயத்திலும் இறுதிநிலை உற்பத்திச் செலவைச் சமன்படுத்த வேண்டும். அப்போதுதான் குறைந்த செலவுத்தானத்தை அடையலாமென்ற உண்மையை, அதில் நம்பிக்கையில்லாதவருக்கு விளக்கிக் காட்டுக. நல்ல இலாப வெளியீடுபற்றி நாம் நிச்சயிக்காத பட்சத்திலும் இஃது உண்மையே என்பதை எடுத்துக்காட்டுக.

3. இறுதிநிலை வருமானப்பொருள் என்பதற்கு வரைவிலக்கணம் கூறுக. இறுநிலைப்பிண்டப்பொருள் என்ருலென்ன ? ஒவ்வொரு சாதனவிலையும் அதன் இறுநிதிலை வருமானப் பொருளுக்கு அச்சொட்டாகச் சமனுயில்லா விட்டால் இலாபம் உச்சமாகவிராதென்பதைச் சாதாரணமுறையில் விளக்குக.

4. கோதுமையை நிலம், எந்திரம், தொழிலாளர், உரம் என்ற சாதனங்களைப் பலவகையில் சேர்த்துப் பயன்படுத்திச் சாகுபடி செய்யலாம். எந்தவகையில் இச்சாதனங்களைச் சேர்க்க வேண்டும் என்பதை நிச்சயிக்க என்ன தகவல் தேவை ? நீர் நிர்ணயிக்கும்போது படிப்படியாகப் பயன்படுத்தும் முறையைத் தருக.

5. தனது உற்பத்திப் பொருளுக்கு அதிக கிராக்கியுண்டென ஒரு கம்பெனி காண்கிறது. (தேவைக்கோடு வலப் பக்கமாக நகர்கிறது.) விலை, வெளியீடு,. அமர்த்தப்படும் சாதனங்கள், அவற்றின்தொகை என்பன பற்றி ஒரு புதிய சமநிலையை அடைய அஃது என்ன முறையை அனுசரிக்க வேண்டும் ?

6. சாதனவிலை இறங்கினுல், சாதனத்துக்கு மேலும் தேவையை அதிகரிக்கும் வெளியீட்டு விளைவும், பதிலீட்டு விளைவும் உண்டென்பதைக் காட்டுக. அல்லது குறைந்துசெல் பிண்டவிளைவினுலும், குறைந்துசெல் டொலர் விளைவினுலும் சாதனத்தேவைக்கோடு கீழ்நோக்கிச் சரிகிறது என்பதைக் காட்டுக (படம் 2 ஐப் பயன்படுத்துக).

7. தருவிக்கப்பட்ட தேவை, கூட்டுத்தேவை என்பவற்றுக்கு உதாரணம் தருக.

8. இசைவின்மை, பதிலீட்டுக்குப் பொருத்தமின்மை என்பவற்றுக்கு உதாரணம் தருக. குறைந்த செலவு, நல்ல இலாபம் என்ற பிரச்சினைகளை இது கடினமாக்குமா ?

www.padippakam.com



9. பின்வரும் கருத்துக்களைத் திருப்பி ஞாபகப்படுத்துக :
யாருக்கு, எப்படி என்ற சாதனவிலையிடல்
பகிர்வுக்கொள்கை
உற்பத்தித்தொழிற்பாடு
இறுநிலைப்பொருள், இறுதிநிலைப்பிண்டப்பொருள், இறுதிநிலைவருமானப்பொருள், ஒவ்வொரு சாதனத்திலும் செலவுசெய்யும் கடைசி டொலருக்குக் கிடைக்கும் இறுதிநிலைப் பிண்டப்பொருள் ; குறைந்து செல் விளைவு ; குறைந்த செலவுப்பதிலீட்டுவிதி ; MR (இ.வ.) = MC (இ.செ.) யும்
நல்ல இலாப Q வும் தனியுரிமை உற்பத்தியும், சாதனக்கட்டுப்பாடும்.
பதிலீட்டிலுள்ள தொழில்முறைக் குறைவு ; தருவிக்கப்பட்ட தேவை.
கூட்டுத்தேவை
கூட்டு உற்பத்தித் தொழிற்பாடு.

**அனுபந்தம் : உற்பத்திக் கொள்கையை வரைபடத்தின்மூலம் விளக்கல்.**


இந்த அத்தியாயத்திலே ஆராய்ந்த உற்பத்திக் கொள்கையை வரைபடம் மூலம் காட்டலாம். அட்டவணை 2 இலேசான உற்பத்தித் தொழிற்பாட்டின் எண்ணுக்குரிய உதாரணமாகும். இது வெளியீட்டை இரண்டு உள்ளீடுகளோடு தொடர்புறுத்துகிறது. அதாவது தொழிற் சக்தி, மூலதனம் என்பனவாகும். இதன் இடப் பக்கத்திலே 1 அலகிலிருந்து 6 அலகுவரை செல்லும் பலவகை மூலதனம் குறிப்பிடப்பட்டுள்ளது. அடித்தளத்தை அனுசரித்து 1 அலகு தொட்டு 6 அலகுவரையுள்ள தொழிலாளர் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மூலதனம், தொழிலாளர் சம்பந்தமான வெளியீட்டு அட்டவணைக்குள்ளே குறிப்பிடப்பட்டுள்ளது.

5 அலகு மூலதனமும், 2 அலகு தொழிலாளரும் இருக்கும்போது வெளியீடு எவ்வளவென்பதை அச்சொட்டாக அறியவேண்டுமென்றால், 5 அலகு முதலையும் 2 அலகு தொழிலையும் எண்ணிப் படத்திற் பார்க்கும்போது 448 அலகு உற்பத்தியைக் காணலாம். அவ்வாறே பார்த்தால் 3 அலகு முதலும் 6 அலகு தொழிலாளரும் 600 அலகு உற்பத்தியை உண்டாக்குவதைக் காணலாம். தொழிலாளர் முதல் என்பவை எந்த அளவிலே சேர்க்கப்பட்டாலும், உற்பத்தித் தொழிற்பாடு, உற்பத்தி எவ்வளவு உண்டென்பதைக் (நுண்தொழில் முறைப் பொறியியலாளர் நிச்சயிக்கும் சிறந்த முறைகளைப் பயன்படுத்தி) காட்டும்.

www.padippakam.com



உற்பத்தித் தொழிற்பாடு தொழில் நுட்பமுறையையே சுருக்கமாகக் குறிப்பிடும்.




**அட்டவணை 2.** வெளியீட்டுத் தொகையைப் பலதொகையான தொழிற்சக்தி, மூலதனம் என்பவற்றின் சேர்க்கைகளோடு தொடர்புபடுத்தும் உற்பத்தித் தொழிற்பாடு, மூலதனம் 3 அலகாகவும், தொழில் 2 அலகாகவு மிருந்தால் நீர் உற்பத்தி செய்யக் கூடிய உச்ச உற்பத்தி 346 அலகென உமது பொறியியலறிஞர் கூறுவர். இந்த 346 ஐ உண்டாக்கும் பலவழிகளையும், 490 ஐ உண்டாக்கும் பலவழிகளையும் கருத்திற் கொள்க.

## குறைந்துசெல் இறுதிநிலைப் பிண்டப்பொருள்.

குறைந்துசெல் பயன் விதியை அட்டவணை 2 மூலம் நன்றாக விளக்கலாம். மூலதனத்தை மாறாமல் வைத்துக்கொண்டு, மேலதிகமான ஓர் அலகு தொழிற்சக்தியைக் கூட்டுவதாலுண்டாகும் மேலதிக உற்பத்திக்கு "தொழிற்சக்தியின் இறுதிநிலைப் பிண்டப் பொருள்" என்ற பெயரைக் கொடுத்துள்ளோம். அட்டவணை 2 இலே எந்த ஒரு தானத்திலும் தொழிலாளர் இறுதிநிலைப்பிண்டப்பொருளைப் பெறுவதானால் குறிப்பிட்ட இலக்கத்தை (இதுவே அந்தத் தானத்திலுள்ள உற்பத்தி) அதே கோட்டிலே வலப்பக்கத்திலேயுள்ள இலக்கத்திலிருந்து கழித்தாற் கிடைக்கும். இவ்வாறு 2 அலகு முதலும், 4 அலகுதொழிலாளருமாயிருந்தால் மேலதிகத் தொழிலாளருக்குரிய இறுதிநிலைப் பிண்டப்பொருள் 48 ஆகும். இது 400 ஐ 448 இலிருந்து கழிப்பதாலுண்டாகிறது.

www.padippakam.com



மூலதனத்தின் இறுதிநிலைப் பிண்டப்பொருள் என்றால், தொழிலாளரை மாற்றாமல், மேலதிக மூலதன அலகு ஒன்றைச் சேர்ப்பதால் உண்டாகும் மேலதிக உற்பத்தியேயாகும். கொடுக்கப்பட்ட ஒரு வரிசையில் அயலாயுள்ள அமிசங்களை ஒப்பிட்டுப் பார்க்க அஃது இடமளிக்கிறது. 2 அலகு மூலதனமும், 4 அலகு தொழிலாளருமிருந்தால் மூலதனத்தின் இறுதி நிலைப் பிண்டப்பொருள் 490-400 ஆகிய 90 ஆகும். இவ்வாறு அட்டவணைக்குள்ளே எந்தத்தானத்திலும் தொழிலாளர் சம்பந்தமான அல்லது மூலதனம் சம்பந்தமான இறுநிலைப்பிண்டப்பொருளை வாசகர் கணித்துக் கொள்ளலாம்.

உள்ளீட்டின் இறுதி நிலைப்பிண்டப்பொருள் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் வகுத்த பின்னர், குறைந்து செல்விதி யென்றால் என்ன என்பதை மறுபடி விளக்கமாகக் கூறக்கூடிய நிலையிலிருக்கிறோம்.

குறிப்பிட்டதோர் உள்ளீட்டை மாறாமல் வைத்துக்கொண்டு, மாறும் உள்ளீட்டை அதிகரித்தால், அதனுடைய இறுநிலைப் பிண்டப்பொருள் குறையும் ; ஒரு தானத்தின் பின்னுவது குறைந்து செல்லும்.

இதை விளக்குவதற்குப் படம் 2 இலே மூலதனத்தை மாறாது ஒரு வரிசையில் வைத்துக் கொள்க. உதாரணமாக 2 அலகுக்குச் சமமான மூலதனத்தைப் பார்க்கலாம். இப்போது தொழிலாளர் 1 அலகிலிருந்து 2 அலகாகவும், 2 இலிருந்து 3 அலகாகவும் உயரட்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உற்பத்திக்கு என்ன நடக்கிறது ?

தொழிலாளர் அலகு 1 இலிருந்து 2 ஆக உயர உற்பத்திப்பொருள் அலகு 200 இலிருந்து 282 அலகாக உயருகிறது. அதாவது 82 அலகாக உயருகிறது. அடுத்து மற்றொரு தொழிலாளர் அலகு உயர, பொருள் 64 ஆகவே உயருகிறது. அதாவது 346-282 ஆகும். இப்போது குறைந்துசெல் விளைவுவிதி வேலைசெய்யத்துவங்கிவிட்டது. மேலும் தொழிலாளர் அலகை உயர்த்த 54 மேலதிக உற்பத்தியலகே கூடுகிறது. இது பின்னர் 48 அலகாகவும் ஈற்றில் 42 அலகாகவும் குறைகின்றது. வாசகர் மற்றொரு கோட்டைப் பரீட்சித்து குறைந்து செல் விளைவு விதி அங்கேயும் காணப்படுகிறதென்பதை அவதானித்துக் கொள்ளவேண்டும். தொழிலாளர் தொகை மாறாதிருக்க மூலதனத்தைக்கூட்டுவதால் அவ்விதி நிகழ்வதையும் கவனிக்கவேண்டும். (எந்தக் கோட்டிலும் உற்பத்தியில் மாற்றமுண்டாவதைப் பரீட்சிக்க வேண்டும்).

இந்தக் கட்டத்திலே குறைந்துசெல் விளைவுக்குக் கொடுத்த விளக்கத்தை ஞாபகத்திலே கொண்டுவரலாம். இரண்டாம் அத்தியாயத்திலே இவ்விடயம் ஆராயப்பட்ட பொழுது மாறும் சாதனத்துக்கு ஒப்பாக நிலையான சாதனம் குறையுமென்று காட்டப்பட்டது. மாறும் சாதனத்தின் ஒவ்வோர் அலகும் நிலையான சாதனத்தில் குறைவாகவே பெறும். அதனால் மேலதிக உற்பத்தி குறைந்து கொண்டுசெல்லும்.

www.padippakam.com



இந்த விளக்கம் நியாயமானதாய்க் கொள்ளப்படுவதானால், இரண்டு சாதனங்களும் விகிதசமத்தில் உயர்த்தப்படும்போது, குறைந்து செல்விளைவு உண்டாகாது. தொழிலாளர் தொகை ஒன்றிலிருந்து இரண்டாக உயரும்போது, மூலதனமும் ஒன்றிலிருந்து இரண்டாக உயரும். இரண்டும் ஒரே நேரத்தில் இரண்டிலிருந்து 3 ஆக உயர்ந்தால் அதே அதிகரிப்பு உற்பத்தியிலும் உண்டாகும். இதனை அட்டவணை 2 இலிருந்து பரீட்சித்துப் பார்க்கலாம். முதல் நகர்வில் நாம் 141 இலிருந்து 282 இக்குச் செல்கிறோம். இரண்டாவது நகர்விலே உற்பத்தி 282 இலிருந்து 423 ஆக உயர்கிறது. இதுவும் 141 அலகு உயர்வே.

உள்ளீட்டின் கணக்குப்படி குறைந்துசெல்விளைவை விளக்குவதானால், மூலதனத்தை அதிகரிப்பதால், தொழிலாளரின் இறுதிநிலைப் பிண்டப் பொருள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம் என்பது உறுதியாகும்.[1] இதனையும் அட்டவணையிலிருந்து பரீட்சித்துப் பார்க்கலாம். 2 அலகு மூலதனம் இருக்கும்போது தொழிலாளரின் 5 வது அலகு 48 அலகு பொருளைக் கூட்டுகிறது. ஆனால் 3 அலகு மூலதனத்திலே 5 வது அலகு தொழிலாளரைச் சேர்த்தால் 58 அலகுப் பொருள் கூடுகிறது.

**கொடுக்கப்பட்டதொரு வெளியீட்டுக்குக் குறைந்த—செலவு சாதனச் சேர்க்கை.**

இலக்கத்தொகை சம்பந்தமான உற்பத்திச் சார்பு, கொடுக்கப்பட்ட தொரு வெளியீட்டை எவ்வாறு உண்டாக்கலாமென்பதை என்ஜினியர் திட்டமாகக் கூறமாட்டார் என்பதைக் காட்டும். ஒரு பூனையைக் கொல்வதானால் பல வழியாகக் கொல்லலாம். அவ்வாறே ஒரு வெளியீட்டை உற்பத்தி செய்வதற்குப் பல வகையான வழிகளுண்டு. 2 ஆம் அட்டவணையிலுள்ள தடித்த இலக்கங்கள் $q = 346$ என்பதை 3 ஆம் அட்டவணையிற் காட்டிய பலவேறு வழிகளில் ஒன்றினால் உற்பத்தி செய்யலாம் என்பதைக் காட்டும்.[2]

என்ஜினியரைப் பொறுத்தவரையில் இந்தச் சேர்க்கைகள் ஒவ்வொன்றும், 346 அலகை உற்பத்தி செய்வதற்குப் போதுமானவை. ஆனால் கம்பெனியின் இலாபத்தை உச்சமாகவும், செலவை அதமமாகவும் வைத்திருக்க விரும்பும் கணக்காளர் இந்தச் சேர்க்கையிலே ஒன்றுதான் குறைந்த செலவை உண்டாக்கு மென்பதை அறிவார். அஃது எது என்பது இரண்டு உற்பத்திச் சாதனங்களின் விலையைப் பொறுத்ததாகும்.

தொழிலாளர் விலை 2 டொலரும், மூலதனத்தின் விலை 3 டொலருமென வைத்துக் கொள்வோம். A சந்தர்ப்பத்திலே தொழிலாளர் செலவும் மூலதனச் செலவும் 20 ($= 1 \times 2$ டொ $+ 6 \times 3$ டொ) ஆகும். B, C, D

1. உண்மையான பொருளாதார வாழ்வில் சந்திக்கும் எல்லா உற்பத்தித் தொழிற்பாடு களும், அளவுக்கு "எற்ற நிரந்தரப்பயன்" என்பதன் விசேடத் தன்மைகளைப் பெறமாட்டா. பெருவாரி உற்பத்தியின் பொருளாதாரம் அல்லது அளவுக்கு எற்ற பயன் அதிகரிப்பு என்ற ஆராய்ச்சி 2 ஆம் அத்தியாயத்திலுண்டு. அதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

2. 490 இற்கோ வேறு ஓர் இலக்கத்துக்கோ உள்ள வெளியீட்டுக்கான அட்டவணையை நீர் ஆக்கலாம்.

www.padippakam.com



என்பவற்றின் செலவு முறையே 13, 12, 15 டொலர் ஆகும். இந்த உள்ளீட்டு விலைகளில் C தான் குறிப்பிட்ட வெளியீட்டை உற்பத்தி செய்வதற்குச் சிறந்த வழியாகும் என்பதில் ஐயமில்லை.

உள்ளீட்டு விலைகளில் எதாவது ஒன்று மாறினால் உள்ளீடுகளின் சமநிலை விகிதாசாரம் எப்பொழுதும் மாறும் ; அந்த மாற்றத்தினால் விகிதாசாரப்படி உயர்ந்த விலையுள்ள உள்ளீடுகளைக் குறைவாகப் பயன்படுத்த வசதியுண்டாகும். 21 ஆம் அத்தியாயத்திலே நாம் ஆராய்ந்த பதிலீட்டுப் பயன் போன்றது இது. உதாரணமாக தொழிற்சக்தி அலகு 2 டொலராக இருக்க மூலதனம் 1 டொலராக விழும்வரையிலிருந்தால், விரும்பப்படும் புதிய சாதனச் சேர்க்கை B யாகும். இங்கே தொழிற் சக்தியைக் குறைத்து மூலதனத்தை உயர்த்துவார்கள். மொத்தச் செலவு 7 டொலர் மாத்திரமே. மற்ற எல்லாச் சேர்க்கைகளுக்கும் செலவாகும் புதிய மொத்தச் செலவையும் கணித்து அவை உயர்வுடையனவாயிருக்கச் செய்து இதை வாசகர் பரீட்சிக்கலாம் (அட்டவணை 3 இலே கொடுக்கப்படாதுள்ள செலவைப் பென்சிலாற் குறிக்க).

வேறு எந்த வெளியீட்டுக்கும் இதே மாதிரிச் செய்யலாம். உள்ளீட்டு விலைகளை யெல்லாம் அறிந்து கொண்டபின், குறைந்த செலவு உள்ளீட்டுச் சேர்க்கையை அறியும்வரை பரீட்சித்துக்கொண்டிருக்கலாம் (உமக்குக் கொள்கைகள் விளங்கிவிட்டனவாவென்பதை உறுதிப்படுத்துவதற்காகத்

**குறைந்த செலவுத் தானத்தை எவ்வாறு வரைபடத்தின்மூலம் காண்பது:**

முதவாவது : ஒரே அளவு வெளியீட்டைப் பெறுவதற்குச் சாதனங்களைப் பதிலீடு செய்யலாம்.

| | தொழில் L | முதல் C | $P_L = \$2$ $P_C = \$3$ எனின், மொத்தச் செலவு | $P_L = \$2$ $P_C = \$1$ எனின், மொத்தச் செலவு |
|---|---|---|---|---|
| *A* | 1 | 6 | $20 | — |
| *B* | 2 | 3 | 13 | $7 |
| *C* | 3 | 2 | 12 | — |
| *D* | 6 | 1 | 15 | — |

அட்டவணை 3 : சம வெளியீட்டுச் சாதனச் சேர்க்கைகளைக்கூட வரைபடத்தின் மூலம் காட்டலாம். 346 அலகை உற்பத்தி செய்யக் குறைந்த முதலையும் அதிக தொழிலாளரையும் ஏற்படுத்தலாம். $P_L=2$ டொ. $P_C=3$ டொ. ஆகவிருக்கும்போது சம்பளச் செலவு மொத்தத்தையும், மூலதனச் செலவையும் கணக்கிட்டு, அவற்றின் சேர்க்கை, C இல், குறைந்த செலவு 12 டொலரைக் கொடுக்கிறதென்பதைக் காட்டுக. $P_C$ ஐ 1 டொலருக்கும் குறைத்தால், C இலிருந்து B இற்கு நகரும்போது, தொழிலாளருக்குப் பதிலாக மூலதனத்தைப் பதிலீடு செய்யச் செய்யும் என்பதைக் காட்டுக.

www.padippakam.com



தொழிலாளரின் விலை 2 டொலராகவும் மூலதனத்தின் விலை 3 டொலராக வுமிருக்கும்போது 490 அலகுக்குச் சமமான வெளியீட்டுக்கு வாய்ப்பான உற்பத்தி நிர்ணயத்தையும் செலவையும் கணக்கிட்டுப் பார்க்க).

**சம உற்பத்தியும் சம செலவும் காட்டும் சம உயரக்கோடுகள் : குறைந்த செலவுத்தானத்துக்கான வரைபடம்.**

செலவைக் குறைப்பதற்காக ஒரு கம்பெனி தனது உள்ளீடுகளை எவ்வாறு சேர்க்கிறது என்பதை இலக்கச் சார்பாக விளக்கமாய் ஆராய்வதானால், படங்கள் மூலம் அவ்வாறு செய்யலாம். குறிக்கப்பட்டதோர் உள்ளீட்டை உற்பத்திசெய்யப் பயன்படும் பல வகையான உள்ளீட்டுச் சேர்க்கைகளை, உற்பத்தி அட்டவணையிலிருந்து படமாகக் கீறலாம். அட்டவணை 3 இன் வரைபடமே படம் 3. 346 அலகுகளை உண்டாக்கப் பயன்படும் பலவகைத் தொழிலாளர், மூலதனம் ஆகிய சேர்க்கைகளை வளைகோடு காட்டுகிறது. 21 ஆம் அத்தியாயத்துக்கு அனுபந்தமாயுள்ள நுகர்வோர் உபேட்சைக்கோடுபோல இதுவும் உற்பத்தி–உபேட்சைக்கோடு எனலாம். ஆனால் அதனிலும் பொருத்தமான பெயர் சம உற்பத்திக் கோடு என்பது. (படம் 3 இல் இதற்குச் சமமான சம உற்பத்திக்கோட்டை அதாவது 490 க்குச் சமமான உற்பத்திக்குரிய கோட்டைப் புள்ளிக்கோடாகக் கீறலாம். இத்தகைய சம உற்பத்திச் சம உயரக்கோடுகளை எல்லையின்றிக் கீறலாம் ; நில அமைப்புச் சம்பந்தமாகவோ, கால நிலை சம்பந்தமாகவோ சம உயரத்தை அல்லது சம அமுக்கத்தைக் காட்டும் சம உயரக்கோடுகளையும், சம அமுக்கக் கோடுகளையும் எல்லையின்றிக் கீறலாமென்பதை நீங்கள் உணர்ந்திருக்க லாம்).

தொழிலாளர் விலையையும், மூலதன விலையையும் கொடுத்தால், A, B, C, D என்ற தானங்களுக்கோ வேறு தானங்களுக்கோ பொருத் தமான மொத்தச்செலவை சம உற்பத்திக்கோட்டில் ஒரு கம்பெனி கணக்கிடலாம். சம உற்பத்திக்கோட்டிலே குறைந்த செலவை அடையும் வாய்ப்பான தானத்தைக் கண்டறிந்த பின்னர்தான் கம்பெனி தனது இலாபத்தை உச்சமாக்கும்.

தொழிலாளர், மூலதனம் என்பவை சம்பந்தமான சாதனச் சேர்க்கை எத்தனை உண்டோ அத்தனையையும் வைத்து மொத்தச் செலவு எவ்வளவுண்டாகுமென ஒரேயடியாய்க் கம்பெனி கணக்கிடும். இதனால் எண்கணித முறையில் கணக்கிடுவதிலுள்ள பலவகைத் தொல்லைகளைத் தவிர்க்கக் கூடியதாயிருக்கும். தொழிலாளர் விலை 2 டொ. ஆகவும், மூலதனவிலை 3 டொ ஆகவுமிருக்கும்போது சாத்தியமான சமச்செலவுக் கோடுகளைச் சமாந்தரமான நேர்க்கோடுகள் 4 ஆம் படத்திலே காட்டுகின்றன (பின்வரும் பக்கங்களைப் பார்க்க).

எந்த ஒரு தானத்துக்குரிய மொத்தச் செலவை அறிய வேண்டுமோ, அதனை அந்தத் தானத்துக்கூடாகச் செல்லும் சமச்செலவுக் கோட்டில் சேர்க்கப்பட்ட இலக்கத்தை வாசித்து அறிந்துகொள்ளலாம். கோடுகளெல்லாம் நேராகவும்

www.padippakam.com




சமாந்தரமாகவுமிருக்கின்றன. ஏனெனில் கம்பெனி தனக்குத் தேவையான உள்ளீடுகளை மாறுத விலையில் வாங்கக்கூடியதாயிருக்கிறது. கோடுகள் 45° க்கும் பார்க்க மட்டமாயிருக்கின்றன. ஏனெனில் $P_L$ என்ற தொழிலாளர்விலை $P_C$ என்ற மூலதன விலையிலும் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு சமவிலைக்கோட்டினதும் சரிவிற்குரிய எண்கணித மதிப்பு தொழிலாளர் விலைக்கும், மூலதன விலைக்குமுள்ள விகிதத்துக்குச் சரியாயிருக்க வேண்டுமெனக் கூறலாம்.[1] இந்தச் சந்தர்ப்பத்திலே அது 2/3 ஆகும்.

கொடுக்கப்பட்டதொரு வெளியீடு சம்பந்தமாக, மொத்தச் செலவு அதமமாக்கப்பட்ட ஒரு கம்பெனியின் வாய்ப்பான சமநிலை உள்ளீட்டு நிலையைக் காண்பது இப்போது இலேசாயிருக்கும். தனியாயுள்ள சம உற்பத்திக் கோடு, சமச்செலவுக்கோட்டுக்கூட்டத்தைத் தன்மீது சுமத்திக் கொண்டது. இது 5 ஆம் படத்திலே காட்டப்பட்டுள்ளது. கம்பெனியானது குறைந்த செலவுக்கோடுகளை அடையக்கூடிய நிலையிலிருக்கும்வரை 5 ஆம் படத்திலுள்ள குழிவான கோட்டையனுசரித்து அது நகரும். அதனுடைய சம நிலை A, B, D என்பவற்றிலிராது, C யிலேயே இருக்கும். அங்கேதான் சம உற்பத்திக்கோடு குறைவான சமச்செலவுக்கோட்டைத் தொடுகிறது. (ஆனுல் கடந்து செல்லவில்லை) இது தொடு கோட்டுத்தானம் ; சம உற்பத்திக்கோட்டின் சரிவு சமச்செலவுக்கோட்டின் சரிவை ஒத்திருக்கிறது. கோடுகள் ஒன்றையொன்று தொட்டுக் கொள்கின்றன.

சமச்செலவுக் கோட்டின் சரிவு $P_L/P_C$ என்பதையறிவோம். ஆனுல் சம உற்பத்திக்கோட்டின் சரிவு என்ன? இந்தச் சரிவு ஒருவகைப் பதிலீட்டு விகிதமாகும். இரண்டு சாதனங்களுக்குமிடையிலுள்ளது. இது இரண்டு உற்பத்திச் சாதனங்களின் சார்பு இடைநிலைப்பிண்டப்பொருளில் தங்கியுள்ளது. நுகர்வோனின் சமநோக்குக்கோட்டை அனுசரித்துள்ள 2 பண்டங்

**இரண்டாவது, சம-வெளியீட்டுச்சாதாரணச் சேர்க்கைகளை வரைப்படத்திற் காட்டலாம் :**




படம் 3. வளைகோட்டிலுள்ள புள்ளிகள் யாவும், 346 அலகுகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் மூலதன, தொழிலாளர் சேர்க்கைகளைக் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



களின் பதிலீட்டு விகிதம் இரண்டு பண்டங்களின் மேலதிகப் பயன்சம்பந்த மான விகிதத்துக்குச் சமம் என்பதை முன்னர் காட்டினேம் (21 ஆம் அத்தியாயத்தின் அனுபந்தம்.)


**மிகக் குறைந்த விலை நிலைமைகள் :**

எனவே குறைந்த செலவுச் சமநிலையைப் பின்வரும் சமன்பாடுகளுள் ஒன்றினுல் விளக்கலாம்.

1. இரண்டு உள்ளீடுகளில் எதாவது ஒன்றின் இறுதிநிலைப் பிண்டப் பொருள்களின் விகிதம் அவற்றின் சாதனவிலைகளின் விகிதத்துக்குச் சமமாயிருக்க வேண்டும். அதாவது பதிலீட்டு விகிதம், அல்லது

$$\frac{\text{தொழிலாளர் இறுதிநிலைப் பிண்டப்பொருள்}}{\text{மூலதன இறுதிநிலைப் பிண்டப் பொருள்}} = \frac{\text{தொழிலாளர் விலை}}{\text{மூலதன விலை}}$$

**மூன்றுவது சமச்செலவுக் கோடுகள் சமாந்தரமான சம உயரக்கோடுகளாகும்**




படம் 4. ஒரு கோட்டிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் ஒரே மொத்த விலையைக்காட்டும். மாருத சாதனவிலையிருப்பதனுல் கோடுகள் நேராயிருக்கின்றன. தொழிலாளர் விலைக்கும் மூலதனவிலைக்குமுள்ள 2 டொ/3 டொ விகிதத்துக்கேற்ற சரிவு அவற்றுக்குண்டு.

2. செலவு செய்த தொகையின் கடைசி டொலரிலிருந்து பெற்ற ஒரு டொலருக்கான இறுதிநிலைப்பிண்டப் பொருள் ஒவ்வோர் உற்பத்திச் சாதனத்துக்கும் ஒரே மாதிரியாகவேயிருக்கும். அதாவது,

$$\frac{\text{L இன் இறுதிநிலைப் பிண்டப் பொருள்}}{\text{L இன் விலை}} = \frac{\text{C யின் இறுதிநிலைப்பிண்டப்பொருள்}}{\text{C யின் விலை}}$$

எத்தனை உள்ளீடாயிருந்தாலும் இது பொருந்தும். 2 ஆவது தொடர்பைப் பற்றி இந்த அத்தியாயத்தின் பெரும்பகுதியில் ஆராய்ந்துள்ளோம். இதை 1 இலிருந்தும் பெறலாம்.

படிப்பகம்

www.padippakam.com



மாணுக்கன் சாதாரண அறிவுக்கேற்ற பொருளாதார விளக்கத்தை மனத்திலே கொள்ளவேண்டும். தன்மீது செலவு செய்யப்பட்ட கடைசி டொலர் ஒவ்வொன்றுக்கும் அதிக விளைவு கிடைக்குமானுல் கம்பெனி தனது செலவைப் புனர்ப்பங்கீடு செய்துகொள்ளும் என்ற உண்மை இதனுல் தெரிய வரும். கடைசியாக குறைந்த செலவுச் சம்பந்தத்தைப் பின்வருமாறு கூறலாம் :

3. உள்ளீட்டு விலைகளும் அவற்றின் இறுதிநிலைப் பிண்டப்பொருள்களும் விகிதசமமாயிருக்க வேண்டும். விகிதத்தைக் காட்டும் சாதனம் இறுதி நிலைச் செலவாகும்.[1]

அதாவது,

உற்பத்தியின் MC (இ.செ.) × தொழிலாளரின் இறுதிநிலைப் பிண்டப் பொருள் = தொழிலாளர் விலை.

உற்பத்தியின் MC (இ.செ.) × மூலதனத்தின் இறுதிநிலைப் பிண்டப் பொருள் = மூலதனத்தின் விலை.

இஃது எத்தனை வெளியீட்டுக்கும் இவ்வாறேயிருக்கும். 1, 2, 3 க்குரிய குறைந்தவிலைத் தொடர்புகள் எல்லாம் சமன். மொத்தச் செலவுக்கோட்டிலேயுள்ள ஒவ்வொரு தானத்திலும் இது சரி. வெளியீடு எப்படியுமிருக்கலாம். இவை கம்பெனி கடைசியாக எங்கே உற்பத்தி செய்யவேண்டுமென்பதைக் குறிப்பிடா.

## நல்ல இலாப இறுதிநிலை வருமான உற்பத்தி நிலை

இப்போது MR (இ.வ.) = MC (இ.செ.) என்ற நல்ல இலாப நிலையை இதிற் சேர்க்கிறேம். இறுதிநிலை வருமான உற்பத்தி என்பது இறுதிநிலைப் பிண்டப்பொருள் × இறுதிநிலைவருமானம் என்ற வரைவிலக்கணத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறேம். இப்போது இறுதிச் சமநிலையியல்பை அடைவதற்கு 3 இன்குறைந்த விலைச் சம்பந்தத்தையும் நல்ல இலாபத் தொடர்பையும் ஒன்று சேர்க்கிறேம். அப்போது தொழிலாளர் இறுதிநிலை வருமானப் பொருள் = தொழிலாளர் விலை மூலதன இறுதிநிலைவருமானப் பொருள் = மூலதன விலை என எத்தனை சாதனங்களுக்கும் சொல்லிக் கொள்ளலாம்.

பொது அறிவைக் கொண்டு நாம் அனுமானித்த உண்மையை வரைபடத்தின் மூலமும் அடைந்துவிட்டோம். அதாவது சந்தைவிலையும் இறுதிநிலை வருமான உற்பத்தியும் சமனுயிருக்கும் நிலையில் ஒரு சாதனத்தை


1. ஒவ்வொரு டொலருக்குமுரிய இறுதிநிலைப்பிண்டப்பொருளானது இறுதிநிலைச் செலவு ஒவ்வொன்றுக்கும் நிரல் நிறையாக அதாவது 1/MC க்கு என் மாயிருக்கிறது ? எனெனில் ஒவ்வொரு டொலருக்குமுரிய மேலதிக வெளியீடு, உற்பத்தியின் ஒவ்வோர் அலகுக்குமுரிய மேலதிக டொலரைத் தலைகீழாக வைத்திருக்கிறது. இதுவே MC என்பதன் தாற்பரியம்.

www.padippakam.com



நாலாவது சம உற்பத்திக்கோட்டையனுசரித்து குறைந்த செலவுக்கோட்டை யடைகிறோம் :

உற்பத்திச் செலவைக் குறைக்க உள்ளிடுகைளைப் பதிலீடு செய்தல்




படம் 5. சம உற்பத்திக்கோடு, குறைந்த மொத்தச் செலவுச் சமநிலைக்கோட்டைத் தொடும் (குறுக்கிட்டுச் செல்லாத) இடமே குறைந்த விலை வாய்ப்புத்தானம். இந்தத் தொடுநிலை எதைக் குறிக்கிறதென்றால் சாதனவிலைகளும் இறுதிநிலைப் பிண்டப் பொருள்களும் (அல்லது பதிலீட்டு விகிதங் கள்) விகிதசமமானவையென்பதையே.

மேலும் பயன்படுத்த மாட்டோம் என்பதாகும். ஒரு கம்பெனியின் உற்பத்திச் சாதனத்துக்குரிய தேவைக்கோட்டில் (பின்னால்) உள்ள தாற்பரியம் இதுவே.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்.**

1. உற்பத்தித் தொழிற்பாடென்றாலென்ன? விளக்குக? குறைந்துசெல் விளைவு விதியை இஃதக்கொண்டு விளக்குக. உற்பத்திச் சாதனங்கள் மூன்று இருந்தால் உற்பத்தித் தொழிற்பாடு என்ன? அதை எப்படி எழுதலாம்?

2. மூலதன விலை 2 டொலரிலிருந்து 3 டொலராக உயர்ந்தால் 4 ஆம் படத்தின் சமாந்தரக்கோடுகளுக்கு என்ன ஆகும்? ஏன் அவை மட்டமாயிருக்கும்? ஏன் இன்னும் சமாந்தரமாயிருக்கின்றன? 5 ஆம் படத்திலுள்ள புதிய குறைந்த செலவுச சமநிலைக்கு என்ன ஆகும்? இது பொது அறிவுக்குப் பொருந்துமா?

3. சம-உற்பத்திக் கோட்டுச் சரிவுக்கும், இறுதி நிலைப்பிண்ட உற்பத்திகளுக்குமுள்ள தொடர்பென்ன? 5 ஆம் படத்திலுள்ள தொடு தன்மை நிலையும் குறைந்த விலை இறுதிநிலை நிபந்தனைகளும் ஒன்றே என்பதைக் காட்டுக. சம உற்பத்திச் சமநிலைக்கோடு மேலிருந்து குழிவாயிராமல் குவிவாயிருந்தால், தொடுநிலை எத்தகைய இடர்ப்பாடுகளை உண்டாக்கும்? (குறிப்பு ; செலவுகள் அதிக மாயிருக்குமா, உச்சமாயிருக்குமா? நீர் இதைப் பற்றி என்ன செய்வீர்?)

படிப்பகம்

# இருபத்தேழாம் அத்தியாயம்

## உற்பத்திச் சாதனங்களுக்கு விலையிடல் : நிலத்தின் வாடகையும் வேறு வளங்களின் வாடகையும்

பன்றிவிலை பெரிது அதனால்
சோளம் விலையும் பெரிது.
நிலத்தின் விலையும் பெரிது.
நிலத்தின் விலையேன் பெரிது ?
சோளம் விலை பெரிததனால்
சோளம் விலையேன் பெரிது
பன்றி விலை பெரிததனால்.

எச். ஜே. டவென்போட்.

உற்பத்தி உள்ளீடுகளுக்கு அவசியமான தருவிக்கப்பட்ட தேவைகள், கொடுக்கப்பட்ட சந்தைச் சாதன விலைகளால் ஒவ்வொரு கம்பெனிக்கும் எவ்வாறு நிச்சயிக்கப்படுகின்றனவென்பதை முந்திய அத்தியாயத்திலிருந்து அறிந்தோம். இந்த அத்தியாயத்திலே ஆராயப்படும் உற்பத்திச் சாதனத்துக்குச் சந்தையிலேயுள்ள ஒன்று சேர்ந்ததேவை எல்லாக் கம்பெனிகளதும் தொழிற்சாலைகளதும் தேவைகளைக் கூட்டுவதால் உண்டாகிறதென்பதைக் காட்டுவோம். அத்தகைய தேவை அட்டவணையும், சாதனத்துக்குரிய சப்பிளை அட்டவணையுமே அச்சாதனத்தின் சந்தை விலையை நிர்ணயிக்கும். பலவகைச் சாதனங்களை உரிமையாயுடையவர்களின் வருமானப் பங்கீட்டைச் சந்தைப் பொருளாதாரமே இவ்வாறு நிச்சயிக்கும். இப்பொதுக் கொள்கைகளை விளக்க நிலவாடகை, ஏனை வளங்களின் வாடகை என்பன துணைபுரிகின்றன. மேல்வரும் அத்தியாயங்கள் முக்கியமான வேறுபல உதாரணங்களையும் எடுத்துக்காட்டும்.

### வெளியீட்டுக்கும் ஒவ்வோர் உள்ளீட்டுக்குமுள்ள மொத்த ஒன்றுசேர்ந்த சந்தைத்தேவைக்கோடு.

பண்பட்ட வயல்நிலம் போன்ற ஓர் உள்ளீட்டுக்கான தேவை நுகர்வோரின் சோளத்தேவைக் கோட்டிலிருந்து எவ்வாறு பெறப்படுகிறதென்பதைப் படம் 1 காட்டும்.

உரம், தொழிலாளர், எந்திர தளவாடம் என்பவற்றின் விலைகள் மாறாதிருக்கின்றன என்று வைத்துக் கொள்கிறோம். சந்தையிலே நிலவும் ஒவ்வொரு நிலவாடகை விலையிலும், பலவகைச் சாதனங்களைக் குறைந்த செலவுச் சேர்க்கையில் எவ்வாறு சேர்க்கவேண்டுமென்பதையும் சந்தையிலே போடுவதற்கு நல்ல இலாபந் தரக்கூடிய உற்பத்தியை எந்த அளவிற் செய்ய வேண்டுமென்பதையும் எந்தச் சிறிய விவசாயியும் நிச்சயித்துக்


www.padippakam.com



கொள்ளவேண்டும். எனவே ஒவ்வொரு விவசாயியும் நிலத்தின் இறுதி நிலை விளைவு, சந்தை வாடகைக்குச் சமனாயிருக்கும் அளவுக்கு அந்நிலத்தை வாடகைக்குப் பெறுவான்.

**சாதனத் தேவை அச்சாதனங்கள் உற்பத்தி செய்யும் பண்டத் தேவையைப் பொறுத்தது.**

பண்டத்தின் தேவையும் வழிவந்த் சாதனத் தேவையும்




படம் 1. விளைநிலம் DD (தேதே) இக்குரிய தருவிக்கப்பட்ட தேவை பண்டமான சோளம் *dd* இன் தேவையிலிருந்து பிறக்கிறது. *dd* ஐ மேலே உயர்த்தினால் DD (தேதே) மேலே உயரும். (*dd* ஐ நெகிழ்ச்சியற்றதாகவும் குத்துநிலையானதாகவுஞ் செய்தால் DD (தேதே) இக்கும் அதே நிகழும்.)

நாம் ஆராய்வது போட்டி விவசாயம். இதிலே தனி விவசாயி சோளத்தின் சந்தைவிலையைப் பாதிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவனல்லன். நிறை போட்டியுள்ள இம்மாதிரித் தொழிலில் சந்தை குழம்பிவிடுமென்று எவரும் கவலை கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில் முந்திய சோள அலகெல்லாம் விற்பனையாகியிருக்கும். எனவே இறுதி நிலை வருமானமும் விலையும் சமனாயிருக்கும். அப்போது இறுதிநிலை வருமான உற்பத்தி = இறுதிநிலைப் பிண்டப் பொருள் × சோளத்தின் விலையாயிருக்கும். இத்தகைய நிறைபோட்டியிலிருக்கும் பண்டச்சந்தைக்குப் பொருளியலாளர், இறுதிநிலை வருமான உற்பத்தியென்ற பெயரை விட்டு விட்டு "இறுதிநிலை உற்பத்தியின் பெறுமதி" என்ற பெயரை வழங்குவர்.

ஒரு சாதனத்துக்குரிய தேவைக்கும், அதற்குக் காரணமாயுள்ள பண்டத்தின் தேவைக்கோட்டுக்குமுள்ள சில சம்பந்தங்களைக் குறிப்பிடலாம். (இந்த உதாரணங்களை இலேசாக வாசித்து விட்டு மேலே செல்லலாம்).

பண்டத்துக்குரிய தேவை அதிகம் நெகிழ்ச்சியற்றதாயிருந்தால், தொழிலாளருக்குரிய தருவிக்கப்பட்ட தேவையும் நெகிழ்ச்சியற்றதாயிருக்கு மென்பதை ஒவ்வொரு தொழிற் சங்கமும் நன்கு அறியும். பதிற் பொருள்கள் இலேசாகக் கிடைக்கக்கூடிய ஒரு பொருளை அல்லது அப்பொருள் இல்லாமலே சரிக்கட்டப்படக்கூடியதாயுள்ள ஒரு பொருளை உற்பத்தி

படிப்பகம்

www.padippakam.com



செய்வோரின் சம்பளங்களை உயர்த்துவதால் அந்த உற்பத்தியிலீடுபட்டிருப் போரின் தொழிலுக்குப் பங்கமுண்டாவது நிச்சயம்.

தொழிற் சங்கத்தலைவர் தமது அனுபவத்தின் மூலம் மற்றுமொரு விடயத்தை நன்கு அறிந்திருப்பர். ஒரு பண்டத்தின் மொத்த உற்பத்திச் செலவில் மிக அற்பமான ஒரு வீதமே சாதனத்தின் செலவாயிருந்தால், அச்சாதனத்துக்கான தேவை அதிக நெகிழ்ச்சியற்றதாயிருக்கும். சிறிய கைத் தொழிற் சங்கத்தின் தலைவர்கள் "முக்கியமற்றவர்களாயிருப்பது முக்கியம்" என்று இந்தக் கருத்தை வருணித்தனர்.

மற்றொரு சம்பந்தம் பின்வருமாறு : உற்பத்திச் சாதனமொன்றுக்குப் பல தொழில் நுட்பப் பதிலீடுகளிருந்தால் அதனுடைய தருவிக்கப்படும் தேவைக்கோடு நெகிழ்ச்சியுடைதாயிருக்கும். அதனுடைய விலையை உயர்த்தினால் கம்பெனிகள் வேறு சாதனங்களைப் பதிலீடு செய்ய முந்தும். நீங்கள் அவற்றுக்கு விற்கக்கூடிய சாதனங்களிற் பெரிதளவைக் குறைத்துக் கொள்ளும்.

போட்டிச் சாதனங்களின் சொந்தக்காரர் நீர் செய்யும் விலை குறைத்தலுக்கு ஏற்றவாறு விலை வெட்டைச் செய்தால் உமது சாதனத்துக்கான தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும். இது நாலாம் சம்பந்தம்.

பண்டங்களுக்கும் தருவிக்கப்பட்ட சாதனத்தேவைகளுக்குமுள்ள தொடர்புகள் சிக்கலானவை. ஆனபடியால் அவை இலேசிலே மனத்தில் தங்மாட்டா. ஆனால் அவைபற்றிச் சிந்திப்பதற்குப் போதிய அவகாசமிருந்தால் அவை சாதாரணப் பொது அறிவுக்கு உட்படும் விடயமென்பது தெளிவாகும்.

**சப்பிளை, தேவை என்பவற்றால் சாதன விலையை நிச்சயித்தல்.**

இதுவரை ஒரு சாதனத்தின் தேவைக்கோட்டைக் கொண்டே ஆராய்ந்தோம். அதனுடைய சந்தைவிலையை தேவையாளருக்குக் கொடுத்த விலையாகவே கொண்டோம். ஒவ்வொரு சிறிய கம்பெனியும் கொடுக்கும் சாதன விலை எல்லாக் கம்பெனிகளாலுமே நிச்சயிக்கப்படுகிறது. சாதனம் பற்றி எல்லாவற்றுக்குமிருக்கும் மொத்தத் தேவைக் கோடு அதே சாதனத்துக்குரிய மொத்த சப்பிளைக்கோட்டுடன் எவ்வாறு செயற்பட்டுச் சந்தை விலையை நிச்சயிக்கிறதென்பதை இனி ஆராய்வோம்.

சோளம் விளைநிலமான DD (தேதே) க்குரிய மொத்தத் தேவைக்கோடு படம் 2 இல் காணப்படுகிறது. இஃது எல்லாக் கம்பெனிகளுடையவும் தேவைகளைக் கூட்டியதொகையாகும்.


நிலத்தைப் பொறுத்த வரையில் அதிக விலை கிடைத்தால் அதைப் பெருக்கவோ, குறைந்த விலை கொடுத்தால் சுருக்கவோ முடியாது. ஏனெனில் அஃது இயற்கையால் மாறாது அமைக்கப்பட்டது (ஆனால் இது முற்றும் உண்மையன்று. சேற்று நிலத்தை நல்லநிலமாக மாற்றலாம். நல்ல நிலத்தை அதிக பயிர்களை உண்டாக்கிச் சாரமற்றதாக்கலாம்). இருந்தும் நிலத்தை மாற்ற முடியாது ; எனவே நிலத்தின் சப்பிளை நெகிழ்ச்சியற்

www.padippakam.com



றது. இந்தச் சாதனத்தின் விலையை அல்லது விளைவையே சென்ற நூற்றுண்டின் பழம்பொருளியலார் "வாடகை" என்றனர். சாதாரணமாக வாடகை யென்பது, வீடு, மோட்டார் முதலிய பொருள்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு கால எல்லைக்குக் கொடுக்கும் பணமாகும்.

**நிலையான நிலம் தேவைப்படுவோர் கேட்கும் விலையிற் செயற்பட வேண்டும் :**




**படம் 2.** சப்பிளையின் நிறைவான நெகிழ்ச்சியின்மை, "தூய பொருளாதார வாடகை" எனவழங்கப் படுமொன்றைச் சிறப்பாகக் குறிக்கும். தேவை வளைகோட்டை SS (சச) வளை கோடு சந்திக்கும்போது வாடகை நிச்சயிக்கப்படும். (நிலம் தவிர, எண்ணெய், சுரங்கச் சொத்துக்கள் என்பனபற்றியும் வாடகை விடயம் கவனிக்கப்படலாம்.)

படம் 2 இலே நிலத்துக்குரிய சப்பிளைக்கோடான SS (சச) பூரணமாக நெகிழ்ச்சியற்றதாயிருக்கிறது. ஏனெனில் அதன் சப்பிளையை மாற்றமுடியாது. தேவைக்கோடும் சப்பிளைக்கோடும் E என்ற தானத்திலே ஒன்றையொன்று வெட்டுகின்றன. சாதனவிலையை நோக்கித்தான் நிலவாடகை செல்லும். ஏன் ? வாடகையானது சமநிலை விலைக்கு மேலாக உயருமானால், எல்லாக் கம்பெனிகளும் கோரும் நிலத்தொகை, சப்பிளை செய்யப்படக்கூடியதாயிருக்கும் தொகையிலும் குறைவாகவேயிருக்கும். சில நிலச்சொந்தக்காரர் தமது நிலத்தை வாடகைக்கு விட முடியாதிருப்பதால் வாடகையைக் குறைப்பர். இவ்வாறே காரணம் கூறிக்கொண்டால், நிலவாடகையானது சமநிலை வெட்டுக்குக் கீழே நீண்டகாலத்திற்கு இருக்கமாட்டாது. அப்படிக் கீழேயிருக்குமானால் திருப்தி கொள்ளாத கம்பெனிகள், வாடகையை உயர்த்திச் சமநிலைத்தானத்துக்குக் கொண்டுவந்து விடும். மொத்தத் தேவை மொத்தச் சப்பிளைக்குச் சமமாக வரக்கூடிய போட்டி விலையிலே தான் சமநிலை கைகூடும். இந்த வகையிலேதான் சப்பிளையும் தேவையும் சாதன விலையை நிர்ணயிக்கின்றன.

28—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



நிலச் சொந்தக்காரர் இந்த வாடகையைப் பெறுவதற்கு நற்குண முடையவனுயிருக்கவேண்டுமென்ற நியதியில்லை. நிலத்தின் தன்மையைக் கொண்டு வாடகை நிர்ணயிக்கப்படுகிறதேயல்லாமல் அதன் சொந்தக்காரருடைய குணத்தைக் கொண்டன்று.

நிலம் பண்பட்டதாயிருந்தால் கட்டாயம் நல்ல வாடகை கிடைக்குமென்று நிச்சயமாகக் கூறமுடியாது. உதாரணமாக மக்கள் சோளத்துக்குப் பதிலாக வேறு பண்டங்களை விரும்பினுல் சோளத்தின் விலை இறங்கிவிடும். அப்போது நிலத்தின் தேவை இடப்பக்கமாக வீழும். நிலச்சொந்தக்காரர் பெறும் வாடகைக்கு என்ன ஆகும் ? சில காலத்தின் பின்னர் நில வாடகை புதியதொரு சமநிலையை அடையும். இது நிலத்தின் பண்போ அதன் சொந்தக்காரருடைய பண்போ குறைந்ததனுல் ஏற்படுவதன்று. சாதனத் தேவை, சப்பிளை என்பன சந்திக்கும் தானம் மாறுகிறதனுலேயே ஏற்படுவதாகும்.

நிலம் போன்ற உற்பத்திச் சாதனம் "தனிப்பொருளாதார வாடகை" யைப் பெறுகிறது. அதற்குப் பல காரணங்களுண்டு. (1) அதனுடைய மொத்தச் சப்பிளை நெகிழ்ச்சியற்றதாயிருக்கிறது. (2) தற்போதைக்கு நாம் அந்த நிலத்திலே கரும்போ, வேறு பயிரோ செய்கைபண்ண முடியாதெனக் கொள்வோம். 1800 ஆம் ஆண்டையடுத்த காலத்தில், அடம் ஸ்மிதின் சீடரான டேவிட் ரிக்காடோ அத்தகையதொரு நெகிழ்ச்சியற்ற சாதனத்தின் சப்பிளை பற்றிப் பின்வருமாறு கூறினுர் ; – சோளவிளைநிலத்தின் விலை அதிகரித்ததனுலேதான் சோளத்துக்கு விலை கூடியிருக்கிறதெனக் கூறுவது பொருந்தாது. எதிர்க்கூற்றே பொருத்தமுடையது. சோளத்தின் விலை அதிகரித்ததாலேதான் சோள விளைநிலத்தின் விலை கூடியிருக்கிறது : மொத்தச் சப்பிளை நெகிழ்ச்சியற்றிருப்பதால் போட்டியில் என்ன விலை அதற்குக் கொடுக்கப்படுகிறதோ அதற்கேற்ற மாதிரி நிலத்தில் விளைவு செய்யப்படும். எனவே நிலத்தின் பெறுமதி விலைபொருளின் பெறுமதி மூலமே நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்முறையாகவன்று.[1]

## வாடகையும் செலவுகளும் : வெளிப்படைப்பயனும் மறைபயனும்.

உற்பத்திச் செலவிலே, வாடைக சேரமாட்டாதெனச் சில பொருளியலறிஞர் கூறத் தலைப்பட்டனர். கடைசிப்பந்தியின்படி இந்தக் கூற்றிலே ஓரளவு உண்மையுண்டெனக் காணலாம். ஆனுல் இ∴து ஆபத்தான கூற்று. சோளச் சாகுபடியில் நீர் இறங்கவிரும்பினுல் மற்ற முதலாளிகளைப்

1. பொருளாதார வாடகை என நிலச்சாதனத்தின் விளைவை மாத்திரம் கூறிக்கொள்ள முடியாது. சம்பளக் கொடுப்பனவின் பெரும்பகுதி "தனிவாடகை" யாயிருக்கும். ஓர் உதாரணம் தேவையானுல் 28 ஆம் அத்தியாயத்தைப் பார்க்க. குறுந்தவணையிலே இயந்திரம் அல்லது இயந்திரத் தளவாடம் மாருத நிலையிலிருக்கலாம் ; நீர் மின்சாரயந்திரத் தளவாடம் அமைக்க அதிக நாட்செல்லும். அது தேய்மானமடையவும் நாட்செல்லும். தற்காலிகமாக நிலையாயுள்ள சப்பிளையிலிருக்கும் ஒரு சாதனத்தைப் பயன்படுத்துதல் போலி வாடகை எனப்படும். ஏனெனில் நெடுந்தவணையில் அதன் சப்பிளை நிலையாயிருக்காது.

www.padippakam.com



போலவே நிலமுதலாளிக்கும் வாடகை கொடுக்கவேண்டுமென்பதை உணர்வீர். வாடகை கொடுக்கமுடியாவிட்டால் நீர் சோளம் சாகுபடி செய்யும் தொழிலை நிறுத்த வேண்டும். உமது சொந்த நிலத்தில் சாகுபடி செய்தாலும், உமது உற்பத்திச் செலவிலே வாடகையைச் சேர்த்துக்கொள்வீர். உமது மற்றச் செலவுகளையெல்லாம் கொடுத்து ஒழித்தபின்னர் உமக்கும் சம்பளம் கொடுப்பீர். இது, நீர் வேறு இடங்களிற் பெறக்கூடிய சம்பளமாயிருக்கும். எல்லாம் கொடுத்த பின்னர் உமது நிலத்துக்குரிய சந்தை வாடகைக்குச் சமமான பணமாவது மிஞ்சவேண்டும். அப்படி இல்லாவிடில் உமது நிலத்தைப் பகிரங்கச் சந்தையிலே வாடகைக்கு விட்டுவிட்டு, நீர் வேறுயாருக்காவது வேலைசெய்வது நல்லதென உமக்குத் தோன்றலாம்.

ஒருவன் தனக்குக் கொடுத்துக்கொள்ளும் வாடகையைப் பொருளியலறிஞர் சிலசமயம் "மறைமுக வாடகை" எனக் கூறுவர். மற்றச் செலவுகளைப் போலவே மறைமுக வாடகையும் நெடுந்தவணைப் போட்டிச் செலவுடன் சேர்ந்தது. மறைமுகச் சம்பளம், மறைமுக வட்டி என்பனவும் அப்படிப் பட்டனவே. இதுபற்றி வாசகர் 22 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கலாம்.

**வாடகையும் செலவுகளும் : கொள்கைகளின் சார்பு உண்மை.**

சமூகத்தின் உற்பத்திச் செலவிலே வாடகை சேர்க்கப்படமாட்டாதெனச் சில பொருளியலறிஞர் வாதிக்கும்போது அவர்களுடைய நோக்கமென்ன? அவர்கள் சொல்லுவது இது : ஒரு சமூகத்துக்குக் குறைந்தவிலையிலேனும் கொடுக்கப்படும் நெகிழ்ச்சியற்ற சாதனத்தால் வரும் வருமானமே வாடகையானபடியால், அது நிகழும் முறை பின்வருமாறு : "நிலவாடகையை நிச்சயிப்பவை பண்டங்களின் விலையே. நிலவாடகை பண்டங்களின் விலையை நிச்சயிப்பதில்லை".

நாம் நமது பழைய சத்துருவான "சேர்க்கைப் போலியைத்" தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு கம்பெனிக்கும் உற்பத்திச் செலவாகத் தோன்றுவது, தொழில் முழுவதற்கும் தருவிக்கப்பட்ட விலை தீர்மானிக்கப் பட்ட செலவாகவிருக்குமன்றி, விலை தீர்மானிக்கும் செலவாயிராது. சோளம் பயிர் செய்தல், பல தொழில்களில் ஒன்றுயிருக்கிறதெனவும், அத்தொழில்கள் அதே நிலத்தைப் பயன்படுத்துகின்றனவெனவும் கொள்வோம். அப்போது ஒவ்வொரு சிறிய தொழிலுக்கும், சப்பிளைக் கோடு முற்றுகக் கிடை நிலையாகவோ, நெகிழ்ச்சியுடையதாகவோ காணப்படலாம். இஃது ஏனென்றுல் ஒரு தொழிலானது மொத்தச் சந்தையில் மிகச் சிறியதொரு பகுதியாய் நிலவாடகையைப் பாதிக்க முடியாததாயிருப்பதனுலெனலாம்.

அந்தத் தொழில் சார்பான நோக்கே உமக்குண்டென வைத்துக் கொள்வோம். அப்போது தானியத்தின் விலையை நிலந்தான் நிச்சயிக்கிறதெனக் கூறமுடியுமா? அல்லது ரை தானியத்தின் விலைதான் இதனுடைய விலையை நிச்சயிப்பதாகத் தோன்றுமா? நிலந்தான் தானியத்தின் விலையை

www.padippakam.com



நிச்சயிக்கிறதென இந்தச் சந்தர்ப்பத்திலே கூறலாம். சிறிய தொழில், சாதனமொன்றின் மிகக் குறைவான தொகையைப் பயன் படுத்துகிறது. அப்போது சாதனவிலை பண்டத்தின் விலையை நிச்சயிப் பதில் முக்கிய பங்கெடுக்கும். எதிர்முறையாக இருக்கமாட்டாது. அதே சமயம் பொருளாதாரத்தை முழுமையாக, நோக்குமிடத்து, மொத்தத் தொகை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும் ஒரு சாதனத்தின் வாடகை, பலவகை உற்பத்திப் பொருள்களின் மதிப்புக்குக் காரணமாயில்லாமல் காரியமா யிருக்குமெனக் கூறலாம். சமூகத்துக்கு நெகிழ்ச்சியற்ற முறையில் சப்பிளையுடையதாக ஒரு சாதனமிருந்தாலும், இதனுடைய சந்தர்ப்பச் செலவு மற்றத் தொழில்களுக்கோ கம்பெனிகளுக்கோ பயனுடையதாயிருத்தலை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். (இந்த அத்தியாயத்தின் ஆரம்பத் திலே காட்டிய டவென்போட் கவிதை இவற்றை யெல்லாம் குறிப்பாக உணர்த்துகிறது.)

வாடகை, விலையை நிச்சயிக்கும் செலவா, இல்லையா என்பது நாம் கொண்ட அபிப்பிராயத்தைப் பொறுத்ததாகும்.

**ஹென்றி ஜோர்ஜின் தனிவரி இயக்கம் : நில வரி ''மேல்மிச்சம்''.**

பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியிலே அமெரிக்காவில் மேற்கு எல்லையொன்று இருந்து வந்தது. ஐரோப்பாவிலிருந்து மேன்மேலும் குடிகள் வந்து குடியேறியதால் ஒவ்வோர் ஏக்கர் நிலத்தையும் செய்கை பண்ண மேலும் மேலும் தொழிலாளர் கிடைத்து வந்தனர். ஒரு வகையில் நிலமானது அதிக விளைவுடையதாயிற்று. அதனுடைய போட்டி வாடகை மதிப்பு உயர்ந்தது. நிலத்தில் முதலீடு செய்யும் அதிட்டமுள்ளவர்களுக்கு இதனுல் நல்ல இலாபமுண்டாயிற்று.

விவசாயத்தில் மாத்திரமன்று. மத்திய மேற்கில் இன்றும் ஜீவந் தராயிருப்போர் சிலர் பட்டினங்கள் எப்போது ஆரம்பித்தன என்பதை ஞாபகப்படுத்தக்கூடியவராயிருக்கின்றனர். 80 வருடத்துக்கு முன்னர் ஸ்டேட் அண்ட் மடிசன் என்ற இடத்திலுள்ள மூலைப்பிரதேசம் பிற்காலத் திலே பெரிய நகரமாகுமென்று அவர்கள் தீர்க்க தரிசனமுடையவராயிருந் திருந்தால், அவர்கள் இன்று பெரிய தனவந்தராயிருப்பர்.

வளமானவிளைநிலங்கள் நல்ல வாடகை பெறுவதுபோலவே நல்ல கேந் திரத் தானங்களிலே அமைந்த நிலங்களும் நல்ல வாடகையைப் பெறும். நல்ல அதிட்டமுள்ள இந்த நிலச்சொந்தக்காரருக்கு இம்மாதிரி ''உழைப் பின்றிக் கிடைக்கும் ஊதியம்'' நியாயமானதா வெனப் பலர் அதிசயப் பட்டனர். பொருளியலைப் பற்றி அதிக மதிப்புவைத்திருந்த ஹென்றி ஜோர்ஜ் என்பவர், இக்கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிய தனிவரி இயக்கம் என ஒன்றை உருவாக்கினுர். இந்த இயக்கத்தை 50 ஆண்டுக்கு முன்னர் பலர் ஆதரித்தனர். இன்றும் இதை ஆதரிப்பவர் சிலர் உளர். 1886 இல் ஜோர்ஜ் நியூயோர்க்கின் நகராண்மைத்தலைவரகத் தெரிவுசெய்யப்

www.padippakam.com



பட்டார். இன்று தனி வரியை ஆதரிக்கும் ஒருவர் இவ்வாறு தெரிவு செய்யப்படுவது துர்லபம். ஹென்றி ஜோர்ஜ் முன்னேற்றமும் வறுமையும் என்ற ஒரு நூலை எழுதினர். இஃது இலட்சக்கணக்கிலே விலைப்பட்டது.

இத்தகைய அரசியல் இயக்கத்தின் நன்மை தீமைகளைப் பற்றி ஆராய்வதற்கு இஃது இடமன்று. ஆனால் இக்கொள்கையின் முக்கியமான தோர் அமிசத்தை—அதாவது நிலவரியானது மேல்மிச்சமான நிலையிலிருப்பதால் அதன்மீது கடும்வரி விதித்தால் அதனால் உற்பத்தி ஆர்வம் பங்கப்பட மாட்டாது என்பதை—பகிர்தல், தீர்வையிடல் என்பதன் ஒரு கொள்கையை விளக்க இங்கே ஆராயலாம்.

படம் 3 இல் E என்ற தானத்திலேயுள்ளதுபோலச் சப்பிளையும் தேவையும் ஒரு சமநிலையையுண்டாக்குகின்றன என வைத்துக்கொள்வோம். எல்லா நில வரிகளிலும் 50 வீத வரியை விதித்தால் என்ன நடக்கும்? நாம் கட்டிடங்கள் மீதோ சீர்திருத்த முயற்சிகள்மீதோ வரிவிதிக்கவில்லை. அப்படிச் செய்தால் கட்டிட வேலைகளை அது பாதிக்கும். இயற்கையிலேயே மாறுமல் இருக்கும் விவசாய நிலத்தினதும் பட்டினச் சார்பான நிலத்தினதும் தானங்களின் வருவாய்மீதே வரி விதிக்கிறோம். இத்தானங்களைக் கண்டு பிடித்துவிடலாமென்பது கொள்ளப்படுகிறது.

நிலத்தேவைக் கோட்டிலே மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஒரே அளவு நிலத்துக்கு ஒரே அளவு பணத்தை முன்போலக் கம்பெனிகள் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றன. நிலச்சப்பிளை மாறுதிருக்கையில் அவற்றுக்கு வழங்கும் சந்தைவிலை இப்பொழுதும் பழைய குறுக்கு வெட்டிலே E இல் தான் இருக்கும். ஏன்? சப்பிளையில் மாற்றமில்லை. தேவையிலும் மாற்றமுண்டாகவில்லை. முன்னிருந்த விலைக்கு உயர்வான விலையில் சில நிலங்களுக்குக் கிராக்கியிருக்கமாட்டாது. எனவே போட்டி வாடகைகளை நிலத்தைப் பயன்படுத்துவோர் விடயத்தில் நிரந்தரமாக உயர்த்த முடியாது.

விவசாயி கொடுப்பதும், நிலச்சொந்தக்காரன் வாங்குவதும் இரு வேறு விடயங்கள்.


நிலச்சொந்தாக்காரரைப் பொறுத்தவரையில் அரசாங்கம் 50 வீத வெட்டை வசூல் செய்ய இறங்கியதும், DD (தேதே) யிலிருந்து D'D' (தே'தே') க்கு தேறிய தேவை இறங்கிய பொழுது சொந்தக்காரருக்கு எப்படியிருக்குமோ அத்தகைய விளைவையே உண்டாக்கும். நிலச்சொந்தக்காரரின் சமநிலை வருவாய் (வரிகழித்தபின்) இப்போது E' வரையே உயர்ந்துள்ளது. அதாவது E யில் அரைப்பங்கு உயர்வாயுள்ளது. வரி முழுவதும், நெகிழ்ச்சியற்ற சப்பிளையிலுள்ள சாதனச் சொந்தக்காரர்மீது சுமத்தப் பட்டுள்ளது. சொந்தக்காரர் இதை விரும்பமாட்டார். ஆனால் போட்டியிலே அவர்கள் இதைப்பற்றி ஒன்றுஞ் செய்ய முடியாத நிலையிலிருப்பர். மொத்தச் சப்பிளையை அவர்களால் மாற்றமுடியாது. பெறக்கூடியது எதுவோ அதை உத்தேசித்து நிலத்தைச் செய்கைபண்ண வேண்டும்.

www.padippakam.com



## நிலையான நிலத்துக்குள்ள வரி நிலப்பிரபுக்கள் மீது சுமத்தப்படுகிறது ; வாடகை மாத்திரம் கடைந்தெடுக்கப்படுகிறது :

நிலத்தின் வாடகைமீது 50% வரியின் விளைவு




படம் 3. நிலையான நிலத்தின்மீதுள்ள வரி நிலத்தைப் பயன்படுத்துவோர் கொடுக்கும் வாடகையை E இல் மாற்றுமல் விடுகிறது. ஆனால் நிலச்சொந்தக்காரருக்குரிய வாடகையை E′ வரை குறைக்கிறது (நிலச்சொந்தக்காரர் என்ன செய்யலாம்? குறைந்தவருவாயைப் பெற்றுக்கொண்டு பேசாமலிருக்க வேண்டியதே.)

நிலச் சொந்தக்காரருடைய வருவாயில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்வது நல்லதா இல்லையா என்பது வேறுவிடயம். மற்ற முதலீட்டுக்காரருக்கு நிலச்சொந்தக்காரர் எந்த அளவிலே வித்தியாசமானவர்கள் என வாக்காளர் கேட்கலாம். மண் எண்ணெய், நிலக் கனிப்பொருள்கள், முதலிய இயற்கைப் பொருள்களைக்கொண்டு எவரும் இலாபம் பெறவிடக் கூடாது எனப் பலர் கருதலாம். ஆனால் இவை அரசியற் பிரச்சினைகள். இவற்றை இங்கே ஆராயவேண்டியதில்லை. ஆனால் பொருத்தமான விடயம் என்னவென்றால், மொத்தச் சப்பிளை பூரணமாக நெகிழ்ச்சியற்றதாயுள்ள உற்பத்திச் சாதனம் மீது இதே போன்ற 50 வீத வரியை சுமத்தினால், அது போட்டிச் சந்தையிலேயுள்ள சாதனவிலைகளைப் பாதிக்கும் என்பதே. ஓரளவுக்கு உற்பத்திக் கோலத்தை இந்த வரி மாற்றும். பளுவிலே ஒரு பகுதியை

படிப்பகம்

www.padippakam.com



அது சாதனத்தைப் பயன்படுத்துவோர் மீதும், நுகர்வோர்மீதும் சுமத்தும் உதாரணமாக ஒரே ஏக்கர் நிலத்தின் மீது கோதுமைச் செய்கைக்கு ஒரு வரியையும் சோளச் செய்கைக்கு மற்றொரு வரியையும் விதித்தால், இது கோதுமை விலையில் மாற்றத்தையுண்டாக்கும். இது சோளத்தோடு சாத்திப்பார்க்கும் அளவுக்கு மாற்றத்தைக் காட்டும்.

## எந்த ஒரு சாதனத்துக்கும் சப்பிளேயும் தேவையும்

நில வாடகையை சப்பிளை, தேவையென்பவற்றால் போட்டி முறையில் நிச்சயித்தல் எந்த ஓர் உற்பத்திச் சாதனத்துக்கும் பொருத்தமான பொது ஆராய்ச்சிக்கு ஓர் உதாரணமாகும். போட்டிச் சந்தையிலே ஓர் எந்திரக் கலப்பையின் வார வாடகையை எவ்வாறு நிச்சயிப்பது? எல்லாக் கம்பெனிகளுக்கும் தேவைப்படும் எந்திரக்கலப்பையின் மொத்தத்தை முதலில் எடுப்போம். (இந்த தருவிக்கப்பட்ட தேவைகளின் பின்னால் இறுதிநிலை வருமானப் பொருள் சலுகைகளுமுண்டு. கடந்த அத்தியாயத்திலே இதைக் குறிப்பிட்டோம். ஆனால் இந்த ஆராய்ச்சி எமக்கு இப்போது தேவையில்லை. ஏனெனில் நாம் இந்தச் சாதனத்துக்குள்ள மொத்தச் சந்தைத் தேவையையே கவனிக்கிறோம்).

படம் 4 இலே காட்டிய DD (தேதே) கோட்டுடன் SS (ச.ச.) போன்ற சப்பிளைக் கோடு அவசியம். சப்பிளைக் கோடு நிலைக்குத்தாயிருக்க வேண்டிய அவசியமில்லை. அஃது இப்போது நெகிழ்ச்சியுடையதாய் வடகிழக்கை நோக்கி உயர்வதாயிருக்கும். அஃது எந்திரக்கலப்பை விடயத்திலே உற்பத்தியின் இறுதிநிலைச் செலவில் தங்கியிருக்கும். உற்பத்திச் சாதனம் தொழிலாளராயிருந்தால் சம்பளம் உயர உயர குறைந்த மணி நேரத்துக்கு வேலை செய்தாற் போது மென மக்கள் கருதுவர். அதனால் SS (ச.ச.) கோடு பின்னோக்கி வடமேற்காகக் குத்துநிலையிலிருந்து மாறி வளையலாம். முன்னோக்கி நிமிர்ந்து செல்ல மாட்டாது.

எனினும் சப்பிளைக்கோடானது நிலைக்குத்தாக நெகிழ்ச்சியற்றதாகவோ, நேர்க்கணியமாய் நெகிழ்ச்சியுடையதாகவோ எதிர்க்கணியமாய் நெகிழ்ச்சியுடையதாகவோ இருந்தாலும், படம் 4 இல் உள்ளது போன்ற SS (ச.ச.) கோடு இருந்தே தீரும். தேவைக்கோடும் சப்பிளைக்கோடும் ஒன்றையொன்று வெட்டும்போது இறுதியான சமநிலைச் சாதனவிலை நிர்ணயிக்கப்படும். சாதனத்தின் தேவைக்கோடு மேலே உயர்ந்தால் அதன் சந்தை விலை உயரும். ஆனால் மறுபுறம் எந்த ஒரு சாதனத்தின் சப்பிளையும் அதிகரித்து அதன் கோடு வலமாக நகர்ந்தால், சாதனவிலை வீழ்ச்சியடையும்.

போட்டியுள்ள சந்தைப் பொருளாதாரத்திலே சாதனவிலைகளும், வருமானப் பங்கீடும் கண்டபடி நிச்சயஞ் செய்யப்படுவதில்லை. சப்பிளை, தேவை சம்பந்தமான விசேட சக்திகளுண்டு. அவை வாங்கும் சக்தியுள்ள மக்களால் விரும்பப்படும் பண்டங்களை உற்பத்தி செய்வதில் மிகப் பயன்படும் அருந்தலான சாதனங்களுக்கு உயர்ந்த வருவாயை உண்டாக்கும்வகையில்

www.padippakam.com




தொழிற்படும். ஒரு சாதனத்தின் தொகை அதிகரித்து அஃது அதிகம் கிடைக்கக்கூடியதாயிருந்தால், அல்லது அதற்குப் பதிலாக வேறு சாதனங்கள் கிடைத்தால் அல்லது குறித்த ஒரு சாதனத்தைக் கொண்டு நன்ருக உற்பத்தி செய்யக் கூடிய பண்டத்தை மக்கள் விரும்பாது விட்டால் விலையானது வீழ்ச்சியடையும். போட்டிதான் கொடுக்கிறது. போட்டிதான் எடுக்கிறது.

**சாதனத்துக்கு விலையிடலும், திறமையும்**

யாருக்கு உற்பத்தி என்ற சமூகப் பிரச்சினையைப் போட்டி வடிவிலுள்ள சப்பிளையும் தேவையும் நிச்சயம் செய்கின்றன. இந்தப் பகிர்வுப் பிரச்சினைக்குக் கொடுக்கப்படும் விடையை நாம் விரும்பினுலென்ன விரும்பாவிட்டாலென்ன —வாடகை விடயத்திலே ஹென்றி ஜோர்ஜ் விரும்பவில்லை—அது சமூகத்திற்காக எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திறமையான வழியை வகுக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

**சாதனச் சப்பிளையும் தருவிக்கப்பட்ட தேவையுமான இரண்டுஞ் சேர்ந்து வருமானப் பகிர்வை நிச்சயிக்கின்றன :**

**உற்பத்திச் சாதனங்களுக்குப் போட்டிமுறையில் விலை குறித்தல்**




படம் 4. தேசீய வருமானத்திலே நிலத்தின் பங்கு, அதன் வாடகை உயர்ந்தால், உயரும். போட்டிச் சந்தையிலே நுண் தொழிற்பயிற்சியுடைய தொழிலாளரின் பங்கும் அப்பயிற்சியில்லாத் தொழிலாளரின் பங்கும் சாதனசப்பிளை தேவை என்பவை தம்முட் செயற்படுவதால் நிச்சயிக்கப்படுகின்றன. எந்தச் சாதனத்திற்கும் இவ்விதி பொருந்தும்.

இவ்வாறு சந்தைகளிலே பண்டங்களுக்கும், சாதனங்களுக்கும் தேவையும் சப்பிளையுமிருப்பதால், நிலம் அதிகமும் தொழிலாளர் குறைவாகவுமுள்ள அமெரிக்காவிலே பரந்த விவசாயம் நடைபெறுகிறது. நிலத்தோடு சார்த்திப் பார்க்கும் போது அதிக மக்கள் வசிக்கும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் செறிவான விவசாயம் அதிகமாக நடைபெறுகிறது. இஃது ஏன் ? அரசாங்கம் திட்டமிட்டபடியினுலா ? இல்லை. சந்தை விலை குறிப்பிடுதலே திறமையான " எவ்வாறு உற்பத்தி " என்பதை உண்டாக்குகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இங்கே நிலத்தை மலிவாக வெந்நீசில் போடவேண்டும். தொழிலாளருக்கு அதிக கிராக்கி உண்டு. எனவே ஒவ்வொரு விவசாயியும் தான் முறிவடையாமலிருப்பதற்காகத் தொழிலாளிக்குப் பதிலாக நிலத்தைச் சேர்த்துச் கொள்ளுகிருன். இது அவனுடைய குறைந்த செலவுச் சாதனச் சேர்க்கை. வெளிநாடுகளிலே மலிவான தொழிலாளர் கிடைக்கின்றனர். அதனுல் நிலத்துக்குப் பதிலீடு செய்யப்படுகிறது : (இங்கே தொழிலாளர் அருந்தலாயிருக்கிறகடியால், அதிக கவனஞ் செலுத்தி வளர்க்க வேண்டிய காய்கறிகளுக்கு விலை அதிகம். பெருவாரியாகச் செய்யக்கூடியவற்றுக்கு விலை குறைவு. இதனுல் பண்டங்களின் விலை ஏற மலிவான பண்டங்களைப் பதிலாகப் பயன்படுத்துகிரேும். வெளிநாடுகளிலே இதற்கு எதிர்மாருக நடக்கிறது. எனவே விலையிடும் திட்டம் நல்ல பண்டப் பதிலீட்டையும் நல்ல சாதனப்பதிலீட்டையுமே குறிக்கும்.)

வாடகை விதிப்பதனுல் ஒரு கடமை நிறைவேற்றப்படுகிறதென்பதை இப்போதாவது உணர்கிறீர்களா ? அதன் ஒரு பகுதியைப் பின்னர் வரி மூலம் எடுத்தபோதிலும் இது நடைபெறுகிறது. உலகிலுள்ள சில இன்னல்கள், சரியான வாடகையை விதிப்பதற்கு வழியில்லாதிருப்பதாலேயே உண்டாகின்றனவென்பதை நீர் அறிவீர். அதற்குச் சில உதாரணங்கள் :

1. கடல் எல்லார்க்கும் பொதுவானது. அதனைப் பயன்படுத்துவதற்கு வாடகையில்லை. எல்லாமீனும் அற்றுப் போகும்வரை எல்லாரும் அதில் மீன்பிடிக்கலாம். ஆனுல் வியாபாரமுறையில் மீன்பிடிப்போருக்கு வாடகை விதித்தால், மீன்பிடிகாரர் உட்பட எல்லாருக்கும் நன்மையுண்டு. புறப்பொருளாதார அழிவுபற்றி 22 ஆம் அத்தியாயத்தில் ஆராய்ந்ததை ஞாபகஞ் செய்க. ஐயோவாக் கம நிலங்களைத் தொழிலாளர் வாடகையின்றிப் பயன்படுத்த விடுவதால் சமூகத்தின் திறமை குறையும் என்பதைக் காட்டுக.

2. வாரமுடிவு காலங்களிலும், காலை மாலைகளிலும் நமது வீதிகளிலே போக்குவரத்து அதிகம். அதற்கு வாடகையோ விதிக்க முடியாது. எனவே சாய்ப்பிலே பொருள் வாங்கச் செல்வோரும், சாரத்தியஞ் செய்வதால் இன்பம் பெறுதவர்களும், நெருக்கமில்லாத நேரங்களிலே வீதிகளைப் பயன்படுத்துமாறு செய்ய வேண்டும்.

3. பொலிஸ்காரர் கார்களை ஒதுக்குமிடங்களில் வரி வசூல் செய்தாலும், அவ்வாறு வரும் வருமானம் பொலிஸ்காரர் சம்பளத்தைக் கொடுப்பதற்கே காணுது. எனவே அத்தகைய வாடகைகளை உயர்த்திஞல் மக்கள் கார் ஒதுக்கு மிடங்களை நியாயமாகப் பயன்படுத்துவர்.

திறமையாக எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பதை அடைய வாடகை விதிப்பது எவ்வாறு துணைபுரியும் என்பதற்கு வேறு உதாரணங்களைக் கொடுக்கலாம். இதிலே யாருக்கு உற்பத்தி என்பது ஒழுக்கமுறையிலே மயக்கத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கலாம். ஆனுல் விடயத்தை விளக்கி விட்டோம்.

www.padippakam.com



முடிவுகள் : நிலவாடகையை நிச்சயிக்கும் பொதுக் கொள்கைகளே எல்லா உள்ளீடுகளின் விலையையும் நிச்சயிக்க உதவுகின்றன. சூடடிக்கும் எந்திரங்கள், மோட்டர் வாகனங்கள் என்பவற்றின் வாடகைகள் எல்லாம் இவ்வாறே நிச்சயிக்கப்படுகின்றன. ஒருவனுக்குக் கொடுக்கும் சம்பளமும் ஒருவகையில் அவனைப் பயன்படுத்துவதற்குக் கொடுக்கும் வாடகையே. இது சற்று நூதனமாயிருக்கலாம். தொழிலாளரைவாடைக்கு அமர்த்தும் ஒவ்வொரு ஒப்பந்தமும் குறித்த ஒருகால எல்லைக்குரிய தாகும். நிலத்தை ஒரு சேர வாங்கி விட்டால் வாடகை கொடுக்க வேண்டி யதில்லை. ஆனால் தொழிலாளரை அவ்வாறு வாங்கிவிட முடியாது. நமது சமூகத்தில் அந்த வழக்கமில்லை. தொழிலாளரை வாடகைக்கமர்த்தலாம். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதம் உண்மையில் வாடகையே.

அடுத்த அத்தியாயத்திலே சம்பளம் சம்பந்தமாகவும், தொழிற் சந்தை சம்பந்தமாகவுமுள்ள விசேடப் பிரச்சினைகள் ஆராயப்படும். 29 ஆம் அத்தி தியாயத்திலே மூலதனம், வட்டி என்பவை ஆராயப்படும். இவை வாட கைக்கோ பயன்படுத்தற்கோ கிடைக்கக்கூடிய நெடுபயன் பொருள்களின் சப்பிளையை நிச்சயிக்க முக்கியமானவையென்பது காட்டப்படும்.

**சுருக்கம்**

1. சாதனத்தேவைக்கோடுகள் பண்டத் தேவைக்கோடுகளிலிருந்தே பெறப்படுகின்றன. பிந்தியவை உயர்ந்தால் முந்தியவையும் உயரும். இவற்றை விடச் சிக்கலானவையும், பொது அறிவுக்கேற்றவையுமான பரஸ்பரத் தொடர்புகளுமுண்டு.

2. கம்பெனிகளின் சாதன மொத்தத் தேவையைப் பெறுவதற்கு அவற்றின் வருவிக்கப்பட்ட தேவைகளையெல்லாம் கூட்ட வேண்டும். சாதனத் தின் குறிப்பிட்ட சப்பிளைக் கோட்டையும் இதனோடு சேர்த்தால் சமநிலைக் குறுக்கு வெட்டை நிச்சயிக்கலாம். உற்பத்திச் சாதனத்தின் சமநிலைச் சந் தைவிலையில், தேவைப்பட்ட தொகையும் விநியோகிக்கப்பட்ட தொகையும் சமனாயிருக்கும். அங்கே மாத்திரம் சாதனவிலை மாறமாட்டாது. சமநிலை விலைக்கு மேலே எந்த இடத்திலும், விநியோகத்தர் சந்தையைக் கீழறுக்க விரும்புவர். அதனால் விலை வீழ்ச்சியடையும். சமநிலைவிலைக்குக் கீழே எந்த இடத்திலும் தேவையாளர் விலையை உயர்த்தப் பார்ப்பர். அதனால் சமநிலை மறுபடி தாபிக்கப்படும்.

3. இயற்கை நிலத்தின் மாறாத அளவு உருசிகரமானதொரு சந்தர்ப்பம். அங்கே சப்பிளைக்கோடு நேர்க்குத்தாகவும், நெகிழ்ச்சியற்றதாகவுமிருக்கிறது. இத்தகைய தனி வாடகை விடயத்தில், போட்டியானது இப்போதும் சம நிலைச் சந்தைவாடகையை நிர்ணயிக்கும். ஆனால் இதில் செலவு அமிச மொன்றைச் சந்திக்கிறோம். அது விலை நிச்சயிக்கப்பட்டதாயிருக்குமே அன்றி விலையை நிச்சயிப்பதாயிருக்க மாட்டாது. நிலவாடகையானது பூரணமாக் கப்பட்ட பண்டங்களுக்கான சந்தைவிலையின் காரியமேயன்றி அவற்றின் காரணமன்று. ஆனால் ஒரு விடயத்தை நாம் மறக்கக்கூடாது. அதாவது

www.padippakam.com



நிலத்துக்கான மொத்தத் தேவையைப் பாதிக்கச் சக்தியற்ற சிறிய கம் பெனி அல்லது தொழில் விடயத்தில், வாடகையானது மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ உற்பத்திச் செலவில் மற்றச் செலவுகளைப் போலச் சேர்ந்து கொள்ளும். அத்தகைய சிறிய தொழிலுக்கு வாடகையென்பது நிலத்தைவேறு இடத்தில் பயன்படுத்தும் சந்தர்ப்பச் செலவாகவே காணப் படும். மற்றச் செலவு அமிசங்களைப் போலவே இதுவும் விலையை நிர்ண யிக்கும் ஒரு காரணமாகும்.

சமூகத்தைப் பொறுத்தவரையில் நெகிழ்ச்சியற்றதாய் விநியோகிக்கப் படும் சாதனத்தின் வாடகை தேசீய வருமானத்திலே அச்சாதனத்தின் முழு டொலர் மதிப்புக்குச் சமமாய்ச் சேர்க்கப்படும். ஆனால் காசென்ற திரைக்குக் கீழே இந்தச் சாதனம் குறைந்த செலவுக்கு வேலை செய்ய வேண்டியேற்பட்டால் செய்யும். அந்தவகையிலே அதன் பயன் "மேல் மிச்ச" மானதாயிருக்குமே யன்றி அந்தச் சாதனத்தின் சப்பிளையைத் தூண் டக்கூடிய பிரதியுபகாரமாயிருக்க மாட்டாது. ஹென்றி ஜோர்ஜின் தனி வரிக்கொள்கைக்கு இதுவே அடிப்படை. அது நிலமதிப்பினாலுண்டாகும் உழையாத வருமானத்தின் மீது வரிவிதிப்பதையே நோக்கமாகக் கொண் டது. நுகர்வோன் மீது சுமத்தாமலும் உற்பத்தியைப்பாதிக்காமலும் இந்தவரி விதிக்கப்படுகிறது.

4. யாருக்கு உற்பத்தி என்ற பிரச்சினைக்குக் கொடுக்கும் விடையிலடங் கிய ஒழுகலாற்று நுணுக்கத்தைப்பற்றிச் சிலர் என்ன நினைத்தாலும், நிறை போட்டியின் கீழே சரியான சாதன விலையிடல், சமூகத்தின் எப்படி உற் பத்தி என்ற பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண்கிறது. வாடகை வாங்கா விட்டால் அது பல சந்தர்ப்பங்களிலே திறமையற்ற நெருக்கத்தை உண் டாக்கும்.

5. நிலம் தவிர்ந்த மற்றச் சேவைகளின் போட்டி விலை நிர்ணயத்தை விளக்க சப்பிளை, தேவை என்பவற்றின் பொதுக் கொள்கைகளைப் பயன்படுத்த லாம். சாதாரண வழக்கிலே வாடகையென்றால் எந்த உள்ளீடாயிருந்தா லும் அதைப் பயன்படுத்த அதற்குக் கொடுக்கப்படும் விலையையே கருது கிறோம். இந்தச் சாதனத்தின் சப்பிளைக்கோடு நெகிழ்ச்சியுடையதாயிருக்க லாம் ; நெகிழ்ச்சியற்றதாயிருக்கலாம். எல்லா உள்ளீடுகளுக்கும் உரிய வாடகை— இதில் மக்களுடைய சேவையைப் பயன்படுத்துவதற்குக் கொடுக்கும் சம்பளமும் சேர்க்கப்படும்— இவை போட்டி முறையிலே சப்பிளை தேவை என்பவற்றால் நிச்சயிக்கப்படும். தொழிலாளர் சந்தைக்கு சில விசேட தன்மைகளுண்டு. வட்டி, மூலதனமதிப்பீடு என்பன சம்பந்தமான விசேட பிரச்சினைகளுமுண்டு.

சாதனச் சப்பிளை, தேவை என்பவற்றின் பொதுவான கோலத்தை நிச்சயிக்கப் பலவேறு சாதனங்களின் இறுதிநிலைப் பொருள்கள் தம்முள் எவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட ஒரு தீவில் வாழும் சமூகத்தின் உதாரணத்தை அனுபந்தம் குறிப்பிடுகிறது.

www.padippakam.com



அடுத்த அத்தியாயங்களுக்கு நேரடியாகச் செல்லவிரும்புவோர் இந்த அனுபந்தத்தை விட்டுவிடலாம்.

**ஆராய்ச்சிக்கான வினுக்கள் :**

**1.** நிரந்தரமான மயிர்ச்சுருள் இருக்க வேண்டுமென்ற தேவை நெகிழ்ச்சியுடையதாகும். அழகு செய்வோருக்குள்ள வருவிக்கப்பட்ட தேவையின் நெகிழ்ச்சியைப் பற்றி நீர் என்ன சொல்வீர் ?

**2.** குடிவகையில் ஒரு சில துளி கசப்புத் திரவமே சேர்த்துக்கொள்வர். அதற்கான தேவை நெகிழ்ச்சியுடையதா நெகிழ்ச்சியற்றதா ? என் ?

**3.** எண்ணெய்த்தன்மையுள்ள மசக்கை எண்ணெய் சில உண்டு. எண்ணெய்க்குரிய தேவைநெகிழ்ச்சி இதனுல் எவ்வாறு பாதிக்கப்படுகிறது ? டெக்ஸாஸ் எண்ணெய்க்குரிய தேவை எப்படிப்பட்டது ?

**4.** நெசவு ஆலையொன்றிலுள்ள மின்சாரத் தொழிலாளர் தாம் மொத்தச் செலவிலே முக்கியமற்ற அமிசமென நினைக்கின்றனர். இதனுல் அவர்கள் சம்பள உயர்வு கோருகிருர்கள். அப்படியானுல் அங்குள்ள மற்றத்தொழிற்சங்கங்களும் அதே வகையில் சம்பள உயர்வைக் கேட்கலாம். அப்போது என்ன ஆகும் ?

**5.** MPP × உற்பத்திப் பொருளின் விலையே இறுதிநிலைப் பொருளின் பெறுமதியென வரைவிலக்கணம் கூறுகிறது. இறுதிநிலை வருவாய் உற்பத்தி = MPP × இறுதிநிலை வருவாய். நிறைவில் போட்டியிலிருக்கும் ஒரு கம்பெனிக்கு இந்த இரு பெறுமதியிலே எது குறைவானது ? நிறைபோட்டியிலுள்ள கம்பெனிக்கு எதுகுறைவானது ? (MPP= இறுதி நிலைப்பிண்டப் பொருள்)

**6.** தனிவாடகைக்கு உதாரணம் கூறி விளக்குக. அத்தகைய தொரு சாதனத்தின் விலை, விலை தீர்மானிக்கப்பட்டதேயன்றி, விலையைத் தீர்மானிப்பதில்லை என்பதன் கருத்தை விளக்குக. வாடகை பெறக்கூடிய சாதனம் அதிகம் கிடைப்பதாயிருந்தால், அதன் வருவாய் குறையும் ; அதனைப் பயன்படுத்தும் சிறு பண்டங்களின் விலையும் இறங்கும் என்பதை விளக்குக.

**7.** ஹென்றி ஜோர்ஜின் தனிவரி இயக்கம் எதைப் பற்றியது ? தனி வாடகை மீது வரி விதித்தால் என்ன விளைவுண்டாகுமென்பதைப் படம் கீறி விளக்குக.

**8.** பின்வரும் கருத்துக்களை மறுபடியும் ஞாபகப்படுத்துக.

வருவிக்கப்பட்ட தேவை

கடவுள் தந்த நிலத்தின் நெகிழ்ச்சியற்ற சப்பிளை.

தனிவாடகை.

தனிவரி ; நிலவரியைப் பின்னுல் தள்ளுதல்.

சப்பிளை தேவைச் சமநிலை.

விலை தீர்மானிக்கப்பட்ட செலவும்,

படிப்பகம்

www.padippakam.com



விலை தீர்மானிக்கும் செலவும்,
சாதனவிலைச் சமநிலை.
திறமைமிக்க சாதனத்தின் விலைக்குறிப்பு.
பண்டப்பதிலீட்டின் விலைக்குறிப்பு.
எப்படி, யாருக்கு, உற்பத்தி என்பதும்,
வாடகையும்.

**அனுபந்தம் : எளிதான உதாரணம் சம்பந்தமாய் இறுதிநிலை உற்பத்தியும் பகிர்வும் பற்றிய பரந்த நோக்கு.**

எல்லாச் சாதனங்களுக்குமான சப்பிளை தேவை என்பன தம்முள் ஒன்றையொன்று பாதிப்பனபோலவே எல்லாப் பண்டங்களின் சப்பிளை தேவை என்பவற்றேடும் கலந்து பரஸ்பரம் பாதிக்கின்றன. இந்தப் போட்டி முறையின் பயனாக இருப்பவை, சமநிலைச் சாதனம், பண்டவிலைகள் என்பவற்றின் ஒரு தொகுதியும், எல்லா உள்ளீடு வெளியீடுகளுக்குமுரிய சமநிலைத் தொகைகளின் ஒருதொகுதியுமாகும். பொருளியல் ஆரம்ப நூலில் இதற்கு மேல் ஆராயவேண்டியதில்லை. இந்த அனுபந்தத்தின் நோக்கம் இறுதிநிலை உற்பத்தி எவ்வாறு சமூகத்தின் உற்பத்தியைப் பகிர்கிறதென் பதே.

**அடிப்படைத்தரவுகள்.**

ஐரோப்பாக் கரையை அடுத்துப் புதியதொரு தீவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதெனக் கற்பனை செய்யுங்கள். இது 1000 சதுரமைல் பரப்புடையது. உணவு உற்பத்திக்கு மிக வாய்ப்பானது. உணவு தனியானதும், பல சேர்ந்து அமைந்ததுமான பண்டம் எனவும், அஃது ஒன்றே எவரும் விரும்பி உற்பத்தி செய்து நுகரும் பொருள் என்றும் கருதுக. இந்த உணவை உற்பத்தி செய்ய இரண்டேயிரண்டு சாதனங்களே தேவைப்படுகின்றன. நிலம் ; தொழிலாளர். கொடுக்கப்பட்டதோர் அளவு நிலத்திலே கொடுக்கப்பட்ட தொகைத் தொழிலாளர் வேலை செய்தால், குறிக்கப்பட்ட தொகை உணவை உற்பத்தி செய்யலாம். இந்தப் புதிய நிலத்திற்குச் சொந்தக்காரர் யாரென்பதையும் நிச்சயித்துக் கொண்டோம். இந்த நிலச் சொந்தக்காரர் அந்தத் தீவிலேயே வசிக்கலாம் ; அல்லது வேறு தேசத்தில் வசிக்கலாம். நிலத்தில் வேலை செய்யும் தொழிலாளர் எவ்வித மேற்பார்வையுமின்றித் தமது கடமைகளை நிறைவேற்றுகிறார்கள்.

இந்தத் தீவு ஐரோப்பாவுக்கு அண்மையில் இலேசாகப் போய்வரக்கூடிய முறையில் போக்குவரத்து வசதிகளோடு அமைந்திருக்குமானால், ஐரோப்பாவிலுள்ள சம்பளவிகிதமே இந்தத் தீவுக்கும் ஏற்புடையதாயிருக்கும். கடைசியில் அத்தகைய சம்பளமே நிலவும். இதற்குச் சிறிது காலம் எடுக்கும். ஏனெனில் தீவிலே ஐரோப்பாவிலும் பார்க்க சம்பளம் உயர்வாயிருக்கும் காலத்தில் மக்கள் அங்கே போய்ச் சேரவேண்டும் ; தீவிலும் பார்க்க ஐரோப்பாவிற் சம்பளம் உயர்வாயிருக்கும்போது மக்கள் அங்கேபோய்ச்

www.padippakam.com



சேரவேண்டும். ஐரோப்பாவில் நிலவும் சம்பள மட்டத்தை மாற்றக்கூடிய அளவு பருமனுக இந்தத் தீவு இல்லை. (ஒரு பெரிய சமுத்திரத்தை அடுத்த குடாக்கடலிலே உள்ள நீரின் மட்டம், சமுத்திரத்தின் நீர் மட்டத்தைக் கொண்டே நிச்சயிக்கப்படும். அதற்கு எதிர்மாருகவன்று).

பொதுமட்டமாகவுள்ள சம்பளம் உணவு அலகைக் கொண்டே கொடுக்கப் படுகிறதென நினைத்துக்கொள்ளலாம். ஓர் அலகு உணவுக்கு ஒரு டொலர் சந்தைக் கடகத்தை உபயோகித்தால், நிசச் சம்பளம் சாதாரண டொலரிலே கொடுக்கப்படுகிறதெனக் கொள்ளலாம். உதாரணமாக ஒருவன் 1000 டொலரை ஒரு வருடத்தில் உழைக்கிருனென்ருே 1000 அலகு உணவை உழைக்கிருனென்ருே கொள்ளலாம்.

**சமநிலை நிச்சயித்தல் :**

இப்போது அரங்கு தயாராகிவிட்டது. ஆரம்பத்திலே தீவில் தொழிலாளர் ஒருவராவது இல்லை. ஆனுல் வருடமொன்றுக்கு 1000 டொலர் சம்பளமிருப் பதால் ஐரோப்பாவிலிருந்து தொழிலாளர் வருவார் என்ற உத்தேசத்தில் நிலச்சொந்தக்காரர் தமக்கு எத்தனை தொழிலாளர் தேவையென்பதை நிர்ணயஞ் செய்வர். தேவைப்படும் மொத்தத் தொழிலாளர் தொகை ஒவ்வொரு சதுரமைலுக்கும் தேவையான தொழிலாளரில் 1000 மடங்காகும். தொழிலாளருக்கும் நிலத்துக்குமுள்ள விகிதமே முக்கியம் ; தனியளவன்று என்றதொரு விசேடகருதுகோளை நாம் மேற்கொள்ளு கிருேம். 200 தொழிலாளர் 2 சதுரமைல் நிலத்திலே வேலை செய்யும் போது, 100 பேர் ஒரு சதுரமைலில் வேலை செய்வதன் விளைவாக உண்டாகும் உணவிலும் பார்க்க இரண்டு மடங்கு உணவை உற்பத்தி செய்வர்.

ஒவ்வொரு நில அலகிலும் தேவைப்படும் தொழிலாளரின் தொகையை எது நிர்ணயிக்கிறது ? சம்பள விகிதமும் தொழிலாளரின் இறுதிநிலை வருமான உற்பத்தியும் சமமாக வரும்வரை நிலத்தில் தொழிலாளரை புத்தியுள்ள எந்த முதலாளியும் அமர்த்துவான் என முன்னர் நாம் ஆராய்ந்து முடிவுசெய்தோம். உணவுப் பொருள்தான் ஒரேயோர் உற்பத்திப் பொருள் ; அதனுடைய விலையும் 1 டொலராக நிச்சயிக்கப்பட்டு விட்டது ; ஆனபடியால் இறுதிநிலைவருமான உற்பத்தியும் இறுதிநிலைப் பிண்டப் பொருளும் அச்சொட்டாகச் சரியாயிருக்கும் என்பது தெளிவு. முந்தியது பிந்தியதில் ஒருதரம் பெரியது. சுருக்கமாகக் கூறுவதற்காக இறுதிநிலை உற்பத்தி என்ற சொல்லையே வழங்குவோம். எனவே தொழிலாளருக்குரிய தேவையை நிச்சயிப்பதானுல், இறுதிநிலை உற்பத்தி என்ன என்று ஆராயவேண்டும்.

**இறுதிநிலை உற்பத்தி சம்பந்தமான விதிகள் :**

ஒரு சதுரமைலில் தொழிலாளர் அலகுகளை அதிகரிக்க அதிகரிக்க உண்டாகும் மேலதிக உணவு உற்பத்தியைப் படம் 5 காட்டுகிறது. முதலில் அமர்த்தப்படும் சில தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி அதிகரிக்கிறது.


www.padippakam.com



அதாவது அது வருடத்துக்கு 3000 உணவு அலகு அல்லது 3000 டொலர் ஆகும். படம் 5 இலே இது மிக உயர்ந்த நிலைக்குத்தான தகடாக இருக்கிறது. இது *a* எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே நில அலகில் தொழிலாளர் தொகையை அதிகரித்தால் இறுதிநிலை உற்பத்தி வீழ்ச்சியடையுமென்பது குறைந்துசெல்விளைவு விதியினால் அறியக் கிடக்கிறது. இது குறுகிய நிலைக்குத்தான *b* என்ற தகட்டினாற் காட்டப்படுகிறது. மேலும் மேலும் தொழிலாளர் அலகை கூட்டிக்காட்ட இறுதிநிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துகொண்டே செல்லும். 100 தொழிலாளர் இருந்தால் கடைசித் தொழிலாளர் அலகுக்குக் கிடைக்கும் இறுதிநிலை உற்பத்தி 1000 உணவு அலகாகும். 200 தொழிலாளர் அலகில் இறுதிநிலை உற்பத்தி 800 உணவு அலகுக்குக் கீழே வீழ்கிறது.

படம் 5 இலுள்ள இந்த இறுதிநிலை உற்பத்திக்கோடு நமது இலேசான உற்பத்தித் தொழிற்பாட்டைப்பற்றி அறியக்கூடியதெல்லாவற்றையும் காட்டுகிறது.

**ஒவ்வொரு புதிய தொழிலாளியும் இறுதிநிலை உற்பத்தியை வீழ்ச்சியடையச் செய்வான் :**




படம் 5. புதிய தொழிலாளி ஒவ்வொருவனும் மொத்த உற்பத்தியை வரவரக்குறைப்பான். இதனை நிலைக்குத்தான தகடுகள் குறுகிக்கொண்டு போவதிலிருந்து அறியலாம். இவற்றைக் கூட்டிப்பார்த்தால் பரப்பாக அமைந்த மொத்த உற்பத்தி கிடைக்கும்.

அதாவது இது பலவகையான அளவுள்ள நிலம், தொழிலாளர் என்பவற்றின் சேர்க்கையால் கிடைக்கக்கூடிய உணவின் தொகையை நிச்சயிக்கும் விசேடவிதி பற்றி அறிய வேண்டியதெல்லாவற்றையுமறிவிக்கிறது. படம் 5

www.padippakam.com



இலிருந்து இறுதிநிலை உற்பத்தியையும், மொத்த உற்பத்தியையும் பின்வருமாறு அறிந்து கொள்ளலாம்.

தொழிலாளர் பூச்சியமானுல், உணவு உற்பத்தியும் பூச்சியமாகும். ஒரு மனிதனை வேலைக்கமர்த்தினுல் 3000 அலகு உற்பத்தி கிடைக்கிறது. இது படத்திலே $a$ என்ற சிறிய தொரு துண்டாக இடப்பக்கத்திற் காட்டப்பட்டுள் ளது. 20 பேர் ஒரு சதுரமைலில் வேலை செய்தால் மொத்த விளைவு எவ்வளவாகும் ? நிலைக்குத்தான துண்டுகளின் தொகையே தகடு $a$ யிலே காணப்படும் பரப்பு ஆகும். இவ்வாறே $a+b+c+d+e$ என்பது 100 அலகு நிலமும் தொழிலாளரும் சேர்ந்து உற்பத்தியாக்கும் விளைவுக்குச் சமனுனதாயிருக்கும். இந்த மொத்தத்தைக் கணித்தால், 1 சதுர மைலில் 100 தொழிலாளர் வேலை செய்ததால் உண்டாகும் 150,000 அலகு உணவு கிடைக்கும்.

குறைந்து செல்விளைவு விதியின்படி தொழிலாளரைக் கூட்டக் கூட்ட விளைவு குறைந்துகொண்டே செல்லும். விளைவைக் குறையாமல் வைத்திருப்பதானுல் தொழிலாளரைக் கூட்டும் அதே சமயத்திலே நிலத்தையும் கூட்டவேண்டும். அதனுல் விகித வீதத்தில் மாற்றமின்றியே அளவு ஒருசேர வளர்ந்திருக்கும்.

**இறுதிநிலை உற்பத்திக்கோடும், தொழிலாளர் தேவைக் கோடும் சமமாயிருத்தல்.**

ஒவ்வொரு பண்ணையிலும் எத்தனை தொழிலாளர் தேவைப்படுவர் என்பதை நாம் இனி நிச்சயிக்கலாம். புத்தியுள்ள நிலமுதலாளி என்ன செய்வான் ? சம்பளத்துக்குச் சமனுன அளவுக்கு இறுதிநிலை உற்பத்தி இருக்கும் தொழிலாளரை அமர்த்துவான். தொழிலாளருக்கு என்ன சம்பளம் கொடுப்பது என்பதை 5 ஆம் படத்திலுள்ள இறுதிநிலை உற்பத்திக் கோட்டிலிருந்து அறிவான். உயர்வான நிசச் சம்பளத்தில் அதிக தொழிலாளரை அமர்த்தமாட்டான். ஐரோப்பாவிலும் ஏனைய பகுதிகளிலும் சம்பளவிகிதம் வீழ்ச்சியடைந்தால், அவன் அதிக தொழி லாளரை அமர்த்துவான்.

இறுதிநிலை உற்பத்திக் கோட்டைச் சம்பளக் கோட்டுடன் சமன்படுத் துவதே விதியானபடியால், இறுதிநிலை உற்பத்திக் கோடும், தேவைக் கோடும் ஒன்றே. (ஐரோப்பிய சம்பளவிகிதம் வருடத்தில் 1000 டொலர் அல்லது உணவு அலகாயிருந்தால் ஒவ்வொரு சதுரமைல் பண்ணையிலும் 100 தொழிலாளர் அமர்த்தப்படுவர். இது 5 ம் படத்திலே M தானத்தில் காட்டப்பட்டுள்ளது).

**மொத்தமான சப்பிளையும், தேவையும்.**

தீவுக்குத் தேவையான தொழிலாளர் தொகையை இப்போது நாம் அனுமானிக்கலாம். இது 6 ஆம் படத்திற் காட்டப்பட்ட DD (தேதே) ஆகும். இந்தத் தீவிலே 100 சதுரமைல் இருப்பதால் இந்தக் கோடு 5 ம் படத்

படிப்பகம்


www.padippakam.com



திலுள்ள தனி நில அலகில் விளையும் தொழிலாளரின் இறுதி நிலை உற்பத்திக்கோட்டை 1000 மடங்கு பெருப்பித்தலாகும். குறைந்துசெல் விளைதிறன்விதிப்படி இந்தத்தேவைக்கோடு கீழ்நோக்கிச் செல்கிறது.

தொழிலாளரின் நெடுந்தவணை சப்பிளைக்கோடு SS (ச.ச.) என்பதால் காட்டப்பட்டுள்ளது. இதனை ஐரோப்பாவும் ஏனைத்தேசங்களும் விதித்த சம்பள மட்டத்தோடு சமாந்தரமாகக் கீறவேண்டும். சப்பிளை, தேவையென்ற கோடுகள் வெட்டும் இடமே நமது சமநிலை E. இந்த உதாரணம் வருடச் சம்பளம் 1000 டொலர் என்பதைக் காட்டும். அன்றியும் நமது தீவிலே அச்சொட்டாக எத்தனை பேர் வேலைக்கமர்த்தப்படுவார்கள், மொத்த உற்பத்தி எவ்வளவு என்பவற்றை யெல்லாம் எடுத்துக்காட்டும்.

**சமூகத்தின் தேவையிலே இறுதிநிலை உற்பத்திதங்கியுள்ளது :**




**படம் 6.** 1000 சதுரமைல் பண்ணைக்குரிய இறுதிநிலை உற்பத்தியைக் கூட்டினால் தொழிலாளருக்குரிய தேவைக்கோடு கிடைக்கும். சப்பிளைக்கோடு வெளிநாட்டுச் சம்பள விகிதத்தால் நிச்சயிக்கப்படும். சமநிலை E தானத்தில் இருக்கும்.

தீவு முழுவதற்குமான தொழிலாளர் சமநிலைத் தொகை, ஒவ்வொரு சதுரமைல் அலகு நிலத்துக்கும் நடைமுறைச் சம்பள விகிதத்தில் கேட்கப்படும் சமநிலைத்தொகையின் ஆயிரம் மடங்காகும். (அதாவது $1000 \times 100$ தொழிலாளர் $= 100,000$ தொழிலாளர். இது படம் 6 இலே E யின் கீழே காட்டப்பட்டுள்ளது. சமநிலை மொத்த உற்பத்தி அல்லது தேசியவருமானம், 5 ஆம் படத்திலே காட்டப்பட்ட நிலைக்குத்தான தகடுகளின் கூட்டுத் தொகையை 1000 ஆல் பெருக்கிய தொகையாகும். இது $150,000 \times 1000$ டொலர் அல்லது 15 கோடி டொலர் ஆகும்.

6 ஆம் படத்தைத் திருப்பிக் கீறியதே 7 ஆம் படம். இதிலே ODEL என்பது மொத்தத் தேசிய உற்பத்தியைக் காட்டும். 15 கோடி டொலரில் 10 கோடி தொழிலாளர் சம்பளமாகும். 100,000 தொழிலாளருக்கும் ஆளுக்கு 1,000 டொலர் அல்லது உணவு அலகு வருடாவருடம் கொடுக்க வேண்டும். OWEL என்பது சம்பளத்தைக் காட்டும். அதனுடைய உயரம் சம்பளமாகும் ; அடிமட்டம் தொழிலாளர் தொகையாகும்.

www.padippakam.com




எஞ்சிய தொகை, யாருக்குச் சேரும் ? நிலமுதலாளிக்குத்தான். ஒவ்வொரு பண்ணையும் பண்ணைச் சொந்தக்காரருக்கு 50,000 உணவு அலகை வழங்கும். 100 தொழிலாளர் ஆளுக்கு 100 உணவு அலகைப் பெறுவர்.

மொத்தவாடகை எவ்வளவு ? 1000 × ஒவ்வொரு நில அலகினதும் வாடகை = மொத்த வாடகை. இதுவே மொத்தத் தேசிய உற்பத்தியில், மூன்றில் ஒரு பகுதியான, தொழிலாளருக்குக் கொடுத்தது போக மிஞ்சிய 5 கோடி டொலர். மொத்த வாடகை WDE என்ற பிரதேசம். படம் 5 இலுள்ள முக்கோணவடிவத்தின் 1000 மடங்கு அதிகரிக்கப்பட்ட பரப்பு இது. (வாசகர் தாம் இதனை விளங்கிக் கொண்டனரா என்பதைப் பரீட்சிப்பதற்கு, சம்பளத்துக்குரிய நீள்சதுரத்தையும், வாடகைக்குரிய முக்கோணத்தையும் சம்பளம் 800 டொலராயிருக்கும்போது கீறலாம். தொழிலாளர் சம்பளம் குறைந்தால் நிலத்தில் அதிக தொழிலாளரை வேலை செய்யவிடலாம். அப்போது நிலத்தின் வாடகை அதிகரிக்கும் ; வாடகை உயர்வை எந்தப் பிரதேசம் காட்டும் ? தொழிலாளர் சம்பளம் குறைந்தால் மொத்தச் சம்பளம் குறையுமா ? ஏன் அவ்வாறு குறையாதென்பதைப் பொது அறிவைக்கொண்டு விளக்குக. இதற்குரியவிடை சில பிரதேசங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில் தங்கியிருக்கிறதெனக் காட்ட முடியுமா என்பதைப் பார்க்க. எந்தப்பிரதேசங்கள் ?)[1]

## இறுதிநிலை உற்பத்திக் கொள்கைகள் வருமானத்தின் சாதனப்பங்குகளை நிச்சயிக்கின்றன :

தேசிய உற்பத்தியைப் பிரித்தல்




படம் 7. மொத்தச் சம்பளம் நீள்சதுரத்தின் பரப்பளவாகும். அடித்தளம் தொழிலாளர் தொகை, உயரம் சம்பளவிகிதம்; ஒன்றையொன்று பெருக்கினால் மொத்தச் சம்பளத்தின் பரப்பளவுண்டாகும். எஞ்சிய முக்கோணம் வாடகையாகும் (WED). சம்பள நீள்சதுரம், + வாடகை முக்கோணப்பரப்பளவு = DE, அதாவது இதுவே சமூகத்தின் இறுதிநிலை உற்பத்தித் தேவைக்கோடு.

1. இந்த உதாரணத்திலே தேசிய உற்பத்தியில் வாடகைப் பங்கு, சனப்பெருக்கத்தின் பின்னரும் சம்பள வீழ்ச்சியின் பின்னரும் 1/3 ஆக இருக்கும். இது விசேடமானதொரு சந்தர்ப்பம். சம்பளவீழ்ச்சி நிலவாடகையை உயர்த்தும் ; ஆனால் மொத்த உற்பத்தி வாடகையைப் போல உயராது.

www.padippakam.com



## போட்டிச் சமநிலை நல்லதா ?

தனி ஒரு பண்டமே உற்பத்தி செய்யப்படும் சிக்கலில்லாத ஓருலகத்திலே நிலம், தொழிலாளர் என்ற இரு சாதனங்களுக்கிடையில் மொத்த உற்பத்தியை இறுதிநிலை உற்பத்திக் கொள்கை எவ்வாறு "பகிர்ந்துகொள்ளு" கிறதென்பதைப் பற்றிச் சுருக்கமாக இங்கே ஆராய்ந்தோம்.

சிக்கலில்லாத நிலைமைகளிலே போட்டியானது எவ்வாறு தொழிற்படுமென்பதை நாம் முன்னரே அவதானித்தோம். காட்டிலே நன்மை தீமையென்பது கிடையாது. அதுபோலவே போட்டியிலும் நன்மை தீமை பார்ப்பதில்லை. ஆனால் ஒரு திறமையான கருமம் நிகழ்ந்ததை நீங்கள் கவனித்தீர்களா ? திட்டக் கமிஷன் இல்லாமலே சமூகம் தனக்குத் தேவையான உணவைத் திறமையான முறையில் உற்பத்தி செய்தது. அஃதெவ்வாறு ? ஓரினமான நிலமும் தொழிலாளரும் எங்கும் ஒரேவிகிதாசாரப்படி சேர்ந்தாற்றான் திறமைக்கு உதவியாயிருக்கும். (உதாரணம் : அரசாங்கம் நாட்டின் பாதிப்பேரை ஏக்கருக்கு அதிகமாகத் தொழிலாளரைப் பயன்படுத்தும்படிகட்டளையிடுகிறது. மற்றப்பாதியைக் குறைவாகப் பயன்படுத்துமாறு கட்டளைபண்ணுகிறது. குறைந்து செல் விளைவுவிதிப்படி அதிக தொழிலாளரைப் பயன்படுத்தும் பகுதியிலே மேலதிக உற்பத்தி குறையும். இஃது, ஒவ்வொரு தொழிலாளிக்கும் செய்கை பண்ண அதிக நிலமிருந்தால், அவர் தமது இறுதிநிலை உற்பத்திக்கோட்டில் உயர்தானத்தில் எவ்வளவு உற்பத்தி செய்திருப்பாரோ அதனோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து வீழ்ச்சியாகவே தோன்றும். இறுதிநிலை உற்பத்தியையும் சாதனவிகிதங்களையும் சமனுயிருக்கச் செய்வதே உற்பத்தித் திறமைக்கு விதியாகும்[1]).

இரக்கமில்லாத போட்டிதான் சாதனவிகிதத்தையும், இறுதிநிலை உற்பத்தியையும் உண்டாக்குகிறது. இஃது எவ்வாறு ? நிலப்பிரபுக்கள் உச்சவாடகை பெறவிரும்பினர். தொழிலாளர் உச்சச் சம்பளம் பெறவிரும்பினர் ; உற்பத்திச்செலவை மிகக் குறைவாக வைத்திருக்கும் வகையில்

1. மேலே கூறிய பகிர்வு இறுதிநிலைஉற்பத்திக்கொள்கை 75 வருடங்களுக்கு முன்னர் கொலம்பியாவைச் சேர்ந்த ஜோன பேட்ஸ் கிளாக் என்பவரால் நிறுவப்பட்டது. அதன் கருத்துப் பின்வருமாறு– உற்பத்திக்கு நிலம், தொழிலாளர், வேறு உள்ளீடுகள் என்பன தேவை என்று வைத்துக்கொள்வோம். உள்ளீடுகளை 1 வீதத்தால் உயர்த்தினுல், வெளியீடும் அதே வீதத்தால் உயரும். ஆனுல் ஏதாவதொரு சாதனத்தை முற்றய் எடுத்துவிட்டால் உற்பத்தி கிடையாது. நிலம், தொழிலாளர், மூலதனம் என்பவற்றின் தனித்தனிச் சேவையை எவ்வாறு பிரிக்கலாம் என்ற பிரச்சினைக்குப் போட்டிச்சந்தையே விடைபகரும். அது பின்வருமாறு :— ஏனைய சாதனங்களை மாற்றுமல் வைத்துக்கொண்டு ஒவ்வொரு சாதனத்திலும் 1 வீதம் அதிகரித்தால் உற்பதியில் என்ன அதிகரிப்பு உண்டாகிறதென்பதைக் கணிக்க. இது 1 வீதத்தின் பின்னமாகக் காணப்படும். இந்தச் சாதனப்பின்னங்களின் கூட்டுத்தொகை 1 க்குச் சமமாகும். பின்னத்துக்கேற்ற மாதிரி ஒவ்வொரு சாதனத்துக்கும் மொத்த உற்பத்தியிலே ஒரு பிரிவை ஒதுக்கிவிடுக. (குறிப்பு : போட்டிச்சந்தையில் இந்த ஏகபோகமான பகுப்பு தானுகவே உண்டாகும். நிலத்தின் தன்மையில் உள்ள வித்தியாசங்களை இங்கே நாம் ஆராயவில்லை).

www.padippakam.com



சந்தை விலையேற்பட்டது. (எச்சரிக்கை : "அஃவுக்கேற்றபடி அதிகரித்துச் செல் விளைவு" என்ற கொள்கை நிறைபோட்டியை அழித்துத் தனியுரிமையைக் கொண்டுவந்துவிடும்).

எப்படி உற்பத்தி செய்யவேண்டும் என்ற பிரச்சினையைப் போட்டி விலை தீர்த்து விடும். இதனை 30 ஆம் அத்தியாயத்தின் அனுபந்தம் காட்டும். கடவுள்தந்த அருந்தலான நிலத்தைச் சரியாகப் பகிர்வதானால் வாடகை விதிப்பது அவசியம்.

சரி ; அப்படியானால், சந்தை விலை சர்வ சுபீட்சத்தைக் கொண்டுவருமா ? அப்படியானால் ஆதியில் நிலத்தைச் சுவீகரித்துக்கொண்ட மூதாதையரிடமிருந்து முதுசொமாகப் பெற்று வந்த சில நிலப்பிரபுக்கள் தாம் ஒரு முயற்சியும் செய்யமாலிருந்து கொண்டே வாடகையாகத் தேசிய வருமானத்தில் மூன்றிலொரு பகுதியை அனுபவிக்கலாமா எனச் சில தீவிர ஆராய்ச்சியாளர் கேட்பர்.

இஃது ஒழுக்கம் பற்றிய கேள்வி. பொருளியலாளர் இதைப்பற்றி கூறமுடியாது. யாருக்கு உற்பத்தி என்ற விடயம் சம்பந்தமாய் போட்டியின் திறமை பற்றி நாம் காட்டிய நிரூபணம் ஒன்றும் கூறவில்லை. தொழிலாளர் நிலச்சொந்தக்காரராயிருந்து வாடகை வசூல் செய்துகொண்டார்களானால் விடயங்கள் இவ்வாறே நிகழ்ந்திருக்கும். ஹென்றி ஜோர்ஜை இக்கட்டத்திலே ஞாபகப்படுத்தலாம். அரசாங்கம் நிலத்தைச் சொந்தமாய் வைத்திருந்து அதற்கு நிசமான விலையைப் போட்டால் அதுவும் திறமைக்கு வழியாகும்.

இதனால் நாம் பெறும் படிப்பினை என்ன ? யாருக்கு உற்பத்தி என்ற பகிர்வு சம்பந்தமான ஒழுக்கப்பிரச்சினைகளை இந்தக் கட்டத்திலே எழுப்பக் கூடாது. அத்தகைய ஒழுக்கப்பிரச்சினையை எடுப்பதானால் திறமையை மறக்கவேண்டாம்.

**முடிபு : பண்டங்களிடையே பதிலீடு செய்தலும் நிபந்தனைகளும்.**

தனி உற்பத்திப் பொருளொன்றுபற்றி ஆராய்ந்தோம். பல பொருளை ஆராயும் போது என்ன நடக்கும் ? பயிற்சி பெறாத தொழிலாளர் போன்ற ஒரு சாதனம் அதிகம் பெறக்கூடியதாயிருந்தால், அதனுடைய இறுதி நிலை வருமான உற்பத்தியும் வாடகையும் குறையும். உற்பத்திகளில் இந்த மலிவான சாதனத்தை வேறு ஒறுப்பான சாதனங்களுக்குப் பதிலாக உற்பத்தியாளர் பயன்படுத்துவர். அதன்பயனாக அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டத்தின் விலையும் வீழ்ச்சியடையும். இவ்வாறு விலை வீழ்தல் நுகர்வோர் அத்தகைய பண்டங்களை அதிகம் பயன்படுத்த வழிவகுக்கும். அதனால் அச்சாதனத்துக்கான வருவிக்கப்பட்ட தேவை மேலும் நெகிழ்ச்சியுடையதாகும்.

சாதனங்களிடையே பண்டங்களுக்குள்ளேயுள்ள விசேடப் பதிலீட்டுத் தன்மையோடு பண்டங்களுக்கிடையேயுள்ள பதிலீட்டுத்தன்மையும் விலையிலேற்,

www.padippakam.com



படும் வித்தியாசத்தாலுண்டாகும். பதிற்பொருளைச் சேர்க்கும்முறை தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்குமெனக் கருதிக்கொள்ளும் இறுதிநிலை உற்பத்திக் கொள்கை உடையுங் காலத்திற் கூட பகிர்வு எவ்வாறு நிச்சயிக்கப்படுமென்பதை இது சூசகமாகக் காட்டுகிறது. சாதனங்களைக் குறிப்பிட்ட விகிதப்படி பயன்படுத்த வேண்டுமானுல், அவற்றின் வருவிக்கப்பட்ட தேவைகள் நன்கு நிச்சயிக்கப்பட்டனவாகவே இருந்து வரும். இந்தத் தேவைகளும் சபபிளைத்தொடர்புகளுமாகச் சேர்ந்து, எல்லா விலைகளையும் நிச்சயிக்க உதவுகின்றன. பண்டங்களிடையே பதிலீடுகள் இப்போது மிக முக்கியமுடையனவாகின்றன. அவ்வாறே சாதனங்களின் சப்பிளை நிபந்தனைகளும் முக்கியமுடையனவாகின்றன.[1]

கடைசியாகப் பின்னரும் விடயத்தைக்கவனிக்க : நமது தீவுச் சமூகத்திலேயுள்ள பகிர்வுப் பிரச்சினையின் பலதன்மைகளையும் விளங்கிக்கொள்வது பகிர்வு, போட்டிவிலையிடல் என்பனபற்றிய பழைய கொள்கைகளையும் புதிய கொள்கைகளையும் வரலாற்றுமுறையில் அறிவதற்குச் சமனுகும். ஆனுல்

1. பண்டங்களிடையே பதிலீடு செய்யும் முறை குறிப்பிட்ட விகிதப்படியிருக்கும் மாருத நிலையிலும் சாதனவிலைகளை நிர்ணயிக்க உதவும் என்பதற்கு ஓர் உதாரணம். உதாரணமாக : 1 அலகு மதுசாரத்தை உற்பத்திசெய்ய 1 அலகு எந்திரமும் 1 அலகு தொழிலாளரும் தேவைப்படும்போதும் ஓர் அலகு அப்பத்தை உற்பத்தி செய்ய, 1 அலகு எந்திரமும் 2 அலகு தொழிலாளரும் தேவைப்படும்போதும் இது நிகழும். மதுசாரம் ஓரலகு 10 டொலரும் அப்பம் ஓரலகு 12 டொலருமாக விலைப்படுகின்றன. அப்பம் மதுசாரத்திலும் பார்க்க விலையாலும் செலவாலும் 2 டொலர் வித்தியாசமுடையது. உள்ளீட்டுமுறையில் எவ்வாறு வித்தியாசப்படுகிறது ? 1 அலகு தொழிலாளரினுல். எனவே சம்பளம் ஓரலகுக்கு அச்சொட்டாக 2 டொலர் (12–10) ; எந்திரம் ஓரலகின் விலை 8 டொலர் (10–2 அல்லது 12–2). எனவே இத்தகைய குறிக்கப்பட்ட விகிதமான சாதனவிடயத்திற் கூட பண்டவிலையிலிருந்து சாதனவிலையை அனுமானிக்கலாம்.

மதுசாரம், அப்பம் என்பவற்றின் விலையைக் கூட சப்பிளை தேவை என்பவற்றைக் கொண்டே நிச்சயிக்கவேண்டும். அத்துடன் எவ்வளவு வருமானம் பசிகொண்ட தொழிலாளருக்குச் செல்கிறது ; எவ்வளவு வருமானம் தாகங்கொண்ட எந்திரச் சொந்தக் காரருக்குச் செல்கிறதென்பதிலும் ஓரளவு தங்கியிருக்கிறது. அத்துடன் ஆரம்பத்தில் சாதனங்கள் எவ்வளவு சப்பிளை செய்யப்பட்டன என்பதிலும் தங்கியிருக்கிறது. உதாரணமாக நாம் 200 எந்திரங்களோடும் 300 தொழிலாளரோடும் வேலையை ஆரம்பித்தோமெனக் கொள்வோம். அப்போது விளையும் பொதுச் சமநிலையைச் சுருக்கமாகக் கூறுவோம். 1 : 1 விகிதத்தில் சாதனங்களைப் பயன்படுத்தி. அதாவது 200 க்கு 200 போட்டு ஆரம்பித்தால், அவை எல்லாம் பூரணமாகப் பயன்படுத்தப்படவேண்டுமென்று விரும்பினேமானுல், அவையெல்லாம் மதுசார உற்பத்தியிலேயே ஈடுபடுத்தப்படவேண்டும். அப்பம் உற்பத்தி செய்யமுடியாது. இருந்தும் எமது சாதனங்கள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே நமது சாதனமொத்தம் 1 : 2 விகிதத்திலிருந்தால் (200 எந்திரம், 400 தொழிலாளர்) நாம் அப்பத்தைத் தவிர வேருென்றும் உற்பத்தி செய்யமாட்டோம். ஆனுல் நாம் இடைவிகிதத்தில் 200 : 300 இல் ஆரம்பிக்கிறேம். அப்போது நமது எந்திரங்களை இரண்டு தொழில்களுக்குமாகப் பாதி பாதியாகப் பிரிக்க வேண்டும். இரண்டு தொழிலின் சாதனங்களையும் பயன்படுத்தி 100 அலகு மதுசாரத்தையும் 100 அலகு அப்பத்தையும் உற்பத்திசெய்வோம். இந்தப் பண்டங்களின் சப்பிளைவிலையானது போட்டியினுலேயே நிச்சயிக்கப்படும். பண்டங்களிடையிலும் சாதனங்களிடையிலும் போட்டியுண்டாகும். கடைசியில் மேலே காட்டிய சமநிலைவிலையில் (பண்டம், பணி இரண்டுக்கும்) முடியும்.

www.padippakam.com



அது நிறைவில் போட்டியைப்பற்றிய சந்தர்ப்பங்களைப்பற்றி அதிகம் கூற மாட்டாது. அதாவது (1) அளவு விடயத்தில் சிக்கனம் செய்வதால் சில கம்பெனிகள் அரைகுறையான தனியுரிமைச் சக்தியைப் பெறலாம். (2) தனியொரு கம்பெனிக்குச் சொந்தமான சாதனங்களினால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நுகர்வோர் விசேட விருப்பத்தை வளர்க்கலாம், என்பவற்றைப்பற்றிக் கூறமாட்டாது. இந்தச் சந்தர்ப்பங்களிலே அக்கம்பெனிகள் தனியுரிமை இலாபங்களையோ, தனியுரிமை வாடகையையோ பெறலாம். மற்றக் கம்பெனிகள் போட்டியிட்டாலும் இந்தத் தனியுரிமையை அக்கம்பெனிகளிடமிருந்து எடுத்துவிடமுடியாது. இயல்பாகவேயுள்ள அருந்தலோடு செயற்கையாக உண்டாக்கப்பட்ட அருந்தலும் சேர்க்கப்படும். இஃது எதனாலுண்டாகிறது ? சிலர் பண்டங்களை வேண்டுமென்றே சந்தையில் விடாமல் வைத்திருப்பர். விட்டால் சந்தை நிலை குழம்பிவிடும் என்பது அவர்களுடைய கருத்து.

**அனுபந்தத்துக்குச் சுருக்கம்.**

1. உணவானது நிலம், தொழிலாளர் என்ற இரண்டு சாதனங்களால் உற்பத்தி செய்யப்படும் சாதாரணமான உலகிலே 1 அலகு நிலத்தின் சொந்தக் காரருக்குத் தேவைப்படும் தொழிலாளர் கோடு, தொழிலாளரின் வீழ்ச்சியுறும் இறுதிநிலை உற்பத்திக் கோட்டுக்குச் சமமாயிருக்கும். 1000 சதுர மைலில் ஒவ்வொரு சதுரமைலுக்கும் தேவைப்படும் தொழிலாளர்தேவையை 1000 முறை பெருக்கியதே மொத்தத் தேவையாகும். தொழிலாளரின் சப்ளைக்கோடு தேவைக் கோட்டை வெட்டும் இடமே சம்பளச் சமநிலையும், தொழிலாளர் தொகையின் சமநிலையுமாகும். விளைவிலே தொழிலாளருக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம் போக எஞ்சியது வாடகை. தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்திப் படத்திலே வாடகை முக்கோணவடிவாயும் சம்பளம் நீள்சதுரவடிவாயுமிருக்கும்.

2. இடைக்கால நூல்கள் சாதனங்களை ஒரே அளவாகப் பயன்படுத்தலாமெனக் கூறும். தொழிலாளர் தொகையை மாருமல் வைத்துக் கொண்டு நிலத்தைச் சேர்க்கலாம். கொடுக்கப்பட்ட ஒரு வாடகையிலே தொழிலாளருக்கான நிலத்தேவையானது நிலத்தின் இறுதிநிலை உற்பத்தியினுல் எல்லைப்படுத்தப்படும். ஒவ்வொரு தொகுதித் தொழிலாளரினதும் நிலத்தேவையைப் பெருக்கினுல் மொத்த நிலத்தேவையின் தொகையை அறியலாம். பெருக்கும் அளவு மொத்தத் தொழிலாளர் தொகையைப் பொறுத்ததாகும்.

நிலத்துக்குரிய சப்ளை தேவை என்பவற்றிடையுள்ள சமநிலையானது பாரிசேடமுறையினுல் என்ன இறுதிநிலை உற்பத்தி வாடகை நிலத்துக்குக் கிடைத்ததோ அதே வாடகையையே கொடுக்கும். இல்லாவிட்டால் (அ) நிலச்சொந்தக்காரர் தொழிலாளரை வேலைக்கமர்த்துகிருர்களா, தொழிலாளர் நிலத்தை வாடகைக்கு அமர்த்துகிருர்களா என்பனவெல்லாம் அக்கறையற்ற விடயமாக இருந்திருக்கமாட்டா.

www.padippakam.com



3. பல பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டால், பல பண்டங்களுக்குள்ளே விசேடப் பதிலீடு செய்வதற்கு அப்பாற்செல்லலாம். சென்று அருந்தலான ஒரு சாதனத்தை எடுத்துக் கொள்ளலாம். இதனோடு இப்போது பண்டத் துக்கிடையே பதிலீடு செய்தல் நுகர்வோனால் நடைபெறும். அவன் தற் போது அருந்தலாயுள்ள பண்டங்களைக் குறைவாக வாங்குவான். ஒறுப் பான சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்துவான் ; இப்போது மலிவாயு யுள்ள பண்டங்களை வாங்கி அவற்றை குறைவாகவே பயன்படுத்துவான். ஒவ் வொரு தொழில்முறையிலும் சாதனவிகிதம் நிலையாக்கப்பட்ட சந்தர்ப்பங் களிலும் இந்தப் பண்ட விலை வித்தியாசங்கள், சாதனங்களின் சப்பிளை நிலைமைகளோடு சேர்ந்து பகிர்வுத்தன்மையின் நிலையை நிச்சயிக்கலாம். எனவே போட்டிச் சப்பிளை தேவை என்ற கொள்கை இறுதி நிலை உற்பத்திக் கொள்கையைக் கடந்து நிற்குமேயல்லாது அதற்கு மறுதலையாயிருக்காது.

4. "அளவுக்கு ஏற்றவாறு உற்பத்தியைப் பெருக்குதல்" என்ற தொழில் நுட்பப் போக்கு இல்லாத பட்சத்திலே சுதந்திரப் போட்டி தன்னையே சீர்ப்படுத்தி இயங்கும். சமூகத்தின் எவ்வாறு உற்பத்தி செய் வது என்ற பிரச்சினையை போட்டிவிலை நல்லமுறையில் தீர்த்து வைக்கும். ஆனால் இந்தவகையான தீர்ப்பு எவ்வளவு தூரம் நன்மைபயக்கு மென் பதைப்பற்றி மதிப்புக் கூறுவதானால் உற்பத்திச் சாதனங்களின் உடைமை பற்றிய ஒழுகலாற்று மதிப்புக்களை யாராவது நிச்சயிக்கும்வரை கூறமுடி யாது.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்.**

1. இறுதிநிலை உற்பத்திக் கோட்டிலிருந்து மொத்த உற்பத்தியை எவ்வாறு அறியலாம் ? தொழிலாளர் பூச்சியமாயிருக்கையில் மொத்த உற்பத்தி பூச்சியமாயிருந்தாலொழிய இஃது உண்மையாயிராதென்பதைக் காட்டுக.

2. "அளவு ஒத்திருந்தால் விளைவு ஒத்திருக்கும்;" அதாவது ஒரே அளவான உள்ளீடு அதே அளவான வெளியீட்டைக் கொடுக்கும். அளவுக் கேற்றபடி அதிகரித்துச்செல் விளைவு என்றால் என்ன? அளவுக்கேற்றபடி குறைத்துசெல் விளைவு என்றால் என்ன? குறைந்து செல்விளைவு விதிக்கும், அளவு ஒத்திருந்தால் விளைவு ஒத்திருக்கு மென்பதற்கும் வித்தியாசமில்லை என்பதைக் காட்டுக.

3. வெளிநாடுகளிலே சம்பளவீதம் 1,000 டொலரிலிருந்து 1,500 டொலராக உயர்ந்தது. தொழில், வாடகை, மொத்த உற்பத்தி முத லியவற்றின் புதிய சமநிலை மட்டத்தை வருணிக்க. உலகச் சம்பள மட்டம் மாறாவிட்டாலும், குடியேற்றத்தைத் தடைசெய்தால் இதே நிலைமையை ஏற்படுத்தலாம். குடியேற்றத்தை எந்த அளவுக்குத் தடைசெய்ய வேண் டும் ?

www.padippakam.com



4. நிலமும் தொழிலாளரும் நெகிழ்ச்சியற்ற சப்பிளையுடையவாயிருக்கின்றன என்று கருதுவோம். அப்போது ஒவ்வொரு சாதன விளைவும் தனி வாடகையாகும். இதனுலுண்டாகும் சமநிலை, நிர்ணயிக்குந் தன்மையுடையதா ? ஏன் ? எந்த மட்டத்தில் ?

5. சாதனங்களிடையே தொழில் நுட்பப்பதிலீடு என்ருலென்ன ? உதாரணம் தருக. பண்டங்களுக்கிடையிலுள்ள பதிலீடுகளென்ருலென்ன ? பலவகைப்பண்டங்கள், சாதனங்களைப் பல்வேறு அளவுகளில் பயன்படுத்தும்போது ஒரு சாதனத்தில் அதிகரிப்பு ஏற்படுமாஞல் அதையே அதிகமாகப் பயன்படுத்தத் தூண்டும் ; இது விசேட தொழில்நுட்பப் பதிலீட்டுத்தன்மையில்லாவிட்டாலும் நிகழும். இதை விளக்குக.

6. மூன்று உற்பத்திச் சாதனங்களிருந்தால் என்ன ஆகும் ?

7. இரண்டு சாதனங்களில் ஒன்று எச்சத்தை விளைவிக்கும் என்பதைக் காட்டுக. இந்த எச்ச விளைவை, சாதனத்தின் இறுதிநிலை உற்பத்தி என்று ஏன் கொள்ளலாம் என்பதை விளக்குக (குறிப்பு : குறிப்பிட்ட ஒரு தொகைத் தொழிலாளர், நிலத்துக்கான குறிப்பிட்டதொரு சந்தை வாடகை எதிர்ப்பட்டால் என்ன செய்வார் என்பதைக் கவனிக்க. தொழிலாளர் என்ற நிலையான வாடகைச் சாதனமும், நிலம் என்ற மாறும் நிலையிலுள்ள வாடகைக்கு எடுத்த சாதனமும் இருந்தால் ஒரே முடிவான விளைவும், சாதனவிலைச் சமநிலையும் உருவாகும் என்பதைக் காட்டுக. புதிய முக்கோணம், நீள்சதுரம் முதலியவற்றைக் கொண்டு விளக்குக.

8. ஓர் ஆடு எப்பொழுதும் 100 இருத்தல் இறைச்சியையும் 5 இருத்தல் கம்பளியையும் கொடுக்கிறது. அதை வளர்க்க 10 டொலர் செலவு என்று வைத்துக்கொண்டால், இந்தச் சேர்க்கைப்பொருள்களின் விலை அவற்றுக்குரிய தேவையைப் பொறுத்து 2 டொலர் கம்பளிக்கும் 0 டொலர் இறைச்சிக்கும் என்பதிலிருந்து 0 டொலர் கம்பளிக்கும் 10 சதம் இறைச்சிக்கும் என்பதற்கிடையில் ஊசலாடும் என்பதைக் காட்டுக. மற்ருெரின ஆடும் வளர்க்கப்படுகிறது. அது 100 இருத்தல் இறைச்சியையும், 6 இருத்தல் கம்பளியையும் கொடுக்கிறது. அதை வளர்க்க 11 டொலர் செலவாகிறது. இது விலையை நிச்சயமாக்கிவிடுமென்பதைக் காட்டுக.

(குறிப்பு : இரண்டு இனத்தையும் பயன்படுத்திஞல் கம்பளி இருத்தல் 1 டொலருக்கு விற்கும். ஏன் ? இறைச்சியின் விலை என்ன ?)

9. பின்வரும் கருத்துக்களை ஞாபகப்படுத்துக :

உற்பத்திச் சார்பு

விகிதமும் அளவும்

குறைந்து செல் இறுதிநிலை உற்பத்தி, MP, MP ஒரு சாதனத் தேவைக்கோடு.

எச்ச முக்கோணமும், MP யின் நீள்சதுரப் பரப்பும் சேர்ந்து மொத்த உற்பத்தியாகும். MP யும் மிச்சமுறை வழியும்.

பண்டத்திடைப்பதிலீடு, பண்டத்துள் பதிலீடும்.

படிப்பகம்

www.padippakam.com

# இருபத்தெட்டாம் அத்தியாயம்

## போட்டிச் சம்பளமும் கூட்டுப் பேரமும்

*தொழிலாளிக்கேற்ற கூலி.*

*—புதிய ஏற்பாடு*

மனிதன் பொருளியற் பரிபாஷையில் ஒரு பண்டமானாலும், அவன் அதற்குப் பலபடி உயர்ந்தவன். மனிதர் தமது தொழிற்சக்தியை, அதாவது உழைக்குந் திறனைக் கூலிக்கு விற்றுவிடுகிறார்கள். இவ்வாறு கொடுக்கும் விலையே கூலி. எல்லா விலைகளிலும் இதுவே மிக முக்கிய மானது. குடும்ப வருமானத்தை நிர்ணயிக்கும் ஒரே ஒரு சாதனம் இந்தக் கூலியே. விவசாயிகளிற் பெரும்பாலோருடைய வருவாயும், கூட்டுக் கம்பெனியாகாத தொழில்களின் வருவாயும் உண்மையில் தொழிற் கூலி யாகவே அமையும். அப்போது கூலிகள் தேசீய வருமானத்தில் 80 வீதமாக அமையுமெனக் கொள்ளலாம்.

காப்பியின் விலையும் தட்டச்சு நாடாவின் விலையும் மாறினால் நாம் அதைப்பற்றி அதிகம் அக்கறைகொள்ளமாட்டோம். நமது பொது நலத்தை அது மிக அற்பமாகவே பாதிக்கும். ஆனால் எனது சம்பளத்தை 5 வீதம் குறைத்தால் நான் சாந்த நிலையிலிருந்து மாறி அழுமூஞ்சியாகிவிடு வேன். சம்பளம் மக்களுடைய உணர்ச்சியைத் தூண்டக் கூடியது. எனவே சம்பளத்தின் தன்மையை உளவியலறிஞரும் ஆராயலாம்; பொருளிய லறிஞரும் ஆராயலாம். சம்பளங்களின் சமூக முக்கியத்துவம், பொரு ளியல் முக்கியத்துவமுடையது. தொழிற் சந்தையை ஆராயும் மாணக்கர் இதை எப்போதும் கருத்திலே கொள்ள வேண்டும்.

### சம்பள மட்டமும், வித்தியாசங்களும் :

சம்பள விகிதங்களில் பெரிய வித்தியாசமுண்டு. சராசரிச் சம்பளம், சராசரி மனிதனைப் போலவே வரைவிலக்கணம் கூறுவதற்குக் கடினமான விடயம். மோட்டார் கம்பெனி நிர்வாகி ஒருவர் வருடத்துக்கு 500,000 டொலர் உழைக்கலாம். எழுத்தாளர் ஒருவர் 4,000 டொலர் உழைக் கலாம். விவசாயிக்கு 2,000 டொலர் கிடைக்கலாம். ஒரே தொழிற்சாலையில் தொழில் நுட்பம் தெரிந்த ஒரு தொழிலாளி ஒரு வாரத்துக்கு, 150 டொலர் உழைக்கலாம். தொழில் நுட்பப் பயிற்சியில்லாத சாதாரணத் தொழிலாளி 75 டொலர் உழைக்கலாம். சம்பளக் கொள்கைபற்றிய எந்த ஓர் அறிமுறையும் இந்த வித்தியாசங்களை விளக்கவேண்டும்.

இந்தச் சம்பள வித்தியாசங்கள் முக்கியமானவையே. இருந்தும் பொதுச் சம்பள மட்டம் பற்றிய பிரச்சினையைக் கருத்திற் கொள்ளவேண்டியது அவசி யம். அரை நூற்றாண்டுக்கு முன்னிருந்த கூலிவிகிதங்களிலும் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com



இப்போதுள்ள கூலிவிகிதம் அதிகம். ஐரோப்பாவிலுள்ள தொழிலாளர் சம்பளத்திலும் பார்க்க அமெரிக்காவில் உள்ள சம்பளம் உயர்வானது. ஆசியாவில் உள்ளதிலும் பார்க்க ஐரோப்பிய சம்பள விகிதம் உயர் வானது. இத்தகைய மூலாதாரமான தகவல்களை அறிவதற்குப் பொரு ளியல் உதவி புரிகிறது.

போட்டி நிலைகளிலே சம்பளங்களை நிர்ணயிக்க உதவி புரிவது எது ? இந்தப் பிரச்சினையையே நாம் முதலில் ஆராய்வோம். பின்னர் இந்த அத்தியாயத்தின் (ஆ) பகுதியில் போட்டி நிலைகளிலிருந்து பிறழும் தன்மைகளாலுண்டாகும் விளைவை ஆராய்வோம். பின்னர் தொழிற் சங்கங்களும் முதலாளிகளும் செய்யும் கூட்டுப் பேரத்தின் பொருளியற் தன்மையை ஆராய்வோம்.

**(அ) நிறைபோட்டியில் சம்பளம் நிர்ணயித்தல் :**

**ஒரே தன்மையான தொழிலுக்குச் சமமான சம்பளம்.** திறமை, முயற்சி முதலிய விடயங்களில் சமமாயுள்ள தொழிலாளர் வகுப்பிற்குக் கொடுக்கும் சம்பளம் பற்றிய உதாரணத்தை முதலில் ஆராய்வோம். போட்டியில் இந் தச்சம்பளம் எல்லாம் சமமாகவேயிருக்கும். ஒருவனுக்குக் கொடுக்கும் சம்பளமே மற்றவனுக்கும் கொடுக்கப்படும். எந்தத் தொழிலாளியும் மற்றவனினும் பார்க்கத் தனக்கு அதிகம் சம்பளம் கொடுக்குமாறு கேட்கமாட்டான்.

இந்தத் தனிச் சந்தைச் சம்பளம் எவ்வாறு நிச்சயிக்கப்படும் ? இந்தத் தொழிலாளர்க்குரிய சப்ளை தேவைக் கோடுகளை அறிந்தால் (படம் 1 *a* ஐப் போல) போட்டிச்சமநிலைச் சம்பளம் E யிலிருக்கும். அதுவே கோடு கள் வெட்டும் தானம். சம்பளவிகிதம் E யிலும் அதிகமாக இருந்தால் தொழிலாளர் மேல்மிச்சமாகக் கிடைக்கக்கூடியதாயிருப்பதால் சம்பள விகிதம் குறையும். E க்குக் கீழே சம்பளவிகிதமிருந்தால், மனமடி வுற்ற சில முதலாளிமார் சம்பளத்தை உயர்த்திச் சம நிலையைக் கொண்டு வரப் பார்ப்பார்.


நாம் நிசச் சம்பளத்திலேயே அக்கறையுடையோம். நிசச் சம்பளம் என்றால் அதன் வாங்கும் சக்தியேயன்றி, பணத்தின் தொகையன்று. எனவே, நமது உதாரணங்களிலே சம்பளத்தைப் பண அலகிலே காட்டு கிறோம். இந்த அலகுகளின் வாங்கும் சக்தி குறித்த ஓரிடத்திலே குறித்த ஒரு வருடத்திலே (உதாரணமாக 1939 ஆம் ஆண்டு அமெரிக்க டொலர் கணக்கிலோ 1961 ஆம் ஆண்டு டொலர் கணக்கிலோ வாங்கும் சக்தித் கணக்கில்) உள்ள மட்டத்தில் நிரந்தரமாய்க் கொள்ளப்படுகிறது. வரை விலக்கணப்படி, நிசச்சம்பளத்தின் சூசிகை, நிசமான பணச் சம்பளத்தை விலை மட்டத்தின் சூசிகையினால் பிரித்ததைக் காட்டும். (உதாரணம் : 1946 துவக்கம் பணச்சம்பள வீதம் இரட்டித்தது. ஆனால் அக்காலத் திலே விலைகள் 50 சவீதமாக உயர்ந்தபோதும் நிசச் சம்பளங்கள் 1/3 ஆகவே உயர்ந்தன. அதாவது $200/150 = 1\frac{1}{3}$)

www.padippakam.com



**வாய்ப்பான வளங்களும், தொழில்நுட்ப விளைவுகளுமே அமெரிக்காவின் உயர் சம்பளத்துக்குக் காரணம்.**

ஒப்பீட்டளவிலே சம்பள விகிதங்கள்




**படம் 1.** *அமெரிக்காவில் ஐரோப்பாவிலும் பார்க்க அதிக சம்பளம் நிலவுகிறது. அதனை நிச்சயப்படுத்துவன சப்பிளையும் தேவையுமே.*

படம் 1*a* அமெரிக்காவிலுள்ள நிலைமைகளையும், 1*b* ஐரோப்பாவிலுள்ள நிலைமைகளையும் காட்டுகின்றன. ஐரோப்பாவிலும் பார்க்க அமெரிக்காவிலே சம்பளம் உயர்வாயிருப்பதற்குக் காரணமென்ன ? தமது நாட்டிலே தொழிற்சங்கங்களிருப்பதும் ஐரோப்பாவில் அவை குறைவாயிருப்பதுமே காரணமா ? அல்லது அமெரிக்காவில் உயர்ந்த வகையில் குறைந்த பட்சச் சம்பளம் சட்டப்படி விதிக்கப்பட்டுள்ளதே காரணமா ? இத்தகைய காரணங்கள் இலேசாக்கப்பட்ட நமது போட்டியுலகிலே கணக்கில் எடுக்கப்படாது தவிர்க்கப்பட்டன. இனுல் உண்மையானவிடை, அமெரிக்காவிலுள்ள சப்பிளை, தேவையென்பன ஐரோப்பாவிலும் பாக்கச் சிரான நிலையிலிருக்கும் காரணமேயாகும்.

அமெரிக்காவிலே சப்பிளையும் தேவையும் உயர்ந்த சம்பளத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு ஏன் அமைந்துள்ளன? இந்த அட்டவணைக்குப் பின்னுல் அடங்கியுள்ள விடயமென்ன ?

## தேசிய வளமும் உயர்ந்த விளைதிறனும்

தருவிக்கப்பட்ட தொழிலாளருக்கான தேவை அட்டவணைகள் கீழ் நோக்கிச் சரிவதை முதலிலே கவனிக்க வேண்டும். குறைந்துசெல் விளைவு விதிப்படி அமெரிக்க நிலவளம் முதலியவற்றுக்கு மேலும் மேலும் தொழிலாள

www.padippakam.com



ரைப் போட்டு உற்பத்தியை நடத்திஞல் தொழிலாளரின் உற்பத்திச் சக்தி குறைவதோடு சம்பளங்களும் குறையும். ஆஞல் அமெரிக்கச் சனத் தொகை பெருகுகிறதென வைத்துக் கொள்வோம். அப்போது படம் 1a யிலுள்ள SS கோடு வலப்பக்கமாகச் சரியும். அப்போது சம்பள மட்டம் ஐரோப்பிய மட்டத்துக்கோ அதற்குக் குறைவாகவோ இறங்கலாம்.

பொருளாதாரப் பூமிசாத்திரத்துறையிலே அமெரிக்க உயர் சம்பளத் துக்கானதொரு காரணத்தைக் காணலாம். வேலையிலீடுபட்டிருக்கும் நமது குடிசனத் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து நமக்கு நிலம், நிலக்கரி, இரும்பு, எண்ணெய், நீர்ச்சக்தி என்பன அதிகமாயிருக்கின்றன. தற்காலக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான மிகமுக்கியமான இவ்வளங்களின் ஆள் வீத சப்பிளை ஐரோப்பாவிலே குறைவாயிருக்கிறது. மற்ற நாடுகளிலே இதனிலும் குறைவாயிருக்கிறது.

## தொழில்நுட்பம், மூலதனம், உயர் விளைதிறன்

ஆஞல் பொருளாதாரப் பூமிசாத்திரம் முழுக்காரணத்தையும் கூற வில்லை. இயற்கை வளத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு பிரதேசங் கள் ஒரேமாதிரி இருக்கலாம். ஆஞல் ஒரு பிரதேசத்திலே தொழில் நுட்ப சாதனங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதஞல் அதனுடைய உற் பத்தியும் நிசச்சம்பளமும் மற்றப் பிரதேசத்திலும் பார்க்க அதிகமா யிருக்கலாம். உயர்வான தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதால், அறிமுறை சிறப்பானதாயிருக்கும், விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் முறை சிறப்பானதாயிருக்கும் ; பொருளாதார விதிகள், வழக்கங்கள் சிறப்பா னவையாயிருக்கும். நிர்வாக முறை சிறப்பானதாயிருக்கும். இவற்றேடு ஏராளமாக மூலதனப் பொருள்களும், எந்திர சாதனங்களும், தளவாடங் களும் சிறப்புடையனவாயிருக்கும்.

## தொழிலாளர் சப்பிளை சம்பந்தமான கட்டுப்பாடும், குடிவரவும்

அப்படியாஞல் ஐரோப்பியர் உயர்சம்பளத்தைப் பெறும் நிலைமையை ஏன் ஏற்படுத்தக்கூடாது? இதற்கு நமது சரித்திர நூல்களிலிருந்து விடை பெறக்கூடியதாயிருக்கிறது. முதலாவது மகா யுத்தத்துக்கு முந்திய 300 ஆண்டுகளாக வேறு நாடுகளிலிருந்து மக்கள் அமெரிக்காவுக்குப் பெரு வாரியாக வந்து குடியேறினர். சிலர் சமய சுதந்திரத்தை அனுபவிப்பதற் காக வந்தார். பலர் நமது அரசியல் முறையை விரும்பி வந்தனர். மிகப் பலர் தமது பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கமாக வந்தார்கள்.

முதலாம் மகாயுத்தத்தின் பின்னர் இக்குடியேற்றத்தைத் தடுக்கும் முறையில் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்பின்னர் மிகக் குறைவானவரே குடியேற அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு கட்டுப் பாடுசெய்தற்கு முக்கிய காரணம் பொருளாதாரமன்று ; சமூகப் பிரச்சினை யேயாகும். முதலாவது மகாயுத்தத்துக்கு முன்னர், ஐரோப்பாவின் தெற்

படிப்பகம்

www.padippakam.com



குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலுமுள்ளவர்களே பெரும்பாலும் குடியேறினார்கள். அதன்பயனுக ஏற்பட்ட அரசியற் காரணமாக எல்லாவகையான மக்கள் விடயத்திலும் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. மேற்கு ஐரோப்பிய மக்கள் விடயத்திலே சலுகை காட்டப்பட்டது. இங்கிருந்துதான் ஆதியில் பல மக்கள் வந்து குடியேறினர்.

சம்பளச் சந்தையிலே சுதந்திரமான போட்டி நிலவிவருவதில் நாம் தலையிட்ட முதல் உதாரணம் இதுவேயாகும். தொழிலாளர் சப்பிளையைக் குறைத்தபடியினுல் குடியேற்றக் கொள்கை சம்பளத்தை உயர்த்த வழி வகுத்தது. இந்த அடிப்படைக் கொள்கை வற்புறுத்தப்பட வேண்டிய தொன்றுகும். எந்த ஒரு தொழிற்றெகுதியின் தொழிலாளரைக் கட்டுப்படுத்தினுலும் அதனுடைய சம்பள விகிதம் உயரும் என எதிர்பார்க்கலாம். சப்பிளை உயர்ந்ததால், மற்றவிடயங்களெல்லாம் சமமாயிருக்கையில், சம்பள விகிதம் இறங்கும்.

**அதிகரிச்செல் விளைவு சம்பந்தமான எதிர்ச்சட்டம்**

இந்தக் கட்டத்திலே குறைந்து செல் விளைவு விதி பற்றி மிகைபடக்கூறக் கூடாது. ஓரளவுக்கு இதற்கு மாறுன ஒரு விதியுமுண்டு. அது அதிகரித்துச் செல் விளைவு விதி. இதனைப் பெருவாரி உற்பத்தி எனலாம். நமது நாடு சுதந்திர வியாபாரமுள்ள நாடு. அமெரிக்காவின் சுபீட்சத்துக்குரிய ஒரு காரணம் இதுவே. தற்காலத் தொழில் நுட்ப முறைகளுக்குப் பெரிய எந்திரத் தளவாடங்கள் அவசியம். பெருவாரி உற்பத்தியின் பயனைப் பெறுவதாலுல் தினமும் 1000 மின்சாரக்குளிர்ப் பெட்டிகளை உற்பத்தி செய்ய வேண்டும். எனவே, ஐரோப்பாவில் நிலவிய வியாபாரத் தடைகளிடையே, பெல்ஜியம் போன்ற சிறிய நாடு, ஒரு மாதத்திற்கூட ஆயிரம் குளிர்ப் பெட்டிகளை விற்க முடியாததால், திறமையானதோர் உள்நாட்டுத் தொழிலை நிலைநிறுத்த முடியாதிருந்தது.

மற்றோர் உதாரணத்தைக் கவனிப்போம். மோட்டார்த் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள். ஜெனரல் மோட்டார், கிறிஸ்லர், போட் என்ற கம்பெனிகள் பெருவாரி உற்பத்தியைச் செய்வன. சிறிய தனிக் கம்பெனிகளும்,பெரிய கம்பெனிகளிடமிருந்து உதிரிப்பாகங்களை வாங்குவதனுலேயே திறமையுடையனவாயிருக்கின்றன. ஆனுல் பெருவாரியான சிக்கனத்தை ஏற்படுத்துவதற்கு ஸ்ருடிபேக்கர், பக்காட் என்பவை ஒன்றுசேர வேண்டியதாயிற்று. ஹட்சனும், நாஷ் கம்பெனியும் ஒன்று சேரவேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் நிகழும் புதிய பொதுச் சந்தையினுல், தமக்குப் பெரிய சந்தையும், கார்விற்பனையும் உண்டாகுமென ஐரோப்பாவின் கார் வியாபாரிகள் கருதுகின்றனர்.

1960 ஐ அடுத்த ஆண்டுகளிலே நமது குடிசனத்தொகை 1000 இலட்சமாகக் குறைந்தால் ஐக்கிய அமெரிக்கா சுபீட்ச நிலை அடையுமா ? என்ற

www.padippakam.com



கேள்வி எழுகிறது. குறைந்துசெல் விளைவு நியதியை ஆராய்வின்றிப் பிரயோகித்தால், ஒருவேளை நீர் இக் கேள்விக்கு "ஆம்" என்று விடையளிக்கலாம். ஆனால் உயர்ந்து செல் விளைவு விதி என்ற நியதியை அனுசரித்துப் பார்த்தால் இந்த வினவுக்கு விடை கூறுவதில் ஐயப்பாடுண்டு. முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் குடிசனப் பெருக்கம் திடீரென அதிகரித்திருப்பதைப்பற்றி நாம் விசாரப்படுகிறோமா ? வெளிநாடுகளிலிருந்து தடையின்றி மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியுமானால் இந்த விசாரமிருக்காதெனக் கூறலாம்.

யுத்தத்துக்குப் பின்னர் ஐரோப்பாவில் குடிசனத் தொகை அளவுக்கு மிஞ்சி உயர்ந்துவிட்டதா ? சில விவசாயப் பிரதேசங்களில் இஃது உண்மையே. இராணுவப் பாதுகாப்பு, பொதுநலம் என்பவற்றைக் கணக்கில் எடுக்கும்போது ஐக்கிய ராச்சியம் தனது உணவின் பெரும்பகுதிக்குத் தனது விவசாயத்திலேயே தங்கியிருக்க வேண்டும். அப்படியான நிலைமையேற்பட்டால் குடிசனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதனால் ஆள்வீத சுபீட்சம் அதிகரிக்கும். உலக வியாபாரம் சமாதான முறை அமைப்பில் மறுபடியும் தாபிக்கப்பட்டால், ஐரோப்பியப் பட்டணங்களிலிருந்து மக்களை அவுஸ்திரேலியப் பட்டணங்களுக்கும், கனேடியப் பட்டணங்களுக்கும் குடியேறச் செய்வதால் அதிக நன்மையுண்டாகுமா ? இதற்குப் பதில் எவரும் சொல்ல முடியாது. அதிலிருந்து இக் கொள்கையால் அதிகப் பயன் கிடையாதென்பது தெரிய வருகிறது.

**வாய்ப்புள்ள குடிசனத் தொகை என்ற கொள்கை**


இவற்றிலிருந்து நாம் உருசிகரமானதொரு குடிசனக் கொள்கையை அனுமானிக்கலாம். இரண்டு நிலைமைகளாலும் வரக்கூடிய நன்மைகளை நாம் பயன்படுத்தினாலென்ன ? உயர்ந்து செல் விளைவு, குறைந்து செல் விளைவு இரண்டையும் பயன்படுத்தினாலென்ன? உயர்ந்துசெல் விளைவு முடியும் நிலைக்கும், குறைந்து செல் விளைவு ஆரம்பிக்கும் நிலைக்கு முள்ள தானம்வரை குடிசனப் பெருக்கம் வளராவிட்டால் என்ன ? இந்தத்தானம் நிசமான சம்பளம் அல்லது நிசமான வருமானம் என்பதன் உயர்ந்த மட்டத்தை அளிக்கும். இதனை "வாய்ப்புள்ள குடிசனத்தொகை" என வழங்குவர். உற்பத்திக்கோட்டின் உச்சியில், வாய்ப்புள்ள குடிசனத்தொகை எவ்வாறு வரையறுக்கப்படுகிறதென்பதை படம் 2 காட்டுகிறது.

உயர்ந்து செல்விளைவு, குறைந்து செல்விளைவு என்பவை சம்பந்தமான நிசமான தொகை என்ன என்பதை எந்தப் பொருளியலாளரும் அறிய மாட்டார். அமெரிக்கராகிய நாம், குடியேற்றம் அதிகரிப்பதையும், குடிசனத் தொகை அதிகரிப்பதையும் வரவேற்போம். அல்லது நமது நாட்டின் வாய்ப்புள்ள குடிசனத் தொகை நிலையை நாம் கடந்துவிட்டோமா? முக்கியமான இக்கேள்விகளுக்கு விடை எவருக்குந் தெரியாது.

www.padippakam.com



**குடிசனத்தொகை மிக அதிகமாகவோ மிகக் குறைவாவோ இல்லாத போது வருமானம் ஓர் உச்சத்தை அடையும்.**




**படம் 2.** *தனிநபருக்குரிய குறைந்து செல்விளைவு ஆரம்பிக்கும் தானத்திலே தனிநபருக்குரிய வெளியீடு உச்சமாயிருக்கும்.*

**சம்பளம் பற்றிய இரும்பு விதி : மால்தசும், மாக்சும்**

இந்த நூலின் இரண்டாம் அத்தியாயத்திலே குடிசனப் பெருக்கம் சம்பந்தமான மால்தசின் கொள்கையைப்பற்றிக் குறிப்பிட்டோம். அக்கொள் கையின்படி படம் 1*a* யில் தொழிலாளர்க்கான நீண்ட சப்பிளைக் கோட்டைக் கிடைநிலையாகக் கீற வேண்டும். இதனைச் சம்பளமட்டத்தில் கீற வேண்டும். கீழ்த்தரமான சீவன மட்டத்திற்குப் பொருத்தமாகக் கீறவேண்டும். இந்த மட்டத்திலே சனங்கள் இனப் பெருக்கத்தை மாத்திரம் மேற்கொள்வர். ஒன்றரை நூற்றுண்டுக்கு முன்னர், பொருளியலை மந்தமான அறிவிய லென்று கூறினர். அதற்குக் காரணம், சம்பளங்கள் உயிர்வாழ்வதற்கு மாத்திரம் போதுமான நிலையை நோக்கிச் செல்லுகின்றனவென்று பழைய பொருளியலறிஞர் கருதினமையே. வாழ்க்கைத்தரம் உயர்தலுக்கான ஆராய்ச்சியைச் செய்தபோதும், இறப்புக்கு அதிகமாகப் பிறப்புண்டாவதால் குடிசனத் தொகை அதிகரிக்கும் நிலையை ஆராய்ந்தபோதும், நெடுந் தவணைத் தொழிலாளர் சப்பிளைக் கோட்டின் மிகக் குறைந்த தொகை, பற்றியகருத்து தற்கால மேற்கு நாடுகளுக்கு எதார்த்தமானதொன்றன்று என்பதைக்கண்டோம்.

www.padippakam.com



சம்பளத்தின் இரும்பு விதி சம்பந்தமான மற்றொரு கூற்றைக் காள்-மாக்ஸ் வழங்கினர். "வேலையற்றிருப்போரின் சேமப்படை" என்ற கொள்கையை அவர் அதிகமாக வற்புறுத்தினர். முதலாளிகள் தமது வேலையாட்களைத் தொழிற்சாலைகளின் யன்னலிலே கொண்டுபோய் நிறுத்தி, வாசலில் வந்து குவிந்து நிற்கும் வேலையில்லாதாருடைய தொகையைக்காட்டி, அவர்கள் குறைந்த சம்பளத்துக்கு வேலைசெய்ய ஆயத்தமாயிருப்பதை எடுத்துக் காட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர். இத்தகைய காட்சி, சம்பளத்தை பிழைப்புச் செலவு மட்டத்துக்கு இறக்கிவிடப் போதுமானதென்பதே மாக்ஸின் கொள்கை. இதை நமது படங்களின் மூலம் எடுத்துக் காட்டுவோம். 1*a* படம், படம் 3 ஐப் போலவே திருப்பிக் கூறப்பட்டுள்ளது. சம்பளமானது 1939 ஆம் ஆண்டின் விலையில் மணியொன்றுக்கு 2 டொலர் எனக் கொள்வோம். (இது 1961 ஆம் ஆண்டு விலையில் 5 டொலராகும்) A என்ற தானத்திலே குறிக்கப்பட்ட மட்டத்திலேயே வேலை கொடுக்கப்படும். இந்த உயர்ந்த சம்பள மட்டத்திலே வேலையின்மையிருக்கலாம். இந்த வேலையில்லாத் தன்மையை, சப்பிளை செய்த தொழிலாளர் தொகைக்கும், தேவைப்பட்ட AB இக்கு மிடையிலுள்ள தூரம் காட்டும். நாம் ஆராய்ந்த, இலேசாக்கப்பட்ட போட்டியிலே இத்தகைய வேலையின்மை சம்பளத்திலுள்ள தாக்கத்தை இறக்கும்.

ஆனல் மாக்ஸ் கூறிய முடிபு ஏற்படுமா? படம் 3 இலே காட்டப்பட்ட MM மட்டத்துக்குச் சம்பளங்கள் இறங்குமா? இது மிகக் குறைந்த சீவனத்துக்குரிய சம்பள மட்டமாகும். அப்படியிராது E இலுள்ள சமநிலைக்குக் கீழே நிசச்சம்பளத்தின் வீதம் விழுவதற்கு நியாயமில்லை. மூலதனம், இயற்கை வளம் என்பன நிறைய உள்ள ஒரு நாட்டிலே போட்டி முறையிலே நிச்சயிக்கப்பட்ட இந்தச் சமநிலைச் சம்பளம் வசதியானதொரு சம்பளமாகும். சரித்திரத்திலே காணப்படும் சம்பளங்களிலும் இன்றைய உலகின் பல பாகங்களிலும் காணப்படும் சம்பளங்களிலும் இது வசதியானதாகும். நமது நாட்டிலும் அதிட்டம் குறைவானதொரு நாட்டிலே இந்தச் சம்பள விகிதம் மேலும் குறையலாமென நாம் எதிர்பார்க்கலாம்.

எனவே முக்கியமானதொரு கொள்கையை நாம் அடைகிறோம். தொழிற் சந்தையிலே போட்டியானது நிறைவுடையதாயிருந்தால் சம்பளங்கள் மிகக் குறைந்த சீவன நிலைக்கு வீழ்ச்சியடைவதற்கு அவசியமில்லை.


முதலாளிமார் குறைவான சம்பளம் கொடுக்க விரும்பலாம். ஆனல் அதைப்பற்றிப் பறவாயில்லை. போட்டிச் சந்தையில் அவர்கள் தாம் விரும்பியபடி சம்பளவீதத்தை அமைக்க முடியாது.

முதலாளிமார் தொகை அதிகமாகவும், அவர்கள் தம்முட் கலந்து காரியம் நடத்தாமலுமிருந்தால், எந்தவகையானதொரு தொழிலாளரை அவர்கள் விரும்பினும், அத்தொழிலாளர் தமக்கு ஏற்ற சம்பளத்தை சம நிலைமட்டம்வரை வேண்டிக்கொள்வர். அந்த நிலையிலேதான் மொத்தத் தொழிலாளர் தொகைக்கும் வேலை கிடைக்கும். தொழிலாளர்மேலும்

www.padippakam.com



வேலையில்லாதோர் சேமப்படையின் சக்தியை மாக்ஸ் மிகைப்படுத்திக் கூறினர்:




படம் 3. AB ஆல் காட்டியபடி வேலையில்லாதிருப்போர் சேமப்படை நிசச்சம்பளத்தை MM என்ற குறைந்தபட்ச சீவன மட்டத்துக்குக் குறைக்கவேண்டியதில்லை. இது மாக்ஸின் சித்தாந்தத்துக்கு மாருனது. ஆனல் இது போட்டிச் சம்பளத்தையே A இலிருந்து E இக்கு இறக்கும்.

சம்பளத்தை அதிகமாகக் கேட்கலாம். ஆனல் போட்டி நிலைமை நிலவுவதால் அவர்கள் தாம் விரும்பியதைப் பெற மாட்டார். ஆனல் அதற்குத் தொழிலாளர் சப்பிளையைக் கூட்டு நடவடிக்கையாற் குறைக்கலாம். அப்போது சம்பளம் போட்டி மட்டத்துக்கு மேலாக உயரலாம்.

## குறைந்த நேர வேலையும் குறைந்த தொழிலாளர் தொகையும்

தொழிற் சங்கங்கள் குடியேற்றத்தைத் தடுப்பதற்குக் காரணம் அறிவதாலுல்குறைந்து செல் பயன் விதியைக் கொண்டு அறியலாம். மேலும் (1) வாரத்தில் குறைந்த வேலைநேரங்களையும், வருடத்திலே அதிக ஓய்வு நாட்களையும் அவர்கள் கேட்பதற்கும் (2) சிறுவரை வேலைக்கமர்த்தக்கூடாது வயோதிபரை நேரத்தோடு ஓய்வுபெறச் செய்யவேண்டும். சிலவேலைகளில் பெண்களை வேலைக்கமர்த்தக் கூடாது. (3) விரைவாக வேலை செய்யுமாறு

29—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



நெருக்கக் கூடாது என்ற விடயங்களில் எல்லாம் தொழிற் சங்கங்கள் முயல்வது எதனால் என்பதையும் குறைந்துசெல் பயன் விதியைக்கொண்டு விளங்கலாம்.

## தொழிலாளர் ஆபத்துப் போலி

தொழிலாளரையும் அவர்கள் செய்யும் முயற்சியையுங் கட்டுப்படுத்தத் தொழிற் சங்கங்கள் ஏன் முயல்கின்றன? குறைந்துசெல் பயன் விதிக்கு அஞ்சியே என ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. குறைந்த நேர வேலையைத் தொழிலாளர் விரும்புவதற்கு வேறொரு சக்திவாய்ந்த காரணமுண்டு. அவர்கள் தொழிலாளரிடையே வேலையின்மை உண்டாகுமென அஞ்சுகின்றனர். குறுந் தவணையிலே செய்யக்கூடிய மொத்த வேலை மாறாதிருக்குமெனவும் அவர்கள் நினைக்கின்றனர். அந்நியர் ஒருவரை வேலைக்கமர்த்தினால் என்ன நடக்கும்? அல்லது பெண் ஒருத்தி தொழிற் சந்தையில் தோன்றினால் என்ன நடக்கும்? வயோதிபர் ஒருவர் ஓய்வுபெற மறுத்தால் என்ன? அல்லது தொழிலாளி ஒருவர் மிகத் திறமையோடு வேலை செய்யத் துவங்கினால் என்ன நடக்கும்? அல்லது மனிதனுக்கு பதிலாக இயந்திரத்தைத் தாபித்தால் என்ன? இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் தனது வேலைக்கோ, சீவனத்துக்கோ ஆபத்தையுண்டாக்குமென அவன் நினைக்கிறான்.

இந்த மனோபாவத்தையே பொருளியலறிஞர் சில சமயம் தொழிலாளர் ஆபத்துப் போலியெனக் கொள்வர். விசேடத் தொழிற்றிறமையும் அந்தஸ்தும் உள்ளவர்களும் ஒரே பிரதேசத்தில் நெடுங்காலம் உள்ளவருமான சில தொழிலாளருக்குப் புதிய தொழில்நுட்ப மாற்றங்களைப் புகுத்துவது ஆபத்தையுண்டாக்கலாம். அந்த வகையிற் பார்க்குமிடத்து இந்தத் தொழிலாளர் ஆபத்துப்போலி, அத்துணைப் போலியாய்த் தெரியமாட்டாது. பெரியதொரு வியாபார மந்தமேற்பட்டால், வேலையில்லாத் திண்டாட்டம் பல வருடங்களுக்கு நிலவலாம். அப்போது தொழிலாளர் தொழிற் பஞ்சப் போலிக்கு ஆளாகலாம். ஆனால் தொழிற் பஞ்ச நியாயமானது எந்த ஒரு பொருளியற்றிட்டத்திலும், குறித்த ஓரளவு பயனுள்ள வேலையே உண்டு என்ற கொள்கையே போலிக் கொள்கை. பொருத்தமான நல்ல பணக் கொள்கை, பிஸ்கால் கொள்கை, விலைக் கொள்கை என்பவற்றை நன்றாக அமுல் நடத்தினால் பெருவாரியான வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகமாட்டாது. தொழில்நுட்பத்துறையிலே வேலையின்மை ஏற்பட்டால் அதனைப் பாரதூரமாகக் கருதாது தள்ளிவிடுவதும் கூடாது. அதனைத் தீர்ப்பதற்கு வழி நல்ல வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவதே. அதை விடுத்து உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது ஏற்புடையதன்று.

## முப்பது மணி நேர வாரம்

வாரத்தில் நாற்பது மணி நேரம் வேலை செய்வனத 30 மணி நேரமாகக் குறைப்பதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் வேறு பல காரணங்களைக் கூறலாம். நமது வாழ்க்கைத் தரமும், உற்பத்தியும் உயர உயர நமக்கு

www.padippakam.com



அதிக ஓய்வு நேரம் கிடைக்குமென உணரலாம். சரித்திர ரீதியாகப் பார்க்குமிடத்து வேலை நேரம் குறைக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. ஆனல் இந்தக் காலக்கட்டத்திலே அமெரிக்கத் தொழிலாளி கணிசமானதொரு நிச வருமானத்தையும், பண வருமானத்தையும் இழந்து மேலதிக மான ஓய்வு நேரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவாரா ?- அதாவது உழைக்கக் கூடியதில் 20 சத வீதம்? பூரண வேலை வாய்ப்பு நிலவிய சென்ற தசாப்தத்திலே 30 மணி நேர வாரத்துக்குக் கிளர்ச்சி செய்தவர் தொகை குறைந்தது. ஓய்விலும் பார்க்க வேலையின்மையென்ற காரணமே அதிக பொருத்தமானதென இதிலிருந்து அறியலாம்.

ஐக்கிய மோட்டார் தொழிலாளர் தலைவரான வால்டர் ரூதர் என்பவர் குறைந்த மணி வேலை நேரத்தைக்கொண்ட வாரம் வேண்டுமென்று கூறும்போது, தொழிலாளரின் சம்பளத்தைக் குறைக்கக்கூடாதெனவுங் கேட்கிறார். சம்பளம் குறையாமல் ஓய்வு நேரம் கிடைப்பதை எந்தத் தொழிலாளிதான் விரும்பமாட்டான்? தொழிற்சங்கங்கள் முதலாளிமாரிட மிருந்து அதிக சம்பளத்தை எவ்வாறு கறக்கப் பார்க்கிறார்களென்பதைப் பின்னர் ஆராய்வோம். 30 மணிநேர வாரத்துக்குக் கூறப்படும் காரணங் களை இதற்கும் நாம் இங்கே பயன்படுத்த வேண்டியதில்லை. ஆனல் வேலை நேரம் சம்பந்தமானதொரு நேரடிக் காரணத்தை மாத்திரம் குறிப்பிடு வோம்.

முதலாவது மகாயுத்தத்தின்போது 10 மணித்தியாலத்துக்கு 1 மணி நேரம் வெட்டப்பட்டால் உற்பத்தி பத்திலொன்றுகக் குறையவில்லை. ஏன் ? மணித்தியாலத்துக்குரிய பிரயத்தனம் கூடிற்று. 25 சத வீதமாக வேலை நேரத்தை வெட்டினல், சம்பளத்தையும் 25 சத வீதம் வெட்டவேண்டிய தில்லை. ஆனல் வாரத்தில் ஒரு நாளை மேலதிகமாக ஓய்வு நேரமாக எடுத்துக் கொண்டாலும் உற்பத்தி குறைய மாட்டாதெனக் கூறிக்கொள்வது பொருத்தமற்றதாகும். தொழிலாளர் பற்றிய விபரங்களைத் தயார் செய்த தாபனத்தின் அறிக்கைப்படி 30 மணிநேர வாரத்துக்கு வாதாடுவோருடைய தீவிரமான கொள்கைகள் பொருந்தாவென்பது தெரிகிறது.

அமெரிக்காவில் சனிக்கிழமை வேலை அருகிக் கொண்டே வரும். அதிக ஓய்வு நாட்களை முழுச்சம்பளத்தோடு பெறுவதற்கு முயற்சி செய்யப்படும். ஓய்வு காலத்தை அதிகரிப்பதால் தொழிலாளரின் உற்பத்தித் திறன் பெருகுமென்பது காரணமன்று. கோடைகால விடுமுறையினலும், மாரி கால விடுமுறையினலும் அதிக மகிழ்ச்சி தொழிலாளருக்கு உண்டாகு மென்பதே காரணமாகும். தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பயனே அதிக ஓய்வு பெறுதலாகும். தமது பேரப்பிள்ளைகள் வேலை நேரத்தை மேலும் குறைப்பதற்கே முயல்வார்கள்.

### தொழிலாளர் பொது சப்பிளைக் கோடு

நிறை போட்டி சம்பந்தமான உதாரணத்தை மறுபடியும் ஆராய்வோம். இதிலே தொழிலாளர் சப்பிளைக் கோடு எவ்வாறிருக்கும்? சம்பளவிகிதம்

www.padippakam.com



குடிசனப் பெருக்கத்தை எவ்வாறு பாதிக்கும். மக்கள் நீண்ட வேலை நேரத்தையோ குறுகிய வேலை நேரத்தையோ விரும்புவதை அது எவ்வாறு பாதிக்கும்? தொழிலில் ஈடுபடாதவர்களை (ஓய்வு பெற்றோர், டாடசாயிலே லிருப்போர், பெண் தொழிலாளிகள்) சம்பள மட்டம் எவ்வாறு பாதிக்கும்? உயர்ந்த சம்பள மட்டம் மக்களைத் திறம்பட வேலை செய்யத் தூண்டுமா ? அல்லது விடயங்களை ஆறுதலாகச் செய்வதற்குத் தூண்டுமா ?

மேலே காட்டிய கேள்விகள் தொழிலாளர் சப்பிளை நாலு பிரிவான பரிமாணம் உடையதென்பதைக் காட்டும்.

அவை : (1) குடிசனத்தொகை (2) தொழிலாளர் தொகையில் அடங்கிய குடிசனத் தொகையின் விகிதம். (3) ஒரு வாரத்திலும், வருடத்திலும் தொழிலாளர் தொழில் புரிந்த சராசரி மணித்தியாலம் (4) தொழிலாளர் தரக்கூடிய திறமை, முயற்சி என்பவற்றின் தன்மையும், அளவும்.

இந்த தொழிலாளர் சப்பிளை பரிமாணம் நாலிலும், மூன்ருவது பொருளாதாரக் காரணங்களைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டது. மேற்கு நாடுகளிலே குடிசனத் தொகையானது சமூகச் சக்திகளிலும், பொருளாதாரச் சக்திகளிலும் தங்கியுள்ளதென்பதை மேலே கண்டோம். நயமுள்ள துறையிலே எந்தத் தொழிலாளர் கூட்டம் ஈடுபட்டிருக்கிற தென்பதைப் பழக்கவழக்கங்களும் சட்டதிட்டங்களுமே நிச்சயிக்கின்றன.[1]

தொழிலாளரின் தைரியம், தூண்டுதல் என்பவற்றைப் பொருளாதார அமிசங்கள் ஓரளவு பாதித்தபோதிலும், உளவியலறிஞரும், சமூக மனித இனவரலாற்றறிஞரும், பல காரணங்களை, தொழிற்சாலையில் கூட்டு உற்பத்தி சம்பந்தமாகக் கூறியுள்ளனர்.

## " பதிற் பயனும் ", " வருமானப் பயனும் "

ஒரு வருடத்தில் வேலை செய்யும் மணித் தொகையிலே சம்பள வீதம் என்ன பயனை உண்டாக்கும் என்ற பொருளாதாரப் பிரச்சினை எழுகிறது. இதைப்பற்றி முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். படத்தின் மூலம் இதனை விளக்கலாம் வித்தியாசப்பட்ட சம்பள விகிதம் ஒவ்வொன்றிலும், ஒரு தொழிலாளர் தொகுதி வேலை செய்யவிரும்பும் மொத்த மணித்தியாலத்தின் சபபிளைக் கோட்டை 4 ஆம் படம் காட்டுகிறது இச்சப்பிளைக்கோடு, ஆரம்பத்திலே வட கிழக்காக உயர்வதைக்கவனிக்க. பின்னர் C என்ற அவதியில் அது வடமேற்காக வளைகிறது. உயர்ந்த சம்பளம் கொடுத்தால் தொழிலாளர் தொகை அதிகரிக்கவுங் கூடும், குறையவுங்கூடும். இதை எவ்வாறு விளக்குவது ?

[1]. பெரியவியாபார மந்தமுண்டாகுங் காலங்களிலே தொழிலாளர் தொகை அதிகரிக்கும். கணவன் வேலையிழந்தால் மனைவியும் பிள்ளைகளும் வேலை தேடுவர். வியாபார மலர்ச்சிக் காலத்திலே வேலை வாய்ப்புக்கள் அதிகமிருப்பதால் பெண்களும் வேறு தொழிலாளரும் சேர்வர். அது இந்த நிலையை மாற்றும். சமீபகாலத்தில் உண்டான சுபீட்ச நிலைகளில் பெண் தொழிலாளர் பலர் வேலையிற் சேர்ந்து, நீங்கிப் பின்னருஞ் சேர்ந்தார்கள்.


www.padippakam.com



நீர் ஒரு தொழிலாளி ; உமது மணித்தியாலச் சம்பளம் கூட்டப்படுகிறது. எத்தனை மணி நேரம் வேலை செய்ய முடியுமென்பதை நீரே நிச்சயிக்கவிடப் படுகிறீர். சம்பளம் உயர்வுற்றபடியால் கொஞ்சம் மணித்தியாலம் அதிகப் படியாக வேலை செய்யலாமேயென உமக்கு ஆசை உண்டாகலாம். உமது ஓய்வு நேரத்தில் ஒவ்வொரு மணி நேரமும் அதிக விலையுடையதாகிறது.

**மிக உயர்ந்த சம்பளமானுல், குறைய வேலை செய்யலாம்:**

பின்ஞேக்கி வளையும் சப்பிளை வளைகோடு




படம் 4. C என்ற நெருக்கடியான தானத்திற்கு மேலே சம்பளத்தை உயர்த்தினுல் சப்பிளை செய்யப்படும் தொழிலாளர் தொகை குறையும். (வருமான விளைவு பதிற்பொருள் விளைவை அடக்கிவிடும்.)

எனவே ஓய்வு நேரத்திலும் வேலை செய்யத்தூண்டப்படுகிறீர்கள். இந்தப் பதிலீட்டு பயனுக்கு மாருக வருமானப் பயன் வேலை செய்கிறது[1]. சம்பள வீதம் உயர்ந்தால் நீர் செல்வராவீர். செல்வராளுல் மேலதிக மான துணிமணிகளையும் உணவுப் பொருள்களையும் வேறு போகப் பொருள்களையும் வாங்குவீர். காப்புறுதிப் பொலிசிகளையும் அதிகமாக வாங்குவீர். அத்துடன் அதிக ஓய்வு நேரத்தையும் வாங்குவீர். அதுவே இங்கு ஆராயும் பிரச்சினைக்கு முக்கியமானது. சனிக்கிழமையை வேலை செய்யாது கழிக்கவிரும்புவீர். மழைகாலத்திலே ஒரு வாரத்தை மேலதிக மாக ஓய்வாய்க் கொள்ளுவீர்.

1. "பதிலீட்டுப்பயன்" "வருமானப்பயன்" என்பன சம்பந்தமாக 21 ஆம் 22 ஆம் அத்தியா யங்களைப் பார்க்க. சம்பள உயர்வினுல் உண்டாகும் வருமானப்பயன் உம்மைப் பணக்காரஞக உணரச் செய்கிறது. அத்துடன் ஓய்வாய் நேரத்தைக் கழிக்கச் செய்கிறது. பதிலீட்டுப் பயன் என்பது உயர்ந்த ஓய்வு விலைக்கு நீர் மறிவினை செய்வதைத் தூண்டுவது. இந்த ஓய்வைத் தியாகம் செய்தால் நீர் புதிய பொருள்களை வாங்குவீர். இந்த இரு பயனும் ஒன்றுக்கொன்று எதிராகத் தொழிற்படும். வருமானப் பயன் வெற்றியடைந்தால் தொழிலாளர் சப்பிளைக் கோடு பின்ஞேக்கிச் செல்லும்.

www.padippakam.com



பதிலீட்டுப் பயனு, வருமானப் பயனு, சக்தி வாய்ந்தது ? இரண்டும் சம சக்தி வாய்ந்தனவா ? அப்படியானுல் சப்பிளைக் கோடு முன்னுக்கும் வளை யாமற் பின்னுக்கும் வளையாமல் நடுக்குத்தாக நெகிழ்வின்றி எழுகிறதா ? இதற்கு ஒரு விடை கொடுக்க முடியாது. ஆளுக்காள் விடை வித்தியாசப் படும். படம் 4 இலே S′ இலிருந்து C வரை பதிலீட்டுப்பயன் வருமானப் பயனே மிஞ்சிவிட்டது. ஆனுல் C இலிருந்து S″ வரை வருமானப் பயனே முக்கியமானதாகிறது.

## தனி நிலையிலுள்ள ஆட்களின் சம்பளத்தில் வாடகை அமிசங்கள்

சாதாரணமாகத் தேவைப்படும் அளவுக்கு மக்களுக்கு வருவாய் கிடைக்கு மானுல், மேலும் சம்பளம் உயர்வதால் மேலும் வேலை செய்யவேண்டிய மணித்தியாலங்கள் கூடமாட்டா. இதனை ஒரு வரி சம்பந்தமான சட்ட அறிஞர் ஆராய்ந்தறிந்தார். யுத்தகாலத்திலே ஏற்பட்ட அபரிதமான வரி கள் தமது நண்பரிடையே எத்தகைய விளைவுகளை உண்டாக்குகின்றதென் பதை அவர் ஆராய்வதற்காக அந்த முயற்சியிலீடுபட்டார். உயர்ந்த வரிபோடப்பட்டதால் அந்த வரியை ஈடு செய்வதற்காக மக்கள் மேலதிக மாக வேலை செய்தார்களென்பதை அவர் ஆராய்ச்சி மூலம் அறிந்தார். குறுந்தவணை வருமானப்பயன் பதிலீட்டுப்பயனிலும் பார்க்கச் சக்தி வாய்ந்த தென அவர் கண்டறிந்தார். ஆனுல் பணம் மாத்திரம் அவர்களைத் தூண்டவில்லை. கருமத்தை நிறைவேற்றி அதிலே திருத்திகாணுதலும், எடுத்த முயற்சியிலுள்ள கரிசனையும் அவர்களைப் பெரிதும் ஊக்குவித்தன. ஹார்வாடிலுள்ள தொழிற் கல்லூரி ஒன்றும் இதே தகவல்களைச் சேர்த்தது. அதுபோலவே ஆங்கிலக் கணக்காளரும் சட்ட அறிஞருமான சிலர் சமீ பத்தில் நடத்திய ஆராய்ச்சிகள் இதே முடிபுகளைக் கொடுத்தன.

உயர்ந்த வரி வீதத்தினுல் துணிவு மேற்கொள்ளுதலும், துணிவாக முத லீடு செய்தலுமே உண்டாகும். திறமை படைத்தவர்களின் முயற்சிக்கு ஊக்கமுண்டாகாது. சிறந்த திறமையுள்ள தனியாரின் உயர் வருமானங் களிற் பெரும்பாலானவை " தனிப் பொருளாதார வாடகை " என்ற இனத்தைச் சேர்ந்தது. பேப் ரூத் என்பவர் பந்தாட்டத்தால் வருடத்தில் 100,000 டொலர் உழைத்தார். இது அவருக்குப் பிரியமானதொரு தொழில். இதை விட்டால் இவருக்கு வேறு தொழிலிலே 5,000 டொல ருக்கு மேற் கிடைக்குமோ என்பது சந்தேகம். இந்த இரண்டு எல்லைகட்கு மிடையிலே அவருடைய சப்பிளைக்கோடு நெகிழ்ச்சியற்றிருந்தது. எனவே மேலதிகமாயுள்ள இந்த வருமானத்தைத் தனிவாடகை எனப் பொருளிய லறிஞர் கூறுவர். 27 ஆம் அத்தியாயத்திலே ஆராய்ந்த நிலத்தின் திர மான சப்பிளைக்குரிய வாடகை போன்றது இது.

## சம்பளத்திலேயுள்ள வித்தியாசங்களைச் சமன் செய்தல்.

தொழிலாளர் சப்பிளை சம்பந்தமான பிரச்சினையை விட்டுவிட்டு இனி பல தினிசான தொழிலாளர், தொழில் என்பவற்றுக்கிடையேயுள்ள போட்டிச்

www.padippakam.com



சம்பளத்திலுண்டாகும் வித்தியாசம் சம்பந்தமான பிரச்சினையை ஆராய்வோம். தினசரி வாழ்க்கையிலே காணப்படும் சம்பள வித்தியாசங்களை விளக்க சப்பிளை நிலைமைகள் மிக முக்கியமானவையாகின்றன.

உத்தியோகங்களிடையே காணப்படும் வித்தியாசங்களை நுணுகி ஆராயுமிடத்து அவதானிக்கக்கூடிய சம்பள வித்தியாசங்கள் சிலவற்றை இலேசாக விளக்கிவிடலாம். சில தொழில்கள் செய்வதற்குக் கடினமானவையாயிருக்கலாம். எனவே அத்தகைய தொழில்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். இத்தகைய காரணங்கள் பணச்சம்பந்தமான காரணங்களாகும். இக்காரணங்களை ஈடு செய்வதற்காகக் கொடுக்கும் சம்பள வேற்றுமைகளைச் "சமன்படுத்தும் வேற்றுமைகள்" எனலாம். காவற்காரரிலும் பார்க்க கோபுரம் ஏறுவோருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். பிற்பகல் 4 மணியிலிருந்து 12 மணிவரை வேலை செய்வோருக்கு 5 சத வீதம் அதிகப்படி வழங்கப்படும். இரவு 12 மணி துவக்கம் காலை 8 மணிவரை வேலை செய்வோருக்கு 10 சத வீதம் அதிகப்படி உண்டு. வாரத்தில் 40 மணிநேரத்துக்கு மேலும் ஓய்வு நாட்களிலும், வேலை செய்வோருக்கு $1\frac{1}{2}$ சத வீதம் அதிகமாக மணித்தியாலத்துக்கு வழங்கப்படும். வருடத்தில் 20,000 டொலர் உழைக்கும் வைத்தியர் விடயத்தில், அவர்கள் படிப்புக்குச் செலவு செய்யும் பணமும், சில காலங்களில் வருவாயில்லாத நிலையும் கவனிக்கப்படலாம். இது வித்தியாசங்களைச் சமன் செய்யும் ஈடாகும்.

ஊத்தை சம்பந்தப்பட்ட வேலைகள் நரம்புத் தளர்ச்சியுண்டாக்கக்கூடிய வேலைகள், களைப்பை உண்டாக்குபவை, உருசிகரமற்றவை, அந்தஸ்துக் குறைந்தவை, ஒழுங்காகக் கிடைக்காதவை, உயிர்வாழ்வைக் குறைக்கக் கூடியவை என்பன பலராலும் விரும்பப்படாத வேலைகளாகும். இத்தகைய வேலைகளைச் செய்வதற்குத் தொழிலாளரைச் சேர்ப்பதானல், சம்பளத்தை உயர்த்தவேண்டும். சந்தோஷமும் கவர்ச்சியுமுள்ள வேலைகளைப் பலர் விரும்புவர். அதனுல் அவற்றின் சம்பளம் குறையும். குமாஸ்தா வேலையை எல்லாரும் விரும்புவதால் அதற்குச் சம்பளம் குறைவு.

ஒரு தொழிலுக்கும் வேருெரு தொழிலுக்குமிடையிலுள்ள சம்பள வித்தியாசம் வேற்றுமை சமன்படுத்தும் தன்மையுடையதா என்பதைப் பரீட்சிப்பதற்கு இரண்டு தொழிலையும் செய்யும் தகுதியுடையவரைக் கேட்க வேண்டும். குறைந்த சம்பளமுள்ள வேலையிலும் பார்க்க உயர்ந்த சம்பளமுள்ள வேலையையா விரும்புவீர் என்று அவர்களைக் கேட்டால், அவர்கள் எதிலும் ஆர்வங்காட்டாதிருந்தால், உயர்ந்த சம்பளமுள்ளதொழில் கவர்ச்சியுடையதல்லவென்று அறிந்து கொள்ளலாம்.

### வேற்றுமைகளைச் சமன்படுத்தாத சம்பளங்கள், தொழிற் பண்பிலே வித்தியாசங்கள்

தொழில் எங்கும் ஒரு சீராயிருந்தால், போட்டிச் சம்பளம் எல்லாவற்றையும் வேற்றுமை சமன் படுத்தும் பண்பாக விளக்கிவிடலாம். ஆனல்

www.padippakam.com



நிச உலகத்தைப் பாருங்கள். அவதானிக்கப்பட்ட சில வேற்றுமைகள் சமன்படுத்த உதவுவனவாயிருக்கலாம். ஆனால் உயர்ந்த சம்பளத்தைப் பெறும் பெரும்பாலான தொழில்கள் கவர்ச்சிகரமானவையென்பதையும் கருத்திலே கொள்ள வேண்டும். பெரும்பாலான சம்பள வித்தியாசங்கள் சமன் செய்யும் தினிசைச் சேர்ந்தனவாகா. இதற்குக் காரணமென்ன ?

போட்டி, நிறைவில் போட்டியாயிருப்பது காரணமா? சில வித்தியாசங்கள் இந்தத் தினிசைச் சேர்ந்தனவாயிருக்கலாம். வேலைவாய்ப்புக்களைப் பற்றித் தொழிலாளருக்குப் பூரண அறிவு இல்லையென்பது ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது. தற்போது நிலவும் சமன்செய்யாத வித்தியாசங்கள் ஏன் என்பதை தொழிற் சங்கங்கள், குறைந்த பட்சச் சம்பளவிதிகள், குறித்த ஒரு தொழிலில் தொழிலாளர் ஏகபோக உரிமை கொள்ளுதல் என்பன விளக்கக் கூடியதாயிருக்கும். ஏகபோக உரிமையாலோ, நிறைவில் போட்டியினாலோ உண்டாகிய தடைகளை நீக்கினால், உயர் சம்பளம் கொடுக்கப்படும் உத்தியோகங்களுக்குப் பலர் ஓடுவர். அப்போது மற்ற வேலைகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்களோடு இச்சம்பளமும் சமனாக வரும். போட்டியில் ஏற்படக்கூடிய இந்தத் தலையீடுகளை இனி ஆராய்வோம்.

சம்பளங்களிலே அவதானிக்கப்படும் வித்தியாசங்கள் நிறைவில் போட்டி சம்பந்தமான விடயங்களோடு தொடர்புடையனவல்ல. ஏகபோக உரிமை அமிசங்களில்லாவிட்டாலும் அவை இருந்துகொண்டேயிருக்கும். உத்தேசமான நிறைவான வெந்நீசுச் சந்தையிலே கூட அதாவது பலவகையான தொழிலாளர் இனத்தையுஞ் சேர்ந்த தொழிலாளரும் சப்பிளை தேவை ஆகியவற்றால் விலை மதிக்கப்படும் சந்தையிலே சமநிலை ஏற்படுவதானால் பெரிய வித்தியாசங்கள் தேவைப்படும்.

இதற்குக் காரணம் மக்களிடையேயுள்ள பெரிய பண்பு வித்தியாசங்களாகும். மனிதன் சம்பந்தப்பட்ட போட்டிச் சம்பளம் குதிரை சம்பந்தப்பட்ட சம்பளத்துக்குச் சமமாயிருக்கமாட்டாது. அப்போது ஒரு மனிதனின் போட்டிச் சம்பளம் மற்றவனுடையது போலிருக்க வேண்டுமென்று எவ்வாறு எதிர்பார்ப்பது. உயிர்நூலறிஞர் நாமெல்லாம் மனித இனத்தைச் சேர்ந்தவர்களென்றே இனப்படுத்துவார். ஆனால் மக்கள் திறமையாலும், உழைப்பாலும் வித்தியாசப்பட்டவர்களென்பதை அறிவோம்.

நமது தொழிலாளர் தொகை 750 லட்சமாகும். தொழிலாளர் இனத்தில் ஒருவகைதானிருக்கிறதென்று கூறமுடியாது. ஆயிரக்கணக்கான இனமுண்டு. பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளதொரு புகையிரதப் பாதையில், பனிக்கட்டியை அள்ளி வீசுவதற்கான தொழிலாளர் இனத்தை ஓரினமாகக் கருதலாம். இவ்வாறே சம்பளத்தை நிர்ணயஞ் செய்வதற்காகத் தொழிலாளரை பொதுவான பல இனங்களாக வகுத்துக் கொள்ளலாம். அப்படிச் செய்த பின்னர்கூடப் பல தொழிலாளர் இனங்கள் வகுக்கப்படாதிருக்கின்றன. அவற்றின் சம்பள விகிதம் பரந்த ஒரு தன்மையை உடையதாயிருக்கும்.

www.padippakam.com



### தொழிற் சந்தையிலே போட்டியிடாத பிரிவுகள்

நூறு வருடங்களுக்கு முன்னர் பல பிரிவைச் சேர்ந்த இந்தத் தொழில் இனங்களைப் பொருளியலறிஞர் தொழிற் சந்தையிலுள்ள போட்டியிடா இனமெனக் கூறிக்கொண்டனர். உற்பத்திச் சாதனங்களில் ஒன்ருகத் தொழிலாளர் கருதப்படாது பல சாதனங்களாகக் கருதப்பட்டனர். எத்தனை போட்டியில்லாத தொழிலாளர் இனம் இருக்குமோ அத்தனை தினிசான சம்பளவிகிதங்களிருக்கு மெனக்கருதப்பட்டு வந்தது. ஆனுல் இப் பரிபாஷை தப்பான விளக்கங்களுக்கு இடமளித்து வந்தது.

நிறை போட்டியுள்ள தொழிற் சந்தையிலே போட்டியற்ற பிரிவு மறைந்து விடுமென நாம் நினைக்கக் கூடாது. எப்பொழுதும் பல இனத் தொழிலாளர் இருப்பர். இந்த இனங்களுக்குள் போட்டியுமிருந்தே வரும். குதிரையையோ, எந்திரக்கலப்பையையோ வாடகைக்கு அமர்த்துவது போலத் தொழிலாளரிடையிலும் பயிற்சிபெற்ற, விரைவாக வேலை செய்யும் உயர் சம்பளம் பெறும் தொழிலாளரையோ, பயிற்சி குறைந்த, குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளரையோ வேலைக்கமர்த்துவதென்பதை நான் நிச்சயிக்க வேண்டும்.

முக்கியமான விடயம் இது. பல இனங்களும் தம்முள்ளே போட்டியிடுகின்றன. ஆனுல் அவை 100 இற்கு 100 சமமானவர்களல்லர். ஒருவருக்குப் பதிலாக மற்றவரைப் பதிலாளாய் வைக்கமுடியாது ; ஓரளவுக்கே பதிலாக இருப்பார் ; பூரணமாகப் பதிலாக இருக்க மாட்டார்.

தொழிலாளர் ஒரு பிரிவிலிருந்து மற்ருெரு பிரிவுக்கு மாறலாம். உலோகத்தொழிலாளர் சம்பளம் வருடத்துக்கு 100,000 டொலராக இருந்தால், நான் ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டு அந்தத் தொழிலைக் கற்று அதை மேற் கொள்வேன். நான் அப்படிச் செய்யாவிட்டால் வேறு யாராவது செய்வர். பல இனத்தொழிலாளரின் சம்பளங்கள் பலவிதமாக இருந்தாலும், சம்பளங்களின் தொகையில் உண்டாகும் வித்தியாசங்கள் சப்பிளை தேவை என்பவற்றைப் பொறுத்தனவாயிருக்கும். சப்பிளை " மாற்று நெகிழ்ச்சி " யானது மிக முக்கியமானது. உலோக வேலைக்காரருக்குக் கொடுக்கும் சம்பளம், கார் கம்பெனியில் பொருத்து வேலை செய்வோரின் சம்பளத்தைப் பொறுத்ததாயிருக்கும்.

பயிற்சி பெற்ற அறுவை வைத்தியரின் உதாரணத்தை ஆராயலாம். இவர்களுடைய சம்பளம், கசாப்புத் தொழிற்காரருடைய சம்பளத்திலும் பார்க்க அதிகமாயிருக்கும். ஏன் ? அவர்களுடைய தொழில மிக முக்கியமானது என்பதாலா ? ஓரளவுக்கு அது உண்மையே. ஆனுல் (1) ஒவ்வொருவருடமும் கசாப்புத் தொழிலுக்குத் தகுதி வாய்ந்த குழந்தைகள் பிறப்பது போலவே அறுவை வைத்தியத்துக்குத் தகுதியுள்ள குழந்தைகளும் பிறக்கின்றன. (2) அறுவை வைத்தியத்தை மிகச் சுலபமாகப் பழக்கக்கூடியவர்கள் தோன்றியுள்ளனர். (3) கசாப்புத் தொழில் போலவே அறுவை வைத்தியமும் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போதும் அறுவை வைத்தியருக்குக் கசாப்புத் தொழிற்காரரிலும் அதிக சம்பளம் கொடுக்கப்படுமென நீர் நினைக்கிறீரா? மனிதருடைய உயிரைக் காப்பது மிகப்புனிதமான தொழில் என நீர் நினைக்கிறீரா? அப்படியானல் வயிற்றுப்பகுதியில் அறுவை வைத்தியஞ் செய்யும் வைத்தியரிலும் பிளாஸ்டிக் வைத்தியஞ் செய்வோருக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுவதற்குக் காரணமென்ன?

## தொழிலாளர் சந்தையிற் பொதுச் சமநிலை

உண்மை வாழ்விலே வெவ்வேறு தொழில்களுக்கிடையிலே ஒரு நெகிழ்ச்சியுண்டு. இந்த நெகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்வது சம்பளங்களிடையே உள்ள வித்தியாசம். எல்லாத் தொழிலாளரும் சலனமுள்ளவராயிருக்க வேண்டியதில்லை. ஒரு சிலர் வெளியேறினுற் போதும். ஆனுல் அவர்களுடைய சலனத்துக்கு இயற்கையிலும் சமூகத்திலும் அமைந்த சில தடைகளுண்டு. ஆனபடியால் சம்பளவித்தியாசங்கள் நெடுந்தவணையிற்கூட இருந்து கொண்டிருக்கும்.

இந்த வித்தியாசங்கள் எவ்வளவு பெரிதாயிருக்கும். ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய இயல்புக்கேற்ற கல்வி கொடுக்கப்படுகிறதென்றும், அவர்களுடைய விசேடதிறமையைப் பயன்படுத்தக்கூடியவாறு ஓரிடத்திலிருந்து வேருரிடத்துக்குச் செல்ல வசதியளிக்கப்படுகிறதென்றும் வைத்துக்கொள்வோம். வேலை வாய்ப்புக்கள் சம்பந்தமாகவும், தனிப்பட்டவரின் திறமை அமைப்புக்களைப்பற்றியும் நாம் சரியான தகவல்களை மக்களுக்கு அறிவிக்கிருேமென்றும் வைத்துக்கொள்வோம். அப்போது சம்பளங்களிடையேயுள்ள வித்தியாசங்கள் பெரிதும் குறைக்கப்படும்.

குறைக்கப்பட்டுள்ள வித்தியாசங்களை எவ்வாறு நிச்சயிப்பது ? சப்பிளையும் தேவையுமே இதனை நிச்சயிக்கும். பல இனத் தொழிலாளருக்குரிய மொத்தத் தேவை அதன் போட்டிச் சப்பிளைக்குச் சமனுயிருக்கும் போது தான், சம்பளவித்தியாசச் சமநிலை மாதிரிக்குச் சந்தையானது திரும்பும்.

**அட்டவணை 1. போட்டிச் சம்பள நிர்ணயம்.**

| | நிலைமை | பயன் |
|---|---|---|
| 1. | எல்லோரும் ஒரேமாதிரி-வேலைகள் ஒரேமாதிரி. | வித்தியாசமில்லை. |
| 2. | எல்லோரும் ஒரேமாதிரி சில வேலைகள் பயனின்மை பற்றி வேறுபடும். | சம்பள வித்தியாசங்களைச் சமன் படுத்தல் |
| 3. | சனம் வித்தியாசப்படும். ஆனுல் ஒவ்வொரு தொழிலாளர் இனமும் மாருத சப்பிளையிலுண்டு. (போட்டியிடாத் தொகுதி.) | சம்பள வித்தியாசம் " தனிப் பொருளாதார வாடகை " அல்லது " மேலதிகங்கள் " எனப்படும். |
| 4. | சனம் வித்தியாசப்படும். ஆனுல் ஒவ்வோர் இனத்துக்குமிடையிற் சிறு சலனமுண்டு. (அரை குறையான போட்டித் தொகுதி, " மாற்று நெகிழ்ச்சி " முக்கியம்.) | பொதுச் சப்பிளை தேவை என்பவற்ருல் நிச்சயிக்கப்படும் சம்பள வித்தியாசங்கள் பொதுச் சமநிலை மாதிரி (இதில் 1-3 விசேட உதாரணங்களாகச் சேரும்.) |

www.padippakam.com



அப்பொழுதுதான் பொதுச் சமநிலையுண்டாகும். சம்பள வித்தியாசங்கள் பெருகவோ குறுகவோ இடமிராது. நமது முடிபுகளின் சுருக்கம் அட்டவணை 1 இலேயுண்டு.

## ஆ. தொழிற் சந்தையின் குறைபாடுகளும் கூட்டுப் பேரமும்

நிறை போட்டியிலுள்ள இலட்சியபூர்வமான தொழிலாளர் சந்தைக்கும் தினசரி வாழ்வில் நிகழும் தொழிலாளர் சந்தைக்குமிடையே மிகத் தூரமுண்டு. கோதுமையை அச்சொட்டாக இனம்பிரித்து விடலாம். ஆனால் மனிதரை அவ்வாறு செய்யமுடியாது. தொழிலாளரை வெந்நீசிலே போட முடியாது. நியூ ஹேவென், கொனெக்டிகட் முதலிய இடங்களிலே செய்த ஆராய்ச்சியின்படி பார்க்கும்போது தொழிலாளருக்கு அயலூர்களிலுள்ள சம்பள நிலைமை தெரியாதிருப்பது புலனாகிறது. தொளிலாளரிடையே குறுந்தவணைச் சலனமும், நெடுந்தவணைச் சலனமும் இருப்பதை ஆராய்ச்சியிலிருந்து அறியலாம். அறியாமையாலும் சோம்பேறித்தனத்தாலும், குறித்த ஓர் ஊரிலேயே இருக்கவேண்டுமென்ற அபிமானத்தாலும், குறித்த ஒரு வேலையையே செய்யவேண்டுமென்ற விருப்பத்தாலும், தொழிலாளர் உயர்ந்த சம்பளமுள்ள தொழில்களுக்கு மாறுவதில்லை. அதனால், சம்பள வித்தியாசங்கள் இருந்துகொண்டேயிருக்கின்றன.

### சம்பளம் மாறுதிருத்தல்

தொழிற்சந்தை குறையுடையதென்பதை இரண்டு பரீட்சைகளைக் கொண்டு அறியலாம். 1960 இல் இருந்ததுபோல வேலையின்மை அதிகரித்தால் சம்பளவீதம் போட்டிச்சந்தையிற்போல குறையுமா ? சரித்திரத்தைக் கேட்டால் இல்லை என்று பதில் வரும். நீர் மற்றொருவர் செய்யும் வேலையிலே திறமையுடையவராயிருக்கலாம். ஆனால் அவருடைய சம்பளத்துக்கு குறைவான சம்பளத்திலே அந்தத் தொழிலைச் செய்வதாகக் கூறி அதனை நீர் பெற்றுக்கொள்ள முடியாது.

### கம்பெனிகளின் சம்பளக் கொள்கை

ஒரு கம்பெனிக்குச் சம்பளக்கொள்கையுண்டு. அது அதற்கு அவசியம் என்ற கருத்தே தொழிலாளர் சந்தை குறைபாடுடையதென்பதை எடுத்துக் காட்டும். நிறை போட்டியுள்ள சந்தையிலே ஒரு கம்பெனி அதன் சம்பளங்கள் பற்றித் தீர்மானங்கள் செய்யவேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அது தனது சம்பளக்கொள்கை எப்படியிருக்கவேண்டுமென்பதைக் காலைப் பத்திரிகை வாயிலாக அறிந்து கொள்ளலாம். சம்பளத்தைச் சிறிது உயர்த்தினால் ஒரு கம்பெனி தனக்குத் தேவையான மேலதிக உதவியைப் பெறலாம். அதற்கு மாறாக அது சம்பளத்தைச் சிறிது வெட்டினால், நிறைபோட்டித் தொழிலாளர் சந்தையிலே தொழிலாளரைப் பெற முடியாத நிலைமையிருக்கும்.

போட்டி 100 சத வீதம் நிறைவுடையதாயிராவிட்டால் அது 0 சத வீதம் எனக்கொள்ளவுங் கூடாது. உலகிலே போட்டியும், சம்பளவிடயமாக ஓரளவு

www.padippakam.com



ஏகபோக உரிமையுமுண்டு. சம்பளத்தை மிகக் குறைக்க விரும்பும் கம்பெனி இதனை விரைவில் உணர்ந்துகொள்ளும். ஆரம்பத்திலே அதிகமொன்றும் நடவாது. ஆனால் நாளடைவில் தொழிலாளர் மெள்ள மெள்ள விட்டு விலகுவதை அறியும். புதிய தொழிலாளரை அமர்த்துவதும் கடினமாகும். வேலையிலமர்ந்திருக்கும் பழைய ஆட்களும் குறைவாகவே வேலை செய்வர்.

நிறைவில் போட்டியுள்ள யதார்த்த நிலைமைகளில் நீர் நிர்ணயிக்கும் சம்பளத்தைக் கிடைக்கக்கூடிய தொழிலாளர் சப்ளை பாதிக்கும். உமது கம்பெனி சிறிய கம்பெனியாயிருந்தால் சம்பளம் பற்றித் தொழிலாளரோடு பேரம் பேசலாம். ஆனால் உமது கம்பெனி பெரிதாயிருந்தால் உம்மிடமுள்ள ஒவ்வொரு வகையான தொழிலுக்கும் இன்ன சம்பளம் கொடுக்கலாமென்றுகூறி, இத்தனைபேரை அந்தத் தொழிலுக்கு அமர்த்தலாமெனவும் குறிப்பிடுவீர். பின்னர் விண்ணப்பதாரில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கலாமெனவும் கூறுவீர். விண்ணப்பதாரரின் தொகை எத்தனை என்பதைக் கொண்டு சம்பளவீதத்தை மாற்றுவீர். தொழிற் சங்கங்களில்லாவிட்டாலும், வாய்ப்பானதொரு சம்பளக் கொள்கைபற்றி நிச்சயிப்பது மயக்கம் மிக்க பிரச்சினையாயிருப்பதை அறிவீர்.

"நடப்புச்-சம்பளம்" கொடுப்பது நல்லதா ? (அப்படியானால் "நடப்புச் சம்பள" மென்பதன் உண்மையான அர்த்தமென்ன ?) அல்லது பெரிய கம்பெனிகள் செய்வதுபோல உள்ளூர்த் தொழிலாளரிற் சிறந்தவர்களுக்குச் சராசரிச் சம்பளத்திலும் பார்க்க அதிகமாகக் கொடுப்பது உசிதமா ? அல்லது மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வேலை செய்வோரிடமிருந்து வாங்கக்கூடிய அளவு வேலையை வாங்கி நிலைமையைச் சமாளிக்கக் கூடிய போட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறீரா ? அப்படிப்பட்ட தொழிலாளர் வேறு நல்லவேலை கிடைத்தவுடன் விட்டு விலகி விடுவர்.

### தொழிற்சந்தையிற் குறைபாடுகள்

தொழிற் சங்கங்கள் சம்பந்தப்படாத விடயங்களிலும் தொழிற்சந்தைகளே குறைபாடுள்ள சந்தைகளாக ஆராய்ச்சியாளராற் காணப்படுகின்றன. தொழிலாளர் தங்கள் ஊரிலோ பட்டினத்திலோ உள்ள தொழில் வாய்ப்புக்களைப் பற்றி அறியாதிருப்பது இயல்பு. வேறு இடங்களிலுள்ள தொழில்வாய்ப்புக்களையும் அவர் அறியார். சம்பளங்களிடையேயுள்ள வித்தியாசங்களை தொழிலாளரில் சிறுபான்மையினர் உயர் சம்பளமுள்ள வேலைகளுக்குச் சென்றால் தீர்த்துக் கொள்வது சுலபம். ஆனால் ஒரே சமூகத்திடையிலே சம்பளவித்தியாசங்களிருப்பது அதைப் போட்டி அடிப்படையில் விளக்குவதும் கடினமாகும் என்பதை ஆராய்ச்சியால் அறிகிறோம்.

தொழிற்சங்கங்களை ஆரம்பிப்பதற்குக் கொடுக்கப்பட்ட காரணங்களில் ஒன்று சங்கடமாகக்கூடாத தொழிலாளர், பணம்படைத்த முதலாளிகளின் முன்னர், "பேரம் பேசுவதற்கான சம உரிமையற்றவராவார்" என்ற உணர்ச்சியே. தொழிற்சங்கங்களினால் இந்தச் சம உரிமையிலே பெரிய அளவைப் பெற்றுவிடலாமெனக் கருதப்பட்டது. ஆனால் பேரம் பேசும்

www.padippakam.com



அதிகாரம் சமமானதா குறைந்ததா என்பதை எவ்வாறு அளப்பதென்பது பொருளியலாராய்ச்சியாளர்க்குக் கஷ்டமான காரியமாகும்.

தொழிற் சங்கங்களை அமைப்பதற்கு முன்னர், பொருளியலறிஞர் கருத்தின்படி தொழிற்சந்தை நிறைபோட்டியுடையதாக இருக்கவில்லை. ஆனால் தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டபின்னர், அது நிறைபோட்டி முன்மாதிரியிலிருந்து வித்தியாசப்பட்டது. சங்கங்களில்லாத இடத்திலேகூட, சங்கத்தோடு வழக்கமாகத் தொடர்புபடுத்தப்படும் பல தொழிற்சந்தை அமிசங்கள் காணப்பட்டன. உதாரணமாக தொழிற்சங்கமில்லாத பல பெரிய கம்பெனிகள் பிரமாணமானதொரு சம்பளவிகிதத்தை ஏற்படுத்தி அதை மாற்றாது பார்த்துக்கொள்வர். இது உள்ளூர்த் தொழிலாளரிடையேயுள்ள வேலையின்மை குறைந்தாலென்ன கூடினாலென்ன நடைபெறும். தொழிற் சந்தை மந்தமாயிருக்குங்காலத்திலே தொழிற் சங்கங்களின் அளவுக்குச் சம்பளங்களை உயர்த்துவர். ஆனால் சாதாரணமான போட்டிக் கொள்கையின்படி மணிச்சம்பளத்தையும் சமயோசித வேலைச் சம்பளத்தையும் குறைக்க வேண்டியேற்படும்.

நமது ஆராய்ச்சி பெரும்பாலும் தொழிற் சங்கக் குறைபாடுகளைப் பற்றியே கவனஞ் செலுத்தினாலும், அதிலே கண்டமுடிபுகள் பல பொதுப்படையாக எல்லாருக்கும் பொருத்தமுடையதாகும். சங்கங்கள்பற்றிய எமது ஆராய்ச்சிகளிற் பல, தொழிலாளரின் பொருளாதாரக் கடமைகளைப்பற்றியதாயிருக்கும். அவையாவன, உயர்ந்த சம்பளவிகிதம், நல்ல பென்ஷன், கூடிய ஓய்வுக்காலம், குறைந்த கால வேலை, இலேசான வேலை, என்பனபற்றியவை. இவற்றோடு பொருளாதாரச் சம்பந்தமற்ற வேலைகளுமுண்டு. அவையாவன அங்கத்தவர் சம்மேளனம், அரசியல்விடயங்களில் ஈடுபடுதல், தொழிற்சாலைக் கட்டுப்பாடுகளைச் சனநாயக முறையிலமைத்தல், முதலாளிகளோடு ஒத்துழைத்தல், குறைபாடுகளை ஆராயும் கமிட்டிகள் முதலியனவாகும்.

### சம்பளங்களை உயர்த்தத் தொழிற் சங்கங்கள் அனுசரிக்கும் மூன்று முறைகள்

நிறைபோட்டி என்ற இலேசாக்கப்பட்ட கருத்தைக் கைவிட்டுவிட்டுப் பொருளியற் கொள்கைகளைப் பயன்படுத்தித் தொழிற் சங்கங்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை ஆராய்வோம். குறிப்பிட்ட ஒரு தொழிலில் சம்பள விகிதத்தைத் தொழிற் சங்கங்கள் எவ்வாறு உயர்த்தும்? இதனை மூன்று வகையிற் செய்யலாம். (1) தொழிற் சங்கங்கள் தொழிலாளர் சப்பிளையைக் குறைக்கலாம். (2) அவர்களின் பேரம்பேசும் அதிகாரத்தைக் கொண்டு, நேரடியாகவே நியமச் சம்பளங்களை உயர்த்தலாம். (3) தொழிலாளருக்கான வருவித்த தேவைக்கோட்டை மேலே உயரர்த்தலாம். இம்மூன்று முறைகளும் சமமானவை; ஒன்றையொன்று பலப்படுத்தும் தன்மை வாய்ந்தவை. இவற்றுக்கிடையே அர்த்தம் பொதிந்த வித்தியாசங்களுண்டு.

www.padippakam.com



## 1. தொழிலாளர் சப்பிளையைக் கட்டுப்படுத்தல்

தொழிற்சங்கமானது தொழிலாளர் சப்பிளையைத் தொழிலாளர்க்கான வருவிக்கப்பட்ட தேவைக்கோட்டில் மேலே செல்வதற்காகக் கட்டுப்படுத்தலாம். வந்தேறு குடிகளைக் கட்டுப்படுத்தல், உச்சவேலை நேரத்தைச் சட்டத்தினுற் கட்டுப்படுத்தல், உயர்ந்த ஆரம்பக் கட்டணம், நீண்ட காலத் தொழிற் பயிற்சி, புதிய அங்கத்தவரைச் சேர்க்க மறுத்தல், சங்கத்திற் சேராதவரை உத்தியோகம் வகிக்கவிடாது தடுத்தல் என்பனபோன்ற முறைகள் சென்ற காலத்திலே பயன்படுத்தப்பட்ட சாதனங்களாகும். இதனோடு தொழிலாளர் சப்பிளை சம்பந்தமாக வேறு நுட்பமான தடைகளுமுண்டு. வேலையைத் தொழிற் சங்கம் மட்டுப்படுத்தல் (உதாரணமாக தினமொன்றுக்கு இத்தனை செங்கல்லு உற்பத்தி செய்யலாமென்பது முதலியன) வேலையைத் தாமத மாகச் செய்யச்செய்தல்.

## 2. நியமச் சம்பளவீதத்தை உயர்த்துதல்

உயர்ந்த சம்பளவிகிதத்தை ஏற்படுத்தத் தொழிற் சங்கங்கள் தொழி லாளர் சப்பிளையைக் கட்டுப்படுத்துமேயன்றி நேரடியான கட்டுப்பாட்டை அவை இன்று மேற்கொள்ளுவதில்லை. சங்கத்தலைவர்கள் இந்த முக்கியமான பொருளியல் உண்மையை உணர்ந்துகொண்டனர். முதலாளிகளை உயர்ந்த சம்பளம் கொடுக்குமாறு நெருக்கினுல் தொழிலாளர் சப்பிளை தானகவே இயங்கும். பிரமாணச் சம்பளத்தில் முதலாளிமார் தமக்குத் தேவையான வேலையாட்களை நியமிப்பர். மேலதிகமான விண்ணப்பதாரர்கள் தொழிற் சந்தையிலிருந்து சுயமாகவே நீக்கப்பட்டு விடுவர்.

நேரடித் தொழிலாளர் சப்பிளைக் கட்டுப்பாடு, உயர் சம்பள வீதம் மூலமாக மறைமுகமான கட்டுப்பாடு என்பவற்றிடையுள்ள தாரதம்மி யத்தை 5*a*, 5*b*, படங்கள் காட்டும்.

5*a* படத்திலே தொழிற்சங்கமானது SS (ச. ச.) இலிருந்து S′S′ (ச′ச′) க்கு சப்பிளையைக் குறைக்கிறது. இதனை நீண்டகாலப்பயிற்சியாலும், உயர்ந்த பயிற் சிக்கட்டணங்களாலும், செய்கிறது. இதனுல் சம்பளம் E இலிருந்து E′ இக்கு உயர்கிறது. (இதை நன்கு விளங்க வேண்டும். மொத்தச் சனத்தொகைக்கு ஏற்றபடி வைத்தியப் பயிற்சி பெறுவோர் தொகையைக் குறைப்பதால் வைத்தியர் களுடைய சம்பளத்திலுண்டாகும் மாற்றத்தைக் கவனிக்க).


5*b* இலே, தொழிற் சங்கமானது, முதலாளிமார் குறைந்த பட்சச் சம்பளத்துக்குக் குறையாமல் தொழிலாளருக்குக் கொடுக்க வழி செய்கிறது. இது RR என்ற கோட்டினுற் காட்டப்பட்டுள்ளது. இங்கேயும் சமநிலை E′ யிலிருப்பதைக் கவனிக்க. இங்கே RR ஆனது முதலாளிமார் தேவைக் கோட்டை வெட்டுகிறது. E′ இலிருந்து F வரையுள்ள தொழிலாளர் வேலைகளிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர். இது தொழிற்சங்கம் நேரடி யாகத் தடை செய்ததுபோலிருக்கிறது. இப்போது சப்பிளையைக் கட்டுப்படுத்து வது என்ன? உயர்ந்த சம்பள விகிதத்திலுள்ள வேலை வாய்ப்புகள் இல்லாதிருப்பதே.

www.padippakam.com



சம்பளத்தை உயர்த்துவதற்காகத் தொழிற்சங்கங்கள், சப்பிளையைக் கட்டுப்படுத்தி, நியமச் சம்பளத்தைக் கட்டாயப்படுத்தும் :

**சம்பளத்தை உயர்த்தும் இரு வழிகள்**




படம் 5. (*b*) இல் நியமச் சம்பளத்தை RR இற்கு உயர்த்துதலும், (*a*) இல் SS (ச.ச.) இலிருந்து S'S' (ச'ச') இற்குப் பயன்படு சப்பிளையைக் குறைத்தலும் சம்பளத்தில் ஒரேவிளை வைப்பயக்கும் இரு சந்தர்ப்பங்களிலும், E' இலிருந்து F வரை தொழிலாளர் வேலையிலிருந்து தவிர்க்கப்படுவர்.

தற்காலத் தொழிற்சங்க இயக்கங்கள்பற்றி, அவதானிப்போரிடை மயக்கத்தை உண்டுபண்ணிய ஒரு விடயத்தைத் தெளிவாக விளக்க இது உதவுகிறது. அத்துடன் சங்கங்கள் தம் சங்கங்களில் அங்கத்தவர் சேருவதற்கான கட்டுப்பாட்டைத் தளர்த்தின. அத்துடன் கூட்டுப் பேரத்தின் மூலம் சம்பள வீதங்கள் உயர்த்தப்பட்டன.

## 3. வருவிக்கப்பட்ட தேவைக் கோட்டை உயர்த்துதல்

தொழிலாளர் சம்பளத்தை உயர்த்துவதற்காக ஒரு தொழிற் சங்கம் ஏதாவது தந்திரத்தைக் கையாண்டு தொழிலாளர் தேவையை ஏற்படுத்தலாம்.


தொழிலாளர் தேவை அதிகரித்தால் அந்த கொள்கையைக் கொண்டு தொழிற்சங்கம் சம்பளங்களை உயர்த்த எண்ணலாம். சர்வதேசப் உடைத் தொழிலாளர் சங்கம்போல ஒரு தொழிற்சங்கம் உற்பத்தியைப் பெருக்கி உடைகளின் விலையைக் குறைக்கப்பார்க்கலாம். அன்றியும் பொருள்களை விளம்பரஞ் செய்யவும் உதவிபுரியலாம் ; அல்லது தொழிலைப் பாதுகாப்பதற்காக ஒரு பாதுகாப்புத் தீர்வையை உண்டாக்கலாம்.

அதனால் மனைத் தொழிலாளருக்கான தேவை உயர்த்தப்படலாம் ; அல்லது பொது உடன்படிக்கைகளுக்கான தொகையை உயர்த்தலாம் ; அல்லது முதலாளிமார் உயர்ந்த ஏகபோக விலையை நிலவச் செய்ய உதவி புரியலாம். அவ்வாறு புரிந்து உபரியாகக் கிடைக்கும் இலாபத்தைச் சம்பளமாக மாற்றலாம்.

கூட்டுப் பேரத்தினால் சம்பளங்கள் உயர்ந்தால், சம்பளங்கள் அவ்வாறு உயர்வதன் பயனாகத் தொழிலாளரின் உற்பத்திச் சக்தி உயருமானால், தொழிலாளர் தமது தேவைக் கோட்டை உயர்த்திவிடுவர்.

6 ஆம் படம் இதைக் காட்டும். இங்கே சம்பளம் RR இலிருந்து R′R′ இக்கு உயரத் தொழிலாளரின் தேவைக்கோடு DD (தே. தே.) இலிருந்து

**சில சங்கங்களின் கொள்கைகளால், தொழிலுக்கான தேவைக்கோடு மேலே நகர்கின்றது :**




படம் 6. போஷாக்கான உணவு அருந்தாதவர்களைப் பலமுள்ளவர்களாகவும், சோம்பேறிகளை வேலையில் ஆர்வமுள்ளவர்களாகவும் செய்வதால், சம்பளத்தை (RR இலிருந்து, R′R′ இற்கு) உயர்த்துகிறபோது, வேலைவாய்ப்பு (E இலிருந்து E′ இற்கு) அதிகரித்து, உற்பத்தித் தேவைக் கோட்டை மேலே DD (தே. தே.) இலிருந்து D′D′ (தே′தே′) இற்கு நகர்த்துகிறது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



D'D' (தே'தே') ஆக உயருகிறது. புதிய E சமநிலையில் சம்பளமும், வேலை வாய்ப்பும் உயர்ந்திருப்பதைக் கவனிக்கலாம்.


முற்காலத்திலே, தொழிலாளருக்குக் குறைந்த சம்பளம் வழங்கப்பட்டது. அதனால் அவர்கள் போஷாக்கற்ற உணவை அருந்தி வேலைத்திறமை யற்றவரானர். உயர்ந்த சம்பளம் கொடுத்திருந்தால், திறமையான வேலை யாட்களாகியிருக்கலாம். அதனால் உற்பத்திச் செலவு கூடுவதிலும்பார்க்கக் குறைந்திருக்கும். இன்று இந்நாட்டிலே தொழிலாளர் போஷாக்குள்ள உணவையுண்டு திடகாத்திரமுள்ளவராயிருக்கின்றனர். ஆனல் மனநிலைக் காரணங்களும் முக்கியமானவை. சம்பளத்தைக் குறைப்பதால் தங்க ளுக்கே நட்டமென்பதை இலாபம் விரும்பும் முதலாளிமாரும் இன்று ஒத்துக்கொள்ளுகின்றனர்.

உயர்ந்த சம்பளம் வழங்குதல் முதலாளிமாருக்கும் நன்று. அது "அதிர்ச்சிவிளைவை" வழங்கும். அவர்கள் தொழிலாளரிடம் பயன்படும் முறையில் வேலை வாங்குவர். 19 ஆவது நூற்றாண்டிலேகூட அமெரிக்கத் தொழில் உற்பத்தி உயர்வாயிருந்ததற்கு ஒரு காரணம், நல்ல விளைவுகளால், தொழிற்சாலை எந்திரங்களை முற்போக்கானவையாகச் செய்யவும், உயர்ந்த சம்பளங்களை வழங்கவும் முடியுமாயிருந்தமையே. தொழிற்சங்கங்கள் முதலாளிமாருக்கு உதைகொடுப்பதனாலோ, விதியின் கொடுமையாலோ வறுமையடையும் முதலாளிமார் தமது தொழிலைப் புதுவழியிற் பெருப்பிக்க முயற்சி செய்வர்.

### சம்பள உயர்வும் வேலைவாய்ப்பிலே குறைவும்.

சம்பள வீதமுயர்ந்தால் வேலை வாய்ப்புக்கள் குறையும்.[1] சம்பள உயர்வினல் குறிப்பிட்டதொரு தொழிலிலே உண்டாகக் கூடிய

கொள்வோரின் தனியுரிமையும் தொழிற்சங்கங்களும்




படம் 7.

1. முன்னர் தொழிலாளரை எற்படுத்தும் ஏக போக சக்தியை முதலாளிகள் பெற்றிருந்தால் கூட்டுப் பேரம், சம நிலையை உண்டாக்கும். இதனல் சம்பளம் உயர்வதோடு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்பதை நடுத்தரவகுப்புக்குரிய பொருளியல் நூல்களும், தொழிலாளர் பிரச்சினையை ஆராயும் நூல்களும் காட்டுகின்றன. ஏகபோகமான வாங்கும் சக்தியுடையவரைக் கொள்வோரின் தனியுரிமை யுடையவர் என வழங்குவர். தொழிற் சங்கம் ஏற்படுவதற்குமுன்னர் தனியுரிமையுடையோர் தனது சமநிலைச் சம்பளத்தை படம் 7 இலுள்ள MM இல் வைப்பர். இது E இலுள்ள போட்டிச் சம்பளத்திலும் பார்க்க எப்பொழுதும் குறைவாயிருக்கும். தனியுரிமையுடையோரின் சமநிலை எப்போதும் ஏன் $m$ என்ற தானத்திலிருக்கிறது ? தனிவாங்குவோர் $m$ இலிருந்து E இக்கு மேலே போக விரும்பமாட்டார். எனெனில் $m$ க்கு மேலுள்ள சம்பளங்

படிப்பகம்

www.padippakam.com



வேலையின்மை குறிப்பிட்ட அந்தத்தொழிலுக்குரிய தொழிலாளரின் தேவைக்கோட்டு நெகிழ்ச்சியிலே தங்கியிருக்கும். சாதனத்தேவை வருவிக்கப்பட்ட தேவையாகும் என்பதை, முந்திய அத்தியாயங்களிலே ஆராய்ந்தோம். தொழிலாளர்க்கானதேவை எவ்வாறு நெகிழ்ச்சியுடையதாயும் நெகிழ்ச்சியற்றதாயுமிருக்குமென்பதற்கான சில நிபந்தனைகளையும் ஆராய்ந்தோம். அந்தக் கொள்கைகளை ஆராய்வதற்கும் பிரயோகிப்பதற்கும் பின்வரும் உதாரணங்களிரண்டும் ஏற்புடையனவாகும்.

**நெகிழ்ச்சியற்ற வருவிக்கப்பட்ட தேவை.**

உதாரணமாக மின்சாரத்தை தொழிலாளர் சங்கமொன்று சம்பளங்களை உயர்த்துகின்றதென வைத்துக்கொள்வோம். நெகிழ்ச்சியற்ற தேவைக்கான சாதனங்களை இந்த உதாரணம் வலியுறுத்துவதோடு, மின்சார வேலையாட்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது சிறிதளவு குறையும் என்பதையும் வலியுறுத்தும்.

(1) குறுகிய தவணையிலே முதலாளிமார், மின்சாரத் தொழிலாளருக்குப் பதிலாக யந்திரங்களையோ, மேசன்மாரையோ ஏற்படுத்தமுடியாது.

(2) **முக்கியமற்றவராயிருத்தல் முக்கியமென்பதை** மறந்துவிடக்கூடாது. மின்சார வேலையாட்களின் சம்பளவிகிதத்தை மாற்றுவதனால் ஒரு வீடுகட்டுவதன் மொத்தச் செலவில் அதிக வித்தியாசமுண்டாகாது. சம்பளத்தை அவர்களுக்கு உயர்த்துவதனால் வேலை வாய்ப்பிலே அதிக குறைவு உண்டாகுமா ? சிறிய குறைவு உண்டாகுமா ?

(3) உதாரணமாக வீட்டுப் பஞ்சம் அதிகமாயிருக்கிறதெனக் கொள்வோம். வீடுகளின்றி இருக்கமுடியாதநிலை வீட்டுக்கான தேவை நெகிழ்ச்சியின்மை, மின்சார வேலைக்காரரின் வருவிக்கப்பட்ட நெகிழ்ச்சியை எவ்வாறு பாதிக்கும் ?

(4) உதாரணமாக எல்லா மின்சாரவேலையாட்களும் சங்கத்திற் சேரவேண்டுமென்று வைத்துக்கொள்வோம். சம்பளத்திலே உயர்வுண்டானால் தொழிற்சங்கத்திலே சேராத தொழிலாளரின் தொகையிலே உயர்வுண்டாகாது எனவுங் கொள்வோம். போட்டி வகையிலுள்ள இந்தச் சாதனங்களின் சப்பிளையிலுள்ள நெகிழ்ச்சியின்மை, சங்க மின்சார வேலையாட்களுக்கான தேவையை அதிகரிக்குமா ? அல்லது சமாந்தரமான நெகிழ்ச்சித் தேவையை உண்டாக்குமா? இதனால் தேவைக்கோட்டில் ஏற ஏற வேலை வாய்ப்புக் குறையுமா ?

களை அவர்கள் கொண்டுவரக்கூடிய வருமானத்துக்கு அதிகமாக உயர்த்துமென்பதை உணர்வர்.

கூட்டுப்பேரத்தினால் தொழிற்சங்கமானது சம்பளத்தை E வரை உயர்த்துமானால் தனி வாங்குவோர் SS (ச.ச.) கோட்டில் மேலே செல்வர். DD (தே.தே.) என்ற தேவைக் கோட்டிமே நாம் உயர்வதில்லையென்பதைக் கவனிக்க வேண்டும். சம்பளமும் வேலைவாய்ப்பும் ஒருசேர உயரும். (வினா : E க்கு மேலேயுள்ள R"R" என்ற மட்டத்துக்குப்பிரமாணச் சம்பளத்தைக் கூட்டுப் பேரம் உயர்த்தினால் என்ன நடக்கும் ? வேலை வாய்ப்புக்கு என்ன நடக்கும் ? தேவைக் கோட்டில் அம்புகள் கீறுக.

www.padippakam.com



(5) ஈற்றில் நிறைவில் போட்டியோ, பொதுக்கட்டுப்பாடோ வீடுகளின் விலையை அதிகம் மாற்றச் செய்யாதெனக் கொள்வோம். இதனுல் வீடு கட்டுஞ் சாதனங்களிடையே நெகிழ்ச்சித் தேவையா, நெகிழ்ச்சியற்ற தேவையா உண்டாகும். (குறிப்பு : எல்லா நிலைமைகளும் நெகிழ்ச்சியற்ற தன்மையையே உண்டாக்கும்.)

**நெகிழ்ச்சித் தேவைக்கான உதாரணம்.**

உதாரணமாக நீர் கண்ணுடி செய்யும் தொழிலாளர் தலைவனென்று வைத்துக்கொள்வோம். மொத்தச் செலவிலே தொழிலாளர் சம்பளம் ஒரு பெருந்தொகை. ஆனுல் மனிதருக்குப் பதிலாக எந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலில் உள்ள பெருந்தொகையான தொழிலாளர் சங்கத்திலே சேரவில்லை. பிரதானமாகப் புதிய இயந்திரங்களை இயக்கும் பயிற்சியற்ற தொழிலாளர் சேரவில்லை. கண்ணுடிக்குப் பதிலாக கடதாசியையோ தகரத்தையோ பயன்படுத்தலாமெனவும் வைத்துக்கொள்வோம். அப்போது நமது கொள்கைகளைப்பயன்படுத்தி (1) தொழிலாளருக்கான தேவை நெகிழ்ச்சியுடையதெனவும், (2) வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், சம்பளத்தை உயர்த்துவது ஆபத்தானதென்பதையும் பண்புவகையிற் காட்டமுடியுமா ?

**சங்கத்தின் சம்பளக் கொள்கை.**

கண்ணுடித் தொழிலாளர் சங்கம், சம்பள வெட்டு அவசியமென்பதைக் காலந்தாழ்த்தியே உணர்ந்தது. இவ்வாறே 1931 இல் கம்பளித் தொழிலாளர் சங்கம் சங்கத்திற் சேராத தொழிலாளரின் போட்டியைக் குறைப்பதற்குச் சம்பளவெட்டை மேற் கொண்டது. மகாச்சுசெட்சிலுள்ள சப்பாத்துத் தொழிற்சாலைகளில் சங்கத்திற் சேராத கிராமத் தொழிலாளர் வந்து சேர்ந்தனர். யுத்தத்துக்குப் பிந்தியகாலத்திலே தொழிலாளர் தேவைக்கான நெகிழ்ச்சியைக் கருத்திலே கொண்டு குறைவான சம்பளத்துக்குச் சம்மதித்தது. 1950 ஐ அடுத்த ஆண்டுகளிலே ஸ்ருடிபேக்கர் மோட்டார் தொழிலாளரும் இந்தக் கொள்கையை அனுசரித்தனர். ஆனுல் ஐக்கியச் சுரங்கத் தொழிலாளர் சங்கம் மணித்தியால வேலை நேரச் சம்பளத்தையே உயர்த்திற்று. இதனுல் வருடத்தில் வேலை செய்யும் மணி நேரம் குறைந்தது. நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெய் அதிகமாக விலையாயிற்று.

வேலை வாய்ப்பை, சம்பளக் கோரிக்கைகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைச் சில தொழிற் சங்கங்கள் கணக்கிலெடுப்பதுண்டு. ஆனுல் சம்பள உயர்வை மட்டுப்படுத்தத் தொழிற் சங்கங்கள் தாமாகவே முயல்வது அவ்வளவு வெற்றிகரமாகச் செயற்படுவதில்லை. ஏனெனில் (1) சம்பள உயர்வைப் பொதுவாகத் தொழிலாளர் வெறுப்பதில்லை. (2) சங்கங்கள், தமது அங்கத்தவரின் நன்மையையே கருதும் ; வேலையிழப்போரின்

படிப்பகம்

www.padippakam.com



நன்மையையோ, இனிமேல் வேலைக்கமர்த்தப்படுவோரின் நன்மையையோ கருதுவதில்லை. சங்கத் தொழிலாளர் சம்பந்தமான தேவைத் கோடு நெகிழ்ச்சியற்றதாகக் கருதப்படுகிறது.

**கூட்டுப் பேரத்தில் நிர்வாகத் தலைவர்.**

தொழிற் சங்கம் சில சமயம் சம்பள உயர்வை எதிர்ப்பதுபோலவே கம்பெனி நிர்வாகிகளும் சம்பளத்தை உயர்த்துவதால் நீண்ட தவணை இலாபம் பெருகுமென எண்ணுவர். ஆனால் இவை விசேடமாக உள்ள அபிப்பிராயம். சாதாரணமாக பேரம்பேசும் மகாநாடுகளிலே தொழிலாளர் நிர்வாகிகள் கூறும் சம்பளத்துக்கு அதிகமாகவே கோருவர்.

ஆயுதஞ் செய்யும் தொழிற்சாலையொன்றிலே ஒரு தொழிலாளிக்கு மணித்தியாலந்துக்கு 3 டொலர் சம்பளம் கிடைக்கலாம். சங்கத்தோடு நிர்வாகிகள் செய்துகொண்ட பழைய உடன்படிக்கை காலாவதியாகிறது. கம்பெனி அதிகாரியும், சங்கத் தலைவரும் சந்திக்கிறார்கள். சங்கப் பிரதிநிதி 10 சத வீதச்சம்பள உயர்வு, அதாவது மணி நேரத்துக்கு 30 சத உயாவைக் கேட்கிறார் ; நிர்வாகி 5 சத வீதம் அதாவது 15 சத உயர்வைக் கொடுக்கச் சம்மதிக்கிறார். சங்கத் தலைவர் தான் கேட்கும் 30 சதமும் கிடைக்குமென எதிர்பார்ப்பதில்லை. 15 சதத்துக்கும் அதிகமான உயர்வைக் கொடுக்க வேண்டுமென்பது கம்பெனிக்கும் தெரியும்.[1]

**கூட்டுப் பேரத்திலேயுள்ள நிச்சயமற்ற தன்மை.**

முடிவான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளென்ன ? இதைப்பற்றிப் பொருளியல் கொள்கை ஒன்றுங் கூறமாட்டாது. இது உளவியல், அரசியல் முதலியபற்பலகாரணங்களிலே தங்கியுள்ளது. பொருளியலறிஞரைப் பொறுத்தவரையிலே கொள்கையளவில் முடிந்தபயன் நிச்சயமற்றதாகவேயிருக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடைசியான சம்பள முடிவு 3 டொ. 15 சதத்துக்கும் 3 டொ. 30 சதத்துக்குமிடையிலிருக்கும். இதைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்தும்போது ஆறு வகையான காரணங்கள் எடுத்துக் காட்டப்படும். (1) வாழ்க்கைச் செலவு உயருமானால் சங்கத்துப் பொருளியலறிஞர் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தைப்பற்றி அதிகம் பேசுவார். ஆனால் விலைவாசிகள் வீழ்ச்சியடைந்தால் முதலாளியே இந்தவிடயத்தைப் பிரஸ்தாபிப்பார். (2) கம்பெனியும் தொழிலும் வளர்ச்சியடைந்தால், கம்பெனி சம்பள உயர்வைக் கொடுக்கும் சக்தியுள்ளதென்பதை சங்கம், எடுத்துக்காட்டும். கம்பெனிக்கு இலாபம் அதிகம் கிடைக்காவிட்டால் முதலாளியே இந்தப் பிரச்சினையைப் பிரஸ்தாபிப்பார். (3) சமீபத்திலே உற்பத்தி உயர்ந்தாலென்ன தாழ்ந்தாலென்ன அந்த விடயம், சம்பந்தப்பட்ட ஒருவ

1. இந்த 30 சத சம்பள உயர்வில் ஒரு பகுதி பென்ஷனுகவும், சுகநலக்காப்புரிமை நிதிக்கோ, உத்தரவாதஞ் செய்யப்பட்ட வருடாந்தச் சம்பளமாகவோ கொடுக்குமாறு கேட்கப்படும். ஆனால் அடிப்படைக் கொள்கை ஒன்றே.

www.padippakam.com



ரால் பேச்சுவார்த்தையின் போது எடுத்துக் காட்டப்படும். (4) அதே பிரதேசத்திலே வேறு கம்பெனிகள் சம்பளத்தை உயர்த்தியோ குறைத்தோ கொடுத்தால் இந்த விடயமும் பேச்சின்போது கொண்டுவரப்படும். (5) வாங்குஞ் சக்தியையும் நாட்டின் சுபீட்சத்தையும் உயர்ந்த சம்பளங்கள் தாங்கி நிற்குமெனத் தொழிலாளர் எடுத்துக்காட்டுவர். சம்பள அதிகரிப்பால் ஏற்படும் கூடிய செலவுகளை முதலாளி குறிப்பிடுவார். (6) தேசத்திலே சம்பள உயர்வு பலமுறை சில பெரிய தொழிற்சாலைகளிற் கொடுக்கப்பட்டுப் பழக்கப்பட்டால் அது பேச்சின்போது எடுத்துக்காட்டப்படும். (7) அமெரிக்கத் தொழிலாளரும் முதலாளிகளும் காசுச் சம்பள உயர்வில் பழக்கமுடையவர்கள். இவ்வாறு ஒவ்வொருவருடமும் மணிக்கு 3–4—சதச் சம்பள உயர்வுண்டு. இது வாழ்க்கைச் செலவுப்படிகளைவிடப் பிரத்தியேகமானது.

தொழிலாளரும், நிர்வாகிகளும் வருடாவருடம் புதிய சம்பள உடன்படிக்கைக்கு வருவர். இது சில நாட்கள் பேரம் பேசிய பின்னர் நிகழும். 3.24 டொலரே கூட்டுப்பேரத்திலிறங்கியவர்கள் கடைசியாக ஒப்புக் கொண்ட சம்பளமாகும். சில சமயம் அவர்கள் சம்பளம் 3.23 இக்கும் 3.25 இக்குமிடையில் நின்று விடும். அரசாங்க நடுவர் ஒருவர் இந்த 2 சத வித்தியாசத்தைக் குறைக்கப்பார்ப்பார். கட்சிச் சார்பற்ற மத்தியட்சர் ஒருவரின் தீர்ப்புக்கு இணங்கிவிடுவதாக ஓர் உடன்படிக்கை ஏற்படலாம். ஒரு மத்தியட்சர் தமது கடைசி முடிபுக்கு எவ்வாறு வருவார் என்பதைப் பொருளாதார இயல் கூறமாட்டாது. முன்னே கூறிய விடயங்களெல்லாவற்றையும் மத்தியட்சர் கருத்தில் கொண்டபோதிலும் அவருக்கு மிக முக்கியமான விடயம், இரு கட்சியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிபு எது என்பதேயாகும்.

**வேலை நிறுத்தமும் கூட்டுப் பேரமும்.**

வழக்கமாக வேலை நிறுத்தமோ, ஆட்களை வேலைக்கு வரவிடாது தடுத்தலோ இருக்கமாட்டாது. ஆனால் சமாதானமாக ஓர் ஒழுங்குக்கு வராவிட்டால் பெரிய வேலை நிறுத்தம் உண்டாகுமென்பதை எல்லாரும் அறிவர். நிர்வாகிகள் சம்பளத்தை 3.23 இக்கு மேலே போகவிரும்பமாட்டார்கள். தொழிலாளர் 3.25 இக்குக் குறைய வாங்குவதற்கு விரும்ப மாட்டார். இதனால் "வேலை நிறுத்தஞ்" செய்யப்படும். இதனைத் "தொழிலாள வேலை நிறுத்த"மென்று கூறுவதா, "முதலாளிகள் கதவடைப்பு" என்று சொல்வதா ? பொதுவாக இது வேலை நிறுத்தமென்றே கூறப்படும். ஆனால் குறித்த பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதானால் வேலைநிறுத்தமுண்டாகாதென்பதை இரு கட்சியினரும் அறிவர். எனவே இதனைத் தொழிலாளர் வேலை நிறுத்தமென்றோ, முதலாளிகதவடைப்பென்றோ கூறவேண்டியதில்லை.

வேலை நிறுத்தம் இரு கட்சியாரையும் வெகுவாகப் பாதிக்கும். தொழிலாளர் பலவாரச் சம்பளத்தை இழக்கலாம். முதலாளியின் எந்திரம் அந்தக்கால எல்லைக்கு ஒரு வேலையுமின்றிக்கிடக்கும். இதன்பயனாகப் பொதுசனம் பெரிய கஷ்டங்களை அடைய நேரிடும்.

www.padippakam.com



இரண்டு சதத்தில் வந்த வேற்றுமையினால் தொழிலாளர் எதற்காக வேலை நிறுத்தஞ் செய்யவேண்டுமென்று கூறுவர். மணிநேரத்துக்கு இரண்டு சதவீதம் சேர்ப்பதானால் அவர்கள்தாம் இழந்த பொருளைப் பெறுவதற்குப் பல வருடங்கள் பிடிக்கும். ஆனால் அவர்களுடைய நோக்கின்படி முதலாளியே குற்றவாளி. அவன், தான்பிடித்த பிடியை விடமாட்டேன் என்று நின்றது தவறு. அவனுடைய நட்டமே தங்களுடைய நட்டத்திலும் பார்க்கப் பெரிதென அவர்கள் எடுத்துக்காட்டுவர்.

வேலை நிறுத்தத்தை எதற்காக இரு கட்சியாரும் உண்டாக விடுகின்றனர்? இதற்குக் கொடுக்கப்படும் விளக்கம் பின்வருமாறு : வேலை நிறுத்தம் அந்த இரண்டு சத உயர்வுக்காகவன்று. 3.15 இலிருந்து முதலாளி 3.23 இக்கு வந்தது எதனால் ? வேலை நிறுத்தம் உண்டாகிவிடுமென்ற பயத்தினாலேயே. இருவரும் மனமொத்து உடன்பட வேண்டும். இல்லாவிட்டால் வேலைநிறுத்தமென்ற குண்டு வெடிக்கவே செய்யும்.

பயமுறுத்தல் வெறும் பயமுறுத்தலாக மாத்திரம் இருக்கக் கூடாது. ஒரு சமயம் அதை நிறைவேற்றினாலொழிய அது பயனற்ற வெறும் பயமுறுத்தலாக மாத்திரம் இருந்துவிடும். வேலைநிறுத்தத்தால் வரக்கூடிய நட்டத்தை இரு கட்சியாரும் தாங்கள் பொறுக்க ஆயத்தம் என்பதைக் காட்டவேண்டும். வேலை நிறுத்தத்தைக் கொண்டுவரக்கூடிய சம்பள உயர்வு மறுப்பை எந்த முதலாளியும் மேற்கொள்ளக்கூடாதெனச் சட்டம் செய்யப்பட்டால், இது ஒரு மணிநேரத்துக்கு அவனுக்கு 2 சத நட்டத்தைத் தானா கொண்டுவரும் ? இல்லை. அப்படியானால் தொழிற்சங்கங்கள் 50 சத உயர்வையோ 25 சத உயர்வையோ கேட்கலாம். அவ்வாறே சங்கமானது வேலை நிறுத்தஞ் செய்வதற்குரிய உரிமையைப் பயன்படுத்தாவிட்டால் முதலாளி 3 டொலர் கொடுத்துத் தொழிலாளியை அமர்த்துவதற்குப் பதில் 2 டொலர் கொடுத்து அமர்த்தலாமே.

## கூட்டுப் பேரமும் பொது நலமும்.

தற்போதுள்ள சட்டத்தின்படி அரசாங்கம் தலையிடமாட்டாது. தொழிலாளரும், நிர்வாகிகளும் தாமாக ஒத்துக்கொண்டால் கூட்டுப் பேரம் உண்டாகும். ஏற்படக்கூடிய பலாபலன் மிக்க பயனுள்ளதெனக் கூறமுடியாது. ஆனால் அரசாங்கத் தலையீடுகூட, விடயங்களைத் திருத்தமாட்டா என்பது நிபுணர்களுடையகருத்தாகும். ஆனால் முக்கியமானதும், சமூகத்தின் உயிர்நாடிபோன்றதுமான போக்குவரத்துத் தொழில், உருக்குத் தொழில் போன்ற தொழில்களில், கூட்டுப்பேரம் பொது நன்மையினால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியது. ஒவ்வொரு தொழிற் பிணக்கிலும் மூன்று கட்சிகளுண்டு. இரண்டன்று. தொழிலாளியும் முதலாளியும் சண்டையிடும்போது பொதுசனம் துன்பமடைகிறது. அப்போது கூட்டுப் பேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. அதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் போது அரசாங்கம் தலையிடும் ; அது புகையிரத நிர்வாகத்தைக் கையேற்று

www.padippakam.com



நடத்தும் ; சனாதிபதி இராணுவத்துக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்த்து அவர்கள் மூலம் வேலையைத் தொடர்ந்து நடத்தலாம். உயர் கோடு இதற்கு அனுமதி அளிக்கும். 1959–60 இல் உருக்கு வேலை நிறுத்தத்திலே நாட்டின் பொருளாதாரச் சுகத்துக்கும் சீர சுகத்துக்குமே இந்த வேலை நிறுத்தம் தீங்கு விளைக்குமென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டது.

அரசாங்கக் கூட்டுப்பேரத்தைப் புறக்கணித்தால் சம்பளத்தை ஒழுங்கு படுத்த என்ன செய்யவேண்டும்? தகவல்காணும் ஆராய்ச்சிச் சபைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவை பிரச்சினையை வேறொரு வகையிலே திருப்பி எழுதுகின்றன. மேலும் நியாயமான சம்பளம்பற்றி வரைவிலக்கணம் கூறும் பிரச்சினை வெறும் பொருளாதாரப் பிரச்சினைமட்டுமா? அல்லது பொதுமக்கள் எதைச்சிறந்த நியாயமான ஒரு சம்பளமாகக் கொள் வாரென்பதையுணர்த்தும் அரசியல் பிரச்சினையா? இவற்றைப் பொரு ளாதார நூலிலே திட்டமாகக் கூறமுடியாது. முற்போக்குள்ளதும் நிலையானதுமானதொரு பொருளாதாரத் திட்டத்தை விரும்பினால் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தும் விடயத்தில் எல்லாரும் தன் அடக்கத்தை மேற்கொள்ளவேண்டியதவசியம்.

**தகைமைகள்.**

1. தொழிற் சங்கங்கள் சம்பளங்களை உயர்த்திவிட்டனவா? தொழிற் சங்க ஆதரவாளர் அவை நிசச் சம்பளத்தை உயர்த்திவிட்டனவென்று கூறுகின்றனர். அதைக் கண்டிப்போர், அவை செய்தது அவ்வளவுதான். அதன்பயனாக வளங்களின் தொழிற் படுதிறமையைக் குழப்பிவிட்டார்கள் என்று கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் ஒத்துக் கொண்டபோதிலும், சங்கங்கள் நிசச் சம்பளத்தை உயர்த்தி விட்டன என்பது பற்றி ஒன்றுந் தெளிவாயில்லை.

1933 ஆம் ஆண்டு துவக்கம், குறைவான சம்பளத்தைப் பெறுவனவும், சங்கத்திற் சேராதனவுமான தொழில்கள் (உதாரணமாக வீட்டு வேலை, பண்ணை வேலை போன்றன) சங்கத்திலே சேர்ந்த தொழில்களைவிட அதிக வீதச்சம்பள உயர்வைப் பெற்றுவிட்டன. இக்காலக்கட்டத்திலே தொழில் களெல்லாம் சங்கமுடையனவாயாகிக் கொண்டு வந்தன. அப்போது உயர்ந்த சம்பளம் பெறும் தன்மை கூடிக்கொண்டு வந்தது. ஆனால் இந்த வித்தியாசங்கள் தனிக்கணக்கிற் கூறுவதானால் மாற்றமின்றியே இருந்தன. இதன் அர்த்தமென்ன? வீதவித்தியாசம் குறைந்துகொண்டு வருகிறதென்பதே. (உதாரணமாக நீர் சங்கத்திற் சேர்ந்த தொழிலாளர் எனக் கொள்வோம். உமது சம்பளம் மணித்தியாலத்துக்கு 2 டொலர். என்னுடைய சம்பளம் ஒரு டொலர். நான் சங்கத்திலே சேராதவன். இருவருக்கும் 1 டொலர் அதிகரிப்புக் கிடைத்தது. இதனால் தனி வித்தியாசத்தில் மாற்றமுண்டாகவில்லை. ஆனால் உமக்கு என்னிலும் பார்க்க இரண்டு மடங்கு சம்பளம் இப்போது கிடைக்கவில்லை. பதிலாக நான் பெறும் 2 டொலருக்கு உமக்கு 3 டொலர் கிடைக்கிறது.)

www.padippakam.com



சமீப காலத் தசாப்தங்களிற் பெரும்பாலனவை சம்பள வித்தியாச விகிதத்திலே குறைவைக் காட்டுகின்றன. இது சங்கத்துப் போக்குக்கு ஓரளவு தனிப்பட்ட போக்காகும்.

சங்கத்திலே சேர்ந்தவர்களின் சராசரிச் சம்பளம், சங்கத்திற் சேராதவருடைய சராசரிச்சம்பளத்திலும் பார்க்க உயர்வானதென்பது உண்மையே. இது சங்கங்களின் செல்வாக்கினுல் உண்டானதென்று கூறமுடியாது. சங்கங்களையுடைய தொழில்முறைகள் பெரிய தாபனங்களாயிருக்கும்; இந்தத் தொழில்களிலே வேலை செய்வோரும் சாதாரணமான தொழிலாளரை விட அதிக பயிற்சிபெற்ற தொழிலாளராயிருப்பர். இத்தாபனங்களிலே தொழிற்சங்கங்களேற்படுவதற்கு முன்னர் கூட இத்தொழிலாளர் சராசரி சம்பளத்திலும் பார்க்க உயர்ந்த சம்பளத்தையே பெற்று வந்திருப்பர்.

கலிபோர்னியாச் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஆதர்ரொஸ் என்பவர் 1933 ஆம் ஆண்டு துவக்கம் சங்கத் தொழிலாளரிடையிலும் சங்கத்திற் சேராத தொழிலாளரிடையிலுமுண்டான சம்பள மாற்றங்களை ஆராய்ந்தார். சமீபத்திலே தொழிற் சங்கங்களை ஏற்படுத்திய தொழில்களில் சற்றே அதிகமான சம்பள உயர்வு இருப்பதை அவர் கண்டார். இது 1933 ஆம் ஆண்டிலிருந்ததாகும். ஆனுல் சங்கத்திலே சேராத தொழிலாளரையுடைய தொழில்களிலும் 1933 இக்கு முன்னரே தொழிலாளர் சங்கத்தைத் தாபித்துக் கொண்ட தொழில்களிலும் பார்க்கச் சற்று அதிகமான சம்பளம். (அதாவது எ. பீ. சீ. என்று மூன்று தொழில்களுண்டெனக் கொள்வோம். இவையெல்லாம் 1933 இல் ஒரே சம்பளத்தைக் கொடுத்து வந்தன என்றும் கொள்வோம். சமீபத்திலே தொழிற் சங்கத்தைத் தாபித்த எ என்ற தாபனம் பீ இலும் பார்க்கச் சிறிது அதிகமான சம்பளத்தைக் கொடுக்கிறது. பீ இக்குத் தொழிற் சங்கமில்லை. சி. 1933 இக்கு முன்னரே தொழிற் சங்கத்தையுடையது. அதனுடைய சம்பளத்திலும் பார்க்க எ இன் சம்பளம் சிறிது உயர்வானது.)

ஆனுல் இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து தொழிற் சங்கங்கள் சம்பள உயர்வை உண்டாக்கினவென்று கூறமுடியாது. சங்கத்திலே சேராத தொழிலாளரின் சம்பளத்தை உயர்த்தவும் தொழிற் சங்கங்கள் பாடுபட்டுள்ளனவென்று தொழிலாளர் தலைவர் கூறுகின்றனர். சங்கத்திலே சேராத தொழிலாளரை வேலைக்கமர்த்தும் தாபனங்கள், சங்கத் தொழிலாளருக்குக் கொடுக்கும் சம்பளங்களையே கொடுக்கப்பார்க்கும். சங்கங்களின் தலையீட்டைத் தவிர்ப்பதற்காக ஒரு தாபனம் தனது சம்பளத்தை உயர்த்தினுல், தொழிற்சங்கத்துக்கு அதனுல் எவ்வித மதிப்புமுண்டாகாது. ஆனுல் தொழிற்சங்கங்களின் முயற்சியால் இலாபமும், தொழிற் பெருக்கமும், உற்பத்தி உயர்வும் தொழில்கள் ஆங்காங்கு குவிந்து கொள்வதுமுண்டானுல் சங்கங்கள் அவற்றுக்குத் தாமே காரண கர்த்தாக்கள் என்று கூறலாம். அப்போது தொழிலாளர் தேவையும் அதிகரிக்கும். தொழிற் சங்கங்களில்லாவிட்டாலும் இந்த நிலைமை உண்டாகலாம். எனவே எது காரணம் ? எது

www.padippakam.com



காரியம். ஆனால் சமூகம் சம்பந்தமான விடயங்களை இரசாயனப் பொருள்கள் போல ஆராய முடியாது.

## 2. தொழிலாளர் தேவைபற்றிய கருத்திலுள்ள சில குறைபாடுகள்

சிறியதொரு தொழிலாளர் சந்தைக்குத் தேவையான தேவைக்கோட்டைத் தயார் செய்வது நியாயமானதே. மற்றப் பொருள்களின் விலைகளோ சம்பளங்களோ மாறாதிருந்தால் ஒரு பிரிவிற் கொடுக்கப்படும் உயர்ந்த பணச்சம்பளம் மற்றொரு பிரிவிலே கொடுக்கப்படும் நிசச் சம்பளத்துக்குச் சரியாயிருக்கும். அந்தக் கட்டத்திலே வேலை வாய்ப்புக்கள் குறையத் தொடங்கும்.

ஆனால் நாம் சேர்க்கைப் போலியை மறந்துவிடக்கூடாது. பொருளாதாரத்தின் ஒரு சிறு பகுதிக்குப் பொருத்தமான ஒரு விடயம் அதன் சமுதாயத்துக்குப் பொருத்தமுடையதாயிராது. சம்பள விகிதங்களெல்லாம் உயர்ந்தால் பண்டங்களின் விலை மாறாதிருக்குமென்று கொள்வது ஆபத்தானது. உதாரணமாகப் பணச் சம்பளத்தை இரட்டித்தால் விலைகளெல்லாம் இரட்டிக்கும். நிலைமை அப்படியானால் நிசமான சம்பளம் மாறவே மாட்டாது. படம் 1 இலுள்ள வரைப்படத்திலே தேவைக்கோட்டில் மேலே செல்வதுமில்லை, கீழேயிறங்குவதுமில்லை. (படம் 1 ஐப் பார்க்க, நிலைக்குத்தான அச்சு நிரந்தரமான வாங்கும் சக்தியை டொலர் கணக்கிற் காட்டும்.)

சம்பளங்கள் வெறும் செலவுகள் மாத்திரமல்ல ; அவை குடிசனங்கள் பெரும்பாலோருடைய வருமானத்தையும் காட்டும். தொழிற்றுறைகளில் கிடைக்கும் விற்பனவு வருமானம் சம்பள மட்டத்திலே பாரதூரமான மாற்றமுண்டாவதால் பெரிதும் பாதிக்கப்படும். தொழிலாளர் வேண்டுமென உண்டாகும் தேவை, தொழிலாலுண்டாகும் உற்பத்திப் பொருள்களுக்குண்டாகும் தேவையிலிருந்து வருவிக்கப்பட்டதே. எனவே சம்பளத்திலுண்டாகும் மாற்றம் ஒவ்வொன்றும், தொழிலாளருக்கான தேவையை மாற்றும். எனவே தொழிலாளர் தேவை விடயத்திலே மாற்றமில்லாததைக் கொண்டு வாதமிடுவது மிக ஆபத்தானதாகும்.

இந்த குறைபாட்டை எடுத்துக்காட்டுவதற்கு நாம் பின்வரும் கேள்விகளைக் கேட்போம். 1932 இலே வேலையின்மை அதிகமாக இருந்தபொழுது பணச் சம்பளத்திலே வெட்டை உண்டாக்கியிருந்தால் வேலை வாய்ப்புப் பெருகியிருக்குமா ? அல்லது தொழிற் சங்கவாதிகள் கூறுவதுபோல பணச் சம்பளத்திலே குறைவை உண்டாக்கினால், வாங்கும் சக்திகுறைய வேலை வாய்ப்புக் குறைந்திருக்குமா ? சம்பளத்தை அரைவாசியாகக் குறைத்தால் விலைகளும் அரைவாசியாகும். பணச்சம்பளங்களும் அரைவாசியாகும், பணச் செலவுகளும் அரைவாசியாகும், எனக் கொண்டால், இவ்வாறு சமநிலையான பணவாட்டம், வேலையின்மை நிலையைக் குறைக்கவும் மாட்டாது; அதற்குத் துணைபுரியவும் மாட்டாது. சாதாரண DD (தே. தே.) கோட்டுக்

www.padippakam.com



கணக்கில் வாதாடும் கண்டனக்காரரின் ஆதாரமற்ற கண்டனத்தை ஏற்கக் கூடாதென்பதையே இது காட்டும். அத்துடன் "வாங்கும் சக்தி" வகையில் வாதாடும் தொழிலாளர் நண்பர்களின் வாதத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதைக் குறிப்பிடும்.

இந்த விடயம் மிகச் சிக்கலானது. அதை இதுபோன்ற ஆரம்பநூலிலே விளக்கமுடியாது. உயர்ந்த பணச்சம்பளம் பூரண வேலை கொடுக்கிறதெனத் தொழிற்சங்கங்கள் வாதாடும். வியாபார மந்தத்தைத் தடுப்பதானல் சம்பளத்தை வெட்டவேண்டுமென ஒரு நூற்றுண்டாகவே கூறப்பட்டு வருகிறது. இரண்டு கொள்கைகளும் தவறுடையனவாயிருக்கலாம். பொருளியலறிமுறை இதற்கு முடிவானதொரு விடையைக் கொடுக்க மாட்டாது.

தொழிலாளர் பொருளியல் பற்றி ஆராய்ந்த அல்பேட் றீஸ், லோயிட் ஜி. றெய்னேல்ட்ஸ் என்பவர்களின் கருத்தை இங்கே மேற்கோள்காட்டித் தருகிறேம்.

தொழிற் சங்கங்கள், தொழிற்றுறைகளிலும், பொருளியல் பிரிவிலும் ஆற்றும் தொண்டைப்பற்றி நாம் அளவுக்கதிகமாக வற்புறுத்துகிறேம். சங்கங்கள் செய்யும் கருமங்களாலே எஞ்சிய மூன்றிலிருபகுதிகளின் சம்பளம், கூலி என்பன பாதிக்கப்படும். ஆனல் அவற்றின் சம்பளவிகிதத்தைப் பாதிக்கும் தனிப்பட்ட சக்திகளுமுண்டு. மூன்றிலொன்றுனதொழிற் சங்கத் தொழிலாளர் விடயத்தைப்பற்றி எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாத தொழிற் சங்கங்களுமுண்டு.

தொழிற் சங்கங்களிலே மூன்றிலொரு பகுதி தமது தொழிலாளரின் சம்பளத்தை 15சத வீதத்திலிருந்து 20சத வீதமாக உயர்த்தியுள்ளன. வேறு மூன்றிலொரு பகுதி அதை 5சத வீதத்திலிருந்து பத்து வீதமாக உயர்த்தி யுள்ளது. எஞ்சிய மூன்றிலொரு பகுதி ஒன்றுஞ் செய்ய வில்லை. இந்த உயர்வீதம் பணவீக்கக் காலத்திலே ஏற்படவில்லை. சுபீட்சமும் நிலையான விலையுமுள்ள காலத்திலே நடந்திருக்கின்றன. உதாரணமாக 1946–1948 போன்ற பணவீக்கமிருந்த காலத்திலே சங்கங்கள் கூடச் செயலாற்றியிருக்கின்றன. இது கூட்டுப்பேரம் சம்பந்தமான டவடிக்கைகள் கஷ்டமானவை என்பதனுலேயே.

றெய்னேல்ட்ஸ் தமது ஆராய்ச்சியின் பயனுகப் பின்வரும் முடிவைத் தருகின்றுர் :—கூட்டுப்பேரத்தின் பயனுக உண்டாகும் பலவகை விளைவுகளை ஆராயுமிடத்து, சம்பள அமைப்புக்குத் தொழிற்சங்கங்கள் கேடு விளைவிக்கவில்லையெனக் கூறலாம். அவற்றின் பிரயத்தனத்தால் சம்பள அமைப்பு நன்மையடைந்ததெனவுங் கூறலாம். இம்முடிவு பல பொருளியலறிஞருக்கு வியப்பைக் கொடுக்கலாம். தொழிற் சங்கங்கள் எங்கும் உண்டானல் சம்பள அமைப்பில் பெரிய குழப்பமுண்டாகுமென்று கூறுவது ஆதாரமற்றது.

www.padippakam.com



தொழிற்சங்கங்கள் பலமடைந்திருக்கும் நாடுகளிலேயுள்ள சம்பள அமைப்பு ஒழுங்கானதாகவும், கண்டனமற்றதாகவுமிருக்கிறது. சங்கங்கள் பலமற்ற நாடுகளில் அவ்வாறில்லை.

**சுருக்கம்**

**அ. போட்டிச் சம்பள நிர்ணயம்**

1. நிறைபோட்டியுள்ள சமநிலையிலே மனிதரிடையிலும் வேலைகளிடையிலும் வேறுபாடில்லாவிட்டால், சம்பள வித்தியாசம் இருக்கமாட்டாது. சமநிலைச் சம்பளவிகிதம், சப்பிளை தேவை என்பவற்றல் நிர்ணயிக்கப்படும். ஏ என்ற நாட்டிலே பீ என்ற நாட்டிலும் பார்க்க (1) ஒரு தொழிலாளிக்கு அதிக இயற்கை வளம் இருப்பதாலும் (2) உற்பத்திச் சாதனங்கள் வாய்ப்பாயிருப்பதாலும் (அதிக மூலதனம், சிறந்த நுண் தொழில் அறிவு) ஏ நாட்டில் பீ நாட்டிலும் பார்க்க உயர்ந்த சம்பள விகிதமிருப்பதற்கு வாய்ப்புண்டு.

2. இயற்கை வளங்களுக்கு ஏற்றவகையிலே தொழிலாளரைக் குறைத்தால் நிசச் சம்பளம் உயரும் என்பது குறைந்துசெல் பயன் விதியிஞல் கூறப்படுகிறது. தொழிலாளர் சம்பந்தமான கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இந்தக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டாலும், பெருவாரி உற்பத்தியிலே கட்டுப்பாட்டை உண்டாக்கும் சரித்திர ரீதியான உதாரணங்கள் இதற்கு மாருனதொரு போக்கான, விளைவு அதிகரித்தலைக் காட்டும். விரும்பிய அளவுக்குக் குடிசனத்தொகை இருக்குமாஞல் தனிநபர் ஆள்வீத உச்ச வருமானம் சம நிலையடையும் வகையில் இரு போக்குக்களும் அமையும்.

3. இந்தியாபோன்ற நாடுகளிலே அதிகப்படியான சனப்பெருக்கம் உண்டாகுமென்பது மல்தஸின் சித்தாந்தம். ஆஞல் ஐக்கிய அமெரிக்காவிலோ, வளர்ச்சியடைந்த வேறு நாடுகளிலோ சனப்பெருக்கமுண்டாகி, நிச வருமானத்தை வாய்க்கும் வயிற்றுக்கும் போதுமான— குறைந்த உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத— அளவுக்குத் தள்ளிவிடக் கூடிய நிலை கிடையாது.

வேலையற்றோர் தொகை, நிசவருமானத்தைக் குறைப்பதாஞல் சமநிலைக்குத்தான் குறைக்கும். மேஞடுகளிலே இந்தச் சமநிலைச்சம்பளம் (வாய்க்கும் வயிற்றுக்கும் போதுமான) குறைந்த சீவன மட்டத்துக்கு மிக அதிகமாயுள்ளது. இது ஒவ்வொரு தசாப்தத்திலும் கூடிக்கொண்டேயிருக்கும்.

4. வேலையின்மையுண்டாகுமென்ற பயத்திஞற் சில சமயம் "தொழிலாளர் ஆபத்துப் போலி" உண்மையென ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தப்போலியின்படி குறிப்பிட்ட ஒரு தொகை வேலைதானுண்டு என்ற எண்ணமுண்டா கிறது. நுண்தொழிலாளரிடையே வேலையின்மையுண்டாவதாலும், வியாபார மந்தத்திஞலும்ஏற்படும் அனுபவமேஇதற்குக்காரணம். வாரத்திலே 30 மணி நேரவேலை, பாதுகாப்புவரிகள், தொழிலாளர் வேலை விதிகளை இலேசாக்குதல் என்ற கிளர்ச்சிகட்கெல்லாம் இதுவே

www.padippakam.com



காரணம். ஆனால் வேலையின்மை இவ்வாறு நீக்கமுடியாது. அரசாங்கமும், தனியார்துறையும் போதிய வேலை வசதிகளையுண்டாக்கவேண்டும். அதைவிடுத்து இத்தகைய தோல்வி மனப்பான்மைக் கட்டுப்பாடுகளை உண்டாக்கக் கூடாது.

தொழிலாளர் சப்ளைக்கு நாலுபரிமாணமுண்டு: சனத்தொகை, பயன்படு தொழிலில் ஈடுபட்டோர்தொகை, ஒரு வாரத்திலோ வருடத்திலோ வேலை செய்யும் சராசரி மணிக்கணக்கு, தொழிலாளரின் வேலைத்திறன், என்பன. இவற்றுள் சம்பளவீதம் பிரதானமாக மணித்தியாலத் தொகையையேபாதிக்கும். மற்றவை சமூகச் சாதனங்களிலே தங்கியிருக்கின்றன.

6. சம்பளங்கள் உயரும்போது தொழிலாளர் சப்ளையிலே இரண்டு எதிரிடையான விளைவுகளுண்டாகின்றன. "பதிலீட்டு விளைவு" ஒவ்வொரு தொழிலாளரையும் மேலதிகமான மணித்தியாலங்களுக்கு வேலை செய்யத் தூண்டுகிறது. காரணம் மேலதிகமான சம்பளம். "வருமானவிளைவு" எதிரான பயனைக் கொடுக்கிறது. அதாவது சம்பளம் உயரத் தொழிலாளர் ஓய்வு காலத்தைக் கூட்டுவர்; அத்துடன் சௌகரியங்களையும் கூட்டுவர். இந்த விளைவுகளில் எது தலை ஓங்கி நிற்குமென்பது ஒவ்வொரு தொழிலாளியினுடைய உருசிகளினாலுமே நிச்சயிக்கப்படும். ஆனால் பெரும்பாலானவர்க்குப் பொருத்தமானதொரு விடயமுண்டு. அது நெருக்கடியானதொரு சம்பள மட்டம். அந்த மட்டத்துக்கு மேலே போனால் சப்ளைக்கோடு பின்னோக்கி வளையும். மிக்க திறமையும், வரப்பிரசாதமுமுள்ள தொழிலாளர் சம்பந்தமான சப்ளை நெகிழ்ச்சியற்றது. இவர்களுடைய சம்பளத்திலே "தனிப் பொருளாதார வாடகை" என்ற அமிசம் கலந்திருக்கிறது.

7. மக்களும், வேலைகளும் ஒரே மாதிரியிருக்கும் என்ற கற்பனைச் சார்பான கருதுகோளைக் கைவிடுவோமானால், நல்ல சம்பள வித்தியாசங்கள் நிறை போட்டியிலுள்ள தொழிற் சந்தைக்குக்கூடப் பொருத்தமுடையதாயிருக்கும், என்பதை உணரலாம். "சம்பள வித்தியாசங்களைச் சமன்படுத்தல்" வேலைகளிடையேயுள்ள பயனின்மையிலடங்கிய பணச்சார்பற்ற வித்தியாசங்களுக்கு ஈடு செய்யும். இது வேற்றுமைகளிற் சிலவற்றுக்கு விளக்கம் தரும்.

8. தொழில்கள் பலவற்றின் தன்மை சம்பந்தமாயுள்ள வித்தியாசங்களே சம்பள வித்தியாசங்களுக்கான மிக முக்கிய காரணம். தொழிலாளரிடையே போட்டியில்லையெனக் கூறமுடியாது. அரைகுறையாகப் போட்டியிடும் தொகுதிகள்ள அவர்களிடையே உண்டு. ஒரு தொகுதியின் சார்பளவுச் சம்பளம் உயர்ந்தால் தொழிலாளர் சப்ளையில் மாற்று—நெகிழ்ச்சிப் பயன்கள் நிறைய உண்டாகும்; ஏனெனில் சிலர் நல்ல சம்பளமுள்ள வேலைகளையே நாடுவர். நிறைவான போட்டிச் சந்தையிலே, சம்பளத்தின் இறுதி மாதிரி, சப்ளை, தேவை என்பவை தம்முட் தொடர்புறும் பொதுச் சமநிலை

www.padippakam.com



யினுலேயே நிச்சயிக்கப்படும். (அட்டவணை, 1ஐ மறுபடி பார்க்க. பல வகை விசேட உதாரணங்கள் பொதுச் சமநிலை சம்பந்தமான இந்த மாதிரியில் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை ஆராய்க).

**(ஆ) நிறைவில் போட்டியும், கூட்டுப் பேரமும்.**

1. தொழிற் சங்கத்தோடு கூடினுலென்ன கூடாவிட்டாலென்ன தினசரி வாழ்வில் தொழிற் சந்தைகள் நிறைபோட்டியிலிருப்பதில்லை. முதலாளிகள் சம்பளவிடயத்தில் சாதாரணமாக ஓரளவு ஆதிக்கம் வகித்தே வருகின்றனர். ஆனுல் அவர்களுடைய சம்பளக் கொள்கை கிடைக்கக் கூடிய தொழிலாளரைப் பொறுத்தே அமையும்.

2. (1) தொழிலாளர் சப்பிளையைக் கட்டுப்படுத்துவதாலும் (2) கூட்டுப் பேரத்தின் பயனுக பிரமாணச்சம்பள விகிதங்களைத் தாபிப்பதாலும் (3) தொழிலாளர்க்கான வருவித்த தேவையை உயர்த்தக்கூடியவாறு கொள்கைகளை உண்டாக்குவதாலும், தொழிற் சங்கங்கள் சம்பளத்தை நிர்ணயிக்கப் பார்க்கின்றன. இவற்றுள் இரண்டாவதே இன்று பிரபலமடைந்து வருகிறது.

3. சம்பளங்கள் சார்பளவில் உயர்வதால் பல தொழிற்றுறைகளில் தொழில் வாய்ப்புக்கள் குறைவதுண்டு. குறிப்பிட்டதொரு தேவைக் கோட்டின் போக்கை அனுசரித்தே இம்முடிபு செய்யப்படுகிறது. (இதில் உயர் உற்பத்தி காரணமாகத் தேவையில் மாற்றம் உண்டாகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.)

4. கூட்டுப் பேரம் விவாதிக்கப்படும்போது பின்வரும் விடயங்கள் எடுத்துக்காட்டப்படும். (அ) செலவும், வாழ்க்கை தரம் மட்டமும் (ஆ) சம்பளம் கொடுக்குந்திறனும், இலாபமும். (இ) உற்பத்திப் போக்கும், முன்னேற்றச் சாதனங்களும். (ஈ) அத்தொழிற் துறைகளிலும், அந்தப்பிரதேசத்தில் வேறு இடங்களிலும் வழங்கப்படும் சம்பளங்களும். (உ) வாங்கும் சக்தி, செலவுகளின் மட்டம் ஆகியவற்றில் உயர் சம்பளவீதம் உண்டாக்கக் கூடிய மாற்றம். (ஊ) முக்கியமான தொழிற்றுறைகளிலே " சூசக பேரங்களினுல் " நிச்சயிக்கப்படும் தேசீய மாதிரிப்போக்கு. ஈற்றிலே எத்தகைய சம்பளப் பேரம் உண்டாகுமென்பதைப் பொருளாதார அறிமுறையினுல் கூறிக் கொள்ள முடியாது. கடைசி நிபந்தனைகள் நிச்சயமற்றவை.

5. அரசாங்கம் தலையிடாமலோ, பூர்வாங்க மத்தியட்சஞ் செய்யாமலோ, வேலை நிறுத்தஞ் செய்யாமலோ சமரசமான உடன்படிக்கைக்கு இடமுண்டு. ஆனுல் வேலைநிறுத்தம் உண்டாகலாம் என்ற பயம் எப்போதுமுண்டு. பேர நடவடிக்கைகள் அந்தப் பின்னணியிலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை நிறுத்தம் தொழிலாளருக்கும் நட்டத்தையுண்டாக்கும், முதலாளிக்கும் நட்டத்தையுண்டாக்கும் ; பொதுமக்களுக்கும் நட்டத்தை

படிப்பகம்

www.padippakam.com



யுண்டாக்கும். தொழிலாளரோ முதலாளியோ தாமாக ஒருதலைப்பட் சமாய்த் தமக்கிருக்கும் உரிமையை—அதாவது வேலை நிறுத்தம் செய்யும் உரிமையையோ, சம்பள உயர்வைத் தடுக்கும் உரிமையையோ—விட்டுக் கொடுத்தால் பேரஞ்செய்யும் சக்தியை அது பெரிதும் பலவீனப்படுத்தும். முக்கியமான தொழில்களிலே பொதுமக்களின் நலவுரிமை தனிப்பட்ட நலவுரிமையிலும் பார்க்க முக்கியம் வாய்ந்தது. அத்தகைய தொழில்களிலே பொதுமக்களின் நலவுரிமை தனிப்பட்ட நலவுரிமையிலும் பார்க்க முக்கியம் வாய்ந்தது. அத்தகைய தொழில்களிலே கூட்டுப்பேரம் பரீட் சைக்குள்ளாகிறது. நட்டகரமான வேலைநிறுத்தம் உண்டாகினல் அரசாங் கம் தலையிடும்.

6. தொழிற் சங்கங்கள் சம்பளத்தை உயர்த்திய செய்கையை வரலாற்று ரீதியிலே பார்க்கும்போது ஐக்கியத்துக்கிடமானதாகவே இருக்கிறது. 1933 துவக்கம் தொழிற் சங்க அங்கத்துவம் அதிகரித்து வந்துள்ளது. ஆனல் அதே காலக்கட்டத்திலே சம்பள வித்தியாசத்திலே எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. ஆனல் இந்நாட்டிலும் வேறுநாடுகளிலும் சம்பள வித் தியாசத்திலுள்ள விகிதம் குறைந்துகொண்டே வருகிறது. 1933 துவக்கம் 1960 வரை சமீபத்திலே தொழிற் சங்கங்களையுடைய தொழிற்றுறைகளிலே சம்பளம் உயர்ந்திருப்பது காணப்பட்டாலும், தொகையளவான வித்தி யாசம் அதிகம் போலத் தெரியவில்லை. ஆனல் இதிலே காரணம் எது, விளைவு எது என்று சொல்லமுடியவில்லை. விரிவடைவனவும், ஒரே இடத் தில் குழுமியுள்ளனவுமான தொழிற்றுறைகளிலே சங்கங்கள் அமைப்பது சகசமானலும், சங்க அமைப்புக்குக் காரணமான ஏதுக்களே சம்பள உயர்வுக்குக் காரணமன்றி சங்க அமைப்பே காரணமென்று கூறமுடி யாது.

7. கடைசியாக ஓர் எச்சரிக்கை : சேர்க்கைப் போலியைப் பற்றி நாம் கவனமாயிருக்கவேண்டும். ஒரு வகைத் தொழிலாளரின் தேவைக் கோட் டைக் கொண்டு அது பொதுவாக எல்லாத் தொழிலாளருக்கும் பொருத்த முடையதெனக் கூறமுடியாது. சம்பளம் செலவிலும் பார்க்க உயர்ந்தது. நுகர்வோரின் வருமானத்தில் பெரும் பகுதி சம்பளமே. சம்பளம் உயர்ந் தால், உற்பத்திப் பொருள்களுக்கான தேவையும் உயரும். பணச் சம்பள விகிதத்திலே பொதுப்படையாக மாற்றமுண்டானல் அது விலைகளிலேயும் மாற்றத்தையுண்டாக்கும். நிச வருமானத்தில் மாற்றமில்லாமலுமிருக் கலாம். பொதுப்படையாகப் பணச் சம்பள வீதத்திலே உண்டாகும் மாற்றம், எல்லாவிலைகளிலும் அதேவகையான மாற்றத்தை உண்டாக்குமானல், வேலை யின்மையிலோ, வேலை வாய்பிலேயோ மாற்றத்தை உண்டாக்கமாட்டாது. பொதுப் படையான சம்பளமாற்றம், சேமிப்பு, முதலீடு என்பவற்றில் நொதுமலற்ற பாதிப்பை உண்டாக்கலாம், அதனல் வேலைவாய்ப்பைக் கெடுக்கலாம், அல்லது அதற்குத் துணைபுரியலாம். ஆனல் இது மிகச் சிக்கலான விடயம். இது போன்ற ஆரம்ப நூலிலே பிரச்சினையின் சிக்கலைப் பற்றி ஓர் எச்சரிக்கை மாத்திரம் செய்யலாம்.

படிப்பகம்

www.padippakam.com



**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள்.**

1. மக்களும் எல்லா வேலைகளும் வித்தியாசமின்றியிருக்கும் நிறை போட்டியுள்ள ஒரு சந்தையிலே, சம்பள வேற்றுமைகள் எவ்வாறு மறைந்துவிடுமென்பதை விளக்குக.

2. நிசச் சம்பளத்தை நிர்ணயிக்க தொழில் நுட்பம், பொருளாதாரப் புவியியல், சட்டம் என்பன எவ்வளவு தூரம் துணைபுரிகின்றன என்பதை ஆராய்க. வாய்ப்புள்ள சனத்தொகை என்ற கொள்கையோடு குறைந்து செல் பயனும், எதிர்ப்போக்குக்களும் தொடர்பு பெற்றுள்ளனவென்பதை ஆராய்க.

3. மார்க்சின் சம்பள இரும்புச் சட்டம் மால்தசின் சட்டம் போன்றதா? ஆராய்க.

4. சம்பளத்தில் சமன்படுத்தும் வேற்றுமைகள், சமன்படுத்தா வேற்றுமைகள் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் கூறுக. ஆராய்க. "தனிப் பொருளாதார வாடகை" யுள்ள உயர் சம்பளங்களை, இவ்விரண்டில் எந்தக் கருத்து விளக்கும். போட்டியிடாத வகுப்பைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

5. தொழிற் சந்தையிலுள்ள குறைபாடுகளை வரிசைப்படுத்துக. இவற்றில் எல்லாம் ஏகபோக உரிமையோடோ, தொழிற் சங்கத் தாபனங்களோடோ தொடர்பில்லாதன என்பதை விளக்குக.

6. முதலாளி, தொழிலாளி என்பவரிடையில் பேரம் செய்யும் அதிகாரம் சரி சமனுக இல்லையென்பதைக் காட்டும் நியாயங்களைக் கூறுக. போட்டிச் சம்பளம் என்ற கொள்கை உப நயமாகக் கொண்ட கருதுகோள் என்ன ?

7. தொழிற் சங்கங்கள் சம்பளங்களைப் பாதிக்கும் மூன்று வழிகள் எவை ? முதலிரண்டு வழியைக் கூறி அவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்க. இந்த அத்தியாயத்திற் கூறப்பட்ட மூன்றும் வழியையும் ஆராய்க.

8. "நிசச் சம்பளத்தையும் பணச் சம்பளத்தையும் தொழிற் சங்கங்கள் ஒரு தொழிற்றுறையில் உயர்த்தலாம். ஆனுல் அதன் விளைவு வேலையின்மையே" இந்தக் கூற்று எவ்வளவுக்கு உண்மையானது. தொழிலுக்குரிய தேவையின் நெகிழ்ச்சியைக் கருத்தில் வைத்து ஆராய்க.

9. குறிப்பிட்டதொரு தொழிலில் கூட்டுப் பேரம் எவ்வாறு தொழிற்படுகிறது? சுயேச்சையான கூட்டுப் பேரத்திலே பொது சனங்களின் அக்கறை எத்தகையது ?

10. தொழிற் சங்கங்கள் சம்பளத்தை உயர்த்துகின்றனவா ? றீஸ், ரெய்னேல்ட்ஸ் என்பவர்களுடைய நியாயங்களைக்காட்டி வாதிக்க.

11. தொழிலாளர் தேவை பொதுவாயிருப்பதை, குறித்த ஒரு பிரிவுக்கான தொழிலாளர் தேவையைப் போல எண்ணிச் செயல்புரிவதிலுள்ள ஆபத்து என்ன ? சம்பளம் என்றுல் செலவும், தேவையின் மூலமுமாகும். இதை விளக்குக.

www.padippakam.com



12. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஆராய்ந்து மனத்திலிருத்துக.
விரும்பிய அளவு சனத்தொகை.
வயிற்றுக்கு, வாய்க்குப் போதுமான சம்பள மட்டம், அல்லது உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத குறைந்த சம்பள மட்டம்.
பின்னோக்கி வளையும் சப்பிளைக் கோடு.
வருமானப் பயனும், பதிவீட்டுப் பயனும்.
சம்பளத்திலே வாடகை அமிசம்.
சமன்படும் சமன்படாச் சம்பள வேற்றுமை.
போட்டியிடாக் கட்சிகள்.
பொதுச் சமநிலை.
பிரமாண விகிதம்.
அதிர்ச்சி விளைவு.
தருவித்த தேவை நெகிழ்ச்சி.
தருவித்த தேவை நெகிழ்ச்சியின்மை.
கூட்டுப் பேரம்.
உற்பத்தி, கொடுக்கும் திறன், சீர்திருத்தச் சாதனம், சம்பளச் சக்கரம்.
வேலை நிறுத்தம், கதவடைப்பு.
வேலையை நிறுத்தி வைத்தல்.
விகித வேற்றுமை.
தனி வேற்றுமை.
வாங்கும் சக்தி.

படிப்பகம்

www.padippakam.com

# இருபத்தொன்பதாம் அத்தியாயம்

## வட்டியும் முதலும்

உம்முடைய இனிப்புப் பண்டத்தை வைத்துக்கொண்டும்
சாப்பிடுவதும் எப்படி : அதை வட்டிக்குக் கொடுக்கவும்.
—யாரோ.

மூலசாதனங்களின் வாடகையும், தொழிலாளரின் சம்பளமும் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றனவென்பதைக் கடந்த அத்தியாயங்கள் கூறின. இப்போது, உற்பத்திச் சாதனங்களின் மூன்ருவது முக்கிய வகையான முதலேப்பற்றியும், "வட்டி" யென அழைக்கப்படும் அதன் விசேட விலையைப் பற்றியும் இவ்வத்தியாயத்தில் ஆராய்வோம்.

பொருளியற் கொள்கையில் மிகச் சிக்கலான பகுதிகளுள் முதல் பற்றிய கோட்பாடும் ஒன்ருகும். இக்காரணத்திஞல், ஆரம்பவுரையில் அதுபற்றிய முக்கிய விடயங்கள் யாவையுமே கூறமுடியுமென்று நம்பமுடியாது. ஆகையிஞல், பின்வருமாறு ஆரம்பித்துத் தொடர்ந்து செல்வதே மிகச் சிறந்த வழியாகத் தென்படுகின்றது.

முதலேப்பற்றியும் வட்டியைப்பற்றியும் தகுதிவாய்ந்த முறையிற் கூறப்படும் முக்கிய அடிப்படை அம்சங்களேப்பற்றி விமர்சனமற்றவகையில் இவ்வத்தியாயத்தின் முக்கிய பகுதி சுருக்கிக் கூறுகின்றது. மிக எளிதான வகையிற் கூறும் சம்பிரதாய முறை சம்பந்தமாகக் கூறப்படவேண்டிய சில முக்கிய அம்சங்கள் அத்தியாயத்தின் இறுதியில் சுருக்கமாகத் தரப்படுகின்றன. பழம்பொருளியல் முதல் கொள்கை சம்பந்தமான சில விசேட விடயங்களும், வருமான நிர்ணயிப்புச் சம்பந்தமான சில நவீன தத்துவங்களும் அத்தியாயத்தின் பின்னிணேப்பிற் கூறப்பட்டுள்ளன.

### நிலம், உழைப்பு, முதல்

எல்லா உற்பத்திச் சாதனங்களேயும் மூன்று பகுதிகளாகப் பாரபட்சமான முறையிற் பிரிப்பதோடு, மூலதனக் கொள்கையின் எமது சம்பிரதாய மதிப்பீடு ஆரம்பமாகின்றது. சாதனங்களின் இந்த முப்பிரிவு கீழ்வருவனவற்றைக் கொண்டிருக்கும் : (1) இயற்கையன்னேயிஞல் அளிக்கப்படும் நிலேயான விநியோகமுடைய இயற்கைச் சாதனங்கள். இவற்றை அதிகப்படுத்தவோ அல்லது முற்ருகப் பாவித்து முடிக்கவோ இயலாது. நெகிழ்ச்சியின்மையான இச்சாதனத்தின் பலனே வாடகை அல்லது "தூய சிக்கன வாடகை" என நாம் அழைக்கிருேம். (2) மனித உழைப்புச் சாதனங்கள். இவை பொருளியல் நிலேமைகளுக்கு ஏற்ப உண்டாக்கப்பட்டனவல்ல; ஆஞல் பொருளியற்றுறைக்கு அப்பாற்பட்ட சமூக, உடனலவியற் சூழ்நிலேகளுக்கேற்ப உண்டாக்கப்பட்டனவாகப் பொருளியலாளரிஞற் கொள்



30—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



ளப்படுபவையாகும். இம்மனித சாதனத்தின் பலன் சம்பளம் எனப்படும். (கூலி வேலையாளர், நிர்வாக அலுவலாளரோடு, சாதாரண உடலுழைப்பாளருக்கும் கொடுபடும் சம்பளங்கள் யாவும் இதனுள் அடங்கும்).

மிக இலகுவாக்கப்பட்ட சம்பிரதாயக் குறிப்பில் மேற்கூறிய இரு சாதனங்களும், "அடிப்படை உற்பத்திச் சாதனங்கள்" என அழைக்கப்படும். பெரும்பாலும் அவையிரண்டும் பொருளியல் முறைக்கு அப்பாற்பட்ட வழியில் நிர்ணயிக்கப்படுவதினால், அவை அடிப்படை உற்பத்திச் சாதனங்களென அழைக்கப்படுகின்றன. அவற்றோடு "இடைநிலை" உற்பத்திச் சாதனமொன்றையும் இப்போது நாம் சேர்த்துக்கொள்ளவேண்டும். (3) நுகர்ச்சிக்காகவும், ஏனைய பொருள்களுக்காகவும், சேவைகளுக்காகவும் மேலும் உற்பத்தி செய்வதற்காக, உபயோகிப்பதற்கான உற்பத்தி உள்ளீடாகப் பொருளியல் முறையிலேயே உற்பத்தி செய்யப்படும் முதற் பொருள்களாகும். இம்முதற் பொருள்கள் நீண்ட கால அல்லது குறுகியகால வாழ்வுடையனவாயிருக்கலாம். பல ஏக்கர் நிலங்களை அல்லது பல மணித்தியால மனித உழைப்பை வாடகைக்கு விடுமாப்போன்று, இம்முதற் பொருட்களும் போட்டிச் சந்தையில் வாடகைக்கு விடப்படலாம். இவற்றின் வாடகைக்கும், நிலையான விநியோகமுடைய இயற்கை மூலச் சாதனங்களின் தூய வாடகைக்குமிடையே வேறுபாடுசெய்வுமுகமாக, முதற் பொருள்களின் வாடகையை "வாங்கப்படும் வாடகைத் தொகை", யெனஅழைக்கலாம். இம்முதற் பொருள்களின் "வாங்கப்படும் வாடகைத்தொகை" யென அழைக்கலாம். இம்முதற் பொருள்களின் "வாங்கப்படும் வாடகைத் தொகை", கடந்த அத்தியாயங்களில் நாம் ஆராய்ந்த அதே இறுதிநிலையுற்பத்தியின் தேவை நிலைமைகளைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது.

எனினும், சம்பிரதாய முதற் தத்துவத்தில் முதலின் பலன் அல்லது விளைவு, முதற் பொருள்களின் "வாங்கப்படும் வாடகைத் தொகை" எனக் கொள்ளப்படுவதில்லை. அப்படியாயின் அது என்ன? முதலின் விளைவு அதன் வருடாந்த வட்டிவீதமாகும். ஒவ்வொரு பகுதி நேரத்திற்குமான தனி விகிதமே இதுவாகும்—டொலர் அல்லது ஏனைய பெறுமதி அளவுகளினின்றும் சுதந்திரமானதாகும். ஒரு வருடத்திற்கான 5 சத விகித வட்டி விகிதம் எதன் விளைவு அல்லது விலையாகும்? வெளிப்படையாக, முதற் பொருள்களின் டொலர் பெறுமதி சம்பந்தமானதே இவ் விளைவு அல்லது விலையாகும். உண்மையில், சரியான கருத்தைக் தரக்கூடிய அளவு முறைகளைப் பெறுவதற்காக சம்மட்டிகளையும் நூலையும், புகையிரத இயந்திரங்களையும் தறிகளையும் ஒன்று சேர்க்க முடியாது. ஆனால் போட்டிச் சந்தைகளில் ஒவ்வொரு முதற் பொருளுக்கும் விநியோகத்தினாலும், தேவையினாலும் தீர்க்கமாக நிர்ணயிக்கப்பட்ட டொலர் சந்தைப் பெறுமதியுண்டு.

வேறுபட்ட முதற் பொருள்களின் டொலர் பெறுமதிகளனைத்தையும் ஒன்று சேர்க்கமுடியாதென்பதற்கு ஏதேனும் நியாயமுண்டா? இல்லை.

www.padippakam.com



டொலர்களை டொலர்களுடன் சேர்க்கமுடியும். அவ்வாறு சேர்ப்பதின் விளை வான மொத்தம், எல்லா முதற் சொத்துக்களினதும் பணப் பெறுமதி யாகும்.

### முதலின் தேறிய விளைதிறன்

இப்போது எம்மை நாமே ஒரு கேள்வி கேட்கிறேம் ; என் மனிதர்கள் உழைப்பு, நிலம் ஆகிய அடிப்படை உற்பத்திச் சாதனங்களை இடைநிலை முதற் பொருள்களாக அல்லது முதலாக மாற்றுவதற்குக் கரிசனைகொள்ள வேண்டும்? அதற்குரிய பதில் என்னவெனில், மறைமுகமாக அல்லது சுற்றிவளைத்த முறைகளை உபயோகிப்பதன் மூலம் மேலதிக எதிர்கால நுகர்ச்சி உற்பத்தியைப் பெறலாமென்பது வாழ்வின் தொழில்நுட்ப உண் மையாகும்.

இதைக் காண்பதற்கு, ஒரே மாதிரியான இரு தீவுகளைக் கற்பனைசெய்து கொள்வோம். இரு தீவுகளும் ஒரேவகையான உழைப்பு, நிலம் ஆகிய அடிப்படைச் சாதனங்களைக் கொண்டிருக்கின்றன. தீவு அ, நுகர்ச்சிப் பொருட்களை உற்பத்திசெய்வதற்காக நேரடியாகவோ இவ்வடிப்படைச் சாத னங்களை உபயோகிக்கின்றது. உற்பத்தி செய்யப்பட்ட முதற்பொருட்கள், எதையுமே அது உபயோகிக்கவில்லை. மறுபக்கத்தில் தீவு ஆ, தனது அன்றாட நுகர்ச்சியை ஆரம்ப காலத்திற் தியாகம் செய்கின்றது. அதற்குப் பதிலாக கலப்பைகள், மண் அள்ளிகள், இரசாயனக் கலவைகள் போன்ற இடைநிலை முதற் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தன் நிலம், உழைப்பு முதலியவற்றில் ஒரு பகுதியை உபயோகிக்கின்றது. தேறிய முதலாக்கம் நடைபெறும் இவ்வாரம்ப காலத்தின் பின், பலதரப்பட்ட முதற்பொருட்களின் கையிருப்பைப் பெறமுடிகின்றது, அதாவது கணிசமான அளவு முதலைப் பெறுகின்றது. இப்போது தனது நிலம், உழைப்பு, தொடராக மாற்றப்படும் முதற் பொருள் முதலியவற்றைக் கொண்டு நிரந்தரமாக உற்பத்தி செய்யக்கூடிய, நுகர்ச்சி உற்பத்தித் தொகையை அளவிடுவோம்.

தீவு ஆ ஐச் சுற்றிவளைத்த உற்பத்தியை மிகக் கவனமாக அளந்தால், அது தீவு அ இன் உற்பத்தியைவிட அதிகமாயிருப்பதைக் காணலாம். என் அது அதிகமாயிருக்கின்றது? தற்போதைய நுகர்ச்சியில் 100 பகுதி களை ஆரம்பத்திற் தியாகம் செய்வதால், என் ஆ 100 க்கு மேலான பகுதி நுகர்ச்சிப்பொருட்களை எதிர்காலத்திற் பெறமுடிகின்றது? அதுவொரு தொழில் நுட்பப் பொறியியல் விஞவாகும். கீழ்வரும் விடை ஓர் அடிப் படைத் தொழில்நுட்ப உண்மையென ஒவ்வொரு பொருளியல் நிபுணனும் சம்பிரதாயமாக ஏற்றுக் கொள்கிருன்.

சுற்றி வளைக்கும் முறைகளை ஆரம்பிப்பதற்குக் காலமெடுத்தாலும், நேரடி யான முறைகளைவிட, அவை அதிக ஆக்கமுடையவையாகும்.

www.padippakam.com



இவ்வடிப்படைத் தொழில் நுட்ப உண்மையிலிருந்து ஒரு முக்கிய பொருளியல் முடிவை நாம் இப்போது பெறமுடியும். மதிப்பிழப்புத் தேவைகள் யாவற்றிற்குமான வழிவகைகளைச் செய்தபின், முதல் ஒரு தேறிய விளைதிறனையுடையது. வருடத்திற்கான விகிதாசாரம் இவ்வளவு என்ற முறையில் அதை வெளியிடலாம். மேலதிக உற்பத்தியைப் பெறுவதற்கு இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாக உபயோகியாமல் விடுவதற்குரிய ஒரே யொரு காரணம் யாதெனில், முதல் வளர்ச்சியின் விகிதாசாரத்தை அதிகரிக்கவேண்டுமாயின் தற்போதைய நுகர்ச்சியைக் குறைக்கவேண்டும்.

**முதற் பொருளின் அல்லது முதலீட்டுத் திட்டத்தின் தேறிய விளைதிறனின் வரைவிலக்கணம்**

எந்த முதற் திட்டத்தினதும் தேறிய விளைதிறனின் திட்டவட்டமான வரைவிலக்கணம் எமக்குத் தேவையாகும். ஒவ்வொரு சுற்றிவளைத்த முறையையும் ஆரம்பிப்பதற்காக வாங்கிய சாதனங்களின் உண்மையான டொலர் செலவினங்களை முதலிற் கணிக்கவேண்டும். அதன் பின்னர் சுற்றிவளைத்த முறை தருகின்ற மொத்த வருமானத்தைக் கணிக்கவேண்டும். வருமானத்தில் மொத்தத் தொகை, உண்மையான செலவின் மொத்தத்தொகையை விட அதிகமாயிருக்கவேண்டுமென்பது எமக்கு மிக நன்கு தெரியும். இவ்வாண்டில் தேறிய விளைதிறன் இல்லை. உண்மையிலேயே தேறிய விளைதிறன் உண்டு என நாம் திருத்திப்பட்டபின், அதைக் கணிய முறையில் அளக்கக்கூடிய வழியொன்று தேவை. அப்போதுதான் அப்பிள்கள், தோடம்பழங்கள் சம்பந்தப்பட்ட திட்டங்களும், ஐம்பது வருடப் பாலங்கள், ஐந்து மாத மதுசாரம் சம்பந்தப்பட்ட திட்டங்களும் போன்ற நானாவித மாறுபட்ட திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய வழிசெய்யமுடியும். வருடத்திற்கான விகிதாசார அளவு முறையொன்றைக் காண்பதே எமது இறுதி முடிவாகும்.

முதற் திட்டத்தின் தேறிய விளைதிறனை நாம் மேல்வருமாறு வரையறுக்கலாம் :

> ஒரு முதல் அல்லது முதலீட்டுத் திட்டத்தின் தேறிய விளைதிறன் யாதெனில், அதில் எமது பணத்தைப் போடுவதின்மூலம் பெறுகின்ற வருடாந்த விகிதாசார விளைவாகும். இத்திட்டத்தின் தேறிய விளைதிறனும், அத்திட்டத்தைப் பொறுப்பெடுப்பதற்கான வருமானத்தைத் தரக்கூடிய சந்தை வட்டி விகிதமும் ஒன்றேயாகும். (உதாரணம் : சந்தை வட்டிவீதம் 9 சதவீதமாயிருந்தால், 8 சதவீத தேறிய விளைதிறனையே தரக்கூடிய இந்த 50 வருட பாலத்தைக் கட்டுவதனால் எதுவிதபயனுமில்லை. ஆனால் சந்தை வட்டி 8 சதவீதத்திற்கும் அல்லது அல்லது அதற்குக் குறைய வீழ்ச்சியடையும்பொழுது, நாம் பாலத்தைக் கட்டுவோம்).

ஒரு சமூகம் தன்னுடைய உற்பத்திச் சாதனங்களிலொரு பகுதியைத் தற்போதைய நுகர்ச்சியினின்றும் முதற் திரட்சிக்கு மாற்றும்பொழுது, குறையக்குறையத் தேறிய விளைதிறனைத் தருகின்ற திட்டங்

www.padippakam.com



களும் மேற்கொள்ளப்படும். இயற்கைச் சாதனங்களினதும், நிலத்தினதும் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்துடனும், போகப்போக மெதுவாக வளர்ச்சியடையும் தொழிலாளர் தொகையுடனும் தொழில் புரிவதற்கு மேன்மேலும் எல்லாவகையான முதற் பொருள்களும் கிடைக்கக் கூடியதாயிருக்கும்பொழுது, முன்னர் கைக்கொள்ளப்பட்ட திட்டங்களைப்போல உயர்ந்த தேறிய விளைதிறனைத் தரக்கூடிய புதுத் திட்டங்களைச் சமூகமோ, தனிப்பட்ட முதலீட்டாளர்களோ இப்போது பெறமுடியாது போய்விடுமென, குறைந்துசெல் விளைவு நியதி கூறுகின்றது. தொழில் நுட்பப் புதுமைகளினால் நீக்கப்படாதுவிட்டால், காலப்போக்கில் வீழ்ச்சியடையும் வட்டி வீதத்திலும், முதலீட்டு விளைவுகளிலும் இக் குறைந்துசெல் விளைவுகள் நியதி தானே இயங்கும். வட்டியில் அவ்வித வீழ்ச்சியில்லாமல் குறைந்த விளைவைத் தருகின்ற நீண்ட ஆயுளையுடைய திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது.

**இப்போதைய கழிவு மதிப்புக்களில் முதலாக்கம் செய்தல்—மற்றொன்று விரித்தல்.[1]**

"முதலாக்கம் செய்யப்படும் மதிப்பில்" சந்தையில் முதற்பொருட்கள் விலை நிர்ணயிக்கப்படும் முக்கிய பொருளியல் முறை, முதலின் தேறிய விளைதிறன் கருத்தோடு சம்பந்தமுடையதாகும். வட்டிவிகிதம் ஒரு முக்கிய இடத்தினை வகிக்கின்றது. உயர்ந்த அளவிலிருந்து குறைந்த அளவொன்றிற்கு வட்டி வீதம் வீழ்ச்சியடையும்பொழுது, இயந்திரங்கள், பிணைப் பத்திரங்கள், வருடாந்த மானியங்கள், அல்லது எதிர்காலத்திற் தொடராகச் சொத்து வருமானம் தரக்கூடிய எவ்வித சொத்தினதும் முதலாக்க மதிப்பிற் கணிசமான உயர்வு கட்டாயம் ஏற்படுவதை நாம் காணமுடியும்.

சொத்துக்கள் எவ்வாறு முதலாக்கம் செய்யப்படுகின்றன என்பதைக் காண்பதற்கு இன்று தொடக்கம் காலாந்த காலம்வரையும் ஒவ்வொரு வருடமும் ஒரேயளவான தொகை டொலர்களை நிச்சயம் தரக்கூடிய ஒரு நிலத்துண்டு அல்லது ஒரு வருடாந்த மானிய ஒப்பந்தம் பற்றிய மிகச் சிறிய சந்தர்ப்பத்தினை முதலில் நோக்குவோம். 1 டொலர் அல்லது N டொலருக்கான ஒருவருடத்து நிரந்தர வருமானப் போக்கின் தற்போதைய முதலாக்க மதிப்பு V இக்கான சூத்திரத்தை மிக இலகுவாக எழுதலாமெனத் தோன்றுகின்றது. நாங்கள் கேட்பது "வருடாந்த $i$ சந்தை வட்டி வீதத்தில் எவ்வளவு தொகை டொலர்களை வருடாவருடம் வெளியீடு செய்தால் 1 டொலர் ஒரு வருடத்தில் அல்லது N டொலர் ஒரு வருடத்திற் தரும் அதேயளவான பலனைத்தரும்?" இதற்குரிய பதிலைக் கீழ்வருமாறு சுருக்கிக்கூறலாம்.

1. அடுத்த இரு பகுதிகளையும் முதல் வாசிப்போடு ஒதுக்கிவிடலாம்.

www.padippakam.com



$$V = \frac{N \text{ டொலர்}}{i}$$

தற்போதைய முதலாக்கிய மதிப்பு (அடிக்கடி "தற்போதைய கழிவு மதிப்பு" எனவும் அழைக்கப்படும்), V இற்குச் சமன்.
நிரந்தர வருடாந்தப் பலன் = N டொலர்
ஒரு தசமமுறையிற் கூறப்படும் வட்டிவிகிதம்.
(0.05 அல்லது 5/100 சதவீதம் போன்று).

இவ்வாறாக வட்டி விகிதம் எப்போதும் 5 சத விகிதமாய் இருந்தால் எவ்வித நிரந்தர வருமானமும், அதன் வருடாந்த வருமானத்தில் சரியாக 20 முறை (= 1÷5/100) விற்பனையாகும்.[1] (எங்கள் சூத்திரத்தைச் சரி பார்ப்பதற்கு, 20 டொலர் முதல், 5 சத விகிதத்தில், ஒவ்வொரு வருடமும் 1 டொலர் பலனைத் தரும் ; அப்படியாயின் பின்னதன் முதலாக்கிய மதிப்பு 20 டொலராகத்தானிருக்க வேண்டும் என்பதை உணரலாம்).

**சொத்துக்களைச் சந்தைமுதலாக்கம் செய்தல் அவற்றின் இப்போதைய கழிவு மதிப்பிற்குச் சமமாகும் :—**

இப்போது நிலையான வருடாந்த மானியமாகிய எளிதான நிகழ்ச்சிக்கு அப்பால் பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்லலாம். பூரண நிச்சயமான நிலமைகளில் யாராயினும் தனியான போட்டிச் சந்தை வட்டிவீதத்தில் தான் விரும்பிய அளவு கடன் வாங்கலாம் அல்லது கடன் கொடுக்கலாம். ஒவ்வொரு சொத்தும் அதேயளவான சந்தை வட்டி விகிதத்தைத் தருவதாகவேயிருக்கும். யாதாயினும் சொத்தின் சந்தைவிலையைப் போட்டியாளர் பேரம் பேசிக் கூட்டும் அல்லது குறைக்கும் முறையினால் இவ் விளைவுச் சமத்துவம் ஏற்படுகின்றது. அது ஓர் ஒப்பந்தப் பத்திரமாகவோ சரக்கிருப்பாகவோ, தனியுரிமைக் குறியாகவோ, விற்பனையுள்ள வியாபாரமாகவோ, ஒரு மூலை நிலப்பகுதியாகவோ அல்லது தேறிய வாடகைத் தொகையை உழைக்கக் கூடிய எதுவித உழைக்கும் வழியாயுமிருக்கலாம்

எதுவித சொத்தினதும் முதலாக்கம் செய்யப்பட்ட சந்தை மதிப்பின் சரியான செய்முறை யாது ? இங்கு எம்விடை சுருக்கமாயிருக்கலாம் :—

பூரண நிச்சயமான நிலமையில் ஒவ்வொரு சொத்தும் அதன் எதிர்கால முழுத்தேறிய வருமானத்தின் தற்போதைய கழிவு மதிப்பில் வாங்குவோருக்கும் விற்போருக்குமிடையே சந்தையிடத்தில் நடைபெறும் விலைப்பேரத்தினால் முதலாக்கம் செய்யப்படும். இவ்வித டொலர் வருமானங்கள், அவை எத்திகதியிற் பெறப்பட்டனவென்னும் அக்கறையில்லாமற் சாதாரணமாகக் கூட்டப்படமுடியாது. ஒரு டொலர் வருமானம் எதிர்காலத்தில் எவ்வளவு தூரத்திலிருக்கிறதோ, அதேயளவு இன்று பெறுமதி குறைந்ததாயிருக்கும். ஏன் ?

1. மத்தியகாலத்தில், இதை "20 வருடக் கொள்வனவு" என அழைத்தனர். இவ்வாறாக வட்டிக்கெதிரான தடையை ஆட்கொண்டனர். 2 சதவீத வட்டியாயின் 50 வருடக் கொள்முதல் எனக் கருதப்படும் ; 4 சதவிகிதமாயின், 25 வருடக் கொள்வனவு.

www.padippakam.com



ஏனெனில், தீர்க்கமான சந்தை வட்டிவீதம் யாதெனில் எல்லா எதிர்காலச் செலுத்துதல்களும் கழிவு செய்யப்படவேண்டும். தூரத்தி லுள்ளவொரு கட்டிடம் இடையிலுள்ள நீண்ட இடைவெளியின் காரண மாகச் சிறியவொன்ருகத் தெரியும். வட்டிவிகிதமும் இவ்வாறே நேரத் தொலை நோக்குக் காரணமாகக் குறுகுதலினை ஏற்படுத்தும். இன்றி லிருந்து 999 வருடங்களின்பின் என்னுடைய பின்னுரிமையாளருக்கு நீர் ஒரு டொலர் கொடுப்பீரென எனக்கு நன்கு தெரிந்திருந்தாலும், இன்று ஒரு சதத்திற்கு மேல் உமக்கு நான் முற்பணமாகத்தருவதற்கு மடைய னுகவே இருக்கவேண்டும். என் இவ்வாறென அறிவதற்கு, இக்கழிவு முறையினை மீண்டும் ஆராய்வோம்.

நான்குசதவிகித வட்டியில் இன்று 96 சதங்களை ஒதுக்கிவைத்தால், ஒரு வருடத்தினுள் அது 1 டொலர் ஆக வளரும். எனவே இன்றிலிருந்து ஒரு வருடத்தின்பின் செலுத்தக்கூடிய 1 டொலரின் இப்போதைய கழிவு மதிப்பு 96 சதங்கள் மட்டுமேயாகும். (அல்லது சரியாகக் கூறப்போனுல் $100/1.04=96$, $16/104$ சதங்கள்). இருவருட காலத்தின்பின் செலுத்தக் கூடிய ஒரு டொலரின் இன்றையக் கழிவு மதிப்பு 92 சதங்கள் மட்டுமே அல்லது 1 டொலர் $1 ,(1.04)^1$. இதுபோன்றே 4 சதவீதத் தொடர் வட்டியில் முதலீடும், பிரதி முதலீடும் செய்யப்படும் பணம் இருபது வருட காலத்திற் தன்னைவிட இருமடங்காகும் என்பதனை எத்தொடர்வட்டி அட்ட வணையுங் காட்டும். அவ்வாறெனின் இருபது வருடங்களின்பின் செலுத்தப் படக்கூடிய 1 டொலர் இன் இன்றையச் சந்தை மதிப்பு என்னவாயிருக்க வேண்டும் ? இப்போதையக் கழிவு மதிப்பு 50 சதங்களிலும் குறை வானதாகும்.[1]

கீழ்வரும் எதிர்ப்பினை ஒருவர் கிளப்பக்கூடும் : " எதிர்காலத்தில் ஏதாவதொரு குறிப்பிட்ட நாளில் செலுத்தப்படவேண்டிய ஒரேயோரு டொல ரைக் கணிப்பது எவ்வாறென்பதை அறிந்திருப்பது மிகவும் நன்றுதான். ஆனுல் பெரும்பாலான சொத்துக்கள் வருங்காலங்களில் ஏதாவது தவணை முறைகளிற் செலுத்தவேண்டிய ஒரு கட்டு டொலர்களைக் கொண்டனவாக வேயிருக்கின்றன. அவ்வாருன சொத்துக்களைச் சந்தைக்களம் எவ்வாறு கணிக்கும் ? ".

1. இப்போதைய கழிவு மதிப்புக்களின்போது நியதி கீழ் வருவதாகும் :— இன்றிலிருந்து $t$ வருடங்களின்பின் செலுத்தவேண்டிய 1 டொலரின் இன்றைய மதிப்பைக்காண்க.

$t$ வருடங்களின் முடிவில் 1 டொலராக வளரக்கூடியதாக தொடர் வட்டியில் எவ்வளவு இன்று முதலீடு செய்யப்படவேண்டும். 4 சதவீதத் தொடர் வட்டியில் எந்த முதலும் $t$ வருடங்களில் $(1+0.04)$ வீதத்திற்கு வளருமென்பது நமக்கு இப்போது தெரியும். எனவே இறுதி முடிவையடைவதற்கு இக்கூற்றினைத் தலைகீழாக்கவேண்டும். ஆகையினுல் இன்றிலிருந்து $t$ வருடங்களிற் செலுத்த வேண்டிய 1 டொலரின் இன்றைய கழிவு மதிப்பு 1டொலர் $(1+0.04)$ மட்டுமே. வட்டி 6 சதவீதமாயிருந்தாலென்ன ? அல்லது, $i$ சதவீதமாயினும் என்ன ?

படிப்பகம்

www.padippakam.com




இதுவொரு நியாயமான கேள்வியாகும். கடன்பத்திரம் போன்ற சொத்தொன்று நீண்ட காலத்திற்குச் சம அளவான தவணை முறைச் 'சீட்டுக்களைத் தந்தபின்னர் எமது முதலையும் மீண்டுதரும். ஒரு டிரக் (வண்டி) குறைந்து செல்லும் வருமானத்தைத் தந்துவிட்டு, அது பழைய தாகித் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய தேவை ஏற்படும். ஒரு துண்டு நிலம் ஒரு குறிப்பிட்ட அளவான வாடகையை ஒரு முறையல்ல, ஒவ்வொரு வருடமும் தந்து கொண்டிருக்கும். ஒரேயொரு தனி வருமானத்தைத் தரும் கடன்களைத் தவிர, எப்போதும் ஒரு கட்டான வருமானத்தையே தர வேண்டும்.

ஏதாவதொரு சொத்தின் இப்போதைய கழிவு மதிப்பை அடைவதற்குரிய வழி நேரானதாகும். ஒவ்வொருடொலரும் சுதந்திரமாகத் தனித்து நிற்கட்டும்; எதிர்கால வருமானங்கள் ஒவ்வொரு பகுதியினதும், இப்போதைய பெறுமானத்தை மதிப்பிட வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது, அதைச் செலுத்தும் நாளில் வேண்டப்படும் கழிவுக்குரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். பின்னர், இவ்வாறுன தனித்தனியான இப்போதைய கழிவு மதிப்புக்கள் எல்லாவற்றையும் ஒன்ருகக் கூட்டவேண்டும். இவ்வாறு சொத்தின் முதலாக்கிய சந்தைப் பெறுமதியை—"அல்லது அதன் இப்போதைய கழிவு மதிப்பு" என அழைக்கப்படுவதை—அடைகிறோம்.

20 வருட காலத்திற்கு ஒவ்வொரு வருடமும் 100 டொலர் நிலையான வருடாந்த தேறிய வருமானத்தைத் தந்து கடைசியிற் கழிவு மதிப்பில்லாத இயந்திரமொன்றை, முதலாம் வடிவம் தெளிவாகக் காட்டுகின்றது அதன் இப்போதைய மதிப்பு 2,000 டொலர் அல்ல ; ஆனல் 1359 டொலர்.

**வருங்கால டொலர் வரவுகள் நிகழ்காலப் பெறுமானத்தைப் பெறுமுக மாகக் கழிவொடு மாற்றப்பட்டுள.**




படம் 1. ஆண்டொன்றுக்குத் தேறிய வாடகையாக நூறு டொலர் வீதம் 20 வருடங்களுக்கு (4 சதவீத வட்டியில்) வட்டிதரும் ஓர் எந்திரத்தின் இப்போதையப் பெறுமானம், கீழுள்ள பரப்பளவாற் காட்டப்பட்டுளது. மேற்பரப்பளவு கழிவொடு மாற்றப்பட்டுளது.

www.padippakam.com



மட்டுமே . நாங்கள் கவனத்திற்கெடுத்துக்கொண்ட காலத்தொலேநோக்குக் காரணமாகப் பின்னர் பெறும் டொலர் வருமானங்கள் எவ்வளவு குறைக் கப்படுகின்றன அல்லது கழிக்கப்படுகின்றனவென்பதை அவதானிக்கவும். கழிவுசெய்யப்பட்ட பின் எஞ்சியிருக்கும் மொத்தப் பகுதி (அதாவது கோடு வரையப்படாத வெற்றிடப் பகுதி) இயந்திரத்தின் மொத்த இப்போதைய கழிவு செய்யப்பட்ட மதிப்பை—அதாவது அதன் முதலாக்கம் செய்யப்பட்ட சந்தை மதிப்பை—காட்டுகின்றது.[1]

இப்போதையக் கழிவு மதிப்பை உச்ச நிலேக்குப் பெருக்குவதற்கான செயல் :—ஒரு சொத்து எவ்வாறு உபயோகிக்கப்படுமென்பதை அறிந்த வுடன் அச்சொத்தின் பெறுமதியை எமது இருப்பு நிலேக்குறிப்புக்களில் எவ்வாறு எழுத வேண்டுமென எமது விதிமுறை எமக்குக் கூறுகின்றது. ஆனல் ஒரு சொத்தின் எதிர்கால வருமானங்கள் வழக்கமாக எமது வியாபாரத் தீர்மானங்களிலேயே தங்கியிருக்கிறதென்பதை அவதானிக்க வேண்டும் ; ஒரு டிரக்கை (வண்டி) 8 அல்லது 9 வருடங்களாக உபயோ கிப்போம் ? மாதத்திற்கொருமுறையா அல்லது வருடத்திற்கொருமுறையா அதிற் திருத்தங்கள் செய்வோம் ? அதற்குப் பதிலாக வேறென்று வாங்கும் பொழுது மலிவான, நீடித்துழைக்கும் தன்மையற்ற ஒன்றைப் பெறுவதா அல்லது அதிக விலேயுள்ள நீடித்துழைக்கக்கூடிய ஒன்றைப் பெறுவதா ?

இவ்வாறன கேள்விகளுக்கும், ஏனைய முதலிட்டுத் தீர்மானங்கள் அனைத் திற்குமான சரியான பதில்களைக் கொடுப்பதற்கு ஓர் அரிய விதியுண்டு.

ஒவ்வொரு சாத்தியமான தீர்மானத்தின் விளேவாயேற்படும் இப்போ தையகழிவு செய்யப்பட்ட மதிப்பினைக் கணக்கிடுக. இப்போதைய மிகப்

[1] எங்களது அழியாத் தன்மையுடைய விதிமுறையான V=N டொ/$i$ ஐ இப்போது உறுதிப்படுத்த முடியுமா ? உயர்நிலேஅட்சர கணிதத்தில், ஒரேமையத்தை நாடுகின்ற கேத்திரகணித முன்னேற்றத்தைக் கணக்கிட நாம் கற்கிறேம்.

$$1+K+K^2+\ldots\ldots=\frac{1}{1-K}$$

இது 1 இக்குக் குறைந்த எப்பகுதிக்குமாகும். $K=\frac{1}{1+i}$ ஐச் சரிவர வைத்தால் எங்களது முதலாக்க விதிமுறையை ஒரு நிரந்தர வருமான வழிக்கு மிகக்குறைந்த சிரமத்துடன் உறுதிப்படுத்தலாம். எல்லாக் கழிவு செய்யப்பட்ட பதங்களையும் எழுதிவிடவேண்டும்.

$$\frac{N\text{ டொ}}{1+i}+\frac{N\text{ டொ}}{(1+i)^2}+\ldots=-N\text{ டொ}+N\text{ டொ}\left\{1+\frac{1}{1+i}+\left(\frac{1}{1+i}\right)^2+\cdots\right\}$$

$$=-N\text{ டொ}+N\text{ டொ}\frac{1}{1+i}=\frac{N\text{ டொ}}{i}\quad\text{[QED]}$$

எம்மை இதேயளவு திருப்திப்படுத்தக்கூடிய சான்றினைப் பொதறிவுப் பொருளியல் தருவதை அவதானிக்கவும். $i$ வட்டியில் $Ni$ ஆகிய தொகை மட்டுமே தன் வருமானம், வருடாந்த நிரந்தரவருமானம் N ஐச் சரியாக நிகர்செய்யக்கூடியதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



பெரிய கழிவு செய்யப்பட்ட மதிப்பினைப் பெறுவதற்குரிய வழியில் எப்போதும் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறான வழியில் நாம் விரும்பியபடி வேண்டிய நேரத்திற் செலவிட அதிக செல்வமிருக்கும்.[1]

மீண்டுமோர் முறை தேறிய விளைதிறன் : வட்டி வீதம் எவ்வளவு குறைவாயிருக்கிறதோ, உற்பத்திகள் அதிக நிலையாயிருக்கும். அத்தோடு மக்கள் இறுதியாகத் தீர்மானஞ் செய்யும் முறைகள் அதிகம் சுற்றிவளைந் தவையாயிருக்கு மென்பதை அவதானிக்க வேண்டும். என் ? எனெனில், குறைந்த வட்டி வீதம் சுற்றிவளைத்த முறைகளின், தூர—எதிர்கால வருமானங்களைக் குறைவாகவே கழிவு செய்யும். எனவே அவ்வாறான முதலீட்டுத் திட்டங்கள் முதன் முறையாகப் பயனுள்ளவையாயமையும்.

எந்த முதலீட்டுத் திட்டத்திலும்—ஒரு குறிப்பிட்ட பாலம் அல்லது எண்ணெய் சுத்திகரிப்பு—சம்பந்தப்பட்ட திட்டம் பயனுள்ளதாய் வருவதற்கு வட்டிவிகிதம் எவ்வளவு தூரம் வீழ்ச்சியடைய வேண்டுமெனக் கணக்கிடலாம் (எனவே, 10 சதவீத வட்டியில் ஹட்சன் நதிக்குமேலாயமையும், 50 வருடத்திற்கானவொரு பாலம் எதுவித வருமானத்தையும் தராது. ஆனால் 6 சதவீதவட்டியில் அது வருமானத்தைத் தரலாம்.)

**வட்டியைத் தீர்மானித்தல் : மேலெழுந்தவாரியான ஒரு நோக்கு.**

நீண்ட காலத்தில் வட்டிவீதத்தை யாது தீர்மானிக்கிறதென நாம் இப்போது பார்ப்போம். றொபின்சன் குரூசோ (அல்லது ஒரு பொதுவுடைமைச் சர்வாதிகாரத்திலுள்ள அல்லது ஒரு சுதந்திரப் பொருளியலமைப்பிலுள்ள சாதாரணப் பிரஜை) இப்போதைய நுகரச்சியைக் குறைத்துக்கொண்டால், முதலாக்கம் உயர்ந்ததாயிருப்பதோடு, முதற் பொருள்களின் தொகையும் வளரும். முதற் பொருள்கள் எவ்வளவு அதிகமாயிருக்கின்றனவோ, அவற்றின் தேறிய விளைதிறன் அவ்வளவு தாழ்ந்ததாயிருக்க முற்படும். என் ? எனெனில், எமது பழைய நண்பனான குறைந்து செல்விளைவுகள் நியதியினாலாகும் கனத்தொகையும், இயற்கைமூல வளங்களும் மாறுபடாதிருக்கும்பொழுது, மேன்மேலும் இயற்கையான முதற் பொருள்களைக் கூட்டினால்—அல்லது, அதனோடு நெருங்கிய தொடர்புடையதான உற்பத்தியை மேன்மேலும் சுற்றிவளைத்ததாயும் அதிகநேரமெடுப்பதாயும் அமைத்து விட்டால்—மொத்த உற்பத்தியைக் கூட்டமுடியும். ஆனால் ஒரு குறைந்து செல்லும் விகிதத்திலேயே கூட்ட முடியும்.

20 சதவீத தேறிய விளைதிறனைத் தருகின்ற பாலங்களையும், அணைக்கட்டுக்களையும், தொழிற் சாலைகளையும், உற்பத்தி வழிகளையும் கட்டிமுடித்தபின், குறைவான தேறிய விளைதிறனைத் தருகின்ற முதலீட்டுத் திட்டங்

[1] சிறப்பான முதற் சந்தையில் செய்யப்படும் வியாபாரத் தீர்மானங்கள், அவ்வாறு தீர்மானிப்பவரின் சொந்த நுகர்ச்சி சேமிப்பு நேர விருப்புக்களினின்றும் சுதந்திரமாயிருக்குமென இவ்விதி காட்டுகின்றது. என் ? எனெனில் ஒரு சிறு தொகைக்கு விற்பதைவிட இப்போது அதைவிடப் பெரிய பணத்தொகைக்கு விற்றுவிட முடிவது எப்போதும் நன்றாகும்—நுகர்ச்சியில் எவ்வாறு செலவழிப்பதெனத் தீர்மானிப்பதைப்பற்றி விசாரமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



களுக்குச் செல்லவேண்டும். எனவே, முதலீடுகளினுல் உழைக்கக்கூடிய சந்தைவட்டிவீதம் வீழ்ச்சியடையும். இவ்வாறு நடைபெறுவது, உயர்ந்த வட்டி விகிதங்களில் முன்னர் எதுவித இலாபத்தையும் தராத திட்டங்களை இப்போது மேற்கொள்ள வேண்டுமென்பதை, முதலீட்டாளருக்கு அறிவுறுத்தும்.[1]

இருவகையான சிக்கனங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. முதலாவது, கடந்த காலத்திற் திரட்டப்பட்ட முதலைச் சாப்பிட்டு முடிப்பதற்கான ஆசையை மக்கள் எதிர்க்கவேண்டும். அவர்களின் இப்போதைய வருமானங்களைவிட அதிகமாக நுகர்தலினைத் தவிர்க்கவேண்டும்; அதாவது, தேறிய சேமிப்பு இல்லாமற் செய்யும் நிலையினின்றும் நீங்கவேண்டும். இரண்டாவது, திட்டமான முதற் திரட்சி இருக்க வேண்டுமாயின் சிலகாலம் “காத்திருப்பதற்குச் சமூகம் சித்தமாயிருக்க வேண்டும்—காத்திருப்பதெனின், எதிர் காலத்தில் அதிக நுகர்ச்சிப் பொருள்களைக் கைமாருகப் பெறும் பொருட்டு இப்போது நுகர்ச்சிப் பொருள்களைக் கைவிடுவதாகும்.

மொத்தமாகப் பார்க்குமிடத்து, வட்டி வீதங்கள் நீண்ட காலப் பரப்பில் எவ்வாறு நடந்து கொள்கின்றனவென்பதை விளக்குவதற்கு நுகர்ச்சி சேமிப்புத் தீர்மானங்களும், முதற் பொருள்களின் தேறிய விளைதிறனும் தேவைப்படுகின்றன.[2]

### சில முக்கிய தகைமைகள் :

இவ்வத்தியாயத்தின் முக்கியவேலை இப்போது நிறைவேறிவிட்டது. இச்சம்பிரதாய முதற் கோட்பாட்டிற்கு சில முக்கிய தகைமைகள் தேவைப்படுகின்றன. இவ்வத்தியாயம் அதிமுக்கியமானவைகளைப் பற்றிச் சுருங்கக் குறிப்பிடுவதுடன் முற்றுப் பெறுகிறது. பின்னுரை மேலும் சில ஆராய்வுகளைத் தருகின்றது.

**தொழில்நுட்பக் குழப்பங்கள் :** உண்மை வாழ்க்கையில் இம்முறை, முதலைத் திரட்ட முற்பட்டுக் குறைந்துசெல் விளைவுப் பாதையில் கீழ் நோக்கிச் செல்லும்பொழுது, ஏனையவற்றை அப்படியே நிலையாக நாம் வைத்திருக்க முடியாது. குறிப்பாகப் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. அவ்வாருன நுட்பத் தொழில் மாற்றங்கள் தேறிய விளைதிறனையும் சமூகத்தின் முதற் கையிருப்பில் உழைக்கப்படும் வட்டி வீதங்களையும் அதன் விரிவுகளையும் அடிக்கடி உயர்த்தும். எனவே,

[1] இப்போதைய கழிவு செய்யப்பட்ட மதிப்புக்களை நாம் கணக்கிடும் வட்டிவீதத்தைக் குறைத்தல், முதலீட்டுத் திட்டங்களை ஆரம்ப செலவிற்கு மேல் மேன்மேலும் உயர்த்தும் என்பதும் ஒன்றுதான். அவை சமூக நன்மைகளுக்காகவே மேற்கொள்ளப்படும்.

[2] நாம் காணுமாப்போன்று முதற்திரட்சி வீதத்தினை ஆதரிக்கின்ற அல்லது தடுக்கின்ற தன்னுடைய பணத்துறைக் கொள்கைகளின் மூலமும் அரசிறைக் கைக்கோள்கள் மூலம் அரசாங்கம் முதலீட்டையும் வட்டி வீதத்தையும் தீர்மானிக்கும். எனவே, தனிப்பட்டவர்களும் தொகுப்பகங்களும் ஒரேவகையான சேமிப்பு அளவுகளைக் காட்டுகின்ற இரு பொருளாதார அமைப்புக்கள், அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகளைப் பொறுத்துச் சில வருடங்களில் அல்லது ஒரு நூற்றுண்டில் மிக வேறுபட்ட முறையில் வளரலாம்.

www.padippakam.com



மாறுபடாத பட்டியலொன்றில் கீழ் நோக்கிச் செல்வதற்குப் பதிலாக முதல் அட்டவணையின் தேறிய விளைதிறனில் மேல் நோக்கிச் செல்லும் மாற்றம் ஏற்படும்.[1] இவை யாவும் கற்பனையிலெழுபவையல்ல. அமெரிக்காவிலும், பொதுவாக மேலைத் தேசங்களிலும் குறைந்து செல் விளைகளினூடாக வட்டி வீழ்ச்சியடையும் போக்கு தொழில் நுட்ப முன்னேற்றத் திறல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்று சரித்திர ஆராய்வுகள் கூறுகின்றன. மெய்க்கூலி விகிதங்கள் உயர்கின்றபொழுதிலும், முதல் திரட்சியின் புராதனப் பழம் பொருளியல் ஆராய்வினின்றும் எதிர்பார்க்குமாப்போன்று இந்நூற்றுண்டில் முதலின் வட்டி வருமானம் பொதுவாக வீழ்ச்சியடையவில்லை.

தொழில்நுட்ப மாற்றம் முடிவடையும் ஒரு நிலைக்கு வந்தால், வட்டி வீதம் மீண்டும் ஒரு வேளை பூச்சிய நிலைக்குக் கீழிறங்கிச் செல்லலாம். ஆனால் உண்மையில் வட்டி விகிதங்களை உயரத்தூக்கிவிடுவதற்குப் புதுக் கண்டுபிடிப்புக்கள் தொடராக வந்துகொண்டிருக்கின்றன. சில பொருளியலாளர், இழுத்து விடப்பட்ட பிடில் கம்பிக்கு, இம்முறையினை ஒப்பிடுகின்றனர். ஏனையவை சமமான நிலையிலிருந்தால், பிடில் கம்பி மெதுவாகத் தன் பழைய நிலையையடையும். ஆனால் அவ்வாறு நடைபெறுவதற்கு முன் ஏதாவது வெளி நிகழ்ச்சி அல்லது கண்டுபிடிப்பு, அதை மீண்டுமொருமுறை இழுத்து இயக்கிவிடுகின்றது.

**நிச்சயமின்மையும் எதிர்பார்ப்புக்களும் :** சம்பிரதாய முதல் கோட்பாட்டின் எமது விளக்கவுரை பூரண முன்னோக்குகளைப் பெற்றுவிட்டது. இதுவொரு பாரதூரமான மிகு இலகுவாக்கப்படுதலாகும். உண்மைவாழ்வில் எதிர்காலத்தையறியக்கூடிய மந்திரப் பேழை எவரிடமுமில்லை. முதல் பற்றிய எல்லா மதிப்பீடுகளும், எல்லா முதலீட்டுத் தீர்மானங்களும், எதிர்கால வருமானங்களின் மதிப்பீடுகளிற் தங்கியிருப்பதோடு, கட்டாயமாக ஊகங்களாகவேயிருக்கவேண்டும். சில நிகழ்ச்சிகளில் தீவிர சிந்தனையினதும் செய்திகளினதும் அடிப்படையிலமைந்த சரியான ஊகங்களாயிருக்கலாம். ஏனைய நிகழ்ச்சிகளில் வெறுமனே செய்யப்பட்ட ஊகங்களாயிருக்கலாம். ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவை நிச்சயமற்ற ஊகங்களே. ஒவ்வொரு நாட்காலையிலும் படுக்கையை விட்டெழும்பொழுது எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் சரியானவையல்லவென்றும், அதனால் அவை புனர்மதிப்பீடு செய்யப்படவேண்டுமெனவும் அறிகிறோம். ஒவ்வோர் இரவும் படுக்கைக்குச் செல்லும்பொழுது, நாளைக் காலை சில ஆச்சரியங்கள் எம்மைக் காத்திருக்கும் என்ற உணர்வோடு படுக்கிறோம்.

[1] சில கண்டுபிடிப்புக்கள் "முதல் சேமிப்பனவாய்" இருப்பதோடு அவை தேறிய விளைதிறன் உறவைக் கீழ்நோக்கியும் நகர்த்தலாம். அடிக்கடி வட்டியைக் குறைக்க முற்படலாம் (கண்டுபிடிப்புக்கள் சில முதலை உபயோகமற்றவையாக்கி அழித்துவிடுவதோடு, நுகர்வோரின் சுவையிலேற்படும் மாற்றங்களும் இதே வகையான குழப்ப விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கவனிக்கவும்.)

படிப்பகம்

www.padippakam.com



இலாபக் கோட்பாட்டிற்கு நிச்சயமின்மை எவ்வளவு முக்கியமானதென் பதை அடுத்த அத்தியாயம் காட்டும். இங்கு, வட்டியும் முதல் கோட்பாடும் சம்பந்தமாக நிச்சயமின்மையின் முக்கிய விளைவொன்றினை நாம் கவனிக்க வேண்டும். எதிர்கால வருமானங்கள்பற்றியும், அபாயங்கள்பற்றியும் முத லீட்டாளர் கொண்டுள்ள திட நம்பிக்கை மிகக் குறுகிய காலத்தில் குறிப்பிடக் கூடிய அளவு மாற்றமடையலாம்; எனவே, எல்லா உறவுகளும் மிகவும் மாறக்கூடியவை. அபிப்பிராயங்களும் வதந்திகளும் மாறும்பொ மூது இவையும் மாற்றமடையும்; சனத்தொகைப் போக்கில் ஏற்படும் மாற்றங்கள், தொழில் நுட்ப புதுமை மாற்றங்கள், வேறுபலவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இவையெல்லாவற்றோடும் இதுவும் மாற்றமடையும்.[1]

**வருமானத்துடன் பட்டியல்கள் மாற்றமடைதல் :** குழப்பமேற்படுத்தும் வெளிச்சாதனங்கள் எதுவுமில்லாமலேயே, சம்பிரதாய பட்டியல்களில் பார தூரமான குறைபாடொன்றுண்டு. மெய்வருவாய் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொரு வட்டி விகிதத்திலும் சேமிப்பையும் முதலீட்டையும் ஆழமாக மாற்றும்.

(வருமானத்தின் வெவ்வேறு மட்டங்களிலேற்படும் நுகர்ச்சி நாட்டம் சேமிப்பு நாட்டம் ஆகியவைபற்றி இரண்டாம் பகுதியில் எமது நீண்ட புள்ளி விபரங்களும் தத்துவங்களும் அடங்கிய ஆராய்வுகளை மீண்டுமோர் முறை நினைவுபடுத்திக் கொள்ளவும். முதலின் நிலையான திறமையுடன் சம்பந்தமுடைய வருமான மட்டத்தின் அதிகரிப்புக்களினால் உந்தப்படும் முதலீடு பற்றிய எமது ஆராய்வுகளையும் அல்லது அதனோடு நெருங்கிய தொடர்புடைய எமது வர்த்தகச்சுழல் அத்தியாயத்திற் கூறப்படும் "வேக வளர்ச்சி விதியினை" யும் மீண்டுமோர் முறை நினைவுபடுத்திக் கொள்ளவும்).

அடிப்படைப் பட்டியல்களில் ஏற்படும் மாற்றங்கள் சம்பிரதாய தத்துவத் திலுள்ள பாரதூரமான பலவீனங்களைக் காட்டுகின்றன. ஒரு நூற்றாண்டி ற்கு முந்திய பழம் பொருளியலாளர் பலர் இப்பிரச்சினையை அறியாதிருந் தனர். ஏனெனில் மிகமோசமான வேலையில்லாத் திண்டாட்டம் சாத்திய மற்றதொன்று எனும் சொகுசான கருத்தினைக் கொண்டிருந்தனர். வேலை நிறைவு தவிர்க்கமுடியாததொன்றென ஏன் அவர்கள் நம்பினர் என் பதை அவர்களே ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. ஆனால் "விநியோகம் எப்போதும் அதன் சொந்தத் தேவையினை உருவாக்கும்; அதனால் பொது அமித உற்பத்தி அசாத்தியமானது" என்று அவர்கள் நம்பினர்.[2]

1 இவ்வகைப் பொருள் நிலையற்ற தன்மையினை விளக்குவதற்கு கெயின்ஸ் ஒருமுறை குறிப்பிட்டதை நினைவுபடுத்திக் கொள்ளவும். 1929 ஆம் ஆண்டுச் சிதைவினை, "முதலின் (தேறிய விளைதிறனில்) ஏற்பட்ட சடுதியான முறிவு" எனச் சிறப்பாக வர்ணித்துக் கூறினார்— இதுவொரு உண்மையான, மேலெழுந்த வாரியான விளக்கமாகும்.

2 உதாரணமாகச் சந்தைவாங்கும் சக்தியினைப் பாதுகாக்கும் ஓர் அற்புத விதியினைச் சிலர் நம்பினர். ஒருவழியில் செலவழிக்கப்படாதது இன்னோர் வழியில் செலவழிக்கப்பட்டேயாக வேண்டுமென அவர்கள் கூறினர். இத்தத்துவத்தின் அதிக தற்காப்பான விளக்கம் கூறுவது யாதெனின் சம்பளங்களும் விலைகளும் ஒட்டிக்கொள்பவையாய் மட்டும் இல்லாமலிருந்தால்

www.padippakam.com



## ஒரு நவீனப் பழங்கொள்கை இணைப்பு :

அதன் சொந்த நன்மைக்காகச் செய்யப்படும் பொது ஆராய்வுகளில் வாசகர் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் அறியவிரும்புவது யாதெனில், சம்பிரதாய முதல் தத்துவம் தற்கால உண்மை வாழ்வோடு ஏதாவது சம்பந்தமுடையதா என்பதாகும். பதினைந்து வருடங்களுக்குமுன் இதற்கு என்ன சொல்வதென்று பெரும்பாலான பொருளியலாளர் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்று கீழ்வரும் வகையில் உறுதியான பதிலை ஒருவர் அளிக்கலாம் :

> பணத்துறைக் கொள்கைகளையும், அரசிறைக் கோள்களையும் முறையாகப் பாவிப்பதன் மூலம், பெருவேலையின்மையையும் பண வீக்கத்தினையும் இன்று நாடுகள் வெற்றிகரமாக ஒழிக்கலாம். நியாயமான அளவு நிலையான நிறை வேலை வாய்ப்பினை இலக்காகக் கொண்டு, வருமானத்தைத் தீர்மானிக்கும் இக்கால நியதிகளும், பழம் பொருளியல் உண்மைகளும் ஒன்றுயிணைந்த அடிப்படையிலைமைந்த ஒரு "நவீனப் பழங்கொள்கை இணைப்பினை" இக்காலப் பொருளியலாளர் உபயோகிக்கலாம்.[1]

வருமானத்தை தீர்மானிக்கும் நியதிகளின் வெற்றிகரமான உபயோகம், உண்மை நிலைமைகளை மறைக்கும் பணத்துறைத் திரையினைக் கிழித்தெறிவதோடு, எண்ணற்ற பிழையான தொகுப்புக்களுக்கு வழிவகுப்பதாய், முழுவதற்கும் ஒரு பகுதிக்குமிடையே நடைபெறும் தலைகீழ் மோதல்களையும் சிதறச் செய்து, ஈற்றில் முக்கிய பழம் பொருளியல் உண்மைகளைச் செல்லுபடியாக்கி காலந்தவறி ஜெனிக்கும், சிக்கனத்தின் முரண்பாடுகளையும் முறியடிக்கின்றது.

## முதலாக்க நிர்ணயிப்பில் பொதுக் கொள்கையும் தனிப்பட்ட கொள்கையும்:

சம்பிரதாய தத்துவத்தின் பலமான முதற் பொருட்களை நாம் உபயோகிப்பதற்கு, நவீனப் பழங்கொள்கை இணைப்பு எவ்வாறு உதவுகின்றது? அதன் அடிப்படை உதவி இங்கேயுளது.

எல்லா விலைகளிலும் சம்பளங்களிலும் ஏற்படும் நெகிழ்ச்சியான இறக்கங்கள் கடைசியாக வேலை நிறைவினைப் புனருத்தாரணம் செய்வதற்குப் போதுமான அளவிற்கு அவனது சிக்கனத்தைக் குறைக்கக்கூடிய அளவில் ஒவ்வொரு மனிதனது பையினுள்ளிருக்கும் நாணயத்தினதும் செலாவணியினதும் உண்மையான வாங்கும் சக்தியினை அதிகரிக்கும். இவ்வமிதப் பணவாட்டத் தத்துவத்தின் தற்கால விளக்கம் கேம்பிரிஜைச் சேர்ந்த ஏ. ஸி. பிகுவுடன் தொடர்புடையது. அவர் இதனைக் கொள்கை நோக்கங்களுக்காகச் சிபார்சு செய்யவில்லை. (சேயர்ஸ் விதிபற்றிய 18 ஆம் அத்தியாயத்தின் பின்னுரையைப் பார்க்கவும்.)

[1] "நவீனப் பழங்கொள்கை" என்னும் பதத்தின் உபயோகம் அதன் முன்னைய மரபு முறையான கருத்தினைவிடப் பரந்ததாகும். பழம் பொருளியற் சம்பிரதாயங்களைப் பூரணப்படுத்தி, அவற்றினுள்ளேயே அடங்கி நின்ற பழம் பொருளியலாருக்கு இப்பதத்தினை அடக்கிவைக்காமல், அதை நாம் இப்போது ஒரு பரந்த முறையில் நானுவிதப் பழம் பொருளியற் கருத்துக்கும், வருமானத்தைத் தீர்மானிக்கும் தற்போதைய தத்துவங்களுக்கும் பிரயோகிக்கிறோம்.

www.padippakam.com



சமூகம் அவ்வளவு விரைவாய் அதன் முதலைக் கட்டியெழுப்புகின்ற தென்பதை நிர்ணயிக்க, அரசிறைக் கைக்கோளும் பணத்துறைக் கொள்கை களும் தனிப்பட்ட சிக்கனத்தைப் பாதிக்கின்றன. உதாரணமாக ஒரு பண வீக்கமில்லாத வெற்றிகரவகை வேலை நிறைவுச் சமநிலையினைக் கவனத் திற்கெடுக்கவும். 13 ஆம் அத்தியாயத்திலுள்ள வருமான நிர்ணயிப்புச் சேமிப்பு வளைகோடுகளும் முதலீட்டு வளைகோடுகளும், பணவீக்க இடைவெளி யும் பணவாட்ட இடைவெளியுமின்றி வேலை நிறைவில் ஊடறுத்துச் செல்லவேண்டியது இதற்கு அவசியமாகும் என்பதை நினைவு படுத்திக் கொள்ளவும். இங்கு இரண்டாம் வடிவத்தில் இரு நிகழ்ச்சிகள் காட்டப் படுகின்றன.

சமூகத்தின், வருமானத்திலிருந்து சேமிக்கக்கூடிய நாட்டவளைகோடு வரவு-செலவுத் திட்ட அரசிறைக் கைக்கோளின் மேல் தீர்மானமாகத் தங்கி நிற்கும். இதைக் காண்பதற்கு, வரிவீதங்கள் மிகவும் உயர்ந் தவையென எண்ணிக் கொள்வோம். அதனுல் வரவு-செலவுத் திட்டம் தாழ்த்தப்பட்டிருப்பதினுல் வேலை நிறைவில் சேகரிக்கப்படும் வருவாயைச் செலவுடன் ஒப்பிடும் பொழுது மிகவுயர்ந்ததாயிருக்கும். ஒப்பீட்டடிப்படை யில் சிக்கனமற்ற குறைந்த வருவாயுடைய பகுதியினரை வரிகள் மிக அதிகமாகத் தாக்கும் எனவும் எண்ணிக்கொள்வோம். அப்பொழுது வேலை நிறைவு மட்டமுட்பட தேசிய வருமானத்தின் ஒவ்வொரு மட்டத்தி லும் சமூகத்தின் நுகர்ச்சி நாட்ட அட்டவணை தாழ்ந்ததொன்ருகவே யிருக்கும். நுகரப்படாத தொகை (தேறிய தனி நபர் சேமிப்பும் அரசாங்க உபரியும் ஒன்று சேர்ந்ததற்குச் சமமானது) ஒவ்வொரு மட்டத்திலும் பெரிதளவாய் இருக்கும். இங்கு எங்களுக்கு அக்கறையுண்டாக்குவது யாதெனில் 2 அ படத்திற் காட்டப்படும் வருமானத்தின் வேலை நிறைவு மட்டம் பெரிதளவாயிருப்பதே.

இவ்வாருன மந்த நுகர்ச்சிமட்டம் வேலையின்மையை விளைவிக்குமா ? நவீனப் பழங்கொள்கை இணைப்பு வேலைசெய்யின் அவ்வாறு நடைபெருது. பணத்துறைக் கொள்கையைத் தீவிரமாக இலகுவாக்கல் (பகிரங்கச் சந்தைக் கொள்வனவுகள், குறைக்கப்பட்ட காப்புக் கட்டளைகள், குறைக்கப்பட்ட கழிவு விகிதம், ஆகியவற்ருேடு ஒருவேளை தீவிரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் திட்டங்கள்) சமூகத்தின் சேமிப்பு அட்டவணையை மேல்நோக்கித் தள்ளிவிடும். முடிவு : இறுக்கமான அரசிறைக் கொள்கையும் அதனேடு மிகவும் விஸ்தரிப்பான பணத்துறைக் கொள்கையும்மிகவுயர்ந்த முதலாக்கத் தினையும் அதனேடு ஒப்பிடும்பொழுது குறைந்த நுகர்ச்சியையுங் கொண்ட ஒரு வேலை நிறைவு வருமானத்தை எமக்குத் தந்துள்ளன. (2 அ படத்தைப் பார்க்கவும்).


2 ஆ படத்திலுள்ளபோன்று, உயர்ந்த நுகர்ச்சி-குறைந்த முதலீடு-வேலைநிறைவு வருமானத்தை நாடுகின்ற ஒரு சமூகத்திற்குப் பொருத்த முடைய இறுக்கமான பணத்துறைக் கொள்கைகளையும், இலகுவான

படிப்பகம்

www.padippakam.com



முதல் வளர்ச்சி வீதத்தை, பணத்துறை அரசிறைக்கொள்கைகளின் கலவை நிர்ணயிக்கின்றது :




படம் 2. அரசிறை இறுக்கத்தாலும் பணத்துறை தளர்தலாலும் வேலை நிறைவு, சேமிப்பு, முதலீடு என்பவற்றை E இல் சமநிலையடையச் செய்து, முதலாவது பொருளாதாரம் முதலாக்க வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. இரண்டாவது பொருளாதாரம் அரசிறைக் கொள்கையை (குறைந்தவரி, பற்றுக்குறை) இலகுவாக்கி, பணத்துறைக்கொள்கையை இறுக்கி, குறைந்தசேமிப்பு, முதலீட்டுடன் நுகர்ச்சியை உயர்த்தி, வேலைநிறைவுச் சமநிலையை ஏற்படுத்துகிறது.

அரசிறைக் கைக்கோளையுங்கொண்ட எதிர்மாறான கலப்பினை நாம் இயற்றலாம். ஒவ்வொன்றும் ஒரேயளவான தனிப்பட்ட சிக்கனத்தினையும் (பயன்படுத்தக்கூடிய வருமானத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் குடும்ப வரவு–செலவுத்திட்ட விடயங்களினால் அளக்கப்பட்ட) ஆனால் மாற்றுடைய பொதுக் கொள்கைகளையும் குறிப்புக்குணதிசயங்களாகக் கொண்ட இச்சமூகங்களின் முதலாக்கத்தின் மாற்றுடையவிகிதங்களினை எமது விளக்கப்படம் காட்டுகின்றது. முதலாக்கத்தில் அதன் விளைவாயேற்படும் வித்தியாசங்களைக் கவனிக்கவும். அங்கு விசேட தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் ஈடு செய்யப்படாவிட்டால், அதிக முதலீட்டுச் சமுதாயத்தில் அதிவிரைவாய் வட்டியினைக் கீழுக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்துசெல் விளைவுகள் இயங்குமென்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும்.

**ஆறுதலளிக்குமோர் பொதுப்பொறுப்பு :** அப்படியாயின், இருநினை வூட்டிக் குறிப்புக்களுடன் நாம் முடிக்கிறோம். ஒவ்வாத சாத்திய சிக்கனம் சிதைவுறுவதை நவீனப் பழங்கொள்கை இணைப்பு நீக்கி, முதலாக்கம், விளைதிறன் ஆகியவை பற்றிய பழம் பொருளியற் கருத்துக்களினை இவ்வழியில் நியாயமானதாக்கும். மறுபக்கத்தில் இன்றைய சமுதாயங்கள் நிச்சயமாகப் பணம் சார்ந்த கொள்கைகளையும் அரசிறைக் கைக்கோளையும் அனுசரிக்கின்றன. இப்பொதுக் கொள்கைகளே அவற்றின்

www.padippakam.com



விளைவாயேற்படும் வேலை நிறைவு, நுகர்ச்சி, முதலீடு ஆகிய வகைகளை ஒரு முக்கிய அளவிற்கு உருவாக்குகின்றன.

சமூகத்தின் முதலாக்க வீதத்தின் மேலுள்ள இச்சக்தி, இக்கால ஜனநாயகமெதிலுமுள்ள வாக்காளருக்கு ஓர் ஆறுதலளிக்கும் பொறுப்பாயமைகின்றது.

**சுருக்கம் :**

1. முதற்பொருள்கள் எனப்படும் இடை நிலை ஆக்க சாதனங்களைப் புகுத்துவதன் மூலம், நிலம், உழைப்பு ஆகிய மூல உற்பத்திச் சாதனங்களை மறைமுகமான வழிகளில் நாம் உபயோகப்படுத்தலாம். வழமையான குறைந்துசெல் விளைவு விதிக்குட்பட்டு வருடாந்த வட்டிவிகிதத்தில் வெளியிடக் கூடியதாய் எல்லாம் பதில் வைத்தற் செலவுகளுக்கும் மேலான தேறிய விளைதிறனை இச் "சுற்றிவளைத்தல்" தருகின்றதென்பது தொழில் நுட்ப உண்மையாகக் கொள்ளப்படுகின்றது. (ஓர் இன்றியமையாத சுருத்தான தேறியவிளைதிறனின் திட்டவட்டமான வரைவிலக்கணத்தை மீண்டும் வாசிக்க நிச்சயப்படுத்திக் கொள்ளவும்).

2. மிகவும் அவசரமானவையும் சிக்கனமானவையுமான எமது முதலீட்டுத் திட்டங்களைத் தணிக்கை செய்வதற்குச் சமூகம் உபயோகிக்கும் வழியே வட்டிவீதமாகும். வட்டி அதிகமாயிருந்தால் ஆகக் கூடிய தேறிய விளைதிறன்களையுடைய திட்டங்கள் மட்டுமே தகுதி பெறமுடியும். படிப்படியாக அதிக கடந்தகால முதலாக்கம் குறைந்துசெல் விளைகள் விதியினை ஏற்படுத்திய பிறகு, வட்டிவீதங்கள் வீழ்ச்சியடையும். குறைந்த தேறிய விளைதிறன்களைத் தருகின்ற முதல் திட்டங்களைப் புகுத்துவதற்கான அறிகுறியினை இதுதருகின்றது.[1]

3. சிக்கனம்–கடந்தகால முதல் திரட்சியின் நுகர்வினைத் தவிர்த்து இப்போதையவைகளைவிட எதிர்கால நுகர்ச்சிப் பொருள்களுக்குக் காத்திருப்பது– வட்டி வீதங்களும் முதலாக்கமும் வளர்ந்துவரும் பாங்கினை நிர்ணயிப்பதற்கு முதற் பொருள்களின் தொழில்நுட்பத் தேறிய விளைதிறனைப் பாதிக்கின்றது. ஒரு றொபின்சன் குரூசோவுக்கு அல்லது கூட்டுலகுக்கப்பால் அரசாங்கப்பணத்துறைக் கொள்கைகளும் அரசிறைக் கைக்கோள்களும் இப்போக்கினில் முக்கிய இடமொன்றினை வகிக்கின்றன.

4. அளவுக்கு மீறி இலகுவாக்கப்பட்ட சம்பிரதாய முதற் தத்துவத்தின் முக்கிய தகைமைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்: பூரண தூரதிருஷ்டிக்குறைவு எதைக் காட்டுமெனில் எதிர்பார்ப்புக்கள், தொழில் நுட்பம், வருமான அளவுகள் ஆகியவை மாறும்பொழுது முதலின் தேறிய விளைதிறனும் மிகவும் மாறக்கூடியதாகும். வேலைநிறைவு வருமானத்திலிருந்து வழிதவறிச் செல்லுதலைப் புறக்கணிக்கும் பழம் பொருளியற் தத்துவமும் திருத்தப்படவேண்டும்.

[1] குறைந்த வட்டியாயின் கூடிய இப்போதைய கழிவு மதிப்புக்களாகும். மேலதிக ஆக்க முதலீட்டுத் திட்டங்கள் அவற்றின் ஆரம்பசெலவின் "பெறுமதியைப் பெற ஏதுவாகும்".

www.padippakam.com



5. அதிட்டவசமாகச் சம்பிரதாய பழம் பொருளியல் முதல் தத்துவத்தின் செல்லுபடியாகும் முதற்பொருட்களான நவீனப் பழங்கொள்கை இணைப்பையும், முதல் நிர்ணயிப்பினதும் பயன்படுதேவையினதும் நவீன தத்துவங்களையும் நாம் கைக்கொள்ளலாம். பூரண நம்பிக்கையுள்ளதும் ஓரளவு அளவுமீறி இலகுவாக்கப்பட்டதுமான இந்நோக்கின்படி பலதரப்பட்ட ஈடு செய் பணத்துறைக் கொள்கைகளும் அரசிறைக் கைக்கோள்களும் பணவீக்கமற்ற நியாயமான அளவு வேலை நிறைவினை நிலை நிறுத்துவதில் வெற்றியடைய முடியும். நிலையான வேலையை எண்ணத்திற்கொண்டு, சம்பிரதாய தத்துவத்திற்குத் தேவையான தகைமைகளை இரண்டாம் படம் தருகின்றது. வேலைநிறைவுத் தேசிய வருமானத் தொகுப்பு, முதலீட்டின் பக்கமா அல்லது நுகர்ச்சியின் பக்கமா அதிகம் கனத்திருக்கும் என்பதை நிர்ணயிப்பதில் பொதுக்கொள்கைக்கும் பெரும் பங்குண்டு என்பதனை இது வெளிப்படுத்துகின்றது. இது எதைக் கூறுகிறதென்றால் சிக்கனம் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை மத்திய வங்கியும் சட்டத்துறையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இதைப்பற்றிப் பின்னுரை மேலும் ஆராய்கின்றது.

**ஆராய்வுக்கான வினாக்கள் :**

1. ஒரு தொகை முதற்பொருள்களை அல்லது சொத்துக்களைக் கூறுக. " சுழல் முதல் " எவை (அதாவது ஒரு வருடத்தினுள் நுகரக் கூடியவை) ? " நிலை முதல் " எவை ?

2. முதலின் மூன்று " விலைகளினை " வேறுபடுத்துக : (அ) ஒரு முதற் பொருளின் வாடகை ; (ஆ) முதற் பொருளின் சந்தைவிலை ; (இ) பொருளின் மதிப்பிற் கிடைக்கும் வட்டி.

3. திறமையான சுற்றிவளைத்த வழிகளில் சில உதாரணங்களைத் தருக.

4. " வட்டியின் தத்துவம் என்னும் தலைப்பில் இர்வின் பிஷர் ஒரு நூல் எழுதினர். அதன் உபதலையங்கமாகச் " செலவழிப்பதற்கான பொறுமையின்மையினாலும், முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களினாலும் தீர்மானிக்கப்படுவது " எனக் கொடுத்தார். இவையாது கூறுகின்றன என்பதை விளக்குக. கீழ்வருவனவற்றை வாதிக்கவும் ஆதரிக்கவும் : " அரசாங்கப் பணத்துறைக் கொள்கைகளினாலும் அரசிறைக் கைக்கோள்களினாலும் பாதிக் கப்படுவது போலவும் ", என பிஷர் சேர்த்திருக்கவேண்டும்.

5. புதுமை மாற்றங்களும் எதிர்பார்ப்புகளும் எவ்வாறு சம்பிரதாய வட்டிக் கொள்கைத் தத்துவத்தினைப் பாதிக்கின்றன ?

6. " நவீனப் பழங்கொள்கை இணைப்பு " என்பதனை விளக்குக. " இறுக்கமான பணம் " " இலகுவான அரசிறைக் கைக்கோள் " ஆகியவை சம்பந்தப்பட்ட வேலை நிறைவினை அதற்கெதிரான வேலைநிறைவு ஒன்றினுடன் வேறுபடுத்துக.

www.padippakam.com



7. நிலையான வருட மானியம் ஒன்றின் இப்போதைய கழிவு மதிப்பினைக் கணக்கிடுவதற்கான நியதியினை விமர்சிக்கவும். ஏதாவது எதிர்கால வருமானங்களின் அமைப்பிற்கான முறையினை விபரிக்குக.

8. கீழ்வருவனவற்றை நீர் விளங்கியவாறு விமர்சிக்குக :

முதலின் தேறிய விளைதிறன்.

மறைமுகமான, சுற்றிவளைத்த முறைகளும், குறைந்து செல் விளைவுகளும்.

வருடாந்த வட்டி வீதம்.

புலனடக்கமும், காத்திருத்தலும்.

நிச்சயமின்மையும் நுட்பத் தொழில் மாற்றமும்.

கண்டிப்பான அரசிறைக் கைக்கோளும், இலகுவான பணத்துறைக் கொள்கையும்.

மேற்கூறியதன் எதிர்மாறான நிலை.

முதலாக்கவிகிதத்திற்கான நவீனப் பழங்கொள்கை இணைப்பும் பொது சனப் பொறுப்பும்.

## அனுபந்தம் : வட்டி, பணம், கைக்கோள் ஆகியவற்றின் கோட்பாட்டு அமிசங்கள்.

இவ்வத்தியாயத்தின் ஆராய்வுகளைப்பற்றிய சில விரிவுகளும் யோக்கிய தாம்சங்களும் மிகச் சுருக்கமாக இங்கு குறிப்பிடப்படலாம்.

### வட்டி நேர்மையானதா அல்லது நேர்மையற்றதா ?

பணம் " மலடு " என்பதைச் சுட்டிக்காட்டி, கடன்களுக்கு நேரடியான வட்டி அறவிடுவது நேர்மையற்றதென அரிஸ்டாட்டில் கூறினார். நியாயமற்ற கடும் வட்டிக்குக் கடன் கொடுத்தலையே வட்டி காட்டுகிறதெனும் இந்நோக்கினை, அரிஸ்டாட்டிலைத் தொடர்ந்து இடைக்கால அறிஞர் பலர் கைக்கொண்டனர். மத்திய காலம் முழுவதும் கோயிற் சட்டங்களினால், தவிர்த்து நடப்பதற்காகப் பல தந்திரங்களும் வழிகளும் மேற்கொள்ளப் பட்டன.

இக்கருத்திற்கு நாம் எவ்வாறு பதிலளிப்பது ? முதலில், முன்னை அத்தியாயங்களிற் காட்டப்பட்டதை நாம் குறிப்பிடலாம். அதாவது, ரொக்க இருப்பினை உடைத்தாயிருப்பது உபயோகமான கருமமொன்றினை அடிக்கடி செய்கின்றது. அதற்காக, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மக்கள் மகிழ்ச்சியுடன் செலுத்துவர். ஆனால் அரிஸ்டாட்டிலின் கூற்றினை நாம் நேரடியாக ஆராய்வோம். நான் உம்மிடமிருந்து கடனாகப் பணம்பெறும்பொழுது அந்த ரொக்கத்தினை வைத்திருப்பது எனது நோக்கமல்ல எனும் உண்மைநிலைக் கருதுகோளினை நாம் செய்வோம். அதற்கு மாறாக முதற் பொருட்களினை வாங்குவதற்குக் கடன் பெற்ற ரொக்கத்தினை நான் உபயோகிக்கிறேன். அத்துடன் நாம் முன்னர் பார்த்ததுபோன்று, தமது

www.padippakam.com



மீண்டும் நிறுவும் செலவிற்கு மேலாலும், அதிகமாகவும் தேறிய உற்பத்தியினைச் சிருட்டிப்பதற்கு இவ்விடைநிலை முதற்பொருள்கள் மிகவும் அரிதாயிருக்கின்றன. ஆகையினுல் நான் உமக்கு வட்டி செலுத்தாது விட்டால் உமது பணத்தினை இவ்வாருன ஆக்க முதலீட்டுத் திட்டங்களிற் போடுவதினுல் நீர் பெறக்கூடிய வருமானத்தை நீர் பெருது உண்மையிலேயே நான் உம்மை ஏமாற்றுவதாகும்.

நுகர்ச்சிக் கடன்கள் : முதலீட்டு நோக்கங்களுக்கல்லாது நுகர்ச்சிக்காகச் செய்யப்பட்ட கடன்கள் பற்றிய கேள்வி தோன்றும். உதாரணமாக ஒரு ஏழை மனிதனுன நான் இன்றைக்கு அதிகம் உண்ணமுடியும் என்பதற்காக அல்லது மருத்துவசாலைக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக ஒரு பணக்கார மனிதனுன உம்மிடமிருந்து கடன் பெறுகிறேன் என எண்ணிக்கொள்வோம். (1) உமக்கு நான் வட்டி செலுத்த வேண்டுமென்பது நேர்மையானதா ? (2) அவ்வாருன நுகர்ச்சிக் கடன்கள் எவ்வாறு குறுகிய கால, நீண்டகாலச் சமநிலை வட்டி வீதங்களினைப் பாதிக்கும் ? இரண்டாவது வினுவிற்கான விடை முதலாம் வினுவிற்கு விடையிறுக்க உதவும்.

இன்று ஆக்க முதலீட்டுக் கடனீவைவிட நுகர்ச்சிக் கடனீவு முக்கியத்துவம் குறைந்தது. ஆகையினுல் வட்டி வீதங்களின் புள்ளி விவரங்களை அடிப்படையாகத் தீர்மானிப்பது ஆக்க முதலீடாகும். ஆயினும் இப்போதைய நுகர்ச்சி நோக்கங்களுக்காக இப்பொழுது கடன்படும் விருப்பு இருக்குமளவிற்கு இதையும் சந்தை கணக்கிலெடுத்துக் கொள்ளும். சில மனிதர் சேமிக்க விரும்பாவிடின் அவர்களது நுகர்ச்சிக் கடன்பெறுதல் சமூகத்தை முழுமையாக நோக்கு மிடத்து அதைக் குறைந்த சிக்கனமுடையதாக்கும். இல்லாவிடில் அது வேருெருவகையில் அமைந்திருக்கும். எனவே அது வேருெரு வகையில் அமைந்திருக்குமாப் போன்றல்லாது முதல் மிக மெதுவாய் வளர்வதோடு, வட்டியும் மிக விரைவாய்,—அல்லது அவ்வளவு தூரத்திற்கு—வீழ்ச்சியடையாது.

இப்பொழுது, நேர்மைபற்றிய வினுவினை நாம் ஆராயலாம். உள்ளதில் மிகவும் மலிவான முறைகளில் ஒருவர் கடன் பெறுவதைத் தடுத்து, ஒருவரேனும்—பணக்காரனுயினும் அல்லது ஏழையாயினும்—வேறு எவரினின்றும் நேர்மையற்ற ஏகபோகவுரிமை அநுகூல நிலையினை எடுக்காவண்ணம் நுகர்ச்சிக் கடன்களுக்குப் பணச் சந்தையில் பயன்படு போட்டியிருக்கிறதென நாம் கொள்கின்ருேமா ? நாம் விளக்கமாகப் பயன்படு போட்டியினை எடுத்துக்கொண்டால், அப்போது பணக்காரருக்கும் ஏழைகளுக்குமிடையில் நடைபெறும் ஏனைய போட்டிப் பேரங்களைவிட, பணக்காரருக்கும் ஏழைகளுக்குமிடையில் நடைபெறும் கடன் பேரங்களில் அதிகமான நேர்மையின்மை ஏன் இருக்க வேண்டுமெனப் பார்ப்பது கடினம். உதாரணமாக ஒரு பணக்காரக் கசாப்புக் கடைக்காரன் ஓர் இறுத்தல் இறைச்சியை ஓர் ஏழை நுகர்வோனுக்கு விற்கிருன். இயல்பாகவே ஒரு தீர்மானமான

www.padippakam.com



விலையைச் செலுத்துவதைவிட இந்த ஏழை மனிதன் அவ்விறைச்சிக்கு வேறெதுவும் செலுத்த மாட்டான். ஆனால் இறைச்சி அருந்தலான பொருளாகையினால் அது தீர்மானமான விலையொன்றைப் பெற்றிருப்பதோடு தேவையுடனும் விநியோகத்துடனும் மாறுபடும். இப்பொழுது நிலவும் வருமானப் பங்கீடு மக்களுக்கு நேர்மையற்றதாய்த் தோன்றினால் அதற்கான சிறந்த தீர்வினை வரி தருவதாயுள்ளது—போட்டிக் கடன் அல்லது ஏனைய சந்தைப் பேரங்களில் தலையிடாதிருத்தல் அல்ல.

## ஆக்கச் சத்தி அல்லது பொறுமையின்மை ?

சில மனிதர்கள் எல்லாவற்றிற்கும் ஒரேயொரு தனிக் காரணத்தைக் கண்டுபிடிக்க விரும்புவர். அவ்வாறான மனிதர் கேட்பர் : " முதலின் ஆக்க சத்தியினால், வட்டி ஏற்படுத்தப்படுகின்றதா ? அல்லது " புலனடக்கம் " நுகர்ச்சியை விலக்குதல் அல்லது " காத்திருத்தல் " போன்ற மகிழ்ச்சியற்ற காரியங்களுக்காகச் சேமிப்போர் ஏதாவது கொடுக்கப்படவேண்டும் என்பதினாலா ? எது அதிக முக்கியமானது : முதலீடு செய்யும் சந்தர்ப்பமா அல்லது செலவளிப்பதற்கான பொறுமையின்மையா ?

இதுவொரு தவறான எதிர்க்கருத்தென எமது முன்னையவாதம் காட்டுகின்றது. வட்டியின் காலவழியினை நிர்ணயிப்பதற்கு இரு சாதனங்களும் இயங்குகின்றன. செலவளிப்பதற்கான பொறுமையின்மை அல்லது எதிர் காலத்தை விட இக்காலத்தை விரும்புதற்கான போக்கு, முதலின் வளர்ச்சி விகிதத்தினையும் முதலை அடையக் கூடிய அளவினையும் மட்டுப்படுத்தும். நானாவித முதற் பொருள்களை வெவ்வேறு அளவுகளில் நாம் வைத்திருக்கும் பொழுது என்ன வட்டி அல்லது தேறிய விளைதிறனைச் சம்பாதிக்க முடியும் என்பதனை ஆக்கசாதனம் எமக்குக்கூறும். எதையாவது வெட்டுவதற்கு ஒரு கத்தரிக்கோலின் இரண்டு அலகுகளும் தேவைப்படுவது போன்று ஒன்றைவிட மற்ற அலகே உண்மைவேலையைச் செய்கிறதெனக் கூற முடியாததுபோன்று–அதேவகையிற் பொறுமையின்மை, ஆக்க சத்தி ஆகிய இரு சாதனங்களும் ஒன்றையொன்று பாதித்து வட்டி வீதங்களின் நடத்தையினைத் தீர்மானிக்கின்றன.[1]

## சமதர்மவாதத்தில் வட்டி ?

சூறையாடும் முதலாளித்துவத்தின் பணத்துறைச் சம்பவமே வட்டியென ஒரு மனிதன் நினைத்தால் அவன் ஆழமற்ற தன்மையினன் என எமது பொருளியல் ஆராய்வு தெரிவிக்கின்றது. மத்தியப் படுத்தப்பட்ட சமதர்மச் சமுதாயத்தின் திட்டமிடும் மாணவர், அவ்வாறான சமுதாயங்கூடத் தன்

1. 21 ஆம் அத்தியாயத்தின் பின்னிணைப்பாலுள்ள சமநோக்குக் கோட்டு வரைப் படங்கள் பற்றி நன்கு கற்றவர்கள் உறுதியான வட்டி இரு சாதனங்களினால் விளைவிக்கப்படுகின்றதென்பதை அறிவதற்கு இத்துடனுள்ள வரைப்படத்தினை (படம் 3) உபயோகிக்கலாம் : (1) நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்குமிடையிலான நுகர்ச்சிப் பொருள்களின் AB உற்பத்திச் சாத்திய அட்டவணையின் ஒரு செங்குத்துச் சார்பும், (2) நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்குமிடையிலான நுகர்ச்சிப் பொருள்களில் பிரதிரூபமான நுகர்வோனின் சமநோக்கு சம

படிப்பகம்


www.padippakam.com



னுடைய திட்டங்களுள் வட்டி வீதம் போன்ற கருத்தினைப் புகுத்த வேண்டுமெனக் கண்டு பிடித்துள்ளனர். எடனது காலத்திலிருந்து நாம றிந்த ஒவ்வொரு சமுதாயமும் அதன் முதல் விநியோகத்திற்கு ஏதாவது மட்டத்தைக் கொண்டதாகவே இருந்திருக்கின்றது. ஆகையால் ஒவ்வொரு சமுதாயமும், தான் வேண்டும் பொருள்களினை மிகத் துரிதமாக ஆக்கக் கூடியதற்கு முதன்மையிடங்கொடுத்து, முதலீட்டுத் திட்டங்களினைத் தேர்ந்தெடுக்கவேண்டிய முக்கிய கடமையைக் கொண்டுள்ளது. கனவுல கிலுங்கூட எல்லாவற்றையும் உடனடியாகச் சாதாரணமாகச் செய்ய முடியாது.

அவ்வாறுயின் திட்டவட்டமான முதன்மையிடம் கொடுப்பதற்காக சாத்தியத்திட்டங்களிடையே எவ்வாறு தேர்வு நடைபெறும்? தெளிவாக, (1) இப்போதைய மூலச்சாதனங்களில் எவ்வளவு உபயோகிக்கப்படலா மென்றும், (2) உபயோகமான எதிர்கால உற்பத்திகள் எவ்வளவு சிருஷ்டிக்

உயர்க் கோடுகளின் பொதுவான செங்குத்துச் சார்புமாகும். எனவே, உறுதியான வட்டிக்குப் பொருந்த E யில் தொடு கோட்டுச் சமனை 1.0 விடச் செங்குத்தான சரிவினைக் கொண்டுள்ளது. இவை போம்-வேர்க்கின் (Bohm Bawerk) பிரசித்திபெற்ற வட்டிக்கான மூன்று காரணங்களுடன் சம்பந்தப்படுத்தப்பட முடியுமென்பதை அனுபவமுடைய வாசகர் கண்டுகொள்வர். அவரது மூன்றுவது காரணமான, சுற்றிவளைத்த போக்குகளின் தொழில் நுட்ப மேன்மையும் அவரது முதலாவது காரணமான, (தொழில் நுட்ப முன்னேற்றத்தினுல் அல்லது சுற்றி வளைத்தலின் விளைதிறனின் விளைவாய்) எதிர்காலத்தில் அவனது வருமானம் உயர்ந்ததாயிருக்குமென்பதினுல் அவனது எதிர்கால டொலர்கள் குறைந்த இறுதி நிலைப் பயன் பாட்டையுடையதாய் இருக்குமென்ற பிரதிரூபமான நுகர்வோன் எதிர்பார்ப்பும், (1) ஆவது சாதனத்துடன் தொடர்புடையவை : போமினது (Bohm) இரண்டாவது காரணம்-வாழ்வின் நிச்சயமின்மைகளான பகுத்தறிவுடைய காரணங்களுக்காக அல்லது பகுத்தறிவற்ற காரணங்களுக்காக எதிர்காலப் பொருள்களைவிட இக்காலப் பொருள்களுக்கான நுகர்வோனின் முறையான நேரத் தேர்வு-(2) ஆவதுடன் தொடர்புடையது. (AB ஐ "45° கோட்டிற்குச் சமமாக ஒத்த பிரமாணமுள்ளதாக்குவதினுல்" (1) சாதனத்தை நாம் நீக்கிவிடுவதாக வைத்துக் கொள்வோம். அத்தோடு சமநோக்குக் கோடுகளை (45° கோட்டிற்கு சமீபமாக ஒத்த பிரமாணமுள்ளதாக்குவதினுல்" (2) சாதனத்தையும் நீக்கிவிடலாம். தேறிய விளைதிறனையும் நேரத்தேர்வினையும் இவ்வாறு நீக்கியபின் சமநிலை வட்டி வீதம் பூச்சியமாயிருக்குமென்பதையே நாம் காணுவோம்)




படம் 3.

www.padippakam.com



கப்படலாம் என்பதையும் கவனத்திற்கெடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எல்லா மாற்று வகைகளினையும் ஓர் இறுதியான தனி எண்ணிற்குக் குறைப்பது இலகுவல்ல; ஆனுல் எமது முன்னையத் தேறிய விளைதிறன்களின் கணக்கிடுதலைப் போன்று ஏதாவது செய்யப்படவேண்டும். உம்முடைய கூட்டுச் சமுதாயத்தில் ஒரு நாணயத்தைச் சுண்டுவதினுல் அல்லது ஊகங்களினுல் செயலாற்றுவதினுல் நீர் திருத்திப்பட்டாலொழிய, உயர்ந்த தேறிய விளைதிறனையுடைய முதலீட்டுத் திட்டங்களினை முதலில் நீர் புகுத்துதல் வேண்டும். கடந்த காலத்தில் அதிக முதலீடு இவற்றினுட் சென்று குறைந்துசெல் விளைவுகள் வருவாயினைக் குறைத்தபின், குறைந்த தேறிய விளைதிறன் திட்டங்களுக்கு நீர் செல்லலாம்.

ஆகவே, ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வட்டிவிகிதம் போன்ற ஏதாவது கட்டாயமாக நடைமுறைக்கு வருகிறது. சோவியத் யூனியன் சமூக வல்லுனர்கள் தாங்கள் முதலாளித்துவத்திற்காக வாதாடுபவரென பகிரங்கக் கண்டனத்திற்கு ஆளாகக் கூடாதென ஆவல் கொண்டுள்ளனர் எனச் சமீபத்திய ஆராய்வுகள் காட்டுகின்றன. எனினும் திறமையான முதலீட்டுக் கணக்கீடுகளைச் செய்வதற்கு ஏதாவதொரு வகையான வட்டிவிகிதம் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. அதன் விளைவாய் சோவியத் திட்ட முறைகளினுள் மெல்லிய உருவமாற்றுச் செய்யப்பட்ட வட்டிவிகிதக் கருத்தினைப் புகுத்துவதற்கு ஏறக்குறைய ஒருடசின் வேறுபட்ட கணக்கீடு முறைகள் நடைமுறையிலுள்ளன.

**வட்டியாகக் கருதப்படும் வாடகைகள் : மற்றுென்று விரித்தல்.**

சம்பளங்கள், வாடகைகள், வட்டிகளைக் கொண்டதே தேசீய வருமானம் என நாம் கூறியுள்ளோம். அல்லது உழைப்பு வருமானங்களும் சொத்து வருமானங்களுமென அதைச் சுருக்கமாகக் கூறலாம். எவ்வாருயினும் மிகச் சிறந்த நிலைமைகளிலே சொத்து வருமான மொத்தத்தினை வட்டியெனக் கருதலாம்.

காரணம் பின் வருமாறு : வட்டியை உற்பத்தி செய்யும் ஏதாவது உற்பத்திச் சாதனம்-நிலம், இயந்திரம் அல்லது வேறேதாவது- மூலதனமாக்கப்பட்ட பின் அதன் வாடகைச் சம்பாத்தியம் வட்டி உருவிற் தோன்றும். ஒரு துண்டு நிலத்திலிருந்து வருடாந்தத் தேறிய வாடகையாக நான் பெற்ற 40 டொலர் நிலத்தின் மூலதனமாக்கிய சந்தை மதிப்பு 1000 டொலரின் 4 சதவீத வட்டி ஆதாயமாகத் தோன்றும். இதே போன்று ஒரு சாமான் வண்டியினுல் (truck) சம்பாதிக்கப்பட்ட தேறிய வாடகை (பதில் வைத்தற் செலவுக்கும் ஏனைய செலவுகளுக்கும் மேற்பட்டது) அதன் முதல் மதிப்பினது வட்டியென மறைமுகமாகத் தோன்றும். முதலீட்டாளருக்கு, இவ்வட்டி ஆதாயங்களை, வேறு ஏதாவது வட்டிச் சம்பாத்தியங்களிலிருந்து வேறுபாடு கண்டறிய முடியாது.

**எல்லாச்** சொத்து வருமானங்களும் வட்டியென வெளிப்படுத்தப்பட முடியுமென்பதையே இது காட்டுகின்றது. இந்நோக்கில், தேசீயவருமானம்

www.padippakam.com



என்பது சாதாரணமாகச் **சம்பளங்களும் வட்டியும்** சேர்ந்ததென நாம் நினைக்கலாம்.[1] (முக்கிய விடயம் என்னவெனில், தேறிய வாடகைகளை இருமுறை கணக்கிடக் கூடாது : நில வாடகைகளாலும் கணக்கிட்டு, அத்தோடு நிலத்தின் பண மதிப்பின் வட்டியினையுங்கூடக் கணக்கிடக் கூடாது).

**ஒரு பூச்சிய வட்டி வீதம் சாத்தியமானதா ?**

பூரண நிச்சயத் தன்மையுடைய ஓர் உலகில், முதலின் தேறிய விளைதிறனைப் பூச்சிய வட்டி வீதத் திற்குக் கீழிறக்கிக் கொண்டுவரப் போதிய அளவுக்கு, மக்கள் எவ்வாறு எப்போதாவது சேமிக்க முடியுமாவென் பதைக் காண்பது கடினமாகும். ஒரேயொரு மலைப்பாங்கான புகையிரதப் பாதை எஞ்சியிருக்கும் வரைக்கும் அதைச் சமப்படுத்துவது பூச்சிய வட்டி வீதத்தையே தரும். ஏன் ? ஏனெனில் போதிய வருடங்களில் எரிபொருளிலேற்படும் சேமிப்பு செலவிற்குச் சரியாயிருக்கும். காலம்–எடுக்கும் முறைகளில் ஏதாவது அதிகரிப்பு, ஏதாவது மிகையான உற் பத்திகளையும், டொலர் வருவாயையும் உற்பத்தி செய்யுமெனக் கணிக்கக் கூடிய வரைக்கும் முதலின் விளைவு பூச்சியமாயிருக்கமுடியாது. அத் தோடு, ஏதாவது நிலம் அல்லது வேறு சொத்து **நிச்சயமான முடிவற்ற நிகர வருமானத்தைக்** கொண்டிருக்கும் வரைக்கும், எதிர்காலம் முழுவதிலும் பரப்பப்பட்ட வரையறையற்ற பெருந்தொகை வருமானத்திற்கு மாற்றாக இன்று மக்கள் ஒரு **வரையறுக்கப்பட்ட** தொகைப்பணத்தையே கொடுக்க விரும்பும்வரைக்கும், வட்டி வீதம் பூச்சிய நிலைவரைக்கும் கீழிறங்குமென நாம் கருத முடியாது.[2]

ஒரு பூச்சிய வட்டிவீதம் பௌதிகவியலில் " தட்ப–வெப்ப நிலையின் பூரண பூச்சியத்தை " சிறிது ஒத்ததாகும். அதற்கருகில் நாம் போவதாகக் கற்பனை பண்ண முடியும் ; ஆனால் பூச்சிய வட்டிவீத மட்ட நிலையை உண்மையில் அடைவதாக நாம் கற்பனை பண்ணுவது முடியாதவொன்றாகும். இவ் வாறு வட்டி மிகச் சிறந்த பொருளாதார, உலகிலுங்கூட மறைந்துபோகாத அடிப்படை விடயமாகும்.

1. உண்மையிற் சட்டரீதியாக மனிதர்களை வாங்கவும் விற்கவும் எம்மால் முடியுமானால் அவர்களது எதிர்காலச் சம்பாத்தியங்களிலும் எமக்கு உரிமையிருந்தால், அப்போது சம்பளங் களுங்கூட மூலதனமாக்கப்படலாம். அதைச் செய்ததோடு, எதிர்பாராத இலாபங்களெல்லாம் " மூலதனம் செய்யப்பட்டபின்", எல்லாத் தேசிய வருமானமும் வட்டியென அழைக்கப்படலாம்.

2. உள்ளபடியான நிச்சயமற்ற நிலைமைகளின் கீழ் மேற்கூறியதை நாம் திருத்த வேண்டும். புகையிரதப் பாதையைச் சமப்படுத்திய செலவுகளை மீண்டும் பெறுமுன்னர் ஆகாயவிமானங்கள் அவற்றை வழக்கொழிந்து போகச் செய்யலாம்–அல்லது நில அதிர்வுகள் உமது வேலையைச் சீரழித்து விடலாம். 1932 ஆம் ஆண்டு மக்கள் தாம் மேற்கொண்ட முதல் திட்டங்கள் பெரும்பாலானவற்றில் பூச்சிய அல்லது எதிர்மறை விளைவுகளை எதிர்பார்த்ததோடு அவற்றையும் அனுபவித்தனர்.

www.padippakam.com



**ஆபத்தான விளைவுகளுக்கும் முதலீடுகளுக்குமான ஒரு நிச்சயமற்ற தளமா?**

பூரண நிச்சய நிலமைகளின் கீழ் உறுதியான சிக்கனம் பூச்சிய நிலைக் கன்றி வேறேதாவது வட்டித் தளத்திற்கு இட்டுச் செல்லாமலிருக்கலாம். ஆனல் எவ்வித உண்மையான முதலீட்டுத் திட்டத்திற்கும், ஓரளவு நிச்சய மின்மை எப்போதும் அஞ்சப்படவேண்டும் எனும் உண்மை உலகைப்பற்றி யாது ? முதலீட்டாளர், ஆபத்துக்களைத் தம்தோள்களிற் தாங்கும் கருமத் தினை விரும்பார் எனும் நிகழ்ச்சி இல்லாமலிருக்குமா ? திட்டவட்டமான, உறுதியான சில சதவீத சிறப்புமதிப்பினை உள்ளடக்கிய வீத விளை வொன்றினை இவ்வித முதலீடுகளில் வற்புறுத்துவார்களா ? இவ்வாரு கப் பூரண பாதுகாப்பான சொத்துக்களினுற் சம்பாதிக்கக்கூடிய வட்டி விகிதம் பூச்சிய நிலைக்குக் கட்டாயமாகக் கீழிறக்கப்பட்டாலும், இன்னமும் மக்கள் ஓர் இயந்திரத்தின் மேலான அபாயகரமான முதலீட்டில் அல்லது நிச்சயமற்ற வருடாந்த வாடகையை உற்பத்தி செய்யும் நிலத்தைக் கொள் வனவு செய்வதில் 5 சதவீத விளைவினை வற்புறுத்த மாட்டார்களா ?

5 சதவீதத்தில் அல்லது பூச்சியத்திற்கு மேலான ஏதாவது உறுதியான மட்டத்திலான இத்தளம், எதிர்நோக்குவதற்கானவொரு உண்மையான பிரச்சினையாயிருக்கலாம். அது உருவெடுக்க வேண்டுமாயின் வேலை நிறைவுக் கொள்கைக்கான சில பாரதூரப் பிரச்சினைகள் ஒரு நாள் வந்துசேரலாம். அது ஏன் என்பது இங்கேயுளது ; பெடரல் காப்புப் பெருக்கக் கொள்கைகள், மிகவும் பாதுகாப்பான குறுகிய கால அரசாங் கப் பத்திரங்கள் மேலான வட்டிவீதத்தினைப் பூச்சிய நிலைநோக்கித் தாழ்த் தின என எண்ணிக்கொள்வோம். இவ்வாறு செய்யின் அபாயகரமான முயற்சிகளின் மேலான விளைவு வீதத்தினைப் 10 சத விகிதத்திலிருந்து 6 சதவிகிதத்திற்குக் கீழே கொண்டுவருமென எதிர்பார்க்கலாம். குறைந்த விகிதத்தில் பல புதிய முதலீட்டுத் திட்டங்கள் இப்போது வருவாய் தருமாகையினுல், எமக்குப் பரிச்சயமான பெருக்கிமுறை நுட்பம் மூலம் உற்பத்தியும் வேலை வாய்ப்பும் உயர்த்தப்படுமாகையினுல் முதலீட்டுச்செல வில் ஒரு மேல்வீச்சு ஏற்படலாம்.

ஆனல் வேலை நிறைவினைத் திரும்ப நிலைநாட்டுவதற்கு இவையாவும் போதாதென எண்ணிக் கொள்வோம். அவ்வாருயின் பெடரல் காப்பு அதையே அதிகம் செய்யலாம். ஆனல் எவ்வளவுதான் பெருக்க நட வடிக்கைகளினுலும் பாதுகாப்பான வட்டி வீதத்தினைப் பூச்சிய தளத்திற் குக் குறைக்க முடியாது. இத்துடன் பாதுகாப்பான சொத்துக்களின் பூச்சிய தளம் ஆபத்தான முதலீட்டு வீதங்களை அவற்றின் 5 சத வீத தளத்திற்கு மட்டும் கீழிறக்கலாமேயொழிய அதற்கப்பாற் கீழிறக்க முடியாத நிலைமையாயிருக்கலாம். அவ்வாருயின் வேலை நிறைவினைப் பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடிய பெரிய அளவில் தற்போதைய வேலை வளங்கும் முதலீட்டு வீதத்தினை இனிமையாக்கத் தேவையான விகிதத்தின் மேலதிகக் குறைவினை ஓரிடத்தில் ஒட்டிக் கொள்ளும் 5 சதவீத தளம் தடுக்குமென்பது நினைக்கத் தக்கதொன்ருகும்.

www.padippakam.com



ஆகையினுல் முதலீட்டைத் தூண்டக்கூடிய சம்பிரதாய சாதனங்கள் வேலே நிறைவினைப் பழைய நிலேக்குக் கொண்டுவந்து எமது திடநம்பிக்கை யான நவீனப் பழங்கொள்கை இணைப்பு சுமுகமாகவும் விரைவாகவும் முழுமையாகவும் தானே இயங்குவதற்கு அனுமதிக்கமுடியாவிடத்து ஓர் இக்கட்டு, கலப்பு முறைக்கான ஒருவகை இறுதித் தீர்ப்பு நாள், வந்து சேருமென, எண்ணலாம்.

இந்நம்பிக்கையற்ற சாத்தியம் இப்பொழுது தோன்ருவிடினும் மதி நுட்பமுள்ள ஒரு சமுதாயம் இதை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அம்மகிழ்வற்ற நாள்வந்தால் அதிகம் பரந்த பரிகாரத் திட்டங்கள் (கடன் ஆபத்துக்களேக் காப்புறுதி செய்தல் அல்லது துணிவு முதலினே அளிக்கக் கூடிய புது நிறுவனங்கள் போன்றவை) கற்பனேத் திறமையுடன் கண்டு பிடிக்கப்படவேண்டும்.

**பணம், வட்டி, பொதுக் கொள்கை :**

எமது சுருக்கமான இறுதிக் கருமம் என்னவெனில், வட்டியின் பழங் கொள்கை எவ்வாறு தற்காலப் பயன்படுதேவைத் தத்துவத்துடன் பொருந் துமென்பதைத் தெரிவிப்பதாகும்.

பணத் தொகையிலேற்படும் மாற்றங்கள் வட்டிவீதத்தினேப் பாதிக்குமா ?

வேலே எப்பொழுதும் நிறைவுள்ளது எனவும், பணத்தில் மாற்றங்கள், எல்லா விலேகளிலுமேற்படும் விகிதாசார மாற்றங்களான கண்டிப்பான “ கணியக் கொள்கை ” மூலமாகவே எப்போதும் ஏற்படுகின்றன எனவும், நீர் நம்பினுல், அப்போது வட்டிவீதம் பணத்துறைக் கொள்கைகளினின் றும் சுதந்திரமுடையதாயிருக்கும். நடுநிலேப் பணத்தைப்பற்றிய பழமை யான கருத்து குறுகிய காலத்தில் பிரயோகிக்க முடியுமென இப்போது ஒருவரும் நம்புவதில்லே. (நாங்கள் ஏற்கனவே பார்த்ததுபோன்று இது வொரு கிரமமான நீண்டகாலச் சாதனமென சில பொருளியலாளர் இன்றுங்கூட ஏற்றுக் கொள்வர்.)

இரண்டாம் பகுதியில், சம்பாதித்த கொத்துக்களே வைத்திருப்பதற்கான ஒரு மாற்றுமுறை பணத்தைச் சொத்தாக வைத்திருப்பதென்பதை நாம் கண்டோம். நடைமுறையிலுள்ள தங்கள் சேமிப்பு நாட்டங்களில் மக்கள் எதுவித மாற்றமும் செய்யாமல், தரப்பட்ட வட்டிவீத அமைப்பினே எதிர்நோக்கும்பொழுது, தரப்பட்ட வருமானத்திலிருந்து நுகர்வதாக எண் ணிக்கொள்வோம். ஆனுல் ரொக்கத்தினே வைத்திருப்பதற்கான ஆவ லினே அவர்கள் குறைக்கின்றனர் என எண்ணிக்கொள்வோம். அவ்வா றுயின், அப்போதுள்ள சரக்கிருப்புகள், பத்திரங்கள், சம்பாதிக்கும் சொத் துக்களின் உரிமைகள் ஆகியவற்றிற்கு அவர்கள் விலேபேசுவர். இது முதல் மதிப்புக்களே உயர்த்துவதோடு உடனடியாக **வட்டி வீதங்களே யும் குறைக்கும் ;** கூடுதலான துரித வீதத்தில் வளருமாறு முதலேயும் அது முறையாக்கும். ஆனுல் ஓர் உயர்ந்த முதலீட்டுக் காலத்தின் பின்னர்

www.padippakam.com



மட்டுமே உண்டான முதற்பொருள்களின் அளவு குறிப்பிடத்தக்க முறையில் அதிகரிக்கும். சுருக்கும் அரசிறைக் கைக்கோளினுல் நீக்கப்பட்டாலொழிய இவையெல்லாம் வேலையினை உயர்த்தும் ; அத்தோடு அல்லது சம்பளங்களையும் விலைகளையும் விரிவடையச் செய்யும்.

பெருக்க பணத்துறைக் கொள்கைகளை மேற்கொள்ளுவதினுல் இதே வகையான நிகழ்ச்சித் தொடர்களை மத்திய வங்கி சிருஷ்டிக்க முடியுமென்பதை அவதானிக்கவும். (17 ஆம் அத்தியாயத்திலிருந்த பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள், சேமவீதம், கழிவுவீத மாற்றங்கள் ஆகியவற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளவும்).

தனி நபர் சிக்கனத்தில் மாற்றமேற்படாததன் விளைவாய் ஏற்படும் இம் முதலீட்டு அதிகரிப்பினைப் பழங்கொள்கைக் கருத்துடன் எவ்வாறு நாம் பொருந்தச் செய்வது ? வட்டியினைக் கீழ்நோக்கி நகர்த்துவதும், பொதுவாகக் கடனைத் தளர்த்துவதும் வேலையையும் மெய்வருவாயையும் உயர்த்தும். அதனுற் பெற்ற முதலாக்கத்தினை அதிகரித்து, இவ்வாருக முதலின் தேறிய விளைதிறன் அட்டவணையில் எம்மை விரைவான விகிதத்திற் கீழ்நோக்கி அனுப்புவதை ஒப்புக் கொள்வதினுல் நாம் அவ்வாறு செய்கிறேம்.

### வட்டியின் பழங்கொள்கைத் தத்துவத்தை வருமான நிர்ணயிப்புத் தத்துவத்துடன் இணைத்தல் : விமர்சனம்.

முன்னர் குறிப்பிடப்பட்ட நவீனப் பழங்கொள்கை இணைப்பு, தனிப்பட்ட சிக்கனவகையும் பொதுச் சிக்கனவகையும் எவ்வாறு ஒன்றையொன்று இயக்குகின்றனவென்பதைக் காட்டுகின்றது. தனிப்பட்ட சிக்கனம் மந்தத்தினை விளைவித்து ஒவ்வாத வகையில் தானுகவே அழிந்துவிடுமென இனிமேல் பயப்படத் தேவையில்லை யென்பதை அது காட்டுகின்றது. மத்திய வங்கிக் கொள்கைகளையும் அரசிறைக் கைக்கோள்களையும் இணைப்பதின் மூலம் பணவீக்கமற்ற வேலை நிறைவின் அருகில் வைக்கப்படும் மிக நேர்மையாய் நடைபெறும் முறையொன்றினைப் பற்றிக்கூறுகின்றது.

இவ்வாறு, உயர்ந்த-முதலீட்டு வேலை நிறைவு நிலையொன்றினை நாம் விரும்பினுல், முதலீட்டினை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி தனது " மந்திரப் பையை " உபயோகிக்கும். இயல்பாகவே, சமூகத்தின் தனிப்பட்ட சிக்கன வகைகளும், அச்சமயத்தைய தொழில் நுட்ப-எதிர்பார்ப்பு முதலீட்டு வகைகளும் தரப்பட்டு, காங்கிரஸ் ஈடுசெய் அரசிறைக் கைக்கோளினை எடுத்துக் கொண்டால் மட்டுமே, மத்திய வங்கியினுல் இலக்காகக் கொள்ளப்பட்ட வேலை நிறைவு மட்டத்திற் தங்கியிருக்க முடியும்.

இந்த ஈடு செய் அரசிறைக் கைக்கோளின் தேவைகள் என்ன ? முதலீட்டினைக் கழித்து வேலைநிறைவு உற்பத்திக்குச் சமமாக நுகர்ச்சி நாட்டத்தினைக் குறைக்கக் கூடிய அளவு, பயன்படக்கூடிய வருமானங்களைப் பாதிக்கக் கூடிய அளவு வரிகளும் செலவுகளும் சுருக்கமுடையனவா


www.padippakam.com



யிருக்கவேண்டும். (உயர்ந்த நுகர்ச்சியுடன் வேலை நிறைவினைச் சிருஷ்டிக்க மத்திய வங்கியும், அரசிறை அதிகாரிகளும் என்ன செய்யவேண்டுமென்பதை விபரிக்குக.)[1]

[1]. சுதந்திரமான அரசிறைக் கைக்கோள்களும் பணத்துறைக் கொள்கைகளும் பின்பற்றப்படும்பொழுது என்ன நடைபெறும் என்பதை இடைநிலை நூல்கள் எமக்குக் காட்டும். அப்பொழுது வருமானமும்வேலையும் (சிலவேளை விலைமட்டமும்) முக்கியமான மாறிகளாக வரும். ஆழ்ந்து கற்க விரும்பும் வாசகர்களின் நன்மைக்காக இச்சாதாரண நிகழ்ச்சியைப்பற்றி அதிகம் விளக்கம் கொடுப்பதற்குப் படங்கள் 4*a* உம் 4*b* உம் சேர்க்கப்பட்டுள்ளன. மெய்வருவாய் மட்டத்திற்குச் செங்குத்தெதிராக வட்டிவீத மட்டங்களினை இவையிரண்டும் வைக்கின்றன. ஒவ்வொரு வட்டி விகிதத்திற்கும் ஒரு மதிப்பிட்ட அரசிறைக் கைக்கோளிற்கும் குறிப்பிட்ட வட்டி வீதத்திற்குப் பொருத்தமாய், முதலீட்டு மட்டத்தின் இறுதி நிலை விளைதிறனுல் (எமது பழைய நண்பன் " பெருக்கி "யின் மூலம்) உண்டாக்கப்படும் வருமான மட்டம் என்ன

மாற்றுப் பணத்துறைக் கொள்கைகள்




படம் 4.

என்பதைக் காட்டும் **BB** வளைகோட்டினை இரண்டும் கொண்டிருக்கின்றன. இந்த **BB** வளைகோடு தென்கிழக்காய்ச் சாய்வாயுள்ளது, ஏனெனில் குறைந்த வட்டி உயர்ந்த முதலீட்டையடைய அது உயர் வருமானத்தையடையும்.

மத்தியவங்கி அதிகாரிகள் தாங்கள் அடையவேண்டுமென வற்புறுத்தும் வட்டி மட்டத்தினைக் காட்டுவதன்மூலம் படம் 4 ஒவ்வொரு பணத்துறைக் கொள்கையையும் சுருக்குகின்றது. கிடைநிலையான கோடுகள் எல்லாவற்றினுள்ளும் (**AA, A′ A′** . . . . . . . . . .) **BB** இனுல் எண்ணிக் கொள்ளப்படும் அரசிறைக் கைக்கோள் தரப்பட்டவுடன் வேலைநிறைவு இடமான **E** இக்கு எம்மை ஒரேயொரு கோடே கொண்டுவரும்.

படம் 4*b* உம் ஒரேவிடயத்தையே காட்டுகின்றது. ஆனுல் ஒவ்வொரு மாறுபட்ட பணத்துறைக் கொள்கையும் நிலையான பணமட்டத்தினைச் சரியாக்கும் நோக்கில் வெளியிடப்படுகின்றன வெனும் ஊகத்திலேயே இவ்வாறு காட்டப்படுகின்றது. இவ்வாறு, **MM** இனுல் காட்டப்படுவதை விட மத்திய வங்கியினுற் சிருட்டிக்கப்பட்ட குறைந்த மொத்தப் பணத்தையே **M′M′** காட்டுகின்றது. இவ்வயையான ஒவ்வொரு " சம-மொத்தப்-பணம் " வளைகோடுகளும் மேல் நோக்கிச் சாய்வாயுள்ளன. ஏன் ? ஏனெனில் உயர்ந்த வருமானங்கள், பேரங்களுக்காக அதிக பணம் வேண்டுகின்றன. அவ்வாறு நடைபெறுவது ஈட்டுப் பங்குகளின் விளைவுகளைக் குறைந்த பேரம் பேசுவதற்குக் குறைந்த பணத்தையே மீதமாக்குகின்றது. வேலை நிறைவு குறிக்

படிப்பகம்

www.padippakam.com



**அனுபந்தம்: பின்னிணைப்பின் சுருக்கம்.**

1. பணக்காரக் கடன் ஈவோரின் பேரசக்தியின் தயவில் ஏழை தங்கியிருப்பதாகக் கருதக்கூடிய நிறைவில் போட்டிச்சந்தைகளில் நுகர்ச்சிக் கடன் பேரங்கள் நிகழ்வதினை, வட்டியின் விமர்சகர் மனத்தில் எண்ணியிருக்கக் கூடும். அரிஸ்டாட்டிலைப் போன்ற தத்துவ ஞானிகள் முயல்களின் அல்லது புளிச்சத்தின் பிரதியுற்பத்திச் சக்தியினை நாணயங்கள் கொண்டிருக்கவில்லையென்பதையுணர்ந்து, வட்டிசெலுத்தலும், வட்டி பெறுதலும் ஆகிய கருத்திலே ஏதோ ஓர் அடிப்படைத்தவறு உண்டு என்பதையே இஃது குறிக்குமென எண்ணினர்.

இன்று போட்டிக் கடன் சந்தைகளில் ஏழை மனிதன் நுழையமுடியாதென்பதைச் சாதகமாகப் பயன்படுத்தி மேலதிக கடும்வட்டி அறவிடுவதற்கு எவரும் ஆதரவாயிரார். ஆனல் பொருளியலாளரும், தத்துவ ஞானிகளும் இன்றைய நாளைய வட்டிக்கு மிகவும் அடிப்படையான தொழில் நுட்ப அம்சம் முதலின் தேறிய விளைதிறனுகுமென ஒப்புக்கொள்வர். நீர் எனக்குப் பணம் இரவலாகத் தரும்பொழுது, நிலம், இயந்திரங்கள், பத்திரங்கள், சரக்கிருப்புக்கள் அல்லது வளமான முயல்களில் முதலீடு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை நீர் விட்டுவிடுகிறீர் என அவர்கள் உணர்ந்தனர்—வட்டியைக் கொண்டு சுமாராய் அளக்கக்கூடிய சந்தர்ப்பங்களினை இழந்துவிடுகிறீர். கலப்புப் பொருளாதார முறையொன்றில் விலை நிர்ணயிப்பதால், பொருளாதார நடத்தை சம்பந்தமான நன்னெறிப் பிரச்சினைகளெல்லாம் எஞ்சியிருந்தாலும், வட்டித் தத்துவம் தானுகவே முற்றும் புதிதான பிரச்சினைகளைப் புகுத்துவதில்லை.

2. நுகர்ச்சிக் கடன்கள் இன்று சிறிதளவே முக்கியத்துவம் உடையவையாயினும், சமுதாயம் நுகர்வதைவிடச் சேகரிக்கும் முதலை என்ன வீதத்திற் சேகரிக்கும் என்பதில் இவை ஓரளவு செல்வாக்குள்ளன. சிக்கனம், நுகர்ச்சி விலக்கல், புலனடக்கம், பொறுத்திருத்தல், முன்னேக்கு, பொறுமையின்மை போன்ற இன்னேரன்ன அகப்பொருட் சாதனங்களைப்போல்,

கோளான **E** ஐச் சரியாக அடையக்கூடிய பணமட்டம் **MM** மட்டுமே என்பதை அவதானிக்கவும்.

உயர்ந்த நூல்கள் (1) தனி மனித சிக்கனத்திலேற்படும் மாற்றங்களும், முதலீட்டின் இறுதி நிலை விளைதிறனிலேற்படும் மாற்றமங்களும் போன்று, அரசிறைக் கைக்கோளும் **BB** யின் மேல் முக்கியமாய் இயங்குகின்றதென்பதைக் காட்டுகின்றன. மறுபக்கத்தில், (2) ரொக்கத்தினை வைத்திருப்பதற்கான அல்லது சொத்துக்களைச் சம்பாதிப்பதற்கான விருப்புச் சம்பந்தமான மக்களின் நீர்மைவிருப்பங்களில் மாற்றங்கள் செய்வது போன்று, பணத்துறை சார்ந்த கொள்கையும், கடன் நிர்வாகக் கொள்கையும் **AA** ஐ அல்லது **MM** ஐ நகர்த்த முக்கியமாக இயங்குகின்றன என்பதையும் காட்டுகின்றன. ஏ. எச். ஹான்சனது "பணத்துறைத் தத்துவமும் அரசிறைக் கைக்கோளும்" எனும் நூலினைப் பார்க்கவும். (மக்ரோ-ஹில், நியுயோர்க், 1949), அத்தியாயம் 4, கெயின்ஸினது "பொதுத் தத்துவத்தின் தெளிவான இவ்விளக்கத்தினை முதன் முதலில் ஒக்ஸ்போட்டைச் சேர்ந்த ஜேர். ஆர். ஹிக்ஸ் தந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



தனிமனிதன் கடன் வாங்குதல், தேறிய விளைதிறனைத் தருகின்ற நீண்ட ஆயுளையுடைய திட்டங்களிலே முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தின் தொழில் நுட்ப உண்மையுடன் கலந்து இயங்குகின்றது. இவ்வாறு, வட்டி வீதங்களின் நீண்ட கால நடத்தையினை நிர்ணயிப்பதில் கத்தரிக்கோலின் இரண்டு அலகுகளும் முக்கியமானவையாகும்: தனிப்பட்டதும் சமூக சிக்கனமுமான அலகும், அதனோடு கலந்தியங்கும் அலகான முதலின் வெளித் தோற்ற தேறிய விளைதிறனும் அவையாகும்.

3. தனிப்பட்ட இலாபத்திற்காக நடத்தப்படாத திட்டமிட்ட ஓர் அரசுங்கூட, இப்போதைய நுகர்ச்சித் தேவைகள் நிர்ணயிக்கப்பட்டபின், இன்றிருக்கும் திரவிய சாதனங்களின் மிகச் சிறந்த உபயோகத்தினை, பல சாத்தியமான முதலீட்டுத் திட்டங்களுள் எது குறிப்பதாக அமையும் என்பதினை, நிர்ணயிப்பதற்காக (வடிகட்டியாய் உதவுதற்காக) வட்டி வீதம் போன்ற ஏதாவதொரு முறையை உபயோகிக்க வேண்டும். "புரட்சியே வருக" தலையிடாக் கொள்கை வருக—இயற்கையின் குறைந்துசெல் விளைவு விதி இன்னும் இயங்கிக்கொண்டேயிருக்கும்.

4. பொருளியலாளர் உழைப்பு, நிலம் போன்ற முதனிலை உற்பத்திச் சாதனங்களுக்கும் முதற் பொருட்கள் போன்ற உற்பத்தி செய்யப்பட்ட சாதனங்களுக்குமிடையிலான வேறுபாட்டினை கொள்கையளவில் அங்கீகரிக்கும்பொழுது, நிலவாடகையெனக் கூறப்படும் அநேகமானவை பிறிதொரு நோக்கில் வட்டியெனப் பார்க்கப்படலாம், என்பதையும் உணர்கின்றனர். இயந்திரங்களைப் போன்று நிலமும் கழிவு செய்யும் முறையின் மூலம் எல்லா எதிர்கால விளைவுகளையும் முதலாக்கம் செய்கின்ற போட்டிச் சந்தையினுல் விலைக்குறிப்பொன்று கொடுக்கப்படும். இதனுல் அந்நிலத்தின் வாடகை அதை வாங்குவதற்கு அவர் செய்த செலவின் வட்டியைப் போன்றே அதன் உரிமையாளருக்குத் தோன்றும். இயந்திரங்களை வாங்குவதில் அவர் செய்த செலவில் அவர் பெறும் வட்டியிலிருந்தும் இது அவ்வளவு வேறுபட்டதல்ல. ஒவ்வொரு பொருளும் அது எவ்வாறு பெயரிடப்பட்டபொழுதிலும், தேசீய வருமானக் கணக்கீடுகளில் சரியாக ஒரு முறையே கணக்கிடப்படவேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள, புள்ளிவிபர வல்லுனர் மிகவும் கவனமெடுப்பர்.

5. நிச்சயமின்மையும் தொழில் நுட்பப் புதுமைமாற்றங்களும் சம்பந்தப்படாத சமயங்களில் சமூகம் மேன்மேலும் முதலினைத் திரட்டுவதற்கு உறுதியாயிருந்தால் குறைந்துசெல் விளைவுகள் இறுதியாக முதலின், தேறிய விளைதிறனையும் வட்டி வீதத்தினையும் பூச்சியத்தை நோக்கி வரையறையின்றிக் கீழ் நோக்கித் தள்ளும். உண்மை—வழ்வு நிலைகளான பாரிய நிச்சயமின்மைகளின் அபாயமற்ற கடன்களின் பூச்சிய விளைவுத் தளத்தைவிட, அபாயகரமான விளைவின் தளம் கணிசமான அளவு உயர்ந்திருக்கக்கூடிய சாத்தியமுண்டு. எனவே, வேலையினை உயர்வாயும், நிறைவாயும் வைத்திருக்கத் தேவையான தொழிற்—சிருஷ்டிக்கும் முதலீட்டு

www.padippakam.com



அளவினைச் சரிப்படுத்துவதில் அவர்கள் வெற்றியடைய வேண்டுமாயின் வட்டிவீதங்களினைச் சுலபமாக்குகின்ற மத்திய வங்கியின் வைதீக முறைகளுக்கு அதிகாரிகள் துணை சேர்க்கவேண்டிய எதிர்கால இறுதித்தீர்ப்பு நாளொன்று வருமெனும் நம்பிக்கையற்ற சாத்தியத்தினை நாம் முற்றாக ஒதுக்கிவிட முடியாது.

6. பணத்தின் தொகையிலேற்படும் மாற்றங்கள் பெயரளவு விலைமட்டத்தினை வெறுமனே மாற்றுவதோடு, சார்பு விலைகள், வட்டி வீதங்கள், உற்பத்தி, வேலை மட்டங்கள் எல்லாவற்றையும் எதுவித மாற்றமும் செய்யாமல் விட்டுவிடும் எனும் பழம் கருதுகோளில், இன்றைய உலகில்—சம்பளங்களும் ஏனைய விலைகளும் குறுகிய காலத்தினுள் நகராதிருப்பதோடு, நீண்ட காலத்தில் சம்பளங்கள் கீழிறங்குவதற்குக் கடினமாயிருப்பதோடு, வேலையின்மையின் அளவும் கணிசமாய் வேறுபடும் இவ்வுலகில்—கடுமையான திருத்தங்களினைச் செய்ய வேண்டிய தேவையுள்ளது. பணத்தின் அதிகரிப்புகள் (அல்லது ஆளாப்பணம் வைத்திருப்பதற்கான மக்களின் விருப்பிற் குறைவுகள்) அடிக்கடி ஈட்டுப்பங்கு விலைகளினை உயர்த்தி, வட்டி வீதங்களினைக் குறைத்து, முதலீட்டினைக் கூட்டி, உண்மை வருமானங்களை அல்லது பணவருமானங்களை அல்லது இருவகையையும் விரிவடையச் செய்யும்.

7. ஆனால், தகாத பணவீக்கமின்றி நிலையான உயர்தொழில் மட்டங்களினைப் பாதுகாக்கக்கூடிய வகையில் மத்திய வங்கிக் கொள்கைகளும், அரசிறைக் கைக்கோள்களும் இணைந்து செயலாற்றமுடியுமெனும் நவீனப் பழங்கொள்கைக் கருதுகோளினை நாம் செய்தால், பழம் ஆராய்ச்சியை உபயோகமான முறையில் உபயோகப்படுத்தலாம். (இவ்வாறு கூறப்போனால் விரும்பப்படும் முதலீட்டு மட்டத்திற்கு மத்தியவங்கி வட்டியினை வைக்கும். தேவைப்படும் சிக்கனத்தைப் பலமாக்குவதற்கு அரசிறை அதிகாரிகள் வரிகளையும், செலவினங்களையும் அணிப்படுத்துவர். இயல்பாகவே இரு கொள்கைகளும் **ஒரே காலத்தில்** செலுத்தப்படவேண்டும்.)

**ஆராய்வுக்கான வினாக்கள் :**

1. புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க, யூத மத தாபனங்கள் இன்று உள்ளூர் வணக்கதலங்களைக் கட்டுவதற்காக ஈடு அடகுவைக்கின்றன. ஏதாவது மேலதிக நிதிகளிருந்தால் அவர்கள் ஒப்பந்தங்களில் முதலீடு செய்கின்றனர்; அல்லது ஆங்கில திருச்சபையைப்போன்று சாதாரண சரக்கிருப்புக்களில் முதலீடு செய்கின்றனர். "அளவிற்கு மீறிய வட்டியெடுக்கும்" பழக்கத்திலிருந்து இதை அவர்கள் எவ்வாறு நன்னெறி முறையில் வேறுபடுத்துவர் ?

2. இரு சமூகங்கள் ஒரே வகையான தொழில்நுட்ப உற்பத்திச் செயல்களினைக் கொண்டிருக்கின்றன. அவை சரித்திரத்தில் வேறுபட்ட வட்டி விகித முறைகளினை ஏன் காட்டவேண்டும் ?

www.padippakam.com



3. "வட்டிவீதம் சுரண்டலுக்கான மத்தியதர வர்க்கத்தினரின் வழி யாகும்". ஆராய்க.

4. உயர்ந்த வட்டிவீதங்கள் என் முதலீட்டுத் தேவைகளைக் குறைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைத் தருக.

5. வட்டிக்கு உயர்ந்த M என்ன செய்யும் ? ஏன் ? உயர்ந்த வருமானம் யாது செய்யும் ? சுதந்திரமான பணத்துறைக் கொள்கைகளும் அரசிறைக் கைக்கோள்களும் என் வேலை நிறைவினுக்கு இட்டுச் செல்ல வேண்டியதில்லை என்பதனை விளக்குக. மாறுபடும் அரசிறைக் கைக்கோள்களின் காரணமாய் வேலை நிறைவுடன் ஒத்துப் போககக் கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட முதலீட்டு வீதங்கள் உள்ளன என்பதைக் காட்டுக.

6. கீழ்வரும் கருத்துக்களினை நீர் விளங்கியவாறு விபரிக்குக :

நுகர்ச்சி விலக்குதல் அல்லது புலனடக்கம், பொறுமையின்மை, காத்திருத்தல்

முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம்.
நுகர்ச்சிக் கடனீவு.
வட்டிவிகிதமும் திட்டமிடுதலும்.
நிச்சயமின்மை.
பொதுக் கொள்கையும் முதல் வளர்ச்சியும்.
நவீனப் பழங் கொள்கை இணைப்பு.

www.padippakam.com

# முப்பதாம் அத்தியாயம்

## இலாபமும், தூண்டல்களும்

உலகம் எப்பொழுதும் தன்னல உணர்ச்சியினுலேயே செயற்படும். இதைத் தடைசெய்யக்கூடாது. கயவரிடத்துக் காணும் தன்னலத்தை நல்லவர்களு டையதோடு இணைக்கப்பார்க்க வேண்டும்—

சாமுவேல் பட்லர்

சம்பளம், வட்டி வாடகை என்பவற்றைவிட பொருளியலறிஞர் வேறு மொரு நாலாவது இனத்தைச் சேர்ந்த வருமானத்தைப்பற்றிப் பேசுவர். இதுவே இலாபம். தொழிலாளர் செய்யும் தொழிலுக்கான கூலியே சம்பளம் ; முதலாளி போட்ட முதலுக்குரிய வருமானமே வட்டி. நிலத்துக் குரிய வருமானமே வாடகை. அப்போது இலாபம் எதனுடைய வருமானம்? பொருளியலாளர் கூறும் விடை சிக்கலானது.

"இலாபம்" என்ற சொல்லுக்கு வெவ்வேறு பாடையில் வெவ்வேறு பொருள் கூறப்படலாம். இந்தப் பலவகைப்பட்ட பொருள்களையும் பொருளியலறிஞர் ஆராய்ந்து, தீவிரதுணிவு, நிச்சயமின்மை, ஏகபோக உரிமை, தூண்டல்கள் என்பவற்றேடு இலாபத்தைத் தொடர்பு படுத்தியுள்ளனர்.

முதலிலே நாம் இலாபம் சம்பந்தமான முக்கியகருத்துக்களை ஆராய் வோம். சாதாரணமாக வழங்கப்படும் இலாப இலக்கங்கள் இந்த முக்கிய கருத்துக்களோடு ஒத்திருக்கமாட்டா. பின்னர் இலாபம் பற்றிய முக்கியமான கருத்துக்களை ஆராய்ந்தபின்னர் இந்த அத்தியாயத்தை இலாபநட்டம் பற்றிய ஆராச்சியோடு முடிப்போம். அந்த ஆராய்ச்சியிலே இலாபநட்டம், சமூகத்தின் என்ன, எப்படி, யாருக்கு என்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் சந்தை விலைநிர்ணயிக்கும் விடயத்தில் என்ன பங்கை மேற்கொள்ளுகிற தென்பதைக் குறிப்பிடுவோம்.

**இலாபப் புள்ளியியல்.**

ஐக்கிய நாடுகளின் வர்த்தகப் பகுதிப்புள்ளியியலாளர் அல்லது அமெரிக்க வர்த்தக இலாகாப்புள்ளியியலாளர் இலாபங்கள் சம்பந்தமான விபரங் களை பத்திரிகைக்காரருக்குக் கொடுக்கும்போது அவர் கூறும் விடயங் களின் பொருள் என்ன ? முதலாவது அவர் கம்பெனியின் உழைப்பைக் குறிப்பிடுகிருர். இவை பங்குலாபமாக விநியோகிக்கப்படலாம் ; அல்லது விநியோகியாமல் வைத்திருக்கும் இலாபமாயிருக்கலாம். (சில சந்தர்ப் பங்களிலே கம்பெனியின் இலாபவரியைச் சேர்த்துக் கொள்வார். சில சந்தர்ப் பங்களிலே சேர்க்கமாட்டார். விலை மட்டம் மாறினுல் பொருள்களின் மதிப்பு மாறும் என்ற காரணத்தால் கம்பெனி இலாபங்களைச்" சரிபண்ணு"



31—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



வார். எனவே பிரசுரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தும் விடயத்தில் கவனமாயிருக்கவேண்டும்.) இரண்டாவது வகையில் மற்றொரு தினிசான இலாபத்தையும் குறிப்பிடுவார். இது கம்பெனியாகச் சேராதவர்கள் பெறும் இலாபம். (இதில் விவசாயிகள், தாமாக வேலை உண்டாக்கிச் செய்வோர், வைத்தியர், பங்காளிகள், முதலானோர் உளர்).

இவ்வாறு கம்பெனி இலாபம், கம்பெனியாய்ச் சேராதோர் இலாபம் என் பவற்றைப்பற்றிய இலக்கம் அவருக்கு எவ்வாறு கிடைத்ததென்று நாம் அறிந்தோம். கம்பெனியின் விற்பனை வருமானத்திலிருந்து அவர் செல வைக் கழித்தார் : தளவாடங்களுக்கான செலவு, தொழிலாளரின் சம்பளம், உறுதிப்பத்திரத்தின் மூலம் வளரும் வட்டி, நிலவாடகை முதலியன போன்ற செலவுகள் போக மிஞ்சியதே வருமானம்.

**முதலாவது கருத்து : சாதனங்களில் அடங்கிய வருவாயே இலாபம்.**

புள்ளி இயலாளர் கொடுக்கும் இலாபங்கள் பொருளியலறிஞருக்கு எல்லாம் கூழாம் பாணியாகத் தோன்றும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள இலாபத்திலே ஒரு பகுதியாவது, கம்பெனிச் சொந்தக்காரரின் சாதனங் களாலுண்டாகும் வருவாயாகும். ஒரு பகுதி கம்பெனிச் சொந்தக்காரர் உதவிய தொழிலுக்குரிய வருவாயாகும். அதாவது விவசாயி, அவருடைய குடும்பம், வைத்தியர், பங்காளிகள், நிர்வாகிகள், இவர்களே சில சமயம் பங்குதாரராயிருப்பர். ஒரு பகுதி இயற்கை வளத்தின் சொந்தக்காரருக் குரிய வாடகையாயிருக்கும். ஒரு பகுதி சொந்தக்காரரின் முதல் மீதுள்ள வட்டியாயிருக்கும்.

இதிலிருந்து இலாபத்தின் முதற் கொள்கையை அறியலாம். சாதாரண மாக இலாபமென்று சொல்லப்படுவதிலே பெரும் பகுதி வட்டியும், வாடகை யும் சம்பளமுமாகும். அடங்கிய வட்டி, அடங்கிய வாடகை, அடங்கிய சம்பளம் என்றெல்லாம் பொருளியலாளர் இந்த வகையான இலாபத்துக்குப் பெயர் கொடுப்பர். அதாவது சாதனங்களின் உழைப்பு இலாபமாகும்.

**இரண்டாவது கருத்து : முயற்சி, தானாக ஒன்றை ஆரம்பித்தல், என் பவற்றுக்கான வருவாயே இலாபம் என்றபடி.**

நாம் நிறை போட்டியுள்ள ஓர் உலகத்திலே வாழ்கிறோம் என்று வைத் துக் கொள்வோம். அங்கே வருங்கால நிலையை முன்கூட்டியே நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். நடைமுறையிலுள்ள நிகழ்ச்சிகளுக்கு எவ்வித மாற்றமும் உண்டாகமாட்டாது. அப்போது பொருளியலாளர் "இனி இலாப மென்பது இருக்கமாட்டாது" என்று சொல்லுவார். இதுதான் அவர் கருதும் பொருள்.

புள்ளியியலாளர் பத்திரிகைகட்கு இலாபக் கணக்குகளைச் சொல்லுவார். ஆனால் இந்த இலட்சியபூர்வமான சமநிலை நிலைமைகளிலே சொந்தக் காரர் வழங்கிய தொழில், சொத்து என்பவற்றின் உள்ளடங்கிய வருமானம் குறிப்பிடப்பட்ட இலாபம் முழுவதையும் விழுங்கியிருக்கும். ஏன் ? சொந்

படிப்பகம்

www.padippakam.com



தக்காரர் தமது சொந்த முயற்சியிலேயே அவற்றைப் பயன்படுத்தி இலாபம் பெறமுடியாவிட்டால் அந்தச் சாதனங்களைச் சந்தையிலே வாடகைக்கு விட்டுவிடுவர். அத்துடன் முன்னர் தமது தொழிற் சக்தியையும் சொத்துக்களையும் வாடகைக்கு விட்டவர்கள், இனி அவ்வாறு செய்யாது இலாபம் பெறலாமென்ற எண்ணத்தால் தாமே அவற்றைப் பயன் படுத்திச் சொந்த முயற்சியிலீடுபடுவர்.

இவ்வாறு பல போட்டியாளர் கட்டுப்பாடின்றிச் சுதந்திரமாக வியாபாரத்திலீடுபட்டால், மாறாநிலையிலும், எல்லாவிடயங்களையும் முன்னேறியே அறிந்திருக்கக்கூடியதுமான ஒரு நிலையிலும், விலை, செலவு நிலைக்கு இறங்கி, போட்டிச் சம்பளம், வட்டி, வாடகை என்பவற்றுக்கு மேலேயுள்ள இலாபமெல்லாவற்றையும் இல்லாமற்செய்துவிடும்.[1]

ஆனால் இத்தகைய கற்பனை உலகிலே நாம் இருப்பதில்லை. அவ்வாறிருக்கவும் முடியாது. நிசவாழ்வில் யாராவது ஒருவர் நிர்வாகத் தலைவராயிருக்க வேண்டும். இருந்து ஒரு தொழில் முயற்சியை எவ்வாறு நடத்தவேண்டுமென நிச்சயிக்க வேண்டும்; போட்டி ஒரு போதும் சரியான நிறை போட்டியாயிருக்க மாட்டாது. வருங்காலத்திலே சப்பாத்து நாடா கிராக்கியிருக்குமா, கோதுமையின் விலை எவ்வாறிருக்குமோ என்பதை ஆராய்ச்சி செய்ய ஒருவர் இருக்கவேண்டும். நாமிருக்கும் இந்த உலகிலே புதியதோர் எந்திரத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய மனிதர் இருக்கவே செய்வர். அதனால் புதியதொரு தொழிலை ஆரம்பித்துப் புதிய பொருளை உற்பத்தி செய்யலாம். இவ்வாறு புதிய கண்டுபிடிப்பைக் காண்பவரை முயற்சியாளர் என்று கூறுவோம். இவர் வேறு; நடைமுறை முயற்சியை நடத்தும் நிர்வாகி வேறு நிர்வாகிக்குக் கொடுக்கும் சம்பளத்தை இலாபம் எனப் பல பொருளியலாளர் கருதுவதில்லை. ஹார்வாட்டைச் சேர்ந்த ஜோசப் ஷும்பீட்டர் இந்த வகையைச் சேர்ந்தவரே. நிர்வாகியின் சம்பளம் சம்பளமாகவே கருதப்படுகிறது. அது அடங்கிய சம்பளமாயிருக்கலாம்; வெளிப்படையான சம்பளமாயிருக்கலாம். திறமையுள்ள நிர்வாகிகளுக்குச் சந்தையிலே நல்ல சம்பளமுண்டு. புதியன கண்டுபிடிப்போரும், முயற்சியாளரும் பெறும் வருவாயே இலாபமெனக் கொள்ளப்படுகிறது.

அரை நூற்றாண்டுக்கு முன்னிருந்த நிலைமையிலும் பார்க்க இப்போதுள்ள நிலைமையிலே இந்த வேறுபாட்டை உணர்ந்துகொள்வது இலேசாகும். ஒரு வீதத்துக்குக் குறைவாகப் பங்குள்ள நிர்வாகிகள் பெரிய கம்பெனிகளின் நிருவாகியாயிருக்கிறார்கள். இவர்கள் நிர்வாகத்தை நடத்தினாலும் மற்றவர்களைப்போலவே சம்பளம் பெறுகிறார்கள். இத்தகைய தொழிற்றிறமை வேறு தொழிற்றிறமைகளைப் போன்றதே. கணக்கு வைத்தல், உற்பத்தி முறையை மேற்பார்வை செய்தல் போன்ற தொழிற்றிறமை

1. மக்கள் சொந்த வியாபாரத்தை நடத்த முற்பட்டால், அடங்கிய சம்பளத்தைக் குறைவாகக் கொள்ள விரும்புவர். மக்கள் மற்றவர்களிடம் வேலைவாங்கவும் நிர்வாகப் பொறுப்பை ஏற்கவும் விரும்பாவிட்டால் நிர்வாகச் சம்பளம் உயர்வாயிருக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



போன்றதே அதுவும். இத்தகைய திறமை உடையோர் சந்தையிலே வாங்கப்படுகின்றனர். மற்றும் சாதனங்களைப் போல அவர்கள் தமக்கு உயர்ந்த சம்பளம் கிடைக்கும் இடத்தையே நாடுவர்.

புதியன கண்டுபிடித்தவர் விடயம் வேறு. அவர் எப்போதும் சித்தியடையாவிட்டாலும் புதிய முயற்சிகளைச் செய்யப் பார்க்கிறர். அவரிடம் தொலையறிவு, புதியது காணும் திறன், உற்சாகம், துணிவு என்பன உண்டு. புதிய கண்டுபிடிப்புக்களைக் காணும் விஞ்ஞானி இவரல்லர். ஆனல் அவற்றை நடைமுறையிற் புகுத்துபவர் இவரே. ரேடியோ அலைகளைப் பற்றிய விஞ்ஞானக் கோட்பாட்டை அபிவிருத்தி செய்தவர் மாக்ஸ்வெல்; ஹேட்ஸ் அவற்றை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்தார். ஆனல் அவற்றை வர்த்தக முறையிலே பயன்படுத்தியவர் மார்க்கோனியும் சர்னேவுமாகும். ட்ரையோட் குழாயைக் கண்டுபிடித்த டி போறஸ்ட் என்பவர் தமது கண்டுபிடிப்புக்களை வியாபாரமுறையிற் பயன் படுத்தமுயன்ருர். அவருடைய வியாபாரத்திலே பலர் முதலீடு செய்தனர். ஆனல் அவர் பல முறை வியாபாரமுறிவையடைந்தார். அவருடன் முதலீடு செய்தவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

பலர் முயற்சி செய்யலாம்; சிலர் வெற்றி பெறுவதுண்டு. சித்திபெற்ற புதுமைகாண்போர் உழைக்கும் பணமே இலாபம் என்று ஷூம்பீட்டர் போன்ற பொருளியலாளர் வரைவிலக்கணம் கூறியுள்ளனர். இந்த இலாபங்கள் தற்காலிகமானவை. ஏனெனில் போட்டியாளர் வியாபாரத்திலே இறங்கி அவர்களை ஓட்டிவிடுகிருர்கள். புதியன கண்டுபிடித்து அதிலே இலாபம் பெறும் ஒரு பகுதியார் மறைய வேறு ஒரு பகுதியார் தோற்றுவார்கள். எனவே இத்தகைய இலாபங்கள் இருந்து கொண்டேவரும்.

**மூன்ருவது கருத்து: ஆபத்து, நிச்சயமின்மை, இலாபம்.**

வருங்காலம் நிச்சயமானதாயிருந்தால் விவேகமுள்ள ஒரு வாலிபன் புரட்சிகரமான புதியதொரு கண்டுபிடிப்பைக்கொண்டுவர முடியாதிருக்கும். எல்லாம் முன்னேறியே தெரிந்ததாயிருக்கும். ஆபத்து, நிச்சயமின்மை என்பவற்ருேடு கண்டுபிடிப்பாளரின் இலாபங்களும் நெருங்கிய தொடர்புடையனவாயிருக்கின்றனவென்பது இதிலிருந்து தெரியும். உண்மையான இலாபம் முழுவதும் நிச்சயமின்மையோடு சம்பந்தமுடையதென சிக்காகோ சர்வகலாசாலையில் 40 வருடமாக பொருளியலாளராயிருந்த பிராங்க் நைட் என்பவர் கூறுகிருர். முந்திய பந்தியிலே ஆராயப்பட்ட புதிய கண்டுபிடிப்பாளர் இலாபம், நிச்சயமற்றவகையிலுண்டாகும் இலாபத்தின் ஒரு வகையைக் காட்டுகிறது.

நைட்டின் கொள்கையைப் பின்பற்றும் ஒருவரிடம் தரகர் ஒருவர், கோதுமையின் விலை ஏறுமென்று யூகித்து ஒரு வார இறுதியில் 10 இலட்சம் டொலர் இலாபமடைந்த செய்தியைக்கூறினர். அதற்கு அவர் " எதிர்காலம் பூரணமாக நிச்சயமாயிருக்குமானல், எதிர்காலத்திலே கோதுமைக்

www.padippakam.com



குறைபாடிருக்குமென்ற கொள்கையை சந்தை ஏற்றிருக்கமாட்டாது. எனவே இந்தக் கொள்ளை இலாபம் உண்டாயிருக்க மாட்டாது" என்று கூறுவார். அல்லது கோதுமையின் விலை கூடுமென்று பந்தயம் பிடித்த ஒரு தரகரின் கதையை அவரிடம் கொண்டு செல்லவும். அதற்கு அவர் பின்வருமாறு கூறுவார் :—"இலாபங்கள் நேர்க் கணியமாகவுமிருக்கலாம்; எதிர்க்கணியமாகவுமிருக்கலாம். மக்கள் இது நடக்குமென எதிர்பார்ப்பதற்கும், உண்மையாக நடப்பதற்கும் இடையிலே நிச்சயமின்மை ஒரு பரவலை உண்டாக்குகிறது. இந்தப் பரவலிலுள்ள வேற்றுமை இலாபமாயிருக்கும் அல்லது நட்டமாயிருக்கும்"

இலாபம் சம்பந்தமான இலக்கங்களை ஆராயும்போது நிச்சயமின்மை, அபாயம் என்பவற்றை மனத்திலே கொள்ளவேண்டும். கீழ்த்தரமான அபாயம் நிறைந்த கடன்பத்திரங்கள் சில, 8 சதவீத வருமானம் கொடுப்பதாகத் தோன்றலாமெனவும், உயர்ந்த தரமுள்ள பாதுகாப்பான பத்திரங்கள் 3 சத வீதமே வழங்குமெனவும் கடந்த அத்தியாயத்திலே கண்டோம். ஆனால் 20 கீழ்த் தரப்பத்திரங்களில் ஒன்று முதலுக்கே எதிர்வரும் வருடத்தில் ஆபத்துண்டாக்குமென்று கண்டு இந்தப் பத்திரங்கள் நல்லவை என்று நீர் கருதினால் நீர் உம்மையே ஏமாற்றுவதுபோலாகும். இந்த 5 சத வீத மேலதிகலாபம், அதில் வருகிற அபாயத்துக்கு ஈடு செய்யப் போதுமானதாகும்.

லொத்தர் சீட்டுகளை வாங்குவோர் நிச்சயமின்மையை எதிர்பார்த்த போதிலும், லொத்தரை நடத்துபவர்க்கு எவ்வித அபாயமுமில்லை. அவருக்கு இலாபமுண்டென்பதில் ஐயமில்லை. பெரிய காப்புறுதிக் கம்பெனி கணித பூர்வமான சம்பவ விதிகளில் நம்பிக்கைவைத்து அதனுடைய சார்பளவான ஆபத்தைக் குறைக்கலாம். ஏனெனில் தொகை அதிகமானால் பலவகை ஆபத்துக்களும் ஒன்றையொன்று சமன்படுத்திவிடும். ஆபத்துக்களை ஒன்றாகச் சேர்ப்பதன் பயனாக நிச்சயமற்றதன்மையை எவ்வளவுக்கு நீக்குகிறோமோ, அவ்வளவுக்கு இலாபம் சம்பந்தமான பிரச்சினை எழமாட்டாது. எஞ்சிய குறைந்தபட்ச ஆபத்து விடயத்திலேயே அது எழக்கூடும்.

சில வருடங்களிலே மொத்த இலாபத்திலும் பார்க்க மொத்த நட்டம் அதிகமாயிருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களிலே ஆபத்தை தாங்குவோர், தொழிலாளருக்கும், முதலாளிகட்கும், நிலச் சொந்தக்காரருக்கும், எதிர்காலம் நிச்சயமாயிருந்தால் அந்தச் சாதனங்கள் உழைக்கக்கூடியதற்கு அதிகமாகச் செலவு செய்திருப்பார்கள். வேறொரு வருடத்திலே நைட் விவரித்த இலாபத்தின் அட்சர கணித முறையிலுள்ள தொகை நேர்க் கணியமானதாயிருக்கும். அதன் பயனாக உற்பத்திச் சாதனங்கள் எதிர்காலம் நிச்சயமாயிந்தால் எவ்வளவு பெறமுடியுமோ அதற்குக் குறைவாகவே பெறும். பெரியதொரு பிரச்சினை வருமாறு :— ஆபத்தை தாங்குவோர் பெரிதும் நன்னம்பிக்கைக் கோட்பாடுடையவராயிருக்கிறார்களா?

படிப்பகம்

www.padippakam.com



ஓர் இனமென்ற அளவிலே அவர்கள் பணத்தை இழக்கிறார்களா ? ஏனைச் சாதனங்களை ஊக்குவிக்கிறார்களா ? பெரும்பாலான பொருளியல் நூல்களிலே கூறியுள்ளபடி பெரிதும் சோர்வு மனப்பான்மையுடையவராயிருக்கிறார்களா ? இதன் பயனாக, ஆபத்தைத் தாங்குவதற்கு தேறிய நேர்க்கணியக் கொடுப்பனவாகவே இலாபங்கள் கருதப்படுகின்றனவா ? வியாபாரிகள் மொத்தத்திலே, ஆபத்தை விரும்பாதவர்போலக் காணப்படுகின்றனர். அதனால் ஆபத்தைத் தாங்குவதற்காக அவர்களுக்குச் சராசரி நேர்க்கணியமானதொரு மிகுதிப் பணத்தை அல்லது இலாபப் பணத்தைக் கொடுக்க வேண்டுமெனப் பல பொருளியலாளர் நினைக்கின்றனர்.

ஆபத்து நிறைந்த தொழில்கள் விடயத்திற் கொடுக்கப்படும் மிகுதிப்பண சராசரி நேர்கணியமாகவோ, எதிர்க்கணியமாகவோ, பூச்சியமாகவோ இருக்க வேண்டுமென்பது எப்படியிருந்தாலும், இது மாத்திரம் தெளிவு. இலாபமென்பது நிச்சயமின்மையின் பயனாக உண்டாகும் விளைவு எனக் கொண்டால், அது சம்பளம், வட்டி, வாடகைபோல நாலாம் சாதனத்துக்கான பயனன்று. இலாபம் இந்தச் சாதனவருவாய்களில் ஒரு பிரிவாகும். கருநாடகமான ஒரு தொழிலில் ஒரு தொழிலாளி ஈடுபட்டிருந்தால் அவன் நட்டத்தை அடைவான். முன்னெல்லாம் கண்ணாடித் தொழிலில் ஒரு வேலையை மேற்கொண்ட தொழிலாளர் அவ்வேலையை எந்திர சாதனங்களினாலே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதும் வேலையின்றித் தவிப்பர். உண்மையில் நடைபெற்றதொரு கருமத்துக்கும், சனங்கள் எதிர்பார்த்ததற்குமுள்ள வித்தியாசத்தை இந்த உதாரணம் காட்டுகிறது. நிச்சயமில்லாத தன்மையினால் நிலச் சொந்தக்காரருக்கு இலாபமும் கிடைக்கலாம், நட்டமுங் கிடைக்கலாம். அந்தப் பொருளிலிலே அவனுடைய வாடகையில் ஒரு பகுதி நேர்க்கணியமாயிருக்கலாம் ; எதிர்க்கணியமாயுமிருக்கலாம். பலவகைத் தொழில்களிலே முதலாளிமார் பேரஞ் செய்வதும், இதைப்போன்றதே.

“ மூலதன இலாப நட்டங்கள் ” நிச்சயமின்மையாலுண்டானவை. அவை மறுபடியும் உண்டாகுமென எதிர்பார்க்கமுடியாது. இவை வருமானமென்று பல நிபுணர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார். இங்கிலாந்திலே மூலதன இலாபங்களுக்கு வரி கிடையாது. இந்நாட்டில் (அமெரிக்கா) அவற்றுக்கு விசேட நடவடிக்கையுண்டு. ஆறுமாதமாகச் சொந்தமாயுள்ள சொத்துககள் மூலம கிடைக்கும் மூலதனலாபத்துக்குச், சாதாரண வருமானத்துக்கு விதிக்கும் வரியிலும் அரைவாசி வரியே விதிக்கப்படும். சில சமயம் அதற்குக் குறைவாகவும் விதிக்கப்படும். எப்படியும் 25 சத வீதத்துக்கு மேல் விதிக்க முடியாது. ஆனால் மேற்படியான சாதாரண வருமானத்தின் மீது 90 சத வீதமோ அதற்குக் கூடவோ விதிக்கலாம்.

**நாலாவது கருத்து : இலாபம் ஏகபோக உரிமையால் வரும் வருவாய்.**

நாம் இதுவரை இலாபம் பற்றி மூன்று அமிசங்களைக் கவனித்தோம். (1) இலாபமென்பது வாடகை, சம்பளம், வட்டி என்பவற்றில் அடங்கியிருக்கிறதென்பது (2) வியாபாரத்திலே துணிச்சல் காட்டுவதாலுண்டாகும்,

படிப்பகம்

www.padippakam.com



ஆனல் எதிர்பாராத, புதிய மாற்றங்களுக்கான தற்காலிக வருமான மாயிருப்பது (3) மக்கள் எதிர்பார்த்த நிகழ்ச்சிக்கும், நடந்தேறிய நிகழ்ச்சிக் குமிடையில் உண்டான நிச்சயமற்ற நிலையிலுண்டானமாற்றத்தாலேற்பட்ட இலாபம். மக்கள் ஆபத்தை விரும்பாவிட்டால் நேர்க்கணியமாகத் தேறியிருக்கும்; இதனைத் தாங்குவதற்காக நேர்க்கணியமான கட்டணம் கொடுக்க வேண்டும்.

இலாபம் சம்பந்தமாகத் தெளிவற்றதொரு கருத்தைக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு மேலே குறிப்பிட்டவற்றைச் சுட்டிக் காட்டினல் நீர் அவனை மயக்கமடையச் செய்வதோடு அவன் எதற்குமாறுயிருக்கிருன் என்பதைப் பற்றியும் தெளிவற்ற கருத்தை உண்டாக்குவீர். அவன் முதலாளியென்பவன்; கணக்குப் பார்த்துக் கொண்டேயிருக்கும் கொழுத்தமனிதன் ; அவன் சமூகத்திலுள்ள ஏனைய மக்களைச் சூறையாடுபவன் என்ற கருத்தைக்கொண்டிருப்பான். இதுலாபம் பற்றிய நாலாவது ஒரு கருத்துக்கு இடமளிக்கிறது. அதாவது இலாபமென்பது ஏகபோக உரிமையின் பயனுகக் கிடைக்கும் ஒன்றென்பது.

கார்க் கணக்கில் அல்லது இறைச்சிக் கணக்கில் செலவிடும் ஒவ்வொரு டொலரிலும் முதலாளிக்கு நாம் மேலே காட்டிய வரைவிலக்கணங்களின்படி பெரிய இலாபம் கிடைக்குமெனச் சாதாரணமாக மக்கள் கருதுவதுபோல அவனும் கருதக்கூடும். அதில் 50 சத வீதம் ஏகபோக உரிமையாளர் கைக்கு இலாபமாகச் செல்கிறதென அவன் நினைக்கக்கூடும். ஆனல் உண்மையெப்படியென்ருல், வரிகள் எல்லாம் கொடுக்கப்பட்டபின்னர் மிஞ்சக்கூடிய கூட்டு இலாபம் கம்பெனியின் சம்பளப்பட்டியலிலும் பார்க்க 1/5 வீதத்துக்குங் குறைவானதாகும். இது தனிப்பட்டவர் மீதுள்ள வரி கொடுக்கப்படுவதற்கு முன்னுள்ளதாயுமிருக்கலாம். பின்னுள்ளதாயுமிருக்கலாம்..

**பூரணப்போட்டி—புனர்வரைவிலக்கணம்.**

நாம் விடயங்களை நேரடியாக இருந்த இருந்தபடி பார்ப்பதானுல் பின்வரும் விடயத்தை அவதானிக்கவேண்டும் : நடைமுறை உலகத்திலே போட்டியானது பூரணமானதன்று. பொருளாதார அறிஞர் கூறிய வரைவிலக்கணப்படி பூரண போட்டியென்ருல் என்ன என்பதை ஆராய்வோம். ஒரு பொருளை விற்போர் இருவர் இருக்க முடியாதென்பது மாத்திரமன்று; தத்தம் பொருள்களின் சிறப்பைப் பற்றி இரண்டு கம்பெனிகள் ரேடியோவில் விளம்பரஞ் செய்யாமல் விடுவது மாத்திரமன்று; எந்த ஒரு கம்பெனியாவது விற்கும் பொருளுக்கு அரைகுறையாகவாவது பதிலாய்ப் பயன்படுத்தக்கூடிய பொருள் இல்லாதிருப்பது மாத்திரமன்று; ஒரு கம்பெனி தனது பொருளுக்கான விலையைப் பகிரங்கப்படுத்தி அதை அந்த விலைக்கு விற்பதற்கு உற்பத்தி செய்யப் பெரும்பாடுபட்டபோதிலும், பொருளாதார அறிஞர் கருத்துப்படி இதனைப் பூரணப்போட்டி என்று கூறி விடமுடியாது. இவற்றில் எல்லாமோ, சிலவோ, பூரணப் போட்டியாகா.

www.padippakam.com



பூரணப்போட்டியென்றால் எந்த விற்பனையாளரும் அந்தப் பொருளின் விலை மாட்டு எவ்வித அதிகாரமும் இல்லாதிருத்தலாகும். அவருடைய தேவைக்கோடு கிடைநிலையாக இருக்கும் ; அத்துடன் அஃது எல்லையற்ற நெகிழ்ச்சி யுடையதாயிருக்கும். எந்த ஓர் உற்பத்தி வளத்தின் மொத்தத் தில் எந்த ஒரு பகுதியையும் எவரும் கட்டுப்படுத்த முடியாததாயிருக்கும்.

உற்பத்திச் சாதனங்களின் விநியோகத்திலே சொந்தக்காரர்களிடையே பெரிய வித்தியாசமிருக்குமானால், பூரணமான போட்டியிற்கூட (இங்கே தனி இலாபம் பூச்சியமாயிருக்கும்) பெரிய செல்வம் படைத்த அநேகமாக சோம்பேறிகளான சிறு தொகைச் செல்வர்களைச் சுற்றிப் பெருந்தொகையான சிறிய வருமானமுள்ளவர்கள் சூழ்ந்திருப்பார்கள்.

24 ஆம் அத்தியாயத்திலும் வேறு இடங்களிலும் பூரண போட்டி என்பது உண்மை உலகில் முடியாத காரியம். விவசாயிகளைத் தவிர ஏனைய தொழிலில் ஈடுபட்டவர்கள் தமது விலைகளை, வாடிக்கைக்காரர் எல்லாரையும் பாதிக்காமலே, கூட்டவும் குறைக்கவும் கூடும். அவர்களுடைய தேவைக் கோடுகள் சற்றே சரிவாயிருக்கும். விலைக்கும் இறுதி நிலை வருமானத்துக்குமிடையே வித்தியாசமுண்டு. சந்தைநிலைமைகள் பெரும் பாலும் நிறைவற்ற போட்டி நிலையிலிருக்கும். இது போட்டியும் ஏக போக உரிமையும் கலந்த நிலை. (இத்தகைய சர்வ சாதாரணமான நிலை சட்ட விரோதமானதாகவோ ஒழுக்கச் சார்ப்றறதாகவோ இருக்கமுடியாது. ஆனால் போட்டி நிறைவின்மை, என்ன, எப்படி, யாருக்கு, என்பவற்றைப் பாதிக்கும்.)

உற்பத்திச் சாதனங்களின் உரிமை பற்றி ஆராயுமிடத்து இரண்டு சாதனங் கள் ஒன்றுபோலிருப்பதில்லையென்பதை அறிவோம். வேலையாள் என்ற முறையில் உமது திறமை உமது அயலவனுடைய திறமையிலும் பார்க்க வித்தியாசமுடையதே. உமது திட்டமான திறமை அமைப்புக்களை உற்பத்திச் சாதனங்களிலொன்றாகக் கருதுவோமானால், நீர் அந்தச் சாதனத்தின் மொத்தத்தில் அதாவது 100 வீதத்தில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்து கிறீர் என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். அல்லது குறிப்பிட்ட தொரு தொழில் முறையின் ஏக உரிமையாளராக நீர் இருக்கலாம். அல்லது ஆறானது குறுகி ஓடுவதால் பொருத்தமான பாலமொன்றை அமைப்பதற் குரிய தானம் உம்மிடம் இருக்கிறதென வைத்துக்கொள்வோம். அல்லது அயோவாவில் உம்முடைய பண்ணை போலச் செழிப்பானதில்லை எனக் கொள்வோம்.

இது நிறைவற்ற போட்டியோடு எவ்வாறு முரண்படுகிறது. உம்மிலும் பார்க்க உமது அயலவர் சற்றேவித்தியாசமானவர்தான். ஆனால் பொது வாக எல்லா வகையிலும் அவர்கள் உம்மைப்போலவே இருக்கின்றனர். உமது திறமைகளில் ஒரு பகுதியைச் சந்தையில் விற்காது பதுக்கிவைத் திருப்பதனால் சம்பளவிகிதம் அதிகம் மாற்றமடையாது. இதனால் உம்மிடம் அதிக ஏகபோக உரிமை இருப்பதாகக் கூறமுடியாது. ஏனெனில் உம் மிடமுள்ள உற்பத்திச் சாதனம் எல்லையின்றி நெகிழக்கூடியது.

www.padippakam.com



உமது பண்ணை விடயமும் அத்தகையதே. அதில் அரைப்பகுதியைச் செய்கை பண்ணுமல் விட்டால், தானிய விலை பாதிக்கப்படமாட்டாது. அதனுல் உமது பண்ணைக்குரிய தருவிக்கப்பட்டவிலை மாருது. உம்முடைய பண்ணை போலவேறு டண்ணையில்லையென்பதை நீரும், உமது குடும்பமும் உணர்ந்தாலும் அது அவ்வாறே நிகழும்.

உமது நிலம் செழிப்புள்ளதாளுல் உங்கள் சீவியத்துக்கு அதிலிருந்து கிடைக்கும் வருமானம் போதும். வருமானப் பகிர்வில் நீர் உச்சத்திலுள்ள 2 சத வீதத்திற்கூட இருக்கலாம். பூரண போட்டியிருந்தாலும், இந்த வருவாயை எவரும் போட்டியினுல் நீக்கிவிட முடியாது. கடவுள் இவ்வாருெரு நிலத்தைப் படைத்திருக்கும்வரை, அது வருமானத்தைப் பெற்றுக்கொண்டேயிருக்கும். ஆரம்பத்தில் அந்த நிலத்தை நீர் எவ்வாறு உரிமையாக்கினீர் என்பது இவ்வாதத்துக்குப் பொருந்தாது. இயற்கைப் பொருளில் அருந்தல் இருக்கும்வரை சார்பளவில் நிச்சயிக்கப்படும் வாடகையிருந்து கொண்டே வரும்.

**செயற்கை அருந்தலும் இயற்கை அருந்தலும்.**

உமது உற்பத்திச் சாதனங்களில் ஒன்றுக்குரிய தேவை எல்லையின்றி நெகிழ்ச்சியுடையதாயிருப்பதற்குப் பதிலாக எதிர்க்கணியமானதாயிருந்தால் அதுவேறு விடயம். (இதன் கருத்தென்னவென்பதை ஆராய்வாம். அதாவது நீர் விலையை உயர்த்திணுற்கூட ஓரளவு உமது சாதனங்களிற் கொஞ்சத்தையாவது விற்றுவிடலாம். இந்தப் பொருளிலேதான் விலையின்மீது உமக்கு ஓரளவு ஆதிக்கமுண்டு.) முக்கியமானதோர் ஆக்கவுரிமைச் சின்னம் விடயத்தில் நீரே தனியுரிமையுடையவராயிருந்தால் அதன் பயனுடைமையை வரையறை செய்யுமுகமாக விலை போட்டால் அது இலாபத்தைக் கொண்டு வரும். நீர் பாடும்போது சபையிலுள்ளோர் மயங்கக்கூடியதாயிருந்தால், நீர் எவ்வளவுக்கு அதிகமாகப் பாடுகிறீரோ, அவ்வளவுக்கு உமது சங்கீதத்துக்குச் சந்தையிலே விலை குறையும். ஒரு பாலம் அமைப்பதற்குப் பொருத்தமான நிலம் உம்மிடமிருக்குமாளுல் அதற்கு அயலாயுள்ள நிலங்களை நீர் விற்கும் விடயத்திலே அவதானமாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதை வாங்கிய அவன் உம்முடைய நிலத்தைப்போல வசதியானதொரு நிலத்தைப் பாலம் கட்டுவதற்குக் கொடுக்கக்கூடியவனுயிருப்பான். இதனுல் உமது வருமானம் குறையலாம். இயற்கையாக உமக்கு அமைந்த பாலம் கட்டும் நிலம் ஏகபோக உரிமையுடையது. அதைப் பயனபடுத்திஞல் டொலர் சந்தை வீழ்ந்துவிடுமென்ற காரணத்தால் நீர் அதைப் பயன்படுத்தாமல் வைத்திருக்கவேண்டும்.

இதன் தாற்பரியமென்ன ? உமது சாதனத்தை எவ்வளவுக்கு விலைக்குக் கொடுக்கிறீரோ அவ்வளவுக்குச் சந்தை சீரழியும். இதை நீர் கருத்திற் கொண்டால் நல்லது ; இது எப்போதென்ருல் பூரணப்போட்டியிலிருந்து போதிய அளவு விலகும் தன்மை இருக்கும்போது மேலதிகமான ஓர் அலகு உற்பத்திப் பொருளை விற்பதனுல் உண்டாகும் முந்திய

www.padippakam.com



அலகுகளில் உண்டாகும் நட்டத்தை எந்த ஒரு கவனமுள்ள கம்பெனியும் கணக்கிலெடுத்துக்கொள்ளும். அது அதனுடைய இறுதிநிலை வருவாயாகும். அது விலையிலும் குறைவானது. ஏனெனில் முந்திய அலகுகளில் ஏற்பட்ட நட்டத்தினால் இந்த இறுதிநிலை வருவாயில் நல்ல கம்பெனி கவனஞ் செலுத்தும். உமது விடயமும் அப்படியே. ஏனெனில் நீர் உற்பத்திச் சாதனமுடையவர். நீரும் மேலதிக வருமானமான இறுதிநிலைவருமானத்திலே கருத்துடையவர். உமது சாதனமெல்லாவற்றையும் சந்தையில் போடாது வைத்திருக்க மாட்டீர். அப்படிச் செய்தால் உமக்கு ஒருவகை வருமானமும் கிடையாது. சாதனத்தை அதிகமாகப் போட்டால் அது இலவசப் பொருளாகி வருமானம் கொண்டு வரமாட்டாது. அரை குறை ஏகபோக உரிமையாளராக, அல்லது நிறைவில் போட்டியாளராக இருக்கும் நீர் என்னசெய்வீர் ? உமது சேவையில் இறுதி நிலை வருவாயைப் பூச்சியத்துக்குக் கொண்டு வரக்கூடிய அளவு பொருளை வைத்துக்கொள்வீர்[1].

நமது கொள்கை இது : நிறைவில் போட்டியிலே சாதன சப்பிளையை வரையறை செய்வது இலாபத்தைத் தரக்கூடியதாயிருக்கும். வரைவிலக் கணப்படி இயற்கையான அருந்தலைப்போக்குவதற்கு ஒன்றுஞ் செய்ய முடியாது. நிறைவில் போட்டியில் இயற்கையருந்தலோடு செயற்கையருந்தலுந் தோன்றுகிறது.

**“ செயற்கையருந்தலின் ” விளைவு ஏகபோக உரிமை வருமானம்.**

எனவே ஏகபோக உரிமை வருமானம் என்ற நாலாவது இலாபம், பொருளியல் நூல்களிலே பின்வருமாறு வருணிக்கப்படுகிறது. செயற்கை அருந்தலினால் உண்டாகும் வருவாய் இலாபத்தின் ஒரு பகுதியாகும். இந்த வருவாய் வாடகை, சம்பளம், வட்டி என்ற வடிவத்தில் வரும். இது சாதனத்தின் தன்மையில் தங்கியிருக்கிறது. குறிப்பிட்ட நிலைமையைச் சமாளிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைத் தொடர்பிலுந் தங்கியுள்ளது. (உதாரணமாக முதலீடு செய்பவன் பாலம் அமைப்பதற்குத் தகுதிவாய்ந்த அந்த நிலத்தை ஏகபோக உரிமையால் உழைக்கக்கூடிய சக்திக்குரிய மூலதனப் பெறுமதி முழுவதையுங் கொடுத்து வாங்குவான். அவனுக்கு வரும் வருமானம் வட்டியாகக் கருதப்படும்.) எனவே ஏக போக உரிமை வருமானங்கள், சம்பளம், வட்டி, வாடகை என்பவற்றோடு இணைந்திருக்கின்றன.

1. இந்தச் சேவையை நிறைவேற்றுவதில் உமக்கு அசௌகரியமிருக்கலாம். அல்லது வேறு சந்தையில் அந்தச் சேவையை விலைப்படுத்தச் சந்தர்ப்பமிருக்கலாம். பாலம் அமைக்கக் கூடிய நிலத்திலே தானியம் பயிரிடுவதுபோல. இத்தகைய சந்தர்ப்பத்திலே நீர் இறுதிநிலை வருவாயைப் பூச்சியத்துக்குச் சமனுக்காமல் குறிப்பிட்டதோர் இறுதிநிலைச் செலவுக்குச் சமனுக்குவீர்.

www.padippakam.com



**இலாபம் பற்றிய ஒழுக்கச் சார்பான கருத்து.**

பொதுமக்களின் அபிப்பிராயத்தை ஆராய்ந்தால் அது பெரும்பாலும் இலாபம் என்ற கொள்கைக்கு மாறுனதாகவே காணப்படும். சமீபத்திலே ஒரு விஞ்ஞானி சில வியாபாரிகளைச் சந்தித்து "நீங்கள் இலாபத்தை உச்சமாக்கப் பார்க்கிறீர்களா" என்று கேட்டான். இதை எல்லாரும் மறுத்தனர். ஏனெனில் இலாபம் ஈட்டவிரும்புபவன் ஒரு லோபி என்ற எண்ணமும், அவன் மக்களைச் சூறையாடுபவன் என்ற எண்ணமும் மனத்தில் இருந்ததாகத் தெரிந்தது. அந்த விஞ்ஞானி அதே வியாபாரிகளைப் பின்வருமாறு கேட்டான் "அவர்களுடைய தற்போதைய விலைக் கொள்கைகளில் பிற்காலத்தில் ஏதாவது உங்களுக்கு நன்மைபயக்கக்கூடிய மாற்றம் யோசிக்கப்பட்டிருக்கிறதா" இதற்கு அவர்கள் தாம் அவ்வாறு இப்போ செய்து வருவதாகவும், இனிமேல் செய்யப்போவதாகவும் கூறினர்.

**இலாப நட்டமுறையை நாங்கள் ஆராயலாம்.**

"இலாபமுறை" என்று ஒன்றைப்பற்றிப் பேசுவது மயக்கந்தருவதாகும். தொழிற்றிறமையைத் தூண்டும் சாதனம் இலாபம். திறமையற்ற முறைகளைப் பயன்படுத்துவோர்க்கு வழங்கப்படும் தண்டனை நட்டமே. பணத்தைச் செலவு செய்யவிரும்பும் நுகர்வோர் விரும்பாத வழிகளில் வளங்களைப் பயன்படுத்துவோர் பெறும் தண்டனையுமதுவே.

சட்டம், வழக்கம் என்ற அமைப்புக்குள்ளே—(இங்கே சீனியில் மணலைக் கலப்பது சட்டவிரோதமானதும், வழக்கமற்றதுமாகும்) இலாபத்தை நாடுவதென்றுலென்ன ? வியாபாரி தன்னிடமுள்ள வளங்களுக்கு ஈடாகப் பெறக்கூடிய அத்தனையும் பெறமுயல்தலே. ஒரு தொழிலாளி தனது தொழிலை மாற்றுகிறுன் ; அல்லது வேறு வாய்ப்பான தொழிற் சங்கத்திலே சேர்கிறுன். அவனின் நோக்கம் இலாபம் பெறுவதே. போட்டி நிறைபோட்டியாயிருந்தால் மேலதிக இலாபம் பெறச் செய்யும் முயற்சியெல்லாம் அனர்த்தமாய் முடியும். எவ்வளவு வேகமாய் ஓடினுலும் நின்ற இடத்திலேயே நிற்கவேண்டிவரும். இது புதிராயிருக்கலாம். ஆனுல் உண்மையே.

போட்டியில் இலாபம் இல்லாமற் போனுல், வியாபாரியின் நிலம், திறமை முயற்சி, முதல் எல்லாவற்றுக்கும் எவ்வித பிரதிபலனும் கிடைக்க மாட்டாதா ? இல்லை ; அப்படியன்று ; நிறைபோட்டியிற்கூட அவனுடைய சாதனங்கள் வருவாயையும், வட்டியையும், வாடகையையும் கொண்டுவரும். உயர்வு தாழ்வான சாதன உடைமையால் உண்டாகும் பணவருமானத்தின் பங்கீட்டில் தீவிரமான சமமற்ற தன்மையிருப்பதையே இலாபத்தின்மாட்டு மக்களுக்கிருக்கும் வெறுப்புக் காட்டுகிறது. போட்டி முறையின் பயனுக உண்டாகும் குறைபாடுகளால் வரும் இலாபத்துக்கெதிராக உண்டாகும் வெறுப்புவேறு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



### இலாபத்தை அளக்கமுடியாது.

இந்த நாலு வகை இலாபங்கள் எத்துணைப் பெரியன ? இலாபமொத்தத்தில் இத்தனை கோடி டொலர் சம்பளத்தில் அடங்கும், இத்தனை கோடி வாடகை எஞ்சியதில் இத்தனை முயற்சியாளனின் இலாபம், இத்தனை எதிர் வரும் நிச்சயமின்மைக்காக ஒதுக்கப்பட்ட தொகையென்றெல்லாம் சொல்வது, பொருத்தமுடையது. சாதன வருமானங்களை இரண்டு பிரிவாய்ப் பிரிப்பது நன்று (1) செயற்கை அருந்தலின் பயனாய் உண்டாவது (2) இயற்கை அருந்தலின் பயனாய் உண்டாகும் போட்டி வாடகை வருமானம்.

ஆனால் இதைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாது. அப்படிச் செய்தாலும் அதனாற் கிடைக்கும் இலாபமென்ன ? காங்கிரஸ் சட்டவிரோதமாக உண்டாக்கப்பட்ட அருந்தல் நிலைமை ஒவ்வொன்றையும் கண்டுபிடிக்க முடியுமானால் அது வளங்களை நல்ல முறையிற் பயன்படுத்தமுடியுமென்று சில சீர்திருத்த வாதிகள் கூறுவர்[1]. தன் முயற்சியாலுண்டான தற்காலிகமான இலாபங்களைக் கண்டுபிடிக்கமுடியுமானால், அவர்கள்மீது அதிக வரி விதிக்கலாமெனச் சிலர் கூறக்கூடும். மூலதன வருமான விடயத்தில் தற்போதுள்ள சலுகையை மாற்றிச் சாதாரண வருமானத்தின் மீது அதிகவரிபோடாமல் எதிர்பாராத வருமானத்தில் வரிபோட வேண்டுமென்று சிலர் கருதலாம்.

### இலாபத்தில் வரி விதிப்பதாலுண்டாகும் விளைவு.

இலாபத்தின் மீது அதிகவரிவிதிப்பதை நீர் ஆட்சேபித்தாலும், இலாபங்கள் மீது வரிவிதித்தல் பெரிய பிரச்சினைகளை உண்டாக்கலாமென்பதை நீர் உணர்வீர். அத்தகைய சட்டங்கள் பொருளாதாரமுறையில் பல விளைவுகளை உண்டாக்கலாம். இந்தத் திசையில் எவ்வளவு தூரம் செல்லலாமென்பதை நிச்சயிக்கு முன்னர் இந்த விளைவுகளைக் கொஞ்சம் ஆராய்வோமா. நாலுவகையான இலாபங்கள் மீது வரிவிதிப்பதனாலுண்டாகும், சில விளைவுகளை ஆராய்வோம்.

1. ஒரு கம்டெனிக்கு மறைவான சில இலாபங்களுண்டென்று வைத்துக் கொள்வோம். அது வெளிப்படையான சில இலாபங்களைப் பங்குதாரர்க்குக் கொடுக்கிறது. மறைவான இலாபங்கள் மீது அதிக வரிவிதிக்கிறோம். இதனால் வரும் விளைவுகளென்ன ? இதற்கு விடைதருவதற்கு

[1]. செயற்கை அருந்தல் எங்கே உண்டோ அங்கெல்லாம் வளத்தை விரும்பியபடி பயன்படுத்தும் முறை சீர் கெடுகிறது. அதிற் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல வருமானத்தையும் கொடுக்கும். ஆனால் எப்போதும் அது உண்டாகாது. உதாரணமாக நிறைவில் போட்டியில், அல்லது ஏகபோக உரிமைப்போட்டியில் பலவாடகைக்காரர்களும், பலசரக்கு மாளிகைகளும் இருக்கலாம். ஒவ்வோர் உடைமையாளருக்கும் சரிந்த தேவைக்கோடு இருக்கலாம். இறுதி நிலைச் செலவுக்கு அதிகமான விலைபோடப்படலாம், இருந்தும் பல நிறைவில் போட்டியாளர் நிறைபோட்டியில் இருப்பதிலும் அதிகவருமானத்தைப் பெறமுடியாதிருக்கலாம். குறைவுகளை நீக்கி சட்டவிரோதமான செயற்கை அருந்தல்களை நீக்கினால் உற்பத்திக்கோலம் திருந்தலாம். அதனால், வருமானப் பங்கீடு பாதிக்கப்படலாம் ; பாதிக்கப்படாதுமிருக்கலாம்.

(படம் 4, பக்கம் 727 பார்க்க)

www.padippakam.com



நாம் வெறுமனே சிந்திக்க வேண்டியதில்லை. அமெரிக்கக் கம்பெனி வருமானவரி அப்படியானதாகும்.

ஸ்டான்டர்ட் என்ணெய்க் கம்பெனி பங்குதாரரின் முதலினால் கிடைக்கும ஒவ்வொரு டொலர் வருமானத்திலும் பாதியை வரியாக அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும். கடன் பத்திரங்கள் மூலம் உண்டாக்கும் முதல் சம்பந்தமாக அது கூட்டுவரி கொடுக்கவேண்டியதில்லை. (அதாவது கம் பெனி வரிக்குட்பட்ட வருமானத்தில், கடன் பத்திர வட்டியைக் கழித்துக் கொள்ளலாம். ஆனால் பங்குலாபமாகவோ, கொடுக்காத பங்குலாபமா கவோ உள்ளவற்றிலிருந்து ஒன்றையும் கழிக்கமுடியாது.) இதன் விளைவு என்ன ? கடன்பத்திரப் பணம், பங்குப் பணம் என்பவற்றிடையே பேதம் பாராட்டா திருக்குமானால், அது தனது மூலதனவருமானம் வெளிப்படை யானது மறைவானதல்ல என்பதைக் காட்டக் கடன் பத்திரங்களிற் தங்கி யிருக்க வேண்டும். (வாசகர் பின் வரும் பிரச்சினையை ஆராயலாம். எனது வீட்டுக்கு மை பூச நாம் ஒருவாரம் வேலைக்குப் போகாதிருந்தால் நான் வெளிப்படைச் சம்பளத்திலில்லாது உள்ளடங்கிய சம்பளம் பெறுகிறேன். பிந்தியதற்கு வருமானவரியில்லை. நமது வரியமைப்பிலுள்ள இந்த அமி சத்துக்கு என்ன தன்மையைக் கற்பிப்பீர்.).

இலாபத்துக்கு எதிராகக் கருமமாற்ற வேண்டுமென்று நினைத்து மறை முகமான இலாபங்கள் மீது வரிவிதிக்கப்படுமானால், இது மக்களுடைய தீர்மானங்களை மாற்றிவிடுமென்பதை நீர் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இது சில சமயம் அவர்களுடைய தீர்மானங்களை உருக்குலைக் கவுங்கூடும்.

**2.** புதிய முயற்சி துவங்குவோரின் இலாபங்கள்மீது வரி விதித்தல், பற்றிய விடயம் தெளிவானது. ஓய்வு பெற்ற இத்தகைய முயற்சியாளரின் வருமானத்தின்மீது வரி விதிப்பதால் குலைவு உண்டாகாது. ஆனால் இளம் முயற்சியாளரை மறந்துவிடக்கூடாது. அவர் தமது புதிய கருத்துக் களால் நல்ல இலாபம் பெறும் யோசனை உடையவராயிருப்பார். அவர் சிவில் சேவை உத்தியோகத்தை விரும்பலாம். அல்லது வங்கியிலே பதின் மூன்றாவது உப தலைவராயிருக்க விரும்பலாம். புது முறைகண்ட பழைய ஒருவரின் வருமானத்தின் மீது வரி விதித்தால், அது வருங்காலத்திலே புதிய முயற்சியில் புதிய கருத்துக்களோடு இறங்கவிருப்பவர்களைப் பாதிக் கும்.[1]

**3.** வாடிக்கையான கருமங்கள் விடயத்தில் அதிக வரி விதிக்காமல், ஆபத்து நிறைந்த முயற்சிகள் விடயத்திலே அதிக வரிவிதித்தால், நியாய

[1] இது ஆக்க உரிமை விடயத்தில் ஓரளவு பாதுகாப்பளிக்கிறது. சமூகம் ஒருவனுக்கு இவ் வகையில் ஏகபோக உரிமையளிக்கிறது. இதனால் அவன் செயற்கை முறையிலே சில பொருள் களுக்கு அரைகுறையான அருந்தலுண்டாக்குகிறான். நூற்றுக்கு நூறுவீதம் அருந்தலாக இருக்கும் பொருள்களை அந்த நிலையிலிருக்கவிடாமல் ஒருவனுக்கு ஏகபோக உரிமையைத் தற்காலிகமாக வழங்குவது அவனுக்குத் தூண்டுதலையுண்டாக்குமெனச் சமூகம் நினைக்கிறது.

www.padippakam.com



மான ஒருவர் என்ன நடக்குமென எதிர்பார்க்கலாம். சாதாரணமாக ஆபத்து நிறைந்த முயற்சிகளில் மக்கள் முயலாமல், வாடிக்கையான விடயங்களிலேயே முயல்வர். ஆனல் புதிய முயற்சிகளில் மக்கள் ஈடு படுவது வறியவர்க்கும் செல்வருக்கும் பயனுடையதே. விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களும், தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்களுமே, எமது பொருளா தார வளர்ச்சிக்கு அடிப்படை. அத்துடன் புதிய முயற்சிகளைத் துவக்கு வதால், வியாபார மந்தம், வேலையின்மை என்பனவும் நீங்குகின்றன.

புதுமுயற்சியில் முதலீடு செய்வோரை நமது தற்போதைய வருமான முறை சோர்வடையச் செய்கிறது. ஒருவருடத்துக்கு மேற்பட்ட வருமானத் தைச் சராசரி பார்த்து வரி விதிப்பதால் வருமானவரி முறை திருந்துகிற தென்பது உண்மையே. ஆனல் மேலும் பல திருத்தங்கள் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் அரசாங்கம் இலாபமடைகிறது ; முயற்சியாளர் நட்டமடைவர். எனக்கு வரும் இலாபத்துக்கு ஈடாக முயற்சியில் உண்டாகும் நிச்சயமின்மையை முற்றுய்ச் சமன்படுத்திக் கொள்ளமுடியாது. அத் துடன் இலாபத்தின் மீதும் வரி போட்டால், புது முதலீடுகள் விடயத்தில் ஏற்படும் கெடுதிகள் அதிகரிக்கும்.

ஆனல் இப்போது மூலதன வருமானங்கள் மீது இலேசான வரியே விதிக்கப்படுகிறது. அதனல் தனிப்பட்டவர் வருமானத்தின்மீதும், கூட்டு வருமானத்தின்மீதும் போடப்படும் சாதாரண வருமானவரி, ஆபத்தான முயற்சிகளில் ஈடுபடுவதற்குச் சலுகை கொடுப்பதில்லையென நாம் கொண்ட முடிவு, பெரிதும் மாற்றவேண்டியதாகும். முதலீடு செய்வோர், விசேட மாக உயர்வருமானங்களில் முதலீடு செய்வோர், ஆபத்து நிறைந்த, முதலீடுகளையே விரும்புவர் என்பது வரி நிபுணர்கள் அறிந்த விடயம். இந்த ஆபத்து நிறைந்த முதலீடுகளிற் சில, எண்ணெய் அகழ்தல் பொதுப் பங்குகளை வாங்குதல், ஆக்க உரிமை முதலியனவாகும். ஏனெனில் இவற்றல் வரும் இலாபங்களுக்கு அரைவாசியிலும் குறைவான வரியேயுண்டு. செலவுகளையும் பெரிய வரியிடும் வருமானத்திற்கு ஈடாகக் கணக்கிற்போட்டு விடலாம்.[1] இத்தகைய மூலதனலாப வரி முறையிலுள்ள குறைபாடுகள் இன்று பலராலும் பயன்படுத்தப்படுகிறது.[2] எமது தற்கால வரிமுறை புதிய முயற்சிகளில் ஈடுபடுவோரைத் தண்டிப்பதற்குப் பதிலாக

[1] சினிமா நடிகர் ஒருவர் எண்ணெய் முயற்சியிலீடுபடுவதற்காக வங்கியிலிருந்து பணம் கடனெடுப்பார். டொலருக்கு 91 சதவீதம் அதற்கு வட்டியை அரசாங்கம் கொடுக்குமென்பது அவருக்குத் தெரியும். இது வரி சேமிப்பாலுண்டாவது. மறைமுகமான செலவுவகையையும் அவ்வாறு கழித்துவிடலாமென்பது அவருக்குத் தெரியும். எண்ணெய் கிடைத்தவுடன் அதைவிற்று 25 சதவீத நெடுந்தவணை மூலதனலாப வரியைக் கொடுப்பார். அல்லது எண் ணெய்க் கிணற்றுக் கணக்கில் எண்ணெய்த் தேய்வுப்படியென்ற முறையில் 27½ சதவீதம் வரியில்லாத படியை அவர் சேர்த்துக்கொள்ளலாம்.

[2] தாம் ஆராச்சி செய்த தனவந்தர்கள் வரிகளைச் சராசரி 50 சதவீதம் குறைத்து வைக்க முயன்றனர் என்றும் இந்த வரிகளாற் சிலர் புதிய முயற்சிகளில் ஈடுபட்டனர் என்றும் 1953 இல் ஹார்வாட்டி லுள்ள வியாபார ஆராய்சிக் கழகம் ஒன்று குறிப்பிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



பொருத்தமற்றமுறையிலே அவர்களைத் தூண்டுகிறது ; அதனால் அவர்கள் அத்துறையில் அதிகம் ஈடுபடுகிறார்கள் எனச் சிலர் வாதிக்கின்றனர். முன்னேற்றமடைய வேண்டுமானால் ஆபத்து நிறைந்த முயற்சிகளில் அதிகம் ஈடுபடக்கூடாது ; முதலாளித்துவம் வரி முறையிலுள்ள குறைபாடுகளைப் பயன்படுத்தி இலாபமடைகிறதெனச் சிலர் கூறுவர். இது விவாதத்துக்குரிய விடயமாதலால் இலேசானவிடைகளை இதற்குத் தரமுடியாது.

4. ஏகபோக உரிமையால் வரும் இலாபங்கள் மீது வரிவிதிப்பதால் நீங்கள் திரமான நிலையிலிருக்கிறீர்களென நினைக்கலாம். ஆனால் ஒரு கம்பெனியின் இலாபங்களில் எத்தனை பங்கு இத்தகைய செயற்கை அருந்தல்களிற் தங்கியிருக்கிறதென்று எவ்வாறு நிச்சயிப்பது ? 1920 ஆம் ஆண்டிலே அமெரிக்க விஸ்கோஸ் கம்பெனி செயற்கைப்பட்டு உற்பத்தியிலீடுபட்டுத் தனது மூலதனத்தில் 156 சதவீத இலாபம் பெற்றது. இத்தகைய சந்தர்ப்பங்களை ஒரு வேளை ஏகபோக உரிமை இலாபங்களென நீதிமன்றம் கருதலாம் ; அவ்வாறு கருதாமலும் விடலாம். ஆனால் இத்தகைய சாதாரண சந்தர்ப்பங்கள் விதிவிலக்குகள். ஏனெனில் செயற்கை அருந்தலினாலுண்டாகும் வருமானம் எல்லாச் சாதனங்களின் வருமானங்களோடுங் கலந்திருக்கிறது. ஏகபோக உரிமை இலாபங்கள் ஏற்கனவே மூலதனத்திற் சேர்க்கப்பட்டிருக்கலாம் ; அவை வட்டி வடிவத்தில் தோன்றலாம். அல்லது உயர் சம்பள வடிவத்திற் தோன்றலாம்.

ஏகபோக உரிமையை நீக்குவதானால் வரும் இலாபத்தை 15 ஆம் லூயியும் ஏனைச் சர்வாதிகளும் உப்புவரி, தீப்பெட்டி வரி, விடயத்திற் செய்தது போல அரசாங்கம் அபகரித்துக் கொள்ளக்கூடாது. ஒரு சாதனம் இயற்கையாகவே அருந்தலற்றதாயிருந்தால் பின்னர் அதை ஏன் செயற்கையாக அருந்தலுடையதாக்கவேண்டும். சட்டவிரோதமான ஏகபோக உரிமையை அரசாங்கம் கண்டுபிடித்தால் அதை நீதிமன்றம் மூலமோ, பொது சனப்பயனுடைமைச் சட்டத்தின் மூலமோ பைசல் செய்யலாம், அளவுக்கு மிஞ்சிய ஏகபோக உரிமை லாபம் இருக்கும் பட்சத்தில் அதை நீக்கவேண்டுமானால் விலைகளை இறக்கலாம். அதுவே நல்ல கொள்கை. அதைவிட்டுவிட்டு அந்த இலாபத்தை அரசாங்கம் வரி மூலம் அபகரிக்கக் கூடாது.

**ஊக்கம், மேலதிகம், சமநிலை : இலாபம் மேலதிகமாயிருக்கவேண்டியதில்லை**

தனவந்தர் மீது அதிக வரியும் ஏழைகள் மீது குறைந்தவரியும்போடும் நடவடிக்கைகளை வாக்காளர் பெரிதும் விரும்புவர். இதனால் வருமானத்திலுள்ள உயர்வு தாழ்வு குறைக்கப்படும்.

வாக்காளர் அரசாங்க அரசியலமைப்புக்குள்ளே அமைந்ததொரு ஒழுக்கமான நல்வாழ்வையே விரும்புவர். இப்போதிருப்பதிலும்பார்க்கச் சமமான வருமானப் பங்கீட்டினாலுண்டாகக் கூடிய ஒழுக்கச் சார்பான நயங்களெவையென்று ஆராயுமிடத்து, துணிவு, முயற்சி, சிக்கனம் என்பவற்றின்

www.padippakam.com



பயனாக உண்டாகும் விளைவுகளையும் பொதுமக்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

இலாபம் என்று சொன்னவுடனே மக்கள் எதிர்ப்புக் காட்டுவதற்கு ஒரு காரணம் இலாபம் பற்றி அவர்கள் மனத்திலே ஐந்தாவதானதொரு போலிவரைவிலக்கணமிருப்பதே. இலாபமென்பது உற்பத்திச் சாதனங்களின் வருமானமாயுள்ள அவசியமற்ற மேலதிக வருவாயென்பதே அந்த வரைவிலக்கணம். நெகிழ்ச்சியற்ற சப்ளையாகவுள்ள நிலம் போன்ற ஒரு சாதனத்தினுல் கிடைக்கும் வருமானம் இருப்பதை நோக்குமிடத்து சில சமயம் வரிக்குட்பட்ட (வரிவிதிக்கக்கூடிய) மேலதிக வருமானம் நிகழ்வதுண்டென்பது வெளியாகிறது. எந்த ஓர் உற்பத்திச் சாதனத்தை ஆராய்ந்தாலும் கடைசி அலகை, அல்லது இறுதி நிலை அலகைச் சேர்த்துக்கொள்வதற்காக விலைகளை உயர்த்திஞல், அதுவரை பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் எல்லாவற்றுக்கும் கூடிய மேலதிகத்தை உண்டாக்கவே தெண்டிக்கிறீர்கள்.[1] (முதலாவது மகாயுத்தத்திலே அரசாங்கம் செம்பின் விலையை உயர்த்தவே திறமையற்ற சுரங்கங்கள் வேலையைத் துவங்கின. இதனுல் திறமையுள்ள சுரங்கங்கள் நல்ல இலாபத்தையீட்டின.)

ஒவ்வொரு சாதன வருமானத்திலும் (1) மேலதிக வருமானம், (2) ஊக்க வருமானம் என இரண்டு அமிசங்கள் உண்டு. 100 பில்லியன் டொலர்வரிக்குரிய மேலதிக வருமானமென்றும் 400 பில்லியன் டொலர் ஊக்கவருமானமென்றும் 500 பில்லியன் டொலர் தேசிய வருமானத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்க முடியாது. இரண்டும் ஒன்றேடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சாதனத்தையும், தனித்தனியாகப் பிரித்து ஆராய்ந்து ஒவ்வொரு பொருள் அலகுக்கும் வெவ்வேறு விலை போட்டாலன்றி (இது இரண்டாவது மகாயுத்தத்தின்போது செம்புத் தொழிலிலே ஓ. பி. ஓ. யினுற் செய்யப்பட்டது) ஊக்க வருமானத்துக்கு ஊறு விளைவிக்காமல் மேலதிக வருமானத்தைப் பிரித்துக் காண முடியாதிருக்கும்.

இலாபம் என்பது மேலதிக வருமானம் என்ற ஐந்தாவது கருத்தைச் சாவதானமாகவே ஆராயவேண்டும்.

### இலாபம் பற்றிய உபதேசம். என்ன, எப்படி, யாருக்கு என்பன :

சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினையான என்ன, எப்படி, யாருக்கு என்பவற்றை விலை அமைப்பு எவ்வாறு தீர்த்துவைக்கிறதென்பதை மூன்றும் அத்தியாயத்திலே ஆராய்ந்தோம். போட்டிச் சந்தைவிலையை நிச்சயிக்கும் தேவை சப்ளை என்பவை பற்றி மூன்றும் பாகத்திலே படித்தோம். போட்டி சம்பந்தமான ஏகபோக உரிமைக்குறைபாடுகளின் முக்கியமான விளைவுகளையும் ஆராய்ந்தோம்.

[1] அல்பிரட் மாஷல் இதனை "உற்பத்தியாளர் மேலதிகம்" என்பர். இது 21 ஆம் அத்தியாயத்திலே காட்டப்பட்ட "நுகர்வோர் மேலதிகம்" போன்றது.

படிப்பகம்

www.padippakam.com



விலை அமைப்பு, வருமானப் பங்கீட்டை எவ்வாறு நிச்சயிக்கிறதென்ற விடயம் நாலாம் பகுதியின் கடைசி அத்தியாயமான இலாபம் பற்றிய அத்தியாயம் ஆராய்கிறது. சாதனவிலையீடு சமூகத்தின் எப்படி, யாருக்கு என்பவற்றை நிச்சயிக்கிறது. (என்ன பொருளை நுகர்வோர் நுகர்கிருரோ அதன் செலவையும் நிச்சயிக்கிறது.) விலையிடும் முறையில் உள்ள இலாப நட்டம் என்பனபற்றிச் சுருக்கமாகக் கூறலாம். அனுபந்தத்திலே விரிவாக விடயம் காட்டப்பட்டது. இங்கே முக்கியமானவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஒவ்வொருவரும் தமது நன்மையையே கருதுவர். தொழிலாளர் தமக்கு உயர்ந்த சம்பளத்தை விரும்புவர். நிலச் சொந்தக்காரர் உயர்ந்த வாடகையை விரும்புவர் ; முதலாளிமார் உயர்ந்த வட்டியை விரும்புவர் ; இந்தச் சாதனங்களின் வருமானங்களிற் சில மறைந்த வருமானமாயிருக்கும். வேறு சில தன்னூக்கத்திஞலோ, நிச்சயமில்லாத தன்மையாலோ உண்டாவன. ஆனபடியால் இவற்றை இலாபம் எனலாம்.

2. பொதுப்படையான கருத்துப்படி இலாபந்–தேடல் என்பது தன்னலங் கருதலே. இவையெல்லாம் போட்டி பூசலைத்தானுண்டாக்குமா ? பூரண மான தடைகளும், முட்டுக்களுமிருக்குமாஞல் அவ்வாறு நிகழாது. போட்டி நிறைபோட்டியாஞல் இந்தத் தடைகளும் முட்டுக்களும் பூரணமா யிருக்கும். போட்டி நிறைபோட்டியாயில்லாவிட்டால் அவை நிறைவற்றன வாயிருக்கும்.

3. போட்டி நிறைபோட்டியாயிருந்தால் அங்கே ஓர் ஒழுங்கு இருக்கும். திறமைகாட்டும் ஒரு திட்டமிருக்கும். ஆஞல் இலட்சிய உலகம் உண்டாகாது. வறியவர் செல்வராகவும், செல்வர் குறைந்த தனத்தையுடையவராகவும் இருக்க மாட்டார். சோம்பேறிகள் குறைந்த வருமானத்தையே பெறுவர். ஆர்வமுள்ளவர்கள் கூட மந்த புத்தியும் துணிவுமில்லாத பட்சத்தில் குறைந்த வருமானத்தையே பெறுவர். சுறுசுறுப்புள்ளவர் நல்ல வருமானத்தைப் பெறுவர். விவேகமும். பிறர் நலமும் விரும்புவோர் கூடக் குறைந்த வருமானத்தையே பெறுவர். நல்ல திட்டமும் முயற்சியும் உள்ள தந்தையர்க்குப் பிறந்த பெண்கள் நல்ல வருமானத்தைப் பெறுவர். நல்ல திடமும் உற்சாகமுமுள்ள தந்தையர்க்குப் பிறந்த பெண்கள் மந்த புத்தியுள்ளவராஞலும் நல்ல வருமானத்தைப் பெறுவர். ஐந்து வயது துவக்கம் 20 வயது வரையும் அல்லது 5 வயது துவக்கம் 12 வயது வரையும் கல்வி பெற்றவர்கள், அவ்வாறு கல்விபெருதவரைக் காட்டி லும் நல்ல வருமானம் பெறுவர். இவ்வாறே சொல்லிக்கொண்டு போக லாம்.

4. யாருக்கு என்ற அமைப்பில் ஒரு சனநாயகம் அதிருப்தி கொள்ளு மாஞல் அது தலையிடாக் கொள்கையினுலுண்டானது. அது வரிமாற்றம், பாடசாலைச் செலவு, வேறு செலவுகள் சட்டங்கள், உபகாரப் படிகள் என்பவற்றைப் புகுத்தி இந்த அமைப்பை மாற்றப் பார்க்கும். இதஞல் சில வருமானங்களுக்கு நன்மையுண்டு. வேறு சிலவற்றுக்குத் தீமையுண்டு.

www.padippakam.com



இவ்வாறு வருமானத்தை மாற்றிப் புனர்ப் பங்கீடு செய்வது செலவுக் குரிய காரியம். என்ன செலவு ? ஒருவனிடம் ஊக்கத் தூண்டலைச் சீர் குலைக்கிறது. அது செலவுத்தானமாகும். மிக்க திறமையுள்ள சந்தைத் திட்டத்தின் திறமையை அது சீர் குலைக்கிறது. அதுவுஞ் செலவுத் தானம், மேலும் வரிகளை வசூல் செய்வதும் மாற்றுவதும் செலவுத்தானம்.

5. நடவடிக்கை முயற்சி என்பவற்றின் அறிகுறியே இலாபநட்டங்கள். சமூகத்திலுள்ளவர்கள் விரும்பும் பொருள்களை ஒருவர் உற்பத்தி செய் தால் அவருடைய சம்பளம் அல்லது இலாபம் உயரும். எனவே அவர் அந்தத் தொழிலைச் செய்துகொண்டேயிருப்பார். மேலதிகமாகச் செய்தால் நட்டப்படுவார். அல்லது அவரிலும் சிறந்த வியாபாரி ஒருவர் தோன்றினு லும் நட்டமுண்டாகும். அதற்கு அவர் பொறுப்பாளியல்லர். எனவே அவர் அந்தத் தொழிலேவிட்டுவிட்டு வேறென்றைப் பார்ப்பார்.

பூரண அறிவு இல்லாத சமயத்திலே ஒருவன் ஊகித்துச் சில விடயங்களைச் செய்து பணம் சம்பாதிப்பான். கான்சாஸில் கோதுமை அருந்தல் என்று கண்டால் அங்கே கோதுமையை அனுப்புவான்; அல்லது அங்கே கோது மையைச் சாகுபடி செய்வான்; அல்லது கோதுமை அருந்தலாகுமென்பது பற்றி வர்த்தக சபையில் பந்தயம் பிடிப்பான்; இதனுல் சிலர் கோது மையை அதிகமாகச் சாகுபடி செய்யத் தூண்டப்படுவர். அல்லது குறைவாகச் சாப்பிட்டுக் கோதுமையை ஏற்றுமதி செய்யச் செய்வர்.

சுதந்திரமான விலே அமைப்பிலே ஒவ்வொருவரும் தனது சொந்தத் தூண்டலின் பிரகாரம் புதியதொரு பொருளையோ, உற்பத்திமுறையையோ உண்டாக்குவார். எதிர்காலம்பற்றிய அவருடைய ஊகம் பிழையானுல் அவர் நட்டமடைவார்: அவரை நம்பிய மற்றவர் கதியும் அதுதான்; அதாவது அவரை நம்பித் தமது பழைய வேலையைக் கைவிட்ட தொழி லாளர், முதலாளிகள், முதலியோர் ஆவர். அவருடைய ஊகம் சரியானுல் அவருக்குப் பணம் வந்து குவியும்; அவருடன் போட்டியிட்டவர் ஓட்டாண்டி யாவார். சுதந்திரமான போட்டிநிலேயிலே ஒன்றில் ஆழ்ந்து செய்யப்படும் கருமம் நெருக்கப்பட்டு மாற்றப்படலாம். இலாபமும், சாதனங்களால் கிடைக் கும் உயர்ந்த வருவாயுமே முயற்சியாளருக்குத் தூண்டுதல் உதவுகின்றன. நட்டம் என்பது நமக்குக் கிடைக்கும் குற்றத் தண்டனை. பொருளை உற்பத்தி செய்வதிலும், விற்பதிலும், முன்னேறியே கருமங்களை யோசித்து அறிவ திலும் திறமையுடையவர்க்கே இலாபம் கிடைக்கும். பலபடி வெற்றிமாலை சூடியவர்கள் வசம் புதிய முயற்சிகளின் தலைமையைச் சமூகம் இலாபத்தின் மூலம் வழங்குகிறது.

இந்தக் கடைசிக் கருத்தைவிளக்குவதானுல் ஒரு முகாமை அதிகாரமுள்ள ஒரு சபையைக் கற்பனை செய்யுங்கள். புதிய முயற்சிகளைத் தொடங்கு வோர்க்கு அது பண உதவி செய்கிறதெனவைத்துக்கொள்வோம். கடந்த 5 முறை அவர் தமது முயற்சிகளில் வெற்றியீட்டியிருந்தால், அவருடைய விண்ணப்பத்துக்குச் சபை ஆதரவாயிருக்கும். உயர்ந்த தூண்டுதல் பண

www.padippakam.com



புள்ள ஒருவர் ஈட்டிய இலாபங்கள் எதிர்காலத்திலே அவர் துவங்க இருக்கும் முயற்சியிலும் பயன் தரக்கூடியதாயிருக்கும். (ஆனால் வாழ்க்கையிலே எவ்வாறு ஒருவர் ஆதியில் பிறர் உதவியைப் பெறலாம். சபைவிடயத்திலும் இது உண்மை.) இலாபங்கள் பழைய வெற்றிகளையே காட்டும். அது எதிர் காலத்துக்கு வழிகாட்டி ; புதிய முயற்சிக்கு அது ஆதாரம்.

6. தனக்கோ பிறர்க்கோ பயன்படக்கூடிய கருமங்களைச் செய்தே ஒருவன் நிறைபோட்டியில் முன்னேறலாம். அவன் பொய் சொல்லிக் காசு பிழைக்கமுடியாது ; அல்லது போலி விளம்பரங்களைச் செய்து பிழைக்க முடியாது. இறுதிநிலை வருவாயையும், இறுதி நிலைச் செலவையும் சமன்படுத்த அவன் உற்பத்தியைக் குறைக்கமாட்டான். (MR = MC) விலை அமைப்பு நூற்றுக்கு நூறு திறமையுடையதாயிருப்பதற்காக இலட்சியவாதி செய்வதுபோலவே அவனுஞ் செய்வான். ஏனெனில் அவனிடம் சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் சக்தி கிடையாது. அதாவது அவன் விலையை இறுதி நிலைச் செலவோடு சமன் படுத்துவான். (P = MC) செயற்கை அருந்தல் மூலம் அவன் தனியுரிமை இலாபத்தைப் பெறமுடியாது. ஏனெனில் பூரணப் போட்டியிலே தனியுரிமை கிடையாது.

ஒரு விலையமைப்புச் செயல்முறைப்படும்போது இலட்சியத்தன்மையுடையதாயிருந்தால் எவரும் பயன்கிடையாத வேலை செய்ய மாட்டார்கள். எவரும் ஆராய்ச்சியிலீடுபட மாட்டார்கள். ஏனெனில் அதற்குச் செலவான பணம் திரும்பக் கிடைக்காதபடியினால், ஒரு கருமத்தோடு சம்பந்தப்பட்ட "வெளி" நன்மைகளோ சரியாகக் கணக்கிலெடுக்கப்படும். ஒவ்வொருவனும் தனக்குரிய நன்மையை உச்ச நிலைப்படுத்தினால், பூரண விலையமைப்பிலுள்ள தடைகளும், சமன்படுத்தும் உபாயங்களும், எல்லாருடைய நன்மைகளும் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்யும்.

7. நிறை போட்டியென்பது எங்காவது செயல்முறைப்படுத்தப்படவில்லை என்று சொல்லுவது தவறு என்பதை மேலே கூறிய குறிப்புக்கள் காட்டும். அதை எப்போதாவது பரீட்சிக்க முடியுமா ? நிறைபோட்டியை உண்டாக்க முடியுமா ? தனியுரிமையை விடுங்கள். "வெளிப்பயன்களை" நீக்கமுடியுமா ?

எவரும் நிறைபோட்டியை ஏற்படுத்த முடியாது. தற்போதுள்ள நிலைமை நிறைபோட்டி நிலையென்றுங் கூறமுடியாது. அரசாங்கம் தலையிடா நிலைமையோடும் அதை ஒப்பிட்டுக் கூறமுடியாது. அரசாங்கம் (அ) தனியுரிமைக்குறைபாட்டை நீக்கி (ஆ) அரைகுறை அறிவை அதிகரித்து, (இ) சமூக நன்மை செலவு என்பவற்றின் முழுத் தன்மையையும் தனிப்பட்டோர் நன்மை செலவு என்பவற்றோடு நெருங்கிய சம்பந்தமுடையதாய்ச் செய்துவிட எவ்வளவுக்கு எத்தனிக்கிறதோ அந்த அளவுக்கு அரசாங்கம் ஆக்க முயற்சியில் ஈடுபடுகிறதெனலாம். இத்தகைய செய்கைகளெல்லாம் செலவுத் தானத்துக்காளானவை. ஆனபடியால் அரசாங்கம் மாறும்போதும், பழைய கொள்கைகளை அனுசரிக்கும்போதும் இவை நன்கு ஆராயப்படவேண்டியவை.

www.padippakam.com



விலை சம்பந்தமான உபதேசம் முடிந்தது. நாமிருக்கும் உலகின் பிரத்தியட்சநிலையை வைத்துப் பார்க்குமிடத்து இக்காலப் பொருளாதாரம் என் கலப்புப் பொருளாதாரமாயிருக்கவேண்டுமென்பதை பொருளியலறிஞர் உணர்வர். சமூகத்தின் என்ன, எப்படி யாருக்கு என்ற பிரச்சினைகளின் பாரத்தை போட்டி விலையே பெரும்பாலும் தாங்கிக் கொள்ளவேண்டும். ஆனால் அதைப் போட்டி நிலையில் வைத்திருப்பதற்கும், தனிப்பட்டோரின் தன்முயற்சி பொது நன்மைக்கேற்ற முயற்சியிலீடுபடுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கும், ஆக்கமுள்ள பொதுக் கொள்கைகள் தேவை.

**சுருக்கம்.**

1. இலாபமென்பது நானுவிதப்பட்ட விடயங்களடங்கிய ஒரு பொருள். தேசீய வருமானப்புள்ளி விபரங்களிலே கூட்டு வருமானமும், கம்பெனியல்லாத வகையில் கிடைக்கும் வருமானமும் சேர்ந்திருக்கும். ஆனால் பொருளியல் வகையில் நாலு வகையான இலாபங்களைக் குறிப்பிடலாம்.

2. ஒரு தொழிலின் சொந்தக்காரர் உதவும் சாதனங்களுக்கான சம்பளம், வாடகை, வட்டி, என்பவற்றின் தொகுப்பிலே இலாபம் மறைந்துள்ளது.

3. துணிந்து முயலும் ஒருவருக்குத் தற்காலிகமாகக் கிடைக்கும் உயர்ந்த வருவாயே இலாபம் எனப் பல பொருளியலாளர் கருதுவர். மாமூலான நிர்வாகிகள் பெறுவது சம்பளம். ஆனால் துணிந்து முயல்வோருக்குக் கிடைப்பதே இலாபம் என அவர் கூறுவர்.

4. வாழ்க்கையிலே நிச்சயமின்மை எங்குமுண்டு. இது துணிந்து முயல்வதைச் சாத்தியமாக்குகிறது. அது சாதனங்கள் எதிர்பார்க்கும் வருவாக்கும் அவை உண்மையில் ஈட்டும் வருமானத்திற்குமிடையே நேர்க்கணியமான வேறுபாடுகளையும் எதிர்க்கணியமான வேறுபாடுகளையும் உண்டாக்கும். நிச்சயமற்ற தன்மைகளால் உண்டாக்கப்பட்ட, முன் கூட்டியே காண முடியாத வேறுபாடுகளே இலாப நட்டங்கள் என நைட் முதலிய பொருளியலறிஞர் வரைவிலக்கணங் கூறுவர். வீசகணித மயமான மொத்தம் நேர்க்கணியமோ எதிர்க்கணியமோ, என்பது அதிட்டத்திலே தங்கியுள்ளது. அத்துடன் பதில் கூறமுடியாத பின்வரும் கேள்வியிலும் தங்கியுள்ளது. மக்கள் பெரும்பாலும் நன்மை காணும் இயல்புடையவராயிருக்கிறார்களா ? அப்படியானல், பல ஆபத்துக்களை ஏற்கத் துணிவு கொள்வாரா ? அவர்கள் தோல்வி மனப்பான்மையுடைய அபாயத்தைத் தவிர்க்க விரும்புவாரா ? அவர்களிடத்து ஆபத்தைத்தாங்கும் துணிச்சல் குறைவாயிருப்பதால் திட்டமான இலாபம் கிடைத்தாலொழிய ஒரு தொழிலில் துணியமாட்டாரா ?

5. இலாபம் பற்றிய மற்றொருவரைவிலக்கணம் தனியுரிமை நிலையின் பயனுக உண்டாகும் வருவாய் என்பது. இதே கருத்து வேறொரு வகையிலும் வருணிக்கப்படும். அதாவது "செயற்கை அருந்தல்" காரணமாக உண்டாகும் வருவாயின் ஒரு பகுதி என்பது.

படிப்பகம்

www.padippakam.com



6. இந்தவகையான இலாபங்கள் மீது வரிவிதிப்பதால் திட்டமான விளைவுகள் உண்டாகும். அவற்றில் சில எந்தக்கருத்திலும் விரும்பத் தகாதவை. இலாபம்பற்றி ஐந்தாவது வரைவிலக்கணமுமொன்றுண்டு. இலாபமானது ஒருவனுடைய துணிந்து முயலும் ஆற்றலுக்கான தூண்டற் கொடுப்பனவு அன்று, அது கண்டுபிடிக்க முடியாததும் வரிவிதிக்கத் தக்கதுமானதொரு மேலதிக வருமானமென்பது. இதுமிக இலேசாக்கப்பட்ட வரைவிலக்கணம். அறஞ்சார்ந்த வருமானப்பங்கீடு அல்லது சமன்பாடு என்ற கொள்கையைப் பொதுமக்கள் அனுசரிக்க விரும்பினால், அதனால் மனிதனுடைய தூண்டலுக் குண்டாகும் கெடுதிகளையும் அவர்கள் ஆராய வேண்டும்.

7. இலாபம் ஈட்டல் அல்லது நன்மை பெறவிரும்புதல் பூரணமான விலை அமைப்பு நிலைமைகளில் திறமையாக எப்படிச் செய்தல் என்ற தத்துவத்தை உணரச் செய்யும். ஆரம்ப தசையில் தேவைப்படும். மூலதனம், திறமை, சந்தர்ப்பங்கள், என்பவற்றின் பங்கீடு அறமுறைப்படி வாய்ப்பானதாயமைந்தது, தொழில் நுட்பவாய்ப்பு சந்தை என்பன தனியுரிமையாயில்லாவிட்டால், பூரணப் போட்டியிலுள்ள பாதுகாப்புக்களால் சமூகத்தின் என்ன, எப்படி, யாருக்கென்ற தத்துவங்களுக்குச் சிறந்த தீர்வு காணலாம். கலப்புப் பொருளாதாரத்திலே, அரசாங்கம் தேவையான பாதுகாப்புக்களையும், நடுநிலைச் சமன்படுத்தல்களையும் வழங்குகிறது. அதன் பயனாக சமூக நன்மைகளையும் தனிப்பட்டோர் நன்மைகளையும் இணையச் செய்கிறது. அதாவது தனிப்பட்டவரின் துணிதல் முயற்சி தொழிற்படுவதற்கான சிறந்த சூழ்நிலையை உண்டாக்குகிறது.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்.**

1. தொக்கிநிற்கும் (மறைந்து) சாதன வருவாய்க்கு வரைவிலக்கணம் தருக. வேறுவகை இலாபக் கருத்துக்களோடு இதனை ஒப்பிடுக. (22 ஆம் அத்தியாயத்திற்குறிப்பிட்ட பொருத்தமான பகுதியை ஞாபகம் செய்க.)

2. துணிந்து முயல்தலுக்கு உதாரணந்தருக. அபாயந்தரும் முயற்சிகளிலீடுபடுதற்கு உதாரணந்தருக. வரிகள் இவற்றை எவ்வாறு பாதிக்கும்?

3. நிறைபோட்டியென்றாலென்ன? நிறைவில் போட்டியென்றால் என்ன? எல்லாராலும் கண்டுபிடிக்கக்கூடிய தனியுரிமை இலாபம் பற்றிக் குறிப்பிடுக. இயற்கை அருந்தல், செயற்கை அருந்தல் என்பவற்றைப் பிரிக்க முடியுமா? பிரித்தால் என்ன நடக்கும்?

4. உயர் வருமானங்கள் இலாபங்கள் என்பன மீது வரி விதித்தல் சம்பந்தமான அறச் சார்பான அமிசங்களையும், துணிவு முயற்சி, அமிசங்களையும் ஆராய்க. (உதாரணம் கூட்டு வருமானவரி கடன் பத்திரப் பணத்தை ஆதரிக்கிறது. என்?)

5. இலாபமீட்டல் அருவருப்பானது. அது திறமையுள்ளதாயிருந்தாலும்- அது அத்தகையதென்பதை நான் மறுக்கிறேன்–அதற்கு நான் எதிர்ப்புச்

www.padippakam.com



சொல்வேன். மத்தியகாலத் தரும முறை நல்லது. ஆனால் என்னைச் சந்தைவியாபாரத்தில் ஈடுபடவிடாதே" நீர் இக்கூற்றை ஒப்புக்கொள்ளுகிறீரா ?

6. "கடவுள், ஒருவனுக்குப் பலம், மூளை, உற்சாகம் என்பவற்றைக் கொடுத்தால் அதுவே போதும். அவனுக்கு வருமானத்தைக் குறைவாகக் கொடுக்கலாம். அதிகம் கொடுக்கவேண்டியதில்லை." இந்தக் கூற்றைப் பின்வரும் கூற்றோடு ஒப்பிடுக. "ஒவ்வொருவனுக்கும் அவனுடைய திறமைப் பிரகாரம் கொடு ; அவனுடைய இறுதி நிலை உற்பத்திப் பொருளின் படி கொடு."

7. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஆராய்க :

இலாபம் பற்றி அறிவிக்கப்பட்ட புள்ளிவிபரம்; தொக்கி நிற்கும் சாதன வருவாய், வெளிப்படைச்சாதன வருவாய் ; நிர்வாகச் சம்பளம் ; துணிந்து அபாயம் தாங்குவதற்கு ஏற்றவெகுமதி ; துணிந்து முயலல் ; நிச்சயமின்மை ; மூலதன இலாபம் ; சாதாரண வருமானம் ; பெரிய தொகைகளில் சம்பவமும், பிழை கணித்தலும் ; போட்டியிலுள்ள குறைபாடு ; தனியுரிமை ; இயற்கை அருந்தல், செயற்கை அருந்தல் ; வாடகையும் மேலதிக வருமானமும் ; தூண்டுதல்கள் ; ஆரம்பப் பணச் செறிவு ; ஒழுக்கப் பிரச்சினைகள் ; தனிப்பட்ட நன்மை, சமூக நன்மை செலவு என்பவை சம்பந்தமான வெளிப்பயன்களும், வேற்றுமைகளும்.

## அனுபந்தம். பொருள், சாதனம் என்பவற்றுக்கு விலையிடல் பற்றிய புனராய்வு ; பொதுச் சமநிலை ; இலட்சிய பூர்வமான பொதுநல விலையமைப்புப் பற்றிய நீதிக்கதை.

மூன்றும் நாலாம் பகுதிகளை முடித்துவிட்டோம். இனி விலையிடல் சம்பந்தமான இலட்சியபூர்வமான கதையை ஆராய்வோம்.

### விலையிடல் ஆராய்ச்சி.

1. ஒரே சந்தையிலே போட்டி மயமான சப்பிளையும் தேவையும் எவ்வாறு இருக்கின்றன (2) தேவைக் கோடுகள் மனிதனுடைய நொதுமல் விருப்பங்களையும் சார்பு இறுதி நிலைப்பயன்களையும் எவ்வாறு காட்டுகின்றன. (3) போட்டிச் சப்ளைக் கோடுகள் எவ்வாறு மொத்தச் செலவுகளையும் இறுதி நிலைச் செல்வுகளையும் அலகுச் செலவுகளையும் காட்டுகின்றன (4) சாதன விலைகளுக்கு ஏற்ற விகிதப்படி இறுதிநிலைப் பௌதிக உற்பத்திகள் அமையும் வரை கம்பெனி தன்மாட்டுத் தேவைப்பட்ட உள்ளீடுகளைக் குறைத்துக் கொள்ளும். அந்தவகையிலுள்ள செலவுக்கோடுகளில் சாதன உள்ளீடுகளோடு உற்பத்திகளைச் சம்பந்தப்படுத்தும் முறையில் நுண் தொழில் முறைப்போக்கு எவ்வாறு அமைந்திருக்கின்றது (5) எவ்வாறு இந்த இறுதி நிலைப்பிண்ட உற்பத்திகளும், இறுதிநிலை வருமானப் பொருள்களுமாகச் சேர்ந்து கூடிய தொகை எல்லாக் கம்பெனிகளுக்கும், சாதனங்களுக்கான

www.padippakam.com



தருவிக்கப்பட்ட தேவைகளைக் கொடுக்கின்றன. (6) வாடகை, சம்பளம், முதலிய சாதனவிலைகளை நிச்சயிக்க நிலம், தொழிலாளர், மூலதனப் பொருள் என்பவற்றுக்குரிய தருவிக்கப்பட்ட இத்தேவைகள், அவற்றின் சந்தைச் சப்பிளைகள் என்பவற்றின் பரஸ்பரம் எவ்வாறு பாதிக்கின்றன (7) போட்டி முறையில் இலாபந் தேடுவதும் நட்டந்தவிர்ப்பதும் எவ்வாறு தூண்டுதலாயிருக்கிறது. ஆனால் நிச்சயமில்லா நிலையும், துணிந்து முயல்வதால் ஏற்படும் மாற்றங்களுமில்லாத நிலையான சந்தர்ப்பங்களில் (மறைந்த சாதன வருவாய், நிர்வாகச் சம்பளம் தவிர) போட்டி இலாபங்கள் எவ்வாறு முரண்பாடாகப் பூச்சிய நிலையை அடையும் என்ற இன்னோரன்ன விடயங்களை மேலே கண்டோம்.

### ஒரே சமயத்தில் நிகழும் பரஸ்பர நிர்ணயம்.

மேலே கூறிய 7 படிகளைப் பார்க்க. ஒவ்வொன்றும் படிமுறையாகப் போகின்றது. (1), அதிலிருந்து (2), அதிலிருந்து (3), என்று (7) வரை வளர்கின்றது. பாடநூல் அத்தியாயங்களும் அவ்வாறே அமைந்துள்ளன. ஆனால் நிசவாழ்வில் எது முதலாக உண்டாகிறது? இவையெல்லாம் ஒரே சமயத்திலேயே உண்டாகின்றன. திங்கட்கிழமை தனிச் சந்தையில் விலைகள் நிச்சயிக்கப்பட்டு, செவ்வாய்க் கிழமை நுகர்வோர் தமது விருப்பங்களை மதிப்பிட்டு, புதன் கிழமை வியாபாரிகள் செலவுகளை மதிப்புப் போட்டு, வியாழக்கிழமை இறுதி நிலை உற்பத்திகளை நிச்சயிப்பதில்லை.


மேலும் இந்நிகழ்ச்சிகள் தனித்தனியாக நிகழ்வதில்லை, இவையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புள்ள ஒரே நேரத்தில் நிகழும் பெரிய நிகழ்ச்சிகள். சப்பிளை தேவை, செலவு, விருப்பத் தேர்வு, சாதன உற்பத்தி, சாதனத் தேவை என்பனவெல்லாம் ஒரே நேரத்தில் நடைபெறும் பரஸ்பரத் தொடர்புள்ள நிகழ்ச்சிகள்.

நூலின் மூன்றும் பாகத்தின் முதலாம் அத்தியாயத்தில் கோதுமைக்குக் கொடுக்கப்பட்ட சப்ளைகோடு, மூன்றும் பாகத்தின் இறுதியிற் கொடுக்கப்பட்டுள்ள செலவுமதிப்பீடுகளினதும், நாலாம் பாகத்தின் ஆரம்பத்திலே கொடுக்கப்பட்ட உற்பத்தி ஆராய்வுகளினதும், நாலாம் பாகத்தின் இறுதியிற் கொடுக்கப்பட்ட சம்பள நிர்ணயம், வட்டி, வாடகை நிர்ணயம் என்பவற்றினதும் விளைவாகும். இந்த ஏழுபடிகளில் ஏதாவதொன்றை உருவரையில் எடுத்து மற்றப்படிகளோடு தொடர்பு படுத்தி அம்புகளைக் குறிக்கலாம். (அவ்வாறு செய்து பரஸ்பரத் தொடர்புள்ள தொடர்களுக்கு விளக்கந் தருக.)

பொருளியலறிஞர் "பொதுச் சமநிலை" என்று கூறும் அமைப்பின் சுருக்கமான நிலையைப் படம் 1 காட்ட முயல்கிறது.

தேசியவருமானம் பற்றிய முதலாம் அத்தியாயத்திலே (பக்கம் 293) வட்டமாகச் செல்லும் ஒரு விளக்க வரைப்படம் உண்டு. அங்கே கடிகாரம் போல வலம் வரும் குழாய்களில் டொலர்கள் வியாபாரங்களிலிருந்து

என்ன, எப்படி, யாருக்கு என்பவை பொதுச் சமநிலை விலையிடுதலால் நிச்சயிக்கப்படும் :




படம் 1. சமநிலை விலையையும் ஒவ்வொரு பொருளின் அளவையும் நிச்சயிப்பதற்கு, A இல் நுகர்வோர் தேவையும் கைத்தொழில் சப்ளையும் சந்திப்பதைக் காட்டுமுகமாக வலஞ்சுழியான பணவோட்டம் தொடர்புறுக்கப்பட்டுளது. அவ்வாறே, வியாபாரத்தின் வழிவந்த சாதனத் தேவைகள் அரசாங்கத்தின் சாதனச் சப்ளையை E இற் சந்திப்பதன்மூலம் சமநிலைச் சாதன விலைகளும் அளவுகளும் நிருணயிக்கப்படுகின்றன. (B, D, F, H என்பவற்றுக்குப் பின்னும் C, G என்பவற்றுக்குள்ளும் என்ன நடைபெறுகிறது என்பதை விளக்குக. ::ஆம் பக்கத்திலுள்ள என்ன, எப்படி, யாருக்காக என்ற படம் உடன் ஒப்பிடுக.)

www.padippakam.com



குடும்பங்களுக்கும் குடும்பங்களிலிருந்து வியாபாரங்களுக்குஞ் செல்கின்றன. இதைப் பொருளியலறிஞர் தேசத்தின் மொத்தக் கூட்டுத் தொகையில் " திரண்ட " அல்லது " முழுப் பொருளியல் " படமென்பர்.

இப்போது படம் 1 ஐப் பாருங்கள். இங்கேயும் டொலர்கள் வட்டமாகப் பாயும் தன்மை காட்டப்பட்டுள்ளது. இங்கே நாம் நுணுக்கமாதிரிப் படிவத்தைக் காண்கிறோம். பெரியது சிறியதாகக் காட்டப்படுகிறது. இதைப் பொருளியலாளர் " பிண்டப் பொருளியல் " படமென்பர். சாதன வருமானங்களின் பேரளவு தொகையைப் பற்றி இங்கே நாம் பேசுவதில்லை. அதற்குப் பதிலாக பயிற்சி பெற்ற தொழிலாளர், பயிற்சி பெறுத் தொழிலாளர், நல்ல முந்திரித் தோட்ட நிலம், முதலிய எல்லாவித உற்பத்திச் சாதனங்களுக்கும் வியாபாரம் தேவைப்படும், தருவிக்கப்பட்ட தேவைகளைக் காட்டுவோம். அவ்வாறே மொத்த நுகர்வைப் பற்றிப் பேசமாட்டோம். கோப்பி, தேயிலை, சப்பாத்து, ஏனை நுகர்வுப் பொருள்கள் சேவைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவோம்.

கீழ் வளைவிலே ஒவ்வொரு சாதனத்துக்கும் சப்பிளையும் தேவையும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைக் குறித்துக் கொள்க. (கேள்வி : இவற்றில் எவை வியாபாரத்தில் வருகின்றன, எவை நுகர்வோரிடமிருந்து வருகின்றன.) மேல் வளைவிலே வியாபாரச் சப்பிளையும், நுகர்வோர் தேவையும் ஒவ்வொரு பொருளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் உற்பத்திக்கும், ஒவ்வோர் உள்ளீட்டுக்கும் விலையையும் தொகையையும் நிச்சயிக்கும் நிலைமைகளைக் காணும்வரை உமது பொருளியல் அமைப்பு உறுதியானதன்று. " ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உமது சமநிலை அமைப்பை வரையறையுள்ளதாக்க உம்மிடம் போதிய சமகால நிபந்தனைகள் (அல்லது சமன்பாடுகள்) உண்டா ?" என்ற எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்கும் தூய்மைவாதிக்கு நலன் காண்தன்மையுடைய பதிலைக் கொடுக்கலாம்.

நாம் கூறலாம், " ஒவ்வோர் உற்பத்திக்கும், உள்ளீட்டுக்கும், சப்பிளை தேவை நிலைமைகள் உண்டு. சந்தையில் நமது திட்டம் பரீட்சிக்கப்பட்டு ஈற்றிலே நல்ல அமைப்பு ஏற்படுத்தப்படும். ஆனால் அதுவரை அதைக் குழப்பிவிடக்கூடாது. அவ்வாறு ஏற்படும் அமைப்பு வரையறையான போட்டிச் சமநிலையாகும்."[1] "கடைசியான போட்டிச் சமநிலை திறமையுள்ளது. உற்பத்தி உச்ச நிலையடைகிறது. உள்ளீடு குறைந்த பட்சமாயிருக்கும் ; அப்பிள் கேட்டவருக்கு அப்பிளும் தோடம்பழம் கேட்டவர்க்குத் தோடம்பழமும் கிடைக்கிறது. இத்தகைய திறமை வாய்ந்த கடைசிக் கட்டத்தி

[1] 75 வருடத்திற்கு முன்னர் பிரஞ்சுப் பொருளியலறிஞரான லியன்வால்றஸ் என்பவரே பொதுச் சமநிலைவைக் கண்டு பிடித்தவர். அதற்கு இங்கிலாந்தைச் சேர்ந்த டப்ளியூ. எஸ். ஜிவோன்சும், அவுஸ்திரிய சி. மெஞ்ஜரும், இங்கிலாந்து அல்பிரட் மாஷலும், அமெரிக்க ஜே. பி. கிளாக்கும், இத்தாலிய வில்பிரெடோ பறெட்டோவும், சுவீடனில் கே. விக்செலும் விளக்கம் கொடுத்தனர். அடம் சிமித் எழுதிய நூலிற் கூட இக்கருத்து முளை கொள்வதைக் காணலாம்.

www.padippakam.com



லிருந்துகொண்டு எல்லோருக்கும் நன்மை செய்யமுடியாது. ஒருவருக்கு நன்மைசெய்வதானல் இன்னெருவருக்கு ஊறு செய்யவேண்டி ஏற்படும்.''

மூன்ரும் அத்தியாயம் 57 ஆம் பக்கத்திலுள்ள படத்தின் கடைசியான வளர்ந்த வடிவமே படம் 1. எதை, எப்படி யாருக்கு, உற்பத்திசெய்வ தென்ற பிரச்சினைகளை விலைத் திட்டம் எவ்வாறு தீர்த்துவைக்கும் என அங்கே கேட்டோம். மூன்ரும் பகுதியிலும் நாலாம் பகுதியிலுமுள்ள சாதனங்களை முற்ருக அறிந்த பின்னரே இந்த விடையைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது.

## நிபந்தனைகள்

மேலே கூறியவையெல்லாம் சில கருத்துருவான எடுகோள்களிலேயே தங்கியிருக்கின்றன. தனியுரிமை இல்லை ; குறைபாடுகள் இல்லை ; தீவிர மான துணிவு முயற்சிகள் இல்லை ; எதிர்பாராத குழப்பங்களில்லை ; அரசாங்கத்தால் எவ்வித சீர்குலைவுமுண்டாகாது என்ற இன்னேரன்ன கருத்துக்களே மேலே கூறிய எடுகோள்கள். யதார்த்த உலகம் வேறு ; இங்கே கூறும் இலட்சிய நிலை வேறு.

இது இலட்சியபூர்வமான போட்டி முன்மாதிரி. காலப்போக்கிலே பல குறைபாடுகள் தற்காலிகமானவையாய்த் தெரியவரும். போட்டி முன்மாதிரி யானது, நீண்டகால உண்மையுடைய சில உருசிகரமான கருதுகோள் சில வற்றை மிக இலேசான முறையில் குறிக்கக்கூடியதாயிருக்கும். (உதார ணம் : ஒரு கண்டுபிடிப்பின் பயனுக அலுமினியத்தின் செலவு குறைக்கப் படலாம் இந்தப் போட்டி மாதிரியின்படி விலைவிழவேண்டும். உருக்குப் பாவனை அதிகரிக்கும் ; அதனுல் விலையும் மாறும். குறைப்போட்டியை ஆராய்வோர் நிச உலகிலே நிறைபோட்டி இடையாதெனவும், அதனுல் திட்டமான முடிவைச் செய்யமுடியாதெனவுங் கூறுவர். ஆனுல் மேலே கூறிய பயன் நீண்டகாலப் போக்கில் உண்டாகுமெனப் பந்தயம் பிடிக்க லாம். அதில் நீர் வெற்றி பெறுவீர். அது நிச்சயமா ? இல்லை. இருந்தா லும் நல்ல பந்தயம்.)

## இலட்சிய முறையான விலை நிர்ணயம்

பொருளியலாளர் எப்போதும் ரொபின்சன் குரூஸோவைப் பற்றி பேசு கிருர்களெனக் குறைகூறப்படுகிறது. அஃது உண்மையே. நமது அடிப்படைத் தத்துவங்களை ஒரு தனிமனிதனின் பொருளாதாரத் தீர்மானங்கள் இலே சாக்குகின்றன என்பதைக் காண்கிருேம். இன்று நாம் பூரணமாக ஒன்று சேர்க்கப்பட்ட சமூகத்தையே உதாரணமாகக் கொள்ளுகிருேம். இதிலும் முடிவில் தீர்மானஞ் செய்யும் அதே எளிமை காணப்படுகிறது. அத்துடன் குரூஸோ உதாரணத்தில் இல்லாத வகையில் இங்கே சமூகத் தொடர்பு மக்களிடையே காணப்படுகிறது. ஆனுல் இரண்டுக்குமிடையேயுள்ள வித்தி யாசம் அதிகம். அங்கேதான் இதன் பயனுடைமை காணப்படுகிறது.

www.padippakam.com



அத்தகையதொரு மாதிரியின் நியாயப்போக்கை ஆராயும்போது நமது சொந்த விலை அமைப்பின் தன்மைபற்றிப் புதிய தகவல்களைப் பெறுகிறோம்.

நமது விலையமைப்பின் பொருளாதார ஆராய்ச்சியை ரூஷியாவிலோ வேறெந்த நாட்டிலுமோ காணப்படாத செயற்கைச் சமூகத்தில் எவ்வாறு பிரயோகிக்கலாமென்று பார்ப்போம். அந்த நாடு இலட்சிய நாடு எனக் கொள்வோம். இது நிசமானதன்று. புத்தகத்தில் மாத்திரமுள்ளது. பொருளாதாரக் கொள்கைகளுக்கு உதாரணங் காட்டுவதற்காக அமைக்கப் பட்டது. திட்டப்படுத்தப்பட்ட சமூகவுடைமை நாட்டிலே விலை அமைப்பு எவ் வாறமையுமென்பதை ஆராய்கிறபோது ஒரு கல்லால் இரண்டு கனியை விழுத்துகிறோம்.

1. பூரணமான முதலாளித்துவ அமைப்பிலுள்ள விலைத்திட்டத்தின், சகல அமிசங்களையும் அடக்கியதொரு சிறந்த ஆராய்ச்சியைப் பெறுகிறோம்.

2. "பொது நலப் பொருளாதாரம்", அதாவது எந்த ஒரு பொருளி யற்றிட்டத்திலும் எது சரி எது தவறெனக் கருதப்படுவதன் ஆராய்ச்சியைப் பற்றிய அறிமுகத்தைப் பெறுகிறோம். இது ஒழுக்கச் சார்பான அபிப்பிராயங் களிற் தங்கியுள்ளது. அவை விஞ்ஞான மயமானவையல்ல. குறிக்கப்பட்ட ஒழுக்கச் சார்பான குறிக்கோள்களை ஒரு பொருளியல் அமைப்பு எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நிறைவேற்றும் என்பதுபற்றிப் பக்கச் சார்பில்லாத பொருளியலறிஞர் விளக்கக்கூடியவராயிருப்பர்.[1]

## மையமான திட்ட அமைப்பில் உண்டாகும் சிக்கல்

அடிப்படைப் பொருளியற் பிரச்சினைகளான என்ன, எப்படி, யாருக்கு என்பவற்றைத் தீர்த்துவைப்பதற்கு அனுகூலமாகச் சந்தைவிலை அமைப் பொன்று எவ்வாறு செயற்படுகிறதென்பதை இந்நூலின் முந்திய அத்தி யாயங்களிலே கண்டோம். இவற்றைப்பற்றி மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு மானசீக பரீட்சையைச் செய்து பாருங்கள். பூரணமாகத் திட்டஞ் செய்யப்பட்டதொரு பொருளியல் அமைப்பைப்பற்றிய பூர்வாங்கத் திட்டத்தை எழுதுமாறு நீர் பணிக்கப்பட்டுள்ளீர் என வைத்துக்கொள் வோம். நீர் எவ்வாறு இதைத் துவங்குவீர் ?

முதலில் நீர் மக்களுக்குத் தேவைப்பட்டவற்றை வழங்க விரும்புவீர் எனவும், அவர்கள் எதை விரும்பவேண்டுமென அவர்களுக்கு உபதேசஞ் செய்யமாட்டீர் எனவும் வைத்துக்கொள்வோம். அவர்கள் விரும்புவதெல் லாவற்றையும் நீர் கொடுக்கமாட்டீர். ஏனெனில் நிலம், தொழிலாளர், மூலதனப் பொருள்கள், நுண்தொழில் முறை அறிவு எல்லாம் ஓரளவு தானே கிடைக்கக்கூடும். எனவே நீர் தெரிந்தெடுக்கவும், சரிக்கட்டவும்

1. உதாரணமாக வருமானத்தைச் சரி சமனுகப் பங்கிட வேண்டுமென்பதை அவர் ஆட்சேபிக்கலாம். ஆனல் அந்த நோக்கத்தை எவ்வளவுக்கு நிறை வேற்றலாமென்பதையும் அதனல் உண்டாகும் செலவையும் ஆராய்வதற்கு அவருக்கு ஆட்சேபமிருக்காது.

www.padippakam.com



செய்வீர். நீர் சொல்லலாம். இது சிக்கலான கணிதப் பிரச்சினை. இதற்குச் சக்தி வாய்ந்த நல்ல மின்சாரக் கணித எந்திரங்களைப் பயன்படுத்தவேண்டு மென்பீர். ஆனால் நீர் கோடிக்கணக்கான பொருள்களையும், ஆயிரக்கணக் கான பல்வகை உற்பத்திச் சாதனங்களையும் எத்தனையோ தனிப்பட்டவர்களையும் குடும்பங்களையும் கணக்கிலெடுக்கவேண்டும். கவனத்துக்கு வராமலே கோடிக் கணக்கான கணிதப் பிரச்சினைகளிருக்கும் ; அவற்றைத் தீர்ப்பதற்குரிய படி களும் கோடி கோடியாயிருக்கும். இவற்றைச் சமாளிக்க எந்தக் கணித எந்திரத்தாலும் முடியாது.

உமது ஊக்கம் குன்றிவிடும். மக்கள் விரும்புவதைக் கொடுப்பதைவிட அவர்கள் இன்ன இன்னவற்றையே பெறலாமெனத் திட்டமிடுவீர். அதன் பயனாகக் கணக்கெடுக்கும் பிரச்சினை இலேசாக்கப்பட்டுவிடும். அல்லது மக்கள் விரும்புவதைக் கொடுக்காது நீர் வசதியாகக் கொடுக்கக்கூடிய பொருள்களை முதலிற் கொடுக்கத் துவங்குவீர்.

மத்திய மையமாகத் திட்டமிடல் ஒருவரால் செய்யப்படவேண்டுமென்றால் அது முடியாத காரியம். எத்தனையோ விபரங்களை ஒருவர் அவதானித்துத் திட்டமிடுவதானால் அது திறமையுள்ள திட்டமாயிருக்க மாட்டாது. எனவே மத்திய மையத்தை நீக்கி அதை வெவ்வேறு மையங்களில் வைத்துத் திட்டப்படுத்த நீர் விரும்புவீர். பல வழிகளைக் கைக்கொண்ட பின்னர் முதலாளித்துவ முறையிலுள்ளதுபோன்ற விலையமைப்பு முறையைப் புகுத்த விரும்புவீர். அத்தகைய அமைப்பு எவ்வாறு செயற்படும் ?

## இலட்சிய உலகில் விலை அமைப்பு : நுகர் பொருள் விலைகள்

புதிய உமது சமூகத்திலே, நுகர்வோர் தமக்கு வேண்டிய பொருள்களைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரமுண்டு. அதைப்பற்றி எவரும் அவனுக்கு விதி வகுக்க வேண்டியதில்லை. முதலாளித்துவமுறையிலுள்ளது போலவே ஒவ் வொருவருக்கும் ஒரு தொகைப்பணமோ, வாங்கும் சக்தி பொருந்திய ஒரு சின்னமோ வழங்கப்படும். அதை அவன் தான் விரும்பிய பொருள்களை வாங்குவதிலே செலவு செய்வான். தாவர உணவு சாப்பிடுவோர் இறைச்சி வாங்கமாட்டார். இறைச்சி உண்போர் தாம் விரும்பியதையே வாங்குவர்.

சோஷலிஸ்ட் அரசாங்கம் இந்த நிலைமையில் நுகர்ச்சிப் பொருட்களிடையே சார்பு விலைகளை எவ்வாறு அமைக்கும் ? பொதுப்படையாகக் கூறுவதானால் முதலாளித்துவ அமைப்பிலுள்ள இரண்டு வகையான நோக்கத்தை அனு சரித்தே விலைகள் அமைக்கப்படும் (1) கிடைக்கக்கூடிய நுகர்வோர் பொருள் களை ஒன்றும் மிஞ்சாமல், விலையாகக் கூடிய அளவுக்கும், ஒன்றும் அருந்தலாகாத முறையிலும், பகிர்ந்து கொடுக்கும் வகையில் விலை அமையும் (2) குறிப்பிட்ட பொருளைச் சமூகத்துக்கு அவசியமான மேலதிக உற்பத்திச் செலவைச் சமாளிக்கக் கூடிய அளவில் விலை உயர்த்தப்படும். இதைப் பொருளியற் பரிபாடையிற் கூறுவதானால், சார்பான “ இறுதி நிலைப் பயனுக்கும் ” சார்பான “ இறுதிநிலைச் செலவுக்கும் ” சமனான வகையில் விலை அமைக்கப்படும்.

www.padippakam.com



**வருமானப் பங்கீடு**

இதுவரை, இந்நிகழ்ச்சி முதலாளித்துவ அமைப்பில் நிகழக்கூடிய முறையிலேயே நடைபெற்றுள்ளது. சமூகவுடைமை முறையிலே நிலமும் மூலதனப் பொருள்களும், அதாவது எல்லாவகையான மனித மயமில்லாத வளங்களும் சமூகத்தின் பொதுவுடைமையாயிருக்குமேயன்றித் தனிப்பட்ட வர் சொத்தாக இரா. நமது சமூகத்திலே அஸ்டர்போல ஒருவர், நியூ யோர்க் நகரில் 500 துண்டுக் காணியை உடையவராயிருந்தால் அவருடைய வருடாந்த வாடகை தனியொரு துண்டுக்கு 4,000 டொலர் தேறிய வருமானமாகும். இதனால் வருடத்தில் 20 இலட்சம் டொலர் வருமானம் கிடைக்கும் ; காவல் தொழில் செய்யும் ஒருவனுடைய சம்பளத்திலும் பார்க்க இது 1000 மடங்கு அதிகம். ஓர் என்ஜினியர் பெறக்கூடியதிலும் 200 மடங்கு அதிகம். சமூகவுடைமைச் சமூகத்திலே இந்த வித்தியாசமிராது. சொத்துக்கள் கூட்டாண்மை முறையாயிருக்கும் சமூகத்தில் வருமானம் ஒவ்வொருவருக்கும் சமமாகப் பங்கிடப்படும்.

தனிப்பட்டவர்களுடைய தேவைகளும் விருப்பங்களும் ஒரேமாதிரியாக வேயிருக்கும் எனப் பலர் கருதுவர். உற்பத்தியை நிச்சயிப்பதில் தனவந்தர்க்கு அதிக சலுகையும் ஏழைகளுக்குக் குறைந்த சலுகையும் இருப்பதனாலேதான் தற்போதைய சந்தை அமைப்புப் பொருத்தமற்ற முறையிற் செயற்படுகிறதென்றுங் கூறுவர். அதனால் பண்டங்களுக்குள்ள தேவை சமூகத்தின் உண்மையான நிலையைக் காட்டுவதில்லை. ஒரு லட்சம் டொலர் வருமானமுள்ளவனிடமிருந்து 1000 டொலரை எடுத்து 2,000 டொலர் வருமானமுள்ளவனிடம் கொடுத்தால் சமூக சுபீட்சமுண்டாகுமென அவர்கள் கருதுவர். இவ்வாறு வருமானங்களைக் குடும்பங்களிடையே பங்கீடு செய்தபின்னர்தான் சந்தைக்கு வரும் டொலர் தன் பண்டம் பணி என்பவற்றின் மதிப்பைச் சரியாகக் காட்டக்கூடியதாயிருக்குமென்பர். அப் போதுதான் உற்பத்தியை நல்லவழியிலும், பண்டங்களைத் தக்கோர் கையிலும் செலுத்தக்கூடியதாயிருக்குமென வாதிப்பர். உயர்ந்த வருமான முள்ளவர்களின் வருமானத்திலிருந்து பெரிய அளவு தொகையை அப கரித்துக்கொள்ளாமல் இந்த சமன்பாடான வருமானப் பங்கீட்டை எவ்வாறு செய்யலாம் ? பூரணவாதிகள் இரண்டு விடைகளைத் தருவர். (1) சம்பளத்தை உயர்த்தலாம். (2) சமூகத்திற்கு ஆதாயப்பங்குகளை நன்கொடையாகக் கொடுக்கலாம். இந்த நன்கொடை எல்லாக் குடும்பங்களுக்கும் சமனாகவே யிருக்கும். ஆனால் சமத்துவ சமூகத்திலும் அதிக குழந்தைகள் உள்ளவர் விடயத்திலும் நோய் நொடி, வயது முதிர்ச்சியுள்ளவர் விடயத்திலும் சில வித்தியாசங்களுண்டாகலாம்.

ஒருவருடைய மொத்த வருமானம் எவ்வளவாயிருக்கவேண்டுமென்ற விடயம் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியன்று. ஒழுக்கரீதியான ஆராய்ச்சி யாகும். ஒரு நோக்கத்தை எவ்வாறு நல்லமுறையில் நிறைவேற்றலா மென்றே பொருளியல் கூறமுடியுமன்றி, நோக்கம் எப்படியிருக்கவேண்டு மென்று அது கூறமுடியாது.

www.padippakam.com



உபகார நன்கொடை சம்பளமன்று. நன்கொடை ஒவ்வொருவருக்கும் அவருடைய பிரயத்தனம் எத்தகையதென்பதைக் கணக்கிலெடாமற் கொடுக்கப்படுவது. அதனுற்றுன் அது "மொத்தப் பணப் பங்கு" எனக் கூறப்படுகிறது. உற்பத்தித் திறமை, பிரயத்தனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் நன்கொடை சம்பளம் என்ற வகையிற் சேரும். சம்பளம் எவ்வாறு நிச்சயிக்கப்படவேண்டுமென்பதை நாமின்னும் ஆராயவில்லை. அதற்கு முன்னர் மற்றெரு முக்கியமான பிரச்சினையை ஆராய்வோம்.

### மனிதத் தன்மையிலடங்காத உற்பத்தி வளங்களுக்கும் இடைநிலைப் பண்டங்களுக்கும் விலையிடல்

இத்தகைய இலட்சிய உலகில் நிலம் முதலிய வளங்களின் தானம் எங்கே. செலவு என்ற வகையில் அவை எந்த இடத்தை வகிக்கின்றன? இத்தகைய வளங்கள் செலவினத்திலே சேர்க்கப்படக்கூடாதெனச் சிலர் வாதிப்பர். மனித முயற்சியும் திறமையுமே எல்லாமதிப்பீடுகளினதும் உண்மையான ஊற்று. நிலம், எந்திரசாதனங்கள் என்பன முதலாளிகளின் மேலதிகப் பொருள்களாகும்; அவற்றைச் சொத்துக்களின் உடைமையாளர் தொழிலாளிகளிடமிருந்து உற்பத்திச் சாதனங்களால் கறந்துகொள்ளுகிருர்கள். (ஏனெனில் அது அவர்களுடைய தனி உரிமைப் பொருள்; உற்பத்தி சாதனமாயமைந்துள்ளதென்பர்). இந்தக் கருத்தை உடையவரே பொதுவுடைமையின் தந்தையான காள்மாக்ஸ். அவர் இதனை, பெறுமதி சம்பந்தமாய்த் தொழிலாளர் கொண்ட கொள்கை (அல்லது உழைப்புப் பெறுமதிக் கொள்கை) என்பர். நிபுணர்கள் இந்தத் தொடருக்குப் பலவித அர்த்தங் கொடுப்பர். குறுந்தவணைப் பொதுவுடைமைப் பொருளாதாரத்துக்கா, நெடுந்தவணைப் பொருளாதாரத்துக்கா அவர் இதனைப் பொருத்தமுடையதெனக் கூறினுர் என்பதில் அவர்களிடையே அபிப்பிராயபேதமுண்டு.

இந்த விவாதத்தில் நாம் இறங்கவேண்டியதில்லை. பூரணமானதொரு பொதுவுடைமை அமைப்பிலேகூட, இலேசான உருவிலிருக்கும் உழைப்புப் பெறுமதிக் கொள்கை தொழிலாளர்களையும், தொழிலாளர் அல்லா வளங்களையும் பிழையாகவும் திறமையின்றியும் பயன்படுத்தச் செய்யும் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

எந்த ஒரு பொருளாதார வளமோ இலவசமாய்க் கிடைப்பதாக இல்லாமல், அருந்தலாகுமாளுல் பொதுவுடைமைத் திட்டக்காரர் அதற்கு ஒரு விலைபோட்டு வாடகை அறவிடவேண்டும். அஸ்டர் கோடீசுவரன் விடயத்தில் நடந்ததுபோல இந்த விலையானது எவனெருவனுடைய தனிப்பட்ட வருமானத்தையும் நிச்சயிக்க வேண்டியதில்லை. இந்த விலை சந்தைவிலையாயிருக்க வேண்டியதில்லை. திட்டமிடுவோர் கணக்கேட்டில் பதிவற்கு அதாவது கணக்கில் போட்டுக் கொள்வதற்கு ஏற்பட்ட விலையாயிருக்கலாம். அத்தகைய வளம் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவதற்கு ஒரு விலை இருக்கவேண்டி

www.padippakam.com



யது அவசியமாகும். ஏன்? பொருள்களை எவ்வாறு நல்ல முறையில் உற்பத்தி செய்யலாமென்பதைச் சமூகம் தீர்மானிக்கக்கூடிய வகையில், மனிதத் தன்மையில்லாத வளங்களுக்கு விலைபோடவேண்டும். இதன் பயனாக நாம் சமூகத்தின் உண்மையான உற்பத்தித் தகவுக்கோட்டிலே நமது உற்பத்திகளை முடிவடையச் செய்யலாமேயன்றி அந்தக் கோட்டுக் குள்ளே முடிவடையச் செய்யமுடியாது. முதலாளித்துவ முறையையும், அம்முறையிலே வேலையின்மையினால் உண்டாகக்கூடிய வீண் கழிவுகளையும் நீக்கி ஒழித்துவிட்டு, முட்டாள்தனமான திட்டங்களாலே சமூகத்தின் உண்மை யான உற்பத்திச் சக்திகளுக்கு உள்ளேமிகத்தூரம் போய் முடிவது அர்த்த மற்ற செயலாகும்.

அருந்தலான வளங்களிற் பெரும் பகுதியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும், இறுதி நிலைப் பொருள்களுக்குச் சரியான விலையை நுகர் வோரிடம் பெறுவதானால், எல்லா வளங்களுக்கும் பெறுமதியொன்றைக் கற்பிக்க வேண்டியதவசியம். இது இரண்டாவது காரணமாகும். அதாவது உற்பத்தித் தகைமைக் கோட்டிலே சமூகம் நல்லதானத்தில் நிற்கவேண்டு மானால், உணவு, உடைபோன்ற நுகர் பொருள்களுக்கு விலைபோடுமிடத்து, அருந்தலான வளங்களைப் பயன்படுத்தும் சார்புச் செலவைக் காட்டக் கூடியவாறு (இச் செலவு மேலதிகச் செலவு அல்லது இறுதி நிலைச் செலவு எனப்படும்). விலையைப் போடவேண்டும். இல்லாவிட்டால் நுகர்வோர் தமது டொலரைச் செலவு செய்யும் விடயத்தில் அனுபவிக்கும் சுதந்திரத் தெரிவு முறை, அவர்களுடைய விருப்பத்தேர்வையோ சமூகத்தின் விருப் பத்தேர்வையோ உண்மையான உச்ச நிலையை அடையவிடாது.

**நிலவாடகை உதாரணம்**

இந்த இரு காரணங்களையும் விளங்கிக் கொள்வது கஷ்டம். ஒரு தனி உதாரணத்தைக் காட்டி நிலத்துக்கு விலைபோடுதலின் அவசியத்தைத் தெளிவாக்குவோம். ஒரு லட்சியப் பண்ணையில் இரட்டையர் இருக்கிறார் களெனக் கொள்வோம். ஒருவர் நல்ல ஓர் ஏக்கர் நிலத்தில் கோதுமை செய்கை பண்ணுகிறார். மற்றவரும் ஓர் ஏக்கர் செழிப்பில்லாத நிலத்தில் கோதுமை சாகுபடி செய்து குறைந்த விளைவைப் பெறுகிறார். இருவரும் ஒரே வகையில் உற்சாகமாகவேலை செய்தவர்களானால் அவர்களுக்கு ஒரே வகையான சம்பளம் கொடுக்கப்படும் என்பதில் நாம் கருத்து வேற்றுமை கொள்ளமாட்டோம். உழைப்புப் பெறுமதிக் கொள்கைப்படி சம்பளமே ஒரேயொரு செலவாகக் கொள்ளப்படல்வேண்டும். அப்படியானால் இரண்டு வகையான கோதுமை உற்பத்திக்கும் ஒரே வகையான விலையைப்போட முடியாது. நல்ல நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு தொழிற் செலவு குறைவு. அதனால் மற்ற நிலத்தில் விளைந்த கோதுமையிலும் மலிவாக விற்கப்படலாம்.

இவ்வாறு வாதிப்பது அர்த்தமற்றது. சமூக நலத்தை விரும்பும் ஒரு மூகத்திட்டக்காரன் இந்தச் சிக்கலான நிலையைச் சமாளிப்பதற்கு இரண்டு

www.padippakam.com



வகைக் கோதுமைக்கும் ஒரேவிலையைப் போடுவான். இதன் பயனுகச் செழிப்பற்ற நிலத்தில் விளைந்த கோதுமையால் வரும் நட்டத்தை நல்ல நிலத்தில் விளைந்த கோதுமையால் கிடைக்கும் இலாபத்திஞல் ஈடு செய்வான். இதை வேருெரு வகையிலே சொல்வதாஞல் அவன் “விளைவு குறைந்த நிலத்திலே சாகுபடி செய்தவனுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்போம் ; மற்றவனுக்குக் கூடிய சம்பளம் கொடுப்போம். இதஞல் இரண்டுவகை நிலத்தின் செலவையும் சமன்படுத்தலாம். ஆஞல் அதிக சம்பளம் வாங்குபவன் வறிய தனது சகோதரனேடு தன் சம்பளத்தைப் பகிர்ந்துகொள்ளட்டும்.” என்று கூறுவான்.

இத்தகையதொரு தீர்வு அர்த்தமற்றதென்று கூறமுடியாது. ஆஞல் இதுவிரும்பிய நல்ல பலாபலனைக்கொண்டுவரமாட்டாது. அதாவது உச்சமான உற்பத்தியும் சமமான வேலைக்குச் சமமான கூலி கொடுத்தலுமாகும். விசேடமாக இந்தப் பரிகாரம் நல்ல விளைவுள்ள நிலத்துக்கு நல்ல தொழிலாளரை அனுப்பத் தவறிவிடுகிறது. சரியான வழி எதுவெனில் ஒவ்வொரு நிலத்துக்கும் கணக்குக்குரிய ஒரு விலையைப் போட்டுவைத்தல் ; நல்ல நிலத்துக்கு அதிக விலைபோடப்படும். இரண்டுவகைக் கோதுமையின் விலையும் சமஞயிருக்கும். ஏனெனில் நல்ல நிலத்துக்கோதுமையின் விலை, மற்ற நிலத்தின் குறைவான விலைக்கு ஈடு செய்யக்கூடிய அளவில் சற்றே உயர்ந்திருக்கும்.

இரண்டுவகைக் கோதுமையையும் உற்பத்தி செய்வதற்கான தொழிலாளர் செலவு, நிலத்துச் செலவு என்பவற்றைப் பொதுவுடைமை உற்பத்தி நிர்வாகி குறைத்துக்கொள்ளக்கூடியதாயிருக்கவேண்டும். நாலாம் பகுதியிலே ஆராயப்பட்ட இறுதி நிலை உற்பத்திப் பொருட் கொள்கைகளின்படி அவ்வாறு அவர் செய்வாராஞல் முக்கியமானதும், தொழிற்பெறுமதிக் கொள்கையிஞல் கற்பனை செய்யமுடியாததுமானதொரு சாதனையைச் செய்தவராவார். அவன் நல்ல நிலத்தைத் தீவிரமாகச் செய்கை பண்ணுவதால் நல்ல இலாபம் கிடைக்கும். $1\frac{1}{2}$ மனிதர் செய்யும் காலத்தில் வேலை செய்விக்கலாம். அங்கே உண்டாகும் மேலதிகவிளைவு குறைந்து செல் பயன் விதிப்படி குறையும்வரை வேலை நடைபெறும். அது $\frac{1}{2}$ மனிதன் செய்யும்மேலதிக விளைவுநேரத்தை செழிப்பற்ற நிலத்தில் பயன்படுத்தியதோடு சமனுடையதாக்கப்போதுமானது. நிலத்தின் விலையோ வாடகையோ உயர்வதால், குறிப்பிட்ட அளவுள்ள அந்நிலத்தைச் சிறந்த பயன் படுத்தலுக்குட்படுத்தக் கூடியவாறு அளந்து கொடுக்க வேண்டிவரும்.

இந்த வகையான தீர்ப்பையிட்டு சீவகாருணியவாதிகளில் மிக்க நுட்பமானவர்கூடத் தவறு கண்டுபிடிக்கமாட்டார். ஒரு காணியிலிருந்து மற்றெருகாணிக்கு அதன் இறுதிநிலை உற்பத்தி சமஞயிருக்கக் கூடியவாறு தொழிலாளரை வேலை செய்யவிட்டால் நமக்கு உற்பத்தியாக்

www.padippakam.com



கக்கூடிய மிகப் பெரிய மொத்த விளைவு கிடைக்கும்[1]. இரு சகோதரரும் கடுமையாக வேலை செய்ததால் இருவருக்கும் ஒரே சம்பளம் கொடுக்கப் பட்டது. ஆனால் முழுக்கோதுமையையும் தாமே வாங்கிவிடக்கூடிய அள வுக்கு அவர்களின் சம்பளம் உயரவில்லை. ஏனெனில் கோதுமையின் செலவின் ஒரு பகுதி நிலவாடகையினால் உண்டானது. (இது கணக்கேட்டில் வகுக்கப்பட்ட வாடகை.) ஆனால் நிலம் முழுவதும் அரசாங்கத்தின் ஆணைப் படி மக்களெல்லாருக்குச் சமமாகச் சொந்தமாகின்றது. நிலவருவாய் எந்த ஒரு நிலச் சொந்தக்காரருக்கும் செல்வதில்லை. அது உபகார நன்கொடை யாகச் சகோதரர் இருவரிடையிலும் பிரித்துக்கொடுக்கப்படுகிறது. அவர் களுடைய ஒழுக்கத் தகுதிபற்றி அது பங்கிடப்படும்.

நிலத்துக்கு ஏற்புடையதொரு வாடகையை விதிப்பதன் மூலம் சமூகத் துக்கு முன்னையிலும் அதிக நுகர்ச்சியுண்டாகிறது.

ஒன்றுக்கு மேலான நுகர் பொருள் உற்பத்திவிடயத்தை ஆராய்ந்தால், அவற்றின் உற்பத்திச் செலவுகளிலே, பயன்படுத்தப்பட்ட சமூகத்தின் எல்லைக் குட்பட்ட நிலம், யந்திரசாதனம் என்பன தெரியவரும். உருளைக்கிழங் குச்செய்கைக்கு அதிக நிலமும் சொற்பத்தொழிலாளரும் தேவைப்படும். தக்காளிச் சாகுபடிக்கு அதிக தொழிலாளரும், சொற்பநிலமும் போதும். தொழிலாளர்க்குரிய செலவு என்ற அடிப்படையில் மாத்திரம் ஒவ்வொரு பொருளுக்கும் விலைபோட்டால் உருளைக்கிழங்கின் விலை குறையும், தக் காளிச் செய்கைக்குரிய நிலமும் குறைக்கப் பட்டுவிடும். ஒவ்வொருவரும் ஆரம்பத்திலிருந்ததைவிட வறிய நிலையை அடைவர்.

ஒரு பொருளின் செலவு, விலை என்பவற்றை நிச்சயம் செய்வது சம் பந்தமாகக் கடைசியாய்க் கூறக்கூடியதொரு விடயம்: சகல சாதனச் செல வுகளையும் கூட்டி மொத்த உற்பத்திச் செலவைத் தயார் செய்ததும், திட்ட மிடும் அதிகாரிகள், புதிய இறுதி நிலைப்பொருள்களின் உற்பத்தி அலகின் செலவை ஆதாரமாகக் கொண்டே விலையைக் கணிக்கவேண்டும். மேலும் தெளிவாகக் கூறுவதானால், ஒரு யந்திர சாதனத்தின் பொதுவுடைமை நிர்வாகி நிறைபோட்டியாளரைப் போல நடந்து கொள்ளவேண்டும். சந்தை விலையிலே தமது சொந்த உற்பத்திகள் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கைப் புறக்கணித்துவிட்டு கடைசிச் சிறிய அலகின் செலவு அதன் விற்பனவு விலை யோடு சமனாகும் அளவுக்கு மேலதிக அலகுகளை உற்பத்தி செய்து கொண் டேயிருக்கவேண்டும். ரயில் றேட்டுப்போன்ற அலகுச் செலவுகள் விழுந் துகொண்டேயிருக்கும் தொழில்களுக்கு இறுதிநிலைச் செலவை விலையோடு சமன் படுத்திவிடுவது எதைக்குறிக்குமென்றால் பூரணச் சராசரிச் செலவு

1. மொத்த உற்பத்தி உச்ச நிலையை அடையும்; எப்போதென்றால், இறுதிநிலை விளைவு குறைவான ஒரு காணியிலிருந்து அது அதிகமாயிருக்கும் ஒரு காணிக்கு மாறும்போது. இவ்வாறு செய்யும் ஒவ்வொரு மாற்றமும் மேலதிக விளைவைத்தரவேண்டும். கடைசியில் இரண்டு இடத்திலும் இறுதிநிலை விளைவு சமனாயிருக்கும் நிலையில் மேலதிக விளைவுகளுண்டாக மாட்டா.



படிப்பகம்

www.padippakam.com



கள் ஈடு செய்யப்படவில்லை யென்பதையே. முதலாளித்துவ முறையில்லாத ஒருசமூகத்திலே அரசாங்கம் இந்த வித்தியாசத்தை ஈடு செய்ய நன்கொடையொன்று கொடுக்கும். (இது கணக்கிடுதற்கு) ஏனெனில் ரயில் ரோட்டு அமைப்பைக் கட்டுவது தகுதியுடையதாயிருந்தால், அதைப் நன்கு பயன் படுத்துவதும் ஏற்புடையதே.

### வளங்களுக்கு விலையிடல் பற்றிய சுருக்கம்

அருந்தலாயிருக்கும் மனித முயற்சியென்றுலென்ன வேறுவகையான வளங்களென்றுலென்ன எல்லாவற்றுக்கும், கணக்களவிலாவது விலை போடவேண்டியது சமூகத்திட்டத்தை அமைப்போர் கடமையாகும். நுகர்வோர் பண்டங்களின் இறுதிச் செலவு, ஒவ்வொரு பண்டத்தையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையானமேலதிகச் செலவு எல்லாவற்றின் மொத்தத்தையும் உள்ளடக்கியிருக்கவேண்டும். அதாவது இறுதி நிலைச் செலவுக்குச் சமனுயிருக்கவேண்டும். நுகர்வோர் பண்டங்களுக்குரிய தேவை உண்மையில் எல்லாவளங்களுக்குமுரிய மறைமுகமான தேவையே. இந்தத் தேவையைக் கட்டுப்படுத்துவதாலுல் உற்பத்தி வளங்களுக்குப் பொருத்தமான பெறுமதிகளைப் போடவேண்டும்.

இல்லாவிட்டால் சமூகத்துக்குச் சொந்தமான மனித வளமும், மனிதத் தன்மையற்ற வளங்களும் பொருத்தமற்ற முறையில் பகிர்ந்துகொடுக்கப் படுவதோடு முடிவுற்ற, பொருள்களுக்குச் சந்தை விலையிடும் முறை நுகர்வோரின் உச்சத்திருத்திக்கு உகந்ததாயுமிராது. நிலம் முதலிய மனிதத் தன்மையற்ற வளங்களுக்கு விலை கணக்கிட்டுப் போட்டால், பொதுவுடைமைச் சமூகத்தில் அந்த வருமானம் எவருக்கும் சொந்தமானதாகாது. முடிவுற்ற பொருள்களின் ஒரு பகுதியை நில உடைமையாளன் எடுத்துக் கொண்டால் அதனுல் எவரும் சூறையாடப்படுவதில்லை. மூலதனமும், நிலமும் உற்பத்திக்கு வழங்கும் பங்கு, மக்களுக்குச் சமூக ஆதாயப் பங்கு என்ற முறையில் வழங்கப்படுகிறது. (இது சமூகப் பங்கீடு அல்லது போனஸ் எனப்படும்.)

### வட்டி வீதமும் இலட்சிய உலகமும்

வட்டிவீதம், எந்த ஒரு பொருளாதார அமைப்பிலும் முக்கியமான கடமையொன்றைச் செய்கிறதென்பதை முன்னரே கண்டுகொண்டோம். இது முதலாளித்துவ அமைப்பாயிருந்தாலென்ன, சமூக அமைப்பாயிருந்தாலென்ன, வேறு எவ்வகை அமைப்பாயிருந்தாலென்ன பரவாயில்லை. மூலதனப் பொருள்களுக்குத் தேறிய உற்பத்தி நிலை ஒன்று உண்டு. நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் வளங்களை முதலீடு செய்யமுடியுமானுல், மூலதனம் பற்றிய முக்கிய தீர்மானங்கள் செய்யவேண்டியேற்படும். இப்போதுள்ள நிலம் தொழிலாளர் ஆகியோரை இந்த வருடம் சோளச் சாகுபடியில் ஈடுபடுத்துவோமா ? இன்னும் 15 வருடத்துக்குப் பின்னர் அப்பிள் சாகுபடியில் ஈடுபடுத்துவோமா ? இன்று நாம் திராட்சைப்

www.padippakam.com



பழத்தின் இரசத்தைச் சாப்பிடுவோமா ? 10 வருடத்தின் பின்னர் திராட்சை ரசத்தைச் சாப்பிடுவோமா ? தற்போது தேய்ந்துபோயிருக்கும் அச்சுயந்திரத்தை எடுத்துவிட்டு 20 வருடத்துக்கு நின்று வேலை செய்யக்கூடிய விலையுயர்ந்த ஓர் எந்திரத்தை வாங்குவோமா அல்லது 14 வருடம் சேவைசெய்யக்கூடிய மலிவானதோர் எந்திரத்தை வாங்குவோமா ? எதிர்காலப் பொருளாதாரப் பெறுமதிகளையும் இக்காலப் பொருளாதாரப் பெறுமதிகளையும் சம்பந்தப்படுத்தக்கூடிய ஒரு வட்டி வீதத்தைப் பயன்படுத்தினுல்தான் இக்கேள்விகளெல்லாவற்றுக்கும் பதில் சொல்லலாம். அத்தகையதொரு வட்டி வீதமில்லாவிட்டால், தற்போதுள்ள நிலையான மூலதனமும், புழக்கத்திலுள்ள மூலதனமும் நல்ல பயனுடைய செயல்களில் பிரயோசனப்படுத்த முடியாது. தேசீய வருமானத்தில் எந்த அளவைச் சமூகம் மூலதன அமைப்புக்குப்பயன்படுத்தி முதலீடு நிச்சயித்திருக்கிறதோ அதை இத்தகைய வட்டி வீதமில்லாமல் நல்ல முறையிற் பயன்படுத்த முடியாது.

வட்டி வீதமானது அரிப் பெட்டி போலவோ, கட்டுப்படுத்தும் சாதனம் போலவோ அமைகிறது. 6 வீத மேலதிக விளைவு கொடுக்கும் தொழிலை 5 வீத விளைவு கொடுக்கும் தொழிலிலும் விசேடமாகக் கொள்வதுண்டு. நடைமுறை நுகர்வுக்கு ஈடாக மூலதன வளர்ச்சி எந்த விகிதத்திலே நிகழவேண்டும் என்பதை வட்டி வீதம் நிச்சயிக்கவேண்டியதில்லையெனப் பொதுவுடைமைபற்றி எழுதும் பல பொருளியலறிஞர் கருதுகின்றனர். நம் நாட்டிலே ஓரளவுக்கு வட்டிவீதமே அதை நிச்சயிக்கிறது. எவ்வளவு சேமிக்கப்படவேண்டுமென்பதை அரசாங்கமே நிச்சயிக்கவேண்டும். அது தேசீயத் தேவைகள், சமூகத் தேவைகள் என்பவற்றை வைத்து ஆராய்ந்தே அவ்வாறு செய்யவேண்டுமன்றி எதிர்காலம் பற்றித் தனிப்பட்ட மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயப்படியன்று. சமூகத்தின் சேமிப்பு, மூலதன வளர்ச்சி என்பவற்றின் மட்டத்தை, ஒரு முறை நிச்சயித்துவிட்டால் வட்டிவீதத்தை, அருந்தலான மூலதன சப்பிளைகளைப் பங்கீடு செய்வதிலும், மாற்றுத் தொழில்முறைகளின் வரிசைக்கிரமத்தை நிச்சயிப்பதிலும் பயன்படுத்தப்படவேண்டும்.[1]

### சம்பள வீதமும், ஊக்கமளிக்கும் விலையேற்பாடும்

இலட்சிய வாதிகள் சம்பளவீதத்தை எவ்வாறு நிச்சயிக்கிறுர்கள் என்பதை இனி ஆராய்வோம். அவ்வளவில் நமது ஆராய்ச்சி முடிந்துவிடும். சகல விதமான தொழிலாளர் இனங்களும், திறமைகளும், பூரணமாகப் பயன்படுமுறையில் தாபிக்கப்பட்டுவிட்டால் ஏனைய உற்பத்திச் சாதனங்களுக்கு விலைபொறிப்பது போல இவற்றுக்கும் விலை பொறிக்கலாம். வேலையாட்களுக்குக் கூலி கொடுக்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர்

1. தற்போதைய நுகர்வை எதிர்கால நுகர்வுக்காகப் பின்போடுவோர் தன்னியல்பாக மேலதிக சேமிப்புச் செய்யவிட்டு விடலாம். அதற்கு அவர்களுக்கு வட்டி கொடுக்கவேண்டும். அது மூலதனத்தின் தேறிய விளைவுக்குச் சமனுயிருக்கவேண்டும்.

www.padippakam.com



களுக்கு தேசிய வருமானம் முழுவதினதும் ஆதாயப் பங்காகப் பெரிய நன்கொடைகிடைக்கும். ஆனால் பல வகைப்பட்டவர்களும் தத்தமக்கு விருப்பமான வேலைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளச் சுதந்திரமிருந்தால், அத்துடன் அவர்கள் மேலதிக வருமானம் பெறக்கூடியமுறையில் கடுமையாக வேலை செய்யவும் அதிகநேரம் வேலைசெய்யவும் அவகாசமளிக்கப்பட்டால், நிசமான சந்தைச் சம்பளம் ஏற்படுத்த வேண்டிய அவசியமுண்டாகிறது. அந்தச் சம்பளவீதப்படி மக்கள் தமது சேவையை விரும்பியவாறு விற்றுக்கொள்ளலாம். இந்தச் சம்பளங்கள் வேலைகளின் தன்மையைப் பொறுத்தவை. சில வேலைகள் கடினமாகவும், விருப்பமற்றனவாகவும் இருக்கலாம். விருப்பமற்ற வேலைகட்குச் சம்பளம் குறைவு ; உதாரணமாக தோட்டி வேலையும் மண்வெட்டும் வேலையுமானால் அவற்றுக்கு ஆட்கள் வரமாட்டார்கள். ஆனபடியால் சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதிகதிறமையும் பயிற்சியும் தேவைப்பட்ட வேலைகளுக்கும் அதிக சம்பளம் தேவை. ஆனால் பயிற்சியளிப்பதற்கு அரசாங்கமே பணம் செலவு செய்யும். குத்தகைக் கணக்கில் வேலை கொடுக்கப்படலாம். 10 வீத உயர்வு உற்பத்திச் சக்தியுள்ள வேலைக்காரருக்கு உயர்ந்த சம்பளம் கிடைக்கும். மேலதிக உற்பத்தி எவ்வளவெனப் பார்த்தே வேலையாட்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

இலட்சியச் சமூகத்திலே எல்லா வருமானமும் ஒரே மட்டத்திலிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இரண்டு காரணங்களை முன்னிட்டு அவை வித்தியாசப்படும். (1) பலவகைத் தனிப்பட்டோரின் " தேவை " " தகுதி " என்பவற்றைச் சமூகம் மதிப்பிடும். இந்தப் பண்பு அந்த ஆள் பெறும் ஆதாயப் பங்கிலிருந்து தெரியவரும். (2) மக்களுக்குத் தூண்டுதல் அளிக்கவும், மேலதிக பிரயத்தனம் எடுப்போர்க்கும், மேலதிகப் பிரயாசை எடுப்பதற்கும், கூடிய சம்பளம் வழங்குதல் அவசியம். சொத்துரிமை விடயத்தில் தாரதம்மியமிருப்பதாலும், சொத்தை மரபுரிமையாகப் பெறுவதாலும் வருமானங்கள் வித்தியாசப்படவேண்டியதில்லை. சம்பளவாடகைகள் மீது அதிகவரி போடலாம் ; இது ஹென்றி ஜோர்ஜின் மேலதிக நிலவரி விடயத்தில் நிகழ்ந்ததுபோன்றது.

### இலட்சிய உலகில் விலை அமைத்தல் பற்றிய சுருக்கம்

1. இலட்சிய உலக அமைப்பு நாலு வகையான விலை இனங்களைப் பயன்டடுத்தலாம். (அ) நுகர் பண்டங்களின் விலைகள் (ஆ) சம்பளம், தூண்டல் என்பவை சம்பந்தமான விகிதங்கள் (இ) இடைநிலைப் பண்டங்களின் கணக்கிடும் விலைகள் (ஈ) முடிவான ஒரு தொகை ஆதாயப் பங்குகள் (இவை நேர்க்கணிய சகாயமாயிருக்கலாம், அல்லது எதிர்க்கணிய வரியாயிருக்கலாம்) இங்கே கூறியவற்றில் முதல் மூன்று வகை விலைகளும் சப்பிளை, தேவை என்பவற்றால் நிச்சயிக்கப்படும்.

www.padippakam.com



2. நுகர் பண்டங்களிடையே தேவையானவற்றை மக்கள் தேர்ந்து வாங்குவதற்காக அந்தப் பண்டங்களுக்குச் சந்தைவிலை நிர்ணயிக்கப்படும். அவ்வாறே மக்கள் தாம் விரும்பிய வேலையைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கும், அவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதற்கும், வேலைகளிடையேயுள்ள வேற்றுமை பற்றி ஈடு செய்வதற்கும், சம்பள வீதங்களை நிர்ணயிக்கவேண்டும். சம்பள வீதங்கள் (இறுதிநிலை) விளைவு, பயனின்மை என்பவற்றுக்குப் பொருந்தக்கூடியவாறு அமையவேண்டும்.

3. மனித இனத்தைச் சேராத உற்பத்தி வளங்களை, அவற்றின் இறுதி நிலை விளைவுகள் சமனாகவும், உச்ச நிலையுடையனவாகவும் இருக்கும் வகையில், அவற்றைப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக கணக்குப் போடும் விலைகளை அவற்றுக்கு அமைக்கவேண்டும். அவ்வாறே தற்போதுள்ளதும் வளர்ந்துவருவதுமான மூலதனத்தை அளந்து நல்ல பயன்பட உபயோகிப்பதற்குக் கொடுப்பதற்கு வட்டி வீதம் அமையவேண்டும். எந்த ஒரு நுகர் பொருளையும் உற்பத்தி செய்வதானல் அதன்பூரண இறுதிநிலை உற்பத்திச் செலவு அதன் விலைக்குச் சமனுடையதாயிருக்கும் அளவுக்கே உற்பத்தி செய்யவேண்டும். எல்லாவளங்களையும் வேறு உற்பத்திகளுக்குப் பயன்படுத்தாமலும், அவை ஒரு பயனுமின்றிக் கிடக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.[1]

4. வருமானத்தின் இறுதிப் பங்கீடு, சமூகம் எதை இலட்சிய பூர்வமான பங்கீடென்று கருதுகிறதோ அதிலேதான் தங்கியிருக்கும். இந்தப் பங்கீட்டு அமைப்பு மக்களுடைய தேவை, தகுதி என்பவற்றையடிப்படையாகக் கொண்ட நன்கொடைப் பங்கிலே தங்கியிருக்குமேயன்றி சம்பளம் போல ஒருவருடைய பிரயத்தனத்திலோ கருமத்திலோ தங்கியிராது. ஆனல் இலட்சிய உலகில், நுகர்வோரின் டொலர் மானியங்கள் உண்மையான சமூகத் தெரிவுகளைக் காட்டும் எனக் கொள்வதற்கு முன்னர் சமமான வருமானப் பங்கீடு தேவைப்படும். ஆனல் இது விஞ்ஞான ரீதியற்ற ஒழுக்க நெறி சார்ந்த பிரச்சினையாகும். ஆனல் இதே பொருளியற் கொள்கைகளைப் பயன்படுத்தி சமநிலையற்ற இலட்சிய சமூக அமைப்புக்கான திட்டத்தை அமைக்கலாம்.

5. இங்கே கூறியவற்றுட் கடைசி அமைப்புக்கே சகல அமிசங்களையும் அடக்கிய விபரமான திட்ட அமைப்பு, மத்திய காரக சபையினல் உண்டாக்கப்படவேண்டும். ஆயிரக்கணக்கான சமன்பாடுகளை விடுவிக்கக் கணித நிபுணர்கள் தேவையில்லை. துறைதுறையாகப் பிரிக்கப்பட்ட திட்ட அமைப்பாளர் பரீட்சார்த்தமான சந்தைவிலைகளையும், கணக்குப் போடும் விலைகளையும் போட்டுப் போட்டு சப்பிளைக் கேற்றவாறு அவற்றைத் திருத்திக்கொள்ளலாம்.

1. தொழிற்றுறைகளைப்பிரித்து அவ்வத்துறைகளுக்கு நிர்வாகிகளாயிருப்போர் தமது தேறிய பீசகணிதலாபங்களை உச்சநிலைப்படுத்துவதன் மூலம் இந்தப் பயனை அடைவர். இந்தஇலாபங்கள் கணக்கிடும் தானங்களாகவோ நிசமான டொலர்களாகவோ கணிக்கப்படும். ஆனல் கொடுக்கப்பட்ட விலைகளெல்லாம் சார்பளவுகளாக எடுக்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



பணக்கொள்கையென்பவற்றுக்குப் பக்க பலமாய் நின்று இந்தப் பெரிய கொள்ளை நோயை, காரணமின்றியுண்டாகும் இந்த வறுமையை எதிர்க்க வேண்டும். பணமயமான சமூகத்திலிருந்து பெருஞ் சிக்கலான முறையில் துர்நடத்தையிலீடுபடும் சமூகத்திலிருந்து உற்பத்தியாகும் இந்த வறுமை யைப் போக்க எல்லோரும் ஓயாமல் யுத்தஞ் செய்யவேண்டும்.

**அனுபந்தத்துக்குச் சுருக்கம்.**

1 தூய கலப்பில்லாத போட்டிச் சமூகத்திலே, என்ன உற்பத்தி செய்யப்படவேண்டும், எவ்வாறு, யாருக்கு என்ற பொருளியல் பிரச்சினை களெல்லாம் இலாப நட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிக்கலான முறையில் தீர்க்கப்படும். ஒவ்வொரு பொருளாதார மாற்றப் பொருளும் மற்றொன்றிலே தங்கியிருக்கிறது. எல்லாம் ஒரே சமயத்தில் அவற்றின் பொதுச் சம நிலைப் பெறுமதியில் நிச்சயிக்கப்படுகின்றன. இது தொடர்ந்து தொடர்ந்து சரிப்பண்ணுவதால் சம நிலையை அடையவேண்டியிருக்கிறது.

2. திறமை, சிக்கனம் என்பவற்றிலே இலட்சிய பூர்வமான பொரு ளாதாரம் அக்கறை கொள்ளாவிட்டால் அல்லது பண்டங்களைத் தேர்ந் தெடுப்பதிலும், தொழில்களை விருப்பம்போல் தேர்வதிலும் சுதந்திரமிருக்க வேண்டுமென்பதிலும் அது அக்கறை கொள்ளாவிட்டால், விலை நிர்ண யிக்கும் ஒரு முறையை அது அமைக்கவேண்டும். அப்படியானாலும் சில விலைகள் வெறும் எட்டுப் புத்தக விலைகளாகவேயிருக்கும். அத்துடன், வருமானத்தை பங்கிடுதற்கான இறுதித் தீர்மானம், சமூகம் அரசாங்கம் ஆகியவற்றின் (விஞ்ஞான ரீதியற்ற ஒழுக்கமயமான) தீர்மானமாகவே யிருக்கும். இத்தீர்மானப்படி மக்களுக்கு நன்கொடையாக மொத்தத் தொகையைச் சமூக ஆதாயப் பங்கீடென்று சொல்லிக் கொடுக்க வேண்டி வரும்.

3. பொதுநலப் பொருளாதாரம் என்ற நோக்கின்படி நமது முதலாளித் துவ முறை, சமூக வளர்ச்சி வளங்களுக்குப் பெரிதும் உகந்த ஒரு முறை யிலிருந்து மூன்றுவகையிலே நழுவிவிட்டது. அவையாவன, வருமானம் தவறுகப் பங்கிடப்படுகிறது ; தனியுரிமையை ஏற்கிறது ; வேலையின்மை ஊசலாடிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ முறையிலிருந்து கொண்டே உசிதமான அரசாங்கக் கொள்கைகளையனுசரித்து இந்தத் தீமைகளையெல் லாம் நீக்கிவிடலாமென்பதே இந்த நூலின் ஆசிரியருடைய நம்பிக்கை யாகும்.

**ஆராய்ச்சிக்குரிய வினுக்கள் :**

1. திட்டமிடப்பட்ட இலட்சிய உலகில் நிலவும் நாலுவகையான விலைகளை ஆராய்க.

2. முக்கியமான மூன்று பொருளாதாரப் பிரச்சினைகளை விலைத் திட்டம் எவ்வாறு தீர்த்துவைப்பதற்கு உதவுகிறதென்பதைச் சுருக்கமாக எழுதுக.

www.padippakam.com



இம்மூன்று பிரச்சினைகளும் ஒன்றேடொன்று தொடர்புடையன என்பதை உதாரணமுகத்தால் விளக்குக.

3. தற்போதைய பொருளியல் அமைப்பிலுள்ள குறைபாடுகளெவை ? நன்மைகளெவை ? கூட்டாண்மைக் கோட்பாட்டுக்குரிய சமூகத்தைக் கெடுப்ப தற்கேதுவான குறைபாடுகளெவை ?

4. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஆராய்க :

பரஸ்பரம் தங்கியிருத்தல் ; பொதுச் சமநிலை ; தீர்மானிக்கப் பட்ட இறுதிச் சமநிலை ; திறமையுள்ள இறுதிச் சமநிலை. பெறுமதிபற்றிய தொழில் முறைக்கோட்பாடு மனிதத்தன்மையில்லாத (அமானுஷிக) வளங் களுக்குச் சரியாக விலையிடல், முதலாளித்துவ முறையிலும், பொது வுடைமை முறையிலும் வட்டிவீதம், மொத்தத் தொகை நன்கொடை. சமூக ஆதாயப் பங்கு, சம்பளவாடகை ; எட்டு விலையும் நிசவிலையும். தனியுரிமைக் கட்டுப்பாடு ; மேலதிகத் தகைமையை வீணாக்கல்.

சமூக நலன்கள், தனி நலன்கள், செலவுகள் என்பவற்றுக்கிடையே யுள்ள வெளிநிலை வித்தியாசங்கள். பொது நலப் பொருளாதாரம் ; ஒழுக்க மயப் பங்கீட்டுப் பிரச்சினைகள்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஐந்தாம் பகுதி

## சர்வதேச வியாபாரம், நிதி என்பவை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முப்பத்தோராம் அத்தியாயம்

## சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு

செல்வி பிறிஸ்ம் : சிசிலி, நானில்லாத சமயம் நீ அரசியல் பொருளாதாரத்தைப் படித்துக்கொள். ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியென்ற அதிகாரத்தை விட்டுவிடலாம். அது அதிர்ச்சியுண்டாக்கக்கூடியது. உலோகம் சம்பந்தமான இந்தப் பிரச்சினைகள்கூட உணர்ச்சி முனைப்புடைய அமிசங்களைக்கொண்டவை.

—ஒஸ்கார் வைல்ட், " எணஸ்ட் ஆக இருப்பதன் சிறப்பு " என்ற நாடகத்தில்.

இந்நூலின் முந்திய அத்தியாயங்களிலே சர்வதேச வியாபாரத்தைப் பற்றிவிளக்காதுவிட்டோம். ஐந்தாம் பாகமாகிய இப்பிரிவில், வெளிநாட்டு வியாபாரத்தினுல் எழக்கூடிய பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்வோம்.

சர்வதேச வியாபாரத்திலே சம்பந்தப்பட்ட பணச்செயற்பாடுபற்றி இந்த அத்தியாயத்திலும், அனுபந்தத்திலும் ஆராய்வோம். அடுத்த இரண்டு அத்தியாயங்களிலே சர்வதேச வியாபாரத்தில் அடங்கியவையும் சர்வதேச விவகாரங்கள் எல்லாவற்றையுமே மூடியிருக்கும் பணத்திரையினுல் மறைக்கப்பட்டவையுமான அடிப்படை நிச அமிசங்களைப் பற்றியும் ஆராய்வோம். சர்வதேசத் தொழிற் பிரிவுக்குத் தடைகளாகவும் தாரிப்புகளாகவுமுள்ளவற்றின் பயனுக உண்டாகும் பிரச்சினைகளைச் சரிவர மதிப்பிடும்போது இந்த அடிப்படை நிச அமிசங்களைச் சந்திக்கவேண்டிவரும். கடைசி அத்தியாயத்திலே இந்தக் கொள்கைகளெல்லாவற்றையும் செயற்படுத்திப் பார்க்கும்போது நடைமுறையிலுள்ள சர்வதேசப் பொருளாதார அமைப்புப் புலனுகும்.

பின்வரும் அடிப்படைக் காரணங்களினுல் சர்வதேச வியாபாரம் முக்கியமடைவதைக் காண்போம். நமது உள்ளூர் சாத்திய உற்பத்திப் பொருள்கள் பட்டியல் தரும் பண்டங்களைவிட அதிகமாக எல்லாப் பண்டங்களையும் தரக்கூடியது வெளிநாட்டு வியாபாரம் வழங்கும் சாத்திய–நுகர் பொருள் பட்டியல் !

உதாரணம் : மலாயா ரப்பரைத் தரும். நாங்கள் இங்கிலாந்துக்குக் கோதுமை ஏற்றுமதி செய்கிறேம். இங்கிலாந்து மலாயாவுக்குப் பருத்திச் சேலை சட்டைகளை வழங்குகிறது. ஒவ்வொருவரும் தாந்தாம் தனியாக உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு அதிகமாக நுகர்கிறர். வெளி



படிப்பகம்

www.padippakam.com



நாட்டு வியாபாரத்தின் தாற்பரியம் இதுதான். இது மிக இலகுவானது. ஆனால் அரசியலாளருக்கும் வாக்காளர்க்கும் இது கடினமான விடயம்.

இந்நூலின் ஐந்தாம் பகுதியில் சர்வதேச வியாபாரமும் நிதியும் செயற் படும் முறையை ஆராய்வோம். வெளிநாட்டுச் செலாவணிவிகிதம், சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு, வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல், இறக்குமதிவரி, அமெரிக்கா எவ்வளவு எண்ணெயை இறக்குமதி செய்யலாமென்பதைக் கூறும் இறக்குமதிப் பிரமாணம், "ஒப்பியல் நலன்" என்ற கொள்கை (இது என்னவகையான வியாபாரம் ஏன் நடக்கிறதென்பதைக் கூறும்) ஈற்றில் அமெரிக்காவிலிருந்து தங்கம் வெளியே செல்லுதல், பொது ஐரோப்பியச் சந்தை, வெளிநாட்டு உதவி என்பனபோன்ற 1960 ஆம் ஆண்டின் சர்வதேசப் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாம் இங்கே ஆராயப்படும். இவை கருத்துருவான பொருளியற் பிரச்சினைகளல்ல ; தின சரி பத்திரிகையில் முதற்பக்கத்தில் வரும் செய்திகள்.

## வெளிநாட்டுச் செலாவணி விகிதம்

வியாபாரம் எப்படி நடைபெறுகிறதென்பதை முதலில் ஆராய்வாம். வேர்மண்டிலிருந்து சீனியும், பிட்ஸ்பர்க்கிலிருந்து வார்ப்பிரும்பும் வாங்கி ஞல் அதற்குரிய விலையை டொலரில் கொடுக்கவேண்டும். அப்பொருள் களை விற்கும் விவசாயியும், உருக்கு உற்பத்தியாளனும் டொலர் பணத்தி லேயே அந்த விலையைப் பெறவிரும்புகின்றனர். ஏனெனில் அவர்களு டைய செலவு சித்தாய மெல்லாம் டொலர் கணக்கிலேயே நடைபெறுகின் றன. உள்நாட்டுக்குள்ளேயானுல் பொருளியல் விவகாரங்கள் இலேசாயிருக் கும்.

ஆனுல் பிரித்தானியப் பந்தயக் கார் ஒன்றை நான் நேரடியாகத் தருவிக்க விரும்பினுல் விடயங்கள் சிக்கலாகும். நான் அதன் விலையை டொலர் பணத்திற்கொடுக்க முடியாது ; இங்கிலாந்துப் பணத்திலே, ஸ்டேர்லிங் பவுணிலேதான் கொடுக்கவேண்டும். அமெரிக்கப் பொருள்களை ஆங்கிலே யன் வாங்குவதானுல் டொலர் பணம் கொடுத்தே வாங்கவேண்டும். அமெ ரிக்கரிலே பெருந்தொகையினர் பிரித்தானியப் பவுண் நோட்டைக் கண்டி ருக்க மாட்டார். அமெரிக்க டொலராக மாற்றக்கூடிய தன்மை அந்தப் பவுணுக்கு இருந்தாற்ருன் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வர்.

எனவே வெவ்வேறு நாணயங்களைப் பயன்படுத்தும் நாடுகளிடையே வியாபாரம் நடைபெறுவதானுல் புதியதொரு பொருளியல் அமிசத்தைப் புகுத்தவேண்டியிருக்கிறது. இதுதான் வெளிநாட்டுச் செலாவணிவிகிதம். அதாவது நமது பணத்தை அந்த நாட்டவர் பணமாக மாற்றும் விகிதம்.

1961 இல் பிரிட்டிஷ் பவுண் நோட்டு 2.80 டொலராயிருந்தது. அவ்வாறே அமெரிக்க டொலருக்கு மற்ற மற்ற நாட்டுப் பணங்கள் விடயத்திலும்

www.padippakam.com



ஒரு மாற்றுவிகிதமுண்டு. புதிய பிரெஞ்சு பிராங்கு 20.4 சதமாகும்.[1] இத்தாலிய லீரு நாணயத்தின் மாற்று விகிதம் $\frac{1}{6}$ சதத்துக்குக் குறைவாகும். இவ்வாறே மற்றவையும்.

வெளிநாட்டுச் செலாவணிவிகிதத்தை அறிந்ததும் நான் பிரிட்டிஷ் காரை வாங்குவது இலேசாகும். அதன் கூறியவிலை 1000 டொலர் (அதாவது 1,000 பிரிட்டிஷ் பவுண் என வைத்துக்கொள்வோம். நான் செய்ய வேண்டியது ஒன்றேயொன்றுதான். பவுணுக்குரிய மாற்றுவிகிதம் என்ன என்பதைப் பத்திரிகையிலே பார்த்தல். இது 2.80 டொலராயிருந்தால் நான் 2800 டொலரை எடுத்துக்கொண்டுபோய் வங்கியில் அல்லது தபாற் கந்தோரிலே கொடுத்து அதை அந்த பிரிட்டிஷ் கார் வியாபாரிக்கு அனுப்புமாறு சொல்லுவேன். அவருக்கு பவுண்பணத்திலே கொடுக்குமாறு கட்டளையிடுவேன்.

நான் வங்கியிலே போட்டாலென்ன, தபாலில் அனுப்பினாலென்ன, தரகர் மூலம் அனுப்பினாலென்ன, அது அத்துணை முக்கியமன்று. பிரிட்டிஷ் கார் வியாபாரி டொலரில் அனுப்புமாறு எனக்கு விலைப்பட்டியல் அனுப்பலாம்; அல்லது அமெரிக்கக் கார் கம்பனிமூலம் அவர் வியாபாரத்தை நடத்தலாம். எல்லாம் எனக்கு ஒன்றே. அவருக்குத் தேவை டொலரன்று. பவுண்தான். அவர் கடைசியில் எனது 2800 டொலரை 1000 பவுணக மாற்றி விடுவார். இந்த விவகாரத்திலே நாம் கழிவுப் பணம், தபால் அஞ்சல் கட்டளைக் கட்டணம் என்பவற்றைச் சேர்க்கவில்லை.

பிரிட்டிஷ் வியாபாரி ஒருவர் 5,600 டொலர் பெறுமதியான கோதுமையை அமெரிக்க வியாபாரியிடமிருந்து வாங்க விரும்பினால் என்ன செய்வார் என்பதை நீர் காட்ட முடியும். இச்சந்தர்ப்பத்திலே பவுண்களை டொலராக மாற்றவேண்டும். பவுணின் மாற்று வீதம் 2.80 டொலரானால் அவர் 2,000 கொடுக்கவேண்டியது எதற்கு ?

**வெளிநாட்டுச் செலாவணி வீதம் எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது ?**

வெளிநாட்டுச் செலாவணி விகிதத்தின் கருத்துப்பற்றி இப்போதைக்கு இவ்வளவும் போதும். நுகர்வோன் என்ற வகையிலே நீர் செயல்முறை விபரங்களைப் பற்றி இப்போது மேலும் அறியவேண்டியதில்லை. ஆனால் திரை மறைவிலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் மூலாதாரமான பொருளியற் சக்திகளைப் பற்றி அறியாதிருந்தால் உமது பொருளியலறிவு பூரண

1. பவுணை பிரெஞ்சு பிராங்காக மாற்றும் விதமுமுண்டு. ஆனால் இந்த வெளிநாட்டு நாணய மாற்றுவிகிதங்களைப்பற்றி நாம் இங்கே ஆராயவேண்டியதில்லை. ஏனெனில் சுதந்திரமானதொரு போட்டிச் சந்தையிலே பவுண் பிராங்கு விகிதத்தை, பவுண் டொலர் பிராங்க் டொலர் மாற்றுவிகிதங்களிலிருந்து கணித்துவிடலாம். அத்துடன் கூர்மையாக விடயங்களை அவதானிக்கும் சர்வதேசமத்தியட்சர்கள் இந்த மாற்றுவிகிதங்கள் எல்லை கடந்து போகாமற் பார்த்துக்கொள்வர். ஒருபவுண் 10 பிராங்குக்குச் சற்று அதிகமாக மாற்றப்படும்.

www.padippakam.com



மற்றதாகும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், பவுணை டொலராகவும் டொலரைப் பவுணாகவும் வங்கிகள், தபாற்கந்தோர்கள், தரகர் என்போர் எவ்வாறு மாற்றுகிறார்கள்?

சர்வதேச வியாபாரம் என்பது பெரும்பாலும் இருவழியுள்ள வீதி என்பதை நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். பண்டத்தைக் கொடுத்து பண்டத்தை மாற்றுகிறார்கள். நாம் இறக்குமதி செய்யும்போது பவுணுக்கு மாற்றாக டொலரைக் கொடுக்கிறோம். ஏற்றுமதி செய்கிறபொழுது இங்கிலாந்துக்காரர் நமது டொலருக்கு மாற்றாகப் பவுணைத் தருகிறார்கள். சர்வதேச வியாபாரம், செலாவணி விகிதங்கள் என்பவற்றின் சமநிலை மட்டத்தை இறக்குமதித் தேவையும், ஏற்றுமதிச் சப்ளையுமே நிச்சயிக்கின்றன.

செலாவணி விகிதத்தை நிச்சயிக்கும் விடயத்திலே இரண்டு உருசிகரமான சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொள்ளலாம். (1) சுதந்திரமாக ஊசலாடிக் கொண்டிருக்கும் வெளிநாட்டுச் செலாவணி விகிதம் ஒன்று (2) மற்றது தங்க நாணயத்திட்டத்தையோ வேறு வெளிப்படையான அரசாங்கத் திட்டத்தையோ பின்பற்றி அரசாங்கம் நிச்சயிக்கும் திரமானதொரு செலாவணி.

சமாதானம் நிலவிய ஒரு நூற்றாண்டில் தங்க நாணயத்திட்ட திரமான செலாவணி மிக முக்கியமானது. ஆனால் சுதந்திரமான செலாவணிவிடயத்தை விளக்குவது இலேசு. கனேடா—ஐக்கிய அமெரிக்க வியாபாரத்திலே சமீபகாலத்தில் இது ஓரளவு முக்கியத்துவம் பெற்றது.

**சுதந்திரமான செலாவணி விகிதங்கள் :**

கனேடாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நடைபெறும் வியாபாரத்தை பற்றி இப்போது ஆராய்வோம். கனேடிய டொலர் அமெரிக்க டொலருக்குச் சமமானதன்று. இன்று கனேடிய டொலர் 1.02 அமெரிக்க டொலருக்குச் சரி. அடுத்த வாரம் திடீரென்று பனியுறையத்துவங்கினால் கனேடாவிலிருந்து புளோரிடாவுக்கு யாத்திரிகர் கூட்டம் கூட்டமாகப் புறப்படுவர்; அப்போது 1 கனேடிய டொலர் $1.01\frac{1}{4}$ அமெரிக்க டொலருக்குச் சரியாக மாறும். 1940 இல் ஒரு கனேடிய டொலர் 0.90 அமெரிக்க டொலருக்குச் சரியாயிருந்தது. இது சட்டபூர்வமாக ஆக்கப்பட்டதன்று; தரகரும் வங்கிகளும், நிமிடந் தோறும் தெலிபோனிலே பேசிச் சப்பிளை தேவையை அனுசரித்து இந்தச் செலாவணி விகிதத்தை நிச்சயிப்பர்.

மற்றோர் உதாரணம் பின்வருமாறு :—1919 துவக்கம் 1925 வரை இங்கிலாந்து தங்க நாணயத்திட்டத்திலிருந்து விலகிற்று. அமெரிக்கா திட்டத்திலிருந்தது. என்ன நடந்தது? வெளிநாட்டுச் செலாவணி விகிதம் நாளுக்கு நாள் மாறிற்று. இங்கிலாந்து 1890 இலும், 1914, 1918 ஆகிய ஆண்டுகளிலும் தங்க நாணயத்திட்டத்திலிருந்தபோது பிரிட்டிஷ் பவுணின் விலை 4.87 டொலராயிருந்தது. பின் 4 டொலராக வீழ்ந்தது. 1925 இலே பிரிட்டிஷ் பொருளியல் அமைச்சராயிருந்த வின்ஸ்டன் சேர்ச்சில்


www.padippakam.com



பிரிட்டிஷ் ராச்சியத்தை மறுபடி தங்க நாணயத்திட்டத்துக்கு அவசர அவசரமாகக் கொண்டுவந்தார். இந்த விகிதம் யுத்தத்துக்கு முன்னிருந்த 4.87 டொலரிலாகும். இது அவசரமான நடவடிக்கை. ஏனெனில் 1931 இல் இங்கிலாந்து இந்த விகிதத்தை நிலைநிறுத்த முடியாமல் பவுணின் பெறுமதியை 4.02 டொலராக்கவேண்டியதாயிற்று. 1949 இல் இது மேலும் குறைந்து 1961 வரை 2.80 டொலராயிருந்தது.

சுதந்திர நிலையிலுள்ள மற்றைப்போட்டி விலைகளைப்போல சுதந்திர மான செலாவணி விகிதமும் சப்பிளை தேவையென்ற சக்திகளால் நிச்சயிக்கப்படுகிறது. படம் 1 இலே இலேசாக்கப்பட்ட சப்பிளை, தேவைப்படம் காட்டப்பட்டுள்ளது. போட்டிச் சந்தையைச் சரிப்படுத்துவதற்காக எவ்வாறு

**சுதந்திரமான வெளிநாட்டுச் செலாவணி விகிதத்தைத் தேவை உயர்த்துகின்றது ; சப்பிளை இறக்குகின்றது :**




**படம் 1.** DD (தேதே) என்பதில் நாம் விரும்பும் பிரிட்டிஷ் பண்டங்கள் பிரிட்டிஷ் கடன்பத்திரங்கள், இங்கிலாந்து சென்று உல்லாச யாத்திரை செய்வதற்கான பிரயாணச் செலவுகள் முதலியவை அடங்கியுள்ளன. SS (ச.ச.) சப்பிளைக் கோட்டில் அவர்கள் நம்மிடமிருந்து பெற விரும்பும் பண்டம், பணி என்பவற்றுக்குக் கொடுக்கும் பவுண்மாற்று நாணயம் அடங்கும். விகிதம் E இக்கு மேலேயிருக்குமானல் நாம் தேவைப்படுவதற்கு அதிகமாக அவர்கள் எங்களுக்குச் சப்பிளை செய்யவிருக்கும் மேலதிக வெளிநாட்டு நாணயத்தைக் காட்டும். இத்தகைய மேலதிகச் சப்பிளை பின்னர் விகிதத்தை E இக்கு இறக்கும். இங்கே டொலருக்கு மாற்றுகக் கொடுக்கவிருக்கும் வெளிநாட்டு நாணயம் முடிவுசெய்யப்பட்டுவிடும்.

www.padippakam.com



சுதந்திரச் செலாவணி விகிதம் நிச்சயமாகிறதென்பது இதிலே காட்டப்பட்டுள்ளது. சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு என்ற முக்கியப் பகுதியிலே நம் வெளிநாட்டுச் செலாவணித் தேவைகளை அதிகரிக்கச் செய்யும் சக்திகளான பண்ட இறக்குமதிகள், பணி இறக்குமதிகள், யாத்திரிகரின் செலவுகள், நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பும் உதவிகள், கடன்கள் (இவை அட்டவணையில் "பற்று" என்று குறிப்பிடப்படும்) என்பவற்றை அட்டவணை 1 சுருக்கமாகக் கூறும். சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு, வெளிநாட்டார் நமது டொலருக்கு மாற்றாய்த் தமது நாணயத்தில் நமக்குச் சப்ளை செய்யும் அமிசங்களையும் காட்டும். இது அவர் நம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பண்டம், பணி, என்பவற்றையும் அவர்கள் நமக்குக் கொடுக்கும் கடனையும் குறிப்பிடும். (இவை அட்டவணை 1 இல் வரவு என்று குறிப்பிடப்படும்.

சுதந்தரமான செலாவணி விகிதம் நிர்ணயிக்கப்படுவதைப் பற்றி இங்கே மேல் ஒன்றுங்கூற வேண்டியதில்லை. இந்த அத்தியாயத்தில் ஆராயப்பட்ட வியாபார நிலைக்குறிப்புப் பற்றிய கருத்துக்களை நன்கு மனத்திலே பதித்துக் கொண்ட வாசகரிற் சிலர் இந்த விடயத்தை மேலும் அனுபந்தத்தில் படித்தறிய விரும்புவர்.

**தங்க நாணயத்திட்டத் திரச் செலாவணி விகிதம்.**

இனித் தங்க நாணயத்திட்டம் பற்றி ஆராய்வோம். 1925 இல் வின்ஸ்டன் சேர்ச்சில், இங்கிலாந்தை பவுணுக்கு 4.87 டொலர் வீதமான யுத்தத்துக்கு பிந்திய "தங்க சாலை ஒப்பு மதிப்பு" வீதத்தில் திருப்பி விட்டார். இதை அவர் எவ்வாறு செய்தார்? மந்திரத்தினாலா? இல்லை. பின் அவர் எவ்வாறு செய்தாரென்றால் அது வருமாறு :—

குறிப்பிட்டதொரு பவுண்விலைக்குத் தங்கத்தை வாங்கி அதே விலைக்கு விற்பதற்கு வின்ஸ்ட்டனுடைய அரசாங்கம் விரும்பிற்று. அந்தத் தங்க சாலை விலைக்குத் தங்கத்தின் பவுண் விலை நிலையாக்கப்பட்டது. இது வின்ஸ்டன் விரும்பினார் என்றதனாலன்று; அவருடைய அரசாங்கம் அந்த விலைக்கே தங்கத்தை வாங்கி விற்றதனால் எனக்கூறவேண்டும்.

இக்கால எல்லையில் அமெரிக்காவும் தங்க நாணயத்திட்டத்திலே அடங்கியிருந்தது. 1925 இல் நிதி மந்திரியான மெல்லன் என்ன செய்து கொண்டிருந்தார்? ஓர் அவுன்ஸ் தங்கத்தை 21 டொலருக்கு வாங்கி ஏறக்குறைய அதே விலைக்குவிற்க விரும்பினார். எனவே டொலரின் விலையும் பவுண் கணக்கில் திரமாக்கப்பட்டது.

இனி இரு நாடுகளையும் ஒன்றாக வைத்து ஆராய்வோம். ஒரு பொருளுக்குச் சமனான பொருள்கள் தம்முட் சமமுடையன என்று நாம் பள்ளிக்கூடத்திலே படித்துள்ளோம். இது பொருளியல் ஆராய்ச்சிக்கும் பொருத்தமானதே. தங்கக்கணக்கிலே டொலருக்கு விலை விதித்தால், தங்கக் கணக்கிலே பவுணுக்கும் விலை விதித்தால், தங்க ஏற்றுமதி இரு

www.padippakam.com



நாடுகளுக்கும் கட்டுப்பாடின்றிச் செல்ல அனுமதிக்கப்படும்போது பவுணும், டொலரும் பரஸ்பரம் நிலையான செலாவணி விகிதத்தை உடையனவாயிருக்கும் என்பதாகும்

உதாரணம் : 1959 இல் ஐக்கிய அமெரிக்கத் திறைசேரி தங்கத்தை ஓர் அவுன்ஸ் 35 டொலராக வாங்கிவிற்றது. ஐக்கியராச்சியம் தங்கத்தை அவுன்ஸ் $12\frac{1}{2}$ பவுண்வீதம் வாங்கிவிற்றது. எனவே ஒரு பவுணின் $35/12{\cdot}5\times1$ பெறுமதி டொலர் ஆகிறது. இது ஒருபவுணுக்கு 2.80 டொலர் சமச் செலாவணி விகிதத்தைக் கொடுக்கிறது. தங்கம் ஏற்றுமதி இறக்குமதி செய்வதாலுள்ள தாமதத்தினலும், கப்பற் கூலியினலும் இந்த விகிதம் சில சமயம் சற்றே உயர்ந்தும் தாழ்ந்துமிருந்தபோதிலும் பொதுவாகச் செலாவணி விகிதத்தில் அது திரமான நிலைமையிருந்தது. நமது நாணயம் பிரிட்டிஷ் நாணயத்தோடு நெருங்கிய தொடர்புடையதாயிற்று.

**செலாவணியில் விலை மாற்றம், தேய்மானம் என்பவற்றுக்கு வரைவிலக்கணம்.**

1933 இல் பிராங்க்லின் ரூஸ்வெல்ட் டொலர் பெறுமதியின் விலையிறங்கச் செய்தார் என்று பத்திரிகைகளில் வாசித்தோம் ; 1949 இல் பவுண் 4.02 டொலரிலிருந்து 2.80 டொலராக விலையிறக்கஞ் செய்தார் என்று படித்தோம். விலை மாற்றம் என்ருல் என்ன ? புதினப்பத்திரிகைகளில் இதைச் செலாவணித் தேய்மானம் என வழங்குவர். இரண்டுக்குமுள்ள தாரதம்மியமென்ன ? பிராங் நாணயம் டொலரை அனுசரித்து விலையிறங்கிற்று என்பதன் அர்த்தமென்ன ? இந்தப் பதங்களுக்கு இனி நாம் வரைவிலக்கணம் கூறலாம். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலே பவுணின் டொலர் விலை இறங்கினல் டொலரை அனுசரித்து பவுண் தேய்மானமடைந்ததென்போம். (அதாவது இப்போது நாம் 4 டொலருக்கு வாங்குகிற பவுணை 2.80 டொலருக்கு வாங்குகிரும். பவுணின் வெளிநாட்டுச் செலாவணி வீதம் கூடினல் பவுண் வளர்மானமடைகிறதென்கிரும்; அதாவது 2.80 டொலராயிருந்த பவுண் 2.90 டொலராக உயர்கிறது.) கட்டுப்பாடில்லாத செலாவணிச் சந்தையில் தினமும் செலாவணி விகிதம் ஊசலாடிக்கொண்டிருக்கும். அதையனுசரித்து வெளிநாட்டுச் செலாவணி விகிதமும் ஓயாமல் தேய்ந்துகொண்டோ வளர்ந்து கொண்டோ இருக்கும். பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளில் இந்த ஊசலாட்டம் ஒரு நெறியிலேதானிருக்கும். ஏனெனில் அந்த நாட்டுப் பண்டங்களை அந்நாட்டு நாணயத்தைக் கொண்டு குறைவாகவே வாங்கலாம். அதனல் அதனுடைய செலாவணி விகிதம் தேய்ந்து கொண்டேயிருக்கும்.

**விலை மாற்றம்**

ஒரு நாணயத்தின் விலை மாற்றமென்னும்போது தங்கத்தையனுசரித்து அதன் பெறுமதி மாறுதலையே அது குறிக்கும். உதாரணம் : எல்லா நாடும் தங்க நாணயத்திட்டத்திலிருக்கின்றன என்று வைத்துக்கொள்

www.padippakam.com



வோம். ஒரு நாள் இருந்தாப்போல் எல்லா நாடுகளும் தங்கத்திற்கான கொள்வனவு, விற்பனவு விலையை இரட்டிக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அப்போது அகில உலக விலை மாற்றமுண்டாகிறதென்கிறோம். அப்போது பவுண், பிராங்கு, டொலர், முதலிய எல்லா நாட்டு நாணயங்களும் ஒரேவகையில் ஏறுகின்றன என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும். வெளிநாட்டுச் செலாவணி விகிதத்தில் ஒருநாடு உயர்வாகவும் மற்றநாடு தாழ்வாகவுமிருக்கமாட்டா. விலைமாற்றம் ஏற்படலாம். ஆனால் தேய்மானம் உண்டாவதில்லை. சுருக்கமாகக் கூறுவதானால், நாணயத்தின் தேய்மானமென்றால், மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து ஒரு நாட்டின் செலாவணி விகிதத்தில் வீழ்ச்சியேற்படுதலே. விலை மாற்றமென்பது தங்கத்தையனுசரித்து ஒரு நாட்டின் நாணயப் பெறுமதியிலுண்டாகும் மாற்றமே. இது தினசரி ஊசலாட்டத்தைப் பொதுவாகக் குறிப்பதில்லை. பெரிய அளவில் உண்டாகும் குறிப்பிடத்தக்கதொரு அரிய நிகழ்ச்சியையே இது குறிக்கும்.

விலை மாற்றத்தினாலுண்டாகும் முக்கிய பொருளாதார விளைவுகள் என்ன ? ஒரு நாடு தங்க நாணயத்திட்டத்திலிருந்து நழுவிவிட மற்றவை அத்திட்டத்திலிருந்தால் அதனுடைய நாணயம் மற்றநாடுகளோடு ஒப்பிடும் பொழுது தேய்மானமடையும். மறுபடி அது தங்கநாணயத்திட்டத்துக்குத் திரும்புமானால், அதனுடைய ஒவ்வொரு பண அலகும், தங்கக் கணக்கிலே மதிப்புக் குறையுமானால் அது விலைமாற்றத்தையடைந்துவிட்டதெனலாம்.

ஒரு நாட்டின் நாணயம் தேய்மானமடைந்து விலையிறக்கமுற்றால் அதனுடைய பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதி என்பனவற்றைத் தாக்கும். எவ்வாறு ? இங்கிலாந்து தனது பவுணின் விலையை 4.20 டொலரிலிருந்து 2.80 டொலருக்கு மாற்றுமானால் அதனுடைய பண்டங்களான புத்தகம், விஸ்கி, முதலியன எனக்கு மலிவுள்ளனவாகும். எனவே நான் அப்பொருள்களை அதிகமாக வாங்குகிறேன். எனது தேவைக்கோடு ஆங்கிலப் பண்டங்கள் விடயத்தில் விசாலமாகும்.

ஆனால் விடயம் அவ்வளவில் முடியவில்லை. ஒக்ஸ்போட்டில் பொருளியல் பேராசிரியராயிருக்கும் ஜோன் ஹிக்ஸ் என்பவர், அமெரிக்கப் பண்டங்களைக் குறைவாகவே வாங்கப் பார்ப்பர். அமெரிக்க ஜாஸ் இசைத் தட்டுக்கள் விலையேறிவிட்டன என்பதை அவர் உணர்வார். முன்னெல்லாம் ஒரு பவுணுக்கு வாங்கிய இசைத்தட்டு இப்போது $1\frac{1}{2}$ பவுணாகிவிட்டது. எனவே அவர் அமெரிக்க ஜாஸ் இசைத் தட்டைக் குறைவாகவே வாங்குவார். அதனால் அவருடைய அமெரிக்கப் பண்டங்களுக்குரிய தேவைகள் குறைகின்றன. அவருடைய தேவைக்கோடு நெகிழ்ச்சியுடையதாயிருந்தால் அமெரிக்கப் பண்டங்களில் அவர் குறைவாகவே பணத்தைச் செலவு செய்வார். இதன் அர்த்தமென்ன ? ஒரு நாட்டின் நாணயப் பெறுமதி மற்ற நாட்டு நாணயங்களோடு ஒப்பிடும்போது தேய்மானமுடையமுறையில் மாறுமானால், அதன் பண்ட ஏற்றுமதி கூடும் ; இறக்குமதிகள் குறையும். இதுவே அதன் பொருள்.

www.padippakam.com



எப்போது ஒரு நாட்டின் நாணய விலை மதிப்பில் மாற்ற முண்டாகும் ? என் ? " வியாபார நிலைக் குறிப்புக்கள் " கடினமுண்டாக்கும்போது அதன் நாணயவிலை மதிப்பில் மாற்றமுண்டாகும், அல்லது அம்மாற்றம் அதன் மீது சுமத்தப்படும். அது ஏற்றுமதி செய்யும் பண்டம் பணிஎன்ப வற்றின் மதிப்பு, அது இறக்குமதி செய்யும் பண்டம் பணி என்பவற்றின் மதிப்புக்குக் குறையத் தொடங்கி அவ்வாறே குறைந்துகொண்டு போகுமானல் இந்த விலை மதிப்பில் மாற்றமுண்டாகும். அத்தகைய நாடு இந்த வித்தியாசத்துக்கு ஈடு செய்யும் மூகமாகத் தங்கத்தை ஏற்றுமதி செய்யலாம், அல்லது வெளிநாட்டிலுள்ளவர்கள் கடன் கொடுக்கலாம். இது கொஞ்சக்காலத்துக்கே. அதன் பின்னர் அந்நியநாட்டு நாணயத்தை நடைமுறைச் செலாவணி விகிதத்தில் கொடுப்பதற்கு அதனிடம் குறை வாயிருக்கும்.

அப்போது நாணயவிலை மதிப்பு மாறும் ; அது நிலைமையை எப்படித் திருத்தும் ; நாணய விலை மதிப்புக்குறைந்தால் இறக்குமதி குறையு மென்று கூறினேம். அதன் பயனுக வெளிநாட்டு நாணயம் சேமிக்கப் படும். அது நன்மைபயக்கிறது. மேலும் நாணயவிலை மதிப்பு மாற்றத் தால் பண்டங்களின் ஏற்றுமதி பெருகுமென்று கூறினேம். இதன் பயனுகவும் வெளிநாட்டு நாணயம் இடைக்கக் கூடியதாயிருக்கும்.

இது எட்டுச் சுரைக்காயா ? இல்லை சமீபகாலத்தில் அமெரிக்கா இதை உணர்ந்து பலவகை முக்கியமான சீரமைப்புக்களைச் செய்துகொண்டது. அல்லது தங்கம் தொடர்ந்து வெளியேறிக்கொண்டிருக்குமானல் அது நாணயவிலை மதிப்பு மாற்றத்திற்கோ வெளிநாட்டுச் செலாவணி விகித வீழ்ச்சிக்கோ ஆளாகலாம்.

**சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு.**

ஒரு நாட்டின் சர்வதேச " வியாபார நிலைக்குறிப்பு " பற்றி ஆராயும் சமயம் வந்துவிட்டது. இஃது ஓர் அறிக்கை : இதிலே நாட்டில் இறக்குமதி ஏற்றுமதியாகும் எல்லாப் பண்டங்களின் பெறுமதியும், நன்கொடைகள், வெளிநாட்டு உதவிகள், மூலதனக் கடன்கள் (ஐ.ஓ.யூக்கள்) தங்கம், என்பவற்றின் பெறுமதிகளும் இவற்றினடையேயுள்ள பரஸ்பரத் தொடர் புகளும் அடங்கும்.

முக்கியமான இந்தத் தொடர்புகளெல்லாம் சர்வதேச வியாபார நிலைக் குறிப்பிலே சங்கிரகமாக இடம்பெறும். இதை ஒருவர் அறிந்து கொண் டால் அவருக்கு வெளிநாட்டு வியாபாரம் பற்றிய நல்ல அறிவு உண் டாகும்.

ஒரு வருடத்திலே நடக்கும் சர்வதேச வியாபாரங்கள் பற்றிய குறிப் புக்களும் உத்தியோகபூர்வமான மதிப்பீடுகளும் ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக பகுதியில் தயார் செய்யப்படுகின்றன. இவற்றிலே ஏற்றுமதி இறக்குமதி வாணிகப் பண்டங்கள், வெளிநாடுகட்குக் கொடுத்த கடன்,

படிப்பகம்

www.padippakam.com



வெளிநாடுகளிலிருந்து வாங்கிய கடன், தங்கப் போக்குவரத்து, உல்லாசப் பிரயாணிகள் செலவிடும் பணம், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பங்குப் பணம், வெளிநாடுகளுக்குக் கொடுக்கும் பங்குப் பணம், கப்பற் சேவைகள், முதலியன எல்லாம் அடங்கும். இவையெல்லாம் சர்வதேச வியாபார நிலைக்குறிப்பில் அடங்கும். இஃது ஓர் இரட்டைப் பதிவுமுறை. இதில் எல்லா இனங்களும், இருப்புக் காட்டக்கூடியவகையில் பதியப்படும்[1].

சர்வதேச வியாபார நிலைக்குறிப்புப் பின்வருமாறு மூன்று பிரிவுகளாக வகையாகப் பதியப்படும் :—

(I) நடைமுறைக்கணக்கு
தனிப்பட்டது.
வணிகச் சரக்கு (அல்லது "வியாபார நிலை") காணப்படாதவை.
போக்குவரத்து (கப்பற் சேவை முதலியன).
பிரயாணச் செலவு (உல்லாசப்பிரயாணம் முதலியன).
முதலீட்டு வருமானம் (வட்டி, ஆதாயப் பங்கு முதலியன).
தனிப்பட்ட கொடை (குடி வருவோர், கட்டும் பணம் முதலியன)
சில்லறைச் சேவைகள்.

அரசாங்கம் :

நேசநாடுகளுக்கு அரசாங்கம் ஏற்றுமதி செய்யும் ஆயுதம் முதலியன.
ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் ஒரு தலைச் சார்பான கொடைகள் (உதவித்திட்டங்கள், இராணுவ உதவி முதலியன).

(II) மூலதன இயக்கம்
நீண்ட தவணை
அரசாங்கம்
தனியார்
குறுந்தவணை
அரசாங்கம்
தனியார்.

(III) தங்கப் போக்குவரத்து (வருதலும் போதலும்).

நடைமுறைக் கணக்கிலே இருக்கை நிலை :

(1) இன்கீழ் உள்ள அமிசங்களின் மொத்தம் "நடைமுறைக் கணக்கின் இருக்கை நிலை" என வழங்கப்படும். நமது பண்டம் பணிகளின் ஏற்றுமதி மொத்தத்துக்கும் இறக்குமதியாகும் பண்டம் பணி என்பவற்றுக்குமுள்ள வித்தியாசம் இதிலே சுருக்கமாகக் காட்டப்படுகிறது.

[1] கள்ளமாய்க் கடத்தப்படும் பொருள்களும் வேறு சில பாதகமற்ற அமிசங்களும் தவறிவிடலாம். அதற்காக விடுபட்ட இனங்களுக்கென ஒரு பிரிவு 'சில்லறைகள்' என ஒதுக்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



நடைமுறைக் கணக்கிலே உள்ள மேலதிகம் அல்லது பற்றுகுறை எவ்வாறு (II), (III) என்பவற்றின் கீழ், தங்கத்தினாலும் மூலதன இயக்கத்தினாலும் சரியீடு செய்யப்படுகின்றது என்பதைக் கீழே காட்டுவோம். அதற்கிடையில் தனிப்பட்டது, அரசாங்கத்துக்குரியது என்ற தலைப்புக்களின் கீழேயுள்ள முக்கியமான நடைமுறை அமிசங்களைச் சுருக்கமாக வருணிப்போம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், வணிகச் சரக்குகள் முக்கியம் பெற்றிருந்த காலத்திலே எழுத்தாளர் இந்தச் சிறிய அமிசத்தை மாத்திரமே குறிப்பிட்டனர். பண்ட ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் பெறுமதியிலும் பார்க்க அதிகமாயிருந்தால், வர்த்தகத்தில் " வாசியான நிலை " உண்டெனக் கூறினர். இறக்குமதிகள் ஏற்றுமதிகளிலும் அதிகமானால், " வாசியற்ற நிலை " உண்டெனக்கூறினர். இவ்வாறு கூறுவது பொருத்தமற்றது. வாசியற்ற நிலை சில சமயம் நாட்டுக்கு நன்மையுடையதாயிருக்கும் என்பதைக் காட்டுவோம்.

காணக்கூடிய வணிகச் சரக்குகளோடு " காணமுடியாத " அமிசங்கள் வகிக்கும் முக்கியமான பங்கையும் நாம் மறந்துவிடக்கூடாது. இவை வெளி நாட்டாருக்கு உதவும் கப்பற் சேவைகள் அல்லது அவர்கள் நமக்கு வழங்கும் கப்பற் சேவைகள், அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் வெளிநாடுகளிற் செலவிடுபவை, வெளிநாடுகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் வருவாய், உள்ளூரிற் குடியேறுவோர் தாய் நாட்டுக்கு அனுப்பும் கொடைகள் என்பன அடங்கும். பாரிஸ் நகரில் ஓர் அமெரிக்கர் குடிப்பதற்குச் செலவிடும் பணமும், அமெரிக்காவில் இருந்து குடிப்பதற்காக அவர் வரவழைக்கும் பிரெஞ்சு வைனும் ஆகிய இரண்டும் நிலைக்குறிப்பில் ஒரே பங்கையுடையன. வெளிநாட்டாருக்கு நாம் கப்பல் இன்சூரன்ஸ் வசதி செய்தால் அதுவும் நமது வர்த்தகச் சரக்கு ஏற்றுமதி போன்றதே.

ஓர் அமிசத்தை எந்த வகையிற் சேர்க்கவேண்டுமென்பதை நிச்சயிப்பதானால் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம். இந்த இனம் நமது ஏற்றுமதிச் சரக்குக்களில் ஒன்றைப்போல அதிகமான வெளிநாட்டு நாணயத்தைத் தருகிறதா ? அத்தகை ஏற்றுமதி இனம், " வரவு " என வழங்கப்படும். அல்லது இறக்குமதி இனம் ஒன்றைப்போல நமது வெளிநாட்டு நாணய இருப்பைச் செலவு செய்து மேலும் வெளிநாட்டு நாணயத்தைப் பெருக்கச் செய்கிறதா ? இத்தகைய இறக்குமதி இனம் " பற்று இனம் " எனப்படும்.

இந்த விதி எப்படிச் செயற்படுகிறதென்பதைக் காட்டுவதற்குப் பின்வரும் வினாவை எழுப்பலாம். வெளிநாடுகளிலுள்ள முதலீடுகள் மூலம் அமெரிக்கருக்குக் கிடைக்கும் வட்டி ஆதாயப் பங்கு என்பவற்றை எவ்வாறு நடத்துவது ? அவை உண்மையில் ஏற்றுமதிகள் போன்ற வரவு இனங்களே. ஏனெனில் அவை வெளிநாட்டு நாணயத்தை அதிகரிக்கின்றன. நம்மிடமிருந்து வெளிநாட்டார் பெறும் வட்டிகளும் பங்குகளும் பற்று இனமாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில் அவை நமது வெளிநாட்டு நாணயத்தைச் செலவிடச் செய்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கட்டத்திலே அட்டவணே 1 பயன்படும். இங்கே 1959 ஆம் ஆண்டுக்குரிய அமெரிக்காவின் வர்த்தக நிலைமையைக் காணலாம். இங்கே நடப்பு இனம், மூலதன இனம், தங்கம் என மூன்று வகை முக்கியப் பிரிவுகள் காணப்படுகின்றன. அத்துடன் புள்ளி விபரங்களில் உள்ள பிழைகளை ஈடு செய்யும் ஓர் பிரிவும் உண்டு. ஒவ்வொரு வரிசையும் இலக்கம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இது முன்பின் பார்த்துக் கொள் வதற்கு எளிது.

ஒவ்வோர் இனமும் பெயரோடு (அ) வரிசையில் காட்டப்பட்ட பின்னர் (ஆ) வரிசையிலே வரவைக் குறிப்பிட்டுள்ளோம். அதாவது இவை வெளி நாட்டு நாணயத்தை நமக்கு ஈட்டித் தரும் ஏற்றுமதிகள் போன்றவை. அடுத்த (இ) வரிசையில் பற்றுக்களுண்டு; இவை வெளிநாட்டு நாணயங் களைச் செலவு செய்யும் இனங்களின் தொகை; இது நமது இறக்குமதி முதலியவற்றுக்குக் கொடுக்கப்படும் தொகைகள்.

இவ்வாறு பார்க்குமிடத்து 1959 இல் நமது வரவு 1,62,250 இலட்சம் டொலர். இது ஏற்றுமதிகளாலுண்டானது. நமது பற்று இறக்குமதிகளால் 1,53,150 இலட்சம் டொலராகும். தேறிய வித்தியாசம் 9,100 இலட்சம் டொலர். இது (ஈ) வரிசையிற் காட்டப்பட்டுள்ளது (அட்சர கணிதக் குறியீடு- என்று இல்லாமல் + என இருப்பது ஏன் என்பதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்) இன்று கூட இந்த உபரி ஏற்றுமதி "வாசியான வியாபார நிலை" எனத் தவருகக் கூறப்பட்டுவருகிறது.

காணமுடியாத இனங்களின் ஒவ்வொரு வரியையும் வாசகர் விளங்கிக் கொள்ளலாம். அமெரிக்கர் வெளிநாடு செல்லுவதனுல் உண்டாவது தேறிய பற்றுயிருக்கிறது. இது பிரயாணச் செலவுகளின்கீழ்க் காணப்படுகிறது. ஏன் இது எதிர்க்கணியமாயிருக்கிறதென்பதை வாசகர் அறிவர். தனிப்பட்ட அமெரிக்கர் வெளிநாடுகளிற் செய்யும் கொடைகள் முதலியன வெளி நாட்டு நாணயத்தைச் செலவு செய்வதால் 5 ஆம் வரியில் அவை பற்றுக்களாகக் காட்டப்பட்டுள்ளன. (வெளிநாட்டினர் எமது பற்றுக்களைத் தமது வரவாகத் தங்கள் வியாபார நிலைக்குறிப்பில் அறிவிப்பர். கடைசி இரண்டு இனங்களால் அவர்கள் தமக்கு அதிக டொலர் கிடைப்பதாகக் கொள்வர்).

தனிப்பட்ட நடைமுறை இனங்களைப் பொறுத்தமட்டில் காணமுடியாத இனங்களால் உண்டாகும் கடைசி விளைவு, பற்றிலும்பார்க்க அதிக வரவை உண்டாக்குவதே என்பதை அட்டவணே 1 காட்டுகிறது. இது நமக்கு வெளி நாடுகளில் உள்ள வட்டி ஆதாயப் பங்கு என்பவற்ருல் உண்டாவது.

முதல் 7 தனிப்பட்டோர் வரிசையிலுள்ள தேறிய வரவு நிலை, அடுத்த 5 வரிசைகளிலுள்ள அரசாங்க இனங்களிஞல் ஈடு செய்யப்பட்டுவிட்டன. அரசாங்கத்தின் இராணுவ விவகாரங்கள், வெளிநாட்டுக்கு அனுப்பும் பலவித உதவிகள் என்பன எல்லாமாகச் சேர்ந்து 47,450 இலட்சம் டொலர் தொகை உண்டாயிற்று. அது 12 ஆம் வரியிற் காட்டப்பட்டுள்ளது. இது நேர்க்

www.padippakam.com



அட்டவணை 1. ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேசக் கொடுப்பனவு நிலைக்குறிப்பு, 1959. மூலம் : (ஐக்கிய அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தரவுகள்) (மில்லியன் டொலரில்).

| இல. இனங்கள் (a) | வரவு (b) | பற்று (c) | தேறிய வரவு (+) அல்லது தேறிய பற்று (–) (d) | |
|---|---|---|---|---|
| 1. நடைமுறை : தனிப்பட்டவர் : | | | | |
| (1) வணிகச் சரக்கு காணுதவை .. | 16,225 | 15,315 | + 910 | |
| (2) போக்குவரத்து .. .. | 1,649 | 1,784 | – 135 | |
| (3) பிரயாணச் செலவு .. .. | 902 | 1,610 | – 708 | |
| (4) முதலீட்டு வருமானம் (வட்டி, ஆதாயப் பங்கு) முதலியன .. .. | 2,702 | 549 | +2,153 | |
| (5) தனிப்பட்டவரின் பண அனுப்புதல்கள் .. | | 563 | – 563 | |
| (6) சில்லறைச் சேவைகள் .. .. | 1,199 | 609 | + 590 | |
| (7) நடைமுறையிலே தனிப்பட்டவரின் மிச்சம் .. | | | | + 2247 |
| ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துக்குரிய : | | | | |
| (8) இராணுவப் பண்டம் பணிகள் ஏற்றுமதி செய்தல் (+) .. .. | 1,988 | | | |
| இராணுவ உதவிக் கொடுப்பனவு (–) நேச நாடுகளுக்கு .. .. | | 1,988 | 0 | |
| (9) ஏனைய இராணுவக்கொடுக்கல் வாங்கல்கள் .. | 297 | 3,090 | –2,793 | |
| (10) வேறு கொடைகளும் கொடுப்பனவுகளும் .. | | 1,839 | –1,839 | |
| (11) அரசாங்கத்தின் சில்லறைக் கொடுக்கல் வாங்கல்கள் .. .. | 490 | 603 | – 113 | |
| (12) நடப்பிலுள்ள அரசாங்கக் கொடுக்கல் வாங்கல்கள் .. .. | | | | – 4745 |
| (13) நடைமுறைக் கணக்கிலே தேறிய மீதி .. | | | | – 2498 |
| 11. மூலதனக் கணக்கு, எங்கள் ஐ.ஒ. நூக்களிலே தேறிய ஏற்றுமதி அல்லது தேறிய இறக்குமதி நீண்ட தவணைக்கொடுகடன் (–) அல்லது படு கடன் (+) | | | | |
| (14) தனிப்பட்டவர் .. .. | | | – 995 | |
| (15) அரசாங்கம் .. .. | | | –1,380 | |
| (16) தேறிய நெடுந்தவணை அந்நியநாட்டு முதலீடு | | | | – 2375 |
| (17) நடைமுறைக் கணக்கிலே தேறிய மீதி(+) நெடுந்தவணைக் கொடுகடன் (பரிபாஷையில் " ஐக்கிய அமெரிக்க வியாபார நிலைக் குறிப்பில் பற்றுக்குறை ") .. | | | | – 4873 |
| குறுந்தவணைக் கொடுகடன் (–) அல்லது படுகடன் பெறுதல் (+) | | | | |
| (18) தனிப்பட்டவர் .. .. | | | +3368 | |
| (19) அரசாங்கம் .. .. | | | – 353 | |
| (20) குறுந்தவணைப் படுகடனில் தேறிய முதலீடு | | | | +3015 |
| 111. தேறிய தங்க ஏற்றுமதி (+) அல்லது இறக்குமதி (–) .. .. | | | | +1070 |
| (21) தவறுகளும் விடுபட்டவைகளும் .. | | | | + 783 |
| (22) ஐ. அ. பற்றுக்குறையை ஈடுசெய்தல் .. | | | | + 4873 |
| (23) முழுதும் தழுவிய தேறிய சர்வதேசக் கொடுப்பனவு நிலைக் குறிப்பு .. | | | | 0 |

படிப்பகம்

www.padippakam.com



கணியமாக தனிப்பட்ட பாக்கியை ஈடு செய்யவும்,[1] 13 ஆம் வரியிலுள்ள தேறிய நடப்புக்கணக்குப் பாக்கியை எதிர்க்கணியமாக்கி நீக்கி அதை—24,980 இலட்சம் டொலருக்குச் சமனுக்கவும் போதுமானது.[2]

நடைமுறைக்கணக்கிலேயுள்ள தேறிய பாக்கியைக் கணக்கிடும்போது அட்டவணை 1 இன் முதல் பெரிய கண்டத்தை முற்றுக்கிவிட்டோம். நடைமுறைக் கணக்கில் நிகழும் எதிர்க்கணியப் பாக்கியை ஒரு நாடு எவ்வாறு தீர்க்கும் ? அட்டவணை (III) இல் காட்டியபடி தங்கத்தை ஏற்றுமதி செய்யும்; அல்லது கடன் படும். வாங்கினுல் ஒன்றில் காசைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்; அல்லது அது கடனுயிருக்கவேண்டும். இதுவே கணக்குப் பதிவிலே இரட்டைப் பதிவாயிருக்கும். சர்வதேச வியாபார நிலைக்குறிப்பிலே அட்டவணை இறுதியான பூரண ஐந்தொகையைக் காட்டும். இரட்டைப் பதிவு செய்பவருக்கு எல்லாத் தகவலும் கொடுக்கப்படாவிட்டால் புள்ளி விபரத் தவறுகள், குறிப்பிடாமல் விடப்பட்டவை என்பனவற்றுக்கு (இது 11 ஆம் அத்தியாயத்தில் GNP புள்ளி விபர விடயத்திலே காட்டப்பட்டது) சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். ஆனுல் இது பூரணச் சமநிலை என்ற நியாயத்தைப் பாதிக்காது.

### மூலதன இயக்கம்

இனி மூலதன இயக்கம் பற்றி ஆராயலாம். இது தனிப்பட்ட மக்கள் வெளிநாட்டிலுள்ள தனிப்பட்ட குடி மக்களிடமிருந்து பெறும் கடன் அல்லது அவர்களுக்குக் கொடுக்கும் கடன். (உதாரணம்: நான் பிரெஞ்சுக் கடன் பத்திரம் வாங்குதல் ; அல்லது சுவிஸ் வங்கியில் முதலீடு செய்தல் ; அல்லது பெல்ஜியத்திலுள்ளவர் அமெரிக்க திறைசேரிக்கடன் பத்திரம் வாங்குதல்) இவை நெடுந்தவணையாயுமிருக்கலாம். குறுந்தவணையாயு மிருக்கலாம். இவ்வாறே அரசாங்கம் நேரடியாகவோ, இடைவழி மூலமோ நெடுந்தவணைக் குறுந்தவணைப் படுகடன்கள் வாங்கும், அல்லது கொடு கடன்கள் கொடுக்கும்.

1. பிரெஞ்சு இராணுவத்துக்கு அரசாங்கம் நேரடியாகக் கொடுத்த கொடைகள் 8 ஆம் வரியிலுண்டு. அது உள்நாட்டிலே உற்பத்தி செய்து பிரெஞ்சு இராணுவத்துக்குக் கொடையாய்க் கொடுக்கப்பட்டபடியால் சுயமாக அழிந்துக் கொள்ளும். இதனை ஏற்றுமதிப் பற்றுகக் கொண்டால், பற்றுப் பகுதியில் நன்கொடையாகக் காட்டப்படும். ஜெர்மானியாக்கு நமது சைனியத்துக்குக் காட்டப்படும். ஜெர்மானியரிடம் நமது சைனியத்துக்குப் பெட்ரோல் வழங்கக் கொடுத்தல் போன்ற ஏனை இராணுவ விவகாரங்களும் ஐக்கிய அமெரிக்க அரசின் ஏனைய வெளிநாட்டுத் திட்டங்களும் 9 ஆம் வரியில் 11 ஆல் காட்டப்பட்டுள்ளது.

2. 1958 க்கு முன்னர் வர்த்தக இலாகா இத்தேறிய நடைமுறைக்கணக்கு நிலுவை இனத்தை 11 ஆம் அத்தியாயத்திற் காட்டிய வகையான G. N. P. முறிவுக் கணக்கில் போட்டு வந்தது. 1958 இல் பின்னர் G. N. P. கணக்கிலுள்ள அரசாங்க இனங்கள் சிலவற்றைப் புனர் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் பயனுக—14980 இலட்சம் டொலர் 13 ஆம் வரியிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டது. இது 11 ஆம் அத்தியாயத்திலே அட்டவணை 4 இல் காட்டப்பட்ட 1.0 மில்லியன் டொலர் என்ற இனத்துக்கு வருமுன்னர் செய்யப்பட்டது. இந்த இனத்தையே இங்கே "தேறிய வெளிநாட்டு முதலீடெனக்" காட்டியுள்ளோம்; வர்த்தக இலாகா பயன்படுத்திய 13 ஆம் வரிக்குறிப்பைபயன்று.

www.padippakam.com



பின்வரும் விதியை அனுசரித்தால் மூலதனக் கணக்கிலே எவை கொடு கடன் எவை படுகடன் என்பதை நிச்சயித்துவிடலாம். அமெரிக்க மூலதனக் கடன்களை ஏற்றுமதி செய்வதாகவோ இறக்குமதி செய்வதாகவோ நினைத்துக்கொள்ளவேண்டும். மற்றொருவகையிற் கூறுவதானால் ஐ. ஓ. யூ. குறிப்புக்களை ஏற்றுமதி இறக்குமதி செய்கிறது என வைத்துக் கொள்வோம். அப்போது இந்த ஏற்றுமதி இறக்குமதிகளை ஏனைய ஏற்றுமதி இறக்குமதிகள் போலக் கவனித்துக் கொள்ளலாம். நாம் கடன் வெளிநாட்டுக்குக் கொடுக்கும்போது கொடுகடனா படுகடனா? ஐ. ஓ. யூ. குறிப்புக்களை உண்மையில் இறக்குமதி செய்கிறோம். இறக்குமதி எப்போதும் பற்றை உண்டாக்கும். எனவே அது பற்று. இவ்வாறே வெளிநாட்டிலிருந்து பணத்தை இறக்குமதி செய்தால் இது வரவு. இந்த விதியை அறிந்து கொள்ளாவிட்டால் மயக்கமுண்டாகும். வெளிநாட்டுக்குப் பணம் கடன் கொடுத்தால் நாம் மூலதனத்தை ஏற்றுமதி செய்கிறோமென்ற எண்ணமுண்டாகும். அதனால் அதுவரவு என நினைக்க இடமுண்டு. இது தவறு. அப்படியானால் நாம் ஐ. ஓ. யூக்களை இறக்குமதி செய்கிறோம். இந்த இறக்குமதிகள் பற்று ஈடுகள். நடைமுறைக் கணக்கு வரவு ஏற்றுமதிகளிலே மேலதிகமுண்டானால் அதைப் பெற்றுக்கொள்வதற்கு எமக்கு உரிமையுண்டு.

1959 இல் அமெரிக்கா வெளிநாடுகளுக்கு நெடுந்தவணைக் கடன் கொடுக்கும் நாடாயிருந்தது என்பது 16 ஆவது வரியிற் காட்டப்பட்டுள்ளது. வெளிநாட்டார் அமெரிக்காவுக்குக் கடன் கொடுத்து முதலீடு செய்வதிலும் அதிகமாக அமெரிக்க, வெளிநாடுகளுக்குக் நெடுந்தவணைக் கடன் கொடுத்தோ வெளிநாடுகளில் முதலீடு செய்தோ வந்தது. அதன் பயனாக நாம் நெடுந்தவணை ஐ. ஓ. யூ. க்களை இறக்குமதி செய்தோம். இதன் தொகை 23,750 இலட்சம் டொலராகும்.

17 ஆவது வரியிலே நமது நடைமுறை விவகாரங்களும், நெடுந்தவணை மூலதனப் போக்குகளும் உண்டு. நடைமுறைப் பற்றுக்களும், நீண்ட தவணை முதலீட்டுப் பற்றுக்களும் அதிகம். இந்த நிலையில் அது 48,730 இலட்சத்துக்குப் பற்று உடையது.

"வியாபார நிலைக்குறிப்பிலே பற்றுக்குறையுண்டு" எனக் கூறுவது பொருந்தாது. "வியாபார நிலைக்குறிப்பென்றாலே பற்றும் வரவும் சமன் என்று அர்த்தம். இரட்டைப் பதிவின் அர்த்தம் அதுதான். 1958-1960 இக்கு வியாபார நிலைக் குறிப்பில் அமெரிக்காவுக்குப் பற்றுக் குறையுண்டெனப் புதினப் பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் பேசுவதின் கருத்தென்ன? அவர்கள் கருத்திலே கொள்வது 17 ஆவது வரியைப் போலும். இது நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றுக்குறையும், நெடுந்தவணை முதலீட்டிலுள்ள பற்றுக்குறையுமாகும். இந்தத் தொகையையே தங்கமாகக் கொடுக்க வேண்டும். அல்லது குறுந்தவணை மூலதனக் கணக்கிலே அமெரிக்கத் திரவச் சொத்தை வெளிநாட்டார் தேர்ந்து வாங்கச்

www.padippakam.com



சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அவர்கள் எந்த நேரத்திலும் தமது மனத்தை மாற்றிக் கொண்டு தமக்குத் தங்கமாகக் கொடுக்கவேண்டு மெனக் கேட்கலாம். குறுந்தவணை மூலதனத்துக்கு வேறு சந்தைகளில் மேலான வட்டிகிடைக்கிறது ; நியூயோர்க் நகரில் அது கிடையாதெனக் கூறி அவர்கள் அவ்வாறு கேட்கலாம்.

20 ஆம் வரியின்படி 5 பில்லியன் டொலர் பற்றுக் குறையில் 30,150 இலட்சம் டொலர் குறுந்தவணைக் படு கடனுல் ஈடு செய்யப்பட்டது. கடைசி யாக (111) இன்படி புள்ளிவிபரத்தவறுகள் என்று சமாதானஞ் சொல்ல முடியாத 10,750 இலட்சம் டொலரைத் தங்கமாகக் கொடுத்தோம்.

தங்கமாகவும், குறுந்தவணை மூலதனப் போக்காகவும் கொடுத்தபின்னர் 23 ஆம் வரியிலே காட்டிய விதிமுறை ஒப்புக்கிடைக்கிறது. வியாபார நிலைக்குறிப்பை மொத்தமாக எடுத்து ஆராயுமிடத்து இரட்டைப் பதிவுப் பற்றுவரவுகள் காணப்படும். ஆனபடியால் அது இந்த விதிமுறை ஒப்பைக் காட்டும். "டொலர் குறைவு" உள்ள 1946—1949 இல் வெளிநாடுகளி லிருந்து தங்கத்தையும் திரவச் சொத்துக்களையும் பெற்றுவந்த நாட்களி லும் இது பொருத்தமுடையதாயிருந்தது. அப்போது ஐரோப்பிய தொழிற் சாலைகள் நமது தொழிற்சாலைகளோடு போட்டிபோட முடியாத நிலைமையி லிருந்தன. இந்த விதிமுறை ஒப்புதற்போதும் பொருத்தமுடையதாயிருக் கிறது. இப்போது டொலர் குறைவாகவில்லை ; ஆனுல் அமெரிக்காவின் நடைமுறை நிலைக்குறிப்பிலும், நெடுந்தவணை மூலதன நிலைக்குறிப்பிலும் மாருத பற்ருக்குறை உண்டு. இது வெளிநாட்டார் தங்கம் வெளியேறுவ தாலும், குறுந்தவணை டொலர் கடன் கொடுப்பதாலும் ஈடு செய்யப் பட்டது ; அவர்கள் எல்லாவற்றையும் தங்கமாகக் கேட்கவில்லை.

**ஒரு நாட்டின் வியாபார நிலைக்குறிப்பிலுள்ள பல படிகள்**

அமெரிக்கா முதலில் விவசாய நாடாயிருந்து பின்னர் பூரணக் கைத் தொழில் நாடாக மாறிவிட்டது. அந்த வகையில் அது நாலு படிகளையும் கடக்கவேண்டியிருந்தது. இந்த வரலாற்றை ஆராய்வது பயனுடையது.

1. **இளையதும் வளர்வதுமான கடன்பட்ட நாடு.** புரட்சிச் சண்டைக் காலந் தொட்டு உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலம் வரை நடப்புக் கணக்கிலே நாம் ஏற்றுமதிக்கதிகமாக இறக்குமதி செய்தோம். இந்த வித்தியாசத்தை இங்கிலாந்தும், ஐரோப்பாவும் எமக்கு வழங்கின. நாம் நமது மூலதனத் தைக்கட்டி எழுப்பினேம். இதனுல் எமது நாடு இளமையும் வளர்ச்சியும் உள்ள ஓர் இளம் நாடாக விளங்கிற்று.

2. 1873 துவக்கம் 1914 வரை நமது வியாபாரப் பாக்கி நமக்கு வாய்ப் பாயிருந்தது. பழைய வெளிநாட்டுக் கடன்கள் மீது நாம் வட்டியும் ஆதாயப் பங்கும் கொடுக்கவேண்டியிருந்தது. அது வளர்ந்துகொண்டு வந்தது. அதனுல் நமது நடப்புக் கணக்கு ஏறக்குறைய ஒத்ததாயிருந்தது. மூலதனப்போக்கும் ஒப்பாயிருந்தது. நாம் புதிதாகக் கடன் கொடுத்ததால் நாம் வாங்கிய கடனுக்கு அது சமனுயிற்று.

www.padippakam.com



**3. புதிய கடன்கொடுக்கும் நாடு.** முதலாவது மகா யுத்தத்தின்போது எமது ஏற்றுமதி பெரிதும் பெருகிற்று. ஆரம்பத்திலே தனிப்பட்ட அமெரிக்கர் நேசநாடுகளுக்குக் கடன் கொடுத்தனர். நாம் யுத்தத்தில் இறங்கிய பின்னர் நமது அரசாங்கம் யுத்தச் செலவுக்கும் யுத்தத்துக்குப் பிந்திய புனருத்தாரண வேலைகளுக்குமாக இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கடன் கொடுத்தன. யுத்தத்தின் பின்னர் நமது நாடு கடன் கொடுக்கும் நாடாயிற்று. 1920 இலும், 1930 இலும் தீர்வைகளை விதித்தோம். நாம் ஏற்றுமதி செய்ய மறுத்ததால் வெளிநாட்டார் நமது வட்டிகளையோ, ஆதாயப் பங்குகளையோ முதலையோ திருப்பிக் கொடுப்பதற்கு டொலர் பெற முடியாதிருந்தனர்.

இந்த மூன்றாவது படியில் நாங்கள் இருக்கும்வரை, அதாவது 1920 ஐ அடுத்த வருடங்களில் தனிப்பட்டோர் வெளிநாடுகளுக்குக் கடன் கொடுத்து வரும் நிலையில் இருக்கும் வரை எல்லாம் சௌசன்னியமாகத் தோற்றமளித்தது. வாங்கும் பண்டங்களுக்கு அதிகமாக நாம் விற்றோம். நமது ஏற்றுமதிகளுக்கு ஈடாக மற்ற நாடுகள் தங்கத்தையும், ஐ. ஓ. யூக்களையும் அனுப்பின. எல்லாம் நன்றாக இருந்தது. ஆனால் 1929 இலும் பின்னரும் அமெரிக்கர் வெளிநாடுகளுக்குக் கடன் கொடுக்க முடியாதிருந்தது. பின்னர் முறிவு ஏற்பட்டது. சர்வதேச வர்த்தகம் முறிந்தது. கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை ; அமெரிக்காவும் ஏனைய நாடுகளுமே இந்நிலைக்குப் பொறுப்புடையனவாயின.

**4. வளர்ச்சிபெற்ற கடன் கொடுக்கும் நாடு.**

1960 வரையில் அமெரிக்கா முதிர்ச்சியுள்ள கடன் கொடுக்கும் நாடாயிற்று. இந்த நிலையை இங்கிலாந்து சில வருடங்களுக்கு முன்னர் அடைந்தது. அதனுடைய இறக்குமதிகள் ஏற்றுமதியிலும் அதிகரித்தன. வாய்ப்பற்ற வர்த்தக நிலை அதற்கு உண்டானது. இதன் அர்த்தமென்னவென்பதைப் பார்ப்போம்.

இங்கிலாந்து மக்கள் மலிவாக உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து சுகமாக வாழ்ந்தனர். இறக்குமதிக்கீடாக அவர்கள் அதிகம் ஏற்றுமதி செய்யமுடியவில்லை. முன்காலத்தில் இங்கிலாந்து வெளிநாடுகளுக்குக் கொடுத்த கடனின் பயனாக உண்டான வட்டிகளைக் கொண்டு மேலதிகமாக ஏற்பட்ட இந்த இறக்குமதிக்கு ஈடு செய்தனர்.

இது இங்கிலாந்துக்குப் பொருத்தமுடையதாயிருக்கலாம். ஆனால் மற்ற நாடுகளின் கதியென்ன ? இறக்குமதிக்கதிகமாக ஏற்றுமதி செய்வது அந்நாடுகளுக்கு நட்டமாகுமா ? இல்லை. இங்கிலாந்து முற்காலத்தில் அந்த நாடுகளுக்கு வழங்கிய மூலதனப் பொருள்களைக் கொண்டு அவை தமது உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கின. இது இங்கிலாந்துக்குக் கொடுக்க வேண்டிய வட்டி, பங்கு என்பவற்றிலும் அதிகம். இரு பகுதியாரும் கடினமின்றிக் கருமங்களை நடத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வெளிநாடுகளுக்குக் கொடுத்த கடன் இரண்டு பக்கத்தாருக்கும் பயன்

www.padippakam.com



கொடுத்தது. கொடுத்தவரும் பயனடைந்தார் ; வாங்கினவரும் பயனடைந்தார். சர்வதேச வர்த்தகமும் பொது நிதி ஆட்சியும், சுமூகமாக நடைபெறவில்லை. சில முதலீடுகள் சாதுரியமற்றனவாயிருந்தன. குடியேற்ற நாடுகளின் பிரச்சினையும், தேசீய வாதமும் நிலைமையைச் சிக்கலாக்கின. முதலாவது மகாயுத்தத்தின் பின்னர் முழு நிலைமையும் மோசமடைந்து முறிவுற்றது.

கெடுபிடியுத்தம் பயத்தினுலுண்டான வெளிநாட்டு உதவிகளுக்கும், இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் அமெரிக்காவுக்குப் பணம் தேவைப்படும் நிலைமையுண்டாகியுள்ளது. அதனுல் முன்னர் செய்த முதலீடுகளினுல் இடைக்கக்கூடிய ஆதாயம் அதற்குத் தேவைப்படுகிறது.

**சர்வதேச மூலதன இயக்கங்களின் அடிப்படை அர்த்தம்.**

இனி, மூலதன இயக்கம் பற்றிய பிரச்சினையை ஆராய்வோம். தேசியத் தன்மை என்ற அரசியல் பிரச்சினையும், வேலையின்மையென்னும் உள் நாட்டுப் பிரச்சினையும் இந்த விடயத்திற் புகுந்துகொள்ளாவிட்டால் சர்வ தேசக் கடன் விடயத்தை நன்கு புரிந்துகொள்ளலாம். பணம், நிதி என்ற திரைகளை நீக்கிவிட்டு பண்டம், வளம் என்னும் உண்மையான அமிசங்களையிட்டு ஆராயலாம்.

ஒரு நாட்டின் எல்லைக்குள் மூலதனம் எவ்வாறு பெருகுகிறது. நடப்பு நுகர் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக நமது தொழிலாளரையும் நிலத்தையும் இயந்திரசாதனங்களையும், வேறு வளங்களையும் பயன்படுத்தாமல் இருப்பது ; அதற்குப் பதிலாக நாம் மரம் நட்டு, ஆறுகளைப் பயன்படுத்திப் புதிய எந்திர சாதனங்களை உற்பத்தி செய்கிருேம். இவையெல்லாம் நமது எதிர்கால வருமானத்துக்கும் நுகர்வுக்கும் பயன்படும்.

தற்போது நுகராமல், பின்னர் நுகர்வோமெனப் பின்போட்டு வைக்கிருேம். எதிர்காலத்திலே மேலும் அதிக நுகர்ச்சியைப் பெறுவோமென்று நினைக்கிருேம். எதிர்கால நுகர்விலே உண்டாகக் கூடிய அதிகரிப்பு எங்கிருந்து வரும் ? மூலதனப் பொருள்களுக்குத் தேறிய உற்பத்தி உண்டு என்ற உண்மையிலிருந்தே. இந்த உற்பத்தியே வட்டி வீதத்தின் உண்மையான அமிசம். (அத். 29 பார்க்க).

உலகின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு அளவு வளங்களுண்டு. தொழிலாளர், உலோகம், காலநிலை, நுண்தொழில்முறை அறிவு என்ற வகையில் இருக்கின்றன. வேறு நாடுகளிலே 6 வீத இலாபங் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பங்களிருந்தால், வட அமெரிக்காவில் ஒருவர் 3 வீத இலாபம் பெறக்கூடிய முதலீடுகளிலே முயலமாட்டார். இவ்வாறு நடைபெறுவதற்குக் காரணம் அறியாமையும், தேச எல்லைகளுமேயாகும் மூலதனத்திலே கொஞ்சத்தை வெளிநாடுகளிலே முதலீடு செய்யவேண்டியது அவசியமே. இதனுல் வெளிநாட்டுத் தொழிலாளிக்கு அதிக சம்பளம் கிடைக்கிறது. ஏனெனில் அவனுக்கு பெருந்தொகையான சிறந்த ஆயுதம்

www.padippakam.com



கள் இருக்கின்றன. எனவே வெளிநாட்டு உற்பத்தி அதிகரிக்கும். எவ்வளவில் ? பயன்படுத்தப்பட்ட மூலதனத்தை மறுபடி ஈடு செய்வதற்கும், நாம் முதலீடு செய்த முதலுக்கு வட்டியும் பங்கு இலாபமும் கொடுக்கவும் போதுமான அளவிலும் அதிகமாக அதிகரிக்கும். இந்த வட்டி வருவாய் பணமும் பணியுமாக எங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கிறது. இதனால் நமது வாழ்க்கைத்தரம் உயரக்கூடும். சகல ஞானமுமுள்ள ஒரு விஞ்ஞானி இந்த முறையை ஒரு வேளை அனுமதிக்கக் கூடும். மூலதனமானது உயர்ந்த உற்பத்தியுடைய விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

நமது முதலை எப்பொழுது திருப்பிக் கொடுப்பார்கள் ? நாம் நல்ல வருவாயைப் பெறும்வரையில் முதலை நாங்கள் திருப்பிக் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஒரு காலத்திலே பிற்போக்காயிருந்த நாடு கடைசியில் சுபீட்சமுடையதாகலாம். அது நுகர்வுகளைக் குறுக்கிக்கொண்டு சேமிப்பால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நமக்குச் சொந்தமாயுள்ள தொழிற்சாலைகளையும், பண்ணைகளையும், சுரங்கங்களையும் வாங்கிக்கொள்ள விரும்பலாம். ஆனால் நாம் தனவந்தராயிருக்கிறோமென்றும், எங்களிடம் போதிய சேமிப்பு உண்டென்றும், நம்மிடம் தாய் நாட்டிலே பெருந்தொகையான முதல் உண்டென்றும் நமது வட்டி விகிதம் குறைவென்றும் கொள்ளுவோம். எனவே நாம் எதையும் விற்க விரும்பமாட்டோம் ; அல்லது முதலைத் திருப்பிப் பெறவிரும்பமாட்டோம். வெளிநாடுகளில் உள்ள நமது பண்ணையின் விலையை உயர்த்துவோம். தொழிற்சாலைகளின் விலையையும் அதிகரிப்போம். நமக்கு முன்னையிலும் குறைந்த வட்டி வந்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டோம். எனவே ஒரு நாட்டின் பழைய கடன்களை உடனே திருப்பிப் பெறுவதற்கு அது ஒன்றில் வறுமையடைந்திருக்க வேண்டும், அல்லது முதிர்ச்சியடைந்திருக்கவேண்டும்.

தேசீய இனம் என்ற கருத்துத் தலை நிமிர்த்தியதும் விடயங்கள் மாறும். ஐக்கிய அமெரிக்க எல்லைக்குள்ளேயே தெற்கிலிருந்து வடக்கு வரைக்கும், கிழக்கிலிருந்து மேற்க்குவரைக்கும் இலாபப் பங்குகள் நிரந்தரமாகக் சொரிந்துக்கொண்டிருக்கும். சிலர் சொந்தக்காரர் நிலத்தில் வசிப்பதில்லையென முறுமுறுப்பர். ஆனால் சொத்துரிமைகளைப் பாதுகாக்க நீதிமன்றங்களும் நகர்க்காவலரும் உண்டு. ஆனால் தேசங்களிடையே இந்த ஒழுங்குகிடையாது. ஒரு நாடு வறுமையுற்றால் அது மற்ற நாடுகளிடமிருந்து கடன் வாங்கலாம். அது செல்வமுள்ள நாடாக வந்ததும் வெளிநாட்டுக்குரிய வட்டியையும், பங்கு இலாபத்தையுங்கொடுக்கக் கடினமாகத்தோன்றும். தன்னுடைய தற்போதைய செல்வநிலைக்குக் காரணம், தான் பெற்ற கடன் என்பதை நினைக்கப் பின்வாங்குகிறது. இது பொருளாதாரப் பழு மாத்திரமன்று ; தலத்திலேயில்லாத அந்நியருக்கு வழங்குவதை நாடுகள் விரும்புவதில்லை. அதனால் சர்வதேசக் கடன்களைத் தீர்த்துவிட அவை முனைகின்றன. சில சமயம் நியாயவிலைக்கும், சிலசமயம் அநியாயமான விலைக்கும் விற்கக் கூடும். அல்லது அவை அந்தக் கடனைப்பற்றி மறந்தும் இருந்துவிடுன்றன.

www.padippakam.com



இவ்வாறு பொருளியலும், அரசியலும் கலந்து கொள்ளுகின்றன. இதை இந்நூலிலே ஆராயமுடியாது. "கொடியைப் பின்தொடர்ந்து வியாபாரம்" செல்லுகிறதென்பர் சிலர். வேறு சிலர் வியாபாரத்தைப் பின்தொடர்ந்து கொடி செல்கிறதென்பர். நாடுகள் குடியேற்ற நாடுகளை அடிமைப்படுத்தி ஏகாதிபத்தியம் நாட்டுவது வியாபாரத்தின் நிமித்தமே என்பர். தேசிய அதிகாரத்தை நிலைநாட்டுவதே நோக்கம் என்பர். (இது ராணுவ எதிர்ப்பினுலும் ; பாதுகாப்பினுலும் உண்டாகிறது) இந்த நோக்கத்துக்காகப் பொருளாதாரம் கூடத்தியாகஞ் செய்யப்படுகிறது. ராணுவத்தின் செலவுக்குப் பொருள் தேடுவதற்காகவே பொருளாதார வளங்களைத் தேடுகிறுர்கள். பொருளியற் சுபீட்சத்துக்காகவன்றென்பர். இந்தக் கொள்கையின்படி யுத்தம், தேசீயக் கொள்கை என்பன இல்லாவிட்டால் ஒருவர் எந்த நாட்டிலும் முதலீடு செய்து தொழில் நடத்தலாம். புத்தியுள்ளவர்கள் இராணுவ அமைப்புக்களும் குடியேற்ற நிர்வாகமுமில்லாத சிறிய நாட்டிலே வாழ்வர், என்பது அவர்களுடைய வாதம், வேறு சிலர் சுக சீவனத்தை விட வெற்றிப் பிரதாபமே வாழ்வின் உயர்ந்த குறிக்கோள் என்பர். தாய் நாடே முக்கியம் ; அந்நிய நாட்டவரைப்பற்றி எங்களுக்கு அக்கறையில்லையென்பர். அந்நிய நாட்டவரின் பண்டங்களையும், நிலங்களையும் கவர்ந்துகொள்ளலாம் ; அவர்களை வெற்றிபெற்ற நாட்டவருக்கு அடிமைகளாக்கலாம். கடந்த சில நூற்றுண்டுகளாக இந்த இருவகைக் கொள்கைகளுக்கிடையிலேயே உலகம் ஊசலாடிக்கொண்டிருந்தது.

### வெளிநாட்டுக் கடன் சம்பந்தமான நிச அமிசங்களும் பொது நிதி அமிசங்களும்.

இப்போது அரசியலைவிட்டுவிட்டு பொருளியலை ஆராய்ந்து பொது நிதிப் பரிபாஷையில் வெளிநாட்டு முதலீடு எவ்வாறு நடைபெறுகிறதென்பதை அவதானிப்போம். மூலதனப்போக்குவரத்தின் நிசமான அமிசங்களை நேரடியாக வாங்காமல் பணத்தையே கடனுக வாங்குகிறுர். அவர் எமக்கு ஒரு ஐ. ஓ. யூ. குறிப்பைக் கடன் பத்திரமாகவோ, சீட்டுப் பத்திரமாகவோ பங்குப் பத்திரமாகவோ தருகிறுர். அதற்கு ஈடாக நாம் அவருக்கு டொலர் பணத்தைக் கொடுக்கிறேம். அவர் அதனை அமெரிக்காவிலே கணக்கிற் போட்டோ அமெரிக்க வங்கியிலே போட்டோ, அமெரிக்கக் கடன்பத்திரத்திற் போட்டோ வைப்பாராளுல், தேறிய மூலதனப் போக்கு இல்லாமலிருக்கிறது. அவருடைய ஐ. ஓ. யூ. எம்மிடமிருக்கிறது. நாம் கொடுத்த சில தஸ்தாவேஜுகள் அவரிடமுண்டு. வியாபாரநிலைக்குறிப்பின் மூலதனப்போக்குப் பிரிவில் இவை ஒன்றுக்கொன்று சமனுயிருக்கும். ஆனுல் இந்தப் பற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கடன்காரர் நமக்கு அனுப்பும் பண்டம் பணி என்பவற்றை (அல்லது தங்கத்தை) இறக்குமதி செய்தால், அப்போதுதான் நிசமான நிதிமயமான மூலதனப் போக்கு நிகழ்கிறது.

வட்டி கொடுக்கவேண்டிய சமயம் வரும்போது கடன் பெற்ற வெளிநாட்டார் வட்டிக்குச் சமமான மேலதிக ஏற்றுமதியை எங்கள்

படிப்பகம்

www.padippakam.com



நாட்டுக்கு அனுப்பவேண்டும். அப்போது நமது வியாபார நிலைக்குறிப்பிலே இறக்குமதி மேலதிகம் காணப்படும். இது காணத் தெரியாத வரவு இனத்திலுைம் வட்டி, ஆதாயப்பங்குகளாலும் சமநிலைப்படுத்தப்படும்.

இறக்குமதிக்கு அதிகமாக நாம் ஏற்றுமதி செய்தால் அதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டுமா, துக்கப்படவேண்டுமா? நம் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டமில்லாவிட்டால் நமது சுபீட்சத்துக்கு அவசியமான பண்டங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதைப்பற்றித் துக்கப்படுவோம். இப்போதைய இந்த நட்டத்தை வருங்காலத்தில் இறக்குமதி செய்யும் பண்டங்கள் ஈடு செய்யுமானுல் அது ஒரு ஆறுதலாயிருக்கும். ஆனுல் எதிர்காலத்திலே இந்த முதலீட்டினுல் வட்டியோ முதலோ கிடைக்க மாட்டாதெனக் காண்போமானுல் இந்த மூலதனப் போக்கு நல்லதன்றெண முடிவு செய்யலாம்.

ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் இறக்குமதிகளே ஒரு நாட்டின் சுபீட்சத்துக்கு ஏற்றவை; ஏற்றுமதிகளன்றென ஜோன் ஸ்டுவேட் மில் வலியுறுத்திஞர். இரண்டாவது மகாயுத்தத்துக்கு முன்னர் பல நாடுகள் பூரண வேலையுடைமையை நல்ல வகையிலே நிலை நாட்ட முடியாதிருந்தபடியால், ஏற்றுமதிகள் நல்லதென நினைத்தனர். பழைய பொருளியலாளரின் மூலாதாரமான கொள்கைகளைப் பெறுமதியுடையன ஆக்குவதற்குச் சரியான வகையில் பணக்கொள்கைகளையும் அரசிறை சம்பந்தமான கொள்கைகளையும் சரிப்படுத்தினுல் முடியுமென்பதை நாடுகள் இன்று உணர்ந்து வருகின்றன.

**சுருக்கம்.**

பண்டங்களை வெளிநாடுகளிருந்து வாங்குவதற்கும் அவற்றுக்கு விற்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணி வீதமொன்று இருநாடுகளின் நாணயங்களிடையிலும் அவசியம். சுதந்தரமான செலாவணி விகிதம் தினசரி சப்பிளை தேவை என்பவற்றுல் நிச்சயிக்கப்படுகிறது. தங்க நாணயத்திட்டத்துக்குள் அடங்கிய இரண்டு நாடுகள் திரமான வெளிநாட்டுச் செலாவணி வீதத்தை உடையன. அந்த விகிதத்திலே தான் தங்கத்தை வாங்கியும் விற்றும் வருகிறுர்கள். (இதைப்பற்றிய விரிவான ஆராச்சியை அனுபந்தத்திலே காணலாம்.)

2. சர்வதேச வர்த்தக நிலைக்குறிப்பு வெளிநாட்டுச் செலாவணியை நாம் பயன்படுத்தும் விவகாரங்களையும், வெளிநாட்டுச் செலாவணி நமக்குப் பயன்படும் வகைகளையும் குறிப்பிடுகிறது. அது நமது பண்டம் பணிகள் மொத்த ஏற்றுமதிகளை நமது இறக்குமதிகளோடு கணக்கிடுகிறது. நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பண்டம், பணி, தங்கம், ஐ. ஓ. யூ. என்பவை வரவுகள். இவற்றுல் நமக்கு வெளிநாட்டு நாணயம் கிடைக்கிறது. நாம் இறக்குமதி செய்யும் அத்தகைய அமிசங்கள் நமது பற்றுக்கள். அவை நாம் வெளிநாட்டு நாணயத்தை எவ்வளவு செலவு செய்கிறுேமென்பதைக் காட்டும்.

33—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



3. நடப்புக் கணக்கிலுள்ள தேறிய மீதி நமது வர்த்தகச் சரக்கு வியாபாரத்தினால் கண்ணுற் காணமுடியாத அமிசங்களுக்குக் கிடைக்கும் வியாபாரப் பாக்கியாகும். அத்துடன் நமது அரசாங்கத்தின் ஒரு தலைச் சார்பான உதவித் திட்டங்களும் அடங்கும். இதுவும் தேறிய நெடுந்தவணை மூலதன இயக்கமும், தங்கம் ஏற்றுமதி செய்வதாலும், குறுந்தவணை மூலதனப் போக்குகளினாலும் சமன் செய்யப்படும்.

4. ஒரு தேசமானது இளமையான வளர்ச்சி நிலையில் கடனாளியாயிருந்து பின்னர் முதிர்ந்து கடன் கொடுப்பவனாக மாறும். அதனுடைய வியாபார நிலைக்குறிப்பும்" "நடப்புக்கணக்கு மீதியும்" பலபடியான கட்டங்களை அடையும்.

5. தேசங்களின் கைத்தொழில் வளர்ச்சியில் மூலதனப்போக்கில் நிசமான தன்மையும், பணமயமான தன்மையும் விளைவுகளையுண்டாக்கும். இதை விளங்கிக்கொள்வது மிக முக்கியம்; சர்வதேச நிதிப்பிரச்சினையில் இது போல முக்கியமானதொன்றுமில்லை.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்.**

1. சுதந்திரமானதும் திரமானதுமான வெளிநாட்டுச் செலாவணி வீதங்களை ஒப்பிடுக. ஒவ்வொன்றையும் விளக்குக.

2. சர்வதேச வியாபார நிலைக்குறிப்பிலே வரவு இனங்கள் எவை எனவும் பற்றினங்கள் எவையெனவும் குறிப்பிடுக. வாசியான வர்த்தக நிலையென்பது என்ன? நடப்புக் கணக்கு மீதி, வியாபாரப் பாக்கியிலிருந்து எவ்வாறு வித்தியாசப்படுகிறது? கண்ணுற் காண முடியாத இனங்கள் என்ற பதம் எதற்கு? குறுந்தவணை மூலதனப்போக்குக்கும் நெடுந்தவணை மூலதனப் போக்குக்கும் உள்ள வித்தியாசமென்ன?

3. இளம் கடனாளி நாடு, முதிர்ந்த கடனாளி நாடு புதிய கடன் கொடுக்கும் நாடு, முதிர்ந்த கடன் கொடுக்கும் நாடு என்பவற்றின் ஐந்தொகையைக் கற்பனையில் அமைக்க.

4. கனேடாவிலுள்ளதொரு ரயில் பாதைக் கம்பெனி இங்கிலாந்திலே கடன் வாங்குகிறது. அந்தப் பணத்தைக்கொண்டு என்ஜின் முதலிய வற்றை வாங்குகிறது. இந்த மூலதனப் போக்கினால் இங்கிலாந்து வியாபார நிலைக்குறிப்பில் எவ்விதமாற்றமுண்டாகும். பின்னர் இந்தக் கடன் வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. இதன் விளைவென்ன?

5. "வெளிநாட்டுக்குக்கடன் கொடுத்தால் யுத்தமுண்டாகும். வெளிநாட்டிலிருந்து கடன் பெற்றால் யுத்தம் பின்போடப்படும்; கட்டுப்பாடில்லாத வெளிநாட்டு வியாபாரம் யுத்தத்தைத் தடை செய்யும்." இக்கூற்றை ஆராய்க.

6. ஸ்டுவேர்ட் சேஸ் என்பவரின் பின்வரும் பொது அறிவுச் சூத்திரத்தை ஆராய்க. "ஒரு தேசமென்ற முறையில் நாம் உற்பத்தி செய்வது, நாம்

www.padippakam.com



இறக்குமதி செய்வது, என்பவற்றை நாம் ஏற்றுமதி செய்வதிலிருந்து கழித்துப்பார்க்கும்போது நமது வாழ்க்கைத் தரத்தை அளவிடலாம்."

7. பின்வரும் கருத்துக்களை மறுபடி ஆராய்க.
தங்கநாணயத்திட்டமும் கட்டுப்பாடற்ற செலாவணி விகிதமும் ; நாணயத்தின் தேய்மானம், தங்கப் பெறுமதிக் குறைவு என்பவற்றை விளக்குக.

சர்வதேச வியாபார நிலைக்குறிப்பு, வியாபாரப் பாக்கி, நடப்புக் கணக்கு, அரசாங்க உதவி இனங்கள் ; வாசியான வர்த்தக நிலை ; கண்ணுற் காணமுடியாதவை, அமெரிக்காவின் பற்றுக்குறை, தங்கப்போக்குகள், ஐ. ஓ. யூ. க்கள், மூலதனப் போக்குக்கள், தேறிய வெளிநாட்டு முதலீடு, பொருளியலிலும் அரசியலிலும் சரித்திர ரீதியான மூலதனப் போக்குக்கள், நிதி மயமானதும் நிசமானதும்,

## அனுபந்தம்: சர்வதேச நிதிபற்றிய வேறு சில தத்துவங்கள்.

செலாவணி விகிதங்கள், விலைகள், வியாபாரம் என்பன கட்டுப்பாடற்ற நெகிழ்வான செலாவணி விகிதங்களாலும், தங்கநாணயத்திட்டம், அல்லது வேறு வகையான திரமான செலாவணி விகிதம் என்பவற்றின்கீழ் நிச்சயிக்கப்படுகின்றன என்பதைப் பற்றிய ஆழமானதும் சுருக்கமானது மான ஆராச்சியே இது. விலை, வருமான மாற்றங்கள் என்பவற்றின் சமனீடாக்கும் விளைவுகளும் ஆராயப்படுகின்றன.

### கட்டுப்பாடற்ற நெகிழ்ச்சியான செலாவணி விகிதம்.

1919 துவக்கம் 1925 வரை பவுணின் விலை நாளுக்கு நாள் ஊசலாடிற்று. அது 5 டொலரிலிருந்து 3 டொலர்வரை வீழ்ந்தது. இது வெளிநாட்டுச் செலாவணிக்குள்ள தேவை, அதன் சப்பிளை, என்பவற்றின் போட்டியினல் நிச்சயிக்கப்படுகிறது. அமெரிக்கர் இறக்குமதி செய்யவோ, உல்லாசப் பிர யாணஞ் செய்யவோ விரும்பினல் பவுணின் தேவை விகிதத்தை 3 டொலரிலிருந்து 3.10 டொலராக உயர்த்தும். அமெரிக்கா வெளிநாடு களுக்குப் பணத்தை கடன் கொடுக்க விரும்பினல் (அதாவது ஐ. ஓ. யூக் களை இறக்குமதி செய்தால்) அப்போதும் இந்த நிலையுண்டாகும்.

நாம் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யும்போது இந்த வரவுவகை பவுண் சப்பிளையை அதிகரிக்கிறது. ஏனெனில் வெளிநாட்டாருக்கு டொலர் தேவைப் படுகிறது. இதனல் வெளிநாட்டுச் செலாவணியை அல்லது பவுணை விலை குறையச் செய்கிறது. அப்போது சப்பிளைக்கும் தேவைக்குமிடையே நெகிழ்ச்சி யான செலாவணி விகிதத்தை அனுசரித்துப்போர் நடக்கிறது. தரகரும் வங்கிக்காரரும் இதனை மிகக் கவனமாக அவதானித்து வருவர்.

முக்கியமானதொரு போக்கை நாம் குறிப்பிடவேண்டும். வெளிநாட்டுச் செலாவணி விலை ஏறினல் அதை அதிகம் ஏறவிடாமல் பல சக்திகள் தடை செய்துகொண்டிருக்கும். அவ்வாறே விலை இறங்கினலும் இதைத்

www.padippakam.com



ஆக வீழ்ச்சியடைந்தால், அது மேலும் வீழ்ச்சியடையலாமெனப் பலர் பயப்படலாம். எனவே அவர்கள் பவுணை விட்டுவிட்டு டொலரை நாடுகிறார்கள். குறுந்தவணை யூக மூலதன இயக்கத்தினால் பவுண்டு அதிகம் விலையாவதும் அதற்குத் தேவை குறைவதும், பவுணின் விலையை மேலும் இறக்கும். செலாவணி விகிதம் மந்தமாக மாறுதல், சில சமயம் யுத்த வதந்தியாலும் அரசியல் நிலைமை மாறுமென்ற வதந்தியாலும், செலாவணி விகிதம் ஊசலாடுமென்ற வதந்தியாலும், "சுடச்சுடப் பணம்" நாடுகளிடையே கைமாறுவதை உண்டாக்கும். இத்தகைய மூலதன ஓட்டம் ஒரு திசையில் பேரளவில் உண்டாகுமானால் செலாவணி விகிதம் குழப்பமடையும்.

## நெகிழ்ச்சியான செலாவணி வீதம்.

நெகிழ்ச்சியான செலாவணி வீதஞ்சார்பாக அதிகம் சொல்லலாம். ஒவ்வொரு நாடும். செலாவணி வீதத்தைப் பொருட்படுத்தாமல் தமது உள் நாட்டுப் பொருளியற் கொள்கைகளை நடைமுறையில் கொண்டு வரலாம். ஆனால் இதிலே சில தீமைகளுமுண்டு. மாதத்துக்குமாதம் செலாவணிவிகிதம் மாறுமானால் சர்வதேச வியாபார அளவு குறையும்; அங்குகடன் அங்கு கொடுப்பவர் கொடுக்கமாட்டார். உற்பத்தியாளர் வெளி நாட்டுச் செலாவணி வீதத்தில் ஓயாமல் ஏலவிலை கூறிக்கொண்டிராமல் தனது பொருளை உள்ளூரிலேயே விற்கவும் வாங்கவும் பார்ப்பார்.

செலாவணி வீதத்திலே உண்டாகும் ஒவ்வொரு மாற்றமும், நடைமுறையிலுள்ள ஏற்றுமதி இறக்குமதிச் சந்தையின் நிலையைக் குழப்பும்; இதனால் செலாவணி விகிதத்தில் ஊசலாட்டமுண்டாகும். திடீரென டொலர் விலை தேய்ந்தால் நமது ஏற்றுமதியாளர்க்கு உதவியாயிருக்கும்; இறக்குமதியாளர்க்குத் துன்பமுண்டாகும். டொலரின் விலை உயருமானால் இதற்கு மாறாக நடைபெறும். இதனால், வேலையின்மையும், திடீர் இலாப நட்டங்களும், திரமற்ற நிலைமையும் உண்டாகும்.

இந்தக் கண்டனங்களுக்குக் கட்டுப்பாடற்ற செலாவணி வீதத்தை ஆதரிப்போர் பின்வருமாறு பதில் கூறுவர் :—" வியாபாரம் சமன்பாடு அடையாவிட்டால் யாராவது ஒருவர் சில சரிப்படுத்தல்களைச் செய்யவேண்டும். இது செலாவணி வீத வீழ்ச்சியால் உண்டாவது நல்லது. ஏனெனில் அது ஏற்றுமதிகளைத் தூண்டி இறக்குமதிகளைத் தடைசெய்யும்; முழுப் பொருளாதாரத்திலும் மறைமுக விளைவுகளை உண்டாக்காது. இதிலுஞ் சிறந்த வழி அரசாங்கம் இறக்குமதிமீது கட்டுப்பாடுகளையும், கட்டுப்பாட்டு வீதங்களையும் விதிக்கலாம். அதனிலும் சிறந்த வழி செலாவணி வீதங்களைத் தற்காலிகமாகத் திரப்படுத்தாமல், அதை இன்று விழவிடலாம். அதனால் ஊகவியாபாரிகளெல்லாரும் அது போகுந்திசையை அறிந்து, அது விலை மதிப்பையிழக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தச் செய்யவேண்டியதையெல்லாம் செய்ய அவர்களுக்கு அவகாசமளிக்கலாம்".

[1]. ஊக வியாபாரம் சம்பந்தமாக அத்தியாயம 23 இல் அனுபந்தம் பார்க்க.

www.padippakam.com



**திரமான செலாவணி வீதங்கள்.**

கட்டுப்பாடற்ற சுதந்திரமான செலாவணி வீதத்துக்குப் பதிலாக திர
மானதொரு வீதத்தை அனுசரித்துப் பொருளாதாரம் தன்னைச் சரிப்
படுத்திக்கொள்ளக்கூடியதொரு கொள்கையை அரசாங்கம் மேற்கொள்ள
லாம். இதனை இலேசாகச் செய்வதானால் சட்டம் செய்யவேண்டியதில்லை.
வீதத்தைத் திரமாக வைத்துக்கொள்வதற்காக வெளிநாட்டுச் செலா
வணிக்குப் பெரிய சப்பிளை செய்யவோ. அதற்குத் தேவை உண்டாக்கவோ
செய்யலாம். வழக்கமாக அரசாங்கங்கள் இதனைச் "செலாவணித் திரப்
படுத்தும் நிதிகள்" மூலம் செய்கின்றன. பெல்ஜிய பிராங்குகளின் டொலர்
விலையை திரப்படுத்துவதற்கு எந்த ஒரு தனவந்தனும் விரும்புவான்
என்பதில் ஆச்சரியமில்லை. அவனே, அரசாங்க நிதியோ இந்த விடயத்தை
ஆரம்பிக்கும்போது பெருந்தொகையான டொலர், பெல்ஜிய பிராங்கு
என்பவற்றோடு ஆரம்பிக்கவேண்டும். (அல்லது கோதுமை அல்லது தங்கம்
முதலிய பண்டங்கள் என்பவற்றோடும் ஆரம்பிக்கலாம்) பின்னர் பிராங்கின்
விலையைத் திரப்படுத்த அவன் தனது தரகரிடம், விலை வீழ்ச்சியடையுமானால்
டொலரைக் கொடுத்து பிராங்கை வாங்குமாறும், விலை கூடுமானால்
பிராங்கை டொலருக்கு விற்குமாறும் கட்டளையிடுவான். அவனிடம் போதிய
அளவு பிராங்கும், டொலரும் இருக்குமானால், குறிப்பிட்ட தொரு டொலர்
விலையிலே அவன் பிராங்குகளை வாங்கவும் விற்கவும் தயாராயிருப்பானானால்,
அந்த மட்டத்திலே பிராங்கு டொலர் செலாவணி வீதம் மாறாமலிருக்கும்.

கோடீஸ்வரன் கூட இந்த வியாபாரத்தை அதிக நாள் செய்யமாட்டான்.
அரசாங்கமோ, சர்வதேசப் பணநிதியோதான் இதைச் செய்யும், ஆற்றல்
வாய்ந்தவை. ஆனால் எவ்வளவு பலமுள்ள அரசாங்கமானாலும், எப்
பொழுதும் ஒரு திரமான செலாவணி வீதத்தை நிலை நிறுத்த முடியாது.
ஆனால் அது விலைகள், செலவுகள், வேறு விடயங்கள் என்பவற்றைப்
பயன்படுத்தி, திரப்படுத்தப்பட்ட நிலையான வீதத்திலே செலாவணிக்குத்
தனிப்பட்டவரின் சப்பிளை தேவை என்பவற்றைச் சமநிலையில் வைத்திருக்க
முடியுமானால், இதைச் செய்யலாம். இல்லாவிட்டால் ஓர் இன நாணய
உடைமைகள் முழுதும் வற்றிவிடும். அதனால் செலாவணி வீதத்தை
நிலையாக வைத்திருக்க முடியாதுபோய்விடும்.

"போலிச்-சுயத்தங்க நாணயத்திட்டம்" தான் செலாவணி வீதங்களைத்
திரப்படுத்தவும், சர்வதேச வியாபாரத்தைச் சுமூகமாக்கவும் பயன்படுத்தப்
பட்ட முக்கியமான முறையாகும். இது சரித்திர ரீதியான முறை.

**தங்க நாணயத்திட்டத்தின் செயற்பாடு**

ஒரு நாடு தங்க நாணயத்திட்டத்திற் சேர்வதானால் எவரையும் கலந்தா
லோசிக்கவேண்டியதில்லை. அந்நாட்டின் திறைசேரி இரண்டு விடயங்களைச்
செய்யவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



(1) குறிப்பிட்ட ஒரு விலைக்கு அதாவது ஓர் அவுன்ஸ் 35 டொலருக்கு (அமெரிக்க திறைசேரி விடயமாக 1961 இல்) வாங்கக் கூடியதாயிருக்க வேண்டும்.

(2) அதே விலையில் எவருக்கும் தங்கத்தை விற்கக்கூடியதாயிருக்க வேண்டும். விளைவு : இந்த தங்கசாலைச் சமநிலை விலையிலே தங்கத்தின் டொலர் விலை பூரணமாக திரமான நிலைமையை அடைகிறது.

தனியொரு நாட்டைப் பொறுத்தவரையில் அவ்வளவுதான். அப்போது வெளிநாட்டுச் செலாவணி வீதம் எங்கே வருகிறது ? இரண்டாவது நாடொன்று (உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவோடு பிரிட்டனும் சேர்ந்தால்) தங்கத்திட்டத்தில் புகுந்தால் பவுண்கணக்கிலே தங்கத்தின் விலை நிலைபெறுகிறது. கணக்கை இலேசாகச் செய்வதற்காக 2.80 டொலர் பவுணை எடுக்காமல் 3 டொலர் பவுணை எடுப்போம்.[1] ஒரே பொருளுக்குச் சமமான பல பொருள்கள் தம்முட் சமமானவை என்ற உண்மையைக் கைக்கொள்வோம். ஒரு டொலர் 1/3 அவுன்ஸ் தங்கம் உடையதானல் ஒருபவுண்டின் விலை டொலர் கணக்கிலே 3 டொலராகும். இது வெறும் கணிதப் பிரச்சினையன்று ; வியாபாரவிடயம். பிரிட்டனிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பத் தங்கத்தை வாங்குவதானல் நான் 3 டொலருக்கு மேலே கொடுக்கமாட்டேன். ஏன் ? ஏனெனில் நான் அமெரிக்க திறைசேரியிலிருந்து 3/35 அவுன்ஸ் தங்கத்தை மூன்று டொலருக்கு வாங்கி விடலாம். இதை நான் இலண்டனுக்கு அனுப்பினல் எனக்கு ஒரு பவுண் நோட்டுக் கிடைக்கும். ஆங்கிலேயன் பவுணை 3 டொலருக்குக் குறைய ஏன் கொடுக்கமாட்டான் என்பதற்குரிய நியாயத்தை நீர் தீர்மானித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நாட்டு நாணயமும் தங்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இதனல் நாடுகள் ஒன்றோடொன்று குறித்த ஒரு செலாவணி வீதத்திலே இணைக்கப்பட்டுள்ளன. ஆனல் ஒரு சிறிய நிபந்தனையுண்டு. அதாவது நியூயோக்கிலிருந்து இலண்டனுக்கு இந்தத் தங்கத்தைக் கப்பலிற் கொண்டு போவதற்கு இரண்டு சதம் கூலியாகவும், காப்புறுதியாகவும் வட்டியாகவும் விதிக்கப்படுகிறது. இது அமெரிக்க தங்க ஏற்றுமதிப் புள்ளி எனவும் (பிரிட்டிஷ் தங்க இறக்குமதிப்புள்ளி) எனவும் வழங்கப்படும். எனவே பிரிட்டிஷ் தங்க ஏற்றுமதிப்புள்ளி 2.98 டொலர் எனவும், செலாவணி வீதம் 3 டொலருக்கும் இதற்குமிடையில் ஊசலாடிக்கொள்ளலாமெனவும் நீர் காட்டலாம்.

## சமநிலைப்படுத்தும் நாணய ஓட்ட–விலைத் தொழிற்பாடு

இதுவரை செலாவணி நடைமுறை பூரணமாகஎந்திரப் போக்குடையதாயிருந்ததைக் கண்டோம். ஒரு நாட்டின் தங்க ஏற்றுமதிப்புள்ளிக்கு

[1]. 1961 விலையான $12\frac{1}{2}$ (ஓர் அவுன்ஸ்) ஐ விட்டு ஐக்கியராச்சியம் தங்கத்தை 35 ÷ 3 பவுண்டு 11 2/3 டொலர் ஓர் அவுன்சை வாங்கி விற்கிறதெனக் கொல்வோம். (மத்திய வங்கித் தரகை விட்டுவிடுக).

www.padippakam.com



செலாவணி விகிதம் எப்பொழுதும் செல்வதையும் அந்த ஒரு பக்கப் போக்கினுல் அந்நாட்டிலுள்ள தங்கமெல்லாம் செலவாகி அந்நாடு தங்கத் திட்டத்திலேயில்லாமற் போவதையும் என்ன தடுக்கப்போகிறது.? இதற்கு ஸ்கொத்துலாந்து தத்துவ ஞானியான டேவிட் ஹியூம் 2 நூற்றுண்டுக்கு முன்னர் விடை கூறினுர். இந்த நிலை தானே சுயமாகச் சரியாகிவிடும் என்பது அவருடைய கோட்பாடு. அமெரிக்கர் இறக்குமதிக்குக் குறைவாக ஏற்றுமதி செய்கிறேமேயென்று அச்சங்கொள்ளத் தேவையில்லை. தாம் தங்கத்தையோ நாணயத்தையோ இழக்கிறேமேயென்றும் அவர்கள் துக்கப் படத் தேவையில்லை.

ஏனெனில்

(1) இங்கிலாந்துக்குச் செல்லும் தங்கம் இங்கிலீஷ் பணத்தை அதிகரிக்கும். (2) இங்கிலீஷ் பணம் அதிகரித்தால் (பணம், விலை என்பவற்றின் தொகைக்கோட்பாட்டின்படி) இங்கிலாந்திலே பணவீக்கமுண்டாகி விலைகள் ஏறும். (3) மேலும் அமெரிக்காவிலிருந்து தங்கம் வெளியேறினுல் அமெரிக்காவில் பணம் அருந்தலாகும். (4) தொகைக்கோட்பாட்டின்படி விகிதாசாரப்படி விலைகள் வீழ்ச்சியுறும். இந்த நாலுபடிகளின் பயனுகவும் தங்க வெளியேற்றம் தானுகவே ஒன்றையொன்று திருத்திக்கொள்ளும். (5) பிரிட்டிஷ் விலைகள் எமது விலைகளிலும் பார்க்க அதிகமாயிருப்பதால் பிரித்தானியர் எமது ஏற்றுமதிகளை அதிகம் வாங்குவர். (6) எங்கள் நாட்டிலே விலை குறைவாயிருப்பதால் அவர்களுடைய இறக்குமதிகளைக் குறைவாகவே வாங்குவோம். எனவே நிலைமை சுயமாகவே திருத்தமடையும். தங்க ஓட்டத்தினுல் பிறந்த ஒப்பியல் விலை மட்டத்து மாற்றங்கள் வாய்ப்பில்லாத வியாபாரப் பாக்கியைச் சரிப்படுத்தும்; அத்துடன் ஒரு தலைப்பட்சமான தங்க ஓட்டம் மிகுதூரம் செல்வதற்கு முன்னர் தடை செய்து விடும். இக்காரணத்தைக் கொண்டே இதையிட்டுச் சஞ்சலப்படத் தேவையில்லையென ஹியூம் கூறினுர். இன்று இதைப்பற்றி நாம் அத்துணை உறுதியாகக் கூறமுடியாது. இங்கிலாந்து பணவீக்கத்தை விரும்பாது. பணவாட்டத்தை அமெரிக்கா விரும்பாது. அதுவும் தங்க நாணயத் திட்டமென்ற பூதத்தின் ஆணைப்படி.[1]

1. சர்வதேசத் தேவைகள் நெகிழ்ச்சியுள்ளனவாயிருப்பதைக் காட்டிலும் நெகிழ்ச்சியற்றன வாயிருந்தால், சார்பு விலைமாற்றங்கள் நிலைமையை மோசமாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளு முண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களிலே அமெரிக்க ஏற்றுமதிப் பண்டங்களின் விலையைக் குறைப்பதால் நமது விற்பனை அதிகரிக்கமாட்டாது. அதனுல் நமது டொலர்களுக்கு இங்கிலீஷ் காரர் சொற்ப தொகையான பவுண்களையே வழங்குவர். இவ்வாறே பிரிட்டிஷ் பண்டங்களுக்கு அமெரிக்காவில் அவசர தேவையும், நெகிழ்ச்சியற்ற தேவையுமிருந்தால் பிரிட்டிஷ் விலைகளை உயர்த்துவதால் நாம் அதிக பவுணைக் கேட்போமேயொழியக் குறைவாகக் கேட்கமாட்டோம். டொலர் மதிப்புத் தேய்ந்தால் விலை விளைவு விபரீதமானதாய்ப் போகுமேயன்றிச் சமனீடாக்கக் கூடியதாயிராது. டொலரின் மதிப்பு மேலும் இறங்கும்; தேவைகள் நெகிழ்ச்சியுடையன வாயிருக்கும்வரை அவ்வாறிருக்கும். இவ்வாறு நாணயமதிப்பேற்றம் நாட்டின் இறக்குமதிப் பற்ருக்குறையை நீக்கிவிடும்.

www.padippakam.com



அன்றியும் ஹியூம் காலத்துக்குப் பின்னர் வங்கித் தொழிலும் நிதி விடயங்களும் மிகச் சிக்கலாகிவிட்டன. இன்று தங்கநாணயம் நமது பணச் சப்பிளையின் முக்கிய அமிசமன்று. அதனால் இந்தத் தொழிற்பாடு தானுகச் சரிப்படமாட்டாது. திறைசேரியும் பெரிய வங்கியுமே தங்க நாணய விதிகளை அனுசரிக்க வேண்டிய தாபனங்களாகின்றன. தங்கம் வெளியே போகுமானல் நாம் அதற்குத் தடைபோடவேண்டும். வரிகளை செலவினத்துக்கு ஒத்தாற்போல் உயர்த்த வேண்டும். தனிப்பட்டோரின் முதலீட்டை உற்சாகப்படுத்தக்கூடாது. இதனை "கழிவு", வட்டிவீதம் என்பனவற்றை ஏற்றுவதனுல் செய்யலாம். வங்கி ரிசர்வ்களைக் கட்டுப்படுத்த பெடரல் ரிசர்வ் வெளிச் சந்தைக் கடன்பத்திர விற்பனைகளை உண்டாக்கலாம். சட்டபூர்வமான ரிசர்வ் விகிதங்களைக் கூட்டிச் சம்பளம், விலை என்பவற்றை ஏறவிடாது தடுக்கலாம். செயற்கையாகவே வியாபார மந்தத்தையும் பண வாட்டத்தையுமுண்டாக்கவேண்டும்.

தங்கத்தைப் பெறும் நாட்டில் அனுசரிக்கவேண்டிய பணவீக்க நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். முதலாவது மகாயுத்தம் முடிந்தபின்னர் நாடுகள் தங்க நாணயத்திட்ட விதிகளை உதாசீனம் செய்தது எதனுல் என்பதையும் எவ்வாறு என்பதையும் அப்போது அறிந்து கொள்ளலாம். பண வீக்கம், பண வாட்டம் என்பவற்றைத் தவிர்ப்பதற்கே. ஆனுல் அதனுல் உண்டான பயன், தங்கம் ஒரு முகமாகச் செல்வதைச் சீர்ப்படுத்தவில்லை. அதனுல் தங்க நாணயத்திட்டம் முறிவுற்றது.

விதிகளை நாடுகள் வேண்டுமென்று மீறவில்லை. முறிவுக்கு ஒரு காரணம், தங்க நாணயத்திட்டம் நல்லகால நிலையிலேயே செயற்படுவதொன்ருதலால் அதிக பளுவில்லாத சந்தர்ப்பங்களிலேதான் அது நன்ருகச் செயற்படும். 1914 இன் பின்னர் தேசங்களிலே அரசியல் மாற்றங்களுண்டாயின. அத்துடன் மூலதனங்கள் ஒழுங்கற்ற முறையிலே இயங்கின. இவற்ருல் தங்க நாணயத்திட்டத்தின்மீது அதிக பளு ஏற்றப்பட்டது.

பொருளியல் நோக்கின்படி, ஹியூமினுடைய கொள்கைபற்றி இன்று நாம் அதிகம் சந்தோஷமடைவதற்கில்லை. 1958-1960 இல் ஐக்கிய அமெரிக்கா தங்கத்தை இழந்துகொண்டு வந்தது. மேற்கு ஜெர்மனிக்கு அத் தங்கம் போய்க்கொண்டிருந்தது. இதனுல் பணம் இங்கே குறைந்து அங்கே அதிகரித்ததா ? பெடரல் வங்கி இங்கே பணம் போதிய அளவு குறைந்து போகாமல் நடவடிக்கை எடுத்தது. ஏனெனில் எங்கள் நாட்டிலே அப்போது 5 சதவீதமோ அதற்கு அதிகமாகவோ வேலையின்மையிருந்து வந்தது. ஜெர்மனி தனது ஏற்றுமதியின் விலைகளை உயர்த்தி நாட்டில் தங்கம் சேர்வதைத் தடுத்தது. 5 சதவீத வேலையின்மை இருந்த போதும் எமது செலவும் விலைகளும் உயர்ந்தன. சொற்ப தங்கக் கழிவோடு நிலைமை மாறுவதற்குப் பதிலாக எமது தங்கப் பிரச்சினையும் வர்த்தக நிலைக்குறிப்புப் பிரச்சினைகளும் இருந்தபடியே இருந்தன.

www.padippakam.com



**வருமான விளைவும், " வெளிநாட்டு வியாபாரப் பெருக்கியும் "**

முன்னே காட்டிய காரணங்களின் நிமித்தம் தங்க நாணயத்திட்டம் முறிவடைந்து எப்பொழுதோ திரஸ்கரிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஹியூமின் தத்துவத்திலே கற்பனை செய்துகூடக் காணமுடியாத எதிர்ச் சமன் நடைமுறையொன்று அதனைத் தடைசெய்தது. இரண்டு நாடுகளிலும் ஏற்படக்கூடிய வருமான மாற்றங்கள் சமநிலையைக் கொண்டுவரும் எனச் சமீப காலப் பொருளியலறிஞர் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

உதாரணமாக 1960 இல் வெளிநாடுகளிலே வருமானம் அதிகரித்தது. நாட்டிலே வருமானம் குறைந்தது. அதனால் நாம் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் பண்டங்கள் அதிகரித்தன. அங்கிருந்து எம்நாட்டுக்கு இறக்குமதியாகும் பொருள்கள் குறைந்தன. இது நமது சர்வதேசப் பற்றுக்குறைப் பிரச்சினைகளுக்குச் சகாயமளித்தது. இந்த வருமானத்தில் ஒரு பகுதி இறக்குமதிப் பண்டங்கள் சிலவற்றைப் பெற உதவும். எனவே (1) ஏற்றுமதி அதிகரித்தால், வருமானத்தின் வழியாக இறக்குமதியும் நேரடியாக உயரும். இது விலைகளை அனுசரியாமலே நடக்கும். (2) நமது வருமான அதிகரிப்பிலேயுள்ள பெருக்க விளைவுகளைப் பூரணமாக ஆராய்ந்தால், இறக்குமதியில் உண்டான தூண்டல் அதிகரிப்பு ஏற்றுமதியின் மூல அதிகரிப்புக்குச் சமனற்றதென்பதையும், ஒரு பகுதியே சமனுடையதென்பதையும் அறியலாம். விலைகளோ, செலாவணி வீதமாற்றங்களோ சமநிலையை மறுபடி கொண்டுவருதற்கு ஓரளவு அவசியமிருப்பதை உணரலாம். இதன் விபரம் பின்வருமாறு :—

வெளிநாட்டு வியாபாரம் சம்பந்தமான பெருக்கி ஆராய்ச்சியைப் பார்ப்போம். புதிய உள்நாட்டு முதலீடுகள் வேலைகளையும், வருமானத்தையுமுண்டாக்கும். இப்புதிய வருமானத்தைச் செலவு செய்தலும், திருப்பிச் செலவு செய்தலும், இரண்டாந்தரப் பெருக்கி விளைவுகளை உண்டாக்கும். புதிய ஏற்றுமதிகளும், உற்பத்தி, விலைகள் என்பவற்றின் மீதும் அதே விதமான பெருக்கி விளைவுகளை உண்டாக்கும். அவை வருமானத்தை நேரடியாக அதிகரிக்கின்றன. அத்துடன் மேலும் செலவு செய்தல், திருப்பிச் செலவு செய்தல் என்பவற்றையும் செய்கின்றன.

உதாரணமாக, நியூ இங்கிலாந்திலுள்ள எந்திரசாதன உற்பத்திச்சாலைகளிலேயிருந்து 1 பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகளுக்குக் கட்டளை பிறந்தால், 1 பில்லியன் டொலர் பெறுமதியான பிரதம தொழில்களும் வருமானங்களுமுண்டாகும். அப்போது தொழிலாளரும் உடைமையாளரும் இப்புதிய வருமானத்திலே மூன்றில் இரு பகுதியை இந்தியானா, கலிபோர்னியா போன்ற தேசங்களில் உற்பத்தியாகும் நுகர்வுப் பொருள்களிலே செலவு செய்வர். இந்த மேலதிக வருமானததிலே மூன்றிலிரு பகுதி, மறுபடி திருப்பிச் செலவு செய்யப்படுகிறது. இந்த நடைமுறை எப்போது முடிவுக்கு வரும் என்றால் $3 = 1 + 2/3^2 + \ldots = 1/(1-2/3)$ அளவு 1 பில்லியன் டொலர் அல்லது 2 பில்லியன் டொலர் இரண்டாந்தர

www.padippakam.com



நுகர்வுச் செலவுடன் 1 பில்லியன் டொலர் பிரதம செலவு இருக்கும் போது இது முடிவுக்குவரும்.

இந்தப் படத்திலே ஏற்றுமதிப் பெருக்கல் விளைவுகளைப் புகுத்துவதோடு சர்வதேச வர்த்தகம் மற்றொரு முக்கிய விளைவையும் உண்டாக்கிறது. நமது தேசிய வருமானம், நமது இறக்குமதிகளையும் அதிகரிக்கச் செய்யும். எப்படி ? ஒவ்வொரு மேலதிக டொலரிலும் 1/12 இனால் அதிகரிக்குமென, வைத்துக்கொள்வோம். இதன் அர்த்தமென்ன ? மேலே காட்டிய உதாரணத்திலும் பார்க்க மிக விரைவாக நமது ஊக்கப்படுத்திய வாங்குஞ் சக்தி கரைந்துபோகும். ஒவ்வொரு படியிலும், இந்த இறக்குமதிகள், இறுதி நிலைச் சேமிப்பு நாட்டம்போல " ஒழுகிகளாகச் " செயற்படும்.[1]

எனவே முதலில் நாம் கண்ட 1 பில்லியன் டொலர் ஏற்றுமதித் தொழில் வருமானத்திலே 7/12 (=2/3−1/12) தான் 8/12 க்குப் பதிலாக அமெரிக்க நுகர்வுப் பண்டங்களிலே (இந்தியானா, கலிபோர்னியா முதலிய நாட்டவை) திருப்பிச் செலவு செய்யப்படும். இஃது ஒவ்வொரு படியிலும் இவ்வாறே நடைபெறும். முழுப் பெருக்கியும் இப்போது $1+7/12\,(7/12)^2+\ldots$ ஆகும். அல்லது $2\frac{2}{5} = 1 \div (1-7/12) = 1 \div 5/12$ ஆகுமன்றி 3 ஆகாது. இது எதனாலென்றால், ஊக்கப்படுத்தப்பட்ட 2 2/5 பில்லியன் மேலதிக டொலரின் 1/12 அல்லது 1/5 பில்லியன் டொலர் (இச்சந்தர்ப்பத்தில்) மேலதிக இறக்குமதிக்காக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுவதால்.

நமது பெருக்கிச் சூத்திரங்களைப் பார்த்தால் இஃது ஒரு பொது விதியென்பது தெரிகிறது. வருமானத்திலே ஒரு பகுதி ஒவ்வொரு கட்டத்திலும் உள்நாட்டுச் சேமிப்புக்குள்ளே வந்துசேர்ந்துவிடுவதால், புதிய ஒரு டொலர் ஏற்றுமதி, முழு டொலர் பெறுமதியான புதிய இறக்குமதியை உண்டாக்கக்கூடிய அளவுக்கு வருமானத்தை உயர்த்தமாட்டாது.[2]

1. வெளிநாட்டு வியாபாரம் பெருக்கி ஆராய்சியை ஒரு சிறியநகருக்கோ நாட்டுக்கோ பயன்படுத்திப் பார்த்தால் அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர் மீதுள்ள இரண்டாந்தரப் பெருக்கி விளைவுகள் சொற்பமாயிருப்பதைக் காணலாம். ஏனெனில் மேலதிக வருமானங்களிற் பெரும்பாலானவை வேறுபகுதிகளுக்கு ஒழுகிவிடுகின்றன.

2. மேலதிக டொலர் ஒவ்வொன்றும், மூன்று சினையாகப் பிரிக்கப்படுகிறதெனக்கொள்வோம். $c$ அமெரிக்க நுகர்வுப் பொருள்கள் $b$ வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அமெரிக்காவுக்குள்ள நாட்டம் எஞ்சிய பொருள் சேமிப்பிலே சேர்தல். ஏற்றுமதிகள் 1 அலகினால் உயரட்டும். அப்போது நமது வருமானம் $1/(1-c)=1/(b+a)$ இனால் உயருமெனப் பெருக்கினால் அறியலாம். இந்த மேலதிக வருமானத்தை சினையினால் பெருக்கினால் $b/(b+a)$ என்ற ஊக்கி இறக்குமதி கிடைக்கும். இது ஆரம்பத்திலிருந்த புதிய ஏற்றுமதிகளிலும் குறைவாகவேயிருக்கும். எவ்வளவுக்கென்றால் $a$ ஐச் சேமிப்பதற்குள்ள இறுதி நிலை நாட்டம் நேர்க்கணியமாயிருக்கும் அளவுக்கு, ஊக்கப்படுத்தப்பட்ட உள்நாட்டு முதலீடு ஏதுமிருந்தால் அதனை $c$ உடன் சேர்க்கலாம். அப்போது நமது பயன் நேர்க்கணிய " ஒழுகல் " $a$ உடன் சேர்ந்த நிலையான அமைப்புக்கு ஏற்றதாக நமது விளைவு இருக்கும்.

www.padippakam.com



## சர்வதேச நிதிச் சமநிலையும், நிசச் சமநிலையும்.[1]

முதலாவதாக நிசமான ஒப்பியல் நயம்பற்றிப் படித்தபின்னர் அல்லது வர்த்தகப் பண இருப்பு நிலைபற்றிப் படித்த பின்னர் வர்த்தகக் கோட்பாடு களைப் படிக்கலாம். ஐந்தாம் பிரிவின் முதலிரு அத்தியாயங்களை எந்த ஒழுங்கிலே படிப்பதானாலும், நிச அமிசங்களும் பண அமிசங்களும் எவ் வாறு ஈற்றிலே ஒற்றுமைப்படுத்தப்படலாமென்பதை இந்தப் பகுதி காட்டும். 965 ஆம் பக்கத்திலுள்ள ரிக்காடோவின் ஒப்பியல் நயம்பற்றிய அட்டவணை 1 ஐப் பார்க்க. உணவு உடை என்பவற்றின் ஒவ்வோர் அலகுக்கும் அமெரிக்காவில் 1, 2, தொழிலாளர்நாள் முறையே தேவைப்படும். திறமை குறைந்த ஐரோப்பாவிலே 3, 4 தொழிலாளர்நாள்கள் முறையே தேவைப்படும். உணவு விடயத்திலே அமெரிக்கத் தொழிலாளர் ஐரோப் பியரிலும் மூன்று மடங்கு அதிக உற்பத்தியைச் செய்வர். துணி விடயத் திலே இரண்டு மடங்கு அதிகம் உற்பத்தி செய்வர். போட்டியிலே அமெரிக் காவில் நிசச் சம்பளம் ஐரோப்பாவிலும் பார்க்க 2, 3 மடங்கிற்கிடையில் அதிகமாகும். இந்த இடை எங்கே? இது ரிக்காடோவின் அட்டவணையி லன்று, தேவை நிலைமைகளிலேதான் தங்கியுள்ளது.[2]

இலக்கங்கள் மூலம் இந்த நடைமுறையை விளக்கலாம். செலாவணிவீதம் பவுணுக்கு 3 டொலராயிருக்கட்டும். அமெரிக்கச் சம்பளம் ஒரு நாளுக்கு 15 டொலர் (5 பவுண்) ஆக இருக்கட்டும். ஐரோப்பியச் சம்பளம் 2 பவுண் (6 டொலர்) ஆக இருக்கட்டும். அப்போது உணவின் விலை, அது என்ன குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படுமோ அதற்குச் சமனுயிருக்கும். ஏனெனில் அங்கேதான் இந்தச் செலவு குறைந்ததாய்க் காணப்படும். எனவே அமெரிக்கச் செலவு என்னவோ அந்த விலைக்கே உணவு எங்கும் விற்பனையாகவேண்டும். அதாவது அமெரிக்காவிலே 15 டொலர், ஐரோப்பாவிலே 3 1/3 பவுண். ஐரோப்பாவிலே தான் துணியானது மிகக் குறைந்த செலவான 8 பவுணுக்கு (24 டொலர்) க்கு உற்பத்தி செய்யப்படு கிறது. எனவே உலகவிலை 8 பவுணகவேயிருக்கும். இவற்றையெல்லாம் இலக்கங்களிலே பரீட்சித்துப்பார்க்கலாம். (1, 2, 3, 4 என்பவற்றை அட்டவணை 1 இல், அத்துடன் சம்பளம், செலாவணி விகிதங்களோடும் ஒப்பிடலாம். ஒவ்வொரு நாடும் இந்த வகையில் தாமே உற்பத்தி செய்வ திலும் பார்க்கக் குறைந்த விலையிலே இறக்குமதியைப் பெறலாம் என்பதை யும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்).

1. அடுத்த அத்தியாயத்திலேயுள்ள ஒப்பியல் நயம்பற்றிய ரிக்காடோ கோட்பாட்டைப் படித்த பின்னர் இப்பகுதியைப் படிக்க.

2. ஒவ்வொரு நாட்டிலும் வருமானங்கள் சரிசமனுகப் பங்கிடப்பட்டால், 21 ஆம் அத்தி யாயத்து அனுபந்தத்திலுள்ள நொதுமல் கோட்டுச் சாதனத்தை, அமெரிக்கத் தரவழிக்கும், ஆங்கிலத்தரவழிக்கும், ஈறிவிடலாம். இந்த (1) நொதுமற் கோட்டிலிருக்கும், (2) அமெரிக்கா உணவை உற்பத்தி செய்யும், ஐரோப்பா துணியை உற்பத்திசெய்யுமென்பதிலிருந்தும் (3) இரண்டு நாடுகளின் குடிசனத்தொகை, ஒப்பீட்டுப் பரப்பளவு என்பவற்றிலிருந்தும், இரு நாடுகளின் உணவு உடை என்பவற்றுக்குரிய பரஸ்பர நிசத் தேவைக்கோடுகளை விரிவான நூல்களிற் காணலாம்.

www.padippakam.com



சர்வதேச வியாபார நிலைக்குறிப்பில் தங்கம் பூச்சியமாகவும் மூலதன இயக்கம் பூச்சியமாகவும் இருப்பதாகக் கருதுவோம். அப்போது உணவு ஏற்றுமதி வரவுகளும், உடை இறக்குமதிப் பற்றுக்களும் சமனுக இருக்கும் (படம் 1 இல் உள்ள சப்பிளை, தேவை என்பவற்றின் பரஸ்பரம் போல்) நிலையை அடையலாம்.

இனி வாங்குஞ் சக்தி சமநிலைக் கோட்பாட்டை உதாரணமுகத்தால் விளக்குவோம். உதாரணமாக ஐரோப்பாவிலே டிரிலியன் மடங்கு பண வீக்கம் உண்டெனவும் தினசரிச் சம்பளம் 2 டிரிலியனுய் இருக்கிறதெனவும் கொள்ளுவோம். அமெரிக்காவின் நாட் சம்பளம் 15 டொலரில் இருக்கிறது. வேறு ஒன்றும் மாறுவதில்லை. பணமயமான இந்த மாற்றம் ஒரு டிரிலியனுக்கு வெளிநாட்டிலே மாறினபின்னர் ஈற்றில் ஏற்படக்கூடிய சமநிலைஎன்ன ? ஒரு பவுணுக்கு 1 டொலரின் 1 டிரிலியன் துவக்கம் மூன்று டிரிலியன் சமமாக இருக்கும் செலாவணி வீதமுண்டாகிறது. பின்னர் எல்லாச் சமநிலை விலைகளும் புதிய பண அலகளவுக்கு மாற்றப் படும்.

(எச்சரிக்கை : பண வீக்கத்தின்போது வேலை பெறும் நிலை, மனிதருடைய ருசி, வருமானப் பங்கீடு முதலியன மாறிஞல் வாங்குஞ் சக்தி சம நிலையை இவ்வளவு அச்சொட்டாகக் கணிக்க முடியாது).

நமது சாதனத்தின் வேருெரு பயன் பின்வருமாறு ; ஐரோப்பிய உற்பத்தி அச்சொட்டாக இரட்டித்து நமது உற்பத்தி மாருமலிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ரிக்காடோவின் அட்டவணை இப்போது (1, 2, $1\frac{1}{2}$, 2) ஆகவிருக்கும். ஐரோப்பாவிலே தொழிலாளர் தினத்தேவைகள் அரை வாசியாகின்றன. இதுவே அதற்குக் காரணம். அமெரிக்காவுக்கு ஒப்பிய ளவில் உணவு விடயத்தில் வாய்ப்புண்டு. றிக்கார்டோ அவ்வாறு கூறுகிறர். ஆனல் நமது சம்பளம் 15 டொலரிலும் ஐரோப்பியரது சம்பளம் 2 பவுணி லுமிருந்தால் ஐரோப்பா எங்களுடைய விலையிலும் குறைவான விலையிலே தனது பண்டங்களைவிற்க முடியும். உணவு, உடை என்பவற்றில் ஈடுபட்ட தொழிலாளர் அமெரிக்காவிலே வேலையில்லாதிருப்பர்.

ஏன் ? உணவை இங்கே உற்பத்தி செய்ய இப்போதும் 15 டொலர் செலவாகிறது. அங்கே இதனை $E\,2 \times 1\frac{1}{2} = 3$ பவுண் $= 9$ டொலருக்கு உற்பத்தி செய்யலாம். எனவே நாம் ஒன்றும் உற்பத்தி செய்யாமல் எல்லா வற்றையும் இறக்குமதி செய்யலாம். நமது வியாபார நிலுவை சாதக மற்றதாகிறது. தங்கத்தை நாங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டி ஏற்படுகிறது. டேவிட் ஹியூம் என்ன நினைத்தார். நாம் இழக்கும் தங்கம் எமது பணத்தைக் குறைக்கும். அதனுல் விலைகளும் சம்பளங்களும் குறையும். அவர்கள் பெறும் தங்கத்தினுல் அவர்களுடைய பணம் பெருகும். அதனுல் அவர்களுடைய விலையும் சம்பளமும் ஏறும். நமது பணச் சம்பள விகிதம் போதிய அளவு வீழ்ந்தால், அவர்களுடையது போதிய அளவு உயர்ந்தால் எங்கள் நாட்டிலே மறுபடியும் உணவுமலியும் ; இரண்டு பக்கத்து வியாபாரமும் முன்போல விருத்தியாகும்.

www.padippakam.com



இதன் பயன்கள்: நமது பணச் சம்பள வீதங்கள் அரைவாசியாகி அவர்களுடைய பணச் சம்பளம் இருந்தபடியே இருக்கிறதெனக் கொள் வோம். உலக விலைகள், முன்னிருந்த சமநிலை விலையிலும் பார்க்கச் சரி அரைவாசியாயிருக்கும். பழைய செலாவணி விகிதம் இருந்து கொண்டே யிருக்கும். நமது புதிய உணவுச் செலவுகள் பழைய பூரண வேலையுடை மையை மறுபடியும் உண்டாக்கும். அல்லது அவர்களுடைய பணச் சம்பளம் 4 பவுணுக்கு இரட்டிக்கிறதென்றும், நம்முடையது 15 டொலராகவேயிருக் கிறதென்றும் கொள்வோம். செலாவணி வீதம் அவ்வாறே நின்றால், உலக விலைகளும் இருந்தபடியேயிருக்கும்; நமது உணவு உற்பத்தி விடயத்திலே பூரணவேலையுடைமை பெறுவோம். நமது பணச் சம்பளத் திலே வீழ்ச்சியுண்டாகி, அவர்களுடைய பணச் சம்பளம் ஏறினால் இதனால் அவர்களுடைய நிசச் சம்பளம் இரட்டிக்க நமது சம்பளத்தில் மாற்ற மில்லாதிருந்தால், அது பழைய சமநிலை உணவு உடை ஒப்பியல் விலைகளை மறுபடி மீட்டுவிடும்.

அமெரிக்கப் பணச் சம்பளங்கள், நமது கலப்படமான பொருளாதாரத் திலே மாறாதிருக்குமெனக் கொள்வோம். ஐரோப்பா தங்கநாணயத்திட் டத்தை ஒழுங்காக நடத்தவில்லையெனவும் அது தனது பணச் சம்பள வீதங்களை உயரவிடுகிறதெனவுங் கொள்வோம். அப்போது அமெரிக்கா தொல்லையில் மாட்டிக்கொள்ளும். நாம் தங்கத்தை இழக்கிறோம். போட்டி இறக்குமதியின் பயனாக வேலையின்மையை அதிகரிக்கச் செய்கிறோம். உற் பத்தியைப் பெருக்குதல், பணச் சம்பளத்தைக் குறைத்தல், தற்காப்பு வரிகளைப் போடுதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டால், நிலை மையைச் சரிப்படுத்துவதற்குத் தீவிரமான நடவடிக்கையே எடுக்கவேண்டி வரும்.

இந்த வகையான தீவிரமான கற்பனைச் சந்தர்ப்பத்திலே நாம் டொலரின் மதிப்பைக் குறைக்கவேண்டும். அதனால் செலாவணி வீதம் பவுண் ஒன்றுக்கு 3 டொலராயிருப்பது பவுண் ஒன்றுக்கு 6 டொலராகும். இந்தப் புதிய செலாவணி வீதத்திலே உணவு, உடை என்பவற்றின் டொலர் விலை முன்னைய சமநிலையிலும் பார்க்க இரட்டிக்கும். ஐரோப்பாவின் விலைகள் சரிபாதியாகும். நிசச் சம்பளம் அமெரிக்காவில் முன்னிருந்தது போலவே இருக்கும். மீண்டும் வேலை வாய்ப்புப் பூரணமாகும். ஐரோப்பாவின் நிசச் சம்பளம் உயரும். (குறிப்பு: நாணயத்தின் மதிப்புக் குறைந்தபின்னுள்ள விலையின் ஏற்றம், நாம் நமது பணச்சம்பளத்தை ஏற்றுவதற்கு ஏதுவா யிருந்தால் நாணய மதிப்பு மாற்றத்தால் உண்டாகிய எதிர்சமரீடாக்கல் நீங்கிவிடும். அமெரிக்கா தனது உற்பத்திக்கு அதிகமான நிசச் சம்பளத் தைக் கொடுக்கவேண்டுமென வற்புறுத்திக் கொள்ளுமானால் அதனுடைய சமான்கள் விலையுள்ளனவாய் விலைப்படாதிருக்கவே ஒன்றில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்; அத்துடன் முடிவற்ற மதிப்பிழப்புண்டாகும்; அல்லது இரண்டுமே நிகழும்).

படிப்பகம்

www.padippakam.com



புனைவுகோளாய், வாத ஆதாரமாய் ஏற்கப்பட்ட இந்த உதாரணம், 1960 இல் அமெரிக்காவில் நிலவிய வர்த்தக நிலைக்குறிப்புப் பிரச்சினையை விளக்கு வதற்குப் பயன்படலாம். வெளிநாட்டில், நிசச் செலவு இறங்கிப் பணச் சம்பளம் அதற்கு ஏற்றாற்போல உயராவிட்டால் அமெரிக்கா ஒன்றில் தனது (அ) உற்பத்தியை மாற்ற வேண்டும் (ஆ) அல்லது வெளிநாடுகளில் உள்ள அளவுக்குத் தனது பணச் சம்பளங்களைக் குறைக்க வேண்டும் அல்லது (இ) நாணயத்தை மதிப்புக் குறைக்க முயலவேண்டும் (அல்லது பாது காப்புத் தீர்வைகளைச் சீர்குலைக்கவேண்டும்).

கடைசியாகக் கூறியவிடயத்தின் கணித அமைப்புக் கடினமானதன்று ; ஆனால் சற்றுச் சிரமமுள்ளதாயிருக்கும். எனினும் அது 34 ஆம் அத்தியா யத்தில் உள்ள அமெரிக்காவின் 1960 ஆம் ஆண்டுத் தங்கப் பிரச்சினை சம்பந்தமாக விளக்கங் கொடுக்கும்.[1]

1. தற்போது துணி விடயத்திலே உலகில் உற்பத்தி பெருகியுள்ளது. எனவே உணவுடன் ஒப்பீட்டு வகையிற் பார்த்தால் அதன் விலை குறைவதை எவரும் எதிர்பார்க்கலாம். பணம், செலாவணி விகிதம், விலை என்பவை சம்பந்தமான சரிக்கட்டல்கள் எல்லாம் செய்து முடிந்தபின்னர், ஐரோப்பாவின் உற்பத்தி இரட்டிப்பது காரணமாக, ஐரோப்பிய நிசச் சம்பளங்கள் இரட்டிப்பதிற் குறைவாக் முடிவதை எர்திபார்க்கலாம், அமெரிக்காவிலே பூர்ணமாக வேலைக்கமர்த்தப்பட்ட மக்களின் நிசச் சம்பளம் துணி அருந்தல் நிலைகுறைவு தனால் ,அதிகரிப்பதை எதிர்பார்க்கலாம். (எச்சரிக்கை : முன்னர் நாமே தனி ஏற்றுமதி யாளராக இருந்து ஏற்றுமதி செய்த பொருள்களை ஜப்பானும், ஐரோப்பாவும் உற்பத்தி செய்தால், நமது ஏற்றுமதிப் பொருளின் விலை இறங்கும். அதன் பயனாக அமெரிக்க நிசச் சம்பளம், வருமானம் என்பன குறையும். இந்தக் குறைவைப் பணச் சம்பள வீதச் சரிக்கட்டலோ, செலாவணி வீதங்களோ நிறுத்த முடியாது.)

www.padippakam.com

## முப்பத்திரண்டாம் அத்தியாயம்

# சர்வதேச வியாபாரமும் ஒப்பியல் நன்மைக் கொள்கையும்

*சர்வதேச வியாபாரத்திஞல் உண்டாகும் நன்மை உலகத்து உற்பத்திச் சக்திகளை திறம்படப் பயன்படுத்துதலே* —ஜே. எஸ். மில்

தொழிலிலே நிபுணத்துவம் பெருகப் பெருக உற்பத்தி பெருகும். அத்துடன் வாழ்க்கை வசதிகளும் உயரும் என்பதை அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேம். இது சர்வதேச வியாபாரத் துறையில் எவ்வாறு செயற்படுகிறதென்பதை இனி ஆராய்வோம். அதற்குச் சர்வதேச நிதி என்ற வெளிக்கோலத்துக்குப் பின்ஞற் புகுந்து ஆராயவேண்டும்.

ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்கா விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து கைத்தொழிலுற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்தது. இதற்குக் காரணமென்ன ? இன்று அமெரிக்கா பெருவாரியாகக் கைத்தொழிற் பொருள்களை உற்பத்தி செய்து உலகின் நாலுபாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடியதாயிருப்பது எதஞல் ? ஆஸ்திரேலிய விவசாய முறை அவுஸ்திரிய முறையிலும், பெல்ஜியமுறையிலும் பார்க்க வித்தியாசமுடையதாயிருப்பது எதஞல் ? தற்கால நாடொன்று சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதாஞல் அதற்கு என்ன செலவாகும் ? வியாபாரத்திஞல் நாடுகள் எவ்வாறு பயனடைகின்றன ?

இவ்விஞக்களுக்கும் வேறு பலவற்றுக்கும் விடைகூறுவதாஞல் ஒப்பியல் நன்மை, ஒப்பியல் செலவு என்ற கொள்கைகளை ஆராயவேண்டும். இந்தக் கொள்கை அடம் ஸ்மித் என்பவரின் சீடர்களான டேவிட் ரிக்காடோ, ஜோன் ஸ்டுவோட்மில், முதலிய ஆங்கிலப் பொருளியலறிஞர்களால் ஒரு நூற்றுண்டுக்கு முன்னராகவே தாபிக்கப்பட்டது. இதனைச் சரிவர அறிந்து கொள்ள வேண்டும். இறக்குமதிகளைக் குறைக்கவேண்டும் என்றும் அதற்குப் பாதுகாப்பு வரிகளை விதிக்கவேண்டுமென்றும் அரசியற் பிரசாரஞ் செய்யப்பட்டது. அந்தப் பிரசாரத்திலுள்ள ஆபாசங்களை இந்தக் கொள்கையை ஆராய்வதால் நீக்கிக் கொள்ளலாம். அத்துடன் பாதுகாப்பு வரிகள் சம்பந்தமான சில உண்மைகளையும் அறிந்து கொள்ளலாம்.

### நாடுகள் பிரதேசங்கள் தோறுமுள்ள நிலைமை வேறுபாடுகள்

உதாரணமாக இரண்டு நாடுகளை அல்லது இரண்டு தேசங்களை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு தேசத்துக்கும் குறிப்பிட்ட இயற்கை வளங்களும், மூலதனப் பொருள்களும், பல்வகைத் தொழிலாளரும், நுண்தொழில்



படிப்பகம்

www.padippakam.com



அறிமுறையும் உண்டெனக் கொள்வோம். நாடுகளிடையே உற்பத்தி நிலைகளி லுள்ள வேறுபாடே ஒப்பியல் செலவு ஆராய்ச்சித் தொடரிலுள்ள முதல் தொடர். இதன் அர்த்தமென்ன ? பல்வேறு நாடுகளிலுமுள்ள உற்பத்தித் திறன் பலவிதப்படுமென்பதே. எந்த ஒரு நாட்டிலும் எந்த வகையான பொருளிலும் ஒரளவு தொகையை உற்பத்தி செய்யமுடியுமானுல் அது சித்தியடையாது. அப்படிச் சித்தியடைந்தாலும் அது பெருவாரி செலவை உண்டாக்கும். ஸ்கொத்லாந்திலே இரசாயனமுறையில் திராட்சைச் செடிகளை உண்டாக்கலாம் ; ஆனுல் சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற் பணமான கதைபோலாகும். மேலும் அவ்வாறு வளர்த்த திராட்சையி லிருந்து கிடைக்கும் பழம் அத்துணைப் பயனுள்ளதாகவுமிராது.

ஒரே வகைப் பொருள்களை இரண்டு நாடுகள் உற்பத்தி செய்ய முடியு மானுலும், ஒவ்வொரு நாடும் ஒரு பொருளில் கருத்தைச் செலுத்தி அதைப் பெருவாரியாக உற்பத்தி செய்து வேறு பண்டங்களுக்காக வியா பாரம் செய்வதே சிறப்புடையது. உதாரணமாக, வடக்கேயுள்ள மத்திய வலய நாடுகளோடு தெற்கேயுள்ள உஷ்ணமண்டல நாடுகள் வியாபாரஞ் செய்வதானுல் அது பொருத்தமுடையதாகும். அதிலே ஒரு புதுமையு மில்லை. பூமத்திய ரேகைக்கு அடுத்த நாடுகளிலே வாழை பயிர் செய்வது சுலபம். வடக்கேயுள்ள மத்திய வலயங்களில் கோதுமை பயிர் செய்வதற் கான இயற்கை அமைப்பு உண்டு. இவ்வகையான பயிர்ச் செய்கையும் வியாபாரமும், இருவகைப் பயிர்களின் விளைவையும் அதிகரிப்பதோடு வியா பாரத்தையும் விருத்தி செய்யுமென்பதை எவரும் உணர்வர்.

இத்தகைய சர்வதேச வியாபாரம் பரஸ்பரம் இலாபமுடையதாகும். எல் லாப் பொருள்களையும் மலிவாக உற்பத்தி செய்யக்கூடிய வசதி ஒரு நாட்டுக்கு மற்ற நாட்டிலும் பார்க்க அதிகமிருந்தாலும், சர்வதேச வியா பாரம் பரஸ்பரம் இலாபமுடையதாகும். இந்த உண்மை இலேசாக விளங்குவ தில்லை. என்ன ஒரு பொருளானுலும் அதை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு மற்ற நாட்டிலும் மிக்க திறமையுடையதாயிருக்கலாம். மற்ற நாட் டுக்குப் போதிய வசதிகள் கிடைக்காமலிருக்கலாம். ஆனுல் வறுமைப்பட்ட நாடு சில பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஒப்பளவில் போதிய திறமை யுடையதாயிருக்கலாம். வேறு சில பொருள்களை உற்பத்தி செய்வதில் அதிக வசதியோ திறமையோ இல்லாதிருக்கலாம். எனவே செல்வமும் திறமையுமுள்ள நாடு தனக்கு வாய்ப்பான பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதில் கவனஞ் செலுத்திக் கொண்டு, தனக்கு வாய்ப் பில்லாத பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்விக்க வேண்டும்.

உணவு உடை என்ற பொருள்களை அமெரிக்கா தானே உற்பத்தி செய்யலாம். ஆனுல் தனக்கு மிக வாலாயமான ஒரு பொருளை உற்பத்தி செய்து தனது தேவைகளையும் பூர்த்தி செய்து, எஞ்சியதை ஐரோப்பா வுக்கு ஏற்றுமதி செய்துகொண்டு மற்றப் பொருளை ஐரோப்பாவிலிருந்து

www.padippakam.com



இறக்குமதி செய்விப்பது இருநாடுகளுக்கும் பயனுடையதாகும். அமெரிக்கா, ஆசிய நாடுகளுடன் பண்டமாற்றுச் செய்வது அமெரிக்காவுக்குப் பயனுடையதே. அமெரிக்கத் தொழிலாளிக்குக் கிடைக்கும் சம்பளத்தில் ஒரு சிறு பகுதியே இந்தியத் தொழிலாளிக்குக் கிடைக்கிறது. அப்படியிருந்தாலும் அமெரிக்காவுக்கு இந்தப் பண்டமாற்றினுல் நன்மையுண்டு. ஏன் என்பதை ஆராய்வோம்.

தோற்றத்தில் முரண்போலத் தெரியும் இந்த உண்மை, அதாவது ஒப்பளவில் நன்மையுடையதாகக் காணும் இந்நிகழ்ச்சியை ஓர் உதாரணத்திஞல் விளக்கலாம். பட்டினத்திலே சிறந்த சட்ட அறிஞராக இருப்பவரே தட்டச்சு நிபுணராகவுமிருக்கிருர். அவர் சட்டத்திலே விசேடப்பயிற்சியைப் பெற்றுக்கொண்டு, தட்டச்சு விடயத்தை ஒரு காரியதரிசிக்கு விடக்கூடாதா ? சட்டத் துறையிலே அவர் தமது நேரத்தைக் கழித்தால் பெரும் பயன் பெறுவார். தட்டச்சு விடயத்தில் அவருக்கு அதிக இலாபமிருக்காது. மேலும் ஒப்பளவில் அவருக்கு அது குறைந்த பயனையே கொடுக்கும். காரியதரிசியின் நோக்காக இதைப் பாருங்கள். இரண்டு தொழிலிலும் காரியதரிசி சட்ட அறிஞரிலும் பார்க்கத் திறமை குறைந்தவரே. ஆனல் ஒப்பளவில் காரியதரிசியின் திறமைக்குக் குறைவு தட்டச்சு விடயத்தில் அற்பமே. எனவே ஒப்பளவில் காரியதரிசிக்குள்ள நன்மை அதிகம்.

**சாதாரண உதாரணம் : ஐரோப்பாவும் அமெரிக்காவும்**

சர்வதேச வியாபாரம் பற்றிய மூலாதாரமான இக்கொள்கைகளை இலேசான ஓர் உதாரணத்தால் விளக்குவாம். நூறு வருடத்துக்கு முன்னர் ஐரோப்பாவும் அமெரிக்காவும் இருந்த நிலைமையைப் பாருங்கள். உதாரணமாக உணவு உடை என்ற இரண்டு விடயங்களை ஆராயுங்கள். அமெரிக்காவிலே தொழிலாளர், மூலதனம் என்பவற்றைவிட நிலம் அதிகம் கிடைத்தது. ஐரோப்பாவிலே நிலம் அருந்தல் ; ஆனல் மூலதனமும் தொழிலாளரும் நிறைய உண்டு.

பெல்ஜியம் போன்ற தீவிரமான விவசாய நாட்டை உதாரணமாகக் கொண்டு ஆராய்ந்தால் இந்தத் தாரதம்மியம் தெளிவாக விளங்கும். அங்கே விளைவைப் பெருக்குவதற்காகச் சிறிய அளவு நிலங்களிலே அதிக பசளையைப் போட்டு ஏராளமான தொழிலாளரை ஏற்படுத்திப் பயிர்ச் செய்கை செய்ய வேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலே பழங்காலத்தில் பரவலான விவசாயம் நடைபெற்றது. இங்கே ஒரு குடும்பத்தினர் பல ஏக்கர் நிலத்தில் விவசாயஞ் செய்தனர். தேசிய உற்பத்தி உச்ச நிலைக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டதென்ரு , கட்டுப்பாடின்றிப் பரந்துகிடந்த நிலத்திலே பரவலாக விவசாயஞ் செய்தமையால், பெல்ஜியத்திலுள்ள

www.padippakam.com



விவசாயி இதனை வீண் விரயம் என்பார். ஆனால் அமெரிக்காவிலே தொழிலாளர் சம்பளம் ஒப்பளவில் அதிகம்; மூலதனமும் அப்படி; ஆனால் நிலம் மாத்திரம் மலிவாயிருந்தது. அதனால் இது வீணன்று. இதுவே புத்திசாலித்தனமாகும்.

பெல்ஜியத்திலேயுள்ள மேலதிகமான சனத்தொகை அமெரிக்காவுக்குக் குடியேறினால் அமெரிக்காவிலுள்ள நிசச் சம்பளம் பெல்ஜியத்திலுள்ள உயர் சம்பளத்தை அனுசரித்து வீழ்ச்சியடையும். அங்குள்ள நிலவாடகை இங்குள்ள நிலவாடகை உயர்ச்சியை அனுசரித்து வீழ்ச்சியடையும்.[1]

அமெரிக்காவிலே தொழிலாளர் அருந்தலை உண்டாக்கிச் சம்பளமட்டத்தை உயர் நிலையிலேவைத்திருப்பதற்காக அமெரிக்கா பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமானால், வெளிநாட்டிலிருந்து வருவோர் தடுக்கப்படுவர். இவ்வாறே அமெரிக்க இறக்குமதிகளையும் தடைசெய்யலாம். செய்வது உசிதமா ? இந்தக் கேள்விக்கு விடையளிப்பதானால் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி செய்து நுகரப்படும் உணவு உடை என்பவற்றின் கணக்கை எடுக்க வேண்டும். எப்போது ? (1) சர்வதேச வியாபாரம் இல்லாத நிலையிலும்; (2) ஒப்பளவிலுள்ள நன்மையை அனுசரித்து வியாபாரம் அனுமதிக்கப்பட்ட நிலையிலும்.

### ஒப்பியல் நன்மை விதி

டேவிட் ரிக்காடோ என்பவர் பங்குப் பரிவர்த்தனை வியாபாரி; அவர் இலட்சாதிபதி; நிலவரி, நாணயம் என்பவற்றைப் பற்றிய அறிவில் நிபுணர். அவர் 1817 இல் ஒவ்வொரு தேசமும் தனக்கு வாய்ப்பான உற்பத்தியிலே விசேட ஊக்கம் செலுத்தினால் அது தேசங்களுக்கு நன்மையை உண்டாக்குமென நிரூபித்தார். இதுவே ஒப்பியல் நன்மைக் கொள்கை. இதனை ஒப்பியல் செலவுக் கொள்கை எனவுங் கூறுவர். இந்தக் கொள்கையை இனி ஆராய்வோம்.

ரிக்காடோ இலேசாக ஆராய்ச்சி செய்வதற்காக இரண்டு தேசங்களையே எடுத்துக் கொண்டார். இவை அமெரிக்கா, ஐரோப்பா என்று வைத்துக் கொள்வோம். இலேசாக ஆராய்வதற்காக அவர் உணவு உடை என்ற இரண்டே பொருளை எடுத்துக்கொண்டார். எல்லாச் செலவுகளையும் அவர் தொழில் செய்யும் மணி நேரத்திலே கணித்தார். நாமும் அப்படியே கொள்வோம். ஆனால் விரிந்த நூல்களிலும் அனுபந்தத்திலும் இதைப் பற்றிய சில நிபந்தனைகளைக் கொடுப்போம். எனினும் ஒப்பியல் நன்மையின் தத்துவம் மாறாது அப்படியே இருக்கும்.

பொது அறிவைக்கொண்டு பார்க்குமிடத்து அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையிலுள்ள வியாபாரம் பரஸ்பர லாபமுடையதென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். அமெரிக்காவிலே ஓர் அலகு உணவை உற்பத்திசெய்

1. இதனால் மொத்த உலக உற்பத்தி அதிகரிக்கும். ஏன் ? வளம் குறைந்த பெல்ஜியக் கமங்களிலிருந்து வந்த விவசாயிகள் வளம்மிகுக அமெரிக்கக் கமங்களில் வந்து வேலைசெய்து விளைவைப் பெருக்குவர். அதனால் உலக உற்பத்தியும் அதிகரிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



வதற்கு ஐரோப்பாவிலே தேவைப்படும் அளவுக்குக் குறைவான அளவு நாள்களே தேவைப்படும். ஆனால் ஐரோப்பாவில் சீலை நெசவு செய்வதற்கு அமெரிக்காவிற் செலவு செய்யும் நாள்களிற் குறைவாகவே தேவைப்படும். இந்த இலட்சணத்தில் அமெரிக்கா உணவு உற்பத்தியிலேயே விசேட முயற்சிசெய்யுமென்பதைக் கூறுவதற்குப் பொது அறிவே போதும். ரிக்கார்டோ போன்றவர்கள் தேவையில்லை. அவ்வாறு உற்பத்தி செய்யும் உணவில் ஒரு பகுதியை ஐரோப்பாவுக்கு அனுப்பி அதற்குப் பதிலாக புடைவையை இறக்குமதி செய்யும்.

ஆனால் ரிக்காடோ இதனினும் சிறப்பான ஆராய்ச்சியைச் செய்தார். அதாவது அமெரிக்காவே இரண்டுவகைப் பொருளையும் சுலபமாக உற்பத்தி செய்யக்கூடிய வசதியிருந்தாலும் ஐரோப்பாவோடு வியாபாரஞ் செய்வது இருநாடுகளுக்கும் பயனுடையதென்று கண்டார்.

**விளைதிறன் விகிதங்களில் மட்டுமே ஒப்பியல் நன்மை தங்கியுளது.**

| உற்பத்தி | அமெரிக்காவில் | ஐரோப்பாவில் |
|---|---|---|
| 1 அலகு உணவு | 1 நாள் உழைப்பு | 3 நாள் உழைப்பு |
| 1 அலகு உடை | 2 நாள் உழைப்பு | 4 நாள் உழைப்பு |

**அட்டவணை 1** அமெரிக்கா ஐரோப்பா ஆகியவற்றில் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு, அமெரிக்காவின் முதலாம், இரண்டாம் நாள் உழைப்பு முறையே ஐரோப்பாவிற் மூன்றும், நாலாம் நாள் உழைப்பிலும் குறைவாயிருந்தாலும், அமெரிக்காவுக்கு உணவிலும், ஐரோப்பாவுக்கு உடையிலும் ஒப்பியல் நன்மை கிடைக்கின்றது. ஏன்? அமெரிக்காவின் 1 ஐ ஐரோப்பாவின் 3 ஆல் பிரித்து வருவது, அமெரிக்காவின் 2 ஐ ஐரோப்பாவின் 4 ஆல் பிரித்து வருவதினும் குறைவாகும் (அல்லது அதற்குச் சமனாக அமெரிக்காவின் 1.2 என்பது ஐரோப்பாவின் 3.4 என்பதினும் குறைவாகும்).

அட்டவணை 1 இந்த உண்மையை விளக்கிக் காட்டும். அமெரிக்காவிலே ஓர் அலகு உணவு உற்பத்தி செய்ய 1 நாள் தொழில் தேவைப்படும் ; ஓர் அலகு துணி நெசவு செய்ய இரண்டு நாள் தொழில் தேவைப்படும். ஐரோப்பாவிலே உணவுக்கு 3 நாள் தொழிலிலும் துணி நெசவு செய்ய 4 நாள் தொழிலிலும் தேவைப்படும். இந்த நாலு இலக்கங்களிலும் அடங்கியுள்ள விகிதாசாரத்தைக் கணித்த ரிக்காடோ, அமெரிக்கா உணவு உற்பத்தி செய்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வதும் ஐரோப்பா துணி உற்பத்தி செய்து அதை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதும் இரு நாடுகட்கும் நன்மைபயக்குமெனக் கண்டார். இதை ஆராய்வதற்கு முன்னர், தெருவிற் போகும் ஐரோப்பிய மனிதன் என்ன சொல்லுகிறான் என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார் :—

அமெரிக்கா பெரிய வியாபாரி. அதனோடு நாமெப்படிப் போட்டி போடுவது ? நாங்கள் இங்கே உற்பத்தி செய்யும் உணவு, துணி என்பவற்றை அமெரிக்கா திறமையாக உற்பத்தி செய்து, நம்முடைய விலையிலும்

படிப்பகம்

www.padippakam.com



பார்க்க மிக மலிவாக இங்கே விற்றுவிடும். ஆனபடியால் நமது ஐரோப்பியத் தொழிலாளரைக் காப்பாற்றுவதானுல் நாம் இறக்குமதி வரிகளை விதிக்கவேண்டும்.

அமெரிக்காவிலேயுள்ள சாதாரண மனிதர் என்ன சொல்லுகிருர்கள் ? ஒப்பியல் நன்மையை உணராத காங்கிரஸ் கட்சிக்காரர் என்ன சொல்லுகிருர்கள் ? பின்வருமாறு சொல்லுவர் :—

ஐரோப்பியருடைய சம்பளமட்டம் அமெரிக்கா போன்ற செல்வமிக்க நாட்டிலும் மிகக் குறைவானதே. அமெரிக்கத் தொழிலாளர் கட்டுப்பாடில்லாத ஐரோப்பியப் போட்டியிலீடுபடுவதானுல் அமெரிக்கருடைய சம்பளமட்டம் இறங்கிவிடும். ஐரோப்பியர் நாளொன்றுக்கு மிகக் குறைவாகவே செலவு செய்வர். மலிவான இறக்குமதிப் பொருள்களை இங்கே கொண்டுவந்துகுவித்தால் அமெரிக்கத் தொழிலாளரின் வாழ்க்கை மட்டம் வீழ்ச்சியடையும். ஆனபடியால் அந்த இறக்குமதிகளைத் தடுக்கப் பாதுகாப்பு வரிவிதிக்கவேண்டும்.

இந்த இருவகையான வாதமும் தவறுடையதென்பதே ரிக்காடோவின் கருத்து. சர்வதேச வியாபாரம் நடைபெறுமானுல் இரண்டு தேசத்துத் தொழிலாளருக்கும் நல்ல நிசச் சம்பளம் கிடைக்கும். பாதுகாப்பு வரிகளை விதிப்பதால் நிசச் சம்பளம் இருநாடுகளிலும் குறையும். (இன்று இதைக் கூறுவதானுல், பாதுகாப்பு வரிகளிலும் பார்க்க விசேடமான சாதனங்கள், வேலைவாய்ப்புக்களை உண்டாக்கவும், விலை மட்டங்கள் மாருதிருக்கவுஞ் செய்வதற்கு இருக்கின்றன. அதாவது அரசாங்கம் உசிதமான பிஸ்கால் கொள்கைகளாலும் மத்திய வங்கி நடவடிக்கைகளாலும் அவ்வாறு செய்யலாம்)

### வியாபாரத்துக்கு முன்னர்

சர்வதேச வியாபாரத்தை இல்லாமற் செய்யக்கூடிய பாதுகாப்பு வரிகள் ஏற்படுத்தப்பட்டால், அட்டவணை 1 இன்படி அமெரிக்கத் தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு ஓர் அலகு உணவும் அரை அலகு துணியுமே கிடைக்கும். ஐரோப்பியத் தொழிலாளருக்கு அதிலும் குறைவாகவே கிடைக்கும். வியாபாரம் தொடங்குவதற்கு முன்னர் 1/3 அலகு உணவும் $\frac{1}{4}$ அலகு உடையுமே அவனுக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு கண்டத்திலும், உணவு உடை என்பவற்றின் விலை விகிதம் வித்தியாசப்படும். அதற்குக் காரணம், தொழிற் செலவின் ஒப்பியல் விகிதமாகும். அமெரிக்காவிலே துணி, உணவிலும் பார்க்க இரட்டிப்பு விலையுடையதாயிருக்கும். ஏனெனில் அங்கே தொழிலாளர் இரண்டு மடங்கு அதிகம் வேலை செய்யவேண்டும். ஐரோப்பாவிலே உடை, உணவிலும் பார்க்க 4/3 விலைகூடியதாயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



## வியாபாரத்தின் பின்னர்

இப்போது பாதுகாப்பு வரியை நாம் நீக்கிவிட்டு வியாபாரத்தைத் தடையில்லாத வியாபாரமாக்குகிறேம். உடையும் உணவும் இப்போது பொது மட்டத்துக்கு வந்துவிடுகிறது. அது இரண்டு தொடர் பைப்பிலுள்ள நீரானது தடையை எடுத்ததும் ஒரே மட்டத்துக்கு வந்துவிடுகிறது போலாகும்.

போட்டி வியாபாரிகள் மலிவான இடங்களிலிருந்து வாங்கி அருந்தலான இடங்களிலே விற்பனை செய்வர். அமெரிக்காவிலே துணிக்கு அருந்தலிருக்கிறபடியால் ஐரோப்பாவிலிருந்து அதை வாங்கி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வர். அமெரிக்காவிலே உணவு மலிவானபடியால் அங்கிருந்து உணவை வாங்கி ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்வர். அமெரிக்கத் துணி வியாபாரத்துக்கு இவ்வாறு போட்டியுண்டாகிறது. எனவே அட்டவணை 1 இல் உள்ள பெறுமதிகள் மாருவிட்டால், நெசவு தொழிலை விட்டுவிட்டு அமெரிக்கத் தொழிலாளர் உணவு உற்பத்தியிலீடுபடுவர். ஐரோப்பாவிலும் இதற்கு நேர்மாருக நடைபெறும். அங்குள்ள தொழிலாளர் உணவு உற்பத்தியைக் கைவிட்டு விட்டு நெசவு தொழிலில் ஈடுபடுவர். ஏனெனில் அதிலே ஒப்பியலான நன்மையுண்டு.

இதனுல் அமெரிக்காவுக்கு நன்மையுண்டு. தானுகவே மலிவான மின்சார சக்தியை உற்பத்தி செய்ய முடியாது ஒரு வியாபாரி வேருெரு கம்பெனியிடம் அதை மலிவாகப் பெறவிரும்புவதுபோல துணியை உள்ளூரில் உற்பத்தி செய்வதைவிட ஐரோப்பாவிலிருந்து வாங்குவது மலிவென்று கண்டதும் அமெரிக்கா அங்கிருந்து துணியை மலிவாக இறக்குமதி செய்யும். அதனுல் ஐரோப்பா துணி நெசவு செய்யும் தொழிலை விருத்தி செய்யும். அவ்வாறே உணவு விடயத்திலும் அமெரிக்கா செய்துகொள்ளும்.

ஆனுல் சார்பியல் நன்மை இரு நாடுகளுக்கும் சர்வதேச வியாபாரத்திஞல் உண்டென்பதை ரிக்காடோ நிரூபித்து விட்டார் என்று கொண்டாலும் இருதேசங்களிலேயுமுள்ள தொழிலாளரின் நிலைமை என்ன? அட்டவணை 1 இன்படி பார்த்தால் இரண்டு தேசங்களிலும் தொழிலாளரின் நிசவருமானம் உயர்கிறது. அமெரிக்கத் தொழிலாளி ஒரு நாள் வேலையின் பயனுக அதே உணவை முன்போல வாங்குவதோடு மேலதிகமாக இறக்குமதியான துணியையும் வாங்குகிறுன். எனவே இரண்டு வகையான பொருள்களிலும் தேவையானவற்றை நுகர்வான். அவ்வாறே ஐரோப்பியத் தொழிலாளியும். மலிவான உணவையும், நிசவருமானத்துக்கு ஏற்ற துணியையும் பெறுகிறுன். எனவே அவனுடைய வரவு செலவுக் கணக்கு நன்மைபயப்பதாயிருக்கிறது.

## ஒப்பியல் நன்மை பற்றிய தத்துவத்தை மறுபடி கூறுதல்

இரண்டு தேசங்களுள் ஒன்று எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்வதில் மற்றதிலும் பார்க்க திறமையுடையதாயிருக்கிறதோ இல்லையோ, ஒவ்வொன்றும் தனக்குச் சார்பியல் நன்மையுள்ள உற்பத்திகளில் பெரிதும்

படிப்பகம்

www.padippakam.com



ஈடுபட்டால் வியாபாரமானது பரஸ்பரம் நன்மைதரக்கூடியதாயிருக்கும். உற்பத்திச் சாதனங்களின் நிசமான சம்பளம் இரண்டு இடத்திலும் உயரும். நன்ருக திட்டப்படுத்தப்படாத பாதுகாப்பு வரி, பாதுகாக்கப்பட்ட உற்பத்திச் சாதனத்துக்கு உதவி செய்யாது. அதற்கு மாருக, நிசவருமானத்தை இறக்குமதிப் பொருள்களின் விலையை அதிகரிக்கச் செய்வதால் குறைக்கும். அத்துடன் உலகத்து உற்பத்தியையும் குறைக்கும். எவ்வாறு ? ஒரு நாட்டில் இயல்பாக அமைந்துள்ள சிறந்த தொழில் நிபுணத்துவத்தையும் தொழிலாளர் அமைப்பையும் சரியாகப் பயன்படுத்தாமற்றடுக்கும்.

## நிபந்தனைகளும் முடிபுகளும்

சார்பியல் நன்மை எந்த இரு நாடுகளுக்கும் பொருந்தும் ; எந்தப் பொருள்களுக்கும் பொருந்தும். அமெரிக்கா ஐரோப்பா, உணவு துணி என்பவற்றிற்கு மட்டுமில்லை. (ரிக்கார்டோ இங்கிலாந்தையும் போர்த்துக்கலையும் உதாரணமாக எடுத்தார். துணியையும், திராட்சை இரசத்தையும் உதாரணமாகக் கொண்டார்.) இந்த ஒப்பியல் நன்மைக் கொள்கையில் எத்தனை வகையான பொருள்களையும் கொள்ளலாமென்பதை அனுபந்தம் விளக்கும். விரிந்த நூல்களிலே எத்தனை நாடுகளையும் சேர்க்கலாமென்பது தெளிவாக்கப்படும்.

இவற்ருேடு போக்குவரத்துச் செலவுகளையும் சேர்த்துக் கொள்ளலாம். தேசத்துக்குத் தேசம் நகரும் உற்பத்திச் சாதனங்களையும் சேர்க்கலாம். இலேசான தொழிலாளர்—செலவு உதாரணங்களை எடுத்து ஆராயாமல் செலவுகளைத் தொழிலாளர், நிலம், மூலதனம் என்பவற்றின் சிறு பகுதிகளைக் கணக்கிலெடுத்தும் ஆராயலாம். அவை குறிப்பிட்ட விகிதங்களாயிருக்கலாம். உற்பத்திச் சாதன விகிதங்களிலுண்டாகும் மாற்றம், குறைந்து செல் பயன் என்பவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ளலாம். இவை அனுபந்தத்திலே மேலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நிலையான சில கருதுகோள்களை ஏற்றுக்கொள்வது ஒப்பியல் நன்மைக் கொள்கையிலுள்ள பெரிய குறைபாடாகும். விலை, சம்பளம் என்பன நெகிழாமலிருப்பதை இக்கருதுகோள் கருத்திலே கொள்வதில்லை. தற்காலிகமாக உண்டாகும் பணவீக்கம், பணவாட்டம் என்பவற்றையோ, சர்வதேச வியாபார நிலைக்குறிப்புப் பிரச்சினைகளையோ கருத்திற்கொள்வதில்லை. தொழிலாளர் ஒரு தொழிலைவிட்டால் வேறு கூடிய திறமையுள்ள ஒரு தொழிலிற் சேர்ந்துவிடுகிருர்கள் என்று கருதுகிறது. அவர்கள் வேலையில்லாதிருப்டார்கள் என்பதை அது கருத்திற்கொள்வதில்லை. பெரிய வியாபார மந்தம் ஏற்பட்ட காலத்திலே இந்தக் கொள்கை செல்லுபடியாகவில்லை. தற்போது அது மறுபடியும் புழக்கத்தில் வந்துவிட்டது. தற்காலக் கொள்கைகள் பணவீக்கத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தை

www.padippakam.com



யும் போக்குவதற்கு பிஸ்கால் கொள்கைகளையும், பணக் கொள்கைகளை யும் பயன்படுத்தலாமென்று கொள்வதால், ஒப்பியல் நன்மைக் கொள் கைக்கு மதிப்புண்டாகிறது.

சிறுமிகள் அழகுப் போட்டியில் வெற்றிபெறுவார்கள் என்ற கொள்கை போலவே இக்கொள்கையும் தர்க்க பூர்வமானபடியால் பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் இது மிக இலேசாக்கப்பட்டதொரு கொள்கை. எனினும் இதிலே உண்மையிருக்கிறது. அரசியற் பொருளியல் இதைப் போல இரண்டோர் அர்த்தம் பொதிந்துள்ள கொள்கைகளை உருவாக்கியுள் ளது. இந்தக் கொள்கையை அசட்டைசெய்யும் ஒரு தேசம் வாழ்க்கை மட்டத்தை இறங்கச் செய்வதோடு நாட்டின் வளர்ச்சியையும் குறைத்து விடும்.

**சுருக்கம் :**

ஒரு நாட்டிலே பலவகையான தொழில்களிருக்குமானால் சில தொழில் களை விசேடமாகச் செய்தலும், பரஸ்பரம் உற்பத்திப் பொருள்களைப் பண்ட மாற்றுச் செய்தலும் பயனுடையது. நாடுகளிடையிலும் இத்தகைய பரி வர்த்தனை இலாபமுடையதாகும். நாடுகளிடையே இவ்வாறு பொருள் களைப் பண்டமாற்றுச் செய்வதால் ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை மிக்க திறமையோடு பண்டமாற்றுச் செய்யக்கூடியதாயிருக்கிறது. எல்லாப் பொருளையும் ஒரு நாடு தானாகவே உற்பத்தி செய்வது இலாப கரமானதன்று.

2. தட்பவலய நாடுகள் வெப்ப வலய நாடுகளோடு வியாபாரஞ் செய்வது பரஸ்பர நன்மையைக் கொண்டு வருமென்பதை ஒருவர் பொரு ளியலைப் படியாமலே அறிந்துகொள்ளலாம். ஒரு நாடு ஒரு பொருளை மிக இலேசாக உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்கும். இவ்வாறின்றி ஒரு நாடு எல்லாத் தொழிலிலும் மற்ற நாட்டைவிட மிகத் திறமையுடையதா யிருக்கும் பட்சத்திலும் பரஸ்பர வியாபாரம் இருநாடுகளுக்கும் பயனுடைய தென்பதை ரிக்காடோவின் கொள்கை விளக்கும். (உ-ம் : சட்ட அறிஞர், தட்டச்சாளர்).

தொழில் செய்யும் திறமையானது சார்பளவிலிருக்கும்போது குறித்த ஒரு வாலாயமான தொழிலில் விசேட பயிற்சிபெற்று அதையே உற்பத்தி செய்து மற்ற நாட்டில் அவ்வாறே விசேடமாக உற்பத்தி செய்யும் பொருளோடு பண்டமாற்றுச் செய்தல் மிகப் பயனுடையதாகும்.

3. ஒப்பியல் நன்மை விதியானது விசேடப் பொருள் உற்பத்தி எங் கெங்கே உண்டென்பதையும், வியாபாரப் போக்கையும் காட்டும். அத்துடன், இரண்டு நாடுகளுக்கும் நன்மையுண்டென்பதையும் அவ்வந் நாடுகளின் நிசச் சம்பளங்கள் (அல்லது உற்பத்திச் சாதனங்களின் வரு மானம்) வியாபாரத்தாற் பெருகுமென்பதையும், அதனால் உலகப்பொருள் உற்பத்தியின் தொகை கூடுமென்பதையும் அது காட்டும். தேசியப் பொரு

www.padippakam.com



ளாதார சுயதேவைப் பூர்த்தியை உண்டாக்கும் பாதுகாப்பு வரிகள் நிசச் சம்பளத்தையும் உற்பத்திச் சாதனங்களால் வரும் வருமானத்தையும் பங்கப்படுத்தும்.

4. ஒப்பியல் நன்மையில் தலையிடுஞ் சில விடயங்களைக் கணக்கிலெடுப்பதற்காக இந்த முக்கியமான ஒப்பியல் நன்மை விதிக்குச் சில நிபந்தனைகளை விதிக்கவேண்டும். பணச் சம்பள விகிதங்கள் இரு நாடுகளிலும் நெகிழ்ச்சி இன்றியிருந்தால் அல்லது பிஸ்கால் கொள்கைகளும், பணக் கொள்கைகளும் இரு நாடுகளிலும் சரிவரச் செயல் முறைப்படுத்தாவிட்டால், மலிவான இறக்குமதி வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கும்.[1] உசிதமான அரசாங்கக் கொள்கைகளிருந்தால் வியாபாரத்தால் வரும் பெரிய நன்மைகளைத் தற்காலத் தேசங்கள் தியாகஞ் செய்யவேண்டியதில்லை. ஆனால் ஒப்பியல் நன்மை பொருந்தக்கூடிய சூழ்நிலையைப் புனருத்தாரணஞ் செய்யலாம்.

**ஆராய்ச்சிக்குரிய வினாக்கள்**

1. "உள்நாட்டிலே ஒரு பொருளை உற்பத்தி செய்வதினும் வெளிநாட்டிலிருந்து அதை மலிவாக வாங்குவது நமக்கு நன்மை பயப்பதாகும்". இது ஒப்பியல் நன்மையோடு பொருந்துமா ?

2. ஒப்பியல் நன்மைக் கொள்கையைச் சுருக்கமாக விளக்குக.

3. நிசச் சம்பள மட்டம், பொருத்தும் குழாய்களில் உள்ள தண்ணீர் மட்டம் போல, சர்வதேச வியாபாரத்தால் ஒரே மட்டத்துக்குக் கொண்டு வரப்படுமா ? ஏன் ?

4. அட்டவணை 1 இல் (1 ; 2 ; 3; 4), (1, 2, $1\frac{1}{2}$, 3) என்று மாற்றப்பட்டால் என்னவாகும் ? யாருக்கு அதனால் நட்டம் ? அது 1, 2 ; $1\frac{1}{2}$, 4 ஆனால் ஐரோப்பா உணவுப் பொருளை ஏற்றுமதி செய்யுமென்பதைக் காட்டுக.

5. மின்சார உற்பத்தித் தளவாடத்தில் ஒரு நாடு ஒப்பியல் நன்மையுடையதாயின் பின்னர் அந்த நிலையை இழக்கமுடியுமா ? அப்போது என்ன நடக்கும் ? அப்படி நடக்கவேண்டுமா ?

6. புதிய ஒரு கண்டம் உணவு விடயத்தில் என் ஒப்பியல் நன்மை உடையதாயிருக்க வேண்டும் ?

7. இரண்டு நாடுகள் உற்பத்தியிலும் திறமையிலும் ஒரே மாதிரியிருந்தால் என்ன ஆகும் ? விளக்குக.

8. பின்வரும் கருத்துக்களைச் சிந்திக்க.

தனிப்பட்ட வகையிலும், பிரதேச வகையிலும் வித்தியாசங்களும் நிபுணத்துவமும், தனித்திறமையும், சார்பியல் பயனும். பண்டமாற்றும், உள்ளூர் உற்பத்தியும் பாதுகாப்புவரியும் நிசச்சம்பளங்களும்.

[1]. முந்திய அத்தியாயத்தின் அனுபந்தத்திலே இந்த நிசக் கொள்கைகள், வியாபார நிலைக் குறிப்பு, வெளிநாட்டுச் செலாவணி விகிதம், சம்பந்தமான நிதிக் கொள்கைகள் என்பன இணைத்து ஆராயப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



**அனுபந்தம். : ஒப்பியல் நன்மை விளக்கமும் விசேடிப்பும்**

ஒப்பியல் பயன்பற்றி நாம் இதுவரை ரிக்காடோவைப் பின்பற்றி எல்லாச் செலவுகளையும் தொழிற் கணக்கிலே அளந்தோம். (மதிப்புப் பற்றித் தொழில் முறையில் உள்ளதொரு கொள்கையை ஆதாரமாகக் கொள்ளா விட்டாலும் இந்தக் கொள்கை பொருத்தமுடையது என்பதைத் தற் காலப் பொருளியலறிஞரும் ஒப்புக்கொள்வர். இரண்டாவது அத்தியாயத் திலே நாம் ஆராய்ந்த உற்பத்தித் தகைமை அல்லது மாற்றுக்கோடு, தொழில் அலகுகளைக் கணக்கில் எடுக்காமல் விடுவதற்கு சாதனமாயுள்ளது. உற்பத்தித் தகைமைக் கோட்டைப் பயன்படுத்துவோர் அதிக துணி எமக்குத் தேவையானல் எவ்வளவு உணவைத் தியாகஞ் செய்யவேண்டும் என்ற கணக்கில் துணியின் பெறுமதியை அளப்பர். (இதனை "சந்தர்ப்பப் பெறு மதி" என விரிந்த நூல்களில் வழங்குவர்.)

அமெரிக்க- ஐரோப்பிய உணவு துணி உதாரணத்தை இந்த அனுபந்தத் தின் முதற் பகுதி விபரமாக அனுசரிக்கிறது. தனித் தொழிலாளர் செலவு இந்தப் பிரச்சினைக்கு அவசியமில்லை என்பதை இது காட்டும்.

**உள்நாட்டு விடயம் சம்பந்தமாக, அமெரிக்கநாடு துணிக்காக உணவைத் தியாகஞ் செய்யலாம்**

| | அமெரிக்கா | |
|---|---|---|
| இயலதகவுகள் | உணவு, மில்லியன் அலகுகளில் | உடை, மில்லியன் அலகுகளில் |
| A | 100 | 0 |
| B | 90 | 3 |
| C | 80 | 6 |
| D | 70 | 9 |
| E | 60 | 12 |
| F | 50 | 15 |
| G | 40 | 18 |
| H | 30 | 21 |
| I | 20 | 24 |
| J | 10 | 27 |
| K | 0 | 30 |

**அட்டவணை 2.** அமெரிக்காவின் உற்பத்தித்தகைமை அட்டவணை (10:3 மாறுச் செலவு விகிதம்.)

அனுபந்தத்தின் எஞ்சிய பகுதியிலே மேலே ஏற்றுக்கொண்ட கருது கோளின் முக்கியமான சில விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com




**வியாபாரமின்றி அமெரிக்கா.**

ஒவ்வொரு பொருளாதார அமைப்பிலும் உற்பத்தித் தகைமையொன் றிருக்கிறது. இதனை மாற்றுக்கோடு எனலாம். உணவு உற்பத்தியிலேயே எல்லாச் சக்தியையும் பயன்படுத்தினுல் எவ்வளவு உணவை உற்பத்தி செய்யலாம் என்பதை இது காட்டும். அல்லது துணி உற்பத்தியானுல் எல்லாச் சக்தியையும் அதற்காகப் பயன்படுத்தினுல் எவ்வளவு துணி உற்பத்தி செய்யலாம் என்பதைக் காட்டும். அத்துடன் வளங்களை மாற்று வதால் ஒரு பொருளை எவ்வாறு மற்றப் பொருட் கணக்கில் உற்பத்தி செய்ய மாற்றலாமென்பதையும் காட்டிற்று. இதனை இரண்டாம் அத்தியா யத்திலே கண்டோம்.

இலேசாக விளக்கிக் கொள்வதற்காக அமெரிக்காவில் ஒரு பொருளைத் தியாகஞ் செய்து மற்றப் பொருளில் எவ்வளவை உற்பத்தி செய்யலா மென்பதைக் கணக்கிலே போடுவோம். அதாவது உணவின் எத்தனை அலகுகளைத் தியாகஞ் செய்த்தால் துணியில் எத்தனை அலகுகளைப் பெற லாமென விகிதாசாரம் காண்போம். இது 10 : 3 என்ற விகிதமெனக் கொள்வோம். அதாவது தியாகஞ் செய்யும் 10 அலகு உணவுக்கு, 3 அலகு துணியைப் பெறுகிறோம். எல்லா வளங்களையும் உணவு உற் பத்தியிலே செலவிட்டால் அமெரிக்காவில் 1000 இலட்சம் உணவு அலகு உற்பத்தி செய்யப்படும்.[1]

**வியாபாரமின்றேல், உள்ளூர் உற்பத்திக்கேற்ப நுகரவேண்டும்:**




படம் 1. மாறுச் செலவுச் கோடு AK அமெரிக்காவின் உள்ளூர் உற்பத்தி இயல் தகவைக் காட்டும். புதிய கோடு AK[1] உடை உற்பத்தி செய்யும் ஆற்றலை அதிகரித்தி ருக்கிறது என்பதையும், அமெரிக்கா அதிக அளவில் இருவகைப் பண்டங்களையும் நுகர்ந்து AK இலிருந்து வடகிழக்குப் போகலாம் என்பதையும் காட்டும்.

[1]. இந்த ஆராய்ச்சியிலே தொழிலாளர் கணக்கிற்கொள்ளப்படவில்லை. ரிக்கார்டோவின் கணக் குப்படி தொழிலாளரைப் புகுத்தவிரும்பினுல் அட்டவணை 1 இலுள்ள இலக்கங்களான (1, 2 ; 3, 4) என்பதை (10, 3 ; 10, 8) ஆகவோ $10a$, $3a$ ; $10b$, $8b$) ஆகவோ மாற்றலாம். இங்கே $a$, $b$ என்பன வலிந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நேர்நியம எண்கள். இவை அலகுகளிலும் சார்பற்ற திறமைகளிலுமே தங்கியுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



அப்போது அமெரிக்கா விரும்பினுல் 90 அலகு உணவையும் 3 அலகு துணியையும் வைத்துக் கொள்ளலாம். அல்லது 80 ; 6 ஆக வைத்திருக்கலாம். அல்லது கடைசியாக 0 உணவும் 30 உடையுமாக உற்பத்தி செய்யலாம். இதை அட்டவணைப் படுத்தினுல் அட்டவணை 2 இல் உள்ளபடியாகும்.

இந்த நிலைமையைப் படம் 1 இல் உள்ளபடி வரைகோடாகக் கீறிக் காட்டலாம்.

இது இரண்டாம் அத்தியாயத்திலுள்ள படம் 3 இன்படியே. AK என்ற கோடு உற்பத்தித்-தகைமையைக் காட்டும். இந்தப் புதிய உற்பத்தித் தகைமைக்கோடு நேர்கோடாயிருக்கிறது. பழைய கோடு வளைந்து மேலேயிருந்துபார்க்கும்போது குவிந்திருக்கும். நேர் கோடு காட்டப்பட்டமைக்குக் காரணம் ஆராய்ச்சியை இலேசாக்குவதற்கே. "அதிகரிக்கும் செலவு" (சார்பு இறுதிநிலைச் செலவு) இருக்குமானுல் அது கணக்கிலெடுக்கப்படவில்லை. தியாகஞ் செய்த துணிக்குப் பதிலாக உள்ள உணவு 10,3 என்ற நிரந்தர செலவு விகிதத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. இது இல்லாவிட்டால் சார்புச் செலவு யதார்த்தமான முறையிலே ஏறிக்கொண்டு செல்லும். நிலையான செலவு கருதுகோளாக எடுத்துக் கொண்டதன் நோக்கம் ஆராய்ச்சியை இலேசாக்கி, மாணுக்கர் பலவகைச் செலவு விகிதங்களை மனத்தில் வைத்திருக்க வேண்டிய சங்கடத்தை நீக்குவதற்காகவே. இது ஆராய்ச்சியின் பொருத்தத்தைக் குறைக்கமாட்டாது. சில இடங்களில் விசேடிக்கவேண்டிய அவசியமுண்டானுல் அது பின்னுற் செய்யப்படும்.

இதுவரை உற்பத்தியைப்பற்றி மாத்திரமே ஆராய்ந்தோம். ஐக்கிய அமெரிக்கா எல்லா வியாபாரத்திலிருந்தும் விலகி விட்டால் அது தான் உற்பத்தி செய்வதையே நுகரவேண்டும். அட்டவணை 2 இலே H இக்குள்ள தொகையும் படம் 1 இல் உள்ள தொகையும் வியாபாரம் நடத்தாமலே அமெரிக்க உற்பத்தி செய்து நுகரும் தொகையெனக் கொள்வோம். வேறு வகையிற் கூறுவதானுல் அமெரிக்கா 30 அலகு உணவையும், 21 அலகு துணியையும் உற்பத்தி செய்து நுகருகிறதெனக் கொள்வோம்.

ஏன் இந்த இலக்கங்களை எடுத்தோம். வேறு இலக்கங்களை எடுக்கக் கூடாதா ? போட்டியமைப்பொன்றிலே எவரும் இதை நிச்சயிக்கத் தேவையில்லை. பண்டம், பணி என்பவற்றிற்கான சப்பிளை தேவை என்பவைமூலம் விலை அமைப்பு, எவ்வளவு உற்பத்தி செய்யப்படவேண்டும், எவ்வாறு யாருக்கு என்பதைத் தானுகவே நிச்சயிக்கும். குறிப்பிட்ட தொகையே என்ன உற்பத்தி என்பதைக் காட்டும். எப்படி என்பதைக் கூறவேண்டியதில்லை. விவசாய உணவு உற்பத்திக்குத் தொழிலாளர் இருக்கும் விலைக்கேற்ற அதிக நிலம் வேண்டும். துணி நெசவு தொழில் நுட்பம் வாய்ந்த தானபடியால் அதிக நிலம் தேவையில்லை என்பதை மாத்திரம் இங்கே

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிடலாம். யாருக்கு என்பதைப்பற்றிக்கூறுமிடத்து, அமெரிக்காவிலே தொழிலாளருக்கு அருந்தல் உண்டு. ஆனபடியால் அங்கே தொழிலாளருக்கு அதிக சம்பளம் வேண்டும். நிலம் இங்கே அதிகமானபடியால் நிலச் சொந்தக்காரருக்கு அதிக வாடகை கிடையாது.

இக்கட்டத்திலே ஐரோப்பாவின் கதையை எடுப்போம். அதற்கிடையிலே ஒரு கேள்வி. அமெரிக்காவில் புதிய இயந்திரமொன்று கண்டுபிடித்ததன் காரணமாக, 10 அலகு உணவை 3 அலகு துணிக்குச் சரியாக மாற்றும் முறைக்குப்பதில் 6 அலகு துணியாக மாற்றக்கூடிய வசதியுண்டானால், என்ன நடக்கும் ? அதனால் அமெரிக்காவுக்கு நன்மையுண்டா ? ஆம். உற்பத்தி வீதம் பெருகும். அதை AK′ என்ற கோடு காட்டுகிறது. (படம் 1) (அமெரிக்கா இப்போது H இலிருந்து H′ அளவுக்கு உற்பத்தியில் உயருகிறது. அதனால் அதனிடம் அதிக உணவும் அதிக துணியுமுண்டு என்பதைக் காட்டுக.)

**வியாபாரமின்றி ஐரோப்பா.**

அமெரிக்கா சம்பந்தமாகக் கூறிய விடயங்களை இப்போது ஐரோப்பா விடயத்திலும் கூறலாம். ஆனால் ஒரு வித்தியாசம். நிலத்தோடு வைத்துப் பார்க்குமிடத்து ஐரோப்பாவிலே அதிக தொழிலாளர் உண்டு. அதனால் ஐரோப்பாவின் செலவு வித்தியாசப்படும். அதாவது உணவைத் துணிக்கணக்கில் மாற்றும் வீதம் வித்தியாசப்படும். உணவு விடயத்தில் அதற்கு ஒப்பியற் பயன் குறைவு; ஆனால் துணிவிடயத்திலே கூட, அதனுடைய 10 அலகு உணவை 8 அலகு துணியாக மாற்றலாம். ஐக்கிய அமெரிக்காவிலும் பார்க்க 5 அலகு அதிகமாக ஐரோப்பா பெறுகிறது. ஏனெனில் அதற்கு துணி விடயத்தில் ஒப்பளவு நன்மை உண்டு. அமெரிக்கா தியாகஞ் செய்யும் ஒவ்வொரு அலகு துணிக்கும் அது உணவு வகையில் 10/3 அல்லது 3.33 அலகு பெறுகிறது. ஆனால் ஐரோப்பாவுக்கு

ஐரோப்பாவும் உணவையோ உடையையோ உண்ணாட்டில் உற்பத்தி செய்யலாம்.

| இயல்தகவுகள் | ஐரோப்பா<br>உணவு, மில்லியன் அலகுகளில் | உடை, மில்லியன் அலகுகளில் |
|---|---|---|
| A | 150 | 0 |
| B | 100 | 40 |
| C | 50 | 80 |
| D | 0 | 120 |

அட்டவணை 3.—ஐரோப்பாவின் உற்பத்தி—இயல்தகவு அட்டவணை (10 : 8 மாறுத—செலவு விகிதம்).

www.padippakam.com




அதனுடைய உணவு உற்பத்திக்குரிய ஒப்பியல் வசதிக்குறைவினுல் 10/8 அல்லது 1.25 அலகு உணவையே அது தியாகம் செய்யும் ஒவ்வொரு அலகு துணிவகையாற் பெறுகிறது. இங்கே செலவு விகிதத்தில் இரு நாடுகளுக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். அமெரிக்காவுக்கு 10 : 3, ஐரோப்பாவுக்கு 10 : 8 ஐரோப்பாவும் உணவு உடை என்பவற்றை உள்ளூரில் உற்பத்திசெய்யலாம்.

மேலும் இருநாடுகளேயும் தனித்தனி வைத்து ஆராய்வோம். ஐரோப்பாவின் உற்பத்தித் தொகை என்ன ? வியாபாரத்திலே ஈடுபடுமுன்னர் அது 50 அலகு உணவையும் 80 அலகு துணியையும் உற்பத்தி செய்ததென்று வைத்துக்கொள்வோம். ஏனெனில் அதன் சனத்தொகை அதிகம். நிலப் பரப்புக்குறைவு. அதனுடைய நிரந்தரச் செலவு விகிதம் 10 : 8. இவற்றைக் கொண்டு நாம் அட்டவணை 3 இல் உள்ளதுபோன்ற உற்பத்திச் சாத்திய அட்டவணையைத் தயார் செய்யலாம். இதைப்படம் 2 இல் உள்ள உற்பத்தித் தகைமைக்கோட்டுடன் ஒப்பு நோக்கிப் பார்க்க.

**வியாபாரம் தொடங்குதல்.**

இப்போது இரண்டு நாடுகளுக்குமிடையில் வியாபாரம் செய்யக்கூடிய தகுதியுண்டென்பதை ஒப்புக்கொள்வோம். உணவுக்குப் பதில் துணியை ஒரு விலை விகிதத்தில் பண்டமாற்றுச் செய்யலாம். இருநாடுகளுக்கும்

**ஐரோப்பாவின் உற்பத்தி இயல்தகவுகள் உடை உற்பத்திக்குச் சார்பானவை ;**




**படம் 2.** சருவதேச வியாபாரத்திற்கு முன், ஐரோப்பா தான் உற்பத்தி செய்வதையே நுகர்ந்து, உள்ளூர் உற்பத்தி இயல்தகவு வளைகோட்டிலே C இல் இருகின்றது. (இவ்வத்தியாயத்தை வாசித்து முடிக்கும் வரையும் C[1], S என்ற தானங்களைப் புறக்கணிக்கவும்).

உணவு உடை விடயத்திலேயுள்ள சப்பிளை, தேவையை அறிந்து பூர்த்தி செய்வதற்கு நடுக்கடலில் ஒரு மத்தியஸ்தர் நிற்கிருர் எனக்கொள்வோம். இவர் உணவு உடை என்பவற்றுக்கானதொரு பண்டமாற்று விலையைக் கூறுகிருர். சப்பிளை, தேவைக்கு ஏற்புடையதாகவரும்வரை அவர் கூறிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டேயிருப்பார். கடைசியாகச் சமநிலை விலை மட்டம் வந்ததும், சரி என்கிறார். இந்த நிலையில் சப்பிளை தேவை என்பவற்றுக்கிடையே சமநிலை உண்டாகிறது.

ஐரோப்பா துணி உற்பத்தியிலே விசேட கவனம் செலுத்தும். அதற்கான பலவாய்ப்புக்கள் அதனிடமுண்டு. அவ்வாறு உற்பத்தி செய்த துணியின் ஒரு பகுதியை அது வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யும். அதற்குப் பதிலாக உணவுப் பொருளை வாங்க உத்தேசிக்கும் என்ற விடயமெல்லாவற்றையும் மத்தியட்சர் யூகித்து அறிந்திருப்பார். ஆனால் பரிவர்த்தனை விகிதம் எப்படியிருக்குமென்பது அவருக்குத் தெரியாது. அது 10 : 3 ஆகவோ 10 : 8 ஆகவோ 10 : 5 ஆகவோ 10 : 6 ஆகவோ வேறு விதமாகவோ இருக்குமென்பது அவருக்குத் தெரியாது. அவர் வியாபாரத்துக்குப் புதியவராகவோ மந்தபுத்தியுடையவராகவோ இருந்தால் பரிவர்த்தனை விகிதம் 10 : 1 ஆக அல்லது 10 : 12 ஆக இருக்குமென எண்ணக் கூடும்.

ஆனால் கடைசியாகக் குறிப்பிட்ட இரண்டும் முடிவான பரிவர்த்தனை விகிதமாயிருக்கமுடியாது. இதை அவர் அனுபவத்தால் அறிந்துகொள்வார். 10 அலகு உணவுக்குப் பதிலாக 1 அலகு துணியைத் தரலாமென அவர் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குஞ் சொல்லட்டும். உடனே அமெரிக்கா வேண்டாமென்று சொல்லிவிட்டு உள்நாட்டிலே 3 அலகு துணியை உற்பத்தி செய்து சுயதேவையைப் பூர்த்தி செய்யப்பார்க்கும்.

அமெரிக்கா துணியைப் பெரிய அளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து கொண்டு உணவை ஏன் இறக்குமதி செய்யக்கூடாது. ஓர் அலகு துணிக்கு 10 அலகு உணவல்லவா கிடைக்கிறது. 1 அலகு துணி உள்நாட்டு உணவு உற்பத்திவகையில் எவ்வளவு உணவை உண்டாக்கும். அட்டவணை 2 படம் 1 என்பவற்றை ஆராய்ந்தால் அதை 10/3 அல்லது 3.33 அலகு உணவாகக் காணலாம். 10 : 1 விகிதத்தில் அமெரிக்கர் தனது வளங்களையெல்லாம் துணி உற்பத்திக்குத் திருப்பலாம். தனக்கு மிஞ்சிய துணியை ஏற்றுமதி செய்து உணவை இறக்குமதி செய்யலாம்.

ஐரோப்பாவின் நிலை என்ன ? உள்நாட்டிலே அது உற்பத்தி செய்யும் ஒவ்வோர் அலகு துணிக்கும் 10/8 அல்லது 1.25 அலகு உணவை உற்பத்தி செய்கிறான். 10 : 1 இல் ஐரோப்பாவும் உணவைவிட்டு விட்டுத் துணியை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவிரும்பும். மத்தியட்சர் அனுபவமில்லாதவர் என்பது இதிலிருந்து தெரியும். துணி சப்பிளை ஏராளமாக இருக்கும் ; ஆனால் உணவுக்கு நிறையத் தேவை உண்டாகும். இரண்டு பொருளும் அவரிடத்துக் கைவசமில்லாதபடியால் அவர் தமது தந்திரத்தைமாற்ற வேண்டும். துணியின் விலைக்குச் சார்பாக உணவின் விலையை அவர் ஏற்ற வேண்டும். விகிதத்தை 10 : 2 ஆகவோ 10 : 9 ஆகவோ உயர்த்த வேண்டும். இந்த இரண்டு விகிதங்கள்கூடப் பொருந்தமாட்டா. 10 : 2 விகிதம் கூட துணி உற்பத்தியைப் பெருக்கும். 10 : 9 ஆனால் உணவு உற்பத்தி பெருகும்.

படிப்பகம்

www.padippakam.com



எனவே பரிவர்த்தனை விகிதம் கடைசியாக 10 : 3, 10 : 8 என்பவற்றுக்குப் புறம்பாயிருக்கமுடியாது. இந்த இரண்டுக்குமிடையேயுள்ள விகிதம் நிகழக்கூடியதே. ஆனல் அமெரிக்கா தனக்கு வாய்ப்பான உணவு உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கும். ஐரோப்பா தனக்கு வாய்ப்பான துணி உற்பத்தியைச் செய்யும்.

**தொகுத்துக் கூறுதல்**

இதுவரை ஆராய்ந்தவற்றை ஒரு முறை நினைத்துப் பார்ப்போம்.

1. இயற்கை இரு நாடுகளுக்கு அல்லது பிரதேசங்களுக்கு உற்பத்திச் சாதனங்களை வித்தியாசமாகக் கொடுத்திருக்கிறது. உள்நாட்டிலே ஒரு பொருளுக்குப் பதிலாக மற்ெருரு பொருளை உற்பத்தி செய்வதற்கான சார்பியல் செலவு இரண்டு நாடுகளுக்கும் வித்தியாசப்படும். (உதாரணமாக விளைநிலம் அதிகமுள்ள பிரதேசமானல் உணவு உற்பத்திக்கும் அது போன்ற விடயங்களுக்கும் வசதி அதிகமுண்டு ; தொழிலாளர் அதிகமுள்ள பிரதேசமானல் தொழிலாளரைப் பயன்படுத்திச் செய்யும் வேலைகளுக்கு அதிக வாய்ப்புண்டு).

2. கட்டுப்பாடில்லாத வியாபார முறையிலே பொருள்கள் இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறப்படும். அப்போது பொருள்களின் விலைவிகிதம், இரண்டு நாடுகளிலுமுள்ள உள்ளூர் உற்பத்தி விலை விகிதங்களுக்கிடையில் இருக்கும்.

3. ஒவ்வொரு நாடும் தனக்கு வாய்ப்பான உற்பத்திகளைச் செய்து, தேவைக்கு அதிகமானவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அங்கு விளையும் பொருள்களைத் தன் தேவையை நோக்கி இறக்குமதி செய்யும்.

4. பரஸ்பர வியாபாரத்திலுலும் வாய்ப்பான உற்பத்தியில் ஈடுபடுவதிலுலும் ஒவ்வொரு நாடும் பயனடையும். அமெரிக்கா தான் அனுப்பும் ஒவ்வொரு 10 அலகு உணவுக்கும் பதிலாக 6 அலகு துணியைப் பெறுமானல் அது இலாபகரமானதாகும். எவ்வாறு? தான் உற்பத்தி செய்யும் 10 அலகு உணவுக்குப் பதிலாக 3 அலகு துணியை உற்பத்தி செய்வதிலும் பார்க்க இத்தகைய பண்டமாற்று இலாபகரமானதே. ஐரோப்பா விடயத்திலும் இது பொருந்தும். ஐரோப்பாதான் உற்பத்தி செய்யவாய்ப்புள்ள 8 அலகு துணியை 10 அலகு உணவாக மாற்றுவதானல் அது அவ்வளவு வாய்ப்புடையதன்று. அதற்குப் பதிலாக 6 அலகு துணியை ஏற்றுமதி செய்து 10 அலகு உணவை இறக்குமதி செய்வது வாய்ப்புடையதாகும். 10 :6 என்ற விகிதத்தை விட்டுவிட்டு 10 : 3 இற்கும் 10 : 8 இற்குமிடையிலுள்ள ஒரு விகிதத்தைத் தேர்ந்தெடுத்தாலும் அது பொருத்தமுடையதாகவே யிருக்கும்.

5. வியாபாரம் என்பது மறைமுகமான உற்பத்தி. அது திறமை சார்ந்த உற்பத்தி. திறமையற்ற உற்பத்தியிலும் பார்க்கத் திறமைசார்ந்த உற்



படிப்பகம்

www.padippakam.com



பத்தி பயனுடையது. (வியாபார நலன்களுக்கும் சார்புள்ள சம்பள விகிதங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும். கட்டுப்பாடில்லாத வியாபாரத்திலே, நாட்டின் ஏற்றுமதித் தொழிலின் உயர்ந்த உற்பத்தி அளவுக்குச் சம்பள விகிதம் உயர்வு பெறும். அதன் இறக்குமதிப் பொருட் தொழிலின் திறமை குறைந்த அளவுக்கு சம்பள விகிதம் இறங்கமாட்டாது).

## இறுதி விலை விகிதத்தை அச்சொட்டாக நிர்ணயித்தல்

உள்நாட்டு உற்பத்திச் செலவு விகிதங்களுக்கிடையில் எங்கே வியாபார விலை நிர்ணயமாகும்? “இரண்டு நாடுகளின் செலவு விகிதத்திலுமுள்ள வித்தியாசத்தை இரண்டாகப் பிரிக்கிறோம். அல்லது இந்த உதாரணப் படி 10 : 5½ ஐ சமநிலை விதமாகத் தெரிந்து கொள்கிறோம்.” என ரிக்காடோவின் சீடர் மதியீனமாகக் கூறுகின்றனர்.[1]

ஸ்மித், ரிக்காடோ என்பவர்களுக்குப் பின்னர் தோன்றிய பழைய பொருளியலாளரில் மூன்றாவது பேர்வழி ஜோன் ஸ்டூவட் மில். இரு நாட்டுச் செலவு வீதங்களின் இடையே அச்சொட்டாக நியமமாகும் இறுதி வியாபாரவிலை ஒவ்வொரு பொருளுக்கும் உலக மார்க்கெட்டிலுள்ள சப்பிளை, தேவை என்பவற்றின் வீத அளவிலே தங்கியுள்ள தெனக் காட்டினார். மக்கள் உணவுக்கு அதிக விருப்பம் உடையவராய்க் காணப் பட்டால், கிடைக்கக்கூடிய உணவு உடை என்பவற்றின் சார்பளவில் இது காணப்பட்டால் விலைவிகிதம் உயர்ந்த அளவான 10 : 8 ஐ அடுத்து அமையும். இரண்டு நாடும் துணியையே அதிகம் விரும்பினால் கடைசி விலை விகிதம் 10 : 3 ஐ அடுத்து அமையும்.[2]

மில் நமது மத்தியஸ்தர் செய்யும் வேலையையே செய்தார். ஒவ்வொரு சாத்தியமான விலைவிகிதத்திலும் கிடைக்கக்கூடிய சப்பிளை தேவை என் பவற்றைப் பற்றிய ஓர் அட்டவணையை அவர் தயார் செய்தார். அமெரிக்கா எவ்வளவு உணவை ஏற்றுமதி செய்யும் ; ஐரோப்பா எவ்வளவு உணவை இறக்குமதியாக்கவிரும்பும். ஒவ்வொரு விலை விகிதத்திலும், ஐரோப்பா எவ்வளவு துணியை ஏற்றுமதி செய்யவிரும்பும். அமெரிக்கா இறக்குமதி செய்யவிரும்பும் துணியின் தொகை எவ்வளவு? என்பவற்றையும் கணக்

1. அல்லது 10 : 3 இற்கும் 10 : 8 இற்குமிடையில் ஒரு வீதமென்று சொல்லி 110 : 48 அல்லது 10 : $\frac{44}{11}$ எனக் கொள்வார்களோ. அதுவும் தான் தோன்றித் தனமானதே.

2. அமெரிக்கா, ஐரோப்பாவிலும் பார்க்க மிகச் சிறியதானால் அதனுடைய சப்பிளைகள் சந்தையில் அதிகம் தோன்றா. அப்போது விலை 10 : 8 இலேயே நிற்கக்கூடும். அப்படியானால் அமெரிக்கா உணவுக்கு உற்பத்தியைச் செய்து கொண்டு துணியை இறக்குமதி செய்யும். ஆனால் அமெரிக்காவின் ஏற்றுமதி மொத்தத்தில் ஐரோப்பாவின் தேவைக்குப் போதாதிருக்கும். அதனால் ஐரோபபா தானும் உணவை உற்பத்தி செய்யவேண்டியதாகும். இது 10 : 8 விலையிற்றான் பொருத்தமுடையதாயிருக்கும். இந்த உதாரணத்தில் அமெரிக்கா சர்வதேச வியாபாரத்தின்பயனாக எல்லா நன்மையையும் பெறும். உருவத்தாற் பெரிய வித்தியாசமான அயல் நாட்டைப் பெற்றிருப்பது நன்மைக்கேதுவானதே.

www.padippakam.com




கொடுத்தார். ஏற்றுமதியும் இறக்குமதியும் சமன்படக்கூடியது ஒருவிலை விகிதத்திலேதான். இந்த விலை சமநிலை விலையாகும். இதிலே ஏற்றுமதியும் இறக்குமதியும் சமனாகும். அதாவது தொகை அளவிலும், குணமளவிலும் பொருந்தும். பின்னர் வியாபாரம் சுமூகமாக நடைபெறும். எது வரை? மக்களுடைய உருசியும் நுண்தொழிற் செய்முறையும் மாறும் வரை.

சமநிலை வியாபார விலைவிகிதம் 10 : 6 எனக்கொண்டோம். இது ஐரோப்பா வியாபாரத்திலிறங்குவதற்கு முன்னிருந்த நிலைமைக்கு அணித்தாயிருக்கிறதேயன்றி அமெரிக்கா வியாபாரத்திலிறங்குவதற்கு முன்னிருந்த நிலைமைக்கணித்தாக இல்லை.

அமெரிக்கா உணவு உற்பத்தியையே விசேடமாகச் செய்கிறது. படம் 3 இல் அமெரிக்க உற்பத்தியை உணவாக A இல் கொள்ளுகிறது. இப்போது அமெரிக்கா சுதந்திரமாக வியாபாரஞ் செய்யமுடியுமாதலால் பழைய உற்பத்தி நிலையைவிட்டுவிடுகிறது. வியாபாரம் காரணமாக அது AK', என்ற கோட்டில் நிற்கிறது. இது ஏதோ பயனுள்ள புதிய கண்டுபிடிப்பைக் கண்டதுபோலிருக்கும். வியாபாரத்தினால் அமெரிக்கா நன்மையைப் பெறுகிறதா? ஆம். இது அமெரிக்காவின் புதிய நுகர்வுச்-சாத்தியக்கோடு. இதில் அது எங்கே நிற்குமென்பது உள்நாட்டு விலைத்திட்டத்தில் தங்கியுள்ளது. அது H' இல் தங்கிவிடுமென நாம் கொள்ளுகிறோம். இந்தத் தானத்திலே 40 அலகு உணவும், 36 அலகு துணியும் நுகரப்படுகிறது. வெள்ளை அம்பு அமெரிக்காவின் ஏற்றுமதி (+) யைக்

**அமெரிக்கா உணவு உற்பத்தியை விசேடமாகச்செய்கின்றது; உடையை இறக்குமதி செய்கின்றது;**

சருவதேச வியாபாரத்திற்குப்பின் அமெரிக்கா




படம் 3. அமெரிக்காவின் உள்ளூர் உற்பத்தி இயல்தகவுக் கோட்டை AK குறிப்பிடுகிறது. 10 : 6 என்ற விலைவிகிதத்தில் வியாபாரம் செய்து A இல் உணவு உற்பத்தி செய்வதை புதிய நுகர்வுச் சாத்தியக்கோடு AK' காட்டுகிறது. கரிய அம்புக்குறிகள் (+) (−) என்ற அடையாளங்களால் ஏற்றுமதி இறக்குமதியைக் காட்டுகின்றன. சுதந்திரவியாபாரத்தால் அதிக பண்டங்களைப் பெற்று H இலிருந்து H' ஐ அமெரிக்கா அடைகிறது.

படிப்பகம்

www.padippakam.com



காட்டுகிறது. (−) இறக்குமதியைக் காட்டும். அமெரிக்கா உணவை உற்பத்திசெய்து உடையை இறக்குமதிசெய்கிறது.

இவை அட்டவணை 4 இல் அமெரிக்காவின் கீழ் காட்டப்பட்டுள்ளன. இந்த அட்டவணை முக்கியமானது. அதைக் கருத்தோடு படிக்கவேண்டும். இதைச் சரிவர அறிந்தால் ஒப்பியல் செலவுக் கோட்பாட்டை அறியலாம். சிறப்பு உற்பத்தியை மேற்கொள்வதாலும் வியாபாரத்தினுலும் அமெரிக்கா நன்மையடைந்துவிட்டது. அதற்கு நுகர்வதற்கு முன்னையிலும் அதிக உணவும், உடையும் உண்டு. ஐரோப்பாவின் நிலையும் இத்தகையதே. 'உலகம்' என்ற தலைப்பிலே உள்ளது அமெரிக்க ஐரோப்பிய உற்பத்திகளின் தொகை. சிறப்பு உற்பத்தியினுலும், வியாபாரத்தினுலும் இரண்டு பொருள்களினதும் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆருவது கட்டத்திலே மத்தியஸ்தருக்கு உருசிகரமான தகவல்களுண்டு. இரண்டு விடயங்கள் சம நிலையடைந்தமையைக் காட்டும். (1) இரண்டு பொருள்களினதும் உலக நுகர்ச்சி உலக உற்பத்திக்குச் சமனுயிருக்கிறது. கூடவுமில்லை குறையவுமில்லை. (2) ஒவ்வொரு நாடும் ஏற்றுமதிசெய்ய விரும்பும் தொகை மற்ற நாட்டினுல் இறக்குமதி செய்யவிரும்பும் தொகைக்குச் சமமாயிருக்கிறது. எனவே விலை விகிதம் 10 : 6 சரியானதே.[1]

ஒப்பியல் நன்மை சம்பந்தமான விளக்கம் இவ்வளவில் முடிகிறது. படம் 3 இலே அமெரிக்கா விடயத்திற் செய்ததுபோல படம் 2 இலே ஐரோப்பாவுக்குச் செய்து பரீட்சித்துப் பார்க்கலாம். வியாபாரத்தினுல், ஐரோப்பாவின் புதிய நுகர்ச்சிச்—சாத்தியக்கோடு D ஐச் சுற்றி நிலக்குத்து அச்சில் இயங்குவது ஏன்? படம் 3 இற் செய்ததுபோல அம்புகளை S க்கு இழுங்கள். அவை ஏற்றுமதி (+) யையும் இறக்குமதி (−) யையும் காட்டும். ஐரோப்பாவின் அம்புகள் அமெரிக்காவின் அம்புகளோடு ஒத்திருக்கின்றன. ஆனுல் அடையாளக்குறிகள் எதிராயிருக்கின்றன. இத்தகைய தொகைவாரியான ஏற்றுமதி இறக்குமதிச் சமன்பாடு சமநிலையிலே ஏன் அவசியம்? வாசகர் இந்த உதாரணத்துக்கு தொழிலாளர் அளவையும் சம்பளத்தரவுகளையும் சேர்க்கலாம். ஒப்பியல் நன்மையே பிரதானம், தனித்தொழிலாளர் வசதியன்றென்பதைக் கவனியுங்கள்.

1. மத்தியஸ்தர் இவ்வாருன அட்டவணைகளைத் தயார் செய்து ஒரு புத்தகத்தையே உருவாக்கலாம். ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு விலை விகிதத்தைக் குறிப்பிடலாம். ஆனுல் ஒரு பக்கந்தான் பொருத்தமாயிருக்கும். மற்றவற்றிலுள்ள ஏற்றுமதி இறக்குமதி சமன்படா. உதாரணமாக 10 : 7 இல் அமெரிக்காவின் துணி இறக்குமதி விருப்பத்துக்கு ஏற்ப ஐரோப்பா செய்துகொள்ள மாட்டாது. உலகத்தை ஒரு சேரப்பார்க்குமிடத்து உற்பத்திக்கு அதிகமாகவே துணி நுகர விரும்பும். மத்தியஸ்தரிடம் பொருள் அட்டவணையிடையாது. எனவே துணிக்கு அதிக விலையும் உணவுக்கு குறைவான விலையும் பதியப்பட்ட பக்கத்தைத் திருப்புவார். சரியான பக்கத்திலே ஏற்றுமதியும் இறக்குமதியும் சமனுடையதாயிருக்கும்.

www.padippakam.com



**சர்வதேச வியாபாரம் அதிக உலக உற்பத்தியைச் சாத்தியமாக்குகிறது :**

அட்டவணை 4. ஒப்பியல் நன்மைப்படி வியாபாரத்தினால் உண்டாகக் கூடிய இலாபத்தையும் சிறப்பு உற்பத்தியையும் காட்டும் சுருக்கம்.

| ஒப்பிடும் பிரதேசம். | துணிக்குப் பதிலாக உணவு பெறும் மாற்று விகிதம் $Pc/Pf$ | உணவு உற்பத்தி | உணவு நுகர்ச்சி | உணவு ஏற்று (+) மதி அல்லது இறக்குமதி (–) | துணி உற்பத்தி | துணி நுகர்வு | துணி ஏற்று மதி (+) இறக்குமதி (–) |
|---|---|---|---|---|---|---|---|
| **வியாபாரத்துக்குமுன் :—** | | | | | | | |
| அமெரிக்கா | 10 : 3 | 30 | 30 | 0 | 21 | 21 | 0 |
| ஐரோப்பா | 10 : 8 | 50 | 50 | 0 | 80 | 80 | 0 |
| உலகம் | — | 80 | 80 | 0 | 101 | 101 | 0 |
| **வியாபாரத்துக்குப்பின் :—** | | | | | | | |
| அமெரிக்கா | 10 : 6 | 100 | 40 | +60 | 0 | 36 | -36 |
| ஐரோப்பா | 10 : 6 | 0 | 60 | -60 | 120 | 84 | +36 |
| உலகம் | 10 : 6 | 100 | 100 | 0 | 120 | 120 | 0 |
| **வியாபாரத்தால் இலாபம் :** | | | | | | | |
| அமெரிக்கா | — | — | +10 | — | — | +15 | — |
| ஐரோப்பா | — | — | +10 | — | — | +4 | — |
| உலகம் | — | +20 | +20 | — | +19 | +19 | — |

**பலபண்டம்**

மேற்காட்டிய ஆராய்ச்சியிலே இலேசாக்கப்பட்டதை அகற்றினால் என்ன நடக்குமென்பதைச் சுருக்கமாகக் காட்டலாம். முடிபுகள் விசேடமாக மாறவில்லை. விபரங்களிலுள்ள மாற்றங்களும் கஷ்டமானவையல்ல.

இதுவரை இரு பண்டங்களையே ஆராய்ந்தோம். அவையாவன உணவு, துணி. உணவு பல பொருள்களையடக்கும். (இறைச்சி, பால்..........) துணி விடயமும் அப்படியே. பரிவர்த்தனையாலுண்டாகும் நன்மையும் பெரிதே. எத்தனையோ வகையான பொருள்கள் சர்வதேசச் சந்தையில் காணப்படுகின்றன.

இரண்டு நாடுகளிலே பலவகைப்பட்ட பொருள்கள் மாறுத செலவில் உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றின் ஒப்பியல் நன்மைப்படி அல்லது சார்பியல் செலவுப்படி ஒழுங்கு செய்யலாம். உதாரணமாக கார், சணல் வாசனைப் பொருள், கடிகாரம், கோதுமை, கம்பளி என்பவற்றைப் பின் வரும் ஒப்பியல் நன்மைப்படி ஒழுங்குசெய்யலாம்.

www.padippakam.com



அமெரிக்கா ←——————————————→ ஐரோப்பா.

கோதுமை, கார், சணல் கடிகாரம், கம்பளி, வாசனைப்பொருள்

இதன் அர்த்தமென்ன? அமெரிக்காவில் மற்றப் பொருள்களைவிட கோதுமை உற்பத்திச் செலவு மிகக் குறைவென்பதே. ஐரோப்பாவில் வாசனைப்பொருள் உற்பத்திக்கு ஒப்பியல் வசதி அதிகம். கடிகார உற்பத்திக்கு அவ்வளவு வசதியில்லை.[1]

1. கீழே இந்தப்பண்டங்களின் இலக்கபூர்வமான தரவைத் தருகிறேம். மேலும் ஆராய்ச்சி நடத்தும் மாணுக்கருக்கே இது பயனுடையது. உற்பத்திச் செலவைப் பணக்கணக்கிலோ, தொழிலாளர்கணக்கிலோ அளக்கவேண்டியதில்லை. ஒரு பொருளை மற்றொரு பொருளாக "மாற்றும்" கணக்கிலே அளக்கலாம். உதாரணமாக இரு நாட்டுப்பொருள்களின் உற்பத்திச் செலவையும் கம்பளிவிகிதத்திலே அளக்கவிரும்புகிறேம். அதனைக் காட்டப் பின்வரும் படம் உதவும்.

| பண்டம் (1) | அமெரிக்க உற்பத்திச் செலவு விகிதம் கம்பளிக்கணக்கில் (2) | ஐரோப்பிய உற்பத்திச் செலவு விகிதம் கம்பளிக்கணக்கில் (3) | அமெரிக்கச் செலவில் ஐரோப்பியச் செலவைச் ஒப்பீட்டளவிற் கணித்தது (4) [= (3) ÷ (2)] |
|---|---|---|---|
| கார் .. | 1000 | .. 3000 | .. 3.0 |
| சணல் .. | 0.8 | .. 1.6 | .. 2.0 |
| வாசனைப் பொருள் | 5.0 | .. 3.0 | .. 0.6 |
| கடிகாரம் .. | 50 | .. 75 | .. 1.5 |
| கோதுமை .. | 0.2 | .. 0.8 | .. 4. |
| கம்பளி .. | 1.0 | .. 1.0 | .. 1.0 |

இதன் அர்த்தமென்ன? அமெரிக்காவிலே 1000 அலகு கம்பளி உற்பத்தியைத் தியாகஞ் செய்தால் 1 கார் உற்பத்தி செய்யலாம். ஐரோப்பாவிலே 3000 அலகு கம்பளியைத் தியாகஞ் செய்யவேண்டும். அப்போது அமெரிக்க உற்பத்திச் செலவில் 3 மடங்கு ஐரோப்பிய உற்பத்திச் செலவென ஆகிறது. ஐரோப்பாவில் வாசனைத் திரவிய உற்பத்திச் செலவு குறைவு; அதனல் சார்பியல் செலவு நன்மை அதிகம்; கோதுமைவிடயத்தில் இந்நன்மை மிகக்குறைவு. மற்றப்பண்டங்கள் இடைப்பட்டுள்ளன. கடைசிப்பந்தியிலுள்ள இலக்கங்கள் 1 இல் பார்க்க உயர்ந்தவை என்பதன் அர்த்தம் ஐரோப்பாவின் உற்பத்தித் திறன் குறைவென்பதன்று. கம்பளியை உதாரணமாக எடுத்ததால் அது உண்டானது. கோதுமை அல்லது கடிகாரம் என்பதை எடுத்திருந்தால் விளைவு எதிர்மாருக இருக்கும். ஆனல் முடிவுகள் மாருதிருக்கும் அளவு முறைமாத்திரம் மாறும். (அதாவது அங்குலத்தை அடியாகவும், யார் ஆகவும் மாற்றும் முறையைப்போல்)

நுண்தொழிற் குறிப்பு: தொழிலாளர் உற்பத்தித் திறனைப் புகுத்தவிரும்பினல் அமெரிக்கத் தேவைகளைத் தொழிலாளர் தினக்கணக்கிலே ABC என்று எழுதலாம். ஐரோப்பா விடயத்தை $a, b, c$ . . என எழுதலாம். பின்னர் இந்த ஆராய்வினை ஒப்பியல் விகிதத்திலே $A/B$, $C/B$, . . . . $a/b$, $c/b$, . . . என்ற உருவத்தில் எழுதலாம். வியாபார மாதிரியை விளக்குவதாலுல் $A/a$, $B/b$, என நாடுகளிடையே உள்ள தனி வசதிகளை ஒப்பிடத்தேவையில்லை. பணத்தையும் நிச வருமானத்தையும் ஒப்பிடுவதாலுல் இந்தத் தனி வசதிகள் அவசியமே. 31 ஆம அத்தியாயத்தின் அனுபந்தத்திலே ஐரோப்பிய நிசவருமானத்துக்கும் அமெரிக்க நிசவருமானத்துக்குமுள்ள விகிதம் $A/a$, $B/b$, என்பவற்றின் உச்சத்துக்கும் அதமத்துக்குமிடையிலுண்டென்பதைக் காட்டினேம். அந்த இடை எங்கே அச்சொட்டாக இருக்குமென்பதை பரஸ்பரத் தேவைகளை ஆராய்ந்தே அறியவேண்டும்.

www.padippakam.com



வியாபாரம் ஏற்பட்டால் அமெரிக்கா கோதுமையை உற்பத்தி செய்யும், ஐரோப்பா வாசனைப் பொருளை உற்பத்தி செய்யும் என்பது நிச்சயம். ஆனால் பிரிவுக்கோடு எங்கே உண்டாகும்? காருக்கும் சணலுக்கும் இடையிலா? அல்லது அமெரிக்கா சணலை உற்பத்தி செய்ய ஐரோப்பா கடிகாரம், கம்பளி, வாசனைப் பொருள் என்பவற்றை உற்பத்தி செய்யுமா? அல்லது பிரிவுக்கோடு இரண்டு பண்டங்களுக்கிடையில் ஏற்படாமல் ஒரு பண்டத்திலே விழுமா? உதாரணமாக சணலிலே விழுந்தால் இரண்டு நாடுகளும் ஒரே சமயத்திலே சணலை உற்பத்தி செய்யக்கூடும்.

பலவகையான பண்டங்களுக்கு இருக்கும் சர்வதேசத் தேவையின் ஒப்பியல் வீத அளவிலேதான் இவ்வினாவுக்கு விடை தங்கியுள்ளது என்பதைக் காண நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். இந்தப் பண்டங்கள் ஒரு நூலிலே அவ்வவற்றின் ஒப்பியல் நயனை அனுசரித்துக் கோக்கப்பட்ட மணிகள்போல இருந்தால், அமெரிக்க உற்பத்திக்கும், ஐரோப்பிய உற்பத்திக்குமிடையிலே பிரிக்கும் கோடு எங்கே விழும் என்பதை மொத்தத்தேவை சப்பினை நிலைமையே நிச்சயிக்கும். பின்னர் உதாரணமாகக் கார்களுக்கும் கோதுமைக்கும் உள்ள அதிகமானதேவை அமெரிக்காவுக்கு வாய்ப்பான முறையிலே வியாபாரத்தைத் திருப்பும். அதன்பயனாக நாம் சுபீட்சமுடையவராவோம். அதன் பின்னர் சணல் தும்பு உற்பத்தி எமக்கு எவ்வித நன்மையையுங் கொண்டுவரமுடியாத நிலையை அடைவோம். ஆனால் பாலைவனங்களிலே சணலை வளக்கக்கூடிய புதிய விஞ்ஞான முறையைக் கண்டுபிடித்தால், அதன் பயனாக பல பண்டங்களின் ஒப்பு நயங்கள் புனர்ச்சீரமைப்படையும். அதனால் விசேட உற்பத்திகள் வியாபாரங்கள் என்பவற்றின் மாதிரியமைப்பு மாறும்.

**பலநாடுகள்.**


பல பண்டங்களால் உண்டாக்கப்பட்ட சிக்கல் நிலைபற்றி இவ்வளவும் கூறினோம். பல நாடுகள் பற்றிய பிரச்சினை எப்படி? ஐரோப்பாவும், அமெரிக்காவும் சேர்ந்ததுதான் உலகம் என்று கொள்ளமுடியாது. அவைகளும் பல தனிப்பட்ட தனியாட்சித் தேசங்களைக் கொண்டவை. பல தேசங்களைப் புகுத்துவதால் நமது ஆராய்ச்சிமாற வேண்டியதில்லை. ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில், அதனோடு வியாபாரஞ் செய்யும் ஏனைய நாடுகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு கூட்டமாக்கி, "உலகின் எஞ்சிய பாகங்கள்" என்று கூறிவிடலாம். வியாபார நன்மைகள் நாடுகள் எல்லைகள் சம்பந்தமாக விசேடத் தொடர்புடையனவல்ல. ஏற்கனவே நாம் கண்ட கொள்கைகள் நாட்டுத்தொகுதிகளிடையிலும், ஒரே நாட்டிலுள்ள பல பிரதேசங்களிடையிலும் பொருத்தமுடையனவாயிருக்கும். ஐக்கிய அமெரிக்காவுக்கும், கனேடாவுக்குமிடையிலே வியாபாரம் செய்வதிலும் பார்க்க வடக்குப் பிரதேசத்துடனும் தெற்குப் பிரதேசத்துடனும் வியாபாரம் நடத்துவது பொருத்தமுடைய தாயிருக்கும்.

www.padippakam.com



தனிப்பொருளாதாரச் சுபீட்சத்தை நோக்காகக் கொள்ளும்போது, " அமெரிக்க பண்டங்களை வாங்குக ", என்ற வகையான சுலோகங்களைக் கூறுவது மடைமையாகும். நமது சுபீட்சத்தில் ஒரு பகுதி, நமது 50 சமஸ்தானங்களிடையிலும் சுதந்திர வியாபாரம் சுங்கவரியின்றி நடைபெறுவதனால் உண்டானதே.

ஆனால் பல தேசங்கள் இருப்பதால் புதியதோர் அமிசம் புகுத்தப் பட்டிருக்கிறது. ஐரோப்பாவோடு மறைமுகமாக வியாபாரம் நடத்துவது அமெரிக்காவுக்கு இலாபகரமானதாயிருக்கும். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு யந்திர சாதனங்கள் உட்படப்பல பண்டங்களை விற்கிறது. ஐரோப்பாவிலிருந்து மிகச் சொற்பமான பொருளைத்தான் வாங்குகிறது. ஆனால் கிழக்கிந்திய தீவுகளிலிருந்து றப்பர், முதலிய மூலப்பொருள்களை வாங்குகிறது. அந்த நாடுகள் அமெரிக்காவிடமிருந்து பண்டங்களை வாங்குவதில்லை. ஆனால் துணி முதலிய பொருள்களை அவை ஐரோப்பாவிடமிருந்து பெறுகின்றன. இவ்வாறு மிக வாய்ப்பான முக்கோண வியாபாரமொன்று நடைபெறுகிறது. இதனைக் கீழேயுள்ள படத்திலே காண்க. அம்புகள் ஏற்றுமதிகளின் முக்கியமான போக்கைக்காட்டுகின்றன.



ஒவ்வொரு நாடும், பரஸ்பரம் வியாபார உடன்படிக்கைகளைச் செய்துகொண்டால், நிலைமை எப்படியிருக்கும் ? இந்தியத் தீவுகள் எம்மிடமிருந்து சமமான அளவு பண்டங்களை வாங்கினாற்றான், நாமும் அவர்களிடமிருந்து பண்டங்களை வாங்குவோம் என்ற நிலை வந்துவிட்டால் என்ன ? இந்த நிலையே ஒவ்வொரு இரு நாடுகளிலும் உண்டானால் என்ன நடக்கும் ? அதனால் வியாபாரம் பெரிதும் வீழ்ச்சியடையும் ; எந்த மட்டம் குறைவாக இருக்கிறதோ அந்த மட்டத்தின் அளவுக்கு இறக்குமதிகள் ஏற்றுமதிக்குச் சமனாயிருக்கும். ஒவ்வொரு வியாபாரப் பிரதேசமும் இறுதியில் மோசமான நிலையிலேதான் முடிவுபெறும்.

**செலவு அதிகரிப்பு.**

இரண்டு நாடு இரண்டு பண்டம் என்ற விடயத்தை மறுபடியும் ஆராயுமிடத்து செலவுகள் நிரந்தரமாயிருக்குமென்ற கருதுகோளைவிட்டு விடவேண்டும். படம் 1, 2, 3 இலுள்ள உற்பத்தித் தகைமைக்கோடு இரண்டாம் அத்தியாயத்திலே உள்ளவாறு வளைந்திருக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தனிப்பட்ட செலவுத் தொகையை விசேடமாகக் குறிப்பிடுவது முடியாத காரியம்.


ஐரோப்பாவிலும் பார்க்க அமெரிக்காவிலேதான் உணவு உற்பத்திக்கான வசதிகள் அதிகமுண்டு. அமெரிக்க உணவிற் பெருந்தொகை உற்பத்தி செய்யப்பட்டபின்னர் அமெரிக்காவின் மேலதிக உணவின் செலவு ஐரோப்பாவிலும் பார்க்க அதிகமாக இருக்கும். சீலையோடு ஒப்பிட்டுப் பார்க்குமளவில் உணவின் விலையைத் தீவிரமான அளவுக்கு அமெரிக்கப் போட்டி குறைத்தாலும், ஐரோப்பாவிலுள்ள நிலத்திலே சிறந்தவற்றில் ஒரு சொற்பம் உணவு உற்பத்தியிலே மற்ற நாடுகளுக்கு சளைக்காமல் நிற்கும். சர்வதேச வியாபாரம், சம நிலை நிலைமையை அடைந்தபின்னரும் அமெரிக்கா குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய முதல் சொற்பத் துணி அவ்வாறே மாறுமல் உற்பத்தி செய்யப்பட்டுவரும். எனினும் அமெரிக்கத் துணி உற்பத்தியை பெருக்குதற்கான எந்த ஒரு முயற்சியும் உயர்ந்த மேலதிகச் செலவை உண்டாக்குவதோடு போட்டியளவில் நட்டத்தையுமுண்டாக்கும்.

சர்வதேச வியாபாரத்திலே உயர் செலவிஞல் உண்டாகக்கூடிய மாற்றங்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கே கூறுவாம்.

ஒவ்வொரு நாடும் உற்பத்திக்கு ஒப்பியல் நன்மைகள் உள்ள ஒரு பொருளின் உற்பத்தியிலே தனது முழுக்கவனத்தையுஞ் செலுத்தும். இது சர்வதேச வியாபார விளைவிஞல் உண்டாவது. இந்தப் பொருளிலே ஒரு பகுதியை ஏற்றுமதி செய்து வேற்றுநாட்டின் மேல்மிச்சமான ஏற்றுமதிகளின் ஒரு பகுதியைப் பதிலாக இறக்குமதி செய்யும். ஆனுல் சார்பான செலவினம் உயர்ந்தால் விசேட உற்பத்தி செய்தல் பூரணமாக்கப்பட வேண்டியதில்லை. இந்த நாட்டிலோ அந்த நாட்டிலோ இரண்டு பொருள்களிலும் ஒரு சிறு பகுதியை உற்பத்தி செய்யலாம். இதற்குக் காரணம் அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள் குறைவாகவேயிருக்குமாதலால் அதனுடைய உற்பத்திச் செலவும் குறைவாயிருக்கும்.[1]

1. கேத்திரகணிதப் போக்குடையவர் கட்கு படம் 4 துணை புரியும். ஆனுல் எங்களிற்பலர் அதைத் தவிர்த்துவிடலாம். உயர்ந்த செலவுவகை நிலவிய காலத்திலே அமெரிக்காவின் வியாபாரத்துக்குப் பிந்திய நிலையையும் முந்திய நிலையையும் இதுகாட்டுகிறது. உற்பத்திச் சாத்தியக்கோடு இப்போது வெளியே வளைந்துள்ளது. சர்வதேச வியாபாரத்துக்கு முன்னர் அமெரிக்கா H இல் உற்பத்தி செய்தும், நுகர்ந்தும் வருகிறது. உள்ளூர் விலை விகிதம் 10 : 3. இது சொற்பம் உணவைத்தியாகஞ் செய்து அதற்குப் பதிலாகக் கொஞ்சம் மேலதி

குறைந்துசெல் விளைவுகளிலும் அதிகரித்துச்செல் விலைகளிலும் சருவதேச வியாபாரம்




படிப்பகம்

www.padippakam.com



## தொழிலாளர், உற்பத்திச் சாதனங்கள் என்பவற்றின் இயக்கங்களுக்குப் பதிலாகச் சர்வதேசப் பண்ட இயக்கங்கள்.

இரண்டாவது அத்தியாயத்திலே கூறப்பட்ட உயர்ந்து செல்செலவுவிதியை நாம் ஏற்றுக்கொண்டபடியால் ஒவ்வொரு நாட்டினுள்ளும் செயற்படும் குறைந்து செல் பயன்விதியைப்பற்றி ஆராய்வோம்.

சர்வதேச வியாபாரம் நடந்தேறிய பின்னர் ஐரோப்பாவின் வளங்கள் உணவு உற்பத்தியிலிருந்து விலகி துணி உற்பத்தியிலீடுபடுகின்றன. துணி உற்பத்திக்கு அதிக தொழிலாளரும், சொற்ப நிலமுமே தேவைப்படுவதால், சொற்ப நிலமுள்ளதும், அதிக குடிசனமுள்ளதுமான ஐரோப்பாவில் நில நெருக்கடி தீர்க்கப்படுகிறது. நிலம் அத்துணை அருந்தலன்று. சம்பளங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து வாடகைகள் விழுகின்றன. அமெரிக்காவிலே வியாபாரத்தின் பின்னர் உணவு உற்பத்தியிலே கவனஞ் செலுத்தப்படுகிறது. இங்கே தொழிலாளரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிறார்கள் ; நிலம் நன்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் சம்பளங்களுக்கு ஒப்பாக வாடகைகள் உயர்கின்றன.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கட்டுப்பாடற்ற சர்வதேசப் பண்டங்களின் இயக்கம், உற்பத்திச் சாதனங்களின் சர்வதேச இயக்கம் போலவே சில விளைவுகளை உண்டாக்குகின்றது. ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குத் தொழிலாளர் பெயர்வதால் அமெரிக்காவிலுள்ள தொழிலாளர் குறையைத் தீர்ப்பதோடு ஐரோப்பாவின் நிலப் பிரச்சினையையும் தீர்க்கிறது. அவ்வாறே ஐரோப்பாவிலிருந்து துணி அமெரிக்காவுக்குச் செல்வதும் அமெரிக்காவிலிருந்து உணவு ஐரோப்பாவுக்குச் செல்வதும், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள

கத் துணியைப் பெறுவதற்கான மேலதிகச் செலவோடு சமனுடையதாகும். (இது H இல்) இது H இல் உள்ள AK கோட்டின் சரிவால் காட்டப்பட்டுள்ளது.

வியாபாரத்தின் பின்னர் பொதுப்படையான விலைவிகிதம் 10 : 6 ஆயிருக்கும்போது அமெரிக்க உற்பத்தி B இக்கு நகருகிறது. இது குறைந்த துணிக்கானாலும் துணியிலிருந்து முற்றாக விலகவில்லை. புதிய உற்பத்தித்தானமான B போட்டியின் பயனாகவே அடையப்படும் ஏனெனில் அங்கேயுள்ள கோட்டின் சரிவு அதாவது மேலதிகத் துணியின் செலவுக்கும், மேலதிக உணவுக்குமுள்ள விகிதம் 10 : 6 ஆகும். இது பொதுவான சர்வதேசவிலை விகிதத்துக்குச் சமமாகும். B இலேதான் அமெரிக்காவின் தேசீய உற்பத்தி உச்ச நிலையிலிருக்கும்.)

நேர்க்கோடு புதிய நுகர்வுசாத்தியக்கோட்டைக் காட்டுகிறது. அமெரிக்கா வியாபாரத்தின் மூலம் இந்த இடத்தைஅடையும். இது வளையாமல் நேராக இருக்கிறது. ஏனெனில் ஏலக்காரர் சுதந்திரமாக வியாபாரம் செய்ய விரும்புகிறார். இவ்வாறு அமெரிக்காவுக்கு 10 : 6 விகிதத்திலே அது விரும்புமளவு உணவுக்கு துணியைக் கொடுப்பார். சப்பிளை, தேவை என்பவற்றால் நிச்சயிக்கப்பட்ட இறுதி நுகர்வு மட்டங்கள் H என்ற புள்ளியினாற் காட்டப்பட்டுள்ளன. முன் போலவே இந்த அம்புகள் ஏற்றுமதி இறக்குமதிகளைக் குறிக்கின்றன.

வியாபாரத்தினால் இன்னும் இலாபங்களுண்டு. குறைந்து செல்விளைவினாலும், அதிகரிக்கும் செலவுகளினாலும், முன்போல விசேட உற்பத்திகிடையாது. அத்துணைப் பெரிய இலாபங்களுமில்லை. சமநிலைப்புள்ளியிலே மேற்படி வியாபாரத்துக்கு இடமில்லை. ஒப்பியலான (மேலதிக அல்லது இறுதிநிலை) உற்பத்திச் செலவுகள் இரண்டு நாட்டிலும் 10 : 6 இக்குச் சமமாயிருக்கின்றன.

www.padippakam.com



மேலதிக உற்பத்திச் சாதனங்களைக் குறைத்தும், அருந்தலான சாதனங்களை அருந்தலற்றதாக்கியும் விடுகிறது.

பண்டவியாபாரம், குறைவாக உற்பத்திச் சாதனங்களுள்ள நாடுகளிலே அருந்தலை எவ்வாறு ஓரளவு தீர்க்கிறதென்பதைத் தெளிவாக வற்புறுத்தினவர் சுவீடிஷ் பொருளியலறிஞரும் அரசியலறிருமான ஓலீன் என்பவர். ஒப்பியல் செலவு பற்றிப் பழம் பொருளியலாளர் கொண்டகோட்பாட்டுடன் அவர் பின்வரும் முக்கியமான கூற்றையும் கூறியுள்ளார்.

தொழிலாளரும், முதலும் நாடுகளிடையே கட்டுப்பாடின்றிச் செல்லத் தலைப்பட்டால், அது சம்பளங்களையும், சாதனவிலைகளையும் சமநிலைப்படுத்தத் தூண்டும். தேசீய எல்லைகளைக் கடந்து எந்தவிதமான உற்பத்திச் சாதனமும் செல்லாவிட்டாலும், சர்வதேச வியாபாரத்திலேயுள்ள கட்டுப்பாடற்ற பண்டங்களின் இயக்கத்தினால் ஓரளவு சாதன விலைகள் சமநிலைப்படும் போக்குக் காணப்படும்.

சர்வதேச வியாபாரமானது தேசீய உற்பத்தியை ஐரோப்பாவிலே அதிகரித்தாலும், அதே நேரத்திலே குறிப்பிட்டதொகுதிகளின் பங்கைக் குறைப்பதால் அவை நட்டமடைகின்றன. கன்சர்வேடிவ் கட்சியின் முதுகெலும்பாகக் கருதப்பட்ட பிரிட்டிஷ் நிலப்பிரபுக்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இங்கிலீஷ் தானியச் சட்டத் தீர்வைகளை 1846 இல் நிராகரித்தது சுயநலமாக இருந்திருக்கலாம். ஆனால் இறக்குமதித் தானியம் மீது பாதுகாப்பு வரிவிதிப்பதை நிலைநாட்ட அவர்கள் கடைசிவரை போராடித் தோல்வியுற்றமை மடைமையன்று.

## விலைக் குறைவும், சர்வதேச வியாபாரமும்.

பெருவாரி உற்பத்தியின் சிக்கனங்கள் மிக முக்கியமானால், உற்பத்தி பெருகப் பெருகச் செலவுகள் குறையும். சர்வதேசப் பண்டமாற்றின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்தும். செலவு குறைதல் குறிப்பிட்ட சில உற்பத்திகளைச் செய்வதாலும், வியாபாரம் நடத்துவதாலும் ஏன் இலாபமுண்டாகிறது என்பதை விளக்கும் இரண்டாவது பெரியசாதனமாகும். மற்றச் சாதனம் ஒப்பியல் செலவிலுள்ள வித்தியாசங்களாகும். மிக விஸ்தாரமான ஒரு சந்தையிருக்கும்போது பெரிய எடுப்பிலே விசேட உற்பத்தியைச் செய்தல் மிகப் பயனுடையதாகும். இதனை மூன்றும் அத்தியாயத்திலே ஆராய்ந்தோம். ஒப்பியலான செலவிலே இருநாடுகளிடையில் வித்தியாசங்களில்லாவிட்டால், அதிகரிக்கும்பயன், குறையும் செலவினம் என்பவற்றுக்கடங்க இரண்டுபண்டங்களில் ஒவ்வொன்றையும், யார் உற்பத்தி செய்வதென்பதை நிச்சயிக்கத் திருவுளச் சீட்டுப்போடுவது நல்லது. விசேட உற்பத்தி பூரணப்படுத்தப்பட்டுவிட்டால், இரண்டு பண்டங்களின் உலக உற்பத்தியையும் அதிகரிக்கும். மூன்றும் அத்தியாயத்திலே கொடுத்த உதாரணத்தினால் அதனை விளக்கலாம். பெருவாரி உற்பத்தித்திறனைப் பெறுவதற்கு சிறப்பு உற்பத்தி பயனுடையது.

www.padippakam.com



அப்படியான ஒரு விரிவான தொழிற் பங்கீட்டினால் கிடைக்கும் நன்மைகளை அடைய ஐரோப்பிய பொதுச்சந்தை விரும்புகிறது.

குறையும் செலவினம் என்ற வகையின் கீழ் சர்வதேச வியாபாரம் சம்பந்தமான காரிய பூர்வமானதொரு அமிசத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய நிலைமைகளிலே போட்டி முறிவடையக்கூடும்; அதனுடைய இடத்தைத் தனியுரிமையோ, நிறைவில் போட்டியோ எடுத்துவிடும். வெளிநாட்டுப் போட்டியைத் தவிர்ப்பதன்மூலம், பாதுகாப்பு வரிகள், தனியுரிமையாளரின் நிலையையே திரப்படுத்துகின்றன. "பாதுகாப்புவரியே தொழில் இணைப்புக்களுக்குத் தாய்" என்ற பழமொழி இதனை விளக்கும். கட்டுப்பாடு குறைந்த சர்வதேச வியாபாரம், அத்தகைய தனி உரிமைகளை முறிப்பதற்கு ஏற்ற வழியாகும்.[1]

**உருசியில் உண்டாகும் வித்தியாசங்கள் அல்லது தேவைகள். இவை வியாபாரத்துக்கு ஒரு காரணமாகலாம்**

சர்வதேச வியாபாரம் சம்பந்தமாக இதுவரை இரண்டு காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. (1) பிரதேசங்களிடையே உள்ள ஒப்புமுறையில் செலவின் வித்தியாசம். (2) குறையும் செலவுகள்.

இந்த ஆராய்ச்சிக்கு முழு உருவம் கொடுப்பதற்காக வியாபாரத்துக்கான மற்றொரு காரணத்தையும் கூறலாம். இரண்டு நாடுகளிலே செலவுகள் ஒன்றுபோலிருந்தாலும், அவை அதிகரித்தாலும், உருசியிலுள்ள வித்தியாசத்தினால் வியாபாரம் உண்டாகலாம்.

நோர்வேயும், சுவீடனும், மீன், மாமிசம் என்பவற்றின் உற்பத்தியை ஒரே அளவுக்குச் செய்வதால் இரண்டு நாடுகளும் நன்மை பெறலாம், ஆனால் சுவீடன்காரருக்கு மாமிசத்திலே அதிக விருப்பமும், நோர்வேக்காரருக்கு மீனிலே அதிக விருப்பமுமிருந்தால் நோர்வேயிலிருந்து மாமிசமும், சுவீடனிலிருந்து மீனும் ஏற்றுமதி செய்து பரஸ்பரம் இலாபமுள்ள வியாபரத்தை நடத்தலாம்.

இந்த வியாபாரத்தினால் இரு பகுதியாருக்கும் இலாபமுண்டாகும். அதனால் மனிதருடைய சுபீட்சம் அதிகரிக்கும்; இந்தப் பண்டமாற்றினால் "நுகர்வுப் பொருள் மேலதிகம்" இருவருக்குமுண்டு.[2]

1. குறைந்துசெல்லும் செலவு நிலைகள், கட்டுப்பாடற்ற வியாபார நிலையிலே பெரிய தனியுரிமைகட்கு இட்டுச் செல்லும் என்றும் கூறலாம்; குறையும் செலவு நிலைகள், இளம் கைத்தொழில் என்ற வகையிற் கூறப்படும் சில அமிசங்களைத் தம்மகத்தே கொண்டனவாயிருக்கும்.

2. இரண்டுபேர் ஒரே அளவான இருவகைப் பண்டங்களையும் ஒரே வகையான உருசியையுமுடையவராயிருந்தாலும், அருமையாகத்தான் வியாபாரஞ் செய்யும் சந்தர்ப்பம் உண்டாகும். இரண்டுமாணுமிகள் 1/5 மையும் 1/5 ஜின்னும் வைத்திருக்கிறார்கள். இவர்கள் திருவுளச்சீட்டுப்போட்டு யாரிடம் 2/5 மையிருக்கவேண்டும்; யாரிடம் 2/5 ஜின் இருக்கவேண்டுமென்பதை நிச்சயிக்கலாம். மீன், சொக்லேட் என்ற பண்டங்கள் விடயத்திலும் இந்நியாயம்

படிப்பகம்

www.padippakam.com



## ஏற்றியிறக்கும் செலவுகள்

இது வரை ஏற்றியிறக்கும் போக்குவரத்துச் செலவுகளை நாம் கருத்திலே கொள்ளாது விட்டுவிட்டோம். பெருந்தொகையானதும், விரைவில் அழிந்து விடக்கூடியதுமான பொருள்களை ஏற்றியிறக்கும் பொருளியல் செலவுகள் இலாபந்தரக்கூடிய விசேட உற்பத்தியின் தகைகைமையின் அளவைக் குறைக் கிறது. இந்த விளைவுகள், செயற்கையாக உண்டாக்கப்பட்டதும் தடை செய் வதுமான பாதுகாப்புச் சட்டங்கள் போன்றவை. இந்த விளைவுகளிற் பெரும் பாலானவை தேசியப் பொருளியல் நன்மைக்குப் பாதகமானவை. இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்திலே ஆராய்வோம். போக்குவரத்துச் செலவு களைத்தவிர்க்க முடியாது. ஆனால் பாதுகாப்பு வரிகள், செயற்கை முட்டுக் கட்டைகள் என்பன ஒரு தேச எல்லைக்குள்ளேயிருக்கும் பிரதேசங்களுக்கி டையே போட்டப்பட்டால் அவை மனிதனுடைய செய்கையாலுண்டானவையே. மனிதனே விளைவுகளுக்குப் பொறுப்பாளி.

பொருத்தமுடையதென்பதை நீர் ஆராயலாம். ஆனால், பாண், வெண்ணெய் போன்ற வற்றுக்கு இது பொருந்தாது. இந்த நாலாவது வியாபாரக் காரணம் பெறுமதி சம்பந்த மானதே.

www.padippakam.com

## முப்பத்து மூன்றும் அத்தியாயம்

# இறுப்பு முறைக் காப்பு, கட்டுப்பாடற்ற வியாபாரம் என்பனவற்றின் பொருளியற்றன்மை

பிரதிநிதி சபைக்கு: வெளிநாட்டுப் போட்டியாளர் ஒருவர் வெளிச்சம் செய்வதற்குத் தமக்கிருக்கும் பெரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி நமது தொழிலோடு போட்டிபோடுகிறார். அவர் குறைந்த விலையிலே தமது பொருள்களை இங்கே கொண்டுவந்து குவிக்க வசதிகளுண்டு. இந்தப் போட்டியாளர் வேறெவருமல்லர். இவரே சூரியன். நமது நாட்டிலே யுள்ள எமது தொழிலுக்குக் குந்தகம் விளைக்கக்கூடிய முறையிலே அவருடைய கிரணங்கள் எமது வீடுகளிலுள்ள யன்னல்கள், துவாரங்கள் என்பவற்றின் மூலம் உள்ளே நுழையாமல் அவற்றை மூடிவைப்பதற்குச் சட்டம் இயற்ற வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஒப்பம்: மெழுகுவர்த்தித் தொழிலாளர்: எப். பஸ்டியாட்.

கடவுள் இருக்கிறார் என்றதற்குச் சாதகமான நியாயங்களையும் பாதகமான நியாயங்களையும் எண்ணிக் கணக்கெடுத்து எதற்கு அதிக நியாயங்களுண்டோ அதன் சார்பாக வாக்குக் கொடுத்துக் கடவுளுண்மையை நிச்சயிப்பது முட்டாள்தனமானதே. அது போலவே காப்புவரியின் நன்மை, தீமைகளைக் கணக்கெடுத்து கூடிய எண்ணிக்கையுடைய தொன்றால் அதனை மதிப்பிடுவதும் முட்டாள்தனமாகும். கட்டுப்பாடற்ற சுதந்திரமான வியாபாரம் பெரிய நன்மையை உண்டாக்குமென்பதற்கு மிகவலிமை பொருந்திய காரணமொன்றுண்டு. அதாவது சுதந்திர வியாபாரம் சர்வதேசத் தொழிலாளரைப் பிரித்துத் தொழிற்றுறைகளிலே போடுவதற்குப் பரஸ்பரம் உதவி செய்வதோடு அவ்வாறு பிரிப்பது இலாபகரமானதுமாகும். எல்லா நாடுகளினதும் நிசமான தேசிய உற்பத்திச் சக்தியை அதிகரிக்கிறது. அத்துடன் வாழ்க்கைத் தரத்தையும் எல்லா நாடுகளிலும் ஒருசேர உயர்த்துகிறது. இதை முந்திய அத்தியாயத்திலே விரிவாக விளக்கினோம்.

பாதுகாப்பு வரிகளும், இறக்குமதிக்கோட்டாக்களும், இவற்றை எவ்வாறு பாதிக்கின்றன? பாதுகாப்பு வரி போடுவதால் இறக்குமதிகள் தடைப்படுவதோடு உள்ளூர் நுகர்ச்சியாளர் அதிக விலைகொடுக்க வேண்டியுமிருக்கும். பலனளிக்கும் சர்வதேசத் தொழிலாளர் பிரிப்பை இது அழித்துவிடுவதோடு திறமையற்ற உள்ளூர் உற்பத்தியாளரையும், சார்பளவிலே பாதுகாக்கிறது. வெளிநாட்டுப் போட்டியாளருக்கு எதிராக உயர்வான காப்புவரிபோடுதல் என்ற விடயம் பல வடிவங்களை எடுக்கும். இவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com



(1) பொருளியல் முறையிலே முற்றும் பொய்யானவை. சில காரணங்கள் ஆராயவேண்டிய அவசியமேயற்றவை. சில காரணங்களின் போலித் தன்மைகள் நுட்பமான பொருளியல் ஆராய்ச்சியினாலேயே காணத்தக்கவை. (2) பூரண வேலை வாய்ப்பும், நிறைபோட்டியுள்ள பழம் பொருளியல் கோட்பாட்டின்படி நிலையாயுள்ள ஓர் உலகில் பொருத்தமாகாத சில காரணங்கள். ஆனால் அவற்றுட் சில பொருளியல் அபிவிருத்தியடைவனவும், வேலைவாய்ப்புப் பூரணமாக ஒவ்வொருவருக்குமில்லாதனவுமான நியாயமான பரப்பளவுள்ள தேசங்களடங்கிய உலகைப் பொறுத்தமட்டிலே ஓரளவு உண்மையுடையன. (3) ஈற்றிலே சில பொருளியற் சார்பில்லாத காரணங்களுண்டு. இவை பொருளியற்றிறமையற்ற சிலநடவடிக்கைகளுக்கு உதவி செய்வதற்காகப் பொருளியல் சுபீட்சத்தைத்தியாகம் செய்யும் விரும்பத்தக்க தேசியக் கொள்கையாகக் காப்புவரியை ஆதரிப்பவை.

## பொருளியற் சார்பில்லாத நோக்கங்கள்

கடைசியாகக் கூறப்பட்ட காரணங்களைப்பற்றி முதலில் ஆராய்வோம். ஏனெனில் அவை இலேசாகமுடிவுசெய்யப்படக்கூடியவை. நீர் விவாதக் கட்சியொன்றிலே சுதந்திர வியாபாரத்தை ஆதரிக்க வேண்டிக் கேட்கப் பட்டால் வாழ்வின் நோக்கம் பொருளியல் சுபீட்சம் மாத்திரமன்றென ஆரம்பித்து உமது கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாம். அரசியல் நியாயங்களும் முக்கியமானவை. எதிர்காலத்திலே யுத்தம் உண்டாகலா மென்ற அடிப்படையில் நாட்டின் சில அமிசங்களிலே நாம் ஓரளவுக்காவது சுயதேவையை நிரப்பக்கூடிய தன்மை பெறவேண்டுமெனக் கூறலாம்.

உதாரணமாக எண்ணெய் உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். தேசியப் பாதுகாப்புக்கு எண்ணெயைச் சேமிப்பதும், எண்ணெய் வளங்களும் அவசியமெனக் கண்டால் அந்த வளம் சுதந்திரவர்த்தகத்தின் கீழ் பாதுகாக்கப்பட முடியாவிட்டால், இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டிய தில்லையெனப் பொருளியல் வாதிகள் கூறமாட்டார். பாதுகாப்பு வரியினும் பார்க்க உள்நாட்டுத் தொழிலால் இதனை விருத்திசெய்யக் காப்பு வரியிலும் பார்க்க அரசின் பண உதவி அவசியமென அவர் வாதாடலாம். இது எண்ணெயின் விலையைச் சர்வதேச விலைமட்டத்துக்குக் கொண்டுவரும். உள்ளூர் உற்பத்திச் செலவு மட்டத்திற்கு விலையை நுகர்வோர் கொடுக்கத் தேவையில்லை. மேலும் இந்தச் சகாயம் தேசியப் பாது காப்பின் மொத்தச் செலவு என்ன என்பதைத் தெளிவாகக் காட்டும். அவ்வாறு செய்து அதனால் சமூகத்துக்கு நன்மையுண்டா என்பதை அவர்களே நிச்சயிக்க விட்டுவிடலாம்.

அமெரிக்கக் கப்பல் வணிகத்தை விருத்தி செய்வதற்கானதொரு தேசியக் கொள்கையை உருவாக்கவேண்டுமென்ற பிரச்சினையும் இது போன்றதே. வியாபாரக் கப்பல்களைக் கட்டவும், பரிபாலிக்கவும் அமெரிக்காவிடம் ஒப்பியலளவில் ஒரு வாய்ப்பும் இடையாது. சீட்டில் தொழிற்சாலைகளில் உள்ளது போன்ற வாழ்க்கைத் தரம் அமெரிக்க மாலுமிகளுக்கு

www.padippakam.com



இருக்கவேண்டுமென அமெரிக்க மாலுமிகள் தொழிற் சங்கங்கள் மூலமோ தாமாகவோ வற்புறுத்துவார்களானல், அப்போது நாம் ஆங்கில, கிரேக்க, ஜப்பானிய, நோர்வீஜிய, கப்பல்களோடு போட்டி போட முடியாது. அமெரிக்காவின் பழைய சிறப்பான கடல் ஓடும் மரபைப் பற்றிக்கவனிக்காமல், பொருளியல் சுபீட்சத்தை மாத்திரமே கவனிப்போமானல், சரியான கொள்கை எப்படியிருக்கும் என்பதை அறிந்து விடலாம். தொழிற்சாலை உற்பத்தியில் அமெரிக்காவுக்கு நல்ல வாய்ப்பிருக்குமானல், தொழிலாளர் சீட்டில் தொழிற்சாலைகளுக்குப் போகட்டும். அங்கே அவர்களின் நிச உற்பத்தியின் தன்மை உயர்வுடையதாயிருக்கும். பிறநாட்டு வியாபாரம் நிலையில்கீழ்த் தளத்திலேயிருந்தாலும் அமெரிக்க சர்வதேச வியாபாரத்துக்குத் தீமை ஏற்படவேண்டியதில்லை.

ஆனல் தேசிய பாதுகாப்புக்குப் பெரியதொரு வியாபாரக் கப்பற்படை தேவையானல் அது வேறு விடயம். நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து தப்பக்கூடிய வேகமுள்ள கப்பல்களைக் கட்ட நன்கொடைகளும், (கவசப்) பாதுகாப்பு நன்கொடைகளும் கொடுப்பதானல் அவை நியாயமானவையே.

ஆயுதஞ் செய்வதிலே போட்டியிடுதல் சர்வதேச ஒற்றுமையீனத்துக்குக் காரணமாகவும், அந்த ஒற்றுமையீனத்தின் விளைவாகவுமிருப்பதால் சமாதான காலத்திலே தேசியப் பாதுகாப்புக்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டுமென்பதை நிச்சயிப்பது சிக்கலான பிரச்சினையாகும். இந்தப்பிரச்சினைபற்றி ஆலோசனைகூறுவதற்கு பொருளியலறிஞருக்கு விசேடதகைமையிருக்கிறதெனக்கூறமுடியாது. மக்கள் சுயநலத்தைத், தேச நலமாகக் காட்டி பொருளியற் சார்பற்ற திட்டங்களைத் தேசியப் பாதுகாப்பென்ற வகையிலே காட்டப் பார்ப்பர். சமீபத்திலே சுவிஸ் கடிகாரங்கள் மீது கூடுதலாக விதிக்கப்பட்ட (உபரியாது) காப்பு வரி நமது தேசியப் பாதுகாப்புக்கு அவசியமா? அல்லது இது அரசியல் நெருக்கத்தால் உண்டானதா என்று அத்தகையோர் கேட்பர். பரஸ்பரம் இலாபகரமான சர்வதேச வர்த்தகம் சர்வதேச நல்லெண்ணத்தை வளர்ப்பதோடு ஒற்றுமையையும் உண்டாக்கும் ; வியாபாரத்திலே அரசியல் தலையிடுவதால் முன்னெல்லாம் யுத்தங்களுண்டாயினவென்று பொருளியலறிஞர் எடுத்து வாதிக்கலாம்.

முடிவில், பொருளியற் சார்பற்ற வேறு குறிக்கோள்களை எடுத்துக்காட்டலாம். விவசாய வாழ்க்கையிலே விசேடமானதொரு தெய்வத்தன்மை உண்டெனவும், வலிமைமிக்க விவசாயியின் வாழ்க்கையிலே பாதுகாக்கப் படவேண்டிய அமிசங்கள் சில உண்டெனவும் சமூகம் நினைக்கலாம். (இவ்வாறு விவசாயத்தின் பெருமையைப் புகழ்வோர் விவசாயிகளாய் வாழ்ந்தார்களோ என்பது சந்தேகத்துக்குரியது.) நகர வாழ்க்கையில் ஏற்படும் குடிசனப் பெருக்கத்திலும் பார்க்கக் கிராம வாழ்விலே குடிசனம் அதிகமாகப் பெருகுவதால் விவசாயக் கிராம வாழ்வைத் தூண்டி விடுவது நல்லதெனச் சோவியத் அரசாங்கம் கூறும் கொள்கையைச் சிலர் ஆதரிப்பர்.

www.padippakam.com



தானாகவே எழுந்து வந்துவிழும் சலவாயுக்குண்டின் ஆபத்துக் காரண மாக சனப்பெருக்கம் நிறைந்த நமது கிழக்குக் கரைகளில் உள்ளவர்கள் அங்கிருந்து ஏனைப்பகுதிகளுக்குப் பரவிவாழ வேண்டிய அவசியமுண்டாக லாம். இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் பாதுகாப்பு வரியிடுவதிலும் பார்க்க உதவி நன்கொடை அளிப்பதே சிறந்தது. பரிகரிக்க வேண்டியதொரு தீமையைக் கவனத்திலெடுக்காமல் செய்யக்கூடியதும் மறைமுகமானதும் அருவருப்பானதுமானதொரு உதவி நன்கொடையே இப்பாதுகாப்பு வரி யாகும்.

அரசியற் சார்பானவையும் பொருளியற் சார்பற்றவையுமான காரணங்கள் பாதுகாப்புவரிக்குச் சாதகமானவையென நினைத்துக்கொள்ளக்கூடாது. நண் பர்களை உண்டாக்குவதும் நாடுகளை நேசநாடுகளாக்குவதும், அமெரிக் காவின் தற்போதைய இராசதந்திர முயற்சிகளிலே மிகமுக்கியமானது என் பதை அமெரிக்கக் காங்கிரஸ்காரர் நன்கு அறிவர். பாதுகாப்புவரி நிலவும் நாடென்ற பெயர் நமது நாட்டுக்கு வெளிநாடுகளிலே மதிப்பைக் குறைக்கக் கூடும். இது அமெரிக்காவுக்குக் குந்தகம் விளைக்கும். எனவே சர்வதேச வியாபாரத்துக்கு முட்டுக்கட்டையாயுள்ள பல தடைகளையும் குறைப்பது நமது அரசியலுக்கும் நன்மைபயக்கக்கூடியதாகும்.

### பாதுகாப்பு வரி சம்பந்தமான போலி நியாயங்கள்

**பணத்தை வெளியே செல்லவிடாமல் தடுத்தல் :** " பாதுகாப்பு வரியைப் பற்றி எனக்கு அதிகந் தெரியாது. ஆனால் இங்கிலாந்திலிருந்து நான் ஒரு கோட்டை வாங்கினால், கோட் எனக்குக் கிடைக்கிறது. அதன் விலையான பணத்தை இங்கிலாந்து பெற்றுக்கொள்கிறது. ஆனால் அமெரிக்காவிலேயே ஒரு கோட்டை வாங்கினால் கோட் எனக்குக் கிடைக்கிறது ; பணமும் அமெ ரிக்காவிலேயே தங்குகிறது " என ஏபிரகாம் லிங்கன் கூறியதாக ஒரு செய்தியுண்டு.

ஆனால் இக்கூற்றை அவர் கூறியதற்கு ஆதாரம் எதுவுமில்லை. அடம் ஸ்மித்துக்கு முன்னர் இருந்த 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வணிகவியலாளர் கூறிய போலிக் கொள்கை இதுவே. ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதிகள் அதிகம் வெளிநாட்டுக்குச் செல்வதும் இறக்குமதிகள் குறைவாயிருப்பதும் நல்லதெனவும், இந்த வியாபாரப் பாக்கியினால் தங்கம் சொந்த நாட்டுக்கு வந்து சேருகிறதென்றும் அவர்கள் கருதினர்.

ஒருவரிடம் அதிக பணமிருந்தால் அது அவரைச் சுபீட்சமுடையவராக்கும் என்றும், பூரண வேலை வாய்ப்பு உள்ள ஒரு சமுதாயத்திலே ஒவ்வொரு வர் கையிலும் இரட்டிப்பான பணமிருக்கச் செய்தால் அது விலை வாசிகளை உயர்த்தும் என்றும் அறியப்பட்ட உண்மையை நாம் மேலும் இங்கே வாதிக்க விரும்பவில்லை. தனிப்பட்ட ஒரு தனவந்தரிடம் அதிக பணமிருக்குமானால் அது பண்டங்களை வாங்கும் சக்தியை உயர்த்துவதோடு,

www.padippakam.com



மற்றவர்கள் பண்டங்கள் வாங்குவதைத் தடுக்கும். ஆனால் சமூகத்திலே பூரண வேலை வாய்ப்பு உண்டாகுமானால், புதிய பணத்தைக்கொண்டு புதிய பண்டங்களை வாங்க முடியாது.[1]

### உயர்ந்த பணச் சம்பளம் பெறுவதற்காகப் பாதுகாப்புவரி

மற்றநாடுகள் எதிர் நடவடிக்கை எடாதவரை, தீவிரமான பாதுகாப்பு வரிவிலைகளை உயர்த்தி நாட்டுக்குள்ளே தங்கத்தை வரச் செய்யும். பாது காப்புவரிகூடச் சில சமயம் பணச் சம்பளத்தை உயர்த்தலாம். பணச் சம்பளத்தை உயர்த்துவதிலும் பார்க்க அதிகப்படியாக வாழ்கைச் செலவை உயர்த்தலாம். அப்போது தொழிலாளரின் உற்பத்தி குறைந்தால் வாங்கும் சத்தியான நிசச் சம்பளம் வீழ்ச்சியடையும்.[2] இவ்வாறு பாதுகாப்புச் சம்பந்தமான போலி நியாயங்கள் பலவற்றைக் கூறலாம். இவற்றைச் சிந்தனையுள்ளவர்கள் ஒரு நிமிடத்திலே ஆராய்ச்சி மூலம் மறுத்துவிடு வார்கள். ஆனால் இத்தகைய போலி நியாயங்கள் முக்கியமற்றவையெனவும் கூறமுடியாது. சட்டங்களைச் செய்யும் விடயத்திலே இவை மிக முக்கிய மானவையாயிருக்கலாம். வேறு பல நூதனமான காரணங்கள் பூசி மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

### விசேட நலவுரிமைப் பிரிவுகளுக்கான பாதுகாப்புவரி

பாதுகாப்புவரி சம்பந்தமாகச் சட்டம் விவாதிக்கப்படும்போது காங்கிரஸ் கரரிடையே உண்டாகும் அரசியல் கூட்டுக்களைக் கவனித்தோர் பாதுகாப்பு வரியின் முக்கியமான நோக்கம் என்ன என்பதைத் தெளிவாக அறிவர். வியாபாரம், தொழிலாளர் சம்பந்தமாக அரசியற்கட்சிகளைச் சேர்ந்த கூட்டத்தினர், சுயநலக் கட்சிக்காரர் என்போர், தம் உற்பத்திப் பொருள்கள் சம்பந்தமாய் விதிக்கும் பாதுகாப்புவரி தமக்கு உதவியளிக்குமென்பதை அறிவர். மொத்த உற்பத்தி, நுகர்வு என்ப வற்றில் அவ்வரி எத்தகைய விளைவுகளை உண்டாக்கினாலும் அதைப்பற்றி அக்கறையில்லை. முற்காலத்திலே சட்டங்களுக்கு வாக்குப் பெறுவதற்காக இலஞ்சங்கூடப் பயன்படுத்தப்பட்டது. இன்று கடிகாரம், பழைய சமையற் தளவாடம், பொத்தான் கொழுக்கி போன்ற தொழில்களுக்கு ஆதரவு தேடு வதற்காக வாஷிங்டனிலே சட்டசபை அங்கத்தவரை ஆதரிக்கும் மண்டபங் கள் உண்டு.

சுதந்திரமான வியாபாரம் நடத்துவதற்குப் பொருளியல் முறையிலே பலமான காரணங்களுண்டு. அரசியல் முறையிலே பாதுகாப்பு வரிக்கான ஆதரவு, அவசியமற்றமுறையில் தூண்டப்படுகிறது. ஏன் ? எனெனில் சுதந்திரமான வியாபாரம் எல்லாருக்கும் ஓரளவுக்கு உதவிசெய்கிறது ;

1. நமது தங்கத்தை வெளிநாடுகளிலே செலவு செய்யலாம். ஆனால் தங்கத்தை இறக்குமதி செய்து நமது சுபீட்சத்தை விருத்தி செய்தல் என்ற கொள்கைக்கு எதிராகவே வணிகவிய லாளர் வாதாடினர்.

2. முன்னைய அத்தியாயங்களைப் பார்க்க. அனுபந்தம் பக். 958–960 ஐப் பார்க்க.

www.padippakam.com



பாதுகாப்பான வியாபாரம் சிலருக்குமாத்திரம் பெருகிய நன்மையைக் கொடுக்கிறது. அரசியல் வகையில் பார்க்கும்போது, பாதுகாப்புவரி சார்பாகக் கூறும் காரணங்களிலும் அதற்கு எதிராகக் கூறும் காரணங்கள் வலுவுடையனவா? பாதுகாப்பினுல் நன்மையடையும் (அல்லது பாதுகாப்பினுல் தீமையடையாமற் காப்பாற்றப்படுபவர்) சிலர் பகலிரவாகத் தமது கட்சிக்காக வேலை செய்வார்களானுல் அவ்வாறு வலுவுடன் நடவாது. தேசிய அடிப்படையிலே சில விசேடத் தொழில்களைச் செய்து விசேட வியாபாரம் நடத்தித் திறமையானதொரு மாதிரியமைப்பை அத்தொழில்களுக்கு உண்டாக்கி அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை மேலும் பெருக்குவதற்கு நுகர்வோரையும், உற்பத்தியாளரையும் ஒன்று சேர்த்துக் கிளர்ச்சி செய்வது கடினமான விடயமாகும். அரசியல் வாக்குகள் மொத்தப் பொருளியல் நன்மைக்குச் சமமான விகிதாசாரப்படியிருந்தால் ஒவ்வொரு நாடும் பாதுகாப்பு வரியை நீக்கிவிடும்.

**நேரடியாகத் தெரியவராத சில போலி நியாயங்கள்.**

**வருவாய்க்குப் பாதுகாப்புவரி :** பாதுகாப்புவரியைப் பயன்படுத்தி அரசாங்க வருவாயை உயர்த்தலாமென்ற ஒரு காரணம் காட்டப்படுகிறது. இறக்குமதியிலே போடப்படும் சுங்கவரியானது பின்போடப்பட்ட விற்பனை வரியே. இது தீமை தரக்கூடியதொன்று. பொருளாதார வளங்களை இந்த வரியானது நல்லமுறையிற் பயன்படுத்தாதவாறு தடுப்பதால் தீமையுடையது. பாதுகாப்புவரி வருவாயை உண்டாக்குகிறது என்று கூறுவோர் நேர்மையுடன் வாதிப்பவரானுல், அவர்கள் உள்ளூர் உற்பத்தியிலும் விழக்கூடியதொரு விற்பனை வரியை ஆதரிக்கலாம். ஆனுல் இவ்வரி எவ்வித பாதுகாப்பையும் உண்டாக்கமாட்டாது.

இந்த நியாயம் போலியென்பதை அறுதி செய்வதற்கு இறக்குமதிகளிலிருந்து எம்மைக் காப்பாற்றுவதற்காக விதிக்கப்படும் மிக உயர்ந்த பாதுகாப்புவரி எவ்வித வருமானத்தையும் கொண்டுவரமாட்டாதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 1890 இல் " பில்லியன் டொலர் காங்கிரஸ் ஆட்சி " செலவிலும் பார்க்க அதிக வருமானத்தையுடையதாயிருந்தது. படுகடனிருந்தாலாவது அதை அடைப்பதற்கு இந்த வருமானத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். அதுவுமில்லாதபடியால், நிலைமை காங்கிரசுக்குத் தொல்லையை உண்டாக்கிற்று. மேலதிகப் பாதுகாப்புவரி வருமானப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அது பாதுகாப்புவரியைக் குறைக்காமல், அதிகம் கூட்டிற்று. இதன் பயனுக வருமானம் குறைந்தது.

**பாதுகாப்புவரியும், உள்ளூர்ச் சந்தையும்.**

இலேசாக அறிந்துகொள்ள முடியாத மற்ருெரு போலி நியாயம் பின்வருமாறு : விவசாயிகள் தமது பொருள்களுக்கு உள்ளூர்களில் நல்ல கிராக்கி இருக்க விரும்பினுல் பாதுகாப்புவரியை ஆதரிக்கவேண்டும். ஹென்றிகிளே என்பவர் ஒரு நூற்ருண்டுக்கு முன்னரே இந்தக் கொள்கையை ஆதரித்தார்.

www.padippakam.com



இதன் போலித் தன்மையைப் பலகோணத்திலிருந்து அறியலாம். கைத்தொழிற் பொருள்களின் இறக்குமதியைக் குறைத்தால் அதன் பயனாக நமது விவசாயப் பொருள் ஏற்றுமதியையும் குறைக்கவேண்டியேற்படும். இதனால் விவசாயி நேரடியாக பாதிக்கப்படுவான். ஆனால் அதற்குப் பதிலாக உள்ளூர்ச் சந்தையிலே நமது பொருள்கள் அதிகம் விற்பனையாகுமென்று கிளே கூறியிருக்கலாம்.

ஒப்பியலளவான செலவுபற்றி நாம் ஆராய்ந்த உதாரணத்திலே, வெளிநாட்டு வியாபாரத்திலிருந்து நாம் ஒதுங்கிக் கொண்டால் நமது தேசிய உற்பத்தியின் மொத்தம் அல்லது நிசவருமானம் குறையும். நிசவருமானம் குறைந்த மட்டத்திலேயிருந்தால், விவசாயப் பொருள்களுக்கான மொத்தத் தேவை குறையும். எனவே பாதுகாப்புக்கு ஆதாரமான வேறு காரணங்களை பின்னர் வரும் நிலைமையை உத்தேசித்துக் கூறுவிட்டால், நமது விவசாயப் பொருள்களுக்கு "உள்ளூச் சந்தையை உருவாக்கலாம்" என்று கூறுவது போலி நியாயமாகும்.

**மலிவான வெளியூர்த் தொழிலாளரின்போட்டி :**

மூன்றுவது காரணம் அமெரிக்க சரித்திரத்திலே மிகப் பிரபலம்வாய்ந்தது. ஏனெனில் இது தொழிலாளர் வாக்குக்களைப் பெரிதும் பாதித்தது. சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளிலே தொழிலாளர் கூலி மிகக்குறைவு. அவர்கள் மலிவாக உற்பத்திசெய்து அனுப்பிய பொருள்களை இறக்குமதி செய்யாவிட்டால், அமெரிக்கத் தொழிலாளர் அனுபவித்து வரும் வாழ்க்கைத் தரத்தை நிலைநிறுத்த முடியாது என்பதே அந்தக்கூற்று. இவ்வாறு கூறும்போது ஆராய்ச்சியில் இக்கூற்று நின்றுபிடிக்க மாட்டாது.

ஒரு நாடு தனக்குத் தேவையான பொருளெல்லாவற்றையும் தானே உற்பத்தி செய்ய வசதியான வளம் பெற்றிருந்தாலும், பரஸ்பரம் மற்ற நாடுகளோடு வியாபாரம் செய்வது பயனுள்ளதென்று மேலே கண்டோம். இங்கே முக்கியமானது எது என்றுல் சார்பளவில் இடைக்கும் நன்மையேயன்றித் தனியாகக் கிடைக்கக்கூடிய நன்மையன்று. வியாபாரம் என்பது இரு பக்கத்தில் நடைபெறும் பண்டமாற்று. எல்லா வியாபாரத்துறையிலும் ஒரு நாடு மற்ற நாட்டுப் படைகளைவிட மலிவான விலையில் எப்பொழுதும் பண்டங்களை விற்றுவிடமுடியாது.

உள் நாட்டிலே பூரண வேலை வாய்ப்பு அவசியமானல், அதற்கு வெளிநாட்டு வியாபாரம் அவசியமில்லை என்று முன்னர் கண்டோம். நமது நாட்டிலே எல்லாரும் தத்தமக்கு ஏற்ற வேலையில் பூரணமாக ஈடுபட்டிருக்கவேண்டுமானல் அந்நிய நாட்டுத் தொழிலாளர் மலிவான கூலியில் வேலை செய்யவேண்டியது எமது நாட்டுக்கு நயத்தைக் கொடுப்பதல்லவா ? வேறொருவகையிலே கூறுவதானல், ஒப்பியல் செலவுக் கோட்பாட்டின்படி எம்மிலும் பலவகையில் வித்தியாசப்பட்ட தூர கீழ்த்திசை நாடுகளோடு அல்லது அயன மண்டல நாடுகளோடு வியாபாரஞ் செய்வது

www.padippakam.com



நமக்கு மிக்க நன்மை பயக்கும். அதை விடுத்து நமது பொருளியலோடு ஒப்பான பொருளாதாரமுடைய ஜெர்மனி இங்கிலாந்து போன்ற நாடுகளோடு வியாபாரஞ் செய்வது நன்மைபயக்காது.[1] கூலி மலிவுள்ள நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தல் என்ற காரணத்தை ஆராயுமிடத்து முந்திய அத்தியாயத்தில் சுருக்கிக் கூறப்பட்ட ஒப்பியல் நயம் பற்றிய ஆராய்ச்சிப்படி தனிச் சம்பளமட்டத்துக்கும் வியாபாரத்திலுண்டாகும் நெடுந்தவணைத் தேசிய அதிகரிப்புக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பது தெளிவாகிறது.

அறிமுறை ஆராய்ச்சிப்படி இதுவரை கூறினோம். நிச உலகத்தை ஆராய்ந்தால், நியாயங்கள் மேலும் தவறுடையன என்பது தெரியவரும். "விசேட பயிற்சி, சிறந்த எந்திர சாதனம், உயர்ந்த கூலி என்பன பெறும் திறமைமிக்க அமெரிக்கத் தொழிலாளரின் "நியாயமற்ற போட்டியிலிருந்து" எம்மைக் காப்பாற்றுங்கள்" என்று கூறி ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள தொழிலாளர் பாதுகாப்பு வரிபோடுமாறு இரந்து கேட்பர். ஏனைய நாட்டினரும் அமெரிக்கப் பெருந்தொகை உற்பத்தி தமது தொழில் முறைகளோடு எப்போது போட்டியிடுமென்ற பயத்துடனிருக்கின்றன. கொனெக்டிகட், பிரிட்ஜ்போட்டிலுள்ள அமெரிக்கத் தொழிலாளிக்கு ஒரு மணி நேரத்துக்கு 3 டொலர் கொடுக்கப்படுகிறதென்றும், அவன் மணியொன்றுக்கு 95 சதம் சம்பளம் பெறும் ஆங்கிலத் தொழிலாளியிலும் பார்க்க மூன்று மடங்குக்கு அதிகமாகத் திறமையுள்ளவனென்றும் ஆங்கில பாதுகாப்பு வரி வாதிகள் வாதிக்கின்றனர். இது மிகைபடக் கூறலாயிருந்தாலும் முக்கியமானதோர் உண்மையை வலியுறுத்துகிறது. அமெரிக்கர் உயர்ந்த சம்பளம் பெறுவதற்கு அவர்களுடைய திறமையே காரணம். வெளிநாட்டுத் தொழிலாளரோடு போட்டியிடுவதற்கு இது முட்டுக்கட்டையன்று என்பதே அந்த உண்மை.

"மலிவான வெளிநாட்டுத் தொழிலாளர்" காரணமாகப் பாதுகாப்புவரி என்ற கூற்றை இதுவரை கண்டித்தவர்களின் ஆராய்ச்சியை எடுத்துக் காட்டினோம். இதிலே உண்மை சிறிதுண்டு. வியாபாரத்திலே சுதந்திரம் இருப்பதால், அது ஐக்கிய அமெரிக்காவுக்குள் தொழிலாளர் குடியேறுவதற்கு ஓரளவு ஒப்பாகும் எனக் கடந்த அத்தியாயத்தின் அனுபந்தத்தில் ஒஹ்லின் கூற்றை எடுத்துக் காட்டினோம். இதன் அர்த்தமென்ன? தொழிலாளரைச் சிக்கனப்படுத்தும் பண்டங்களைச் சர்வதேசச் சிறப்பு உற்பத்தியாகச் செய்தால், ஐக்கிய அமெரிக்காவிலே தொழிலாளர் அருந்

1. இந்த நியாயத்தை மேலும் விளக்கவேண்டும். பின்தங்கிய நாடுகள் வறுமைப்பட்டவையானபடியால் அவர்களிடம் வாங்குஞ் சக்திகுறைவு. அதனால் அவை அதிகம் இறக்குமதி செய்யமாட்டா. அதனால் எமக்கு அதிகம் ஏற்றுமதி செய்யமாட்டா. இன்று வியாபாரம் பெரும்பாலும் கைத்தொழில் நாடுகளிடையேதான் நடைபெறுகிறது. கைத்தொழில் முறையிலே பின்தங்கியநாடுகள் முன்னேறும்போது அவை மற்றைக் கைத்தொழில் நாடுகளிடமிருந்து அதிகம் இறக்குமதி செய்கின்றனவேயன்றிக் குறைவாகவன்று. அதுவும விகிதாசாரப்படி அதிகமன்று. இரண்டு பகுதியினருக்கும் வியாபாரத்தில் நுகர்வுமேலதிகம் குறைவாகவே யிருக்கும்.

www.padippakam.com



தலைத் தீர்க்கலாம். அத்துடன் சுதந்திர வியாபாரத்தின் பயனாக நிசச் சம்பளங்கள் வீழ்ச்சியடையலாம். நிசமான தேசீய உற்பத்தி அதிகரிக்கும் ; ஒப்பியலான தொழிலாளர் பங்கும், தனிப்பாங்கான தொழிலாளர் பங்கும் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு ஓரளவு உண்மை இந்த வாதத்திலேயிருந்தாலும், வேறு யதார்த்தமான காரணங்களால் இது குறைக்கப்படுகிறதெனப் பொருளியலறிஞரிற் பலர் கூறுகின்றனர். நெசவுத் தொழிலாளர் போன்றவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு வரியை நீக்கினால் தீங்குண்டாகலாம் ; இதை எவரும் மறுக்கமாட்டார். தொழிலாளர், பலவகையானதுறையிற் பயன் படுத்தப்பட்டதாலும் அவர்கள், முக்கியமான நெகிழ்ச்சியுள்ள உற்பத்திச் சாதனமாதலாலும், நெசவு தொழிலாளர் இழப்பதிலும் பார்க்கக்கூடிய பயனை மற்றத்துறைகளிலுள்ள தொழிலாளர் நயமாகப் பெறுவர். அத்துடன், வியாபாரத்தினால் விளையும் உயர்ந்த தேசீய உற்பத்தியில் தொழிலாளர் இனம் பங்குபெறும்.

## எதிர்நடவடிக்கையாகப் பாதுகாப்பு வரி

பாதுகாப்புள்ள வியாபாரத்திலும் பார்க்கச் சுதந்திரமான வியாபாரமே சிறந்ததெனவும் ஆனால் மற்ற நாடுகள் முட்டாள்தனமாகப் பாதுகாப்பு வரிச் சட்டங்களை இயற்றி வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதால் நாமும் பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கிறதெனச் சிலர் கருதுவர். ஆனால் உண்மையில் பாதுகாப்பு வரியென்பது, சாமான் போக்குவரத்துச் செய்வதற்கான உயர்ந்த சுமைக்கூலிபோன்றது. மற்ற நாட்டவர் தமது வீதிகளை அழிந்துபோக விட்டால் நாமும் அவ்வாறு செய்வதா? இல்லை. மற்ற நாட்டவர் பாதுகாப்பு வரிச் சட்டங்களை இயற்றி நமக்கும் தமக்கும் தீமை இழைத்தால் நாமும் பாதுகாப்புவரியை உண்டாக்கி எமக்குள்ள தீமையை அதிகரித்துவிடக்கூடாது.

நாம் பாதுகாப்பு வரிவிதிப்பது நமக்கும், வெளிநாட்டார்க்கும் தீமை பயக்குமென்ற உண்மையை சரிவர உணர்ந்துகொள்வதானால், மற்ற நாடுகளும் நாமும் பாதுகாப்புவரியை உடன்படிக்கை மூலம் குறைத்துக் கொண்டால் நாலுவகையான நன்மைகளுண்டாகும். வெளிநாட்டவர் பாதுகாப்புவரியைக் குறைப்பதால் (1) எமக்கு நன்மையுண்டாகிறது. (2). அவர்களுக்கு நன்மையுண்டாகிறது. நாம் பாதுகாப்பு வரியைக் குறைத்தால் (3) எமக்கும் (4) அவர்களுக்கும் நன்மையுண்டாகிறது.

மற்ற நாடு பாதுகாப்பு வரி விதிக்கப்போகிறதென்று கூறியதும் நாம் எதிர் நடவடிக்கை எடுப்போமென்று வலியுறுத்தினால் அந்த நாடு அந்த வரிகளை குறைக்க முயலும். இடையிடையே மற்றவர்களைப் பயமுறுத்துவதற்காக நாம் பாதுகாப்புவரியைத் தற்காலிகமாக விதிக்கலாம். அதனால் அந்த நாட்டவர் தமது வரிகளைக் குறைக்காமல் விட்டால் நாம் நமது வரிகளைத் தளர்த்திவிட்டுவிடுவதே புத்தியுள்ள செய்கையாகும்.

www.padippakam.com



எட்டிக்குப் போட்டியாக நாமும் வரியை விதித்தால், மற்ற நாட்டவர் மேலும் தமது வரியை உயர்த்தலாம். இதனால் பரஸ்பரமான வரி ஒழிப்புக்கு வழிபிறக்காது என்பதை அரசியல் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

## விஞ்ஞான முறையிலமைந்த பாதுகாப்புவரி

பாதுகாப்புவரி வேண்டுமென்று கூறுவோர் குறிப்பிடும் மிகக் கபடமான காரணம் இதுவே. ஏனெனில் இந்தக் காரணம் வெளித்தோற்றமளவிலே நியாயமானதாகவும், மிதமானதாகவுந் தோற்றமளிக்கிறது. அட்சர ரீதியாக இதை உண்மையென எடுத்தால் இது வியாபாரத்துக்கே சாவுமணி அடிப்பதாயமையும். உற்பத்தி விலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமமாக்கவே பாதுகாப்புவரி விதிக்கவேண்டுமென இந்தக் கோட்பாடு குறிப்பிடும். வியாபாரத்தினால் ஏற்படக்கூடிய நலன்கள், செலவு சம்பந்தமான வித்தியாசங்களிலோ நயங்கள் சம்பந்தமான வித்தியாசங்களிலோ தாம் தங்கியுள்ளனவென்று சென்ற அத்தியாயத்திலே குறிப்பிட்டோம். உயர்ந்த அமெரிக்க உற்பத்தியாளரின் செலவுக்குச் சமமாக இறக்குமதிகளின், மீதுள்ள வரியை உயர்த்தினால் இந்த நாட்டுக்கு எவ்வித பொருளும் இறக்குமதியாகாது.[1]

இத்தகைய பாதுகாப்புவரி விடயத்தில் விஞ்ஞான ரீதியானது எதுவுமில்லை. எல்லாக் காரணங்களுள்ளும் சமாதானங் கூறமுடியாத இந்தக் காரணம், நமது சரித்திரத்திலே மிக்க அரசியல் முக்கியத்துவம் வகித்து வந்துள்ளமையும் சில சமயங்களிலே சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டமையும், அமெரிக்காவின் பொருளியலறிவுக் குறைவையே காட்டும்.

## ஆபத்துநிலைப் பாதுகாப்புக் காரணம்

இந்தப் பிரபலமான காரணத்தின்படி அமெரிக்கா ஒரு தொழில் சம்பந்தமான பாதுகாப்பு வரியைக் கீழான விகிதத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் அந்தத் தொழிலுக்கே ஆபத்துத் தரக்கூடிய வகையில் இறக்குமதிகள் உள்நாட்டுக்கு வந்து சேருமானால், "ஆபத்து நிலையை" அடைந்துவிட்டோமெனக் கூறலாம். அந்த நிலையை அடைந்ததும், அமெரிக்கா பாதுகாப்புவரிகளை உயர்த்த வேண்டும்; அல்லது கோட்டாக்களை குறைத்துவிட வேண்டும். இதனால் அந்தத் தொழில் காப்பாற்றப்படும்.

இந்தக் காரணம் எப்படிப்பட்டது? இது மேற்பார்வையளவில் நியாயமானதுபோலத் தெரியலாம். ஆனால் சார்பளவு அனுகூலமென்ற பொருளியற் கோட்பாட்டுக்கு நேர்மாறாக இதன் அடிப்படைத் தத்துவமிருப்பதைக் கவனிக்கலாம். நமக்கு வாய்ப்பான தொழில்களிலே விசேட கவனஞ் செலுத்துவதால் நமது வியாபாரத்துக்கும் வாய்ப்புண்டு. அதாவது நாம்

1. நிலையற்ற செலவானால் விஞ்ஞான ரீதியான சூத்திரம் நிச்சயமற்றதாகும். பூச்சியமான
பாதுகாப்புவரி வெளிநாட்டுச் செலவைத் திறமையுள்ள நமது உற்பத்தியாளர் சிலரின் செல
வோடு சமன்படுத்தும். இது நமது உயர் செலவு உற்பத்தியாளரோடு பார்க்குமிடத்து மிக
உயர்ந்த பாதுகாப்புவரியாகும். விஞ்ஞான ரீதியில் எங்கே எல்லையைக் கீறுவது ?

படிப்பகம்

www.padippakam.com



மேற்கொண்டுள்ள சில தொழில்களைக் கைவிட்டுவிட்டு அந்தவளங்களை நமக்கு அனுகூலமான தொழிற்றுறைகளிலே ஈடுபடுத்தலாம். நமக்கு ஒப்பளவிலே பிரதிகூலமுண்டாகக்கூடிய தொழில்களைக் கைவிட்டுவிடலாம். முன்னெல்லாம் ஒப்பளவிலே அனுகூலமுள்ளதாயிருந்த தொழில் பல காரணங்களால் அந்த அனுகூலத்தை இழக்கலாம். ஒரு சமயம், மற்றத் தொழிற்துறைகளிலே நுண்தொழிற் செயல்முறைகள் அதிகரித்திருக்கலாம்; உள் நாட்டிலே பயன்படுத்தப்பட்ட உற்பத்திக்குச் சாதனங்கள் அருந்தலாகவும் விலையுள்ளனவாகவுமிருக்கலாம். அல்லது அதற்கான சாதனங்கள் வெளிநாடுகளிலே சார்பளவிலே மலிவுள்ளனவாயிருக்கலாம்; அல்லது வேறு காரணங்கள் தோன்றியிருக்கலாம். இவை காரணமாக இந்தத் தொழிலுக்கு ஆபத்துண்டாக்கப்படலாம். இதனைத் தவிர்ப்பதானால் அதிக உற்பத்திப் பெருக்கமுள்ள ஏனைத் தொழில்களை மேலும் விருத்தி செய்ய வேண்டும். ஆபத்துத் தானத்தை அது கடந்து விடவேண்டும்[1]. இது மிகக் கொடுமைபோலத் தெரியலாம். எந்த ஒரு தொழிலும் தானாக அழிந்துபோவதில்லை; எந்த ஒரு பிரதேசத்திலும் புதிய உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி அதை மாற்றியமையார். ஆபத்துக் கேதுவான தொழில், முன்னேறியே வேதனையடைந்து சோடைபற்றிய தொழிலாயிருக்கும். எனவெ வலுக்குன்றிய தொழிலும் பிரதேசமும் கவனத்துக்கு வருகின்றன. நாட்டின் உற்பத்தியை மேலும் விருத்தி செய்யும் பொறுப்பு அவற்றினிடமும் சுமத்தப்பட்டுள்ளது.

ஆதலால், பாதுகாப்பு வரிகளைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்வதே நல்ல கொள்கையாகும். அதனால் சாதனங்கள் நகர்வதற்கு அவகாசமுண்டாகும். அரசாங்கம் பண உதவி செய்யவேண்டுமெனச் சில தொழில்கள் யோசனை கூறியுள்ளன. அத்துடன் சகாய நிதி உதவுமாறும், அதனைக் கொண்டு உற்பத்திச் சாதனங்களை நிலைபெறச் செய்யலாமெனவும், புனர் அமைப்புச் செய்யலாமெனவும் நினைக்கின்றன. இதனால் இடைக்கால நிலை துரிதப்படுத்தப்படும், பளு வலியவர்களிடையிலும் மெலியவர்களிடையிலும் பங்கு செய்யப்படும்; தேசிய உற்பத்தியைப் புனருத்தாரணஞ் செய்வதற்கிருக்கும் ஆட்சேபமும் குறைக்கப்படும். வலுக்குன்றிப் போயிருக்குந் தொழில்களிலே சில, பைசிக்கிள், கடிகார உற்பத்தி, எண்ணெய், சுங்கான், கம்பளித் தொழில், கோப்பைத் தொழில், நெசவு, பெரிய தளவாடங்கள் என்பனவாகும். இவற்றில் பலவற்றுக்கு அரசியல் நெருக்கத்தினால் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வளர்ந்துவரும் பொருளாதாரத்திலே போக்கில்லாத தொழில்கள் குறைந்து குறைந்து போக்குள்ள நல்ல தொழில்களுக்கு இடமளிக்கும். நமது ஏற்றுமதித் தொழில்களும், பிஸ்கால், நிதிக்கொள்கைகளும், வேலை

1. தேசியப் பாதுகாப்பு முதலிய காரணங்களால் பாதுகாப்புவரி வேண்டுமென நாம் சமாதானங்கூறலாம். அப்படியான சந்தர்ப்பங்களிலே ஆபத்துத் தானமென்ற காரணத்தை விடுத்து அந்த பாதுகாப்பு நியாயங்களையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஒப்பியல் நன்மைக் கோட்பாடுகளின் பயனாக உண்டாகும் தொழில்நுட்பச்சிறப்புக்களால் நிசவருமானம் உயரும் வகையில் நாடு முயலலாம்.

**“வெளிநாட்டான் கொடுப்பான்” அல்லது வாணிபமாற்று விகித காரணம்.**

பாதுகாப்புச் சம்பந்தமான போலிக் காரணங்களை இதுவரை பார்த்தோம். இனி உண்மையான காரணங்களைக் கவனிப்போம். இவை வாணிப மாற்று விகிதத்தை வெளிநாட்டானுக்குப் பாதகமாக விதிக்கச்செய்யும். நிலையான தன்மைகளிற் கூட இந்தக் காரணமே உண்மையுள்ளதாயிருக்கும். இது 130 வருடங்களின் முன்னர் ஜோன் ஸ்டுவேட் மில் என்பவரால் கூறப்பட்டது. பாதுகாப்புக்குச் சார்பான காரணங்கள் கட்டுப்பாடில்லாத வியாபாரத்துக்காக வாதாடியவர்களிடமிருந்தே வருகின்றனவன்றிப் பாதுகாப்பை விரும்புவோரிடமிருந்து வரவில்லை.

ரப்பர்மீது பாதுகாப்பு வரிபோட்டால், அதனுடைய விலை வெளிநாட்டிலும் பார்க்க உள்நாட்டிலே அதிகமாகும் என மில் வாதித்தார். (நமது தேவை வெட்டப்பட்டதோடு, நம்மிடை ரப்பருக்கு அதிக தேவையிருப்பதால்) நாங்கள் ரப்பர் பாவனையாளர்களில் முக்கியமானவர்கள் நமது தேவை குறைக்கப்பட்டால், வெளிநாடுகளிலே ரப்பரின் விலை குறையும். எனவே பாதுகாப்புவரியின் ஒரு பகுதி வெளிநாட்டார் மீது பொறுக்கிறது. (சிறிய தேசமானால் இந்தக் காரணத்தைப் பயன்படுத்தமுடியாது ; ஏனெனில் அது உலக விலைகளை மாற்றமாட்டாது.)

எவ்வாறிருப்பினும், நியாயமான காப்புவரியொன்று முக்கியமான தொரு நாட்டின் “வாணிப மாற்று விகிதத்தை” அபிவிருத்தியடையச் செய்யும். (மாற்று விகிதம் என்பது ஒரு நாட்டின் ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குமுள்ள விகிதாசாரமாகும்.)

எச்சரிக்கை : இந்த வாணிபமாற்று விகிதவாதம் எவ்வித வியாபாரத்தையும் விரும்பாத பாதுகாப்பு வாதி ஆதரிக்கும் பாதுகாப்புவரிக்குச் சமாதானம் கூறமாட்டாது. ஏன் ? எல்லா வகையான வியாபாரத்தையும் அழித்துவிட்டால், வியாபார மாற்று விகிதத்தை உமது சார்பாகத் திருப்புவதனாலுண்டாகும் அனுகூலங்களை அழித்துவிடும். “உகந்த பாதுகாப்பு வரி” என்றால், உங்கள் வியாபார மாற்று விகிதத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய அளவுக்கு அதிகமானதாயும், ஏற்றுமதி இறக்குமதிப் பண்டப் பொருள்களின் மாற்றத்தை உங்கள் நாட்டிற்கு அனுகூலமான மட்டத்தில் வைக்கும் அளவுக்குச் சிறியதாயும் இருக்கவேண்டுமென மில்லும் ஏனைய நவீனப் பொருளியலாளரும் வற்புறுத்தினர்[1]. இவையெல்லாம் பெரும்பாலான நாடுகட்குச் சிறிய காப்புவரியைக் குறிக்குமெனப் பெரும்

1. உள்ளூர் ஏகபோகத் தனியுரிமையாளர் இறுதி நிலைச் செலவுக்குமேலே தமது விலையை உயர்த்தும்போது வானளாவ உயர்த்தாமல் MR = MC வரை உயர்த்துவதைப் போன்றதே இந்த வாதம்.

www.padippakam.com



பாலான பொருளியலாளர் நினைக்கின்றனர். எல்லா நாடுகளும் இத்தகைய வியாபார மாற்று விகிதப் பாதுகாப்புக் கொள்கையை அனுசரித்தால் உலக உற்பத்தி மாதிரியும், பரிவர்த்தனையும் திறமையிற்குறையுமெனச் சுட்டிக்காட்டுகின்றனர். "என் அயலவனைப் பிச்சைக்காரனுக்கு" என்ற கொள்கைகளின் பிரகாரம் பெரும்பாலான நாடுகள் உள்ளதிலும் குறைவான நன்மையைப் பெறுவனவாயமையும்.

**விசையார்ந்த நிலைமைகளிலே பாதுகாப்பு ஏன் அவசியமென்பதற்கான காரணங்கள் :**

பாதுகாப்புவரியா, கட்டுப்பாடற்ற வியாபாரமா என்ற வாதத்திலே, பாதுகாப்பை ஆதரிப்போர் காட்டக்கூடிய சில காத்திரமான காரணங்களை இனி நாம் எடுத்துக் காட்டலாம். இந்த வகையிலே மூன்று முக்கியமான காரணங்களைக் காட்டலாம். (1) பாதுகாப்புவரி வேலையின்மையை நீக்கும். (2) ஆபத்தில்லாத பல்வகைப்படுத்தப்பட்ட கைத்தொழில்களைப் பாதுகாப்புவரி உண்டாக்கும். (3) ஆரம்பநிலையிலுள்ள வளரும் (நிலையிலுள்ள) கைத்தொழில்களுக்குத் தற்காலிகமான பாதுகாப்பு வரி ஏற்புடையதாகும்.

**பாதுகாப்பு வரியும் வேலையின்மையும்.**

சரித்திரரீதியாகப் பார்க்குமிடத்து பாதுகாப்புக்குச் சார்பான பலத்த காரணமொன்று வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவதும், உள்ளவற்றைக் காப்பாற்றிக் கொள்வதுமாகும். ஏற்றுமதிகள், வேலை வாய்புக்களுக்காக வெளிநாடுகளில் முதலீடு செய்தல், உள்ளூர்ச் செலவீடுகள், இறக்குமதி சம்பந்தமாயுள்ள பிரதிகூலமான "ஒழுகும்" பயன்கள் என்பனபற்றிய சாதகமான பெருக்கப் பயன்களைப்பற்றி முன்னேறியே ஆராய்ந்தோம். எனவே என் அயலவனைப் பிச்சைக்காரனுக்கு (அயலான்-யாசகன்) என்ற நம் உயர் பாதுகாப்புவரிக் கொள்கை மற்ற நாடுகள் எதிர் நடவடிக்கை எடுக்குமுன் குறுந்தவணையில் வேலை வாய்ப்பை உயர்த்திவிடும் என்பதை மறுக்கமுடியாது.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் நமது தேசீயப் பூரண வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒப்புக்கொள்ளத் தக்கபகுதியாகக் கொள்ள முடியுமா ? கட்டுப்பாடற்ற வியாபாரம், புதிய எந்திர சாதனங்களையும் உற்பத்தி முறைகளையும் கண்டுபிடிக்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் போன்றதல்லவா ? இரண்டும், நிசமான தேசீய உற்பத்தியின் உள்ளார்ந்த ஆற்றலுள்ள உற்பத்தி மட்டத்தின் விருத்தியைக் காட்டுகின்றன. ஆனால் இவற்றில் ஏதாவதொன்று குறுந்தவணையிலே உற்பத்தியினதும், வேலை வாய்ப்பினதும், நிசமாக அடைந்த மட்டத்தைக் குறைக்கச் செய்யலாம். குறுந்தவணையிலோ நெடுந்தவணையிலோ நிச உற்பத்தி உள்ளார்ந்த உற்பத்தி என்பவற்றில் ஓர் இடைவெளி உண்டாக விடுவதற்கு எவ்வித அவசியமுமில்லை. ஏனெனில் அது அபிவிருத்தியாலுண்டாகும் இலாபங்களை அவசியமின்றிச் சிதறச் செய்வதாகும்.

www.padippakam.com



மிகக் குறைந்த பாதுகாப்புவரிகளால் வேலையின்மை உண்டாகுமென்
பது சம்பந்தமான காரணங்களுக்கு எவ்வாறு சமாதானங்கூறுவது?
நுண்தொழில்: வேலையின்மை சம்பந்தமான காரணங்களுக்கு எவ்வாறு
சமாதானங் கூறுவோமோ அவ்வாறே இந்தக் காரணங்களுக்கும் சமா
தானங் கூறுவோம். பொருளியல் மந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக
வும் திறமையாகவும் தீர்க்க உள்நாட்டுப் பணக்கொள்கையும் பிஸ்கால்
கொள்கையும் உண்டென்பதை எடுத்துக் காட்டுவோம். (இதைப்பற்றி
நூற்றுக்கணக்கான பக்கங்களை முன்னரே எழுதியுள்ளோம்). இறக்கு
மதிகளால் தொழிலிழந்தவர்கட்கு வேறு வேலை இடைக்குமானால்
பாதுகாப்பென்ற இந்தக் காரணம் வலியிழந்துபோகும்.

"நவீனப் பழம் பொருளியற் கொள்கைகள் தொகுப்பு முறை எவ்வளவு
அவசியமென்பதை மறுபடியும் நாம் உணர்கிறோம். பழம் பொருளி
யலாளரின் கொள்கைகள் ஒப்புக் கொள்ளக்கூடியனவாயும் பொருத்த
முடையனவாயுமிருக்க வேண்டுமானால், நிலைபேறும் வளர்ச்சியுமுள்ள
சூழ்நிலையை உண்டாக்க இத்தொகுப்பு முறை தற்கால வருமான
ஆராய்ச்சிக்கான சாதனங்களைப் பயன்படுத்துகிறது.

**வியாபாரமாற்று விகிதத்தின் அபாயநேர்வைக் குறைக்கும் போக்குமாற்றம்**

ஒப்பியல் நன்மைகள், நாட்டுக்கு ஒரு பொருள் உற்பத்தியிலேயோ,
சில பொருள் உற்பத்தியிலேயோ சிறப்புத்தேர்ச்சி பெறுமாறு கூறும்;
எனவே அந்நாடு தனது வளங்களையெல்லாம் ஒரு துறை உற்பத்தியிற்
போடும். அந்தப் பண்டங்களின் விலை இறங்கினால் என்ன நடக்கும்?
அல்லது ஏற்றுமதிப் பொருள்கள் விலை ஊசலாடினால் என்ன நடக்கும்?
ஒரு நாட்டின் வியாபார மாற்று விகிதத்திலே அத்தகைய மாற்றங்களுண்
டானால் அது நாட்டின் நிசவருமானத்துக்கு உறுதியின்மையைக் கொடுக்கும்.
அப்போது அந்நாட்டின் ஒரே ஒரு தொழில் நிரந்தரமாகவே இலாபமற்ற
தாயிருக்கச் செய்யும்.

ஒற்றைச் சார்பான உற்பத்தியைத் தவிர்ப்பதற்காக இலத்தீன் அமெரிக்கப்
பொருளியலாளர் பாதுகாப்பு வரி ஏற்படுத்துமாறு யோசனை கூறுவர்.
அபாயவரவைத் தடுப்பதற்காக, கடன் பத்திரங்களிலே முதலீடு செய்பவர்
தமது முதலீடுகளைப் பல துறைகளில் பிரித்துவிடுகிறார். எல்லாவற்றை
யும் ஒரே முதலீட்டிலே போடமாட்டார்; அது போல பலதுறைப்படுத்து
வதற்காக பாதுகாப்புவரிகள் போடப்பட வேண்டுமென அவர்கள் நம்
புகின்றனர்.

இந்த வாதம் கருத்தோடு ஆராயப்பட வேண்டியதொன்றாகும். தனிப்
பட்டவர்கள் தனியார் துறைத் தொழில்களிலே தமது பணத்தை முடக்கும்
போது எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய விலைகளினால் உண்டாகும் அபாய
வரவைக் கருத்திற் கொள்ளாது விடுகிறார்கள் என்றதொரு எண்ணம்
இதிலே அமைந்துள்ளது. எதிர்காலத்திலுண்டாகக்கூடிய விலையேற்ற

www.padippakam.com



இறக்கங்களால் விளையும் ஆபத்துக்களை, தனியார் துறையிலும் பார்க்க அரசாங்கம் அறிய வாய்ப்புண்டென்ற கருதுகோளை இந்த வாதம் ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது. வருங்கால ஆபத்துக்கள் உண்மையானவை யாய், தனிப்பட்ட முதலிடுவோரால் முன்னேறியே அறியக்கூடியதாயிருந் தால் தற்காலிகமாக உண்டாகும் உயர் இலாபங்களால் அந்த முதலிடுவோர் தவருன வழியில் செலுத்தப்பட்டு, இச்சில தொழில்களில் முதலீடு செய் யத்தூண்டப்படமாட்டார். அத்தகைய தொழில்களுக்கு ஒப்பியல் நன்மை கள் நெடுந்தவணையிலே இருக்கமாட்டாது. எனவே அத்தொழில்களில் விசேட உற்பத்திக்கு இடமிராது[1]. இக்கட்டத்திலே பாதுகாப்புக்கு ஆதர வானதோர் இலத்தீன் அமெரிக்க நாட்டுக் காரணத்தைக் குறிப்பிடல் வேண்டும். டாக்டர் ரோல் பிரெபீஷ் என்ற பிரபல பொருளியலறிஞர், விவசாயப் பொருள்கள் விடயத்திலே நெடுந்தவணை வியாபார மாற்று விகிதம், எப்பொழுதும், அப்பொருள்களுக்குமாருக மாறிக் கொண்டி ருக்கிறது ; எனவே விவசாயப் பொருள்களை விசேடமாக உற்பத்தி செய் வோர் பிழையான குதிரையிலே பந்தயம் வைக்கிருர்கள். கைத்தொழிற் பொருள்கள் மீது பாதுகாப்புவரி விதிப்பது அரசாங்கங்களின் கடமை எனக் கூறுகிருர். கைத்தொழிற் பொருள்களுக்கு வருங்காலத்திலே நல்ல வியாபாரமாற்று விகிதமுண்டெனவுங் கூறுகிருர். இந்த வாதத் துக்கு மாருகப் பின்வருமாறு கூறப்படுகிறது. இறந்த காலத்திலும் எதிர் காலத்திலும் உணவு விலைகுறைவதற்கேற்றவாறு உணவு உற்பத்திச் செல வும் அதிகம் குறையுமானல், (இது விவசாயத்துறையிலே நுண் தொழில் சீர்திருத்தங்களுண்டாவதால் ஏற்படலாம்) நெடுந்தவணை ஒப்பியல் நன் மைகள், ஒரு நாட்டைப் பார்த்து " நீ உனது உணவு உற்பத்தியில் விசேட வினைவை உண்டாக்கு ; அதனல் உனது நிசவருமானம் அதிகரிக்கும் அல்லது நட்டங்களை குறை " எனக்கூறும்.

வருங்காலத்திலே குறிப்பிடப்பட்ட நாடுகளின் ஒப்பியல் நன்மைகள் எவ்வாறிருக்கும் என்பதைப் பற்றியதே இந்த வாதமாகும். வியாபார மாற்று விகிதத்துக்குப் பாதகமான போக்குக்களை அறிவதில் தனியார் துறை முதலீட்டுக்காரரிலும் அரசாங்கம் எத்துணைக் கெட்டித்தனமுடைய தாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அது கட்டுப்பாடற்ற சந்தைப் போக்குக்களில் தலையிடலாம் எனக்கூறுவதற்குக் காரணங்காட்டலாம். ஆனல் ஒப்பியல் நன்மைகள் பற்றிய தீர்க்க தரிசனங்களிலே அரசாங்கம் தவறினல் நாட்டில்

1. இந்த ஆபத்தை முதலாளிகள் முன்னேறியே அறிந்துகொள்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம். ஏற்றுமதி விலைகள் விழுந்தால், வேலையாட்களுக்குச் சிட்டுக்கிழித்துவிடலா மெனவும், வேலையற்றோர்க்கு வேலை கொடுக்கும் பொறுப்பை அரசாங்கத்துக்கே விட்டுவிடலா மெனவும் முதலாளிகள் நினைக்கலாம். அப்போது எமக்கு "வெளிப்பொருளாதார முரண்" உண்டாகும். அப்போது பாதுகாப்புவரி, கோட்டா, ஏனைத் திட்டங்கள் என்பவற்றில் அரசாங்கம் தலையிடும் கொள்கைக்கு நியாயமுண்டு. "வெளிநாட்டார் கொடுப்பார்" என்ற கொள்கை எத்தகைய குறுகிய சூழ்நிலையில் வியாபார மாற்றுவிகிதம் பெறுமதி உடைய தாகும் எனக்காட்டும் என்பதை இங்கே ஞாபகத்திற்கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



நிசவருமானத்திற்குண்டாகும் நட்டம் அதிகமாகலாம். அதனுல் நாட்டின் அபிவிருத்தி விகிதம் மந்தமாய்ச் செல்லுமேயன்றித் துரிதமாய்ச் செல்லமாட்டாது.

## “ஆரம்பநிலையிலுள்ள கைத்தொழில்களுக்குப்” பாதுகாப்புவரி

கைத்தொழில்பற்றிய தமது அறிக்கையிலே அலெக்ஸாண்டர் ஹமில்டன் இந்தக்காரணத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த ஜெர்மன் பொருளியலறிஞரான பிரெடெரிக் லிஸ்ட் என்பவரும் இக்கொள்கையை உடையவராயிருந்தார். ஜோன் ஸ்டுவர்ட் மில், அல்பிரட் மாஷல், பேராசிரியர் டப்ளியூ. டௌசிக் ஆகியோர் இதனை ஆதரித்துள்ளனர். வேறு பழம் பொருளியலாளரும் இதனை ஆதரித்துள்ளனர்.

இக்கொள்கையின்படி ஒரு நாடு ஒப்பியல் நயன்களைப் பெறப் பல முயற்சிகளில் ஈடுபடலாம். ஆனுல் அவற்றை அது ஆரம்பித்துவைக்க வேண்டும். வெளிநாட்டுப்போட்டி அதற்கு இருக்குமாளுல், பாலநிலையிலுள்ள அத்தகைய தொழில்கள் ஆரம்ப பரீட்சைக்காலத்தை நிர்வகிக்கவும், பண நெருக்கடியைச் சமாளிக்கவும் முடியாதிருக்கும். ஆனுல் அவை மூச்சு விட அவகாசமளிக்கப்பட்டால், பெருவாரி உற்பத்தியின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், தற்காலத்தில் நிலவும் நுண்தொழில் முறைகளைக் கைக்கொள்ளவும் முடியும். பாதுகாப்பானது ஆரம்பத்திலே நுகர்வோரின் விலையை அதிகரிக்கச் செய்தாலும், கைத்தொழில் வளர்ச்சியடைந்தால் அஃது அத்துணைத் திறமையோடு செயலாற்றுமாதலால், செலவுகளும் விலைகளும் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு அமெரிக்காவிலே பாலநிலையில் உள்ளதொரு தொழிலாகப் பட்டு நூற்றெழிலை டௌசிக் என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார். இத்தொழில் ஈற்றில் ஒப்பியல் நயமுள்ளதொரு தொழிலாய் வளர்ந்தது. பின்னர் பாதுகாப்புவரியை நீக்கிஞலும் தன்காலில் நிற்கக்கூடியதொரு தொழிலாய் அமைந்தது. ஆனுல் கம்பளித் தொழில்பற்றி இவ்வாறு கூறமுடியாது. பாதுகாப்புவரியின் பலத்தைக் கொண்டுதான் இந்தத் தொழில் முன்னேறிற்று. ஆனுல் இது நமது அமெரிக்க நுண்தொழில் முறைகளைப் பயன்படுத்தி வெற்றிபெறக்கூடிய கட்டத்தை அடையவில்லை. இது எப்போதும் பாலிய நிலையிலேயே இருந்து வந்தது.

நல்ல நிலைமைக்கு வரக்கூடிய தொழில்கள்கூட மக்களுடைய வாக்குகளைப் பெறமுடியாதிருந்தமை இந்த வாதத்திற்குப் பலவீனத்தை உதவிற்று. இவை காங்கிரசிடமிருந்து ஆதரவைப் பெறவில்லை. பாலியதசையிலுள்ளவையும், சக்திவாய்ந்த சுயநல உரிமையுடையோரின் ஆதரவிலிருந்தவையுமே அரசாங்கத்தின் அனுக்கிரகத்தைப் பெற்றன.

**இளம் பொருளாதாரம் என்ற காரணம்.** பாலநிலையிலுள்ள தென்ற காரணம் ஒரு நூற்றுண்டுக்கு முந்திய அமெரிக்கவிடயத்தில் பொருத்த

www.padippakam.com



முடையதாய் இருந்திருக்கலாம். இன்று அது பொருந்தாது. இன்றைய உலகிலுள்ள பிற்போக்கான தேசங்களுக்கே அது பொருந்துமன்றி விவசாய நாடாயிருந்து கைத்தொழில் நாடாக மாறியவற்றுக்கு அதிகம் பொருந்தாது. வளரும் நாடுகள் இன்றும் தூக்கத்திலேயே இருக்கின்றன. அவை சமநிலையடைந்துவிட்டன என்று கூறமுடியாது. கைத்தொழில் உழைப்பாளிகளே விவசாய உழைப்பாளிகளிலும் பார்க்க அதிக வருமானத்தை உலகின் எல்லாப் பாகங்களிலும் பெறுகின்றனர். அதனுல் உலகின் எல்லாப் பாகங்களிலும் கைத்தொழில் வளர்ச்சி காணப்படுகிறது. விவசாயத் தொழில் குன்றிவருகிறது. மக்கள் நகரத்தை நாடிப்போகிருர்கள். ஆனுல் வருவாய் உற்பத்தி என்பவற்றுக்கிடையே ஒரு சமநிலையை உண்டாக்கக்கூடிய அளவுக்கு விரைவான நுகர்வு இல்லை. பொருளியல் முறையிலே விரும்பத்தக்க நெடுந்தவணைப்போக்கை உற்சாகப்படுத்த மிதமான பாதுகாப்புவரியை விதிக்கலாம். இத்தகைய பாதுகாப்பை ஆதரித்தலுக்கு "இளம் பொருளாதாரச் சமாதானம்" என்று கூறலாமேயொழியப் பாலியநிலைத் தொழிற்சமாதானம் என்று கூறமுடியாது.

ஈற்றில் ஒரு வார்த்தை. இளம் பொருளாதார வாதமோ, பாலிய நிலைத் தொழில் வாதமோ ஒப்பியல் நயத்துக்குமாருணவையல்ல. உற்பத்தித்தகைமைக்கோடு வெளிநோக்குடையதாயும், புதிய ஒப்பியல் நயங்களின் போக்குடையதாயும் தற்காலிகமான பாதுகாப்புத் தேவைப்படுவதாயுமிருக்கும் வகையில் அந்த உற்பத்தித்தகைமையை ஊக்கிச் சலனப்படுத்திஞற்ருன் அவை பொருத்தமுடையனவாயிருக்கும்.

**அனுமதிப் பங்குகளும், தோன்ருப் பாதுகாப்பும்.**

இதுவரை இந்த அத்தியாயத்திலே பாதுகாப்பு வரியைப் பற்றியே குறிப்பிட்டோம். ஆனுல் இங்கே கூறப்பட்டவை எத்தகைய ஏனைவியாபாரத் தடைகளுக்கும் பொருத்தமானதே. பாதுகாப்புவரிகளால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் அனுமதிப் பங்குகளுக்குமுண்டு. அனுமதிப்பங்குகள், பாதுகாப்புவரிகளிலும் பார்க்க மிகக் குறுகிய போக்குடையன. போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தால், அரசாங்கம் செயற்கையாக விதிக்கும் தடைகளைப் போல அனுகூல மாற்றத்தில் விளைவுகளை உண்டாக்கும்.

ஈற்றில் "தோன்ருப் பாதுகாப்புப்"பற்றிக்குறிப்பிட வேண்டும். அமெரிக்காவுட்படப் பலநாடுகளிலே சுங்கபரிபாலனம், பணவரிபோலத் தீமையுடையதாயிருக்கும், அல்லது அதிலும் பார்க்க அதிக தீமையுடையதாயிருக்கும். இறக்குமதியாளர் ஒருவரின் இறக்குமதிகளை அவசியமின்றித் தாமதிக்கச் செய்தால், அல்லது வெளிநாட்டிலிருந்து எங்களுக்கு ஏற்றுமதியாகும் பொருள்கள் சுகாதாரம் காரணமாகவோ, தான்ருேன்றித்தனமான சட்டங்களிஞலே தடைசெய்யப்பட்டால் அது, பாதுகாப்புவரிகள் போலவும், அனுமதிப் பங்குகள் போலவும் தீமையுடையனவாயிருக்கும். ஐக்கிய அமெரிக்கா சுங்க நிர்வாகத்தை இலேசாக்க முயன்றுவருகிறது. ஆனுல் அது எவ்வளவோ தூரம் போக வேண்டியிருக்கிறது.

www.padippakam.com



பாதுகாப்புவரி சம்பந்தமான விவாதம் இவ்வளவில் நிறைவேறுகிறது. பாதுகாப்பு வரிக்கு ஆதரவாகக் கூறப்பட்ட காரணங்கள் பலபோலித் தன்மையுடையன. பாலிய நிலையிலுள்ள தொழில், இளம் பொருளாதாரம் என்பனவே ஓரளவு நியாயமானவை. பொருளியலாளர் பாதுகாப்புவரிகளை எதிர்த்ததில் ஆச்சரியமில்லை. 1930 ஐச் சார்ந்த ஆண்டுகளிலே அவர்கள் ஸ்மூத் ஹோலி பாதுகாப்புவரிகளை எதிர்த்தனர். உறல் பரஸ்பர வியாபார ஒப்பந்தத்தையும் GAAT (காட்) என்று சொல்லப்படும் பாதுகாப்பு வியாபாரம் சம்பந்தமான பொது ஒப்பந்தத்தையும், அவர்கள் ஆதரித்தமை நூதனமன்று. இவை வியாபாரத் தடைகளைக் குறைக்கும் நோக்கமுடை யவை.

**சுருக்கம்.**

1. ஒப்பியல் நயங்கள், அனுகூலவிதிப்படி சர்வதேச விசேட உற்பத்தியினால் உண்டாகும். அதிக உற்பத்தியிலேயே கட்டுப்பாடற்ற வியாபாரம் தங்கியுள்ளது. இதனால் உலகில் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கிறது. அதனால் வாழ்க்கைத்தரம் உயர்கிறது. பலவிதவாழ்க்கைத்தரமுள்ள நாடுகளிடையே நிகழும் வியாபாரம் விசேடமாகப் பரஸ்பரம் இலாபமுடையதாயிருக்கும்.

2. பாதுகாப்பு வரியை ஆதரிக்கும் வாதங்கள் சில குறிப்பிட்ட வற்புறுத்தும் ஆற்றல்மிக்க கூட்டத்தினருக்கு விசேட சலுகைபெற்றுக் கொடுக்கும் நோக்கமாகப் பின்னப்பட்ட காரணங்களே, அவை ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு நிற்கமாட்டா.

3. ஒப்பியல் நயன்கள் விதிக்கு விலக்காக உள்ளவற்றில் முக்கியமானது தேசிய இராணுவப் பாதுகாப்புச் சம்பந்தமாக அனுசரிக்கப்பட்ட பொருளியலுக்கு முரணான சில நடவடிக்கைகளே. இச்சந்தர்ப்பங்களிலே நேரடியான அரசாங்கச் சகாய முறை ஏற்றதாகும்.

4. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கப் பாதுகாப்புவரி விதித்தல் என்ற காரணத்தைவிட காரியபூர்வமான விலக்கு ஒன்றுண்டு. அதுபால நிலையிலுள்ள தொழில்களும், இளம் பொருளாதாரமும் தமது நிசமான நெடுதவணைச் சார்பு அனுகூலத்தை நிறைவேற்றத்தற்காலிகமாக விதிக்கப்படவேண்டிய பாதுகாப்பு வரியாகும். சுதந்திரச் சந்தையிலும் பார்க்க அபிவிருத்திக்கான பொதுத்திட்டம்போடுவோர் நெடுதவணைப் போக்குக்களை விசேடமாக அறிந்துகொள்ளமுடியுமாதலால் அளவுக்கு பாதுகாப்புவரியும் ஏனைய தலையீடுகளும் நன்மைதரக்கூடும்.

**வினுக்கள்.**

1. பாதுகாப்பு வரிவிதித்தலை ஆதரிக்கும் மிகவாய்ப்பான ஒரே ஒரு காரணம் என்ன ?

படிப்பகம்

www.padippakam.com



2. பாதுகாப்புவரிசம்பந்தமாகக் கூறப்படும் போலிநியாயங்களை நிரைப்படுத்துக. பாதுகாப்புவரிக்குப் பாதகமாகவும் சாதகமாகவும் உள்ள பலகாரணங்களை எவ்வாறு வகைப்படுத்துவீர் ?

3. "இறக்குமதி அனுமதிப்பங்குகளும் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளும் பாதுகாப்பு வரிபோன்றவை". இக்கூற்றை ஆராய்க.

4. பாலியநிலைக் கைத்தொழில், இளம்பொருளாதாரம் பற்றிக்கூறும் காரணங்களை நுட்பமாக ஆராய்க. இவைகளுக்கும் ஒப்பியல்நன்மைகளுக்கும் என்ன தொடர்பு.?

5. பொருளியல் சாராத பாதுகாப்புவரி சம்பந்தமான சிலநியாயங் களைக் குறிப்பிடுக.

6. ஆபத்துத்தானக் காரணத்தை ஒப்பியல் நன்மைக் கொள்கையோடு பொருத்தி ஆராய்க.

7. பின்வரும் கருத்துக்களைப் புனராலோசனை செய்க: பாதுகாப்பு வரி, சுங்கவரி, அனுமதிப்பங்கு, விஞ்ஞான ரீதியான பாதுகாப்பும், ஆபத்துத் தானமும்; தேசியபாதுகாப்புக் காரணங்கள். வியாபாரமாற்று வீதம், விசேட உற்பத்தியும் ஆபத்தும், கட்டுலனுகா பாதுகாப்புவரி, பாலிய நிலைத் தொழில், இளம் பொருளாதாரம்.

www.padippakam.com

# முப்பத்துநாலாம் அத்தியாயம்

## சர்வதேச நடப்புப் பொருளாதாரப் பிரச்சினைகள்

*சுவரைக் கட்டுமுன்னர் எவரைத் தடுத்துக் கட்கிறேன் ;*
*எவரை அடக்கிக் கட்டுகிறேன்*
*எவருக்குச் சஞ்சலமுண்டுபண்ணுகிறேன் என்பதை*
*அறிய விரும்புவேன்—*

*ரொபேட் புரொஸ்ட்.*

எதிர்காலத்திலே உலகையும், ஐக்கிய அமெரிக்காவையும் எதிர்நோக்கியுள்ள சர்வதேசப் பொருளியற் பிரச்சினைகளைப்பற்றி இப்போது நாம் ஆராய்வோம். முக்கியமான தகவல்களை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது? எந்தப் பொருளியல் கொள்கைகளை நாம் தவிர்க்க வேண்டும்? எவற்றை அனுசரிக்க வேண்டும்?

பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளிலே வாழ்ந்த வணிகவியலாளரே சர்வதேசப் பொருளியல் பற்றி முதன் முதல் எழுதியவர்கள். அவர்கள் தங்கள் தங்கத்தை வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றிச் சஞ்சலமடைந்தனர். "வாய்ப்பான" வியாபாரப் பாக்கியைக்கொண்டு உள்நாட்டிலே வேலைவாய்ப்புக்களை எவ்வாறு உண்டாக்கலாம் என்பதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்தனர். வெளிநாடுகளிலிருந்து மலிவாகவும் அதிகமாகவும் இறக்குமதிகளை வரவழைப்பதால் நாடு எவ்வாறு பயனடையுமென்ற பிரச்சினைபற்றி அடம் சிமித்தும், ஏனைய பழம் பொருளியலாளரும், வாதத்தை ஆரம்பித்தனர். இதனுல் நாட்டிலே பூரணமான வேலைவாய்ப்புப் பெற்றுள்ள பொருளாதாரத்துக்குத் தேவையான பண்டங்களை அதிகரிக்கலாம் எனவும் எண்ணினர்.

1960 ஐ அடுத்துள்ள ஆண்டுகளிலே அமெரிக்காவுக்கு, தங்கம் வெளியேறும் பிரச்சினை உண்டாகியிருக்கிறது. அத்துடன் நடப்புக் கணக்கு நிலைக் குறிப்பில் பற்றுக்குறை உண்டாகியிருக்கிறது. இவற்றுல் உள்நாட்டு, வேலைவாய்ப்பு நிலைகளை வெளிநாட்டு வியாபாரம் எவ்வாறு பாதிக்குமென்பதைப் பற்றிய விடயத்தில் கவனந்திரும்பியுள்ளது. வணிகவியல் வாதத்திலே உண்மையான காரணகாரியத் தொடர்புகளுண்டா என்பதைக் காண்பதே நமது பிரச்சினை. ஆனுல், தற்காலத்து அண்டப் பொருளியல் பிண்டப் பொருளியல் என்பவற்றின் அடிப்படைத் தத்துவங்களை உணராத வணிகவியல்வாதிகளின் கொள்கைச் சிபாரிசுகளை நாம் தவிர்ப்போம்.

### ஏற்றுமதிகளும், உத்தியோகங்களும்

இன்றுள்ள வியாபாரப் போட்டியைப்பற்றித் தலையுடைக்கும் ஒரு வியாபாரியிடம் 45 வருடத்துக்கு முன்னுள்ள நிலைமையைப் பற்றிப் பேசி



35—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



பாருங்கள். ஏற்றுமதிகள் தூண்டுதலளிக்கும் விடயமென்றும் அவர் கூறுவதோடு, உள்நாட்டிலே தனிப்பட்டவரும் அரசாங்கமும் செய்த முதலீடு களைப்பற்றியும் கூறுவார். 1915 ஆம், 1916 ஆம் ஆண்டுகளைப்பற்றியும் நாம் யுத்தத்திலிறங்க முன்னர் இருந்த நிலைமைகளைப்பற்றியும், அப்போது பிரான்ஸ், ருஷ்யா, இங்கிலாந்து ஆகியநாடுகள் நமது ஏற்றுமதிகளை எவ்வளவு விரும்பின என்பதைப் பற்றியும் கூறுவார். அப்போது நாம் தங்கத்தையும், உறுதிப்பத்திரங்களையும் பெற்றுக்கொண்டு பண்டங்களை அந்நாடுகளுக்கு அனுப்பினோம். அதனால் அமெரிக்காவிலுள்ள மந்த நிலைமை மாறிப் பெரிய சுபீட்சமுண்டானது. நாம் யுத்தத்தில் இறங்கிய பின்னர், துப்பாக்கித் தோட்டாக்களையும் வெடி மருந்துகளையும் ஏற்றுமதி செய்தோம். அப்போதும் வெளித்தோற்றத்தளவிலே சுபீட்சமுண்டானது. உயர்ந்த விலைகளும், பல உத்தியோகங்களும் ஏற்பட்டன.

1920 ஐ அடுத்த ஆண்டுகளிலே தனிப்பட்ட தனவந்தர் வெளிநாட்டவருக்குக் கடன் கொடுத்தார்கள். அமெரிக்கத் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்காகக் காப்புவரிகளிடப்பட்டன. அப்போது நம் நாட்டிலே சேமிப்பிலே அதிக மிச்சமும் முதலீட்டிலே நல்ல வாய்ப்பான பாக்கியும் உண்டானதற்குக் காரணம் இந்த வெளிநாட்டுக்கடனே. உள் நாட்டிலே தனிப்பட்டவர் முதலீடு போலவும், அரசாங்கப் பற்றுக்குறை செலவு போலவும் வெளிநாட்டு வர்த்தக நிலைக்குறிப்பு மொத்தப் பணச் செலவீட்டை அதிகரித்ததேயன்றி அதைக் குறைக்கவில்லை. "நமது வெளிநாட்டுக் கடன் கொடுப்புக்கள் பலனற்றனவாயின. முதலீடு செய்தோர் தமது பணத்தை இழந்தனர். ஆனால் நாம் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உள்நாட்டு வேலைவாய்ப்புக்கள் உண்டாக்கப்பட்டன. உத்தியோகங்கள் பற்றியும் 1920 இலிருந்த விலைவாசிகள்பற்றியும் என்ன நடந்தாலும் அதைப்பற்றி நாம் அக்கறை கொள்ளவில்லை. 10 வருடத்தின் பின்னர் இந்தக் கடன்கள் நல்ல கடன்களாகுமோ தீய கடன்களாகுமோ, அதைப்பற்றி அக்கறையில்லை. அவை பொது நன்கொடையாகவோ தனிப்பட்டோர் நன்கொடையாகவோ வருமென்பதைப்பற்றியும் அக்கறையில்லை" என வியாபாரத்திலே பழுத்த அனுபவமுள்ளவர் கூறலாம். அத்துடன் அவர் "நியூயோர்க்கில் நிறுவப்பட்ட ஜே. பி. மோர்கனின் முதலாவது தேசிய வங்கியின் தலைவரான லியன்பிரேசர் கூறியதுபோல, "கடன் கொடாதிருப்பதிலும் கடன் கொடுத்து நட்டமடைவது நல்லது" எனவும் எடுத்துக் காட்டியிருப்பார்.

## வெளிநாட்டு முதலீடும், பணவீக்கப் பளுவும்

இவ்வாறு நாம் செய்த வெளிநாட்டு முதலீடுகளின் விரிவான விளைவுகளை மதிப்பிடுவதற்கு இரண்டாம் பாகத்திலே கொடுக்கப்பட்ட வருமான ஆராய்ச்சி இப்போது துணைபுரியும். 13 ஆம் அத்தியாயத்திலே பெருக்கி எவ்வாறு தொழிற்பட்டதென்பதை ஞாபகப்படுத்தலாம். உள்நாட்டு முதலீட்டிலும், அரசாங்கச் செலவீட்டிலும், அல்லது தேறிய

www.padippakam.com



வெளிநாட்டு முதலீட்டிலும், ஒருபில்லியன்டொலரளவான அதிகரிப் போடு ஆரம்பமாயிற்று. அது முதலில் 1 பில்லியன் வேலைவாய்ப்பை உண்டாக்கிற்று. இரண்டாவது முறையில் 2/3 பில்லியன் டொலரை, அதன் பயனாக வந்த முதலாளிகளும் தொழிலாளிகளும் செலவு செய்தனர். அந்த உற்பத்திகளை உண்டாக்கிய முதலாளிகளும் தொழிலாளி களும் அந்த 2/3 பில்லியன் டொலரிலிருந்து வந்த வருமானத்திலே 2/3 பில்லியன் டொலரைத் தமது உற்பத்திக்குச் செலவு செய்தனர். இவ்வாறு அது சங்கிலித் தொடராய்ப் பெருகிற்று. இதனால் மொத்தச் செலவீடு $[1+2/3+(2/3)^2+---]=3$ பில்லியன் டொலராக மதிக்கப்பட்டது.

அந்தப் பெருக்கியின் செயற்பாட்டையே நாம் இங்கே காண்கிறோம். வெளிநாட்டார் எங்களிடமிருந்து அதிகம் வாங்க நாம் அவர்களிடமிருந்து குறைவாக வாங்க, அதில் உண்டாகும் சேமிப்பும் முதலீடும், அமெரிக்கத் தேசீய வருமானத்தை உயர்த்தும்.

இது நல்லதா? முதல் பணவீக்க இடை வெளியிருந்திருந்தால், வெளி நாடுகளிலே புதிதாக முதலீடு செய்வது நல்லது. ஏனெனில் அது வேலை யற்றோருக்கு வேலை வாங்குவதோடு, உங்கள் நாட்டின் உற்பத்தியையும் பெருக்கும். உதாரணம்: 1914 இல் இங்கே ஒரு மந்தமுண்டானது. ஐரோப்பிய யுத்தத்தினால் நமது பண்டங்களுக்குத் தேவையுண்டானது. அதன்பயனாகப் பொருளுற்பத்தி அதிகரித்ததோடு வேலைவாய்ப்புக் களுமுண்டாயின.

அதிகமான தேவைகளிருக்கும் சந்தர்ப்பத்திலே புதிய வெளிநாட்டுத் தேவைகள் வந்து சூழ்ந்துகொள்வதால், பணவீக்க இடைவெளி உண்டானால் என்ன செய்வது ?

அப்போது பெருக்கி நடவடிக்கை விரிவடையும். இப்போது என்ன விரி வடையும்? வேலைவாய்ப்பு அதிகம் விரிவடையாது. வேலையாட்களுக்குக் கிராக்கி உண்டாகும். உற்பத்தி பெருகமாட்டாது. யந்திரங்கள் மேலதிக நேரத்துக்கு வேலை செய்துகொண்டேயிருக்கின்றன. புதிய கூலியாட்களை ஏற்படுத்துவதற்குக் கண்காணிப்பாளர் கஷ்டப்படுவர். இதற்கு ஏதும் கொ டுக்கப்படல் வேண்டும், எனவே விலைகளை உயர்த்த வேண்டியேற்படும்.

உள்ளூர் தேவை மிதமிஞ்சியதாயிருக்கும்போது நமது ஏற்றுமதியை இறக்குமதியின் ஒப்பீட்டு அளவுக்கு விரிவடையச் செய்தால் பணவீக்க அழுத்தத்துக்கு மேலும் பழுவுண்டாகும். அத்தகைய சமயங்களிலே புதிய வெளிநாட்டு முதலீடு நமது நிலைப்பு நோக்கிலிருந்து பார்க்கும் போது தீமைவிளைவிக்கக் கூடியதாயிருக்கும்.

இதை எட்டுச் சுரைக்காயென்று நீங்கள் நினைக்கிறீர்களா ? இல்லை. அது எட்டுச்சுரைக்காயன்று. 1945 துவக்கம் 1948 வரை உள்ளூர்த் தேவை அதிகரித்தது. ஆனால் ஐரோப்பா தனது பழைய நிலையை அடைவதற்கு, எமது தேவை அவசியமாயிற்று. எனவே ஐரோப்பாவுக்கு உதவினோம் ;

www.padippakam.com



கொடைகளைக் கொடுத்தோம் ; கடன் கொடுத்தோம். தங்கத்துக்குப் பதிலாகப் பண்டங்களை விற்றோம். விளைவு ; நமது பணவீக்கம் அதிகரித்தது ; நமது விலைகள் உயர்ந்தன. 1915–1917 இலும் இவ்வாறே நடந்தது. 1914 இலே ஐரோப்பிய தேவைகள் நன்றாயிருந்தன. ஏனெனில் அவை எமது பின்னிறக்கத்திலிருந்து எம்மை வெளியேற்றின. ஆனால் 1916 இல் நல்ல காரியத்தில் அதிகம் கிடைத்தது. நமது வெளிநாட்டு முதலீடு, கடதாசி விலை அதிகரிப்பாகவேயிருந்ததொழிய உண்மையான உற்பத்தி அதிகரிப்பாயிருக்கவில்லை. எனவே யுத்தத்தில் நாம் இறங்குவதற்கு முன்னரே பணவீக்கம் நம்மிடையே உண்டாகிவிட்டது.

1958–1960 இல் வேறு கதையாயிற்று. நமது தொழிலாளரில் 5 சதவீதத்துக்கு அதிகமானோர் வேலையற்றிருந்தனர். நம்மிடம் அதிக பண்டங்களிலிருந்தன. ஏற்றுமதிக் கட்டளைகளைக் கம்பெனிகள் மகிழ்வுடன் எதிர்பார்த்திருக்கும். உருக்கு, கார், தளவாடங்கள் என்பவற்றின் இறக்குமதியில் போட்டியேற்பட்டுவிட்டதாக அவை முறையிட்டன. நமது நடப்பு வியாபாரப் பாக்கி திருப்தியற்றதாயிருந்தது. வெளிநாட்டு வியாபாரப் பெருக்கி கீழ்நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

**இரண்டு அப்பத்துண்டுகளைப் பெற நீரிலே ஒன்றை எறிவதா ?**

பெரிய வியாபார மந்த நிலைக்கு மறுபடியும் இந்த உலகம் திரும்பிவிடக் கூடுமென்பதற்கு அறிகுறிகள் குறைவு. ஆனால் நாம் சாவதானமாயிருக்கவேண்டியது அவசியம். 1930 இல் நடந்த பெரிய மந்தத்தின்பயனாக உண்டானபடிப்பினைகளை ஞாபகத்திலே வைத்துக்கொண்டால் எதிர்காலத்திலே பல தவறுகளைத் தவிர்க்கலாம்.

வேலை வாய்ப்புக் குறைவாயிருப்பதால் ஒவ்வொரு நாடும் வேலையின்மையை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பார்க்கிறது. வேலையற்றோரை வெளிநாடுகட்கு அனுப்பப் புகையிரதச் சீட்டோ கப்பற் சீட்டோ வாங்கி உதவுகிறதா ? இல்லை. வெளிநாட்டிலிருந்து வரும் வேலையாட்களை அதாவது தற்காலிக வாச அனுமதி கொடுத்த சில நாடுகளே அவர்களை வெளியேற்றலாம். (தனது நாட்டிலே வேலைக்கு வந்த இத்தாலியரைச் சுவிட்சர்லாந்து அங்கே வேலையில்லாவிட்டால் திருப்பியனுப்பிவிடும். ஆனால் இது விதிவிலக்கு) எனது அயலவனை ஒட்டாண்டியாக்கும் என்ற கொள்கைகளை மேற்கொண்டு இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலமே நாடுகள் தம் நாட்டிலுள்ள வேலையின்மையை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்கின்றன.

ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்ற நாட்டின் இறக்குமதியாயிருப்பதால் எல்லா நாடுகளும் வியாபார மேல் மிச்சத்தைக் காட்ட முடியாது. ஆனால் ஒவ்வொரு நாடும் முயற்சி செய்யலாம். அந்த முயற்சி சில சமயம், எல்லாருக்கும் கேட்டை உண்டாக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



என் அயலவனை ஒட்டாண்டியாக்கும் என்ற கொள்கைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை இனி ஆராய்வோம். ஆனால் நியாய ரீதியாகக் கருமங்களைச் செய்யும் ஒரு நாடு பொருள்களை ஏன் ஏற்றுமதி செய்ய வேண்டும் ; இறக்குமதி செய்தாலென்ன ? என்று ஒரு கேள்வியைக் கேட்கலாம். பண்டங்களை ஏன் கொடுக்கவேண்டும் ? வாங்கவல்லவா வேண்டும் ? அதுதானே புத்திசாலித்தனம் என்று கேட்கத் தோன்றும். ஒருவன் உங்களுக்குப் பண்டங்களைத் தர விரும்பினால் அதை நீங்கள் ஏன் மனமுவந்து வாங்கக் கூடாது ?

இதற்கு விடைகூறுவதானால், புதிய பழம் பொருளியல் முறை தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்ளவேண்டிவரும். இறக்குமதியையே விருத்தி செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். 13 ஆம் அத்தியாயத்திலே நாம் சிக்கனத்தின் முரண்பாடு பற்றி ஆராய்ந்ததை நினைவு கூரவும். வேலைவாய்ப்புக்களற்ற உலகிலே அனுசரித்த சிக்கன முறை, சிக்கனத்தையோ முதலீட்டையோ விருத்தி செய்யமாட்டாதெனக் கண்டோம். ஏனெனில் அது வருமானத்திலும், வேலை வாய்ப்பிலும் ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும்.

இதுவே "சர்வ தேசப் பரோபகாரத்தின் புதிர்" என்று சொல்லக் கூடியது. மந்தத்தினால் உண்டாகும் வேலையில்லாத் திண்டாட்டத்தை மாற்ற ஒன்றும் செய்யாமலிருப்பதிலும் பார்க்க ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்து இறக்குமதிகளைத் தவிர்ப்பதால் நாட்டுக்கு நன்மை ஏற்படலாம். இதனால் புதிய வேலை வாய்ப்புக்கள் உண்டாகலாம். இது சாத்தியக் கூறுடைய காரியமே. ஏற்றுமதி செய்யும்திட்டம் உள்ளூர் நுகர்வையும் அதிகரிக்கும். எப்படி ? பெருக்கிமூலம் ; முதல் பில்லியன் டொலர் பண்டங்களை நீங்கள் வெளியே அனுப்பலாம் ; எஞ்சிய $(2/3 \quad (2/3)^2 . . . .)$ 2 பில்லியன் டொலர் புதிய பண்டம் முற்றாய் உள்ளூர் நுகர்வுக் குரியதே. இந்தப் புதிர், கொள்கையளவிலே இரண்டாந்தரமானாலும் சாத்தியக்கூறுடையதாகக் கொள்ளவேண்டும்.

**என் அயலவனை ஒட்டாண்டியாக்கும் கொள்கை.**

அற்ப அறிவு ஆபத்தைக்கொண்டுவரலாம். புதிய வேலைவாய்ப்புக்களை உண்டாக்கும் சாத்தியத்தையும், ஏற்றுமதியை ஊக்கி இறக்குமதியைக் குறைப்பதால் உள்ளூர் நுகர்வை அதிகரிக்கும் தன்மையையும் அறிந்த காங்கிரஸ்வாதி நீர் எனவைத்துக்கொள்வோம். உடனே ஐக்கிய அமெரிக்காவுக்கு வாய்ப்பானதொரு வியாபாரப் பாக்கியை உண்டாக்க விரும்புவீர். உடனே பின்வரும் கொள்கைகளில் ஒன்றைப் பின்பற்றிப் பார்ப்பீர்.

1. இறக்குமதிகளில் பாதுகாப்பு வரிகளை உயர்த்துவீர் ; "அமெரிக்கப் பண்டங்களை வாங்கவேண்டுமென்ற கிளர்ச்சியை உண்டாக்குவீர்.

2. இதனிலும் சிறந்த முறை இவ்வளவு தான் இறக்குமதி செய்யலாமென்ற ஓர் அனுமதிப் பங்கை உண்டாக்கச் சட்டம் செய்வீர்.

படிப்பகம்

www.padippakam.com



3. அல்லது ஹிட்லர் செய்ததுபோல, அங்கு பூரணமானதொரு செலாவணிக் கட்டுப்பாட்டை உண்டாக்கலாம். அதாவது இறக்குமதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விசேட அனுமதிப்பத்திரம் வேண்டும். ஏற்றுமதிகளுக்குச் சகாய நிதி உதவ வேண்டும். ஒவ்வொரு நாட்டுடனும், இருபக்கப் போக்கான வியாபார ஒப்பந்தஞ் செய்து வியாபாரப் போக்கையும் அளவையும் கட்டுப்படுத்தலாம். இது அரசியல் ஆயுதமாகப் பயமுறுத்தலாயும் இலஞ்சமாயும் அமையும். விஸ்தாரமானதொரு ஒழுங்குமுறை அமைக்கப்படும். இதனால் ஒவ்வொரு பொருளுக்கும் வித்தியாசமான டொலர் விலையை வெளிநாட்டார் கொடுக்குமாறு செய்யப்படும்.

4. டொலரின் விலை மதிப்பைத் தேய்க்கலாம். அதனால் வெளிநாட்டார் நமது பண்டங்களை மலிவாய் வாங்குவர். பவுணும், பிராங்கும் மதிப்பேறும். எங்கள் இறக்குமதிகள் இதனாற் குறையும். வெளிநாட்டு நடப்பு நாணயத்திலும் டொலர் மதிப்பு எவ்வளவு குறைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு நமது ஏற்றுமதிகள் பெருகும்; இறக்குமதிகள் குறையும். மற்ற நாடுகள் இந்த நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை எடுக்காவிட்டால், டொலர் விலை இறக்கம், டொலரை மலிவாக்கும். அதனால் நமது ஏற்றுமதிகளைக் கொடுத்து இறக்குமதிகளைப் பெறக்கூடியதாயிருக்கும்.

ஏற்றுமதியைக் கூட்டி இறக்குமதியைக் குறைப்பதற்கு ஐந்தாம் வழி, குறைந்த வட்டியில் வெளிநாடுகட்குக் கடன் வழங்கல் ஆகும்; இக்கடன் நல்ல கடனாகவோ, கெட்ட கடனாகவோ இருக்கலாம். அல்லது வெளிநாடுகளுக்கு நன்கொடை பெரிய அளவிற் கொடுக்கலாம். இதற்குத் திறைசேரி உதவி செய்யலாம். அல்லது தனிப்பட்ட முதலீடு செய்வோர் உதவலாம். இதனால் வெளிநாடு ஓட்டாண்டியாகப் போய்விடமாட்டாது.

சந்தர்ப்பவாதியாயுள்ள காங்கிரஸ்காரர் வேறு சில உபாயங்களை அனுசரிக்கலாம். ஆனால் அயல் நாடுகளின் செலவிலே தனது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நாடு அனுசரிக்கக்கூடிய முக்கியமான கொள்கைகளை மேலே கூறினும்.

ஐக்கிய அமெரிக்கா சர்வதேச விடயங்களிலே முக்கிய பங்கெடுக்க வேண்டுமென விரும்பும் எவரும் எல்லா நாடுகளும் பின்னடைந்தபோது இந்தக் கொள்கைகளை ஆதரிக்க மாட்டார். ஏனெனில் இந்தக் கொள்கைகள் மற்றவர்களுடைய செல்வங்களைத் தாங்கள் பறிப்பதற்காக ஏற்பட்ட உபாயங்களே.

ஆனால் நாமெல்லாம் சுயநலவாதிகளாயிருக்கிறோமென வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் அயலவனை ஓட்டாண்டியாக்கும் கொள்கைகள் மடைத்தனமானவை. ஏன்?

மற்ற நாடுகள் நமது சுயநலத் தன்மையைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். அவர்களிடமும் பொருளாதார அறிவும் சட்டம் இயற்றும் அதிகாரமுமுண்டு. அவர்களும் மந்தமேற்படுங்காலங்களிலெல்லாம் மற்றவர்களை ஓட்டாண்டியாக்கும் உபாயங்களை மேற்கொள்வர்.

www.padippakam.com



அவர்களும் பாதுகாப்புவரிகளைப்போட்டு இறக்குமதிப் பங்குகளை நிச்சயித்து நாணயப் பரிவர்த்தனையைக் கட்டுப்படுத்துவர். பவுணை விலையிழக்கச் செய்வர். அதனால் டொலரின் மதிப்பு அதிகரிக்கும். சுருக்கமாகக் கூறுவதானால், ஏற்றுமதிகளை உயர்த்தி இறக்குமதிகளைக் குறைக்கப் பார்ப்பார்.

எல்லா நாடுகளும் இவ்வாறு அயலவரை ஓட்டாண்டியாக்கும் முயற்சியில் ஈடுபட்டால் என்ன விளைவையுண்டாக்கும் ? ஒவ்வொருவரும் மற்றவன் தோளிலே ஏறப் பார்ப்பதால் என்ன விளையும் ? இங்கிலாந்து எங்களுக்கு அனுப்பும் பண்டங்களிலும் பார்க்க அதிக பண்டங்களை நாம் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யமுடியாது. அத்துடன் இங்கிலாந்து தான் இறக்குமதி செய்யும் பொருளிலும் பார்க்க அதிகமான பண்டங்களை எங்களுக்கு ஏற்றுமதி செய்யப் பார்க்கிறது. இவ்வாறு இரு நாடுகளும் தத்தமக்கு வாய்ப்பான வியாபார மேல்மிச்சத்தை உண்டாக்க நினைப்பதால் இரு நாடுகளுக்கும் ஊறு உண்டாகிறது. இதனால் சர்வதேச வர்த்தகம் ஏற்றுமதி இறக்குமதிகளில் மிகக் கீழான மட்டத்தை அடையும்.

பவுண் – டொலர் வெளிநாட்டு நாணயச் செலாவணி விகிதத்தைப் பவுணுக்கு நாலு டொலராக எவ்வாறு மாற்றலாம். (இது டொலர் மதிப்பின் தேய்வாகும்) அதே சமயம் இங்கிலாந்து தனது பவுணை 2.80 டொலருக்குக் குறைவாக விலையிறங்கச் செய்யப்பார்க்கிறது. இரண்டு நாடும் இம்முயற்சியில் வெற்றி காணமாட்டா. அடுத்த மந்தத்தில் நாம் பிரிட்டனுக்கு எவ்வாறு கடன் கொடுப்பது ; பிரிட்டன் நமக்கு எவ்வாறு கடன் தருவது என்று இரு நாட்டுச் சட்ட சபையினரும் ஐயுறவாக இருக்கையில் ஒருவர்க்கொருவர் பண்டம் வழங்குவதே முடியாத காரியமாகும். வெளிநாடுகளிலிருந்து கட்டுப்பாடில்லாமற் பொருள் வருமானால், அமெரிக்கத் தொழிலாளர் பலருக்கு வேலையில்லாது போய்விடும். இதை எந்த அமெரிக்கனும் விரும்பமாட்டான். இதன்படிப்பினை என்ன ?

சர்வதேச வர்த்தகத்தின் மூலம் எதிர்காலத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கமுடியாது. அதுவும் வல்லரசான அமெரிக்கா அவ்வாறு நினைக்கமுடியாது.

இத்தகைய உபாயங்கள் செயற்படமாட்டா. நாம் மற்ற நாட்டை ஓட்டாண்டியாக்க நினைக்கும்போது மற்ற நாடுகள் எதிர் நடவடிக்கை எடுக்கலாம். இதனால் எல்லாருக்கும் தீமையுண்டாகும்.[1] 1960–1975 இக்கிடையில் நாம் (1) நமது வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி ஒன்றுஞ் செய்யாமலிருக்கவும் கூடாது. (2) வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளால், வாய்ப்புள்ள இரண்டாந்தரப் பெருக்கி விளைவுகளைப் பெறலாமென்ற நோக்கத்தோடு நமது வேலையின்மையை ஏற்றுமதி செய்ய எண்ணவுங் கூடாது.

[1] நம் அயல் நாட்டவரிடம் பணவீக்கத்துக்கும் பூரணவேலைவாய்ப்புக்கும் மிஞ்சிய ஒரு நிலையிருந்து, நம்மிடம் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்குமானால், அயலவனை ஓட்டாண்டியாக்கும் கொள்கை இருவர்க்கும் மகிழ்ச்சிதரக் கூடியதாயிருக்கும். இத்தகைய நிலை இருந்ததுண்டு. மேலும் உண்டாகலாம்.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றுவது ஒரு வழியைப் பார்க்கவேண்டும். (3) உள்ளூர்க் கொள்கைகளை அனுசரித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவேண்டும். சர்வதேசவியாபாரத்தை நமது தற்கால நுகர்ச்சியையும் வருங்கால நுகர்ச்சியையும் அதிகரிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். அல்லது நமது அரசியல் அபிலாஷைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற சர்வதேச வியாபாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

**அமெரிக்காவின் குறிக்கோளும், சர்வதேச ஒத்துழைப்பும்.**

பொருளாதாரத்திலே தனிப்பட ஒதுங்கி நிற்கக்கூடாது. இவ்விடயத்தைப் பொருளியலாளரில் 99.44 சத வீதத்தினர் ஒத்துக்கொள்ளுகின்றனர். தனித்து நிற்றல் மறுபடியும் தலையைத் தூக்கலாம். சரித்திரப் படிப்பிணையைக் கவனியாதவர்கள் மறுபடியும் இந்த நிலையிலே இருக்கவிரும்பலாம்.

வருங்காலத்திலே ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்க்கும் பிரச்சினைகளை ஆராய்வோம். நமது இலட்சியங்கள் இரண்டு. உள்நாட்டிலே பூரண வேலை வாய்ப்பும் திறமையான வேலைகளும் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாயும் உற்பத்தி பெருக்கமுள்ளதாயுமிருக்கவேண்டும். வியாபாரத் துறையிலே நம் அயலாரோடு இலாபகரமானதும், நிலைத்திருக்கக்கூடியதுமான வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டும். இவற்றை அடைவதற்கு பின்வரும் பிரதானமான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியது அவசியம்.

**வெளி நாட்டுக் கடனும், சர்வதேச வங்கியும்.**

கைத்தொழில் முறையிலே மற்றெல்லா நாடுகளையும்விட அமெரிக்கா முன்னேறியுள்ளது. தென்னமெரிக்காவும் கீழைத் தேசங்களும், உலகின் ஏனைய பாகங்களும் நமது மூலதனத்தைத் தமது கைத்தொழில் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தலாம். இந்த மூலதனம் அவர்களுடைய உற்பத்தியைப் பெருக்கும். நல்ல வட்டியும் முதலுமாய்த் திருப்பிக் கொடுக் கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகும்.

ஆனல் தனிப்பட்ட அமெரிக்கக் குடிமக்கள் கடன் கொடுக்கப்பல காலமாக விரும்பாதிருந்தார்கள். வெளிநாடுகளிலே அமெரிக்க கூட்டுத்தாபனங்கள் எண்ணெய்ச் சுரங்கங்களிலே முதலீடு செய்தபோதிலும், வெளிநாட்டுக்கடன் பத்திரங்களிலும் பங்குகளிலும் முதலீடு செய்யும் முறை 1929 உடனே நீங்கிவிட்டது. ஆனல் அமெரிக்கக் குடிமக்களிடம் சேமிப்பு இருந்தது. முதல் விவகாரங்கள் பாதுகாப்புள்ளனவாயிருந்தால் முதலைக் கடன் கொடுக்க அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். இத்தகைய கடன்களால், எதிர்காலத்திலே அமெரிக்க வாழ்க்கைத் தரம் உயரக்கூடியதாயிருந்தது.

எனவே ருஷியாவைத் தவிர ஏனைய வல்லரசுகள் 1944 இல் ஒன்று சேர்ந்து புனருத்தாரணம் அபிவிருத்தி என்பவற்றுக்கெனச் சர்வதேச வங்கியொன்றை ஏற்படுத்தின. அத்துடன் சர்வதேசப் பணநிதியெனவும்

படிப்பகம்

www.padippakam.com



ஒரு தாபனத்தை அமைத்தன. நெடுந்தவணைப் புனருத்தாரணம் அபி விருத்தி என்பவற்றுக்காகவே சர்வதேச வங்கி ஏற்படுத்தப்பட்டது. (சர்வ தேசப் பணநிதித் தாபனம் குறுந்தவணைக் கடன் கொடுக்கவும், வெளி நாட்டுச் செலாவணி விகிதத்தை கூட்டு முயற்சியால் நிலை நாட்டவுமே ஏற்பட்டது. சர்வதேச வங்கியைப் பற்றி அறிந்துகொள்வது சுலபம். அத னுடைய மூலதனம் 21 பிலியன் டொலர். பல நாடுகளுந் தத்தம் பொ ருளாதார முக்கியத்துவத்துக்கேற்ப அதற்குக் கட்டணம் செலுத்தும். ஐக் கிய அமெரிக்கா 61-3 பில்லியன் டொலர் கட்டுகிறது. வங்கி சர்வதேசக் கடன்கள் கொடுப்பதற்குத் தனது முதலைப் பயன்படுத்தும். பொருளாதார ரீதியில் நல்லதாயுள்ள திட்டங்களுக்காக மக்களுக்கும் நாடுகளுக்கும் அது கடன் உதவும்; குறைந்த வட்டியில் கடன் வாங்க முடியாத தேசங்கள் இதனிடம் கடன் பெறும்.

இதுவரை ஒவ்வொரு நாடும் தனது முழுப் பங்கில் 10 சத வீதத்தைக் கொடுக்குமாறு அழைக்கப்பட்டது. ஏனைய சத வீதத்தைக் கொடுத்துவிடவேண் டுமெனத் திட்டம் போடப் படவில்லை. சர்வதேசத் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இது ஒரு பெரிய பணமன்று அது தன் சொந்த முதலிலி ருந்து கடன் கொடுப்பதனால் மாத்திரம் சர்வதேச வங்கி முக்கியத்துவம் பெறவில்லை. அது கடன் பத்திரங்களைப் பிறப்பித்து அதன் மூலம் வரும் நிதியிலிருந்து கடன் கொடுக்கலாம். (ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலே அது இவ்வாறு கடன் பத்திரங்களைப் பிறப்பித்திருத் திறது). இப் பத்திரங்கள் மிக்க பாதுகாப்புடையன. ஏனெனில் இவை சர்வதேச ஆதரவை உடையன. கடன்களை அது மறுபடி ½ அல்லது 1 வட்டியில் முதலீடு செய்யும். தனிப்பட்டவர்கள் அப்போது கடனை அச்சமின்றி வங்கிக்குக் கொடுப்பார்கள்.

இவ்வாறு மூன்று வழிகளிலே நெடுந்தவணைக் கடன்கொடுப்பதால், வருங்காலத்திலே பண்டங்களும் பணிகளும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வெளியே சென்று சர்வதேச அபிவிருத்திக்குத் துணைபுரிகின்றன. இந்தக் கடன்கள் நல்ல கடன்களாயிருந்தால் முற்றாகத் திருப்பிக் கொடுக்க பட்டுவிடும். கடன் மீளாக் கடன் ஆனால் வங்கியின் வட்டியிலிருந்து, வரும் நட்டத்தை ஈடு செய்யலாம். இது எல்லா நாடுகளுக்கும் செறியு மேயன்றி அமெரிக்காவை மாத்திரம் பாதிக்கமாட்டாது. கடன் கொடுத் துக்கொண்டிருக்கவே அமெரிக்கா புதிய தொழில் வாய்ப்புக்களைப் பெறும். (செலவு அதிகமானால் பணவீக்கப் பிரச்சினை அதிகரிக்கும்.) கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டால், அமெரிக்காவிற்குப் பயன் உள்ள மேல் மிச்சப் பொருள்கள் மிஞ்சும். கடன் படும் நாடுகளின் உற்பத்தி பெருகும். இதன் பயனாக கடன் மீதுள்ள வட்டிகளை அந்த நாடுகள் கொடுத்துத் தீர்க்கக்கூடியதாயிருக்கும். உள்ளூர்த் தொழிலாளர் சம்பளமும், சாத னங்களால் வரக்கூடிய வருவாயும் அதிகரிக்கும்; குறையமாட்டாது. ஏனெ னில் முதல் அந்நிய நாட்டு முதலாயிருப்பதால் என்க.

படிப்பகம்

www.padippakam.com



வங்கி நிதியைப் பொறுத்த மட்டில் வெற்றியீட்டுமா ? ஆம். வங்கி தாமாக முறிவடையுந் திட்டங்களுக்குக் கடன் கொடுப்பதில் கவனமாயிருக்கும்.

பல தேசங்களும் சேர்ந்த சர்வதேச வங்கி ஒரு புறமிருக்க பெடரல் அரசாங்கம் சொந்தத்திலே ஓர் ஏற்றுமதி இறக்குமதி வங்கியை உண்டாக்கியுள்ளது. இந்த வங்கி வெளிநாடுகட்கும் கடன் கொடுக்கிறது. உதாரணமாக அமெரிக்க ஏற்றுமதியாளர் ஒருவர் பிரேசிலுக்கு இயந்திர சாதனங்களை விற்க விரும்பினால், ஏற்றுமதி இறக்குமதி வங்கி உதவி செய்யும். இந்தக் கடன்களிலே பலவும், வேறு அபிவிருத்திக்காகக் கொடுக்கும் கடன்களும், " கட்டுப்பட்ட கடன் " களாகும். அதாவது இந்தக் கடனால் வரும் பணங்களையெல்லாம் இந்த நாட்டிலேயே நேரடியாகச் செலவுசெய்யவேண்டும். மற்ற நாடுகள் இவ்வகை கட்டுப்பாடான நடவடிக்கைகளை எடுத்தால் அவற்றை நாம் கண்டிக்கிறோம். ஆனால் நாம் அதையே செய்கிறோம். டொலர் அருந்தலாக இருந்தபோதும் இதனைச் செய்தோம்.[1]

ஐசன்ஹோவர் நிர்வாகத்திலே சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் என ஒரு தாபனம் அமைக்கப்பட்டது. இது உலக வங்கிக்கு அனுசரணையானது. பொருளாதார அபிவிருத்திக்கான கடன்கொடுக்கிறது. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்ற தாபனமும் ஆக்கப்பட்டது. அது ஐக்கிய நாட்டுத் தாபனத்தைச் சேர்ந்தது ; எங்கள் அபிவிருத்திக்கடன் நிதி என்ற தாபனமும் உருவாயிற்று. இது 1959 இல் கடன்களைக் கட்டுப்படுத்திற்று ; பின்னர் அட்டவணை 1 இல் யுத்தத்துக்குப் பிந்திய அரசாங்கக் கடன்கள் காட்டப்படும்.

### நிலையான செலாவணி விகிதம், கட்டுப்பாடில்லாத வியாபாரம், பண நிதித்தாபனம்.

தினமும் செலாவணி விகிதம் மாறுவதால் சர்வதேச வியாபாரத்தில் ஆபத்து அதிகரிக்கும். அதனால் அவ்வியாபாரத்தின் தொகை குறையும். விசேட உற்பத்திகளும் சாதாரண உற்பத்திகளும் குறையும் ; ஒவ்வொரு நாடும் போட்டிச் செலாவணி மதிப்புத் தேய்வில் ஈடுபட்டால், உலக வியாபாரம் மந்தமடையும்.

தங்க நாணயத்திட்டம், அது நிகழும்போது செலாவணி விகிதத்தை நிலைபேறுடையதாகச் செய்தது. ஆனால் அது சொந்த நாட்டின் பொருளாதாரத் தலைவிதிக்கு அந்நாட்டை அடிமையாக்கிற்றேயன்றி எசமானுக்கவில்லை. இது விடயம் 31 ஆம் அத்தியாயத்தின் அனுபந்தத்தில்

[1] கட்டுப்பட்ட கடன் சர்வதேச வியாபார போக்கை சிர்குலைத்துவிடும். அத்துடன் அது பலசந்தர்ப்பங்களிலே அவசியமில்லாதும் போகும். நமது கடனில் ஒரு பகுதி இங்கிலாந்திலே செலவு செய்யப்பட்டால், பிரிட்டிஷ் மக்கள் கையிலே கிடைத்த மேலதிக டொலரை நமது பொருள்களை இறக்குமதி செய்வதிற் பயன்படுத்துவர். சர்வதேச வியாபாரம் பலமுகப்பட்டதன்றி, இருமுகப்பட்டதன்று.

www.padippakam.com



காட்டப்பட்டது. அதன் விதிகளின்படி பணவீக்கஞ் செய்யுமாறு கூறிய வுடன் நாம் வீக்கஞ் செய்தோம்; உலகத்திலே செலவிலும், தேவை யிலும் மாற்றமிருந்தால், நாமும் பணவாட்டத்தை உண்டாக்க வேண்டியதா யிற்று. இதனால் சில நன்மைகளுண்டானமை உண்மையே. ஆனால் முதலாம் உலக மகாயுத்தத்திலே தங்க நாணயத்திட்டம் தலைமுழுகிப்போய்விட்டது. அதன் பின்னர் அதை எல்லா நாடுகளின் நிதியமைச்சர்களும் ஒன்று சேர்ந்தும் புனருத்தாரணஞ் செய்ய முடியவில்லை.

நியூ ஹாம்ஷயரிலுள்ள பிரெட்டன்வூட்சிலே 1944 இல் நடைபெற்ற சர்வதேச மகா நாடுகளிலிருந்தே சர்வதேசப் பணநிதியும், சர்வதேச வங்கியும் உறவு பூண்டன. தங்க நாணயத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய பிரதி கூலங்களை நீக்கி அனுகூலங்களைப் பயன்படுத்துவதே சர்வதேசப் பண நிதியின் அபிலாஷையாகும். அதாவது செலாவணி விகிதத்தை நிலை பேறுடையதாகச் செய்தல்; முன்னிருந்த எதேச்சையான செயல்முறை அமைப்புக்குப் பதிலாகச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறும் வழி செய்யப் பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் தீவிரமாக உண்டாகாமல் ஒழுங் குகளைச் செய்யும் கடப்பாடு நாடுகளுக்கு இல்லையாகும்படி செய்யப்பட்டது. நேரடியான இறக்குமதிக் கட்டுப்பாட்டைக் குறைக்கவும் வழி கோலப் பட்டது.

இந்த நிதி 1947 இல் யுத்தத்துக்குப் பிந்திய செலாவணி விகிதங் களை அதன் அங்கத்துவ நாடுகளுக்கு விதித்தது. தங்கம் சட்டத்துக்கமைந்த ஓர் அரசனுகவே மதிக்கப்பட்டதன்றி, சர்வாதிகாரமுள்ள அரசனுக மதிக் கப்படவில்லை. 1949 இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நாடுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும், தமது நாணயங்களின் விலையை 30 சதவீதம் குறைத்தன. அதனால் பவுணனது 4.03 டொலருக்குப் பதிலாய் 2.80 டொலருக்குக் குறைக்கப்பட்டது.

சங்கடம் நிறைந்த இந்த நாட்களிலே சர்வதேச விவகாரங்களில் பூரண மான சமநிலை இருக்குமென்று எதிர்பார்க்கமுடியாது. சில நாடுகள் இறக்குமதியிலும் பார்க்க அதிகமான பண்டங்களை ஏற்றுமதி செய்யும். இது சில சமயம் நெடுந்தவணை வெளிநாட்டுக்கடன்களையும் உதவிகளையும் கணக்கிலெடுத்த பின்னரும் நடைபெறும். சில நாடுகள் பிரதிகூலமான வியாபாரப் பாக்கியுடையனவாயும் கடன் உடையனவாயும் இருக்கும். அப் போது நிலையான செலாவணி விகிதத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

இங்கேதான் சர்வதேசப் பண நிதி தலையிடும். கடனாளியான நாடு களுக்குக் குறுந்தவணைக் கடன் வழங்கும். ஒருநாடு மேலும் மேலும் கடனிலே அமிழ்ந்தாமலிருக்கச் சில விதிகளையும் நடைமுறைகளையும் ஏற்படுத்தும். ஒரு நாடு பலகாலமாகக் கடனைக் குவித்துக்கொண்டு வந்த பின் சில பணமயமான தண்டனைகள் அந்நாட்டுக்கு விதிக்கப்படும். நிதி யின் ஆணையாளர் அந்த நாட்டுடன் ஆலோசனை செய்தபின்னர், அந் நாட்டின் அசமநிலையைச் சீர்ப்படுத்தச் சிலவிதிகளை ஏற்படுத்துவர். அதனு

www.padippakam.com



டைய இறக்குமதி அதன் சக்திக்கு ஏற்ற அளவுக்கு விழக்கூடிய அளவு அந்நாடு தனது தேசிய வருமானத்தைக் குறைக்க அது வியாபார மந்தத்தைத் தானே உண்டாக்கிக் கொள்ளவேண்டுமென அவர்கள் அந் நாட்டுக்குக்கூறமாட்டார். எனவே முதலில் அந்நாடு தனது நாணயத்தை 10 சத வீதம் தேய்மானமடைய அனுமதிப்பர். இதனால், ஏற்றுமதி அதிகரிக்க இறக்குமதி குறையும். இதன் பயனாகச் சமநிலை மறுபடியும் உண்டாகும்.

கடனாளியான நாட்டின் நாணயப் பெறுமதி இதனாலும் இறங்கா விட்டால் தகுந்த ஆலோசனையின் பின்னர் மறுபடியும் அந்நாட்டின் செலாவணி விகிதத்தைத் தேய்மானமடைய அனுமதியளிப்பர். ஆனால் விகிதத்திலே உண்டாகும் இந்த மாற்றமெல்லாம் ஒழுங்கு முறைப்படி நடக்கும். பெரும்பாலும் சர்வதேசச் செலாவணி நிலைபேறாயிருக்கும். தேவையானால் நெகிழ்ச்சிக்கு இடமளிக்கப்படும். சர்வதேச நெருக்கடி உண்டாவதிலும் இது மேலானது.[1]

சர்வதேசப் பணநிதி குறுந்தவணைக்கடன்களை எவ்வாறு கொடுக்கிற தென்பதை இங்கே சுருக்கமாக விளக்குவாம். இதிற் சேர்ந்த அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் தேசிய வருமானத்துக்கு ஏற்றவாறு சில பங்கு உண்டு. ஐக்கிய அமெரிக்காவின் பங்கு 4 பில்லியன் டொலர். இது மொத் தத்திலே மூன்றிலொரு பங்காகும். ஒவ்வொரு நாடும் தனது பங்கைத் தன்னாட்டுச் செலாவணியிலேயே கொடுக்கும். எஞ்சியதைத் தங்கமாகக் கொடுக்கும். ஆனால் நாட்டின் மொத்தத் தங்கத்தின் 10 சத வீதத்துக்கு மேலே கொடுக்கக்கூடாது.

சாதாரணமாக ஒரு நாடு தனது இறக்குமதிகளை ஏற்றுமதிகளுக்குப் பண்டமாற்றுச் செய்யும் அல்லது நீண்ட தவணைக் கடன்பட்டுக் கொடுக்கும். இவை அத்துணை அதிகமாயிராவிட்டால், உதாரணமாக இங்கிலாந்துக்கு இந்த நிதியிலிருந்து குறுந்தவணைக் கடன் தேவைப்பட்டால், அந்த நாடு டொலரைப் பெற நிதி என்ன செய்யும்? நிதிக்குச் சொந்தமான டொலரின் கொஞ்சத்தை பிரிட்டிஷ் நாணயத்தைக் கொண்டு வாங்க அனுமதி யளிக்கும். பவுண் அதிகரித்து டொலர் குறைந்து போகாதிருப்பதற்காக 12 மாதத்தில் பிரிட்டன் தன்னுடைய அனுமதிப் பங்கில் கால்வாசிக்கு மேலாக வாங்காது நிதி தடுக்கும். நிதியிலே பிரிட்டிஷ் பவுணின் ஆதிப் பங்கில் இருமடங்குக்கு அதிகமாக அது வைத்திருக்க மாட்டாது.

பிரிட்டிஷ் வியாபார நிலைக்குறிப்பு அபிவிருத்தியடைந்ததும், பிரிட்டன் தனது பொன்னைக் கொண்டோ டொலரைக் கொண்டோ, நிதிக்கு விற்ற

[1] நிலையான செலாவணி விகிதமிருப்பதிலும் சுதந்திரமாக ஊசலாடும் செலாவணி நிலையிருப்பது நல்லதெனவும், அது ஈற்றில் சரியாகிவிடுமென்றும் பலபொருளியலறிஞர் கூறுவர். பின்போடாமல் தினமும் செலாவணி விகிதத்தை ஒழுங்கு செய்வது நல்லது. விலைமதிப்பு இறங்குவதைத் தீர்க்கதரிசனமாயறியலாம். அது ஒழுங்காயிருக்குமென்று கூற முடியாது என அவர்கள் வாதிப்பர். 1960ஐ அடுத்தத சாப்தத்திலே டொலரை விலைகுறைத்தால் இம்மாற்றம் 1961 இல் கட்டுப்பாடற்ற ஒழுங்குடன் நடைபெறுவதிலும் பார்க்க ஒழுங்காய் நடைபெறும்.

படிப்பகம்

www.padippakam.com



பவுணை வாங்கிவிடவேண்டும். இதனால் நிதியில் டொலர் இல்லாமலோ, வேறு நாட்டு நாணயமில்லாமலோ இருக்கமாட்டாது. சம நிலையில் இருப்பதற்காகச் செய்வதானால் இது நடைபெறவேண்டும்.

ஆரம்பத்திலே இந்த நிதி அதிகபயன் தரவில்லை. 1944 இல் மக்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாக யுத்தப் பின்நிலை மோசமாயிற்று. இந்த அசம நிலையைச் சமாளிக்க நிதியின் வளங்கள் போதாதிருந்தன. அதிட்ட வசமாக இதன் கடமைகளிற் சிலவற்றை ஐரோப்பியக் கொடுப்பனவுச் சங்கம் நிறைவேற்றியது. இந்தத் தாபனம் மாஷலினால், ஐரோப்பிய நாடுகளுக்குக் குறுந்தவணைக் கடன் கொடுக்கவும் தீர்க்கவும் ஏற்படுத்தப் பட்டது. ஆலோசனை கூற ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுத் தாபனம் உதவிற்று. பிரிட்டிஷ் பொதுநல நாட்டினுள் ஸ்டேர்லிங் பிரதேசம் இந்த கேந்திர நாணயப் பிரதேசத்தின் வியாபாரத் தொடர்புகளை ஒன்றுபடுத்திற்று. பின்னர் யுத்தம் முடிந்த காலத்தில் இந்நிதியை மக்கள் பெரிதும் சிலாகித்தனர். இதுமேலும் விருத்தியாகுமென நிபுணர்கள் நினைக்கிறார்கள்.

**மாஷல்திட்டம், இராணுவ உதவி, வேறு திட்டங்கள்.**

அமெரிக்க உதவித்திட்டம் எத்துணைப் பெரிதென்பதை அட்டவணை 1 காட்டுகிறது. ஐக்கிய நாட்டு உதவிப்புனருத்தாரண நிர்வாகம் யுத்தத்துக் குப்பின்னுள்ள அவசரகால உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவியபின், ஐரோப்பியப் புனருத்தாரணத்துக்கான மார்ஷல் திட்டத்தை நாம் கொண்டுவந்தோம். பின்னர் நாம் வட அத்லாந்திய உடன்படிக்கைத் தாபனத்துக்கு உதவி செய்தோம். இது நேடோ எனப்படும். முந்தியது யூ. என். ஆர். ஆர். ஏ. எனப்படும். (இதன்பயனாக கிரேக்க நாட்டிலே பொதுவுடைமைவாதம் பரவுமென்ற நிலை உண்டான போது ட்ரூமன் கோட்பாடு அந்நாட்டுக்குப் பண உதவி அளித்தது. பொதுவுடைமை யூகோஸ்லாவியாவும், சீனாவிலுள்ள தேசிய வாதிகளும் தெற்குக் கொரியர்களும், இந்து சீனத்திலுள்ள பிரெஞ்சு நாட்டவரும் உதவி பெற்றனர்.) சரித்திரத்திலே காணுதவகையிலே நாம் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடு களுக்கு உதவி செய்தோம்.

பொதுவுடைமை உலகிலே பரவிவிடும் என்ற பயத்தினாலேயே இந்த உதவித் திட்டங்களை நாம் ஏற்படுத்தினோம். வயிறு நிரம்பினால் மாத்திரம் சனநாயகத்தை காக்கமுடியாது, ஆனால் பட்டினி இப்போர் சனநாயகத்தை அழித்துவிடலாம். நமது நண்பர் கையிலே புதிய துப்பாக்கிகளைக் கொடுத் தால் அவர்களுடைய பாதுகப்புக்கும் அது நல்லது; அமெரிக்கராணுவ வீரரின் உயிரையும் அது பாதுகாக்கும். வெளிநாட்டு உதவித் திட்டங்கள், மார்ஷல் திட்டம் முதலியன வரை நடந்த நிகழ்ச்சிகளை ஆராய்ந்தால் யுத்தத்திற்கு பிந்திய காலத்திலே அமெரிக்கா நன்மை செய்யவேண்டு

www.padippakam.com



ரோடு வாழ்ந்ததற்குக் காரணம் வெளியூர்களிலிருந்து வந்த மருத்துவ முறை. அவர்களோடு நீரும் உயிர்வாழ்வதற்குப் போட்டியிட்டிருக்கவேண்டும். முன்னேற்றமுள்ள நாடுகளிலுள்ளவர்களிற் பார்க்க நீர் இருபதில், ஒருபங்கு அஸ்வ சக்தியுடனே தான் வேலை செய்கிறீர். ஆசியா, ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள நீரும், உமது சகாக்களும் உலகக் குடிசனத் தொகையில் 70 சத வீதமாயிருக்கிறீர்கள். ஆனால் உலக வருமானத்தில் 20 சத வீதத்தையே நீங்கள் உங்களுக்கும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஐக்கிய அமெரிக்காவிலே உலகக்குடிசனத் தொகையில் 6 சத வீதத்தினர் இருக்கிறார்கள். அவர்கள் உலக வருமானத்திலே 38 சத வீதத்தைத் தம்முட் பகிர்ந்து கொள்ளுகின்றனர். 22 சத வீத மக்கள் குடியிருக்கும் ஐரோப்பாவில் அவர்கள் 36 சத வீத வருமானத்தைத் தம்முட் பகிர்ந்து கொள்ளுகின்றனர்.

**பிரச்சினையின் அவசர நிலை.**

வறியவர் செல்வர் என்பவருக்கிடையில் வித்தியாசம் எப்பொழுதும் இருந்துகொண்டே வருகிறது. அபிவிருத்தியடையாத நாடுகளைப்பற்றி நாம் ஏன் கவலை கொள்ளவேண்டும்? இதற்கு முக்கியமான சில காரணங்களை நாம் குறிப்பிடலாம்.

1. **விரிவடையும் வித்தியாசங்கள் :** முன்னேற்றமான நாடுகளிடையேயுள்ள வருமான வித்தியாசங்கள் குறைந்துகொண்டு வருகிறது. ஆனால் முன்னேற்ற மான நாடுகளுக்கும் அபிவிருத்தியற்ற நாடுகளுக்குமிடையே உள்ள வருமான வித்தியாசம் விரிந்து கொண்டே வருகிறது. கனேடா, ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா என்ற நாடுகள் 1938 ஆம் ஆண்டு துவக்கம் தமது தனிநபர் உற்பத்தியை 70 சத வீதம் பெருக்கியுள்ளன. இந்தியா, இந்தோனேசியா, முதலிய முன்னேற்றம்குறைந்த நாடுகளிலே வாழ்க்கைத் தரம் முன்னையிலும் குறைந்துவருகிறதென்று சில நிபுணர்கள் நினைக்கிறார்கள்.

2. **இலட்சிய வாதங்கள் :**

சுதந்திர நாடுகளுக்கும், பொதுவுடைமை நாடுகளுக்குமிடையிலுள்ள இலட்சியப்போரில், முன்னேற்றமடையாத நாடுகள் சுதந்திரநாடுகளுக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடியனவென்று பொதுவுடைமை வாதிகள் நினைக்கின்றனர். அத்தகைய நாடுகளிலுள்ள வறுமையைச் சுட்டிக்காட்டிக் கிளர்ச்சி செய்கிறார்கள். நமது ஐசுவரியத்தைக் காட்டி அவர்களின் வறுமைக்கும் ஏனைய தீமைகளுக்கும் நாமே காரணமென எடுத்துக்காட்டுகின்றனர், அயல்நாடாகிய கியூபாவை இதற்கு உதாரணமாகச் சுட்டுகின்றனர்.

“ வயிற்றை நிரப்பி விட்டால் மக்கள் பொதுவுடைமையை மேற்கொள்ள மாட்டார்கள் ” என்று கூறப்படுகிறது. இது எப்போதும் உண்மையெனக் கொள்ள முடியாது. மிக வறிய நிலையிலுள்ளவர்கள் புரட்சி செய்யமாட்டார்கள். பிரெஞ்சுப் புரட்சி, ரூஷியப் புரட்சிபோன்றவை, ஓரளவு பொருளாதார அபிவிருத்தியுண்டான பின்னரே நடைபெற்றன.

படிப்பகம்

www.padippakam.com



அபிவிருத்தியைப்பற்றி அக்கறை கொள்ளாதிருந்தால் அது பிற்காலத்திலே ஆபத்தை உண்டாக்கும். உற்ர்வாட்டைச் சேர்ந்த பிரபல பொருளியலறிஞரான அலெக்ஸ்ஸாண்டர் ஜேர்ஷெங்ரன் சரித்திரரீதியான பின்வரும் படிப்பினையைச் சுட்டிக்காட்டுகிறுர் :—

" நாட்டின் பொருளாதாரப் பிற்போக்கின் பயனாகவே சோவியத் அரசாங்க முறை உண்டானது. மகாகதரீன் அடிமை முறையை ஒழித்திருந்தால், 1825 இல் பாட்டாளி மக்கள் அதிருத்திகொண்டு புரட்சி செய்திருக்கமாட்டார்கள். ரூஷியப் புரட்சி உக்கிரங்கொண்டிருக்கமாட்டாது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி படிமுறையாக நடந்திருக்கும். தாமதிக்கப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி காரணமாக அரசியல் புரட்சியுண்டானது. அப்போது அதிகாரம் சர்வாதிகார அரசாங்கத்தின் கையிலே சிக்கியது. காலஞ்செல்ல மக்களிற் பெரும்பாலோர் அதை எதிர்த்தனர். இருபதாம் நூற்றுண்டிலே கிடைத்த படிப்பினை என்ன வென்றால், பின்தங்கிய நாடுகளை முன்னேற்றுவது அந்நாடுகளின் பொறுப்பு மாத்திரமன்று; முன்னேறியநாடுகளின் பிரச்சனைகளுமாகும். ரூஷியப் பாட்டாளி மக்களை விடுதலை செய்யாததற்கு உலகம் முழுவதுமே பிராயச்சித்தஞ் செய்துவருகிறது. பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமான நாடுகள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் அக்கறை கொள்ள வேண்டும்.

அட்டவணை 1 இலுள்ள A பிரிவில் காணப்படும் முன்னேறிய நாடுகளைப் பாருங்கள். இவை எவற்றிலாவது பாட்டாளிகள் வெற்றிகரமான புரட்சி ஏற்பட்டதில்லை.

**3. பெரிய எதிர்பார்த்தல்கள் :** முன்னேருத நாடுகளிடையே மக்கள் தமது வறுமையைப்பற்றி மிகவும் ஆராய்ச்சியுடையவராயிருக்கிறுர்கள். அது அவர்களுக்குச் சஞ்சலத்தைக்கொடுக்கிறது. அவ்வறுமையை நீக்க அவர்கள் முயன்றுவருகின்றனர்.

என்றும் இந்த நிலை இருந்ததில்லை. ஒரு நூற்றுண்டுக்கு முன்னர், சீனச் சக்கரவர்த்தி இங்கிலாந்து அரசர்க்கு ஒரு தூது அனுப்பினுர். தனது நாட்டுக்குப் பொருளாதார அபிவிருத்தி அவசியமில்லையென அவர் அறிவித்தார். இன்று சீனுவில் நடக்கும் அபிவிருத்தி முயற்சிகளைப் பாருங்கள். பழைய வாய்ப்பாட்டின்படி சுகம் $=\left(\frac{\text{பொருள் நுகர்வு}}{\text{விருப்பம்}}\right)$ தேரு விருப்பங்களைக் குறைக்கச் சொன்னுர். இன்று மக்கள் நிசவருமானத்தை உயர்த்தச் சொல்லுகிறுர்கள்.

இன்றைய மேனுட்டு வாழ்க்கை வசதிகளை உலகமெல்லாம் அறிந்துவருகிறது. வறுமையைப் பார்த்து இது கடவுள் செயல் என்று எவரும் பெருமூச்சு விடுவதில்லை. அரசாங்கத்தின் கடமைகள் அதிகரித்துவிட்ட தருணத்திலே இந்த உணர்ச்சி வந்துள்ளது. மக்களுக்கு ஏதாவது தேவை

www.padippakam.com



ஏற்பட்டால் உடனே அரசாங்கத்திடம் கேட்கின்றனர். அதற்குத் திட்டமிட்டு நிறைவேற்றுமாறு அரசை வற்புறுத்துகின்றனர்.

"நூதனமான நாடுகளும் இணக்கமான மக்களும்" என்ற தமது நூலிலே நீதிபதி வில்லியம் ஓ டக்ளஸ், மத்தியதரைக்கடல்தொட்டு பசிபிக் வரையும் தாம் கேட்டறிந்தவற்றைக் குறிப்பிட்டார். நமக்கு நல்ல உடல் நலம் வேண்டும்; நிலச்சீர்திருத்தம் வேண்டும்; ஜமீந்தார் முறை ஒழியவேண்டும்; புதுமுறை விவசாயம் வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தி வேண்டும்; தனிப்பட்டவர் என்ற முறையிலே அரசியல் உரிமைகள் வேண்டும். இயற்கையான தனித்துவக் காரணங்களுக்காக மக்கள் இவற்றை விரும்புகிறார்கள். பொருளாதார நன்மைகளுக்காக மட்டுமே மனிதர் அபிவிருத்தியை விரும்புவதில்லை, தேசிய கோட்பாடும் தற்காலத்தவர்கள் அபிவிருத்தியை விரும்புவதற்குரிய காரணமாகும். தமது நாடு பலம் பொருந்தியதாயிருக்கவேண்டும், மற்றவர்கள் மதிக்கவேண்டும்; அதன்மாட்டு அச்சமுடையவராயிருக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகிறார்கள். ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் தமது குடியேற்ற நாடுகளிலே சுகாதார முறைகளைப் புகுத்தினர். அதனால் மக்களுடைய வாழ்நாட்காலத்தையும் பொருட்சுபீட்சத்தையும் அதிகரிக்கச் செய்தனர். அத்துடன் தமக்கென விசேடமான சங்கங்களை உண்டாக்கி, சுதேசிகளை அவற்றிலே பங்குபற்றுது தடைசெய்தனர். "அவமதிப்பிலிருந்து விடுதலை பெறுதல்" என்பது பாக்கிஸ்தானின் தேசிய இலட்சியங்களில் ஒன்றாகும்.

### 4. விரும்பிய சந்தைகள்

பிறர் நலம் பேணுதலும், அரசியல் நோக்கும் ஒருபுறமிருக்க, முன்னேறிய நாடுகள் சர்வதேச வியாபாரத்துக்குச் சந்தைகளை உண்டாக்கும் சுயநலம் கருதியும் முன்னேறாத நாடுகளிலே அக்கறை காட்டுகிறார்கள். நம்மோடு போட்டியிடுவோருக்கு அபிவிருத்தியடைய ஆதரவளிக்கக்கூடாதென்பவர்கள் பின்வரும் காரணங்களைக் கவனிக்கவேண்டும். பின்தங்கிய நாடுகள் அபிவிருத்தியடைந்திருந்தால் அவற்றின் வருமானம் அதிகரிக்கும். அப்போது அவை நம்மிடமிருந்து அதிக பொருள்களை இறக்குமதி செய்யும். எனவே எமது ஏற்றுமதியை விருத்திசெய்வதற்காக நாம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை கொள்ளவேண்டும்.

மற்ற நாடுகளின் அபிவிருத்தியை எதிர்ப்பவர்களின் நியாயங்களை இந்த உண்மை தோற்கடித்துவிடுகிறது. ஆனால் இந்த விடயம் சிக்கலானது. எமக்கேன் அதிக வியாபாரம் வேண்டும்? நமது டொலர்களை அதிகரிப்பதற்கு மாத்திரமன்று. இறக்குமதி செய்யாமலும், கடன்கொடாமலும் நாம் எப்பொழுதும் ஏற்றுமதிசெய்துகொண்டிருக்க முடியாது. எங்கள் சுயநலத்திற்கான பொருளாதாரக் காரணம் ஒன்றுமுண்டு. அதாவது சர்வதேசப் பண்டமாற்றுப் பலனுடையதாயிருப்பதானல் ஒப்பியலளவில்

www.padippakam.com



உள்ள அனுகூலங்களைக் காட்டக்கூடிய முறையில் அந்நிய நாடுகள் தமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

நாம் எங்கள் நாட்டிலே சிக்கனமாக உற்பத்தி செய்யமுடியாத பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும். நாம் வசதியாக உற்பத்தி செய்யக்கூடியவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்துவிட்டு, வெளிநாடுகள் வசதியாகவும் சிக்கனமாகவும் உற்பத்திசெய்பவற்றை இறக்குமதி செய்யல... அப்பொழுதுதான் சர்வதேச வியாபாரம் உண்மையில் எல்லார்க்கும் அனுகூலமுடையதாயிருக்கும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் (வேறு முன்னேற்றமான நாடுகளுக்கும்) மூலப் பொருள்கள் தேவை. ஒவ்வொரு தசாப்தத்திலும் இந்தத் தேவை வளர்ந்துகொண்டே போகும். இன்று 10 சத வீதம் அந்நியநாட்டு மூலப் பொருள்களிலே தங்கியுள்ளோம். 1975 இல் இது 30 சத வீதமாகும். ... மூலப் பொருள் ஆராய்ச்சித்தாபனம் இதனை எடுத்துக்காட்டியுள்ளது.

வெளிநாடுகளிலே எந்த அளவுக்குப் பொருளாதார அபிவிருத்தி ... வியாபார மாற்றுவிகிதத்தை மேம்பாடடையச் செய்கிறதோ அந்த அளவுக்கே நமது சந்தைகளை விருத்திசெய்ய நாம் அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற கூற்று உண்மையுடையதாயிருக்கும். வியாபார மாற்றுவிகிதம் என்பது இறக்குமதி விலைகளுக்கும் ஏற்றுமதி விலைகளுக்குமுள்ள விகிதம்; அபிவிருத்தியில்லாதடட்சத்தில் அது எப்படியிருக்குமென்பதையும் இந்தக் கணக்கிலே சேர்த்துக்கொள்ளவேண்டும்.

அபிவிருத்தியடையும் நாடுகள் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குத்தேவையான பொருள்களின்மீது அக்கறை காட்டாமலிருக்கலாமென்பதையும், அப்போது நலவுரிமைகளிடையே போட்டியேற்படுமென்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

### 5. பொருளாதார ஏகாதிபத்தியத்தினால் வியாபார மந்தத்தைப் போக்கும் அவசியம்?

முதலாளித்துவ நாடுகளின் சுயநலப் பற்றுக்கள் இறக்குமதிகளிலே தான் தங்கியிருந்தன என்பதை மேலே கூறிய ஆராய்ச்சியின் படியாக அறிந்தோம். இக்கால மாக்சீயப் பொருளாதாரவாதிகளுக்கு இது தலையாயதாகத் தோன்றும். கார்ள்மாக்ஸ் தாமாக ஏகாதிபத்தியக் கோட்பாடொன்றை வகுக்கவில்லை. ஆனால் அவருடைய சீடரான லெனின் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஒரு கோட்பாட்டை வகுத்தார். அவரின் பொருளாதார ஏகாதிபத்தியக் கோட்பாடு சுருக்கமாகப் பின்வருமாறு :—

தனம்படைத்த முதலாளித்துவ நாடுகள் தம் நாட்டிலே நாளுக்கு நாள் மோசமாகிவருகின்ற மிதமிஞ்சிய சேமிப்பு நெருக்கடியை அடையும். இலாபத்தைக் குறையவிடாமற் செய்யவும் வியாபாரமந்த நெருக்கடியைத் தடுக்கவும், தமது பண்டங்களை அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். இதற்காகவே பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில்

www.padippakam.com



அவை அக்கறை கொள்ளுகின்றன. இவ்வாறு குடியேற்றநாடுகளிலுள்ளவர்களை அடிமைகளாக்கித் தம்மிடையே போட்டி காரணமாக யுத்தத்தையும் துவக்கும்.

இக்கருத்து எப்படி? குடியேற்றநாடுகளில் நடந்த ஆட்சி அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் உண்டானதேயன்றி பொருளாதா[illegible] சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதன்று என்பதைச் சரித்[illegible]தியாக ஆராய்ந்தோர் கூறுவர். மேலே கூறிய கருத்து இ[illegible] கொள்கையை ஆட்சேபிக்க முடியுமா? வியாபாரிகள், இலாப[illegible]டுவோர் ஆகியோரைத் தொடர்ந்து கொடியுஞ் செல்லுமென்ற[illegible]கை தவறுடையது. அரசாங்கங்களே மற்ற நாடுகளை அ[illegible]படுத்தும் முயற்சியில் முதலில் ஈடுபட்டன. பின்னரே வி[illegible]களின் துணையை அவை பெற்றன. அவர்கள் அரசுக்கு அவ[illegible] பகுதிகளிலே பொருளாதாரத்தை விருத்தி செய்தனர். இ[illegible] சரித்திர ரீதியாகக் கண்ட உண்மை. அரசியல் நோக்கங்[illegible], பொருளாதார நோக்கங்களும் ஒன்றோடொன்று எவ்வாறு இணைந்து செயற்பட்டன என்பதை ஆராய்வது பயனற்றது. அவ்வாறே பின்தங்கிய நாடுகளுக்கு, முற்போக்கான நாடுகள் செய்த சரித்திர ரீதியான நன்மை தீமைகளைக் கணக்குப்போட்டு ஐந்தொகை முடிப்பதும் சிரமமான வேலையாகும்.

இப்பழைய பிரச்சினைகளைக் கிளறுமலே நாம் பிரச்சினையை அறிந்து கொள்ளலாம். 25 வருடங்களுக்கு முன்னர் உலகிலே ஒரு பெரிய வியாபார மந்தமுண்டாயிற்று. இதனைப் பொருளாதார அறிஞர் அறிந்து கொள்ளவில்லை. அப்போது நவீன—மாக்சீய வாதமான ஏகாதிபத்தியக் கொள்கைபற்றி ஒரு சமாதானங் கூறுவதற்கு அவர்கள் அறியவில்லை. இன்று எங்களுக்கு விடயம் விளங்குகிறது.

தேசீய வருமான நிரூபணம்பற்றி இரண்டாம் பகுதியிலே ஆராய்ந்தோம். பெரிய வியாபார மந்தங்களைத் தவிர்ப்பதற்கு இன்று பிஸ்கால் கொள்கைகளும், பணக்கொள்கைகளும் உண்டு. அயல்நாட்டு வியாபாரத்தின் மூலம், உள்ளூரிலே வாங்குஞ் சக்தியை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லையென முன்னரே அறிந்துள்ளோம். பணம், வரி, வரவு செலவுத் திட்டம் என்பவற்றை ஒழுங்குசெய்யும், பூரண அரசியற் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றுள்ள தற்கால அரசுகள் நேரடியாகப் பயனுள்ள திட்டங்களால் வேலையின்மையை எதிர்க்க வசதியுடையனவாயிருக்கின்றன. எனவே வேலைவாய்ப்புக்களுக்காக, நிலத்தை வெட்டிப் பின் மூடுவதுபோல வெளிநாடுகட்குப் பண்டங்களை அனுப்பிச் சுபீட்சத்தை வாங்கவேண்டிய அவசியமில்லை.

**6. குடியேற்றங்களைச் சூறையாடுதல்?** நிசவருமானம் வீழ்ச்சியடைதல் அல்லது பாட்டாளிகளை இமிசைப்படுத்தல் என்ற காள்மாக்ஸ் கொள்கை தவறு என்பதை அவருடைய சீடர்கள் இன்று அறிந்துகொண்டனர். இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்காந்திநேவியா ஆகிய

www.padippakam.com



நாடுகளிலே, முதலாளித்துவ முறையின்கீழ் நிசவருமானம் உயர்ந்து கொண்டே வருகிறது. மாக்ஸ்வாதிகள் இதற்கு என்ன சமாதானம் கூறப் போகிறுர்கள்? இதற்குக் காரணம் தொழிற்சங்கங்களும், சகாயச்சீர்திருத்த நடவடிக்கைகளுமா? புரட்சியை விரும்பும் பொதுவுடைமைவாதிகள் இதனை ஒப்புக்கொள்ளமாட்டார். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் சபட. அதிகரித்தமைக்கு அவர்கள் சமாதானங் கூறிக்கொள்ள மாட்டார்கள்.

நல்ல சமாதானம் கூறுட
னேற்றமான நாடுகளிலே சம்பளங்கபடியால் மாக்ஸியவாதிகள் பலர், முன் களை அவை சூறையாடுவதேயெனக் கூற்ந்தமைக்குக் காரணம் கொலனி ஆகிய ஊர்களிலே மக்கள் புதிய கார்களில் ஓடுவது டேய்டன், ஒஹியோ பட்டினிகிடப்பதிஞலேயே என அவர்கள் கூறுவர். இவ்வாட்டாளிகள் ளுடைய ஆராய்ச்சி செல்லும். ஆஞல் இக்காரணங்கள் நியாயமானவைய்க

இந்தக் கொள்கை தவறுடையதென ஆராய்ச்சியின்றிக் கூறிவிட முடி யாது. ஏனெனில் பொருளாதாரம் அளவறிவுக்குரிய சாத்திரமன்று. சரித்திரம் தரும் சிக்கலான விடயங்கள் ஆராயப்பட வேண்டும். நம்மீது சுமத்தப்படும் குற்றங்களையும் ஆராயவேண்டும். மேடுகளிலே நிலவும் உயர்ந்த வாழ்க்கைத் தரம், முன்னேருத நாடுகளோடு அவை செய்யும் வியாபாரத்திலேதான் பெரும்பாலும் தங்கியிருக்கிறதென்ற கொள்கைக்கு எதிராகவே சான்றுகள் நிறைய உண்டு. நைலோன், செயற்கை ரப்பர் போன்ற புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டறிந்தால் எதிர்காலத்திலே இந்த வியாபாரத்திற்கூட மேல்நாடுகள் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படாது.

7. **பிறர்நலன்கருதல்:** முன்னேருத நாடுகளுக்கு உதவிபுரிதல் பிறர் நலம் கருதும் பண்பாலுண்டானதென்பதற்கு அதிக ஆதாரம் தேவை யில்லை. முன்னேறிய நாடுகளிலே பொதுசன அபிப்பிராயம் இதுவே. ருஷியாவுடன் இலட்சிய நெருக்கடி ஏற்படுவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னர் லத்தீன் அமெரிக்காவுக்கு, அமெரிக்கா "நல்ல அயலவர்" என்ற முறையில் இந்த உதவியைச் செய்தது. 1941 பிராங்லின் ரூஸ் வெல்ட் நாலு சுதந்திரம் பற்றிப் பேசுகையில், மூன்ருதாக "எல்லா நாடுகளும் தேவையிலிருந்து விடுதலை பெறவேண்டும்? என்று கூறிஞர் இதனை ஞாபகத்திலே கொள்ளலாம்.

முன்னேற்றமுள்ள எல்லா நாடுகளிலும் மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தையாவது எல்லார்க்கும் கொடுக்கவேண்டுமென்ற பண்பில் உந்தல் உண்டு. இது அரசியல் வகையிலும் முக்கியமானது. வெளிநாடுகள் விட யத்திலும் இதே பண்பு தலைக்காட்டுவதஞலேதான் அந்நாட்டவருடைய பொருளாதார அபிவிருத்தியிலும் முன்னேற்ற நாடுகள் அக்கறை கொள்ளு கின்றன. பிறர் நலம் பாராட்டுதலைப்பற்றி அதிகம் பேசுவது அழகாயிராது. இதை மறந்துவிட்டால் அரசியல் சம்பந்தமான தீர்க்கதரிசனங்கள் ஓரளவு அச்சொட்டாக இருக்கமாட்டா. சுருக்கம்: பிறர்நலம் பேணுதல் ஒருபுற

www.padippakam.com



மிருக்க பொருளியல் அனுகூலங்கள் ஒருபுறமிருக்கப் பிரதானமாக அரசியற் காரணங்களுக்காகவே முன்னேறிய நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு உதவ முன்வருகின்றன.

**நோய் நிதானமும், பரிகாரமும்**

அபிவிருத்தி குறைந்த நாடுகளின் பொதுப்படையான பிரச்சினை பற்றியும், அது சம்பந்தமான போலி வாதங்கள்பற்றியும் அவ்வறுமையை நாடுகள் என் வறுமைப்பட்டுள்ளன என்றும் ஆராய்வோம். நான்கு மூலா எவ்வாறு நீக்கலாமென்பதைப் பகள் உண்டு. அவை குடிசனத்தொகை, தாரமான பொருளா மூலதன ஆக்கம், தொழில் நுணுக்க அறிவு இயற்கை வளம்.

**குடிசனத்தொகைப் பிரச்சினை**

குடிசனப்பெருக்கம் வெறுமனே அதிகரித்தால் அதன் பயனாக அபிவிருத்தியுண்டாகுமெனக் கூறமுடியாது. கட்டுப்பாடின்றி சனப்பெருக்கமுண்டானால், குறைந்துசெல் பயன் விதியை அனுசரித்துத் தனி நபரின் வாழ்க்கைத்தரம் குறையும். 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் வழங்கிய அபிவிருத்திமுறைகளையே முன்னேறாத நாடுகள் இன்றும் மேற்கொள்வதை நாம் காணலாம். முன்னேற்றமான வைத்தியமுறைகள் (உ-ம்.—சுகாதாரம் இன்று மலிவான டி.டி.ரி) மரணவிகிதத்தைக் குறைத்துவிடுவதால், பிறப்பு விகிதம் ஒருபுறம் அதிகரிக்க, இரண்டுமாகச் சேர்ந்து சனத்தொகையை அதிகரிக்கச்செய்கின்றன.

போட்டோ ரிக்கோ, ஜாவா முதலிய நாடுகளிலே இருபடிப்பிணைகளை நாம் அறியலாம். தொழில் நுட்ப முறைகளாலுண்டான உற்பத்திப் பெருக்கம், இரட்டிப்பான சனப்பெருக்கத்துக்குச் செலவு செய்யப்படுகிறது. என்பது முதலாவது படிப்பிணையாகும், தற்காலவிஞ்ஞானம் வியாதிகளை விரைவாகக் குணப்படுத்துவது போல, உணவை உற்பத்தி செய்யவில்லை. அதனால் வியாதியினால் சாகாதவர்கள் பசியினாற் சாகவேண்டியேற்படுகிறது என்பது இரண்டாவதாகும். பிறப்பிறப்பு முதலியவற்றின் புள்ளிவிபரம் திரட்டுவோர் கேட்கும் கேள்வியை பொருளியல் நூல்கள் வெறுமனே குறிப்பிடத்தான் முடியும். பழைய நாடுகளிலே உள்ளதுபோல அபிவிருத்தியடையும் நாடுகளிலும் பிறப்பு விகிதம் குறையுமா? மேலும் வாழ்க்கைத்தரம் க்ஷீணிக்கு முன்னர் அது நிகழுமா?

**மனிதவளங்களை அபிவிருத்திசெய்தல்**

தொழிலாளர் உற்பத்திச் சாதனங்களில் முக்கியமானவர்கள். எனவே இந்த வகையில் ஆக்கபூர்வமான திட்டங்கள் அதிகமுண்டு. பொருளியல் அபிவிருத்திக்கான திட்டங்களை நிர்வாகிகள் தயார் செய்யும்போது பின்வரும் திட்டங்களைக் குறித்துக்கொள்வர்.

www.padippakam.com



1. மக்களின் வாழ்வை இன்பமுடையதாக்கவும், உற்பத்தியைப் பெருக் கக்கூடியவகையில் அவர்களுடைய நிலையை ஆக்கிக்கொள்ளவும், வியாதி யைப்போக்கி சுகாதாரத்தைப் பெருக்கவும், போஷாக்கு உணவுத் திட்டத்தை உருவாக்கவும் வேண்டும். எனவே ஆஸ்பத்திரிகளைக் கட்டுதலும், சாக் கடை நீரைப் போக்க வசதிகளைச் சமைத்தலும் உயர்ந்த வாழ்வுக்குரிய சௌகரியங்கள் என்று கருதக்கூடாது.

2. கல்வியறிவுள்ளவர்கள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வசதியுள்ள வராவர். எனவே பாடசாலைகளை அதிகரிக்கவும், எழுத்து அறிவைப் பெருக் கவும் திட்டம் போடவேண்டும். வாசித்தல் எழுதுதல் என்பவற்றோடு நின்றுவிடாமல், விவசாயம் கைத்தொழில் ஆகியவற்றிலும் மக்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். உள்ளூரிலேயுள்ள திறமைசாலிகளை வெலி யூர்களுக்கு பொறியியற் கலை, வைத்தியம், வியாபாரம் முதலியவற்றைப் பயின்று வர அனுப்ப வேண்டும்.

**மறைவான வேலையின்மை :—**

மனிதசக்தியை நன்றாகப் பயன்படுத்தவேண்டும். அபிவிருத்திக்கு அது முக்கியம். வறிய நாடுகளிலே விசேடமாகக் கிராமப் பகுதிகளில் மக்கள் சோம்பேறிகளாக இருக்கிறார்கள் அவர்களைப் பயன்படுத்துவாரில்லை. வேலையற்றோர்தொகையில் அவர்களைச் சேர்க்கமுடியாது. அவர்களை வேலை யிலீடுபட்டோராகவும் கருதமுடியாது. அவர்கள் சுற்றத்தவரோடு வாழ் கிறார்கள் ; அபிவிருத்தித் திட்டம் அல்லது வியாபார மலர்ச்சியுண்டானால், அவர்கள் நகரங்களில் வேலைக்குச் செல்கிறார்கள் ; இதனால் பண்ணை உற்பத்தியில் எவ்வித வித்தியாசமும் உண்டாவதில்லை. இதே நிகழ்ச் சியை முன்னேற்ற நாடுகளிலும் காணலாம். உற்பத்தி வேலை கிடைக் காத போது வீட்டுக்கு வீடு பண்டங்களை விற்று வயிற்றைக்கழுவுகின்றனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சில சமயம் அரசாங்கங்கள் விரிவான பிஸ்கால்கொள்கை, பணக்கொள்கை எனபவற்றை மேற்கொள்ளும். இவை பணவீக்கப் பிரச்சினைகளையும், சர்வதேச வர்த்தக நிலைக்குறிப்பில் பற்றாக் குறையையும் உண்டாக்கலாம்.[1]

**இயற்கைவளங்கள் :**

வறிய நாடுகளில் இயற்கை வளமும் குறைவு. இருக்கிற தாதுப்பொருள் களும் நிலமும் செறிவான குடிசனமுள்ள இடத்திற் குடிமக்களிடையே பிரிக்கப்படவேண்டும். நல்லவளமுள்ள பகுதிகளிலே மக்கள் குடியேறி விட்டனர்.

உண்மையான பூகர்ப்ப ஆராய்ச்சியாளர் புதிய வளங்களைத் தேடித் திரிகிறார்கள். பல நூற்றுக்கணக்கான சதுரமைல் வளமுள்ள காட்டு

1. இத்தகைய மறைவான வேலையின்மை முன்னேறாத நாடுகளிலே அதிகம் என்பதை ஜி. ஹபேர்லா, டி. டப்ளியூ. சூல்ட்ஸ் போன்ற ஆசிரியர் மறுக்கின்றனர். இலத்தீன் அமெரிக் காவில் இது மிகக் குறைவென்கிறார் திரு. சூல்ட்ஸ்.

www.padippakam.com



நிலத்தை மலேரியாக் கொடுமையிலிருந்து டி.டி.ரி. உபயோகத்தினல் நீக்கி, விளைநிலமாக்கியுள்ளனர். முன்னேருத பல நாடுகளிலே பல சுரங்கங்கள் தாதுப் பொருளற்று வருகின்றன. மேற்பரப்பு அரிபட்டுப்போகிறது; இயற்கைவளங்கள் வறுமையடைந்துவருகின்றன. விஞ்ஞானத்தின் பயனுக உண்டான செயற்கைப்பொருள்களின் பெருக்கத்தால், ஏற்பட்ட போட்டியால் அயனமண்டலத்துக்குரிய இக்கால வளங்கள் வழக்கற்றுப் போன பொருள்களாய்விட்டன. நைலன் துணி நெசவு, பட்டு நூல் துணிகளைச் சந்தையிலிருந்து விரட்டி எத்தனையோ கோடிமக்களை வறுமைப்படச் செய்துவிட்டது. செயற்கை ரப்பர் இயற்கை ரப்பருக்குப் பதிலாகப் பயனுள்ளதாகுமானுல் கிழக்கு ஆசியா தனது இப்போதிருக்கும் கீழ்த்தரமான வாழ்க்கைத் தரத்தையே நிலைநிறுத்தமுடியாதிருக்கும்.

தற்போதுள்ள மூலப்பொருள்களை நல்லவகையிலே பயன்படுத்துவதானுல், மேலும் அபிவிருத்தியுண்டாகுமெனப் பொருளியல் புவியியலாளர் கருதுகின்றனர். கொலம்பஸ் காலத்திலேயிருந்த சந்தர்ப்பங்களெல்லாம் மறைந்து விட்டன. வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் வந்து குடியேறுமாறு வறியவர்களை வருந்தி அழைத்த காலம் போய்விட்டது. வெனிசூலா, ஈராக், சௌடி அராபியா, ஈரான், குவாயிட்போன்ற இடங்களில் எண்ணெய்ச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதனுல், அந்நாடுகள் விருத்தியடைந்தன.

### நிலச் சீர்திருத்தம்

புதிய இடங்களைக் கண்டு பிடிக்காமலே தமக்கிருக்கும் நிலங்களைக் கொண்டே தேசங்கள் முன்னேறலாம். மத்திய காலக்கிராமங்கள் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இரண்டொரு நிலப்பரப்பின் வருவாயைக்கொண்டே அக்கால மக்கள் வாழ்வு நடத்த வேண்டியிருந்தது. இவை ஒன்றுக்கொன்று அநேகமாக வெகு தூரத்திலிருந்திருந்தன. 13 ஆம் நூற்றுண்டிலிருந்து 18 ஆம் நூற்றுண்டுவரையும் சிறிது சிறிதாக இங்கிலாந்திலே நில அடைப்பு இயக்கம் பொது நிலங்களைப் பிரித்து பெரிய துண்டுகளாக ஒன்ருக்கிற்று. இதனுல் பல கிராம மக்கள் நிலமின்றி நகரங்களிலேயுள்ள சேரிகளில் வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று. 1920 இல் ருஷிய விவசாயத்திற் காணப்பட்ட கூட்டுப்பண்ணைமுறை இது போன்றதே. சீனுவிலே கூட்டுப்பண்ணை முறை விரைவாக அமைக்கப்பட்டது. 1930 இல் யந்திரக் கலப்பைகள் தோன்றின. உலகின் பல பாகங்களில் இன்னும் சிறுதுண்டுக் கமங்களிருந்து வருகின்றன.

ஒரு பக்கத்தில் முன்னேருத நாடுகளிலே பெரும் பண்ணைகள் உண்டு. இவை திறம்படச் செய்கை செய்வதற்கு ஏற்றனவன்று. அவற்றில் வாரத்துக்குக் கமஞ் செய்வோரும் நிலத்தை வளம்படுத்தும் ஊக்கமற்றவராயிருக்கின்றனர். அதற்குக் காரணம் நிலம் தமக்குச் சொந்தமற்றதென்பதும், விளைவில் பெரும்பகுதி தனக்குக் கிடையாதென்பதுமே. நிலச் சொந்தக் காரரும் அதில் ஊக்கங்காட்டுவதில்லை. விலையுயர்ந்த உபகரணங்

www.padippakam.com



களை குத்தகைக்காரருக்கு வாங்கிக் கொடுத்தால் அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்த மாட்டார் என்பதே அவர்களுடைய எண்ணம்.

நிலச் சீர்திருத்தம் உடனே கவனிக்கப்படவேண்டிய விடயம். அல்லது புரட்சியுண்டாகும் என்பதைப் பொதுவுடைமை வாதிகள் உணர்வர். பிர பல விவசாயப் பொருளியலறிஞரான தியடோர் டப்ளியூ. சூல்ட்ஸ் பின்வரு மாறு கூறியுள்ளார் :— " தமது சொந்த முயற்சியின் பலனை எதிர்பார்த் திருக்கும் நிலச் சொந்தக்காரரின் கையில் நிலத்தைக் கொடுக்க வேண்டு மென்ற சீர்திருத்தம் " மண்ணைப் பொன்னாகப் " பல நாடுகளில் அடிக்கடி மாற்றியுள்ளது ".

இயற்கை வளத்தை அபிவிருத்தி செய்யும் பிரச்சினைகள், சீர்திருத்த மான நுண் தொழிற் பிரச்சினையோடும், இயற்கை வளங்களைக்கண்டுபிடித் துப் பயன்படுத்துவதற்கேதுவான மூலதனப் பண்டங்களின் சீர்திருத்தப் பிரச்சினையோடும் சேர்ந்திருக்கின்றன.

**மூலதனம் ஆக்குதல் :**

முன்னேறாத நாடுகளில் வசிக்கும் மக்களின் கை, மூளை என்பன போன் றதே முன்னேறிய நாடுகளிலுள்ளவரின் கையும் மூளையும். ஆனால் முன் னேற்றமான நாடுகளிலேயுள்ளவர்களிடம் பல ஆண்டுகளாக அபிவிருத்தி செய்யப்பட்ட மூலதனப் பண்டங்கள் நிறைய உண்டு. முன்னேறாத நாடுகள் மிக வறுமைப்பட்டவை ; அவை தமது நடப்புத் தேசியவரு மானத்திலே அதிகத்தைச் சேமிக்கமாட்டா என்பதை உணர்கின்றன.

முன்னேற்ற நாடுகளிலே வருமானத்தில் 10, 20 சத வீதம் மூலதன ஆக் கத்துக்குப்போய்விடும். முன்னேறாத நாடுகளிலே சேமிப்பும் முதலீடும் 5 சத வீதத்துக்குக் குறைவாயிருக்கும். சில மதிப்பீட்டின்படி இந்தோனேசியா வின் தேறிய மூலதன ஆக்கத்தின் நடப்புவீதம் மொத்த நிசவருமானத் தில் (இதில் பணமல்லாத அமிசங்களும் அடங்கும்) 5 சத வீதத்திலும் குறை வாகும். விரைவாக வளர்ச்சியடையும் குடிசனத்தொகைக்குப் பழங்கால ஆயுதங்களையும், வீடுகளையும் அமைத்துக் கொடுக்கவே இந்தச் சேமிப்பு முடிவடைந்துவிடும்; பின்னர் அபிவிருத்திக்கு என்ன மிஞ்சப் போகி றது !

முன்னேற்றமுள்ள நாடுகளிலே மேலதிக சேமிப்பை என்ன செய்யலா மென்று, பெருவாரியான வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுக்க நாம் அறியுமுன்னர் பல பொருளியலாளர் கவலைப்பட்டனர். ஆனால் முன்னே றாத நாடுகளின் பிரச்சினை சேமிப்புக் குறைவாயிருத்தலே. பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிக்கக்கூடிய உற்பத்திச் சாதனங்களில் போதிய அளவு பணம் முதலீடு செய்யாதிருத்தலே பிரச்சினையாகும். இந்த நாடுகள் அதிகம் சேமியாது இருப்பதற்குக் காரண மென்ன ?

படிப்பகம்

www.padippakam.com



பதுக்கி வைக்கிறார்கள். இதனால் தேசத்தின் உள்ளூர் அபிவிருத்திக்கு இந்தப் பணம் பயன்படாமற் போகிறது.

**தனவந்தரான வெளிநாட்டாரைப் பின்பற்றல்**

இன்றைய வறிய நாடுகளிலே சேமிப்புக் குறைவதற்கு மற்றுமொரு காரணமுண்டு. இங்கிலாந்தின் சேமிப்பு விகிதத்தை இவர்கள் பின்பற்றுவது முடியாத காரியம். ஏனெனில் கைத்தொழில் புரட்சிக் காலத்திலே ஆங்கிலேயர் வறியவராயிருந்தாலும், உலகில் மிகச் சுபீட்சமுடையவராகக் காணப்பட்டனர். நமது அயலவரைப்போல நாமும் சிறப்போடிருக்கவேண்டுமென விரும்புவது மக்களுடைய இயல்பு. முன்னேறாத நாடுகளிலுள்ளவர்கள், முன்னேறிய நாட்டிலுள்ளவர்களைப்போல வாழவிரும்புகிறார்கள். நமது சினிமாக்களை அவர்கள் பார்க்கிறார்கள். சஞ்சிகைகளை வாசிக்கிறார்கள்; நமது உல்லாசப் பிரயாணிகளைச் சந்திக்கிறார்கள்; மாணக்கர் நல்ல புதினங்களைக் கொண்டுவருகிறார்கள். நாம் அனுபவிக்கும்போகங்களிலே கொஞ்சத்தையாவது அவர்கள் அனுபவிக்க விரும்புகிறார்கள். அதற்காகத் தமது வருமானத்திலே பெரும் பகுதியைச் செலவு செய்கின்றனர்.

இது தனியார் துறையில் மாத்திரமன்று. அரசாங்கத்துறையிலும், மானிய முறை அமைப்பிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் நாடுகள் கூட தலையிடாக்கொள்கை முதலாளித்துவ நிலையிலிருக்க விரும்பவில்லை. முன்னேறிய நாடுகளிலேயுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அனுசரிக்கப் பார்க்கிறார்கள்; குறைந்த பட்சச் சம்பளச் சட்டம், தொழிற்சாலையிற் பாதுகாப்பு, கூடியபட்ச வேலைநாள் என்பவற்றுக்குச் சட்டம், தொழிற்சங்க இயக்கம்; முலியவை அத்திட்டங்களாகும். ஐக்கியநாட்டுத் தூதுக்குழுவிலுள்ள ஒருவர் கூறியது பின்வருமாறு :—“ நாம் சிறுவர் பெறும் வருமானமுடையோம்; ஆனால் பெரியவர்களுக்குரிய பசி எமக்கு உண்டு; முன்னேறிய நாடுகளில் உள்ள மானிட நலம்பற்றிய சட்டங்களுக்குப் போதிய வசதி எங்களிடமில்லை; ஆனால் அச்சட்டங்கள் மூலம் பெறக்கூடிய நலம் முழுவதையும் பெறத் தெண்டிக்கிறோம்.” இவ்வாறெல்லாம் செய்வதானால் அரசாங்கம் உயர்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். உயர்தரமென்றால் முன்னேற்றமான நாடுகளில் உள்ள தரமன்று. ஏனெனில் முன்னேற்ற நாடுகளிலே அரசாங்கம் தனது வருமானத்திலே 25 சத விகிதத்தைத்தானே செலவு செய்கிறது. முன்னேற்றமில்லாத நாடுகள் 10 சத விகிதத்தையே செலவு செய்கின்றன. ஆனால் முன்னேற்ற நாடுகள் படிப்படியாக முன்னேறியபோது முன்னேறாத நாடுகளுக்குரிய வசதிகள் இருந்திருக்கமாட்டா. அரசாங்கத்தின் செலவுப்பங்கு ஒரு புறமிருக்க இந்நாடுகள் பலவற்றிலேயுள்ள சட்டங்கள் பல முயற்சியாளருக்குத் தடைபோடக்கூடியனவாயிருக்கின்றன. உதாரணமாக இத்தாலியிலே குறைந்த பட்சச் சம்பளம் பென்ஷன் என்பன அதிகம். அதனால் உற்பத்தியிலீடுபடக்கூடிய பல தொழிலாளர் வேலையின்றியிருக்கவேண்டியதாகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## வெளிநாட்டிலிருந்து மூலதனம்

உள்ளூர்ப் பணத்தைக்கொண்டே முதலை ஏற்படுத்துவதற்குப் பல தடைகளிருக்குமானால், வெளிநாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தினலென்ன? பத்தொன்பதாம் நூற்றுண்டிலே பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்காவிலும், கனேடா, அவுஸ்திரேலியா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் முதலீடு செய்யவில்லையா? 1914 இக்கு முன்னர் பிரான்ஸ் சாருடைய ருஷ்யாவிலே முதலீடு செய்யவில்லையா? ஜெர்மனி, கிழக்கு ஐரோப்பாவிலே முதலீடு செய்யவில்லையா? தனம் மிக்க நாடானது நல்ல வட்டிகொடுக்கும் தனது முதலீட்டுத்திட்டங்களை முடித்துக்கொண்டால், வறிய நாடுகளிலே அதேவகையான முதலீடுகளைச் செய்யலாம். அதனல் அதற்கும் முதலீடு செய்யப்படும் வறியநாடுகளுக்கும் அது பயனுடையதாகுமென்று பொருளாதாரத்தில் நாம் படிக்கவில்லையா?

1914 இக்கு முன்னர், இந்த வகையிலேதான் பொருளாதார அபிவிருத்தி உண்டானது. பிரிட்டன் சுபீட்ச நிலை உச்சமடைந்த காலத்தில் தனது வருமானத்திலே 15 வீதத்தைச் சேமித்து அதில் பாதியை வெளிநாடுகளிலேயே முதலீடு செய்தது. ஐக்கிய அமெரிக்கா இன்று இவ்வாறு செய்வதானல் பிரதிவருடமும் நாம் தனிப்பட்ட வகையில் 60 பிலியன் டொலரைக் கடன் வழங்கியும் முதலீடு செய்தும் வரவேண்டும். அல்லது இன்று அரசாங்கம் நடத்தும் மாஷல் திட்டம், அரசாங்க வெளிநாட்டு உதவித் திட்டம், ஏற்றுமதி இறக்குமதி வங்கி, சர்வதேசவங்கி முதலியவற்றுக்குச் செலவு செய்யுந் தொகையிலும் இது பன்மடங்கு அதிகமானதாகும்.

இக்காலத்தில் வாழும் நாம் இவ்வாறு பெரிய முதலீடுகளிலே இன்று ஈடுபடமுடியாது. அதற்குப் பல காரணங்களுண்டு. முதலாம் யுத்தத்துக்கு முந்திய மாதிரி இயற்கையானதா? அல்லது தற்செயலாக ஏற்பட்ட சரித்திரபூர்வமான பயனுயுண்டானதா? ஐரோப்பாவிலிருந்து புதிய உலகத்துக்குச் சென்ற கடன், அங்கு குடியேறிய ஐரோப்பிய மக்களைத் தொடர்ந்தே சென்றது. ஆங்கிலேயர் தமது பணத்தைக்கொண்டே அமெரிக்க, கனேடா, அவுஸ்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகளுக்குச் சென்றனர். மூலதனத்தை இறக்குமதி செய்யும் நாடுகளிலே என்ன சட்டங்களும் பழக்கவழக்கங்களும் மேற்கொள்ளப்பட்டனவோ அதே சட்டங்களும் பழக்கவழக்கங்களுமே மூலதனம் முதலீடு செய்யும் நாடுகளிலும் வழங்கலாயின.

யுத்தத்துக்கு முன்னிருந்த இந்த உலகம் பலசாதி மக்களும் கலந்து வாழ்ந்த உலகம். நுழைவுச்சீட்டு இல்லாமலே எங்கும் செல்லக்கூடியதாயிருந்தது. எந்த நாட்டுக்கும் சுதந்திரமாய்ச் சென்று குடியேறலாம். தீர்வைகள் குறைவாயிருந்தன. அனுமதிப்பங்குகள் இருக்கவில்லை. சர்வதேசத் தங்கத்திட்டப்படி விரும்பியவாறு உமது மூலதனத்தை எந்த நாட்டுக்கும் மாற்றக்கூடியதாயிருந்தது. அரசாங்கம் உமது சொத்தைப் பறிமுதல் செய்ய முடியாதபடி வெளிநாட்டில் பத்திரமான நிலையிருந்தது.

www.padippakam.com



செல்லவேண்டியதாயிருந்தது. இரசாயனம், கண்ணுடித்தொழில் மின்சாரத் தளவாடம் என்பவற்றிலே ஜெர்மானியர் தலை சிறந்து விளங்கினர். ஆனால் இரண்டு பெரிய உலகயுத்தங்கள் அவர்களுக்குப் பெருந்தடையாயின.

தொழில் நுட்பமுறைகளால் முன்னேறிய மற்றொரு நாடு ரூஷியா. தாமே எல்லாவற்றையும் கண்டுபிடித்தவர்களென ருஷ்யர் கூறிக்கொண் டமை, அவர்களது பாதுகாப்பில்லாத தன்மையையும், அபிவிருத்திப் பந்தயத்தில் அவர்கள் பிந்தியே சேர்ந்துகொண்டார்கள் என்பதையுமே காட்டுகிறது. அறுபது வருடங்களுக்கு முன்னர் சார் ஆட்சியிலிருந்த ருஷ்யா தீவிரமாகப் பொருளாதாரத்துறையிலே முன்னேறிற்று. தமது அரசாங்கத்தின் ஆதரவோடு பிரெஞ்சு வங்கிகள், தனிப்பட்ட பிரெஞ்சுக்கார ருக்கு, சார், அரசாங்கக் கடன் பத்திரங்களை ஏராளமாக விற்பனை செய்தது. அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு புகையிரதப் பாதைகளைப் போட்டுக் கைத்தொழிலை விருத்தி பண்ணினர்.

முதலாவது உலக மகாயுத்தத்தில் ஜெர்மனி ரூஷியாவைத் தோற் கடித்ததும் உண்டான பொல்ஷிவிக் புரட்சியை நிறுத்துவதற்கு இந்த அபிவிருத்திகளால் முடியவில்லை. இவை காலதாமதமாகவேயுண் டானமையே அதற்குக் காரணம். அதன் பின்னர் ருஷ்யா வெளிநாட்டு மூலதனத்தைப் பெறமுடியாதிருந்தது. கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 1928 இன் பின்னர் ஏற்பட்ட ஐந்து வருடத்திட்டங்களிலே நடப்பு நுகர்வுகளைத்தாறுமாறுகக் குறைத்தது. ஆரம்பத்திலே அந்நிய நாட்டுப் பொறியியலாளரில் ரூஷியா தங்கியிருந்தது. அதன் பின்னர் ருஷ்ய நாட்டுவிஞ்ஞானிகள் வெளிநாடுகளிலிருந்துவரும் தொழில் நுட்ப இலக்கியங்களைப் பெரிதும் கருத்தோடு பயின்றனர். அவற்றைப் பெறு வதற்கு உளவாளிகளை அனுப்பவேண்டிய அவசியமுண்டாகவில்லை. அத் தகைய இலக்கிய பொதுச்சஞ்சிகைகளிற் பிரசுரிக்கப்பட்டு வந்தன.

ஈற்றிலே ஐக்கிய அமெரிக்காவின் நிலையைப் பார்க்கலாம். இது உலகுக்கு ஓர் முன்மாதிரிபோன்றது. 1930 இல் ஹிட்லர் ஆட்சியால் ஜெர்மனியில் உள்ள பல விஞ்ஞானிகள் தம் நாட்டைத் திரஸ்கரித்துவிட்டு அமெரிக்காவுக்குச் சென்றனர். அதன் பின்னரே அமெரிக்கா தனி விஞ்ஞானத்துறையில் முன்னணியிடத்தைப் பெற்றது. ஒரு நூற்றுண்டாக நமது பிரயோக நுண் தொழில் சிறப்புற்றிருந்தது. கார்சம்பந்தமான முக்கியக் கண்டுபிடிப்புக்கள் பெரும்பாலும் அந்நிய நாடுகளிலேதான் நிகழ்ந்தன. இருந்தும் ஹென்றிபோட் கம்பெனியும் ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனியும் உலகின் மற்ற நாடுகளைவிட அதிக மோட்டார்களை உற்பத்தி செய்தன. அமெரிக்கத் தொழில் நுட்பம் என்பது உலகிலே ஒரு புதிய தோற்றம்.

### தொழில் நுட்பம், மூலதனம் என்பவற்றின் இடைவிளைவு.

முன்னேறுத நாடுகள் தொழில் நுட்பங்களை முன்னேறிய நாகேளி டமிருந்து அனுகரணஞ் செய்கின்றன என்பதெல்லாம் சரிதான்.

www.padippakam.com



ஆனால் நாம் ஒரு முக்கியமான விடயத்தை மறந்துவிட்டோம். முன்னேற்றமான தொழில் நுட்பம் சிக்கலான மூலதனப் பொருள்கள் மயமாயிருக்கின்றன. முன்னேறாத நாடுகளிடம் மூலதனம் குறைவென்பது தெரியாதா ? எனவே அந்நாடுகள் நமது தொழில் நுட்பத்தை எவ்வாறு அனுகரணஞ் செய்வது ?

இந்த யோசனைகளிலே அதிக உண்மையுண்டுதான். தொழில் நுட்பத்தை மாற்றுவதும் மூலதனமுதலீடும் ஒன்று சேர்ந்தே செல்லும். ஒன்றை மற்றதிலிருந்து பிரிக்க முடியாது. இவை ஆராய்ச்சிக்கு இரண்டு பிரிவைச் சேர்ந்தவையே. ஆனால் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. இதற்கு உதாரணமொன்று தருகிறோம்.

பல பின்தங்கிய நாடுகளிலே விவசாயம் திறமையற்ற முறையிலே நடைபெறுகிறது. டேவிட் சொலமன் என்போர் பயன்படுத்திய விவசாய முறைகளையே இன்றும் உபயோகித்து வருகின்றனர். ஒரு டொலர் பெறுமதியுள்ளதும் இலேசானதும், முதல்மாதத்திலேயே அதன் செலவைப் பெற்று விடக்கூடியதுமானதொரு கலப்பை மூலதனப் பழுவைக் குறைப்பதோடு விளைவையும் அதிகரிக்கலாம். புதியதொழில் நுட்பங்களைப் புகுத்துவதால் மூலதனம் சேமிக்கப்படுகிறதன்றி அது செலவாவதில்லையென்பதை இது காட்டுகிறது.

மிக வறிய நாடுகளிலும் ஓரளவு மூலதன ஆக்கம் நடந்துகொண்டேயிருக்கும். தேய்ந்த உபகரணங்களைப் புதுப்பிக்கவேண்டும். அப்போது பழையதற்குப்பதிலாக அதே உபகரணத்தைப் புதிதாக ஏன் மாற்றவேண்டும் ? புதிய உபகரணங்களை ஏன் பயன்படுத்தக்கூடாது ? இவ்வாறு மூலதன ஆக்கமும், தொழில்நுட்ப மாற்றமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருக்கின்றன.

**முயற்சியுடைமையும் புதியன துணிதலும்.**

நாமெல்லாம் பல ஆண்டுகளாக உருவாக்கிவந்த தொழில் நுட்பங்களை முன்னேறாத நாடுகள் உடனடியாகப் பயன்படுத்தலாம். செய்யவேண்டியது வெளிநாடுகளுக்குப் போய் அங்குள்ள திறமையான முறைகளைக் கற்றுக்கொண்டுவந்து தமது நாட்டிலே பிரயோகித்தல்தான். பின்னர் அதிக விளைவு உண்டாவதை எதிர்பார்க்கலாம்.

ஆனால் இந்தமாதிரி எப்போதும் நடைபெறாது. முன்னேறாத நாடுகளில் உள்ளவர் இதை அனுபவத்தினால் அறிந்திருப்பார்கள். "முன்னேறிய நாடுகளில்" உள்ளவர்க்கு இந்த மயக்கம் அடிக்கடி தோன்றும். வறிய நாட்டுக்கு நாம் சில நிபுணர்களை உல்லாசப் பிரயாணத்திலே அனுப்பினால் ஒரு மாதத்தின்பின்னர் அவர்கள் சீர்திருத்ததிற்கான தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம். பின் அந்த அறிக்கையை அமுல் நடத்தலாம். இவ்வாறு அபிவிருத்திப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



கொண்டுள்ளோம். ஏகாதிபத்திய நோக்கத்தை [illegible]த்தி செய்வதற்கன்று. பரஸ்பரம் நன்மைபயக்கக்கூடிய வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு. இக்காரணங்களாலும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டுமென்ற [illegible] பிஞலும், அபிவிருத்திப் பிரச்சினைகள் நமது அக்கறையைப் பெரிதும் பெற்றுள்ளன.

2. அபிவிருத்திக்கு நாலு மூலாதாரமான விடயங்கள் அவசியம். அவை குடிசனத்தொகை, இயற்கைவளம், மூலதன ஆக்கம், தொழில் நுட்ப முறை என்பனவாகும். பிறப்புத் தொகை வீழ்ச்சியடைவதற்கு முன்னர் இறப்புத் தொகை வீழ்ச்சியடைவதால், குடிசனத்தொகை அதிகரித்து அதனுல் சமூகவியல் சம்பந்தமான பிரச்சினைகள் உண்டாகின்றன. மல்தஸ்கண்ட குறைந்துசெல் பயன்விதி என்ற பேய் முன்னேருத நாடுகளிலே நடமாடிக்கொண்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திலே குடிகளின் உடல் நலத்தை அபிவிருத்தி செய்தலும், கல்வி விருத்தியும், தொழில் நுட்பப் பயிற்சியும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. நாட்டிலும், நகரிலும், "மறைந்திருக்கும் வேலையின்மை" அதாவது பற்றுக்குறையான வேலை வசதிகளைப் பயன்படுத்திஞல் மேலதிக உற்பத்தியைப் பெருக்கலாம்.

3. குறைந்துசெல் பயன் விதியிஞல் உண்டாகும் விளைவுகளைப் போக்கடிப்பதாஞல், குடிசனத்தொகை அதிகமுள்ள இடங்களிலும் இயற்கை வளங்களைப் புதிதாகக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். நிலச் சீர்த்திருத்தம் பெரிய இடைக்காலப் பிரச்சினைகள் பலவற்றை உண்டாக்குகிறது. நில அரிப்பைத் தடுத்தல், நீர்ப்பாசனம், வடிகால் அமைத்தல், அபிவிருத்தி போன்ற மூலதன ஆக்கமுயற்சிகள் இயற்கை வளத்தைப் பாதிக்கின்றன. குடிசனங்களையும் அவை பாதிக்கும். எவ்வாறெனில் அவர்களை முதலீடு செய்யப்பண்ணும்.

4. (அ) வறுமை, (ஆ) சிக்கனம், ஈட்டல் என்ற மத்திய வகுப்புப் பண்புகளில்லாமை (இ) விலை உயர்ந்த பொருள்களைப் பதுக்கிவைத்தல் பண்டங்களைப் பயன்படுத்தாது அடுக்கி வைத்திருத்தல், வெளிநாடுகளிலே பணச் சந்தைகளை ஏற்படுத்தல் அல்லது இன்பவாழ்க்கைக்குகந்த நிசச் சொத்துக்களை வைத்திருத்தல் (ஈ) முன்னேறிய நாடுகளின் வாழ்க்கை முறையை அனுகரணஞ் செய்தல், (உ) முன்னேறிய நாடுகளிலுள்ள முதலீட்டுக்காரருக்கு உவப்பான நிபந்தனைகளில் மூலதனத்தை நாட்டில் அனுமதிக்க விடாது தடுத்தல் என்ற இக்காரணங்களிஞலேயே முன்னேற்ற மடையாத நாடுகளிலே உற்பத்திக்கான மூலதன ஆக்கம் குறைவாக இருக்கிறது.

5. புதிய மூலதனப் பண்டத்திலே தொழில்நுட்ப மாற்றம் அடங்கியிருப்பதோடு, அவற்றிடையே பரஸ்பரம் பாதிப்புமுண்டு. அத்துடன் தொழில் நுட்பமாற்றம் விசேடமானதொரு நடைமுறை. முன்னேருத நாடுகள் முன்னேறிய நாடுகளின் தொழில் நுட்பமுறைகளை அனுகரணஞ்

www.padippakam.com



செய்யலாம். வேறு நாடுகளிலே அபிவிருத்தி செய்யப்பட்ட முறைகளைத் தன்னுடைய—டுக்குப் பயன்படும் முறையிலே பயன்படுத்துவது கஷ்டமான காரியமென்பது ஜப்பான், ரூஷியா, ஜெர்மனி போன்ற நாடுகளின் அனுபவத்தைக் கொண்டு அறியலாம். முயற்சியும் துணிந்து கருமமாற்றும் சக்தியும் இதற்கு மிக அவசியம். வியாபார மனோபாவமும், முயற்சியுடைமையும் அபிவிருத்திக்கு முக்கியம். இவை எளிதிற் கிடையா.

6. அலேஷியா போன்ற நாட்டின் பொருளியல் அபிவிருத்தியை ஆராய்ந்து அரசாங்கங்கள் அனுசரிக்கும் திட்ட விபரங்கள் குறிப்பிடப்படுகின்றன. தேசீய வருமானத்தையும் வளங்களையும் ஆராய்தல் ; பொதுத் திட்டத்தின் இலட்சியம் ; ஏற்படுத்தல் பணவீக்கத்தைத் தடுக்க வரிவிதிப்பு முறையைச் சீர்திருத்தல் ; சமூகப் பயனுள்ள மூலதனத் திட்டங்கள் ; தனியார் துறையிலே முக்கியமான திட்டங்களுக்குக் கடன் கொடுப்பதற்காக பணத்தாபனங்களை ஏற்படுத்தல் ; அதிக பணவீக்கத்தை உண்டுபண்ணுமல் மேலும் மூலதனத்தை ஆக்குவதற்கு வங்கிகள் பொருள் வழங்கும் முறையில் பிஸ்கால் மேலதிகத்தை உண்டாக்குதல். அரசாங்கங்கள், சர்வதேசத் தாபனங்கள், தனியார் வெளிநாட்டுக் கம்பெனிகள் என்பவற்றிடமிருந்து கடனையும், தொழில்நுட்ப உதவித்திட்டங்களையும் பெறுதல் ; பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்திப் புதிய ஒப்பியலான் அனுகூலங்களை அபிவிருத்தி செய்து ஒரு போக்கான உற்பத்திகளைக் குறைக்கும் முறையில் பாலதிசையிலுள்ள கைத்தொழில்களுக்கு ஆதரவளித்தல் முதலியன.

**ஆராய்ச்சிக்குரிய வினக்கள்.**

1. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்திலே லெளகீக இன்பங்களைப் புகழ்ந்து கூறப்பட்ட கூற்றை எல்லாரும் ஆதரிப்பார்களா ? இக்காலத்து ஒட்டு வேலையை வாழ்வின் இலட்சியமாக ஒருவர் கூறினுல் புத்தர் அதைப்பற்றி என்ன நினைப்பார் ? ஒட்டு வேலையைப் பழகிப்பின்னர் அதைத் தொழிலாகக் கொள்வதைப் பற்றி புத்தமதத்தைச் சார்ந்த இக்காலத்தவர் ஒருவர் என்ன நினைப்பார் ? இத்தகைய விடயங்களிலே பொருத்தமான கருத்து என்ன என்பதைப்பற்றி விஞ்ஞானிகள் நிச்சயிக்கமுடியுமா ? ஏன் நிச்சயிக்க முடியாது ?

2. 18 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த மேற்றிருணியார் பேக்ளி என்பவர் அயர்லாந்தின் அவலநிலையை விவரித்து ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். அதிற் கூறப்பட்ட விடயங்களைப் பார்க்குமிடத்து அக்காலத்து அயர்லாந்து இக்காலப் பிரமாணங்களைக் கொண்டு காணும்போது (பார்க்குமிடத்து) முன்னேற்றமடையாத நாடாயிருந்தது தெரிகிறது. டென்மார்க்கிலும் பார்க்க அயர்லாந்து வளமிக்க நாடாயிருந்தபோதிலும் சமீபகாலத்திலேதான் அது அபிவிருத்திப்பாதையிற் சென்றது. அயர்லாந்தை அபிவிருத்தியடைய என்ன செய்திருக்கலாம் ?

www.padippakam.com



**பொருளாதார வளர்ச்சியை அளத்தல்.**

வளர்ச்சியென்பது பல முகப்பட்டதொரு நடவடிக்கை. சகல அமிசங்களின் வளர்ச்சியையும், ஒரு இலக்கத்திலால் படம்பிடித்துக் காட்ட முடியாவிட்டாலும், நிசத்தேசீய உற்பத்தியே (தேறிய, அல்லது மொத்தமான) தனிப்பட்டதொரு விசேட அறிகுறியாகும். மொ. தே. உ. (GNP) உம் தே. தே. உ. (NNP) உம் ஒரே கதையையே கூறுகின்றன. மொ.தே.உ. தகவல்களே பெரும்பாலும் கிடைக்கின்றன. அக்காரணத்தால் இந்த அத்தியாயத்திலே மொ.தே.உ. இனையே சிறப்பாக ஆராய்வோம். ஆனால், சில அனுபந்தங்களையும் எச்சரிக்கைகளையும் கொடுக்க வேண்டும்.

1. யுத்தம் போன்ற சில கருமங்களுக்கு நிசமான மொத்தத் தேசீய உற்பத்தியின் தனிப்பெரிதளவு தேவை. ஆனால் பொது நன்மையை ஆராயுமிடத்து மொ.தே. உ. இனைக் குடிசனத்தொகை மாற்றத்தை அனுசரித்துக் குறைக்க வேண்டும்.

2. ஓய்வுகாலம் வாழ்வின் சிறந்த பொருள்களில் ஒன்றாகும். ஆனால் அது மொ.தே.உ. இல் சேர்க்கப்படவில்லை. ஒரு வாரத்திலே உள்ள தொழில் நேரத்தைக்குறைப்பதும், வருடத்தில் குறைவும், தொழிற்படையிலே பங்கு பற்றும் ஆயுட் கால அளவின் மாற்றமும், எல்லாம் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

3. மொ.தே.உ. இல் அதிகரிப்பு ஏற்பட, அதை மக்களிடம் பகுத்துக் கொடுக்கும் போது பாரதூரமான குறைவு உண்டாகுமானால், இதனை அபிவிருத்தியாக எவரும் கொள்ள மாட்டார். என்ன உற்பத்தி செய்யப் படவேண்டுமென்பதை யாருக்கு என்பதனிலிருந்து பிரித்துவிடக் கூடாதெனப் பல அவதானிகள் கூறுகின்றனர்.

4. விலைமட்டத் தகவலிலும், மொ.தே.உ. இலும் பண்டம் பணி என்பவற்றில் ஏற்படும் குண அபிவிருத்திகள் அச்சொட்டாகப் பதியப்படமாட்டா. இதனால் மிக்க அதிகமான பிரதிகூலப் போக்கு இதற்குக் கற்பிக்கப்படும். இதற்கு ஒரு கழிவு விடவேண்டும். (இப்பிரச்சினை முக்கியமானது. மக்கள் விரும்பும் பண்டங்கள் சம்பந்தமான மொ.தே.உ. உடன், திறமையின்றி நடத்தப்படும் ஒரு சர்வாதிகாரச் சமூகத்திலே மக்களுக்கு ஒதுக்கப்பட்ட அவர்கள் விரும்பாத சீரில்லாத பண்டங்களை ஒப்பிட்டால் இது தெரியவரும்).

5. மனித சமுதாயத்தின் சுபீட்சத்துக்கு ஏதுவான ஓரளவு பொருளியற் சார்பற்றவையும் முக்கியமான ஆன்மார்த்தப் போக்குடையவையுமான பண்டங்களைப் பண அளவைக் கொண்டு அளக்க முடியாது (பெரிய கார்கள், ஏனைய நுகர்ச்சிப் பொருள்கள் என்பன ஒரு சுபீட்சமான சமூகத்திலிருந்தால் அவை பணமதிப்பையே காட்டுமெனச் சிலர் வாதிப்பர்). மேலே கூறிய நிபந்தனைகளோடு மொ.தே.உ. இன் பண்புபற்றிய வேறு நிபந்தனைகளுக்கும் அடங்கியவகையில் நிச மொ.தே.உ. இனையே பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான தொகையளவான பிரமாணமாகக்

படிப்பகம்

www.padippakam.com




கொள்வோம். (இங்கே மொ.தே.உ. என்பது விலைமட்ட மாற்றங்களுக்கு ஏற்ப வீக்கம் குறைக்கப்பட்ட மொ.தே.உ. இனையே கருதுகிறோம்).

**வளர்ச்சியின் சுருக்கமான வரலாறு.**

இக்கால உலகம் பொருளாதார வளர்ச்சி என்னும் பண்பையுடையது. தேசங்கள் குடிசனத்தொகையிற் பெருகி வருகின்றன. அவை மொத்த உற்பத்தியாலும், தொழில் வாய்ப்பினாலும் வளர்ச்சியடைந்துள்ளன; வாழ்க்கைத்தரத்திலும் உயர்ந்துள்ளன. இன்றைய குடும்பத்தினர், தம் பேரர் காலத்திலும் பார்க்கச்சிறப்பான வாழ்க்கைத்தரமுடையவராயிருக்கின்றனர். அதிக ஓய்வு நேரம் இவர்களுக்குண்டு; சீவனத்துக்கு உழைக்கும் முறையில் மிகக் கஷ்டப்பட்ட நிலை மாறி எவ்வளவோ வசதிகளைப் பெற்றுள்ளன. இவையெல்லாம் பொருளாதார வளர்ச்சியின் அமிசங்களே.

**ஆள்வீத சுபீட்சம் உயர்வதையே முன்னேறிய நாடுகள் எதிர்பார்க்கின்றன.**




படம் 1. வருடாவருடம் உண்டாகும் வளர்ச்சி விகிதங்களிலே ஒப்பியலான சிறு வித்தியாசங்கள், பல காலமாகத் திரளும்போது படிப்படியாகத் தேசங்களின் ஒப்பியல்நிலைமையில், மாற்றமுண்டாக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் இன்று அதிககாலம் நோய்நொடியின்றி வாழ்கிறார்கள் என்பதே இந்தப்பொருளியல் அமிசங்களின் தாற்பரியமாகும்.[1] முன்னேற்றமான நாடுகளின் தனிநபர் முறையான நிச மொ.தே.உ. இல் உண்டான வளர்ச்சியை படம் 1 காட்டுகிறது. உலகிலே பிரிட்டன் தான் சுபீட்சமுள்ள நாடுகளிற் சிறந்ததாக ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் விளங்கிற்று. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சி வீதம் இங்கிலாந்திலும் எம்மை மேம்பாடடையச் செய்தது. பிரான்சும் ஜெர்மனியும் அரசியல் ஆட்சி முறையில் வித்தியாசப்பட்டிருந்தாலும் அவற்றின் அபிவிருத்தி ஒரே தன்மையாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாளித்துவ நாடுகளின் தபானங்கள் முன்னேற்றமான வாழ்க்கைத் தரத்தைக் குடிகளுக்கு வழங்கியபோதும், வளர்ச்சிவீதமானது ஒழுங்காயிருந்ததாகத் தெரியவில்லை. முதலாவதுபடம் இதனைக்காட்டுகிறது. முதலாவது, இரண்டாவது உலகயுத்தங்கள் பல விளைவுகளை உண்டாக்கி விட்டன. முதலாவது மகாயுத்தத்துக்கு முந்திய காலமே தலையிடாக் கொள்கை உச்சநிலையடைந்திருந்த காலம். இக்காலத்திலே முன்னேற்றமான நாடுகளிடையே வளர்ச்சி மந்தமாகிக்கொண்டு வந்ததெனச் சில சரித்திராசிரியர்கள் எண்ணினர். 1930 ஐ அடுத்து நிகழ்ந்த பெரிய வியாபாரமந்தமும் பலவிளைவுகளைப் பிரதானமாக ஐக்கிய அமெரிக்காவிலுமுண்டாக்கியது. இருந்தும் யுத்தத்துக்குப் பிந்தியவளர்ச்சி யுத்தத்துக்கு முந்திய வளர்ச்சியோடு ஒத்திருக்கிறது.

**வளர்ச்சி.** 1960 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலே பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிபற்றியும், சோவியத் நாட்டின் வளர்ச்சி பற்றியும் ஆராய்ந்தவர்கள் நமது வளர்ச்சி வீதம் திருப்தியுள்ளதா ? அதை எவ்வாறு மேலும் அபிவிருத்திசெய்யலாம் ? என்ற கேள்விகளைக் கேட்டனர்.

இக்கேள்விகளுக்குப் பலவிடைகள் கொடுக்கப்பட்டன.

**1. தலையிடாக் கொள்கை.** ஒரு மனிதனுடைய கால்கள் எவ்வளவு உயரமாயிருக்கவேண்டுமென்று ஆபிரகாம் லிங்கனைக் கேட்டபோது அவர் " நிலத்தை அடையக்கூடிய அளவு உயரமாயிருக்கவேண்டுமென்று "

[1]. பொருளாதார வளர்ச்சியின் பயனாக மேனாடுகளிலே அரசியற்சனநாயக வளர்ச்சி அதிகரித்துள்ளது. இந்தப் பொருளாதாரவளர்ச்சிக்கும் அரசியல்வளர்ச்சிக்கும் இடையிலுள்ள காரண காரியத் தொடர்பு என்ன என்பதை எவராலும் கூறமுடியாது. பொருளாதார வளர்ச்சியால் அரசியல் உரிமைகள் விரிவடைகின்றனவா ? வாக்குரிமை விரிவடைகின்றனவா ? அல்லது அரசியல் விடுதலை காரணமாகவே பொருளாதார விரிவு உண்டாகிறதா ? இதுவே காரணமானால் சமீப தசாப்தங்களிலே தனிப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளைத் தொகுதியினர் அடக்கியதால் உண்டாகிய பொருளாதார வளர்ச்சி துரிதமடைந்தமையை எவ்வாறு விளக்குவது ? இவையெல்லாம் தற்செயலாக வந்து கூடிவிட்டனவா என்பதைப் பொருளாதாரவகையில் விளக்க முடியாது. இவற்றின் காரணங்களையும் கூறமுடியாது. இத்தகைய விடயங்களை ஆராய்வதில் ஆராச்சியாளருக்குப் பொருளியலறிஞர் சில தகவல்களை உதவலாம்.

www.padippakam.com



பதிலளித்தாராம். பழைய பொருளாதாரத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் பின்வரும் கருத்தை உடையவராயிருக்கின்றனர்.

தற்கால நுகர்விலும் எதிர்காலத்துக்குச் சேமிப்பதிலும், ஒவ்வொரு நாளும் என்ன முடிவுகள் செய்யப்படுகின்றனவோ அவற்றால் நிர்ணயிக்கப் பட்டவகையிலே, தமது பொருளாதாரம் வளர வேண்டுமென்று குடிமக்கள் எவ்வளவுதூரம் நினைக்கிறார்களோ அவ்வளவுக்கே பொருளாதாரம் வளர்ச்சியடையவேண்டும்.

1950 ஐ அடுத்த காலத்தில் நிச மொ.தே.உ. இன் வருடாந்த வளர்ச்சி விகிதம் 4 வீதத்திலிருந்து $2\frac{1}{2}$ வீதமாக வீழ்ச்சியுற்றது. (புள்ளிவிபரந் தயாரிப்போர் இது உண்மையில் நடந்ததா என்பதைப் பற்றி நெடுநாள் விவாதிக்கலாம். வியாபாரச் சக்கரம், ஏனைய சிக்கலான கருமங்கள் என்பனபற்றித் திருத்தங்கள் செய்த பின் அவர்கள் நீண்ட விவாதம் நடத்தலாம்). அப்போது குடிமக்கள் தற்காலத்தில் நன்றாக வாழ விரும்புகிறார்களா விரைவாக வளர்ச்சியடைய விரும்பவில்லையா என்பதை அது காட்டுகிறது.[1]

இஃது இன்று பரவலாயுள்ள கருத்தன்று. ஆனால் இக்கருத்தை ஆதரிப் போர் கூறும் நியாயங்களை நாம் மரியாதையோடும் விஞ்ஞானநோக்குடனும் ஆராயவேண்டும்.

2. **மேலும் வளர்ச்சியடைவதற்கு அவசியமில்லை.** நாம் சுபீட்ச நிலையில் உள்ளவர்கள் ; மேலும் வளர்ச்சியடையவேண்டிய அவசியமில்லையெனவுஞ் சிலர் கருதுகின்றனர். அமெரிக்கா எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்கிறது, அது இலௌகீக விருத்தியைப் பெரும்பாலும் விரும்புகிறதென்று கூறுவோர், இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.

3. **மிக்க வேகத்தோடு முன்னேறுதல்.** சோவியத் ருஷ்யாவின் செல்வாக்கும், நாம் நடுநிலையிலுள்ள நாடுகளைப் பொதுவுடைமை நாடுகளாக மாறாமலிருப்பதற்குச் செய்யும் பிரயத்தனமுமே இந்தக் காலத்தின் வளர்ச்சியை முதலாவது பிரச்சினை ஆக்குகின்றன. பொரு ளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமெனக் கூறச் சிலர் விரும்புவர். வேறு சிலர் அரசாங்கம் மேலே குறிப்பிட்ட பிரச்சினையை எப்போதும் கருத்தில் வைத்திருக்கவேண்டுமெனக் கூறுவர். பின்னர் குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் கீழ்க்கூறப்படும் கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய தொகை அதிகமாகும்.

1. இத்தகைய எளனவார்த்தைக்குப் பழம்பொருளியலாளர் பின்வருமாறு பதில் கூறுவர்: "1929–1935 வரை மொ. தே. உ. இலுண்டான நட்டம் அமெரிக்கர் அக்காலத்தில் விருத்தி யடையவிரும்பவில்லை என்பதற்குச் சான்றாகும்" தகுந்த பணக்கொள்கைகளினாலும் வேறு கொள்கைகளினாலும் தன்னலத்திற்கேற்ற சூழ்நிலை உண்டாக்கப்பட்டால், பெரிய வியாபார மந்தமேற்பட்டிருக்க மாட்டாது ; வளர்ச்சியானது அடிப்படை விருப்பங்களையே பிரதி பலிக்கக் கூடியதாயிருக்குமென்று அவர்கள் கூறுவர்.

37—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



**4. பொது நடவடிக்கையாலும், தனித்துறை நடவடிக்கையாலும் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல்.**

எம்முடைய பொருளாதாரம் போன்ற கலப்புப் பொருளாதாரம் யுத்தத்துக்குப்பிந்திய கால வளர்ச்சியிலே திருப்தியடையக்கூடாது. அதை மேலும் வளர்ப்பதற்கான நேர்க்கணியமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதிக வளர்ச்சி எதற்காக வேண்டும் என்பதற்குரிய காரணம் பலவகைப்படும். இந்த விடயத்திலே எதிர்க்கருத்துடையவர்கள் கூட ஒன்று சேர்வதைக் காணலாம்

அதிகப்படியான வளர்ச்சிக்குரிய பல காரணங்களிலே சிலவற்றைக் குறிப்பிடலாம்: இராணுவ மயமானதும் பொருளாதார மயமானதுமான சோவியத் சவால்; தமது சொந்த அபிவிருத்தியிலே ஆவலுள்ள நடுவுநிலை நாடுகளுக்குக்கலப்புப் பொருளாதாரமே நல்லதென்பதை வற்புறுத்த முயலுதல்; எதிர்காலத்திலே பொதுசனங்களுக்கு அரசாங்கப் பண்டங்கள் பணிகள் அதிகம் தேவைப்படும். இந்தத் தேவைகளை மேலதிக மொ.தே.உ. இலிருந்து பெற்றுப் பூர்த்தி செய்தல் அரசியல் முறையில் இலேசாகும்; அதை விடுத்துத் தற்போதுள்ள மொ.தே.உ. இன் கீழ் வரி போட்டுப் பெறுவது கஷ்டமாகும் என்ற கொள்கையில் நம்பிக்கை; மேலதிகமாக இலௌகீகப் பொருள்களைப் பெறுவது அத்துணை முக்கியமன்றாயினும், ஒரு சமூகம் முன்னேறிக்கொண்டிருக்கும்போது அது சந்தோஷமுடையதாயிருக்கும்; முன்னேறாமல் இருந்தபடியே இருந்துகொண்டு அத்தகைய சூழ்நிலையிலே வளர்ச்சியடையக்கூடிய பாதுகாப்பு இயக்கங்களும் அதுபோன்ற இயக்கங்களும் விருத்தியாகும் என்ற நம்பிக்கை; தனிப்பட்டவர்களின் இன்பங்களை விடுத்து இனவாரியாக இயங்குவதில் ஆர்வங்கொண்டு அவ்வாறு செய்தல்; இவ்வாறு பல பல நியாயங்களைக்கூறலாம்.

சிறுபான்மையினர் தமக்குப் பொருளாதார வளர்ச்சியிலுள்ள ஆர்வத்தைக்காட்டிப் பெரும்பான்மையினரை ஊக்கப்படுத்துவதானால், அதை ஆதரிக்கக் கூறக்கூடிய நியாயங்கள்பின்வரும் போக்கிலேயிருக்கும்.

மக்கள் இரண்டு வகையிலே தேர்வு செய்கிறார்கள். ஒவ்வொன்றும் நல்லதே. தினமுஞ் சந்தையில் தமது டொலரைக் கொண்டு அவர்கள் கொள்வனவு விற்பனவு செய்கின்றனர். இது வளர்ச்சியென்ற அடிப்படையிற் பார்க்கும்போது சில சேமிப்புக்களையும் நுகர்வுகளையும் பற்றி முடிவு செய்கிறார்களென்பதே. அவர்கள் பிரதிவருடமும், அல்லது தவணைக்குத் தவணை சனநாயக அமைப்பிலுள்ள மக்கள், அரசியல் வாக்குரிமையைப் பயன்படுத்திச் சுதந்திரமான தெரிவுகளைச் செய்கின்றனர். இவ்வாறு தேர்தல் செய்யும்போது வளர்ச்சி விகிதம்பற்றித் தினசரிச்சந்தைத் தெரிவுகளைத் தீர்மானமாக்க விரும்புகிறார்களில்லையென்பது தெரிகிறது. பெரும்பான்மையினர் என்ற முறையிலே உயர்ந்த மொ.தே.உ. இற்கும், உயர்ந்த எதிர்கால நுகர்வுக்கும் அனுகூலமான பொதுக் கொள்கைகளைத்

படிப்பகம்

www.padippakam.com



தம்மீது சுமத்திக்கொள்ளுகிறார்கள் ; இந்தக் கொள்கைகள் தனியார் கொள்கையாகவோ, பொதுக்கொள்கையாகவோ இருக்கலாம்.

இத்தகைய நியாயம் பொருத்தமான நியாயமாயிருக்கலாம். ஆனால் இது தனிப்பட்டவரை அரசாங்கம் அடக்கி ஆளவோ, பெரும்பான்மையினரைச் சிறுபான்மையர் அடக்கியாளவோ ஓர் உபாயமாக இருக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**வளர்வது எப்படி ?** எதிர்காலத்திலே வரும் தசாப்தங்களிலே விரைவாக வளரவேண்டியது அமெரிக்காவின் பிரதானமான இலட்சியம், என்பதைப் பொருளாதாரவழியிலன்றி வேறு வழிகளால் நாம் அறிந்துள்ளோம் என்று வைத்துக்கொள்வோம். கலப்புச் சமூகம் தனது வளர்ச்சி வீதத்தை எவ்வாறு பெருக்கும் ?

இதற்குரிய விடைகள் வெளிப்படையாயில்லை. சர்வாதிகார ஆட்சியிலே நடப்பு நுகர்வுக்குரிய பொருள்களை நுகரவிடாது மூலதனம் ஆக்கமாக்குவது சுலபம். ஆனால் சுதந்திர சமூகம் தனது வளர்ச்சிவீதத்தை அதிகரித்துக் கொண்டே சுதந்திர முடையதாக இருக்க முடியுமா ?

இரண்டாம் பாகத்திலும் ஐந்தாம்பாகத்திலுமுள்ள முந்திய அத்தியாயங்களிலே கலப்புச் சமுதாயம், சுதந்திர ஆட்சி அமைப்பிலே அதனுடைய நிச மொ.தே.உ. இன் உயரக் கூடிய வீதத்தை எவ்வாறு துரிதப்படுத்தும் என்பதைக்காட்டினும். முதலிற் சில பயன் அதிகமில்லாத பரிகாரங்களை எடுத்துக் காட்டவேண்டும்.

வருடத்துக்கு 5 சத வீத இலக்கை ஏற்படுத்தினாலென்ன ? இதைச் செய்வது சுலபம். பலர் இவ்வாறு செய்துள்ளனர் என்பதை அடுத்த அத்தியாயத்திலே காட்டிடுவோம். ஆனால் வெறும் பேச்சினால் வளர்ச்சியுண்டாகாது. மக்களுடைய நுகர்ச்சிப் போக்கை மாற்ற வேண்டும். ஆனால் இஃது இலேசாகச் செய்யக்கூடிய விடயமன்று

வளர்ச்சி வீதத்தை உயர்த்துவதானால், சில சாதனங்களை மாற்ற வேண்டும். இதைப்பற்றி இந்நூலின் இரண்டாம் பாகத்திலே, உற்பத்தியைப் பற்றிக் கூறுமிடத்தும், முன்னேறாத நாடுகளின் அபிவிருத்தி பற்றிச் சென்ற அத்தியாயத்திலே ஆராய்ந்தபொழுதும் குறிப்பிட்டோம். குடிசனத்தின்தொகை அதன் பண்பு, இயற்கைவளம், பலவகையான மூலதனப் பொருள், தொழில்நுட்ப அறிவு என்பன மாறவேண்டும். வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு இதுவே திட்டம்.

**தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் ஆராய்ச்சியை விருத்தி செய்ய வேண்டும்.**

வளர்ச்சிக்காக தனி விஞ்ஞானம், பிரயோகவிஞ்ஞானம், அபிவிருத்தி, பொறியியல், நிர்வாகம், செயலாட்சி என்பவற்றிலே விரிவான ஆராய்ச்சி செய்ய வேண்டும். உற்பத்திவகையில் இவை உயர்ந்த சமூகப் பங்கு லாபத்தைக் கொடுக்கலாம். அமெரிக்க உற்பத்தியின் வரலாற்றை ஆராய்ந்த

www.padippakam.com



போது, மூலதனம், தொழிற்சக்தி என்பவற்றைவிடத் தொழில் நுட்ப உற்பத்தித்தன்மை பெருகி வளர்ச்சி வீதத்துக்குக் காரணமாயிருந்த தென்பதைப் படம் 1 இன் மூலம் காட்டினோம். அதிக குடிகளும் 17 ஆம் நூற்றாண்டில் நிலவிய பொறிகளுமிருந்தாற் போதா. அத்தகைய அனுகூலங்கள் மேபிளவர் யாத்திரிகர் தாம் குடியேறிய புதிய நாட்டிலே வாழ்வை ஒழுங்கு செய்த போதிருந்த வாழ்க்கைத் தரத்தையே இவை கொடுத்திருக்கும். இவற்றுக்குமேல் போக முடியாது.

வியாபாரத்தலங்கள் அதிக ஆராய்ச்சியை நடத்துகின்றன. அவற்றை மேலும் தூண்டவேண்டும். தனக்கு எத்துணை ஆராய்ச்சி பயன்படுமென்பதை நிர்வாகம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆராய்ச்சி பற்றிப் புதிய அரசாங்கக் கொள்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அதிக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

அரசாங்கம் இங்கேதான் தலையிட முடியும். 1940 துவக்கம் இந்த நாட்டிலே நடத்திய ஆராய்ச்சிகளுக்கு அரசாங்கமே நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி செய்துள்ளது. இந்த உதவியை மேலும் அதிகரிக்கலாம். ஆனால் இது அரசாங்கத்தின் கடமையா என்பதற்குச் சமாதானம் கூறமுடியாது. பொருளாதாரச் சார்பான சில வெளி விவகாரங்கள் இருந்தால் அரசாங்கம் தலையிடவேண்டும் என்பதற்கு ஒன்பதாம் அத்தியாயத்திலும் 22 ஆம் அத்தியாயத்திலும் காட்டப்பட்ட விடயங்களைக் கொண்டு அறியலாம். இந்த "வெளி விவகாரங்கள்" ஒவ்வொரு முயற்சியாளரும் தமது தனிப்பட்ட நன்மையையும், பணச் செலவையும் கணக்கிடும்போது சமூகத்துக்குள்ள பண நன்மையையும், பணஞ் சாராத நன்மையையும் செலவையும் காட்டக்கூடியனவாயிராத வகையிற் காணப்படும். வெளியிலிருந்து வரும் பொருளாதாரக் குறைவுக்கு உதாரணம் புகையினாலுண்டாகும் துன்பம். இதனைப் பொது நடவடிக்கைமூலம் தடைசெய்ய வேண்டும். அதுபோலவே ஆராய்ச்சி, வெளியேயிருந்துவரும் பொருளாதார நிறைவாகும். இதனையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். பின் வரும் தற்பேச்சைக் கவனிக்க.

நான் மேலதிகமான ஆராய்ச்சி அலகுக்குச் செலவு செய்யும் டொலரை, அந்த ஆராய்ச்சியின் பெரும்பாலான பயனுக்குச் சமனாகச் செய்வேன். அப்போது என் ஆராய்ச்சி விரைவிலே எனது தொழிலில் இறங்கியுள்ள மற்ற உற்பத்தியாளருக்கும் உதவியளிக்கும் என்பதை உணர்வேன். அதனாற் சமூகமும் பயனடையும். எனவே சமூகத்துக்குரிய நன்மை எனக்குள்ள நன்மையிலும் அதிகமாகும். இந்த வெளிப்படையான நன்மையால், ஆராய்ச்சிக்கு அரசாங்கம் உதவி புரியவேண்டியதவசியம். சர்வகலாசாலைகள், கம்பெனிகள், ஆய்கூடங்கள் என்பவற்றுக்கு அரசாங்கம் நேரடியாக உதவவேண்டும். ஆராய்ச்சிச் செலவுகளை வரியில்லாதனவாக்க வேண்டும்.

எனவே ஆராய்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடியதொரு சாதனமாகும். ஆராய்ச்சி வளர்ச்சியடைய ஊக்கமளித்து உதவவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



**கல்வி, பயிற்சி என்பவற்றை விரிவடையச் செய்தல்**

இயந்திரம் சமூகத்துக்கு மூலதனமாவதுபோலவே குடிமக்களும் கருதப் படுவர். தளவாடங்களிலே முதலீடு செய்தால் வருடத்திலே 10 அல்லது 15 வீத வட்டிவரும். மக்களிலே முதலீடு செய்தால் அதாவது கல்வி வழங்கி முதலீடு செய்தால் பொருளாதார உற்பத்தியை அது பெருக்கும். அதனுல் கல்வியில் அதிகம் முதலீடு செய்து வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும். (மக்களுக்குக் கல்வியளிப்பதற்குப் பொருளாதார சம்பந்த மில்லாத வேறு பல காரணங்களுண்டு).

கல்விப்பயிற்சி சமூக விருத்திக்கு உபயோகமான முதலீடாயிருந்தால், தனி யார் ஏன் அத்தகைய முதலீடுகளிலே ஈடுபடுவதில்லை ? இதற்குப் பதில் பலர் இவ்வாறு செய்கிறுர்கள் என்பதே. 20,000 டொலர் வருமானமும், 100,000 டொலர் சொத்துமுள்ள சட்ட அறிஞர் ஒருவர், தனது மகனின் கல்வியில் முதலீடு செய்வார். ஏனெனில் ஜெனரல் மோட்டர்க் கம்பெனியிற் பங்குகளை வாங்குவதிலும் இதுவே நல்ல முதலீடென்பது அவருக்குத் தெரியும்.

வறிய குடும்பத்திலேயுள்ள கெட்டித்தனமான ஒரு பையன் விடயம் எப்படி ? அவனுடைய கல்வியிலே முதலீடு செய்வதற்குத் தந்தையிடம் டணமில்லை. முதலுள்ள ஒருவன் அந்தப் பையனுடைய கல்வியில் முதலீடு செய்தால், வேறு முதலீடுகளில் கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பெற மாட்டான். அடிமைகளை எங்கள் சட்டம் அனுமதிப்பதில்லை.

கல்வி உபகார நிதியை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகிறது. மேலும் மாணவர் படிப்பதற்குக் கடன் கொடுக்கவும், அவர்கள் உழைத்துக் கட னைக் கட்டக்கூடியதாகவும் நிதியமைக்க வேண்டும். இவற்றையெல்லாஞ் செய்த பின்னரும் அரசாங்கம் கல்வி விருத்திக்கு உதவி செய்ய முடியு மானுல், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றுக்கு உதவி செய்யலாம்.

**உயர்ந்த வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்**

பாவஞ் செய்வதை மக்கள் விரும்பாதவாறே வேலையில்லாத்திண்டாட் டத்தையும் அவர்கள் விரும்பமாட்டார். வேலையின்றியிருப்பவர்க்கு வேலை கொடுத்துத் தொழில் நிலையங்களை உண்டாக்கினுல் உற்பத்தி பெருகும். எனவே நியாயமான அளவு பூரண வேலை வாய்ப்பை உண்டாக்குவது விரைவான வளர்ச்சிக்குரிய, விவாதத்துக்கு இடங் கொடாத ஒரு வழி யாகும்.

6 சத வீத வேலையின்மையை 3 சத வீதமாகக் குறைத்தால், அது நல்ல தொரு முயற்சியே. மனிதர்க்கணக்கிலே அது நல்லவிடயமே. உற்பத்திக்கணக் கிலே நாம் 94 சத வீதத்திலிருந்து 97 சத வீதத்துக்குச் செல்லுகிறேம். 97/94 அல்லது 3/94 வீதத்தை அலட்சியப்படுத்தக்கூடாது. இது 3/6 அல்லது 50 சத வீதத்தைப் பார்க்கிலும் உற்பத்தி இலாபத்தை பற்றிய கருத்தை அச்

www.padippakam.com



சொட்டாகக் கொடுக்கிறது. இந்த இலாபம் உயர்–வேலைவாய்ப்புக் கொள்கையால் உண்டாவது. ஒரு வருடத்திலே வேலையின்மையை 6 இலிருந்து 3 சத வீதமாகக் குறைத்தல் நியாயமான குறைவே. நாம் 3 சதவீதம் (அல்லது 3/94) வருடாந்த வளர்ச்சி வீதத்துக்கு மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளுகிறோம். உதாரணமாக அதனைத் தற்காலிகமாக வாடிக்கையான 4 சத வீதத்திலிருந்து வருடமொன்றுக்கு 7 சத வீதமாக உயர்த்துகிறோம். ஆனால் இத்தகைய உயர்வீதம் தற்காலிகமானதே. பூரண வேலை வாய்ப்பு நிரந்தரமான நிலை. அடுத்த வருடத்திலே நாம் மறுபடியும் 4 வீத வளர்ச்சிக்குத் திரும்புவோம். ஏனெனில் தொழிலாளர் சப்பிளை மேலும் கிடையாது.

உயர் வேலை வாய்ப்பு வளர்ச்சிக்கு அவசியம். இங்கே கூறிய விடயங்கள் அதன் முக்கியத்துவத்தைக் குறைக்கமாட்டா.

**புதியதும் பழையதும் இணைந்து தொழிற்படல்**

கலப்புப் பொருளாதாரம் தனது வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கும் முக்கியமான வழி ஒன்றுண்டு. இதைப் பற்றி முன்னர் பல இடத்திலே குறிப்பிட்டுள்ளோம். பிரதானமாக இரண்டாம் பகுதி 17 ஆம் அத்தியாயத்திலும் நாலாம் பகுதி 29 ஆம் அத்தியாயத்திலும் குறிப்பிட்டுள்ளோம். கலப்புப் பொருளாதாரத்துக் குடிமக்கள், பிஸ்கால் பணக்கொள்கைகளைப் பொருத்தமாகக் கலப்பதாலே தமது பூரண—வேலைவாய்ப்பு வசதியுள்ள தேறிய தேசிய உற்பத்தி அமைப்பை மூலதன ஆக்கத்திலே திருப்பி நடப்பு நுகர்ச்சியிலிருந்து அப்புறப்படுத்தி விடலாம்.

இந்த உபாயத்திஞல் அது தனது வளர்ச்சியையே மாற்றலாம். இந்த நவீனப் பழமை உபாயம் பயனற்றதாயிருக்குமாஞல், வளர்ச்சி வீதத்தை மாற்றும் சக்தி கலப்புப் பொருளாதாரத்துக்குக் கிடையாதென்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

இதிலே உண்மையிற் சம்பந்தப்பட்ட செயற்பாடு என்ன ? இரண்டாம் பகுதியிலே கூறிய விடயத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவரலாம். பெடரல் ரிசர்வ் பணக்கொள்கை, கடன் வசதியை அருந்தலாக்கி முதலீடு செய்வதையும் மூலதன ஆக்கத்தையும் நிறுத்தலாம். அல்லது வட்டி வீதங்களைக் குறைத்துக் கடன் வசதியைப் பெருக்கி, மூலதன ஆக்கத்தைத் தூண்டும் வகையில் விசாலமான பணக்கொள்கையை மேற்கொள்ளலாம்.

வட்டி வீதத்தை ஆறு வீதமாகக் குறைத்தால், 10 வீதந் தானும் இலாபந் தராத மில்லின் செலவைக் குறைக்க இலாபகரமான முதலீட்டை உண்டாக்கலாம். அல்லது ஒரு கம்பெனி உள் விவகாரநிதிக்குத் தட்டுப்படுமாஞல், பொறியியலாளருக்குத் தேவைப்படுவதும், சில வருடங்களிலோ அதற்குக் குறுகிய காலத்திலோ இலாபமீட்டக்கூடியதுமான அதிகப்படிச் சீர்திருத்தங்களைக் கொடுக்க முடியாதிருக்கும். ஆஞல் வங்கிகள், பத்திரம் வாங்குவோர், காப்புறுதிக் கம்பெனிகள், பங்குதாரர்களாக வரவிரும்புவோர் ஆகியோரிடமிருந்து அதிக நிதி பெறக்கூடுமாஞல் அதுவும்

படிப்பகம்

www.padippakam.com



இலேசான கடன் வசதியாயிருந்தால், கம்பெனி அத்தகைய உற்பத்தி பூர்வமான முதலீடுகளில் இறங்கலாம்.

இந்த நடவடிக்கைக்கு, அதாவது வட்டி வீதங்கள் குறைந்து கடன் வசதி இலேசாகும் போது சமூகம் மேலும் மேலும் மூலதன ஆக்கத் திலீடுபடுவதை "மூலதனம் ஆழமாகுதல்" என்று ஐக்கியராச்சியத்தின் திறைசேரி நிபுணரான சேர். ரால்ப் ஹோட்ரி கூறினர்.[1]

மூலதனத்தை ஆழமாக்குதல், மிக முக்கியமானதொரு விடயமாகும். உண்மையான மூலதன ஆழமில்லாவிட்டால் சோவியத் ஆட்சியாளர் மக்கள் தமது நுகர்வுகளை, எதிர்கால மூலதனப் பண்டங்களுக்காகக் குறைத்துவிடவேண்டுமென்று கூறுவதிலே பொருளில்லை. மேலதிகமான மூலதனப் பொருள்கள் சமூக உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் ஆக்கத்தைக் கொடுக்காவிட்டால், அவற்றைப் பெறுவதற்கு ஏன் எதையும் தியாகஞ் செய்யவேண்டும் ?

மூலதனத்தை ஆழமாக்குதல் கலப்புப் பொருளாதாரத்திலே அத்துணை இலேசான விடயமன்று. இருந்தும் அது புதிய பழைய தளரா நம்பிக்கை யார்வம் கொண்டுள்ள ஒரு மாதிரிப் படிவத்தில் எவ்வாறு செயற் படுகிறதென்பதைக் காட்டுவோம்.

**கடினமான பிஸ்கால் கொள்கையும், விரிவுள்ள பணக்கொள்கையும்**

உயர்ந்த வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனக் கொள்க. (இதன் தாற் பரியமென்ன ? 97 வீதத்தொழிலாளர் ஒரு சிறு தொகை வேலை மாறும் கருமத்துக்கு விட்டுவிடலாம்). இத்தகைய உயர்ந்த வேலைவாய்ப்பு உற்பத்தி யில் ஒரு பகுதி நுகர்விலிருந்து பிரித்து மூலதன ஆக்கத்துக்குப் பின் வரும் இரட்டைக் கொள்கைகளால் ஒதுக்கப்படலாம். ஒருபுறத்திலே பணக்கொள்கை விரிவடைய வேண்டும் ; இது மூலதனத்தை ஆழமடையச் செய்வதோடு மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும். மறு புறத்திலே இத்தகைய முதலீட்டு அதிகரிப்பு பணவீக்க இடைவெளியை உண்டாக்கு மாதலால், கடினமான பிஸ்கால் கொள்கையை அனுசரிப்பதால் இதனை நீக்கலாம். இது வரிவீதத்தை உயர்த்தி, அரசாங்கச் செலவைக் குறைக்க வேண்டும். இதனால் வரி கட்டிய பின்னர் மக்களிடம் மிஞ்சும் வருமானம் குறையும் ; அதனால் நுகர்ச்சியைக் குறைப்பர் ; அதன்பயனாக உண்டாகும் சேமிப்பு, முதலீட்டுக்கு உதவும் ; பண வீக்கம் உண்டாகாது.

இவ்வாறு இந்தக் கொள்கைகளை ஒன்று சேர்ப்பதால் ஒரு சுதந்திரச் சமூகம் மூலதன ஆக்கத்தையும் வளர்ச்சியையும் மாற்றும்.

யேல்ஸ் பொருளாதார நிபுணரான பேராசிரியர் ஜேம்ஸ் டோபின் இதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறர் :—ஐக்கிய அமெரிக்கா விரைவாக

[1] மூலதனம் ஆழமாகுதல் என்பதுபோல அதற்கு இணையானது மூலதனம் விரிவடை தல். குடிசனத் தொகை பெருகும்போது பொருளாதாரம் நடைமுறையிலுள்ள வசதிகளை இருபடியாக்குகிறது. இதுவே மூலதனம் விரிவடையச் செய்தலாகும்.

www.padippakam.com



வளர்ச்சியடைய வேண்டுமானுல், தனியார் நுகர்ச்சிக்கு மொ. தே. உ. (GNP) இல் 65 சத வீதத்தைச் செலவு செய்யும் பூரண வேலை வாய்ப்புப் பொருளாதாரத்தை 60 சத வீதமாகக் குறைத்து எஞ்சும் 5 சத வீதத்தை மூலதன ஆக்கத் துக்குப் பயன்படுத்தி தேறிய மூலதன ஆக்கத்தை அதிகரிக்கவேண்டும்.[1] 1960 இல் சனுதிபதி ஐசன்ஹோவர், தனது பொருளாதார ஆலோசகர் சபையின் உதவியோடு தயார் செய்த பொருளாதார அறிக்கையும் இத்தகைய கருத்தையே தெரிவித்துள்ளது. அத்தகைய நிலைமையில் பணம் எளிதாகக் கிடைத்தால், அதைப் பணவீக்கத்தாலுண்டானதெனக் கூறக் கூடாது. அப்பண வீக்கத்தைத் தடுப்பதற்கு பணவீக்கத்தடுப்பு பிஸ்கால் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்கள் எப்பொழுதும் சமூகத்தின் நுகர்வு நாட்டத்தை விருத்தி செய்ய விரும்புமேயன்றிக் குறைக்க விரும்பமாட்டா. அவை இந்த முறையைக் கண்டிக்கலாம். ஆனுல் அவற்றுக்கு நாம் கூறக்கூடிய தென்னவென்றுல், 13 ஆம் அத்தியாயத்திலே எடுத்துக்காட்டிய "சிக்கனத்தின் முரண்" என்றபடி இதனுல் ஏற்படக்கூடிய அதிக சிக்கனம் அழிந்துபோகக் கூடாதென்பதே. நுகர்வுக்குப் புறம்பான மாற்றம், பூரணவேலைவாய்ப்பு நிலையை ஆபத்துக்குள்ளாக்காமற் செய்யப்படும். முதலீட்டுச் செலவிலே ஏற்படக் கூடிய கடன்வசதிகளால் உந்தப்பட்ட நிலையுண்டானுற்றுன் இறுக்கமான வரவு செலவுத்திட்ட மேலதிகங்கள் உண்டாகும்.

மேலே கூறிய நடைமுறை செயற்பட முடியாவிட்டால், கலப்புப் பொருளாதாரம் விரைவாய் வளர்ச்சியடைவது தடைப்படும். விதியின் பிரகாரம் உண்டாகும் வளர்ச்சி வீதத்தையே அப்போது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[1] வளர்ச்சியைத் தூண்டக்கூடிய பிஸ்கால் கொள்கை நுகர்ச்சியைக் குறைக்கும் இது வரியின் தொகைத் தன்மையாலுண்டாகும். முதலீட்டைத் தூண்டி வரியின் தன்மையை மாற்றுவதனுலும் வளர்ச்சியைத் தூண்டலாம். வாக்காளர் கடுமையான வரியை விரும்ப மாட்டார். ஆனுல் முதலீட்டைத் தூண்டக்கூடிய சில திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்கலாம். இவற்றுள் முக்கியமானது தேய்மானம். இதன்படி கம்பெனிகள் தமது தளவாடம் பொறி என்பவற்றின் தேய்மானத்தைப் பிரமாதப்படுத்திப் பெருந்தொகை போடுவார்கள். அரசாங்கம் வரிக்காக அனுமதிக்கும் இந்தத் தேய்மானத்தைக் கழிக்கலாம். பல நாடுகள் இத்திட்டத்தைப் பரீட்சித்துப் பார்த்துள்ளன. நம்மிலும் பார்க்க அந்நாட்டு அரசாங்கங்கள் தாராள சுபாவமுடையனவாய் விரைவான தேய்மானத்தை வழங்கியதோடு புதிய மூலதனப்பண்டங்களை வாங்கினுல் முதலீட்டுக் கழிவையும் கூட வழங்கியுள்ளன.

இத்தகைய முதலீட்டுக் கழிவு விடயத்திலுள்ள ஒரு பிரச்சினை என்னவென்றுல், வேறு இடங்களில் முதலீடு செய்யக்கூடியவர்கள் விடயத்தில் அனுகூலங்கள் செய்யப்படுவதே. புதிய முதலீடு செய்யாமலே வரிச்சலுகை பெறக்கூடியவர்க்கும் அது வழங்கப்படுகிறது. இத்தகைய உபாயங்கள், "வரியிலிருந்து தப்பும் உபாயங்கள்" என வழங்கப்படும். இதன் கருத்து இவை சட்டவிரோதமானவையல்ல; வெறும் சலுகைகள் என்பதே. இது சில விசேட வகுப்பைச் சேர்ந்தவர்க்கு வழங்கப்படுவது. ("முதலாளித்துவம் இந்தச் சலுகைகளுக்கூடாகவே மூச்சுவிடுகிறது" என்ற கூற்றை ஞாபகத்திலே கொள்க). நேரடியாக முதலீட்டைத் தூண்டும் வரி மாற்றங்கள் செய்யப்பட்டாலென்ன படாவிட்டாலென்ன, புதிய பழைய பொருளாதாரத்திட்டம் முதலீட்டு விரிவிலே பெரிதும் தங்கும். இதற்கு வட்டி குறைவாயிருப்பது பொருளாதார வாய்ப்புடையதாகும்.

www.padippakam.com



அத்தகைய தொரு நிலைமை உண்டாகுமானுல், விடயங்களை இருந்த இருந்தபடி பார்க்கும் விஞ்ஞானி அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.[1]

நாம் விரும்பும் வளர்ச்சி வீதத்தைக் கொடுப்பதற்கு பண இலகுவை பிஸ்கால் கடுமையோடு பிணைக்கும் இத்திட்டத்தின் வெற்றிக்கு எதிரான காரணங்களெவை ?

**நவீன புராதன வளர்ச்சி ஒழுங்குக்கு நிபந்தனைகள்**

**1. அமெரிக்காவின் சர்வதேசப் பற்ருக்குறை.** 34 ஆம் அத்தியாயம் போன்ற முந்திய அத்தியாயங்களிலே அமெரிக்கா 1960 இல் நீண்டகாலம் நிலவக்கூடிய தங்கவெளியேற்றப் பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியிருக் குமென எடுத்துக்காட்டினேம். உள்நாட்டிலே வட்டிவீதம் குறையு மானுல் அங்கே முதலீடு செய்த வெளிநாட்டவர் தமது முதலைத் தங்கமாக எடுத்துக்கொள்ளப் பார்ப்பர். எம்மிடமுள்ள தங்கம் எல்லைக்குட்பட்டதா யிருப்பதால், கடன்வசதி நிலையை இலேசாக்கும் கொள்கை 1960 இல் சர்வதேசக் கொடுப்பனவுகளால் முன்னிருந்ததைவிட அதிகம் தடைப் படும்.

**2. மூலதனம் ஆழமாதலில் சங்கடம்.** வளர்ச்சியை அதிகரிக்க மேற் கொள்ளும் புதிய பழைய கோட்பாட்டு கொள்கை சித்தியடைவதற்குள்ள மற்ருெரு தடை பின்வருமாறு : (அ) குறுந்தவணையிலே மூலதன வளர்ச்சியைத் துரிதப்படுத்த, விரிவடையும் கடன்வசதியால் முடியாவிட்டால் என்ன நடக்கும் ? (ஆ) குறுந்தவணையிலே உயர்ந்த உற்பத்தித்திறன் புதிய தளவாடம் முதலியவற்றை அது உண்டாக்குவதில் சித்திபெற்ற போதிலும், அத்தகைய மேலதிகத் திறமையும் தளவாடமும் வருங் காலத்திலே உயர்ந்த மூலதன ஆக்கத்தை உண்டாக்கத் தடையாயிருந் தால் என்ன நடக்கும் ? அதாவது வைதிகமான பெரிய வங்கியின் விரி வாக்கற் கொள்கைகள், மூலதனத்தை ஆழமாக்க முடியாவிட்டால் என்ன நடக்கும் ?

இஃது ஒரு சாத்தியக்கூறே. நடப்பு உற்பத்தி, தொழிற் சத்தி என்பவற் றுக்குள்ள தொடர்புக்கு அதீதமாய் மூலதனப்பண்டம் பெருகுமானுல், மேலதிக மூலதனத்தைப் பயனற்றதாக்கிவிடும். புதிய முதலீடு எல்லா மூலதனத்திலும் உள்ள வட்டியை விரைவாகப் பூச்சியத்துக்குக் கொண்டு வருமானுல், மூலதனம் ஆழமாதல் முடியாது. அப்போது ஆரம்பத்தி லேயே நவீன பழம் கொள்கை முறிவடையும்.

1. பின்வரும் தலைவிதி சார்பான காரணங்கள் பல பொருளாதார அபிவிருத்தி இலக்கியங் களிலே காணப்படுகின்றன. சமூகத்தின் மூலதனக் கையிருப்பு ஒருவருடத்துத் தேறிய தேசீய உற்பத்திக்குச் சமனுயிருந்தால், வருடம் 2 சத வீதம் வளரும் குடிகளுக்கு வேலை வாய்ப்புத் தேட, மூலதனம் வேண்டுமானுல் அது தனது வருவாயில் இரண்டு வீதத்தைச் சேமிக்கலாம். ஆனுல் சமூகத்தின் மூலதனம் வருடாந்த வருமானத்திலும் 2½ சத வீதம் அதிகமானுல், வருமானம்—சேமிப்பு வீதம், குடிசனத்தொகை வீதத்தில் 2½ சத வீதமாயிருக்க வேண்டும், அதாவது இச்சந்தர்ப்பத்தில் 5 சத வீதமாகும். எல்லாரும் வேலை வாய்ப்புத் தேட இது அவசியம்.

www.padippakam.com



ஆனால் சோவியத் ரூஷ்யாவின் திட்டப்பட்ட பொருளாதாரத்தைப் பார்க்கும்போது, மேலதிக மூலதனத்தை உபயோகிக்கும் தொழில் நுட்பமுறைகள் உண்டென்பதையுணர்வதோடு, நீண்ட முறைகளுமுண்டென்பது தெரிய வரும். ஒரு தொழிலிலே போதிய அளவு திறமை இருக்குமானால், வட்டி குறைவான வளங்களிருக்கும் பட்சத்தில் செலவைக் குறைக்கக் கூடிய முதலீடுகளிருந்தே தீரும். பொறியியல் தொழில் நுட்பங்களை ஆராய்ந்தால், அதிக மூலதனத்தைப் பயன்படுத்தக்கூடிய பல மாற்று முறைகளுண்டென்பதை அறியலாம். இவ்வாறு நவீன பழம் பொருளியல் வாதிகள் கூறுவர்.

ஆனால் எமது பொருளாதாரம் திட்டமிடப்பட்ட பொருளாதாரமன்று. முதலாளித்துவ முறையிலே தனிப்பட்ட முயற்சியாளருக்கு ஆபத்துண்டாகும் தன்மையைப் பார்க்குமிடத்து கடன் வசதியை இலேசாக்கலும், வட்டியை மலிவாக்குதலும், மூலதனத்தை ஆழமாக்குதலைத் தூண்டமாட்டாது. அத்தகைய ஆழமாக்கல் இயற்கையாகச் செயல்படுமென்று தொழில்நுட்பம் கருதினாலும், அது நடைபெருது. இது நடக்குமானால், நவீன பழமை வாதிகள் பின்வருமாறு கூறுவர் :—"இச்சந்தர்ப்பத்திலே, மரபுவழுவாத மத்தியவங்கிப் பணவிரிவில் தங்குதலோடு வரி அனுகூலம், நிதி என்பவற்றின்" புதிய திட்டங்களும் உதவி செய்ய வேண்டும். வியாபாரிகளுக்குத் தோன்றும் அபாயங்களைப் போக்கப் பொது உத்தரவாதங்கள் அதிற் சம்பந்தப்படும். அவை அவர்கள் "வளர்ச்சிக்கேதுவான மூலதனத்தை ஆழமாக்குவதை ஊக்குவிக்கும்". இங்கே திட்டமான முடிபைக் கூறமுடியாது. சமூகச் சிக்கனத்துக்குத் திரும்புதல் பற்றிய திட்டங்களிற் பல, புதிய மூலதன ஆக்க வருவாய் (வரிக்கு முந்தியது) வருடத்திலே 15 வீதமோ அதிலுங் கூடவோ இருக்கும் என்பதைக் குறிக்கும். சமூகமானது மூலதனத்தினல் நிறைந்திருக்கிறதென்று கூறுவதற்குச் சான்றில்லை (அந்தநாள் வருமானல், கடினமான பிஸ்கால் கொள்கைகளுக்கு அவசியம் இடையாது. நவீனபழம் விதியமைப்பால் எவ்வித கெடுதியும் விளையாது).

**3. செலவு-உந்தல் பணவீக்கப் பிரச்சினைகள்.** தற்காலத்துக் கலப்புப் பொருளாதாரத்திலே செயற்படும் விற்பனையாளர் பணவீக்கத்தின் "செலவு-உந்தற்" செயற்பாடு உண்டாகும் பிரச்சினையே வளர்ச்சித் திட்டத்துக்குத் தடையாயுள்ள ஒரு பெரும் காரணமாகும். தேவை வகையிலுள்ள பணவீக்கம், பணவாட்டங்களைத் தவிர்ப்பதானல் அதிகாரிகள் பணச்செலவு பிஸ்கால் செலவு என்பவற்றைத் திறந்து விடலாம், அல்லது மூடிவிடலாம். எந்தத்திசையிலே நல்ல கொள்கையுண்டென்பதை முன்னேறியே அறிந்து அவ்வாறு செய்ய வேண்டும். செலவு-உந்தல் நிகழ்ச்சி கொள்கை அமைப்பதை மயக்கக்கூடும். பொருளாதாரம் பெரிதும் மந்தமாயிருக்கும்போது பணவீக்கமான விலையேற்றங்கள், அதிக விரிவோ குறைந்த விரிவோ நல்ல பொதுக் கொள்கைக்கு வாய்ப்பானது என்பதைப் பற்றி ஐயங்களை உண்டாக்கும்.

www.padippakam.com



புதிய பணவீக்கம் ? 1955 இலிருந்து 1958 வரை விலைவாசிகள் ஏறின. மொத்த விலைகள், விவசாய விலைகள், வாழ்க்கைத்தரத்துக்கான விலைகள் என்பனவெல்லாம் ஏறின. முக்கியமான பொருள்களின் விலைமாத்திரம் ஏறவில்லை.

மாதாமாதம் விலையேற்றத்தைக் கேட்ட எல்லாரும் சஞ்சலமடைந்தனர். இதற்குக் காரணமென்ன ? அபரிமிதமான தேவையா ? ஒவ்வொருதொழிலையும் பார்க்குமிடத்து அதிக தேவையிருந்ததாகத் தெரியவில்லை. கார்கள் விலைப்படவில்லை, விவசாயத்தளவாடங்களும் அப்படியே. டெலிவிஷன் கருவிகளுமப்படியே. மக்கள் இழக்கமான கருவிகளை வாங்கினர். உருக்குத் தொழில் 80 வீத சக்திக்குக் குறைவாகவே உற்பத்தி செய்தது. இவ்வாறே மற்றத் தொழில்களிலும்.

விலை அதிகரித்தது. எனவே நிபுணர்கள் இது தேவை-இழுத்தலால் அன்று ; சம்பள-உந்தலினுலாயிருக்கவேண்டுமென எண்ணினர்.

வருடாவருடம் சம்பளம் உயர்ந்தது. இது உற்பத்தியிலும் அதிகமாக இருந்தது. வேலை நிறுத்தங்களும் அதிகம் நிகழவில்லை. தொழிற்சங்கங்களிலே சேராத தொழில்களிலும் சம்பள-உந்தல் உண்டானது. தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழில்களைப் பற்றி அவதானிகள் பின்வருமாறு கூறினர் : "உயர் சம்பளத்துக்குத் தொழிலாளர் வாதாடும்போது முதலாளிகள் அதைக் கொடுத்து விடுகிருர்கள். அவர்கள், உயர்விலையிலே உற்பத்தி செய்யப்படும் பண்டங்களுக்குக் கூட்டுத் தேவையை நிலைநிறுத்தும் வகையிலே திறைசேரியும், பெடரல் அரசும் நடவடிக்கையெடுக்கும் என்ற எண்ணத்தோடு முதலாளிகள் செயல்புரிகின்றனர். அதனுல் அவர்கள் சம்பள உயர்வைக் கேட்டதும் கொடுக்கிருர்கள். இதனுல் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. இதனுல் கம்பெனிகள் விலைகளை உயர்த்துகின்றன. இதனுல் புதுவகையானதொரு பணவீக்கம் உண்டாகிறது. பெடரல் அரசாங்கமும் திறைசேரியும் இந்நிலையைச் சமாளிக்கத் தேவையைப் பாதிக்கும் சாதனங்களை உபயோகிக்கும்போது வேலையின்மையை உண்டாக்கி 1957, 1958 இல் உள்ள நிலையை உண்டாக்குகின்றன ".

பின்னர் படிப்படியாக சம்பள-உந்திலிருந்து பொதுவான செலவு உந்தலுக்குக் கவனம் மாறிற்று. 1959 இலே காங்கிரசின் கூட்டுப்பொருளாதாரக் கமிட்டி ஆராச்யசி அறிக்கையைப் பிரசுரித்தது. உருக்கு விலையின் அதிகரிப்பு, மற்ற விலைவாசிகளையும் உயர்த்திவிட்டதென அது கூறிற்று. இந்த நிர்வகிக்கப்பட்ட விலைத்தொழிலில் இலாபங்கள் கூடிவிட்டதாகவும் அது குறிப்பிட்டது. சம்பள உயர்வுகளோடு இது நடந்தது. இதற்குக் காரணம் தொழிற்செலவும், தொழிலாளர் சார்பற்ற செலவுமெனக் கூறிற்று. மிச்சிக்கனைச் சேர்ந்த ஏ. பி. லேணர் என்பவர், இதனை " விற்பனையாளர் வீக்கம் " எனக்கூறினர். விற்பனையாளரும், (தொழில், சொத்து, பண்டம் என்பனவெல்லாம்) மொத்தத் தேசிய

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்தியில் 100 வீதத்துக்கு அதிகமானதைத் தாம் பெற்றுக்கொள்ள விரும்பினால், விலைவாசி ஏறும்"[1] என்று கூறினர்.

**வளர்ச்சியும், விலைநிலைப்பும் ஒன்றுக்கொன்று முரணானவையா ?**

முரண்பாடில்லாத பழைய பொருளாதாரமுறையில் அமெரிக்கா செய லாற்றுமானால் சம்பளங்கள் உயரமாட்டா. வேலையின்மை அதிகரிக்கும் போது அதிகாரிகள் விஸ்தாரமான திட்டங்களைச் செயற்படுத்துவர். அதிக வளங்களைச் செயற்படுத்தினால் அதிக வளர்ச்சியுண்டாகுமென்று அவர்கள் நினைப்பர். தேவை-உந்தல் வகையிலே பணவீக்க இடைவெளியிருந்தால் விலை உயரும். அப்போது சுருங்கிய திட்டங்களைச் செயற்படுத்தலாம். இது விலையுயர்வை நீக்கும். ஆனால் இது வேலையின்மையை உண்டாக்கக் கூடியதாக இருக்காது.

4, 5, 6, வீத வேலையின்மை இருந்தால் நுகர்வு, மொத்த, பொது மொ. தே. உ. விலைகள் எல்லாம் ஏறும். அப்போது பண, பிஸ்கால் அதிகாரிகள் என்ன செய்வார் ? மொத்தத் தேவையைக் குறைக்கலாமா ? (அதாவது C+I+G அல்லது MV மொத்தச் செலவு) இதனால் உற் பத்தியும் வேலைவாய்ப்பும் குறையும். அல்லது மொத்தச் செலவை அதி கரிக்கலாமா ? இதனால் விலை வாசிகள் மேலும் சிறிது உயரும். இதற்கு இலேசாக விடைகூறமுடியாது. இருந்தாலும் மூன்று விதமான அபிப்பிரா யங்கள் கீழே தரப்படுகின்றன.

**1. என்ன செலவிலும் விலையை நிலையாக வைத்திருத்தல்**

உயர்ந்த வேலை வாய்ப்பு, வளர்ச்சி என்ற இலட்சியங்களை விட நிலையான விலைமட்டத்தை ஏற்படுத்துவது மிக முக்கியமான சமூக இலட்சியமாகும் என மேற்படி தலைப்பிலுள்ள கருத்துடையவர் நினைக்கின்றனர். ஆர்வம் மிக்கவர்கள் விலையை நிலைநாட்டுவதை மேலாகக் கொள்வர். அதுவும் பல இலட்சியங்களிடையே ஒன்றைத் தேர்ந்து கொள்வதால் இதனையே விடாப்பிடிக்கொள்கையாகத் தேர்வர். ஆனால் இந்தக் கருத்தை மேற்கொள் பவர் ஆர்வமுடையவரல்லர். காலப்போக்கிலே விலை நிலையுடைமைக்கும் வளர்ச்சி அல்லது உயர்வேலை வாய்ப்பு என்பவற்றுக்கும் முரண்பாடில்லை என அவர் கருதுவர். இன்று பணவீக்கத்தைச் சிறிது அனுமதித்தால் நாளை மந்தமாகும் என்பர். முதலில் அது ஊர்ந்து கொள்ளத் துவங்கும். ஊர்தல் பின்னர் நடத்தலாகும். நடத்தல் ஓட்டமாகும் ; ஓட்டம் பின்னர் ஒரேயடியாக வெடித்துவிடும். அப்போது ஏன் இந்த விடயத்தை முதலிலே

1. சண்டைக்குப் பின்னர் உண்டான விலையேற்றம் தேவை இழுத்தலேயன்றிச் செலவு உந்தல் அன்றென்பதைப் பல பொருளியலறிஞர் இப்போது ஒப்புக்கொள்ளுகின்றனர். அக் காலத்தில் இவ்வாறு கருதப்படவில்லை. 1950 இன் அனுபவம், நடைமுறையில் இந்த அந்தத்திலே செலவு உந்தல் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். வேலையின்மை குறைவாயுள்ளபோதும் நமது விலைவாசிகள் உயருகின்றன (அதாவது 30 பேரில் ஒருவருக்கு மேல் வேலையின்றியிருந்தாற்கூட). இதைப் பற்றி மேலும் அறிய அத்தியாயம் 17 ஐப் பார்க்க.

www.padippakam.com



அனுமதிக்க வேண்டும்? நடப்பு உற்பத்தியையும் வேலை வசதியையும் தியாகஞ் செய்து வருங்கால வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் ஏன் இடமளிக்கக் கூடாது?

இந்தக் கொள்கை சார்பான பல கோட்பாடுகளில் நன்மையானவற்றைத் தெரிந்து கொள்ளும் முறையையே சமீபகாலத்தில் பெடரல் ரிசேர்வ் வங்கி உத்தியோகத்தர் பலர் ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

**2. என்ன பாடுபட்டாலும் வளர்ச்சி.** மேலே கூறிய கொள்கையிலும் பார்க்க வித்தியாசமானதே முன்னைநாள் அமெரிக்க ஜனதிபதியாயிருந்த ரூமனின் பொருளாதார ஆலோசகரான லியோன் கைசர்லிங்கின் கொள்கை. பூரண வேலை வாய்ப்பும், வளர்ச்சியுமே முதல் இலட்சியங்கள் இவற்றுக்கே அவர் முதலிடம் கொடுக்கிறார். வளர்ச்சியை வற்புறுத்தினல் சமூகம் ஈற்றில் நல்ல விலை வாசிகளை நன்கொடையாகப் பெறுமென்று இவரும், இவருடைய கட்சியினரும் கருதுகின்றனர்.

வளர்ச்சியால் விலை நிலையாயிருக்கும் என்ற கோட்பாடு, நிலையான விலை வாசிகளால் வளர்ச்சியுண்டாகும் என்பது போன்றது. அது பின்வரும் காரணங்களிலே தங்கியுள்ளது. உயர்ந்த உற்பத்தியால் விலைகள் இறங்கும்; இந்நிலை ஏற்பட மற்ற விடயங்கள் மாருதிருக்கவேண்டும். தொழிலாளரின் பணச் சம்பளம் கிரமப்படிதான் உயரும். உற்பத்தியைத் துரிதப்படுத்தினல் சமூகத்திலே சிறிய விலையேற்றம் உண்டாகும்.

தகுதியின் உயர்படிகளிலே வியாபாரிகளின் அலகு விலை குறையும். அதனல் அவர்கள் குறைந்த விலையை விதித்தாலும் நல்ல இலாபம் பெறலாம். உயர்ந்த வேலை வாய்ப்பும் உற்பத்தியும் மக்களைத் திறமையுடையவராகவும் புதிய துறைகளில் துணியவும் தூண்டும். சுருக்கமாகக் கூறுவதானல், எதிர்கால வளர்ச்சி, விலை நிலைப்பு என்பவற்றுக்கு முதலீடாக விலை நிலைப்பு முனையிலே குறுந்தவணைத் தியாகத்தைத் தேவையானல் இக்கொள்கையாளர் செய்வர்.

**3. விலை நிலைப்பு, வளர்ச்சி என்பவற்றுக்கிடையிலே இணக்கம்.**

காங்கிரஸ் முன்னர் சாட்சியமளித்தவர்களும், ஆராய்ச்சிச் சஞ்சிகைகளும், பணம், கடன் வசதி என்பவற்றை ஆராய்ந்த ஆணையாளர்களும், தேசீய இலட்சியங்களைப் பற்றி சனதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்த ஆணையாளர்களும், நிபுணர்களும், மேலே கூறிய இரண்டு கொள்கைகளையும் நிராகரித்துவிட்டனர்.

1960 இல் நிலவிய அமெரிக்காவின் கலப்புப் பொருளாதாரம் போன்ற ஒன்றிலே விலை நிலைப்பு உயர் வேலைவாய்ப்பையும், வளர்ச்சியையும் பாதிக்குமென நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். விலை வாசிகள் மெதுவாக உயர்வதை முற்றுக நீக்குவதானல், பொருளாதார அமைப்பிலே வேகத்தைக் குறைக்க வேண்டும் என எண்ணுகின்றனர். (பண்டங்களின் பண்பு திருத்தமடைந்திருப்பதை உத்தியோகபூர்வமான

படிப்பகம்

www.padippakam.com



கணக்குகள் காட்டவில்லை. அதனால் உண்மையான விலை அதிகரிப்பின் விகிதம், தோற்றத்திற் காணும் விலை அதிகரிப்பிலும் குறைவே என்றனர். வேறு சிலர் உண்மையாகக் கணிக்கப்பட்ட விலை மட்டங்களும் பிரதானமாக நிலைப்புடையனவாயிருக்கின்றன என வாதிப்பர்).

இம்மாதிரிப் பரீட்சையின் பயனாக என்ன நடக்கிறது? பூரண வேலை வாய்ப்பையும், உச்ச நிலை வளர்ச்சியையும் அவற்றின் கடைசி எல்லைக்குத் தள்ளிவிட்டால் விலைகள் தாக்கப்படும். அப்போது இலட்சியங்களில் சில இணக்கங்களைச் செய்ய வேண்டும். எதிர்காலத்திலே விலை ஓரளவு ஏறுவதை விடவேண்டும். இல்லாவிட்டால் பொருளாதார முன்னேற்றத்தையும் நியாயமான உயர்வேலைவாய்ப்பையும் தியாகஞ் செய்ய வேண்டும்.

சில சமயங்களிலே விலை ஏற்றத்தை அனுமதித்தாலும், இது இக் காலத்துப் பிரச்சினைகளுள் மிக முக்கியமான பிரச்சினையைக் கிளப்புகிறது.

விலை ஊர்வதை அனுமதிப்பதோடு நியாயமான அளவு உயர் வேலை வாய்ப்பையும், வளர்ச்சியையும் வலியுறுத்தினால் விலையில் பெரிய மாற்றங்கள் உண்டாகுமா?

பணம், கடன்வசதி பற்றிய ஆணைக்குழுவுக்காகச் சமீபத்திலே சான்றுகள் பெருவாரியாகச் சேர்க்கப்பட்டன. இவற்றை ஆராய்ந்தபொழுது, பணவீக்கம் ஊர்ந்து நடந்து பாய்ந்து செல்லவேண்டிய நியதியில்லையென்று காணப்பட்டது. இவ்விடயத்திலே திட்டமான தொரு முடிவைச் செய்வதற்கு இங்கும் வெளிநாடுகளிலுமுள்ள சரித்திரரீதியான அனுபவமும், பொருளியல் ஆராய்ச்சியும் போதா.

மிக வாய்ப்பானதோர் இணக்கத்திலே விலை ஊர்வதைத் தடுப்பதற்காக, இக்காலத்தாபனங்களிலே என்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கு விரிவான ஆராய்ச்சி செய்ய வேண்டும். அத்துடன் பின்வரும் விடயங்கள்பற்றியும் அத்தகைய ஆராய்ச்சி அவசியம். நிர்வகிக்கப்பட்டவிலைப் பிரதேசத்திலே முன்னையிலும் மும்முரமான எதிர் நம்பிக்கை நடவடிக்கை; தொழிற் சங்கங்கள் உயர்ந்த பணச் சம்பளத்தைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சி பற்றி மாறிய சட்டம்; நுகர்வோர் நன்மையையும் தேசீய நன்மையையும் நிலைநாட்ட சனாதிபதியும், காங்கிரசும் கூட்டுப்பேரம் பேசுதல்; இதுவரை கண்டு வகைப்படுத்தப்படாத கொள்கைகள் என்பவற்றை ஆராய வேண்டும்.

விட்டுக் கொடுத்து இணக்கங்கள் செய்யாமலே பூரணமான விலை நிலைப்பும், உச்சமான வேலை வாய்ப்பும், வளர்ச்சியும் தேவையென வலியுறுத்துவது நன்று. கெடுபிடியுத்தமும், பொருளாதாரக் குழப்பமும் உள்ள ஒரு யுகத்திலே தற்காலக் கலப்புப் பொருளாதாரத்திற் பூரண பாதுகாப்பாகவும், விட்டுக் கொடுக்காமலும் இருக்கக் குடிமக்களுக்கு வழியில்லாதிருக்கும்.

www.padippakam.com



முடிபு : வளர்ச்சியானது பல சவால்களையுடையதாய் இருந்தாலும் விடயம் செந்தளிப்பானது. வளர்ச்சிக்காகத் திட்டமாக எதையுஞ் செய்யாவிட்டாலும் வருங்காலத்திலே முற்போக்கான பொருளாதாரங்கள் முன்போலவே வளர்ச்சி காட்டக்கூடியனவாயமையும். நாம் விசேடமாக ஒன்றுஞ் செய்யாமலே நமது அமைப்பை நியாயமாக நிர்வகித்துக் கொண்டால், 3 சதவீதம் அதிக வளர்ச்சியடைவோம்.

நாம் முயன்று திட்டம் போட்டால் 4 சதவீத வளர்ச்சியடையலாம். சிலர் 5 வீதம் என்று கூறுவது இதன்று. ஆனால் நாலுவீதத்தைப் பற்றி நாம் மனம் மடியவேண்டியதில்லை.

பொருளாதாரம், ½ சதவீத வளர்ச்சியை வருடத்தில் அடைவதே பெரிய காரியம். பார்வையளவிலே இது அற்பமாயிருந்தாலும் இவ்வீதம் பெரிதே. பொருளாதாரத்தை கவனமாக ஆராய்ந்தபின்னர், தொகை சம்பந்தமான வித்தியாசங்கள் முக்கியமென்பதைக் அறியலாம், சோவியத் ஆட்சியிலும், ஐக்கிய அமெரிக்காவிலுமுள்ள வளர்ச்சியின் தொகைப் பிரச்சினை மாற்றுப் பொருளாதாரத்திட்டம் என்ற கடைசி அத்தியாயத்திலே ஆராயப்படும்.

**சுருக்கம் 1** நிச மொ. தே. உ. (GNP) வளர்ச்சியை அளக்கக்கூடிய நல்ல சாதனம். ஓய்வு, குடிசனத் தொகை, ஒப்பியற் பங்கீடு, பண்பு, பொருளியல் சாராத சாதனங்கள் என்பனவற்றின் தகவல்கள் இதற்குத் துணை புரியும்.

2. முன்னேறிய நாடுகள் திரமான வரலாற்றுப்பூர்வமான வளர்ச்சியைக் காட்டுகின்றன. சமீபகாலத்துப் போக்குக்கள் பொதுவாக வாய்ப்பானவையாகவே காணப்படுகின்றன. வளர்ச்சியைத் துரிதப்படுத்தவேண்டுமென்பது பற்றிய போக்கு பலவகைப்படும். தினசரி சந்தையிலே பண்டங்கள் சேமிப்புகள் வலியுறுத்தும் வளர்ச்சிக்குமேலே வளர்ச்சியை உண்டாக்கவே குடிகள் பல இடங்களில் விரும்புகின்றனர்.

3. ஆராய்ச்சியையும், கல்வியையும் விரிவடையச் செய்தால் வளர்ச்சி வேகமடையும். உயர்ந்த வேலைவாய்ப்பை அடைதலும், நிலைநாட்டலும் வளர்ச்சியைத் தூண்டலாம். ஆனால் நாட்டின் மூலதன ஆக்கத்தின் விகிதத்தை அதிகரிப்பதானால், நுகர்வு, சேமிப்பு என்பவற்றில் தனிப்பட்ட முறையிலோ, கூட்டுமுறையிலோ மாற்றமில்லாவிட்டால் நவீன பழம் பொருளியலிணைப்பின்படி பின்வரும் விடயங்கள் தேவை : தேறிய மூலதன ஆக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்ட குறைந்த வட்டி வீதமும், விரிவான பணக்கொள்கையும், வேண்டும். இது உயர்வேலைவாய்ப்புக்குரிய தேசிய உற்பத்தியுடனும், பணவீக்கத்தைத் தவிர்க்கக்கூடிய கட்டுப்பாடான பிஸ்கால் கொள்கையுடனும் இணைந்திருக்க வேண்டும். இதனை பைசலாக்கக்கூடியவருமானத்திலும், நுகர்விலும் சிக்கனம் பண்ணி உண்டாக்கலாம். (அத்துடன் முதலீடு செய்வோருக்கு உதவி செய்யக்கூடிய தூண்டப்பட்ட தேய்மானம் போன்ற வரிமாற்றங்களையும் ஏற்படுத்தலாம்.) இலேசான பணக்கொள்கை கண்டிப்பான பிஸ்கால் கொள்கை என்பவற்

படிப்பகம்

www.padippakam.com



றால், கலப்புப் பொருளாதாரம் உயர்வேலை வாய்ப்பு வருமானத்தில் ஒரு பகுதியை நடப்பு நுகர்விற் செலவு செய்யாமல் எதிர்கால முதலீட்டிற் புகுத்த முயலலாம்.

4. இத்தகைய திட்டங்களுக்குத் தேவையான நிபந்தனைகள் பின்வருமாறு :—நமது சர்வதேசப் பற்றுக்குறைப் பிரச்சினையும் தங்கப் பிரச்சினையும் முதலீட்டை உண்டாக்கும் நோக்கத்தோடு செய்யும் விசாலமான கடன்வசதித் திட்டங்களை அனுசரிப்பதைத் தடைசெய்யலாம். வைதீகமான மத்திய வங்கி வழிகளால் வட்டியைக் குறைத்து கடன்வசதியைச் சுலபமாக்குவது மேலதிக முதலீடு செய்வதை ஊக்கப்படுத்தமாட்டாது. இது மூலதனத்தை எப்பொழுதும் ஆழமாக்கமாட்டாது. எனவே காப்புறுதி முறையினாலும், உதவி நன்கொடை கொடுக்கும் முறையினாலும் வைதீகத் திட்டங்களுக்கு உதவிபுரியலாம். கடைசியாக விற்பனையாளர் பணவீக்கம் நோக்கி செலவு—உந்தல் நிகழ்ந்தால், நாம் நோக்கமாகக் கொண்ட உயர்தர வேலைவாய்ப்பு, எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு நுகர்வையும், முதலீட்டையும் பெற அனுமதி தருமானால், விலை—மட்ட நிலைப்புடன் பொருத்தமுடைய மிக உயர்வான வேலைவாய்ப்பு மட்டத்துக்கு இலக்கு வைக்கும் திறமையைப் பாதிக்கும்.

5. செலவு—உந்தல் செயற்பாட்டின் சாரம் இதுவே. வேலையின்மை விரும்பப்படாத அளவுக்கு இருக்கும்போதும், விலைவாசிகள் உயரக்கூடிய போக்கு உண்டா ? அப்படி இக்காலத்திலே ஒரு போக்கு இருக்குமானால் கொள்கை நிர்ணயம் கடினமாகும். இணக்கங்கள் அவசியமாகும். "விலைவாசி நிலையாயிருத்தல் வளர்ச்சிக்கு அவசியம்." "வளர்ச்சி, விலைவாசிகளை நிலை நிறுத்த அவசியம்." "வளர்ச்சி, உயர்வேலை வாய்ப்பு என்பவற்றை உத்தேசித்துச் சில சமயம் சிறிது விலையேற்றத்தை வரவேற்கலாம்." இவை பலவித அபிப்பிராயங்கள், இவற்றுள் எதையாவது இன்றைய அரசியல் வாதிகள் தெரிந்து கொள்ளலாம்.

6. வளர்ச்சி பல பிரச்சினைகளை உண்டாக்கலாம். ஆனால் இது மனோரம்மியமானதொரு விடயம்.

**வினாக்கள்**

1. "ரோமின் மொ. தே. உ. (GNP) உயர்ந்தது. ஆனால் ரோம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டே போயிற்று" ஆராய்க.

2. வளர்ச்சி பெரிய இலட்சியமா ? அல்லவா ? காரணங் காட்டி ஆராய்க.

3. "வளர்ச்சியை ஊக்கப்படுத்த நுகர்வைக் குறைக்க வேண்டுமா ? நுகர்வு C உயர்ந்தாற்றான், முதலீடு (I) உயரும். "மூல தனத்தை ஆழமாக்குதல்" என்பது எனக்கு விளங்கவில்லை." விளக்குக ?

4. கல்வி, ஆராய்ச்சி, உயர் வேலை வாய்ப்பு என்பன வளர்ச்சிக்கு ஏன் அனுசரணையாயிருக்கின்றன ?

படிப்பகம்

www.padippakam.com



5. வளர்ச்சிக்கு எத்தகைய வரிமாற்றங்கள் உகந்தது ? இவை வழக்க நீதி சம்பந்தமான கருத்துக்கு மாறானவையா ?

6. ஊர்ந்து செல்லும் பணவீக்கப் பிரச்சினையை ஆராய்க ? அதுபற்றி என்ன செய்ய வேண்டும் ?

7. பின்வரும் கருத்துக்களை ஞாபகத்திற்கு மறுபடியும் கொண்டு வருக : தனி நபர் சம்பந்தமான தே. தே. உ. அல்லது மொ. தே. உ. ; மூலதனம் ஆழமாக்குதல்.

நவீன பழம் பொருளாதாரம்பற்றிய கடின பிஸ்கால் கொள்கையும் இலேசான பணக் கொள்கையும் ; செலவு உந்தல் அல்லது விற்பனையாளர் பணவீக்கம் ; ஊர்தல், துள்ளல், பாய்தல்.

இலட்சியம் பற்றிய இரண்டுங்கெட்ட கொள்கைகள், சாத்தியமான இணக்கங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# முப்பத்தேழாம் அத்தியாயம்

## மாற்றுப் பொருளாதாரமுறைகள்

*உங்களுடைய முதியோர் கனுக்காண்பார்*
*இளையவர் காட்சிகளைக் காண்பார்.*

—பழைய ஏற்பாடு.

### முதலாளித்துவத்தின் நெருக்கடி

முதலாவது மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவெங்கும் புதிய ஆட்சிகள் நிறுவப்பட்டன. 1927 ஆம் ஆண்டளவிலே பட்சபாதமற்ற ஓர் அவதானி, முதலாளித்துவத்தின் எதிர்காலம் ஆனந்தமாகவும், நம்பிக்கையுடையதாகவுமிருக்கிறதெனக் கூறியிருப்பார். ஆனால் ஆறேழு வருடத்துக்குள் சர்வாதிகார ஆட்சி பல நாடுகளிற்றோன்றிற்று. ஐரோப்பாவெங்கும் பாசிச அரசாங்கங்கள் தோன்றின. 1930 ஐ அடுத்த வியாபார மந்தத்தின் பின்னர் பெரிய உலக மகாயுத்தமுண்டானது.

இரண்டாவது மகாயுத்தம் உண்டாகியும் 20 வருடங்கள் சென்றுவிட்டன. உலகின் நிலையென்ன ? உலகம் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து கொண்டது. சோவியத் ரூஷ்யாவும் அதனுடைய செல்வாக்கின் கீழுள்ள நாடுகளான கிழக்கு ஐரோப்பாவும், ஆசியாவும் ஒரு பக்கத்தில் இரும்புத்திரைக்குள் நிற்கின்றன. ஏனைய நாடுகள் மறுபுறத்தில் நிற்கின்றன. இரும்புத்திரைக்கு வெளியேயுள்ள நாடுகள் எல்லாம் ஒரே போக்குடையனவல்ல. பிரிட்டன், அவுஸ்திரேலியா, நியூசிலந்து, ஸ்காந்திநேவியா ஆகிய நாடுகளிலே தொழிற் சமூகவுடைமைக் கட்சி இருந்து வருகிறது. ஸ்பெயின், போர்த்துக்கல், லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளிலே பல இனப்பட்ட சர்வாதிகார ஆட்சி யுண்டு. பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளிலே இணைக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகள் சத்தம்போடுகின்றன. ஆசியா, ஆபிரிக்கா என்பவற்றிலுள்ள விழித்தெழுந்த நாடுகளிலே தலையிடாக் கொள்கையிருப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலே தான் முதலாளித்துவ ஆட்சியுண்டு. இந்நாடுகளிலும் மாற்றங்களுண்டாகி வருகின்றன. நமது நாட்டிலே தனியார் துறையும் அரசாங்கமும் சேர்ந்து ஆட்சிசெய்கின்றன. சமாதானமும் யுத்தமும் கலந்த ஒரு பொருளாதாரம் இன்று நிலவுகிறது.

முதலாளித்துவ ஆட்சிக்குச் சோதனைக்காலம் உண்டாகிவருகிறது. ஆனபடியால் அது விசேடமான செய்கைகளிலே ஈடுபடவேண்டும். இங்கே வேலையில்லாத்திண்டாட்டம் அதிகமிருக்குமானால், வெளிநாடுகளில் நமக்கிருக்கும் மதிப்புக்குறையும். உள்நாட்டிலும் வியாபார மந்தமும் அரசியற் குழப்ப

www.padippakam.com



மும் உண்டாகும். நமது வளர்ச்சி மந்தமானல் அது நமக்குப் பிரதிகூலத்தையுண்டாக்கும்.

**கற்பனை உலகம்**

புதிய சமூகத்தை உண்டாக்கவேண்டுமென்று மனிதர் காலாகாலமாகக் கற்பனை செய்து வந்தனர். பிளேட்டோ குடியரசு என்ற சமுதாயத்தைக் கற்பனை செய்தார். சர். தோமஸ் மூர், உடோபியா என்ற கற்பனைச் சமுதாயத்தை உண்டாக்கினர். மாக்ஸ் பட்டாளியின் சர்வாதிகாரம் என்பதைக் கற்பனை செய்தார். இவ்வாறு பல கற்பனைச் சமுதாயங்கள் உருவாயின. தெளிவில்லாது கற்பனையில் அமைக்கப்பட்ட இலட்சிய அமிசங்களை இன்றைய சமுதாயத்திலே காணும் குறைபாடுகளோடு ஒத்துப்பார்ப்பது சுலபமான விடயம். இக்காலச் சமுதாய ஒழுங்கின் தவறுகள் இவை என்று கூறுவதில் மட்டுமே சமூகத்தைச் சீர்திருத்தவேண்டுமென்று திட்டங்கள் போடும் பலவித சீர்திருத்த வாதிகளும் ஒற்றுமைப்படுகின்றனர். மற்றப்படி அவர்களிடையே ஒற்றுமையைக் காண்பது அரிது.

ஒரு புறத்திலே அராஜரீகவாதிகள் உளர். அவர்கள் அரசாட்சியே தேவையில்லையென வாதாடுகின்றனர். மறுபுறத்திலே சர்வ அதிகாரமும் உள்ள கூட்டான, சர்வாதிகாரத் தன்மைவாய்ந்த பொதுவுடைமைச் சமூக ஒழுங்கை விரும்புவோர், நான் என்பதை மாற்றிவிட்டு நாம் என்ற சொல்லை மாத்திரம் புகுத்தியுள்ளனர். பொதுவுடைமையிலேயே பலவகையான பிரிவுகளுண்டு. கிறிஸ்தவப் பொதுவுடைமை, அரசுடன் பொதுவுடைமை, மாக்ஸீயப் பொதுவுடைமை, கில்ட் (தொழிற்சங்கப்) பொதுவுடைமை, பேபியன் (வளரும்) பொதுவுடைமை, என இப்பொதுவுடைமைகளிலே பலவகையுண்டு.

பொதுவுடைமை வாதிகள் சதிகாரர் என்றும், அவர்கள் இரகசியமாகக் கூடிச் சதிசெய்வரென்றும், பலாத்காரமான புரட்சிகளை உண்டாக்குவரென்றும், அரசாங்க உத்தியோகத்தர், முதலாளிகள் என்போரைக் கொலை செய்வதற்காக வண்ணனுடைய மூட்டைகளில் வெடிகுண்டுகளை அனுப்புவர் என்றும் பொதுமக்கள் மனத்தில் இவர்களைப்பற்றி ஓர் எண்ணம் உண்டு சமூகப் பாதுகாப்பு, முற்போக்குப்படியிலுள்ள வரிவிதிப்பு, வங்கி வைப்புக், காப்புறுதி, வேறுவகையான சமூகச் சீர்திருத்தம், சுதந்திரமாகக் காதல் புரிதல் என்பவற்றை இகழ்ச்சி செய்வதற்கும் பொதுவுடைமை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

வெளிநாடுகளிலே தீவிரவாதிகளின் பலம் எப்படியிருந்தாலும், அமெரிக்காவிலே எந்த ஒரு மூன்றும் கட்சியும் பலமுள்ளதாக இருக்கவில்லை.[1] அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சி சனதிபதிப் பதவிக்கு, மதுவிலக்குக் கட்சி

[1] 1912 இல் தியடோர் ரூஸ்வெல்டின் புல்மூஸ் கட்சி குடியரசுக் கட்சியிலிருந்து முளைத்தது. 1924 இல் பொப்லா பொலெட் துவக்கிய முன்னேற்றக் கட்சி மிகவும் வெற்றி பெற்றமூன்றுவது கட்சியானலும் விஸ்கொன்சினுக்கு வெளியே அது பரவவில்லை. 1948 இல் ஹென்றிவலஸ் ஆரம்பித்த முன்னேற்றக் கட்சி பூரண தோல்வியடைந்தது.

www.padippakam.com



யோடு போட்டியிட்டுத் தோல்வியுற்றது. கமியூனிஸ்ட் கட்சி தன் சொந்தப் பெயராலோ, மறைந்துநின்றோ அதிக வாக்குகளைப் பெறமுடியவில்லை.

ஐரோப்பாவிலே உள்ள நிலைமையைப் பார்த்தால், எல்லாக் கட்சிகளும் சோஷலிஸம் என்ற பெயரையும் தமது கட்சிப் பெயரிலே சேர்த்துக் கொள்வதைக் காணலாம். ஆனால் இதிலே அவ்வளவு அர்த்தமில்லை. பிரான்சின் தீவிர சோஷலிஸ்ட் கட்சி தீவிரக் கட்சியன்று ; அது வைதீகக் கட்சிகளில் ஒன்று. ஹிட்லர் ஆரம்பித்த பாசிச கட்சியின் பெயர் " தேசீய சோஷலிஸ்ட் கட்சி. "

ஐரோப்பாவிலேயுள்ள முக்கியமான சீர்திருத்தக் கட்சிகளை "சோஷல் டிமோக்கிராட்ஸ்" சமூகசனநாயகக்கட்சிகள் என வழங்கலாம். உதாரணமாக, பிரிட்டனிலுள்ள தொழிற் கட்சி, ஜெர்மன் சமூகசனநாயக கட்சி, சுவீடன் நோர்வே ஆகிய தேசங்களிலுள்ள ஆட்சிக் கட்சிகள் எல்லாம், சமாதானமான சனநாயக முறையில் புரட்சியின்றிச் சமூகவுடைமைக்கொள்கைகளைக் கிரமமாகப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

இன்றைய உலகநிலையைச் சரிவர அறிவதற்கு உலகிலுள்ள பலதிறப்பட்ட வாதங்களை அறியவேண்டியதில்லை. (1) ஒப்பியலான தலையிடாக் கொள்கை அல்லது தனியார் முயற்சி (2) சோஷலிசிம் (3) கமியூனிஸம், (4) பாசிசிம் என்பவற்றை அறிந்தாற்போதும். இவற்றுக்கிடையே திட்டமான எல்லைகள் கிடையா. படி விகிதத்திலேதான் வித்தியாசம். இவற்றை ஒரு வரிசையிலே வகைப்படுத்தவும் முடியாது. பாசிச கொள்கையை வலக் கோடியிலும், கமியூனிஸத்தை இடக் கோடியிலும் போடமுடியாது. சில முறையிலே பாசிசம் கமியூனிசம் என்பவை சில பொதுவான தன்மைகளைக் கொண்டுள்ளன.

இந்நூலிலே முதலாளித்துவ முறையைப் பற்றியே பெரிதும் கூறினோம். மற்ற அரசியற் கொள்கைகளைப் பற்றி இனி ஆராய்வோம்.

**பாசிசிம்**

இக்கொள்கையை பொருளாதார முறையிலே வருணிப்பதிலும் பார்க்க அரசியல் முறையிலே வருணிப்பது இலேசு. ஹிட்லருடைய ஜெர்மனியிலென்றாலென்ன, முஸோலினியின் இத்தாலியிலென்றாலென்ன, பிராங்கோவின் ஸ்பெயினிலென்றாலென்ன, சலசாரின் போர்த்துகலிலென்றாலென்ன, பெரனின் ஆர்ஜெண்டீனாவிலென்றாலென்ன பாஸிஸத்துக்கு ஒருவனே சர்வாதிகாரியாயிருப்பான். ஒரேயொரு அரசியற் கட்சியேயிருக்கும் ; மற்றவையெல்லாம் நீக்கப்படும். நமது உரிமைச்சாசனத்திலே கொடுக்கப்பட்ட உரிமைகளெல்லாம் நீக்கப்பட்டிருக்கும். பாஸிஸ்ட் இயக்கம் தேசீய இயக்கமாயிருக்கும். உயர்ந்த இனம் என்ற கோட்பாடும், சிறுபான்மையினரை நசுக்கும் மனப்பான்மையுமிருக்கும். முஸோலிசொன்னது போல பாஸிஸ்டுகள் ஆபத்தான வாழ்க்கை நடத்தவேண்டும். யுத்தம் தேசீய அதிகாரம் இரண்டுமே அதன் குறிக்கோள். தனிமனிதன் அரசுக்கு அடிமைப்பட்டவனே.

www.padippakam.com



பொருளாதாரத் துறையிலே முஸோலினியுடைய பாசிசம் " சிண்டிக்கல் " அல்லது " கூட்டு அரசு " என்ற கொள்கையையுடையதாயிருக்கும். ஒவ்வொரு கைத்தொழிலும், தொழிலாளர் தொகுதியும் " சிண்டிக்கேட் " முறைப் படி அமைக்கப்பட்டிருக்கும் ; இந்தத் தாபனம், பொருளாதாரத்தை எவ்வாறு திட்டமிடவேண்டுமென்பதைக்கூடி நிச்சயிக்கும். இத்தகைய சிண்டிக்கல் கொள்கைகளிடையே இந்த அமைப்பு அதிக செல்வாக்குப் பெறவில்லை.

பாசிச கோட்பாடு சுதந்திரமானதும் தீவிரமானதுமான தொழிற் சங்கத்துக்கு எதிரானது. எல்லாவிதமான பொருளாதார வாழ்வும் மத்திய அரசாங்கத்தினல் நெறிப்படுத்தப்பட வேண்டுமென்னும் கோட்பாடுடையது. சில சமயத்தாபனங்களோடு சேர்ந்து தொழில் புரியும் ; வேறு சில சமயத்திருச்சபைகளுக்குமாமுனது. முதலாளிகளும், கீழ்மத்திய வகுப்பாரும் பாசிஸ்டு இயக்கத்தின் மூல பலத்துக்கு உதவி செய்யும். பின்னர் இயக்கம் புரட்சிப் போக்கைப் பெற்றதும் பச்சாத்தாபப்படும்.

பாசிசம் கொமியூனிஸத்துக்கு மாமுனதென்ற எண்ணத்தினுலேதான் முதலாளிகள் அதை ஆரம்பத்தில் ஆதரித்தனர். ருஷியப் பொதுவுடைமையால் போல்சிவிக் புரட்சிவரப் போகிறதென்ற பூச்சாண்டியைக் காட்டிக்கொண்டே அது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெறும். அதிகாரம் வந்ததும் கொமியூனிசத்தின் பெயரால் சனநாயக முறைகள் அடக்கப்பட்டன.

**சோஷலிஸம்**

பாசிசமைப்பற்றிக் குறிப்பிட்டபோது நாஸி ஜேர்மனியையும் பாஸிஸ்ட் இத்தாலியையும் உதாரணங்காட்டினேம். சோஷலிஸமைப்பற்றி அத்துணை இலேசாகக் கூறிவிடமுடியாது. சுவீடனிலுள்ள சோஷலிஸ்ட் அரசாங்கத்தைப் பற்றியோ, பிரிட்டிஷ் தொழிற்கட்சியைப்பற்றியோ நாம் வருணிக்கலாம். ஆனல் இவை நமது அரசியல் முறைக்குப் பெரிதும் வித்தியாசப்படவில்லை. நமது முறை கலப்புள்ளது. அவை நடுவழியைப்பின்பற்றுவன ; சோவியத் ருஷியா, சீன என்ற நாடுகளின் ஆட்சிமுறைக்கும் நமது முறைக்கும் இடைப்பட்டவை.

சோஷலிஸ்ட் கோட்பாட்டின் சில அமிசங்கள் பின்வருமாறு :—

**1. உற்பத்தி வளங்களை அரசாங்கம் சொந்தமாக்குதல்**

ரயில்ருேட்டு, நிலக்கரி, உருக்கு உற்பத்தியென்பனவெல்லாம் தேசீய மயமாக்கப்படுகின்றன. இதன்பயனகத் தனியார் சொத்துக்கள் படிப்படியாக குறைக்கப்படுகின்றன. நிலமதிப்பினுல் உண்டாகும் உழையாத இலாபம் கூட எல்லைப்படுத்தப்படுகிறது. (மேற்கு ஜேர்மனியிலும் ஐக்கிய ராச்சியத்திலும் தேசீய மயமாக்கும் வேகம் குறைகிறது).

**2. திட்டமிடல்.** தலையிடாக்கொள்கையுள்ளதொரு சந்தைப்பொருளாதாரத்திலே இலாபக்கோட்பாட்டைத் தாராளமாகச் செயற்படவிடுவதற்குப்

www.padippakam.com



பதிலாக கூட்டுத் திட்டமுறை புகுத்தப்படுகிறது. இலாபத்துக்கன்றி உபயோகத்துக்கு உற்பத்தியை உண்டாக்குந் திட்டம் சில சமயம் ஆதரிக்கப்படுகிறது. விளம்பரத்தில் செலவு செய்வதைக்குறைத்தல்; தொழிலாளரும் தொழில் நிபுணரும், தமது தொழில்களில் நிபுணத்துவம் பெறும் ஊக்கத்தை அபிவிருத்தி செய்யவும், சமூகத்தொண்டிலே பற்றுண்டாக்கவும் துணைபுரிவதோடு பணம் திரட்டும் சமூகக் கோட்பாட்டைக் கைவிட்டு வேறு நோக்கங்களில் அவர்களை ஈடுபடச் செய்தல்.

**3. வருமானத்தைப் புனர்ப்பங்கீடு செய்தல்.** வாரிசாகப் பெற்ற சொத்து, பெருகிய வருமானம் என்பவற்றை அரசாங்கவரியிடும் முறையால் குறைத்தல், பின்தங்கிய சமூகத்தவரின் சுபீட்சத்தை அதிகரிப்பதற்கு சமூகப் பாதுகாப்பு நலன்களையும், தொட்டிலிலிருந்து சுடுகாடுவரைக்குமுள்ள நலன் சேவைகளையும் பொதுப் பணத்தைக்கொண்டு நிறைவேற்றல்.

**4. சமாதான மயமான சனநாயக முறையிலே புரட்சி.** பொதுச் சொத்துக்களை அரசாங்கம் சிரமமாகவும், சமாதான முறையிலும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதே சோஷலிஸத்தின் கொள்கை. இது கம்யூனிஸ முறைக்குமாறானது. கம்யூனிஸம் பலாத்காரத்தைப் பயன்படுத்திப் புரட்சியை உண்டாக்கப் பார்க்கிறது. சோஷலிசம் தேர்தல் நடத்திச் சனநாயக முறையைப்பயன்படுத்துகிறது. இது ஆழ்ந்த தத்துவக் கொள்கை அடிப்படையிலுள்ளது.

**பிரித்தானிய சமூகவுடைமை.** பிரித்தானிய சமூகவுடைமையின் வரலாற்றைப்பார்த்தால் இக்காலப் பிரச்சினைகள் தெரியவரும். அடம் சிமித்தின் பழம் பொருளியல் வெற்றியடைந்ததும், ஆங்கில அறிவாளர் தலையிடாக் கொள்கைக்கு அப்பாற் சென்று சோஷலிஸக் கோட்பாட்டை அடைந்தனர். இதற்கு ஓர் உதாரணம் ஜோன் ஸ்டுவட் மில், இவர் 18 ஆம் நூற்றாண்டிலுள்ள பயனுடைமைத் தனித்துவத்திலே நம்பிக்கை உடைய ஒருவரால் வளர்க்கப்பட்டவர். இவர் 19 ஆம் நூற்றாண்டின் கடைசிப்பாதியில் ஒருவகையான சோஷலிஸக்கோட்பாட்டை அனுசரித்தார். 20 ஆம் நூற்றாண்டிலே சர்வகலாசாலைப்பண்டிதர்களும் இராப்பாடசாலைகளிலே படித்துத் தேறிய அறிவாளிகளும் பேபியன் (தவிர்க்க முடியாத படிப்படியான) சோஷலிஸக் கோட்பாட்டை மேற்கொண்டனர். பேர்னட் ஷோ, பீயற்றிஸ் ஸிட்னி வெப் தம்பதிகள் என்போரின் சோஷலிஸக் கருத்துக்கள் தொழிற்சங்க இயக்கத்தின் கோட்பாடுகளாயின.

முதலாவது உலக மகாயுத்தம் வரைக்கும் இவையெல்லாம் மறைந்திருந்தன. அதன்பின்னர் வைதீகக் கட்சி, தொழிற்கட்சி என்ற திரிகைக்கல்லுக்கிடையே லிபரல் கட்சி அரைபட்டு ஒழிக்கப்பட்டது. இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர் தொழிற்கட்சி ஆதிக்கம்பெற்றது. அதன் ஆரம்ப இலட்சியங்கள் (1) அரசாங்கம் பொதுநலனுக்கான திட்டங்களை அமைத்தல்— இதனை வைதீகக் கட்சி பெரிய அளவில் ஆதரித்தது. (2) வருமானத்தைப் புனர்ப்பங்கீடு செய்தல், தோட்டவரிகளை விதித்தல்—இதையும் வைதீகக்

www.padippakam.com



கட்சி ஓரளவு ஆதரித்தது. (3) விரிவான மைய ஆட்சிக்குட்படுத்திய திட்டம். நிலத்தைப் பயன்படுத்தல் விடயத்திலும், வட்டாரமாகப் பிரித்தல் விடயத்திலும் கண்டிப்பான ஒழுங்கு விதிகள். (4) தேசியமயமாக்கம் பெரிய திட்டம். இது நிலக்கரி, மின்சக்தி, புகையிரதப்பாதை, என்பவற்றிலே ஆரம்பித்துப் பின்னர் இடது சாரிகளின் கொள்கைப்படி உருக்குத் தொழிலுடன் பண்டங்களை மொத்தமாகச் சேர்த்தல், பங்கீடு செய்தல், பொறியியல், ராணுவ சப்ளை முதலியவற்றையும் அடக்கிற்று. வைதீகக் கட்சியினர் ஆட்சிக்குவந்ததும், மரபுபற்றி வந்த சோஷலிஸத்தை எவ்வளவு தூரம் செயற்படுத்தலாமென்ற விடயத்திலே தொழிற்கட்சி ஓரளவு பிரிந்துள்ளது. தேசியமயமாக்கல் எவ்வளவு தூரம் செல்லும், சந்தை அமைப்புகளிலே எவ்வளவுதூரம் நம்பிக்கை வைக்கலாம் என்பதைப்பற்றி நடந்த விவாதங்களிலே தெரியவருகிறது. பலவருடங்களுக்கு முன்னுல் பேபியன் கட்டுரைகளிலே எடுத்துக்காட்டப்பட்ட கொள்கைகள் அறிவு மட்டமளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை. ஆட்சேபிக்கும்வகையில் புதிய பேபியன்கட்டுரைகளை எழுத முடியாது. "புதிய டீல்" என்ற கோட்பாடு முதலாளித்துவ முறை சமூகமாக நடைமுறையிலே வருவதற்கு ஏற்படுத்தப்பட்டது. அதுபோதுமா ? வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டதால், வறியவர்கள் மத்திய வகுப்பு நிலையை அடையமுடியுமா ? சமூகம் சலனத்தன்மையடைவதால் வறியவரின் விவேகமுள்ள மக்கள் ஒக்ஸ்போட் சர்வகலாசாலைக்குப் போய் விடுகிறார்களா ? அதனால் அவர்கள் தீவிரமான தொழிற்சங்க அமைப்பிலிருந்து தவறிவிடுகிறார்களா ?

இந்த மயக்கமான நிலை பிரிட்டனுக்கு மாத்திரம் சொந்தமானதில்லை. சுவீடன், நோர்வே, டென்மார்க், அவுஸ்திரேலியா, நியூசிலந்து என்ற நாடுகளிலே, மிதமான தொழிற் சோஷலிஸம் கடந்த 25 வருடமாக நடைமுறையிலிருந்து வருகிறது.[1] ஆனால் இந்த நாடுகளின் பொருளாதாரங்கள் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத்தை ஒத்துவிட்டன. ரூஸ்வெல்ட், ட்ரூமன், ஐசன்ஹோவர், கென்னடி என்னும் அமெரிக்க

[1] பொதுசனம் பொருளாதாரவிடயங்களை மேற்பார்வை செய்யும்முறை தலையிடாக் கொள்கைப்போக்குள்ள சமூகத்திலிருந்து கூட்டுக்கமியூனிஸ்ட் ஆட்சிவரை பரவியுள்ளது, இந்த பகுத்துக்காட்டல் அரசியற் சுதந்திரத்தின் தரத்தோடும், சனநாயக சிவில் உரிமைகளோடும் மயமாக்கப்படக்கூடாது. பாசிச ஆட்சிகள் சமூகவுடைமைச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளன. கமியூனிச ஆட்சிக்குழுக்கள் தனிப்பட்டவர் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியுள்ளன. பிரிட்டன், காந்திநேவியா, முதலிய சோஷலிச நாடுகள் பழக்கமான சிவில் உரிமைகளையும், தனிப்பட்ட அரசியற் சுதந்திரங்களையும் நிலைநிறுத்தியுள்ளன; அவை அரசியற்றிட்டங்களினுலே பாதுகாக்கப்பட்டுள்ளன. ஒரு நகராண்மைக்கழகம் மின்சக்திக்கு எவ்வளவு பணம் வசூல் செய்யப்போகிறதென்று சொல்வது ஒரு விடயம். ஆனல் ஒருவன் எதைப்பேசலாம், எதில் நம்பிக்கை வைக்கலாம் ; எவ்வாறு சமய வழிபாடு செய்யலாமென்று கட்டளையிடுவது வேறு விடயம். அரசு பொருளியற் சுதந்திரத்தை மட்டுப்படுத்தினுல் அரசியற் சுதந்திரத்தை வைத்திருக்க முடியுமா ? என்று ஒருவர் கேட்கலாம். இந்தக்கேள்விக்குச் சரித்திரமோ, மனித இயற்சாத்திரமோ இன்னும் முடிவான பதிலைக்கொடுக்கவில்லை.

www.padippakam.com



சனாதிபதிகள் முப்பது வருடமாக நடத்திய ஆட்சியின் பின்னர் அமெரிக்கா என்ன நிலையில் இருக்கிறதோ அதே நிலைமைக்கே மேலேகூறிய இந்நாடுகளும் சென்றுகொண்டிருக்கின்றன.

**மாக்சீயப் பொதுவுடைமையும் சோவியத் ருஷியாவும் : சரித்திரம்.**

பழைய சோஷலிஸ்டுகள் கண்ட கற்பனைச் சமுதாயம், சென்ற நூற்றாண்டில் நிலவிய வளர்வுறும் சோஷலிஸ்ட் சமுதாயம் என்ற இரண்டிலும் பார்க்க வித்தியாசமானது மாக்சீயப்பொதுவுடைமை.

காள் மாக்ஸ் (1818–1883) ஹெகெலின் தத்துவத்தைப் பின்பற்றிப் பின்னர் "விஞ்ஞான சோஷலிஸம் என்ற" கோட்பாட்டின் தீர்க்கதரிசியானார். தனது நண்பனும் உபகாரியுமான பிரெடரிக எஞ்ஜெல்ஸ் என்பவருடன் தேசப் பிரஷ்டராகிப் புதியமுறையானதொரு சரித்திரக்கோட்பாட்டையும் பொருளாதாரக் கோட்பாட்டையும் வகுத்தார். 1848 இலே பொதுவுடைமை அறிக்கையொன்றை காள்மாக்சும், பிரெடரிக் எஞ்ஜெல்சும் வெளியிட்டனர். 75 வருடத்தின் பின்னர் கூட அவர்கள் கூறிய விடயங்களிற் பல நிறைவேற்றப்படவில்லை. ஆனால் எத்தனையோ சர்வதேச சோஷலிஸ்ட் மகாநாடுகள் கூடிவிட்டன.

1917 இல் பெரிய இயக்கம் உண்டானது. சார் ஆட்சியிலிருந்த ருஷியாவை ஜெர்மனி தோற்கடித்தது. மாக்ஸின் சீடனான லெனினை ஜெர்மனியிலிருந்து பாதுகாப்பாக ருஷியாவுக்கு அனுப்பினர். நியூயோக்கில் சிறிது காலம் வாழ்ந்துவந்த ட்ரொஸ்கி என்பவரின் துணையோடு லெனினுடைய பொல்ஷிவிக் கட்சியினர், அரசைக் கைப்பற்றி ஆட்சிநடத்தி வந்த மிதவாதக் கட்சியிடமிருந்து அதிகாரத்தைப் பறித்தனர். லெனின் கட்சி சமாதானத்தை உபதேசித்தது ; பாட்டாளிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாக வாக்குச் செய்தது ; பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை உண்டாக்குவதாகக் கூறிற்று. இராணுவம், கடற்படை என்பவற்றின் உதவியோடு அதிகாரத்தைக்கைப்பற்றியது.

பின்னர் "உலகத்தை நடுங்கச் செய்த பத்து நாள்" நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (இவ்வாறு இந்நிகழ்ச்சிகளை வருணித்த ஜோன்ரீட் என்பவர் கிரெம்லினில் பின்னர் அடக்கஞ் செய்யப்பட்டார்.) அரசியல் நிர்ணய சபை சனநாயகப்போக்குடையது ; இதில் பிரதிநிதிகளாயிருந்தவரின் சிலரே பொதுவுடைமைச் சார்புடையவர்கள். அவர்களுடைய கூட்டம் தடுக்கப்பட்டது. ட்ரொஸ்கி ஓர் இராணுவத்தைக் கூட்டிப் பயிற்சியளித்தார். பல பட்டினங்கள் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தன. தண்ணீர், மின்சாரம் என்பவற்றைக் கைப்பற்றியதால் சில பட்டினங்கள் இதில் சேர வேண்டியதாயிற்று. பின்னர் சிவப்புச் சைனியத்துக்கும் வெள்ளைச் சைனியத்துக்குமிடையிலே போர் நடந்தது. வெள்ளைச்சைனியத்துக்கு போலந்தும் மேற்கு நாடுகளும் உதவிபுரிந்தன. வெள்ளைச் சைனியம் தோல்வியுற்றபடியால் உத்தியோகத்தர் நாட்டைவிட்டு வெளியேறினர்.

www.padippakam.com



ருஷிய ஆட்சி வீழ்ந்துவிடுமென உலகம் எதிர்பார்த்தது. ஆனால் பொதுவுடைமை ஆட்சி நிலைநாட்டப்பட்டது. நாட்டிலே பெரிய பஞ்ச முண்டாகி இலட்சக்கணக்கானோர் மாண்டனர். உயர்குடியினர் பலர் கொலை செய்யப்பட்டனர்.

பொதுவுடைமைக்கட்சி ஒன்றே அனுமதிக்கப்பட்டது. குடிமக்களில் ஒரு சிறு வீதத்தினரே இந்தக் கட்சியிற் சேரக்கூடியவராயிருந்தனர். தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும் உள்ளூர் சோவியற்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் தமது பிரதிநிதிகளை மேற்சபைகளுக்குத் தெரிந்தெடுத்தனர். குடியரசிலுள்ள சமஷ்டிகளெல்லாவற்றினதும் பிரதிநிதியாக சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுச் சமஷ்டியின் பொதுமக்கள் சபை இவ்வாறு அமைக்கப்பட்டது.

சோவியத் தலைவர்கள், திட்டமிடவில்லை. மாக்ஸ் முதலாளித்துவ முறையிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டினாரேயன்றி எதிர்காலத்திலே புதிதாக அமைக்கப்படவிருந்த சமூகம் எப்படியிருக்க வேண்டுமென்று ஒரு திட்டம் அமைக்கவில்லை. ருஷியா பிற்போக்கான சேவைமானிய முறையிலிருந்து முதலாளித்துவ முறைக்கு உருப்பெற்றது. அது கைத்தொழில் நாடுகளுக்கு முன்னரே புரட்சியிலீடுபடுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை. 1920 இல் லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையில் முதலாளித்துவ நாடுகளோடு இணங்கவேண்டியதாயிற்று. ஆனால் 1928–1929 இலே உற்பத்திக்கான கைத்தொழில், கூட்டாட்சியான விவசாயம் என்பன சம்பந்தமான முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயல் முறைபடுத்தப்பட்டது. இதையடுத்து இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

மூலதன ஆக்கம் விரைவாக நடைபெற்றது. யுத்த ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ருஷியாவிலே தொழில் நுட்பமுறைகள் பெருகின. இவை காரணமாக நுகர்வுப் பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்டன. தொழிலாளருக்கு கூப்பன் அட்டைகள் வழங்கப்பட்டன. அவற்றைக் காட்டிப் பண்டங்களை வாங்கவேண்டியிருந்தது. பணம் புளக்கத்திலிருந்தது. மேலதிகப் பணமிருந்தால் விசேட பண்டங்களை வாங்குவதற்கு அதிகவிலை கொடுத்தால் மாத்திரமே செலவு செய்யலாம். நிசச் சம்பளமும், பணச் சம்பளமும் செய்யும் தொழில்களையனுசரித்து வித்தியாசப்படும். உயர்ந்த உற்பத்திகளுக்கு உற்சாகப் பணமும், சில்லறைச்சம்பளமும் கொடுக்கப்படும்.

1920 இல் லெனின் இறந்ததும், அவருடைய சகாக்களில் ஒருவரான ஜோசப் ஸ்டாலின் அதிகாரத்தைப் பெற்றார். ட்ரொஸ்கி முதலிய பழைய புரட்சியாளர் சோவியத் அரசுக் கெதிராக வெளிநாடுகளோடு சேர்ந்து சூழ்ச்சி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர். 1935 வரையில் பல உயர் அதிகாரிகள் பதவி நீக்கஞ் செய்யப்பட்டனர். பின்னர் பரபரப்பைக் கொடுத்த மொஸ்கோ விசாரணைகளுண்டாயின. இது பரபரப்பை உண்டாக்கியதற்குக் காரணம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொள்

www.padippakam.com



ளப்போட்டியிட்டமையே. சேம்பர்லேனுடன் ஹிட்லர் ஒப்பந்தஞ் செய்து கொண்டபின்னர் ஹிட்லர் ரூஷியாவுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு, போலந்தையும் பிரான்சையும் வென்ற பின்னர் ரூஷியா மீது பாய்ந்தார்.

ரூஷியா நிரம்பிய தேசாபிமானத்தோடு ஐக்கிய அமெரிக்காவின் உதவியைப் பெற்று, உயிரைத் திரணமாக மதித்து எதிர்த்த ஜெர்மானியரை நிர்மூலமாக்கிற்று. அச்சு நாடுகள் தோல்வியடைந்த பின்னர் ரூஷியா மேற்கு நாடுகளோடு கொண்ட நட்பு மறையத்துவங்கிற்று. உலகம் ஜலவாயுக் குண்டின் ஆபத்திலே சிக்கிற்று. ருஷ்யா தனது செல்வாக்கை ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரப்பத்துவங்கிற்று. பிரிட்டனும் அத்லாந்திக் நாடுகளும் அமெரிக்காவும் இதைத்தடுக்க முற்பட்டன.

யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலே ஸ்டாலினுடைய தனியாட்சி தனிச் சர்வாதிகாரமாயிற்று. 1953 இலே ஸ்டாலின் இறந்தார். அதனோடு அவருடைய ஆட்சிமீது வெறுப்புண்டாயிற்று. குருஷேவ் ஆட்சியில் கமிட்டியாட்சி நடைபெற்றது. அதனையும் கண்டிக்கத் துவங்கினர் போலீஸும் ஹங்கேரியரும், லெனின்கிராட் மாணுக்கரும் நல்லகாலம் இன்னும் விடியவில்லையென்பதை உணர்ந்தனர்.

**சோவியத் பொருளாதாரம்**

சரித்திரம் இவ்வளவிலிருக்க, பொருளாதாரத்தின் மூன்று பிரச்சினைகளான என்ன உற்பத்தி, எப்படி உற்பத்தி, யாருக்கு உற்பத்தி என்பவற்றை சோவியத் ரூஷியா எவ்வாறு நிச்சயித்ததென்பதை ஆராய்வாம்.

அங்கே அரசாங்கத்துக்கே உற்பத்திச் சாதனங்களான தொழிற்சாலைகள், சுரங்கங்கள், நிலங்கள் என்பனவெல்லாம் சொந்தம். தொழிலாளர் வேலை செய்து சம்பளம் பெறுவர். அவர்களுக்கு ஓர் எல்லைக்குட்பட்ட தொழில் உண்டு. சோவியத் தொழிலாளி தனக்குப் பிடித்த இடத்திலே தொழில் தேடிப்போக முடியாது.

**என்ன உற்பத்தி**

இராணுவப்பாதுகாப்பும், மூலதன ஆக்கமும் முக்கியமானவை என அரசாங்கம் நிச்சயித்துள்ளது. மிஞ்சியவை நுகர்வோர் பண்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். ரூஷியன் தான் விரும்பும் பண்டங்களைச் சுட்டிக்காட்டலாம். அது அவன் தனது வருமானத்தைச் செலவு செய்யும் முறையினால் அறியப்படும். இதிலே உண்டாகும் குறைவுகள் அல்லது மேல்மிச்சங்களினால் விலைவாசிகள் மாறமாட்டா. அதனால் நேர்க்கணியமாகவோ எதிர்க்கணியமாகவோ வருவாய்கள் உண்டாகி, வளங்கள் புனர்வழிப்படமாட்டா. பண்டங்கள் அருந்தலாயிருந்தால், மக்களுக்கு இவ்வளவு உணவு தேவைப்படும், இவ்வளவு சப்பாத்துக்கள் தேவைப்படும், வேறுவகையான பண்டங்கள் இவ்வளவு தேவைப்படும் என்று திட்டம்போடுவோர் நிச்சயித்துக்கொள்வர். இப்பண்டங்களெல்லாம் சந்தையிலே கிடைத்தவுடன் எல்லாரும் விழுந்தடித்

www.padippakam.com



துப்போய் வாங்குவார்கள். உள்ளூர்ப்பண்டசாலையிலே உங்கள் அளவினும் சிறிது பெரியதான சப்பாத்துக் கிடைத்தாலும் நீங்கள் வாங்கிவிடுவீர்கள். சில உபயோகப் பொருள்களும், போகப் பொருள்களும் கிடைக்கத் துவங்கினுல், மக்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதென்ற கருத்தைவிடுத்து, திட்டம் போடுவது கடினமாகிறது. இந்நாட்களிலே சில பண்டங்கள் விலைப் படுவதில்லை. அதனுல் அவற்றைக் குறைப்பதற்குத் திட்டம்போடுவோர் வழிவகுப்பர். மக்களுக்கு என்னதேவையில்லையென்பதை நிச்சயிப்பதிலும் பார்க்க அவர்களுக்கு என்ன தேவையென்பதை நிச்சயிப்பது கடினம். சந்தையாராய்ச்சி பாலதிசையிலேயே இருந்து வருகிறது. ருஷிய மக்களைச் சுயேச்சையாகத் தெரிவுசெய்யவிட்டால் என்ன பண்டங்களைத் தெரிவு செய் வார்களென்பது அதிகாரிகளுக்கே தெரியாது. அவர்கள் அமெரிக்கருக்கு என்ன விருப்பமென்பதை ஆராய்ந்து அப்பண்டங்களைத் தாமதப்பட்டேனும் ருஷியாவில் புகுத்துவர். உதாரணமாக ருஷியத் தோழர் ஒருவர் ஒரு காரைப் பெறுவாராஞல் அது அமெரிக்கரின் பழைய மொடல் கார் போன்றதாய் இருக்கும். இவ்வாறு ஒருவரைப் பார்த்து மற்றவர் செய்யும் முறை நூதனமானதன்றென நிபுணர் கூறுவர்.

மூலதனப் பொருள்கள், இராணுவச் செலவு என்பனபற்றி அரசாங்கம் நேரடியாக நிர்ணயஞ் செய்யும். கைத்தொழில் விருத்தி செய்யப்படும். மின்சாரம். போக்குவரத்து, சுரங்கங்களை விருத்தி செய்தல், கூட்டுப்பண்ணை, பயிர்ச்செய்கைமுறை என்பனவிருத்தி செய்யப்படும். இவையெல்லாம் அரசியல் நிர்ணயப்படியே நடைபெறும்.

### எப்படி உற்பத்தி

தனியார் துறை அத்துணை முக்கியத்துவமுடையதன்று. சோவியத் தொழிற்சாலைபெரும்பாலும் அரசுக்குச் சொந்தமான முயற்சியாகவேயிருக்கும். ஜெனரல் மோட்டார் தாபனத்தின் தலைவர் அதன் மொத்தப்பங்கில் சிறிதும் சொந்தமாகவுடையவரல்லர். அரசாங்கத்துக்குச்சொந்தமான இந்த முயற்சியின் மூலதனத்திலே எதுவும் மனேஜருக்குச் சொந்தமில்லை. அவருக்கு சராசரியாகக் கிடைக்கும் சம்பளத்திலும் பார்க்கக் கூடக்கிடைக்கிறது. அத்துடன் பிரயாணச்செலவு, மோட்டார் செலவு, முதலிய விசேட உரிமைகள் கிடைக்கும். நன்கொடைப்பணங்கூடக் கிடைக்கும். அவருடைய வேலைக்கேற்றபடி உத்தியோக உயர்வுமுண்டு. அவர் மற்ற அதிகாரிகளைப் போலவே கட்டளை பிறப்பிப்பார். கீழேயுள்ள உத்தியோகத்தர் அதன்படி நடக்கவேண்டுமெனவும் விரும்புவர். தனக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிப் பங்கை நிறைவேற்றமுடியாவிட்டால் உருக்கு முதலிய பண்டங்களை மற்றத் தொழில்களுக்குக் கொடாமல் முடக்கிவைத்திருப்பார். அதிகாரிகள், தமது தொழிற்சாலையில் நல்ல உற்பத்தியுண்டாக்கியிருக்கிறதெனக் காட்டுவதற்கு, உண்மையான சக்தியை மறைப்பதாயிருந்தாலும் முயற்சி செய்வார். உதாரணங்கள் : சில தொழில்களிலே வேலை மந்தமாக நடைபெறும். நோக்கம் குறைவான அனுமதிப்பங்கைப் பெறுதல் ; அதன் பயனுக

www.padippakam.com



நிறைவேற்றுவது சுலபமாயிருக்கும்; அல்லது மேலதிகமாக உற்பத்தி செய்வதும் சுலபமாயிருக்கும்).

நிலம், தொழிலாளர், யந்திரசாதனம் என்ற உற்பத்திச் சாதனங்கள் பலவற்றை ஒன்று சேர்ப்பதற்கான நிச்சயிப்பு, பலவகையான பொருளாதார வளங்களின் அருந்தல்களைச் சரிப்படுத்துவதிலும், தொழில்நுட்பவிடயங் களைக் கலத்தலிலுமே தங்கியுள்ளது. இவ்வாறு பிழைவிட்டுத் திருத்திக் கொண்டேயிருப்பார்கள். இந்தச் செயற்பாடுகள் சமமாயிராமல் ஏற்றஇறக்க முள்ளனவாயிருக்கும். சில சந்தர்ப்பங்களிலே தொழில் நுட்பமுறை மிகச் சிறப்புடையதாயிருக்கும். சில சந்தர்ப்பங்களில் மிகப் புராதனமான முறை கள் பயன்படுத்தப்படலாம். இதனுல் உற்பத்திப் பண்டங்கள் பெரும் பாலும் தரத்தில் மிகவும் குறைந்திருக்கும் (உதாரணம்: சோவியற் பண்ணை வேலையாள் ஒருத்திக்கு ஒரு பசுவைப் பாதுகாக்கவிடுவர்; விஸ் கொன்சின் கால்நடைப் பண்ணையிலே ஒவ்வொரு மனிதனுக்கும் பெண் ணுக்கும் பொதுவாக 30 மாடுகள் வழங்கப்படுவதோடு அவர்கள் தமது வேறு வேலைகளையும் பார்க்க வேண்டியிருக்கும்).

சோவியத் பொருளாதார வாழ்க்கை பிரமித உருவத்திலிருக்கும். தனி யார் துறை முயற்சிகளுக்கு மேலே வட்டாரச் சபையொன்றிருக்கும். இவ் வட்டாரச் சபைக்கு மேலே கைத்தொழில் அமைச்சொன்று மொஸ்கோவி லிருக்கும். இந்த அமைச்சுக்களுக்கு மேலே கொஸ்பிளான் திட்டக்காரரி ருப்பர். இத்தகைய ஒழுங்கு முறைப் படங்களில் முழுக்கவனத்தையுஞ் செலுத்தினுல் அது மயக்கத்தை உண்டாக்கும் என்பது நிபுணர் கருத்து. ஏனெனில் மத்தியமுகப்படுதல், வெளிமுகப்படுதல் என்பவற்றின் கலப்பு அதிலே இடைக்கிடை மாறிக்கொண்டேயிருக்கும். ஆணையிடல், பராதீனப் படுத்தப்பட்ட பொறுப்பு, துணிந்துமுயலல், முதலியவற்றுடன் நல்லவிளை வுண்டானுல் பரிசுகள், அல்லது உதை, மறியல் போன்ற தண்டனைகள் என்பனவெல்லாம் உண்டு.

மேலும் வெளித்தோற்றத்தில் காணப்படுவனபோல் எல்லாமிருக்கமாட்டா. ஒரு தொழில் முயற்சியின் தலைவர் பொதுவுடைமைக் கட்சி அங்கத்தவரா யிருப்பார். இவர் எடுத்த காரியத்திலே சித்திபெறக்கூடிய அதிகாரியா யிருப்பார். இவர் திறமையான நிர்வாகி; இவர் அடங்கி நடக்கவேண்டும். அத்துடன் தொழில் புரியும் ஆற்றல்மிக்கவராயும், கர்வமும் பணிவும் ஒருங்கே உடையவராயும், ஊக்கமுள்ளவராகவும், இலேசாக உணர்ச்சி வசப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தகுதி குறைந்தவர்கள் முன் னுக்கு வரமாட்டார். சராசரியாகத் தகுதியுடையவர் கணிக்கப்படுவர். தொழில்நுட்பத்திறமை மாத்திரம் இருந்தாற்போதாது. தொழிலாளரைக் கொண்டு நடத்தும் திறமையுமிருக்கவேண்டும்.

திட்டமிடுவதிலே விரிவானதோர் அமைப்பு உண்டென்றும், சுத்தமான பொதுவுடைமைப் பொருளாதாரம் பற்றி ஒரு நூலையே எழுதிவிடலா மென்றும், தனிப்போட்டிச் சந்தை அமைப்பின் பொதுவான சமநிலை

www.padippakam.com



பற்றிய ஒரு ஆராய்ச்சிபோல அது இருக்குமென்றும் நினைப்பது அறிவுடைமையாகாது என நிபுணர் கருதுகின்றனர்.[1]

**யாருக்கு உற்பத்தி**

ருஷியப் பொருளாதாரம் அரசைப் பாதுகாப்பதிலும் எதிர்காலத்தின் சுபீட்சத்திலும் நோக்கமுடையது. தனியார் துறைப் பொருள்களை இந்தத் தலைமுறையில் ருஷியர் எவ்வளவு தூரம் அனுபவிக்கிறார்களென்பது அவர்களுடைய தினசரிச் செலவீட்டிலும், தொழில் செய்யும் தீர்மானங்களிலும் தங்கவில்லை. அவர்கள் உழைக்கிறார்கள் என்பது உண்மை. (ஓரளவு வட்டியையும் அரசாங்கக் கடன் பத்திரங்களில் பெறுகிறார்கள்) சமமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. தேவை அதிகமுள்ளவர்கள், குறைபாடுள்ளவர் என்போருக்கு முயற்சி உடையோர், பயிற்சி உடையோர் என்பவர்களிலும் பார்க்க அதிக சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. தொழிற் பயிற்சியுடையவர்களுக்குத் தொழிற் பயிற்சியில்லாதவர்களிலும் பார்க்க அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. சுதந்திரமான தொழிற்சங்கங்கள் கிடையா ; தொழில் நிர்வாகி தொழிலாளரின் ஒற்றுமையைப் பெற வேண்டும், சில்லறை வேலைகளும், வேறுவகையான முயற்சித் தூண்டல்களுமுண்டு. எல்லாரும் தாய்நாட்டுக்காகவும், மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்ப்பதற்காகவும் உழைக்கவேண்டுமெனத் தூண்டப்படுகின்றனர். சோவியத் நாவல்களிலே கதைப்பொருள் நல்ல பையனும் சிறுமியும் சமூகத்துக்குப் பிரதிகூலமான செயல்களில் ஈடுபட்டோரைத் திருத்துவதையும், உழவு, தொழில் விருத்தி செய்வதையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1848 இல் மாக்சும் ஏஞ்ஜெலும் அறிந்த சமூக வகுப்புக்கள் சோவியத் நாட்டிலே கிடையாது. ஆனால் சமூக அரசியல் அடுக்கு முறை ஒன்று உண்டு. வறுமையுள்ள விவேகி ஒருவன், பௌதிக நிபுணனாக வளர்ந்து நல்ல சீவியம் நடத்தலாம். பரீட்சையிலே அவன் நல்ல புள்ளிகளைப் பெற வேண்டும். பின்னர் மேற்படிப்பு அவனுக்கு இலவசமாக வழங்கப்படும். பின்னர் மொஸ்கோவிலே பௌதிக சாத்திரத்தில் மேற்படிப்புப் படிப்பான். தொழில்நுட்ப பொறியியல் அதிகாரியாக யூறல் மலைக்கோ, வேறு தூர இடங்களுக்கோ போக விரும்பமாட்டான். நல்ல சம்பளம்

[1] இவ்வத்தியாயத்தின் அனுபந்தத்திலே ஹாவாட் பேராசிரியரான லியோன்டீவின் உள்ளீடு உற்பத்தி என்பனபற்றிய முறை குறிப்பிடப்படுகிறது. ருஷியர் இதைப்பயன்படுத்துகிறார்கள் என்று கூறுவது தவறு. (சில அமிசங்களை அவர்கள் அறிந்துள்ளனர்.) முப்பதாம் அத்தியாயத்தின் அனுபந்தத்திலே காட்டியவிலை அமைப்பை அவர்கள் பயன்படுத்தவுமில்லை. அவர்கள் பண்டமான திட்டஅமைப்பு, கணக்கிடல், பொருளியற்றிட்டம் என்பவற்றைக் கலந்துள்ளனர். விலையிடல், செலவிடல், அருந்தல் என்பவற்றைப்பயன்படுத்துகின்றனர். முறையமைப்பாயுள்ள எந்தக்கோட்பாட்டையும் அவர்கள் பயன்படுத்தவில்லை. (உதாரணம்: கழிவுகணக்கிடல், வருவாய், காணக்கிடல் என்பவற்றில் ஓரளவு தங்கியுள்ளனர். இது வட்டிவீதம் போன்றது. மூலதனத் திட்டங்கள் பலவற்றிடையே சிலவற்றைத் தேர்ந்தெடுப்பதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது இலட்சிய பூர்வமான விடயங்கள் சம்பந்தமாக விவாதத்துக்குரியதே.)

படிப்பகம்

www.padippakam.com



பெற்றுப் பேராசிரியனுயிருப்பான். அதிகாரிகளைத் தவிர மற்றவர்களைச் சமமற்றவர்களாகக் கருதுவான். கார் இருக்கும், கிராமத்திலே வீடிருக்கும், நல்ல ஆய்கூடங்களிருக்கும் ; அதன் பயனாகத் தன் மகனுக்கு நல்ல கல்வியை அவன் அளிக்கக்கூடியதாயிருக்கும்.

யாருக்காக உற்பத்தி என்பதையறிய பலவகையான பொருளாதார உபாயங்கள் உண்டு. கைத்தொழில், இராணுவப் பாதுகாப்பு என்பவை நன்கு வலியுறுத்தப்படும். பண்டங்கள் உற்பத்திப்படிகளொவ்வொன்றிலும், தீர்வை விதிக்கப்படும். இது மாற்றியமைக்கும் வரி எனப்படும். இதனால் விலைகள் உயரும். சம்பளம் அவ்வளவு உயரமாட்டாது. எனவே உற்பத்தி செய்வதில் ஒரு பகுதியையே மக்கள் நுகரக்கூடியதாயிருக்கும். வரிகளை விதிப்பதனால் நாம் வளங்களைத் தனியார் துறையிலிருந்து அரசியற் றுறைக்கு வழிப்படுத்த விரும்புவதுபோல இது பயன்படுகிறது.

இராணுவப் பொருள்கள் மூலதனப் பொருள்கள் என்பவற்றிலும் பார்க்க உண்மையான சில பொருளாதாரச் செலவுகள் சம்பந்தமாக நுகர்பொருள் களின் விலை அதிகரிக்கப்படுகிறது. இஃது ஒரு உபாயம். மற்றதொரு உபாயம், யாதெனில் வசதியானதொரு வீடுபோன்ற நுகர்பொருள்களை எல்லாரும், என்ன விலைக்கும் வாங்கமுடியாது. அதிட்டமுள்ள பொருளா தார வசதியும், அரசியல் அனுகூலமுமுள்ள சிலரே அவற்றை வாங்க லாம்.

இத்தகைய முறைகளினாலே சோவியத் அதிகாரிகள் விலை அதிகரிப்பைக் குறைக்கிறார்கள். தொழிலாளர் தமது வருமானத்தைச் செலவு செய்யத் துவங்கினால், அதாவது எல்லைக்குட்பட்ட நுகர் பொருள்களை வாங்கமுற் பட்டால், விலை அதிகரிக்கும். இக்காலப் பொருளாதாரத்தைப் பயின்ற வர்கள், சமூக நிர்ணயிப்பை அனுசரித்து யாருக்குப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் என்பதைச் சமூகம் நிச்சயிப்பதற்கு, துணையாயுள்ள உபா யங்கள் இவையே என்பதை அறிவர்.

ருஷியாவிலே எல்லாரும் கடினநிலையிலிருக்கிறார்கள் என்று நினைப்பது தவறு. மேற்கு நாடுகளில் உள்ளவர்களில் மிகச் சிலரே தமது பொருளா தாரச் சுபீட்சத்தையும் அரசியல் சுதந்திரத்தையும் சோவியத் வாழ்வுக் காகப் பேரஞ் செய்வார்களென்பது உண்மையே. சோவியத் குடியானவர், தமது ஆட்சி சீன ஆட்சியிலும் மிகச் சிறப்புடையதெனவே எண்ணுவர். சீன ஆட்சியிலே குடும்ப உரிமைகள் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கைத்தொழில் மிகப் புராதன நிலைமையிலுண்டு. வாழ்க்கைத்தரமும், சௌகரியங்களும் குறைவாயுள்ளன. சமூகத்துக்குத் தொண்டு செய்யு மாறு தனிப்பட்டவர் பெரிதும் நிர்ப்பந்திக்கப்படுவர். சார் ஆட்சியிலே எந்த வகுப்பாரும் அதிக சலுகை பெற்றதில்லை. ஆசியா, ஆபிரிக்கா போன்ற வறிய நாடுகளிலிருந்து ருஷ்யாவுக்கு வரும் யாத்திரிகர்கள் அங்குள்ள நிலைமையைப் பெரிதாக நினைக்கலாம். ஆனால் நாம் அவ்வாறு நினைப்பதற்கு இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



**ஒப்பியலான பொருளாதார வளர்ச்சி**

ருஷிய அமைப்பைப்பற்றி இன்று நாம் பலவிடயங்களை அறிந்திருக்கிறோம். நமது நிபுணர்கள் அவர்களுடைய புள்ளி விபரங்களை நன்ருக ஆராய்ச்சி செய்கிருர்கள். அவர்கள் உதவிய தரவுகள் பூரணமற்றதாயும், சில சமயம் தவறுடையனவாயுமிருக்கின்றனவென்றும், இருந்தும் அவர்களுடைய பொருளாதாரத்தின் தன்மையை அச்சொட்டாகக் கூறலாமென்றும் நிபுணர்கள் நினைக்கின்றனர். சோவியத் குடிகள் திறமையற்றவர்கள் என்றோ, ஒரு போட் மோட்டாரைக்கூட நல்ல நிலைமையில் வைத்திருக்கும் சக்தியற்றவர்களென்றோ கூறமுடியாது. அதற்கு எதிர்மாருக அவர்கள் 7 அடி உயரமுள்ளவரென்றும், விரைவில் அவர்களுடைய உற்பத்தி வீதம் மற்றெல்லாரையும்விட மிஞ்சிவிடுமென்றும் கூறிவிடமுடியாது.

1960 இல் சோவியத் நாட்டின் மொத்தத் தேசீய உற்பத்தி எமது உற்பத்தியில் 2/3 இக்கும் 1/3 இக்குமிடையிலுள்ளது. இது டொலர் விலை அளவைப் பயன்படுத்தியோ ரூபிள் விலை அளவைப் பயன்படுத்தியோ பெற்றுக்கொள்ளலாம். பொதுப்படையாகக் கணக்கெடுப்பதானுல் சோவியத் ஐக்கியநாடுகளின் 1960 ஆம் ஆண்டுக்குரிய நிசமொத்த தேசீய உற்பத்தி ஐக்கிய அமெரிக்காவின் நிச மொ. தே. உற்பத்தியில் அரைப் பங்காகும்.

சோவியத் குடிசனத் தொகை அமெரிக்க குடிசனத் தொகையினும் பார்க்க அதிகமாகும். மேலும் சோவியத் ருஷியா தனது மொ. தே. உ. (GNP) இல் ஒரு சிறு பகுதியையே நுகர்வுக்குப் பயன்படுத்துவதால், அதனுடைய தனி நபர் வீதமான நுகர்வு மேலும் குறைவாகவேயிருக்கும். இது சகல அமிசங்களாலும் ருசுப்படுத்தப்பட்ட தகவலாகும். நிபுணர்களின் இந்த அபிப்பிராயத்தை அந்த நாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்தவர்களும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

1960 இல் இந்த இரு நாடுகளுக்குமிடையில் நிலவிய ஒப்பியலான பலம் இப்போது வாசிக்கப்படவில்லை. ஒரு நாடு மற்ற நாட்டைவிட விரைவாக வளர்ச்சியடைகிறதா ? இவற்றுக்கிடையேயுள்ள இடைவெளி வருங்காலத்திலே சிலதசாப்தங்களிலே நீங்கிவிடுமா என்பதே ஆகும். இவ்விடயமாகப் பல பொருளற்ற பேச்சுக்கள் நடந்துள்ளன. நிபுணர் தமது கணக்கீடுகள், ஏறக்குறையச் சரியானவையென்றே கூறுகிருர்கள் ; ஆனுல் நடு நிலைமையோடு பிரத்தியட்ச ஏதுக்களைக்கொண்டு ஆராயக்கூடிய தகவல்கள் சில உண்டு என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

அமெரிக்காவின் நிச மொ. தே. உ. (GNP) நெடுந்தவணை வீதத்திலே வருடமொன்றுக்கு 3 அல்லது 4 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதெனக் கூறலாம். இது எந்த வருடங்களை ஒப்பீட்டுக்கு எடுக்கிறோமென்பதைக் பொறுத்தது. 1960 ஆண்டில் சனநாயகமேடைகளிலும், நெல்சன் ரொப் பெலர் என்ற குடியரசுக்கட்சித் தேசாதிபதியின் எழுத்துக்களிலும், ஐக்கிய அமெரிக்காவின் இலட்சியம் 5 வீத வளர்ச்சியெனப் பேசப்பட்டது. ஆனுல் நிபுணர்கள் இதை ஆட்சேபிப்பர். படம் 1, 1960 இலிருந்து வளர்ச்சி

www.padippakam.com



வீதங்கள் பலவற்றைக் கணக்கிடுகிறது. இவ்வீதங்கள் நியாயமான அளவு நன்மைகாணும் கணக்குக்களுக்கும், தீமைகாணும் கணக்குக்களுக்கு மிடையிலே ஊசலாடுகிறது.

சோவியத் நாட்டின் விடயத்தில் இந்தக் கணக்கீடு சற்றுச் சிரமமானது. வருடமொன்றுக்குள்ள வீதமாகக் கணக்கிடும்போது சோவியத் வளர்ச்சி நம்முடைய வளர்ச்சியிலும் பார்க்கச் சிறந்ததாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனல் சோவியத் ருஷியா, கலப்புப் பொருளாதா ரமுள்ள மேற்கு ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகள் சென்ற தசாப்தத்திலேயடைந்த உற்பத்திப் பெருக்கத்தைக்கூட அடையவில்லை என்பது உண்மை. தாழ்ந்த உற்பத்தி மட்டத்திலே ஆரம் பிக்கும் ஒரு பொருளாதாரம் உயர்ந்த ஆரம்ப விகிதத்தைக் காட்டுவது சாத்தியமெனப் பலநிபுணர்கள் நினைக்கிருர்கள். (பூச்சியத்திலிருந்து ஏதாவதொரு மட்டத்துக்கு ஏறுவது இலேசான காரியந்தானே). நமது வளர்ச்சிக்கு ஒப்பான அளவில் சோவியத் நாடு வளர்ச்சியடையும்போதும், சேவையை அது அதிகம் வலியுறுத்தும்போதும், வளர்ச்சி விகிதத்திலே அது பிற்போக்கைக் காட்டக்கூடிய நிலை உண்டாகலாம். அத்துடன் அதிக வளர்ச்சியடைந்த தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதிலும் அனுகூலமடை வதை இழக்கலாம் என அவர்கள் எண்ணுகின்றனர். எனவே சமீப காலத்திலே கிடைத்த தரவுகளைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுவதைப் பற்றி அவர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். அத்துடன் அத்தகைய தரவு களைக்கொண்டு எதிர்காலத்தை நிச்சயிப்பது தவறெனவுங் கூறுகின்றனர்.

இவ்வாறு கூறப்படும் காரணங்களிலே ஓரளவு நியாயமுண்டு. மேலும் வளர்ச்சியிடையேயுள்ள இடைவெளிமூடப்படாதிருக்கவேண்டுமென விரும்பு வோருக்கு இக்காரணங்கள் இடமளிக்கலாம். மேலும் உற்பத்தியிலே சோவியத் நாடுகளைவிட முன்னேற்றமாயுள்ள ஜெர்மனிபோன்ற நாடுகளின் உதாரணம் இந்த நியாயங்களை சில சமயம் (பின்னோக்கிச் செல்லக்கூடிய தன்மையுடையனவாயுமிருக்குமெனவும்) எதிர்மாருக இருக்கச் செய்யும் எனவும் எச்சரிக்கை செய்கின்றனர். மாக்ஸ்வாதிகள் முன்னெல்லாம் சமூகத்தை ஒரு குழந்தையைப் போலவே பலபடியான வளர்ச்சிகளை அடையுமென்று கூறினர். ஆனல் இக்கால நிபுணர் கைத்தொழில் அபிவிருத்தியின் கால உருப்படி பற்றித் திட்டமாக ஒன்றும் வற்புறுத்திக் கூறமாட்டார்கள். நன்மைகாணும் கருத்துத் தீமைகாணும் கருத்து இரண் டையும் அடக்கக்கூடிய கணக்கீடு படம் 1 இல் உண்டு.

நமது நிச மொ. தே. உ. (GNP) இங்குச் சமமாக சோவியத் ருஷ்யா உற்பத்தியை விரைவில் பெருக்கிக்கொள்ள முடியாது. மேலும் நமது தனி நபர் சுபீட்ச நிலையை அடைய அது பலகாலம் எடுக்கும். ஆனல் இரு முறை களினதும் வளர்ச்சி ஒழுங்கை ஒப்பிட்டுத் திட்டமாக எதையுங் கூறுமுன்னர் பொருளியல் நிபுணர் இரண்டு எச்சரிக்கைகளை அவதானிக்க வேண்டும்.


www.padippakam.com



யுத்த பலத்தை இன்று நிச மொ. தே. உ. (GNP) இனுல் மட்டுமே அளக்க முடியாது. இன்று சோவியத் ருஷியா யுத்த பலத்தில் அமெரிக்காவுக்குச் சமனுயிருக்கிறதென ராணுவ நிபுணர் கூறுகின்றனர். ருஷியாவின் நிச மொ. தே. உ. எங்களுடையதிலும் பார்க்க அரைவாசியாயிருக்கலாம். ஆனுல் இந்த மொத்தத்தில் தாங்கள் பயன்படுத்தும் பங்கிலும் இரண்டு மடங்கை அது பாதுகாப்புக்குப் பயன்படுத்துகின்றது.

படம் 1. ருஷியாவுக்கு அமெரிக்கா வழிகாட்டுகிறது. ஆனுல் இவற்றிடையேயுள்ள இடைவெளி குறையுமா ?

ஒப்பியலான வளர்ச்சி வீதங்கள்




படம் 1. இங்கு காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகள் செம்மையானவையல்ல ; எனினும், இவை சோவியத் அறைகூவலின் தன்மையை எடுத்துக் காட்டுசின்றன. (குறிப்பு : சுட்டெண்கள் யாவும் ஐ. அ. நிசமான மொ. தே. உ. (GNP) 1960 = 100 என்ற அடிப்படையிலும் சோவியத் ருஷிய நிசமான மொ. தே. உ., 1960 = 50 என்ற அடிப்படையிலும் அமைக்கப்பட்டுள.)

மேலும் இருகட்சிகளிடத்திலும் அணுக்குண்டு அதிகமாயிருக்குமானுல் சோவியத் ருஷியாவுக்கு ரொக்கெட், ஏவாயுதம் என்பவற்றில் தொழில் நுட்ப அனுகூலமுள்ள காலத்திலே, அமெரிக்கா தனது மொ. தே. உற்பத்தியின் இராணுவ செலவுக்கான பகுதியைப் பேரளவாக அதிகரித்



படிப்பகம்

www.padippakam.com



தாலும், ருஷியாவிலும் அதிகமான இராணுவ அனுகூலத்தைப் பெற்றிருக்கமாட்டாது. எனவே அதிகாரப்போராட்டம் நடத்துவோருக்கு நிச மொ. தே. உ. (GNP) இல் அடையும் உயர்தானம் சந்தோஷமாயிருப்பதற்குக் காரணமாகமாட்டாது.

இரண்டாவதாக இந்த இரு நாடுகளும் முன்னேருத நாடுகளால் கவனமாகக் கவனிக்கப்பட்டுவருகின்றன. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ருஷியாவிலும் பார்க்க முன்னேறியிருந்தாலும், ருஷியா வளர்ச்சி வீதத்தில் உயர்வு காட்டுமானல், நடுவுநிலே இப்போதிருக்கும் நாடுகள் வருங்காலத்தில் ருஷியாவின் ஆட்சி முறையை விரும்பிக்கொண்டிருக்கலாம். இதனுல் சனநாயகம் நசுக்கப்படலாம் ; கூட்டுத் தீர்மானங்கள் செய்யப்படலாம் ; தனியார் சுதந்திரம் பெரிதும் மட்டுப்படுத்தப்படலாம். நடைமுறை நுகர்வு, எதிர்காலத்திலே மூலதன ஆக்கத்துக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் குறைக் கப்படலாம்.

பொருளாதாரத்தை " துயர் நிறைந்த சாத்திரமென்று " கூருமல், " யதார்த்தமான சாத்திரமென்றே " கூறவேண்டும்.

**கடைசி வார்த்தை**

நமது இக்காலப் பொருளாதாரம் எவ்வாறு செயற்படுகிறதென்பதை முந்திய அத்தியாயங்களால் அறிந்தோம். பொருளாதாரம் மிக நுட்பமாக ஆராயப்பட்டது. இந்த ஆராய்ச்சியிலே சாதகமான கண்டனங்களும் பாதகமான கண்டனங்களுமிருக்கலாம். இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. கம்யூனிஸம், பாஸிஸம் சோஷலிஸிம் என்ற பலவகை ஆட்சி முறைகளே இங்கே அவதானித்துள்ளோம்.

நமது கலப்பான முயற்சிமுறைகூடப் பூரணமானதன்று. எந்த முறையும் பூரணமாயிருக்கமாட்டாது. ஆனுல் அதனுடைய குறைபாடுகளே, நடப்பு எண்ணங்கள், தாபனங்கள் என்ற மேற்சட்டத்துக்குள்ளேயே வைத்துச் சீர்படுத்திக் கொள்ளலாம்.

கற்பனையிலே உண்டாகும் ஒரு திட்டத்துக்குட்பட்ட இலட்சிய அமைப்பை நாம் அறிந்துள்ள எமது அமைப்பிலுள்ள குறைபாடுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது இலேசான காரியம். நமது கலப்புப் போக்கான சுதந்திர முயற்சித் திட்டத்திலேயுள்ள தீவிரமான ஆற்றலேப்பற்றி மழுப்பிவிடுவதும் இலேசு, இந்தக் கலப்புச் சுதந்திர முயற்சித் திட்டமே தனது எல்லாக் குற்றங்களுடனும் உலகுக்கு ஒரு நூற்றுண்டாக முன்னேற்றத்தை வழங்கி வந்துள்ளது. இதற்குச் சமமாக பொதுவுடைமை முறை வழங்கவில்லே.

அமெரிக்கப் பொருளாதாரம் முன்னிருந்ததைவிடப் பெரிய சக்தியுள்ளதாக இருந்து வருகிறது. உலகின் குடிசனத் தொகையிலே 6 சதவீதம் அமெரிக்காவிலுண்டு. ஆனுல் உலகின் வருமானத்திலே 38 சதவீதம் அமெரிக்காவிலுண்டு. இவ்வளவு குற்றங்களுடனும் அமெரிக்காவில் உலகில்

www.padippakam.com



வேறெங்கும் அறியாத வகையில் உற்பத்தி வேகமும், வாழ்க்கைத் தரமும் ஏற்பட்டுள்ளன. நமது மக்கள் விரைவான வளர்ச்சியை விரும்பினுல் அது அவர்களுக்குக் கிடைக்கும்.

யுத்தம் இருந்தபோதிலும், நமது கலப்புப் பொருளாதாரம் பெரும் எதிர்காலத்தை உடையதாகும்.

இத்தகைய பாடநூலை 30 வருடத்துக்கு முன்னர் எழுதியிருந்தால் இவ்வாறெல்லாஞ் சொல்லியிருக்க முடியாது. சர்வதேச வியாபார வலை சுருங்கிக் கொண்டே வருவதைப் பார்க்கும்போதும், வங்கி அமைப்பு முறி வடைவதைப் பார்க்கும்போதும், செல்வத்துக்கும் சுபீட்சத்துக்கும் மத்தி யிலே கொடிய வறுமை தாண்டவமாடுவதைப்பார்க்கும்போதும், எதிர் காலத்திலே சுதந்திர சமூகங்கள் நிலைத்திருக்க முடியுமா என்று எவரும் சந்தேகப்படலாம். வரலாற்றுப் பதிவேடுகளையும் பொருளாதாரப் புள்ளி விபரங்களையும் கவனமாகவும், காய்தல் உவத்தலின்றியும் ஆராய்ந்தால், நல்லதோர் எதிர்கால முண்டென்ற முடிபுக்கு வரக்கூடியவராயிருப் போம்.

பாடநூல் எழுதுபவர்க்கு முக்கியமான வேறெருவிடயம், "நவீன, பழம் பொருளியற் கொள்கைகளின் இணைப்பு". இது வருமானத்தை மொத்த மாகக் கணக்கிட்டு வருமானம் நிச்சயிக்கும் கொள்கையின் பிரதான அமிசங்களைப் பழைய பொருளியற் கொள்கையான ஒப்பியல்விலைகள், பிண்டப் பொருளியற் கொள்கைகள் என்பவற்றேடு இணைக்கிறது. நன்ருக நடைபெறும் ஓர் ஒழுங்கிலே, பழைய பொருளியற் கோட்பாடுகளால் அனுமதிக்கப்பட்ட உயர் வேலைவாய்ப்புக்கருதுகோளை உறுதிப்படுத்தும் முறையில் பண, பிஸ்கால் கொள்கைகள் நடந்துகொண்டிருக்குமாஞல், அந்தப் பழைய பொருளியற் கொள்கை மறுபடியும் நடைமுறைக்கு வந்து விடும். எனவே பொருளியலாளர், புதிய நம்பிக்கையோடு சமுதா யத்தில் பழைய பொருளியற் கொள்கைகளைச் சொல்லமுற்படுவர்.

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய உலகின் சகல பாகங்களிலும், நிலவும் பொரு ளியல் ஆராய்ச்சி முறையின் பொதுப்படையானதொரு அறிவை இதுவரை வாசகர் பெற்றிருக்கலாம். மாக்ஸீயப் பொருளியல் நிலவும் இரும்புத் திரைக்குப் பின்னுள்ள நாடுகளின் பொருளியலாராய்ச்சி பற்றிய அறிவு கொடுக்கப்படவில்லை. அனுபந்தத்திலே இக்காலப் பொருளியலின் சரித் திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சிக்குரிய விஞக்கள்.**

1. அரசியற் கோட்பாடுகள் எத்தனை என்பதை அட்டவணைப்படுத்தி அவற்றைப்பற்றி விவரித்து வரலாறு எழுதுக.
2. உமது கற்பனைச் சமுதாயத்தை வருணிக்க. அது இன்றைய சமு தாயத்திலும் பார்க்க வித்தியாசமானதா ?

www.padippakam.com



3. பாசிசம், கொம்யூனிசம் என்பவற்றை ஒப்பிட்டு ஆராய்க. சோஷலிஸம், முதலாளித்துவம் என்பவற்றிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

4. "பொதுவுடைமை நாட்டில் வயிறு நிறையச் சாப்பிடுவதிலும் சுதந்திரமுள்ள அமெரிக்காவிலே பசியால் வாடுவது மேல்" இக்கருத்தை ஆராய்க.

5. கியூபா, கானு, கொங்கோ, இந்துனீஷியா, போன்ற நாடுகள் சர்வாதிகார ஆட்சியைத் தழுவாமல் அபிவிருத்தியடைவதற்கு என்ன பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றவேண்டும்.

6. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரூஷியா, சீனு, இந்தியா ஆகிய நாடுகளிலேயுள்ள வளர்ச்சி வீதத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பிரச்சினைகளை ஆராய்க.

7. பின் வருங்கருத்துக்களை ஆராய்க :—
அராஜரீகம், பாசிசம், சோஷலிஸம், கொம்யூனிசம், மத்திய முகமான திட்டமிடல்; சோவியத்முறைத் திட்டமிடல், கலப்பு முறை, சுதந்திரம், சனநாயகம்.

## அனுபந்தம்: பொருளாதாரக் கோட்பாடுகளின் வரலாற்றுச் சுருக்கம்

தற்காலத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளில் அக்கறை கொண்ட தத்துவ அறிஞரும், பொருளாதாரக் கருமங்களை நிறைவேற்றுவோரும் ஆகிய இரு வகையினரே பொருளாதார ஆராச்சியை விசேடமாக முதலில் மேற்கொண்டனர்.

பொருளியல் வரலாறு பற்றிய வமிசாவளியும் முக்கியமான சில பொருளியலாசிரியர்கள், அவர்கள் எழுதிய நூல்களின் காலம் என்பனவும் அச்சொட்டாகக் கடைசிப் பக்கத்திற் குறிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்திலிருந்த மிகப் புராதனப் பொருளாதாரக் கோட்பாடுகள் அரிஸ்டோட்டிலுடைய நூல்களிலும், விவிலிய வேதத்திலும், ஒவ்வொரு நாட்டு மக்களினதும் எழுத்தில் எழுதப்படாத கிராமியக் கலாசாரங்களிலுங்கூட இருந்துவந்தன என்பது அவற்றிலிருந்து புலனாகும். பின்னர் அர்ச். தோமாஸ் அக்குவைனஸ் போன்ற மத்திய காலத்து வேதாகமப் பண்டிதர்களின் எழுத்துக்களிலும் காணப்படுகிறது. இவர்கள் "நீதியான விலை"யைப் பற்றிய அங்கபூர்வமான ஒரு சட்டத்தைத் தொகுக்க வேத சாத்திரத்தையும் நடைமுறைப் பழக்கங்களையும் பயன்படுத்தினர்.

### இளவரசனுக்கு ஆலோசனை கூறுவோர் வணிகவியலாளர்

"எக்கொனொமிக்ஸ்" என்ற சொல் இன்றைய "வீட்டுப் பொருளாதாரத்தை" விசேடமாகக் குறிப்பிடும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அது, வாங்குதல், விற்றல், உற்பத்தி செய்தல், பண்டமாற்றுதல் என்பவை சம்பந்தமான நிருவாக நிருணயங்கள் எப்பொழுதும் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகவே இருந்தன என்பதைக் காட்டுகிறது. மக்கள் சமுதாய மாகச் சேர்ந்ததும் அரசு தோன்றியது. அது மக்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முற்பட்டதும், நடைமுறைச் சீர்திருத்தங்களில் அக்கறை கொண்ட துண்டுப் பிரசுரக் கர்த்தாக்களே பிரதானமாகப் பொருளாதார ஆராச்சியை மேற்கொண்டனர்.

எனவே, இக்காலயுகம் ஆரம்பமாகித் தேசங்கள் தனித்தனி அரசு களை ஏற்படுத்தியதும், ஆட்சி நடத்தும் அரசனுடைய ஆலோசகர்கள், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப், பொன்னைப்பற்றியும், இறக் குமதியில் ஊக்கங் குன்றச் செய்து, ஏற்றுமதியை ஊக்குவித்தல்பற்றி யும், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கமாகச் செய்யவேண்டிய ஆயிரக்கணக்கான சிறு, சிறு, கட்டளைகளைப்பற்றியும் துண்டுப்பிரசுரங்கள் எழுதினர். இவர்களே "**வணிக இயலாளர்**" என்று வழங்கப்பட்டனர். இவர்களின் கருத்துக்களையும், துண்டுப் பிரசுரங்களின் பண்பற்ற தன்மை யையும் பார்த்து, நாம் இன்று ஏளனம் செய்யினும், பொருளாதார ஆராச்சிச் சாதனங்களை இவர்கள் உண்டாக்கியதோடமையாது, பழம் பொரு ளியல் வாதத்திற்கு வழியும் வகுத்தனர். அவர்களுடைய கோட்பாட்டுக்கு எதிராகவே அடம் சிமித் கண்டனங்களைத் தொடுக்க வேண்டியதாயிற்று.

## இயற்கையாளர், லியோன்டீவின் முதலீடு–உற்பத்தி என்பன பற்றி மற்றொன்றுவிரித்தல்

எந்த வரலாற்றுச் சுருக்கமும் பிரெஞ்சு இயற்கையாளரைப்பற்றிக் குறிப் பிடுவதற்குத் தவறுவதில்லை. இவர்கள் 1789 புரட்சிக்குச் சிறிது முன்பாக நிலமே சகல தேறிய உற்டத்திக்கும் மூலம் என்று வற்புறுத்திக் கூறினர். அவர்களின் தலைவரான குயெஸ்னே என்பவர்தான் முதலிலே பொருளா தார வாழ்க்கையின் சுழல் ஓட்டத்தையும் தேசீய வருமானம்[1] என்று நாங்கள் இன்று வழங்கும் விடயத்தையும் கருத்துக்குக் கொண்டுவந்தனர்.

குவெஸ்னேயின் "பொருளியல் அட்டவணை" என்பது, உண்மையிலே இன்று ஹாவாட்டைச் சேர்ந்த வாசிலி லியோன்டீவ் என்பவர் வகுத்த முதலீடு–உற்பத்திப் டண ஓட்டம் என்றழைக்கப்படும் கொள்கையின் வடி வத்திலே நிறைவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கைத்தொழில் உற்பத்தி யினதும் பெறுமதியில் எவ்வளவு பங்கு, ஏனைய தொழில்களிலிருந்து கிடைத்த முதலீடுகளிலும், தொழிற்சக்தி முதலீட்டிலும் செலவழிக்கப் படுகின்றது என்பதைக் காட்டக்கூடிய புள்ளி விபரங்களைச் சேகரிக்க இப் போது அநேக தேசங்கள் முயற்சி செய்கின்றன.

அமெரிக்காவின் பொருளாதாரத்திற்காக, அரசாங்கமும், லியோன்டீவும் அமைத்த பல நூற்றுத் தொழில் அட்டவணையின் மிக இலேசாக்கப்பட்ட

[1] உசிதம்போல இவ்வத்தியாயத்தின் எஞ்சிய பகுதியை மேலோட்டமாக வாசிக்கலாம்.

www.padippakam.com



ஓர் உதாரணத்தை அட்டவணை 1 கொடுக்கிறது. அதன் பொதுப்படையான கருத்து பின்வருமாறு. ஒவ்வொரு தொழில் முறையும் இரண்டுதரம் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கிறது ஒரு குறுக்குவரிசையில் அது உற்பத்தியென்ற வகையிலும், ஒரு நீள்வரிசையில் அது தேவையான முதலீடென்ற வகையிலும் நிரைப்படுத்தப்பட்டிருக்கின்றது. விவசாயமும் கைத்தொழிலும் மாதிரித் தொழில்களாகும். அத்துடன் வீடுகளிலுள்ள முடிவான வீட்டு நுகர்ச்சிப் பொருள்களைப்புறம்பான ஒரு நீள்வரிசையிலும், வீடுகளிலிருந்து பெறும் தொழிற்சக்தி அல்லது வேறு மூல உற்பத்திச் சாதனங்களை மேலதிக நீள்வரிசையிலும் குறித்துள்ளோம். இப்படியான எண்களை தேசீய வருமானத்தின் கீழ் அதாவது தேறிய தேசீய உற்பத்தியின் கீழ் காணப்படுவதோடு, அவை சரிந்தவெழுத்திலும அச்சிடப்பட்டிருக்கின்றன. (லியோன்டிவ், அரசாங்கம், வெளிநாட்டு வாணிபம், முதலீடு முதலிய வற்றையும், வேறுபல சிக்கல்களையும் சேர்த்துள்ளார்.)

விவசாய உற்பத்தியின் மொத்தப் பெறுமதி, தடித்த எழுத்தில் 240 டொலராக (பில்லியன்) இருமுறை காட்டப்பட்டுள்ளது. அதன் குறுக்கு வரிசையின் வலது புறத்திலே கைத்தொழில் ஆக்கத்திற்கு முதலீடான 140 டொலருடன், வீடுகளிலே நுகர்பொருளாக, நேரடியாக நுகரப்பட்ட 100 டொலரையும் சேர்த்து, விவசாயப் பண்ணையின் உற்பத்தியாயிருந்த சகல இடங்களினதும் கூட்டுத் தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அதன் நீள்வரிசையின் அடியிலே 160 டொலர் தொகையைத் தொழிற் சக்தி முதலீட்டிற்காகவும் (மற்றும் வீட்டுச் சாதனங்களுக்காகவும்) 80 டொலர் தொகையை உற்பத்தி முதலீட்டிற்காகவும் (இரசாயன உரம் முதலியவை) காட்டப்பட்டுள்ளது.

இம்மாதிரி ஒரு விளக்கத்தை 280 டொலர் மொத்த உற்பத்தித் தொகைக்குத் தருக.

பழைய விடயமான தேசீய வருமானத்தையும் அட்டவணை காட்டுகின்றது. அரசாங்கமோ முதலீடோ இல்லாமல் இறுதி உற்பத்திகளின் (மூன்றாவது நீள்வரிசையின் சரிவெழுத்தில் அச்சிட்ட)கூட்டுத் தொகைக்குத் தேறிய தேசீய உற்பத்தியாகிய 300 டொலர் சமனாக இருக்கின்றது.

அல்லது தேறிய தேசீய உற்பத்தி மூன்றாவது குறுக்குவரிசையிற் சரிவெழுத்திற் காட்டப்பட்ட எல்லாச் சாதனச் செலவுகளின் கூட்டுத் தொகைக்கும் (அல்லது "சம்பாத்தியங்கள் கூட்டப்பட்டது") சமனாக இருக்கின்றது, என்று பிறிதொரு விதமாகக் கூறலாம். (தேறிய தேசீய உற்பத்தி ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவின் இடையிற் கொள்வனவை நிச்சயமாகச் சேர்த்துக் கொள்வதில்லை. தடித்த எழுத்திலான மொத்தத் தொகையாகிய 520 டொலர் நிச்சயமாக இரட்டை எண்ணிக்கையாகவே இருக்கின்றது.)

www.padippakam.com



**லியோன்டீவின் கொள்கையான உள்ளிடுகை–வெளியீடு குவெஸ்னேயின் அட்டவணையைத் தற்காலத்திற்கேற்றதாக்குகின்றது :**

| | விவசாயம் | கைத்தொழில் உற்பத்தி | வீட்டின் இறுதி நுகர்ச்சிகள் | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| விவசாயம் | .. | .. 140 | .. *100* | .. 240 |
| கைத்தொழில் உற்பத்தி | 80 | .. | .. *200* | .. 280 |
| வீட்டுத்தொழிலும் மற்றும் சாதனங்களும் .. | *160* | .. *140* | .. — | .. |
| மொத்தத் தொகை .. | 240 | .. 280 | .. | .. 520 |

அட்டவணை 1. உள்ளிடுகை–வெளியீட்டுப் பண ஓட்டத்தின் உதாரணம். (பில்லியன் டொலரில்) சரிவெழுத்திலச்சிடப்பட்ட இறுதியான இனவகைகளின் கூட்டுத்தொகை, தேசிய வருமானத்தை அல்லது உற்பத்தியைக் காட்டுகின்றது. ஒவ்வொரு தொழிலினதும் உற்பத்தி குறுக்குவரிசையாலும், நீள்வரிசையாலும் இருமுறை நிரற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு குறுக்கு வரிசையும் அதன் தடித்த எழுத்திலான வெளியீட்டுக்கு என்ன நடக்குமென்பதைக் காட்டுகின்றது. ஒவ்வொரு நீள்வரிசையும் அதன் தேவைப்பட்ட உள்ளிடுகைகளைக் காட்டுகின்றது. (பொருத்தமான தேறிய தேசிய உற்பத்தியை நிரப்புக.)

இந்த உள்ளிடுகை–வெளியீட்டு அட்டவணை கடந்தவரலாற்றின் ஒரு பதிவுச் சுவட்டியிலும் மேலானதொன்றாகக் கருதத்தக்கது. அதை, லியோன்டிவ் அல்லது திட்டமிடுவோர் எப்படிப் பயன்படுத்த எண்ணுவார் ? அவர், அதை நுகர்ச்சிகள் மாறும்போது ஏற்படும் விளைவுகளை முன்கூட்டியே காணுவதற்காகப் பயன்படுத்த எண்ணுவார். எனவே உணவு நுகர்ச்சி 100 டொலரிலிருந்து மாறாமல் இருக்கும்போது 200 டொலரிலிருந்து 300 டொலருக்கு, இறுதியாக கைத்தொழில் உற்பத்தி நுகர்ச்சி, யுத்தம் காரணமாக ஏறினால் ஒவ்வொரு தொழிலுக்கும் எவ்வளவு தொழிற் சக்தி தேவைப்படும் ? எவ்வளவு இடை நிலை முதலீடு வேண்டும் ? இதற்கு விடை அடிக்குறிப்பின்[1] புதிய அட்டவணையிற் கொடுக்கப்பட்டதே என்பதைக் காட்டுவதற்கு லியோன்டீவ் ஓர் இராட்சத கணக்கிடும் எந்திரத்தைப் பயன்படுத்துவார்.

[1] விவரங்கள் ஒருபுறமிருக்க அவருடைய முக்கியமான உத்தேசக்கோட்பாடு பின்வருமாறு விவசாய வரவின் 80/240 1/3 எப்போதும் உற்பத்தி முதலீட்டிற் செலவிடப்படும். மீதியான 160/240 = 2/3 எப்போம் தொழில் சக்தி முதலீட்டிற்காகவே செலவிடப்படும். அதே மாதிரி கைத்தொழில் உற்பத்தி அதற்குத் தேவைப்பட்ட விவசாய முதலீட்டிற்காக எப்போதும் 140/28C = ½ஐ செலவிடும். மீதி, தேவைப்பட்டவீட்டு மூலச் சாதனங்களுக்காகச் செலவிடப்படும். அவர் இந்தவிவரத்தை எடுத்துக்கொண்டு இறுதி நுகர்வுக்காகவும் இடை முதலீட்டிற்காகவும் தேவைப்பட்ட ஒவ்வொரு பண்டத்தின் மொத்தத் தொகையைக் கணக்கிடுவதற்காக, அட்சர கணிதத்தைப் பயன்படுத்துகின்றார். அத்துடன் தொழில் இலாகாவின் உதவியுடன் இவற்றை மனித சக்தித் தேவைகளாகவும் மாற்றிக்காண்பிப்பார்.

படிப்பகம்

www.padippakam.com



குவெஸ்னேயிற்கும் லியோன்டீவுக்குமிடையே நீண்டகால இடைவெளி இருந்தும் அவர்கள் இருவருக்குமிடையேயுள்ள தொடர்பு என்ன ? அதைப் பின்வருமாறு கூறலாம். அட்டவணையின் மூன்ருவது குறுக்குவரிசையில் சரிவெழுத்துக்களில், மூலச் சாதனமுதலீடாக, நிலத்தைக் குறிப்பிடக் குயெஸ்னே விரும்பினுர். மல்தஸையும், பிந்திய பழம் பொருளியலாளர்களையும் போலவே இவரும், ஒழுங்குமுறையிலே மக்கள் ஆக்கப்படுவதாக எண்ணினுர். அதாவது லியோன்டீவின் அட்டவணையின் வடமேற்குத் துண்டத்திற்குள் மற்றை இடைநிலை தொழிலைப்போலவே, உழைப்பையும் வீட்டுநுகர்ச்சிகளையும் குறிக்கின்ருர். தீனியாற் குதிரைகள் ஆக்கப்படுவதுபோலவும், உருகுகினுறபொறிகள் உற்பத்தியாவதைப்போலவும், தொழிலாளரும், உணவாலேயே உண்டாக்கப்படுவதாக இயற்கையாளர்

மேலேயுள்ள அட்டவணையிலிருந்து குறுக்கப்பட்டது இந்த அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 140 | *100* | | 240 |
| 80 | 0 | *200* | | 280 |
| *160* | *140* | *300* | .. | — |
| 240 | 280 | — | .. | 520 |

யுத்தகாலத்தில் பின்வரும் அட்டவணையாக மாறும்

| | | | |
|---|---|---|---|
| 0 | 200 | *100* | 300 |
| 100 | 0 | *300* | 400 |
| *200* | *200* | *400* | — |
| 300 | 400 | — | 700 |

குறிப்புரை :— ஒருங்கமைச்சமன்பாடுகளைத் தவிர்ப்பதற்காக லியோன்டீவ் "பெருக்கி" முறையைக் கையாளுவார். ஒவ்வொரு கைத்தொழில் உற்பத்திக்கும், விவசாயத்தின் அரைவாசி முதலீடாகத் தேவைப்படுகின்றது. அதுபோலவே ஒவ்வொரு விவசாயத்திற்கும் அதன் முதலீடாக கைத்தொழில் உற்பத்தியின் 1/3 தேவைப்படுகின்றது. எனவே ஒவ்வொரு கைத்தொழில் உற்பத்திக்கும் அதனை ஆக்குவதற்கு $\frac{1}{2} \times 1/3 = 1/6$ மேலதிக கைத்தொழில் உற்பத்தி மறைமுகமாகத் தேவைப்படுகின்றது. அப்போது $(1+1/6+(1/6)^2+\ldots\ldots\ldots\ldots)$ என்பதற்கு 1.2 கூட்டுத்தொகையாகும். இந்த 1.2 ஒவ்வொரு 1.0 சரிவெழுத்திலுள்ள உற்பத்திப் பெருக்கத்திற்குமாகத், தடித்த எழுத்திலுள்ள உற்பத்தியின் தேவைப்பட்ட பெருக்கமாக இருக்கின்றது. இதே விதமாக, அவர் புதிய யுத்த அட்டவணையை நிரப்பமுடியும்.

www.padippakam.com



கருதினார்கள். அதனால் அவர்கள், சகல தொழிலின் நுகர்ச்சியையும் வேலையாளரின் நுகர்ச்சியையும் ஓர் இடைநிலைப் பொருளாகக்கருதி, சகல "உபரி நுகர்ச்சியும்" இறுதியிலே நிலத்தில் தங்கியிருக்கிறதென்ற முடிவுக்கு வந்தனர்.

## அடம் சிமித்தும் பழம்வாதமும்.

தற்காலப் பொருளாதாரத்தின் ஆரம்பத்தை அடம் ஸ்மித் 1776 இல் எழுதிய தேசங்களின் செல்வம், என்ற நூல் குறிக்கின்றது. இந்நூல் ஆதியிலிருந்து அந்தம் வரை வணிகவியலாளரிடமிருந்து வழிவழிச் சொத்தாகப் பெற்ற தடையில்லாத போட்டி அரசாங்க ஒழுங்குகளையும் ஏனைய தலையீடுகளையும் கண்டிக்கிறது. இயற்கையாளர், நியூட்டனின் பௌதீக அமைப்புமுறையை ஆதரித்த அவர் காலத்தவர் என்போரைப்போல இந்த உலகம் ஒன்றுக்கொன்று இசைவான ஒழுங்குடையதென ஸ்மித் கண்டார். அதாவது, தடையில்லாத போட்டிமட்டும் இருக்குமாகில் "தோன்றாத் துணை" ஒன்று பூரணநிலையை உண்டாக்குவதற்கு உதவும் என்பதாகும். இம்மட்டன்று; அவர் பெரிய வியாபாரிகளுக்காகப் பரிந்துபேசவில்லை. தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்காகவே பாடுபட்டார். இவ்விடயத்தை இவ்வளவு சுருக்கமாகக் கூறுவதானால் மேலெழுந்தவாறாகத்தான் கூறமுடியும்.

டேவிட் ரிக்காடோவும், ஜோன் ஸ்டுவட் மில்லும் பழம் பொருளியல் வாதத்தின் பிரதான விரிவுரையாளராக இருந்தனர். அவர்கள் ஸ்மித்தின் காட்சிகளை விளக்கி நிறைவாக்கினார்கள். பெரும்பாலான செலவுகளைத் தொழிற் செலவுகளாகப் பகுக்கலாம் என்ற கருத்தை ரிக்கார்டோ மேலும் விருத்தி செய்தார். முதலின் திரட்சி, சனத்தொகை உயர்வுடன் இணைந்து எப்படி நிலவாடகையைக் கூட்டும் என்பதை விளக்கினார். இந்நிலை இறுதியிலே, குறைந்துசெல் விளைவு விதி, எல்லாச் சேமிப்பையும் அழிக்கும் இலாபத்தை (அல்லது வட்டிவீதத்தை) தாழ் எல்லைக்குக் கொண்டுவரும். மேலும் ஒருவித வளர்ச்சியுமில்லாமலே இருக்கும். இதனால் மாறாத உயிர் வாழ்வுக்கு மாத்திரம்போதுமான அரசாங்க சம்பளம் பெறக்கூடிய பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் விளக்கினார்.

பழம் பொருளியலாளர், வளர்ச்சியடைகின்ற வியாபார வகுப்பினர் விரும்பியவற்றையே கூறினர்; அவற்றை அவர்கள் கேட்டு நடந்துகொண்டனர். அவர்கள் கூறியவை உண்மையிலேயே பிடிவாதக் கோட்பாட்டுக்குரியனவாக இருந்தன. உலகச் சந்தைகளை நடைமுறையிலே ஒருபோதும் ஆராயமலே எண் கணிதம், தர்க்கம் என்பவற்றின் விகிதங்களை உய்த்தறிவது போலவே பொருளாதார விதிகளையும் உய்த்தறிய முடியும் என்று நினைக்கவேண்டியிருந்தது. மல்தஸினது "சட்டரீதியான கூலி விதியையும்" பழம்பொருளியலாளருடைய துயர் நிறைந்த சாத்திரத்தாற் சித்தரிக்கப்பட்ட தவிர்க்கமுடியாத விளைவுகளையும் விலக்குவதற்கு, அரசாங்கங்களால் அதிகமாக ஒன்றும் செய்யமுடியாது என்றும் எண்ண வேண்டியிருந்தமை பிடிவாதக் கோட்பாடே. அப்போது விடய உணர்ச்சியுள்ள மனித



படிப்பகம்

www.padippakam.com



ரான ஜோன் ஸ்டுவட் மில், அவருடைய தகப்பனுர் இறந்தபின், அவருடைய நூலாகிய அரசியற் பொருளாதாரத்தின் தத்துவங்களின் முதலாவது பதிப்பில் (1848) பழம் பொருளாதார முறை கோவைப்படுத்தப்பட்ட போது, சமவுடைமை வாதியாகவும் சீர்திருத்த வாதியாகவும்[1] மாறியமை காலத்தின் கோலமே. (தாபனரீதியாக சீர்திருத்தம் வேண்டுமென மில் விரும்பியபோதும் போட்டி விலை மதிப்பீட்டில் அவருக்கிருந்த நம்பிக்கையை அவர் துறக்கவில்லை.)

**மாக்ஸினது விஞ்ஞான ரீதியான பொதுவுடைமையும் அதற்கு மாமுன கற்பனைப் பொதுவுடைமையும்.**

நிறைவான ஓர் உலக ஒழுங்கைக் கற்பனையிற் காணும் மனிதர்களை ஒவ்வொரு யுகமும் படைத்துள்ளது, என்பதை அறிந்துள்ளோம். அவர்கள் கண்ட உலகிலே பற்ருமை ஒழிந்தும், சுயநலத்திற்குப் பதிலாக பிறர்நலம் பிரியவாதம் நிலைநாட்டப்பட்டும் இருக்கும். அவர்கள் ஏற்றத் தாழ்விற்குப் பதிலாகச் சொத்துக்களைப் பொது சனத்திற்கு உடைமையாக்குவதும் சமத்துவம் நில்வுவதுமான ஓர் உலகையே கண்டார்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டிலே பிரசித்திபெற்ற பிரதிநிதிகளிலே, ஒருவர் பெருஞ் செல்வரான ஆங்கிலேய உற்பத்தியாளர், ரேபற் ஓவென். அவர் இங்கும், வெளிநாடுகளிலும், கற்பனைக் குடியேற்றங்களுக்கு ஆதரவு காட்டினுர். இன்னொருவரான சைமண்டி டி. சிஸ்மண்டி என்பவர் மிகக் குறைந்த நுகர்ச்சியாலும், குறைந்த வாங்கும் சக்தியாலும் சிலகாலப் பகுதிகளிலே முதலாளித்துவம் இடர்ப்படும் என்று நம்பினுர். சார்ல்ஸ் போறியர்; எச். டி. செயின்ற் சைமன் பி. ஜே. பிறௌடன் (எல்லாச் சொத்துக்களும் களவாடப்பட்டவை என்றவர்) ஆகியோரும் இன்னும் அநேகரும் அக்காலத்தைச் சேர்ந்தவராவர்.

முதலாளித்துவத்தை ஏற்று சாதாரணமாக வாதித்தவர்களை அவமதித்ததுபோலவே, இப்படியான கற்பனைச் சீர்திருத்தவாதிகளையும், காள் மாக்ஸ் அவமதித்தார். அவர் நாடுகடத்தப்பட்ட பின் ரிக்காடோவின்

[1] ஐரோப்பாவில் அநேகர் பழம்பொருளாதாரக் கொள்கைகளைக் கைவிட்டனர். இவ்வாறு செய்தோர் முதலாளித்துவத்தை வெறுத்த கற்பனை ஆசிரியர்களும், பின்பு, காரணனுமானக் கொள்கையை வெறுத்து, அவற்றிற்குப் பதிலாக விவரங்களோடு கூடிய (மந்தமான) உண்மையான ஆராய்ச்சியை நிலைநாட்ட முயற்சி செய்த வரலாற்றுப் பொருளியலாசிரியரும் ஆவர். 1840ஆம் ஆண்டளவில் ஜேர்மனிய எழுத்தாளரான பிரெடறிக் லிஸ்ற் என்பவர் கற்பனைக் கொள்கைகளின் சில அமிசங்களுக்கு விசேடமானவர். சுங்கவரி சம்பந்தமான அவருடைய வாதங்கள் சக்திவாய்ந்தனவாக இருந்ததுடன், அவருடைய தேசிய ஆதரவாளர்களுட் சிலரும் பாசிசப் பொருளாதாரத்தையே சரியானதாக போதித்தனர். அமெரிக்காவிலே விஸகொன்ஸைச் சேர்ந்த ஜோன், ஆர். கொமன்சையும், பேராசிரியர் தோஸ்டேன் வெப்லெனையும் தலைவர்களாகக் கொண்ட தாபனவாதிகள், வரலாற்றுப் பொருளியலே முதலாவது உலக மகாயுத்தத்தின்போது உருவாக்கினர். இன்று எல்லாப் பொருளியலாளரும் உண்மையான கருதுகோளுக்குத் தர்க்கரீதியான நியாயங்களும் அவசியமெனப் பேச்சளவில் மட்டுமே கூறுகின்றனர்.

www.padippakam.com



நூல்களை ஆராய்ந்தார். அத்துடன் எல்லாப் பெறுமானங்களையும் உழைப்புத்தான் உற்பத்தி செய்வதாலே, அது சுரண்டப்படாவிட்டால் எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்ளலாம் என்ற, ரிகாடோவின் உழைப்பின் பெறுமதிக் கொள்கையைக் குறிப்பாக அழுத்திக்கூறினார். மனமுட்பட எல்லாம் சடப்பொருள் என்ற ஹேகெலினது தத்துவ ஞானத்தைத் தலைகீழாக மாற்றமுடியுமென்றும் அவர் நினைத்தார். அதற்குப் பதிலாக அவர் "வரலாற்றுக்குப் பொருளாதார விளக்கமொன்றைக்" கொடுத்துள்ளார். அதிலே, உற்பத்தி நிலைமைகள் எல்லாக் கொள்கைகளையும் உருவாக்குகின்றன, என்றும், அதிலே மானியமுறையினதும் முதலாளித்துவத்தினதும் அடுத்தடுத்த காலப்பகுதிகள் மூலமாகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நோக்கித் தவிர்க்கமுடியாதபடி, வகுப்புப் போராட்டம் இயக்குகின்றது என்பதையும் விளக்கினார். இதைத் தொடர்ந்து, அரசு சிதைந்து, இறுதியாக வகுப்புப் பேதமில்லாத சமநிலை உண்டாகலாம் என்றும் கூறினார். ("நாங்கள் உங்களைப் புதைப்போம்" என்று குருஷ்சேவ் அமெரிக்கர்களுக்குக் கூறியபோது இக்கூற்றிலே மாக்ஸினுடைய தவிர்க்கமுடியாமைக் கோட்பாட்டைக் காணலாம்).

மாக்ஸ், முதலாளித்துவத்தினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து கூறும்போது ஒப்பு நோக்கிலே மெய்க்கூலியின் வீழ்ச்சியும், இலாபவிகிதங்களின் வீழ்ச்சியும், அரைகுறை நுகர்ச்சியும், மேலும் மேலும் தொழிற் சகடவோட்ட நெருக்கடிக்குக் கொண்டு செல்லும் என்று சொன்னார். அதிக ஏகபோகவுரிமைக் கட்டுப்பாட்டையும், ஏகாதிபத்தியத்தையும் இறுதியாகத் தவிர்க்க முடியாத புரட்சியையும் எதிர்பார்த்தார். எனவே அவர் முக்கியமாகச் "சுயமுரண்பாடுடைய" முதலாளித்துவ[1] முறையின் சாதாரண சீர்திருத்தங்களை உதறித் தள்ளினார்.

## இருபதாம் நூற்றாண்டுப் பொருளாதாரம்

பழம் பொருளாதார ஆராச்சிகளிலே பல முரட்டுத் தன்மை காணப்பட்டது. இந்த நூலின் மூன்றாவதும் நான்காவதும் பிரிவுகளிற் கொடுக்கப்பட்டுள்ள பிண்டப் பொருளியலானது 1870 இன் பின்னர் வளர்ச்சியடைந்தது. இந்தக் காலப்பிரிவில் மிகப் புகழ்பெற்றவரும் கேம்பிரிட்ஜ்ஜைச் சேர்ந்தவருமான அல்பிரேட் மாஷல் இக்காலப் போக்குடையவர். (இதே இயக்கத்தைச் சேர்ந்தவர்களே, சுவீடினைச் சேர்ந்த, கே. விக்செலும், பிரான்சைச் சேர்ந்த

1. மாக்ஸினுடைய பொருளாதாரச் சாதனங்கள், உழைப்புச் செலவு V என்றும் இலாபம் S என்றும், தேய்வு இடையான மூலப் பொருட்கள் போன்ற ஆரம்பகாலச் செலவு வகைகளுக்கு C என்றும் ஒரு பண்டம் வருவாயாகிய P/Q ஐ பிரித்தன. மாக்ஸ், C/V இன் விருத்தியடைகின்ற ஏற்றம், (ஈடு செய்யக்கூடிய அளவுக்கு S/V ஏற்றமடையாவிட்டால்) இலாபவிகிதமான S/PQ ஐ இறங்கச் செய்யும் என்று நினைத்தார். சகல விதமான அரசியற் கொள்கையையுமுடைய கவனமுள்ள திறனாய்வோரும், இது, முதலாளித்துவத்தினதும் சமவுடைமையினதும் ஒரு பலனளிக்காத பாகுபாடாக இருப்பதாகப் பொதுவாக நினைக்கின்றனர், ஆனால், அப்படியாகச் சிந்திக்கும் ஒரு பில்லியன் மக்களை, நம்பச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

www.padippakam.com



எல். வால்றஸ்சும், இத்தாலிய வி. பாறெட்டோவும், அமெரிக்க ஜே. பி. கிளாக்கும், அவுஸ்திரிய கே. மெங்கரும், ஈ. போம்-பாவெக்கும் ஆவார்கள்.)

மில்லினுடைய நூலைப் பின்பற்றியே மாஷலினுடைய "பொருளாதாரத்தின் தத்துவங்கள் (1890) பல சந்ததியாருக்கு பாடப்புத்தகமாக வழங்கப்பட்டது. ஆனால் தற்கால உயர்நோக்குள்ள கல்விமான்கள் சும்பீற்றரைப் பின் பற்றிப், பொருளாதாரத்தின் நியூற்றனாக, வால்றஸ் என்பவரையே மதிக்கின்றார்கள்.

1930 ஆம் ஆண்டிற்குப் பின் இரு முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஹாவேட்டைச் சேர்ந்த ஈ. சேம்பலின், கேம்பிரிட்ஜைச் சேர்ந்த ஜோன் றெபின்சன் ஆகியோர் ஏகபோகவுரிமைக்குரிய போட்டி, நிறைவில் போட்டி என்பவற்றை ஆராய்ந்தனர். அத்துடன் கேயின்ஸ் பிரபு (முன்னை நாள் ஜோன் மேனாட் கேயின்ஸ்) தமது நூலாகிய வேலை, வட்டி பணம் என்பவற்றின் பொதுக் கொள்கையிலே (1936) வருமானத்தைத் தீர்மானிக்கும் கொள்கைக்காக[1] அடிக்கல்லை நாட்டினார். பொருளாதார ஆராச்சியின் இலாபமற்ற தேசீயப் பணியகத்திலுள்ள, சைமன் குஸ்னெற்சு என்பவர் தேசீய வருமானப் புள்ளிவிவரத்திற்குரிய அளவைக்கு முன்னோடியாக இருந்தார். இந்த வேலையைத் தொடர்ந்து, வணிகத் திணைக்களமும் ஐக்கிய நாடுகளும் ஆராய்ந்தன. ஹாவேட்டைச் சேர்ந்த அல்வின் ஹன்செனும் ஏனையோரும் வருமான ஆராய்ச்சிச் சாதனங்களுக்காக அரசிறைக் கொள்கை அனுமானங்களை நிறைவாக்கினார்கள்.

இன்று, சுதந்திர உலகப் பொருளியலாளருள், அநேகர், இந்த நூலில் வழங்கப்படும் "நவீனப் புராதன இணைக்கருத்து" என்பதற்காக, பாடுபடுகின்றனர். அதாவது, காரியப்பாடான பணத்துறை, அரசிறை என்பவற்றின் கொள்கைகளால் ஸ்மித், மாஷல் ஆகியோரின் பழம் பிண்டப் பொருளியலுக்கும், தற்கால வருமானத் தீர்மானத்தின் அண்டப் பொருளியலுக்குமிடையே, அவை ஒவ்வொன்றின் நோக்கங்களிலுமுள்ள சிறந்த கருத்துக்களை இணைத்துச் சம்பந்தப்படுத்த முயற்சி செய்கிறார்கள். இலண்டன் சர்வகலாசாலையிலுள்ள பழமைபேணும் கட்சியில் உள்ள லயனல் றெபின்ஸ் போன்றவரிலிருந்து நவீனக் கொள்கையுடையோரான அல்வின் ஹன்சன் போன்றவர்களுடன் இரண்டிற்கும் பொதுவான கருத்துக்களைக் கொண்ட ஜேம்ஸ்டோபின் போன்றவர்கள்வரை இருக்கின்றனர். ஆனால் அவர்கள் யாபேரும் உள்ளதை[2] உள்ளவாறே கூறுமியல்புடையோராவர்.

[1]. ஸ்கான்டினேவியாவின் ஒஹிலின், மிற்டல், பிறிச் என்பவர்கள் இங்கும் முன்னோடிகளாக இருந்தனர். போலந்தில் கலெக்கியும் அமெரிக்காவில் ஜே. எம். கிளாக்கும் அவ்வாறே இருந்தனர்.

[2]. இவை எல்லாவற்றினதும் நியம உத்தரவாத ஆராய்ச்சியாக ஜே. ஏ. சும்பீற்றரின், பொருளாதார ஆராய்ச்சியின் வரலாறு (ஒக்ஸ்போட், நியூயோக் 1954) இருக்கின்றது. அதன் 1200 பக்கங்களைப் பயன்படுத்தமுடியாதவர்களுக்கு, எறிக் றோல் என்பவரின் பொருளாதார எண்ணத்தின் வரலாறு (பிறெண்டிஸ்-ஹால், எங்கில்வுட் கிளிவ்ஸ். NJ, 1956. 3 ஆவது பதிப்பு) பயனுள்ள ஒரு பதிலீடாக இருக்கக் காணலாம்.

www.padippakam.com

# சொல்லட்டவணை

அ :

அடில்மன், எம். எ. 130
அடுக்கிவைத்தல், கொள்வனவு–கடன் 652, 655–656, 664, 668–669
அணுசக்தித்திட்டம், 254
அண்டப்பொருளாதாரம், 543, 552
அதிகரித்துச்செல் விளைவுகள், விதி, 813–814
அபாயம் பரவல், 668–670
அபிப்பிராயம் சேகரித்தல், 402
அபிவிருத்திக் கடன் நிதி, 1018
அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் 214–215, 238–239, 244–245
அமெரிக்கப் புகையிலைக் கம்பெனி, 680–682, 737–740
அமெரிக்கா, வரலாறு, 216–219, 225–227
அமைப்புப்போலி, 16–19
அயோக்கியர் அட்டவணை 232
அரசாங்க உறுதிப் பத்திரங்கள், 122, 196–198, 408–409, 419கு.
அரசாங்கச் செலவுகள் 257–259
நீர்மை விருப்பம் 505–507
நுகர்ச்சிப் பட்டியல் 378–379
மாற்றுதல் 196
வங்கிச் சேமநிதி, 438–439, 467–471 484, 489கு.
விலையாகக்கூடிய, கடன், 195
அரசாங்கச் செலவுகள், சமட்டி, உற்பத்தித் தகைமைக் கோடு, 258–262
அரசாங்கக் கட்டுப்பாடும் ஒழுங்குபடுத்தலும் 247–250, 738–740
ஆராய்ச்சி, 258–262
கூட்டுப் பேரம், 237–239
சப்பிளையும் தேவையும், 573–577
அரசாங்கக் கட்டுப்பாடும் ஒழுங்குபடுத்தலும், நேரடி, 253
வளர்ச்சி, 247–251
விவசாயம், 649–661
அரசாங்கம், சமட்டி (பார்க்க, சமட்டி அரசாங்கம்)
அரசாங்கச் செலவுகள், சமட்டி, 251–254
தலதாபனமும், அரசும், 263, 279–281, 286
அரசாங்கக் கட்டுப்பாடும் ஒழுங்குபடுத்தலும், தனியுரிமைகள், 738–740.
அரசாங்கச் செலவுகள், சமட்டி, தேசிய வருமானம், 247
தேறிய தேசிய உற்பத்தி, 303–309
பணவளிப்பு செய்தல், 257–259, 267, 289
பொதுநலம், 255–256, 289
அரசாங்க பற்றுக்குறை, 376கு
அரசாங்கச் செலவுகள், சமட்டி, மதிப்பிடப்பட்ட, 1961 ஆம் ஆண்டிற்கு, 252
மாகாண, தலத்தாபன, 250–251
மாற்றம், 255–257, 260, 267, 304–307
வரிகள், 374–375
அரசாங்கச் செலவுகள், வளர்ச்சி, 246–247
அரசாங்கச் செலவுகள், சமட்டி, வெளிநாட்டு உதவி, 1021–1023
அரசாங்க மாற்றச் செலவுகள், 255–257, 260, 267–268, 305–306 523, 526–527
அரசியல் கட்சிகள், தீவிரவாதமும்–சீர்திருத்தமும், 1091, 1093–1095
அரிஸ்டாட்டில், 867–868, 877–878
அருந்தல், இயல்பான, 806, 889–892
அருந்தல், செயற்கை, 807, 890–892
அருந்தல், விதி, 22–25
அலுமினியத் தொழில், 680–681, 736–737
அல்பேட் றீஸ், 842
அனுமதிப் பங்குகள், 1006, 1014

ஆ :

ஆக்க உரிமைகள், 893கு
கணக்கு வைப்பு முறையில், 149–153
ஆபத்து, இலாபம், 884–887
காப்புறுதி, 676–678
ஆதாம் சிமிது, 52,70கு, 598, 700, 702, 905கு, 1009, 1113
மேற்கோள், 49, 593–595
ஆர்நல்ட் தார்மன் 742–743
ஆணைக்குழு, பணம் கடன்வசதி, 1085
ஆபத்து முதலீடு, 873, 895



40—CP 680 (5/67)

படிப்பகம்

www.padippakam.com



இ :

இங்கிலாந்து (பார்க்க, பெரிய பிரித்தானியா),
இசைவின்மை, நல்ல—இலாப விளைவு, 765–767, 770
இடைநிலைப் பொருள்கள், இருமுறை கணித்தல், 297–300
இருமுறை கணக்கெடுப்பதைத் தவிர்த்தல்.
இடைநிலைப் பொருள்கள், தேறிய தேசிய உற்பத்தி, 299, 306கு.
விலையிடல், 910–912
இந்தியா, உதவித் திட்டங்கள், 660–661
குடித்தொகை, 41–43, 843
குறை விருத்தியடைந்த நாடு, 1042
முதலீடு, 1052கு, 1053–1054
இந்தோனேசியா, 1041, 1051
இயக்குநர் சபை, கம்பெனி, 128–129
இயற்கை வளங்கள், 811–812, 849
முன்னேறாத நாடுகள், 1050–1051
இயற்கையாளர், 1109
இருபதாம் நூற்றாண்டு நிதியின் தனியுரிமை, தனியார் கைத்தொழில் முயற்சியாளர் சங்கம் என்பவற்றின் கமிட்டி, 719
இலட்சிய உலகம், 907–908, 914, 920, 1113
இலாண்ட்ரம்–கிரிப்பின் சட்டம், 228, 240, 244
இலாபம், அளக்கமுடியாது, 892
ஆபத்து, நிச்சயமின்மை, 884, 887, 900–901
உச்சப்படுத்தல், 696–698, 703–704, 719–721, 725–726, 745
எதிர்பாராத, 354 கு
ஒழுக்கச்சார்பான கருத்து, 891–892
கம்பெனி, 310–311, 881
கம்பெனிகளின் பருமன், 123–125 கு
சாதனங்களில் அடங்கிய வருவாயே, 882 900–901
சாதாரண, 620
இலாபம், செயற்கையருந்தல், 890–891, 901
சேட, 307 கு, 314
தனியுரிமை, 806–807, 886–887, 900–901
தேறிய, 698
பகிர்ந்து கொடுக்கப்படாத கூட்டுத்தாபன, 119, 129, 881
புள்ளியியல், 881–883, 900–901
முயற்சிக்கான வருவாயே, 882–884
மேலதிக, 619–620, 716–717, 745, 891
மேலதிகம், 895–897
வரியிடல், 730–732, 892–895
வரைவிலக்கணம், 292–294
இறுதிநிலைச் செலவுகள், அதிகரித்தல், 705–706
இறுதிநிலை வருமானம், 716–717
கருதுகோள், 610–612, 692–693
சப்பிளைக் கோடு, 612–615, 622–624, 705–706
சப்பிளை மறிவிணை, 613
மொத்தம், 686–693
வரைவிலக்கணங்கள், 608–610, 626–628, 690–692, 698
விலை, 614–615, 628–629, 700–701, 705–706
இறுதிநிலைச் செலவுக்கோடுகள், 615–618, 627–628, 696–698
இறுதிநிலைச் செலவு நாட்டம், 376 கு
இறுதிநிலைச் செலவு விலை, விசேடம் 614–616
இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், 340–341
இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், பெருக்கு மெண், 360–364
இறுதிநிலைத்–தேறிய, பொருள், 767 கு.
இறுதிநிலை நுகர்வு நாட்டம், 339–341
கணக்கிடுதல் 336–337
வரிகள் 377
பெருக்குமெண், 266–365
இறுதிநிலைப் பயன், 582–586, 597, 634 கு
அளவீடு, 585கு–588
ஒரு டொலருக்கு, விதி, 589–593
குறைந்துசெல் (பார்க்க, குறைந்துசெல் இறுதிநிலைப்பயன்)
நியாயபூர்வமாகத் தெரிதல், 589
மதிப்பு, 593–595
வருமானம், 586
விலைக்கேற்ப, 589
இறுதிநிலைப்பயன், சமநிலைத்தன்மை, 589–593
இறுதிநிலைப் பயன்கோடு, 587–589, 614–615
இறுதிநிலைப் பயனின்மை, 634 கு
இறுதிநிலைப் பிண்டப் பொருள், 755–756
இறுதிநிலை வருமானப் பொருள், 761–763
உழைப்பு 773–774
குறைந்துசெல், 755–756, 773–776
குறைந்துசெல் விளைவு 755–757
சாதனவிலை, 758–761

படிப்பகம்

www.padippakam.com



இறுதிநிலை முதலீட்டுத் திறன், 494–507
இறுதிநிலை வருமானம், 697–700, 703–704, 716
இறுதிநிலை வருமானம், இறுதிநிலைச் செலவு, 716–717
விலை, 692–695
இறுதிநிலை வருமான–உற்பத்தி–761–763
உழைப்பு, 765 கு.,
சாதனத் தேவைக் கோடுகள், 764–765
இறுதிநிலை வருமானமும் விலையும், 692–695
இறுதிநிலை–விளைவு, உற்பத்திக் கொள்கை, 569–781
குறைந்த செலவு, 757–759
சமூகத்தின் தேவை, 801
பகிர்வு, 797–807
பெறுமானம், 783–784
வரைவிலக்கணம், 755
விதிகள், 798–800
இறுப்பு முறை, 990–1008
ஆபத்துநிலை வாதம், 999–1001
இறுப்பு முறை : ஆரம்ப தசையிலுள்ள கைத்தொழில்கள், 1005–1006
எதிர் நடவடிக்கைக்கு, 998
ஒப்பியல் நன்மை, 967
கட்டுப்பாடற்ற வியாபாரம், 1024–1026
சம்பந்தமான போலி நியாயங்கள், 993–1001
தொழிலாளர் மீது விளைவு, 994–999 1002
"தோன்றுப் பாதுகாப்பு" 1006
வர்த்தகத்தில், 992–996, 1001–1005, 1014
விசேட நலவுரிமைப் பிரிவுகளுக்காக, 994
விஞ்ஞான முறையில், 999
இறைச்சியடிக்குந் தொழில், பயிற்சி விசேடத்துவம், 70 கு
இனப் பாரபட்சம், 176–177, 181, 217
இன்சல் சாமுவல், 126

ஈ :

ஈடுகள், 204 கு
பண்ணை, 649–650
ஈட்டு நிபந்தனைகள் மீது கட்டுப்பாடு, 475

உ :

உண்ணாட்டு வரி, 250–251
உதவி நன்கொடை, அரசாங்கங்களுக்கிடையே, 285–286
அரசு, 283–286
சமட்டி, 209, 283–286, 289
உதவி பெறுவோருக்குக் கிடைக்கும் வட்டி, 537
உ.பவரி இலாபவரி, 275 கு
உருக்குத் தொழில், 680–742
தொழிற் சங்கங்கள் 231–232
நிறைவில் போட்டி 734–735
உருக்குத் தொழிலாளர் வேலைநிறுத்தம், 1959–60, 241
உலகக் கைத்தொழில் நிலையத் தொழிலாளர் சங்கம், 224 கு
உழைப்பு, அரசாங்கத்தின் நிலை, 236–238
அரசியல், 217–219, 237, 238–240
உரிமைகள், 237 கு
உற்பத்திக் காரணி, 753–754, 765 கு, 791–792, 797
சப்பிளைக் கோடு, 634 கு, 800–802, 815, 819–820
டாவ்ட்–ஹாட்லி சட்டம், 239–241
தேவை, 798–799, 806–807, 830–833, 840–842
பண்பு, சம்பள வேற்றுமைகள், 823–825
பதிலீடு, 497
முதல், 849
உள்ளீடு, (பார்க்க உற்பத்திக் காரணிகள்)
உள்ளீடு–உற்பத்திக் கோட்பாடு, 1101 கு, 1108–1114
உறுதிப் பத்திரங்கள், 98–99, 122
சமநிலையான பணப்பை, 198
முதலீடு, 202–204, 438–440
விலைகள் ஏறியிறங்கல், 200–204
உறுதியாக்கப்பட்ட வருடாந்தச் சம்பளம், 243
உற்பத்தி, அரசாங்க, 254–255
கொள்கை, இறுதிநிலை விளைவுகள், 751–772
கொள்கை, வரைப்படத்தின் மூலம் விளக்கல், 772–781
தேறிய தேசீய விளைவு, 356–357, 508–509
விலைகள், 409–410
உற்பத்திச் சாதனங்கள், 54, 752
உழைப்பு, 753, 767 கு., 792

படிப்பகம்

www.padippakam.com




உற்பத்திச் சாதனங்கள், குறைந்த செலவுப் பதிற் சாதனம் 757–759
சந்தைகள், 753
சப்பிளையும் தேவையும், 791–792, 806
நிலம், 785, 794–796, 806–807
பதிற்சாதன அமிசங்களைப் புகுத்தல் 757, 765, 783, 807
உற்பத்திச் சுட்டி, 323
உற்பத்தித் தகைமைக் கோடு, 24, 622 கு
அரசாங்க நடவடிக்கை, 258–262
உற்பத்தித் தொழில், 752–756, 770, 773–774

ஊ :

ஊக வியாபாரம், காலப் போக்கில் விலைப் போக்கு, 666–670
பொருளாதாரம், 664–677
ஊகவியாபாரிகள், 202–204, 400–401
இலட்சியமான நிலைப்படுத்தல், 672–674
பணவீக்கம், 410
விலைத் தளம்பல்கள், 677

எ :

எச்சப்பாடு : நுகர்வோர் எச்சப்பாடு, 594–596, 598–599, 602, 896
எஞ்செல் எர்னெஸ்ட், 183 கு
எஞ்செல் சட்டங்கள், 183 கு
எஞ்செல், பிரெடரிக், 160, 1096
எட்வர்ட்ஸ் ஜோர்ஜ், 163கு.
எதிர்கால விற்பனைகள், வியாபாரம் 668–670
எதிர்மாறான சக்திக் கொள்கை 132கு.,
எர்ஹார்ட் லட்விக், 744
எல்லைக் கோட்டுத் தேவைகள், கட்டுப்பாடு, 474–475
என் அயலவனை ஓட்டாண்டியாக்கும் கொள்கை, 1012–1016

ஏ :

"ஏ அண்ட் பீ" என்ற கம்பனி 131, 741–742
ஏகபோக உரிமை (தனியுரிமை), 683, 918–919
அரசாங்கப் பிரமாணம், 683, 725–726
அரசாங்க மேற்பார்வை, 738–740
ஆதிக்கம் 130–133
இலாபம், 886–887
உத்திகள், 129–131
எல்லைப்பட்ட சாதனத் தேவை, 762–764
குறைபாடுகள், பரிகாரம், 737
சிறந்த இலாபச் சமநிலை, 725–726
சப்பிளையும் தேவையும் 572
தீமைகள், 129–131, 745
தீவிரமான ஆராய்ச்சி, 735–737, 745
பங்கு வியாபாரக் கம்பெனிகள், 125–127
ஏகபோக உரிமைப் போட்டி, 58–61, 97–101, 569–570
(தனியுரிமைப் போட்டி), கூட்டுப்பேரம், 827–846
சிறந்த பரீட்சை,
682–685, 694, 707, 719, 745, 763–764, 804–805
மாதிரிகள், 725–731, 745
வரைவிலக்கணம், 682–683
வளத்தைப் பகிர்தல், 700–704, 730–37
வீண் செலவு, 730–736
ஏகாதிபத்தியம், பொருளாதார, 1044–1045
ஏ. ரி. அண்ட் ரீ என்ற கம்பெனி, 125
ஏற்றுமதிகள், 1009–1010, 1025–1027
ஏற்றுமதி இறக்குமதி வங்கி, 1018

ஐ :

ஐக்கிய அமெரிக்கா, சம்பளங்கள், 809–812
சனத்தொகை வளர்ச்சி, 38, 41–45, 814
சுபீட்சநிலை, 813–814
பொருளாதார வளர்ச்சி, 541–543, 1103–1106
வருமானப் பங்கீடு 156–160, 165–168
வாழ்க்கைத் தரம், 165, 180–181
விளைதிறன், 164–165
வெளிநாட்டு வியாபாரப் பற்றுக்குறை, 1028–1034
ஐக்கிய அமெரிக்க திறைசேரியும் பெடரல் ரிசர்வும், 477–480, 487–489, 535
ஐக்கிய சுரங்கத் தொழிலாளர், 215, 835
ஐக்கிய மின்சாரத் தொழிலாளர், 217, 228
ஐக்கிய மோட்டார் தொழிலாளர், 217–243
ஐசன்ஹோவர், டுவைட். டீ. 242, 1080
ஐந்தொகை, கணக்கு வைப்பு, 135–140, 145–152
ஐரோப்பா, குடித்தொகை, 38, 40–42, 45, 813–814
குடிவரவு, 812
சம்பளங்கள், 810–812
சர்வதேச நிதியில், 1011,–1012, 1024–1028
சர்வதேச வியாபாரத்தில் 956–60, 962–968, 974–975, 980–983

www.padippakam.com




ஐரோப்பியக் கொடுப்பனவுச் சங்கம், 1021
ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுறவுத் தாபனம், 1021

ஒ :

ஒப்பியல் நன்மை, கொள்கை, 961–989
ஒருதுறை நிபுணத்துவம், 62, 68–71, 79
ஒன்றிலொன்று தங்கியிருக்கும் சந்தைகள், 97–98
ஒன்றிலொன்று தங்கியிருத்தல், தனித்துறைப் படுத்தல், 70

ஓ :

ஓய்வுநேரம், விளைதிறன், 164
ஓய்வுபெற்ற யுத்த வீரருக்கு அளிக்கும் நன்கொடைகள், 286
ஓவென் ரேபற், 1114

க :

கடதாசிக் கம்பனி, 235
கடன்கள், ஆளுக்குரிய, 109–111
  சிறிய வியாபார நிர்வாகத்திலிருந்து, (வங்கிகளையும் பார்க்க) 109–111
  வெளிநாட்டு, (பார்க்க வெளிநாட்டுக் கடன்கள்)
கடன் நிருவாகம், 488
  பணத்துறைக் கொள்கை, 533–535, 876
கடன் பெறுதல், அரசாங்கம், 257–258, 532–534
கடன் பெறுதல், தனிப்பட்டவர்கள், 192–196, 211, 447–448
  தொழில் வளர்ச்சியும், 113
கணக்கு வைத்தல், ஐந்தொகைகள் 138–140, 145–152
  சொத்துக்கள் 135–140, 145–148, 150–152
  பொறுப்புக்கள், 135–140, 145–146
  தேயமானம் 135, 143–145, 150–152
  மேல்மிச்சம் 145–148
  வருமான அறிக்கைகள் 135, 140–142, 145–148, 152
கணக்கு வைத்தலும் இலாபநட்ட அறிக்கைகளும், 135, 140–143, 152
கணக்கு வைத்தலில் ஒதுக்கங்கள், 147–150
கணக்கு வைத்தலும் சேமநிதியும் 148–150, 152
கணக்கு வைத்தலும் பொருட்பெறுமதியும் 136–143, 152
கணக்கு வைத்தலும் தேறிய பெறுமானமும் 135–140, 145–148
கம்பெனியின் உழைப்பு, 881
கருஞ்சந்தை நடவடிக்கைகள், 571–572
கலப்பு முயற்சித் திட்டம் 49–52
கல்பிரேத் ஜே. கே. 23, 132கு, 260
கல்வி, 170–172, 195கு
  பொருளாதார வளர்ச்சி 1076–1077
கல்லூரிப் படிப்புக் கடன், 195கு
கழிவு மதிப்பு, 853–858
கனேடா, அரசாங்க பற்றுச்சீட்டுக்கள், 248–249
  குடும்பப் படிகள், 188
  தொழிற் சங்கங்கள், 215கு
  வங்கிகள், 430–431, 454கு
  கனேடா, விளைதிறன், 164

கா :

காங்கிரசின் கூட்டுப் பொருளாதாரக் கமிட்டி 1083
காட்டெல், 727
காச்சிங்ஸ், 394கு
காசு நழுவுதல், கைமாறும் பழக்கத்தில், 455, 460
  வங்கி ரொக்கப் பெட்டிகளுள், 455–456, 481
காப்புறுதி, காப்புறுதி செய்யப்படும் ஆபத்துக்கள், 676–677
காப்புறுதி, சமூகம் (பார்க்க, சமூகப் பாதுகாப்பு)
  சீவிய (பார்க்க, சீவியக் காப்புறுதி)
  தனிப்பட்ட, 210–211
  பொதுச் சுகாதாரம் 210
  பொருளாதாரம், 674–676
  வங்கி வைப்புக்கள், 444
  வயதுமுதிர்ந்த ஓய்வும் சொந்தக்காரர் நன்மையும், 208
காப்புறுதி, வேலையற்றோர் சகாய ஒழுங்கு, 209
காலமும் விநியோகமும் தேவையும் 560–561
காலத்தொடர் வியாபாரச் சக்கரத்தின் சுட்டியாக, 386–388


படிப்பகம்

www.padippakam.com



கி :

கிங் கிரெகரி, 92, 553–555, 557
கிப்பின் சர் பிரான்சிஸ், 638கு
கிப்பினின் நிகழ்ச்சி, 638கு
கிளார்க், ஜே. எம், 744, 751
கிளாக் யோன் பேட்ஸ், 803கு, 905கு
கிளேட்டன் அன்டிட்ரஸ்ட் சட்டம் (1914) 237, 740–741
கிரௌன் செல்லர்பாச் கோர்ப்பொரெஷன் 235
கிரேஸ், டபிள்யூ. ஆர். 235
கிறிஸ்டியாறு செக்யூரிட்டீஸ் கம்பனி, 126

கீ :

கீழ்நோக்கிச்–சரியும் தேவை 579, 582கு, 681கு.,
காரணம், 87–88
பதிலீட்டு–வருமான–விளைவுகள் 591–593, 597–599
விதி, 86–87

கு :

குக், எம். எல், 234கு.
குடும்பச் செலவுகள், 184–191
குடும்பச் சொத்துக்கள், யுத்தத்துக்குப் பிந்திய காலப் பெருக்கம், 191–193
குடும்பப் படிகள், அரசாங்க, 188
குடும்பப் பண்ணைகள், 645–648
குடிசனப் பெருக்கம், குறைந்து செல்லும் விதி, 31, 813-814
நுகர்ச்சி, 643–645
பொருளாதார விளைவுகள், 44–45, 359, 528–529
மல்தசின் கொள்கை 35–39, 63கு., 671–672, 815, 843
குடிசனப் பெருக்கம், வியக்கத்தக்க சமீப காலப் பெருககம், 38–39, 41–43 வியாபாரச் சக்கரங்கள், 396–397
குடிவரவு, 812, 817, 843
குடியேற்ற வரட்சி, 1042
குயெஸ்னே, 1109, 1112
குறுந்தவணை, 616, 626, 709–710
குறுஷேவ் நிகிற்ரா, 1098, 1116
குறைந்துசெல் இறுதிநிலைப்பயன், சூதாட்டம், 670–672, 674கு.,
பணம், 586–588
குறைந்துசெல் விளைவு விதி, 31–35, 671–672, 752–757, 798–800, 812–814, 817–818, 843, 852, 877–878
குறைந்துசெல் விளைவு, இறுதிநிலைப் பிண்டப் பொருள், 755–757
குறைந்துசெல் இறுதிநிலைப்பயன், விதி, 582–586, 597, 671–673, 676–678, 798–800, 812–814, 817, 843
குறைந்துசெல் இறுதிநிலைப் பிண்டப் பொருள், 773–776
விதி, 755
குறைந்துசெல் இறுதிநிலைப் பயனும் தேவைப் போக்கும், 586–589
குறைந்த அபிவிருத்தியுள்ள நாடுகள், 1039, 1068
மூலதனம் ஆக்குதல், 1051–1056, 1061–1063
அரசாங்க வருமானம் 248, 1055
இயற்கை வளங்கள், 1049–1051
ஏகாதிபத்தியம், 1045–1047
சந்தைகளாக, 1044–1045
சனத்தொகைப் பிரச்சினை 843, 1048–1049
பொதுவுடைமை, 1042
குறைந்த அபிவிருத்தியுள்ள நாடுகள், வரலாற்று விபரம், 1062–1066
வரைவிலக்கணம், 1039–1040
வாழ்க்கைத்தரம் 1040–1043
குறைந்த செலவுச் சேர்க்கை, 759–761
சமநிலை, 524–527
கொடுக்கப்பட்டதொரு வெளியீட்டுக்கு 775–777
குறைந்த செலவுத் தானம், வரைபடம், 776–777
குறைந்த செலவுப் பதிற் சாதனக் கொள்கை, 758–760, 766–767, 769
குறைந்தபட்சச் சம்பளச் சட்டம், 238
குறை விருத்தியடைந்த நாடுகளில் புதியன துணிதல், 1059–1061
குஸ்நெட்ஸ் சைமன், 163–164, 392–393, 1115–1116

கூ :

கூட்டுச் சேர்தல்கள், 740, 742–743
கூட்டுப்பேரம், உரிமை, 238–239
சம்பளம், 833கு.,
பொதுநலமும், 838–840
நிச்சயமற்ற தன்மை 836–837

படிப்பகம்

www.padippakam.com



தொழிற் சந்தையின் குறைபாடுகள், 827–848
விநியோக தேவை விதி, 244
வேலைநிறுத்தம், 837–838
கூட்டுத்தாபனங்கள், அமைத்தல் 114–118
கூட்டு முயற்சி 115
நன்மை தீமை 117–119, 133
பணவளிப்பு, 119–120
பிரமாண்டமானவை அல்லது பெரியவை 106–108, 123–136
இயக்குநர் சபை 128–129
உரிமையுமில்லை, ஆட்சியுமில்லை, 125, 133
தலைமையும் ஆட்சியும், 126–133
பட்டியல், 123
பொருளாதாரவலு 123–124
வளர்ச்சியும் செல்வாக்குப் பெருக்கமும், 125–127
கூலிட்ஷ் கல்வின், 241

கெ :

கென்றசன், எச். டீ. 566கு.,

கே :

கேரி, நீதிபதி, 226, 727
கேயின்சு, பிரபு, 329–330, 506கு., 876கு, 1115–1116
கேயின்சு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது 17–19, 348, 861கு

கொ :

கொடுகடன், கூர்முனைக் கோபுரம் 479–481
சர்வதேச நிதி, 1016–1021
முதலீடு, 464
வங்கி, 430
வட்டி வீதங்கள், 464
கொடை வரிகள், 273–274
கொப், டி. எச், 533கு.,
கொம்மன்ஸ் ஜே. ஆர். 69கு, 70கு, 1114
கொம்பேர்ஸ் சாமுவேல், 224–227
கொலின் கிளாக், 163கு.,
கொள்வனவு வலுவும் சம்பளமும், 836–837, 840–842, 846
கொள்ளையிலாபமீட்டல், 570, 742

கோ :

கோடன், ஆர். ஏ. 125கு
கோல்ட்ஸ்மித் ரேமண்ட், 393

கை :

கைசர்லிங் லியோன், 1085

ஹ :

ஹபர் ஹெபேட், 200, 526
ஹபேர்லர். ஜி, 1049கு.,
ஹமில்டன் அலெக்ஸாண்டர், 534, 1005
ஹவர் அணை, 254

ஹா :

ஹாடர் டெல், 493
ஹார்வாட் தொழில் கல்லூரி, 822, 894கு
ஹான்சென் அல்வின், 390–391, 394கு, 528, 1116

ஹி :

ஹிக்கி பிரிமன் கம்பனி, 235
ஹிக்ஸ், ஜே. ஆர். 877கு
ஹில்மன் சிட்னி, 226

ஹெ :

ஹெப்சன், யே. ஏ., 394கு
ஹெவ்வா ஜேம்ஸ், 215, 229

ஹே :

ஹேயெக். எப். ஏ. 394கு., 919கு

ஹோ :

ஹோட்டீ, ஆர். மி, 394கு, 1079
ஹோவாட் ராப்ட், 527, 740

ச :

சகாயத் திட்டம், 652–653
சகாயப்பணம், 566–567, 625
விவசாய சகாயப்பணம், 653, 656–658
சங்கங்கள் (பார்க்க தொழிற்சங்கங்கள்)
சங்கத்தின் சம்பளக் கொள்கை, 835–836 844–846
சட்டமுறைப் பணம், 414–415
சந்தைத் தேவைக் கோடு, (பார்க்க தேவைக் கோடு)
சந்தை விலைத் திட்டம், சப்பிளையும் தேவை 53–59, 83–85, 90–93, 101
சப்பாத்துத் தொழில், 835
சம்பளப் பட்டியல் வரிகள், சமட்டி, 274
மாகாணமும் தலத்தாபனமும், 283

www.padippakam.com



சம்பளம், உள் அடங்கிய சம்பளம், 620, 627
உற்பத்தியும் சம்பளமும் 813
உறுதியாக்கப்பட்ட வருடாந்தச் சம்பளம், 243
குறைந்தபட்சம் 238
சம்பள உயர்வு 830–933, 840–843
சம்பள உயர்வும் வேலை வாயப்பிலே குறைவும் 833–835, 841–845
சம்பளம் பற்றிய இரும்பு விதி, 815–816
சம்பளத்தில் வாடகை அமிசங்கள், 822
சமன்படுத்தா வேற்றுமைகள் 823–825
சமமான சம்பளம், 810–812, 822–825, 844–845
தொழிற் சங்கங்களும் சம்பளமும் 218–222, 231–244
தொழில் நுட்ப முறைகளும் சம்பளமும். 812–813
" நடப்புச்–சம்பளம் ", 828, 837, 846
நிசச் சம்பளம் 412, 426, 798, 810, 843
நிசச் சம்பளச் சூசிகை 810
நில வாடகை 802கு.
நிலையுள்ளதாக்குதல் 242
நீக்கிரோவரும் வெள்ளையரும் 175–178
பண்ணைத் தொழிலாளரின் சம்பளங்கள், 647–649
பணச் சம்பளம் 412, 426
போட்டிச் சம்பளமும் கூட்டுப் பேரமும் 809–848
சம்பளக் கொள்கை, 827–828, 844–845
மூலதனமும் சம்பளமும் 812
மொத்தச் சம்பளம், 801
வரைவிலக்கணம் 881
வாங்குஞ் சத்தியும் சம்பளமும் 837, 841
வாழ்க்கைச் செலவும் சம்பளமும் 185
விலைகளும் சம்பளமும் 243–245, 407, 411–413, 517, 569
யுத்தத்துக்குப் பின்னிருந்த சம்பளத் திட்டம் 242–245
சம்பளங்கள், சராசரி 809
சம்பள உடன்படிக்கைகள், 835–837
சம்பள உந்தற் பணவீக்கம் 1082–1083
சம்பளம் பற்றிய இரும்புவிதி, 815–816
சம்பள வீதங்கள், 54, 769, 794, 797–798
சம்பள வீதங்களும் ஊக்கமளிக்கும் விலையேற்பாடும், 915–1917
வித்தியாசங்களும், 809–810, 823–827, 839, 843–845
சம்பள வீதச் சந்தை 569
சம்பளம் நிர்ணயித்தல், நிறைபோட்டி சம்பள உடன்படிக்கைகள், 810–827, 843–845
சம்பளமும் தேசிய உற்பத்தியும், 751, 753
தொழிலாளர் சப்பிளையும் 819–822
சமநிலைக் கருத்து, 650–652, 662
சமநிலை விலைகள், 651–652, 655–659, 662–663
சம–உற்பத்திக் கோடு, 777–778, 781
சமட்டி மாகாண வியாபாரக்குழு, 248, 734–735
சமட்டி அரசு, 249–251
சமட்டி அரசு, ஆண்டுச செலவு 252
உழைப்பு, 234–237
கட்டுப்பாடு (பார்க்க, அரசாங்கக் கட்டுப்பாடும் ஒழுங்குபடுத்தலும்)
செலவுகள் (பார்க்க, அரசாங்கச் செலவுகள்)
பண்ணை உதவி, 649–660
பிஸ்கால் கொள்கை (பார்க்க பிஸ்கால் கொள்கை)
பொருளாதாரப் பங்கு 60–62, 66–68, 246–270
மாறும் கடமைகள், 253–256
சமநிலை, இறுதிநிலைப் பயன், 565–568
சமநிலை, தொழிலாளர் சந்தை, 826–827
நல்ல இலாபம், 725
சமட்டியரசு, நிர்வாகத்திறன், 261–262
சமநிலை, நுகர்வோன், 602, 603
நெடுந்தவணை இலாபமில்லாக் குறைந்த செலவு, 710–714
பொது 905கு
போட்டி 803–807
விநியோகம் தேவை, 90–92, 101, 560–567, 575
சமநிலைத்தானம், தேவை வளைகோடு நகர்தல் 724–725
சமநிலைத்தானமும் " நிர்வகிக்கப்பட்ட விலைகளும் " 722
சமநிலைப்புள்ளி, 336–340, 721–722
நெடுந்தவணை கைத்தொழில் நிரம்பல், 621–623, 627–628
வரைவிலக்கணம், 341
சமநிலைவிலை 91–93, 101, 564–567, 570, 904
கால அமிசம், 560–563, 575

படிப்பகம்

www.padippakam.com




சமூக அடிப்படையும் வெற்றியும் 179–181
சமூகச் செலவின் மூலதனம், 1062
சமூகத் தேவைகள், 263–266
சமூக நிலையும் சந்தர்ப்பமும், 177–181
சமூகப் பாதுகாப்பு, 208–211, 217, 238–239
சமூகப் பாதுகாப்புச் சட்டம், 208–209, 274
சமூகப் பாதுகாப்பு வரிகள், 208–210, 274–275
சமூகவுடைமை, 908, 1091–1092, (சோஷலிசம்) 1093–1096, 1113–1116
உத்தம, 919கு
வட்டி, 869–872, 914–915
சர்வதேச, அபிவிருத்திச் சங்கம், 1018
சர்வதேச தோற்றொழிலாளர், 228
சர்வதேச நிதி, 925–960, 1009–1021, 1024–1034
சர்வதேச நிதித்தாபனம், 1018
சர்வதேச பணநிதித் தாபனம், 1017, 1019–1021
சர்வதேச பெண்ணுடைத் தொழிலாளர் சங்கம், 227–228, 830–831
சர்வதேச பொருளாதாரப் பிரச்சினைகள், 1009–1035
சர்வதேச வங்கி, புனருத்தாரணம், அபிவிருத்தி 1016–1018
சர்வதேச வியாபாரம், ஒப்பியல் நன்மைக் கொள்கை, 961–989
ஐரோப்பிய பொதுச்சந்தை 1024–1026
கட்டுப்பாடற்ற 1023–1026
டொலர் குறைபாடு 1025–1029
பற்றுக்குறை, நாட்பட்ட, 1028–1034
சரக்குக் கையிருப்பு, 530
ஒழிவு, 356–357
கணக்குவைப்புமுறையில், 136–143
கணக்கு வைப்புமுறையில், பெறுமான மதிப்பிடல் 136–140, 153
முதலீடு, 354கு.,
வியாபாரச் சக்கரம், 392–393, 398கு, 399–400

சா :

சாதனச் செலவு, 767
சாதனத் தேவை, இறுதி, நல்ல இலாபத்தான உற்பத்தியில், 760–762
எல்லைக்குட்பட்ட, தனியுரிமை, 762–764
சாதனத் தேவைக் கோடுகள், 764–765
சாதனத் தேவை, வருவிக்கப்பட்டது, 767, 783–784, 793–794
சாதன–விலைகள், 769–770
குறைந்த–செலவுக் கொள்கை, 758–760
சப்பிளை, தேவை ஏற்பவற்றால் நிச்சயித்தல் 784–786, 794, 805கு
திறமையும் 792–793, 795
மாற்றங்கள், பதிலீட்டைத் தூண்டும், 760, 767கு
சாதாரணப் பங்கு, 98, 115–118, 120–122, 196–198

சி :

சிக்கனம் 859, 864–866, 877
சிக்கனப் போலிமுரண், 368–370, 381
வட்டிவீதமும் சிக்கனமும் 874–875
வருமானமும் சிக்கனமும், 365–366
முதலீடுசெய்யத் தூண்டுதலும் சிக்கனமும், 366–371
சிக்காகோ வர்த்தகச் சங்கம், 97, 665, 669–670
சிக்கனமும் நுகர்ச்சியும் 367
சிங். எச். சைபிஸ், 234
சிமிது–விக்டர். ஈ. 189கு
சிலருரிமை, 683–684, 726–729, 734–736, 745
சிறுபான்மையினருக்குப் பாரபட்சம், 175–178, 217
சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்தும் சட்டம், 238, 249–250, 816–818
சின்கிளேர், அப்டன், 190

சீ :

சீவியக் காப்புறுதி, சாதாரணம், 205
சீவியக் காப்புறுதி, தவணை, 206
தொகுதி, 205
தொழில், 205–207
நன்கொடை, 206–208
நேரடியான, 206–208
வங்கிகளால் விற்கப்படும், 431கு
சீனு, கூட்டுப்பண்ணை, 1050
பொருளாதார அபிவிருத்தி, 1040

சு :

சுகபோகச் செலவுகள், 185–186
சுகாதாரம் பாதுகாப்பு என்பவற்றைப் பேணும் சட்டம்–238

www.padippakam.com



சுதந்திர முயற்சி 22
அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள், 50–62
சமூக நுகர்வு, 253
பொதுநலப் பொருளியல், 918–920
வியாபாரம், 813, 918கு, 1023–1026
வியாபாரப் பிரதேசம் 1024
" சுபீட்ச அரசு " 160, 210, 211
சுபீட்சம், 390–392
தந்தம், 384–385
விவசாயப் பிரச்சினை, 663
சுயமான நிலையாக்கிகள், பிஸ்கால், கொள்கையில், 521–525
சுருக்கம், 395–400, 425–426
விலைகள், 408–410
வேலைவாய்ப்பின்மை, 410
சுருக்கமான விற்பனை, 668கு
சுருட்டுத் தொழிலாளர் சங்கம், 224
சுவீடன் உற்பத்தி, 165
சனத்தொகை, 39, 41–43, 45
பணவீக்கம், 516
பொதுநலவரசு, 188, 210, 255, 1095
சுவை மாற்றங்கள், 573–574, 581

சூ :

சூதாட்டம், 670–672

செ :

செக்கியூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ் கமிசன், 117, 127, 249
செக்கு, உபயோகம், 437கு
செம்புக் கைத்தொழில், 896
செல்வாக்கு, சங்கங்கள், 218–219
செல்லர் கூட்டுச் சட்டம், (1950), 741
செலவு உந்தல் அல்லது விற்பனையாளர்–வீச்சம், 505, 513–518, 1082–1084
செலவுக் கோடுகள், ஆக்கற் காரணிகள், 757–759
செலவுகள், அதிகரித்தல், 29–31, 631–632
இறுதிநிலை (பார்க்க இறுதிநிலைச் செலவுகள்)
உள்ளடங்கிய, 620–627
உற்பத்தி, 567, 685
ஓரலகின் சராசரி, 612கு, 689–691, 703, 716–717
குறைதலும் பூரணப் போட்டிநிலை சீர் குறைதலும், 623–624, 627–629, 707–710
குறையும், 635–638
சந்தர்ப்பச், 620–622
சப்பிளை, 604–638
செலவுகள், நிலையான, 687–689, 703
போட்டி, 620கு
போட்டி சப்பிளை, 705–717
மாறுத, 631
மாறும், 687–691, 703
மொத்த, 611–613, 686–693, 698, 703
மொத்த குறுந்தவணை மூடும் நிலைமைகள், 616–618, 627
மொத்த சம செலவு, 777–780
மொத்த நெடுந்தவணை முறிவு நிலைகள், 618–672
செலாவணி வீதங்கள், 727–931, 1015
சருவதேச பணநிதி, 1018–1019
சுதந்திரமான, 928–930
தங்க நாணயத் திட்டத் திரம், 930. 951–953
நெகிழ்ச்சியான, 947–951
சென்மதி நிலுவைகள் (சருவதேச), 925–927, 933–943, 1020–1021, 1030–1031
சென் லோறன்ஸ் கடற்பாதைத் திட்டம், 258

சே :

சேம்பர்லேன், எட்வாட், எச்., 679, 726
சேமிப்புக் கணக்கு, 196
சேமிப்புக் கோடும் முதலீட்டுக் கோடும், 349–354
சேமிப்பு நாட்ட அட்டவணை, 339–340, 345
சேமிப்பு நாட்ட அட்டவணையும் வியாபாரச் சக்கரமும், 393
சேமிப்பு, அளந்து கணிக்கப்பட்ட, 322, 325 380கு
இறுதிநிலை நுகர்வு நாட்டம், 377
குடும்ப, 523
கூட்டு, 523, 528
சேமிப்பு, நுகர்ச்சி, வட்டிவீதம், 859
முதலீடு, 196–199, 204–208, 330–332, 359–380
வருமானம், 334, 345, 355
தேசிய வருமானம், 350, 360
தேறிய, 335
நோக்கங்கள், 330–332, 345, 379
முன்னேறுத நாடுகளில், 1051–1052
வேலையின்மை, 369–371

www.padippakam.com



யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் சேர்தல், 191–193
நாட்டம், 334–336, 863
அட்டவணை, 337–341, 345
இறுதிநிலை, 340–341, 360–364
குடும்பவகை, 334–340
போருக்குப் பிற்பட்ட, 334–335
சேமிப்பு வங்கிச் சீவியக் காப்புறுதி, 207
சேயின் கொள்கை, 510, 517

சை :

சைபர்னெட்டிக்ஸ், 498

சொ :

சொத்து வரி, 280–282, 289
சொந்த வியாபாரம், 106–111
சொலோன் ஞெபேட், 753

சோ :

சோவியத் நாடுகள், ஐக்கிய அமெரிக்காவுடன் பொருளாதார வளர்ச்சியை ஒப்புநோக்குதல் 1103–1106
கூட்டுப் பண்ணை முறை 1050
சனத்தொகை 40–43, 45
பொருளாதார அபிவிருத்தி 1040, 1058–1082
அமைப்பு, 1098–1102
வட்டி வீதம், 869–872
வரலாறு, 1043–1044, 1096–1098
வருமானப் பங்கீடு, 170, 175கு

ஸ் :

ஸ்டாலின், யோசெப்பு, 1098
ஸ்டிக்ளர் ஜோர்ஜ். ஜே., 189கு, 737
ஸ்விஸ்டர் சம்னர், 213, 229

ஷு :

ஷும்பீட்டர், 132, 391கு
புதியது காணும் கொள்கை, 394கு, 736, 884

ஷே :

ஷேர்மன் அன்ரிரஸ்ட் சட்டம் (1890) 130, 236–238, 248, 734, 740–741

ஜி :

ஜிவோன்ஸ் டபிள்யூ. எஸ்., 394கு, 907கு

ஜெ :

ஜெர்மனி, இரண்டாவது உலக யுத்தம், 1097–1098
கம்பெனிக் கூட்டுக்கெதிரான சட்டங்கள், 743–744
குடித்தொகை, 38–39, 41–43
கைத்தொழில் அபிவிருத்தி, 1057–1058
தங்கச் சேமிப்பு, 766
பணவீக்கம், 407, 410, 515–516
வியாபாரச் சக்கரம், 386–387
வியாபாரத்தை வங்கி உடைமையாகப்பெறல், 110கு
ஜெர்மனி, விலைத்திட்டம், 51
வேலையின்மை 386–387
ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனி, 724, 742, 837

ஜே :

ஜேகப் வீனர், 1064கு
ஜேம்ஸ், தோபின், 487, 1079
ஜேர் ஷெங்ரன் அலெக்ஸ்ஸாண்டர், 1043

ஜோ :

ஜோர் ஹன்றி, 788, 792, 795, 804
ஜொசிலின். சீ. எஸ்., 179–181

ட் :

ட்ருமன், 242, 1023
ட்ருமன் கோட்பாடு, 1021
ட்ரொஸ்கி, 1096, 1097

ட :

டக்ளஸ் வில்லியம், 1044
டக்ளஸ் பி. எச். 753

டா :

டான் டொபின், 227
டாவ்ட்–ஹாட்லி சட்டம், 239–242, 244
டான்பெரி ஹாட்டோர்ஸ் வழக்கு, 236

டீ :

டீம்ஸ்டர் சங்கம், 229

டு :

டுசெல்பெரி எல் ஜேம்ஸ், 344கு
டு பொண்ட் கம்பெனி, 126, 742
டு பொண்ட் செலோபேன் வழக்கு, 737

www.padippakam.com



டே :

டேவீஸ். ஆர். ஜி. 533கு,

டேவிட் ஹியூம், 954

டொ :

டொலர் குறைவு 1026–1029

டௌசிக், 179, 180

த :

தங்க அளவைத் திட்டம், 477–479, 480கு, 930–932, 912–952, 1018–1019

தங்கம், கண்டுபிடிப்பு, சுபீட்சம் 391, 413

தங்கச் சான்றிதழ்கள், 415, 478–481

தங்கம், சர்வதேச நடமாட்டம், 476–479

சர்வதேச நடமாட்டம், அமெரிக்காவிலிருந்து வெளியேற்றம் 1026–1029, 1081

நாணயமாக 415–417

பணக்கொள்கை விடயத்தில்—மட்டுப்படுத்தும் சாதனம், 478–479

வங்கிச் சேமநிதிகள், 476–483

விலையிற் பாதிப்பு, 416கு

விற்பனை விலை, 477–479

தடைசெய்தல், 668–670

தவணைக் காப்புறுதி, 206–208

தவணைக் கொடுப்பனவுக் கடன், வட்டி 195–196

தவணைக் கொடுப்பனவு நியதிகள், கட்டுப்பாடு, 474–476

தலத்தாபன அரசு, செலவுகள், 250, 279–281, 286, 289

தலைவரி, 273

தலையிடாக் கொள்கைப் பொருளாதாரம், 248, 262–266, 331–332, 624–625, 715கு, 743–744, 897–899, 918கு–919, 1072–1073

தள்ளுபடி வீதக் கொள்கை, 467–469, 470–472

சீர்திருத்தம், 485

தனிப்பட்ட சொத்தும் முதலும், 66–68

தனிப்பட்ட வருமானம், 183–211

தனிவரி இயக்கம், 788–791, 795

தனியுரிமை வாங்குவோன், 764கு, 833கு

தா :

தானியங்குதல், 497–502

தி :

" தி கிராஞ்ஜ் ", 650

திரட்டு நிதி, கணக்குவைப்பு முறையில், 148–150

தியடோர் சுல்ட்ஸ், 645, 1049கு, 1051

திருத்தமற்ற கணியக் கொள்கை, 512–514

திருத்தமுற்ற கணியக் கொள்கை, 423–425, 427–428

திரும்ப விற்கும் விலைப் பரிபாலனம், 741

தீ :

தீவிரமான ஆராய்ச்சியும் தனியுரிமையும், 735–737

தூ :

தூண்டுகருவிகள், 671, 896

தூய உணவு மருந்துச் சட்டம், 190, 248

தெ :

தெனசி பள்ளத்தாக்கு அபிவிருத்தி, 253, 254, 740

தே :

தேசிய உற்பத்தி, அரசாங்கத்தின் பங்கு, நாடுகள், 248

தேசிய உற்பத்தி, சமநிலை மட்டம், 376

நிச ; பணம், 292–293

நிச. பணம், விலைச் சுட்டிகள், 295–297

மதிப்பிடுதல், 292–295

உழைப்பு ஓட்டம், 294, 307, 309, 313–314

பொருள் ஓட்டம், 292–294, 306–310, 313–314

முதலீடு, 366–367

மொத்த, (பார்க்க, மொத்த தேசிய உற்பத்தி)

தேசிய ஆராய்ச்சிப் பகுதியினர், சிபார்சு செய்த உணவு, 189

தேசிய உற்பத்தியாளர் சங்கம், 225

தேசியக் கைத்தொழில் மறுமலர்ச்சிச் சட்டம், 237

தேசிய திட்டக் கமிஷன், 235

தேசிய தொழிலாளர் உறவுச் சங்கம், 220–222 237, 240–242, 244

தேசியத் தொழில் உறவுச் சட்டம், 226, 237

படிப்பகம்

www.padippakam.com



தேசியப் பாதுகாப்பு, செலவுகள், 252, 258-260, 263-265
தேசிய புனருத்தாரணச் சட்டம், (1933), 741
தேசியப் பொருளாதார ஆராய்ச்சித் தாபனம், 159, 291, 753
தேசிய வருமானம் : அரசாங்கச் செலவுகள், 246-247, 262கு
உத்தியோகபூர்வமான தரவு, 317-325
குறைவுகள், சம்பள உயர்வுகள், 833-835
சம்பளத்தின் பங்கு, 310கு
சமநிலை, 351-358, 365-369, 371
சலனமுள்ள முதலீடு, 359
தேசிய உற்பத்தி, தேறிய, (பார்க்க தேறிய தேசிய உற்பத்தி)
தேசிய வருமானம், தேறிய தேசிய உற்பத்தி, 315-321, 323-324
நிர்ணயித்தல், கோடு, 358
நிலத்தின் பங்கு, 791-792
நுகர்ச்சியையும்-சேமிப்பையும் நிர்ணயித்தல், 350-351
பங்கு முதல் விலைகள், 201-202
புள்ளி விபரம், 151-152, 323-324
பொதுக்கடன், 541கு
வரைவிலக்கணங்கள், 291-292, 312-313
தேய்மானம், கணக்கு வைப்பு முறையில், 138, 139, 141-145, 147-149
மூலதனம், 300-304, 308-311, 315-316
தேவை அட்டவணைகள், 84-85, 579-685
வருமான அட்டவணை, 686
தேவை, அதிகரித்த, விலைமாற்றம் 561, 630-631, 635-636
குறைதல், 830-831
குறைந்துசெல் இறுதிநிலைப்பயன், 586-590
தேவை, கீழ்நோக்கிச் சரிதல் (பார்க்க கீழ்நோக்கிச் சரியும் தேவை)
சந்தை, தனிப்பட்ட தேவைகள், 579-580
சப்பிளை, (பார்க்க சப்பிளை)
சாதனம், 760-761, 767-770
நிலைமாறுதல், 580-581, 635-636
நெகிழ்ச்சி, 554-557, 575, 686-687, 695கு, 834-835
நெகிழ்ச்சியற்ற வருவிக்கப்பட்டது, 834
பயன்பாடு, கொள்கை, 579-603
தேவைக்கோடு, 84-88, 92-93, 558-559
உற்பத்திக் காரணிகள், 762-764, 782-784, 794
உழைப்பு, 801, 806-807, 830-833, 835-836, 845-846
குறைந்து செல்லும் இறுதிநிலைப்பயன், 586-590
சந்தை, 579-580, 597, 627
சந்தை, மொத்தம், 782-784
நகர்வு, 581-582கு., 724-725
நிலம், 789
நெகிழ்ச்சி, 591-594
பண்ணை உற்பத்திப் பொருள்கள், 654-655
போட்டி, 681-683
வரி, 564-567
வருமானக் கோடு, 686
தேவையின் குறுக்குத் தொடர்புகள், 582
தேறிய சனன விகிதம், 39-43
தேறிய தேசிய உற்பத்தி (தே. தே. உ.), 291-292
தேறிய தேசிய உற்பத்தி, அரசாங்கச் செலவுகள், 303-309, 374-375
அளத்தல், 292-296, 300-310
ஆக்கம், 356-357, 508-509
இடைநிலைப் பொருள்கள், 297-299, 306கு.
உயர்ந்துசெல் விலைகளால்-வீக்கமடைந்தது, 296
சமன்பாடு, 314
சேர்க்கப்பட்ட மதிப்பு, 299
தேசிய வருமானம், 315-321, 323-324
தேறிய முதலீடு, 299-302, 374-375
நிச, 295-297
நுகர்ச்சி, 299-302, 374-375
பணம், 422-425
மதிப்பிறக்கம், 295-297, 314
பணவாட்ட இடைவெளி, 372
மொத்த தேசிய உற்பத்தி, 303, 313-315
வரிகள், 377-379, 495-497, 522, 524-525
வரைவிலக்கணங்கள், 292-294, 299, 305-309
வெளிநாட்டு முதலீடுகள், 308-309, 531கு
தேறிய விளைதிறன், 856-857
முதற்பொருளின் அல்லது முதலீட்டுத் திட்டத்தின், 852-854
வட்டிவீதம், 858-859, 869

தொ :

தொகுதிக் காப்புறுதி, 205
தொம்சன், 38

படிப்பகம்

www.padippakam.com




தொழில் பரிவர்த்தனை நிலையம், அரசாங்க, 209

தொழிற்கட்சி, பெரிய பிரித்தானியா, 1094–1095

தொழில்நுட்ப மாற்றம், குறைந்த அபிவிருத்தியுள்ள நாடுகள், 1056–1061

தொழிற் சங்கங்கள், 213–244
அங்கத்துவம், 213–216
உண்டாவதற்கான காரணங்கள், 219–220
உழைப்புக்குரிய தேவை, 783–784
உள்ளூர், 216–219, 244
எதிர் நடவடிக்கை, 232–233
ஒப்பந்தங்கள், 214–216
"கம்பெனி", 221–222, 232–233
கூட்டுப் பேரம், 215–216, 219–224, 239–240, 244
கைத்தொழில், 214–216, 224–225, 244
சம்பள அதிகரிப்பு, 829–833, 839–843
சம்பளக் கொள்கை, 835–836, 839–843
சமட்டியாட்சி, 224–225
சனநாயகம், 229–231
சுய விருப்பு, 225
செல்வாக்கு, 214–215, 569
டாவ்ட் ஹாட்லி சட்டம், 239, 244
தேசிய, 216–219, 244
தேசிய சம்மேளனம், 216–217, 244
தொழிலாளரை மட்டுப்படுத்தல், 817–818, 843
தொழிற்சாலைத் தொடர்பு, 234–236
பொதுவுடைமை, 215–216, 227
முதலாளிகள், 230–233
வரலாறு, 223–228
வளர்ச்சி, 214–215

தொழிற் சங்கத் தலைவர்கள், 216–219, 224–231, 233–235, 783–784

தொழிற் சந்தை, கட்டுப்பாடுகள், 812, 817–818, 830–831, 843
குறைபாடுகள், 827–845
சம்பளங்கள், 820–822, 844–845
பொதுச் சமநிலை, 826–827
போட்டியிடாத பிரிவுகள், 825–826, 844
மந்தம், 820கு

தொழிற் பிரிவு, 63, 68–69, 70–71, 78–80

தொழிலாளர் வீரத் தொண்டர், 223–225

தொழிற் சட்டம், 208–209, 219–220, 226–227, 229, 234–235, 237–239, 244, 249–250

தொழிற்சட்டம், (1959), 229

தொழிற் சீவியக் காப்புறுதி, 205–207

தொழில் நிர்வாகத் தொடர்புச் சட்டம், (பார்க்க டாவ்ட்–ஹாட்லி சட்டம்)

தொழில் முயற்சிச் சக்கரம், 384–386, 402–403 485–486
அசியல், 386–388
அளந்து முன்னறிந்து கூறல், 386–388
ஐரோப்பாவில், 386
கால நீடிப்பு, 390
கொள்கைகள், 393–398, 403
சுருக்கம், 386, 388–390
சேமிப்புப் பட்டியல், 392–393
நாலு அமிசங்கள், 388–392, 402–403
நீண்ட அலைகள், 391
நுகர்ச்சிப் பட்டியல்கள், 392–394
பருவத்தொடர் சுட்டியாக, 386–388
பருவ மாற்றம், 388–389
பெரிய, 390–392
பொதுக்கடன், 535
போக்குகள், 386–389
மூலதன ஆக்கமும், 391–393
யுத்தங்கள், 391–393
வருமானம் நிருணயித்தல், 378–379
விரிவு, 386, 388–390
வேக வளர்ச்சித் தத்துவம், 397–400

தொழில் நுட்ப மாற்றங்கள் குறைந்து செல்விளைவு விதி, 754
சம்பளங்கள், 810–813
பொருளாதரா வளர்ச்சி, 359

தொழில் முயற்சி, முன்னேறியே கூறுதல், 400–403

தொழில்நுட்ப மாற்றங்கள், மூலதனக் கொள்கை, 860
வியாபாரச் சுழல், 397–398
விவசாய வீழ்ச்சி, 643

தொழிலாளர் ஆபத்துப் போலி, 818–819, 843

தொழிலாளர் புள்ளிவிபரத் தாபனம், 819

தொழிலாளருக்கு நட்டஈடு கொடுக்கும் சட்டம், 238

தொழிலும் அரசியலும், 217–219, 237, 239–241

www.padippakam.com




தொழிற்றுறைத் தாபனச் சங்கங்கள், 214–244
அ. தொ. ச. உடன் சேர்தல், 214–215, 218–219, 226–227
அமைத்தல், 226–227
அரசியல், 217–219
பட்சபாதம், 217
பொதுவுடைமை, 216–217, 227–228
தொழிற்றுறையாளரும் வருமானமும், 170–173, 175கு

தோ :

தோஸ்டீன் வெப்லேன், 1057, 1114கு
தோன்றுத்துணை போலிமுரண், 700–701, 703–705, 712–713

ந :

நட்டங்கள், 354கு, 716–717, 886–887, 897–899
அசாதாரணமான, 619–620
கம்பெனியின் பெருப்பம், 124கு.,
குறைத்தல், 709
நட்விக்செல், 265கு., 905கு.,
நலலாபத்தான உற்பத்தி, 760–762, 768–769
உற்பத்தியும் இசைவின்மையும், 765–770
இறுதிநிலை வினைவும், 763–768, 770
நல்ல லாபம் பெறக்கூடிய தானம், 695–698, 731–733
நல்லெண்ணம், மதிப்பீடு, 112, 117
சூக்குமச் சொத்து, 150–153
நன்கொடைத் திட்டக் காப்புறுதி, 207–209

நா :

நாட்டிடை வர்த்தகம், தொழில் சட்டவாக்கம், 238–239
நாணய ஒட்ட விலைத் தொழிற்பாடு, 752–955
நாணயம் (பார்க்க பணம்)
நாஷ்வா கம்பெனி, 235
நாலாம் அமிசத் திட்டம், 1023
நாட்டுக்கடன் (பார்க்க, பொதுக்கடன்)

நி :

நிக்கலஸ் வில்லியம், எச். 462, 662
நிச்சயமின்மையும் இலாபம் பற்றி நைட் என்பவரின் கொள்கையும், 884–887, 900
நிச்சயமின்மையும் வட்டிவீத வேறுபாடும், 872கு, 885
நிதிக் கம்பனிகள், வங்கிகள், 430–431
நிதி, சர்வதேசம் (பார்க்க சர்வதேச நிதி) தனிப்பட்ட, 183–211
நியமச் சம்பள வீதத்தை உயர்த்துதல், 830–831
நியாயமான தொழில் நியமச் சட்டம், (1938)
நியாயமான தொழிற் குழுக்கள், 177
நியூகம். ஜி. பி., 665
நியூயோர்க் பங்குச் சந்தை, 97–99, 125, 199
நியூ ஜேர்வி ஸ்டான்டர்ட் எண்ணெய்க் கம்பனி, 737, 740
நிர்வகிக்கப்பட்ட விலைகள், 722
நிர்வாகம், கூட்டுப்பேரம், 836
சங்க எதிர்ப்பு, 231–232
சம்பளங்கள், 883–884
தொழிலுக்குரிய கூட்டு முயற்சி, 127–129
நிலம், உற்பத்திக் காரணியாக, 785–786, 794–797
சப்ளையும் தேவையும், 806–807
நிலச் சீர்திருத்தம், 1050–1051
நிலம், தேசிய வருமானம், 792, 801–802
மாறு, 784
வரி, 787
“மேல்மிச்சம்”, வரியிடல், 788–791, 794–795
நிலம், வாடகை, 782–786, 788–791, 793–795, 798–799, 803கு
உதாரணம், 911–916
நிலையான செலவுக் கோடு, 687
நிறைவில் போட்டி (பார்க்க தனியுரிமைப் போட்டி)
நிறைவில் போட்டி, வளப் பகிர்வு, 700–703

நீ :

நீக்ரோவர், பாரபட்சம் காட்டுதல, 175–178, 181, 217
நீர்மைச் சொத்து, 417–419
நீர்மைத் தேர்வுக் கொள்கை, 494, 505–507, 517
நீர்வீழ்ச்சி மின்சக்தி, 354

நு :

நுகர்ச்சி அட்டவணைகள், 336–338, 340–341, 344–346
அரசாங்க செலவினங்கள், 374–375
அரசிறைக் கொள்கை, 500


படிப்பகம்

www.padippakam.com



நுகர்ச்சி இயல்தகவுக் கோடு, 600–603
நுகர்ச்சி அட்டவணைகள், கீழ்நோக்கிச் செல்லல், வரி, 377–379, 381
தேசீய, 344
தேசிய, புள்ளிவிபரமுறை, 343
முதலீட்டுப் பட்டியல்கள், 352–354
முழுமையான, 341–343
மேல்நோக்கிச் செல்லுதல், 378–380, 500
நுகர்ச்சி, மொத்தப் பயன், 585
நுகர்ச்சி அட்டவணைகள், நிபந்தனைகள், 344–346
வருமானமும் நுகர்வுகளும், 364–366
வியாபாரச் சக்கரம், 392–394
இ. நு. நா. 377
நுகர்ச்சி
உணவு, 643–644
கூடுதலான வரிகள், 378–379
சமூக, 253
சிக்கன முரண்பாடு, 366–367
தலைவீத, 344
நோக்கங்கள், 330–332, 345–346
வருமானம், 341–342
நுகர்ச்சியும் மொத்தப் பயனுடைமையும், 584–586
நுகர்வு நாட்டம், 334–336, 863
அட்டவணை, 335–338, 341, 344–346
இறுதிநிலை (பார்க்க இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்)
குடும்ப வகை, 334–340
சமநிலைப்புள்ளி, 336–341
தேசீய, 342–343
நடவடிக்கை வகைகள், 344
போருக்குப் பிற்பட்ட, 334–335
நுகர்வோர் ஆராய்ச்சி நிலையம், மிச்சிக்கன் சர்வகலாசாலை, 193
நுகர்வோன், ஆராய்ச்சி, 191–192
எச்சப்பாடு, 594–596, 598–599
நுகர்வோன் கொடுகடன், போருக்குப் பிற்பட்ட அதிகரிப்பு, 195–196
நுகர்வோன் சமநிலை, கேத்திரகணித ஆராய்ச்சி, 600–603
நுகர்வோன் செலவினங்கள், 183–191
நுகர்வோன், பங்கீடு, 570–572
நுகர்வோர் பண்டங்கள், நெடுங்காலப் பயன், 391–394, 396–398, 528–530
நுகர்வோர் பண்டங்கள், நெடுங்காலப் பயன், முதல், 850–851
தேறிய விளைதிறன், 852–854, 864–865
நுகர்வோர் பண்டங்கள், நெடுங்காலப் பயனற்றவை, 391–393
நுகர்வோன், பணம் செலவு செய்யும் விதம், 188–190
வரிகள், 564–567
விளம்பரம் செய்தல், 189–190

நூ :

நூதனமான தேக்கம், 528, 545

நெ :

நெகிழ்ச்சி, தேவை (பார்க்க தேவை)
விநியோகம், 560
விநியோகமும் தேவையும், 554–563, 575
நெடுந்தவணை இலாபமில்லாக் குறைந்த செலவுச் சமநிலை, 710–714

நை :

நைட் குட்வின், 218
நைட் பிராங், 884

நொ :

நொறிஸ்–லாகார்டியா சட்டம், 237

நோ :

நோட்டு, 73, 413–415
“ நோயான ” கைத்தொழில், மிகைத்திறன், 731–735
நோபேட் வீனர், 498

ப :

பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள், 467–471
பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள், சீர்திருத்தங்கள், 487–489கு
பங்குச் சந்தை வீழ்ச்சி–1929, 199–201, 389
பங்குடைமை, 111–115
பண்ணை, 645–646
பங்குதாரர், 125
(பங்காளர்)
உரிமைகளும் கடமைகளும், 115–122, 126–128
சிறுபான்மை, 127–128
வரிப்பளு, 287–288
பங்குதாரரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு, 117–119

படிப்பகம்

www.padippakam.com



பங்குதாரரும் ஆட்சியும், 126–127, 129
தத்துவ பிரதிநிதிகளும், 126–128
பங்கு வியாபாரக் கம்பனிகள், 125–127
பங்கு விளைவு பெறுவோர், 645–647
பங்கீடு, 751, 797–808
இறுதிநிலை உற்பத்திக் கொள்கை, 803கு
நன்னெறிப் பிரச்சினைகள், 803–805
பண்டச் சந்தை, 753–756
பண்டப்பணம், 72–74
பண்டம் பணி, அரசாங்கத்தின் செலவு, 303–309, 376
பண்டமாற்றும் பணமும், 71–73
பண்ணைச் சங்கங்களின் சம்மேளனம், 650
பண்ணைத் தொழிலாளர் சம்பளங்கள், 645–647
பணக் கணியக் கொள்கையும் விலைகளும், 405
பணக்கொள்கை, ஆராய்ச்சி, 491–506
பணக்கொள்கை, கடன் நிர்வாகம், 534–535, 876கு
முதலாக்கம், 862–865
முதலீட்டுக் கோடு, 491–492
பணமும் விலைகளும், திருத்தமுற்ற கொள்கை, 423–425, 426–427
பணக்கொள்கை, பெடரல் ரிசர்வ்வின், 466–474, 484–487, 489கு., 534–535
பொருளாதார வளர்ச்சிக்கு, 1079–1081
பணக்கொள்கை, வட்டி, 679, 874–875
வருமானம் நிருணயித்தல், 493–495, 500
பணத்தைப் புதைத்து வைத்தல், 409, 454–455
பணப்புழக்க வேகம், 419–420, 509–511, 517
பணம், உயிர்ப்பில்லாத, 506
பணம், கணக்கு அலகாக, 75–77, 79
கடமைகள், 75–77, 79
சர்வதேச அலகு, 1032–1033
சர்வதேச வியாபாரப் பற்றுக்குறை, 1029–1031
சமீபப்பணம், 417–419
செலவு செய்யும் கலை, 189–192
டொலர் குறைபாடு, 1026–1029
நுகர்ச்சி வலு, 408–410
பண்டமாற்று ஊடகம், 63, 70–73, 75–77, 79–80
புழக்க வேகம், 419–421, 425–427, 494–495, 508–511, 517–518
மதிப்பு அதிகமான, 1031
வகைபாடு, 73–75, 413–419, 425–427
வங்கி உண்டாக்கும், 447–450, 451–452, 454, 459–460
வட்டி, 505–507, 873–875
விநியோகம், 413–422, 425–426, 493–495
விலைகள், பருமட்டான அளவுக்கொள்கை, 405, 422–424, 426–427
விலைமாற்றமும் தேய்மானமும், 931–933, 1014, 1019–1020, 1026–1027, 1032–1033
பணமாற்றம், 75கு
பணமும் காலமும், 76–78
பணவாட்ட இடைவெளி, 371–375, 381–382, 520–521, 528–529
பணவிநியோகம், பெடரல் ரிசர்வ், 467, 470கு 480–481, 492–493
பணவிநியோகமும் தங்கமும், 478–481
பணவீக்கம், 243, 331–334, 425, 502
பணவீக்கம், இடைவெளி, 373–375, 380–382, 464–465, 462, 514, 518, 527–529
சர்வதேச வியாபாரப் பற்றுக்குறை, 1028
செலவு–உந்தல், 1082–1084
செலவு உந்தும் அல்லது விற்பனையாளர், 505–506, 513–518, 1082–1084
தவழும், 503, 735–736
நாணய ஒட்டவிலைத் தொழிற்பாடு, 952–955
பாயும், 410–412, 423, 503–504
பூரண வேலைவாய்ப்பு, 368–370, 519–547
பொதுக்கடன், 539
மாறுவிலைகள், 570–572
விலை, 373–375, 407–410
விவசாயிகள், 648–649
வெளிநாட்டு முதலீடு, 1010–1012
பத்திரங்கள், அரசாங்கம் (பார்க்க, அரசாங்கப் பத்திரங்கள்)
கூட்டு, 97–98, 120–121
வங்கிகளின் முதலீட்டில், 439–440
வரியில்லா நகரசபை, 279
வருவாய், 122
பதிலீட்டுப் பயனும் வருமானப் பயனும், 821–822, 843
பதிலீட்டு விளைவு பண்டப் பதிலீடும் விசேடப் பதிலீடும், 804–805

www.padippakam.com



பதிலீட்டு விளைவும் உற்பத்திச்சார்பும், 757–759, 765, 783
தொழிலாளர் சப்பிளையும், 820–822, 844–845
குறைந்துசெல் தேவையும், 591–593
பப்ளிக் யூடிலிட்டி ஹோல்டிங் கம்பனிச் சட்டம், 126
பரஸ்பர முதலீட்டு நிதி, 197–199
வியாபார ஒப்பந்தம், 1007, 1024–1025
பரிவர்த்தனையின் தொகைச் சமீகரணம், 421–422
பருத்திச் சந்தை, 97
பரும்படியான கணியக் கொள்கை, 422–423, 427
பருவபூர்வமான மாற்றமும் வியாபாரச் சக்கரமும், 388–389
பரூக், பேர்னுட், 204, 665
பலர் பிரவேசித்தலும் "நோயான" கைத்தொழிலும், 731–735
பவர், பி. டி. 1052கு
பழைய வைதீகப் பொருளாதாரம், 501–503, 505–506, 512, 873–874, 879, 1113–1114
பற்றுக்குறை, சருவதேச வியாபாரம், 1028–1034, 1081
நிதி ஒழுங்கு, 527–529, 541–542
பெடரல் அரசாங்கம், 376கு
பறெட்டோ விதி, 168கு
பறெட்டோ, வில்பிரெடோ, 168கு, 919கு

பா :

பாதுகாப்பு (பார்க்க, தேசீய பாதுகாப்பு)
பாதுகாப்புத் திட்டங்கள், 253
பாசிசம், 1092
பாடசாலைகள், மாகாண–தல ஆட்சிகளிலே செலவுகள், 280

பி :

பிஸ்கால் கொள்கை, உசிதாசாரமானது, 525–527, 544–545
கருத்து, 496, 503
குறுந்தவணை, நெடுந்தவணை, 520–529, 544–546
திரப்படுத்தல், 258–259
நிர்மாண நிலையாக்கி, 521–525
பூரணவேலை வாய்ப்பு, 519–547
பொதுக்கடன், 529–547
பொருளாதார வளர்ச்சி, 1079–1080
முதலாக்கம், 862–864
வரிகள், 500, 503
வருமானம் நிர்ணயித்தல், 374–377, 495
வீக்க இடைவெளி, 528, 544–545
பிராங்லின், பெஞ்சமின், 36, 368, 491
பிரிட்ஜெஸ், ஹரி, 228
பிரான்ஸ், குடித்தொகை, 38–39, 41–43, 45–46
விளைதிறன், 163–164
பிரீட்மன், மில்டன், 344கு, 423
பிராங்கோ மோடிக்லியானி, 344கு
பிரெபீஷ், பரோல், 1004
பிரென்னன், காரியதரிசி, 652, 656–660
பிரேசில், முதலீடு, 1053
பிலிப்ஸ். ஏ. டபிள்யூ., 515
பிலிப்ஸ் வளைகோடு, 515–518
பிளாங், மாக்ஸ், 9
பிறப்பு வீதங்கள், தேறிய சனனவீதம், 39–42
வேற்றுமை, 643–644, 662–663
பின்னிடைவு, 388–390, 400, 522, 842
பின்னேக்கி நகரும் பொருளாதாரம், 635–636

பீ :

பீகு. ஏ. சி. 510, 517, 861கு., 919கு
பீகு. ஏ. சி. இன் உளவியற் கொள்கை, 394கு. 513–514
பீகு விளைவுகள், 510–512, 517

பு :

புக்கனன், யே. எம், 532
புதிய ஆராய்ச்சிகள், போட்டி, 919கு
வியாபாரச் சக்கரம், 391–392, 393–394, 397–398, 528–529
விளைதிறன், 500
வேலைவாய்ப்பு, 497–501, 504
புதியது காணும் கொள்கை, தொழில்முயற்சிச் சக்கரங்கள், 394கு, 735–736
புதியன கண்டுபிடிப்போர், இலாபம், 882–884
புதிய மல்தூசியன் இயக்கம், 37

படிப்பகம்

www.padippakam.com




புதிய மலர்ச்சி, 214, 234–235, 238–239, 254–255, 659

புதிய வைதீக இணைப்பு, 330–331, 501–503, 542–545, 862

பொருளாதார வளர்சசி, 1078–1079,1081–1083

புரட்டஸ்தாந்திய அறப்பண்பு, 1052

புளூ குரொஸ், 210

புறச்சிக்கனம், 624–626, 628, 638கு, 1076

புறப் பொருளாதார நட்டம், 265, 623–626, 628

பூ :

பூரண வேலைவாய்ப்பு 332, 411–412, 861, 875, 879

உற்பத்தித் தகைமைக் கோடு, 24–31

பணவீக்கம், 368, 371, 381, 410–411, 492

பணவீக்கமற்ற, பிஸ்கால் கொள்கை, 519–547

பணவாட்ட இடைவெளி, 371–372, 381

பூரண வேலை வாய்ப்புச் சமநிலை, 499–500, 503, 864கு

பெ :

பெக், டாவே, 217–229

பெடரல் ரிசேர்வ் முறை, 248, 429, 444, 457–458, 463, 470கு, 519

அமைத்தல், 431–433

எத்தனிக்கப்பட்ட ஒழிப்பு, 487–490

கடமைகள், 463–484

சேமநிதிச் தேவைகள், 439–442, 457–458 472–474, 479–484

பரிபாலன சபை, 431–433, 458, 463–465

பெடரல் ரிசர்வ் வங்கிகள், ஏனைய வங்கிகள், 478–479

ஐந்தொகை, 465–467

கடன் பத்திரங்களும் முதலீடுகளும், 480

திறைசேரி, 477–480, 534–535

பணக் கொள்கைகள், 467–468, 534–535

பணக் கொள்கைகள், தள்ளுபடி வீதம், 467, 470–472, 485–486

பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள், 468–471, 484, 492–493

ரிசர்வ் தேவைகளை மாற்றல், 468–469, 472–474

வங்கிச் சேமப் பணம் (பார்க்க, வங்கிச் சேமப் பணம்)

பெடரல் வெளிச் சந்தைக் கமிட்டி, 432–433, 467–469

பெடரல் நாஷனல் மோட்கேஜ் சங்கம், 476

பெடரல் வீடமைப்புத் தாபனம், 476

பெடரல் ரிசர்வ் வங்கிகள், வைப்புப் பொறுப்புக்கள், 467

பெடரல் ரிசர்வ் வங்கிகள் கட்டுப்பாடு, குணமயமான, 474–476

சட்டம், 431

வங்கிகள், 429, 431–433, 439–441, 457–458

பெடரல் டிபொசிட் இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன், 249, 429, 443–444, 458

பெடரல் விவசாய சபை, 650

பெடரல் வியாபார கமிசன் சட்டம் (1914) 740,

பெண்கள், பேதப்படுத்தல், 177, 181, 817

சம்பளங்கள், 176

வேலைப் பாதுகாப்புச் சட்டம், 238, 249

பெரிய பிரித்தன், கம்பனிக் கூட்டு எதிர்ப்புச் சட்டம் 743

குடித்தொகை, 38–39, 41–43, 45–46, 813–814

குடும்பப் படிகள் 188–189

சங்கங்கள் 235–246

சமூகவுடைமை, 210–211

தொழிலாளர் சட்டம் 238–239

நாணயம், 930–932, 1019–1021

பணவீக்கம், 514–518

பிறநாட்டு முதலீடுகள், 1055

பொது ஐரோப்பிய சந்தை 1025–1026

பொதுக்கடன், 531–532, 539–541

வங்கிகள், 430–431, 454கு., 474–475

வருமானப் பங்கீடு, 168–171

வியாபாரச் சக்கரம், 386–387

வினைதிறன், 164

பெருக்கி, அரசாங்கச் செலவுகள், 376–378

சேமிப்பதற்கும் நுகர்வதற்குமான இறுதி நிலை நாட்டம், 360–365

முதலீடு, 371–372, 376, 380–381, 399–400, 524–525, 539–540

வருமானம், 492–493

வெளிநாட்டு வியாபாரம், 955–957, 1010–1012

பெருக்கிக் கோட்பாடு, வரைவிலக்கணம், 360–361


படிப்பகம்

www.padippakam.com



முதலிடாமலிருக்கத் தூண்டுதல், 370, 374–375, 539
முதலாளிகளும் சங்கங்களும், 219–222, 230–233, 238–240, 244
முதலாளித்துவம், 21–22, 160–161, 412–413
முதலும் காலமும் 63–66
முதற்கோட்பாட்டின் நிச்சயமின்மை, 860–861
முதலீடு அட்டவணைகள், பணக்கொள்கை, 491–493
முதலீடு, ஆபத்தான விளைவுகள், 873
கணிக்கப்பட்ட, 322, 325, 380கு
குறைவிருத்தியடைந்த நாடுகள் 1053–1054
சலனமுள்ள, தேசீய வருமானம், 359
சேமிப்புக்கள், 195–199, 204–208, 330–332 359 361, 380கு
தூண்டப்பட்ட 379–380
சிக்கனம் 365–371
தேசீய உற்பத்தி, 366–367
தேறிய 299–302, 330–332, 380
தேறிய, தனியார், உள்நாட்டு, 309
வரைவிலக்கணங்கள், 302–303, 314–315, 331, 332
வெளிநாட்டு, 308–309, 320–321
நோக்கங்கள், 379–380
படிமுறைவரி, 278–279
பணவாட்ட இடைவெளி, 371–373
பராதீனமாக உண்டான, 358கு
பொதுக்கடன் 537–539
மாறுந்தன்மை, 331–334, 396–398
மொத்த, 301–305
முதலீடு, வங்கி, 348–440, 446–453, 459–460, 481
வருமானம், 360–375, 380–381
நுகர்வுக்கோட்டு மாற்றம் 364–366, 378–380
விலைகள், 890கு
வெளிநாட்டு (பார்க்க, வெளிநாட்டு முதலீடு
வேகவளர்ச்சித் தத்துவம், 397–400, 541கு
வேலைவாய்ப்பு மட்டம், 366–367
முதலீட்டு அட்டவணைகள், சேமிப்பு அட்டவணைகள், 349–354, 365–366
முதலீட்டுத் திட்டங்கள், தேறிய விளைதிறன், 852–854, 856, 859
முதலீட்டு அட்டவணைகள், நுகர்ச்சி அட்டவணைகள், 352–354, 365–366
வியாபாரச் சக்கரம், 392–394
முரண் நம்பிக்கைச் சட்டங்களும் விதிகளும், 130–131, 734–737
முரண் நம்பிக்கை, வரலாறு, 739–743, 745–746
வருங்காலம் 743–745
முரண் நம்பிக்கைப் பிரிவு, வழக்குகள், 743–744
முரண்பாடுகள், சிக்கனம் பற்றியது 366–370, 381
மதிப்பின், 593–595, 598–599
முறிவுத்தான நிலை, 619
முறிவுத்தான நிலைகள், நெடுந்தவணை, மொத்தச் செலவு, 617–621, 627–628
முனைப்பான நுகர்ச்சி, 638கு

**மூ :**

மூடும் அவத்தை, 617, 627, 709–710
நிலைமைகளும் மொத்தச் செலவும், 616–618
மூர், ஜியோபிரே, 402கு
மூலதனக் கொள்கை, 849–859
தகைமைகள், 859–863, 865–866
தொழில்நுட்ப மாற்றம் 859–866
நவீனப் பழங்கொள்கை இணைப்பு, 862–863, 865–866, 879
பாதிக்கும் நிச்சயமின்மையும் எதிர்பார்ப்புக்களும் 860–862
வருமான மட்டங்கள், 861–862, 865–866
மூலதன மதிப்பு, அளவிடல், 738–739
மூலதனமும், உற்பத்திக் காரணிகளும் 849–851
காலமும் 63–66
சம்பளமும், 812–813
தனிப்பட்ட சொத்தும் 66–68, 78–79
தொழில்நுட்பமும், 1058–1059
புதிய 109–110
மூலதனம், ஆழமாதல், 1078, 1081–1082
உண்டாக்குதல், 299–302, 331–332
உண்டாக்குதல், குறைவிருத்தியடைந்த நாடுகளில், 1051–1056, 1058–1059
தேறிய, 330–332
உற்பத்திக் காரணி, 753–756
ஒவ்வோர் அலகின் வருவாய், 754
குறுங்காலம், தொழில்முயற்சி வளர்ச்சி, 109–111

www.padippakam.com



சர்வதேச இயக்கம், 942–944
தேய்மானம், 301–304
தேறிய விளைதிறன், 851–853
நிச, 331
மூலதனம் உண்டாக்குதலும் வியாபாரச் சக்கரமும், 391–393

மெ :
மெஞ்சர், சி. 905கு
மெரில் லிஞ்ச், பியர்ஸ், பென்னர் அண்ட் ஸ்மித், 115
மெலன், அன்ரூ, 200

மே :
மேலதிக உற்பத்தி, 861
மேலதிக சனத்தொகை, 38–39, 813–814, 843
மேலதிகச் செலவு, 690–691
மேலதிகம், இலாபமாக, 895–896
உற்பத்தியாளர், 896கு

மொ :
மொத்தமான சப்பிளையும் தேவையும் 800–804
மொத்தச் செலவு வளைகோடு, 687, 696–698, 703
மொத்த தேசிய உற்பத்தி, ஆள்வீத அதிகரிப்பு, 1071–1073
சோவியத் ரூஷ்யாவிலும் அமெரிக்காவிலும் 1102–1106
மொத்த தேசிய உற்பத்தி (மொ. தே. உ) 303, 312–315, 323–324
வரைவிலக்கணம், 306–309
வளர்ச்சி அளவீடு, 1070
மொத்தப் பயனுடைமை, 597, 671–673
மொத்தப் பொருளாதார மதிப்பு, 594
மொத்த முதலீடு, 301–304

மோ :
மோட்டார் உற்பத்தித்துறை, 684, 813–814
மோர்கன், ஜே. பி. அண்ட் கம்பெனி, 114

ய :
பயப்பான, அதிகரிக்கும் விளைதிறன், 1028–1029, 1031
யப்பான், கம்பனி கூட்டுச் சேர்வதற்கெதிரான சட்டம் 743–744
கைத்தொழில் அபிவிருத்தி, 1057–1058

யு :
யுத்தகாலச் செலவு, 349–350, 392–393
யுத்தகால விலைமட்டங்கள், 392, 406–407, 572
யுத்தத் தொழிற் சங்கம், 24
யுத்த நிதி, 481–484

யூ :
யூனைட்டெட் ஸ்டேட்ஸ் உருக்குக் கம்பனி, தனியுரிமை நிலை, 680
யூனைட்டெட் ஸ்டேட்ஸ் உருக்குக் கம்பனி, 737, 740
யூனைட்டெட் ஷூ வழக்கு 743

ர :
ரயில் பாதைகள், அரசாங்க ஒழுங்கின் கீழ் 248
சேர்தல், 740
ரயில்வேத் தொழிலாளர் சட்டம் (1926), 237

ரா :
ராஸ்கோப், ஜே. 161

ரி :
ரிக்காடோ, டேவிட், 786, 964–968, 1114–1115
ரிசர்வ் வங்கிக் கொடுகடன், 478–481
ரிபப்ளிக் ஸ்டீல், 231

ரூ :
ரூஸ்வெல்ட், தியடோர், 249, 740
பிராங்க்ளின் டி., 228, 239, 443

ரெ :
ரெய்னோல்ட்ஸ், லோயிட் ஜீ. 842

ரொ :
ரொக்கப் பெட்டிப் பணம் 481
ரொக்பெலர், ஜோன், டி. 200, 737
ரொபின்சன்–பாட்மன் சட்டம் (1936), 130, 741
ரொபேட்யங், 127
ரொஸ், ஆதர், 840

லா :
லாங், ஒஸ்கார், 916கு.

www.padippakam.com



லி :

லிஸ்ற், பிரெடறிக், 1114கு
லியோன்டீவ், வசிலி, 1101கு
லிங்கன், ஏபிரஹாம், 157, 265, 993

லு :

லுவிஸ், ஜோன், எல், 215, 225–230, 769

லெ :

லெனின், நிகோலே, 1045–1047, 1096–1097

லே :

லேணர், ஏ. பி., 918கு., 1083
லேவாதேவிக்காரர், 193–195, 248

லோ :

லோயிட்ஸ், இலண்டன், 674
லோறன்ஸ் வளேகோடு, 167–170, 181, 278–751

வ :

வங்கி, இங்கிலாந்து 431–433
வங்கிக் கொடுகடன், 430–431
வங்கிச் சேமப்பணம், 434–435, 436–439, 457–458, 463–467, 479–480
வங்கித் தொழில், அரசாங்கப் பிரமாணம், 248–249, 442–444, 457–458
வங்கித் தொழில், இக்காலப் பின்னச்சேமம், 437–440, 442–443
ஒரு தொழில், 432–435
முறை, சீர்திருத்தும் யோசனைகள், 485–490
விரிவடைதல் அல்லது ஒடுங்குதல், 454–456, 459–460, 465–466
இக்கால, 42 (444, 456–458)
வங்கிப் பரீட்சகர், 443–444
வங்கி முறிவுகள், 430–431
“ வங்கி விடுமுறை ”, 1933கு
வங்கி வைப்புக்கள், 75, 430–431
அரசாங்கக் காப்புறுதி 443–444
ஆக்கம், 444–458
எடுத்தல், 453, 455–457, 459–461
ஒருவகைப் பணம், 412–413, 405–417, 457–458
வங்கி வைப்புக்கள், கொடுகடன்கள், 446–450
செலவு செய்தல், 417–420
தேவை 434–436, 465–466. 482–483
வங்கி வைப்பு, நிபந்தனைகள், 439–443, 457–458, 463, 470–480
வங்கி வைப்புக்கள், பன்மடங்கு விருத்தி, 452–454, 482–483
புதியவை, 455–457, 459–461
மாற்றமடையும், 468, 470, 471–474
வங்கிச் சேமப்பணமும் முதலீட்டுப் பட்டியலும், 491–493
வங்கிச் சேமப்பணம், மேலதிகம், 455–457, 460–461, 473கு., 482–483, 503–504
வங்கி வைப்புகள், மொத்தம் 419கு
வங்கி வைப்புகள், யுத்த காலமும் யுத்தத்திற்குப் பிந்திய காலமும், 481–484
வருவிக்கப்பெற்றது, 454கு
வங்கிகள், அமைத்தல், 443–444
அரசாங்க, 429
ஏகபோக உரிமை, 454–456, 459–460
ஒரே நேரத்தில் விரிதலும் ஒடுங்குதலும், 454–456
கடமைகள், 430–432, 456–457
கிளை, 430–431, 454–455
கொடுகடன், 113–114, 193–195, 459–460
சேமிப்பு, 430–431
நாட்டு, 429
பெடரல் சேமநிதி (பெடரல் சேமநிதி வங்கிகளைப் பார்க்க)
முதலீடுகள், 438–440, 446–454, 459–460
விரிவாக்கமும் ஒடுக்கமும், 473–474, 479–480
வியாபார உடைமை, சேர்மனியில், 110கு
வங்கிகளின் இடைத்தொடர்பு, 449–454, 459–460
வங்கிகளின் வளர்ச்சி, 434–437, 457–458
வங்கிகள் அரசாங்கமும், 442–444, 457–458
வங்கிகளும் தள்ளுபடிக் கொள்கையும், 470–474
வங்கிகளும் பணவாக்கமும், 444–445, 447–450, 452, 454–455
வட அத்லாந்திய உடன்படிக்கைத் தாபனம், 1021
வட்டி, கோட்பாட்டு அமிசங்கள், 867–879
சமதர்மவாத அமைப்பில், 869–872, 877–878
தேறிய, 308–310
நியாயமானதா, 867–868
நேர்மையற்ற தன்மை, 867
பணம், 505–507

படிப்பகம்

www.padippakam.com




பொதுக்கடன், 533–535
பழைய கொள்கை 873–875
வரைவிலக்கணம், 881
விளைதிறன், 869
வட்டியாகக் கருதப்படும் வாடகை 871, 878
வட்டி, பொதுக்கடன், தேறிய தேசிய உற்பத்தி 305–306
வட்டி மாற்றங்கள், மறைமுகப்பளு, 535–538
வட்டியும் முதலும், 849–851
வட்டி முதலீடு தேவை அட்டவணை 494–495, 506–507
வட்டி வீதம், 853–859, 863–865
அரசாங்கம், 859கு
இலட்சிய உலகம், 914
கடன், 464–465
சிக்கனம், 370கு
தனிப்பட்டவரின் கடன்கள், 193–196
தீர்மானித்தல், 858, 869
நீர்மை விருப்பம், 505–507
பணக் கொள்கை, 492கு, 543, 874
பூச்சிய, 872
பெடரல் ரிசர்வ், 478, 484
வியாபாரச் சக்கரம், 307–308
வணிகவியலாளர் 1108
வயது முதிர்ந்த ஓய்வுக்காலமும் சொந்தக்காரர் காப்புறுதியும், 208–210, 274
வரவுசெலவுத் திட்டங்கள், குடும்பம், முறைகள், 183–186
பெடரல், சரிக்கட்டல் 527–529, 544–545
வெளிநாட்டு, சரிக்கட்டல், 541–542
வரவு செலவுத் திட்ட மிகுதி, பணவீக்கம், 522, 527–529, 544–545
வரிகள், அரசாங்கக் கடன்மீது வட்டி, 535–538
அரசாங்கச் செலவுகள், 375–381, 503–504
அரசிறைக் கொள்கை, 520–522
ஆட்சிக்குரிய 281–285, 288–289
இலாபங்கள், 731கு
கழிவு, 496
கழிவும் மந்தமும், 377–378
சமூகப் பாதுகாப்பு, 209, 274
தவிர்த்தல், 275–276
தலத்தாபன, 250, 280–285, 289
தேறிய தேசிய உற்பத்தி, 307, 312–315, 381, 496–498, 523–525
நிகழ்வின் எல்லை, 286–289
வரிகள், நேரடி, 312
நேரடியான மறைமுகமான, 273
மறைவான வியாபாரம், 310–314, 315, 495
விநியோகம், தேவை மீது பாதிப்பு, 564–567, 576
விலைகள், 564–567, 632
கூட்டாட்சி, வருமானம் (பார்க்க, வருமான வரிகள்)
1961 வரவிலிருந்து மதிப்பிடப்பட்டவை, 274
சமட்டியாட்சி, 250, 257, 260, 272–276
வரி வசூலிப்பிலே சுயமான மாற்றங்கள், 522–524
வரிவிதித்தல், ஆபத்து, 895
இரட்டிப்பு, 118–119
இலாபங்கள் மீது, 802–805
சில விட்டுக்கொடுப்பு, 271–273
மறுபடி பகிர்ந்தளித்தல், 257, 269
முற்போக்கான வரியும் பிற்போக்கான வரியும், 272–273, 275–279, 284, 287–289, 671–673
நிலவரி "மேல்மிச்சம்", 788–791
வரி விதிப்பில் நன்மை தியாகம் என்ற கொள்கைகள், 270
சமதையும் அசமதையும் 271–272
வரிவிதித்தல் பற்றிய பொருளாதாரத் தன்மை, 269–272
வரியும் நுகர்வுக்கோடு கீழ்நோக்கிச் செல்லலும், 377–379, 382
வரியிலுள்ள மாற்றங்கள், 524கு, 527, 537–538, 895–896
வரிவீதங்கள், 277
வருடாந்த மானியம், கழிவு மதிப்பு 853–854
வருமானம், 116–119, 122, 881
ஆளுக்குரிய, 312, 315, 323–324
ஆள்வீத, 344
ஆள்வீத, அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் 156–157, 165–166
கம்பெனியின் தராதரம், 171கு
காரணிப் பங்குகள், 801–812
குடித்தொகை, 815
குடும்பம், 310–313
குடும்பம், அமெரிக்காவில், 158–160
குடும்பப் பின்னணி, 172–173, 177–181
நுகர்வு நாட்டம், 334–336
வாழ்க்கைத்தரம், 155, 160–164

www.padippakam.com



சமநிலை மட்டம், 348–358, 380
சமன்பாடு, 170–171
சமமின்மை, 165–172, 751
சமமின்மை, சிறுபான்மையினர், 175–178, 181
சராசரி, 170, 177, 180
சர்வதேச அமிசங்கள், 320–322
செலவுகள், 183–186, 188–192, 211
திறமை, 172–176, 182
தேசீய, (பார்க்க. தேசீய வருமானம்)
தேவைக்கோடு, 580–581
நடு, 158
நிச, நுகர்ச்சி, 643–645
நுகர்வோன், சமநிலை, 603
பங்கீடு, 155–160, 573கு–574, 907–910
பங்கீடு, அமெரிக்காவில், 155–160, 165–172
படிமுறைவரி, 278
பங்கீடு பறெட்டோவிதி, 165கு,
மாற்றுதல், 269–270
லோறன்ஸ் கோடு, 277–278
பண்ணை, 648–649
பெருக்கி விளைவுகள், 507–509
பைசல் செய்யக்கூடிய 277–278, 311–315, 323–324, 335–337, 343, 346
பைசல் செய்யக்கூடிய வரிகள், 379, 496
வரைவிலக்கணம், 342கு
போருக்குப் பிற்பட்ட அதிகரிப்பு, 159–160, 191–196
மறுபடி பகிர்தல், 407–409
முதலீடு (பார்க்க முதலீடு)
மொத்த, 692–695, 703
ருஷ்யாவின் பொதுவுடைமைச் சமுதாயத்தில் 175கு.
வாடகை, 310–311
வியாபாரச் சக்கரம், 397–398
வருமான அட்டவணைகள், 685–686
வருமானஆராய்ச்சி, இக்காலக் கொள்கை, 329
வருமானம் நிர்ணயித்தல், எண்கணிதமுறையில் எடுத்துக்காட்டல், 355–358
கொள்கை, 344, 348–382
இலகுவாக்கப்பட்டது, 359–361
சேமிப்புக்கோடும் முதலீட்டுக்கோடும், 349–354
நுகர்வு முதலீடு என்பனவற்றின் அட்டவணைகள், 352–354
சாதனங்கள், 505–518
வருமானம் நிர்ணயித்தல் தானியங்குதல், 497–500
பணக் கொள்கை, 491–495
பிஸ்கால் கொள்கை, 374–378, 381–383 495–503
மொத்தமாக, 378–379
வட்டியின் பழங்கொள்கை, 875, 879
வருமான வரிகள் அரசு, 284
ஆளுக்குரிய, 118–119, 273–275, 485கு, 894–895
படிமுறையான, 175, 276–277, 289
சமட்டி, 271–273
கூட்டு, 118–119, 272–276, 287–289, 895
படிமுறையான, 272
வருமான விளைவு, கீழ்நோக்கிச் சரியும்தேவை, 592–594
பதிற்பயன், 820–822, 843
வெளிநாட்டு வியாபாரப் பெருக்கி, 955–956
வரையறுக்கப்பட்ட சொத்துரிமைகள், 67–68
வளர்ச்சி, அளத்தல், 1070
ஆராய்ச்சி, 1075–1076
கல்வி, 1077–1078
சோவியத், ருஷ்யாவிலும் அமெரிக்காவிலும், 1103–1106
பணவீக்கம், 1082–1084
பிஸ்கால் கொள்கையும் பணக் கொள்கையும், 1079–1080
புதியதும் பழையதும் இணைந்து, 1078–1079, 1081–1083
பொருளாதார, 1069–1088
விலை நிலைப்பு, 1084–1087
வீதம், 1072–1073, 1075, 1103, 1105
வறுமை, 169, 920
வறுமை குறைதல், 160–165
தனிப்பட்ட வருமானம், 183–184
விவசாயத்தில், 161, 645–649

வா :

வாடகை இயற்கை அருந்தல், 889
சம்பளத்தில் வாடகை அமிசங்கள், 822
சிக்கன, 784–785, 849–851
தனியுரிமை, 806
தூய, 785, 786கு
தேசீய உற்பத்தி, 802கு
நிலம், (பார்க்க, நிலம்)
போலி, 786கு
வட்டியாகக் கருதப்படும், 871
வரைவிலக்கணம், 795, 881
விலைமுறை, 793, 795
வெளிப்படைப் பயனும் மறைபயனும், 786

www.padippakam.com



வாடகையும் செலவுகளும், 786–788
வாடகை வருமானம், 310–311
வாணர் சட்டம், (1935), 226, 237–239, 244
வாய்ப்புள்ள குடிசனம், கொள்கை, 814–815, 843
வாய்ப்புள்ள குடிசனத்தொகை, கொள்கை, 814–816, 843
வால்டர் ரூதர், 213, 217, 230, 243, 819
வால்றஸ், எல். 1116
வால்ஷ்–ஹீலி பொது உடன்படிக்கைச் சட்டம், 238
வாழ்க்கைச் செலவு, உயர்விலை மட்டம், 569
குடும்ப வித்தியாசங்கள், 188
சம்பளங்கள், 186கு, 836–837, 845–846, 408–409
வாழ்க்கைச் செலவு, பிரதேச வித்தியாசங்கள் 185–188
வாழ்க்கைத் தரம், 836–837, 846
அபிவிருத்தி குறைந்த நாடுகள், 1040–1043
அமெரிக்காவிலும் பிறநாடுகளிலும் 162–163, 165, 180–181
சீர்திருத்தம், 161
நுகர்ச்சி அட்டவணை, 378–380
சேமிப்பு, 523
வருமானம், 155, 408–409

**வி :**


விசேட பங்கு, 121–122, 196–199
விதிகள், அதிகரித்துச் செல் விளைவு 813–814
அருந்தல், 22–25
எஞ்செல், 183கு
ஒவ்வொரு டொலருக்கும் இறுதி நிப் பயன் சமனாயிருத்தல், 589
கீழ்நோக்கிச் சரியும் தேவை, 86
குறைந்துசெல் விளைவுகள், (பார்க்க, குறைந்துசெல் விளைவுகள்)
குறைந்துசெல் இறுதிநிலைப் பயன், (பார்க்க, குறைந்து செல் இறுதிநிலைப்பயன்)
குறைந்துசெல் இறுதிநிலைப் பிண்டப் பொருள் 755–756
சப்பிளையும் தேவையும் 567–570
சே, 510, 517–518
பறெட்டோவின், 168கு
வித்தியாசமுள்ள பொருள்கள், 684, 726–729
விநியோக அட்டவணை 89, 562–565
விநியோகமும் தேவையும் 82–105, 506, 637–641
அடிப்படைகள், 553–554
எந்த ஒரு சாதனத்துக்கும், 791
அரசாங்கத் தலையீடு, 573–576
விநியோகமும்தேவையும், கருவிகள், 99–100 102–103
கூட்டுப்பேரம், 243
சமநிலை, 90–92, 95–96, 101, 561–567 575
சம்பள வீதங்கள், 809
சாதன விலையை நிச்சயித்தல், 784–786
சாதனை 96–98
தனியுரிமைத் தலையீடு, 573–577
நியமிக்கப்படும் விலைகள், 569–572, 576–577, 631
நிலைபெயர்தல், விளைவு, 92–94, 637
நெகிழ்ச்சி 554–563
பங்கீடு, 570–571
போட்டி, 572–573, 576, 604–616, 626, 637–640
மாறுநிலையிலுள்ள அல்லது நெகிழ்ச்சியற்ற, 632–635
முட்டுக்கட்டைகள், 94–96
மொத்தம், 800–804
வரிகள், 565–567, 576
விதி, 567–570
விலைத்திட்டம், 53–59, 90–93, 551–578, 608–609
விவசாயத்தில், 642–678
விநியோகம் உற்பத்திச் சாதனம், 791–792
கம்பனி, 621–623, 715–717
கம்பனி–நெடுந்தவணை, குறுந்தவணை, 619 623
சந்தை, 604–605
சமநிலை, 563
செலவு, 604–641
தொழில், 634கு, 800–801, 815, 821
விநியோகம், நிலம், 785
நெகிழ்ச்சி, 560, 576
நெகிழ்ச்சியற்ற, 784
பின்னோக்கி வளைதல், 635–636
போட்டி, 705–818
வரிகள், 564–567
வழங்கப்பட்ட அளவு, விலை சம்பந்தமாக, 90, 101
வளைகோடு, 89, 92, 100, 561–562

www.padippakam.com

படிப்பகம்


www.padippakam.com

# பொருளியற் பரம்பரை




படிப்பகம்

1900 தொடக்கம் அமெரிக்க நுகர்வோர் விலைகள்




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

5
-127
7-101,
827-
3-764,
-37
1045
312
314
103-
028-
[illegible]
28
43
)
140,
45,
)24-
)62-

படிப்பகம்